NGLISH - TAMIL DICTIONARY

VOLUME — II

CHIEF EDITOR :

Dr. A. CHIDAMBARANATHA CHETTIAR

With the Foreword

of

Dr. A. LAKSHMANASWAMI MUDALIAR,
D.C.L., (Oxon.) B.A., M.D., LL.D., D.Sc.,
D.Litt., F.R.C.O.G., F.A.C.S., M.L.C.,

Vice-Chancellor



FOREWORD

of

THE VICE-CHANCELLOR

TO THE FIRST VOLUME

I am glad that the first volume of the English-Tamil Dictionary is to be issued shortly. The publication of such a Dictionary was undertaken on the advice of the Senate of the University, as it was felt that it will serve a real need in the present context of events. I am glad that the Chief Editor and his staff have devoted considerable amount of energy and enthusiasm to bring out the first volume, and it is hoped that the three volumes will be completed by the year 1965.

This scheme formulated by the Syndicate of the University was placed before the University Grants Commission which undertook to bear the cost of preparation and publication of the Dictionary to the extent of 66 per cent of the total cost during the first three years. The scheme has had to be extended and the University hopes that it will be possible that grants may be given by the State Government.

The compilation of the Dictionary naturally demanded a great deal of thought and the Chief Editor was helped by an Advisory Committee in the general policy-making in bringing out this Dictionary. It is hoped that a Dictionary of this kind will play a very useful part in spreading knowledge of Tamil and English to the general public.

Univers ty Buildings,
Chepauk, Madras
26th January 1963

NOTE

The principles adopted in Volume I are followed in this volume.

We tender our thanks to the Vice-Chancellor and the Authorities of the University for their continued guidance and support.

To the colleagues in the department who diligently worked with me I offer my sincere thanks.

I express my thanks to the Members of the Advisory Committee for their valuable suggestions.

Rathnam Press, Madras deserve to be thanked for their hearty co-operation in the execution of the work.

I reported in the Preface to Volume I that an English-Malabar Dictionary published in 1786 was not readily available for consultations. Since then, Rev. Dr. Winkler of Tranquebar has made available to us for reference a copy of that Dictionary. It is in fact an "English-Tamil Dictionary", Malabar (Malayalam) and Tamil having been treated as one. I thank Dr. Winkler for his kindness in sparing the book for our use till the completion of the work.

Madras,
26th January 1964

A. C. CHETTIAR

EDITORIAL STAFF

DR. A. CHIDAMBARANATHA CHETTIAR, M.A., Ph.D., *Chief Editor*

SRI K. APPADURAI, M.A., L.T., *Assistant Editor*

SRI V. BALASUBRAMANIAM, B.A., *Assistant*

SMT. P. S. INDIRA, M.A., B.T., M.Litt., *Assistant*

SRI N. SANJEEVI, M.A., M.Litt., *Assistant*

ADVISORY COMMITTEE

1. Dr. M. VARADARAJAN, M.A., M.O.L., Ph.D.,
Professor of Tamil,
University of Madras

2. PROF. T. P. MEENAKSHISUNDARAM, M.A., B.L., M.O.L.,
Professor of Linguistics,
Annamalai University

3. Dr. A. C. CHETTIAR, M.A., Ph.D., M.L.C.,
Chief Editor,
English-Tamil Dictionary,
University of Madras

4. PROF. P. ALALASUNDARAM, M.A.,
Professor of Tamil,
Madras Christian College, Tambaram

5. PROF. S. ARUMUGA MUDALIAR, M.A., B.O.L., L.T.,
Principal,
Sri Palaniyandavar College of Oriental Culture,
Palani, Madurai District

PREFACE

to the First Volume

I. The Senate of the University of Madras resolved at its meeting held on the 27th October 1955 that necessary steps be taken for the compilation and publication of a standard and authoritative English-Tamil Dictionary. The Syndicate of the University formulated a scheme for the implementation of this proposal. The scheme was accepted by the University Grants Commission which undertook to bear the cost of the preparation and publication of the Dictionary to the extent of 66 per cent of the total cost during the first three years. The scheme originally sanctioned for three years had to be extended mainly because the Advisory Committee later recommended that phrases also should be included in the Dictionary.

II. The work commenced on the 16th March 1959. Certain principles for adoption by the staff were formulated by the Advisory Committee and they have been followed by the Editorial staff.

These principles are :—

(1) The Oxford English Dictionary (Concise) (1958 Edition) be taken as the basis for preparing the basic word list.

(2) Each derivative from a word is to be taken as a separate word in order to help the consultants.

(3) Phrases in frequent use are to be included.

(4) The pronunciation of the English words need not be given in Roman or in International phonetic script or in Tamil script. It would suffice to indicate the English accents without syllabification.

(5) The Anglicized pronunciation of French or Latin or German words is to be adopted wherever they need transliteration.

(6) Letters corresponding to Grantha characters are to be used wherever necessary in giving th pronunciation of words borrowed from other languages.

(7) Highly specialized technical words need not be taken up.

(8) Transliteration of the English word need not be given.

III. Ordinarily, the logical sequence of meanings has been kept in mind in giving the Tamil renderings, wherever there are more senses than one for an English word. Occasionally, however, the Editor's discretion had to be used in arranging the meanings of a particular word. Words which have the same spelling but which are different in origins or have different accents are treated as separate words for purposes of convenience.

In giving the meaning of a particular word which may occur as different parts of speech in English, the following order has been followed :— noun, pronoun, adjective, verb, adverb, preposition, conjunction, interjection.

IV. Though the Tamil language is one of the earliest of the cultivated languages, it has not been put to uses that have been necessitated during the last two centuries by the phenomenal growth in the fields of Science, Technology, Medicine, Law etc. Consequently, there are not adequate terms for expressing the ideas denoted by the English words. In this Dictionary, therefore,

attempts have been made to make the consultant understand the precise meaning of the English term very often by a descriptive meaning given for scientific and technological words. Wherever possible, the Tamil equivalents in vogue have been given. And when necessity demanded, efforts have been taken to coin Tamil expressions by keeping close to the idea expressed in the English language. In such connections, the usual method by which all languages replenish their vocabulary, namely, building up words from known prefixes and suffixes has been adopted.

V. As early as 1786 an English-Malabar Dictionary was published but copies of this Dictionary are not now available. There is, however, a copy of this in the University Library declared as "unusable." In 1844. Rev. J. Knight and Rev. L. Spaulding published an English-Tamil Dictionary. In 1936, Mr. P. Ramanathan, M.A., published his English-Tamil Dictionary upto the word "sparre." None of these is available now for sale. The stupendous task undertaken by these pioneers in this field deserves to be acknowledged and remembered. "A vocabulary in English Teloogoo and Tamil languages" of about 260 pages prepared by a late student of Mr. Lewis and Mr. T. M. Kistanasawmy Pillay published in 1851, and "A Builder's Vocabulary in English and Tamil" of about 70 pages prepared by Mr. T. R. Veeraswamy Moodeliar and published in 1880 deserve to be mentioned as other pioneering efforts in this direction.

VI. Since then, there have been great strides in the extent to which the English language has developed. This Dictionary, which is more comprehensive, takes note of such developments and covers many words not attempted in the earlier Dictionaries and gives more meanings than one that belong to a particular word. However, the consultant will have to choose and decide the meaning according to the context in which the word occurs.

VII. To *Dr. A. Lakshmanaswamy Mudaliar*, the revered Vice-Chanceller of the University, abundant thanks are due for sponsoring this work and for nurturing this department with the kindness characteristic of him.

I acknowledge with thanks the help and guidance which I received from the late Dr. R. P. Sethu Pillai (Former Professor of Tamil) and from Dr. M. Varadarajan, the present Professor of Tamil in the University.

I offer my sincere thanks to the Members of the Advisory Committee for their valuable suggestions given from time to time.

Sri R. Ramachandran of Mylapore was good enough to place with us for consultation a list of certain English words he had rendered into Tamil as a hobby. Mr. C. Rajaratna Mudaliar also furnished us with a copy of certain mathematical terms etc. rendered into Tamil by the late Mr. P. V. Manikka Naicker. I thank them for their kindness.

I am deeply indebted to the Assistant Editor, Mr. K. Appadurai and other members of the Editorial staff and the Ministerial staff for their unstinted help in the fruition of this work.

VIII. It has been decided to publish the Dictionary in three volumes and to present all the volumes together on the completion of the entire work. This volume is the first in the series. Rathnam Press Madras, who took up this work in January 1961, deserve our thanks for their hearty co-operation.

MADRAS-5,
Dated 26-1-1963

A. C. CHETTIAR
Chief Editor

HINTS FOR USING THE DICTIONARY

(1) Words in the Dictionary have been alphabetically arranged.

(2) A word having the same form in its many parts of speech is treated as one word if its etymons are the same. (E.g. double, *n.* இருமடங்கு; *a.* இரட்டிப்பான; *v.* இரட்டிப்பாக்கு; *adv.* இருமடங்காக.)

(3) If the same word-form has more origins than one, it is treated as so many separate words and is serially numbered. (E.g. coil[1], *n.* கயிற்றுச்சுருள்; coil[2], *n.* குழப்பம்.)

(4) Whenever the word-form varies in accentuation, the word is marked as [1], [2], [3], etc. in the series. (E.g. es'cort[1], *n*; escort'[2], *v.*)

(5) Accents are marked as in authoritative English Dictionaries like the Concise Oxford Dictionary. But in the case of French loan words accents are not marked.

(6) Though the tracing of words etymologically to the language of origin is out of place in a bi-lingual dictionary, foreign loan words of importance inclusive of loans from Tamil and other Indian languages and Eastern languages are shown as such with appropriate abbreviations [like த. for Tamil (anicut), இ. for Hindi (dhal), ச. for Sanskrit (deodar), துரு. for Turkish (bairam), அரா. for Arabic (bulbul) etc., etc.]

(7) Words printed in italics indicate that they have been treated as foreign words in English Dictionaries. For instance, *double entendre*, (பிர. for French) *n.* இருபொருட் சிலேடை; *brio*, (இத். for Italian) *n.* கிளர்ச்சி: *caldarium*, (ல. for Latin) *n.* சுடுநீரிற் குளிப்பதற்கான அறை.

(8) The meanings of technical words are given with indications of the field to which the word belongs. E.g. cell, மின். for மின்சாரம் (Electricity); உயி. for உயிர்நூல் (Biology); cribriform, தாவ. for தாவரவியல் (Botany); affirm, சட். for சட்டம் (Legal); aetiology, மரு. for மருத்துவம் (Medical); crypt, வில. for விலங்குநூல் (Zoology) etc. etc.

(9) A comma is used after every single entry of meaning but a semicolon is employed to show that a different sense or a different shade of meaning follows. (E.g. cynical, நாய்க்குணம் படைத்த, எரிந்துவிழுகிற; குற்றம் நாடுகிற etc. etc.,).

(10) Derivatives of a word are treated as separate words and are placed in the alphabetical order. (E.g. clear, clearage, clearnance etc.)

(11) Compound words connected ordinarily with a hyphen are treated as separate words and are given in the alphabetical order. (E.g. earth-born, earth-fed, earth-house etc.)

Occasionally, however, groups of words without a hypen are also shown as separate words if they are important. (E.g. Chiltern Hundreds)

(12) English verbs are rendered into Tamil as verbal roots which are identical with the imperative singular forms in the language. (E.g. deny - மறு; deploy - மடிப்பவிழ்; abstain - விட்டிரு, தவிர்.)

(13) Phrases are arranged alphabetically within the bounds of a word and are shown at the end of the main word with an abbreviation enclosed in brackets. [E.g. (தொ.) call attention to, call to mind, call up, etc.]

(14) Grammatical forms with internal changes like bear - bore, can - could are treated in their alphabetical order.

Regular grammatical forms such as plurals in -s or -es, past tenses and past participles in -ed or -t, present participles in -ing, abverbs in -ly, comparative and superlative forms in -er and -est, and nouns in -ness, -ment, -ship etc. are generally not given, unless such forms are in any way important or peculiar.

ஆங்கிலம்–தமிழ்ச் சொற்களஞ்சியம்

2 - ஆம் தொகுதி

தலைமைப் பதிப்பாசிரியர் :

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
எம்.ஏ., எம் எல்.சி.,

துணைவேந்தர்

டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியார்
எம்.டி., டி.சி.எல்., டி.லிட்.,
டி.எஸ்.சி., எம்.எல் சி.,

அவர்கள்

எழுதிய ஆங்கில முகவுரையுடன் வெளிவருவது



சென்னைப் பல்கலைக்கழகம்

1964

முன்னுரை

1955 அக்டோபர் 27-ஆம் நாளன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட்டு கூட்டத்தில் தக்கதோர் ஆங்கிலம்-தமிழ்ச்சொற்களஞ்சியம் தொகுத்து வெளியிடுதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேறிற்று. இதனை நிறைவேற்றுதற்காகப் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட்டு ஒரு திட்டத்தை வகுத்தது. இந்திய பல்கலைக்கழக மானியக் குழுவினர் இத்திட்டத்தை ஒப்புக்கொண்டு, இச் சொற்களஞ்சியத்தைத் தயார்செய்து வெளியிடுதற்காகும் செலவினில் மூன்றில் இரண்டு பங்கு ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தனர். இச்சொற்களஞ்சியத்தின் ஆலோசனைக் குழுவினர் ஆங்கிலச் சொற்களை மாத்திரமல்லாமல் ஆங்கிலச் சொற்றொடர்களையும் இப்பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பின்னர்ப் பரிந்துரைத்த முக்கிய காரணத்தால் இத்திட்டம் முதலில் மூன்றாண்டிற்கு என வகுக்கப்பட்டது தொடர்ந்து நீட்டிக்கப்படுவதாயிற்று.

(2) 1959 மார்ச்சு 16-ஆந் தேதி வேலை தொடங்கிற்று. பதிப்பாசிரியப் பணியினர் மேற்கொள்ளவேண்டிய சில கொள்கைகளை ஆலோசனைக் குழுவினர் வகுத்துத் தந்தனர். அவற்றைப் பதிப்பாசிரியப் பணியினர் பின்பற்றியுள்ளனர். அக் கொள்கைகளாவன :—

1. 1958-இல் வெளியான ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் (சுருக்க) அகராதியை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலச் சொற்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படவேண்டும்.
2. சொற்களஞ்சியத்தை நோக்குவோருக்கு உதவியாக இருக்கும்பொருட்டுச் சொல்லினின்று விரியும் ஒவ்வொரு வடிவமும் தனித்தனிச் சொல்லாக எடுத்துக்காட்டப்பட வேண்டும்.
3. பெருவழக்கிலுள்ள சொற்றொடர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.
4. ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பினை ஆங்கில எழுத்திலோ தமிழ் எழுத்திலோ காட்ட வேண்டுவதில்லை. ஆங்கில அசையழுத்தங்களை மாத்திரம் காட்டுவது போதுமானது.
5. பிரஞ்சு, லத்தீன், செர்மன் ஆகிய மொழிகளிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்துள்ள சொற்களின் உச்சரிப்பு முறை ஆங்கில உச்சரிப்பு முறையாகவே இருக்கலாம்.
6. பிற மொழிகளிலிருந்து கடன்வாங்கப்பட்டுள்ள சொற்களை எழுத்திற் காட்டும்பொழுது தமிழ் நெடுங்கணக்கின் கிரந்த எழுத்துக்களினால் வேண்டியவிடத்துக் காட்டவேண்டும்.
7. சிறப்புரிமை பெற்ற கலைச்சொற்களை இச்சொற்களஞ்சியத்தில் எடுத்துக்கொள்ள வேண்டா.
8. ஆங்கிலச் சொல்லுக்கு நேராகத் தமிழ் எழுத்தில் அச்சொல்லை எழுத வேண்டுவதில்லை.

(3) ஒரு பொருளுக்கு மேற்பட்ட பொருள்களையுடைய ஆங்கிலச் சொல்லின் அர்த்தத்தினைத் தரும்பொழுது தொடர்புடைமை பொதுவாக மனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், ஒவ்வொரு சொல்லின் வெவ்வேறு பொருள்களை வரிசைப்படுத்துதலிற் பதிப்பாசிரியரின் தேர்வுரிமை கைக்கொள்ளப் பட்டுள்ளது. எழுத்தினால் ஒத்திருந்து தோற்றுவாய் காரணமாக வேறுபடுஞ் சொற்கள் வெவ்வேறு சொற்களாகவே கொள்ளப்பட்டுள்ளன. அசையழுத்தத்தான் வேறுபட்ட சொற்களும் வசதி காரணமாக வெவ்வேறாகவே காட்டப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தில் வெவ்வேறு இலக்கண உறுப்புக்களாக அமைந்துள்ள ஒரே சொல்லினை எடுத்தாளும்பொழுது, பெயர்ச்சொல், மறுபெயர்ச்சொல், பெயருரிச்சொல், வினைச்சொல், வினையுரிச்சொல், முன்னீடு, இணைப்புச்சொல், வியப்பிடைச்சொல் என்றவாறு வரிசை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) செப்பனிடப்பட்டுத் திருத்தமுற்ற உலக மொழிகள்தம்மில் தமிழ்மொழி மிக்க பழமை வாய்ந்ததொன்று. எனினும், சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம் முதலிய துறைகளில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய வளர்ச்சிக்குப் பொருந்திய வகையில் அது பயன்படுத்தப்படவில்லை. ஆதலால், ஆங்கிலச் சொற்கள் குறிக்கும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கப் போதுமான பதங்கள் இப்பொழுதில்லை. இக்காரணத்தால், நுணங்கியல்துறைச் சொற்களையும் தொழில்நுட்பத்துறைச் சொற்களையும் தெளிவுபட மக்கள் உணர்ந்துகொள்ளுதற்காகச் சில நேரங்களில் விளக்கமான பொருள்கள் தரப்பட்டுள்ளன. இயன்றவிடங்களில், வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவசியமான இடங்களில், தமிழ்ச்சொற்கள் புதியனவாக அமைக்கப்

பட்டுள்ளன. இவ்வாறு, முன்னரே தாம் அறிந்துள்ள பகுதிகளையும் பிற சொற்கூறுகளையும் சேர்த்தமைத்துப் புதுச்சொற்களைப் படைத்துக்கொண்டு தத்தம் சொற்களஞ்சியத்தை வளம்படச் செய்துகொள்வது எல்லா மொழிகளிலும் வழக்கமாக உள்ளது. இம்முறை இச்சொற்களஞ்சியத்திலும் கையாளப்பட்டுள்ளது.

(5) 1786-இல் ஓர் ஆங்கில - மலபார் அகராதி வெளிவந்ததெனினும், அவ்வகராதியின் படிகள் இப்பொழுது கிடைக்கவில்லை. சென்னைப் பல்கலைக்கழக நூனிலையத்திற் பயன்படுத்த முடியாத நிலையில் ஒருபடி காட்சிக்கு உளது. 1844-இல் அருட்டிரு. ஜே. நைட் என்பாரும் அருட்டிரு. எல். ஸ்பால்டிங் என்பாரும் வெளியிட்டதோர் ஆங்கிலம் - தமிழகராதி உண்டு. 1936-இல் "A" முதல் "sparre" என்ற சொல்வரையில் திரு. பி. இராமநாதன் அவர்கள் ஓர் ஆங்கிலம் - தமிழ் அகராதி வெளிப்படுத்தினர். இவற்றில் எதுவும் இப்பொழுது விலைக்குக் கிடைத்தலில்லை. இம்முன்னோடி யார்கள் மேற்கொண்ட மாபெரும் பணி நினைவில் வைக்கத்தக்கதொன்று. 1851-இல் திரு. லூவிஸ் என்பாருடைய மாணவரும், திரு. டி. எம். கிருட்டினசாமி பிள்ளையும் ஒருங்கேகூடி 260 பக்கத்தில் வெளியிட்ட "இங்கிலீஷ் - தெலுங்கு - தமிழ்ச் சொற்கள் தொகுப்பு" என்பதும், 1880-இல் திரு. டி. எஸ். வீராசாமி முதலியார் 70 பக்க அளவில் வெளியிட்ட "கொத்தனரது ஆங்கிலத் தமிழ்ச்சொல் அட்டவணை" என்பதும் பிற முன்னோடி முயற்சிகளாகக் குறிப்பிடத்தக்கவை.

(6) ஆங்கிலமொழி மிகப்பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளமை யாவரும் அறிந்தது. முந்திய அகராதிகளிற் சேர்க்கப்படாத பல ஆங்கிலச் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் இச் சொற்களஞ்சியத்திற் காணலாம். அன்றியும், முந்திய அகராதிகளில் ஒவ்வொரு சொல்லுக்குந் தரப் பட்டிருக்கும் பொருள்களைவிட மிக்க எண்ணிக்கையுடைய பொருள்களை அவ்வச்சொல் பெற்றிருக்கு மாயின், அவற்றையும் இதனுள் தந்துள்ள வகையான் இச்சொற்களஞ்சியம் முன்னைய அகராதிகளைக் காட்டிலும் விரிவுடையது. சில நேரங்களில், இடம்நோக்கி வேண்டிய பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு இச்சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்துவோருடையதாகிறது.

(7) இப்பணியைத் தோற்றுவித்து, இத்துறையிற் பணியாற்றுவோரிடத்துத் தமது பெருந்தகை மைக்கேற்ப அன்புகாட்டிவரும் மதிப்புமிக்க துணைவேந்தர் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியார் அவர்களுக்கு மிக்க பெருநன்றி உரியது.

முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் (மறைந்த) டாக்டர் ரா. பி. சேதுபிள்ளை அவர்களும், இந்நாள் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் அவர்களும் உதவியாகவும் வழித்துணையாகவும் உள்ளமை பொருட்டு நன்றியுடையேன்.

இந்நூலின் ஆலோசனைக் குழுவினராக அமர்ந்து அடிக்கடி நல்ல கருத்துரைகளை வழங்கி யுதவிய அறிஞர்கள் திருவாளர்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், அருட்டிரு. தனிநாயகர், பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், சரவண ஆறுமுக முதலியார் ஆகியோருக்கு என் உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாப்பூர் திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தாம் பொழுதுபோக்காகத் தொகுத்திருந்த சில ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களை இப் பதிப்பாசிரியர் பார்வைக்கு அனுப்பிவைத்திருந்தார். முன்னர்ச் சென்னை அரசின் மேற்பார்வைப் பொறியாளராக இருந்த திரு. பா. வே. மாணிக்க நாயகர் அவர்களாற் கணக்கியல் முதலிய விஞ்ஞானத் துறைகளுக்காக இயற்றப்பட்ட தமிழ்க்கலைச் சொற்களின் பட்டியல் ஒன்றைத் திரு. சி. இராசரத்தின முதலியார் அன்புகூர்ந்து கொடுத்துதவினர். அப்பட்டியலும் பதிப் பாசிரியப் பணியினருக்குச் சில வேளைகளிற் பயன்பட்டது. அவர்களது அன்புடைமைக்கு நன்றி உரியது.

உதவிப் பதிப்பாசிரியர் திரு. கா. அப்பாத்துரை அவர்களுக்கும், பதிப்பாசிரியப் பணியில் என்னுடன் பொறுப்பேற்றுப் பங்குகொண்டு என்னோடு அலுவல் இயற்றிய ஏனைய உதவியாளர்கள் திரு. வல்லை. பாலசுப்பிரமணியம், (மறைந்த) திரு. டி. ஏ. வி. நாதன், திருவாட்டி பி. எஸ். இந்திரா, திரு. ஏ. சகதீசன், திரு. ந. சஞ்சீவி ஆகியோருக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இப்பணியைச் செவ்வனே முடித்தற்கு உதவிய இவ்வலுவலக எழுத்தர்களுக்கும் என் நன்றி உரியது.

(8) இச்சொற்களஞ்சியத்தை மூன்று பாகங்களாக வெளிப்படுத்துவதென்றும் முழு வேலை முடிந்ததும் மூன்று பாகங்களையும் சேர்த்து ஒரு தொகுதியாக வெளிப்படுத்துவதென்றும் முடிவுகள் செய்யப் பட்டுள்ளன. இப்பணியினை 1961 ஜனவரியில் தொடங்கிய சென்னை இரத்தினம் அச்சகத்தாரது மனமுவந்த ஒத்துழைப்பிற்கு மிக்க நன்றி.

சென்னை-5,
26-1-1963

அ. சிதம்பரநாதன்
தலைமைப் பதிப்பாசிரியர்

இப்புத்தகத்தைப்
பயன்படுத்துவோருக்குச் சில குறிப்புகள் :

(1) ஆங்கில அகர வரிசையிற் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(2) ஆங்கில எழுத்துக்களால் ஒரே வடிவமுடைய சொல் வெவ்வேறு உறுப்பிலக்கணம் உடையதாயினும், ஒரே சொல்லாக எடுத்துக்கொள்ளப்பட்டுப் பொருள் தரப்பட்டுள்ளது. ஒரே சொல் பெயராகவும் வினையாகவும் இருந்தால் அச்சொல்லுக்குரிய பத்தியில் n. பெயர்ச்சொல் என்றும், v. வினைச்சொல் என்றும் காட்டப்பட்டுப் பொருள்கள் தரப்பட்டுள்ளன. (எ-டு. double, n. இருமடங்கு; a. இரட்டிப்பான; v. இரட்டிப்பாக்கு; adv. இருமடங்காக.)

(3) ஆங்கிலச் சொல் ஒரே எழுத்துவடிவம் உடையதாயினும், வெவ்வேறு தோற்றுவாய்கள் உடையதாக இருப்பின், வெவ்வேறு சொற்களாக மதிக்கப்பட்டு மேலே எண்கள் இடப்பட்டுள்ளன. (எ-டு. coil[1], n. கயிற்றுச்சுருள் ; coil[2], n. குழப்பம்.)

(4) ஆங்கிலச் சொல் அசையழுத்த வகையான் வேறுபடும் இடங்களில் அச்சொல்[1], [2], [3], முதலிய எண்கள் கொடுத்துக் காட்டப்பட்டுள்ளது. (எ-டு. es'cort[1], n., escort'[2], v.)

(5) ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி முதலிய அளவைச் சொற்களஞ்சியங்களினுடைய துணைக் கொண்டு அசையழுத்தங்கள் குறியிடப்பட்டுள்ளன. எனினும், பிரஞ்சு சொற்களின் அசையழுத்தங்கள் காட்டப்படவில்லை.

(6) இருமொழி அகராதிகளில் அடிவேர்களினுடைய தொடர்புகள் காட்டப்படுவது வழக்கமில்லையாயினும், தமிழ் முதலிய இந்திய மொழிகளிலிருந்தும், ஏனைய கீழ்த்திசை மொழிகளிலிருந்தும் ஆங்கிலம் கடன் வாங்கியுள்ள முக்கிய சொற்களின்பின் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன. [தமிழ் என்பதைக் காட்ட (த.); சம்ஸ்கிருதம் என்பதைக் காட்ட (ச.); அராபிக் என்பதைக் காட்ட (அரா.) போன்ற சுருக்கங்கள் கையாளப்பட்டுள்ளன. பிற சுருக்கங்களை அட்டவணையிற் காண்க.]

(7) சாய்வெழுத்திற் காட்டப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்கள் ஆங்கில அகராதிகளில் அன்னிய மொழிச் சொற்களாக மதிக்கப்பட்டுள்ளவை. [எ-டு. *double entendre,* (பிர. = French) n. இருபொருட் சிலேடை; *brio,* (இத். = Italian) n. கிளர்ச்சி; *caldarium,* (ல. = Latin, n. சுடுநீரிற் குளிப்பதற்கான அறை.]

(8) கலைச்சொற்கள் எவ்வெக் கலைத்துறைக்குச் சிறப்பாகப் பொருந்தியன என்பது அவ்வவ் விடத்துச் சில சுருக்கக் குறியீடுகளாற் காட்டப்பட்டுள்ளன. [எ-டு. cell, மின். = மின்சாரம் (Electricity); உயி. = உயிர்நூல் (Biology); cribriform, தாவ. = தாவரவியல் (Botany); affirm. சட். = சட்டம் (Legal); aetiology, மரு. = மருத்துவம் (Medical); crypt, வில. = விலங்குநூல் (Zoology.)]

(9) சொல்லின் பொருள் ஒவ்வொன்றும் காட்டப்பட்டவுடன் ஒவ்வொரு காற்புள்ளி இடப்பட்டுள்ளது. பின்வரும் பொருள் முந்திய பொருளின் வேறுபட்டதாக அல்லது சிறிது வேறு

பட்ட சாயலுடையதாக உள்ள இடங்களில் அரைப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது. (எ-டு. cynical, நாய்க்குணம் படைத்த, எரிந்து விழுகிற; குற்றம் நாடுகிற).

(10) ஆங்கிலச் சொல் ஒன்றிலிருந்து பிரிந்து விரிவுற்ற பல்வேறு வடிவங்கள் தனித்தனிச் சொற்களாக மதிக்கப்பட்டு அகர வரிசைப்படி காட்டப்பட்டுள்ளன. (எ-டு. clear, clearage, clearance).

(11) சிறு இணைப்புக்கோடு உடைய ஆங்கிலத் தொகைச்சொற்கள் தனித்தனிச் சொற்களாகக் கொள்ளப்பட்டு அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. (எ-டு. earth-born, earth-fed, earth-house).

சில நேரங்களில் சிறு இணைப்புக்கோடு இல்லாத சொற்றொகுதிகளும் தத்தம் சிறப்புடைமை காரணமாக வெவ்வேறு சொற்களாகக் காட்டப்பட்டுள்ளன. (எ-டு. Chiltern Hundreds).

(12) ஆங்கில வினைச்சொற்களுக்குப் பொருள் தரும்பொழுது முன்னிலையேவல் வடிவங்கள் கையாளப்பட்டுள்ளன. (எ-டு. deny - மறு; deploy - மடிப்பவிழ்; abstain - விட்டிரு, தவிர்; disagree - இசையாதிரு).

(13) ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லின்கீழே அதனையொட்டிய சொற்றொடர்கள் அகர வரிசைப்படி தரப்பட்டுள்ளன. [எ-டு. (தொ.) call attention to, call to mind, call up.]

(14) வினைக்கூற்றின் வேறுபாடுகளைக் காட்டுதற்காகச் சொல்லின் உள்ளீடாக மாறுதல்களைப் பெறும் ஆங்கிலச் சொற்கள் அகர வரிசையின்படியே அமைக்கப்பட்டுள்ளன. (எ-டு. bear-bore, can - could).

வழக்கமாக மரபுப்படி முடியும் பன்மை வடிவங்களும், கால வடிவங்களும், இன்ன பிற வடிவங்களும் பொதுவாகத் தனித்தனியே காட்டப்பட்டில; சிறப்பு நோக்கிச் சில இடங்களில் மாத்திரம் காட்டப்பட்டுள்ளன.

ENGLISH ABBREVIATIONS

a.	Adjective
adv.	Adverb
art.	Article
conj.	Conjunction
fem.	Feminine gender
f.t.	Future tense
int.	Interjection
masc.	Masculine gender
n.	Noun
pl.	Plural
poss.pron.	Possessive Pronoun
p.p.	Past participle
pref.	Prefix
prep.	Preposition
pron.	Pronoun
pr.t.	Present tense
p.t.	Past tense
p.v.	Passive voice
refl.v.	Reflexive verb
rel.a.	Relative adjective
rel.adv.	Relative adverb
rel.pron.	Relative pronoun
sing.	Singular
v.	Verb

TAMIL ABBREVIATIONS

சுருக்க வடிவங்கள்

அச்சு.	அச்சுத்தொழில்	Printing
அர.	அரசியல்	Politics
அரா.	அராபிய மொழி	Arabic
அரு.	அருவழக்கு	Rare usage
அள.	அளவையியல்	Logic
அற.	அறநூல்	Ethics
இ.	இந்தி, இந்துஸ்தானி	Hindi, Hindustani
இசை.	இசைத்துறை	Music
இத்.	இத்தாலிய மொழி	Italian
இ-ப.	இயற்படி	Positive degree
இய.	இயற்பியல்	Physics
இயந்.	இயந்திரத்துறை	Mechanics
இலக்.	இலக்கணம்	Grammar
இழி.	இழிவழக்கு	Slang
இறை.	இறையியல்	Theology
உட.	உடல் நூல்	Physiology
உ-ப.	உறழ்படி	Comparative degree
உயி.	உயிர் நூல்	Biology
உரு.	உருது	Urdu
உருவி.	உருவியல்	Mensuration
உலோ.	உலோகத்தொழிலியல்	Metallurgy
உள்.	உள்ளமைப்பியல்	Anatomy
உள.	உளநூல்	Psychology
எகி.	எகிப்திய மொழி	Egyptian
எ-டு.	எடுத்துக்காட்டு	Example
எபி.	எபிரேய மொழி	Hebrew
எல்.	எல்லை அளவை	Survey
ஏ-ப.	ஏற்றுயர்படி	Superlative degree
ஒலி.	ஒலியியல்	Phonetics
க-க.	கட்டிடக்கலை	Architecture
கட்.	கட்டியம்	Heraldry
கண.	கணக்கியல்	Mathematics
கப்.	கப்பல்துறை	Nautical
கரு.	கருவியல், கரு உயிரியல்	Embryology
கனி.	கனிப்பொருளாராய்ச்சி	Mineralogy
கிரே.	கிரேக்கம்	Greek
ச.	சமஸ்கிருதம்	Sanskrit
சட்.	சட்டத்துறை	Legal
சித்.	சித்திரம்	Painting
சுரங்.	சுரங்கத்துறை	Mining
சுரு.	சுருக்கம்	Abbreviation
சு-வ.	சுருக்கவடிவம்	Abbreviated form
செது.	செதுக்குருவக்கலை	Sculpture
செய்.	செய்யுள் வழக்கு	Poetical usage
செர்.	செர்மன் மொழி	German
சொல்.	சொற்கோப்புக்கலை	Rhetoric
சோதி.	சோதிட நூல்	Astrology

டச்.	டச்சு	Dutch
டே.	டேனிஷ்	Danish
த.	தமிழ்	Tamil
தாவ.	தாவரவியல்	Botany
துரு.	துருக்கி	Turkey ; Turkish
தொ.	தொடர்	Phrase
தொல்.	தொல்பொருளாய்வு	Archaeology
நகைச்.	நகைச்சுவை	Jocular
நி-ப.	நிழற்படக்கலை	Photography
நில.	நிலவியல்	Geography
படை.	படைத்துறை	Military
பிர.	பிரஞ்சு	French
பூச்.	பூச்சிநூல்	Entomology
பெர்.	பெர்சியன் மொழி	Persian
பெரு.	பெரும்பொருளியல்	Theosophy
பெரூ.	பெரூவிய மொழி	Peruvian
பே-வ.	பேச்சு வழக்கு	Colloquial
பொரு.	பொருளியல்	Economics
பொறி.	பொறியியல்	Engineering
போர்., போர்ச்.	போர்ச்சுகீசிய மொழி ; போர்ச்சுகல்	Portuguese ; Portugal
ம.	மலையாளம்	Malayalam
மண்.	மண் நூல்	Geology
மரு.	மருத்துவம்	Medical
மலே.	மலேயா மொழி	Malayan
மால்.	மால்டாதீவு மொழி	Maltese
மின்.	மின்சாரம்	Electricity
மெய்.	மெய்விளக்கியல்	Philosophy
மொழி.	மொழிநூல்	Philology
யாப்.	யாப்பியல்	Prosody
ருசிய.	ருசியா ; ருசியமொழி	Russia ; Russian
ரோ.	ரோமன்ஷ் மொழி	Romansh
ல.	லத்தீன்	Latin
வங்.	வங்கமொழி	Bengali
வடி.	வடிவியல்	Geometry
வர.	வரலாறு	History
வான்.	வானியல்	Astronomy
வானிலை.	வானிலைநூல்	Meteorology
விசை.	விசையியக்கவியல்	Dynamics
வில.	விலங்குநூல்	Zoology
விவி.	விவிலியநூல் வழக்கு	Biblical usage
வேதி.	வேதியியல்	Chemistry
ஸ்கா.	ஸ்காத்லாந்துமொழி	Scottish
ஸ்பா.	ஸ்பானிய மொழி	Spanish
ஸ்வீ.	ஸ்வீடிஷ்	Swedish
ஜப்.	ஜப்பானிய மொழி	Japanese

Gab, *n.* பிதற்றுரை ; உளறல், பொருளில் உரை ; (தொ.) gift of the gab, பேச்சுவன்மை ; வம்பளப்பு.

gab'ardine, *n.* கம்பளி உள்வரி இணைவுடைய பருத்தி அல்லது பட்டுத்துணிவகை ; மழைகாப்புச் சட்டைக்குரிய துணிவகை.

gab'ble, *n.* பிதற்றல், உளறல் ; விளங்காப் பேச்சு ; *v.* வாத்துப்போலக் கத்து ; சளசளவென்று பேசு ; தெளிவில்லாமற் பேசு ; இணைப்பில்லாமற் பேசு ; உரத்தகுரலுடன் கடகடவென்று படி ; மிகுவிரைவாகப் பேசு.

gab'bro, *n.* பளிங்குருவான எரிமலைப்படிகப் பாறைவகை.

gabelle', *n.* பிரான்சு நாட்டில் புரட்சிக்காலத்துக்கு முற்பட்ட உப்புவரி ; வரி.

gab'erdine, *n.*=gabardine.

gab'ion, *n.* அரண் கட்டுமானப் பாளச்சட்டம், அரண் கட்டுதலில் அல்லது பொறியமைத்தலில் மண்ணால் நிறைக்கப்பட்ட பிரம்பால் அல்லது உலோகப்பட்டைகளால் ஆன நீள் உருளைச்சட்டம்.

gabionade', *n.* அரண் கட்டுமானப் பாளச்சட்டங்களின் வரிசை.

ga'ble, *n.* மஞ்சடைப்பு, கன்ன முக்கோணச்சுவர் ; மஞ்சடைப்பு முகடுடைய சுவர்; கதவு பலகணிக்குரிய மஞ்சடைப்பு வடிவான மேற்கட்டி.

ga'ble-end, *n.* கட்டிடக் கோடியிலுள்ள மஞ்சடைப்புச் சுவர்.

ga'blet, *n.* சிறு முக்கோணச் சுவர்முகடு.

gab'y, *n.* பேதை.

gad[1], *n.* வீணாக அலைந்துதிரிதல் ; *v.* வீணாக அலைந்துதிரி, சோம்பித்திரி ; படை வகுப்பிலிருந்து அணிமீறிச்சென்று அலை.

gad[2], *int.* அட கடவுளே ! கடவுளாணை !

gad'about, gadd'er, *n.* சுற்றித்திரிபவர்.

gadd'i, (இ.) *n.* தவிசு, அரியணை ; அரசுநிலை.

gad'-fly, *n.* உண்ணி; தொந்தரவு கொடுப்பவர், எரிச்சலூட்டுபவர் ; திடீர்த்தூண்டுதல்.

gadg'et, *n.* இயந்திர நுணுக்கப் பகுதி; சிறு பொறியமைப்பு; சிறு சூழ்ச்சித்திறம்.

Gadhel'ic, *n.* ஸ்காத்லாந்து-அயர்லாந்து-மேன் தீவு (Isle of Man) ஆகிய பகுதிகளிலுள்ள கெல்டிக் இனத்தவர் மொழி ; *a.* ஸ்காத்லாந்து-அயர்லாந்து-மேன் தீவு ஆகிய பகுதிகளிலுள்ள கெல்டிக் இனத்தவருக்குரிய.

gad'i, (இ.) *n.*=gaddi.

gad'oid, *n.* கடல்மீன் இனப்பிரிவு; *a.* கடல்மீன் இனப்பிரிவு சார்ந்த.

gadroon's, *n. pl.* விளிம்பு ஒப்பனைக்குரிய உட்குவிந்த வளைவு வரிசை.

Gael, *n.* ஸ்காத்லாந்து நாட்டின் பழங்குடி மக்கள் இனத்தவர்.

Gael'ic, *n.* ஸ்காத்லாந்து நாட்டின் கெல்டிக் இனத்தவர் மொழி ; ஸ்காத்லாந்து-அயர்லாந்து-மேன் தீவு (Isle of Man) ஆகிய இடங்களிலுள்ள கெல்டிக் இனத்தவர்களின் மொழி; *a.* ஸ்காத்லாந்து நாட்டின் கெல்டிக் இனத்தைச் சார்ந்த ; ஸ்காத்லாந்து நாட்டுக் கெல்டிக் இனத்தவர் மொழி சார்ந்த; ஸ்காத்லாந்து-அயர்லாந்து-மேன் தீவு ஆகிய இடங்களிலுள்ள கெல்டிக் இனத்தவர்களைச் சார்ந்த.

gaff[1], *n.* மீன்குத்தும் ஈட்டி ; கோல் ; பாய்மரத்தின் மேற்புறத்திலுள்ள நீள்கம்பு ; *v.* இரும்புக்கொக்கித் தடியால் மீனைப் பற்று.

gaff[2], *n.* மறை திட்டம், சதி ; (தொ.) blow the gaff, சதித்திட்டத்தை வெளியாக்கு.

gaff[3], *n.* எளிய அரங்கு.

gaffe, *n.* பெருந்தவறு ; ஆராயாத செயல் அல்லது கூற்று.

gaff'er, *n.* நாட்டுப்புறக் கிழவர் ; பணியர் தொகுதியின் தலைமைப் பொறுப்பாளி ; முதிய ஆண்.

gag, *n.* வாயடைப்பு ; வாய்க்கட்டு, வாய் திறந்தபடியே இருக்கும்படியாகப் பல்மருத்துவர் இடும் பொறியமைப்பு ; சட்டமன்றத்தின் பேச்சு நிறுத்த ஆணை ; நாடக உரையாடலிடையே நடிகர் இடையீட்டுரை ; இசை நாடக நிகழ்ச்சிகளிடையே திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட நகைத்திறத் துணுக்கு; கேலிக்கூத்து; மோசடி; *v.* வாயடைப்புச் செய்; பேச்சடக்கு ; பேச்சுரிமை அடக்கு ; சட்ட மன்றத்திற் பேச்சு நிறுத்த ஆணையிடு ; நாடக உரையாடலிடையே இடையிட்டுப்பேசித் தடங்கல்செய் ; குதிரைக்கு வாய்ப்பூட்டிடு ; ஏமாற்று ; ஏமாற்றிப்பழகு ; மூச்சுமுட்டு ; ஓங்கரி, குமட்டல் கொள்ளு.

gag'-bit, *n.* குதிரைகளை ஒடுக்கிப் பழக்குவதற்குப் பயன்படுத்தப்படும் வாய்ப்பூட்டுக் கருவி.

gage[1], *n.* அடகுப் பொருள்; மற்போர் அழைப்புக்காக எறியப்படும் கையுறை; *v.* அடகு வை, பணயம் வை, பந்தயம் வை.

gage[2], *n.*=gauge.

gage[3], *n.* மணமுள்ள பச்சை முந்திரி வற்றல்.

gag'gle, *n.* வாத்துக்களின் திரள்; பெண்டிர்கும்பு; *v.* வாத்து வகையில் கத்து, கூச்சலிடு, கொக்கரி.

gag'-man, *n.* இசை நாடக நிகழ்ச்சிகளிடையே திட்டமிட்ட நகைத்திறத் துணுக்குகளை அமைப்பவர்.

gag'-rein, *n.* குதிரைகளைப் பயிற்சிசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் வாய்ப்பூட்டுக் கருவிகளமைந்த வலுவுள்ள கடிவாள வார்.

gai'eties, *n. pl.* களியாட்டங்கள், வேடிக்கை விளையாட்டுக்கள் ; விழாக்காலம் ; விழா நிகழ்ச்சிகள் ; அவிர்மை.

gai'ety, *n.* மகிழ்ச்சி ; களிகிளர்ச்சி.

Gaik'war, *n.* இந்தியாவில் பரோடா நாட்டின் தலைவர்.

gail'y, *adv.* மகிழ்வொடு.

gain, *n.* பேறு; ஊதியம்; இலாபம்; செல்வப்பேறு, உடைமைப் பெருக்கம், வருவாய்ப்பெருக்கம்; *v.* பெறு; ஈட்டு; ஆதாயம் பெறு ; வெற்றியடை, கெலி, கெலிப்புப் புள்ளிகள் பெறு ; (தொ.) gain ground, முன்னேறு ; gain ground upon, நெருங்குறு ; gain on, gain upon, கடந்துசெல் ; gain the ear of, சொற்செல்வாக்குப் பெறு ; gain the upper hand, மேற்படு, வெற்றி எய்தப்பெறு; gain time, சாக்குப்போக்குக்களால் காலநீட்டிப்புப் பெறு.

gain'ful, *a.* ஊதிய மிகுதியுடைய ; ஆதாயமுள்ள.

gain'ings, *n. pl.* ஆதாயம்; ஈட்டம்.

gains, *n. pl.* ஈட்டிய பொருள்கள்; ஊதிய வகைகள்; பெறு பலன்கள்.

gainsaid', *v.* gainsay என்பதன் இறந்தகால முடிவெச்சம்.

gainsay', *v.* மறுத்துப்பேசு, மறு.

gainst, 'gainst, *prep.*=against.

gait, *n.* இயலுந்திறம், நடக்கும் பாணி.

gait'er, *n.* காலுறை; (தொ.) ready to the last gaiter button, முழு ஏற்பாட்டோடு.

gal'a, *n.* மகிழ்வு ; (தொ.) gala day, மகிழ்ச்சி விழா நாள் ; gala dress, மகிழ்வுநாள் உடுப்பு.

galac'tic, *a.* வானிலுள்ள பால்மண்டலத்தைச் சேர்ந்த, வான் கங்கை சார்ந்த.

galac'togogue, *n.* பால்சுரப்பு மருந்து.

galactom'eter, *n.* பாலியல்புமானி, பால் ஒப்புச்செறிவுமானி.

galactorrhoe'a, *n.* மிகு பால்சுரப்பு.

galac'tose, *n.* பாற்சர்க்கரைப்பொருள்.

gal'antine, *n.* சுவையூட்டப்பட்டுச் சமைத்த வெள்ளை இறைச்சிக் குளிர்ப்பு.

galan'ty show, *n.* பொம்மை நிழலாட்டம்.

galate'a, *n.* கோடுபோட்ட உயர்தரப் பருத்தியாடைத் துணி.

gal'axy, *n.* வானிலுள்ள பால்மண்டலம், வான்கங்கை; அழகியர் குழாம்; சிறந்தோர் கூட்டம், அறிவாளிகள் குழாம்.

gal'banum, *n.* பாரசீக நாட்டு மரத்திலிருந்து எடுக்கப்படும் பிசின்வகை.

gale[1], *n.* கடுங்காற்று; (கப்.) புயல்; (செய்.) இளமென் காற்று.

gale[2], *n.* காலந்தக வாடகை செலுத்துதல்; (தொ.) hanging gale, வாடகைப் பாக்கி.

gale[3], *n.* சதுப்புநில மணமலர்ச் செடிவகை.

gal'ea, *n.* (தாவ., வில.) தலைச்சீராவைப் போன்ற அமைப்பு; தலையணி வடிவுடையது; தலையணியின் இயல்புடையது; தலைச்சீராவின் அமைப்பு உடையது.

galeen'y, *n.* கினிக்கோழி.

Gal'en, *n.* மருத்துவர்.

galen'a, *n.* ஈயச் சுரங்கக் கலவை; ஈயக்கந்தகை; பளபளப்பான ஈயச் சுரங்கக் கலவை வகை.

galen'ic, galen'ical, *a.* கலென் (Galen) என்ற பண்டைக் கிரேக்க மருத்துவரைச் சார்ந்த; கலெனின் மருத்துவமுறைக்கு இணங்கிய; பூண்டு மருத்துவம் சார்ந்த, பூண்டு முறை சார்ந்த.

Galile'an[1], *n.* பாலஸ்தீன் நாட்டிலுள்ள கலீலி (Galilee) பகுதியைச் சார்ந்தவர்; கிறித்தவர்; *a.* கலீலி பகுதிக்குரிய.

Galile'an[2], *a.* கலிலியோ (Galileo) என்ற வான நூலறிஞருக்குரிய; (தொ.) Galilean telescope, உட்குவிந்த இரு கண்ணாடித் துண்டுகளும் புறங்குவிந்த இரு கண்ணாடித் துண்டுகளும் உள்ள தொலைநோக்கி.

Gal'ilee, gal'ilee, *n.* திருக்கோயில் நுழைவு வாயிலிலுள்ள முகப்புமண்டபம்.

galimatias, (பிர.) *n.* குழப்பமான பேச்சு; பொருளற்ற பேச்சு; சுற்றிவளைத்த பேச்சு.

gal'ingale, *n.* நறுமண மருந்துக்கிழங்கு வகை.

gali'ot, *n.* ஆலந்து நாட்டுச் சரக்குப் படகுவகை; ஆலந்து நாட்டு மீன்படகு வகை; குட்டையான சிறு கப்பல் வகை.

gal'ipot, *n.* கெட்டியாக்கப்பட்ட கற்பூரத் தைலவகை.

gall[1], *n.* கல்லீரலின் சுரப்பு; கீழ்த்தர விலங்குகளின் பித்தநீர்; கசப்புப் பொருள்; கசப்பு; உள்ளடங்கலுடன் கூடிய பித்த நீர்ப்பை; கடுமை, காழ்ப்பு, தீராப்பகை; (தொ.) dip one's pen in gall, கடுமையாகத் தாக்கி எழுது.

gall[2], *n.* வீக்கம்; கொப்புளம்; திறந்த மேனியாக உராய்வுற்ற இடம்; உராய்வதாலுண்டான காயம்; மனப்புண், மனவேதனை; மனவேதனை தருஞ் செய்தி; வயற்காட்டிடை வெட்டை; *v.* புண்ணுறும்படி தேய், தேய்த்துப் புண்ணாக்கு; தொந்தரவு செய்; துயரளி; மனம் புண்படுத்து; அவமானப் படுத்து.

gall[3], *n.* மரங்களின்மீது பூச்சிகளின் செயலால் ஏற்படும் கரணை வளர்ச்சி.

gall'ant, *n.* நடப்புநயத்தான், பழகினியன், சிங்காரன்; காதற் பாங்கன்; கள்ளக்காதலன்; *a.* பகட்டான; நடப்புநயம் வாய்ந்த; ஒய்யாரமான; கருணைமறமுடைய; காதல்சார்ந்த; *v.* மகளிர் தோழனுயிரு; பழகினியனுயிரு.

gall'antry, *n.* கருணைமறம்; நடைநயம்; பெண்பாலாரிடம் காட்டப்படும் பண்பார்வம்; பெண்டிரிடம் நன்மதிப்பு; காதலூடாட்டம்; சிற்றின்ப நடத்தை; சிற்றின்ப நெறிபிறழ்ச்சி.

gall'-bladder, *n.* பித்தப்பை.

gall'-duct, *n.* பித்தநீர்க்குழாய்.

gall'eon, *n.* பெரிய கப்பல்வகை; போர்க்கப்பல் வகை; பண்டை ஸ்பானிய நாட்டுப் போர்க்கப்பல்; அமெரிக்க வாணிகத்திற் பயன்படுத்தப்படும் பெரிய ஸ்பானிய கப்பல்.

gall'ery, *n.* நுழைமாடம், இருபுறமும் அரைகுறையாகத் திறந்த வழியுடைய மூடுபாதை; முகப்புத்தளம்; எறிபயிற்சிகளுக்குரிய நீண்ட அறைக்கூடம்; ஊடுவழிக்கூடம், இருபுறமும் கட்டிட அறைவாயில் பலகணிகளையுடைய இடைவழி; படைத்துறை ஒடுங்கிய இடைவழி; சுரங்க நிலவறை வழி; சுற்றுமேடை வழி; திருக்கோயில் பேச்சுமேடை; பாடகர் மேடை; மன்ற இருக்கைப் படியடுக்கு வரிசை மேடை; கலைக் காட்சிக்கூடம்; நாடகக்கொட்டகை உச்சப்படியடுக்கிருக்கை; உச்சப்படியடுக்கிலுள்ள மிகத்தாழ்ந்த நிலைப் பொதுமக்கள்; விளக்குப்புகைக்குழாய் தாங்கி; *v.* படியடுக்கு மேடை ஏற்படுத்து; சுரங்க நிலவறைவழி குடைந்து உருவாக்கு; (தொ.) gallery hit, gallery shot, gallery stroke, பகட்டாரவாரமான நாடகப்பகுதி; பகட்டாரவாரமான பந்தடி; play to the gallery, கீழ்த்தரமான சுவையினருக்குப் பிடித்தமாய் நடி; பாராட்டுவதற்கான நடவடிக்கை பின்பற்று.

gall'ey, *n.* ஒரே தளமுள்ள தட்டையான தாழ்ந்த கப்பல், அடிமைகளாலும் குற்றவாளிகளாலும் துடுப்புகளினால் தள்ளிச் செலுத்தப்படுங் கப்பல்; பண்டைய கிரேக்கரின் அல்லது ரோமாபுரியினரின் போர்க்கப்பல்; போர்க்கப்பலின் தளபதி பயன்படுத்தும் பெரிய படகு; கப்பலில் சமையலறை; அச்செழுத்துக்கள் அடுக்கும் நீண்ட தட்டு; (தொ.) galley proof, பக்கங் கட்டாத அச்சுப் பார்வைப்படி.

gall'ey-slave, *n.* கப்பலில் துடுப்பு வலிக்கும்படி தண்டிக்கப்பட்ட குற்றவாளி; ஊழியன்.

gall'eyworm, *n.* துடுப்புப்போன்ற அமைப்புள்ள பல கால்களுடைய பூச்சிவகை.

gall'-fly, *n.* மரவகையில் காழ்ப்பூட்டும் பூச்சிவகை.

galliam'bic, *a.* காடுல்லஸ் (Catullus) என்ற கிரேக்க கவிஞன் பயன்படுத்திய 8 அசையுடைய இருசீரடி யாப்புக்குரிய.

galliamb'ics, *n. pl.* காடுல்லஸ் (Catullus) என்ற கிரேக்கக் கவிஞன் பயன்படுத்திய 8 அசையுடைய இருசீரடியாப்புச் செய்யுள் வகை.

gall'iard, *n.* மூன்றும் காலப் பாணியில் இருவர் ஆடற்குரிய விரைதுடி நடனவகை.

gall'ic[1], *a.* மரவகைக்காழ் சார்ந்த, ஒட்டுயிர்ப்பூச்சி வகையின் செயலால் மரவகையில் உண்டான கரணையிலிருந்து எடுக்கப்பட்ட; (தொ.) gallic acid, காழகிக்காரம், மரவகைக் கரணையிலிருந்து எடுக்கப்பட்டு மைசெய்வதிற் பயன்படுத்தப் படும் மணிப்படிகக்கார வகை.

Gall'ic[2], *a.* 'கால்ஸ்' (Gauls) என்ற பண்டைப் பிரஞ்சு நாட்டுப் பழங்குடி மக்களினத்தைச் சார்ந்த; பிரஞ்சு நாட்டுக்கு உரிய.

Gall'ican, *n.* போப்பாண்டவருக்கு முற்றிலும் கட்டுப்படா உரிமைகோரிய பிரஞ்சு ரோமன் கத்தோலிக்கக் கோட்பாட்டுக் கிளை இயக்கத்தின் சார்பாளர்; *a.* பிரான்சின் பண்டைத் திருக்கோயிலைச் சார்ந்த.

gall'ice, *adv.* பிரஞ்சு மொழியில்.

galligas'kins, *n. pl.* காற்சட்டை.

gallimau'fry, *n.* கூலக்கலவை.

gallina'ceous, *a.* கோழிகள்-கௌதாரிகள் அடங்கிய பறவையினத்தைச் சேர்ந்த.

gallina'zo, *n.* அமெரிக்க வல்லூறு வகை; துருக்கிநாட்டு வேட்டைப்பருந்து.

gall'io, *n.* அத்துமீறித் தலையிட மறுக்கும் பணியாளர்; பொறுப்பேற்க விழையாத கவலையில்லா மனிதர்.

gall'iot, *n.* ஆலந்து நாட்டின் சரக்குப்படகு; ஆலந்து நாட்டு மீன் கலம்; சிறு சிறைக்கப்பல்.

Gallip'oli, *n.* தேவதாரு எண்ணெய்.

gall'ipot, *n.* சாடி வகை, தைலம் வைக்கப் பயன்படும் சிறு பளபளப்பான மட்பாண்டம்.

gall'ium, *n.* மென்மையான நீலஞ்சார்ந்த வெண்ணிற உலோகவகை.

gallivant', *v.* வீணுகச் சுற்றித்திரி.

gall'-nut, *n.* கசப்புக்காய், மர வகையில் மை செய்யப்பயன் படுகிற புற வளர்ச்சியான கரணை.

galloman'ia, *n.* பிரஞ்சு நாட்டுப் பழக்கவழக்கங்களில் வெறியார்வம்.

gall'on, *n.* 'காலன்', நீர்மப்பொருள்கள் கூலவகைகள் முதலியவற்றைக் கணிக்கும் முகத்தலளவைக்கூறு; (தொ.) imperial gallon, 227¼ கன அங்குலம் கொள்ளும் அளவை.

galloon', *n.* கட்டு இழைக்கச்சை; ஆடைவிளிம்பில் இணைக்கப் படும் கசவாலான இழைக்கச்சை.

gall'op, *n.* நாலுகாற் பாய்ச்சல்; நாலுகாற் பாய்ச்சற் குதிரை இவர்தல்; *v.* நான்குகால் பாய்ச்சலிற் செல், பாய்ந்தோடு; குதித்தோடு; குதிரையை நாலுகாற் பாய்ச்சலிற் செலுத்து; விரைவேகத்தில் வாசி; வேகமாக ஒப்பி; விரைந்து பேசு; வேகமாகச்செல்; விரைந்து இயங்கு; வேகமாக முன்னேறு.

gallopade', *n.* சுறுசுறுப்பான எழுச்சியுள்ள அங்கேரிய (Hungarian) நாட்டு நடனம்.

gall'oper, *n.* நான்குகாற் பாய்ச்சலிற் செல்பவர்; வேகமாகச் செல்வது.

Gall'ophil, *n.* பிரஞ்சு நாட்டுமீது பற்றார்வம் கொண்டவர்.

Gallovid'ian, *n.* ஸ்காத்லாந்திலுள்ள 'காலோவே' (Galloway) என்னும் பகுதிக்குரியவர்; *a.* 'காலோவே' பகுதியைச் சேர்ந்த.

gall'oway, *n.* உறுதிவாய்ந்த குட்டையான வளர்ப்பினக் குதிரைவகை; குட்டையான குதிரை; கால்நடை வளர்ப்பின வகை.

gall'ows, *n. pl.* தூக்குமரம், கொலைமரம்; தூக்குதண்டனை; தூக்குமர அமைப்பை ஒத்த சமையற்கட்டின் உறி; உடற் பயிற்சிக்குரிய கருவி; (தொ.) a gallows look, கடுந் தோற்றம்; cheat the gallows, தூக்குதண்டனைக்குரிய குற்றஞ்செய்தும் அதிலிருந்து தப்பு; have the gallows in one's face, தீய பயக்குந் தோற்றங்கொள்.

gall'ows-bird, *n.* தூக்குதண்டனைக்குத் தகுதியானவர்.

gall'ows-free, *a.* தூக்குதண்டனை இடரினின்று விடுபட்ட.

gall'ows-ripe, *a.* தூக்குதண்டனைக்குத் தகுதியான.

gall'ows-tree, *n.* தூக்குமரம்.

gall'-stone, *n.* பித்தப்பையில் விளையும் கல்போன்ற கடும் பொருள்.

Gall'up poll, *n.* பல்திறக் குழுக்களிலிருந்தும் தனி ஆட்கள் கருத்தறிந்து பொதுமக்கள் கருத்தறியும் முறை; பொது மக்கள் வாக்குரிமை முடிவை முன்கூட்டியே சோதித்தறியும் முறை.

gal'op, *n.* இரண்டாவது நாலாவது காலத்துக்குரிய சுறுசுறுப் பான நடனவகை; *v.* இரண்டாவது நாலாவது காலத்துக்கு உரிய விரைநடனவகை ஆடு.

galore', *n.* நிறைவு; *adv.* நிறைய.

galosh', *n.* புதைமிதியடி மேலுறை, மிதியடிமீது ஈரமும் அழுக்கும் படாமற் காக்கும் தொய்வக உறை.

galumph', *v.* வெற்றிக் கும்மாளம் அடித்துச்செல்; பரணி பாடிச் செல்.

galvan'ic, *a.* (வர.) மின் ஆற்றல் சார்ந்த; மின் ஆற்றலால் விளைந்த; மின் ஆற்றலுண்டுபண்ணுகிற; திடீரென நிகழ்கிற; மின் ஆற்றல் போன்றியங்குகிற; புன்னகையிலும் அசை விலும் திடீரென்றும் செயற்கையாகவும் தோன்றுகிற; (தொ.) galvanic battery, galvanic cell, galvanic pile, பழைய வழக்கின்படி மின்னுக்கமூலச் சேமகலம்; galvanic belt, மின்னோட்டத்தை உண்டுபண்ணி அணிபவர்களுக்கு நன்மை பயப்பதாகக் கருதப்படும் இடுப்புக்கச்சை; galvanic electricity, மூல மின்சேமகல அடுக்குக்களிலிருந்து பாயும் மின்வலி.

gal'vanism, *n.* (வர.) மூல மின்சேமகல அடுக்கிலிருந்து பாயும் மின்னியக்கம்; மருத்துவத்துறையில் பயன்படுத்தப் படும் நேர்மின்னோட்டம்.

gal'vanize, *v.* மின்னாற்றலால் இயக்கம் தூண்டு; மின்னாற் றலின் செயல்போன்ற இயக்கம் தூண்டு; போலி உயிர்ப்புத் தோற்றங் கொடு; மின்பிரி இயக்கமூலம் உலோகப்பூச்சிடு; இரும்பு துருப்பிடிக்காமல் துத்தநாகப் பூச்சுப்பூசு; (தொ.) galvanized iron, துத்தநாகத்தால் மேற்பூச்சுப் பூசப்பட்ட இரும்பு; galvanize into life, அதிர்ச்சி அல்லது கிளர்ச்சி யினால் இயக்கம் தூண்டி எழுப்பு.

galvanog'raphy, *n.* செப்புத்தகடுகளின் மின்பிரிப்பூச்சுமூலம் செதுக்குவேலை செய்யும் முறை.

galvanom'eter, *n.* மின்னோட்டமானி.

gal'vanoplasty, *n.* மின்பிரிப்பூச்சுமானம், மின்பிரி இயக்க மூலம் உலோகத்தின்மேல் மற்றோர் உலோகத்தினால் மேற் பூச்சிடும் முறை.

Galwe'gian, *n.*, *a.* = Gallovidian.

gam'ba, gam'ba stop, *n.* சுர மண்டலியில் நரப்பிசை ஒலி தரும் இசைமேளத் தடைப்புழை.

gambade', gambad'o, *n.* குதிரைக்குதிப்பு; முரண்புணைவான இயக்கம்; இயற்கைக்கு மாறான வழு; இயல்பிழுக்கம்; தப்பி யோடல்; தவறாக நடத்தல்.

gam'bier, *n.* பதச்சாறு, தோல் பதனிடுதலிற் பயன்படும் காரமும் உவர்ப்புமுள்ள மூலிகைச்செடிச் சாறு.

gam'bist, *n.* சுரமண்டல இசைக்கருவி வாசிப்பவர்.

gam'bit, *n.* சதுரங்க ஆட்டத்திற் காலாட்களை வெட்டுக் கொடுத்து இலக்கினை அடையும் ஆட்டத்தொடக்கமுறை: தொடக்கச் செயற்கட்ட நடவடிக்கை.

gam'ble, *n.* சூதாட்டம்; இடருள்ள முயற்சி ஈடுபாடு; *v.* சூதாடு; போரிலும் பணத்துறையிலும் பெருவெற்றிகளை அடைவதற்காகப் பேரிடர்ப்பாடுகளை மேற்கொள்; பெரு வெற்றி நாடித் துணிவு முயற்சியில் ஈடுபடு; (தொ.) gamble away, சூதாடி முற்றிலும் இழ.

gam'bler, *n.* சூதாடி; செயல்துறைகளில் சூதாட்டமாடுபவர்.

gamboge', *n.* மக்கி, மஞ்சள்வண்ணப்பொருளாகப் பயன்படும் மரப்பிசின் வகை.

gam'bol, *n.* குதியாட்டம்; துள்ளிவிளையாடல்; *v.* துள்ளி விளையாடு.

game[1], *n.* விளையாட்டு, வேடிக்கை; ஆட்டமுழு நிகழ்ச்சி; போட்டி விளையாட்டு; சீட்டுவிளையாட்டிலும் வரிப்பந்தாட் டத்திலும் ஆட்டப்பிரிவு; ஆட்டத்தில் வெற்றிக்குரிய எண் ணிக்கைத்தொகுதி; ஆட்டமுறைமை; வாணிகத்துறையில் ஆட்டத் துணைக்கருவிகலத் தொகுதி; வேட்டையாடப்பட்ட விலங்கு புள்ளினத்தின் தசை; தொடரப்பட்ட இலக்கு; வளர்ப்பு அன்னத்திரள்; *a.* வேட்டைவிலங்கு புள்ளி னத்துக்குரிய; சண்டைக்கோழிபோன்ற இயல்புடைய; ஆண்மையுடைய, வீரதீரப்பண்புடைய; செயற்கிளர்ச்சி யுடைய; செயல்நடிப்புமிக்க, துடிப்பார்வமிக்க; செயல் விருப்பார்வமிக்க; *v.* பணயம் வைத்தாடு; சூதாடு; சூதாடி யிழ; (தொ.) be off one's game, தன்னியல்பான செயல் தகுதி நிலையற்றிரு; be on one's game, தன்னியல்பான செயல் தகுதிநிலையோடிரு; fair game, முறைப்படி வேட்டையாடத் தக்க விலங்கு; நேர்மையாக மேற்கொள்ளத்தக்க முயற்சி; forbidden game, சட்டமுறைப்படி வேட்டையாடக்கூடாத விலங்கு; முறைப்படி மேற்கொள்ளத்தகாத முயற்சி; game and game, இருபுறமும் முழுஎண் கெலிப்புநிலை; game not worth the candle, முயற்சியாளருக்கோ செலவுக்கோ பொருந் தாத சிறுசெய்தி; have the game in one's hands, ஆட்ட வெற்றி எளிதில்கிட்டும் நிலைபெறு; make game of, ஏளனம் செய், இகழ்ந்து பேசு; none of your games, இத்தகைய சூழ்ச்சி எதுவும் வேண்டா; play a good game, திறமையோடு செயலாற்று; play a poor game, திறமையற்றவராகச் செய லாற்று; play the game, விதிகளைப் பின்பற்றி நட; நேர்மை யாக நட; round game, ஆட்டக்காரர் எண் வரையறையற்ற வட்டமேசைக்குரிய ஆட்டம்; the game is up, ஆட்டம் தொடங்கியாயிற்று.

game[2], *a.* கால் கை முடமான, நொண்டியான, உறுப்புக் குறைந்த.

game'-act, *n.* விலங்கு-புள் வேட்டை உரிமை பற்றிய சட்டம்.

game'-bag, *n.* வேட்டையாளர் கொல்லப்பட்டவற்றைக் கொள்ளும் பை.

game'-chick'en, *n.* சண்டைக்காகப் பயிற்றுவித்து வளர்க்கப்படும் கோழிக்குஞ்சு.

game'-cock, *n.* சண்டைச் சேவல்.

game'-egg, *n.* சண்டைக்கோழிக்காகத் தனிப்படப் பேணப்படும் முட்டை.

game'-fowl, *n.* சண்டைக் கோழி.

game'keeper, *n.* வேட்டைக்காட்டுக் காவலர், பறவைகளைப் பயிற்றி வளர்ப்பதற்கும் திருட்டு வேட்டையாடுதலைத் தடுப்பதற்கும் அமர்த்தப்பட்ட பணியாளர்.

game'-law, *n.*=game-act.

game'-licence, *n.* விலங்குகளை அல்லது புள்ளினங்களை வேட்டையாடவும் வாணிகம் செய்யவும் உரிய தனி இசைவுரிமை.

game'-preserve', *n.* வேட்டைக்காவற்காடு, வேட்டைக்காகச் சேகரித்துப் பாதுகாத்து வைக்கப்பட்ட விலங்கு பறவை இனமுள்ள நிலப்பரப்பு.

game'-preserv'er, *n.* வேட்டைக்காவற்காட்டு உரிமையாளர், வேட்டை உரிமைச் சட்டங்களைச் செயற்படுத்தும் வேட்டைக் காட்டு உரிமையாளர்.

games, *n. pl.* பண்டை ரோமாபுரியில் உடற்பயிற்சிப் பொதுக் காட்சிகள்; மற்போர் வாட்போர் அரங்குகள்; இசைநாடகக் காட்சிகள்; ஏய்ப்பு முறைகள், சூழ்ச்சிமுறைகள்; தட்டிக் கழிப்பு முறைகள்.

game'some, *a.* விளையாட்டியல்பான, விளையாட்டு விருப்பமுள்ள.

game'ster, *n.* சூதாடி.

gamete', *n.* பாலணு, இனப்பெருக்கவகையில் இருபால்களின் சார்பாகவும் இணைந்துகலந்து ஒன்றையொன்று பொலிவுபடுத்தும் பாலினச்சார்பான ஊன்மத் துகட்கூறு.

game'-tenant, *n.* வேட்டையாடுவது மீன்பிடிப்பது முதலிய உரிமையுடைய நிலக் குத்தகையாளர்.

gamin, (பிர.) *n.* தெருக்கொடுக்கு.

gam'ing-house, *n.* சூதாடுமனை.

gam'ing-ta'ble, *n.* சூதாடு மேசை.

gamm'a, *n.* கிரேக்க நெடுங்கணக்கில் மூன்றுவது எழுத்து; அந்துப்பூச்சி வகை; (தொ.) gamma plus, மூன்றுந்தரத்துக்குச்சற்று மேற்பட்ட; gamma rays, மிகக் குறுகிய ஒளிக் கதிரலையுள்ள ஊடுருவு கதிர், சிற்றலை ஒளிக்கதிர் வகை.

gammad'ion, *n.* சுவஸ்திகை வகை.

gamm'er, *n.* நாட்டுப்புற வழக்கில் கிழவி.

gamm'on[1], *n.* உப்பிட்டு உலர்த்திய பன்றியின் பின்கால் விலா அடிப்பகுதி இறைச்சி; பன்றித்துடை இறைச்சி வற்றல்; புகைப்பதனமிட்ட அல்லது பதனப்படுத்தப்பட்ட பன்றி இறைச்சி; *v.* பன்றி இறைச்சியைப் பதனஞ்செய்து பக்குவப்படுத்து.

gamm'on[2], *n.* வட்டாடலில் இரட்டை முழுக்கெலிப்பு வெற்றி எண்ணிக்கை; *v.* இரட்டை முழுக்கெலிப்பு எண்ணிக்கை கொண்டு தோற்கடி.

gamm'on[3], *n.* மோசம், ஏய்ப்பு; *v.* நம்பக்கூடிய முறையாக நடித்துப்பேசு; பாசாங்கு செய்; ஏமாற்று, மோசஞ் செய்; *int.* மண்ணாங்கட்டி!

gamm'on[4], *n.* கப்பல் முன்புறமீது நீட்டுகோலின் மோதல்; *v.* நீட்டுகோல் வகையில் கப்பல் முன்புறமீது அடித்துக்கொள்.

gamogen'esis, *n.* பாலிணைவுச்சார்பான இனப்பெருக்கம்.

gamopet'alous, *a.* புறவிதழ் இணைவுடைய.

gam'ut, *n.* (வர.) ஏழிசைத்தொகுதி; நிறைசுரத்தொகுதி; மக்களினத்தின் முழுச்சுரவட்டம்; காலப்பிரிவின் நிறைசுர வட்டம்; இடைநிலைக் காலச்சுரத் தொகுதி; இடைநிலைக்கால அடிச்சுரம்; குரல் இசைச்சுர முழு ஏற்றவிறக்க நிலை; இசைக் கருவி முழு ஏற்றவிறக்க வீச்சு; ஆற்றல் முழு எல்லை, செயல் திற முழுவீச்சு.

gam'y, *a.* வேட்டைவிலங்கு புள்வளம் நிறைந்த; வேட்டை விலங்கு புள்ளினங்கள் முழுச்சுவைப்பதம் பெறும்வரை பேணி வளர்க்கப்படும் நிலையுடைய.

gan'der, *n.* ஆண் வாத்து; அறிவிலி, பேதை; (தொ.) sauce for the goose is sauce for the gander, உனக்கு எப்படியோ அப்படித்தான் எனக்கும், ஒருவருக்கு எது நல்லதோ அது தான் மற்றவருக்கும் நல்லது.

gan'der-par'ty, *n.* ஆண்கள் மட்டும் கூடி அளவளாவும் விருந்துக்கூட்டம்.

gang, *n.* தனிக்கும்பு, கூட்டுக்குழு; வேலையாள்களின் தொகுதி; அடிமைகள் அல்லது சிறைக்கைதிகளின் கும்பு; குற்றம் செய்யும் நோக்கத்தோடு இயங்கும் அல்லது செல்லும் கும்பல்; விரும்பாத செயலில் ஈடுபடுங் குழு; ஒரே சமயத்தில் வேலை செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கருவிகலங்களின் தொகுதி; *v.* விரும்பாத செயலில் ஈடுபடுவதற்காகக் கும்பு சேர்; குழுவுணர்ச்சியுடன் ஒன்றுபட்டு ஒத்தியங்கு; கருவி முதலியவற்றை ஒத்திசைவிக்க ஒழுங்குபடுத்து.

gang'-board, *n.* படகில் ஏறியிறங்குவதற்குரிய பலகையாலான ஊடிணைப்பு வழி.

gange, *v.* தூண்டில் முனையை மென்கம்பி வரிந்து காப்பீடு செய்.

gang'er, *n.* குழுமுதல்வர், கும்புக் கண்காணி.

Ganget'ic, *a.* கங்கை ஆறு சார்ந்த.

gang'liate, gang'liated, *a.* நரம்பு முடிப்புகளுடைய, நரம்பு மையமான.

gang'ling, *a.* தளர்நிலையிற் கட்டப்பட்ட, தடுமாற்றமுள்ள கட்டுமானமுடைய.

gang'lion, *n.* நரப்புக்கணு; நரப்பு மண்டல மையப்பிழம்பு, மங்கிய சாம்பல்நிற மாப்பொருள் நிரம்பிய நரம்புமண்டல மையம்; ஆற்றல் மையம்; செயல் மையம்; உயிர் மையம், முக்கியகூறு; *pl.* gang'lia.

gang'lion-cell, gang'lion-corpuscule, gang'lion-globule, *n.* நரம்பு மையக் கருவணு.

ganglion'ic, *a.* நரம்பு மையஞ் சார்ந்த; நரம்புக்கணுச் சார்ந்த.

gang'rene, *n.* தசையழுகலுடன் கூடிய உடலின் உட்கூற்றழிவு; மரத்துப்போதல்; *v.* அழுகிக்கெட வை; மரத்துப்போ.

gang'ster, *n.* கொள்ளைக்கூட்டத்தான்.

gangue, *n.* கனிப்பொருள் உலோகக் கலவையுள்ள பாறை.

gang'way, *n.* இருக்கைவரிசைகளின் ஊடாகச் செல்லும் இடைநெறி; கப்பல் ஏற்ற இறக்க இடைவழி; ஊடுவழி; சட்டமன்றப் பின்னிருக்கைகளுக்குச் செல்வதற்குரிய குறுக்கு ஊடுபாதை; *int.* வழி விலகுக!

gan'ister, *n.* உலை அடுப்புக்களில் உட்சுவராகப் பூசப்பயன்படும் நுண்மணல் கலந்த களிமண் வகை.

gann'et, *n.* வாத்துப்போன்ற கடற்பறவை வகை.

gan'oid, *n.* பளபளப்பும் வழவழப்பும் உடைய மீன் செதில்கள்; பளபளப்பும் வழவழப்பும் உடைய செதிள்கள்வாய்ந்த மீன்; *a.* பளபளப்பும் வழவழப்பும் உடைய; பளபளப்பும் வழவழப்பும் உடைய செதிள்கள் வாய்ந்த.

gan'oin, *n.* மீன் செதிள்களுக்குப் பளபளப்பைத் தரும் சுண்ணச்சத்து.

gan'try, *n.* மிடா வைப்பதற்கான நான்கு கால்களுள்ள மரத்தாலான நிலைதாங்கி; பாரந்தூக்கி-கைகாட்டி முதலியவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுசெல்லுவதற்குரிய அடிச்சட்டம்.

Gan'ymede, *n.* கலமேந்தி, உணவுவிடுதிச் சிற்ருள்; (வான்.) வியாழனின் மிகப்பெரிய துணைக்கோள்.

gaol, *n.* காவற்கூடம், சிறைச்சாலை; *v.* சிறையிடு.

gaol'-bird, *n.* அடிக்கடி சிறைசெல்பவர்.

gaol'-delivery, *n.* மொத்தவிசாரணை, விசாரணைக்குக் காத்திருக்கும் காவற் கைதிகள் எல்லோரையும் ஆணையாளர் மன்றக்கூட்டத்தில் மொத்தமாக ஒருங்கே விசாரணைக்கு அனுப்புதல்.

gaol'er, *n.* சிறைக்காவலர், சிறைக்காவற் பொறுப்பாளர்.

gaol'-fever, *n.* சிறைச்சாலைகளில் தொற்றுநோயாயிருந்து வந்த கடுமையான குடற்காய்ச்சல்.

gap, *n.* பிளவு; வெடிப்பு; கீறல்; உடைப்பு; தொடர்ச்சியில் இடை முறிவு; இடையீடு; இடைவெளி; இடுங்கிய வழி; மலையிடைக் கணவாய்; மலைக்குவடுகளின் இடைப்பள்ளம்; வேலி இடைவெளி; இடைவாயில்; பள்ளம், விடர்; கருத்துக்களிடையே வேறுபாடு; பண்புகளிடையே அகல்முரண்பாடு; ஆட்களிடையே ஒப்புணர்வின்மை; *v.* பிளவு உண்டுபண்ணு; (தொ.) fill a gap, stop a gap, supply a gap, குறைபாட்டை நீக்கு, விட்ட இடத்தை நிரப்பு.

gape, *n.* வாய்பிளத்தல்; வாய்பிளப்பெல்லை; வாய்பிளப்புக் கோணம்; அலகுதிறப்பெல்லை; திறக்கும் அலகுக்கூறு; *v.* வாயைப்பிள; கொட்டாவிவிடு; திற; அகலமாகத் திறக்கப்பெறு; உற்றுநோக்கு; வியப்போடு நோக்கு; திகைத்துப் பார்; (தொ.) the gapes, வாய்பிளப்பினைச் சின்னமாகக் கொண்ட கோழியின் நோய்; (பே-வ.) அடுத்தடுத்துக் கொட்டாவிவிடுங் கோளாறு.

gap'er, *n.* வியப்போடு உற்றுநோக்குபவர்; பறவைவகை; நத்தைவகை.

gapp'y, *a.* இடைவெளிகள் நிறைந்த, பிளவுகளுள்ள, இடைமுறிவுகள் உள்ள.

ga'rage, *n.* பொறிவண்டிக்கொட்டில்; மோட்டார் வண்டியை வைத்துப்பேணிப் பழுதுபார்க்கும் குச்சில்; *v.* பொறிவண்டியைக் கொட்டிலிற் கொண்டுவிடு.

garb, *n.* சிறப்புடுப்பு; ஆடைத்தோற்றம், வேடம்; *v.* உடையுடுத்து; தன்னிசைவான ஆடையணி.

garb'age, *n.* கழிவுப்பொருள், குப்பை, கூளம்; பயனற்ற பொருள்; விலங்கின் கழிபொருள் இரை.

gar'bage-man, *n.* குப்பைக்காரன்.

gar'ble, *v.* திரித்தெடுத்துரை, தீய நோக்கத்துடன் சாதகமானவற்றை மட்டும் பிரித்தெடுத்துக்காட்டு; சிதைத்துக் கூறு.

garb'oard, garb'oard strake, *n.* மரக்கலங்களின் அடிக்கட்டைக்கு அடுத்துப் பரப்பப்பட்டிருக்கும் பலகைகளின் முதல்வரிசை; தற்காலக் கப்பல்களில் அடித்தளப் பாளத்தை அடுத்து இடப்படும் முதல்வரிசைத் தகடுகள்.

garcon, (பிர.) *n.* பிரஞ்சு உணவுவிடுதியில் தட்டேந்தி.

get, *n.* உழைப்பின் விளைவு ; ஈன்றெடுத்த குஞ்சுகுட்டித் தொகுதி ; *v.* கொள் ; விலைக்குப்பெறு, வாங்கு ; விலையாக அடை ; அடையும்படி செய் ; அடை ; ஈட்டு ; நாடிப்பெறு ; தேடிப்பெறு; பெற்றுக்கொடு; பெற்றெடு; ஊதியமாகப்பெறு; ஆதாயமாய்ப் பெறு ; நன்கொடையாகப் பெறு ; கொடுக்கப் பெறு; எய்தப்பெறு; நோய்வரப்பெறு; தண்டனையாகப்பெறு; துய்க்கப்பெறு ; விளைவாகப் பெறு ; கைக்கொள் ; பிடி, கைப்பற்று ; சென்றுசேர் ; சென்றடை ; வென்றடை ; வென்று கீழ்ப்படுத்து ; விஞ்சிமேம்படு ; தொல்லைப்படுத்து ; திகைக்க வை ; உணர்ச்சிமூலம் வசப்படுத்து ; கவர்ச்சிக்கு ஆளாக்கு; சுவையுணர்வு கண்டு பயன்படுத்திக்கொள்; புரிந்து கொள் ; பொருளுணர்ந்துகொள் ; கற்றுணர் ; மறவாமல் நினைவில் வைத்துக்கொள் ; திடுமென நினைவுபடுத்திக்கொள் ; கணித்துக்காண் ; காண் ; கண்டுணர் ; கம்பியில்லாத் தந்தியில் தொடர்பு கண்டுபிடி; தொடர்புகண்டு மேற்கொள்; தொடர்பு ஏற்படுத்திக்கொள் ; தூண்டு ; இயங்குவி ; ஆகுவி ; செயல் முற்றுவி ; வென்றுகொள் ; அமர்வி ; ஆகு ; பெற்றிரு ; கடவதாயிரு, வேண்டியதாயிரு ; (தொ.) be getting on for, அணுகிக்கொண்டிரு, நோக்கிச் சென்றுகொண்டிரு ; get about, இங்குமங்கும் செல் ; நோய்க்குப்பின் நடமாடத் தொடங்கு ; செயல் தொடங்கு ; பரவு ; get abroad, பரவு ; தொலைசெல் ; வெளிநாடு செல் ; get ahead, get along, முன்னேறிச்செல் ; முந்து ; தொடர்ந்து முன்னேறிக் கொண்டிரு ; get at, அடை, சேர்; கிட்டு, எட்டு; get a thing for a person, ஒருவருக்காக ஒருபொருள் பெற்றுக்கொடு; get away with it, முயற்சியில் வெற்றியடை ; தண்டனை பெறுமல் தப்பு, பணிவச்சமின்றிச் செய்துமுடி ; திண்ணமாகச் செய் ; get back, திரும்பி வா ; திரும்பிச்செல்; இழந்ததை மீண்டும் பெறு; get by, நிறைவேற்றுவதில் வெற்றியடை ; get down, இறங்கு; get in, நுழை ; பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படு ; விளைச்சலை வீட்டிற்குக் கொண்டுவா ; கடன் மீட்டுப் பிரி ; கொடுத்த காலத்திற்குள் செய்துமுடி ; திருப்பி அடிப்பதில் வெற்றிபெறு ; get it, தண்டிக்கப் பெறு ; get it into one's head, நம்பு ; get knowledge of, get wind of, தகவல் உணர் ; கேள்விப்படு ; செய்தி அறியப்பெறு ; get off, தப்பியோடு, தப்பிப்பிழை ; மன்னிக்கப் பெறு ; குற்றமற்றவரென்று தீர்ப்பளிக்கப் பெறு ; தண்டனை குறைக்கப் பெறு ; புறப்படு ; உறக்கங்கொள் ; இறங்கு ; விடுபடு ; விலகிச்செல் ; get off with, காதல் தொடர்பு கொள் ; காதல் உறவாடு ; get on, ஏறு ; எழுந்துநில் ; முன்னேறு, வெற்றியடை ; செழிப்படை ; இணங்கு ; ஒத்திசை ; அணிமணிகளைப் பூட்டு, குமிழ்மாட்டியுடன் கால்புதைமிதிகளை மாட்டு ; get one a place, ஒருவருக்கு ஒரு பணியிடம் பெற்றுக்கொடு ; get one's hand in, சில செயல்முறைகளில் நன்கு பழக்கமடைந்து விடு; get on one's nerves, எரிச்சலேற்படும்படி செய் ; get on the brain, வேறெதிலும் கருத்துச்செல்லாமல் தனிப்பட மறவாமல் எண்ணிக்கொண்டிரு ; get on to, எடுத்த காரியங்களில் வெற்றியடை ; get out, வெளியேறு ; வெளிப்படு ; வெளிப்படுத்து ; வெற்றிகரமாக வெளிச்செல் ; உண்டுபண்ணு ; ஆக்கு ; சிக்கலிலிருந்து விடுவித்துக்கொள் ; get out of hand, கையிலிருந்து நழுவு ; கட்டுப்பாட்டினின்று மீறு ; வேலையைமுடி ; பழக்கத்தை மெல்லக் கைவிடு ; செயலைத் தட்டிக்கழித்துவிடு ; தகவல் கிளறிப்பெறு ; பணம் தட்டிப்பறி ; get out of sight, get out of one's depth, மறைந்து போ ; நீரில் நிலைகொள்ளா ஆழத்திலிரு ; கண்ணிற்குப் புலப்படாது நீருக்கடியில் மறை ; get over, ஏறிக் கடந்து செல் ; தாண்டு ; வெல் ; வெற்றிகொள் ; விடுபடு, நலம் பெறு ; தொல்லைதருஞ் செயலுக்கு முடிவுகட்டிவிடு ; get person upon a subject, பொருள்பற்றிப் பேசவை ; get possession of, அடை ; உடைமையாக அடையப்பெறு ; வசப்படுத்திக்கொள் ; get round, பசப்பிப்பேசு ; தட்டிக்கழி ; ஏமாற்று ; வஞ்சி ; சிக்கவை ; இணங்கச் செய் ; தூண்டிவயப்படுத்து; பேசி இணங்கச்செய்; get round to, ஒருமட்டில் செய்ய ஒருப்படு ; get ship under way, கப்பலை ஓடச்செய் ; கப்பல் புறப்படச்செய்; get the best of it, முழு வெற்றியடை; get the upper hand, நலமடை ; ஆதாயமடை ; விஞ்சு, மேம்படு ; வெற்றிபெறு ; get the wind up, செயற்கையாக உணர்ச்சி வேகத்தை எழுப்பு ; தேர்வுக்காகக் கடுமையாக உழை ; get the worst of, மிகு கேடுறு ; பெருந்தோல்வியடை ; முழு இழப்பும் அடை ; get through, முடித்துக் கொள் ; இருசட்டமன்றங்களிலும் நிறைவேற்று ; இருசட்டமன்றங்களிலும் நிறைவேற்றப்பெறு; நேரம் போக்குவி; தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வை ; get through with, செயல் வெற்றிபெறு ; பொறுத்திருந்து தாங்கி முடிவு காண் ; get together, ஒருங்குகூட்டு; ஒருங்கு கூடு; திரட்டு; ஒருங்குகூடிக் கலந்தாய்வுசெய் ; ஒருங்குகூடித் திட்டத்துக்கு ஆக்கம்தேடு; get under, தணித்தடக்கு ; அடக்கு ; get up, எழு ; மேலேறு ; கிளர்ந்தெழு ; அழன்றெழு ; ஏற்பாடு செய் ; முன்னேற்பாடு முற்றுவி ; வேட்டைவிலங்கு புள் வகையில் மறைவிலிருந்து வெளிப்படு ; நிகழ்ச்சிக்காக முன்னொருக்கம் செய்துவை ; பாடம்செய் ; ஏட்டைக் கட்டடமிட்டு அமை ; get up stream, இயந்திரத்துக்குப் போதிய நீராவி சேமித்துவை ; கோப மீதூரப்பெறு ; ஆற்றல் மீதூரப்பெறு ; get well, get better, நோய் நீங்கிக் குணம்பெறு ; நோயினின்று விடுபடு ; get wise to, தெரிந்துகொள்; அறிந்துகொள்; get with child, கருவுறச் செய் ; சூலடையச்செய் ; have got to do, செய்து தீரவேண்டியதாயிரு.

get-at'-able, *a.* எளிதில் காணக்கூடிய ; கிட்டக்கூடிய ; கிடைக்கக்கூடிய, பெறத்தக்க.

get'away, *n.* தப்பியோடல் ; தொடக்கம் ; புறப்படுகை ; மூடியைத் திறத்தல்.

gett'ing, *n.* இலாபம், ஆதாயம் ; பலன் ; பிறப்பித்தல்.

get'-together, *n.* தலைக்கூடுதல்; சமுதாயப் பொதுக்கூட்டம்; *v.* கலந்து ஆய்வுசெய்.

get-up', *n.* கட்டமைப்புத் தோற்றம் ; ஒழுங்கமைதி ; இணைவமைதி.

ge'um, *n.* ரோசா இனச் செடிவகை.

gew'gaw, *n.* பகட்டு விளையாட்டுப் பொருள் ; சிங்கார அணிமணி ; சிறுபொருள் ; பயனற்ற துணுக்கு.

gey'ser, *n.* வெந்நீரூற்று ; வெந்நீர்க் கொதிகலம்

gey'serite, *n.* நீரூற்றுப் படிவுகளால் ஏற்படும் சுண்ணப் பாறை.

Ghana'ian, *n.* கானு (Ghana) நாட்டவர்; கானு நாட்டுக் குடியுரிமையாளர்; *a.* கானு நாட்டைச் சார்ந்த, கானு நாட்டுக்குரிய.

gha'rri, gha'rry, (இ.) *n.* வாடகைக் குதிரைவண்டி.

ghast'ly, *a.* கோரமான; பேய் போன்ற; பேய்த்தன்மை வாய்ந்த; அதிர்ச்சி உண்டுபண்ணுகிற; நடுக்கம் தருகிற; சாவுக் களையுடைய; விளறிய; வெறித்த தோற்றமுடைய; மயிர்க்கூச்சிட வைக்கும் வண்ண வடிவமுடைய; புன்முறுவல் வகையில் போலியாக வருவித்துக்கொள்ளப்பட்ட; *adv.* கோரமாக, வெறிப்பாக.

ghat, ghaut, (இ.) *n.* மலைத்தொடர்; மலைக்கணவாய்; ஒடுக்கமான வழி; ஆற்றில் இறங்குதுறை; (தொ.) burning ghat, ஆற்றின் படிமேடையில் இறந்தவர்களை எரிக்குமிடம்.

Gha'zi, (அரா.) *n.* இஸ்லாமிய புனிதப் போர்வீரர்; புறச் சமயிகளை எதிர்த்தழிக்கும் இஸ்லாமியர்; இஸ்லாமிய மத வெறியர்; துருக்கிய உயர்மதிப்புப் பட்டம்.

ghee, (இ.) *n.* நெய்.

gherk'in, *n.* ஊறுகாய் போட உதவும் வெள்ளரிவகைப் பிஞ்சு.

ghett'o, *n.* (வர.) நகரத்தில் யூதர்கள் வாழும் பகுதி; *pl.* ghett'os.

Ghib'elline, *n.* இத்தாலி நாட்டில் இடைநிலைக்காலத்தில் பேரரசரை ஆதரித்த கட்சிகளுள் ஒன்று; *a.* இடைநிலைக்கால இத்தாலியில் பேரரசரை ஆதரித்த கட்சி சார்ந்த.

ghost, *n.* ஆவி, கடவுளின் தூய ஆவி; ஆன்மா; பேய், பேய் உரு, பேய்த்தோற்றம்; நிழலுருவம், பொய்த்தோற்றம்; உருவெளிக்காட்சி; நலிந்து மெலிந்தவர், எலும்புக் கூடு; உள்ளீடற்ற பொருள்; சாரமற்ற பொருள்; வெற்றுரு வரை; நிழற்பண்பு; சாயல், உருவரைத் தடம்; கூலிக் கலைஞர்; தொலை நோக்கிக் கண்ணாடி வில்லையின் கோளாறு காரணமாகத் தோற்றும் ஒளிப்பட்டை அல்லது இரட்டித்த உருவம்; தொலைக் காட்சியில் காலந்தாழ்த்தி அனுப்பப்பட்ட அடையாள அலையுடன் பின் அலை கலப்பதால் ஏற்படும் இரட்டைத் தோற்றக் குளறுபடி; (தொ.) give up the ghost, உயிர்விடு; Holy Ghost, பரிசுத்த ஆவி; lay ghost, பேய்த் தோற்றம் மறையச் செய், பேயொழி; not the ghost of a chance, சிறிதுகூட வாய்ப்பில்லா நிலையில்; raise ghost, பேய் உருத்தோற்றுவி, பேய் வரவழை.

ghost'ly, *a.* பேய்த்தோற்றமுள்ள; ஆவி சார்ந்த, உடற் பண்பற்ற; ஆன்மிக; சமயம் சார்ந்த; (தொ.) ghostly adviser, ghostly director, ghostly father, பாவமன்னிப்பு அளிக்கும் குரு; ghostly comfort, ghostly counsel, சமய குருவின் பாவமன்னிப்பு ஆறுதல்; ghostly weapons, சமய வாதங்கள்; திருச்சபை சார்ந்த தண்டனைகள்; our ghostly enemy, பேய்முதல்வன், சைத்தான்.

ghost'-word, *n.* எழுத்துப் பிழையாலோ அச்சுப்பிழையாலோ தோன்றி உளதாகப் பாவிக்கப்பட்டு வழக்கிலேற்படும் சொல், போலிச்சொல்.

ghoul, *n.* கீழை நாட்டுக் கதைகளில் வரும் பிணந்தின்னும் பேய்.

ghyll, *n.* = gill [2].

gial'lo anti'co, (இத்.) *n.* இத்தாலிய இடிபாடுகளில் காணப் படும் உயர்ந்த செம்மஞ்சள் சலவைக்கல்.

gi'ant, *n.* அரக்கர், இராட்சதர்; பேராற்றல் வாய்ந்தவர்; இயல்பு மீறிய உயரமுடையவர்; இயற்கை மீறிய உயர முடைய விலங்கு; மட்டுமீறிய உயரமுடைய மரம்; பெருந் திறலாளர்; *a.* அளவிற்பெரிய பேராற்றல் வாய்ந்த.

gi'ant-cement, *n.* உறுதிச் சிமைக்காரை.

gi'ant-hood, gi'antism, *n.* அரக்க நிலை; அரக்கத்தன்மை; கதையில் அரக்கர் நிகழ்ச்சியியல்பு; பெரிய அளவு, பேருருவம்.

giantom'achy, *n.* தேவாசுரப் போர்.

gi'ant-powder, *n.* சுரங்க வெடிமருந்து வகை.

giant's-stride, gi'ant-stride, *n.* இராட்சத நடைக்கருவி.

giaour, (பெர்.) *n.* இஸ்லாமிய வழக்கில் புறச்சமயி; கிறித்தவர்.

gib, *n.* பொருத்தும் உலோகமுளை; மர ஆப்பு.

gibb'er, *n.* புரியாப்பிதற்றல்; குரங்கின் சலசலப்பு ஒலி; *v.* புரியாது பிதற்று, குரங்கின் சலசலப்பு ஒலிசெய்; பிதற்று; உளறு; பரபரப்பாகப் பேசு.

gibb'erish, *n.* தெளிவற்ற பேச்சு, புரியா மொழி; பொரு ளற்ற ஒலி; இலக்கண வழுவுடைய குற்றம் செறிந்த பேச்சு.

gibb'et, *n.* கொலைக்கம்பம், தூக்குக் கம்பம்; தூக்கிடு தண்டனை; *v.* தூக்கிலிடு; பொது இகழுக்கும் கண்டனத் துக்கும் ஆளாக்கு.

gibb'on, *n.* கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள நீண்ட கைகளுள்ள குரங்குவகை.

gibb'ose, gibb'ous, *a.* குவிவான; தொங்கலாகப் புடைத்து உந்திக்கொண்டிருக்கிற, தொப்பை போல முன் தள்ளிய; கூனலான, குவிந்து வளைந்த முதுகுடைய; திங்கட்கோளில் அரைவட்ட அளவிற் கவிந்து முழுவட்டத்தில் குறைந்த, ஏற்றத்தாழ்வாய் இருபுறமும் புறங்குவிந்த.

gibe, *n.* இகழ்ச்சி, ஏளனம்; *v.* இகழ்ச்சிசெய்; எள்ளிநகை யாடு.

gib'lets, *n. pl.* வாத்தின் கரள், சமைப்பதற்கு முன் வெட்டி எடுக்கப்படும் வாத்தின் ஈரல் இறக்கை அரைவைப் பை முதலி யவற்றின் தொகுதி; (தொ.) giblet soup, வாத்தின் கரள் வடிசாறு.

gib'us, *n.* இசைநாடகத்தில் அணியப்படும் தொப்பி; நீள மடிப்புக் குல்லாய்.

gidd'y, *a.* கிறுகிறுப்பான, தலைசுற்றுகிற; மயக்கங்கொண்ட, மயங்கிக் கீழே விழத்தக்க, தள்ளாடுகிற; தலைசுற்றவைக்கிற, மயக்கம் ஊட்டுகிற, தடுமாற்றம் தருகிற; தலைசுற்றுகிற வேகத்திற் சுழல்கிற; சுழன்றோடுகிற; இறுமாந்த; தன்னை மறந்த; எளிதில் உணர்ச்சி வசப்படுகிற; முன்னாய்வற்ற, ஆழ்ந்தாய்வற்ற; மனஉறுதியற்ற, ஒருநிலைப்படாத; அடிக்கடி மாறுகிற; சிறுபிள்ளைத்தனமான, விளையாட்டியல்புடைய; *v.* கிறுகிறுக்கப்பண்ணு; மயங்கச்செய்; கிறுகிறுப்புறு, மயங்கு; மனஉலைவு உண்டுபண்ணு.

gift, *n.* கொடை; கொடைப்பொருள்; நன்கொடை; பரிசில்; அரும்பெறற் பேறு, அருந்திறம், அரும்பண்பு, அருங்குணம்; அருட்கொடை, வரம்; இயற்கைத்திறம், இயற்பேறு, இயற் பண்பு; பண்புக்கூறு; கையுறைக்கொடை, கைக்கூலி; (சட்.) மனமார்ந்த உடைமை மாற்றம்; *v.* கொடையளி; நன்கொடையாக வழங்கு; பண்புத்திறமாக இயலுவி; (தொ.) at a gift, மனமார்ந்த கொடையாக; free gift, மன மார்ந்த கொடை; gift coupon, விலைச்சரக்குடன் பெறும் நன்கொடைச்சீட்டு; gift of the gab, (பே-வ.) பேச்சுத்திறம்; வம்பளக்கும் இயல்பு; gift of the tongues, அயல் மொழிகள் பேசும் திறம்; முற்காலக் கிறித்தவர்களிடையே தெரியாத மொழிபேசும் அருள்திறம்.

gift'-book, *n.* பரிசு ஏடு, பரிசிற் புத்தகம்.

gif'ted, *a.* இயற்கைப் பேறுகள் நிரம்ப வாய்க்கப்பெற்ற; இயல்பாகத் திறமையுள்ள.

gift'-horse, *n.* பரிசிற் குதிரை, நன்கொடைக் குதிரை; (தொ.) look a gift-horse in the mouth, கொடைப்பொருளில் குற்றங்காண்.

gig [1], *n.* இருசக்கர ஒற்றைக் குதிரைவண்டி; கப்பல் பாய்மரங் களும் துடுப்புகளும் வைக்கப் பயன்படும் குறுகிய சிறுபடகு; பந்தயப்படகு.

gig [2], *n.* மீன் ஈட்டிவகை.

gig [3], *n.* பம்பரம் சுற்றும்போது தெறித்து வீழ்ந்து தானும் சுற்றும் பம்பரத்தின் மீதுள்ள முகட்டுப்பம்பரம்; துடுக்குப் பெண்.

gigante'an, gigan'tic, *a.* பேருருவம் படைத்த; மிகப்பெரிய; இயற்கை மீறிப் பெரிதான, அரக்கனைப்போன்ற.

gigantesque', *a.* அரக்கனுக்கேற்ற; பெரும்பேருருவத்தைக் குறிக்கிற.

gig'gle, *n.* கொக்கரிப்பு, இளிப்பு, ஒழுங்கு கெட்ட பெண்ணின் பண்பற்ற சிரிப்பு; *v.* இளி; பண்பற்ற சிரிப்புச் சிரி; ஒழுக்கிலிபோல் நகை.

gig'let, gig'lot, *n.* பண்பற்ற பெண்; பண்பின்றி நகைப்பவள்.

gig'man, *n.* இருசக்கர ஒற்றைக் குதிரைவண்டி வைத்திருப்பவர்; ஆன்மிகக் கலையுணர்ச்சியற்ற சமுதாயக் கட்டுப்பாட்டு மதிப்புடைய நடுத்தர வகுப்பின் உறுப்பினர்.

gigman'ity, *n.* ஆன்மிகக் கலை உணர்ச்சியற்ற சமுதாயக் கட்டுப்பாட்டு மதிப்புடைய நடுத்தர வகுப்பு.

gig'mill, *n.* இழைதூக்கும்பொறி, துணியின் பரப்பை உயர்த்தும் பொறி; இழைதூக்கும்பொறியாலை; இழை தூக்கும் பொறியாலைக் கட்டிடம்.

gig'olo, *n.* இணைப்பு ஆண்ஆட்டக்காரர்; *pl.* gig'olos.

gig'ot, *n.* ஆட்டுக்கால் இறைச்சி; (தொ.) gigot sleeve, ஆட்டுக்காலிறைச்சி போன்ற உடுப்பின்கையுறுப்பு.

gilamon'ster, *n.* அமெரிக்காவில் நியூ மெக்சிகோ (New Mexico) அரிசோனு (Arizona) முதலிய பகுதிகளிற் காணப்படும் பெரிய நச்சுப் பல்லிவகை.

gil'bert, *n.* காந்த இயக்க ஆற்றல் அலகு.

Gilbert'ian, *a.* கில்பர்டு சலிவன் (Gilbert & Sullivan) துணைவர்களின் இசை நாடகத்தில் தனிச்சிறப்பாகவுள்ள முரண் நகைச்சுவைக்குரிய.

gild[1], *n.* = guild.

gild[2], *v.* பொன்வேய், மெல்லிய தங்கத்தகடிட்டுப் பொதி; பொன் மெருகிடு, தங்கமுலாம்பூசு; பொன்னிற மூட்டு; பொன் சாயல் கொடு; கட்டுப்பாடுகளுக்குப் பணமூலம் கவர்ச்சியூட்டு; பகட்டுச் சொற்களால் போலிக்கவர்ச்சியூட்டு; புறக்கவர்ச்சியால் பூசி மெழுகு, போலிப் பகட்டுச்செய்; (தொ.) gild pill, கசப்புப் பொருளைப் புறக்கவர்ச்சி உடையதாக்கு.

gild'ed[1], *n.* gild என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.

gild'ed[2], *a.* பொன்முலாமிட்ட, தங்க மெருகுபூசிய, பொன் வேய்ந்த; (தொ.) Gilded Chamber, பிரிட்டன் நாட்டு மாமன்றத்தின் மேல் அவை; பெருமக்கள் அவை; gilded spurs, வீர விருதுச் சின்னவகை; gilded youth, புதுநாகரிகப் பாணியுடைய இளைஞர்.

gill[1], *n.* செவுள், மீன் முதலிய நீர்வாழ் உயிர்களின் கன்னத்தினருகேயுள்ள உயிர்ப்பு உறுப்பு; கோழியின உயிர்களின் தொங்குதாடை; காளான் தலைப்பின் அடியிலுள்ள சுற்றுக் கீற்றுத்தொகுதி; மனிதர் காதருகில் தாடையின்கீழுள்ள தசை; *v.* செவுள் அகற்று; நாய்க்குடையின் தலையடிக்கீற்றுத் தொகுதியை வெட்டு; செவுளினைப் பற்றும் வலையையிட்டு மீன்பிடி; (தொ.) rosy about the gills, உடல்நலத் தோற்றமுள்ள.

gill[2], *n.* மரங்களடர்ந்த ஆழ்ந்த மலைப்பள்ளத்தாக்கு; ஒடுங்கிய கானாறு.

gill[3], *n.* சில்லறை நீர்ம முகத்தலளவை வகை.

Gill[4], *n.* பெண், சிறுமி (கதை இலக்கியச் சுட்டுக் குறிப்பு); (தொ.) Jack and Gill, சிறுவனும் சிறுமியும், ஆணும் பெண்ணும்.

gillaroo', *n.* அயர்லாந்து நாட்டில் உணவுக்குரிய நன்னீர் மீன்வகை.

gill'-cover, *n.* செவுள் பொதிந்த எலும்பு, செவுள்மூள்.

gill'ie, *n.* ஸ்காத்லாந்து நாட்டில் மேட்டுநிலப் பகுதித் தலைவனின் பணியாள்; ஸ்காத்லாந்தில் வேட்டையாளருடன் செல்லும் துணைவர்; வேட்டைத்துணைச் சிறுவன்.

gill'-net, *n.* மீனைச் செவுள்களின்மூலம் சிக்கவைக்கும் வலை.

gill'yflower, *n.* 'கிராம்பு' மணம் வீசும் மலர் வகை.

gilt[1], *n.* பொன் பூச்சுமானம்; பொன்வண்ணப் பளபளப்பு; *a.* பொன்வேய்ந்த; தங்க மெருகேற்றப்பட்ட; பொன்வண்ணமான; (தொ.) cloth gilt, பொன் எழுத்துப் புத்தகக் கட்டிடம்; gilt spurs, வீர விருதுச் சின்னவகை; take the gilt off the gingerbread, மேற்பூச்சு அகற்று; மேலீட்டுக் கவர்ச்சியை விலக்கிக்காண்.

gilt[2], *n.* பெண் பன்றிக்குட்டி.

gilt[3], *v.* gild என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.

gilt'-cup, *n.* மஞ்சள்நிற மலர் வகை.

gilt'-edged, *a.* விளிம்புகள் பொன்வண்ணக் கவர்ச்சியூட்டப்பெற்ற; உச்ச உயர்தரமான; (தொ.) gilt-edged paper, gilt-edged securities, gilt-edged stocks, நிறைகாப்புடைய பத்திரங்கள்.

gim'bals, *n.* கடலில் திசைகாட்டி முதலிய கருவிகளைத் தளமட்டமாக வைத்திருப்பதற்கான இயந்திரக் குழையச்சு அமைவு.

gim'crack, *n.* பயனற்ற பகட்டுப்பொருள்; விளையாட்டு உடைமை; பயனற்ற அணிகலன்; *a.* பகட்டான; போலியான; பயனற்ற.

gim'let, *n.* துறப்பணம், மரவேலைத் துளைப்புக்கருவி.

gim'let-eyed', *a.* மிகக் கூரிய பார்வையுள்ள.

gimp, *n.* கெட்டியான நடுப்பகுதியுள்ள இழை; உள்ளீடான கம்பியுடைய கெட்டி இழை; பூவேலையில் சித்திர விளிம்புக் கெட்டி இழை; கம்பியிணைத்த பட்டுத் தூண்டில் இழை.

gin[1], *n.* கண்ணி, வலை, பொறி; பாரந்தூக்கி; பஞ்சுத்தூக்கி; பருத்தியினின்று விதைகளை அகற்றும் பொறி; *v.* கண்ணியில் அல்லது வலையில் சிக்கவை; பஞ்சினின்று விதைகளை இயந்திரத்தினால் நீக்கு.

gin[2], *n.* சாராய வகை, தானியங்களினின்று அல்லது ஊறவைத்த மாவினின்று இறக்கப்பட்ட கடுந்தேறல் குடிவகை; (தொ.) gin and it, கடுந்தேறலும் இத்தாலிய நாட்டு இன் தேறலும் கலந்த பானம்.

gin[3], *v.* (செய்.) begin.

gin'gal, gin'gall, (இ.) *n.* சுழலச்சின்மீது வைத்துச் சுடப்படும் துப்பாக்கி வகை.

gin'gelly, (இ.) *n.* எள்; நல்லெண்ணெய்.

gin'ger, *n.* இஞ்சி; இஞ்சிக்கிழங்கு; எழுச்சி, கிளர்ச்சி, ஊக்கம், சுறுசுறுப்பு; தூண்டுதல்; மங்கிய செம்மஞ்சள் நிறம்; *a.* மங்கிய செம்மஞ்சள் நிறமான; *v.* இஞ்சியிட்டு மணமும் சுவையுமுண்டாக்கு; இஞ்சிதிணி; குதிரையின் மூலத்தில் இஞ்சியிட்டுச் சுறுசுறுப்புக்கொள்ளச்செய்; எழுச்சியூட்டு; (தொ.) black ginger, தோல் நீக்கப்படா இஞ்சி வகை; ginger group, சட்ட மன்றத்தில் அரசியலை விறுவிறுப்பாகச் செயலாற்றும்படி தூண்டும் கட்சிக்குழு; ginger shall be hot in the mouth, இன்பத்தின்மீதுள்ள பற்று அழிவில்லாதது; white ginger, தோல் நீக்கப்பட்ட இஞ்சி வகை.

gingerade', ginger-ale', ginger-beer', ginger-pop', *n.* இஞ்சியின் மணமும் சுவையும் ஊட்டப்பெற்ற கரியுயிரகி கலந்த குடிவகை.

gin'gerbrandy, *n.* உடல் வலிமை தரும் மருந்தாகப் பயன்படும் கடுந்தேறல் வகை.

gin'gerbread, *n.* இஞ்சியப்பம்; இஞ்சியினுல் சுவையும் மணமும் ஊட்டப்பெற்ற வெல்லப் பண்டம்; (தொ.) gingerbread nut, குமிழ்மாட்டி வடிவுடைய சிறுஇஞ்சி அப்பம்; take the gilt off the gingerbread, மேற்பூச்சை நீக்கு; மேலீடான கவர்ச்சிப் பொருளை அகற்று.

gin'gerly, *a.* விழிப்புடன் மெல்லச் செல்கிற; *adv.* முன்னெச்சரிக்கையுடன், மெல்லமெல்ல.

gin'ger-nut, *n.* குமிழ்மாட்டி போன்ற சிறு வடிவுடைய இஞ்சியப்ப வகை.

gin'gerous, *a.* இஞ்சிபோன்ற ; இஞ்சிச் சுவையொத்த.
gin'ger-race, *n.* இஞ்சிவேர், இஞ்சிக்கிழங்கு.
gin'ger-snap', *n.* இஞ்சியப்ப மாச்சில்லு, இஞ்சிச் சுவையும் மணமும் கொண்ட 'பிஸ்கோத்து'.
gin'ger-wine', *n.* தட்டியிட்ட இஞ்சியும் புளித்த சர்க்கரையும் நீரும் கலந்து உண்டுபண்ணிய பிரித்தானிய இன்தேறல் வகை.
ging'ham, *n.* வண்ண இழைகளால் கோடுகள் அல்லது கட்டங்களிட்டு நெய்யப்பட்ட பருத்தி அல்லது மென்சணல் துணி.
gin'gili, *n.*=gingelly.
gingiv'al, *a.* பல்லெயிறு சார்ந்த.
gingivi'tis, *n.* பல்லெயிற்று வீக்கம்.
ging'ko, *n.* விசிறி மரவகை.
gi'nglymus, *n.* (உள்.) இரு திசைகளில் மட்டும் இயங்கக் கூடிய கீல்மூட்டு.
gin'-horse, *n.* ஆலையை இயக்கும் குதிரை.
gin'-house, *n.* பஞ்சினின்று கொட்டைகளை அகற்றும் ஆலை, பஞ்சரைக்குமிடம்.
ginn'er, *n.* பஞ்சினின்று பருத்திக் கொட்டைகளை நீக்குபவர்.
ginn'ery, *n.*=gin-house.
gin'palace, *n.* இன்தேறற் பகட்டில்லம்.
gin'seng, *n.* மருந்துவேர்.
gin'-shop, *n.* இன்தேறல் விடுதி.
gin'sling, *n.* நல்மணத் தண் குடிவகை.
gin'-trap, *n.* பல்லுடைத் திண் விசைப்பொறி.
gip'sy, *n.* நாடோடி இனவகை சார்ந்தவர்; நாடோடி; சூழ்ச்சி மிக்க கயவர்; குறும்புக்காரர்; கருநிற உடலுடையவர்; குறும்புக்காரப் பெண்; கருநிறப் பெண்; *a.* நாடோடி இன வகை சார்ந்த; மனைப் புறவாழ்வுப் பண்பு தோய்ந்த; சமுதாயக் கட்டுப்பாடற்ற; *v.* நாடோடி இனவகையினர்போல மனைப்புற வெளிகளில் அல்லது கூடாரங்களில் தங்கி உண்டாடி வாழ்.
gip'symoth, *n.* இலை தழைகளுக்குச் சேதம் விளைக்கும் அந்துப் பூச்சிவகை.
gip'sywort, *n.* தோல்நிறம் மாற்றப் பயன்பட்ட செடிவகை.
giraffe', *n.* ஒட்டைச்சிவிங்கி.
gi'randole, *n.* சுழல் வாணம், சுழலும் சக்கரத்திலிருந்து வாணங்களை எறியும் வெடியமைவு; சுழலும் நீர்த்தாரை; மெழுகுதிரிக் கொத்துவிளக்கு; சிறுமணிக்கற்களால் சூழப்பட்ட பெரிய மணிக்கற் காதணி; பெரிய மணிக்கல்லைச் சூழச் சிறுமணிகளையுடைய தொங்கட்டம்.
gi'rasol, gi'rasole, *n.* சிவப்பு ஒளிகாலும் நீரகப்படிக்க மணிக்கல் வகை.
gird [1], *v.* சுற்றிக்கட்டு, வரிந்து கட்டு; கச்சையினால் இறுக்கிக் கட்டு; சூழ், வளை; சுற்றியிரு; சூழ்எல்லையாய் அமை; அணி; பூட்டு; வலிமையும் ஆற்றலும் அளி; கச்சையில் வாள் செருகிக்கொள்; கச்சையின்மேல் வாள் முதலியவற்றை வைத்துக்கட்டு; (தொ.) gird oneself, gird one's loins, ஆடைகளை வரிந்து கட்டிக்கொண்டு புறப்படு, மடிதற்று முந்துறு, செயலாற்ற ஆயத்தமாகு.
gird [2], *n.* வசை மொழி; ஏளனம்; *v.* ஏளனம் செய், இகழ்.
gird'er, *n.* தூலம், தள ஆதாரமாக இடப்படும் பெரிய உத்தரம்; தூலமாகப் பயன்படும் இரும்புப் பாளம்; பாலங்களுக்கும் மோடுகளுக்கும் ஆதாரமான எஃகுக்கட்டுமானச் சட்டம்.
gird'ing, *n.* வட்டமாகச் சூழ்ந்துள்ள பொருள்.
gir'dle, *n.* அரைக்கச்சை, அரைஞாண்; ஒட்டியாணம்; கச்சை போல் சூழ்ந்துள்ள பொருள்; (உள்.) கைகால்களைத் தாங்கும் என்புவளையம்; பட்டை வளையம்; பட்டை அகற்றுவதனுல் மரத்தைச் சுற்றி ஏற்படும் வளையம்; ஒளிபிறங்கும்படி பட்டை தீட்டப்பட்ட மணிக்கல்லின் விளிம்பு; *v.* கச்சையினால் கட்டு; வட்டமாகச் சூழ்ந்துகொள்; மரத்தைச் சுற்றிப் பட்டையகற்றி வளையமிட்டு மரத்தின் புதுவளர்ச்சி ஊக்கு; (தொ.) hip girdle, pelvic girdle, இடுப்பு அரை சூழ்ந்துள்ள என்புவளையம்; pectoral girdle, shoulder girdle, தோள் எலும்பு வளையம்.
girl, *n.* பெண் மகவு; மணமாகா இளம்பெண்; சிறுமி; பெண்; காதலி; வேலைக்காரி; *a.* பெண்பாலரான; (தொ.) Girl Guide, Girl Scout, சாரணப் பெண்கள் படையினர்; old girl, முன்னாளைய மாணவி; பெட்டைக் குதிரை.
girl'hood, *n.* சிறுமிப் பருவம்; கன்னித் தன்மை.
girl'ish, *a.* சிறுமிக்குரிய; சிறு பெண் போன்ற; சிறு பெண்ணின் பண்பு வாய்ந்த.
Giron'dist, *n.* பிரஞ்சுப் பேரவையில் 1791 முதல் 1793 வரையிலிருந்த மிதவாதக் குடியரசுக் கட்சி உறுப்பினர்; பிரஞ்சு மிதவாதக் குடியரசுக் கட்சியின் கொள்கை உடையவர்; *a.* பிரஞ்சு மிதவாதக் குடியரசுக் கட்சி சார்ந்த; பிரஞ்சு மிதவாதக் குடியரசுக் கட்சியின் கருத்துக்களையுடைய.
girt [1], *n.* முரண்கணிப்பீட்டளவை, தட்டையாயிராத பரப்புக்களில் மேடுபள்ளக் கணிப்புக்களுடன் குறுக்காகவும் சுற்றியும் எடுக்கப்படும் அளவை; *v.* முரண்கணிப்பீட்டளவை எடு.
girt [2], *v.* gird [1] என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.
girth, *n.* சேணக்கச்சு, சேணத்தைக் குதிரையின் உடலுடன் இணைத்துக் கட்டும் துணி அல்லது தோல்வாரினாலான சுற்றுப் பட்டை; பக்கச் சுற்றளவு, நீள்உருளை ஒத்த வடிவுடைய வற்றின் சுற்றுப்பட்டை அளவு; *v.* உடலை வட்டமாக அணைத்துகிட; சேணத்தை இறுகக்கட்டு; வரிந்து கட்டு; சுற்றி வளை, சூழ்; சுற்றுப்பட்டை அளவு எடு.
gist, *n.* கருப்பொருள்; பிண்டப் பொருள், சாரம்; உயிர்க் கருத்து; சுருக்கம்.
gitt'ern, *n.* தொடக்ககால நரப்பிசைக் கருவி வகை; *v.* நரப்பிசைக் கருவி வகையை மிழற்று.
give, *n.* இழைவு, தொய்வு, நீண்டு கொடுத்துச் சுருங்கும் இயல்பு, விட்டுக்கொடுப்பு; *v.* தா, கொடு; பரிசாக அளி; இரவலர்க்கு ஐயம் கொடு; விலைக்குக் கொடு; செலவழி; வீணாக்கு; மணஞ்செய்து கொடு; உடைமை வழங்கு; ஒப்புவி; துற; மரபுரிமையாக விட்டுச்செல்; விளைவித்து உதவு; பயனுக வழங்கு; செயல் உதவு; ஆட்படுத்து; ஈடுபடுத்து; தெரிவி; அறிவி; இசைவளி; வாய்ப்பளி; வசதிசெய்து கொடு; இணக்கமளி; சலுகையளி; தருவித்துக் கொடு; தேடிக்கொடு; ஏற்படுத்திக் கொடு; தோற்றுவி; காட்டு; குறித்துக் காட்டு; செலுத்து; இடங்கொடு; விட்டுக்கொடு; தொய்வுறு; விழு; தகர்; தளர்வுறு, தளர்ந்திறு; கரை; சுருங்கு; திற; (தொ.) give and take, கொடுத்து வாங்கல்; பரிமாற்றம்; ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்தல்; give away, ஒன்றும் பெற்றுக் கொள்ளாமல் கொடு; காட்டிக் கொடு; மணமகளை மணமகனிடம் கைப்பிடித்துக் கொடு; பரிசாக வழங்கு; give back, திருப்பிக்கொடு; பழைய நிலையில் வை; give birth to, பெறு; ஈனு; தோற்றுவி; give chase, துரத்து; பின் தொடர்ந்து செல்; give ear, கேள், செவிசாய்; give forth, வெளியிடு; புறந்தள்ளு; give ground, இடங்கொடு, விட்டுக்கொடு இணங்கு; give head, give line, give rein, இன்னும் மிகுதி உரிமை அளி, மேலும் வாய்ப்புக் கொடு; give in to, கீழ்ப்படி, விட்டுக்கொடு; give in to one, (பே-வ.) செம்மையாகத் திட்டு, நன்கு அடி; give off, வெளியிடு, உமிழ், புறந்தள்ளு; give oneself away, தன்னை அறியாது அல்லது வாய்தவறி மறை செய்தியை வெளியிட்டுவிடு; give out, வெளியிடு, சொல், தெரிவி; பங்கிடு; முட்டுப்பாடுறு; முற்றிலும் களைப்படைந்துவிடு; give over, செயல் நிறுத்து, செய்யாமலிரு; கைவிட்டுவிடு; தவிர், ஒப்புவி; give place, give place to, இணங்கு, விட்டுக்கொடு; give rise to, காரணமாகு, விளைவி; give the lie to, ஒருவர் பொய்யரெனப் பலரறியக் குற்றம் சாட்டு; give tongue, வேட்டை நாய் வகையில் மோப்பங்கண்டு குரை; give up, கைவிடு, விட்டுவிடு; சரணடை,

கீழ்ப்படி ; செயல் தவிர் ; தொடர்பினின்றும் விலகிக்கொள், நோய் வகையில் தீராதெனக்கூறு; நம்பிக்கையிழ; give way, பின் தங்கு, பின்வாங்கு, இடங்கொடு, விலகிக்கொள், பெரும்பாரம் தாங்காமல் அறு; பிளந்து இறு; இடிந்து விழு.

gi'ven, *a.* கொடுக்கப்பட்ட; குறிப்பிடப்பட்ட; மனம் பற்றிய நிலையுடைய ; பழகி அடிமைப்பட்டுவிட்ட, ஏற்றுக்கொள்ளப் பட்ட ; (தொ.) given name, தீக்கை அல்லது ஞான ஸ்நானத்தின்போது சூட்டப்பட்ட பெயர்; given over, தீய நெறிகளுக்கு ஆளாகிவிட்ட.

giv'er, *n.* கொடுப்பவர், கொடையாளி.

giv'ing, *n.* கொடுத்தல்; கொடுக்கப்பட்ட பொருள்; *a.* கொடுக்கிற.

gizz'ard, *n.* பறவைகளின் குடற்பைகளுள் இரண்டாவதான அரைவைப்பை, கற்குடல்; மீன்-பூச்சி-நத்தை வகைகளின் சதைப்பற்றுள்ள இரைப்பை; (தொ.) fret one's gizzard, தேவையின்றி மனதைத் தொல்லைப்படுத்திக் கொள் ; stick in one's gizzard, விருப்பமற்றதாயிரு.

glab'rous, *a.* மயிர் அல்லது மென்மயிர் அற்ற, மழமழப்பான தோலுடைய ; துய்யில்லாத, சிலிம்பிலாத.

glace, (பிர.) *a.* துணி-பதனிட்ட தோல் முதலியவற்றின் வகையில் மழமழப்பான, மெருகிட்ட; பழங்கள் வகையில் சர்க்கரையிட்டுக் குளிர் பதனம் செய்யப்பட்ட.

gla'cial, *a.* பனிக்கட்டிக்குரிய ; பனிக்கட்டிமயமான ; உறைந்த ; இயல்பாய் உறைநிலையிலுள்ள ; எளிதில் உறைநிலைப்படுகிற ; (வேதி.) மணிஉருப்பட்ட ; (மண்.) பனிப்பாளம் பரவிய; பனிப்பாளத்தின் செயலாலான; (தொ.) glacial epoch, glacial era, glacial period, பனிக்கட்டி ஊழி, நிலவுலக வடபாதி முழுதும் பனிக்கட்டியால் மூடப்பட்ட மண்ணியல் ஊழிக்காலம்.

gla'cialist, *n.* மண்ணியல் பனிக்கட்டியூழியின் செயற்பாட்டினை ஆய்பவர்.

glac'iate, *v.* பனிக்கட்டியின் செயலால் மெருகூட்டு ; நிலத்தின்மீது சறுக்கும் பனிக்கட்டியின் செயலுக்கு உட்படுத்து.

gla'ciated, *a.* பனிக்கட்டியின் செயலுக்குட்பட்ட வடுவுடைய; பனிக்கட்டியின் செயலால் மெருகிடப்பட்ட ; பனிக்கட்டிப் பாளங்களால் மூடப்பட்ட, சறுக்கு பனிக்கட்டித் தேக்கங்களால் மூடப்பட்ட.

gla'cier, *n.* சறுக்கு பனிக்கட்டிப்பாளம், சறுக்கு பனிக்கட்டியாறு; பனிக்கட்டிக்குவியல்.

glaciol'ogist, *n.*=glacialist.

gla'cis, *n.* எதிரிகள் எளிதில் சுடப்படுவதற்கு வாய்ப்பான கோட்டைப் புறவாரச் சரிவு ; *pl.* gla'cia, glac'ises.

glad, *a.* மகிழ்ச்சியுடைய; செய்தி வகையில் மகிழ்ச்சி தருகிற; அகமகிழ்வு தெரிவிக்கிற; இயற்கை வகையில் மகிழ் தோற்றமுடைய, இன்பக்காட்சிகள் நிரம்பிய, இன்னொளியார்ந்த ; *v.* மகிழ்வூட்டு; (தொ.) glad neck, சட்டைவகையில் முன்புறம் தெரியும்படித் திறந்துகாட்டப்படும் கழுத்து, தாழ்வாகத் தைத்த கழுத்துப் பகுதி.

gladd'en, *v.* உவப்பூட்டு ; இன்பங்கொடு ; ஊக்கு.

glade, *n.* காட்டினுள் திறந்த வெளி ; காட்டுவழிப்பாதை.

glad'iate, *a.* வாள் வடிவமுள்ள.

glad'iator, *n.* பண்டைய ரோமாபுரிக் காட்சியரங்குகளில் வாட்போர் வீரன்; காட்சிச் சண்டை வீரன், மல்லன்; அரசியல் முதலிய துறைகளில் சொற்போர் வல்லுநர்.

glad'iole, *n.*=gladiolus.

gladiol'i, *n. pl.* gladiolus என்பதன் பன்மை வடிவங்களில் ஒன்று.

gladiol'us, *n.* (தாவ.) வாள்போன்ற இலைகளையுடைய செடி வகை; (உள்) மார்பெலும்பின் நடுப்பாகம்; *pl.* gladiol'uses.

glad'some, *a.* மகிழ்ச்சி மிக்க, இன்பந்தருகிற, உவப்பான.

Glad'stone, Glad'stone-bag', *n.* பளுக்குறைவான பயணப் பை வகை.

Glad'stone claret, *n.* மலிவான பிரஞ்சுக் குடிவகை.

glair, *n.* முட்டையின் வெண்கரு; முட்டை வெண்கருவினின்றும் செய்யப்படும் பசைப்பொருள் வகை; முட்டை வெண்கருவையொத்த பசைப்பொருள் வகை; *v.* முட்டைகளின் வெண்கருவினை மேலே பூசு.

glaive, *n.* (செய்.) அகல்வாள், வாள்.

glam'orous, *a.* மருட்டுகிற, மயக்குகிற, ஏமாற்றி மனத்தைக் கவர்கிற.

glam'our, *n.* மயக்கும் அழகு; மாயக் கவர்ச்சி; மந்திர ஆற்றல், வசியத்திறம்; *v.* மயக்கு, மாயவித்தையால் மருட்சி செய் ; மாயத்தினுல் வசப்படுத்து.

glance[1], *n.* கண்ணோட்டம் ; நொடிநேரப்பார்வை ; கணநேர நோக்கு; சாய்வியக்கமோதல்; சாய்வியக்கம்; பட்டுத்தெறிப்பு; மின்னொளி ; மின்னியக்கம் ; மின்னொளி வீச்சு ; மின்னியக்க வீச்சு ; மட்டையைச் சாய்வானநிலையில்கொண்ட பந்தடி ; *v.* பட்டுத் தெறித்தோடு ; பட்டுப்படாமல் விரைந்தோடு ; மின்னிடு, பளிச்சிடு ; மின்வெட்டு ; அம்புபோல் பாய் ; கதிர் பாய்ச்சு ; கண்பார்வை செலுத்து ; கணநேரம் நோக்கு ; மேலீடாகக் குறிப்பிட்டு விரைந்துசெல் ; கவனித்துங் கவனியாதது போல் விரைந்து மேலே செல் ; போகிற போக்கில் குறிப்பிடு ; ஏளனமாகக் குறிப்பிட்டுச் செல் ; குறிப்பாக வாசித்துச் செல், மேலீடாக வாசித்துச்செல்.

glance[2], *n.* ஒளிரும் தனி உலோகக் கலவை வகை.

glance'-coal, *n.* அனல்மலி நிலக்கரி வகை.

gland, *n.* (உட.) சுரப்பி, கழலை; (தாவ.) செடியினத்தின் புறம்பேயுள்ள உயிர்மத் தொகுதி.

glan'dered, *a.* குதிரைச் சயநோயினுல் பீடிக்கப்பட்ட.

glan'ders, *n. pl.* குதிரைச் சயம், மனிதரையும் தொற்றிக் கொள்ளும் குதிரைத் தொற்றுநோய் வகை.

glandif'erous, *a.* கொட்டை வகைகளைக் கொண்டுள்ள.

glan'diform, *a.* சுரப்பிபோன்ற ; கொட்டை வகை வடிவமுள்ள.

gland'ular, *a.* சுரப்பிகள் கொண்டுள்ள ; சுரப்பிகளடங்கிய ; சுரப்பிகள் சார்ந்த.

gland'ule, *n.* சிறு சுரப்பி; நுண்கழலை.

gland'ulous, *a.*=glandular.

glare, *n.* கூசொளி ; கடுவெயில் வெக்கை, படரொளி வெப்பு ; வெறிப்புப் பேரொளி; பளபளக்கும் பனிப்பரப்பு; பளபளக்கும் கண்ணாடிப் பரப்பு ; வெறித்த நோக்கு ; குத்திட்ட பார்வை ; *v.* கூசு பேரொளி வீசு, கண்ணை உறுத்தும் ஒளிகாலு ; முனைப்பான காட்சியளி, வெறித்த தோற்றமளி ; அச்சந் தோன்றப் பார், குத்திட்டுப் பார் ; உறுத்த நோக்கினுல் கடுவெறுப்பினைக் காட்டு.

glar'ing, *a.* ஒளிவீசுகிற, பளபளப்பான; கண் கூசச்செய்கிற; வெளிப்படையான, முனைப்பான.

glar'ingly, *adv.* முனைப்பாக.

glass, *n.* பளிங்கு; கண்ணாடி ; கண்ணாடி போன்ற பொருள் ; கண்ணாடியின் இயல்பும் பண்பும் உடைய பொருள்; மணி உரு அமைப்பற்ற பாறை வகை ; மணிஉரு அமைப்பற்ற பாறைத்துண்டு ; கண்ணாடியால் செய்யப்பட்ட பொருள் ; கண்ணாடிக் குவளை ; கண்ணாடிக் குவளை நீர்மஅளவு ; கண்ணாடிக் குவளையிலுள்ள குடிவகை ; கண்ணாடிக் குவளைப் பானம்; கண்ணாடிக் கலம்; முகக் கண்ணாடி; மூக்குக்கண்ணாடி வில்லை ; கடிகார முகப்புவட்டில் ; முற்கால நாழிகை வட்டில் ; வானிலை வட்டில்; தொலை நோக்காடி ; தொலைஆடி ; நுண்ணோக்காடி; காற்றழுத்தமானி; வண்டியின் கண்ணாடிப் பலகணி ; கண்ணாடிக் கருவிகலத்தொகுதி ; பலகணிக் கண்ணாடித்தொகுதி ; செடிகளுக்கான காப்புமனைக் கண்ணாடித் தொகுதி ; *a.* கண்ணாடியினுல் செய்யப்பட்ட ; *v.* பளபளப் பாக்கு; மெருகிடு; கண்ணாடியில் மாட்டு, கண்ணாடிக்குள் வைத் தமை; கண்ணாடியின் கீழ்வை; கண்ணாடிக்குப் பின்னுல் வை;

கண்ணுடிபோடு; கண்ணுடி அமைத்துக்கொடு; ஒளி கண்ணுடியில்பட்டு மீளச்செய், எதிர் உருக்காட்டு, நிழலிடு; (தொ.) glass wool, வெப்பத் தடையாகவும் கட்டுமான இடையடைப்பாகவும் பஞ்சுபோலப் பயன்படும் நுண்ணிழை வடிவான கண்ணுடி; live in a glass house, தாக்குதலுக்கு அல்லது சுடுசொல்லுக்கு எளிதில் உள்ளாகு; soluble glass, water glass, சாம்பர சிலிகை, உவர சிலிகை.

glass'-blower, *n.* கண்ணுடிப்பொருள்களை உருகுநிலையில் ஊதி உருவாக்குபவர்.

glass'-blowing, *n.* ஊதிக் கண்ணுடிப் பொருள்களை உருவாக்கும் முறை.

glass'-case, *n.* கண்ணுடி மூடுகாப்புப் பேழை.

glass'-cloth, *n.* கண்ணுடிகளைத் துடைத்து உலர்த்துவதற்கான துணி; கண்ணுடி இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட பொருள்; தேய்ப்புத் துணி, கண்ணுடித்துகள்கள் தூவப்பட்ட மெருகிடுவதற்கான துணி.

glass'-crab, *n.* பளிங்கனைய நத்தையின முட்டைப்புழு வகை.

glass'-culture, *n.* கண்ணுடிக்காப்பு மூடிகளில் செடியினம் பேணி வளர்க்கும் முறை.

glass'-cutter, *n.* கண்ணுடித்தகடுகளை வெட்டுவதற்கான கருவி; கண்ணுடி வெட்டும் தொழில்செய்பவர்.

glass'-cutting, *n.* கண்ணுடி வெட்டி உருவாக்கும் முறை.

glass'es, *n. pl.* மூக்குக்கண்ணுடி; கண்ணுடிவில்லைகள்; (தொ.) musical glasses, இசைக்கருவி வகை.

glass'-eye, *n.* கண்ணுடிச் செயற்கைக் கண்; குதிரைகளின் பார்வை குருடாக்கும் நோய் வகை.

glass'ful, *n.* கண்ணுடிக்கலம் கொள்ளும் அளவு; *pl.* glass'fuls.

glass'-gall, *n.* உருக்கப்பட்ட கண்ணுடியின்மேல் படியும் அழுக்கேடு.

glass'-house, *n.* கண்ணுடித்தொழிற்சாலை; செடிகளை வளர்ப்பதற்கான கண்ணுடிக் காப்பகம்; கண்ணுடிமோடிட்ட நிழற்படத் தொழில்மனை.

glassine', *n.* பளிங்கு போன்ற தாள்.

glass'ing-jack, *n.* தோல் பதனிடுபொறி.

glass'-man, *n.* கண்ணுடி செய்பவர்; கண்ணுடி விற்பவர்.

glass'-painting, *n.* வேதியியல் முறையில் கறைப்படுத்துவது மூலமாகக் கண்ணுடியின்மேல் படங்கள் எழுதும் கலை.

glass'-paper, *n.* கண்ணுடித்தூள் தூவப்பட்ட தாள்.

glass'-snake, *n.* எளிதில் ஒடிந்துவிடும் வால் உடைய கால் அற்ற தென் அமெரிக்க பல்லி வகை.

glass'-soap, *n.* கண்ணுடி செய்பவர்கள் கண்ணுடியிலிருந்து வேண்டாத நிறத்தை அகற்றுவதற்குப் பயன்படுத்தும் மங்கனிய ஈருயிரகை போன்ற பொருள்.

glass'ware, *n.* கண்ணுடிக் கருவிகலப் பொருள்களின் தொகுதி.

glass'work, *n.* கண்ணுடித் தொழிற்சாலை; கண்ணுடித் தட்டுமுட்டுப் பொருள்கள்; கண்ணுடித் துணைக்கருவிகலங்கள்.

glass'wort, *n.* கண்ணுடி செய்வதில் முன்பு பயன்படுத்தப்பட்ட செடிவகை.

glass'y, *a.* கண்ணுடிபோன்ற, கண்ணுடியின் இயல்புள்ள; கண்வகையில் பார்வை மங்கலான, உணர்ச்சியின் தடமற்ற, துரித்த தோற்றமுடைய; தண்ணீர் வகையில் படிகம் போன்ற, அலையற்ற, அமைதியுடைய, ஒளிர்கிற.

Glaswe'gian, *n.* கிளாஸ்கோ (Glasgow) நகரவாசி; *a.* கிளாஸ்கோ நகரம் சார்ந்த.

glau'berite, *n.* சாம்பல்நிற வெள்ளைக் கனிப்பொருள் வகை, பாறை உப்புவகையில் பெரும்பாலும் காணப்படும் உவர சுதைய கந்தகை.

Glaub'er's salt, Glaub'er's salts, *n.* செர்மன் வேதியியலாரான கிளாபர் (J. R. Glauber 1604-68) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட பளிங்கனைய நீருடை உவரக் கந்தகை.

glaucom'a, *n.* (மரு.) கண்விழி விறைப்புநோய்.

glauc'ous, *a.* கடற்பச்சை நிறமுள்ள, சாம்பல் நிறங்கலந்த நீலவண்ணமுடைய; (தாவ.) கொடிமுந்திரிப் பழங்களைப் போல நேர்த்தியான பசுமை போர்த்த.

glaze, *n.* மட்பாண்டத்தின் மெருகிட்ட பரப்பு; மண்பாண்டத்தை மெருகூட்டுவதற்குரிய பளிங்கியற்பொருள்; துணி தோல் அப்பங்கட்குரிய மேல் மெருகுப் பரப்பு; கண்ணின் ஆடை படர்ந்த தோற்றம்; வண்ணங்கள்மீது தோய்விக்கப் பெறும் பளபளப்பான பளிங்குத்தாள்; பளபளப்பான தோற்றம்; *v.* பலகணிச்சட்டங்களில் கண்ணுடி பதி; படங்களுக்குக் கண்ணுடிப்பலகணிகளமை; மட்பாண்டங்கள்மீது மெருகுப் பரப்பிடு; மட்பாண்டங்கட்கு வண்ணமெருகிடு; வண்ணங்கள் மீது மெருகுத்தாள் பொருத்து; துணிதோல் அப்பங்கள்மீது மெருகுத்தோடு அமை; கண்மீது வெண்படலம் படர்வி; தேய்த்துப் பரப்பைப் பளபளப்பாக்கு.

glaz'en, *a.* கண்ணுடிபோன்ற; பளபளப்பாக்கப்பட்ட.

glaz'er, *n.* மட்பாண்டமெருகிடுபவர்; தாள் மெருகிடுபவர்; பொருள்களைப் பளபளப்பாக்குபவர்.

gla'zier, *n.* சாளரச் சட்டங்களுக்குக் கண்ணுடி பொருத்துபவர்.

glaz'ing, *n.* கண்ணுடி பொருத்துதல்; கண்ணுடி பொருத்தும் கலை; பளிங்குப்பூச்சுப் போர்த்தும் கலை; மெருகிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்; சாயங்களின்மீது பொதியப்படும் வண்ணக்கண்ணுடித் தாள்.

gleam, *n.* மினுமினுப்பு, பளிச்சிடுதல்; மெல்லிய ஒளிக்கதிர்க்கற்றை; தடம், சாயல், இடைப்பட்டுத் தோன்றும் பண்பின் மென்கூறு; *v.* மங்கலாக ஒளிவீசு, மின்னு; பளிச்சிடு.

gleam'y, *a.* மங்கலாக மினுங்குகிற, மங்கல் ஒளிக்கதிர்கள் வீசுகிற.

glean, *n.* பொறுக்கிச் சேர்க்கப்பட்ட பொருள்; பொறுக்குதல்; *v.* சிதறிக்கிடக்கும் கூலக்கதிர்களைப் பொறுக்கு, பொறுக்கிச் சேர்; கொந்து, கொய்; சிறு அளவுகளாகத் திரட்டு, தூர்த்துத்துடைத்துச் சேர்; செய்திகளைத் திரட்டித்தொகு.

glebe, *n.* (செய்.) மண்; மண்கட்டி; நிலம்; வயல்; திருக்கோயில் பணியுடன் இணைவுற்ற நிலம்.

glebe'-house, *n.* சமயகுருவின் குடியிருப்பிடம்.

glee, *n.* மகிழ்ச்சி, எக்களிப்பு; பல் குரற் பாட்டு.

gleep, *n.* அணு ஆற்றல் உண்டாக்கவல்ல அமைவு வகை.

gleet, *n.* சீநீர், புண்ணீர்; புறமேகம், வெட்டைநீர்; *v.* சிலைத்து ஒழுகு.

glen, *n.* இடுங்கிய பள்ளத்தாக்கு.

glen'doveer, *n.* கந்தருவர் போன்ற தேவதை.

glenga'rry, *n.* வட ஸ்காத்லாந்து மேட்டு நிலத்தவர் தொப்பி வகை.

Glenliv'et, *n.* ஸ்காத்லாந்து நாட்டுச் சாராய வகை.

glen'oid, glen'oidal, *a.* (உள்.) எலும்பு வகையில் கிண்ணம் போற்குழிவான.

glib, *a.* வழவழப்பான, இயங்கும்வகையில் தங்குதடையற்ற, எளிதாக வழுக்கிச் செல்கிற; பேச்சுவகையில் ஆற்றொழுக்கான, தடைப்படாத, கருத்தின்றிச் சொல்லோட்டமுள்ள; வெறுஞ்சொல் வளமுடைய; *v.* வழவழப்பாக்கு; *adv.* வழவழப்பாக; தங்கு தடையின்றி; பேச்சளவில், வெறுஞ்சொல்லோட்டமுடன்; சொல்வளமாக.

glide, *n.* இழைவியக்கம், தடையின்றி நழுவிச்செல்லும் போக்கு; சுரநிலையிலிருந்து மறுசுரநிலைக்கு இடையறுது இயங்கும் ஒழுகிசை; (ஒலி.) ஒலியுறுப்புக்களில் ஓரிடத்திலிருந்து பிறிதிடத்துக்கு இடைவிடாது படிப்படியாக இயங்கும் இணை இழையொலி; இழைபு நடனஇயக்கம்; மென்சரிவு; மென்

சரிவுச் சறுக்குதளம்; ஒழுகியல் ஆறு; ஆற்றின் ஒழுகியற் பகுதி; மரப்பந்தாட்டத்தில் தடவடி; *v.* இழைந்துசெல், மிதவலாகத் தடவிச்செல், நழுவிச் செல், சறுக்கு; நீர்வகையில் ஒழுகலாகச் செல்; பறவைவகையில் மிதவலாகச்செல்; பாம்பு வகையில் தவழ்ந்து ஊர்ந்துசெல்; வண்டிவகையில் தடையற்று ஊர்ந்துசெல்; கப்பல்வகையில் மிதந்துசெல்; ஆள்வகையில் மெல்ல நழுவிச்செல்; பனிக்கட்டிமீது சறுக்காடிச்செல்; பொழுதுவகையில் மெல்லக் கடந்துசெல்; விமானவகையில் இயங்குபொறி இல்லாமலே சறுக்கிச் செல்; மறைவாக நழுவு; முன்னேறுவது தெரியாமல் மெல்ல நகர்ந்து செல்; வேறுபாடு தெரியாமல் படிப்படியாக மாறுதலடை; இழைவுபடச் செலுத்து.

glid'er, *n.* இழைந்து செல்பவர்; இழைந்து செல்வது; பொறி அமைப்பில்லாச் சறுக்கு விமானம்; கடல் விமானம்.

glid'ing, *n.* நழுவிச்செல்கை; பொறியற்ற வானவூர்தியிற் பறத்தல்.

glim, *n.* கணநேரத் தோற்றம்.

glimm'er[1], *n.* மினுக்கம், மங்கிய ஒளி; நடுங்கொளி; தொலைச் சிற்றொளி, மினுங்கொளி; தொலைத் தோற்றம்; கணநேரத் தோற்றம், அரைத்தோற்றம்; *v.* விட்டொளிர்.

glimm'er[2], *n.* அப்பிரகம், காக்காய்ப் பொன்.

glimm'ering, *n.* மங்கல் ஒளி; தொலைத்தோற்றம்.

glimpse, *n.* கணநேரத் தோற்றம்; மங்கலான மினுக்கொளி; அரைகுறைத்தோற்றம்; விட்டுவிட்டுத் தோன்றும் தோற்றம்; தெளிவற்ற காட்சித் துண்டுத் துணுக்கு; *v.* கணநேரத் தோற்றமாகக் காண்; விட்டுவிட்டுக்காண்; அரைகுறையாகப் பார்; மங்கலாகத் தோன்று; காட்சிக்குப் புலனாகு.

glint, *n.* பாயொளி, மின்னொளி, மினுக்கம், ஒளிர்வு; *v.* பளிச்சிடு, மின்னு, ஒளிர்; எதிர் ஒளிகாட்டு.

glissade', *n.* சரிவில் கீழ்நோக்கிச் சறுக்கிச் செல்லுதல்; வழுக்கல் நடனம்; *v.* சரிவில் கீழ்நோக்கிச் சறுக்கு.

glis'ten, *n.* மினுமினுப்பு, மின்னொளிர்வு; *v.* விட்டுவிட்டு ஒளிர், மினுமினு, பளபள என்று ஒளிகாலு.

glis'ter, *v.* (செய்.) ஒளிர், மின்னு.

glitt'er, *n.* பளபளப்பு, மினுமினுப்பு; சுடரொளி வீச்சு; *v.* பளபளப்பாக மின்னு, சுடரொளி வீசு, மின்னி மினுமினுப்பாகப் பகட்டு.

gloam'ing, *n.* அந்தி ஒளி, மாலை அரைஒளி.

gloat, *n.* அவல மகிழ்வு; *v.* அவலமகிழ்வுகொள்; அவலமகிழ்வுடன் நோக்கு; சிற்றின்ப எண்ணத்துடன் நோக்கி மகிழ்வில் திளை; பேராவலுடன் நோக்கி மகிழ்; காழ்ப்புடன் நோக்கி மகிழ்வுறு; சிற்றின்பத்தில் தோய்; பேராவலிற் கிடந்து மகிழ்; தேடிக்கண்டுமகிழ்; வெறுப்பில் ஆழ்ந்து ஈடுபட்டு மகிழ்.

glob'al, *a.* கோள வடிவமான; உலகெங்கும் பரவியுள்ள; மிகப் பரந்த; முழு உலகளாவிய; அனைத்துலகையும் பாதிக்கிற; மக்களனைவரையும் கருத்திற்கொண்ட; இன எல்லை முழுதளாவிய.

glob'ate, glob'ated, *a.* கோளவடிவமான.

globe, *n.* உருண்டை வடிவப்பொருள்; நிலவுலகம்; கோள்; வான் கோளம்; விண்மீன், ஞாயிறு; வான்கோளகை; வான் கோளகை வடிவ விளக்கப்படம்; அரசுச்சின்னமாகிய பொன் உருண்டை; (உள்.) கண்விழி உருளை; உருண்டை வடிவக் கண்ணாடியாலான விளக்குமூடி; உருண்டை வடிவக் கண்ணாடிக் கிண்ணம்; *v.* உருண்டை வடிவமாக்கு; கோளமாகு.

globed, *a.* உருண்டை வடிவமான; கோளமுடைய.

globe'-fish, *n.* தன் உருவத்தை உருண்டையாகப் பெருக்கிக் கொள்ளக்கூடிய மீன்வகை.

globe'-flower, *n.* வட்டக் கிண்ண வடிவமான மஞ்சள்நிற மலர்ச் செடிவகை.

globe'-trotter, *n.* அண்டசாரணர்.

globe'-trotting, *n.* உலகச்சுற்றுலா வரல்.

glob'ular, *a.* உருண்டையான, கோளவடிவமுள்ள; சிறு கோளங்களாலான.

glob'ule, *n.* சிறுகோளம், உருண்டைத்துகள்; துளி; மாத்திரை, குளிகை.

glob'ulin, *n.* உப்புநீரில் கரையும் இயல்புடன் உயிரினத் தசைக்கூறுகளில் காணப்படும் புரத வகை.

glob'ulite, *n.* பாறை வகைகளில் காணப்படும் மிகநுண்ணிய உருப்பளிங்குக் கோளம்.

glochid'iate, *a.* (தாவ.) நுனியில் சுணையுடைய, முனையில் ஈட்டி முனைபோன்ற கூறுடைய.

glock'enspiel, *n.* மொத்துச்சலாகை இசைக்கருவி, சம்மட்டியால் அடித்து மிழற்றப்படும் உலோகக் கட்டைகளையுடைய இசைக்கருவி வகை.

glom'erate, *a.* (தாவ., உள்.) நெருக்குக் கொத்துக்களாயுள்ள; *v.* திரட்டு, உருட்டு.

glom'erule, *n.* (தாவ.) சிதல் விதைகள் கொண்ட சிறு உருண்டை; குறுங்காம்புள்ள பூங்கொத்து; சிற்றுயிர்களின் திரள் மொத்தை வடிவம்; நாடி நரம்புகளின் திரள்முடி; தசைக் கூறுகளின் இணைக்குச்சம்.

gloom, *n.* இருள்; தெளிவற்ற நிலை; மனச் சோர்வு; முக வாட்டம்; கையறவு; *v.* முகவாட்டமாயிரு, சிறிய தோற்றங் கொள்; (வானிலை.) மப்புமந்தாரமாயிரு; குமுறலாயிரு; அச்சுறுத்துவதாயிரு; இருண்டு தோன்று, இருளடைந்திரு; தெளிவற்றதாயிரு; இருள் பரப்பு; துயர் பரப்பு.

gloom'y, *a.* இருண்ட; வெளிச்சமில்லாத; சோர்ந்த தோற்ற முடைய; சிடுசிடுப்பான; துயருற்ற, மனச்சோர்வு தருகிற.

glor'ia, (ல.) *n.* இறை புகழ்ப்பாடல்; தலைசூழ் ஒளிவட்டம்.

glorifica'tion, *n.* மேன்மைப்படுத்துதல்; இறைபுகழ்ப் பாட்டு; இறைபுகழ்ப்பாடல் தொகுதி.

glor'ify, *v.* பெருமைப்படுத்து; புகழொளி சார்த்து; வானளாவப் புகழ்; அருஞ்சிறப்பேற்று; எளிய பொருளுக்குக் கவர்ச்சியூட்டு; புகழ்பாடிப் போற்று.

glor'ious, *a.* புகழ்பெற்ற; மேன்மை பொருந்திய; கீர்த்தி வாய்ந்த; மிகுபுகழ் தருகிற; மதிப்பு வாய்ந்த; சிறந்த; பெருந்தக்க; பேருவப்புத் தருகிற.

glor'iole, *n.* மிகுபுகழ்; தலைசூழ் ஒளிவட்டம்.

glory, *n.* புகழ்; கீர்த்தி; பெருஞ்சிறப்பு; பெருமைப் படுவதற்குரிய செய்தி; பெருமைக்குரிய செய்தி; புகழ் வழிபாடு; நன்றியறிவிப்பு வழிபாடு; செயற் பெருவெற்றி; செயல் வெற்றி முகடு; வெற்றி வீறு; வள நிறைவு; பெருமிதச் செய்தி; பேரணிகலம்; பேரொளி; கதிரொளிப் பிறக்கம்; நிலா வட்டம்; வானவில் வட்டம்; முகிலொளி வட்டம்; புகழ் ஒளி; சூழொளி வட்டம்; இறை ஒளிமாட்சி; வானுலக மாட்சி; பேரெழில்; தனிப்பேருயர்வு; பேரின்பம்; நிலவுலகு காணாக் கற்பனைப் பேரழகு; *v.* பெருமைகொள், மகிழ்ந்தாடு; (தொ.) be in one's glory, வள உச்ச நிலையிலிரு; glory be, போற்றி! வாழ்க!; glory of the snow, அல்லி இனத்தைச் சேர்ந்த நீலமலர்ச் செடி வகை.

gloss[1], *n.* மேல் மினுக்கு; மாயத் தோற்றம், அழகிய புற வடிவம்; *v.* மேற்புறத்தைப் பளபளப்பாக்கு; போலிப் புறத் தோற்றம் கொடு; கவர்ச்சி மிகுத்துக் காட்டு; தீங்கு குறைத்துக் காட்டு.

gloss[2], *n.* ஓர விளக்கக் குறிப்பு; வரியிடை விளக்கக் குறிப்பு; உரை விளக்கம், விளக்கவுரை; பொருள் விளக்கம், பொழிப்புரை; திரித்துரைப்பு; அரும்பதவுரை; வரிவரியான இடைமொழி பெயர்ப்பு; குறிப்புரை; *v.* மூலவாசகத்தில் விளக்கக் குறிப்புகள் செருகு; விரிவுரை எழுது; மறுப்புரை வரை; வேறு பொருள் கண்டுரை; விளக்கங் கூறியமை.

gloss'al, *a.* (உள்.) நாவுக்குரிய.

glossa'rial, *a.* அரும்பதவுரை சார்ந்த; அரும்பதவுரையின் உருவான; விளக்கம் அடங்கிய.

gloss'arist, *n.* விளக்கவுரை வரைபவர்.

gloss'ary, *n.* அரும்பதவுரைத் தொகுதி, அருஞ்சொல் விளக்கக் கோவை ; விளக்கத் திரட்டு ; தனித்துறைச் சொல் விளக்கக் களஞ்சியம் ; திரிசொல் விளக்கத் தொகுதி ; திசைச்சொல் விளக்கக் களஞ்சியம்.

glossat'or, *n.* உரையாசிரியர், இடைநிலைக்கால நாட்டுரிமைச் சமய உரிமைச் சட்டத் தொகுதிகளின் விளக்க உரையாளர்.

Gloss'ic, *n.* எல்லிஸ் (A. J. Ellis 1814-90) என்பவரால் திட்டமிட்டமைக்கப்பட்ட ஒலிக்குறி நெடுங்கணக்கு வகை.

glossi'tis, *n.* (மரு.) நாக்கின் அழற்சி.

glossog'rapher, *n.* விளக்கவுரையாளர்.

glossog'raphy, *n.* விளக்கவுரை எழுதுதல்.

glossola'lia, *n.* இயல்பு மீறிய உளவியல் உணர்வுநிலையில் தெரியாத மொழிகளில் பேசும் ஆற்றல்.

glossol'ogy, *n.* துறைச்சொல் தொகுதி.

gloss'y, *n.* (பே-வ.) கவர்ச்சிகரமான பெண்டிருக்குரிய இதழ்; *a.* வழுவழுப்பும் பளபளப்பும் வாய்ந்த ; மெருகிடப்பட்ட ; (தொ.) glossy magazine, பளபளப்பான தாளில் படங்களுடனும் விளம்பரங்களுடனும் வெளியிடப்படும் கவர்ச்சிமிக்க பெண்பாலாருக்குரிய இதழ்.

glott'al, *a.* குரல்வளை வாய் சார்ந்த ; (தொ.) glottal stop, (ஒலி.) குரல்வளை வெடிப்பொலி.

glott'ic, *a.* குரல்வளை வாய்க்குரிய, நாவிற்குரிய ; மொழி சார்ந்த.

glott'is, *n.* குரல்வளை முகப்பு.

Glouces'ter, *n.* பாலடைக்கட்டி வகை.

glove, *n.* கையுறை, கைச்சாடு ; குத்துச்சண்டைக்கான கைக் கவசம் ; *v.* கையுறையிடு ; கையுறை வழங்கியுதவு ; கையுறை போல் பொதிந்து மூடு ; (தொ.) fit like a glove, சரிநுட்பமாகப் பொருந்து ; hand and glove, hand in glove, மிக நெருங்கிய பழக்கமுள்ள நிலையில் ; நெருங்கிய கூட்டுறவுடன் ; take off the gloves, வாதிடும் வகையில் கண்டிப்பாயிரு ; எதிர்ப்பில் கண்ணோட்டம் தவிர் ; take up the glove, அறைகூவலை ஏற்றுக்கொள் ; throw down the glove, அறைகூவி அழை; without the gloves, வாதத்தில் கண்டிப்புடன்; எதிர்ப்பில் கண்ணோட்டம் காட்டாமல்.

glove'-fight, *n.* கைகளுக்குத் திண்ணுறையணிந்து செய்யப்படும் குத்துச்சண்டை.

glove'-money, *n.* கைக்கூலி, இலஞ்சம்.

glov'er, *n.* கையுறை செய்பவர் ; கையுறை விற்பவர்.

glove'-shield, *n.* அடிகளைத் தவிர்ப்பதற்காக வீரன் இடக் கையுறைமீது அணியும் கேடயம்.

glove'-stretcher, *n.* கையுறை விரல்களைப் பெரிதாக்குவதற்கான கத்தரிக்கோல் வடிவமுள்ள கருவி வகை.

glow, *n.* கனலொளி, வெந்தழலொளி; பிறங்கொளி; வெப்பு; ஒளிவண்ணம்,• செந்தழல் வண்ணம் ; அழகொளி ; ஒளி மிக்க தோற்றம் ; சிவப்பு வண்ணம் ; முகச் சிவப்பு ; எழுச்சியார்வம், ஆர்வத் தணல்; ஆர்வ உணர்ச்சி; *v.* அழன்றெழு; தீக்கொழுந்தின்றி ஒளியும் வெப்பமும் காலு ; கனன்றெரி ; நின்றெரி, தளராது ஒளி வீசு ; அழலொளி வீசு ; ஒளி வண்ணம் காட்டு; உடலுளங்கொதித்தெழு; உணர்ச்சியுடன் உடல் விதிர்விதிர்ப்புறு ; முகஞ்சிவப்புறு ; ஆர்வமுறு.

glow'er, *n.* வெறித்த நோக்கு, அச்சுறுத்தும் பார்வை ; *v.* உறுத்துப் பார் ; சினத்தினால் புருவங்களை நெரி, புருவங்களை நெரித்து நோக்கு.

glow'-lamp, *n.* மின் விளக்கு.

glow'-worm, *n.* மின்மினி.

Gloxin'ia, *n.* (தாவ.) மணிவடிவ அமெரிக்க மலர்ச்செடி வகை.

gloze, *n.* பொய்த்தோற்றம் ; *v.* போலி விளக்கம் கூறியமை; குற்றந் தணித்துக் காட்டு, குற்றங்களை மூடி மழுப்பு; இன்சொல் கூறு, பசப்புரை கூறு ; முகமன் உரை, கெஞ்சு, இச்சகம் பேசு.

glo'zing, *n.* முகப் புகழ்ச்சி, ஏமாற்று.

gluci'na, *n.* வெள்ளை உலோகத் தனிம வகையில் கெட்டி உயிரகை.

glucin'ium, glucin'um, *n.* (வேதி.) கடல்வண்ணக் கல்லிலிருந்து பெறப்படும் கெட்டியான வெள்ளை உலோகத் தனிம வகை.

glu'cose, *n.* (வேதி.) பழ வெல்லம், கொடிமுந்திரிப்பழச் சர்க்கரை.

glu'coside, *n.* காடி-காரங்களின்மூலம் பழவெல்லம் போன்ற பொருள்களைத் தரும் தாவரப் பொருள் வகை.

glucosu'ria, *n.*=glycosuria.

glue, *n.* பசைப்பொருள், திண்ணிய பசைப்பொருள் வகை ; வச்சிரப் பசை ; *v.* பசையிட்டு ஒட்டு ; பசையிட்டு இணை ; நெருக்கமாகச் சேர் ; இறுக்கமாக இணை.

glue'-pot, *n.* வச்சிரப்பசைக் கலம் ; பசபசப்பான இடம்.

glu'ey, *a.* வச்சிரப்பசை அடங்கிய ; ஒட்டிக்கொள்கிற; பிசுக்குள்ள, களியான.

glum, *a.* சூம்படைவான, சோர்வார்ந்த ; வாட்டங்கொண்ட; எழுச்சி குன்றிய, கிளர்ச்சியற்ற ; சிடுசிடுப்பான.

gluma'ceous, *a.* (தாவ.) உமி போன்ற ; கதிர்த்தாள் போன்ற.

glume, *n.* (தாவ.) உமி ; கதிர்த்தாள்.

glumell'a, *n.* தவிட்டுத்தாள் ; சூரலின் செதில்.

glumps, *n. pl.* வெறுப்பு காரணமாகப் பராமுகமாயிருக்கும் நிலை.

glump'y, *a.* கடுகடுப்பான.

glut, *n.* மட்டிலா மிகுதி, தேக்கம்; செறிமிகை, மடுப்பு, திகைமறிவு ; தெவிட்டு நிலை; தேவைக்கு மேற்பட்ட வளம் ; *v.* பேராவலுடன் விழுங்கு ; தெவிட்டுகிற வரையில் ஊட்டு ; திகையும் வரையில் நுகர் ; தெவிட்டு நிலை எய்து ; செம்மு, திணற வை; தேவைக்கு மேற்பட இருப்புக் குவித்து வை.

glu'ten, *n.* ஒட்டிக்கொள்ளும் பொருள், பசைப்பொருள் ; விலங்குகளிலிருந்து சுரக்கும் பசைப்பொருள் ; மாப்பிசின் ; மாப்புரதம்.

glu'tinous, *a.* ஒட்டிக்கொள்ளுகிற, பசையான, களியான.

glutt'on, *n.* பெருந்தீனியர், வயிறுதாரி ; சுவடிகளைப் பேராவலுடன் படிப்பவர்; வேலை செய்யும் பெரு வேட்கையுடையவர்; பெருந்தீனிகொள்ளும் கீரியின விலங்குவகை.

glutt'onish, *a.* பெருந்தீனி கொள்ளும் இயல்புடைய; பெருந்தீனி கொள்ளும் இயல்புக்குரிய.

glutt'onize, *v.* பெருந்தீனி கொள்.

glutt'onous, *a.* மீதூண் விரும்புகிற, மீதூண் இயல்புடைய.

glutt'ony, *n.* பேருண்டி, மீதூண்.

gly'cerin, *n.*=glycerine.

gly'cerinate, *v.* கரிநீர்ப்பாகு கலந்து செயலாற்று.

gly'cerine, *n.* கரிநீர்ப்பாகு, கொழுப்பிலிருந்து காரம் சேர்ப்பதால் விளைவிக்கப்பட்டு மருந்துக்கும் பூச்சுநெய்க் களிம்புகளுக்கும் வெடிமருந்துக்கும் பயன்படுத்தப்படும் நீர்மப் பொருள்.

gly'cerol, *n.*=glycerine.

glyc'ogen, *n.* (வேதி.) விலங்கு இழைமங்களில் பழ வெல்லம் விளைவிக்கப் பயன்படும் பொருள்.

glycogen'ic, *a.* (வேதி.) விலங்கு இழைமங்களில் பழச்சீனி போன்ற பொருளை உண்டாக்குகிற.

glyc'ol, *n.* கொழுப்புவாய்ந்த ஈரணும வெறிய வகைகளில் ஒன்று.

glycon'ic, *n.* கிரேக்க லத்தீன் மொழிகளில் நாலுசீர்ப் பாடல் வகை, நெடில் குறில் ஈரசைச்சீர் மூன்றினுடன் பலவகையில் இடைப்பெய்த நெடில் குறில் குறில் மூவசைச்சீர் ஒன்று கொண்ட யாப்பு வகை; *a.* நாற்சீர்ப் பாடல் வகையாலான.

gly'cose, *n.* = glucose.

glycosur'ia, *n.* (மரு.) சிறுநீரில் இனிப்பு கலந்திருக்கும் நோய் நிலை.

glyph, *n.* (க-க.) செங்குத்தான ஒப்பனைச் சால்வரி; சிற்ப வேலைப்பாட்டு அடையாளம்.

glyphog'raph, *n.* கடித அச்சு வகை மின்செதுக்குப் புடைப் புருத் தகடு.

glyphog'raphy, *n.* கடித அச்சுவகைச் செதுக்குப் புடைப் புருத் தகட்டு மின்முறை.

glyp'tic, *a.* மணிக்கற்களின் செதுக்குவேலை பற்றிய.

glyp'todon, *n.* மரபற்றுப்போன தென் அமெரிக்க நாற்கால் விலங்கு வகை.

glyptog'raphy, *n.* மணிக்கல்லிழைப்புக் கலை.

gnarl, *n.* மரத்திலுள்ள கரணை, கணுப்புடைப்பு.

gnarled, gnarl'y, *a.* மரவகையில் கரணைகள் வாய்ந்த, கணுப்புடைப்புக்களுடன் திருகிமறுகிய; முண்டு முடிச்சுக் களையுடைய; வளைந்து நெளிந்த.

gnash, *v.* பற்களை நெரி, பற்கள் வகையில் கடகடவென்றடித் துக்கொள்.

gnat, *n.* ஒலுங்கு, கொசு வகை; மிகவும் சிறிய பொருள்; சிறு தொல்லை; (தொ.) strain at gnat, சிறிதைப் பெரிதாக்கு, சிற்றியற் பொருள்களைக் குறித்துக் குற்றங் காண்.

gnath'ic, *a.* தாடைகளைச் சார்ந்த.

gnat'ling, *n.* சிறிய கொசு; சாதாரண மனிதர், பொருளல்லவர்; குறிப்பிடத்தகாதவர்.

gnaw, *v.* பல்லால் கறி, கரம்பு; பல்லால் கொந்து; பிடிவாத மாக விடாமல் கடி; வெந்துயரால் பல்லைக் கடி; சினத்தால் பற்களை நெரி; அரித்துத்தின்; அரித்தழி; சித்திரவதை செய்.

gnaw'er, *n.* பல்லைக் கடிப்பவர்; கொறிக்கும் விலங்கு.

gneiss, *n.* படிகம் களிமம் அப்பிரகம் முதலியவை கலந்த அடுக்குப்பாறை வகை.

gnome[1], *n.* கூளி, அடிநிலக் கனிச் செல்வங்களைக் காப்ப தாகக் கருதப்படும் குறளித் தெய்வங்களில் ஒன்று.

gnom'e[2], *n.* முதுமொழி, முதுரை; மந்திர வாசகம்; திட்ப நுட்ப வாசகம், பொருள் செறிதொடர், சூத்திரம்; மேற் கோளுரை; நீதிமொழி.

gnom'ic, *a.* முதுமொழி சார்ந்த; மூதுரை கொண்ட; நீதி மொழியைப் பயன்படுத்துகிற; பொருட்செறிவுள்ள, திட்ப நுட்பமான; (தொ.) gnomic aorist, (இலக்.) பொதுப்படை யான உண்மைகளைத் தெரிவிப்பதற்குப் பயன்படும் காலம் அற்ற வினை.

gnom'on, *n.* கதிர்மணிப்பொறியின் கம்பம்; கதிர்நிலைக் காட்சிக் கம்பம்; கடிகாரமுள்; இணைவகக்குறை, மூலையில் இணைவகப் பகுதி குறைக்கப்பட்ட இணைவக வடிவம்.

gnomon'ic, gnomon'ical, *a.* கதிர்மணிப்பொறிக்கலை சார்ந்த; கணிப்பு வட்டில் சார்ந்த, முகப்புவட்டில் மூலம் கணிப்பறிவிப்புக் கலை சார்ந்த.

gnomon'ics, *n.* கதிர்மணிப்பொறிக்கலை, கணிப்பு வட்டிற்கலை.

gnos'is, *n.* மறையியல் ஞானம்; முற்பட்டகாலக் கிறித்தவ சமயக் கிளையினர் சமரச மறைஞானக் கோட்பாடு; நம்பிக் கையைவிட மெய்யறிவுதான் விடுபேறு அடைவதற்குரிய சாதனம் என்னும் முற்கால மறைஞானியர் கோட்பாடு.

Gnos'tic[1], *n.* சமரச மறையியல் ஞானக் கோட்பாடுடைய முற்பட்டகாலக் கிறித்தவ சமயக்கிளையினர்.

gnos'tic[2], *a.* மறையியல் ஞானம் சார்ந்த; முற்காலக் கிறித்தவ சமயக் கிளையினருக்குரிய; முற்காலக் கிறித்தவ சமயக் கிளை யினர் கோட்பாட்டுக்குரிய

gnu, *n.* எருதுபோன்ற தோற்றமுடைய மான் வகை.

go, *n.* போக்கு, போதல்; புகல், வழிவகை; செய்தி; தெம்பு, உரம்; ஊக்கம், விசை; வரிசையான செயல் முறை; திருப்ப முயற்சி, முயற்சி; உணவு குடியின் படையல்கூறு; சீட் டாட்ட வகையில் ஆட்ட ஏலாமை முறை; ஏலாமுறைக் குரிய எதிர்ப்பக்க மதிப்பெண்; (பே-வ.) இக்கட்டுநிலை; இயலுந்திறம்; (பே-வ.) இயற்செயல்; (பே-வ.) செயற் பண்பு; இயக்கநிலை; *v.* போ, செல், ஏகு; இடம் மாறு; அப்பாற்செல்; பயணஞ் செல்; புறப்படு; திசைப் படு; கிட; கொண்டு செல்; பரவியிரு; எல்லையளாவியிரு; முன்னேறு, இயங்கு; நடைபெறு, நடப்புறு; நடைமுறையி லிரு; நடைமுறை வழக்கமாயிரு; நடைமுறைப்படு; துறைப் படு; பொதுநிலையாக அமை; மொத்தநிலையாக அமை; காலத்தில் இயங்கு; தொடர்புறு; தொடர்ந்து செல்; காலங்கழிவுறு, செல்லாகு; காலங்கழி; செயல்விரவி நில்; செயற்படு; செயலைக்கொண்டு செல்; செயல் மேற்கொள்; தொழில்நாடு; நாடி மேற்கொள்; செலவு ஆகு; விற்கப் பெறு; பின்பற்று; கடைப்பிடி; சார்; சேர்; இணை; சொல் தொடர்புறு; பொதுக் கருத்துப் போக்குக்கொள்; நடை உடையதாயிரு; ஓசைபெறு; மணி வகையில் அடிக்கப்பெறு; துப்பாக்கி குண்டு வகைகளில் வெடிக்கப்பெறு; வேட்டிடப் பெறு; கணிப்புறு; அழைக்கப்பெறு; தெரியப்பெறு; பரவலாயிரு; எங்கும் பேசப்பெறு; செல்லுபடியாயிரு; கருக்கொண்டிரு; ஆகு, ஆகுநிலைபெறு; சார்பு அமைவுறு; மாறுபட்டமை; விளைவுறு; விளைவில் ஒருகூறுருயுதவு; பங்குகொள்; உள்ளடக்கமாகக் கொள்; இயல்வுறு; வழி செய்; பிளவுறு, இறு, தகர்; தளர்; அழி; தோல்வியுறு; ஒழி; இற; எடு; கொள்; புகு; உரியதாகு; உரிமையாகச் செல்; மரபாகச் செல்; சென்றெட்டு; தாவிக்கட; புகு; ஊடுருவிச்செல்; பந்தயம் வை; ஆட்டங்கேள்; (தொ.) be gone, போய்விடு, விலகிச் செல், ஓடிவிடு; far gone, மிகவும் நோயுற்ற; ஆழ்ந்து சிக்கிக் கொண்ட; go about, அங்குமிங்குஞ் செல்; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்; செய்வதற்கு முயல்; வேலை செய்யத் தொடங்கு; go about one's business, தன் காரி யத்தைப் பார்த்துச் செல்; go abroad, வெளிநாடு செல், வீட்டைவிட்டு வெளியே போ; சுற்று; go against, எதிராகத் திரும்பு; பகையாகு, மிகு வெறுப்பாகு; go ahead, தயக்கமில்லாமல் முன்னேறு, தடையின்றி முன் செல்; go a long way, நீடித்து உழை, நீடித்துப் பயன்படு; பேரளவில் வலிவு தருவதாயிரு; go along with, go with, உடன் செல்; ஒன்றுபடு; பின்பற்று; இணை; இணையாயிரு; go aside, தவறிழை, பின்வாங்கு; விலகு; ஒதுங்கு; go at, தாக்கு, ஊக்கத்துடன் செயலைக் கைக்கொள்; go back from one's word, go back upon one's word, சொல் தவறு; go bail, பிணையமாயிரு; உறுதி கூறு; go behind, மீண்டும் ஆராய்; go better, go one better, எதிரியைப் போட்டியில் தோற்கடி, எதிரியைவிட மிகுதியாக ஏலங்கூறு; எதிரியைவிடச் செயலில் மேம்படு; go black, go brown, go native, கீழ்த்திசை மக்க ளுடைய வாழ்க்கைமுறை பின்பற்று; தாய்நில மக்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்று; go by, கடந்து செல்; go down, மூழ்கு; தோல்வியுறு; பணிந்திணங்கு; எழுத்திற் பதிவாகு; விழுங்கப்பெறு; ஏற்புப் பெறு, பல்கலைக்கழகத்தை விட்டு நீங்கு; go for, போய்க்கொண்டு வா; தாக்கு; பெறு வதற்காகச் செல்; கைப்பற்ற முயற்சிசெய்; பொருத்தமா யிரு; go for little, go for nothing, பயனற்றதாகக் கருதப் படு; go halves, go shares, சரிசமமாகப் பங்குபிரி, சம நிலை யாகப் பங்கிடு செய்; go hard with, கெடுதலாக முடிவுறு, தீங்காயமை; go hot and cold, சுரத்தால் பீடிக்கப்பெறு; அவமதிப்பு அடை; go in, போட்டியாளராகச் செல்; go in for, நாடி மேற்கொள்; சென்றீடுபடு; பழக்கப்படுத்திக்கொள்; go into, நுழை; பணிபுகு; அடிக்கடி சென்று பழகு; கலந்துகொள்; ஆட்படும்படி செய்துகொள்; தனி உடை அணிந்துகொள்; அலசியாராய், தேர்ந்தாராய்; go it alone, துணையின்றித் தனியாகச் செய்; go off, நீங்கு; தொடங்கு; வெடி; இற; சென்று தேய்ந்திறு; நிலைமை மோசமாகு; தன்னை மற, உணர்ச்சியிழ; விற்பனையின்மூலம் தொலைத்து

விடு, நன்றாக வெற்றியுறு ; அரைகுறை வெற்றியுறு ; go off one's head, தலை திரிவுறு, மூளை பிறழ்வுறு ; பித்தங்கொள்; go on, முன்செல்; தொடர்ந்து மேற்செல்; தொடர்ந்து நிகழ், தொடர்ந்து செல் ; விடாமுயற்சி செய் ; அடுத்தபடிக்குச் செல், அடுத்த முயற்சியில் முன்னேறு ; நாடகமேடைமீது தோன்று; மரப்பந்தாட்டத்தில் பந்து வீசுவதைத் தொடங்கு; ஏதாவது செய்வதற்குத் தன்னுடைய முறையை மேற்கொள்; go on the streets, விலைமகளாகு ; go out, வெளியேறு ; அணைந்து போ ; இருவர் வகையில் கைச்சண்டை செய் ; கால வண்ணமுறைகளை நீக்கு; கைவிடு; குடியேற்றப் பகுதி முதலிய வற்றிற்குச் செல்; பெண்டிர் வகையில் வீட்டை விட்டு வேலை நாடிச் செல்; சமுதாயத்தோடு கலந்து பழகு; தொழிலாளர் வகையில் வேலை நிறுத்தஞ் செய் ; காதலால் விரிவடைந்து நாடு; go over, கட்சிமாறு, மதம் மாறு ; நுணுக்க விவரங்களை மேற்பார்வை செய்; ஒத்திகை பார், திருத்தியமை; go over the top, go over the bags, எதிரியைத் தாக்குவதற் காகப் பதுங்கு குழியிலிருந்து வெளியேறு; go round, பொது முறை இயல்பாகப் பார்க்கப் போ ; போதுமான அளவு நீள மாக இரு ; போதுமானதாயிரு ; go sick, படைத்துறையில் நோயாளிகள் பட்டியலிற் பதிவுசெய்துகொள் ; go slow policy, எதிர்ப்பக்கத்தாரை வலியுறுத்திச் சலுகை பெறுவதற் காக வேண்டுமென்றே முயற்சி விளைவைக் கட்டுப்படுத்திக் குறைக்கும் கோட்பாடு ; go the whole hog, கடைபோகக் காண் ; go through, நுணுக்க விவரமாக ஆராய், முழுதும் தேர்ந்தாராய்; துருவி ஆராய்; துருவி உசாவு; முழுதும் முடி; விரைந்து அரைகுறையாக முடித்துவிடு; படு, பொறு, தாங்கு, அனுபவி ; நூல் வெளியீட்டு வகையில் பல பதிப்புக்கள் கடந்துவிடு; go through fire and water, எவ்வகை இடர்களை யும் இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் கடக்கத் துணி ; go through with, குறைவற முடி ; go to, எரிச்சல் அவமதிப்பு தடைப்புரை விளிக்குறிப்பு; go to Canossa, மீறுதலுக்குப் பின் செருக்கைவிட்டுத் தற்பணிவுடன் சரணடை; go to one's heart, மனத்தைத் துயர்ப்படுத்து ; கனிவுடையதாக்கு ; go to pieces, பிளவுறு ; தகர்வுறு ; மனமிடிவுறு ; நிலை மையை ஏற்று நடத்த ஏலாநிலையுறு ; go to the bar, வழக் கறிஞராகு ; go to the country, பொதுத்தேர்தல் மூலம் மக்கள் கருத்தை அறிய முனை ; go to the wall, புறக்கணிக்கப் படு, கடந்து ஒதுக்கப்படு; go under, அமிழ்; தோல்வியடை; இறந்துபோ, அழிந்துபோ ; எதிர்ப்புக் கைவிடு ; முயற்சி யிழ, கீழ்ப்படி ; go up the line, போர்முனைக்குச் செல்வதற் காக மூல தளத்தை விட்டு நீங்கு ; go without, இல்லாமற் கழி ; இல்லாமல் குறைப்படு ; go without saying, கூறாமல் தானே விளங்கத்தக்கதாயிரு; go with tide, go with times, மற்றவர்களைப் போல நடந்துகொள் ; he will go far, தனிச் சிறப்புக்கு உரியராவார் ; let go, விடுதலை செய் ; பிடி நீக்கு.

goad, *n.* தாற்றுக்கோல்; துன்புறுத்தும் பொருள்; தூண்டுதல் அளிக்கும் பொருள் ; *v.* தாற்றுக்கோல்கொண்டு குத்து ; எரிச்சலூட்டு ; தொல்லை தந்து தூண்டுதலளி.

goads'man, goad'ster, *n.* தாற்றுக்கோலால் விரைவுபடுத்து பவர்.

go'-ahead, *n.* மேல் தொடர்வதற்கான இசைவு ; *a.* துணி வான முயற்சியுள்ள.

goal, *n.* இலக்கு, குறிக்கோள் ; முயற்சி நோக்கம் ; உயர் அவா நோக்கம் ; பயண எல்லை; பந்தய முடிவெல்லை; ஆட்ட இலக்குக்குறியிடம் ; பந்தாட்டத்தில் பந்தைக் குறியிடம்பட அடித்த கெலிப்பெண் ; பண்டை ரோமாபுரியில் தேரோட்டப் பந்தயத்தில் திரும்புகட்டக் கம்பம்.

goal'keeper, *n.* இலக்குக் காவலர், பந்தாட்ட இலக்குக் குறி யிடப் பாதுகாப்பாளர்.

goal'-line, *n.* பந்தாட்டக் குறியிலக்குக் கள எல்லை.

goal'-posts, *n.* பந்தாட்டக் குறியிலக்குக் கம்பங்கள்.

go'-as-you-please', *a.* கட்டுப்பாடில்லாமல் செல்லத்தக்க.

goat, *n.* வெள்ளாடு ; தகர்மனை, மேடராசி ; ஒழுக்க வரம் பற்றவர் ; (தொ.) get one's goat, எரிச்சலூட்டு ; play the giddy goat, முட்டாளாக நட.

goat'beard, *n.* புல்வெளிகளில் வளரும் ரோசாக் குடும்ப மலர்ச்செடி வகை.

goatee', *n.* வெள்ளாட்டின் தாடி.

goat'-fig, *n.* காட்டு அத்தி வகை ; காட்டு அத்திப்பழம்.

goat'-fish, *n.* நீளுருளை வடிவான சுவைமிக்க மீன்வகை.

goat'-god, *n.* கிரேக்க நாட்டு இயற்கைத் தெய்வம்.

goat'herd, *n.* வெள்ளாடு மேய்ப்பவர்.

goat'ish, *a.* வெள்ளாடு போன்ற ; வெள்ளாட்டின் வாடை யுடைய ; சிற்றின்ப விருப்புள்ள ; கட்டற்ற, குறும்புத்தன மான.

goat'ling, *n.* இரண்டு வயதுக்குட்பட்ட வெள்ளாட்டுக்குட்டி.

goat's'-hair, *n.* சுருள் இழைகள் போன்ற மேகக்கூட்டம்.

goat'skin, *n.* வெள்ளாட்டுத்தோல் ; வெள்ளாட்டுத் தோலாடை ; வெள்ளாட்டுத் தோலாலான புட்டி ; வெள் ளாட்டுத் தோலாலான தேறல்மிடா.

goat'sucker, *n.* ஆட்டுக் குருதியை உறிஞ்சுவதாகத் தவறாகக் கருதப்பட்ட இரவுப் பறவைவகை.

goat's wool, *n.* இல்லாப் பொருள்.

gob, *n.* உமிழ்ந்த எச்சில் ; வாய் ; பசைப்பொருள் கூறு ; நிலக்கரிச் சுரங்கத்தில் கரிபறித்த குழி ; கரி பறித்த குழியில் சேரும் கழிவுப் பொருள் ; *v.* துப்பு.

gobang', *n.* கட்டமிட்ட பலகைமீது ஆடும் விளையாட்டு வகை.

gobb'et, *n.* கவளம், வாய்நிறை அளவு ; வாய்நிறை அளவு உணவு ; மொழிபெயர்ப்பிற்கு அல்லது கருத்துரைக்கு அளிக்கப்பட்டுள்ள வாசகப்பகுதி.

gob'ble [1], *n.* விரைவாகவும் நேராகவும் குழிக்குள் விழும்படி வீசப்படும் அடி.

gob'ble [2], *v.* ஓசையோடு விரைவாக உண்ணு.

gob'ble [3], *v.* வான்கோழி போன்று தொண்டையில் களகள வென்று ஒலியெழுப்பு ; வெகுளி முதலியவற்றினால் பேசும் பொழுது களகளவென ஒலிசெய்.

gobb'ler, *n.* வான்கோழிச் சேவல்.

Gob'elins, Gob'elin tapestry, *n.* ஓவியத் திரைச்சீலை வகை.

gobe'mouche, *n.* எளிதில் எதையும் நம்பும் தன்மையுள்ள செய்திப் பரப்பாளர்.

go'between, *n.* இடையீட்டாளர் ; பேரம் செய்பவர், தரகர்.

gob'let, *n.* மூடியும் பாதமுமுடைய கைப்பிடியில்லாத குடி கிண்ணம்.

gob'lin, *n.* பூதம், அருவருப்பான தோற்றமுடைய குறும்புத் தெய்வம்.

gob'y, *n.* வயிற்றுப்புறமாக உணவை உறிஞ்சும் வட்டத் துடுப்புள்ள சிறுமீன்வகை.

go'-by', *n.* கடத்தல், கடப்பு ; (தொ.) give the go-by to, தாண்டிச் செல் ; பின்னடையச் செய் ; நழுவிச் செல் ; புறக் கணி ; ஏளனஞ் செய் ; அவமதித்து நடத்து.

go'cart, *n.* குழந்தை நடைவண்டி ; தள்ளுவண்டி.

God [1], *n.* கடவுள், இறைவன், படைப்பாளர், ஆண்டவர் ; (தொ.) act of God, கட்டுப்படுத்தமுடியாத இயற்கை நிகழ்ச்சி; by God, கடவுள் ஆணையாக !; God forbid, கடவுள் தடுத்துக் காப்பாராக !; God grant, கடவுள் அருள்பாலிப்பா ராக !; God knows, எனக்குத் தெரியாது ; மனித அறிவுக்கு அப்பாற்பட்டது ; கடவுள் சான்றாகக் கூறுகிறேன் ; God's earth, நிலவுலகம்; God's image, மனித உடல்; God's truth, கலப்பற்ற உண்மை ; good God, my God, வியப்பு இரக்கக் குறிப்பு ; thank God, மகிழ்ச்சிக் குறிப்பு ; under God, உச்ச அளவு மனித முயற்சியால், மனிதமுயற்சி பற்றியமட்டில் முழு அளவும் உறுதியாக.

god [2], *n.* தேவர் ; தெய்வம், தெய்வ உருவம்; தெய்வத்தன்மை உடைய விலங்கு; வணக்கத்துக்குரிய தெய்வச்சிலை; வணங்கத் தக்கவர், போற்றிப் பணிந்து பாராட்டற்குரியவர்; செல்வாக்

குடையவர்; நாடகமேடை அடுக்குவரிசை இருக்கைகளில் இருப்பவர்; (தொ.) blind god, god of love, காதல் தெய்வம், மாரவேள்; feast for the gods, sight for the gods, உளங் கவர் செய்தி; கண்கவர் பொருள்; god of day, கதிரவன்; household gods, குடும்பத் தெய்வங்கள், குல தெய்வங்கள், இல்லுறை தெய்வங்கள்; ரோமரின் வீட்டுத் தெய்வங்கள்.

god'child, *n.* வளர்ப்புக்குழந்தை; ஞானக் குழந்தை, 'ஞான ஸ்நான' நிகழ்ச்சியில் குழந்தையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிள்ளை.

godd'ess, *n.* பெண் தெய்வம்; ஆர்வக் காதலுக்குரிய பெண்.

go'det, *n.* ஆடையில் இடையிட்டுப் பொருத்தப்பட்ட முக் கோணத் துண்டுத் துணி.

gode'tia, *n.* அமெரிக்க மலர்ச்செடி வகை.

god'fearing, *a.* உண்மைச் சமயப்பற்றுடைய.

god'forsaken, *a.* நற்பண்புகள் சிறிதுமற்ற; காலத்துக் கொவ்வாத; பாழான; பழியார்ந்த; இருளடைந்த; இரங்கத் தக்க நிலையிலுள்ள; துயரஞ்செறிந்த.

God'head, god'head, *n.* இறைமை, பரத்துவம்; கடவுள் தன்மை.

god'less, *a.* கடவுளற்ற; கடவுள் ஏற்பற்ற, நாத்திக; கடவுள் நம்பிக்கையில்லாத; தெய்வ வழிபாடற்ற; கெட்ட, பழி சார்ந்த.

god'like, *a.* கடவுள் போன்ற; தெய்வத்தன்மையுள்ள; தெய்வத்துக்குத் தகுந்த.

god'liness, *n.* கடவுட் பற்று; திப்பிய நேர்மை.

god'ly, *a.* சமயப்பற்றுடைய; கடவுட் பற்றுடைய; பற்றுறுதியுள்ள.

God'man, *n.* இயேசுநாதர்.

godown', *n.* கிடங்கு, கொட்டாரம், பண்டகசாலை.

god'parent, *n.* பெயரிட்டுப் பெற்றோர், ஞானஸ்நானப் பெற்றோர்; வளர்ப்புத் தாய்தந்தையர்.

god's'-acre, *n.* கிறித்தவத் திருக்கோயில் முற்றம்.

god'send, *n.* நல்லதிர்ஷ்டம்; எதிர்பாரா விருப்பு நிகழ்ச்சி.

godspeed', *n.* வெற்றிபெறக் கடவுள் துணை செய்க என்ற வாழ்த்து.

god'ward, *a.* கடவுளை நோக்கிய; *adv.* கடவுளை நோக்கி; இறைவனின் தொடர்பாக.

god'wit, *n.* மேல்நோக்கி வளைந்த அலகும் நீண்டு மெலிந்த கால்களுமுடைய சதுப்புநிலப் பறவை வகை.

go'er, *n.* செல்லுபவர்; செல்லுவது; செல்லும் பொருள்.

Goeth'ian, *n.* கெதே (Goethe 1749-1832) என்னும் செர்மன் கவிஞரைப் பின்பற்றுபவர்; *a.* கவிஞர் கெதேயைச் சார்ந்த; கெதேயைப் போன்ற; கெதேயின் நூல்களைச் சார்ந்த; கெதேயின் கருத்துக்களுக்குரிய.

gof'er [1], *n.* பிஸ்கோத்து வகை, தேன்கூடுபோன்ற வரியமைப் புடைய மாப்பண்டம்.

gof'er [2], goff'er, *n.* மடிப்புகள் சுருக்கங்கள் அலைவளைவுகள் முதலியன செய்வதற்குப் பயன்படும் இரும்புக்கருவி; கொய் சக ஒப்பனைக்குப் பயன்படும் அழகிய பின்னல்; *v.* சால்வரி யிடு; சூடாக்கப்பட்ட இரும்புக் கருவிகளால் ஓரங்களை அலை யலையாக மடிப்படையச்செய்; (தொ.) goffered edges of book, முனைப்பியலாகச் செதுக்கப்பட்ட புத்தக ஓரங்கள்.

goff'ering, *n.* மடிப்புகள், சுருக்கங்கள்; மடிப்புக்கள் சுருக் கங்கள் செய்யும் முறை; புத்தக விளிம்பில் பற்களாக வெட்டும் வேலை.

go'-gett'er, *n.* (பே-வ.) விடாக்கண்டன்; தன்முனைப்புக்காரர்.

gog'gle, *a.* விழி பிதுங்கியுள்ள; விழி வகையில் உருண்டு திரண்ட; உருட்சி வாய்ந்து சுழல்கிற; *v.* விழிகளையுருட்டிப் பார்; சாய்த்துப் பார்.

gog'gle-eyed, *a.* முட்டைக் கண்ணுடைய, பெந்தை விழி யுடைய; திருகு விழியுடைய; விழிசுழல்வுடைய.

gog'gles, *n. pl.* பாதுகாப்புக் கண்ணாடி, வலைகாப்புடைய வண்ணமூக்குக் கண்ணாடி வகை; ஆட்டு நோய் வகை.

gog'let, *n.* மண் கூசா.

goid'el, *n.* ஸ்காத்லாந்து-அயர்லாந்து மக்களின் தொன் மூதா தையரின் இனத்தவர்.

go'ing, *n.* செல்லுதல்; புறப்பாடு; வாழ்க்கைப்போக்கு; வழி நிலை; பயணநிலை; முன்னேற்றம்; *a.* போகிற; செயற் படுகிற; இயக்க நிலையிலுள்ள; உளதான நிலையுடைய, கைக்குக் கிடைக்கக் கூடிய; செயற்பட இருக்கிற; வயது வகையில் அணுகுகிற; (தொ.) going concern, இயங்கிக் கொண்டிருக்கிற வாணிகம்; going on for, அணுகி நெருங்கு கின்ற; going strong, ஊக்கத்துடன் முன்னேறுகிற; முழு அளவிற் செயற்படுகிற.

go'ings-on, *n.* நடத்தை.

goi'tre, *n.* குரல்வளைச் சுரப்பி வீக்கம், குரல்வளை தொங்கு சதையாக வீங்கி ஆறாத கோளாறு.

goit'rous, *a.* குரல்வளைச் சுரப்பி வீக்கமுடைய; குரல்வளைச் சுரப்பி வீக்கம் போன்ற.

Golcon'da, *n.* செல்வக் களஞ்சியம்.

gold [1], *n.* பொன், தங்கம்; பொன் அணிகலத் தொகுதி; பொன் நாணயம்; பணம்; செல்வம்; விலை மதிப்பற்ற பொருள்; அழகும் ஒளியும் உடைய பொருள்; அம்பு எய்வதற்குரிய இலக்கு; பொன்நிறம், தங்கவண்ணம்; *a.* பொன்னாலான; தங்கம் போன்ற; பகுதி பொன்னாற் செய்யப்பட்ட; நாணய வகையில் மதிப்புக்குறையா முகப்பு மதிப்பு உடைய; (தொ.) gold amalgam, நெகிழ்நிலைப் பாதரசத் தங்கக் கலவை; gold bloc, தங்க நாணய ஏற்பள வைப் பிணைப்பு நாட்டுத் தொகுதி; gold crest, பொன்சிகை உடைய பறவை வகை; gold ink, தங்கநிற மை, தங்கம் அல்லது போலித்தங்கப்பொருள் மிதக்க எழுதும் மை; gold standard, தங்க நாணய ஏற்பளவை; தங்க நாணயத் திட்டம்; Gold Stick, காவற்படைப் பிரிவுத் தலைவன்முன் கொண்டு செல்லப்படும் பொற்கோல்; பொற்கோலேந்தி; off the gold standard, தங்க நாணயத் திட்டம் வழங்காத; தங்க நாணய ஏற்பளவைக் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய; on the gold standard, தங்க நாணயத் திட்டத்தைப் பயன் படுத்துகிற, தங்க நாணயத் திட்டமுள்ள.

gold [2], *n.* மஞ்சள் வண்ண மலர்ச்செடி வகை.

gold'-beater, *n.* மெல்லிய தங்கத்தகடு அடித்துருவாக்குபவர்.

gold'-beaters'-skin', *n.* எருதினுடைய குடலின் புறப் பகுதி.

gold'-brick', *n.* தங்கப்பாளம்; (பே.வ.) போலி.

gold'-bug, *n.* வண்டு வகை; பெருஞ்செல்வர்; தங்க நாணயத் திட்டத்தை ஆதரிப்பவர்.

gold'-digger, *n.* பொன்னுக்காக நிலத்தைக் கிளறுபவர், பொன் அரிப்புக்காரர்; பொருட்பெண்டிர்.

gold'-dust', *n.* பொற்றுகள், ஆறு நீர்நிலைகளில் மணலிற் காணப்படும் பொன்தூசு.

gold'en, *a.* பொன்னாலான; பொன்மயமான; பொன்னிறஞ் சார்ந்த; பொன்வளமிக்க; பொன்னை வழங்குகிற; ஒளி யுடைய; விலைமதிக்கமுடியாத; மகிழ்ச்சியளிக்கிற; ஆதரவு மிக்க; நேர்த்தியான; மிகச் சிறந்த மதிப்புடைய; உச்ச உயர்வான; உயர்திறம் வாய்ந்த; முழுநலமார்ந்த; (தொ.) golden age, பொற்காலம்; golden fleece, ஸ்பானிய-ஆஸ்தி ரேலிய நாடுகளின் வீரப் பெருந்தகைப் பட்டம்; Golden Horn, துருக்கி நாட்டில் கான்ஸ்டாண்டிநோப்பிள் (Constantinople) துறைமுகம்; golden key, செல்வம்; golden mean, நடுநிலைச் செவ்வி; golden number, விழாக்கால அறுதி செய்வதற் குதவிய முற்காலக் கணிப்பு மூல எண்; பத்தொன்பது போன்ற அதிர்ஷ்ட எண்; golden rain, எறிவாண வகை; golden syrup, மஞ்சள்நிறப் பாகு வகை; golden wedding, திருமணப் பொன்விழா.

gold'enberry, *n.* நெல்லிக்காய் வகை.

gold'en-crest'ed, *a.* பொன் சிகையுடைய ; (தொ.) golden-crested wren, பொன் வண்ண உச்சிக்கொண்டையுடைய பறவை வகை.

gol'den-eye, *n.* கடல்வாத்து வகை.

gol'den-knop, *n.* கரும்புள்ளிகள் கொண்ட செம்பழுப்பு நிறம் வாய்ந்த வண்டு வகை.

gol'den-mouthed, *a.* சிறந்த சொல்லாற்றலுடைய.

gold'en-rod, *n.* மஞ்சள்நிறக் குடைமஞ்சரிப் பூங்கொத்துக் களையுடைய செடிவகை.

gold'-fever, *n.* பொன் பேராசை.

gold'-field, *n.* தங்க வயல் ; பொன் செறி நிலப்பரப்பு.

gold'finch, *n.* தித்திரி பறவை.

gold'fish, *n.* பொன்மீன்.

gold'-foil, *n.* மென் பொன் தகடு.

gold'ilocks, *n.* பொன்னிறத் தலைமுடியர் ; பொன்னிறக் கிண்ண வடிவ மலர்ச் செடிவகை.

gold'ish, *a.* சற்றே பொன் வண்ணமான.

gold'-lace', *n.* பொற்சரிகை.

gold'-leaf, *n.* மென் தங்கத்தகடு, தங்கரேக்கு.

gold'-mine, *n.* தங்கச் சுரங்கம் ; மிகு ஆதாய வழிவகை.

gold'plate', *n.* பொற்கலத் தொகுதி.

gold'-rush, *n.* புதிய தங்கவயல் நாடிச் செல்லும் மக்களின் விரைவு.

gold'-size, *n.* பொற்றகட்டு ஒட்டுப்பொருள்.

gold'smith, *n.* பொற்கொல்லர்.

gold'-thread, *n.* பொன்னிழை, பொன்னுடை நெய்ய உதவும் பொன்னூல் ; பொன்முலாம் பூசப்பட்ட கம்பியால் சுற்றப் பட்ட பட்டிழை ; மஞ்சள்நிற வேர்களையுடைய செடிவகை.

gold'-washer, *n.* பொன்னரிப்பாளர்; பொன்னரி தொட்டி, தங்கம் கழுவும் கலம்.

gold'-wasp, *n.* பொன் வண்டு, பளபளப்பான உலோக வண்ண வண்டு வகை.

gold'y, *a.* சற்றே பொன்போன்ற.

golf, *n.* குழிப்பந்தாட்டம், இருவராடும் பந்தாட்ட வகை ; *v.* குழிப்பந்தாட்டமாடு.

golf'-bag, *n.* குழிப்பந்தாட்ட மட்டைகளை எடுத்துச் செல்லும் பை.

golf'-club, *n.* குழிப்பந்தாட்ட மட்டை ; குழிப்பந்தாட்டம் ஆடுவோர் சங்கம் ; குழிப்பந்தாட்டம் ஆடுவோர் சங்கப் பணிமனை.

golf'-course, *n.* குழிப்பந்தாட்டம் ஆடும் மைதானம், குழிப் பந்தாட்ட அரங்கம்.

golf'er, *n.* குழிப்பந்தாட்டக்காரர்.

Goliath, *n.* இராட்சதன், பேருருவ மனிதன்.

goll'iwog, *n.* கறுப்புப் பொம்மை ; விசித்திர உருவம், பூச்சாண்டி.

goll'y, *int.* அட கடவுளே !

golosh', *n.* = galosh.

golop'tious, golup'tious, *a.* மணமும் சுவையுமிகுந்த ; நறுஞ்சுவையான ; மகிழ்ச்சியான.

gombeen', *n.* கடுவட்டி வாங்குதல்.

gombeen'-man, *n.* கடுவட்டி வாங்குபவர்.

gombroon', *n.* = gomroon.

Gomo'rrah, *n.* கொடிய நகரம்.

gomroon', *n.* பெர்சிய மட்பாண்ட வகை.

gon'ad, *n.* (உயி.) ஆண்பெண் கருப்பை இரண்டுக்கும் பொது நிலையான திரிபுருத நுண்ம உயிர்மம்.

gon'dola, *n.* தோணி, வெனிஸ் நகரத்தில் வழங்கிய பளுவற்ற தட்டை அடியுடைய படகு வகை ; விமானத்தின் கீழ் இணைக்கப்படும் உந்துகலம்.

gondolier', *n.* தோணி வலவர்.

gone [1], *v.* go என்பதன் முடிவெச்சம்.

gone [2], *a.* சென்ற, கழிந்த; இழக்கப்பட்ட; திருத்தும் நம்பிக்கை இல்லாமல் கெட்டுப்போன ; பிரிந்து போன; இறந்துபோன ; கடந்து போன, கழிந்த காலத்தைச் சேர்ந்த ; வலுவற்ற ; மயக்கமான ; கிளர்ச்சி குன்றிய ; குறி தவறிய ; (தொ.) gone under, மீட்க முடியாதவாறு அழிந்துபோன.

gon'falon, *n.* குறுக்குச்சட்டத்தினின்றும் தொங்கவிடப்படும் நீண்ட கொடிவகை; இத்தாலியக் குடியரசுகளின் கொடிவகை.

gonfalonier', *n.* நீண்ட குறுக்குச்சட்டக் கொடிபிடிப்பவர் ; இத்தாலியக் குடியரசுகளில் முதன்மைக் குற்ற இயல் நடுவர்.

gong, *n.* சேகண்டி, சேமக்கலம் ; கண்டாமணி ; *v.* சேகண்டி அடித்துப் பொறியூர்தியை நிறுத்தச் சொல்.

gon'gorism, *n.* செயற்கை அணிநடை, பண்டைய கிரேக்க லத்தீன் நூல்களிலிருந்து மேற்கோள்களுடன் முரணணி முதலியவை கொண்ட ஸ்பானிய இலக்கியக் கடுநடை வகை.

gong'ster, *n.* சேகண்டியடித்துப் பொறியூர்தியை நிறுத்தச் சொல்லும் அமெரிக்கக் காவல் துறையினர்.

goniom'eter, *n.* கோணமானி.

gonococc'us, *n.* மேகவெட்டைநோய் உண்டாக்கும் நுண்மம்.

gonorrhoe'a, *n.* (மரு.) மேகவெட்டை நோய்.

good, *n.* நல்லது, பயனுடையது; நல்வாழ்வு; நன்மை, பொது நலம்; பொதுவளப்பம்; ஒழுக்கத்துறை நலம்; புண்ணியம், ஆன்மநலம் ; பலன், பயன், ஆதாயம் ; விரும்பத்தக்க முடிவு ; விரும்பத்தக்க பொருள் ; முயன்று பெறத்தக்க பொருள் ; *a.* நல்ல, நலமார்ந்த, நலம் பயக்கிற ; ஒழுக்க நலம் வாய்ந்த ; நன்னெறியில் வாழ்கிற ; விரும்பத் தக்க பண்புகள் வாய்ந்த, பண்பார்ந்த ; சமுதாயப் பழக்க முள்ள ; அளவளாவியுடாடுகிற ; நன்னடத்தையுடைய ; தொல்லை தராத ; நற்பெயர் வாய்ந்த; உடல்நலத்துக்கு ஒத்த; உடல்நலம் பேணி வளர்க்கிற ; நல்ல வடிவமைந்த ; இன்பம் அளிக்கிற; மகிழ்வூட்டுகிற; நலநிறைவுக்குரிய; நேரம் போக்க உதவுகிற ; மனநிறைவளிக்கிற ; போதிய; செழிப்பான, வளமான ; வலிமை வாய்ந்த ; சரியான ; சரியான இயல் புகள் வாய்க்கப் பெற்ற ; தகுதிவாய்ந்த ; இசைவான ; மனத்துக்கொத்த ; பொருத்தமான ; உரிய ; நோக்கத்துக்கு ஏற்ற ; பரிந்துரைக்கத்தக்க ; பாராட்டத்தக்க ; காலத்துக்கு ஏற்ற ; நிலைமைக்கேற்ற ; முழு நிறைவான ; பயனிறை வுடைய ; விளைவுத்திறம் வாய்ந்த ; திறமையுடைய ; தனித் திறமிக்க ; குறைவற்ற ; குறையாத ; மிக்க; கிட்டத்தட்ட நிறைவான; திருந்திய; செயல் தகுதி வாய்ந்த; சட்டத்துக்கு உகந்த ; செல்லுபடியான ; செலாவணியிலுள்ள ; சமயப் பற்றுமிக்க; அன்புள்ள; கனிந்த உள்ளம் வாய்ந்த; கருணை மிக்க ; உதவி செய்கிற ; பயன்படுகிற ; இரண்டகமற்ற ; மனமார்ந்த, வாய்மையுடைய; நம்பகமான; உறுதிவாய்ந்த; இடர்காப்பான ; அச்சத்துக்கு இடமற்ற ; கடன் வகையில் மீட்டும் பெறும் நம்பிக்கைக்குரிய ; வாழ்க்கை வகையில் நீடிக்கிற ; ஆதரவான ; சார்வான ; மட்டான ; கவர்ச்சி வாய்ந்த; சுவைமிக்க ; *adv.* நன்றாக ; *int.* நன்று, நல்லது!; சரி ; அவ்வாறே ஆகுக ! (தொ.) as good as, ஒத்த நிலை யுடையதாகவே, ஒப்பீட்டில் குறைவற்றதாகவே ; செயலள வில் கிட்டத்தட்ட; be as good as one's word, வாக்குறுதியை நிறைவேற்று ; for good, for good and all, நிலையான முடி வாக, செயல்மாற்ற முடியாத வகையில்; good for anything, எவ்வேலைக்கும் பொருத்தமான; good looks, அழகுத்தோற் றம்; good luck, நற்பேறு, தற்செயலான நல்வாய்ப்பிணைவு ; good offices, இடையீட்டு இணக்கத்திறம் ; good sense, திடமான மதிப்பீட்டுத்திறன், செயலறிவு, பொது அறிவு, அனுபவ அறிவு ; இயல்பான செயல்துறை அறிவுத்திறம் ; good temper, சிடுசிடுப்பின்மை, இன்முகப்பண்பு, நகை முகத்திறன்; Good Templar, குடி ஒழிப்புக்கழக உறுப்பினர்;

good thing, பயன்தரும் பேரம்; ஆதாயம்தரும் பொருள் துறை முயற்சி; நகைத்திறமுடைய கூற்று; good things, சுவைப் பொருள்கள்; make good, ஈடுசெய், சீர்ப்படுத்து; செலவுகளைக்கொடு; நிறைவேற்று; செய்துகாட்டு; காரணம் காட்டி விளக்கு; பதவியைப்பெற்று அதிலேயே அமர்ந்திரு, ஒருவர் முயன்றதைச் செய்துமுடி; திடீர் என்று ஆக்கம் பெறு; no good, பயனற்ற, எதற்கும் உதவாத; stand good, நிலையான நன்மையுடையதாயிரு, தங்கியிரு, நிலைத்திரு; தொடர்ந்திரு; the good people, வன தெய்வங்கள்; think good, விருப்பங் கொள்; மனஞ்சார்.

good'-breed'ing, *n.* நல் வளர்ப்பு; மரியாதை நடத்தை.

good-broth'er, *n.* மனைவியுடன் பிறந்தவன்; உடன்பிறந்தாள் கணவன்.

good-bye', *n.* பிரியாவிடை வாழ்த்து; *int.* கடவுள் உன்னைக் காப்பாராக! வாழி! போய் வா!

good'-condi'tioned, *a.* நல்ல நிலைமையிலுள்ள.

good-dame', *n.* பாட்டி.

good-day', *n.* கூடும்போது அல்லது பிரியும்போது பொதுவாகச் சொல்லப்படும் முகமனுரை, சந்திப்பு அஞ்சலி.

good-ev'en, good-eve'ning, *n., int.* மாலை நேரத்தில் கூடும்போது அல்லது பிரியும்போது சொல்லப்படும் முகமனுரை.

good-fath'er, *n.* மாமனுர்.

good'fell'ow, *n.* களிப்புமிக்க தோழன், மனமொத்த பாங்கன்.

good-fell'owship, *n.* மகிழ்வூட்டும் தோழமை, களியாட்டுக் கூட்டு.

good'-for-nothing, *n.* சோம்பேறி; *a.* பயனற்ற, ஒன்றுக்கும் உதவாத.

Good'-Friday, *n.* புது வெள்ளிக்கிழமை, இயேசுநாதர் சிலுவையிலறையப்பட்டதை நினைவுகூர்தற்கான ஈஸ்டர் நாளுக்கு (Easter-day) முந்திய வெள்ளிக்கிழமை.

good-hu'mour, *n.* இன்முகச் செவ்வி.

good'iness, *n.* அப்பாவியாயிருக்கும் இயல்பு.

good'ish, *a.* மட்டாக நல்ல பண்பு உள்ள; மட்டியல் அளவுடைய.

good'-King-Hen'ry, *n.* அமெரிக்க வானிலைக்கு இணக்குவிக்கப்பட்ட ஐரோப்பியச் செடிவகை.

good-lack', *int.* ஆகா; அடடா! ஐயோ; வியப்பு அல்லது இரக்கத்தைக் குறிக்குஞ் சொல்.

good'lier, *a.* goodly என்பதன் உறழ்படி.

good'liest, *a.* goodly என்பதன் ஏற்றுயர்படி.

good-look'ing [1], *a.* அழகு வாய்ந்த.

good'looking [2], *a.* நன்னெறித் தோற்றமுடைய.

good'ly, *a.* அழகான, நேர்த்தியான; போதிய; *adv.* அன்புடன், அன்பாக; நேர்த்தியாக.

good-morn'ing, *n.* காலை நேரத்தில் கூடும்போது அல்லது பிரியும்போது சொல்லப்படும் முகமனுரை.

good-moth'er, *n.* மாமியார்.

good-na'ture, *n.* அன்புள்ளம், ஒப்புரவியல்பு; தன்னலந் தளரவிடும் தன்மை, விட்டுக்கொடுக்கும் இயல்பு; அடக்கம்.

good'ness, *n.* நன்மை; நற்குணம்; மேம்பாடு, சிறப்பு, நேர்த்தி, மிகுநலம்; அன்புடைமை, தாராள குணம்; அற ஆர்வம்; பொருளின் நற்கூறு, பொருளின் சாரம் அல்லது வலிமை.

good-night', *n.* இரவிற் பிரியும்போது பொதுவாகச் சொல்லப்படும் முகமனுரை.

goods, *n. pl.* புடைபெயர்ச்சிப் பொருள்கள்; வாணிகச் சரக்குகள்; இருப்பூர்தி முதலியவை மூலமாக அனுப்பப்படுவதற்குரிய பொருள்கள்; (தொ.) goods train, சரக்குத் தொடர்வண்டி.

goodsire', *n.* பாட்டன்.

good-sis'ter, *n.* மைத்துனி, உடன் பிறந்தார் மனைவி; மனைவியுடன்பிறந்தவள்.

good-son', *n.* மருகர், மகள் கணவர்.

good'speed', *n.* வெற்றி; *int.* வெற்றி கிட்டுவதாக!

good'-tem'pered, *a.* நற்செவ்வியுடைய, இனிய உள்நிலைச் செவ்வியுடைய.

goodwill', *n.* நல்லெண்ணம்; ஆதரவு; மகிழ்வினக்கம்; நட்பார்வம்; வாணிக நற்பெயர் உரிமை.

Good'wins, Good'win sands, *n. pl.* ஆங்கிலக் கால்வாய் (English Channel) இடையிலுள்ள மணல்திட்டு.

Good'wood, *n.* இங்கிலாந்தில் சஸ்ஸெக்ஸ் (Sussex) மாவட்டத்தில் பந்தய ஓட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் இடம்; சஸ்ஸெக்ஸ் மாவட்டப் பந்தய ஓட்டம்.

good'y [1], *n.* திண்பண்டவகை.

good'y [2], good'y-goody, *a.* அப்பாவியான, அருவருப்புண்டாக்கும் அளவுக்கு நல்லவராயிருக்கிற, திறனின்றி அற ஆர்வமுள்ள.

go'-off, *n.* தொடக்கம்; (தொ.) at the first go-off, முதன் முதல், தொடக்கத்தில்.

goon, *n.* தொழிலாளிகளை அச்சுறுத்துவதற்காக எதிரிகளால் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்; மட்டி.

goosan'der, *n.* வாத்து வகை.

goose, *n.* வாத்து; பெண்வாத்து; வாத்திறைச்சி; அப்பாவி, முட்டாள், பேதை; உடுப்புத் தேய்ப்புப்பெட்டி வகை; அட்டையின்மேல் வில்லைகளை வைத்து ஆடப்படும் தற்செயல் வாய்ப்பு விளையாட்டு வகை.

goose'berry, *n.* முட்செடி வகை; முட்செடி வகையின் உண்ணத்தக்க பழம்; முட்செடிப் பழத் தேறல்; வேண்டப்படாத அயல் மனிதர்; (தொ.) gooseberry tomato, மழைக் காலத்தில் பலன்தரும் சிறு பழச்செடிவகை; சிறுசெடி வகையின் பழங்கள்; play gooseberry, காதலரிடையே துணைச் செவிலியாய் இயங்கு.

goose'berry-fool', *n.* முட்செடிவகைப் பழங்களைக் கொண்டும் கடைந்த பாலாடையைக் கொண்டும் செய்யப்படும் இனிப்புப் பண்ணிய வகை.

goose'-cap, *n.* அறிவற்றவர்.

goose'-club, *n.* கிறித்துமஸ் விழாவை எதிர்நோக்கிச் சிறுதவணைப்பணம் பெற்று வாத்துக்கள் வழங்கும் கூட்டமைப்பு.

goose'-flesh, *n.* தோலின் சிலிர்ப்பு நிலை.

goose'-flower, *n.* ஆடுதின்னுப் பாளை வகை.

goose'foot, *n.* அக்காரக் கிழங்கினத்தைச் சேர்ந்த செடிவகை; *pl.* goose'foots.

goose'-girl, *n.* வாத்து மேய்க்கும் சிறுமி.

goose'-grass, *n.* ஒட்டுப்புல் வகை.

goose'herd, *n.* வாத்து மேய்ப்பவர்.

goose'-neck, *n.* வாத்தின் கழுத்தைப்போல் வளைந்துள்ள கொக்கி-குழல்-தாங்கி முதலியவை.

goose'-quill, *n.* பழங்கால வாத்து இறகுப் பேனு.

goos'ery, *n.* வாத்துக்களை வைத்திருப்பதற்கான இடம்; அறிவின்மை.

goose'-skin, *n.* = goose-flesh.

goose'-step, *n.* (படை.) வாத்து நடப்பதைப் போன்ற படை நடை வகை.

goose'-wing, *n.* கப்பலின் முதன்மையான பாயின் கீழ்மூலைகளில் ஒன்று.

goos'ey, *n.* வாத்து; மூடன்.

goph'er [1], *n.*, *v.* = gofer [2].

goph'er [2], *n.* வளைதோண்டும் அமெரிக்க கொறிவிலங்கு வகை; வட அமெரிக்க நில அணில்; வளைதோண்டும் நில ஆமைவகை; ஏ. வளைதோண்டு, சிறு அளவில் அடிநிலச் சுரங்கம் அறு.

goph'er[3], *n.* மரவகை.

gor'al, *n.* இந்திய மான்வகை.

gor'cock, *n.* சிவப்புக் காட்டுக்கோழி வகைச் சேவல்.

Gord'ian, *a.* பண்டைய ப்ரிஜியா (Phrygia) நாட்டு அரசனுகிய கார்டியஸ் (Gordius) வகுத்திருந்த சிக்கலான முடிச்சுக்குரிய; சிக்கலான, மிகக் கடினமான; (தொ.) cut the Gordian knot, வன்முறைக் குறுக்கு வழியில் இடரைக் கடந்து வெற்றிகாண்.

gore[1], *n.* சிந்தி உறைந்துபோன குருதி.

gore[2], *n.* முக்கோண நிலத்துண்டு; உடையை அகலமாக்கச் செருகப்படும் முக்கோண வடிவத்துணி; குடை வட்டத்தின் முக்கோணக் கூறு; உருளைக் கூறு; குவிமாடக் கூறு; பறவைக் கப்பலின் கூறு; வளைந்த பரப்பின் பகுதி; *v.* முக்கோணத் துண்டுகளைப் போன்ற வடிவங்கொடு; முக்கோணத் துண்டுகளை வைத்துப் பொருத்து; முக்கோணத் துண்டுகளால் அகலம் பெருக்கு அல்லது சுருக்கு.

gore[3], *v.* கூர்மையான விளிம்புடைய பொருள்களால் குத்தித் துளை, கொம்பினுல் குத்திக் கிளறு.

gorge[1], *n.* தொண்டை, மிடறு; விழுங்கப்பட்ட பொருள்; இரைப்பையிலுள்ளவைகள்; கோட்டை கொத்தளங்களில் ஒடுங்கிய பகுதி; மீனுல் விழுங்கப்படும் தூண்டிலிரை வகை; பருந்தின் தொங்கு கழுத்துப் பை; இரைப்பை; பெருங் கட்டிடத்தின் பின்புற நுழைவாயில்; அருவியரித்த மலைச் சந்து, விடர்; சுருங்கை, இடுக்கு வழி; (தொ.) have one's gorge rise, பெரிதும் வெறுப்புக்கொள்; heave the gorge, குமட்டு.

gorge[2], *n.* தெவிட்டுதல்; ஆவலுடன் விழுங்குதல்; கழிமிகு தீனி; *v.* பேராவலோடு தின்னு; தெவிட்டு, பெருந்தீனி கொள்; பேராசையுடன் விழுங்கு; திணி, விரியச்செய்; தொண்டை அடைத்துக்கொள்.

gorged, *a.* தொண்டையுடைய; தெவிட்டிய; (கட்.) கழுத்தைச் சுற்றி வளையமுள்ள.

gor'geous, *a.* ஒளி வண்ணமார்ந்த; பகட்டான, சிறப்பான; சொல்லணிகள் நிறைந்த, சொல்வளமுடைய.

gor'get[1], *n.* தொண்டைக்காப்பு; முற்காலப் படைத்துறைப் பணியாளர் பதக்கம்; ஆடையின் கழுத்து விசிறிமடிப்புக் கூறு; கழுத்தட்டிகை, கழுத்தணி வகை; பறவை முதலிய வற்றின் கழுத்து நிறத்திட்டு.

gor'get[2], *n.* அறுவை மருத்துவத்திற் பயன்படுத்தப்படும் நீண்ட சால்வரியுடைய எஃகுக் கருவிவகை.

Gor'gio, (ரோமனி) *n.* நாடோடி அல்லாத ஒருவர்; *pl.* *Gor'gios*.

Gorg'on, *n.* பாம்புகளையே மயிராகக்கொண்டு பார்ப்பவர்களைக் கல்லாக மாற்றும் ஆற்றலுடைய கிரேக்கபுராண அரக்கியர் மூவரில் ஒருத்தி; கோரப்பெண்.

gorgonei'on, *n.* கிரேக்க புராணக் கதைகளில் வரும் பாம்புகளையே மயிராகவுடைய அரக்கியின் முகமூடி.

Gorgon'ia, *n.* பவழப்பூச்சி வகை; *pl.* Gorgon'iae, Gorgon'ias.

gorg'onize, *v.* கல்லாக மாற்று.

Gorgonzol'a, *n.* செழுமையான பாலேட்டுக் கட்டி.

gorill'a, *n.* ஆப்பிரிக்க வாலில்லாப் பெருங்குரங்கு வகை.

gor'ing, *n.* கோணமாக வெட்டப்பட்ட துண்டு; *a.* முக்கோணத் துண்டாகவுள்ள.

gor'mand, *n.* = gourmand.

gor'mandism, *n.* பெருந்தீனி தின்னுதல்.

gorm'andize, *n.* வயணமாகச் சாப்பிடுந்திறன்; வயணமாகச் சாப்பிடும் பழக்கம்; குதிர்மை; *v.* பெருந்தீனி கொள்; பேராசையுடன் விழுங்கு.

gorse, *n.* மஞ்சள்நிற மலர்களும் முட்களும் உடைய புதர்ச் செடி வகை.

Gors'edd, *n.* வேல்ஸ் நாட்டுப் பாணர்கள்-மதகுருக்கள் மாமன்றத்துக்கு முன்னீடான நாட்கூட்டம்.

gor'y, *a.* உறைந்த குருதிபோன்ற; குருதிக் கறைபடிந்த; குருதி தோய்ந்த; (தொ.) gory dew, ஈரச் சுவரில் பாசி வகை காரணமாகக் காணப்படும் களிபோன்ற திண்சிவப்பு மென்படலம்; பாசி வகை.

gos'hawk, *n.* குறுஞ்சிறகுடைய பெரிய வல்லூறு வகை.

Gosh'en, *n.* ஒளிவள இடம்.

gos'ling, *n.* வாத்துக் குஞ்சு.

gos'pel, *n.* நற்செய்தி, இயேசுநாதர் அறிவுறுத்திய நல்வாழ்வுக் கோட்பாடு; இயேசுநாதரும் அவரது மாணவரும் அருளிச்செய்த போதனை; திருவருள் வெளிப்பாடு; இயேசுநாதர் வாழ்க்கை வரலாறு; இயேசுநாதர் வாழ்க்கை வரலாறடங்கிய விவிலிய ஏடுகள் நான்கனுள் ஒன்று; திருநல்லேடு, திருமறை நூல்; திரு நல்லேடுகளிலிருந்து வழிபாட்டுரையில் மேற்கொள்ளப்படும் பகுதி; உறுதியாக மேற்கொள்ளப்படும் பகுதி; உறுதியாக மேற்கொள்ளத்தக்க செய்தி; நம்பத்தக்க உறுதியான பற்றுக்கோடு; செயலில் பின்பற்றத்தக்க உறுதிப்பொருள்; நல்லுறுதியுடன் பரப்பிப் போதிக்கத்தக்க உயிர்த் தத்துவம்; வலங்கொண்ட பரப்பாதரவுக்குரிய மெய்ம்மை; பரப்பாதரவுக்குரிய முறைமை; உறுதிவாய்ந்த கடைப்பிடி மெய்ம்மை; (தொ.) gospel oath, விவிலிய நூல்மீது சூளுரை; gospel side, விவிலியத் திருநல்லேடு படிக்கப்படும் பலிமேடையின் வடபக்கம்; gospel truth, மறைமொழி, மறைநூல்களிற் கண்ட உண்மை; மறைநூல்களில் உள்ளதைப்போன்ற உறுதிப்பாடான செய்தி.

gos'pel-book, *n.* கூட்டுத்தொழுகையின்போது படிக்கப்படும் திருநல்லேட்டுப் பகுதிகள் அடங்கிய சுவடி.

gos'pelize, *v.* மறைநூற் பொருள்களை எடுத்துரை; மறைநூலுக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்.

gos'peller, *n.* கூட்டுத்தொழுகையின்போது திருநூல் படிப்பவர்; சமய போதகர்; சமய ஆர்வலர்; (தொ.) hot gospeller, வெறி ஆர்வலர்; வெறி ஆர்வக் கோட்பாட்டினர்; மூர்க்கக் கோட்பாட்டுப் பரப்பாளர்.

gos'pel-shop, *n.* மெதடிஸ்ட் (Methodist) என்னும் கிறித்தவ உட்சமய வகுப்பைச் சார்ந்தவர் தொழுமிடம்.

goss'amer, *n.* சிலம்பி நூல், காற்றில் ஊசலாடும் மெல்லிழைச் சிலந்தி நூல், புதர்களுக்கிடையில் படரும் இலேசான மென்படலப் பொருள்; நொய்ம்மைப் பொருள்; நொய்தான மெல்லிய வலைத்துணி; *a.* இலேசான, நொய்தான.

goss'amery, *a.* சிலம்பி நூல்போன்ற, நொய்தான.

goss'ip, *n.* பயனில பேசுபவர், செய்தி பரப்புகிறவர்; வம்பர்; வீண்பேச்சு; வதந்தி; துழாவாரம், மனம்போன போக்கிலான வரம்பற்ற பேச்சு; பழிமொழி; *v.* வறுமொழி பேசு; வாய்க்கு வந்தன கூறு, வீணுரையாடு; மனம்போன போக்கில் எழுது.

gossoon', *n.* ஏவற்சிறுவன்.

got, *v.* get என்பதன் இறந்தகால முடிவெச்சம்.

Goth, *n.* முற்காலச் செர்மன் இனத்தவர்; கல்வியறிவும் நாகரிகமும் அற்றுக் கலைப்பொருள்களை அழிக்கும் முரடர்.

Got'ham, *n.* கற்பனைக் கோமாளி நகரம்; (தொ.) wise man of Gotham, அறிவிலி.

Goth'amist, Goth'amite, *n.* பேதை, படித்தவன்போல் நடிக்கும் முட்டாள்.

Goth'ic, *n.* முற்காலக் கிழக்குச் செர்மானிய இனத்தவரின் மொழி; இடைநிலைக்காலக் கூர்மாடச் சிற்பப் பாணி; அச்சுருப் பழம்படிவ வகை; *a.* கிழக்குச் செர்மானிய இனத்தவருக்குரிய; கிழக்குச் செர்மானிய இன மொழிக்குரிய; (க-க.) இடைநிலைக்காலக் கூர்மாடச் சிற்பப்பாணியில் அமைந்த, பண்படாத, முரடான; அச்சுருப் பழம்படிவ வகையில் அமைந்துள்ள; பழங்கால ஆங்கில அச்சுருப் படிவத்தில் உள்ள.

Goth'icism, *n.* முற்காலக் கிழக்குச் செர்மானிய இன மொழி மரபு; இடைநிலைக் காலக் கூர்மாடச் சிற்பப்பாணி; பண்படாப் பழக்க வழக்க நிலை, முரட்டுப் பண்பு.

go'-to-meeting', *a.* தொப்பி ஆடை முதலியவற்றின் வகையில் திருக்கோயிலுக்குச் செல்வதற்குத் தகுதியான.

got'-up', *a.* செயற்கையான ; போலியான ; இட்டுக் கட்டப் பட்ட ; போலிப் பகட்டான ; ஏமாற்றும் நோக்கத்துடன் போலியாகப் புனையப்பட்ட.

gouache, (பிர.) *n.* நீரில் அரைத்துப் பசையைக் கொண்டும் தேனைக்கொண்டும் அடர்த்தியாக்கப்பட்ட மந்தமான வண்ணங்களில் படந்தீட்டும் முறை ; மந்தமான வண்ணங்களில் தீட்டப்பட்ட ஓவியம்.

Goud'a, *n.* ஆலந்து நாட்டுப் பாலேட்டுக்கட்டி வகை.

gouge, *n.* நகவுளி, தச்சு வேலையிலும் அறுவை மருத்துவத்திலும் பயன்படுத்தப்படும் உட்குழிவான அலகுடைய உளி வகை ; *v.* நகவுளியால் வெட்டு ; நகவுளியால் தோண்டு ; நகவுளியால் தோண்டியெடு ; கண்ணைத் தோண்டியெடு.

Goulard', *n.* ஈயத் துணைக்காடிகக் கரைசலடங்கிய கழுவுநீர் மருந்து.

gou'lash, *n.* இறைச்சித் துண்டுகளையும் காய்கறிகளையும் வதக்கிச் சமைக்கப்பட்ட உண்டிவகை ; மறுவகை பிரிப்பு, சீட்டாட்ட வகையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள சீட்டுக்களை வகைப்படுத்தி மீண்டும் பகிர்ந்து கொடுக்கும் முறை.

gourd, *n.* சுரைக் கொடியினம் ; சுரையினக் கொடியின் காய் ; சுரைக்காய் ; சுரைக் குடுக்கை.

gourd'-worm, *n.* பூசனி விதையையொத்த ஈரல் கிருமிவகை.

gourd'y, *a.* கால்களில் வீக்கங் கண்டுள்ள.

gourm'and, *n.* வயணமாகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவர், நல்ல சாப்பாட்டினை மதிப்பிடுபவர் ; பெருந்தீனிக்காரர் ; *a.* பேருண்டியரான, பெருந்தினி கொள்கிற ; தீனிவிருப்பமிக்க.

gourmandise, (பிர.) *n., v.* = gormandize.

gourm'et, *n.* உணவு குடிவகைச் சுவையுணர்வாளர் ; இன் தேறல் வகைகளின் சுவையுணர்வுமிக்கவர்.

gout¹, *n.* (மரு.) கீல்வாதம், சந்து வாதம், ஊளைச்சதை நோய் ; கோழி முதலிய பறவைகளுக்கு வரும் சிலேட்டும சூலை ; கோதுமைத் தண்டு புடைப்பு ; துளி ; அழுக்குத் தெறித்த புள்ளி.

gout², *n.* இன்சுவை, நறுஞ்சுவை.

gout'-fly, *n.* கோதுமைத் தண்டுகளைத் துளைத்து வீங்குவிக்கும் முட்டைப்புழுக்களை ஈனும் ஈ வகை.

gout'weed, gout'wort, *n.* கீல்வாதத்துக்கு நல்லதென்று நெடுங்காலம் கருதப்பட்டு வந்த குடைப் பூங்கொத்துடைய செடிவகை.

gout'y, *a.* சந்து வாதம் சார்ந்த ; கீல்வாத நோய்க்கு ஆளான.

go'vern, *v.* ஆளு ; நேரடியாக ஆட்சி நடத்து ; கோட்டையின் பொறுப்பாட்சி செய் ; நகரத்தின் பாதுகாப்பாட்சி ஏற்று நடத்து ; செயலாட்சி செய் ; செயல்முறைக்கான கோட்பாடுகளை வகுத்தியக்கு ; ஆட்சிச் செயல்முறைகளை ஒழுங்குபடுத்து ; வகைப்படுத்து, நெறிப்படுத்து, தூண்டு, ஆட்கொண்டியக்கு, வசமாகக்கொண்டு நடத்து, செல்வாக்கால் செயற்படுத்து ; அடக்கியாளு ; கட்டுப்படுத்து ; செயலுறுதி செய் ; ஆற்றலில் முதன்மை பெற்றிரு ; சட்டக் கட்டுப்பாடுடையதாயிரு ; உரிமையெல்லைக்குரியதாய் அமை, தொடர்புடையதாயிரு ; அறுதி செய்ய உரியதாயமை ; (இலக்.) தனிச்சார்புடையதாகப் பெற்றிரு, அவாவி நில், தனிப்பட்ட வேற்றுமையை வேண்டிநில்.

go'vernance, *n.* ஆளுகை ; ஆட்சி ; ஆட்சி முறை ; கட்டுப்பாடு ; கட்டளை ; அதிகாரம் ; நடத்தை.

go'verness, *n.* ஆசிரியை, வீடுகளில் குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்துப் பார்த்துக் கொள்பவள் ; *v.* ஆசிரியையாகச் செயலாற்று ; ஆசிரியையாகத் தொடர்பு கொண்டிரு.

gov'erness-car, gov'erness-cart, *n.* இருக்கைகள் எதிரெதிராயமைந்த பளுவற்ற இருசக்கர வண்டி.

gov'erning, *a.* கட்டுப்படுத்தும் ஆற்றலுடைய.

go'vernment, *n.* ஆட்சி முறை ; ஆட்சி ; ஆளுநர் குழு, ஆட்சி உரிமை பெற்றவர் குழு ; அரசு, அரசியல், அரசியலார் ; அமைச்சரவைக் குழு ; ஆளுநர் கால எல்லை ; ஆளுநர் ஆட்சிப் பரப்பு, மாகாணம் ; (இலக்.) மற்றொரு சொல்லின் வேற்றுமையை அறுதிசெய்வதற்குரிய சொல்லின் ஆற்றல் ; *a.* அரசியலாருக்குரிய ; அரசியலாரால் கடைப்பிடிக்கப்படுகிற ; (தொ.) Government house, ஆளுநர் இருக்கை.

government'al, *a.* அரசாங்கத்துக்குரிய ; ஆட்சிக்குரிய.

go'vernor, *n.* ஆளுநர், மாநில ஆட்சித் தலைவர், ஆட்சிப் பகுதியில் அல்லது குடியேற்ற நாட்டில் அரசரின் பிரதிநிதி ; கோட்டைக் காவலர் ; கோட்டைப் பாதுகாப்புப் படையின் மேலாளர் ; நிறுவனத்தின் தலைவர், நிறுவனத்தின் ஆட்சிக் குழுவினருள் ஒருவர் ; சிறைச்சாலைப் பொறுப்பாளர் ; மேற்பணி முதல்வர் ; தலைவர் ; தந்தை ; ஆசான் ; இயந்திரத்தில் வேகங்காக்கும் விசை அமைவு ; தூண்டில் முள்ளில் இரையாகச் செருகப்படும் செயற்கைப் பூச்சிவகை.

gov'ernor-gen'eral, *n.* மாநில ஆட்சித் தலைவர் முதல்வர் ; *pl.* gov'ernors-gen'eral.

gown, *n.* அங்கி, நிலையங்கி, பெண்களின் நெடுஞ்சட்டை ; மேலங்கி ; பண்டைய ரோமாபுரியினரின் புற உடுப்பு ; நகரத் தந்தை-நீதிபதி-வழக்குரைஞர்-மதகுரு-பல்கலைக் கழகத்தினர் முதலியோர் அணியும் வெவ்வேறு வடிவங்களிலுள்ள பணி முறை அங்கி ; *v.* நெட்டங்கி உடுத்திக்கொள் ; மேலங்கி யணிவித்துப் பதவியிலமர்த்து ; (தொ.) town and gown, ஆக்ஸ்போர்டிலும் கேம்ப்ரிட்ஜிலும் பல்கலைக்கழகத்தினரல்லாதவர்களும் பல்கலைக் கழகத்தினரும்.

gown'man, gowns'man, *n.* படைத்துறைசாராப் பொது மகன் ; பல்கலைக் கழக உறுப்பினர்.

goy, *n.* செர்மானிய யூதவழக்கில் யூதர் அல்லாதவர் ; பிற இனத்தவர்.

Graaf'ian, *n.* ஆலந்து நாட்டு உள்ளுறுப்பியலாரான கிராப் (Graaf 1641-73) என்பவருக்குரிய ; (தொ.) Graafian follicle, Graafian vesicle, பாலுண்ணிகளின் கருப்பையில் கருச்சத்துத் தங்கி முதிர்ச்சியடைகிற சிறு பைகளில் ஒன்று.

grab¹, *n.* கிழக்குத்திசைக் கரையோரக் கப்பல்.

grab², *n.* இறுகு பிடிப்பு ; பறிப்பு ; பறிக்கும் பண்பு, சுரண்டல் ; அரசியல் சூறை ; வாணிகக் கொள்ளை ; பற்றமைவுப் பொறி, பற்று கருவி ; சிறுவர் சீட்டாட்ட வகை ; *v.* திடீரெனப் பறி ; சடுதியில் கைப்பற்று ; பற்றிப் பறி ; சுரண்டு ; பேரவாக் கொண்டு பிடுங்கு ; கொள்ளையிட்டுத் தனதாக்கிக்கொள், தடுத்து நிறுத்து.

grabb'er, *n.* பேரவாவுடன் பறிப்பவன், பேராசைக்காரன்.

grab'ble, *v.* தடவித் தேடு ; கைகால்களைப் பரப்பிக்கொண்டு துழாவு.

grace¹, *n.* நயம், பண்பு ; கவர்ச்சிக் கூறு, இனிமைப் பண்பு ; வனப்பு, அழகுக் கூறு ; அணிநயம் ; செயற்பாங்கு, செயல் வண்ணம் ; அருள் ; அருள்பாலிப்பு, அனுக்கிரகம் ; அருட்பேறு, கடவுட்பேறு ; அருட்கொடை ; தெய்வத்திறம் ; தெய்வ அருளிரக்கம் ; தயவு, பரிவு, அருட்கனிவு, கருணை ; நல்லெண்ணம் ; தகவு, இசைவுநயம் ; மன்னிப்புப் பண்பு ; சலுகை, அருண்முறைத் தவணை விட்டுக்கொடுப்பு ; தடையற்ற தன்விருப்புரிமை ; கமகம், இசை அதிர்வுநயம் ; திருமேனி, கோமான் கோமாட்டியர் சமய மாவட்ட முதல்வர் முதலியோரின் அருட் பட்டம் ; உணவுமேடை வந்தனை வழிபாடு ; பல்கலைக் கழகச் செயற்குழுவின் இசைவு ; பல்கலைக் கழகச் செயற்குழுவின் தீர்ப்பு ; *v.* கவர்ச்சியூட்டு, அணி செய், அழகு செய் ; மதிப்பளி ; இணைந்து சிறப்பளி ; மதிப்பு மேம்படுத்து ; பண்புகளை முனைப்பாக எடுத்துக் காட்டு ; பட்டம் முதலியன வழங்கிச் சிறப்புச்செய் ; (தொ.) days of grace, சலுகை நாட்கள் ; fall from grace, ஒழுக்க நிலையினின்றும் இழி, அருள்நிலையினின்றும் வழுவு ; saving grace, முத்தி வழங்கும் தெய்வ அருள் ; ஈடு செய்யும் பண்பு ; take heart of grace, வழங்கப்பட்ட சலுகையினின்றும் ஊக்கங்கொள் ; with bad grace, வெறுப்பைத் தருகிற

பாங்குடன்; with good grace, நல்லிணக்கமான பாங்குடன்; year of grace, இயேசுநாதரின் பிறப்பிலிருந்து கணிக்கப் படும் ஆண்டு, கி. பி. ஆண்டு.

Grace[2], *n.* உள்ளூரொடும் நெடுந்தொலைவொடும் நேரே தொடர்பு கொள்ளக்கூடிய தானியங்கி தொலைபேசி.

grace'-cup, *n.* விருந்தின் முடிவில் அருந்தப்படும் கிண்ணத்து தேறல்.

grace'ful, *a.* இயல் நயமுடைய, நேர்த்தியான, நாகரிகமான, அழகிய; தகவுடைய, பொருத்தமான; அருள் நிறைந்த; அருள் பாலிக்கிற.

grace'less, *a.* நற்பாங்கு அற்ற, நல்லுணர்ச்சியில்லாத; நாணங்கெட்ட, சிறப்பில்லாத; இரக்கமற்ற, கொடிய, சீர் கெட்ட; நயமுறையற்ற.

grace'-note, *n.* (இசை.) கமகம், இசைத்திறத்துக்கு வேண்டா விடினும் அழகுக்காகப் புகுத்தப்படும் இசைமானம்.

graces[1], *n. pl.* நட்பாதரவு.

Graces[2], *n. pl.* கிரேக்க புராண மரபில் அழகும் கவர்ச்சியும் அளிப்பவர்களென்று கருதப்பட்ட மூன்று உடன்பிறப்பு நயத்தெய்வங்கள்.

grace'-stroke, *n.* முற்றுவிக்குஞ் செயல்.

gra'cile, *a.* மெல்லிதான; வலிவற்ற.

gra'cious, *a.* அன்புள்ள, இன்முகமார்ந்த; கனிவார்ந்த; அற ஆர்வமுடைய; நய ஆதரவான; பண்பமைதியுள்ள; அருள்பாலிக்கிற, கருணை நிறைந்த; மதிப்பு விட்டிறங்கிச் செயலாற்றுகிற; சலுகை தரும் பான்மை மேற்கொண்ட; தகவார்ந்த; சாதகமான, சார்வு நலமுடைய; *int.* 'கடவுளே!', 'ஆ! அப்படியா!', வியப்பு ஆர்ப்பரிப்புக் குறிப்பு; (தொ.) good gracious, 'ஆ! அப்படியா!', வியப்பு ஆர்ப்பரிப்புச் சொற்றொடர்.

grac'kle, *n.* காக்கையினப் பறவை.

gradate', *v.* படிப்படியாக ஒன்று மற்றொன்றில் இழையும்படி செய்; படிநிலைஏற்ற இறக்கமாக ஒழுங்குபடுத்து, தரப்படுத்து.

grada'tim, *adv.* படிப்படியாக.

grada'tion, *n.* படித்தர வரிசை; படித்தர வரிசையொழுங்கு; கவின்கலைத் துறையில் வண்ணங்களின் ஏற்ற இறக்கப் படி இழைவு; (மொழி.) உள்ளுயிர் மாற்றம்; படிநிலை ஏற்ற இறக்கம்; (இசை.) சுர வரிசை.

grada'tioned, *a.* படி நிலைகளால் ஆன.

grada'tions, *n. pl.* மாறுதல் படிநிலை வரிசை; மாறுதல் வரிசைப் படிநிலைகள்.

grad'atory, *a.* படிப்படியாக முன்னேறிச் செல்கிற; நடப் பதற்கு இசைவாக்கப்பட்ட.

grade, *n.* படிநிலை; படித்தரம்; பண்பின் தரநிலை; மதிப்பின் படி; வளர்ச்சிப்படி; முன்னேற்றப்படியின் ஒரே தளத்தி லுள்ள ஆட்கள் அல்லது பொருள்களின் தொகுதி; படி உயர் வின் தரம்; அளவுகருவியின் படியளவு நிலை; வகை பிரிவு; வகை பிரிவின் உட்படித்தரம்; சரிவு; சாய்வு வீதம்; ஏற்ற வீதம்; இறக்க வீதம்; பள்ளி வகுப்பு; பள்ளிப்படிவம்; கால்நடைகளில் தூய உயரினக் கலப்பால் ஏற்படும் உயர் திரிபு வகை; (கண.) செங்கோணத்தில் நூறில் ஒரு கூறு; (மொழி.) உள்ளுயிர் மாற்றத்தின் ஒரு படி; (வில.) ஒரே வளர்ச்சித் தசையில் தாய்க் குடும்பத்திலிருந்து பிரிந்துபோன தாகக் கருதப்படும் விலங்கு வகைகளின் தொகுதி; *a.* இனக் கலப்பால் உண்டான; *v.* தரப்படுத்து; வகைப்படுத்து; தரங்களாக வரிசைப்படுத்து; வகைப்படுத்தி ஒழுங்குசெய்; தர அறுதிசெய்; படிநிலைத் தரமாக வகைப்படும்படி உரிய வீதத்திற் கல; இடைநிலைச் சாயல்கள் மூலம் வண்ணத்துடன் வண்ணம் இழையும்படி செய்; வாட்டங்கொடு; பாதைக்குப் படிநிலை ஏற்ற இறக்கம் கொடு; கால்வாய்க்குப் படிநிலைச் சாய்வு அளி; வேறுபட்ட சாய்வுகளைச் சரிசெய்து ஒருசீர்ப் படுத்து; ஒரு சீர்ப்படு; கால்நடைவகையில் உயர்படி தூய இனத்துடன் கலப்புச் செய்; (மொழி.) உள்ளுயிர் மாற்றப்படி வேறுபாடு செய்.

grad'ient, *n.* சரிவு வாட்டம், பாதை இருப்புப்பாதை முதலி யவற்றின் வகையில் சம தளத்திலிருந்து ஏற்ற இறக்கமாக ஏற்படும் சாய்வளவு வீதம்; ஏற்ற இறக்க வாட்டம், வெப்ப மானி அழுத்தமானி முதலியவற்றின் வகையில் இடத்துக்கு இடம் ஏற்படும் அளவை ஏற்ற இறக்க மாறுபாட்டு வீதம்.

grad'ienter, *n.* நில அளவையாளரின் சரிவு வாட்டமானி.

grad'in, grad'ine, *n.* இருக்கைப்படி வரிசை; பலிமேடையின் பின்புறப் படி, படித்தட்டு.

grad'ual[1], *n.* ரோமன் கத்தோலிக்கக் கோயிலில் திருமுகப் பகுதிக்கும் நற்செய்திப் பகுதிக்கும் இடையே எழுப்பப்படும் எதிர்க் குரற்பாடல் பகுதி; எதிர்க்குரற் பாடற் பகுதிகள் அடங்கிய சுவடி.

grad'ual[2], *a.* படிப்படியாக நிகழ்கிற, மெல்ல நடைபெறுகிற, விரைவாயிராத; திடீரென்று தோன்றாத; செங்குத்தாயிராத

grad'ually, *adv.* படிப்படியாக, பைய.

grad'uand, *n.* பல்கலைக்கழகப் பட்டம் பெறவிருப்பவர்.

grad'uate, *n.* பட்டதாரி, கல்விப்பட்டம் பெற்றவர்; வேதி யியலாரின் அளவு குறிக்கப்பட்ட கண்ணுடிக்கலம்; *v.* கல்விப்பட்டம் பெறு, பட்டதாரியாகு; துறையின் முழுத் திறமைக்குரிய தகுதி பெறு; நுண் கூறுகளாக அளவின் அடையாளமிடு; படிநிலைகளாக வரிசைப்படுத்து; குறிப்பிட்ட படிநிலை வீதப்படி வரிவிதிப்பை வகுத்தமை; படிப்படியாக மறைவுறு; படிப்படியாக மாறு; நீர்வற்றச் செய்வது மூல மாகக் கரைசலைச் செறிவுபடுத்து.

grad'uated, *a.* நுண்படிகளாக அளவுக்கூறுகள் குறிக்கப் பெற்ற.

gradua'tion, *n.* நுண்படியளவிடுதல்; நுண்படியளவு நிலை; வண்ணத்தின் படிநிலை இழைவு; படியளவுக் குறியீடு; படி யளவுக் குறி; படிப்படியாக ஆவியாவதற்குக் காற்றுப்பட வைத்திருக்கை; பட்டத் தகுதிப்பேறு.

grad'uator, *n.* ஒழுங்கான இடைவெளிகள் விட்டுக் கோடுகளை வகுப்பதற்கான கருவி.

grad'us, *n.* கிரேக்க அல்லது லத்தீன் யாப்பிலக்கணச் சொற் களஞ்சியம்.

Grae'cism, *n.* கிரேக்க பண்பு; கிரேக்க சொல்மரபு; கிரேக்க நடை; கிரேக்க மரபைப் பின்பற்றியமைத்தல்; கிரேக்க மாதிரிப் போலி.

Grae'cize, *v.* கிரேக்க பாணியில் அமை; கிரேக்க இயல்பு அளி; கிரேக்க வடிவங்கொடு; கிரேக்கர் சார்பாயிரு; கிரேக்கர்களைப் பின்பற்றி நட.

Graeco-Ro'man, *a.* பண்டைய கிரீஸ்-ரோம் நாடுகள் சார்ந்த; ரோம ஆதிக்கத்தின்கீழ்த் தொடர்ந்து பயின்ற கிரேக்க கலைப்பாணிக்குரிய.

graffi'ti, *n.* graffito என்பதன் பன்மை.

graffi'to, *n.* தொல்பழங்கால நகரச் சுவர்களில் சுரண்டு வரி களால் அமைக்கப்பட்டுள்ள சித்திர வடிவம்; சுவர் அடித் தளத்தின் பல்வண்ணங் காட்டும் சுரண்டு வரி ஓவிய ஒப்பனை.

graft[1], *n.* ஒட்டுச்சினை; (மரு.) அறுவையில் இடம் மாற்றிப் பொருத்திவைக்கப்பட்ட உயிரிழைமம்; ஒட்டுமுறை; ஒட்டுச் சினை செருகப்படுமிடம்; *v.* ஒட்டுச் சினையைச் செருகிவை; பொருத்தி இணை, இரண்டறப் பிணை; (மரு.) அறுவையில் உயிரிழைமத்தை இடம் மாற்றிப் பொருந்தவை; (கப்.) தாழ்ப்பாள் வளையத்தை இழைக்கயிறு வரிந்து இறுக்கு.

graft[2], *n.* வெட்டுமான அலகு, ஒருதடவை மண்வெட்டி எடுத்தெறியும் மண் ஆழ அளவு; பிறைவடிவ அல குடைய மண்வெட்டி வகை; சுரண்டல், பணித்துறை கைப்பொருள்.

graft'ing, *n.* ஒட்டு, ஒட்டவைத்தல்.

graft'ing-clay, graft'ing-wax, *n.* ஒட்டுச்சினை இணைக்கப் படுமிடத்தை மூடுவதற்கான பொருள்.

grail[1], *n.* = gradual[1].

grail[2], *n.* திருக்குருதிக்கலம், இயேசுநாதர் சிலுவை யேற்றத்தின்பின் அவர் குருதி சேமிப்புக் கலமாக அமைந்த இறுதியுணவின் வட்டில்.

grail[3], *n.* சீப்புச் செய்பவரது அரம்.

grail[4], *n.* சரளைக்கல்.

grain[1], *n.* கூலம், தானியம்; கூலமணி; செறிவார்ந்த சிறு தனி வித்து; கடுஞ்செறிவார்ந்த சிறு துணுக்கு; அரிமணி, சிறுதுகள், உள்ளணு; அரிமணல் பொடி; பொன்துகள்; உப்புத்துணுக்கு, வெடிமருந்துப்பொடி, மணப்பொருள்துகள்; மிகச் சிறிய அளவு; நெல்மணி எடை, மிகச் சிறிய எடை வகை; முன்பு வித்துக்கள் எனக் கருதப்பட்ட உணங்கிய இந்திரகோபப் பூச்சித்தோடு; உணங்கிய இந்திரகோபப் பூச்சியிலிருந்து செய்யப்படும் செக்கர்நிறச் சாய வகை; கெட்டிச்சாய வகை; பொருள்களின் உட்கட்டுச் செறிமானம்; பொருள்களின் புறக் கரண்பரப்பு; தசை தோல் மரம் கல் ஆகியவற்றின் உள்ளணுத் துகள் கட்டமைப்பு; உள்ளணுத் துகள் ஒழுங்கமைதி; உள்ளணுத் துகள் பரும அளவு; மரக் கட்டைகளில் நார்வரி அமைதி; நிலக்கரி கல் ஆகியவற்றில் அடுக்கு வரி அமைவுமுறை; உள்ளார்ந்த இயல்பு; தொய்வாற்றல், இழைவாற்றல், உழைப்பாற்றல்; மனநிலை; போக்கு, பாங்கு; *v.* உள் அணுத்துகள் கட்டமைப்பு உருவாக்கு; உள் அணுத்துகள் கட்டமைப்பு உருவாகு; புறக் கரண் பரப்பமை; மரம் சலவைக்கல் ஆகியவற்றின் உள் அணுத்துகள் வரியமைதியின் செயற்கை வண்ணம் தோய்வி; கெட்டிச்சாயமிடு; மயிர்களைந்து தோற் பதனிடு; (தொ.) against the grain, மரச் சிராயின் போக்குக்கு எதிராக; மனப்பாங்குக்கு மாறாக; dye in grain, கெட்டிச் சாயமிடு; in grain, முழுநிறைவாக; உண்மையாக; பிண்டப்பிழிவாக, இயல்பாக; தீர்மானமாக; நிலையாக; with a grain of salt, முழுதும் நம்பாமல், மிகைபட்டதாயிருக்கலாம் என்ற ஐயத்துடன், மெய்ம்மை துணியும் உணர்வு தனியாகக் கொண்டு.

grain[2], *n.* கவடு; கவர்முள்.

grain'age, *n.* கூல வரி.

grained, *a.* உட்கட்டமைந்த, மணிக்கட்டான; தோல் பதனிடும் வகையில் மயிர் களையப்பட்ட; கெட்டிச்சாயமிடப்பட்ட; மேற்கரண் பரப்புடைய; சொரசொரப்பான; சால்வரியிடப்பட்ட.

grain'er, *n.* அகவரி வண்ணம் தோய்ப்பவர்; சால்வரி வண்ணத்தூரிகை.

grain'ing[1], *n.* மரச்சிராய்போல அகவரி வண்ணங் கொடுத்தல்; தோல் பதனிடும் வகையில் மயிர் களையும் வேலைமுறை.

grain'ing[2], *n.* ஐரோப்பிய நன்னீர் மீன் வகை.

grains[1], *n. pl.* நறுமணப்பொருளாகவும் மருந்து சரக்காகவும் பயன்படுத்தப்படும் மேற்கு ஆப்பிரிக்கச் செடிவகையின் விதை மேலுறைகள்; சாராயங் காய்ச்சி வடித்த பிறகு எஞ்சி நிற்கும் மாவூறல் சக்கை; (தொ.) grains of Paradise, Guinea grains, நறுமணப்பொருளாகவும் மருந்து சரக்காகவும் பயன்படுத்தப்படும் மேற்கு ஆப்பிரிக்கச் செடிவகையின் விதை மேலுறைகள்.

grains[2], *n.* மீனைக் குத்திப் பிடிப்பதற்கான ஈட்டி வகை.

grain'y, *a.* கூலம்-பருப்பு அல்லது கொட்டைகளையுடைய.

Grall'ae, Grallato'res, *n. pl.* (வில.) நீரில் நடக்கும் நீண்ட காலுடைய பறவையினம்.

grallator'ial, *a.* (வில.) நீரில் நடக்கும் நீண்ட காலுடைய பறவை இனஞ்சார்ந்த.

grall'och, *n.* இறந்துபோன மான் உடலின் உள்ளுறுப்புகள்; *v.* மானின் குடலை வெளிப்படுத்து.

gram[1], *n.* காராமணி, பருப்பு வகைப் பொது; கொள்ளு, குதிரைத்தீனியாகப் பயன்படும் பயறுவகை.

gram[2], *n.*=gramme.

gram'a, gram'a grass, *n.* அமெரிக்க மேய்ச்சற் புல்வகை.

gram'-at'om, *n.* (வேதி.) அணுக்கட்டு நிறை, தனிமத்தின் அணு எடை அளவின் பரும அளவெண்.

gram'-centimetre, *n.* (இயங்.) ஒரு சீரெடையைச் செங்குத்தாக ஒரு செண்டிமீட்டர் உயர்த்துவதற்கு வேண்டிவரும் பணியாற்றல்.

gramer'cy, *int.* நன்றி!

gramina'ceous, *a.* புல்சார்ந்த; புல்போன்ற; புல்நிறைந்த.

Gramin'eae, *n. pl.* புல் இனம்.

gramin'eous, *a.*=graminaceous.

graminiv'orous, *a.* புல் தின்கிற.

gramm'a, *n.*=grama.

gramm'alogue, *n.* (சுருக்கெழுத்து) ஒரு கீற்றுச்சொல், ஒரே எழுத்துக்கீற்றால் குறிக்கப்படுஞ்சொல்.

gramm'ar, *n.* இலக்கணம்; மொழிவழிக் கற்ற கலை, இலக்கண விதிகளைக் கையாளும் முறை; இலக்கண விதி முறைப்படி அமைந்த எழுத்துநடை; இலக்கண விதிமுறைப்படி அமைந்த பேச்சுநடை; மொழிப்படிவ மரபு அமைதி; கலைத்துறையின் அடிப்படைக் கூறுகள்; இயல்துறையின் தொடக்கக் கூறுகள்; அடிப்படைத் தொடக்க ஏடு; (தொ.) comparative grammar, ஒப்பிலக்கணம்; general grammar, பொது இலக்கணம்; historical grammar, வரலாற்று வழி இலக்கணம்; philosophical grammar, மெய்யுணர்வு இலக்கணம்; universal grammar, அனைத்துலக மொழியிலக்கணம்.

grammar'ian, *n.* இலக்கணப் புலவர்; இலக்கண ஆசிரியர்; இலக்கண நூலாசிரியர்; மொழிநூல் வல்லுநர்.

gramm'ar-school, *n.* முற்கால லத்தீன் இலக்கணப் பள்ளி; இங்கிலாந்தில் இக்கால இடைநிலைப்பள்ளி.

grammat'ic, grammat'ical, *a.* இலக்கணம் சார்ந்த, இலக்கண விதிகளையொட்டிய; (தொ.) grammatical gender, இலக்கணவகைப் பால் வேறுபாடு.

grammat'icism, *n.* இலக்கண விதிமுறைச் செய்தி.

grammat'icize, *v.* இலக்கண விதிகளையொட்டியதாக்கு; இலக்கண விதிகளாக்கு.

gramm'atist, *n.* இலக்கண ஆசிரியர், இலக்கணப் புலவர்.

gramme, *n.* சீரெடை, சீர் அளவை முறையில் பொதுநிலை எடையலகு.

gram'-mol'ecule, *n.*=gram-atom.

gram'ophone, *n.* இசைத்தட்டுப் பெட்டி, ஒலிப்பதிவுப் பேழை.

gram'pus, *n.* திமிங்கிலகிலம், தண்ணீர்பீறிட்டு வெளிப்படப் பேரிரைச்சலுடன் மூச்சுவிடும் திமிங்கிலம் போன்ற கடலுயிர் வகை; உரக்க மூச்சுவிடுபவர்.

granadill'a, grenadill'a, *n.* சிலுவையேற்றத் தோற்றம் உடைய மலர்க்கொடி வகை.

gran'am, *n.*=grannom.

gran'ary, *n.* கூலக்களஞ்சியம், தானிய உற்பத்தி நிறைவுப் பகுதி.

grand, *a.* வீறுர்ந்த; விழுமிய தோற்றமுடைய; மதிப்பு வாய்ந்த; பேரழகு வாய்ந்த; வண்ணப்பகட்டான; மிக நேர்த்திவாய்ந்த; ஆரவாரமான; பகட்டழகுடைய; மலைக்க வைக்கிற; மேதக்க, மாட்சி மிக்க; மேம்பட்ட; முதன்மை வாய்ந்த, தலைமைசான்ற; உயரிய; மேலான; நிறைபேருருவமைந்த; முழுநிறைவான; முழுநிலையான; முடிவான; களிப்பூட்டவல்ல, நிறைவளிக்கிற; இரண்டாந் தலைமுறையான; (தொ.) grand air, தனிச்சிறப்பு வாய்ந்த தோற்றம்; Grand Almoner, இன்னும் நீடித்துவருகிற பழைய மதிப்பு வாய்ந்த அறம் வழங்கும் பணியினை மேற்கொண்டவர்; grand committee, சட்டத்தொழில் சட்டப்படி மூலங்களை ஆய்வதற்கு அமர்த்தப்படும் நிலைக்குழுக்கள் இரண்டில் ஒன்று; Grand Duchess, சிறுவட்ட ஆட்சிக்கோமாட்டி; சிறுவட்ட ஆட்சிக் கோமான் துணைவி; Grand Duchy, சிறுவட்டக் கோமக்கள் ஆட்சிப்பகுதி; Grand Duke, சிறுவட்ட அரசுக்கோமான்; grand duke, பேராந்தை வகை; grand march, ஆடல்வகை நடனத்தொடக்க வரிசையணி; Grand Master, இராணுவ

வீரத்திருத்தகைக் குழுவின் தலைவர்; Grand Monarch, பிரஞ்சு நாட்டின் 14-ஆவது லூயி (Louis XIV) என்னும் அரசர்; grand opera, உரையாடல் இல்லாத இசைநாடகம்; grand piano, upright piano, பெரிய இன்னிசைப்பெட்டி வகை; grand stand, குதிரைப்பந்தய மைதானத்தில் உயர் காட்சி மேடை; grand total, மொத்தக் கூட்டுத்தொகை; Grand Turk, துருக்கி சுல்தான்; Grand Vizier, துருக்கி நாட்டு முதலமைச்சர்.

gran'dad, *n.* = grand-dad.

gran'dam, *n.* பாட்டி, கிழவி; குலமூதாட்டி; விலங்கினுடைய தள்ளையின் தள்ளை.

grand'-aunt, *n.* பாட்டன் அல்லது பாட்டியின் உடன்பிறந்தவள்.

grand'child, *n.* பேரக்குழந்தை.

grand'-dad, *n.* பாட்டனுர்.

grand'daughter, *n.* பேர்த்தி.

Grand'-ducal, grand'-ducal, *a.* சிறுவட்ட அரசுக்கோமானுக்குரிய; சிறுவட்ட அரசுக் கோமானைச் சார்ந்த; சிறு வட்ட அரசு சார்ந்த.

grande, (பிர.) *a.* சிறப்புமிக்க; (தொ.) *grande passion*, முழுதும் ஆட்கொண்ட காதல்; *grande toilette*, சிறப்பு முறையான ஆடை.

grandee', *n.* ஸ்பெயின் போர்ச்சுகல் நாடுகளில் உயர்தரப் பெருங்குடி மகன்; உயர் பதவியாளர்; பெரும்புகழ் படைத்தவர்.

gran'deur, *n.* பேராற்றல்; பெரும் பதவி; உயர்நிலை; மேதகைமை; பேரழகு; வீறுர்ந்த தன்மை; பெருமித உணர்வு; வாழ்க்கை மேம்பாடு; சூழல் மாட்சி; வாழ்க்கை ஆரவாரம்.

grand'father, *n.* பாட்டனுர், தாய் அல்லது தந்தையின் தகப்பனுர்.

grand'father's-clock, *n.* தரையில் நிற்கும்படி நீண்ட பெட்டி வடிவாக அமைந்த பழங்கால மணிப்பொறி வகை.

Grand Guignol, *n.* ஆழ்ந்த உணர்ச்சி செறிந்த சிறு தொகுப்புக்களடங்கிய நாடகக் காட்சி.

grandil'oquent, *a.* சொல்லாரவாரமுடைய, சொற்பகட்டான; வீம்புபேசும் பழக்கமுடைய.

gran'diose, *a.* பெருமிதப் பகட்டான, பெருமித நடிப்புடைய; ஆரவாரமான.

Grandison'ian, *a.* வீறுர்ந்த நடைநயமும் வீர மரபார்ந்த பெருமிதமுங் கொண்ட.

grand'-ju'ror, *n.* தனிச் சிறப்புச் சான்றுளர் குழுவின் உறுப்பினர்.

grand'-ju'ry, *n.* தனிச்சிறப்புச் சான்றுளர் குழு.

grand'ma, grand'mamma, *n.* பாட்டியார்.

grand'mother, *n.* பாட்டியார்; தாய் அல்லது தந்தையின் தாய்.

grand'motherly, *a.* பாட்டியைப் போன்ற, பாட்டி போன்று நடத்துகிற; ஒருவர் வாழ்க்கையைப் பெருங்கவலையுடன் முழுதும் இயக்க விரும்புகிற.

grand'pa, grand'papa, *n.* பாட்டனுர்.

grand'parent, *n.* பெற்றேரைப் பெற்றவர், பாட்டன் அல்லது பாட்டி.

grand'sire, *n.* பாட்டனுர், மூதாதை.

grand'-slam', *n.* சீட்டாட்ட வகையில் எல்லாப் 'பிடி' ஆட்டத்தையும் கொள்ளும் நிறைவெற்றி.

grand'son, *n.* பேரன்.

grand'-un'cle, *n.* பாட்டனுர் அல்லது பாட்டியார் உடன் பிறந்தார்.

grange, *n.* பண்ணை மனை, குதிரைக்கொட்டில் முதலிய கட்டிடங்களடங்கிய வளைவு; கம்பத்தம், நாட்டுப்புற மனை; படைத்துறையில் கூலக்களஞ்சியம்.

gran'ger, *n.* பண்ணைக்காவலர்.

gran'gerism, *n.* கழிமிகைப் படவிளக்கம், வேறு பல நூல்களிலிருந்து விளக்கப்படங்களையும் தலைப்புப் பக்கங்களையும் வெட்டியெடுத்து உடன் வழங்கும் முறை.

gran'gerize, *v.* கழிமிகைப் படவிளக்கம் அளி, வேறு பல நூல்களிலிருந்து விளக்கப் படங்களையும் தலைப்புப் பக்கங்களையும் வெட்டியெடுத்து மற்ற விளக்கங்களுடன் கலந்து வழங்கு.

granif'erous, *a.* கூலவகை விளைவிக்கிற; தானியம் போன்ற விதையை வழங்குகிற.

gran'ite, *n.* கருங்கல், கட்டிடத்துக்குப் பயன்படுத்தப்படும் திண்பாறை வகை; *a.* கருங்கல்லாலான; கருங்கல் போன்று கடினமான; (தொ.) bite on granite, பயனின்றித் தொடர்ந்து முயற்சிசெய், விழலுக்கு நீர் இறை; the granite city, ஸ்காத்லாந்திலுள்ள அபர்டீன் நகரம்.

gran'ite-ware, *n.* கருங்கல் போன்ற தோற்றத்தோடு கூடிய புள்ளிகளுள்ள மட்கலம்; மெருகிடப்பட்ட இரும்புக்கல வகை.

granit'ic, *a.* கருங்கல் சார்ந்த; கருங்கல்லாலான; கருங்கல் போன்ற.

gran'itite, *n.* அப்பிரகக் கருங்கல், வெள்ளை அப்பிரகம் கலந்த கருங்கல் வகை.

gran'itoid, *a.* கருங்கல் வடிவம் போன்ற, கருங்கல் தோற்ற முள்ள.

graniv'orous, *a.* கூலம் தின்கிற; தானிய விதைகள் தின்கிற.

grann'om, *n.* நீர் ஈ வகை; மீன் பிடிப்பதற்கு ஈப் போன்று பயன்படுத்தப்படும் போலிப் பொருள்.

grann'y, *n.* பாட்டி; (தொ.) granny's bend, granny's knot, தவருகக் கட்டப்பட்ட கப்பற் பாய்க்கயிற்று முடிச்சு.

granodi'orite, *n.* கருங்கல் போன்ற படிகக் கல்லுள்ள பாறை.

granolith'ic, *a.* சீமைக்காரை சார்ந்த, சிமிட்டியும் கருங்கல் துண்டுகளுங் கொண்ட.

grant, *n.* கொடை; கொடை வழங்கீடு; நன்கொடை; கொடைப் பொருள்; மானியத்தொகை, அரசின் பொருளுதவி; கொடைப் பத்திரம், பட்டயம்; செலவுப்படி, வாழ்க்கைப்படி; பத்திரத் தின்மூலம் சொத்துரிமையைக் கொடுத்தல்; சட்டப்படியான உரிமை மாற்றம்; *v.* அளி, கொடு, வழங்கு; மெய்யென ஒப்புக்கொள்; விட்டுக்கொடு; இசைவு கொடு; சலுகையளி.

grant'ed, *a.* கொடுக்கப்பட்ட; வழங்கப்பட்ட; இசைவளிக்கப் பட்ட; ஒத்துக்கொள்ளப்பட்ட; (தொ.) take for granted, ஆராயப்புகாமலே முன்னதாக மெய்யென ஏற்றுக்கொள், உண்மையென அப்பொழுதைக்காக ஒப்புக்கொள்.

grantee', *n.* கொடையளிக்கப்பட்டவர்; (சட்.) பட்டய உரிமையாளர்.

grant'er, grantor', *n.* (சட்.) நன்கொடை வழங்குபவர்; மானியம் அளிப்பவர்; உரிமைப்பத்திரம் கொடுப்பவர்.

Granth, (இ.) *n.* சீக்கியச் சமய நூல் தொகுதி.

grant'-in-aid, *n.* பணித்துறை உதவித்தொகை.

gran'ular, gran'ulary, gran'ulose, gran'ulous, *a.* சிறுமணி சார்ந்த, சிறுமணி போன்ற; மணியடர்த்தியுள்ள, அகவரிச் செறிவுள்ள; சொரசொரப்பான மேற்பரப்போடு கூடிய.

gran'ulate, *a.* சிறுமணி சார்ந்த, சிறுமணி போன்ற; சிறு மணியடர்த்தியுள்ள, அகவரிச் செறிவுள்ள; சொரசொரப்பான மேற்பரப்போடு கூடிய; சிறு முனைகளை மேற்பரப்பில் கொண்ட; *v.* சிறு மணிகளாகும்படி செய்; சிறு மணிகளாகு; மணிக்கட்டாக அமை; மணிக்கட்டமைவி; மேற்பரப்பைச் சொரசொரப்பாக்கு; புண் முதலியவற்றின் வகையில் குணமாவதற்குத் தொடக்கமாக சிறு முளைகள் காணப்பெறு, காய்ந்து குணமடையத்தொடங்கு, புண்ணுறு.

granula'tion, *n.* சிறுமணிகளாக உருவாக்கும் செய்கை, உருக்கிய உலோகத்தைச் சூடுள்ளபோதே சல்லடையின்மூலம் நீருட் பாய்ச்சிச் சிறு துணுக்குக்கள் ஆக்குதல்.

granula'tions, *n. pl.* ஆறிவரும் புண்மீது முதலில் உருவாகும் புது வளர்ச்சிக் கூறுகள்.

gran'ule, *n.* சிறு மணி; சிறு துகள்; நுண்பொடி.

grape', *n.* கொடிமுந்திரி, திராட்சைப்பழம்; குதிரையின் காலில் ஏற்படும் கட்டி; பீரங்கி சுடும்போது பரவலாகத் தாக்கும் சிறு குண்டுகளின் தொகுதி, கொத்துக்குண்டு; (தொ.) sour grapes, ஏமாந்த பொருள்; the grape, the juice of the grape, கொடிமுந்திரித் தேறல், இன்தேறல்.

grape'-brandy, *n.* கொடிமுந்திரிப்பழத் தேறல்.

grape'-fruit, *n.* சிறந்த புளிச்சுவைப் பழவகை.

grape'-house, *n.* கொடிமுந்திரி சேமப்பண்ணை, செயற்கை வெப்பநிலையில் திராட்சைக்கொடி வளர்க்கும் இடம்.

grape'-hy'acinth, *n.* கொடிமுந்திரிப் பழம் போன்ற மலர்க் கொத்துள்ள செடிவகை.

grape'less, *a.* கொடிமுந்திரியின் தனிச்சுவை மணமற்ற.

grape'-louse, *n.* கொடிமுந்திரிப்பழம் அழிக்கும் ஈ வகை.

grap'ery, *n.* கொடிமுந்திரித் தோட்டம்.

grape'-scissors, *n.* கொடிமுந்திரிக் கொத்துக்களைக் கத்தரிக்கும் கத்தரிக்கோல்; உணவு மேசையில் கொடிமுந்திரிப் பழக்கொத்தைக் கத்தரிக்கப் பயன்படும் கத்தரிக்கோல்.

grape'seed, *n.* கொடிமுந்திரி விதை.

grape'seed-oil, *n.* கொடிமுந்திரி விதை நெய்.

grape'-shot, *n.* தெறிகுண்டு, பீரங்கி சுடும்போது பரவலாகத் தாக்கும் சிறு குண்டுகளின் தொகுதி.

grape'-stone, *n.* கொடி முந்திரி விதை.

grape'-sugar, *n.* பழச்சர்க்கரை.

grape'tree, *n.* அமெரிக்க வெப்பமண்டல மர வகை, வெப்ப மண்டல மரவகையின் பழம்.

grape'-vine, *n.* முந்திரிக்கொடி; இயல்பான விரைசெய்திப் பரப்பு, அலருரை; பொய்யான அவதூறு.

graph [1], *n.* அடையாள விளக்கக் குறிவரைவு; வரைக்கட்டம்; *v.* அடையாள விளக்கக் குறிவரையிடு; அடையாளக் குறிவரைமூலம் விளக்கஞ்செய்.

graph [2], *n.* படியெடுக்கும் எலும்புப் பசையாலான அமைவு; *v.* எலும்புப் பசையாலான அமைவுமூலம் படியெடு; எலும்புப் பசையாலான அமைவுமூலம் படிபெருக்கு.

graph'ic, *a.* சித்திரம் சார்ந்த; ஓவியம் சார்ந்த; செதுக்குக் கலை சார்ந்த; எழுத்துருவான; எழுதும் கலை சார்ந்த; விளக்கவரை சார்ந்த; குறிவரைக்குரிய; உயிர்ச்சித்திரம் போன்ற; விரிவிளக்கமான; கனிப்பொருள் வகையில் மேற்பரப்பில் எழுத்துருப்போன்ற வரைத் தடங்கள் உள்ள; கனிப்பொருள் வகையில் வெட்டுவாயில் வரைத்தடங்களையுடைய; (தொ.) graphic arts, ஓவியம், படவரைவு, சித்திரம்-செதுக்குதல் போன்ற வரையுருவக்கலைகள்; graphic formula, தொடர்புக் குறிவரையிட்ட வேதியியல் வாய்பாடு; graphic granite, எபிரேய (Hebrew) மொழியெழுத்துக்களைப் போன்ற வரிவடிவங்களுள்ள படிகக் கனிப்பொருள் பாறை வகை.

graph'ical, *a.* = graphic.

graph'ically, *adv.* படத்தோற்றம் போன்று; விளக்கமாக, தெளிவாகத் தெரியும்படி; உயிர்ச்சித்திரம் போன்று; எழுத்து மூலம் விளக்கமாக; விளக்கவரை மூலமாக; குறிவரை மூலமாக.

grahp'ics, *n.* விளக்கக் குறிவரைக் கணிப்பியல்.

Graph'is, *n.* எழுத்துப்போன்ற விதையமைப்புக் காளான் வகை.

graph'ite, *n.* காரீயகம், கனிப்பொருள் வகை.

graph'ium, *n.* கரியகத் தாள்களின்மூலம் பல படியெடுத்தற்குப் பயன்படும் முனைக்கூருடைய கருவி.

graph'iure, *n.* மயிர்க்குஞ்ச நுனிவாலுடைய தென்னாப்பிரிக்க கொறிவிலங்கு வகை.

graphol'ogy, *n.* கையெழுத்துமூலம் நடத்தை முதலியவற்றை ஆய்தல்; கையெழுத்தின்மூலம் நடத்தை முதலியவற்றை மதிப்பிடுங் கலை; விளக்கக் குறிவரை வாய்பாடு.

graph'otype, *n.* மேற்பரப்பை அச்சிடுவதற்கான புடைப்பகழ்வுச் சித்திரக் கட்டை; புடைப்புகழ்வு அச்சுக்கட்டையின் செய்முறை.

grap'nel, *n.* பல வளைகங்களையுடைய சிறு நங்கூரம்; பாதாளக் கரண்டி, இறுகப்பிடிக்கும் இரும்புக் கொளுவி, கொக்கி மாட்டுங் கருவி; கருவிரலூகம், எதிரிக் கப்பலைப் பிடிக்க உதவும் வளைகப்பிடி நங்கூரம்.

grap'ple, *n.* கருவிரலூகம், பற்றிப்பிடிக்குங் கருவி; மல்லர் பிடி; நெருங்கிய போட்டிச் சண்டை; *v.* கொளுவியால் பற்றிப்பிடி; இறுகப் பற்று; நெருங்கி அருகே சென்று மல்லாடு; போராடு; (தொ.) grapple with, போராடி வெற்றியடைய முயல்; போராடிச் செய்துமுடி; கடுமுயற்சியில் ஈடுபடு.

grap'pling, *n.* கொளுவியால் பிடித்தல்.

grap'pling-i'ron, *n.* இரும்புக் கொளுவி, கருவிரலூகம், கடற்போரில் எதிரிக் கப்பல்களைக் கைப்பற்றுவதற்குப் பயன்படும் எறிகொக்கி.

grap'y, *a.* கொடிமுந்திரிப் பழங்களாலான; கொடிமுந்திரிப் பழங்கள் போன்ற.

grasp, *n.* பிடிப்பு, கைப்பிடி ஆற்றல்; பற்றும் ஆற்றல்; எட்டுந் தொலை; கட்டுப்படுத்தும் சக்தி; அடக்கியாளும் திறம்; மனம் பற்றிக்கொள்ளும் திறம், மூளையில் வாங்கிக் கொள்ளும் ஆற்றல்; *v.* பற்றிப்பிடி; பிடிபடு; பற்ற முயற்சி செய்; எட்டிப் பற்று; பேராவலுடன் கைப்பற்று; பறி; (தொ.) beyond one's grasp, பிடிப்புக்கு அப்பாற்பட்ட; அறிவாற்றலுக்கு எட்டாத; grasp nettle, துணிவுடன் துன்பத்தையும் இடர்ப்பாட்டையும் ஏற்றுச் சமாளி; within one's grasp, கைப்பற்றும் எல்லைக்குட்பட்ட; எட்டுகிற; அறிவாற்றலுக்கு உட்பட்ட.

grasp'ing, *a.* பேராசைபிடித்த, பிறர்பொருள் வௌவுகிற.

grasp'less, *a.* வலுவற்ற, தளர்ந்த.

grass, *n.* புல்; புல்வகை; மேய்ச்சல்; மேய்ச்சல் நிலம், புல் நிலம்; புல்மூடிய நிலம்; சுரங்கத்தொழில் வகையில் நிலத்தின் மேற்பரப்பு, சுரங்கத்தின் தலைப்பு; *v.* புல் தீனி கொடு; புல்கரண் கொண்டு மூடு; மென்சணலின் நிறம் வெளுக்கும்படி வெயிலில் உலர வை; எதிரியைக் கீழே வீழ்த்தியடி; மீனைக் கரைக்குக் கொணர்; பறவையைச் சுட்டு நிலத்தில் வீழ்த்து; (தொ.) at grass, வேலையின்றி; விடுமுறையாகக் கழிக்கும் நிலையில்; go to grass, மேயவிடப்பெறு; தள்ளாத குதிரை வகையில் வெளியே திரிந்து மேயும்படி விடப்பெறு; ஓய்வு பெற்றுக்கொள்; நாட்டுப்புறத்திற் சென்று நாட்கழி; தடாலென்று கீழே விழு; grass widow, கணவன் வேறிடத்தில் இருக்கப் பெற்ற மனைவி; hear the grass grow, இயல்பு கடந்த கூரறிவுள்ளவராயிரு; let grass grow under one's feet, சோம்பியிருந்து காரியம் கெடு, வேலையின்றிச் சோம்பியிரு; send person to grass, கீழே வீழ்த்து.

grass'-cutter, *n.* குதிரைக்குப் புல் தீவனம் சேகரிக்கும் பணியாள்; புல்செதுக்கி.

grass'er, *n.* அச்சகத் தற்காலிகப் பணியர், தேவைக்கு மேற்பட்ட அச்சகப் பணியாள்.

grass'-green, *a.* பசும்புல்லார்ந்த; புல்போன்று பசுமையான.

grass'-grown, *a.* புல் வளர்ந்த, புல்லால் மூடப்பட்ட.

grass'hopper, *n.* தத்துக்கிளி, வெட்டுக்கிளி.

grass'hopper-beam, *n.* மையத்திலிருந்து அகன்ற கோடியில் சுழல் அச்சுக்கொண்ட பொறியின் விட்டம்.

grass'ing, *n.* புல்லின்மீது பரப்பி நிறம் நீக்குதல்.

grass'land, *n.* மேய்ச்சல் வெளி.

grass'-moth, *n.* மென்னிற வண்ணத்துப் பூச்சிவகை.

grass'-oil, *n.* புல் எண்ணெய் வகை; எளிதில் ஆவியாகும் எண்ணெய் வகை.

grass'-plot, *n.* புல் திடல், புல் தரை.

grass'-snake, *n.* நஞ்சில்லாத பாம்பு வகை.

grass'-tree, *n.* ஆஸ்திரேலிய மரவகை; நீண்ட கம்பி போன்ற இலைக் கொத்துக்களையும் நீள் குழல் வடிவ மலர்களையும் கொண்ட செடி வகை.

grass'-wrack, *n.* கடல்நீரில் வளரும் புல் போன்ற மலர்ச் செடியினம்.

grass'y, *a.* புல் போன்ற; புல்லையொத்த; புல்படர்ந்த; புல்லால் மூடப்பட்ட.

grate[1], *n.* கிராதி; இரும்பு அடுப்புத்தட்டம், தீத்தாங்கி, தீத்தட்டு, நெருப்புவைக்கும் கணப்புத்தட்டு.

grate[2], *v.* சொரசொரப்பான மேற்பரப்பில் தேய்த்துச் சிறு பொடியாக்கு; அராவிப் பொடியாக்கு; பற்களை நறநற வென்று கடி; உராய்ந்து வெறுப்பைத்தரும் ஒலியுண்டாக்கு; எரிச்சலுண்டாக்கு; மனம் புண்படுத்து; தொல்லைப்படுத்து; கோபமூட்டு.

grat'ed, *a.* இரும்புக் கிராதியுள்ள; நெருப்புத்தாங்கும் தீத்தட்டுள்ள, கணப்புச் சட்டியில் தீத்தட்டுள்ள.

grate'ful, *a.* நன்றியுடைய; நன்றியறிதலுள்ள; ஏற்றுக் கொள்ளத்தக்க; இனிமையான.

grat'er, *n.* அரம், அராவு கருவி.

grat'icule, *n.* தொலையாடி வரை அளவுக் குறிப்பு; நில அளவையில் நேர்நிரைக் கோடுகள் காட்டும் பின்னல் வரைத்தாள்.

gratifica'tion, *n.* மனநிறைவு; மனநிறைவுணர்ச்சி, திருப்தி; மனமகிழ்ச்சி; மகிழ்ச்சிதருஞ் செய்தி; தடையிலா நுகர்வு; நுகர்வுக்குரிய செய்தி; விருப்பந்தருஞ் செய்தி; கைம்மாறு; கைக்கூலி.

grat'ify, *v.* மகிழ்வி; தாராளச்சலுகை அளி; விட்டுக்கொடுத்து ஆறுதலளி; இசைவாக நடத்தி மகிழச்செய்; உகந்தன செய்து உவப்பூட்டு; மனநிறைவடையச்செய்; விருப்பம் நிறைவேற்று; அவா நிறைவுசெய்; மன ஆறுதலடைவி; நலஞ்செய்; நன்றிக் கடப்படுத்து; கையுறை கொடு, கைக்கூலி அளி; பரிசளி; ஊதியம் வழங்கு.

gratin, (பிர.) *n.* பொரியப்பளரொட்டி, இருதிசைத்தணல் இடையே வைத்துப் பக்குவப்படுத்திய ரொட்டிப்பொதி அல்லது பாலேட்டுச் சீவல்; பொரியப்பள ரொட்டி செய்யும் சமையற் பக்குவ முறை.

grat'ing[1], *n.* கணப்புச் சட்டியில் நெருப்புத் தாங்கும் குறுக்குச் சட்டம்; தடுப்பு இரும்புக்கிராதி; ஒளிக்கோட்ட மூலம் நிறப் பட்டை தோற்றுவிக்கும்படி இணைவரை இரும்புக்கம்பி அல்லது புறவரியிட்ட நோக்காடி வகை.

grat'ing[2], *a.* உணர்ச்சியைப் புண்படுத்துகிற; சினமூட்டுகிற; தொல்லை தருகிற.

grat'is, *adv.* கைம்மாறுகருதாமல்; விலையில்லாமல்.

grat'itude, *n.* நன்றி, நன்றியறிதல்.

gratu'itous, *a.* நன்கொடையான; கைம்மாறு கருதாத; உள்நோக்கமற்ற; தூண்டுதல் காரணமற்ற; தன் விருப் பார்ந்த; தன்னியல்பாகச் செய்யப்பட்ட; தானுக வலிந்து தரப் பட்ட; புரியாத்தனமான; பொருத்தமற்ற; தெளிவற்ற; ஆதாரமற்ற; (சட்.) ஒருகட்சியினருக்கு மட்டும் நலந்தருகிற.

gratu'ity, *n.* நன்கொடை; பணிக்கொடை; ஊழியக் கைம்மாறு; விருப்புதவித்தொகை; நன்மதிப்புத்தொகை; ஓய்வுதவி; படைவீரன் பதவியிலிருந்து விலகும்போது அளிக்கப்படும் நல்லெண்ணக் கொடை.

grat'ulate, *v.* பாராட்டு; மகிழ்ச்சி தெரிவி; வரவேற்று மகிழ், நல்வரவு அளி.

gratula'tion, *n.* = congratulation.

grat'ulatory, *a.* = congratulatory.

gravam'en, *n.* குறை; குறைமுறையீடு; குற்றச்சாட்டின் சாரம்; குற்றச்சாட்டின் மோசமான பகுதி; திருக்கோயில் மாமன்றத்தின் கீழவையிலிருந்து மேலவைக்கு அனுப்பப் படும் முறையீட்டுப் பத்திரிகை இதழ்; *pl.* gravam'ina.

grave[1], *n.* கல்லறை, புதைகுழி; கல்லறைத் திடல், பிணக்குழி மீதிடப்படும் மண்மேடு; கல்லறை நினைவுச்சின்னம்; சாவு; மாண்டார் உலகு, கீழுலகம்; அழிவுக்களம்; முடிவிடம்; உருளைக்கிழங்கு முளைகளை இட்டு மூடுவதற்கான நெடுங்குழி; (தொ.) feel some one walking on one's grave, காரணமில்லா நடுக்கவுணர்வு பெறு; grave of reputations, பலர் புகழ்ச்செயல்கள் பழுதுபட்டுப்போகக் காரணமாயிருந்த இடம்; make one turn in his grave, மாண்டவர் உயிருட னிருந்தால் கண்டு மனமுளையுஞ் செயலைச்செய்; secret as the grave, மிக இரகசியமான; with one foot in the grave, இறக்குந் தறுவாயில், சாவெல்லையில்.

grave[2], *n.* படுத்தல் ஒலியழுத்தம்; *a.* முதன்மைவாய்ந்த, முக்கியமான; மதிப்பேறிய; மறக்கமுடியாத; ஆழ்ந்த கவனத்துக்குரிய; மறுத்தற்கியலாத; பெரும் பொறுப்பு வாய்ந்த; அச்சந்தரத்தக்க; பேரிடருக்குள்ளாக்கத்தக்க; வீறூர்ந்த; துயரார்ந்த; சோர்ந்த, கிளர்ச்சியற்ற; வேடிக்கைக்கு உரியதல்லாத, ஆர்ந்தமைந்த சிந்தனைக்குரிய; அமைந்த, தாமதமான, மெல்லமைதி வாய்ந்த; விரைவற்ற; கிளர்ச்சி ஊட்டாத; மங்கலான; கருமை தோய்ந்த; பகட்டற்ற; முனைப்பற்ற; கட்டெளிமை வாய்ந்த; ஒலியழுத்த வகையில் படுத்தலான; (தொ.) grave accent, படுத்தல் ஒலியழுத்தம்; படுத்தல் ஒலியழுத்தக் குறி.

grave[3], *v.* செதுக்கு; செதுக்கிவரை; செதுக்கி உருவாக்கு; பொறித்துவை; அழியா நிலையிற் பதியவை; மனத்தில் அழுத்திப் படியவை.

grave[4], *v.* கப்பல் அடித்தளத்தில் கழிசடை எரித்துக் கீலடித்துத் துப்புரவு செய்.

grave'-clothes, *n.* பிணத் துணி.

graved, *v.* grave[1] என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

grave'-digger, *n.* புதைகுழி தோண்டுபவர்; முட்டைகளி னின்று வெளிவரும் புழுக்களுக்கு உணவாகும்படி பூச்சிகள் முதலியவற்றைப் புதைத்துவைக்கும் வண்டு வகை.

grav'el, *n.* சரளைக்கல்; (மண்.) சரளைப்படுகை அடுக்கு; பொன் உட்கொண்ட பரற்கல்லடுக்கு; (மரு.) கல்லடைப்பு, சிறுநீர்ப்பையில் மணிக்கற் கட்டல்; *v.* சரளையிடு; பரற்கல் கொண்டு பாவு; திகைப்பூட்டு, மலைக்கச் செய்; (தொ.) pay gravel, ஆதாயந் தருமளவில் பொன்னடங்கிய சரளைக்கல்.

grav'el-blind', *a.* பாதிக்கு மேற்பட்ட அளவில் கண் பார்வை கெட்ட.

grav'el-pit, *n.* சரளைக் கற்குழி.

grav'el-voiced, *a.* கரகரப்புக் குரலுடைய.

grav'el-walk', *n.* சரளைக்கல்லிட்ட நடைபாதை.

grav'en, *v.* grave[2], என்பதன் முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.

grav'er, *n.* செதுக்குபவர், சித்திரந் தோண்டுவோர்; எஃகு உளி வகை.

Graves, *n.* பிரஞ்சு நாட்டில் செய்யப்படும் மென்மையான வெண்ணிறமுள்ள இன்தேறல் வகை.

grave'stone, *n.* புதைகுழிக் கல்; கல்லறை நினைவுச் சின்னம்.

grave'yard, *n.* புதைகுழி முற்றம், கல்லறை வெளி, இடுகாடு.

grav'id, *a.* சூல்கொண்ட, கருவுற்ற.

grav'ing-dock, *n.* கப்பல்களைத் துப்புரவாக்குதற்கும் பழுது பார்ப்பதற்கும் உள்ள நிலத்துறை இறவு.

grav'itate, *v.* நிலவுலகம் முதலிய கோளங்களால் ஈர்க்கப் பட்டுச் செல்; இயல் ஈர்ப்பாற்றலுக்கு உட்பட்டியங்கு; ஈர்க்கப் படு; நோக்கிச் சாய்வுறு; இயல்பாக ஆழ், தாழ், படிவுறு; வலங்கொண்ட கவர்ச்சிக்கு ஆட்படு; வைர அகழ்வில் பளுவான கற்கள் அடியில் தங்கும் முறையைக் கையாளு.

gravita'tion, *n.* இயலீர்ப்பாற்றலுக்கு உட்பட்டு இயங்குதல், இயலீர்ப்பாற்றல், பாரிப்பு, பொருள்களிடையே உள்ள கவர்ச்சி.

grav'ity, *n.* நிலவுலக மைய ஈர்ப்பாற்றல்; விசை ஏற்றத்தால் அளவிட்டுணரப்படும் நிலவுலக மைய ஈர்ப்பாற்றலின் வலிமைத்தரம்; பொருள்களிடையே உள்ள இயலீர்ப்பின் வலிமைத்தரம்; கனம்; வீறமைதி; வினைமை; முக்கியத்துவம்; முதன்மை; அமைந்த தன்மை, அமைதிவாய்ந்த நடை; (தொ.) center of gravity, ஏண்மையம், பொருள் சமனிலையாக நிற்பதற்குரிய ஆதார மையம்; specific gravity, ஒப்பு எடைமான வீதம், சம அளவு நீருடன் ஒப்பிட்ட எடை வீதம்.

gravure', *n.* நிழற்படச் செதுக்குப்பாளப்பாடம், நிழற்பட மறிபடிவத்தை உலோகத் தகட்டுக்கு மாற்றிச் செதுக்கி அதன் மூலம் கிடைக்கும் படம்; நிழற்படச் செதுக்குப் பாள முறை, நிழற்பட மறிபடிவத்தை உலோகத் தகட்டில் மாற்றிப் படம் உருவாக்கும் முறை.

grav'y, *n.* இறைச்சி வடிநீர், சமைக்கும் முன்னும் பின்னும் இறைச்சியிலிருந்து கசியுஞ் சாறு; வடிசாறு, கறி வகைகளில் கலக்கப்படும் வடிநீர்க்கலவை; (தொ.) gravy beef, வடிசாற்றுக்காகச் சமைக்கப்படும் மாட்டுக்கால் பகுதி.

grav'y-boat, *n.* வடிசாறு சமைப்பதற்கான படகுருவக் கலம்.

grav'y-soup, *n.* வடிநீர்ச்சாறு, இறைச்சி வடிநீர் போன்ற வடிசாறு.

gray, *n.*, *a.*, *v.*=grey.

grayl'ing, *n.* வெண்ணிறங்கலந்த சாம்பல் வண்ண மீன்வகை; பழுப்பு நிறமான சிறகடி வாய்ந்துள்ள வண்ணத்துப் பூச்சி வகை.

graze[1], *n.* மேலீடான உராய்வு; தோலுராய்வு; *a.* மெல்ல உராய்ந்துசெல், தடவலாகச் செல்; தோலுராயவிடு, மேற்பரப்பு உராய்வுறு.

graze[2], *v.* புல்மேய்; புல்மேயவிடு, புல்லுணவளி, புல்லைத் தருவித்து வழங்கு; புல்தின்; மேய்ச்சலுக்கு இட்டுச்சென்று பேணு, மேய்த்துக் காப்பாற்று.

graz'er, *n.* புல்வாய்.

gra'zier, *n.* சந்தையில் விற்பதற்காக ஆடுமாடுகளை மேய்த்து வளர்ப்பவர்.

graz'ing, *n.* மேய்ச்சல்; புல்தின்னல், மேய்தல்; மேய்த்துப் பேணல், மேய்த்துக் கால்நடை வளர்த்துப் பெருக்குதல்.

grease[1], *n.* கொழுப்பு; பசையுள்ள எண்ணெய்ப்பொருள்; மான் கொழுப்பு; வேட்டை விலங்குகளின் கொழுப்பு; இறந்த விலங்குகளின் உருக்கியெடுக்கப்பட்ட கொழுப்பு; மசகெண்ணெயாகப் பயன்படும் பொருள்; தூய்மைப்படுத்தப்படாத கம்பளியிலுள்ள எண்ணெய்ப் பசைப்பொருள்; குதிரைக் குளம்புகளிலுள்ள நோய் வகை; (தொ.) hart of grease, கொழுத்த ஆண் மான்; in grease, in pride of grease, in prime of grease, கொல்லத்தகுதியான, கொழுத்த.

grease[2], *v.* கொழுப்புப் பூசு; எண்ணெய் பூசு, எண்ணெய்க் கறையாக்கு; கொழுப்பினால் மாசுபடுத்து; மசகிடு; குதிரைக்குக் குளம்புநோய் வருவி; (தொ.) grease one's palm, கைக்கூலி கொடு; grease the wheels, காரியங்களைத் தங்குதடையின்றிச் செயற்படுத்து; பணத்தால் வேலையை எளிதாக்கு.

grease'-box, *n.* மசகிடுவதற்காகப் புகைவண்டிச் சக்கரத்தில் பொருத்தப்பட்டுள்ள பெட்டி.

grease'-heels, *n.* குதிரைக் குளம்புகளில் வரும் நோய்வகை.

grease'-paint, *n.* நடிகர்களின் முகத்தை அழகுபடுத்தப் பயன்படும் கொழுப்புக் கலந்த முகப்பூச்சு.

grease'-proof, *a.* கொழுப்பு புகமுடியாத, மசகெண்ணெய் நுழையவிடாமல் தடுக்கிற.

greas'er, *n.* மசகெண்ணெய் பூசுபவர், எரிபோர்ப்பு பணியாளர்களின் முதல்வர்.

grease'-trap, *n.* வடிகால் பசைப்பொருளைத் தடுத்துப் பிடிக்கும் அமைவு.

grease'wood, *n.* எண்ணெய்ப்பசையுள்ள அமெரிக்க புதர்ச் செடிவகை.

greas'y, *a.* கொழுப்புப்போன்ற; மிகு கொழுப்பார்ந்த; எண்ணெய்ப் பசையுடைய; வழவழப்பான; பிசுக்குள்ள; வழுக்குகிற; சேற்றுக்களியார்ந்த; நனைவுற்ற; கம்பளி வகையில் துப்புரவாக்கப்படாத; குதிரை வகையில் காலழற்சி வீக்கங் கண்டுள்ள; வெறுப்பூட்டும் மட்டுமீறிய இன்னய நடைவாய்ந்த, பசப்பு நடையுடைய; கீழ்த்தரச் சிற்றின்ப உணர்ச்சியுடைய; கீழ்த்தர உணர்ச்சி சார்ந்த; (தொ.) greasy fritillary, வண்ணத்துப் பூச்சிவகை; greasy pole, வழுக்குமரம், சறுக்குமரம், பந்தயங்களில் ஏறுவதற்கும் நடப்பதற்கும் பயன்படுத்தப்படும் எண்ணெய் பூசிய கம்பம்.

great, *n.* பெரியது; தொகுதி; முழுமை; *a.* பெரிய; பரந்தகன்ற; மொத்தையான; மிகுந்த; பெரும்படியான; வழக்கத்துக்கு மேற்பட மிகுதியான; அகல் விரிவான; எழுத்தில் தலைப்புருவான; ஆற்றலில் மிக்க; பதவியில் உயர்ந்த; தரத்தில் மேம்பட்ட; அறிவாற்றலில் தலைசிறந்த; அருந்திறல் வாய்ந்த; உயர் பண்புத் திறங்கள் அமைந்த; இயற்றிறம் சிறந்த; மேலான; உயரிய; வீறுர்ந்த; பெருந்தன்மை மிக்க; தகுதிவாய்ந்த; முக்கியமான; தலைமையான; முதன்மையான; தலைசிறந்த; வல்லமை வாய்ந்த; பெரும்புகழ்வாய்ந்த; பேர்போன; முனைத்த சிறப்புடைய; தூலுண்ட; கருவளமுடைய, பெருவளம் தருதற்குரிய; வருங்காலச் சிறப்பு வாய்ந்த; நற்கட்டமான; தனித் தேர்ச்சிமிக்க; பழகித் தேர்ந்த; நட்பு ஆர்ந்த; நெருங்கிய தோழமையுடைய; உணர்ச்சி ததும்புகிற; விருப்பார்ந்த; மதிப்பார்ந்த; போற்றுதலுக்குரிய; வழக்கமான; வாடிக்கையான; நல்ல; முழுநிறைவான; (தொ.) a great deal, மிகப்பெரிய அளவு; a great many, மிகப்பலர்; மிக்கப்பல; Great Assize, Great Day, Great Inquest, கடைத் தீர்ப்பு நாள்; Great Bible, 1539-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கவர்டேல் (Coverdale) விவிலிய நூற்பதிப்பு; Great Dane, மயிரடர்த்தியுடைய பெரிய நாய் வகை; great go, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பட்டத்திற்கான இறுதித்தேர்வு; Great God! Great Caesar! Great Scot! Great Scott!, வியப்பைத் தெரிவிக்கும் சொற்கள்; great gross, பன்னிரண்டு மடங்கு, 144 உருப்படி; great organ, பெரிய இசைப்பெட்டி வகை; great toe, பெருவிரல்; Great unwashed, பொதுமக்களைக் குறிக்கும் இழிவுப் புறக்கணிப்புச்சொல்; the great majority, மிக்கப் பெரும்பான்மைப் பகுதி; The Great Powers, வல்லரசுகள்; the great world, உயர்ந்தோர்.

great'-aunt, *n.* பாட்டனுர் அல்லது பாட்டியாரின் உடன் பிறந்தாள்.

great'-circle, *a.* நிலவுலகக் கோளப் பெருவட்டம் சார்ந்த, நிலவுலகக் கோள மையமே மையமாகக் கொண்ட நிலவுலகக் கோளத்தின் மேற்பரப்பிலுள்ள வட்டம் சார்ந்த; நிலவுலகக் கோளப் பெருவட்டம் வழிச் செல்கிற.

great'coat, *n.* புறமேற்சட்டை.

great'en, *v.* பெரிதாக்கு, மிகப் பெரிதாக்கு; பெரிதாகு; மேன்மையாகு.

great'-grand'child, *n.* பேரனின் அல்லது பேர்த்தியின் பிள்ளை, கொள்ளுப் பெயரன்; கொள்ளுப் பேர்த்தி.

great'-hearted, *a.* பரந்த மனப்பான்மையுள்ள, பெருந்தன்மையுள்ள, மேதக்க; அஞ்சாத.

great'ly, *adv.* மிகுதியாக; மிகு அளவில்; நிரம்ப; பெருந்தன்மையாக.

great-'nephew, *n.* உடன் பிறந்தாரின் பேரன்.

great'ness, *n.* பெருமை, மேன்மை.

great'-niece, *n.* உடற்பிறந்தாரின் பேர்த்தி.

Greats, *n. pl.* ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பண்டை உயர்தர இலக்கியம் அல்லது தற்கால மெய்யறிவுத் துறையில் முடிவான தேர்வுச் சிறப்பு; (தொ.) classical Greats, பண்டைய உயர்தர இலக்கியத் தேர்வுச்சிறப்பு; Modern Greats, இக்கால மெய்யறிவுத் துறைத் தேர்வுச் சிறப்பு.

greaves[1], *n. pl.* முழங்காலுக்குக் கீழுள்ள காலின் போர்க் கவசம் ; முழந்தாள் முன்புறக் காப்புத்தகடுகள்.

greaves[2], *n. pl.* தூண்டில் இரையும் நாய் உணவும் ஆகும் உருக்கப்பட்ட மெழுகின் வண்டற்பொருள்.

grebe, *n.* வாலில்லாத் தோற்றமுடைய நீர்மூழ்கு பறவை வகை ; ஒப்பனைப் பொருளாகப் பயன்படும் நீர்மூழ்கு பறவை வகையின் இறகு.

Gre'cian, *n.* கிரேக்க நாட்டினர் ; கிரேக்கமொழி இலக்கிய அறிஞர் ; கிரேக்கமொழி இலக்கிய மாணவர் ; கிறைஸ்ட்ஸ் ஹாஸ்பிட்டல் (Christ's Hospital) நிலையத்து ஒற்றுயர்படி மாணவர் ; கிரேக்க மரபில் பயின்றிடுபட்ட யூதர்; *a.* கிரேக்க நாடு அல்லது மொழி சேர்ந்த ; கிரேக்க சிற்பக்கலை சார்ந்த ; கிரேக்க முகவெட்டுடைய ; கிரேக்க மரபு பின்பற்றிய ; கிரேக்க பாணி பின்பற்றுகிற ; (தொ.) Grecian bend, கிரேக்க சிலையின் சாய்நிலையைப் பின்பற்றுவதாக மேற் கொள்ளப்பட்ட போலி நடை; Grecian gift, கேடு விளைவிக்க எண்ணி அளிக்கப்படும் நன்கொடை ; Grecian knot, தலை யின் பின்புறம் முடியப்பட்ட பெண்கள் கொண்டை ; Grecian nose, நெற்றியோடு ஒரே சமனாகத் தொடர்ந்த மூக்கு; Grecian profile, நெற்றியோடு தொடர்ந்த நேர்சமமாகப் பள்ளமில்லாமல் அமைந்த மூக்கோடு கூடிய முகத்தோற்றம்; Grecian slippers, கீழை நாட்டு மிதியடி வகைப்பெயர்.

Gre'cism, *n.*=Graecism.

Gre'cize, *v.*=Graecize.

Gre'co-Roman, *n.*=Graeco-Roman.

greed, *n.* பேரவா, பேராசை.

greed'y, *a.* பேராவலுள்ள ; தணியாப் பேராசையுடைய ; பெருந்தீனி தின்கிற, மிகுந்த பசியுடன் உண்கிற; பெரும் பொருளவாவுள்ள; கொடுங்கொள்ளையிடுகிற; ஆர்வமிகுந்த; முனைப்பான விருப்பமுள்ள.

Greek, *n.* கிரீஸ் நாட்டவர் ; கிரேக்க இனத்தவர் ; கிரேக்க குடியேற்றப் பகுதிக்குரியவர் ; கிரேக்க மரபீடுபாடுடைய யூதர் ; கிரேக்கத் திருக்கோயில் உறுப்பினர் ; கிரேக்க மொழி ; விளங்காமொழி ; விளங்காச்செய்தி ; சூழ்ச்சித் திறமையுள்ளவர், எத்தர், மோசடி செய்பவர் ; களிமகன்; கோமாளி ; *a.* கிரீஸ் நாடு சார்ந்த; கிரேக்க இனத்துக்குரிய; கிரேக்க மக்களுக்குரிய; கிரேக்க மொழியைச் சேர்ந்த; (தொ.) Greek architecture, பண்டைக்காலக் கிரீஸில் பேணி வளர்க் கப்பட்ட கட்டிடக்கலைப் பாணி; Greek Church, ரோமத் திருச் சபையிலிருந்து 9-ஆவது நூற்றாண்டில் பிரிந்து கான்ஸ் டாண்டிநோபிள் நகரிலுள்ள சமயத் தலைவரைப் பின்பற்றிய திருச்சபை ; Greek Cross, எங்கும் ஒரேஅளவான குறுங் கைகளுள்ள செங்குத்துச் சிலுவை வகை ; Greek Fathers, கிரேக்க மொழியில் எழுதிய கிறித்தவத் துறவிகள் ; Greek fire, நீர் பட்டால் நெருப்பெரியும் கலவைப் பொருள், பைசாண்டைன் கிரேக்கர்கள் (Byzantine Greeks) நீண்டகாலம் ரகசியமாக வைத்திருந்ததும் போரில் பயன் படுத்தப்பட்டதுமான நெருப்பெரியும் கலவைப் பொருள் ; Greek fret, நேர்வரை செங்கோடுகளால் இணைக்கப்பட்ட விளிம்பு ஒப்பனை வேலை; greek gift, கேடு விளைவிக்க எண்ணி அளிக்கப்படும் நன்கொடை ; Greek to me, என்னால் புரிந்து கொள்ள இயலாத; விளங்காத ; when Greek meets Greek, எதிரிகள் இரு திசைகளிலும் சமநிலையாயிருக்கும் நிலையில் ; the Greek calends, ஒருபொழுதும் இல்லாமல்.

Greek'dom, *n.* கிரேக்க உலகம் ; கிரேக்க சமுதாயம்.

Greek'less, *a.* கிரேக்கமொழி அறியாத.

Greek'ling, *n.* வெறுக்கத்தக்க அல்லது இழிவான கிரேக்கர்.

green, *n.* பசுமை நிறம்; ஒளிக்கதிர் நிறப்பாட்டையில் நீலத் துக்கும் மஞ்சளுக்கும் இடைப்பட்ட வண்ணம் ; பச்சை நிறப் பொருள் ; பொருளின் பசும்பகுதி ; பசும்புல் தரை; பச்சைப்புல்வெளி ; பசும்புல் திட்டு ; குழிப்பந்தாட்டத்தில் குழிகளைச் சுற்றிச் செம்மைப்படுத்தப்பட்ட நிலம் ; *a.* பச்சை நிறமான ; இலைதழை வண்ணமான ; பசுந்தழை போர்த்த ; இலையடர்ந்த ; செழிப்பான ; இலையுதிர்வற்ற ; பனிபடாத ; வாடாத ; உலராத ; பழுக்காத ; முற்றாத ; முதிராத ; இளமையான ; காய்கறி சார்ந்த; வளர்கிற ; உரமான, வலி மையுள்ள ; ஊக்கமுடைய ; திடமான, நன்னிலையிலுள்ள, உடல்நலங் கெடாத ; புதிய ; தேர்ச்சியில்லாத ; அனுபவம் அற்ற ; எளிதில் ஏமாற்றப்படுகிற ; எளிதில் மலைப்புக்கு ஆளாக்கப்படுகிற ; சமைக்கப்படாத ; பக்குவமடையாத ; பதனுறாத ; தாளிக்கப்பெறாத ; முற்றுப்பெறாத ; உருவா காத ; விளறிய, நோய்ப்பட்ட நிறமான ; பொறாமையுள்ள ; *v.* பசுமை நிறமாகு; இலைதழை பெருக்கமுறப்பெறு; பசுமை நிறமாக்கு ; பசுமை போர்த்து ; பச்சைவண்ணம் தோய்வி ; பச்சை நிறக் கரையூட்டு ; (தொ.) green cheese, பக்குவம் அடையாத பாலேடு; green eye, பொறாமை; a green Christ. mas, a green Yule, பனியற்ற கிறிஸ்துமஸ் பருவம், மட் டான குளிருடைய கிறிஸ்துமஸ் பண்டிகைக்காலம்; green fat, சுவையுணர்வாளர் உயர்வாக மதிக்கும் ஆமைக்கொழுப்பு ; green light, தொடர்ந்து திட்டத்தில் மேற்செல்ல இசைவு ; green jaundice, காமாலை நோய் வகை; green manure, பசுந்தாள் உரம் ; green tea, நீராவியால் உலர்த்தப்பட்ட தேயிலை வகை.

green'back, *n.* பச்சைநிற அமெரிக்க அச்சுத் தாள் நாணயம்.

green'-bag, *n.* வழக்குரைஞரின் பை.

green'-blind, *a.* பச்சைநிறக் கதிர்கள் கட்புலனாகாத.

green'-book, *n.* பணித்துறை வெளியீடு.

green'-bottle, *n.* பொன்வண்டு, பசுமஞ்சள்நிற ஈ வகை.

green'-cloth, *n.* சூதாட்ட மேசை ; அரசுமாளிகையின் பண்டகசாலைத் துறையரங்கம்.

green'-crop, *n.* பச்சை வண்ணநிலையிலேயே உணவாகப் பயன்படும் விளைவு வகை.

green'-drake', *n.* மே மாதத்தில் தோன்றும் சில்வாழ்நாள் உடைய வண்டு வகை.

green'-earth, *n.* நிறப்பொருளாகப் பயன்படும் பச்சை வண்ணக் கனிப்பொருள் வகை.

green'ery, *n.* பசுமையான செடிகொடித் தொகுதி; பசுந்தழை.

green'ery-yall'ery, *a.* பச்சை மஞ்சள் நிறங்களில் மாத்திரம் ஈடுபடுகிற ; அழகுணர்ச்சி கெட்ட.

green'-eyed, *a.* பொறாமையுள்ள, அழுக்காறுள்ள ; (தொ.) green-eyed monster, பொறாமை, அழுக்காறு.

green'finch, green linnet, *n.* பசுமைநிறமும் பொன்நிறமும் கலந்த இறக்கைகளையுடைய சிறு பறவை வகை.

green'-fly, *n.* செடிப்பேன் வகை.

green'gage, *n.* உருண்டையான பச்சை நிறமுடைய இன்சுவைப் பழவகை.

green'-goose', *n.* வாத்துக்குஞ்சு ; உள்ளீடின்றிச் சமைத் துண்ணப்படுவதற்குரிய நாலு மாதமாகாத இளவாத்து ; பேதை, மட்டி.

green'grocer, *n.* பாசவர், பச்சைக் காய்கறி விற்பனையாளர்.

green'-hand, *n.* தாழ்படியிலுள்ள கப்பலோட்டி.

green'heart, *n.* மிக உறுதிவாய்ந்த பலகைதரும் தென் அமெரிக்க மரவகை.

green'-horn, *n.* அனுபவமற்ற இளைஞன்; அறிவிலி, பேதை

green'house, *n.* அருஞ் செடிகொடிகளை வளர்க்கப் பயன் படுத்தப்படும் கண்ணாடிக் கூடு.

green'ing, *n.* பச்சையாகுதல் அல்லது பச்சையாக்குதல்; பழுத்த நிலையிலும் பச்சை நிறமாயுள்ள ஆப்பிள் பழ வகை.

green'-keeper, *n.* குழிப்பந்தாட்டப் பசும்புல் தரையைக் கண்காணிப்பவர்.

green'let, *n.* அமெரிக்க பறவை வகை.

green'ly, *adv.* முதிராமல் ; திறமையின்றி.

green'-man, *n.* குழிப்பந்தாட்ட ஆட்டக்களக் காவலர்.

green-peak, Green Woodpecker, *n.* பச்சை நிறமுள்ள மரங்கொத்திப் பறவை வகை.

green'room, *n.* நாடகக் கொட்டகையில் நடிகர்களின் ஒய்வு அறை.

Greens, *n. pl.* கிழக்கு ரோமாபுரியில் பேரரசர் ஜஸ்டினியன் (Justinian) காலத்தில் கான்ஸ்டாண்டிநோப்பிள் (Constantinople) நகரிலிருந்த கட்சியின் பெயர்.

greens, *n. pl.* கீரை; கீரைவகைகள்.

green'sand, *n.* பச்சை நிறங்கொடுக்கும் கனிப்பொருள் நிறைந்த மணற்கல்; பச்சைநிற மணற்கல்லடுக்குப் படுகை.

green'shank, *n.* தெளிவான கீச்சொலியிடுகிற பசுமையான கால்கள் வாய்ந்த ஆற்றுேரப் பறவை வகை.

green'sickness, *n.* இளம் பெண்களின் சோகை நோய், பசலை நோய்.

green'snake, *n.* நஞ்சற்ற தென் அமெரிக்கப் பச்சைப் பாம்பு வகை.

green'stick, *n.* எலும்பு முறிவு, குழந்தைகள் வகையில் ஒருபுற எலும்பு வளைக்கும் மறுபுற எலும்பு முறிவு.

green'stone, *n.* பச்சைக்கல் வகை, மரகத வகை.

green'-stuff, *n.* பசுங் காய்கறித் தொகுதி; காய்கறிப் பயிர்; கோசுக்கீரைத் தொகுதி.

green'sward, *n.* பசும்புற்றரை.

green'tail, *n.* நீர்வாழ் ஈ வகை.

green'weed, *n.* சாயமிடுவதற்குப் பயன்படும் மஞ்சள்நிற மலருடைய செடி வகை.

Greenw'ich, *n.* கெண்ட் (Kent) மாகாணத்தில் இங்கிலாந்தின் அரசாங்க வானுராய்ச்சி நிலையம் அமைந்துள்ள நகரம்; (தொ.) Greenwich Hospital, ஆங்கிலேய அரசின் கப்பற் படை அதிகாரிகளாகப் பயிலும் மாணவர்களுக்கான கல்லூரிக் கட்டிடம்; முற்கால ஏலாக் கடற்படையினர் மருத்துவ மனை; Greenwich Time, கிரீன்விச் வானுராய்ச்சி நிலைய உச்சநேர சராசரிக் காலக் கணக்கு; பிரிட்டனிலும் வேறு சில நாடுகளிலும் வழங்கும் நிலையான பொது அளவுக்கால அறுதி.

green'wood, *n.* வேனிற்காலப் பசுமை வளமிக்க காடு; இனிய காட்சிக்குரிய பசுஞ்சோலை வளம்.

green'yard, *n.* அலைந்து திரியும் கால்நடைகளை அடைக்கும் பட்டி.

greet, *v.* முகமன் கூறு, வரவேற்பு அளி; வரவேற்று வணக்கம் தெரிவி; வரவேற்புரை கூறு; வரவேற்புக்குரிய செயல் முறை ஆற்று; வரவேற்று மகிழ்ச்சி தெரிவி, வரவேற்பாரவாரம் செய்; கண்ணுறு, ஆர்வத்துடன் நோக்கு.

greet'ing, *n.* வரவேற்பு; பாராட்டுரை; வணக்கவுரை.

greff'ier, *n.* பதிவாளர், ஆயத்துறைக் கணக்கர்.

grega'rian, *a.* பொதுத்தரத்திலுள்ள.

grega'rianism, *n.* கூடிவாழும் தன்மை; இணைந்து வாழுமியல்பு; மந்தையாக வசிக்கும் தன்மை.

gregar'ious, *a.* மந்தையாக வாழ்கிற; கூடி வாழ்கிற; இணைந்து வாழ விரும்புகிற.

grege, *n.* இயற்கம்பளி நிறம், சாம்பல்நிறத்திற்கும் பழுப்பு நிறத்திற்கும் இடைப்பட்ட வண்ணம்; *a.* இயற்கம்பளிநிறம் வாய்ந்த.

Gregor'ian, *n.* முதலாம் கிரகரி (Gregory I) என்ற முற்காலப் போப்பாண்டவரால் வரையறை செய்யப்பட்டது; பதின்மூன்றும் கிரகரி (Gregory III) என்ற முற்காலப் போப்பாண்டவரால் அறுதி செய்யப்பட்டது; கிரகரி என்ற பெயருடையவரின் வழி பின்பற்றுபவர்; ஆங்கில நாட்டில் 18-ஆம் நூற்றுண்டில் நிறுவப்பட்டிருந்த கூட்டமைப்பின் உறுப்பினர்; *a.* முதலாம் கிரகரி என்ற போப்பாண்டவரால் வரையறுக்கப்பட்ட; பதின்மூன்றும் கிரகரி என்ற போப்பாண்டவரால் வரையறுக்கப்பட்ட; கிரகரி என்ற பெயருடையவரின் வழி பின்பற்றுகிற; (தொ.) Gregorian calendar, பதின்மூன்றும் கிரகரியால் திருத்தியமைக்கப்பட்ட ஆண்டுக் கணிப்பேடு; Gregorian epoch, பதின்மூன்றும் கிரகரியால் புதிய ஆண்டுக் கணிப்பேடு வரையறுக்கப்பட்ட காலமுறைத் தொடக்கம் (கி. பி. 1582);] Gregorian style, பதின்மூன்றும் கிரகரியால் திருத்தியமைக்கப்பட்ட ஆண்டுக் குறிப்பின்படி கணக்கிடப்படும் முறை; Gregorian tones, முதலாம் கிரகரியால் ரோமன் கத்தோலிக்கத் திருக்கோயில்களில் பாடுவதற்கான வரையறை செய்யப்பட்ட எட்டுப் பொதுமுறை இசைப் பாடல்கள்.

greg'ory-powd'er, gregory's mixture, *n.* சீன திபேத்திய நாட்டு மூலிகைகளின் வேர்களினின்று எடுக்கப்பட்ட பேதிப் பொருட்கலவை மருந்து.

grem'ial, *n.* கிறித்தவ சமயவட்டத் தலைவரின் மடியிற் சில நிகழ்ச்சிகளின்போது போடப்படும் மென்பட்டாடை.

grem'lin, *n.* விபத்துக்களுக்குக் காரணராகக் கருதப்பட்ட சிறு குறும்புத் தெய்வங்களின் வகை.

grenade', *n.* எறிகுண்டு; துப்பாக்கித் தெறிகுண்டு; நெருப்பணைக்கப் பயன்படும் வேதிப் பொருள்களடங்கிய கண்ணுடி எறிகலம்; வடிகால்களைச் சோதிக்க உதவும் வேதிப்பொருட்கள் கொண்ட கண்ணுடிக் கொள்கலம்; (தொ.) rifle grenade, சுழல் துப்பாக்கிக்குண்டு.

grenadier', *n.* காலாட்படை முதற் பிரிவாளர்; எறிகுண்டு வீரர்; கூடு இழைக்கும் தென் ஆப்பிரிக்க பறவை வகை.

Grenadiers, Grenadier Guards, *n. pl.* காலாட்படையில் முதற் பிரிவுப்பகுதி.

gren'adine[1], *n.* கன்றின் இறைச்சிக் கீற்று உணவுவகை; கோழி இறைச்சிக் கீற்றுக்களாலான உணவுவகை.

gren'adine[2], *n.* ஆடை செய்வதற்கான பட்டு அல்லது கம்பளித்துணி வகை.

gren'adine[3], *n.* மாதுளம்பழச்சாறு கலந்த தேம்பாகு.

Gresham's law, *n.* நாணயங்களுள் போலியான அல்லது மட்டமான நாணயம் நல்ல நாணயத்தைச் செலாவணியிலிருந்து விலக்கிவிடுமென்னும் பொருளியல் விதிச்சட்டம்.

gressor'ial, *a.* (வில.) நடக்கிற; நடப்பதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட.

grew, *v.* grow என்பதன் இறந்தகாலம்.

grey, *n.* சாம்பல்நிறம்; கதிரவனிடமிருந்து நேரடியாக வராத குளிரொளி; சாம்பல் வண்ணமூட்டும் பொருள்; சாம்பல் வண்ண ஆடை; சாம்பல்நிறக் குதிரை; *a.* சாம்பல் நிறமான; கருமைக்கும் வெண்மைக்கும் இடைப்பட்ட நிறமுடைய; அரையிருளான, ஒளி இருள் கலந்த நிலையிலுள்ள; ஒளி மயங்குகிற; மந்தாரமான; முகில் மூடாக்கான; சோர்வான; மகிழ்ச்சியற்ற; நரைத்த; நரைக்குரிய; மூப்பினுல் முடி நரைத்த; மூப்புச் சார்ந்த; பழமைப்பட்ட; பண்டைய; தொல்பழங் காலத்திய; நினைவுக்கு எட்டாத; பட்டறிவுடைய, அனுபவம் வாய்ந்த; *v.* சாம்பல் நிறமாக்கு; சாம்பல் நிறமாகு; நரை; ஒளி மங்கவை; ஒளி மயங்குவி; நிழற்படத்துறையில் கண்ணுடியின் மேற்பரப்பை மங்கலாக்கு; மறிபடிவத்தின்மீது மங்கலாக்கப்பட்ட கண்ணுடியிட்டு நிழற்படத்துக்கு அரைச் செயற்படிவத் தோற்றம் அளி; (தொ.) grey crow, பிடரிக் கவிகையுடைய காக வகை; grey eminence, தனிமுறை மறைச் செயலாளர்; பின்னணியிலிருந்து செயலாற்றும் மறைநிலைச் செயலாளர்; grey friar, தூய பிரான்சிஸ் (St. Francis) என்பவரால் 1209-இல் நிறுவப்பட்ட கிறித்தவ சமயத் துறவியர் குழுவினைச் சார்ந்தவர்; grey mare is better horse, கணவனை அடக்கி மனைவி ஆளுதல்; grey matter, விரைந்து தொழிலாற்றும் மூளைப் பகுதி; grey sister, தூய பிரான்சிஸ் என்பவரால் 1209-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கிறித்தவ சமயப்பிரிவின் கிளை சார்ந்த பெண் துறவி; the Greys, Scots Greys, 1683-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட புகழ்பெற்ற துப்பாக்கித் தாங்கிய குதிரை வீரர்களடங்கிய படைப்பகுதி.

grey'beard, *n.* முதியவர், கிழவர்; நரைத்த கிழவர்; இன் தேறல் சாடி; பாசி வகை.

grey'-coat, *n.* இங்கிலாந்தில் கம்பர்லாந்து (Cumberland) மாவட்டத்தைச் சார்ந்த குடியானவர்.

grey'-drake, *n.* ஓரேநாள் வாழும் உயிரின வகை.

grey'-goose, *n.* காட்டு வாத்துவகை; (தொ.) grey-goose quill, grey-goose shaft, grey-goose wing, அம்பு, பகழி.

grey-headed, *a.* வயது முதிர்ந்த; நீண்ட நாள் பணியாற்றிய; தொல் பழமையான; பழமைப்பட்ட; காலங்கடந்த.

grey'-hen, *n.* இறகுடைய கால்கள் கொண்ட பெட்டைக்கோழி வகை.

grey'hound, *n.* நீண்ட மெல்லிய கால்களும் கூரிய பார்வையும் விரைவோட்டமுடைய முயல் வேட்டைநாய் வகை; (தொ.) ocean greyhound, கடிதாகச் செல்லக்கூடிய கப்பல்.

grey'hound-racing, *n.* பணயம் வைத்து விளையாடுவதற்காகச் செயற்கை இயந்திர முயலை வேட்டைநாய் பிடிப்பதற்கான விளையாட்டு வகை.

grey'ish, *a.* சிறிதே சாம்பல்நிறமான.

grey'lag, *n.* காட்டுவாத்து வகை.

grey'stone, *n.* எரிமலைப் பாறைவகை.

grey'wacke, *n.* உருண்டையான கூழாங்கற்களும் மணலும் சேர்ந்து உருவான கலவைப் பாறைவகை.

grey-weth'er, *n.* மேயும் ஆட்டுத் தோற்றமளிக்கும் பாறை வகை.

grid, *n.* கம்பி அழிச்சட்டம்; சமையற் கம்பி வலைச்சட்டம்; மின் துறையில் கம்பி வலை; மின் ஆற்றல் நிலைய இணைப்பு வரைச்சட்டம்; நிலப்படக் குறுக்குக் கோட்டுச் சட்டம்; இருப்பூர்திக் கம்பி அமைவு.

grid'dle, *n.* அப்பம் சுடும் இருப்புக்கல்; சுரங்கத் துறையில் இரும்பு வலைத்தட்டி; *v.* சுரங்கத் துறையில் இரும்பு வலைத் தட்டியால் மறை.

gride, *n.* வெறுப்புண்டாக்கும் ஓசை; சுரண்டும் ஒலி; *v.* ஓசைபடச் சுரண்டு, கிறீச்சொலியிடும்படிக் கொத்து.

grid'iron, *n.* இறைச்சி மீன் முதலியன சுடுதற்கான இருப்புக் கம்பிச் சட்டம்; (கப்.) கப்பற் பட்டடை; நாடக மேடையில் திரைகளைக் கீழே விடுவதற்காக மேலே அமைக்கப்பட்டச் சட்டம்; கப்பல் கட்டுமானச் சட்டம்; மணிப்பொறியின் சரிமான ஊசற்குண்டின் இணைப்பமைவு.

grid'iron-pendulum, *n.* மணிப்பொறியில் கம்பிகள் வெவ்வேறு வகையான உலோகங்களால் செய்யப்பட்டு இணைக்கப் பட்ட சரிமான ஊசற்குண்டு.

grief, *n.* துயரம், கவலை; ஆழ்ந்த மனத்துன்பம்; கடுங்கழிவிரக்கம்; (தொ.) come to grief, இடர்ப்பாடு அடை, இடர் உறு; தோல்வியுறு, வீழ்ச்சியுறு; அழிவுறு.

griev'ance, *n.* மனக்குறை, குறை.

grieve, *v.* வருந்து, துயரப்படு; துயரமளி.

griev'ous, *a.* துன்பந்தருகிற; பொறுக்கமுடியாத; பெருங்கேடு செய்கிற; இடர்ப்பாடான; தீங்கான.

griff, griff'in [1], *n.* ஆங்கிலோ இந்திய வழக்கில் புதிதாக வந்திறங்கிய ஐரோப்பியர், அனுபவமற்றவர்; பந்தயத்தில் மாட்டப்படாத புது மட்டக் குதிரை; சிறு பெண்ணின் காவலர், துணைக் காவற்பெண்டு.

griff'in [2], **griff'on** [1], *n.* சிங்கத்தின் உடலிற் கழுகின் தலையும் இறகுகளும் கொண்ட பழங்கதைக் கற்பனை விலங்கு; (தொ.) the Griffin, லண்டன் நகரெல்லை வாயிற் கற்பனை விலங்குருச் சிலை.

griff'on [2], முரட்டு முடிகொண்ட அயல்நாட்டு வேட்டைநாய் வகை.

grig, *n.* சிறு விலாங்குமீன்; வெட்டுக்கிளி; சுவர்க்கோழி.

grill [1], *n.* இறைச்சி முதலியன சுடும் இருப்புத்தட்டம்; இருப்புத் தட்டத்திலிட்டுச் சுட்ட உணவு; *v.* வறு; சுடு, வாட்டு; சித்திரவதை செய்; கடுந்துயரில் ஆழ்த்து; கடுந்துன்பத்திற்கு ஆளாகு; காவல் துறையில் குறுக்குக் கேள்விகளுக்கு ஆட்படுத்து; சிப்பியைத் தட்டத்திலிட்டுச் சமை.

grill [2], *n.*=grille.

grillade', *n.* வறுவல், இரும்புத் தட்டத்திலிட்டு வறுக்கப் பட்டது.

grill'age, *n.* சதுப்பு நிலத்து வீடுகளுக்குக் குறுக்கு உத்திரங்களால் போடப்படும் கனத்த அடித்தளம்.

grille, *n.* பின்னல் அழித்தட்டி, வலைத்தட்டி; கன்னி மாடங்களில் பின்னலழிப் புழைக்கதவு; மாமன்றப் பொது அவைப் பின்னற் புழைவாய்க் கதவு; வரிப்பந்தாட்ட மதிற்புழைவாய்; மீன் குஞ்சுபொரிக்கும் சட்டம்.

grilled, *a.* நீண்ட சிறு சதுரப் புடைப்பாக அழுத்தப்பட்ட.

grill'room, *n.* வெளியார் கோரிக்கைக்கு இறைச்சி வறுத்துக் கொடுக்கப்படும் அருந்தகப் பகுதி.

gri'lse, *n.* கடலில் வாழ்ந்து ஆற்றுத்தலைப்பில் சினையிடும் மீன் வகையில் ஒரே ஒரு தடவை கடலுக்குச் சென்றுள்ள இள மீன் 'சால்மன்'.

grim, *a.* கொடிய, இரக்கமற்ற; கடுமையான, கண்டிப்பான; விட்டுக்கொடுக்காத, பிடிவாதமிக்க; அச்சந்தருகிற, நெருங்க முடியாத; கடுகடுப்பான; சிடுசிடுப்பான; பேய்த்தன்மை வாய்ந்த; வன்கண்மையுடைய; கிளர்ச்சியற்ற; கனிவில்லாத.

grimace', *n.* முகச்சுளிப்பு; இளிப்பு; முக நெளிப்பு; செயற்கையான தோற்றம்; முகக்கோட்டம்; அழகு காட்டுதல்; ஏளனப் பழிப்பு; போலி நடை; *v.* அழகு காட்டு; பழிப்பு காட்டு, முகத்தை நெறி.

grimal'kin, *n.* கிழப் பெண்பூனை; வெறுக்கத்தக்க பொருமைக்காரக் கிழவி.

grime, *n.* புகைபிடித்த கறை; கரிபற்றிய அழுக்கு; தூசு படிந்த மாசு; *v.* கருமையாக்கு; அழுக்காக்கு; அழுக்கடை.

Grimm's law, *n.* மூல இந்தோ-செர்மானிய வல்லெழுத்துக்கள் செர்மானிய மொழியில் அடைந்த ஒலிமாற்றம் பற்றிய ஜேகப் கிரிம் (Jacob Grimm 1785-1863) என்பவர் கண்டு வகுத்த விதிமுறை.

grin, *n.* இளிப்பு, பல்லைக்காட்டுதல், அசட்டுச்சிரிப்பு; *v.* பல் இளி, அசட்டுச்சிரிப்பு சிரி; வெறுப்புக்காரணமாகப் பல்லைக்காட்டு; இறுமாந்து பல்லை இளித்துக்காட்டு; பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொள்; (தொ.) grin and bear it, துன்பத்தை வெளிக்காட்டாது பொறுத்துக்கொள்; grin like Cheshire cat, இடைவிடாத அசட்டுச்சிரிப்பு சிரி; ஓயாது காரணமின்றி இளித்துக்கொண்டிரு.

grind, *n.* அரைப்பு; தேய்ப்பு; அரைப்பொலி, கிறீச்சொலி; கிறீச்சொலியினால் ஏற்படும் நரம்பு அதிர்ச்சி; கடு உழைப்பு; சோர்வூட்டும் இடைவிடா உழைப்பு; முசிவுணர்ச்சி; தேர்வுக்கான கடுமையான படிப்பு; உடற்பயிற்சிக்கான கடுநடை; கடுவழிக் குதிரைப்பந்தய ஓட்டம்; படகில் ஆறு கடத்தல்; *v.* அரை; நொறுக்கு; ஒன்றுடனொன்று தேய்; அரைத்து மாவாக்கு; இயந்திரத்திலிட்டு அரை; அரைபடு; பொடிபடு; தேய்த்துப் பொடிசெய்; அராவிச் சொரசொரப்பாக்கு; அராவித்தீட்டு; பட்டையிடு; பற்களால் அரை; மென்று பொடிசெய்; தேய்த்து வழவழப்பாக்கு; உராய்வுமூலம் கூர்மைப்படுத்து, சாணையிட்டுத் தீட்டு; திருகு இசைக்கருவியின் திருகை இயக்கு; திருகிசைக் கருவி இயக்கு; கடுமையாக உழை; கொடுமைப்படுத்து, அடக்குமுறை செய்; தொல்லைப் படுத்து; மிகுவரியால் கடுந்துயர்ப் படுத்து; (தொ.) grind lenses, அரைத்துக் கண்ணாடிச் சில்லு உருவாக்கு; have an axe to grind, செயல் வகையில் தனக்கெனத் தனித் தன்னல நோக்கம் கொண்டிரு; hold one's nose to the grind stone, keep one's nose to the grind stone, இடைவிடாது வேலைவாங்கு, கடுமையாக அயரவிடாது வேலைவாங்கு.

grind'er, *n.* அரைப்பவர்; தீட்டுபவர்; இயந்திரம், அரைக்கும் கருவி; இயந்திரத்தின் மேற்பகுதி, திரிகைக் கல்; கடைவாய்ப் பல், உணவை அரைக்கும் பல்; தேர்வுக்காக மாணவர்களைப் பயிற்றுவிப்பவர்; கடுமையாக உழைக்கும் மாணவர்.

grind'ery, *n.* கத்தி முதலியவற்றைச் சாணைபிடிக்கும் இடம்; மிதியடி செய்பவர்களின் துணைப்பொருட்கள்.

grind'ing, *n.* மாவரைத்தல்; மாவரைக்கும் ஓசை, உராய்வொலி; ஊழிய வேலை; கடின வேலை; சிறப்புத் தேர்வுக்காக கடுமையாகப் படித்தல்; *a.* கொடுமைப்படுத்துகிற.

grind'stone, *n.* இயந்திரம், மாவரைக்கும் இயந்திரம்; சாணை தீட்டும் கருவி.

grin'go, *n.* அயலார், அயல்நாட்டவர்; *pl.* grin'gos.

grip[1], *n.* பிடி, இறுக்கப்பிடிப்பு; கைப்பிடிப்புப்பாணி; அடையாள வகையான பிடிப்புமுறை; பற்று கருவி; இயந்திரத்தின் பிடிக்கும் பகுதி; கைப்பிடி; பிடிப்பாற்றல்; பிடிப்பாற்றல் தடை; பிடிப்பாற்றல் வலு; துயரின் பிடி, நெருக்கடி; அடக்கியாளும் ஆற்றல்; ஆட்சித்திறம்; கட்டுப்பாடு; புரிந்துகொள்ளும் ஆற்றல்; கவனத்தைக் கவரும் சக்தி; உணர்ச்சியை அடக்கும் திறல்; சளிக் காய்ச்சல்; *v.* பிடி; இறுகப்பற்று; பிடிப்பு விடாதிரு; கவனத்தைக் கவர்; மனத்தை ஈர்த்துப்பிடி; உணர்ச்சிகளை அடக்கு; (தொ.) at grips, நெருங்கி மோதும் நிலையில், சச்சரவு நிலையில்; come to grips, நெருங்கி மோது, சச்சரவில் ஈடுபடு.

grip[2], *n.* சிறு பள்ளம், குழி; வடிகால்.

gripe, *n.* இறுகுபிடி; கையால் பற்றுகை; வன்முறைக்காவல் வைப்பு; பிடிப்பாற்றல், கட்டுப்பாடு; கைப்பிடி; *v.* பற்று, இறுகப் பிடி; கொடுமைப்படுத்து; அல்லற்படுத்து; நோவூட்டு; வயிற்று வேதனை உண்டுபண்ணு; படகைக் கயிற்றால் பிணித்து அசையாமல் கட்டு; கப்பல் வகையில் காற்றின் உந்தலுக்கு ஆளாகு.

gripes, *n.pl.* கடு வயிற்றுவலி, குடல் நோய்; நோவு; படகுகளைத் தளத்துடன் இறுக்கிக்கட்டும் கயிறு.

gripe'-water, *n.* குடல்வலி மருந்து.

grippe, (பிர.) *n.* பெருஞ் சளிக்காய்ச்சல்.

grip'-sack, *n.* கைப்பை.

grisaille', *n.* ஒருவண்ணத்திறமாகச் சாம்பல்நிறச் சாயல்களில் அமைவுறும் புடைப்பியல்திற ஓவிய ஒப்பனை.

gris'eous, *a.* (தாவ., வில.) நீலஞ்சார்ந்த; முத்துநிறச் சாம்பல் வண்ணமுடைய.

grisette, (பிர.) *n.* பிரான்சு நாட்டில் பணிமுறை வகுப்புச் சார்ந்த பெண்.

gris'kin, *n.* இறைச்சிக்குரிய கொழுப்பற்ற பன்றித் தசைப் பற்று இறைச்சி.

gris'ly, *a.* அச்சுறுத்துகிற; பேரச்சமூட்டுகிற.

grist[1], *n.* அரைப்பதற்கான கூலம்; சாராயம் காய்ச்சுவதற்காக ஊறவைத்து அரைத்த மாவு; (தொ.) all is grist that comes to his mill, அவன் அனைத்தையும் ஆதாயப்படுத்திக் கொள்கிறான்; brings grist to the mill, ஆதாயம் தருவதாயுள்ளது; பயன் விளைவிப்பது.

grist[2], *n.* கயிற்றின் திட்பத்திறம்; நூலிழையின் பரும அளவு.

gri'stle, *n.* குருத்தெலும்பு; (தொ.) in the gristle, முதிராத.

grit, *n.* சிறு கல்பொடி, கடு மணல்பொடி; கற்சுணை, பரல்; இயந்திரங்களின் ஓட்டத்தைத் தடைசெய்யும் மணல்துகள்; நொய் அரிசி; பாறை வகையின் சிரை; காயின் சிராம்பு; திராணி, திறல்; உளத்திட்பம், மன உறுதி; *v.* வெறுப்பைத்தரும் ஓசையோடு இயங்கு; சொரசொரப்பான அல்லது கரகரப்பான ஒலியுண்டாக்கு; நறநறவென்று பற்களைக் கடி.

grits, *n. pl.* கூலநொய், திட்டப்படாத உமிபோக்கிய கூல வகை.

griz'zle, *n.* நரை; *v.* சிணுங்கு, தேம்பியழு.

griz'zled, *a.* நரைத்த; தலை நரைத்த, நரைமயிருடைய.

grizz'ly, *n.* கொடிய வட அமெரிக்கப் பெருங்கரடி வகை; *a.* சாம்பல் நிறமான; சிறிது சாம்பல் வண்ணமான; தலை நரைத்த; (தொ.) grizzly bear, கொடிய வட அமெரிக்கப் பெருங்கரடி வகை; grizzly king, grizzly queen, மீன்தூண்டில் இரையாகப் பயன்படும் பெரிய ஈ வகை.

groan, *n.* ஏங்கொலி, வேதனைக்குரல், புலம்பல்; அழுகை, தேம்புதல், கரைவு; முனகல், நெட்டுயிர்ப்பு; கரகரப்பொலி; *v.* ஏங்கு, தேம்பு, இரங்கு, கரைவுறு; முனகு, நெட்டுயிர்ப் பெறி; அழுதரற்று, புலம்பு; பொருமு, கடுந்துயருறு; சுமை தாங்கமாட்டாமல் அவதியுறு; கொடுமை பொறுது துன்புறு; (தொ.) groan down, பேசுபவரை முனகல்களால் அடக்கு; groaning board, உணவுமேசை; groan inwardly, கடுந்துயரிலாழ்.

groat, *n.* (வர.) நான்கு பென்னி வெள்ளி நாணயம்; சில்லறைக் காசு; சிறு அளவு; (தொ.) don't care a groat, ஒரு சிறிதும் பொருட்படுத்தாதிரு.

groats, *n. pl.* உமி நீக்கப்பட்ட கூலவகை.

Grob'ian, *n.* கோமாளித்தனம் வாய்ந்த நடையுடை ஒழுங்கற்ற மனிதர்.

gro'cer, *n.* பலசரக்கு வணிகர், மளிகைக் கடைக்காரர்; (தொ.) grocer's itch, சர்க்கரையைக் கையாளுவதால் மளிகைக் கடைக்காரருக்கு ஏற்படும் கரப்பான் வகை.

gro'cery, *n.* பலசரக்குப் பொருள்களின் தொகுதி; மளிகைக் கடை.

grocete'ria, *n.* தற்பரிமாற்ற மளிகைக்கடை.

grog, *n.* நீர்த்தேறல், இனிப்பில்லா நீர்சேர் சாராய வகை; நீர்த்தேறல் அருந்தும் கூட்டுக்குழாம்; *v.* நீர்த்தேறல் அருந்து; வெறுமையாய்விட்ட மிடாவில் வெந்நீரூற்றிச் சாராயம் பெறு.

grog-blossom, *n.* மட்டிலாக் குடியினால் மூக்கில் ஏற்படும் செந்நிறக் கொப்புளம்.

grogg'iness, *n.* வெறிமயக்க நிலை.

grogg'y, *a.* குடித்த; மட்டுமீறிக் குடித்த; குடிப்பழக்கமுள்ள; குதிரை வகையில் வலிவற்ற முன்னங்கால்களுடைய; குத்துச் சண்டையில் தளர்வினால் நிலைதடுமாறுகிற; தள்ளாடு நிலையிலுள்ள.

grog'ram, *n.* பட்டும் கவரிமான் மயிரும் கம்பளியும் சேர்த்து நெய்யப்பட்டுப் பசையால் விறைப்பாக்கப்பட்ட முரட்டுத் துணி வகை.

grog'-shop, *n.* சாராயக்கடை, தேறல்விடுதி.

groin[1], *n.* அரை, இடுப்பு, வயிறு தொடை சேருமிடம்; (க-க.) இரு வளைவுமாடங்கள் சேரும் கட்டுமான இடைக் கோணம்; கட்டுமான இடைக்கோணப்பட்டி; *v.* கட்டுமான இடைக்கோணமமை; இடைக்கோணப்பட்டியுடன் கட்டு.

groin[2], *n.*, *v.* = groyne.

grol'ier, *n.* ஜீன் கிரோலியர் (Jean Grolier 1479-1565) என்ற பிரஞ்சு ஏட்டார்வலர் கண்டு பின்பற்றிய பகட்டணியுடைய புத்தகக் கட்டடமுறை; கிரோலியர் ஏடகத்திலுள்ள புத்தகம்; (தொ.) Grolier binding, கிரோலியர் கண்ட புத்தகக் கட்டடமுறை.

grom'et, gromm'et, *n.* = grummet.

grom'well, *n.* முன்பு மருந்தாகப் பயன்படுத்தப்பட்ட கல்லையொத்த விதைகளையுடைய செடிவகை.

groom, *n.* அரசமாளிகைப் பணியாளர்; குதிரைக்காரன், குதிரை நலம்பேணும் பணியாள்; மணமகன், மாப்பிள்ளை; *v.* குதிரையைப்பேணு; குதிரைக்குத் தீனியிட்டு வளர்; குதிரையைத் தேய்த்துவிடு.

grooms'man, *n.* மாப்பிள்ளைத் தோழன்.

groove, *n.* வரிப்பள்ளம்; சால்வரி; தவாளிப்பு, பள்ள இணைவரி; வரித்தடம், செல்தடப்பள்ளம்; தடம்பட்ட வழி, பழக்கப்பட்ட நாள்முறை நடப்பு, மாறா வழக்க நடைமுறை; *v.* வரிப்பள்ளமிடு, சால்வரி அகழ், நீண்ட பள்ளத்தடமிடு.

grope, *v.* தட்டித் தடவித் தேடு; இருட்டிலே தடவிப்பார்; கண்முடிக்கொண்டு துழாவித் தேடு.

grop'er, *n.* = grouper.

gros'beak, *n.* கொட்டைகளை உடைத்துத் தின்னவல்ல உறுதியான அலகுடைய சிறுபறவை வகை.

gro'schen, *n.* செர்மனி நாட்டின் வழக்கொழிந்த சிறு வெள்ளி நாணயம்.

gros de naples, (பிர.) *n.* கனமான பட்டுத்துணி வகை.

gross', *n.* பன்னிரண்டு உருப்படிகளடங்கிய தொகுதிகளின் பன்னிரண்டு, நூற்று நாற்பத்துநாலு ; *pl.* gross ; (தொ.) great gross, பன்னிரண்டு பன்னிரண்டின் பன்னிரு தொகுதி, ஆயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு உருப்படி.

gross², *n.* முழு மொத்தம் ; பெரும்பருமன் ; *a.* முழு மொத்தமான ; நிறை முழுமையான், கழிவு நீக்காத ; செழிப்பான, காடாக வளர்ந்துள்ள ; கொழுத்த ; பருத்த, தடித்த ; மிகுதியாக உணவூட்டப்பட்ட ; பிழம்பியலான, பருப் பொருளியல் புடைய ; அடர்த்தியான, செறிந்த ; ஒளி எளிதில் ஊடுருவாத ; தெளிவாகத் தெரியாத ; தொட்டுப் பார்க்கக்கூடிய ; புலன்களால் அறியப்படத்தக்க ; கண்ணுக்குத் தெரிகிற ; முனைப்பான ; படுமோசமான ; கீழ்த்தரமான ; வெறுக்கத்தக்க ; முரடான, நுட்பமற்ற ; உணர்ச்சி மந்தமான ; பிசுபிசுத்த ; மாசடைந்த ; மடத்தனமான ; நயமற்ற ; நயநாகரிகமற்ற ; சுவைநயமற்ற ; நடைநயமற்ற ; ஒழுக்கங்கெட்ட ; நாணமில்லாத ; திருத்தப்பெறாத ; (தொ.) gross feeder, வெறுக்கத்தக்க உணவை விரும்புபவர் ; in gross, in the gross, மொத்தமாக; பொதுவாக; நுண்விளக்கந் தவிர்த்துப் பார்க்கும் முறையில்.

grot, *n.* (செய்.) குகை, குகைபோன்ற உட்கவிவிடம்.

grotesque', *n.* விசித்திரமான கற்பனைக் கதம்பம், ஓவிய சிற்பத் துறைகளில் மனித விலங்கு செடி கொடிகளின் முரண் கலவைப் பண்பு ; கோமாளித்தனமான உருவம் ; *a.* பொருந்தாக் கற்பனைக் கூளமான ; இயற்கையிலில்லாத ; முரண் கலவையான; விசித்திரமான; கோமாளித்தனமான, நகைப்புக் கிடமான ; ஒவ்வாத.

grott'o, *n.* அழகுச் செறிவான குகை; கண்கவர் வனப்புடைய செயற்கைக் குகை; *pl.* grott'oes, grott'os; (தொ.) the Grotto, சிப்பிகள் கிடைக்கும் பருவ முடிவில் ஆகஸ்டு மாதம் 5-ஆம் தேதி லண்டன் மாநகரச் சிறுவர்கள் கொண்டாடும் கொண்டாட்டம்,

grouch, *n.* (பே-வ.) முனகுபவர் ; மனக்குறையுடையவர் ; மனக் குறையால் மூலையில் சோர்ந்திருத்தல்; *v.* முனகு, முணுமுணு.

ground¹, *n.* நிலத்தளம் ; தரை, நிலப்பரப்பின் ஒரு பகுதி ; நிலம்; நில உடைமை; மண் ; மின் துறையில் மண்தொடர்பு ; நிலை ; சூழமைவு ; செயற்களம் ; நிலைக்களம் ; அடித்தளம்; அடிப்படை; வண்டல், கசடு, அடிமண்டி; போதிய காரணம்; எண்பித்தற்கான அடிப்படை ; பரப்பு ; சுற்றெல்லை ; கலைத் துறையில் பின்னணித்தளம் ; அடிப்பூச்சு, முதற்பூச்சு வண்ணம் ; சுரங்க வேலையில் சூழ்தளப்பாறை; மரப்பந்தாட்டத்தில் மட்டையை வைக்கும் ஆட்டக் கோட்டிற்குப் பின்புறமுள்ள இடம் ; ஆட்டக் களங்களில் ஊதியம்பெற்ற நிலை ஆட்டக்காரர் ; *v.* நிலைநிறுத்து, அடித்தளத்தில் உறுதியாக நிலை நாட்டு; கொள்கையில் ஊன்றுவி; நம்பிக்கையில் உறுதிப்பட வை; ஆதாரமாகக்கொள்; மூலமாகக் கொள்; மூலக் கூறுகளில் ஊன்றிப் பயிற்றுவி ; பூவேலைக்கியைப் பின்னணியை உகந்ததாக்கு ; ஓவியப் பின்னணியாகச் சுவரில் நீறு பூசு ; செதுக்கு வேலைக்காகப் பரப்பில் பூச்சுமானமிடு ; மின்னாற்றலுக்கு நிலத் தொடர்பு உண்டுபண்ணு ; நிலத்தில் இறங்கு; விமானத்திலிருந்து இறங்கு; கப்பலிலிருந்து இறங்கு ; தரை தொடு, கரைமீது தட்டிப் பதிந்து கொள்ளவை ; பறப்பதிலிருந்து விமானியைத் தடு ; பறக்காமல் விமானத்தைத் தடுத்து நிறுத்து ; நிலத்தில் வை ; நிலத்தின்மீது அமர், ஓய்வு கொள்ளு ; விமானத் துறையின் நிலக்கிளைப் பணிக் குழுவுடன் இணைவி ; (தொ.) above ground, உயிரோடு வாழ்ந்திருக்கிற ; break ground, தொடங்கு; முயற்சியில் முதன்முதலாக ஈடுபடு; classic ground, வரலாற்றுச் சிறப்புடைய இடம் ; cut the ground from under one's feet, திட்டங்களையும் வாதங்களையும் முன்னறிந்து தடுத்துப் பயனற்றதாகச் செய்; fall to the ground, be dashed to the ground, நம்பிக்கை வகையில் இழக்கப்பெறு ; திட்டவகையில் கைவிடப்பெறு ; திட்டத்தில் தோல்வியுறு ; forbidden ground, விலக்க வேண்டிய செய்தி, நீக்க வேண்டிய செயல் ; gain ground, முன்னேறு ; விஞ்சி மேம்படு ; get in on the ground floor, வணிக நிலையம் முதலியவற்றில் நிறுவுவோருடன் சம உரிமைகளுடன் இடம்பெறு ; ground landlord, கீழ்வாரத்தார், கட்டிடத்திற்காகக் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தின் உரிமையாளர் ; ground sea, காரணம் தெரியா நிலையிலே கொந்தளிக்கும் கடல் ; ground speed, வானூர்தியின் நிலத்தொடர்பான விரைவு வேகம் ; ground torpedo, கடலடியுடன் இணைத்து வைக்கப்பட்ட நீர்மூழ்கி வெடிகுண்டு; lose ground, give ground, பின்வாங்கிச் செல்; குறைபடு, தளர் ; on the ground of, என்னுங் காரணத்தைக் கொண்டு ; காரணங்காட்டி ; சாக்குப்போக்குக் காட்டி ; shift one's ground, வாதப்போக்கு மாற்று ; நோக்கமாற்றிக் கொள் ; stand one's ground, வாதத்தில் உறுதியாயிரு ; நோக்கம் வலியுறுத்து ; take ground, (கப்.) தரை தட்டு.

ground², *v.* **grind** என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்

ground³, *a.* அரைக்கப்பட்ட; (தொ.) ground glass, நன்றாக அரைத்து மங்கலாக்கப்பட்ட கண்ணாடி, தேய்த்த பளிங்குக் கல்.

ground'age, *n.* கப்பல் துறைமுக நுழைவுக் கட்டணம் ; கரையோரக் கப்பல் கட்டணம்.

ground'-ang'ling, *n.* மிதவையின்றி மீன் பிடித்தல், தூண்டிலுக்கருகில் பளுவை வைத்து நீரடியில் மீன்பிடித்தல்.

ground'-ann'ual, *n.* (சட்.) நிலத்திற்கான ஆண்டுக் கட்டணம்.

ground'-ash, *n.* மரவகையின் இளங்கன்று ; மரவகை இளங் கன்றினால் செய்யப்பட்ட கைக்கோல்.

ground'-bait, *n.* அடித்தளத் தூண்டிலிரை, நீரின் அடித்தளத் திற்குப் போகும்படிப் போடப்படும் தூண்டிலிரை ; *v.* அடித் தளத் தூண்டிலிரையிட்டு மீன்பிடி, அடித்தளத் தூண்டிலிரை பொருத்து.

ground'-bass, *n.* முற்பகுதி பன்முறை இரட்டிவரும் மட்டக் குரலிசைக்குரிய குறுகிய இசைப்பகுதி.

ground'-box, *n.* தோட்டப்பண்ணை ஓரங்களில் அணைத்து வைக்கப்படும் பெட்டி.

ground'-colour, *n.* உடல் நிறம், வண்ணத்தின் அடிப்படை மூல முதற்பூச்சு.

ground'-control, *n.* விமானத்துறையின் நில அறிவிப்பாட்சி, விமானம் இறங்கும் வகையில் வானலைவாங்கித் தகவலின் துணையால் நிலப்பரப்பு அலுவலகம் செலுத்தும் அறிவிப் பாட்சி.

ground'-cuckoo, *n.* நிலக்குயில் வகை.

ground'-dove, *n.* தரைப் பழக்கவழக்கமுள்ள அமெரிக்க சிறு புறு வகை.

ground'ed, *a.* உறுதியாக நிலைநாட்டப்பட்ட ; நன்கு நிலை நாட்டப்பட்ட.

grounded'ly, *adv.* போதிய காரணங்களோடு ; போதிய ஆதாரத்தின் மீது.

ground'er, *n.* நிலத்தோடு தாழ்ந்து செல்லும் பந்து.

ground'-feeder, *n.* நீரின் அடித்தளத்தில் உணவுண்ணும் மீன் வகை.

ground'-fish, *n.* நீரடியில் வாழும் மீன்.

ground'-fishing, *n.* நீரடித் தூண்டிலிரையால் மீன்பிடித்தல்.

ground'-floor, *n.* கட்டிட அடித்தளம், வெளி நிலத்தள மட்டத்திலுள்ள வீட்டுத்தளம்.

ground'-game, *n.* வேட்டையாடற்குரிய விலங்கு வகை.

ground'gudgeon, *n.* நன்னீரில் வாழும் சிறிய உணவுமீன் வகை.

ground'hog, *n.* வளைதோண்டி வாழும் கொறிவிலங்கு வகை.

ground'-ice, *n.* நீரின் அடித்தளத்தில் உருவாகும் உறைபனி.

ground'ing, *n.* அடிப்படை; பொருள்பற்றிய ஆழ்ந்த பொது அறிவு; பூ வேலையின் பின்னணி வண்ணம்; நிலத்தைப் பண்படுத்திச் சுத்தம் செய்யும் முறை; நிலத்தளத்தைச் சீர் செய்யும் செயல்; நிலந்தட்ட வைத்தல்; நிலந்தட்டுதல்.

ground'-ivy, *n.* செங்நீல மலரும் குண்டிக்காய் வடிவ இலைகளும் கொண்ட பிரித்தானிய நிலம் படர் கொடிவகை.

ground'less, *a.* ஆதாரமற்ற; காரணமில்லாத; அடிப்படையற்ற.

ground'ling, *n.* நீரின் அடியில் வாழும் மீன்வகை; நாடகக் கொட்டகையில் கடைசி வகுப்புப் பார்வையாளர், பொது வகுப்பினரில் ஒருவர்; சுவை உயர்வற்றவர்; கொடி வகை; குறும் புதர்ச் செடிவகை.

ground'man, *n.* மரப்பந்தாட்ட ஆட்டவரம்பு நிலப் பாது காப்பாளர்; வானூர்தி நிலையத் தொழில் நுட்ப வேலைக்காரர்.

ground'mass, *n.* எரிமலைப் பாறையில் பெரும்படி மணித் துகள் பொதிந்த சிறுபொடித் திரட் பிழம்பு.

ground'-moraine, *n.* நகர்ந்து செல்லும் பனிப்பாறையின் அடிப்புறத்திலிழுத்துச் செல்லப்படும் சேறு கல் மணல் கூளம்.

ground'-note, *n.* மட்டக்குரல் அடிப்படையான தாய்ச்சுரம்.

ground'-nut, *n.* மணிலாக்கொட்டை, வேர்க்கடலை, நிலக் கடலை.

ground'-off'icer, *n.* பண்ணைநில மனையிட மேலாளர்.

ground'-pine, *n.* குங்கிலியம் போன்ற மணமுள்ள மூலிகை வகை.

ground'-plan, *n.* கட்டிடத்தின் நிலத்தள மாதிரிப்படம்; பொதுமாதிரித் திட்டம்.

ground'-plot, *n.* கட்டிடத்துக்குரிய மனையிடம், கட்டிடம் எடுக்கப்பட்டிருக்கும் எல்லையுட்பட்ட மனைநிலம்.

ground'-rent, *n.* கீழ்வாரம், நில உரிமையாளருக்கு அளிக்கப் படும் மனைநில வரி.

grounds, *n. pl.* மதிலகச் சுற்றுநிலம், கட்டிடத்தைச் சுற்றி விடப்பட்ட நிலப்பரப்பு.

ground'sel, **ground'sell**, **ground'sill**, *n.* கட்டுமானத் தின் கீழ்ப்பகுதியிலுள்ள உத்திரம் அல்லது குறுக்கு விட்டம்.

ground'sheet, *n.* நீர்புகா விரிப்பு வகை.

ground'sloth, *n.* மரபற்றுப்போன பெரிய பல்லற்ற பாலுண்ணி விலங்குவகை.

grounds'man, *n.* = groundman.

ground'-staff, *n.* நிலத்திலிருந்து வேலைசெய்யும் வானூர்திப் பொறி வேலைக்காரர், வானூர்திப்பொறி கம்மியர்; (மட்டைப் பந்தாட்டம்) ஊதியம் பெறும் ஆட்டக்காரர்கள் தொகுதி.

ground'-swell, *n.* தொலைப்புயல் முற்பட்ட புயல் நில அதிர்ச் சிகள் காரணமாகத் தோன்றும் ஆழ்ந்தகன்ற பேரலை உயர்வு தாழ்வு.

ground'-tack'le, *n.* நங்கூரமிட்ட கப்பலைப் பிணித்து நிறுத்தும் கருவி.

ground'work, *n.* அடிப்படை; அடித்தளம்; கடைகால்; இன்றியமையாப்பகுதி; முதற்கொள்கை.

ground'-zero, *n.* வானிலிருந்து அணுகுண்டு நிலத்தில் விழு வதற்குரிய நேரிடம்.

group, *n.* கூட்டம்; தொகுதி; பிரிவு; வகுப்பு; ஒருங் கிணைந்து ஒருருவாயமையும் குழு; *v.* கூட்டமாகக் கூட்டு, தொகுதியில் சேர்; இனமாக இணை; இனமாகப் பிரி; தரப்படி பிரி; இசைவிணக்கமுடைய முழுமையாக்கு; இணைகுழுவில் இடம்பெறு, இனமாக இணைவுறு; இனமாகப் பிரிவுறு; தரப்படி பிரிவுறு.

group'-captain, *n.* விமானப்படைத் தொகுதித் தலைவர், விமானப்படைத் தளபதி.

group'er, *n.* ஆஸ்திரேலிய (Australia) மேலை இந்தியத் தீவுகளிற் (West Indies) காணப்படும் மீன்வகை.

group'ing, *n.* கலைத்துறையில் தொகுதியாகப் பிரித்தல்.

group'ist, *n.* ஒரு கட்சி அல்லது தொகுதிச் சார்பாளர்.

grouse[1], *n.* சதுப்புநிலக் கோழி; (தொ.) black grouse, சதுப்பு நிலக் கோழிவகையின் சேவல்; great grouse, wood grouse, ஸ்காத்லாந்திலுள்ள பெரிய சதுப்புநிலக் கோழி வகை; white grouse, கோடைக் காலத்தில் பழுப்புநிற இறகுத் தொகுதிகளையும் குளிர் காலத்தில் வெண்மையான இறகுத் தொகுதிகளையும் கொண்ட காட்டுக்கோழி வகை.

grouse[2], *n.* மனக்குறை; *v.* குறைபட்டுக் கொள், முணு முணுத்துக் கொள்.

grout[1], *n.* அரைசாந்து, கட்டிட இடைவெளிகளை நிரப்புதற் கான நீராளமான நீறு; *v.* அரைசாந்து பூசி இடைவெளிகளை நிரப்பு.

grout[2], *v.* குத்திக் கிளறு.

grove, *n.* சோலை; சாலை; அறநலக் கழக மனையிடம்.

grov'el, *v.* ஊர்ந்து செல், நகர்ந்து செல்; மானங்கெட்டு நட; அடிமையாய் இயங்கு; அஞ்சி அஞ்சி நட.

grov'elling, *a.* நிலத்தில் ஊர்கிற; தலை குனிந்துள்ள; கீழான, அடிமைத்தனமான; அஞ்சி அஞ்சி நடக்கிற.

grow, *v.* வளர், வளர்ச்சியுறு; வளரச் செய்; பேணி வளர்; நிலைபெற்று வளர்ச்சியடை; வளர்ச்சியால் மூடு, கவிவுறச் செய்; பயிரிடு; விளைவி; விளை, உண்டாகு; நீளு, பாவு; பெருகு; இயல்பாகப் பெருக்கமுறு; பெரிதாகு; முதிர்வுறு; உயரமாகு; உயர்வுறு; ஆற்றல் மேம்பாடுறு; தர உயர்வுறு; விரைவு மிகுதியுறு; மிகுதியாகு; படிப்படியாக முன்னேறு; மலிவாகு, பொது நிகழ்வாகக் காணப்பெறு; எழு; முளை; முளைவிடு; காணப்பெறு; ஆகிச்சமைவுறு; மாறுபட்டு முன்னேற்றமடை; மாறி அமைவுறு; உருவாகு; உளத்தில் இடம்பெறு; உளத்தில் இடம்பெற்று வளர்; உளத்தில் எழுந்து தோன்று; (தொ.) grow downwards, தேய்ந்துபோ; குறைந்துபோ; சிறிதுசிறிதாகக் குறைபடு; grow into one, grow together, ஒன்று சேர்; இணை; grow on, grow upon, மிகுந்த பிடிப்பு அடை; மேம்பட்ட மதிப்புப் பெறு; grow on one, மிகுதியாகச் செல்வாக்கடை; மிகுதியும் விரும்பிப் பாராட்டப்படு; grow out of, இடங்கொண்டு தோன்று, மூலப்பொருளாகக்கொண்டு விளை; வளர்ச்சியில் எல்லை கடந்துசெல்; அளவிற்குமேல் மிகப் பெரிதாகு; grow up, முதிர்வு நோக்கி முன்னேறு; பக்குவநிலை நாடி முன்னேறிச் செல்.

grow'er, *n.* வளரும் செடி; செடி வளர்ப்பவர்; பயிர் வளர்ப் பவர்; உழவர்.

grow'ing, *a.* வளர்கிற; மிகுகிற; (தொ.) growing pains, இளம்பிள்ளை நரம்பு நோவு.

grow'ingly, *adv.* வரவர மிகுதியாக.

gow'ing-point, *n.* செடிகளின் வளர்நுனி; தண்டுகளின் நுனியிலுள்ள ஆக்குத் தசைப்பகுதி.

growl, *n.* உறுமுதல்; முறுமுறுப்பு, கோபத்தோடு முறு முறுத்தல்; குறை முறையீட்டுக்குரல்; *v.* உறுமு; சீறிப் பேசு; குறையீடு செய்; (தொ.) growl out, சீறி உரை.

growl'er, *n.* உறுமுபவர்; முறுமுறுப்பவர்; முனகுபவர்; முணுமுணுக்கும் அகன்ற வாயுள்ள வட அமெரிக்க ஆற்று மீன் வகை; கடலில் மிதக்கும் சிறு பனிக்கட்டி.

growl'ery, *n.* முனங்குதல்; உறுமுதல்; முறுமுறுத்தல்; முறுமுறுப்பதற்கான இடம்; தனிப்பட்ட இடம்.

grown, *v.* **grow** என்பதன் முடிவெச்சம்.

grown-up, *n.* வளர்ந்தவர்; வயது வந்தவர்; *a.* வளர்ந்த, வயது வந்த.

growth, *n.* வளர்த்தி; வளர்ச்சி; முன்னேற்றம்; மிகுதி; பயிர் விளைச்சல்; விளைபொருள்; நோயினால் உடலில் ஏற்படும் சதை வளர்ச்சி; வளர்ந்தது; வளர்வது; (தொ.) full growth, நிறை வளர்ச்சி, வளர்ச்சி முடிவுற்றநிலை.

groyne, *n.* மரத்தாலான கடலரிப்புத் தடுப்பு அரண்; *v.* கடலரிப்புத் தடுப்புக்கான மர அரண் அமை.

grub, *n.* பூச்சிகளின் முட்டைப்புழு; அறிவிலா ஊழியவேலை செய்பவர்; இலக்கிய வகையில் சிறு கூலிக்கு மட்டுமிஞ்சிய உழைப்புச் செய்பவர்; ஒழுங்கற்றவர்; தூய்மையற்றவர்; குறுகிய நோக்கமும் தற்பெருமையுமுடையவர்; மட்டைப் பந்தாட்டத்தில் தரையோடு சேர்ந்தாற்போல் வீசப்படும் பந்து; உணவு; உண்டி; *v.* தோண்டு; மேலீடாகக் கிளறு; நிலத்தினின்று வேர் முதலியவற்றைப் பறித்தெறி; தோண்டியெடு; கிளறித் தேடு; ஓயாது உழை; துன்பப்பட்டு வேலை செய்; உணவளி; உணவு ஏற்பாடு செய்.

grub'-axe, *n.* தாளரி கருவி.

grubb'er, *n.* கிளறுபவர்; அகழ்ந்து பறிப்பவர்; தாளரி கருவி, களைக்கொட்டு.

grubb'y, *a.* அழுக்கான; களிம்பான; ஒழுங்கற்ற; புழு நிரம்பிய; தூய்மையற்ற.

Grub'-street, *n.* ஏழைக் கூலி எழுத்தாளர்களின் இருப்பிடம்; கூலி எழுத்தாளர் குழு.

grudge, *n.* காழ்ப்பு, பொல்லாப்பு; வன்மம், கறுவுதல், மாற்சரியம்; *v.* கொடுக்கத்தயங்கு; தர விருப்பமில்லாமலிரு; கருமித்தனம்பண்ணு; இசைய மனமொப்பாதிரு: மன வெறுப்புக் காட்டு.

gru'el, *n.* புற்கை, பாழ்ங்கூழ், நோயாளிக்கான நீராளக் கஞ்சி; பாற்கஞ்சி; (தொ.) have one's gruel, get one's gruel, தண்டிக்கப்படு; கடுமையாகத் தோற்கடிக்கப்படு; கொல்லப்படு; give one his gruel, தண்டி; தோற்கடி; கொல்லு.

grue'some, *a.* அருவருப்பான; கோரமான; அச்சமூட்டுகிற; கொடிய; வெறுப்புத்தரத்தக்க.

gruff, *a.* வெடுவெடுப்பான; சீறிவிழுகிற; கண்டிப்பான; மிகச் சுருக்கமான; முரட்டுத்தனமான; பண்பாடற்ற; கரகரத்த ஒலியுடைய.

grum'ble, *n.* முணுமுணுப்பு; குறுகுறுத்தல்; குறைபட்டுக் கொள்ளுதல்; *v.* முணுமுணு; இரை; குறைப்படு; குறையுரை.

Grumbleto'nian, *n.* (வர.) 17.ஆம் நூற்றாண்டின் இங்கிலாந்து அரசியலில் அரசவைக் கட்சிக்கு மாறான நாட்டுக் கட்சியினர்.

grume, *n.* (மரு.) கட்டிக்குருதி; பசை நீர்மம்.

grumm'et[1], *n.* கயிற்றுவட்டு வளையம்; கயிற்றுவிளிம்பு பொருத்தப்பட்ட துளை; ஆணி அடிக்குமுன் அடியில் பொருத்தும் மாப்பசை சணல் விளிம்புடைய வளைவட்டு; இரட்டுக்களின் துணை விளிம்பாகப் பொருத்தப்பட்ட உலோக வட்டு வளையம்; உலோக வட்டு வளையம், சிறு துளை.

grumm'et[2], *n.* கப்பலின் பணிப் பையன்.

grum'ous, *a.* தடித்த; உறைந்த.

grum'pish, grum'py, *a.* முரணியல்புடைய; சிடுசிடுப்புள்ள.

Grun'dyism, *n.* போலி ஆசாரம், பிறர் மெச்சுவதற்கான நன்னடத்தை.

grunt, *n.* பன்றியின் உறுமல்; உறுமல் ஒலி; மீன்வகை; *v.* உறுமு, முறுமுறுப்புக் காட்டு; உறுமுதல் வாயிலாகக் குறைபட்டுக்கொள்; சலிப்புக்காட்டி உறுமு; சீறியுரை; (தொ.) grunt out, சீறியுரை.

grun'ter, *n.* முறுமுறுப்பவர்; பன்றி; மீன் வகை.

grunt'le, *n.* உறுமொலி; விலங்கின் நீண்ட மோவாய்; *v.* உறுமு, உறுமிக்கொண்டேயிரு.

gru'yere, *n.* சுவிட்சர்லாந்தில் செய்யப்படும் இளமஞ்சள் நிறமுடைய பசும்பாலாடைக் கட்டி.

grys'bok, *n.* சிறிய சாம்பல் நிறத் தென்னுப்பிரிக்க மான் வகை; வெள்ளைத்துய் உடைய சிவப்புநிற மரக்கொட்டை வகை.

g'-suit, *n.* விசைகாப்பங்கி; பெருவிசையியக்கத்தின்போது மூளையிலிருந்து குருதியிறங்கி உணர்விழப்பு உண்டாகாமல் தடுப்பதற்காக விமானிகளணியும் விரிவாற்றல் கண்ணறைகளையுடைய இறுக்கமான அங்கி.

guacha'ro, *n.* எண்ணெய் எடுக்கப்பெறும் தென் அமெரிக்க பறவை வகை.

guai'ac, *n.* மருந்து சரக்காகப் பயன்படுத்தப்படும் மேற்கு இந்திய புதர்ச்செடி வகையின் பச்சைப் பழுப்புநிறக்கட்டை; புதர்ச்செடி வகையிலிருந்து கிடைக்கும் பிசின்; புதர்ச்செடி வகையின் பிசினிலிருந்து கிடைக்கும் மருந்து சரக்கு.

guai'acum, *n.* மேற்கிந்திய மரவகைகளின் புதர்ச்செடி இனம்; புதர்ச்செடி வகைகளின் பச்சைப் பழுப்புநிறக்கட்டை; புதர்ச்செடி வகைகளிலிருந்து கிடைக்கும் பிசின்; புதர்ச்செடி வகையின் பிசினிலிருந்து கிடைக்கும் மருந்து சரக்கு.

guan, *n.* வேட்டையாடுதற்குரிய அமெரிக்க கோழியினப் பறவைவகை.

gua'na, *n.* உடும்பு; பெரிய பல்லி வகை.

guana'co, *n.* ஒட்டை இனத்தைச் சேர்ந்த செம்பழுப்புக் கம்பிளி மயிரையுடைய தென் அமெரிக்க காட்டு விலங்கு வகை.

guanazo'lo, *n.* புற்றுநோயில் புற்றுப் பகுதிகளை ஊட்டமறுத்து ஒழிக்கும் முயற்சிக்குத் தேர்வு முறையான மருந்தாயுதவும் பல்கூட்டுச் சேர்மப்பொருள் வகை.

gua'nin, gua'nine, *n.* கடற்கோழி எச்சத்தின் கூறு ஆகிய இளமஞ்சட் பொருள்.

gua'no, *n.* உரமாகப் பயன்படுத்தப்படும் கடற்கோழியின் எச்சம்; மீனிலிருந்து செய்யப்படும் செயற்கை உரம்; *pl.* gua'nos; *v.* கடற்கோழி எச்சத்தைக் கொண்டு உரமிடு.

guarantee', *n.* உத்தரவாதம்; பொறுப்புறுதி; உறுதியுரை; ஈடு, பிணையப்பொருள்; உத்தரவாதம் கொடுப்பவர்; பிணையம் நிற்பவர்; ஈடுகட்டுபவர்; செயல் ஒப்பந்தம் செய்பவர்; உத்தரவாதி, செயற் பொறுப்பு ஏற்பவர்; உறுதியுரை கொடுக்கப் பெறுபவர்; *v.* பிணைப்படு; உத்தரவாதம் செய்; ஒப்பந்தப் பொறுப்புறுதி ஏற்றுக்கொள்; நிகழ்ந்தது அல்லது நிகழ இருப்பது பற்றிச் சான்றுறுதி கூறு; செயலுறுதி கூறு; பெற்றுத் தரும் உறுதி கூறு; காப்புறுதி செய்; (தொ.) guarantee association, guarantee company, guarantee society, காப்புறுதிக் கோட்பாட்டின் பேரில் பிணையமாக நிற்கும் கூட்டுப் பங்குக் கழகம்; guarantee fund, பொறுப்புறுதிப்பணம், உத்தரவாதப்பணம்.

guar'antor, *n.* உத்தரவாத ஒப்பந்தத்தார், பொறுப்புறுதி அளிப்பவர்.

gua'ranty, *n.* உத்தரவாத ஒப்பந்தம்; ஈடு, பிணை; உத்தரவாதம் அளிப்பவர்; உத்தரவாதத் தன்மை.

guard, *n.* காவல்; காப்பு; விழிப்புநிலை, எச்சரிக்கைநிலை; குத்துச்சண்டை வாட்போர் முதலியவற்றின் வகையில் தற்காப்புநிலை; தற்காப்பியக்கம்; காவலர்; பாதுகாப்பவர்; மெய்க்காவல் வீரர்; வாயிற்காவலர்; படைக்காவல் வீரர்; காவற்படை; பாதுகாப்புப் படை; இடர்காப்பமைவு; வாளின் கைப்பிடி; சிறு மணிப்பொறியின் சங்கிலி; கரை; ஓரக்குஞ்சம்; ஏட்டில் தாள் படம் கடிதம் முதலியன ஒட்டுவதற்கான விடுதாள் துண்டு; மரப்பந்தாட்டக்காரரது பட்டை மெத்தை; மரப் பந்தாட்டத்தில் இலக்குக் கட்டைகளைக் காப்பதற்கேற்ற மட்டைநிலை; *v.* காவல் செய்; பேணிப்பாதுகாப்புச் செய்; அரண்காப்புச் செய்; சேமக்காப்புச் செய்; வழித்துணையாகச் செல்; காப்பாற்று; விளக்கச் சொற்கள் மூலம் பொருள் மாருட்டமேற்படாமல் தடுத்துப்பேணு; (மரு.) தக்க துணையால் மருந்தின் குணம் பேணு; பேச்சைத் தடுத்தாள்; எண்ணம் உணர்ச்சி ஆகியவற்றை அடக்கியாளு; இடர்தடுத்துக் காத்துக்கொள்; தற்காப்பு நிலை மேற்கொள்; பாதுகாப்பு ஏற்பாடு செய்; காவற்படைகளை அமைத்து வலுப்படுத்து; வழித்துணை செல், வழிக்காவல் செய்; கவனி, விழிப்பாயிரு, முன்னெச்சரிக்கையாயிரு; முன்னேற்பாடு செய், முன் எச்சரிக்கை செய்; கரைகாப்பிடு, ஓரக்குஞ்சமிடு; (தொ.) off one's guard, விழிப்பின்றி, கவனமின்றி, எதிர்பாராத நிலையில்; on one's guard, விழிப்பாக, கவனமாக, எதற்கும் சித்தமாயிருக்கிற நிலையில்; run the guard, காவற்காரரால் கண்டுபிடிக்கப்படாமல் கடந்துசெல்.

guard'ant, *a.* (கட்.) பார்ப்பவரை நோக்கி முகப்புப்பக்கம் திருப்பப் பெற்றுள்ள.

guard'-boat, *n.* துறைமுகத்தில் காவல் வேலைக்கென விடப் பட்ட படகு.

guard'-book, *n.* நெடுந்துண்டுகளுள்ள வெற்றுச் சுவடிச் சட்டம்.

guard'-cell, *n.* (தாவ.) செடியினங்களின் பசும்புழை வாயருகிலுள்ள காப்புயிரணு.

guard'-chain, *n.* கைம்மணிப்பொறி முதலியவற்றைக் கட்டித் தொங்கவிடும் சங்கிலி.

guard'ed, *a.* விழிப்புடைய, எச்சரிக்கையான; விழிப்புடன் அளந்து கூறப்பட்ட; செம்மையாக்கப்பட்ட; கரை இணைக்கப் பட்ட.

guard'-house, *n.* படைவீரர்கள் தங்கியிருப்பதற்கான விடுதி; தவறிழைத்தவர்களை அடைத்து வைத்திருப்பதற்கான இடம்.

guard'ian, *n.* பாதுகாப்பாளர்; ஆதரவாளர்; (சட்.) முதுகணுவர், சிறுவர்-பித்தர் போன்றவர்களின் பொறுப்பேற்கும் பாதுகாவலர்; இரவலர்சட்டச் செயலாற்றும் குழு உறுப்பினர், பிரான்சிஸ்கன் (Franciscan) துறவிமடத்து முதல்வர்; *a.* ஆதரவாயிருக்கிற; பாதுகாக்கிற; (தொ.) guardian angel, தனி மனிதரின் காவல் தெய்வம்; ஒருவரிடம் நல நாட்டமிக்க பேராதரவாளர்.

guard'ianship, *n.* பாதுகாவலர் பதவி; சட்டப்படியான காப்புநிலை; பொறுப்பு, பாதுகாப்பு, காவல்.

guard'less, *a.* ஆதரவற்ற; காப்பற்ற; காவலற்ற.

guard'-rail, *n.* விழாதபடி தடுக்கும் கைப்பிடிக் கம்பியழி.

guard'-ring, *n.* தடை, ஒத்து, விரல்மோதிரம் நழுவாதிருக்கச் செய்யும் காப்புக் கணையாழி.

guard'room, *n.*=guard-house.

guards, *n. pl.* மன்னரின் மெய்க்காவல் படையினர்; படைப் பிரிவு வகைகள்.

guard'-ship, *n.* துறைமுகத்தைக் காப்பதுடன் மாலுமிகள் தங்கள் தங்கள் கப்பல்களில் சென்று சேருகிற வரையில் அவர்களுக்குத் தங்க இடங்கொடுக்கும் போர்க்கப்பல்.

guards'man, *n.* மன்னரின் மெய்க்காவல் படையினருள் ஒருவர்.

guard'-tent, *n.*=guard-house.

gua'va, *n.* கொய்யாமரம்; கொய்யாப்பழம்.

guayule', *n.* தொய்வகத்துக்கு மாற்றீடான பொருள்தரும் சாறுடைய மெக்சிகோ (Mexico) நாட்டுச் செடிவகை; மாற்றீட்டுத் தொய்வகம்.

gu'bernator, *n.* ஆளுநர்.

guberna'tion, *n.* கட்டுப்பாடு, ஆட்சி.

gubernator'ial, *a.* ஆளுநரைச் சார்ந்த; ஆளுநருக்குரிய; ஆட்சிக்குரிய.

gudg'eon [1], *n.* தூண்டில் இரையாகப் பயன்படுத்தப்படும் சிறு நன்னீர் மீன்வகை; ஏமாளி; *a.* அறிவில்லாத, ஏமாளியான; *v.* ஏமாற்று.

gudg'eon [2], *n.* உந்து தண்டின் இணைகோல்; இயந்திரச் சுழல் தண்டின் தலைப்பொருத்து; வண்டியிருசின் தலைத்தண்டு; மணியின் உத்திரப் பொருத்து; கதவின் திருகு குடுமி; (கப்.) பயின்கருவியின் திருகு பொருத்து; கற்பாளங்களின் இணைப்புக் கம்பி.

gudg'eon-pin, *n.* பொறிவண்டி வகையில் உந்து தண்டின் முளை.

Gue'ber, Gue'bre, *n.* பார்சி நெறியாளர், நெருப்பு வழிபாடு செய்பவர்.

guel'der-rose, *n.* பனிவெள்ளை நிறமான வட்ட மலர்க் கொத்துச் செடிவகை.

Guelf, Guelph, *n.* பேரரசருக்கெதிராகப் போப்பாண்டவரை ஆதரித்த இடைநிலைக்கால இத்தாலிய நாட்டின் கட்சி உறுப்பினர்,

guerd'on, *n.* பரிசு, பயனூதியம்; *v.* பரிசுகொடு, ஊதியப் பயனளி, உழைப்பீடு செய்.

guerill'a, *n.*=guerrilla.

Guern'sey, *n.* இங்கிலிஷ் கால்வாயிலுள்ள தீவுகளில் ஒன்று; கேன்சி தீவைச் சேர்ந்த பசுவகை; (தொ.) guernsey, guernsey coat, guernsey frock, guernsey shirt, கப்பலோட்டிகள் அணியும் இறுகலான பின்னல் மேற்சட்டை வகை.

guerrill'a, *n.* முறையற்ற போர், சிறுசிறு கும்பல்கள் தனித் தனியாகத் தொடுக்கும் போர்; முறையற்ற போரில் ஈடுபடுபவர்; *a.* போர்வகையில் முறையற்ற, முறையற்ற போர்வகை சார்ந்த.

guess, *n.* உய்த்துணர்வு, ஊகம்; குத்துமதிப்பு, பாணிப்பு; வைப்புக்கோள், தற்பொழுதைய முடிபு, மேற்கொள் முடிபு, குருட்டுப்போக்கான குறிப்பு; *v.* ஊகி, உய்த்துணர்; குத்து மதிப்பாகக் கருது; நேரடியாக அறியாமலே மதித்துணர்; இயன்முடிவாகக் கருது; குருட்டுப்போக்காகக் குறிப்பிடு; தற்பொழுதைய முடிபு மேற்கொள்; ஆராய்வின் துணையில்லாமலே கூறத்துணி.

guess'rope, *n.*=guest-rope.

guess'work, *n.* உய்த்துணர்தல், ஊகித்தல்; ஊக விளைவு.

guest, *n.* விருந்தினர்; உணவுவிடுதி முதலியவைகளில் தங்கி இருப்பவர்; விலங்கு தாவர ஒட்டுண்ணி.

guest'-chamber, *n.* விருந்தினர் அறை.

guest'-house, *n.* விருந்தினர் மாளிகை, உயர்தரத் தங்கல் விடுதி; மடத்து வரவேற்பு மனை, ஆதரவகம்.

guest'night, *n.* விருந்திரவு, கழகங்களிலும் கூட்டுப் பந்திக் குழுக்களிலும் கல்வி நிலையங்களிலும் வெளி விருந்தினரை வரவேற்று மகிழும் நாளிரவு.

guest'-room, *n.* விருந்தறை, விருந்தினர் தங்கும் பகுதி.

guest'-rope, *n.* வால் கயிறு, படகினை நிலைப்படுத்துவதற்காக இணைக்கப்படும் இரண்டாவது கயிறு; தொங்கு கயிறு, கூடவேவரும் படகுக்குப் பிடிகொடுப்பதற்காகக் கப்பலுக்கு வெளியே தொங்கவிடப்படும் கயிறு.

guest'wise, *adv.* விருந்தினர் என்னும் முறைமையில்.

guffaw', *n.* வெடிப்புச் சிரிப்பு; *v.* உரக்கச்சிரி.

gugg'le, *n., v.*=gurgle.

gui'chet, *n.* கதவிற் புழைவாயில்; மதில் இடைவழி மாடம்; கம்பியிட்ட பயணச்சீட்டுப் புழைமாடம்.

guid'ance, *n.* வழித்துணை; கற்பித்தல், அறிவுரை, போதனை; மேலாண்மையுதவி; தலைமைப் பெறுப்பு.

guide, *n.* வழிகாட்டி; வழித்துணைப்பணியாளர், ஊதியம் பெற்றுப் பிரயாணிகளுடன் செல்லுபவர்; ஸ்விட்சர்லாந்து நாட்டில் மலையேறுதலைத் தொழிலாகக் கொண்டவர்கள்; படைத்துறை வேவுப் பணியாளர்; கடற்படைக் கப்பல்கள் இயங்க மூலமாதிரியாயியங்கும் கலம்; முன்மாதிரி; தலைவர்; வாழ்க்கை வழிகாட்டி; அறிவுரையாளர்; ஆசிரியர்; பெண் சாரண இயக்கத்தினர், பெண் சாரணர்; வழிகாட்டுவது; வழிகாட்டும் தத்துவம்; வழிகாட்டும் நூல்; பயண வழி விளக்க நூல்; மூலக் கோட்பாடுகளடங்கிய சுவடி; கையேடு; இயந்திர வகையில் இயக்கும் தண்டு, இயக்கம் தூண்டும் உறுப்பு; குறித்துக்காட்டும் அடையாளம், நிலை சுட்டிக் காட்டும் குறி; *v.* வழிகாட்டு; வழிகாட்டியாகச் செயலாற்று; வழித்துணை செல்; இட்டுக்கொண்டு செல்; முன்செல்; நடத்து; செயற்படுத்து; தூண்டு; முறைப்படுத்து; வழிப்படுத்து; நெறிப்படுத்தும் கோட்பாடாயமை; கடைத்தேற்றும் இலக்காயமை; தூண்டுதற் காரணமாயியங்கு; தலைமை ஏற்று ஆட்சி நடத்து; (தொ.) guided missile, ஏவு படை, வானொலி போன்ற கருவிகளைக் கொண்டு தொலைவிலிருந்தே வேண்டிய நெறியில் செலுத்தப்படக்கூடிய படை.

guide'-book, *n.* பயணத் துணைச்சுவடி, வழிகாட்டு ஏடு.

guide'-post, *n.* கைகாட்டி மரம், வழிவிளக்கக் கம்பம்,

guid'er, *n.* வழிகாட்டுபவர், நெறிப்படுத்துகிறவர்; வழிகாட்டுவதற்கான அமைவு; பெண் சாரணப்படையின் தலைவர்.

guide'-rail, *n.* வளைவிலே வண்டிகள் தண்டவாளங்களிலிருந்து விலகாமல் செல்ல உதவும் மிகைத் தண்டவாளம்.

guide'-rope, *n.* பாரந்தூக்கியில் பொருள் இயக்க நெறிப்படுத்தும் கயிறு.

guide'way, *n.* வழித்தடம்.

guid'on, *n.* பறக்கும் முனை கூரியதாயிருக்கும் படைத்துறைத் துகிற்கொடி.

guild, *n.* கூட்டுறவுக் குழு, தொழிற் சங்கம், ஒருவர்க்கொருவர் உதவிக்கான சங்கம், பொதுநோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான கழகம்; (தொ.) Guild Socialism, தொழிற் சங்கப் பொதுவாயம், தொழில் ஒவ்வொன்றினுடைய வளங்களும் முறைகளும் ஆதாயங்களும் அதைச் சேர்ந்தவர்களடங்கிய சபையின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கவேண்டுமென்னும் தொழிற் கூட்டு முறைமை.

guil'der, *n.* பழைய ஆலந்து-செர்மன் தங்க நாணயம்; தற்கால ஆலந்து வெள்ளி நாணயம்.

Guild'-hall[1], *n.* (வர.) இடைநிலைக் காலத் தொழிற்சங்க மண்டபம்; நகர மாளிகை.

Guild'hall[2], *n.* லண்டன் மாநகராட்சி மண்டபம்.

guile, *n.* வஞ்சம், மோசம், கபடம், இரண்டகம், சூழ்ச்சித் திறம்.

guiled, *a.* வஞ்சனையுள்ள, நம்பிக்கைக்கேடு செய்கிற.

guile'ful, *a.* ஏமாற்றுகிற, கபடமுள்ள.

guile'less, *a.* கபடமற்ற, வஞ்சனையில்லாத.

guill'emot, *n.* கடற்பறவை வகை.

guilloche', *n.* பின்னற்சடை போன்ற சிற்பக்கலை ஒப்பனை; *v.* பின்னற் சடைச் சிற்ப ஒப்பனை செய்.

guill'otine, *n.* தலைவெட்டு பொறி, தலைவெட்டுவதற்கான கத்தி அலகுடைய கொலைத்தண்டனை இயந்திரம்; உண்ணுக்கு முதலியவற்றை வெட்டியெடுப்பதற்கான அறுவை மருத்துவக் கருவி; தாள் வெட்டுவதற்கான இயந்திரக் கருவி; வைக்கோல் தறிக்கும் கருவி; சட்டமன்ற நடைமுறை வகையில் விவாதத்தைச் சுருக்கும் பொருட்டுக் கையாளப்படும் கண்டிப்பான நடைமுறை; *v.* தலைவெட்டு பொறியால் தலையை வெட்டு; கண்டிப்பான நடைமுறையைப் பயன்படுத்து; விவாதத்தைச் சுருக்கு.

guilt, *n.* குற்றப்பழி, குற்றப் பொறுப்பு, குற்றத்தன்மை; சட்டத்தை மீறியுள்ள நிலை; தண்டனைக்குள்ளாகத்தக்க நிலை.

guilt'less, *a.* குற்றமற்ற, பழி பாவமற்ற; பாவம் செய்தறியாத.

guil'ty, *a.* குற்றமுடைய, குற்றவாளியான; குற்றத் தண்டனைக்குரிய; குற்றமெனத் தெரிந்திருக்கிற; குற்றம் பொருந்திய எண்ணத்தினால் தூண்டப்பட்ட; குறிப்பிட்ட குற்றம் செய்திருக்கிற; கொடிய; (தொ.) guilty conscience, குற்றமுள்ள நெஞ்சம்.

guimp, *n.*=gimp.

Guin'ea[1], *n.* ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரைப் பகுதி; (தொ.) Guinea Grains, நறுமணப் பொருளாகவும் மருந்து சரக்காகவும் பயன்படுத்தப்படும் மேற்கு ஆப்பிரிக்க செடி வகையின் விதைகள்.

guin'ea[2], *n.* செலாவணியற்றுப்போன 21 வெள்ளி மதிப்புடைய ஆங்கில நாட்டுத் தங்க நாணய வகை; கினி நாணயத்தின் மதிப்பு; *a.* ஒரு கினி விலையுள்ள.

guin'ea-corn, *n.* தானிய வகை.

guin'ea-fowl, *n.* கினியாக் கோழி, வெள்ளைப் புள்ளிகளுடன் கூடிய சாம்பல் நிறமுள்ள ஆப்பிரிக்க மாநிலப் பறவை வகை.

guin'ea-grass, *n.* கின்னிப் புல், தினை இனத்தைச் சேர்ந்த நீண்ட ஆப்பிரிக்க புல் வகை.

guin'ea-hen, *n.* கினியாக் கோழியின் பெடை.

guin'ea-pig, *n.* சீமைப் பெருச்சாளி, சிறு தென் அமெரிக்க கொறி விலங்கு வகை; மருத்துவத்துறையில் தேர்வாய்வுக்குத் தம்மை ஒப்படைப்பவர்.

Guin'ea-worm, *n.* நரம்புச் சிலந்திப்புழு.

Guinn'ess, *n.* இன்தேறல் வகை; இன்தேறல் வகை கொண்ட கண்ணாடிக்கலம்.

guipure, (பிர.) சித்திரப் பின்னல் கரை வகை; கயிறு அல்லது கம்பி ஊடே செலுத்தப்பெற்றுள்ள பட்டு-கம்பளி அல்லது பருத்தி நூலிழை வகை.

guise, *n.* உடுக்கும் பாணி, உடை; புறத்தோற்றம்; கோலம், மேற்கொண்ட தோற்றம்; புனையுரு, வேடம்; பாவனை, புனைவு.

guis'er, *n.* கிறிஸ்துமஸ் விழாவில் மாறுவேடம் பூண்டு ஊமையாட்டம் ஆடுபவர்; மாறுவேடம் புனைந்தவர்.

guitar', *n.* யாழ்வகை, ஆறு நரம்புள்ள இசைக்கருவி வகை; *v.* ஆறு நரம்புள்ள நரப்பிசைக் கருவி வகை வாசி.

gul'den, *n.* ஆலந்து ஆஸ்ட்ரியா-அங்கேரி (Austro-Hungarian) நாடுகளில் வழங்கும் வெள்ளி நாணய வகை.

gules, *n.* (கட்.) சிவப்பு நிறம்; *a.* சிவப்பு நிறமான.

gulf, *n.* (நில.) வளைகுடா; ஆழ்கடற்கயம்; ஆழ்கயம்; படுகுழி; ஆழ்கெவி; பாதாளப்பள்ளம்; நீர்ச்சுழல்; நிரம்பா நெடுநீள் பள்ளம்; பெரும் பிளவு, கடக்க முடியா இடைப்பள்ளம்; பல்கலைக்கழகச் சிறப்புத் தேர்வில் தவறிப் பொதுத் தேர்வுப்பட்டம் பெறுபவர் நிலை; *v.* வளைந்து சூழ்; கவிந்து உட்கொள்; விழுங்கு; பல்கலைக்கழகத்தில் சிறப்புப்பட்டத் தேர்வு எழுதித் தவறியபின் பொதுநிலைத் தேர்ச்சிப் பட்டம் பெறும்நிலை அளி.

Gulf'-stream, *n.* மெக்சிகோ வளைகுடாவினின்றும் (Gulf of Mexico) வெளிப்பட்டுச் செல்லும் வெப்பக் கடல்நீரோட்டம்.

gulf'weed, *n.* கிளைவிட்டு வளரும் கடற் களைப்பூண்டு வகை.

gulf'y, *a.* வளைகுடாக்கள் அல்லது நீர்ச்சுழல்கள் நிறைந்துள்ள.

gull[1], *n.* நீள் சிறகும் தோலடியும் உடைய கடற்பறவை வகை.

gull[2], *n.* ஏமாளி, பேதை; மோசடி; *v.* மயக்கி ஏய், ஏமாற்று.

gull'ery, *n.* வஞ்சனை.

gull'et, *n.* உணவுக்குழாய், இரைக்குழல்; தொண்டை, மிடறு; நீர்க்கால்; கடல் இடுக்கு; இடுமுடுக்கு, ஒடுக்கமான வழி.

gull'ey, *n.*, *v.*=gully[1].

gull'ible, *a.* எளிதில் ஏமாற்றப்படும் இயல்புள்ள.

gull'y[1], *n.* நீர் அரித்தோடிய மலை இடுக்கு; ஆழமான செயற்கை நீர்க்கால்; சாக்கடை, வடிகால்; சால்வரி; சால்வரியிட்ட இருப்புப் பாதை; மரப்பந்தாட்ட வகையில் மட்டையாளருக்குப் பின்னால் சற்றுப் பக்கவாட்டத்திலுள்ள ஆட்டக்களம்; *v.* சால்வரி இடு, அரித்தகழ்ந்து நீண்ட இடுக்கப்பள்ள வழி உண்டாக்கு.

gull'y[2], *n.* பெரிய கத்தி வகை.

gull'y-drain, *n.* வடிகால், சாக்கடைக்கால்.

gull'y-hole, *n.* தெருப்பக்கச் சாக்கடைத்தொட்டி.

gull'y-trap, *n.* சாக்கடை வளியடைப்பு அமைவு.

gulos'ity, *n.* பேருண், கழிபேர் இரை.

gulp, *n.* பேராவலோடு விழுங்குதல்; விழுங்க முயலுதல்; பெருங்கவளம்; *v.* அவசரமாக விழுங்கு; பேராவலோடு உண்; பெருமுயற்சி செய்து உட்கொள்; இடர்ப்பட்டு விழுங்கு; மூச்சுத் திணறு, தொண்டை அடைத்துக்கொள்; அடக்கு; (தொ.) gulp down, முயற்சிசெய்து அடக்கு, அடக்கிக்கொள்.

gum, *n.* மரப்பிசின், கோந்து; கண்பீளை; இனிப்புத் தின்பண்டம் செய்ய உதவும் பொருபொருப்பான கடும் பிசின் பொருள், அதுக்குவதற்குரிய சவ்வுப் பண்டம்; பிசின் வெளிப்படுத்தும் மரவகை; நோய்ப்பட்ட பழமர வகைகளிலிருந்து கசியும் பிசின்; *v.* பிசின் தடவு; பசை தடவி விறைப்பாக்கு; பசை தடவி ஒட்டு; பசைப்பொருளாகு; பிசின் கசியவிடு.

gum'-ammo'niac, gum'-ammoni'acum, *n.* குங்கிலியப் பிசின்.

gum'-ar'abic, *n.* வேலம் பிசின்.

gum'boil, *n.* பல் ஈறுகளில் தோன்றும் சிறுகட்டி.

gum'-drag'on, *n.* முட்புதர்ச்செடிப் பிசின்; முட்புதர்ச்செடி வகை.

gum'-ju'niper, *n.* மெருகெண்ணெய் செய்வதற்குப் பயன்படும் குங்கிலியப் பிசின் வகை.

gum'lah, (இ.) *n.* நீர் வைப்பதற்கான பெரிய மண்சாடி வகை.

gumm'a, *n.* (மரு.) மேகக்கட்டி, பிசின் போன்ற செறிவுள்ள புடைப்பு; *pl.* gumm'as, gumm'ata.

gumm'atous, gummif'erous, *a.* பிசின் உண்டாக்குகிற.

gumm'ing, *n.* பிசின் கொண்டு ஒட்டுதல்; கல் அச்சு முறை வகையில் கல்லின்மேல் பிசின் நீர் தடவுதல்; செடிகளுக்குக் காணும் நோய்க்கூறு வகையில் உயிர்மச் சுவர்கள் பிசினுக மாறுதல்.

gummos'ity, *n.* பிசின் போன்ற நிலை.

gumm'ous, gumm'y, *a.* பிசுக்குள்ள, களியான; ஒட்டிக் கொள்ளுகிற; பிசின் மிகுந்துள்ள, பிசின் கசிகிற; கால்-கணைக்கால் விக்கங் கண்டுள்ள.

gump'tion, *n.* (பே-வ.) செயல்துறை அறிவு; அறிவுக் கூர்மை; அறிவுவன்மை, ஊக்கவளம், விரைசெயல் திறம்; வண்ணக்கலப்புக் கலை, படம் எழுதுதற்கான வண்ணப் பொருள்களை ஆயத்தப்படுத்தும் துறை.

gum'-rash, *n.* (மரு.) எயிற்றுப்புண்.

gum'-res'in, *n.* பிசின் கலந்த குங்கிலியம்.

gums, *n. pl.* ஈறு, எயிறு, பல்நிற்கும் தசை.

gum'-tree, *n.* பிசின்-குங்கிலிய மரவகை; (தொ.) up a gum-tree, இக்கட்டான நிலையில்.

gun, *n.* துப்பாக்கி; சுழல் துப்பாக்கி; பீரங்கி விசைப்பீற்று கருவி; பூச்சிகளைக் கொல்வதற்காகத் தூவப்படும் மருந்து; துப்பாக்கி வேட்டு அடையாளம்; துப்பாக்கி தாங்கிச் செல்பவர்; துப்பாக்கி தாங்கி வேட்டையாடச் செல்பவர்களில் ஒருவர்; *v.* வேட்டிடு; குறிபார்த்துச்சுடு; துப்பாக்கிகளைத் தருவித்துக்கொடு; வெடிதீர்; துப்பாக்கி தாங்கி வேட்டையாடச் செல்; (தொ.) as sure as a gun, உறுதியாக, கட்டாயமாக; மறுப்புக்கிடமின்றி; blow great guns, புயற் காற்று வகையில் வேகமாக வீசு; great gun, சிறப்புப் பொருந்தியவர்; gun moll, கீழோர்களுடன் பழகுபவர்; துப்பாக்கி வீரன் காமக்கிழத்தி; son of a gun, இகழ்ச்சிக் குரியவர், திருட்டுப்பயல்; stand to one's guns, stick to one's guns, கொள்கை-நிலை முதலியவற்றைப் பற்றுறுதியாகக் கடைப்பிடித்து நில்.

gun'-barrel, *n.* துப்பாக்கிப் புழை; துப்பாக்கிக் குழல்.

gun'boat, *n.* சிறு பீரங்கிப் போர்க்கப்பல்.

gun'-carriage, *n.* பீரங்கி வண்டி.

gun'-cotton, *n.* வெடிப்பஞ்சு, வெடிப்பாற்றலுள்ள நீர்மங்களில் தோய்ந்த பஞ்சு.

gun'-fire, *n.* துப்பாக்கி வெடிப்பு; காலங் காட்டும் வேட்டடையாளம்; புலர்காலைத் தேநீர்.

gun'-flint, *n.* துப்பாக்கித் தீக்கல்.

gun'-harpoon', *n.* துப்பாக்கி ஈட்டி.

gun'-house, *n.* (கப்.) பீரங்கிப் பாதுகாப்புக் கட்டமைவு.

gun'-lock', *n.* துப்பாக்கி வெடி தீர்ப்பதற்குரிய பொறி அமைவு.

gun'-metal, *n.* கருங்கலம், துப்பாக்கி செய்யப் பயன்படுத்தப்பட்ட செம்பு துத்தநாகம் வெள்ளீயக் கலவை உலோகம்.

gunn'age, *n.* போர்க்கப்பல் ஏற்றிச் செல்லும் பீரங்கிகளின் எண்ணிக்கை.

gunn'el [1], *n.* விலாங்கு போன்ற சிறு கடல் மீன் வகை.

gunn'el [2], *n.* = gunwale.

gunn'er, *n.* துப்பாக்கி சுடுபவர்; துப்பாக்கி வீரர்; பீரங்கிப் படைவீரர்; கப்பல் படைக்கலப் பணித்துறையின் பொறுப்பு வகிக்கிற ஆணை பெற்ற அலுவலர்; (தொ.) gunner's daughter, தண்டனைக்காகக் கப்பலோட்டியை வைத்துக் கட்டும் துப்பாக்கி; kiss the gunner's daughter, கசையால் அடிக்கப்படுவதற்காகத் துப்பாக்கியுடன் சேர்த்துக் கட்டப் பெறு.

gunn'era, *n.* (தாவ.) நீண்டுயர்ந்த மிகப் பெரிய இலைகளையுடைய சதுப்புநிலச் செடியினம்.

gunn'ery, *n.* பீரங்கி இயக்கும் கலை; பீரங்கி இயற்றும் கலை; பீரங்கிப் பழக்கம்.

gunn'y, (இ.) *n.* கோணிப்பை, சாக்கு.

gun'-pit, *n.* பீரங்கிப்பள்ளம்; பகைவரது தாக்குதலினின்றும் பீரங்கிகளுக்குக் காப்பளிக்கும் குழி.

gun'-port, *n.* பீரங்கி சுடுவதற்கான கப்பலின் பக்கத்துத் துளை.

gun'powder, *n.* வெடிமருந்து, துப்பாக்கி மருந்து; நுண் மணிகள் போன்ற நேர்த்தியான பச்சைத் தேயிலைத் தூள் வகை; (தொ.) Gunpowder Plot, (வர.) பிரிட்டனில் பாராளு மன்றத்தைத் தகர்த்தெறிவதற்காக 1605-ஆம் ஆண்டில் நிகழ்ந்த சதி.

gun'-room, *n.* போர்க்கப்பலில் பீரங்கிப்படை வீரரும் அவருடைய துணைவர்களும் உணவு கொள்வதற்காகப் பயன்படுத்தும் அறை.

gun'-runner, *n.* சார்புநாட்டில் சட்டத்தை மீறி வெடி படைக்கலங்களைக் கொண்டு செல்பவர்.

gun'-running, *n.* சார்பு நாட்டில் சட்டத்தை மீறி வெடி படைக் கலங்களைக் கொண்டு செல்லுதல்.

gun'shot, *n.* துப்பாக்கிக் குண்டு பாயுந்தூரம்; *a.* துப்பாக்கிக் குண்டு தாக்கியதனுல் விளைந்த.

gun'-shy, *a.* துப்பாக்கி வேட்டுக்களினுல் அச்சங்கொள்ளுகிற.

gun'smith, *n.* துப்பாக்கி செய்பவர்; துப்பாக்கி செப்பனிடுபவர்.

gun'stick, *n.* துப்பாக்கியில் மருந்து திணிக்க உதவுங் கோல்.

gun'stock, *n.* பீரங்கிக்குழல் ஏற்றப்பெறுவதற்குரிய மரச் சட்டம்.

gun'ter, *n.* இரண்டடி நீளமுள்ள மரத்தினுலாய தட்டை அளவு கோல் வகை; கப்பலின் உச்சிப்பாய்மரம்; கப்பலின் உச்சிப்பாய்மரத்துணி; (தொ.) Gunter's chain, அறுபத் தாறடி நீளமுள்ள நில அளவைச் சங்கிலி; Gunter's scale, இரண்டடி நீளத் தட்டை அளவுகோல் வகை.

gun'wale, *n.* கப்பலினது அல்லது படகினது பக்கத்தின் மேல்விளிம்பு.

gun'yah, *n.* ஆஸ்திரேலிய நாட்டுக் குடிசை.

gup, (இ.) *n.* வம்பளப்பு.

gurgita'tion, *n.* அலையெழுச்சி; குமிழியிட்டுக் கொந்தளித்தல்; குமிழியிட்டுக் கொந்தளிக்கும் ஒலி.

gur'gle, *n.* களகள வென்னும் நீர்பாயுமொலி; *v.* களகள என நீர்பாயும் ஒலியெழுப்பு.

gur'jun, *n.* குட்டநோய் களிம்பு தைலம் தரும் கிழக்கிந்திய மர வகை.

gurn'ard, gurn'et, *n.* கடல்மீன் வகை, பெரிய தலையும் கவசக்காப்புடைய மூன்று கை போன்ற உறுப்புக்களும் செவுள்களும் கொண்ட கடல்மீன் வகை.

gu'rrah, *n.* மட்கலம், சாடி.

gu'rry, (இ.) *n.* சிறிய கோட்டை.

guru, (ச.) *n.* குரு, ஞான ஆசிரியர்.

gush, *n.* பொங்கி வழியும் நீர்த்தாரை; உணர்ச்சியின் எழுச்சி; கிளர்ந்தெழும் கனிவு; பேச்சுநடையில் உணர்ச்சிவளம்; *v.* பொங்கிவழி, பீறிட்டு ஒழுகு; கொப்புளி; பீறிட்டு ஒழுகும்படி செய்; தேனொழுகப் பேசு, இனியது கூறு, அன்பு ததும்பும்படி பேசு.

gush'er, *n.* பொங்கிப் பீறிடும் மண்ணெண்ணெய்க் கிணறு.
gush'y, *a.* மன உணர்ச்சி பொங்குகிற; பொங்கி வெளிப்படுகிற மன உணர்ச்சியுள்ள.
guss'et, *n.* கொளு, அகலப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் ஆடைகளுக்கு உள்ளே கொடுக்கப்படும் முக்கோண வடிவான துணி; கட்டுமானக் கோணத்தை வலுப்படுத்துவதற்காகக் கொடுக்கப்படும் இரும்பு வளைகொண்டி.
gust[1], *n.* காற்றுவீச்சு, வன்காற்றலை; புயல்வீச்சு, மழை வீச்சலை; வெப்பலை; புகைவீச்சலை; ஒலியலை; உணர்ச்சியின் திடீர்த்தாக்குதல் அலை.
gust[2], *n.* (செய்.) சுவையுணர்வு; சுவை ஆர்வநயம்; நுகர் வார்வம், நுகர்வுநயம்; (தொ.) have a gust of, நலம் பாராட்டு, நயநுகர்ந்து மகிழ்.
gusta'tion, *n.* சுவை நுகர்தல்; சுவையுணர்வு.
gust'ative, gust'atory, *a.* சுவையுணர்வைச் சார்ந்த, சுவையறிகிற.
gust'ful[1], *a.* புயலான, கொந்தளிக்கிற; எரிச்சலூட்டுகிற; எளிதிற் கோபிக்கிற.
gust'ful[2], *a.* சுவையான, சுவையுடைய; மகிழத்தக்க.
gus'to, *n.* சுவைநயம், சுவை ஆர்வம்.
gust'y[1], *a.* = gustful[1].
gust'y[2], *a.* சுவையான, சுவையுடைய, நாவில் நீர் சுரக்கும்படி நறுமணமும் இன்சுவையும் ஊட்டப்பட்ட.
gut, *n.* உணவு செரிமான அடிக்குழாய்; குடற்கூறு, குடல் நாளம்; குடல் நாளங்களால் முறுக்கப்பட்ட யாழ் நரம்பு; பட்டுப்புழுக் கழலையினுல் முறுக்கப்பட்ட இசைக்கருவி நாண்; பட்டுப்புழுக் குடலிலிருந்து இயற்றப்படும் தூண்டிலிழை; இடுங்கிய நீர் ஓடை; கால்வாய்; கடற்கால்; படகுப் பந்தயத்தினிடையிலுள்ள ஆற்று வளைவு; தெருவின் இடுக்குப் பகுதி; *v.* மீனின் குடலெடு, உள்ளீடெடு; மீனைத் துப்புரவு செய்; வீட்டு உள்ளீடழி, வீட்டின் உள்ளமைப்புக்களை அகற்று; ஏட்டின் கருப்பொருளை வாங்கு, சாரத்தை எடு; (தொ.) blind gut, குடல்வால்.
guts, *n. pl.* குடல்; விலங்குடலின் உள்ளீடு; உள்ளீடு; உள்ளார்ந்த தகுதி; வயிறு; உந்தாக்கம், முந்தாற்றல், தாங்குறுதி; (தொ.) has no guts in it, உண்மையான மதிப்பு அற்றது; மெய்யார்ந்த வலிமை இல்லாதது; take out guts of, மீனின் உள்ளீடு எடு, மீனைத் துப்புரவு செய்.
gut'-scrap'er, *n.* நரப்பிசைக்கருவி வாசிப்பவர், நரப்பிசைக் கருவியாளர்.
gutt'a, *n.* (க-க.) கிரேக்கச் சிற்ப வகையில் துளி போன்ற அணி ஒப்பனை; *pl.* gutt'ae.
gutta-perch'a, *n.* கட்டிறுக்க சாம்பல்நிற மரப்பால் பிசின் வகை; *a.* மரப்பால் பிசினுலான.
gutt'ate, gutt'ated, *a.* துளிகள் கொண்டுள்ள; (தாவ.) புள்ளிகள் உள்ள.
gutt'er, *n.* சாக்கடை, தெரு ஓரக்கால்வாய்; வடிநீர்க்கால், நீர்ப்பொருள் வழிந்தோடுவதற்கான திறந்த குழாய்; வாரி நீரோடை, இறப்பிடையில் மழைநீர் ஓடும் பள்ளம்; சால்வரி, நீள்வரிப்பள்ளம்; ஓரவெட்டு வரிப்பள்ளம்; அச்சுத் துறையில் வரிச்சட்டத்தில் பக்கங்களை இடைப்பிரிக்கும் வெட்டு வரிப்பள்ளமிட்ட பட்டிகை; சேரிவாழ்வு; சமுதாய இழிநிலை; *v.* வடிகால் உருவாக்கு; சால்வரியிடு, வரிப்பள்ளமிடு; பள்ளமாக அகழப்பெறு; ஓடையாக ஒழுகு; வடிகால் வழி ஓடு; துளித்துளியாய் விழு; விளக்கில் மெழுகுதிரி உருகிச் சொட்டுக்களாக விழு; (தொ.) gutter journalism, gutter press, இழிசுவைப் பத்திரிகை; take out of gutter, ஏழ்மையான சூழ்நிலைகளினின்று வெளியே கொணர்.
gutt'er-blood, *n.* இழிபிறப்பாளர்; நகர உள்ளூர்வாணர், நகரத்திலேயே பிறந்து வாழ்பவர்.
gutt'er-child, *n.* யாருமிலாக் குழவி, துணையற்ற குழந்தை.
gutt'er-man, gutt'er merchant, *n.* தெருவோரச் சிறு வணிகன்.
gutt'er-snipe, *n.* துணையற்ற குழந்தை, பெற்றோரை இழந்த குழந்தை.
guttif'erous, *a.* துளிகள் புறங்கசிகிற; இருவிதையிலைச் செடி வகை சார்ந்த.
gut'tle, *v.* பேராவலோடு உண்ணு.
gutt'ural, *n.* மிடற்றொலி; *a.* மிடறு சார்ந்த; தொண்டையில் ஒலிக்கின்ற, முதல் நா அண்ணத்தினிடைப் பிறக்கின்ற.
gutt'uralize, *v.* மிடற்றொலி ஆக்கு; தொண்டையில் ஒலி.
gutt'uro-maxill'ary, *a.* மிடற்றையும் தாடைகளையும் சார்ந்த.
gutt'y, *n.* குழிப்பந்தாட்டத்தில் பயன்படுத்தப்படும் கட்டிப் பிசின் பந்து.
guy[1], *n.* சமநிலைப் பிணிப்பு, பாரந்தூக்கி கூடாரம் முதலிய வற்றைச் சமநிலைப்பட இழுத்து நிறுத்தும் கயிறு அல்லது சங்கிலி முதலியவற்றாலான பிணைப்பு; *v.* சமநிலைப் பிணைப்பு மூலம் பிணித்துவை.
guy[2], *n.* நவம்பர் 5-ஆம் நாள்தோறும் கட்டியிழுக்கப்படும் 'கொடும்பாவி உருவம்; விசித்திர ஆடை அணிந்த மனிதன்; கோரமானவர்; ஆள், பேர்வழி; *v.* கொடும்பாவியாக்கிக் காட்டு; (தொ.) do a guy, மறைந்துகொள்; ஒளித்துக் கொள்; காணுமற் போ; give the guy to, தப்பித்துக்கொள்.
Guy's, Guy's Hospital, *n.* லண்டன் மாநகர மருத்துவமனை.
guz'zle, *v.* பேரார்வத்துடன் உண்ணு; பேராவலுடன் குடி; தின்று குடித்துப் பெரும்பணம் அழி.
gwin'iad, gwyn'iad, *n.* வெண்ணிறத் தசையுடைய ஏரி மீன் வகை.
gybe, *v.* கப்பலின் பாயை வெட்டி இழுத்து மாற்று; பாயை வெட்டியிழுத்துக் கப்பல் பாதை மாற்று; கப்பல் பாதை மாறிச் செல்.
gyle, *n.* ஒரு தடவை வடித்த மாத்தேறல் ஈடு; புளியாக்கப் பட்ட மாவூறல் சத்து; புளிப்பாக்க உதவும் மிடா.
gymkha'na, *n.* உடற்பயிற்சிப் போட்டி விளையாட்டுப் பொதுவிடம்; உடற்பயிற்சிப் போட்டி விளையாட்டுக் காட்சியணி; போட்டி விளையாட்டுக் கூட்டம்.
gymna'siarch, *n.* உடற்பயிற்சிக் களரி முதல்வர்.
gymnas'iast, *n.* உடற்பயிற்சிப்பள்ளி மாணவன்; உடற் பயிற்சி அறிஞர், உடற்பயிற்சி ஆசிரியர்.
gymna'sium, *n.* களரி, உடற்பயிற்சிக்கூடம்; உடற் பயிற்சிக்கான இடம்; உடற்பயிற்சிப் பள்ளி; செர்மன் உயர்தரப்பள்ளி.
gym'nast, *n.* உடற்பயிற்சித்துறை வல்லுநர்.
gymnas'tic, *n.* கட்டுப்பாட்டுப் பயிற்சி அமைப்புமுறை; *a.* உடற்பயிற்சிகள் சார்ந்த.
gymnas'tics, *n. pl.* தசைகளை வலுப்படுத்துவதற்கான உடற் பயிற்சிகள்.
gym'nosoph, gymnos'ophist, *n.* பண்டைக்கால இந்திய திகம்பரத் துறவி; உண்முகச் சிந்தனையாளர், மறையியலறிஞர்.
gymnosperm'ous, *a.* விதைவகையில் பொதியப்பெறுத, திறந்த மேனியான, தோடற்ற.
gymnot'us, *n.* மின் விலாங்கு, மின் அதிர்ச்சி ஆற்றலுடைய மீன்வகை.
gynaece'um, *n.* உவளகம், பண்டைக் கிரேக்க ரோமரிடையே வீட்டில் பெண்டிர் பழகும் பகுதி; (தாவ.) மலரின் பெண் உறுப்புக்கள்.
gynaecoc'racy, gynoc'racy, *n.* பெண் ஆட்சி; பெண்களின் ஆட்சி.
gynaecol'ogy, *n.* பெண்நோய் மருத்துவக்கலை, பெண்களின் நோய்களைப் பற்றிய ஆய்வியல்துறை.

gynan'drous, *a.* (தாவ.) மலரில் துய்யும் சூலகமும் ஒரே தண்டில் இணைந்துள்ள.

gyn'obase, *n.* (தாவ.) மலரின் பெண் உறுப்புக்களைத் தாங்கும் கொள்கலத்தின் விரிவகற்சி.

gyn'ophore, *n.* (தாவ.) மலரின் கருப்பையைத் தாங்கும் சிறுகாம்பு போன்ற பகுதி; (வில.) நீர்வாழ் உயிரின வகையின் புத்துயிர்க்கிளையின் முனை.

gyp, *n.* கேம்பிரிட்ஜ் (Cambridge) நகரிலும் டர்ஹாம் (Durham) நகரிலுமுள்ள கல்லூரி வேலையாள்.

gyp'-room, *n.* கேம்பிரிட்ஜ் அல்லது டர்ஹாம் நகரிலுள்ள கல்லூரி வேலையாளுக்குரிய சரக்கறை.

gyps, *n.*=gypsum.

gypsoph'ila, *n.* நூலிழைபோன்ற காம்புகளுடன் நுடங்கியாடும் தோட்டச்செடி வகைகள்.

gyp'sum, *n.* கனிக்கல், மருத்துவர் பயன்படுத்தும் கட்டு காரைக்குரிய மூலக்கனிப்பொருள் வகை.

gyp'sy, *n.*=gipsy.

gyr'ate[1], *a.* (தாவ.) வளையங்களாயமைந்த, மடிப்புச் சுருள்களாக ஒழுங்குபடுத்தப்பட்ட.

gyrate'[2], *v.* திருகு சுருளாகச் சுற்றிச்செல்; விரைவாகச் சுழலு.

gyra'tion, *n.* விரைவாகச் சுற்றும் இயக்கம், சுழற்சி; திருகு சுருளின் ஒருவட்டச் சுற்று; சிறுகிளையின் ஒருவரிசைச் சுற்று.

gyr'atory, *a.* சுற்றுகிற, சுழலுகிற; போக்குவரத்துவகையில் ஒருவழி முறையாகச் சுற்றி வருகிற.

gyr'e, *n.* வட்டம், சுற்று; திருகுசுருளாகச் சுழலுதல், சுற்றுதல்; *v.* சுழலு, சுற்று.

gyr'o, *n.*=gyroscope.

gyr'o-car', *n.* சுழல்வேகமானியால் சமநிலைப்படுத்தப்பட்டு ஒரே தண்டவாளத்தில் இயங்கும் பொறியூர்தி அல்லது வண்டி.

gyr'o-com'pass, *n.* சுழல்வேகமானியால் இயங்கும் திசைகாட்டி அல்லது திசையறி கருவி, காந்தக் கவர்ச்சியால் இயங்கும் திசைகாட்டி பயனற்றபோது திசையறிவதற்கு உதவும் சுழல் வேகமானி.

gyr'ograph, *n.* சுழற்சிகளைப் பதிவுசெய்யும் கருவி.

gyroid'al, *a.* திருகு சுருளான, திருகிச் சுழலுகின்ற, சுழற்சியுள்ள, சுழலுகின்ற.

gyr'omancy, *n.* வட்டமாகச் சுழன்று சுழன்று சென்று தலைசுற்றி மயக்கமாக விழுந்து வருவதுரைத்தல்.

gyr'oplane, gyrop'ter, *n.* தலைக்கு மேலே விரைவாகச் சுற்றும் காற்றுடிப் பொறிகளின் இயக்கத்தால் உயர்ந்து செல்லும் வானூர்தி வகை, செங்குத்தாக மேலெழும் வானூர்தி வகை, மீவான் கலம், நிமிர் வானூர்தி.

gyr'oscope, *n.* சுழல் பொருள்களின் இயக்க இயல்பை விளக்குங் கருவி; சுழலாழி விளையாட்டுக் கருவி; ஒரு தண்டூர்தியின் சுழலாழி.

gyrose', *a.* (தாவ.) மடிப்புச் சுருள் பரப்புடைய; அலை குறியடையாளங்களையுடைய.

gyrostab'iliser, *n.* கப்பல் ஆடி உருளாமல் காக்கும் சுழல் விசைக் கருவி.

gyr'ostat, *n.* சுழல் பொருள்களின் இயக்க இயல்பை விளக்குங் கருவி.

gyr'us, *n.* இரு பள்ளங்களிடையேயுள்ள வரை முகடு; மூளையின் மடிப்புச்சுருள்.

gyve, *v.* விலங்குமாட்டு, தளையிடு.

gyves, *n. pl.* தளை, விலங்கு.

Ha[1], *int.* வியப்பு-மகிழ்ச்சி-ஐயம்-வெற்றி முதலியவற்றைத் தெரிவிக்கும் வியப்பிடைச்சொல், ஆ!

ha[2], *v.* தாழ்ந்த குரலில் முணங்கு அல்லது பாடு, வாயை மூடிக்கொண்டே பாடு; மந்த ஓசை செய், முரலு.

haaf, *n.* ஷெட்லாந்திலும் ஆர்க்னியிலும் (Shetland and Orkney) ஆழ்கடல் மீன்பிடிப்பு நிலப்பகுதி.

hab'eas corp'us, *n.* கைதியைக் கொண்டு வரும்படி நடுவர் இடும் ஆணை, (தொ.) Habeas Corpus Act, ஆட்கொணர் சட்டம்.

hab'erdasher, *n.* சிறுபொருள் விற்போர்.

hab'erdashery, *n.* சில்லறை உடுப்புக்கள்-நாடா போன்ற சாமான்கள் விற்பனை.

hab'ergeon, *n.* (வர.) கையில்லாத இருப்புப் போர்க் கவச மேலங்கி.

hab'ile, *a.* திறமைவாய்ந்த, கைவல்ல.

habil'iment, *n.* தளவாடம்.

habil'iments, *n. pl.* கஞ்சுகம், பணி உடுப்புக்கள்.

habil'itate, *v.* சுரங்கத் தொழிலிற்குச் செயல் மூலதனம் அளி; பல்கலைக்கழகப் பதவிக்குத் தகுதியாகு.

hab'it, *n.* பழக்கம்; மனப்பாங்கு; உடற்பாங்கு; வளரும் வகை அல்லது முறை; மகளிர் குதிரைச் சவாரிஉடுப்பு; சமய நெறியினர் உடுப்பு; *v.* உடையணி, உடுத்திக்கொள்.

hab'itable, *a.* குடியிருக்கத்தக்க, வசிக்கத்தக்க.

hab'itant, *n.* குடியிருப்பவர், வசிப்பவர்; பிரஞ்சு மரபைச் சேர்ந்த கனடா நாட்டினர்.

hab'itat, *n.* தாவரம் அல்லது விலங்கின் இயற்கையான இருப்பு; மனை.

habita'tion, *n.* உறைவிடம்; 'பிரிம்ரோஸ் லீக்' (Primrose League) என்னும் கழகத்தின் கிளைச்சங்கம்.

habit'ual, *a.* பழக்கத்திலுள்ள; தொடர்ச்சியான; அடிக்கடி நிகழ்கிற; குறிப்பிட்ட பழக்கத்துக்கு ஆளாகிவிட்ட.

habit'uate, *v.* பழக்கப்படுத்து.

hab'itude, *n.* மனப்பாங்கு; உடற்பாங்கு; பழக்கம்; போக்கு.

habitue, (பிர.) *n.* பழக்கமாக வருபவர் அல்லது தங்குபவர்.

hachures, (பிர.) *n. pl.* தரைப்படங்களில் மலைச்சரிவுகளைக் காட்டுவதற்கான கோடுகள்.

hacien'da, (ஸ்பா.) *n.* குடியிருப்பு மனையோடு கூடிய தோட்டம்.

hack[1], *n* மண்வெட்டி வகை; சுரங்கத் தொழிலரின் கடப்பாரை; ஆழமான வெட்டு; காயம், புதைமிதியடியின் பெருவிரற் பகுதியால் உதைக்கப்பட்டு விளையும் காயம்; *v.* வெட்டு; அடையாளம் ஏற்படும்படி வெட்டு, கீறு; சம்மட்டியால் அடித்துச் சொரசொரப்பாக்கு; அடித்துக் காயப்படுத்து; காற்பந்தாட்டத்தில் எதிர்த்தரப்பு ஆட்டக்காரரின் கீழ்க்கால் முன்புறத்தின்மீது உதை; காயப்படும்படி அடி; சிறிது சிறிதாக வறட்டு இருமல் இருமு; (தொ.) hacking cough, குறுகுறு வறட்டு இருமல்.

hack[2], *n.* பருந்திறைச்சி பரப்பி வைக்கப்படும் பலகை; செங்கல் காயவைக்கும் சட்டம்; கால்நடைகளுக்குத் தீனி வைக்கப்படும் மரவடைப்பு.

hack[3], *n.* வாடகைக் குதிரை; களைத்த குதிரை; சவாரிக் குதிரை; கடும்வேலை செய்வோன்; *v.* பொதுவாக்கு; வாடகைக்கு விடு; குதிரைச்சவாரி செய், சாதாரண வேகத்தில் சாலை வழியாகச் சவாரி செய்; வாடகைக் குதிரைகளைப் பயன்படுத்து.

hack'ery, *n.* மாட்டு வண்டி.

hac'kle[1], *n.* சணலுக்கான எஃகுச் சீப்பு, சணலைத் துப்புரவு செய்யும் சீப்பு; கோழி முதலிய பறவைகளின் கழுத்திலுள்ள நீண்ட இறகுகள்; சேவலின் கழுத்திறகு; *v.* எஃகுச் சீப்பைக் கொண்டு சணலைச் சிக்கறு, சிக்கெடு.

hac'kle[2], *v.* வெட்டு, நையச்சிதை, உருக்குலை; அடித்துக் காயப்படுத்து.

hack'-log, *n.* இறைச்சி வெட்டும் மரக்கட்டை.

hack'ly, *a.* வெட்டப்பட்டதைப் போன்று சொரசொரப்புடைய; (கனி.) தாறுமாறும் கரடுமுரடும் ஆன.

hack'matack, *n.* அமெரிக்க சவுக்கு மரவகை, அமெரிக்க ஊசியிலை மரவகை.

hack'ney, *n.* சவாரிக்குதிரை; கடும்வேலை செய்பவன்; கூலிக்கு உழைப்பவன்; *a.* வாடகைக்கு விடப்பட்ட; *v.* பொதுவாக்கு; பழகியதாக்கு; சிறுதிறமாக்கு.

hack'ney-carr'iage, hack'ney-coach, *n.* வாடகை வண்டி.

hack'neyed, *a.* பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற, பொதுப்பயனுக்கான; பழகிப்போன; சிறுதிறமான; அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதால் சலித்துப்போன.

hack'neyman, *n.* வாடகைக் குதிரைக்காரன்; சவாரிக் குதிரைகள் வைத்திருப்பவன்.

hack'-saw, *n.* உலோகப் பொருளை வெட்டும் வாள், உலோக இரம்பம்.

hack'stand, *n.* வாடகை வண்டி நிறுத்துமிடம்.

hack'-work, *n.* நூல் வெளியீட்டார்க்குச் செய்யும் இலக்கியக் கூலிவேலை.

hack'writer, *n.* கூலி எழுத்தர்.

had, *v.* have என்பதன் இறந்தகாலம்.

hadd'ock, *n.* 'ஆடாக்' மீன், 'காட்' (cod) இனத்தைச் சேர்ந்த கடல்மீன்வகை.

hade, *v.* (மண்., சுரங்.) செங்குத்தான நிலையிலிருந்து சாய்ந்திரு.

Had'es, *v.* கிரேக்க புராண வழக்கில் கீழுலகம், பாதாளம், ஆவி உலகம், நரகம்.

Hadj'i, Hajj'i, *n.* மெக்கா சென்று திரும்பிய இஸ்லாமிய யாத்திரிகர் பட்டம்.

haecce'ity, *n.* (மெய்.) இது என்ற தன்மை, தனிப்பண்பு.

haem, *n.* குருதிச்சிவப்பு வண்ணப்பொருள், குருதிச் சிவப்புப் பொருளில் பிசிதம் சேர்ந்த வண்ணம்.

haem'al, *a.* (உள்.) குருதி சார்ந்த; இருதயமும் பெரிய குருதிக் குழாய்களும் உள்ள உடற்பகுதியில் அமைந்திருக்கின்ற.

haeman'thus, *n.* குருதி வண்ண மலர்வகை, தென்னாப்பிரிக்க வேர்ப்பூண்டு மலர்வகை.

haemat'ic, *n.* குருதிவினைமருந்து; *a.* குருதிசார்ந்த; குருதியுள்ள.

hae'matin, *n.* உலர்ந்த குருதியிலிருந்து கிடைக்கும் பழுப்பு நிற இரும்புச் சத்துப்பொருள்.

haem'atite, hem'atite, *n.* சிவந்த அல்லது ஒருவாறு கறுத்த இரும்பு உயிரகைக் கனிப்பொருள்.

hae'matocele, he'matocele, *n.* குருதிக்குழிவு, இரத்தக் குழி, இரத்தவண்டம்.

haematogen'esis, *n.* குருதி உருவாதல்.

haematol'ogy, *n.* குருதியியல்.

haematur'ia, *n.* (மரு.) சிறுநீரில் குருதி உள்ளமை.

haemoglob'in, hemoglob'in, *n.* செந்நிறக் குருதியணு உடலியின் வண்ணப்பொருள்.

haemophil'ia, hemophil'ia, *n.* (மரு.) சிறு காயத்திலிருந்தும் குருதிப்பெருக்கிடும் பரம்பரை நோய்.

haem'orrhage, hem'orrhage, *n.* குருதிக்குழாய்களில் இருந்து இரத்தம் வெளிப்படுதல், இரத்தப்போக்கு.

haem'orrhoids, hem'orrhoids, *n.* மூலநோய்.

hae'mostat, *n.* குருதிப்போக்கினை நிறுத்தும் கருவி.

ha'fiz, (அரா.) *n.* திருக்குரானை மனப்பாடம் செய்துள்ள இஸ்லாமியரைக் குறிக்கும் பட்டம்.

haf'nium, *n.* (வேதி.) 1923-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்ட உலோகத் தனிமம் அல்லது உலோக மூலம்.

haft, *n.* கைப்பிடி ; *v.* கைப்பிடி பொருத்து.

hag[1], *n.* அருவருப்புத்தோற்றமுள்ள கிழவி ; மந்திரக்காரி, சூனியக்காரி ; பெண் பேய்.

hag[2], *n.* சதுப்பு நிலத்தில் மென்மையான நிலப்பகுதி; சதுப்பு நிலத்தில் உறுதியான நிலப்பகுதி.

hag'fish, *n.* விலாங்கு போன்ற மீன்வகை.

hagga'dah, *n.* எபிரேய மொழி வழக்கில் யூதர் சட்டப் புராணப் பகுதி.

hagg'ard, *n.* பருந்து, இராசாளி, வல்லூறு ; *a.* பருந்து வகையில் வளர்ச்சியுற்ற சிறகமைப்போடு பிடிக்கப்பட்ட; வேட்டைக்குப் பழக்கப்படாத ; பயிற்றுவிக்கப்படாத; அருவருப்புத் தோற்றம்உடைய.

hagg'ed, *a.* அருவருப்பான கிழவி போன்ற தோற்றமுடைய, சூனியக்காரி போன்ற தோற்றமுடைய, விகாரமான ; சோர்ந்த, நலிவடைந்த தோற்றமுடைய.

hagg'is, *n.* ஆடு முதலியவற்றின் இருதயம்-நுரையீரல்-கல்லீரல் முதலியவற்றைக் கொத்திய இறைச்சிக் கொதிப்புணவு வகை.

hag'gle, *n.* சண்டை, சச்சரவு ; *v.* வாதமிடு, சச்சரவு செய்; பிசிர் பேசு.

hag'iarchy, *n.* மெய்ஞ்ஞானிகளின் ஆட்சி ; மெய்ஞ்ஞானிகளின் அமைப்பு.

hagioc'racy, *n.* தூய்மையாளர்களின் அரசு.

Hagiog'rapha, *n. pl.* எபிரேய வேத புத்தகங்கள்; விவிலிய வேதத்தின் பழைய ஏற்பாட்டில் 'சட்டமும் வருவதுரைப்பவர்களும்' என்ற பகுதியிற் சேர்க்கப்படாத பகுதிகள்.

hagiog'rapher, *n.* விவிலிய வேதத்தின் பழைய ஏற்பாட்டுப் பகுதியில் சில நூல்களை எழுதியவர்; திருநிலையான தெய்விக நூல்களை எழுதுபவர்; திருத்தொண்டர் வரலாறு எழுதுபவர்.

hagiog'raphy, *n.* திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாற்றியல்.

hagiol'ater, *n.* திருத்தொண்டர்களை வழிபடுபவர்.

hagiol'atry, *n.* திருத்தொண்டர் வழிபாடு.

hagiol'ogist, *n.* திருத்தொண்டர் புராண எழுத்தாளர்.

hagiol'ogy, *n.* திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாறு புராணம் ஆகியவற்றைப் பற்றிய இலக்கியம்.

hag'ioscope, *n.* உயர் பலிபீடத் தோற்றத்தைக் காணக் கூடிய திருக்கோயிற் சுவரின் கோணல் திறப்பு அல்லது துளை.

hag'ridden, *a.* தீக்கனவுகளால் துன்பப்படுகிற.

hah, *int.*, *v.* = ha [1], [2].

ha ha[1], *int.* ஒலியோடு கூடிய சிரிப்பு.

ha'-ha[2], *n.* பூங்கா அல்லது தோட்டத்தைச் சுற்றியுள்ள கால்வாயிற் பதிந்த வேலி.

ha'ick, ha'ik, ha'ique, hyke, *n.* தலையையும் உடலையும் மூடுவதற்கான அராபியப் புற உடை.

hail[1], *n.* கல் மழை, ஆலங்கட்டி மழை ; *v.* கனமாகப்பெய், பொழி.

hail[2], *n.* வணக்கம், முகமன் ; *v.* வணங்கு, முகமன்கூறு, வரவேற்பளி; கவனத்தைக் கவரும்படி கூவியழை ; *int.* வரவேற்கும் வியப்பிடைச் சொல்; (தொ.) hail from, இடத்திலிருந்து வருகை தா, புறப்பட்டு வா.

hail'-fellow, hail'-fellow-well-met', *a.* எளிதில் அல்லது விரைவில் பழகுகிற அல்லது நண்பராகுகிற.

hail'shot, *n.* ஆலங்கட்டி மழை போன்று பரவி விழும் சிறு குண்டு.

hail'stone, *n.* ஆலங்கட்டி.

hail'storm, *n.* புயற்காற்றோடு கூடிய ஆலங்கட்டி மழை ; வசைமாரி ; விறு மழை.

hair, *n.* மயிர், முடி; தாவரங்களில் புரணியிலிருந்து வளரும் நீண்ட உயிரணு ; மயிர் போன்ற பொருள் ; புள்ளி, மயிரிழை அளவு ; துப்பாக்கி பீரங்கி முதலியவற்றிலுள்ள பாதுகாப்பு மூடுபொறி ; (தொ.) against the hair, விருப்பத்திற்கு மாறாக ; a hair of the dog that bit him, தொந்தரவு கொடுத்ததன் மிகச் சிறுபகுதி ; do the hair, put up the hair, let down the hair, முடியை அழகுபடுத்து, முடியைத் திருத்து, முடியை ஒப்பனைசெய், முடியைத் தொங்கவிட்டு அழகுபடுத்து ; lose one's hair, சினங்கொள் ; make one's hair stand on end, மயிர்க்கூச்செறியச் செய்; அச்சமூட்டு; பெருவியப்பூட்டு; not turn a hair, கலக்கமுறுதிரு, குழப்பமடையாதிரு; put up the hair, தலைமுடியைத் தூக்கிக் கொண்டை போடு; split hairs, சிறிதைப் பெரிதாக்கு; to a hair, to the turn of a hair, மயிரிழைகூடப் பிசகாத, சரிநுட்பமாக.

hair'-ball, *n.* இரைப்பையில் தொகுதியாகும் மயிர்.

hair'breadth, hair's'-breadth, *n.* மயிரளவு தொலைவு, மிகக்குறுகிய தொலைவு, மிகச்சிறு தொலைவு ; *a.* மிக நெருங்கிய, மிகக்குறுகிய ; (தொ.) hairbreadth escape, மயிரிழையில் தப்பிப் பிழைத்தல்.

hair'-brush, *n.* மயிர்க்குச்சு, முடிச்சிக்கல் எடுக்க உதவுங் கருவி.

hair'cloth, *n.* கம்பளம், முழுவதும் அல்லது அரைகுறையாக முடியினால் செய்யப்படும் துணி.

hair'cut, *n.* முடி திருத்துதல், சிகை வெட்டுதல்.

hair'dresser, *n.* முடியலங்காரர், முடி திருத்துவோர்.

hair'-dressing, *n.* முடி திருத்துதல், முடி அலங்கரித்தல்.

hair'-line, *n.* முடியாலான வரிக்கோடு, மயிரிழைக் கோடு ; எழுத்து அச்சு முதலியவற்றில் மிக நுட்பமான வரிக்கோடு ; மிக நுண்ணிய கோடுகளிட்ட துணி.

hair'-net, *n.* 'பிச்சோடா' வலை, கொண்டை வலை.

hair'-pen'cil, *n.* மெல்லிய வண்ணத்தூரிகை.

hair'pin, *n.* கொண்டை ஊசி ; *a.* சாலையிற் குறுகலான வளைவுடைய.

hair'-rais'er, *n.* பயங்கரக் கதை.

hair'-seal, *n.* கடல் நாய், புறச் செவிகளும் முரட்டு முடிகளும் உடைய கடல் நாய்.

hair'-shirt, *n.* பாவ மன்னிப்புத் தேட்டாளர் அணியும் சுணைச் சட்டை ; அந்தரங்கமான வருத்தம், மன நோய்.

hair'space, *n.* அச்சுக்கோப்போர் பயன்படுத்தும் இடைவெளிக்கான மிக மெல்லிய உலோக அச்சு.

hair'-splitt'er, *n.* அறக்கூராய்வாளர்.

hair'-splitt'ing, *n.* நுண்கூர் வேறுபாட்டு அமைப்பு.

hair'spring, *n.* கடிகாரச் சுருள்வில்.

hair'-stroke, *n.* மயிரிழைக்கோடுபோன்று அழகாக எழுதக் கூடிய திறமை, கையெழுத்துத் திறன்.

hair'y, *a.* முடியாலான ; முடிபோன்ற ; முடியால் மூடிய.

hake[1], *n.* கடல்மீன் வகை, 'காட்' (cod) என்பதைப்போன்ற கடல்மீன் வகை.

hake[2], *n.* செங்கற்களைக் காய வைப்பதற்குப் பயன்படும் மரச்சட்டம்.

hakeem', hakim[1], (அரா.) *n.* மருத்துவர்.

ha'kim[2], *n.* நடுவர், தலைவர், மாநில ஆளுநர்.

hal'ation, *n.* (நி.ப.) எதிர்மூலப்படியில் இயல்பான வரம்பிற்கு அப்பால் ஒளியைப் பரப்புதல்.

hal'berd, hal'bert, *n.* ஈட்டிக்கோடரி.

halberdier', *n.* ஈட்டிக்கோடரிக் கையர்.

hal'cyon, *n.* சிச்சிலிப் பறவை ; (தொ.) halcyon days, அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த காலம்.

hale [1], *a.* திடமான, உடல் நலமுடைய.

hale [2], *v.* வலிந்து இழு.

half, *n.* அரை, பாதி, இரு சமக்கூறுகளில் ஒன்று ; அரையாண்டு காலக் கூறு, அரையாண்டு காலப் பிரிவு ; காற்பந்தாட்டம்-வளைகோற் பந்தாட்டம் முதலியவற்றில் இலக்குப் பகுதியைக் காக்கும் ஆட்டக்காரர் ; குழிப்பந்தாட்டத்தில் அரைக்குழி தூர அளவு ; *a.* அரைப்பகுதியான, இரு சமக் கூறுகளில் ஒன்றன அல்லது ஒன்றைக் கொண்ட ; அரை குறையான, முழு நிறைவற்ற ; *adv.* அரையளவில், பாதி யளவில் ; பகுதியாக, அரைகுறையாக ; (தொ.) better half, மனைவி, இல்லாள் ; cry halves, சரிசமமாகப் பங்கிடும்படி கேள் ; do a thing by halves, அரைகுறையாகச் செய் ; go halves, சரி சமமாகப் பங்கிடு ; half-way house, இரு பட்டணங்கள் முதலியவற்றிற்கு இடை வழியிலுள்ள தங்கு மிடம்.

half'-and-half, *n.* ஒத்த அளவான இரு பொருட்கலவை ; *a.* ஒன்றுக்கு ஒன்றன, ஒத்த அளவுடைய.

half'-ape, *n.* மனிதக்குரங்கு ; வாலில்லாக் குரங்கு ; காட்டு மனிதன்.

half'-back, *n.* காற்பந்தாட்டம் முதலியவற்றில் முற்புற ஆட்டக்காரர்களுக்குப் பின்னணியிலுள்ள ஆட்டக்காரர் ; 'ரக்பி' (Rugby) ஆட்டத்தில் முற்புற ஆட்டக்காரர்களுக்கும் முக்கால்புற ஆட்டக்காரர்களுக்கும் இணைப்பாகவுள்ள ஆட் டக்காரர்.

half'-baked, *a.* அரைகுறையான, அரைகுறையாகச் செய் யப்பட்ட ; அரைவேக்காடான ; முழு நிறைவற்ற ; பண் படாத ; முதிராத, பக்குவமடையாத.

half'-ball, *n.* குறிக்கோள் பந்தின் ஓரத்தை நோக்கி ஆட்டப் பந்தைச் செலுத்துதல்.

half'-baptise', *v.* தனியாகவும் விரைவாகவும் ஞானஸ்நானம் செய்வி.

half'-beak, *n.* ஈட்டி போன்ற கீழ்த்தாடையுடைய மீன்வகை.

half'-binding, *n.* புத்தக மூலையும்முதுகுப்புறமும் தோலால் அமைந்த கட்டுமானம்.

half'-blood, *n.* பெற்றோரில் ஒருவர் பொதுவாக உள்ள உற வுத்தொடர்பு ; இருசாதிப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளை, இருதார மகவு.

half'-blue', *n.* ஆக்ஸ்போர்டு அல்லது கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக ஆட்டக் குழுவில் ஆட்டக்காரரது பதிலாள் ; ஆட்டக் காரர் உடை வகை.

half'-board, *n.* (கப்.) பயணம் செல்லும் கப்பல் காற்றை எதிர்த்துச் செல்வதற்குரிய சூழ்ச்சித்திறச் செயல்.

half'-boot, *n.* அரை முழங்காலளவுள்ள புதைமிதியடி.

half'-bound, *a.* புத்தகத்தின் முதுகுப் புறமும் மூலைகளும் தோலினுற் கட்டுமானஞ் செய்யப்பட்ட.

half'-bred, *a.* இழி பிறப்பான, கலப்பட இனமான, நன் னடக்கை அறியாத, கலப்புச் சாதியான, கலப்புச் சாதிக்குப் பிறந்த.

half'-breed, *n.* இருசாதிப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளை, கலப்பு இனப் பிள்ளை.

half'-brother, half'-sister, *n.* ஒன்று விட்ட உடன்பிறந் தார்.

half'-cap, *n.* அசட்டையான வணக்கம்.

half'-caste, *n.* ஐரோப்பிய-ஆசிய கலப்பு இனப் பெற்றோர்க் குப் பிறந்தவர்.

half'-close, *n.* (இசை.) அரைகுறையான சந்த ஒலி.

half'-cock', *n.* சுடுவதற்குமுன் துப்பாக்கிக் குதிரை அரை யளவில் நிற்கும் நிலை ; மட்டைப் பந்தாட்டத்தில் முன்புறம் பாயாமலும் பின்புறம் சாயாமலும் பந்தை அடிக்கும் அடி.

half'-crown', *n.* இரண்டு ஷில்லிங்கும் ஆறு பென்சும் கொண்ட மதிப்புடைய ஆங்கில நாணயம்.

half'-deck, *n.* வணிகக் கப்பலில் பயிற்சியாளர்களும் இளம் மாலுமிகளும் வசிக்கும் இடம்.

half'-doll'ar, *n.* 50 செண்டுகள் மதிப்புள்ள அமெரிக்க நாணயம்.

half'-done, *a.* அரைவேக்காடான ; அரைகுறையாகச் செய்யப் பட்ட.

half'-face, *n.* பக்கத்தோற்றம்.

half'-hard'y, *a.* மழைக்காலம் தவிர்ந்த மற்றக் காலங்களில் திறந்த வெளியில் வளரும் ஆற்றலுடைய.

half'-heart'ed, *a.* அரை மனதான, முனைப்பார்வமற்ற, சுறு சுறுப்புக் குறைந்த.

half'-hitch, *n.* ஒரு பொருளைச் சுற்றிக் கட்டப்பட்ட சாதா ரண முடிச்சு.

half'-kir'tle, *n.* 16-17-ஆம் நூற்றாண்டுகளில் பெண்கள் அணிந்த ஒருவகைச் சிறுசட்டை, அரைக்கச்சு.

half'-length, *n.* உடலின் மேற்பகுதியைக் காட்டும் உருவப் படம் ; *a.* முழுநீளத்தில் அரைப் பகுதியான.

half'-life, *n.* அணு ஆற்றல் சக்திப்பொருள் இயல்பாக வானிலிருந்து விழும் அளவில் அரைப்பகுதி விழும் கால அளவு.

half'-light, *n.* அரைகுறை ஒளி, மங்கலான வெளிச்சம், அந்தி ஒளி.

half'lin, *n.* 'பென்னி' என்ற வெள்ளி நாணயத்தில் அரைப் பகுதி; *a.* அரைகுறையாக வளர்ந்த, பாதி அளவில் வளர்ந்த.

half'-lings, half'-lins, *a.* அரைப்பகுதி வளர்ந்த ; *adv.* அறைகுறையாக.

half'-mast', *n.* இறந்தவர்களுக்கு மரியாதை காட்டுதற்குக் கொடிமரத்தில் அரைப்பகுதிக்குத் தாழ்த்திக் கொடியைப் பறக்கவிடும் நிலை.

half'-meas'ure, *n.* அரைகுறைச்சாதனம்.

half'-nel'son, *n.* குத்துச்சண்டையில் ஒருவகைப் பிடிவரிசை; கைக்குள் கையும் கழுத்தின் பின்புறம் ஒரு கையும் கொண்ட பிடிவகை.

halfp'enny, *n.* ஆங்கில நாணயமாகிய 'பென்னி'யில் அரைமதிப்புள்ள நாணயம் ; இந்நாணய மதிப்பு ; *pl.* halfp'ence, half-p'ennies.

halfp'ennyworth, hap'orth, *n.* அரை 'பென்னி'க்கு விற்கக் கூடிய அளவு, அரை 'பென்னி' நாணய மதிப்புடைய அளவு.

half'-plate, *n.* நிழற்பட அரைத்தகடு, $4\frac{3}{4} \times 4\frac{1}{2}$ அங்குல அளவுள்ள நிழற்படத் தகடு.

half-pound'er, *n.* அரை 'பவுண்டு' எடையுள்ள மீன் அல்லது வேறு பொருள் ; அரை 'பவுண்டு' எடையுள்ள வெடி குண்டுச் சுடும் பீரங்கி.

half'-roy'al, *n.** புத்தகக் கட்டுமானம் செய்வதற்குப் பயன் படும் தடித்த அட்டை வகை அல்லது அட்டைப் பலகை.

half'-seas-o'ver, *a.* கடலின் பாதிவழியில்; குடிமயக்கத்தில்.

half'-shift', *n.* யாழ் அல்லது நரம்பிசைக் கருவியை வாசிக்கும்போது அரையொலி கொடுக்கும் கை அமைவு நிலை.

half'-sword, *n.* அரைவாள் தூரச் சண்டை.

half'-text, *n.* மூல ஏட்டின் அரை அளவுள்ள கையெழுத்து.

half'-tim'er, *n.* அரைநேரம் வேலை செய்பவர், பாதிநேரம் பணியாற்றிப் பாதிநேரம் கல்வி பயிலுபவர்.

half'-ti'tle, *n.* புத்தகத் தலைப்புப் பக்கத்திற்கு அல்லது புத்தகப் பிரிவுக்கு முன்னுள்ள சிறுதலைப்பு.

half'-tone, *n.* நுண்பதிவுப்படம் ; (இசை.) மைய இசை ; *a.* நிழற்படத்தில் ஒளி நிழல் மாறுபாட்டளவுப் புள்ளிகளைக் காட்டுகின்ற.

half'-truth, *n.* அரைகுறையான உண்மை.

half'witt'ed, *a.* மந்த மதியுள்ள.

hal'ibut, hol'ibut, *n.* பெரிய தட்டை உணவுமீன் வகை.

halieut'ic, *n.* மீன் பிடித்தல்; *a.* மீன் பிடித்தலைப் பற்றிய.

halieutics, *n. pl.* மீன்பிடிக்குங் கலை.

halitos'is, *n.* (மரு.) ஊத்தை நாற்றம்.

hall, *n.* மன்றம், அரண்மனை முதலியவற்றில் உள்ள நீண்ட பொது அறை; நிலக்கிழாரின் வசிப்பிடம்; ஆங்கிலேயக் கல்லூரிகள் முதலியவற்றிற் பொது உணவிடம்; சங்கக் கட்டிடம்; (தொ.) Liberty Hall, முழுச் சுதந்திர மன்றம், எது வேண்டுமென்றாலும் செய்யும் வாய்ப்புள்ள சுதந்திர மன்றம்; servants' hall, பணியர் உணவறை, வேலைக்காரர் களின் உணவறை.

hall'-door, *n.* முகப்பு வாயிற் கதவு.

hallelu'jah, hallelu'iah, *n.* தெய்வப்புகழ்ப் பாட்டு.

hall'iard, *n.* (கப்.) பாய்மரத்தை உயர்த்தவும் தாழ்த்தவும் பயன்படுங் கயிறு.

hall'mark, *n.* அதிகார முத்திரை; தரக்குறியீடு, தூய்மைக் குறி; பொன் அல்லது வெள்ளிப் பொருள்கள்மீது பொற் கொல்லர் மன்றம் பொறிக்கும் முத்திரை.

hallo', haloa', *n.* அகவு குரல்; *v.* விளி, கூப்பிடு; *int.* கவனத்தை ஈர்க்கும் வியப்பிடைச்சொல்.

halloo', *n.* நாய்களை ஏவிவிடும் கூக்குரல்; *v.* நாய்களைத் தூண்டிக் கூக்குரலிடு; கவனத்தைக் கவரும்படி கூக்குரலிடு; *int.* வேட்டையாடுவதற்கு நாய்களைத் தூண்டும் வியப் பிடைச்சொல்; (தொ.) don't halloo till you're out of the wood, do not halloo until you are out of the wood, பாதுகாப்பான இடஞ்சேரும் வரையில் கூக்குரலிடாதிரு.

hall'ow [1], *n.* தூய்மையர், திருத்தொண்டர்; *v.* தூய்மை யாக்கு; தூய்மையெனப் போற்று.

hall'ow [2], *v.* கூக்குரல்களுடன் துரத்திச்செல்; கூக்குரலிட்டுத் தூண்டு; நாய்கள் முதலியவற்றை ஏவுதற்காகக் கத்து.

Hall'statt, *a.* புராதனக் கற்காலத்தின் நாகரிகப் பகுதியைக் குறிக்கிற.

hallu'cinate, *v.* மாயக்காட்சி விளை, மருட்சியுண்டாக்கு, மயங்கச் செய்.

hallucina'tion, *n.* மாயக்காட்சி, மருட்சி.

halm, *n.* காம்பு, அடிமரம், தண்டு.

hal'ma, *n.* சதுரங்க ஆட்ட வகை, 256 சதுர வடிவ கட்டங்கள் உடைய பலகையின்மீது ஆடும் ஆட்டம்.

hal'o, *n.* ஒளிவட்டம், அகல்வட்டம்; வட்டம், வளையம்; பிரபை; சீர்த்தி; ஒன்றனிடத்துள்ள கவர்ச்சியாற்றல்; *pl.* hal'oes; *v.* ஒளிவட்டமாகச் சூழ்.

hal'ogen, *n.* (வேதி.) உப்பீனி.

halog'enate, *v.* உப்பீனியோடு சேர்.

hal'oid, *n.* (வேதி.) உப்பினம்; *a.* சாதாரண உப்பினது போன்ற கூட்டுகை உடைய; உப்பினஞ்சார்ந்த.

halt [1], *n.* தங்குதல்; நிற்குமிடம்; அசையாநிலை; *v.* அசை வின்றி நில்; சிறிது தங்கு; நிறுத்திவை.

halt [2], *n.* நொண்டி நடத்தல்; *a.* நொண்டியான, முடமான, நொண்டுகிற; *v.* தயங்கிநட; நொண்டு; தயங்கு.

hal'ter, *n.* ஆடு மாடு குதிரைகளுக்கான கண்ணிக் கயிறு அல்லது தோற்பட்டை வார்; தூக்குக் கயிறு; தூக்குச் சாவு; *v.* கண்ணியுடைய கயிற்றினால் கட்டு; தூக்கிலிடு.

hal'ter-break', *v.* கண்ணிக்கயிறு பூட்டிக்கொள்ளக் குதிரை யைப் பழக்கு.

halve, *v.* பாதிகளாகப் பிரி; சமமாகப் பங்கிடு; பாதியாகக் குறை; குறுக்குவெட்டு மரம் ஒவ்வொன்றின் கனத்தையும் பாதியாகக் குறைத்து இணை.

hal'yard, *n.* கப்பலின் பாயை உயர்த்துதற்கும் இறக்குதற்கும் உரிய கயிறு அல்லது கருவி.

ham [1], *n.* தொடையின் பின்புறம், உப்பிட்ட பன்றித்தொடை உணங்கல்.

ham [2], *n.* (வர.) நகரம்; கிராமம்.

hamadry'ad, *n.* தான் வாழும் மரத்துடனேயே மடியும் வன தேவதை; இந்திய நச்சுப்பாம்பு வகை; அபிசீனியக் குரங்கு வகை.

Ham'burg, *n.* கறுப்பு வகைத் திராட்சை; சிறு வீட்டுக் கோழி வகை.

hames, *n. pl.* சுமை இழுக்குங் குதிரைக் கழுத்துப்பட்டைச் சட்டங்கள்.

ham'-fist'ed, ham'-hand'ed, *a.* செப்பமற்ற.

Ham'ite [1], *n.* எகிப்திய அல்லது ஆப்பிரிக்க இனத்தைச் சேர்ந்தவராகிய ஹாம் (Ham) என்பவரின் வழிவழி மரபினர் எனக் கருதப்படுவர்.

ham'ite [2], *n.* கொக்கிவடிவத் தோட்டினை உடைய புதை படிவ நத்தையின உயிர்வகை.

ham'let, *n.* சிறு கிராமம், திருக்கோயில் இல்லாத சிறு கிராமம், தொட்டி, சிற்றூர்.

hammam', hamm'um, *n.* நீராடுதற்கான விடுதி; துருக்கி நாட்டுக் குளிக்கும் அறை.

hamm'er, *n.* சுத்தி, சம்மட்டி; கடிகார நரம்பு; இசைப்பெட்டி நரம்பு; சுடும் படைக்கலத்தில் மருந்தினை வெடிக்கவைக்கும் பொறியமைவு; ஏலம் போடுபவர் ஒரு பொருள் விற்கப் பட்டுவிட்டது என்பதை அடித்து அறிவிக்கப்பயன்படுத்தும் மரக்கொட்டாப்புளி; காதில் உள்ள சிறு எலும்பு; *v.* சம்மட்டி யால் அடி, சம்மட்டியால் அடித்துச் செலுத்து; சம்மட்டியால் அடித்து உருவாக்கு; கடுந்தண்டனை கொடு; போரில் அல்லது விளையாட்டில் அடியோடு தோல்வியுறும்படி செய்; பங்கு மாற்ற வகையில் சம்மட்டியால் மூன்று முறை அடித்துத் தவறியவரென்று அறிவி; பண்டத்தின் விலை இறங்கும்படி செய்; விற்றல் வாங்கல்களில் சோர்வூட்டு; (தொ.) bring to the hammer, ஏலத்திற்குக் கொண்டுவந்து விற்க; come under the hammer, ஏல மூலமாக விற்கப்பெறு; hammer and tongs, கடுஞ் சுமையுடன்; hammer out, திட்டஞ்செய்; knight of the hammer, கருமான்; throwing the hammer, கனத்த சம்மட்டியைக் கொண்டு நடத்தப்படும் போட்டிப் பந்தயம்.

hamm'er-beam, *n.* (க-க.) முதன்மையான உத்தரத்துக்குக் கீழே சுவரிலிருந்து பிதுங்கி வந்திருக்கும் தூலம்.

ham'mer-cloth', *n.* வண்டியில் வலவன் இருக்கையை மூடி இருக்கும் ஒப்பனைத் துணி.

hamm'er-fish, *n.* சம்மட்டி போன்ற தலையையுடைய சுறுமீன் வகை.

hamm'er-head, *n.* சம்மட்டியின் தலைப்பாகம்; சம்மட்டி போன்ற தலையையுடைய சுறுமீன் வகை; ஆப்பிரிக்க பறவை வகை.

ham'mer-lock', *n.* முதுகுக்குப்பின் வளைத்து வைத்துக் கொள்ளும் மல்லன் கைப்பிடி.

hamm'erman, hamm'er-smith, *n.* கருமான்.

hamm'er-toe, *n.* (மரு.) கால் விரல்களில் ஒன்று நிலையாக மேல் நோக்கி வளைந்து மடிந்திருக்கும் அங்கக்கோணல்.

hamm'ock, *n.* கித்தான் அல்லது வலையினாலான ஏணை போன்ற தூங்கு மஞ்சம்; (தொ.) hammock chair, கித் தான் சரிவு நாற்காலி, கித்தான் தொட்டில்.

ham'per [1], *n.* சிப்பங்கட்டுதற்கான கூடைப்பெட்டி; பெரிய கூடை; தின்பண்ட அடைப்பை; மதுக்குப்பி அடைப்பை.

ham'per [2], *n.* கப்பல் அடைசத் தளவாடம்; *v.* தடுத்து இடர் செய்; இடையூறுக்குள்ளாக்கு.

Hamp'ton Court, *n.* தேம்ஸ் ஆற்றின் கரையில் லண்ட னுக்கு அருகே அரசர்களின் அரண்மனையாய் இருந்த கட்டிடம்.

ham'shackle, *v.* குதிரை முதலியவற்றின் தலையையும் முன் னங்காலையும் கயிற்றால் பிணைத்துத் தளைபூட்டு; விலங்கிடு; தடைசெய்.

ham'ster, *n.* கன்னப்பைகளுள்ள பெரிய எலிபோன்ற கொறி விலங்கு வகை.

ham'string, *n.* மனிதர்களின் பின் தொடைத் தசைநார்; நாற்கால் விலங்குகளின் பின்னங்கால் பின் தொடையிலுள்ள பெரிய தசைநார்; *v.* பின் தொடை நரம்புகளை வெட்டி முடமாக்கு.

ham'ulus, *n.* (உள்., விலை., தாவ.) கொக்கி போன்ற முனைப்பு.

hand, *n.* கை; நுதிக்கை; குரங்கின் நான்கு கால்களிலும் நுதிப் பகுதி; நாற்கால் விலங்கின் முன்னங்கால்; மேலாண்மை உரிமை, செயலாட்சி; செயல்முதல்; செயலிற் பங்கு; திருமண வாக்குறுதி; ஏதாவதொன்றைச் செய்பவர்; ஒன்று வெளிப்படுவதற்கு மூலமாயிருப்பவர் அல்லது மூலமாயிருப்பது; திறமை, வேலைப்பாட்டுத்திறம் அல்லது பாணி; மேடைக்கோற்பந்தாட்டம்-மரப்பந்தாட்டம் முதலிய வை வகையில் வரிசை முறை-ஆவட்டம்; எழுதும் விதம் அல்லது பாணி; கையெழுத்து; கைபோன்ற பொருள்; கடிகாரத்தின் முள் அல்லது ஊசி; வாழைக்குலை சீப்பு; புகையிலைக்கட்டு என்பதுபோல் பல்வேறு பண்டங்களின் குறிப்பிட்ட அளவு; நான்கு அங்குலம் கொண்ட நீட்டலளவை; சீட்டாட்ட வகையில் ஓர் ஆட்டக்காரருக்குக் கிடைத்த சீட்டுக்கள்; சீட்டுகளை வைத்துக்கொண்டு இறங்க இருப்பவர்; *v.* கையினால் ஒருவருக்கு உதவி செய், கைகொடுத்து உதவு; (கப்.) பாய் சுருட்டு; கொடு, ஒப்புவி; (தொ.) at first hand, மூலத்திலிருந்து நேரடியாக; at hand, அருகே; at the hand of, இன்னுருடைய செயலினால்; bear a hand, பங்குகொள்; உதவு; by hand, உடலுழைப்பினால், கையினால் இயக்கப்படும் கருவிகளைக்கொண்டு; by the strong hand, வலுக்கட்டாயமாக; come to hand, வந்துசேர்; தோன்று; வரவேற்கப்படு; do a hand's turn, குறுஞ் சிறு முயற்சி செய்; for one's own hand, தனக்காகவே; from hand to mouth, சிக்கனமின்றி; get one's hand in, சீட்டாட்ட வகையில் தனக்குக் கிடைத்த சீட்டுகளை நன்முறையில் பயன்படுத்திக்கொள்ளும் விதத்தில் ஆட்டத்தை வசப்படுத்திக்கொள்; hand and foot, முழுக்க; ஊன்றிய கருத்துடன்; hand and glove, நெருங்கிப்பழகும் முறையில்; hand down, மரபுரிமை வழியாக ஒப்புவி; hand in glove, நெருங்கிய பழக்கத்தோடு; hand in hand, கைகோத்துக்கொண்டு; hand of God, மின்னல்-புயல் ஆகிய வற்றைப்போல் எதிர்பாராத தவிர்க்க முடியாத நிகழ்ச்சி; hand on, மரபு வழக்கமாகக் கொடு அல்லது ஒப்புவி; hand over fist, hand over hand, கயிற்றைப் பிடித்து ஏறும்போது அல்லது நீச்சல் வகையில் செய்வதைப்போல் ஒவ்வொரு கையையும் அடுத்தடுத்து மேலே மேலே வைத்துக் கொண்டு; hand over head, தலைகீழாக, பதற்றமாக; hand to hand, மிக நெருங்கி, கை கலந்து; have one's hand in, தொழில் நடத்திக் கொண்டிரு; வழக்கமாகக் கொண்டிரு; in hand, தயாரிப்பில்; கட்டுக்கடங்கி; lend a hand, கை கொடுத்துதவு, உதவிசெய்; off hand, ஆயத்தமின்றி, உடனுக்குடன்; old hand, அனுபவமுள்ளவர்; on hand, ஆயத்தமாக, எளிதில் கிடைக்கக்கூடியதாக, ஒருவர் உடைமையுட்பட்டதாய்; on the one hand, ஒருசார்; on the other hand, மற்றொரு சார்; out of hand, உடனே, முன் ஆலோசனையின்றி; கட்டுக்கடங்காமல்; poor hand, திறமையற்றவர்; set one's hand to, ஒன்றில் ஈடுபடு, மேற்கொள்; கையெழுத்திடு; take in hand, மேற்கொள்; take off one's hands, விடுவித்துக்கொள்; to one's hand, ஆயத்தமாக; under one's hand, ஒருவரது சரியான கையெழுத்துடன்; upper hand, அதிகாரம், மேம்பாடு; with a heavy hand, வன்முறையாக, கொடுமையாக; with a high hand, தைரியமாக, செருக்குடன்.

hand'-bag, *n.* மகளிர் கைப்பை.

hand'-ball, *n.* எறிந்து பிடிக்கும் பந்து விளையாட்டு.

hand'bell, *n.* கைப்பிடி மணி.

hand'-bill, *n.* துண்டறிக்கை; மெல்லிய அரிவாள் வகை.

hand'-book, *n.* கையேடு, கைச்சுவடி, வழிகாட்டு நூல்.

hand'breadth, *n.* கையகலம்.

hand'craft, *n.* சிறு கைத்தொழில், கைவினை, கைப்பணி.

hand'cuff, *v.* கைவிலங்கு பூட்டு.

hand'cuffs, *n. pl.* கைத்தளை.

hand'ed, *a.* கைகளை உடைய.

hand'er, *n.* கொடுப்பவர்; ஒப்புவிப்பவர்; அனுப்புபவர்; கைமேல் விழும் அடி.

hand'fast, *n.* உறுதியான பிடி; காவல்; ஒப்பந்தம்; திருமண உறுதி; *a.* கட்டுப்பட்ட, ஒப்பந்தம் செய்துகொண்ட; உறுதியான பிடியுள்ள; *v.* திருமண உறுதிசெய்; உறுதியாகப் பிடித்து இணை.

hand'fasting, *n.* திருமண உறுதிப்பாடு.

handfeeding, *n.* விலங்குகளுக்குக் கையினால் தீனி ஊட்டுதல்; இயந்திரங்களில் மூலப்பொருள்களைக் கையினாற் செலுத்துதல்.

hand'ful, *n.* கைப்பிடி, கைப்பிடியளவு, சிறிதளவு, சிறங்கை; சிற்றெண்ணிக்கை; (பே-வ.) தொல்லைதரும் ஆள் அல்லது வேலை.

hand'-gall'op, *n.* கடிவாளப் பிடிப்பிற் செல்லுங் குதிரையின் எளிய பாய்நடை.

hand'-glass, *n.* செடிகளின் பாதுகாப்புக்கான கண்ணாடிச் சட்டம்; கைப்பிடியுடன் கூடிய கண்ணாடி; சிறு உருப்பெருக்காடி.

hand'-grenade', *n.* கையினால் எறியப்படும் வெடிகுண்டு.

hand'grip, *n.* கையினால் இறுகப்பிடித்தல்; கையிற் பிடித்துக் கொள்வதற்கான பொருள்.

hand'grips, *n. pl.* நெருங்கிப்பொருதல், கைகலப்பு.

hand'hold, *n.* கைப்பிடிப்பு; கையினால் பற்றுறுதியாகப் பிடித்தல்.

han'dicap, *n.* போட்டியிடுபவர்களிடையே சமவாய்ப்புக்கு வகை செய்யப் பெற்றுள்ள பந்தயம்-போட்டி; கூடுதலான சுமை; இடையூறு, தடங்கல்; *v.* போட்டியிடுபவர்மேல் தடைவிதி; ஒருவரை வாய்ப்புக் குறைவான நிலையில் இருத்து.

hand'icapper, *n.* பந்தயக் குதிரைகள் இன்ன சுமைகளைத் தாங்கிச் செல்ல வேண்டுமென உறுதிசெய்யும் அலுவலர்; கட்டுப்பாட்டுப் பந்தயத்தில் போட்டியிடும் ஆள் அல்லது விலங்கு.

han'dicraft, *n.* கைவினை, கைவினைத்திறன்.

hand'icraftsman, *n.* கைவினைக் கலைஞன்; *fem.* hand'icraftswoman.

hand'icuffs, *n. pl.* குத்துச்சண்டை.

han'diwork, *n.* கைவினை, கைவேலைப்பாடு.

hand'kerchief, *n.* கைக்குட்டை, சவுக்கம், கழுத்துக்குட்டை; (தொ.) throw the handkerchief, சில விளையாட்டு வகைகளில் பின் தொடரும்படி கூப்பிடு; வரிசை முறையை ஏற்கு மாறு அழை.

han'dle[1], *n.* பிடி, கைப்பிடி; காம்பு, மிதிவண்டி முதலியவற்றின் கைப்பிடிக் காம்பு; பகைவனுக்குப் பயன்படும் செய்தி அல்லது நிகழ்ச்சி; (தொ.) a handle to one's name, பட்டம், விருது.

han'dle[2], *v.* கையினால் பிடி; கையினால் துழாவு, வழங்கு; கைகளினால் தொடு அல்லது உணர்; கையாளு; நடத்து; விவகரி; வாணிகஞ்செய்.

hand'le-bar, *n.* மிதிவண்டி முதலியவற்றின் கைப்பிடிக் காம்பு.

hand'led, *a.* கைப்பிடி உடைய.

hand'-line, *n.* கோல் இல்லாத தூண்டிற் கயிறு.

hand'list, *n.* கைச்சிட்டை.

hand'loom, *n.* கைத்தறி.

hand'maid, hand'maiden, *n.* சேடி, ஏவற்பெண், வேலைக்காரி.

hand'-me-down', *n.* உடன் உடுப்பு; *a.* உடன் உடுப்பதற்காகச் செய்யப்பட்ட.

hand'mill, *n.* ஏந்திரம், திரிகை; கையினால் இயக்கப்படும் தூளை.

hand'-off, *n.* உதை பந்தாட்டத்தில் எதிரியை உந்தித் தள்ளும் செயல் அல்லது விதம்; *v.* உதை பந்தாட்டத்தில் எதிரியை உந்தித் தள்ளு.

hand'-pa'per, *n.* கைபோன்ற நீரெழுத்துள்ள தாள் வகை.

hand'-pick, *v.* ஒவ்வொருவராகத் தெரிந்தெடு.

hand'-play, *n.* கைகலப்புச் சண்டையில் ஒருவரையொருவர் குத்திக்கொள்ளுதல்.

hand'-post, *n.* வழிகாட்டிக்கம்பம்.

hand'rail, *n.* கைப்பிடிக்கிராதி.

hands, *n. pl.* கைகள்; தொழிற்சாலையிற் கைவேலையர்; (தொ.) change hands, கைமாறிச் செல், வேறொருவர் உடைமையாக மாறு; clean hands, குற்றமின்மை, தீதற்ற நிலை, மனத்தூய்மை; good hands, நம்பத்தகுந்த ஆதாரம்; நல்ல பொறுப்பான இடம், நன்கு நடத்துவார்களென நம்பிக்கை கொள்ளத் தக்கவர்களின் பாதுகாப்பு; hands off, எட்டநில்! தொடாதே! hands up, தலைக்குமேல் கைகளை உயர்த்து; தோல்வியை ஒப்புக்கொள்; lay hands on, கைப்பற்று; பெறு; கண்டுபிடி; முரட்டுத்தனமாக நடத்து; கையினால் தொட்டு வாழ்த்துரை; laying on of hands, தீக்கையின்போது சமயத் தலைவர் தீண்டுதல்; off one's hands, ஒருவர் பொறுப்புக்கு உட்பட்டிராத நிலையில், கைமீறிப்போய்விட்ட நிலையில்; on all hands, எல்லாப் படியாலும், எப்படிப் பார்த்தாலும்; அனைவராலும்; on one's hands, ஒருவரது பாதுகாப்பில் அல்லது பொறுப்பில்; சுமையாக அல்லது வில்லங்கமாக உள்ள; show of hands, கைகளைத் தூக்கி அளிக்கப்படும் வாக்கு; strike hands, ஒப்பந்தம் செய்துகொள்; take off one's hands, இன்னுரை இன்ன வேலையினின்றும் விடுவி; wash one's hands, wash one's hands of, பொறுப்பைத் தட்டிக்கழி, கை கழுவிவிடு.

hand'-screen, *n.* நெருப்பு அனல் அல்லது வெய்யில் படாத படி கையில் பிடித்துக்கொள்ளும் மறைப்பு.

hand'-screw, *n.* பற்றிறுக்கி; சுமை உயர்த்து கருவி.

hand'sel, *n.* புத்தாண்டுத் தொடக்கத்தில் புதிய முயற்சி மேற்கொள்ளும்போது வழங்கப்படும் பரிசு; அச்சாரப்பணம்; வரப்போவதன் முன சுவை; முன் உணர்ச்சி; *v.* புத்தாண்டுப் பரிசு கொடு; போணிசெய்; தொடங்கி வை; முயன்று பார்ப்பதில் முதல்வனாயிரு; (தொ.) Handsel Monday, பரிசுகள் வழங்கப்படும் நாளாகிய புத்தாண்டு நாளுக்குப் பின்னர் வரும் முதல் திங்கட்கிழமை.

hand'shake, hand'shaking, *n.* கைகுலுக்குதல்.

hand'some, *a.* அழகிய வடிவமைந்த; நேர்த்தியான உருவமைந்த; தாராள குணமுள்ள, பெருந்தகைமை வாய்ந்த; மிகுதியான.

hand'spike, *n.* நெம்புகோலாகப் பயன்படுத்தப்படும் கோல்.

hand'staff, *n.* சாட்டையின் கைப்பிடி; வேல், ஈட்டி; தடி; *pl.* hand'staffs, hand'staves.

hands'turn, *n.* சிறு செயல்.

hand'-to-hand', *a.* மிக நெருங்கிய; *adv.* மிக நெருங்கிய நிலையில்.

hand'-to-mouth', *a.* கஷ்ட சீவனமுடைய, போதும் போதாத; *adv.* அன்றாடம் தள்ளிக்கொண்டு போகிற நிலையில், போதும் போதாமல்.

hand'work, *n.* கைவேலை, கையினால் இயன்ற வேலை.

hand'writing, *n.* எழுத்து, கையெழுத்து; எழுதும்விதம்; (தொ.) handwriting on the wall, கேட்டின் முன்னறிவிப்பு.

han'dy, *a.* எட்டக்கூடிய, அருகிலுள்ள; வாய்ப்பான, கையாளுவதற்கேற்ற வசதியுள்ள; கைத்திறமுடைய.

hand'y-dand'y, *n.* எந்தக் கையில் பொருள் மறைக்கப்பட்டிருக்கிறதென்பதை ஊகிக்குஞ் சிறுவர் விளையாட்டு வகை.

han'dywork, *n.* = handiwork.

hang [1], *n.* கீழ்நோக்கிய சரிவு அல்லது வளைவு; ஒருபொருள் தொங்கும் விதம்; *v.* தொங்கவிடு, தளர்த்தியாக மாட்டிவை; இறைச்சி முதலியவற்றை உலர்த்துவதற்காகத் தொங்கவிடு; படங்களைச் சுவரில் மாட்டு; ஒட்டு, பொருத்திவை; தடையின்றி இயங்கும் வகையில் கதவினை முளையின்மேல் அமர்த்திவை; தொங்கு, தொங்கவிட்ட நிலையில் இரு; தொங்கல்களைக் கொண்டு ஒப்பனைசெய்.

hang [2], *v.* தூக்கிலிடு; சோர்வுறு; தலைகுனி; (தொ.) get the hang of, தெரிந்துகொள், ஒன்றன் நுண்திறம் அறிந்துகொள்; hang about, சோம்பித்திரி, வட்டமிடு; hang back, விருப்பமின்மை தெரிவி அல்லது காட்டு; hang behind, பின்தங்கு; hang by a thread, உறுதியற்ற நிலைகளைச் சார்ந்திரு; hang, draw, and quarter, குற்றவாளியைத் தூக்கிலிட்டு உயிரோடிருக்கும்போதே வெட்டிக் குடலைப் பிடுங்கிப் பல இடங்களிற் காட்டுவதற்காகத் துண்டுகளாக வெட்டு; hang fire, சுடுபடைக்கல வகையில் நேரம் கடந்துவெடி; செயற்படுவதிற் சுணங்கு; தயங்கு; hang heavy, மெதுமெதுவாகக் கழி; hang in the balance, உறுதியற்ற நிலையில் இரு, ஐயத்துக்கிடமாயிரு; hang off, போகவிடு, தொலைவிலேயே வைத்திரு; hang on, நெருங்கியிருந்து பாராட்டிக் கொண்டிரு, ஒட்டிக்கொண்டிரு, கொண்டது விடாதிரு; தயங்கு; காத்திரு; அண்டியிரு; சுமையாயிரு, அழுத்து; hang one's head, வெட்கப்படு; hang out, அடையாளமாகக் கட்டி வை; hang up, தொங்கவிடு, காலந்தாழ்த்து; hang up one's hat, இருப்பிடம் அமர்த்திக்கொள்.

hang'able, *a.* தூக்குத்தண்டனைக்குரிய.

hang'ar, *n.* விமானம்-வண்டிகள் முதலியவற்றை விட்டு வைப்பதற்கான கொட்டகை.

hang'-dog, *n.* இழிசினன்; *a.* கள்ளப்பார்வை பார்க்கிற.

hanged, *v.* hang [2] என்பதன் இறந்தகால-முற்றெச்ச வடிவம்.

hang'er [1], *n.* செங்குத்தான குன்றின் சரிவிலுள்ள காடு.

han'ger [2], *n.* தூக்கிலிடுபவர்; தூக்கிலிடச் செய்பவர்; கொக்கி; தூக்குச் சங்கிலி; தூக்குக் கம்பி; சிறுவாள்; எழுத்தில் இரட்டை வளைவுடை வடிவம்.

hang'er-on', *n.* ஒருவரோடு அல்லது ஓரிடத்திலேயே ஒட்டிக் கொண்டிருப்பவர், அட்டை, அண்டி வாழ்பவர்.

hang'fire, *n.* சுடுபடைக்கலம் வெடிப்பதில் காலந்தாழ்த்தல்.

hang'ing, *n.* தூக்கிலிட்டுக் கொல்லுதல்; *a.* தொங்குகிற; தொங்கவிடப்பட்டுள்ள; சோர்வுற்றிருக்கிற, வாட்டமான; தூக்கிலிட்டுக் கொல்லப்படத்தக்க, தூக்கிலிட்டுக் கொல்லப் பட இருக்கிற.

hang'ings, *n. pl.* தொங்கல் திரைச்சீலைகள் போன்று தொங்கவிடப்படும் பொருள்கள்.

hang'man, *n.* கொலையாளி, மரணதண்டனையை நிறைவேற்றும் வகையில் தூக்கிலிட்டுக் கொல்பவர்; *a.* போக்கிரித்தனமான.

hang'nail, *n.* நகத்தடியில் உரிந்த தோல்.

hang'-nest, *n.* தொங்கும் கூடு கட்டுகிற பொற்குருவி வகை.

hang'-over, *n.* எச்சம்; குடியின் பின் விளைவுகள்.

hank, *n.* வட்டநூற்சுருள், சிட்டம், வட்டநூற்கண்ணி, நூற்கழி, நூன்முடி; பாய்மரக் கயிறுகளைக் கொண்டு பாய் மரங்களைக் கட்டுவதற்கான கயிறு-இரும்பு முதலியவற்றாலான வளையம்; தடைப்படுத்தும் பிடி; *v.* கண்ணிபோட்டுப் பிடி; கட்டுப்படு, சிக்குறு.

hank'er, *n.* மிகுவிருப்பம், ஆவல்; *v.* வேணவாக்கொள்.

hank'ie, hank'y, *n.* (பே-வ.) கைக்குட்டை.

hank'y-pank'y, *n.* மாயவித்தை; மறைவான வஞ்சக நடவடிக்கை, கீழறுத்தல்.

Han'over, *n.* இங்கிலாந்து வரலாற்றில் ஹானோவர் அரச மரபு, முதலாம் ஜார்ஜ் (George I) முதல் விக்டோரியா வரையுள்ள பிரிட்டிஷ் மன்னர்கள்.

Hans, *n.* செர்மானியருக்கு அல்லது ஆலந்து நாட்டவருக்கு வழங்கும் மறுபெயர்.

Han'sard, *n.* பிரிட்டிஷ் மாமன்ற நடவடிக்கைகளின் அதிகார பூர்வமான அறிக்கை.

Han'sardize, *v.* ஒருவருடைய முந்தைய பதிவான கருத்துக்களை எடுத்துக்காட்டித் திணறவை.

Hanse, *n.* (வர.) வாணிகக்குழு; செர்மன் வாணிக நகரங்களின் கூட்டுக்குழு.

han'som, han'som-cab, *n.* வலவனுக்காகப் பின்புறம் உயர்ந்த இருக்கையுடன் கூடிய இரண்டு சக்கர வாடகை வண்டிவகை.

hap, *n.* தற்செயல் நிகழ்ச்சி, எதிர்பாரா நற்பேறு; *v.* தற்செயலாக நிகழ், நேர்.

hap'ax legom'enon, (கிரே.) *n.* ஒரேவொருமுறை ஆளப்பட்ட சொல்.

haphaz'ard, *n.* வெறும் தற்செயல் நிகழ்ச்சி; *a.* தற்செயலான; *adv.* தற்செயலாக.

hap'less, *a.* ஆகூழ் இல்லாத, மகிழ்ச்சியற்ற.

haplog'raphy, *n.* இருமுறை எழுதவேண்டியதை ஒரு முறையே எழுதுவதால் விளையும் தவறு.

haplol'ogy, *n.* (மொழி.) அண்மையில் உள்ள ஒலியைப் போன்றதோர் ஒலியை உச்சரிக்காமல் விடுதல்.

hap'ly, *adv.* தற்செயலாக, ஒருவேளை.

happ'en, *v.* நிகழ், சம்பவி, வாய்; நேர், தற்செயலாக நேரிடு; நற்பேறு உறு: (தொ.) if anything should happen to me, நான் இறந்துபோனால்.

happ'enings, *n. pl.* சம்பவங்கள், நிகழ்ச்சிகள்.

happ'iness, *n.* நற்பேறு, அதிர்ஷ்டம், செழுமை, வளமை, நிலைத்த நல்வாழ்வுற்ற நிலை.

happ'y, *a.* நல்வாய்ப்புடைய, அதிர்ஷ்டமுடைய, நற்பேறுற்ற; மனநிறைவுடைய; தக்க; நல்வாழ்வுடைய, இன்பமான; (தொ.) happy dispatch, ஜப்பானில் மானங்கெட்டபோது அல்லது மரணதண்டனை விதிக்கப்பட்டபோது குடலைப் பிடுங்கிக்கொண்டு தற்கொலை செய்துகொள்ளுதல்.

happ'y-go-luck'y, *a.* சோம்பல் வாழ்வுடைய, வருவது வரட்டும் என்றிருக்கிற; *adv.* விரும்பியவாறு.

hara-ki'ri, (ஜப்.) *n.*=happy dispatch.

har'am, *n.*=har'em.

harangue', *n.* கும்பல்முன் உயர்குரலுரை; விராவேசப் பேச்சு, வாய்சாலம்; *v.* ஆவேசமாகப் பேசு.

ha'ras, *n.* குதிரைப்பண்ணை.

ha'rass, *v.* அலைக்கழி, நச்சரி, தொல்லைகொடு, கவலையுண்டாக்கு.

harb'inger, *n.* முன்னோடி, குயிலோன், கட்டியக்காரன்; *v.* வரவு அறிவி.

harb'our, *n.* துறைமுகம், கப்பல்துறை; புகலிடம், மறைவிடம், காப்பிடம்; *v.* புகலிடம் அளி; இடங்கொடு; தஞ்சம் புகு; துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சிநில்.

harb'ourage, *n.* புகலிடம்.

har'bour-bar', *n.* துறைமுக வாயிலில் உள்ள மணல்மேடு.

hard, *n.* கரையோரச் சரிவுச்சாலை; கடினம்; கெட்டியான நிலம்; உறுதியான கடற்கரை; கடின உழைப்பு; *a.* உறுதியான, தொட்டால் நெகிழாத, கெட்டியான; கண்டிப்பான; எளிதாயிராத; உணர்ச்சியற்ற, கொடிய; தகுதிக்கு மிஞ்சிய துன்பம் விளைக்கிற, நேர்மையின்றி இன்னல் பயக்கிற; கஞ்சத்தனமுள்ள; பொறுக்கமுடியாத, முரணிய; கண்ணுக்கோ செவிக்கோ இன்பம் பயவாத; தேறல் வகையில் வெறியூட்டுகிற, சாராயங் கலந்துள்ள; விலைவாசிகள் வகையில் அகவிலையான, எட்டாத; (ஒலி.) வல்லோசையுள்ள; பெருமுயற்சி செய்யவேண்டியுள்ள, உழைத்துத் துன்பப்படுகிற; நீர்வகையில் உப்பு வகைகள் கலந்திருப்பதால் நுரைவிடாத; செய்திகள் வகையில் திட்டவட்டமான, ஆதாரமுள்ள; *adv.* மிக உழைத்து; விடாமுயற்சியுடன், கடுமையாக, மிகுதியாக, காலஇடச்சூழ்நிலை வகையில் சிறிதுகூட அனுகூலமாயிராமல்; முழு அளவுக்கு; (தொ.) a hard bargain, சலுகையற்ற கண்டிப்பான பேரம்; hard and fast, விதிகள் வகையில் கண்டிப்பான; hard by, அருகில்; hard cash, ரொக்க நாணயம்; hard court, நிலக்கீல்—காரை முதலிய வற்றைக்கொண்டு பாவப்பட்ட வரிப்பந்தாட்ட மேடை; hard currency, உலோகப்பணம், மதிப்பு திடீரெனக் குறையாத பணம்; hard drinker, விடாமிடாக்குடியன்; hard facts, மறுக்கொணு உண்மைகள் அல்லது செய்திகள்; hard fight, இடைவிடாச் சண்டை; hard hit, கடுந்துன்பத்துக்காளான; hard labour, சில குற்றவாளிகளுக்குத் தண்டனையாக விதிக்கப்படும் கடும் உழைப்பு; hard life, தாங்கமுடியாத வாழ்க்கை, கஷ்ட சீவனம்; hard lines, துரதிர்ஷ்டம், போகூழ், காலக்கேடு; hard-lying money, அலுவலில் உள்ள இடர்ப்பாடுகளை முன்னிட்டு நீர்மூழ்கிக் கப்பல் முதலியவை தொடர்பான பணிகளில் அமர்ந்திருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் கூடுதலான ஊதியம்; hard of hearing, சற்றே செவிடாயுள்ள; hard on, ஒருவரைக் கண்டிப்பதிலோ நடத்துவதிலோ மிகக் கடுமையோடிருத்தல்; hard pad, நாய்க்குட்டிகளின் அடிக்கால்களை மரத்துப்போகவைக்கும் நச்சுநோய் வகை; hard pressed, நெருக்கமாகப் பின்தொடரப்படுகிற; hard put to it, மிக்க இடரான நிலையில்; hard question, விளங்காத அல்லது விளக்க முடியாத கேள்வி; hard row to hoe, கடினமான வேலை; hard set, கெட்டியாக அமைக்கப்பட்ட; முட்டை வகையில் அடைகாக்கப்பட்ட; hard swearing, அடிப்பட்ட சத்தியம்; பொய்க்கரி; hard times, பொல்லாங்கான காலம்; காலக்கேடு; hard up, பணமுடையான, தேவைப்பொருள்களைப் பெற்றிராத; hard water, கனி உப்பு வகைகள் கலந்திருப்பது காரணமாக மண்ணு நீராகப் பயன்படாத நீர்; hard winter, கடுங்குளிர்காலம்; hard words, அரைகுறைப் படிப்புள்ளவருக்கு விளங்காத சொற்கள்; காரமான சொற்கள், சினத்தினுல் மூண்ட சொற்கள்; hold hard, நில், நிறுத்து.

hard'-a-lee', *adv.* காற்றிற்கு மறைவான பகுதிக்கருகில்.

hard'-bake, *n.* வாதுமைப் பண்ணிய வகை.

hard'-baked, *a.* அப்பம் முதலியவை வகையில் கெட்டியாகிற வரையில் சுடப்பட்ட.

hard'-billed, *a.* கெட்டியான அலகுடைய.

hard'-bitt'en, *a.* மூர்க்கமாகச் சண்டையிடுகிற.

hard'board, *n.* மரக்கழிவிலிருந்து செய்து கட்டைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் விறைப்பான அட்டைப்பலகை வகை.

hard'-cured, *a.* மீனைப்போல் உப்பிட்டு வெயிலில் நன்றாக உலர்த்தப்பட்ட.

hard'-drawn, *a.* உலோகக் கம்பி முதலியவை வகையில் வேண்டிய திண்மை பெறும் பொருட்டுக் குளிர்ந்திருக்கும் போதே இழுக்கப்பட்ட.

hard'-earned, *a.* வருந்தி ஈட்டிய.

hard'en, *v.* கெட்டியாக்கு, கடினமாக்கு; கெட்டியாகு, கடினமாகு, இறுகு, வயிரங்கொள்; உணர்ச்சியறச்செய்; உணர்ச்சியற்றுப் போ; வலிமையுள்ளதாக்கு; வலிமையுள்ளதாகு; தீமை செய்வதில் காழ்ப்பேறு.

hard'ened, *a.* கெட்டியாக்கப்பட்ட; உணர்ச்சியற்ற.

hard'face, *n.* இரக்கம் சிறிதுமற்றவர்.

hard'-fav'oured, hard'-feat'ured, *a.* அருவருப்பான முகத்தோற்றமுடைய.

hard'-fist'ed, *a.* உறுதியான அல்லது வலிய முட்டிகள் அல்லது கைகளை உடைய; மூடிய முட்டியுடைய; கஞ்சத்தனமான.

hard'-fought, *a.* தீவிரமாகப் போட்டியிடப்பட்ட.

hard'-got, hard'-gotten, *a.* வருந்தி ஈட்டிய, பாடுபட்டுப் பெற்ற.

hard'-grained, *a.* நெருக்கமும் உறுதியும்வாய்ந்த நுண்மணி அமைப்புள்ள; கவர்ச்சியற்ற, அச்சந்தருந் தோற்றமுடைய.

hard'-hand'ed, *a.* உறுதியான கைகளையுடைய; மட்டு மதிப்பற்ற, திருத்தமற்ற; கடுமையான.

hard'-head'ed, *a.* கூரிய அறிவுள்ள, காரியத்தில் கண்ணுயிருக்கிற, உணர்ச்சி வசப்படாத.

hard'-heart'ed, *a.* உணர்ச்சியற்ற, வன்னெஞ்சுடைய, இரக்கமற்ற.

hard'ihood, *n.* நெஞ்சுரம், அஞ்சாமை.

hard'ish, *a.* சற்றே கடினமான.

hard'-laid', *a.* கயிறு-துணி முதலியவை வகையில் இறுக்கமாக முறுக்கப்பட்ட அல்லது நெய்யப்பட்ட.

hard'ly, *adv.* கடினமாக; கொடுமையாக; இடர்ப்பட்டு; கண்ணற்று; அரிதாக, போதாமல்.

hard'-mouthed, *a.* கடிவாளத்தினால் எளிதிற் கட்டுப்படுத்த முடியாத; எளிதில் மேலாண்மை செய்ய இயலாத.

hard'ness, *n.* வன்மை, திண்மை, வன்குணம்; (கனி.) மற்றொன்றைக் கீறும் ஆற்றல்; மற்றொன்றின் கீறலைத் தாங்கும் ஆற்றல்.

hard'-pan, *n.* மேலீடான மண்ணுக்கு அடிப்படையாயுள்ள கெட்டியான நிலப்படலம்; மிகக்கீழான மட்டம்.

hard'-paste, *a.* சீனக் களிமண்ணினாலும் கருங்கற் பொடியினாலும் செய்யப்பட்ட.

hard'-pressed, hard'pushed, *a.* இக்கட்டுகளுக்காளான.

hard'-rid'ing, *a.* குதிரையேறி விரைந்து செல்லுகிற.

hard'-run, *a.* பெரிதும் நெருக்கப்பட்ட, அலக்கண் உற்ற.

hard'-set, *a.* இன்னல்களால் நெருக்கப்பட்ட; உறுதியான, வளையாத, முறைப்பான.

hard'shell, *a.* கெட்டியான தோட்டினையுடைய; பிடிவாதமாகப் பழமைக்குக் கட்டுப்பட்ட; விடாப்பிடியான.

hard'ship, *n.* இன்னல், துன்பம்; வறுமை; படமுடியாத் துயரம்; தீவினைப் பயன்; பொல்லாங்கான சூழல்.

hard'-vis'aged, *a.* வெறுப்புணர்ச்சி தூண்டும் அல்லது விகாரமூட்டும் முகத்தோற்றமுடைய.

hard'ware, *n.* இரும்பு-செம்பு போன்ற வலிய உலோகங்களாற் செய்யப்பட்ட பொருள்கள், இரும்பு செம்பு வாணிகம்.

hard'wareman, *n.* இரும்புச்சாமான் வணிகன்; கன்னன்.

hard'-won, *a.* அரிதிற் பெற்ற.

hard'wood, *n.* இலையுதிர்க்கும் மரவகைகளின் வயிரம் பாய்ந்த கட்டை.

hard'y[1], *n.* கொல்லன் பட்டடை, உலோகத்தை வெட்டும்போது கீழே ஆதாரமாக வைத்துக்கொள்வதற்கான கெட்டியான இரும்புத் தடை.

hard'y[2], *a.* துணிவுள்ள, முனைப்பான, ஆண்டு முழுதும் திறந்த வெளியில் வளரக்கூடிய; (தொ.) half hardy, குளிர் காலத்தில் மட்டும் பாதுகாப்பு வேண்டியுள்ள; hardy annual, திறந்த வெளியில் விதைக்கக்கூடிய ஓராண்டுப் பயிர்; ஆண்டுதோறும் விவாதத்துக்கு வரும் பொருள்.

hare, *n.* முயல்; (தொ.) first catch your hare, first catch your hare then cook him, ஒன்றினை என்ன செய்வதென்று யோசிப்பதற்குமுன் அது உனக்குக் கிடைப்பதை உறுதி செய்துகொள்; hold with the hare and run with the hounds, run with the hare and hunt with the hounds, குழந்தையைக் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டு; பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழனுயிரு; ஒரே சமயத்தில் எதிரெதிரான இரண்டு கட்சிகளிலும் இரு.

hare'-and-hounds', *n.* சிலர் ஓடிக்கொண்டே காகிதத் துண்டுகளைக் கிழித்தெறிவதும் அவற்றைக்கொண்டு மற்றவர்கள் அவர்களைப் பின்தொடர்வதுமான விளையாட்டு வகை.

hare'bell, *n.* நீலமலர் வட்ட இலைப் பூண்டு வகை.

hare'-brained, *a.* மயக்கமான; கவலையற்ற; துடுக்கான; வெறிகொண்ட.

hare'-foot, *a.* விரைந்த நடையுடைய.

hare'-lip, *n.* முயலுக்கிருப்பதைப் போன்ற பிளவுபட்ட மேல் உதடு, ஒறுவாய்.

har'em, *n.* அந்தப்புரம், உவளகம், உள்ளில், முஸ்லீம்கள் வீட்டில் பெண்கள் புழங்குமிடம்; முஸ்லீம்களது புனித இடம்; (தொ.) harem skirt, இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வழக்கத்திலிருந்த காற்சட்டை போன்ற அமைப்புடைய பாவாடை வகை.

hare's'-ear, *n.* மஞ்சள்மலர்க் குடைப்பூங்கொத்துச் செடி வகை.

hare's'-foot, hare's-foot tre'foil, *n.* நீண்ட மெத்தென்ற பஞ்சுபோன்ற நுனிப்பாகங்களையுடைய மணப்புல் வகை.

ha'ricot, *n.* ஆட்டிறைச்சியும் மொச்சை முதலிய காய்கறிகளும் சேர்த்து அவித்த உணவு வகை; பிரஞ்சு அவரை; (தொ.) haricot bean, பிரஞ்சு அவரை.

hark, *n.* குசுகுசுத்தல்; *v.* உற்றுக்கேள், செவிமடு; உசாவு; தேடிப்புறப்படு; (தொ.) hark away, வேட்டை நாய்களையும் வேட்டைக்காரர்களையும் தூண்டும் வகையில் ஓடு! முன்னேறிச்செல்! hark back, வேட்டை நாய் வகையில் மோப்பம் பற்றுவதற்காகச் சென்ற வழியே திரும்பிவா; முன்சொன்ன பொருளை மீண்டும் குறிப்பிடு; வேட்டைநாய்களைத் திரும்ப அழை; திரும்பிவா!

harl, harle, *n.* சணல்-இறகுகள் முதலியவற்றின் நார் அல்லது மெல்லிழை.

Harlei'an, *a.* ஆக்ஸ்போர்டு கோமான் ராபர்ட் ஹார்லி (Robert Harley Earl of Oxford 1661-1724) சார்ந்த; ஹார்லியின் நூலகம் சார்ந்த.

harl'equin, *n.* இத்தாலிய கேலிக்கூத்தில் ஒரு நாடகப் பாத்திரம்; இங்கிலாந்து ஊமைக்கூத்தில் ஊமைப்பாத்திரம்; கோணங்கி, நகைவேழம்பர்; பலநிறச் சிறகுகளையுடைய கடல் வாத்து வகை; புள்ளிகளையுடைய சிறுநாய் வகை; *v.* கோணங்கிக் கூத்தாடு.

harlequinade', *n.* ஊமைக்கூத்தில் நகைவேழம்பர் முதன்மைப்பங்கு கொள்ளும் பகுதி.

Harl'ey Street, *n.* மருத்துவ வல்லுநர் வசிக்கும் லண்டன் தெரு ஒன்று.

harl'ot, *n.* விலைமகள், பரத்தை; *a.* இழிந்த; காமவெறி பிடித்த; *v.* வேசித்தொழில் புரி.

har'lotry, *n.* பரத்தைமை; ஒழுக்கக்கேடு; போலி.

harm, *n.* தீங்கு, பொல்லாங்கு; *v.* தீங்கு செய்.

harmatt'an, *n.* மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள பாலைவனத்திலிருந்து வீசும் வறண்ட வடகிழக்குப் புழுதிக் காற்று.

harm'ful, *a.* புண்படுத்துகிற.

harm'less, *a.* தீங்கற்ற, குற்றம் இழைக்காத; தீங்கு செய்யப் பெறுத.

harmon'ic, *n.* நரப்பிசைக் கருவிகளில் வில்லினை ஒரு நரம்பின் மேல் இலேசாக இழைப்பதன்மூலம் உண்டாக்கப்படும் குழல் ஒலி; *a.* ஒத்திருக்கிற, இணக்கமான; ஒத்திசையான, இன்னிசையான; முரண்பாடில்லாத, சரியான அளவுகளில் உள்ள; (தொ.) harmonic mean, (கண.) மூன்றுறுப்புக் கொண்ட இசைத்தொடரில் நடுத்தொடர்; harmonic minor, (இசை.) சிறுதிறச் சுரவரிசை வகை; harmonic motion, (இய.,கண.) வட்டத்தின் சுற்று வரையைச் சுற்றி ஒரு சீராகச் செல்லும் புள்ளியிலிருந்து இறங்கும் குத்துக்கோட்டின் அடித்தலம் அவ்வட்டத்தின் விட்டம் நெடுகச் செல்லும் இயக்கம்; தனியிசை இயக்கம்; harmonic pencil, (கண.) இசைக்கற்றை;

harmonic progression, (கண.) இசை விருத்தி, இசைத் தொடர்; harmonic proportion, (கண.) இசைத்தகவுப் பொருத்தம்; harmonic range, (கண.) இசை வீச்சு; harmonic triad, இசைக்கருவிகளின் பொதுநரம்பு.

harmon'ica, *n.* பல்வேறு இசைக்கருவிகளின் பொதுப்பெயர்.

harmon'icon, *n.* = harmonica.

harmon'ics, *n. pl.* இசை ஒலிகள் பற்றிய கோட்பாடு அல்லது ஆய்வுநூல்; கிளைச்சுரம்.

harmon'ious, *a.* இணக்கமான, ஒத்திருக்கிற; பொருத்தமான, மனத்துக்கொத்த; முரண்பாடில்லாத; இன்னிசையான, ஒத்திசையான.

harmon'iphon, harmon'iphone, *n.* இசைப்பட்டையுடைய துளைக்கருவி வகை.

har'monist[1], *n.* (இசை.) பல பண்திற இசை வல்லுநர்; இசைஞர், பாடகர்; இணக்குவிப்பவர்; முரண்பட்டவைகளை இணக்குவிக்க முயல்பவர்.

Har'monist[2], Har'monite, *n.* இயேசுநாதரின் இரண்டாவது வருகையில் நம்பிக்கை கொண்டு மணங்கொள்ளா நோன்பினரான சமயப்பிரிவினரில் ஒருவர்.

harmon'ium, *n.* ஆணிப்பட்டைகளையுடைய இசைப்பெட்டி வகை; கின்னரப்பெட்டி.

harm'onize, *v.* இணக்குவி, இசைவி; இணங்கு, இசை; நேர்படு, பொருந்து; அழகுக்கலை விளைவில் மனதுக்குகந்த தாக்கு; (இசை.) பல பண்திறங்களை இசைவுபடுத்து.

harmon'ogram, *n.* அதிர்வுகளின் நெளிவரைகளைப் பதிவிடும் கருவி வரைந்த வளைகோடு.

harmon'ograph, *n.* அதிர்வு நெளிவரைகளைப் பதிவிடும் கருவி.

harmonom'eter, *n.* ஒலிகளின் இசைவுப்பொருத்தங்களை அளப்பதற்கான கருவி.

harm'ony, *n.* இணக்கு, ஒத்திசைவு, இழுமெனல்; இசைவு, பொருத்தம், நேர்படுதல்; (இசை.) பல பண்திறங்களின் ஒருங்கிசைவு; பண்ணேசை, பண்ணிசை; (தொ.) pre-established harmony, உடலும் உயிரும் படைக்கப்படுவதற்கு முன் அவற்றுக்கிடையில் ஏற்பட்டிருந்த தெய்விகத் தொடர்பு.

harn'ess, *n.* குதிரைக்கலணை, இழுவை விலங்கின் சேணம்; வேலைத் தளவாடம்; தறியில் பாவு நூலை மாற்றுவதற்கான அமைவு; (வர.) காப்புக் கவசம்; *v.* கலணையிடு, சேணம் பூட்டு; போர்க்கவசம் அணிவி; இயங்காற்றலுக்காக ஆறு-அருவி முதலியவற்றைப் பயன்படுத்திக்கொள்; in harness, ஒருவரது வழக்கமான அன்றாட வேலையில் ஈடுபட்டிருக்கிற; விடுப்புப் பெற்றிராத, வேலையினின்றும் ஓய்வு பெற்றிராத.

har'ness-cask, *n.* (கப்.) விளிம்பு மூடியுடன் கூடிய உப்புக் கண்டப் பெட்டி.

harp, *n.* ஆதியாழ், சுரமண்டலம், வில்யாழ், நரப்பிசைக்கருவி வகை; *v.* யாழைமீட்டு; அலுக்கும்படி பேசு; (தொ.) harp on one string, ஒன்றனைப் பற்றியே இடைவிடாமற் பேசிக் கொண்டிரு.

harp'er, *n.* நரப்பிசைக் கருவிவகை வாசிப்பவர்.

harp'ings, *n. pl.* கப்பல் முன்புற வரிப்பலகைகளின் முகப்புப் பகுதிகள்.

harp'ist, *n.* யாழிசைஞர்.

harpoon', *n.* மண்டா, திமிங்கிலங்கள் முதலியவற்றைப் பிடிப்பதற்காகக் கயிறு கட்டியுள்ள ஈட்டிபோன்ற எறிபடை; *v.* மண்டாவினுற் குத்து.

harpoon-gun', *n.* மண்டா எறிவதற்கான துப்பாக்கி.

harp'-seal, *n.* கிரீன்லாந்து (Greenland) மாநிலத்திலுள்ள யாழ் போன்ற வளைவுடைய கடல்நாய்வகை.

harp-'shell, *n.* வில்யாழின் நரம்புகளைப் போன்ற விலாப்புறமுடைய சிப்பிவகை.

harp'sichord, *n.* தந்திகள் இறகினுல் அல்லது தோல் ஊசிகளால் வருடப்படும் ஆணிப்பட்டையுள்ள முற்கால இசைக் கருவி வகை.

harp'y, *n.* கிரேக்க புராணக் கதையில் பறவையின் சிறகுகளும் நகங்களும் உடைய கோரப் பெண்ணுருவ அரக்கியருள் ஒருத்தி; கொடுங்கொள்ளையிடுபவர், சூறையாடி; பெரிய தென்அமெரிக்க கழுகு வகை.

har'py-ea'gle, *n.* பெரிய தென் அமெரிக்க கழுகு வகை.

harq'uebus, *n.* பழைய மாதிரியான துப்பாக்கி வகை.

ha'rridan, *n.* சிடுசிடுப்புவாய்ந்த கிழவி, ஓயாது பூசலிடுங் கிழவி.

ha'rrier[1], *n.* பாழாக்குபவர்; கொள்ளைக்காரர்; தொல்லை தருபவர்.

ha'rrier[2], *n.* முயல்வேட்டை நாய்; சிறு பறவைகளைத் துரத்தி அழிக்கும் வேட்டைப் பருந்து வகை.

ha'rriers, *n. pl.* முயல்வேட்டை நாய்களின் கும்பு; முயல் வேட்டைக் கழகப் பெயர்.

Ha'rris tweed, *n.* ஹெப்ரைடிஸ் (Hebrides) தீவுகளில் செய்யப்படும் கம்பளி ஆடை வகை.

Harrov'ian, *n.* இங்கிலாந்திலுள்ள ஹாரோ (Harrow) உயர்பள்ளியில் படித்தவர்; ஹாரோ வட்டாரத்தில் வாழ்பவர்; *a.* ஹாரோ உயர்பள்ளிக்குரிய; ஹாரோ வட்டாரம் சார்ந்த.

ha'rrow[1], *n.* பரம்பு, பலுகுக்கட்டை, வயலில் மண்கட்டிகளை உடைத்துப் பரப்பாக்குவதற்கான பல கொழுத்தட்டு; *v.* பரம்படி, வயலில் மண்கட்டியுடை; கீறு; புண்படுத்து; மன வருத்தமுண்டாக்கு; (தொ.) under the harrow, பெருந் துயரில் சிக்குண்ட நிலையில்.

ha'rrow[2], *v.* கொள்ளையிடு; அழி; தொந்தரவுசெய்.

harr'owing, *a.* பெரு மனவேதனை தருகிற.

ha'rry, *n.* பாழாக்கு; கொள்ளையடி; சூறையாடு; பறி, தொல்லைப்படுத்து, வதை.

harsh, *a.* கரடுமுரடான, கடுப்பான; உறுத்தலான; முருடான, இன்னாத, இனிமையற்ற; கடுப்பூட்டுகிற, வெறுப்பான, உவர்ப்பூட்டுகிற; காதுக்கு அருவருப்பான, கேட்கப் பொறுக்காத, இன்னா ஓசையுடைய; கண்ணுக்கு உறுத்தலான; விரும்பாச் சுவையுடைய; முரண்சுவையுடைய, முரண்பட்ட, இசைவற்ற; கனிவற்ற, கடுகடுத்த; மட்டுமீறிய கண்டிப்பு வாய்ந்த, கடுமையான; கடுமை காட்டுகிற, கடுமையாகச் செயலாற்றுகிற.

hars'let, *n.* = haslet.

hart, *n.* கலைமான்; செந்நிற மான் கலை; ஐந்து வயதுக்கு மேற்பட்ட ஆண்மான்.

hart'al, (இ.) *n.* கடையடைப்பு, அரசியல் எதிர்ப்புக்கு அடையாளமான கண்டன வேலைநிறுத்தமுறை.

hart'beest, hart'ebeest, *n.* தென் ஆப்பிரிக்க மான்வகை.

harts'horn, *n.* கலைமான் கொம்பு; கலைமான் கொம்புக் கரைசல்; நவச்சாரக் கரைசல்; (தொ.) salt of hartshorn, நவச்சாரம்; spirit of hartshorn நவச்சாரக் கரைசல்.

hart's'-tongue, *n.* தோல்வார் வடிவமுள்ள இலைகளையுடைய சூரல்வகை.

har'um-scar'um, *n.* மடத்துணிச்சல் உள்ளவர்; மடத்துணிச்சல் உள்ள நடத்தை; *a.* மடத்துணிச்சலுள்ள.

harv'est, *n.* கதிரறுப்பு, அறுவடை; அறுவடைப்பருவம்; கூலப்பயிர்; பருவ விளைவு; உழைப்பின் பயன், நல்விளைவு, பெரு வருவாய்; *v.* கதிரறுத்துக்குவி; அறுவடைசெய்; சேர்த்துவை; (தொ.) harvest festival, கதிரறுப்புத் தொடர்ந்த வணக்கவழிபாடு; harvest home, அறுவடை முடிவு; அறுவடை விழா; harvest moon, அறுவடைக்கால எல்லையில் செப்டம்பர் 22, 23க்குள் மூடியும் அரைமதிக் காலத்திய நிறை நிலா; harvest mouse, சிறு சுண்டெலி வகை.

har'vest-bug, *n.* கதிரறுப்புக் காலத்தில் தொந்தரவு கொடுக்கும் சிறு பூச்சி வகை.

harv'ester, *n.* கதிரறுப்பவர்; கதிரறுக்கும் இயந்திரம்; கதிரறுப்புக் காலத்தில் தொந்தரவு கொடுக்கும் சிறு பூச்சி வகை.

har'vest-la'dy, har'vest-lord, *n.* அறுவடை செய்பவர்களில் முதன்மையானவர்கள்.

har'vestman, *n.* கதிரறுப்பு வேலையில் ஈடுபட்டிருப்பவர்.

har'vest-queen, *n.* அறுவடை செய்யப்பட்ட கூலப்பயிரின் கடைசி இணுக்கினால் செய்யப்பட்ட பொம்மை உருவம்; அறுவடைக்காரர்களில் முதன்மையானவர்.

has, *v.* have என்பதன் படர்க்கை ஒருமை வடிவம்.

has'-been, *n.* (பே. வ.) முன்பிருந்த திறல் இழந்தவர்; முன் திறம் இழந்தது; பழமையாகிவிட்ட பொருள்; *pl.* has'-beens.

hash, *n.* கொத்திய இறைச்சிக்கறி; புதிய உருவில் படைக்கப்பட்ட பழஞ்செய்தி; கதம்ப கூளம்; *v.* கொந்து, கொத்து, இறைச்சியினைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டு; (தொ.) hash up, கொத்து, கொந்து; make a hash of, செய்து கெடு; கையாடிக் கெடு; settle one's hash, தீர்த்துக்கட்டு, முற்றுப் புள்ளி வை.

hash'eesh, hash'ish, *n.* கசகசா வகை, சணல் வகைச்செடி; கஞ்சா, அராபியா-எகிப்து-துருக்கி முதலிய நாடுகளில் புகைப்பதற்கு அல்லது மெல்லுவதற்கென உலர்த்தப்படுகிற சணல் செடியின் கொழுந்துகளும் இளம் பகுதிகளும் அடங்கிய சரக்கு.

has'let, *n.* வறுத்து உணவாகக் கொள்ளத்தக்க பன்றிக்குடல்.

hasp, *n.* கொளுவி, கொண்டி, பூட்டு, கொக்கி; நூற்கும் கதிர்; நூற்கண்டு; நூற்கழி, நூற்சிட்டம்; *v.* கொளுவி மாட்டிப்பூட்டு.

hass'ock, *n.* முழந்தாளிட்டு நிற்பதற்கான திண்டு; புற்கற்றை; மென்சுணக்கல் வகை.

hast, *v.* have என்பதன் பழங்கால முன்னிலை ஒருமை வடிவம்.

has'tate, has'tated, *a.* ஈட்டி வடிவமுள்ள; பின்னோக்கிய கவை முள்ளுடைய.

haste, *n.* விரைவு, பரபரப்பு, அவசரம்; ஆத்திரம், பதற்றம்; *v.* அவசரப்படு, பதற்றங்கொள்; விரைந்து செல்; அவசரப்படுத்து, விரைவுபடுத்து, உந்திச் செலுத்து; (தொ.) make haste, விரைந்து செயலாற்று; விரைவாகச் செலுத்து; விரைவுபடுத்து.

ha'sten, *v.* அவசரப்படுத்து, விரைவுபடுத்து; தொழில் விரைவு மேற்கொள்; அவசரப்படு, பதற்றங்கொள்; அவசரமாகச் செல்.

hast'iness, *n.* விரைவு, பரபரப்பு; துடுக்குச்செயல்; எளிதில் சினமூட்டப் பெறும் இயல்பு.

has'ty, *a.* பரபரப்புடைய; விரைவுள்ள; துடுக்கான, எண்ணமல் துணிகிற, முன்பின் பாராத, ஆய்ந்தமைவில்லாத; முன்சினமுள்ள, பதற்றமுடைய.

hast'y-pudd'ing, *n.* கொதிக்கும் பால் அல்லது நீரில் மாவைப் போட்டுக் கிளறியெடுத்த களி.

hast'y-witt'ed, *a.* துடுக்கான, முன்னுய்வற்ற, ஆய்ந்தோய்ந்து பாராத.

hat, *n.* உச்சியும் விளிம்பும் உடைய தொப்பி; போப்பாண்டவரின் திருத்துணைவர் பதவி; *v.* தொப்பியினால் மூடு; தொப்பி தருவித்துக்கொடு; ஒருவருக்கு வணக்கம் செலுத்தும் வகையில் தொப்பியை எடு; (தொ.) as black as my hat, முற்றும் கறுப்பான; hang up one's hat, தங்கிடம் அமைத்துக்கொள்; hat in hand, கெஞ்சுகிற; அடிமைத்தனமான; கெஞ்சிக்கொண்டு; hats off to, சிறப்பெல்லாம் அவருக்கே உரியதாக்குகிறோம்; pass round the hat, send round the hat, பணம் திரட்டும் வேலை மேற்கொள்; நன்கொடை வேண்டிப்பெறு; under one's hat, இரகசியமாக.

hat'band, *n.* தொப்பியைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள இழைப்பட்டை.

hat'-block, *n.* தொப்பியை உருவாக்குவதற்காகக் கீழே வைத்துக்கொள்ளப்படும் மரக்கட்டை.

hatch [1], *n.* கீழ்ப்பாதிக்கதவு, இரட்டைக் கதவின் கீழ்ப்பகுதி; திட்டிக்கதவு; கதவின் புழைவாயில்; சுவரின் இடைப் புழைவாய்; மோட்டுப்புழைவாய்; நிலத்தளப்புழைவாய்; கப்பல் தளப் புழைவாயில்; புழைவாயடைப்பு; வெள்ளவாரி, மதகுவாய்; *v.* திட்டிவாயிலை அடை; (தொ.) under hatches, கப்பல் தளத்துக்குக் கீழே; கண்காணுமல்; வேலை செய்ய வேண்டியிராத நிலையில்; கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டு; தாழ்த்தப்பட்டு; உயிரிழந்து.

hatch [2], *n.* குஞ்சு பொரிப்பு; ஓரீட்டு முட்டைக் குஞ்சுகள்; *v.* முட்டை குஞ்சு பொரிக்க வை; அடைகா; குஞ்சு பொரி; சூழ்ச்சிசெய்து உருவாக்கு; (தொ.) count one's chickens before they are hatched, உறுதியற்ற வருங்கால நிகழ்ச்சியை மிகப் பெரிதும் நம்பியிரு; hatches, catches, matches, and dispatches, பிறப்புகள்-மண உறுதி ஒப்பந்தங்கள்-திருமணங்கள்-சாவுகள் பற்றிய செய்தித்தாள் பட்டியல்.

hatch [3], *n.* செதுக்கப்பட்ட வரி; *v.* பரப்பின்மேல் நேர்த்தியான ஒருபோகு வரிகளை உருவாக்கு.

hatch'-boat, *n.* பாதியளவு தளமிடப்பட்டுள்ள மீன்பிடி படகு வகை.

hatch'ery, *n.* முட்டைகளைக் குஞ்சுபொரிக்க வைப்பதற்குரிய இடம்.

hatch'et, *n.* கைக்கோடரி; (தொ.) bury the hatchet, போர் ஒழி; throw the hatchet, மிகைப்படுத்திக்கூறு; throw the helve after the hatchet, முன்னரே அடைந்த இழப்புடன் மீண்டும் புது இழப்புக்குள்ளாகு.

hatch'et-faced, *a.* இடுக்கமான முகமுடைய.

hatch'ety, *a.* கைக்கோடரி போன்ற.

hatch'ing, *n.* நேர்த்தியான கோடுகள் மூலம் நிழல் வண்ணங்காட்டுதல்.

hatch'ment, *n.* (கட்.) மரபுச்சின்னங்களைத் தாங்கிய கேடயம்; இறந்தவருடைய படைக்கலங்களைக் குறித்த வீட்டு முகப்புத்தகடு.

hatch'way, *n.* (கப்.) தளப்புழைவாய், சரக்குகளை இறக்குவதற்காகக் கப்பல் தளத்திலுள்ள புழை; நிலத்தளத்திலுள்ள புகுவாயில்; சுவரிலுள்ள திட்டிவாயில்; மோட்டிலுள்ள புழைவாய்.

hate, *n.* வெறுப்பு; பகைமை; *v.* பெருவெறுப்புக்கொள், அருவரு, கறுவு; (தொ.) morning hate, பகைப்புல மீது வாடிக்கையான காலைவேட்டுமுறை.

hate'ful, *a.* வெறுப்புணர்ச்சியைத் தூண்டுகிற; அருவருப்பான, வெறுத்தொதுக்கத்தக்க; வெறுப்புக்கொண்டிருக்கிற; வெறுப்பைக் காட்டிக்கொள்ளுகிற.

hat'ful, *n.* தொப்பி கொள்ளக்கூடிய அளவு; *pl.* hat'fuls.

hat'-guard, *n.* தொப்பி காற்றில் அடித்துக்கொண்டு போகாமற் காக்கும் மென்கயிறு.

hath, *v.* have என்பதன் பழையவழக்கு நிகழ்காலப் படர்க்கை ஒருமை வடிவம்.

hat'-peg, *n.* தொப்பி மாட்டி.

hat'pin, *n.* தொப்பியை மயிரோடு இணைப்பதற்கான நீண்ட ஊசி.

hat'-plant, *n.* தொப்பிகள் செய்வதற்குப் பயன்படும் தக்கைச் செடி வகை.

hat'rack, *n.* தொப்பி மாட்டும் சட்டம்.

hat'red, *n.* பெருவெறுப்பு, பகைமை, வன்மம், காழ்ப்பு.

hat'stand, *n.* தொப்பி மாட்டுவதற்கான முளைகளுடன்கூடிய நிலைச் சட்டம்.

hatt'ed, *a.* தொப்பியணிந்துள்ள; தொப்பியினால் மூடப்பட்ட.

hatt'er, *n.* தொப்பி செய்பவர்; தொப்பி விற்பனையாளர்; (தொ.) as mad as a hatter, பைத்தியம் முற்றிய.

hatt'i, hattisherif', (பெர்.) *n.* (வர.) துருக்கி சுல்தானுல் கையெழுத்திடப்பட்ட நிலவரக் கட்டளை.

hat'-trick, *n.* மாந்திரிகன் தொப்பியை வைத்துக்கொண்டு செய்யும் மாயவித்தை; மரப்பந்தாட்டத்தில் அடுத்தடுத்து மும்முறை பந்து வீசி இலக்குக்கட்டைகளை விழ்த்தி வெற்றி பெறுதல்; விளையாட்டுக்களில் ஒரே ஆட்டக்காரர் மூன்று இலக்கு எடுத்தல்.

haub'erk, *n.* போர்க்கவசம், இருப்புக் கவசம்.

haugh, *n.* ஆற்றங்கரை வண்டல்நிலச் சமவெளி.

haught'iness, *n.* தருக்கு, இறுமாப்பு, மேட்டிமை.

haught'y, *a.* செருக்கு வாய்ந்த; ஏளன இறுமாப்புக்கொண்ட, மேட்டிமையுடன் அவமதித்து நடக்கிற.

haul, *n.* இழுப்பு; இழுவை, ஓர் இழுவை வலைப்பட்ட மீன்; ஆதாயத்தின் அளவு, பேறு; இழுக்கப்பட்ட சுமை; *v.* இழு; வலித்திழு; வெட்டியிழு; வண்டி முதலியவற்றில் எடுத்துச் செல்; கப்பலின் போக்கினைமாற்று; காற்று வகையில் திசைமாறு; (தொ.) haul off, haul round, விலக்கிக் கப்பலைத் திருப்பிச் செலுத்து; haul over the coals, கண்டித்துரை, ஒறு, அதட்டு; haul up, இழுத்து நிறுத்து; இயக்கம் தடுத்து நிறுத்துவி; ஓய் நிலைக்குக் கொண்டு வா; ஓய்நிலை மேற்கொள்; விளக்கம் கோரு; haul upon the wind, காற்றடிக்கும் திசையை நோக்கிக் கப்பலைப் பின்னும் திருப்பு.

haul'age, *n.* இழுப்பு; இழுவைக் கூலி; பளுவேறிய சரக்கின் இடமாற்றம்.

haul'er, *n.* இழுவைப்பணியாள்.

haul'ier, *n.* இழுவைப்பணியாள், நிலக்கரிச் சுரங்கவழியின் அடிப்பாகத்துக்குத் தொட்டிகளை இழுத்துச் செல்பவர்; கூலிக்கு வண்டியிழுப்பவர்.

haulm, *n.* அடித்தண்டு; பயறு வகைகளின் தாள்; உருளைக் கிழங்கின் அடித்தண்டு.

haul'yard, *n.* = halyard.

haunch, *n.* இடுப்பு, கடைசி விலா எலும்புகளுக்கும் தொடைக்கும் இடைப்பட்ட உடற்பகுதி; பிட்டத்துடன் கூடிய இடுப்பு; மான் முதலிய விலங்குகளின் கால் துடை இறைச்சி; (க-க.) வளைவு மாடத்தின் உட்பக்கச் சரிவு; கீழ்நோக்கிய கையின் எறிவு; *v.* கையைக் கீழே தாழ்த்தி வீசி எறி.

haunt, *n.* பயிலிடம், ஊடாட்டப்பகுதி, நடமாட்டப்பகுதி; விலங்குகள் வழக்கமாகச் சென்று தீனி கொள்ளும் இடம்; குற்றவாளிகள் பதுங்கிடம்; *v.* அடிக்கடி செல், சென்று ஊடாடு, வழக்கமாக நடமாடு; பயில், பழகி ஊடாடு; விரும்பிக் கலந்து உறவாடு; வழக்கமாகத் தங்கியிரு; ஓயாது வந்து தலையிடு; சுற்றிச்சுற்றி வா; பேய்வகையில் தங்கியிரு, வட்டமிடு; எண்ணங்கள் வகையில் அடிக்கடி வந்து தோன்று; ஓயாது நினைவில் ஊடாடு.

haunt'ed, *a.* பேய் தங்கிவாழ்கிற; பேய்கள் வட்டமிடுகிற; பேயாட்டம் நிரம்பிய.

haut'boy, *n.* நாகசுரம் போன்ற துளை இசைக்கருவி வகை; துளை இசைக்கருவி வகையின் அழுத்து கட்டை; உயரமான பழச்செடி வகை.

haute ecole, (பிர.) *n.* மிகக் கடினமான குதிரை ஏற்ற வித்தைகள்.

hauteur, (பிர.) *n.* செருக்கார்ந்த நடத்தை, அகம்பாவம்.

haut gout, (பிர.) *n.* உச்ச உயர் சுவைநலம்; சிறு கறை.

Havan'a, *n.* கியூபா என்னும் தீவில் செய்யப்படும் சுருட்டு வகை.

have, *v.* கொள்; கொண்டிரு; பெறு; பெற்றிரு; முயன்று பெறு; வைத்திரு; உடைமையாகக் கொண்டிரு; உரிமையாகப் பெற்றிரு; வசமாகக் கொள்; கைக்கொண்டிரு; உறவாகக் கொள்; பண்பாகக் கொள்; படு; தாங்கு; பொறுத்துக்கொள்; அனுபவி, நுகர்பொருளாகக் கொள்; பட்டறி; உணர்; நுகர்; அறி; உளங்கொள்; பொருள் காண், புரிந்து கொள்; தகவல் பெறு; கருது; வெளியிடு; கூறு; வலியுறுத்து; மதி; கொண்டு வா, கொண்டு செல்; போகச் செய்; ஏற்றுக்கொள்; பிறப்பி, ஈனு; இன்றியமையா நிலைபெறு; கடமைப்பட்டிரு; மேனிலை பெறு, விஞ்சிய நிலை அடை; சிக்க வை; ஏமாற்று; முடித்து விடு; (தொ.) have an attempt, முயற்சி செய்; முயன்று பார்; have at, தாக்கு; மேல்விழு; have done, நிறுத்து, முடி; போதும்; have it one's own way, விருப்பப்படியே செய்; have it out, வாதம் முதலியவற்றுல் பூசலை முடிவுசெய்; பல்லைப் பிடுங்கு; have on, ஆடைகளை அணிந்திரு; have one up, நீதிமன்றத்திற்குக் கொண்டு வரும்படி செய்; haves and have-nots, பணக்காரர்களும் ஏழைகளும்.

hav'en, *n.* துறைமுகம்; புகலிடம்; ஏமம்.

hav'ersack, *n.* படைவீரரின் உணவுப்பை.

hav'ildar, *n.* படைத்துறை மேலாள்.

hav'ing, *n.* உடையவராயிருத்தல்; உடைமை; சொத்து.

hav'ings, *n. pl.* உடைமைகள்.

hav'oc, *n.* பேரழிவு; சூறை; *v.* பாழ்படுத்து; (தொ.) cry havoc, சூறைக்குறிப்பாணை இடு.

haw[1], *n.* வேலியாகப் பயன்படும் முட்செடி வகை; முட்செடி வகையின் பழம்; (வர.) வேலி, வளாகம், அடைப்பு.

haw[2], *n.* குதிரை நாய் முதலியவற்றின் மூன்ருவது கண்ணிமைத்திரை; கண்ணின் உட்கோணத்திலுள்ள குருத்தெலும்பு.

haw'buck, *n.* பட்டிக்காட்டான்.

haw'finch, *n.* சிறுபறவை வகை.

haw'-haw', *n.* வெடிச் சிரிப்பு; செயற்கைப் பெருமிதப்பேச்சு; *a.* பேச்சில் செயற்கைப் பெருமிதமான; *v.* வெடிச் சிரிப்புச் சிரி; *int.* பேரொலியுடன் கூடிய பெருஞ்சிரிப்பு.

hawk[1], *n.* பருந்து, வேட்டைப்பறவை வகை; பேராசைக்காரன்; கொடுங் கொள்ளைக்காரன்; *v.* பருந்து கொண்டு வேட்டையாடு; பருந்துப் பாய்ச்சலில் தாக்கு; பூச்சிகளை வேட்டையாடு; (தொ.) know a hawk from a handsaw, குறைந்த பொதுநிலை அளவான பிரித்தறியும் ஆற்றலாவது பெற்றிரு.

hawk[2], *n.* பூசுதட்டு, காரை பூசுபவரின் கைப்பிடியுள்ள சதுரப்பலகை

hawk[3], *v.* விற்பனைக்காக பொருட்களைத் தூக்கித் திரி, கூவி விற்பனை செய்து திரி.

hawk[4], *n.* காறி இருமு, தொண்டையைக் கனைத்துக்கொள்.

hawk'-beaked, hawk'-billed, *a.* கழுகினது போன்ற கூரிய வளைந்த அலகுடைய.

hawk'er, *n.* கூவி விற்பவர், தெருவில் விற்றுத் திரியும் வணிகர்.

hawk'-eyed, *a.* கூரிய பார்வையுள்ள.

hawk'ing, *n.* பருந்து போன்ற வேட்டைப் பறவைகளை வளர்த்துப் பழக்கும் கலை.

hawk'-moth, *n.* ஆப்பிரிக்காவிலுள்ள பெரிய விட்டிற்பூச்சி வகை.

hawk'-nosed, *a.* வளைந்த மூக்குடைய; பருந்தினத்தினது போன்ற மூக்குடைய.

hawk's-bill, *n.* ஆமை வகை.

hawse, *n.* விலாத்துளையிடம், கப்பலின் பக்கங்களில் நங்கூரக் கம்பிவடத் துளைகளிடப்பட்டுள்ள இடம்; இணை நங்கூர இடைவெளியமைவு; கப்பல் தலைப்புக்கும் நங்கூரத்துக்கும் உள்ள இடைவெளி.

hawse'-hole, *n.* கப்பலின் நங்கூரக் கம்பிவடத் துளை.

haws'er, *n.* நங்கூரக் கம்பிவடம், எஃகினுல் ஆன திண்ணிய வடம்.

haw'thorn, *n.* வெண்மை சிவப்பு இளரோஜா முதலிய நிறமுடைய மலர்களும் திண்சிவப்பு நிறமுடைய சிறு பழங்களுங் கொண்ட முட்செடி வகை.

hay[1], *n.* உலர்புல், கால்நடைத் தீவனத்திற்காக அறுத்து உலர்த்தப்பட்ட புல்; *v.* உலர்புல்லாக்கு, புல் உலர்த்து; நிலத்தை உலர்புற் பயிருக்கு உரியதாக்கு; (தொ.) Burgundian hay, கால்நடைத் தீவனமாகப் பயன்படும் செடிவகை; make hay, வெயிலில் காய்வதற்காகப் புல்லைப் புரட்டு; make hay of, தாறுமாறாகப் போடு; அலங்கோலஞ் செய்; make hay while the sun shines, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

hay[2], *n.* நாட்டுப்புற நடனவகை; நாட்டுப்புற ஆடற்கலை.

hay[3], *n.* வேலி, அடைப்பு.

hay[4], *int.* வாட்போரில் வெற்றி ஏற்படும்பொழுது விளையும் வியப்பொலி.

hay'-band, *n.* வைக்கோற்புரி, உலர்ந்த புல்லை முறுக்கிச் செய்த கயிறு.

hay'-bote, *n.* வேலிகளையும் அடைப்புக்களையும் சீர்செய்வதற்காக மரத்தை வெட்டுவதற்கான குடிக்கூலிக்காரருக்குள்ள உரிமை.

hay'-box, *n.* பதனுணப்பெட்டி, அரைகுறையாக சமைக்கப்பட்ட உணவை வைத்து முற்றிலும் பக்குவமடையச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் உலர்புல்லடைத்த காற்றுப் புகாப் பெட்டி.

hay'-cock, *n.* உலர்புல் குவியல், வைக்கோற் போர்.

hay'-fever, *n.* தூசியினுல் ஏற்படும் வேனிற்காலச் சளிக் காய்ச்சல் வகை.

hay'-field, *n.* உலர்புற்களம், புல் உலர்த்துபுலம்.

hay'-fork, *n.* உலர்புல் கவர்க்கோல், உலர்புல்லைப் புரட்டப் பயன்படும் நீண்ட பிடியுடைய கவர்முட்கருவி.

hay'ing, *n.* உலர்புல் அறுவடை; புல் உலர்த்தல்.

hay'loft, *n.* வைக்கோற்பரண், வைக்கோல் வைப்பதற்கான மேலிடம்.

hay'-maker, *n.* புல் உலர்த்துபவர், அறுத்த புல்லைக் கிளறிப் பரப்பிக் காய வைப்பவர்; புல் கிளறி உலர்த்துவதற்கான கருவி.

hay'-mow, *n.* உலர்புற் கட்டு, உலர்புற்கந்து, களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள உலர்புல்.

hay'-rick, *n.* உலர்புற் கட்டு, உலர்புற் போர்.

hay'seed, *n.* உலர்புல்லினின்று உதிரும் புல்விதைகள்.

hay'sel, *n.* உலர்புற் பருவம், உலர்புல் விளைவிக்கும் காலம்.

hay'-ward, *n.* வேலிகாவலர், ஊர் வட்டத்தினுள் கால்நடைகள் நுழைந்து பாழாக்காதபடி வேலிகளையும் அடைப்புக்களையும் கண்காணிக்கும் பொறுப்பாளர்.

hay'-wire, *n.* உலர்புல்லைப் பிணைத்துக்கட்டும் கம்பி; *a.* கோட்டியான; பெருங்குழப்பமான, தாறுமாறான.

haz'ard, *n.* சொக்கட்டானில் சிக்கலான குருட்டடி ஆட்ட வகை; குருட்டடி; இடர்துணி முயற்சி; துணிந்த செய்தி; இடையூறு, தீங்கு; *v.* இடருக்கு உட்படுத்து; இடர் துணிந்திறங்கு; துணிந்து மேற்கொள்ளு; குருட்டடியான ஊகம் செய்; குருட்டடி ஊகமாக உரை.

hazard'ous, *a.* துணிச்சலான; இடரார்ந்த; அபாயமான.

haze[1], *n.* ஆவிமூடாக்கு, வெப்பத்தினுல் அடிக்கடி நிலவுல கடுத்து வளிமண்டலத்தில் ஏற்படும் மங்கல் நிலை; பனியார்ந்த நிலை; தெளிவின்மை; மனக்குழப்பம்; *v.* மங்கலாக்கு; மனக்குழப்பம் உண்டாக்கு.

haze[2], *v.* (கப்.) அதிகப்படியான வேலையால் துன்புறுத்து; எளியாரைக் கொடுமைப்படுத்து, அடக்கி அச்சுறுத்து.

haz'el, *n.* கொட்டையுடைய தொய்வொசிவான தண்டு கிளையுடைய குறுமரவகை; குறுமர வகையின் கொட்டை நிறம்; கண்களின் மங்கலான செம்மை கலந்த பழுப்பு நிறம்.

ha'zel-nut, *n.* குறுமர வகையின் உணவாகக் கொள்ளத்தக்க செம்பழுப்பு நிறக் கொட்டை.

haz'y, *a.* மங்கலான; பனியார்ந்த; தெளிவற்ற; ஐயத்துக்கிடமான; சிறிது குடிமயக்கமுள்ள.

H-bomb, *n.* = hydrogen bomb.

he[1], *n.* ஆண்; *pron.* அவன், அவர்.

he[2], *int.* ஏளனநகைக் குறிப்பு.

head, *n.* தலை; மண்டை; முகடு; சிறப்புக்குரிய இடம்; ஆணைக்குரிய இடம்; மேலிடம்; தலைவர்; ஆட்சித் தலைவர்; முதல்வர்; தலைமை ஆசிரியர்; மூளை; அறிவாற்றல்; தன்னடக்க ஆற்றல்; அறிவின் இருப்பிடம்; கற்பனையின் பிறப்பிடம்; தொழிலில் இயற்கைத்திறம்; இயற்சார்புத்திறம்; முன்னேற்றம்; ஆற்றல்முகப்பு, நீர்மங்களின் உயர வேக அழுத்தங்களின் பயனுன ஆற்றலளவின் மொத்தம்; வலிமை; கிளர்ச்சியாற்றல்; உச்சி; மேல்பகுதி; உருண்ட மேல்புறம்; தலைப்புறுப்பு; முன்புறம்; உருண்டு திரண்ட முன்பகுதி; முகப்புப்பகுதி; நிலமுனைக்கோடி; படைமுகம்; படையணி முகப்பு; உச்ச உயர்நிலை; முடிநிலை, திரண்ட முடிபு; நெருக்கடிக் கட்டம்; முக்கிய பகுதி; முக்கிய செய்தி; மூலம்; பிறப்பிடம்; ஆற்றுமூலம்; ஏரியில் ஆறு வந்து கலக்கும் பகுதி; உயிர்நிலை, உயிர்; நாணயத் தலை உருவம்; படுக்கைத் தலைப்புறம்; தலைப்பாகை; தலை உடை ஒப்பனை; தேறல் நுரைத்தலை; பாலின் மேலாடை; சிக்கட்டுமுகம்; பருவின் முதிர்ப்பமுப்பு; திரள் மலர்க்கொத்து; தழைக் கொத்து; மரத்தின் கிளைதழைத்தலைப்பு; மயிர்முடி; நரப்புக் கருவி வகையின் சுருள்முனைப் பெட்டி உறுப்பு; முரசின் தோல்முகம்; மிதிவண்டியின் முகப்புக்குழாய்; பொறி அமைவின் உயிர்நிலை உறுப்பு; கால்நடை விலங்குகளில் எண்ணுதற்குரிய ஒன்று; தனித்தனி உருப்படி; தனித்தனி ஆள்; *v.* தலை அமைத்துக் கொடு; உச்சி அமை; தலைப்பு அமை; தலையாய் அமை; உச்சியாய் அமைவுறு; தலைப்பாகு; மரஞ்செடி கொடிகளின் தலைப்பகுதியை வெட்டு; உச்சியை வீழ்த்து; தலைமைதாங்கு, தலைமை தாங்கிச்செல்; நடத்திச் செல்; முந்து, முன்செல்; முன்சென்று திரும்பு; மேம்படு; எதிர்; முன்னேறு; முதிர்வுறு, வளர்ந்து முனைப்பாகு; நோக்கித் திருப்பு, நேர்ப்படு; சுற்றிச் சென்று திருப்பு; உதை பந்தாட்டத்தில் பந்தைத் தலையால் தாங்கி எறி; (கப்.) நோக்கிச்செல்; (தொ.) beat person's head off, செயலில் முற்றிலும் விஞ்சு, முழுதும் வெல்; by head and shoulders, வன்முறையாக; மிக மேம்பட்ட; come to a head, மும்மரமாகு; உச்சநிலை பெறு, உணர்ச்சி முகட்டினை அடை; eat one's head off, தகுதி அல்லது மதிப்பிற்குமேல் உணவுச் செலவு வை; from head to foot, உடல் முழுதும்; give a horse his head, அவன் விருப்பம்போல் போகவிடு; go by the head, தலைகுப்புறக் கீழே சென்று அமிழ்; go to one's head, ஒருவரின் நல்லுணர்ச்சியைக் கெடு; have a head on one's shoulders, திறமையும் மன அமைதியோடு கூடிய சமநிலையும் பெறு; head first, head foremost, தலைகீழாக, தலைகுத்தாக; முன்னுய்வின்றி; head over heels, தலைகீழாக; keep one's head, அமைதியாயிரு, பொறுமையை இழக்காதிரு; keep one's head above water, கடனில் மூழ்காதிரு, கடன் படாதிரு; lay heads together, கூடிக் கலந்தாராய், சேர்ந்து ஆய்ந்துபார்; lose one's head, தலை இழ; அமைதியிழ, குழப்பமடை; make head, விரைவாக முன்னேறு; off one's head, கோட்டியுடைய, கிறுக்குவாய்ந்த; old head on young shoulders, இளமையிலே நல்லறிவு வாய்ந்த; out of one's own head, தனிப்பட்ட கற்பனையிலிருந்தே; over head and ears, முற்றமுழுக்க, முழுதும் ஆழ்ந்து ஈடுபட்ட; over one's head, தலைமேலே, காத்திருக்கிற; put thing in person's head, குறிப்பாகத் தெரிவி, கருத்தைத் தூண்டு; put thing out of one's head, எண்ணத்தை நீக்கு; மறந்துவிடு; put thing out of person's head, மறக்கச்செய்; show one's head, தலைகாட்டு, வெளியே வந்து தோன்று; talk person's head off, பேச்சினுல் களைப்படையச் செய்.

head'ache, *n.* தலைவலி, மண்டையிடி; (பே-வ.) பெருந்தொல்லைக்கு இடமான செய்தி.

head'achy, *a.* தலைவலியால் துன்பப்படுகிற; தலைவலி உண்டு பண்ணுகிற.

head'-band, *n.* தலைக்கச்சு; தலைப்பட்டி, தலையில் கட்டிய இழைக்கச்சை; தலைப்பகுதிக் கட்டு.

head'-boom, *n.* கப்பலின் பாய்மர விரிவு.

head'borough, *n.* (வர.) சிறு காவலர், காவல்துறைப் பணியாள்.

head'-boy, *n.* பள்ளியில் சட்டாம்பிள்ளை.

head'-dress, *n.* தலைப்பாகை; பெண்டிர் தலையுடைக் கோலம்.

head'ed, *a.* தலையுள்ள; தலைவருள்ள; முதல்வராகக் கொண்ட.

head'er, *n.* நடத்திச் செல்பவர், வழிகாட்டி; தலைகீழாக நீரில் மூழ்குதல்; சுவரின் முன்பகுதிக்குச் செங்கோணத்தில் பொருத்தப்பட்ட கல் அல்லது செங்கல்; தலையிலடிக்கும் அடி; தலை கொடுத்தடிக்கும் உதைபந்து; மிடாக்களுக்கு மூடி செய்து பொருத்துபவர்.

head'-fast, *n.* நங்கூரம் பாய்ச்சி உறுதியாகப் பிணைப்பதற்காகக் கப்பலின் முன்புறத்திலுள்ள திண் கயிறு.

head'gear, *n.* தலையணி; குல்லாய், தொப்பி.

head'-hunt'er, *n.* எதிரிகளின் தலைகளை வெற்றிச் சின்னங்களாகக் கருதிச் சேர்க்கும் காட்டுமிராண்டி.

head'iness, *n.* மடத்துணிச்சல்; அடங்காத துடுக்குத்தனம்; மட்டற்ற வெறியூட்டுந் திறம்.

head'ing, *n.* காற்பந்தாட்ட வகையில் பந்தினைத் தலையால் மோதுதல்; தலைப்பு; பக்கத்தலைப்பு; தலையங்கம்; சுரங்கப் பாதை அல்லது குடைந்து பாதை அமைப்பதற்காக போடப்படும் முதல் தளமட்டப் பாதை; முன்செல்லுதல்; முன்னேறுதல்.

head'land, *n.* கடலில் புகுந்துள்ள மேட்டுநிலப் பகுதி; நிலக் கூம்பு; வயலின் ஒரு மூலையில் உழுது பயன்படுத்தாது விடப்பட்ட பகுதி.

head'light, *n.* முன்விளக்கு, உந்துவண்டி கப்பல் விமானம் ஆகியவற்றின் முகப்பில் பொருத்தப்பட்டுள்ள வெளிச்சம் மிக்க விளக்கு.

head'line, *n.* பத்திரிகைத் தலைப்பு; வானொலியில் முதலிற் கூறப்படும் செய்திச் சுருக்கம்; (தொ.) hit the headlines, பத்திரிகைத்துறையில் முதன்மையான புகழ் விளம்பரம் பெறு.

head-lin'er, *n.* நிகழ்ச்சிநிரலில் முனைப்பான இடம்பெறுபவர்.

head'long, *a.* தலைகுப்புறப் பாய்கிற, தலைகீழான; துணிகரமான; கண்மூடித்தனமான; பதற்றமான; விரைவுடைய; *adv.* தலைகீழாக; பதற்றமாக, மிகுவிரைவாக; முன்யோசனையற்று.

head'-man, *n.* தலைவன், வழிகாட்டி; குலத்தலைவன்.

head'mark, *n.* தனிப்பட்ட தன்மை.

headmas'ter, *n.* பள்ளித்தலைவர், தலைமையாசிரியர்.

headmis'tress, *n.* பள்ளித்தலைவி, தலைமை ஆசிரியை.

head'-money, *n.* தலைவரி.

head'most, *a.* தலைசிறந்த.

head'-note, *n.* தலைப்புக்குரிய குறிப்பு; சட்ட முற்குறிப்பு; மூலப் பதிவேட்டால் தரப்படும் பொதுக்குறிப்பு.

head'-on [1], *a.* தலையோடு தலையான; முகப்புடன் முகப்பான நிலையுடைய; தலைநேரே சென்று மோதும் நிலையுடைய; (தொ.) head-on collision, இருப்பூர்தித் தொடர்வண்டிகள் முதலியவை வகையில் தலையோடு தலைமுட்டிக்கொள்ளுகிற மோதல்.

head-on' [2], *adv.* தலை நேரே சென்று மோதும்படி, தலை நேராக உள்ள நிலையில்.

head'phone, *n.* தலைமேல் அணியப்படும் தொலைபேசிக் கருவியிலுள்ள 'குரல் வாங்கி'.

head'piece, *n.* தலைச்சீரா; இருப்புத்தொப்பி; தொப்பி, குல்லாய்; தலைப்பகுதி; மண்டை ஓடு; மூளை; அறிவாற்றலுடையவர்; உச்சிப்பகுதி; அச்சுத்துறையில் நூலின் அல்லது அதிகாரத்தின் தலைப்பில் அழகுக்குரிய செதுக்கு ஒப்பனைப்பகுதி.

head'quart'ers, *n.* தலைமை அலுவலகம்; செயற்கள மையம்; தளபதி அலுவலகம்.

heads, *n. pl.* நாணயத் தலையுருவப்பக்கம்.

head'-sea, *n.* கப்பல் செல்லும் திசைக்கு நேர் எதிராக ஓடும் கடல்.

head'ship, *n.* தலைவர் நிலை; தலைவர் பணி.

heads'man, *n.* தலைவெட்டுத் தண்டனையாற்றுபவர்; திமிங்கில வேட்டைக் கப்பல் தலைவர்.

head'spring, *n.* தலையூற்று; மூலப் பிறப்பிடம்.

head'-square, *n.* தலைமீது அணியப்படும் சதுரக்குட்டை, தலை மூடப் பயன்படும் சதுரத் துணி, சவுக்கம்.

head'stall, *n.* தலைப்பகுதியில் மாட்டப்படும் சேணத்தின் பகுதி.

head'-stock, *n.* பொறியின் சுழலும் பகுதிகளிலுள்ள உராய்வு தாங்கி உருளைகளின் தொகுதி.

head'stone, *n.* கல்லறைக்கல்; மூலக்கல், அடிப்படைக்கல்.

head'strong, *a.* தன்முப்புள்ள; பிடிமுரண்டான.

head'-tire, *n.* தலையணி, தலைக்கோலம்.

head'-voice, *n.* பேச்சு பாட்டு வகைகளில் உயர்பதிவுக் குரல்.

head'wait'er, *n.* அருந்தகங்களிலுள்ள தலைமைப் பணியாள்.

head'way, *n.* முன்னேற்றம்; (கப்.) செல்லும் விரைவு அளவு; (க-க.) வளைவின் உயரம்.

head'-wind, *n.* எதிர்க்காற்று.

head'-work, *n.* மூளைவேலை, சிந்திக்கும் வேலை.

head'y, *a.* மூளையைத் தாக்குகிற; வெறியூட்டுகிற; அழற்சியுடைய; முரட்டுத்தனமான; பதற்றமான.

heal, *v.* குணப்படுத்து; நோயாளியை மீண்டும் நலம்பெறச் செய், புண் ஆற்று; காயம் ஆறு, குணப்படு.

heal'-all, *n.* சஞ்சீவி, அனைத்து நோய் மருந்து; பூண்டு வகைகளுக்கு வழங்கும் பெயர்.

health, *n.* உடல்நலம், உடல்நிலை; ஆரோக்கியம்; நோயற்ற நிலை; வாழ்த்தொடு அருந்தும் நீர்.

health'ful, *a.* உடல்நலம் ஆர்ந்த; உடல்நலம் உண்டு பண்ணுகிற; உடல்நலம் பேணுகிற; உடல்நலங் குறித்த; உளநலத்துக்கு உகந்த.

health'-officer, *n.* சுகாதார அலுவலர், உடல்நலத்துறைப் பணிமேலாளர்.

health'y, *a.* உடல்நலமுடைய; உடல்நலத்திற்கு உதவுகிற; நலவாழ்விற்குத் துணைபுரிகிற; நலமார்ந்த.

heap, *n.* குவியல்; *v.* குவி, குவியலாக்கு; வண்டியில் சரக்குகளை ஏற்றி நிரப்பு; பண்புகளைச் சேர்த்துத் திரட்டு, ஒருங்கு குவி; (தொ.) knock all of a heap, strike all of a heap, முழுதும் குழப்பு; முற்றிலும் பாழாக்கு.

heap'stead, *n.* சுரங்க வழியைச் சுற்றிலுமுள்ள செயற்களக் கட்டிடங்கள்.

heap'y, *a.* குவியல் நிறைந்த.

hear, *v.* கேள்; கேள்விப்படு; செய்தியுணர், தகவல்பெறு, அறியப்பெறு; காது கொடுத்துக் கவனி; வழக்குக் கேள்வி முறை செய்; வழக்கு வாதத்தைக் கேள்; முறையீட்டுக்குச் செவிசாய்; வேண்டுகோளைக் காதுகொடுத்துக் கவனி; வேண்டுதலுக்கு இணங்கியருள்; (தொ.) hear from, கடிதம் தூது தகவல்கள் மூலம் செய்தி உணர்; hear! hear! பாராட்டுக் குறிப்பு; hear tell of, பேசுவதைக் கேள்விப்படு, கேள்வியால் அறி.

hear'ing, *n.* செவிப்புல அறிவு கேள்வி; வழக்குக் கேள்வி முறை; கவனம்; உற்றுக்கேட்டல்; கேட்கும் தொலை, கேட்டுணரும் வாய்ப்பு; (தொ.) give fair hearing, ஒரு தலைச் சாய்வின்றி வழக்குக் கேள்விமுறை செய்; hard of hearing, நன்கு காதுகேளாத, செவிடான; out of hearing, காது கேட்கக்கூடாத தொலைவில், கேட்கும்நிலை கடந்து; within hearing, அண்மை இடத்தில்.

hear'ing-aid, *n.* செவிடர் கேட்க உதவும் பொறியமைவு; கேள்விப் புலனை மேம்படுத்தும் பொறியமைவு.

heark'en, *v.* உற்றுக்கேள், கவனித்துக்கேள்.

hear'say, *n.* கேள்வியறிவு; கேட்டுணர்ந்த செய்தி; பொதுப் பேச்சு, ஊர்ச்செய்தி.

hearse, *n.* பாடை; பிண ஊர்தி, இடுகாட்டிற்குச் சவப் பெட்டியை ஏற்றிச்செல்லும் உந்துவண்டி.

hearse'-cloth, *n.* பிணச்சீலை.

heart, *n.* நெஞ்சுப்பை, இருதயம், குருதி ஓட்டத்தை ஊக்கும் உறுப்பு; நெஞ்சு, நெஞ்சுப்பையை உட்கொண்ட மார்புப் பகுதி; நெஞ்சம், இதயம், உணர்ச்சிகளின் இருப்பிடம்; உள்ளுணர்ச்சி; உணர்ச்சி; ஊக்கம்; வீரம்; அன்பு, கனிவு; காதலின் உறைவிடம்; காதல்; உள்ளிடம்; மையம்; உள்ளார்ந்த பகுதி; முக்கிய பகுதி; முக்கிய உறுப்பு; உயிர் நிலை; மரத்தின்காழ், கடுமரம்; நெஞ்சுப்பை வடிவப் பொருள்; இருதய வடிவக் குறியுடைய சீட்டு; இருதயத்தின் நோயுற்ற நிலை; அருமைவிளி; அருமைவிளிக் குறிப்பு; *v.* கிளர்ச்சி யூட்டு; ஊக்கப்படுத்து; திரண்டு உள் முகையாயுருவாகு; (தொ.) after one's heart, after one's own heart, தன் முழு விருப்பப்படி, தன் மனம் போல; at heart, உள்ளார, உள்ளார்ந்த உணர்ச்சியின்படி; break one's heart, ஏமாற்றத்தினாலும் கவலையினாலும் மனமுறிவடை, கவலையினால் மாள்வுறு; by heart, மனப்பாடமாக; cry one's heart out, மனம் விட்டு அழு; கடுமையாக அழுது புலம்பு; eat one's heart out, துன்பத்தால் நலிவுறு, தொல்லைகளால் இளைத்துப்போ, சோர்வடை; find it in one's heart, இடங்கொடு; இணங்கு; இசை; from one's heart, மனமார, வஞ்சகமின்றி; have at heart, மிகுந்த அக்கறைகொள்; have one's heart in one's boots, சோர்வுணர்ச்சி கொள்; have one's heart in one's mouth, அதிர்ச்சியும் கிலியும் கொள்; heart and hand, உள்ளக் கிளர்ச்சியுடன், முழு எழுச்சியுடன்; heart and soul, முழு ஊக்கத்தோடும், முழு ஆற்றலோடும்; heart of oak, பெரு மர வகையின் காழ்; ஆண்மை நிறைந்தவர், அஞ்சா நெஞ்சினர்; heart to heart, மனம்விட்டுப் பழகுகிற; மனம் விட்டுப் பழகும் நிலையில்; in heart, நல்ல மனநிலையில், எழுச்சியுடன்; in one's heart, உள்ளார, மனத்துக்குள்; in one's heart of hearts, உள்ளார்ந்த உணர்ச்சிகளின்படி; lay thing to heart, மனத்தில் வைத்துக்கொள்; near one's heart, nearest one's heart, மிக நெருங்கிய பாசத்துக்கு உரிய; out of heart, மகிழ்ச்சியின்றி, மன ஊக்கமில்லாமல்; வறுமையுற்ற நிலையில்; searching of heart, உணர்ச்சி ஆய்வு; smoker's heart, புகை பிடித்தலால் ஏற்பட்டுள்ள இருதயக் கோளாறு; நெஞ்சுப்பை நோய்; take heart of grace, சோர்வகற்று, தைரியம் கொள்; take to heart, மனக்கவலைகொள்; உணர்ச்சி வயப்படு; wear one's heart upon one's sleeve, உணர்ச்சிகளை வெளிப்படையாகக் காட்டு; win the heart of, அன்பு அடையப்பெறு; காதலிக்கப்பெறு, காதலைப்பெறு; with all one's heart, முழு மனதார.

heart'ache, *n.* மனநோய்; கடுந்துயர்.

heart'-beat, *n.* இதயத் துடிப்பு, நாடித் துடிப்பு; உணர்ச்சி.

heart'-blood, *n.* உயிர்க்குருதி, உயிர்.

heart'break, *n.* அழிதுயர்.

heart'-brea'ker, *n.* காதோரக் குழற்சுருள்; காதற் சின்னமான மயிர்ச்சுருள் கற்றை.

heart'-break'ing, *a.* கடுந்துயர் உண்டுபண்ணுகிற.

heart'-broken, *a.* கடுந்துயர்க்காட்பட்டு, நெஞ்சமுறிவுற்று.

heart'burn, *n.* நெஞ்செரிவு, செரிமானக் குறைவினால் ஏற்படும் நெஞ்சு எரிச்சல்.

heart'burning, *n.* மனநிறைவின்மை, ஓயா அலப்பு; பொறாமை, மனப்புழுக்கம்.

heart'-disease, *n.* நெஞ்சுப்பை நோய்.

heart'-eas'ing, *a.* உள்ளத்திற்கு அமைதிகொடுக்கிற.

heart'en, *v.* ஊக்கப்படுத்து, கிளர்ச்சியூட்டு; எழுச்சிகொள்.

heart'-felt, *a.* மனமார்ந்த, நெஞ்சார்ந்த.

heart'-grief, *n.* நெஞ்சுப்புண், ஆழ்ந்த மனவேதனை.

hearth, *n.* அடுப்படி, அடுப்பங்கரை; அடுப்பின் அடித்தளம்; அடுக்களை, சமையற்கட்டு; குடும்பம்; குடும்ப வீடு; குடும்பச் சூழல்; உலைக்களத்தின் தாழ்பகுதி; கணப்படுப்பு; கணப் பறை.

hearth'-brush, *n.* அடுப்புக்கூட்டும் விளக்குமாறு.

hearth'-mon'ey, hearth'-penn'y, hearth'-tax, *n.* குடும்ப வீட்டின்மீதுள்ள வரி.

hearth'rug, *n.* கணப்பு விரிப்பு.

hearth'stone, *n.* கணப்பு அடுப்பாகப் பயன்படும் கல்.

heart'ily, *adv.* மனமார, நல்லெண்ணத்துடன்; முழு மனத்துடன், மனமுவந்து; மனத் திட்பத்துடன்; பசிச்சுவையுடன், வயிருர, பசிதீர.

heart'less, *a.* உணர்ச்சியற்ற; இரக்கமற்ற; வீரமற்ற; மனச்சான்றின் உறுத்தலுக்கு இடமற்ற வகையில் காழ்ப்புடைய.

heart'let, *n.* சிறு இருதயம்.

heart'-quake, *n.* அச்சம், நடுக்கம்.

heart'-rending, *a.* நெஞ்சம் பிளக்கின்ற, வெந்துயரளிக்கின்ற.

heart'-rot, *n.* காழ்ச்சிதைவு, மரங்களில் காளான்களால் ஏற்படும் உள் வைரச்சிதைவு.

heart's'-blood, *n.*=heart-blood.

heart'-search'ing, *n.* தன்னுய்வு, தன் உணர்ச்சியாய்வு.

hearts'-ease, *n.* மலர்ச்செடி வகை.

heart'-shaped, *a.* இருதய வடிவம்போல் அமைந்துள்ள.

heart'-sick, *a.* ஊக்கமிழந்த; தளர்வுற்ற, சோர்வுற்ற.

heart'some, *a.* எழுச்சி ஊட்டுகிற; மகிழ்ச்சி விளைவிக்கிற.

heart'-sore, *n.* துயரம்; *a.* மனம் புண்பட்ட.

heart'-spoon, *n.* மார்பெலும்புக் குழிவு; மார்பெலும்பு.

heart'-stirr'ing, *a.* உணர்ச்சி கிளறுகிற, ஆழ்ந்த உணர்ச்சிகளை எழுப்புகிற.

heart'-strike, *v.* நெஞ்சூடுருவு, கிலியூட்டு, கலங்க வை.

heart'-strings, *n. pl.* ஆழ்ந்த அன்புத்தளைகள், ஆழ்ந்த உணர்ச்சிக் கூறுகள்.

heart'-to-heart', *a.* மனந்திறந்த, ஒளிவுமறைவற்ற, உண்மை வாய்ந்த; நெருங்கிய பழக்கமுடைய, நெருங்கிப் பழகும் பண்புடைய.

heart'-ur'chin, *n.* (வில.) இருதயவடிவுள்ள கடல்விலங்கு வகை.

heart'-whole, *a.* முழு மனமார்ந்த; பிற ஈடுபாடற்ற; உள்ளார்ந்த; கபடமற்ற; கலக்கமற்ற; முழு ஈடுபாடுடைய.

heart'-wood, *n.* மரக்காழ், மர வைரம்.

heart'y, *n.* மாலுமிகளை விளிக்கும் சொல்; பல்கலைக்கழக வழக்கில் உடற்பயிற்சி விளையாட்டாளர்; *a.* உள்ளார்ந்த; உளங்கனிந்த; ஊக்கமுள்ள; தீவிரமான; ஏராளமான, வளம் நிறைந்த.

heat, *n.* சூடு, பொருள்களின் உயர் வெப்பநிலை; வெப்பம், வானிலையின் கொதிப்பு, பொறுக்கமுடியா வெப்பம்; வெப்ப உணர்ச்சி; உடல் வெப்பு; வெக்கை, புழுக்கம்; மிகு வெப்ப நிலை; வெயிலின் உச்சநிலை; வெப்பமிக்க வேளை; வெப்பார்ந்த வானிலை; தோலின் செந்நிறம்; வியர்க்குறு;

கடுங்காரச்சுவை, எரிப்பு; உணர்ச்சியின் உச்சநிலை; உணர்ச்சி வேகம்; எழுச்சி; சீற்றம்; வெகுளி; பரபரப்பு, விறு விறுப்பு; தீவிர கட்டம்; வேகம், விரைவு; சிற்றின்ப வேகம்; விலங்குப்பெடையின் வேட்கைப் பருவம்; விளையாட்டுக் களில் ஒரு தடவை ஆட்டம்; v. சூடாக்கு; குருதிக் கொதிப் பூட்டு; உணர்ச்சி வேகம் உண்டுபண்ணு; சினமூட்டு; சூடாகு; (தொ.) final heat, முடிவான பந்தய ஆட்டம்; heat barrier, உயர்விசை நிலைகளில் விமானங்களுக்கு இடர் நிலை உண்டுபண்ணும் சூழ்வெப்பவெளிப் படலம்; latent heat, மறைநிலை வெப்பு, வெப்பின் அடங்குநிலை; mechanical equivalent of heat, ஒரு வெப்ப அலகு உண்டுபண்ணு வதற்கு வேண்டிய விசை ஆற்றல்; specific heat, பொருளின் பருமஅலகின் வெப்பநிலையை ஒரு பாகை உயர்த்துவதற்குத் தேவைப்படும் வெப்ப அலகு எண்.

heat'-ap'oplexy, *n.* கடுவெயில் அதிர்ச்சி.

heat'er, *n.* சூடேற்றுபவர்; சூடுட்டுங் கருவி; அறையை அல்லது கட்டிடத்தை வெப்பமாக்கும் அமைவு, சலவைத் துணி தேய்க்கும் பெட்டியைச் சூடாக்குங் கருவி.

heath, *n.* கரம்பு நிலம்; புதர்க்காடு; புதரடர்ந்த சமவெளி; புதர்ச்செடி வகையின் பெயர்.

heath'-bell, *n.* புதர்ச்செடியின் மலர்.

heath'-berry, *n.* கரம்பு நிலங்களில் காணப்படும் புதர்ச்செடி களில் உள்ள கொட்டைக் கனிவகை.

heath'-cock, *n.* கறுப்புக் காட்டுச் சேவல்.

hea'then, *n.* புறச் சமயத்தினர்; கிறித்தவரோ யூதரோ இஸ் லாமியரோ அல்லாத பிற சமயத்தார்; மத நம்பிக்கையற்றவர்; சமயம் பற்றிய அக்கறையற்றவர்; மெய்விளக்கம் பெறுதவர்; *a.* புறச் சமயத்தைச் சார்ந்த, மெய்விளக்கம் பெருத, மத நம்பிக்கையற்ற; சமயப் பற்றற்ற.

heath'endom, heath'enesse, heath'enism, hea'thenry, *n.* புறச் சமயத்தினர் மத அமைப்பு; சமய நம்பிக்கை இல்லாமை; புறச்சமயத்தைச் சேர்ந்த பண்பு; காட்டு மிராண்டித்தன்மை; புறச்சமயம் நிலவியுள்ள உலகப் பகுதிகள்.

hea'ther, *n.* குட்டையான புதர்ச்செடி வகை; (தொ.) set the heather on fire, குழப்பம் உண்டுபண்ணு; take to the heather, நாடு கடத்தப்படு.

heath'er-ale, *n.* ஸ்காத்லாந்து நாட்டில் புதர்ச்செடி வகையின் மலர்களினின்று இறக்கப்பட்ட பேர்போன மதுவகை.

heath'er-bell, *n.* குட்டையான புதர்ச்செடியின் மலர் வகை.

heath'er-mix'ture, *n.* புதர்ச்செடியின் பல்வண்ண மலர் களைப் போன்று பல்வண்ணங்களைக் கொண்ட துணிவகை; *a.* புதர்ச்செடி மலரின் பல்வண்ணங்களைக்கொண்ட.

heath'y, *a.* புதர்ச்செடிகள் நிறைந்துள்ள.

heats, *n. pl.* விளையாட்டுப்போட்டிப் பந்தய முடிவாட்டத்தில் பங்கு கொள்பவர்களை முடிவு செய்யும் துணைப்பந்தய ஆட்டங் கள்; (தொ.) trial heats, துணைப்பந்தயத் தேர்வு ஆட்டங்கள்.

heat'-spot, *n.* வேனிற் கொப்புளம்; வெப்பநிலை அறியும் தோற் பகுதி.

heat'-stroke, *n.* கடு வெப்பத்தினால் ஏற்படும் மயக்க நோய்.

heat'-wave, *n.* அனற் காற்று, வளி மண்டலத்திலுள்ள கடு வெப்பக் காற்று நிலை.

heave, *n.* தூக்கு முயற்சி; எறிவு, வாங்கி வீசும் முயற்சி; அலை எழுச்சி; கடல்நீர் அமிழ்ந்தமிழ்ந்தெழுதல்; பொங்குதல்; மற்போர்ப் பொறித்தட்டு முறைகளில் ஒன்று; (மண்.) படுகைப்பொருள் மாற்றுப் பெயர்ச்சி; கனிப்பாறைப் பொருள் மாற்றுப் பெயர்ச்சி; v. வலித்திழு; வலித்திழுத்து உயர்த்து; வலித்திழுத்துத் தூக்கு; தூக்கி எறி, வாங்கி வீசு; ஏங்கு; நெடுமூச்சு விடு; வீங்கு, விரிவுற்றெழு; கடல் வகையில் எழுந்து பொங்கு; அமிழ்ந்தமிழ்ந்தெழு; நெஞ்செழுந்தெழுந் தமிழ்; அலையெழு; குமட்டு, ஒங்காரி; (மண்.) படுகையில் பொருட்பெயர்ச்சி செய்து மாற்று, கனிப்பாறை வகையில் பொருட்பெயர்ச்சி செய்து மாற்று; (தொ.) heave at, பற்றி யிழு; heave down, கப்பலைப் புரட்டு, துப்புரவு செய்வதற் காக ஒரு பக்கமாகச் சாய்த்துத் திருப்பு; heave ho, நங் கூரத்தை மேலிழுக்கும்போது மாலுமிகள் இடும் கூச்சல்; heave in sight, கண்ணிற்குப் புலப்படு, காட்சியில் வந்து தோன்று; heave of the sea, கப்பல் செல்லும் பாதையில் கடல் அலை எழுச்சியினால் ஏற்படும் ஆற்றல்; heave the log, கப்பலின் வேகத்தைக் கண்டுபிடிப்பதற்காக மரக்கட்டையைத் தண்ணீரில் தூக்கி எறி; heave to, நங்கூரம் பாய்ச்சாமலே கப்பலை நிலைக்குக் கொண்டுவா.

hea'ven, *n.* பேரின்ப வீடு, இன்ப உலகம்; உம்பருலகம்; வானுலகு, கடவுளும் தேவதூதரும் ஊடாடுமிடம்; பேரின்பம்; இறைவன், ஆண்டவன்; வானுயர்வெளி; முகில் மண்டலம்; மீயுயர்நிலை; (செய்.) வான் முகடு, ஆகாயம்; (தொ.) by heaven! good heavens! வியப்பிடைச் சொல், சூளுரைச் சொல்; seventh heaven, heaven of heavens, யூதர்களால் கடவுளின் இருப்பிடமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழாவது விசும்புலகம்; tree of heaven, தேவ மரம், ஆசிய மாநில மர வகை.

hea'ven-born, *a.* தெய்வத் தன்மையுள்ள; தெய்வப் பிறப் புடைய.

hea'venly, *a.* வானுலகத்துக்குரிய; வானவெளி சார்ந்த; தெய்வத் தன்மையுடைய, மனித எல்லை கடந்த மேம்பாடு உடைய, அளப்பருஞ்சிறப்பு வாய்ந்த; (தொ.) heavenly bodies, வானொளிக் கோளங்கள்; heavenly host, தேவ கணங்கள், தேவதூதர் குழு; தேவர்கள்; the Heavenly City, பொன்னுலகு, துறக்கம்; the Heavenly Twins, மிதுனவான் மனை, ஆனி வீடு.

hea'venly-minded, *a.* தூய்மையான, திருநிலையான; கடவுட்பற்றுள்ள, சமயப்பற்றுள்ள.

hea'vens, *n. pl.* வான்முகடு, ஆகாயம்.

heaves, *n. pl.* முட்டடைப்பு, நெஞ்சுப்பைத் தோல் வீக்கத்தால் இருமலுடன் திணறல் ஏற்படும் குதிரைநோய் வகை.

heav'ier-than-air, *a.* வானூர்திகளில் காற்றைவிட எடை குறைந்த வளிப்பையினால் உயர்ந்தியங்காத.

Hea'viside lay'er, *n.* வளிமண்டல அலைத்தடை எல்லைத் தளம், வானொலி அலைகளைத் தடுத்தெறிந்து நிலவுலகு சுற்ற வைக்கும் வளிமண்டல எல்லைத்தளம்.

hea'vy, *a.* எடைமிக்க; கனமான; பாரமேற்றப்பட்ட; மிகுதி யான ஒப்புச் செறிவெண் கொண்ட; அழுத்தும் சுமையுடைய, தாக்குவிசைமிக்க, மோதுவிசையார்ந்த; பொறுப்பான; முக்கியமான; வீறூர்ந்த; கடுகடுப்பான; மொத்தையான; திண்ணிய; மாவகையில் கெட்டியான; அப்பவகையில் பொங் காது கடுந்தோடாயிருக்கிற; உணவு வகையில் எளிதில் செரிக்காத; அலங்கோலமாக ஆடையணிந்த; குரல்வகையில் ஆழ்தொனியுடைய; நிலப்பாதை வகையில் ஒட்டிக்கொள்கிற; கடுநடை வாய்ந்த; துயரார்ந்த; பொறுக்க முடியாத துய ரில் அழுத்துகிற; துயர்வகையில் அழுத்துகிற; துயர் குறித்த; எழுச்சியற்ற; கிளர்ச்சியற்ற; சோர்ந்த; முக வாட்டமான; ஊக்கமில்லாத; எளிதில் கிளர்ச்சியூட்ட இயலாத; கடு உழைப்புக்குரிய; கடுமுயற்சி வாய்ந்த; எளிதில் இயங்காத; முயற்சி எளிமையற்ற; படைக்கல வகையில் பாரமிக்க; படைத்துறை வகையில் கனமான படைக்கலந் தாங்கிய; தொழில் வகையில் பெருந் தரமான பொருளாக்கத்தில் ஈடுபட்ட; (தொ.) heavy chemicals, தொழிற்சாலையில் பெரிய அளவில் ஆக்கப்பெறும் வேதிப் பொருள்கள்; heavy hydrogen, இரட்டை எடைமான முடைய நீரக உருமாறகம்; மும்மடங்கு எடைமானமுடைய நீரக உருமாறகம்; heavy in hand, heavy on hand, குதிரை வகையில் கடிவாளத்தால் அடக்கிப் பிடிக்கப்பட்ட; மழுங்க லான; எளிதில் மகிழச்செய்ய இயலாத; heavy marching order, போர்க்களப் பணிக்காக முழு ஏற்பாட்டோடு கூடிய படையணி; heavy metal, ஒப்புச் செறிவெண்மிக்க உலோகம்; பீரங்கிகள் அல்லது பெரிய அளவு குண்டுகள்; மிகுந்த செல் வாக்கு; பேரளவான உரிமையாற்றல்; செல்வாக்கு மிக்கவர்,

முதன்மையானவர்; வெல்லமுடியாத எதிரி; heavy oil, நிலக் கரிக் கீலினின்று வாலைவடித்தல்மூலம் இறக்கப்படும் நீரைவிடப் பளுவுள்ள எண்ணெய்வகை; heavy water, கடுநீர், நீரகத்தினிடமாக இரட்டை எடைமானமுடைய நீரக உருமாறகம் இடம்பெறும் நீர்; heavy wet, கடுந்தேறல், புளித்த மாவடித் தேறலும் முந்திரித் தேறலும் கலந்த கடுமையான குடிவகை; The Heavies, (படை.) கனமான போர்த்தளவாடங்கள் கொண்ட குதிரைப்படை வகை; பெருந்தரப் பீரங்கிப்படை; time hangs heavy, காலம் மிக மெதுவாகக் கழிகிறது.

heav'y-armed, *a.* பருத்த போர்க்கவசத்தைத் தாங்கிய; எடைமிக்க படைக்கலந் தாங்கிய.

heav'y-hand'ed, *a.* அருவருப்பான; தடுமாற்றமுடைய; அமைப்பில் குறைபாடுடைய; அல்லற்படுத்துகிற.

heav'y-head'ed, *a.* பெரிய தலையுடைய, கனத்த தலையுடைய; மடத்தனமான, அறிவற்ற; சோம்பலான; அரை குறைத் தூக்கமுடைய.

heav'y-heart'ed, *a.* மனத்துயரால் வாடுகிற.

heav'y-lad'en, *a.* கனமான சுமையுடைய, பளுவான பாரம் கொண்ட.

heav'y-spar, *n.* பாரியக் கந்தகை.

heav'y-weight, *n.* மட்டான அளவுக்கு மேற்பட்ட கனமுடைய பொருள்; மட்டளவு மீறிய கனமுடையவர்; கேளிக்கைகளில் கனமிக்க வகுப்பினர்; குத்துச்சண்டையில் தொழில் துறையாளரிடையே 175 கல் எடைக்கும் விருப்பத்துறையாளரிடையே 178 கல் எடைக்கும் மேற்பட்ட கனமுடையவர்.

heb'domad, *n.* ஏழன் அடுக்கு; வாரம்; மனித ஆற்றலை மீறிய ஆவிகளின் தொகுதி.

hebdom'adal, *a.* வார முறையான, வாரந்தோறும் நிகழ்கிற; (தொ.) Hebdomadal Council, வாரந்தோறும் கூடுகிற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆட்சிக்குழு.

hebdom'adary, *n.* திருக்கோயில் அல்லது கன்னிமாடத்து வாரத் தவணைப் பணியாளர்; *a.* வாரஞ் சார்ந்த; வாரந் தோறுங் கூடுகிற.

Heb'e, *n.* கிரேக்க புராண மரபில் தேவர்களுக்கு இன்தேறல் வழங்கும் இளமைப் பருவத்துக்குரிய பெண்தெய்வம்; அருந் தகப் பணிப்பெண்.

heb'etate, *v.* உணர்ச்சி மழுங்கலாக்கு; உணர்ச்சி மழுங்கலாகு.

heb'etude, *n.* மடமை.

Hebra'ic, Hebra'ical, *a.* எபிரேய (Hebrew) மக்களைச் சார்ந்த; எபிரேய மொழியைச் சார்ந்த.

Hebra'ically, *adv.* எபிரேய மொழிமரபைப் பின்பற்றி; எழுத்துவகையில் வலமிருந்து இடமாக.

Heb'raism, *n.* எபிரேயர்களின் பண்பு; எபிரேய சமயம்; எபிரேய சமயக் கோட்பாடு; எபிரேய மொழிமரபு.

Heb'raist, *n.* எபிரேய மொழிப் புலவர்; எபிரேய சமயப் பற்றுடையார்; யூதர் கருத்துக்களை மேற்கொள்பவர்.

Hebraist'ic, Hebraist'ical, *a.* யூதரைச் சார்ந்த; யூதரைப் போன்ற; எபிரேய மொழி சார்ந்த; எபிரேயமொழி போன்ற.

Heb'raize, *v.* எபிரேயமாக்கு; எபிரேய மொழிமரபைப் பயன் படுத்து; எபிரேய வழிகளைப் பின்பற்று.

Heb'rew, *n.* பண்டைய இஸ்ரேயில் (Israel) நாட்டைச் சார்ந்தவர், யூதர்; எபிரேயமொழி, பண்டைக்கால எபிரேய மொழி; விளங்காத மொழி; புரியாத நடை; *a.* எபிரேய மொழியைச் சார்ந்த; யூதர்களைச் சார்ந்த.

Heb'rewess, *n.* யூதப் பெண்.

hec'atomb, *n.* பண்டைக் கிரேக்கரிடையே பெரும் பொதுப் பலியாட்டு, நூறு எருதுகளைப் பலியிடும் பெரும்பலி, படுகொலைத் தொகுதி.

heck, *n.* படல்; ஆறுகளில் மீன்களின் போக்கைத் தடுக்கும் அழிச்சட்டம்.

hec'kle, *n.* சிக்குவாரி, சணல் சிக்கு எடுக்கும் எஃகுச் சீப்பு; *v.* வினாக்களால் திகைக்க வை.

hec'tare, *n.* 2·471 ஏக்கர் கொண்ட பதின்மானமுறை நிலப் பரப்பு அளவை.

hec'tic, *n.* எலும்புருக்கிக் காய்ச்சல், 'உளமாந்தை', எலும் புருக்கி நோயாளி முகஞ்சிவந்த நிலை; *a.* எலும்புருக்கிக் காய்ச்சல் உள்ள; எலும்புருக்கி நோய்க்கு ஆட்பட்ட; நோய் நிலையால் முகஞ்சிவந்த; (தொ.) hectic fever, எலும்புருக்கிக் காய்ச்சல்.

hec'togram, hec'togramme, *n.* நூறு கிராம், 3·527 அவுன்சு கொண்ட எடை அளவை.

hec'tograph, *n.* கைப்படி பெருக்கி, கையெழுத்துப்படி எடுக்கும் கருவி; *v.* கைப்படி பெருக்கியினால் படிகள் எடு.

hec'toliter, hec'tolitre, *n.* நூறு லிட்டர் கொண்ட பதின் மான முகத்தலளவை.

hec'tometer, hec'tometre, *n.* நூறு மீட்டர், 328·089 அடி கொண்ட பதின்மான நீட்டலளவை.

hec'tor, *n.* தற்புகழ்ச்சியாளர்; வீம்பு பேசுபவர், எளியவரைக் கொடுமை செய்பவர், கொடுமைக்காரர்; *v.* மெலியாரைக் கொடுமை செய்; வீரப்புப்பேசு.

hed'dles, *n. pl.* தறியில் ஊடிழை நுழைந்து செல்லும் புழையுடைய கயிறு அல்லது கம்பி.

hedge, *n.* புதர் வேலி; எல்லைக் குறுமர வரிசை; எல்லைக் குத்துக்கல் வரிசை; புல்கரண் எல்லைக்கோடு; எல்லை குறிக்கும் ஆள்வரிசை; எல்லை குறிக்கும் பொருள் வரிசை; எல்லை, வேலி; பந்தயம் சூதாட்ட முதலியவற்றில் இழப்பீட்டுக் கை காப்புத்துறை; இழப்பீட்டுக் கைகாப்பு ஏற்பாடு; *v.* குறு வேலியிட்டு வளை; சூழ், அடைப்புச் செய்; தடு, இடையிட்டுத் தடையமை; தடுத்து நிறுத்து; காவல் செய்; கைகாப்புத் துறை மூலம் இழப்பிலிருந்து தன்னைக் காத்துக்கொள்; தடை வேலிகள் வகு; பொறுப்பேற்றலைத் தவிர்; (தொ.) dead hedge, கல் கம்பு முதலிய உயிரிலாப் பொருள்களாலமைந்த குறு வேலி; dosen't grow on every hedge, அருமையாகவே கிடைப்பது; quickset hedge, வளரும் உயிர்மர வேலி; வளரும் உயிர்ப்புதர் வேலி.

hedge'hog, *n.* முள்ளெலி; முள்ளமைப்புக் காப்புடைய சிற்றுயிர் வகைகளில் ஒன்று; படைத்துறையில் தடையரண் வேலிகளால் சூழப்பட்ட தனிநிறைவுடைய காப்பிடம்; ஒப்புர வற்றவர், பழகப் பொருந்தாதவர்.

hedge'-priest, *n.* தாழ்நிலையுடைய கல்லாச் சமயகுரு.

hedge'-row, *n.* புதர்வேலி வரிசை, மரவரிசை வேலி.

hedge'-school, *n.* கீழ்த்தரப்பள்ளி; திறந்தவெளிப் பள்ளி.

hedge'spar'row, *n.* வேலிக்குருவி, வேலிகளில் உள்ள இசைப் பறவை வகை.

hedon'ic, *a.* இன்பத்துக்குரிய.

hedon'ics, *n. pl.* அறநூலில் இன்பக் கோட்பாடு; உள நூலில் இன்பவியல்.

hed'onism, *n.* அறநூல் வகையில் இன்பமே சிறந்தநலம் என்னுங் கோட்பாடு.

heed, *n.* கவனம்; முன்னறிவு, எச்சரிப்புணர்வு; கருத்துணர்வு; *v.* கவனத்திற் கொள், கருத்திற் கொள்; அக்கறை கொள், பொருட்படுத்து; கூர்ந்துபார்; கருதிப்பேணு; உற்றுக்கவனி.

heed'ful, *a.* கவனமுள்ள; முன் கருதியிருக்கிற.

hee'-haw', *n.* கழுதையின் கனைப்பு; உரத்த சிரிப்பு; *v.* கழுதைபோலக் கத்து.

heel[1], *n.* குதி, குதிகால்; விலங்கின் குளம்புக்கு மேற்பட்ட பின்பகுதி; குளம்பின் பின்பகுதி; காலடி; விலங்கின் பாதம்; புதையடியின் குதியடிக்கட்டை; காலுறையின் குதிகாற் பகுதி; குதிகால் போன்ற பகுதி, பொருட்களின் அடிப் பகுதியின் பின்புறம்; யாழ் வில்லின் கைப்புற அடி; வளை கோற் பந்தாட்டத்தில் கோலின் அடிவளைவு; கப்பலடிக் கட்டையின் பின்புறம்; குதிகாலிற் பொருந்தும் தார்முள்;

அப்பத்தின் மேன்முளை ; அப்ப அடிமுளை ; உறைபாற் கட்டியின் புறமுளை ; *v.* நிலத்தைக் குதிகாலால் தொடு ; ஆடலின்போது குதிகால்மீது இயங்கு ; புதையடிக்குக் குதிகாற் கட்டை இணை ; அருகாகப் பின்தொடர், பின்பற்று ; உதைபந்தாட்டத்தில் பந்தைக் குதிகாலால் பின்னேக்கி எற்று ; வளைகோற் பந்தாட்டத்தில் கோலின் வளைபகுதியால் பந்தடி; போர்க் கோழிகளுக்குக் காலில் குதிமுள் வைத்திணை; குதிகாலைப் பற்றிப்பிடி ; (தொ.) at heel, at one's heels, on one's heels, upon one's heels, அடுத்துப் பின்னுக, பின்பற்றி; be carried with heels foremost, குதிகால் முன்னுகப் பிண வடிவில் கொண்டுசெல்லப் பெறு, இற ; clap by the heels, lay by the heels, விலங்கிடு, சிறைப்படுத்து ; cool one's heels, kick one's heels, காத்திரு; காக்க வைக்கப்பட்டிரு ; down at heels, புதையடி வகையில் குதிகாற் பகுதி சிதைந்த நிலையில் ; ஆள் வகையில் குதிகாற் பகுதி சிதைந்த புதையடி அணிந்து ; have the heels of, தாண்டிச் செல், விஞ்சி விடு, விஞ்சி மேம்படு ; head over heels, heels over head, தலை கீழாக, குட்டிக்கரணமிட்டு; heel and toe, இயல்நடை வேகம் கடவாமல் ; out at heel, புதை மிதி அல்லது காலுறை வழி குதி தெரியும் நிலையில் ; show a clean pair of heels, take to one's heels, தப்பி ஓடு, ஓட்டம் பிடி ; turn on one's heels, சட்டெனத் திரும்பு.

heel[2], *n.* பார ஏற்றத் தாழ்வாலோ காற்றழுத்தத்தாலோ ஏற்படும் கப்பலின் சாய்நிலை; சரிவு; *v.* கப்பல் வகையில் சிறிது சாய்வுறு, சரிவுறு ; சாயச்செய், சரிவுறச் செய்.

hef'ty, *a.* வலிமை வாய்ந்த, திண்ணிய.

hegemon'ic, *a.* தலைமை வாய்ந்த, மேலாட்சி செய்கிற.

hegem'ony, *n.* தலைமை ; கூட்டாட்சித் தலைமைநிலை ; முதன்மையான செல்வாக்கு.

he'gira, *n.* முகமதுநபி நாயகம் மக்கா நகரினின்று (Mecca) மதீனு நகர் (Medina) நோக்கிச் சென்ற ஓட்டம்; இஸ்லாமிய சகாப்த தொடக்கம்.

hei'fer, *n.* ஈனுப்பெற்றம், கன்றுபோடாத இளம்பசு.

heigh, *int.* ஊக்குதற் குறிப்புவிளி ; உசாவுதற் குறிப்புவிளி ; மகிழ்வுக் குறிப்பு.

heigh'-ho, *int.* சோர்வுக்குறிப்பு ; மனக்கசப்புக் குறிப்பு.

height, *n.* உயரம் ; உயர்வு, உயரத்தின் அளவு ; தலைக்கு மேலுள்ள தொலை ; மேல்நோக்கிய தொலை ; மீகோணம் ; உயர்ந்த இடம் ; உயரத்திலிருக்கும் பொருள் ; குன்று ; மேடு ; ஏற்றம், மேல் நோக்கிய சரிவு ; உச்சி ; உச்சநிலை ; உச்ச அளவு ; உயர்சிறப்பு, உயர்தகுதி, மேம்பாடு ; (தொ.) at a height, மேட்டில் ; at its height, உச்சப் படிநிலையில், உச்ச அளவில்; the height of, முழுநிறை உச்ச நிலையான.

height'en, *v.* உயர்வாக்கு ; மிகைப்படுத்து.

hei'nous, *a.* கடுங்கொடிய.

heir, *n.* உரிமையாளர் ; மரபுவழி உடைமைக்கு உரியவர் ; சட்டமுறை உரிமை உடையவர் ; தகுதி உரிமையாளர் ; பண்புக்கு உரிமைப்பட்டவர் ; பின்தோன்றல் ; வழித் தோன்றல் ; மைந்தன் ; முதல்மகவு ; (தொ.) heir apparent, தாய்மருகர், சட்டப்படி உறுதியான பின்னுரிமையுடையவர்; heir in tail, உரிமை வழி மரபில் வகுக்கப்பட்ட நிலையிலுள்ள உரிமையாளர் ; heir male, முழுதுற ஆண் வழியே மரபுரிமை பெற்ற ஆண் உரிமையாளர் ; heir presumptive, மிக நெருங்கியார் பிறர் பிறக்காவிட்டால் உரியராகும் பெற்றியினர்.

heir'ess, *n.* பெண் உரிமையாளர்; பெருஞ்செல்வத்தை உரிமையாகப் பெற்றுவிட்ட மாது; பெருஞ்செல்வத்தை உரிமையாகப் பெற இருக்கிற பெண்.

heir'less, *a.* பின்னுரிமையாளர் இல்லாத.

heir'loom, *n.* சொம்மு, மரபுரிமையாளர் உடைமையுடன் பழக்கப்படி வந்து சேரும் உடைமைப் பொருள் ; குடும்ப மரபாய் வரும் உடைமைப் பொருள், வழிவழி உடைமை.

he'jira, *n.* = hegira.

held, *v.* hold என்பதன் இறந்தகால-முடிவெச்சம்.

heli'acal, *a.* கதிரவனைச் சார்ந்த ; சூரியனுக்கு அணித்தான ; கதிரவன் மண்டலத்தோடியைந்து காணப்பெறுகிற; கதிரவன் மண்டலத்திற்கு மிக அருகாகத் தோற்றுகிற ; (தொ.) heliacal rising, நட்சத்திர வகையில் கதிரவனணிமை காரணமான மறைநிலைக்குப் பின்னைய முதன்முதல் தோற்றம் ; heliacal setting, நட்சத்திர வகையில் கதிரவனணிமை காரணமான மறைநிலைக்கு முற்பட்ட கடைத்தோற்றம்.

Helian'thus, *n.* சூரிய காந்தியை உட்படுத்திய நெருஞ்சிப் பேரினம்.

hel'ical, *a.* திருகுசுழலான.

hel'ices, *n.* helix என்பதன் பன்மை.

Hel'icon, *n.* கிரேக்க கலைத்தெய்வங்களின் இருப்பிடமான மலை ; கவிதை அகத்தூண்டுதலின் தலையூற்று.

Helicon'ian, *a.* கிரேக்க கலைத்தெய்வங்களின் இருப்பிடமான மலைக்குரிய ; கவிதை அகத்தூண்டுதல் தருகிற.

hel'icopter, *n.* செங்குத்தாக மேலெழும்பி இறங்கவல்ல திருகு வானூர்தி.

hel'iocen'tric, *a.* கதிரவன் மண்டல மையத்திலிருந்து காணும் நிலைப்பட்ட ; கதிரவனையே மையமாகக் கொண்ட.

hel'iochromy, *n.* இயல்வண்ண நிழற்படப் பதிவுமுறை.

hel'iogram, *n.* சூரியன் ஒளிக்கதிர்களை எதிரொளிப்படுத்திக் காட்டி அனுப்பப்படும் அடையாளச் செய்தி.

hel'iograph, *n.* ஒளி படிவதால் ஏற்படும் செதுக்குருவம், நிழற்படமுறைச் செதுக்குப்படிவம்; கதிரவனைப் படம்பிடிக்கும் நிழற்படக் கருவியமைவு ; கதிரவன் ஒளிக்கதிர்களை எதிரொளிப்படுத்திக்காட்டி அடையாளச் செய்தி அனுப்பும் முறை ; ஒளிச்செறிவுமானி ; *v.* கதிரவன் ஒளிக்கதிர்களை எதிரொளிப்படுத்திக் காட்டி அடையாளச் செய்தி அனுப்பு ; ஞாயிற்றின் ஒளிபடுவதால் ஏற்படும் மாறுபாட்டு மூலம் நிழற்படமெடு.

hel'iograph'ic, *a.* கதிர்மண்டல ஆய்வுவிளக்கம் சார்ந்த ; ஒளியூடுருவு செதுக்குமானம் பற்றிய ; கதிர் எதிரொளிப்பு அடையாளச் செய்தி குறித்த.

heliog'raphy, *n.* கதிரவன் மண்டலம் பற்றிய ஆய்வு விளக்கம் ; ஒளியூடுருவலால் ஏற்படும் செதுக்குமானம் ; கதிரவன் ஒளிக்கதிர்களை எதிரொளிப்படுத்திக்காட்டி அடையாளச் செய்தி அனுப்புதல்.

hel'iogravure', *n.* நிழற்படமுறைச் செதுக்குமானம், நிழற்பட எதிர்ப்படியை உலோகத் தகட்டுக்கு மாற்றி இழைத்த செதுக்குவேலை.

heliolith'ic, *a.* பரிதிக்கல் பண்பாடு சார்ந்த, கதிரவன் வழிபாடும் வழிபாட்டுப் பெருங்கல்லும் இடம்பெறும் நாகரிகப் படிக்குரிய.

heliom'eter, *n.* குறுக்கைமானி, கதிர்மண்டல விட்டத்தையோ விண்மீன்களிடைத் தொலையையோ அளக்கும் கருவி.

hel'ioscope, *n.* கண்ணுக்குக் கேடின்றிக் கதிரவன் மண்டலத்தைக் காண்பதற்கு உதவும் கருவி.

helios'is, *n.* வெயிற்காட்ட நோய் ; (தாவ.) கண்ணடி வழி ஒளிக்கதிர்கள் செறிவுறலால் இலைகள்மீது ஏற்படும் கறைப் புள்ளிகள்.

hel'iothe'rapy, *n.* கதிர் மருத்துவமுறை, கதிரொளிப்படிவு மூலம் நோய் குணப்படுத்தும் மருத்துமுறை.

hel'iotrope, *n.* மணமிக்க கருஞ்சிவப்பு மலர்களையுடைய செடிவகை ; கருஞ்சிவப்பு மலர்வகையின் மணம் ; குருதிநிற மணிக்கல் வகை.

hel'iotrop'ic, *a.* (தாவ.) ஒளி நோக்கிய சாய்வுத்தொடர்பான, ஒளி நோக்கிச் சாய்கிற.

heliot'ropism, *n.* தாவரங்களின் ஒளி நோக்கிய சாய்வு.

hel'iotype, *n.* பசை ஒளிப்படம், ஒளிபடியும் பசைபூசிய தகட்டினின்று கிடைக்கும் படம்.

hel'iscoop, *n.* வானூர்திக் காப்புத் திருகுவலை.

hel'ium, *n.* பரிதியம், கதிரவன் மண்டலத்திலிருப்பதாகக் கருதப்பட்ட தனிமவளி, 1868-இல் முதல்முதலாகக் கண்டுணரப்பட்ட தனிமம்.

hel'ix, *n.* திருகு சுழல், திருகுசுழல் வட்டம்; புறச்செவி விளிம்பு; நத்தைப் பேரினம்; (க-க.) திருகுசுழல் ஒப்பனைச் சிற்பம்.

hell, *n.* நரகம்; பழியாவிகள் தண்டனை நுகரும் உலகம்; வெம்பழி ஆற்றல் தெய்வங்களின் தொகுதி; துன்ப உலகு; இறந்தோர் உலகு; கடுந்துயர் நிலை; பழிநிலை; சூதாடுமனை; ஆட்ட வகைகளில் சிறைகாப்புக் கட்டம்; தையல்மணைக் கூளக்குழி; *int.* வெறுப்புக்குறிப்பு, சீற்றக்குறிப்பு; (தொ.) a hell of a noise, மிக்க பேரொலி; give hell, தாங்கமுடியாத் தொல்லைகொடு; hell for leather, கடு வேகத்தில்.

hell'-cat, *n.* குதிரி, அடங்காப் பிடாரி.

hell'ebore, *n.* பித்தத்தைக் குணப்படுத்துவதாகப் பண்டு நம்பப்பட்ட செடி வகைகளில் ஒன்று; ரோசா மலர்ச்செடி வகை.

Hell'ene, *n.* இனத்தூய்மையுடைய பண்டைக் கிரேக்கர்; தற்கால கிரேக்க நாட்டின் குடியுரிமையினர்.

Hellen'ic, *a.* கிரேக்கருக்குரிய, கிரேக்க இனத்துக்குரிய.

Hell'enism, *n.* கிரேக்க சொல்மரபு; கிரேக்க இலக்கணத் தொடர்பு மரபு; கிரேக்க இனப் பண்பாடு; கிரேக்க இனத்தைப் பார்த்துப் பின்பற்றிய போலிப்பண்பாடு; கிரேக்க தேசியம்; கிரேக்க மரபுவழி பின்பற்றும் கோட்பாடு; கிரேக்க மொழி பின்பற்றும் பண்பு.

Hell'enist, *n.* கிரேக்கமொழி வழங்கும் கிரேக்கரல்லாதவர்; கிரேக்கமொழி வல்லுநர்; கிரேக்கமொழியும் வழியும் பின்பற்றியவர்; கிரேக்கமொழியும் வழியும் பின்பற்றிய யூதர் (Jew).

Hellenis'tic, Hellenis'tical, *a.* கிரேக்கரைச் சார்ந்த; அலக்ஸாண்டர் காலத்துக்குப்பின் ஏற்பட்ட அயற்கலப்பு மிகுந்த நிலையுடைய கிரேக்க இனமொழிப் பண்பாடுகளுக்குரிய.

hell'-hound, *n.* நரகக் கொடும்பேய்; நரக வேட்டை நாய்.

hell'ish, *a.* நரகத்துக்குரிய; நரகம் போன்ற; மிகக்கொடிய; பயங்கரமான.

hello', *n.*, *v.* = hallo.

hell'ward, *a.* நரகம் நோக்கிய; *adv.* நரகம் நோக்கி.

helm[1], *n.* தலைக்கவசம், கவசத் தலைப்பகுதி; தலைக்கவசம் போன்ற பொருள்; புயலின்போது அல்லது புயலுக்குமுன் மலைமுகட்டில் தவழும் முகில்; வான்கோழித் தலைச்சூட்டு; மலர்களின் மீ உயர் கவிவிதழ்.

helm[2], *n.* பயின்கருவிப்பிடி, சுக்கான்பிடி; பயின்கலம், சுக்கான் திருப்புவதற்குரிய இடம்; ஆட்சிப்பிடி, செயலாட்சி, இயக்குமுதன்மை; *v.* தலை நின்றியக்கு; (தொ.) take the helm of, தலைமையிடங் கைக்கொள், ஆட்சி மேற்கொள்.

helm'-cloud, *n.* புயலின்போது அல்லது புயலுக்குமுன் மலைமுகட்டின்மீது காணப்படும் முகில்கற்றை.

hel'met, *n.* தலைக்கவசம், போர்வீரர் கவசத் தலைப்பகுதி; தீயணைப்புப் படைவீரர் தலைகாப்புக் கவிகை; வேனிற் காப்பான அழுத்தத் தோல்தொப்பி; நெட்டிக்காப்பிட்ட வேனிற் பருவத் தொப்பி; வடிகல முகடு; கிளிஞ்சில் வகையின் சிப்பி; (தாவ.) மலர் வகைகளிற் புறவிதழின் வளைந்த மேன்முகடு.

hel'minth, *n.* குடற் புழு.

helminthi'asis, *n.* குடற்புழுவினால் ஏற்படும் நோய்.

helmin'thoid, *a.* குடற்புழு போன்ற உருவுடைய.

helminthol'ogy, *n.* ஒட்டுயிரிகளான குடற்புழு பற்றிய ஆய்வுநூல்.

helms'man, *n.* கப்பல் இயக்குநர்.

hel'ot, *n.* ஸ்பார்ட்டா (Sparta) என்ற பண்டைக் கிரேக்க நகரிலுள்ள அடிமை வகுப்பினருள் ஒருவர்; அடிமை வகுப்பினர், உரிமையற்றவர்.

hel'otry, *n.* அடிமைகளின் தொகுதி; அடிமை வகுப்பினர் குழு.

help, *n.* உதவி, துணை, ஆதரவு; துணைவலு, ஊக்காற்றல்; தீர்வு வழி, போக்கு, புகல்; உணவு பரிமாற்றம்; உதவியாளர், ஆதரவாளர்; வீட்டு வேலையாள்; தொழிலாளி; *v.* உதவு, துணையளி, ஆதரவு வழங்கு; வெற்றியில் பங்குகொள்; செயலில் துணைசெய்; வகைதுறை கருவி வழங்கு; தேவையானவை அளித்துதவு; பகுதி கொடுத்துதவு, பங்கு பெற்றளி; பங்கிட்டளி; துயர் நீக்கு, நோவு அகற்று; தணி; தடு; காப்பாற்று; செயல் விலகியிரு; அருள் துணையளி; (தொ.) cannot help it, cannot help doing, செய்யாமலிருக்க முடியவில்லை; lady help, வீட்டுத்தலைவிக்குத் தோழமையுதவியானவள், உடனுதவியாள்; mother's help, உயர்தரச் செவிலி; no help for it, வேறு வழியில்லை.

help'ful, *a.* பயனுடைய, உதவியான; உதவி செய்கிற.

hel'ping, *n.* உதவுதல்; பரிமாறுகை; பரிமாறிய பகுதி; *a.* உதவுகிற.

help'less, *a.* உதவியற்ற; தன் செயலற்ற; உதவி செய்யாத.

help'mate, help'meet, *n.* வாழ்க்கைத்துணை; பக்கத் துணைவர்.

hel'ter-skel'ter, *n.* சீர்க்குலைவு, தாறுமாறான நிலை; *a.* தாறுமாறான, குழப்பமுற்ற; *adv.* தாறுமாறாக; அவசர அவசரமாக; முற்றிலும் குழப்பமுற்று.

helve, *n.* கோடரியின் காம்பு; கருவியின் கைப்பிடி.

Helve'tian, *n.* ஸ்விட்ஸர்லாந்து நாட்டவர்; *a.* ஸ்விட்ஸர்லாந்து நாட்டுக்குரிய.

hem[1], *n.* விளிம்பு, துணியின் மடித்த ஓரம்; *v.* ஓரம் உள் மடித்துத் தை; (தொ.) hem in, hem about, சூழ்ந்து வளைத்துக் கொள்.

hem[2], *n.* 'ஊம்' ஒலி; கவனிப்புக் குறிப்பு; தயக்கக் குறிப்பு; *v.* 'ஊம்' ஒலி செய்; தொண்டையைக் கனைத்துக்கொள்; பேச்சில் இடைத்தயக்கங் காட்டு, திக்கித் தயங்கு; *int.* ஊம்! கவனிப்புக் குறிப்பு, தயக்கக் குறிப்பு.

hemat'ic, *n.*, *a.* = haematic.

hemianop'sia, *n.* அரைக் குருடு, அரைப்பார்வை மங்கல்.

hem'icycle, *n.* அரைவடிவப் பிறை, அரைமதி வடிவம்.

hemidemisemiquav'er, *n.* இசைமானக்கால நுட்பக்கூறு.

hemihed'ral, *a.* மணியுருக்களில் முழுநிறைதள எண்ணிக்கையில் பாதியுடைய.

hemimetab'ola, *n. pl.* (வில.) முழு அளவில் மெய்யுருமாற்றம் பெறாத பூச்சிகள்.

hemiple'gia, *n.* ஒருபுறமாகச் செயலற்ற தன்மையூட்டும் வாத நோய்.

hem'isphere, *n.* அரையுருண்டை வடிவம்; நிலவுலக அரைக் கோளம்; நிலவுலக அரைக்கோள மணப்படம்; வான்கோளகையின் பாதி; மூளையின் இருபாதிகளில் ஒன்று.

hem'istich, *n.* செய்யுட் பாதியடி.

hem'-line, *n.* உள்மடித்துத் தைத்த பாவாடை விளிம்பு.

hem'lock, *n.* நச்சுச்செடி வகை; நச்சுச்செடி வகையிலிருந்து வடித்தெடுத்த நஞ்சுநீர்.

hem'orrhage, *n.* = haemorrhage.

hemp, *n.* நார்தரும் சணல்செடி வகை; சணல்நார்; சணற் கயிறு.

hem'-stitch, *n.* விளிம்பு மடிப்புத் தையல்.

hen, *n.* பெட்டைக்கோழி; கோழியினப் பெடை; பறவையினப் பேடு; பெடை; மீன் முதலிய நீர்வாழ் உயிரின் பெண்; பெண்; சிறுமி; கோழை நெஞ்சினர், உரமற்றவர்; (தொ.) hen crab, hen lobster, பெடை நண்டு.

hen'bane, *n.* நச்சு மயக்க மருந்து; நச்சு மயக்க மருந்து தரும் செடி வகை.

hence, *adv.* இங்கிருந்து ; இதிலிருந்து ; இப்போதிருந்து ; இதனால், இதன் விளைவாக, இதனின்று உய்த்துணர்வாக ; *int.* போய்விடு, இங்கிருந்து அப்பால் செல்; (தொ.) go hence, இற ; hence with, இங்கிருந்து அப்பால் எடுத்துச் செல்.

henceforth', **hencefor'ward**, *adv.* இச்சமயமுதல், இது முதற்கொண்டு.

hench'man, *n.* வேலையாள் ; மதிப்புக்குரிய மெய்க்காவற் பணிப் பையன்; தம்பிரான் தோழர்; அரசியல் ஆதரவாளர்; *pl.* hench'men.

hen'-coop, *n.* கோழிக்கூடு.

hendec'agon, *n.* பதினொருகோணக் கட்டம்.

hendecasyllab'ic, *n.* பதினோரசையடிச் செய்யுள் ; *a.* பதினோரசையுடைய.

hendecasyll'able, *n.* லத்தின்மொழியின் பதினோரசைச் செய்யுள் ; முதலிரண்டும் நெடில்-நெடில் அல்லது குறில்-நெடில் அல்லது நெடில்-குறிலாகவும் இறுதி இரண்டும் நெடில்-நெடில் அல்லது குறில்-நெடிலாகவும் இடை ஏழும் நெடில்-குறில்-குறில் நெடில்-குறில்-நெடில்-குறில் எனவும் வரும் பதினோரசை யாப்பு.

hendi'adys, *n.* ஒருபொருள் இருமொழி.

Hen'don, *n.* இங்கிலாந்தில் மிடில்செக்ஸ் கோட்டத்தில் (Middlesex of England) உள்ள விமானத்துறைப் புகழ் வாய்ந்த நகரம்.

hen'-harr'ier, *n.* பருந்து வகை.

hen'-heart'ed, *a.* கோழையான, மனவுரமற்ற; அற்பத்தனம் வாய்ந்த.

Hen'ley, *n.* ஆண்டுதோறும் இங்கிலாந்தில் தேம்ஸ் (Thames) ஆற்றங்கரையில் ஹென்லி என்ற இடத்தில் நடைபெறும் படகுப் பந்தயம்.

henn'a, *n.* மருதோன்றி வகை.

henn'y, *n.* பெட்டைக்கோழி போன்ற தோற்றமுடைய சேவல் ; *a* பெட்டைக்கோழி போன்ற.

hen'otheism, *n.* தலைக்கடவுட் கோட்பாடு, பிற தெய்வங்களை விலக்காது ஒரு முழுமுதற் கடவுளை நம்பும் கோட்பாடு.

hen'-pecked, *a.* மனைவியின் மேலாட்சிக்கு உட்பட்ட, பெண் வழிச் செல்கிற.

hepat'ic, *n.* செடி வகை ; கல்லீரலுக்கு நலஞ்செய்யும் மருந்து வகை ; *a.* கல்லீரலுக்குரிய ; கல்லீரலுக்கு நலஞ்செய்கிற ; கல்லீரல் நிறமுடைய.

hepatit'is, *n.* கல்லீரல் அழற்சி.

hepatiza'tion, *n.* நுரையீரல் முதலிய பகுதிகள் கல்லீரல் போன்ற பொருளாக இறுகிவிடும் நோய்வகை.

hep'atize, *v.* நுரையீரல் போன்றவற்றைக் கல்லீரல் போன்ற பொருளாக்கு.

hepatog'enous, *a.* கல்லீரலில் தோன்றுகிற.

Hep'plewhite, *n.* தட்டுமுட்டுப்பொருள்களுக்குரிய வேலைப் பாட்டுப் பாணிவகையின் பெயர்.

hep'tachord, *n.* ஏழ்நரம்பு வீணை ; கிரேக்கரிடை ஏழ்சுர வரிசை.

hep'tad, *n.* ஏழன்தொகுதி.

hep'taglot, *n.* ஏழு மொழிகளில் வெளியிடப்பட்ட புத்தகம் ; *a.* ஏழு மொழிகளுக்குரிய.

hep'tagon, *n.* எழுகோணக் கட்டம்.

heptag'onal, *a.* எழுகோணமுடைய, எழுகோணக் கட்டமான.

hepta-hed'ron, *n.* எழுமுகப் பிழம்புரு, ஏழு முகப்புத் தளங்களையுடைய பிழம்பு வடிவம்.

hep'tarchy, *n.* எழுவர் ஆட்சி ; (வர.) பண்டை ஆங்கிலோ-சாக்ஸனியரின் (Anglo-Saxons) ஏழரசுத் தொகுதி.

heptasyllab'ic, *a.* ஏழசையுடைய.

hep'tateuch, *n.* விவிலிய ஏட்டின் முதலேழு பிரிவுகளின் தொகுதி.

her [1], *pron.* she என்பதன் எழுவாயல்லா வேற்றுமை வடிவம்.

her [2], *pron.* she என்பதன் உடைமைப்பொருள் வேற்றுமை வடிவம்.

he'rald, *n.* கட்டியர், வள்ளுவர், அரசவிளம்பரங்கள் பொது அறிவிப்புகள் தெரிவிப்பதையும் கட்டியப் படிமுறை நடைமுறைகளை ஒழுங்குசெய்து தீர்ப்பளிப்பதையும் தூதுச்செய்திகளை அறிவிப்பதையும் கடமையாகக்கொண்ட அரசியல் உயர் பணியாளர் ; தூதர் ; முன்னறிவிப்போர் ; வருகை முன் சென்று தெரிவிப்பவர்; *v.* கட்டியங்கூறு, வருகை முன்னறிவி; வரவேற்று உள்ளே இட்டுவா, வாயில் தந்து இட்டுச்செல் ; (தொ.) Heralds' College, பட்டப்படிகளையும் சின்னங்களையும் பதிவுசெய்து பேணும் குழுமம்.

heral'dic, *a.* கட்டியம் சார்ந்த, கட்டியருக்குரிய, கட்டிய இயலுக்குகந்த, கட்டியர் பதவிச்சார்பான.

he'raldry, *n.* கட்டியம், கட்டிய இயல், கட்டியர் பதவி ; கட்டிய முறைசார்ந்த குலமரபுச் சின்னங்களின் தொகுதி ; கட்டிய ஆரவார அமைதி ; (தொ.) canting heraldry, அணிந்தவர் பெயர்க் குறிப்பீடு.

herb, *n.* பூண்டு ; அகக்காழற்ற செடியினம் ; மருந்தாகவோ உணவாகவோ மணமூட்டும் பொருளாகவோ சுவையூட்டும் பொருளாகவோ உள்ள இலைகளையுடைய செடியினம்.

herb'age, *n.* பூண்டுகளின் தொகுதி; பூண்டுகளின் சாறு கொழுந்தசையுடைய பகுதிகளின் தொகுதி ; (சட்.) பிறர் நிலத்தில் மேய்ச்சல் உரிமை.

herb'al, *n.* பூண்டு விளக்க ஏடு, பூண்டுவள இயல்; *a.* பூண்டு சார்ந்த.

herb'alist, *n.* பூண்டுகள் பற்றிய அறிவுத் திறமுடையவர் ; முற்காலத் தாவர இயல் எழுத்தாளர் ; மருத்துப்பூண்டு விற்பனையாளர்.

herbar'ium, *n.* பூண்டு உணக்கக் கொட்டில்.

herb'orist, *n.* செடியின ஆய்வாளர் ; செடியினங்களைச் சேகரித்துத் தொகுப்பவர் ; செடியினங்களைத் தொகுத்து விற்பவர் ; செடியினங்களைத் திரட்டி மருந்தாக வழங்குபவர்; தொடக்கக்காலத் தாவர இயலார்.

herb'orize, *v.* செடியினம் சேகரி.

herb'y, *a.* பூண்டின் இயல்புடைய ; பூண்டுவளம் வாய்ந்த.

Hercul'ean, *a.* பண்டைக் கிரேக்க மாவீரன் ஹெர்க்குலீஸுக்குரிய ; வலிமைமிக்க ; ஹெர்க்குலீஸின் பணிகள்போன்ற முடித்தற்கரிய பெருங் கடுமுயற்சி வாய்ந்த.

Herc'ules, *n.* செயற்கருங் கடும்பெரும் பணிகள் பன்னிரண்டு முற்றுவித்த கிரேக்க ரோமப் பழங்கதை மாவீரன் ; வலிமை மிக்கவன் ; வடதிசை வான்மீன் குழுக்களுள் ஒன்று ; (தொ.) Hercules beetle, ஐந்தங்குல நீளமுள்ள அமெரிக்க வண்டு வகை ; Pillars of Hercules, ஜிப்ரால்டர் கடலிடுக்கில் (Straits of Gibraltar) இருபுறமும் உள்ள பாறைகள் ; கடைக்கோடி எல்லை.

herd [1], *n.* மந்தை ; மேய்ச்சல் விலங்குகளின் திரள் ; திரியும் கால்நடைக் குழுமம் ; மக்கட் கும்பல் ; கும்பு ; பாமரர் குழு, கல்லாப் பொதுமக்கள் திரள் ; *v.* மந்தையோடு செல் ; குழுவாகச் செல் ; மந்தையுள் அனுப்பு ; மந்தை விலங்காக நடந்து கொள் ; மந்தையை ஓட்டு ; மேய் ; (தொ.) herd instinct, அலைந்து திரிதலும் ஒருவருடனொருவர் நெருங்கிப்பழகிப் பற்றுக் கொள்ளுதலும் உள்ளார்ந்து தோய்ந்த உணர்ச்சியாகக் கொண்டிருத்தல்; the common herd, the vulgar herd, பாமர மக்கள், கல்லாப் பொதுநிலைமக்கள் கும்பல்.

herd [2], *n.* கால்நடை மந்தை வைத்திருப்பவர் ; கால்நடை ஓட்டி, இடையர், ஆயர் ; *v.* மேய்ப்பவனுகச் செயலாற்று.

herd'-book, *n.* கால்நடை-வளர்ப்புப் பன்றிகள் ஆகியவற்றின் மரபுக்கொடி விளக்கப் பட்டியல்.

herds'man, *n.* மந்தைக்குரியவர்.

here, *n.* இந்த இடம் ; *adv.* இங்கே ; இந்த இடத்தில் ; இந்த உலகில் ; இந்தச் சூழலில் ; இவ்வாழ்வில் ; இங்கிலேயில் ; வாதத்தின் இந்தக் கட்டத்தில் ; இந்தச் செய்தியில் ; இந்த இடத்துக்கு ; இந்த இடம் நோக்கி ; (பே-வ.) இதோ ! (தொ.) here and there, ஆங்காங்கே, பல்வேறிடத்திலும் ; here goes, (பே-வ.) இதோ பார்! here, there and everywhere, விடாது எங்கும் ; neither here nor there, குறிவராது ; சிறப்பின்றி.

here'about, hereabouts', *adv.* இங்கே எங்காவது, இந்த இடத்துக்குப் பக்கத்தில் எங்காவது.

hereaf'ter, *n.* எதிர்காலம் ; வருங்கால உலகு ; இனிவரும் உலகு ; *adv.* வருங்காலத்தில் ; பிற்காலத்தில் ; வருங்கால உலகில் ; இனிவரும் வாழ்வில்.

hereat', *adv.* இதன்மீது, இதுகாரணமாக.

hereby', *adv.* இதனுல், இதன்மூலம் ; இதன் பயனுக.

hered'itable, *a.* மரபுரிமையாகப் பெறத்தக்க.

heredit'ament, *n.* மரபுரிமையாகப் பெறத்தக்க உடைமை ; நிலஉடைமை ; மரபுரிமைப் பேறு.

hereditar'ian, *n.* மரபுத்தொடர்புக் கோட்பாட்டாளர்.

hered'itariness, *n.* மரபுரிமையாக வரும் பண்பு.

hered'itary, *a.* மரபுரிமையாக வருகிற ; மரபுவழித் தொடர்கிற ; தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகிற ; முன்னேர் பண்பொத்த ; வழிவழித் தொடர்கிற, வழிவழித் தொடர்ந்து வந்துள்ள.

hered'ity, *n.* பண்பின் மரபுத் தொடர்பு, மரபொப்புத் திறம்.

He'reford, *n.* கால்நடைப் பயிற்சியின வகை.

herein', *adv.* இதில் ; இப்புத்தகத்தில்.

hereinaf'ter, *adv.* பத்திர எழுத்தில் இனிமேல், இனி இதன் கீழே, இதில் பின்னுல்.

hereinbefore', *adv.* பத்திர எழுத்தில் இதற்குமுன், இதில் முன்னுல்.

hereof', *adv.* இதனுடையதாக, இதைப்பற்றி, இதன் தொடர்பாக.

heres'iarch, *n.* சமயமுரண் கோட்பாடு தோற்றுவிப்பவர் ; பாசண்டர், முரண் கோட்பாட்டுத் தலைவர்.

heresiol'ogist, *n.* முரண் கோட்பாட்டு மாணவர் ; முரண் கோட்பாடு பற்றிய எழுத்தாளர்.

he'resy, *n.* முரண் சமயக் கருத்து, கிறித்தவத் திருச்சபையின் ஏற்பமைதிக்கு மாருன கருத்து.

he'retic, *n.* ஏற்பமைதியில்லாத கோட்பாட்டில் பற்றுடையவர், திருச்சபைக்கு முரணுன கோட்பாடுடையவர்.

hereto', *adv.* இவ்வகைக்கு.

heretofore', *adv.* முன்னுட்களில், சென்றகாலங்களில்; இது வரை.

hereun'der, *adv.* இதன்கீழே.

hereunto', *adv.* இதுவரை, இந்நேரம் வரை.

hereupon', *adv.* இதன்மீது; இதன்பின்னர்; இதன் பயனுக.

herewith', *adv.* இதனுடன்.

he'riot, *n.* குடியுரிமையாளர் மறைவின்போது பண்ணை மேலாட்கு முன்பு உரிமைப்படி கொடுக்கப்பட்டுவந்த விலங்கு அல்லது கருவிப் பொருட்கொடை.

he'ritable, *a.* மரபுரிமையில் செல்லத்தக்க ; இயங்குடைமை அல்லாத ; தந்தையிடமிருந்து மகவுக்குச் செல்லத்தக்க ; மரபுரிமையாகப் பெறத்தக்க.

he'ritor, *n.* மரபுரிமை பெறுபவர்.

herl, *n.* இறகின் துய்.

hermaph'rodite, *n.* பேடு, இருபாற் சின்னங்களும் ஒருங்கே உடையவர் ; இருபாற் சின்னங்களும் உடைய உயிரினம் ; முரண் பண்புகளை ஒருங்கே உடையவர் ; முரண்கூறுகளை ஒருங்குடைய பொருள் ; இரு வேறுவகைக் கலங்களின் தன்மைகள் இயைந்த கப்பல்வகை ; (வில.) இயல்பாக இரு பால்களுக்கும் உரிய உயிரினம் ; (தாவ.) பெண்கூறும் ஆண் கூறும் ஒருங்கே ஒரே பூவிலேயே கொண்ட செடியினம் ; *a.* இருபாற் கூறுகளையும் ஒருங்கேயுடைய ; முரண்பண்புகளை ஒருங்கே கொண்ட.

hermeneut'ic, hermeneut'ical, *a.* பொருள்கோள் சார்ந்த ; திருமறைப் பொருள்கோள் முறைக்குரிய.

hermeneut'ics, *n. pl.* பொருள்கோள் இயல், திருமறைப் பொருள்கோள் முறை ஆய்வியல் துறை.

Herm'es, *n.* கிரேக்க பெருந்தெய்வமான சியூஸுக்கும் மேயாவுக்கும் (Zeus and Maia) உரிய புதல்வன் ; தேவர்களின் தூதன் ; அறிவியலுக்கும் உரைத்திறத்துக்கும் உரிய தெய்வம் ; (தொ.) Hermes Trismegistus, 'தாத்' (Thoth) என்ற எகிப்திய தெய்வத்துக்குப் பிற்காலக் கிரேக்கர் வழங்கிய பெயர்.

hermet'ic, *a.* பொன் மாற்றியல் சார்ந்த ; இரசவாத ஆற்றலுடைய ; மாயத்திறம் வாய்ந்த ; இயைபுமூலம் காற்றிடை புகாக் காப்புடைய ; கட்டிறுக்கமான.

hermet'ically, *adv.* காற்று இடையே புகாமல்.

hermet'ics, *n. pl.* இரசவாதம் ; மறைநிலை இயல்.

herm'it, *n.* முற்காலக் கிறித்தவத் துறவி ; ஒதுக்கமாக வாழ்பவர், ஒதுங்கியுறைபவர்.

herm'itage, *n.* துறவி மாடம் ; தனிமை மனை ; பிரஞ்சு இன்தேறல் வகை.

herm'it-crab, *n.* சிப்பிமீன் எறிந்த தோட்டில் பாதுகாப்பற்ற தன் பின்புறம் காத்துத்திரியும் நண்டுவகை.

hern, *n.* = heron.

hern'ia, *n.* (மரு.) குடலிறக்கம், அண்டவாதம், குமுறலண்டம், முறிவு.

her'o, *n.* வீரன், மீளி ; பெரியோன் ; தெய்வ மகன் ; அரைத் தெய்வம் ; புகழ்சான்ற போர்வீரன் ; நாட்டுத்தியாகி ; பெருந்தகை, சான்றோன் ; பெருஞ் செயலாளர் ; பாட்டுடைத் தலைவன் ; கதைத் தலைவன் ; நாடகத் தலைவன் ; பூசிக்கத் தக்கவர் ; பாராட்டத்தக்கவர் ; பின்பற்றத் தக்கவர்.

hero'ic, *n.* வீரகாவியப் பாவகை ; *a.* வீரனுக்குகந்த ; வீரனுக்குரிய ; வீரப் பண்புகளையுடைய ; நடைமுறையில் மீயுயர் கற்பனைத் திறம் வாய்ந்த ; துணிவான எழுச்சியுடைய ; பாரித்துயர்ந்த ; (தொ.) heroic poetry, வீரகாவியம் ; வீர காப்பியக் கவிதை ; heroic verse, வீரகாவியத்துக்குரிய பாவகை ; the heroic age, பண்டைக் கிரேக்கரிடையே திராய்ப் (Troy) பெரும்போர் வீரர் மீட்சிக்கு முற்பட்ட காலம் ; வீரவாழ்வுக் காலம்.

heroi-com'ic, *a.* வீர விகடமான.

hero'ics, *n. pl.* பகட்டு நடை ; அகன்று விரிந்த உணர்ச்சிகள்.

hero'ify, *v.* வீரத்தலைவனுக்கு, பேராண்மையாளராக்கு.

he'roin, *n.* மயக்க மருந்திலிருந்து உண்டாக்கப்படும் ஒருவகை நஞ்சுமருந்து.

he'roine, *n.* தலைவி ; வீர அணங்கு ; தெய்விக ஆற்றலுடைய மாது, அரைத்தெய்வ மகள் ; பாட்டுடைத் தலைவி ; கதையின் நாயகி ; நாடகத் தலைவி.

he'roism, *n.* பேராண்மை, பெருஞ்செயல் வீரம்.

he'roize, *v.* வீரத்தலைவனுக்கு ; வீரகாவியப் பண்பூட்டு ; தலைமகனுகச் செயலாற்று.

he'ron, *n.* கொக்கு வகை, நாரையினப் பறவை.

he'ronry, *n.* நாரைவகைப் பறவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் இடம்.

her'o-worship, *n.* வீரபூசனை ; பண்டை வீரவழிபாடு.

her'o-worshipper, *n.* வீரபூசகர், வீரவழிபாட்டாளர் ; பண்டை வீரரைப் பாராட்டிப் போற்றுபவர்.

herp'es, *n.* தோல்நோய் வகை, தேமல் வகை, படர்தாமரை.

herpet'ic, *a.* படர் தேமல் போன்ற ; படர் தேமலுக்குரிய ; படர்கிற.

herpetol'ogy, *n.* ஊர்வன நூல்.

Herr, (செர்.) *n.* செர்மனி நாட்டு வழக்கில் திருவாளர்; *pl.* *Herr'en.*

he'rring, *n.* உணவுக்குப் பெரிதும் பயன்படும் வட அட்லாண்டிக் மாகடல் மீன்வகை.

he'rring-bone, *a.* தையலிலும் கல் செங்கல் ஓடுபாவுதலிலும் தச்சுக் குறுக்குக் கை இணைப்புகளிலும் மீன்வகையின் எலும்புகள்போல எதிரெதிர்ச் சாய்வான வரிசைப்பட அமைந்த; *v.* எதிரெதிர்ச் சாய்வுப் பாணியில் தை; எதிரெதிர்ச் சாய்வுப் படிவத்திற் பாவு.

Herrn'huter, *n.* மொரோவிய (Moravian) சமயக் கிளையினைச் சார்ந்த குழுவினர்.

hers, *poss. pron.* அவளுடையது.

herself', *pron.* அவளே, அவள்தானே; அவள் தன்னையே; அவள் தனக்கே; அவள் தன்னிடமே.

Hert'zian waves, *n. pl.* கம்பியில்லாத் தந்தியில் பயன் படுத்தப்படும் மின் அலைகள்.

hes'itance, hes'itancy, *n.* தயக்க நிலை; ஐயப்பாடு; கொன்னல்; ஆடலில் சிறு தடுமாற்றம்; தடுமாற்றப்பாணி ஆடல் வகை.

hes'itant, *a.* தயங்குகிற, தயக்கங்காட்டுகிற; மனவுறுதி அற்ற.

hes'itate, *v.* தயக்கம் காட்டு, பின்னிடை; செயலில் ஐயுறவு கொண்டு தயங்கு, மனச்சான்றுக் குத்தலால் செயல் மயக்கங் கொள்; மனவுறுதியின்றிப் பேசு; உறுதியின்மை காட்டு; ஐயுறு, துணிவில் பின்னிடை; கொன்னுறு, திக்கு.

hesita'tion, *n.* தயக்கம்; இருமனநிலை; ஐயப்பாடு; கொன்னல்; உறுதியற்றநிலை.

hes'itative, *a.* தயக்கங் காட்டுகிற.

Hesper'ian, (செய்.) *a.* மேற்றிசை சார்ந்த.

Hes'peris, *n.* கவின்மலர்ச் செடிப்பேரினம்.

hesperorn'is, *n.* மரபற்றுப்போன அமெரிக்க புதைபடிவப் பறவை வகை.

Hes'perus, *n.* மாலை வெள்ளி, சுக்கிரன்.

He'ssian, *n.* வலிமை வாய்ந்த முரட்டுச் சணல்துணி வகை; *a.* செர்மனி நாட்டிலுள்ள ஹெஸ் நகரத்தைச் சார்ந்த; (தொ.) Hessian boot, உயர்குதி மிதியடி; Hessian fly, கோதுமைப்பயிரை அழிக்கும் முட்டைப் புழுவையுடைய ஈ வகை.

hest, *n.* = behest.

hetaer'a, *n.* காமக்கிழத்தி.

hetaer'ism, *n.* கட்டற்ற காமக்கிழத்தி முறை, மரபுக்குழுவில் சமுதாயப் பொதுமை மணமுறை.

hetair'a, *n.* = hetaera.

hetai'rism, *n.* = hetaerism.

heterochrom'ous, *a.* இனமொவ்வாப் பல்முரண் நிறங்களை உடைய.

het'eroclite, *n.* செவ்வொழுங்கு மீறிய வேற்றுமைத் திரிபுடைய பெயர்ச்சொல்; *a.* செவ்வொழுங்கு மீறிய திரிபுடைய.

heterocy'cle, *a.* (வேதி.) சேர்மங்களில் ஒரே வளைய அணுத்துகளில் பல்வகை அணுக்களையுடைய.

het'erodox, *a.* புறக்கோட்பாடான, வழக்கத்திலுள்ள கொள்கைக்கு மாறான.

het'erodoxy, *n.* புறக்கோட்பாடு, பரபக்கம்.

het'erodyne, *n.* தந்தியில்லாக் கம்பிவகையில் கேளா உயர் விசை அலையை மற்றோரலையில் போதுவித்து அதிர்வூட்டிக் கேட்கும் அலையாக மாற்றுவதற்குரிய கருவியமைவு.

heterog'amous, *a.* (தாவ.) சூலகமும் பூவிழைகளும் தாறுமாறாக உள்ள.

heterogen'eous, *a.* கதம்பப் பண்புகளையுடைய; பல்வேறான முரண் கூறுகளைக்கொண்ட.

heterogen'esis, *n.* முரண்பிறப்பு, தன்னொத்த இனப்பெற்றோரிடமிருந்து தோன்றாமை; ஒற்றைமாற்றுருத் தலைமுறையுடைய பிறப்பு; உயிரற்ற பொருளிலிருந்து தன்னியல்பாய் உருவாதல்.

heterogenet'ic, *a.* தன்னொத்த இனப்பெற்றோரிடமிருந்து தோன்றாத; ஒற்றைமாற்றுருத் தலைமுறை இனஞ்சார்ந்த; உயிரற்ற பொருளிலிருந்து தன்னியல்பாய் உருவாகிற.

heterog'raphy, *n.* தவறான எழுத்துக்கூட்டு முறை; பொருந்தாத எழுத்துக் கூட்டுமுறை.

heteromorph'ic, *a.* ஒவ்வா உருவங்களையுடைய.

heteromorph'ism, *n.* அளவுருத்திரிபு; உருப்பன்மை.

heteron'omous, *a.* பல்வேறுபட்ட சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்ட; புறச்சட்டத்துக்குக் கட்டுப்பட்ட, புறவுரிமைப் பட்ட.

heteron'omy, *n.* புறச்சட்ட உரிமைநிலை.

heteropath'ic, *a.* முரண் செயலூட்டு மருத்துவமுறை சார்ந்த; விளைவு வகையில் வேறுபட்ட.

heterophyll'ous, *a.* ஒருசெடிப் பல்லுருவ இலைகளையுடைய.

het'erosexual, *n.* இயற்கைப் பால் இணைவுடையவர்; இயற்கைப் பால் இணைவுடையது; *a.* இயற்கையான பால் இணைவுடைய.

het'erotaxy, *n.* உறுப்பு மாறுபட்ட அடுக்கம்.

heterozyg'ote, *n.* உயிர்மரபியலின்படி ஒவ்வாப் பாலணு இணைவினால் விளைவுறும் உயிருரு.

het'man, *n.* போலந்து நாட்டுப் படைத்துறைத் தலைவர்.

heuris'tic, *n.* அளவை இயலில் கண்டுணர்வு முறை; கல்வித் துறையில் கண்டுணரத் தூண்டும் முறை; *a.* கண்டுணர் முயற்சிக்குரிய, மாணவர்கள் எதையும் தாங்களே முயன்று கண்டுணரும்படி செய்யும் கல்விமுறை சார்ந்த.

heuris'tics, *n. pl.* மாணவர்கள் எதையும் தாமே கண்டு உணரும்படி செய்யும் கல்வி முறை.

hew, *v.* வெட்டு; கோடரியால் துண்டி; வாளால் துணித்து விடு; கோடரியால் அடி; வாளால் வீக்கு; தாக்கு, வாள் சுழற்றி நின்று தாக்கிப் போராடு; வெட்டி உருவாக்கு; (தொ.) hew among, உட்சென்று தாக்கு; hew at, ஓங்கி வெட்டு, தாக்கு; hew down, hew asunder, hew away, வெட்டித்தள்ளு; hew one's way, வெட்டி வழி உண்டாக்கிச் செல்; வெட்டி வீழ்த்தித் துளைத்துச்செல்.

hewed, *v.* hew என்பதன் இறந்தகால வடிவம்; அருகலான முற்றெச்ச வடிவம்.

hew'er, *n.* வெட்டுபவர்; நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரி நரம்புப்பாளங்களில் வெட்டுபவர்; (தொ.) hewers of wood and drawers of water, வெட்டுதல் நீர் இறைத்தல் போன்ற கீழ்த்தர உடலுழைப்பாளர்.

hewn, *v.* hew என்பதன் முடிவெச்ச வடிவம்.

hex'achord, *n.* ஆறுசுர இசைக்கேள்விப் பாணி.

hex'ad, *n.* ஆறன்தொகுதி.

hex'agon, *n.* ஆறுகைக் கட்டம், அறுகோணக் கட்டம்.

hexag'onal, *a.* அறுகோணமுடைய, ஆறு பக்கங்களை உடைய.

hex'agram, *n.* அறுகோண நட்சத்திர வடிவம், அறுகோணத்தை உட்கொண்ட இரு சமபக்க முக்கோணங்களின் இணைப்பு.

hexahed'ral, *a.* ஆறு முகப்புத்தளங்களையுடைய.

hexahed'ron, *n.* ஆறு முகப்புத்தளங்களையுடைய பிழம்புரு.

hexam'eter, *n.* அறுசீர்ச் செய்யுளடி.

hex'apla, *n.* பக்கத்துக்குப் பக்கமான பத்திக் கூறுகளில் ஆறு வேறுவேறு மூலபாடங்களை வகுத்துக்காட்டுகிற விவிலிய ஏடு.

hex'apod, *n.* அறுகாலி, ஆறு கால்களையுடைய உயிரினம்; *a.* ஆறு கால்களையுடைய.

hexap'ody, *n.* அறுசீர்ச் செய்யுளடி.

hex'astyle, *n.* அறுகால் வாயில்முகப்பு; *a.* ஆறு கம்பங்களை உடைய.

hexasyllab'ic, *a.* ஆறு அசைகளையுடைய.

hex'ateuch, *n.* விவிலியமறையில் முதலாறு பிரிவுகளின் தொகுதி.

hey, *int.* கவன ஈர்ப்புக் குறிப்பு; மகிழ்ச்சிக் குறிப்பு; வியப்புக் குறிப்பு; கேள்விக் குறிப்பு; (தொ.) hey for, மகிழ்ச்சி ஆரவாரக் குறிப்பு; பாராட்டு ஆர்ப்பரிப்புக் குறிப்பு.

hey'day[1], *n.* பருவ காலம்; விறு நேரம்; முழுமலர்ச்சி வேளை.

hey'-day[2], *int.* மகிழ்ச்சிக் குறிப்பு; வியப்புக் குறிப்பு.

hey'duck, *n.* போலந்து நாட்டில் பணிப்பட்டயம் தாங்கிய பணியாள்; குடிஉயர்மதிப்புப்பெற்ற ஹங்கேரி நாட்டுப் படைத்துறை வகுப்பினர்.

hi, *int.* கவன ஈர்ப்புக் குறிப்பு.

hiat'us, *n.* பிளவு; இடைவாய்; முறிவு; சிறுகோளாறு; வாதத்தொடர்பில் இடைக்குறை; இருவேறிசைகளுக்குரிய இரண்டு உயிரொலிகளுக்கிடையே ஏற்படும் பிளவு.

hib'ernate, *v.* விலங்குகள் வகையில் குளிர்கால முழுவதும் செறிதுயில் கொள்ளு; ஆட்கள் வகையில் மிதமண்டலத்தில் ஓய்வு கொள்; செயலற்றிரு.

Hibern'ian, *n.* அயர்லாந்து நாட்டவர்; *a.* அயர்லாந்து நாட்டுக்குரிய.

Hibern'icism, *n.* அயர்லாந்து மக்களுக்குரிய மரபு; அயர்லாந்து மக்களுக்குரிய மரபுத்தொடர்; இயல்வெடித்தொடர், அயர்லாந்து மக்களிடையே கேட்பவர்களுக்கு அதிர்ச்சி அல்லது நகைப்பு மூட்டும் வகையில் அமையும் சொற்றொடர்.

hibis'cus, *n.* பண்படுத்தப்பட்ட தோட்டச்செடிவகை.

hicc'up, *n.* விக்கல்; *v.* விக்கு; விக்கல் எடு; விக்கிவிக்கித் தெரிவி.

hic ja'cet, (ல.) *n.* "இவ்விடத்து உறைகிறார்" என்னும் கல்லறை வாசகம்.

hick'ory, *n.* திண்ணிய பளுவான வெட்டுமரமும் வாதுமை போன்ற கொட்டையும் தரும் வடஅமெரிக்க மரவகை.

hid, *v.* hide[2], என்பதன் இறந்தகால வடிவம்; முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.

hidal'go, *n.* ஸ்பானிய நன்மகன்; *pl.* hidal'gos.

hidd'en, *v.* hide[2] என்பதன் பெருவழக்கான முடிவெச்ச வடிவம்.

hide[1], *n.* விலங்கின் தோல்; பதனிட்ட தோல்; *v.* தோலுரி; கசையாலடி.

hide[2], *n.* ஒளிவிடம்; கொடுவிலங்குகள்மீது கண்காணிக்கும் காப்பிடம்; பதுக்கிடம், மறைவான சேமிப்பிடம்; *v.* ஒளித்துவை; மறைந்திரு, ஒளிவிரு; ஒளிந்துகொள்; இரகசியமாக வைத்திரு; தெரியாமல் வைத்திரு; கட்புலப்படாமல் மறை; (தொ.) hide one's head, வெட்கத்தால் தலைமறைவாய் இரு.

hide[3], *n.* பழைய ஆங்கிலநாட்டு முறையில் நிலப்பரப்பளவைக் கூறு, வேலையாட்களுடன் ஒரு நிறையுரிமைக் குடும்பத்துக்குப் போதிய (120 ஏக்கர்) அளவான நிலம்.

hide'-and-seek, *n.* கண்ணும்பூச்சி விளையாட்டு, ஒளிந்தோடும் விளையாட்டு.

hide'-bound, *a.* உடலொடு தோல் ஒட்டிய; மரவகையில் வளர்ச்சி தடைப்படும்படியான அளவில் மரப்பட்டை மரத்துடன் ஒட்டிய; முரட்டுப் பிடிவாதமான, பிடிமுரண்டான, வெறிப்பற்றுடைய; குறுகிய மனப்போக்குடைய.

hid'eous, *a.* வெறுப்பூட்டுகிற; அருவருப்பான; பயங்கரமான.

hide'-out, *n.* பதுங்கிடம்.

hid'ing[1], *n.* கசையடி.

hid'ing[2], *n.* ஒளிப்பு; ஒளிவிடம்.

hid'ing-place, *n.* மறைவிடம்.

hie, *v.* (செய்.) விரை, விரைவுபடுத்து.

hi'erarch, *n.* உயர்சமயகுரு, தலைமைப்புரோகிதர்; மண்டலத் திருச்சபைத்தலைவர்.

hi'erarchy, *n.* தேவதூதர்களின் முப்பிரிவுகளில் ஒன்று; தேவதூதர்களின் தொகுதி; புரோகித ஆட்சி; படிநிலையாக அமைந்த புரோகிதர் அமைப்பு; படிநிலை அமைப்பு.

hierat'ic, *a.* சமயகுருமாருக்குரிய; சமயகுருமாரால் வழங்கப்பட்ட; (தொ.) hieratic art, குருமார் வழக்குக்குரிய சமய மரபுகளைப் பின்பற்றிய எகிப்திய கிரேக்கப் பழங்கலைப்பாணி; hieratic writing, பண்டை எகிப்திய குருமார்க்குரிய எழுத்து முறை.

hieroc'racy, *n.* புரோகித ஆட்சி.

hi'eroglyph, *n.* எகிப்தியர் போன்ற பண்டை மக்கள் கையாண்ட சொல் அல்லது அசை அல்லது எழுத்துக்குப் பதிலாக நிற்கும் பொருள்வடிவம், புனித எழுத்துமுறை; மறைபொருட் குறியீடு; விளங்காத எழுத்து.

hieroglyph'ic, *a.* புனித எழுத்துமுறை சார்ந்த.

hieroglyph'ics, *n. pl.* புனித எழுத்துமுறைகள்; மறைபொருட்குறியீடு; விளங்காத எழுத்து.

hi'erogram, *n.* புனிதச் செதுக்கு.

hi'erograph, *n.* புனிதக்குறியீடு, பரிபாஷை.

hierol'atry, *n.* புனிதர் வழிபாடு.

hierol'ogy, *n.* புனித இலக்கியம்.

hi'erophant, *n.* பண்டைக் கிரேக்கரிடையே திருநிலை வெளிப்படுத்தும் புரோகிதர்; திருநிலைத் தீக்கை செய்பவர்; திருநிலை மறைமெய்ம்மைகளை விளக்குபவர்; தேசிகர்.

hig'gle, *v.* பேரச் சச்சரவு செய்.

hig'-gledy-pig'gledy, *n.* பெருங்குழப்பம்; *a.* குழம்பிய; *adv.* பெருங்குழப்பமாக.

high, *n.* உயரிடம்; உயரெண்சீட்டு; உயர்எண்; *a.* உயரமான; உயர்ந்த; உயரத்தில் உள்ள; நிலமட்டத்துக்கு மேற்பட்ட; கடல்மட்டத்துக்குமேற்பட்ட; மேடான; கடலிலிருந்து நெடுந்தொலை உள்நாட்டுப் பாங்கான; நில நடுக் கோட்டினின்றும் தொலைவான; கப்பல் வகையில் நீரினின்றும் விலகிக் கரைமீதான; உயர்ந்து செல்கிற; உயர்படியான, உயர்தரமான, உயர்தளத்துக்குரிய; உயரிய, உயர்தகுதி வாய்ந்த; பண்பு மேம்பட்ட; உயர்மதிப்புடைய; உயர் வகுப்புக்குரிய; செல்வ வளமுள்ள; இன்பவாழ்க்கைப்பாங்கான; பெருமிதமான, வீறூர்ந்த; மிகுந்த, மிகுதியான; அடர்த்திமிக்க; முனைப்பான, தீவிரமான; வெப்பநிலை மிக்க; வேட்டை விலங்குவகையில் பதங்கெட்ட; இறைச்சிவகையில் பதனழிந்த; விலையுயர்ந்த; நேரம் மிகச்சென்ற, மிகப் பிந்திய; சீற்றமிக்க; கிளர்ச்சிமிக்க; துடுக்குமிக்க; பொங்கி எழுகிற; புயலார்ந்த; கடுமைமிக்க; மிகுகண்டிப்பான; அடக்குமுறைவாய்ந்த; முக்கியமான; வாழ்வின் சுழலிலிருந்து விலகிய; *adv.* உயரமாக; மேட்டில்; உச்ச அளவில், உச்ச எல்லையில்; உரத்து, உச்சத்தொனியில்; உயர் விலையில்; உயர்ந்தபந்தயம் வைத்து; உயர்சீட்டை வைத்து; கடல் வகையில் வேலி ஏற்றத்தில் பொங்கியெழுந்து; (தொ.) high altar, முக்கிய வழிபாட்டுமேடை; high command, higher command, மேலிடம், உச்சஉயர் தலைமை, உயர்தர ஆட்சிக்குழு; High Court, உயர்நீதி மன்றம்; high day, விழாநாள்; high explosive, ஆற்றல்மிக்க வெடிப்பொருள்; high farming, உரங்களைப் பரவலாகப் பயன்படுத்திச் செழிப்பு வளர்க்கும் வேளாண்மை முறை; high frequency, பேரளவான விரைவு; high hand, கண்டிப்பு; வன்முறை; தன்முனைப்பு; தன்னுண்மை, வல்லாண்மை; high horse, துடுக்குத்தனமிக்க குதிரை; high jump, உயர் எல்லை தாண்டிக் குதித்தல்; high mass, குருமார்துணைக்குழு உடனிருந்து தூபங்களுடனும் இசையுடனும் செய்யும் சிறப்பு வழிபாடு; high opinion, உயர் மதிப்பு; high priest, முக்கிய புரோகிதர்; high school, உயர்நிலைப்பள்ளி; high seas, கரையிலிருந்து மூன்று கல் கரையாட்சி எல்லைகடந்த திறந்த கடல்பரப்பு; high street, பெருந்தெரு; high tea, இறைச்சி

உணவுடன் வழங்கப்படும் தேநீர் ; high time, மேலும் தாள முடியாத பிற்பட்ட நேரம், கிட்டத்தட்டக் கடைசிக்கணம் ; high Tory, முனைத்த 'டோரி'க் கட்சியினர் ; high treason, உயர்தண்டனைக்குரிய அரசுப்பகைமைக்குற்றம்; high words, சீறி எழுகிற பேச்சு, உரத்த சச்சரவு; play high, உயர்பந்தயம் வைத்தாடு ; உயர்சீட்டை வைத்தாடு ; the Most High, கடவுள்.

high'ball, *n.* நீள்குவளையில் பரிமாறப்படும் விஸ்கி-சோடாக் கலவை.

high'-blower, *n.* சீறுங்குதிரை.

high'-born, *a.* உயர்குடிப் பிறந்த.

high'brow, *n.* சார்பற்ற கலையார்வலர் ; அறிஞர்.

high'-browed, *a.* தனித்தொதுங்கி வாழும் அறிவாளியியல்புடைய.

High Church, *n.* சமயகுருமாருக்கும் சமயஆட்சிக்குழுவினருக்கும் வினைமுறைகளுக்கும் மிகுதிமதிப்பளிக்கும் கோட்பாடு; ஆங்கிலநாட்டுத் திருச்சபையில் ஆட்சிக்குழு வினைமுறைகளுக்கு மதிப்பளிக்கும் கட்சி; *a.* சமயகுருமாருக்கும் சமயஆட்சிக்குழுவினருக்கும் வினைமுறைகளுக்கும் மிகுதி மதிப்பளிக்கிற ; ஆங்கில நாட்டுத் திருச்சபையில் குருமார் ஆட்சி வினைமுறைகளுக்குப் பெருமதிப்பளிக்கிற கட்சி சார்ந்த.

High'-Church'man, *n.* ஆங்கிலநாட்டுத் திருச்சபையில் சமயகுருமாருக்கும் சமய ஆட்சிக்குழுவினருக்கும் வினைமுறைகளுக்கும் பெருமதிப்பளிக்கும் கோட்பாடுடையவர்.

high'-class, *a.* உயர்தரமான.

high-falut'ing, *n.* பகட்டாரவாரப் பேச்சு ; *a.* பகட்டாரவாரப் பேச்சுப் பேசுகிற.

high'flown, *a.* புனைந்துரையான; கடுநடையான.

high'flying, *a.* உயரப்பறக்கிற ; உயர்பேராவலுடைய, மட்டுமீறிய உயர்அவாவுடைய.

high'-geared, *a.* விசையிணைப்பில் மூலச் சக்கரச்சுற்றைவிட விசைச்சக்கரம் பன்மடங்கு மிகுதியாகச் சுற்றும்படி இணைக்கப்பட்ட.

high'-handed, *a.* அடக்குமுறையான, வன்முறையான.

high'-hat, *n.* வீறாப்புடையவர், மட்டுமீறிய தற்பெருமையுடன் நடப்பவர் ; *v.* வீறாப்புக்காட்டு, தற்பெருமை மேற்கொள் ; வீறாப்புடன் ஏளனமாக நடத்து.

high'-jinks, *n.* ஆரவாரக் களியாட்டம்.

High'lander, *n.* ஸ்காத்லாந்தின் வடமேட்டு நிலத்துக்கு உரியவர்.

high'lands, *n. pl.* மேட்டுநிலம்.

high'light, *n.* முனைப்பான பகுதி, சிறப்புக்கூறு ; *v.* முனைப்பான ஒளியால் விளக்கமாகத் தெரியும்படி செய்.

high'lights, *n. pl.* மிகு ஒளிபடும் இடங்கள் ; நன்கு புலப்படும் பகுதிகள்.

high'ly, *adv.* மிகுதியாக, உச்ச அளவாக, உச்சஉயர்படியில் ; உயர்வாக ; உயர்விலையாக ; உயர்மதிப்புடன் ; மிக ஆதரவாக ; மிகவும் சாதகமாக ; உயர்குடி மரபில் ; (தொ.) highly descended, உயர்குடிமரபில் பிறந்த ; speak highly of, பாராட்டிப் பேசு.

high-mind'ed, *a.* பெருந்தன்மையுடைய, தாராள மனப்பான்மைகொண்ட.

high-mind'edness, *n.* பெருந்தன்மை, தாராள மனப்பான்மை.

high'ness,[1] *n.* உயர்வு ; மேம்பாடு ; பதவிமதிப்பு.

High'ness,[2] *n.* அரசர்க்கும் இளவரசர்க்கும் உரிய பட்டம்.

high'-pitched, *a.* ஒலிவகையில் உயர்விசைத் தொனியுடைய; மேடு முதலியவை வகையில் செங்குத்தான ; உயர்பண்பான்மையுடைய.

high'-souled, *a.* மன உயர்வு வாய்ந்த, மேதக்க, சான்ற.

high'-sound'ing, *a.* பகட்டோசையுடைய.

high'-spi'rited, *a.* வீரமுள்ள, பேராண்மைமிக்க.

high'-stepp'er, *n.* காலை உயரத்தூக்கி நடக்கும் குதிரை ; வீறுர்ந்த தோற்றமுடையவர் ; நாகரிகப் பகட்டாளர்.

high'-strung', *a.* ஊக்கமிக்க ; துடிப்புமிக்க ; கூருணர்ச்சித் திறம்வாய்ந்த ; எளிதில் கோபம் கொள்ளத்தக்க.

hight, *a.* (செய்.) எனப் பெயரிய.

high'-wa'ter mark, *n.* நீரின் உச்ச எழுச்சித்தள அளவு ; உச்ச அளவு எல்லை.

high'way, *n.* அரசபாட்டை, பெருவழி, நெடுஞ்சாலை; நீர்நிலத் தலைமை நெறி; செயல்துறையில் நேர்வழி, பொதுமுறை நேர்பாதை.

high'wayman, *n.* ஆறலைக்கள்வர், வழிப்பறிக்கொள்ளைக்காரர்.

hike, *n.* (பே-வ.) பயிற்சிக்கான நீள்வழிநடை ; இன்ப உலா நடை ; *v.* நெடுவழி நட ; காலுழைக்க நட ; தங்குகூடாரச் சுமைகளைத் தோளில் தாங்கி நட.

hilar'ious, *a.* களிப்புடைய, பெருமகிழ்வான.

hila'rity, *n.* உவகை, கழிமகிழ்வு.

Hil'ary, **Hil'ary term**, *n.* இங்கிலாந்துநாட்டு நீதிமன்ற ஆண்டிருக்கைக் காலத்தொடக்கம் ; பல்கலைக்கழக ஆண்டிருக்கைத் தொடக்கம்.

hill, *n.* குன்று, சிறுமலை ; பொற்றை, மேடு ; புற்று; குவியல் ; *v.* குன்றுபோல உருவாக்கு; செடிக்கு மண்ணணைப்பிடு; (தொ.) over the hill, உச்சநிலை கடந்து ; தளர்படியில்.

hillo', **hilloa'**, *int.* தொலைவிளிப்புக் குறிப்பு ; சந்திப்பு வியப்புக் குறிப்பு.

hill'ock, *n.* பொற்றை, சிறுகுன்று ; மேடு.

hill'y, *a.* குன்று நிரம்பிய, குன்றூர்ந்த.

hilt, *n.* வாள் முதலிய கருவிகளின் கைப்பிடி ; *v.* கைப்பிடி அமை ; (தொ.) up to the hilt, முழுவதும்.

hil'um, *n.* (தாவ.) விதையின் தாளடித்தழும்பு ; (உள்.) நாடிநரம்பு குழாய்கள் உறுப்பினுள் நுழையும் உள்வாய்ப்பள்ளம் ; *pl.* hil'a.

him, *pron.* he என்பதன் எழுவாயல்லாத பிற வேற்றுமைகளின் வடிவம்.

himself', *pron.* அவனே, அவன் தானே, அவன் தன்னையே.

hind[1], *n.* மடமான், பெண்மான் ; செந்நிற மானின் பிணை ; மூன்றாண்டு அல்லது மூன்றாண்டுகட்கு மேற்பட்ட மான் பிணை.

hind[2], *n.* பண்ணைக்குடி வேலையாள், ஸ்காத்லாந்திலும் வட இங்கிலாந்திலும் பண்ணையிலேயே குடும்பத்துடன் குடியிருந்துகொண்டு இரு குதிரைகளின் பொறுப்புடன் பண்ணை வேலை செய்யும் வேலையாள்; பண்ணைச் செயலாளர்; பட்டிக்காட்டான்.

hind[3], *a.* பின்புறத்துக்குரிய, பின்னுலுள்ள.

hind'er[1], *a.* பின்புறமான.

hin'der[2], *v.* தடு, தடங்கல்செய், முட்டுக்கட்டையிடு.

Hin'di, *n.* இந்திமொழி ; *a.* இந்திமொழிக்குரிய.

hind'most, *a.* பின்கோடியிலுள்ள ; மிகத்தொலைவிலுள்ள.

hin'drance, *n.* தடை, தடங்கல்; இடையூறு.

hind'sight, *n.* துப்பாக்கியில் பின்காட்சி; பின்னறிவு; வந்தபின் காப்பு.

Hindu', *n.* இந்துமதத்தைச் சார்ந்தவர் ; *a.* இந்துவுக்குரிய; இந்துக்கள் சார்ந்த.

Hin'duism, *n.* இந்துமதம்.

Hin'duize, *v.* மதத்தில் இந்துவாக்கு ; இந்துப் பழக்க வழக்கங்கள் உடையவராக்கு.

Hindusta'ni, *n.* இந்துஸ்தானத்தவர்; இந்துஸ்தானி மொழி; *a.* இந்துஸ்தானத்துக்கு உரிய.

hinge, *n.* கீல், கதவின் மூட்டுவாய்; இயற்கை மூட்டுப் பிணையல்; அடிப்படைக்கொள்கை; *v.* சுழல் திருகு வைத்துப் பொருத்து; குடுமிமீது திருகு; திருகி இயங்கு, சுழன்று திரும்பு; (தொ.) off the hinges, பழுதுற்று, சீர்குலைவுற்று; உடல் கோளாறுற்று; மூளைக்கோளாறுற்று.

hinn'y, *n.* பெண்கழுதையினிடமாகப் பொலி குதிரைக்குப் பிறந்த விலங்கு, கோவேறுகழுதை வகை.

hint, *n.* சிறு நினைவுக்குறிப்பு, நினைவூட்டுச் செய்தி; பயில், சாடைக்குறிப்பு; *v.* மெல்ல நினைவூட்டு, சிறுநினைவுக் குறிப்பளி; பயில்காட்டு, சாடையாகக் குறி.

hin'terland, (செர்.) *n.* ஆற்றின் கரைகளுக்குப் பின்னணியிலுள்ள மண்டலம்; கடற்கரைக்குப் பின்புறமுள்ள நாட்டுப் பகுதி.

hip[1], *n.* இடுப்பு, ஒக்கலை; மோட்டு இணைப்புவாரி; *v.* இடுப்புச் சுளுக்கவை; இடுப்பைக் காயப்படுத்து; இடுப்பு மீதாகத் தூக்கியெறி; மோட்டு இணைப்புவாரி வைத்துக்கட்டு; (தொ.) have one on the hip, எக்கச்சக்கமான நிலைப்படுத்தி வை, தனக்குச் சாதகமான நிலையில் வைத்தாட்டு; smite hip and thigh, நன்றாக அடித்து நொறுக்கு.

hip[2], *n.* காட்டு ரோசாச் செடியின் காய்.

hip[3], *n.* மனவாட்டநோய், சூம்படைவுக் கோளாறு; *v.* சோர்வுறச் செய்.

hip[4], *int.* குழு மகிழ்ச்சி அழைப்புக் குறிப்பு.

hip'bath, *n.* குந்து தொட்டிக்குளிப்பு.

hip'-disease, *n.* இடுப்புநோய், இடுப்புச் சந்தில் காளான் வகை வளர்ச்சியினால் ஏற்படும் கோளாறு.

hipe, *n.* மற்போர் எறிவகை; *v.* மற்போர் எறிவகை கையாளு.

hip'-joint, *n.* இடுப்புச்சந்து.

hipp'o, *n.* = hippopotamus.

hippocam'pus, *n.* கடற்குதிரை போன்ற சிறு மீன்களின் இனம்; மூளையின் பின்புறமுள்ள இருமேடுகளில் ஒன்று; *pl.* hippocam'pi.

hippocen'taur, *n.* குதிரை உடலுடன் மனித உடற்பகுதியும் கையுமுடைய உருவம்.

hipp'ocras, *n.* மணமூட்டப்பட்ட இன்தேறல்.

Hipp'ocrene, *n.* பண்டைக் கிரேக்க கலைத்தெய்வங்களுக்கு உரிய மலையின் ஊற்று.

hipp'odrome, *n.* பண்டை ரோமாபுரி மக்களின் தேரோட்டப் பந்தயச் சதுக்கம், வையாளிவீதி; விலங்குப் பயிற்சிக்காட்சி வட்டரங்கு; களியாட்டக் கொட்டகைவெளி.

hipp'ogriph, hipp'ogryph, *n.* குதிரை உடலுடன்கூடிய கற்பனைக் கொடுவிலங்குருவம்.

hippoph'agy, *n.* குதிரைத்தசைதின்னும் வழக்கம்.

hippopot'amus, *n.* நீர்யானை.

hip'-roof, *n.* கிழ்விளிம்பும் பக்கங்களும் சாய்வான மோடு.

hir'cine, *a.* வெள்ளாடு போன்ற.

hire, *n.* வாடகை; வாடகை ஏற்பாடு; கூலி; கூலி ஒப்பந்தம்; ஊதியம்; *v.* வாடகைக்குக் கொடு; வாடகைக்கு எடு; கூலிக்கு அமர்த்து; (தொ.) on hire, வாடகைக்கு; வாடகைக்கு விடப்படும் நிலையில்.

hire'ling, *n.* கையாள்; கூலிக்கு உழைப்பவர்.

hire'-purchase, *n.* தவணைக்கு வாங்கும் முறை, குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய வாடகைத் தவணைகள் கொடுத்தபின் பொருள் வாடகைக்கு எடுத்தவன் உடைமையாகிவிடும் முறை.

hirs'ute, *a.* மயிரடர்ந்த, பரட்டையான; பம்பையான, கோதாத.

his[1], *pron.* he என்பதன் உடைமை வேற்றுமை வடிவம்.

his[2], *poss. pron.* அவனுடையது.

his'pid, *a.* (வில.) மயிரடர்ந்த; (தாவ.) முள்ளடர்ந்த.

hiss, *n.* 'உசு' என்ற ஒலி; சீறொலி; பாம்பின் சீறல்; தீயணைப்பினால் ஏற்படும் 'சுறீர்' ஒலி; *v.* சீறு; 'உசு' ஒலி எழுப்பு; 'உசு' ஒலியால் மறுப்பு ஏளனக் குறிப்பு எழுப்பு; வெறுப்புத் தெரிவி; ஒலி எழுப்பிக் கண்டனம் தெரிவி; ஒலி எழுப்பித் துரத்து.

hist, *int.* கவனி என்ற கவனஈர்ப்புக் குறிப்பு; சும்மா இரு என்ற பேச்சடக்குக் குறிப்பு; நாய் தூண்டும் குறிப்பு.

histogen'esis, *n.* உயிர்த்தசைமங்களின் உருவாக்கம்; உயிர்த்தசைக் கூறுகளின் உருத்திரிபு.

histogenet'ic, *a.* உயிர்த்தசைமங்களின் உரு ஆக்கத்திரிபு சார்ந்த.

histog'eny, *n.* = histogenesis.

histol'ogy, *n.* உயிர்த்தசைமங்கள் பற்றிய ஆய்வுநூல்.

histor'ian, *n.* வரலாற்றாசிரியர்.

histor'iated, *a.* எழுத்துக்கள் வகையில் ஆள் அல்லது விலங்கு உருவத்தால் ஒப்பனை செய்யப்பட்ட.

histo'ric, *a.* வரலாற்றுப் புகழ்பெற்ற; (தொ.) historic present, நடந்ததை நடக்கிறதுபோலக் கூறும் கால வழுவமைதி; historic tenses, கடந்த கால நிகழ்ச்சிகளைத் தெரிவிக்க உதவும் காலக் கூறுகள்.

histo'rical, *a.* வரலாற்றுச் சார்பான; வரலாற்றுக்குரிய; வரலாற்றுத் தொடர்புடைய; வரலாற்றிலிருந்து பெறப்பட்ட; வரலாற்றைப் பின்பற்றிய; வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட; வரலாற்றுப் பின்னணியுடைய; வரலாற்று நிகழ்ச்சிகள் குறித்த; வரலாற்று வாய்மையுடைய; பழங்கதை சாராத; கற்பனையல்லாத; மெய்யான; வரலாற்றுத் துறைக்குரிய; சென்ற காலத்துக்குரிய; தற்காலஞ் சாராத; (தொ.) historical method, தோற்ற வளர்ச்சி வரலாற்றுமுறை ஆய்வு.

histori'city, *n.* வரலாற்று வாய்மை, மெய்ம்மைப்பாடு.

historiog'rapher. *n.* வரலாற்றெழுத்தாளர், அரசவைப் பணித்துறை சார்ந்த வரலாற்று எழுத்தாளர்.

historiograph'ic, historiograph'ical, *a.* வரலாற்று எழுத்தாண்மை சார்ந்த.

historiog'raphy, *n.* வரலாற்று எழுத்தாண்மை.

his'tory, *n.* வரலாறு, சென்றகால அறிவு; இனவளர்ச்சி பற்றிய ஆய்வு; மனித உலக வாழ்வு நிகழ்ச்சிகளின் தொடர் கோவை; நிகழ்ச்சிக்கோவை, பொதுமுறை நிகழ்ச்சிகளின் முறைப்பட்ட தொடர்ப் பதிவீடு; இறந்தகாலச் சிறப்பு நிகழ்ச்சிகளின் தொகுதி; நாட்டு நிகழ்ச்சித் தொடர்பு விளக்கம்; மனித வாழ்க்கை நிகழ்ச்சித் தொடர்பு; பொருள் தோற்ற வளர்ச்சித் திரிபு விளக்கம்; இயல்கலைத் தோற்ற வளர்ச்சி விளக்கம்; இயற்கை நிகழ்ச்சிகளின் முறையான விளக்கம்; (தொ.) ancient history, கி. பி. 476 வரையுள்ள வரலாறு; mediaeval history, கி. பி. 476 முதல் கி. பி. 15ஆம் நூற்றுண்டு வரையுள்ள வரலாறு; modern history, கி. பி. 15ஆம் நூற்றுண்டுக்குப் பிற்பட்ட வரலாறு; natural history, விலங்கின் வாழ்வு போன்ற இயற்கை நிகழ்வுகளின் விளக்க ஆய்வு.

his'trion, *n.* நாடகமேடை ஆட்டக்காரர்.

histrion'ic, *a.* நடிப்புச் சார்ந்த; நடிகர்களுக்குரிய; நாடகப் பாங்கான.

histrion'ics, *n. pl.* நாடகமேடைக்கலை; நடிப்புத்திறம்; மேடைக்குரிய பண்பு, நாடகப்பண்புவாய்ந்த செயற்கையான நடை; புறவேடம், பகட்டு.

his'trionism, histrion'icism, *n.* நடிப்பு; செயற்கை நடை.

hit, *n.* அடி; தட்டு; வெட்டு; குறிதவறுத எறி, வெற்றிகரமான இலக்குப் பிழையாத வேட்டு; வேட்டு எறிதல், அடித்தல்; வேட்டு எறிவாய்ப்பு; வசைத் தாக்குதல்; வாய்ப்பு; நல்வாய்ப்பு, குருட்டடி, யோகம்; வாய்ப்பான திடீர்த் துணுக்கு; உணர்ச்சிக் கௌவுகை, விருப்பம் கப்புதல்; கெலிப்பு; *v.* அடி; வெட்டு; தட்டு; குத்து; இலக்கு வைத்தெய்; குறிநோக்கி வேட்டுச் செலுத்து; குறியில்படும் படி செய், இலக்கு நிறைவேறப் பெறு; தாக்குதலுக்கு

ஆளாக்கு; சென்று மோது; மோதி வீழ்த்து; காயப்படுத்து; புண்படுத்து; திடீர் உணர்வுகொளுத்து; சேதத்துக் குள்ளாக்கு; வசைத்தாக்குதல் செய்; மீதுபடு; சென்றெட்டு; சென்றடை; நேர்வெற்றிபெறு; வாய்ப்பாகப்பெறு; வாய்ப் பாயமை, தகுதியாயிரு, பொருந்துறு; திடீரென்று நினை; சுற்றிவளையாது நேரடியாகக் கருத்தில் தோன்றப்பெறு; (தொ.) hit against, படு, தட்டு; சென்றுமோது; hit below the waist, மற்போரில் விதிமுறை மீறிச் செயலாற்று: தகாமுறைத் தாக்குதல் செய்; hit it, hit the nail on the head, hit the right nail on the head, சரியாக ஊகம் செய்; மெய்ம்மையை அப்படியே கூறு, இம்மி பிசகாமல் உள்ளதை உள்ளபடியே எடுத்துரை; hit it off, உடன்படு, இசைந்துபோ; hit off, முழுதும் இசைவுறு, ஒத்துப்போ; இம்மி பிசகாது முழுதும் ஒத்திருக்கும்படி பார்த்துப் பின்பற்றிவிடு; hit out, வலிமையுடன் வீசியடி; hit up, கெலி; hit upon, படு; தட்டு; சென்று மோது; திடுமென ஊகி; வேண்டியது நேரே வந்தெய்தப் பெறு.

hitch, *n.* வெட்டியிழுப்பு; திடீர் உந்தல்; குலுக்கு, திடீர் அதிர்ச்சி; இடைத்தடங்கல், இடக்கு, சிக்கல், முட்டுப்பாடு; தடங்கல் காரணமான இடைத்தாமதம்; வண்டியுடன் வண்டி இடைக்கொளுவுதல், இடையிணைப்பு; நடப்பவர்க்கு இடையே ஊர்திகளில் அளிக்கப்படும் ஏற்றுதவி; (கப்.) முடிச்சுக் கண்ணி வகை; *v.* வெட்டி வெட்டிச் செல், வெட்டியிழுத்துக் கொண்டு செல்; தட்டுத் தடங்கலுறு, பட்டுத்தடைபடு; முடிச்சிட்டு இணை; கொளுவி இணை; இணைக்கப்பெற்றிரு; இடையே ஊர்தியிலேறிச் செல்லும் உதவிபெறு; வெட்டித் தாக்கு; மூட்டை முடிச்சுக்களுடன் நட; கதையில் இடைச் செருகு; (தொ.) hitch one's waggon to a star, தன்னினும் மிக மேம்பட்ட உயர் இட ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்; hitch up, வெட்டித்தூக்கு.

hitch'-hike, *n.* இடையிடையே ஊர்தி ஏற்ற உதவியுடன் நடத்தும் நடைப் பயணம்; *v.* இடையிடையே ஊர்தி ஏற்ற உதவியுடன் நடந்து பயணம் செய்.

hith'er, *a.* இப்பக்கமுள்ள, அருகிலுள்ள; இரண்டில் மிகுதி அணிமையிலுள்ள; *adv.* இவ்விடத்துக்கு; இவ்விடம் நோக்கி.

hitherto', *adv.* இந்நேரம் வரை.

hith'erward, hith'erwards, *adv.* இப்பக்கம் நோக்கி.

Hit'lerism, *n.* செர்மானிய வல்லாளர் அடால்ப் ஹிட்லர் (Adolf Hitler 1889-1945) பின்பற்றிய கோட்பாடுகளின் தொகுதி.

hive, *n.* செயற்கைத் தேன்கூடு; தேனீக்கள் நிரம்பிய கூடு; ஆரவார மொய்ப்பிடம்; மொய்திரள்; *v.* தேனீக்களைக் கூட்டில் வை; கூட்டில் ஒருங்குதிரட்டு; கூட்டில் புகு; தேனீக்கள் போல ஒருங்கு கூடிவாழ்; கூட்டமாகத் தங்கிடம் கொள்; ஆட்களுக்கு வாய்ப்பான தங்கிட வசதிசெய்; திரட்டிக்குவி; சேமித்து வைத்துப் பேணு; (தொ.) hive off, தேசியமய ஆக்கத்திலிருந்து தப்புவதற்காக உற்பத்திப் பகுதியைத் துணை நிலையங்களிடம் ஒதுக்கீடு செய்.

hives, *n. pl.* தோல்வீக்கம்; படைநோய்; குடல்வீக்கம்; தொண்டை அழற்சி.

ho, *int.* வியப்புக்குறிப்பு; ஆர்வப்பாராட்டுக் குறிப்பு; வெற்றிக் குறிப்பு; ஏளனக்குறிப்பு; கவனஈர்ப்புக் குறிப்பு; (தொ.) what ho, விளுக்குறிப்பு; westward ho, இலக்கின் திசை பற்றிய ஆர்வக்கிளர்ச்சிக் குறிப்பு.

hoar, *n.* மூப்பு, நரைமுதிர்தோற்றம்; உறைபனி வெண் திரை; *a.* மூப்பால் நரைத்த; சாம்பற் சாயல் கலந்த வெண்ணிறமான, நரைவெள்ளையான, வெள்ளை பூத்த; காலத்தால் முதுமை வாய்ந்த, மிகப்பெரும் பழமை வாய்ந்த.

hoar'frost, *n.* உறைபனி வெண்திரை.

hoard, *n.* சேமக்குவை, சேமித்துவைத்திருக்கும் கையிருப்பு; பணக்குவியல், கருவூலம்; அறிவுத்திரட்டு; *v.* திரட்டிச்சேர், குவி; உள்ளத்தில் தேக்கிவை; போர்க்காலத்தில் உணவுப் பொருள் முதலியன சேமித்துவை, சேகரித்துப் பதுக்கிவை.

hoard'ing, *n.* சாரக்கட்டு, சாரம், விளம்பரங்கள் ஒட்டப்படுவதற்கான சுவரணை சட்டம்.

hoar'hound, *n.* = horehound.

hoarse, *a.* குரல்வகையில் கரகரப்பான, கம்மிய; குளிரினுல் குரல் கட்டிக்கொண்ட; கரகரத்த குரலையுடைய, தொண்டை கட்டிக்கொண்ட; செவிக்கு நாராசமான, கடுமையான; கேட்க அருவருப்பான.

hoar'stone, *n.* மிக்க பழமை வாய்ந்த எல்லைக்கல்.

hoar'y, *a.* நரைத்துவெளுத்த; நரையுடைய, மூப்புடைய; முதுமைதியுடைய, முதுமை மதிப்புக்குரிய; (தாவ.) வெண் மயிர் போர்த்த; மிகுபழமைவாய்ந்த.

hoax, *n.* குறும்புத்தனமான ஏமாற்று, கேலிக்கூத்து; நகைப்புக்கான கட்டுக்கதை; *v.* குறும்புத்தனமாகப் பொறியில் சிக்கவை; கேலிக்கூத்தடி.

hob, *n.* அடுப்பருகிலுள்ள கணப்புத்தட்டம்; எறிவட்டாட்ட வகையில் கோல்; நாணய எறியாட்ட வகையில் எறிகோல்; நாணய எறியாட்டம்; சக்கரக்குமிழ்; சக்கரப் பல்வெட்டுங் கருவி; சறுக்கு வண்டியின் கட்டை.

hob'ble, *n.* நொண்டுநடை, குதிநடை; அருவருப்பான நிலைமை, சிக்கல்நிலை; காற்கட்டு, முட்டுக்கட்டை; *v.* நொண்டிநட; அருவருப்பாக நட, குதித்துக் குதித்து நட; சந்தமற்று இயங்கு, ஏறுமாறாக இயங்கு; இடைவிட்டுவிட்டுச் செயலாற்று, விட்டுவிட்டுப் பேசு; யாப்பு வகையில் போலி எதுகையுடன் இயங்கு; போலி எதுகையுடன் இயங்குவி; கால் கட்டிடு; முட்டுக்கட்டையிடு; கால்களைக் கட்டு.

hob'bledehoy', *n.* இளமை நிலை கடந்தும் பருவ நிலை பெறாத அருவருப்பான நடையுடைய இளைஞன், வளர்ந்த குழந்தைப்பிள்ளை.

hob'ble skirt, *n.* காலடியருகே மிகவும் குறுகலான பாவாடை.

hobb'y [1], *n.* விருப்பவேலை, ஓய்வுநேர விருப்பார்வத் தொழில்; வாழ்க்கைக்குரிய தலைத்தொழிலல்லாத விருப்பார்வத்துறை, ஆர்வ ஈடுபாட்டுத்துறை; மட்ட விரைநடைக் குதிரை வகை; முற்கால மிதிவண்டி வகை.

hobb'y [2], *n.* சிறு வேட்டப் பருந்துவகை, இராசாளிவகை.

hobb'y-horse, *n.* விழாக்காலப் பொய்க்கால் குதிரை; சிறுவர் குதிவிளையாட்டுக்கான குதிரைத் தலையுடைய கோல்; சிறுவர் விளையாட்டு ஆட்டக்குதிரை; விழாக்கால இராட்டினக் குதிரையிருக்கை.

hob'goblin, *n.* குறளி, குட்டிச்சாத்தன்; ஆவி, கொல்லைப் பொம்மை; பூச்சாண்டி.

hob'nail, *n.* புதைமிதியின் அடியில் தைக்கும் பெருந்தலை ஆணி.

hob'nailed, *a.* பெருந்தலையாணிகள் கொண்ட; தலையாணிகள் பதித்த; (தொ.) hobnailed liver, தலையாணிக்குமிழ்கள் போன்ற புடைப்பு வரிசையுடைய கல்லீரல்.

hob'-nob, *v.* கூடிக்குடித்து மகிழ்; கூடிக்குலாவி உரையாடு.

hob'o, *n.* நாடோடித் தொழிலாளி, வேலை தேடித் திரியும் தொழிலாளி.

Hob'son's choice, *n.* எடு அல்லது விடு என்ற வகையில் அமைந்த போலித் தேர்வுப்பொருள்.

hock [1], *n.* விலங்கின் பின்னங்கால் முழந்தாள் இறைச்சி.

hock [2], *n.* செர்மானிய நாட்டு வெண்ணிற மதுவகை.

hock'ey, *n.* வளைகோற்பந்தாட்டம்.

Hock'-tide, *n.* (வர.) ஆங்கிலநாட்டுப் பழங்கால விழா.

hoc'us, *v.* சூழ்ச்சியில் வீழ்த்து, ஏமாற்று; மருந்துகொடுத்து மயக்கமூட்டு; குடிவகையில் மயக்க மருந்துகல.

hoc'us-poc'us, *n.* ஏமாற்று, செப்படிவித்தை; பொதுமுறை மந்திர வாய்பாட்டுமாதிரி; *v.* செப்படி வித்தைசெய்; ஏமாற்று.

hod, *n.* கொத்துவேலைச் சாந்து எடுத்துச்செல்லும் தட்டு.

Hodge, *n.* உருமாதிரிச் சுட்டுக்குறிப்பில் ஆங்கிலநாட்டுப் பண்ணையாள்.

hodge'-podge, *n.* கூட்டவியல், கறிகாய் கலவைக் கூட்டுணவு; சரிசம மதிப்புடன் பங்கிடுவதற்கான உடைமைக் கூட்டுக்கலப்பு; கலவைக் கூளம், கதம்பம்.

hodiern'al, *a.* இன்றைய, இற்றை நாளுக்குரிய.

hod'man, *n.* கொத்துவேலைக் கையாள்; சாந்துத்தட்டுத் தூக்குபவர்; கைவேலைக்காரன்; கூலி எழுத்தாளன்.

hodom'eter, *n.* சகடத்தொலைவுமானி.

hoe[1], *n.* மண்கிளறி, மண்ணைக்கிளறும் மண்வெட்டி; களைக்கொட்டு, உழவாரப்படை; *v.* மண்ணைக்கிளறிவிடு; மண் கிளறியைக் கையாளு; களைகொட்டு; தோண்டு; வெட்டி வீழ்த்து, செதுக்கு.

hoe[2], *n.* நிலக்கூம்பு, கடற்கூம்புப்பாறை.

hog, *n.* பன்றி; இறைச்சிக்காக விதையடித்து வளர்க்கப்படும் ஆண்பன்றி; அழுக்கேறியவன், கீழ்மகன்; நாகரிகமற்றவர், பட்டிக்காட்டான்; பேராவற்காரன்; முதல் கத்திரிப்புக்கு முற்பட்ட ஒரு வயது ஆடு; ஒரு வயது விலங்கு; *v.* முதுகை உயர்த்து; முதுகை வில்போல் வளை; பிடரிமயிரைக் குறுக்கே வெட்டு; பன்றிபோலப்பற்று; பன்றிபோலத் தின்னு; பன்றி போல நடந்துகொள்; முரட்டுத்தனமாக நடத்து; (தொ.) go the whole hog, முற்ற முழுக்க நிறைவேற்று, கடைபோகக்காண்; hog in armour, அருவருப்பான கட்டை போன்ற உருவமைதியுடைய மனிதன்; hog's pudding, பல வகைப் பொருள்கள் திணிக்கப்பெற்ற பன்றியின் குடல்கறி.

hog'back, *n.* நடுவே முகட்டையுடைய கொடும்பாறை.

hog'-fish, *n.* தலையில் பன்றிமுள் போன்ற அமைப்புடைய மீன்வகை.

hogg'et, *n.* ஒருவயதான ஆடு.

hogg'in, *n.* அரித்தெடுத்த சரளை.

hogg'ish, *a.* பன்றிபோன்ற; முரட்டுத்தனமான; அழுக்கடைந்த; தன்னலம்பிடித்த.

hog'-mane, *n.* குறுகத்தறித்த குதிரையின் பிடரிமயிர்.

hog's'-back, *n.* = hogback.

hogs'head, *n.* பெரிய மிடா; முகத்தலளவைக் கூறு; 52½ கேலன் (gallon).

hog'-wash, *n.* அடுப்படிச் சாக்கடை.

hoick[1], *v.* விமானத்தை வலிந்து நேர்உயரமாகச் செலுத்து; விமானத்தில் நேர்உயரச்செல்லு.

hoick[2], **hoicks**, *int.* வேட்டைநாய் ஊக்கு குரல்.

hoik, *v.* = hoick[1].

hoi poll'oi, (கிரே.) *n.* மிகப்பலர், பெரும்பான்மை மக்கள், பொதுமக்கட்கும்பல்.

hoist[1], *n.* உயர்த்துதல்; மேலேதள்ளுதல்; பாய்மர உயரம்; பாய்மரத்தை அடுத்த கொடியின் பகுதி; பாரந்தூக்கி; ஏற்றுமாடம்; *v.* உயரத்தூக்கு; கொடியை உயர்த்து, உயரப் பறக்கவிடு; கயிறு கம்பிகள் மூலம் மேலெழுப்பு; கயிறுகம்பிகள் மூலம் தூக்கு; தூக்கி எறி.

hoist[2], *a.* தூக்கி எறியப்பட்ட; (தொ.) hoist with one's own petard, தன் வெடிகுண்டினால் தானே தகர்த்தெறியப் பட்ட; பிறருக்கெதிரான தன் சதிச் சூழ்ச்சிகளால் தானே அழிவுற்ற.

hoit'y-toit'y, *a.* ஆரவாரக் கூச்சலிடுகிற; விருப்பான; முகங்கோணிக்கொண்டிருக்கிற, கத்திக்கொண்டு பிணங்குகிற; *int.* மட்டுமீறிய தற்பெருமை கண்டு வியப்பும் கண்டனமும் தெரிவிக்கும் குறிப்பு.

hok'ey-pok'ey, *n.* செப்படி வித்தை; மந்திரதந்திரம்; ஏமாற்று; தெருவில் விற்கப்படும் கீழ்த்தரக் குளிர்ப்பாலடைக் குழம்பு.

hok'um, *n.* சுவைத்திறமற்ற மக்கள் கும்பலுக்கிசைவாகத் திட்டமிடப்படும் கீழ்த்தர நாடகக் கூறுகளின் தொகுதி; கீழ்த்தரத் திரைப்படக்கூறுகளின் தொகுதி.

hold[1], *n.* பிடி, பிடிப்பு; பிடிப்பாற்றல்; வாய்ப்பு; பிடிக்குகந்த பொருள்; தனி மனிதனின் வசமான கட்டுப்பாடு; கட்டுப்படுத்திவைக்குமிடம், சிறை; அரண்காப்பிடம்; *v.* பிடி; பிடித்திரு; உறுதியாகக் கையில் பற்று; கைவிடாது வைத்திரு; பிடிப்பில் வைத்திரு; பெற்றிரு; உடைமையாகக் கொண்டிரு; உரிமையைப் பெற்றிரு; வசமாகக்கொண்டிரு; ஆற்றலுக்குள் வைத்திரு; கட்டில் வைத்திரு; சிறைப்படுத்து; வெற்றிகரமாக முற்றுகையிடு; தொடர்ந்து செயலாற்று; தொடர், நீடித்து இயங்கு; தகர்வுறுதியங்கு; அடங்காது தொடர்ந்து இயங்கு; உரிமையுடன் வலியுறுத்து; பிடி முரண்டுகொள், விடாப்பிடிகொள்; கையாளு, கைக்கொண்டு பயன்படுத்து; இடங்கொள்; உட்கொண்டிரு; கவனத்தைத் தன் பக்கமாகக்கொள்; தடைப்படுத்து; தாமதப்படுத்து; நிறுத்து; கொண்டாடு; நடத்து; நடைபெறுவி; கூட்டு, கூட்டிலிணைத்து நடைபெறுவி; கருது; வைத்துக்கொண்டிரு, தாங்கு; பொறு; உறுதியாயிரு; தவறாதிரு; பற்றிக் கொண்டிரு, ஒட்டிக்கொண்டிரு; (தொ.) hold aloof, தொடர்புநீக்கி விலகியிரு; hold back, தடுத்துநிறுத்து; தயங்கிநில்; தன்னைக் கட்டுப்படுத்திக்கொள், அடக்கிக்கொள்; செயலை நிறுத்திக்கொள்; hold cheap, மதியாதிரு; ஏளனமாகக் கருது; hold dear, உயர்வாக மதி; போற்று; hold forth, மேடையில் முழக்கமிட்டு விரித்துப்பேசு; விளக்கமாக விரித்துரை; விளக்கமாகக் காட்டு; hold in, கட்டுப்படுத்து; தடுத்துநிறுத்து; தேக்கிவை; அடக்கிவை; hold off, விலகி இரு; தள்ளிவை; தாமதி; hold on, பிடிதொடர்; நிறுத்து; hold one at bay, தயக்கநிலையில் வைத்திரு; திகைக்க வை; hold oneself, கருது; hold one's hand, செயலைநிறுத்து; எண்ணிக்கொள்; நிலை மேற்கொள்; hold one's head down, அவமானத்தால் தலைகுனி; பெருமை இழந்துநில்; பணிந்துநில்; நாணுறு; hold one's head erect, hold one's head high, hold up one's head, நிமிர்ந்துநில், தன்மதிப்புடன் நட; hold one's tongue, hold one's noise, பேசாதிரு, சந்தடி செய்யாதிரு, பேச்சை நிறுத்து; hold out, நீட்டு; ஏந்து; கொடு; ஏந்தி ஆசை காட்டு; தாங்கு; நீடித்து உழை, உறுதியுடன் தொடர்ந்திரு; hold to, பற்றிக்கொள், கட்டுப்படுத்திக்கொள்; hold together, இணைந்திரு; ஒன்றுபட்டிரு; hold up, தாங்கு; ஆதரி; வழிப்பறிக்காக நிறுத்திவை; there is no holding him, அடங்காதவனாயிருக்கிறான்; துடிதுடித்துக்கொண்டிருக்கிறான்.

hold[2], *n.* கப்பல் தளத்தடியில் சரக்குகள் சேமிக்கும் பள்ளம்.

hold'er, *n.* பிடிப்பவர்; வைத்திருப்பவர்; பதவிபெறுபவர்; பதவியில் தற்காலிகமாக அமர்ந்திருப்பவர்; பட்டம் பெறுபவர்; எழுதுகோலின் கைப்பிடி; பிடிப்புச்சட்டம்.

hold'ing, *n.* பிடி; பிடித்தல்; பற்றுதல்; கைப்பற்று நிலம், நில உடைமை; நில உரிமை முறை; கைக்கொண்டுள்ள முதலீட்டுப்பங்கு; செல்வாக்கு; (தொ.) holding company, சார்புநிலையங்களின் பங்குகளை வைத்திருப்பதற்கான நிலையம்.

hole, *n.* துளை, புழை; குழி, கிடங்கு; சிறுவிலங்கின் வளை; ஆற்றின் ஆழ்தடம்; ஒடுக்கமான உறைவிடம், ஒட்டுக்குடிசை; ஒளிவிடம்; ஆட்டக்குழி; தப்பிச்செல்லும் புழை வழி; குழிப்பந்தாட்டக் கெலிப்பு; துளையீடு, சல்லடையான துளைப்பு; எக்கச்சக்கமான நிலை, இக்கட்டுநிலை; *v.* துளையிடு; துளையிலிடு; குழிப்பந்தாட்டத்தில் பந்தைக் குழியிலிடு; குழியில் விழு; கப்பல் பக்கங்களைத் துளை; சுருங்கை வழியமை; அடிநிலக்குழாயமை; சுரங்கத்தில் வெட்டுவாயிலிருந்து வெட்டுவாய்க்கு வழிசெய்; (தொ.) a round peg in a square hole, a square peg in a round hole, இடத்துக்கு ஒவ்வாத ஆள்; be in rather a hole, be in rather a devil of a hole, எக்கச்சக்கமான நிலையிலிரு; make a hole in, பெருந்தொகை செலவாக்கிவிடு; pick holes in, குற்றங் காண், குறைகூறு.

hole'-and-cor'ner, *a.* மறைவான, புதைவான, இரகசியமான.

hol'iday, *n.* விடுமுறை நாள், வேலையில்லாத நாள்.

hol'idays, *n. pl.* நீள்விடுமுறைக்காலம்.

hol'ily, *adv.* புனிதமாக, திருநிலையாக.

hol'iness[1], *n.* புனிதத்தன்மை.

Hol'iness[2], *n.* திருமேனி, போப்பாண்டவரைக் குறித்த மதிப்புக்குறிப்பு ; (தொ.) his Holiness, திருமேனியவர்கள், போப்பாண்டவர் குறித்த மதிப்பு வழக்கு.

hol'ism, *n.* (மெய்.) முழுமைப் படைப்புக் கோட்பாடு, கூறுகளின் தொகுதிக்கு மேம்பட்ட நுண் உயிர் முழுமைகளிலிருந்து உயர் முழுமை நோக்கி வளர்ந்த படிமலர்ச்சியே படைப்பின் அடிப்படை என்னும் கோட்பாடு.

holl'a[1], *v.*=hollo[2].

holl'a[2], *int.*=holl'o[1].

Holl'and, *n.* ஆலந்து நாடு, வடக்கு நெதர்லாந்து மாநிலப்பகுதி ; நெதர்லாந்து அரசு ; நார்த்துணிவகை ; (தொ.) brown Holland, வெளுக்கப்படாத நார்த்துணி வகை.

Holl'ander, *n.* ஆலந்துக்காரர்; ஆலந்துக் குடிமகன்; டச்சுக் கப்பல், ஆலந்து நாட்டுக் கப்பல்.

Holl'ands, *n.* கூலத்தினின்றும் செய்யப்படும் தேறல் வகை.

holl'o[1], *n.* தொலைவிலுள்ளோரை அழைக்கும் விளிக்குறிப்பு ; *int.* விளிக்குறிப்பு.

holl'o[2], holl'oa, *v.* ஆர்ப்பரி, கூவு ; வேட்டைநாய்களைக் கூவிக்கொண்டே துரத்து.

holl'ow[1], *n.* பொள்ளல் ; உட்புழை ; வெறுமை ; குழிவு ; உள்துளை ; பள்ளம் ; பள்ளத்தாக்கு ; வடிநிலம் ; *a.* குழிவான ; பள்ளமான ; புழையுள்ள ; திடமற்ற ; கெட்டியாயிராத ; வெறுமையான ; உள்ளீடில்லாத ; வயிற்றில் ஒன்றுமற்ற, பசியுடைய ; ஒலிவகையில் முழுத்தொனி அமையப் பெற்றிராத ; வஞ்சகமான; வாய்மையற்ற ; போலியான ; பொய்யான ; பொருளற்ற; அறிவற்ற; பண்பற்ற ; *v.* துளையிடு, உட்டுளையுடையதாகச் செய் ; அகழ், குடை, தோண்டு; *adv.* முழுவதும், தீர ; (தொ.) beaten hollow, முற்றத் தோற்கடிக்கப்பட்ட ; hollow out, அகழ், குடை, தோண்டு.

holl'ow[2], *v.*=hollo[2].

Holl'oway, *n.* பெண் காவற் கைதிகளுக்கும் கடன் குற்றக் கைதிகளுக்கும் உரிய சிறைக்கூடம்.

holl'ow-eyed, *a.* குழிந்த கண்களையுடைய.

holl'ow-ground, *a.* நாவிதன் கத்தியைப்போல் இரண்டு பக்கமும் குழிவான மேற்பரப்புடைய.

holl'ow-heart'ed, *a.* வாய்மையற்ற மனமுடைய, வஞ்சகமான.

holl'owness, *n.* பொள்ளன்மை, உட்டுளையுடன்கூடிய நிலை; அகழ்வு ; வெறுமை ; பொய்ம்மை, வஞ்சகம்.

holl'ow-ware, *n.* குடம்-கெண்டி போன்ற இருப்புக்கலங்களுக்கு வழங்கும் வாணிகப் பெயர் ; உலோக மங்குக் கலங்களின் தொகுதி.

holl'y, *n.* முள் இலைகளையும் பசிய சிறுமலர்களையும் சிவப்புப் பழங்களையும் உடைய இலையுதிர்க்காத புதர்ச்செடி வகை.

holl'yhock, *n.* பலநிறப் பெரிய மலர்களையுடைய நெட்டையான செடிவகை.

Holl'ywood, *n.* அமெரிக்காவில் காலிபோர்னியாவில் உள்ள மாகாணம் ; ஹாலிவுட்டில் உருவாக்கப்படும் அமெரிக்கத் திரைப்படத்துறை.

holm[1], *n.* துருத்தி, அரங்கம், ஆற்றங்கரையில் அமைந்து வெள்ளம் வரும்போது மூழ்கிப்போகும் திட்டு நிலம் ; தலைநிலத்துக்கு அண்மையிலுள்ள தீவு.

holm[2], *n.* இலையுதிர்க்காத சீமை ஆல்வகை ; சணல் வகை.

holme, *n.*=holm[1].

holm'-oak', *n.* இலையுதிர்க்காத சீமை ஆல்வகை.

hol'ocaust, *n.* முழு அவியூட்டுப்பலி ; பெருங்களப்பலி ; நூழிலாட்டு, படுகொலை, பாடழிவு.

holocrys'talline, *a.* கண்ணாடியின்றி முழுவதும் படிகத்திறலான அமைப்புக்கொண்ட.

hol'ograph, *n.* உரியவர் கையாலேயே முழுவதும் எழுதப்பட்ட ஆவணம் ; *a.* தம் கையாலேயே முழுவதும் எழுதப்பட்ட.

holohed'ral, *a.* மணியுரு வகையில் முழுசெவ்விசைவுக்கு வேண்டிய எல்லாப் பட்டைகளையும் உடைய.

holohe'dron, *n.* பளிங்குவகையில் முழுசெவ்விசைவுக்கு வேண்டிய எல்லாப் பட்டைகளையும் உடைய வடிவம்.

holometab'ola, *n. pl.* (வில.) முழு உருமாற்றமடையும் பூச்சி வகைகள்.

holometab'olism, *n.* (வில.) பூச்சிவகையில் முழு உருமாற்றத்துடன்கூடிய வளர்ச்சி.

hol'ophote, *n.* கலங்கரைவிளக்கத்தில் ஒளிக்கூறு முழுமையையும் வேண்டிய திசையில் வீசுவிப்பதற்கான அமைவு.

holophyt'ic, *a.* பசுஞ்செடியினைப் போலவே ஊட்ட உணவைப் பெறுகிற.

holothurian, *n.* (உயி.) புழுவியல்புடைய வட்டவடிவான கடல்வாழ் உயிர்ப் பேரினம் ; *a.* கடல்வாழ் உயிர்ப் பேரினம் சார்ந்த.

holozo'ic, *a.* (உயி.) விலங்கினம் போலப் பிற உயிரினங்களிலிருந்தே ஊட்டஉணவு பெறுகிற.

hol'ster, *n.* சேணத்தில் அரைக்கச்சில் செருகப்படும் கைத்துப்பாக்கிக்கான தோலுறை.

holt[1], *n.* காடு, புதர்க்காடு ; சோலைமலை ; பழத்தோட்டம்.

holt[2], *n.* விலங்கு பதுங்குமிடம்; நீர்நாயின் வளை.

hol'us-bol'us, *adv.* ஒருங்கு சேர, எல்லாம் ஒரே மொத்தத் தொகுதியாக.

hol'y, *n.* புனிதப்பொருள் ; திருத்தலம் ; புண்ணிய மூர்த்தி; *a.* புனிதமான, திருநிலையுடைய; தேவாலயம் சார்ந்த; திருப்பணிக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட ; நிறை சமய வொழுக்கமுடைய ; சீரிய ஒழுக்க மேம்பாடுள்ள ; (தொ.) Holy Alliance, புனிதக் கூட்டுறவு, நெப்போலியன் வீழ்ச்சிக்கு (*1815*) பிறகு ஆஸ்ட்ரியா ருசியா பிரஷியா (Prussia) ஆகிய மூன்று நாட்டு மன்னர்களும் கூடிச் செய்துகொண்ட உடன்படிக்கை ; Holy City, ஜெருசலம்; ரோமாபுரி; மெக்கா; காசி ; அலகாபாத் ; வானுலகம் ; Holy Cross day, சிலுவை மேம்பாட்டுத் திருவிழா, செப்டம்பர் *14*-ஆம் நாள் ; holy day, சமயத் திருவிழா நாள் ; Holy Family, குழந்தை இயேசு யோசேப்பு மேரி முதலியோர் கொண்ட புனிதக் குடும்பம் ; Holy Ghost, தூய ஆவி, கிறித்தவ சமய மும்மைத் திருவுருவின் மூன்றுவது திருவுரு ; Holy grail, இறுதி உணவின்போது இயேசுநாதர் பயன்படுத்திய தட்டம் ; Holy Land, யூதேயா (Judaea), பாலஸ்தீன நாட்டுப்பகுதி ; Holy Office, ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில் சமயத்தண்டமுறை மன்றம் ; holy of holies, கோயில் மூலக் கருவறை ; holy orders, சமயப் பணிக்கென ஒதுக்கிவைக்கப்படும் நிறுவனம்; திருச்சபைப்பணி ; Holy Roman Empire, புனித ரோமப் பேரரசு, கி. பி. 962 முதல் 1806 வரையில் செர்மன் பேரரசுக்கு வழங்கிவந்த பெயர் ; Holy Saturday, புனித வாரத்தில் வரும் சனிக்கிழமை ; Holy Spirit, கிறித்தவ சமய மும்மையில் மூன்றுவது திருவுரு ; Holy Thursday, இயேசுநாதர் ஆவி நீத்த நாளாகிய புது வெள்ளிக்கிழமைக்கு முன்புள்ள வியாழக்கிழமை ; இயேசுநாதரின் விண்ணேற்ற நாள் ; holy war, புனிதப்போர், சமயப்போர், சிலுவைப் போர் ; holy water, தீர்த்தம் ; Holy Week, புனித வாரம் ; இயேசுநாதர் உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்புள்ள வாரம் ; Holy Willie, புறநீரார், வெளிப் பாசாங்குக்காரர்; holy Writ, விவிலிய நூல், கிறித்தவரின் மறைநூல், திருநூல் தொகுதி.

ho'ly-rood, *n.* இயேசுநாதரின் சிலுவை ; ரோமன் கத்தோலிக்கக் கோயில்களில் பலிபீடத்துக்குப் போகும் நுழைவாயிலுக்கு மேலேயுள்ள சிலுவை ; (தொ.) Holy-rood Day, சிலுவை கண்டுபிடிப்புத் திருநாளாகிய மே திங்கள் *3*-ஆம் நாள் ; சிலுவை மேம்பாட்டுத் திருநாளாகிய செப்டெம்பர் *14*-ஆம் நாள்.

hol'ystone, *n.* கப்பல் தளங்களைத் தேய்த்துத் துப்புரவாக்கு வதற்குப் பயன்படுத்தப்படும் மெத்தென்ற மணற்கல் வகை; *v.* மெத்தென்ற மணற்கல் வகையினால் தேய்த்துத் துப்புர வாக்கு.

hom, (பெர்.) *n.* சிந்திவகை, பண்டைப் பார்சிகளின் (Parsees) புனிதச்செடி.

hom'age, *n.* மேலாண்மை ஏற்பு, பணிவறிவிப்பு; வணக்க முறை; உரிமைப் பாராட்டு; ஆர்வமதிப்பு; மேம்பாடேற்பு; மனந்திறந்த புகழுரை; ஆட்குடியுரிமைக் குழு.

hom'bre, (ஸ்பா.) *n.* மனிதன்.

Hom'burg, hom'burg-hat', *n.* குறுகிய விளிம்பும் உச்சி யில் குழிவும் உடைய மெத்தென்ற அழுத்தக் கம்பளத் துணித் தொப்பி.

home, *n.* வீடு; நிலவரக் குடியிருப்பிடம்; நிலையான வாழ் விடம்; குடும்ப மனை; குடும்பத்தாயகம்; தாயகம், தாய் நாடு; பிறப்பகம்; இயலிடம்; வழக்கமான சூழல்; புக லிடம்; ஓய்விடம்; விளையாட்டுக்களில் மூலதளம்; இலக்கு; உட்களம்; தனிமனிதர் மருத்துவ மனை; விருந்தினர் தங்கிடம்; ஏலாதவர் பேணகம்; விலங்குகளின் காப்பகம்; *a.* வீட்டுக்குரிய; குடும்பத்துக்குரிய; தாயகத்தைச் சார்ந்த; உள்நாட்டுச் சார்பான; தம் ஆட்டகளத்துக்குரிய; வீட் டில் நடைபெறுகிற; வீட்டில் செய்யப்படுகிற; வீட்டுக்கு அருகிலுள்ள; தாய்நாட்டில் செய்யப்பட்ட; தாயகம் நோக் கிய; தாயகத்திலிருந்து செல்கிற; பெரிதும் பாதிக்கிற; *v.* வீட்டுக்குச்செல்; குடியிரு; வாழ்; தாயகத்துக்கு மீள்; வீட்டுக்குடித்தனம் நிறுவு; வீடு அமைத்துக்கொடு; *adv.* வீட்டுக்கு; வீட்டில்; வீடு திரும்பியுள்ள நிலையில்; தாய கத்துக்கு; தாயகத்தில்; குறிநோக்கி; இலக்கு நோக்கி; உள்ளூர; முடிவான நிலையில்; திறம்பட; தொடங்கிய இடத்துக்கே; காரணமானவரிடமே; (தொ.) at home, தமது சொந்த வீட்டில்; ஓய்வான நிலையில்; இடரற்ற நிலையில்; கவலையற்ற நிலையில்; பழக்கப்பட்ட சூழலில்; நன்கு தெரிந்த நிலையில்; பேட்டியாளரை அல்லது விருந்தினரை வரவேற்கச் சித்தமாக; bring charge home to, குற்றத்தை மெய்ப்பித் துத் தீர்ப்பளி; bring home to, மனத்திற் பதியவை, முடிவை ஒப்புக்கொள்ளாதிருக்க வகையில்லாதவாறு மெய்ப்பி; come home to, நலங்களை நெருக்கமாகப் பாதிக்கும் நிலையுண்டு பண்ணு; drive a nail home, கூடுமானவரை ஆழமாக உள்ளே செலுத்திப் பதியவை; eat out of house and home, ஒருவரைப் பாழ்படுத்தும் வகையில் அவர் செலவில் வாழ்; Home Counties, லண்டனுக்கு மிகு அண்மையிலுள்ள கோட் டங்கள்; Home Department, உள்துறை; Home Guard, உள்நாட்டுப் படை, குடிமக்கள் படை; home market, உள்நாட்டு வாணிகக்களம்; ஒருநாட்டில் விளையும் சரக்கு கள் அந்நாட்டிலேயே வாங்கப்படும் நிலை; Home Office, உள்துறைஅமைச்சர் அரங்கம், உள்துறைப் பணிமனை; Home Rule, தன்னாட்சி; Home Secretary, உள்துறை அமைச்சர், உள்துறைச் செயல்முதல்வர்; home thrust, ஒருவர் மனத் தில் சுருக்கெனத் தைக்கிற சொட்டுரை; திறம்பட்ட செயல்; last home, long home, கல்லறை; make one's self at home, தன் விடெனவே கருதித்தாராளமாகப் பழகு; not at home, வீட்டிலிராத, வெளியேபோயிருக்கிற; விருந்தினரை வரவேற் கும் பாங்கிலிராத; pay home, சுருக்கெனத் தைக்குமாறு கூறு, எதிர்ப்பழி செய்.

home'-born, *a.* பிறப்பிடத்திற்குரிய, நாட்டுக்குரிய; திணைக் குரிய; அயல்வரவல்லாத.

home'-bound, *a.* வீட்டில் கட்டுப்பட்டிருக்கிற; வீடுநோக்கிப் போய்க்கொண்டிருக்கிற; தாயக நோக்கிச் செல்கிற.

home'-bred, *a.* வீட்டில் வளர்க்கப்பட்ட; பிறப்பிடத்திற் குரிய, வீட்டுக்குரிய; சிறப்பற்ற, திருத்தப்படாத.

home'-brewed, *n.* வீட்டில் வடிக்கப்பட்ட சாராயவகை; *a.* வீட்டில் வடிக்கப்பட்ட; வீட்டுப்பயனீடு கருதி வடிக்கப் பட்ட.

home'-com'ing, *n.* வீடுவந்தடைவு; தாயக மீள்வு; *a.* வீட்டுக்குத் திரும்புகிற.

home'craft, *n.* வீட்டுக் கலைத்தொழில் துறை; வீட்டில் செய்யப்படும் தொழில்களின் தொகுதி; வீட்டுவாழ்க்கைத் தொடர்பான தொழில் தொகுதி.

home'-farm, *n.* வீட்டுப்பண்ணை, பெரிய வீட்டுக்கருகிலுள்ள அதைச்சேர்ந்த பண்ணை.

home'felt, *a.* மனத்தில் உறைத்த; மனத்தின் ஆழ் உணர்வுக் குரிய.

home'-grown, *a.* தாயகத்தில் விளைவிக்கப்பட்ட.

home'-keeping, *a.* வீட்டில் அடைபட்டுக்கிடக்கிற.

home'land, *n.* பிறந்தநாடு, தாய்நாடு, தாயகம்.

home'less, *a.* வீடற்ற.

home'-life, *n.* வீட்டுவாழ்க்கை.

home'like, *a.* வீட்டைப்போன்ற; நன்குஅறிந்த; இன்சொல் உடைய; எளிய, இடரற்ற; வசதியான.

home'ly, *a.* வீட்டுக்குரிய; நன்குஅறியப்பட்ட; சிறப்பற்ற; முனைப்பு வண்ணமற்ற; திருத்தப்படாத; செப்பமற்ற; ஒப்பனையற்ற; செருக்கற்ற; பகட்டற்ற; எளிய; பழம் பாணியிலுள்ள; அழகுமிகுதியற்ற; மட்டான தோற்றமுடைய; அலங்கோலமான.

home'-made *a.* வீட்டில் செய்யப்பட்ட; சொந்த நாட்டில் செய்யப்பட்ட; சிறப்பற்ற, பொது எளிமையான.

homeop'athy, *n.*=homoeopathy.

hom'er, *n.* தொலைவிலிருந்து வீட்டுக்குச் செல்லும் வழியைக் கண்டறிவதற்கு எளிதில் பயிற்றுவிக்கப்படக்கூடிய இனத் தைச் சேர்ந்த புறா; செல்வழி மீளவல்ல விலங்கு; செல்வழி கண்டறியும் திறமை பெற்றுள்ள மனிதர்.

Home'ric, *a.* கிரேக்கப் பெருங்கவிஞரான ஹோமர் (கி. மு. 850) என்பாருக்குரிய; ஹோமரின் பாணியிலுள்ள; ஹோமர் இயற்றியதாகக் கூறப்படும் கவிதைகளுக்குரிய; ஹோமர் பெயராலியலும் கவிதையின் பாணியிலுள்ள; ஹோமரின் பெருந்தகுதிக்கியைந்த; வீரகாவியம் சார்ந்த; (தொ.) Homeric laughter, தணிக்க முடியாத உரத்த சிரிப்பு; Homeric question, இலியட், ஒடிஸி, என்ற இரண்டு காவியங்களையும் ஹோமரே எழுதினாரா அல்லரா என்பது பற்றிய எதிரெதிர்வாத நிலை.

Ho'merid, *n.* ஹோமர் வழிவந்தவர்களெனக் கருதப்படும் மரபினருள் அவர் பாடல்களைப் பாடும் ஒருவர்; *pl.* Homer'idae.

home'-rul'er, *n.* தன்னாட்சிக் கோட்பாட்டின் ஆதரவாளர்.

home'sick, *a.* வீட்டு ஏக்கங்கொண்ட; தாயகத்தை நினைத் துக்கொண்டு சோர்வடைகிற.

home'sickness, *n.* வீடுபற்றிய ஏக்கம்; தாயகப் பிரிவுத் துயர்.

home'spun, *n.* வீட்டில் நூற்று நெய்யப்பட்ட துணி; *a.* வீட்டில் நூற்கப்பட்ட; வீட்டில் செய்யப்பட்ட; அயல்நாடு களில் செய்யப்படாத; சிறப்பற்ற; சாதாரணமான; அழ கற்ற; நேர்த்தியில்லாத.

home'stead, *n.* வளாகம், வீடுசூழ்பண்ணை; பண்ணை.

home'stretch', *n.* பந்தய வெளியின் கடைசிக்கட்டப் பரப்பு.

home'-town, *n.* பிறந்தக நகரம்.

home'truth, *n.* உள்ளத்தில் தைக்கும் மறுக்கவொண்ணா உண்மை.

home'ward, *a.* வீடுநோக்கிய, வீடு இருக்கும் திசையிலுள்ள; தாயக நோக்கிய; *adv.* வீடுநோக்கி; தாயகம்நாடி.

home'ward-bound, *a.* வீடுநோக்கிச் செல்கிற; தாயகத் துக்குத் திரும்புகிற.

home'wards, *adv.* வீடுநோக்கி; தாயகம்நாடி.

home'work, *n.* வீட்டில் செய்வதற்குரிய வேலை; பள்ளிச் சிறுவர் வீட்டில் எழுதவேண்டிய பாடவேலை.

homicid'al, *a.* மனிதக்கொலை சார்ந்த; கொலைகாரத்தன மான.

hom'icide, *n.* மனிதக்கொலை செய்பவர்; மனிதக்கொலை.

homilet'ic, homilet'ical, *a.* செவியறிவுநூலினைச் சார்ந்த.

homilet'ics, *n. pl.* செவியறிவுநூல் பற்றிய ஆய்வுநூல் துறை.

hom'ily, *n.* சமய நற்போதனை; செவியறிவுறூஉ; வேண்டா வெறுப்பான அறிவுரை, சலிப்பூட்டும் போதனை; (தொ.) Books of Homilies, இங்கிலாந்தில் திருவட்டகைத் திருக் கோயில்களில் படிக்கப்படும் வழிபாட்டுப் போதனைச் சுவடிகள்.

hom'ing, *a.* வீட்டுக்குத் திரும்புகிற; வசிக்கிற; மாடப்புருக் கள் வகையில் விடுநோக்கித் திரும்பிப் பறக்கப் பயிற்று விக்கப்பட்டுள்ள; (தொ.) Homing device, தானே இயங்கி எறிபடைகளைச் செலுத்துவதற்கான இயந்திர அமைவு.

hom'iny, *n.* தண்ணீர் அல்லது பாலோடு கலந்து வேக வைக்கப்பட்ட மக்காச்சோள நொய்.

hom'o, *n.* (வில.) மனித இனம்; (தொ.) Homo Sapiens, நடைமுறை வரலாற்றுக் காலத்தில் வாழும் மனித இனம்.

homoblast'ic, *a.* (தாவ.) ஒத்த உயிர்மங்களினின்றும் பிறந்த; நேர்முக வளர்ச்சியைக் காட்டுகிற.

homocen'tric, *a.* ஒரே மையமுடைய; ஒரே புள்ளியிலிருந்து பெறப்படுகிற.

homoch'romy, *n.* காப்புநிறம்.

homocyc'lic, *a.* (வேதி.) ஒருபடித்தான அணுக்கள் கொண்ட மூடிய சங்கிலித் தொடர்புடைய.

homoeom'eric, homoeom'erous, *a.* ஒரு படித்தான உறுப்புக்களால் ஆன.

hom'oeopath, *n.* இனமுறை மருத்துவம் செய்பவர்.

hom'oeop'athist, *n.* இனமுறை மருத்துவத்தில் நம்பிக் கையுடையவர், இணக்கமருந்திட்டு முறையில் மருத்துவம் செய்பவர்.

homoeop'athy, *n.* (மரு.) இனமுறை மருத்துவம், நோய்க் கூற்றுப் பெருக்கத்தால் நோய் நீக்கும் முறை.

homoes'tasis, *n.* சமநிலை பேணல்.

homogam'ic, homog'amous, *a.* (தாவ.) பூங்கொத்தி லுள்ள சிறுமலர்களெல்லாம் ஒரே பாலினதாக உடைய.

homog'amy, *n.* பால்வகை இன உட்கலப்பு; (தாவ.) பூங் கொத்தின் சிறு மலர்களெல்லாம் ஒரே பாலினதாக உள்ள நிலை; மலர்த்துகளும் சூலகமும் ஒன்றாக முதிர்ச்சியடைதல்.

homogene'ity, *n.* ஓரினத்தன்மை, ஒரே இனமாக அமைதல்; ஓரின அமைதி, ஒரே இயல்பினதாக இருத்தல்; (கண.) ஒரே சீரான அமைப்பு; உறுப்புக்கள் முழுதும் ஒத்திருக்கும் நிலை.

homogen'eous, *a.* ஒரே இனம் அல்லது வகையைச் சேர்ந்த; உறுப்புக்கள் எல்லாம் ஒரேமாதிரியாக உடைய; ஒருபடித் தான; (கண.) ஒருசீரான.

homogen'esis, *n.* (உயி.) பின்தோன்றல்கள் பெற்றோரைப் போலவே இருந்து அதேமாதிரி வாழ்க்கைப் போக்கை உடைய இனப் பெருக்கமுறை.

homogenet'ic, homogenet'ical, *a.* பொதுவான மரபு முதல் உடைய.

homog'enize, *v.* ஒருபடித்தாயிருக்கும்படி செய்; பாலில் உள்ள கொழுப்பணுக்களை உடைப்பதன் மூலம் அதை நன்றாகச் செரிக்கத் தக்கதாகச்செய்; பால்கூறுகளைக் கலந்து செயற்கைப்பால் உண்டாக்கு.

homog'enous, *a.* பொதுவான முதலிலிருந்து தோன்றியதனுல் ஒரு படித்தாயுள்ள.

homog'eny, *n.* ஒரேமுதலினின்றும் தோன்றியதனுல் ஏற் பட்ட ஒருபடித்தான நிலை.

hom'ograph, *n.* எழுத்துமுறையில் ஒன்றுபட்டுப் பொருள் வேறுபாடுடைய சொல்.

homoious'ian, *n.* கடவுள் தத்துவத்திலுள்ள தந்தைமையும் மகன்மையும் பொருண்மையால் ஒன்றே என்னும் கோட்பாடு உடையவர்; *a.* பொருண்மையால் ஒன்றேயான.

homol'ogate, *v.* ஏற்றுக்கொள்; உறுதிப்படுத்து; சேர்த்துக் கொள்.

homol'ogize, *v.* உடனொத்த உறவு கொண்டிரு; ஒத்திசை வாயிரு.

homologou'mena, *n. pl.* உண்மையானவையென முற்பட்ட கிறித்துவத்திருச்சபையில் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட புதிய ஏற்பாட்டுச் சுவடிகள்.

homol'ogous, *a.* உடனொத்த தொடர்புடைய, ஒத்திசைவான.

hom'ologue, *n.* மரபுவகையில் ஒன்றுடனொன்று ஒத்திசை வான புள் விலங்குகள் அடங்கிய உயிரினங்களின் உறுப்பு.

homologu'mena, *n. pl.* = homologoumena.

homol'ogy, *n.* அமைப்பொப்பு, உடனொத்திசையும் பண்பு; உருவும் பயனும் ஒவ்வாத இடத்தும் மூலமும் அமைப்பும் உட னொத்ததாயிருத்தல்.

hom'omorph, *n.* உருவொத்திசை பொருள், ஒன்றினைப் போலவே உருவமுடைய மற்றொரு பொருள்.

homomorph'ic, *a.* உருவொத்த, ஒத்த வடிவமுள்ள; தன்மை வேறுபட்டும் வடிவு ஒத்த.

homomorpho'sis, *n.* (வில.) இழந்த உறுப்பு முதல் வடிவி லேயே மீளவும் தோன்றுதல்.

homomorph'ous, *a.* = homomorphic.

homon'omous, *a.* (உயி.) ஒத்த வளர்ச்சி விதிக்குட்பட்ட.

hom'onym, *n.* பொருள் வேறுபட்டு ஒலிவடிவம் ஒத்தசொல்; பெயர்க்குரிய முற்சுட்டுமுதல்; (உயி.) பிற முற்சுட்டுமுதல் கருதிப் புதிய இனம் அல்லது வகைக்குப் பொருந்தினும் மறுக்கப்படும் சொல். T 3318

homonym'ic, *a.* சொற்சுட்டுமுதலுக்குரிய.

homon'ymous, *a.* ஒரே பெயரை உடைய; ஒரே ஒலிப்புடை யவையாயிருந்தும் வெவ்வேறு பொருள்களும் முதல்களும் உடைய; இருபொருள் மயக்கமுடைய, இரண்டகப்பொருள் ஐயப்பாடு உடைய.

homoous'ian, *n.* இறை மும்மையின் முத்திறங்களும் பொருண்மையில் ஒன்றேயாம் என்னுங் கோட்பாட்டாளர்; *a.* பொருண்மை ஒன்றேயான.

hom'ophone, *n.* மற்றொன்றின் ஒலிப்புடையதாயிருந்தும் வேறு பொருளுடைய சொல்; மற்றொன்றின் ஒலியையே குறிப்பிடும் எழுத்து.

homophon'ic, *a.* (இசை.) ஒத்திசைவான குரல் எடுப்புடைய.

homoph'onous, *a.* குறியீடுகள் வகையில் ஒரே ஒலியைக் குறிப்பிடுகிற; (இசை.) ஒத்திசைவான.

homoph'ony, *n.* ஒத்திசைவு.

homoplas'tic, *a.* ஒத்த கட்டமைவுடைய.

Homop'tera, *n. pl.* (வில.) சிறகுகள் ஒரே மாதிரியாக உடைய பூச்சிகளின் இனம்.

homosex'ual, *n.* தன்னொத்த பாலினத்தவர்மீதே பாலின விருப்புடையவர்; *a.* தன்னொத்த பாலினத்தார் மாட்டே பாலின விருப்புடைய.

homosex'ualist, *n.* தன்னொத்த பாலினத்தவர் மாட்டே பாலின மனச்சார்புடையவர்.

homos'porous, *a.* (தாவ.) ஒரேவிதமான சிதல்விதைகளை உடைய.

homotax'is, *n.* (மண்.) இடத்துக்கிடம் மண்ணியலூழிப் புதைபடிவங்களும் படியடுக்குகளும் காலநீட்டிப்பில் ஒவ்வா விடினும் முறைவைப்பமைப்பில் ஒத்திருத்தல்.

homothall'ic, *a.* (தாவ.) காளான் வகையில் ஒத்தவகை இழைவட்டுக் குடையுடைய.

homotherm'ic, homotherm'ous, *a.* (உட., வில.) ஒரே குருதி வெப்புப் பதமுடைய; வெம்பதக் குருதியுடைய.

homoton'ic, homot'onous, *a.* ஒத்த குரல் தொனியுடைய.
homotyp'al, *a.* பொதுநிலை அமைப்புடன் ஒத்தியல்கிற.
hom'otype, *n.* (உயி.) உடனொத்த அமைப்புடைய உறுப்பு ; உடனொத்த இயல்புடைய பகுதி.
homotyp'ic, *a.* = homotypal.
homous'ian, *n.*, *a.* = homoousian.
homozyg'ote, *n.* (உயி.) ஒத்த பாலணுக்களின் இணைவு.
homunc'le, homunc'ule, homun'culus, *n.* சிறு மனிதன், குள்ளன்.
hom'y, *a.* வீடுபற்றிய எண்ணத்தைத் தோற்றுவிக்கிற; வீடு போன்ற; தாயகம் பற்றிய எண்ணந் தோற்றுவிக்கிற; தாயகம் போன்ற.
hone, *n.* சாணைக்கல், சவரக்கத்தி முதலியன தீட்டுவதற்கான தீட்டு கல்; *v.* சாணையில் தீட்டு.
hon'est, *a.* நேர்மையான, சொல்லிலும் செயலிலும் உண்மையான; பொய்யற்ற; ஏமாற்றாத; கரவற்ற, கபடமற்ற; ஆதாயம் முதலியவை வகையில் அறநெறியில் ஈட்டப்பெற்ற; பொருள்கள் வகையில் கலப்படமற்ற, அப்பட்டமான; (தொ.) honest Injun, என் கண்ணியத்தின்மேல் ஆணையாக; make an honest woman of, கெடுக்கப்பட்ட பெண்ணை மணந்துகொள்.
hon'estly, *adv.* நேர்மையாக, உண்மையாக.
hon'esty, *n.* நேர்மை, உண்மை, வாய்மை, கண்ணியம், கபடமின்மை; பளிங்கனைய விதை உறைகளையும் ஊதா மலர்களையும் உடைய செடிவகை; (தொ.) honesty is the best policy, நேர்மை நெறியே சிறந்த செயல்வகைமுறை.
ho'ney, *n.* தேன்; மலர்த்தேன்; இனிமை; காதலி; அருமை விளிக்குறிப்பு; *v.* இனிப்பாக்கு; மனதுக்குகந்ததாக்கு; (தொ.) virgin honey, தேன் கூண்டொழுகல், இருலினின்றும் தானுகவே ஒழுகும் தேன்; wild honey, கொம்புத்தேன், கோற்றேன், காட்டுத் தேனீக்கள் ஈட்டிய தேன்.
hon'ey-badg'er, *n.* வளைதோண்டி வாழும் கரடியின விலங்கு வகை.
hon'ey-bag, *n.* தேனீ தேன் வைத்திருக்கும் உணவுக்குழற் பகுதி.
hon'ey-bear, *n.* காட்டுத் தேனீக்களின் கூண்டினையழித்துத் தேன் களவாடும் கரடியின விலங்குவகை.
hon'ey-bee, *n.* தேனீ.
hon'ey-bird, *n.* மரத்திலிருந்து மரம் தாவித் தேனிருக்கும் இடத்தை மனிதர்கட்குக் காட்டுவதாகக் கருதப்படும் ஆப்பிரிக்கப் பறவை வகை.
hon'ey-buzz'ard, *n.* தேனீக்களின் முட்டைப் புழுக்களைத் தின்னும் பெரும்பறவை வகை.
hon'eycomb, *n.* தேனடை, தேனிறால்; தேன்கூடு; துப்பாக்கி வடு; அறுகோண அமைப்புடைய அணி ஒப்பனைப் பொருள்; *v.* தேனிறால்போல் ஆக்கு; நிரம்பக் குழிவுகள் விழப்பண்ணு; கிழறு, அழி.
hon'eycomb-moth', *n.* இளந்தேனீக்களைக் கொல்லும் முட்டைப்புழுக்களை ஈனும் அந்துப்பூச்சி வகை.
hon'ey-crock, *n.* தேன்குடம்.
hon'ey-dew, *n.* செடிகளினின்றும் கசியும் இனிய சுரப்புப் பொருள்; அமுதம்; வெல்லப்பாகில் ஊறவைக்கப்பட்ட நேர்த்தியான புகையிலை வகை.
hon'ey-eat'er, *n.* பெரிய ஆஸ்திரேலிய இனப் பறவை வகை.
hon'eyed, *a.* தேன் தடவிய, இனிப்பான; கவர்ச்சியுள்ள; புகழ்ந்து பசப்புகிற.
ho'neymoon, *n.* தேன்நிலவு, புது மணமக்கள் மகிழ்ச்சியோடு கழிக்கும் ஓய்வு நாட்கள்; *v.* தேன்நிலவுக் காலத்தைக் கழி.
hon'ey-mouthed, *a.* இனிக்கும் பேச்சுடைய, இன்சொல் உடைய.
hon'ey-stone, *n.* பழுப்பு நிலக்கரியுடன் காணப்படும் மிக மென்மையான மஞ்சள்நிறக் கனிப்பொருள்வகை.
hon'ey-suck'er, *n.* பெரிய ஆஸ்திரேலிய இனப் பறவை வகை.
hon'eysuckle, *n.* அழகிய மஞ்சள்நிற மலர்களையுடைய தழுவு கொடிவகை.
hon'ey-sweet, *a.* தேன்போல் இனிப்பான.
hon'ey-tongued, *a.* இன்சொல்லுடைய, கவர்ச்சியாகப் பேசுகிற.
hong, *n.* சீனு நாட்டில் தொழிற்சாலை முதலியவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் கட்டிடங்களின் தொகுதி; சீனுவில் அல்லது ஜப்பானில் அயல்நாட்டு வாணிக நிறுவனம்.
honk, *n.* காட்டுவாத்தின் கூச்சல்; உந்துவண்டியினது ஊது குழல் எழுப்பும் ஒலி; *v.* காட்டுவாத்து வகையில் கூச்சலிடு; உந்துவண்டி ஊதுகுழல் ஒலிக்கச் செய்.
hon'or, *n.*, *v.* = honour.
honorar'ium, *n.* மதிப்பூதியம், தொழிற்பணிகளுக்காக மனமுவந்து கொடுக்கப்படும் ஊதியம்; *pl.* honora'ria, honorar'iums.
hon'orary, *n.* ஊதியக்கட்டணம்; *a.* மதிப்புக் காரணமாக வழங்கப்படுகிற; மதிப்பளிக்கிற; சிறப்பு வகையான; மதிப்புப்பட்டம் தாங்கிய, மதிப்பார்ந்த பணி வகிக்கிற; உழைப்பூதியமின்றிப் பணி செய்கிற; சட்டவலுவின்றிக் கண்ணியத்தின் பொறுப்பில் உள்ள.
honorif'ic, *n.* மதிப்புவழக்குச்சொல்; *a.* நன் மதிப்புக்குறிப்பான.
honor'is caus'a, (ல.) *adv.* (தொ.) நன்மதிப்புக்கடையாளமாக.
hon'our, *n.* நன்மதிப்பு; புகழ்; உயர் ஒழுக்க நெறி; பண்பொழுக்கம்; நற்பெயர்; நிறையுடைமை; கன்னிமை, கற்பு நிலை; தன்மதிப்பு; தன்மானம்; நுண்நேர்மையுணர்வு; உயர்பதவி; தலைமையிடம்; சிறப்பு; சிறப்புரிமை; மதிப்புச்சின்னம்; புகழ்ப்பட்டம்; மதிப்புரிமை; தகுதி; தகுதிக்குரிய உயர்வு; மேன்மை, மேதகைமை; புகழ் தருபவர்; மதிப்புத்தருவது; திருமேனி, உயர்வுவிளிக்குறிப்பு; குழிப்பந்தாட்டத்தில் முன்வெற்றி காரணமான முந்து பந்தடி உரிமை; சீட்டாட்ட வகைகளில் சிறப்புச் சீட்டு வகை; வாணிகத்துறைப் பற்று மதிப்பு; ஒரே பெருமகனுக்குரிய மானியத்தொகுதி; *v.* உயர்வாக மதி; பெருமைப்படுத்து; உயர் மதிப்புக்கொடு; அணி செய், அழகு செய்; சிறப்பு அளி; சிறப்பி, சிறப்புச்செய்; சிறப்புப்பட்டம் வழங்கு; மதிப்புச் சின்னம் அளி; வாணிகத் துறையில் கடன் பட்டியலை உரிய சமயம் ஏற்றுக்கொள்; உரியசமயம் கடன்பட்டியலுக்குப் பணம் கொடு; (தொ.) affair of honour, இருவரிடை நிகழும் தனிப்போர்; be on one's honour, நேர்மையை முன்னிட்டுச் செய்யக் கடமைப்பட்டிரு; bound in honour, நேர்மையை முன்னிட்டுச் செய்யக் கடமைப்பட்டுள்ள; code of honour, laws of honour, மரபொழுக்க விதிகள்; Court of Honour, இருவர் செய்யும் தனிப்போரினை முறைப்படுத்தும் நீதி மன்றம்; debt of honour, சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படா விட்டாலும் செலுத்தக் கடமைப்பட்டுள்ள கடன்; honour bright, சூளுரைக் குறிப்பு; in honour of, சிறப்புக் கருதி; கொண்டாடுவதற்காக; Legion of Honour, பிரஞ்சு நாட்டு மரபில் சிறப்பு வாய்ந்த உயர்பண்பாட்டுக் குழுமம்; maid of honour, அரசியின் அல்லது இளவரசியின் அரசவைப் பணிப்பெண்; பாலடைக்கட்டி அப்பவகை; point of honour, கடமையுணர்ச்சி காரணமான தற்கட்டுப்பாடு; மான உணர்ச்சி; upon my honour, என்மீது ஆணையாக; word of honour, கண்ணிய மீதளிக்கப்படும் உறுதியுரை.
Hon'ourable[1], *n.* கோமான் இளைய புதல்வர்களுக்கும் நடுத்தரப் பெருமக்களுக்கும் முறை மன்ற நீதிபதிகளுக்கும் தனி மன்ற நீதிபதிகளுக்கும் வழங்கப்பெறும் மதிப்படைச்சொல்; (தொ.) Most Honourable, கோமான்களுக்கும் உச்ச உயர் திருத்தகை முறையினர்க்கும் அரசப் பேரவையினர்க்கும் வழங்கப்பெறும் மதிப்படைச் சொல்; Right Honourable, பெருமக்களுக்கு வழங்கப்பெறும் மதிப்படைச்சொல்.

hon'ourable[2], *a.* மதிப்புக்குரிய ; பெருமைக்குரிய.

hon'ours, *n. pl.* வரிசை, சிறப்பு ; பெருமை ; விருந்தினர்களுக்குச் செய்யப்படும் மரியாதைகள்; பல்கலைக் கழகங்கள் வகையில் தேர்வு வெற்றியின் தேவைக்கு மேற்பட்ட தனிச் சிறப்புத் தகுதி; (தொ.) birthday honours, அரசரின் பிறந்த நாள் நினைவாக வழங்கப்படும் சிறப்புப் பட்டங்கள் ; do the honours, விருந்தளிப்பவர் என்னும் முறைமையில் மரியாதைகள் செய் ; funeral honours, last honours, ஈமச் சடங்குகள் ; honours easy, சீட்டாட்டங்கள் வகையில் உயர்தரத் துருப்புச் சீட்டுகள் இரு திறத்தாரிடையே சமமாகப் பங்கிடப்பட்டுள்ள நிலை ; honours of war, சரணடைந்தவர் படைக்கலங்கள்-கொடிகள் முதலியவற்றுடன் வெளியேற வழங்கப்படும் உரிமைகள் ; military honours, இறந்த போர்வீரன் புதைக்கப்படுகையில் படையினர் செலுத்தும் மரியாதைச் சடங்குகள்.

hon'ours-man, *n.* தனிச்சிறப்பு வாய்ந்த பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்.

hood, *n.* பிடரிக் கவிகை, தலைக்கும் கழுத்துக்குமான முக்காடு; பல்கலைக் கழகங்கள் வகையில் இன்னபட்டம் என்பதைக் குறிப்பதற்காக அங்கியின்மேல் அணியப்படும் விருது ; பருந்தின் தலைச்சூட்டு; வடிவத்தில் அல்லது பயன்படுவதில் தலைச் சீராவைப்போன்ற பொருள் ; உந்து வண்டியின் முகப்பிலுள்ள மடிப்பு முகடு; வண்டி முகடு; மேற்கட்டி; பன்னுங்கு, பல்லக்கின் மேற்கவிகை; புகைப்போக்கி மூடி; நல்ல பாம்பின் படம் ; *v.* தலைச்சீராவினுல் மூடு ; முக்காடிடு ; மூடி மறை.

hood'ie, **hood'ie-crow**, *n.* தலைச் சூட்டுடைய காக்கை வகை.

hood'less, *a.* தலைச் சூட்டற்ற ; மேற்கட்டியில்லாத ; பாம்பு வகையில் படமில்லாத.

hood'man, *n.* கண்ணும்பூச்சி விளையாட்டில் கண்கட்டி ஆடுபவர்.

hood'man-blind, *n.* கண்ணும்பூச்சி விளையாட்டு.

hood'wink, *v.* ஏமாற்று, ஏய், வஞ்சி, மோசஞ் செய் ; கண்களைக் கட்டு.

hood'y, *n.*=hoodie.

hoof, *n.* குளம்பு; குளம்புடைய விலங்கு; *pl.* hoofs, hooves; *v.* குளம்பினுல் தாக்கு; உதை; வெளியேற்று; நட; (தொ.) cloven hoof, அசைபோடும் கால்நடைகளுக்கும் கிரேக்க நாட்டுப்புறத் தெய்வத்துக்கும் யூதர் கிறித்தவர்களின் நரக வேந்தனுக்கும் உரிய கவர்க்குளம்பு; on the hoof, கால்நடைகள் வகையில் உயிரோடிருக்கிற.

hoof'-bound, *a.* சதைச் சுரிப்பால் நொண்டுகிற.

hoof'-pad, *n.* காலோடு கால் மோதுவதைத் தடுக்கும் திண்டு

hoof'-pick, *n.* குளம்பிலிருந்து கற்களை அகற்றுவதற்கான ஊசி.

hoof'print, *n.* குளம்புச்சுவடு.

hook, *n.* கொக்கி, கொளுவி, துறட்டி ; தூண்டில் முள் ; சூழ்ச்சிப் பொறி; மரப்பந்தாட்டத்தில் அல்லது குழிப்பந்தாட்டத்தில் அடி ; குத்துச்சண்டையில் முழங்கையை மடித்துக் கொடுக்கப்படும் குத்து ; வாய்ப்பான கைப்பிடி ; அரிவாள் ; உடை பற்றிப்பிடிக்கும் கொக்கி; ஆறுகளில் உள்ளதைப் போன்ற திடீர்த்திருப்பம் ; கொக்கிபோன்ற நில முனை ; கொக்கியிட்டுப் பிடித்தல் ; *v.* கொக்கிபோட்டுப் பிடி; சிக்கப் பண்ணு ; மாட்டு ; கொக்கிகளைக் கொண்டு பொருத்து ; கொக்கி வடிவமாக்கு ; திருடு ; பெண்டிர் வகையில் வசப்படுத்திக் கைக்கொள் ; தூண்டில் போட்டு மீன்பிடி ; குழிப்பந்தாட்ட மரப்பந்தாட்ட வகைகளில் பந்தினைத் திடீரென இழுத்து அடி ; உதைப்பந்தாட்ட வகையில் பந்தினைத் தன தாக்கிக்கொண்டு பின்னுக்குச் செலுத்து ; குத்துச் சண்டையில் முழங்கை மடித்து எதிரியைக் குத்து; வளை; வளைந்திரு; திடீரென இழுத்துக்கொள் ; (தொ.) by hook or by crook, எப்படியாவது, நல்லவழி கெட்டவழி எதனுலாவது ; hook and eye, உடையைப் பற்றிப் பிடிப்பதற்கான கொக்கி கண்ணி அமைந்த கொளுவி அமைவு; hook-line-and sinker, முழுமையான ; முழுவதும், முற்றும் ; off the hooks, பூட்டுப் பழுதாய்விட்ட; தள்ளிவைத்து மாற்றப்பட்ட; இறந்துபோன; முற்றும் உருவாக்கி முடிக்கப்பட்ட ; on one's own hook, தன்பொறுப்பிலேயே ; தானுகவே.

hook'a, **hook'ah**, (அரா.) *n.* புகைக்குழாய், புகை பிடிப்பதற்கான குழல்.

hooked, *a.* கொக்கி வடிவமுள்ள ;. கொக்கி பொருத்தப் பெற்றுள்ள ; கொக்கிகள் வாய்ந்த.

hook'er[1], *n.* கொக்கிமாட்டிப் பிடிப்பவர் ; ரக்பி உதைபந்தாட்டத்தில் (Rugby football) பந்தினைச் சூழ்ந்துகொண்டு தம் வசமாக்கிச் செலுத்த முயலும் ஆட்டக்காரர் இருவரில் ஒருவர்.

hook'er[2], *n.* சிறிய டச்சு-ஐரிஷ் நாட்டுக் கப்பல் வகைகள்

hook'-nose, *n.* கொக்கிபோல் வளைந்த மூக்கு.

hook'-nosed, *a.* நீண்டு வளைந்த மூக்குடைய.

hook'-pin, *n.* கூரைதளம் பொருத்துவதற்கான கொக்கித் தலைப்பினையுடைய இரும்புமுளை.

hook'-up, *n.* தொடர்பு, இசைப்பு; தனிச்செய்திப் பரப்புக்கான ஒலிபரப்பு நிலையங்களின் தற்காலிக இணைவமைவு.

hook'-worm, *n.* கொக்கிப் புழு ; கொக்கிப் புழுவினுல் உண்டாகும் நோய்.

hook'y, *a.* கொக்கிகள் நிறைந்த ; கொக்கி சார்ந்த.

hool'ee, (இ.) *n.* ஹோலிப் பண்டிகை, கண்ணன்-ஆய்ச்சியர் நினைவாகக் கொண்டாடப்படும் இந்துக்களின் திருவிழா.

hool'igan, *n.* தெருவீணர், போக்கிரி.

hool'iganism, *n.* போக்கிரித்தனம்.

hoop[1], *n.* மிடாக்களை வரிந்து இறுக்கும் இரும்புப்பட்டை ; குழந்தைகள் வண்டியாக உருட்டி விளையாடும் இரும்பு வளையம்; பெண்களின் பாவாடையை எடுப்பாக்குவதற்கான தொய்வளையம் ; கோற்பந்தாட்டத்தில் பயன்படுத்தப்படும் இரும்புக் கவான்வளைவு ; வட்டரங்குப் புரவி வீரர்கள் புகுந்து குதிப்பதற்கான தாள் பொதிந்த பெரிய வளையம் ; விரல் மோதிர வகை; *v.* வளையங்களைக்கொண்டு கட்டு; வளையத்தைப்போல் சூழ்ந்துகொள் ; (தொ.) go through the hoop, go through the hoops, துன்பத்துக்காளாகு ; hoop petticoat, அகன்று சுருங்கும் வளையங்களால் எடுப்பாக்கப்பட்ட மகளிர் உட்பாவாடை.

hoop[2], *n.* ஆர்ப்பரிப்பு, கூப்பாடு, கூவிளி ; குத்திருமலில் கேட்கப்படும் ஒலி ; *v.* ஆர்ப்பரி, கூப்பிடு.

hoop'er, *n.* மிடாக்களுக்குப் பட்டை போடுபவர் ; கூடை முதலியன முடைபவர்.

hoop'ing-cough, *n.* க்க்குவான், குத்திருமல், நீண்ட கூக்குரலுடன் கூடிய குழந்தைத் தொற்றுநோய் இருமல் வகை.

hoop'-iron, *n.* மிடாக்களை வரிந்திறுக்கும் இருப்புப்பட்டை.

hoop'-la, *n.* விழாக்கால வளைய எறியாட்டம், வளையப் பொருளைக் கவியும்படி திறமையாக எறிந்தவரே அப் பொருளைப் பெறும் விளையாட்டு வகை.

hoop'oe, *n.* பலவண்ணங்களும் பெரிய நிமிர்ந்த சூட்டும் உடைய பறவை வகை.

Hoo'sier, *n.* அமெரிக்காவில் இந்தியானு அரசுப் பகுதியில் வாழ்பவரைக் குறிக்கும் அவல விளிப்பெயர்.

hoot, *n.* கூ கூவொலி ; கொட்டகையில் இகழ்ச்சிக் கூச்சல் ; வெறுப்பொலி ; ஆந்தை அலறல் ; கொம்பூதல் ஒலி ; உந்து கலக் குழலோசை; சிறிதளவு; *v.* கூகூ ஒலிசெய்; இகழ்ச்சிக் கூச்சலிட்டுத் தாக்கு ; வெறுப்பொலி எழுப்பித் துரத்து ; ஆந்தை வகையில் அலறு ; உந்துகலக் குழல் ஊது ; எச்சரிக்கைச்சங்கு ஊது ; ஊர்தியின் நீராவி விசைக்குழல் ஊது ; விசைக்குழல் ஊதிக்கொண்டு செல்.

hoot'er, *n.* வெறுப்பொலி செய்பவர் ; தொழிற்சாலைச் சங்கு; நீராவி ஊதுகுழல்.

hoove, *n.* கால்நடைகளுக்குக் காணும் வயிறு உப்புதல் நோய் வகை.

Hoov'er, *n.* காற்றுநீக்கத் துப்புரவுக்கருவி வகை; *v.* காற்று நீக்கத் துப்புரவுக் கருவியினுல் துப்புரவு செய்.

hop[1], *n.* தேறல் சுவையூட்டப் பயன்படுத்தப்படும் கசப்பான காய்களையுடைய தழுவிப்படரும் முசுக்கட்டையினச் செடி வகை; *v.* தழுவிப்படரும் முசுக்கட்டையினச் செடியின் காய் வகையினுல் கசப்புச் சுவையூட்டு; காய் வகையில் விளையச் செய்; காய்வகை திரளப் பெறு.

hop[2], *n.* ஒற்றைக்காலில் தத்துதல், நொண்டியடித்தல், துள்ளல்; வான்வழிப் பயணக் கட்டம்; *v.* ஒற்றைக்காலில் தத்து, தத்தி நட; நொண்டு, நொண்டி நட; தத்துவி; நான்கு கால்களாலும் தாவிக்குதி; விமானத்திற் பற; ஊர்தி முதலிய வற்றில் ஓடும்போதே தாவி ஏறு; (தொ.) hop it, போய்விடு; hop off, விமான வகையில் புறப்படு; hop-skip and jump, hop-step and jump, ஒரு காலில் தத்தித் துள்ளி இரண்டு கால்களினுலும் குதித்தல்; on the hop, எதிர்பாராமல், தன் விழிப்பற்ற நிலையில், கைமெய்யாக, உடனுக்குடன்.

hop'bind, hop'bine, *n.* கசப்புக்காயுடைய முசுக்கட்டை இனச் செடிவகை தழுவிப் படருவதற்குப் பயன்படுத்தும் தளிர்க்கிளை.

hop'-bitt'ers, *n.* முசுக்கட்டையினச் செடிவகையின் கசப்புக் காய்களால் சுவையூட்டப்பெற்ற தேறல்வகை.

hope, *n.* ஆர்வ நம்பிக்கை; அவா ஆர்வம்; ஆர்வம், விருப்பம், வரவு காத்திருக்கை; நடக்கக் கூடியது, நம்பிக்கைக்கு இடந் தரக் கூடியது; நம்பிக்கையார்வம் கொள்வதற்கு ஏதுவா யிருப்பவர்; ஆர்வ நம்பிக்கைக்கு ஏதுவாயிருக்கும் பொருள்; அவா நம்பிக்கைக்குக் காரணமாயிருக்கும் செய்தி; *v.* நம்பு, நம்பிக்கை கொள், அவா ஆர்வம் காட்டு, ஆவலுடன் எதிர் நோக்கு; நிறைவேறக் கூடுமென எண்ணு; (தொ.) hope against hope, எவ்வித ஆதாரமும் இல்லாமலேயே தொடர்ந்து நம்பிக்கை கொண்டிரு.

hope'ful, *n.* முன்னுக்கு வரக்கூடுமென நம்பிக்கையளிக்கிற இளையோர்; *a.* நம்பிக்கை கொண்டுள்ள; நம்பிக்கையூட்டுகிற, நம்பிக்கைக்கு இடங்கொடுக்கிற; நிறைவேறத்தக்க.

hope'less, *a.* நம்பிக்கை உணர்ச்சியற்ற; நம்பிக்கைக்கு இடந் தராத; நோய்வகையில் தீராத.

hop'-fly, *n.* கசப்புக் காயினையுடைய முசுக்கட்டையினச் செடி வகைக்குத் தீங்கிழைக்கும் பச்சை ஈ வகை.

hop'-garden, *n.* கசப்புக் காயினையுடைய முசுக்கட்டையினச் செடிவகை பயிரிடும் இடம்.

hop'lite, *n.* நிரம்பப் படைக்கலங்கள் தாங்கிய பண்டைக் கிரேக்கக் காலாட்படைவீரன்.

hop'-o'-my-thumb, *n.* குள்ளன்.

hopped, *a.* தேறல்வகையில் முசுக்கட்டையினச் செடிவகையின் காய்களைக்கொண்டு கசப்புச்சுவை ஊட்டப்பெற்ற.

hopp'er[1], *n.* முசுக்கட்டையினச்செடி வகையின் பழங்களைப் பறிப்பவர்; முசுக்கட்டையினச்செடி வகையின் பழங்களைப் பறிப்பதற்கான பொறி அமைவு.

hopp'er[2], *n.* தத்துகிறவர்; தத்துப்பூச்சி வகை; திரிகை வாய்ப் பெட்டி; கூல இயந்திரப் பெய்குடுவை; இயந்திரங் களில் பெய்குடுவை போன்ற அமைப்பு; கழிவகற்ற அடிப் பகுதி திறக்கப்படக்கூடிய தூர்வாரிப்படகு; கூலவிதை கொண்டு செல்லும் கொள்கலம்.

hop'-pick'er, *n.* = hopper [1].

hop'-pillow, *n.* தூக்கம் வருவிப்பதற்காக முசுக்கட்டையினச் செடி வகையின் பழங்கள் நிரப்பப் பெற்றுள்ள தலையணை.

hopp'ing[1], *n.* தேறலுக்குக் கசப்புச்சுவையூட்டப் பயன் படுத்தப்படும் முசுக்கட்டையினச் செடிவகையின் பழங்களைச் சேகரித்தல்; முசுக்கட்டையினச் செடியின் அறுவடைக் காலம்.

hopp'ing[2], *n.* தத்துதல், துள்ளுதல்.

hop'ple, *n.* முட்டுக்கட்டை, குதிரை முதலிய விலங்குகளின் கால்களுக்கு இடப்படும் தளை; *v.* தளையிடு, கால்களைக்கட்டு, முட்டுக்கட்டை இடு.

hop'-pock'et, *n.* முசுக்கட்டையினச் செடிவகையின் பழங் களைப் போட்டு வைப்பதற்கான முரட்டுப் பை; முசுக்கட்டை இனச் செடிக்குரிய பழங்களில் ஏறத்தாழ 168 கல் எடை அளவு.

hop'-pole, *n.* முசுக்கட்டையினச் செடிவகையின் தண்டினைத் தாங்கும் கழி.

hopp'y, *a.* முசுக்கட்டையினச் செடியின் கசப்புக் காய்களின் சுவையுள்ள.

hops, *n. pl.* மாவூறல் தேறல் முதலியவற்றிற்குக் கசப்புச் சுவை தருவதற்குப் பயன்படுத்தப்படும் முசுக்கட்டையினச் செடியின் கசப்புக்காய் வகை.

hop'sack, hop'-sack, *n.* முசுக்கட்டையினச் செடியின் கசப்புப் பழங்களைப் போட்டு வைப்பதற்கான பை.

hop'-sacking, *n.* முசுக்கட்டையினக் கசப்புப்பூண்டு வகை யின் பழங்களைப் போட்டு வைப்பதற்கான பை; முரட்டுச் சணல் துணி; சொரசொரப்பான மேற்புறமுடைய கம்பளித் துணி.

hop'-scotch, *n.* சில்லு விளையாட்டு, நொண்டி விளையாட்டு.

hop'-tree, *n.* முசுக்கட்டையினச் செடியின் பழங்களுக்குப் பதிலாகத் தேறற் சுவையூட்டப் பயன்படுத்தப்படும் கசப்புப் பழங்களைத் தரும் சிறு அமெரிக்க மரவகை.

hop'-tre'foil, *n.* மஞ்சள்நிற மணப்புல் வகை.

horal, *a.* மணிநேரம் சார்ந்த.

hor'ary, *a.* மணிநேரத்துக்குரிய; ஒவ்வொரு மணி நேரத் திலும் நிகழ்கிற.

Hora'tian, *a.* ஹோரஸ் (Horace கி. மு. 65-8) என்ற லத்தீன் மொழிக் கவிஞரைச் சார்ந்த; ஹோரஸ் போன்ற; ஹோரஸின் கவிதை சார்ந்த; ஹோரஸின் கவிதை போன்ற.

horde, *n.* நாடோடி இனக் குழுவினர், கும்பல், திரள், கூட்டம்; *v.* கும்பலாகக் கூடி வாழ்; (தொ.) Golden Horde, கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் கிழக்கு ஐரோப்பாவைப் படையெடுத் தழித்த மங்கோலியத் தாத்தாரிய (Mangol Tartars) இனக் கும்பல்.

hore'hound, *n.* இருமல் முதலியவைகளுக்குப் பயன்படுத்தப் படும் கசப்பும் மணமும் உள்ள சாறுடைய பூண்டு வகை.

hori'zon, *n.* அடிவானம், வான விளிம்பு, தொடுவான்; காட்சி எல்லை; அறிவெல்லைக்கோடு; அனுபவ எல்லை; பற்றெல்லை, அக்கறை கொள்ளும் பொருள் தொகுதி எல்லை.

horizon'tal, *n.* கிடைக்கோடு; கிடைநிலை; கிடைநிலையி லுள்ள பொருள்; *a.* அடிவானம் சார்ந்த; அடிவானத்தி லுள்ள, அடிவானத்துக்கு ஒருபோகு ஆன; செங்குத்துக் கோட்டிற்குச் செங்கோணத்திலுள்ள; மட்டமான, படுமட்ட மான, கிடையான; இயந்திரங்கள் முதலியன வகையில் கிடைப்போக்கில் இயங்கும் உறுப்புக்களையுடைய.

hor'mone, *n.* (உட.) இயக்குநீர், குருதியில் கலந்து உறுப்புக் கள் செயற்படத் தூண்டும் உட்சுரப்பு நீர்வகைகளில் ஒன்று.

horn, *n.* விலங்குகளின் கொம்பு; காண்டாமிருக முதலிய வற்றின் கோடு; கலைமான் கொம்பு; விலங்குகளின் தலை யிலுள்ள கொம்பு போன்ற உறுப்பு; நத்தையின் கொடுங்கை; பூச்சியின் உணர்கொம்பு; ஆந்தை வகையின் சூட்டு; கொம்பில் பொதிந்துள்ள மூலப்பொருள்; கொம்பினுல் செய்யப்பட்ட பொருள்; கொம்பினுல் செய்யப்பட்ட குடிகலம்; கொம்பினுல் செய்யப்பட்ட சுண்ணக்கிண்ணம்; துளைக்கருவி வகை, ஊதுகொம்பு, இசைக்கொம்பு; கொம்பு வடிவப் பொருள்; முகடு; இளம்பிறையின் முனைகளில் ஒன்று; விரிகுடாவின் பிரிவு; ஆற்றின் கிளை; இருதலைத் தடுமாற்றத்தின் ஒரு கூறு; பொறி வண்டிகளில் எச்சரிக்கை ஒலி எழுப்புங்கருவி; வலிமையைக் குறிக்கும் யூதர்களின் சின்னம்; *a.* கொம்பினுல் செய்யப்பட்ட; *v.* கொம்புகள் அமைத்து உதவு; கொம்புகளை நீக்கு; கொம்புகளினுல் குத்து; தலையால் முட்டித்தள்ளு;

கப்பல் அடிக்கட்டைக் கோட்டுக்குச் செங்கோணமாகக் கப்பற் சட்டத்தைச் சரிப்படுத்து; இசைக்கொம்பு ஊது; எச்சரிக்கை ஒலிக்கருவியை ஒலிக்கச்செய்; நாடு கடத்து; (தொ.) draw in one's horns, pull in one's horns, ஆர்வ உணர்ச்சியை அடக்கிக்கொள், பின்னிடு, பின்வாங்கு; gate of horn, கிரேக்க புராணக் கதைமரபில் உண்மைக் கனவுகள் வரும் வாயில்; horn of plenty, குறையா நிறைகலம்; பொங்கு கலம்; horns of a dilemma, இருதலைக்கொள்ளி எறும்புநிலை, இருதலைப் பொறி நிலை; make a spoon or spoil a horn, தோல்வி வந்தாலும் குற்றமில்லையென முயற்சி செய்; take the bull by the horns, இடர்ப்பாட்டினின்றும் தப்பித்துக் கொள்ள முயலாமல் அதனை எதிர்த்துச் சமாளி.

horn'-bar, *n.* வண்டியின் குறுக்குக்கம்பி.

horn'-beak, *n.* நீண்ட ஈட்டி போன்ற உடலுடைய மீன் வகை.

horn'beam, *n.* வயிரம் பாய்ந்த உறுதியான கட்டையை உடைய மரவகை.

horn'bill, *n.* அலகின்மீது கொம்புபோன்ற புற வளர்ச்சி உடைய பறவை வகை.

horn'blende, *n.* திண்பழுப்பு அல்லது கருமை அல்லது பச்சைநிறக் கனிப்பொருள் வகை.

horn'book, *n.* (வர.) சட்டத்தில் அமைக்கப்பட்ட தாளும் அதைக் காப்பதற்கென முன்னால் மெல்லிய கொழுப்புத்தகடும் உள்ள குழந்தைகளுக்கான அரிச்சுவடி.

horned, *a.* கொம்பு அல்லது கொம்புகளை உடைய; கொம்பினைப் போல் வளைந்த.

horned'-owl, *n.* தலையில் கொம்பு போன்ற இறகுச்சூட்டு உடைய ஆந்தை வகை.

horned'-popp'y, *n.* மஞ்சள்நிற மலருடைய பூண்டு வகை.

horned'-toad', *n.* முள்ளுடைய அமெரிக்கப் பல்லி வகை; முதுகில் எலும்பினாலாய தோடு உடைய தென் அமெரிக்கத் தேரைவகை.

horn'er, *n.* கொம்பினால் கரண்டி-சீப்பு முதலியன செய்பவர்; இசைக்கொம்பு ஊதுபவர்.

horn'et, *n.* கடுமையாகக் கொட்டும் பெரிய குளவி வகை, மலைக்குளவி; (தொ.) bring hornets' nest about one's ears, நிரம்பப் பகைவர்களை உண்டாக்கிக்கொள்.

hor'n-foot'ed, *a.* குளம்புகளையுடைய.

horn'geld, *n.* (வர.) கால்நடைகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு அறுதி செய்யப்படும் நிலமானியப் பணி.

horn'ing, *n.* பிறைநிலாத் தோற்றம்.

horn'ish, *a.* கொம்புபோன்ற; கெட்டியான.

horn'ist, *n.* இசைக்கொம்பு ஊதுபவர்.

horn'less, *a.* கொம்புகள் அற்ற.

horn'let, *n.* சிறு கொம்பு.

horn'-mad, *a.* முழுவெறி பிடித்த; எருதைப்போல் கொம்புகளால் பிறரைக் குத்திக்கொல்லும் அளவுக்கு வெறிபிடித்த.

horn'-mer'cury, *n.* இயற்கையிற் கிடைக்கிற பூரம்.

horn'pipe, *n.* வழக்கற்றுப்போன துளைக்கருவி வகை; கப்பலோட்டிகளிடையே தனி மனிதரின் எழுச்சிமிக்க ஆங்கில ஆடல்வகை; கப்பலோட்டிகளிடையே தனி மனிதரின் ஆடலுக்குரிய இசை மெட்டமைப்பு.

horn'-plate, *n.* இருப்பூர்தி வண்டி இருசின் பாதுகாப்புச் சாதனம்.

horn'-rimmed, *a.* மூக்குக்கண்ணாடி வகையில் கொம்பினால் செய்யப்பட்ட விளிம்புகளையுடைய.

horn'-shavings, *n.* எருவாகப் பயன்படும் கொம்புச்சீவல்கள்.

horn'-sil'ver, *n.* வெள்ளிப்பாசகை.

horn'-spoon, *n.* கொம்புக்கரண்டி, ஆட்டுக்கொம்பினால் செய்யப்பட்ட கரண்டி.

horn'stone, *n.* மணல் சத்து நிறைந்துள்ள எளிதில் நொறுங்கத்தக்க பாறைவகை.

horn'tail, *n.* பளிங்கனைய நான்கு சிறகுகளையுடைய பூச்சி வகை.

horn'work, *n.* கோட்டைக் கொத்தள வகையில் திரையமைப்பால் இணைக்கப்பட்ட இரண்டு காவலரண்களைக் கொண்ட புற அரண்; கொம்பில் செய்யப்படும் வேலை.

horn'y, *a.* கொம்புக்குரிய; கொம்பு போன்ற; கொம்புகள் மலிந்த; கொம்பினைப்போல் கெட்டியான; உணர்ச்சியற்ற, மரத்துப்போன.

horn'y-hand'ed, *a.* உழைத்துக் காழ்ப்பேறிய கைகளை உடைய.

ho'rologe, *n.* மணிப்பொறி, கடிகாரம், காலங் காட்டும் பொறி அமைப்பு.

horol'oger, horol'ogist, *n.* மணிப்பொறி செய்பவர்.

horol'ogy, *n.* காலமளப்பது பற்றிய ஆய்வுத்துறை; மணிப்பொறி செய்யும் கலை.

horop'ter, *n.* கண்களின் குறிப்பிட்ட நிலையில் ஒன்றே ஒன்று ஆகக் காணப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகுதி.

ho'roscope, *n.* பிறப்புக்குறிப்பு, சாதகம்; நேர வானிலைப் பட்டி; (தொ.) cast a horoscope, சாதகக் குறிப்பெழுது, பிறப்புக்குறிப்புக் கணி.

horos'copist, *n.* சோதிடன்.

horos'copy, *n.* சாதகபலக் கணிப்பு, சாதகத்தைக்கொண்டு ஒருவரது வாழ்க்கையின் வரும்பொருளுரைக்குங் கலை; பிறக்கும் நேரத்தில் கோள்களின் நிலை.

ho'rrent, *a.* (செய்.) சிலிர்த்துக்கொண்டிருக்கிற; அடர்த்தியாக நிறைந்துள்ள.

ho'rrible, *a.* திடுக்கிடச் செய்கிற; பயங்கரமான, அச்சமூட்டுகிற; கோரமான; அதிர்ச்சியூட்டுகிற; வெறுப்பான.

ho'rrid, *a.* பயங்கரமான, அச்சந்தரத்தக்க; அருவருப்பான; முரட்டுத்தோற்றமுடைய; பரட்டையான.

horrif'ic, *a.* அச்சத்தையுண்டாக்குகிற, கிலியூட்டுகிற; பயங்கரமான.

ho'rrify, *v.* திடுக்கிடச் செய்; அச்சமூட்டு; அதிர்ச்சியடையச் செய்; கொடும்பழிக்காளாக்கு.

horripila'tion, *n.* மயிர்ப்புடைப்பு, தசைச்சுரிப்புடன்கூடிய மயிர்க் கூச்செறிவு.

ho'rror, *n.* பேரச்சம்; நடுக்கம்; பெருவெறுப்பு; (மரு.) நோய்க்கு அறிகுறியான நடுக்கம்; (தொ.) Chamber of Horrors, அச்சமூட்டும் பொருட்கள் நிறைந்த இடம்; the horrors, fit of horror, அச்சமுற்ற நடுக்கம்; சன்னியில் உண்டாகும் நடுக்கம்.

horr'or-struck, horr'or-stricken, *a.* அச்சத்தால் தாக்கப்பட்ட; அதிர்ச்சியூட்டப்பட்ட.

hors, (பிர.) *adv.*, *prep.* வெளியில், புறம்பாக.

hors concours, (பிர.) *a.* பொருட்காட்சியில் பரிசுப் போட்டித் திட்டத்தில் சேராத.

hors de combat, (பிர.) *adv.* போரிலிருந்து விடுபட்ட நிலையில், போரிடும் தகுதியற்று, ஏலாத நிலையில்.

hors-d'oeuvre, (பிர.) *n.* பசி எழுப்புவதற்காக உணவிற்கு முன்னும் இடையிலும் பயன்படுத்தப்படும் சிற்றுணவு வகை; *pl.* hors-d'oeuvres.

horse, *n.* குதிரை; ஆண்குதிரை; பொலிகுதிரை; புரவிப்படை; படைத்துறைக் குதிரைவடிவ மரச்சட்டத் தண்டனைக் கருவி; உடற் பயிற்சி முறையில் தாண்டிச் செல்வதற்கான தாவுகட்டை; துணி முதலியவற்றுக்கான தாங்குசட்டம்; தாவுகயிறு; தாவுசலாகை; தாதுப்படுகையினிடையே குறுக்கிடும் வளமற்ற நிலப்பரப்பு; பள்ளி மாணவர்களின் பொழிப்பு; சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு; *v.* குதிரை ஏற்று; குதிரை வசதிசெய்து கொடு; குதிரை ஏறு; குதிரை மீது இவர்ந்து செல்; குதிரைமீது பயணம் செய்; இருபுறமும் கால்களை அகல விரித்து அமர்; விரை; விரைவாக ஊக்கு; முதுகில் ஏற்றிக்கொண்டு செல்; சவுக்கடித் தண்டனை பெறும்

படி மற்றொருவர் முதுகில் ஏற்றிவை; கடு உழைப்புச் செய்யும் படி கொடுமையுடன் தூண்டு; வேலை முடியுமுன் கட்டணம் கோரு; இரண்டாந்தர மொழிபெயர்ப்பு விளக்கங்கள்மூலம் கற்றுக்கொள்ள முயற்சிசெய்; (தொ.) dark horse, பந்தயத்தில் எதிர்பாராது வெற்றிபெற்ற குதிரை; எதிர்பாராது வெற்றி பெற்றவர்; eat like a horse, குதிரைபோல் மிகுதியாக உண்ணு, மடத்தீனி தின்னு; flog a dead horse, சிறு செய்திக்காகப் பேரார்வார முயற்சிசெய்; horse artillery, குதிரையேறிய விரை பீரங்கிப்படை; look a gift horse in the mouth, "சும்மா வந்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பதம் பார்", விலையின்றித் தந்த பொருளில் குற்றம் காண்; mount the high horse, ride the high horse, வீண்பெருமை காட்டு, விம்பாகத் தருக்கிநட; put the cart before the horse, முன்பின் தலைமாற்றிச் செயல் செய், காரியத்தைக் காரணமாக்கிக் கூறு; to horse, குதிரைகளின்மேல் ஏறுக என்னும் படைகளுக்குரிய போர்த்தொடக்க ஆணை; white horses, கடலில் வெண்ணுரை ஏந்திவரும் அலைகள்; winning horse, வெற்றிபெறும் குதிரை; வெற்றி பெறுபவர்; work like a horse, குதிரைபோல் கடுமையாக உழை.

horse'back, *n.* குதிரையின் முதுகு; (தொ.) on horse back, குதிரைமேல் ஏறியுள்ள.

horse'bean, *n.* கொள்ளு, காணம்.

horse'-block, *n.* படிக்கட்டை, குதிரைமேல் ஏறுவதற்குப் படியாகப் பயன்படும் படிக்கல்.

horse'-bot, *n.* குதிரைகளின் உடலில் ஒட்டி அவற்றின்மீது முட்டையிடும் ஈ வகை.

horse'-box, *n.* புகையூர்தியில் குதிரை கொண்டுசெல்வதற்கான மூடுபெட்டி; கப்பலில் குதிரையை ஏற்றுபொறி வழியாக ஏற்றுவதற்கான மூடுபெட்டி.

horse'-boy, *n.* குதிரை இலாயப் பணிச்சிறுவன்.

horse'-break'er, horse'-tam'er, *n.* குதிரைகளைப் பழக்குபவர், பளு இழுப்பதற்குக் குதிரைகளைப் பழக்குபவர்; குதிரை மீது தோற்றமளிக்கும் ஆடலணங்கு.

horse'-chestnut, *n.* வெண்மை அல்லது செங்கழுநீர் நிறமான பூங்கொத்துக்களும் கசந்த பழமும் தரும் பெரு மர வகை.

horse'-cloth, *n.* குதிரையை மூடுவதற்கான துணி, குதிரை மீது போடப்படும் துணி.

horse'-collar, *n.* குதிரையின் கழுத்துவார்; (தொ.) grin through a horse-collar, கீழ்த்தர நிலையில் இளி.

horse'-co'per, horse'-dealer, *n.* குதிரை வாணிகர்.

horse'-faced, *a.* குதிரை போன்ற நீண்ட முகமுடைய.

horse'-fair, *n.* குதிரைச்சந்தை.

horse'flesh, *n.* குதிரை இறைச்சி; குதிரைத் தொகுதி; *a.* சிவந்த வெண்கல நிறமுடைய.

horse'-fly, *n.* குதிரைக்குத் தொல்லை கொடுக்கும் பெரிய ஈ வகை.

horse'-foot, *n.* அகன்ற மென்மையான இலையுடைய செடி வகை; பெரிய விநோதமான கடல்வாழ் விலங்கு.

Horse'-Guards, *n. pl.* உள்துறைக் குதிரைக் காவற்படை; (தொ.) Royal Horse-Guards, பிரித்தானிய அரச குடும்பப் பாதுகாவற் குதிரைப்படையினர், லண்டன் ஒயிட் ஹாலிலுள்ள காவற் குதிரைப்படையின் தலைமை அலுவலகம்; படைத்துறைத் தலைவர்கள்.

horse'-hair, *n.* குதிரைமயிர்; குதிரையின் பிடரிமயிர்த் தொகுதி; குதிரை வால் மயிர்த் தொகுதி; குதிரை முடியைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடைவகை; *a.* குதிரை முடியினால் செய்யப்பட்ட; குதிரை முடி உள்திணித்து நிரப்பப்பட்ட.

horse'-lat'itudes, *n.* வடகிழக்குக் காற்று மண்டலத்தின் வடகோடியில் நீடமைதியுடைய இரு திட்டுக்களில் ஒன்று.

horse'-laugh, *n.* கனைப்புச் சிரிப்பு, கடுமையான ஓசையுடைய வன்சிரிப்பு.

horse'-leech, *n.* பெரிய அட்டை வகை; அட்டைபோல் ஒட்டிக் கொண்டு எளிதில் விடாதவர்; அமையாப் பேருணர்.

horse'less, *a.* குதிரையற்ற; பொறியினால் இழுக்கப்பட்ட.

horse'-litter, *n.* இரண்டு குதிரைகளுக்கு இடையே போடப்பட்டுள்ள வைக்கோற் படுக்கை; குதிரைகளுக்கான படுக்கை.

horse'-mack'erel, *n.* மீன் வகை.

horse'man, *n.* குதிரை இவர்ந்தவர்; குதிரையைத் திறமையாகக் கையாளுபவர்; குதிரை வீரர்; குதிரைகளுக்கான பொறுப்பாளர்; புழுவகை; நிலநண்டு வகை.

horse'manship, *n.* குதிரையேற்றத்திறமை; குதிரையேற்றக் கலை; குதிரையூர்ந்து செல்லும் பழக்கம்; குதிரையை அடக்கி யாளும் கலை.

horse'-marines', *n. pl.* கற்பனைப்படையினர், நடைமுறையில் இல்லாத படையினர்.

horse'-mastership, *n.* குதிரை ஏற்ற வல்லாண்மை.

horse'-meat, *n.* குதிரைத் தீவனம்.

horse'-mill, *n.* குதிரையால் இயக்கப்படும் ஆலை.

horse'-mill'iner, *n.* குதிரைச் சேணம் முதலியன செய்து கொடுப்பவர்.

horse'mint, *n.* காட்டு நறுமணச் செடிவகை.

horse'-mush'room, *n.* பெரிய சொரசொரப்பான உணவுக்குரிய காளான் வகை.

horse'-play, *n.* கீழ்த்தரக் கும்மாளமான ஆட்டம், முரட்டுக் களியாட்டம்.

horse'pond, *n.* குதிரை குளிப்பாட்டும் குட்டை, பாழ்ங் குட்டை.

horse'power, *n.* குதிரைத்திறன், ஒரு குதிரை வலிமைக் கீடாகக் கணிக்கப்படும் ஆற்றல் அலகு.

horse'-race, *n.* குதிரை ஏற்றப் பந்தயம்.

horse'-racing, *n.* போட்டிப் பந்தயக் குதிரையோட்டப் பழக்கம்.

horse'-rad'ish, *n.* உணவுக்குரிய சுவைப்பொருளாகப் பயன்படுத்தப்படும் காரமான வேரையுடைய கிழங்குச் செடிவகை.

horse'-rake, *n.* குதிரையால் இழுக்கப்படும் பரம்படிச் சட்டம்.

horse'-sense, *n.* அனுபவப் பொது அறிவு, செயல்முறை உணர்வு.

horse'-shoe, *n.* குதிரை இலாடம்; இலாடம் போன்ற வடிவுடையப் பொருள்; *a.* குதிரை இலாடம் போன்ற வடிவுடைய; (தொ.) horse-shoe table, குதிரை இலாட வடிவான மேசை.

horse'-tail, *n.* குதிரைவால்; படைத்தலைவரின் வரிசைத் தரத்தைக் குறிக்கும் துருக்கியக் கொடிகளின் தொகுதி; குதிரை வால் போன்ற குறிமறையினச் செடிவகை.

horse'-way, *n.* குதிரை கடந்துசெல்லக்கூடிய வழி.

horse'-whip, *n.* குதிரைச்சவுக்கு; *v.* குதிரைச் சவுக்கால் அடி.

horse'woman, *n.* குதிரைமீது இவர்ந்து செல்லும் பெண்.

hors'ing, *n.* குதிரைமீது ஏறிக்கொள்வது போன்று மற்றொருவன் முதுகில் ஏறிக்கொண்டு பிரம்பினால் அடித்தல்.

hors'y, *a.* குதிரை சார்ந்த, குதிரை பற்றிய; குதிரைபோன்ற; குதிரைப் பந்தயத்தில் ஈடுபாடுள்ள; குதிரைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள; குதிரைப் பந்தயத்தில் ஈடுபாடுடைய; குதிரைக்காரர் நடை உடை பகட்டுகிற; குதிரைக் காவலர் பேச்சு மேற்கொள்கிற.

hort'ative, hort'atory, *a.* அறிவு கொளுத்தும் தன்மையுடைய; அறிவுறுத்துகிற.

hort'iculture, *n.* தோட்டக்கலை, காய்-கனி-மலர் முதலியவற்றைப் பயிராக்கும் தோட்ட வேளாண்மை.

horticul'turist, *n.* தோட்டக்கலை நிபுணர்.

hort'us sicc'us, (ல.) *n.* ஒழுங்குபடுத்தப்பட்ட உலர்ந்த பூண்டுகளின் தொகுதி.

hosann'a, *n.* இறைவனைப் புகழ்ந்து ஏத்தும் வாழ்த்தொலி.

hose[1], *n.* கால்மேசுகள், முழுநீளக் காலுறைகள்; *v.* கால்மேசு அணி.

hose[2], *n.* நெளிவு குழைவுடைய நெடு நீளமான நீர்கொண்டு செல்லும் குழாய்; பெருங்குழாய் வைப்பதற்கான பொருத்து; *v.* நெளியக்கூடிய நெடுநீளக் குழாய் பொருத்து; நெடுநீளக் குழாய்மூலம் நீர்தூவு.

hose'man, *n.* எரியும் திசைநோக்கி நீர்க்குழாயிலுள்ள நீரைச் செலுத்தும் தீயணைப்புப் படை ஆள்.

hose'-net, *n.* முழுநீளக் காலுறை போன்ற வடிவுள்ள வலை.

hose'-reel, *n.* நெளியக்கூடிய நீண்ட நீர்க்குழாயை எடுத்துச் செல்வதற்கான சுழல் பீப்பாய்.

hose'-tops, *n.* நெடு நீள் அடியற்ற காலுறைகள்.

ho'sier, *n.* காலுறை விற்பவர்; பின்னப்பட்ட உள்ளுடை விற்பவர்.

ho'siery, *n.* முழுநீளக் காலுறைகளின் தொகுதி; பின்னப்பட்ட உள்ளாடைத் தொகுதி.

hos'pice, *n.* பிரயாணிகள் தங்குமனை; சமய நிறுவனங்களால் நடத்தப்படும் வழிப்போக்கர் விடுதி; இயலாரகம்; பிணியாளர் பேணகம்.

hos'pitable, *a.* வேளாண்மைப் பண்புடைய, விருந்தோம்புகிற; கொடுக்கிற, ஈகைப்பண்புடைய.

hos'pitage, *n.* விருந்தினரிடமிருந்து எதிர்பார்க்கப்பட வேண்டிய பண்பு.

hos'pital, *n.* மருத்துவமனை, காயமுற்றோர்களையும் நோயாளிகளையும் பேணும் மனை; அறநிலையம், அறமுறைக் கல்வி நிலையம்; முற்கால வழிப்போக்கர் தங்குமனை; படைவீரத் துறவிகள் குழுவினர் தங்கு நிறுவனம்; (தொ.) hospital fever, மக்கள் நெருக்கமுள்ள மருத்துவ மனைகளில் முன்பு பெருவழக்காயிருந்த நச்சுக் காய்ச்சல் வகை; Hospital Saturday, Hospital Sunday, உள்ளூர் மருத்துவமனைகளுக்காகத் தெருக்களிலும் திருக்கோயில்களிலும் நிதி திரட்டும் சனி ஞாயிறு நாட்கள்.

hos'pitaler, *n.* உதவி செய்யும் பண்புள்ள சமயப் பிரிவின் உறுப்பாளர்; லண்டன் நகர மருத்துவ மனைகளில் சமயக் குருக்கள் குழுவினர்; 1048-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட படைவீரத் துறவிகள் குழு.

hos'pitalism, *n.* மருத்துவ மனைகளின் அமைப்புமுறை; மருத்துவமனை அமைப்பு முறையின் நலவழிக் குறைபாடுகள்.

hospital'ity, *n.* விருந்தோம்பும் பண்பு, வேளாண்மைக் குணம்.

hos'pitalize, *v.* மருத்துவமனையில் சேர்; மருத்துவமனையில் கட்டுப்படுத்தி வை; மருத்துவமனைக்கு அனுப்பு.

hos'pitaller, *n.*=hospitaler.

hos'podar, *n.* முற்கால ருமேனிய நாட்டு வழக்கில் பெருமகன்.

host[1], *n.* தொகுதி; பெருந்திரள்; படை; கணம்; பெருங்கூட்டம்; மிகுந்த எண்ணிக்கையுடைய குழு; (தொ.) host of heaven, hosts of heaven, கதிரவன் நிலவுகோள் விண்மீன் குழுக்கள் போன்ற வானொளிக் கோளங்கள்.

host[2], *n.* விருந்தளிப்பவர், ஓம்புநர், பிறரை ஆதரிப்பவர்; குடியிருக்கும் இடத்துக்கு உடையவர்; சத்திரம் வைத்திருப்பவர்; (உயி.) ஒட்டுணி உயிர்களுக்கு இடமான விலங்கு; ஒட்டுணிக்கு ஆதாரமான செடி இனம்; (தொ.) count without one's host, reckon without one's host, உரியவர் இல்லாமல் பட்டியல் கணக்கிடு; முக்கியமான உயிர்க்கூறினைப் புறக்கணித்துச் செயலாற்று.

host[3], *n.* தெய்வத் திருவிருந்தில் இறைவனுக்காக நேர்ந்து விடப்பட்ட அப்பம்.

hos'tage, *n.* பிணையாக நிறுத்தப்பட்டவர்; பிணையாக நிறுத்தப்படும் நிலை; (தொ.) hostage to fortune, மனைவி மக்கள் முதலியோர்.

hos'tel, *n.* மாணவர் இல்லம், மாணவர் போன்ற தனி வகுப்பினர் தங்கு விடுதி.

hos'telry, *n.* வழிமனை, சாவடி, தங்கல்மனை.

hos'tess, *n.* விருந்தினரை உபசரிக்கும் பெண், விருந்தோம்பும் பண்புள்ளவள்; தங்கல் மனைத் தலைவி; விடுதித் தலைவி.

hos'tile, *a.* எதிரியைச் சார்ந்த; எதிர்ப்புணர்ச்சியுள்ள; எதிர்க்கின்ற, போர் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள; போர் நிகழ்ச்சிகள் சார்ந்த.

hostil'ities, *n. pl.* போர் நடவடிக்கைகள், போர் நிகழ்ச்சிகள்; கருத்து முதலியவற்றில் எதிர்ப்பு.

hostil'ity, *n.* பகைமை; எதிர்ப்பு; போர் நிலவரம்.

hos'tler, *n.* விடுதி இலாய மேற்பார்வையாளர்.

hot, *a.* சூடான; மிக வெப்பமான; வெப்பம் உண்டுபண்ணுகிற; நெருப்பைப் போன்ற; புழுக்கமிக்க; உயர்வெப்ப நிலை உடைய; வெப்ப உணர்ச்சி தருகிற; சூடு ஊடு செல்லவிடுகிற; சுவை வகையில் காரமான; மோப்ப வகையில் ஆற்றல் வாய்ந்த; உணவு வகையில் சூடாகப் பரிமாறப்படுகிற; செய்தி வகையில் புத்தம் புதிதான, நிகழ்வணித்தான; கலை வகையில் அணிச் செறிவுடன் விரைசந்தமிக்க; விரைவான, அடுத்தடுத்துத் தொடர்கிற; போட்டி வகையில் வெல்லும் பெரு வாய்ப்புடைய, வெற்றி வாய்ப்பு மிகுதி உடையவராகக் கருதப்படுகிற; வெகுளியுடைய; மனத்தைப் புண்படுத்துகிற; எழுச்சியூட்டுகிற; ஆர்வமிக்க; உணர்ச்சி வேகமிக்க; கொந்தளிப்பான; மூர்க்கமான; வல்லந்தமான; சிற்றின்ப எழுச்சிமிக்க; கேடு விளைக்குமளவு மின்னுற்றல் ஊட்டப்பட்ட; இடர் நிறைந்த; தேடப்பட்ட பொருளுக்கு அண்மையிலுள்ள; உணர்ச்சியைத் தூண்டத்தக்க; உணர்ச்சியைத் தோற்றுவிக்கும் பகுதிகளையுடைய; அண்மையிலேயே திருட்டுத்தனமாகப் பெற்ற; விளையாட்டு நடவடிக்கைகளில் எதிர்ப்பக்கத்தினரால் தடுக்க முடியாத இயல்புடைய; *v.* சூடாக்கு; வெதுவெதுப்பு ஊட்டு; *adv.* சூடாக; நெருக்கி; ஆர்வமாக; சீற்றத்துடன்; எழுச்சியுடன்; (தொ.) a hot favourite, போட்டி வெற்றி உறுதி என்று ஆர்வமாகப் பார்வையாளரால் நம்பி எதிர்பார்க்கப் பெற்றவர்; blow hot and cold, இருகோடிக்குமிடையே மாறிமாறி ஊசலாடு, பெருந்தயக்கம் காட்டு; give it him hot, கடுமையாகக் கண்டி; go like hot cakes, sell like hot cakes, விரைவாக விற்பனையாகு; hot and strong, சீற்ற எழுச்சியுடைய; கோப வேகத்துடன்; hot coppers, குடித்தபின் ஏற்படும் நாவறட்சி; hot water, வெந்நீர்; தொல்லை, இக்கட்டு, மானக்கேடு; hot well, வெந்நீரூற்று; செறிவெப்பாலையில் தேக்கக்கலம்; make it too hot for him, make it too hot to hold him, make the place too hot for him, make the place too hot to hold him, கொடுமைப்படுத்தி அமைந்து இருக்கமுடியாதநிலை உண்டுபண்ணு.

hot'-air, *a.* வெப்பக்காற்றைப் பயன்படுத்துகிற; தற்புகழ்ச்சியுள்ள; பயனில பேசுகின்ற, வீண்சொல்லாடுகின்ற.

hot'-and-hot', *a.* சமைத்தவுடனே சூட்டோடு பரிமாறப்பட்ட.

hot'bed, *n.* விரைவளர்ச்சிச் சேமக்கலம், செடிகள் விரைவாக வளர்ச்சியுறும்படி மக்கிப் புளித்த எருப்படுகையால் வெதுவெதுப்பாக்கப்பட்டுக் கண்ணாடியால் மூடப்பட்ட பாத்தி; விரை வளர்ச்சிக்குகந்த இடம்.

hot'blast, *n.* கடுவெப்பக்காற்று.

hot'-blood'ed, *a.* சூடான குருதியுடைய; சமநிலைக் குருதி வெப்பமுள்ள; மன எழுச்சிமிக்க; துணிந்து செயலாற்றுகிற; உணர்ச்சி மிகுந்த; எரிச்சலூட்டுகிற.

hot'brain, *n.* முரட்டுத்தனமானவர், முரட்டுப்பிடியுள்ளவர்.

hot'-brained, *a.* எளிதில் உணர்ச்சியூட்டப்படத்தக்க.

hotch'kiss, *n.* இயந்திரத் துப்பாக்கி வகை.

hotch'pot, hotch'potch, *n.* ஆட்டிறைச்சியும் காய்கறிகளும் கலந்த குழம்பு வகை, கூட்டுக்கறி; (சட்.) விருப்ப ஆவணம் எழுதாமல் இறக்கிற பெற்றோரின் சொத்துக்களை எல்லாம் சமபங்குகளாக்குவதற்காக எல்லாச் சொத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்தல்; குழப்பம்; தாறுமாறான குவியல்.

hot'-cock'les, *n.* கண்ணாம்பூச்சி ஆட்ட வகை, கண்பொத்திய நிலையில் குட்டியவர் யாரென ஊகித்துரைக்கும்படி விடப்படும் ஆட்டம்.

hot'-dog', *n.* சூடான காரச் சோமாசி வகை.

hotel', *n.* வழித்தங்கல்மனை, வழிப்போக்கர் தங்குவதற்கான விடுதி; அருந்தகம், பணம்பெற்று உணவும் உறையுளும் அளிக்கும் நிறுவனம்.

hotel'ier, *n.* உணவகம் வைத்து நடத்துபவர்.

hot'foot, *adv.* மிகுவிரைவாக, வேகமாக.

hot'-gos'peller, *n.* வலுவூட்டும் உணர்ச்சிமிக்க கிறித்தவ சமயச் சொற்பொழிவாளர்.

hot'head, *n.* இறுமாப்பு பிடிமுரண்டுடையவர், மூர்க்கர், முரடர்.

hot'-headed, *a.*=hot-brained.

hot'house, *n.* சேமச்செடிப் பண்ணை வீடு, பருவந்தப்பியும் குளிர்மண்டலத்திலும் வளரும்படியாக வெப்பநிலையூட்டப் பட்ட நிறைகண்ணாடிக் கட்டிடம்; சூளையில் வைப்பதற்கு முன் பச்சை மட்கலங்கள் வைக்கப்படும் சூடான அறை.

hot'-mouthed, *a.* குதிரை வகையில் அடங்காத, கடிவாள ஈர்ப்புப் பொருத.

hot'pot, *n.* கொத்தி உருளைக்கிழங்கோடு சூட்டடுப்பிலிட்டுப் பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சியுள்ள மூடியிறுக்கமுடைய உண்கலம்.

hot'press, *n.* துணி தாள் ஆகியவற்றின் மேற்பரப்பை வழவழப்பாக்கும்படி சூடான தகடுகளிடையே வைத்து அழுத்துவதற்குரிய கருவி; *v.* வழவழப்பான மேற்பரப்பை உண்டுபண்ணுவதற்குச் சூடான தகடுகளிடையே அழுத்து.

hot'-short, *a.* இரும்பு வகையில் சூடானபோது எளிதில் நொறுங்கத்தக்க.

hot'spur, *n.* துடுக்கானவர், முன்பின் பாராதவர், ஆத்திர முள்ளவர்.

hot'tem'pered, *a.* முன்கோபமுள்ள.

Hott'entot, *n.* மேய்ச்சல்தொழில் கொண்ட தென் ஆப்பிரிக்க நாடோடி இனத்தவர்; நாகரிகப்படியில் தாழ்ந்தவர், அறிவு பண்பாட்டில் முதிர்நிலை பெறாதவர்; (தொ.) Hottentot fig, தென் ஆப்பிரிக்க அத்திப்பழ வகை.

hough, *n.* விலங்கின் பின்னங்காலின் முழங்காலுக்கும் காற் குழைச்சுக்கும் இடையிலுள்ள இணைப்பு; *v.* முழங்கால் தசைக்கயிற்றை அறு; கால்தசை நாணறுத்து உருக்குறை.

hound, *n.* வேட்டைநாய், மோப்ப உணர்ச்சியுடைய நாய் வகை; வெறுக்கத்தக்கவன், அயோக்கியன்; வேட்டையாடு பவர், அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்று வேட்டையாடு பவர், விடாமுயற்சி செய்து தேடுபவர்; துரத்திப்பிடிக்கிற விளையாட்டு வகையில் துரத்துபவர்; மீன்வகை; *v.* வேட்டை நாய் கொண்டு துரத்து, வேட்டை நாயை ஏவு; ஆளை ஏவு; தூண்டு; (தொ.) master of hounds, வேட்டைநாய்த் தொகுதித் தலைவர்; the hounds, குள்ள நரிகளை வேட்டை யாடுவதற்காகப் பழக்கப்பட்ட வேட்டை நாய்களின் தொகுதி.

hound's'-tongue, *n.* மயிரிழை போன்ற புற வளர்ச்சியுள்ள இலைகளும் நீல மலர்களும் கொண்ட செடிவகை.

hour, *n.* ஒருமணி நேரம், அறுபது நிமிடங்கள் கொண்ட காலக்கூறு; மணிப்பொறி காட்டும் நேரம், மணிநேரம்; (தொ.) at the eleventh hour, கடைசி நேரத்தில், மிகப் பிந்தி; in a good hour, நற்பேறாக; நன்னிமித்தத்தில்; in an evil hour, காலக்கேடாக, கெட்ட நேரத்தில்.

hour'-circle, *n.* இரு வான்துருவங்களையும் கடந்து செல் லும் பெரிய வான் வட்டம்.

hour'-glass, *n.* மணல் நாழிகை வட்டில், மணல் சொரிந்து காலங்காட்டும் கருவி.

hour'-hand, *n.* மணிப்பொறியின் சிறு முள், மணி காட்டும் முள்.

hour'i, *n.* இஸ்லாமியர்களின் வானுலகுக்குரிய அணங்கு; இன்ப எழிலாரணங்கு.

hour'ly, *a.* மணிக்கு மணி நிகழ்கிற; அடிக்கடி நிகழ்கிற; *adv.* மணிதோறும்; அடிக்கடி.

hour'plate, *n.* கடிகாரத்தின் முகப்புத் தகடு.

hours, *n. pl.* பணியாற்றுவதற்குக் குறிக்கப்பட்ட கால அளவு; வழிபாட்டுக்காகக் குறிக்கப்பட்ட ஏழு வேளைகள்; ஏழுவேளைக் கட்டளைப் பணிகள்; ஏழுவேளைக் கட்டளை ஏடு கள்; கிரேக்கபுராண மரபில் பெரும்பொழுது சிறுபொழுதுத் தெய்வங்கள்; (தொ.) at all hours, காலமில்லா காலத்தில்; பின்னிரவு வேளைகளில்; keep good hours, நேரத்தோடு படுத்து நேரத்தோடு எழு; அமைதியும் ஒழுங்கும் நிறைந்த வாழ்க்கை நடத்து; small hours, குறைந்த இலக்கங்களால் குறிக்கப்படும் மணிநேரங்கள், மூன்று தொடங்கிய மணி யுடைய காலை பிற்பகல் வேளைகள்.

house, *n.* வீடு; குடியிருக்குமிடம்; குடும்பம்; குடும்பமரபுக் குழு; கால்வழி; சுற்றத்தார் குழாம்; கட்டிடம்; வழித் தங்கல்மனை, சாவடி, சத்திரம்; வாணிக நிலையம்; சட்ட சபை கூடுமிடம்; சட்டசபைக்குழு; கன்னிமாடம்; மாணவர் இல்லம், கல்விநிலைய மாணவர் தங்கல்விடுதி; பள்ளிப் பிரிவு; நாடகம் திரைப்படம் முதலியவற்றின் வகையில் காட்சிக்கொட்டகை; அவையோர், காண்போர், கேட்போர்; கூட்டமண்டபம்; கூட்ட நிகழ்ச்சி; விலங்குப் பேணகம்; பண்டங்கள் வைக்கப்படுமிடம்; தொழுகைக் கூடம்; வான் மனை, வானவட்டத்தின் 12-இல் ஒரு கூறான 30 பாகையிடம்; தாளும் எழுதுகோலும் கொண்டு ஆடக்கூடிய குருட்டடி ஆட்ட வகை; *a.* வீட்டுக்குரிய; வீட்டில் பழக்கப்பட்ட; உள்துறை சார்ந்த; *v.* வீடமைத்துக் கொடு, வீடு வாய்ப்பளி; இட வாய்ப்பளி, இட வாய்ப்பாயுதவு; பாதுகாப்பு வழங்கு; தங்கிடம் உதவு; சேமித்துவை, இட்டுவை; தங்கு; புகலிடம் பெறு; இட வாய்ப்பாயமை; தங்கிடமாயமை; சேம இடமாய் உதவு; துப்பாக்கிகளைப் பாதுகாப்பான இடத்தில் வை; பாய்மரங்களைத் தாழ்த்து; குதைகுழியில் பொருத்தி வை; (தொ.) bring down the house, கைத்தட்டல் தூண்டு; மகிழ்ச்சி ஆரவாரம் உண்டுபண்ணு; house of call, ஒருதரத் தெரு வணிகர் தம் வாணிகத் தரகு பெறுவதற்காகச் செல்லும் இடம்; அடிக்கடி செல்வதற்குரிய வீடு; house of correction, சிறை, காவற்கூடம்; House of God, House of Prayer, House of Worship, கோவில், வழிபடுமிடம்; house of ill-fame, பொதுமகளிர் இல்லம், விலைமகளிர் வீடு; House of Lords, House of Peers, பெருமக்கள் அவை; House of Representatives, பிரதிநிதிகள் சபை; House of the People, பொதுமக்கள் அவை, பாராளுமன்றக் கீழ்சபை; Inner House, குற்ற நீதிமன்ற உயர்பகுதி; keep a good house, வளமாக வாழ்; keep house, வீட்டை மேற்பார்த்துப் பேணு, நிலையத்தை நடத்து; keep open house, வருபவர்களுக்கு எல்லாம் உணவுபசாரம் அளி; keep the house, வீட்டி லிரு; வீட்டில் அடைபட்டிரு; வீட்டுக்குப் பொறுப்பேற்று நடத்து; வீட்டைக் காவல் செய்; like a house on fire, like a house afire, வியத்தகு வகையில் விரைவாக, வியப் பூட்டும் வேகத்துடன்; Outer House, குற்ற இயல் நீதி மன்றத்தின் கீழ்ப்பிரிவு.

house-a'gent, *n.* வீட்டுத் தரகர், வீடு கொள்விலை விற்பனை வகையில் இடையீட்டாளர்.

house'-boat, *n.* தங்கி வாழ்வதற்கான வாய்ப்புக்கள் இணைக்கப்பட்ட படகு.

house'-bote, *n.* வீடு சீர்திருத்த மரங்களைப் பயன்படுத்த வாடகைக்காரர் உரிமை.

house'-break'er, *n.* துணிகரத் திருடர், பகல் நேரத்தில் வீட்டை உடைத்துத் திருடுபவர்; பழைய வீடுகளை அழிப் பவர்.

house'craft, *n.* வீட்டுவேலைத் திறமை, வீட்டு வேலைகளைச் சார்ந்த கைத்திறமை.

house'-dinner, *n.* கழகங்களில் உறுப்பினருக்கும் தனி விருந் தினர்க்கும் மட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்து.

house'-dog, *n.* வீட்டுக் காவல்நாய்.

house'-flag, *n.* வாணிகக் கப்பலில் வாணிகக் கழகத்தின் கொடி.

house'-flannel, *n.* தளம் துடைக்கும் முரட்டுக் கந்தல்துணி.

house'-fly, *n.* வீட்டு ஈ.

house'hold, *n.* குடும்பத்தினர்; குடும்ப அமைப்பு; *a.* குடும்பத்தைச் சார்ந்த; (தொ.) household franchise, household suffrage, வீடு உடையவர்கள் மாமன்ற உறுப்பினர்களுக்கு வாக்கு அளிப்பதற்கான உரிமை; household gods, பற்றுதலுக்குரிய வீட்டுப்பொருள்கள்; household troops, அரசரையும் தலைநகரையும் காக்கும் தனிப்பணிகொண்ட காவற்படைப் பிரிவு; household word, வீட்டு வழக்கு மொழி, பழஞ்சொல்; குடும்ப வழக்கில் வந்துவிட்ட பெயர்; the Household, அரசர்கள் குடும்பம், அரண்மனை.

house'holder, *n.* தன்வீட்டில் குடியிருக்கும் வீட்டுடைமையாளர்; குடும்பத் தலைவர்.

house'holds, *n. pl.* இரண்டாந்தர மாவு.

house'keeper, *n.* வீட்டைப் பாதுகாப்பதற்காக அமர்த்தப்பட்ட ஆள்; வீட்டைப் பாதுகாக்கும் பொறுப்புடையவர்; வீட்டிலேயே பெரிதும் தங்கியிருப்பவர்.

house'keeping, *n.* வீட்டுக் காரியங்களை நடத்தும் பொறுப்பாண்மை; குடும்பம் நடத்தும் திறமை; குடும்ப ஆட்சி.

house'leek, *n.* வீட்டுக் கூரைமீது வளரும் கொடி வகை.

house'less, *a.* வீடற்ற, வீடில்லாத, தங்க இடமற்ற.

house'maid, *n.* வீட்டுப் பணிப்பெண், வரவேற்பு படுக்கையமைப்பு முதலியவற்றைக் கவனிப்பவள்; (தொ.) house. maid's knee, பெரும்பாலும் பணிப்பெண்களுக்கு வரும் முழங்கால் அழற்சி நோய்.

house'-mas'ter, *n.* பொதுப் பள்ளிக்கூடத்தோடு இணைந்த மாணவர் விடுதித் தலைவர்.

house'mate, *n.* கூடக் குடியிருப்பவர்.

house'-par'ty, *n.* நாட்டுப்புற வீட்டில் தங்கியிருக்கும் விருந்தினர் குழு.

house'-physi'cian, *n.* = house-surgeon.

house'place, *n.* வீட்டில் பகலில் பயன்படுத்தப்படும் பகுதி.

house'-proud, *a.* வீட்டைப்பேணி அழகுபடுத்துவதில் மிகு ஈடுபாடுடைய; வீட்டின் நிலைகண்டு பெருமிதம்கொள்கிற.

house'-room, *n.* வீட்டின் இடவசதி; (தொ.) would not give it house-room, நன்கொடையாகப் பெறார்.

house'-stew'ard, *n.* பெரிய வீட்டுப்பொறுப்பைக் கவனிக்கும் மேற்பார்வையாளர்.

house'-sur'geon, *n.* மருத்துவ மனையிலேயே தங்கியிருந்து பணிபுரியும் மருத்துவர்.

house'-to-house, *a.* வீட்டுக்கு வீடான, வீடுவீடாகச் சென்று ஆற்றப்படுகிற.

house'-top, *n.* வீட்டுக்கூரை; (தொ.) proclaim from the house-tops, விளம்பரமாகப் பறைசாற்றிக் கூறு.

house'-warm'ing, *n.* புதுமனை புகுவிழா.

house'wife, *n.* குடும்பத் தலைவி, இல்லாள்; குடும்ப ஆட்சியாளர்; ஊசி நூல் வைக்கும் உறை.

house'wifery, *n.* குடும்ப ஆட்சி; குடும்பப் பொறுப்பாண்மை.

house'work, *n.* வீட்டுவேலை, வீட்டுக்குரிய பணி.

hous'ing [1], *n.* வீடு, தங்குவதற்கான வசதி, குடியிருப்புவசதி, தங்குமிடம்; வீடளிப்பு, வீட்டு வசதியளிப்பு ஏற்பாடு; மரத்துண்டு சென்று அடைக்கக்கூடிய துளை; (தொ.) housing estate, திணையாட்சி நிலையங்களால் கட்டமைக்கப்பட்ட குடியிருப்பு அமைப்புத் தொகுதி; housing scheme, வீடு கட்டும் திட்டம்.

hous'ing [2], *n.* குதிரையின்மேல் மறைப்புக்காக அல்லது அழகுக்காகப் போடப்படும் துணி.

hous'ings, *n. pl.* குதிரைச்சேணை அணிமணித் தொகுதி.

Houyh'nhnm, *n.* மனிதப்பண்புள்ளதாகக் கற்பனை செய்யப்படும் குதிரை.

Hov'a, *n.* மடகாஸ்கரில் உள்ள ஆளும் குடிக்குழுவினரில் ஒருவர்.

hove, *v.* heave என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவங்களில் ஒன்று.

hov'el, *n.* திறந்த கொட்டில், தொழுவம்; அழுக்கடைந்த குடில்; காளவாய் உள்ள கூர்ங்கோணக் கட்டிடம்.

hov'eller, *n.* சட்டப்படி இசைவு பெறாத கரையோரப் படகோட்டி; அரசியல் இணக்கம் பெறாது கப்பல் அழிபாட்டை அணுகுபவர்; சிறு கரையோரப் படகு.

hov'el-post, *n.* தானியக் குவியலைத் தாங்கும் கம்பம்.

hov'er, *n.* அந்தர நிலை, பறவைகளின் சிறகு விரித்து வானில் மிதந்து அமையும் நிலை; தொங்கல் நிலை; தயக்க நிலை; *v.* சிறகு விரித்து வானில் மிதந்தமை, தொங்கல் நிலைகொள்; சுற்றி வட்டமிடு, அருகாக ஊடாடு, சுற்றித் திரி; தயங்கு, ஊசலாடு.

hov'erplane, *n.* மீவானூர்தி.

how, *n.* செய்வகை, செய்முறை, எவ்வாறவ்வாறு; *adv.* எப்படி, எவ்வாறு, எவ்வகையில்; எம்முறையில்; எவ்வழியாக; எந்நிலையில்; எந்த அளவில்; எந்த அளவுக்கு; எத்தரத்தில்; *conj.* எப்படி என்று, எவ்வாறவ்வாறு; (தொ.) and how, உறுதியாகவே; உள்ளபடியே; நானும் அவ்வாறே நினைக்கிறேன்; here's how! உங்கள் நலத்திற்கு நான் இதை அருந்துகிறேன்; how are you, how do you do, உங்கள் உடல்நிலை எவ்வாறுள்ளது; நலந்தானா; how far, எவ்வளவு தொலை, எதுவரைக்கும்; how is corn? தானியம் என்ன விலை; how many, எத்தனை; how much, எவ்வளவு; how now, இது என்ன; ஏன் இவ்வாறு இருக்கிறது; how so, இப்படி என்று காட்டமுடியுமா; how's that, (மட்டைப் பந்தாட்டம்) அவர் ஆடலாமா, ஆட்டக்காரர் ஆட்ட உரிமையை இழந்துவிட்டார் என்று தீர்ப்பளிக்கும்படி எதிர்ப்புக்கட்சித் தரப்பினர் நடுவரை வேண்டும் விஞச்சொல்; the how and the why, காரணமும் வழிவகையும்.

howbe'it, *conj.* எனினும், என்ருலும்.

howda'h, *n.* அம்பாரி, யானைமீது ஒருவர் அல்லது இருவர் உட்காரக்கூடிய மேல்விதானமுள்ள இருக்கை.

howev'er, *adv.* எப்படியாவது, எந்த அளவிலாவது, எவ்வகையிலேனும்; ஆயினும்.

how'itzer, *n.* குட்டையான பீரங்கிவகை, முற்றுகையிலும் அகழ்ப்போர்களிலும் செங்குத்தான கோணங்களில் தாக்குவதற்குப் பயன்படும் குட்டையான பருத்த துப்பாக்கி வகை.

howl, *n.* ஊளை, நாய் ஓநாய் நரி முதலியவற்றின் கூக்குரல்; வலி தாங்க முடியாது செய்யும் அலறல்; ஏளனமான கூச்சல்; கம்பியில்லாத் தந்தியில் ஒலி வாங்கும் கருவியில் ஏற்படும் ஓசை; *v.* ஊளையிடு; வலியினுல் அலறு; கூக்குரலிட்டுக் கெக்கலி; சொற்களை ஊளையிட்டுக்கொண்டே ஒலித்தல் செய்.

howl'er, *n.* தென் அமெரிக்க குரங்கு வகை; (பே-வ.) குதிப்பிடத்தக்க பெரும்பிழை.

howl'et, *n.* (பே-வ.) ஆந்தை, கூகை.

howl'ing, *a.* ஊளையிடுகிற; அலறுகிற; கூக்குரலிடுகிற.

howsoev'er, how'soever, *adv.* எவ்வகையான தன்மையிலும், எப்படிப்பட்ட அளவிலாவது.

hoy [1], *n.* குறுந்தொலைப் பாய்மரக் கப்பல் வகை.

hoy [2], *int.* கவனத்தை ஈர்க்கும் விளித்தற்குறிப்பு; விலங்கு ஊக்குவிளிக்குறிப்பு; (கப்.) உயர இருப்பவர்களை அழைக்கும் விளிப்புக்குறிப்பு.

hoy'a, *n.* படரும் பல்வண்ண மலர்ச்செடி வகை.

hoy'den, *n.* ஆண்பிள்ளை போல் நடக்கும் பெண், துடுக்கார வாரப் பெண்.

hub [1], *n.* வண்டிச்சக்கரத்தின் குடம்; சக்கரத்தில் அச்சைப் பொருத்துமிடம்; முக்கிய மையம், கருத்தீர்க்கும் மையச் செய்தி; (தொ.) hub of the universe, அமெரிக்காவில் பாஸ்டன் (Boston) நகரம்.

hub [2], *n.* (பே-வ.) கணவர், துணைவர்.

hub'ble-bubble, *n.* புகைக்குழாய் வகை; குமிழி ஒலி; குழப்பமான பேச்சொலி; உளறல் பேச்சு.

hub'-brake, *n.* குடத்தடுக்குப் பொறி, வண்டிச் சக்கரத்தின் அச்சின் சுழற்சியைத் தடைசெய்யும் சக்கரத்தடுக்கு.

hubb'ub, hubb'uboo, *n.* குழப்பம், கலகம், ஆரவாரம்; போரில் ஏற்படும் குழப்பமான கூக்குரலொலி.

hubb'y, *n.* = hub².

hub'ris, (கிரே.) *n.* அவமதிப்பான தற்பெருமை, துடுக்கான இறுமாப்பு.

huck'aback, *n.* மேல்துண்டுகளுக்குப் பயன்படும் தடித்த நார்த்துணி.

huc'kle, *n.* இடுப்பு, இடைபிட்டம், தொடை.

huck'le-back, *n.* கூன்.

huck'le-backed, *a.* கூனிய முதுகுடைய.

huc'kleberry, *n.* தென் அமெரிக்க புதர்ச்செடிகளில் காணப்படும் பழ வகை.

huckle'-bone, *n.* இடுப்பு எலும்பு; தொடை எலும்பு; விலங்குகளின் தொடை எலும்பு.

huck'ster, *n.* திரிந்து விற்பவர், கூவி விற்பவர்; சிறு வணிகர்; பணமே குறிக்கொண்ட பணியாளர்; *v.* பேரம் பேசு; சிறு அளவில் வாணிகம் செய்; கீழ்த்தரக் கலப்புச் செய்; கலந்து கெடு, கீழ்த்தரப்படுத்து.

hud'dle, *n.* கதம்பக் குவியல்; குவியற் கூளம்; குழப்பம்; ஆரவாரம்; பரபரப்பு, அவசரம்; மறைநுழுக் கூட்டம்; *v.* தாறுமாறாகக் குவி, ஒழுங்கின்றிக் கொட்டு; அவசரப்படுத்து, பரபரப்புக்காட்டு; பரபரப்பாகப் பணிசெய்; அவசர அவசரமாகச் சுருட்டிக்கட்டு; கும்பலில் குழப்பம் உண்டுபண்ணு; ஆத்திரமாகத் தூக்கிப்போடு; சுருட்டி மடக்கிக்கொள்; அரைகுறையாக வேலைசெய்; அடர்ந்து நெருங்கி அமர்.

hudd'led, *a.* நெருங்கிய; குவியலான; ஒழுங்கின்றிச் சேர்ந்த; தாழக் குனிந்து கெஞ்சுகிற.

Hudibras'tic, *a.* பட்லர் (Butler 1612-1680) என்பவரின் ஹ்யூடிப்ராஸ் (Hudibras) என்ற வசைக்காப்பியத்தின் யாப்பமைப்புமுறை சார்ந்த.

hue¹, *n.* வண்ணம்; தோற்றம்; சாயல்; நிறக் கலவை; ஒரு நிறத்தோடு பிறிதொன்றைச் சேர்ப்பதால் ஏற்படும் வேறொரு நிறம்.

hue², *n.* கூக்குரல், கூப்பாடு; (தொ.) hue and cry, பின்தொடர்ந்து இடும் ஆரவாரம்; அச்சத்தாலிடும் கூப்பாடு, எதிரியை அல்லது குற்றவாளியைப் பிடிக்குமாறு எழுப்பும் கூக்குரல்.

huff, *n.* கோபநிலை, வெடுவெடுப்பு; (சதுரங்க ஆட்டத்தில்) ஆட்ட உரிமை இழந்துவிட்டதாக எதிரியின் ஆளை ஆட்டத்தினின்று விலக்குதல்; *v.* கொடுமைப்படுத்து, அடக்கியாளு; சீறு, தாக்கு; சினமுறச் செய்; வெறுப்புறச் செய்; கோபப்படு; (சதுரங்க ஆட்டத்தில்) ஆட்ட உரிமை இழந்துவிட்டதாக எதிரியின் ஆளை ஆட்டத்தினின்று விலக்கு.

huff'ish, huff'y, *a.* கோபிக்கிற, வெடுவெடுக்கிற, சீறுகிற; சிடுசிடுப்பான; எதையும் குற்றமாக எடுத்துக் கொள்கிற.

hug, *n.* அணைப்பு, இறுகத் தழுவுதல்; மற்போரில் பிடிவகை; *v.* அன்போடு இறுகத்தழுவு, ஆர்வத்தோடு அணை, கட்டித்தழுவு, கரடி வகையில் முன்னங்கால்களுக்கிடையே வைத்து அழுக்கு; மனத்தில் பற்றிப் பிடித்துக்கொள்; அன்பாதரவை வெளிக்காட்டு; வாழ்த்துக்கூறு; கரையோரமாயிரு; (தொ.) hug oneself, தன்னைத்தானே மெச்சிக்கொள்.

huge, *a.* மிகப் பெரிய; மாபேரளவான; மிகச்சிறந்த.

huge'ly, *adv.* மிகப்பேரளவில்.

hu'geous, *a.* (பே-வ.) மிகப்பெரிய.

hugg'er-mugg'er, *n.* இரகசியம், மர்மம், ஒளிவு மறைவு, குழப்பம்; *a.* இரகசியமான, ஒளிவு மறைவான; குழப்பமான; *v.* மறை; குழப்பு, வெளியாகாது அடக்கு, மறைவாகச் செய், அடக்கமாக முன்னேறு; *adv.* குழப்பத்தில், இரகசியமாக, ஒளிவு மறைவாக.

hugg'ery, *n.* ஆதரவு நாடிய பசப்பு, வழக்குரைஞர் முதலியோர் வகையில் தொழில் வாடிக்கை நாடிப் பசப்பி வசப்படுத்தும் முயற்சி.

hug'-me-tight, *n.* உடம்போடு ஒட்டிய கம்பளி ஆடைவகை.

hug'uenot, *n.* (வர.) கத்தோலிக்க மதத்திலிருந்து பிரிந்த முனைத்த சீர்திருத்தக் கிறித்தவமதக் கொள்கையுடைய பிரஞ்சுக்காரர்.

hul'a, *n.* ஹவாய் (Hawaii) நாட்டுப் பெண்ணின் நடனம்.

hulk, *n.* கரையோரச் சரக்குக் கிடங்காய்ப் பயன்படுத்தப்படும் உடைந்த கப்பலின் உடற்பகுதி; எளிதில் கையாள முடியாத பளுவான கப்பல்; மிகத் தடித்த மனிதர்; பருமனான பொருள்.

hul'king, *a.* பருமனான; அருவருப்பான.

hulks, *n. pl.* சிறைக்கூடமாகப் பயன்படும் உடைந்த கப்பலின் உடற்பகுதி.

hull¹, *n.* உமி, தோடு, காய் கூல வகைகளின் மேல்தோல், மூடி, மேலுறை; *v.* மேல் தோல் நீக்கு, உமி நீக்கு.

hull², *n.* கப்பலின் கட்டுமானம், கப்பல் உடற்பகுதி; *v.* நீர்மூழ்கிக்குண்டு கொண்டு கப்பலின் உடற்பகுதியைத் தாக்கு.

hullabaloo', *n.* குழப்பம், அமளி, ஆரவாரப் பேரொலி, கூச்சல்.

hull'-down', *adv.* கப்பலின் உடற்பகுதி அடிவானத்திற்குக் கீழ்ப்புறமாகும்படி மிகத் தொலைவில் உள்ள நிலையில்.

hullo', hull'oa, *int.* வியப்பொலி, கவனத்தை ஈர்க்கும் குறிப்பொலி; தொலைபேசியில் அழைப்பிற்குரிய பதிலொலி.

hull'y, *a.* உமி உடைய, மேற்றோலுடைய.

hum¹, *n.* முரல் ஒலி; முனங்கொலி, மந்த ஓசை; *v.* முரலு; தாழ்ந்த குரலில் பாடு; மந்த ஓசையில் வாய்திறவாது பாடு; முனங்கு; தயக்கத்தைக் காட்ட மெல்லிய குரலில் புரியாதபடி கூறு; (தொ.) hum and ha, hum and haw, இன்னது சொல்வது என்று அறியாத நிலையில் தயக்கத்தைக் காட்ட தெளிவற்ற ஒலி எழுப்பு; make things hum, சுறுசுறுப்பாக இயங்க வை.

hum², *int.* தயக்கம் கருத்து வேறுபாடு இவற்றைக் காட்டும் ஒலிக்குறிப்பு.

huma, *n.* ஓய்வின்றித் திரிவதாகக் கதைகளில் கூறப்படும் பறவை.

hum'an, *a.* மனிதனுக்குரிய; மனிதத் தன்மையுடைய; மனிதப் பண்புகளைப் பெற்றிருக்கிற; (தொ.) human nature, மனிதப் பண்பு, மனித இயல்பு.

humane', *a.* இரக்கமுள்ள; கொடைத்தன்மையுள்ள; பண்புநயமுடைய; கலைத்துறை வகையில் பண்புநயம் பயிற்றுவிக்கிற; (தொ.) humane killer, கால்நடைகளை நோவின்றிக் கொல்லும் கருவி; humane society, நீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்றும் சங்கம்.

hum'anism, *n.* மனித இனநலக் கோட்பாடு; மனித உலக வாழ்க்கை இயல்; மனிதப் பொதுமைநல இயல்; மனித இனப் பொதுச்சமய அமைதி; மனித இன இயற் பண்பாய்வுத் துறை; பண்டைக்கிரேக்க ரோமக்கலை இலக்கியப் பண்பு.

hum'anist, *n.* மனித இன இயற்பண்பாய்வாளர், மனிதப் பண்பாட்டியல் மாணவர்; பண்டைக் கிரேக்க ரோமக் கலை இலக்கியப்பண்பாய்வாளர்; கிரேக்க ரோமக்கலைப் பழங்கலை மாணவர்; மனித இனநலக் கோட்பாட்டாதரவாளர்.

humanitar'ian, *n.* மனிதப் பண்புடையவர்; மனித இனநலப் பற்றுடையவர்; கனவியல் அறச்சிந்தனையாளர்; அருளிரக்கப் பண்புடையவர்; மனித இனப்பொதுச்சமய அமைதியாளர்; இயேசுநாதரை மனிதப் பண்புடையவராக மட்டுமே கொள்பவர்; *a.* கனவியல் அறச்சிந்தனையுடைய, அருளிரக்கப் பண்புடைய; மனிதஇனப் பொதுச்சமய அமைதியுடைய; மனிதப் பண்புடைய; மனித இனநலப் பற்றுடைய.

human'ities, *n. pl.* உயர்மனிதப் பண்புகள்; அருளிரக்கச் செயல்கள்; (தொ.) the humanities, பண்டைக்கிரேக்க ரோம இலக்கண இலக்கியக் கலைப்பயிற்சி; உயர்புலமை.

human'ity, *n.* மன்பதை, மனித இனம்; மனித இயல்பு, மனிதத்தன்மை; மனிதப் பண்பு; அருளிரக்கம், அன்பு; அற ஆர்வச் செய்கைகள்; (தொ.) Religion of Humanity, இயற்கை கடந்த பண்புகளை மறுத்த மனிதநல முன்னேற்றக் கோட்பாடு.

hum'anize, *v.* மனிதனுக்கு, மனிதப் பண்பூட்டு; மனிதத் தன்மையடையச் செய்; இரக்கமுடையவனுக்கு, அருளுடைய வனுக்கு; மனிதனுகு, மனிதப் பண்புடையவராகு; பால் வகையில் தாய்ப்பாலின் பண்புடையதாக்கு; (தொ.) humanized milk, தாய்ப்பாலை ஒத்திருக்கும்படி செய்யப் பட்ட ஆவின்பால்.

hum'ankind, *n.* மனித இனம்.

hum'anly, *adv.* மனிதத்தன்மையோடு; மனித முயற்சியள வில்; மனித உணர்ச்சியுடன்; மனித நோக்குடன்.

hum'ble, *a.* பணிவான, தாழ்மையுள்ள; தாழ்நிலையிலுள்ள; தற்பெருமையற்ற; அடக்கமுள்ள; பகட்டற்ற; பொது நிலைப்பட்ட; *v.* தாழ்வுபடுத்து, செருக்குக் குலை, இழிவு படுத்து; (தொ.) eat humble pie, பணிந்து மன்னிப்புக் கோரு; அவமதிப்பை ஏற்றுக்கொள்; Humble Plant, 'தொட்டால் சிணுங்கி', தொட்டால் சுருங்கும் செடிவகை.

hum'ble-bee, *n.* கோத்தும்பி, பெரிய வண்டு வகை.

hum'bug, *n.* மோசடி; ஏய்ப்பு; கள்ளத்தனம்; பாசாங்குக் காரன்; ஏமாற்றுபவன், முறுகலான இனிப்புப்பண்ட வகை; *v.* ஏமாற்று; மோசடி செய்; பசப்பி ஏய்; போலியாக நடந்து கொள்; விட்டுவிட்டு விரை வேலைசெய்.

hum'drum, *n.* யாவரும் அறிந்த தன்மை; கவர்ச்சியற்ற நிலை, உவர்ப்பு நிலை; *a.* யாவரும் அறிந்த; சுவையற்ற; சலிப் பூட்டுகிற; மழுங்கலான; கூரறிவற்ற; *v.* கவர்ச்சியற்ற முறையில் செயலாற்று.

hum'eral, *n.* தலைவழிபாட்டின்போது குருமார் தோளைச் சுற்றிலும் அணிகிற நீள்வட்டமான பட்டுச்சவுக்கம்; *a.* தலைவழிபாட்டின்போது குருமார் அணிகிற; (தொ.) humeral veil, குருமார் தலைவழிபாட்டின்போது அணிகிற பட்டுச்சவுக்கம்.

hum'erus, *n.* மனித உடலில் கையின் மேற்புற எலும்பு; முதுகெலும்புடைய விலங்குகளின் முன்கால் மேற்புற எலும்பு.

hum'id, *a.* ஈரமான, ஈரக் கசிவான.

humid'ify, *v.* ஈர நயப்பூட்டு.

humid'ity, *n.* ஈரம், நீர்நயப்பு.

humil'iate, *v.* மதிப்பிழக்கும்படிச் செய், மானமிழக்கும்படிச் செய், செருக்குக்குலை; தாழ்வுபடுத்து, கீழ்ப்படுத்து; பிறர் தன்மதிப்புக்கு ஊறுபாடு செய்; துன்புறுத்து, அழுங்குவி.

humil'ity, *n.* பணிவு, தாழ்வுணர்ச்சி; அடக்கம், அமைவு, அமரிக்கை; தாழ்ந்தநிலை.

humm'er, *n.* வாய்திறவாது மென்மையாகப் பாடலை முனகு பவர்; முனகல் ஓசை எழுப்புபவர்; முரலும் வண்டு; மந்த ஓசையெழுப்பும் பறவை.

humm'ing, *a.* முரலுகிற; முனகுகிற; வாய்க்குள்ளாகப் பாடுகிற; (பே-வ.) ஊக்கமான, கிளர்ச்சிமிக்க; (தொ.) humming ale, புளித்துப் பொங்கி ஓசை எழுப்பும் காடியேறிய தேறல் வகை; humming knock on the head, தலையில் வலிமைவாய்ந்த குட்டு.

humm'ing-bird, *n.* சிறகடிப்பதன்மூலம் பொம்மெனும் ஒலி எழுப்புகின்ற சிறு பறவை வகை.

humm'ing-top, *n.* சுழலும்போது பொம்மெனும் முரல் வோசை எழுப்பும் பம்பர வகை.

humm'ock, *n.* சிறு குன்று; மேடு; திடர்; தேரி; சதுப்பு நிலத்தில் உயர்ந்து செல்லும் நிலம்; பனிக்கட்டிப்பரப்பில் இடைகரை; பனிக்கட்டிக் குவியல்.

hum'oral, *a.* (மரு.) உடம்பின் தாதுக்களைச் சார்ந்த; (தொ.) humoral pathology, எல்லா நோயும் உடம்பிலுள்ள நீரியலான தாதுக்களின் நிலை சார்ந்ததெனக் கருதின முற் கால மருத்துவக் கோட்பாடு.

hum'oralism, *n.* உடலில் நீர்க்கசிவுப் பொருள்களுள்ள நிலை; உடலின் நீரியல் தாதுக்களின் நிலை சார்ந்தே நோய்கள் தோன்றுகின்றன என்னுங் கோட்பாடு.

hu'moralist, *n.* உடலின் நீரியல் தாதுப்பொருள்களின் நிலை களினாலேயே நோய்கள் தோன்றுகின்றன என்னுங் கோட் பாட்டை ஆதரிப்பவர்.

hum'orist, *n.* நகைத்திறமுடையோன், நகைச்சுவையுணர் வுடையவர்; நகைத்திறப் பேச்சாளர்; நகைத்திற எழுத் தாளர்; நகைத்திற நடிகர்; நகைத்திறமூட்டும் பேச்சு நடை யாளர்; தனித்திறப் போக்குடையவர்; மக்கள் போக்கு களில் ஈடுபட்டு ஆய்பவர்.

hum'orous, *a.* நகைத்திறத்தால் தூண்டப்பட்ட; நகையாடி மகிழ்வுறுவதற்குரிய; நகைத்திறம் நிரம்பிய; சிரிப்பூட்டு கின்ற, கேலிக்குரிய; தனிப்போக்கான; மனம்போன போக் கான; ஏறுமாறுன.

hum'our, *n.* நகைச்சுவை; நகைச்சுவை காணும் திறன்; நகை ஏளனத்திறன்; ஈரம், நீர்க்கசிவு; நீர்ப்பொருள்; தாது, உயிரின உடற் கசிவுப்பொருள்; விருப்புவெறுப்புக் கூறு; வேடிக்கைக் கற்பனை; விளையாட்டான புனைவாற்றல்; குறும்பு; மனநிலை; மனப்போக்கு; மனவிருப்பம்; நாட்டம்; மனச் சாய்வு; *v.* இசையச் செய்; இணக்கமாக்கு; மனநிறைவு செய், உணர்ச்சியுடன் ஒத்திழைந்து மன நிறைவூட்டு; மகிழச் செய்; விட்டுக் கொடு, சலுகையளி; இடங் கொடு; (தொ.) aqueous humours, vitreous humours, ஒளியூடுருவும் திறமுள்ள நீரியலான கண்ணின் பகுதி; cardinal humours, உடல் அல்லது மன இயல்புகளைத் தீர்மானிப்பதாக முற் காலங்களில் கொள்ளப்பட்ட குருதி கோழை பித்தம் சோர்வு என்ற உடலின் நான்கு முக்கிய நீர்மப் பொருள்கள்; comedy of humours, தனிப்பட்ட குண இயல்புகளைப் பாத் திரங்களாகக் கொண்ட நாடகம்; good humour, மகிழ்வோ டுள்ள மனநிலை; ill humour, மகிழ்வற்ற மனோநிலை; out of humour, மனநிலை மாறிய, சினமுள்ள, சினமூட்டப்பட்ட, வெறுப்போடு கூடிய.

hum'oursome, *a.* மனம்போன போக்கில் செல்கிற; உள்ளம் ஒரு நிலையற்ற; தனிப்போக்குடைய; சிடுசிடுப்பான.

hump, *n.* கூன், முதுகிலுள்ள இயற்கையான முனைப்பு; ஒட்ட கத்தின் திமில்; நிலத்தின் குவி முனைப்பு; *v.* கூனல் வடி வாக்கு; தொந்தரவு செய், ஊக்கமழி, சோர்வூட்டு.

hump'back, *n.* கூனல் முதுகு; கூனுடையவர், கூனன், கூனி; *a.* கூனல் முதுகுடைய.

hump'backed, *a.* கூனிய, முதுகுகூனலுள்ள.

humped, *a.* கூனுடைய.

humph, *v.* ஐயம் தெரிவி, மனக்குறைபாட்டைத் தெரிவி; *int.* ஐய ஒலிச்சொல், வெறுப்பொலிச் சொல்.

hump'ty-dump'ty, *n.* விழுந்தால் எழுந்திருக்க முடியாதபடி தடித்துக் குறுகியவர்.

hump'y [1], *a.* முதுகுப் புடைப்புகள் நிறைந்துள்ள.

hum'py [2], *n.* ஆஸ்திரேலிய (Australian) நாட்டுக் குடிசை.

hum'us, *n.* இலை தழை மக்கிய சத்துள்ள தோட்டமண்.

Hun, *n.* ஊணர், 4-ஆம் 5-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா வைப் படையெடுத்துக் கொள்ளையடித்த ஆசிய நாடோடி இனம்; இழி வழக்காற்றில் செர்மானியர்.

hunch, *n.* முதுகுப்புடைப்பு, கூன்; தடித்த திரளை; *v.* புறங் கவிந்து வளை, கூனுண்டாகும்படி புறங்கவி.

hunch'back, *n.*=humpback.

hunch'backed, *a.*=humpbacked.

hun'dred, *n.* நூறு; பெருந்தொகை; நூறன் தொகுதி; கூற்றம், வட்டம், இங்கிலாந்து நாட்டின் சிறுதிற உட்பிரிவு; நூறு பொன்; நூறு வெள்ளி; *a.* நூருன, நூறு மடங்கான;

(பே-வ.) நூறுவதான; (தொ.) great hundred, long hundred, நூற்றி இருபது; Hundred Years' War, இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் இடையே (1337-1453) நடைபெற்ற நூற்றுண்டுப் போர்; not a hundred miles from, அருகாமையில்.

hun'dredfold, *a.* நூறுமடங்கான; நூறு உட்பிரிவுகள் கொண்ட; நூறு முறை மடிக்கப்பட்ட.

hun'dred-per-cent', *a.* முழு நிறைவான.

hun'dred-per-cent'er, *n.* விட்டுக்கொடுக்காத தேசபக்தர், தளர்வுறு நாட்டுப் பற்றுளர்.

hun'dreds-and-thou'sands, *n. pl.* அழகொப்பனையாகப் பயன்படுத்தப்படும் சிறு இனிப்புப்பண்டங்கள்.

hun'dredth, *n.* நூறு சமப்பகுதிகளில் ஒன்று; *a.* நூறுவதான, நூறில் கடைசியான; நூறு சமப்பகுதிகளில் ஒன்றுன.

hun'dredweight, *n.* நிறையளவுப் பேரெல்லைக் கூறு, பாரத்தில் இருபதில் ஒரு பகுதி, 112 கல் எடை.

hung, *v.* hang[1] என்பதன் இறந்தகால முற்றெச்ச வடிவம்.

hung'-beef, *n.* மாட்டிறைச்சியின் உப்புக்கண்டம்.

hung'er, *n.* பசி, பசியினுல் ஏற்படும் களைப்பு; பெருவேட்கை, வேணவா; அமைவின்மை, அவாத்துடிப்பு; *v.* பசிகொள், உணவார்வம் கொள்; ஆர்வத்துடன் நாடு, வேணவாக் கொள்; பட்டினிபோடு, உணவுமறு.

hung'er-march, *n.* பசி ஊர்வலம், வறுமைநிலையைத் தலைவர் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான வேலையற்றோர் அணி வகுப்பு.

hun'ger-strike, *n.* சிறைப்பட்டவர்கள் தம் விடுதலைக்காக மேற்கொள்ளும் உண்ணுநோன்பு.

hun'gry, *a.* பசித்திருக்கின்ற; பசித் தோற்றமளிக்கின்ற; பசியை உண்டாக்குகிற; ஆர்வமிக்க, பேராசையுள்ள; வளமற்ற, வறண்ட, கட்டாந்தரையான; (தொ.) Hungry Forties, (வர.) இங்கிலாந்தின் 1840-49 ஆண்டு வற்கடம்.

hunk, *n.* தடி, வெட்டப்பட்ட பெருந்துண்டு; கோணல்மாணலான துண்டு; முதுகுப்புடைப்பு, கூன்.

hunk'ers, *n. pl.* பிட்டம்; (தொ.) on one's hunkers, குந்திக் கொண்டுள்ள நிலையில்.

hunks, *n.* கஞ்சன்.

Hunn'ic, Hunn'ish, *a.* ஐரோப்பிய நாடோடிக் கொள்ளையினத்தைச் சார்ந்த.

hunt, *n.* வேட்டை; வேட்டை நாய்களுடன்கூடிய வேட்டைக் குழு; வேட்டையாடுவதற்குரிய வட்டாரம்; பின்துரத்து முயற்சி; தேட்டம், தேடியலையும் முயற்சி; *v.* வேட்டையாடு; வேட்டைக்குச் செல்; வீர விளையாட்டுநாடி வேட்டம் பயில்; உணவுக்காக வேட்டை மேற்கொள்; இரைநாடி வேட்டைக் கெழு; துரத்திச் செல்; பின்தொடர்; துரத்தியடி; துருவித் தேடு; வேட்டைக் காட்டைத் துருவிக்கலை; வேட்டையில் குதிரைகளைப் பயன்படுத்து; வேட்டையில் நாய்களை ஈடுபடுத்து; (தொ.) hunt after, தேடு, அடைய முயற்சி செய்; hunt ball, வேட்டையில் ஈடுபட்டவர்களின் நடன நிகழ்ச்சி; hunt counter, வேட்டை மோப்பத்தைப் பின்னேக்கித் தொடர்ந்து செல்; hunt down, கடைசி வரை பின்தொடர்ந்து செல்; hunt in couples, சோடி நாய்களுடன் வேட்டையாடு; hunt out, தேடிப்பிடி; hunt the letter, செயற்கையாக மோனை அணிபயில்; hunt up, தேடிக் கண்டுபிடி.

hun'ter, *n.* வேடன், வேட்டையாடுபவன்; வேட்டையாடுவதற்குப் பயன்படும் குதிரை; கிலோடு கூடிய உலோக முகப்பு மேன்மூடியுள்ள கைக்கடிகாரம்; (தொ.) hunters' moon, அறுவடை நிலவிற்குப் பின்னைய நிறைமதியம்.

hun'ting, *n.* வேட்டையாடுதல்; வேட்டை; *a.* வேட்டையாடுகிற; வேட்டைக்குப் பயன்படுகிற; (தொ.) happy hunting grounds, அமெரிக்காவிலுள்ள 'சிவப்பு இந்தியர்களின்' துறக்க உலகம்; hunting mass, பொறுமையற்ற வேட்டையாளர்களுக்கான விரைவழிபாடு.

hunt'ing-box, *n.* வேட்டையாடுவதற்குரிய தற்காலிகமான இருப்பிடம்.

hunt'ing-cog, *n.* இணைந்து சுழலும் பற்சக்கரங்களிரண்டில் ஒன்றில் மட்டும் மிகுதிப்படியாகவுள்ள ஒருபல்.

hunt'ing-crop, *n.* வேட்டைக்களத்தில் பயன்படுத்தப்படும் கசை.

hunt'ing-field, *n.* வேட்டைக்களம்; நரிவேட்டைக்களம்; வேட்டையாளர்களின் கூட்டத் தொகுதி.

hunt'ing-ground, *n.* வேட்டைக்களம்

hunt'ing-horn, *n.* தாரை, வேட்டைக் கொம்பு; பக்கச் சேணத்தில் அண்மைப்பகுதியிலுள்ள இரண்டாவது புடைப்புக்குமிழ்.

hunt'ing-song, *n.* வேட்டைப் பாட்டு; வேட்டையைப் பற்றிய பாட்டு.

hunt'ing-tide, *n.* வேட்டைப் பருவம்.

hun'tress, *n.* வேட்டையாடும் பெண்.

hunts'man, *n.* வேட்டையாடுபவன்; வேட்டையாளன்; வேட்டையாடும்போது வேட்டை நாய்களைப் பேணிக் காக்கும் பணியாள்.

hunts'manship, *n.* வேட்டைத் திறலாண்மை.

hunt-the-slipp'er, *n.* மிதியடி வேட்டை, கைவிட்டுக் கைமாற்றி அனுப்பிக் கொண்டிருக்கும் செருப்பை வட்டத்திற் குள்ளிருப்பவர் பிடிக்கமுயலும் ஆட்டவகை.

hur'dle, *n.* இடையீட்டுத் தடைவேலி; பந்தயத்தில் தாண்டிச் செல்வதற்குரிய தடுப்புச் சட்டம்; துரோகிகளைத் தூக்கிலிட இழுத்துச் செல்லும் மரச்சட்டம்; *v.* மரச்சட்டங்களால் வேலியிடு; தடையிடர்களைச் சுற்றிலும் அமை; தடைச்சட்டத்தின் மீது தாவிக் குதி; இடையீட்டுத் தடைச்சட்ட ஓட்டப்பந்தயத்தில் கலந்தாடு.

hurd'ler, *n.* நீள்சதுர மரச்சட்டங்களைச் செய்பவன்; இடர் இடையீட்டு ஓட்டப் பந்தயங்களில் ஓடுபவன்.

hur'dle-race, *n.*, **hur'dles,** *n. pl.* தடைதாவல் ஓட்டப் பந்தயம், இடையீட்டுத் தடைச்சட்டங்களைத் தாண்டிச் செல்லும் ஓட்டப் பந்தயம்.

hurd'y-gurdy, *n.* கைப்பிடியைச் சுற்றி இயக்கும் இசைப் பெட்டி வகை; தெருவில் பாடுவதற்கான இசைப்பெட்டி வகை.

hurl, *n.* எறிவு, சுழல் வீச்சு; *v.* வீசி எறி, தூக்கி எறி, சுழற்றி வீசு.

hurl'ey, *n.* அயர்லாந்தின் வளைகோல் பந்தாட்ட வகை; பந்தாட்டத்துக்குரிய வளைகோல்.

Hurl'ingham, *n.* செண்டாட்டக் கழகத்தின் தலைமை அலுவலகம்.

hurl'y-burl'y, *n.* குழப்பம், கொந்தளிப்பு, சந்தடி, கலக்கம்.

hurrah', hurray', *n.* மிகு மகிழ்ச்சி; ஆதரவான மகிழ்ச்சியொலி; *v.* மகிழ்ச்சிக் குரல் எழுப்பு; *int.* மிகு மகிழ்ச்சிக் குறிப்பு, ஆதரவு விளிக் குறிப்பு.

hu'rricane, *n.* சூறாவளி, புயற்காற்று; மேலை இந்தியத் தீவுகளுக்குரிய சுழல் காற்று; கொந்தளிப்பான செய்தி.

hu'rricane-bird, *n.* கப்பற் பறவை.

hu'rricane-deck, *n.* கப்பலின் சிறிய அரைத்தளமேடை.

hu'rricane-lamp, *n.* கூண்டு விளக்கு, வன்காற்றைத் தாங்க வல்ல விளக்குவகை.

hu'rry, *n.* மிகுவிரைவு, மிகுவிரைவில் முடிக்க வேண்டுமென்ற படபடப்பு; விரைவூக்கம்; பரபரப்பு; மிகையார்வம்; கலவரம்; கூட்ட நெருக்கடி; அவசரத்துக்குரிய தேவை; *v.* பரபரப்புக் கொள்; தேவையற்ற விரைவுகாட்டு; படபடப்புடன் செயலாற்று; விரைந்து இட்டுச்செல்; அதிரடி செய்து தூண்டு; விரைவுபடுத்து; (தொ.) hurry up, விரைவு செய்; in a hurry, மிகவிரைவில், மிக எளிதாக, மனமார விரும்பி.

hu'rry-scu'rry, *n.* குழப்ப அவசரம்; *v.* குழம்பி அவசரப்படு; *adv.* அவசரக்கோலமாய்.

hurst, *n.* குன்றுமேடு; ஆறு கடலிடையேயுள்ள மணல்திடல்; காடடர்ந்த மேடு; காடு.

hurt, *n.* ஊறு, காயம்; நோவு, தீங்கு, கேடு; *v.* ஊறுபாடு உண்டுபண்ணு; நோவூட்டு, கேடுசெய்; தீங்கிழை; துன்புறுத்து, வருத்தம் உண்டுபண்ணு; ஊறுசெய்.

hurt'ful, *a.* நோவு உண்டுபண்ணுகிற; ஊறுபாடு செய்கிற; கேடான, இழப்பு உண்டுபண்ணுகிற.

hur'tle, *n.* மோதொலி; சடசடவென்ற ஒலி; *v.* மோது; வீசி எறி; சடாரென்று தகர்வுறு; சடசடவென்ற ஒலியுடன் செல்.

hurt'less, *a.* ஊறு விளைவிக்காத; தீங்கிழைக்காத; தீங்கற்ற.

hus'band, *n.* கணவன், அகமுடையான்; செயலாட்சியாளர்; சிக்கன ஆட்சியாளர்; மேலாளர்; *v.* சிக்கனமாகக் கையாளு; மேலாட்சி செய்; கணவனைத் தேடிக்கொடு; கணவனாக இயங்கு; நிலத்தைப் பண்படுத்து.

hus'bandman, *n.* உழவர்.

hus'bandry, *n.* வேளாண்மை, உழவர் வேலை; நிலம் பண்படுத்தும் தொழில்; சிக்கன ஆட்சி; கவனிப்பு மிக்க மேலாட்சி.

hush, *n.* சந்தடியின்மை, ஓசை நீங்கிய அமைதி; நீர்ப் பாய்ச்சல்; நீர்ப்பாய்ச்சலின் இரைச்சல்; மேலரிப்பு; அடிநிலப் பாறை தெரியுமளவு மேற்பரப்பிலுள்ள மண்ணை நீர் அலசி விடல்; *a.* சந்தடியற்ற, அமைதியான; *v.* சந்தடியடக்கு; அமைதிப்படுத்து; பேசாதிரு, ஓசையடங்கியிரு.

hush'-money, *n.* வாய்முட்டுக்காசு, மறைவுச் செய்தியைப் புறந்தெரியாதடக்கிவைப்பதற்காகக் கொடுக்கப்படும் பணம்.

hush'-ship, *n.* மறைகட்டுப் பெட்டிக் கப்பல், தொலைவாற்றல் மிக்க பீரங்கியுடன் மிகுவிரைவும் நீளமும் உடையதாகக் புறந்தெரியா மறைகட்டுமானமுடைய கப்பல்.

husk, *n.* உமி, வித்துக்களின் புறத்தோடு, புறத்தோல்; மீந்தோல்; உமிபோன்ற இயல்புடையது; சப்புச்சவறு; மோசமான பொருள்; பயனற்ற பொருள்; ஒட்டுண்ணியால் கால் நடைகளுக்கு வரும் தொண்டை நோய் வகை; *v.* உமிபோக்கு; மேல்தோடு அப்புறப்படுத்து.

hus'ky[1], *n.* உடலுரமுடையவர், திடமமைந்த உடல்வாய்ந்தவர்; *a.* உமிசார்ந்த; உமியாலான; உமிநிரம்பிய; உமி போன்ற; உலர்ந்த; கம்மிய, குரல்கட்டிய; ஒலியெழாத, கரகரப்பான; திடமான, உடலுரம் வாய்ந்த.

hus'ky[2], *n.* வடதுருவத்தை அடுத்த எஸ்கிமோ இனத்தவர் நாட்டு நாய்வகை.

Hus'ky[3], *n.* வடதுருவத்தை யடுத்த பகுதியில் வாழும் எஸ்கிமோ இனத்தவர் மொழி; எஸ்கிமோ இனத்தவர்.

hussar', *n.* பளுவற்ற படைக்கலந் தாங்கிய குதிரைப்படை வீரர்.

Huss'ite, *n.* பொஹீமியா (Bohemia) நாட்டில் 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜான் ஹஸ் (John Huss) என்ற முனைத்த சமய சீர்திருத்தத் தலைவரைப் பின்பற்றுபவர்.

huss'y, *n.* அடிச்சேரியாள்; துடுக்குக்காரி.

hus'tings, *n.* தேர்தல் நடவடிக்கைகள்; லண்டன் மாநகர வழக்கு மன்றம்; முற்காலத்தில் சட்ட மாமன்ற உறுப்பினர் அமர்வு அறிவிக்கப்பட்ட மேடை.

hu'stle, *n.* பரபரப்பு, நெருக்கடி ஆரவாரம்; *v.* நெருக்கு, உந்தித்தள்ளு; தள்ளு; விரைந்து திணி; குலுக்கு, ஆட்டி அலட்டு; வலிந்து வழி உண்டுபண்ணிச் செல்; விரை, அவசரப்படு; ஆரவாரஞ்செய்.

hut, *n.* சிறு குடில், புல் வீடு; தற்பொழுதைய தங்கிடம்; படை வீரர்களுக்கான தற்பொழுதைய பலகை வீடு; *v.* குடிசையில் தங்கு; படைவீரரைத் தங்கல் குடிசையில் அமர்வி.

hutch, *n.* குழிமுயல்களுக்கான பெட்டி; சிறிய அறை; சிறு வீடு, குடிசை; சுரங்கத்தில் பயன்படுத்தப்படும் கட்டை வண்டி.

hut'-cir'cle, *n.* தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் வரலாற்றுக்கு முற்பட்டகாலக் குடிலின் சின்னமான வளைகற் கட்டுமானம்.

hut'ment, *n.* படைவீரர் குடிசைத் தொகுதி, படை வீடு.

Huzoor', (அரா.) *n.* மரியாதை வழக்கு.

huzza', *n.* மகிழ்வொலி, பாராட்டு அரவம்; *v.* பாராட்டி ஆரவாரம் செய்; *int.* மகிழ்ச்சியைக் காட்டும் வியப்பிடைச் சொல்.

huzz'y, *n.* = hussy.

hy'acinth, *n.* செந்நீலம் முதலிய நிறங்களையுடைய மணி வடிவ மலர்களையும் கிழங்கந்தண்டுகளையும் உடைய செடி வகை; செந்நீல நிறம்; ஒண்மணிக் கல்வகை.

Hy'ades, *n. pl.* விண்மீன் குழுக்களில் ஒன்று.

hyaen'a, *n.* கழுதைப்புலி.

hy'aline, *n.* படிகநிறப் பரப்பு; அமைதியான கடற்பரப்பு; நீல வான்பரப்பு; *a.* படிகவியலான, கண்ணாடிபோன்ற; தெளிவான; ஒளி ஊடுருவுகின்ற.

hy'alite, *n.* நிறமற்ற ஒண்மணிக்கல் வகை.

hy'aloid, *n.* கண்ணின் கண்ணாடித்தாள் போன்ற புறப் படலம்; *a.* கண்ணாடி போன்ற; (தொ.) hyaloid membrane, கண்ணின் மேற்படலம்.

hyb'rid, *n.* இனக்கலப்பின் வழித்தோன்றல்; இனங்கலந்து தோன்றிய செடி; இனங்கலந்து தோன்றிய உயிரினம்; *a.* இனக்கலப்புப் பிறவியான; இனத்தூய்மையற்ற; இனக் கலப்படமான; (தொ.) hybrid bill, தனிமுறை அலுவல் முறை ஆகிய இரு சார்புகளின் பண்புகளும் கலந்துள்ள சட்டப்பகர்ப்பு.

hyb'ridism, *n.* பிறிதினக்கலப்பு; இனக்கலப்பு நிலை; இனக் கலப்புப் பண்பு.

hyb'ridize, *v.* பிறிதினக்கலப்புக்கு உட்படுத்து; கலப்பினப் பிறவி உண்டுபண்ணு; இனத்துடன் இனம் கல.

hyd'atid, *n.* (மரு.) நோய் நீர் தேங்கியுள்ளமை; இழைக் கச்சைப் புழுவினுல் ஆகி அதனை உட்கொண்ட நோய்நீர்த் தேக்கப்பை.

Hyde Park, *n.* லண்டனில் உள்ள பெரும் பூங்கா; அரசியல் கிளர்ச்சிக் கூட்டங்களுக்கு நிலைக்களமான லண்டன் மாநகரத்து உயர்குடிச் சூழலார்ந்த பூங்காப்பகுதி.

hyd'ra, *n.* கிரேக்க புராணகதை மரபில் வெட்டவெட்ட வளர்ந்து வரும் பலதலைப்பாம்பு; ஒழித்தற்கரிய ஒன்று; தீராப் பெரும்பழி; நீர்ப்பாம்பு வகை; வெட்டிப் பகுப்பதால் பல்லுயிராகப் பெருகும் இயல்புடைய நன்னீர்வாழ் உயிர் வகை.

hy'dra-head'ed, *a.* ஒழிக்கப்படமுடியாதபடி அழிக்க அழிக்க விரைந்து வளரும் இயல்புடைய.

hydran'gea, *n.* வெள்ளைநீலக் கருஞ்சிவப்பு நிறங்களையுடைய உருள் பூங்கொத்துக்களைக்கொண்ட குறுஞ் செடிவகை.

hyd'rant, *n.* நெடுநீர்க்குழாய், நீள்குழாயை இணைத்து நீர் கொண்டு செல்லும்படி பெருங்குழாயுடன் பொருந்தும் இணைப்பு வாயிணையுடைய நீர்க்குழாய்.

hyd'rate, *n.* தனிமத்துடன் அல்லது மற்றொரு சேர்மத்துடன் நீர் இணைந்த சேர்மப்பொருள்; *v.* தனிமம் அல்லது சேர்மம் வகையில் நீருடன் இணை.

hydraul'ic, *a.* குழாய் வழி செல்லும் நீர்சார்ந்த; கால்வாய் நீருக்குரிய; நீராற்றலால் இயக்கப்படுகிற; இயக்க ஆற்றலுக் குரிய நீர்பற்றிய ஆய்வுத்துறை சார்ந்த; (தொ.) hydraulic press, நீரமுக்கு இயந்திரம்; hydraulic ram, இயங்கு நீரின் தடையாற்றலால் அதன் பகுதியை உயர்த்தும் அமைவு.

hydraul'ics, *n. pl.* நீரியல் ஆய்வுத்துறை; குழாய்வழி இட்டுச்செல்லும் நீர்பற்றிய ஆய்வுத்துறை; இயக்க ஆற்றலுக் குரிய குழாய் நீர் பற்றிய ஆய்வுத்துறை.

hyd'ric, *a.* (வேதி.) நீரகத்துக்குரிய; நீரகமடங்கிய.

hyd'ride, *n.* தனிமத்துடன் நீரகம் இணைந்த சேர்மப்பொருள்.

hyd'ro, *n.* நீர்மருத்துவ மனை, நீர்மருத்துவ முறையினைப் பின்பற்றும் மருந்தகம்.

hpdrocarb'on, *n.* நீரகம் கரியகம் இணைந்த சேர்மப்பொருள்.

hydrocephal'ic, hydroceph'alous, *a.* மூளை நீர்க் கோவைக்கு உட்பட்ட.

hydroceph'alus, *n.* மூளைநீர்க்கோவை, தலையில் நீர் தங்கிய கோளாறு.

hydrochlor'ic, *a.* நீரகமும் பாசிகமும் உள்ளடங்கலான.

hydrocyan'ic, *a.* நீரகமும் கரிவெடியமும் உள்ளடங்கலான; (தொ.) hydrocyanic acid, நீரகக் கரிவெடியகக்காடி.

hydrodynam'ic, hydrodynam'ical, *a.* நீர் சார்ந்த இயக்க விசைபற்றிய, நீர்மத்தின் அல்லது நீர்மத்தின்மீது தாக்கும் ஆற்றல் பற்றிய.

hydrodynam'ics, *n. pl.* நீர்இயக்கவிசைசார்ந்த இயற்பியல் துறை.

hydroelec'tric, *a.* நீர்மின் ஆற்றல் சார்ந்த, நீராற்றலால் உண்டான மின் ஆற்றலுக்குரிய; நீர்மின் ஆற்றலால் இயக்கப்படுகிற.

hyd'rogen, *n.* நீரகம், எடைமானத்தில் மிகக்குறைந்த தனிமம், நீரில் மூன்றிலிரண்டு கூருயடங்கிய நீர்வளி; (தொ.) hydrogen bomb, நீர்வளிக் குண்டு, நீரகச்சேர்மம் செறியப் பெற்று உள்ளமைந்த அணுகுண்டினால் நீரகம் கதிரகமாக மாற்றப்படுவதன்மூலம் பெரு விசையாற்றல் வெளிப்படுத்தும் குண்டுவகை.

hydro'genate, *v.* நீரகத்துடன் இணைவி; நீரகச்செறிவு ஊட்டு.

hydrog'rapher, *a.* நிலவுலக நீர்நிலைப் பரப்பாராய்ச்சித் துறை வல்லுநர்.

hydrograph'ic, hydrograph'ical, *a.* நிலவுலக நீர்நிலைப் பரப்பாராய்ச்சிக்குரிய.

hydrog'raphy, *n.* நிலவுலக நீர்நிலைப் பரப்பாராய்ச்சித் துறை.

hy'droid, *n.* வெட்டிப்பகுப்பதால் பல்லுயிராகப் பெருகும் இயல்புடைய உயிர்ப்பேரினம்; *a.* வெட்டிப்பகுப்பதால் பெருகும் இயல்புடைய நன்னீர்வாழ் உயிரினம் போன்ற; வெட்டிப்பகுப்பதால் பெருகும் உயிரினத்துடன் இனத் தொடர்புடைய.

hydrokinet'ic, *a.* நீர்ம இயக்கம் பற்றிய.

hydrokinet'ics, *n. pl.* நீர்ம இயக்கம் பற்றிய ஆய்வுத்துறை.

hydrol'ogy, *n.* நீரின் பண்பியல்பமைதிகள் பற்றிய ஆய்வு நூல்.

hydrol'ysis, *n.* நீரிடைச்சேர்மப் பிரிப்பு, நீர் இயல்பின் துணைகொண்டு நீர்கலந்த சேர்மத்தில் நீர்க்கூறு சேர்மக் கூறுகள் சிதைவுற்றுக் கூறுபடும் நிலை.

hydroman'ia, *n.* நீர்ப்பேரார்வம்.

hydromechan'ics, *n. pl.* நீரியக்க ஆய்வியல்.

hyd'romel, *n.* தேன் நீர்க்கலவை; (தொ.) vinous hydromel, புளிக்க வைக்கப்பட்ட தேன்நீர்க்கலவை.

hydrom'eter, *n.* நீர்ம எடைமானி, நீர்ம எடைமான ஒப்பீட்டளவு காட்டும் கருவி.

hydromet'ric, *a.* நீர்ம எடைமான அளவை சார்ந்த.

hydrom'etry, *n.* நீர்ம எடைமான ஒப்பீட்டறுதிப்பாடு.

hydropath'ic, *n.* நீர் மருத்துவமனை; நீர்மருத்துவ முறைக்குரிய தனி வாய்ப்புக்களையுடைய மருந்தகம்; *a.* நீர்மருத்துவ முறை சார்ந்த; நீர்மருத்துவத்துக்குரிய.

hydrop'athist, *n.* நீர்மருத்துவ முறை பயில்பவர்.

hydrop'athy, *n.* நீர்மருத்துவமுறை, அகப்புற நிலைகளில் நீரைப் பயன்படுத்தி நோய் குணப்படுத்தும் மருத்துவமுறை.

hyd'rophane, *n.* நீர்ப்படிகக்கல், நீருறிஞ்சும் ஆற்றலுடைய தாய் நீரில் அமிழ்ந்தபோது முற்றிலும் ஒளியூடுருவுவதாக மாறும் இயல்புடைய அரை ஒளியூடுருவும் மணிக்கல்வகை.

hydrophob'ia, *n.* நீர் வெறுப்பு; வெறிநாய்க்கடியின் சின்னமாகத் தோற்றும் நீர் உவர்ப்பு; வெறிநாய்க்கடி; மனிதரின் வெறிநாய்க்கடிக் கோளாறு.

hyd'rophone, *n.* நீருள் ஒலியலைகளைக் கண்டுபிடிக்குங் கருவி.

hyd'rophyte, *n.* நீர்வாழ் செடிவகை.

hydrop'ic, *a.* நீர்க்கோவைநோய்க் கோளாறுடைய.

hyd'roplane, *n.* நீர்மூழ்கி எழவும் அமிழவும் உதவும் துடுப்புப்போன்ற உறுப்பமைவு; விசை வேகத்தில் நீரின் மேற்பரப்பின்மீது சறுக்கியோடும் இயல்புடன் தட்டையான அடியுடைய விசைப்படகு; கடல்விமானம்.

hydropneumat'ic, *a.* காற்று நீர் ஆகிய இரண்டின் இயக்கத்தையும் உட்கொண்ட.

hydropon'ics, *n.* மண்ணிலி வேளாண்மை.

hyd'ropsy, *n.* மகோதரம்; நீர்க்கோவை நோய்.

hydroquin'one, *n.* நிழற்பட ஆக்கத்துக்கு உதவும் வேதியியற் பொருட்கூறுகளில் ஒன்று.

hyd'rospnere, *n.* நீருலகு, நிலவுலக நீர்ப்பரப்பு; கடல் மாகடல்களின் மொத்தத்தொகுதி.

hyd'rostat, *n.* நீர்க்கூறு கண்டுணர உதவும் மின்னமைவு.

hydrostat'ic, *a.* நிலைநீர்மம் சார்ந்த, அமைந்தநிலையில் உள்ள நீர்மத்தின் அழுத்த ஆற்றலமைதிகளுக்குரிய; (தொ.) hydrostatic paradox, நீர்மப்பரப்பின் சிறுமை பெருமை எல்லைகளின் அழுத்தச் சரிசம எதிர்நிலைப்பண்பு; hydrastatic press, நீராற்றல் அழுத்தப்பொறி.

hydrostat'ics, *n. pl.* நீர்மநிலையியல்.

hydrotherapeut'ic, *a.* நீர்மருத்துவ முறைசார்ந்த.

hydrothe'rapy, *n.* நீர்மருத்துவ முறை.

hydrotherm'al, *a.* வெப்பமூட்டப்பட்ட நிலஞ்சார்ந்த நீராற்றலுக்குரிய; வெப்பமூட்டப்பட்ட நிலஞ்சார்ந்த நீராற்றலின் விளைவான.

hydrothor'ax, *n.* மார்பு நீர்க்கோவை நோய்.

hydrot'ropism, *n.* நீர்நோக்கிய அல்லது நீர்விட்டு விலகுகின்ற செடிகளின் இயற்பாங்கு.

hyd'rous, *a.* வேதியியல் களிப்பொருள்கள் வகையில் நீரடங்கியுள்ள.

hydrox'ide, *n.* தனிமங்களுடன் நீரில்லாமலே நீரகமும் உயிரகமும் கொண்ட சேர்மானப்பொருள்.

Hydrozo'a, *n. pl.* இழுதுமீன் போன்றவற்றை உள்ளடக்கிய வட்டுருச் சந்தமுடைய உயிர்ப்பேரினம்.

hyen'a, *n.* கழுதைப்புலி.

hyetog'raphy, *n.* மழைவீழ்ச்சி பற்றிய நிலப்பட அமைப்பு.

hyetom'eter, *n.* மழைமானி, மழைவீழ்ச்சியளக்கும் கருவி.

Hygei'a, *n.* உடல்நலத் தெய்வம்; உடல்நலம்பற்றிய உருவகக் குறிப்பு, உடல்நலம்.

hygei'an, *a.* உடல்நலத் தெய்வத்துக்குரிய; உடல்நலம் பற்றிய.

hy'giene, *n.* உடல்நல இயல்; உடல்நலம் பேணும் கலை; உடல்நலம் பற்றிய தத்துவங்களின் தொகுதி.

hygien'ics, *n.* உடல்நலம் பற்றிய தத்துவங்களின் தொகுதி.

hy'gienist, *n.* உடல்நல இயல் வல்லுநர்.

hyg'rodeik, *n.* ஈரம் உலர்வு ஆகிய இருநிலைகளுக்குரிய இரு குமிழ்களைக் கொண்ட ஈரமானி வகை.

hygrol'ogy, *n.* வளிமண்டல ஈரநிலை பற்றிய ஆய்வு நூல்.

hygrom'eter, *n.* ஈரமானி, ஈரநிலை அளக்கும் கருவி.

hygromet'ric, *a.* ஈரநிலை அளவுக் கணிப்புச் சார்ந்த.

hygrom'etry, *n.* ஈரநிலை அளவைக்கணிப்பு.

hyg'roscope, *n.* ஈரங்காட்டி, வளிமண்டல ஈரநிலைகாண உதவுங் கருவி.

hygroscop'ic, *a.* வளிமண்டல ஈரநிலை சார்ந்த; ஈரம் உறிஞ்சும் பாங்குடைய.

Hyk'sos, *n. pl.* எகிப்தின் பண்டைக்கால (கி. மு. 2000-த்துக் குரிய) ஆயர்கோக்கள்.

hyl'ic, *a.* பருப்பொருளுக்குரிய; பருப்பொருளியல்புடைய, பிழம்பு நிலையான.

hylomorph'ism, *n.* இயன்மூலவாதம், பருப்பொருள் மூல நிலையே இயலுலகின் மூலமுதல் என்னும் கோட்பாடு.

hyl'otheism, *n.* இயலிறை ஒருமை வாதம், இயற்பொருளும் இறையும் வேறல்ல என்ற கோட்பாடு.

hyl'otheist, *n.* இயலிறை ஒருமை வாதி, இயற்பொருளும் இறையும் வேறல்ல என்ற கோட்பாடுடையவர்.

hylotheis'tic, *a.* இயலிறை ஒருமை வாதம் சார்ந்த, இயற் பொருளும் இறையும் வேறல்ல என்ற கோட்பாட்டுக்குரிய.

hylozo'ism, *n.* இயல் உயிர்வாதம், இயற்பொருளும் உயிரும் வேறல்ல என்ற கோட்பாடு.

hylozo'ist, *n.* இயல் உயிர்வாதி, இயற்பொருளும் உயிரும் வேறல்ல என்னும் கோட்பாடுடையவர்.

hylozois'tic, *a.* இயல் உயிர்வாதம் சார்ந்த, இயற்பொருளும் உயிரும் வேறல்ல என்னுங் கோட்பாடுடைய.

Hym'en[1], *n.* கிரேக்கபுராண மரபில் திருமணத் தெய்வம்.

hym'en[2], *n.* கன்னிமைத்திரைச்சவ்வு, முதிரா இளமைப் பருவத்தில் பெண் குறியின் புறவாயை மூடியிருக்கும் தாள் போன்ற சவ்வு.

hymene'al, *n.* திருமணப்பாட்டு; *a.* திருமணஞ் சார்ந்த.

Hymenop'tera, *n. pl.* ஒளியூடுருவும் மென்தாள்போன்ற நான்கு சிறகுகளையுடைய புழுபூச்சியினப் பிரிவு.

hymenop'teral, hymenop'terous, *a.* புழுபூச்சியினத்தில் நான்கு சவ்வுச் சிறகுகளை உடைய.

hymn, *n.* பாசுரம், இறைவன் புகழ்ப்பாடல்; தேவாரம்; *v.* பாசுரங்களால் இறைவன் புகழ்பாடு; பாடிப் பூசனை செய்; பாட்டால் புகழ்நிறுவு; பாட்டில் தெரிவி.

hym'nal, *n.* பாசுர ஏடு, இறைவன் புகழ்ப்பாடல் தொகுதி; *a.* பாசுரம் சார்ந்த; புகழ்ப்பாடலின் இயல்புடைய.

hym'nary, *n.* இறைவன் புகழ்ப்பாசுர ஏடு.

hym'nody, *n.* இறைவன் புகழ்ப்பாசுரத் தொகுதி; பாசுரம் பாடுதல்; பாசுரங்கள் இயற்றுதல்.

hymnog'rapher, *n.* பாசுரங்கள் இயற்றுபவர்.

hymnol'ogy, *n.* பாசுரங்கள் இயற்றுதல்; பாசுர ஆராய்ச்சி; பாசுரங்களின் தொகுதி.

hy'oid, *n.* வளைந்த நாவடி எலும்பு; *a.* எலும்பு வகையில் நாவடி சார்ந்த.

hy'oscine, *n.* நச்சுச்செடி வகையிலிருந்து எடுக்கப்பட்டு மருந்தாய் உதவும் காரப்பொருள்களில் ஒன்று.

hyoscy'amine, *n.* நச்சுச்செடி வகையிலிருந்து எடுக்கப்பட்டு மருந்தாகப் பயன்படும் காரப்பொருள்களில் ஒன்று.

hyp, *n.*=hypochondria.

hypaeth'ral, *a.* வானம் பார்த்த, கூரையற்ற; திறந்த வெளியான.

hypall'age, *n.* (இலக்.) வாக்கியத்தில் சொற்றொடர்புகள் தம்முள் நிலைமாறுகை.

hyperaesthes'ia, *n.* கூர்நரம்புணர்ச்சிக் கோளாறு; மட்டற்ற கூருணர்வுநிலை.

hyperaesthe'sic, hyperaesthet'ic, *a.* மட்டற்ற கூருணர்வுநிலையுடைய; மட்டற்ற கூரிய கலைச்சுவையுணர்வுடைய.

hyperb'aton, *n.* சொல் வரிசையில் தலைதடுமாற்றம்.

hyperb'ola, *n.* (வடி.) நிமிர்மாலை வட்டம், குவிபிறை, குவிகையுருவில் அடித்தளமீது சாய்பக்கங்களுக்குள்ள கோணத்திலும் பெருங்கோணம் படும்படி வெட்டிய குறுக்கு வெட்டு வாயின் வடிவம்.

hyperb'ole, *n.* உயர்வுநவிற்சி.

hyperbol'ic, hyperbol'ical, *a.* (வடி.) குவிபிறை சார்ந்த; உயர்வுநவிற்சியான.

hyperbor'ean, *n.* நிலவுலக வடகோடி வாழ்நர்; கிரேக்க புராண மரபின்படி வடகாற்றுக்கு அப்பால் கதிரொளி வளமிக்க பகுதியில் வாழும் மனித இனத்தவர்; *a.* நிலவுலகின் வடகோடியில் வாழ்கிற; கிரேக்கபுராண மரபின்படி வடகாற்றுக்கு அப்பால் கதிரொளி வளமிக்க பகுதியில் வாழும் இனம் சார்ந்த.

hypercatalec'tic, *a.* (இலக்.) யாப்பில் கடைசி இரண்டடிகளின் ஈற்றில் ஓர் அசை அல்லது அரையடி மிகுகிற.

hypercrit'ical, *a.* முனைவு ஆராய்ச்சியான, குற்றம் கண்டு பிடிக்கும் நிலையதான.

hypermet'ric, hypermet'rical, *a.* யாப்பில் மிகை அசையுடைய; அசை வகையில் யாப்பு மிகையான.

hypermetrop'ia, *n.* தொலைப்பார்வைக் கோளாறு.

hyperphys'ical, *a.* இயற்கை கடந்த, இயல் அமைதிகளுக்கு அப்பாற்பட்ட.

hyp'ersthene, *n.* பச்சைநிறக் கனிப்பொருள் வகை.

hyperten'sion, *n.* மட்டுமீறிய மிகஉயர்ந்த குருதி அழுத்தம்.

hypert'rophy, *n.* மிகை ஊட்டத்தால் ஏற்படும் உறுப்புப் பொருமல்.

hypeth'ral, *a.*=hypaethral.

hyph'en, *n.* சொல்லிடை இணைப்புக்குறி; ஒட்டுக்குறி; ஒலிப்பில் அசையிடையே நிகழும் இடைத் தயக்கநிலை; *v.* இணைப்புக் குறியிட்டு இணை.

hyph'enate, *v.* இணைப்புக்குறியிடு.

hypnogen'esis, *n.* துஞ்சுநிலை தூண்டிவிடல்.

hypnogenet'ic, *a.* அறிதுயில்நிலை தூண்டுகிற.

hypnol'ogy, *n.* மன ஆற்றலால் அறிதுயிலூட்டுதல் பற்றிய ஆய்வுநூல்.

hypnos'is, *n.* மன ஆற்றல் கொண்டு தூண்டப்படும் அறிதுயில்; அறிதுயில் நிலை.

hypnot'ic, *n.* துயிலூட்டுவது; மனஆற்றலால் தூண்டப்படும் அறிதுயில் நிலைக்கு ஆட்பட்டவர்; *a.* மனஆற்றலால் தூண்டப்படும் அறிதுயிலுக்குரிய; அறிதுயில்நிலையை உண்டுபண்ணுகிற.

hyp'notism, *n.* தரவுதுயில், சம்மோகனம், புறத்தூண்டுதலின்மீது மட்டுமே செயலாற்றும் இயல்புடைய செயற்கையான ஆழ்ந்த அறிதுயில்நிலை.

hyp'o, *n.* மாற்றுநிலை உவரகக் கந்தகி வகை, உவரகச் சேர்ம வகையில் உயிரக அணுக்களினிடமாகக் கந்தக அணுக்கள் இடம்பெற்ற உவரகக் கந்தகி.

hyp'oblast, *n.* உள்மடி உயிர்ம வரிசை, முதிராக் கருவின் உள்மடிப்புப் பருவத்தொடக்கத்தில் உருவாகும் உள்வரி முளையுயிர்ம வரிசை.

hypobran'chial, *a.* செவுளின் அடியில் அமைந்த.

hyp'ocaust, *n.* அடிநிலைவெப்பறை, உலை அல்லது வெப்பக் காற்று மூலம் சூடு சேகரித்து அளிக்கப் பண்டை ரோமாபுரியினர் பயன்படுத்திய நிலத்தளத்தின் அடியிலுள்ள பொள்ளலான இடம்.

hypochon'dria, *n.* தும்படைவுக் கோளாறு, மனவாட்ட நோய், மௌட்டிய நோய், கற்பனைப்பிணி.

hypochon'driac, *n.* மௌட்டிய நோயாளி, மனவாட்ட நோய்க்காளானவர்; *a.* மனவாட்டநோய் சார்ந்த; தும்படைவூட்டும் நோய்க்கு ஆட்பட்ட.

hypochondri'asis, *n.*=hypochondria.

hypocris'tic, *a.* (இலக்.) செல்லப்பெயரின் இயல்புடைய.

hypoc'risy, *n.* பாசாங்கு, போலி நடிப்பு; படிற்றொழுக்கம்.

hyp'ocrite, *n.* வஞ்சனையாளர், கபட வேடதாரி.

hypocrit'ical, *a.* வஞ்சித்தொழுகுகிற, போலி நடிப்பினை ஏய்க்கிற, பொய்யகமான.

hypocyc'loid, *n.* உள் உருள்வரை, வட்டத்தின் சுற்று வரையிலுள்ள புள்ளி மற்றொரு வட்டச் சுற்று வரையினுள்ளாக வட்டம் உருளும்போது இயக்கும் வளை வரைவடிவம்.

hypoderm'ic, *a.* அடித்தொலி சார்ந்த ; (உள்.) மேல்தோலடியிலுள்ள ; (மரு.) ஊசிபோடுதல் வகையில் தோலடியூடான; தோலடியூடான ஊசிபோடுதலுக்குரிய.

hypoder'mis, *n.* அடித்தொலி, செடி உயிரினங்களின் புறத்தோலடுத்துள்ள மென்தோல் பகுதி.

hypogas'trium, *n.* அடிவயிற்றின் அடியகட்டுப்பகுதி.

hypoge'al, hypoge'an, *a.* நிலத்தின் அடியிலுள்ள; விதைப்பகுதி நிலத்தினுள்ளிருக்கும்போது முளைவிடுகிற.

hyp'ogene, *a.* பாறை வகையில் நிலத்தினகமாக உருவான ; நிலத்தினகம் உருவான பாறைகளுக்குரிய ; நிலத்தினகத்தே பாறைகளையுருவாக்கும் இயலாற்றலுக்குரிய.

hypoge'um, *n.* நிலவறை ; *pl.* hypoge'a.

hypogloss'al, *a.* நரம்பு வகையில் நாவடிக்குரிய.

hypog'ynous, *a.* (தாவ.) சூலகம் அல்லது கருவகத்துக்குக் கீழுள்ள.

hyp'onasty, *n.* (தாவ.) மேலே வளைவு தூண்டவல்ல கீழ்ப்புற மிகுவளர்ச்சிப்பாங்கு.

hypophos'phite, *n.* மாற்றுநிலை உவரகக் கந்தகத்துக் காடியின் உப்பு.

hypos'tasis, *n.* வண்டல், மண்டி; குருதி ஓட்டக் குறைவினால் உடலுறுப்புப் பகுதிகளில் ஏற்படும் செயலற்ற உறைவுக் கூறு: (மரு.) உறுப்பின் கழிமிகைக் குருதியுடைமை; (இறை.) அடிநிலைப் பொருண்மை, கிறித்தவ சமயக்கோட்பாட்டின்படி இறைமையின் முத்திறங்களின் உள்ளுறை மெய்ம்மை.

hypostat'ical, *a.* அடிநிலைப்பொருண்மைக் கூறான, மூல ஆக்கக்கூறான; இறைமையின் உள்ளார்ந்த தன்மைக்குரிய.

hypos'tatize, *v.* அடிநிலைப்பொருண்மைக் கூறாகக் கொள்ளு; மெய்யுருப்படுத்தி உருவகமாக்கு.

hyp'ostyle, *a.* தூண்கள் மீது ஆதாரமான கூரையையுடைய.

hypoten'sion, *n.* தாழ்ந்த குருதியழுத்தநிலை.

hypot'enuse, *n.* நெடுங்கை வரை, செங்கோண முக்கோணத்தில் செங்கோணத்துக்கு எதிர்முகமான உறுநீள்கோடு.

hyp'othec, *n.* (சட்.) கடனாளியின் உடைமைக்குரிய சட்டப் பாதுகாப்புரிமை.

hypoth'ecary, *a.* அடைமானம் சார்ந்த.

hypoth'ecate, *v.* அடகு வை ; பொருளை ஒழுங்குமுறை ஏற்பாட்டின்கீழ்ப் பிணையமாக வை.

hypotheca'tion, *n.* அடைமானம்.

hypoth'esis, *n.* புனைவுகோள், வாத ஆதாரமாகத் தற்காலிகமாய்க் கொள்ளப்பட்ட கருத்து ; மெய்ம்மைக்கோள், மேலாராய்வுக்கு அடிப்படையான தற்காலிகப் பொது விளக்கக் கோட்பாடு ; *pl.* hypoth'eses.

hypoth'esize, *v.* புனைவுகோள் உருவாக்கு.

hypothet'ic, hypothet'ical, *a.* புனைவுகோளியலான, தெளிவின்றித் தற்காலிக முடிவாய் வாத ஆதாரமாக ஏற்கப்பட்ட ; மெய்ம்மைக்கோளியலான, முடிந்த முடிபாகவன்றி மேலாராய்ச்சியின் அடிப்படையான பொதுவிளக்க மெய்ம்மையாய் ஏற்கப்பட்ட ; புனைவுகோள் சார்பான, மெய்ம்மைக் கோளுக்குரிய ; புனைவுகோளை மிகவும் பயன்படுத்தும் பழக்கமுடைய ; ஒருதலையானதல்லாத, ஐயநிலையான, முடிந்த முடிபாயில்லாத.

hypothet'ically, *adv.* தற்பொழுதைக்குக் கொள்ளப்பட்ட நிலையில்.

hypotrachel'ium, *n.* தூண் தலைப்பின் அடிப்பகுதி.

hypsog'raphy, *n.* உயர்ச்சி பற்றி ஆயும் நில இயல்துறை.

hypsom'eter, *n.* இட உயரமானி, மேட்டுப்பகுதிகளின் உயரமளக்கும் கருவி.

hypsomet'ric, hypsomet'rical, *a.* மேட்டுநில உயர அளவை சார்ந்த.

hypsom'etry, *n.* மேட்டு உயர அளவைபற்றிய ஆய்வுத் துறை.

Hyr'ax, *n.* குழிமுயல் போன்ற சிறுவிலங்கினம்.

hys'on, *n.* சீனப் பச்சைத்தேயிலை வகை.

hy'-spy *n.* கண்பொத்தி விளையாடல்.

hyss'op, *n.* முற்காலங்களில் மருந்தாகப் பயன்படுத்தப்பட்ட மணமுள்ள புதர்ச்செடி வகை ; யூதர் வினைமுறைகளில் பயன்படுத்திய சுள்ளி வகை ; யூதர் துப்புரவுத் திருவினைகளில் பயன்படுத்திய சமித்துக்கட்டு.

hysteres'is, *n.* (இய.) காந்த ஆற்றலுக்குக் காந்தத்தின் தூண்டுதல் இயக்கம் பிற்படும்நிலை.

hyster'ia, *n.* இசிவுநோய், நரம்புக்கோளாறினால் பெண்டிர் உடல் உளப்பண்பையும் உரத்தையும் பாதிக்கும் இசிப்பு.

hyste'ric, hyste'rical, *a.* இசிப்புநோய்க் கோளாறுக்கு உள்ளான ; பெண்டிர் இசிப்பு நோய்க்கோளாறு சார்ந்த ; மிகையுணர்ச்சிக் கோளாறு வாய்ந்த.

hyste'rics, *n. pl.* பெண்டிர் இசிப்பு நோய்க்கோளாறில் உறுப்புக்களின் இழுப்புவலிப்புக்கள் ; வலிப்புத்துடிப்புக்கள்.

hysterogen'ic, *a.* இசிப்பு நோய்க்கோளாறு உண்டுபண்ணுகிற.

hysterog'eny, *n.* இசிப்புநோய்க்கோளாறு உண்டுபண்ணுதல்.

hysterol'ogy, *n.* கருப்பை பற்றிய ஆய்வுநூல்.

hys'teron prot'eron, (ல.) *n.* (இலக்.) தலைதாள் தடுமாற்ற அணி.

hysterot'omy, *n.* கருவக அறுவை.

I, *n.* தான் என்ற உணர்ச்சி, தன்முனைப்பு; *pron.* நான், யான், தன்மை ஒருமை மறுபெயர்; (தொ.) the I, தான் என்ற உணர்ச்சி, தன்முனைப்பு.

i'amb, *n.* = iambus.

iam'bic, *n.* (இலக்.) குறில் நெடிலான ஈரசைச் சீர்கொண்ட யாப்பு; *a.* குறில் நெடிலான ஈரசைச் சீருக்குரிய; குறில் நெடில் ஈரசைச்சீர்கொண்ட; குறில் நெடில் ஈரசைச்சீரின் அடிப்படையில் அமைந்த.

iam'bics, *n. pl.* குறில் நெடிலான ஈரசைச் செய்யுள்; குறில் நெடில் ஈரசைச்செய்யுளாலான வசைப்பாட்டு.

iam'bist, iambog'rapher, *n.* ஈரசைச் சீர்ச் செய்யுள்களை எழுதுபவர், வசைப்பாட்டு வரைபவர்.

iam'bus, *n.* (இலக்.) குறில் நெடில் ஈரசைச்சீர்; *pl.* iam'bi, iam'buses.

Iber'ian, *n.* ஸ்பெயின் போர்ச்சுகல் ஆகிய இருநாடுகளையும் உள்ளடக்கிய பண்டைய ஐபீரிய மாநில வாணர்; பண்டைய ஐபீரிய மொழி; *a.* பண்டைய ஐபீரிய மாநிலம் சார்ந்த.

ib'ex, *n.* உள்வாங்கிய பெரிய கொம்புகளையுடைய மலையாடு வகை; *pl.* ib'exes, i'bices.

ibid'em, (ல.) *adv.* அதே சுவடியில், அதே பிரிவில், அதே நூற்பகுதியில்.

ib'is, *n.* நீரில் நடந்துசெல்லும் நாரையினப் பறவை; *pl.* ib'ises; (தொ.) Sacred Ibis, பண்டைய எகிப்தியர்கள் பூசித்து வழிபட்ட நாரையினப் பறவை.

ice, *n.* உறைநீர், பனிக்கட்டி; அப்பம் முதலியவற்றின் மேலுள்ள சர்க்கரைப் பொருக்கு; இனிப்பூட்டிய குளிர் பாலேடு; இனிப்பூட்டிய குளிர்பழச்சாறு; *a.* உறைநீர் அல்லது பனிக்கட்டி சார்ந்த; *v.* உறைவி; பனிக்கட்டியினால் மூடு; இன்தேறல் முதலியவற்றைப் பனிக்கட்டியில் வைத்துக் குளிர்ச்சி உண்டுபண்ணு; அப்பம் முதலியவற்றைச் சர்க்கரைக் கட்டியினால் மூடு; (தொ.) break the ice, தொடக்கம் செய்; முதற்கண் நேரிடும் இடர்ப்பாடுகளைக் கடந்துசெல்; நாணம் கூச்சம் தயக்கம் முதலியவற்றை முதற்கண் விடப் பழகிக்கொள்; cut no ice, காரியமாக எதுவும் செய்யாதிரு; செயலில் எதுவும் வெற்றிகாணுதிரு; day ice, உறைந்த கெட்டியான கரிய ஈருயிரகை.

ice'-action, *n.* நிலவுலகப்பரப்பில் நிலப் பனிக்கட்டியால் ஏற்படும் அரைப்பு.

ice'-age, *n.* மண்ணியல் பனியூழி.

ice'-anchor, *n.* மிதக்கும் பனிப்பாளத்துடன் படகு முதலியவற்றை இறுக்க உதவும் ஓரலகுடைய நங்கூரம்.

ice'-a'pron, *n.* மிதந்துவரும் பனிக்கட்டியை உடைத்து விலக்குகிற பால அமைவு.

ice'-axe, *n.* மலையேறுபவர்கள் பனிக்கட்டியில் படிகளை வெட்டுவதற்குப் பயன்படுத்தும் கோடரி வகை.

ice'berg, *n.* பனிப்பாறை, மிதக்கும் பனிப்பரப்புத்துண்டு; உணர்ச்சியற்றவர்.

ice'-bird, *n.* சிறு கடற்புரு.

ice'blink, *n.* தொலைவிலுள்ள பெரும்பனிப்பரப்பின் ஒளிக்கதிர் எதிர்த்து மீள்வதால் வானவிளிம்பில் ஏற்படும் பளபளப்பு.

ice'-boat, *n.* பனிக்கட்டியினூடாகச் செல்வதற்குரிய சக்கர அமைவுடைய படகுவகை.

ice'-bound, *a.* பனிக்கட்டியால் சூழப்பட்ட; பனிக்கட்டியிடையே மாட்டிக்கொண்ட; பனிக்கட்டியில் சிக்கிய.

ice'-box, *n.* குளிர்பதனப்பேழை.

ice'-breaker, *n.* பனிக்கட்டியை உடைத்து ஊடே வழியுண்டாக்குவதற்கான கப்பல்; பனிக்கட்டியை உடைப்பதற்கான துணைக்கருவி.

ice'-cap, *n.* பனிக்கவிகை, பனிமூடியபகுதி.

ice'-cold, *a.* பனிக்கட்டியைப்போல் குளிர்ந்த.

ice'-cream', *n.* இனிப்பு அல்லது நறுமணம் ஊட்டிய குளிர் பாலேடு; (தொ.) ice.cream soda, குளிர்பாலேடு சேர்த்த காரநீர்.

iced, *a.* பனிக்கட்டியினால் மூடப்பட்ட; பனிக்கட்டியினால் குளிர வைக்கப்பட்ட; சர்க்கரை மேற்பூச்சமைந்த.

ice'-fall, *n.* பனிக்கட்டி வீழ்ச்சி; உறைநிலை நீர்வீழ்ச்சி போன்று தோன்றும் பனிக்கட்டியின் செங்குத்தான பகுதி.

ice'-fern, *n.* பலகணி மீது படியும் சூரல் போன்ற உறை பனிப்படுகை.

ice'-field, *n.* பனிப்பரப்பு, பனிக்கட்டிப் பாள மூடிய பெரும் பரப்பு.

ice'-floe, *n.* மிதக்கும் பெரிய பனிக்கட்டிப் பாளம்.

ice'-foot, *n.* நிலவுலகின் வடமுனை சார்ந்த கடற்கரையோர முள்ள பனிக்கட்டிமூடிய பகுதி.

ice'-free, *a.* பனிக்கட்டியற்ற; என்றுமே உறைந்து போகாத.

ice'-front, *n.* சறுக்குப் பனிக்கட்டியின் முகப்புப்பக்கம்.

ice'-hill, *n.* சறுக்குவண்டி மீதேறிச் செல்வதற்கான பனிக் கட்டிச் சரிவு.

ice'-hock'ey, *n.* பனிக்கட்டிமீது சறுக்குக்கட்டையணிந்து ஆடப்படும் வளைகோற்பந்தாட்ட வகை.

ice'-house, *n.* நிலத்துக்கடியில் பனிக்கட்டி வைத்திருப்பதற்கான கட்டிடம்.

Ice'land, *n.* நார்வேக்கும் கிரீன்லாந்துக்கும் இடையிலுள்ள பெரிய தீவு; *a.* ஐஸ்லாந்துக்குரிய; ஐஸ்லாந்தில் தோன்றிய.

Ice'lander, *n.* ஐஸ்லாந்து நாட்டினர்; ஐஸ்லாந்து நாட்டுக் குடிமகன்; ஐஸ்லாந்து நாட்டு வேட்டைப்பருந்து வகை.

Icelan'dic, *n.* ஐஸ்லாந்து நாட்டு மொழி; *a.* ஐஸ்லாந்து சார்ந்த.

Ice'land-li'chen, Ice'land-moss', *n.* மருந்தாகவும் உணவாகவும் பயன்படும் காளான்வகைப் பூண்டு.

ice'land-spar', *n.* சுண்ணகப் பளிங்கு வகை.

ice'-ledge, *n.* = ice-foot.

ice'man, *n.* பனிக்கட்டியின்மீது செல்வதில் வல்லவர்; பனிக் கட்டிமீது சறுக்கி விளையாடுபவர்களுடனிருந்து ஊழியம் செய்பவர்; பனிக்கட்டி விற்பவர்.

ice'pack, *n.* நெருக்கமாக மிதந்துசெல்லும் பனிக்குன்றுகள்; மிதவைப் பனிப்பாளங்கள் நிறைந்த கடற்பரப்பு; பனிக் கட்டியைக் கொண்டு செய்யப்பட்ட பொதி.

ice'-pan, *n.* மிதக்கும் பனிக்கட்டிப் பாளம்.

ice'-pick, *n.* பனிக்கட்டியைத் துண்டுகளாக உடைப்பதற்கான கூர்ங்கருவி வகை.

ice'-plant, *n.* வெயிலில் பனிக்கட்டிபோல் பளபளக்கும் இலைகளையுடைய செடிவகை.

ice'-pu'dding, *n.* உறையச்செய்யப்பட்ட இனிப்புத் தின்பண்ட வகை.

i'cer, *n.* அப்பம் முதலியவைகளைச் சர்க்கரைத் தோட்டில் பொதிபவர்.

ice'-rink, *n.* வழுக்கியோடுவதற்கான உறைபனிப்படலம்.

ice'-run, *n.* சறுக்குவண்டி செல்வதற்கான செயற்கைப் பனிக் கட்டிப்பாதை.

ice'-sheet, *n.* நிலப்பகுதி முழுவதையும் மூடியுள்ள பனிக் கட்டிப்படலம்.

ice'-spar, *n.* கண்ணாடிபோன்ற தெளிவான களிமக்கல் வகை.

ice'-stone, *n.* தொழில் வகைகளுக்குப் பெரிதும் பயன்படும் ஒளிரும் கனிப்பொருள் வகை.

ice'-water, *n.* பனி நீர்; பனிக்கட்டி உருகியநீர்; பனிக்கட்டியிட்டுக் குளிர்ச்சியாகிய நீர்.

ice'-wool, *n.* பின்னல் வேலை முதலியவற்றில் பயன்படுத்தப் படும் பளபளப்பான கம்பளி நூல் வகை.

ice'-worm, *n.* பனிக்கட்டியாறுகளில் இருப்பதாகச் சொல்லப்படும் நாங்கூழ் இனப் புழுவகை.

ice'-yacht, *n.* பாய்மரங்களுடன் பனிக்கட்டியின்மீது செல்லும் சறுக்குக் கப்பல் வகை.

ich'abod, *n.* புகழ் மறைந்ததே என்ற ஏங்குகுரல், வருத்தக் குரல்.

ichneum'on, *n.* முதலைகளின் முட்டைகளை அழிக்கும் சிறிய தவிட்டு நிறமான கீரியின நாற்கால் விலங்கு வகை; மற்றொரு பூச்சியின் முட்டைப் புழுக்களில் தான் முட்டையிடும் பளிங்கனைய நான்கு சிறகுகளையுடைய சிறிய ஒட்டுண்ணிப் பூச்சிவகை.

ichneu'mon-fly, *n.* மற்றொரு பூச்சியின் முட்டைப்புழுக்களில் தான் முட்டையிடும் பளிங்கனைய நான்கு சிறகுகளை உடைய சிறிய ஒட்டுண்ணிப் பூச்சிவகை.

ich'nite, *n.* = ichnolite.

ichnog'raphy, *n.* நிலப்படம்; நிலப்படங்கள் வரையும் கலை.

ichno'lite, *n.* புதைபடிவ அடிச்சுவடு.

ichnol'ogy, *n.* புதைபடிவ அடிச்சுவடுகள் பற்றிய ஆய்வு நூல்.

ich'or, *n.* கிரேக்கபுராணக் கதை வகையில் கடவுளர்களின் நாளங்களில் குருதியைப்போல் வடியும் நீர்; (மரு.) புண்ணீர்; ஆண்யானையின் கன்ன மதநீர்.

ichthyocoll'a, *n.* மீன் பிசின்.

ichthyog'rapher, *n.* மீன்வகைகளைப் பற்றிய ஆய்வுரை எழுதுபவர்.

ichthyog'raphy, *n.* மீன்கள் பற்றிய ஆய்வுரை.

ich'thyoid, *n.* மீன் வகையைச்சேர்ந்த முதுகெலும்புள்ள உயிரினம்; *a.* மீன்போன்ற.

ich'thyoidal, *a.* மீன் போன்ற.

ichthyol'atry, *n.* மீன் வழிபாடு.

ich'thyolite, *n.* புதைபடிவ மீன்.

ichthyol'ogy, *n.* மீனியல் நூல்.

ichthyoph'agist, *n.* மீனுணி.

ichthyoph'agy, *n.* மீன் தின்னும வழக்கம்.

ichthyor'nis, *n.* முன்னூழிப் பறவை வகை, மரபற்றுப்போன பல்லுடைய பறவைகளின் பேரினம்.

Ichthyosaur'us, *n.* முன்னூழி அரக்கப்பல்லி வகை, மிகப் பெரிய தலையையும் கூம்பிய உடலையும் நான்கு துடுப்புகளையும் நீண்ட வாலையும் உடைய மரபற்றுப்போன கடல் வாழ் உயிரினம்.

ichthyos'is, *n.* மேல்தோல் கெட்டியாகிச் சுரசுரப்பாகிவிடும் நோய்வகை.

i'cicle, *n.* உறைநீர்மணி, விழுநீர்த்துளி உறைந்து மின்னும் பனித்துகள், வீழ்துளி வடிவப் பனிக்கட்டி.

i'cing, *n.* உறைதல்; குளிரவைத்தல்; பண்ணியம் முதலிய வற்றின் சர்க்கரை மேற்பொதி; விமானத்தின்மீது பனிப்படிவு.

ic'kle, *a.* குழந்தை உலக வழக்கில் சின்னஞ்சிறிய.

ic'on, *n.* உருவம், உருவச்சிலை; புனிதமாகக் கருதப்படும் தெய்வ வடிவம்; புனிதச் செதுக்குவண்ண ஓவியம்.

icon'ic, *a.* உருவம் அல்லது உருவப்படம் பற்றிய; உருவம் அல்லது உருவப்படத்தின் தன்மைவாய்ந்த; மரபு வழக்கமான பாணியையொட்டிய.

icon'oclasm, *n.* உருவத்தகர்ப்பு; உருவவழிபாட்டு எதிர்ப்பு; ஆர்வப் பழமரபு அழிப்பு.

icon'oclast, *n.* உருவங்களை உடைப்பவர்; கீழ்த்திருச்சபையின் உருவ வழிபாட்டினை எதிர்த்து கி. பி. 8-ஆம் 9-ஆம் நூற்றாண்டுகளில் நடத்தப்பட்ட இயக்கத்தில் பங்கு பற்றியவர்; ஆர்வக்கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் தாக்குபவர்.

iconog'raphy, *n.* உருவங்களினால் அல்லது வரிவடிவங்களினால் பொருளை விளக்குதல்; படங்களே முதன்மையாயிருக்கும் சுவடி; படங்கள் அல்லது சிற்பம் பற்றிய கட்டுரை.

iconol'ater, *n.* உருவ வழிபாடு செய்பவர்.

iconol'atry, *n.* உருவ வழிபாடு.

iconol'ogy, *n.* உருவங்கள்-சிலைகள் பற்றிய ஆய்வு; குறிப்பு அடையாள முறைமை.

iconom'achy, *n.* உருவ வழிபாட்டுக்கு எதிரான இயக்கம்.

iconom'eter, *n.* (நி-ப.) நேர்முகப்பார்வைப் புல அறுதிக் கருவி; தொலைப்பொருளின் அளவையோ தொலைவையோ அறுதி செய்வதற்குரிய கருவி.

iconos'tasis, *n.* கீழைத்திருக்கோயில்களில் கருவறையை உருவங்கள் வைக்கப்பெறும் பகுதிகளிலிருந்து மறைப்பதற்கான திரைத்தட்டி.

ic'osahed'ron, *n.* (வடி.) இருபது பட்டைமுகப்புடைய பிழம்புருவம்; *pl.* icosahe'dra.

ic'tus, *n.* (யாப்.) சந்த அழுத்தம்; நாடித்துடிப்பு; *pl.* ic'tuses.

i'cy, *a.* பனிக்கட்டியாலான; பனிக்கட்டிகள் நிறைந்த; பனிக்கட்டி போன்ற; குளிர்ச்சியான; உறைபனி மூடிய; நடுக்குக் குளிரூட்டுகிற; அன்பார்வமற்ற.

id [1], *n.* (உயி.) கரு உயிர்ம இனக்கீற்றில் மரபியல் சிறப்பியல்புகளையெல்லாம் கொண்டுள்ளதாகக் கருதப்படும் மூலப் பொருள்; (உள.) தனிப்பட்ட ஒருவரின் உணர்வுந்துதல்.

id [2], = ide.

ide, *n.* கெண்டை இன மீன்வகை.

ide'a, *n.* கருத்து, எண்ணம்; கருத்துருவம், நினைவுப்படிவம்; நினைவுத்தோற்றம்; பாவனை உரு; உள்நோக்கம்; உட்கருத்து; உட்கோள், கருத்துப்போக்கு; புதுக் கருத்து; யோசனை; திடீர் எண்ணம்; ஆலோசனை; எண்ணச்சாயல்; தெளிவற்ற கொள்கை; உருவாகாத் திட்டம், திட்டவட்டமாகாக் கருத்து; மூலக்குறிப்பு; மூலமாதிரி; பிளேட்டோ என்ற பண்டைக் கிரேக்க அறிஞர் கருத்துப்படி குறைவுடைய நிலையற்ற உலகப் பொருள்வகைகளுக்குரிய குறைவற்ற நிலையான மூல முதற்படிவம்; (தொ.) man of ideas, சூழ்திறம் மிக்கவர்.

ide'a'd, ide'aed, *a.* கருத்துடைய, எண்ணவளம் வாய்ந்த.

ide'al, *n.* இலக்கியல் நிறைவு, பின்பற்றத்தக்க குறிக்கோள் நிலை; சீர்மை, குறைவிலா நிறைசெப்பம், முழுநிறைநலம்; *a.* இலக்கியலான, குறிக்கோள் நிலையான; கருத்தியலான, குறிக்கோள் வடிவான; கனவியலான, செயல்துறை சாராத; புனைவியலான, கற்பனைச் சார்பான; பண்டைக் கிரேக்க அறிஞர் பிளேட்டோ கருத்துக்களடங்கிய; பொருள்களின் நிலையான மூல நிறை படிவங்களுக்குரிய.

ide'aless, *a.* எண்ணங்கள் அற்ற.

ide'alism, *n.* கருத்தியற் கோட்பாடு, புலன்வழி அறியப்பட்ட புற அறிவுலகு முழுவதும் கருத்தியல் தோற்றமே எனும் கொள்கை; புற உலகவாய்மை அக அறிவின் வேறனதென்ற கோட்பாடு; கற்பனைக்குறிப்பீடு; கருத்தியற் பாங்கு; கனவியற்போக்கு; செயல்துறை சாராதநிலை.

ide'alist, *n.* புற உலகில் தோன்றுவதெல்லாம் கருத்தளவே ஆகுமென்னும் கொள்கையுடையவர்; இலக்கியலாளர், குறிக்கோள் நிலையை எய்த முயல்பவர்; செயல்முறைக்கு ஒவ்வாதனவற்றை மேற்கொள்பவர்.

idealist'ic, *a.* புறஉலகில் தோன்றுவதெல்லாம் கருத்தளவேயாகுமென்னும் கொள்கை சார்ந்த; இலக்கியலாளர்களைச் சார்ந்த; குறிக்கோள் நிலையை எய்த விரும்புகிற; கனவியற் போக்குடைய.

ideal'ity, *n.* உச்ச உயர்நலநிலை, முழுநிறைவாயுள்ள கற்பனை நலம்; எட்டாக் கற்பனை நலம்; குறிக்கோள்நிலை; முழுநிறை அழகு நலக் கூறுகளைக் கற்பனை செய்து காணுந்திறம்.

ide'alize, *v.* இலக்கியலாகக் குறி; இலக்கியலாகக் கருது; மீ உயர்வாக மதி; மீ உயர்வுபடுத்து; மீ உயர்வுபடுத்திக்கூறு; கற்பனை உயர்நிலை ஆக்கு; செயல்துறைத் தொடர்பற்றதாக்கு; கனவியற்படுத்து.

ide'alless, *a.* குறியிலக்கற்ற, குறிக்கோள் இல்லாத.

ide'ate, *v.* கற்பனைசெய் ; எண்ணப்படிவங்களை உருவாக்கு; எண்ணு, கருது.

idee fixe, (பிர.) *n.* மனத்தை ஆட்கொண்டுள்ள கருத்து, ஒற்றைக்கருமத்தில் பித்தேறிய நிலை.

id'em, (ல.) *n.* அதுவே ; அதே நூலாசிரியர் ; அதே நூல் ; அதே சொல்; *adv.* அதே நூலில்; (தொ.) *idem quod,* (ல.) அதைப்போலவே.

iden'tic, *a.* ஒரேபடித்தான ; (தொ.) identic note, நாடுகளிடைப்பட்ட அரசியல் இடைபாடுகளில் ஒரேசமயத்தில் ஒரே சீராகப் பலதிறத்தார் தம்மிடையே பரிமாறிக்கொள்ளும் கருத்துக்குறிப்பு.

iden'tical, *a.* அதுவேயான, வேறு அல்லாத ; முழுதொத்த, எல்லாக் கூறுகளிலும் ஒப்பான ; இரட்டைக் குழவிகள் வகையில் சினைப்பட்ட ஒரே கருமுளையிலிருந்து வளர்ச்சி அடைந்த ; (அள.) வேறன்மைசுட்டுகிற ; (கண.) முழுது மொத்த நிலையைக் காட்டுகிற.

iden'tify, *v.* இனம் அறி, அடையாளம் கண்டுணர் ; ஒன்றே எனக் கருது ; அதுவேயெனச் சான்றுகூறு, வேறன்றென உறுதி கூறு ; அடையாளங்கண்டு இனவுறுதிப்படுத்து ; பொருண்மையில் ஒன்றேயெனக்குறி ; இனமாக வகுத்தமை ; ஒன்றுபடுத்து ; ஒன்றில் இழைவி, இணைபிரிக்க முடியாதபடி முழுதும் தோய்ந்து ஈடுபடுவி.

iden'tity, *n.* அதுவேயாந்தன்மை; வேறன்மை; தனித்துவம்; (கண.) முற்றொருமை; (அள.) முற்றொருமை காட்டும் சமன்பாடு ; (தொ.) identity disk, போர்ப்பணியிலீடுபட்டுள்ள வீரர் அணிவதற்கென அவர் பெயர் முதலியவை பொறிக்கப் பெற்றுள்ள வில்லை.

id'eogram, id'eograph, *n.* ஒலிகுறித்துக் காட்டாத சொல்லின் கருத்துக்குறியீடு, பண்டைச் சீன வரிவடிவம் போன்ற சொற்சுட்டுக்குறிப்பு.

ideol'ogist, id'eologue, *n.* கருத்தியல் கொள்கையாளர் ; கற்பனைக்கொள்கையாளர் ; பண்பியலான கோட்பாடுகளில் ஈடுபட்டவர் ; கனவியலாளர் ; செயல்முறைக்கு ஒவ்வாதன வற்றை மேற்கொள்பவர்.

ideol'ogy, *n.* கருத்தாய்வுநூல், கருத்துருவான பண்பாய்வு நூல்; பொருளுலகத்தொடர்பற்ற கட்டற்ற கருத்தியல் கட்டுமானம் ; கனவியல் கோட்பாட்டமைவு ; கருத்துத் தொகுதி; கருத்துப்பாங்கு ; இனத்தவர்-தனிமனிதர்-அரசியல் அல்லது பொருளியல் கோட்பாட்டுக்குழுவினர் முதலியோருக்குரிய பொது அடிப்படையான தனிக் கருத்துப்போக்கு.

ides, *n. pl.* பண்டைய ரோமரின் காலக்கணிப்பில் மார்ச்சு-மே-சூலை-அக்டோபர் மாதங்களின் 15-ஆம் நாளுக்கும் மற்ற மாதங்களின் 13-ஆம் நாளுக்கும் உரிய சுட்டுக்குறிப்பு.

id est, (ல.) (தொ.) அதாவது.

id'iocy, *n.* பேதைமை, மூளைத்திறமற்ற முழுநிறைமடமை.

id'iom, *n.* தனிமரபு, மரபுக்கூறு; மொழிமரபுத்திறம்; நாட்டு மரபுத்திறம்; மக்கள் மரபுமொழி; நாட்டுமரபுமொழி; மொழியின் வகை திரிபு ; பேச்சு வகைமரபு ; மரபுத்தொடர் ; மரபு வழக்கு.

idiomat'ic, *a.* மொழியின் தனிச் சிறப்பியல்பான ; மொழி மரபுக்குரிய ; மொழிவழக்குக்கு ஒத்த.

idiop'athy, *n.* தனிமனிதரின் தனிச்சிறப்புக்குரிய அனுபவம்; (மரு.) வேறொரு நோயின் வழிநிலையாய் அமையாமல் முதல் நிலையாகத் தோன்றும் நோய்.

id'ioplasm, *n.* (உயி.) மரபுவழிச் சிறப்பியல்பினை அறுதியிடும் ஊன்மக்கூறு.

idiosync'rasy, *n.* தனிமனப்போக்கு ; தனிச்சிறப்புக்குரிய பண்பு; தனி நூலாசிரியருக்குச் சிறப்பியல்பான மொழிநடை; தனிமுரண்பாடு ; பொதுமீறிய தனியியல்பு ; (மரு.) தனி மனிதருக்குச் சிறப்பியல்பான உடலமைப்பு.

id'iot, *n.* மட்டி, முழு மூடன்; ஒன்றுக்கும் உதவாதவன், முழு மகன், பேதை.

idiot'ic, *a.* மட்டிக்குரிய ; மடமைவாய்ந்த.

id'iot-stitch, *n.* தையலிழைத் துன்னல்வகை.

i'dle, *a.* சோம்பலான, மடிமைவாய்ந்த ; சோம்பியிருக்கிற, முயற்சியற்ற ; செயல்விருப்பமற்ற ; வேலையில்லாத ; விளைவற்ற, பயனற்ற, வீணான ; செயல்வகையில் விளையாட்டுப் போக்கான ; எண்ணங்கள் வகையில் அறிவற்ற ; சொல் வகையில் உறுதிப்பாடற்ற ; செய்தி வகையில் ஆதாரமற்ற ; *v.* சோம்பியிரு ; விண்காலங்கழி, பயனற்ற வகையில் பொழுதைப்போக்கு; இயந்திர வகையில் உரிய செயலாற்றுமல் இயங்கு ; உந்துவண்டி விமான முதலியனவற்றின் வகையில் நீராவிப்புழையின் வாயடைக்கப்பெற்று மெல்ல இயங்கு ; (தொ.) idle wheel, காப்பாழி, இயந்திரம் கெட்டுப்போய் நின்றுபோகும்போது செயற்படும் காப்புச் சக்கரம் ; இயக்க இடையாழி, திசையை மாற்றுமலே ஒரு சக்கரத்திலிருந்து மற்றொன்றிற்கு விசையைச் செலுத்துவதற்காக அவைகளுக் கிடையில் பொருத்தப்படும் மூன்றுவது சக்கரம்.

i'dleness, id'lesse, *n.* சோம்பல்.

id'ler, *n.* சோம்பன், சோம்பேறி ; காப்பு ஆழி, இயந்திரம் கெட்டுப்போய் நின்றுபோகும்போது செயற்படும் காப்புச் சக்கரம் ; இயக்க இடையாழி, திசையை மாற்றுமலேயே ஒரு சக்கரத்திலிருந்து மற்றொன்றிற்கு விசையைச் செலுத்துவதற்காக அவைகளுக்கிடையில் பொருத்தப்படும் மூன்றுவது சக்கரம்.

Id'o, *n.* செயற்கை உலகப்பொதுமொழி வகை.

id'ol, *n.* வழிபாட்டுக்குரிய தெய்வ உருவம் ; பொய்த்தெய்வம், போலித்தெய்வம் ; பேரன்புக்குப் பாத்திரமானவர் ; பெரும்போற்றுதலுக்குப் பாத்திரமான பொருள் ; மாய நம்பிக்கை ; போலிக்கற்பனை ; (அள.) போலிமருட்சி, தப்பெண்ணம் ; பொருள்களைத் தவருகக் காணும் அல்லது கருதும் மனப்பாங்கு ; ஆங்கில அறிஞர் பிரான்சிஸ் பேக்கன் (Francis Bacon) வகுத்துக்காட்டிய நால்வகைப் பிழைபடுவாத அடிப்படைகளில் ஒன்று ; (தொ.) idols of the cave, idols of the den, தனி மனிதர் தனிக்குறைபாடுகளால் ஏற்படும் பிழை பாட்டு மருட்சிகள் ; idols of the forum, idols of the market, சொற்கள் சொற்றொடர்களில் கரந்துள்ள குறைபாடுகளால் ஏற்படும் பிழைபாட்டு மருட்சிகள் ; idols of the theatre, அறிவேடுகளின் அரைகுறை அறிவால் ஏற்படும் பிழைபாட்டு மருட்சிகள் ; idols of the tribe, மனிதர் இனப் பொது அறிவு நிலைக் குறைபாடுகளால் ஏற்படும் பிழைபாட்டு மருட்சிகள்.

idol'ater, *n.* உருவ வழிபாட்டினர் ; ஒருவரை அன்பார்வத்துடன் போற்றுபவர் ; ஒன்றினைப் பூசித்துப் பேணுபவர்.

idol'atry, *n.* உருவ வழிபாடு ; மீதூரும் அன்பு ; ஆர்வப் போற்றரவு ; (தொ.) honour one on this side of idolatry, வழிபடாக்குறையாக மதித்துப் போற்று.

id'olize, *v.* மீதூரும் அன்புக்குப் பாத்திரமாக்கு, வழிபாட்டுப் பொருளாக்கு; மட்டுமீறிய அன்புசெலுத்து; பெரிதும்போற்றி வழிபடு ; உருவவழிபாட்டினை மேற்கொள்.

idol'um, *n.* அகத்தில் தோன்றும் தோற்றம், எண்ணவடிவம்; (அள.) பிழைபடு வாத வகை, வாதக்கோளாறு ; *pl.* ido'la.

id'yl, id'yll, *n.* முல்லைப்பாட்டு, ஆயர்வாழ்வுபற்றிய சிறு காப்பியம் ; எளிய நாட்டுப்புற வாழ்க்கைக்கதை ; எளிய நாட்டுப்புற வாழ்க்கை நிகழ்ச்சி ; வனப்புமிக்க சொல்லோவியம் ; எளிய வாழ்க்கைச் சித்திரம்.

if, *n.* மயக்கதயக்கநிலை ; ஒருவேளை சிலவேளை என்ற குறிப்பு; கற்பனைப்பாவனை நிலை ; *conj.* ஆமாயின், என்ற நிலையில், என ஆனுல், என நிகழ்ந்தால், என்று வைத்துக்கொண்டால்; (தொ.) as if, இருந்தாற் போன்று, இருந்தால் எப்படியோ அப்படியே, என்ற கற்பனையான நிலையில்.

ig'loo, *n.* எஸ்கிமோக்களின் (Eskimos) கும்மட்ட வடிவான குடிசை.

ig'neous, *a.* தீச்சார்ந்த, நெருப்புள்ள, நெருப்பொத்த; எரிமலை செயற்படுவதனுல் உண்டான.

ig'nis fat'uus, (ல.) *n.* சதுப்புநில ஒளி, கொள்ளிவாய்ப் பேய் ; நம்பிக்கைதந்து நழுவிக்கொண்டே போகும் செய்தி, ஆதாய ஆசைகாட்டி ஏய்த்துக்கொண்டே செல்லும் நிகழ்வு.

ignite', *v.* கொளுத்து, தீப்பிடிக்கவை; தீப்பற்று; மிகுதியும் சூடாக்கு; தீயெழச் சூடாக்கு, வேதியியல் மாறுதலடையும் அளவுக்கு வெப்பூட்டு.

igni'tion, *n.* தீப்பற்றவைப்பு; தீப்பற்றுகை; தீப்பிடித்துள்ள நிலை; அழல்மூட்டும் வகைமுறை; உள்வெப்பாலையில் தீக்கொளுவும் ஏற்பாடு.

igno'ble, *a.* இழிபிறவியான; தாழ்நிலையிலுள்ள; கீழான, இழிந்த; ஈனப்பேர் படைத்த; பழிப்புக்கிடமான; *v.* தாழ்த்து, இழிவுபடுத்து.

ig'nominy, *n.* இழிவு, பேரிகழ்; அவமதிப்பு; அவமானப்படத்தக்க நடத்தை; ஒழுக்கக்கேடு.

ignoram'us, *n.* அறிவிலி; *pl.* ignoram'uses.

ig'norance, *n.* அறியாமை; மடமை; தெரியாமை; அறியாநிலை; அறியாப்பிழை; அறியாப்பிழையால் நேர்ந்த செயல்; அறியாமைப்பருவம்; முகமது நபிநாயகத்துக்கு முற்பட்ட காலம்.

ig'norant, *n.* அறிவற்றவர்; *a.* அறியாத; தெரியாத; தகவல் பெறாத நிலையிலுள்ள; அறிவில்லாத; படிப்பில்லாத; எழுத்தறிவற்ற; அறியாமைக்குரிய; அறியாமையால் நிகழ்கிற; அறியாநிலை காட்டுகிற.

ignora'tio elen'chi, (ல.) *n.* (அள.) வாதம் மறுப்பதுபோற் காட்டித் தொடர்பற்ற பிற பொருளை மறுக்கும் போலி வாதம்.

ignore', *v.* பொருட்படுத்தாமல் விடு, புறக்கணி; சிறைக்கணி, கண்டும் காணாததுபோல் இருந்துவிடு; பொதுச்சான்றுளர் வகையில் ஆதாரமில்லையெனத் தள்ளிவிடு.

ignot'um per ignot'ius, (ல.) *n.* விளக்கக் கருதும் பொருளைக்காட்டிலும் விளங்காத விளக்கம்.

igua'na, *n.* உடும்பு.

Iguan'odon, *n.* புதைபடிவமாகக் காணப்படும் மிகப்பெரிய தழையுண்ணியினப் பல்லி வகை.

IHS, *n.* கிரேக்க மொழியில் 'இயேசு' என்பதன் சுருக்கத்தைக் குறிக்கும் சின்னம்.

ilei'tis, *n.* சிறுகுடற் பின்பகுதியின் அழற்சி.

ile'um, *n.* சிறுகுடற் பின்பகுதி.

il'ex[1], *n.* இலையுதிராச் 'சிமை ஆல்' வகை; *pl.* i'lices, il'exes.

Il'ex[2], *n.* (தாவ.) முள்ளிலைகளும் பசிய சிறுமலர்களும் சிவப்புப் பழங்களுங்கொண்ட இலையுதிராப் புதர்ச்செடி உள்ளிட்ட பேரினம்.

il'iac, *a.* (உள்.) இடுப்புச்சார்ந்த; இடுப்பெலும்புக்குரிய; (தொ.) iliac artery, இடுப்புக் குருதிநாளம்; iliac passion, அடிக்குடரில் அடைப்பு ஏற்படுவதனால் உண்டாகும் நோக்காடு.

Il'iad, *n.* திராய் (Troy) முற்றுகையைப் பொருளாகக்கொண்டு ஹோமர் எழுதியதாகச் சொல்லப்படும் பண்டைக் கிரேக்க கவிதைக் காப்பியம்; தொடர் நெடுங்கதை; (தொ.) Iliad of woes, தொடர்ச்சியாக வருந்துன்பங்களின் தொகுதி.

il'ium, (ல.) *n.* (உள்.) இடுப்பெலும்பு; *pl.* il'ia.

ilk, *a.* அதே; (தொ.) of that ilk, அதே குடிப்பெயருடைய; அதே வகைப்பட்ட.

ill, *n.* தீமை, கேடு; தீங்கு, பொல்லாங்கு; கெடுதி, கேடான செய்தி; *a.* கெட்ட, தீய; தீங்கிழைக்கிற; கேடுசூழ்கிற; ஒழுக்கக்கேடான; அவல நிலையிலுள்ள; பொல்லாங்கான, பாதகநிலையிலுள்ள; துயர் தருகிற; இடர்ப்பாடான, கடுமைவாய்ந்த; கண்டிக்கத்தக்க; நோயுற்ற; தவறான; *adv.* மோசமாக, கேடாக; மாறாக, பாதகமாக; அரை குறையாக, குறைபாடுகளுடன், போதாநிலையில்; தவறாக; திருந்தா நிலையில்; குறி தவறி; வாய்ப்புக்கேடாக; இடர்ப்பட்டு; தொல்லை தொந்தரைகளுடன்; மனக்குறையுடன்; (தொ.) do an ill turn, கேடுசெய்; நலங்கெடு; go ill with, நலத்துக்கு எதிராகு, பாதகமாகு; ill at ease, இருப்புக்கொள்ளா நிலையுடைய, மன உலைவுடைய; ill blood, பகைமை உணர்ச்சி; ill fame, இகழ்ச்சி, பழி, வசை; ill off, மிக மோசமான நிலையில், வறுமைப்பட்டு; ill provided with, துணைச்சாதனங்கள் சரியாகப் பெறாமல், போதா வாய்ப்பு வளங்களுடன்; ill success, அரைகுறையான வெற்றி; ill to please, எளிதில் மகிழ்வுபடுத்த முடியாத; ill will, பகைமை எண்ணம்; it ill becomes one, தகுதிக்கு உகவாது, தகாது; take it ill, சினங்கொள்.

ill'-advised', *a.* மதியற்ற; ஆய்ந்தமைந்த உணர்வில்லாத; தவறாக முடிவு செய்யப்பட்ட.

ill'-affect'ed, *a.* பரிவுகாட்டாத, ஆதரவு காட்டாத.

illa'tion, *n.* உய்த்துணர்வு; ஊக முடிவு; அனுமானித்தறியப்பட்ட செய்தி.

illat'ive, *a.* சொற்கள் வகையில் அனுமானம் குறித்த; ஊக வாசகத்துக்கு வாயில் செய்கிற.

ill'-bred', *a.* சீர்கேடாகப் பயிற்றுவித்து வளர்க்கப்பட்ட; பண்பற்ற; முரட்டுத்தனமாக நடக்கிற.

ill'-breed'ing, *n.* பண்புக் கேடான வளர்ப்பு.

ill'-condit'ioned, *a.* வெடுவெடுப்பான; சீர்கெட்ட நிலையிலுள்ள.

ill'-disposed', *a.* தீங்கிழைக்கும் பாங்குள்ள; பழியார்வமுள்ள; சுமுகமாயிராத.

illeg'al, *a.* சட்டப்படியிராத, சட்டத்துக்குமாறான, முறைகேடான.

ille'gible, *a.* விளங்காத, தெளிவாயிராத, படிக்கமுடியாத.

illegit'imate, *n.* முறைகேடாகப் பிறந்தவர்; திருமண மூலமாகவன்றிப் பிற முறையில் பிறந்தவர்; *a.* சட்ட இசைவு பெற்றிராத; தக்கதாயிராத; திருமணமூலமாகவன்றிப் பிற முறையில் பிறந்த, முறைகேடாகப் பிறந்த; தவறாக உய்த்துணரப்பட்ட; இயல்முரணிய; *v.* சட்டத்துக்கு மாறானதாக்கு; முறைகேடனென்று அறிவி.

ill'-fat'ed, *a.* அழிவுநோக்கிய, கேட்டுக்கு இட்டுச்செல்கிற; கெடுகேடான.

ill'-fa'voured, *a.* அழகற்ற; வெறுப்புத்தருகிற; விரும்பத்தகாத, விலக்கத்தக்க.

ill'-gott'en, *a.* தீய வழியில் ஈட்டப்பட்ட.

ill'-hu'moured, *a.* கடுகடுப்பான.

illib'eral, *a.* குறுகிய நோக்குடைய; கையிறுக்கமான, கஞ்சத்தனமான; நாகரிகமில்லாத, இழிந்த, மோசமான; மேம்பட்ட பண்பாடு அமையப்பெறாத; உரிமைபெற்ற மனிதருக்குத் தக்கதாயிராத.

illi'cit, *a.* சட்டத்தால் விலக்கப்பட்ட; கள்ளத்தனமான; மறைமுகமான; உரிமைச்சீட்டுப் பெறாத; கள்ளவாணிகத்துக்குரிய; மறையொழுக்கம் சார்ந்த; விதிமுறைக்கு மாறான, தவறான.

illim'itable, *a.* எல்லையற்ற, வரம்பின்றிப் பரந்தகன்ற.

illit'erate, *n.* தற்குறி, எழுதப்படிக்கத்தெரியாதவர்; *a.* எழுத்து வாசிப்பற்ற, எழுதப்படிக்கத்தெரியாத, கல்லாத.

ill'-judged', *a.* மடமையான; ஆய்ந்தோய்ந்து பாராத, ஆய்வமைவற்ற.

ill'-mann'ered, *a.* நடைகேடான, முரட்டுத்தனமாக நடக்கிற.

ill'-na'tured, *a.* வெடுவெடுப்பான, சீறிவிழுகிற.

ill'ness, *n.* உடல்நலக்கேடு, பிணி, நோய்.

illog'ical, *a.* முன்பின் முரணான, பொருத்தக்கேடான; அளவைமுறைக் கொவ்வாத, தருக்கமுரணான.

ill'-o'mened, *a.* தீக்குறியான; அவப்பேறு சுட்டிய.

ills, *n. pl.* இடையூறுகள், காலக்கேட்டால் வரும் இடர்கள்.

ill'-starred', *a.* தீக்கோளில் பிறந்த; அவப்பேறான.

ill'-tem'pered, *a.* கடுகடுப்பான.

ill'-timed', *a.* பொருத்தமற்ற நேரத்தில் சொல்லப்பட்ட, வேளைக்கேடான.

ill-treat', *v.* சீர்கேடாக நடத்து, கொடுமைப்படுத்து.

illume', *v.* (செய்.) விளக்கேற்று; ஒளி கொடு, ஒளிரச் செய்.

illum'inate, *v.* விளக்கேற்று; வெளிச்சம் காட்டு; ஒளி விளக்கம் செய்; மூளை தெளிவி; மயக்கநீக்கு; விளக்கம் அளி, பொருளை விளக்கு; ஒளிரச்செய்; விழாக்கோல ஒளிவிளக்க ஒப்பனை செய்; கையெழுத்துச் சுவடியின் முதலெழுத்து முதலியவை வகையில் பொன் வெள்ளி மெருகிடு; வண்ண மெருகூட்டு.

illuminati', *n. pl.* அறிவொளி பெற்றோர், புத்தெழுச்சி பெற்ற பல 18-ஆம் நூற்றுண்டுக் கழக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்.

illum'ine, *v.* ஒளி விளக்கம் அளி; ஆன்மிக அறிவொளி யூட்டு; ஒளிர்வி.

ill-use', *v.* சீர்கேடாக நடத்து, கொடுமைப்படுத்து.

illu'sion, *n.* மயக்கம், மருட்சி; பொய்த்தோற்றம்; மாயத் தோற்றம்; போலி எண்ணம், போலிக்கருத்து; போலி நம்பிக்கை; விழிமாருட்டத் தோற்றம்; ஏமாற்றம்; மிக நுட்பமான மெல்லிய பளிங்கனைய பட்டுநூல் வலைத்துணி.

illu'sionist, *n.* மாயாவாதி, புறவுலகு வெறும் பொய் என்னுங் கோட்பாட்டாளர்; பொய்த்தோற்றங்கள் உண் டாக்குபவர்; மாயவித்தைக்காரர்.

illus'ive, *a.* ஏமாறச் செய்கிற; போலித் தோற்றமான; மாயமான; மருட்சி தருகிற.

illus'ory, *a.* பொய்த்தோற்றங்களால் ஏமாற்றுகிற, மருட்சி தருகிற.

ill'ustrate, *v.* தெளிவாக்கு, விளக்கு; எடுத்துக்காட்டு வாயிலாக விளக்கமளி; ஒப்புமைகாட்டித் தெளிவாக்கு; படங் கள்மூலம் விளக்கு; படங்களெழுதி அழகுபடுத்து; உரு வரைகளால் அழகொப்பனை செய்.

illustra'tion, *n.* தெளிவாக்குதல்; எடுத்துக்காட்டு; விளக்கப் படம்.

illus'trative, *a.* விளக்குகிற; எடுத்துக்காட்டாகப் பயன் படுகிற.

illus'trious, *a.* புகழ்பெற்ற; முதன்மையான; சிறப்புவாய்ந்த; மேதக்க; தேசுடைய.

im'age, *n.* உருவம், படிவம்; உருவச்சிலை; படிமம்; புனிதர் திருவுருவச்சிலை; ஒத்த வடிவம்; உருவச்சாயல்; உருமாதிரி; எதிர் உரு, எதிர் படிவம்; பளிங்கில் தெரியும் நிழலுரு; உவம உருவக அணி; கருத்துரு, கருத்துப்படிவம்; மனச் சாட்சித் தோற்றம்; *v.* உருவங்கொடு; படங்தீட்டு; மனத்தில் உருவங் கற்பித்துக்காண்; நிழலுருப்படுத்திக்காட்டு; உரு மாதிரியாய் அமை; மாதிரி எடுத்துக் காட்டாகப் பயன்படு; விளங்க விரித்துரை.

im'agery, *n.* உருவங்களின் தொகுதி, உருவங்கள்; உவம உருவக அணி வகை; இலக்கிய அணி; நினைவுக்காட்சி, மனத்தகத் தோற்றம்; புனைவாற்றல், கற்பனை.

im'age-wor'ship, *n.* உருவ வழிபாடு.

ima'ginable, *a.* கற்பனை செய்யப்படத்தக்க, மனத்தினுல் பாவிக்கப்படத்தக்க, நினைத்துப்பார்க்கக்கூடிய.

ima'ginal, *a.* (பூச்.) நிறை வளர்ச்சியடைந்த.

ima'ginary, *a.* கற்பனையான; உளதாயிராத; புறமெய்ம்மை யற்ற; (கண.) கற்பிக்கப்பட்ட, கணிப்பளவில் உளதா யிருப்பதாகக் கொள்ளப்படுகிற; (தொ.) imaginary line, (கண.) கற்பனைக்கோடு; imaginary point, (கண.) கற்பனைப்புள்ளி; imaginary quantities, (கண.) கற்பனைக் கணிப்பளவைகள்.

imagina'tion, *n.* கற்பனை செய்தல்; புனைவாற்றல், கற்பனைத் திறம்; கலைப்புனைவுத்திறம்; பாவனை, போலி எண்ணம்; கட்டற்ற புனைவு, மாயத்தோற்றம்; வீண் எண்ணம்; போலிப்புனைவு; மனத்தின் படைப்புத்திறன்.

ima'ginative, *a.* கற்பனைத்திறத்துக்குரிய; கற்பனைத்திறத் தினைப் பயன்படுத்தும் பாங்குள்ள; மிகுகற்பனைத்திறம் வாய்ந்த.

ima'gine, *v.* கற்பனை செய், கற்பனையாற்றலைப் பயன் படுத்து; கருத்துருவாக்கிக்கொள்; வீண் எண்ணங்கொள், செருக்கிக்கொள்; எண்ணிப்பார்; ஊகி, உய்த்தறி; பாவித்துக் கொள், எண்ணிக்கொள்; உள்ளூரக்கருது; ஐயுறு; எண்ணு; கருத்தினை உட்கொள், எண்ணம் மேற்கொள்.

im'agist, *n.* கவிதைப்புனைவியல் திட்பக்குழுவினர், உணர்ச்சி வசப்படாமல் சரியான சொற்களை ஆண்டு மிகத் தெளிவாகவும் செறிவாகவும் பாடல்களியற்ற வேண்டுமென்பதை நோக்க மாகக்கொண்ட 20-ஆம் நூற்றுண்டுத் தொடக்ககாலக் கவிஞர்குழுவினர்.

imag'o, *n.* முற்றுரு, பூச்சி வாழ்க்கையில் எல்லா மாறுதல் களையும் அடைந்தபிறகு இறுதியாக ஏற்படும் முழு நிறை வான நிலை; *pl.* imag'ines, imag'os.

imam', imaum', *n.* பள்ளிவாசலுக்குரிய இஸ்லாமிய சமய குரு; பள்ளிவாசல் வழிபாட்டு முதல்வர்; இஸ்லாமியத் தலைவர்களின் பட்டப்பெயர்.

im'becile, *n.* பிறப்பிலேயே மூளைச்சோர்வுடையவர், ஏலா அறிவிலி; தன்னிலையற்றவர்; *a.* இயல்பான அறிவுமுட முடைய, ஏலா மூளைத்தளர்ச்சியுடைய; தன்னிலையற்ற.

imbibe', *v.* உள்ளீர்த்துக்கொள், ஈரம் உறிஞ்சு; காற்று உள்வாங்கு, மூச்சு உள்வாங்கு; உட்கொண்டு செரிக்கவை, நீர் பருகு, குடி; மனத்தில் வாங்கிக்கொள், கருத்துக்களை ஏற்றமை.

im'bricate, *v.* கவிந்து பாவு, மோட்டில் ஓடுகள் போன்று ஒன்றன்மேற் சென்று ஒன்று கவியும்படியாகப் பரப்பி அடுக்கு, இலைகள் மீன் செதிள்கள் போன்று பரவலாக அமைவி.

imbro'glio, *n.* குழப்பநிலை; அரசியல் சிக்கல்நிலை; நாடக நெருக்கடிக் கட்டநிலை; இசைத்துறையில் குழப்பநிலைபோலத் தோற்றமளிக்கும்படி வகுத்தமைக்கப்படும்நிலை.

imbrue', *v.* குருதி முதலியவற்றின் கறைபடுவி; நீர்மத்தில் தோய்வி.

imbrute', *v.* விலங்குபோல் ஆக்கு; விலங்குத்தன்மை யூட்டு.

imbue', *v.* சாயம் தோய்வி; ஊறிச் செறியவை; ஊடுருவிப் பரவச்செய்; உள்நின்று இயக்குவி, ஊக்குவி.

im'itable, *a.* பார்த்துப் பின்பற்றத்தக்க, போன்று செய்யத் தக்க.

im'itate, *v.* பின்பற்று; பார்த்துப் பழகு; போலிசெய்; ஏறக்குறைய ஒப்புடையதாகச் செய்யமுயலு; போன்று நடி; போன்று நட, போலி ஒப்புமைகாட்டி நடி, நையாண்டி நடிப்புச்செய்.

imita'tion, *n.* பார்த்துப் பின்பற்றுதல்; போலிசெய்தல்; போலி காட்டி நடிக்கும் நடிப்பு, போலி, போலித்தோற்றம்; போலிப்பொருள்; இரண்டாந்தரச் செயற்கைப்பொருள்; ஏமாற்றுச் சரக்கு, புறத்தோற்ற மட்டுமே ஒத்த அகப்பண் பற்ற பொருள்; *a.* போலியான; புறப்பகட்டான; புறநடிப் பியல்புடைய; அகப்பண்பற்றுப் புறத்தோற்ற மட்டுமே ஒத்த; செயற்கையான; பார்த்துச் செய்யப்பட்ட; இரண்டாந் தர மான; பூவேலைத் துன்னல் வகையில் இயந்திரத்தால் செய்யப் பட்ட.

im'itative, *a.* பின்பற்றுகின்ற, பின்பற்றும் இயல்புடைய; போன்று செய்கின்ற; போலியாக நடிக்கின்ற; மாதிரியைப் பின்பற்றி அமைக்கப்பட்ட; போலியான; (தொ.) imitative arts, ஓவியமும் சிற்பமும் போன்ற இயற்கையைப் பின்பற்றும் கலைகள்; imitative word, இயற்கை ஒலியைக் குறித்து அவ்வொலியோடு கூடிய சொல்; பொருளின் தோற்றம் பண்பு முதலியவற்றை ஒலியால் குறிப்பிடுவதாகக் கருதப்படும் சொல்.

immac'ulacy, *n.* மாசிலா இயல்பு, கறையற்ற தன்மை, விழுமிய தூய்மைநிலை.

immac'ulate, *a.* மாசற்ற, கறையற்ற, களங்கமற்ற, விழுத் தூய்மைவாய்ந்த; (தொ.) Immaculate Conception, தூய மரியன்னையின் (Blessed Virgin Mary) மனித இனத் தொடக்கப் பழியின் கறையற்ற சூலமைவு.

imm'anence, imm'anency, *n.* உள்ளுறைவியல்பு; பாலில் நெய்போல் இயல்பாக எங்கும் ஊடுருவிப் பரவியுள்ள இறைவனின் தன்மை.

imm'anent, *a.* உள்ளார்ந்த, இயல்பாயுள்ள, இயற்கையாய் அமைந்திருக்கிற, நிலைபேறான தன்மையில் படைப்பு முழுமையும் பரவி நிலவியுள்ள.

imm'anentism, *n.* எங்கும் நிலவியுள்ள கடவுள் பற்றிய நம்பிக்கை, இயல்பாக ஊடுருவிப் பரந்தியலும் இறைமை பற்றிய கோட்பாடு.

Imman'uel, *n.* இயேசுநாதரைக் குறித்த பெயர்.

immater'ial, *a.* பொருள் தன்மையில்லாத; உடலற்ற; உடல் சார்பில்லாத; ஆவியியலான; நுண்ணியலான; கருத்தியலான; புறக்கணிக்கத்தக்க, முக்கியமல்லாத.

immater'ialism, *n.* புலக்காட்சிப்பொருள்கள் தம்மியல்பாக உளதாம் தன்மை கொண்டனவல்ல என்னும் கோட்பாடு.

immaterial'ity, *n.* பொருள்தன்மையற்றநிலை, தூலப்பொருளற்ற தன்மை.

immate'rialize, *v.* தூலப்பொருளிலிருந்து பிரி.

immature', immatured', *a.* முதிராத; முழுதும் விளையாத; பழுக்காத, பக்குவப்படாத; பருவமடையாத, நிறைவுறாத.

immea'surable, *a.* அளவிடற்கரிய, மிகப்பெரிய, வரம்பிட இயலாத.

immed'iate, *a.* அடுத்துள்ள; இடையீடின்றி அருகிலுள்ள; அடுத்த, மிக நெருங்கிய; நேரடியான; உடனடியான; காரண வகையில் நேர் தொடர்புத் தூண்டுதலான, இடைக் காரண நிலைகளற்ற; காலந்தாழ்த்தாத, சுணக்கமற்ற; அடுத்துப் பின்வருகிற; அடுத்துப்பின் நிகழ்வான; (தொ.) immediate inference, (அள.) நேரடியான அனுமானம், உடனடியான முடிவு, இடையீடில்லாமல் ஊகித்துணர்தல்.

imme'diatism, *n.* உடனடியான தன்மை, உடனடியாகச் செயலாற்றும் கொள்கை.

immemor'ial, *a.* மிகப்பழமையான, தொல்பழமையான, நினைவுக்கு எட்டாத பழங்காலத்தைச் சேர்ந்த.

immense', *a.* மிகப்பெரிய, அளக்க முடியாத, மிகப்பரந்த.

immense'ly, *adv.* மிகப்பெரிய அளவில்; மிகுதியாக.

immens'ity, *n.* அளக்க இயலாப் பெரும்பரப்பு, எல்லையற்ற பேரளவு; பெருஞ்சிறப்பு.

immerse', *v.* மூழ்குவி, நீர்மத்தில் உள் அமிழ்த்து; உள் அமிழ்த்திவை, தோய்வி; மூழ்கடி, உள் அமிழச்செய்; தீக்கை முறையாகத் தலையை நீரினுள் அமிழ்த்து; ஆழ ஈடுபடுத்து, கவனமுற்றிலும் தோய்வி.

immersed', *a.* மூழ்கடிக்கப்பட்ட; தோய்ந்த; (தாவ.) இழைமங்களுடன் தோய்ந்து சிக்கிய.

immer'sion, *n.* மூழ்குவிப்பு; மூழ்குநிலை; அமிழ்வு, தோய்வு; தீக்கைத் திருமுழுக்கு; வானகோளத்தின் நிழல் மறைவு, மற்றொரு கோளத்தின் நிழலில் மறைதல்; தோய் வாழ்வு, ஆழ்ந்த ஈடுபாடு; (தொ.) immersion heater, நீர்மத்தில் உள் தோய்ந்து நின்று வெப்பூட்டும் மின்கருவி.

imm'ersionist, *n.* முழுதும் நீரில் மூழ்கும் தீக்கை முறையை ஆதரிப்பவர் அல்லது கடைப்பிடிப்பவர்.

imm'igrant, *n.* குடிபுகுபவர், வந்தேறி.

imm'igrate, *v.* பிறநாட்டிலிருந்து வந்து குடியேறு, குடி நுழை, குடிபுகு; குடியேறுபவர்களாகக் கொண்டுவா.

immigra'tion, *n.* குடியேறுதல்.

imm'inence, *n.* அண்மையில் நிகழப்போகிற நிலை, உடனடியாக நேரவிருக்கும் இடர்.

imm'inent, *a.* நெருங்கி வர இருக்கிற, அண்மையில் நிகழப் போகிற, உடனடியாக நிகழக்கூடிய, வருவதாக அச்சுறுத்துகிற.

immis'cible, *a.* கலக்க முடியாத, கலப்பதற்கு இடந்தராத.

immit'igable, *a.* தணிக்க முடியாத, அமைக்க இயலாத, மட்டுப்படுத்த இயலாத.

immix'ture, *n.* கூட்டுக்கலப்பு, சிக்குறவு.

immob'ile, *a.* இயங்காத; அசைவற்ற; நகர்த்த முடியாத.

immob'ilize, *v.* அசைக்கமுடியாதபடி பொருத்து; படைகள் ஊர்திகள் வகையில் வேறொரு இடத்திற்கு இடம் பெயர்க்க முடியாதபடி செய்; செலாவணியிலிருந்து நாணயத்தைத் தடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்.

immod'erate, *a.* முனைப்பான, நடுநிலை இகந்த; மட்டுமீறிய, எல்லை கடந்த, கட்டுக்கடங்காத; அளவுமீறிச் செலவுசெய்கிற, ஊதாரித்தனமான.

immodera'tion, *n.* அளவுமீறிய தன்மை; மட்டுமிஞ்சிய நிலை; கழிமிகை, மிகைபாடு, மிகுதி.

immod'est, *a.* அடக்கமற்ற; நடைநயமற்ற; துடுக்கான; நடைமுனைப்பான; வெட்கமில்லாத; வரம்புமீறிய, மதிப்புக்கேடான.

imm'olate, *v.* பலியாக்கு, பலியாக ஒப்படை; பலியாகக் கொல்லு; மற்றொருவருக்காக நலங்களைத் துற, தியாகம் செய்.

immo'ral, *a.* ஒழுக்கமற்ற, நெறியற்ற; நன்னெறிக்குப் புறம்பான, ஒழுக்கக்கேடான; கொடிய; நெறிகெட்ட, தீயொழுக்கமுள்ள.

immort'al, *n.* இறவாதவர்; தேவர்; இறவாப்புகழுடையவர்; புகழ் நிலைபெற்ற இலக்கிய எழுத்தாளர்; பிரஞ்சுக்கலை இலக்கியக்கழக உறுப்பினர்; *a.* இறப்பற்ற, இறவாமையுற்ற; தெய்விகமான; அழியாத; என்றும் புகழ் பெற்றுள்ள, நிலைபேறான.

immort'alize, *v.* இறவாநிலை வழங்கு; அழியாப்புகழை அளி; நிலைபேறான வாழ்வளி; நீடித்து நிலைத்திருக்கச்செய்.

immort'ally, *adv.* நிலையாக, என்றுமுள்ளதாக, நீடித்ததாக.

immort'als, *n. pl.* பண்டைக்கிரேக்கரின் தேவர்கள்; தெய்வங்கள்; பண்டைக்காலப் பாரசீக அரசரின் மெய்காப்பாளர் குழு.

immortelle', *n.* உலர்ந்தபின்பும் நிலையான வண்ணமுடன் கல்லறைகளை அழகுபடுத்தும் தாள் போன்ற மலர்க்கொத்து வகை.

immo'vable, *a.* இயங்காத; இயக்கமற்ற; வளைந்துகொடுக்காத; மாறுதலுக்கு இடங்கொடாத; அசைக்கமுடியாத, உறுதியான; உணர்ச்சியற்ற.

immo'vables, *n. pl.* நிலை உடைமைகள், புடைபெயர்க்க முடியாத செல்வக்கூறுகள், தாவர சொத்துக்கள்.

immune', *n.* பிணிகளினின்று முழுநிறை தடைகாப்புப் பெற்றவர்; *a.* நஞ்சு தொற்றுநோய் முதலியவற்றினின்றும் விடுபாடு உடைய, தடைகாப்புறுதி பெற்ற.

immun'ity, *n.* (சட்.) காப்புரிமை; (சட்.) விடுபாட்டுரிமை; (மரு.) தடைகாப்புநிலை.

imm'unize, *v.* தொற்றுநோய்களினின்று தடைகாப்பு அளி.

immure', *v.* சிறைப்படுத்து; அடைத்துவை.

immut'able, *a.* மாற்றமுடியாத, மாறாத, நிலையான, மாறும் இயல்பற்ற.

imp [1], *n.* பேய்க்குட்டி; கூளி, குறளி; குறும்புத்தனமுள்ள குழந்தை; குழந்தை.

imp [2], *v.* வேட்டைப்பருந்தின் சிறகுகளில் ஒட்டுச்சேர்; ஒட்டுச்சேர்த்து வலுப்படுத்து.

im'pact [1], *n.* மோதுதல், தாக்குதல், அடியின்வேகம்; தாக்குதல் விளைவு; விசைப்பயன்; விசைவலு; பயன்; செயல் விளைவு.

impact' [2], *v.* அழுத்தமாகப் பதியவை, வலிவாக ஊன்றவை, நெருக்கு, இறுக்கிப்பிணை.

impair', v. அழி, பதங்கெடு; சேதப்படுத்து, ஊறுபடுத்து, பழுதாக்கு; ஆற்றல் குறை.

impale', v. கழுவேற்று; கூரிய முளையை உடலில் குத்தி ஊடுருவச் செய்; செருகிவை; குத்திவை; கழிகளால் வேலியமை; வரம்புகட்டு; அடைத்துவை; (கட்.) பிரிக்கப்பட்ட இரு குலமரபுச்சின்னங்களைச் செங்குத்தான நடுக்கோடிட்டு அருகருகாக வைத்து இணை.

impal'pable, a. தொட்டு உணரமுடியாத; மிகமெல்லிய; நுண்ணியலான; மனத்தாற் பற்ற முடியாத; உணரமுடியாத; புதிரான.

impal'udism, n. சதுப்புநில வாழ்நரிடையே காணப்பெறும் இடையிடையிட்ட மண்ணீரல் அழற்சியும் காய்ச்சலும் வாய்ந்த பிணிவகை.

impan'ate, a. இயேசுநாதரின் திருவுடல் வகையில் திருநேர்வு பெற்ற திருவுணு அப்பத்திலடங்கிய.

impana'tion, n. திருநேர்வு பெற்ற திருவுணு அப்ப வகையில் இயேசுநாதரின் திருமேனி உளப்பாட்டடக்கம்.

impan'el, v.=empanel.

impa'radise, v. பொன்னுலகாக்கு, பொன்னுலக மயமாக்கு; பேரின்ப நிலைக்குக்கொணர்; பேரின்பமளி; கழிமகிழ்வூட்டு.

imparisyllab'ic, n. பண்டைக்கிரேக்க லத்தீன் மொழி இலக்கணங்களில் ஆறும் வேற்றுமையில் எழுவாய் வேற்றுமையை விட மிகுதியான அசைகளைக் கொண்ட பெயர்ச்சொல்; a. பண்டைக் கிரேக்க லத்தீன் மொழி இலக்கணங்களில் பெயர்ச்சொல் வகையில் ஆறும் வேற்றுமையில் எழுவாய் வேற்றுமையைவிட மிகுதியான அசைகளைக்கொண்ட.

impark', v. விலங்குகளைத் தோட்டத்தில் அடை; பூங்காவிற்காக நிலத்தைச் சுற்றி வேலியடை.

impart', v. பங்களி; செய்திகூறு; தெரிவி.

impar'tial, a. நடுநிலை தவறாத, ஒருதலை சாயாத; தப்பெண்ணமற்ற; நடுநேர்மை வாய்ந்த.

impart'ible, a. பிரிக்கமுடியாத; பங்கிடத்தகாத.

impass'able, a. கடந்துசெல்ல முடியாத.

impasse', n. முட்டுச்சந்து; தப்பிக்க முடியாதநிலை.

impass'ible, a. உணர்ச்சித்திறமற்ற; உணரும் திறமில்லாத, துன்ப உணர்வற்ற; துன்பத்துக்கு ஆட்படாத; வருத்த முணரும் இயல்பற்ற.

impa'ssion, v. உணர்ச்சியூட்டு, உணர்ச்சி கிளர்ந்தெழச் செய், முனைப்பான தூண்டுதலளி.

impass'ive, a. உணர்ச்சித்திறக் குறைவான; கிளர்ச்சியற்ற; துன்பமுணராத; ஆரமைதியுடைய, அசைக்க முடியாத வீறமைதி வாய்ந்த.

impaste', v. பசைப்பொருளில் பொதி; பசைபோன்ற பொருளில் பதித்துவை; பசைக் களிம்பாக்கு; வண்ணச்சாயங்களை அப்பிச் சாயம் தீட்டு.

impas'to, n. திண்சாயப்பூச்சு, கெட்டியாக வண்ணச்சாயம் அப்பிய நிலை.

impa'tience, n. பொறுமையின்மை, பொறுமையற்ற விரைவு; அமைவின்மை, படபடப்பு; சகிப்பின்மை.

impa'tient, a. பொறுமையற்ற; பதற்றமான, மன அமைதியற்ற; சகிப்புத்தன்மையற்ற; ஆத்திரமான, அமைதியற்ற தன்மையில் ஆர்வமுற்ற.

impawn', v. அடகுவை; ஈடாகவை, உறுதிக்காப்பாக அளி.

impayable, (பிர.) a. விலைமதிப்பற்ற.

impeach', v. உச்சஉயர் பேரவை மன்றத்தில் நிறுத்தி அரசுப் பகைமைக் குற்றஞ்சாட்டு; பேரவைப் பொதுமன்றத்தின் சார்பாக உயர்மன்றத்தில் அரசியல் உயர்பணியாளர்மீது குற்றஞ் சாட்டு; மன்றச்சான்றுகி உடன்குற்றவாளிமீது குற்றம் தாக்கு; குறைகாண், இழித்துரை, மதிப்புக்குறைப்படுத்து.

impeach'able, a. குற்றத்துக்கிடமான, குறைகாணத்தக்க.

impeach'ment, n. மன்பகைக் குற்றச்சாட்டு; அரசியல் குற்றச்சாட்டு, பழிப்பெதிர்ப்பு, குற்றத்தாக்குதல்.

impecc'able, a. பழிக்கிடந்தராத, மாசற்ற, குற்றமில்லாத; குறையற்ற.

impecun'ious, a. கையில் பணமில்லாத, பணமுடைப்பட்ட.

imped'ance, n. (மின்.) மாற்று மின்னோட்டத்துக்கு ஏற்படும் புறத்தோற்றத்தடை.

impede', v. தடைசெய்; முட்டுக்கட்டையிடு, தாமதப்படுத்து.

imped'iment, n. தடை, இடர்ப்பாடு, குறை; (தொ.) impediment in one's speech, திக்கிப்பேசுதல், தெற்றுவாய்.

impel', v. உந்துவி, முன்னேறச்செய், தூண்டு; இயக்கு, செலுத்து, ஓட்டு; கட்டாயப்படுத்திச் செய்வி.

impend', v. தொங்கு, ஊசலாடு; அச்சுறுத்தும் நிலையில் இரு; எக்கணமும் நிகழஇரு; வரஇரு, நடைபெற இரு.

impen'etrable, a. ஊடுருவிச்செல்ல இடந்தராத, துளைக்க முடியாத; அறிய முடியாத, ஆழங்காண முடியாத, கருத்தேற்கும் இயல்பற்ற, முட்டாளான; (மெய்.) இட இயல்பு வகையில் ஒருங்கு இருபொருள் புகுந்திடப்பெறமுடியாத.

impen'etrate, v. ஆழ்ந்து ஊடுருவு, நுழை; உற்றறி.

impen'itent, a. பிழைக்கிரங்காத, கழிவிரக்கமற்ற; தீமையில் தோய்ந்து கல்மனப்பட்ட.

impe'rative, n. (இலக்.) வினையின் ஏவல்வடிவம்; a. கட்டளையிடுகிற, அதிகாரமான; அவசரமான; தவிர்க்க முடியாத; (இலக்.) ஏவலைக் குறிக்கிற.

imperat'or, (ல.) n. (வர.) பண்டை ரோமாபுரியில் தளபதி, வெற்றியுடன் திரும்பும் படைத்தலைவர்; சக்ரவர்த்தி, பேரரசர்.

impercep'tible, n. புலப்படா நுண்பொருள்; a. புலனால் அறியப்படமுடியாத; உணரமுடியாத; காணப்பட முடியாத, புலப்படாத; சிறு அளவான, மிகநுட்பமான; நுண்ணியலான.

impercip'ient, a. புலனறிவிற் குறைபாடுடைய.

im'perence, n. கல்லா ஆணவம், மடமைத் துணிவு.

imperf'ect, n. (இலக்.) முடிவுறுநிலை குறித்த வினைச்சொல்லின் காலப்படிவம்; வினையின் முடிவுறு இறந்தகாலம்; a. குறைபாடான, நிறைவுறாத; குற்றமுள்ள; (இலக்.) வினைச்சொற் காலப்படிவ வகையில் முடிவுறுநிலை குறித்த; (தொ.) imperfect tenses, (இலக்.) முடிவுறு நிலைகுறித்த வினைச்சொற் காலங்கள்.

imperfec'tion, n. குறைபாடு; குற்றம், தவறு; கறை, மாசு, நிறைவுறுநிலை.

imperf'orate, a. துளையற்ற, துளையிடப்படாத; அஞ்சல் தலை வகையில் துளைவரியற்ற; அஞ்சல்தலை வரித்தாள் வகையில் துளைவரியிடப்படாத; (உள்.) இயல்பான புழைகள் இல்லாத.

imper'ial, n. கீழுதட்டின் அடிப்புறத் தாடிப்பகுதி; மோட்டிலிடத்தக்க மூடைப்பெட்டி; ருசிய தங்க நாணயம்; a. பேரரசுக்குரிய; பிரிட்டனின் மைய அரசைச் சார்ந்த; பேரரசைச் சார்ந்த; ஏகாதிபத்தியஞ்சார்ந்த; உச்சஉயர் அதிகாரமுடைய, தனிமுதல் உரிமையுடைய; மாட்சிமை மிக்க, மேன்மை தங்கிய; பகட்டழகுடைய; சிறந்த; பிரிட்டனில் வாணிக அளவைகளின் வகையில் மைய ஆட்சியின் சட்டவரம்புக் கட்டளைப் பட்ட பகுஅளவையுடைய; தாள் வகையில் 22 × 32 அங்குல அளவுடைய; (தொ.) imperial federation, பேரரசு கூட்டுக் குழு; Imperial Institute, பிரிட்டனின் பேரரசு நாடுகளிடையே வாணிகத்தொடர்புகளுக்குரிய இலண்டனிலுள்ள கூட்டிடம்; imperial preference, பேரரசு நாடுகளுக்குரிய சலுகை, பிரிட்டனின் பேரரசுக் கூட்டிணைவு நாடுகளிடைப்பட்ட சரக்குகளுக்குக் குறைந்த வரி விதிக்கும் முறை.

imper'ialism, n. சக்ரவர்த்தியின் ஆட்சி; பேரரசு ஆட்சி முறை; பேரரசுத் தன்மை, பேரரசுக் கோட்பாடு; பிரித்தானியப் பேரரசின் பல்வேறு பகுதிகளின் போர்ப்பாதுகாப்பு உள்நாட்டு வணிகம் முதலியவற்றிற்கான கூட்டிணைப்பு; குடியேற்ற நாடுகளால் வரும் வளம் பற்றிய நம்பிக்கை.

imper'ialist, *n.* பேரரசின் ஆதரவாளர்; பேரரசுக் கோட்பாட்டு ஆதரவாளர்; (வர.) செர்மன் பேரரசரின் ஆட்சியை ஆதரிப்பவர்; பிரித்தானிய ஏகாதிபத்தியவாதி, ஏகாதிபத்திய ஆதரவாளர்.

impe'ril, *v.* இடுக்கணுக்கு உள்ளாக்கு, இடர்ப்பாட்டுக்கு உட்படுத்து.

imper'ious, *a.* அதிகாரமனப்பான்மையுள்ள; மேலாதிக்கமிக்க தொனியையுடைய; விருப்பான, இறுமாப்புவாய்ந்த; கட்டளையிடுகிற; தவிர்க்கமுடியாத; அதிரடியான, இமைக்கப் பொறுத அவசரமுடைய.

impe'rishable, *a.* அழியாத, அழிவில்லாத.

impe'rium, (ல.) *n.* கட்டற்ற வல்லாட்சி; மேனிலைப் படைத்துறை ஆட்சி; பேரரசு; (தொ.) *imperium in imperio*, (ல.) வல்லாட்சிக்குள் ஒரு வல்லாட்சி.

imperm'anent, *a.* நிலையற்ற, நிலைத்திராத, நிலையாமையுடைய.

imperm'eable, *a.* ஊடுருவ இடந்தராத, துருவிச்செல்ல முடியாத; (இய.) நீரியற்பொருள்கள் கடந்து செல்லவிடாத.

impermiss'ible, *a.* இசைவளிக்கத்தகாத, ஒப்புதலளிக்க இயலாத.

imperscrip'tible, *a.* எழுத்து மூலமான ஆணைபெறாத.

impers'onal, *a.* ஆளைக்குறிக்காத, பண்புகுறித்த; (இலக்.) ஆட்சார்பற்ற; தனி மனிதரைச் சுட்டாத; பொதுமுறையான; (இலக்.) வினை வகையில் வினைமுதல் சுட்டாத, பொதுச்சுட்டான.

impers'onate, *v.* உருவகப்படுத்திக்காட்டு; உருமேற்கொண்டு செயலாற்று; நடித்துக்காட்டு; பாகம் நடி; ஆள்மாருட்டஞ் செய்.

impersona'tion, *n.* ஆள்மாருட்டம்.

imperson'ify, *v.* பண்புருவகப்படுத்து, பண்பைப் பண்பியாக உருவகஞ் செய்; உருவகஞ் செய், மனித இயல்பு ஏற்றி உரை.

impert'inence, *n.* மதிப்பின்மை.

impert'inent, *a.* தகாத, முறைகெட்ட, திமிரான; துடுக்குத்தனமிக்க; மட்டுமதிப்பற்ற, வரம்புகடந்த; தகாத்தலையீடான; பொருத்தக்கேடான; முட்டாள்தனமான.

imperturb'able, *a.* எளிதில் அமைதி குலையாத, அசையா அமைவுறுதி வாய்ந்த.

imperv'ious, *a.* புக வழியளிக்காத, துளைக்கமுடியாத; செவி வழி நுழைய இடங்கொடாத; மூளையில் ஏற்றுக்கொள்ளாத.

impetig'o, *n.* கொப்புளத் தொற்றுநோய் வகை.

im'petrate, *v.* (இறை.) வேண்டிப்பெறு.

impet'uous, *a.* விசைவேகமான, வீசியடிக்கிற; கட்டுக்கடங்காத, வெறித்த, மூர்க்கமான; சிந்திக்காமல் செயலாற்றுகிற.

im'petus, *n.* தூண்டுவிசை; செயல்தூண்டுதல், தூண்டுதிறம்.

im'peyan phea'sant, *n.* தலைச்சூட்டும் வண்ண அழகுமிக்க இறக்கையும் கொண்ட வான்கோழிவகை.

im'pi, *n.* தென் ஆப்பிரிக்க இனத்தவரின் படைவீரர் தொகுதி.

impi'ety, *n.* இறைப்பற்றார்வமின்மை, தெய்வபக்தியற்ற நிலை; சமயத்துறை அவமதிப்பு; மதிப்பார்வக்கேடு; பணிவடக்கமின்மை.

impinge', *v.* மேல்வந்தழுத்து, மோது; தாக்கு, அடி; மோதுவி; மேற்சென்று பாதித்தல்செய்.

im'pious, *a.* கடவுட் பற்றில்லாத; சமயத்தை இகழ்கிற, கொடிய, பழிசார்ந்த.

im'pish, *a.* குறளி சார்ந்த; குறளி போன்ற; கூளியின் இயல்புடைய; குறும்புமிக்க; குறும்புசெய்து தொல்லை உண்டுபண்ணுகிற.

impit'eous, *a.* (செய்.) இரக்கமற்ற.

implac'able, *a.* எளிதில் மசியச்செய்ய முடியாத, இணக்குவிக்க இயலாத; தளர்த்தப் பெறமுடியாத; மாறாத, கனியாத; விட்டுக்கொடுக்காத, தணியாத.

implacen'tal, *a.* நஞ்சுக்கொடியற்ற, தொப்புட்கொடியில்லாத.

implant', *v.* நடு, நட்டுவை; செருகிவை; முளைத்து வளரச் செய்; பயிரிடு; நிலைநாட்டு; புகுத்து; பதியவை; ஆழ்ந்து செறியும்படி செய்.

implaus'ible, *a.* பொருத்தமாகத் தோற்றாத.

impledge', *v.* அடகுவை, அடைமானம் வை.

im'plement, *n.* கருவி, துணைச்சாதனம், தட்டுமுட்டுப் பொருள்; *v.* ஒப்பந்தத்தை நிறைவேற்று; செயல்முற்றுவி, செயல்துறை நிறைவுசெய்.

im'plements, *n. pl.* துணைக்கருவிகளின் தொகுதி, கருவி கலக் கோப்பு.

imple'tion, *n.* நிறைத்தல், நிரப்புதல்; நிறைவு, முழுமை.

im'plicate, *n.* குறிப்பாகச் சுட்டப்பட்ட பொருள்; *v.* சிக்கவை, பின்னிக்கொள்ளச் செய்; பாதிக்கச்செய்; சிக்கலாக்கு; குறிப்பாகச்சுட்டு; உய்த்துணரும்படி சொல்.

impli'cit, *a.* பொருள் தொக்கி நிற்கிற; உள்ளடக்கமான; (தொ.) implicit faith, மட்டுமாற்றங்களற்ற முழுநிறை நம்பிக்கை, ஐயுருப் பற்றுறுதிப்பாடு; திருச்சபை ஏற்பிலே அடங்கியுள்ள நம்பிக்கை, ஏற்ற திருச்சபை மூலமாகவன்றித் தனி மனிதன் தானே நாடி அனுபவத்தால் பெறாத நம்பிக்கை.

implore', *v.* கெஞ்சிக்கேள், மன்றாடு, இரந்து வேண்டு.

implor'ingly, *adv.* வற்புறுத்திக் கெஞ்சி, மன்றாடி.

impluv'ium, (ல.) *n.* அங்கணம், பண்டை ரோமரின் கட்டட நடுமுற்றத்தில் மோட்டு நீரைச் சேரவாங்கும் தொட்டிக்கட்டு.

imply', *v.* குறிப்பாகச் சுட்டு, பொருள்தொக்கியிருக்கச் செய்; மறைமுகமாகக் குறிப்பிடு; சூழ்ச்சித்திறம்படக் கூறு.

impold'er, *v.* கடலிலிருந்து நிலம் மீட்டுப்பெறு.

impol'icy, *n.* மோசமான செயற்கோட்பாடு, கால இடச் சூழலுக் கொவ்வாநிலை.

impolite', *a.* நடைநயமற்ற, வணக்க இணக்கமற்ற, மரியாதையில்லாத.

impol'itic, *a.* செயல்துறை அறிவு நயமற்ற, ஏற்பறிவற்ற; செயல் நயமறியாத; கால இடச்சூழலுக்கு ஒவ்வா நிலையுடைய.

imponderabil'ia, (ல.) *n. pl.* = imponderables.

impon'derable, *n.* கணிக்க முடியாதது, கணக்குக் கடந்தது, சில்லறையானது; *a.* (இய.) பளுவற்ற, இலேசான, கனமில்லாத; அளவிடமுடியாத.

impon'derables, *n. pl.* கணிக்கமுடியாதவை, கணக்குக் கடந்தவை; கணிக்க முடியாக் கூறுகள், தெரியவராக் காரண நிலைக் கூறுகள்; சிறு சில்லறைச் செய்திகள்.

impon'ent, *n.* கடமை முதலியவற்றைச் சுமத்துபவர்; *a.* கடமை முதலியவற்றை விதிக்கின்ற, கடமை சுமத்துகிற.

im'port[1], *n.* உட்பொருள், தொக்கு நிற்கும் கருத்து; உட்கருத்து, சுட்டுப்பொருள்; முக்கியத்துவம், சிறப்புக்கூறு; இறக்குமதி.

import'[2], *v.* இறக்குமதி செய்; பொருள்சுட்டு, பொருள் குறிப்பிடு, பொருள்கொள்; தெரிவி, தெரியப்படுத்து; நலங்களைப் பாதித்தல் செய்; முக்கியத்துவமுடையதாக இரு.

import'ance, *n.* முக்கியத்துவம்; பெருமை, சிறப்பு; தனி மனிதனின் மதிப்பு; பெருமைத்தனம், பகட்டாரவாரம்.

import'ant, *a.* முக்கியமான, முக்கியத்துவம் வாய்ந்த; பெரும்பயன் விளைவிக்கிற; பகட்டாரவாரமுள்ள, பகட்டான, பெருமையான.

imports', *n. pl.* இறக்குமதிச் சரக்குகள்.

import'unate, *a.* விடாக்கண்டனான, ஓயாது வற்புறுத்தலாகக் கெஞ்சிக் கேட்கிற; விடாப்பிடியான; மீண்டும் மீண்டும் நெருக்கித் தொந்தரவு செய்கிற; அவசரப்படுத்தி நெருக்குகிற.

importune', *v.* இடைவிடாமல் இரந்துகேள், வற்புறுத்திக் கெஞ்சிக் கேள், தொடர்ந்து மன்றாடு.

importun'ity, *n.* விடாத்தொந்தரவு.

impose', *v.* சட்டக்கோப்புச்செய், அச்சுக் கோக்கப்பட்ட உருக்களை இருப்புச்சட்டத்தில் வைத்துப் பொருத்தி அமை; வரி சுமத்து; வலிந்து கடமை ஏற்கச்செய்; பணிகளைச் செய்யும்படி ஏற்பி; பொறுப்புக்களை ஒப்படை; போலிச்சரக்குகளைக் கொடுத்து ஏய்; ஏமாற்று; தோற்றத்தால் கவர்ச்சிக்கு உட்படுத்து; பண்புத் திறங்களால் ஆட்கொள்ளு.

imposi'tion, *n.* சுமத்தீடு; விதிப்பு; வரி; தீர்வை; சுமை; ஏமாற்றுச் செயல்; பள்ளிக்கூடத்தில் தண்டனையாக விதிக்கப்பட்ட கடமை வேலை; திருச்சபைப் பணி அமர்த்து வினையில் கையமர்த்துதல்.

imposs'ible, *a.* செயல்கூடாத; இயலாத, நடக்கமுடியாத; உண்மையாக நடந்திருக்க முடியாத; முற்றிலும் பொருத்தமற்ற; எவ்வகையிலும் ஒத்துவராத, இணங்கி நடத்த முடியாத; எளிதாக இல்லாத, வசதியில்லாத; ஒத்துக்கொள்ள முடியாத, மிகு மோசமான.

im'post[1], *n.* (வர.) வரி; கடமை; திறை, கப்பம்.

im'post[2], *n.* (க-க.) மேல்வளைவைத் தாங்கும் தூணின் மேற்பகுதி.

impos'thume, *n.*=impostume.

impos'tor, *n.* ஏமாற்றுகிறவர், வஞ்சகர், மோசக்காரர்.

impos'tume, *n.* சீக்கட்டியபரு; கேடுவிளைவிக்கும் பகுதி.

impos'ture, *n.* ஏமாற்று, மோசடி, வஞ்சகம்.

im'potent, *a.* செயலற்ற, வலுவற்ற; ஆற்றலற்ற; செயல்வகையற்ற; முதுமையுற்ற, தளர்ந்த; ஆண் தன்மையற்ற.

impound', *v.* கால்நடைகளைப் பட்டியில் அடை; மூடிவை; சிறைப்படுத்திவை; சட்டப்படி உரிமையைத் தன்வயப்படுத்திக்கொள், சட்டப்படி உடைமைப் பொருளாகக் கொள்; பறிமுதல் செய்.

impov'erish, *v.* வறுமையாக்கு, ஏழ்மையாக்கு; வலுக்குறையச்செய்; வளங்குறை.

imprac'ticable, *a.* செயல்முறைக்கொவ்வாத; செயற்படுத்த இயலாத; வைத்துநடத்த இயலாத; சமாளிக்கமுடியாத; செய்ய முடியாத; பயனற்ற; பாதைகள் வகையில் செல்வதற்கரிதான.

im'precate, *v.* சாபமிடு, பழித்துரை, கண்டி.

impreca'tion, *n.* சாபம்.

impreg'nable, *a.* கோட்டை வகையில் கைப்பற்றமுடியாத வலிமையுள்ள; தாக்குதலுக்கு அசையாத.

impreg'nate, *a.* சினைப்படுத்தப்பட்ட, கருவுறச்செய்யப்பட்ட; செறிவுற்று வளப்படுத்தப்பட்ட; *v.* சினைப்படுத்து, கருவுறச்செய்; செறிவி, திண்ணிறை வாக்கு, ஏற்கக்கூடிய அளவுகல; (உயி.) கருப்பொலிவுறுத்து; பண்புதோய்வித்து வளப்படுத்து.

impresar'io, *n.* பொதுக்கேளிக்கை விழாக்கள் ஏற்பாடு செய்பவர்; இசைநாடக மேலாள்; இசையரங்குச் செயலாளர்.

imprescrip'tible, *a.* வரையறைகட்கு உட்படாத, சட்டப்படி அகற்ற முடியாத.

im'press[1], *n.* பொறிப்பு, முத்திரை; பொறிப்புச் சின்னம்; தனிச் சிறப்பான அடையாளம்.

impress'[2], *v.* அழுத்து, பதியச் செய், குறியிடு, அடையாளம் செய்; முத்திரையிடு; அச்சில் பதி; திறம்படக் கவர்ச்சி செய்; ஆழ்ந்து பண்புருவாக்கு; மனத்திற் பதியவை.

impress'[3], *v.* நிலப்படை கடற்படைத்துறைகளில் சேவை செய்யும்படி வற்புறுத்து; பொதுச்சேவைக்காகக் கைப்பற்று; விவாதத்தில் இணைத்துப் பயன்படுத்திக்கொள்.

impre'ssion, *n.* பொறித்தல், பொறிப்பு; பொறித்த அடையாளம்; முத்திரை; அச்சுப்பதிவு; படச்செதுக்குப்பாளப் பதிவு; பதிப்பு, ஒருதடவை பதிக்கப்பட்ட ஏடுகளின் தொகுதி; மறுபதிப்பு, பதிப்பின் மாற்றம்படாத மறு அச்சுப் பதிவு; கருத்துப்பதிவு, கருத்துத்தடம், கருத்துவிளைவு; உணர்ச்சி விளைவு; எண்ணப்பதிவு, மனத்தில் ஏற்பட்ட கருத்து; தெளிவற்ற நம்பிக்கை, உறுதியற்ற கோட்பாடு.

impre'ssionable, *a.* எளிதில் உள்ளத்தில் எதுவும் பதிகிற; எளிதாகப் பிறர் கருத்தேற்றுத் தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மையுடைய; ஏற்கும் இயல்புடைய.

impre'ssionism, *n.* பாவியல் கலைத்திறம், விரிநுணுக்கக் கூறுகளில்லாமலே பொதுமைப்பாவமும் தொனியும் உண்டு பண்ணும் ஓவிய இலக்கியக் கலைகளின் பண்பு.

impress'ive, *a.* ஆழ்ந்த உணர்ச்சியைத் தூண்டத்தக்க, மனக்கிளர்ச்சி உண்டாக்குகிற, கவர்ச்சியூட்டி ஆட்கொள்ளத் தக்க, மனத்தில் ஆழ்ந்து பதியத்தக்க.

im'prest, *n.* அக்கறைத்தொகை, அரசாங்க வேலைக்காக முன் பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை, அச்சாரம்.

imprimat'ur, (ல.) *n.* அச்சிடுவதற்குரிய அரசியல் இசைவுரிமை; இசைவாணை, செயலுரிமை இணக்கம்.

imprim'is, (ல.) *adv.* முதலாவதாக, முதலிடத்தில்.

im'print[1], *n.* பெயர்விவரப் பொறிப்பு, அடையாள முத்திரை.

imprint'[2], *v.* முத்திரையிடு, மனத்தில் ஆழ்ந்து படியச்செய், கருத்தில் பதியச்செய்.

impris'on, *v.* சிறைப்படுத்து, காவலில் அடை; கட்டுப்படுத்து, எல்லைக்குட்படுத்து, அடைத்துவை, மூடி வை.

improb'able, *a.* இயல்பாக நிகழக்கூடாத, நடைபெற்ற உண்மையாயிருக்க முடியாத, பொருத்தமற்ற, நம்புதற்கரிய.

improb'ity, *n.* நாணயமற்ற தன்மை, நேர்மையின்மை; வஞ்சகம், மோசம்.

impromp'tu, *n.* முன்னேற்பாடின்றி ஆற்றப்படுகிற பேச்சு; உடனடி நகைச்சுவைத்துணுக்கு; முன்முயற்சியின்றி உருவாக்கப்படும் கட்டுரை; உடனடி நடிப்புப்பகுதி; திட்டமற்றதுபோல் அமைக்கப்படும் இசை அமைப்பு; *a.* முன்னேற்பாடின்றி ஆற்றப்படுகிற; உடனடிச் செயலான; முன்முயற்சியற்ற; *adv.* முன்னேற்பாடின்றி, உடனடிச் செயலாக, முன்முயற்சியில்லாமல், தற்கணமாக.

improp'er, *a.* நேரல்லாத, தகுதியற்ற, தவறான, ஒழுங்கில்லாத; (தொ.) improper fraction, தகாப்பின்னம், முழுமை கனிந்த மேனிலைக் கீழ்வாய் எண்.

improp'riate, *v.* திருச்சபை மானியத்தைக் கூட்டவைக்கு அல்லது தனிப்பட்டவருக்குரிய சொத்துடன் இணைத்துக் கொள்; திருச்சபை வருவாய் உடைமைகளைச் சமயத்துறை சாராப் பொதுத் துறையினர் கையில் ஒப்படை.

improp'riator, *n.* திருச்சபை மானியம் அல்லது மகன்மை ஒப்படைக்கப் பெற்றவர்.

impropri'ety, *n.* தவறான நடைமுறை; தகுதியின்மை; ஒழுங்கின்மை.

improv'able, *a.* திருந்தத்தக்க, செம்மைப்படத்தக்க; மேம்பாடடையத்தக்க; வேளாண்மைக்குகந்த நிலையிலுள்ள.

improve', *v.* திருத்து; செம்மைப்படுத்து; மேம்பாடடையச் செய்; முன்னேற்று; திருத்தங்கள் செய்; நிலத்தைச் சீர் திருத்து; நிலம் பண்படுத்தி மதிப்புயர்த்து; கட்டிடத்தை மேலும் கட்டி மேம்படுத்து; விலை உயர்த்து; திருந்து; மேம்படு; முன்னேறு; மேலும் சிறந்து வளர்; தாண்டி மேம்பாடு காண்; நன்கு பயன்படுத்திக்கொள்; (தொ.) improve away, திருத்தியமைப்பதன்மூலம் நீக்கிவிடு; improve the occasion, improve the opportunity, தறுவாயை நன்கு பயன்படுத்திக்கொள்; improve upon, மேலும் சிறப்பாகச் செய், சிறப்பைத் தாண்டிப் பெருஞ்சிறப்புக் காண்.

improve'ment, *n.* திருத்துதல்; திருந்தம், மேம்பாடு, முன்னேற்றம்; மேம்பாடு தரும் மாறுபாடு; திருந்தம்பெற்ற செய்தி; திருந்திய பொருள்; திருத்தத்துக்கு உதவுகிற கூறு; மேம்பட்ட புதிய மாற்றுப்பொருள், மேம்பட்ட பகரப் பொருள்; மதிப்புயர்த்தும் மாறுபாடு; விரிவுபடுத்தும் புதுக் கூறு.

improv'er, *n.* திருந்துபவர்; திருத்துபவர்; மேம்பாடடைபவர்; தேர்ச்சி நாடியவர், தன் திறமைப்பயிற்சி நாடிக் குறை ஊதியத்துடனோ ஊதியமில்லாமலோ உழைப்பவர்.

improv'ident, *a.* எதிர்காலத்தைப்பற்றி அக்கறையில்லாத; வாழ்க்கை பற்றிய முன் கருதலற்ற ; சிக்கனமாயில்லாமல் வீண்செலவு செய்கிற ; செட்டற்ற.

improv'isator, *improvisator'e*, (இத்.) *n.* முயற்சியின்றித் திடீரென்று செய்யுள் இயற்றுபவர்.

improvise', *v.* செய்யுள் இசை முதலியவற்றின் வகையில் முயற்சியின்றித் திடீரென்று ஆயத்தம் செய் ; திடீரென்று ஏற்பாடு செய்.

improvvisator'e, (இத்.) *n.*= improvisator.

imprud'ence, *n.* வருவதுணராமை, முன்னறிவின்மை, தன் மதி கேடு, சூழ்வகை அறியாமை, அவிவேகம்.

imprud'ent, *a.* செயல்வகையற்ற, விவேகமில்லாத; முன்னறிவற்ற, எதிரது அறியாத; செயலறிவற்ற, முன்பின் பாராது செயலாற்றுகிற ; காரியத் திறமையற்ற; சிக்கன மதியற்ற.

im'pudence, *n.* வெட்கங்கெட்டதன்மை ; திமிரான அவமதிப்புப் பண்பு.

im'pudent, *a.* வெட்கமில்லாத, நாணங்கெட்ட ; ஆணவமான; முரட்டுத்தனமான ; அமைவடக்கமற்ற, மரியாதையற்ற ; துடுக்கான தன்மையில் அவமதிக்கிற.

impudi'city, *n.* வெட்கங்கெட்டநிலை, நாணமற்றதன்மை, அடக்கமற்ற இயல்பு.

impugn', *v.* பழிச் சொற்களால் தாக்கு ; தவறென்று வினு எழுப்பு ; குறைகூறித் தடங்கல் செய் ; மறுத்துப் பேசு, எதிர்த்து நில்.

impu'issant, *a.* வலிமையற்ற, ஆண்மையற்ற, வலுவற்ற, மெலிந்த.

im'pulse, *n.* தூண்டுதல் ; தூண்டுவிசை, உந்துவேகம் ; தாக்குவிசை ; தூண்டுவிசையின் விளைவு, உந்துவிசையாற்றல்; திடீரியக்கம்; கணநேர ஆற்றல்; தள்ளல்; தாக்கு; அடி ; நாடி நரம்புகளில் அலை எழுப்பும் புறத் தூண்டுதல் ; மனத்தின் புறத்தூண்டுதல்; திடீர் உணர்ச்சி; மனக்கிளர்ச்சி; ஆராயாத் திடீர்ச்செயல்.

impul'sion, *n.* தூண்டுதல், தள்ளுதல் ; மனத்தூண்டுதல், உள் உணர்ச்சி ; தூண்டு விசை.

impul'sive, *a.* திடீர் எழுச்சிக்கு ஆளாகும் இயல்புடைய ; திடீர் உணர்ச்சிகளுக்கு ஆட்படுகிற; திடீர்த் தூண்டுதலான, திடீர் உணர்ச்சி காரணமான.

impun'ity, *n.* தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமை; விளைவுகளிலிருந்து விடுபாட்டுறுதி ; முழுநிறைக் காப்புறுதி.

impure', *a.* அழுக்கான; தூய்மையற்ற, துப்புரவற்ற; புனித நிலை திரிந்த, திருநிலைகெட்ட ; ஒழுக்கமற்ற ; ஒழுக்கத் துறையில் கறைப்பட்ட, கற்பொழுக்கங் கெட்ட ; அயற் பொருள் கலப்புள்ள, கலப்படமான ; ஒரு வண்ணத்தோடு பிறிதொரு வண்ணக் கலப்புடைய.

impur'ity, *n.* தூய்மைக்கேடு, மாசு ; கழிவுப்பொருள்.

impute', *v.* செயல்காரணமாகச் சுட்டிக்காட்டு, பண்புக்குரியவராகக் குறித்துக்காட்டு; காரணமாகக் குறித்துரை; (இறை.) நலந்தீங்குகளுக்கு வேறொருவரைப் பகராளாகச்சுட்டு.

in, *a.* உள்நோக்கிய; உள்நோக்கிச் செல்கிற; *v.* உள்ளே எடுத்துச் செல் ; உள்ளடை, வளைத்து அடைப்புச் செய் ; உள்ளிடு, உள்வை ; அறுவடையாகச் சேகரி ; *adv.* உள்ளே ; உள்ளிடத்தில் ; உள் இருக்கும் நிலையில் ; வெளியே சென்றிரா நிலையில் ; வந்து சேர்ந்துள்ள நிலையில் ; உள்ளிடத்துக்கு ; உட்புறமாக ; உள்நோக்கி; உள்நோக்கி வருகிற; உடனுக மிகையாக; வழக்காற்றில் புதுமைப்பாணியாக; பணியேற்ற நிலையில் ; செயல் நிலையில் ; விளையாட்டில் ஆட்ட நிலையில்; உள்தொய்வாக; நன்கு வரிந்திழுத்து; ஈடுபடத்தக்க நிலையில்; ஈடுபட்ட நிலையில்; சிக்கிய நிலையில்; ஆர்வ நிலையில் ; அருகே : உள்ளின நோக்கி ; *prep.* இல், இடத்தில்; இடையில், நடுவில்; உள்ளே; எல்லைக்குள்; வாயில் கடந்து; உள்ளாக ; நடுவாக ; இடையே ; அருகே ; நெருங்கி ; சூழலில்; காலத்தில்; வேளையில்; கட்டத்தில்; ஏல்வையில்; வேளையிடையே ; செயலில் ; செயலிடையே ; முறையில் ; துறையில் ; ஊடாக ; வாயிலாகக் கொண்டு; பண்பில் ; பண்புகளிடையே; பண்புகாரணமாக; (தொ.) in and out, உள்ளும் புறமும், இங்குமங்கும் ; அடுத்தடுத்து வருவதும் போவதுமாக; முன்னும் பின்னும் ஊசலாடும் நிலையில் ; in as far as, in so far as, inasmuch as, என்ற அளவில் ; என்ற காரணத்தினுல்; in fact, in truth, மெய்யாக, உண்மையைச் சொல்லுமிடத்தில் ; in for, தொடர்புகொண்டு ; அக்கறை கொண்டு ; ஈடுபாடு கொண்டு; in for it, முற்றிலும் சிக்கி ; விடுபடமுடியா நிலையில் அகப்பட்டு ; in hot water, இக்கட்டில் சிக்கி, தொல்லையிற் பட்டு ; in itself, தனிப்பட்ட, தன்னிலையில் ; in order, ஒழுங்காக; in order to, in order that, வேண்டி, எதிர்நோக்கி, என்ற நோக்கத்துடன் ; in pursuance of, in search of, பின்பற்றி, தேடிக்கொண்டு ; ins and outs, முழு நுணுக்க விவரங்கள் ; in the darks, ஒளியின்றி ; எதுவும் புரியாமல் ; live in clover, கவலையற்று இன்புற்று வாழ் ; not in it, போட்டியில் கலந்துகொள்ளா நிலையில்.

inabil'ity, *n.* இயலாமை ; ஆற்றற்கேடு ; வகையின்மை.

in absen'tia, (ல.) *a.* ஆள்இலாநிலை நிகழ்வான ; *adv.* ஆள் இல்லா நிலையில்.

inacessibil'ity, *n.* எட்டாத்தன்மை ; அணுக முடியாமை.

inaccess'ible, *a.* எட்டாத ; புகமுடியாத ; அணுகமுடியாத; அடையமுடியாத, எய்த இயலாத, கிட்டாத.

inacc'uracy, *n.* சரிநுட்பக்கேடு ; தவறு.

inacc'urate, *a.* சரிநுட்பமற்ற; சரியாக இல்லாத ; பிழைபாட்டுக்கு இடந்தருகிற ; தவறுன.

inac'tion, *n.* செயலின்மை, சோம்பல் ; உயிரற்ற தன்மை, கிளர்ச்சியற்ற நிலை.

inadaptabil'ity, *n.* சூழலிசைவின்மை, சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ளக்கூடிய தன்மை இல்லாமை.

inad'equacy, *n.* போதாமை ; குறைபாடு.

inad'equate, *a.* போதாத, பற்றுத ; தேவைக்குக் குறைந்த.

inadhes'ive, *a.* ஒட்டும் இயல்பற்ற.

inadmiss'ible, *a.* ஒத்துக்கொள்ளக்கூடாத, ஏற்பளிக்கத்தகாத, அனுமதிக்கக்கூடாத.

inadvert'ence, inadvert'ency, *n.* கவனக்குறைவு.

inadvert'ent, *a.* கவனக்குறைவுடைய ; புறக்கணிக்கும் இயல்புடைய.

inal'ienable, *a.* மாற்றிக்கொடுக்க இயலாத, பராதீனப் படுத்தமுடியாத.

inal'terable, *a.* மாற்றமுடியாத ; மாறுத.

inamora'ta, (இத்.) *n.* காதலி, காதலணங்கு.

inamora'to, (இத்.) *n.* காதலன்.

inane', *n.* வெறும்பாழ், பாழ்வெளி, வெற்றிடம் ; *a.* ஒன்றுமற்ற ; வெறுமையான ; வெற்றிடமான ; உணர்ச்சியற்ற ; அறிவற்ற ; பண்புத்திட்பமற்ற ; சாரமற்ற ; (தொ.) the inane, எல்லையற்ற பெருவெளி.

inan'imate, *a.* உயிரற்ற, சடப்பொருளான ; உயிர்வளம் இல்லாத, உயிர்வாழ்வு அற்ற ; கிளர்ச்சியற்ற ; உணர்ச்சியற்ற ; மந்தமான ; (தொ.) inanimate nature, உயிர் செடிகொடி நீங்கலான இயற்கைப் பரப்பு.

inani'tion, *n.* வெறுமை, பட்டினி, ஊட்டக்குறை.

inan'ity, *n.* வெறுமை ; மூளை வெறுமை ; மனவறுமை ; அறிவிலாச் சிற்றுரை.

inappeas'able, *a.* நிறைவுபடுத்த இயலாத ; தணிக்க முடியாத ; அமைதிப்படுத்த இயலாத.

inapp'etence, *n.* விருப்பின்மை, அவாவின்மை ; சுவைப் பொருத்தக்கேடு.

inapp'licable, *a.* பொருத்தமற்ற, இணைவொவ்வாத.

inapp'osite, *a.* தகுதியற்ற, உரியதல்லாத, உதவாத ; இடத்திற்கு ஒவ்வாத.

inappre'ciable, *a.* அற்பமான ; புலப்படாத ; பாராட்டத் தகுதியற்ற.

inapprecia'tion, *n.* போற்றாமை, நலம்பாராட்டத் தவறுதல்.

inapprehen'sible, *a.* புலன்களால் பற்றப்பட இயலாத ; அறிவாற்றல் சென்றெட்ட முடியாத.

inapproach'able, *a.* அணுகமுடியாத, நெருங்க இயலாத, அடையமுடியாத.

inapprop'riate, *a.* பொருத்தமற்ற, தகுதியற்ற ; ஒவ்வாத.

inapt', *a.* தகுதியற்ற ; திறமையற்ற ; பொருந்தாத.

inarch', *v.* கிளையைச் செடியினின்று வெட்டாமல் வளைத்துப் பதியம் போடு.

inarm', *v.* (செய்.) தழுவு, கட்டியணை.

inartic'ulate, *a.* இணைப்பில்லாத, பூட்டுப்பொருத்தப்படாத; (பே-வ.) தெளிவாய்ப் பேசும் ஆற்றலற்ற ; நன்கு ஒலிக்க முடியாத ; ஊமையான.

in arti'culo mortis, (ல.) *adv.* இறந்தவுடனே, உயிர் பிரிவுற்ற கணத்திலேயே.

inartifi'cial, *a.* கலைத்திறனற்ற, சுவைநயமற்ற, அழகற்ற, திறனற்ற, இயற்கையான ; கவடற்ற, சூதற்ற.

inartis'tic, *a.* கலைக்கொள்கையைப் பின்பற்றாத ; கலைத் திறனற்ற.

inasmuch', *adv.* என்ற காரணத்தினால்.

inatten'tion, *n.* கவனக்குறைவு, பராமுகம், அசட்டைப் படுத்துதல் ; பண்பிணக்கக்கேடு, நடைநயக்கேடு.

inaud'ible, *a.* கேட்க முடியாத, செவிப்புலனாகாத.

inaug'ural, *n.* தொடக்க விழாப்பேருரை; *a.* தொடக்கத்திற் குரிய ; தொடக்க விழாவுக்குரிய.

inaug'urate, *v.* தொடங்கிவை, பணியமர்வுத் தொடக்கஞ் செய் ; விழாவினை முறையாற்றித் தொடங்கு ; கட்டிடம் முதலியவற்றைப் பொதுமக்களுக்குத் தொடங்கிவை ; முதன் முதல் காட்சிப்படுத்து.

inauspi'cious, *a.* தீயசகுனம் உடைய, நல்லெதிர்ப்பற்ற ; மங்கலமற்ற, தீயதான.

in'board, *a.* (கப்.) கப்பலின் பக்கங்களிடையே ; கப்பல் மையத்தில்.

in'born, *a.* இயல்பாயமைந்துள்ள ; உடன்பிறந்த ; உள்ளிருந்து தோன்றிய.

inbreathe', *v.* மூச்சு உள்வாங்கு; பண்பை ஈர்த்து உட்கொள்.

in'bred, *a.* இயல்பான, உடன் பிறந்த, இயற்கையாக உள்ளார்ந்த.

in'breeding, *n.* உட்குழு மண உறவு முறை ; இனத்தகப் பாலிணைவு முறை.

Inc'a, *n.* தென் அமெரிக்காவில் பெரு (Peru) என்ற நாட்டை ஸ்பானியர்கள் கைப்பற்றுவதற்குமுன் ஆட்சியில் இருந்த பேரரசர் ; பெரு நாட்டின் ஆளும் இனத்தவருள் ஒருவர்.

incal'culable, *a.* கணித்தற்கரிய, மிகப்பெரிய ; முன்னரே மதிப்பிட்டறிய முடியாத ; வரையறுத்துணர முடியாத ; திட்ப உறுதியற்ற, நிலை உறுதியற்ற.

in cam'era, (ல.) *a.* தனி மறைவான ; நீதிபதியின் உள்ளரங்கத்தில் நிகழ்கிற ; *adv.* தனி அரங்கில், நீதிபதியின் பொது மன்றத்திலிருந்து விலகித் தனியிடத்தில்.

incandesce', *v.* வெப்பத்தோடு ஒளிவிடு ; வெண்சுடர் ஒளி வீசி எரியச்செய்.

incandes'cence, *n.* வெள்ளொளி.

incandes'cent, *a.* வெண்சுடர் வீசி எரிகிற ; வெப்பத்தோடு ஒளிவிடுகிற; பளபளப்பாக ஒளிவீசுகிற, மின்விளக்கு முதலியவற்றின் வகையில் இழைகள் சூடாவதால் ஒளிவீசுகிற.

incanta'tion, *n.* மந்திரிப்பு ; மந்திர உச்சரிப்பு ; மந்திரம் ; மந்திர வாசகம்.

incap'able, *a.* திறமையற்ற, ஆற்றல் குறைபாடுடைய; மேற்கொள்ளும் தன்மையற்ற ; நிலை வகையில் இடங்கொடாத.

incapa'citate, *v.* தகுதியற்றதாகச் செய், தகைகேடு உண்டு பண்ணு, ஏலாமற் செய்.

incapa'city, *n.* திறமையின்மை, தகுதியின்மை ; சோர்வு ; வலுவின்மை ; சட்டப்படியான தகுதிக்குறைபாடு.

incar'cerate, *v.* சிறைப்படுத்து, அடைத்துவை.

incarn'adine, *a.* (செய்.) தசை நிறமுடைய, சாய வகையில் சதை வண்ணமுடைய, மிகச் சிவப்பான.

incarn'ate[1], *a.* தசையுருத்தாங்கிய ; உடலெடுத்த ; மனித உரு ஏந்திய ; பண்பின் கண்கூடான உருவமான ; *v.* தசை உருமேற்கொள் ; திருவுருக்கொள் ; மனிதப் பிறவியெடு ; திருவவதாரம் செய் ; கருத்துக்கு வடிவம் கொடு ; பண்பின் திருவுரு வாக்கு.

incarn'ate[2], *v.* incarnate[1] என்பதன் முற்றெச்ச வடிவங்களுள் ஒன்று.

incarna'tion, *n.* திருப்பிறப்பு மேற்கொள்ளுதல்; திருவவதாரம் ; மனித உருவேற்பு ; தசை உருவேற்பு ; பண்பின் திருவுரு, பண்புருவகம்.

incau'tious, *a.* ஆத்திரமுள்ள, முன்பின் பாராத ; துடுக்கான, சிந்தித்துச் செயலாற்றாத.

incen'diary, *n.* தீக்கொளுத்தி நெருப்பிட்டழிப்பவர் ; கலகக்காரர் ; எரியூட்டுக் குண்டு ; *a.* தீ மூட்டுகிற ; கலகஞ் செய்கிற ; கலகத்தைத் தூண்டிவிடுகிற ; உணர்ச்சிகளைக் கிளறுகிற ; சினமூட்டுகிற.

in'cense[1], *n.* நறுமணப்புகை; நறும்புகை எழுப்பும் பொருள்; சாம்பிராணி ; நறுமணம் ; புகழ்ச்சி, முகமன் ; *v.* நறும் புகையூட்டு, தெய்வ உருவங்களுக்கு நறுமணத் தூபம் இடு ; நறுமணம் பரவவிடு.

incense'[2], *v.* சினமூட்டு ; கிளறி விடு ; ஆத்திரமூட்டு.

in'censory, *n.* நறும்புகைக் கலம்.

incen'tive, *n.* செயல் தூண்டுதல் ; தூண்டுவிசை ; செயல் நோக்கம் ; *a.* தூண்டுகிற, செயலுக்கு அக்கறை ஊட்டுகிற.

incept', *v.* எம். ஏ. அல்லது டாக்டர் பட்டம் பெறத் தொடங்கு ; (உயி.) உள்வாங்கு, சினைகளை உள்ளடக்கு.

incep'tion, *n.* தொடக்கம், எம். ஏ. அல்லது டாக்டர் பட்டம் பெறுவதற்கான துவக்கம்.

incep'tive, *n.* துவக்க நிலை குறிக்கும் வினைச்சொல் ; *a.* முதலாவதான, தொடக்கத்திலுள்ள, துவங்குகிற ; துவக்கங் குறிக்கிற ; (இலக்.) துவக்கநிலை குறித்த ; (தொ.) inceptive verb, செயல் தொடக்கத்தைக் குறிக்கும் வினைச்சொல்.

incert'itude, *n.* ஐயப்பாடு, உறுதியற்றநிலை.

incess'ant, *a.* இடைவிடாத, ஓயாத, தொடர்ச்சியான, திரும்பத்திரும்ப வருகிற.

in'cest, *n.* முறைதகாப் புணர்ச்சி, தடை விதிக்கப்பட்ட அணுக்க உறவினரிடையேயான கலவி.

inces'tuous, *a.* முறைதகாப்புணர்ச்சி சார்ந்த, கலவி வகையில் தடைவிதிக்கப்பட்டுள்ள அணுக்க உறவினரிடைப் பட்ட.

inch[1], *n.* விரற்கடை, அங்குலம், அடியில் பன்னிரண்டில் ஒரு பகுதி ; சிறு அளவுக்கூறு ; மழைமானியில் ஓர் அங்குல உயரம் பெய்யும் மழை அளவு ; பாதரசப் பாரமானியில் ஓர் அங்குல உயரமுள்ள பாதரசத்தின் பளுவைச் சரிகட்டும் வளி மண்டல அமுக்கத்தின் அளவு ; *v.* அங்குலம் அங்குலமாக முன்னேறு, மெல்ல நகர் ; (தொ.) an inch of cold iron, உடைவாளின் குத்து ; by inches, சிறிது சிறிதாக ; படிப் படியாக; every inch, முழுதும், முற்றும்; flog person within an inch of his life, சாகாமல் சாகும்படி கசையடி கொடு.

inch[2], *n.* சிறு தீவு ; ஸ்காத்லாந்து நாட்டினையடுத்த சிறு தீவம்.

inch'es, *n. pl.* உடலுயரம்.

in'choate, *a.* துவங்கிய நிலையிலுள்ள; முதிராத, முற்றிலும் வளர்ச்சியுறாத : *v.* துவங்கு, தொடக்கிவை, தோற்றுவி.

in'cidence, *n.* வரி விழுப்பாடு, வரியின் வீழ்தகவு; பொருளின் சாய்தகவு; நிகழ்வின் கூடுநிலை; நேர் நிலை, பரப்பில் ஒளிக்கதிர் சென்று தொடும் இடம்; (கண.) விழ்தடம், தளத்திற் கோடு சென்று விழும்இடம்; (தொ.) angle of incidence, படுகோணம், விழ்தடத்தில் பரப்பின் செங்கோட்டுடன் தொடுகோடு கொள்ளும் கோணத்தொலைவு.

in'cident, *n.* நிகழ்ச்சி; குறிப்பிடத்தக்க தனிச்சிறப்பு நிகழ்ச்சி; இடை நிகழ்ச்சி; சிறு செய்தி; கிளைக்கதை; சிறு பண்பு; நாடகம் அல்லது செய்யுளின் தனிப்பட்ட செயல் நிகழ்ச்சி; (சட்.) உரிமை கடமைப்பொறுப்புக்களைச் சார்ந்த செய்தி, பண்ணை முதலியவற்றோடு இணைந்த உரிமை பொறுப்பு முதலியன; *a.* நிகழக்கூடிய; சார்ந்துள்ள; இயல்பாகத் தொடர்பு கொண்ட; (சட்.) உடனிணைந்த, தொடர்புள்ள; ஒளிக்கதிர் விழுகின்ற; கோடு சென்று தொடுகின்ற; இயங்கு படை சென்று தாக்குகின்ற.

inciden'tal, *a.* தற்செயலாக நிகழ்கிற; நிகழக்கூடிய; முக்கியமல்லாத, சிறப்பித்துக்கூறமுடியாத, சில்லறையான; இடைநிகழ்வான; வருநிகழ்வான; (தொ.) incidental colours, நிகழ்வுநேரம் நிலவாத புல உணர்வுகளால் உண்டான வண்ணக்காட்சி; incidental images, நிகழ்வுநேரம் நிலவாத புல உணர்வுகளால் உண்டாகும் உருக்காட்சி; incidental music, நாடகத்தின் செயலோடு இணைந்த இசை.

incin'erate, *v.* சுட்டு நீறுக்கு, எரித்துச் சாம்பலாக்கு, எரித்துவிடு.

incin'erator, *n.* எரி தொட்டி, நீற்றுலை.

incip'ience, incip'iency, *n.* தொடக்க நிலை, முதிரா நிலை.

incip'ient, *a.* தொடக்க நிலையிலுள்ள; முதிராத, புனிற்றிளமையான.

in'cipit, (ல.) *n.* தோற்றுவாய்; இங்கு தொடங்குகிறது.

incise', *v.* வெட்டு; செதுக்கு.

incis'iform, *a.* உளிப்பல் போன்ற, முன்பல் ஒத்த வடிவுடைய.

inci'sion, *n.* வெட்டுதல்; செதுக்குதல், அறுத்தல்; வெட்டு, கீறல்; வெட்டுப் பள்ளம், ஆழமான காயம்.

incis'ive, *a.* வெட்டுகிற, துளைத்துச் செல்லுகிற; ஆழமான வெட்டுக் காயம் உண்டுபண்ணுகிற; கடுந்தாக்குதலான, கடும் வசையான; அறிவுக் கூர்மையான.

incis'or, *n.* முன் வாய்ப்பல், உளிப்பல்.

incis'ure, *n.* வெட்டு, ஆழமான வெட்டுக்காயம், செதுக்குதல்.

in'citant, *n.* தூண்டுவது, கிளர்ச்சியூட்டுவது; கிளர்ச்சிப் பொருள்.

incita'tion, *n.* தூண்டுதல், கிளர்ச்சியூட்டுதல், தூண்டு விசை; செயற்காரணம்.

incite', *v.* தூண்டு, கிளறி விடு; செயல் தூண்டுதலளி.

incivil'ity, *n.* பணிவின்மை, வணக்க இணக்கமின்மை, முரட்டுத்தனம்.

in'civism, *n.* குடியுரிமைக் கேடு, பிரஞ்சுப்புரட்சிச் சார்பான பற்றுதல்.

in'-clearing, *n.* அகத்தீர்வு, பொருள் மனையின் கணிப்புத் தீர்வுக்குரிய பண முறித் தொகுதி.

inclem'ent, *a.* பருவநிலை வானிலைகள் ஒவ்வாத, கடுமையான, புயலார்ந்த; காற்றுமழை கலந்து அடிக்கிற.

inclin'able, *a.* சாய்க்கத்தக்க; சார்வான; சாய்வான; சார்தகவான, சாதகமான, துணைநலமான.

inclina'tion, *n.* சாய்வு, வாட்டம்; சரிவு; சார்தல், மனச்சார்பு, பற்றுகை; மனப்பற்று, விருப்பம்.

incline', *n.* சாய்வு தளம்; சரிவு; *v.* சாயச் செய்; சாய்; செங்குத்தான நிலையினின்று சரியச்செய்; வளை; குனி; சார்பு கொள்; மனவிருப்பங் கொள்; பற்றுதல் கொள்வி; (தொ.) incline one's ear, செவிகொடுத்துக்கேள்; மன விருப்பத்துடன் உற்றுக்கவனி, நாட்டங்கொண்டு கேள்.

inclined', *a.* சாய்ந்த, நாட்டங்கொண்ட; (தொ.) inclined plane, சாய்வு மட்டம்.

inclinom'eter, *n.* சாய்வு மானி, பூமியினுடைய காந்தத் தாக்குதலின் செங்குத்து அடர்த்தியைக் கணக்கிடுங் கருவி.

include', *v.* உள்ளடக்கு, உட்கொண்டிரு, உள்ளிணை; கவிந்திரு; உள்ளடங்கலாகக் கொள்.

inclu'sion, *n.* உட்படுத்துதல்.

inclus'ive, *a.* உள்ளடங்கலான, உட்கொண்ட, அகப்படுத்தி இணைந்த.

incog'nito, *n.* ஆளடையாளம் அறியப்படாதவர்; உருக்கரந்தியல்பவர்; ஒளிவுமறைவு, உருக்கரந்தியல்பு; இனமறியப்படாமை; அடையாளம் உணரப்படாமை; *a.* ஆளடையாளம் அறியப்படாத; உருக்கரந்தியல்கின்ற, மாறுவேடம் புனைந்த; பெயர் மாறுட்டமான; மாற்றுப் பெயரான, புனை பெயரான; *adv.* ஆளடையாளமறியப்படாமல், உருக்கரந்து, பெயர் மாறுட்டத்துடன், பண்பு மாறுட்டத்துடன், புனை பெயருடன், மாற்றுப் பெயருடன்.

incogn'izable, *a.* புலனுக்கெட்டாத, புலப்படுத்துணர முடியாத, அறிந்து கொள்ள முடியாத.

incogn'izant, *a.* அறியாத; தெரியாத; உணர்ச்சி நிலையற்ற.

incoher'ent, *a.* தொடர்பிசைவற்ற, உறுப்பொவ்வாத, முற்றிலும் பொருத்தமில்லாத.

incohes'ive, *a.* உள்ளொட்டாத, அகஇசைவற்ற, அக ஒருமைப்பாடற்ற.

incombus'tible, *a.* தீப்பற்றாத, எரியும் தன்மையற்ற.

in'come, *n.* வருவாய், தொழில் நிலம் முதலியவற்றிலிருந்து கிடைக்கும் காலாகால ஊதியம், வரவு, வருமானம், நிகர ஆதாயம்.

in'com'er, *n.* உள்ளே வருபவர்; புதிதாக வருபவர்; வந்தேறி, வேறு நாட்டினின்று வந்து குடியேறுபவர்; தொலைவிலிருந்து பண்ணையாள்பவர்; அழையாது நுழைபவர்; தலையிடுபவர்; பின்மரபினர், கால்வழியினர், பின்தோன்றல்.

in'come-tax, *n.* வருமானவரி; வரவினங்களின்மேல் விதிக்கப்படும் வரி.

in'com'ing [1], *n.* நுழைகை, வருகை, புதுவரவு.

in'coming [2], *a.* உள்ளே வருகின்ற, அடுத்த; புதிதாகக் குடியேறுகின்ற; வளர்கிற, ஆதாயமாகச் சேருகிற.

in'com'ings, *n. pl.* வருவாய்; வரி வருமானம், அரசாங்க வருமானம்.

in commen'dam, (ல.) *adv.* திருக்கோயில் பதவிக்கு நிலையான ஆள் அமர்த்தப்படும் வரை பொறுப்பாளராக இருக்கும் நிலையில்.

incommen'surable, *a.* ஒப்பிசைவற்ற, அளவில் பொருத்தமோ ஒப்புமையோ அற்ற; ஒப்பிட்டுக் காண்பதற்குரிய தகுதியற்ற, பொது அளவு ஏற்காத; (கண.) எண் வகையில் வகைப்பொருத்தமற்ற, வாயாத.

incommen'surate, *a.* அளவுப்பொருத்தமற்ற, தகுதியற்ற; போதாத.

incommode', *v.* தொந்தரவு செய், தொல்லை கொடு, வசதிக்கேடு உண்டுபண்ணு.

incommod'ious, *a.* இட வசதியற்ற; வசதியற்ற; தொல்லையான.

incommod'ity, *n.* தொந்தரை; வசதிக்குறைவு; தொந்தரவு கொடுப்பது, வசதிக்கேடு தரும்பொருள்.

incommun'icable, *a.* பிறர்க்குப் பகிர்ந்தளிக்க இயலாத; பிறர்க்குக் கூறமுடியாத; வெளியிட்டுத் தெரிவிக்க இயலாத.

incommunica'do, *a.* தொடர்புறவு வாய்ப்பற்ற; கைதி வகையில் தனிக்காவலிலுள்ள.

incommuni'cative, *a.* பேச்சு விருப்பமற்ற, உரையாடல் விரும்பாத, கருத்து வெளியிடாத; வாய்விடாத, பேசாத, கலந்துறவாடாத.

incommut'able, *a.* இனமாற்றமுடியாத; நிலையான.

incompact', *a.* அடர்த்தியற்ற; மொழியின் நடைவகையினுல் பொருட்செறிவற்ற.

incom'parable, *a.* இணையற்ற, ஒப்பற்ற, ஒப்புவமையற்ற; மிகச்சிறந்த; ஈடற்ற.

incompatibil'ity, *n.* ஒவ்வாமை, ஒத்திசையாமை.

incompat'ible, *a.* மாறுபாடான, முரண்பாடான, ஒவ்வாத; பொருத்தமற்ற உடனெத்தியலமுடியாத.

incom'petence, incom'petency, *n.* திறமைக்கேடு, தகுதிக் கேடு.

incom'petent, *a.* ஏலாத; தகுதியில்லாத; செயல் திறமை யற்ற; ஆற்றல் போதாத; திறமைக் குறைவுடைய; சட்டப் படி உரிமையற்ற.

incomplete', *a.* முழு நிறைவுபெருத, முடிவுபெருத, அரை குறையான.

incompli'ance, *n.* இணக்க இசைவின்மை, ஒத்திசைந்து போகாமை.

incompli'ant, *a.* ஒத்திசைந்து போகாத, இணக்க இசைவற்ற.

incom'posite, *a.* தனியான; சிக்கலில்லாத; சரியாக அமைக்கப்படாத; (தொ.) incomposite numbers, பகா எண், வகுக்கப்படாத எண்.

incomprehen'sible, *a.* புரிந்துகொள்ளமுடியாத, உணர்வு கடந்த; (இறை.) எல்லையற்ற.

incomprehen'sion, *n.* உணராமை, புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றலின்மை.

incomprehens'ive, *a.* பலவற்றை உட்கொண்டில்லாத, விரிவற்ற, சுருக்கமான.

incompress'ible, *a.* அமுக்க இயலாத; அழுத்தியடக்க முடி யாத.

incomput'able, *a.* எண்ணுதற்கரிய, கணக்கிடவியலாத.

inconceiv'able, *a.* நினைக்கமுடியாத, கருதுதற்கியலாத; தனிச்சிறப்புடைய.

inconclus'ive, *a.* முடிவுபடாத, தீர்ந்த முடிபாகக் கொள்ள இயலாத, அறுதியிட்டு நம்பவைக்காத.

inconden'sable, *a.* சுருக்கப்படமுடியாத; செறிவாக்கப்பெற இயலாத; வளி வகையில் நீர்மமாக வடித்திறக்கப்பட இயலாத.

incon'dite, *a.* இலக்கிய ஆக்கவகையில் ஒழுங்காக அமைக்கப் பெருத; செப்பமுருத, கரடுமுரடான.

inconfirm'ity, *n.* முரண்பாடு, பொதுப் படிவத்துடன் ஒவ் வாமை, தனிவேறுபாடு.

incong'ruous, *a.* முரணியலான, முன்னுக்குப்பின் முரணுன, பொருந்தங்கெட்ட; ஒத்துவராத, ஏறுமாருன; தகுதிக் கேடான, இசைவுகேடான; நகைப்பிற்கிடமான.

inconsec'utive, *a.* தொடர்பற்ற, முறைப்படி தொடர்ச்சியா யில்லாத; இயல் விளைவாகத் தொடராத.

incon'sequent, *a.* இயல்விளைவாகத் தொடராத; தொடர்புப் பொருத்தமற்ற; முறைப்படி தொடர்ச்சியாக அமையாத; தொடர்ச்சியற்ற, இடையறுந்த.

inconsid'erable, *a.* முக்கியமல்லாத; கவனிக்க வேண்டாத; சிறு மதிப்புடைய; சிறிதளவான.

inconsid'erate, *a.* சிந்திக்காத, முன்யோசனையற்ற; ஆய்ந் தமைவில்லாத, பிறருணர்ச்சி கருதாத.

inconsis'tent, *a.* முரண்பாடான, ஒவ்வாத; முன்னுக்குப் பின் மாறுபட்ட; முரணியலான; அக ஒழுங்கமைதியற்ற.

inconsol'able, *a.* ஆற்றமுடியாத, ஆறுதல் கூற இயலாத; ஆற்றுதற்கரிய; தாங்கமுடியாத.

incon'sonant, *a.* ஒத்திசையாத, உடனிணைந்தியலமுடியாத, முரணுன.

inconspic'uous, *a.* தெளிவாகத்தெரியாத, விளக்கமாகத் தோன்ருத; முனைப்பற்ற, பின்மறைவான; ஒதுக்கமான; (தாவ.) மிகச்சிறிய வெண்மலர்களையோ அல்லது பச்சைநிற மலர்களையோ உடைய.

incon'stancy, *n.* நிலையாமை; மனஉறுதியின்மை; நட்பு காதல் வகையில் உறுதியின்மை; நெறிபிறழ்வு நிகழ்ச்சி.

incon'stant, *a.* ஆள் வகையில் நிலையற்ற, அடிக்கடி மாறும் இயல்புள்ள; மன உறுதியற்ற, சஞ்சலபுத்தியுடைய.

inconsum'able, *a.* எரிபடாத; அழிபடாத; பொருளியல் வகை யில் பயன்படுத்திச் செலவழிப்பதற்குரியதாகக் கருதப்படாத.

incontes'table, *a.* போட்டியிடமுடியாத; மறுத்தற்கியலாத; எதிர்க்க முடியாத.

incon'tinence, *n.* தன்னடக்கமின்மை; மறைகேடு; சிற்றின்ப வழிப்படல்.

incon'tinent, *a.* தன்னடக்கமற்ற; உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தாத; மறையடக்க முடியாத; நாவை அடக்கி வைக்க முடியாத; இயற்கை முனைப்புக்களை அடக்க இயலாத; நெறி யடக்கமற்ற, சிற்றின்ப வழிப்பட்ட.

incon'tinently, *adv.* (செய்.) உடனே, உடனடியாக.

incontrovert'ible, *a.* மறுக்கமுடியாத; எதிர்ப்புரையற்ற, உறுதியான.

in'contuma'cium, (ல.) *adv.* நீதி மன்றத்தை அவமதித்ததாக.

inconven'ience, *n.* வாய்ப்புக்குறை, வசதிக்கேடு; வாய்ப்புக் கேடான செய்தி; தொல்லை; *v.* வசதிக்குறைவாக்கு; தொந்தரவு கொடு, தொல்லையளி.

inconven'ient, *a.* வசதிக்குறைவான; வாய்ப்புக்கேடான; வாழ்க்கை நலங்களில் குறைபட்ட; பொருத்தக்கேடான; எக்கச்சக்கமான, சிறுதொல்லைகள் தருகின்ற; இக்கட்டான, தொந்தரவான.

inconvert'ible, *a.* மாற்றமுடியாத, நாணயவகையில் இன மாற்றமுடியாத.

inconvin'cible, *a.* நம்பவைக்கமுடியாத.

incoordina'tion, *n.* ஒருமுகப்படுத்தப் பெருமை, ஓரினப் பாடின்மை; இணக்கமின்மை, நிரற்பாடின்மை.

incorp'orate, *a.* ஒருடலாய்ச்சமைந்த; ஒருங்கொத்திணைந்த; கூட்டுக்குழுவாக ஒன்றுபட்ட; கூட்டுக்குழுவில் இணைந்து ஒன்றுபடுத்தப்பட்ட, கூட்டுக்குழுவில் இணைந்த; கூட்டிணை வாக்கப்பட்ட; *v.* ஒருடலாக உருப்படுத்து; உடம்பெடு; உடம்பொடு தோன்று; ஒருங்கு திரட்டி உருவாக்கு; சட்டப் படி கூட்டிணைவு உருவாக்கு; கூட்டிணைவாகச்சேர்; கூட் டிணைவில் சேர்; கூட்டிணைவுடன் சேர்த்துக்கொள்; கூட் டிணைவில் ஒருங்கொத்திணை; கூடி ஒன்றுபடு.

incorpora'tion, *n.* குழுவாக இணைத்தல்; கூடிஇணைதல்; கூட்டிணைவு; அரசியற் கூட்டிணைப்பு; கூட்டிணைப்புக் கழகம்; கழகங்களின் கூட்டிணைவு.

incorp'orator, *n.* கூட்டுக்குழு அமைப்பாளர், சங்கமாக இணைத்து அமைப்பவர்; மற்றொரு பல்கலைக் கழகத்தில் உறுப்பினரான பல்கலைக் கழக உறுப்பினர்; கூட்டிணைவுற்ற கழகத்தில் மூல உறுப்பினர்.

incorpor'eal, *a.* உடல் சார்பில்லாத, நுண்ணியலான, பருப் பொருள் சாராத; (சட்.) நடைமுறையில் மெய்யாயிராத.

incorrect', *a.* தவருன, சரியல்லாத; செய்திவகையில் உண் மைக்கு மாருன; எழுத்தாண்மை வகையில் குற்றமுள்ள, குறைகளையுடைய; நடைவகையில் ஒழுங்குமீறிய; அச்சுப் படிவ வகையில் சரியானபடி திருத்தப்பெருத; பிழைபட்ட.

inco'rrigible, *a.* திருந்த முடியாத; சீர்ப்படுத்த முடியாதபடி கேடான; இழிவான, சீர்கேடான.

incorrup'tible, *a.* சிதைந்து கெடாத, அழிவுக்காளாகாத; ஒழுக்கக் கேட்டிற்கு உள்ளாக்க முடியாத; கைக்கூலி வாங் காத, இலஞ்ச ஊழலுக்கு ஆட்படுத்தப்படமுடியாத.

incrass'ate, *a.* (தாவ., வில.) தடித்த, தடிப்புற்ற, வீங்கிய.

in'crease[1], *n.* மிகுதிப்பாடு, பெருக்கம், வளர்ச்சி; எண்ணிக்கையில் மிகுதி; இனப்பெருக்கம்; மிகுதிப்பட்ட தொகை; மிகைபட்ட எண்; கூடுதலான பணத்தொகை; (தொ.) on the increase, பெருகுகின்ற, வளர்ச்சியடைகின்ற.

increase'[2], *v.* மிகுதியாகு, பெருகு; எண்ணிக்கையில் வளர்; பல்கிப் பெருகு, பலவாகு; பண்பு திறன் முதலியவற்றின் வகையில் முன்னேறு; மிகுதியாக்கு; இனப்பெருக்கமுறு, பெற்றுப் பெருகு; பெருக்கு; குணத்தை மூணைப்பாக்கு; பண்பைச் செறிவார்ந்ததாக்கு.

incred'ible, *a.* நம்புதற்கரிய; உண்மையென நம்ப முடியாத; நம்புதற்கியலா நிலையில் விசித்திரமான; வியக்கத்தக்க.

incred'ulous, *a.* எளிதில் நம்பாத; அவநம்பிக்கைவாய்ந்த.

in'crement, *n.* மிகைப்பாடு, மிகையான பகுதி; கூடுதல், பெருக்கம்; வருவாயில் உயர்வு; ஆதாய வளர்ச்சி; படிப்படி உயர்வு; உயர்வு வீதம்; (கண.) ஏறுமுகப்படி, மாறுபடு தொகையின் மாறுபாட்டளவு.

incrim'inate, *v.* குற்றஞ்சாட்டு, குற்றச்சாட்டில் சிக்கவை.

incrusta'tion, *n.* மேலேடு படிவு; மேலேடு, புறஓடு, பொருக்கு, தோடு; திண்பூச்சு; கட்டட ஓரச்சலவைக் கற்கட்டு; பழக்க வழக்க உறைபடிவு.

in'cubate, *v.* அடைகாக்கும்படி முட்டைமேலமர், குஞ்சு பொரி; நினைவில் ஆழ்ந்திரு, நினைந்து நினைந்து உருகு.

incuba'tion, *n.* அடைகாத்தல்; அடைகாப்பு, குஞ்சுபொரிப்பு; அடைகாப்பு முறை; வேண்டுதல் நோன்புத்துயில், தெய்வங்களிடம் கனவு மூலமான அருள்வேண்டிப் புனிதத்திருவிடத்தில் துயிலுதல்; தன்னைமறந்த ஆழ்நினைவு, தற்சிந்தனை; தூய ஆவியின் தற்சிந்தனை நிலை; ஆழ்ந்த திட்ட ஆய்வாராய்வு; (மரு.) நோய் நுண்மப்பெருக்க நிலை, நோய்க்குறிகள் தோன்றுமுன் நுண்மங்கள் ஆக்கம் பெறும் நிலை; (தொ.) artificial incubation, செயற்கை அடைகாப்புமுறை, செயற்கைச் சூட்டினால் அடைகாத்தல்.

in'cubator, *n.* அடைகாப்புக்கருவி, செயற்கை முறையில் குஞ்சு பொரிக்க முட்டைகளை அடைகாக்கும் கருவி; கருமுதிர்ச்சிக்கருவி, முழுவளர்ச்சியுறாது காலத்திற்கு முன்பே பிறந்த குழந்தைகளை வளர்க்கும் அமைவு; (மரு.) மருத்துவ முறைகட்கான நோய்நுண்மப்பெருக்க அமைவு.

in'cubus, *n.* பேய்க்கனவு, தீக்கனவு; கனவில்வந்து கிலியூட்டுவதாகக் கருதப்படும் கொடிய பேயுருவ ஆவி; அச்சுறுத்திக் கொடுமைப்படுத்துபவர்; அச்சுறுத்திக் கொடுமைப்படுத்தும் பொருள்; கிலியூட்டும் செய்தி.

in'culcate, *v.* மனத்தில் ஆழப்பதியவை; வற்புறுத்திப் பயிற்று; மீண்டும் மீண்டும் முயன்று படியவை; பயிற்றுவித்துப் பழக்கு.

in'culpate, *v.* குற்றஞ் சாட்டு, குறைகூறு; குற்றச்சாட்டில் சிக்கவை.

incum'bency, *n.* திருக்கோயில் மானியம்; மானியம் வகிப்பவர் பதவி; மானியம் வகிப்பவர் ஆட்சியுரிமை; மானியம் வகிப்பவர் ஆட்சியுரிமை எல்லை; பணி வகிப்பு; கடமை; பொறுப்பு; சார்பு; சார்புநிலை; மேலார்வு, மேற்கவிவு.

incum'bent[1], *n.* திருக்கோயில் மானியம் வகிப்பவர்; பதவி வகிப்பவர்.

incum'bent[2], *a.* மேற்கிடக்கிற, படுத்திருக்கிற; மேற்படிந்தமுழுந்துகிற; நெருக்குகிற; சார்ந்துள்ள; கடமைப்பட்டுள்ள; சுமத்தப்பெற்ற; பொறுப்பேற்றப் பெற்றுள்ள.

incunab'ula, (ல.) *n. pl.* ஒன்றன் தொடக்கநிலைகள்; 1501-ஆம் ஆண்டிற்கு முன் அச்சிடப்பட்ட நூல்கள்.

incur', *v.* வருவித்துக்கொள்; ஆட்படு, உள்ளாகு.

incur'able, *n.* தீராப் பிணியாளர், குணப்படுத்த முடியாத நோயாளி; *a.* குணப்படுத்த முடியாத; திருத்த முடியாத.

incur'ious, *a.* ஆவலற்ற, அறிவார்வமற்ற, அவாத்தூண்டுதலற்ற; அக்கறையற்ற; கவலைகொள்ளாத; கவர்ச்சி தராத; சிறப்பற்ற.

incur'sion, *n.* உள்ளேறித் தாக்குதல்; திடீர்த் தண்டெழுச்சி; அடுத்தடுத்த தாக்குதல் முயற்சி.

incurve', *v.* வளைவாக்கு, உள்நோக்கி வளையும்படி செய்.

in'cus, (ல.) *n.* சுத்தி எலும்பிலிருந்து ஒலியலை அதிர்வுகளை வாங்கும் காதெலும்பு.

incuse', *n.* நாணயத்தின்மீது பொறிக்கப்பட்ட முத்திரை உரு; *a.* பொறிக்கப்பட்ட, முத்திரையடிக்கப்பட்ட; *v.* முத்திரையடித்து உருப் பதியவை; உருப் பொறிப்பிடு; உருவங்களால் நாணயங்களுக்குக் குறியிடு.

Ind, *n.* (செய்.) இந்தியா.

inda'ba, *n.* தென்னுப்பிரிக்க பழங்குடியினரிடையே நடைபெறும் கலப்பாய்வுக் கூட்டம்; தென்னுப்பிரிக்க பழங்குடியினருடன் நடைபெறும் மாநாடு.

indebt'ed, *a.* கடன்பட்டுள்ள, கடனாளியாயுள்ள; நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ள; கடப்பாடுடைய.

inde'cent, *a.* நாணமில்லாத, நடை நயமற்ற; மரியாதையற்ற; கேவலமான, இழிவான; தகுதியற்ற; அருவருப்பான.

indecid'uous, *a.* இலை உதிராத, ஆண்டு முழுவதும் இலை தழைகளையுடைய.

indeciph'erable, *a.* புரிந்துகொள்ள முடியாத; பொருள் விளங்காத; அடையாளங் கண்டுணர முடியாத.

indeci'sion, *n.* திட்ட முடிபின்மை; உறுதியின்மை; ஐயப்பாட்டு நிலை; தயக்கம்.

indecis'ive, *a.* திட்டமுடிபற்ற; முடிவுக்கு வராத; ஐயப்பாடான, உறுதியற்ற; தயக்க நிலையிலுள்ள; முடிவுபடுத்தப்படாத.

indeclin'able, *a.* (இலக்.) சொற்கள் வகையில் உருத்திரிபுறாத, உருமாற்றம் பெறாத.

indecompos'able, *a.* கூறுகளாகப் பிரிக்க முடியாத; உட்கூறுகளாகச் சிதைவுறாத; பதனழிந்து கெடாத.

indecor'ous, *a.* தகுதிக்கேடான, ஒழுங்கற்ற, நயமுறையற்ற, முறைகேடான, சுவைகேடான.

indecor'um, *n.* நயமுறைக் கேடு, தகுதிக் கேடு, ஒழுங்கின்மை, நடைமுறைத் தவறு.

indeed', *adv.* மெய்யாக, உண்மையாகவே, உண்மையிலேயே.

indefat'igable, *a.* சோர்வுறாத, தளர்ச்சியடையாத, இடையறாத, விடா முயற்சியுடைய.

indefeas'ible, *a.* பறிமுதல் செய்யப்பட முடியாத; தவிர்க்க முடியாத, விலக்க முடியாத.

indefec'tible, *a.* தோல்வியுறாத; தவறாத; கெடாத; குற்றமற்ற; மாசற்ற.

indefen'sible, *a.* எதிர்ப்பைத் தடுத்துக்காக்க முடியாத; வாதவகையில் தாக்குதலுக்கு நில்லாத; ஆதரிக்கத்தக்க வலிமையற்ற; வலிமைக்கேடான; நேர்மையற்ற.

indefin'able, *a.* வரையறுத்துக் கூறமுடியாத; விளக்கமாகக் கூற இயலாத; உருவரைத் தெளிவற்ற.

indef'inite, *a.* எல்லையற்ற, வரையறைப்படாத; தெளிவற்ற; அறுதியற்ற, திட்பமல்லாத; (இலக்.) பொருளிடங்கால வகைகளில் பொதுச் சுட்டான; (தொ.) indefinite article, பொதுநிலைச் சுட்டு.

indehis'cent, *a.* (தாவ.) வெடிக்காத.

indel'ible, *a.* துடைத்தழிக்க முடியாத; மறக்க முடியாத; நிலையான.

indel'icate, *a.* நுண்ணயமற்ற, நயமுறைக்கொவ்வாத, உணர்ச்சிநயமற்ற; நயத்திறனற்ற; நாணங்கெட்ட; தகாமுனைப்புடைய.

indem'nify, *v.* இழப்பெதிர்காப்புச்செய், முன்காப்பீடு செய், சட்ட விலக்குரிமையளி; இழப்பீடு செய்.

indem'nity, *n.* இழப்பெதிர்காப்பு ; முன்காப்பீடு ; சட்ட விலக்குரிமை ; இழப்பீடு ; போரில் தோற்றவர்மீது கோரப் படும் இழப்பீட்டுத் தண்டத்தொகை.

indemon'strable, *a.* மெய்ப்பிக்க இயலாத ; விளக்கிக் காட்ட முடியாத ; செயல் விளக்கம் அளிக்க முடியாத.

in'dent [1], *n.* வடு, உள் வெட்டுத்தடம்; சிறுபள்ளம்.

indent' [2], *n.* ஓர வெட்டீடு ; ஓர வெட்டு ; எழுத்து மூலமான ஒப்பந்தம் ; முதலாளி தொழிலாளிகட்கிடைப்பட்ட தொழில் முறை ஒப்பந்தப் பத்திரம் ; வாணிகத்துறையில் சரக்குத் தேவைக்கட்டளை; *v.* பல்போன்ற கீற்றுக்கள் உண்டாகும்படி செய், ஓரத்தில் பற்களாக வெட்டு; கடற்கரையோரம் முதலிய வற்றின் வகையில் ஆழ்ந்த உள்வளைவு நெளிவுகளை உடைய தாக்கு ; பத்திரத்தில் நடுவே வக்கரித்த கோடிட்டு இருபகுதி களாகப் பிரி ; பத்திரத்தைச் சரிநேர் படிகளாக எழுது ; அச்சுத் துறையில் ஓர இடம்விட்டுத் தொடங்கு ; சரக்குக் கோரிக்கைக் கட்டளை அனுப்பு ; சரக்காணை கொடு ; *v.* ஓரத்தில் விளிம்பு வெட்டு ; முத்திரையிடு.

in'denta'tion, *n.* விளிம்பு வெட்டுதல்; ஓரவெட்டு ; சிறு வெட்டு, சிறுபிளவு ; வக்கரிப்பு ; வக்கரித்த வரை ; கரை யோர உள்வளைவு.

inden'tion, *n.* அச்சுத்துறை வகையில் ஓரத்தில் இடும் வெற்றிடம்.

inden'ture, *n.* சட்டப்படி உருவான உடன்படிக்கைப் பத்திரம் ; தொழில் முறைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ; முறை யான பட்டியல் ; நற்சான்றிதழ் ; அச்சுத்துறை வகையில் ஓர இடம் விடுகை ; *v.* தொழில்முறை ஒப்பந்தப் பிணைப்புச் செய்துகொள் ; (தொ.) take up one's indentures, தொழிற் பயிற்சி முடிந்தவுடன் ஒப்பந்தப் பிணைப்புப்பத்திரங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்.

indepen'dence, *n.* தற்சார்பு; தன்னுரிமை; தன்னுட்சி; சுதந் திரம் ; தற்சார்பான வருவாய்.

Indepen'dency [1], *n.* கிறித்தவரிடையே திருக்கோயில் தன் னுட்சிக் குழுவினரின் கோட்பாடு.

indepen'dency [2], *n.* தன்னுட்சி நாடு ; தற்சார்பான வருமா னம் ; தன்னுரிமை.

Indepen'dent [1], *n.* தனித் திருக்கோயில் தன்னுட்சியுரிமை வற்புறுத்தும் கோட்பாடுடைய கிறித்தவ சமயக்கிளையினர் ; *a.* தனித்திருக்கோயில் தன்னுட்சியுரிமைக் கோட்பாடுடைய.

indepen'dent [2], *n.* அரசியலில் கட்சி சாராதவர், தற்சார் பாளர் ; *a.* பிறிது சார்பற்ற ; தற்சார்பான ; தற்சார்புரிமை யுடைய, சுதந்தரமான ; தன்னிறையாட்சியுடைய ; தன்னிய லான, தனித்தியங்குகிற ; பிறர் ஆதரவு சாராத.

indescrib'able, *a.* விவரித்துக்கூற இயலாத ; சொல் லொணுத ; தெளிவற்ற, வரையறுத்துக் கூறமுடியாத.

indestructibil'ity, *n.* அழிவின்மை, அழிக்க முடியாநிலை.

indestruc'tible, *a.* அழிக்க முடியாத.

indeterm'inable, *a.* கண்டுறுதி செய்ய முடியாத ; முடிவு காண்பதற்கரிய ; முடிவாக அறுதியிட்டுரைக்க இயலாத ; சச்சரவு வகையில் இருதரப்பிலும் மெய்ம்மை கண்டுதீர்ப் புரைக்க முடியாத.

indeterm'inate, *a.* உறுதி நிலையற்ற ; எல்லையறுதியற்ற ; அளவுறுதியில்லாத ; தெளிவற்ற ; ஐயுறவு நிலையிலுள்ள ; (கண.) முடிவு தேரப்பெறுத ; (தொ.) indeterminate sentence, சிறைக் கைதிகளின் நடத்தையைப் பொறுத்து அமையும் விடுதலைத் தீர்ப்பு ; சட்டச் சீர்திருத்தத்தை எதிர் நோக்கி விடப்பட்ட தீர்ப்பு ; indeterminate vowel, ஒலித் தெளிவற்ற உயிரெழுத்து.

indetermina'tion, *n.* முடிவுறுதியின்மை ; உறுதியற்ற நிலை.

indeterm'inism, *n.* அகநிலை மறுப்புக் கோட்பாடு, உள் நோக்கங்களினுல் மட்டுமே மனிதனுடைய செயல் தீர்மானிக்கப்படவில்லை என்னும் கோட்பாடு.

in'dex, *n.* சுட்டுவிரல், ஆள்காட்டி விரல் ; கருவிகளின் அளவை முதலியவற்றைக் காட்டும் முள் ; வழிகாட்டும் கொள்கை ; அகரவரிசைத் தொகுப்பு அட்டவணை ; பொரு ளடக்க அட்டவணை ; (கண.) பெருக்க அடுக்குக் குறி ; *v.* புத்தகங்களுக்கு அகரவரிசை அட்டவணை கொடு பொரு ளடக்க அகரவரிசை அட்டவணை அமை ; (தொ.) index number, மடங்குச்சுட்டு எண் ; the Index, ரோமன் கத்தோ லிக்க கிறித்தவர்கள் படிக்கக்கூடாதென்று தடைப்படுத்தப் பட்ட புத்தகங்களின் பட்டியல்; படிப்பதற்கென்று குறை வெட்டி அகற்றப்பட்ட புத்தகப்பட்டியல்

In'dia, *n.* இந்தியா, பாரத தேசம் ; (தொ.) Further India, இந்திய நாட்டிற்கும் சீனுவிற்கும் இடைப்பட்ட மாநிலம் ; India ink, சீனு-ஜப்பான் நாடுகளில் செய்யப்படும் கரிய மை; India Office, இந்திய அரசாங்க அலுவல்களை முன்பு கவ னித்து வந்த பிரிட்டிஷ் ஆட்சித்துறை ; India paper, சீனுவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மெல்லிய உறிஞ்சு தாள் வகை ; India proof, உறிஞ்சு தாளில் எடுக்கப்படும் அச்சுத் திருத்தப்படி ; Oxford India paper, மெல்லிய உறுதி யான ஒளி ஊடுருவாது அச்சடிப்பதற்கான தாள் வகை.

In'diaman, *n.* இந்திய வாணிகத்தில் ஈடுபடும் நீராவிக் கப்பல்.

In'dian, *n.* இந்தியர், பாரத தேசத்தவர், பாரத தேசத்தின் குடியுரிமையாளர் ; அமெரிக்காவுக்கும் மேற்கிந்தியத் தீவு களுக்கும் உரிய பழங்குடிமக்கள் ; இந்தியாவில் முன்பு நீடித்து வாழ்ந்த ஆங்கிலேயர்; *a.* இந்தியாவுக்குரிய; இந்தி யருக்குரிய ; அமெரிக்க மேற்கிந்தியத் தீவுகளின் பழங்குடி மக்களுக்குரிய ; (தொ.) Indian Administrative Service, இந்திய நிர்வாகப் பணித்துறை; Indian club, உடற்பயிற்சிக் கான குப்பி வடிவக் குண்டாங்கட்டை ; Indian corn, சோளம், மக்காச் சோளம், வட அமெரிக்கக் கூல வகை ; Indian file, ஒருவர் பின்னெருவரராக நிற்கும் வரிசை ; Indian ink, சீனு விலும் ஜப்பானிலும் செய்யப்படும் கருநிறப் பொடியாலான எழுதும் மை ; Indian meal, சோள மாவு ; Indian summer, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட பக்கங்களில் இலையுதிர் காலத்தின் பின் பகுதிக்குரிய வறட்சியான வெப்பநிலை ; Indian weed, புகையிலை ; Red Indian, செந்நிற மேனியரான வட அமெரிக்காவின் தொல் குடிமக்கள்.

in'dianiza'tion, *n.* (வர.) இந்திய மயமாக்குதல், இந்தியா வில் பணித்துறை இடங்களை நாட்டு மக்களையே கொண்டு நிரப்பும் முறை.

In'diarubber, in'dia-rubber, *n.* ரப்பர், மரப்பால் உறை விலிருந்து எடுக்கப்படும் தொய்வகத்துண்டு.

in'dicate, *n.* சுட்டிக்காட்டு ; தெரிவி ; விளக்கிக்காட்டு ; சுருக்கமாகக்கூறு ; (மரு.) குறிப்பாகத் தெரிவி ; அறிகுறி காட்டு, அறிகுறியாயிரு, அடையாளப்படுத்தித் தெரிவி.

indic'ative, *n.* (இலக்.) தெரிநிலைவினை; *a.* சுட்டிக்காட்டுகிற, குறிப்பாகத் தெரிவிக்கிற ; (இலக்.) தெரிநிலையான, வினைச் சொல் வகையில் நிகழ் செய்தியை எடுத்துக்கூறுகிற.

in'dicator, *n.* சுட்டிக்காட்டுபவர்; பொருளளவு விசைவேகம் தொலை முதலியவற்றினைப் பதிவுசெய்து சுட்டிக் காட்டும் கருவி.

indi'cium, (ல.) *n.* அடையாளம், அறிகுறி ; *pl.* ***indi'cia***.

indict', *v.* சட்டமுறைப்படி குற்றஞ் சாட்டு, குற்றப்பதிவு செய், குற்றப்பதிவறிவி.

indict'able, *a.* செயல்வகையில் வழக்குத் தொடர்வதற்குரிய; ஆள்வகையில் குற்றம் சுமத்தப்படக்கூடிய.

indic'tion, *n.* அரசியல் ஆணைவிளம்பரம், மன்னர் கட்டளை அறிவிப்பு ; (வர.) பண்டை ரோமாபுரிப் பேரரசர் கான்ஸ் டண்டைன் (Constantine) கி. பி. 312 செப்டம்பர் முதல் நாள் முதல் கணக்கிட்டு நிறுவிய 15 ஆண்டுகளடங்கிய வரித் துறைக் காலப்பிரிவு ; வரித்துறைக் காலப்பிரிவுக்குரிய வரி.

indict'ment, *n.* முறையார்ந்த குற்றச்சாட்டு; குற்றச்சாட்டுப் பத்திரம் ; முறைப்பேராயம் குற்றச்சாட்டினைப்பெற்று மீட் டளிக்கும் சட்டமுறைமை ; (தொ.) bill of indictment, முறைப்பேராயத்திடம் அளிக்கப்படும் குற்றச்சாட்டுப் பகர்ப்பு.

In'dies, East Indies, *n. pl.* இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடைப்பட்ட மாநிலமும் அதற்கப்பாலுள்ள தீவுகளும் இந்தியாவும் சேர்ந்த பரப்பு ; (தொ.) West Indies, நடு அமெரிக்காவில் மெக்சிகோ வளைகுடாவின் நுழைவாயிலுள்ள தீவுகளின் தொகுதி.

indiff'erence, indiff'erency, *n.* கவனமின்மை, கருத்தின்மை ; விருப்புவெறுப்பின்மை, அக்கறையின்மை ; மெத்தனம், வேண்டாவெறுப்பு ; புறக்கணிப்பு, அசட்டை மனப்பான்மை ; கொதுமல் நிலை, பட்டுப்படாநிலை ; எழுச்சியற்ற தன்மை ; இரண்டுங்கெட்டநிலை ; இடைப்படுநிலை.

indiff'erent, *n.* நடுநிலையாளர், சமயத்துறைத் தனிச்சார்பில்லாதவர்; அரசியல்துறை நடுநிலையினர்; *a.* நடுநிலையான, சார்வெதிர்வற்ற ; கவலையற்ற, கருத்தற்ற ; விருப்புவெறுப்பற்ற ; நல்லதுகெட்டது அற்ற ; சிறிது மோசமான ; நடுத்தரமான, இடைநிலைப்பட்ட ; முக்கியத்துவமற்ற; இடைநிலையான, வேதியியல் காந்த மின்துறைகளில் இருதிறச்செயல் விளைவுகளுமற்ற.

indiff'erentism, *n.* சமயத்துறையில் பட்டுப்படா மனப்பான்மை ; சமய ஒப்புரவு நிலை.

in'digence, in'digency, *n.* நல்குரவு, கழிபெரு வறுமை.

in'digene, *n.* நிலத்துக்குரிய தொன்முதற் குடியினர், திணைத் தோன்றல்.

indi'genous, *a.* நிலத்துக்குரிய தொன்முதற்குடியான, நாட்டுப் பழங்குடி சார்ந்த ; திணைநிலைக்குரிய, திணைத் தோன்றலான.

in'digent, *a.* ஏழ்மையான, வறுமைப்பட்ட, நல்கூர்ந்த.

indiges'ted, *a.* செரிமானமாகாத, சீரணிக்காத; நன்கு சிந்தித்துருவாக்கப்படாத ; உருவற்ற, வடிவற்ற.

indiges'tible, *a.* செரிக்கவைக்க முடியாத. சீரணிக்க முடியாத.

indiges'tion, *n.* உணவுச்செரிமானமின்மை, வயிற்றுமந்தம், மப்புநோய் ; உணவு செரியாநிலை ; ஏற்றமையாநிலை, புறப்பண்புகளையோ கருத்துக்களையோ ஏற்றுத் தன்வயப்படுத்திக் கொள்ளமுடியாமை.

indiges'tive, *a.* வயிற்றுமந்தம் உண்டுபண்ணுகிற ; மப்பு நோய்ப்பட்ட.

indig'nant, *a.* சீற்றங்கொண்ட ; கடுஞ்சின வெறுப்புடைய.

indigna'tion, *n.* நேர்மையான சீற்றம் ; ஏளனக்கோபம் ; கடுஞ்சினம்; கோபத்தின் விளைவான நிலை; கோப உணர்ச்சி, உளக்கொதிப்பு.

indigna'tion-meeting, *n.* பொதுமக்கள் கடுஞ்சினத்தைத் தெரிவிக்கும் பொதுக்கூட்டம்.

indig'nity, *n.* அவமதிப்பு ; தகாதமுறையில் நடத்துகை ; ஏளனப்பழிப்பு.

in'digo, *n.* நீலச்சாயம் ; அவுரிச்செடி ; (தொ.) indigo blue, நீலமும் ஊதா நிறமும் கலந்த கருநீலநிறம் ; indigo white, நீலத்தின் வெண்ணிறப் படிகத்தூள்.

in'digo-bird, *n.* வட அமெரிக்க கருநீலநிறப் பாடும் பறவை வகை.

indirect', *a.* சுற்றுமுகமான ; எதிர்முகமல்லாத ; சுற்றிவளைத்துச் செல்கிற ; நேரடியல்லாத; நேர்வழியல்லாப் பிறிது வழியான : பிறிதாடு செல்கிற ; சுற்றிவளைத்துக் கூறுகிற ; மறைமுகமான ; குறிப்பாகத் தெரிவிக்கிற ; நேராக அமையாத, பிறிதூடாகத் தாக்குகிற; (இலக்.) தன்மொழிக்கூற்றுயமையாத, பிறிதுமொழிக் கூற்றான; (தொ.) indirect object, (இலக்.) மறைமுகச் செயப்படுபொருள், ஆங்கில மொழியில் செயப்படுபொருள்போல இயங்கும் செயப்படுபொருளை ஏற்கும் பெயர்ச்சொல்; indirect passive, (இலக்.) மறைமுகச் செயப்படுபொருளை எழுவாயாகக் கொண்டு நேர்முகச் செயப்படுபொருளுடன் வரும் செயப்பாட்டு வினைப்படிவம்; indirect speech, (இலக்.) மறைமுகக்கூற்று வாசகம், பிறிதுமொழிக்கூற்று.

indirec'tion, *n.* சுற்றுவளைவான முறைகள் ; நேர்மையற்ற வழிகள் ; ஏமாற்றம் ; மோசடி, சூழ்ச்சி.

indiscern'ible, *n.* வகைதிரிபறிந்துகொள்ள முடியாத பொருள், ஒன்றிலிருந்து மற்றொன்றைத் தெளிவாகப் பிரித்துத் தெரிந்துகொள்ள முடியாத பொருள் ; *a.* வேறு பிரித்தறிய முடியாத ; வகுத்துணர இயலாத, திரித்து அறிய முடியாத; (தொ.) identity of indiscernibles, பண்பு வேறுபாடில்லாத இருபொருள்கள் இருக்க முடியாதென்ற கொள்கை.

indiscerp'tible, *a.* கூறுகூறாகப் பிளந்தாலும் தன்மையழியாத ; பகுதிபகுதியாகப் பிரித்தழித்துவிட முடியாத.

indis'cipline, *n.* கட்டுப்பாடின்மை, ஒழுங்கின்மை.

indiscreet', *a.* வகைதிரிபற்ற, கூரிய தேர்வறிவற்ற, தகவறியாத.

indis'crete, *a.* பகுதிகளாகப் பிரிக்கப்பட முடியாத ; பிரித்துணரப்படாத ; தனி முழுமையான.

indiscre'tion, *n.* மடமைவழு, ஆராயாத செயல், அனுபவ அறிவற்ற தவறு ; பணிமனைக் கடமைகளில் அறியாப் பிழைபாடு ; அறியாப் பிழைச்சாக்குடன் செய்யப்பட்ட கடமை தவறுதல்.

indiscrim'inate, *a.* வகைதொகையற்ற, திரித்துணர்வில்லாத; குழப்பநிலைப்பட்ட; கும்புகூளமான; தாறுமாறாகச் செயல்படுகிற; பாகுபாடற்ற.

indispen'sable, *a.* இன்றியமையாத, தவிர்க்க முடியாத, இல்லாமல் முடியாத.

indispose', *v.* நலிவி, உடல்நலங்கெடு ; உவர்ப்புத்தூண்டு, மனச்சார்பு கெடு ; இயலாமற் செய், வாய்ப்புநலங் கெடு ; தகுதியற்றதாக்கு.

indisposi'tion, *n.* உடல்நலமின்மை ; நோய்நிலை ; உளநலமின்மை ; விருப்பமின்மை, உவர்ப்புநிலை.

indis'putable, *a.* மறுக்க முடியாத, எதிர்க்க முடியாத, எதிர்வாதமிட முடியாத.

indiss'oluble, *a.* கரைக்கமுடியாத; கலைக்க முடியாத; கூறுகளாகப் பிரிக்க முடியாத ; நிலைத்து நிற்கிற ; உறுதியான.

indistinct', *a.* விளக்கமற்ற ; தெளிவற்ற ; குழப்பமான ; நுண்ணியலான ; மறைந்திருக்கிற.

indistinc'tive, *a.* தனிப்பட்ட தன்மையற்ற, பிரித்தறியக் கூடிய பண்பற்ற.

indisting'uishable, *a.* வேறு பிரித்தறிய முடியாத, தனிப்பட வேறாகக் காண இயலாத.

indistrib'utable, *a.* பகிர்ந்தளிக்க முடியாத, பங்கீடு செய்ய இயலாத, விரிவாகப் பரப்ப இயலாத.

indite', *v.* சொற்புணர்த்துக் கட்டமைவி, செய்யுள் எழுது; சொற்பொழிவு புனைந்துருவாக்கு; முடங்கல் வகுத்துருப்படுத்து.

indivert'ible, *a.* வேறு திசையில் செலுத்த முடியாத ; கவனத்தை வேறுபடுத்த முடியாத.

individ'ual, *n.* தனி மனிதன், தனி ஒருவர் ; *a.* தனியான, தனிப்பட்ட; தனிப்பட்ட தன்மையுடைய, தனிச் சிறப்பான, குறிப்பிட்ட ஒரு, தனிப்பண்புவாய்ந்த.

individ'ualism, *n.* தற்பற்று; தன்னலம், தன்னல உணர்ச்சி ; தன்னல நடத்தை ; தனிப்பண்பு ; ஆணவம், செருக்கு ; தனியுரிமைக் கோட்பாடு, தனி மனிதனின் தனிச் செயலுரிமையை ஆதரிக்கும் சமுதாயக் கொள்கை.

individual'ities, *n. pl.* தனிப்பட்ட விருப்பாற்றல்; தனிச் சுவை நலச் சுவைத்திறத் தொகுதி.

individual'ity, *n.* தனி ஒருமை, தனித்தன்மை ; தனிச் சிறப்புப்பண்பு, உறுதியான தனிப்பண்பு ; தனிப்பட்ட வாழ்க்கை.

individ'ualize, *v.* தனித்தன்மையளி, தனிப்பண்பு கொடு ; தனிப்படக் குறிப்பிடு, ஒவ்வொன்றாகக் குறிப்பிடு.

individ'ually, *adv.* தானாக, தன்னிலையில், தனியாக, தனி ஆள் நிலையில்; தனிப்பட்ட முறையில்; ஒவ்வொருவராக; ஒன்றொன்றாக; (தொ.) individually different, ஒரே இன வகை சேர்ந்திருக்கக் கூடுமானாலும் தனித்தனியாக வெவ்வேறான.

individ'uate, *v.* தனித்தன்மையளி, தனிப்பண்பு கொடு; தனி மனிதனாக உருவாக்கு; தனியாக்கு.

indivis'ible, *n.* பகுக்க முடியா நுண்ம எல்லைத்துகள்; *a.* பகுக்க முடியாத, பிரிக்க முடியாத; வகுக்கப்பட முடியாத.

In'do-Aryan, *a.* இந்திய ஆரியரைச் சார்ந்த, இந்திய ஆரிய இனத்தவருக்குரிய.

In'do-Chinese', *a.* இந்தியாவிற்கும் சீனாவுக்கும் இடைப்பட்ட நிலத்தைச்சார்ந்த.

indo'cile, *a.* கீழ்ப்படிதலில்லாத, பணிவற்ற; பிடிவாதமுள்ள.

indoc'trinate, *v.* கற்பி, போதனைசெய்; கருத்தில் தோய்வி, கொள்கையை முற்றிலும் ஏற்றுக் கோட்பாட்டைத் தனதாகக் கொள்ளும்படி செய்துவிடு.

In'do-Europe'an, In'do-German'ic, *a.* ஐரோப்பா ஆசியாக் கண்டங்களின் பெரும்பகுதிகளில் பேசப்படும் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த.

In'do-Iran'ian, *a.* இந்தியா பாரசீகம் ஆகிய நாடுகளில் பெரும்பாலும் பேசப்படும் இந்திய-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் உட்பிரிவைச் சார்ந்த.

in'dolent, *a.* சோம்பலான, மடிமையுடைய; வேலை செய்ய மனமில்லாத; (மரு.) நோவு தராத, வேதனை உண்டு பண்ணாத.

indom'itable, *a.* வெல்லமுடியாத; விடாப்பிடியாய் எதிர்க்கின்ற; பிடிவாதமான; தளர்வுறாத, வளையாத, பணிதலில்லாத.

In'dones'ian, *n.* கிழக்கிந்தியத் தீவுகளைச் சார்ந்தவர்; கிழக்கிந்தியத் தீவுக்குழுவின் மொழிகளைப் பேசுபவர்; *a.* கிழக்கிந்தியத் தீவுகளைச் சார்ந்த, இந்தோனேசியா நாட்டைப் பற்றிய.

in'door, *a.* வீட்டிற்குள் இருக்கிற; மனையக, வீட்டுக்குள் நிகழ்த்தப்படுகிற; மதிலக, தொழிற்சாலைக் கட்டிடத்துக்குட்பட்ட; (தொ.) indoor games, மனையகக் கேளிக்கைகள்; indoor relief, பொதுமனைகளுக்கு வரும் ஏலாதவர்க்கு வழங்கப்படும் துணையுதவி.

indoors', *adv.* வீட்டிற்குள்; மறைவில்.

indorsa'tion, *n.* புறவரி, மேலெழுத்து, ஆதரித்து எழுதுதல்.

indorsee', *n.* புறவரிக்குரியவர், மேல் வரியில் ஆதரித்து எழுதப் பெற்றவர்.

in'draft, in'draught, *n.* உள்ளீர்ப்பு; உள்ளொழுக்கு; உள்நோக்கிய பாய்ச்சல்.

in'dri, *n.* மடகாஸ்கர் தீவில் இரவில் உலவும் நீண்ட முகமுடைய குரங்கினம்.

indub'itable, *a.* ஐயத்துக்கிடமற்ற, உறுதியான.

induce', *v.* தூண்டு; இணக்குவி; தூண்டிச் செயலாற்றுவி; உண்டுபண்ணு, தோற்றுவி; கருத்து எழும்படிசெய், ஊகிக்கும்படி செய், உய்த்துணர்வி; கிளர்மின்னோட்டத்தை உண்டாக்கு.

induce'ment, *n.* தூண்டுதல்; கிளறிவிடும் கவர்ச்சிப்பண்பு.

induct', *v.* மானிய வகையில் முறைப்படி உரிமையில் புகுவி; பதவியில் அமர்வி; அறையில் குடிமேற்கொள்ளுவி; புகுமுகம் செய், தொடக்கவினையாற்று.

induc'tile, *a.* கம்பியாக இழுக்க முடியாத.

induc'tion, *n.* புகுமுகம் செய்தல்; தொடங்கிவைப்பு; முன்னுரை; முகப்பு வாசகம்; தூண்டுதல்; உய்த்துணரவைப்பு; (அள.) விதிவருமுறை, தொகுப்பாய்வு முடிவு, தனிச்செய்திகளை விரிவாக வகுத்துத் தொகுத்தாய்வதன்மூலம் பொது மெய்களை வருவிக்கும் முறை; (கண.) பொதுமுடிவின் வகைதேர்வு, ஒருவகைக்குப் பொருந்துவது மறு வகைக்கும் இசைவதுகாட்டி மெய்ம்மையின் பொதுமைநிலை எண்பித்தல்; (இயற்.) அணுக்கநிலை மின்பாய்வு; (தொ.) mathematical induction, பொதுமுடிபின் வகைதேர்வு.

induc'tion-coil, *n.* அணுக்கமின்பாய்வுமூலம் நேர்மின்னோட்டத்தை மாற்றுமின்னோட்டமாக்கும் மின்சுருள்.

induc'tive, *a.* விதிவருநிலை சார்ந்த, தொகுப்பாய்வு முறைக்குரிய; உய்த்துணர்வு சார்ந்த; கிளர்மின்னியலான, அணுக்கநிலை மின்பாய்வு சார்ந்த.

induc'tor, *n.* புகுமுகவாணர், கிறித்தவ சமயக் குருவைப் பதவியில் அமர்த்துபவர்; கிளர்மின்னோட்டத் துணைக்கருவிப் பகுதி.

indulge', *v.* அவாநிறைவுபடுத்து, திருப்திப்படுத்து; தற்போக்கில் ஊக்கு; மனம்போனபோக்கில் போகவிடு, செல்லங்கொடு, சலுகை காட்டு; தற்போக்கில் நட, மனம்போன போக்கில் செல்; சலுகை எடுத்துக்கொள்.

indul'gence, *n.* சலுகை காட்டுதல்; சலுகையளிப்பு; தனிச்சிறப்புரிமை, தனிப்பட வழங்கப்பட்ட உரிமை; செல்லம், இளக்காரம்; இன்பத்தோய்வு; மட்டற்ற நுகர்வு; தண்டனைக் குறைப்பு, சலுகை; பாவமன்னிப்புச் சலுகை; (தொ.) Declaration of Indulgence, (வர.) சமய உரிமைகளைப் பற்றிய அரசாங்க ஆணை அறிவிப்பு.

indul'genced, *a.* வழங்குவோருக்குச் சிறப்புரிமை ஏற்பாடுடைய.

indult', *n.* ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பொதுவிதி முறைகளின் இசைவில்லாவிடத்தில் பெறப்படும் போப்பாண்டவர் தனிச் சலுகையுரிமை.

indun'a, *n.* தென் ஆப்பிரிக்காவில் குடிமரபுத் தலைவர்.

in'durate, *v.* கடினமாக்கு; உணர்ச்சியறச்செய்; நீண்ட காலப் பழக்கத்தினால் காழ்ப்புறு, காய்ப்படை.

indus'ium, (ல.) *n.* தூல் காய்த்தொகுதியை மூடிக்கொண்டிருக்கும் மென்தோல் போன்ற கவசம்; சூல்முடியைச் சூழ்ந்திருக்கும் மயிர்போன்ற தாள்களின் தொகுதி; முட்டைப்புழுவின் மேலுறை; *pl.* *indus'ia.*

indus'trial, *n.* தொழில்துறையாளர்; *a.* கைத்தொழில் பற்றிய; தொழிற்சாலைகள் பற்றிய; தொழில் சார்ந்த; பெருந்தொழில் சார்ந்த; இயந்திரத்தொழில் சார்ந்த; தொழில் துறைக்கென்றமைக்கப்பட்ட; தொழில்துறையில் பெருவழக்கான; (தொ.) industrial estate, திட்டத் தொழிற் பேட்டை, பல்வேறு வகைப்பட்ட வேலையளிப்புக்களுக்கு உகந்த முறையில் தொழிற்சாலைகள் பரவலாகத் திட்டமிட்டமைக்கப்பட்ட பகுதி; industrial maintenance, தொழில்துறையில் வேலையற்றோர்க்கு வேலை அல்லது உதவி அளிக்கும் அமைப்பு; industrial school, தொழிற்பயிற்சிப் பள்ளி, கவனிப்பாரற்ற குழந்தைகளுக்கு பொதுப்பாடங்களோடு தொழிற்பயிற்சி முறைகளும் கற்றுக்கொடுக்கப்படும் பள்ளிக்கூடம்; the industrial revolution, தொழிற்புரட்சி, 18-19ஆம் நூற்றாண்டுகளில் இயந்திரச் சாதனங்களின் கண்டுபிடிப்பினால் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலேற்பட்ட திடீர் உறவு மாற்றம்.

indus'trious, *a.* கடுமையாக உழைக்கிற; பெருமுயற்சியுள்ள, செயலூக்கமுள்ள, சுறுசுறுப்பான, உழைக்கிற.

in'dustry, *n.* விடாமுயற்சி; கடும் உழைப்பு; பயன்தரும் வேலை ஈடுபாடு; வாணிக முயற்சி; தொழில்துறை.

indwell', *v.* உள்ளமர்ந்திரு; உள்ளுறைவாயிரு; தங்கிவாழ்; தங்கியிரு; நிலைபரமாக அமர்ந்திரு.

ineb'riate, *n.* குடிகாரர்; குடிப்பழக்கமுள்ளவர்; *a.* குடிவெறியேறிய; *v.* குடிவெறியேறியவனுக்கு, வெறிகொள்ளுவி; கிளர்ச்சி கொள்ளுவி.

inebri'ety, *n.* மதுமயக்கம், குடிவெறியேறிய நிலை; குடிப்பழக்கம்.

ined'ible, *a.* தின்னத்தகாத.

ined'ited, *a.* வெளியிடப்படாத; பதிப்பாசிரியரின் திருத்த மாறுதல்களின்றி வெளியிடப்பட்ட.

ineff'able, *a.* சொல்லுதற்கரிய, வருணனைக்கடங்காத.

inefface'able, *a.* துடைத்தழிக்க முடியாத, நிலையான தடமுடைய.

ineffec'tive, *a.* பயன்படாத, விளைபயனற்ற, விரும்பிய விளைவினை உண்டுபண்ணாத; திறமையற்ற; கலைத்திறம் படாத.

ineffec'tual, *a.* விளைபயனில்லாத, பலனற்ற, வீணான.

ineffica'cious, *a.* மருந்து வகையில் பயன்தரும் ஆற்றலற்ற; உரமற்ற.

ineff'icacy, *n.* விரும்பும் பயன் விளையாமை.

inefficí'ency, *n.* தகுதியின்மை; திறமையின்மை; பயனின்மை.

ineffi'cient, *a.* முழுத்தகுதி பெற்றிராத; திறமையற்ற; பயனற்ற.

inelas'tic, *a.* மீள்திறனற்ற, இழுபட்டு மீண்டு தன்னிலை கொள்ளாத; மாற்றியமைத்துக்கொள்ளத் தக்கதாயிராத; இணங்கி வராத.

inel'egant, *a.* நயமற்ற, அழகில்லாத; நாகரிகமற்ற; நடைப் பண்பற்ற; நடைவகையில் பண்படாத.

inel'igible, *a.* தேர்வுக்குரிய தகுதிபெற்றிராத, ஏற்புத் தகுதியற்ற.

inelúc'table, *a.* தப்பித்துக்கொள்ள முடியாத, விலக்கிவிட முடியாத.

inept', *a.* பொருத்தமற்ற, தகாத; நகைப்புக்கிடமான; மடத்தனமான.

ineq'uable, *a.* ஒருசீராயிராத; சமனற்ற; மாறுபடு நிலையுடைய.

inequal'ity, *n.* ஒப்பின்மை; உயர்வுதாழ்வுநிலை; பரப்பின் ஒழுங்கற்ற தன்மை, மேடுபள்ள அமைவு; மாறுந்தன்மை; இயக்கவகையில் ஒழுங்குநிலையற்ற போக்கு.

inequilat'eral, *a.* சரிசமமற்ற பக்கங்களையுடைய.

ineq'uitable, *a.* அடாத, நேர்மையற்ற, முறையற்ற.

ineq'uity, *n.* நேர்மையின்மை; கொடுமை, நேர்மையற்ற செயல்.

inerad'icable, *a.* வேரறுத்தற்கரிய, அழிக்கவியலாத.

ine'rrable, *a.* தவருத, பிழைக்கு ஆளாகாத.

inert', *a.* சடமான; செயலாற்றலற்ற; இயக்க ஆற்றலில்லாத; எதிர்ச்செயலற்ற; உள்ளார்ந்த தனியாற்றலற்ற; வேதியியல் விளைவுகளற்ற; செயற்பண்புகள் அற்ற; மந்தமான; மிகமெதுவான.

iner'tia, *n.* (இய.) சடத்துவம்; கிளர்ச்சியின்மை; மடிமை, செறிவுமிக்க சோம்பல்.

iner'tial, *a.* சடத்துவம் சார்ந்த; (தொ.) inertial navigation, கணிப்பியல் தானியங்கி முறை, வானூர்தி எறிகல வகைகள் நிலந்திலிருந்து இயக்கப்படாமலே கணிப்படிப்படையாகத் தானியங்கி விற்சக்கரந்தின்மூலம் இயக்கப்படும் முறை.

inescap'able, *a.* தப்பமுடியாத; தவிர்க்கவொண்ணாத.

in ess'e, (ல.) *adv.* உள்ளபடி இருக்கின்ற நிலையில், மெய்யாகப் புற உலகில் நிகழ்நிலையில்.

inessen'tial, *a.* சிறப்பற்ற, முக்கியத்துவமற்ற; சில்லறையான.

ines'timable, *a.* மதிக்கவொண்ணாப் பெருமையுடைய, விலையிட முடியாத மதிப்புள்ள.

inev'itable, *a.* தவிர்க்கமுடியாத, உறுதியாக நிகழவிருக்கிற; கட்டாய விளைவான; வேறுவழியற்ற.

inexact', *a.* சரிநுட்பமாயிராத; கண்டிப்பில்லாத; தளர்த்தியான

inexcus'able, *a.* மன்னிக்க முடியாத; பொறுக்க முடியாத; காரணம காட்டி விளக்கமுடியாத.

inexec'utable, *a.* நிறைவேற்ற முடியாத, செயற்படுத்த முடியாத.

inexhaus'tible, *a.* வற்ருத, எடுக்க எடுக்கக் குறையாத, குறையா நிறைவளமுடைய.

inex'orable, *a.* மனமிளகாத, இரங்காத, கடினமான, வசப்படாத.

inexpec'tant, *a.* எதிர்பாராத.

inexped'ience, inexped'iency, *n.* கால இடச்சூழலிசைவின்மை; உகவாமை, பொருந்தாமை.

inexped'ient, *a.* சூழிசைவற்ற, தகாத, உகந்ததாயிராத.

inexpen'sive, *a.* மலிவான.

inexper'ience, *n.* அனுபவமின்மை.

inexpert', *a.* திறமையற்ற, தேர்ச்சியில்லாத.

inex'piable, *a.* குற்ற வகையில் கழுவாய் செய்து நீக்க முடியாத; வருத்த வகையில் ஆற்ற முடியாத, கோபவகையில் தணியாத.

inex'plicable, *a.* விளக்க முடியாத, காரணங்காட்ட இயலாத.

inexpli'cit, *a.* திட்டவட்டமாகக் கூறப்படாத, தெளிவற்ற.

inexplos'ive, *a.* வெடிக்காத.

inexpress'ible, *a.* சொல்ல முடியாத, சொல்லால் விரித்துரைக்க முடியாத, சொல்லுக்கடங்காத.

inexpress'ive, *a.* பொருள்விளக்கமற்ற, அர்த்தம் கொடாத, சொல்லமுடியாத.

inexpug'nable, *a.* வெல்லுதற்கரிய, தாக்கிக் கைப்பற்ற முடியாத.

inexten'sible, *a.* விரிவுபடுத்த முடியாத.

in exten'so, (ல.) *adv.* முழுநீளத்தில், விரிவாக.

inexting'uishable, *a.* ஒழிக்க முடியாத; அமர்த்த முடியாத, தணிக்க முடியாத.

in extre'mis, (ல.) *adv.* இறக்குந் தறுவாயில்.

inex'tricable, *a.* விடுவித்துக்கொள்ள முடியாத, சிக்கறுக்க முடியாத, தீர்வுகாண இயலாத; தப்பிச்செல்ல வழிதராத.

infall'ibilism, *n.* போப்பாண்டவர் பற்றிய பிழைபாடின்மைக் கோட்பாடு.

infallibil'ity, *n.* தவறமாட்டாமை, பிழையாத்தன்மை.

infall'ible, *a.* தவருநிலையுடைய, தவறிழைக்காத, பிழையாத.

in'famize, *v.* பழிதூற்று, பழிக்காளாக்கு.

in'famous, *a.* இகழார்ந்த, பழிக்கப்பட்ட, இழிந்தவரெனப் பேரெடுத்த; அருவருப்பான, வெறுக்கத்தக்க, மோசமான; (சட்.) பொல்லாத குற்றத்துக்காகக் குடிமகனுக்குரிய உரிமைகள் சில அல்லது அனைத்தும் பறிக்கப்பெற்ற.

in'famy, *n.* பெரும்பழி; பொது அவமதிப்பு, உலகப்பழிப்பு; இழிபழி; (சட்.) கொடும்பழி காரணமாகச் சான்ருளராக முடியாத கறை.

in'fancy, *n.* குழந்தைத்தன்மை; குழந்தைப்பருவம், பாலப் பருவ நாட்கள்; வளர்ச்சியின் தொடக்கநிலை; (சட்.) வயது வராப் பருவம், 21 வயதுக்குட்பட்ட பருவம்.

in'fant, *n.* குழந்தை; 7 வயதுக்குட்பட்ட சிறுவன்; 7 வயதுக்குட்பட்ட சிறுமி; (சட்.) 21 வயதுக்குட்பட்டவர், வயது வராதவர்; (தொ.) infant school, 7 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான பள்ளிக்கூடம்.

infan'ta, *n.* ஸ்பெயின் அல்லது போர்ச்சுகல்நாட்டு அரசருக்கும் அரசிக்கும் பிறந்த அரசுரிமையில்லாத மூத்த மகள்.

infan'te, *n.* ஸ்பெயின் அல்லது போர்ச்சுகல் நாட்டு அரசருக்கும் அரசிக்கும் பிறந்த அரசுரிமையில்லா இரண்டாவது மகன்.

infan'ticide, *n.* குழந்தைக்கொலை; பெரும்பாலும் தாயுடந்தையாய் இருக்கும் நிலையுடைய குழந்தைக்கொலை; பிறந்தவுடன் குழந்தைகளைக் கொன்றுவிடும் வழக்கம்.

in'fantile, *a.* குழந்தைகளைப்போன்ற ; குழந்தைகளுக்குரிய ; தொடக்க நிலையிலிருக்கிற ; குழந்தைப்பருவத்துக்குரிய ; (தொ.) infantile paralysis, இளம்பிள்ளைவாதம்.

infan'tilism, *n.* (மரு.) அறிவோ உடம்போ வளர்ச்சியடையாத நிலை, உடலுள வளர்ச்சியற்ற நிலை.

in'fantry, *n.* காலாட்படை, இளவணி.

in'fantryman, *n.* காலாட்படை வகுப்பைச் சேர்ந்த வீரன்.

infat'uate, *v.* மருட்சியூட்டி அறிவிழக்கச் செய் ; முட்டாளாக்கு ; மயக்கு ; மோகவலையுட்படுத்து.

infatua'tion, *n.* மையல், மோகம், கைம்மயக்கம்.

infect', *v.* நோய் நுண்மங்கள் பரப்பி நச்சுப்படுத்து ; நோய் பற்றுவி; காற்றில் நிரப்புவி ; பழுதாக்கு, கெடு ; கறைப்படுத்து ; உள்ளத்தில் தீயபண்பு பற்றுவி ; கருத்து மேற்கொள்ளச் செய்

infec'tion, *n.* தொற்று ; காற்று நீர் மூலமான நோய்த்தொற்று ; தொற்றுநோய் ; ஒட்டிப்பரவும் பொருள்; படர்ந்து கறைப்படுத்தும் பொருள் ; பற்றிப்பரவும் பண்பு, பரவும் திறம்.

infec'tious, *a.* தொற்றுகிற ; நோய்பரப்புகிற ; கொள்ளை நோய்த் தன்மைவாய்ந்த ; நோய்வகையில் நீர் அல்லது காற்று மூலமாகப் பரவக்கூடிய ; உணர்ச்சி முதலியவற்றின் வகையில் பரவும் பாங்குடைய, தொற்றிக்கொள்ளுகிற.

infec'tive, *a.* தொற்றவைக்கும் இயல்புடைய ; பழுதாக்குகிற ; பரவக்கூடிய.

infelicif'ic, *a.* மகிழ்ச்சிக்கேடு விளைவிக்கிற.

infeli'citous, *a.* மகிழ்ச்சிக்கேடான ; மங்கலக்கேடான, நற்பொருத்தமற்ற.

infeli'city, *n.* மகிழ்ச்சிக்கேடு ; அவப்பேறு, அமங்கலம் ; சொல் முதலியவற்றில் நற்பொருத்தமின்மை.

infer', *v.* உய்த்துணர், அனுமானி, ஊகி, வருவி, முடிவு செய் ; உய்த்துணரவை.

in'ferable, *a.* அனுமானிக்கத்தக்க, ஊகத்தால் பெறக்கூடிய.

in'ference, *n.* ஊகம், ஊகித்தல்; அனுமானம், கருத்தளவை, தேற்றப்பாடு, முடிவு, முடிவாகப்பெற்ற பொருள், கோள்.

infer'ior, *n.* கீழோர், தரத்தில் அல்லது நிலையில் மற்றவரை விடத் தாழ்ந்தவர்; *a.* கீழ் உள்ள, தரம்-நிலை முதலியவற்றில் தாழ்ந்த ; மட்ட வகையான ; கோள்கள் வகையில் நிலவுலகின் பாதைக்கு உள்ளடங்கிய பாதையுடைய ; அச்சு வகையில் பொது எழுத்துவரி மட்டத்துக்குக்கீழே இடப்படுகிற ; (தாவ.) புல்லிவட்டம் வகையில் கருவகத்துக்குக் கீழுள்ள ; கருவகம் வகையில் புல்லிவட்டத்துக்குக் கீழுள்ள.

inferio'rity, *n.* இழிவு, இளப்பம் ; தாழ்வு ; (தொ.) inferiority complex, தாழ்வு மனப்பான்மை.

infern'al, *a.* அளறு சார்ந்த; நரகத்தின் இயல்புடைய, கீழுலகுக்குரிய, பேயுலகுக்குரிய ; மோசமான ; வெறுக்கத்தக்க ; கொடுமை வாய்ந்த ; (தொ.) infernal machine, தோற்றத்தால் மயக்கி எதிர்பாராப் பேரிடர் விளைக்கவல்ல வெடிமருந்து திணிக்கப்பெற்றுள்ள பொறியமைவு.

infern'o, *n.* அளறு, நரகம் ; பயங்கரக்காட்சிக்களம் ; *pl.* infern'os.

infer'rable, *a.*=inferable.

infert'ile, *a.* வறண்ட, செழிப்பற்ற.

infest', *v.* சூழ்ந்து தாக்கு; மொய்த்தலைக்கழி; நோய் நுண்ம வகையில் பரவி ஊடாடு ; நோய்வகையில் சுற்றி நிலவு.

infesta'tion, *n.* மொய்ப்பு, ஊடாட்டம் ; சுற்றி வளைப்பு ; திரண்டதாக்குதல் ; தாக்குதலுக்கு ஆட்பட்டநிலை.

infeuda'tion, *n.* மானிய அளிப்பு, நிலத்தை மானியமாக விடல்; (தொ.) infeudation of tithes, சமயஞ்சாரா மேலாளருக்கு மகன்மைவரி அளித்தல்.

infibula'tion, *n.* விழைச்சுக்கட்டு, புணர்ச்சி செய்வதைத் தடுக்கும்பொருட்டுப் பாலுறுப்புக்களைக் கொக்கியினுல் கட்டிவிடும் முறை.

in'fidel, *n.* சமய நம்பிக்கையற்றவர் ; (வர.) கிறித்துவ சமயத்துக்கு மாறுபட்ட சமயநெறியைக் கடைப்பிடிப்பவர் ; யூதர் அல்லது முகமதியர் நோக்கில் உண்மைச் சமயத்தில் நம்பிக்கையற்றவர் ; பொதுப்படையான நோக்கில் புறச்சமயி ; நாத்திகர் ; *a.* சமய நம்பிக்கையற்ற ; புறச்சமயிகள் சார்ந்த.

infidel'ity, *n.* கிறித்தவ சமயத்தில் நம்பிக்கையின்மை ; பற்றுறுதியின்மை, கணவன் மனைவியரிடையே உண்மையாக நடந்துகொள்ளாமை, வஞ்ச ஒழுக்கம்.

in'field, *n.* மனையணைநிலம், குடும்ப மனையகத்தைச் சுற்றி அல்லது அதற்கு அண்மையிலுள்ள பண்ணைநிலம் ; உழத்தகுந்த நிலம் ; ஒழுங்காக எருவிட்டுப் பயிரிடப்படும் நிலம் ; மரப்பந்தாட்ட வகையில் பந்திலக்குக் கட்டைக்கு அண்மையிலுள்ள ஆட்டக்களப்பகுதி.

in'fight'ing, *n.* கைநீளத்துக்கும் குறைவாக நெருங்கி நடத்தப்படும் குத்துச்சண்டை.

infil'trate, *v.* இறு, வடித்தெடு ; கசிந்து வடியப்பண்ணு ; கசிந்து பரவச்செய் ; கசிந்துவடி ; ஊடுருவிப்பரவு ; படிப்படியாகச் சென்று பரவு.

infiltra'tion, *n.* இறுத்தல், வடித்தல்; இறுப்புமுறை, வடிப்புமுறை ; ஊடுபரவல், படிப்படியாக உள்சென்று தோய்ந்து பரவுதல் ; இறுத்தமண்டி, வடிநீர்ப்படிவம் ; இறுத்தலுக்குரிய பொருள்; படை மக்கள் தொகை வகையில் புதுவரவின் படிப்படியான ஊடுபரவல்.

in'finite, *n.* எல்லையற்ற பரம்பொருள், கடவுள் ; வரம்பிலி, முடிவறுதி கருதமுடியாத பொருள் ; எல்லையற்ற பெரும் பரப்பு; *a.* முடிவில்லாத, எல்லையற்ற; கருத்து வரம்பு கடந்த, வரம்பிலியான ; வரம்பின்மையளாவிய ; மாபெரிய ; மிகப் பலவான ; அள்ள அள்ளக் குறையாத ; (கண.) கணிப்பு வரம்புகடந்த; (வடி.) வட்டை வகையில் மறி அளவையாக்கி வரம்பிலியாக்கப்பட்ட; (இலக்.) முற்று வினையல்லாத, வினை வகையில் எண் இடப் பால் கட்டுப்பாடற்ற வடிவமுடைய ; (தொ.) the Infinite, கடவுள் ; the infinite, அகண்ட பெருவெளி.

infinites'imal, *n.* உறுநுண் அளவு, மிகச் சிறிய அளவை ; *a.* மிக நுண்ணிய, உறு நுணுக்கமான; (தொ.) infinitesimal calculus, (கண.) முழுநிலைக் கணிப்பு மிச்சநிலைக் கணிப்பு ஆகிய இரண்டும் இணைந்த கணிப்புமுறை.

infin'itive, *n.* (இலக்.) வினைப்பொது நிலை, வினைக்கருத்தினை எழுவாய்க்குப் பயனிலையாக்காமல் காட்டும் வினைவடிவம் ; செயவெனுமெச்ச வடிவம் ; எண்ணிடம் எஞ்சு வினைவடிவச் சொல் ; *a.* (இலக்.) வினைக் கருத்தினை எழுவாய்க்குப் பயனிலையாக்காமல் காட்டுகிற; செயவெனும் எச்ச வடிவான.

infin'itude, *n.* எல்லையற்ற தன்மை ; முடிவற்ற எண் ; முடிவிலாப் பரப்பு.

infin'ity, *n.* (கண.) முடிவற்றது, முடிவிலி.

infirm', *a.* வயது முதிர்ச்சி காரணமாக உடல் வலிமையற்ற ; மூப்பால் தளர்ந்த ; மெலிந்த ; ஏலாத ; மனவுறுதி அற்ற.

infirm'ary, *n.* மருத்துவமனை; பள்ளிக்கூடம்-தொழிற்கூடம் முதலியவைகளில் நோயாளிகள் தங்குமிடம்

infirm'ity, *n.* பலக்குறைவு.

in'fix [1], *n.* (இலக்.) இடைவைப்பு, வேர்ச்சொல்லில் மாறுதல் விளைவிப்பதற்காகப் புகுத்தப்படும் கூறு.

infix' [2], *v.* ஊன்றி நாட்டு, நிலைநிறுத்து; அறைந்து பொருந்தவை ; உட்செலுத்தி இறுக்கு ; மனத்திற் பதியவை ; (இலக்.) இடைக்கூறு புகுத்து.

in flagran'te delic'to, (ல.) *adv.* குற்றஞ்செய்து கொண்டிருக்கும் நிலையில், குற்றத்தின் செயல் நிலையிலேயே.

inflame', *v.* கொழுந்து விட்டெரியச் செய் ; தீக்கொளுத்து, எரியெழுப்பு, நெருப்பேற்று; எரிவு உண்டாகச் செய்; குருதி கொதிக்கச் செய் ; உடல் வெப்பூட்டு; கிளர்ச்சி ஊட்டு ; அழற்சி உண்டுபண்ணு ; தீப்பற்று ; கிளர்ச்சிகொள் ; அழற்சியுறு.

inflamm'able, *n.* எளிதில் தீப்பற்றிக்கொள்ளும் பொருள்; *a.* எளிதில் தீப்பற்றிக்கொள்ளக் கூடிய; எளிதில் அல்லது விரைவில் சினங்கொள்ளுகிற.

inflamma'tion, *n.* அழன்றெழல், கொழுந்து விட்டெரிதல்; எரிவு; கொதிப்பு, கிளர் எழுச்சி; வீக்கம், அழற்சி.

inflamm'atory, *a.* உணர்ச்சியைக் கிளறிவிடக்கூடிய; அழற்சி சார்ந்த, வீக்கம் உண்டுபண்ணுகிற.

inflate', *v.* ஊதிப் பெருக்கச் செய், உப்பச்செய், தற்பெருமை கொள்ளச் செய்; பணவீக்கங் கொள்ளச் செய்; செயற்கையாக விலையேறச் செய்.

inflat'ed, *a.* வீங்கிய, பூரிக்கச் செய்யப்பட்ட; பேச்சுவகையில் தற்பெருமையான, வீறுப்பான; மொழி நடை வகையில் செயற்கைப் பகட்டான.

infla'tion, *n.* ஊதல், உப்பல்; தற்பெருமைப் பூரிப்பு; வீங்கிய நிலை; மொழி நடை வகையில் செயற்கைப் பகட்டாரவாரம்; பண வீக்கம்.

inflat'or, *n.* வீங்கச் செய்பவர்; காற்றடைக்கும் கருவி.

inflect', *v.* உள்வாங்கு, உட்பக்கமாகத் திருப்பு, வளை; (இலக்.) இலக்கணத் தொடர்பைக் காட்டுவதற்காகச் சொல்லிறுதியில் மாறுதல் செய்; விகுதி சேர்த்து உருமாற்று; (இசை.) இசைவிகற்பம் செய்.

inflec'tion, *n.* = inflexion.

inflec'tive, *a.* (இலக்.) விகற்பம் உண்டுபண்ணுகிற; விகற்பத்துக்குரிய; விகற்பத்துக்குட்பட்ட; சொல் சிதைவுக்குரிய.

inflex'ible, *a.* வளைக்க முடியாத; வளையாத; வணங்காத, விறைப்பான.

infle'xion, *n.* உள் வளைவு; நெறிவிலகல்; தொனித்திரிபு; (இலக்.) சொல் உரு மாறுபாடு; விகுதி; (வடி.) வளைவு மாற்றம், உள் குழிவு வளைவைப் புறக் குவிவு வளைவாக்கும் மாறுபாடு.

inflict', *v.* சுமத்து, கட்டாயமாக ஏற்று, பெறுவி, அனுபவிக்கச் செய்; தண்டனை வகையில் ஏற்கும்படி செய்து ஒறு.

inflic'tion, *n.* சுமத்துதல்; கட்டாயப்படுத்தி அனுபவிக்கச் செய்தல்; அல்லற்படுத்தும் செயல்; தண்டனை; தண்டனை விதிப்பு.

inflores'cence, *n.* (தாவ.) பூங்கொத்தொழுங்கு; இணர், பூங்கொத்து; மலர்ச்சி.

in'flow, *n.* உட்பாய்வு; உள் ஒழுக்கு; உள்பாயும் பொருள்.

in'fluence, *n.* இயக்க விளைவு, செயல் விளைவு; விளைபயன், பலன்; புடை விளைவு; கோள்களின் தாக்கு விளைவு; செல்வாக்கு, தனி மனிதனின் சூழ்வலி; ஆற்றல் கூறு, மாறுதல் உண்டுபண்ணும் கூறு; ஆக்கத் திரிபுகள் உண்டுபண்ணும் செய்தி; செல்வாக்குக்குரியவர்; விளைபயனுக்குரிய பொருள்; சக்தி, ஆக்கத்திரிபு உண்டுபண்ணும் ஆற்றல்; உள்ளாற்றல், மறை ஆற்றல், பின்னணி ஆற்றல்; மின் வகையில் அணுக்க ஆக்க விளைவுத்திறம்; *v.* விளைவாட்சிக்கு உட்படுத்து; விளைவு உண்டுபண்ணு; நிலைமாற்றம் காண், மாறுதல் உண்டுபண்ணு; இயக்கு, ஆக்கத் திரிபு உண்டுபண்ணு.

in'fluent, *n.* வந்துபாயும் கிளை ஆறு, துணையாறு; *a.* உள்ளே பாய்கிற.

influen'tial, *a.* செல்வாக்குமிக்க, செல்லுஞ் சொல்லுடைய, செல்லும் அதிகாரமுடைய, வல்லமையுடைய.

influen'za, *n.* சளிக்காய்ச்சல், கடு நீர்க்கோப்புடன் கூடிய காய்ச்சல்; influenza cold, கடுமையான நீர்க்கோப்பு.

in'flux, *n.* உட்பாய்வு, உள்நோக்கிய ஒழுக்கு; உள்வரவு, புகுதரவு; தேக்கம், வந்து மண்டுதல்.

inform', *v.* அறிவி, தெரிவி; தகவல் கூறு; கற்பி, போதி; குறைபுறம் தெரிவி, குற்றம் வெளியிட்டுக் கூறு; உருக்கொடு; உயிர்ப்பூட்டு; பண்பூட்டு; மனத்திற் பதியவை; பண்பு தோய்வி.

inform'al, *a.* முறைப்படி அமையாத, ஒழுங்குமுறை சாராத, தனிமுறையான, இயல்பான.

inform'ant, *n.* அறிவிப்பவர், தகவல் கொடுப்பவர்; குற்றவாளிபற்றி அறிவிப்பவர்.

in form'a paup'eris, (ல.) *adv.* நீதிமன்றச் செலவுத் தொகைகளைக் கொடுக்க இயலா ஏழ்மையான நிலையில்.

informa'tion, *n.* தெரிவிப்பு, தகவலறிவிப்பு; தகவல், செய்தி; (சட்.) நீதிமன்றத்தில் கூறப்பட்ட குற்றச்சாட்டு.

inform'ative, *a.* செய்தி தெரிவிக்கிற, தகவல் அறிவிக்கிற, விளக்கமான; அறிவுறுத்துகிற, கற்பிக்கிற.

inform'atory, *a.* அறிவுறுத்துகிற, கற்பிக்கிற; விளக்குகிற; தகவல் தெரிவிக்கிற.

informed', *a.* அறிவூட்டப்பட்ட; கற்பிக்கப்பட்ட; கற்றுணர்ந்த; கேட்டுணர்ந்த; தகவல் தெரிந்த.

inform'er, *n.* குற்றஞ் சாட்டுபவர்; குறை கூறுபவர்; காட்டிக் கொடுப்பவர்; குற்றங் கண்டுரைக்கும் பணி மேற்கொண்டவர்.

in'fra, (ல.) *adv.* கீழே, தாழ; பின்னர்.

infrac'tion, *n.* மீறுகை; சட்டவரம்பு கடப்பு.

in'fra dig, (ல.) *a.* ஒருவருடைய தன்மதிப்புக்குக் கீழான, மதிப்புக்கு ஒவ்வாத.

in'fralapsar'ian, *n.* வீழ்ச்சி மீட்சிப் புகழ் வீற்றுக் கோட்பாட்டாளர், இறைவன் தன் புகழ் வீறுதோன்றப் பலரை வீழ்ச்சிக்கும் சிலரை மீட்சிக்கும் தேர்வு செய்கின்றானென்ற கிறித்தவ சமயக் கிளைகளின் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்; *a.* வீழ்ச்சி மீட்சிப் புகழ்க்கோட்பாட்டினைச் சார்ந்த.

infra-red', *a.* அப்பாற் சிவப்பு நிறத்துக்குரிய, நிறப்பட்டையில் சிவப்பு நிறத்துக்கு அப்பாற்பட்ட கட்புலப்படா நிறத்துக்குரிய.

infra ren'al, (ல.) *a.* சிறுநீர் பிரிக்கும் கழலைகட்குக் கீழே உள்ள.

infra scap'ular, (ல.) *a.* தோட்பட்டை எலும்புக்கு அடியில் உள்ள.

infra stern'al, (ல.) *a.* மார்பு எலும்புக்குக் கீழேயுள்ள.

infra-structure, *n.* உள்ளமைப்பு; படைத்துறை நடைமுறைகளுக்குப் பின்னணித் துணையான ஊழியத்துறைகள் செய்தி இணைப்புக்கள் ஆகியவற்றின் இணைப்பமைவு; முழு ஐரோப்பிய பாதுகாப்பமைப்பு; ஐரோப்பாக் கண்டப் பொதுப்பாதுகாப்புக்குரிய விமான நிலையங்கள் - தொலை செய்தித் தொடர்புகள் - பொது ஊழிய நிறுவனங்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகுதி.

infreq'uent, *a.* அடிக்கடி நிகழாத, அரு நிகழ்வான.

infringe', *v.* மீறு, கிழ்ப்படிய மறு; வரம்பு கட; சட்டம் ஒப்பந்தம் வாக்கு ஆகியவற்றுக்கு மாறாக நட.

infruc'tuous, *a.* பயனற்ற, பலனளிக்காத; வீணான, ஊதியமற்ற.

infundib'ular, *a.* பெய்குழல் வடிவான, ஊற்றுங்குழல் போன்ற.

infur'iate, *v.* சினமூட்டு, சீற்றமுண்டாக்கு; வெறியூட்டு, பித்துவெறி உண்டுபண்ணு.

infuse', *v.* உட்சொரி, உட்செலுத்து, பாய்ச்சு; புகவிடு; உணர்ச்சி புகுந்து பரவவிடு; பண்பு கலக்கவிடு; புகட்டு, தோய்வி, ஊறவை; ஊறிக்கல, தோய்ந்து ஒன்றுபடு.

infus'ible, *a.* உருக்க முடியாத; உருக்கி ஒன்றாகச் சேர்க்க முடியாத.

infu'sion, *n.* ஊற்றல்; புகுந்து பரவவிடல்; அறிவு புகட்டல்; ஊறிக் கலத்தல்; அகத்தூண்டுதல்; உள்ளுயிர்ப் பண்பு; ஊறல் சாறெடுக்க நீர் ஊற்றல்; சேர்க்கப்பட்ட கலவைக்கூறு; கரைசல்; உயிர்ச்சாறு, வடிசாறு; வடிசாற்றுத்தேறல்; சாற்றுக்கூறு.

infusor'ia, *n. pl.* அழுகிய விலங்கு தாவரப் பொருள்களின் வடிநீரில் காணப்படும் மூல முதல் உயிரி வகை.

in'gathering, *n.* திரட்டிச் சேர்த்தல்; அறுவடை, விளை பொருட்களைச் சேகரித்தல்.

ingem'inate, *v.* இரட்டுறச் செய்; செயலிரட்டு; கூறியது கூறு.

ingen'ious, *a.* கூர்மதியுடைய, யூகமுடைய, சூழ்திறமிக்க, புனைதிறம்வல்ல; புனைதிறம் வாய்ந்த.

in genue, (பிர.) *n.* கள்ளங்கபடமற்ற சிறுமி; நாடகத்தில் தோன்றும் சூதுவாதற்ற பெண்மை நடிப்புறுப்பினர்.

ingenu'ity, *n.* புதுப்புனைவுத் திறன்; சூழ்ச்சித்திறம், கூர்மதி.

ingen'uous, *a.* கள்ளங்கபடற்ற, சூதுவாதற்ற, ஒளிவு மறைவற்ற; வெள்ளை உள்ளம் படைத்த; குற்றமற்ற.

ingest', *v.* உணவை வயிற்றுக்குள் கொண்டுசெல்.

ing'le, *n.* அடுப்பில் எரியும் நெருப்பு.

ing'le-nook, *n.* புகைப்போக்கி மூலை.

inglor'ious, *a.* இழிவுக்குரிய, அவமதிப்புள்ள; புகழ் அற்ற; ஊர்பேர் தெரியாத.

in'going, *n.* புகுதரவு, தமக்கு வேண்டிய சீர்திருத்தங்களுக்காகத் தொழில்துறை வாடகைக்காரர் செலுத்தும் தொகை.

ing'ot, *n.* உலோக வார்ப்புக்கட்டி, தங்கம் வெள்ளி எஃகு முதலியவற்றுக்குரிய வார்ப்புப் பாளம்.

ingraft', *v.* பதி, ஒட்டு, பொருந்தவை.

in'grain, ingrain', *a.* உள்தோய்வாகச் சாயமிடப்பட்ட; உள்ளார்ந்த, உள்ளியல்பாக அமைந்துள்ள; வேரோடி உறைத்த.

in'grained, *a.* நன்கு வேர்பாய்ந்துள்ள; நீண்ட நாள் நிலவி உறைத்த; ஆழமாகப் பதிந்துள்ள.

ingrate', *n.* (செய்.) நனறி கெட்டவர்; *a.* நன்றி மறந்த.

ingra'tiate, *v.* உகந்தவராகச் செய்.

ingrat'itude, *n.* செய்ந்நன்றி மறத்தல், நன்றிக்கேடு.

ingraves'cent, *a.* (மரு.) நோய்நிலை வகையில் மேலும் சீர்கேடடைகிற.

ingred'ient, *n.* கலவையின் கூறு, ஆக்கக்கூறு.

in'gress, *n.* உள்நுழைவு; நுழைவுரிமை.

in'growing, *a.* உள்நோக்கி வளருகிற, நகத்தின் வகையில் சதைக்குள் வளருகிற.

ing'uinal, *a.* அரையைச் சார்ந்த, தொடை அடிவயிறு இணைப்புக்குரிய.

ingur'gitate, *v.* பேராவலுடன் விழுங்கு; வளைத்து உட்கொள்.

inhab'it, *v.* உறைவுகொள், குடியிருப்பிடமாகக் கொள், இடமாகக்கொண்டு தங்கிவாழ்.

inhab'itancy, *n.* குடியுரிமைக்கு இன்றியமையாத கால வரைக் குடியிருப்பு.

inhab'itant, *n.* நாடிடங்கொண்டு வாழ்பவர், நீடுதங்கி வாழும் குடியிருப்பாளர்.

inhale, *v.* உள்வாங்கு, வளி மணம் முதலியவற்றை மூச்சோடு உள் இழு; புகைகுடிப்பு வகையில் புகை நுரையீரல்களுக்குள் பரவுமாறு உட்கொள்.

inharmon'ic, *a.* முரணிசையான, இசைந்து ஒலிக்காத.

inharmon'ious, *a.* பொருத்தமற்ற, இசைந்து ஒலிக்காத, முரணிசையான.

inhere', *v.* நிலையாகத் தங்கியிரு, நிலைகொண்டிரு, பற்றியிரு; பண்பு வகையில் இயற்கூறுயமைந்திரு; உரிமைவகையில் உரியவரை இயல்பாகச் சார்ந்திரு.

inher'ence, inher'ency, *n.* பற்றியிருக்கை, உள்ளார்ந்திருக்கை, நிலையாக உள்ளிருக்கை.

inher'ent, *a.* பற்றியிருக்கிற; இரண்டற நீங்காது உள்ளியல்பாயிருக்கிற; உள்ளார்ந்த, இயல்பான.

inhe'rit, *v.* மரபுரிமையாகப் பெறு, பின்னுரிமையாளராக அடை.

inhe'ritable, *a.* மரபுரிமையாகப் பெறத்தக்க.

inhe'ritance, *n.* மரபுரிமையாக அடைதல்; பரம்பரை உடைமை, வழிவழிச் சொத்து.

inhe'ritor, *n.* வாரிசு, மரபு வழியுரிமையாளர், பரம்பரை வழியாகச் சொத்துக்கு உரியவர்; *fem.* inhe'ritress, inhe'ritrix.

inhe'sion, *n.* = inherence.

inhib'it, *v.* தடைக்கட்டுச் செய், திருச்சபைச் சமயப்படி குறிப்பிட்ட ஆளைக் குறிப்பிட்ட செயல் செய்யக்கூடாதென்று தடைசெய்; தடுப்பாணையிடு, திருச்சபைப் பணியாளர் பணிக் கடமைகளைச் செயற்படுத்தக் கூடாதென்று கட்டளையிடு; தடுத்து நிறுத்து; விலக்கி வை.

inhibi'tion, *n.* தடைக்கட்டுச் செய்தல்; தடைக்கட்டு; தடுப்பாணை; விலக்கி வைப்பு; (உள.) பயிர்ப்புத் தடை, நீடித்த பழக்கம் அல்லது பயிற்சி காரணமான செயலவாக்களின் உள்ளார்ந்த தடையுணர்ச்சி.

inhos'pitable, *a.* விருந்தோம்பாத, அன்பு வரவேற்பற்ற; அன்பில்லாத; கவர்ச்சியற்ற, இட வகையில் நிழலாதரவு தராத, வள ஆதரவற்ற; நில வகையில் தரிசான.

inhospital'ity, *n.* விருந்தோம்பாமை, அன்பு வரவேற்பின்மை; நில வகையில் வளக்கேடு.

inhum'an, *a.* மனிதத் தன்மையற்ற; பழிகேடான, கொடிய; காட்டுமிராண்டித்தனமான; மனித இனப் பொதுவுக்குப் புறம்பான.

inhuma'tion, *n.* மண்ணிலிடல், புதைத்தல்.

inhume', *v.* புதை.

inim'ical, *n.* பகையான, நட்பில்லாத; தீங்கு விளைவிக்கிற.

inim'itable, *a.* பார்த்துப் பின்பற்ற முடியாத; பார்த்தமைக்க இயலாத; ஈடற்ற, ஒப்புக்காட்ட இயலாத.

iniq'uity, *n.* நேர்மையற்ற தன்மை, அநீதி, கொடுமை.

ini'tial, *n.* சொல்லின் முதலெழுத்து; பெயர் முதலெழுத்து; *a.* தொடக்கத்திலுள்ள, முதலிலுள்ள; தொடங்குகிற; *v.* பெயரின் முதலெழுத்துக்களை மட்டும் குறி; முதலெழுத்து மட்டும் குறித்துக் கையொப்பமிடு.

initials, *n. pl.* தலைப்பு எழுத்துக்கள்.

ini'tiate[1], *n.* தீக்கை பெற்றவர்; சமயக்கூட்டில் சேர்க்கப் பட்டவர்; *a.* தீக்கை செய்யப்பட்ட.

ini'tiate[2], *v.* தொடக்கம் செய்; துவக்கிவை; தோற்றுவி; புதிய அறிவுத்துறை வகையில் புகுமுகம் செய்துவை; சமய வகையில் தீக்கை வழங்கு, புதுமுக வினைகளாற்றிச் சேர்த்துக் கொள்.

ini'tiative, *n.* முயற்சி தொடங்குநிலை; முதற்படி; நற்றொடக்கம், அடியெடுப்பு; தொடங்கும் உரிமை; தொடங்கும் வாய்ப்பு வள ஆற்றல்; சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் சட்டமன்றம் வழியாக அல்லாது மக்கள் நேரடிச் சட்டம் ஆக்கும் உரிமை; *a.* தொடக்கம் செய்ய உதவுகிற; புகுமுகமான; (தொ) have the initiative, செயல் தொடங்குவதன் மூலம் எதிரி முயற்சியைத் தூண்டி இயக்கும் வாய்ப்பு வளம் பெறு; சட்டமன்றத்துக்கு வெளியே பொதுமக்கள் வகையில் சட்ட ஆக்க உரிமைபெறு; take the initiative, முயற்சியில் முந்திக்கொள், துணிந்து முயற்சி தொடங்கு.

ini'tio, (ல.) *adv.* புத்தக முதலியவற்றின் வகையில் தொடக்கத்தில்.

inject', *v.* உட்செலுத்து; மருந்து ஊசிபோடு; உட்புகுத்திப் பள்ளம் நிரப்பு.

injec'tion, *n.* மருந்து ஊசி போடுதல்; ஊசியிட்டுச் செலுத்தும் மருந்து நீர்மம்.

injudi'cious, *a.* ஆராயாது துணியப்பட்ட, அறிவுத் தகுதியற்ற.

injunc'tion, *n.* உரிமைக் கட்டளை; தடை அதிகார ஆணை; செயல் தடைப்படுத்தவும் வலியுறுத்தவும் பெறப்படும் நீதி மன்றக் கட்டாயமுறை உத்தரவு.

in'jure, *v.* தீங்கு செய் ; ஊறுபடுத்து, காயப்படுத்து ; பழுதுபடுத்து, இழப்பு உண்டுபண்ணு ; நலங்கெடு.

in'jured, *a.* புண்பட்ட ; தீங்கிழைக்கப்பட்ட, தீங்குக்கு ஆளானதாகக் குறைப்படுகிற ; துயர்ப்படுகிற.

injur'ious, *a.* புண்படுத்துகிற ; தீங்கு நிறைந்த, தீங்கான, கெடுதலான ; தீமை உண்டுபண்ணத்தக்க ; மதிப்புக் கேடான, அவதூறான.

in'jury, *n.* தீங்கு ; தீங்கிழைக்கும் செயல் ; தீமை உண்டு பண்ணும் நடத்தை ; இழப்பு, சேதம் ; ஊறு, காயம் ; அழிபாடு.

injus'tice, *n.* நேர்மைக் கேடு, அநீதி ; முறையற்ற செயல் ; உரிமைப் பறிப்பு ; தீங்கிழைப்பு.

ink, *n.* மை ; எழுதும் மை ; கருநிறக் குழம்பு ; அச்சடிப்பதற்குப் பயன்படும் வண்ணப் பசை ; கடல்மீன் வகையிலிருந்து வெளிப்படும் கருநிற நீர்மம் ; *v.* அச்சுருக்கள்மீது மை பூசு ; மையினால் எழுது ; கரிய வண்ணம்பூசு.

ink'-bag, *n.* கடல்மீன்வகை எதிரிகளிடமிருந்து தப்புவதற்காகத் தன் உடலினின்று வெளிப்படுத்தும் கருநீர்மம்.

ink'-bottle, *n.* மைக்கூடு.

ink'er, *n.* தந்திச் செய்திகளை மையினால் பதிவு செய்யும் கருவி ; அச்சிடும் இயந்திரத்தில் மை தடவும் உருளை.

ink'-horn, *n.* முற்காலங்களில் எழுதும் மை வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சிறு கொம்புக்கலம், மைக்குப்பி.

ink'ling, *n.* அறிகுறி ; முன்குறிப்பு ; தெளிவற்ற குறிப்பு ; சூசகம், ஊக ஐயப்பாடு.

ink'-pad, *n.* மையட்டை, முத்திரையச்சில் மைபூசும் அட்டை.

ink'-pot, *n.*=ink-bottle.

ink'stand, *n.* மைக்கூடு தாங்கி, மைக்கூடுகள் வைப்பதற்கான அமைப்புடைய சட்டம்.

ink'-well, *n.* எழுதும் மேசைக்குழியில் பொருத்தப்பட்ட மைக்கூடு.

in'land, *n.* உள்நாடு, நில உட்பகுதி ; *a.* உள்நாட்டிலுள்ள ; கடலினின்று ஒதுங்கி உட்புறத்தேயுள்ள ; உள்நாட்டுத் தொடர்புள்ள ; உள்பகுதிக்குள் கட்டுப்பட்டுள்ள ; *adv.* உள்நாடு நோக்கி, உள்நாட்டில் ; (தொ.) inland duty, உள்நாட்டு வாணிக வரி ; inland revenue, உள்நாட்டு வரி வருமானம் ; inland trade, உள்நாட்டு வாணிகம்.

in'lay[1], *n.* கல் முதலியன பதித்துச் செய்த வேலை.

inlay'[2], *v.* உள் அழுந்தலாகப் பதித்து வை ; உட்பதித்து ஒப்பனை செய் ; அச்சுப்பாளம் பக்கம் ஆகியவற்றை உள் வெட்டுப் புழையில் பொருத்தி இணை.

in'let, *n.* கடற்கூம்பு, கடற்கழி, நீர்குடா ; வாயில் ; நுழைவிடம் ; நுழைத்த பகுதி.

in'lier, *n.* (மண்.) தொல்படிகத்திட்டு, பின்னுளுண்டான படிவினால் முற்றிலும் சுற்றிச் சூழப்பட்ட முன்படிவிடம்.

in lo'co pare'ntis, (ல.) *adv.* தாய் தந்தையரின் இடத்தில், பெற்றோருக்குப் பதிலாக.

in'ly, *a.* உள்ளார்ந்த, மறைவடக்கமான ; *adv.* (செய்.) உள்ளே ; உள்ளார்ந்து, அந்தரங்கமாய் ; மிக நெருங்கிப்பழகிய நன்மையில்.

in'lying, *a.* உள்ளே இருக்கிற.

in'mate, *n.* அகத்தார், தங்கியிருப்பவர்களுள் ஒருவர் ; உட்குடியிருப்பாளர் ; உடனுறைபவர்.

in med'ias res, (ல.) *adv.* பொருட்களின் இடையே உள்ளார்ந்த நடுவிடத்தில்.

in memor'iam, (ல.) *adv.* நினைவாக ; நினைவு பேணுவதற்காக.

in'most, *a.* உள்ளார்ந்த ; மிகவும் அந்தரங்கமான ; மிகவும் உட்புறமாக இருக்கிற ; மிக உட்புறமாக அமைந்துள்ள.

inn, *n.* பிரயாணிகள் விடுதி, வழிப்போக்கர் தங்கல்மனை ; (தொ.) inns of chancery, லண்டனில் சட்ட மாணவர்கள் விடுதியாகப் பண்டு பயன்பட்ட கட்டிடங்கள் ; சட்ட மாணவர் விடுதியை இடமாகக்கொண்ட சங்கங்களின் தொகுதி ; Inns of Court, இங்கிலாந்தில் வழக்குரைஞர் நுழைவு இசைவு தரத் தனியுரிமையுடைய நாற் பெருஞ் சங்கங்களுக்குரிய கட்டிடம்.

innate', *a.* உள்ளார்ந்த, உள்ளியல்பான, இயல்பார்ந்த.

innav'igable, *a.* கப்பற் போக்குவரவுக்குப் பயன்படாத.

inn'er, *n.* துப்பாக்கி சுடும் இலக்கின் மையத்திற்கு அடுத்த வெளிச்சுற்றிலுள்ள பகுதி ; இலக்கு மையத்தின் வெளிச்சுற்றுப் பகுதியில் தாக்கிய குண்டு ; *a.* உட்புறமான ; உட்பகுதி சார்ந்த ; அகச்சார்பான ; (தொ.) inner tube, சக்கரத்தின் சுழல்வட்டைச் சார்ந்த புறத்தோட்டினுள் பொதிந்த காற்றூட்டப்பட்ட தொய்வகக்குழாய் ; the inner man, உள்ளாவி, உள்மனம்.

inn'ermost, *a.* உள்ளார்ந்த; உள்தொலைவான, புறத்திருந்து நெடுந்தொலை உள்ளார்ந்த.

innerv'ate, *v.* நரம்பு வலுவூட்டு ; உறுப்பு வகையில் நரம்பூட்டு ; செயலூக்கமளி, தூண்டி ஊக்கு.

inn'ings, *n. pl.* மரப்பந்தாட்டத்தில் பந்தடிப்பதற்கு ஒரு பக்கத்தவருக்குரிய முழு ஆட்டமுறை ; ஆட்டக்காரர் ஒரு முறையில் ஆடிய ஆட்டம் ; பதவிக்காலம், அரசியல் கட்சியின் ஆட்சிக்காலம் ; கடலிலிருந்து உருவாக்கிப் பெறப்பட்ட நிலம்.

inn'keeper, *n.* விடுதிக்காரர், சத்திரம் வைத்து நடத்துபவர்.

inn'ocence, *n.* சட்டக் குற்றச் சார்பின்மை ; குற்றமின்மை ; மாசின்மை ; கேடின்மை ; சூழ்ச்சியற்ற இயல்பு ; கரவின்மை; எளிவந்த தன்மை ; ஏலாநிலை.

inn'ocency, *n.* குற்றமிலாநிலை, மாசறுநிலை.

inn'ocent, *n.* குற்றமற்றவர், மாசற்றவர் ; குழந்தை ; அறிவிலி, பேதை ; *a.* குற்றமற்ற, பாவம் செய்யாத, பழிபாவமற்ற ; சூழ்ச்சியற்ற ; தீங்கற்ற ; எளிய.

innoc'uous, *a.* தீங்கு விளைவியாத, கேடற்ற.

innom'inate, *a.* பெயரிடப்படாத, பெயரற்ற ; (தொ.) innominate bone, வயது வந்தவரிடையே மூன்று எலும்புகளின் இணைவாக உருவான இடுப்பு எலும்பு.

inn'ovate, *v.* புதிது புனை; புதுவழியமை; புதுமுறைகாண்; புது மாறுதல்கள் உண்டுபண்ணு.

inno'xious, *a.* தீங்கற்ற, கேடுவிளைவிக்காத.

in nub'ibus, (ல.) *adv.* மேகங்களிடையே ; கற்பனையில் ; திட்டமில்லாமல் ; புனைவு நிலையில்; தெளிவற்ற தன்மையில்.

innuen'do, *n.* மறைமுகக் குறிப்பு ; குத்தல் பேச்சு ; *v.* சாடைகாட்டிப் பேசு ; மறைமுகமாகக் குறிப்பிடு.

innum'erable, *a.* எண்ணிக்கையற்ற, மிகப் பலவான.

innutri'tion, *n.* உணவூட்டக் குறை.

innutri'tious, *a.* ஊட்டமளிக்காத, சத்துக் குறைந்த.

inobserv'ance, *n.* கருத்தின்மை, கவனமின்மை ; சட்ட வகையில் இணங்கி நடவாமை; செயலில் நடைமுறைப்படுத்தாமை.

inoccupa'tion, *n.* இட ஆட்சியின்மை; செயலீடுபாடின்மை; கவனமின்மை ; தொழிலின்மை.

inoc'ulate, *v.* நோய்த்தடுப்பு ஊசி போடு ; தொற்று நோய்களைத் தடுக்க அந்நோயணுக்கள்கொண்ட மருந்தினை ஊசி மூலம் உடலிற் செலுத்து; செடியில் தளிரினை அல்லது மொட்டினைச் செருகி ஒட்டு உண்டுபண்ணு.

inod'orous, *a.* மணமற்ற.

inoffen'sive, *a.* புண்படுத்தாத; தீமை இழைக்காத; வெறுக்கத்தகாத.

inoffi'cious, *a.* பணிக்கடனற்ற ; செயற் பொறுப்பற்ற ; (சட்.) அறமுறைக் கடமை சாராத.

inop'erable, *a.* கட்டி முதலியவற்றின் வகையில் அறுவை மருத்துவம் செய்ய முடியாத.

inop'erative, *a.* செயலற்ற; செயல் விளைவற்ற, பயனற்ற.

inopp'ortune, *a.* வேளைக்கொவ்வாத, வேளைக்கேடான, சமயத்துக்குப் பொருந்தாத.

inord'inate, *a.* அளவு மிஞ்சிய, மட்டுமீறிய; மிகு அளவான; அடக்க முடியாத; ஒழுங்கற்ற, கட்டுப்பாடற்ற.

inorgan'ic, *a.* உயிரியல் உறுப்பமைதியற்ற; உயிர்ப்பொருள் சார்பில்லாத; ஒழுங்கமைவில்லாத; இயல்பான அகவளர்ச்சி யற்ற; புறவளர்ச்சியான; தற்செயல் வளர்ச்சியான; உயிர் வளர்ச்சியற்ற; (வேதி.) கரியமற்ற; கனிப்பொருள் தோற்ற முடைய; (தொ.) inorganic chemistry, கரியமில்லா பொருட்களைப் பற்றிய வேதியியல்.

inorganiza'tion, *n.* அமைப்பு முறையின்மை, வகைதொகை கேடு.

inornate', *a.* முயன்று அழகுபடுத்தப்படாத, பகட்டணியற்ற, எளிய.

inos'culate, *v.* குருதிக் குழாய்கள்வகையில் இணைத்துப் பொருத்து; முளையுடன் முளை இணைந்து பொருந்து; புரி இழைகள் வகையில் பின்னி இணைவி; பின்னி இணைந்துகொள்.

in part'ibus, infidel'ium, (ல.) *adv.* முரண் சமயக்கோட் பாடு நிலவும் நாட்டில்.

in'patient, in'-patient, *n.* மருத்துவ மனையிலேயே தங்கிப் பண்டுவம் பெறுபவர், அகநிலைச் சிகிச்சையாளர்.

in poss'e, (ல.) *adv.* உள்ளார்ந்த மேல்வள ஆதாரம் உடைய தாக.

in'pouring, *n.* உட்பொழிவு; *a.* உள்ளே பொழிகிற.

in prop'ria person'a, (ல.) *adv.* தானாக நேரடியாக.

in pur'is natural'ibus, (ல.) *adv.* முழுதும் ஆடையற்று, முழு நிர்வாணமாக.

inq'uest, *n.* சட்டத் தேர்வாராய்ச்சி; உண்மையறிவதற்கான முறைமன்றத் தேர்வாய்வு; பிண ஆராய்ச்சிக்குரிய தீர்ப்புச் சான்றுளர் குழு; (தொ.) grand inquest, தலைமைத் தீர்ப்புச் சான்றுளர் குழு; grand inquest of the nation, மாமன்றப் பொதுப்பேரவை; great inquest, last inquest, கடைநாள் தீர்ப்பு.

inqui'etude, *n.* மன அமைதியின்மை, மன உலைவு; உடல் உலைவு.

inquire', *v.* விவரம் ஆராய்; உசாவு, செய்தி கோரு; நலம் உசாவு; தேவை குறித்துக் கடையில் விவரம் கேள்; பெயர் முதலிய விவரம் கோரு.

inquir'y, *n.* உசாவல்; விசாரணை; கேள்வி; ஆய்வாராய்வு; (தொ.) court of inquiry, படைத்துறை முறைமன்றம், படைத்துறைப் பணியாளர் வீரர் குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றம்; make inquiries, தகவல் கேள், விவரம் கோரு.

inquisi'tion, *n.* உசாவல், கேள்விமுறைத் தேர்வாய்வு; பணித் துறை ஆய்வுமுறை; முறைமன்றத் தேர்வு விசாரணை; (தொ.) the Inquisition, முரண் சமயக்கோட்பாடுகளை ஒடுக்குவதற்கான சமயத்துறை சார்ந்த தண்ட உயர்முறை மன்றம்.

inquis'itive, *a.* உசாவுகிற; அறியும் அவாமிக்க; துடியார்வ மிக்க; பிறர் செய்திகளில் தலையிடுகிற.

inquis'itor, *n.* கேள்வி முறையாளர், வழக்காராய்ச்சியாளர்; சமயத்துறை சார்ந்த தண்ட உயர்மன்றத்தின் பணியாளர்; பணித்துறைத் தேர்வாய்வாளர்; (தொ.) Grand Inquisitor, சில நாடுகளில் உயர்படி நீதிமன்ற உசாக்குழுவின் இயக்குநர்; Inquisitor General, ஸ்பெயின் நாட்டில் உயர் நீதிமன்ற உசாக் குழுத் தலைவர்.

inquisitor'ial, *a.* நியாய விசாரணையாளரைச் சார்ந்த; கடுங்கேள்விமுறை வாய்ந்த; எரிச்சலூட்டும்படி பிறர் விஷயங்களில் தலையிடுகிற.

in'road, *n.* மீச்செலவு, பகைப்புலமீது படையெடுப்பு; ஆக்கிரமிப்பு, எல்லை கடந்த உள்நுழைவு; எல்லைகடந்த கொள்ளையடிப்பு; வல்லந்தமான எல்லைமீறல்.

in'rush, *n.* உட்பாய்வு, விரைந்த உள்நுழைவு.

ins, *n. pl.* ஆட்சியிலுள்ள அரசியல் கட்சி.

insal'ivate, *v.* உமிழ்நீரில் உணவைக் கல.

insalub'rious, *a.* உடல் நலத்திற்கொவ்வாத; நல உகப்பற்ற.

insane', *a.* மூளைதிறம்பிய; பித்துப்பிடித்த; வெறியார்ந்த; அறிவு திறம்பிய; தன்னிலை மறந்த; (தொ.) insane asylum, பைத்தியக்காரர் காப்பு விடுதி.

insan'itary, *a.* உடல் நலத்திற்கு ஒவ்வாத; துப்புரவற்ற, தூய்மையற்ற.

insa'tiable, *a.* மனநிறைவு உண்டாக்கமுடியாத, மனநிறைவடையாத; தணியாத, ஆற்றமுடியாத; பேராசையுடைய.

insa'tiate, *a.* என்றும் மனநிறைவடையாத; எளிதில் திருப்தி உறாத.

inscribe', *v.* எழுதிப் பதிவுசெய், பொறித்துவை; பட்டியலில் பெயரைப் பதிவுசெய்; தாள்-தகடு முதலியவற்றில் குறியீடுகளால் அடையாளமிடு; பதிவாளர்களுக்குப் பங்கு வடிவத்தில் கடன் அளி; (வடி.) உள்வரை, சில குறிப்பிட்ட புள்ளிகள் பிறிதொன்றன் வரம்பிற்குள் வரும்படி வரைப்படம் அமை.

inscrip'tion, *n.* பொறித்து வைத்தல்; எழுத்துப்பொறிப்பு; பொறித்து வைக்கப்பட்ட எழுத்துமூலம்; நாணய உட்பொறிப்பு; கல்வெட்டுப் பொறிப்பு; செதுக்குப் பொறிப்பு.

inscrip'tive, *a.* கடன்வகையில் பங்கு வடிவில் வெளியிடப்பட்ட; பொறிப்புமூலம் சார்ந்த.

inscrut'able, *a.* ஆராய்ந்தறியக்கூடாத, புரியாத, தெளிவற்ற, அறிய முடியாத; முழுதும் மர்மமான.

in'sect, *n.* புழுப்பூச்சியினம்; சிற்றுயிர்; அற்பர்; பொருட்படுத்தத் தகாதவர்.

insectar'ium, *n.* புழுப்பூச்சிமனை, புழுப்பூச்சியின உயிர்கள் வைக்கப்பட்டுள்ள இடம்.

insec'ticide, *n.* புழுப்பூச்சி கொல்லி, புழுப்பூச்சிகளை அழிப்பதற்குரிய மருந்து.

Insectiv'ora, *n. pl.* புழுப்பூச்சியுண்ணும் சிறிய பாலுணியின உயிரினப்பிரிவு.

insect'ivore, *n.* புழுப்பூச்சியுண்ணும் சிறு பாலுணியின உயிர்களில் ஒன்று.

insectiv'orous, *a.* புழுப்பூச்சிகளைத் தின்று வாழ்கிற.

insectol'ogy, *n.* புழுப்பூச்சிகளைப்பற்றிய ஆராய்ச்சி நூல்; பூச்சியியல் நூல், புழுப்பூச்சியினங்களால் ஏற்படும் பொருளியல் கூறுகளை ஆராயும் இயல்துறை.

in'sect-powder, *n.* பூச்சிகொல்லி, பூச்சி புழு வண்டு முதலியவற்றை விரட்டவோ கொல்லவோ பயன்படும் மருந்துத் தூள்.

insecure', *a.* பாதுகாப்பற்ற; காவலற்ற; நிலையற்ற; விழுந்துவிடக்கூடிய; இடிந்து விழக்கூடிய; நம்பமுடியா நிலையுடைய.

insem'inate, *v.* விதையூன்று, வித்திடு; வித்திட்டுப் பயிர் வளர்; பண்பு செறிவி, திறம்தோய்வி; புகுத்து; செயற்கையாகப் பண்பூட்டு.

insen'sate, *a.* புலனுணர்வற்ற; ஊறுணர்வில்லாத, சொரணையற்ற; உணர்ச்சியற்ற; நல்லுணர்வற்ற; மடத்தனமான.

insensibil'ity, *n.* அக உணர்ச்சியின்மை, கனிவின்மை; அசட்டை மனப்பான்மை; தன்வயமின்மை, உணர்விழப்பு.

insen'sible, *a.* புலப்படாத; மிகநுட்பமான; உணரமுடியாதபடி நுண்படிகளாக இயங்குகிற; அற்பமான, மதித்துணரத் தகாத; நினைவிழந்த, உணர்விழந்த நிலையுடைய; கவனியாத, தெரியாத; அக உணர்ச்சியற்ற, காழ்த்துப்போன; கிளர்ச்சியற்ற, சோர்வற்ற.

insen'sitive, *a.* கூர் உணர்வற்ற, நுண்ணுணர்வுத் திறமில்லாத; சொரணையில்லாத.

insen'tient, *a.* உணரும் திறமற்ற; உயிரற்ற.

insep'arable, *a.* பிரிக்கமுடியாத; (தொ.) inseparable prefix, தனிச்சொல்லாகப் பயன்படுத்தமுடியாத முன்னிணைப்புக் கூறு.

insep'arables, *n. pl.* இணைபிரியா நண்பர்கள்; இணைபிரியாப் பொருள்கள்.

insert', *v.* செருகு; இடையில் சேர்; நுழைத்துவை; இடைக் குறிப்பாகப் புகுத்து.

inser'tion, *n.* செருகுதல்; இடையிற் சேர்த்தல்; நுழைத்தல், புகுத்தல்; செருகிய பொருள்; இடையிற் சேர்த்த பகுதி; அழகொப்பனை நூற்பின்னல்; (உள்.) தசை உறுப்பு முதலியவை இணைந்திருக்கும் முறை.

in'set[1], *n.* இடைச்செருகப்பட்ட அதிகப்படியான பக்கங்களின் தொகுதி; சிறிய உள்வைப்புப் படம், வரைப்படத்துள் வரைப்படம்; ஆடையில் செருகப்பட்ட அழகொப்பனையான துணித் துண்டு; அரைச்சட்டை ஓரத்தில் அணியப்பட்ட இரண்டு வெண்மையான துண்டுத் துணிகளில் ஒன்று.

inset'[2], *v.* உள் வை; உள்ளீடு செய்; உள்வரை; உட்படமாகச் சேர்.

inset'[3], **inset'ted**, *v.* inset[2] என்பதன் இறந்தகால முடிவெச்சம்.

in'shore', *a.* கரைக்கருகிலுள்ள; *adv.* கரைக்கு அருகில்; (தொ.) inshore of, கரைக்கு மேலும் அணிமையில் உள்ள.

in'side'[1], *n.* உள்ளிடம்; உட்பக்கம்; உட்பரப்பு; பாதையில் சுவருக்கு அருகான பக்கம்; பொதுப்பாட்டையிலிருந்து விலகிய பாதைப்பக்கம்; உட்பகுதி; நடுக்கூறு; குடல்; அடிவயிற்றின் உட்புறம்; வண்டியில் உள்ளிருக்கையில் பயணம் செய்பவர்; (தொ.) the inside of a week, வாரத்தின் நடுப்பகுதி; turned inside out, உட்புறம் வெளிப்புறமாக அமைக்கப்பட்ட.

in'side[2], *a.* உள்ளாக இருக்கிற; உட்பக்கமாக அமைந்த; உள்ளிடத்திலிருந்து வருகிற; (தொ.) inside information, இரகசியச் செய்தி, புறத்தார்க்கு எட்ட முடியாத செய்தி.

inside'[3], *adv.* உட்புறமாக, உட்பக்கத்தில்; உள்ளாக; *prep.* உள்ளே, உட்புறத்தில், உட்பக்கமாக.

insid'er, *n.* அகத்தார், அக உறுப்பினர், சங்கம் அமைப்பு முதலியவற்றில் உள்ளிருப்பவர்; இரகசியத்தை உணர்ந்தவர்.

insid'ious, *a.* உட்கவடான, நயவஞ்சகமான; ஆழ்ந்த திட்டமிட்டுச் சதிசெய்கிற, மறைந்து பழி சூழ்கிற; தீயநோக்குடன் மெல்ல முன்னேறுகிற; பழியுட்கரந்து மெல்லப் படிப்படியாக வளர்கிற; பழிசூழ்ச்சி வாய்ந்த, நம்பவைத்து ஏய்க்கிற.

in'sight, *n.* உள்நோக்கு, நுழைபுலம், நுண்ணறிவுத் திறம்.

insig'nia, *n. pl.* விருதுச்சின்னங்கள்; சிறப்புரிமைச் சின்னங்கள்; அறிகுறி அடையாளம்.

insignif'icant, *a.* குறிப்பிடத்தக்கதல்லாத, சிறப்பில்லாத, மிகச் சிறுதிறமான, அற்பமான.

insincere', *a.* வாய்மையற்ற, உள்ளொன்று புறமொன்றான; கபடமான, வஞ்சமான.

insin'uate, *v.* சாட்டிக்கூறு, மறைமுகமாகக் குறிப்பிடு; சுட்டிக் குறைகூறு; மெல்ல நயம்படப் புகுத்து; தயவுக்குப் பாத்திரமாக்கு; மெல்லநுழை; பசப்பி ஆதரவுபெறு.

insip'id, *a.* சுவையற்ற; கிளர்ச்சியற்ற; மந்தமான; கவர்ச்சியற்ற.

insist', *v.* ஊன்றி அழுத்தமாகக்கூறு; வற்புறுத்து; விடாப்பிடியாக வேண்டு; தனிமுக்கியத்துவம் கொடு.

in sit'u, (ல.) *adv.* முன்னிருந்த அதே இடத்தில்.

insobri'ety, *n.* மதிமயக்கம்; குடி மயக்கம்.

insola'tion, *n.* சூரியபுடம், வெயிலிற்படும்படி வைத்தல், வெயிலில் வைத்து வண்ணம்போக்குதல்; வெயில் மருத்துவச் சிகிச்சை; நோய்தரும் வெயில் காய்வுநிலை.

in'solent, *a.* மதியாமல் பேசுகிற; திக்காரமான, திமிரான; துடுக்குத்தனமிக்க.

insol'uble, *a.* கரைக்கமுடியாத; விடை கண்டறியமுடியாத.

insol'vency, *n.* வகையற்ற நிலை, நொடிப்பு.

insol'vent, *n.* பட்ட கடனைத் தீர்க்க ஆற்றலற்றவர், நொடித்தவர்; *a.* கடன் தீர்க்க முடியாத, வகையற்ற; நொடித்தவர்க்குரிய.

insom'nia, *n.* துயிலொழிவு, உறக்கமின்மை நோய்.

insomuch', *adv.* என்ற அளவிற்கு, என்ற அளவில்.

insouciant, (பிர.) *a.* புறக்கணிப்பான, அக்கறையற்ற; கவலையற்ற, கவனமற்ற.

inspan', *v.* வண்டியின் நுகத்தடியில் எருதுகளைப் பூட்டு; வண்டியைப் பயணத்துக்குச் சித்தமாக்கு.

inspect', *v.* மேற்பார்வை செய்; பணி முறையில் கண்காணி; கூர்ந்து தேர்ந்தாராய்.

inspec'tor, *v.* மேற்பார்வையாளர்; காவல்துறை மேலர்.

inspec'torate, *n.* காவல்துறை மேலர் பதவி; மேற்பார்வையாளர்களின் தொகுதி; மேலர் ஆட்சி வரம்புக்குட்பட்ட வட்டகை.

inspira'tion, *n.* உள்ளுயிர்ப்பு, மூச்சு உள் வாங்குதல்; உள் உயிர்ப்பூட்டுதல்; அகத்தூண்டுதல்; தூண்டூக்கம்; தெய்விக அகத்தூண்டுதல்; அருட்கிளர்ச்சி; திடீர் உள்தூண்டுதல்; திடீர்க்கிளர்ச்சி எண்ணம்; அகத்தூண்டுதலால் ஏற்படும் செய்தி; அகத்தூண்டுதலுக்குரிய செய்தி; அகத்தூண்டுதலுக்குரிய மூலம்; கிளர்ச்சியூட்டும் உள்ளார்வக் கொள்கை; (தொ.) moral inspiration, தெய்விக அறத்துறை அகத் தூண்டுதல், சமய ஒழுக்கத்துறைக் கருத்துக்கள் தெய்விகத் தூண்டுதலால் அமையும்நிலை; plenary inspiration, தெய்விக நிறைபொருண்மைத் தூண்டுதல், திருமறைப் பகுதிகளில் எல்லாப் பொருள்களுமே தெய்விகத் தூண்டுதலால் அமையும் நிலை; verbal inspiration, தெய்விக நிறைசொல் தூண்டுதல், திருமறைவாசக முழுவதுமே தெய்விகத் தூண்டுதலால் அமையும் நிலை.

in'spirator, *n.* வளிவாங்கி, காற்று அல்லது நீராவியை உள்வாங்கும் கருவி; காற்றூட்டு கருவி.

inspire', *v.* மூச்சு உள் இழு, மூச்சு உள்வாங்கு; உயிர்ப்பூட்டு; அகத் தூண்டுதலளி; தெய்விக ஊக்கமளி; உணர்ச்சியூட்டு, எழுச்சியூட்டு, உணர்ச்சி புகட்டு; உணர்ச்சியைத் தோற்றுவி.

inspired', *a.* தெய்விக உள்ளூக்கம் பெற்ற; அகத்தூண்டுதலளிக்கப்பட்ட; உயிர் உணர்ச்சிகளால் தூண்டப்பட்ட; மேல்நிலை மறை தூண்டுதலுக்குரிய; மேலிடத் தூண்டுதலுக்குரிய; (தொ.) an inspired article, செல்வாக்குள்ளவரால் இரகசியமாகத் தூண்டப்பட்ட கட்டுரை.

inspi'rit, *v.* உயிர்ப்பி; உணர்ச்சியூட்டு; எழுச்சியூட்டு, ஊக்கு.

inspiss'ate, *v.* கெட்டியாக்கு, தடிப்பாக்கு; உருச்சுருக்கு.

instabil'ity, *n.* நிலையில்லாமை; உறுதியின்மை; மன உலைவு; அடிக்கடி மாறும் இயல்பு.

instal', **install'**, *v.* பதவியில் அமர்த்து, வினைமுறைகளுடன் பணியில் ஏற்றிவை; நிலைநாட்டு, நிறுவு; கருவியை அமைவில் பொருத்திச் சித்தஞ்செய்.

installa'tion, *n.* அமர்த்தல், வினைமுறைகளுடன் அமர்த்து வினை நிறைவேற்றம்; பயனுறுநிலை இணைப்பு; முழுநிறை கருவிகல அமைவு.

instal'ment, *n.* தவணை; தவணைப்பணம்; தொடர்கதை வெளியீடு முதலியவற்றின் வகையில் தொகுதி; வெளியீட்டுக் கூறு.

in'stance, *n.* எடுத்துக்காட்டு; சான்றுநிகழ்ச்சி; குறிப்பீடு; தூண்டுரை; (சட்.) வழக்கின்படி முறை; *v.* சான்றாக எடுத்துக் காட்டு, சான்றுதரும் செய்தியாக எடுத்துக்கூறு; குறிப்பிடு; (தொ.) at the instance of, வேண்டுகோளின்படி, ஆலோசனையின்படி; court of first instance, முதல்நிலை அதிகார வரம்புள்ள நீதிமன்றம்; in the first instance, முதலில், தொடக்கத்தில், முதற்படியில், முதற்பகுதியில்; சட்ட நடவடிக்கைகளின் முதற்படி முறையில்.

in'stancy, *n.* அவசரம், படுவிரைவு.

in'stant, *n.* நொடி, காலநுட்பம், உடனடிவேளை, மிகக் குறுகிய நேரநிலை; சரிநுட்பநேரம்; *a.* உடனடியான; மிக அவசரமான; நடைமுறை மாதத்தைச்சார்ந்த.

instantane, (பிர.) *n.* கணநேரக் காட்சி நிழற்படம்; சில வரிகளில் எழுதப்படும் சுருக்கக் கட்டுரை.

instantan'eous, *a.* உடனடியான; கணத்தில் நிகழ்கிற; உடனடியாகச் செயற்படுகிற.

instan'ter, *adv.* உடனே, உடனடியாக.

in'stantly, *adv.* உடனே, அக்கணத்திலேயே.

in stat'u pupillar'i, (ல.) *adv.* பாதுகாப்பாளர் பொறுப்பின் கீழ்.

in stat'u quo, *adv.* நிலைமாறாமல், இருக்கும் நிலையிலேயே, முன்போன்ற நிலையில்.

instaura'tion, *n.* மீட்டமைவு, முன்னிலை மீட்டமைத்தல்; புதுமீட்பமைவு, புதுப்பித்தாக்கப்படும் நிலை.

instead', *adv.* பகரமாக, பதிலாக, ஈடாக; ஒன்றன் இடமாக, பிரதியாக.

in'step, *n.* புறவடி, பாதத்தின் மேற்பகுதி; புதைமிதியின் புறவடிப்பகுதி; புறவடி வடிவுடைய பொருள்.

in'stigate, *v.* பின்னின்று தூண்டிவிடு; தீமை ஏவு; கிளர்ச்சிக்குத் தூண்டு; கொலை முதலிய செயல்களுக்கு மறை தூண்டுதலளி.

instil', **instill'**, *v.* துளித்துளியாக விடு; சிறிது சிறிதாகப் புகட்டு; படிப்படியாக அறிவுறுத்து; சிறிதுசிறிதாகப் பண்பு தோய்வி.

instilla'tion, *n.* சிறிதுசிறிதாக வடித்தல்; அறிவு புகட்டுதல்; உள்ளத்தில் பண்பு பரவவிடுதல்; புகட்டப்பட்ட பண்பு.

in'stinct[1], *n.* இயல்புணர்ச்சி; இயற்கை அறிவு இயலெழுச்சி; உள்ளார்ந்த உந்துணர்வு; இயற்றூண்டுதல்; இன உணர்வு, அறிவு நிலையுடையன போலக் காணப்படும் திட்ட அறிவற்ற விலங்கினங்களின் இயல்பான செயற்பண்பு; இயலறிவுத் திறம்; உணர்வெற்றநிலைச் செயல்தூண்டுதலுக்கும் முழு அறிவுணர்வுத் தூண்டுதலுக்கும் இடைப்பட்ட நிலையுடைய இயல்பான அகத்தூண்டுதல்.

instinct'[2], *a.* உள்ளூறித்தோய்ந்த, நிரம்பி உட்பொதிந்துள்ள, பொதுளித் ததும்பிய.

in'stitute, *n.* நிறுவனம்; கழக முறை அமைப்பு; குறிப்பிட்ட நோக்கத்துக்குரிய நிலையான வளர்ச்சித்திட்ட ஏற்பாடு; இலக்கிய மெய்விளக்கத்துறை அமைப்பு; கல்வி கலை ஆய்வு புத்தாய்வுகளுக்குரிய நிலையம்; நிலையக் கட்டிடம்; *v.* ஏற்படுத்து, நிறுவு; தொடங்கிவை; ஏற்பாடு செய்; அமர்த்து.

in'stitutes, *n. pl.* சட்டமூலத் தொகுப்பு.

institu'tion, *n.* ஏற்படுத்துதல்; நிறுவுதல்; நிலையம், பொது நோக்கத்துக்கான அமைப்பு; நிலையக்கட்டிடம்; நிலையான ஏற்பாடு; நிலையான ஒழுங்கமைப்பு முறை; நிலவர நிதி அமைப்பு; அறிவு கற்பிக்கும் ஏற்பாடு; பின் மரபினர் அமர்த்தீடு; சட்ட அமைப்பு; பழக்க வழக்க மரபு; விதிகளின் தொகுப்பு; சமய முதல்வரால் குருமாரிடம் ஒப்படைக்கப்படும் ஆன்மநலப் பணிப் பொறுப்பு, (பே-வ.) நன்கு தெரியப்பட்டவர்; நாடறிந்த செய்தி.

institu'tional, *a.* அமைப்பாக வகுக்கப்பட்ட, நிறுவனமாகச் செயலாற்றுகிற; அமைப்பு மூலமான, அமைப்பு வழியாகச் செயலாற்றுகிற.

institu'tionalize, *v.* அமைப்புமுறைக்குட்படுத்து; அமைப்பு முறை ஆக்கு, நிலையமாகச் செயற்படுவி.

instruct', *v.* அறிவுறுத்து; அறிவூட்டு, கற்பி, கற்றுக்கொடு; தெரிவி; உணர்த்து, நடத்து; ஏவு; கட்டளையிடு.

instruc'tion, *n.* கற்பித்தல், அறிவுறுத்துதல், அறிவூட்டல்; போதனை.

instruc'tions, *n. pl.* செயல்துறைக் கட்டளை: மேலாளர் செயல்முறைப் போதனை; நெறிமுறைக் கட்டளைத்தொகுதி; வழக்கறிஞரிடம் தரப்படும் விவரக் கட்டளை.

instruc'tive, *a.* அறிவுரை வழங்குகிற, அறிவுறுத்துகிற; நல்லறிவு கொளுத்துகிற; அறிவூட்டத்தக்க; படிப்பினை அளிக்கிற.

in'strument, *n.* செயற்கருவி, துணைக்கலம்; துணைப்பொருள், கருவியாக உதவும் சாதனம்; கருவியாகப் பயன்படுபவர், கையாள்; இசைக்கருவி, இசையொலி எழுப்பும் சாதனம்; ஒப்பந்தப்பத்திரம்; பதிவேடு, பத்திரம்; *v.* இசைக்கருவிக்குரிய பாடற்பகுதி அமை; (தொ.) stringed instruments, நரம்பிசைக் கருவிகள்; wind instruments, காற்றிசைக் கருவிகள், துளைக்கருவிகள்.

instrumen'tal, *a.* கருவியாகப் பயன்படுகிற; துணைச்சாதனமான; கருவிசார்ந்த; கருவியிலிருந்து எழுகிற; ஏதுவான, காரணமான; இசைக்கருவிகளால் எழுப்பப்படுகிற; (தொ.) instrumental case, மூன்றும் வேற்றுமை, கருவிப்பொருள் வேற்றுமை.

instrumental'ity, *n.* துணைமை, துணைப்பொருள், இடைச்சாதனம்; நிமித்தகாரணம்.

instrumenta'tion, *n.* இசைக்கருவிகளுக்கான இசையமைப்பு; இசைக்கருவிகளின் இயல்பு ஆற்றல் அழுத்தம் ஆகியவை பற்றிய ஆய்வு; கருவிகள்கொண்டு அறுவை மருத்துவம் செய்தல்; கருவிகள் கொண்டு செயலாற்றல்; துணைமை, துணைப்பொருள்.

insubord'inate, *a.* கீழ்ப்படியாத, அடங்காத; கிளர்ச்சி செய்கிற, கலகம் செய்கிற.

insubstan'tial, *a.* உண்மையற்ற; திடத்தன்மையற்ற.

insuff'erable, *a.* பொறுக்கமுடியாத, தாங்குதற்கரிய.

insuffi'ciency, *n.* போதாமை.

insuffi'cient, *a.* பற்றாத, போதாத, தேவைக்குக் குறைந்த.

in'sufflate, *v.* காற்று-ஆவி முதலியவற்றைப் பரப்பிடையே செலுத்து; மூக்கினுள் காற்றுப்பட ஊது.

insuffla'tion, *n.* மேல் ஊதுதல்; உள் ஊதுதல்; பேயை ஓட்டுதற்கான சடங்கில் பேய்பிடித்தவர்மீது ஊதுதல்.

in'sufflator, *n.* காற்றை மேற்செலுத்துதல்; புலனாகா கை விரல் தடங்களைத் தெளிவாகக் காணும்படி மேலே தூளைப் பரப்பிச்செலுத்தும் கருவி.

in'sular, *a.* தீவின் இயல்புடைய; நீரால் சூழப்பட்ட; தீவைப் பற்றிய; தீவில் உறைபவர்களைப்பற்றிய; தனிநிலையான, தனி ஒதுக்கமான; குறுகிய மனப்பான்மையுள்ள; லத்தீன் மொழிக் கையெழுத்து வடிவத்தின் வகையில் முற்பட்ட; இடைநிலைக்காலத்தில் பிரிட்டனில் வழங்கிய.

insula'rity, *n.* தீவின் இயல்பு; தனிநிலை, தனி ஒதுக்கம்; குறுகிய மனப்பான்மை.

in'sulate, *v.* தீவாக்கு; சுற்றுச் சார்பினின்று பிரித்து வை; தனிப்படுத்து, துண்டுபடுத்து; வெப்பத்தொடர்பறுத்துப் பாதுகாப்புச் செய்; மின்பாயாமல் காப்பிடு.

in'sulin, *n.* கணையச் சுரப்புநீர், விலங்குகளின் கணையச் சுரப்பியிலிருந்து எடுக்கப்பட்டு நீரிழிவுநோய் தடுக்கப் பயன்படுத்தப்படும் மருந்து வகை.

in'sult[1], *n.* அவமதிப்பு, மரியாதையற்ற நடத்தை; வசை மொழி, பழிதூற்றுரை, நிந்தை.

insult'[2], *v.* வசை கூறு, இகழ், அவமதி; பலர்முன் பழித்துரை, மானபங்கஞ்செய்.

insup'erable, *a.* கடக்கமுடியாத; வென்று சமாளிக்க முடியாத.

insupport'able, *a.* பொறுக்கமுடியாத; தாங்கமுடியாத; மேற்கொள்ள இயலாத.

insur'ance, *n.* காப்புறுதி, காப்பீடுசெய்தல்; காப்பீட்டுத் தவணைப் பணம், காப்புறுதிக் கட்டணம்.

insur'ant, *n.* காப்புறுதிப் பத்திரம் அளிக்கப்பெற்றவர்.

insure', v. உறுதிப்படுத்து, உறுதிசெய்; காப்புறுதி செய்; காப்பீடுமூலம் உறுதிசெய்.

insur'er, n. ஈடுசெய்ய உத்தரவாதம் அளிப்பவர்; காப்புறுதி செய்துகொள்பவர்.

insur'gence, insur'gency, n. கிளர்ச்சி, எதிரெழுச்சி, ஆட்சியை எதிர்த்துக் கிளர்ந்தெழுதல்.

insur'gent, n. கிளர்ச்சிக்காரர், ஆட்சி எதிர்ப்பாளர்; a. கிளர்ச்சி செய்கிற; கடல் வகையில் கிளர்ந்தெழுந்து பாய்கிற.

insurmoun'table, a. ஏறிக்கடக்கமுடியாத; கடந்து மேற்செல்ல இயலாத, வென்று சமாளித்தற்கரிய.

insurrec'tion, n. ஆட்சி எதிர்ப்பு; கிளர்ச்சிக்கான தொடக்க நிலை எழுச்சி, புரட்சி.

insuscep'tible, a. மசியாத, இளகாத; தடம்பதிய இடந்தராத; ஏற்காத; இயலாத.

intact', a. முழுமைகெடாத, குறைபடாத, பழுதுபடாத; தொடப்படாமலுள்ள.

inta'gliated, a. மேற்பரப்பில் செதுக்கப்பட்ட.

inta'glio, n. செதுக்கு வேலைப்பாடு; கடினமான பொருளின்மீது செய்யப்பட்ட செதுக்கு வேலை; செதுக்கு வேலைப்பாடுள்ள மணிக்கல்; v. கடினமான பொருள்களின் மீது செதுக்குவேலைப்பாடு செய்.

in'take, n. உள்வாய், ஆற்றிலிருந்து குழாய்க்கோ கால்வாய்க்கோ நீர் எடுத்துச் செல்லும் இடம்; சுரங்கத்தில் காற்றுப் புழைவாய்; குழாயின் அல்லது குறுங்காலுறையின் ஒடுங்கிய பகுதி; தையலிணைப்புக் குறுக்கம்; கொள்பொருள்; கொள்ளப்பட்டவர்; சதுப்பு நிலத்திலிருந்து சீர்ப்படுத்திப் பயன்படுத்தப்பட்ட நிலம்.

intan'gible, a. தொட்டறிய முடியாத; உணர முடியாத; புரியமுடியாத, புதிரான; மனத்தால் பற்றமுடியாத.

in'teger, n. முழு எண்; முழுமையாயுள்ள எண்; முழுமைப் பொருள்; பகுபடா அளவு.

in'tegral, n. முழுமை அளவை; அடக்கக்கூறுகளின் முழு மொத்தம்; முழுமைத் தொகையீடு; a. முழுமையான; முழுமைவாய்ந்த; முழு எண்ணான; முழு எண்ணுக்குரிய; (தொ.) integral calculus, முழுமைக் கணிப்பெண்.

in'tegrant, a. ஆக்கப் பகுதியாயுள்ள, முழுமையின் நேர் உறுப்பாயுள்ள, முழுமையாக்கத்துக்கு இன்றியமையாக் கூறான.

in'tegrate, a. பகுதிகளாலான; முழுமையான, முழுநிறைவான; v. முழுமையாக்கு, குறைப்பகுதி சேர்த்து முழுமையாக்கு; பகுதிகளை இணைத்து நிறைவாக்கு; மொத்தத் தொகை குறிப்பிடு; முழுச்சராசரி கூறு.

integra'tion, n. முழுமையாக்கம்; ஒருமைப்பாடு, வெள்ளையரும் பிறவண்ண மக்களும் அடங்கிய பல்வேறுபட்ட சமுதாயத்தை ஒரே முழு அமைப்பாக வகுத்தமைக்கும் செயல்.

integ'rity, n. முழுமை, கூறுபடாநிலை; நேர்மை, வாய்மை, நாணயம், ஒழுங்கு.

integ'ument, n. புறப்போர்வை, தோல், மேந்தோல்.

in'tellect, n. மனத்தின் அறிவுத்திறம், அறிவாற்றல்; மூளைத்திறம்; ஆய்வுணர்வுத்திறம்; அறிவுடையவர்; அறிவுடையோர் தொகுதி.

intellec'tion, n. ஆய்ந்தறிதல், பகுத்தறியும்முறை.

intellec'tual, n. அறிவுத்திறனுடையவர், ஆய்வறிவாளர், அறிஞர்; a. அறிவுத்திறம்வாய்ந்த, அறிவாற்றலுள்ள; அறிவாற்றல் சார்ந்த, ஆய்வுணர்வுக்குரிய; அறிவுக்குகந்த; அறிவுத்திறநோக்கிய.

intellec'tualism, n. ஆய்வறிவுக்கோட்பாடு, எல்லா அறிவும் ஆய்திறத்தின் விளைவே எனுங் கொள்கை.

intell'igence, n. அறிவுத்திறம், கூர்மதி, விவேகம்; ஆறறிவுயிர், அறிவுரு; தகவல், செய்தி; வேவுத்தகவல்; (தொ.) Intelligence Department, படைத்துறை வேவுச்செய்தி அரங்கம்; intelligence quotient, அறிவுத்திற அளவெண், அறிவுக் குறி எண்.

intell'igencer, n. தகவல்கொடுப்பவர்; ஒற்றர், மறைமுகத் தகவலாளர்.

intell'igent, a. அறிவுத்திறம்வாய்ந்த; அறிவுள்ள, விவேகமுள்ள, கூர்மதியுடைய.

intelligent'sia, intelligent'zia, n. தற்சிந்தனையாற்றலுடையவர் தொகுதி, கற்றறிந்தோர் வகுப்பு.

intell'igible, a. புரியக்கூடிய, விளக்கமான, தெளிவான; அறிவுக்குப் புலனாகின்ற, புலப்படக்கூடிய; (மெய்.) புலன்களால் அறியப்படாது அறிவால் மட்டுமே அறியக்கூடிய.

intem'perance, n. தன்னடக்கமின்மை; வரம்புமீறிய செயல்; மட்டுமீறிய குடிப்பழக்கம்.

intem'perate, a. வரம்புகடந்த நுகர்விடுபாடுடைய; மட்டுமிஞ்சிய குடிப்பழக்கமுடைய; மட்டுமீறிய; அளவுகடந்த.

intend', v. எண்ணு, உளங்கொள்; முன்னரே கருது; செயல் குறி, திட்டமிடு; மனமாரச் செயலில் முனை.

inten'dant, n. மேலாள், கண்காணி.

inten'ded, n. (பே-வ.) மணஞ்செய்துகொள்ள உறுதி செய்யப்பட்டவர்.

intend'ment, n. சட்டத்தினால் நிலைநிறுத்தப்பட்ட மெய்யான பொருள் விளக்கம்.

intense', a. மும்முரமான, முனைப்பான; கடுமையான, தீவிரமான; உச்ச அளவான; உச்ச வேகமான; ஆர்வமிக்க; உணர்ச்சிமிக்க.

inten'sion, n. செறிவுநிலை, நெருக்கம்; மனத்தின் தீவிர முயற்சி; தன்முனைப்பாற்றல்; தீவிர விருப்பாற்றல்.

inten'sive, a. முனைப்பியலான; தீவிரமான; ஆழ்ந்த; செறிவு உண்டுபண்ணுகிற; விளைவுவீதம்பெருக்குகிற; பயன் நிறைவு ஊக்குகிற; (மரு.) படிப்படியாக அளவேற்றுகிற; (இலக்.) அழுத்தம் குறிக்கிற; பொருளை வலியுறுத்திக் காட்டுகிற; (தொ.) intensive inoculation, (மரு.) படிப்படியாகச் செறிவை மிகுதிப்படுத்தி மருந்தூசி போடல்.

intent'[1], n. உள்நோக்கம், எண்ணம்; செயல்நோக்கம்; மறைநோக்கம்; a. கருத்தூன்றிய, விடாமுயற்சியுடன் கைக்கொண்ட, ஊக்கத்துடன் ஈடுபட்ட; மனமார்ந்த அக்கறையுள்ள; ஆவல்விருப்பங் கொண்ட; (தொ.) to all intents and purposes, பெரிதும், செயல்முறையில், அனுபவத்தில்.

inten'tion, n. உட்கருத்து, உட்கோள், உள் எண்ணம்; உள்ளக்குறிப்பு, குறிக்கொண்ட செயல்முடிவு; மனத்துட்கொண்ட செயல் திட்டம்; கருதப்பட்ட செய்தி; (அள.) புலனுணர்வு தொகுத்த பொதுக் கருத்துப்படிவம்; (மரு.) பண்டுவத் திட்டம்; (இறை.) வழிபாட்டு நேர்வுக் குறிக்கோள்; (தொ.) first intention, காயங்களில் பிரிந்த பகுதிகள் வளர்ந்து கூடி ஆறும் இயல்பு; particular intention, special intention, (இறை.) திருக்கோயிலில் வழிபாட்டுக்குரிய தனி நேர்வு நோக்கம்; second intention, காயங்களில் பொடிப்பிட்டு புடைத்தாறும் இயல்பு.

inten'tional, a. வேண்டுமென்றே செய்யப்பட்ட, மனமாரத் திட்டமிட்டு இழைக்கப்பட்ட; உள்நோக்கமுடைய.

inten'tionally, adv. வேண்டுமென்றே, மனமாரத்திட்டமிட்டு.

inten'tions, n. pl. (பே-வ.) திருமண ஏற்பாட்டைக் குறித்த உள்ளார்ந்த நோக்கங்கள்; (தொ.) first intentions, (அள.) முற்கோள் கருத்துப்படிவங்கள்; பொருள்களைப் பற்றிய முன்னீடான மூலக் கருத்துக்கள்; second intentions, (அள.) பொருள்களைப் பற்றிய வகை வேறுபாடு உடன்பாடு இனம் முதலியவற்றைக் குறித்த பின்னீடாகத் தோன்றும் கருத்துக்கள்.

inter'[1], v. புதை; கல்லறையில் அடக்கஞ்செய்; நிலத்தினுள் இட்டு மூடு.

in'ter[2], (ல.) prep. இடையே, நடுவே.

in'teract[1], n. இரண்டு அங்கங்களுக்கிடையேயுள்ள நாடக இடை ஓய்வு வேளை; இடைக்காட்சி.

interact' [2], *v.* ஒன்றின்மீதொன்று செயலாற்று, எதிரெதிர் செயல் விளைவு உண்டுபண்ணு.

interac'tion, *n.* செயலெதிர்ச் செயல், பின்னிய செயல் விளைவு.

in'ter al'ia, (ல.) *adv.* மற்றவற்றிற்கிடையில்.

interartic'ular, *a.* ஒரு மூட்டின் அடுத்தடுத்திருக்கும் மேற் பரப்புக்களுக்கிடையேயுள்ள.

interbed', *v.* மற்றவற்றிடையே வை, இடையே கிடத்து.

interblend', *v.* ஒன்றோடொன்று கல ; மாறிமாறிக் கல.

interbreed', *v.* இனக்கலப்புச்செய், இனங்களைக் கலந்து உருவாக்கு ; இனங்களை மாறிமாறிக்கல.

interc'alary, *a.* காலப்பட்டியில் ஞாயிற்றுக் கணிப்பாண்டுடன் ஒத்திசைவுக்காக மிகை நாளாக அல்லது மிகை மாதமாக இடைச் செருகப்பட்ட ; ஆண்டு வகையில் இடைச்சேர்வு மிகையுடைய ; இடையிணைக்கப்பட்ட ; இடைப்பட்ட.

interc'alate, *v.* ஆண்டுப்பட்டியில் இடையிற்கல ; இடைச் செருகு.

intercede', *v.* இடையிட்டுப் பரிந்து பேசு ; பரிந்தாதரித்து வேண்டு.

intercen'sal, *a.* மக்கட்கணிப்புப் பருவங்கட்கிடைப்பட்ட, இரு குடிமதிப்புகளுக்கிடையேயுள்ள.

intercept', *v.* இடைமறி, தலையிட்டுத்தடு, குறுக்கிடு ; இடையீடாகு ; இடையறுத்தகற்று ; தடைசெய், நிறுத்து ; (கண.) இரு புள்ளிகளுக்கிடைப்பகுதியைத் தனிப்படுத்திக் குறிப்பிடு.

intercep'tor, *n.* பின்பற்றித் துரத்துவதற்குகந்த பளுவற்ற விரைவிமானம்.

interce'ssion, *n.* பரிந்துரைப்பு ; பரிந்தாதரவு வேண்டுதல் ; இறைவனிடம் பரிந்து அருள்வேண்டுகை.

in'terchange [1], *n.* இடைப்பரிமாற்றம் ; பண்டமாற்று ; கொடுக்கல்வாங்கல்; ஒற்றை மாற்றுமுறை, ஒன்றுவிட்டொன்றான முறை.

interchange' [2], *v.* பரிமாற்றஞ் செய், பண்ட மாற்றுச்செய், கொடுத்துவாங்கு ; ஒன்றிற்கு ஒன்றாக இடமாற்று ; ஒன்று விட்டு ஒன்றாக மாற்று.

intercolle'giate, *a.* கல்லூரிகளுக்கிடையே நிகழ்கிற, கல்லூரிகளுக்கிடைப்பட்ட.

intercolon'ial, *a.* குடியேற்ற நாடுகளுக்கிடைப்பட்ட, குடியேற்ற நாடுகளிடையே நடத்தப்படுகிற.

intercolum'nar, *a.* இரு தூண்களுக்கிடையான.

intercolumnia'tion, *n.* ஒழுங்காக இடைவெளியிட்ட தூணமைப்பு ; தூணிடைவெளி.

in'tercom, *n.* இடைச்செய்தித்தொடர்பு ; வானூர்திகளின் இடைச்செய்தித்தொடர்பு.

intercommun'icate, *v.* இடைச்செய்தித்தொடர்பு கொள் ; தாராளமாகப் போக்குவரவுத் தொடர்புகொள்.

intercommun'ion, *n.* நெருங்கிய உறவு, தோழமை ஈடுபாடு ; செயல் பரிமாற்றம், உறவு பரிமாற்றம்.

intercommun'ity, *n.* பல்குழுப் பொதுமை ; பொதுவிலுடைமை.

interconnect', *v.* ஒன்றோடொன்று பின்னி இணை, இருபுறத்தொடர்புகளாலும் உறவுபடுத்து.

interconvert'ible, *a.* இடைமாற்றக்கூடிய.

intercos'tal, *a.* உடலின் விலா எலும்புகளுக்கிடையேயுள்ள; கப்பலின் பக்கக் கட்டைகளுக்கிடையேயுள்ள.

intercos'tals, *n. pl.* உடலின் விலா எலும்புகளுக்கு இடையே உள்ள பகுதிகள் ; கப்பலின் பக்கக் கட்டைகளுக்கு இடையே உள்ள பகுதிகள் ; இடைப்பகுதிகள்.

in'tercourse, *n.* இடைக்கூட்டுறவு ; செயலிணைவுறவு ; சமூகக் கூட்டுறவு ; தோழமைத்தொடர்பு ; கடவுள் மனித இடைத்தொடர்பு ; வாணிகப்போக்குவரவுத் தொடர்பு ; பாலுறவு, கலவி, புணர்ச்சி.

intercross', *v.* குறுக்குமறுக்காக வை ; சிலுவை போன்று கிட ; பின்னி இனம் பெருக்கு.

intercu'rrent, *a.* செய்திவகையில் இடைநிகழ்வான ; காலவகையில் இடைப்பட்ட ; நோய்வகையில் உடனிகழ்வான ; விட்டுவிட்டு நேர்கிற.

interdenomina'tional, *a.* பல்சமயக்குழுக்களுக்கிடைப்பட்ட ; சமயக் குழுக்களுக்குப் பொதுவான ; தனிக் குழுச் சார்பற்ற.

interdepend', *v.* ஒன்றையொன்று சார்ந்திரு, பின்னிச் சார்ந்திரு.

interdepen'dence, interdepen'dency, *n.* கூட்டுச்சார்பு; கூறுகளிடையே பின்னிச் சார்பு.

interdepen'dent, *a.* ஒன்றையொன்று பின்னிச் சார்ந்த.

in'terdict [1], *n.* விலக்காணை, தடைக்கட்டளை ; தடைக்கட்டாணை, சமயத் தொடர்புகளிலிருந்து ஆளையோ இடப்பகுதியையோ பிரித்து விலக்கிவைக்கும் போப்பாண்டவரின் தடை ஆணை.

interdict' [2], *v.* செயல் விலக்காணையிடு ; பயனீட்டுத் தடைவிதி; செயலிலிருந்து தடுத்துவை ; ஆள் வகையில் பொருள் மறு ; சமயத் தொடர்பிலிருந்து விலக்கிவை.

interdic'tory, *a.* தடையுத்தரவடங்கிய ; விலக்காணை செய்கிற.

interdi'g'tal, *a.* கைகால் விரல்களுக்கிடையே உள்ள.

interdi'gitate, *v.* கைகோப்பது போன்று பின்னிப்பிணை.

in'terest, *n.* வட்டி ; உறுமிகை, மிகைவீதம் ; கவர்ச்சி ; அக்கறை ; செல்வாக்கு ; உன்னிப்பு, கவனம் ; நலன் ; தனி நலம் ; தன்னலம் ; ஆதாயம் ; பற்று ; பற்றுத்தொடர்பு ; தனிப்பற்று ; கருத்து ; பொறுப்புரிமைப்பங்கு ; சட்டப்படி உரிமை ; சார்புநிலை, சாதக நிலைமை ; *v.* பற்றுத் தூண்டு, அக்கறை உண்டாகச்செய் ; கவர்ச்சியூட்டு ; கவனந்தூண்டு ; கருத்துக்கொள்ளச் செய் ; குறிப்பிட்ட திசையில் கருத்துத் தூண்டு ; தெரியவேண்டுமென்ற ஆர்வம் உண்டுபண்ணு ; (தொ.) compound interest, கூட்டு வட்டி, வட்டிக்கு மேல்வட்டி ; make interest, தன்னலத்தைத் தூண்டிப் பயன்படுத்து ; simple interest, நேர்வட்டி ; vested interests, குழுநலங்கள், இயல்பாக மாறாச் சார்புடைய நலங்கள்.

interfa'cial, *a.* இருதள முகப்புக்களுக்கிடையேயுள்ள; இடைமுகப்புத் தளத்துக்குரிய.

interfere', *v.* தலையிடு ; குறுக்கிடு ; இடையேபுகு ; இடையீடாகு ; இடையிட்டுத்தடு, குந்தகம்செய் ; குதிரைவகையில் காலுடன் கால் முட்டிக்கொள் ; இடைக்குறுக்கிட்டு மோது ; ஒளிக்கதிர் வகையில் குறுக்கிட்டு உறழ்வுறு.

interfer'ence, *n.* தலையிடுதல் ; குறுக்கீடு.

interferom'eter, *n.* ஒளியலை அளவுமானி, இடையீட்டுத் தடுப்புமூலம் ஒளியலைகளின் நீளத்தை அளக்கும் கருவி.

in'terflow [1], *n.* ஒருங்குட்பாய்வு, பின்னிப்பாய்வு ; கூடிக் கலப்பு.

interflow' [2], *v.* ஒருங்கு ஒழுகிப்பாய் ; கூடிக்கல, பின்னிப் பிணைவுறு.

interf'luent, *a.* பின்னிக் கலந்தொழுகுகின்ற.

interfuse', *v.* பின்னி இணைவுறுத்து ; கூடிக்கலப்புறு ; இணைந்தொன்றுபடு ; இரண்டறப் பரவி இணைவுறு.

intergla'cial, *a.* இரு பனியூழிக்காலங்களுக்கு இடையே உள்ள.

intergrada'tion, *n.* படிப்படியாக மாறி ஒன்றுபடுதல்.

intergrade', *n.* நுண்ணிய இடைப்படி, படிப்படியான நிலையில் மாறி வேற்றுரு ஒப்பாகும் மாறுபாட்டில் இடைப்பட்ட படிநிலை ; *v.* படிப்படியான நிலைகளால் வேற்றுரு ஒப்பு அடை.

intergrowth', *n.* பின்னுவளர்ச்சி, ஒன்றிற்குள் ஒன்று பின்னலாகச் சிக்கி வளர்தல்.

in'terim, *n.* இடைக்காலம், இடைப்பட்ட நேரம்; *a.* இடைப்பட்ட காலச்சார்பான, இடைப்படுகாலத்துக்குரிய; தற்போதைக்கான; (தொ.) interim dividend, இடைப்பட்ட காலப் பங்கு வீதம்.

inter'ior, *n.* உட்பகுதி, உட்புறம், உள்நாட்டுப்பகுதி; கட்டிடத்தின் உட்புறம்; அறையின் உட்புறம்; ஓவியத்தில் உட்புறக் காட்சி; உள்ளார்ந்த இயல்பு; ஆன்மா; உள்நாட்டுத் துறை; *a.* உட்புறத்ததான; உட்புறமமைந்த; உள்நாட்டைச் சேர்ந்த; கடற்கரையிலிருந்து நெடுந்தொலைவிலுள்ள; எல்லைப்புறத்துக்கு நெடுந்தொலைவிலுள்ள; உள்ளார்ந்த; உள்ளான; மனத்தகத்தான; ஆன்மிகமான, உள்நோக்கிய.

interja'cent, *a.* இடையில் அமைந்துள்ள, இடைப்பட்ட, இடைநிலையான.

interjac'ulatory, *a.* தனிநிலையில் கழறப்பெற்ற, திடுமென இடையிட்டுரைக்கின்ற.

interject', *v.* இடையீடாகப்பேசு, குறுக்கிட்டுரை; திடுமென இடைமறித்துரை, தனிநிலையாகக் கழறு.

interjec'tion, *n.* திடீர் உரை; வியப்புரை; வியப்பிடைச் சொல்.

interknit', *v.* இணைத்துப்பின்னு.

interlace', *v.* இடையிடையே கோத்துப்பின்னு, இணைத்துப் பின்னு; ஒன்றோடொன்று கல; ஒன்றோடொன்று மாறி மாறிப் பின்னிச்செல்.

interlap', *v.* ஒன்றையொன்று மேற்கவிந்திரு.

interlard', *v.* இடையிடையே கல, அயல்மொழிச் சொற்களை இடைச்செருகிக் கலந்து வழங்கு.

in'terleaf, *n.* நூலின் இடையிடையே சேர்த்த வெறுந்தாள்; *pl.* in'terleaves.

interleave', *v.* வெற்றுத்தாள்களை நூலின் இடையிடையே இணை.

interline', *v.* வரியிடையே சொற்களைச்சேர், இடைவரி சேர்.

interlin'ear, *a.* வரிகளுக்கிடையே எழுதப்பட்ட; இடைவரியாக அச்சடிக்கப்பட்ட.

interlin'gua, *n.* ஐரோப்பிய மொழிகளில் உள்ள லத்தீன அடிப்படையாக அமைக்கப்பட்ட அனைத்துலக மொழி.

interlink', *v.* கொளுவி இணை, இடையிணைப்புச்செய்.

interlob'ular, *a.* இரு பிரிவுகளுக்கிடையேயுள்ள.

interlock', *v.* ஒன்றை ஒன்றுடன் பிணைத்திறுக்கு; பொருந்த இணைவுறு; பிணைப்புறு; இருப்பூர்தி நெம்புகோல்களை ஒருங்கியங்கும்படி சேர்த்திணைவி.

interlocu'tion, *n.* உரையாடல், வாதம்.

interloc'utor, *n.* உரையாடலிற் பங்குகொண்டு பேசுபவர்; நீகிரோ இசைக்குழுவின் மேலாளர்; (சட்.) தற்காலிக முன்னுத்தரவு.

interloc'utory, *a.* நீதிமன்ற வழக்கு விசாரணையின் இடையிற் கூறப்பட்ட.

in'terloper, *n.* தலையிடுபவர், தன் ஆதாயம் கருதிப் பிறர் காரியங்களில் தலையிட்டுத் தொல்லை கொடுப்பவர்; (வர.) உரிமையற்ற வணிகர்.

in'terlude, *n.* இடைக்காட்சி, முற்காலத் தொடர்நாடகங்களின் இடைப்பட்ட சிறு நாடகக்காட்சி; முற்பட்டகால நாடக வகை; நாடகக் காட்சிகளிடையேயுள்ள இடைவேளை; இடைவேளை நிகழ்ச்சி; இடைமாற்று நிகழ்ச்சி; இடைக் காட்சி இசை; (இசை.) பாட்டிடைக் கருவி இசைப்பு.

interma'rriage, *n.* மண இணைப்புறவு, குடும்பம்-குலம்-சாதி-உறவுக்குழு ஆகியவற்றிடையே நிகழும் கலப்புமணம்.

interma'rry, *v.* மண இணைப்புறவுகொள், குடும்பம்-குலம்-நாடு முதலிய குழுக்களின் வகையிற் பிற குழுவிலிருந்து கலப்புமண உறவுகொள்.

intermed'dle, *v.* தகாநிலைத் தலையீடுகொள், வேண்டாத வற்றில் தலையிடு.

intermed'iary, *n.* இடையீட்டாளர், நடுவர், சந்து செய்விப்பவர்; *a.* இடையீட்டாளராய்ச் செயலாற்றுகிற; சந்து செய்விக்கிற; இடைநிலையான.

intermed'iate, *n.* இடைவருபொருள்; இடைப்பட்டபொருள்; நடுத்தரமான பொருள்; *a.* இடைவந்த; இடைப்பட்ட; நடுத்தரமான; இடையீடான; இடையிலுள்ள; *v.* இடைநின்று செயலாற்று; சந்து செய்வி.

intermed'ium, *n.* இடைப்பட்டபொருள், இடைநிலைப் பொருள்; ஊடுபொருள், விண்புறவெளியில் ஆற்றல் கடக்க விடும் ஊடுபொருள்.

interm'ent, *n.* புதைத்தல், புதைவினை.

interme'zzo, *n.* நாடகத்தின் இடையே வரும் சிறுதிற இடைக் காட்சி, பெரிய இசை நிகழ்ச்சித்தொகுப்பை இணைக்கிற சிறு மெல்லிசை நிகழ்ச்சி.

intermigra'tion, *n.* குடிப்பெயர்ச்சிப் பரிமாற்றம், குடி பெயர்வு மாற்றிக்கொள்ளுதல்.

interm'inable, *a.* முடிவுறாத; சலிப்பூட்டுகிற; களைப்பூட்டுகிற அளவுக்கு நீண்ட.

interming'le, *v.* ஒன்றுடன் ஒன்று சேர்; இருபொருள்களைச் சேர்த்துக கல; இணைந்து கல.

intermi'ssion, *n.* ஓய்வு, இடை நிறுத்தம்; நாடக இடைவேளை; நாடக இடைவேளைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடற் பகுதிகள்.

intermit', *v.* நிறுத்திவை; இடைநிறுத்து; தொடர்பறு; காய்ச்சல்-நோவு-நாடி ஓட்டம் ஆகியவற்றின் வகையில் சிறிது இடையே ஓய்வுறு.

intermix', *v.* ஒன்றாகக் கலப்புறு; ஒன்றோடொன்று கல; இணைந்து கல.

in'tern[1], *n.* கல்விநிலைய இல்லத்தின் உள்ளுறைவாளர்; மருத்துவமனை உள்ளுறை மருத்துவர்; முதிர்மாணவ மருத்துவர், மாணவத் தேர்ச்சி முதிர்ந்து அல்லது பட்டம் பெற்று மருத்துவ மனையில் தங்கித் துணைமருத்துவராகச் செயலாற்றுபவர்.

intern'[2], *v.* நாட்டுக்குள் கட்டுப்படுத்து; எல்லைக்குள் நடமாட்டம் கட்டுப்பாடுசெய்; நாட்டின் உட்பகுதிக்குள் அனுப்பிவை; பாதுகாப்புக் காவலில் வை.

intern'al, *a.* உள்ளான, உட்புறமான, உட்புறமுள்ள; உள்ளுறுப்பான; உள்நாட்டுக்குரிய; உள்நாட்டுச் செய்திகள் சார்ந்த; உள்ளத்துக்குரிய; ஆன்மிகமான; அகவியலான, அகப்பண்பு சார்ந்த; (தொ.) internal-combustion engine, உள்வெப்பாலை, எரிபொருள் உருளைக்குள் வெடிக்கும் ஆற்றலால் இயங்கும் பொறி; internal evidence, அகச்சான்று.

Interna'tional[1], *n.* உலகத்தொழிலாளர் கூட்டமைப்பு; (தொ.) first International, மார்க்ஸிய (Marxist) அடிப்படையான 1862-1873 வரை நிலவிய முதல் உலகத்தொழிலாளர் கூட்டமைப்பு; second International, 1889-இல் கூட்டப்பட்ட சமதர்ம அடிப்படையான உலகத் தொழிலாளர் கூட்டமைப்பு; third International, 1919-1943 வரை நிலவிய ருசியப் பொதுவுடைமைச் சார்பான உலகத்தொழிலாளர் கூட்டமைப்பு.

interna'tional[2], *n.* அனைத்து நாட்டுப் போட்டிப் பந்தயங்களில் ஈடுபடுபவர்; அனைத்து நாட்டுப் போட்டி; அனைத்து நாட்டுப் பொதுவுடைமைப் புரட்சிச் சங்க உறுப்பினர்; *a.* வெவ்வேறு நாடுகளிடையேயுள்ள; அனைத்துநாட்டுத் தொடர்புடைய; உலகநாடுகள் சார்ந்த; பன்னாடு சார்ந்த; எல்லா நாட்டுக்குமுரிய; அனைத்துநாட்டுத் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த; (தொ.) international standard atmosphere, பல நாட்டு விமானத்துறை வெற்றிகளை ஒப்பிட்டு நோக்குவதற்காக மேற்கொள்ளப்படும் பொதுவளி மண்டலநிலை.

internationale, (பிர.) *n.* அனைத்துநாட்டுப் புரட்சிப்பாடல்.

interna'tionalist, *n.* அனைத்துநாட்டுத் தொடர்புக்கொள்கையாளர், அனைத்துநாட்டுப் பொதுவுடைமைப் புரட்சிச் சங்க ஆதரவாளர்.

interna'tionalize, *v.* அனைத்துநாட்டுரிமையாக்கு, வெவ்வேறு நாடுகளின் இணைந்த பாதுகாப்பின்கீழ்க் கொண்டு வா.

interne'cine, *a.* ஒருவரை ஒருவர் அழிக்கிற; ஒன்றையொன்று கெடுக்கிற; உட்பகை சார்ந்த.

intern'ment, *n.* பாதுகாப்புக் கட்டுப்பாடு; (தொ.) internment camp, போரில் கைதிகள் அயல்நாட்டினர் காவல் கட்டுப்பாட்டுப் பாசறை.

in'ternode, *n.* கணுவிடைப்பகுதி, இருகணுக்களுக்கு இடைப்பட்ட தண்டுப்பகுதி.

in'ter nos, (ல.) *adv.* நமக்குள், நமக்கிடையே.

internun'cial, *a.* நரம்புகள் வகையில் உடலின் வேறு வேறு அமைப்புக்களை இணைத்துத் தொடர்புபடுத்துகிற.

internun'cio, *n.* போப்பாண்டவரின் தனிமுறைத்தூதர், தூதர் அமர்த்தப்படாத காலத்தில் அல்லது இடத்தில் பணியாற்றும் இடைத்தூதர்; (வர.) துருக்கி அரசவையிலுள்ள ஆஸ்திரிய அரசியல் தூதர்.

interocean'ic, *a.* இருபெருங்கடல்களுக்கிடைப்பட்ட, மாகடல்களை இணைக்கிற.

interos'culate, *v.* ஒருவரோடு ஒருவர் கூடியிணை; ஒன்றோடொன்று கல; இடையிணைப்பாயமை.

inteross'eous, *a.* எலும்புகளுக்கிடையே உள்ள.

interpage', *v.* இடைப்பக்கங்களில் அச்சிடு; பக்கங்களிடையே செருகு.

interpari'etal, *a.* மண்டையோட்டின் பக்க எலும்புகளுக்கிடையே உள்ள.

interp'ellate, *v.* இடைவினா எழுப்பு; நடைமுறை நிகழ்ச்சிகளை இடைமறித்து அமைச்சரை விளக்கம் கேள்.

interpen'etrate, *v.* முழுநிறைவாக ஊடுருவிச்செல்; முழுமையாக ஊடுருவிப் பரவு; மாறிமாறி ஒன்றையொன்று ஊடுருவு.

interplait', *v.* சேர்த்துமுடை, இணைத்துப்பின்னு.

interplan'etary, *a.* கோள்களுக்கிடைப்பட்ட.

in'terplay, *n.* இடைவிளைவு, கலப்பின் இருதிசைப் பயன் விளைவுகளின் தொகுதி.

interplead', *v.* மூன்றாவதாளான ஒருவரின் செய்திபற்றி முடிவு செய்ய ஒருவருக்கொருவர் வாதாடு.

In'terpol, *n.* குற்ற ஒழிப்பில் உலக ஒத்துழைப்பு ஊக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்து நாட்டுக் காவல்துறைக் குழு.

interp'olate, *v.* இடைச்செருகு, புத்தகத்தின் இடையில் இடைச்செருகு; சொற்களை இடைச்செருகு; (கண.) தொடர்பு வரிசைகளில் இடை உருச்சேர்.

interpose', *v.* இடைச்செருகு; இடையிட்டுப்புகுத்து; குறுக்கீடுசெய்; குறுக்கிடு; இடையிற் பேசு; இடைப்படு.

interposi'tion, *n.* குறுக்கிடுதல்; குறுக்கீடு; தலையீடு, இடையீடு; குறுக்கிட்டுப் பேசுதல்; குறுக்கிடுகிற பொருள்.

interp'ret, *v.* உட்பொருளை வெளிப்படுத்து; கலை நயப்படுத்திக்காட்டு; செயலுருப்படுத்திக்காட்டு; பொருள்படுத்து; சுட்டிக் குறிப்பிடு; சுட்டியுணர்; எளிய மொழியில் விளக்கு; மொழிபெயர்த்துரை.

interp'retable, *a.* விளக்கப்படத்தக்க.

interpreta'tion, *n.* பொருள்விளக்கம்; தரப்பட்ட பொருள் விளக்கம்; கருத்து விளக்கக்காட்சி; கருத்துவகை.

interp'retative, *a.* விளக்கம் அடங்கிய; விளக்க விளைவான.

interp'reter, *n.* மொழிபெயர்ப்பாளர்; மொழிபெயர்த்துக் கூறுபவர்; பொருள் விளக்குபவர்.

interp'retress, *n.* மொழிபெயர்ப்பவள்; பொருள் விளக்கும் பெண்.

interprovin'cial, *a.* இருமாநிலங்களுக்கிடைப்பட்ட; இரு மாகாணங்களுக்கிடையே அமைந்துள்ள.

interpunc'tion, *n.* நிறுத்தக்குறி அமைதி.

interpunc'tuate, *v.* நிறுத்தக்குறியிடு.

interra'cial, *a.* வெவ்வேறு இனங்களுக்கிடையேயுள்ள.

interreg'num, *n.* ஒழுங்கான அரசனில்லாக் காலம், இடையாட்சிக்காலம்; ஓராட்சி முடிவுக்கும் அடுத்தஆட்சித் தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலம்; இடை ஓய்வு, இடைக்காலம்; *pl.* interreg'na, interreg'nums.

interrela'tion, *n.* இடையுறவு.

interrela'tionship, *n.* இடை உறவுத்தன்மை.

inte'rrogate, *v.* கேள்விகேள், வினவு; வழக்கில் குறுக்குக் கேள்வி கேள், உசாவு, விசாரணை செய்.

interroga'tion, *n.* கேள்விகேட்டல், வினா, உசாவல்.

interrog'ative, *n.* வினாச்சுட்டு, வினாப்பெயர்; *a.* வினவுகிற, கேள்வி வடிவான, கேள்வி கேட்கிற, கேள்விகுறித்த.

interrog'atory, *n.* கேள்வி; கேள்வித்தொகுதி; குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் கேட்கப்படும் குறுக்குக் கேள்வித் தொகுதி; *a.* வினவுகிற, வினவுடன் கூடிய, விசாரணை செய்கிற, வினாமுறையான.

in terror'em, (ல.) *adv.* எச்சரிப்பாக.

interrupt', *v.* குறுக்கிட்டுத்தடு; திடீரெனக் குறுக்கிடு; திடுமெனத் தொடர்பறு; தடுத்துமறி; இடைத்தடுத்துப்பிரி; காட்சியை மறை; குறுக்கீடுசெய்.

in'ter se, (ல.) *adv.* அவர்களுக்கிடையே; அவற்றிடையே.

intersect', *v.* ஊடறு; வெட்டித் துண்டாக்கு; (வடி.) கோட்டினைக் குறுக்கிட்டுப்பிரி.

intersec'tion, *n.* ஊடறுத்தல்; ஊடறுப்பு; குறுக்கீடு; (வடி.) குறுக்கீட்டுச் சந்திப்பு; குறுக்கீட்டுச் சந்திப்புப் புள்ளி.

intershoot', *v.* இடைநேரம் விட்டுவிட்டு எறி; விட்டுவிட்டுக் கண்வீச்சு எறி; மாறு மாறான பல்வண்ணப்படுத்து.

in'terspace, *n.* இடைவெளி; இடைநேரம்.

intersperse', *v.* இடையிடையே தூவு, சிதறிப்பரப்பு; பல்வேறு இயற்படுத்து.

interspin'al, *a.* முதுகந்தண்டின் இணைப்பு எலும்புகளுக்கிடையே உள்ள.

interspin'ous, *a.* முதுகந்தண்டின் எலும்புகளின் முளைகளுக்கிடையே உள்ள.

in'terstate, *a.* அரசுகளுக்கிடையே நிகழ்கிற; அரசுகட்கிடைப்பட்ட.

interstell'ar, *a.* விண்மீன்களுக்கிடையேயுள்ள; கதிரவன் அண்டத்துக்கு அப்பாற்பட்ட.

inters'tice, *n.* சிறு இடைவெளி; சந்து, வெடிப்பு, ஒடுங்கிய பிளவு.

intersti'tial, *a.* சிற்றிடைவெளி சார்ந்த, சிறு பிளவுருவான; சந்துகளில் உள்ள.

interstratifica'tion, *n.* படுகை இடைப்பாடு; படுகைகளிடையே மாறிமாறிக் கிடத்தல்.

intertan'gle, *v.* ஒன்றோடொன்று சிக்கலாக்கு.

intertan'glement, *n.* கூட்டுச்சிக்கல், ஒன்றோடொன்று பின்னிச்சிக்கிக்கொள்ளுதல்.

intertex'ture, *n.* பின்னல் நெசவு.

intertrib'al, *a.* குடிமரபுகளுக்கிடைப்பட்ட, குலங்களிடைப்பட்ட.

intertwine', *v.* ஒன்றுடனொன்றாகப் பின்னி முறுக்கு; பின்னுறு.

intertwist', *v.* ஒன்றுடனொன்றாக முறுக்கு, பின்னி முறுக்கிக்கொள்.

in'terval, *n.* இடைவெளி; இடைநேரம்; இடை ஓய்வு; இடைப்பிளவு; இடைநிறுத்தம்; (இசை.) இரு ஒலிகளுக்கிடையே உள்ள குரலெடுப்பு வேற்றுமை; பண்பு வகையில் இருவருக்கிடையே அல்லது இருபொருள்களுக்கிடையே உள்ள வேற்றுமை; (தொ.) at intervals, இங்கும் அங்கும்; அடுத்தடுத்து; இடைநேரம் விட்டுவிட்டு.

intervall'ic, *a.* கோட்டை மதில்களுக்கு இடையேயுள்ள வெளி சார்ந்த.

intervein', *v.* நரம்புகள் போல குறுக்குமறுக்காகச் செல்லுவி.

intervene', *v.* குறுக்கிடு; இடையில் நிகழ்; இடையே நேர்; சீர்ப்படுத்துவதற்காகத் தலையிடு; தலையிட்டுத்தடு; (சட்.) வழக்கில் முதலில் தொடர்புகொள்ளாமல் பின்னர்க் குறுக்கிடு.

interven'tion, *n.* இடையீடு; தலையீடு; இடையிட்ட தடை; இடையீட்டு இணக்குவிப்பு.

in'terview, *n.* காண்பு, நேரிடைக்காட்சி; *v.* நேருக்குநேர் சந்தி, பேட்டிகாண், சந்தித்துப் பேசு.

in'ter viv'os, (ல.) *adv.* உயிர் வாழ்பவரிடையே, உயிர் வாழ்வனவற்றிடையே; நல்லெண்ணக் கொடையாக, மரபுரிமையாகவன்றி நன்கொடையாக.

intervolve', *v.* ஒன்றிற்குள் ஒன்றாகச் சுருட்டிவை.

interweave', *v.* இணைத்துப்பின்னு; இசைத்து நெசவு செய்.

interwind', *v.* இணைத்துச் சுருட்டு, சேர்த்து முறுக்கு.

interwork', *v.* இசைத்துப்பின்னு, ஒன்றன்மீதொன்றாகச் செயலாற்று.

interwreathe', *v.* ஒன்றையொன்று சேர்த்து மாலையாகச் சுற்று, ஒன்றினுள் ஒன்றாகப் பின்னு.

inter-zon'al, *a.* இரண்டாம் உலகப்போர் (1939-1945) முடிவில் நேச வல்லரசுகளிடையே பரப்பீடு செய்யப்பட்ட அரங்கங்களுக்கிடைப்பட்ட; பகுப்பீட்டரங்கங்களுக்குரிய.

intes'tate, *n.* விருப்ப ஆவணம் எழுதாமல் இறந்துவிடுபவர்; *a.* இறுதிப்பத்திரம் எழுதாமல் இறக்கிற.

intes'tine, *a.* உள்ளியலான; சச்சரவு வகையில் குடும்பத்துக்கு உள்ளான; போர் வகையில் நாட்டெல்லைக்குட்பட்ட, நாட்டகமான; உயிரின வகையில் உடலுக்குட்பட்ட; (தொ.) intestine motion, முற்றிலும் உடலுக்குள்ளேயே இயங்குகிற.

intes'tines, *n. pl.* குடல்; உணவுக்குழாயின் கீழ்ப்பகுதி; (தொ.) large intestine, பெருங்குடல்; small intestine, சிறுகுடல்.

in'timacy, *n.* நெருங்கிய உறவுடைய நிலை; உள்ளார்ந்த பழக்கம்; கள்ளப்புணர்ச்சி.

in'timate, *n.* மிக நெருங்கிய நண்பர்; உற்றார், உற்ற நேயர்; *a.* மிக நெருங்கிய; மிக நெருங்கிய பழக்கமுடைய; நெருங்கிய உறவுடைய; உள்ளார்ந்த; உற்ற, உயிர்த் தொடர்புடைய; நாட்குறிப்பு முதலியவற்றின் வகையில் உள்ளுணர்ச்சிகளையெல்லாம் தெரிவிக்கின்ற; *v.* தெரியப்படுத்து, தெரிவி; குறிப்பாலறிவி, சுட்டு; குறிப்புக்காட்டு; (தொ.) intimate knowledge, நெருங்கிய பழக்கத்தால் ஏற்பட்ட அனுபவ அறிவு.

intim'idate, *v.* அச்சுறுத்து, மிரட்டு, மிரட்டி அடக்கு; அச்சுறுத்தித் தன் விருப்பப்படி நடக்கச்செய்.

intim'ity, *n.* தனிமை உள்ளார்ந்த தன்மை; தனிமறைவு; நெருங்கிய பழக்கம்.

intinc'tion, *n.* திருக்கோயில் அருளுணா வினையில் பழத்தேறலில் அப்பத்தின் தோய்வு.

intit'ule, *v.* பாராளுமன்றச் சட்ட உரிமையளி.

in'to, *prep.* உள், உள்ளே, உள்ளாக.

in'-toed, *a.* கால்விரல்கள் உள்நோக்கித் திருப்பப்பட்டுள்ள.

intol'erable, *a.* பொறுக்க இயலாத, தாங்குதற்கரிய.

intol'erant, *a.* பொறுதியற்ற, சகிப்புத்தன்மையற்ற, மாறுபாடு பொருத.

in'tonate, *v.* இசையோடு ஓது; இனிய அதிர்விசையலை எழுப்பு; தனிக்குரலிசையுடன் கூறு.

intona'tion, *n.* இசையோடு ஓதுதல்; இசையலை அதிர்வு, ஒலியலை எழுச்சிதாழ்வு; குரல் உயர்வு தாழ்வு; இசையழுத்தம்; எளிய இசைப்பாடலின் தொடக்க வாசக எடுப்பு.

intone', *v.* இசையோடு ஓது; தனி இசைக்குரலுடன் ஓது.

in tot'o, (ல.) *adv.* முழுதும், முற்றும்.

intox'icant, *n.* வெறியூட்டும் குடிவகை; மதி மயக்கும் பொருள்; *a.* வெறியூட்டுகிற, மதி மயக்குகிற.

intox'icate, *v.* வெறியூட்டு; தன்னடக்கம் மீறிய அளவில் கிளர்ச்சியூட்டு, எழுச்சியூட்டு; தூண்டு.

intoxica'tion, *n.* வெறி; குடிமயக்க வெறி; மட்டுமீறிய கிளர்ச்சி; நஞ்சூட்டல்.

intracran'ial, *a.* மண்டையோட்டுக்குள்ளான, மண்டையோட்டின் உட்புறஞ் சார்ந்த.

intrac'table, *a.* வசப்படுத்த முடியாத, அடங்காத; எளிதில் கையாள முடியாத, படிமானமாகாத.

intrad'os, *n.* (க-க.) வளைமுகட்டின் உட்புற வளைவு, வளைமுகட்டின் கீழ்வளைவு.

intramur'al, *a.* மதிலகமான, கட்டிடத்தினுள்ளே நடைபெறுகிற.

intrana'tional, *a.* நாட்டெல்லைக்குட்பட்ட, நாட்டெல்லை கடவாத.

intran'sigence, intran'sigency, *n.* இணங்காமை, விட்டுக் கொடாபபண்பு.

intran'sigent, *n.* அரசியலில் வளைந்து கொடாதவர், கொள்கை விட்டுக்கொடுக்காதவர்; *a.* இணங்கிப்போகாத, ஒத்துவராத, விட்டுக்கொடுக்காத.

intran'sitive, *n.* செயப்படுபொருள் குன்றியவினை; *a.* செயப்படுபொருள் குன்றிய.

in'trant, *n.* கல்லூரிப் புது நுழைவாளர்; சங்கத்தில் சேருபவர்.

intraven'ous, *a.* நரம்பின் அகத்துள்ள; நரம்பூடாகச் செலுத்தப்படுகிற.

intrep'id, *a.* அஞ்சாத, துணிச்சல்மிக்க.

in'tricacy, *n.* கடுஞ்சிக்கல், விளங்காப்புதிர்.

in'tricate, *a.* திருக்குமறுக்கான; கடுஞ்சிக்கலான; மறைபுதிரான, தெளிவற்ற.

in'trigant, in'triguant, *n.* உட்சூழ்ச்சிகளில் ஈடுபடுபவர்.

intrigue', *n.* உட்கிளர்ச்சி, மறை சூழ்ச்சி, கபடச்செயல்; மறை காதல், கள்ளத்தொடர்பு; *v.* உட்சூழ்ச்சி செய், மறை சதிகளில் ஈடுபடு; மறை செல்வாக்கைப் பயன்படுத்து; மறைவான காதல் கொள்; ஆவலைக்கிளறு, அவாத்தூண்டு.

intrin'sic, *a.* உள்ளார்ந்த; உள்ளியல்பான; உயிர்க்கூறான.

introduce', *v.* புகுத்து; உள் இடு, செருகு; பழக்கத்திற்குக் கொணர்; புதிதாகத் தொடங்கி வை, புதுவது புகுத்து; உள்ளே இட்டுச் செல்; அறிமுகப்படுத்து; சமூகத்திற்கு இளம் பெண்ணை அறிமுகப்படுத்து; கவனத்துக்குரியதாக்கு; பாராளுமன்றத்தில் சட்ட முதலியவற்றைக் கொண்டுவந்து முன்னிலைப்படுத்து.

introduc'tion, *n.* அறிமுகப்படுத்துதல்; அறிமுகம்; முன்னுரை; முகவுரை; தொடக்கநிலையான பகுதி, தொடக்கக் கூறு; (தொ.) letter of introduction, அறிமுகக்கடிதம்.

introfle'xion, *n.* உள்நோக்கி வளைதல், உண்முக வளைவு.

introgre'ssion, *n.* உட்போக்குவரவு.

intro'it, *n.* அருளுணா வழிபாட்டின்போது திருமுன்னிலையை அணுகும் சமயகுரு பாடும் திருமறைப்பாடல்.

introjec'tion, *n.* உயிரில்லாதனவற்றுக்கு உயிர்ப்பண்பேற்றுதல்; தாதான்மிய உணர்வு, புற உலகப்பொருள்களுடனும் உயிர்களுடனும் ஒன்றுபட்டு அவற்றின் நிலைகளையும் முடிவுகளையும் தமதாக உணரும் உணர்வு.

intromi'ssion, *n.* உட்புக விடுதல்; செருகல்; பிறர் உடைமைக் கையாளும் உரிமையை மேற்கொள்ளுதல்.

intromit', *v.* இடைச்செருகு, செருகு; புகவிடு, நுழையவிடு.

intromitt'ent, *a.* புகவிடுகிற; செருகுகிற; உட்செருகுவதற்கிசைவாக அமைக்கப்பட்ட, புகுதற்கிசைவான.

introspect', *v.* உண்முகமாகத் தன்னுளாராய், தன்னைத் தானே உள்ளாய்வு செய், உண்முகச் சிந்தனை செய்.

introspec'tion, *n.* உட்புறக்காட்சி; தற்காட்சி, தன் உள்ளத்தைத் தானே நுணுகிக்காணும் செயல், உண்முக நோக்கு.

introsuscep'tion, *n.* = intussusception.

introver'sion, *n.* அகமுகக் கோட்டம்; அகம்புறமாகத் திருப்புகை, உண்முகச் சிந்தனை; தன்முக அவாச்சார்பு; தற்சுட்டு நலம்; அகச்சிந்தனை நாட்டம்; இறைமை அகமுகக்காட்சி.

in'trovert [1], *n.* அகமுக நோக்காளர், தற்சோதனை செய்பவர்; சிந்தனையை உட்புறமாகத் திருப்பும் இயல்புடையவர்.

introvert' [2], *v.* அகமுகச் சிந்தனை செய், எண்ணங்களை உள்நோக்கித் திருப்பு; உள்வாங்கிக்கொள்; (வில.) உறுப்பை உறுப்பினுள்ளிடமாக இழுத்துக்கொள்.

intrude', *v.* உரிமையில்லாமல் தலையிடு; இடையில் புகு; அழையாது நுழை; வல்லந்தமாகப் புகுத்து; தனிமையுள்ள எல்லைமீறிப் புகு.

intrud'er, *n.* அழையாது நுழைபவர்; தாக்கும் விமானம்.

intru'sion, *n.* தலையீடு; இடையீடு; அழையா நுழைவு; வலிந்த புகுத்தீடு; (மண்.) படுகையிடையே கலவைப்பாறையின் உட் சறுக்கீடு.

in'tubate, *v.* (மரு.) குரல்வளை திறந்திருக்கும்படி அதனுள் குழாயைச் செருகு.

in'tuit, *v.* உள்ளுணர், இயற்கை உணர், நேரடி உணர்வு பெறு.

intui'tion, *n.* உள்ளுணர்வு; ஆய்வாராய்வு இல்லாமலே ஏற்படும் நேரடி உணர்வு; நேரடிப்பொறி உணர்வு; திடீர் உணர்வுத்திறம், அகத்திற உணர்வு.

intui'tionalism, *n.* மெய்ம்மை உள்ளுணர்வின் பயனே என்னும் கோட்பாடு.

intui'tionism, *n.* உள்ளத்தின் இடையீடின்றிப் பொறிகள் புறப்பொருள்களை நேரடியாகவே அறிகின்றன என்னும் கோட்பாடு.

intu'itive, *a.* உள்ளுணர்வாலறியப்பட்ட; ஆராயாது உணரப்பட்ட; உள்ளுணர்வால் இயக்கப்படுகிற, இயலறிவால் இயங்குகிற; உள்ளுணர்வு சார்ந்த; இயலறிவார்ந்த.

intu'itivism, *n.* நன்னெறிக் கூறுகள் உள்ளுணர்வைச் சார்ந்து எழுபவை என்னும் கோட்பாடு.

intumes'cence, *n.* பரு, வீக்கம், புடைப்பு.

intumes'cent, *a.* உப்புகிற, பருக்கிற.

intussuscep'tion, *n.* (உட.) தன்னியலாக்க ஆற்றல், உயிரினங்கள் அயற்பொருள்களைத் தன்மயமாக்கித் தன்னுடலுடன் உடலாக இணைவித்துக்கொள்ளும் திறம்; கருத்துக்கள் வகையில் தன்மயப்படுத்திக்கொள்ளும் திறன்; குடல் வகையில் ஒரு பகுதிக்குள் மற்றொரு பகுதியை இழுத்துக்கொள்ளும் செயல்.

inunc'tion, *n.* நெய்யாட்டு, எண்ணெய் தடவுதல்.

in'undate, *v.* வெள்ளப்பெருக்குக்கு உள்ளாக்கு, வெள்ளம் அலைபாய்ந்தோட வை; வழிந்தோடுவி, சூழ்ந்து மூழ்கடி.

inurbane', *a.* பண்பமைதியில்லாத, இணக்க வணக்கமற்ற, நாகரிகப் பண்பாட்டற்ற.

inure', *v.* பயிற்றுவித்துப் பழக்கு, பழக்கப்படுத்து; வலுவூட்டு, பழக்கத்தால் காய்த்துப் போகச்செய்; (சட்.) நடைமுறைப்படு, செயல்வலிவுறு.

inure'ment, *n.* பழக்கப்படுத்துதல்; பயிற்சிப்பழக்கம்; பயின்று பழகிய நிலை.

inurn', *v.* உடலெரித்த சாம்பலைத் தாழியில் இடு.

inut'ile, *a.* பயனற்ற.

inutil'ity, *n.* பயனின்மை; பயனற்ற நிலை; ஆதாயமின்மை; பயனற்ற பொருள்.

invade', *v.* படையெடுத்துத்தாக்கு, பகைநாட்டின்மேல் தண்டெழுந்து செல்; எல்லைமீறி நுழை; தாக்கு; உரிமையுள் தலையிடு; தொல்லைகொடு.

inva'ginate, *v.* உறையிலிடு; உறையினுள்ளாகப் புகுத்து; குழாய்போன்ற உறையை அகம்புறமாகத் திருப்பு.

in'valid [1], *n.* நோயாளி, பிணியாளர், இயலாதவர்; *a.* நோயாளிக்குரிய, இயலாத, ஏலமாட்டாத.

inval'id [2], *a.* சட்டப்படி செல்லாத, ஆற்றலற்ற, கட்டுப்படுத்தாத, பயனற்ற.

invalid' [3], *v.* நோயாளியாகப் படுக்கவை, இயலாதவராக்கு; நோயாளி போன்று நடத்து; படைப்பணியிலிருந்து அகற்று; நோய்காரணமாக வீட்டுக்கு அனுப்பு; நோயாளியாகு, நோயாளிப் பட்டியலில் இடம்பெறு.

inval'idate, *v.* சட்டப்படி செல்லாததாக்கு பயனற்றதாக்கு, வெறுமையாக்கு.

invalid'ity, *n.* சட்டப்படி செல்லாத தன்மை; பயனற்ற தன்மை; நோயுற்றநிலை, உடல் உரங்குன்றியநிலை.

inval'uable, *a.* விலைமதிக்க முடியாத, விலைமதிப்பற்ற, அருமதிப்புள்ள.

in'var, *n.* இயல்நூற் கருவி மணிப்பொறி முதலியன செய்வதற்கேற்றபடி மிகக்குறைவான விரிவகற்சி அலகெண்ணுடைய செர்மன் வெள்ளி எஃகுக்கலவை.

invar'iable, *a.* மாறுத, ஒரே படிமையுடைய; (கண.) நிலையெண்ணுன, மாதிரியான.

inva'sion, *n.* படையெடுப்பு, தண்டெழுச்சி; தாக்குதல்; வரம்பு மீறுகை, எல்லை கடப்பு; பிறர் உரிமை கைப்பற்றுதல்; வல்லந்த நுழைவு.

invec'tive, *n.* திட்டு, வசைமாரி; வசைத்தாக்குதலான சொற்பொழிவு; வன்சொல், சுடுசொல்.

inveigh', *v.* தாக்கிப்பேசு, இரைந்து பழிதூற்று, அறைந்து வசைபாடு.

invei'gle, *v.* பசப்பித்தூண்டு, நயமாக ஏய்த்துச் செயலாற்றுவி.

invener'unt, (ல.) *v.* பலர் வரைந்த கலைப்படங்களில் இயற்றினோர் பெயர்களுடன் 'இயற்றினர்' என்ற குறிப்பு.

inven'it, (ல.) *v.* கலைப்படங்களில் இயற்றினோர் பெயருடன் 'இயற்றினூர்' என்னும் குறிப்பு.

invent', *v.* புத்தாக்கம் புனை, புத்தமைவுகாண்; புதிதாகப் புனைந்துருவாக்கு, முதன் முதலாகக் கண்டுபிடி; கற்பனையாக உருவாக்கு; பொய்யாகக் கற்பனை செய்; இட்டுக்கட்டு.

inven'tion, *n.* புதிதுபுனைதல்; புத்தாக்கப் புனைவு; கற்பனைத்திறம்; போலிப்புனைவு; இட்டுக்கட்டான செய்தி; (சட்.) பாதுகாப்பு உரிமைச்சீட்டு பெற்ற புதிய கண்டுபிடிப்பு.

in'ventory, *n.* விளக்க விவரப்பட்டி; பட்டியலிலுள்ள சரக்குகளின் தொகுதி; அணு இயக்கச்சுழலில் உள்ள மொத்தப் பொருண்மைக்கூறு; *v.* பட்டியலில் சரக்குகளைப் பதிவு செய், பட்டியலாக்கு.

invera'city, *n.* பொய்.

Inverness', *n.* ஸ்காத்லாந்து நாட்டிலுள்ள ஒரு நகரம், ஆடவரின் கையற்ற மேலங்கி; (தொ.) Inverness cloak, Inverness coat, கையற்ற மேலங்கி.

inverse', *n.* தலைகீழ்நிலை; நேர் எதிர்மாருக உள்ள பொருள்; *a.* நிலை ஒழுங்கு உறவு முதலியவற்றில் தலைகீழாகவுள்ள, தலைகீழ் எதிர்மாருன; (தொ.) inverse proportion, தலைகீழ்த்தகவுப் பொருத்தம்; inverse ratio, நேர்மாறு விகிதம், தலைகீழ்த் தகவு.

inver'sion, *n.* தலைகீழ்த்திருப்புதல், எதிர்மாருக்குதல்; நிலை ஒழுங்கு உறவு முதலியவற்றினை எதிர்மாருகப் புரட்டுதல்; (இலக்.) சொற்களின் அமைப்பைத் தலைகீழ்ப்புரட்டுதல்; தலைகீழ்த்தகவு, மாற்று வீதம்; (இசை.) தலைகீழாகத் திருப்பும் முறை, எதிர்மாற்றத்தின் விளைவு.

in'vert [1], *n.* தலைகீழ் வளைவுக் கட்டுமானம்; (உள.) பால் உணர்ச்சிகள் தலைமாற்றமாயுள்ளவர்; (தொ.) invert sugar, வலம்புரிப் பழவெல்லம் இடம்புரிப் பழவெல்லம் ஆகியவற்றின் கலவை.

invert'[2], *v.* தலைகீழாகப் புரட்டு, தலைகீழாகக் கவிழச்செய், நிலை உறவு வரிசை ஒழுங்கு முதலியவற்றைத் தலைகீழாகத் திருப்பு.

invert'ebrate, *n.* முதுகெலும்பில்லா விலங்கு; துணிவற்றவர்; *a.* முதுகெலும்பற்ற; உறுதியற்ற, வலுவற்ற.

invest', *v.* ஆடை அணிவி, போர்த்து; அணிவி; இணைவி; பதவியிலமர்த்து; முற்றுகையிடு, ஆதாயத்தை நாடி முதலிடு.

inves'tigate, *v.* அலசியாராய், சோதனைசெய், விசாரணை செய், உசாவு; துருவித்தேடு.

inves'titure, *n.* சடங்கோடு பதவியில் அமர்த்தல்; பணி அமர்த்தீடு; பண்புகளிணைவித்தல்.

invest'ment, *n.* முதலீடு செய்தல்; முதலீடு; பணம் முதலீடு செய்யப்பட்ட சொத்து; பணியமர்த்தீடு, பதவியேற்றல்; ஆடை அணிவித்தல்; முற்றுகை இடுதல், முற்றுகை.

invet'erate, *a.* நீடித்துப் பயின்று உறுதியாகிவிட்ட, வேரூன்றிய, நாட்பட்ட, மாறாத, அசைக்கமுடியாத.

invid'ious, *a.* மனக்கசப்பு உண்டுபண்ணக்கூடிய, நச்சுத் தன்மையுடைய; பகைமை பாகுபாடு உண்டுபண்ணும் தன்மையுடைய; போட்டி பொறாமைகள் தூண்டக்கூடிய.

invi'gilate, *v.* தேர்வின்போது மாணவர்களைக் கண்காணி, விழிப்புடன் மேற்பார்வையிடு.

invig'orate, *v.* எழுச்சியூட்டு, ஊக்கமூட்டு, உயிர்ப்பளி.

invin'cible, *a.* வெல்லமுடியாத; வென்று கொள்ள முடியாத.

invi'olable, *a.* மீறத்தகாத, அவமதிக்க ஒண்ணாத, கேடணுகத் தகாத, முழுநிறை காப்புடைய.

invi'olate, *a.* சேதத்துக்காளாகாத, கேடுறாத, சிதையாத; மீறப்படாத, தூய்மை கெடாத.

invis'ible, *a.* கட்புலனாகாத; மறைந்துள்ள; காணமுடியாதபடி மிகச் சிறிதான; (தொ.) invisible exports, ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாக இருப்பதற்குக் காரணமான கப்பல் போக்குவரத்து அயல்நாட்டு முதலீடு முதலிய செய்திகள்; invisible ink, எழுதிய பின்னர்ச் சூடேற்றப் படுதல்மூலமே எழுத்துக்களைக் கண்ணுக்குப் புலப்படச் செய்கின்ற மை; the invisible, காணா உலகு, கடவுள்.

invita'tion, *n.* விரும்பி அழைத்தல்; வேண்டுதல்; அழைப்பிதழ், அழைப்புத்தாள்; கவர்ச்சி.

invite', *n.* (பே-வ.) அழைப்பு; *v.* அழை; வரவழை; வணக்க இணக்கமாக அழைப்பு அனுப்பு; வருமாறு வேண்டு; செய்யும்படி தூண்டு; வரவேற்கும் விருப்பம் தெரிவி; ஏற்கும் மனப்பாங்கு காட்டு; கவனம் கவர், கவர்ச்சியுடையதாயிரு; தூண்டுதலளி; செயற்காரணமாயியலு.

in vit'ro, (ல.) *adv.* வேதித்துறை ஆய்வுக் கூடத்தில் சோதனைக் கண்ணாடிக் குழாயில்.

invoca'tion, *n.* வேண்டுதல், நேர்வுவழிபாடு; வேண்டுதல் வழிபாட்டுத் தொடக்க வாசகம்; திருக்கோயில் வழிபாட்டில் வேண்டுதல் வாசகம்; வேண்டுதலுக்குரிய இறைவிளி வாசகம்; வேண்டப்படுபவருக்குரிய விளி அடைமொழி; வரம்வேண்டுதல்; தெய்வ ஆவி அழைப்பு, ஆவாகனம்.

in'voice, *n.* விலைப்பட்டி, விலை விவரங்களுடன்கூடிய சரக்குப் பட்டியல்; *v.* விலைப்பட்டி வரை, சரக்குகளின் விலை விவரங்களைக் குறி.

invoke', *v.* தொழுதுவேண்டு, வழிபட்டு வரவழை; வணங்கி வேண்டிக்கொள்; ஊக்கி உதவவேண்டு.

in'volucre, *n.* (உள்.) மேலுறை; (தாவ.) பூவடிச்சிதல் தொகுதி.

invol'untary, *a.* விருப்பாற்றலுக்குட்படாத, எண்ணாமல் நிகழ்கிற, தானாக இயல்கிற.

in'volute, *n.* உட்சுருள்; (வடி.) கூம்பி, வட்டமையத்தை அடுத்த உள்வட்டத்தின்மீது உள்வளைகோட்டமுறும் வட்ட வளைவு; *a.* சிக்கலான; உட்சுருளான; அடர்ந்து சுருண்ட; உள்முகமாகத் திரும்பிய; (தாவ.) ஓரத்தில் உள்முகமாகச் சுருண்ட.

involu'tion, *n.* சிக்கவைத்தல்; சுற்றி வளைத்தல், சிக்கல்; உட்புறமாக வளைதல், உட்சுருள்வு; உட்சுருள்வுப்பகுதி; சிக்கல் வாய்ந்த இலக்கணக் கட்டமைவு; (கண.) விசை அமுக்கம்.

involve', *v.* ஒன்றுக்குள் ஒன்று வைத்துச் சுருட்டு; பொதி; திருகு சுருளாகச் சுற்று; சிக்கவை; சிக்கலாக்கு; சூழ்ந்துகொள்; உள்ளடக்கு; உட்கொண்டிரு; சேர்த்திணைத்திழு; தொக்க பொருளாகக்கொள்; தொடர்புடையதாயிரு; சேர்த்திணைத்துக்கொண்டிரு; (கண.) விசையேற்று; புரியாதபடி செய், நினைவிலும் வடிவத்திலும் புரியாதபடி செய்.

involve'ment, *n.* சிக்கலாக்குதல்; சேர்த்திணைத்தல்; பொருளியல் சிக்கல்நிலை; சிக்கலான செய்தி.

invul'nerable, *a.* ஊறு செய்ய முடியாத, காயப்படுத்த இயலாத.

in'ward, *a.* உட்புறமாக அமைந்துள்ள, மனத்துள்ள, ஆன்மிகமான; உள் நோக்கிய; *adv.* மனத்தினுள்; ஆன்ம தளத்தில்; உட்புறநோக்கி; உட்புறத்தில்.

in'wardly, *adv.* உட்புறத்தில், உட்புறமாய், உள்ளுக்குள்ளாக, மனத்துள்; தனக்குள்ளாக, உரத்துப் புறம்வெளிப்படாமல்.

in'wardness, *n.* உள்ளியல்பு; உள்நோக்கிய பண்பு; ஆன்மிக நிலை.

in'wards[1], *n. pl.* குடல், உள்ளுறுப்புகள்.

in'wards[2], *adv.* உட்புறநோக்கி; உட்புறத்தில்; மனத்தினுள்; ஆன்ம தளத்தில்.

inweave', *v.* கலந்துபின்னு, கலந்து நெய்து இணை; பின்னிச் சிக்கலாக்கு.

inwrought', *a.* துணி வகையில் சித்திரம் அல்லது கோலங்களால் அணி செய்யப்பட்ட; துணிமேல் வரையப்பட்டுள்ள; சித்திர வேலைப்பாடு பொருந்திய, நெருக்கமாக உள்ளாரப் பின்னிக் கலந்துள்ள.

inya'la, *n.* தென் ஆப்பிரிக்க மான் வகை.

i'odide, *n.* கறையகை, பிறிதொரு தனிமத்தோடு கறையம் சேர்ந்த கூட்டுக்கலவை.

i'odine, *n.* கறையம், கரியப்பொருளைக் கருந்தவிட்டு நிறமாகக் கறைப்படுத்தும் இயல்புடைய தனிமம்.

io'doform, *n.* கறைய நச்சுத்தடை மருந்து, நச்சுத்தடைக் காப்பாகப் பயன்படுத்தப்படும் கறையச் சேர்மம்.

i'olite, *n.* அலுமினியக் கன்மம் இரும்பு வெள்ளிமம் ஆகியவை இணைந்த நீல அல்லது ஊதாநிறச் சேர்மவகை.

i'on, *n.* இயனி, மின்மயத்துகள், நீர்க்கரைசலிலும் சேண் வெளியிலும் அணு அமைதிக்குலைவால் ஏற்படும் மின் செறிவூட்டப்பட்ட துகள்.

Ion'ian, *n.* அட்டிகா (Attica) மேற்கு ஆசியா மைனர் (Western Asia Minor) முதலிய நிலப்பரப்புகளில் பண்டு பரவிய கிரேக்க இனப் பிரிவின் உறுப்பினர்; *a.* அயோனியாவைச் சார்ந்த; பண்டைக்கால கிரேக்க இசைமுறையைச் சார்ந்த; (தொ.) Ionian mode, பண்டைக்கால கிரேக்க இசைமுறை.

Ion'ic, *a.* அயோனியாவைச் சார்ந்த, கிரேக்க இனத்துக்குரிய அயோனியப் பிரிவு சார்ந்த; (தொ.) ionic a majore, இரு நெடில் இருகுறில் இணைந்த நாலசைச்சீர்; ionic a minore இரு குறில் இரு நெடில் இணைந்த நாலசைச்சீர்; ionic dialect, கிரேக்கமொழியின் ஆதென்ஸ் பகுதித்திசைமொழியாகிய 'அட்டிக்' என்பதன் மூல இன மொழிப்பிரிவு; ionic order, (க-க.) பண்டைக்கால கிரேக்க கட்டிடக் கலையில் தூண் தலைப்பின் இருபுறச்சுருள் அணி அமைப்பு.

ion'ium, *n.* சேண்மம், விண்மத்திலிருந்து கிடைக்கும் அணுச் சிதைவார்ந்த நுண்ணதிர்வுடைய தனிப்பொருள் வகை.

ion'osphere, *n.* மீவளிமண்டலம், வளிமண்டலத்தின் மேல் தளப்பகுதி.

iot'a, *n.* கிரேக்க நெடுங்கணக்கில் ஓர் எழுத்து; இம்மி, மிகச் சிறிய அளவு, சிறு துகள்.

iot'acism, *n.* கிரேக்க மொழியில் 'இ' என்னும் உயிரெழுத்தை மிகுதியாகப் பயன்படுத்துதல்; பிற உயிர்களிலும் இகர ஒலி ஏற்றல்.

IOU', *n.* வெண்ணிலைக்கடன் உறுதிச்சீட்டு, வெண்ணிலைக் கடன் சீட்டு, தொகை குறிப்பிடப்பட்ட கடன் உறுதிக்குறிப்பு.

ipecacuan'ha, *n.* வாந்தியும் வயிற்றுப்போக்கும் உண்டாக்கும் தென் அமெரிக்க மூலிகை வேர்.

ip'se dix'it, (ல.) *n.* வாதமுறை சாரா ஆணைக்கூற்று.

ipsiss'ima verb'a, (ல.) *n. pl.* வழுவற்ற சரியான சொற்கள்.

ip'so fac'to, (ல.) *adv.* அவ்வுண்மை காரணமாகவே, அது காரணமாகவே.

ira'de, *n.* துருக்கி சுல்தானின் எழுத்துமூலக் கட்டளை.

Irak', 'Iraq', *n.* மெசபொடேமியா உள்ளிட்ட அராபிய அரசு.

Iran'ian, *n.* பாரசீக இனத்தவர்; *a.* பாரசீக நாட்டைச் சார்ந்த; பாரசீக மொழியினஞ் சார்ந்த.

iras'cible, *a.* எளிதில் கோபிக்கிற, முன்கோபியான.

irate', *a.* கோபமுள்ள, சினமுடைய.

ire, *n.* கோபம், வெகுளி, சினம்.

iren'ic, iren'ical, *a.* அமைதி குறிக்கொண்ட, சமாதானத்தை நோக்கமாகவுடைய.

iren'icon, *n.*=eirenicon.

irida'ceous, *a.* பகட்டான மலர்களையும் கத்திபோன்ற இலைகளையும் வேர்க்கிழங்குகளையுமுடைய அல்லியினச் செடியினத்தைச் சார்ந்த.

irides'cent *a.* வானவில் வண்ணங்காட்டுகிற; இடத்திற்குத் தக்கபடி பன்னிறம் பகட்டிக்காட்டுகிற.

irid'ium, *n.* உறுதியம், அணு எண் 77 கொண்ட உறுகடுமை மிக்க உலோகத் தனிமம்.

iridos'mine, *n.* தங்கப்பேனு முனைகளுக்குப் பயன்படுத்தப்படும் உறுதியம் என்மியம் இணைந்த உலோகக் கலவை.

Ir'is [1], *n.* கிரேக்க வானவில் தெய்வ அணங்கு, வானவர் தூதணங்கு.

ir'is [2], *n.* விழித்திரைப் படலம்; நடுவே விழிமணிக்குரிய துளையுடைய கருவிழிச்சவ்வு; பகட்டான மலர்களையும் கத்தி வடிவ இலைகளையும் வேர்க்கிழங்குகளையுமுடைய செடி இனம்; வானவில்லின் நிறங்களை நிழலிட்டுக் காட்டுகிற பாறைப் படிகக்கல் வகை; கண்ணுடி வில்லைகளுக்கு ஒளிப்புழை விரித்துச் சுருக்கி வகுக்கும் மறைப்பு; (தொ.) iris diaphragm, ஒளி வகுப்பு மறைப்பு, கண்ணுடி வில்லைகளுக்கு ஒளியை ஒழுங்குபடுத்தி அனுப்பும் சுருங்கி விரியக்கூடிய மறைப்பு.

Ir'ish, *n.* ஐரிஷ் மொழி; அயர்லாந்து மக்களால் பேசப்படும் மொழி; *a.* அயர்லாந்தைச் சார்ந்த; (தொ.) Irish bridge, சாலைக்குக் குறுக்கே செல்லும் கல்லாலான திறந்த வடிகால்; Irish bull, முரணுக அல்லது இசைவற்றதாகத் தோற்றும் வாசகம்; Irish Free State, 1922-ஆம் ஆண்டு பிரிட்டனுக்குரிய அரசியலிலிருந்து பிரிந்து தன்னுட்சியுரிமைபெற்ற அயர்லாந்து நாட்டின் பகுதி; the Irish, அயர்லாந்தின் குடிமக்கள்.

Ir'ishman, *n.* அயர்லாந்து நாட்டான்.

Ir'ishwoman, *n.* அயர்லாந்து நாட்டினள்.

irit'is, *n.* கருவிழிச்சவ்வு வீக்கம்.

irk, *v.* தொந்தரையூட்டு, சோர்வூட்டு; வெறுப்பளி.

irk'some, *a.* தொந்தரையூட்டுகிற, சோர்வூட்டுகிற, வெறுப்புத்தருகிற.

i'ron, *n.* இரும்பு; இரும்புக்கருவி; படைக்கலம்; இரும்புத் தட்டுமுட்டு; இருப்புத்தலைப்புடைய குழிப்பந்தாட்ட மட்டை; வலிமை; வலிமைதரும் இரும்புச்சத்துள்ள மருந்து; சூட்டுக் கோல், சூடு போடும் கருவி; சலவைப்பெட்டி; *a.* இரும்பாலான, இரும்பினுலியன்ற; வலிமையுள்ள, உரமான, உறுதியான, வளையாத; மிகுகண்டிப்பான; இரக்கமற்ற; *v.* இரும்பிணை; இரும்புத்தகட்டால் பொதி; விலங்குமாட்டு; சலவைப்பெட்டியிடு, சலவைப் பெட்டியினுல் தேய்த்துச் சமன்படுத்து; சமன்படுத்து; (தொ.) have many irons in the fire, have too many irons in the fire, பல முயற்சிகளில் ஈடுபடு, பல வகைத் துறைகளை மேற்கொள், பல சூழ்திறன்களைக் கையாளு; in irons, கைகளில் விலங்கு மாட்டப்பட்ட, கைவிலங்கு போடப்பட்ட; iron age, கொடுங்கோலாட்சிக்காலம்; இருப்புக் கருவிகள் பயன்படுத்தும் காலம்; Iron Cross, பிரசிய—ஆஸ்திரிய' (Prussian-Austrian) வீரப் போர்ப்பதக்கம்; Iron Duke, (வர.) முன்னுள் ஆங்கிலப் படைத்தளபதியான வெலிங்டன் பெருமகனுர்; iron horse, நீராவி இயந்திரவண்டி; இருசக்கர மிதிவண்டி; மூவுருளை மிதிவண்டி; iron lung, இயந்திரக் குழாய்கள்மூலம் செயற்கை முறையில் உயிர்ப்பு உண்டாக்குவதற்குப் பொருத்தப்படும் இரும்புப் பெட்டி; iron rations, திடீர்த்தேவைகளின்போது மட்டும் பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்ட சிறு அளவான போர்வீரரின் உணவு; strike while the iron is hot, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், நல்வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொள்.

i'ron-bark, *n.* கெட்டியான அல்லது உறுதியான மேற்பட்டையுடைய நீலகிரித்தைலம் வடிக்கும் மரவகை.

i'ron-bound, *a.* இரும்பினுல் கட்டப்பட்ட; கடற்கரையோரம் வகையில் பாறையினுல் சூழப்பட்ட; மட்டுமீறிய கண்டிப்புடைய, கட்டுப்பாட்டிலிருந்து சிறிதும் வழுவாத, சிறிதும் வளைந்து கொடுக்காத.

i'ronclad, *n.* இரும்புத்தகடுகள் வேயப்பட்ட கப்பல்; *a.* இரும்புத் தகடுகள் வேய்ந்துள்ள, இரும்பினுல் பாதுகாக்கப்பட்ட.

i'ron-curtain, *n.* இரும்புத்திரை, உள்விவகாரங்களையும் இரகசியங்களையும் கண்டுபிடிக்கமுடியாத தடுப்புநிலை; சோவியத் ஒன்றியத்தின் (U. S. S. R.) மேல் எல்லையூடாகச் செய்தி பரவாமல் தடுக்கும் அமைப்புமுறை.

i'ron-grey, *n.* சாம்பல் நிறம்; *a.* சாம்பல் நிறமுடைய, புதிதாக உடைக்கப்பட்ட இரும்பு நிறமுடைய.

iron'ic, iron'ical, *a.* வஞ்சப் புகழ்ச்சிசார்ந்த, வஞ்சப்புகழ்ச்சியைப் பயன்படுத்துகிற, வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறுகிற; வஞ்சப் புகழ்ச்சிப் பழக்கமுடைய.

ir'onist, *n.* வஞ்சப்புகழ்ச்சியாளர்.

i'ronmaster, *n.* இரும்பு உற்பத்தியாளர்.

i'ronmonger, *n.* இரும்புச்சரக்கு வணிகர்.

i'ron-mould, *n.* இரும்புக்கறை, இரும்புத்துருவின் கறை; எழுதும் மைக்கறை; *v.* இரும்பு கறைப்படுத்து; எழுதும் மையினுல் கறையாக்கு.

i'rons, *n. pl.* விலங்கு; குதிரையேறும் படித்தட்டு, அங்கவடி; கோணலான உருவமைப்பு; திருத்துவதற்குப் பயன்படுத்தப்படும் இருப்புக்கால் இணைப்பு.

I'ronsides, *n.* மாவீரர், பெரு வீரர்; (வர.) கிராம்வெல் என்ற பிரிட்டனின் ஆட்சித்தலைவனுடைய புரவிப்படை வீரர்கள்.

i'ron-stone, *n.* கடினமான இரும்புக்கனி உலோகக்கலவை வகை.

i'ronwork, *n.* இரும்புவேலை; இரும்பினுல் செய்யப்பட்ட பொருள்களின் தொகுதி.

i'ronworks, *n.* இரும்பு உற்பத்திச்சாலை; இரும்பு வார்த்து உருக்கும் இடம்; இரும்புப்பொருட்கள் உற்பத்தி செய்யும் சாலை.

ir'ony [1], *n.* முரண்நகைச்சுவை; வஞ்சப்புகழ்ச்சி; எதிர்ப்பொருள் கொள்ள வேண்டிய சொற்றொடர்; கேலியாக மற்றொருவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளும் பாவனை; கேலி விளையாட்டுப்பண்பு, முரண்நகைத்திறம்; (தொ.) Socratic irony, எதிரி தவறென்று எண்பிப்பதற்காக அறியாதவர்போல் பாசாங்கு செய்தல்.

iron'y [2], *a.* இரும்புசார்ந்த; இரும்புபோன்ற; இரும்பாலான.

irrad'iant, *a.* ஒளிவீசுகிற.

irrad'iate, *v.* ஒளிவீசு, ஒளியால் நிரப்பு; ஒளிவிளக்கஞ் செய், பொருள் விளங்கும்படி செய்; விளக்கு, தெளிவு படுத்து; முகத்தை மகிழ்ச்சியால் ஒளிபெறச்செய்; கதிரவன் ஒளிக்கு உட்படுத்து; கதிரவன் ஒளியின் ஊதா கடந்த நிறத்தின் செயலுக்கு உட்படுத்து.

irradia'tion, *n.* பிரகாசித்தல்; ஒளிப்பிறக்கம்; இருண்ட பின்னணியில் ஒளியார்ந்த பொருளின் விளிம்பு பெரிதாகத் தெரியும் நிலை, அவிரொளிக்காட்சி.

irra'tional, *n.* கூறுபடா எண், தீரா அளவை; *a.* பகுத்தறிவுக்கு மாறான, அறிவுக்குப் பொருந்தாத, முரண்பாடான, குளறுபடியான; (கண.) கூறுபடா எண்ணைச் சேர்ந்த, தீரா அளவை சார்ந்த.

irreclaim'able, *a.* சீர்ப்படுத்த முடியாத, சீர்திருத்த இயலாத, மேன்மையாக்க முடியாத.

irrec'ognizable, *a.* அடையாளம் கண்டுபிடிக்க இயலாத, புரிந்துகொள்ள முடியாத.

irrec'oncilable, *n.* ஒத்திணைந்து வராதவர்; சட்ட முதலியவற்றுக்கு எவ்வகையிலும் ஒத்துவராதவர்; விட்டுக்கொடுக்காத எதிரி; *a.* தன்மையில் கட்சி சட்டம் முதலியவற்றை எதிர்க்கிற, அமைதிப்படுத்த முடியாத.

irreco'verable, *a.* மீட்க முடியாத, திரும்பப் பெற இயலாத.

irrecus'able, *a.* ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய, மறுக்க முடியாத.

irredeem'able, *a.* மீட்கமுடியாத, திரும்பப்பெற முடியாத; சீர்திருத்த முடியாத, உருப்படாத.

irreden'tist, *n.* இத்தாலி முதலிய கீழ் ஐரோப்பிய நாடுகளில் அவ்வந்நாட்டு மொழி பேசும் மாவட்டங்கள் அவ்வந் நாட்டைச் சேர வேண்டும் என்ற கோட்பாட்டாளர்.

irredu'cible, *a.* குறுக்க முடியாத; விரும்பிய நிலைக்குக் கொண்டுவர முடியாத; (தொ.) irreducible minimum, மேலும் குறைக்க முடியாத சிறுக்கம்.

irref'ragable, *a.* (அறிக்கை வாதம் ஆள் முதலியன பற்றிய) செய்திவகையில் மறுக்க முடியாத; வாத வகையில் எதிர்வாதிட முடியாத; ஆள்வகையில் எதிர்த்துப் பேச முடியாத.

irrefran'gible, *a.* மீறமுடியாத; ஒளிக்கதிர் வகையில் கோட்டுறுத்த முடியாத; கோட்ட நீர்மையற்ற.

irref'utable, *a.* பொய்யென எண்பித்துக் காட்ட முடியாத; மறுக்கமுடியாத; எதிர்த்து வாதாட முடியாத.

irreg'ular, *a.* ஒழுங்கற்ற; சட்டத்திற்கு எதிரான, விதிக்குப் புறம்பான; இயற்கைக்கு மாறான, இயல்பு கடந்த; செவ்வொழுங்கற்ற; சமமல்லாத, கரடுமுரடான மேற்பரப்புடைய; சமதளமற்ற; ஒழுங்குமுறையில்லாத; கால ஒழுங்குபடாத; (இல.) முறைப்படி மாறுபடாத; படைத்துறை ஒழுங்குமுறை சாராத, நிலையாகப் படைத்துறையிலீடுபடாத.

irreg'ulars, *n. pl.* ஒழுங்காகப் பணித்துறையிலில்லாத படைவீரர் தொகுதி.

irrel'ative, *a.* தொடர்பில்லாத, உறவற்ற; உறவினரற்ற; தனித் தன்னிலையான.

irrel'evant, *a.* தொடர்பற்ற; செய்திக்கு ஒவ்வாத, தலைப்புக்குப் பொருத்தமற்ற.

irreli'gion, *n.* சமயப்பற்றின்மை, சமய மறுப்பு; சமய வெறுப்பு, சமயப்புறக்கணிப்பு.

irremed'iable, *a.* சீர்ப்படுத்தவியலாத, சரிப்படுத்த முடியாத, குணப்படுத்த முடியாத.

irremiss'ible, *a.* மன்னிக்க முடியாத; மாற்ற முடியாதபடி கண்டிப்பாகக் கட்டுப்படுத்துகிற.

irremo'vable, *a.* விலக்க முடியாத; பணியிலிருந்து அகற்ற முடியாத.

irrep'arable, *a.* காலவகையில் சரிசெய்ய இயலாத, சேத வகையில் சீர்ப்படுத்த முடியாத.

irreplace'able, *a.* ஈடு செய்யமுடியாத, இழப்பு வகையில் இட்டு நிரப்ப முடியாத.

irrepress'ible, *a.* அடக்கிவைக்க முடியாத; கட்டுப்படுத்த முடியாத.

irreproach'able, *a.* குறை காணமுடியாத, குற்றமற்ற, நேர்மையான.

irresis'tible, *a.* தடுக்கமுடியாத; எதிர்த்து வெல்ல முடியாத, பெருவலி வாய்ந்த; கவர்ச்சி வகையில் தடுக்க முடியாத வலிமையுடன் ஈர்க்கிற.

irres'olute, *a.* ஒரு முடிவுக்கு வராத, தயக்கம் வாய்ந்த; மன உறுதியற்ற; திடசித்தமில்லாத.

irresol'vable, *a.* கூறுகளாகப் பிரிக்க முடியாத; விடுவிக்க முடியாத, விடைகாண முடியாத; சிக்கலகற்ற இயலாத.

irrespec'tive, *a.* கணக்கில் சேர்க்காமலேயுள்ள, நீக்கிக் கணிக்கிற; பொருட்படுத்தாத.

irrespon'sible, *a.* பொறுப்பற்ற; பொறுப்பற்ற தன்மையுடன் நடக்கிற; பொறுப்புணர்ச்சியில்லாத, கவலையற்ற, மனம்போல நடக்கிற.

irrespon'sive, *a.* ஏனென்று கேளாத, எதிர் விளைவற்ற.

irreten'tion, *n.* அடக்கி வைக்க முடியாமை; சிறுநீர் அடக்க முடியாநிலை.

irreten'tive, *a.* மறதியுடைய, மனத்தில் நிறுத்தி வைக்க முடியாத.

irretriev'able, *a.* சீர்ப்படுத்த முடியாத, ஈடு செய்ய முடியாத, மீட்க முடியாத.

irrev'erent, *a.* மட்டு மதிப்பற்ற, பணிவிணக்கமற்ற.

irrevers'ible, *a.* மாற்ற முடியாத; திருப்பி மறிக்க முடியாத.

irrev'ocable, *a.* மாற்றமுடியாத, கை கடந்து போன, மீட்டுப் பெறமுடியாத.

i'rrigate, *v.* நீர்ப்பாசன வசதி செய்; கால்வாய்கள்மூலம் நீர் பாய்ச்சு; ஈரப்பதம் செய்து வளப்படுத்து; (மரு.) காயத்துக்குத் தாரையூற்றிக் குளிர் நிலைப்படுத்து.

irriga'tion, *n.* நீர்ப்பாசனம்.

i'rritable, *a.* எளிதிற்சினங்கொள்கிற, முன்கோபியான, வெடுவெடுப்பான; உறுப்பு முதலியவற்றின் வகையில் கூருணர்ச்சியுள்ள, தொட்டால் கூச்சமுள்ள; தசைகள் நரம்புகள் வகையில் புறத்தூண்டுதலினால் உயிர்ப்பியக்கம் எழுப்பப் பெறத்தக்க.

i'rritancy[1], *n.* சினம்; எரிவந்தம், அழற்சி; தொல்லை, இடைஞ்சல்.

i'rritancy[2], *n.* (சட்.) செல்லுபடியாகாததாகச் செய்தல், செல்லுபடியாகாதிருத்தல்.

i'rritant, *n.* உறுத்தி, எரிவந்தம் கொடுக்கும் பொருள்; *a.* சினமூட்டுகிற, அழற்றுகிற, எரிவந்தம் தருகிற.

i'rritate[1], *v.* சினமூட்டு, எரிச்சற்படுத்து, துயரளி; உறுப்பு முதலியவற்றில் உறுத்தல் உண்டாக்கு; உறுப்பினை உயிர்ப்பியக்கம் கொள்ளும்படி தூண்டு.

i'rritate[2], *v.* (சட்.) செல்லாததாக்கு, முற்றும் தவறென்று தள்ளு.

irrita'tion, *n.* சினமூட்டல், அழற்சி, உறுத்தல், தினவு, நமை, நமைச்சல்.

irrup'tion, *n.* படையெடுப்பு; வல்லந்தமான நுழைவு.

Irv'ingite, *n.* திருமாணவர் திருச்சபை (Catholic Apostolic Church) என்ற பெயருடைய கத்தோலிக்கக் கழகத்தைச் சேர்ந்தவர்.

is, *v.* be என்னும் வினைச்சொல்லின் படர்க்கை ஒருமை நிகழ் கால வடிவம்.

Is'abel, Isabell'a, *n.* தவிட்டு மஞ்சள் நிறம்; *a.* தவிட்டு மஞ்சள் நிறமுள்ள.

isago'gic, *a.* தோற்றுவாயான, அறிமுகப்படுத்துகிற.

isagog'ics, *n. pl.* விவிலிய (Bible) நூல் பற்றிய இலக்கிய வரலாற்றுய்வுத்துறை.

is'atin, *n.* (வேதி.) அவுரி நிலத்தை உயிரகமூட்டுவதனுல் கிடைக்கும் செந்நிற மணி உருப்பொருள்.

ischiad'ic, ischiat'ic, *a.* இடுப்பிணைச் சார்ந்த.

Ish'mael, *n.* விவிலிய நூல்கூறும் இஷ்மாயில் போன்றவர், சமூகத்திலிருந்து தள்ளப்பட்டவர்; சமூகத்தோடு மாறுபட்டவர்.

Ish'maelite, *n.* இஷ்மாயிலின் மரபினர்; பெடாவி அராபிய இனம் (Bedavi Arab) சார்ந்தவர்; சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்.

is'inglass, *n.* மீன் பசைக்கூழ்.

Is'lam, *n.* முகம்மதிய சமயம்; முகம்மதிய உலகம்.

isl'and, *n.* தீவு, நீர்சூழ்நிலம், திட்டு; தனி ஒதுக்கிடம்; தனி மைய இடம்; தெருக்கடப்பு நெறியில் இடைகாப்பான மேட்டிடம்; கப்பலின் மேற்கட்டுமானம்; கப்பற் பாலம்; (உட.) தனி இழைமத்தொகுதி; தனி உயிர்மத்தொகுதி; *v.* நீர்சூழ்ந்த நிலமாக்கு; தனிப்படுத்தி வை; தீவுகளைப்போல் திட்டுகள் இணை.

isle, *n.* தீவு.

isl'et, *n.* சிறுதீவு; தனித்து வேருயுள்ள பகுதி அல்லது இடம்.

ism, *n.* தனிக்கொள்கை, கோட்பாடு; தனிப்பழக்க மரபு.

is'obar, *n.* (வானிலை.) சமஅழுத்தக்கோடு, திணைப்படத்தில் ஒரே வளிமண்டல அழுத்தம் உள்ள இடங்களை இணைத்துக் காட்டும் கோடு.

isoba'ric, *a.* (வானிலை.) சமஅழுத்த இட எல்லைகுறிக்கிற.

is'ocheim, *n.* குளிர்காலச் சராசரி வெப்ப நிலைக்கோடு, திணைப்படத்தில் சராசரி ஒருசீரான குளிர்கால வெப்பநிலை இடங்களை இணைத்துக்காட்டும் கோடு.

isocheim'al, isochim'enal, *n.* குளிர்காலச் சராசரி வெப்ப நிலைக்கோடு; *a.* திணைப்படத்தில் ஒருசீரான குளிர்காலச் சராசரி வெப்பநிலை உடைய இடங்களை இணைத்துக்காட்டுகிற.

isochromat'ic, *a.* ஒளிநூல் துறையில் சரிசம நிறமுள்ள; நிழற்படத்துறையில் இயல்நிறமுடைய.

isoch'ronous, *a.* சரிசமகாலம் கொள்கிற; ஊசலி வகையில் ஒரேசீராக இயங்குகிற.

isoclin'al, isoclin'ic, *a.* சமமான காந்தமுள் சாய்வினைக் காட்டுகிற; (தொ.) isoclinic lines, திணைப்படத்திலே ஒரு சீரான காந்தச் சரிவுடைய இடங்களை இணைக்கும் கோடுகள்.

isoc'racy, *n.* எல்லாருக்கும் சமஅரசியல் அதிகாரமிருக்கிற ஆட்சிமுறை.

isocrat'ic, *a.* ஆட்சிமுறை வகையில் எல்லாருக்கும் சம அரசியல் அதிகாரமிருக்கிற.

isodynam'ic, *a.* சரிசமமான காந்தவிசை காட்டுகிற.

isoge'otherm, *n.* (மண்.) சமவெப்பதளக் கோடு, நிலவுலகின் அகட்டில் ஒரே சீரான வெப்பநிலையுடைய இடங்களை இணைக்கும் கோடு.

isogon'ic, *a.* சரிசமக் காந்த மாறுதல் கோணங்களைக் காட்டுகிற.

is'olate, *v.* தனிப்படுத்து; தனிமை செய்; தீவுபோன்ருக்கு; வேருகப்பிரித்து வை; தொத்துநோய் வகையில் நோயாளியைப் புறத்தொடர்பில்லாதபடி ஒதுக்கிவை; (வேதி.) கூட்டுப்பொருள்களிலிருந்து தனிப்பட விடுவி.

isola'tion, *n.* தனிமை; ஒதுக்கநிலை; தொடர்பின்மை; (தொ.) isolation hospital, தொத்து நோயாளர்களுக்காகத் தனிப்படுத்தப்பட்ட மருத்துவசாலை; isolation ward, தொத்துநோயாளர்களுக்காகத் தனிப்படுத்தப்பட்ட மருத்துவ மனைப் பிரிவு.

isola'tionism, *n.* தலையிடாக்கொள்கை, பிற நாடுகளின் விவகாரங்களில் தொடர்பு கொள்ளக் கூடாதென்ற கோட்பாடு.

isola'tionist, *n.* பிறநாடுகளின் விவகாரங்களில் தலையிடக் கூடாதென்பவர்.

isome'ric, *a.* (வேதி.) கூட்டுச்சமநிலையுடைய, ஒரே எடையுடன் ஒரேவகைத் தனிமங்களை ஒரேசீரான வீதங்களில் ஆனுல் வெவ்வேறு தொகுப்புகளாகக் கொண்டுள்ள.

isomet'ric, isomet'rical, *a.* சமமட்டுடைய, ஒரேசீரான அளவுள்ள.

isomorph'ism, *n.* இசை மணியுருப்பான்மை, ஒரேவகையான அல்லது நெருங்கிய தொடர்புடைய வடிவியல் உருவங்களாக மணிவுருக்கொள்ளும் இயல்பு.

isomorph'ous, *a.* இசைமணியுருப்பான்மையுடைய, ஒரே வகையான அல்லது நெருங்கிய தொடர்புடைய வடிவியல் உருவங்களாக மணிவுருக்கொள்ளுகிற.

isoni'azid, isoni'azide, *n.* எலும்புருக்கி நோயிற் பயன்படுத்தப்படும் மருந்துச் சரக்குவகை.

ison'omy, *n.* சரிசம அரசியல் உரிமை நிலை.

isoperimet'rical, *a.* (வடி.) சரிசமச் சுற்றளவுள்ள.

is'opod, *n.* (வில.) உடலின் இடைக்கண்டத்தில் ஏழு சரிசமமான இணைக்கால்களையுடைய மேலோட்டுயிர் வகை.

isos'celes, *a.* (வடி.) முக்கோண வகையில் இருசமபக்கங்களையுடைய.

isoseis'mal, *a.* நிலநடுக்க வகையில் ஒரேசீரான செறிவுள்ள அதிர்ச்சி இடங்களை இணைக்கிற.

isoth'eral, *n.* சரிசமக் கோடை வெப்பநிலைக்கோடு, ஒரேசீரான சராசரிக் கோடைகால வெப்பநிலையுடைய இடங்களை இணைக்கும் கோடு; *a.* ஒரேசீரான சராசரி கோடைகால வெப்பநிலையுடைய இடங்களை இணைக்கிற.

is'otherm, *n.* சமவெப்பநிலைக் கோடு, ஒரேசீரான சராசரி ஆண்டு வெப்பநிலையுடைய இடங்களை இணைக்கும் கோடு.

isotherm'al, *n.* சமவெப்பநிலைக்கோடு; *a.* ஒரேசீரான சராசரி ஆண்டு வெப்பநிலையுடைய இடங்களை இணைக்கிற.

i'sotone, *n.* கருவுட்பகுதியில் நொதுமங்களை ஒரே எண்ணுக உடைய அணு.

is'otope, *n.* (வேதி., இய.) ஓரகத்தனிமம், ஒரேபொருண்மையுடன் எடைமட்டும் வேறுபாடுடைய தனிமவகை; (தொ.) stable isotope, கதிரியக்கமற்ற ஓரகத்தனிமம்.

isotop'ic number, *n.* அணுவின் கருவுளில் நேர்மங்களைவிட நொதுமங்களின் மிகைபாட்டெண்.

i'sotron, *n.* மின் கோட்டத்தால் ஓரகத்தனிமங்களை வேறு வேறு பிரிக்கும்முறை.

i'sotype, *n.* புள்ளி விவரப்பட விளக்கம்.

Is'rael, *n.* இஸ்ரேல் நாடு; 1948 மேத்திங்களில் பாலஸ்தினத்தில் (Palestine) நிறுவப்பட்ட யூதர்நாடு; யூத இனம்; கடவுளுக்கு விருப்பமான மக்கட்பிரிவு; *a.* இஸ்ரேல் நாட்டுக்குரிய.

Israel'i, *n.* இஸ்ரேல் நாட்டினர்; *a.* இஸ்ரேல் நாடு சார்ந்த.

Is'raelite, *n.* யாக்கோபின் வழிவந்தவர்; யூதர்; தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவர்; யூதர் சட்டத்தைக் கடைப்பிடிக்கும் கிறித்தவ சமயப்பிரிவினர்.

iss'ue, *n.* வெளிப்போக்கு; புறங்கசிவு; குருதிக்கசிவு; குருதிக் கசிவுக்கான துளையீடு; போக்கிடம், செல்வழி; பத்திரிகை-புத்தகம்-அஞ்சல்தலை-பொருளக முறி முதலியவற்றின் வெளியீடு; பதிப்பு, ஒரு வெளியீட்டுத் தொகுதி; வழங்கிடு, பரப்பீடு; ஆணை முதலியவற்றின் பிறப்பிப்பு; பலன்; செயல் முடிவு; விளைபயன்; சந்தானம், கான்முளை, வழித்தோன்றல்; இடைபாடு, வழக்காடும் இருதிறத்தார்க்கும் இடைப்பட்ட பொருள்; வாதச்செய்தி; வாத அடிப்படை, ஆய்வு அடிப்படை; வாத முடிவு; ஆய்வு விளைவு; நடைமுறை, செயல்முறை; செயற்கையாக எழுப்பப்படும் பொக்குளம்; *v.* வெளியிடு; பரப்பு; அனுப்பு; ஆணை முதலியவற்றைப் பிறப்பி; புறஞ்செல்; கசிவுறு; விளைவுறு; உண்டாகு; எழு; வெளிப்படு; வெளியிடப்பெறு; பரவு, பரவுதலுறு; முடிவுறு;

(சட்.) முக்கிய செய்தியை அனுகிச்செல்: படைத்துறையில் படைக்கலங்கள் வழங்கு; (தொ.) at issue, ஆட்கள் வகையில் மாறுபட்ட; பொருள்கள் வகையில் விவாதத்துக்குட்பட்ட; in the issue, நிகழ்ச்சிப் போக்கில்; issue of fact, (சட்.) மெய்ந்நிகழ்வு பற்றிய வாதம்; issue of law, (சட்.) சட்டம் பற்றிய வாதம்; join issue, பொது அடிப்படைமீது சேர்ந்து வாதி; (சட்.) பொதுத் தீர்ப்புக்காகக் கூட்டாக வாதவிவரம் அனுப்பு; மறுதிற வாதப்பொருளை ஏற்றுக்கொள்.

iss'ueless, *a.* மகப்பேறற்ற, குழந்தைகள் இல்லாத.

isth'mus, *n.* பூசந்தி, இருபெரும் நிலக்கூறுகளை இணைக்கும் நில இடுக்கு; இருபெருங்கடலைப் பிரிக்கும் இடைகரை; (உள்., தாவ.) இரு பெரும்பகுதிகளை இணைக்கும் ஒடுக்கமான உறுப்பு; *pl.* isth'muses.

is'tle, *n.* கற்றாழை நார்வகை.

it, *pron.* அது; அதனை.

it'acism, *n.* கிரேக்கமொழி ஏகாரத்தை ஆங்கிலத்தில் ஈகாரம் போல ஒலித்தல்; கிரேக்கக் கையெழுத்துச்சுவடிகளில் மற்ற உயிரெழுத்துக்களுக்குப் பதிலாக கிரேக்க இகர எழுத்தை அமைத்துக்கொள்ளுதல்.

Ital'ian, *n.* இத்தாலிய மொழி; இத்தாலிய நாட்டினர்; *a.* இத்தாலி நாடு சார்ந்த; (தொ.) Italian cloth, சட்டைகளுக்கு உள்ளே வைத்துத் தைப்பதற்கான மென்பட்டு வகை; Italian handwriting, பிரிட்டன்-இத்தாலி-பிரான்ஸ் முதலிய நாடுகளில் இப்போது வழக்காற்றிலுள்ள கையெழுத்து வகை; Italian iron, இழைகளைச் சுருள வைப்பதற்குரிய உருண்ட முகப்புடைய நீளுருளை வடிவான இருப்புப் பாளக் கருவி வகை; Italian warehouseman, ஆலிவ் எண்ணெய் பழவகைகள் முதலிய இத்தாலியப் பல சரக்குகளில் வாணிகம் செய்பவர்.

Ital'ic[1], *a.* பண்டைய இத்தாலி நாடுசார்ந்த; ரோம் நகருக்குப் புறம்பான பண்டைய இத்தாலி மாநிலம் சார்ந்த.

ital'ic[2], *a.* இத்தாலிய அச்சுப்பணியாளர் ஒருவரால் 1501-இல் வழக்காற்றுக்குக் கொண்டுவரப்பட்ட; வலப்பக்கம் சாய்ந்த அச்சுருப்படிவ வகை சார்ந்த; (தொ.) italic type, வலப்பக்கம் சாய்ந்த அச்சுருப்படிவ வகை.

ital'icize, *v.* பொருளை அழுத்தமுறக் காட்டுவதற்காகவோ வேறு பிரித்துக் காட்டுவதற்காகவோ வலப்பக்கம் சாய்ந்த அச்சுருப்படிவங்களைக்கொண்டு அச்சிடு.

ital'ics, *n. pl.* வற்புறுத்துவதற்காக அல்லது வேறு பிரித்துக் காட்டுவதற்காகக் கையாளப்படும் வலப்பக்கம் சாய்ந்த எழுத்துக்கள்.

Ital'iot, Ital'iote, *n.* பண்டைய இத்தாலியிலுள்ள கிரேக்கக் குடியேற்றப்பகுதியாளர்; *a.* தென் இத்தாலியிலிருந்த பண்டைய கிரேக்கக் குடியேற்ற நாடுகள் சார்ந்த.

itch, *n.* சிரங்கு; தோலில் அரிப்புக்காணும் தொற்றுநோய் வகை; நமைச்சல்; அமைதியற்ற பேரவா, ஒன்றைச் செய்ய வேண்டும் அல்லது அடையவேண்டுமென்னும் துடிதுடிப்பு; *v.* தோலில் அரிப்புணர்ச்சி கொள்; ஒன்றைச் செய்யவேண்டும் அல்லது ஒன்றை அடையவேண்டுமென அமைதியற்ற ஆர்வங்கொள்; (தொ.) itching palm, ஆதாயம் பெற வேண்டுமென்னும் அவா.

itch'-mite, *n.* தோலைத் துளைத்துச் சிரங்குக்குக் காரணமாயிருக்கும் சிறு பூச்சி வகை.

it'em, *n.* உருப்படி, இனம், வகை, எண்ணிக்கைக்குரிய ஒன்று; எண்ணிக்கைப் பதிவு, குறிப்பெண்; பத்திரிகைச் செய்திக் குறிப்பு விவரம்; *adv.* இதுபோலவே, இன்னும், மேலும், கூட.

it'emize, *v.* வகைவகையாகச் சொல்லு.

it'erate, *v.* கூறியது கூறு; மீண்டும் மீண்டும் செய்.

itera'tion, *n.* இரட்டுறுத்தல், கூறியது கூறல்; செய்தது செய்தல்.

Ithur'iel's spear, *n.* மெய்த்தூய்மைக்கான உரையாணி.

ithyphall'ic, *n.* கிரேக்க மதுத்தெய்வப் பாடல்; ஒழுக்க வரம்பு மீறிய பாட்டு; *a.* மதுத்தெய்வ விழா ஊர்வலத்துக்குரிய இலிங்க உருச்சார்ந்த; மதுத்தெய்வப் பாடலுக்குரிய யாப்புமுறை சார்ந்த.

itin'erant, *a.* அலைந்து திரிகிற, சுற்றுடி வருகிற, நடுவர் வகையில் இடத்துக்கு இடம் செல்கிற; மெதடிஸ்ட் (Methodist) என்ற கிறித்தவத் திருச்சபைக் குருமார் வகையில் வட்டாரஞ் சுற்றி வருகிற.

itin'erary, *n.* வழி, பயணஞ்செல் நெறி; பயண விரிவுரை ஏடு; பயண வழிகாட்டு விவர ஏடு; வழிகாட்டு நூல்; *a.* பயணஞ் செய்வது சார்ந்த, பயண நெறி பற்றிய.

itin'erate, *v.* ஊருராய்ப் பயணஞ் செல்; மெதடிஸ்ட் என்ற கிறித்தவ திருச்சபைக் குருமார் வகையில் வட்டாரத்திலிருந்து வட்டாரமாகச் செல்.

its, *a.* it என்பதன் உடைமைப் பொருள் வேற்றுமை வடிவம்; it என்பதன் உடைமைப்பொருட் பெயர் வடிவம்; அதன், அதனுடைய; இதன், இதனுடைய.

itself', *pron.* அதுவே; தானே; அதனையே; (தொ.) by itself, புறத்தூண்டுதல் இல்லாமலேயே, தானாகவே; தன்னாலேயே; in itself, தன்னிலையிலேயே, தனிநிலையில்.

iv'ories, *n. pl.* தந்தப் பொருள்கள்.

iv'ory, *n.* தந்தம், யானை-நீர்யானை-கம்பளியானை-திமிங்கிலம் முதலிய விலங்கு வகைகளின் மருப்பு; தந்தத்தின் நிறம்; *a.* தந்தத்திலான; தந்தம் போன்ற; (தொ.) ivory black, எரிக்கப்பட்ட தந்தத்திலிருந்து கிடைக்கும் கறுப்புப்பொடி; ivory tower, மனித வாழ்க்கையின் கடுமைகளிலிருந்து தொலைவாய் ஒதுங்கிய இடம். 1

i'vory-nut, *n.* தென்னமெரிக்க பனைவகையின் கொட்டையின் பருப்பு.

i'vory-tree, *n.* வெட்பாலை மரம்.

iv'y, *n.* பளபளப்பான திண் பச்சை உதிரா இலைகளையுடைய படர்கொடி வகை; (தொ.) ivy geranium, பெருவாரியாகப் பயிரிடப்படும் பளபளப்பான திண்பச்சை இலைகளையுடைய தென்னாப்பிரிக்க படர்செடி வகை.

ix'ia, *n.* பெரிய பகட்டு வண்ண மலர்களையும் வாள்போன்ற இலைகளையுமுடைய தென் ஆப்பிரிக்க செடிவகை.

Ixi'on's wheel, *n.* கிரேக்க புராணக் கதைப்படி நரகத்தில் இக்ஸியன் என்பவனின் தண்டனைக்குரியதான முடிவில் காலச் சுழற்சிச் சக்கரம்.

iz'ard, *n.* பைரென்னீஸ் (Pyrenees) மலைத்தொடரில் வாழும் ஆட்டின விலங்கு வகை.

izz'at, (அரா.) *n.* மானம்; புகழ்; ஆண்டகைமை; தன் மதிப்பு; தற்பெருமை.

J, *n.* 'J' என்ற எழுத்துமுத்திரை இடப்பட்ட அகல முனைப் பேனா.

ja'al-goat, *n.* எகிப்து மேல்நிலத்தைச் சேர்ந்த சைனியை (Sinai) மலைப்பகுதியிலுள்ள காட்டு ஆட்டு வகை.

jab, *n.* கத்திக்குத்து; முட்டிக்குத்து; துப்பாக்கிமுனைக் குத்து; *v.* முரட்டுத்தனமாகக் குத்து; கத்தியால் குத்து; செருகு.

jabb'er, *n.* பிதற்றல், உளறல்; *v.* பிதற்று, உளறு; எடுப்புக் குரலிற் பேசு; பொருள் தெளிவின்றிச் சொற்களை உச்சரி; குரங்குபோலப் பற்களை நெறநெறவெனக் கடி.

jab'iru, *n.* அமெரிக்க வெப்பமண்டல நாரையினப் பறவை வகை.

jaboran'di, *n.* சிறுநீர் வியர்வை பெருக்கும் இயல்புடைய பிரேசில் நாட்டு மூலிகைச்செடியின் உலர்ந்த சிற்றிலைகள்.

jabot', *n.* மகளிர் உட்சட்டை ஓரக்குஞ்சம்; (வர.) ஆடவர் உட்சட்டை முகப்புக்குஞ்சம்.

jac'ana, *n.* மிதக்கும் இலைகளின்மீது நடப்பதற்கேதுவான நீண்ட நகங்களையுடைய சிறிய வெப்பமண்டலப் பறவை வகை.

ja'cinth, *n.* செவ்வந்திக்கல் வகை.

jack[1], *n.* பொதுநிலை ஆடவர் பெயர்க்குறிப்பு; ஆள்; சிறு பணியாள்; பொதுநிலைக் கப்பலோடி; சீட்டு வகையில் ஒன்று; அகப்பைக்கோல் திருகுபொறி; பாரந்தூக்கிப் பொறி; வண்டி தூக்கிப்பொறி; புதைமிதியகற்றி; இயந்திரப்பகுதி; மீன் வகையின் குஞ்சு; ஆட்டக்காரர் குறியாக வைக்கும் பந்து; *v.* பளுத்தாங்கும் கருவிப் பொறியால் உயர்த்து, பாரந்தூக்கியால் மேலே ஏற்று; (தொ.) before you could say Jack Robinson, மிகு விரைவாக, உடனடியாக, திடீரென்று, எதிர்பாராமல்; everyman jack, ஒவ்வொருவரும், ஒவ்வொரு தனியாளும்; Jack Frost, உருவக வழக்கில் உறைபனி; Jack in office, வீண் ஆரவாரப் பணி முதல்வர்; Jack Ketch, கொலைப் பணியாள், தூக்கிலிடுபவன்; Jack of all trades, எதையுஞ் செய்யக்கூடியவன்; jack pudding, கோமாளி, விகடன்; jack tar, கப்பலோட்டி; jack up, முயற்சி முதலியவற்றைக் கைவிடு, விட்டுவிடு.

jack[2], *n.* கப்பலின் கொடி; கப்பலுக்குரிய தாயக நாட்டைக் காட்டும் கொடி; மாலுமிக்குச் சைகைச் செய்தியாகப் பாய் மரத்தில் பறக்கவிடப்படும் ஒற்றைக்கொடி; (தொ.) Union Jack, ஆங்கில ஐக்கிய அரசுகளின் மூவிணைக் கொடி.

jack[3], *n.* காலாட்படைவீரரின் கைப்பகுதியற்ற உள்ளாடை; இடைநிலைக்காலப் படைவீரனின் தோல் உட்காப்புச்சட்டை; (தொ.) black jack, கீல்தோய்த்த மெழுகுத் தோலாலான இன்தேறற் சாடிவகை.

jack[4], (ம.) *n.* பலாமரம்; (தொ.) jack fruit, பலாப்பழம்.

jack'-a-dan'dy, *n.* பகட்டன், வீண் ஆடம்பரக்காரன்.

jack'al, *n.* நரி; முன்னணியான உழைப்புவேலை செய்பவர்.

jack'anapes, *n.* குரங்கு; குறும்பன்; துடுக்கானவன்; தற்பெருமையுடையவன்; துடுக்கான குழந்தை.

jack'ass, *n.* ஆண் கழுதை; பேதை; (தொ.) laughing jackass, பெரிய ஆஸ்திரேலிய மாநில மீன்கொத்திப் பறவை வகை.

jack'boot, *n.* முழங்காலுக்குமேல் வரும் புதைமிதியடி.

jack'daw, *n.* திருக்கோயில் தூபிகளைச்சுற்றி வாழும் சிறு திருட்டுக் காக்கை வகை.

jack'et, *n.* கைப்பகுதியுள்ள புறச்சட்டை, சிறுசட்டை; கச்சு; வெப்பாலையின் உள்வெப்பக்காப்பு மேலுறை; புத்தகத்தின் வண்ண அட்டைப் பொதியுறை; விலங்கின் மேல்தோல்; உருளைக்கிழங்கு மேல்தோல்; *v.* அட்டைப் பொதியுறையால் மூடு; (தொ.) dust one's jacket, அடி, மொத்து.

jack'-in-the-box', *n.* பெட்டியைத் திறந்தவுடன் குதித்தெழும் பொம்மை; வாணவேடிக்கை வகை.

Jack'-in-the-green', *n.* மே மாத விளையாட்டுக்களில் இலைகளாலான சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மனிதன் அல்லது பையன்.

jack'-knife, *n.* பையில் வைக்கக்கூடிய பெரிய கைப்பிடிக் கத்தி.

jack'-o'-lantern, *n.* கொள்ளிவாய்ப் பேய்; சதுப்புநில ஒளி.

jack'-plane, *n.* கட்டை விமானம், கரடுமுரடான வேலைக்குப் பயன்படும் வானூர்தி.

jack'pot, *n.* சீட்டாட்ட வகையில் இரண்டு அல்லது மேற்பட்ட சிறப்புச் சீட்டு உடையவர்கள்மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடிய பொதுச் சேமிப்புத்தொகுதி.

Jack'-pudd'ing, *n.* விதூடகர், வேழம்பர்.

jack'-raft'er, *n.* (க-க.) கூரை உச்சியிலுள்ள குறுகிய உத்திரம்.

jack'-snipe, *n.* நீண்ட அலகுள்ள சதுப்புநிலப் பறவை வகையின் சிற்றினம்.

jack'-staff, *n.* பாய்மரத்தின்மேற் பறக்கவிடும் கொடியைச் சாய்த்துக் கட்டுவதற்கான மரக்கழி.

jack'-tow'el, *n.* உருளையிலிருந்து தொங்கும் துணி.

Jac'ob, *n.* ஏணி போன்ற நீலநிற அல்லது வெள்ளைநிற மலர்க் கொத்துக்களையுடைய செடிவகை; (கப்.) மரப்படியுள்ள கயிற்றேணி; (தொ.) Jacob's staff, அளவையரின் இருப்புப் பூணிட்ட கோல்; தூரத்தையும் உயரத்தையும் அளக்கும் அளவையரின் கருவி.

Jacobe'an, *a.* முதலாவது ஜேம்ஸ் அரசரின் ஆட்சி சார்ந்த; விவிலிய ஏட்டின் தூயதிரு. இளந்திற ஜேம்ஸ் (St. James the Less) என்பாரைச் சார்ந்த; கருநிறச் சீமை ஆலின் சாயலுடைய.

Jac'obin[1], *n.* தூயதிரு. டாமினிக் (St. Dominic) துறவு மடத்துக் குழுவைச் சேர்ந்தவர்; 1789-ஆம் ஆண்டில் பாரிஸ் நகரத்தில் பழைய 'ஜாகோபின்' (Jacobin) துறவிமடத்தில் நிறுவப்பட்ட தீவிர குடியாட்சிச் சங்கத்தின் உறுப்பினர்; தீவிர குடியாட்சிச் சங்கத்தின் கொள்கைகளை ஆதரிப்பவர்; அடிப்படையையே மாற்றியமைக்க விரும்பும் தீவிரக் கோட்பாட்டாளர்.

jac'obin[2], *n.* கழுத்தின் பகுதியில் மேல்நோக்கித் திரும்பியமைந்த இறகுகள்கொண்ட மாடப்புறு வகை.

Jac'obite, *n.* பிரிட்டனில் இரண்டாம் ஜேம்ஸ் முடி துறந்த பின்னும் அவரை அல்லது அவருடைய பின்மரபினரை ஆதரித்தவர்.

jacob'us, *n.* முதலாம் ஜேம்ஸ் காலத்திற் பொறிக்கப்பட்ட பொன் நாணயம்; *pl.* jacob'uses.

jac'onet, (இ.) *n.* மட்டான திட்பமுள்ள பருத்தித்துணி, வீக்கத்திற்கு மாவைத்துக் கட்டப் பயன்படும் நீர்புகாச் சாயக் காப்பிடப்பட்ட பருத்தித்துணி வகை.

Jacq'uard loom, *n.* சித்திரப் பூவேலைக்குரிய இசைவுவாய்ப்பு அளிக்கும் அமைவுடன் இணைக்கப்பட்ட தறிவகை.

jacquerie, (பிர.) *n.* உழவரின் புரட்சி, பிரான்சில் 1357-8 இல் நடைபெற்ற வேளாண்கிளர்ச்சி.

jactita'tion, *n.* (மரு.) படுக்கைப் புரளல், சதைத்துடிப்பு; (தொ.) jactitation of marriage, ஒருவருடைய கணவன் அல்லது மனைவியெனப் பொய்யாக உரிமை கொண்டாடுங் குற்றம்.

jacula'tion, *n.* எறிதல்.

jade[1], *n.* தரங்குறைந்த குதிரை; உழைத்திளைத்த குதிரை; விளையாட்டுத்தனமுள்ள பெண்; *v.* கடினமான வேலையினால் இளைக்கச் செய், சோர்வுறச் செய்.

jade[2], *n.* பச்சை மணிக்கல் வகை; நீலம் பச்சை வெள்ளை நிறங்களையுடைய சுண்ண வெளிமக் கன்மகி.

jadoube, (பிர.) சதுரங்க ஆட்டக்காயை நகர்த்தும் கருத்தில்லை என்று ஆட்டக்காரர் தெரிவிக்கும் சொல்.

Jaeg'er, (செர்.) *n.* கம்பளித்துணி வகை.

Jaff'a, *n.* உணவின்பின் உட்கொள்ளத்தக்க கிச்சிலிப்பழ வகை.

jag, *n.* கூர்மையான குவடு; குன்றின் குவட்டுமுனை; *v.* ஒழுங்கில்லாமல் ஓரம் வெட்டு, தாறுமாறுகக் கிழி; பற்களைப்போல் வெட்டு அமை.

jag'er, (செர்.) *n.* குறிப்பிட்ட செர்மன் படைத்துறைக் குழுவின் உறுப்பினர், துப்பாக்கிப் படைவீரர்.

jagg'ery, *n.* வெல்லம்; பனைவெல்லம், கருப்புக்கட்டி.

jaghir', jaghire', (இ.) *n.* ஊழிய மானியம்.

jaghir'dar, (இ.) *n.* ஊழிய மானிய உரிமையாளர்.

jag'uar, *n.* அமெரிக்க காடுகள் சிலவற்றிலுள்ள பூனையினத்தைச் சேர்ந்த பெரிய ஊனுண்ணி விலங்கு வகை.

Jah, *n.* எகோவா (Jehovah), விவிலியப் பழைய ஏற்பாட்டில் யூதர்களின் கடவுட்பெயர்.

jail, *n.* சிறைக்கூடம், காவற்கூடம்.

Jain, *n.* சமணர், சமண சமயத்தினர்; *a.* சமண சமயத்தைச் சார்ந்த.

jal'ap, *n.* மெக்சிகோ நிலப் படர்கொடிக் கிழங்கினின்று எடுக்கப்படும் பேதிமருந்து.

jal'ousie, *n.* அடைப்புச் சட்டம்.

jam [1], *n.* நெருக்கடி; மிகு நெருக்கத்தால் செயலற்ற நிலை; நெருக்கத் தொகுதி; *v.* நெருக்கு; திணி; இடையிட்டு அழுத்து; அடர்த்தியாக நெருக்கப்பெறு; ஆப்புப்போல் திணிக்கப்பட்டு இறுகு; வானொலி அல்லது தந்தியில்லாக் கம்பி வகையில் வேறு இடத்திற் செயலாற்றுவதன்மூலம் செய்திகளைத் தெளிவற்றதாக்கு.

jam [2], *n.* பழப்பாகு, பழச்சத்து, சர்க்கரைப்பாகில் பதம் செய்யப்பட்ட பழ ஊறல்.

Jamaic'a, Jamaic'a rum, *n.* வெல்லச் சாராயவகை.

jamb, *n.* வாயிலின் புடைநிலை; பலகணியின் பக்கநிலை.

jamboree', *n.* கொண்டாட்டம்; மகிழ்கூட்டு; சாரணச் சிறுவர்களின் பேரணித்திரட்டு.

jambs, *n. pl.* கணைப்படுப்பின் வாயருகிலுள்ள பக்கக்கற்கள்.

Jane'ite, Jan'ite, *n.* ஜேன் ஆஸ்டின் (Jane Austen) என்பவரின் புனை கதையேடுகளின் ஆர்வலர்.

jang'le, *n.* கடுங்கூவிளி; சச்சரவு; *v.* கடுங்கூக்குரல் எழுப்பு; இரைந்து பேசு; சச்சரவிடு.

jan'issary, jan'izary, *n.* (வர.) துருக்கி சுல்தானின் மெய்க்காப்புக் குழுவில் ஒருவர்; துருக்கிநாட்டுப் போர்வீரர்; கொடுங்கோலாட்சியின் கருவியான மனிதர்.

jan'itor, *n.* வாயிற் காவலர்.

jann'ock, *a.* நேர்மையான.

Jan'senist, *n.* ஜேன்சன் (Jansen, 1585-1638) என்பவரின் கொள்கையுடைய ரோமன் கத்தோலிக்கர் திருக்கோயில் கட்சியின் உறுப்பினர், இயற்கையான மனித சக்தி நன்மைக்குப் புறம்பாக இயங்கும் இயல்புடையதென்ற கோட்பாட்டுக் குழுவினர்.

Jan'uary, *n.* ஆங்கில ஆண்டின் முதல் மாதம்.

Jan'us, *n.* முன்பின் இருமுகமுடைய பண்டை இத்தாலிய தெய்வம்; வாயில்காப்புத் தெய்வம்.

Jap, *n.* (பே-வ.) ஜப்பானிய நாட்டினர்; *a.* ஜப்பானிய நாட்டைச் சேர்ந்த.

Japan' [1], *n.* ஜப்பான் நாடு.

japan' [2], *n.* திண்ணிய சாய எண்ணெய்; ஜப்பானிய பாணியில் செய்யப்படும் வேலைப்பாடு; ஜப்பான்நாட்டுச் சரக்கு; *v.* கெட்டியான மெருகெண்ணெயால் மேற்பூச்சுப்பூசு; கறுப்பாகவும் பளபளப்பாகவும் பூச்சுப்பூசு.

Japanese', *n.* ஜப்பானியர்; ஜப்பான் நாட்டவர்; ஜப்பான் நாட்டுக் குடியுரிமையாளர்; ஜப்பானிய மொழி; *a.* ஜப்பான் நாட்டுக்குரிய; ஜப்பானியருக்குரிய; ஜப்பானியமொழி சார்ந்த.

Japanesque', *n.* ஜப்பானிய பாணியிலுள்ள ஒப்பனைப் படிவம்; *a.* ஜப்பானியப் பாணியின் சாயலுடைய.

jape, *n.* (செய்.) கேலி; *v.* கேலிசெய்.

Japhet'ic, *a.* 'பழைய ஏற்பாட்டி'லுள்ள நோவாவினுடைய மகனுகிய ஜாபெட் (Japheth) மரபில் வந்த; இந்தோ-ஐரோப்பிய வழிமுறையான.

japon'ic, *a.* ஜப்பான்நாட்டைச் சார்ந்த, ஜப்பானியரைச் சார்ந்த.

japon'ica, *n.* ஜப்பானிய நாட்டுச் செடிவகை, அழகொப்பனைக்காக வளர்க்கப்படும் செடிவகை.

jar [1], *n.* சாடி, குடுவை; கைப்பிடியுள்ள கண்ணுடிக்குவளை; கைப்பிடியற்ற கண்ணுடிக்குவளை; சாடியளவு; *v.* சாடியிலடை; (தொ.) Leyden jar, 1745-இல் புனைந்துருவாக்கப்பட்ட மின்வடிகலம்.

jar [2], *n.* கரகரப்பான ஒலி; செவிக்கின்னுத ஒலி அதிர்வு, நரம்பு நடுக்கம், நரம்பதிர்ச்சி; உணர்ச்சி உறுத்தல்; அதிர்ச்சி; முரண்பாடு; இசைவிணக்கமின்மை; சச்சரவு, மாறுபாடு; *v.* கரகரப்பான ஒலியெழுப்பு; வெறுப்புண்டாக்கும்படி ஓசைபடு; முரணோசையுடன் இயங்கு; அபசுரமாகு; இசைமுறிவான ஒலியுண்டாக்கு; நரம்புகளில் முரணிசைவான அதிர்ச்சி உண்டுபண்ணு; முரண்பாடு உண்டுபண்ணு; உணர்ச்சி முரண்படுத்து; உணர்ச்சி முரண்படு; கருத்து மாறுபடு; சச்சரவிடு; அதிர்ச்சி உண்டாக்கு.

jar [3], *n.* (பே-வ.) திருப்புநிலை; (தொ.) on the jar, on a jar, on jar, சிறிது திறந்தநிலையில்.

jardiniere, (பிர.) *n.* அழகுப்பூங்குடுவை மலர்த்தொட்டி.

jarg'on [1], *n.* பிதற்றெலி, சலசலப்பு; விளங்கா ஒலி; விளங்கா மொழி; காட்டுமிராண்டிப் பேச்சு; விளங்காத தொடர்கள் நிரம்பிய மொழிநடை.

jarg'on [2], **jargoon'**, *n.* இலங்கையில் காணப்படும் நிறமற்ற அல்லது புகை நிறமார்ந்த மணிக்கல் வகை.

jargonelle', *n.* காலத்திற்கு முன்பாகவே கனிகின்ற பேரியினப் பழ வகை.

jarl, *n.* (வர.) பண்டை நார்வே அல்லது டென்மார்க் நாட்டின் குழுத்தலைவன்.

ja'rrah, *n.* உயர்தர வெட்டுமரமாகப் பயன்படும் பிசினுடைய மேலை ஆஸ்திரேலிய செம்மர வகை.

jarv'ey, *n.* வாடகைக் குதிரைவண்டி ஓட்டுபவர்; மோட்டார் ஓட்டுபவர்.

jas'min, jas'mine, *n.* மல்லிகை, முல்லையின மலர்ச்செடி வகை; (தொ.) common jasmin, white jasmin, மல்லிகைக் கொடி வகை.

jas'per, *n.* சிவப்பு மஞ்சள் அல்லது பழுப்புநிறமுடைய மணிக்கல் வகை.

Jat, *n.* வடமேற்கு இந்தியாவிலுள்ள மக்கட் குழுவினருள் ஒருவர்.

jaun'dice, *n.* மஞ்சட் காமாலைநோய்; பார்வைக்கோளாறு; *v.* மஞ்சட் காமாலைநோயால் தாக்கு; பொருமைக்கு ஆளாக்கு; தீர்ப்பு வகையில் பொருமையூட்டி மாறுபடுத்து.

jaunt, *n.* இன்பப் பயணம்; *v.* இன்பப் பயணஞ் செய்.

jaunt'ing-car, *n.* அயர்லாந்தில் பெருவழக்கான இன்பப் பயண இருசக்கர ஊர்தி.

jaun'ty, *n.* கப்பல் காவல்துறையினரின் தலைவர்; *a.* கவலையற்ற இன்ப எழுச்சி கொள்கிற; இன்ப எழுச்சிப்பகட்டு உடைய; இறுமாந்த தற்பெருமைப் பகட்டுடைய.

Ja'van, *n.* ஜாவா நாட்டுக்குரிய மனிதர்; *a.* ஜாவா நாட்டுக்குரிய.

Javanese', *n.* ஜாவா நாட்டினர்; மத்திய ஜாவா நாட்டின் மொழி; *a.* ஜாவா நாட்டுக்குரிய.

jav'elin, *n.* எறிவதற்குரிய பளுக்குறைந்த ஈட்டி, எறிவேல்.

jaw, *n.* தாடை; தாடை எலும்பு; (பே-வ.) வம்பளப்பு; சொல்மாரி; *v.* சோர்வுறும்படி நீளப்பேசு; கண்டித்துப் பேசு; (தொ.) hold your jaw, பேசாமலிரு, வம்பளப்பை நிறுத்து.

jaw'-bone, *n.* பாலுண்ணிகளின் கீழ்த்தாடை எலும்புகளில் ஒன்று; கீழ் இன விலங்குகளில் கீழ்த்தாடை இணையெலும்பு.

jaw'-break'er, *n.* ஒலிப்பதற்குக் கடுமைவாய்ந்த சொல், பல்லுடைக்குஞ் சொல்.

jaws, *n. pl.* பற்கள் உள்ளிட்ட வாயின் எலும்புகள்; பள்ளத்தாக்கு-கால்வாய் முதலியவற்றின் குறுகிய வாயில்; இயந்திரத்தின் குறடுபோல் பற்றிக்கொள்ளும் அலகுகள்.

jay, *n.* வண்ண இறகுடைய சலசலக்கும் ஐரோப்பியப் பறவை வகை; பிதற்றுபவர், ஓயாது சலசலத்துத் தொல்லை தருபவர்.

jay'-walker, *n.* போக்குவரத்து விதிகளைக் கவனிக்காமல் சாலையில் குறுக்குமறுக்காகச் செல்லுபவர்.

jazz, *n.* அமெரிக்க நீகிரோவரின் ஆரவார இசைக்கூத்து; பேரிரைச்சலுள்ள நிகழ்ச்சி; *a.* முரணிசைவான; பகட்டு வண்ணமிக்க; முரட்டுத்தனமான; கேலிக்கூத்தான; *v.* பேராரவார நிகழ்ச்சியிற் கலந்து செயலாற்று; கேலிக்கூத்து நிகழ்த்து; (தொ.) jazz band, பேரொலி இசைமேளக்குழு.

jea'lous, *a.* பொறாமையுடைய, பிறர்நலங் காணப்பொறாத; காப்பு விழிப்புடைய; அருங்காவலுடைய, இழப்பஞ்சிக் காக்கிற; சிறுதவறுகளைப் பொறாத; காதலர் வகையில் ஓயா ஐயுறவுடைய.

jea'lousy, *n.* பொறாமை; ஓயா ஐயுறவு; இடைவிடா இழப்பச்சம்; அருங்காவற் பண்பு, காப்பு விழிப்புடைமை.

jean, *n.* சாய்வரி நெசவுடைய பருத்தித்துணி.

jeans, *n. pl.* சாய்வரிப் பருத்தித்துணியாலான உடுப்புக்கள்.

jeep, *n.* பயன்பாட்டுப் பொறிவண்டி.

jeer [1], *n.* (கப்.) பாய்மர அடிச்சட்டங்களை ஏற்றியிறக்குவதற்குரிய அமைவு.

jeer [2], *n.* இகழ்ச்சி, எள்ளனம், வசைமொழி, திட்டுதல்; *v.* இகழ்ச்சியாகச் சிரித்து அவமதி; எள்ளனம் செய்.

jehad', *n.* முஸ்லீம் வழக்கில் புனித சமயப்போர்; அறப்போர்; கொள்கைக்கான வீரப்போராட்டம்.

Jehov'ah, *n.* எகோவா, விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டில் யூதர்களின் கடவுட்பெயர்.

Jehov'ist, *n.* விவிலிய நூலில் கடவுளை 'எகோவா' என்று குறிப்பிடும் முதல் ஆறு பாகங்களின் ஆசிரியர்களில் ஒருவர்.

Je'hu, *n.* மூர்க்கமான வண்டியோட்டி, கடும்வலவன்.

jejune', *a.* அருகிய, மிகக்குறைவான; நிலவகையில் வளமற்ற; பயனற்ற, மலடான; மனத்திற்கு நிறைவளிக்காத; கவர்ச்சியற்ற, ஊக்கமற்ற.

Jek'yll and Hyde, *n.* இரட்டை மனிதன்; இருதலை மணியம், இருவேறுருட்களாக மாறிமாறி நடக்கும் ஒருவர்.

jell'y, *n.* பாகு, இழுது; பாகுக் கறியுணவு, எலும்புதோல்களைக் கொதிக்கவைத்தாற்றிய கொழுங்குழம்பு; வடிசாறு, பழச்சாற்றின் வடிகுழம்பு; *v.* வடிசாற்றுக் குழம்பு செய்; பாகாய் வடித்து இறுக வை.

jell'y-bag, *n.* பாகு வடிகட்டும் பை.

jell'y-fish, *n.* இழுதுமீன்.

jell'ygraph, *n.* பாகுபாவிய தட்ட மூலம் பகர்ப்பெடுக்குங் கருவி.

jem'adar (பெர்.) *n.* இந்தியப்படையில் தாழ்படிப்பணித்தலைவர்; இந்தியக் காவல்துறைப் பணியாளர்; பணியாள் தலைவர்; (பே-வ.) தளம் பெருக்குபவர்.

jemim'as, *n. pl.* நீண்டு சுருங்கும் பக்கங்களுள்ள புதைமிதியடி வகை; புதைமிதியடி மேலுறை.

jemm'y, *n.* கன்னக்கோல்; ஆட்டுத்தலை இறைச்சிக்கறி.

je ne sais quoi, (பிர.) *n.* தெரியாததொன்று, விளக்கிக் கூற முடியாத செய்தி.

jenn'et, *n.* ஸ்பெயின் நாட்டுச் சிறு குதிரை.

jenn'eting, *n.* பருவ காலத்துக்குமுந்திப் பழுக்கும் ஆப்பிள் பழவகை.

jenn'y, *n.* புடைபெயர்வுடைய பாரந்தூக்கி; நூற்புக்கதிர்ப் பொறி; மேடைக்கோற் பந்தாட்டத்தில் பந்தடி; சிறுக்கி; பட்டிக்காட்டுப்பெண்; ஆந்தைப்பெடை; குருவிவகைப் பெடை; பெட்டைக்கழுதை; (தொ.) jenny wren, பாடும் பறவைவகை; spinning jenny, நூற்புக்கதிர்ப் பொறி.

jeo'pardize, *v.* இடருள்ளாக்கு, இடருக்கு உட்படுத்து.

jeo'pardy, *n.* இடர், இடுக்கண், இடையூறு.

jequi'rity, *n.* குன்றிமணி போன்ற இருநிற விதைகளையுடைய படர் புதர்வகை.

jerbo'a, *n.* நெடுந்தொலை தாவுமியல்புள்ள ஆப்பிரிக்க பாலை வனக் கொறிவிலங்கு வகை.

jereed', *jerid'*, (அரா.) *n.* கீழ்த்திசைக் குதிரைவீரரின் வேல்; வேலாட்டம், வேல் விளையாட்டுவகை.

jeremi'ad, *n.* ஒப்பாரி; துயரக் கதை; புலம்பற் காவியம்.

Jeremi'ah, *n.* காலநிலை பழிப்பவர்; புலம்பறிவர், அழுதரற்றும் மெய்ஞ்ஞானி.

Je'richo, *n.* பாலஸ்தீன நகரம்; (தொ.) go to Jericho, போய்த்தொலை, நாசமாய்ப் போ; நரகத்துக்கே போய்ச்சேர்.

jerk [1], *n.* வெட்டியிழுப்பு, வெட்டுத்திருப்பு; சுரிப்பிழுப்பு, தசைநாரின் திடீர்ச் சுருக்கதிர்ச்சி, திடீர் இழுப்பு வலி; உடற்பயிற்சியில் திடீர் வெட்டியக்கம்; பறவைகளின் திடீர்ப் பாட்டெழுச்சி; *v.* சட்டென இழு; சட்டெனத்தள்ளு; சட்டென முறுக்கு; வெட்டி வீசியெறி; ஆற்றலுடன் தூக்கியெறி; வெட்டிவெட்டிச் செல், ஆட்டத்துடன் செல்.

jerk [2], *v.* மாட்டிறைச்சி முதலியவற்றை அரிகண்டமிட்டு வெயிலில் உலர்த்திப் பதஞ்செய்.

jerk'in, *n.* (வர.) ஆடவரின் இறுக்கமான சிறுசட்டை; குறுந் தோற்சட்டை.

jerks, *n. pl.* அங்கத்துடிப்பு; தசைத்துடிப்பதிர்ச்சி; சமய வெறித் துடிப்பாட்டம்.

Jerobo'am, *n.* இன்தேறல் மிடாக்குப்பி, எட்டுமுதல் பன்னிரண்டு குப்பி வரை பிடிக்கும் தேறல் பெருங்குப்பி.

Je'rry [1], *n.* செர்மன் படைவீரர்; செர்மானியர்.

je'rry [2], je'rry-builder, *n.* மோசமான பொருள்களால் உறுதியற்ற தன்மையில் போலியான கட்டிடம் கட்டுபவர்.

je'rry-building, *n.* மோசமான பொருள்களால் உறுதியற்ற கட்டிடம் கட்டுதல்; மோசமான சரக்குகளால் உறுதியற்றதாகக் கட்டப்பட்ட கட்டிடம்.

je'rry-built, *a.* மோசமான பொருள்களால் உறுதியற்ற தன்மையில் கட்டப்பட்ட.

jerryman'der, *n.*, *v.*=gerrymander.

je'rry-shop, *n.* கீழ்த்தரச் சாராயக்கடை.

Jers'ey [1], *n.* ஆங்கிலக் கடற்கால்வாயிலுள்ள தீவின் பெயர்; (தொ.) Jersey cow, பயிற்சியினப் பசுவகை.

jers'ey [2], *n.* ஆட்டக்காரர் அணியும் நெருக்கமான கம்பளிப் பின்னல் சட்டை; கம்பளிப் பின்னல் உள்சட்டை; பெண்கள் அணியும் இறுக்கமான சிறுசட்டை; ஆட்டுக் கம்பளியின் நேர்த்தியான பகுதி; நன்கு கோதப்பட்ட கம்பளி; பயிற்சியினப் பசுவகை; *pl.* jers'eys.

Jerus'alem, *n.* பாலஸ்தீன நாட்டில் உள்ள நகரம்; (தொ.) Jerusalem artichoke, தின்னக்கூடிய கிழங்கினை உடைய தூரியகாந்தியினச் செடிவகை; Jerusalem pony, கழுதை.

jess, *n.* வேட்டைப் பருந்தின் கால்கட்டுக்குரிய தோல்வார்; பருந்தின் கால்கட்டுப் பட்டிழை; *v.* வேட்டைப் பருந்துக்குக் கால்கட்டிடு.

jess'amin, jess'amine, *n.*=jasmin.

Jess'e, *n.* விவிலிய வரலாற்றின்படி தாவீது (David) என்பவர் தந்தை; ஜெஸ்ஸியினிடமிருந்து வந்த இயேசுநாதரின் வழிமரபுக் கொடி; திருக்கோயிலின் பெரிய சரவிளக்கு.

Jess'e window, *n.* ஜெஸ்ஸி முதற்கொண்ட இயேசுநாதரின் மரபுவரிசைக் கொடிவழி சித்திரிக்கப்பட்ட பலகணி.

jest, n. கேலி; வேடிக்கைப்பேச்சு; விளையாட்டுரை; ஏளனத்துக்குரியது, நகையாடத்தக்கது; நையாண்டி வசை மொழி; ஏளன இகழ்ச்சிக்குறிப்பு; பரிகாசத்துக்கு ஆளானவர்; v. கேலி செய்; வேடிக்கையாகப் பேசு; விளையாட்டுத்தனமாக நட; ஏளனமாக நையாண்டி செய்; (தொ.) in jest, விளையாட்டாக, கேலியாக.

jest'-book, n. நகைத் துணுக்குகள் கொண்ட புத்தகம்; விகடத்துணுக்கு நூல்.

jes'ter, n. கேலி செய்பவர்; விகடன், கோமாளி.

Jes'uit, n. இக்னேஷியஸ் லாயோலா (Ignatius Loyola) என்பவரால் 1533-ல் நிறுவப்பட்ட இயேசுநாதர் சங்கம் (Society of Jesus) என்ற ரோமன் கத்தோலிக்கக் குழுவின் உறுப்பினர்; சூழ்ச்சியாளர்; பாசாங்குக்காரர்; பசப்பி ஏய்ப்பவர்; (தொ.) Jesuits' bark, சிங்கோனு மரப்பட்டை.

jet[1], n. கருநிமிளைக்கல்; ஆழ்ந்த பளபளப்பான கருநிறம்; a. கருநிமிளை சார்ந்த; பளபளப்பான கருநிறம் உடைய.

jet[2], n. நீர்த்தாரை; பீற்று நீராவி, பீற்று வளி; பீற்றுக் குழாய் நுனி; v. பீற்று, தாரையாக ஊற்று; பீற்றுநீராவி வெளியிடு; விசையுடன் பீற்றுவளி வெளியேற்று.

jet'-black, a. பளபளப்பான மைக் கருநிறமுடைய.

jet'-engine, n. பீற்றுவிசை இயந்திரம்.

jet'-plane, n. பீற்றுவளி விசையால் இயங்கும் விமானம்.

jet'-propelled, a. பீற்று நிலக்கரி வளியின் விசையால் இயங்குகிற.

jet'sam, n. எறிபளு, பளுக்குறைக்க எறியப்படும் சரக்கு; கரைமீது ஒதுக்கப்பட்ட எறிபளு.

jett'ison, n. பளு எறிவு, கப்பலின் பளுவகற்றி இடர்காக்கும்படி வெளியே எறிதல்; v. பளு எறி, கப்பலின் பளு அகற்றி இடர்காக்க வெளியே எறி.

jett'on, n. காசுவட்டு, சீட்டாட்டம்-கணிப்புமுறைகளிற் பயன்படுத்தப்படும் வட்டு.

jett'y[1], n. துறைமுக அணைகரை; இறங்குதுறை, கடவு.

jett'y[2], a. மைக் கருமையான.

jeu, (பிர.) n. மகிழ்ச்சி; விளையாட்டு.

jeu de mots, (பிர.) n. சிலேடை, இருபொருள் ஒருசொல் துணுக்கு.

jeu d'esprit, (பிர.) n. நகைச்சுவைத் துணுக்கு.

jeune premier, (பிர.) n. நாடகத்தில் சிறுவர் முகப்பு நிகழ்ச்சி.

jeunesse doree, (பிர.) n. ஒய்யார இளைஞர், பகட்டு நடையுடை வாலிபர் தொகுதி.

Jew, n. யூதர், எபிரேய இனத்தைச் சேர்ந்தவர்; கடுவட்டிக்குக் கடன் கொடுப்பவர்; கடுங்கண்டிப்பாளர்; ஈவிரக்கமின்றிப் பேரம் செய்பவர்; எவரையும் எளிதில் நம்பாதவர்; v. (பே-வ.) ஏய்; மட்டிலாச் சூழ்ச்சி செய்து ஏமாற்று; (தொ.) tell that to the Jews, நீ கூறுவது நம்பமுடியாத செய்தி; unbelieving Jew, நம்பிக்கையற்றவர், கடு ஐயுறவானவர்; Wandering Jew, இயேசுநாதரைப் பழித்ததற்காகக் கடைத்தீர்ப்பு நாள்வரை அலைந்து திரிவதாகக் கருதப்படும் பழங்கதை உறுப்பினர்; wandering Jew, படர்கொடி வகை.

Jew'-bait'ing, n. யூதர்களை அடக்கி ஒடுக்கும் வன்முறை நடவடிக்கை, யூதர்களின்மேலான அரசியற் குற்றச்சாட்டு.

jew'el, n. அணிமணிப்பூண், மணிக்கற்கள் பதித்த அணிகலன்; விலையுயர்ந்த மணிக்கல்; உயர்வாக மதிக்கப்படுபவர்; உயர்மதிப்புப் பொருள்; v. மணி பதிப்பி; அணிமணி இணை; பூண் அணி; அணிமணி ஒப்பனைசெய்; கடிகாரத்தின் சுழலச்சுத் துளைகளில் மணிக்கற்களைப் பொருத்து.

jew'el-case, n. அணிமணிப் பேழை.

jewel'-house, n. லண்டன் மணிக்கூண்டில் (Tower of London) அரச அணிமணிகள் வைக்கப்பட்டிருக்கும் அறை.

jew'eller, n. அணிமணி செய்பவர்; பொற்கொல்லர், அணிமணி வாணிகம் செய்பவர்.

jew'ellery, jew'elry, n. அணிமணித் தொகுதி; அணிமணிச் சரக்கு.

jew'ing, n. வீட்டுப் புறுவின் அலகடித் தசைப்பொருக்கு.

Jewr'y, n. யூதர் இனம்; (வர.) யூதர் குடியிருப்பிடம்; யூதர் சேரி, நகரம் முதலியவற்றில் யூதர் குடியிருப்பு.

Jew's'-ear, n. உண்ணத்தக்க கிண்ண வடிவமான காளான் வகை.

Jew's'-harp', n. மோர்சிங், இசைக்குரிய வாய்க்கருவி வகை.

jezail', n. ஆப்கானியரின் (Afghan) பளுமிக்க நீண்ட துப்பாக்கி வகை.

Jez'ebel, n. நாணமற்ற ஆணவம் மிகுந்த பெண்; ஒழுக்கந் தவறிய பெண்; மேருமினுக்கி.

jib[1], n. கப்பலின் பாய் முகட்டிலுள்ள நிலவரமான முக்கோணப்பாய்; v. (கப்.) பாய்மரத்தை ஒருபுறத்திலிருந்து மறுபுறம் இழு; பாய்மர வகையில் சுற்றிச் சுழலு; (தொ.) cut of his jib, அவனுடைய தனிமுறைத் தோற்றம்.

jib[2], v. குதிரை வகையில் இடக்குப்பண்ணு, முன்னே செல்ல மறு, பின்னுக்கியிழு, நின்று அடம்பண்ணு, பக்கங்களில் இழு; செயலில் முனையமறு; (தொ.) jib at, செயலில் மிகு வெறுப்புக்காட்டு; ஆளிடம் பகைமை காட்டு.

jibb'a, jibbah', (அரா.) n. ஜிப்பா, முகம்மதியர் துணி மேலங்கி.

jib'-boom, n. கப்பலின் முன் கோடியில் நீண்டுள்ள மரச் சட்டம்; பாரந்தூக்கியின் கைபோன்ற கருவி.

jib'door, n. சுவர்த்தளக் கதவு, சுவருடன் சுவராகத் தெரியும்படி ஒரே வண்ணமும் அமைப்பும்பட அமைக்கப்பட்ட கதவு.

jibe, n., v.=gibe.

jiff, jiff'y, n. (பே-வ.) கணம், மிகக் குறுகிய நேரம்.

jig, n. துடிப்பான ஆடல்வகை; எழுச்சியுள்ள நடன இசை; கருவிப்பிடி நிலை, கைக்கருவிகளைக் கொண்டு உருவாக்கும் பொருளை நிறுத்திப் பிடிப்பதற்குப் பயன்படும் துணைச் சாதனம்; v. துடிப்பான நடனத்திலீடுபடு; திட்ப நுட்பத்தரம் பிரி, கனிப்பொருள்களை அடியிற் சல்லடையிட்ட பெட்டியில் இட்டு நீரடியில் அலைப்பதன்மூலம் கனிப்பொருள்களின் திட்ப மென்மைப் பொருள்களைப் பிரி.

jigg'er[1], n. (கப்.) ஓர் இரட்டைக்கப்பியும் ஒற்றைக்கப்பியும் கயிறும் கூடிய ஏற்று கருவியமைவு; சிறு பாய்மரம்; சிறு பாய் உடைய சிறிய கப்பல் வகை; குழிப்பந்தாட்டத்தில் ஒடுங்கிய முகப்புடைய இரும்புத்தடி; கனிப்பொருள்களைச் சல்லடையிட்டு வகை பிரிப்பவர்.

jigg'er[2], n.=chigoe.

jigg'er[3], v. பழிக்காளாக்கு.

jigg'ery-pok'ery, n. (பே-வ.) திருட்டுத்தனமான சூழ்ச்சி, ஏமாற்று, மோசடி.

jig'gle, v. மெல்ல ஊசலாட்டு; வளைந்து நெளிந்து ஆடுவி; துடிதுடிப்புடன் ஆடு, சாய்ந்தாடு, நெளிந்தாடு; குலுக்கியாடு.

jig'saw, n. திருகுவாள், எவ்வடிவும் அறுக்கத்தக்க ஒடுங்கிய இருபுறக் கூர்வாள் பொறி; திருகுவெட்டுப்புதிர்; (தொ.) jigsaw puzzle, திருகுவெட்டுப்புதிர், அட்டையில் ஒட்டப்பட்டுக் கோணல் மாணலாக வெட்டப்பட்ட படத் துண்டுகளை இணைக்கும் விளையாட்டு; திகைக்க வைக்கும் புதிர்.

jihad', n.=jehad.

Jill, n.=Gill[4].

jilt, n. காதலில் ஆசைகாட்டி மோசம் செய்யும் பெண்; v. காதலில் ஆசைகாட்டி மோசம் செய்; நம்பவைத்து ஏய்.

Jim Crow, n. நீகிரோவர்; நிமிர்த்தல் திருகு, இருப்புச் சட்டங்களை நேராக நிமிர்த்திவிடப் பயன்படும் கருவி; Jim Crow car, புகைவண்டிகளில் நீகிரோவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பெட்டிகள்.

jing'le, *n.* பன்மணிக் கலகலப்பொலி; சங்கிலிச் சலசலப்பொலி; அடுக்கொலி, ஒலி இயைபு, எதுகை மோனை இணைவு; இருசக்கர மோட்டார் வண்டி; *v.* மணி ஒலி செய்; சாவிகள் வகையில் கணகணவென ஒலிக்கும்படி குலுக்கு; எதுகை மோனை நிரப்பி எழுது.

jing'o, *n.* ஆரவார நாட்டுப்பற்றுளர்; கிளர்ச்சித் தேசியவாதி; (வர.) 1878-இல் பீக்கன்ஸ்பீல்டுப் பெருமகனுர் (Lord Beaconsfield) கொள்கை ஆதரவாளர்; *a.* அசட்டுத் துணிவான; கீழ்த்தரமாக மக்களைத் தூண்டிவிடுகிற; குறுகிய பகட்டாரவாரத் தேசியஞ் சார்ந்த; *pl.* jing'oes; (தொ.) by jingo, மக்களைக் கிளறிவிடும் பாடல்களால்; by jingo, by the living jingo, மட்டான எழுச்சியுடைய சூளுரைக்குறிப்பு.

Jing'oism, *n.* குறுகிய பகட்டாரவாரத் தேசியக் கொள்கை; வீறுப்பு; குறுகிய போலிப்பற்று.

jink, *n.* பிடிகொடாது நழுவித்தப்புதல், தட்டிக்கழித்துச் செல்லுதல்; *v.* பிடிகொடாது நழுவித்தப்பிச் செல், தட்டிக் கழித்துத் தப்பு; (தொ.) high jinks, ஆரவார விளையாட்டு, கேளிக்கைக் கும்மாளம்.

jinnee', *n.* இஸ்லாமிய வழக்கில் சிறு தெய்வ உரு, கூளி; *pl.* jinn.

jinrick'sha, jinrik'isha, *n.* ரிக்ஷா, இழுப்புவண்டி.

jirg'a, *n.* ஆப்கானிய குடிமக்கள் தலைவர் பேரவை.

jit'ney, *n.* தாழ்ந்த கட்டணப் பேருந்துகலம்; சிறுவிலைப் பொருள்; *a.* சிறுவிலையுடைய; அற்பமான.

jitt'er, *v.* நரப்பு நடுக்கமுறு, கூச்சமுற்று நடுங்கு.

jitt'erbug, *n.* உணர்ச்சியூட்டும் நடனத்துக்கு ஆட்பட்டவர்; அவைக்கூச்ச நடுக்கமுடையவர்.

jitt'ers, *n. pl.* நடுங்காட்டம், கூச்சத்தால் வரும் கோழைத்தனம், அவைக்கூச்சம்; (தொ.) have the jitters, நடுங்காட்டங்கொள், செயற்கூச்சங்கொள்.

jiu-jitsu', *n.*=ju-jutsu.

Job[1], *n.* விவிலிய நூல் பழைய ஏற்பாட்டிலுள்ள 'ஜாப் ஏட்டின்' (Book of Job in O. T.) கதைத் தலைவர்; பொறுமை மிக்கவர், பொறுமையுடன் கடுஞ்சோதனைகளைத் தாங்குபவர்; (தொ.) Job's tears, வழிபாட்டு உருட்டுமணியாகப் பயன்படுத்தப்படும் புல்வகை விதைகள்; would try the patience of Job, மிகத் தொல்லை தரத்தக்கதாயுள்ளது.

job[2], *n.* வேலை, பணி, தொழில்; பதவி; அலுவல்; கடமை; பணி ஈடுபாடு; கூலிவேலை; சில்லறை வேலை; மறை சூழ்ச்சிச் செயல்; குற்றத்துறை ஈடுபாடு; வாடகைக் குதிரை; வாடகை வண்டி; வாணிகக் கொடுக்கல் வாங்கலுக்குரிய அற்பப் பொருள் தொகுதி; *v.* சிறுபணி செய்; வண்டி-குதிரை முதலியவற்றை வாடகைக்கு விடு; தரகுவேலை செய்; தரகுக்குக் கொடுக்கல் வாங்கல் செய்; பங்கு வாணிகத்தில் ஈடுபடு; பொறுப்பான பதவியைத் தன்னல ஆதாயத்துக்குப் பயன்படுத்து; லஞ்ச ஊழல்களுக்குப் பயன்படுத்து; (தொ.) bad job, தண்ட உழைப்பு; அவக்கேடு; தோல்விக்குரியது; do person's job, ஆளைக்கெடுத்துப் பாழாக்கு; good job, வெற்றிகரமான வேலை; ஆதாயம் தருஞ் செய்தி; நல்ல செய்தி; நற்பேறு; job lot, ஆதாய நோக்குடன் குத்துமதிப்பாக வாங்கப்பட்ட மொத்தப் பேரமான சிறுபொருள் தொகுதி.

job[3], *n.* தாற்றுக்குத்து, கூர்நுனியால் குத்தி ஊக்குதல்; வெட்டியிழுப்பு; குடைவு, இடிப்பு, சிற்றுதைவு; *v.* கடிவாளத்தை வெட்டியிழு; சிறிது புண்படுத்து; தாற்றினால் குத்து, இடி; தூண்டு.

joba'tion, *n.* (பே-வ.) நீண்ட கண்டிப்பு.

jobb'ernowl, *n.* (பே-வ.) வெற்றுமண்டை, அறிவிலி, மூடன், மட்டி.

jobb'ery, *n.* மோசடி வகை.

job'master, *n.* வாடகைக்காக வண்டியும் குதிரையும் கொடுப்பவர்.

job'-work, *n.* சில்லறை வேலை; கூலி வேலை; இடையிடை நேரும் கூலிப்பணி.

jock'ey, *n.* குதிரைப் பந்தயங்களில் குதிரையேறிச் செல்லும் பணியாள்; குதிரை வணிகர்; தொழில்துறையில் மட்டுமீறித் தன்னல ஆதாயந் தேடுபவர்; *v.* நெருக்கித்தள்ளி முன்னேறு; மறைசூழ்ச்சி முறைகளால் வெற்றிபெறு; தந்திரத்தால் வெல்லு; ஏமாற்று; (தொ.) Jockey Club, பந்தயக் குதிரைக்காரர்களின் சுழகம், இங்கிலாந்திலுள்ள நியூமார்க்கெட் (Newmarket) என்னும் இடத்தில் நிறுவப்பட்ட பந்தயக் குதிரைக்காரர்களின் சங்கம்.

jock'o, *n.* சிம்பான்சி (chimpanzee) குரங்கு, வாலில்லாக் குரங்கு வகை; *pl.* jock'os.

jocose', *a.* விளையாட்டான, வேடிக்கையில் விருப்பமுள்ள.

joc'ular, *a.* வேடிக்கையான, விளையாட்டான; களிப்புள்ள, மகிழ்வுறுத்தக்க, நகைச்சுவையுள்ள.

joc'und, *a.* இன்மகிழ்ச்சியான, களி கிளர்ச்சியுடைய, மகிழ்ச்சி விளைவிக்கிற; எழுச்சியுடைய.

Jodhpurs', *n. pl.* முழங்காலிலிருந்து கணுக்கால்வரை நெருக்கமாகவுள்ள குதிரையேற்றம் முதலியவற்றிற்குரிய நீண்ட காற்சட்டை.

Joe Mill'er, *n.* நாட்பட்ட கேலித்துணுக்குப் பேச்சு.

jo'ey, *n.* பைம்மாவின் கன்று, ஆஸ்திரேலிய நாட்டுக் கங்காரு என்னும் விலங்கின் குட்டி, குருளை, விலங்கின் குட்டி; *pl.* jo'eys.

jog, *n.* உந்தித்தள்ளல், இடித்துத் தள்ளுதல்; குடைவு, கவனத்தைத் தூண்டுவதற்கான கிள்ளல்; துள்ளல் மென்னடை; *v.* திடுமெனத் தள்ளு; பிடித்துக்குலுக்கு; கவனத்தைக் கவர்வதற்காகக் கிள்ளு, குடை; நினைவைத் தூண்டு; மேலுங் கீழுமாக எழுந்தெழுந்தாடு; பெரு முயற்சியுடன் ஆடியசைந்து நட; நடந்து கழி, எழுச்சியின்றி நட; கடுகிச்செல்.

jog'gle[1], *n.* ஆட்ட அசைவு; *v.* ஆட்ட அசைவுடன் செல்.

jog'gle[2], *n.* அண்டைப்பொருத்து, இரு கற்கள் அல்லது கட்டைகள் விழாமல் ஒன்றுமேலொன்றாக முட்டவைக்கும் பொருத்து; முட்டுப் பொருத்துக்கான ஒருபக்கப் பள்ளக் குடைவு; சார்பொருத்துக்கான ஒருபுற முனைப்பு; இணைப் பொருத்துக்கான இடைத்துணுக்கு; *v.* முட்டுப் பொருத்திட்டு இணை.

jog'trot, *n.* தளர்ந்த விரைநடை, குறைந்த வேகமுடைய ஒரே சீரான நடை; சலிப்பைத் தரும்படியான முன்னேற்றம், எழுச்சியற்ற வேகம்.

Johann'isberger, *n.* நேர்த்தியான வெள்ளை இன்தேறல் வகை.

John, *n.* பொதுநிலை ஆண்பால் இயற்பெயர்; (தொ.) John Barleycorn, உருவக வழக்கில் மாவூறல் சாராயம்; John Bull, உருவக வழக்கில் உருமாதிரியாகக் குறிக்கப்படும் ஆங்கிலேயர்; ஆங்கில நாட்டினம்; John Chinaman, உருவக வழக்கில் உருமாதிரியாகக் குறிக்கப்படுஞ் சீன நாட்டினத்தவர்; John Company, கிழக்கிந்திய வணிகக்கூட்டத்தார்; John Doe, சட்டத்தில் பேசப்படும் கற்பனை உருவகமாகக் குறிக்கப்படும் வாதி; John Dory, உணவாகக் கொள்ளப்படும் கடல்மீன் வகை.

John'ian, *n.* கேம்பிரிட்ஜிலுள்ள செயிண்ட் ஜான் கல்லூரி (St. John's College, Cambridge) சார்ந்தவர்; *a.* கேம்பிரிட்ஜிலுள்ள செயிண்ட் ஜான் கல்லூரி சார்ந்த.

johnn'y, *n.* ஆள்; ஒயிலாகக் காலந்தள்ளுபவர், நாகரிகப் பாங்கான சோம்பேறி; (தொ.) Johnny Raw, கற்றுக்குட்டி, அனுபவமில்லாப் புதுப்பணியாள்.

johnn'y-cake, *n.* கோதுமைமாவுப் பண்ணியம்; மக்காச் சோள மாவுப் பண்டம்.

John-o'-Groat's, John-o'-Groat's-House, *n.* வடக்கு ஸ்காத்லாந்து; (தொ.) from John-o'-Groat's to Land's End, கிரேட் பிரிட்டன் (Great Britain) முழுமையும்.

Johnsonese', *n.* சாமுவேல் ஜான்சனது (Samuel Johnson) எழுத்துநடைமொழி மரபு; ஜான்சனது போன்ற எழுத்து நடைமொழி மரபு

Johnson'ian, *a.* டாக்டர் சாமுவேல் ஜான்சன் (Dr. Samuel Johnson 1709-84) என்பாரின் பண்பு சார்ந்த ; ஜான்சன் போன்ற ; லத்தீனிலிருந்து பிறந்த மிக நீண்ட சொற்களை வழங்கும் எழுத்துநடை சார்ந்த.

joie de vivre, (பிர.) *n.* வாழ்வின் கிளர்ச்சி, வாழ்க்கை இன்ப நுகர்வுணர்ச்சி.

join, *n.* கூடல் மையம், கோடுகள்கூடும் புள்ளி; கூடல்வரை, தளங்கள் கூடும் கோடு ; *v.* ஒன்றுசேர்த்து வை ; இணை ; சேர்த்துக் கட்டு ; கட்டி இறுக்கு ; சேர்த்து வை ; இரண்டு புள்ளிகளை நேர்வரையினால் இணை ; மண உறவால் பிணைவி; நட்பில் இணைவி ; மணத்தொடர்பால் ஒருங்கிணை ; நட்பில் ஒன்றுசேர் ; செயலில் உடன் பங்குகொள் ; சந்தி ; சென்று கூடு ; கழகம் முதலியவற்றில் சேர், உறுப்பினராகு ; படை-கப்பல் முதலியவற்றில் பதவி ஏற்றுக்கொள் ; படை-கப்பல் முதலியவற்றில் மீண்டும் போய்ச்சேர் ; ஆறு முதலியவற்றின் வகையில் சென்றுகல ; (தொ.) join battle, போரிடத் தொடங்கு ; join hands, கைகளைக் கட்டிக்கொள் ; ஒருவரோடொருவர் கை பிணைத்துக்கொள் ; செயலில் இணை, முயற்சியில் ஒருங்கிணை ; join issue, வாதிக்கத் தொடங்கு ; (சட்.) வாதப்பொருளைக் கூட்டாகத் தீர்ப்புக்கு அனுப்பு ; மற்றவர் கூறும் வாதப்பொருளை ஏற்றுக்கொள் ; join up, படையில் சேர்.

join'der, *n.* இணைப்பு ; (சட்.) வாதிகளாக அல்லது எதிர் வாதிகளாக ஒருங்கிணையும் கூட்டிணைவு ; (சட்.) வாதக் கூற்றின் ஏற்பிசைவு.

join'er, *n.* சேர்த்து வைப்பவர், இணைப்பவர் ; சிறு தச்சு வேலை செய்பவர்.

join'ery, *n.* சிறு தச்சுவேலை, வீட்டு தட்டுமுட்டுச் செப்பம் செய்யும் சிறுதிறத் தச்சுத்தொழில்.

joint, *n.* பொருத்து, இரண்டு பொருள்கள் இணைக்கப்படுமிடம் ; கீல், மூட்டு ; எலும்புப் பிணைப்பு ; கணு, இலை அல்லது கிளை வளரும் தண்டின் பகுதி ; மூட்டிணைப்பு, இரு கூறுகளின் செயற்கையான உறுதி இணைப்பு ; இயக்கச் சந்து, வேண்டிய வழியில் மட்டும் இயங்கும்படியாக மூட்டப்பட்ட இணைப்பு ; (மண்.) பெரும்பாறையில் பிளவு, வெடிப்பு; பொருளின் ஆக்கக்கூறு ; தசைக் கண்டம், இறைச்சித் துண்டம் ; *a.* கூட்டான ; இணைந்த ; ஒருங்கிணைவான ; கூட்டுடைமையான ; கூட்டுடைமையாளரான ; ஈரிணைவான ; பொதுவான, உடன்பங்காளியான ; உடன்பங்கான, பொதுக் கூட்டான ; *v.* பொருத்துக்களால் இணை ; இடையே சாந்திட்டுப் பூசி இணை ; இடம் நிரப்பி இணை ; பலகைகளை இழைத்து ஒருசீராக்கிச் சேர் ; கணுக்கணுவாகப் பிரி ; கூறு கூறாகப் பிரி ; (தொ.) during their joint lives, யாவரும் உயிரோடு இருக்கையில் ; joint stock, பொதுமுதல், கூட்டுப் பங்கு, பங்குகளாகப் பிரிக்கப்பட்ட முதல் ; out of joint, எலும்பு வகையில் மூட்டு நழுவிய ; சீர்குலைந்த ; put one's nose out of joint, காதல் இடம் கவர்ந்து கொண்டுவிடு ; நட்பிடம் கவர்ந்து கொண்டுவிடு ; மனங் குலைவுறச் செய் ; தோல்வியுறச் செய்.

join'ter, *n.* பொருத்துபவர், இணைப்பவர் ; இழைப்புளி ; கொல்லறு, சந்து பிசைவதற்கான கொத்தன் கருவி ; மின் கம்பிகளை இணைக்கும் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள ஆள்.

join'tress, *n.* கைம்மை காப்பீட்டுப் பொருள் உடைய கைம்பெண்.

joint'-stock company, *n.* கூட்டுப் பங்குக் கழகம்.

joint'-stool, *n.* தச்சரால் பொருத்தப்பட்ட பாகங்களாலான மணை.

join'ture, *n.* கைம்பெண் நிலையடைந்தால் காப்பதற்கென மனைவிக்கு விடப்பட்டுள்ள சொத்து ; *v.* மனைவி கைம்மை காப்புப் பொருள் அடையுமாறு ஏற்பாடுசெய்.

joist, *n.* திராவி, துலாக்கட்டை, மரவாரை, சுவருக்குச்சுவராக இடும் தளக் குறுக்குக்கட்டை.

joke, *n.* கேலி, விகடம் ; வேடிக்கைப் பேச்சு ; விளையாட்டுத் தனமான செய்தி ; ஏளனத்துக்குரிய நிலை ; *v.* பகடிபண்ணு, கேலி செய் ; ஏளனஞ் செய் ; (தொ.) it is no joke, முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய செய்தி ; practical joke, ஒருவரைக் கேலிக்கு உட்படுத்தும் குறும்புச்செயல்.

jok'er, *n.* கேலிசெய்பவர், பகடி பண்ணுகிறவர் ; வேழம்பர் ; சீட்டாட்ட வகையில் மிகவுயர்ந்த துருப்பாகக் கருதப்படும் ஒற்றை வெற்றுச்சீட்டு.

jo'kul, *jo'kull*, *n.* ஐஸ்லாந்திலுள்ள பனிமலை.

joll'ify, *v.* மகிழ்ச்சியோடிரு, உல்லாசமாயிரு ; அடிக்கடி மதுபானஞ் செய் ; குடியருந்துவி ; மகிழ்வோடிருக்கச் செய்.

joll'ity, *n.* விளையாட்டயர்வு, மகிழ்ச்சிக் கொண்டாட்டம்.

joll'y, *n.* கப்பலிலுள்ள சிறு படகுவகை ; கடற்படை வீரன் ; கழிமகிழ்வாட்டம் ; *a.* கழிமகிழ்வான ; மிக்க மகிழ்ச்சி தருகிற ; சிறிது குடிபோதையிலிருக்கிற ; கொண்டாட்டமான ; (பே-வ.) மிக இன்பமான, களி கிளர்ச்சியான ; *v.* (பே-வ.) புகழ்ந்து பசப்பு, கெஞ்சு ; கேலிபண்ணு, ஏளனம் செய் ; *adv.* (பே-வ.) மிக ; (தொ.) the jolly god, கிரேக்க மதுக்கடவுள்.

joll'y-boat, *n.* கப்பலில் உள்ள சிறு படகு வகை.

jolt, *n.* தூக்கியெறிவு ; இருப்பூர்தியின் குலுக்காட்டம் ; *v.* குலுக்கு, திடீர் விசையுடன் தூக்கியெறி ; வண்டி வகையில் கடக்குக் கடக்கென்று ஆட்டங்கொண்டு செல்.

jol'terhead, *n.* பெரிய அருவருப்பான மண்டை ; அறிவற்றவன்.

Jon'ah, *n.* அவக்கேடு கொண்டுவருபவர் ; கேட்டைக் கொண்டுவந்து விடுவாரே என்பதற்காகப் பலியிடப்பெறுபவர்.

Jon'athan, *n.* அமெரிக்க குடிமக்களின் உருமாதிரி, அமெரிக்க மக்களினம் ; உணவின்பின் அருந்துவதற்குரிய ஆப்பிள் பழவகை ; (தொ.) Brother Jonathan, அமெரிக்க மக்களின் உருமாதிரி, அமெரிக்க மக்கள் வகுப்பு.

jongleur, (பிர.) *n.* (வர.) பாணன், இடத்துக்கிடம் திரிந்து செல்லும் பாடகன், நாடோடிப் பாடகன்.

jonq'uil, *n.* நாணல் போன்ற இலைகளையுடைய தாழைவகை; தாழை வகையின் நிறம் ; இளமஞ்சள் வண்ணம்.

jord'an, *n.* சிறுநீர்க்கலம்.

Jord'an alm'ond, *n.* தெற்கு ஸ்பெயினிலுள்ள மலாகா (Malaga) என்னும் துறைமுகப்பட்டினத்திலிருந்து கிடைக்கும் கேர்த்தியான வாதுமை வகை.

jor'um, *n.* பெரிய குடிகலம் ; பெரிய குடிகலத்திலுள்ள பான வகை.

Jos'eph[1], *n.* தூய மனிதன்.

jos'eph[2], *n.* 18-ஆம் நூற்றாண்டில் பெண்கள் அணிந்துவந்த நீண்ட குதிரையேற்ற அங்கி.

joss, *n.* சின வழிபாட்டுச் சிலை உரு.

joss'-house, *n.* சீனக்கோயில்.

joss'-stick, *n.* சமித்துப் பிசின்கட்டை, சீனர் தங்கள் கடவுளர்களுக்குத் தூபமிடுவதற்காக எரிக்கும் பிசின்தடவிய குச்சி வகை.

jo'stle, *n.* நெருக்கடிப்பு ; நேரடிமோதல் ; *v.* நெருக்கித் தள்ளு, முட்டி மோது ; பிடித்துப்பறிக்கப் பூசலிடு ; நெருக்கு, முழங்கையினால் இடித்துத்தள்ளு.

jot, *n.* புள்ளியளவு, அணு ; சிறிது, அற்பம் ; *v.* அவசரமாக எழுதிக்கொள், சுருக்கக் குறிப்பெடு.

joule, *n.* (மின்.) வேலை ஊக்க ஆற்றலின் அலகு.

jounce, *v.* மேல்விழுந்து மோது, துள்ளிக்குதி.

journ'al[1], *n.* நாட்குறிப்புச் சுவடி ; அன்றாட நடப்புக் குறிப்பு ; தொழிற்கணக்கு முறையில் நாளேடு ; செய்தித்தாள், பத்திரிகை ; (கப்.) குறிப்புப் புத்தகம் ; (தொ.) the Journals, பாராளுமன்ற அன்றாட நடவடிக்கைக் குறிப்புக்கள்.

journ'al[2], *n.* இருசுக்கடை, தெய்வுருளைகளுடன் இணையும் ஊடச்சின் பகுதி.

journalese', *n.* பத்திரிகைகளுக்குரிய எழுத்துநடை; கீழ்த் தரப் பத்திரிகைகளின் நடை; ஆய்வமைவற்ற அவசரப் பத்திரிகை நடை.

journ'alist, *n.* இதழாசிரியர்; பத்திரிகை எழுத்தாளர்.

journ'alize, *v.* நாளேட்டிற் பதிவுசெய்; நாட்குறிப்பேடு பேணு; நாட்குறிப்பேட்டிற் பதிவுசெய்.

journ'ey, *n.* சிறுதொலைப் பயணம், பயண அளவு; பயணம்; சுற்றுப்பயணம்; தரைச்செலவு; *pl.* jour'neys; *v.* பயணஞ் செய்.

journ'eyman, *n.* மற்றொருவருக்காக வேலை செய்யுங் கலைத் தொழிலாளர்; மற்றொருவருக்காக வேலைசெய்யும் பொறித் தொழிலாளர்; நாள் வேலையாள்; கூலியாள்; கூலிக்கு உழைப்பவர்; பயிற்சிப்பருவ முடித்துவிட்ட தொழிலாளி; மின்னியக்கத் தொடர்புடைய கடிகார முகப்பு; வானுராய்ச்சி நிலையத்தில் துணைமணிப்பொறி.

journ'eyman clock, *n.* வானுராய்ச்சி நிலையத்தில் துணை மணிப்பொறி.

journ'ey-work, *n.* கூலியாள் வேலை.

joust, *n.* திருத்தகை வீரர் குதிரைமீதிவர்ந்து செய்யும் ஈட்டிப் போர்; *v.* குதிரைமீதேறி ஈட்டிப் போர்செய்.

Jove, *n.* ஜூபிட்டர் என்ற பண்டை ரோமாபுரிப் பெருந் தெய்வம்; (தொ.) by Jove! கடவுள் ஆணையாக!

jov'ial, *a.* களிப்பான, மகிழ்ச்சி விளைவிக்கிற; விருந்துக் கொண்டாட்டத்துக்குரிய.

jovial'ity, *n.* மகிழ்ச்சி.

Jov'ian, *a.* ரோமானியப் பெருந்தெய்வம் சார்ந்த; அத் தெய்வம் போன்ற; கோள்வகையில் வியாழன் சார்ந்த.

jowl, *n.* தாடை எலும்பு, தாடை; கன்னம்; முனைப்பு வெளிக்கழுத்து, முனைப்பான தொண்டை; கால்நடைகளின் அலைதாடி; பறவைகளின் முதல் இரைப்பை; மீன் வகைகளின் தலையும் அதையடுத்துள்ள பாகங்களும்; (தொ.) cheek by jowl, நெருக்கமாக, ஒன்றுக இணைந்து.

joy, *n.* மகிழ்ச்சி, களிப்பு; உவகையளிக்கும் செய்தி; *v.* (செய்.) மகிழ், களி; மகிழ்வூட்டு.

joy'-bells, *n.* கொண்டாட்டக் காலங்களில் அடிக்கப்படும் மணி.

joy'-ride, *n.* பொறிவண்டி இன்பச் சுற்றுலா; திருட்டுத்தனமாகக் கிட்டிய பொறிவண்டியில் இன்பப் பயணஞ் செய்தல்; *v.* இன்பப் பொறிவண்டியில் பயணஞ் செய், மற்றொருவர் வண்டியில் இன்பச் சுற்றுப் பயணம் நடத்து.

jub'ilance, *n.* பெருமகிழ்ச்சி; கிளர்ச்சியாரவாரம்.

jub'ilant, *a.* மகிழ்ச்சிகொண்டு ஆரவாரிக்கிற, நாவலிட்டார்ப்பரிக்கிற, விழாக்கொண்டாடுகிற.

Jubilat'e[1], (ல.) *n.* ஆங்கிலத்தோத்திரச் சுவடியில் நூருவது பாசுரம்; நாவல் நாளோதை, வெற்றியார்ப்பரிப்பு.

jub'ilate[2], *v.* பெருமகிழ்ச்சி கொள், களிப்பாரவாரஞ் செய்.

jub'ilee, *n.* யூதர்களிடையே 50 ஆண்டுகட்கொருமுறை கொண்டாடப்பட்ட விடுதலை மீட்சி விழா; ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பாவமன்னிப்புக்குரிய ஆண்டின் விழா; ஐம்பதாம் ஆண்டு நிறைவுவிழா; விழாக்காலம்; பெருமகிழ்ச்சிப் பருவம்; மீதூரும் மகிழ்ச்சி; (தொ.) diamond jubilee, அறுபதாவது ஆண்டு நிறைவுவிழா; Diamond Jubilee, பிரிட்டனை ஆண்ட விக்டோரியா அரசி ஆட்சியின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா; silver jubilee, இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவு விழா.

Juda'ic, *a.* யூதர்களுக்குரிய.

Jud'aism, *n.* யூதர் வினைமுறைக் கோட்பாடுகளின் தொகுதி; யூதர் வினைமுறைகளைப் பின்பற்றுதல்.

Jud'aize, *v.* யூதர் பழக்கவழக்கச் சடங்குகளைக் கடைப்பிடி; யூதர் ஆக்கு.

Jud'as[1], *n.* இயேசுநாதரைக் காட்டிக்கொடுத்த சீடர்; காட்டிக் கொடுப்பவர், கருங்காலி.

jud'as[2], *n.* கதவினூடே மறைந்திருந்து பார்ப்பதற்கான சந்து

Jud'as-colour, *n.* சிவப்பு நிறம்.

Jud'as-coloured, *a.* சிவப்பான.

Jud'as-kiss, *n.* அன்பு செய்வதுபோல் காட்டிக்கொடுக்கும் நயவஞ்சகச் செயல், நச்சுப்பாசப் பசப்பு.

Jud'as-tree, *n.* இலைகளுக்கு முன்பே தோன்றும் ஊதா மலர்களையுடைய மரவகை.

judd'er, *n.* பாடுபவர் குரல் எழுச்சி தாழ்ச்சியால் ஏற்படும் அதிர்வு மாறுாட்டம்; வானூர்தியில் ஏற்படும் அதிர்வலை.

Jud'enhetze, (செர்.) *n.* திட்டமிட்டு யூதர்களைத் தொல்லைக்கு உள்ளாக்குதல்.

judge, *n.* முறை முதல்வர், நீதிபதி; மீமிசை நடுவர்; கடவுள்; தீர்ப்பளிப்பவர்; நடுவர், நடுநிலைத் தீர்ப்பாளர்; நடுவணர், போட்டிகளில் தீர்ப்புச் செய்பவர்; சான்ருளர், போட்டிப் பரிசளிப்பவர்; மதிவலர், நலஞ்சீர்தூக்கி மதிப்பவர்; துறை வல்லுநர், தேர்வுணர்வாளர்; சான்றோர்; (வர.) யூதரிடையே படைத்துறை ஆட்சித்துறை அதிகாரங்களையுடைய மீநடுவர்; (வர.) யூதரிடையே ஜோஷுவா (Joshua) காலத்துக்கும் மன்னர்கள் காலத்துக்கும் இடைப்பட்ட ஊழியில் தலைமைப் பணி முதல்வர்; *v.* நீதிபதியாகப் பணிசெய்; கேள்வி முறை செய்; வழக்காராய், விசாரணை நடத்து; தீர்ப்பளி; தீர்ப்பாணை வழங்கு, தண்டனை விதி; வாத முடிவுசெய்; மதித்துணர், மதிப்பிடு; செய்திகளை ஒப்பிட்டு மதித்துரை; குணங்குறை தேர்ந்துரை; தேர்ந்து முடிவுபடுத்தும் அதிகாரம் மேற்கொள்; திறனுய்ந்துரை; குற்றங்காண்; கண்டித்துரை; கருது; முடிவான கருத்துக் கொள்; கருத்து முடிவுரை; நேர்மையான முடிபு கூறு; சட்டமுடிபு தெரிவி; நலந்தேர்ந்துரை; (தொ.) Judge Advocate General, படைத்துறை மன்றங்களின் மேலாண்மை வகிக்கும் உள்துறை அலுவலர்.

judge'-made, *a.* நடுவர்களால் இயற்றப்பட்ட, நீதிமன்றத் தீர்ப்பினுல் தோற்றுவிக்கப்பட்ட; (தொ.) judge-made law, நடுவர்களின் தீர்ப்புக்களை அடிப்படையாகக்கொண்ட தத்துவம்.

judgemat'ic, judgemat'ical, *a.* (பே-வ.) ஆய்வறிவுடைய, பகுத்துணர்வுள்ள.

judge'ment, *n.* முறைமன்றத் தீர்ப்பு, விதிக்கப்பட்ட தண்டனை; கடவுள் சீற்றத்தின் அடையாளமெனக் கருதப்படும் பொல்லாங்கு; திறனுய்வு முடிவு; மதிப்பீடு; கருத்து; கண்டனம்; திறனுய்வுப் பண்பு; நுண்ணறிவாற்றல், பகுத்துணர்வு; (தொ.) judgement creditor, எதிர்த்தீர்ப்புப் பெற்ற கடன் கொடையாளர்; judgement debt, கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பான கடன்; judgement debtor, எதிர்த் தீர்ப்புப்பெற்ற கடனுளி; judgement summons, கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பான கடனைச் செலுத்தத் தவறிய தன் பயனுன அழைப்பாணை; the last judgement, கடைநாள் தீர்ப்பு.

judge'ment-day, *n.* ஊழிக்கடைத் தீர்ப்பு நாள், கடவுளின் இறுதித் தீர்ப்புநாள்.

judge'ment-seat, *n.* நீதிபதி இருக்கை; முறைமன்றத் தலைமை.

Judg'es, *n. pl.* (விவி.) பழைய ஏற்பாட்டின் ஏழாவது சுவடி.

judg'ment, *n.* = judgement.

jud'icature, *n.* நீதித்துறையாட்சி; நீதித்துறை; முறை நடுவர் பணி; நடுவர் பதவிக்காலம்; மொத்த நீதிபதிகளின் தொகுதி; முறைமன்றம்.

judi'cial, *a.* முறைமன்றம் சார்ந்த; நீதிமன்றத்தினுல் செய்யப்பட்ட; நீதிமன்றத்துக்குகந்த; நிலவரச்சட்ட அமைப்புக்குரிய; சட்டத்தினுல் நிலைபேருக்கப்பட்ட; நீதிபதி சார்ந்த; நீதிபதிக்குகந்த; தீர்ப்புக்குரிய; தீர்ப்பினைத் தெரிவிக்கிற; தீர்ப்பாய்வுக் கடமையுடைய; நுண்ணுய்வுடைய; காய்தல் உவத்தலகற்றிய, நடுநிலையான, நடுநிலையுணர்வுடன் கூடிய; இறைவன் தீர்ப்புக்குரிய.

judi'ciary, *n.* நீதிநிலையத் துறை; நீதிமன்ற அமைப்பு; நாட்டின் நீதிபதிகள் அனைவரின் மொத்தத் தொகுதி; *a.* நீதிபதி சார்ந்த; நீதிமன்றத்துக்குரிய; தீர்ப்புக்குரிய.

judi'cious, *a.* நல்லறிவுடைய, முன்கவனமான, கூர்த்த மதியுடைய.

ju'do, *n.* ஜப்பானிய மற்போர் முறை.

jug[1], *n.* கூசா, கைப்பிடியும் மூக்கும் உடைய நீர்க்கலம்; *v.* சாடியிலிட்டுப் புழுக்கு, முயல் முதலியவற்றைக் கூசாவினுள்ளிட்டு வேகவை.

jug[2], *n.* பறவை வகைகள் எழுப்பும் ஒலி; *v.* பறவை வகைகளின் அகவொலியெழுப்பு.

jug'ate, *a.* (தாவ.) சிற்றிலையுறுப்புக்களை இரட்டைகளாக வுடைய.

Jugg'ernaut, (ச.) *n.* பூரிசகநாதம் என்னும் இடத்தில் கண்ணன் திருவுரு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படுவதற்குரிய பெரிய தேர்; மூடபக்திக்கிரையாகி மக்கள் தம்மைப் பலிகொடுத்தழியும் இடம்; மக்கட்பலி ஏற்கும் பண்பு; மக்கட் பலிகொள்ளும் அமைப்பு; (தொ.) Juggernaut car, பூரிசகநாதத் தேர்; மக்கள் குருட்டுப்பக்தி காரணமாகத் தாமே வந்து பலியாவதற்குரிய அமைப்பு.

jug'gle, *n.* எத்துமானம், ஏமாற்று; *v.* பொறித்தட்டு வித்தைகள் செய்; வஞ்சி, ஏமாற்று; மோசஞ் செய்; செய்திகளைத் திரித்துக்கூறு; ஏமாற்று வித்தையினால் தட்டிப்பறி; பொறித்தட்டு வித்தையினால் மாருட்டஞ் செய்; சூழ்ச்சி முறையால் தட்டிச்செல்.

jugg'ler, *n.* செப்படி வித்தைக்காரர்; பொறித்தட்டாளர்; ஏமாற்றுக்காரர், எத்தர்; ஆள்மாருட்டஞ் செய்பவர்.

jugg'lery, *n.* செப்படி வித்தை; ஏமாற்று, புரட்டு, மோசடி.

jug'-jug', *n.* பாடும் பறவை எழுப்பும் மெல்லிய அகவொலி.

Jug'oslav, *n.*=Yugoslav.

jug'ular, *n.* கழுத்துப் பெருநரம்பு; *a.* கழுத்து அல்லது தொண்டை சார்ந்த; மீன் வகையில் நெஞ்சுத் துடுப்புக்களுக்கு முன்னால் வயிற்றுத் துடுப்புக்களையுடைய.

jug'ulate, *v.* கொல்; கழுத்தை நெரித்துக் கொலைசெய்; ஆற்றல் மிக்க மருந்தால் நோய்க் காலத்தைக் கட்டுப்படுத்து.

juice, *n.* சாறு; சத்து; உயிர்க்கூறு; விலங்குடம்பின் நீர்க்கூறு; (தொ.) the juices, உடம்பின் நீர்க்கூறுகள், தாதுக்கள்.

jui'cy, *a.* நிரம்பச் சாறுள்ள, கனிந்த; வானிலை வகையில் ஈரமான, மழையான; (பே-வ.) அறிவுவளமுடைய; சுவையான; கவர்ச்சியாற்றலுள்ள.

ju-ju, (பிர.) *n.* மேற்கு ஆப்பிரிக்காவின் போலிவணக்கப் பொருள், தாயத்து; தாயத்தினால் விளைக்கப்படும் தடை.

ju'jube, *n.* இலந்தை மரவகை; இலந்தைவகைப்பழம்; சர்க்கரையும் ஊன்பசையும் கலந்து இலந்தைப்பழ உருவில் செய்யப்படும் மருந்துவில்லை.

ju-jutsu', *n.* ஜப்பானிய மற்போர் முறை.

juke'-box, *n.* தானியல் இசைப்பெட்டி, நாணய வில்லை செருகப்பட்டால் குறிப்பிட்ட இசைத்தட்டுக்களைத் தானே இயக்கிப் பாடவைக்கும் இயந்திரம்.

jul'ep, *n.* இனிப்புப்பானம்; மருந்துக்குச் சுவையூட்டும் இன்குடிநீர்; குடிநீர் ஊக்குமருந்து; பனிக்கட்டி அல்லது மணப்பொருள் ஊட்டப்பட்ட நீர்ச்சாராயக் கலவை.

Jul'ian, *a.* ஜூலியஸ் சீசர் (Julius Caesar கி. மு. 100-44) என்ற ரோமாபுரிப் பேரரசுத் தலைவருக்குரிய; (தொ.) Julian calendar, ஜூலியஸ் சீசரால் நடைமுறைக்குக் கொணரப்பட்ட ஆண்டுப்பட்டி.

julienne, (பிர.) *n.* இறைச்சிச் சாறுடன் வேகவைக்கப்பட்ட காய்கறிக் குழம்பு.

July', *n.* ஆங்கில ஆண்டின் ஏழாவது மாதம்.

jum'bal, jum'ble[1], *n.* மெல்லிய பொருபொருப்பான இனிப்புப் பண்ணிய வகைகள்.

jum'ble[2], *n.* பல்பொருள் கூட்டுக்குவியல், கும்பல் கூளம்; குழப்பநிலை, தாறுமாறான நிலை, அலங்கோலம்; குலுக்கீடு, கலைப்பு; *v.* கும்பல் கூளமாகத்திரட்டு; தாறுமாறாக்கல, அலங்கோலமாக்கு; ஒருங்குகூட்டிக் கலை, செப்பம் குலைவி; குழப்பு, கலைவுறு, கலந்துபோ.

jum'ble-sale, *n.* மலிவான பல்கூட்டுச் சரக்கு விற்பனை.

jum'ble-shop, *n.* பல்கூட்டுச் சரக்கு விற்பனைக்கடை.

jum'bo[1], *n.* பருத்த அருவருப்பான ஆள்; பருத்த அருவருப்பான விலங்கு; பருத்த அருவருப்பான பொருள்; குறிப்பிடத்தக்க அளவு பெருவெற்றி காண்பவர்; *pl.* jum'bos.

Jum'bo[2], *n.* லண்டன் நகர விலங்குக் காட்சிச்சாலையிலுள்ள பெயர்பெற்ற யானை.

jump, *n.* குதிப்பு; துள்ளல், எழும்புதல்; தாவல், தாண்டுதல்; குலுக்கம், திடீர் அசைவு; அதிர்ச்சி; கிளர்ச்சிக் குதியாட்டம்; திடீர் ஏற்றம், பெரும்படி உயர்வு; திடீர் மாறுபாடு; இடையறவு, தொடர்பறவு, இடைப்பிளவு; *v.* துள்ளிக்குதி; திடீரென எழும்பு; குலுங்கு, திடீர் அசைவுறு; அதிர்ச்சியினால் திடீரெனத் துள்ளு, கிளர்ச்சியினால் குலுக்குறு; விலை வகையில் திடுமென உயர்வுறு; தாவிக்குதி; தாவிமேற்குதி; தாண்டு, தாவிக்கடந்து செல்; படியாமலே விட்டு மேற்கடந்து செல்; மேற்போக்காகத் தொட்டுத் தடவிச்செல்; மற்றவர் அறியாமலே அவரை விஞ்சி மேற்செல்; இருப்பூர்தி வகையில் பாதையை விட்டு விலகிச்செல்; குழந்தையைக் குதிக்கவை; துள்ளவை; திடுக்கிடவை, திகைக்கச் செய்; திடீரெனப் பாய்ந்து பிடி; ஆவலுடன் கைப்பற்று; விட்டுச்சென்றதைத் தனதாக்கிக்கொள்; கைவிட்டதைத் திடுமெனக் கைக்கொள்; இடைவிட்டு விட்டுச்செல்; அவசர முடிவுக்கு வா; திடீரெனத்தாக்கு; திடீரென ஏற்றுக்கொள்; முற்றிலும் இசைவுறு; சரியொத்து உடம்படு; உருளைக்கிழங்கு முதலியவற்றை வாணலியிலிட்டுக் கிளறி வறு; கெட்டுளியால் பாறையைத் துளைசெய்; (தொ.) high jump, பயிற்சி விளையாட்டுப் போட்டி வகையில் உயர் குதிப்போட்டி; jump at, ஆவலுடன் ஒப்புக்கொள், விரைந்து ஏற்றுக்கொள்; jump down one's throat, கடுமையாகத் திட்டி விடையளி; கடுமையான வசையுடன் இடையீடு செய்; jump for joy, பெருமகிழ்ச்சியினால் துள்ளு, அடங்கா மகிழ்ச்சிகொள்; jump in, வண்டி முதலியவற்றில் விரைவாக ஏறு; jump on, jump upon, குற்றவாளி முதலியவர்களைச் சொல்லாலோ செயலாலோ பணியும்படி தாக்கு; jump out of one's skin, வியப்பினால் துள்ளு, திடீர் வியப்புறு; jump over the broomstick, கட்டுப்பாடின்றித் திருமணம் செய்துகொள்; jump the gun, பந்தயச் சமிக்கை வேட்டு வகையில் சரியான காலத்துக்குமுன்பே வெடி; உரிய பருவம் வருமுன் செயலாற்று; நேர்மையற்ற நலம்பெறு; jump the queue, உரிமையின்றி வரிசையில் இடம்பெறு; வரிசையில் முறைகடந்து முந்து; long jump, உடற்பயிற்சித்துறையில் நீளத்தாவும் போட்டி; the jumps, (பே-வ.) மயக்கவெறித் துடிப்பு.

jum'per[1], *n.* பாய்பவர், குதிப்பவர்; குதிப்பது; வேல்ஸ் நாட்டு மெதடிஸ்ட் (Welsh Methodist) திருச்சபையைச் சேர்ந்தவர்; தத்துப் பூச்சி வகை; பாய்மரக் குறுக்குச் சட்டங்களை இறுக்கிப்பிடிக்குங் கயிறு; பாறை துளைபோடுவதற்குப் பயன்படும் கெட்டுளி.

jum'per[2], *n.* கப்பலோட்டிகளின் தளர்த்தியான கித்தான் மேற்சட்டை; இடுப்பு வரையில் தொங்கும்படி மகளிர் அணியும் தளர்த்தியான மேற்சட்டை.

jum'ping, *a.* குதிக்கிற, தத்துகிற; (தொ.) jumping cat, பொதுமக்கள் கருத்து உருவாகிற வரையில் வாளா இருக்கிற அரசியல்வாதி.

jump'ing-bean, *n.* உள்ளிருக்கும் முட்டைப்புழுவின் செயலால் அசைகிற மெக்சிகோ நாட்டுச் செடி வகையின் விதை.

jump'ing-deer, *n.* கறுப்பு வாலுள்ள வட அமெரிக்க மான் வகை.

junc'tion, *n.* இணைப்பு; இணைப்பிடம்; இரு கிளையாறுகளின் கூடல்; இரு பாதைகள் சேருமிடம்; புகைவண்டிப் பாதைகளின் சந்திப்பு.

junc'ture, *n.* இணைவு; இணைபகுதி; கூடுமிடம்; வேளை, நிகழ்ச்சிகள் வந்துகூடும் நேரம்; தறுவாய், ஏல்லை, திருப்புக் கட்ட வேளை.

June, *n.* ஆங்கில ஆண்டின் ஆறாவது மாதம்.

jun'gle, (இ.) *n.* தூறு, புதர்க்காடு, குறுங்காடு; இறும்பு, அடர்ந்த வெப்பமண்டலக்காடு; (தொ.) jungle fever, கடுமையான மலைக்காய்ச்சல் வகை.

jun'ior, *n.* இளையோர்; இளமுறையோர்; இளம்படியினர்; பிந்தியவர்; பிற்பட்டவர்; பின்னால் வந்தவர்; சிறியவர்; *a.* இளைய; சின்ன; பிந்திய; குறைந்த நீடிப்புள்ள; தாழ்ந்த படியுடைய, கீழ்நிலையிலிருக்கிற.

jun'iorate, *n.* இயேசு சங்கத்தாரிடையே இளம்படியினர் சமயகுரு பதவியை ஏற்குமுன் மேற்கொள்ள வேண்டிய இரண்டாண்டுப் பயிற்சி.

jun'iper, *n.* உதிரா ஊசியிலைகளையுடைய புதர்ச்செடி வகை; (தொ.) common juniper, முள்ளிலைகளையும் கறுப்புப் பழங்களையுமுடைய புதர்ச்செடி வகை; oil of juniper, புதர்ச் செடி வகையின் பழங்களிலிருந்து செய்யப்பட்டு மருந்திலும் குடிவகையிலும் பயன்படும் எண்ணெய்.

junk[1], *n.* பழங்கயிற்றுத் துண்டுகள்; கழிக்கப்பட்ட பொருள், குப்பை கூளம்; மொத்தை, கட்டி, பருந்துண்டு; (கப்.) உப்புக்கண்டம்; கொழுப்புத்தரும் திமிங்கில வகையின் தலையில் மொத்தையாகக் காணப்படும் இழைமம்; *v.* துண்டுக் கயிறுகளாக வெட்டு.

junk[2], *n.* சீனக்கடல்களிற் செல்லுந் தட்டையான அடிப்பாகமுடைய மரக்கல வகை.

junk'er, (செர்.) *n.* செர்மன் நாட்டு இளங்கோமகன்; பிரஷ்யாவில் (Prussia) தனி உரிமையுடைய உயர்குடியாட்சிக் கட்சியைச் சேர்ந்தவர்.

junk'et, *n.* மேலே பாலேடு கவித்த இனிப்பூட்டிய தயிர்ப் பண்ணியம்; விருந்து; *v.* விருந்தயர், மகிழ்வுலா விருந்து நுகர்.

junk'eting, *n.* மகிழ்வுலா விருந்து, நிலா விருந்து.

junk'-shop, *n.* கப்பற் பழங்கலப்பொருள்களின் பண்டகசாலை.

Jun'o, *n.* ஜூபிட்டர் என்னும் ரோமப் பெருந்தெய்வத்தின் மனைவி; வீறுர்ந்த அழகு வாய்ந்த பெண்; (வான்.) செவ்வாய்-வியாழன் ஆகிய கோள்களின் பாதைகளுக்கிடையே ஞாயிற்றினைச் சுற்றிச் சுழலும் சிறு கோள்களில் மூன்றாவதான கோள்; *pl.* Jun'os.

jun'ta, *n.* ஸ்பானிய அல்லது இத்தாலிய நாடுகளில் செயலாட்சிக்குழு அல்லது ஆய்வுக்குழு.

jun'to, *n.* உட்கட்சிக்குழு, குறுங்குழு; தன்னலக்கும்பல்; அரசியல் அல்லது வேறு நோக்கங்களுக்கான மறை சூழ்ச்சிக் கூட்டம்; *pl.* jun'tos.

jupe, (பிர.) *n.* மகளிர் பாவாடை.

Ju'piter, *n.* ரோமானியப் பெருந்தெய்வம்; வியாழக்கோள்; (தொ.) Jupiter Pluvius, ரோமர் மழைக்கடவுள்.

jur'al, *a.* சட்டம் பற்றிய, ஒழுக்கநல உரிமைகள் கடமைகள் சார்ந்த.

Jurass'ic, *a.* (மண்.) பிரஞ்சு நாட்டுக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையிலுள்ள ஜூரா (Jura) மலைகள் சார்ந்த; மணிச் சுண்ணக்கல் அடுக்குச் சார்ந்த.

jur'at, *n.* நகரத் தந்தையாரையொத்த நகராட்சி அலுவலர்; ஆங்கிலக் கடற்கால் தீவுகளில் (Channel Islands) உள்ள வாழ்நாள் குற்றநடுவர்.

jurid'ical, *a.* முறைமன்ற நடவடிக்கைகள் சார்ந்த; சட்டம் பற்றிய.

jur'isconsult', *n.* சட்டம் படித்தவர், சட்ட அறிஞர், சட்ட வல்லுநர்.

jurisdic'tion, *n.* சட்ட ஆட்சி, சட்ட அதிகாரம், நீதியின் செயலாட்சி; சட்ட மேலுரிமை; சட்ட ஆட்சி எல்லை; சட்ட ஆட்சிப் பரப்பு; அதிகார எல்லை; விசாரணை அதிகாரம்.

jurisprud'ence, *n.* சட்ட இயல், மனித சமுதாயச் சட்டம் பற்றிய நூல்; சட்டத்துறை மெய்விளக்க இயல்; சட்டத் துறைக் கோட்பாடு; சட்டத்துறைத் திறமை.

jurisprud'ent, *n.* சட்ட வல்லுநர்; *a.* சட்ட அறிவார்ந்த.

jurispruden'tial, *a.* சட்ட இயல் சார்ந்த.

jur'ist, *n.* சட்ட வல்லுநர், சட்ட அறிஞர்; சட்டங்கள் பற்றி எழுதுபவர்; சட்ட மாணவர்; சட்டத்துறைப் பட்டதாரி.

jur'or, *n.* முறைகாண் ஆயத்தின் உறுப்பினர், அறங்கூறுநர்; சூளுறவு செய்பவர்.

jur'y, *n.* முறைகாண் ஆயம், அறங்கூறுயம், முறைமன்றத்தில் தங்களுக்கு முன் கூறப்பட்ட வழக்கில் முடிவு தெரிவிப்பதாக ஆணையிட்டமர்ந்திருப்பவர்கள்; பரிசாயம், போட்டிகளில் பரிசுகள் வழங்குவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்; (தொ.) common jury, petty jury, trial jury, உரிமை அல்லது குற்றம் பற்றிய வழக்குகளில் நிகழ்வுபற்றிய முடிவான விவாதத்தை ஆய்ந்து ஒருமனதாகத் தீர்ப்புக்கூறும் 12 பேர் கொண்ட ஆயம்; coroner's jury, கொலைகளிலும் ஊறுடை இடர்களிலும் பிண ஆய்வு அதிகாரிக்குத் துணை புரியும் முறைகாண் ஆயம்; grand jury, குற்றச்சாட்டுக்கள் முடிவான முறைகாண் ஆயத்துக்கு அனுப்பப்படுவதற்கு முன் அவற்றைப்பற்றி ஆய்வதற்கு அமர்விக்கப்படும் 12 பேர் முதல் 23 பேர் வரையில் கொண்ட குழு; jury of matrons, (சட்.) ஒருத்தி கருவுற்றிருப்பதைக்குறித்து முடிவுகூற முன்னுட்களில் அமர்த்தப்பட்ட பெண்கள் கொண்ட முறைகாண் ஆயம்; special jury, சமுதாயத்தில் குறிப்பிட்ட நிலை எய்தியுள்ளவர்கள் கொண்ட முறைகாண் ஆயம்.

jur'y-box, *n.* நீதிமன்றத்தில் முறைகாண் ஆயத்தினர் அமரும் தனியிடம்.

jur'yman, *n.* முறைகாண் ஆயத்தின் உறுப்பினரான ஆடவர்.

jur'y-mast, *n.* ஒடிந்துபோன அல்லது கெட்டுப்போன பாய் மரத்துக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் தற்காலிகப் பாய்மரம்.

jur'ywoman, *n.* முறைகாண் ஆயத்தின் உறுப்பினரான மாது.

juss'ive, *a.* (இலக்.) வியங்கோளான, கட்டளை காட்டுகிற.

just[1], *n., v.* = joust.

just[2], *a.* நடத்தை வகையில் நேர்மையான, முறைதவறாத; கொடை-தீர்ப்பு முதலியவற்றின் வகையில் நடுநிலை கோடாத; உரிமை வகையில் நியாயமான, நேரிய; அளவு வகையில் சரியான; பரிசு வகையில் பெறுந்தகுதியுடைய; கருத்து வகையில் நல்ல ஆதாரமுடைய; உணர்ச்சி வகையில் ஒப்புரவார்ந்த; *adv.* சரியாக, துளிகூடப் பிசகாமல்; அப்படியே; கணக்காக, கணக்கான நேரத்தில்; இப்போதுதான்; போதும் போதாததாக, சற்றுக்குறைந்த நிலையிலேயே; (பே-வ.) உறுதியாக, முற்றிலும்; (தொ.) just now, இப்போதுதான், இந்தக்கணத்தில்; சற்றுமுன்.

jus'tice, *n.* நேர்மை, முறைமை, நீதி; முறைதவறா நடத்தை; நடுநிலை, ஒருசார்பின்மை; ஒப்புரவு; நேரிய செயலாட்சி, உரிமை காப்பதில் அதிகாரம் செலுத்தல்; நீதிமன்ற நடவடிக்கைத்துறை; உயர்நீதிமன்ற நீதிபதி; குற்றநடுவர்; (தொ.) do justice to, நேர்மை காட்டு; தக்கவாறு பாராட்டு; do oneself justice, திறமைக்குத் தக்கவாறு செயலாற்று; Justice of the Peace, அமைதிகாவல் நடுவர், நாட்டின் அமைதி காப்பதற்கென நியமிக்கப்படும் பொதுநிலைக் குற்ற நடுவர்; poetic justice, கவிதை நேர்மை, இலட்சிய நியாயம்.

justi'ciable, *n.* மற்றொருவருடைய விசாரணை அதிகாரத்துக்கு உட்பட்டவர்; *a.* நீதிமன்ற விசாரணைக்குட்பட்ட.

justi'ciar, *n.* (வர.) பிரிட்டனில் நார்மன் அரசர்கள் காலத்திலும் அவர்களுக்குப் பின்னர் 13-ஆம் நூற்றாண்டுவரை ஆண்ட அரசர்கள் காலத்திலும் இருந்த முதன்மையான அரசியல்-நீதித்தலைமை அலுவலர்.

justi'ciary, *n.* நீதித்துறையாட்சி செலுத்துபவர்; *a.* நீதித் துறை ஆட்சிமுறைபற்றிய.

jus'tifiable, *a.* நேர்மையென எண்பிக்கப்படத்தக்க, சரியென ஆதரிக்கப்படத்தக்க.

justifica'tion, *n.* எண்பிப்பு; சரியென நிறுவுகை; உரிமை மெய்ப்பிப்பு; நேர்மை எனக் காட்டுதற்குரிய அடிப்படை நியாயம்; பாவமன்னிப்பு; உரிமைக்காப்பு விளக்கம், போதிய காரணமிருக்கிறதென்னும் வாதம்.

jus'tify, *v.* எண்பி, நிறுவு; நேர்மையென விளக்கு, சரியெனக் காட்டு; உரிமை மெய்ப்பி, உரிமைக்கு ஆதரவளி; நிகழ்ச்சிகள் வகையில் சரியானவையெனச் சொல்லத்தக்கவையாயிரு; நடத்தை-உரிமை முதலியவற்றின் வகையில் போதிய காரணங்கள் காட்டு; சமய சித்தாந்தத்துறையில் குற்றம் அல்லது பழியை மன்னித்து விடு; இறையருளின் பாற்படுத்துக் கழுவாய் செய்துவிடு; அச்சுத்துறையில் வரியைச் சரிக்கட்டு; (தொ.) justify bail, (சட்.) போதிய உடைமையிருக்கிறதென ஆணையிட்டுக்கூறிப் பிணையமாகத் தகுதி பெற்றவரெனக் காட்டு.

jut, *n.* புடைப்பு, முனைப்பு, உந்தல், பிதுக்கம், பிதுங்குமுனை; பிற்றியக்கம்; *v.* உந்து, முனைப்பாக இரு, புறந்துருத்து.

Jute[1], *n.* ஐந்தாம் ஆறும் நூற்றாண்டுகளில் இங்கிலாந்துமீது படையெடுத்த செர்மன் இனத்தவரில் ஒருவர்; செர்மன் தாழ்நில (Low German) மக்கள் குழுவினம்.

jute[2], *n.* சணற்பயிர்; சணல்நார்; சணல்.

juvenes'cence, *n.* இளமைவாயிற் பருவம், பிள்ளைமையிலிருந்து இளமைக்கு மாறும் இடைவளர்ச்சிப் பருவம்.

juvenes'cent, *a.* இளமையணித்தான, மிக்கிளம் பருவத்திய.

juv'enile, *n.* இளைஞர், இளமைப்பருவத்தினர்; *a.* இளமையான; இளமைப் பருவஞ் சார்ந்த; இளைஞருக்குரிய; இளமைப் பருவத்துக்குச் சிறப்பியல்பான; (தொ.) juvenile court, (சட்.) இளங்குற்றவாளிகள் பற்றிய வழக்குகளை ஆய்வதற்கென்றே அமைக்கப்பட்ட முறைமன்றம்; juvenile offender, இளங்குற்றவாளி.

juv'eniles, *n. pl.* (பே-வ.) இளைஞர்க்குரிய ஏடுகள்.

juvenil'ia, *n. pl.* ஆசிரியரது இளமைப்பருவத்து நூல்கள்.

juxtapose', *v.* பொருள்கள் வகையில் அடுத்தடுத்து வை.

juxtaposi'tion, *n.* அடுத்தடுத்து வைத்தல்; அடுத்தடுத்து வைக்கப்பெறுதல்; பக்க அணிமைநிலை.

Kaa'ma, *n.* தென் ஆப்பிரிக்க மான்வகை.

kabb'alah, *n.*=cabbala.

kabuki', *n.* பண்டைய ஜப்பானிய வரலாற்று இசை நாடக வடிவம்.

Kabyle', *n.* பெர்பெரி (Berbery) பழங்காலக் குடிகள் உட்படத் தொடர்பான மொழிகள் பேசும் வட ஆப்பிரிக்க இனத்து உறுப்பினர் ; பெர்பெரி மொழி.

kadd'ish, *n.* யூதரின் துயர்க்கொண்டாட்ட வழிபாடு; யூதத் திருக்கோயில் வழிபாட்டுரைக்கீதம்.

kad'i, *n.*=*cadi.*

Kaff'ir, Kaf'ir, *n.* தென் ஆப்பிரிக்க பண்டு (Bantu) இனம் சேர்ந்தவர் ; ஆசியாவிலுள்ள காப்பிரிஸ்தான் (Kafiristan) சார்ந்தவர்.

Kaff'irs, *n. pl.* தென் ஆப்பிரிக்க சுரங்கங்களின் பங்குகள்.

ka'go, (ஜப்.) *n.* ஜப்பானிய பல்லக்கு வகை.

kail, *n.*=kale.

kail'yard, *n.*=kaleyard.

kain'it, kain'ite, *n.* செயற்கை உரமாகப் பயன்படும் வேதிப் பொருள் கலவைவகை.

kai'ser, *n.* (வர.) பேரரசர் ; செர்மன் நாட்டுப் பேரரசர் ; ஆஸ்திரியநாட்டுப் பேரரசர்; புனித ரோமப் பேரரசுத் தலைவர்.

kaja'wah, (பெர்.) *n.* மகளிர்க்குரிய ஒட்டக அம்பாரி.

ka'ka, *n.* நியூசிலாந்து நாட்டுக் கிளிவகை.

ka'kapo, *n.* நியூசிலாந்து நாட்டில் ஆந்தைபோல் இரவில் இயங்கும் கிளிவகை.

kakemon'o, *n.* ஜப்பானிய சுவர்ப்படம்.

kala-azar', *n.* கிழ்த்திசை வெப்பமண்டலக் கடுங்கொள்ளை நோய்வகை.

kale, *n.* சுருண்ட இலைகளுடைய கோசுக்கீரை வகை ; (தொ.) Scotch kale, ஊதாநிற இலைகளையுடைய கோசுக்கீரை வகை ; ஊதாநிறக் கோசுக்கீரை அல்லது காய்கறியால் செய்யப்படும் குழம்பு வகை.

kaleid'oscope, *n.* பல்வண்ணக்காட்சிக் கருவி ; அடிக்கடி மாறுபடும் படிவத்தொகுதி.

kaleidoscop'ic, kaleidoscop'ical, *a.* பல்வண்ணக் காட்சிக்கருவி சார்ந்த; பல்வண்ணக்காட்சிக் கருவிபோன்ற; பல்வண்ணமுடைய, அடிக்கடி வண்ண வடிவ மாறுதலுடைய.

kal'ends, *n. pl.*=calends.

kale'yard, *n.* காய்கறித் தோட்டம், அடுக்களை அடுத்த தோட்டம் ; (தொ.) kaleyard school, கதைகளில் ஸ்காத்லாந்து பொதுமக்கள் வாழ்க்கை வருணனையையும் பேச்சுமொழியையும் தாராளமாகப் பயன்படுத்தும் எழுத்தாளர் குழு.

kal'i[1], *n.* தாழை, முன்பு சாம்பல்மூலம் காரவகைகள் செய்வதற்குப் பயன்பட்ட சதுப்புநிலச் செடிவகை.

Ka'li[2], (த.) *n.* காளி, கொற்றவை, துர்க்கை.

kalian', (பெர்.) *n.* தனிவடிவமைப்புடைய பாரசீக நாட்டுப் புகைக்குழாய்வகை.

Kalin'ga prize, *n.* ஐக்கியநாடுகள் கல்வி விஞ்ஞானப் பண்பாட்டுக்கழகத்தில் பாட்னேயிக் (B. Patnaik) என்பவரால் 1951-இல் நிறுவப்பட்ட விஞ்ஞானத்துறை மக்கள் இலக்கியப் பரிசு.

kalioun', (பெர்.) *n.*=*kalian.*

Kal'muck, Kal'myk, *n.* காஸ்பியன் (Caspian) பகுதிகளில் வாழும் மங்கோலிய இனத்தினர்; மங்கோலிய இனத்தினரின் மொழிவகை ; *a.* மங்கோலிய இனத்தினரின் மொழிவகை சார்ந்த.

ka'long, (மலாய்) *n.* மலேயாநாட்டுப் பழந்தின்னி வௌவால் வகை.

kal'pa, (ச.) *n.* கற்பம், நான்முகன் நாள் (432 கோடி ஆண்டுகள்).

kamerad', (செர்.) *v.* சரணடை; *int.* சரண்புகவரும் செர்மானிய இராணுவ வீரர் கூறுஞ் சொற்றொடர்.

ka'mi, (ஜப்.) *n.* ஜப்பானிய மாகாணத்தலைவரின் விருதுப் பெயர் ; ஜப்பானிய தெய்வம்.

kamika'ze, *n. pl.* தற்கொலைப்பாங்கான தாக்குதலில் ஈடுபடும் ஜப்பானிய விமானிகள் ; தற்கொலைப்பாங்கான போர்முறை.

kamptul'icon, *n.* தரைவிரிப்புத் துணிவகை, ரப்பர் ஒருவகைப்பிசின் தக்கை நெட்டி இவற்றின் கலவை மேல்பூசப்பட்ட இரட்டுத்துணி வகை; தொய்வகம் பிசின் கட்டை நெட்டி ஆகியவற்றாலான தள விரிப்பு இரட்டு.

kan'aka, *n.* தென்கடல்தீவு வாணர், ஆஸ்திரேலிய மாநிலத்தில் முன்பு குவீன்ஸ்லாந்து (Queensland) வட்டாரத்தில் கரும்புத்தோட்டத் தொழிலாளியாகச் சேவைசெய்து வந்துள்ள தென்கடல்தீவு வாசி.

Kanarese', *n.* கன்னட நாட்டவர் ; கன்னட மொழி.

kangaroo', *n.* பைம்மா, கங்காரு, ஆஸ்திரேலியா மாநிலத்தில் குட்டியினை வைத்துக்கொள்ளக்கூடிய வயிற்றுப் பையையுடைய விலங்குவகை ; (தொ.) kangaroo bicycle, சரிந்த பின்பகுதி கொண்ட பாதுகாப்பான மிதிவண்டி ; kangaroo closure, மன்றக் கூட்டங்களில் அவைத்தலைவர் சில திருத்தங்களை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு பிறவற்றைத் தள்ளிவிடும் முறை.

kanoon', (பெர்.) *n.* ஐம்பது முதல் அறுபது நரம்புகளைக் கொண்ட யாழ்வகை.

Kan'tian, *a.* காண்ட் (Immanuel Kant) என்ற செர்மானிய நாட்டுத் தத்துவ அறிஞருக்குரிய.

ka'olin, *n.* பீங்கான் செய்யும் மென்மையான வெண்ணிறக் களிமண்வகை.

kapell'meister, (செர்.) *n.* இசைக்குழு இசைநாடகம் பாடகர் தொகுதி முதலியவற்றை இயக்குபவர்; (தொ.) *kapellmeister music*, எழுச்சியற்ற பொதுநிலைப்பாணி இசை.

ka'pok, (மலாய்.) *n.* இலவம்பஞ்சு, மிகச்சிறந்த மென்மையான பஞ்சுவகை.

kapp'a, *n.* K என்னும் கிரேக்க எழுத்து.

Ka'raite, *n.* திருநூல்களின் சொற்களுக்கு நேரிடையான பொருள் கொள்ளும் கிரிமியா (Crimea) என்ற ருசிய நாட்டுப் பகுதியிலுள்ள யூதமரபுக் கிளையினர்.

karm'a, (ச.) *n.* கர்மம், முன்வினைப் பயன்.

karoo', karroo', *n.* தென் ஆப்பிரிக்காவிலுள்ள உயர்ந்த களிமண் மேட்டு நிலம்.

kaross', *n.* தென் ஆப்பிரிக்க தொல்பழங்குடியினர் வழங்கும் மயிர் நீக்கப்படா விலங்குத்தோல் ஆடை.

kart'el, *n.* தென் ஆப்பிரிக்க எருதுவண்டிகளிலுள்ள மரப் படுக்கை.

kartell', *n.*=cartel.

katabat'ic, *a.* (வான்.) கீழ்நோக்கிப் பாயும் கால்வளியால் இயக்கப்படுகிற.

katab'olism, *n.* (உயி.) ஊன்மச் சிதைவு, உயிர்ச்சத்தின் கட்டழிவு.

katathermom'eter, *n.* காற்றின் குளிர்ச்சியுறும் ஆற்றலை அளப்பதற்குரிய வெறியச் சத்தடங்கிய வெப்பமானி.

kath'ode, *n.*=cathode.

kat'ydid, *n.* பெரிய பச்சைநிற அமெரிக்க வண்டினம்.

kaur'i, *n.* நியூசிலாந்திலுள்ள நறுமணப் பிசின் தரும் ஊசியிலை மரவகை.

ka'va, *n.* சிறுநீர்ப்போக்கினைத் தூண்டும் மருந்தாகப் பயன்படும் வேரையுடைய புதர்ச்செடி வகை ; சிறுநீர்ப்போக்கு மிகுவிக்கும் மருந்துவேர்.

kavass′, (துரு.) *n.* துருக்கியில் போர்க்கருவிகள் தாங்கிய காவலர்; பணியாள்; விரைதூதர்.

kay′ak, *n.* பனிக்கடற் படகு, வடதுருவ எஸ்கிமோக்கள் பயன் படுத்தும் பளுவற்ற கடல்நாய்த் தோலினால் மூடப்பட்ட படகு.

ke′a, *n.* ஆடுகொல்லி கிளி, ஆடுகளைக்கொன்று பிட்டக் கொழுப்புண்ணும் நியூசிலாந்திலுள்ள கொடிய பச்சைக்கிளி வகை.

keck, *v.* குமட்டொலி எழுப்பு; (தொ.) keck at, கண்டதும் குமட்டலுணர்ச்சி எய்தப்பெறு.

kedge[1], *n.* கப்பலை நிலைபெயரச் செய்வதற்கான சிறு நங்கூரம்; *v.* நங்கூரக் கயிற்றினால் கப்பலினை நிலைபெயரச் செய் அல்லது கப்பலை அசைந்து நகரச்செய்.

kedg′eree, (இ.) *n.* கிச்சடி, சோறு வெங்காயம் பருப்பு முட்டை முதலியவை சேர்ந்த இந்திய உணவுவகை; மீன் சோறு முட்டை கலந்த ஐரோப்பிய உணவு வகை.

keel[1], *n.* கப்பலின் அடிக்கட்டை; இரும்பு அடிக்கட்டைப் பாளம்; (செய்.) கப்பல்; *v.* கப்பலின் அடிப்புறம் மேலாகும் படி தலைகீழாக்கு, கப்பலைக் கவிழ்; (தொ.) false keel, கப்பலின் அடிக்கட்டையினைப் பாதுகாப்பதற்காக மேலிணைக்கப்பட்ட கட்டை.

keel[2], *n.* அடித்தட்டைக்கலம், அடிப்புறம் தட்டையாயுள்ள நிலக்கரிக்கப்பல்; அடித்தட்டைக்கலம் எடுத்துச்செல்லும் நிலக்கரி அளவு.

keel′-blocks, *n.* கட்டுமானத் தளத்தில் அடிக்கட்டையின் அண்டைக்கட்டு.

keel′-haul, *v.* ஆள்வகையில் தண்டனையாகக் கப்பலடிக் கட்டையடியினூடாகக் கட்டியிழு; மிகக் கடுமையாக நடத்து.

keel′son, *n.* = kelson.

keen[1], *n.* அழுகையுடன்கூடிய அயர்லாந்து நாட்டு இழவுப் பாடல்; *v.* அழுதரற்றிக்கொண்டே இழவுப்பாடல் பாடு, ஒப்பாரி வை.

keen[2], *a.* கூரிய; ஆர்வமிக்க; கருவிவகையில் கூர்முனையுள்ள; ஒளிவகையில் ஊடுருவுகிற; ஒலி வகையில் காதைத் துளைக்கிற; உரத்த; குளிர்வகையில் உறைப்பான; நோவு வகையில் கடுமையான; கூருணர்ச்சியுடைய; நுண்ணுணர்வுடைய; முனைத்த சுவையுடைய; கூரறிவுடைய.

keen′-set, *a.* பசியார்ந்த; விருப்பார்வமுள்ள.

keep, *n.* காவற்கூண்டு, கோட்டைக்கோபுரம்; கோட்டை, அரண்காப்புடைய இடம்; பாதுகாப்பு; பராமரிப்புக்குரிய உணவு; *v.* வை, வைத்திரு; மறைத்து வை, அடக்கி வை; தனக்கென வைத்துக்கொள்; பேணி வை, பேணிக் காத்துக் கொள்; உடைமையாக வைத்துக்கொள்; இழவாது வைத்திரு; பிற்றைநாளைக்கென்று சேமித்து வை; ஒழுங்கு பேணு; பொறுப்பு மேற்கொண்டு நடத்து; நிர்வகி, வைத்து நடத்து; கணக்குப்பதிவு செய்து ஒழுங்காகப்பேணு; கணக்குவைத்துப் பேணு; வைத்தாதரி; வைப்பாகக் கொண்டு பேணு; விடாது தொடர்வி; மாறுது நீடித்துத் தொடர்வி; தொடர்ந்திரு; விடாது தொடர்; பின்பற்று; தொடர்ந்து பின்பற்றிச் செல்; தங்கியிரு; எதிர்ப்பிடையே உறுதியாயிரு; பிடிவிடாதிரு; விட்டுவிடாதிரு; அகலாதிரு; அசையாதிரு; மாறுதிரு; வெளியே செல்லாதிரு; பதனழியாது வை; கெடாதிரு; நீடித்துழை; நலமாறுதிரு; அடக்கிக்கொள்; விலகியிரு; செயல்தவிர்; தடு, தடுத்துநிறுத்திவை; காவலில் வை; கட்டுப்படுத்தி வை; மதிப்புக்கொடு; மீறுது பின்பற்று; நிறைவேற்று; கொண்டாடு; (தொ.) keep at, விடாமல் வேலைசெய், தொடர்ச்சியாக வேலைநடத்துவி; keep away, வருகை தவிர், விலகியிரு, வருவதை விலக்கு, வருவதைத் தடு; keep back, கொடாதிரு; முன்னேற்றத்தைத் தாமதப்படுத்து; ஒளி, மறை, அடக்கு; keep body and soul together, உயிருடனிரு; keep down, அடக்கிவை, கீழ்ப்படுத்தி வை, தொகையில் குறைவாக்கு; சிறுபோரில் படுத்துப் பதுங்கிச் சண்டைசெய்; keen from, தவிர், விலக்கு; விலகு; keep in, அடைத்து வை; அடக்கிவை; தடு; பள்ளிக்கூடம் விட்ட பின்பும் வீட்டிற்கனுப்பாமல் மாணவனை நிறுத்தி வை; தீ எரிந்து கொண்டிருக்கும்படி செய்; வீட்டிற்குள்ளிரு; நல்லுறவோடிரு; keep in repair, நல்நிலையில் வைத்திரு, சீர்கேடடையாமற் பேணு; keep off, நீக்கு, விலக்கு; விலகியிரு; அணுகவிடாது தடு; தூரத்திலிரு; keep on, தொடர்ந்து செயலாற்று, தொடர்ந்து மேற்கொண்டிரு; keep oneself to oneself, தனித்திரு, மக்கள் சமூகத்தைவிட்டு விலகியிரு; keep one's powder dry, முன்னேற்பாடுகள் செய்து தயாராகவிரு; keep out, நுழையாமல் தடு; உட்புகாமலிரு; keep to, எல்லை கடந்து போகாதிரு, ஒட்டிக்கொண்டிரு; keep together, சேர்த்துவை; இணைந்திரு, சேர்ந்திரு; keep to oneself, பிறரோடு பகிர்ந்துகொள்ள மறு; keep under, அடக்கி வை; அடிமைப்படுத்தி வை; கீழ்ப்படுத்து; keep up, கிளர்ச்சி குன்றுதிருக்கச் செய்; விலைவாசி தளராது இருக்கச் செய்; குறையாமல் நிலைபெறச்செய்; keep up with the Joneses, அண்டை'அயலாருடன் சமுதாய முறையில் சரிசமமாகப் பழகு; keep wicket, மரப்பந்தாட்டத்தில் இலக்குக் காப்போராகச் செயலாற்று.

keep′er, *n.* வைத்திருப்பவர்; பேணுபவர்; காப்பவர்; காவலர்; நிறுவனங்களின் உடைமைக் காப்பாளர்; விலங்குக் காவலர்; வேட்டைக்காடு காவலர்; அரச முத்திரை மேற்காப்புப் பெருமகனர்; ஆட்ட இலக்குக் காப்பாளர்; ஆட்ட எல்லை காப்பாளர்; பூட்டின் திறவுவாய்; திறவுக்காப்பு; காந்தமுனைத் தேனிரும்பு.

keep′ing, *n.* காவல், பராமரிப்பு; இணக்கம்; ஒப்புமை; (தொ.) in keeping with, ஒத்து, இசைந்து; in one's keeping, ஒருவருடைய ஆதரவில், பராமரிப்பில்; in safe keeping, பொறுப்பில், பாதுகாவலில்; out of keeping with, இசையாது, முரணுக.

keep′ing-room, *n.* வீட்டின் வரவேற்பு அறை.

keep′sake, *n.* நினைவூட்டு சின்னம், கொடுத்தவர் நினைவாக வைக்கப்பட்ட பொருள்; உணர்ச்சிப் பசப்புடையது.

keep′sakes, *n. pl.* உணர்ச்சிப் பசப்புடைய எழுத்து உருப்படிகள்.

kees′hond, (டச்.) *n.* ஆலந்து நாட்டு நாய் வகை.

kef, keif, kief, (அரா.) *n.* கஞ்சாச் செடி; கஞ்சா மயக்கம்; சோம்பல் நிலை இன்பம்.

keffi′yeh, (அரா.) *n.* அராபியர் தலையணியாக அணியும் கைக்குட்டை.

kef′ir, (காக்கஸ்.) *n.* நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் நுரைத்துப் பொங்கும் குடிவகை.

keg, *n.* சிறு மிடா.

kelp, *n.* பெரிய கடற்பூண்டு வகை.

kel′pie, kel′py, *n.* ஆட்களை மூழ்கடிக்கும் விருப்புடையதாகக் கூறப்படும் குதிரை வடிவ நீர்த் தெய்வம்.

kel′son, *n.* கப்பல் அடிக்கட்டையுடன் அடித்தளக்கட்டைகளை இணைக்கும் கட்டை வரிசைகள்.

Kelt[1], *n.* = Celt.

kelt[2], *n.* முட்டையிட்ட குளமீன் சால்மன் முதலிய மீன்வகைகளில் ஒன்று.

kemp, *n.* முரட்டுக் கம்பளி மயிர்.

ken, *n.* கண்ணோக்கு, காட்சி எல்லை; அறிவெல்லை; *v.* பார்த்தவுடன் புரிந்துகொள்; அறி, அடையாளம் கண்டுகொள்.

kenn′el[1], *n.* நாய்ப்பட்டி; வேட்டைநாய்த் தொட்டிக்கட்டு; இழிந்த குடியிருப்பிடம்; *v.* பட்டியில் அடை; பட்டியில் வாழ்; இழிந்த இடத்தில் உறை.

kenn′el[2], *n.* சாக்கடை, கழிநீர் ஓடை.

kenos′is, *n.* (இறை.) இயேசுநாதர் மனித உருவேற்பின் போது முழுமையாகவோ பகுதியாகவோ தெய்வத்தன்மையைக் கைதுறத்தல்.

Ken'tish, *a.* பிரிட்டனின் கெண்ட் (Kent) மாவட்டத்தைச் சேர்ந்த; (தொ.) Kentish fire, வெறுப்புக் கைதட்டல்; Kentish man, கெண்ட் மாவட்டத்தில் மெட்வே (Medway) ஆற்றின் மேற்குப் பகுதிக்குரியவர்; Kentish rag, கெண்ட் என்னுமிடத்திற் காணப்படும் கடினமான சுண்ணக் கற்கள்.

kent'ledge, *n.* (கப்.) கப்பலின் நிலவர அடி எடைப்பாரமாகப் பயன்படுத்தப்படும் வார்ப்பு இரும்புப்பாளம்.

kep'i, *n.* தளமட்டப் போக்கான முகட்டையுடைய பிரஞ்சுப் படைவீரர் குல்லாய்.

kept, *v.* keep என்பதன் இறந்தகால முடிவெச்சம்.

ke'ratin, *n.* கொம்பு நகம் முதலியவை உருவாவதற்கு அடிப் படைப் பொருளாக நிற்கும் வெடியகப்பொருள்.

ke'ratose, *n.* கடற்பஞ்சு வகைகளின் காழ்ப்பகுதிப் பொருள்; *a.* கொம்புபோன்ற காழ்ப்பொருளாலான.

kerb, *n.* நடைப்பாதை அல்லது தளத்தின் ஓரத்தில் பதிக்கப் பட்ட கல்வரிசை; (தொ.) kerb market, பங்குமாற்று நிலை யத்தில் விற்கப்படாத பிணையத்தொகைப் பங்குகளை நிலைய அலுவல் நேரத்திற்குப் பிறகு விற்கும் இடம்.

kerb'-stone, *n.* நடைப்பாதை அல்லது தளத்தில் பதிக்கப் பட்ட கல்; (தொ.) kerb-stone broker, பங்கு மாற்று நிலைய உறுப்பினரல்லாத தரகர்.

kerch'ief, *n.* தலைக்குட்டை; (செய்.) கைக்குட்டை.

kerf, *n.* இரம்ப அறுப்பினால் ஏற்படும் பிளவு; மரத்தின் வெட்டப்பட்ட பகுதி.

kerm'es, *n.* செங்கொட்டையென முன்பு கருதப்பட்ட கருத் தரித்த பெண் பூச்சியினம்; பெண்பூச்சியினத்தின் உலர்ந்த உடலிலிருந்து எடுக்கப்படும் செஞ்சாயப்பொருள்; (தொ.) kermes oak, பசுமைமாறுச் சீமை ஆல்மர வகை.

kerm'is, (டச்.) *n.* ஆலந்து நாட்டின் ஆரவாரமிக்க பருவச் சந்தை.

kern, kerne, *n.* (வர.) பளுவற்ற படைக்கலம் தாங்கிய அயர்லாந்து நாட்டுக் காலாட்படைவீரன்; உழவன், பட்டிக் காட்டான்.

kern'el, *n.* கொட்டைக்குள்ளிருக்கும் பருப்பு; கூலத்தினுள் இருக்கும் அரிசி; கருமூலப் பகுதி, உருவாக்க மையம்.

ke'rosene, *n.* மண்ணெண்ணெய்.

Kerram'ograph, *n.* தொலைமின் புயல்களைப் பதிவு செய் வதற்குரிய கருவி.

Ke'rry, Kerry blue, *n.* வேட்டைநாய் வகை.

kers'ey, *n.* நீண்ட கம்பளி உரோமத்தினின்று நெய்யப்படும் குறுகலான முரட்டுக்கம்பளி ஆடை வகை.

kers'eymere, *n.* சாய்வரி அமைவாக நெய்யப்பட்ட நேர்த்தி யான கம்பளி ஆடைவகை.

kers'eymeres, *n. pl.* நேர்த்தியான சாய்வரிக் கம்பளித்துணி யால் செய்யப்பட்ட காற்சட்டை.

kes'trel, *n.* குறும்பருந்து வகை.

ketch, *n.* இருபாய்கள் கொண்ட சிறிய கரையோர மரக்கலம்.

ketch'up, *n.* காளான்-தக்காளி ஆணம்.

ket'one, *n.* கரிமச்சேர்ம வகைகளில் ஒன்று.

ket'tle, *n.* கொதி கெண்டி, கைப்பிடி வைத்த வெந்நீர்க் கொதி கலம்; (தொ.) a pretty kettle of fish, பெருஞ் சிக்கல், குழப்பம்.

ket'tle-drum[1], *n.* படகம், குடமுழாவகை, குறிப்பிட்ட பண் திறத்துக்கேற்ப வரிந்துகட்டப்படுகிற பித்தளையாலான அரை யுருளை வடிவத் தோற்கருவி வகை.

ket'tle-drum[2], *n.* பெரும்படியான பிற்பகல் தேநீர் விருந்து.

ket'tle-drummer, *n.* குடமுழவு வகை முழக்குபவர்.

ket'tle-holder, *n.* வெந்நீர்க் கெண்டியின் கைப்பிடித் துணி.

kev'el, *n.* (கப்.) முறுக்கும் கயிறுகளைப் பிணிப்பதற்குரிய முளையாப்பு.

Kew Gard'ens, *n. pl.* லண்டன் பயிர் ஆராய்ச்சித்துறைத் தோட்டம்.

key[1], *n.* திறவுகோல்; மறைதிறவு; வாயில் துணை, புகுமுக வழித் துணை; வழிகாட்டுங் குறிப்பு; விடைக்குறிப்பு; புதிர் விளக்கக் குறிப்பு; விளக்க வரைப்படம்; மொழி பெயர்ப்புத் துணைக்குறிப்பு; விடைக்குறிப்பேடு; தளமையம், உயிர்மைய இடம்; வாயில் தளம், இடைமுகத்தளம்; தலைக்கல், கட்டிட வளைவு முகட்டுக்கல்; ஆப்பு; இருசாணி; கருவிகளின் விசைக் கட்டை; தட்டச்சுப் பொறியின் விரற்கட்டை; மணிப்பொறி யின் முறுக்குக் கட்டை; கயிற்றுப்புரி முறுக்குக் கட்டை; மின் ஓட்டத் திருப்பாணி; அல்லிக்கொத்துவிதை வகை; பூவேலைப் படிவம்; சுவர் வகையில் முதல் மேற்பூச்சு; இசையில் கிளைச்சுரத் தொகுதி; கருத்துத் தொனி; போக்கின் முனிமுகம்; அடிப்படையான உயிர்க்கருத்து; வெற்றியின் உயிர்நிலை; ஆட்சிநிலையின் உயிர்நாடி; இயக்கும் உயிர் மூலம்; *v.* திறவுகோலாற் பூட்டு; திருகுக் கட்டையால் திருக்கி இறுக்கு; இசைக்கருவியை முடுக்கு; விடை விளக்கம் அளி; முறுக்கிவிடு, தூண்டு, எழுச்சியூட்டு; விளம்பரத்தில் தனி அடையாளக்கூறு இணை; (தொ.) get the key of the street, have key of the street, இரவில் தங்க இடமின்றி வீதி யிலிரு; golden key, silver key, இலஞ்சமாக அளிக்கப்படும் பொன் வெள்ளி நாணயம், கைக்கூலி; key industry, மூலத் தொழில், இன்றியமையாத் தொழில்; key map, எல்லைக் கோடுகள் மட்டும் கொண்ட சிற்றளவான நிலப்படம்; key move, சதுரங்க ஆட்டத்தில் வெற்றிக் கட்டத்தின் முதல் கட்டை இயக்கம்; key up, வேண்டிய நிலைக்கு முறுக்கிவிடு; தொனி உயர்த்து; தூண்டு; கிளர்ச்சியூட்டு; மதிப்பு உயர்த்து.

key[2], *n.* தாழ்ந்த தீவு, கடற்பாறை வரிசை.

key'board, *n.* இசைக்கருவிகளில் ஆணிப்பட்டடை.

key'-cold, *a.* உயிரற்ற.

key'hole, *n.* பூட்டுத் திறவுகோல் துளை.

keynes'ian, *a.* ஜான் மெய்னுடு கெயின்ஸ் (John Maynard Keynes–1883-1946) என்பாரின் முதலாளித்துவ மட்டியல் கட்டுப்பாட்டுவாதம் சார்ந்த.

key'-note, *n.* உயிர்ப் பண்திறம்.

key'-ring, *n.* திறவுகோல் வளையம்.

keys, *n. pl.* போப்பாண்டவரின் சமயத்துறை அதிகாரம்; போப்பாண்டவரின் அதிகார ஆற்றல்; மான் தீவிலுள்ள கீழவை; (தொ.) cross keys, St. Peter's keys, போப்பாண்ட வருக்கு அளிக்கப்பட்ட மேலாண்மை உரிமை; House of Keys, இங்கிலாந்தின் தென்பகுதியிலுள்ள அயில் ஆப் மேன் (Isle of man) என்ற தீவினுடைய சட்டசபையின் தேர்ந் தெடுக்கப்பட்ட பகுதி.

key'stone, *n.* மையக்கல், வளைவு முகட்டுக்கல்; மூலாதாரக் கூறு, உயிர்க்கூறு; உயிர்நிலை, உயிர்நாடி.

Kgot'la, *n.* தென் ஆப்பிரிக்க பெசுவானுலந்து (Bechuanaland in South Africa) நாட்டில் பழங்குடி மக்களின் மூத்தோர் பேரவை.

khadd'ar, (இ.) *n.* கதர்த்துணி.

khakan, (துரு.) *n.* = *khan*[1].

kha'ki, (இ.) *n.* காக்கிதுணி, பிரிட்டனின் படைத்துறையினர் அணியும் மங்கற் பழுப்புநிறத் துணி; *a.* பழுப்பு நிறமான.

khal'ifa, *n.* = caliph.

khal'ifat, (அரா.) *n.* = caliphate.

kham'sin, (அரா.) *n.* எகிப்து நாட்டில் மார்ச்சு ஏப்ரல் மே மாதங்களில் வீசும் தெற்கு அல்லது தென்கிழக்கு வெப்பக் காற்று.

khan[1], (துரு.) *n.* நடு ஆசியா ஆப்கானிஸ்தான் முதலிய நாடு களில் அரசர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கும் விருதுப் பெயர்; (வர.) இடைக்காலத்தில் துருக்கிய தார்த்தாரிய மங் கோலிய இனங்களின் பெருந்தலைவர்களின் பட்டம்; சீனப் பேரரசருக்குரிய பட்டப் பெயர்.

khan², (அரா.) *n.* வழிப்போக்கர் விடுதி.

khe'da, kedd'ah, (இ.) *n.* யானைகளைப் பிடிப்பதற்கான அடைப்புப் பொறி.

Khedive', (துரு.) *n.* எகிப்தில் (1867 முதல் 1914 வரை இருந்த) துருக்கிநாட்டு அரசப் பிரதிநிதி.

khid'mutgar, (இ.) *n.* பணியாள், உணவு மேசையருகே நின்று பணிசெய்யும் வேலையாள்.

khil'afat, *n.* நபிநாயகம் பேரால் இஸ்லாமிய உலகை ஆள்பவர், துருக்கிப் பேரரசர்; (தொ.) khilafat agitation, முதல் உலகப்போர் (1914-1918) முடிவடைந்தபின் இஸ்லாமியப் பேரரசான துருக்கியின் வீழ்ச்சிக்கெதிராக இந்தியாவில் முஸ்லீம்கள் நடத்திய இயக்கம்.

kib'ble¹, *n.* சுரங்கங்களில் இரும்பை மேலே ஏற்றப் பயன்படுத்தப்படும் வாளி.

kib'ble², *v.* கரடுமுரடான பொடியாக அரை.

kibbutz', *n.* இஸ்ரேல் (Israel) நாட்டில் யூத சமுதாய நல வேளாண்மைக் குடியமைப்பு.

kibe, *n.* குளிரால் கைகால்களில் ஏற்படும் கொப்புளப்புண்; (தொ.) tread on one's kibes, ஒருவர் உணர்ச்சிகளைப் புண்படுத்து.

kibit'ka, (ருசிய.) *n.* கம்பளத்தால் மூடப்பட்ட தார்தார் (Tartar) களின் கூடாரம்; தார்தார்களின் குடும்பம்; பனிக்கட்டிமேல் செல்லும் மேல்மூடியிடப்பட்ட குடும்பச் சறுக்குவண்டி.

kib'itzer, *n.* (பே-வ.) வேண்டாத் தலையீட்டாளர்; வேண்டா அறிவுரை தருபவர்; சீட்டாட்டத்தில் ஆட்டக்காரரின் பின்னிருந்து வேடிக்கை பார்ப்பவர்.

kib'lah, (அரா.) *n.* தொழுகையின்போது முகமதியர்கள் நோக்கும் மெக்கா (Mecca) நகரக் கோயிலிருக்குந் திசை.

kib'osh, *n.* முட்டாள்தனம்; போலி எத்துமானம்; (தொ.) put the kibosh on, தலையிலடி, அடித்தொழி.

kick, *n.* உதை, எட்டி மிதித்தல்; உதைபந்தடி; பின்னுதைப்பு, துப்பாக்கியின் எதிர் எறிவு; உதைவிசை, உதைக்கும் ஆற்றல்; எதிர்த்தாக்காற்றல்; தாக்குதல்; வெட்டி வெட்டிச் செல்லும் இயக்கம்; (பே-வ.) தாங்கும் ஆற்றல், எதிர்ப்பாற்றல்; (பே-வ.) ஊக்காற்றல்; இன்னதிர்ச்சி; *v.* உதை, எட்டிமிதி; காலால் எற்று; எட்டி எறி; உதைத்தோட்டு; உதைபந்தடி; அவமதித்து வெளியேற்று; வெறுப்புக்காட்டு, மனக்கசப்புத் தெரிவி; (தொ.) bad kick, உதைபந்தாட்டத்தில் மோசமான ஆட்டக்காரர்; good kick, உதைபந்தாட்டத்தில் நல்ல ஆட்டக்காரர்; kick against, kick at, வெறுப்பைக்காட்டு, விருப்பமின்மையைத் தெரிவி; kick against the pricks, தன் எதிர்ப்பால் தனக்கே துன்பம் பெருக்கிக்கொள்; kick off, உதைபந்தாட்டத்தில் பந்தினை முதலில் உதை; kick one upstairs, பெயரளவான நன்மையாகப் பெருமகளுர் பட்டம்முதலியன அளித்து ஒதுக்கிவிடு; kick the bucket, இறந்துபோ, மாள்வுறு; kick up, kick up a dust, kick up a row, உதைத்துப் புழுதி கிளப்பு; தேவையற்ற பெருஞ் சந்தடி செய்; kick up heels, விளையாட்டாகப் பின்னங்கால் எறி

kick², *n.* கண்ணாடிக் குப்பியில் கீழுள்ள குழிவு.

kick'er, *n.* உதைக்குங் குதிரை.

kick'ing-strap, *n.* பின்காலுதைப்பைத் தடுக்கும் குதிரைத் தோல்வார்ப் பட்டை.

kick'shaw, *n.* பெருஞ்சுவை உணவுவகை; விளையாட்டுப் பொருள், சிறுதிற அணிமணி.

kick'-start'er, *n.* உந்து மிதிவண்டியை மிதித்துச் செலுத்தும் விசைப்படியின் நெம்புகோல்.

kid¹, *n.* வெள்ளாட்டுக்குட்டி; வெள்ளாட்டுக்குட்டித் தோல்; பதனிடப்பட்ட வெள்ளாட்டுக்குட்டித் தோல்; *v.* ஆடு வகையில் ஈனு; குட்டி ஈனு; (தொ.) the Kid, the Kids, தேராளன் விண்மீன் குழுவிலுள்ள மூன்று சிறிய நட்சத்திரங்கள்.

kid², *n.* சிறு மரத்தொட்டி.

Kidd'erminster carpet, *n.* இரண்டு வேறுபட்ட வண்ணங்கள்கொண்ட துணிகளை இடையிணைத்த சமுக்காள வகை.

kid'dle, *n.* ஆற்றணை வலை; கடற்கரைக் கழியடைப்பு வலை.

kid'-glove', *a.* மெல்லியல் வாய்ந்த; அன்றாட வேலையைத் தவிர்க்கிற.

kid'nap, *v.* குழந்தைகளைத் திருடு; சட்டத்திற்குப் புறம்பாக ஆட்களைக் கடத்து, வல்லந்தமாகக் கடத்திச் செல்.

kid'ney, *n.* குண்டிக்காய், இரத்தத்திலிருந்து கழிவுப் பொருளைப் பிரித்துச் சிறுநீராக்கி வெளியேற்றும் உறுப்பு; உணவாகப் பயன்படும் ஆடு மாடு பன்றி முதலிய விலங்குகளின் குண்டிக்காய்; இயல்பு, குணம்; (தொ.) kidney bean, குட்டையான பிரஞ்சு மொச்சை வகை; kidney potato, நீண்ட உருளைக்கிழங்குவகை.

kief, (அரா.) *n.*=*kef.*

kie'-kie, *n.* கூடையாகச் செய்யக்கூடிய இலைகளுடைய நியூசிலாந்து நிலத் தொற்றுச்செடிவகை.

kier, *n.* வண்ணான் சால், ஆடைகளை வெள்ளாவியில் வைப்பதற்கான பெருமிடா.

kie'selguhr, *n.* பளபளப்பூட்டுவதற்கும் வெடிமருந்து தயாரிப்பதற்கும் பயன்படும் மண்வகை.

Kikuyu', *n.* ஆங்கிலத் திருச்சபையில் பிற திருச்சபை உறுப்பினர்களும் தூய நற்கருணையில் பங்கு கொள்ளுதல் பற்றிய விவாதம்.

kil'derkin, *n.* அளவு தேறல்மிடா; தேறல்மிடா அளவு (16 அல்லது 18 காலன்கள்).

kill, *n.* கொல்லுஞ் செயல்; கொலை; வேட்டையிற் கொல்லப்பட்ட உயிரினம்; கொல்லப்பட்ட இரை; புல்வெளிப்பந்தாட்டத்தில் மீட்டு வாராத பந்தடி; *v.* கொல்லு; நோய் வகையில் உயிர்போக்கு; கொலைசெய்; தூக்கிலிடு; செடிகொடி உரங்குன்றச் செய், வலுவழி; உணர்ச்சி இல்லாதாக்கு; எதிர்மாற்று வண்ணத்தால் முனைப்பழி; நேரத்தை வீணுக்கழி; மட்டுமீறிப் போற்றுதலுக்கு ஆளாக்கு; மட்டுமீறிக் களிப்பூட்டு; மட்டுமிஞ்சிக் கவர்ச்சி செய்; சட்டப் பகர்ப்பை முற்றிலும் தோல்வியுறச் செய்; உதை பந்தாட்டத்தில் பந்தை அசைவின்றி நிறுத்து; புல்வெளிப் பந்தாட்டத்தில் பந்து மீண்டுவராதபடி அடி; மறுத்தொதுக்கு, தள்ளு, களை; கரைசலை நீராளமாக்கு, செறிவு கெடு; உணவுக்குரிய உயிரின வகையில் கொன்றபின் கொழுவிய இறைச்சி தருவதாயிரு; புனைகதையில் பாத்திரஞ் சாவதாகத் திட்டு; (தொ.) got up to kill, கவர்ச்சிக்குள் வீழ்த்தத்தக்க ஆடையணி ஒப்பனையுடைய; kill off, ஆட்களைக் கொன்றொழி; kill two birds with one stone, ஒரே செயலில் இரு நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்; ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்து; kill with kindness, தவறான அன்பினால் அழிவுண்டாக்கு.

kill'adar, *n.* கோட்டைப் படைத்தலைவன்.

kill'-devil, *n.* நீரில் சுழலும்படி செய்யப்பட்ட செயற்கைத் தூண்டில் இரை.

kill'er, *n.* கொல்லுபவர்; கொல்லுவது; கொலைஞர்; வழக்கமாகக் கொலையில்ஈடுபடும் கொலைகாரர்; இறைச்சிக் கடைக்காரர், விலங்குகளை இறைச்சிக்காக வெட்டுபவர்; கொல்லும் கருவி; விலங்குகளை வெட்டும் பொறிக்கருவி; மாற்றுப் பொருட்கூறு; திமிங்கிலகிலம், மூர்க்கமான திமிங்கில வகை; (தொ.) humane killer, வேதனையில்லாமலே விலங்குகளை வெட்டிவீழ்த்தும் பொறி; killer whale, திமிங்கிலம், மூர்க்கமான பெருந்தீனி உண்கிற திமிங்கில இனம்.

kill'ick, *n.* சிறு படகுகள் நங்கூரமாகப் பயன்படுத்தும் பளுவான கல்; சிறு நங்கூரம்.

kill'ing, *n.* கொல்லுதல்; கொலை; கடுங்கோலாட்சி; இரக்கமின்றிக் கடுமையாக நடத்தல்; *a.* கொல்லுகிற; உயிர் போக்குகிற; அழிக்கிற; தடுத்தமைக்க முடியாத; உறு கவர்ச்சியுடைய; அடக்கமுடியா நகைத்திறமூட்டுகிற.

kill'joy, *n.* மற்றவர் மகிழ்ச்சியைக் கெடுப்பவர்.

kill'-time, *n.* பொழுதுபோக்கு வேலை, காலங்கடத்துவதற்காகச் செய்யப்படும் வேலை; *a.* பொழுதுபோக்குதற்கான, காலத்தை வீணாக்குகிற, காலத்தை வீணாக்கும் நோக்கமுடைய.

kiln, *n.* சுண்ணும்புக் காளவாய்; செங்கற் சூளை; சூட்டடுப்பு; கொல்லன் உலை; *v.* காளவாயிற் காயவை; சூளையில் சுடு; சூட்டடுப்பிற் காயும்படி செய்.

kiln'-dry, *a.* சூட்டடுப்பிலிட்டுக் காய்ந்த.

kil'o [1], *n.* = kilogram.

kil'o [2], **kil'ocuric**, *n.* கதிரியக்கப் பேரலகு, 1000 கதிரியக்கச் சிற்றலகு.

kil'ocycle, *n.* வானொலியில் நொடி ஒன்றுக்கு ஆயிர விசை விரையதிர்வலகு.

kil'ogram, kil'ogramme, *n.* ஆயிரச்சிரெடை, பதின்மான எடையளவைப் பேரலகு.

kilogramme'ter, kilogramme'tre, *n.* ஆயிரச்சிரெடையை ஒரு சீர்க்கோல் உயர்த்தவல்ல ஆற்றல்.

kil'oliter, kil'olitre, *n.* ஆயிரம் சீர்ப்படி (liter), 35. 31 கன அடி கொண்ட முகத்தலளவுப் பேரலகு.

kil'ometer, kil'ometre, *n.* ஆயிரச்சீர்க்கோல், 3280. 89 அடிநீளமுடைய பதின்மானப் பேரலகு.

kil'owatt, *n.* ஆயிர மின்பேரலகு, மின்னலகுத்தொகுதி.

kilt, *n.* ஸ்காத்லாந்து மேட்டு நிலவாணர் (Scottish Highlanders) அணியும் முட்டளவேயான குறும்பாவாடை; *v.* பாவாடையை மேலிழுத்துச் செருகு; ஆடைக்கொசுவம் சுருக்கு.

kil'ter, *n.* நல்லுழைப்பு நிலை, பணிச்செப்பநிலை.

kil'tie, *n.* சிறு காற்சட்டையணிந்த ஸ்காத்லாந்து மேட்டுநிலவாணர்.

kin, *n.* இனமரபுக் குழு; இனஉறவு; இன உறவினர் குழாம்; குடும்பக்குழு; ஒரே குடும்பத்தினர்; *a.* இனஉறவுடைய, ஒரே குடும்பம் சார்ந்த உறவினரான; (தொ.) kith and kin, அறிமுகமான நண்பரும் உறவினரும்; near of kin, நெருங்கிய உறவுள்ள; next of kin, மிக நெருங்கிய உறவினர்; விருப்ப ஆவணம் இன்றி இறந்தபோதும் இயல்பாகத் தனியுடைமையிற் பங்குகொள்வதற்கு உரிமையுடையவர்; of kin, ஒரே இனத்தைச் சேர்ந்த, உறவுள்ள, குருதிக் கலப்புள்ள; ஒரே இயல்புடைய.

kin'chin, *n.* திருடர் குழூஉக்குறி வழக்கில் குழந்தை; (தொ.) kinchin lay, குழந்தைகளிடமிருந்து பணம் களவாடுதல்.

kin'cob, *n.* பொன் அல்லது வெள்ளிச் சரிகையினால் ஒப்பனை செய்யப்பட்ட விலையுயர்ந்த இந்திய பட்டுத்துணி வகை.

kind, *n.* இனம், மரபின உறவுக்குழு; வகை; செடி உயிர் வகைகளில் இனப்பிரிவு; தனிக்குழு; தனிப்பிரிவு; வகைவேறுபாடு; வகைமாதிரி; மாதிரி, போன்ற வகை; இயற்கை; தன்மை, இயல்பு; பண்பு; சரக்கு, பொருளினம்; திருக்கோயில் இறுதி உணா வழிபாட்டின் அப்பத்தேறல்களில் அப்பம் அல்லது தேறல்; *a.* இரக்கமான, தயவார்ந்த; பாசமிக்க; நட்பிணக்கமான; அன்பான; (தொ.) in a kind, ஒருவாறாக, ஒரு வகையாக; in kind, சரக்காக, பண்டமாக, பணமாக அன்றி விளைபொருளாக; kind of, (பே-வ.) ஒருவகையாக, ஓரளவுக்கு; repay his insolence in kind, அவமதிப்பை அதேவகைச் செயலால் மீட்டளி.

kin'dergarten, *n.* சிறுவர்களுக்குரிய விளையாட்டுமுறைக் கல்விப்பள்ளி.

kind'-heart'ed, *a.* இரக்க மனமுடைய, ஈரநெஞ்சம் வாய்ந்த.

kin'dle, *v.* ஏற்று, பொருத்து, நெருப்புப் பற்றவை; தழலெழுப்பு; ஒளிரச்செய்; ஒளிர்; தீப்பற்றிக்கொள்; நெருப்புப் பிடி; அழன்றெழு; தூண்டு; சினமூட்டு; அவா எழுப்பு; உணர்ச்சி கிளறு; ஊக்கு; உள்ளார்வம் எழுப்பு.

kin'dling, *n.* எரியச்செய்தல்; தீ மூட்டுதற்கான சிறுகட்டை.

kind'lings, *n. pl.* தீ மூட்டுதற்கான சிறு சுள்ளிகள்.

kind'ly, *a.* இரக்கமுள்ள; (வானிலை) உகந்த, நல்ல, துணை நலமான; *adv.* அன்புகூர்ந்து.

kind'ness, *n.* இரக்கம், அருட்குணம்; அன்புச்செயல்.

kin'dred, *n.* குருதி உறவு; உறவினர் தொகுதி; பண்பொருமைப்பாடு; *a.* குருதி உறவுள்ள; நேசமுடைய; ஒப்புமையுடைய, ஒரேமாதிரியான.

kine, *n. pl.* பசுக்கள்.

kinem'a, *n.* = cinema.

kinemat'ic, *a.* தனிநிலை இயக்கஞ்சார்ந்த, ஆற்றல்தொடர்பு கருதாத இயக்கநிலை சார்ந்த.

kinemat'ics, *n. pl.* (இய.) இயக்கவியல், ஆற்றல் தொடர்பில்லாத இயக்கம்பற்றிய ஆய்வியல்.

kinemat'ograph, *n.* = cinematograph.

kinematograph'ic, *a.* = cinematographic.

kinematog'raphy, *n.* = cinematography.

kinet'ic, *a.* (இய.) இயக்கஞ் சார்ந்த, இயக்கத்தின் விளைவான; (தொ.) kinetic energy, இயங்காற்றல்; kinetic theory of gases, நுண்துகள்களின் இயக்கத்தினாலேயே வளிநிலை தோன்றுகிறதென்னும் கோட்பாடு; kinetic theory of heat, நுண்துகள்களின் இயக்கத்தினாலேயே வெப்பம் தோன்றுகிறதென்னும் கோட்பாடு.

kinet'ics, *n. pl.* (இய.) இயக்கத்தாக்கியல், பொருள்களின் இயக்கங்களுக்கும் அவற்றின்மீது செயற்படுகிற ஆற்றல் தாக்குகளுக்குமுள்ள தொடர்புகளைப் பற்றிய ஆய்வியல்.

king, *n.* அரசன், தனிநிலை அரசின் மரபுரிமை ஆட்சியாளன்; மன்னன், நாட்டாட்சியாளன்; வணிக வேந்தர்; சதுரங்க ஆட்டத்தில் அரசுரிமைக்காய்; கட்ட ஆட்ட வகையில் ஆட்டப் பலகையைக் கடந்து எதிரியின் தொடக்கக் கோட்டினை அடைந்ததும் முடிசூடப் பெறுகிற காய்; சீட்டாட்ட வகையில் அரசன் உருவம் பொறிக்கப்பெற்றுள்ள சீட்டு; பழங்கள்-செடிகள் முதலியவற்றின் மிகச்சிறந்த வகை; *v.* அரசனாகச் செயலாற்று; ஆட்சி செய்; அரசனாக்கு; (தொ.) King Baby, குடும்பத்தின் தனிப்பெரும் போற்றுதலுக்குரிய குழந்தை; King Charles's spaniel, கரும்பழுப்பு நிறமுள்ள சிறு வேட்டைநாய் வகை; King Emperor, (வர.) அரசச் சக்கரவர்த்தி, இங்கிலாந்து அரசராகவும் இந்தியாவின் சக்கரவர்த்தியாகவும் இருந்தவர்; King Log, ஒன்றுஞ் செய்யாத பொம்மை அரசன்; King of Arms, படைக்கல உரிமைக் குழாத்தின் தலைமைக்கட்டியர் மூவருள் ஒருவர்; king of beasts, சிங்கம்; king of birds, கழுகு; King of kings, கடவுள்; கிழக்கு நாடுகளில் மன்னர்மன்னன், மாபெரு வேந்தன்; king of metals, தங்கம்; King of Terrors, கூற்றம், சாவுத்தெய்வம்; சாவு; King of the Castle, குழந்தை விளையாட்டு வகை; king of the forest, சீமை ஆல்; king of the herrings, துடுப்பு மீன்; King's Bench, உயர்நீதிமன்றப்பிரிவு; (வர.) அரசர் அமர்ந்த நீதிமன்றம்; king's bishop, சதுரங்கப் பலகையில் ஆட்டத்தொடக்கத்தில் 'அரசு'க்காய்ப் பக்கமாக வைக்கப்படும் ஒட்டகம் போன்ற காய்வகை; King's Bounty, ஒருங்கே மூன்று குழந்தைகளைப் பெற்ற தாய்க்கு வழங்கப்படும் கொடைப்பொருள்; King's colour, படைப்பகுதியினரால் எடுத்துச் செல்லப்படும் இரட்டைப் பட்டுக்கொடிகள்; King's Counsel, அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர்; King's English, திருத்தமான ஆங்கிலமொழி நடை; king's evil, கண்டமாலை; king's knight, சதுரங்கப் பலகையில் ஆட்டத்தொடக்கத்தில் 'அரசு'க்காய்ப் பக்கமாக வைக்கப்படும் குதிரைத்தலைக் காய்வகை; king's peg, சாராய வகையும் உயர்ந்த குடித்தேறல் வகையும் கலந்த பானவகை; King's pipe, லண்டன் துறைமுகத்தில் கள்ளப்புகையிலையைக் கொளுத்துவதற்காக முன்பு பயன்படுத்தப்பட்ட உலைக்கூடம்; King's Roll, போர்ப்பணி செய்தவர்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறையாமல் வேலையிலமர்த்திக்கொள்ளப் பிணைப்பட்டுள்ள பணிமுதல்வர்களின் பட்டியல்; king's rook, சதுரங்க ஆட்டத்தொடக்கத்தில் 'அரசு'க்காய்ப் பக்கமாக வைக்கப்படும் கோட்டைமதில்

போன்ற காய்வகை; King Stork, கொடுங்கோல் மன்னன்; King's weather, சிறப்புக்கொண்டாட்டக் காலங்களில் வாய்த்துவிடுகிற நேர்த்தியான வானிலை; take King's shilling, படையில் சேர்; the king's highway, பொது நெடுவழி; turn king's evidence, (சட்.) மற்ற குற்றவாளிகளுக்கெதிராகச் சான்றுகொடு.

king'bird, *n.* துறக்கப்பறவை, நியூகினி (New Guinea) என்ற தீவைச் சார்ந்த அழகிய இறகுத் தொகுதிவாய்ந்த பறவை வகை; அமெரிக்க பறவைவகை.

king'bolt, *n.* முதன்மையான பெரிய மூளை.

king'-co'bra, *n.* கருவழலை, இராசநாகம்.

king'-crab, *n.* இலாடவடிவத் தோடுடைய நண்டு; இலாடவடிவத் தோடுடைய நத்தைபோன்ற கடல்வாழ் உயிர்வகை.

king'craft, *n.* ஆட்சித்திறம், திறம்பட அரசோச்சுங் கலை.

king'-crow, *n.* கிகிணி, வலியன்.

king'cup, *n.* கிண்ணவடிவான பொன்னிறப் பூக்களைக் கொண்ட செடிவகை.

king'dom, *n.* முடியரசு நாடு; மன்னரின் ஆட்சிக்குட்பட்ட பரப்பு; அரசு, இராச்சியம்; ஆட்சிப்பகுதி, நிலப்பகுதி; இயற்கைப்பொருள்களின் இனப்பிரிவு, இனப்பரப்பு; பெரு வகுப்பு; அருளாட்சி; அருளாட்சி எல்லை; (தொ.) animal kingdom, விலங்கினப்பரப்பு; விலங்கினப் பெரும்பிரிவு; mineral kingdom, கனிப்பொருட் பிரிவு; United Kingdom, இங்கிலாந்து-ஸ்காத்லாந்து-வடக்கு அயர்லாந்து ஆகிய வற்றை உட்கொண்ட தொகுதி; vegetable kingdom, பயிரினப்பரப்பு, தாவரப் பெரும்பிரிவு.

king'fisher, *n.* மீன்கொத்திப் பறவை.

king'let, *n.* குட்டி அரசர்; பொன்னிறச்சூட்டுடைய பறவை வகை.

king'maker, *n.* மன்னர்களைப்படைக்கும் ஆற்றலுடையவர்; (வர.) ஆருவது ஹென்றி ஆட்சிக்காலத்திலிருந்த வார்விக்கு கோமகன் (Earl of Warwick.)

king'pin, *n.* = kingbolt.

king'post, *n.* நடுமரம், கூரைச்சட்டத்தில் கைம்மரங்களின் கீழ் முனைகளை இணைக்கும் கட்டையின் மையத்திலிருந்து செங்குத்தாக உச்சி வரையில் மேலெழும்பும் கம்பம்.

king'ship, *n.* அரசு; அரசபதவி; அரசநிலை; அரசருக்குரிய மதிப்பு.

kink, *n.* குணக்கல், கோட்டம், கம்பி-சங்கிலி அல்லது கயிற்றில் விழும் இடைமுறுக்கு; மனக்கோட்டம், மனக்கவிவு; கொக்கி, கொளுவி; *v.* முறுக்குவிழு, குணக்கலுறு, முறுக்கிக்கொள்; கயிற்றில் முறுக்கு விழச்செய்.

kink'ajou, *n.* இரவுநடமாட்டமுடைய ஊனுண்ணும் மரம் வாழ் அமெரிக்க விலங்குவகை.

kinn'ikinic', *n.* அமெரிக்க இந்தியர்கள் புகையிலைக்குப் பதிலாகப் பயன்படுத்தும் கலவைப்பொருள் வகை; புகைக்கும் கலவைப் பொருள்வகை தருஞ் செடி.

ki'no, *n.* மருந்துவகைகளிலும் தோல் பதனிடுவதிலும் துவர்ப்புப் பொருளாகப் பயன்படுத்தப்படும் வேங்கை மரவகையின் பிசின்.

kins'folk, *n. pl.* குருதித் தொடர்புடைய உறவினர்.

kin'ship, *n.* குருதித் தொடர்புடைய உறவு; பண்பொற்றுமை; பண்புத் தொடர்பு.

kin'tal, *n.* = quintal.

kiosk', *n.* எளிய கட்டமைப்புடைய திறந்த கூடாரம்; செய்தித்தாள் முதலியவை விற்பதற்கான எளிய கட்டமைப்பு வாய்ந்த வெளிப்புறக்கடை; பொதுத்தொலைபேசிக்கான வெளிப்புறக் கட்டமைப்பு, பொதுத் தொலைபேசி அமைவு; (தொ.) Yildiz Kiosk, துருக்கி சுல்தான் அரண்மனை.

kip, *n.* பதனிட்டுப் பயன்படுத்தப்படும் இளவிலங்கின் தோல்.

kipp'er, *n.* முட்டையிடும் பருவத்தில் மீன்வகையில் ஆண் இனம்; மீன் உணங்கல், உப்பிட்டு உலர்த்தப்பட்ட மீன் வகை; *v.* மீன் வகைகளை உப்பிட்டு உணக்கு.

Kirghiz', *n.* காஸ்பியன் கடற் (Caspian Sea) கரையில் வாழும் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்; காஸ்பியன் கடற்கரையில் வாழும் மங்கோலிய இனத்தவர் மொழி; *a.* காஸ்பியன் கடற்கரையில் வாழும் மங்கோலிய இனத்தவரைச் சார்ந்த.

kirk, *n.* வடஇங்கிலாந்து ஸ்காத்லாந்து வழக்கில் திருக்கோயில்; (தொ.) Kirk of Scotland, ஸ்காத்லாந்து நாட்டுத் திருச்சபை; kirk session, ஸ்காத்லாந்து நாட்டுத் திருச்சபையின் முதற்கீழ்ப்படி முறைமன்றம்.

kirk'-man, *n.* ஸ்காத்லாந்து நாட்டுத் திருச்சபை உறுப்பினர்.

kirsch', kirsch'wasser, *n.* காட்டுப் பழவகைகளின் புளிப்பேறிய தேறலிலிருந்து வடித்து இறக்கப்படுஞ் சாராய வகை.

kir'tle, *n.* மேலங்கி, உள்ளுடை வகை.

kis'met, (துரு.) *n.* ஊழ், விதி.

kiss, *n.* முத்தம்; மேசைக் கோற்பந்தாட்டத்தில் பந்துகளுக்கிடையே நேரும் மோதல்; இனிப்புத் தின்பண்ட வகை; *v.* முத்தங்கொடு, முத்தமிடு; மேசைக்கோற் பந்தாட்டவகையில் பந்துடன் பந்து மோதச் செய்; (தொ.) kiss away, முத்தங்கொடுத்துக் கண்ணீர் துடை; kiss hands, kiss the hand, பதவியேற்கும்போது அல்லது முறைமையான வணக்கம் செலுத்தும்போது மன்னரின் கைகளை முத்தமிடு; kiss one's hand to, முத்தங்கொடுக்க விரும்புவதைத் தெரிவிப்பதற்காகத் தன் கையையே முத்தமிட்டுக் காட்டு; kiss the book, சூளுறவு செய்யும் வகையில் விவிலிய நூலுக்கு முத்தங்கொடு; kiss the dust, அடிபணிந்துபோ, சரணுகதியடை; கொல்லப்பெறு; வீழ்ந்து மாள்வுறு; kiss the ground, நெடுஞ்சாண்கிடையாகக் கீழே விழுந்து வணங்கு; தாழ்வுறப்பெறு; kiss the rod, தண்டனையைப் பணிந்து ஏற்றுக்கொள்.

kiss'ing, *n.* முத்தமிடல்; *a.* முத்தங்கொடுக்கிற; (தொ.) kissing kind, ஒருவர்க்கொருவர் அன்புற்றிருக்கிற நிலை.

kiss'ing-crust, *n.* ரொட்டி சுடுகையில் ஒன்று மற்றொன்றோடு ஒட்டியுள்ள பகுதியிலிருக்கும் மென்தோடு.

kiss'ing-gate, *n.* ஒரு தடவை ஒருவரை மட்டுமே செல்லவிடும் பிளவுவடிவ அடைப்புக் கதவு.

kiss'-in-the-ring', *n.* இளைஞர்களிடையே ஒருவர் வேறு பாலராயுள்ள மற்றொருவரைத் துரத்திக்கொண்டுபோய் முத்தமிடும் விளையாட்டுவகை.

kiss'-me-quick, *n.* செடிவகை; மகளிர் தலையில் பின்புறமாக மிகச் சாய்வாக வைத்துக்கொள்ளும் சிறுதொப்பி வகை; குட்டையான முன் மயிர்ச்சுருள்.

kit[1], *n.* மரத்தொட்டி; படைவீரர் மூட்டைமுடிச்சுத் தொகுதி; மூட்டைமுடிச்சுப் பை; பயண ஆயத்த அணி; தொழிலாளியின் கருவிகலத்தொகுதி; *v.* ஏற்படுத்திக்கொடு, ஆயத்தஞ் செய்; சித்தஞ் செய்யப்பெறு.

kit[2], *n.* = kitten.

kit'-bag, *n.* நீட்டுப்பை, படைவீரரின் அல்லது பயணக்காரரின் ஆடை அணிமணிப் பை.

kit'-cat, *n.* (வர.) ஆங்கில நாட்டில் 'விக்கு' (Whig) கட்சி அரசியல்வாதிகள் கொண்ட கழகத்தின் உறுப்பினர்; (தொ.) Kit-cat Club, இரண்டாவது ஜேம்சு (James II) மன்னரை ஏற்ற 'விக்கு' கட்சியினரால் நிறுவப்பட்ட கழகம்; kit-cat portrait, 38 அங்குல நீளமும் 28 அங்குல அகலமும் உள்ள நிழற்படம்.

kitch'en, *n.* அடுக்களை, சமையலறை, மடைப்பள்ளி; (தொ.) kitchen garden, காய்கறித் தோட்டம்; kitchen midden, (தொல்.) பெரும்பாலும் தோடுகளும் எலும்புகளும் கொண்ட வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட குப்பைகூளக்குவியல்; kitchen physic, மிகுதியான நல்ல உணவு.

kitch'ener, *n.* சமையலறை வேலையாள்; சமையலறை மேலாள்; சமையற் சூட்டடுப்பு.

kitchenette', *n.* சிறு சமையலறை; சமையலறையும் பொருட் கிடங்கும் ஒருங்கமைந்த சிறுகூடம்.

kite, *n.* பருந்து, கருடன்; கொடுங் கொள்ளையிடும் ஆர்வ முள்ளவன்; எத்தன்; பட்டம், காற்றாடி; பிரிட்டனின் சரக்குத் தர நிறுவனக் கட்டுப்பாட்டுக்கிணக்கமான தர உறுதிக்குரிய பருந்துக்குறி; *v.* காற்றாடியைப்போல் விண்ணிற் பறந்து உலவு; காற்றாடியைப்போல் விண்ணில் தாவிப் பறக்கச்செய்; (தொ.) fly a kite, பட்டம் பறக்கவிடு; பொதுமக்கள் கருத்தைத் தெரிந்துகொள்வதற்காக நோட்டம் விட்டுப்பார்; கடன் பத்திரம்மூலம் பணந்திரட்டு.

kite'-balloon', *n.* படைத்துறை வேவுக் கூண்டு.

kites, *n. pl.* இளங்காற்றில் மட்டும் விரிக்கப்படும் மிகவுயர்ந்த கப்பற்பாய்கள்.

kith, *n.* அறிமுகப்பழக்கம்; (தொ.) kith and kin, உற்றார் உறவினர்.

kitool', *n.*=kittul.

kitt'en, *n.* பூனைக்குட்டி; கூச்சமுள்ள சிறுமி; *v.* ஈனு, பூனை வகையில் குட்டிபோடு.

kittereen', *n.* மேற்கிந்திய ஒற்றைக் குதிரை வண்டி.

kitt'iwake, *n.* கடற்பறவை வகை.

kit'tle, *a.* கூச்சமுள்ள, எளிதில் கையாளமுடியாத; (தொ.) kittle cattle, கூச்சமுள்ள கால்நடைகள்; எளிதில் பழகாதவர்.

kittul', *n.* பனையினமரம்; பனையினமரத்தின் கருநிறமுடைய உறுதியான நார்ப்பொருள் வகை.

kitt'y [1], *n.* செல்லப்பெயர் வழக்கில் பூனைக்குட்டி.

kitt'y [2], *n.* சீட்டாட்ட வகைகளில் பந்தயத் தொகைகளின் கூட்டு; பொது நிதி; முடப் பந்தாட்டத்தில் இலக்காகவுள்ள சிறு வெள்ளைப்பந்து.

ki'wi [1], *n.* (பே-வ.) நியூசிலந்து நாட்டவர்.

ki'wi [2], *n.* நியூசிலந்தில் காணப்படும் வாலற்ற பறக்காத பறவை வகை.

klax'on, *n.* உந்துவண்டியின் மின்விசை ஊதுகுழல்.

klepht, *n.* (வர.) துருக்கிய வெற்றியின்பின் (15-ஆம் நூற்றாண்டில்) கிரேக்க அல்லது அல்பேனிய நாட்டிலுள்ள மலைப் பகுதிக் கொள்ளைப் படைவீரர்.

kleptoman'ia, *n.* திருட்டுச்செயலில் ஆர்வம், திருட்டார்வக் கோளாறு.

klip'springer, *n.* தென் ஆப்பிரிக்க சிறு மான்வகை.

kloof, *n.* தென் ஆப்பிரிக்காவில் குறுகிய மலையிடுக்கு, மலை விடர், பள்ளத்தாக்கு.

knack, *n.* தனிப்பயிற்சித்திறம், தனிநய நுட்ப ஆற்றல்; பயில்திறப்பண்பு, தனிச் செயற்பண்பு, தனிப்பேச்சுநடைப் பழக்கம்; நுண்விசைப்பொறி, விளையாட்டுப்பொறி; நுட்பச் சூழ்ச்சித்திறம்.

knack'er, *n.* அடிவிலங்காளர், பயனற்ற குதிரைகளை வாங்கிக் கொல்லும் தொழிலுடையவர்; கழிபொருள் வணிகர், மூலப் பொருள்களுக்காகப் பழையவீடுகள்-கப்பல்கள் முதலியவற்றை வாங்குபவர்.

knag, *n.* மரக்கணு, கிளையின் அடித்தூறு.

knap [1], *n.* சிமையம், குன்றின் குடுமி; மேட்டுச்சரிவான நிலம்.

knap [2], *v.* பாட்டைச்சரளைக்காகக் கல்லுடை, சம்மட்டியால் தகர்.

knap'sack, *n.* சடங்கம், அசம்பை, இரட்டு அல்லது தோலாலான படைவீரர் அல்லது பயணக்காரர் தோள்பை.

knap'weed, *n.* உறுதியான காம்பும் ஊதாமலர்களுமுடைய சாதாரண களைப்பூண்டு வகை.

knar, *n.* மரக்கணு, கரணை, அடிமரத்திலோ வேரிலோ பட்டையால் மூடப்பட்ட கரடு.

knave, *n.* வீணன், குறும்பன், போக்கிரி; படைவீரன் அல்லது பணியாள் உருவம் தாங்கியுள்ள ஆட்டச்சீட்டு.

knav'ery, *n.* நாணயக்கேடு, நேர்மையின்மை, கயமை.

knav'ish, *a.* போக்கிரித்தனமான; மோசடியான; கயமைத் தனமான.

knead, *v.* பிசை; மாப்பிசைந்து ரொட்டி சுடு; களிமண் பிசைந்து மட்பாண்டஞ் செய்; கல, ஒன்றுபடுத்து; பற்றவை; உடம்பைப் பிடித்துவிடு.

knead'ing, *n.* பிசைதல்; (தொ.) kneading trough, மாவு பிசைவதற்குரிய மரத்தொட்டி.

knee, *n.* முழங்கால் முட்டு; முழங்காலை மூடும் ஆடைப்பகுதி; வடிவத்தில் அல்லது நிலையில் முழங்கால் போன்றபொருள்; முடக்கு வளைவுள்ள இரும்பு அல்லது மரத்துண்டு; *v.* முழங்காலினால் தொடு; பணிச்சட்டம் முதலியவற்றினை முடக்கு வளைவான இரும்பு அல்லது மரத்துண்டினால் இறுக்கு; (பே-வ.) காற்சட்டையை முழங்காலண்டை புடைத்திருக்கச் செய்; (தொ.) bring one to his knees, ஒருவரை வணங்க வை; give a knee to, குத்துச்சண்டை வீரரை இடைவேளையில் முழங்கால்மேல் தாங்கு; குத்துச்சண்டை வீரரின் உடன் துணைவராயிரு; is on the knees of the gods, முடிவு இன்னும் உறுதிப்படாதிருக்கிறது; on one's knees, வழிபடுகையில் முழந்தாள் படியிட்டு, வணங்கி, வணக்கமாக.

knee'-breech'es, *n. pl.* முழங்கால் வரையிலோ அல்லது அதற்குச்சற்று கீழாகவோ உள்ள காற்சட்டை.

knee'-cap, *n.* முழங்கால் சில்லு; குதிரைகளின் முழங்கால் களுக்குரிய காப்பு மூடி.

knee'-deep, *n.* முட்டளவு ஆழமுள்ள.

knee'-hole, *n.* மேசையின் இழுப்பறை அடித்தளங்களுக் கிடையே முழங்கால் விட்டுக்கொள்வதற்கான வெற்றிடம்.

knee'-hole table, *n.* இழுப்பறை அடித்தளங்களுக்கிடையே முழங்கால் விட்டுக்கொள்வதற்கான வெற்றிடம் அமைந்துள்ள மேசை.

knee'-joint, *n.* முழங்கால் மூட்டு; மூட்டிணைப்பு, கீலினால் பொருத்தப்பெற்ற இருபகுதிகள் கூடுமிடம்.

kneel, *v.* மண்டியிடு, முட்டுன்றிநில்; முழந்தாள்படியிட்டு வணங்கு; பணிவுகாட்டு.

knee'-pan, *n.*=knee-cap.

knee'-swell, *n.* (இசை.) இசைப்பெட்டிகளில் முழங்காலினால் இயக்கப்படும் நெம்புகோல்.

knell, *n.* சாவுமணியோசை; தீக்குறி, தீமைக்கறிகுறி; *v.* சாவு மணியடி; இரங்கொலி எழுப்பு; தீமைக்கறிகுறியாக மணியடி; சாவுமணிபோன்று தீக்குறி காட்டு.

knelt, *v.* kneel என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

Kness'et, *n.* ஒரே அவையையுடைய இஸ்ரேல் நாட்டு மாமன்றம்.

knew, *v.* know என்பதன் இறந்தகாலம்.

Knick'erbocker, *n.* நியூயார்க் வாசி.

knick'erbockers, *n. pl.* முழங்காலில் திரட்டி மடிக்கப்பட்ட தளர்த்தியான காற்சட்டை.

knick'ers, *n. pl.* (பே-வ.) முழங்காலில் திரட்டப்பட்ட தளர்த்தியான காற்சட்டை; முழங்காலில் திரட்டி மடிக்கப் பட்ட தளர்த்தியான மகளிரின் குறுங்காற்சட்டை.

knick'-knack, *n.* பொட்டுப்பொடி, சிற்றழகுப் பொருள், சிற்றணிமணித் துணுக்கு; சிங்காரத் தட்டுமுட்டுப்பொருள், பொட்டுப் பொடிச் சரக்கு; சிறுவிளையாட்டுக்கருவி.

knife, *n.* கத்தி, பேனாக்கத்தி; குத்துவெட்டுக்குரிய பெருங் கத்தி; இயந்திரத்தின் பாகமாகவுள்ள அலகு; *pl.* knives; *v.* கத்தியினால் வெட்டு; கத்திகொண்டு குத்து; (தொ.) before you can say knife, மிகவிரைவாக, திடீரென்று; have one's knife in, விடாப்பிடியாக ஒருவரிடம் பகைமை கொண்டிரு; ஒருவரைப் பழிவாங்கக் காத்திரு; play a good knife and fork, வயிறாரச்சாப்பிடு; the knife, (மரு.) அறுவைச்செயல்கள்; war to the knife, ஈவிரக்கமற்ற போர்.

knife'-board, *n.* கத்தித் துப்புரவுப் பலகை ; பழைய வகைப் பேருந்து வண்டியின் முகட்டின்மேல் நீளவட்டமாக அமைக்கப் பட்டுள்ள இணையிருக்கை.

knife'-boy, *n.* மேசைக்கத்திகளைத் துப்புரவுசெய்யும் பையன்.

knife'-edge, *n.* கத்தியின் கூர்விளிம்பு ; (இயந்.) ஊசலி அசைவதற்கேதுவாயிருக்கிற எஃகு அச்சு.

knife'-grinder, *n.* சாணை பிடிப்பவர், கத்தி கூராக்குபவர்.

knife'-machine', *n.* கத்தித் துப்புரவு இயந்திரம்.

knife'-rest, *n.* கத்தித் தாங்கி, உணவுமேசையில் கத்தி கவர் முள் ஆகியவற்றை வைப்பதற்கான உலோகம் அல்லது கண்ணாடியாலான கட்டை.

knight, *n.* வீரத் திருத்தகை, ஆண்டகை ; கருணைமறவன், மாதர்களுக்கும் நலிவுற்றோர்களுக்கும் நல்லாதரவு நல்கிக் காக்கும் வீரன் ; வீரார்ந்த பெருந்தகை, நற்பணிக்காக மன்னரால் மதிப்புக்குரிய படைத்துறை நிலைக்கு உயர்த்தப்பட்ட உயர்குடிப்பிறப்பினர் ; பண்பார்பெருந்தகை ; படைத்துறை நிலைக்கு உயர்த்தப்பட்டவர் ; வீரப்பெருந்தகைப் பட்டம் வழங்கப்பெற்ற உயர்குடிப்பிறப்பாளர் ; (வர.) மாமன்ற வட்டப்பேராள், கோட்டம் அல்லது வட்டத்துக்கு மாமன்றத்தில் பிரதிநிதியாயிருப்பவர்; பண்டைய ரோம் நாட்டில் குதிரைப் படையைச் சேர்ந்த ஒருவர் ; பண்டைய கிரேக்க நாட்டில் ஆதென்ஸ் (Athens) நகரில் இரண்டாம் படிநிலைக்கு உயர்த்தப்பட்ட குடிமகன் ; சதுரங்க ஆட்டத்தில் குதிரைத்தலையுடைய காய் ; *v.* ஒருவருக்கு வீரத்திருத்தகைப் பட்டம் வழங்கு ; (தொ.) knight bachelor, தனிப்பட்ட எந்தப் படிநிலையையும் சாராத பொதுநிலைப்பட்டம் பெற்ற வீரத்திருத்தகை; knight commander, வீரத்திருத்தகைப் படிநிலை வகைகளில் மேல்தரத்தைச் சேர்ந்தவர் ; knight companion, வீரத்திருத்தகைப் படிநிலையில் தாழ்ந்த தரத்தைச் சேர்ந்தவர் ; knight errant, உலாவியல் பெருந்தகைவீரர், அருளாண்மைச் செயல்களைத் தேடித்திரிந்த இடைநிலைக்கால ஆண்டகை ; கோமாளி வீரன் ; knight of the post, பொய்க் கரியுரைத்தே வாழ்க்கை நடத்துகிறவர்; Knights Hospitallers, படைத்துறைத் துறவிகள்கொண்டதாக 1048-ல் நிறுவப்பட்ட அமைப்பு ; Knights Templars, பாலஸ்தீன (Palestine) நாட்டுக்குத் திருத்தல யாத்திரை செல்பவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்கான சமயச்சார்பான படைத்துறை அமைப்பு.

knight'age, *n.* வீரத்திருத்தகையினர் தொகுதி ; வீரத்திருத் தகைகளின் வரலாறடங்கிய பட்டியல்.

knight'hood, *n.* வீரத்திருத்தகைப் பட்டம் ; வீரத்திருத்தகை நிலை; வீரத்திருத்தகையோரின் படித்தரம்; வீரத்திருத்தகை அமைப்பு.

knight'ly, *a.* வீரத்திருத்தகைக்குரிய ; வீரத்திருத்தகைக் குகந்த ; வீரத்திருத்தகை போன்ற.

knight'-mar'shall, *n.* அரசன் அரண்மனைக்குப் பன்னிரண்டு கல் தொலைவுக்குட்பட்ட எல்லையில் நடைபெறும் குற்றங்கள் நடவாமற் காத்த முற்காலப் பணியாளர்.

knight'-service, *n.* (வர.) படைத்துறைப் பணிக்கான மானியமுறை.

knit, *v.* துன்னு; பின்னியிழை; வலையாகப் பின்னு; துன்னலுறு, பின்னி இணைவுறு; துன்னி உருவாக்கு, பின்னல்வேலை செய்து உண்டுபண்ணு ; சுரி, நெரி, சுருக்கமுறுவி ; நெரிப்புறு, சுருக்கமுறு ; நெருங்கியிணை ; ஒன்றுபடுத்து ; கூட்டி ஒன்றாக்கு ; செறிவுறுத்து ; (தொ.) knit up, பின்னலிழை போட்டுச் செப்பனிடு ; வாத முதலியவற்றுக்கு நிறைவளி ; நன்கு முடி.

knitt'ing, *n.* துன்னுதல் ; பின்னல்வேலை ; ஒன்றுபடுத்தல்.

knitt'ing-needle, *n.* துன்னூசி, துன்னுகோல், பின்னலிழைக் கோல்.

knit'tle, *n.* (கப்.) புரியிழையினாலான சிறிய நூற்கயிறு.

knob, *n.* குமிழ், முனையுருளை; உருள்புடைப்பு ; கொம்மை ; குமிழ்வடிவக் கைப்பிடி ; சர்க்கரை-நிலக்கரி முதலியவற்றின் சிறு கட்டி ; *v.* குமிழ் இணைவி ; புடை, வீங்கு, உப்பு.

knobbed, *a.* குமிழ் இணைவுற்ற ; குமிழினையுடைய ; குமிழ் நிரம்பிய, சிறு புடைப்புக்களையுடைய.

knob'ble, *n.* சிறு புடைப்பு, கணு.

knobb'y, *a.* புடைப்புக்கள் நிறைந்த, கணுக்கள் உள்ள.

knob'kerrie, *n.* தென்னாப்பிரிக்கர் ஆயுதமாக வழங்கும் குமிழ்ப்பிடியுள்ள குறுந்தடி.

knob'stick, *n.* படைக்கலம் என்னும் வகையில் குமிழ்த் தலைப் புடைய தடி; வேலைநிறுத்தக் காலத்தில் வேலைக்குச் செல்பவர்.

knock, *n.* திடீர் அடி, தட்டுதல், தாக்குதல், இடிப்பு, குத்து, கொட்டு ; இயந்திரத்தினுள் கோளாறு காரணமாக எழும் உள்வெடிப்பொலி ; *v.* வலங்கொண்டடி, மொத்து ; இடி, குத்து ; கொட்டு ; மோது ; மோதப்பெறு; அறைந்து உட்செலுத்து; அடித்து வெளியேற்று ; கதவைத்தட்டு, தடதடவென்றடித்துக்கொள் ; தடதட ஓசை உண்டுபண்ணு ; இயந்திர வகையில் தடதடவென்றோசை உண்டாகப்பெறு ; அடித்துத்தாக்கு ; அடிகள் மூலம் வழங்கு ; அடிகள் மூலம் செய்துமுடி ; அடித்து வீழ்த்து ; ஏலத்தில் சுத்தியடித்துப் பொருளை வழங்கு ; (தொ.) knock about, அடிமேல் அடி கொடு ; முரட்டுத்தனமாக நடத்து ; அலைந்து திரி ; ஒழுங்கற்ற வாழ்வு நடத்து ; knock against, சென்று மோதிக் கொள்; தற்செயலாகச் சந்தி; knock down, அடித்து வீழ்த்து; தோல்வியுறுவி; ஏல விற்பனையில் சம்மட்டியாலடித்து ஏலங் கேட்டவருக்குப் பொருளை விற்றுவிடு ; (பே-வ.) குறிப்பிட்டு அழை; (பே-வ.) விலைகளைக் குறை அல்லது தணி; எளிதாக எடுத்துச் செல்லும்படி இயந்திரம் முதலியவற்றைக் கூறுகளாகப் பிரித்துவிடு ; knock head, நெற்றி நிலத்தில் படிய விழுந்து வணங்கு; தன்னை இழிவுபடுத்திக்கொள், தாழ்த்திக் கொள் ; knock into a cocked hat, செம்மையாக அடி ; knock off, அடித்து ஒடித்து வேருக்கு; வேலையை விட்டொழி; விட்டொழி ; (பே-வ.) விரைந்து காரியஞ் செய் ; பாடல்கள் முதலியவற்றை விரைவாக இயற்றித்தள்ளு; விலைப்பட்டியலில் கழிவுதள்ளு ; விலையிலிருந்து கழிவு தள்ளிவிடு ; knock one into the middle of next week, அடித்து ஓட்டு; knock one's head against, முரணான சூழ்நிலைகளோடு மோதிக்கொண்டு இடர்ப்படு; knock one's head off, ஒருவரை எளிதில் விஞ்சு ; knock on the head, தலையிலடித்து உணர்விழக்கச் செய், தலையிலறைந்து கொல்லு; திட்டம் முதலியவைகளுக்கு முடிவு கட்டு; knock out, புகைபிடிக்குங் குழலைக் கவிழ்த்துக்கொட்டு; குத்துச்சண்டையில் குறிப்பிட்ட நேரத்தில் எதிரி மீண்டும் எழாதவாறு மடங்கச்செய், படுகுலையடிகொடு, தோல்வியுறுவி; (பே-வ.) அவசரமாகத் திட்டமிடு ; knock the bottom out of, வாதம் முதலியவற்றைச் செல்லாததாக்கு ; knock together, அவசரமாக ஒன்றுசேர்; knock under, பணி; கீழ்ப்படி; knock up, அடித்து மேல் நோக்கிச் செலுத்து ; அவசரமாகச் செய், விரைந்து ஏற்பாடு பண்ணு ; மரப்பந்தாட்டத்தில் ஓட்டங்கள் எடு; கதவைத்தட்டி ஆளை எழுப்பு; களைப்புறுவி; களைப்புறு.

knock'about, *n.* பகட்டாரவாரமும் இரைச்சலுமுடைய இசையரங்கு; அலைந்து திரிதல்; *a.* பகட்டாரவாரமுள்ள, இரைச்சலான ; துணிவகையில் முரட்டு உபயோகத்துக்குப் பயன் படுத்தத்தக்க.

knock'-down, *n.* தெருச்சண்டை, அருகில் உள்ளவரும் கலந்துகொள்ளும் கைகலப்பு ; *a.* அடிவகையில் வீழ்த்துகிற, விஞ்சி மேற்செல்கிற, அடக்குகிற; ஏல விற்பனையில் கேட்கப் படும் விலை வகையில் மிகக்குறைந்த, கொள்முதல் வைப்பான.

knock'er, *n.* மோதுபவர், தட்டுபவர் ; கதவுதட்டும் கைப் பிடி ; சுரங்கங்களில் வாழ்ந்துகொண்டு உலோகக் கனிப் பொருள் இருக்குமிடம் தட்டிக் காட்டுவதாகக் கருதப்படும் கூளித்தெய்வம்.

knock'-kneed, *a.* தெற்றுக்காலுடைய.

knock'-knees, *n. pl.* தெற்றுக்கால், நடக்கும்போது ஒன்றோடொன்று மோதும் முட்டிக்கால்கள்.

knock'-out', *n.* படுகுலையடி, மீண்டெழாதபடி குத்துச் சண்டைக்காரனை அடிக்கும் அடி ; ஏலவிற்பனையில் குறை விலையில் வாங்கிவிட உடந்தையாயிருப்பவர் ; *a.* குத்துச் சண்டை குத்து வகையில் எதிரியை எழாதவாறு வீழ்த்துகிற.

knoll[1], *n.* சிறுகுன்று, மேடு.

knoll[2], *v.* மணி அடி; மணி அடித்து நேரங்காட்டு; மணி அடித்தழை.

knot[1], *n.* முடிச்சு; சிக்கல், நெருடு; இடர், புதிர்; பிரச்சினை; உடுப்பின் ஒப்பனை இழைக்கச்சை; (கப்.) வேகமளக்குங் கருவியல் முடிச்சுக்களால் குறிப்பிடப்படும் பிரிவு; 6080 அடி கொண்ட கடல்துறை நீட்டலளவை அலகு; பிரச்சினை-கதை நிகழ்ச்சி முதலியவைகளின் மையம்; விலங்கினது உடம்பிலுள்ள கெட்டியான மொத்தைக்கட்டி; செடியின் காம்பு-கிளை அல்லது வேரில் காணப்படும் புடைப்பு; அடிமரத்தில் கிளை தோன்றுமிடத்தில் உண்டாகுங் கெட்டியான திரட்சி; அறுக்கப்பட்ட பலகையில் இத் திரட்சியினுல் ஏற்படும் எதிரிழைப்பகுதி; செடிக்காம்பின் கணு; தொகுதி, கூட்டம், கணம்; குலை; கொத்து; சுமைகளைத் தூக்கிச் செல்வதற்கான இரட்டைத்தோள் சும்மாடு; *v.* கயிறு முடிச்சிடு; முடிச்சாகக் கட்டு; ஆடை ஓர முடிச்சுக்களிடு; முடிச்சுக்களிட்டு ஆடைக் கரைகளுண்டாக்கு; புருவம் நெரி; நெருக்கமாக ஒன்றுபடுத்து; சிக்கவை, சிக்குப்படுத்து; (தொ.) cut the Gordian knot, வன்செயலினுற் கட்டுப்பாடுகளகற்றிச் சிக்கலைத்தீர்; Gordian knot, சிக்கலான முடிச்சு, இடரான பிரச்சினை அல்லது வேலை; porter's knot, சுமைகளை எடுத்துச் செல்வதற்கான இரட்டைத் தோள் சும்மாடு; weaver's knot, வெவ்வேறு அளவுள்ள கயிறுகளை இணைப்பதற்கான முடிச்சு வகை.

knot[2], *n.* ஈரமுள்ள மணற்பாங்கான இடங்களில் நீரில் நடந்து செல்லுஞ் சிறு பறவை வகை.

knot'-grass, *n.* சிக்கிக்கொண்டு படருந் தண்டுகளையும் இளஞ்சிவப்பு மலர்களையுமுடைய களைப்பூண்டு வகை.

knott'y, *a.* முடிச்சுக்கள் வாய்ந்த; கணுக்கள் நிரம்பிய; புதிரான, விளக்கமுடியாத.

knot'work, *n.* பின்னப்பட்டுள்ள கயிறுகள் கொண்ட ஒப்பனை வேலைப்பாடு; சித்திர வேலைப்பாடமைந்த தையல் வேலை வகை.

knout, *n.* அடியால் உயிர்போக்கவல்ல ருசிய நாட்டு முற்காலச் சவுக்கு; *v.* ருசியச் சவுக்கினுல் அடி.

know, *n.* தெரிநிலை, போதிய தகவல் பெற்றுள்ள நிலை, அறிய வேண்டுவனவற்றை அறிந்துள்ள நிலை; *v.* அறி, தெரிந்திரு; தகவல் உடையவராயிரு; ஐயமற உணர்ந்துகொண்டிரு; அடையாளமறி; இனங் கண்டுகொள்; பெயர் விவரந் தெரிந்திரு; திரித்தறி, வேறு பிரித்துணரும் ஆற்றலுடையவராயிரு; அனுபவத்தாலறி, உணர்; நன்கு தெரிந்திரு; பழகியறிந்திரு; பாலினத்தொடர்பு கொண்டிரு; தேர்ச்சி பெற்றவராயிரு; புலமையுடையவராயிரு; (தொ.) don't know him from Adam, பார்வையில் அடையாளந் தெரியாதிரு; in the know, விவரம் முழுதுந் தெரிந்திருக்கிற; தெரியாதநிலையில் இல்லாத; know a hawk from a handsaw, தெளிந்த பொது நிலை அறிவுள்ளவராயிரு; know better, know better than that, கூறியதை நம்பிவிடா அளவுக்குச் செய்திகளை நன்கு தெரிந்திரு; know by name, பெயரைப்பற்றிக் கேள்விப் பட்டிரு; பெயரைக் கூறக்கூடியவராயிரு; know how, வழியறி; know of, உணர், அறி; know one's own mind, ஊசலாட்டமற்றுணர்; know the ropes, செயல் துறையின் நிலையையும் விவரங்களையும் நுணுக்கங்களையும் தெரிந்து கொள்; know what is what, உலக அனுபவமும் அறிவும் உடையவராயிரு; not that I know of, எனக்குத் தெரிந்த வரையில் இல்லை.

know'-all, *n.* எல்லாந் தெரிந்தவர்; எல்லாந் தெரிந்ததாகச் சொல்லிக்கொள்பவர்.

know'-how, *n.* வழிவகையறிவு; செவ்விக்கேற்ற சரியான வகைமுறை நுண்ணறிவாற்றல்.

know'ing, *a.* அறிவுள்ள; விரகுடைய; சூழ்ச்சித்திறமுள்ள; முழு விழிப்புடனிருக்கிற; (பே-வ.) புதுப்பாணியிலுள்ள, நாகரிகப் பாங்கான.

know'ingly, *adv.* முழு விழிப்புடனிருக்கிற நிலையில், வேண்டுமென்றே, நெஞ்சறிந்து, மனப்பூர்வமாக.

knowl'edge, *n.* அறிவு; அறிந்த செய்தி; தகவல்; புற அறிவுத்தொகுதி; அறிவுப்பரப்பு; அறிவுப் பரப்பெல்லை; தெரிந்துள்ள செய்தியின் அளவு; நெருங்கிய பழக்கம்; அனுபவப் பழக்க அறிவு; (தொ.) come to one's knowledge, தெரியவரலாகு.

knowl'edgeable, *a.* (பே-வ.) செய்திகளை நன்கு தெரிந்துள்ள, விவரமறிந்த, அறிவமைதியுடைய.

know'-nothing, *n.* அறிவிலி; ஐயுறவுக் கோட்பாடுடையவர்.

knuc'kle, *n.* கைமுட்டி; விரலடி இணை எலும்பு; நாற்கால் விலங்கு வகையில் கணைக்கால்; குதிரைமுட்டு; கன்றுக்குட்டி அல்லது பன்றியின் இறைச்சியுடன் கூடிய முழங்கால் முட்டுப் பகுதி; *v.* கைமுட்டியால் அடி; கைமுட்டியால் தேய்; விரல்மடக்கிக் குத்து; முட்டியால் அழுத்து; முட்டி கொண்டு துடை; கோலியாடுகையில் விரற் கணுக்களை நிலத்தின்மீது வை; (தொ.) a rap on the knuckles, சிறுவர்களின் விரற் கணுவின் மேலடித்துத் தண்டிக்கும் வகை; கண்டித்தல்; knuckle down, kunckle under, விட்டுக்கொடு, கீழ்ப்படி, அடங்கிப்போ; near the knuckle, (பே-வ.) இழிந்த பாங்குடையதென்று சொல்லும் நிலைக்கு மிக அணித்தான, கிட்டத்தட்ட இழிபாங்கான.

knuck'le-bone, *n.* கைமுட்டி எலும்பு; ஆடு முதலிய நாற்கால் விலங்குகளின் கால்முட்டி எலும்பு; குதிரையின் முட்டெலும்பு.

knuck'le-bones, *n. pl.* ஆடு முதலியவைகளின் முழங்கால் முட்டி எலும்புகளைக் கொண்டு ஆடப்படும் விளையாட்டு வகை.

knuck'le-duster, *n.* முட்டிக்காப்பு, கைமுட்டியால் அடிக்கும் போது ஊறு நேராதபடிக் காப்பதற்கான உலோக உறை.

knur, knurr, *n.* அடிமரக் கணு, முண்டு; காழ்ச்செறிவு; இங்கிலாந்தின் வடபகுதியில் ஆடப்படும் ஆட்டத்திலுள்ள மரப்பந்து.

knurl, *n.* முடிச்சு, கணு; தட்டெழுத்துப் பொறியில் அச்சமுத்துத் தாள் தகட்டைத் திருப்புங் குமிழ்; உலோக வேலையில் விளிம்பு அமைவு.

knut, *n.* பகட்டான இளைஞன்.

ko'a, *n.* 'சான்டுவிச்' (Sandwich) தீவுகளிற் காணப்படும் வேல மரவகை.

koa'la, koo'lah, *n.* ஆஸ்திரேலியாவிலுள்ள மரம் வாழ் பாலுணி விலங்குவகை.

kob'old, *n.* செர்மானியரின் பழங்கதை மரபில் நற்கூளி; சுரங்கங்களில் வாழும் அடிநிலக் கூளி.

kod'ak, *n.* தொடர்படமெடுக்குந் தகட்டுச்சுருளையுடைய நிழற்படக் கருவி; *v.* தொடர்சுருளைக் கருவிகொண்டு நிழற்படம் பிடி; காட்சியை மிகு விரைவாக நிழற்படம் பிடி; தோற்றத்தை விவரித்துக் கூறு.

ko'el, *n.* குயில் வகை.

koh'-i-noor, *n.* புகழ்பெற்ற தென் இந்திய வைரம்; இனத்திற் சிறந்தது; மிகச் சிறந்த பொருள்.

kohira'bi, *n.* இங்கிலாந்திற் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுங் கோசுக்கீரை வகை.

kohl, *n.* மைக்கற்பொடி; அஞ்சனம், கண்ணுக்குத் தீட்டும் மை.

koin'e, *n.* கிரேக்க இலக்கிய காலத்துக்கும் கீழை ரோமப் பேரரசுக் காலத்துக்கும் இடைப்பட்ட ஊழியின் பொதுநிலைக் கிரேக்க இலக்கிய வழக்குமொழி.

kol'a, *n.*=cola.

Kolar'ian, *n.* கோலர், வங்காள மலைகாடுகளிலுள்ள ஆரியர்களல்லாத தொல்பழங்குடியினர்; *a.* கோலர் இனத்தைச் சேர்ந்த.

kolin'sky, *n.* சைபீரியா (Siberia) விலுள்ள நில-நீர்வாழ் விலங்கு வகையின் மென்மயிர்த்தோல்.

komitadj'i, komitaj'i, *n.*=comitadji.

kom'somol, *n.* ருசியாவின் பொதுவுடைமை இளைஞரமைப்பு.

koo'doo, *n.* தென் ஆப்பிரிக்காவிலுள்ள சுருள் கொம்பும் வெண்ணிறக் கோடுமுடைய பெரிய மான் வகை.

koo'lah, *n.* = koala.

koorb'ash, (அரா.) *n.* = kourbash.

kop'ec, kop'eck, kop'eek, kop'ek, *n.* = copeck.

kopp'ie, kop'je, *n.* தென் ஆப்பிரிக்காவில் சிறு குன்று.

Kor'an, (அரா.) *n.* இஸ்லாமியர் திருமறை.

korf'ball, *n.* ஆலந்துநாட்டுக் கூடைப்பந்தாட்ட வகை.

kosh'er, *n.* யூதர்களின் மரபுச்சட்டத்தின்படி செய்து விற்கப் படும் உணவு அல்லது உணவுக்கடை ; *a.* யூதர் மரபுணவுக் குரிய ; யூதர் மரபுணவு மனைக்குரிய.

kotow', *n.* கீழ்ப்படிதலின் அறிகுறியாக நெற்றி நிலத்தில் படும்படி வணங்குஞ் சீனர் வணக்கமுறை; *v.* சீன மரபுப்படி நெற்றி நிலத்திற்பட வணக்கஞ் செய்.

kot'wal, (இ.) *n.* இந்தியத் தலைமை ஊர்க்காவலர் ; குற்ற நடுவர், தண்டலாளர்.

koum'iss, *n.* குதிரைப்பாலிலிருந்து தயாரிக்கப்படும் புளிப் பான குடிவகை.

kourb'ash, (அரா.) *n.* துருக்கி எகிப்து நாடுகளில் தண்டனைக்குரிய சாட்டைவார்.

kraal, *n.* சுற்றிலும் வேலியாற் சூழப்பட்ட தென் ஆப்பிரிக்க கிராமம் ; ஆடுமாடு அடைக்குந் தொட்டி, வேலியிடப்பட்ட பட்டி.

krait, (இ.) *n.* வங்காளத்திற் காணப்படும் கடு நச்சுப்பாம்பு வகை.

kra'ken, *n.* நார்வே நாட்டுக் கடலோரப்பகுதிகளிற் காணப் படுவதாகக் கருதப்படும் பழங்கதை மரபுக்குரிய கடல் வேதாளம்.

krans, *n.* தென் ஆப்பிரிக்காவிற் சுவர்போல் மேற்கவிந்து நிற்கும் பாறைகள்.

krem'lin, *n.* ருசியாவில் மாஸ்கோ நகரிலுள்ள அரசியல் கட்டிடமாகிய உட்கோட்டை மாளிகை; (தொ.) the Kremlin, ருசிய அரசாங்கம்.

kreu'tzer, *n.* செர்மனி ஆஸ்திரியா நாடுகளில் முன்பு வழங் கிய வெள்ளி செம்பாலான சிறு நாணயம்.

krieg'spiel, (செர்.) *n.* போர் மாதிரி விளையாட்டு, வரை படங்களின்மேல் மரக்கட்டைகளைப் போர்வீரர்களாகக் கொண்டு நகர்த்திச் செல்லும் ஆட்ட வகை.

kril'ium, *n.* நில அரிப்பைத்தடுக்கும் தூள் வகையின் வாணிகப்பெயர்.

kris, *n.* = creese.

Krish'naism, *n.* கண்ணன் வழிபாடு.

kromes'ky, *n.* கொத்திய கோழிக்குஞ்சின் இறைச்சி உட் பொதிந்த பன்றி இறைச்சிப் பொரியலுணவு வகை.

kron'e, *n.* டென்மார்க்-நார்வே-ஸ்வீடன் முதலிய நாடுகளிற் பழக்கத்திலிருக்கும் வெள்ளி நாணயம் ; முற்கால ஆஸ்திரியா நாட்டின் வெள்ளி நாணயம் ; முற்கால செர்மனி நாட்டுத் தங்க நாணயம்.

Kroo, Krou, Kru, *n.* மேலை ஆப்பிரிக்காவில் லைபீரியா நிலத்தின் கரையோரப் பகுதிகளில் உள்ள திறமைவாய்ந்த கடலோடிகளான நீக்ரோ இனத்தவர் ; *a.* லைபீரியா நிலத்து நீகிரோ இனத்தைச் சார்ந்த.

kryp'ton, *n.* (வேதி.) மறையம், ராம்சே (Ramsay) என்பவ ரால் 1898-ஆம் ஆண்டிற் கண்டுபிடிக்கப்பட்ட அரிய இயை பியக்கமற்ற ஆவித்தனிமம்.

ksha'triya, (ச.) *n.* க்ஷத்திரியர், வீர வகுப்பினர்.

kud'os, *n.* பெருமை, கீர்த்தி, புகழ்.

Kuf'ic, *n.* = cufic.

Ku'-Klux, Ku'-Klux-Klan', *n.* (வர.) அமெரிக்க தென் ஐக்கிய அரசுகளில் மறைநிலை நீகிரோ எதிர்ப்புச்சங்கம் ; முதல் உலகப் போர்க்கால அமெரிக்க மறைநிலை அயலார் தடைக்காப்புச் சங்கம்.

kuk'ri, (இ.) *n.* இருமுனைகளிலும் அகன்று வளைந்த கூர்க்க வீரரின் கொடுவாள்.

kul'ak, *n.* செல்வ வளநிலையுடைய ருசிய நாட்டுக் குடியான வர் ; *pl.* kul'aki.

kultur', (செர்.) *n.* பண்பாடு ; நாகரிகம் ; நாகரிகப்படிவம்.

kultur'kampf, (செர்.) *n.* (வர.) பள்ளி-கோயில்கள் நிர்வாகம் பற்றி முற்காலச் செர்மன் பேரரசாட்சியாளர்க்கும் போப் ஆண்டவருக்கும் இடையேயுள்ள பூசல்.

kumm'el, (செர்.) *n.* சோம்பு மணமூட்டப்பட்ட இன்தேறல் வகை.

Kurd, *n.* கூர்டிஸ்தான் (Kurdistan) குடிமகன்.

Kuomintang', *n.* சீனாவில் (1912-இல்) நிறுவப்பட்ட தேசீயப் புரட்சிக் கட்சி.

kur'saal, (செர்.) *n.* செர்மானிய உடல்நலத் தலங்களிற் பார்வையாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட கட்டிடம்.

kvass, *n.* கம்பு போன்ற ஒருவகைத் தானியத்தினின்று இறக்கப்படும் ருசியநாட்டுக் குடிவகை.

kwashior'kor, *n.* வெப்ப நாடுகளிற் புரதச்சத்துப் போதாமை யால் வரும் நோய் வகை.

kwe'la, *n.* தென் ஆப்பிரிக்க சூலூ (Zulu) மக்கள் பாடல் வகை.

ky'anize, *v.* மரங்கள் உளுத்து அல்லது மக்கிப்போகாமல் தடுக்கும் 'வீரம்' கலந்த கரைசலைப் பூசு.

kyat, *n.* பொதுச் செலாவணியிலுள்ள பர்மிய நாணயம்.

kyl'in, *n.* சீன ஜப்பானிய பீங்கான் கலங்களின் மேல் வரையப்படும் பழங்கதை மரபுக்குரிய வியத்தகு வடிவுடைய விலங்கு உருவங்கள்.

kyl'oe, *n.* ஸ்காத்லாந்து நாட்டில் வளர்க்கப்படும் நீண்ட கொம்புடைய குட்டையான மாடு வகை.

kym'ograph, *n.* ஒலி அலைகளின் அழுத்த வேறுபாடுகளைப் பதிவு செய்யுங் கருவி.

Kyr'ie ele'ison, (கிரே.) *n.* கிரேக்க ரோம திருக்கோயில்களில் வழிபாட்டின்போது கூறப்படும் வழிபாட்டுச் சொற்றொடர் ; வழிபாட்டுச் சொற்றொடர் சார்ந்த பின்னணி இசையமைப்பு ; ஆங்கிலத் திருக்கோயில்களில் 'நற்கருணை' வழிபாட்டின் போது சமயகுருவின் கட்டளைகளுக்கு அளிக்கப்படும் மறு மொழி.

La, *n.* (இசை.) மேற்பாலையில் ஆறுவது இசைமானம் அல்லது பண்.

laag'er, *n.* படைவீடு; வண்டிகளை வட்டமாக நிறுத்தி வைத்து அமைத்த கூடாரம்; படைத்துறைக்கவச ஊர்திகளின் தங்கலிடம்; *v.* வண்டிகளை வட்டமாக நிறுத்தி வைத்துக் கூடாரம் அமை; வண்டி வட்டக்கூடாரங்களில் ஆட்களைத் தங்கவை.

lab, *n.* (பே-வ.)=laboratory.

lab'arum, *n.* ரோமரின் படைத்துறைக் குறிகளுடன் கிறித்தவச் சின்னங்களையும் இணைத்த கான்ஸ்டண்டின் (Constantine) என்ற முதல் கிறித்தவ ரோமப் பேரரசர் கொடி.

lab'dacism, *n.*=lambdacism.

labefac'tion, *n.* நடுக்கம்; தளர்ச்சி, வலுக்குறைவு; வீழ்ச்சி.

lab'el, *n.* தாள் நறுக்கு; முகப்புவரிச்சீட்டு, பொருட்பெயர்-பண்பு-வகை-உடையவர் பெயர்-செல்லுமிடம் முதலிய இன்றியமையா விவரங்களைத் தாங்கிய அடையாளத் துண்டுக் குறிப்பு; வகை விவரத் துணுக்கு, வகை தொகைப்படுத்தப்பட்ட தொடர்பு விவரக்குறிப்பு; தற்குறிப்பு அடைமொழிப் பெயர்; ஒட்டுப்பொறிப்புத் தலை, தலைச்சின்னம்; *v.* பொருட்களின்மேல் பெயர் விவரச்சீட்டை இணை; தலைச்சின்னத்தை ஒட்டு; இனவாரியாகப் பிரித்து ஒதுக்கிக் குறிப்பிடு.

lab'ia, (ல.) *n. pl.* (உள்.) இதழ்கள் போன்ற பெண்குறியின் பகுதிகள்.

lab'ial, *n.* இதழ் ஒலி; உதடுகளின் துணையால் ஒலிக்கப்படும் எழுத்து; *a.* இதழ்பற்றிய; இதழ்போன்ற; உதடுகள் போன்று செயலாற்றுகிற; உதடுகளால் ஒலிக்கப்பெறுகிற; (தொ.) labial pipe, (இசை.) உதடுபோன்ற உறுப்புடைய இசைக்கருவி.

lab'iate, *n.* (தாவ.) உதடனைய இதழ்களுடைய மலர்வகை; உதடு போன்று இருபிரிவாகப் பிரிந்த புற இதழ்வட்டமுடைய செடிவகை; *a.* உதடனைய இதழ்களுடைய; உதடு போன்ற புல்லிவட்டங் கொண்ட; இதழ்கள் போன்ற.

lab'ile, *a.* (இயற்., வேதி.) நிலையற்ற, நிலைமாற்றமடையக் கூடிய; பொருள்மாற்றம் பெறக்கூடிய.

lab'io-dental, *a.* உதடும் பல்லும் பொருந்தி உண்டாகிற.

lab'ium, (ல.) *n.* தோடுடைய சிற்றுயிரினங்களின் வாய் அடிப்புறம்; ஒற்றைத் தோட்டுயிரின் உதடுபோன்ற உட்பகுதி; உதடுபோன்று இருகூறுகப் பிரிந்த மலரின் கீழ்ப் பகுதி.

lab'oratory, *n.* ஆய்வுக்கூடம், ஆராய்ச்சி செய்முறைச் சாலை.

labor'ious, *a.* விடாதுழைக்கிற, கடினமான வேலைசெய்கிற; உழைப்பாளியான, முனைத்த உழைப்பீடுபாடுடைய; மட்டு மீறிய கடுமையுடைய, வருந்தி உழைக்கத்தக்க, எளிதாகச் செய்ய முடியாத; நீடித்த உழைப்பு தேவைப்படுகிற.

lab'our[1], *n.* உழைப்பு; கடுமுயற்சி; சமுதாயத் தேவை நிறைவேற்றும் உடலீடுபாட்டு வேலை; முயற்சியாற்றல்; உழைப்பாற்றல்; தொழிலாளர் தொகுதி, தொழில்வகுப்பு; தொழிலாளர் இன ஆற்றல்; ஆற்றல் சான்ற முயற்சி; மூளைவேலை; பிள்ளைப் பேற்றுவலி; கப்பலின் புயற்காலப் பெரும் பிறழ்வுப்போக்கு; *v.* உழை; கடுமுயற்சி செய்; கடு உழைப்பில் ஈடுபடு; முனைந்து முயல்; கடுந்துயருறு; துன்பம் அனுபவி; பிள்ளைப்பேற்று நோவுறு; கப்பல் வகையில் உழல், இடரெதிர்த்துப் போராடு; நுணுகி விரிவுபட எடுத்துரை; கடும் உழைப்புக்காட்டு; பேருழைப்பாற் செயற்கைவிளைவு உண்டுபண்ணு; இடர்ப்பட்டு மெல்லமெல்ல இயங்கு; (செய்.) நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடுபடு; (தொ.) labour of Hercules, மிகுவலிமை தேவைப்படுஞ் செயல்; labour of love, ஊதியமின்றி ஏற்றுச் செய்யப்படும் பணி; lost labour, பயனற்ற ஊதியமில்லா உழைப்பு, தண்டவேலை.

Lab'our[2], *n.* அரசியல் முறையின் தொழிலாளர் தொகுதி; (தொ.) Labour Exchange, உழைப்புத் தேவைப்படும் இடங்களுக்குத் தொழிலாளர்களை அனுப்பும் உள்நாட்டுத் தொழில் அமைப்பு அலுவலகம்; Labour leader, தொழிலாளர் தலைவர்; தொழிற்சங்கத் தலைவர்; Labour Party, தொழிற்கட்சி; தொழிலாளர் நலனுக்காக நிற்கும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி.

lab'ourer, *n.* உழைப்பவர்; தொழிலாளி, பாட்டாளி.

lab'ourite, *n.* தொழிற்கட்சி உறுப்பினர்; தொழிற்கட்சிச் சார்பாளர்.

lab'our-market, *n.* தேவைக்கேற்பத் தொழிலாளர் கிடைக்கத் தகுஞ் சமுதாய நிலைக்களம்.

Lab'rador dog, Lab'rador retriever, *n.* காயம்பட்ட அல்லது இறந்த வேட்டை உயிரினங்களின் உடலை மீட்டுத் தருவிக்கப் பழக்கப்படுத்தப்பட்ட நாய்வகை.

lab'ret, *n.* அழகுக்காக உதட்டில் செருகிக் கொள்ளப்படுஞ் சிறு கிளிஞ்சல் அல்லது எலும்பு.

laburn'um, *n.* ஒளிமிக்க மஞ்சள்நிற மலர்க்கொத்துக்களைக் கொண்ட சிறு மரவகை.

lab'yrinth, *n.* அரும்புதிர் நெறி, மீட்டுவரமுடியாதபடி திருக்குமறுக்காக அமைக்கப்பட்ட வழி; புதிர்நெறிக்கூடம், அரும்புதிர் நெறிகள் அமைந்த கட்டிடம்; திகைப்பூட்டுந் திருக்குமறுக்குப் புதிர்; கடுஞ் சிக்கலமைவு; உட்காதின் திருக்குமறுக்கான துளை; திகைப்பூட்டுஞ் சிக்கல் நிலை.

labyrin'thodon, labyrin'thodont, *n.* திருக்குமறுக்காக வளைந்து வளைந்துள்ள பல்லமைப்புடைய நில நீர்வாழ் பேருருவப் புதையுயிர்ப் படிவ விலங்குவகை.

lac[1], *n.* அரக்கு, சில பூச்சிகளால் தற்காப்புக்காகச் சுரப்பிக்கப் படும் பிசின்போன்ற பொருள்.

lac[2], (இ.) *n.* நூறாயிரம், இலட்சம்.

lace, *n.* வார் இழை, புதைமிதி அரணம் போன்றவற்றிற் புழை வழிகோத்து இறுக்குவதற்குரிய இழைக்கச்சை; இழைவார்; ஆடவர் மேலங்கியை அழகுபடுத்துவதற்குரியதாகக் கண்ணி சுருளை முடிச்சுப் பின்னல்களால் அழகுபடுத்தப்பட்ட புரி இழை; பூத்தையல் இழை; சரிகை; பல்வண்ணப் பின்னல் முறுக்கு நூற்கயிறு; *v.* வாரிழைகோத்திறுக்கு, இழைக் கச்சைகொண்டு புதைமிதியரணத்தை இறுக்கு; இழைப் பட்டிகையினுல் இடுப்பைச் சுற்றி இறுக்கிக்கட்டு; இடுப்பை வரிந்திறுக்கு; சரிகையால் பின்னு; சரிகை ஒப்பனைசெய்; இழைக்கச்சையால் பின்னு; பூத்தையல் வேலையில் பல் வண்ணக்கோடுகள் வரும்படி பின்னு; பின்னிமுறுக்கு; பல்சுவை கல; சாராயஞ் சேர்த்துப் பால் முதலியவற்றிற்குச் சுவையூட்டு; கெடாமல் வை; கசைவாரினுல் அடி.

lace'-glass, *n.* சரிகை அல்லது பின்னல் வேலைபோன்ற சித்திரங்கள் கொண்ட வண்ணக்கண்ணாடி.

lace'-pillow, *n.* சரிகை வேலைசெய்யும் பெண்ணின் மடிமீது வைக்கப்படும் அடித்திண்டு.

la'cerate, *v.* கிழி, கீறு, கிழித்துப் புண்படுத்து; சிராய்த்துக் காயப்படுத்து; உள்ளத்தைப் புண்படுத்து, மனவருத்தம் உண்டுபண்ணு.

lacert'ian, lacert'ine, *a.* பல்லிகளைச் சார்ந்த; பல்லி போன்ற.

Lacet', *n.* சரிகை இழைகளிட்டு நாடா அல்லது வாரிழைகளாற் செய்யப்படுஞ் சித்திரவேலை.

lach'es, *n.* (சட்.) மன்னிக்கத் தகாத கவனக்கேடு; மடிமைக் குற்றம்; சட்டஞ் சார்ந்த கடமையை நிறைவேற்றுவதில் புறக்கணிப்பு; உரிமை வலியுறுத்திப் பெறுவதில் சுணக்கம்; உரிமை நிறைவேற்றத்தில் தயக்கம்.

lach'ryma Chris'ti, *n.* தென் இத்தாலியிற் செய்யப்படும் ஆற்றல்மிக்க இனிய செந்தேறல் வகை.

lach'rymal, *n.* கண்ணீர்க்கலம்; *a.* கண்ணீர் சார்ந்த; கண்ணீரலான; கண்ணீருக்கான; (தொ.) lachrymal canal, கண்ணீர்க்கால்; lachrymal duct, கண்ணின் உள்

மூலையிலிருந்து கண்ணீரை மூக்கடிக்குக் கொணரும் நரப்புக் குழாய்; lachrymal gland, கண்கடையிலுள்ள கண்ணீர்ச் சுரப்பி; lachrymal sac, கண்ணீர்ப் பை; lachrymal vase, கண்ணீர்க்கலம்.

lach'rymals, *n.* கண்ணீர்த்தொடர்புடைய உறுப்புக்கள்; கண்ணீர்ச்சுரப்பி-கண்ணீர்க்கால் முதலியவற்றின் தொகுதி.

lachryma'tion, *n.* கண்ணீர் ஒழுக்கு.

lach'rymatory, *n.* பண்டைய ரோம தூபிகளிலுங் கோபுரங்களிலுங் காணப்படும் கண்ணீர்க்கலமாகக் கருதப்பட்ட சிறு குப்பி; *a.* கண்ணீர் சார்ந்த; கண்ணீர் வருவிக்கிற; (தொ.) lachrymatory bomb, கண்ணீர்ப் புகைக்குண்டு.

lach'rymose, *a.* கண்ணீர் நிறைந்த; கண்ணீர் வடிக்கிற; அழுகிற இயல்புடைய.

lacin'iate, lacin'iated, *a.* (தாவ., வில.) தாறுமாறாக உள்ளாழ்ந்து வெட்டிச் சிதைக்கப்பட்ட; ஓரத்தில் ஒடுங்கிய அலகுக்காக அமைந்த; கீற்றுகீற்றான.

lack, *n.* குறைபாடு, பற்றுக்குறை; *v.* இன்றியமையாது தேவைப்படு; இல்லாது குறைபடு; இலம்பாடுறு, இல்லாமலிரு; பெருமலிரு; (தொ.) for lack, தேவை காரணமாக, இல்லாததால்; no lack, நிறைவான, குறைவற்ற; ஏராளமான.

lackadais'ical, *a.* சோர்வுற்ற; வருந்துந் தோற்றமுள்ள; மென்னயத் தளர்ச்சிப் பகட்டுடைய; ஓயிலான உணர்ச்சிப் பகட்டுடைய.

lack'er, *n.* = lacquer.

lack'ey, *n.* குற்றேவலன், பணியாள்; பணித்துறைப்பட்டி அணிந்த வேலையாள்; கெஞ்சிப் பசப்புபவன்; பிறரை ஒட்டி வாழ்பவர்; ஒட்டுயிர் போன்று விடாது பற்றிநிற்பவர்; *v.* குற்றேவலனுயிரு, பணியாளாயிரு, கீழ்த்தரமான அடிமைக் குணத்தோடு நடந்துகொள்.

lack'land, *n.* நிலமில்லாதவர், நிலமற்றவர்.

lack'lustre, *a.* கண் வகையில் ஒளிமங்கிய, மங்கலான.

lacon'ic, *a.* மணிச்சுருக்கமான, பொழிப்பான, பொருட்செறிவார்ந்த, சூத்திரம்போல் திட்பநுட்பம் உடைய; மணிச்சுருக்கமாகப் பேசுகிற; விரைசுருக்கக் குறிப்புவாய்ந்த நடையுடைய.

lac'onism, *n.* சுருங்கச்சொல்லும் பண்பு; மணிச்செறிவான நடைத்திறம்; பொருட்செறிவுள்ள முதுமொழி.

lacq'uer, *n.* பித்தளைமெருகு, பித்தளைமேல் பூசப்படுவதற்கான பொன்வண்ண மெருகெண்ணெய்; அரக்குச்சாயம், மரத்தின்மீது பூசப்படும் மெருகெண்ணெய்; மெருகெண்ணெய் பூசப்பட்ட மரச்சரக்கு; *v.* பொன்வண்ண மெருகெண்ணெய் பூசு; (தொ.) japanese lacquer, மரம் முதலியவற்றிற்குப் பூசப்படுங் கெட்டியான மெருகெண்ணெய்வகை; மெருகெண்ணெய்ப்பூச்சுப் பூசப்பட்ட பொருள்கள்.

lacq'uey, *n.* = lackey.

lacrosse', *n.* வட அமெரிக்க வளைகோற்பந்தாட்ட வகை.

lacta'tion, *n.* பால்கொடுத்தல்; பால்சுரப்பு.

lac'teal, *a.* பால்சார்ந்த, குடல்நீர்மங்களால் உண்டாக்கப்படும் பால்போன்ற கணையம் பித்தம் ஆகிய நீர்மத்தைக் கொண்டு செல்கின்ற.

lac'teals, *n. pl.* குடற் பாற்குழாய்கள், குடலில் அமைந்துள்ள நுட்பமான பாற்குழாய்கள்.

lactes'cence, *n.* பால்போன்ற தோற்றம்; பால்போன்ற சாறு சுரப்பித்தல்.

lactes'cent, *a.* பால்போன்ற தோற்றமுடைய, பால்போன்ற சாறு சுரப்பிக்கிற.

lac'tic, *a.* (வேதி.) பால்சார்ந்த, பால்பற்றிய, பாலுக்குரிய; (தொ.) lactic acid, புளித்த பாலில் உண்டாகுங் காடிப் பொருள்.

lactif'erous, *a.* பால் சுரப்பிக்கிற, பால்போன்ற நீர்மத்தை உண்டாக்குகிற.

lac'tometer, *n.* பால்மானி.

lac'to-prot'ein, *n.* பாலில் அமைந்துள்ள வெண் கருப்பொருள்.

lac'to-scope, *n.* பாலின் ஏட்டுமானி.

lactose', *n.* பால்வெல்லம், பாலில் உள்ள சர்க்கரை.

lacun'a, *n.* இடைவெளி; இடையீடு; இடைத்தயக்க நேரம்; விடுபட்ட பகுதி; எலும்பு-தசை முதலியவற்றிலுள்ள இடைக்குழிவான பகுதி.

lacus'trine, *a.* ஏரிகளைச்சார்ந்த; ஏரிகளில் வாழ்கின்ற; ஏரிகளில் வளர்கிற; (தொ.) lacustrine age, மக்கள் ஏரி உறைவிடங்களில் வாழ்ந்த ஊழி.

la'cy, *a.* பூப்பின்னல் போன்ற, சரிகை போன்ற.

lad, *n.* சிறுவன், இளைஞன்; தோழன்.

ladd'er, *n.* ஏணி, படிமரம்; தவறான தையலாற் காலுறையில் ஏற்படுஞ் செங்குத்தான நூற்பிரிவுகள்; படிமுறை, உலகில் முன்னேறுவதற்கான வழி, படிநிலைத்தொகுதி, குறிக்கோளை அடைவதற்கான படிகளின் மொத்தம்; (தொ.) kick down ladder, முன்னேற உதவியாயிருந்த நண்பர்களையோ தொழிலையோ உதறித்தள்ளு.

ladd'er-dredge, *n.* ஏணித்தொடர் ஏற்றம், ஏணிபோன்ற சங்கிலித் தொடரில் தூக்கிச்செல்லப்படும் வாளிகளின் தொகுதியடங்கிய ஏற்ற அமைவு.

ladd'er-stitch, *n.* பூப்பின்னல் வேலையில் குறுக்குத்தையல்.

lade, *v.* கப்பலிற் சரக்குகளை வை, கப்பலுக்குப் பாரமேற்று; சரக்குகளாகக் கப்பலில் ஏற்று.

lad'ed, *v.* lade என்பதன் இறந்தகாலம்; lade என்பதன் முடிவெச்ச வடிவங்களில் ஒன்று.

lad'en [1], *a.* சரக்கேற்றப்பட்ட; சுமையேற்றப்பட்ட; பளுவேற்றப்பட்ட; துயர்-பழி முதலியவற்றின் பாரம் உடைய.

lad'en [2], *v.* lade என்பதன் முடிவெச்ச வடிவங்களில் ஒன்று.

la-di-da', *n.* வீம்படிப்பவன்; வீறுப்பாளன்; தற்பெருமைமிக்க பேச்சு நடை உடை உச்சரிப்புக்களையுடையவன்; பகடி; *a.* போலியான வீம்புநடையும் வீறுப்புப் பேச்சுமுடைய.

lad'ies [1], *n.* பெண்களுக்கான கைகால் கழுவும் இடம்.

lad'ify, *v.* = ladyfy.

lad'ing, *n.* சாமான் ஏற்றுதல்; கப்பற் சரக்கு.

la'dle, *n.* அகப்பை, சட்டுவம்; *v.* அகப்பையால் எடுத்து ஊற்று.

lad'y, *n.* சீமாட்டி, பெருமாட்டி; பெருங்குடிப்பெண்டு; இல்லத்தலைவி; மனைவி; காதலி; தலைமகள், தலைவி; மரியாதை வழக்கிற் பண்புடைமாது; பெண்பாலார்; விலங்கு புள்ளினங்களிற் பெண்பால்; *pl.* ladi'es; (தொ.) ladies' chain, நான்கு இணை துணைவர்கள் ஐம்புள்ளி வடிவில் நின்றாடும் ஆடல் வகை; ladies' gallery, மாமன்றத்திற் பெண்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட மேடையிருக்கை வரிசை; ladies' man, lady's man, பெண்கள் கூட்டத்திலேயே வட்டமிடுபவன்; Lady Bountiful, அருளாண்மையுடன் யாவர்க்கும் அன்பாதரவு காட்டும் மாது; Lady Day, கன்னித்தாய் விழா (மார்ச் 25), தேவதூதனால் இயேசுநாதர் திருப்பிறப்பு உணர்த்தப்பட்ட நாளின் ஆண்டுவிழா; காலாண்டுத் தவணைநாள்; lady help, இல்லப் பணித்துணைவி, மதிப்புடன் நடத்தப்படும் பணிப்பெண்; lady of bed chamber, அரண்மனை உவளகப் பாங்கி; Lady Mayoress, நகரத்தலைவர் மனைவியாள்; lady of easy virtue, ஒழுக்கங் கெட்டவள்; Lady's bed, ஒருவகைப் புல்; lady's companion, கைப்பை; Lady's cushion, கொத்தான இலைகளையும் வெண்மை-மஞ்சள் அல்லது செந்நிற மலர்களையுங் கொண்ட பாறைச்செடிவகை; Lady's finger, வெண்டைக்காய்; Lady's laces, ஈர்க்குப்போன்ற புல்வகை; Lady's mantle, ரோசா இனக்குடும்பச் செடிவகை; Lady's slipper, பெண்கள் புதைமிதியடியைப்போன்ற வடிவுடைய மஞ்சள் நிற மலருள்ள செடிவகை; Lady's tresses, மலர்ச்செடிவகை; Our Lady, தூய கன்னி மேரி; painted lady, வண்ணத்துப் பூச்சிவகை.

Lad'y-altar, *n.* திருக்கோயிலிற் தூய மரியன்னையின் பலி பீடம்.

lad'ybird, *n.* கரும்புள்ளிகள் கொண்ட செந்நிற வட்டச் சிறு வண்டுவகை.

lad'y-chair, *n.* காயமுற்றவர்களைத் தூக்கிச் செல்வதற்கான இருவர் கைகோப்பமைப்பு.

Lad'y-chapel, *n.* பெரிய திருக்கோயில்களிற் பலிபீடத்திற்குக் கிழக்காக அமைக்கப்பட்ட தூய கன்னிமரியாளின் திருவிடம்.

lad'y-fern, *n.* உயர்ந்த மென்மையான சூரல்வகை.

lad'yfy, *v.* சீமாட்டியாக்கு; சீமாட்டியென அழை; பெருங் குடி மங்கைபோன்று நடிப்பூட்டு.

lad'y-in-waiting, *n.* அரண்மனை உவளகப் பாங்கி.

lad'y-killer, *n.* பெண்களை மயக்கி வெற்றிகொள்ள விழைபவன்.

lad'ylike, *a.* சீமாட்டியின் குணவியல்புகளுடைய; சீமாட்டிக்குத் தகுதியான; ஆண்மையில்லாது பெண்தன்மையுள்ள; ஆண்மையற்ற.

lad'y-love, *n.* உளமார் காதலி.

lad'yship, *n.* பெருமாட்டிநிலை; சீமாட்டித்தன்மை; பெருமாட்டி பட்டம்.

lady's-maid, *n.* பாங்கி, சீமாட்டியின் பணிப்பெண்.

Lad'y-smock, lady's-smock, *n.* புல்தரைச் செடிவகை.

laevo-com'pound, *n.* (வேதி.) ஒளிக்கதிர்களின் சாய்தளப் பாட்டை இடம்புரியாக இயக்குந் திறமுள்ள சேர்மம்.

laevogyr'ous, laevorot'atory, *a.* (வேதி.) ஒளிக்கதிர்களின் சாய்தளப்பாட்டை இடம்புரி இயக்கமாக்குகிற.

laev'ulose, *n.* (வேதி.) இடம்புரி வெல்லம், ஒளிக்கதிர்களின் சாய்தளப்பாட்டை இடம்புரி இயக்கப்படுத்துந் திறமுடைய பூத்தேனின் அல்லது பழத்தின் சத்தான சர்க்கரை.

lag[1], *n.* இயக்கப்பின்னடைவு; ஒழுக்கின் பின்தங்கல்; தடங்கல் நிலை; சுணக்கம், தாமதம்; ஒன்றனுக்கு மற்றொன்று பின் தங்கிய அளவு; பின்கோடி, கடைக்கோடி; பின்தங்கியவர்; பின் தங்கியது; *a.* பின்தங்கிய, பின்னடைந்த; கடைக்கோடியான; தாமதமான, சுணங்கிய; *v.* பின்னடை, பிந்து; பின்தங்கு.

lag[2], *n.* குற்றவாளி, கைதி; கடுங்காவல் தண்டனைப்பருவம்; நாடு கடத்துந் தண்டனைத்தவணை; *v.* கடுங்காவல் தண்டனை அளி; நாடுகடத்தத் தண்டனையளி; காவலிற் பற்று.

lag[3], *n.* கொதிகலத்தின் மின்கடத்தாத மூடியின் ஒருபகுதி; மின் கடத்தாத மூடி; மர உள்வரிச்சட்டம்; மரப்பட்டிகை; வரிச்சல்; குத்துக்கட்டை; *v.* மின் கடத்தாத பகுதியுள்ள மூடியினுற் கொதிகலத்தை மூடு.

lag'an, *n.* (சட்.) கடலடியில் கிடக்குங் கப்பல் உடைவுப் பொருள்கள்.

la'ger, la'gerbeer, *n.* செர்மன் நாட்டுச் சிறுதிற இன்தேறல் வகை.

lagg'er, *n.* பின்தங்குவோர்.

lagoon', lagune', *n.* காயல், கடற்கழி, கடலினின்று மணல் திட்டுக்களால் பிரிக்கப்பட்ட ஏரிபோன்ற உப்புநீர்த் தேக்கம்; மணித்தீவின் மையவட்டக் காயல்.

la'ic, *n.* சமயத்துறை சாராதவர்; பொது நிலையானவர்; திருச்சபைச் சார்பற்றவர்; *a.* சமயத்துறை சாராத, பொது நிலையான.

la'icize, *v.* சமயச்சார்பற்றதாக்கு; சமயச்சார்பற்றவர்களிடம் பள்ளிக்கூடம் முதலியவற்றை ஒப்படை; சமயச்சார்பற்றவர்களுக்குப் பதவி வாய்ப்பு முதலியன அளி.

laid[1], *v.* lay என்பதன் இறந்தகால முற்றெச்சம்.

laid[2], *a.* வைக்கப்பெற்ற; பதிக்கப்பெற்ற; (தொ.) laid paper, கம்பிகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டதால் வரிவரியான முகடுகளுள்ள காகிதம்.

lain, *v.* lie[2] என்பதன் முற்றெச்சம்.

lair, *n.* குகை; வளை, பொந்து; அளை, காட்டு விலங்குகள் தங்குமிடம்; கால்நடை வழித்தங்கற் பட்டி; *v.* குகையில் தங்கு; வழித்தங்கற் பட்டியில் அடை.

laird, *n.* (செய்.) ஸ்காத்லாந்தில் நிலக்கிழார், பெருமகன்.

La'is, *n.* கலைத்திறம் நிறைந்த அழகுமிக்க ஆடலணங்கு.

laissez-aller, (பிர.) *n.* முழுக்கட்டுப்பாடற்ற தன்மை, தாராளமான சுதந்திரநிலை.

laiss'ez-faire, *n.* அரசியற் கட்டுப்பாடற்ற வாணிகக் கோட்பாடு, தன்னிச்சை வாணிகக் கொள்கை.

la'ity, *n.* சமயச்சார்பற்ற பொதுநிலைமக்கள்; பணித்துறை சாராத பொதுநிலையினர்; தனித்துறை சாராத பொதுத் திறத்தினர்; தனித்துறை சாராப் பொதுமைநிலை.

lake[1], *n.* ஏரி; கண்மாய், வானமாரிக்குளம்; (தொ.) lake country, the Lakes, இங்கிலாந்தின் ஏரி மாவட்டங்கள்; lake dwelling, ஏரிப்படுகை மனை, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஏரிப்படுகையில் முளைகளின்மீது கட்டப்பட்ட வீடு; lake poets, கோல்ரிட்ஜ் (Coleridge) சதே (Southey) ஓர்ட்ஸ் ஒர்த் (Wordsworth) போன்று ஏரி மாவட்டங்களில் வாழ்ந்த ஆங்கிலப் பெருங்கவிஞர்கள்; the Great Lake, அட்லாண்டிக் மாகடல் (Atlantic Ocean); the Great Lakes, அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் கனடாவுக்கும் எல்லையாக அமைந்துள்ள பெரிய ஏரிகள்.

lake[2], *n.* அரக்கினுல் முன்பு செய்யப்பட்டுவந்த வண்ணப் பொருள்; சாயப்பொருளாலான வண்ணப்பொருள்.

lake'-dweller, *n.* ஏரிப்படுகைமனை வாணர், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஏரிப்படுகை வீடுகளில் வாழ்ந்தவர்.

lake'-land, *n.* இங்கிலாந்தின் ஏரிமாவட்டங்கள்.

lakh, *n.* = lac.

lalla'tion, *n.* ரகர லகரப் போலி; ரகரத்தை லகரமாக ஒலித்தல்; குழந்தைத் தன்மைவாய்ந்த பேச்சு.

lam, *n.* அடி, மொத்து, பிரம்பால் வன்மையாக அடி.

la'ma[1], *n.* திபேத் (Tibet) மங்கோலியா (Mongolia) மாநிலங்களின் புத்தமத குரு; (தொ.) Grand Lama, திபேத் நாட்டின் புத்தசமயத் தலைமை ஆட்சிக்குரு.

lama[2], *n.* = llama.

Lamarck'ian, *n.* லமார்க் (lamarck) என்ற பிரஞ்சு உயிர் நூலறிஞரின் கொள்கையைப் பின்பற்றுபவர்; *a.* லமார்க் என்ற பிரஞ்சு உயிர்நூலறிஞரின் கொள்கையைச் சார்ந்த.

lama'sery, *n.* திபேத்திய மங்கோலிய புத்தசமயத் துறவிகளின் மடம்.

lamb, *n.* இளமறி, செம்மறியாட்டுக் குட்டி; செம்மறியாட்டுக் குட்டி இறைச்சி; திருக்கோயிற் குழுவினரில் இளையர்; சூது வாதற்றவர்; வலுவற்றவர்; அன்புக்குரியவர்; *v.* செம்மறியாட்டுக் குட்டிகளை ஈனு; பெறு, குட்டிபோடு; குட்டி போடும் பெண் ஆடுகளைப் பேணு; (தொ.) as well be hanged for a sheep as for a lamb, துணிவுடன் தீவினை செய்; fox in lamb's skin, wolf in lamb's skin, புலித்தோற் பெற்றம்; நயவஞ்சக வேடதாரி; the Lamb, the Lamb of God, இயேசுநாதர்.

lambaste', *v.* நையப்புடை, அடித்துத்தண்டனை செய், அடி.

lamb'da, *n.* கிரேக்க நெடுங்கணக்கில் 'எல்' என்ற எழுத்து; (தொ.) lambda moth, கிரேக்க 'எல்' எழுத்தின் வடிவக் கோடுகளை இறகில் கொண்ட அந்துப்பூச்சிவகை.

lamb'dacism, *n.* ரகரத்தை லகரம்போல ஒலித்தல்; லகரத்தைத் தவருக ஒலித்தல்; லகர ஒலியுடைய சொற்களைக் கழிமிகையாகப் பயன்படுத்துதல்.

lamb'doid, lambdoid'al, *a.* கிரேக்க 'எல்' எழுத்தின் வடிவுடைய; (தொ.) lambdoid suture, மண்டையின் இருபக்க எலும்புகளையும் பிடரி எலும்பையும் இணைக்கிற மண்டை எலும்புப் பொருத்துவாய்.

lam'bent, *a.* எரிதழல் வகையில் தடவிச்சென்றெரிகின்ற ; ஒளிவகையில் தழலாடுகின்ற ; சுடரிடுகின்ற ; மெல்லொளி வீசுகின்ற ; பேச்சு வகையில் நகையொளி வீசுகின்ற ; நகைச்சுவை வகையில் கலகலப்பான.

Lam'beth, *n.* ஆங்கிலத் திருச்சபைத் தலைமைக்குருவின் மாளிகை ; திருச்சபை மண்டலத் தலைமைக்குரு ; (தொ.) Lambeth degree, காண்டர்பெரி (Canterbury) மண்டல முதல்வர் அளிக்கும் பட்டம்.

lamb'like, *a.* ஆட்டுக்குட்டி போன்ற ; அமைந்த மெல்லியல் புடைய.

lam'brequin, *n.* கதவின் அல்லது பலகணியின் முகட்டுத் திரை.

lamb's-fry, *n.* விதையடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் விதைப்பகுதி இறைச்சி.

lamb'-skin, *n.* கம்பளியோடுகூடிய ஆட்டுக்குட்டித்தோல் ; பதனிடப்பட்ட ஆட்டுக்குட்டித் தோல்.

lamb's-tails, *n.* பழுப்பு நிலநிறமுள்ள மெல்லிறகு போன்ற மலர்த்தொகுதியினையுடைய செடிவகை.

lamb's-wool, *n.* காலுறை செய்தற்குப் பயன்படும் ஆட்டுக் குட்டியின் கம்பளி.

lame, (பிர.) *n.* பொன் அல்லது வெள்ளி இழைகளாற் பின்னப் பட்ட துணி ; *a.* பொன் அல்லது வெள்ளி இழைகளாற் பின்னப்பட்ட.

lame, *a.* நொண்டியான ; நொண்டுகிற ; காலொடிந்த ; காலற்ற ; முடமான ; கதை முதலியவற்றின் வகையில் குறைபாடுடைய ; வாத வகையில் குற்றமுள்ள ; காரண விளக்க வகையில் மனநிறைவளிக்காத ; சாக்குபோக்கு வகை யில் ஒப்புக்கொள்ளத்தகாத ; சீர் வகையில் அசைக்குறை வான, தட்டித்தடங்குகிற ; *v.* நொண்டியாக்கு, முடமாக்கு ; குறைப்படுத்து, ஏலாதாக்கு.

lamell'a, *n.* தாள்படலம், செதிளடுக்கு ; தசைச்சவ்வு ; எலும்புத் தகடு ; *pl.* lamell'ae.

lament', *n.* புலம்பல், ஒப்பாரி ; இரங்கற்பா, கையறுநிலைப் பாடல் ; *v.* புலம்பு, அழு, நொந்து அரற்று ; கழிந்ததற் கிரங்கு ; வருந்து ; இறந்தவருக்காகத் துயர்கொண்டாடு.

lam'entable, *a.* வருந்தத்தக்க ; துயருக்குரிய ; துக்கங் கொண்டாடுதற்குரிய.

lamenta'tion, *n.* புலம்புதல், ஒப்பாரி வைத்தல், கதறுதல், ஓல மிடுதல்; (தொ.) Lamentations, Lamentations of Jeremiah, அழுதரற்றல், விவிலிய நூலில் 'பழைய ஏற்பாட்டில்' உள்ள ஜெரிமையா (Jeremiah) என்னும் ஞானியின் புலம்பல்.

lam'ia, *n.* குழந்தைகளையும் மனிதர்களையுங் கொன்று தின் னும் பெண்பேய் உரு.

lam'ina, *n.* மென்தகடு, சவ்வு ; தாள்படலம் ; *pl.* lam'inae.

lam'inar, *a.* தகட்டுக்குரிய ; (தொ.) laminar flow, தடை படாத் துகளணுக்களின் இயக்கம்.

lam'inate, *a.* மென்தகட்டு வடிவான ; மென்தகடுகளா லான ; *v.* உலோகத்தை மெல்லிய தகடாகும்படி அடி அல்லது சுருட்டு ; அடுக்கு அல்லது தகடுகளாகும்படி பிள ; உலோகத் தகடுகளால் மேலே பரப்பு; அடுக்கடுக்காக வைத்து உற்பத்தி செய்.

Lamm'as' *n.* ஆகஸ்ட் மாதத்தின் முதல் நாள்; அறுவடைத் திருநாள் ; (தொ.) latter Lammas, இல்லாத தேதி, வாரா நாள்.

lamm'ergeyer, *n.* தாடியுள்ள பெருங்கழுகு வகை.

lamp, *n.* விளக்கு, தீபம் ; வளிவிளக்கு ; கூண்டுவிளக்கு ; மூடொளியலங்கம் ; கைப்பந்தம் ; வானொளிக்கோளம் ; கதிரவன் ; திங்கள் ; விண்மீன் ; அறிவொளி விளக்கம் ; ஆன்மிக ஒளி ; நம்பிக்கை ஒளி ; *v.* ஒளிவீசு ; விளக்கேற்று; விளக்குகள் பொருத்து ; ஒளிவிளக்கஞ் செய் ; (தொ.) hand on the lamp, pass on the lamp, அறிவு வளர்ச்சியின் முன் னேற்றத்தில் பங்குக்கடமையைச் செய் ; குறிக்கோள் முன் னேற்றத்திற்காகக் கடமையிற் பங்குகொள்.

lam'pas[1], *n.* குதிரைவாயின் மேலண்ணத்தில் வீக்கம் உண்டு பண்ணும் நோய் வகை.

lam'pas[2], *n.* முன்பு சீனாவிலிருந்து வந்த பூப்போட்ட பட்டுத் துணி வகை.

lamp'black, *n.* புகைக்கரியிலிருந்து செய்யப்படுங் கரு வண்ணப்பொருள்.

lamp'-chimney, *n.* கூண்டு விளக்கின் புகைபோக்கி.

lam'pion, *n.* வண்ண ஒளியலங்கம், எண்ணெயும் திரியுங் கொண்ட விளக்கு வைக்கப்படும் வண்ணக் கண்ணாடிக்கலம்.

lamp'light, *n.* விளக்கொளி.

lamp'lighter, *n.* தெருவிளக்கு ஏற்றுபவர் ; (தொ.) like a lamp lighter, விரைவாக, வேகத்துடன்.

lampoon', *n.* கீழ்த்தர வசைப்பாடல், தாக்கு வசைப்பாட்டு, பொறுப்புடன்கூடிய நேரடி வசையுரை ; *v.* தாக்கு வசைப் பாட்டியற்று ; தாக்கி எழுது.

lamp'post, *n.* தெருவிளக்குத் தூண், விளக்குக்கம்பம்.

lam'prey, *n.* விலாங்கு மீன் போன்ற மீன்வகை.

Lancas'trian, *n.* லங்காஷயர் அல்லது லங்காஸ்டர் என்னும் பகுதியின் குடிமகன் ; (வர.) ரோசாமலர்ப் போர்களில் லங்காஸ்டர் கோமகன் மரபினரைத் தலைவராகக் கொண்ட சிவப்பு ரோசாக் கட்சியினர்; *a.* லங்காஷயர் அல்லது லங்காஸ்டரைச் சார்ந்த ; (வர.) பண்டைய ரோசா மலர்ப் போரில் செவ்வண்ண ரோசாமலர்க் கட்சியைச் சார்ந்த.

lance, *n.* ஈட்டி ; மீனெறிவேல் ; திமிங்கில வேட்டைக்குரிய வேல் ; *v.* ஈட்டியினாற் குத்து ; (செய்.) எறி, தூக்கி வீசு; தூக்கி எறி, கடலில் வீசு ; (மரு.) அறுவைச் சிறுகத்தியினால் குத்து ; அறுத்துத் திற ; ஈட்டியை ஊடுருவிச் செலுத்து.

lance'-corporal, *n.* படைத்துறைப் பணியாளர்களில் ஒரு படியினர், துணையாணை முகவர்.

lance'-fish, *n.* ஈட்டி போன்ற மீன்வகை.

lance'let, *n.* முதுகெலும்புடைய உயிரினத்தின் மிக்க கீழ்ப் படி உயிரினமான மீன்வகை.

lan'ceolate, *a.* ஈட்டித்தலை போன்ற வடிவுடைய, அடி யகன்று இருபுறமும் முனைநோக்கிக் குவிகின்ற.

la'ncer, *n.* குதிரைப் படைவீரன்; முன்பு ஈட்டி தாங்கியிருந்த குதிரைப் படைவீரன்.

la'ncers, *n. pl.* நான்கு அல்லது நான்குக்கு மேற்பட்ட இணைத் துணைவர் ஆடும் நடனவகை ; நான்கு அல்லது நான்கிற்கு மேற்பட்ட இணைத்துணைவர் ஆடும் நடனவகைக்கான இசை மெட்டு.

lance'-sergeant, *n.* படைத்துறையில் ஆணை முதல்வராகப் பணியாற்றும் ஆணைமுகவர்.

lance'-snake, *n.* அமெரிக்க நச்சுப்பாம்பு வகை.

la'ncet, *n.* தூரி, அறுவை மருத்துவக் கூர்ங்கத்தி; கூர்முகட்டு வளைவு ; கூர்முகட்டுப் பலகணி.

Lance'let, *n.* மீன்வகை, உண்மையான முதுகெலும்புள்ள கீழுயிர் வகை.

lance'wood, *n.* வண்டி அடிக்கட்டை-தூண்டிற்கோல் முதலிய வற்றிற்குப் பயன்படுத்தப்படுங் கெட்டியான உழைப்பாற்றல் மிக்க மேலை இந்திய மரவகை.

la'ncinating, *a.* நோவு வகையிற் கூர்மையான, குத்தலான, முனைப்பான.

land, *n.* நிலம் ; நிலப்பரப்பு ; நிலவுலகின் கூறு ; கரை, தரை ; உலகு, தேசம் ; நாடு ; அரசுப்பகுதி ; மாவட்டம் ; வட்டாரப்பகுதி; நில உடைமை; விளைநிலம்; வயல் வரப்புக் களாற் பிரிக்கப்பட்ட விளைநிலக்கூறு ; பீரங்கியில் குழாய் வரைகளினிடைப்பட்ட பகுதி ; *v.* கப்பலிலிருந்து கரையில் இறக்கு; ஊர்தியிலிருந்து இறக்கு; மீனைக் கரைக்குக் கொண்டு சேர் ; இறக்குமதி செய் ; கீழே இறக்கு ; தரைமீது வை ; கப்பலிலிருந்து இறங்கு; விமான வகையில் நிலத்தில் இறங்கு; குதித்து இறங்கு ; விமான வகையில் கடற்பரப்பில் இறங்கு; சரக்கு வகையில் இறக்கப்பெறு ; கீழிடு ; நிலத்தில் ஊன்று;

நிலைநாட்டு; கொண்டுசேர்; கைப்பற்று, கைக்கொள்; தன் னலத்துக்குப் பயன்படுத்திக்கொள்; சென்றுசேர், வந்திறங்கு; நிலைக்கு ஆளாகு; அடிகொடு, தாக்கு; பரிசு வகையில் வென்றுபெறு; பந்தயக்குதிரையை முதல்நிலைக்குக் கொணர்; பந்தயக்குதிரை வகையில் முதல்நிலையடை; மண்ணை வெட்டிக் கிளறு; தோண்டியெடு; மண்கொண்டு அடை; முடிவாகப் பெறு; (தொ.) how the land lies, நேர நிலவரம்; தறுவாய்க் குரிய நிலைமை; Land League, குத்தகைதாரக் குடியானவர் களுக்கு நில உரிமையும் குத்தகைக்குறைப்பும் வேண்டு மென்று 1879-81-ஆம் ஆண்டுகளிற் கிளர்ச்சி செய்த ஐரிஷ் சங்கம்; land of promise, கனான் (Canaan) என்ற செழிப் பான நாடு; land of the leal, வானுலகம், சொர்க்கம், விண்ணுலகம், பொன்னுலகு; land of the living, நடைமுறை உலக வாழ்க்கைத்துறை.

land'-agency, n. பண்ணைநில மேற்பார்வைப்பணி; நில உடைமை மாற்று வணிக நிலையம்.

land'-agent, n. பண்ணைநில மேற்பார்வையர்; நில உடைமை மாற்று வணிகர்.

lan'dau, n. மடிப்பு முகட்டுவண்டி, முகட்டை முன்புறமோ பின் புறமோ மூடித்திறக்கவல்ல நான்கு சக்கரவண்டி.

landaulet', landaulette', n. மடிப்புமுகட்டுப் பெட்டிவண்டி, முகட்டை முன்புறமோ பின்புறமோ திறக்கவல்ல நான்கிருக்கை மூடுவண்டி.

land'bank, n. நில அடமானப் பொருளகம்.

land'-breeze, n. கரைக்காற்று, கரையிலிருந்து கடல்நோக்கி வீசுங் காற்று.

land'-carriage, n. நிலவழிச் சரக்குப் புடைபெயர்ப்பு, கரை வழிப்பெயர்ச்சி.

land'-crab, n. கடலில் இனம்பெருக்கி நிலத்தில் வாழும் நண்டுவகை.

land'drost, (டச்.) n. (வர.) தென்னாப்பிரிக்காவில் குற்ற நடுவர்.

lan'ded, a. நிலச்சொத்துடைய; நில உடைமையான; நிலத் தைக் கொண்டுள்ள; நில வருவாயினை உடைய; (தொ.) the landed interest, நிலக்கிழார்களின் தொகுதி நலம்; நில உரிமை.

land'fall, n. (கப்.) நில அணிமைப்பேறு, நிலம்நோக்கி அணுகுதல்; நீண்ட கடற்பயணத்தில் முதற்கரை அணு குதல்; (தொ.) bad landfall, (கப்.) திட்டத்திற்கு மாறான நில அமைவு; good landfall, (கப்.) எதிர்பார்த்த நில அடைவு, திட்டப்படியான நில அணுக்கம்.

land'-force, land'-forces, n. pl. நிலத்துறைப்படை; கரைப்படைவீரர் தொகுதி.

land'girl, n. பண்ணைவேலைப் பெண்; போர்க்காலத்திற் பண்ணைவேலை செய்யும் பெண்.

land'grabber, n. அயர்லாந்தில் குடியானவர்களை விரட்டி விட்டு நிலத்தைக் கைப்பற்றிக்கொள்பவர்; கடுமுறையால் நிலம் கைப்பற்றுபவர்; குடியானவர் வெளியேற்றப்பட்ட நிலத்தைக் கைக்கொள்பவர்.

land'grave, n. செர்மனியில் ஆட்சியுரிமைப் பெருமக்கள் பட்டம்.

land'holder, n. நிலக்கிழார், நில உரிமையாளர்; குடியானவர்.

land'-hunger, n. நிலம் கைப்பற்றும் பேரவா.

land'-hungry, a. நிலத்தைக்கைப்பற்ற வேண்டுமென்ற பேராவலுள்ள.

lan'ding, n. நிலத்தில் இறங்குதல்; கரையேறுதல்; சரக்கு இறக்குதல்; ஊர்தியிலிருந்து இறங்குதல்; கீழேவைத்தல்; அடித்தல்; இறங்குமிடம்; இரண்டு படிக்கட்டு வரிசைகளின் இடையிலுள்ள மேடை.

land'ing-beam, n. தாழ்நில வழிகாட்டி அலைக்கரம், விமானம் நிலத்திலிறங்க வழிகாட்டும் வானொலி அலைக்கதிர்க்கற்றை.

land'ing-craft, n. கரையிற் படையிறக்க உதவும் தாழ்ந்த தட்டையான திறந்த தளமுடைய கப்பல்; கரை இறக்கக் கப்பல் தொகுதி.

land'ing-field, n. விமானம் ஏற இறங்க உதவுந் தளம்.

land'ing-gear, n. விமானம் ஏற இறங்க உதவுஞ் சக்கரம் முதலிய அமைவுகளின் தொகுதி.

land'ing-ground, n. விமானம் இறங்குவதற்காக முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட இடம்.

lan'ding-net, n. தூண்டிலிற் பிடிக்கப்பட்ட பெருமீனை இறக்கி வைப்பதற்குரிய வலை.

lan'ding-place, n. இறங்குமிடம்; இறக்குமிடம்.

land'ing-ship, n. ஊர்திகளை இறக்குவதற்கேற்ப முகப்பைச் சாய்த்திறக்கும் வாய்ப்புடைய கப்பல்வகை.

land'ing-speed, n. விமான இறக்கத்துக்குரிய குறைந்த அளவுவேகம்.

lan'ding-stage, n. பிரயாணிகள் இறங்கவும் சரக்குகளை இறக்கவும் பயன்படும் மிதவை மேடை.

land'ing-strip, n. கப்பல் விமானம் இறங்கத்தக்க கரடுமுர டான நீண்ட இடுக்கான இடம்.

land'-jobber, n. நிலத்தை வாங்கி விற்று ஆதாயம் பெறு வதில் துணிகரச் சூதாட்ட வேட்டையாடுபவர்.

land'lady, n. வழித் தங்கல்மனைத்தலைவி; வாடகைக் குடி யிருப்பு விடுதித்தலைவி.

land'-laws, n. pl. நிலச்சட்டம், நிலச்சொத்துரிமைச் சட்டம்.

land'less, a. நிலமற்ற.

land'-locked, a. நிலஞ்சூழ்ந்த; நில அடைப்புற்ற; கிட்டத் தட்ட நிலத்தால் நாலாபக்கமுஞ் சூழப்பட்ட.

land'lord, n. நிலக்கிழார், நிலவுரிமை மேலாளர்; உணவக மேலாளர்; விடுதிக்காரர், தங்கல்மனைத் தலைவர்; வழிமனைத் தலைவர்.

land'lordism, n. பண்ணை மேலாட்சிமுறை; பண்ணை மேலாட்சிமுறை ஆதரவுக் கோட்பாடு.

land'lubber, n. (கப்.) கடலறியாதவர்; கப்பல் பற்றி எதுவும் அறியாதவர்.

land'mark, n. நில எல்லைக்குறி; மாவட்டம் முதலியவற்றுள் குறிப்பிடத்தக்க பொருள்; முனைப்பாகத் தோன்றும் பொருள்; முக்கியமான நிகழ்ச்சி; குறிப்பிடத்தக்க கட்டம்; வரலாற்றில் திருப்புமுனை, திரும்புகட்டம்.

land'mine, n. கரைக்கண்ணி, நிலச்சுரங்கவெடி; விமானத்தி லிருந்து வான்குடையிலிறக்கிவிடப்படும் வெடிகுண்டுப் பொறி.

landoc'racy, n. (பே-வ.) நிலக்கிழார் வகுப்பு.

land'owner, n. நிலக்கிழார், நிலத்தின் உரிமையாளர்.

land'rail, n. வயலில் ஊடாடும் பறவை வகை.

land'scape, n. இயற்கை நிலக்காட்சி; இயற்கைக்காட்சி வனப்புடைய சூழ்நிலம்; இயற்கைக்காட்சி ஓவியம்.

land'scape-gardener, n. இயற்கைக்காட்சிப் படத்தின் வனப்பமையத் தோட்டத்தை அமைக்குந் தோட்டக்காரர்.

land'scape-gardening, n. இயற்கைக்காட்சிப் படத்தின் வனப்புடைய தோட்ட அமைப்பு.

land'scape-marble, n. மரம் போன்ற குறிகளுள்ள சலவைக் கல் வகை.

land'scape-painter, n. இயற்கைக்காட்சிப் பட ஓவியர்.

Land's-End, n. கார்ன்வாலின் (Cornwall) மேற்குக்கோடி முனை.

land'-service, n. படைத்துறைப் பணி.

land'-shark, n. கரையிலுள்ள கப்பலோட்டிகளைச் சுரண்டி வாழ்பவன்.

land'-sick, a. கப்பல்வகையில் நிலம் மிக அருகிலிருப்பதால் இயங்குவதில் தடைப்படுகிற.

land'slide, n. நிலச்சரிவு; எதிர்பாராப் பெருவெற்றி, தேர்தலில் மிக்க பெரும்பான்மையான வாக்குகள் ஒரு கட்சிக்கே கிடைத்த நிலை.

land'slip, *n.* நிலச்சரிவு, மலையின்மீதிருந்து நிலத்தொகுதி அல்லது மண்-கல்-முதலியன சரிந்து கீழே சறுக்குதல்.

land'man, *n.* கப்பலோட்டியல்லாதவர்.

land'sturm, (செர்.) *n.* (வர.) தங்குதடையற்ற அவசரகாலப் போர்ப்படை ஆட்சேர்ப்பு.

land'-swell, *n.* கரைகடந்த கடலலைப்பாய்ச்சல், கரைமீது தாவும் அலையெழுச்சி.

land'tag, (செர்.) *n.* செர்மன் நாட்டுச் சட்டமன்றம்.

land'-tax, *n.* நிலவரி.

land'-tie, *n.* சுவர்தாங்கிக் கட்டுமானம்; சுவர்தாங்கி உத்தரம்; உதைகல்; உதைகால்.

land'ward, *adv.* உள்நாட்டில்.

Land'wehr, (செர்.) *n.* செர்மனி முதலிய நாடுகளிற் போர்க்கால மக்கட் படை, போர்க்கால நாட்டுப்படைத்திரட்டு.

land'-wind, *n.*=land-breeze.

lane, *n.* சந்து, முடுக்கு; இடைவழி; இடுங்கல் வழி, முள்வேலிகளுக்கிடையிலுள்ள வழி; ஒடுக்கமான தெரு; இரு வரிசைகளாக நிற்கும் மக்களிடையே உள்ள ஊடுவழி; பாதை நெறிச்சந்து, பாதைகளில் ஒருதிறப்போக்குக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் வழி; பெருங்கடலிற் செல்லும் நீராவிக்கப்பல்களுக்காக வரையறை செய்யப்பட்ட கடற்பாதை; (தொ.) it is a long lane that has no turning, மாறுதல் இல்லாமல் போகாது; red lane, குரல்வளை; the Lane, Drury Lane, லண்டனிலுள்ள நாடக அரங்கு.

lang'rage, lang'ridge, *n.* கப்பலின் பாய்கயிறுகளைச் சேதப்படுத்துவதற்கு முன்பு பயன்படுத்தப்பட்ட இரும்புத் துண்டுத் துணுக்குக்களடைத்த துப்பாக்கிக்குண்டு.

lang syne, *n.* பழங்காலம்; *adv.* பழங்காலங்களில்.

lang'uage, *n.* மொழி; பேச்சு; பேச்சுமுறை; சொல்தொகுதி; மொழிநடை; இலக்கியநடை; மொழிநடைப்பாணி; கருத்து வெளியிடும் முறை; பேச்சாற்றல்; சொல்லமைதி; சொல் தேர்வுத்திறம்; சொல்வழக்காறு; சொல்வளம்; தனித்துறைச் சொல் தொகுதி; கருத்துத் தெரிவிக்கும் குறியீட்டுத்தொகுதி; bad language, vulgar language, கீழ்த்தரப் பேச்சு; finger language, விரற் சைகைகளாலான குழுமரபுக் குறியீட்டுத் தொகுதி வழக்கு; language of flowers, மலர்வகைகள் சார்ந்த குழூஉக்குறியீட்டுத் தொகுதி; speak the same language, உணருமாற்றல் வகையில் ஒரே தரத்தினராயிரு; ஒரே பழக்கவழக்கப் பண்புடையவராயிரு; ஒரே விருப்புவெறுப்புச் சுவைக்கூறுகளுடையவராயிரு; strong language, உணர்ச்சியுள்ள முனைத்த பேச்சு; வன்சொல்.

langue d'oc, (பிர.) *n.* லாயிர் (Loire) ஆற்றிற்குத் தெற்கே முற்காலங்களிற் பேசப்பட்ட பிரஞ்சுமொழி வகை.

langue d'oil, (பிர.) *n.* லாயிர் (Loire) ஆற்றிற்கு வடக்கே பேசப்பட்ட தற்காலப் பிரஞ்சுமொழிக்கு மூல அடிப்படையான முற்கால மொழிவகை.

lang'uid, *a.* தளர்ச்சிவாய்ந்த, ஊக்கமிழந்த; களைப்புற்ற; எழுச்சி குன்றிய, கிளர்ச்சியற்ற; தளர்வான, சோர்வான; ஓய்வுகொள்ளும் நிலையிலுள்ள, தளரவிட்ட; மெலிந்த, நலிவுற்ற; மடிவார்ந்த; பெருந்தயக்க நிலையுடைய.

lang'uish, *v.* சோர்வடை; ஊக்கங்குறை; வலுக்குறைவாகு; குறைபடு; தளர்வுறு, நலிவுறு, மெலிவுறு; சோர்வூட்டும் சூழ்நிலையின்கீழ் வாழ்; சோர்வுற்ற தோற்றத்தை மேற்கொள்; மேலீடான மெல்லுணர்ச்சி உடையதாகப் பாவனைசெய்.

lang'uor, *n.* சோர்வு; மெலிவு; தளர்ச்சி; கவனக்குறைவு; கிளர்ச்சியின்மை; மென்கனிவு; மடிமை; அரைத்துயில்; வாட்டநிலை, உணர்வற்ற கனவுபோன்ற நிலை.

langur', *n.* நீண்ட வாலுடைய குரங்கு வகை.

lan'iary, *n.* கோரைப்பல், கடித்துக்கிழிக்கும் நாய்ப்பல்; *a.* கடித்துக் கிழிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிற.

lanif'erous, lani'gerous, *a.* கம்பளி மயிருள்ள.

lank, *a.* மெலிந்த; வதங்கிய, ஒட்டி ஒடுங்கிய; சுரித்த; சோர்வான; தொங்கலான; படிந்துகிடக்கிற, தொய்வான; கம்பிபோன்ற, நெளிவு வளைவற்ற; நெட்டிய.

lank'y, *a.* அருவருப்பாக மெலிந்து நீண்ட, கோரமான முறையில் நெட்டையான.

lann'er, *n.* வேட்டைப்பருந்தில் பெண் வகை.

lann'eret, *n.* வேட்டைப்பருந்தில் ஆண் வகை.

lan'olin, *n.* தைல வகை மூலப்பொருளான ஆட்டுக்கம்பளச் சத்து.

lans'quenet, *n.* செர்மனியில் பிறப்புற்ற சீட்டாட்ட வகை.

lan'tern, *n.* ஒளிக்கூண்டு, விளாந்தர், கண்ணாடிக்கூட்டு விளக்கு; கலங்கரைவிளக்க ஒளிமாடம்; மோட்டு ஒளிப்புழை மாடம்; மின்மினிப்பூச்சியின் ஒளியிழைக் கை; (தொ.) bull's-eye lantern, அரையுருளை வடிவான முகப்புக் கண்ணாடியுடைய ஒளிக்கூண்டு; chinese lantern, ஒளிவிளக்கக் காட்சிகளில் பயன்படுத்தப்படும் தாள்பொதி ஒளிக்கூண்டு; lantern jaws, முகத்திற்கு உட்குழிவான தோற்றத்தைக் கொடுக்கும் நீண்ட மெல்லிய தாடைகள்; magic lantern, ஒளிப்பட விளக்கம்; படங்களை உருப்பெருக்கிக் காட்டும் ஒளிநிழல் திரை; parish lantern, சந்திரன், நிலா.

lan'thanum, *n.* (வேதி.) *1839-41* ஆம் ஆண்டுக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அலுமினிய உலோகக் குழுவினம் சார்ந்த அரிய தனிமப்பொருள்.

lan'thorn, *n.* ஒளிக்கூண்டு, விளக்கு.

lan'yard, *n.* (கப்.) பற்றுவடம், கட்டுவதற்கு அல்லது கைப்பிடியாகப் பயன்படுவதற்கான சிறு கயிறு அல்லது கம்பி.

Laodice'an, *n.* சமயம் அல்லது அரசியலில் அரைகுறை ஆர்வமுடையவர்; *a.* சமயம் அல்லது அரசியலில் அரைகுறை ஆர்வமுடைய.

lap [1], *n.* தொங்கல், சட்டை அல்லது சேணம் முதலியவற்றின் மடிவுப்பகுதி; காதின்மடல்; மடிப்பு; முன்தானை; பாவாடையின் முன்பகுதி; மடி, முன்துடை; மேற்பகுதி; பள்ளத்தாக்கு; மலைகளின் நடுவே உள்ள உட்குழிவு; *v.* மடியில் வை, துடைமீது வைத்துக்கொள்.

lap [2], *n.* மேற்கவிதலின் அளவு; மேற்கவிவான பகுதி; இழைக்கூண்டின் வரிந்து கட்டிய பாளம்; வட்டுருளையில் ஒரு முழுச்சுற்று; பந்தய ஓட்டத்தில் ஒரு சுற்றுவட்டம்; நீராவி இயந்திரத்தில் நீராவியை முற்றும் ஒழிப்பதற்குத் திறப்பிதழ் மையம் விரிய வேண்டிய அளவு; பொறிச் சீட்டாட்டத்தில் மறு ஆட்டத்துக்குக் கொண்டுசெல்லும் மிச்சம்; *v.* சுருள்வுறு, மடிப்புறு, சுற்றி மேவுறு; உறை முதலியவற்றால் மூடு, வரிந்து போர்த்து; வரிந்து கட்டு; சுருள்வி, மடிவி, மேவுவி; சூழ், சுற்றிவளை; வளைத்தணை, மேற்சென்று கவி; மேற்கவிதலுடன் இயலு; கடந்து இயலு; ஓட்டப்பந்தயத்தில் முதற்சுற்றில் அல்லது மேற்பட்ட சுற்றில் போட்டி எதிர்ப்பாளரைத் தாண்டிச்செல்.

lap [3], *n.* கற்கள் மெருகிடப் பயன்படும் சுழல்வட்டத் தகடு; *v.* சுழல்வட்டத் தகட்டால் மெருகிட்டுப் பளபளப்பாக்கு.

lap [4], *n.* நாயின் நீராளக்குடிமம்; நீராளக் குடிதேறல்; ஒருமுறை நாத்துழாவிக் குடிப்பு; ஒருமுறை நாத்துழாவிக் குடிக்கும் அளவு; நாத்துழாவொலி; சிற்றலை வீச்சு; சிற்றலை மோதொலி; *v.* நக்கிக்குடி, நாவால் துழாவிக்குடி; பேராவலுடன் பருகு; பரபரப்புடன் மாந்து; சிற்றலை மோது; சிற்றலை மோதொலியுடன் இயங்கு.

laparec'tomy, *n.* குடற் பகுதி அறுவை.

lap'arocele, *n.* இடுப்பிலுள்ள குருதிக்குழாய் முறிவினால் ஏற்படுங் குடல் சரிவு.

laparot'omy, *n.* அடிவயிற்றின் புறத்தோட்டின் அறுவை.

lap'-dog, *n.* வளர்ப்புச் சிறு நாய்.

lapel', *n.* மேற் சட்டையின் மார்புப்புற பின்மடிப்புப் பகுதி.

lap'icide, *n.* கல்வெட்டுபவர்; கல்வெட்டுப் பொறிப்பாளர்.

lap'idary, *n.* மணிக்கல் வெட்டுபவர்; மணி செதுக்குபவர்; மணிக்கல் மெருகு கொடுப்பவர்; *a.* கல் சார்ந்த; கல்லின் மீது செதுக்கப்பட்ட; எழுத்துக்களைப் பொறிப்பதற்குரிய; கல்வெட்டுக்குரிய.

lap'idate, *v.* கல்லாலடி, கல்லாலடித்துக் கொல்.

lapid'ify, *v.* கல்லாகும்படி செய், கல்லாக்கு.

lap'is laz'uli, *n.* மணிக்கல் வகை, கந்தகக் கன்மகி; கந்தகக் கன்மகியிலிருந்து கிடைக்கும் ஒளிர்வுமிக்க நீலவண்ணப் பொருள்; கந்தகக் கன்மகியின் நீலவண்ணம்.

lap'-joint, *n.* தண்டவாளம்-கம்பம் முதலியவற்றின் வகையில் இரு விளிம்புகளையும் பருமனில் பாதியாக்கி இணைத்துப் பொருத்தும் முறை.

Lap'land, *n.* ஸ்காண்டினேவியா (Scandinavia) வின் வடகோடிப்பகுதி.

Lapp, *n.* வடக்கு ஸ்காண்டினேவியா மாநிலத்தின் வடகோடியிலுள்ள குள்ளமான மனித இனத்தைச் சேர்ந்தவர்; லாப்லந்தி லுள்ள மொழி; *a.* லாப்லந்து சார்ந்த; லாப்லந்து மொழியினைச் சார்ந்த.

lapp'et, *n.* தொங்கல்; மடி; காதின் மடல்; தசைமடிப்பு; மற்றொன்றின்மீது படிந்திருக்கும் பகுதி; மேற்சட்டையின் மார்புப்புறப் பின்மடிப்பு; பெண்டிர் தலையணி ஆடையோடு இணைந்த நீண்ட கொடிபோன்ற தொங்கல் துணி.

Lappon'ian, *n., a.* =Lapp.

lapse, *n.* வீழ்வு; பிறழ்வு; சோர்வு, குறைபாடு, தவறு; ஓரா வழு, சிறு விடுபாடு; செய்யாப்பிழை, தவறவிட்டநிலை; வழங்காக்கேடு; நாச்சோர்வு, சொல்லிழுக்கு; எழுத்தாண்மைப் பிழைபாடு; ஒழுங்குத்தவறு, கவனக்கேட்டால் வரும் சிறு நெறிபிறழ்வு; நினைவிழப்பு, உணர்வுக்கேடு, இடைமறதி; படிவீழ்வு, படியிறக்கம்; முன்னிலையடைவு, முன்னிலைவீழ்வு; நீர்மத்தின் மெல்லிய புடைபெயர்ச்சிப் போக்கு; காலக்கழிவு, காலக்கடப்பு; கால இடையீடு; தவணைக்கடப்பு; தவணைக் கடப்பால் வரும் உரிமைக்கேடு; சமயப்பிறழ்வு; புறச்சமயச் சார்வு; உயர்விட வெப்பநிலைத்தாழ்ச்சி; *v.* வீழ்வுறு; சோர்வுபடு; பிறழ்வுறு; மெல்ல ஒழுகிச்செல்; கழிவுறு; தணிவுறு; கடந்துசெல்; மறைவுறு; தவணைகடந்துபடு; தவணைகடந்து செல்லுபடியற்றதாகு; முன்னிலைக்குப் பின்னடைவுறு; உடைமை வகையில் முன்னுரிமையாளருக்கே மீட்டுச் சென்றுவிடு; ஏலாமையால் விழும்படி விடு; முயற்சி பற்றுமையாற் சோரவிடு; காக்கத்தவறு, பேணுதிழுக்குறு; தவறவிடு.

lap'stone, *n.* சக்கிலியின் தோல் வேலை அடிக்கல்.

lap'-streak, *n.* பலகைப்பாளம் மேலது கீழதின்மேல் கவியும் படி இணைத்த படகு.

lap'sus, (ல.) *n.* தவறு.

lap'sus cal'ami, (ல.) *n.* பேனாவின் தவறு, எழுத்துத்தவறு.

lap'sus ling'uae, (ல.) *n.* நாத்தவறு.

Laput'an, *n.* ஜோனதன் ஸ்விப்ட் (Jonathan Swift) என்ற ஆங்கில இலக்கிய ஆசிரியரின் கற்பனைக்குரிய பறக்கும் தீவின் குடிவாணர்; *a.* கற்பனைக்குரிய பறக்கும் தீவுசார்ந்த; வியப்புக் கற்பனையான; கனவுத்தோற்றமான; பொருத்தமற்ற.

lap'wing, *n.* கூட்டத்தொகுதியாக வாழ்கிற நீண்ட காலுடைய நீர்ப்பறவை வகை.

lar[1], *n.* பண்டை ரோமரின் வீட்டுத்தெய்வம்; *pl.* lar'es.

lar[2], *n.* வெள்ளைக் கையுடைய பர்மிய வாலில்லாக் குரங்கு வகை.

larb'oard, *n.* (கப்.) இடது கைப்புறம்; *a.* (கப்.) இடது புறமான.

lar'ceny, *n.* (சட்.) திருட்டு, களவிற் பிறர் பொருள் கைப்பற்றுதல்; (தொ.) petty larceny, சிறுதிறத் திருட்டு.

larch, *n.* கற்பூரத்தைலம் தரும் ஊசியிலைக் கட்டுமான மர வகை.

lard, *n.* உணவு-மருந்து வகைகளில் பயன்படும் பன்றி அகட்டுக் கொழுப்பு; *v.* பன்றிக்கொழுப்பைப் பூசு; கொழுக்கவை; இறைச்சியிடையே சமைப்பதற்குமுன் பன்றிக் கொழுந்தசைத் துண்டுகளை இடையிடையே புகுத்து; இடையிடைச் செருகு; இடையிடைக் கல; பேச்சிலும் எழுத்திலும் இடையிடையே செருகி அணிசெய்.

larda'ceous, *a.* (மரு.) பன்றிக்கொழுப்புப் போன்ற; தசையிழைமம் சீர்கெடப்பெற்றுக் கொழுப்புப்போலான; தசையிழைமச் சீர்கேட்டுக் கோளாறினால் நோயுற்று வருந்துகின்ற.

lard'er, *n.* உணவரங்கு, இறைச்சி முதலியவை வைக்கும் சேம அறை.

lard'on, lardoon', *n.* இறைச்சியில் பூசுவதற்கு அல்லது இடையிடையே செருகுவதற்குப் பயன்படும் பன்றிக்கொழுந் தசைக்கீற்று.

large, *n.* தடையற்ற நிலை, சுதந்திர நிலை; அகல்விரிவு, முழு நிறை நுணுக்கவிவர விளக்க இயல்பு; பரவல்நிலை, தனிக் குறிப்பீடற்ற பொதுநிலை; குறிப்பிட்ட தனி அலுவலற்ற பொதுத்தன்மை; பேரளவு; (இசை.) முற்கால இரு நெடிலளவொத்த இசைமானம்; *a.* பெரிதான, பரந்தகன்ற; அகல்விரிவான; ஏராளமான, வளமான; பலவற்றை உட்கொள்ளவல்ல; எல்லாம் தழுவுகிற; தாராளமான; ஈகைக் குணமுடைய; அன்பாதரவுமிக்க; பரந்தநோக்க முடைய, குறுகிய நோக்கமற்ற; ஒருசார்பற்ற; தப்பெண்ணங்களுக்கிடங்கொடாத; பெரும்போக்கான; பெருமிதமான; பெருமதிப்புடைய; பெருமை சான்ற; முக்கியத்துவம் வாய்ந்த; தற்பெருமையுடன் நடக்கிற; தங்குதடையற்ற; கட்டற்ற, கட்டற்ற இயல் எளிமை வாய்ந்த; *adv.* பகட்டாக; (கப்.) காற்றின் திசையில் முனைப்பாக; (தொ.) at large, சுதந்தரமாக, கட்டுப்பாடின்றி; முழு விவரங்களோடு; தொகுதியாக, முழு அளவில்; பொதுவாக, தனிப்படுத்திக் கூறாமல், குறித்த எவ்வகை நோக்கமுமில்லாமல்; by and large, பொதுவாகக் கூறுமிடத்து, மொத்தத்தில்; எல்லாவற்றையும் சேர்த்துக் கவனித்துப் பார்த்தால்; gentleman at large, தனிப்பட்ட கடமைகளில்லாமல் அரசு மன்றத்தில் இணைப்புக்கொண்டுள்ள உயர் குடிப்பெருமகன்; வேலையில்லாதவர், தொழிலில்லாதவர்.

large'-heart'ed, *a.* வண்மையுளம் உடைய; இரங்குகிற.

large'ly, *adv.* பெரிதும்; பெரும்பாலும்; மொத்தத்தில்.

lar'gess, lar'gesse, *n.* தாராளமான மகிழ்ச்சி; நன்கொடை, வள்ளன்மை மிக்க ஈகை.

larg'o, *n.* (இசை.) பரந்தாழ்ந்த மெல்லியக்க இசை; *adv.* பரந்தாழ்ந்த மெல்லியக்கத்துடன்.

la'riat, *n.* குதிரை முதலியவற்றை முளையில் கட்டிப் பிணைக்கும் கயிறு; கட்டற்ற விலங்கு கால்நடைகளைப் பற்றிப் பிடிக்கும் சுருக்குவார்க் கண்ணி.

lark[1], *n.* வானம்பாடியினப் பறவை; (தொ.) rise with the lark, வைகறைத் துயிலெழு.

lark[2], *n.* விளையாட்டு, வேடிக்கை, களியாட்டு; வேடிக்கையான நிகழ்ச்சி; *v.* கேளிக்கையில் ஈடுபடு, துள்ளி விளையாடு, குறும்பு செய்; (தொ.) what a lark! எவ்வளவு வேடிக்கை! எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி!

lark'-heel, *n.* உணவுக்குரிய காரமான இலைகளுள்ள செடி வகை.

lark'spur, *n.* குதிமுள் போன்ற புல்லிவட்டமுள்ள செடிவகை.

la'rrikin, *n.* போக்கிரி இளைஞன், தெருச்சுற்றி வீணன்.

la'rrup, *v.* (பே-வ.) நையப்புடை, தண்டனைகொடு.

la'rum, *n.* =alarum.

larv'a, *n.* முட்டைப்புழு, முட்டையினின்று வெளிவந்த புழு, கம்பளிப்புழு; அரைகுறை உருமாற்றமடையும் மற்ற விலங்குகளின் முதிராத வடிவம்; *pl.* larv'ae.

laryngit'is, *n.* குரல்வளை அழற்சி.

laryng'oscope, *n.* குரல்வளையைக் கூர்ந்து நோக்குவதற்குப் பயன்படும் துணைக்கருவித்தொகுதி.

laryngot'omy, *n.* வெளியிலிருந்தே குரல்வளையின் உட் பகுதியில் வெட்டும் அறுவை முறை.

la'rynx, *n.* குரல்வளை.

Las'car, (இ.) *n.* கப்பலோட்டி; கூடார உயைழர்.

lasciv'ious, *a.* சிற்றின்பச் சார்பு மிகுதியுடைய, காமமிக்க; சிற்றின்பந் தூண்டுகின்ற.

lash, *n.* கசையடி; தோல்வார்ச் சுடக்கு; சாட்டைபோன்ற தொய்வான பொருளாலடிக்கும் அடி; சுளீர் வீச்சு, சுளீர்ச் சுடக்கீடு; கசையின் வார்; கசைமுனை; சாட்டை; கசையடித் தண்டனை; வசையடி, வசைத்தாக்குதல்; *v.* கசையாலடி; வாரால் அடி; வாலால் அடி; சடாரென்றடி; பாய்ந்தூற்று, விசையுடன் கொட்டு; தாக்குவிசையுடன் அடி; அடி; எற்று, உதை; மோது; கண்டி, திட்டு, வசைமொழியால் தாக்கு; வன்சொல் வீசு; சாட்டையாலடித்துத் தூண்டு; அடித்துத் தூண்டுதலளி; (தொ.) lash onself into a fury, கடுஞ்சீற்றம் வருவித்துக்கொள்; the lash, கசையடித் தண்டனை.

lash'er, *n.* கசையாலடிப்பவர்; மோதுவது; அணை; அணை யின்மீது ஓடும் நீர்; அணையின்கீழுள்ள சிறு குட்டை.

lash'kar, *n.* போர்க்கருவிகள் தாங்கிய குடிமரபுக் குழுவினர்.

las'pring, *n.* மீன்வகையின் முதிரா வடிவம்.

lasque, *n.* வடிவமைதியற்ற நரப்பிழைப் பட்ட வைரக்கல்.

lass, *n.* சிறுமி, சிறுக்கி, பெதும்பை; காதலி.

lass'itude, *n.* களைப்பு, சோர்வு; தளர்மடிமை, முயற்சி செய் வதற்கு மனமில்லாமை, அக்கறையின்மை.

lass'o, *n.* கால்நடைகள் முதலியவற்றைப் பிடிக்கப் பயன்படும் தோல்வார்ச் சுருக்குக்கண்ணி; *pl.* lass'os; *v.* தோல்வார்ச் சுருக்குக் கண்ணியிட்டுப் பிடி.

last[1], *n.* கடைசி ஆள், இறுதியில் குறிப்பிடப்பட்டவர்; கடைசிப் பொருள், இறுதியில் குறிப்பிடப்பட்டது; இறுதி நாள்; இறுதி நேரம்; கடைசி, இறுதி; சாவு, இறப்பு; இறுதியான ஒன்று; கடைசிச் செயல்; *a.* கடைசியான; முடிவான; எல்லாவற்றிற்கும் பின்னான; இறுதியாக வருகிற; வாழ்க்கையின் முடிவான; உலகத்தின் முடிவான; அடுத்து முந்திய; மிக அணிமைக் காலத்திய; மிகவுங்கீழான; மிகத் தாழ்ந்துள்ள; மிகக்குறைவான பதவியிலுள்ள; மிகக் குறைந்த மதிப்புள்ள; இறுதியாக எஞ்சியுள்ள; முடிவான, தீர்மானமான; புறக்கோடியான, முனைக்கோடியான; *adv.* கடைசியாக; எல்லாவற்றிற்கும் பிந்தி; மிக அணிமை யாகக் கடைசியில்; முடிவாக; அறுதியாக; (தொ.) at long last, முடிவில், இறுதியில்; பெருங் காலதாமதத்திற் குப் பிறகு; last but not least, வரிசைப்படி கடைசியிலா யினும் சிறப்புப்படியில் வேறாக, கடைசியாகக் குறிப்பிடினும் முக்கியத்துவங் குறையாத; last day, இறுதித்தீர்ப்பு நாள்; the four last things, சாவு-தீர்ப்பு-சொர்க்கம்-நரகம் ஆகிய நான்கு முடிவான பொருள்கள்; till the last, to the last, முடிவு வரையில்; கடைசிவரை; இறக்கும் வரையில்.

last[2], *n.* வீரியம், நீடுழைப்பாற்றல்; கெடாது நீடித்துப் பயன் படும் பண்பு; *v.* நீடித்துழைப்பதாயிரு, கெடாதிரு; அழியா திரு, செலவாகாதிரு; உயிருடனிரு; போதியதாயிரு; தேவைக் குச் சரியாயிரு; (தொ.) last out, நீடித்து நிலைத்திரு; பதங் கெடாதிரு.

last[3], *n.* புதைமிதியடி செய்வதற்குரிய படியுருவக்கட்டை; (தொ.) stick to one's last, புரியாச் செய்திகளில் தலையிடா திரு.

last[4], *n.* வாணிக எடையளவு; வாணிகக் கன அளவை; இடத்துக்கும் சரக்குக்கும் ஏற்ப மாறுபடும் வாணிகப் பரும அளவை; (தொ.) last of malt, மாவூறல் இரண்டரை அந்தர்; last of wool, பன்னிரண்டு சாக்குக் கம்பளி.

las'ting, *n.* கெட்டுழைப்புத் துணிவகை; *a.* நீடித்திருக் கிற; நிலைத்த; நிலைபேறுள்ள, நீடித்து உழைக்கக்கூடிய.

lat, *n.* பத்து ஆங்கில பென்னி மதிப்புடைய லாட்வியா (Latvia) நாட்டின் பொன் நாணய மூல அளவு.

Lataki'a, *n.* கலவைப் பொருள்களில் பயன்படுத்தப்படும் துருக்கிப் புகையிலை வகை.

latch, *n.* புறவிசைக் கொண்டி; பொறித்தாழ்ப்பாள்; புற விசைப்பூட்டு; கதவின் விசையடைப்பு; *v.* பொறித்தாழ்ப்பா ளிடு, விசைத் தாழ்ப்பாளிட்டுப் பூட்டு; (தொ.) on the latch, தாழ்ப்பாளால் மட்டும் பூட்டும்படியான, விசைத்தாழிட்ட.

latch'et, *n.* புதைமிதியடியின் தோல்வார் இழை.

latch'key, *n.* விசைத்தாழ்த் திறவுகோல்; (தொ.) latchkey vote, விசைத்தாழ்த் திறவுகோலைக் குடியிருப்பின் குறியடை யாளமாகக் கொண்ட குடியிருப்பாளர் வாக்களிப்புரிமை.

late, *n.* அணிமைக்காலம்; *a.* தாமதமான, பிந்திய; சுணங் கிய, உரியகாலங் கடந்த; காலங் கடந்து நிகழ்கிற; எதிர் பார்த்த காலத்துக்குப் பிற்பட இயலுகிற; முடிவுநோக்கி நெடுந்தொலை சென்ற; இறுதிக்கு அணித்தான; நெடுநாட் கடந்த; நடுப்பருவங்கடந்த; வேளைகடந்த; காலந்தாழ்த்தற் குரிய; பொழுதுசென்ற; பொழுதேறிய; வழக்கமான நேரங்கடந்த; பின்னடைந்த; பிற்பட்ட; பிற்காலத்திய; காலஞ்சென்ற, அணிமையில் மறைவுற்ற; முன்னுளைய; பணி ஓய்வுற்ற; அணிமையில் நிகழ்வுற்ற; கழிந்த; *adv.* காலந்தாழ்த்து, சுணங்கி, தாமதமாக; உரியகாலத்துக்குப் பின்; பிந்தி, மிகவும் பிற்பட்டு; காலங்கடந்து; பொழுதேற, வேளைகடந்து நெடுநேரமாக; அணிமையில்; முன்பெல்லாம், அணிமைக் காலங்களில்; காலஞ்சென்று, பிற்பட்டு; பருவங் கடந்து; பிற்பட்டபடியில்; நம் காலத்தை எட்டிய நிலையில்; (தொ.) late fee, தாமதக் கட்டணம்; late hours, இயல்பான வேளை கடந்த நேரம்; late in the day, காலமல்லாத காலத் தில்; of late years, சென்ற சில ஆண்டுகளில்; soon or late, முன்பின்னாக, எப்போதாவது ஒரு சமயத்தில்.

lateen', *a.* (கப்.) பாய்மரத்திலிருந்து 45 பாகைக் கோண அளவுடைய முக்கோண அமைப்புள்ள; 45 பாகைக் கோண அளவான முக்கோண அமைப்புடைய பாய்மரம் கட்டப் பட்டுள்ள.

late'ly, *adv.* சிறிது காலத்திற்குமுன், அணிமையில், அணிமைக் காலங்களில்.

lat'en, *v.* பிற்படு, சுணங்கு.

lat'ent, *a.* மறைந்திருக்கிற; வெளிப்படாத; உள்ளார்ந்த; உட்செறிவான; வெளியிற் காணப்படாத; முதிர்வுறாத; இயக்கமில்லாத; புதைவியல்புடைய, மறை தன்மையுடைய; (தொ.) latent heat, உட்செறி வெப்பம், புதைசூடு.

lat'eral, *n.* பக்கக் கிளை; பக்கக் கிளையுறுப்பு; புடைப்பொருள்; *a.* பக்கத்திலுள்ள; புடைநிலையான; பக்கத்திலிருந்து இயங்கு கிற; பக்கம்நோக்கிச் செல்கிற; (தொ.) lateral branch, நேர்மரபின் கிளைவழிக் குடும்பம், நேர்மரபினரின் உடன்பிறந் தார் வழிக்குடும்பம்.

Lat'eran, The Lateran, St. John Lateran, *n.* ரோமா புரியிலுள்ள தூய யோவானின் கிறித்தவ தலைக்கோயில்; (தொ.) Lateran Council, மேற்கு மண்டலத் திருச்சபையின் ஐந்து பொதுக்குழுக்களில் ஒன்று.

lat'erite, *n.* வெப்பமண்டலச் சாலையமைப்பிற் பயன்படுத்தப் படும் செவ்வண்ண இரும்பகக் களிமண்.

lat'ex, *n.* (தாவ.) இரப்பர் மரப்பால்.

lath, *n.* மென்மரப் பட்டிகை, வரிச்சல்; *v.* சுவர்-தளம்-மச்சுக் களுக்கு மென்பட்டிகைப் பாவு; (தொ.) as thin as a lath, ஆள்வகையில் ஒட்டி மெலிந்த; lath and plaster, சுவரின் உட்புறம் முகப்புக்கூரையின் உட்புறம் பிரிவினைத்தட்டி முதலியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் காரை-மெல்லிய பலகைக் கீற்று முதலிய பொருள்கள்.

lathe[1], *n.* கெண்ட் (Kent) கோட்டத்தின் ஆட்சித்துறை வட்டங்களில் ஒன்று.

lathe[2], *n.* கடைசல் இயந்திரம்; சட்டி பானைகள் செய்வதற் குப் பயன்படும் சுழல் வட்டம்.

lathe'-bearer, *n.* கடைசல் பிடிக்கும் பொறியின் மையங்கள் அல்லது கொளுவிகளுக்குரிய நிலைச்சட்டம்.

lathe'-bed, *n.* கடைசல் பிடிக்கும் பொறியின் ஏற்பமைவு வாய்ப்புடைய அடிப் பணிச்சட்டம்.

lathe'-carrier, lathe'-dog, *n.*=lathe-bearer.

lath'er, *n.* நுரை, சவுக்கார நுரை; குதிரையின் வியர்வை நுரை; *v.* நுரைபடு, நுரையாகு; நுரையால் மூடப்பெறு; மழிப்பதற்காகச் சவுக்கார நுரைதடவு; அடி, நையப்புடை.

lath'i, (இ.) *n.* குறுந்தடி, குண்டாந்தடி.

latifun'dia, *n. pl.* பெரும்பண்ணை, நிலங்களின் தொகுதி; பெரும்பண்ணையாட்சி நிலை.

Lat'in, *n.* லத்தீன் மொழி; லேஷியம் (Latium) என்ற பண்டை இத்தாலி நாட்டு மாகாணத்தின் குடியுரிமையாளர்; சிறப்புக் குடியுரிமையுடைய இத்தாலி நாட்டவர்; பண்டை லத்தீன் மரபில் வந்த மொழியினைப் பேசுபவர்; ரோமன் கத்தோலிக்கர்; *a.* பண்டை ரோமாபுரியினரைச் சார்ந்த; லேஷியம் என்ற பண்டை இத்தாலிய மாகாணத்துக்குரிய; லத்தீன் மொழிக்குரிய; லத்தீன் மொழியிலுள்ள; லத்தீன் மொழிபோன்ற; ரோமன் கத்தோலிக்க திருச்சபை சார்ந்த; பண்டை ரோமரின் பழக்கவழக்கங்களை மரபுவழிப் பின்பற்றுகிற; பண்டை ரோமரின் பழக்கவழக்க மரபுகளைப் பின்பற்றும் மக்களைச்சார்ந்த; லத்தீன் மரபுவழி மொழிகளைப் பேசுகிற; பிரான்ஸ்-ஸ்பெயின்-போர்ச்சுகல்-இத்தாலி ஆகிய மாநிலங்களுக்குரிய; (தொ.) classical Latin, கி. மு. 75 முதல் கி. பி. 175 வரையுள்ள லத்தீன் இலக்கியமொழி; late Latin, கி. பி. 175 முதல் கி. பி. 600 வரை வழங்கிய லத்தீன் மொழி; low Latin, பிற்பட்ட பண்டைக்கால முற்பட்ட இடைநிலைக்கால லத்தீன்மொழி; இடைநிலைக்காலத்திய லத்தீன்மொழி; medieval Latin, கி. பி. 600 முதல் கி. பி. 1500 வரை வழங்கிய லத்தீன்மொழி; modern Latin, கி. பி. 1500-க்குப் பிற்பட வழங்கும் தற்காலத்துக்குரிய லத்தீன் மொழி; old Latin, ஏறத்தாழ கி. மு. 75-க்கு முற்பட்ட லத்தீன்மொழி; இலக்கிய காலத்துக்கு முற்பட்ட லத்தீன் மொழி; the Latin peoples, பிரான்சு-ஸ்பெயின்-போர்ச்சுகல் இத்தாலி முதலிய நாட்டுமக்கள்; thieves' Latin, திருடர்களின் மறைமொழி.

Latin'e, (ல.) *adv.* லத்தீன் மொழியில்.

Latin'ity, *n.* லத்தீன் எழுதுபவரின் மொழிநடை; லத்தீன் மொழிநடைப் பாணி.

lat'inize, *v.* சொல்லுக்கு லத்தீன் வடிவங் கொடு; லத்தீன் மொழிப்படுத்து; பண்டை ரோமரின் பழக்கவழக்க மரபுகளுடன் இசைவுபடுத்து; லத்தீன் மரபுத் தொடர்களை வழங்கு.

lat'itude, *n.* விரிவகலம்; வீச்செல்லை; ஆற்றலெல்லை; வாய்ப்பகலம்; வாய்ப்பெல்லை; இடவாய்ப்புரிமை, வாய்ப்பெல்லையுரிமை; தாராள மனப்பான்மை; கட்டுப்பாடின்மை; நெகிழ்வு; தளர்வு; தளர்வுரிமை; பொருள்கோள் விரிவெல்லையுரிமை; (நில.) குறுக்கைஅளவு, நடுவரைகடந்துள்ள கோண அளவு; (வான்.) கதிர் வீதியிலிருந்துள்ள கோண அளவு.

lat'itudes, *n. pl.* பரப்பெல்லைகள்; (தொ.) high latitudes, நிலநடுக் கோட்டுக்கு வடதொலைவு அல்லது தென் தொலைவுப் பகுதி மண்டலங்கள்; low latitudes, நிலநடுக் கோட்டுக்கு அருகிலுள்ள மண்டலப்பகுதிகள்.

latrine', *n.* மலசலம் கழிப்பிடம், கால் கழுவிடம்.

latt'en, *n.* பித்தளை போன்ற மஞ்சள் உலோகக் கலவை; *a.* பித்தளை போன்ற உலோகக் கலவையாலான.

latt'er, *a.* பிந்திய, பின்கூறப்பட்ட; இரண்டில் பின்குறிப்பிடப்பட்ட; பிற்பட்ட; பிற்பகுதியான; பின்வருகிற, பிந்தி நிகழ்கிற; பிந்திய நிலையுடைய; தற்காலத்தோடொட்டிய; அணிமைக்காலத்திய; முடிவணித்தான; (தொ.) in these latter days, உலக வரலாற்றில் மிகப்பிற்பட்ட அணிமைக் காலத்தில்; latter end, சாவு, இறப்பு.

latt'er-day, *a.* அணிமைக் காலத்துக்குரிய; (தொ.) latter-day saints, நியூயார்க்கில் 1830 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மார்மன்ஸ் (Mormons) என்ற சமயக்குழுவைச் சார்ந்த பலதார உறுப்பினர்.

latt'erly, *adv.* வாழ்க்கையின் இறுதித் தறுவாயில்; காலப் பகுதியின் முடிவான தறுவாயில்; அணிமைக்காலத்தில், சிறிது காலமாக.

latt'ice, *n.* பின்னல் தட்டி, வரிச்சல் அல்லது கம்பிகளின் பின்னலால் அமைந்த மறைப்பு; பின்னல் வேலைப்பாடமைந்த பொருள்; பின்னலமைப்புடைய பிழம்புரு; குறுக்குப்பின்னல் கம்பி வலையிட்ட பலகணி; *v.* வலைப்பின்னலுருவாக்கு; பின்னல் தட்டியமைத்துப் பொருத்து; (தொ.) lattice bridge, குறுக்குச் சட்டப் பாலம்; lattice frame, lattice girder, இரும்பாலான பின்னற்சட்ட அமைப்போடு இணைக்கப்பட்ட பெரிய உத்தரம்; lattice window, பின்னல் வலைப் பலகணி, பின்னல் வலைச்சட்டப் பலகணி.

latt'ice-work, *n.* பின்னல்வலை வேலைப்பாடு; பின்னல் வேலைப்பாட்டமைப்பு.

Lat'vian, *n.* பால்டிக் (Baltic) கடலடுத்துள்ள லாட்வியா குடியரசின் குடிமகன்; *a.* லாட்வியா நாட்டைச் சேர்ந்த.

laud, *n.* புகழ்ச்சி; புகழ்ச்சிப் பாசுரம்; *v.* புகழ்ந்து பேசு, புகழ்ச்சி செய், கொண்டாடு.

laud'able, *a.* புகழத்தக்க, பாராட்டத்தக்க, புகழ்ச்சிக்கு உரித்தான; (மரு.) உடலியல் சுரப்புநீர் வகையில் உடலுக்கு நலமார்ந்த.

laud'anum, *n.* சாராய அபினிக் கரைசல்.

lauda'tion, *n.* புகழ்ச்சி, ஏத்துதல்; மதித்தல், போற்றுதல்.

laudat'or tem'poris de'ti, (ல.) *n.* முற்காலமே பொற்காலமென்று விரும்பிப் போற்றுபவர்.

laud'atory, *n.* புகழுரை; *a.* புகழடங்கிய; புகழ்ச்சியுடைய, புகழ்கிற.

lauds, *n. pl.* திருக்கோயில் முதற்பகல் வழிபாட்டு வேளை; புகழ்க்கீதம்.

laugh, *n.* நகை; நகைப்பொலி; ஏளனச்சிரிப்பு; சிரிக்கும் பாணி, நகைக்கும் வகைமுறை; *v.* சிரி; நகைப்பொலி செய்; நகைமுகங் காட்டு; ஏளன நகைப்பு நகை; வெறுப்புடன் சிரி; அகமகிழ், களிப்புறு; சிரித்துரையாடு; (தொ.) have the laugh of, get the laugh of, have the laugh on one's side, தாக்குபவரைத் திரும்பத் தாக்கு; he laughs best who laughs last, முடிவிற் சிரிப்பவனே உண்மையாகச் சிரிப்பவன், முற்றிலும் முடியுமுன் அகமகிழ்வுறுவது தவறு; join in the laugh, தன்னை ஏளனஞ்செய்து சிரிப்பவரோடுகூடச் சேர்ந்து சிரி, கேலிக்காரரோடுகூடச் சேர்ந்து சிரி; laugh at, கேலி பண்ணு; ஏளனஞ்செய், இகழ்; புன்னகை புரி, மகிழ்ச்சி குன்றாதிரு, மகிழ்வுடனிரு; ஏளனம் செய்வதன் மூலம் பழக்கவழக்கம் நம்பிக்கை முதலியவற்றின் பிடியகற்று; laugh away, சிரித்து ஒதுக்கித்தள்ளு; கேலி கிண்டலில் காலத்தைப் போக்கு; laugh down, சிரித்து வாயடக்கு; laugh in one's sleeve, மறைமுகமாகச் சிரி, ஒளிவுமறைவாக நகை; laugh off, சிரித்துக்கழி; சிரித்துத் தொல்லைகளிலிருந்து தன்னைத் தப்புவித்துக்கொள்; laugh on wrong side of mouth, மகிழ்ச்சியாரவார விருப்பையடுத்துத் துயரம் அல்லது எரிச்சலுக்கு ஆளாக நேரு; laugh out of court, மறுவிளக்கங்களுக்கு இடமில்லாதபடி ஏளனஞ்செய்து அகற்றிவிடு; laugh over, சிரித்துப்பேசித் தள்ளிவிடு.

laugh'able, *a.* சிரிக்கத்தகுந்த, நகைப்புக்கிடமான; நகைப்பைத் தோற்றுவிக்கிற; வேடிக்கையால் மகிழ்ச்சியளிக்கிற.

laugh'ing, *n.* சிரித்தல், நகைத்தல்; (தொ.) no laughing matter, கேலிக்கிடமான செய்தியன்று; விளையாட்டுச் செய்தி அன்று; புறக்கணிக்கத்தகாத செய்தி.

laugh'ing-gas, *n.* வெடியத்து உயிரகை, வலிநீக்கும் மயக்க மருந்தாக மூக்கில் உட்கொண்டு பயன்படுத்தப்படும் வெறியூக்கும் வளி.

laugh'ing-stock, *n.* பழிப்புப்பொருள்.

laugh'ter, *n.* உரத்த சிரிப்பு; நகைப்பொலி; (தொ.) Homeric laughter, உரத்த பொதுச்சிரிப்பு.

launce, *n.* வேலையிறக்கத்தின்போது மணலில் புதைந்து கொள்ளும் இயல்புடைய விலாங்குபோன்ற மீன்வகை.

launch[1], *n.* கல இறக்கம், கப்பல்-படகு வகைகளில் நீரில் இறக்கும் செயல்; கலப்புறப்பாடு, கப்பல்-படகு வகைகளில் துறைபெயர்ந்து செல்லுதல்; *v.* தூக்கியெறி, வீசியெறி; கடலில் தள்ளு; மிதக்கவிடு; தொலைக்கனுப்பு; புதிய துறை தொடங்கு, புது முயற்சியில் இறங்கு; முயற்சியை மேற்கொண்டு புறஞ்செல்.

launch[2], *n.* போர்க்கப்பலின் மிகப்பெரிய படகு; தட்டையான அடிப்புறமுள்ள பெரிய படகு; நீராவி கல்லெண்ணெய் முதலியவற்றால் இயங்கும் பெரும் பயணப்படகு; இன்ப உலாப்படகு.

laun'der, *v.* சலவை செய், ஆடைகளை வெளு; ஆடை வகையில் சலவைக்குரிய தாயிரு, வெளுப்புக்கு ஈடுசெய்வதாய் இரு.

laun'dress, *n.* வண்ணகப் பெண், ஆடை வெளுப்பவள்; இங்கிலாந்தில் முறைவர் உரிமை மன்றங்களின் மேற்பார்வையாளர்.

laun'dry, *n.* அலக்ககம், சலவை மனை, ஆடைவெளுப்புச் சாலை; சலவைக்குரிய துணிகளின் தொகுதி.

laur'eate, *n.* அரசவைக் கவிஞர், ஊதியம்பெற்றுப் பாடும் அரசியற் கவிஞர்; பேச்சு முதலிய போட்டிகளில் வெற்றி வாகை சூட்டப்பெற்றவர்; *a.* வெற்றிமாலை சூட்டப்பெற்ற, வாகை சூடிய, வாகைகொண்ட; வெற்றி வாகைக்குரிய, வெற்றி வாகை சூட்டப்பெறத்தக்க.

lau'rel, *n.* புன்னைவகை; பாடற் போட்டியில் வெற்றிச் சின்னமான தழை; வெற்றிச்சின்னம்; வெற்றித் தனித்துறை ஏற்றம்; (தொ.) look to one's laurels, பெற்ற புகழ்ப் பெருமையை இழந்துவிடாமல் காப்பாற்றுவதில் விழிப்பாக இரு; rest on one's laurels, பெற்ற புகழைக்கொண்டு திருப்தி அடை, மேலும் புகழ்வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடாதிரு.

lau'rel-bottle, *n.* பூச்சிகளைக் கொல்வதற்காகப் புன்னை வகையின் இலைகளால் நிரப்பப்பட்ட குப்பி.

laurestin'us, laurustin'us, *n.* எப்போதும் பசுமை நிறமுள்ள மலருடைய புதர்ச்செடி வகை.

la'va, *n.* எரிமலைக் குழம்பு, உருகிய பாறைக் குழம்பு.

lavab'o, *n.* ஏசுநாதரின் இறுதியுணவு விழாவின் தற்காலிக சமயகுரு கைகளைக் கழுவும் சடங்கு; கைகழுவும் வினைமுறைக்காகப் பயன்படுத்தப்படும் கைத்துண்டு; கை கழுவு தட்டம்; துறவிமடத்தின் தண்ணீர்த்தொட்டி, கழுவு கலம்.

lavab'os, *n. pl.* கைகால் கழுவும் அறை; கழுவு நீர்க்கலம்.

lava'tion, *n.* கழுவுதல், அலம்புதல்.

lav'atory, *n.* கழுவு நீர்க்கலம், துணி துவைப்பதற்குப் பயன்படும் கலம்; கைகால் கழுவும் அறை; சிறுநீர் கழிப்பிடம்.

lave, *v.* (செய்.) கழுவு, குளி; அலம்பு; அலைமோது; ஒழுகு, நீரோட்டமாகச் செல்.

lave'ment, *n.* (மரு.) ஊசிபோடுதல்; குடல் கழுவுதல், மூலம் வழி நீர் முதலியன செலுத்தி மலக்குடலைத் தூய்மை செய்தல்.

lav'ender, *n.* நறுமணச் செடிவகை, ஆடைகளை மணமூட்ட வைக்கப்படும் நறுமணச் செடிவகையின் மலர்க்காம்புகள்; செஞ்சாயலுடைய மென்னீல நிறம்; *v.* துணி முதலியவற்றில் நறுமணச் செடியின் மலர்ப்பூக்காம்புகளை வை; (தொ.) lay up in lavender, பின்னால் பயன்படுத்துவதற்காகச் சேர்த்து ஒதுக்கிவை.

lav'ender-water, *n.* நறுமணப்புதர்ச் செடிவகையின் மலர் காம்பு முதலியவை ஊட்டப்பட்ட நீர்மம்.

lav'er[1], *n.* கடற்பாசி வகை; உண்ணத்தக்க கடற்பாசி இனம்.

lav'er[2], *n.* (விவி.) யூதமத குருக்கள் கழுவுவதற்கான பெரிய பித்தளைக்கலம்; அலம்புவதற்கான தட்டம்; ஊற்றுத் தேங்குகலம்; கிறித்தவர் கோயிலில் திருநீர்வட்டில்.

lav'erock, *n.*=lark[1].

lav'ish, *n.* நிறைவு; *a.* வரையாது கொடுக்கிற; மட்டு மிஞ்சிச் செலவிடுகிற; ஏராளமான விளைவைத் தருகிற; தாராளமான; ஊதாரித்தனமான, அளவு மீறிச் செலவிடுகிற; *v.* தாராளமாகக் கொடு; மட்டுமீறிச் செலவிடு.

law[1], *n.* சட்டம்; சட்டத்தொகுதி; அரசியற் சமுதாயத்தின் கட்டமைதி; சட்ட ஆட்சி, அரசியல் ஒழுங்குமுறை; சட்டக் கட்டுப்பாடு; சட்டமுறைமை; சட்டத்துறை; தனித்துறைக்குரிய சட்டம்; சட்டக்கல்வி; சட்டப்புலமை; சட்டத்தொழில்; சட்டவாசகம், சட்டக்கூறு; சட்டத்துக்குகந்தது; சட்ட ஆட்சிமுறை; சட்ட நடைமுறை; வழக்குமுறை; வழக்கு நிலை; பொதுநீதி; நடைமுறை ஒழுங்கு, செயல் ஒழுங்கு; மரபொழுங்கு; வழக்கமுறைமை, விவகார முறை; கட்டளை; மேற்கோள் விதி; கட்டளை விதிமுறை; விதிமுறை வாசகம்; இயலமைதி; இயற்கை ஒழுங்கமைதி; மெய்யொழுங்கமைதி; தத்துவம்; மெய்ம்மை வாய்பாடு, சூத்திரம்; வேட்டை விளையாட்டுப்போட்டிப் பந்தயங்களில் முன்னுரிமைச்சலுகை; நேர்மைச்சலுகை; சலுகை நேரம்; ஓய்வு; *v.* சட்டநாடி வழக்குக்குச்செல்; விரைவுபடுத்து; (தொ.) be a law unto oneself, மனம்போன போக்கில் நட, மரபொழுங்கைப் புறக்கணி; give the law to, தன் ஆணை சுமத்து; Gresham's law, கெட்ட நாணயம் நல்ல நாணயத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டிவிடுகிறது என்ற சட்டம்; Grimm's law, இந்தோ செர்மானியக்குழு மொழிகளில் மெய்யெழுத்துக்களின் மாறுதல்களைப்பற்றிய கிரிம் (Jacob Grimm 1785-1863) என்பாரின் மெய்விளக்க விதி; international law, law of nations அனைத்து நாட்டுச்சட்டம், உலக நாடுகளிடையேயுள்ள தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்; Kepler's laws, ஜோஹான் கெப்லர் (Johann Keplar 1571-1630) கண்டு நிறுவிய கோள இயக்கங்களைப் பற்றிய மூன்று மெய்விளக்க விதிகள்; law calf, சட்ட புத்தகங்களின் கட்டிடத்துக்காகப் பயன்படுத்தப்படும் கறைப்படுத்தப்படாத மாட்டுக்கன்றின் தோல்; law French, சட்டத்திலும் சட்டப் புத்தகங்களிலும் பயன்படுத்தப்படும் பழைய பிரஞ்சுமொழிச் சொற்கள்; law Latin, ஆங்கிலச் சட்டங்களில் பயன்படுத்தப்பட்ட முற்காலக் கலப்பட லத்தீன் மொழி; law merchant, வணிகத்துறை ஒழுங்குமுறைச் சட்டம்; laws of motion, நியூடன் (Newton) என்பவரால் முறைப்படுத்திக் கூறப்பட்ட பொருள்களின் இயக்கம் பற்றிய மூன்று மெய்விளக்க விதிகள்; lay down the law, அதிகாரத் தோரணையுடன் பேசு, வீம்பு பேசு, அச்சுறுத்தி அடக்கியாளு; martial law, படைத்துறை ஆட்சிநிலை; take the law into one's own hands, தனக்கிழைக்கப்பட்ட தீங்குக்கு வன்முறையால் தானே எதிர்பழி செய்ய முற்படு; the law of the Medes and Persians, மாற்றவே முடியாத சட்டம்; Verner's law, இந்தோ செர்மானியக் குழு மொழிகளில் அழுத்தமாற்றத்தால் மெய்யெழுத்து ஒலிகளில் ஏற்படும் மாறுதல்கள் பற்றிய வெர்னர் (Karl Verner) என்பாரின் மெய்விளக்க விதி.

law[2], *int.* (பே-வ.) வியப்புணர்த்துஞ் சொல், வியப்பிடைச் சொல்.

law'-abiding, *a.* சட்டத்திற்குக் கீழ்ப்படிகின்ற.

law'-agent, *n.* வழக்கு விவரம் திரட்டும் முறைமன்ற அலுவலர்; கீழ்மன்ற வழக்குரைஞர்; வழக்காடும் உரிமை பெற்றவர்.

law'ful, *a.* சட்ட உரிமை வாய்ந்த; சட்டத்தின்படி அமைந்த; சட்டத்துக்கு மாறல்லாத; சட்ட ஒப்புதல் பெற்ற; சட்டத்திற்கு இயைய நிறுவப்பட்ட; முறைப்படி பிறந்த.

law'giver, *n.* சட்ட முதல்வர், சட்டம் செய்பவர்; சட்டத் தொகுதியை உருவாக்கியவர்.

law'-hand, *n.* சட்டப்பத்திரங்களில் பயன்படுத்தப்படும் கை எழுத்து.

lawk, lawks, *int.* (பே-வ.) வியப்பிடைச் சொல்; (தொ.) lawk-a-mussy, (பே-வ.) கடவுள் மன்னிப்பாராக, கடவுள் இரக்கம் காட்டுவாராக.

law'less, *a.* சட்ட ஆட்சியற்ற; சட்டச் செயலாட்சியில்லாத; அமைதியற்ற, குழப்பமிக்க; சட்டமீறிய; சட்டத்துக்குக் கீழ்ப்படியாத; சட்டத்துக்குக் கட்டுப்படாத; கட்டுப்பாடில்லாத, ஒழுங்கு மதியாத; ஒழுக்கவரம்பற்ற; வரம்புமீறிய நடையுடைய, மனம்போனபடி நடக்கிற.

law'-lord, *n.* பிரிட்டிஷ் மாமன்ற மேலவையில் (House of Lords) சட்டத்துறை உதவிக்குத் தகுதிவாய்ந்த உறுப்பினர்.

law'maker, *n.* சட்டமியற்றுநர்.

lawn[1], *n.* புல்வெளி, புல்நிலப் பரப்பு; ஒட்ட வெட்டப்பட்ட புல்கரண் பரப்பு; பூம்பொழில், இன்பப் புல்வெளித் தோட்டம்; (தொ.) lawn tennis, புல்வெளி வரிப்பந்தாட்டம்.

lawn[2], *n.* நேர்த்தியான நாரால் செய்யப்பட்ட துணி வகை, சமய வட்டத்தலைவர் உடையின் கைப்பகுதி தைப்பதற்குப் பயன்படும் மெல்லிய நார்த்துணி; (தொ.) lawn sieve, நார்த்துணி அல்லது பட்டாலான மென்மையான சல்லடை.

lawn'-mower, *n.* புல் அறுக்கும் பொறி.

lawn'-sprink'ler, *n.* பூவாளிப் பொறி, புல் தோட்டத்தில் நீர்தெளிக்கும் சுழற் குழாய்ப்பொறி.

law'-officer, *n.* சட்ட அதிகாரி; வழக்குரைஞர் அரங்க முதல்வர்.

laws, *int.* = law[2].

law'-stationer, *n.* வழக்குரைஞர்களுக்குத் தேவையான தாள் முதலியவற்றை விற்பவர், பெரிய எழுத்தில் எழுத வேண்டிய வழக்குப்பத்திரங்களை மேற்கொள்பவர்.

law'suit, *n.* உரிமைக்கோரிக்கை வழக்கு.

law'-term, *n.* சட்டத்துறைச் சொல்; முறைமன்ற இருக்கைக் கால எல்லை.

law'-writer, *n.* சட்ட எழுத்தாளர், சட்ட நூலாசிரியர்; சட்டப்பத்திரங்களை முறைப்பட எழுதுபவர், சட்ட எழுத்தர்.

law'yer, *n.* வழக்குரைஞர், வழக்கறிஞர், சட்ட அறிஞர், மன்றுடி, வழக்கு நடத்தும் ஆட்பேர், சட்டப் பயிற்சியுள்ளவர்; (தொ.) Penang lawyer, பினாங்கு நாட்டுப் பனைக்குச்சியால் செய்யப்பட்ட நடையுலாக் கோல்.

lax[1], *n.* ஸ்வீடன் அல்லது நார்வே நாட்டுக்குரிய பெரிய வெண்செதிள்களுடைய இளஞ்சிவப்பு உணவுமீன் வகை.

lax[2], *a.* தளர்வு வாய்ந்த, சோரவிட்ட; செறிவற்ற, அடர்த்தியில்லாத; உள்துளைகளையுடைய; நுண்துளை நிரம்பிய; கவனியாதிருக்கிற; கடமையில் தவறுகிற; கண்டிப்பில்லாத; தெளிவற்ற, உறுதியற்ற.

lax'ative, *n.* குடலிளக்க மருந்து, இளம் பேதிமருந்து; *a.* குடலை இளக்குகிற.

lay[1], *n.* நாட்டுப்பாடல்; சிறுகதைப் பாட்டு; உணர்ச்சிப் பாடல்; பறவைகளின் பாட்டு.

lay[2], *n.* கிடப்பு; நிலக்கிடக்கை, இட அமைவு; வழிநிலை; திசையமைவு; நிலை; அடுக்கின் பாங்கு; அடுக்குத்தளம்; கயிற்றுப்புரி முறுக்கின் பாங்கு; *v.* கிடத்து; படுக்கவை; நிலத்தில் படியவை; வீழ்த்து; கீழிடு; இடு; போடு; வை; அடித்து அமர்த்து; அமிழ்த்து; தணிவி; அமைவி; மேவுவி; பொருத்தி வை; படியவிடு; வைத்திரு; படிந்த நிலையில் வை; காற்று வகையில் பயிர்களைச் சாய்த்துக்கிடத்து; காற்று கடல் தூசி முதலியவற்றைத் தணியச் செய்; பேய் வகையில் எழுச்சி அடக்கு; தப்பெண்ணங்களை அமர்த்து; பந்தயம் வை; பந்தயம் வைக்க முன்வா; படுவி; நிலைப்படுத்து; ஆட்படுத்து; முன் வை; முன் கொணர்; கொணர்ந்து வை; முன்னிடு; காரணமாகக் கற்பி; சுட்டிக்காட்டு; சாட்டு; சுமத்து; இட்டுக்காட்டு; அடி; வீக்கு; ஒழுங்காக வை; வகுத்தமை; கட்டமை; செய்தொழிலுக்கேற்ற முன்னேருக்கஞ் செய்துவை; உருவாக்கு; தீட்டு; தீற்று; மேலே பூசு; பரப்பு; பொதி; வரையறுத்தமை; (தொ.) cannot lay my hands upon it, வரையறுத்துக் குறித்துக்காட்ட இயலவில்லை; lay aboard, கப்பலில் ஏறும் நோக்குடன் அதன் ஓரமாக விரைந்தோடு; எதிரி கப்பலைத் தாக்கும்படி அதன் ஓரமாகக் கப்பலைச் செல்லவிடு; lay about one, சுற்றியடி, எல்லாப் பக்கங்களிலும் அடி; lay an information, சட்டமுறைப்படி குற்றச்சாட்டைக் கொண்டுவா; lay aside, lay by, ஒதுக்கி வை; எதிர்கால நோக்கிச் சேமித்துவை; தள்ளி வை; பயன்படுத்தாமலிரு; கைவிடு, துற; lay bare, திறந்து காண்பி, மூடாக்ககற்று, வெளிக்காட்டு; நிர்வாணமாக்கு; வெட்ட வெளியாக்கு, இரகசியம் வெளிப்படுத்து; lay breakfast, lay cloth, lay table, உணவுக்காக மேசையை முன்னேற்பாடு செய்; lay by the heels, lay fast, சிறைப்படுத்து, சிறையிலடை; கட்டிப்போடு; lay down, கீழிடு, தரையில்வை; lay down one's arms, சரணடை, படைக்கலந் துற, எதிர்ப்பைக் கைவிடு; lay emphasis, lay stress, lay weight, வற்புறுத்து, அழுத்தமாகக்கூறு, முக்கியமெனக்கருது; lay great store upon, உயர்வாக மதி, உயர்வாகக் கருது; lay hands on, பிடி, கைப்பற்று, தன்னதாக உரிமைப்படுத்திக் கொள்; வன்முறையாக நடத்து; lay hands on oneself, தற்கொலை செய்து கொள்; lay heads together, கூடிப்பேசு, கலந்தாராய்; lay hold of, lay hold on, பிடி, பற்று; கைப்பற்று, வல்லந்தமாகக் கைக்கொள், எதிரியின் குறைபாடு அல்லது வலுக்கேட்டைப் பயன்படுத்து; lay in, கையிருப்புச் சரக்காக வைத்துக்கொள்; அடிமாரி பொழி, அடித்து நொறுக்கு; lay it on thick, lay with a trowel, வெளிப்படையாக முகப்புகழ்ச்சி செய்; lay low, தாழ்த்து கீழ்ப்படுத்து, செருக்கைக்குலை, பணியும்படி செய்; lay on, வரி முதலியன சுமத்து; அடிவழங்கு, அடிகொடு, அடிமேல் அடியடி; சாட்டையால் வீக்கு; பூசு; lay one's bones, குறிப்பிட்ட இடத்தில் புதைக்கப்பெறு; lay one under, கட்டாயநிலை உண்டுபண்ணு; lay open, தோலைப் பிளந்து காட்டு; வெளிப்படுத்து; தெளிவுபடுத்து; விளக்கிக்காட்டு; lay out, விரித்திடு; பரவச்செய்; சிதறச் செய்; திறந்து காட்டு; காணும்படி வை; பிணத்தைப் புதைவினைக்குச் சித்தம் செய்; பணத்தைச் செலவில் ஈடுபடுத்து; திட்டப்படி ஒழுங்கு செய்; செயலுக்கு ஒருக்கமாக்கு; (பே-வ.) தற்பொழுதைக்கு ஆட்டத்திலிருந்து அப்புறப்படுத்து; lay shaft, மின்பாய்ச்சுப் பொறியின் புறநிலை அடிக்கட்டு; lay siege to, முற்றுகையிடு; வற்புறுத்திக் கெஞ்சிக்கேள்; lay the fire, நெருப்பு வைப்பதற்குத் தக்கவாறு எரிபொருளை வகுத்து வை; lay to rest, lay to sleep, படுக்கவை; அமைதியாயிருக்கும்படி செய்; இறுதி ஓய்வு அளி; புதை, அடக்கஞ் செய்; lay up, சேமித்துவை; ஒதுக்கி வை; சிறுகச்சிறுகப் பணம் திரட்டிக் குவி; பிள்ளைப்பேற்றுக்கு ஒருக்குவி; கப்பலைப் பணிப்புறமாக்கு; lay wait, lay wait for, தாக்கும்படி பதுங்கியிரு; lay waste, பாழாக்கு.

lay[3], *a.* சமயச்சார்பற்ற; தீக்கைபெறாத, துறவுக்குழுவில் சாராத; பொதுநிலை மக்களைச்சார்ந்த; பொதுநிலை மக்களால் செய்யப்பட்ட; வல்லுநர் குழுவுக்குப் புறம்பான; (தொ.) lay brother, சமயத்துறைப் பணி ஏற்றும் பிறவேலையீடு பாட்டுரிமை பெறும் ஆடவர்; lay clerk, தலைக்கோயில் பாடகர்; திருக்கோயில் வட்டார எழுத்தர்; lay communion, பிற வேலையீடுபாட்டுரிமை பெற்ற சமயத்துறை வழிபாட்டுப் பணி, பொதுமக்களுக்கான இறுதி உணா வழிபாடு; lay deacon, உலகியல் சார்ந்த பணியில் இருந்துகொண்டே சமயப்பணி செய்யும் மூன்றும்படிச் சமயகுரு; lay lord, பிரிட்டிஷ் மாமன்ற மேலவையில் சட்ட அலுவல் பாராத பொதுநிலை உறுப்பினர்; lay reader, சமய வழிபாட்டுச் சடங்குகளை நடத்துவதற்கு உரிமையளிக்கப்பட்ட பொதுநிலை மக்களில் ஒருவர்; lay sister, சமயத்துறைப் பணி ஏற்றும் பிறவேலையீடுபாட்டுரிமை பெறும் பெண்டிர்.

lay[4], *v.* lie என்பதன் இறந்தகாலம்.

lay'er[1], *n.* வைப்பவர்; கிடத்துபவர், இடுபவர்; முட்டை முதலியன இடுவது; (தொ.) bad layer, நன்கு முட்டை இடாத பெட்டைக்கோழி; good layer, நன்கு முட்டையிடும் பெட்டைக்கோழி.

lay'er[2], *n.* அடுக்கு, பாளம், அடை; படுகை; மண்படுகை; தாய்ச்செடியோடு தொடர்புள்ளபோதே வேரூன்றுவதற்காக நிலத்தில் இறுக்கி இணைக்கப்பட்ட பதிய மூளை; சிப்பிப் படுகை; கிளிஞ்சிற் படுகை; *v.* தாய்ச்செடியோடு தொடர்புள்ளபோதே வேரூன்றுவதற்காக நாற்றுமுளையை நிலத்தில் இணைத்து நட்டுவளர்; வளர்ச்சிக் குறைவினால் கதிர்மணிப் பயிர் நிலத்தில் படிந்துகிடக்கும்படி செய்; (தொ.) layers and backers, தனிப்பட்ட குதிரை முதலியவற்றிற்கு எதிரிடையாக அல்லது சார்பாகப் பந்தயப்பணம் கட்டுபவர்கள்.

lay'ers, *n. pl.* வயலில் சிதறலாக வளர்ச்சிக் குறைவினுல் படிந்துகிடக்கும் பயிர்ப்பகுதிகள்.

lay'er-stool, *n.* நாற்றுமுளைகள் தோற்றுவிக்கப்படும் வேர்.

layette', *n.* புனிற்றுத் துணைப்பொருள்கள், புதிதாகப் பிறந்த குழவிக்குத் தேவையான உடைகள்-படுக்கை முதலிய துணைப் பொருள்களின் தொகுதி.

lay fig'ure, *n.* ஆடையணிகளையிட்டுப் பகட்டாகக் காட்டுவதற்குப் பயன்படும் மரத்தாலிணைக்கப்பட்ட மனித உருவம்; சிறப்பற்ற மனிதன், மதிப்பு ஏதும் இல்லாதவன்; புனைகதையில் மெய்த்திறமற்ற பண்போவியம்.

lay'lock, *n.* (பே-வ.) = lilac.

lay'man, *n.* தீக்கை பெருதவன், பொதுநிலை மக்களில் ஒருவன்; தொழில்-கலை-விஞ்ஞானம்-மருத்துவம் முதலியவற்றில் பயிற்சி பெருதவர்; சாதாரண மனிதர்; தனித்துறை சாராதவர்; வல்லுநர் குழுவுக்குப் புறம்பானவர்.

lay'-off, *n.* தொழிலாளியைத் தற்காலிகமாக வேலையினின்று விலக்கி வைத்திருக்கும் காலம்; தொழில்துறையில் தளர்ச்சிப் பருவம்.

lay-out', *n.* திட்டம்; திட்ட ஏற்பாடு, அமைப்புத்திட்டம்; நிலத்திட்ட விடுப்பு; மனைத்திட்ட அமைப்பு.

lay'stall, *n.* குப்பைமேடு, குப்பை கூளக் குவியல்.

laz'ar, *n.* நோயுற்று நலிந்த ஏழை; தொழுநோயர்.

lazaret', lazarett'o, *n.* ஏழை நோயாளிகள் மருத்துவமனை; குட்டநோய் மருத்துவமனை; தொற்றுநோயுக்கு மனை; தொற்றுநோயுக்கக் கப்பல்; கப்பலின் பின்புறமுள்ள சரக்குச்சேமப் பகுதி.

Laz'arus, *n.* இரவலர்; பஞ்சை, ஏழை; (தொ.) Lazarus and Dives, பஞ்சை ஏழையும் பணம்பெருத்த செல்வரும்.

laze, *n.* (பே-வ.) சோம்பற் காலம்; *v.* சோம்பலாயிரு; சோம்பிக் காலத்தைக்கழி, வீண்பொழுது போக்கு.

laz'iness, *n.* சோம்பல்.

laz'uli, *n.* = lapis lazuli.

laz'y, *a.* சோம்பலான, மந்தமான, மடிமை வாய்ந்த; வேலை செய்ய மனமில்லாத, சோம்பலுக்கேற்ற; சோம்பலைத் தூண்டுகின்ற; *v.* சோம்பலாயிரு; (தொ.) lazy pinion, சக்கரங்களிடையே இயக்கும் ஆற்றலைவாங்கி அனுப்பும் சிறு சக்கரம்.

laz'y-bed, *n.* ஆறடி அகலமும் இருபுறங்களிலும் நீண்ட பள்ளமுமுள்ள உருளைக்கிழங்குப் பயிர்ப்படுகை.

laz'y-bones, *n.* சோம்பேறி, மந்தமானவர்.

laz'y-tongs, *n.* தூரத்திலுள்ள பொருட்களைப் பற்றியெடுப்பதற்குரிய பல்திசை வளைவுகளையுடைய நெம்புகோல் அமைவு.

lazzaron'e, (இத்.) *n.* நேபில்ஸ் (Naples) நகரத்தில் பலதிறச் சிறு தொழிலும் செய்து பிழைக்கும் தெருச்சுற்றி; *pl.* *lazzaro'ni*.

lea[1], *n.* (செய்.) பசும்புல் தரை; திறந்தவெளி நிலம்.

lea[2], *n.* இடத்துக்கு இடம் மாறுபட்டு வழங்கும் நூலின் நீட்டலளவை வகை.

leach, *v.* நீர்மம் கசியவிடு; மரம்-பட்டை-களிமண் ஆகியவற்றைக் கசிவூறலுக்கு உட்படுத்து; கசிவூறல்மூலம் உள் மாசு வெளியேற்று.

lead[1], *n.* ஈயம், வங்கம்; நீராழம் பார்ப்பதற்கான ஈய நூல் குண்டு; அச்சுவேலை வகையில் இடைவரிக் கட்டை, வரிகளின் இடைவெளியை அகலமாக்குவதற்கான உலோகத் தகட்டுப் பாளம்; *v.* ஈயம் பூசு; ஈயம் பொதி; ஈயத்தைக் கொண்டு பளு வேற்று; கண்ணுடித் தகடுகளுக்கு ஈயச் சட்டமிடு; அச்சுவேலையில் வரித் தகடுகளிட்டு வரிகளைப் பிள; துப்பாக்கிக் குழல் வகையில் ஈயப்பூச்சினுல் கறைப்படு; (தொ.) arm the lead, அடித்தள இயல்புணர்வதற்காக ஈய நூல்குண்டிலுள்ள குழிவில் கொழுப்புவைத்து நிரப்பு; black lead, கருவங்கம், எழுது கரிக்கோலின் உட் கரிக்கிற்றுப் பொருள்; lead comb, மயிரைக் கறுப்பாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் ஈயச் சீப்பு; lead pencil, கரிமுனை எழுதுகோல்; lead wool, நீர்க் குழாய்களை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் நூலிழை போன்ற ஈயம்; red lead, ஈயச் செந்தூரம்; white lead, ஈய வெள்ளை, வண்ண மைப்பொருளாகப் பயன்படுத்தப்படும் ஈயக் கரியகியுடன் நீரியல் ஈய உயிரகி இணைந்த சேர்ம வகை.

lead[2], *n.* வழித்துணை முதன்மை; வழிகாட்டு முதன்மை; முந்துநிலை; முனைப்பு; முதன்மை; தலைமை; முந்துநிலை அளவு; முன்னீடு, முன்னேடி, மாதிரி; முன்மாதிரி; முன் மாதிரிப் பண்பு; ஊக்காதரவு; ஊக்கு முனைவு; முதன்மை, தலைமை, முனைப்பு; முதலிடம்; தலைமைப்பண்பு; செயற்கை நீர்க்கால்; ஆலை நீர்க்கால்; தலைமை மின்னிணைப்புக் கம்பி; மின்திற இணைப்புக்கால்; வான் அலைவாங்கி இணைப்புக்கம்பி; பணிப்பாள நீர்க்கால்வாய்; கைவார், நாய் முதலியவற்றைக் கட்டி இழுத்துச் செல்லுதற்குரிய கயிறு; கயிற்றின் போக்கு; முன் ஆட்டவுரிமை; முன்னுரிமை ஆட்டம்; நாடக முதன்மை நடிப்புப்பகுதி; *v.* வழிகாட்டு; முன்செல்; கைப்பிடித்து இட்டுச்செல்; கால்நடை விலங்குகளைக் கயிறிட்டு இழுத்துச் செல்; வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்; துணை செல்; பாதை வகையில் இட்டுக்கொண்டு செல்; இட்டுக்கொண்டு செல்லும் வழியாய் அமை; செலுத்து; பாயச்செய்; நெறிப்படுத்தி ஒழுகச்செய்; நாடிச்செல்; ஊடாகக் கடக்கவிடு; முந்திச்செல்; முந்திக்கொள், முந்து; விஞ்சிநில்; மேம்படு; முதன்மையாயிரு; தலைமை வகித்து நடத்து; நாடகத்தில் முதன்மைப் பகுதியாக நடி; விளையாட்டில் முதலாட்டமாடு, முன் ஆட்ட உரிமை மேற்கொள்; புதுமை புகுத்து; தூண்டு, ஏவு; தூண்டுதலாயிரு; முடிவுகொள்ளச் செய்; விளைவுடைய தாக்கு; ஏதுவாகு; வழிவகு; வழியாயிரு; சார்பு உண்டு பண்ணு; நோக்கிச் சாய்வுறு; வாழ்க்கை வகையில் மேற்கொண்டியலு; நடத்து, வாழ்; அனுபவி; மேற்கொள்ளுவி; அனுபவிக்கச் செய்; பயிர்விளைச்சலைக் களஞ்சியத்துக்குக் கொண்டுசெல்; (தொ.) lead astray, தவருன வழிகாட்டு, பாவம் செய்யத் தூண்டு; தீநெறிப்படுத்து; lead away, எண்ணுமல் பின்பற்றத் தூண்டு; lead by the nose, விரும்புவதையெல்லாம் உணர்வின்றியே செய்யும்படி தூண்டு; lead off, தொடங்கு, துவக்கமுறு; துவக்கு; lead on, பசப்பி மயக்கிக் கருதிய அளவு கடந்து செல்லும்படி தூண்டு; lead one a dance, நோக்கம் நிறைவேறப் பெறுவதற்காகப் பெருந் தொல்லைகொடு; lead one a life, அவனுக்கு அடுத்தடுத்துத் தொல்லைகொடு; lead one to suppose, ஏமாற்றிக் கருத்தேற்கத் தூண்டுதல் செய்; lead the way, முன்செல், முதன்மைதாங்கி நடத்து; lead up to, படிப்படியாக உண்டாகும்படி செய், படிப்படியாக ஒன்றினுக்கு ஏற்பாடு செய்; பேச்சினை ஒரு பொருளுக்குத் திருப்பு; சீட்டாட்ட வகையில் குறிப்பிட்ட சீட்டினை வெளிக்கொணரும் வகையில் சீட்டினை இறக்கு; lead woman to altar, பெண்ணைத் திருமணம் செய்துகொள்; return lead, கூட்டாளி இறக்கின சீட்டினத்தில் முதலில் ஆடப்படும் ஆட்டம்.

lea'den, *a.* ஈயம் சார்ந்த; ஈயத்தினுல் செய்த, ஈயத்தினுல் செய்ததைப்போன்ற; கனத்த; மழுங்கச் செய்கிற; மந்தமான, அசைவற்ற; சுமையுள்ள; ஈயத்தின் நிறம் வாய்ந்த; (தொ.) leaden sword, பயனற்ற வாள்; sleep's leaden sceptre, உணர்வு மழுக்கும் ஆற்றல்.

Lead'enhall', *n.* லண்டனில் உள்ள இறைச்சி-கோழி முதலிய பறவைகள் விற்கப்படும் அங்காடி.

lead'er, *n.* தலைவர்; முதல்வர்; வழிகாட்டிக்கொண்டு முன்னுல் செல்பவர், நடத்திச்செல்பவர்; வழக்கில் முதன்மையான வழக்கறிஞர்; மந்தையில் முதன்மையான குதிரை; மரத்தில் மேல்நோக்கி வளரும் முதன்மையான கவை; சதைப்பற்றை இயக்கும் தசைநார்; செய்தித்தாளின் தலையங்கம்; (அச்சு.) விழிக்கு வழிகாட்டும் புள்ளிகளால் அல்லது கோடுகளால் ஆன வரை; (தொ.) follow my leader, ஆட்டக்காரர் ஒவ்வொருவரும் தலைவர் செய்கிறபடி செய்யக் கடமைப்பட்டுள்ள ஆட்டவகை; leader of House of Commons, இங்கிலாந்து நாட்டு மாமன்றப் பொதுமக்கள் அவையில் அரசியல் அலு

வலை முன்னின்று தொடங்கும் அதிகாரமுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்.

leaderette', *n.* செய்தித்தாளில் சிறு தலையங்கம், துணைத் தலையங்கம்.

lead'ership, *n.* தலைமை, முதன்மை; தலைமைப்பதவி; தலைமையேற்று நடத்தும் ஆற்றல்.

lead'-in, *n.* வானொலிப் பெட்டியையும் வெளிப்புறத்து அலை வாங்கியையும் இணைக்கும் கடத்துகம்பி.

lead'ing, *n.* வழிகாட்டுதல்; வழிகாட்டும் பண்பு; தலைமை; ஆன்மிகத் துணை; பயிர் விளைவைக் களஞ்சியங்கொண்டு சேர்ப்பு; *a.* தலைவராகச் செயலாற்றுகிற; செயலாட்சி செய்கிற, கட்டுப்படுத்தியாள்கிற; முனைப்பான; முதன்மையான; முந்திச் செல்கிற, முனைந்த; முன்னேற்றம் வாய்ந்த; (தொ.) leading article, செய்தித்தாளின் தலையங்கம்; வாணிகத் துறையில் தூண்டு சரக்கு, மற்றப் பண்டங்கள் வாங்கப் படும்படி செய்வதற்காகக் குறைந்த விலைக்கு விற்கப்படும் பண்டம்; leading case, (சட்.) மாதிரி வழக்கு, மற்ற வழக்குகளைத் தீர்ப்பதற்கு முன்மாதிரியாகப் பயன்படுகிற வழக்கு; leading edge, விமானச்சிறகின் முன்விளிம்பு; leading lady, நாடகத்தில் முதன்மையான பாகமேற்கும் நடிகை; leading light, செல்வாக்கும் புகழும் மிக்கவர்; leading man, நாடகத்தில் முதன்மையான பாகமேற்கும் நடிகர்; leading motive, (இசை.) கதைக் கருப்பொருள்; பாடல் முழுவதும் உறுப்பினர் நிகழ்ச்சி உணர்ச்சிகளுடன் விரவி நிரவிவரும் கருத்து; leading note, பின்வரவிணைக்கும் ஏழாம் இசைத்திறம்; leading question, வேண்டிய மறுமொழியை வருவிக்கும் கேள்வி; men of light and leading, பெருஞ் செல்வாக்குடையவர்கள்.

lead'ing-business, *n.* முதன்மையான நடிகர் ஏற்றுநடிக்கும் பாகங்களின் தொகுதி.

lead'ing-rein, *n.* குதிரையை இட்டுச் செல்வதற்கான கடிவாள வார்.

lead'ing-staff, *n.* எருதின் மூக்கு வளையத்துடன் இணைக்கப்படுந் தடி.

lead'ing-strings, *n.* குழந்தைகளுக்கு நடை பயிலக் கற்பிப்பதற்காக முன்பு பயன்படுத்தப்பட்ட கயிறுகள்; (தொ.) in leading-strings, பயிற்சிப்பருவ நிலையில், துணைமை நிலையில்.

lead'-off, *n.* தொடக்கம்.

lead'-poi'soning, *n.* ஈய நச்சூட்டு, வங்க தோசம்.

leads, *n. pl.* கூரை வேய்வதற்கான ஈயத் தகடுகள்; ஈயத் தகடுகள் வேய்ந்த கூரைப்பகுதி; சாளரத்தின் கண்ணாடியைத் தாங்கும் ஈயச் சட்டங்கள்.

leads'man, *n.* நீராழம் பார்ப்பதற்கான ஈய நூற்குண்டினை இயக்குகிற கப்பலோட்டி.

lead'-work, *n.* ஈயத்தினால் செய்யப்பட்ட பொருள்; ஈய வேலைப்பாடு.

lead'-works, *n.* ஈயச்சுரங்க உலோகக்கலவை உருக்கப்படும் இடம்.

leaf, *n.* இலை; இலைத்தொகுதி; பூவிதழ்; தழை; புகையிலை; தேயிலை; சுவடித்தாள்; தாளின் இரண்டு பக்கங்கள்; பொன்-வெள்ளி ஆகியவற்றின் மிக மெல்லிய உலோகத் தகடு; சீவினகொம்பு-சலவைக்கல்-அபிரகம் முதலியவற்றின் மிக மெல்லிய தகடு; மடிப்புக் கதவுகளின் தனி மடிப்புக் கூறு; நெட்டிழுப்பு மேசையின் இழுப்புப் பகுதி; இழுப்புப் பாலத்தின் மடிப்பலகு; கதவின் சீப்புச் சட்டத்தின் ஒரு பட்டிகை; பற்சக்கரத்தின் பல்; *pl.* leaves; *v.* தளிர், இலைவிடு, தழை; (தொ.) fall of the leaf, இலையுதிர்காலம்; in leaf, தழைத்திருக்கிற நிலையில்; leaf brass, மெல்லிய பித்தளைத் தகடு; leaf insect, செடியின் இலைபோன்ற சிறகுகளையுடைய பூச்சி வகை; take a leaf out of one's book, ஒருவரைப் பார்த்துப் பின்பற்று; turn over new leaf, திருந்திப் புதுவாழ்வு தொடங்கு, திருந்தி நல்லொழுக்கம் மேற்கொள்.

leaf'-lard, *n.* பன்றியின் குண்டிக்காய்களைச் சுற்றியுள்ள கொழுப்புப் படலங்களிலிருந்து செய்யப்படும் இடைக் கூட்டுக் கறியுணவு.

leaf'let, *n.* (தாவ.) இலையின் பகுதியான சிற்றிலை; குருத்திலை; துண்டுப் பத்திரிகை.

leaf'-mould, *n.* அழுகும் இலைகளையே பெரும்பாலும் கொண்டுள்ள மண், தழைமக்கிய மண்.

leaf'y, *a.* இலைமயமான, இலைகள் நிறைந்த, தழைவான; இலைபோன்ற.

league [1], *n.* ஏறத்தாழ மூன்று மைல் தொலைவு.

league [2], *n.* கூட்டிணைவு; இணைகுழு; ஒப்பந்தக் குழு; காப்பிணைவுக் கூட்டுறவு; நாட்டுக் கூட்டிணைவு; கூட்டிணைவு நாடுகளின் குழுமம்; கூட்டுக் காப்புக் கழகம்; சங்கம்; கூட்டிணைவுக் கழகம்; விளையாட்டுக் குழுக்களின் கூட்டிணைப்புச் சங்கம்; *v.* கூடிச்சேர்; கூட்டிணைவில் சேர்; உடன்படிக்கை செய்து கொண்டு ஒப்பந்தத்தில் இணை; கூட்டிணைவாக இணைவுறு, கூட்டிணைவாக்கு; (தொ.) in league with, சார்ந்து நேசங்கொண்டுள்ள நிலையில்; தம்முள் ஒருங்கிணைந்து; League football, கூட்டாகச் சேர்ந்துள்ள கழகங்கள் விரத் தலைமைத் தேர்வுக்காக ஒன்றேடொன்று ஆட்டமாடும் அமைப்பு; League of Nations, சர்வதேச சங்கம், போர்த் தடுப்பு முயற்சி மேற்கொள்வதற்காக 1919-ஆம் ஆண்டின் சமாதான உடன்படிக்கையினால் நிறுவப்பட்ட சங்கம்; Primrose League, ஆங்கில அரசியலில் 1883-இல் காணப்பட்ட பழமை தழுவுவோர் (Conservatives) கழகம்; Solemn League and Covenant, (வர.) நெறி ஒப்பந்தக் கூட்டுக் கழகம், இங்கிலாந்திலும் ஸ்காத்லாந்திலும் கிறித்தவ சமயப் பிரிவாகிய மூத்தோர் ஆட்சிக் கொள்கையை (Presbyterianism) நிறுவுவதற்காக 1643-இல் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை.

leag'uer [1], *n.* முற்றுகையிடும் சேனையின் பாசறை; முற்றுகை; அமைச்சு நிலை அயல்நாட்டுத் தூதர்; வண்டிகள் சூழ நிறுத்தப்பட்ட காப்பு அரண் பாசறை; கவச விசைக்கலங்களுக்கான நிறுவுதுறை; *v.* முற்றுகையிடு; வண்டிகளைக் காப்பரண் பாசறையாக நிறுத்து; வண்டிக் காப்பரண் கூடாரத்தில் தங்க வை; கூடாரமிடு.

leag'uer [2], *n.* கூட்டிணைவுக் குழுவின் உறுப்பினர்.

leak, *n.* ஒழுக்கு, கசிவு; இல்லி, பொத்தல், கலத்தில் உள்ளிருந்து வெளியிலோ வெளியிலிருந்து உள்ளாகவோ நீர்மம் ஊறுவதற்குரிய சிறு பிளவு அல்லது துளை; தகா நுழைவழி; தகாச் செல்வழி; மின்மிகை அடர்ப்பிடம்; *v.* கல வகையில் புறத்தே ஒழுகவிடு; உள்ளே கசியவிடு; ஒழுகச்செய்; நீர்ம வகையில் புறத்தே ஒழுகு; உட்கசி; மறைசெய்தி வகையில் வெளிவரப் பெறு, மெல்லப் புறஞ்சென்றுவிடு, வெளிப்பட்டுப் பரவு; (தொ.) spring a leak, சந்துவிடு; துளைபட்டுக் கசியவிடு, உள்ளே நீர் வரவிடு.

leak'age, *n.* ஒழுகல்; ஒழுகும் பொருள்; சில்லிமூலமாக உள்ளே ஏறும் பொருள்; ஒழுகலுக்கு மாற்றீடு; மறைவெளிப்படுதல், முறையிலா இரகசியங்கள் வெளியீடு; அறியவராச் செலவு, விளக்கமுடியாப் பண மறைவு.

leak'y, *a.* இல்லியுடைய, ஓட்டையுடைய; சில்லிகள் உள்ள; சிறுநீர் அடக்கமுடியாத; இரகசியங்களை வெளியிடும் பாங்குள்ள.

lean [1], *n.* கொழுப்பில்லாத இறைச்சி, இளந்தசை; *a.* மெலிந்த, மெல்லிய, கொழுத்திராத; குறைந்த, வளமற்ற; மட்டத்தரமான; ஊட்டச்சத்தில்லாத; ஆதாயமற்ற; இறைச்சி வகையில் பெரும்பாலும் தசைநார்களே கொண்ட, கொழுப்புச் சேர்ந்திராத; (தொ.) lean years, பஞ்சம் நேர்ந்துள்ள ஆண்டுகள்.

lean [2], *n.* சாய்திறம், சாய்வு, சரிவு; *v.* சாய்ந்திரு; சாய்த்துக் கொள்; சாய்த்து வை; சார்த்தி வை; சாய்; சார்; ஆதாரமாகக்கொள்; நம்பியிரு; கோணலாக நில்; கருணை முதலியன கொள்ளும் பாங்குடையவராயிரு; சார்பாக மனக்கோட்டமுள்ளவராயிரு; (தொ.) lean over backwards, மறுகோடிக்குச் செல், அவாவுடன் ஒப்புக்கொள்ளும் அளவுக்குப் போ.

lean'ing, *n.* சார்பு, சாய்வு, சரிவு ; சாய் செயல் ; சாய்நிலை; சார்பு நாட்டம், சார்பு மனப்பாங்கு ; மனக்கோட்டம் ; *a.* சாய்ந்துள்ள ; இயல் விருப்பமுடைய, ஒருசார் விருப்பமுள்ள.

leap, *n.* குதிப்பு ; பாய்ச்சல் ; துள்ளுதல் ; தாண்டுதல் ; தாண்டிய தொலை ; பாய்ந்து குதித்தற்குரிய இடம் ; தாண்டுதற்குரிய பொருள் ; திடீர் இடைமாற்றம் ; அகல் இடையீடு ; நீண்ட இடைநேரம் ; அகல் இடைவெளி ; *v.* குதி ; துள்ளு ; துள்ளிச் செல் ; பாய் ; தாண்டு ; மீதாகத் தாவு ; வேகமாகச் செல் ; திடுமெனச் செல் ; சட்டென நெடுந்தொலை கட ; தெறி ; வேகமாகக் கட ; குதிக்கச் செய் ; ஆண் விலங்குகள் வகையில் புணர்ச்சியில் முனைவுறு ; (தொ.) by leaps and bounds, தாவிக் குதித்து ; மிகுந்த பெரிய அளவாக ; வியத்தக்க முறையில் விரைவான முன்னேற்றத்துடன் ; leap in the dark, விளைவு தெரியாமல் மேற்கொள்ளப்படும் துணிகர முயற்சி ; look before you leap, எண்ணித் துணிக கருமம் ; பதறிச் செய்கிற காரியத்தைத் தவிர்.

leap'-day, *n.* பிப்ரவரி மாதத்தின் 29-ஆம் நாள்.

leap'-frog, *n.* பச்சைக்குதிரை, தவளைப்பாய்ச்சல் விளையாட்டு ; *v.* தவளைப்பாய்ச்சல் ஆட்டம் ஆடு, மேலாகத் தாவிக்குதி.

leap'-year, *n.* மிகுநாள் ஆண்டு, நானூறு ஆண்டுகளில் ஒருமுறையும் நூறில் குறைந்த நான்காண்டுகட்கு ஒருமுறையும் பிப்ரவரியில் ஒரு நாள் மிகையாக 366 நாட்கள் கொண்ட ஆண்டு ; (தொ.) leap-year proposal, மிகுநாள் ஆண்டில் மட்டுமே உரித்தான பெண்ணின் திருமணக் கோரிக்கைக் கேள்வி.

learn, *v.* புதிதாகக் கற்றுக்கொள் ; கற்றுணர், படித்தறி ; போதனை பெறு ; மனத்திற் பதிய வைத்துக்கொள் ; உருப் போட்டுக் கைவரப்பெறு ; பயின்று திறம் கைவரப்பெறு ; அனுபவத்தால் அறி ; கேள்விப்படு, கேள்வியால் தெரியவரப்பெறு ; கற்றுக்கொடு ; (தொ.) I am yet to learn, I have yet to learn, 'நீ தான் கூறுகிறாய், நான் நம்பவில்லை' என்ற குறிப்புரை.

learn'ed[1], *v.* learn என்பதன் இறந்தகால வடிவங்களில் ஒன்று ; learn என்பதன் முடிவெச்ச வடிவங்களில் ஒன்று.

learn'ed[2], *a.* கற்றறிந்த, படித்துத் தேர்ந்த, நன்குணர்ந்த, துறைபோன, அறிவுவளம் நிரம்பிய ; நீதிமன்றங்களில் வழக்கறிஞரைக் குறிப்பிடும் மரியாதை வழக்குவகையில் சட்டத்தில் கற்றுத் துறைபோய ; மொழி-தொழில் முதலியவை வகையில் கற்றறிந்தவர்களால் பயிலப்பட்ட ; கற்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட ; மொழியிலுள்ள சொற்கள் வகையில் கற்றவர்களால் அயல்மொழிகளிலிருந்து புகுத்தப்பட்ட.

learn'ing, *n.* கற்றல் ; கல்வி ; கற்கப்படுவது ; அறிவு, புலமை ; (தொ.) the new learning, பதினாறும் நூற்றாண்டில் இங்கிலாந்தில் புகுத்தப்பட்ட கிரேக்கமொழி ஆய்வறிவு, மறுமலர்ச்சி.

learnt, *v.* learn என்பதன் இறந்தகால வடிவங்களுள் ஒன்று ; learn என்பதன் முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.

lease[1], *n.* கட்டுக் குத்தகை, குறிப்பிட்ட காலத்துக்கு அனுபவ உரிமையளிக்கும் ஒப்பந்தக் கட்டுப்பாட்டு முறை ; நிலக் குத்தகை, பாட்டம் ; மண்ணக்குத்தகை ; கட்டுக் குத்தகை உரிமை ; கட்டுக் குத்தகை முறை ; கட்டுக் குத்தகைக் கால எல்லை ; அனுபவக் காப்புரிமை எல்லை ; உரிமைக்காப்புக் கால நீடிப்பு ; *v.* கட்டுக் குத்தகை உரிமை வழங்கு ; நிலம் அல்லது மனையைக் கட்டுக் குத்தகைக்கு விடு ; நிலம் அல்லது மனையைக் கட்டுக் குத்தகையில் எடு ; (தொ.) a new lease of life, நோய்-கவலை முதலிய தடைகளின் நீக்கத்தால் ஏற்படும் புது வாழ்வுக்கான வாய்ப்பு.

lease[2], *n.* தறியிலே பாவு நூலிழைகளை முனைகளில் பிரித்து விடல் ; பாவு நூலிழை முனை பிரித்துவிடும் முறை ; பாவு நூலிழை முனை பிரித்துவிடும் இடம்.

lease'hold, *n.* கட்டுக் குத்தகை உரிமை ; கட்டுக் குத்தகை நிலம் ; கட்டுக்குத்தகை மனை.

lease'holder, *n.* கட்டுக் குத்தகையாளர், நிலத்தை அல்லது மனையைக் கட்டுக்குத்தகை எடுப்பவர்.

Lease'-Lend', *n.*, *a.*, *v.* = Lend-Lease.

leash, *n.* நாய்வார் ; மூன்று வேட்டை நாய்கள்-முயல்கள் முதலியவைகொண்ட கணம் ; நெசவு வகையில் பாவுநூலை ஏற்றுக்கொள்வதற்கான சிறு துளையுடன்கூடிய கயிறு ; *v.* தோல்வாரினாற் கட்டிப்பிடி ; தோல்வாரினாற் கட்டி இணை ; (தொ.) hold in leash, அடக்கியாள்.

least, *n.* அறச்சிறிது ; *v.* அறச்சிறிய ; மிகமிகக் கொஞ்சமான ; மிகமிக அற்பமான ; *adv.* மிகமிகக் குறைவாக, மிகமிகக் கொஞ்சமாக ; (தொ.) at least, குறைந்தபடியில், குறைந்த அளவில், சிறிதளவாவது, எப்படியாவது ; at the least, மிகமிகக் குறைந்த அளவில் ; in the least, the least, குறைந்த அளவில், சிறிதேனும், குறைந்த அளவிலேனும் ; least common multiple, (கண.) மீச்சிறு பொது மடங்கை ; least said soonest mended, விவாதிப்பது சீர்கேடாகமுடியும்-விவாதியாமல் இருப்பதே நல்லது ; line of least resistance, மிகு உழைப்பற்ற எளிய வழி ; to say the least of it, நிதானமாகக் கூறினுங்கூட.

least'ways, least'wise, *adv.* (பே-வ.) குறைந்தபடியாகக் கொண்டாலும்.

leat, *n.* ஆலை முதலியவைகளுக்கு நீர்கொண்டு செல்லும் திறந்த நீர்க்கால்.

lea'ther, *n.* பதனிட்ட தோல் ; தோற் சரக்கு ; தோலினால் செய்யப்பட்ட பகுதி ; மெருகிடுவதற்கான தோல் துண்டு ; தோல்வார் ; *v.* தோலினால் மூடு ; தோல் கவசக் காப்புச் செய்துகொள் ; தோல்வாரினால் அடி ; (தொ.) American leather, மெழுகுத்துணி வகை ; leather and prunella, உடுப்பில் மட்டுமுள்ள வேற்றுமை ; nothing like leather, தம் பொருளே தமக்குப் பெரிதும் பயன்படும் என்பது.

lea'ther-back, *n.* கடலாமை வகை.

leatherette', *n.* தோல்போலச் செய்யப்பட்ட தாள்வகை ; தோல்போலச் செய்யப்பட்ட துணிவகை.

lea'ther-head, *n.* அறிவிலி, மூடன்.

lea'ther-jacket, *n.* மீன் வகைகளில் ஒன்று ; ஈ வகையின் முட்டைப்புழு.

lea'thern, *a.* தோலினால் ஆன ; தோல் சார்ந்த ; தோல் போன்ற.

lea'ther-neck, *n.* கப்பலோட்டிகள் வழக்கில் படைவீரன் ; கடற்படைவீரன்.

lea'theroid, *n.* செயற்கைத்தாள் தோல், வேதிமுறையில் பாடம் செய்யப்பட்டுப் பச்சைத்தோல் போலிருக்கும் பருத்தித் தாள்.

lea'ther-wood, *n.* உறுதியான பட்டையுடைய மரவகைகள்.

lea'thery, *a.* தோல்போன்ற ; இறைச்சி வகையில் நெற்றுான.

leave[1], *n.* இசைவு, இணக்கம் ; இசைவாணை ; செல்விடை, போவதற்கான இசைவளிப்பு ; பள்ளி-பணிமனைகளில் விடுப்பு, செலவிசைவாணை, விடுப்பிணக்கம் ; விடுப்புக்காலம், செலவிசைவுக்காலம் ; (தொ.) take French leave, செல்விடை பெறுமல் போ ; இசைவுபெறுமல் வெளியே செல் ; take leave of one's senses, பைத்தியம் கொள், வெறிபிடி ; ticket of leave, தண்டனைக்காலம் முடிவடைவதற்கு முன்பே சிறைக்கு வெளியிலிருப்பதற்கான உரிமை.

leave[2], *n.* மேசைக் கோற்பந்தாட்டக்காரர் இடையே ஆட்டம் விட்டுச் செல்லும்போது உள்ள ஆட்டப்பந்து நிலை ; *v.* விட்டுச்செல் ; கிடக்கவிடு, இருக்கவிடு ; பின்தங்கவிடு ; வைத்துவிட்டுப்போ ; பகரமாக விட்டுப்போ ; செய்யவிடு ; இடு ; கீழே போடு ; கீழே இட்டுச்செல் ; ஒப்புவிக்கும்படிவிடு ; மீதமாக விடு ; எஞ்சவிடு ; உடைமையாக விட்டுப்போ ; விருப்ப ஆவணத்தில் வழங்கு ; விட்டுநீங்கு ; இடம் விட்டகலு ; புறப்படு ; பணிவிட்டகலு ; தொடர்பறுத்து விடு ; கைவிடு ; துற ; பிரிந்துசெல் ; விட்டுப்பிரி ; கடந்து செல் ; நிறுத்து ; நிறுத்திவிடு ; வேலைசெய்யாமல் நின்று போ ; தவிர் ; (தொ.) leave alone, குறுக்கிடாதிரு, அப்படியே விட்டுவிடு, தலையிடாதுசெல் ; leave behind, கொண்டுபோகாது விட்டுச்செல் ; பின்தங்கவிட்டுச் செல் ;

விளைவாக விட்டுப்போ ; சுவடுவிட்டுச் செல் ; கடந்து மேற் செல் ; leave hold of, பிடியை விடு ; leave it at that, அதனை அதனோடு விடு, மேலும் விளக்கிக்கொண்டு தொல்லை விளைவியாதிரு; leave me cold, கிளர்ச்சி ஊட்டாதிரு; leave no stone unturned, நோக்கம் எய்தப்பெற எதையும் விடாது செய் ; leave off, விட்டொழி ; விலகு ; தவிர் ; நிறுத்திக் கொள் ; முடிவுகாண் ; leave one to oneself, அடக்கிக் கட்டுப்படுத்தாது விட்டுவிடு ; leave out, தவிர், உட்படுத் தாது விடு, விலக்கிவிடு, நீக்கிவிடு ; leave over, தற்போ தைக்கு விலக்கிவை, ஒதுக்கி வைத்துவிடு; leaves much to be desired, போதியதாக இல்லை.

leave'-breaker, *n.* விடுப்புக் காலத்துக்கு அப்பாலும் வேலைக்கு வராமல் நிற்பவர்.

lea'ven, *n.* புரையூட்டுப்பொருள், மாவு புளிப்பாக்கும் பொருள்; ஊடுபரவி உள்ளிருந்து மாற்றுதற்குரிய திறம் ; உள்ளார்ந்த நுண்திறக்கூறு ; *v.* புளிப்புப்பொருள் சேர்த்து மாவைப் புளிக்கவை ; ஊடுருவிப் பரவிமாற்று ; பக்குவப்படுத்தும் பொருள் சேர்த்து மாற்றியமை ; (தொ.) the old leaven, திருத்தமுறு நிலையின் சுவடுகள்.

leav'ings, *n. pl.* எச்சம், மிச்சம், சிந்தல் சிதறல்கள் ; நினை வூட்டுஞ் சின்னங்கள் ; கழிவுப்பொருள்கள்.

leb'ensraum, (செர்.) *n.* நாட்டின் வாழ்நிலத் தேவை, தன் இயல்பான வளர்ச்சிக்குத் தேவைப்படுகிறதென ஒரு நாடு கருதும் நிலப்பரப்பு.

lech'er, *n.* ஒழுக்கக்கேடன், காமுகன், தூர்த்தன்.

lech'erous, *a.* ஒழுக்கக்கேடான, சிற்றின்பத்தில் தோய்வுற்ற; ஒழுக்கங்கெடுக்கிற.

lech'ery, *n.* சிற்றின்ப நடத்தை, ஒழுக்கங்கெட்டதன்மை.

lec'tern, *n.* திருக்கோயில் மேடையின் சாய்மேசை.

lec'tion, *n.* பாடம் ; பாடபேதம்.

lec'tionary, *n.* கிறித்தவ திருக்கோயில் வழிபாட்டில் படிக்கப்படும் மறைநூற் பகுதித்திரட்டு; மறைவாசகப் பகுதிப் பட்டியல்.

lec'ture, *n.* சொற்பொழிவு, விரிவுரை, பேச்சு ; போதனை, அறிவுரை; கண்டனவுரை; *v.* சொற்பொழிவாற்று; கல்லூரி அல்லது பல்கலைக்கழக வகுப்பில் பெருஞ்சொல்லாற்று; சொற் பொழிவாற்றிப் பாடங்கற்பி ; அறிவுரை பகர்; கண்டி ; (தொ.) read one a lecture, கடிந்துரை.

lec'turer, *n.* சொற்பொழிவாளர்; விரிவுரையாளர்; அறப் போதகர், இங்கிலாந்து மாநிலத் திருச்சபைச் சார்பில் பொது நிதித் திரட்டுதவி மூலம் ஆதரித்து நடத்தப்பட்ட போதகர் குழுவினர்.

lec'tureship, *n.* கல்லூரியில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பதவி.

led[1], *a.* நடத்திச் செல்லப்படுகிற, தன்செயலற்ற ; (தொ.) led captain, சார்ந்திருப்பவர், பிறரையொட்டி வாழ்பவர் ; அண்டிப்பிழைப்பவர் ; led horse, வேலைக்காரனால் நடத்தி வரப்படும் மிகுதிப்படியான விடுதிக்குதிரை.

led[2], *v.* lead[2] என்பதன் இறந்தகால-முடிவெச்சம்.

light[1], *n.* ஒளி, வெளிச்சம்; படரொளி; ஒளிப்பரப்பு, திறந்த அகல்வெளி; விளக்கு; விளக்கொளி; அழல்நா; விளக்கொளிப்பிழம்பு; ஒளிதரும் பொருள்; நெருப்புப்பற்றவைக்க உதவும் பொருள்; வானொளிக்கோளம்; ஒளிபட்டு மின்னும் பொருள்; மினுக்கம், மின்னொளி; பகலொளி, பகல்; ஒளித்தோற்றம்; பார்வை, நோக்கு; கண்பார்வையாற்றல்; தெளிவு, விளக்கம்; களை, பொலிவு; ஒளிக்கூறு; ஒளிவரும் புழைவழி; பலகணியின் செங்குத்தான கூறு; (சட்.) பலகணி ஒளி வீழ்வு உரிமை; கலங்கரை விளக்கம்; கலங்கரை விளக்கத்துக்கான கப்பலின் ஒளிவரி; ஓவியத்தின் ஒளி வண்ணம்; படத்தின் பொலிவுக்கூறு; அறிவொளி; அறிவு விளக்கம்; ஆய்வுநோக்கு; ஆய்வுநோக்குக் கோணம்; ஆராய்ச்சி; மெய்யறிவு; மனத்தெளிவு; அறிவுவிளக்கத் துணை; அறிவுவிளக்க வழிகாட்டி; அறிவுவிளக்கப் பண்பு; வழிகாட்டும் பண்பு; அருளொளி; அருளொளி விளக்கம்; மெய்ஞ்ஞானம்; தூண்டுரை, தூண்டுகுறிப்பு; புதிர்விளக்கக் குறிப்பு; *a.* விளக்கு வசதி செய்யப்பட்ட; வெளிச்ச மிக்க; ஒளிச்சாயலான; வெண்மைகலந்த; இருண்டிராத;

வெளிறிய; இளஞ்சாயலான ; *v.* ஒளிபொருத்து, ஒளியூட்டு; விளக்குப்பொருத்து ; விறகு பற்றவை; தெருவிளக்குகள் ஏற்று ; தீப்பற்று ; விளக்குப்பற்றிக்கொள் ; எரி; ஒளி கொடு; ஒளிவிளக்கஞ் செய்; விளக்கு; முனைப்பாகக் காட்டு; தெளிவுபடக் காட்டு ; வழிகாட்டு ; களையூட்டு, பொலிவூட்டு; (தொ.) Ancient Lights, சாளரத்தின் வழியாக வரும் ஒளியைப் பக்கத்து வீட்டுக்காரர் கட்டிடமெழுப்பித் தடுக்கக் கூடாதெனத் தெரிவிக்கும் எழுத்தறிவிப்பு ; bring to light, கண்டுவெளிப்படுத்து, விளக்கமாக்கு; by the light of nature, சொல்லிக்கொடுக்கப் பெருமலேயே, உள்ளுணர்விஞல்; come to light, வெளிப்படு; வெளிப்படுத்தப்பெறு; in a good light, சாதக நிலையில், நலம் பெருக்கமாகக் காணப்படும்படி; in the light of these facts, இச்செய்திகளின் துணைகொண்டு பார்க்கையில்; light due, light duty, கலங்கரை விளக்கங்களை வைத்துப் பேணுவதற்காகக் கப்பல்கள்மீது விதிக்கப்படும் ஆயம ; light of one's countenance, ஆதரவுத்தோற்றம், ஆதரவான ஒப்புதல்; light of one's eyes, கண்ணில் மணியானவர், அருமையானவர் ; light up, விளக்கேற்று, வெளிச்சத்திஞல் விளக்கமுறச்செய் ; சுருட்டு முதலியவற்றைப் பற்றவை ; men of light and leading, தகுதியும் செல்வாக்குமுடையவர்கள் ; northern lights, வடமுனை வளரொளி ; place thing in a good light, அதை நல்லமுறையாகத் தெரியக்காட்டு ; see the light, பிற, தோன்று ; shed light upon, விளக்குதற்கு உதவிசெய் ; stand in one's light, மறை, நிழலடி ; உரிய வாய்ப்புக்களைக்கெடு ; strike a light, நெருப்புப் பற்றவை ; the light blues, விளையாட்டுப் போட்டிகளில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் சார்பினர் ; throw light upon, விளக்குதற்கு உதவிசெய் ; zodiacal light, ஞாயிறு தோற்றத்துக்கு முன் கிழக்கிலும் ஞாயிறு மறைவுக்குப்பின் மேற்கிலும் சில சமயங்களில் காணப்படும் நெடிய முக்கோணம் போன்ற வான ஒளிப்பரப்பு.

light[2], *a.* மெல்லிய, இலேசான ; நயநுட்பம்வாய்ந்த, மெல் இயக்கம் வாய்ந்த ; மென்மையான ; எடைகுறைவான ; பாரமற்ற ; அடர்த்தி எண் குறைவாகக்கொண்ட ; பளுக்குறைவாகக் கட்டப்பட்ட ; சிறிது பளுவுக்காகவே இயன்ற ; விரைந்து செல்வதற்காகக் கட்டப்பெற்ற ; விரைவியக்கமுடைய ; எளிதில் இயங்குகிற ; எளிய, எளிதில் செய்யக் கூடிய ; எளிதாகத் தாங்கக்கூடிய ; எளிமை நலம்வாய்ந்த, நயநேர்த்தியான ; அடர்த்தியற்ற, திட்பமற்ற ; வலிமையற்ற, உறுதியில்லாத ; இன்தேறல் வகையில் செறிவற்ற ; துயில் வகையில் நொய்ம்மையுடைய, எளிதில் கலையத்தக்க ; கவலையற்ற ; மகிழ்ச்சியுடைய, கிளர்வூக்கமுடைய ; கிளர்ச்சி தருகிற ; முக்கியத்துவமற்ற, சிறுதிறமான, அற்பமான ; ஆழ்ந்து கவனிக்கவேண்டியிராத ; ஆழ்ந்து கவனியாத ; யோசனையற்ற ; விளையாட்டுத்தனமிக்க ; கேலித்தனம் வாய்ந்த ; கேலிக்கு இலக்கான ; வேடிக்கையே நோக்கமாகக் கொண்ட ; ஒழுங்கம் புறக்கணிக்கிற ; கற்புறுதியில்லாத ; அடிக்கடி மாறும் இயல்புடைய ; *adv.* மெள்ள ; எளிதாக ; (தொ.) light come light go, எளிதில் வந்தது எளிதில் போய்விடும், தேடாச் செல்வம் பாடாய் முடியும் ; light engine, இருப்பூர்தித் தொடர்வண்டி இணைக்கப்பெருத இழுபொறி ; light fingers, கைதேர்ந்த திறம்; light hand, நுண்திறச் செயலாண்மை ; light heavyweight, 161 கல்லெடைக்குக் குறையாத அல்லது 175 கல்லெடைக்கு மேற்படாத எடையுள்ள குத்துச்சண்டை வீரர் ; light marching order, (படை.) விரைவாகக் கொண்டுபோகப்படும் தளவாளங்களுடன் செல்கை ; light railway, எளிதான கட்டமைப்பு வாய்ந்த இருப்பூர்திப் பாதை ; light ship, சரக்கு இறக்கப்பட்ட கப்பல் ; light waterline, சரக்கு இறக்கப்பட்ட கப்பலின் நீர்வரை ; make light of, இளப்பமாகக் கருது, ஒரு பொருட்டாக மதியாதிரு; with a light heart, கிளர்ச்சியுடன், கவலையில்லாமல், மனவருத்தமின்றி.

light[3], *v.* (கப்.) கயிறு முதலியவற்றை நெடுகத்தூக்கு, கயிறு முதலியவற்றை இழுப்பதிற் கைகொடு ; நேர், தற்செயலாக நிகழ் ; கீழே இறங்கு.

light'-armed, *a.* பளுக்குறைவான படைக்கலங்களும் தளவாடங்களும் தாங்கிய.

light'-bob, *n.* எளிதான அமைப்புடைய காலாட்படையைச் சேர்ந்த வீரர்.

light'en[1], *v.* பளுக் குறை ; கப்பலின் பாரத்தைக் குறை ; கப்பல் வகையில் பாரம் குறைவாக்கப்பெறு ; உள்ளத்தின் கவலை தவிர் ; கிளர்ச்சியூட்டு ; உளத்தின் வகையில் கவலை தீரப்பெறு, கிளர்ச்சிகொள் ; தணியச்செய் ; தணிவுறு.

light'en[2], *v.* ஒளிகாலு ; ஒளிர்வி; ஒளிர்; பொலிவுறு; சுடர் வீசு ; மின்னு, மின்னலிடு.

light'ening, *n.* ஒளிகாலுதல்; ஒளிரப்பண்ணுதல்; மலர்தல்; மின்னுதல்.

light'er[1], *n.* விளக்கேற்றுபவர் ; தீக்கொளுவும் பொருள், பூஞ்சுருட்டு முதலியவற்றைப் பற்றவைப்பதற்கான தன்னியக்கமுடைய அமைவு.

light'er[2], *n.* வள்ளம், சலங்கு, நாவாய்க்குறடுக்கு வராத கப்பல்களிலிருந்து சரக்கிறக்கவும் அவைகளில் சரக்கேற்றவும் துறைமுகத்தில் சரக்குகளை அங்குமிங்கும் கொண்டுபோகவும் பயன்படுத்தப்படும் தட்டை அடிப்பாகமுடைய படகு ; *v.* சரக்குகளை வள்ளத்திலேற்றிக் கொண்டுபோ.

light'er[3], *a.* light[2] என்பதன் உறழ்படி.

light'-fing'ered, *a.* கள்ளத்தனமான.

light'foot, *a.* விரைந்துசெல்லும் இயல்புடைய, விரைவெளிமையுடைய.

light'-head'ed, *a.* தலைசுற்றுகிற, தலைக்கறக்கமுடைய.

light'-heart'ed, *a.* மனச்சுமையற்ற ; களிப்பான ; கவலையில்லாத ; ஆழ்ந்த சிந்தனையற்ற ; ஆய்ந்த..மவில்லாத.

light'house, *n.* கலங்கரை விளக்கம்.

light'ish[1], *a.* சற்றே வெளிச்சமுள்ள.

light'ish[2], *a.* சற்றே இலேசான.

light'-minded, *a.* நெஞ்சுரம் இல்லாத.

light'ness, *n.* நொய்ம்மை, கனமின்மை; கவலையின்மை; அகமகிழ்வு ; ஒழுக்கக்கட்டின்மை.

light'ning, *n.* மின்னல் ; (தொ.) chain lightning, chained lightning, forked lightning, வளைந்து வளைந்து கவர்விட்டுச் செல்லும் மின்னல் ; heat lightning, summer lightning, எங்கேயோ மழை பெய்வதன் விளைவாக இடியோசையின்றிப் பரவலாக ஒளிவீசும் மின்வெட்டு ; lightning strike, மின்வெட்டு வேலைநிறுத்தம், குறுகியகால அறிவிப்புடன் திடீரெனத் தொழிலாளர் செய்யும் வேலைநிறுத்தம் ; sheet lightning, பரவலாக ஒளிவீசும் மின்வெட்டு.

light'ning-conduc'tor, light'ning-rod, *n.* சூலிகை, இடிதாங்கி.

light'-o'-love, *n.* வம்பப் பெண்டிர், பொதுமகள்.

lights[1], *n. pl.* விளக்கக் கூறுகள்; கண்டுபிடிப்புகள்; அறிவுத் திறங்கள்.

lights[2], *n. pl.* பூனைகளுக்கும் நாய்களுக்கும் உணவாகப் பயன்படுத்தப்படும் ஆடு-எருது-பன்றி முதலியவற்றின் நுரையீரல்கள்.

light'ship, *n.* விளக்குக்கப்பல், அவிரொளிகள் தாங்கிக் கலங்கரை விளக்கமாகப் பயன்படும் கப்பல்.

light'-skirts, *n.* ஒழுக்கங்கெட்ட பெண்.

light'some, *a.* மலர்ந்த தோற்றமுடைய, கவலையற்ற, களிப்பான ; விரைவியக்கமுடைய.

light'weight, *n.* சராசரி எடைக்குக் குறைவான எடையுள்ள மனிதர் அலலது விலங்கு ; குத்துச்சண்டைத் துறையில் 126 கல்லெடைக்கும் 135 கல்லெடைக்கும் இடைப்பட்ட கனமுடையவர் ; *a.* சராசரி எடைக்குக் குறைந்த எடையுள்ள.

light'wood, *n.* ஒளிர்கொழுந்து விட்டெரியும் இலேசான கட்டையுடைய மரவகை.

lign-al'oes, *n.* கரியபோளம், கற்றாழை வகையிலிருந்து பெறப்படும் மருத்துச் சரக்கு; மெக்சிகோ (Mexico) நாட்டுக் கற்றாழை வகையின் நறுமணக் கட்டை.

lig'neous, *a.* அகக்காழான, செடியினத்தின் வகையில் உட்கட்டைப் பகுதியினையுடைய.

lignif'erous, *a.* மரவகையில் உட்கட்டைப்பகுதி விளைவிக்கிற.

lig'niform, *a.* மரத்தின் உட்கட்டை வடிவான.

lig'nify, *v.* மரத்தில் உட்கட்டையாக்கு.

lig'nite, *n.* பழுப்பு நிலக்கரி, மர உட்கட்டை அமைப்பினை உடைய பழுப்பு நிறமான நிலக்கரி வகை.

lig'num vit'ae, *n.* மேற்கிந்தியத் தீவுகளின் புதர்ச்செடி வகைகளின் கட்டை.

lig'ulate, *a.* (தாவ.) நாக்கு வடிவமான; இழைக்கச்சையுருவான; சிலிர்களையுடைய.

like[1], *n.* சரிநேர்ப்பொருள்; சரிநேர் ஆள்; குழிப்பந்தாட்ட வகையில் ஒவ்வொரு கட்சியினரும் ஆடிய வீச்சுக்களின் எண்ணிக்கையைச் சமப்படுத்தும் வீச்சு; ஒத்த வகைப் பொருள்; ஒத்தவகைப் பொருள்கள்; *a.* ஒத்தமாதிரியான; போலிருக்கிற; ஒத்த இயல்புடைய; மூலத்தையொத்த; ஒன்றையொன்று ஒத்திருக்கிற; (கண.) ஒத்த ஓரினமான; ஒரே வகையைச் சேர்ந்த; தனிச்சிறப்பியல்புக்கொத்த; தனிப் பண்பாயிருக்கிற; நம்பிக்கையூட்டும் நிலையிலிருக்கிற; வாய்ப்பான நிலையிலுள்ள; *prep.* அந்தவிதமாக; அதே அளவுக்கு; (தொ.) and the like, முதலியவை; like a shot, மறுப்பின்றி, விருப்பமுடன், விளைவைக்கருதாமல்; like blazes, மும்முரமாகப் பாய்ந்து; like fun, விரைவாக; ஊக்கத்துடன்; மிகுதியாய்; like mad, மூர்க்கமாக, வல்லந்தமாக; like master like man, முதல்வர் எப்படியோ அப்படியே பணியாளும்; look like, போன்ற தோற்றமுடையதாயிரு.

like[2], *v.* விரும்பு, உகந்ததாகக் கருது, நாட்டங் கொள், ஈடுபட்டு மகிழ்.

like'lihood, *n.* நிகழ்வியல்வு, ஒன்று நிகழ்வதற்கான சாத்தியக்கூறு, நிகழத்தக்கநிலை.

like'ly, *a.* பெரும்பாலும் நேரக்கூடிய, நிகழும் சாத்தியக் கூறுடைய; உண்மையாயிருக்கக்கூடிய; ஆயிருக்கக்கூடிய; எதிர்பார்க்கப்படுகிற; பொருத்தமானதுபோல் தோன்றுகிற; செய்யத்தக்கவர்போல் தோன்றுகிற; *adv.* பெரும்பாலும், நிகழும் சாத்தியக்கூறுடையதாக, நம்பக்கூடியதாக.

like'-mind'ed, *a.* ஒத்தநோக்கம் உடைய; ஒத்த சுவையுணர்ச்சி உடைய.

lik'en, *v.* ஒப்பிடு; ஒப்பிட்டுக்கூறு; ஒப்புடையதாகக் காட்டு.

like'ness, *n.* போன்றிருக்கும் தன்மை, ஒத்த தன்மை, ஒப்பு; ஒப்புமை; ஒத்தபடிவம்; ஒப்புரு; ஒத்த தோற்றம், சாயல்; உருவொத்தபடம்; ஓவியப்படம்; (தொ.) take one's likeness, உருவப்படமெழுது.

likes[1], *n. pl.* சரிநேர்ப் பொருள்கள் அல்லது ஆட்கள், ஒத்த பொருள்கள் அல்லது ஆட்கள்.

likes[2], *n. pl.* பிடித்தமானவைகள், விருப்பமானவைகள், முன் சார்பு நிலைகள்; (தொ.) likes and dislikes, விருப்புவெறுப்புக்கள், வேண்டியவை வேண்டாதவை.

like'wise, *adv.* இதுபோலவே; மேலும், இன்னும்; *conj.* இதுபோலவே.

li'kin', (சீனம்.) *n.* சீனாவில் மாவட்ட இடப்பெயர்வு வரி.

lik'ing, *n.* விருப்பம், தனிப்பற்று, பற்றவா, நாட்டம்; மகிழ்வு ஈடுபாடு, சுவைத்திறப் பற்று.

lil'ac, *n.* நறுமண மலர்ப்புதர்ச் செடிவகை; இளஞ்சிவப்பு நிறம்; *a.* இளஞ்சிவப்பான.

lilia'ceous, *a.* அல்லிமலர்ச் செடியினஞ் சார்ந்த.

Lillipu'tian, *n.* லிலிபுட் என்ற கற்பனை நாடு சார்ந்தவர்; குள்ளர்; *a.* லிலிபுட் என்ற கற்பனை நாடு சார்ந்த; மிகு குள்ளமான, மிகச் சிற்றுருவுடைய.

lilt, *n.* சந்தப்பாடல், இசைப்பாடல்; *v.* இசைத்துப் பாடு, சந்தமுடன் பாடு.

lil'y, *n.* அல்லிமலர்; தூவெண் மேனியர்; தூவெண்ணிறமுடையது; தூய்மையுடையவர்; தூய்மையுடையது; வெண்ணிற மரபுரிமை மலர்ச்சின்னம்; மென்மையான வெள்ளை நிறம்; (தொ.) lilies and roses, தூவெண் மேனி நிறம்; lily of the valley, மணிவடிவ வெண்மலர்க்கொத்தும் இருபேரிலைகளையும் உடைய இளவேனில் மலர்ச்செடி வகை; the lilies, பழைய பிரஞ்சு அரசின் மரபுரிமைச் சின்னம்; பிரஞ்சு நாட்டுப் பூர்பன் (Bourbon) மரபுவழி.

lil'y-iron, *n.* கழற்றக்கூடிய முகப்புடைய மீனெறி வேல், சுழலும் எறி ஈட்டி வகை.

lily'-liv'ered, *a.* கோழைத்தனமான.

lil'y-white, *a.* அல்லிமலர் போன்ற தூய வெண்ணிறமுடைய.

limb[1], *n.* சினை, பக்க உறுப்பு; கைகால் அல்லது சிறகு; கொப்பு, பெருங்கிளை; சிலுவைக் கை; வாசகக் கூறு; மலையின் பக்கக்கிளை; *v.* உறுப்பு அகற்று; உடல் முண்டமாக்கு; முடமாக்கு; செயலற்றவராக்கு; (தொ.) escape with life and limb, ஊறுபாடு மிகுதியில்லாமல் தப்பித்துக்கொள்; limb of the devil, limb of satan, குறும்புக் குழந்தை; limb of the law, வழக்குரைஞர்; ஊர்க்காவலர்; out on a limb, உறுப்பு வகையில் பேரிடர் நிலைப்படு.

limb[2], *n.* மேற்பரப்பின் விளிம்பு; கோணமானி முதலிய வற்றின் அளவு குறிக்கப்பட்ட ஓரம்; வெங்கதிர் தண்கதிர் மண்டிலங்களின் ஓரம்; அல்லிவட்டம் புல்லிவட்டம் இலை ஆகியவற்றின் இதழ்ப்பகுதி.

lim'bate, *a.* (உயி., தாவ.) தெளிவாக வேறுபடுத்தப்பட்ட ஓர எல்லைகளையுடைய; வண்ண வேறுபாடுடைய விளிம்பெல்லைகளையுடைய.

lim'bec, *n.* = alembic.

lim'ber[1], *n.* பீரங்கி வண்டியின் கழற்றக்கூடிய முன்பகுதி; *v.* பீரங்கி வண்டியின் முன்பகுதியைப் பீரங்கியோடு சேர், பீரங்கி வண்டியின் இரு பகுதிகளையும் இணைத்துப் பூட்டு.

lim'ber[2], *n.* (கப்.) இறைப்புக்குழாய்க் கிடங்குக்குக் கழிவு நீர் செல்வதற்காக தளக்கட்டைப் பலகையில் வெட்டப்பட்ட துளைகளுள் ஒன்று.

lim'ber[3], *a.* எளிதில் வளையக்கூடிய, துவளத்தக்க; *v.* வளையும்படி செய், துவளச்செய்; இளக்கமாகும்படி செய்.

lim'bo, *n.* புறநரகு, இயேசுநாதர் பிறப்புக்கு முன் வாழ்ந்த நல்லோரும் ஞானஸ்நானம் பெறாத குழந்தைகளும் செல்லுவதாகக் கூறப்படும் நரகச் சுற்றுப்புறப்பகுதி; சிறைச்சாலை; சிறைக்காவல்; புறக்கணிக்கப்பட்ட நிலை; மறக்கப்பட்ட நிலை; முழுமறதி; *pl.* lim'bos.

lime[1], *n.* சுண்ணாம்பு; சுண்ணநீறு; சுண்ணக உயிரகை; பறவைகளைப் பிடிப்பவர் பயன்படுத்தும் பட்டைப்பசை; *v.* தோலைச் சுண்ணநீரில் இட்டு ஊறுபதஞ் செய்; கிளைகளில் பட்டைப் பசைவைத்துப் பறவைகளைப் பிடி; பட்டைப்பசை தேய்; (தொ.) slaked lime, சுண்ணநீர்க் கலவை.

lime[2], *n.* எலுமிச்சம் பழம்; எலுமிச்சை.

lime[3], *n.* அழகொப்பனைக்குரிய இருதய வடிவ இலைகளும் சிறு நறுமண இளமஞ்சள் வண்ண மலர்களுமுள்ள மரவகை.

lime'-burner, *n.* சுண்ணம் செய்பவர், சுண்ணாம்புக்கல்லை எரித்துச் சுண்ணம் உண்டாக்குபவர்.

lime'-cast, *n.* கட்டிடத்தின் சுண்ண மேற்பூச்சுப் பாளம்.

lime'-juice, *n.* எலுமிச்சம்பழப் பிழிவு; எலுமிச்சைச் சாற்றுக் குடிமம்; சொறி-கரப்பான் மருந்தாகப் பயன்படும் எலுமிச்சம் பழச்சாறு.

lime'kiln, *n.* சுண்ணாம்புக் காளவாய், சுண்ணாம்புச் சூளை.

lime'light, *n.* வெள்ளொளி, தியசுரும் நீரசமும் சலாருவான சுடரொளி; (தொ.) the limelight, முழு ஒளிவிளக்கு பலரறி நிலை, பட்டாங்கு நிலை.

lim'en, *n.* (உள.) தூண்டுதலுணர்ச்சி புலப்படாக் கீழ் எல்லை; உணர்ச்சியைத் தோற்றுவிப்பதற்குத் தேவையான நரம்புக்கிளர்ச்சியின் மிகக்குறைந்த அளவு.

lime'-pit, *n.* மயிரை நீக்குவதற்காக விலங்கின் தோல்களை ஊறவைக்கும் குழி.

lim'erick, *n.* வெற்று வேடிக்கைப்பாட்டு.

lime'-stone, *n.* சுண்ணாம்புக் கற்பாறை வகை; சுண்ணாம்புக்கல்; உரமாகப் பயன்படும் சுண்ணக் கரியகை.

lime'-tree, *n.* = lime[3].

lime'-twig, *n.* பறவைப்பிடிப்புப் பசை பூசப்பட்ட கிளை.

lime'-wort, *n.* மூலிகைச் செடிவகை.

lim'it, *n.* வரம்பு, எல்லைக்கோடு; எல்லைக்கோடிமுனை; கடத்தலாகாத எல்லை, கடக்கக்கூடாத வரம்பு; *v.* வரம்புக் குட்படுத்து, வரையறு; கட்டுப்படுத்து; எல்லை ஏற்படுத்து; மட்டுப்படுத்து; (தொ.) inferior limit, கீழ் எல்லை, அணிமை வரம்பு, சிற்றெல்லை; limited company, வரைநிலைக் கழகம்; limited monarchy, அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்ட முடியரசு; limit man, ஓட்டப்பந்தயத்தில் மிகமிக நீண்ட தொடக்கச் சலுகை பெற்ற மனிதன்; superior limit, பேரெல்லை, உச்சவரம்பு; without limit, எல்லையற்ற; அளவற்ற, வரையறையில்லாத.

limitar'ian, *n.* மனித இனத்தில் வரையறை செய்யப்பட்ட ஒருபகுதி மட்டும் மீட்புப்பெறும் என்னும் கோட்பாட்டாளர்.

lim'itary, *a.* கட்டுப்பாட்டுக்குட்படுத்தப்பட்ட; எல்லை சார்ந்த, எல்லைக்குட்பட்டுள்ள; எல்லைகளாகச் செயற்படுகிற; வரம்பாகப் பயன்படுகிற.

limita'tion, *n.* கட்டுப்படுத்தல்; கட்டுப்பாடு; கட்டுப்பாட்டு விதி; குறைபாடு; எல்லை வரையறை; சூழல் கட்டுப்பாடு; சட்டக்கால எல்லை; உரிமைத்தவணை எல்லை; (தொ.) statute of limitations, செயலாட்சியைக் கால வரையறைப் படுத்தும் சட்டம்.

lim'itrophe, *a.* எல்லையை அடுத்துள்ள.

limn, *v.* வண்ணப்படம் எழுது; தீட்டு, வரை.

limnol'ogy, *n.* ஏரிகளின் புறநிலை இயல்பாராய்ச்சி; குள வாழ்வு உயிரினங்கள் பற்றிய ஆய்வு.

lim'ousine, *n.* மூடிய பொறிவண்டி.

limp[1], *n.* நொண்டுநடை; *v.* நொண்டி நட; சேதமடைந்த ஊர்தி வகையில் தட்டுத்தடங்கலுடன் செல்; செய்யுள் வகையில் முட்டுப்பட்டுச்செல்.

limp[2], *a.* மடிவான; வளைகின்ற; கெட்டியில்லாத, உறுதியற்ற; எளிதில் வளையக்கூடிய; புத்தக அட்டை வகையில் விறைப்பாக நிற்காத; சோர்வுவாய்ந்த, ஊக்கமில்லாத, தன்வலுவற்ற.

lim'pet, *n.* பாறையில் ஒட்டிவாழும் ஒட்டுச்சிப்பி; நத்தையின வகை; (தொ.) limpet mine, கப்பலின் அடிப்புறத்தில் பொருத்தப்பட்ட கடற்கண்ணி.

lim'pid, *a.* தெளிவான, துலக்கமான; ஒளிசெல்லவிடுகின்ற; தூய, கலங்கலில்லாத.

limp'kin, *n.* நாரை இனப் பறவை வகை.

limp'-wort, *n.* = lime-wort.

lin'age, *n.* வரிமானம், அச்சிடப்பட்ட வரி எண்ணிக்கை; வரிமானக் கூலிக்கட்டணம்.

linch'pin, *n.* கடையாணி, சக்கரக் காப்பாணி.

Lin'coln green, *n.* பச்சைவண்ணத் துணிவகை.

lin'den, *n.* எலுமிச்சையின மரம், அழகொப்பனைக்குரிய இருதய வடிவ இலைகளும் சிறு நறுமண இளமஞ்சள் வண்ண மலர்களுமுள்ள மரவகை.

line[1], *n.* வரை, கோடு; வரம்பு, எல்லைக்கோடு; வரிசை; படை அணிநிரை; அகழி; மடிப்புவரை; அடையாளக் கோடு; திரைப்பு, சுரிப்பு வரி; முகத்தோற்றம்; ஒளிக் கீற்று; கீற்று வரி; ஏட்டின் வரி; பாவின் அடி; செய்யுள்; சுருக்கக்குறிப்பு; சிறுகடிதம்; வாணிகக்கட்டளை; கட்டளைச் சரக்கு; நூல், இழை, கயிறு; கயிற்றுத் துண்டு; ஆழம் பார்க்கும் குண்டுநூல்; அளவு இழைக்கச்சை; தூண்டில்; துணி தொங்கவிடும் கொடிக்கயிறு; வழிகாட்டும் கயிறு; வழியறிவிப்புக் கோடு; கம்பி; தந்திக்கம்பி; கம்பிவடம்; தந்திப்பாதை; வழி; போக்கு; திசை; நடைமுறை; நெறி; ஒழுங்கு; ஒழுங்குமுறை; விதி; படித்தரம்; தொகுப்பு, கோப்புத் தொகுதி, கோவை; தொடர்; குடும்பக் கால்வழி; மரபு; வழிமரபு; மரபுவரிசை; துறை; கூறு; தொழில் முறை; வாணிகத்துறைச் சரக்கு; வாழ்க்கைத் துறை; விருப்பத் துறை; ஆற்றல் பாங்கு; கைவரை; அங்குலத்தில் பன்னிரண்டில் ஒரு பங்கான நுண்ணளவை, நுண்கூறலகு; தொலைக்காட்சியில் பக்கவாட்டில் கீற்று கீற்றாக எடுக்கும் நிழற்காட்சிக் கூறுகளில் ஒன்று; *v.* கோடிடு; வரிவரியாயிரு, வரியிட்டு நிரப்பு; வரியிட்டுக் குறி; கோடிட்டு அடி; வரிசைப்படுத்து; வரிசைப்படு; வரிசையாக உருவாக்கு; வரியாக உருவாகு; படைக்காவல் வை; காவல்நிலைகளில் நிறுத்து; வரிசையில் நில்; சம எடையில் நில்; ஒழுங்குமுறையில் அமைந்திரு; பாடலை அடியடியாகப் பாடும்படி வழங்கு; (தொ.) all along the line, இடந்தவறாமல், எங்கணும்; தொடர்ந்து, ஓயாது, இடைவிடாது; bring into line, ஒத்துக்கொள்ளும்படி செய்வி; இணக்குவி; இசைவி; by rule and line, துல்லியமாக, மயிரிழைகூடப் பிசகாமல்; come into line, ஒப்புக்கொள்; உடன் ஒத்துழை; இணங்கு, இசை; down line, இருப்புப்பாதையின் தலைமை இடத்திலிருந்து; give one line enough, விட்டுப்பிடி, போகிறவழி செல்லவிட்டுப் பின்னால் ஒருவரைக் கையுங்களவுமாகப்பிடி; hard lines, அவப்பேறு, அதிட்டக்கேடு; கொடுமை; line abreast, அருகருகாக; (கப்.) பக்கத்துக்குப் பக்கமாக நேர்வரிசையில்; line ahead, (கப்.) நூலிழைபோல முன்செல்லும் வரிசை; line of beauty, எதிரெதிராக வளையும் கோடு, அழகுப்பாம்பு வளைவு; line of fortune, உள்ளங்கை செல்வக் குறியீட்டு வரை; line of life, அகங்கை ஆயுள் வரை; line through, கோடிட்டு அழி; one's line of country, தனிப்பட்ட விருப்பாராய்வுக்குரிய துறை; on the line, இரண்டின் இடைப்பட்ட எல்லைக்கோட்டில்; picture hung on the line, பார்வையாளரின் கண்ணளவில் மையத்தைக் கொண்டுள்ள காட்சிப்படம்; read between the lines, எழுத்தின் புறம்பாக ஊகித்துக்கொள், மறைந்துகிடக்கும் பொருளை அறி; the Line, நில நடுக்கோடு; the line, (படை.) நிலையான எண்ணிக்கையிடப்பட்ட படைப்பகுதிகள்; toe the line, கட்சித் திட்டத்தை ஏற்றுக்கொள்; up line, தலைமையிடம் நோக்கி.

line[2], *n.* சணல் கூளத்திலிருந்து பிரிக்கப்பட்ட மெல்லிய நீண்ட சணல் நூல்.

line[3], *v.* பை வகையில் உட்புற உறையணி; பெட்டி முதலியவற்றின் உட்புறம் பொதி; ஆடைக்கு உள்வரி இணை; பை-வயிறு முதலியவற்றின் வகையில் உட்புறம் நிரப்பு; உள்வரியாயியலு.

line[4], *v.* நாய் முதலியவற்றின் வகையில் பெடையுடன் பிணைவுறு.

lin'eage, *n.* வழிமரபு, மரபுவழி; கால்வழி.

lin'eal, *a.* நேர் மரபுவழி சார்ந்த; நேர்கோட்டுக்குரிய; நேர் வரைகளாலான; கோட்டின் திசையான.

lin'eaments, *n. pl.* தனிச் சிறப்புக்கூறுகள்; தோற்ற அமைதி.

lin'ear, *a.* வரிபற்றிய; கோடுகள் அடங்கிய; நேரான; நீளமான; (கண., இய.) நீட்டலளவை சார்ந்த; ஒரே அளவாக ஒடுங்கி நீண்ட; (தொ.) linear A, கிரீட் (Crete) தீவில் அகழ்ந்தாய்வில் கண்டெடுக்கப்பட்ட புலன் விளக்கம் பெறாத தொல்பழங்கால வரிவடிவ வகை; linear B, மிகத் தொல்பழங் காலக் கிரேக்க மொழி சார்ந்த வரிவடிவாகக் கருதப்படும் மினோவ (Minoan) நாகரிக வரிவடிவ வகை; linear equation, (கண.) ஒருபடிச் சமன்பாடு.

linea'tion, *n.* கோடுகள் வரைதல்; கோடுகளால் குறியிடுதல்; கோடுகளாலான அமைப்பு.

line'-drawing, *n.* மைக்கோல் அல்லது கரிக்கோல் கொண்டு வரையும் வரைபடம்.

line'-engraving, *n.* வரி உருப்படம், கூரிய வரிக்கோடுகளால் ஆன படம்.

line'-filling, *n.* கையெழுத்துப்படியில் வெறுமையான இடத்தில் அழகொப்பனையான கீற்று.

line'-firing, *n.* அணிவரிசையில் நிற்பவர் ஒருமுக வேட்டு.

line'man, *n.* வரிசைக் காவலர், கம்பி முதலியவற்றைப் பழுது பார்த்துப் பேண வேண்டிய பொறுப்புடையவர்.

lin'en, *n.* நாரால் செய்யப்பட்ட துணி; நார்மடி, சில்லறைத் துணிமணி; (தொ.) wash one's dirty linen at home, வீட்டு அழுக்குமூட்டைகளை வெளிக்குக் கொண்டுவராதிரு; wash one's dirty linen in public, வீட்டுக் குப்பைகளை வெளியே கொண்டுவந்து கிளறு.

lin'en-draper, *n.* நார்மடி முதலியவற்றில் வாணிகஞ் செய்பவர்.

lin'en-fold, *n.* நார்மடிச் சுருள் போன்று செதுக்கப்பட்ட அணிகலன்.

lin'er[1], *n.* பீரங்கி-இயந்திரம் ஆகியவற்றில் சுழற்றக்கூடிய உள்வரி உலோகக் காப்புறை.

lin'er[2], *n.* பயண நீராவிக்கப்பல்; பயண வானூர்தி.

liner[3], *n.* புருவ மை எழுதுவதற்கான வண்ணப்பொருள்.

lines, *n. pl.* பாடல்; நடிப்புப் பகுதி; ஊழ்வாய்ப்புக் கூறு, ஊழ்வகுப்பு; உருவரைக் கோடு; குடிசை வரிசை; அரண் வரிசை; திருமணச் சான்றிதழ்; கப்பல் முதலியவற்றின் வகையில் கட்டுமான அமைப்புத்திட்டம்.

lines'man, *n.* நிலைப்படைப் பிரிவின் வீரன்; பந்தாட்ட நடுவரின் துணைச்சான்றாளர்.

line'-work, *n.* மைக்கோல் திட்டுமானம்; கரிக்கோல்தீட்டுமானம்; மைக்கோல் படம்; கரிக்கோல் படம்.

ling[1], *n.* பதன உணவாகப் பயன்படுத்தப்படும் நீண்ட மெல்லிய வடஐரோப்பியக் கடல்மீன் வகை.

ling[2], *n.* புதர்ச்செடி வகை.

ling'a, ling'am, *n.* (ச.) இலிங்கம்.

ling'er, *v.* தயங்கி நில், சுணங்கு, சுற்றி வட்டமிட்டுத் தயங்கு; நேரந்தாழ்த்திக்கொண்டிரு; புறப்படாமல் காலங் கடத்து; நோய்வகையில் போகாது நீடித்திரு; சாவாது நீடி; அரை உயிராய்க் காலங்கழி.

lingerie, (பிர.) *n.* நார்மடித்துணிமணி; நார்மடித்துணிமணிச் சேமத் தொகுதி; பெண்களின் உள்ளுடைத் தொகுதி.

ling'o, *n.* புரியா அயல்மொழி, குழு வழக்குமொழி, தனி வழக்குமொழி; குழுஉக்குறி வழக்கு.

ling'ua franc'a, *n.* கிழை நடுநிலக்கடற் பகுதியில் வழங்கும் கலப்பு மொழி; இடையீட்டுப் பொதுமொழி; இடையீட்டுப் பொதுக்கருத்துப் பண்பு.

ling'ual, *n.* ட, ண போன்று நாவிடைப் பிறக்கும் ஒலி; *a.* (உள்.) நாவினைச் சார்ந்த; ஒலிமுறை நூல் வகையில் நாவினால் உருவாகின்ற; பேச்சுக்குரிய; மொழி சார்ந்த.

ling'uiform, *a.* (தாவ., உள்., வில.) நா வடிவுடைய.

ling'uist, *n.* அயல்மொழி வல்லார்; பன்மொழியறிஞர்.

linguis'tic, *a.* மொழி நூலாராய்ச்சி சார்ந்த; மொழி சார்ந்த.

linguis'tics, *n. pl.* மொழியியல்.

ling'ulate, *a.* நா வடிவுள்ள.

ling'uoden'tal, *a.* நாப்பல் ஒலிப்புடைய.

lin'hay, *n.* பண்ணையின் திறந்த முகப்புக் கொட்டகை.

lin'iment, *n.* தேய்ப்புத்தைலம் முதலிய கில்வாத நோய்க்குரிய பூச்சுத் தைல மருந்து.

lin'ing, *n.* உள்வரிப் பூச்சு; உள்வரித் துணி, அணைசிலை; அக உறை.

link[1], *n.* கண்ணி, சங்கிலியின் தனி வளையம்; கண்ணியிழை, துன்னலிழையின் தனிப்பின்னல் இணைப்பு; தொடர் கோவையின் தனி உறுப்பு; கொக்கி, கொளுவி, இடையிணைப்புக் கருவி; இடையிணைப்புப் பொருள்; இடை இணைப்பாளர்; இடைநிரப்பீடு; நில அளவையில் ஏறத்தாழ 8 அங்குலமுள்ள நீட்டலளவைக் கூறு; *v.* கொக்கியால் பொருத்து, இடையில் சேர்த்திணை; ஒன்று சேர், ஒட்ட வை; கைகளைக் கோத்துக் கொள்; பற்றிப்பிடி; பிணை.

link[2], *n.* பழங்காலத் தீவட்டி, கிலும் சணற் கூளமும் சேர்த்து செய்யப்பட்ட தீப்பந்தம்.

link'boy, *n.* தீப்பந்தந் தூக்குஞ் சிறுவன்.

linked, *a.* இணைக்கப்பட்ட; (தொ.) linked battalions, தாயகத்தில் ஒன்றும் அயலகத்தில் ஒன்றுமாக இணைக்கப்பட்ட படைப்பிரிவுகள்.

links, *n. pl.* கடலோரக் கரையிலுள்ள மணற்பாங்கான புற்றரை; குழிப்பந்தாட்டக் களம்.

linn, *n.* நீர்வீழ்ச்சி; அருவிப்பள்ளம்; கொடும்பாறை.

Linnae'an, Linne'an, *n.* லின்னேயஸ் (Linnaeus) என்னும் உயிரியல் அறிஞரைப் பின்பற்றுபவர்; லின்னேயஸ் வகுத்த பாகுபாட்டு அமைப்பைப் பின்பற்றுபவர்; *a.* லின்னேயஸின் அமைப்பு முறையைப் பின்பற்றுகிற.

linn'et, *n.* பழுப்புநிற இசைப்பறவை வகை.

linn'ey, linn'y, *n.* = linhay.

lin'ocut, *n.* மெழுகுத்துணி போர்த்த பலகையில் பொறிக்கப்படும் புடைப்பகழ்வுச் சித்திரம்; மெழுகுத்துணிக் கட்டைப் புடைப்பகழ்வு அச்சு.

linol'eum, *n.* மெருகிட்ட மெழுகுத்துணி வகை.

lin'otype, *n.* வரி உருக்கச்சுப் பொறி, அச்சுருக் கோப்பு இல்லாமலே எழுத்துருக்களை வரிப்பாளங்களாக உருக்கிவார்த்து அடிக்கும் அச்சுப்பொறி.

lin'sang, *n.* கிழக்கிந்திய தீவுகளிலுள்ள புனுகுப்பூனை வகை.

lin'seed, *n.* ஆளிவிதை; (தொ.) linseed cake, ஆளிவிதைப் பிண்ணாக்கு; linseed meal, ஆளிவிதை மாவு; linseed oil, ஆளிவிதை எண்ணெய்; linseed poultice, வீக்கத்திற்குப் பயன்படுத்தும் ஆளிவிதை மாவுத்துணிக் கட்டுமானம்.

lin'sey-wool'sey, *n.* கம்பளியும் நூலும் சேர்ந்து நெய்த பருக்கன் ஆடைத்துணி வகை.

lin'stock, *n.* (வர.) பழைய பீரங்கிகளுக்கு நெருப்புவைக்கும் எரிகொள்ளி இணைத்த நீண்ட கோல்.

lint, *n.* காயங்களுக்கும் புண்களுக்கும் கட்டும் பஞ்சுத்துணி வகை, கட்டுத்துணி.

lin'tel, *n.* வாயில்-பலகணி ஆகியவற்றின் மேற்கட்டை.

lin'y, *a.* கோடுகளால் ஆன; வரிவரியான, சுரிப்புள்ள, மடிப்புள்ள.

Li'on[1], *n.* சிங்கராசி.

li'on[2], *n.* சிங்கம்; ஆண்மையுள்ளவர், வீரர், நெஞ்சுரமுடையவர்; கூட்டங்களில் சிறப்பாக அறிமுகம் செய்துவைக்கப்படும் புகழ்பெற்ற கல்வியறிவுடையோர்; பிரிட்டன் நாட்டுச்சின்னம்; (தொ.) lion in the way, கற்பனை இடையூறு, கருத்துருவான தடை; lion's mouth, இடரார்ந்த நிலை; lion's share, மிகப்பெரிய பகுதி; சிறந்த பகுதி; தலையான பங்கு; lion's skin, போலிவீரம்; வீரப்புனைவுரு ஏற்பு; see the lions, நகரத்தில் காணவேண்டிய முக்கியமான பகுதிகளைக் காண்; show the lions, நகரத்திற் காணவேண்டிய பகுதிகளைக் காட்டு.

li'on-heart, *n.* மன வலியன்.

li'onize, *v.* அருங்காட்சி காண்; சுற்றிப்பார்; அருங்காட்சி காட்டு; அருங்காட்சியாகக் காட்டு; புகழ்வீரராக நடத்து; புகழ்வீரராக்கு.

li'ons, *n. pl.* அருங்காட்சிகள், நகரத்திற் காணவேண்டிய பகுதிகள், காட்சிச் சிறப்புடைய பகுதிகள்.

lip, n. உதடு, இதழ் ; உதடுபோன்ற உறுப்பு, இதழ்போன்ற பகுதி ; கிண்ணத்தின் வளைவிளிம்பு ; துளையின் பக்க விளிம்பு ; புண்ணின் வாயலகு ; மலரின் இதழலகு ; துடுக்கான பேச்சு ; துடுக்குத்தனம் ; v. உதட்டால் தொடு, இதழ் பொருத்து ; அலை வகையில் மேவி மீள் ; தொட்டு விலகு ; உட்டுக்குள்ளாக முனகு ; குழிப்பந்தாட்டப் பந்து வகையில் குழிவிளிம்பினை மேவி விழாதிரு ; குழிப்பந்தாட்ட வகையில் பந்தினைக் குழிவிளிம்பு மேவும்படி செய் ; (தொ.) bite one's lip, ஏமாற்றத்தால் உதட்டைக் கடித்துக்கொள் ; சிரிப்பையும் கோபத்தையும் அடக்குவதற்காக உதட்டைக் கடித்துக்கொள் ; curl one's lip, வெறுப்பைக் காட்டுவதற்காக உதட்டைச் சுழி, இகழ்ச்சியைக் காட்டுவதற்காக உதட்டை மடக்கு ; escape one's lips, முன் எண்ணமின்றித் தானாக வெளியிடப்படு ; from the lips only, வெறும் உதட்டு அளவில், மனமார்ந்த நிலையிலில்லாமல் ; hang one's lip, அவமானத்தினால் உதட்டைத் தொங்கப்போடு ; hang on one's lips, சொல்லும் சொற்களையெல்லாம் பயபக்தியோடு உன்னிப்பாகக் கேள் ; lick one's lips, smack one's lips, சுவையான உணவை எதிர்நோக்கி உதட்டை நாவால் துழாவிக்கொள் ; stiff upper lip, மன உரம் ; விடாப்பிடி.

lip'-deep, a. உதட்டளவான, மனமேவாத, உள்ளார்ந்த வாய்மையற்ற.

lip'-language, n. இதழியக்கப் பேச்சுமுறை, உதட்டசைவினைப் பயன்படுத்திச் செவிடர்களுக்கும் ஊமைகளுக்கும் கற்பிக்கும் முறை.

lipog'raphy, n. = haplography.

lipp'er, n. (கப்.) அலையதிர்வியக்கம், கடற்பரப்பின் திரைப்பு.

lip'-reading, n. உதட்டசைவால் செவிடர்களும் ஊமையும் பேச்சுப் பொருளறியும் முறை.

lip'salve, n. உதட்டுப் புண் களிம்பு; முகப்புகழ்ச்சி, போலிப் புகழ்ச்சி.

lip'-service, n. போலி வழிபாடு, பாவிப்பு.

lip'-speaking, n. செவிடர்களும் ஊமைகளும் உணரும்படி உதட்டசைவால் பேச்சுப் பொருளறிவிக்கும் முறை.

lip'stick, n. உதட்டுப்பூச்சு வண்ணக்கோல்.

liquate', v. உருக்கி உலோகங்களைப் பிரி; உருக்கி உலோகங்களைத் துப்புரவு செய்.

liq'uefy, v. கெட்டிப்பொருள் அல்லது வளிப்பொருளை நீர்மமாக்கு ; திண்மம் அல்லது வளிமம் வகையில் திரவமாகு.

liques'cent, a. நீர்மமாகிற ; திரவமாகக்கூடிய; நீர்மமாகும் தன்மையுடைய.

liqueur', n. மணமும் இன்சுவையும் ஊட்டப்பட்ட கடுந்தேறல் வகை ; சர்க்கரையும் சாராயம் அல்லது முந்திரித் தேறலும் கலந்து மணமூட்டப்பட்ட கலவைத்தேறல் வகை ; v. தேறலுக்கு மணமுஞ் சுவையும் ஊட்டு; சர்க்கரை முதலியவற்றை உடன்கல ; (தொ.) liqueur brandy, சுவைத்தேறல் கலந்த பழத்தேறல் குடிவகை.

liqueur'-frame, liqueur'-stand, n. குப்பித்தட்டு, கடுந்தேறல் புட்டிகள் வைக்கும் சட்டம்.

liqueur'-glass, n. கடுந்தேறல் குடிக்கப் பயன்படும் மிகச் சிறு குவளை.

liq'uid, n. நீர்மம், திரவவடிவுடைய பொருள்; ஒழுகியல் ஒலி; a. நீரியலான; நீர்ப்பொருளின் தன்மையுடைய; நீர்போன்ற; ஒழுகியலான ; பளிங்கியலான, எளிதில் ஒளி ஊடுருவும் தன்மைவாய்ந்த; நிலையற்ற, அடிக்கடி மாறும் இயல்புடைய; சொத்துக்கள் வகையில் எளிதில் பணமாக மாற்றக்கூடிய ; ஒழுகிசையான, முரணோசையற்ற ; (ஒலி.) மிடற்றொலியல்லாத, உயிரொலி போன்ற; (தொ.) liquid air, கடுங் குளிர்ச்சியினால் நீராக மாற்றப்பட்ட காற்று ; liquid fire, அழலெறி கருவி உமிழும் தீக்கொழுந்து.

liq'uidate, v. கடனைத்தீர், செலுத்தித் தீர்த்துவிடு; தீர்த்துக் கட்டு, ஒழித்துவிடு, அடக்கி ஒடுக்கிவிடு ; மூடிவிடு ; கூட்டு வணிக வகையில் கொடுக்கல் வாங்கல் கணக்கெடுத்து மூடு.

liquida'tion, n. தீர்த்துக்கட்டுதல், கொடுக்கல் வாங்கல் கணக்கெடுத்து மூடுதல் ; கலைப்பு, தீர்வாட்சி ; ஒழுங்குநிலை ; (தொ.) go into liquidation, ஒழுங்குநிலையடை, தீர்த்துக் கட்டு, நொடித்துப்போ.

liq'uor, n. குடிதேறல் ; வடிநீர்மம், சாராயம் வடிப்பதில் பயன்படும் நீர் ; கழிவுநீர் ; கழுவுநீர் ; கசிவூறல் ; செய்நீர் ; கஞ்சி, வடிநீர், உணவு வேகவைத்த நீர் ; v. தோலைக் கொழுப்பால் அல்லது நெய்மத்தால் பதப்படுத்து ; மாவை நீரில் ஊறவைத்துப் புளிக்க வை ; (தொ.) malt liquor, மாத் தேறல், புளித்த மாவின் வடிப்புத்தேறல்; spirituous liquor, சாராயக் குடிவகை.

liq'uorice, n. அதிமதுர வேரிலிருந்து எடுக்கப்பட்டு மருந்தாகவும் தின்பண்டமாகவும் பயன்படும் கருநிறப் பொருள், அதிமதுரம் ; அதிமதுர வேரையுடைய செடிவகை.

liq'uorish, a. சாராய விருப்பமுள்ள, குடிவிருப்பைத் தெரிவிக்கிற.

lir'a, n. இத்தாலி நாட்டு நாணய வகை ; pl. li're.

lisle thread, n. நுண்முறுக்கிழை.

lisp, n. மழலைச்சொல், தெளிவற்ற ஒலிப்புடைய குழந்தைப் பேச்சு ; சகரதகரப்போலி ஒலிப்பு ; நீரின் ஒழுகிசை ; இலைகளின் மென்சலசலப்பொலி ; v. மழலைச் சொல்லாடு ; தெளிவற்ற ஒலிப்புடன் பேசு ; குறைபட உச்சரி ; சகரத்தினிடமாகத் தகரப்போலி ஒலிப்புடன் பேசு ; (தொ.) lisp out, மழலையில் பேசு ; அரைகுறை ஒலிப்புடன் கூறு.

liss'om, liss'ome, a. தொய்வான, ஒசிவான, துவள்வுடைய ; இழைவான.

list[1], n. பட்டியல் ; பெயர்ப்பட்டி ; இனக்குறிப்புப் பட்டி ; நிகழ்ச்சிக் குறிப்புப்பட்டி ; விலைப்பட்டி ; துணி ஓரம், கரை, வகைமாறிய துணியாலான ஓரக்கரை ; கரை கிழிந்த கச்சை; v. படைவீரனாகச் செல் ; பட்டியலில் பதிவு செய் ; கிழித்த ஆடை ஓரத்தை வைத்துக் கதவை இறுக்கிப் பொருத்து ; (தொ.) active list, போருக்கு அழைக்கப்படும் பொறுப்பும் தகுதியுமுள்ள கடற்படை-நிலப்படை-விமானப்படை பணியாளர் பட்டி ; free list, நாடக அரங்கு முதலியவற்றிற்குள் இலவச நுழைவிசைவு பெற்றோரின் பெயர்ப்பட்டியல் ; வரி விலக்குடைய பொருட்களின் பட்டியல் ; line edges of door with list, குளிர்காற்றைத் தடுப்பதற்காகக் கிழித்த ஆடை ஓரங்களை வைத்துக் கதவுகளை இறுக்கமாகப் பொருத்து.

list[2], n. கப்பல் அல்லது கட்டிடம் முதலியவற்றின் ஒருபக்கமான சாய்வு ; v. ஒருபக்கமாகச் சாய்.

list[3], v. விரும்பு, மனங்கொள் ; விரும்பித் தேர்ந்துகொள் ; பிடித்தமாயிரு.

list[4], v. உற்றுக்கேள்.

li'sten, v. உற்றுக்கேள், கவனி ; விண்ணப்பத்திற்குச் செவிகொடு ; அவாவிற்கு இணங்கு ; மருட்சிக்கு உள்ளாகு ; வேண்டுகோளுக்கு இணங்கு ; (தொ.) listen in, தொலைபேசிச் செய்தியை இரகசியமாக ஒற்றுக்கேள் ; கம்பியில்லாச் செய்திவாங்கும் கருவியைப் பயன்படுத்து.

li'stener, n. உற்றுக்கேட்பவர் ; ஒற்றுக்கேட்பவர் ; (தொ.) good listner, பிறர்கூறுவதைக் கூர்ந்து கேட்கும் பழக்கம் உடையவர்.

li'stening-post, n. எதிரி நடவடிக்கைகளையும் இயக்கங்களையும் அறிந்துகொள்ளும்படி பாசறைக்கருகில் உள்ள இடம்.

lis'terine, n. நச்சுத்தடை மருந்துக் கரைசல்.

lis'terize, v. நச்சுத்தடை முறைகளைப் பின்பற்றிக் காயம் ஆற்று.

list'less, a. கவனமில்லாத, அக்கறையற்ற ; மந்தமான, எழுச்சியற்ற ; கருத்தில்லாத, கவையற்ற ; முயற்சி செய்ய விருப்பமில்லாத.

lists, n. pl. குதிரைவீரர் ஈட்டிப்போர்க் களரியைச் சுற்றியுள்ள கழிக்கோல் வேலி ; பந்தயப் போட்டிக்களம்; போர்க்களம் ; வாதிடும் களம் ; (தொ.) enter the lists against, வாத எதிர்வாதத்திற்கு அறைகூவி அழை, வாத எதிர்வாத அறைகூவலை ஏற்றுக்கொள்.

lit, *v.* light என்பதன் இறந்தகால வடிவங்களில் ஒன்று; light என்பதன் முடிவெச்சவடிவங்களில் ஒன்று.

lit'any, *n.* இறைமுறையீட்டுப் பாசுரத்தொகுதி, வழிபாட்டிலும் சமய ஊர்வலங்களிலும் குருமாரும் மக்களுமாக மாறி மாறிப் பாட்டினைப் பல்லவியாகப் பாடுவதற்கமைந்த வேண்டுகோள் பாசுரத்தொகுதி; the litany, பொது இறைமுறையீட்டு ஏட்டில் உள்ள வழிபாட்டுப் பாசுரம்.

lit'any-desk, lit'any-stool, *n.* வழிபாட்டுமேடை முழங்காற்படி.

litchi', *n.* சீனப் பழமர வகை; சீனப் பழவகை.

lit'eracy, *n.* எழுத்தறிவு, படிப்பு வாசனை.

lit'erae humanior'es, (ல.) *n.* பண்பாட்டிலக்கியம்; ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கிரேக்க லத்தீன இலக்கியப் பயிற்சிப் பள்ளி; ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகக் கலை இளவல் தேர்வின் கிரேக்க லத்தீன பிரிவு.

lit'eral, *n.* அச்சு அல்லது தட்டச்சில் எழுத்துப் பிழை; *a.* எழுத்துச் சார்ந்த; எழுத்தியல்பான; எழுத்தைப் பின்பற்றிய; சொல்லுக்குச்சொல் சரியான; சொல்லின் நேர்ப்பொருள் சார்ந்த; சொல்லின் மூலமுதற் பொருள் சார்ந்த; உவம உருவகச் சார்பற்ற; வெளிப்படைப்பொருள் சார்ந்த; உயர்வு நவிற்சியற்ற; நேருண்மையான.

lit'eralize, *v.* உருவக முதலிய அணிவழக்குகளைச் சொல்லின் நேர்ப்பொருளிலேயே கொள்; நேர்ச்சொற்பொருட்படுத்து.

literar'um doc'tor, (ல.) *n.* இலக்கியத்தில் 'டாக்டர்' என்னும் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டம்.

lit'erary, *a.* இலக்கியஞ் சார்ந்த; இலக்கியப் பண்புடைய; மொழி வகையில் நடைநயம் வாய்ந்த; இலக்கிய வடிவமைதி வாய்ந்த; இலக்கியப் புலமை வாய்ந்த; இலக்கிய ஈடுபாடுள்ள; இலக்கியத் தொடர்பான; இலக்கிய ஏடுகள் சார்ந்த; இலக்கிய வழக்கான; எழுத்து வழக்கான; எழுத்தாளர் கையாட்சிக்குரிய; இலக்கியம் படைக்கிற; எழுத்தாண்மை சார்பான; பேச்சுவழக்கிற் படாத; எழுத்துநடை சார்ந்த; (தொ.) literary history of a thing, இலக்கிய ஆட்சி வரலாறு; literary man, இலக்கிய வாணர், செந்நாப்புலவர், இலக்கியப் புலமையுடையவர்; literary property, புத்தகங்கள் முதலியவற்றின் வெளியீட்டுரிமை; தனிவெளியீட்டு உரிமைக்கு உட்பட்ட நூல்.

lit'erate, *n.* எழுத்தறிவுடையவர்; இலக்கியத் தொடர்புடையவர்; பல்கலைக்கழகப் பட்டமில்லாமலே ஆங்கில சமயக் குழுவுக்குள் (Anglican orders) சேர்த்துக் கொள்ளப்பட்டவர்; *a.* எழுதப்படிக்கத் தெரிந்த, கல்வியறிவுள்ள.

literat'i, (ல.) *n. pl.* கல்வியறிவாளர், புலமையுடையவர், கற்றவகுப்பினர்.

literat'im, (ல.) *adv.* சொல்லுக்குச் சொல்லாக, ஏட்டில் உள்ளவாறே.

lit'erator, *n.* இலக்கிய வாணர்; கல்வியறிவுடையவர், இலக்கிய வழக்கில் ஊடாடுபவர்.

lit'erature, *n.* இலக்கியம், கலைப்பண்பார்ந்த ஏட்டுச் சேமவளம்; நாட்டிலக்கியம்; மொழியிலக்கியம்; காலக்கூற்றினுக்குரிய இலக்கியப் பகுதி; கலையியல்வாய்ந்த எழுத்தாண்மை; எழுத்தாண்மைத் துறை; எழுத்தாண்மைத் தொழில்; இலக்கியப் படைப்பு; எழுத்தாண்மைத்தொகுதி; இலக்கிய உலகம், இலக்கியப்படைப்பாளர் வகுப்பு; ஏட்டுத்தொகுதி; தனித்துறை ஏட்டுப்பரப்பு; (பே-வ.) அச்சுருவ ஏட்டுத்தொகுதி, அச்சடித்த ஏடு.

lith'arge, *n.* உயிரக ஓரணுவுடனிணைந்த காரீயம்.

lithe, *a.* நொசிவான, தொய்வுடன் வளையக்கூடிய.

lith'ia, *n.* கல்லிய உயிரகை.

lith'ia-water, *n.* வாத நோய்களுக்குப் பயன்படும் கல்லிய உயிரகைக் கலப்பு நீர்மம்.

lith'ic[1], *a.* கல்சார்ந்த அல்லது குண்டிக்காயில் கல்லுடைய.

lith'ic[2], *a.* (வேதி.) கல்லியம் சார்ந்த.

lith'ium, *n.* கல்லியம், உலோகத் தனிம வகை.

lith'ograph, *n.* கற்பாள அச்சு; *v.* கற்பாள அச்சுமுறையில் அச்சடி; கல்லின்மேல் எழுது; கல்வரைச் செதுக்கீடு செய்.

lithog'raphy, *n.* கல்லச்சுக் கலை.

litho'logy, *n.* பாறை ஆய்வுநூல்; (மரு.) கற்கோளாறு ஆய்வுநூல்.

lithontrip'tic, *n.* (மரு.) குண்டிக்காயில் உள்ள கற்களை உடைக்கும் மருந்து.

lith'ophyte, *n.* (வில.) சுண்ணகக் கலப்புடைய பவழகவுழி சில; (தாவ.) கற்களின்மேல் வளரும் செடிவகை.

lithot'omy, *n.* குண்டிக்காயிலுள்ள கற்களை நீக்கும் அறுவை முறை.

lithot'rity, *n.* இயல்பாக வெளிவருமளவில் குண்டிக்காய்க் கற்களைப் பொடியாக்கும் மருத்துச் செய்முறை.

Lithuani'an, *n.* லிதுவேனிய (Lithuania) நாட்டினர்; லிதுவேனிய நாட்டு மொழி; *a.* லிதுவேனிய மொழிசார்ந்த.

lit'igate, *v.* வழக்காடு, வழக்கில் ஒருசார்பாக இரு; சட்ட உரிமைபற்றி எதிர்த்துப் போராடு.

liti'gious, *a.* வழக்காடுகிற; வழக்காடுவதில் விருப்பமுள்ள; வழக்கில் வாதத்திற்கிடமான; வழக்காடத்தக்க செய்தியுள்ள; வழக்குச் சார்ந்த.

lit'mus, *n.* கற்பாசி வகையிலிருந்து கிடைக்கும் வேதியியல் நிறமாற்ற இயல்புடைய வண்ணப்பொருள்.

lit'mus-paper, *n.* வேதியியல் நிறமாற்ற வண்ணப்பொருள் தோய்ந்த நீலத்தாள்.

lit'otes, *n.* குறைவு நவிற்சி.

lit're, *n.* பதின்மான முகத்தலளவை அலகு, 'லிட்டர்', பத்து செண்டிமீட்டர் பக்கமுள்ள கன சதுரத்தின் பரிமாணம்.

litt'er, *n.* சிவிகை; நோயாளிகளுக்கான தூக்கு கட்டில்; சேக்கை, சிறு விலங்குகளின் வைக்கோற் படுக்கை; ஒரீற்றுக் குட்டிகளின் தொகுதி; சருகு சாணக்கூளம்; குப்பை கூளம்; தாள் செத்தை சவறு; துண்டுதூசுக் குவை; துப்புரவற்ற நிலை; *v.* வைக்கோல் சேக்கையிடு, வைக்கோல் கூளம் தூவிப் பரப்பு; இடத்தை ஒழுங்கின்றி வைத்திரு; பொருளைத் தாறுமாறாகப் போட்டுவைத்திரு; தாறுமாறான தோற்றமளி; பரவலாகச் சிதறியிடு; குட்டிகளை ஈனு.

litterateur, (பிர.) *n.* இலக்கியவாணர்.

lit'tle, *n.* சிறிது; சிறிதளவு; சிறிதளவானது; சிறிது தொலை; சிறிதுநேரம்; அற்பம், சிறுதிறமானது; *a.* சிறிய; பெரிதல்லாத; சிற்றளவான; மிகுதியல்லாத; சிற்றுருவுடைய; இளைய; குழந்தையாயிருக்கிற; குழந்தைபோன்ற மென்னயம் வாய்ந்த; குழந்தைபோன்று மென்னய உணர்ச்சி தூண்டுகிற; குழந்தைபோன்று மெல்லாதரவுக்குரிய; குழந்தைபோன்று அருமையான, அரிய விருப்பத்துக்குரிய; குற்றுருவுடைய; இழிந்த, கீழ்த்தரமான; சிறப்பற்ற, முக்கியத்துவமற்ற; அவலமான, சிறுதிறமான; புறக்கணிக்கத்தக்க, அற்பமான; *adv.* மிகச்சிறிய அளவில் மட்டுமே; ஒரு சிறிதே; அரிதே, கிட்டத்தட்ட இல்லை என்று சொல்லும் அளவில்; (தொ.) a little, ஒரு சிறிது, கொஞ்சம், சிறிதளவானது; in little, சிறுபடி அளவில், சிறிய அளவு வீதத்தில்; little go, (பே-வ.) கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டத்திற்கான முதல் தேர்வு அல்லது சோதனை; little Mary, (பே-வ.) வயிறு; Little Masters, பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த டியூரர் (Durer) என்ற செர்மானிய செதுக்கு வேலைக்காரருடைய பாணியைப் பின்பற்றிய சிறு அச்சுச் செதுக்கு வேலைக்காரர்கள் குழு; little or nothing, சிறிதளவுகூட இல்லை; the little, ஆற்றல் இல்லாதவர், சிறப்பற்றவர்.

lit'tle-case, *n.* (வர.) சிறைக்கூட முடக்க அறை.

lit'tle-Englander, *n.* பிரிட்டன் தன் குடியேற்ற நாட்டுப் பொறுப்புக்களையும் கடமைகளையும் குறைத்துக்கொள்ள வேண்டுமென்னும் கோட்பாட்டாளர்.

lit'tle-Englandism, *n.* பிரிட்டன் தன் குடியேற்ற நாட்டுப் பொறுப்புக்களையும் கடமைகளையும் குறைத்துக்கொள்ள வேண்டுமென்னும் கோட்பாடு.

litt'oral, *n.* கடலோரப் பகுதி ; *a.* கடலோரத்திலுள்ள.

lit'urgy, *n.* கிழக்கிந்திய திருக்கோயில்களின் நற்கருணை அலுவலகம் ; பொதுவழிபாட்டுமுறை வாசகச்சுவடி ; பொது அருள்முறையீட்டுத் தொகுதி ; பண்டைக் கிரேக்க நாட்டில் நகரச் செல்வர்கள் காசின்றிச் செய்யும் பொதுத்தொண்டு.

liv'able, *a.* வீட்டு அறை வகையில் குடியிருக்கத்தக்க ; இடச் சூழல் வகையில் தங்கிவாழ்வதற்கிசைவான ; தட்பவெப்பநிலை வகையில் மனித வாழ்வுக்குகந்த; வாழ்வுவகையில் வாழத்தக்க; ஆள்வகையில் உடன்வாழ்வதற்கியைந்த, தோழமைக்குகந்த.

live[1], *a.* உயிருள்ள, உயிரோடிருக்கிற; வாழ்நிலையிலிருக்கிற; மெய்யாகவுள்ள, கற்பனையல்லாத ; ஓவிய உருவாயில்லாத ; நடைமுறை வினைக்குரிய ; விளையாட்டுப் பொருளாயில்லாத, வேடிக்கைப் பொருளாயிராத ; நடிகர் நடிப்பு வகையில் திரை வழியன்றி நேரே மேடையில் நடிக்கிற ; வானொலி தொலைக் காட்சி வகையில் ஒலிப்பதிவு மூலமாகவன்றி நேரே பேச்சினை ஒலிபரப்புகிற ; உயிர்த்திறம் கெடாத; ஆற்றல் கெடா திருக்கிற; கங்குவகையில் தணல் கெடாத; தோட்டா-மின்கல வகைகளில் விசைதீர்ந்துவிடாத ; தவணை கடந்துவிடாத ; இன்னும் செல்லுபடியாகவுள்ள ; பாறை வகையில் உள்நிலப் பாறைச் சட்டத்துடன் தொடர்புடைய, தனித்தனித் துண்டாயிராத ; இயந்திரச் சக்கர வகையில் விசையியக்கம் தூண்டுகிற; வாணிகத்துறை மீன் வகையில் மிகப் புதிதான; (தொ.) live load, பாரங்களின் குறுக்கசைவியக்கத்தால் ஏற்படும் பார அழுத்தம் ; live wire, வரம்புகடந்த விசைத்துடிப்புடைய ஆள்.

live[2], *v.* உயிருடனிரு, வாழ்ந்திரு ; பிழைத்திரு, சார்ந்து பிழை ; சார்ந்து வாழ்வுபெறு ; வாழ், வாழ்க்கையில் நடந்து கொள் ; வாழ்க்கை நடத்து ; வாழ்க்கைமுறை மேற்கொள் ; வாழ்நாள் கழி ; குறிக்கோள்வழி நில் ; வாழ்க்கை நடந்து காட்டு ; வாழ்வுமூலங் காட்டு ; வாழ்வாகக்கொள் ; வாழ்க்கை நுகர், வாழ்க்கையை முழுதும் அனுபவி ; நீடித்து வாழ் ; நீடித்திரு ; அழிவு கடந்து நிலவு ; தங்கிவாழ் ; தங்கியிரு ; இருப்பிடமாகக்கொள் ; (தொ.) live a double life, வேறுபட்ட இருவாழ்க்கை வாழ், இரண்டகவாழ்வு வாழ் ; live and learn, புதிய உண்மையை வரவேற்கும் முறையில் வாழ்ந்து தெரிந்துகொள்; live and let live, பிறர் மாசு கண்டும் காணாததுபோல் வாளா இரு ; வாழ்ந்து பிறரை வாழவிடு ; live close, கஞ்சத்தனமாக இரு, கருமித்தனமாக வாழ் ; live fast, தீய நடத்தையால் உடல்நலம் முதலியன கெடுமாறு வாழ், சிறிது காலத்திற்குள்ளே பெரிய அளவு ஆற்றலைப் போக்கடித்துக்கொள் ; live in a small way, மட்டான செலவில் அமைதியோடு வாழ், சிக்கனமாகவும் அமைதியாகவும் காலங்கழி ; live in clover, கவலையற்ற இன்பவாழ்க்கையிற் புரளு ; live on air, எதுவும் உண்பதாகக் காணப்படாதிரு, காற்றை உண்டு வாழ்வதுபோல் தோற்றமளி ; live out the night, இரவு முழுதும் இறவாது பிழைத்திரு; live to oneself, தனித்துவாழ், பிறரோடு ஒட்டாது ஒதுங்கிவாழ் ; live up to one's principles, live up to one's faith, நடைமுறை வாழ்க்கையில் கொள்கையைக் கடைப்பிடி ; live well, சுவை செறிந்த அருஞ்சிறப்புடைய உணவுகளை உண்டுவாழ்.

live'-bait, *n.* தூண்டில் இரையாக வைக்கப்பட்ட உயிருள்ள மீன் அல்லது புழு.

live'lihood, *n.* வாழ்க்கைத்தொழில், பிழைப்பு.

live'long, *a.* நெடு நீளமான, நெடு நீளமாக நீடித்த, விடாது நீண்ட.

live'ly, *a.* உயிர்த்தன்மையுள்ள; உயிராற்றலுடைய; உயிர்த் துடிப்புடைய ; உயிர்த்தோற்றமுடைய ; மெய்ப்பாடுடைய ; முனைப்பான விளக்கம் வாய்ந்த ; சுறுசுறுப்பான ; கிளர்ச்சி வாய்ந்த; எழுச்சிதருகிற; உவகையூட்டுகிற; சுவையார்ந்த; நிறவகையில் பளபளப்பான ; படகு வகையில் அலைமீது எழுந்தெழுந்து செல்கிற ; துள்ளிசையான ; இக்கட்டார்ந்த ; நெருக்கடியான.

liv'en, *v.* ஒளிரூட்டு, கிளர்ச்சியூட்டு.

live'-oak, *n.* அமெரிக்க நாட்டுப் பசுமை மாறாச் சீமை ஆல் மரவகை.

liv'er[1], *n.* ஈரற்குலை ; உணவாகப் பயன்படும் விலங்குகளின் ஈரல் தசை ; (தொ.) hot liver, மன எழுச்சி மிகுந்த இயல்பு; காதல் உணர்ச்சியுடைய தன்மை ; liver wing, சமைத்துப் பக்குவம் செய்யப்பட்ட கோழியில் ஈரற்குலையுள்ள வலப்புறம்; வலப்புறம் ; white liver, lily liver, கோழைத்தனம்.

liv'er[2] *n.* வாழ்பவர் ; (தொ.) good liver, நன்னடக்கையாளர், ஒழுக்கசீலர், தூய்மையர்.

liv'er-colour, *n.* ஈரல் நிறம், கருஞ்சிவப்பும் பழுப்பும் கலந்த நிறம்.

liv'er-complaint, *n.* ஈரல் நோய்.

liv'eried, *a.* தொழிலுடையணிந்த, பணிச்சின்னந் தாங்கிய.

liv'er-line, *n.* கைவரை நூலில் குறிப்பிடத்தக்க உள்ளங்கைக் கோடுகளில் ஒன்று.

Liverpud'lian, *n.* லிவர்பூல் (Liverpool) என்னும் நகரத்தில் வசிப்பவர் ; *a.* லிவர்பூல் நகரில் வசிக்கிற.

liv'er wort, *n.* ஈரல்நோய்க்குப் பயன்படுத்தப்பட்டு வந்த மூலிகைச் செடி வகை.

liv'ery[1], *n.* பணியாடை ; பணிச்சின்னம் ; நகரத்தொழிற் குழுவுறுப்பினர் அடையாள ஆடை ; தனியாடை ; தனித் தோற்றம் ; நகரத்தொழிற்குழுவின் உறுப்பாண்மை ; பணியாளர் உணவு உடை உதவிப்படி ; குதிரை தீவனப்படி ; (சட்.) உடைமை உரிமை ஒப்புவிப்பு ; (தொ.) at livery, தீர்மானிக்கப்பட்ட கட்டணத்திற்காகக் குதிரையைப் பேணித் தீவனமளித்து வைத்திருக்கும் முறையில் ; in livery, பணியாளர் உடை அணிந்து, வேலையாளாக ; livery company, தனியாடை அணிந்திருந்த முற்கால நகரத் தொழிற்குழு நிறுவனம் ; livery fine, முற்கால நகரத் தொழிற்குழு நிறுவனத்தில் உறுப்பினராவதற்குரிய கட்டணம் ; out of livery, பொதுமுறை உடையில், பணிச்சின்ன ஆடை அணியாது ; sue one's livery, மரபுரிமையாளர் என்ற முறையில் சொத்துரிமை ஒப்புவிக்கப் பெறுவதற்கான வழக்கினைத் தொடர் ; take up one's livery, ஏவற்பணி மேற்கொள்; நகரத்தொழிற் குழு உறுப்பினராகு.

liv'ery[2], *a.* ஈரல் போன்ற திட்பமுள்ள ; ஈரல் போன்ற நிறமுடைய; ஈரற்கோளாறுடைய ; மண்வகையில் உறுதியான; உடலமைதியற்ற ; சிடுசிடுத்த நிலையிலுள்ள.

liv'eryman, *n.* பணிச்சின்னமணிந்த ஊழியர் ; நகரத் தொழிற்குழு உறுப்பினர் ; படிபெற்றுக் குதிரைக்குத் தீவனமிட்டுப் பேணும் பொறுப்புடையவர்.

liv'ery servant, *n.* கஞ்சுகன்.

liv'ery stable, *n.* குறிப்பிட்ட கட்டணம்பெற்றுத் தீவனமளித்துப் பேணி வளர்ப்பதற்கும் வாடகைக்கு விடுதற்கும் உரிய குதிரை இலாயம்.

live'-stock, *n.* வீட்டு விலங்குகள்.

liv'id, *a.* வெளிறிய நீல நிறமான ; கன்றிப்போன; (பே-வ.) கடுஞ்சீற்றமுடைய.

liv'ing, *n.* பிழைப்பு, வாழ்க்கைத் தொழில் ; வாழ்க்கைத் தேவை ; வாழ்க்கைமுறை ; திருக்கோயில் மானியம் ; *a.* வாழ்கிற ; உடனிணை வாழ்வுடைய; இப்பொழுதுள்ள, ஒத்த கால வாழ்வுடைய ; முழுதொத்த, சரியொத்த ; வழக்காற்றிலுள்ள ; (தொ.) good living, இன்சுவை நல்லுணவு வாய்ப்புடைய இன்ப வாழ்வு; living coal, கங்கு, எரிந்துகொண்டிருக்கிற நிலக்கரி, அணையாமல் கனிந்துகொண்டிருக்கிற கரி; living death, நடைப்பிண வாழ்க்கை, நம்பிக்கைக்கு இடமற்ற இடரார்ந்த துன்பநிலை ; living language, பேச்சுவழக்கு மொழி ; living rock, தனித்துத் துண்டுபடாமல் நிலவுலகத் தோட்டின் நேர்பகுதியாக அமைந்துள்ள பாறை; living wage, வாழ்க்கை நடத்தப்போதிய குறைந்த ஊதியம்; within living memory, உயிரோடு இருப்பவர்களின் நினைவெல்லைக்குட்பட்ட,

liv'ing-room, *n.* பகல் நேர அறை.

livre, (பிர.) *n.* பழைய பிரஞ்சு நாணயம்.

lixiv'iate, *v.* கரையும் பொருளையும் கரையாப் பொருளையும் வடித்திறுத்துப் பிரித்தெடு.

liz'ard, *n.* பல்லி ; பாடும் அழகிய பறவை வகை.

lla'ma, *n.* தென் அமெரிக்காவில் கம்பளி போன்ற மயிரடர்ந்த குட்டையான திமிலற்ற பொதிசுமக்கும் ஒட்டக இன விலங்கு வகை ; ஒட்டக இன விலங்கின் கம்பளி மயிர்.

llaner'o, *n.* மரங்களற்ற தென் அமெரிக்க சமவெளியில் வாழ்பவர்.

lla'no, *n.* மரங்களற்ற தென் அமெரிக்க சமவெளி.

Lloyd's, *n.* கப்பற்பிணைக் காப்பீடேற்பவர்களின் சங்கம் ; (தொ.) Lloyd's list, கப்பல்துறைச் செய்தியிதழ் ; Lloyd's register, கப்பல்துறை ஆண்டுமுறை வகுப்பீட்டுப் பட்டியல்.

lo, *int.* அதோ காண் ; அந்தோ ; ஐயோ.

loach, *n.* உணவாகப் பயன்படும் நன்னீர்வாழ் சிறு மீன் வகை.

load, *n.* சுமை, பளு, தூக்கிச் செல்லும் பொருள்; கண்டி, பார அளவை ; எடையாகப் பயன்படும் பொருள் ; (மின்.) மின்விசை ஆக்கப்பொறியால் குறித்தகாலத்தில் வெளியேற்றப்படும் மின்னோட்ட அளவு ; மனச்சுமை ; கவலை, பொறுப்பு, அக்கறை; *v.* சுமை ஏற்று; பாரமேற்று; கப்பலில் சரக்கேற்று ; மேலும் பளுவேற்று ; பளுவாயிரு ; பளுவால் அழுத்து ; ஈயம் வைத்துப் பளுவாக்கு ; கப்பல் வகையில் எடையேற்றுக்கொள், பளுத்தாங்கு ; எடைப்பெருக்கத்துக் காகக் கலப்படஞ் செய் ; இன்தேறலுக்கு வலுவூட்ட மட்டப் பொருளைக் கல; தேவைக்குமேல் மட்டுமீறிக் கொடு; துப்பாக்கி முதலியவற்றிற்கு மருந்து திணி; பங்குகளைப் பெரிய அளவில் வாங்கு; வாழ்க்கைக் காப்பீட்டுத் தவணைகளுக்கு மிகைபடக் கட்டணம் விதி; (தொ.) loaded dice, எடைமாறுபட்டம் செய்யப்பட்ட கவறு ; take a load off one's mind, மனச்சுமையை அகற்று.

load'-displacement, load'-draught, *n.* எடைமான மூழ்கு வரை, ஏற்றிய எடையால் கப்பல் அமிழும் வரைமட்டம்.

load'ed, *a.* வாதீட்டில் ஒருதிசைச் சார்புமிக்க; வாத வகையில் போராட்டச் செய்திகளை உட்கொண்ட.

load'er, *n.* வேட்டையாட்களின் துப்பாக்கிகளுக்கு மருந்து திணிக்கும் பணியாள் ; பளுவேற்றும் பொறி ; (தொ.) breech loader, muzzle loader, single loader, மருந்து திணிக்கப்படும் துப்பாக்கி வகைகள்.

load'-line, *n.* பாரவரை, அளவு சுமை ஏற்றப்பட்டதைக் காட்டுங் கோடு.

loads, *n. pl.* (பே-வ.) ஏராளம், பெரிய அளவு, கழிமிகை.

load'stone, *n.* காந்தக்கல், காந்தம்.

load'-waterline, *n.*=load-line.

loaf [1], *n.* ரொட்டித்துண்டு, ஊதப்ப அளவுக்கூறு, பொங்கப்ப அளவுக்கூறு ; கூம்பு வெல்லக்கட்டி ; அச்சுவெல்லத் துண்டு ; கோசுக்கீரை வகைகளின் உருள் தலைப்பகுதி ; *pl.* loaves ; (தொ.) brown loaf, சலிக்காத மாவினால் செய்யப்பட்ட பழுப்புநிற ரொட்டி ; cottage loaf, household loaf, tinned loaf, ரொட்டி அளவுப் பாள வகைகள் ; loaf sugar, கூருருளை வடிவுள்ள சர்க்கரைக்கட்டி; அச்சுவெல்லத்துண்டு; loaves and fishes, சிறு வாழ்க்கை நலங்கள்.

loaf [2], *n.* சோம்பித்திரிதல் ; *v.* சோம்பித்திரி, காலத்தை வீணில் கழி ; உலாவு, மெல்ல நட.

loafi'ng, *n.* சோம்பித்திரிதல், காலத்தை வீணிற் கழித்தல்.

loam, *n.* களிச்சேற்று வண்டல்; செங்கல் செய்வதற்கான களிமணல் செத்தைக் கலவை ; மக்கிய பொருள் கலந்த வளமிக்க வண்டல் உரம்.

loan, *n.* கொடுக்கும் கடன்தொகை, கடனுதவித் தொகை ; இரவல்; கடன்கொடுப்பு; பொதுக் கடனளிப்பு, கடனளிப்புத் தொகை ; அரசியல் ஒப்பந்த உரிமைமுன்பணப் பேறு ; மேற்கொண்ட அயல்வரவுக் கூறு ; அயல்மொழி வரவுச் சொல் ; அயல் இனப்பண்பு ; *v.* கடன்கொடு ; கொடுத்து உதவு.

loan'holder, *n.* கடனீட்டுப் பத்திரங்களைக் கைவசமாகக் கொண்டிருப்பவர் ; பொருளை அடைமானம் பெற்றவர்.

loan'office, *n.* கடனுதவிப் பணிமனை ; அரசாங்கத்துக்குரிய தவணை வரிகளைப் பெறும் நிலையம்.

loan'society, *n.* கடனுதவிச் சங்கம், தவணைப் பங்குவரி செலுத்தும் உறுப்பினர்களுக்கு வரி நிதியிலிருந்து கடன் கொடுத்துதவும் சங்கம்.

loath, *a.* விருப்பமில்லாத ; (தொ.) nothing loath, ஒரு சிறிதும் விருப்பக்குறைவில்லாத, முழு விருப்புடனிருக்கிற.

loathe, *v.* வெறு, அருவருப்புடன் பார், வெறுப்புக்கொள்.

loath'ly, *a.* (செய்.) வெறுக்கத்தக்க, அருவருப்பான.

loath'some, *a.* அருவருப்பூட்டுகிற, வெறுக்கத்தக்க; குமட்டலுண்டாக்குகிற.

loath'-to-depart, *n.* பிரிவுவாழ்த்துப் பாடலிசை.

lob, *n.* மரப்பந்தாட்டத்தில் கீழ்க்கைப் பந்துவீச்சு ; புல்வெளி வரிப்பந்தாட்டத்தில் உச்சாணிப் பந்துவீச்சு ; *v.* உருண்டு புரண்டோடு ; ஏடாகோடமாக நட ; தட்டுத்தடங்கலுடன் இயங்கு ; பந்தைச்சுழற்றி உயர எறி ; பந்தைச் சுற்றுவிசையுடன் மெல்ல எறி.

lob'ate, *a.* (தாவ.) தொங்கு சதைகளுள்ள ; காது வகையில் மடல்களுள்ள ; நண்டுவகையில் கொடுக்குகளுள்ள.

lobb'y, *n.* தலைவாயில்; முகப்பு அறை; முகப்புக்கூடம்; இடைகழி ; தங்கறை ; புகுமுகக்கூடம், பல அறைகளுக்கு வழி முகமான பொதுக்கூடம் ; சட்டமன்றப் புறக்கூடம், பொதுமக்கள் உறுப்பினரைக் கண்டு பேசுவதற்குரிய புறவாரம் ; வாக்குப்பதிவு முன்னிட்டுச் சட்டமன்ற உறுப்பினர் கடந்து செல்லும் ஊடுவழிகள் இரண்டில் ஒன்று ; *v.* சட்டமன்ற உறுப்பினர் ஆதரவு தேடு, உறுப்பினர் ஆதரவு திரட்டிச் சட்டப் பகர்ப்பை நிறைவேற்று ; உறுப்பினரிடம் மன்றாடி வாக்குச் சேர் ; புறவாரங்களில் ஊடாடித் திரி.

lobe, *n.* மடல், தொங்குசதை ; இதழ், தட்டை வட்டாகத் தொங்கும் பகுதி ; அலகு, ஓரப்பிளவுக்கூறு ; (தொ.) lobe of ear, புறக்காதுமடல்.

lobel'ia, *n.* நீலம் சிவப்பு ஊதாநிறப் பிளவிதழ் மலர்களையுடைய மூலிகை வகைச்செடி.

loblolI'y boy, loblolI'y man, *n.* (கப்.) அறுவை மருத்துவரின் கைத்துணைவர்.

lobot'omy, *n.*=leucotomy.

lob'scouse, *n.* (கப்.) காய்கறி சேர்த்து வதக்கப்பட்ட இறைச்சி உணவுவகை.

lob'ster, *n.* பெருங்கடல் நண்டுவகை ; கடல்நண்டிறைச்சி ; (தொ.) lobster joint, குழலில் வேண்டிய ஒத்திசைவமைவு உள்ள பொருத்துக்கூறு.

lob'ster-eyed, *a.* முண்டக்கண்ணுடைய, முன்புறமாகப் பிதுங்கிய கண்ணுள்ள.

lob'ster-pot, *n.* அலவன் குடுவை, நண்டுகளைப் பிடிக்கப் பயன்படும் கூடை.

lob'ule, *n.* காதின் சிறுமடல் ; சிறு இதழ்.

lob'worm, *n.* மீன்தூண்டிலிற் பயன்படுத்தப்படும் மண்புழு.

local' [1], *n.* நிகழ்ச்சி நடந்த இடம்.

loc'al [2], *n.* நிலக்குடிவாணர் ; உள்ளூர்த் தொழில்வாணர் ; உள்ளூர் மேடைப் பேச்சாளர் ; பத்திரிகை உள்ளூர்ச் செய்தி ; திணை அகவட்ட அஞ்சல்தலை ; திணைவட்டத் தொடர்வண்டி ; (பே-வ.) உள்ளூர்ப் பொது அருந்தகம் ; *a.* இடஞ் சார்ந்த ; உள்ளூருக்குரிய ; நில வட்டாரத்துக்குரிய ; குறிப்பிட்ட இடத்திலுள்ள ; திணைச் சிறப்புரிமை வாய்ந்த ; திணைத் தனிப்பண்புகொண்ட ; திணை வட்டார எல்லைக்குட்பட்ட, எங்கும் பொதுப்பரவலாக இல்லாத ; (மரு.) நோய் வகையில் உறுப்பெல்லைக்குட்பட்ட, உடல் முழுதும் பரவாத ; (கண.) புள்ளி-கோடு முதலியவற்றின் திரிவட்டணை சார்ந்த ; அஞ்சல் மேல்வரிக் குறிப்பு வகையில் உள்ளூர் வட்டத்துக்குரிய ; (தொ.) local colour, உள்ளூர்

வண்ணம்; திணைமுறைப் பின்னணிப் பண்பு; ஓவியவகையில் தனிமுறைச் சிறப்புவண்ணக் கூறு; local government, வட்டார ஆட்சி; தலத்தாபன ஆட்சி; local time, வட்டாரப் பொழுதுக் கணிப்புப்படி அமைந்த நேரம்.

locale', *n.* = local[1].

loc'alism, *n.* தனியிடப்பற்று; திணை வட்டாரப்பற்று; திணை நிலைக் கருத்துக்குறுக்கம்; திணை வட்டாரச் சார்பு; வட்டார மரபு, வட்டார வழக்கு.

local'ity, *n.* திணையிடம், வட்டாரம்; நிகழ்விடம்; இடச் சூழல்; சூழமைவிடம், அமைப்பிடம்; இடக்குறிப்பு; வட்டார அறிவு.

loc'alize, *v.* இட எல்லைக்குட்படுத்து; இட எல்லையுள் வகுத்தமை; வட்டார எல்லையுட்படுத்து; வட்டாரப் பண்பூட்டு; நடுவாட்சி வலுத்தளர்த்து, கிளையாட்சி வலுப்படுத்து; தனிப்படுத்திக் கவனி, கவனத்தை ஒருமுகப்படுத்திக் காண்.

loc'als, *n. pl.* வட்டாரமுறைத் தேர்வுகள், வட்டாரந்தோறும் நடத்தப்படும் பல்கலைக்கழகத் தேர்வுகள்.

locate', *v.* இடங்குறிப்பிட்டுக் காண்; நுணுகி இடங்குறி; சூழிடங்காண்; எல்லைகுறி; இடத்தில் அமைவி, இடநிறுவு; சூழலில் அமைவி.

loca'tion, *n.* இட அமைவு; இடச்சூழல்; சரியான இடம்; திரைப்படப்பிடிப்பு வகையில் படத்தின் பகுதி எடுக்கப்படும் வெளியிடம்.

loc'ative, *n.* (இலக்.) இடவேற்றுமை, ஏழாம் வேற்றுமை; *a.* (இலக்.) இடவேற்றுமைக்குரிய, ஏழாம் வேற்றுமைக்கு உரிய.

loch, *n.* ஸ்காத்லாந்து நாட்டில் ஏரி; கடற்கழி, காயல்.

lock[1], *n.* மயிர்க்கற்றை; குடுமி; கம்பளிக்கொத்து; பஞ்சுத் திரள்.

lock[2], *n.* பூட்டு; பூட்டு விசைத்தாழ்; விசைத்தடுக்கு, சக்கரம் சுழலாமல் அல்லது விசை திரும்பாமல் அல்லது நெறி பிறழாமல் தடுக்கும் அமைவு; வெடிவிசைக்குமிழ்; கால்வாயின் தளமாற்ற அடைப்பமைப்பு; பொறித்தொழிலிற்குரிய செறி காற்றறையை அடுத்துள்ள இடைச்செறிவுக் காற்றறை; போக்குவரவு நெரிசல் நெருக்கடி; சக்கரச் சாய்வு வரம்பு, பின்சக்கரத் தளத்திலிருந்து முன்சக்கரம் சாயத்தக்க சாய்வின் உச்ச எல்லை; *v.* பூட்டு; தாழிடு; கதவு பெட்டி முதலியவற்றை இறுக்கி மூடிப் பூட்டு; வீடு முதலியவற்றின் கதவை மூடிப் பூட்டிடு; இசைவாகப் பூட்டப்பெறு; பூட்டையுடைய தாயிரு; ஆள் அல்லது பொருளைப் பூட்டி அடைத்து வை; சுற்றி வளைத்துக்கொள்; சேமித்து வை; தொலைவில் ஒதுக்கமாக்கி அமைக்கப்பட்டிரு; சிறை செய், காவலில் அடை; அடங்கி ஒடுங்கும்படி செய்; வெளியே நிறுத்திப் பூட்டிவிடு; பின்னி இணைந்துக்கொள்; பின்னிக் கொளுவி இயங்க முடியாமற் செய்; பின்னிக்கொண்டு இயங்கமுடியாமலிரு; அணைத்துக்கொள்; மற்போரில் கட்டிப்பிடித்துக் கொள்; நடக்கும்போது முன்வரிசை பின்வரிசை கால்கள் பின்னும்படி நெருங்கி அணிவகுத்து நடத்து; முன்சக்கரச் சாய்வாற்றலுடன் இயங்கு; கால்வாய்க்குத் தளமாற்ற அடைப்பமைப்பு ஏற்படுத்து; படகைத் தளமாற்ற அடைப்புக்களினூடாக ஏற்றி இறக்கிச் செலுத்து; தளமாற்ற அடைப்பு வழிச்செல்லு; (தொ.) Lock Hospital, மேகநோய் மருத்துவ நிலையம்; lock, stock, and barrel, எல்லாமாக, முழுநிறைவாக; under lock and key, பூட்டப்பட்டு; பத்திரமாக.

lock'age, *n.* கால்வாய்த் தளமாற்ற அடைப்புக்களினால் நிகழும் எழுச்சி வீழ்ச்சி அளவு; கால்வாய்த் தளமாற்ற அடைப்புப் பயனீடு; தளமாற்ற அடைப்பின் எண்ணிக்கை; கால்வாய் அணையடைப்பைப் பயன்படுத்துவதற்குரிய ஆய வரி.

lock'chain, *n.* வண்டியின் சக்கரங்களின் சங்கிலிப்பூட்டு.

lock'er, *n.* பூட்டுபவர்; பூட்டுவது; நிலைப்பெட்டி, சிறிய அடுக்குப்பெட்டி; பொதுக் கூடங்களில் தனிப்பூட்டு வாய்ப்புடைய நிலையடுக்கு; (கப்.) துணிமணிப்பேழை; ஆடையணிமணி அறை; பலநிலைப் பெட்டிகளில் ஒன்று; (தொ.) not a shot in the locker, பையில் பணமில்லை.

lock'et, *n.* பதக்கம்; வாளுறை மீதுள்ள பட்டைத்தகடு; பொன் வெள்ளியாலான சிறு பேழை.

lock'fast, *a.* பூட்டிப் பாதுகாப்பான.

Lock'ian, *a.* ஜான் லாக் (John Locke) என்ற மெய்விளக்க அறிஞரைப் பின்பற்றுகிற; லாக்கின் கோட்பாட்டைச் சார்ந்த.

lock'jaw, locked'-jaw, *n.* வாய்ப்பூட்டு நோய்.

lock'-keeper, *n.* கால்வாயின் தளமாற்ற அடைப்புக் காவலர்.

lock'man, *n.* 'மான்' (Isle of Man) தீவில் பிண ஆய்வாளரின் துணைவர்.

lock'nut, *n.* மரையாணி கழலாமலிருப்பதற்கான பூட்டமைவு.

lock'out, *n.* கதவடைப்பு, தொழிலாளரின் வெளியடைப்பு.

locks, *n. pl.* தலைமுடி, தலைமயிர்.

locks'man, *n.* = lock-keeper.

lock'smith, *n.* கொல்லன்; பூட்டுச் செய்பவன்; பூட்டுகளைப் பழுது பார்ப்பவன்.

lock'spring, *n.* கடிகார மேல்மூடியை மூடவைக்கும் சுருள் வில்.

lock'-stitch, *n.* இழைப்பூட்டுத் தையல்; ஈரிழைகள் உறுதியாகச் சேரும்படி தையல் இயந்திரத்தில் பின்னப்பட்ட பூட்டுத்தையல்.

lock'up, *n.* பள்ளி அடைப்பு; கடையடைப்பு; அடைப்பு நேரம்; மூலதனக் கட்டுப்பாடு; கட்டுப்பட்ட மூலதனம்; சிறைக்கூட மனை, கைதிகள் தற்காலத் தங்கலாகப் பயன்படும் மனை; சிறைக்கட்டறை.

loc'o[1], *n.* புகைவண்டி இயக்குபொறி.

loc'o[2], *n.* கால்நடைகளுக்கு மூளைக்கோளாறை உண்டு பண்ணும் அவரைக் குடும்பத்தைச் சார்ந்த அமெரிக்க நச்சுச் செடிவகை.

loc'o citat'o, (ல.) *adv.* ஏற்கனவே மேற்கோளாகக் காட்டப்பட்ட பகுதியில்.

loc'o-disease, *n.* அமெரிக்க அவரைக்குடும்ப நச்சுச் செடி வகையைத் தின்பதனால் கால்நடைகளுக்கு ஏற்படும் மூளை நோய்.

loc'omote, *v.* (உயி.) புடைபெயர், இடம்விட்டு இடம் பெயர்.

locomo'tion, *n.* புடைபெயர்வு; இடம்விட்டு இடம்பெயர்வு; இடம் பெயரும் ஆற்றல்; பயணம், செயற்கை இடமாற்ற முறை.

loc'omotive, *n.* தொடர்வண்டி இயக்கு பொறி; தன் ஆற்றலாலேயே இடம் பெயர்ந்தியங்கும் பொறி; இடம் பெயர்ந்து செல்ல உதவும் விலங்கு; *a.* புடைபெயர்ச்சிக்குரிய; இடம் பெயரும் ஆற்றலுடைய, ஓரிடத்தில் நிலைத்திராத, தானே தன் ஆற்றலால் புடைபெயர்ந்தியங்குகிற; இடத்துக்கிடம் கொண்டு செல்கிற; (பே-வ.) பயணத்துக்குரிய; (தொ.) locomotive engine, தன்னாற்றலால் இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்லும் இயந்திரம், தொடர்வண்டியின் இயக்கு பொறி.

loc'omotor, *n.* புடைபெயர் வண்டி, புடைபெயர்பவர்; *a.* இடம்விட்டு இடம்பெயரும் ஆற்றலுள்ள; ஓரிடத்தில் நிலைத்திராத.

loc'omotory, *a.* இயங்குகிற, ஓரிடத்தில் நிலைத்திராத, இடப்பெயர்வுடைய.

loc'ulus, *n.* (வில., தாவ., உள்.) பள்ளக்குழிகளுள் ஒன்று; *pl.* loc'uli.

loc'um ten'ens, *n.* பகர ஆள்.

loc'us, *n.* இடம், குறிப்பிடம், நிலையிடம்; (கண.) புள்ளி வரைதளம் ஆகியவற்றின் திரிபடிவம்; (தொ.) locus classicus, நன்கு தெரிந்த பகுதி; நன்கு சால்புறுத்தப்பட்ட கூறு; locus in quo, நிகழ்ச்சியிடம்; locus poenitentiae, பின்வாங்கு வாய்ப்பு, தீர்மானமான நடவடிக்கை எடுக்கும் வரையில் பின்வாங்குவதற்குத் தரப்பட்டுள்ள தறுவாய்; locus standi, இசைவேற்புடைய நிலை; தலையீட்டுரிமை, இடையீட்டுரிமை; முறைமன்ற வருகை உரிமை.

loc'ust, *n.* வெட்டுக்கிளி; அழிகேடன்; சால் விழுங்கி; நடு நிலக் கடலக மரவகையின் கனி; இலவங்க வகை மரக் கொட்டை; இலவங்க மரவகை நெற்று.

loc'ust-bird, loc'ust-eater, *n.* வெட்டுக்கிளியை உண்ணும் பறவை வகை.

loc'ust-tree, *n.* கொம்புபோன்ற காயுடைய நடுநிலக் கடலக மரவகை.

locu'tion, *n.* பேச்சு; பேசும்பாணி; சொல்நடை; சொற்றொடர்ப்பாங்கு; நடைமரபுப் பாங்கு.

loc'utory, *n.* துறவி மடங்களில் உரையாடல் அறை; வரவேற்புக்கூடம்; துறவிமட வாசிகளுக்கும் வெளியார்களுக்கும் இடையே பேட்டிக்கான கம்பியழி.

lode, *n.* நீர்செல்லும் வழி, வாய்க்கால்; நீர்வழி; சதுப்புநிலக் கழிநீர்க் கால்வாய்; சதுப்பு நிலங்களிலுள்ள உலோகத் தாதுக் கொடிக்கால்.

lode'star, *n.* வடமீன், வடதிசை காட்டும் துருவ நட்சத்திரம்; வழிகாட்டி; வழிகாட்டுங் கொள்கை; குறிக்கோள்; இலக்கு.

lodge, *n.* புறமனை, தோட்டவீடு; வேட்டைக் களமனை; முகப்புக் குச்சில்; கல்லூரி வாயிற்குடில்; தொழிற்சாலைப் புகுமுகச் சாவடி; சட்டமன்ற முகப்புக்கொட்டில்; தொடர்மனை முனங்கறை; வாயிலோன் இருக்கை; நற்கொத்தர் கிளைச் சங்கக் கூடம்; கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகக் கல்லூரித் தலைவரின் உறைவிடம்; நீர்நாயின் குடைவுத் தூறு; வட அமெரிக்க இந்தியரின் கூடாரம்; *v.* தங்கிடம் அளி; தங்கல் விருந்ினராக ஏற்று இடவசதி வழங்கு; துயிலிடமளி; தங்கிடமாயமை; உள்ளடக்கு, உட்கொண்டிரு; தங்குவி; தங்கவிடு; பதியவை; பதியவிடு; பாதுகாப்பாக வை; அடைக்கலமாக ஒப்புவி; கொடு, ஒப்படை; தங்கு; தங்கலாளராக இரு; வாடகை தந்து குடியிரு; (பே-வ.) முறையீட்டைப் பதிவுசெய்; (தொ.) grand lodge, நற்கொத்தர் சங்க ஆட்சிக்குழு.

lodge'ment, *n.* = lodgment.

lodg'er, *n.* தங்குபவர்; வாடகைக் குடியிருப்பாளர்; (தொ.) lodger franchise, பிரிட்டனின் மாமன்றத்துக்கு 1918 நிறையுரிமைக்கு முற்பட்ட வாடகைக் குடியிருப்போருடைய வாக்குரிமை.

lodg'ing, *n.* வாடகை அறை; வாடகை விடுதி; தங்குமிடம்; குடியிருப்பிடம்; (தொ.) lodging turn, இருப்பூர்தி நிலையத்தில் வாய்ப்பிடங் கொள்ளவேண்டிய தவணைமுறை.

lodg'ing-house, *n.* வாடகை விடுதிமனை; (தொ.) common lodging-house, இரவில் படுப்பதற்கான பொது அறை வாய்ப்புக்கொண்ட வாடகை விடுதி.

lodg'ings, *n. pl.* விடுதிக்குப் புறம்பாக வேறிடத்தில் வசிப்பதற்கான வாடகை அறைகள்.

lodg'ment, *n.* பற்றரண், படைத்துறையில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய இடத்தில் அமைக்கப்படும் தற்காலிகக் காப்பரண்; கால் வைப்பிடம்; புது நிலைகாப்பிடம்; புது வெற்றியிடம்; வீழ்ச்சி இடைக்கழிவுத் திரளை; இடைத்தங்கு வண்டற்கூளம்; (சட்.) பண ஒப்படைப்பு; ஒப்படைப்புப்பணம்.

lo'ess, *n.* ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் படியும் களிமண் கலந்த சாம்பல் மஞ்சள் நிறமான வண்டல் படிவு.

loft, *n.* பரண்; மேல்தளத்திலுள்ள சிறு அறை, மாடியிலுள்ள குறுகிய அறை; குதிரை இலாயத்தின் மேலுள்ள அறை; புருக்கூடு; புருக்களின் தொகுதி; திருக்கோயிலின் அடுக்குமேடையிருக்கை; மன்றத்தின் சூழ் அடுக்குமேடை; குழிப்பந்தாட்டப் பந்தடி மட்டையின் பின்புறச்சாய்வு; *v.* குழிப்பந்தாட்ட வகையில் பந்தை உயர அடி; பந்தை உயர அடித்து இடர் நீங்கிச்செல்லுவி; புருக்களைக் கூட்டில் அடை.

lof'ter, *n.* பந்தை உயரத்தில் அடிப்பதற்கான குழிப் பந்தாட்ட மட்டை.

lof'ty, *a.* ஓங்கிய, மிக உயரமான; வீறுர்ந்த, கம்பீரமான; இறுமாப்புள்ள; உயர்ந்த, மேன்மையான, விழுமிய; உயரப் பறக்கின்ற; பெருமிதமான, பெரும்போக்கான, ஆரவாரமான.

log[1], *n.* மரக்கட்டை; வெட்டப்பட்ட மரத்துண்டு; வீழ்த்தப்பட்ட மரப்பகுதி; கப்பலின் வேகத்தை அளக்குங் கருவி; தற்காலக் கூலித் தையற்காரனின் வேலைநேர அட்டவணை; *v.* துண்டுகளாக வெட்டு; கப்பல் சென்ற தூரத்தைக் குறிப்புப் புத்தகத்தில் பதிவுசெய்; கப்பல் வகையில் வேகமாக இடம் பெயர்ந்து செல்; (கப்.) நாள் விவரக் குறிப்பேட்டில் கப்பலோட்டியின் பெயரையும் செய்த குற்றவிவரத்தையும் பதிவு செய்; குற்றவாளிக்குத் தண்டப்பணம் விதி; (தொ.) float like a log, lie like a log, fall like a log, உதவியற்ற நிலையில் இயங்கு; have the log, throw the log, கப்பலின் வேகத்தை அளப்பதற்கான மிதவையைக் கையாளு; in the log, வெட்டப்படாத, முழு மரமாக உள்ள; King Log, பொம்மை அரசன், ஆடுதன் இராஜா; log cabin, மரக்கட்டைகளாலான குடிசை; roll my log and I'll roll yours, ஒருவருக்கொருவர் துணையுதவி செய்துகொள்ளு; sail by the log, கப்பலின் அமைவு நிலையை வேகமானியினால் கணக்கிடு.

log[2], *n.* = logarithm.

log'an, *n.* = logan-stone.

log'anberry, *n.* ஒட்டுக் கனிவகை.

log'an-stone, *n.* தொட்டால் ஆடும் சமநிலையில் நிறுத்தப் பட்ட பளுவான கல்.

logaoed'ic, *n.* கிரேக்க மொழியில் முதலசை நீண்ட மூவசை ஈரசை விரவிய யாப்பு வகை; *a.* முதலசை நீண்ட மூவசை ஈரசை விரவும் யாப்புமுறை சார்ந்த.

log'arithm, *n.* (கண.) மடக்கை, எண்ணுக்கு நிகரான மதிப்புடைய கட்டளை விசை எண்ணின் மடங்கெண்; (தொ.) common logarithm, பத்தினைக் கட்டளை மூல எண்ணுகக் கொண்ட மடக்கை.

log'-board, *n.* நாள்விவரக் குறிப்புப் பலகை, கப்பல் வேகம் முதலியவற்றை நாள்விவரக் குறிப்பேட்டில் எழுதுவதற்கு முன் குறித்துக்கொள்வதற்குப் பயன்படும் மடக்கேடு.

log'-book, *n.* (கப்.) நாள்விவரக் குறிப்பேடு; பயண விவரக் குறிப்பேடு.

log'-cabin, *n.* கட்டைகளால் இயன்ற குடில்.

loge, (பிர.) *n.* நாடகக் கொட்டகை மூடிருக்கை.

logg'erhead, *n.* மரமண்டை, மூடன்; வெப்பூட்டத்தக்க இருபுற உருளைகளையுடைய நிலக்கில் உருக்குகருவி; படகில் கயிறுகளின் திசைத்திருப்பத்துக்குரிய நிலைக் கம்பம்; பெருந்தலைக் கடலாமை வகை; பெருந்தலைப் பறவை வகை; (தொ.) at loggerheads, at loggerheads with, ஒவ்வாதிருக்கும் நிலையில், சச்சரவிடும் நிலையில்.

logg'ia, *n.* திறந்த பக்கங்களுள்ள படிமேடை இருக்கை; மேல்வளைவோடு கூடிய சாலைப்பாதை; *pl.* logg'ias, logg'ie.

lo'gic, *n.* ஏரணம், அளவை நூல்; தருக்கமுறை; தருக்க முறை ஏடு; வாதமுறை; வாதப்போக்கு; தருக்கத்திறமை; தருக்கம், வாதம்; முறைமையாற்றல்; மாறா நியதி, விலக்க முடியா நிலை; (தொ.) is not governed by logic, குயுக்தியானது, தருக்க நூலுக்குப் புறம்பானது.

lo'gical, *a.* நேர்மையான; வாதப் பொருத்தமுடைய; காரண காரியத் தொடர்புடைய; நேர்மைப்பொருத்தமுடைய பொருத்தமாக வாதிக்கப்பட்ட; வருமுறையான, உய்த்துணரும் இயல்புடைய; தருக்கமுறைப்படக்கூடிய; எளிதில் நிலைநாட்டக்கூடிய; எதிர்வாதத்துக்கு நிற்கக்கூடிய; நம்பத்தக்க; சரியான வாதத்திற்கு இடந்தருகிற; பகுத்தறிவுக்குப் பொருத்தமான; (தொ.) logical designer, கணிப்பியந்திரங்களை அமைக்கும் திட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்.

logi'cian, *n.* அளவை நூல் வல்லான், தார்க்கிகன்.

lo'gie, *n.* நாடக மேடைகளில் பயன்படுத்தப்படும் துத்தநாகப் போலி அணிமணி.

log'ion, *n.* புறப்பதிவுப் பொன்மொழி, விவிலிய நற்செய்தி வரலாறுகள் நான்கினுக்கும் புறம்பாகப் பதிவு செய்யப்பட்டு நமக்குக் கிடைத்துள்ள இயேசுநாதரின் வாயுரைப் பொன்மொழி; *pl.* log'ia.

logis'tic, *a.* கணிப்பியல் திட்டம் சார்ந்த; தகவுப்பொருத்த மான, சரி அளவுப்பொருத்தமுடைய.

logis'tical, *a.* = logistic.

logis'tics, *n. pl.* போர்வீரர்களை அணிவகுத்து நடத்துங் கலை; கடற்படைக்குத் தேவையானவற்றை அளித்துக் காப் பாற்றுங் கலை.

log'line, *n.* மிதவை பொருத்தப்பட்ட கம்பிக்கயிற்றினை யுடைய கப்பலின் வேகமானி.

log'ogram, *n.* சுருக்கெழுத்திற் சொல்லெழுத்து.

log'ograph, *n.* அச்சிடுவதற்குப் பயன்படும் வகையில் ஒரே பகுதியாக வார்க்கப்பட்ட சொல்.

logog'rapher, *n.* ஹெரோடாடஸ் (Herodotus) என்பவ ருக்கு முன்னிருந்த கிரேக்க உரைநடை வரலாற்று ஆசிரியர் களுள் ஒருவர்; மேடைப்பேச்சு எழுத்தாளர்.

logog'raphy, *n.* சொல்லச்சு முறை.

log'ogriph, *n.* மாற்றெழுத்துப் புதிர்.

logom'achy, *n.* சொற்போர்.

log'os, *n.* 'சொல்'; வாக்கீசன்.

log'otype, *n.* அச்சுமுறையில் இணையெழுத்து வார்ப்பு; சொற் பாள வார்ப்பு.

log'wood, *n.* அமெரிக்க சாய மரவகை

loin'-cloth, *n.* அரைத்துணி.

loins, *n. pl.* அரை, இடுப்பு, போலி விலா எலும்புகளுக்கும் இடுப்பு எலும்புகளுக்கும் இடைப்பட்ட பகுதி; தண்டெ லும்பின் இடுப்புப்பகுதியை உட்படுத்திய இடுப்பிறைச்சி; (தொ.) fruit of one's loins, child sprung from one's loins, ஈன்றெடுத்த மகவு; gird up one's loins, பயணம் முதலிய வற்றிற்கு வரிந்துகட்டு, முயற்சிக்கு முன்னெருக்கமாய் அமை.

loir, *n.* சுண்டெலிக்கும் அணிலுக்கும் இடைப்பட்ட வளை தோண்டி வாழும் கொழுத்த கொறிவிலங்கு வகை.

loit'er, *v.* சோம்பித்திரி; வறிதே காலந்தாழ்த்து; இடை யிடையே தங்கித் திரி; அலைந்து திரிந்து பொழுது போக்கு; சுற்றித்திரி; பின்தங்கு.

loll, *v.* நா வகையில் வெளியே நீட்டித் தொங்கவிடு; சோம்ப லாக நில்; கிடந்துருள்; சாய்ந்திரு; செயலற்ற முறையில் மேலே சாய்ந்துகிட.

Loll'ard, *n.* பதினான்காம் நூற்றாண்டில் வைகிளிப் (Wyclif) என்பவரைப் பின்பற்றிய சமய எதிர்ப்பாளருள் ஒருவர்.

loll'ipops, *n. pl.* இனிப்புத் தின்பண்டம், சர்க்கரையில் பொதிந்த பழப்பண்டம்.

loll'op, *v.* (பே-வ.) தள்ளாடு, தடுமாறி விழு; தயங்கி நட, சோம்பலோடு அருவருப்பாக நடந்துசெல்.

Lom'bard, *n.* இத்தாலி நாட்டை ஆரும் நூற்றாண்டில் கைப்பற்றியவர்களுள் ஒருவர்; லம்பார்டியில் வாழ்பவர்; *a.* இத்தாலி நாட்டை ஆரும் நூற்றாண்டில் கைப்பற்றிய செர்மானியர்களைச் சார்ந்த; லம்பார்டி பகுதிக்குரிய; (தொ.) Lombard street, வட்டித் தொழிலாளர் வாழ்ந்துவந்த பொரு ளகங்கள் நிரம்பிய லண்டன்மாநகர்த் தெரு.

Lombard'ic, *a.* லம்பார்டியைச் சார்ந்த; லம்பார்டி பகுதி மக்களுக்குரிய; 7-13-ஆம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட சிற்பப் பாணிக்கு உரிய; 15-16-ஆம் நூற்றாண்டுகளுக்குரிய ஓவியக்கலைப் பாணிக்கு உரிய.

lom'ent, *n.* முதிர்வுற்றபோது ஒவ்வொரு விதைக்கணுவாக வெடிக்கும் காய் நெற்றுவகை.

Lo'ndon clay, *n.* (மண்.) தென்கிழக்கு இங்கிலாந்தின் மூன்றும் பிரிவு மண்ணியற் படிவு.

Lo'ndon ivy, *n.* லண்டன் மாநகர மூடுபனி.

Lo'ndon particular, *n.* (பே-வ.) லண்டன் நகரத்திற்கே தனிச் சிறப்பாயமைந்த மூடுபனி வகை.

Lo'ndon pride, *n.* மஞ்சள் வெண்மை சிவப்பு முதலிய கலப்பு மஞ்சரிப் பூக்களையும் கொத்தான இலைத்தொகுதியையும் கொண்ட மலர்ச்செடிவகை.

Lo'ndon smoke, *n.* மங்கிய சாம்பல் நிறம்; வெளிறிய ஈய நிறம்.

lone, *a.* தனிமையான, துணையற்ற, தோழமையற்ற; அரு நிகழ்வான; பலகாற்போகாத; குடியற்ற, குடியில்லாத, தனித்த; தனிமையை உணர்கிற; தனிமையை எண்ணச் செய்கிற; (தொ.) in lone hand, விளையாட்டில் மற்றெல் லோரையும் தனித்தெதிர்க்கும் நிலையில்.

lone'liness, *n.* தனிமை.

lone'ly, *a.* தனித்த, துணையற்ற; ஒதுக்கமான; ஆளரவ மற்ற; நடமாட்டமில்லாத.

long[1], *n.* நெடுங்காலம்; நீளிடை, நீண்ட கால இடைவெளி; விரிவிளக்கம்; நீளசை; நெடில் ஒலி; (க-க.) நீள்பாளம்; (பே-வ.) நெடு விடுமுறை; (இசை.) ஈரிடைச்சுரம்; *a.* நீள மான; நெடிய, நெட்டையான; நீள்கால அளவுடைய, நீடு நிகழ்கிற; நெடுந்தொலைவான; நெடுந்தொலைவு எட்டுகிற; நெடுந்தொலைவாற்றலுடைய; தலைவகையில் உயரமிக்க; முக வகையில் ஒடுங்கிய; சோர்ந்த தோற்றமுடைய; கால நீடித்த; நீடுவழக்கான; நீடித்த பழமையுடைய, நெடுங் காலத்திய; முன்னோக்குடைய; தொலைநோக்குடைய; தொலை விளைவுடைய; தொலைவிலிருந்து செயலாற்றத்தக்க; கண் பார்வைவகையில் தொலைவுத்திறக் கோளாறுடைய; நீட்டான; நீட்டளவுடைய; காலநீடிப்புடைய; நெடிது தொடர்ந்த; நீளமிக்க; நீண்டுசெல்கிற; அளவில் விஞ்சிய; பெரிய; நெடுநீளமான; வரம்பு கடந்த நீட்சியுடைய; சோர் வூட்டுகிற; ஒலி-அசை வகையில் கால அளவு நீட்டிப்புடைய; *adv.* நீண்டகாலமாக; நெடுநேரமாக; காலநீடித்து; கால முழுவதும்; நீண்டகால அளவில்; (தொ.) as long as, so long as, என்றநிலை இருக்குமட்டும்; என்றநிலைமட்டும் இருக்கு குமானால், என்றநிலையில்; be long doing, be long in doing, செயலில் மிகக் காலந்தாழ்த்து; மிக மெல்லச் செயலாற்று; has a long arm, நெடுந்தொலைவிற்குத் தன் ஆற்றலை உணர்த் தக்கவுடையவர்; in the long run, முடிவில், பல சூழ்நிலை மாற் றங்களுக்குப் பிறகு, வேறுபடு நிலைகளுக்குப் பிறகு; long after, நெடுநாளைக்குப்பிறகு; நெடுங்காலத்துக்குப் பின்; long ago, நெடுங்காலத்துக்கு முன்; long before, நெடிது முன்னதாக; விரைவில், சீக்கிரத்தில்; long bowls, நெடுந் தொலைவிலிருந்து போடுதல்; long butt, மேசைக்கோற் பந்தாட்டத்தின் நீண்ட கோல்; long clay, திருக்கோயிற் பாதுகாவலரின் புகைக்குழாய்; long cloth, நீண்டதாக நெய்யப்பட்ட துணிவகை; long date, பட்டய நிறைவு நாள் வகையில் நெடிது நாள் இடைவிட்ட காலம்; long drink, உயரமான கண்ணாடிக் கோப்பைகளில் கொடுக்கப்படும் இன் தேறல் வகை; long ears, கழுதை இயல்பு, மடமை; long face, ஒளியற்ற முகம், துயரார்ந்த முகம்; சோர்ந்த முகத்தோற்றம்; long field, மட்டைப்பந்தாட்டத்தில் பந்து வீசுபவருக்குப் பின்னுள்ள விளையாட்டுக் களப்பகுதி; long figure, long price, மிகுவிலை, பெருவிலை, தாங்கற்கரிய விலை; long head, இயல்பாகவுள்ள நீளத்தைவிட மிகுதி யாக நீண்ட தலை; அறிவுக்கூர்மை, மதிநுட்பம், முன்னறிவு; long hop, மட்டைப்பந்தாட்டத்தில் குறுகிய தொலைவில் படுமாறு வீசப்படும் பந்து; long jump, நெடுந்தாண்டல்; long measure, நீட்டளவை; long metre, அடிக்கு எட்டு அசை கள் கொண்ட நாலடிப் பாசுர யாப்பு; long odds, சூதாட்டத் தில் சிறிதும் சமமற்ற தன்மையில் பணயம் வைத்தாடுதல்; long off, long on, மட்டைப் பந்தாட்டத்தில் பந்து வீசு பவரின் இடப்புறம் வலப்புறம் அல்லது பின்புறத்தில் இருக்கும் ஆட்டக்காரர்; Long Parliament, (வர.) 1640-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு 1660-ஆம் ஆண்டில் கலைக்கப் பட்ட பிரிட்டனின் மாமன்றம்; long pig, மனிதத் தசை, மனித ஊனுண்ணிகள் மனித ஊனுக்கு வழங்கும் பெயர்; long pull, சில இன்தேறல் விடுதிகளில் வாடிக்கைக்காரர் களைக் கவருவதற்காகக் கொடுக்கப்படும் மிகுதிப்படி அள வான இன்தேறல்; long robe, வழக்குரைஞர் உடை;

long service, நீண்டகாலப் படைத்துறைப் பணி, பன்னீராண்டு படைப் பணி முறை; long sight, தொலைப் பார்வைக் கோளாறு; தொலை நோக்கு; நுண்காட்சித் திறம்; long suit, சீட்டாட்ட வகையில் ஒரே இனத்திற் பல சீட்டுக்கள் கொண்டகை; Long Tom, நெடு நீளமான அல்லது நெடுந்தொலை விற்குச் சுடக்கூடிய துப்பாக்கி வகை; long tongue, வம்பளப்பு; long vacation, பெரிய விடுமுறை; long waist, ஆடையில் மிகவும் கீழாகவுள்ள இடுப்புப்பகுதி; long wave, வான்தந்தி வகையில் எண்ணூறு கோல் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய அதிர்வுகள் கொண்ட வானலை; long wind, இடை ஓய்வின்றி நெடுந்தொலை ஓடும் ஆற்றல்; சோர்வூட்டுமளவில் நீடித்துப் பேசும் அல்லது எழுதும் ஆற்றல்; make a long arm, மேசையில் இருப்பதை எட்டியெடுப்பதற்குக் கையை நீட்டு; make a long nose, விரல்களை மூக்கிற்கெதிராக வெட்டி இகழ்ச்சிக் குறிப்புக்காட்டு; take long views, பின்விளைவுகளை ஆராய், வருங்கால விளைவுகளைச் சிந்தி; the long and the short of it, அதைப்பற்றிச் சொல்லக்கூடியவை சொல்லவேண்டியவை எல்லாம்.

long[2], *v.* விரும்பு, அவாவுறு, வேணவாக்கொள்.

long'ago, *n.* தொல்பழங்காலம்; *a.* தொல்பழங்காலத்திய.

long'-bill, *n.* நீண்ட அலகுள்ள சதுப்புநிலப் பறவை வகை.

long'boat, *n.* பயணக்கப்பலின் மிகப் பெரிய படகு.

long'-bow, *n.* கையால் வளைத்து இறகிணைப்புடைய நீண்ட அம்பு கொண்டு எய்யும் வில்; (தொ.) draw the long-bow, உயர்வுநவிற்சியும் பொய்ப்புனைவுஞ் சேர்த்து நெடுநீளச் சரடுவிடு.

long'-clothes, *n.* கைக்குழந்தையின் ஆடைகள்.

long'distance, *a.* காலநிலை முன்னறிவிப்பு வகையில் நெடுநாள் முன்னதாக அறிவிக்கப்பட்ட.

long'-drawn, long'-drawnout, *a.* வரையறையின்றி நீட்டிக்கப்பட்ட, வரம்புமீறி நாட்கடத்தப்பட்ட.

lon'gerons, *n. pl.* வானூர்தியின் நீட்டுவாட்டமான உடற்பகுதி அல்லது இயந்திரத்தின் மேலுறை உறுப்பு.

longev'al, longaev'al, *a.* நீண்டநாள் உயிரோடிருக்கிற, நீடு வாழ்கிற.

longev'ity, *n.* பன்னுள் வாழ்வு, நீள்வாணுள்.

long'-hand, *n.* சாதாரண எழுத்துமுறை.

longicaud'ate, *a.* நீண்ட வாலுடைய.

lon'gicorn, *n.* இழைபோன்ற நீண்ட உணர்கொம்புடைய வண்டு வகை.

lon'gitude, *n.* நிரைகோடு, தீர்க்காம்ச ரேகை; நீளப்பாங்கு.

longitud'inal, *a.* நீளப்பாங்கான, நீட்டுப்போக்கான; நிரைகோடு சார்ந்த.

long'-liver, *n.* நீடுவாழ்பவர்.

Long'obard, *n.* இத்தாலி நாட்டில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் படையெடுத்த செர்மானிய இனத்தவருள் ஒருவர்; இத்தாலியில் லம்பார்டி பகுதிக்கு உரியவர்.

long'-playing, *a.* ஒலிப்பதிவுத் தட்டுவகையில் உள்வரிகளின் மிகு நுட்பங் காரணமாக மிக நீடித்த பாடல்கள் அடங்கிய.

longs and shorts, *n.* லத்தீன் பாவகை; (க-க.) நீளமும் குட்டையுமான பாளங்கள் மாறிமாறி வைக்கப்பட்டுள்ள நிலை.

long'shanks, *n.* நீண்ட காலுடைய பறவை, ஆள்காட்டுங் குருவி, பவழக்காலி.

long'-shore, *a.* கடற்கரையருகில் உள்ள; கடற்கரையருகில் ஊடாடுகிற; கடற்கரையோரமாக வேலைசெய்கிற.

long'-shore-man, *n.* கரையோரப் பகுதியில் கப்பலிற் சரக்கேற்றுபவர்; கடற்கரையோரமாக மீன்பிடிப்பவர்.

long'-spun, *a.* சலிப்பூட்டுகிற.

long'-stand'ing, *a.* நெடுங்காலமாகவுள்ள, நீடித்துநிலவுகிற.

long'stop, *n.* மட்டைப்பந்தாட்டத்தில் இலக்குக் காவலருக்குப் பின்னின்று அவரால் விடப்பட்ட பந்துகளைத் தடுப்பவர்; *v.* இலக்குக் காவலருக்குப் பின்னின்று அவரால் பிடிக்காமல் விடப்பட்ட பந்துகளைத் தடு.

long'-suff'ering, *n.* சகிப்புத்தன்மை, நெடுங்காலம் தீங்குகளைப் பொறுமையோடு தாங்கியிருத்தல்; *a.* தீங்குகளை நெடுங்காலம் பொறுத்துக்கொண்டுள்ள.

long'-term, *a.* நெடுங்கால எல்லையுடைய; திட்டவகையில் தொலைநாட்குறிக்கொண்ட, நீண்டகாலத்ததான, குறுகிய காலத்ததல்லாத.

long'-tongued, *a.* வாய்நீண்ட, வாயாடியான; பிதற்றுகிற.

longue haleine, (பிர.) *n.* நீடரும்பணி, நீடித்த விடாமுயற்சியும் உழைப்பும் தேவைப்படும் வேலை; புத்தகப்படைப்புத் தொழில்.

longueurs, (பிர.) *n. pl.* புத்தகம் படம் நாடகம் முதலியவற்றிற் சோர்வூட்டும் பகுதி.

loo, *n.* வட்டமேசையில் ஆடப்படும் சீட்டாட்ட வகை; சீட்டாட்டத்தில் தண்டத்தொகையைப் பொதுநிதிக்குச் செலுத்தும் நிலை; *v.* ஆட்டத்தவறுகளுக்காகத் தண்டத்தொகைக்கு உட்படுத்து; (தொ.) unlimited loo, பொதுநிதியில் முன்னமேயுள்ள தொகைக்குச் சமமாகத் தண்டத் தொகை விதிக்கப்படும் சீட்டாட்ட வகை.

loob'y, *n.* முட்டாள், அறிவிலி.

loof'ah, *n.* உடல்தேய்ப்புக்குரிய சுரை வகையின் நெற்று.

look, *n.* நோக்கு, பார்வை; நோட்டம்; நோக்குந் திசை; தோற்றம்; சாயல்; *v.* நோக்கு, காண்; நோட்டமிடு; உற்றுப்பார்; நாடு, கவனி; கவனம் செலுத்து; திரும்பிப் பார்; பக்கமாகத்திரும்பு; கண்ணுறு, எதிர்முகமாகு, தோற்று, தோற்றமளி, போலத்தோன்று; திசையில் சாய்வுறு, திசைநாடிச் செல்வதுபோன்றிரு; எதிர்நோக்கு; நோக்கால் உணர்த்து; நோக்கால் தெரிவி; தேர்ந்துகாண், தேர்ந்தாராய்; கண்டறுதிசெய், கண்டுறுதி செய்; திசைநோக்கி அமைவுறு; (தொ.) look about, விழிப்புடனிரு, சுற்றி நோக்கு; look about one, சூழ்நிலை ஆய்ந்துகாண்; திட்டமிடுமுன் சூழ்ந்து ஆய்வுசெய்; look after, பார்வையினூற் பின்தொடர்; நாடு, தேடு; கவனித்துப் பார்த்துக்கொள்; பேணு; look ahead, திரும்பிநோக்கிச் செல்லுமிடமறிந்துசெல்; look alive, விரைவுபடுத்து; look as if, என்ற நிலையே போன்ற தோற்றமளி; look back, முயற்சியில் தயக்கங்கொள்; பின்னேக்கு; சென்றது கருதிப்பார்; look before you leap, பதற்றமான செயலை நீக்கு, எண்ணித் துணி; look black, வெகுளி அல்லது வெறுப்பினைக்காட்டு; புருவங்களை நெரி; look blue, அச்சங்கொள், பயந்து தோன்று; கிளர்ச்சியின்றிச் சோர்வாகத் தோற்றமளி; look down one's nose at, (பே-வ.) உள்ளார்ந்த ஏளன வெறுப்புடன் நோக்கு; look down upon, தருக்குடன் நோக்கு; look for, எதிர்பார்; எதிர்நோக்கி விழிப்பாயிரு; அவாவுடன் நாடு; நாடு, தேடு; look forward to, அவாவுடன் எதிர்நோக்கு; look in, தற்செயலாகச் சென்று காண், வழக்கமுறையில் சென்றுகாண்; look into, ஆராய்; ஆழ்ந்து நுணுகிக் காண்; நுணுகிக் கற்றுராய்; look like, தோன்று; போன்றிரு, வரும் என்ற நிலையைக் குறிப்பாய்த் தோற்றுவி; முன்கூட்டித் தீங்கு குறி; முன்கூட்டி நலங்குறி; look on, காட்சியாகக் கண்டிரு, வாளா பார்த்துக்கொண்டிரு; கருது, பாவித்துநடத்து; look one in the face, துணிவாக நேருக்குநேர் நோக்கு, அஞ்சாது நோக்கு, தளராது நோக்கு; look oneself again, உடல்நலம் திரும்பிய தோற்றமளி; look over, தேர்ந்தாராய்; சட்டை செய்யாது விட்டுவிடு; look round, வருநிலைகள் ஆய்ந்து மதி; look sharp, காலங்கடத்தாது சுறுசுறுப்பாயிரு; looks his age, வயதிற்கேற்ற தோற்றமுடையவராயிருக்கிருர்; look small, அற்பத்தனமாகத் தோற்று; look through, துருவிக்காண், ஊடுருவிப்பார், மீட்டும் மீட்டும் நன்காராய்; வழுவின்றி ஆராய்; ஊடாக நன்கு வெளிப்படத்தோன்று; look to, நன்காராய், ஆராய்ந்துபார், கவனமாகப் பார்த்துக்கொள், கவனமாக இரு.

look'ing-glass, *n.* முகக்கண்ணாடி, நிலைக்கண்ணாடி.

look'-out', *n.* விழிப்பு; காவல்; காவல்தளம்; காவலாள்; காவற்குழு; காவற்படகு; சூழ்நிலைக்காட்சி; வருவாய்ப்பு வளநிலை; தனிப்பொறுப்பு.

loom[1], *n.* நெசவுத்தறி; துடுப்பின் கைப்பிடி.

loom[2], *n.* கடலோடிகளின் தெளிவற்ற முதல் நிலத்தோற்றம்; *v.* தெளிவின்றித் தோன்று; அச்சுறுத்தும் உருவில் பருத்து விரிந்து தெளிவின்றித் தோன்று.

loom[3], *n.* கடற் பறவை வகை.

loon, *n.* நீர்வாழ் பறவை வகை.

loon'y, *n.* பைத்தியக்காரன், கிறுக்கன்; *a.* பைத்தியமான, கிறுக்குப் பிடித்த.

loop, *n.* கண்ணி, கயிற்று மடிப்பு வளையம்; கொளுவி, உலோகக் கம்பிகளின் கொக்கி வளையம்; அணியிழைச் சடை மடி; இருப்புப்பாதையின் மடிகிளை, பிரிந்துசேரும் கிளை; மையவிசை இருப்புப்பாதையின் சுழல்மடி வளைவு; விமானியின் கரண வளைவு; மிதி வண்டியின் கரண வளைவு; பனிச் சறுக்காட்டத்தில் ஒருதிசைச் சறுக்கு வளையம்; *v.* இழை-கயிறு முதலியவற்றால் கண்ணியிடு; மடிப்பு வளையமிடு; கொக்கிபோல் வளையச்செய்; கொக்கிபோல் வளை; கொளுவு; வளைந்துமடி; சடை மடி புனைவி; சூழ், சூழ்ந்துபற்று; வளையங்களால் இணை; கொளுவியால் பொருத்து; (தொ.) looping the loop, கரண வித்தை.

loop'er, *n.* கம்பளிப்புழு, உடலை வில்போல் வளைத்துச் சுருக்குவதன்மூலம் நகர்ந்து செல்லும் புழுவகை; கொக்கி அல்லது கண்ணி போடுவதற்கான தையற்பொறி அமைவு.

loop'-hole, *n.* சுடு மதிற்புழை; காலதர்; புழைவாய்; காண்பதற்குரிய துளை இடைவழி; தப்பித்துக்கொள்ளும் வழி; சட்டமீறி நடப்பதற்குரிய வகைதுறை; *v.* சுவரில் புழைவாய் அமை.

loop'-line, *n.* பிரிந்துசென்று மீண்டும் இணையுங் கிளை இருப்புப்பாதை.

loose, *n.* விடுபாடு; தடைநீக்கம்; கட்டுத்தளர்வு; தளர்ச்சி நிலை; தடையற்ற செயலுரிமை; செல்வழி; போக்கிடம்; செல்வழி வகைதுறை; செல்திற உரிமை; *a.* தளர்ந்த; கட்டிறுக்கமற்ற; உறுதியற்ற; விறைப்பற்ற; இழுத்துக் கட்டப்படாத; அடர்த்தியற்ற; சுருக்கச்செறிவற்ற; கட்டற்றுப் பெருகிய; கட்டமைவற்ற; கட்டுப்பாடற்ற; தளர்ச்சியான; உதிரியான; விடுபட்ட; எளிதில் பிரிக்கக்கூடிய; (வேதி.) இணைந்திராத, தனிநிலைப்பட்ட; தனித்துத் தொங்குகிற, உறுதியாக இணைக்கப்படாத; பொருத்தப்படாத; வரையறையற்ற; திட்டவட்டமாயில்லாத; தெளிவற்ற; பொருத்தமற்ற; சரியாயில்லாத; திருத்தமாயில்லாத; மேலாள் வகையில் கண்டிப்பற்ற; சரியாகச் செயலாற்றாத; விதிமுறைக் கட்டுப்பாடற்ற; இலக்கணமுறையிலமையாத; ஒழுக்கக் கேடான; நெறிதவறின; பேச்சழுத்தமில்லாத; நடைக் கோட்டமுடைய; செயல்திட்பமற்ற; மொழிபெயர்ப்பு வகையில் சொல்லுக்குச்சொல் நேரடியாயிராத; *v.* விடுவி; தளர்த்து; படகு வகையில் கட்டவிழ்; முடிச்சுக் கழற்று; நங்கூரம் பற்று நெகிழ்வி; முடி கலை; அம்பு செல்லவிடு; விட்டெறி, எய்; தடையகற்று; (தொ.) at a loose end, உறுதியான அலுவலற்ற, திட்டமான தொழிலற்ற; loose bowels, தடையற்ற வயிற்றுப்போக்கு; loose bowling, மரப்பந்தாட்டத்தில் குறி சரியாகவைத்துப் பந்து எறியப்படாத ஆட்டம்; loose box, இலாயம்-புகைவண்டித்தொடர் ஆகியவற்றில் குதிரையை அடைத்து வைப்பதற்கான பெட்டிபோன்ற அமைப்பு; loose build, loose make, அழகற்ற உருவம், அந்தமில்லாத் தோற்றம்; loose fielding, தவறான கவனமற்ற பந்துவீச்சு; loose fish, ஒழுக்கங்கெட்டவர்; loose game, loose play, காற்பந்தாட்டத்தில் ஆட்டக்காரர்களின் கட்டிணைவற்ற ஆட்டம்; loose handwriting, ஒழுங்கற்ற தாறுமாறான கையெழுத்து; loose order, பரந்த இடைவெளிகளுடைய அணியமைவு; loose tongue, வம்பளப்பு; on the loose, மகிழ்ச்சிப்பெருக்குடன், கேலி விளையாட்டுக்களுடன்; with a loose rein, கடிவாளத்தைத் தளர்த்திவிட்டு; தற்கட்டுப்பாடில்லாமல், இன்ப நுகர்வுக்கு மிகவும் சலுகைகாட்டி.

loose'-leaf, *a.* கணக்கேடு முதலியவற்றில் தாள்கள் தனித் தனியாகப் பிரித்தெடுக்கக்கூடிய.

loos'en, *v.* தளர்த்து, நெகிழ்த்து; நாத்தடையை நீக்கு; இறுக்கந் தளர்வுறு; செறிவு குன்று; உறுதி குறைபடு; குடலை இளக்கு; வறட்சியினால் இருமு; ஒழுக்கக் கட்டுப் பாட்டைத் தளர்த்து.

loose'strife, *n.* மலர்ச்செடி வகை.

loot, *n.* (இ.) கொள்ளை, சூறை, பறிக்கப்பட்ட பொருள்; இலஞ்சம், நேர்மையற்ற கைக்கூலி இறுப்பு; *v.* கொள்ளையடி; சூறையாடிக் கொண்டுசெல்.

lop[1], *n.* சிறு மரக்கிளை, மரக்கொம்பு, கவடு; *v.* கிளைகளை வெட்டு, கொம்புகளைத் தறி, கிளைகளையும் கவடுகளையும் கழி; (தொ.) lop and top, lop and crop, செடிகள் அல்லது மரங்களைக் கழித்து அழகுசெய்; சீவி ஒழுங்குசெய்.

lop[2], *n.* தொங்கு காதுகளுள்ள முயல்; *v.* வளைந்து உறுதியற்றுத் தொங்கு; காதுகளைத் தொங்கவிடு; தலைதொங்க விடு, சாய்.

lop[3], *n.* சிற்றலையசைவு; *v.* சிற்றலைசிதறு, சிற்றலைகளாகத் துடிப்புறு.

lope, *n.* நீண்ட துள்ளலுடைய ஓட்டம்; *v.* நீண்ட பாய்ச்சலுடன் ஓடு.

lop'-ear, *n.* தொங்கு காதுடைய முயல்வகை.

lop'-ears, *n. pl.* தொங்குங் காதுகள்.

lophobran'chiate, *n.* கொத்துக்களாக அமைந்த செவுள்களையுடைய மீன்; *a.* மீன் வகையில் கொத்துக்களாக அமைந்த செவுள்களையுடைய.

loph'odont, *n.* கடைவாய்ப்பல் முகட்டில் குறுக்குப் பள்ளங்களையுடைய விலங்கு; *a.* விலங்கு வகையில் கடைவாய்ப்பல் முகட்டில் குறுக்குப் பள்ளங்களையுடைய.

lopp'ings, *n. pl.* உறுப்புக்குறைப்பு; வெட்டிக்கழிப்பு; வெட்டி வீழ்த்திய பகுதிகள்.

lop-sid'ed, *a.* பக்கங்கள் ஏற்றத்தாழ்வாய் அமைந்த, பக்கங்கள் பெரிது சிறிதாய் அமைந்த; சரிசமநிலையற்ற; ஏறுமாறான.

loqua'cious, *a.* வீண்பேச்சுப் பேசுகிற, வம்பளக்கிற, வாயாடித்தனமான; பறவைகள் வகையில் கலகலக்கிற; நீரோட்டவகையில் சலசலக்கிற.

loq'uat, *n.* சீன-ஜப்பானிய நாட்டுப் பழமர வகை.

loq'uitur, (ல.) *v.* பேசுகிறார்.

lor'al, *a.* (உயி.) முகட்டலகு சார்ந்த, பறவைகளின் கண்களுக்கும் அலகின் மேற்பகுதிக்கும் இடைப்பட்ட கூறு சார்ந்த; பாம்புகளின் கண்களுக்கும் மூக்குக்கும் இடைப்பட்ட கூறுசார்ந்த.

lor'cha, *n.* சீன மேற்கட்டமைப்பும் ஐரோப்பிய அடிக்கட்டும் உடைய கப்பல் வகை.

lord, *n.* ஆண்டை, தலைவர், அண்ணல், கோமான்; முதல்வர்; (செய்.) நிலக்கிழார்; தொழில் முதல்வர்; பண்ணையாட்சிமுறை மேலாளர்; கணவர், கொழுநர்; (வான்.) ஆட்சிக்கோள், சிறப்பு விண்மீன்குழு; இறைவன், கடவுள்; கிறிஸ்து பெருமான், இயேசுநாதர்; செல்வர், சீமான்; பெருமகன்; பெருமகன் மதிப்படைமொழிக் குறிப்பு; உயர் நடுவர் மதிப்புக்குறிப்பு; மதிப்புவிளிமரபுக் குறிப்பு; *v.* மேலாண்மை செய்; மேலாட்சி நடத்து; ஆணவம் செலுத்து; தலைமை உரிமை கொள்; மேன்மக்களாக்கு; பெருமகன் பட்டம் அளி; (தொ.) Civil Lord, கடற்படைத்துறைக் குழுவின் போர்த்துறை சாராத பொதுமுறை உறுப்பினர்; First Lord, அரசாங்க உயர்பணிக் குழுவின் முதல்வர்; House of Lords, பிரிட்டிஷ் மாமன்றத்தின் மேன்மக்கள் சபை, மாமன்ற மேலவை; இறுதியான மேல்வழக்கு மன்றமாக அமைக்கப்பட்ட மேலவைக் குழு; Lords Commissioners, ஆட்சி உயர் பணிக்குழுவின் உறுப்பினர்கள்; Lord in waiting, அரசியின் ஏவற்பணிச் சிறப்புப் பெருமகனார்; Lord of the Bedchamber, அரசரின் ஏவற்பணிச் சிறப்புப் பதவியிலிருக்கும் பெருமகனார்; Lord Mayor, மாநகராண்மை முதல்வர்;

Lord Rector, ஸ்காத்லாந்து பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் நன்மதிப்புத் தலைவர்; lords & ladies, ஒற்றைவிதைப் பருப்புள்ள காட்டுச்செடி வகை; Lord's day, ஞாயிற்றுக்கிழமை; lords of creation, மன்னினம், மக்கள்தொகுதி; Lords of Session, ஸ்காத்லாந்து நீதிமன்றக் கூட்டமர்வின் நடுவர்கள்; Lord's supper, 'தேவநற்கருணை'; the Lord, our Lord, கிறிஸ்துபெருமான், இயேசுநாதர்.

lord'ly, *a.* வீறுப்பான, செருக்குடைய, இறுமாப்பான; ஆதிக்க மனப்பான்மையுள்ள; வீறுர்ந்த; விழுமிய, பெருமகனுக்குரிய.

lordos'is, *n.* (மரு.) தண்டெலும்பின் முன் நோக்கிய வளைவு.

Lord's, *n.* லண்டன் நகரத்திலுள்ள மரப்பந்தாட்ட வெளி; மரப்பந்தாட்டக்குழுவின் தலைமை அலுவலகம்.

lord'ship, *n.* பெருமகன் பட்டம், பெருமகன் ஆட்சி; பெருமகன் ஆட்சிப் பகுதி; பெருமகன் ஆட்சியுரிமை; மேலாண்மை ஆட்சி.

lore[1], *n.* புலமை, கல்விச் செல்வம், கலையறிவுத் தொகுதி; தனி ஆய்வுத்துறை மரபுச்செய்தித் தொகுதி; கோட்பாட்டுத் தொகுதி.

lore[2], *n.* (வில.) அலகுமுகடு, பறவைகளின் அலகின் மேற் பகுதிக்கும் கண்ணிற்கும் இடைப்பட்ட இழைப்பட்டை போன்ற பரப்பு; பாம்புகளின் கண்ணிற்கும் மூக்குப்பகுதிக்கும் இடைப்பட்ட தோல்பட்டை போன்ற ஒடுக்கமான பரப்பு.

Loretton'ian, *n.* ஸ்காத்லாந்தில் லோரெட்டோ பள்ளியின் உறுப்பினர்; *a.* லோரெட்டோ பள்ளியினைச் சார்ந்த.

lorgnette, (பிர.) *n.* இசைநாடக தொலைநோக்குக் கண்ணாடி.

lo'ricate, *a.* (வில.) எலும்பு செதிள் தோடு முதலியவற்றாலான உடற்காப்புக் கவசத்தினையுடைய.

lo'rikeet, *n.* ஒளிமிக்க வண்ணங்கள்கொண்ட சிறு கிளி வகை.

lo'riner, *n.* (வர.) கடிவாளம் குதிமுள் செய்பவர்.

lor'is, *n.* இரவு நேரங்களில் நடமாடுகிற வாலற்ற மெலிந்த உருவுடைய பாலுண்ணி விலங்குவகை.

lorn, *a.* (செய்.) கைவிடப்பட்ட, தனிமையான, மனித நடமாட்டமற்ற.

lo'rry, *n.* பார உந்து, பார மோட்டார் வண்டி; இருப்புப் பாதைக் கட்டைவண்டி.

lor'y, *n.* பளபளப்பான வண்ணச்சிறகுகள் கொண்ட கிளி போன்ற பறவை வகை.

lose, *v.* இழ; இழக்கப்பெறு; தொலைத்துவிடு, கெடப்பெறு; கைதவறவிடு, கைநெகிழவிடு; மாள்வு மூலம் பிரிவுறப்பெறு, மாளப்பெறு, இழந்து கையறவுறு; உறவு அகலப்பெறு, தொடர்பு நீங்கப்பெறு; உடைமை நீங்கப்பெறு; பறிமுதல் செய்யப்பெறு; பந்தய முதலியன கையிழக்கப்பெறு; இழப்பு உண்டாகப்பெறு; பொருட்சேதமடை; குறைபாடு அடை; நலம்பாதிக்கப் பெறு; ஆற்றலிழ, சோர்வுறு; செயல் பிழை; வழி தவறு; காணாமல் திகைப்புறு; வீணாக்கு; பயனின்றிக்கழி; பயனிழ; பயனில்லாமல் போ; வாய்ப்பிழ; வண்டி முதலியவற்றிற்கான நேரம் தவறு; தோற்றிழ; தோல்வியுறு; கெலிப்பிழ; தோல்வியுறச்செய்; தோல்விக் காரணமாயமை; நிறைவேறாமற்போ; தன்வயமழியச்செய்; முனைப்பழியச்செய்; மறைப்புச்செய்; தோல்வி அணுகுநிலை பெறு; (தொ.) be lost upon, கவனங் கவரத்தவறு, தாக்கு விளைவு எதுவும் இல்லாமற்போ; does not lose in the telling, சொல்வதிற் சுவை குறையவில்லை; lose ground, நிலையிழ, வலுவிழ; பின்வாங்கு; பதவியைக் காப்பாற்றுவதில் தவறு; lose interest, அக்கறை கைவிடு, சுவையிழ, கவர்ச்சி குறையப்பெறு; lose one's temper, lose patience, பொறுமையிழ, பதற்றமடை, சினங்கொள்.

los'er, *n.* இழப்புக்கு ஆளாகுபவர், தோல்வி ஏற்பவர்; ஆட்டத்தில் தோல்விபெறுபவர்; பந்தயம் இழப்பவர்; பந்தயத்தில் வெற்றிபெறாக் குதிரை; (தொ.) be a loser by, இழப்புறு, இழப்புக்கு ஆளாகு, நலங்கள் பாதிக்கப்பெறு; good loser, தோல்வியில் துவளாதவர்; இழப்பிலும் கிளர்ச்சி குன்றாதவர்.

los'ing, *a.* வெற்றி நம்பிக்கையற்ற, வெற்றிவாய்ப்பற்ற, தோல்விக்கே வழிவகுக்கத்தக்க; (தொ.) cannot play a losing game, ஆட்டத்தில் நம்பிக்கையற்று ஊக்கமிழந்து விடுவார்; losing game, தோல்வி தவிர்க்க முடியாதென்ற நிலையிலுள்ள ஆட்டம்.

loss, *n.* இழப்பு, நட்டம்; இழக்கப்பெற்ற ஆள்; இழந்த பொருள்; இழப்புத்தொகை; இழப்பிடர்; இழப்புக் குறைபாடு; (தொ.) at a loss, தடுமாற்ற நிலையில், திகைப்பு நிலையில்; தவறான நிலையில்; குறைபாடான நிலையில்.

loss'-leader, *n.* வாடிக்கை கவர்ந்தீர்க்கும்படி நட்ட விலைக்கு விற்கப்படும் பொருள்.

lost[1], *a.* இழந்த; கைதுறந்த; துறக்கப்பட்ட; விட்டுப்போன; நம்பிக்கைக்கிடமற்ற; கதிகெட்ட, நற்கதிக்கு வகைகெட்டுப்போன; (தொ.) lost soul, மீட்பற்ற ஆன்மா, நரகத்துக்குரிய உயிர்.

lost[2], *v.* lose என்பதன் இறந்தகால முற்றெச்ச வடிவம்.

lot, *n.* தொகுதி; ஓரினக்கூட்டு; ஓரினக்கூட்டாளிகளின் தொகுதி; யோக விற்பனைக்கான சரக்குத்தொகுதி; சீட்டுக் குலுக்குத்தேர்வு; குலுக்குத்தேர்வுமுறை; குலுக்குத்தேர்வு முடிவு; ஊழ்வகுப்பமைவு; ஊழ்க்கூறு; யோகம், ஊழ் வாய்ப்புநிலை; பாக்கியம், செல்வவாய்ப்பு; பங்கு; தனிப் பொறுப்பு; கடமை; வரி; பங்கீட்டுக்கூறு; நிலப் பங்கீட்டுக்கூறு; நிலக்கூறு, நிலப்பகுதி; (பே-வ.) பெரிய அளவு, ஏராளம்; *v.* நிலம் பங்கிட்டுக் கொடு; சரக்குக் கூறிடு; பொருள் பாத்திடு செய்; (தொ.) bad lot, இகழ்ச்சிக்குரியவர், நேர்மைக்கேடானவர்; cast in one's lot with, throw in one's lot with, நிலையில் பங்குகொள், நலந் தீங்குகளில் ஒத்துணர்ந்து பங்குகொள்.

loth, *a.* = loath.

Lothar'io, *n.* கயவர், தீ நெறியாளர்; *pl.* Lothar'ios.

lo'tion, *n.* (மரு.) கழுவுநீர்மம்.

lott'ery, *n.* குருட்டுவாய்ப்புமுறை; திருவுளச்சீட்டுத்தேர்வுமுறை; குலுக்குச்சீட்டுப் பரிசுமுறை; விற்பனைக்குலுக்குச் சீட்டு; பொறுக்குச்சீட்டுமுறை; சூதாட்டமுறை.

lott'ery-wheel, *n.* திருவுளச்சீட்டைக் கலக்கப் பயன்படும் பெட்டியுடன் கூடிய சக்கரம்.

lott'o, *n.* குலுக்குச்சீட்டு போன்ற சூதாட்ட விளையாட்டு.

lot'us, *n.* தாமரை; அல்லியின வகை; சோம்பல் வாழ்வில் ஈடுபாடு உண்டாக்குவதாகக் கருதப்பட்ட கிரேக்க பழங்கதை மரபுச் செடிவகை.

lot'us-eat'er, *n.* சோம்பேறி, செயலின்றிச் செம்மாந்திருப்பவர்; கிரேக்க பழங்கதைமரபில் காய்வகை அருந்திச் செம்மாந்திருந்த மக்கள் தொகுதி.

lot'us-eat'ing, *n.* சோம்பல் வாழ்வில் செம்மாந்திருத்தல்.

loud, *a.* உரத்த, உரத்து ஒலிக்கிற, வல்லொலியான; முழக்கமான; கூச்சலான, கூச்சலிடுகிற; பகட்டான, முனைப்பான; தெளிவாகத் தெரிகிற, பார்வையைக் கவர்கின்ற, வெளிப் பகட்டு மிகுந்த; *adv.* உரக்க, வல்லொலியாக; (தொ.) loud speaker, ஒலிபெருக்கி.

lough, *n.* ஏரி; கடற்கழி.

lou'is, louis-d'or', *n.* ஏறத்தாழ 20 பிராங்கு மதிப்புள்ள முற்காலப் பிரஞ்சுப் பொன் நாணயம்.

Louis Quatorze, *a.* சிற்ப ஓவிய ஒப்பனைக் கலைத்துறைகளில் பிரஞ்சு நாட்டரசன் பதினான்காம் லூயி (Louis XIV 1643-1715) காலத்துக்குரிய பாணியிலமைந்த.

Louis Quinze, *a.* சிற்ப ஓவிய ஒப்பனைக் கலைத்துறைகளில் பிரஞ்சு நாட்டரசன் பதினைந்தாம் லூயி (Louis XV 1715-1774) காலத்துக்குரிய பாணியிலமைந்த.

Louis Seize, *a.* சிற்ப ஓவிய ஒப்பனைக் கலைத்துறைகளில் பிரஞ்சு நாட்டரசன் பதினாறாம் லூயி (Louis XVI 1774-1792 காலத்துக்குரிய பாணியிலமைந்த.

Louis Treize, *a.* சிற்ப ஓவிய ஒப்பனைக் கலைத்துறைகளில் பிரஞ்சு நாட்டரசன் பதின்மூன்றும் லூயி (Louis XIII 1610-1643) காலத்துக்குரிய பாணியிலமைந்த.

lounge, *n.* ஓய்வுகொள்ளல்; ஒய்யார நடமாட்டம்; மெல்லுலா விடம்; முன்கூடம், முன்கட்டு; சாய்ப்பு, உட்கார்ந்திருப் பதற்குரிய அறை; ஓய்வுச் சாய்விருக்கை, தாழ்ந்த சாய்வுக் கிடக்கை; *v.* உலாவித் திரி; ஓய்வாகக் கிட; சாய்ந்திரு; செயலின்றிப் பொழுதுகழி, சோம்பியிரு; (தொ.) lounge suit, பகலுடை, பின்தொங்கலற்ற சட்டை.

lour, *n.* முகச்சுளிப்பு, புருவநெரிப்பு, சிடுசிடுப்பு, சிடுசிடுத்த தோற்றம்; வானம் முகில் முதலியவற்றின் கறுத்திருண்ட தோற்றம்; *v.* முகத்தைச்சுளி, புருவத்தை நெரி, சிடுசிடுப் புக்கொள்.

louse, *n.* பேன்; ஒட்டுயிர்ப்பூச்சி; ஒட்டுயிர் வகை; *pl.* lice.

lout[1], *n.* மட்டி, முட்டாள்; காட்டாள், அருவருப்பான தோற்றமுடையவர்.

lout[2], *v.* தலைகுனிந்து வணங்கு, கும்பிடு.

louv'er, *n.* இடைநிலைக்கால முன்கூடப் புகைக்கூம்பு; காற்று புக விடுவதற்கான பலகை அல்லது கண்ணாடிப்பாளங்களின் மோட்டுக் கவிகையடுக்கு.

louv'er-boards, *n. pl.* காற்று புகவிடுவதற்கான பலகை அல்லது கண்ணாடிப்பாளங்களின் மோட்டுக் கவிகையடுக்கு.

louv're[1], *n.*=louver.

Louvre[2], *n.* பாரிஸ் நகரின் முன்னுள் அரண்மனை; பாரிஸ் நகரிலுள்ள தற்போதைய கலைத்திறக் காட்சிமனை.

louv're-boards, *n. pl.*=louver-boards.

lo'vable, *a.* விரும்பத்தக்க, அன்புக்குரிய; நல்லிணக்கமான, நட்புக்குரிய; காதலிக்கத் தகுதியான.

lo'vage, *n.* மூலிகை வகை.

love, *n.* அன்பு, பற்று; பற்றுர்வம், பாசம்; நேசம், நட்பு; காதல்; காதலணங்கு, காதலி; அன்புச்செய்தி; காதல் நினைவூட்டு; காதல் தொடர்பு, காதலாட்டம்; அன்பு விளிக் குறிப்பு; காதல் தெய்வம், மதவேள்; கெலிப்பு எண்மானம் இல்லா ஆட்டம்; கெலிப்பெண் பெரு நிலை; *v.* அன்புகொள்; பாசங்கொள்; நேயமுறு; காதல்கொள், காதலி; விரும்பு; அன்புடன் பேணு, பாசத்துடன் போற்று; பெற்றுமகிழ்; நுகர்ந்துமகிழ்; ஈடுபாடுகொள்; விருப்பப்பயில், வழக்கமாக ஈடுபடு; நாட்டங்கொள், சார்புகொள்; (தொ.) fall in love, காதல்கொள், காதலி; for love or money, எப்படியாவது, எத்தகைய வகைதுறை மேற்கொண்டாயினும்; for the love of, பொருட்டு, பெயரால்; give love to, அன்புச் செய்தியை அறிவி; in love, காதலில் ஆழ்ந்த நிலையில், காதல்கொண்ட நிலையில்; in love with, காதலீடுபாடு கொண்டு; கவர்ச்சி கொண்டு; labour of love, அன்புப்பணி, இனிய கடமை; love all, விளையாட்டு வகையில் இருசாரினரும் ஆட்டத் திறக்கூறெண் பெருநிலை; love game, விளையாட்டு வகை யில் தோல்வியுற்றவர் ஆட்டத்திறக்கூறெண் ஒன்றும் பெரு நிலை; love in a cottage, போதிய பணமில்லாமலே செய்யும் திருமணம்; make love to, காதல்புரியத்தொடங்கு, காத லாட முற்படு; play for love, பணயத்திற்கல்லாமல் வெறு மகிழ்ச்சிநோக்கி விளையாடு; there is no love lost between them, ஒருவரையொருவர் வெறுக்கிறார்கள்.

love'-affair', *n.* காதல் நிகழ்ச்சி, காதல் நடவடிக்கை.

love'-apple, *n.* சீமைத் தக்காளி.

love'-begotten, *a.* முறைப்படிப் பிறக்காத, மணமுறைக்குப் புறம்பான.

love'-bird, *n.* கிளியினச் சிறு பறவை, அன்றில் வகை.

love'-child, *n.* மணமுறைப்படி பிறக்காத குழந்தை.

love'-drug, *n.* மயக்க வெறிதரும் புகைக் குடிப்புக்குரிய ஆப் பிரிக்க செடிவகை; கஞ்சா செடிவகை.

love'-feast, *n.* தொடக்ககாலக் கிறித்தவரிடையே நிகழ்ந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டு விருந்து, மெதடிஸ்டு (Methodist) உட்சமய வகுப்பினர் அன்பு வழிபாடு.

love'-in-a-mist', *n.* உணவுக்குழம்பு வகைக்குப் பயன்படும் மஞ்சள் வண்ண மலர் வகை.

love'-in-i'dleness, *n.* பல்வண்ண மலர்ச்செடிவகை.

love'-knot, *n.* சிக்கல் முடிச்சு.

Love'lace, *n.* கைதேர்ந்த பெண் வேட்டையாளர், சமூகக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாதவர்.

love'less, *a.* அன்பற்ற, அன்பு காட்டாத; அன்புக்குரிய ராகாத; காதலிக்காத; காதலிக்கப்படாத.

love'-letter, *n.* காதற்கடிதம்.

love'-lies-bleed'ing, *n.* குருதிச் சிவப்பான தொங்கல் மலர் களையுடைய தோட்டச் செடிவகை.

love'lock, *n.* பின்னற் சுருணை.

love'-lorn, *a.* காதலுக்கு ஏங்குகிற, காதலரால் கைதுறக்கப் பட்ட.

love'ly, *a.* அழகான, வனப்புள்ள; கவர்ச்சிவாய்ந்த; (பே-வ.) மகிழச்செய்கின்ற.

love'-match, *n.* காதல் மணம்.

love'-philtre, *n.* வசிய மருந்து, காதலைத்தூண்டும் மருந்து.

lo'ver, *n.* காதலர்; கள்ளக்காதலர்; காதலூடாடி; போற்று பவர், ஆர்வலர்; பொருள் பண்பு செயல்களிற் பற்றுர்வ முடையவர்.

love'-shaft, *n.* மாரன் கணை.

love'sick, *a.* காதலால் ஏக்கமுற்ற, காதலுக்கு அலந்த, காத லால் நலிவுற்ற.

love'-song, *n.* காதற்பாடல்.

love'-story, *n.* காதல் நிகழ்ச்சி, காதற்கதை.

love'-token, *n.* காதற்சின்னம், காதல் நினைவுக்குறி.

lo'ving, *a.* காதலிக்கின்ற; நேசபாசம் வாய்ந்த; அன்பு கொள்கின்ற, பற்றுமிக்க, அன்பார்ந்த.

lov'ing-cup, *n.* விருந்து மேடையிற் சுற்றி அனுப்பப்படும் பெரிய இன்தேறல் கலம்.

lov'ing-kind'ness, *n.* அன்புக்கனிவு.

low[1], *n.* தாழ்வானது; தாழ்மட்டம்; குறைந்தது; காற் றழுத்தம் குறைந்த பகுதி; குறைந்த எண்; *a.* தாழ்ந்த; பள்ள மான, மேடல்லாத; தாழ்நிலத்துக்குரிய; உயரங் குறைந்த; குட்டையான, நெட்டையல்லாத; கீழேயுள்ள; சட்டை வகையில் கழுத்துக் கீழாக வெட்டப்பட்டுள்ள; ஆழ்ந்த; புடை செதுக்கு வகையில் திட்பங் குறைந்த; எண் வகையில் குறைந்த; அளவை வகையில் குறைந்த எண்ணிக்கை யுடைய; அளவு குறைந்த; நிறைவற்ற, தொகை குறைந்த; வெப்பநிலை குறைந்த; அழுத்தநிலை குறைந்த; விரைவற்ற, மந்தமான; விலை மலிவான; இழிந்த; கீழ்த்தரமான; மட்ட மான; உயர்ஒழுங்கமைவற்ற; அற்பத்தனமான; கஞ்சத் தனமான; மதிப்பற்ற, சிறப்பற்ற; தன்மதிப்பில்லாத; உயர்வற்ற, பொதுநிலையான; தாழ்நிலையிலுள்ள; பதவியில் குறைந்த; படியில் இழிந்த; தாழ்வு சுட்டிய; குறைந்த பந்தய எல்லையுடைய; மொழிநடை வகையில் கொச்சையான; இழிவழக்கான; தாழ்குரலுடைய; மெல்ல ஒலிக்கிற; அழுத்த வகையில் கனத்தொனி வாய்ந்த; ஒலிவகையில் நாவின் தாழ் நிலையில் எழுகிற; முனைப்புக்குறைந்த; நாகரிகமற்ற; பண்பாட்டிற் குறைந்த; எளிய; சமுதாயப்படியில் தாழ்ந்த; வளர்ச்சி குன்றிய; வளங்குன்றிய; உரங்குன்றிய, முன் னேறாத; கிளர்ச்சியற்ற; ஊக்கமற்ற; சோர்வார்ந்த; வலுக்குறைந்த; போதாத; அருந்தலான; ஊக்காற்றல் குறைந்த; உள்ளூட்டங் குன்றிய; நிகழ் காலத்துடன் அணிமைமிக்க; நிலவுலக நேர்க்கோடு வகையில் நடு வரைக்கு அணித்தான; திருச்சபைத் துறையில் சமய வினைமுறை மிகுதி வேண்டாத; *adv.* தாழ்நிலையில்; கீழான நிலைக்கு; இழிநிலையில்; இழிநிலைக்கு; பணிவாக; எளியநிலையில்; ஊட்டக்குறைவாக; குறைந்த பந்தய எல்லை யுடன்; மெல்ல; மெள்ள, தளர் ஒலியுடன்; நிகழ்காலத்துக்கு அணிமையாக; நடுவரைக்கு அணிமையாக; தாழ்வாக;

நிலத்தளத்துக்கு அணிமையாக; (தொ.) at lowest, குறைந்த அளவில்; குறைந்த தொகையில்; குறைந்த எல்லையில்; bring low, உடல்நலம்-செல்வம்-பதவி முதலிய வகையில் தாழ்த்து; collar low, காற்பந்தாட்ட வகையில் இடுப்பை அல்லது இடுப்பின் கீழ்ப்பகுதியைப் பிடி; high and low, எல்லோரும், ஒவ்வொருவரும்; lay low, வீழ்த்து; தோற்கடி; lie low, பதுங்கு; மறைந்திரு; வாளா கிட; செயலொடுங்கியிரு; நோக்கம் மறைத்து ஒழுகு; அவமதிக்கப்பெறு, தாழ்த்தப்படு; விழுந்துகிட; இறந்துபடு; live low, ஊட்டமற்ற உணவுண்டு வாழ்; low celebration, தேவநற்கருணைச் சடங்கில் திருக்கோயில் பாடகர் கூட்டமும் உதவிப் புரோகிதர்களும் இல்லாமல் நடைபெறும் வழிபாட்டு விழா; Low Church, சமய குரு சமய வினைமுறைகட்கு முதன்மையளிக்கவிரும்பாத திருச்சபைக் கோட்பாடு; low comedian, அவல நாடகத்திற் கோமாளி நடிகர்; low comedy, அவலநாடகம்; Low Countries, கடல்மட்டத்திலும் தாழ்ந்த நிலமுடைய நெதர்லாந்து (Netherlands) நாடு; Low Dutch, Low German, செர்மானிய மொழிக்குழுவில் ஆங்கில மொழி-டச்சு மொழி உட்பட மேற்கு வடக்கு செர்மன் மொழி வழக்குத் தொகுதி; low latitudes, நில நடுக்கோட்டுக்கு அருகிலுள்ள பகுதிகள்; low life, கீழ்த்தர வாழ்க்கை, கீழ்த்தரமக்களின் வாழ்க்கை; low moon, வானவிளிம்பிற்கு அருகிலுள்ள நிலா; low pitch, இசையில் தாழ் இசைப்பு; தாழ்நிலைச் சாய்வு; low relief, முனைப்புக்குன்றிய புடைப்புநிலை ஓவியம்; Low Sunday, இயேசுநாதர் உயிர்த்தெழுந்த நாள் விழாவுக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமை; low tide, low water, வேலை இறக்கம்; Low Week, இயேசுநாதர் உயிர்த்தெழுந்த நாள் விழாவிற்குப் பின்னுள்ள வாரம்; play low, குறைந்த பணயம் வைத்து விளையாடு; talk low, தாழ்குரலிற் பேசு, மெல்லொலியிற் பேசு.

low[2], *n.* பசுவின் கனைப்பொலி; *v.* பசுவகையில் கனைப்பொலி செய்; பசுப்போற் கதறு; பசு இரைவது போன்ற குரலுடன் பேசு.

low'-born, *a.* தாழ்குடிப் பிறந்த; இழிந்த, தாழ்ந்த.

low'-bred, *a.* நாகரிகமில்லாத, பண்பற்ற; இழிநடத்தையுள்ள.

low'brow, *a.* (பே-வ.) தனியறிவுச்சிறப்பற்ற, பண்பாட்டு உயர்வற்ற.

low'browed, *a.* தாழ்ந்த, மேன்மையற்ற, உயர்பண்பற்ற; பாறை வகையில் புறங்கவிந்துள்ள; கட்டிடம் முதலியவற்றின் வகையில் தாழ்ந்த வாயிலுள்ள; இருளார்ந்த.

low'-down, *a.* இழிந்த, தாழ்வான; அற்பத்தனமான; அடிமைத்தன்மை மிக்க; அவமதிப்பான, இகழ்ச்சிக்குரிய.

low'er[1], *a.* low என்பதன் உறழ்படி.

low'er[2], *a.* இருபொருள்களிடையே கீழான; தாழ்ந்த; தாழ்படியிலுள்ள; (தொ.) lower boy, கீழ்வகுப்புப் பையன்; lower case, அச்சுத்துறையில் நெடுங்கணக்கின் சிற்றெழுத்து வடிவம்; lower critic, சொற்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு திறந் தேர்பவர்; lower deck, கப்பலின் கீழ்த்தளம்; lower Empire, பிற்கால ரோமப் பேரரசு, கீழைரோமப் பேரரசு; lower House, lower chamber, கீழ்ச்சபை; lower school, ஐந்தாம் வகுப்பு வரையுள்ள பள்ளி; ஐந்துக்குக் கீழ்ப்பட்ட வகுப்புக்களின் தொகுதி; lower world, நிலவுலகம்; நரகம்; the lower deck, சிறுபணியாளர் தொகுதி.

low'er[3], *v.* இறக்கு; தாழ்த்து; குறையாக்கு; குறைபடு; (கப்.) படகைக் கீழே விடு; பாய்மரத்தைக் கீழே இழு; உயரத்தின் அளவைக்குறை; அமிழ்த்து; படிப்படியாகக் கீழே செல், அமிழ்; கீழ்நோக்கிச் சாய்; விலை இறக்கு; விலை குறைவுறு; முனைப்புக்குறை; குரல் தணிவுறு; நிலையிறக்கு, இழிவுசெய்.

lower[4], *n.*, *v.* = lour.

low'er-brack'et, *a.* பட்டியலின் அடியிற் சேர்க்கப்பட்ட.

low'est, *a.* low என்பதன் ஏற்றுயர்படி.

Low'land, *a.* ஸ்காத்லாந்தின் தென்கிழக்குப் பகுதிசார்ந்த அல்லது தென்கிழக்குப் பகுதியிலுள்ள.

Low'lander, *n.* தென் ஸ்காத்லாந்து வாணர்.

Low'lands[1], *n.* ஸ்காத்லாந்தின் தென்கிழக்குப் பகுதி.

low'lands[2], *n. pl.* பள்ளப்பகுதி நிலம்.

low'liness, *n.* பணிவு, பணிவமைதி.

low'ly, *a.* அடக்கவொடுக்கமான, பணிவுள்ள; தாழ்நிலையிலுள்ள, ஏழ்மைவாய்ந்த; எளிமையான; பகட்டில்லாத; *adv.* அடக்கமாக, பணிவாக; தாழ்மையாக, எளிமையாக.

low'-wa'ter mark, *n.* நீர்மட்ட இழிவரை; வேலை இறக்க எல்லைவரை; கீழ் எல்லை, அகட்டுநிலை.

lox, *n.* = loxygen.

loxodrom'ic, *n.* எல்லா நிரைகோடுகளையும் சம அளவில் ஊடுருவிச் செல்லுஞ் சாய்வரை; *a.* சாய்வான தன்மையில் கப்பலிற் பயணஞ் செய்கிற; சாய்வாக மிதந்துசெல்கிற; எல்லா நிரைகோடுகள் வகையிலும் ஒரே சாய்வளவில் ஊடு செல்கிற.

loxodrom'ics, *n.* எல்லா நிரைகோடுகளையும் சம அளவில் ஊடுருவிச்செல்லும் கப்பற் பயணமுறை.

lox'ygen, *n.* ஆகாய விமானத்தில் பயன்படுத்தப்படும் நீரியல் உயிரகம்.

loy'al, *n.* மாறு உளத்தர்; கிளர்ச்சிப்பொழுதிலும் பற்று மாறுதவர்; *a.* திடப்பற்றுடைய; பற்றுறுதிகாட்டுகிற; ஆர்வப் பற்றுடைய; நம்பிக்கைக்குரிய; கடமை தவருத; காதல் உறுதியுடைய; பொறுப்பு மீருத.

loy'alty, *n.* இராஜபக்தி, அரசப்பற்று; நிறைமை, பற்றுறுதி, வாய்மை தவருமை; பற்றுறுதிக் கோட்பாடு.

loz'enge, *n.* சாய்சதுர உரு; வைரவடிவம்; எதிர்ச்சம கோணத் தீர்க்க சதுரம்; மரபுரிமைச்சின்னத்தில் முதுகன்னி அல்லது கைம்பெண் நிலைக்குரிய சாய்சதுரவடிவக் கேடயம்; சர்க்கரை கலந்த எளிதில் கரையுமியல்புடைய மருந்து, நலமார்ந்த இன்பண்ட வகை; பலகணிச்சட்டத்தில் சாய்சதுரக் கண்ணுடித்தகடு.

loz'enged, *a.* மாறுபட்ட வண்ண அடுக்குடைய சாய்சதுரப் பலகணிச் சட்டம் பொருந்திய; பலகணிவகையில் சாய்சதுரக் கண்ணுடிச் சட்டங்களையுடைய.

£.s.d., *n.* பவுன்-ஷில்லிங்-பென்னி, ஆங்கில நாணயப் படிவரிசை; பணம்; செல்வம்.

lubb'er, *n.* மொண்ணைத்தடியன், அருவருப்புப் பேருரு மடையன்; நாகரிகம் தெரியாதவன், நாட்டுப்புறத்தான், காட்டான்; செயல்நுட்பம் தெரியாத மாலுமி; (தொ.) lubber's hole, கப்பலின் மேல்தளத்திலுள்ள பெரிய வட்டத் துளை; lubber's line, திசைகாட்டும் பொறியில் கப்பல் முகப்புத் திசைகுறித்த வரை.

lub'ricant, *n.* மசகுப்பொருள், உராய்வுகாப்புப் பொருள்; *a.* மசகியலான, உராய்வுதடுக்கிற.

lub'ricate, *v.* மசகிடு, உயவிடு; இயந்திரங்களில் எண்ணெய் பூசி உராய்வைக் குறைவாக்கு.

lubrica'tion, *n.* மசகிடல், உராய்வுத்தடை.

lu'bricative, *a.* உயவுப்பண்புடைய, உராய்வுதடுக்கிற.

lub'ricator, *n.* மசகுப்பொருள்.

lubri'city, *n.* சறுக்கல், வழுக்கல், வழவழப்பு, எண்ணெய்ப் பிசுக்கான தன்மை; ஒழுக்கக்கேடு, காமவெறி.

Luc'an, *a.* தூயதிரு லூக் (St. Luke) சார்ந்த.

Lucc'a, Lucc'a oil, *n.* உயர்தர ஒலிவ எண்ணெய்.

luce, *n.* மீன்வகை; மீன்வகையின் முழு வளர்ச்சியடைந்த படிவம்.

lu'cent, *a.* பளபளப்பான; ஒளிவீசுகின்ற; மின்னுகின்ற; அரைகுறையாக ஒளி ஊடுருவிச் செல்லுகிற.

lucern', lucerne', *n.* கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுகிற மணப்புல் சார்ந்த செடிவகை.

Lucian'ic, *a.* லூசியன் (Lucian) என்னும் கிரேக்க எழுத்தாளர் பாணியைச் சார்ந்த; ஏளனம் கலந்த நகைத்திறமுடைய.

lu'cid, *a.* துலக்கமுள்ள; தெளிவான; நன்கு விளங்குகிற; (பூச்., தாவ.) வழவழப்பும் பளபளப்புமான மேற்பரப்புடைய; (தொ.) lucid interval, பைத்தியம் பிடித்தவர்களின் நல்லறிவுள்ள இடைவேளை; குழப்பங்களின் இடையில் அமைதியான நிலைமை.

Lu'cifer, *n.* விடிவெள்ளி; நரகிறைவன், சைத்தான்; நச்சுத் தீக்குச்சி; (தொ. lucifer match, உராய்வதால் தீப்பற்றும் தீக்குச்சி.

lucif'ugous, *a.* (உயி.) பகல் ஒளியை வெறுத்து ஒதுக்குகிற.

luck, *n.* ஆகூழ்; ஊழ்க்கூறு; தற்செயலான குருட்டுவாய்ப்பு, குருட்டடி; குருட்டுவாய்ப்பான நிகழ்ச்சி; குருட்டுயோகம், அதிர்ஷ்டம்; நற்பேறு, நல்வாய்ப்பு; திருத்தாயம், யோக உயிர்நிலையாகக் கருதப்படும் பொருள்; (தொ.) as luck would have it, ஆகூழாக, தற்செயல் வாய்ப்பாக; down on one's luck, அவப்பேற்றினுல் ஊக்கங்கெட்டு; தற்காலிகமாக அவப் பேறுற்று; for luck, நற்பேறு வருவிப்பதற்காக; try one's luck, வெற்றி அவாவித் துணிந்தாடு, நற்பேற்றை எதிர் பார்த்து முயற்சிசெய்.

luck'ily, *adv.* நற்பேருக, அதிர்ஷ்ட வசமாக.

luck'-money, luck'-penny, *n.* யோகப்பணம்; கால்நடைகளின் விற்பனையில் விற்பவர் வாங்குபவருக்கு நற்பேறவாவின் சின்னமாகத் திருப்பிக்கொடுக்கும் பணம்; வாய்ப்பு வளப் பணம், நற்பேற்றுச்சின்னமாகச் செலவழியாது வைத் திருக்கும் பணம்.

luck'y, *a.* ஆகூழுடைய, ஊழ்த்தகுதிபெற்ற; குருட்டு வாய்ப்பான; நற்பேறு தருகிற; நற்பேறு குறித்த; வாய்ப்பு வகைக் கவர்ச்சியுடைய; வாய்ப்பான சமயத்தில் வந்த, கால வாய்ப்புடைய; இடவாய்ப்புடைய, இயல் வாய்ப்பு வள முடைய, நற்பேறுடைய, அதிர்ஷ்டமுள்ள.

luck'y-bag, luck'y-tub, *n.* யோகப்பொருளெடுப்புப் பை, சிறுதொகைக்குக் கையிட்டு எதனையும் எடுக்கும் வாய்ப்பு அளிக்கும் பை.

luc'rative, *a.* ஆதாயம் அளிக்கின்ற, மிகுவருவாய் உடைய, ஊதிய மிகுதியுள்ள.

uc're, *n.* கீழ்த்தர ஆதாயம், தகாவழி வருவாய், ஆதாய நோக்கப்பணம்.

Lucret'ia, *n.* கற்புக்கரசி, உயிரினும் கற்பு மேம்பட்டதாகக் கொண்டொழுகுபவள்.

luc'ubrate, *v.* ஆழ்ந்த சிந்தனைகளை எழுத்துமூலம் தெரிவி, சிந்தனை அலைகளைப் பதிவுசெய்; ஆழ்ந்தகன்ற ஆராய்ச்சி ஏடு எழுது.

lucubra'tion, *n.* இராக்கால ஆய்வு; சிந்தனை; சிந்தனைத் தொகுதி; ஆழ்ந்தகன்ற ஆராய்ச்சி ஏடு.

luc'ulent, *a.* தெளிவிளக்கமான, மெய்ம்மை எண்பித்துக் காட்டுகின்ற.

luc'us a non lucen'do, (ல.) *n.* பொருந்தா விளக்கம், முரணுரை விளக்கம்.

Ludd'ite, *n.* இயந்திர ஊழித்தொடக்கத்தில் (1811-1816) இயந்திர அழிப்புக் கிளர்ச்சியிலீடுபட்ட குழுவினர்; *a.* இயந்திர அழிப்புக் கிளர்ச்சிக் குழுவினைச் சார்ந்த.

lud'icrous, *a.* நகைப்புக்கிடமான, கேலியான, முட்டாள் தனமான, பொருந்தாத.

lud'o, *n.* எளிதான பகடையாட்ட வகை.

lu'es, (ல.) *n.* கொள்ளைநோய்; ஒட்டுநோய்; ஒட்டியல் பண்பு; (தொ.) *lues Boswelliana*, தன் நூல்முதல்வரை மிகைப்படுத்திக்காட்டும் வாழ்க்கை வரலாற்று நூலாசிரியரின் இயல்பான போக்கு; வாழ்க்கை வரலாற்றாசிரியர் தனது நூலுடைத்தலைவரை மிகைப்படுத்திக்காட்டும் இயற்சார்புப் போக்கு; *lu'es vener'ea*, மேகநோய், காமவிளைவு நோய்.

luff, *n.* (கப்.) பாய்மரத்திற்கு அடுத்துள்ள பாய்ப்பகுதி; அகல மிக்க கப்பல் முன்புறப்பகுதி; *v.* கப்பல் தலைப்பை அல்லது முகப்பைக் காற்றுத் திசைக்கு அருகில் திருப்பு; கப்பல் முகப்பு காற்றுத்திசைக்கு அருகாகும்படி பயின்கட்டையைத் திருப்பு; படகுபந்தயத்தில் படகை எதிரியது படகின் காற்றுப்புற மாகச் செலுத்து.

luf'fing-match, *n.* படகுபந்தயத்தில் ஒருவர் மற்றவர் காற்றுப்புறப் பக்கமடைவதற்குரிய கடும்போட்டி.

Luft'waffe, (செர்.) *n.* செர்மானிய விமானப்படை.

lug[1], *n.* தூண்டில் இரையாகப் பயன்படுத்தப்படும் பெரிய கடற்புழு.

lug[2], *n.* (கப்.) நான்கு மூலையுள்ள சாய்மடிப் பாய்.

lug[3], *n.* வலித்திழுப்பு, முரட்டிழுப்பு; *v.* வலித்திழு; முரட்டுத் தனமாகப் பற்றியிழு; வலிந்து கடுமுயற்சி செய்; பொருத்த மின்றி வலிந்துபுகுத்து; வல்லந்தமாக இழுத்துக்கொண்டு செல்.

lug[4], *n.* இயந்திர வார்ப்புப் பகுதியின் பொருத்துமுளை; பிடிப்புக்குமிழ், பிடிவளை; காதுபோன்ற பகுதி.

luge, (சுவிஸ்.) *n.* சுவிட்சர்லாந்தில் வழங்கும் பனிக்கட்டிச் சறுக்கு வண்டிவகை; *v.* பனிக்கட்டிமீது சறுக்கு வண்டியிற் செல்.

lugg'age, *n.* பயணமூட்டை, மூட்டைமுடிச்சு, பயணக் கட்டு.

lugg'er, *n.* நாலுமூலைப் பாய்களுள்ள சிறு கப்பல்.

lug'sail, *n.*=lug[2].

lugub'rious, *a.* சோர்ந்த தோற்றமுள்ள, துயரார்ந்த.

luke'warm, *n.* அரைகுறை ஆர்வமுடையவர்; *a.* இளவெப்ப முடைய; அரைகுறை ஆர்வமுடைய, மிகுதி ஆழ் கருத்தில் லாத, அக்கறையில்லாத.

lull, *n.* புயலிடை அமைதி; இடை ஓய்வமைதி; அமைதிப் படுத்தும் பண்பு; *v.* அமைதிப்படுத்து; புயல் அடங்கச் செய்; அரவம் அடங்கச்செய்; தூங்கச்செய், தாலாட்டி உறங்க வை; உளக்கொந்தளிப்புத் தணி; ஐயமகலச் செய்; சூழ்ச்சியால் அவநம்பிக்கை அகற்று.

lull'aby, *n.* தாலாட்டுப் பாட்டு; *v.* தாலாட்டு, தூங்கவைப் பதற்காகப் பாட்டுப் பாடு.

lumbag'o, *n.* இடுப்புவாதநோய், கீல்வாதநோய்; *pl.* lumbag'os.

lum'bar, *n.* இடுப்பு நரம்பு; இடுப்புப்பகுதித் தண்டெலும்பு; *a.* இடுப்பைச் சார்ந்த, இடுப்பிலுள்ள.

lum'ber[1], *n.* கழிகடை, ஓட்டை உடைசல் குவை, பயனற்ற துண்டுத்துணுக்குத் தொகுதி; சேமிக்கப்பட்ட துண்டுத் துணுக்குக்களின் தொகுதி; இடமடைக்கும் பொருட்குவியல்; தேவையற்ற மிகுகொழுப்பு; அரைகுறை வேலைப்பாடுடைய வெட்டுமரம்; *v.* இடமடை, இடஞ் செலுத்தி நிரப்பு; கொட்டிக் குவி; கூளமாக்கு; முரட்டுக் கட்டைகளாக வெட்டு; வெட்டி உருவாக்கு.

lum'ber[2], *v.* அருவருப்பான தோற்றத்துடன் இயங்கு, பெரும் பளுவுடன் தட்டுத்தடுமாறிச்செல், பேரிரைச்சலுடன் இயங்கு.

lum'ber-carrier, *n.* வெட்டுமர வணிகப்படகு.

lum'berer, *n.* காட்டுமரங்களை வெட்டி வகைப்படுத்துபவர்.

lum'ber-jacket, *n.* கழுத்தளவும் இறுகத்தக்க ஆடவர் திண் ணிய முழுச்சட்டை; மாதர் முழுச்சட்டை.

lum'berman, *n.* மரக்கட்டைகளை வெட்டுபவர்; மரம் அறுத்து ஒழுங்குபடுத்துபவர்; வெட்டுமரக் கட்டைகளைத் தூக்கிச் செல்பவர்.

lum'ber-mill, *n.* மரக்கட்டைகளை இரம்பத்தினுல் அறுக்கும் தொழிற்சாலை.

lum'ber-room, *n.* கழிவுக்கிடங்கு, பயனற்ற சாமான்கள் வைத்திருக்கும் அறை.

lum'ber-scaler, *n.* மரக்கட்டைகளை அளப்பவர்.

lum'bo-abdom'inal, *a.* இடுப்பையும் அடிவயிற்றையும் சார்ந்த.

lum'brical, *n.* கைகால் விரல் வளைப்பதற்கான தசைகளில் ஒன்று; *a.* கைவிரல்களை அல்லது கால்விரல்களை வளைக்கிற.

Lum'iere, *a.* வண்ண நிழற்பட முறை சார்ந்த ; (தொ.) Lumiere process, வண்ண நிழற்பட முறை.

lum'inary, *n.* ஒளிப்பிழம்பு, ஒளிபரப்பும் பொருள் ; ஒளிக் கோணம் ; புகழ்சான்றவர் ; ஆன்றோர் ; அறிவு மேதை ; ஆன்மிக வழிகாட்டி ; தலைமைப் பெருந்தகை.

luminif'erous, *a.* ஒளிவழங்குகின்ற, ஒளிக்கதிர் பரப்புகின்ற.

lum'inous, *a.* ஒளிபிறங்குகின்ற, ஒளிதிகழ்கின்ற, சுடர்ஒளி வீசுகின்ற; இருளில் ஒளி வீசுகின்ற, மின்னிடுகிற; மின்னொளிர் வுடைய ; பளபளப்பான, மினுமினுப்புள்ள ; எழுத்தாளர் வகையில் நல்விளக்கம் அளிக்கிற, எழுத்தாண்மை வகையில் விளங்க வைக்கிற ; (தொ.) luminous paint, இருளில் ஒளி விடுகிற வண்ணப்பூச்சு.

lump[1], *n.* கட்டி, மொத்தை ; பெரிய அளவு, மிகுதியான அளவு ; கும்பு, குவியல் ; உருவாக்கத் தகுதியான களிமண் பாளம் ; ரொட்டி சுடுவதற்குத் தகுதியான பிசைந்த மாவு உருண்டை; தசைமுண்டு, இயற்கைக்கு மாறான தசைவளர்ச்சி; புடைப்பு, வீக்கம், கன்றிய காயமுனைப்பு; மந்தமதி, பேதை; *v.* மொத்தையாகத் திரட்டு ; கூளமாகக் குவி ; வகைதிரி பின்றிப் பலதிறங்களையும் ஒருநிலைப்படக் குவி; பந்தய முதலி யவற்றில் முழுப்பணத்தையும் பணயமாக வை ; கட்டியாக எழு ; கட்டியாகப் புடைத்து உருவாகு; பளுவுடன் இயங்கு; பளுப்பட அமர் ; (தொ.) in the lump, மொத்தத்தில், ஒரே மொத்தமாக ; எல்லாவற்றையும் ஒன்றாகக் கொண்டால் ; is a lump of selfishness, முற்றமுழுக்கத் தன்னலமே கொண்ட வர்; lump in throat, உணர்ச்சியால் உண்டாகும் தொண்டை அழுத்தம் ; lump sugar, வில்லைச்சர்க்கரை ; lump sum, முழு மொத்தத் தொகை.

lump[2], *n.* வயிற்றிலுள்ள உறிஞ்சும் வட்டத்தகட்டினால் பொருள்களின்மீது கெட்டியாக ஒட்டிக்கொள்ளும் நீல வண்ண மீன்வகை.

lump[3], *v.* வேண்டாவிருப்புடன் ஏற்றுக்கொள்.

lum'per, *n.* கப்பல் சரக்கேற்றி இறக்குபவர் ; வேலைக் குத்தகைக்காரர்; திட்பநுட்பமற்ற வகைமுறை அமைப்பாளர்.

lum'ping, *a.* (பே-வ.) பெரிய; ஏராளமான; (தொ.) lumping weight, நல்ல பளு.

lum'pish, *a.* மிகுபளுவுடன் இடக்குமடக்கான, மொட்டை மொழுக்கையான ; மட்டித்தனமான, மரமண்டையான.

lum'py, *a.* கட்டிகளால் நிறைந்த; கட்டிகளால் மூடப்பட்ட; காற்றினால் நீர் சிறுசிறு அலைகளாகத் துண்டாடப்பட்ட.

lun'acy, *n.* கோட்டி, கிறுக்கு, பைத்தியம் ; (சட்.) குடி யுரிமைக் கையாட்சிக்குக் குந்தகமான அறிவுக்கோளாறு ; படுமுட்டாள்தனம் ; (தொ.) Commissioner in lunacy, பித்தர் காப்புமனையைப் பார்வையிடுவதற்கு அமைக்கப்பட்ட பதின்மர் குழுவில் ஒருவர் ; Commission of lunacy, குறிப் பிட்ட ஆளின் அறிவொழுங்குநிலை ஆய்வு செய்வதற்குரிய அதிகாரம் ; Master in lunacy, பைத்தியக்காரர் என்று குறிக் கப்படுபவரின் செயல்தேர்ந்தாயும் பொறுப்புடைய அலுவலர்.

lun'ar, *n.* மதிநிலை, கதிரவன் அல்லது கோள் அல்லது வான் மீனிலிருந்து சந்திரனுக்குரிய கோணத்தொலைவுநிலை ; பிறை வடிவான மணிக்கட்டெலும்பு ; *a.* நிலாக்கோளத்துக்குரிய ; சந்திரனைப்போன்ற ; திங்களால் தோற்றுவிக்கப்பட்ட ; வெளிறிய, மங்கலான, வெளுத்த ; மந்தமான ; மெல்லிய ; பிறைவடிவான ; வெள்ளி சார்ந்த ; வெள்ளி கொண்டுள்ள ; (தொ.) lunar bone, பிறைவடிவான மணிக்கட்டெலும்பு ; lunar caustic, உருகி இணைவுற்ற வெள்ளிவெடியகி ; lunar cycle, மாநிலா வட்டம், 19 ஆண்டுக்காலம் ; lunar month, இரண்டு மறையுலா மதிகளுக்கு இடைப்பட்ட காலம், 29½ நாட்கள், ஏறத்தாழ நான்குவாரக் காலம் ; lunar nodes, சந்திரன் அயனவரையைக் கடக்குமிடம்; lunar observation, நிரைகோட்டுநிலைக் கணிப்புக்குப் பயன்படும் மதிநிலைத் தொலைவுக்காட்சி; lunar politics, செயல் வகைக்கு ஒவ்வாத அரசியல்; செயல்வகைக்குப் புறம்பான சிக்கல்கள்; பயனற்ற சிறு செய்திகள்.

lunar'ian, *n.* நிலாவாணர், திங்களில் குடியிருப்பவர்; சந்திர மண்டலத்தைப்பற்றிச் சிறப்பறிவுள்ள வான நூலறிஞர் ; திங்கட்கோளச் சிறப்பறிவுடைய கப்பலோட்டி.

lun'ate, *a.* (வில., தாவ.) பிறைவடிவுடைய.

lun'atic, *n.* பித்தர், கிறுக்கர் ; வெறியர் ; பைத்தியம் பிடித் தவர் ; பித்துக்கொள்ளி ; விசித்திரமானவர், விந்தையான நடத்தையுடையவர் ; இயற்கைக்கு மாறுபட்ட போக்கினர் ; அறிவற்றவர், மட்டி; *a.* கிறுக்கான, பித்துப்பிடித்த; வெறி கொண்ட ; முட்டாள்தனமான; விசித்திரப் போக்குள்ள ; விந்தை நடத்தையுடைய ; இயற்கைக்கு மாறுபட்ட போக் குடைய ; அறிவற்ற ; (தொ.) lunatic asylum, பைத்தியக் காரர் பாதுகாப்பு விடுதி ; lunatic fringe, இயக்கங்களில் வரம்பெல்லையிலுள்ள முனைப்பு வெறியார்வப் பற்றாளர் தொகுதி.

luna'tion, *n.* இரண்டு மறையுலா மதிகளுக்கு இடையிலுள்ள காலம்.

lunch, *n.* நண்பகலுணவு ; சிற்றுண்டி ; *v.* நண்பகலுணவு உண்; நண்பகலுணவு அளி, சிற்றுண்டி அருந்து; சிற்றுண்டி அளி.

lun'cheon, *n.* = lunch.

lune, *n.* பிறைவடிவம்; (வடி.) இணைவிற் கட்டம், சமதளத்தில் அல்லது உருளைப்பரப்பில் இரண்டு வில்வளைவுகளுக்கிடைப் பட்ட வடிவம்.

lunette', *n.* வில்வடிவ முகட்டொளிப் புழைவாய், வளைமாட முகட்டில் பிறைவடிவான வண்ண ஓவியப்பகுதி; அரண் வகையில் முனைப்பான இரண்டு முகப்புக்களையும் இரண்டு இணைச் சிறைகளையும் கொண்ட கட்டுமானம்; தட்டை வடி வான கடிகாரக் கண்ணாடிவில்லை ; (வர.) தலைவாங்கிப் பொறியில் கழுத்தை விடுவதற்கான துளை.

lung, *n.* நுரையீரல்; செயற்கை மூச்சு ஊட்டுவதற்காக நோயாளியின் உடம்பின்மேல் பொருத்தப்படும் இருப்புக்கூடு; (தொ.) good lungs, உறுதியான குரல்; lungs of London, பெரிய பட்டணத்தில் அல்லது அதற்கருகில் உள்ள திறந்த வெளியிடங்கள் ; lungs of oak, நுரையீரல் நோய்க்கு நல்ல தெனக் கருதப்படும் காளான்வகைப் பூண்டு.

lunge[1], *n.* வட்டோட்ட வீதி, வட்டமான குதிரை வையாளி வீதி ; வட்டணைக்கயிறு, குதிரைகளை வட்டாகாரமாக ஓட விடும்போது பிடிக்கும் கயிறு ; *v.* குதிரையை வட்டோட்ட வீதியில் பழக்கு ; வட்டணைக் கயிற்றுதவியால் குதிரையை ஓடவிட்டுப் பயிற்றுவி.

lunge[2], *n.* வாட்போரில் திடீரென்ற வாட்குத்து; திடீரென்ற முன்தேக்கிய பாய்வு, பாய்ச்சல்; *v.* வாளினாற் குத்து, குத்துச்சண்டையில் தோள்வாங்கிக் குத்து; குதிரைவகையில் எற்று, உதை ; படைக்கலங்கொண்டு ஓங்கிக்குத்து ; குத்திச் செலுத்து ; திடீரென்று பாய்ந்து செல் ; திடீரெனப் பாய்ந்து புறப்பட்டுச்செல்.

lung'-fish, *n.* நுரையீரலுடன் செவுள்களும் உடைய மீன் வகை.

lung'-pow'er, *n.* குரல் ஆற்றல்.

lung'wort, *n.* நுரையீரல் நோய்க்கு நல்லதெனக் கருதப்படும் காளான்வகைப் பூண்டு.

lunisol'ar, *a.* திங்களுக்கும் ஞாயிறுக்கும் ஒருங்கே தொடர் பான ; (தொ.) lunisolar period, ஞாயிறு வட்டமும் திங்கள் வட்டமும் ஒன்றுபட்டுப்போகும் நிகழ்ச்சிகளுக்கிடையிலுள்ள 532 ஆண்டுகள் கொண்ட கால அளவு ; lunisolar year, ஞாயிறு திங்களின் வட்ட மாறுதல்களினால் முறைப்படுத்தப் படுங் கூறுகளையுடைய ஆண்டு.

lunk'ah, (இ.) *n.* காரச் சுருட்டு வகை.

lup'in, lup'ine[1], *n.* கால்நடைத் தீனியாக உதவுந் தோட்டச் செடிவகை.

lup'ine[2], *a.* ஓநாய்க்குரிய ; ஓநாய் இனஞ் சார்ந்த ; ஓநாய் போன்ற.

lup'ines, *n. pl.* கால்நடைத் தீனியாக உதவுந் தோட்டச்செடி வகைகளின் விதை.

lup'us, *n.* தோல் படைநோய் வகை.

lurch[1], *n.* கடுந்தோல்வி நிலை, எட்டாநிலை; (தொ.) leave in the lurch, நண்பனை-கூட்டாளியை இடர்ப்பாடான நிலையில் கைவிட்டுவிடு.

lurch[2] *n.* திடீர்ச்சாய்வு, தடுமாற்றம்; *v.* திடீரென ஒருபக்கஞ் சாய், தடுமாறு.

lurch'er, *n.* சிறு திருட்டுச் செய்பவர், மோசடிக்காரர்; ஒற்றர்; கள்ளவேட்டைக்காரர் பயன்படுத்தும் கலப்பின நாய் வகை.

lure, *n.* வேட்டைப்பருந்தைத் திருப்பி வருவிப்பதற்குரிய கவர்ச்சிச்சின்னம்; வஞ்சக்கவர்ச்சிப் பொருள்; வஞ்சக்கவர்ச்சி இரை; வேட்டைக்கவர்ச்சி; மாயக்கவர்ச்சித் திறம்; *v.* கவர்ச்சிச் சின்னத்தால் வேட்டைப் பருந்தை மீட்டழை; மருட்டு, கவர்ச்சிக்குட்படுத்து, வசப்படுத்து; ஏய்; ஆசைகாட்டி இழு; தூண்டிச் செயலாற்றுவி.

lur'id, *a.* கோர உருவான, பேய்போன்ற; வெளிறியதோற்ற முடைய; பயங்கரமான; அச்சக்கூறுகள் வாய்ந்த; இயல்பு முரணிய; கொந்தளிக்கிற; (தாவ.) மங்கலான மஞ்சள் பழுப்பு நிறமுடைய; (தொ.) cast a lurid light on character or facts, நடத்தை அல்லது செய்திகளை அவலமாக அல்லது பயங்கரமாகக் காட்டு.

lurk, *n.* மறைவு; *v.* பதுங்கியிரு, ஒளிந்திரு; காத்திரு, உள்ளுறைவாயிரு; கவனிக்கப்படாமல் இரு, வெளிப்படாதிரு, உள்ளுறையாயிரு; (தொ.) on the lurk, மறைவில் ஒற்றுடிக் கொண்டு, வேவுபார்த்துக்கொண்டு.

lurk'ing-place, *n.* மறைவிடம், ஒளிந்திருக்குமிடம்.

lu'scious, *a.* மிகுமதுரமான, நறுஞ்சுவையுள்ள; தெவிட்டும் அளவுக்கு இனிப்பாயிருக்கிற; அளவுமீறிய கவர்ச்சியுடைய; மொழிநடை வகையில் புலனின்பக் கவர்ச்சிமிக்க; சிற்றின்பச் சுவைகனிந்த.

lush, *a.* புல் தழை வகையில் வளமை ததும்பிய.

lust, *n.* இச்சை, கழிகாமம்; அடங்காச் சிற்றின்ப அவா, தகாச் சிற்றின்பவேட்கை; மட்டில் புலனுகர்வீடுபாடு; *v.* மிகுவிருப்பங்கொள், இச்சைகொள், காமவிகாரமுறு.

lus'tral, *a.* தூய்மைச் சடங்கு சார்ந்த, வினைமுறையாகத் துப்புரவு செய்வது பற்றிய, துப்புரவுச் சடங்கில் பயன் படுத்தப்படுகிற.

lus'trate, *v.* கழுவாய்ப்பலி கொடுத்துத் துப்புரவாக்கு, வினை முறைச் சடங்குகள் செய்து தூய்மைப்படுத்து, திருமுழுக் காட்டித் தூய்மைசெய்.

lus'tre[1], *n.* பளபளப்பு, ஒளிர்வு; பிறங்கொளி; காந்தி; புறப்பொலிவு; கதிரொளி; அழகொளி, மிகுவனப்பு; பகட்டு; மிகுபுகழ்; மேன்மை, தனிச்சிறப்பு; சரவிளக்கு; சரவிளக்கின் தொங்கல் கண்ணாடிப்பட்டை; மெல்லிய பளபளப்பான உடுப்புத் துணிவகை; ஒளிரும் மேற்புறமுடைய கம்பளி வகை; *v.* துணி மெருகிடு; மட்பாண்டம் பளபளப்பாக்கு.

lus'tre[2], *n.*=lustrum.

lus'trine, *n.* பளபளக்கும் பட்டுத் துணிவகை.

lus'trum, *n.* ஐந்தாண்டுக்காலம்; *pl.* lus'tra, lus'trums.

lus'ty, *a.* உடல்நலமும் வலிமையும் வாய்ந்த; ஊக்கமுடைய, எழுச்சியுடைய, சுறுசுறுப்புள்ள.

lu'sus natur'ae, (ல.) *n.* இயல்பிழுக்கம், பெரிதும் இயல் முரணிய இயற்கைப் படைப்பு, இயல்திரி விலங்குரு; இயல் திரி செடிவடிவம்; இயற்கையின் திருவிளையாடல்.

lu'tanist, *n.* யாழ்ப்பாணர், யாழ்வகை வாசிப்பவர்.

lute[1], *n.* 14-17-ஆம் நூற்றாண்டுகளில் கையாளப்பட்ட யாழ் போன்ற இசைக்கருவி வகை; (தொ.) little rift within the lute, யாழ் உட்கீறல்; மூளைக்கோளாறின் தொடக்கம்; கலகத்தின் தொடக்கக் குறி.

lute[2], *n,* சிலைமண், மண்பூச்சடைப்பு; காற்றுப்புகா மண் ணடைப் பூச்சு; கலமட்பூச்சு; ஒட்டுச்செடிப்பூச்சுக்காப்பு; *v.* சிலைமண்பூசு, மண்பூசியடை, மட்காப்பிடு.

lu'teoful'vous, *a.* பழுப்பு கலந்த சிவந்த மஞ்சள் நிறமான.

lu'teous, *a.* (தாவ.) திண்ணிய செம்மஞ்சள் நிறமான.

lute'string, *n.* பளபளப்பான பட்டுத்துணி.

Lute'tian, *a.* பாரிஸ் நகர வாணர் சார்ந்த.

Lu'theran, *n.* மார்டின் லூதர் (Martin Luther 1483-1546) என்னும் செர்மன் சமய சீர்திருத்தக்காரரைப் பின்பற்றுபவர்; ஆக்ஸ்பர்கில் (Augsburg) அறிவிக்கப்பட்ட சமயக்கோட்பாடு களை ஒப்புக்கொள்ளும் திருச்சபையைச் சேர்ந்தவர்; *a.* மார்டின் லூதர் சார்ந்த; ஆக்ஸ்பர்கில் அறிவிக்கப்பட்ட சமயக் கோட்பாடுகளை ஒப்புக்கொள்ளுந் திருச்சபைசார்ந்த.

lux'ate, *v.* மூட்டு விலகச்செய்; இடம்பெயர்.

luxa'tion, *n.* இடப்பெயர்வு.

luxe, (பிர.) *n.* மிகுநிறைவு; (தொ.) *De luxe,* நிறைந்த வசதியுடைய.

luxur'iant, *a.* இனப்பெருக்க வளமுள்ள; தாராளமாக வளர்கிற; அளவுமீறிய செழிப்புவாய்ந்த; இலக்கியநடை-கலைப் பாணி வகையில் அணி வளம் நிரம்பிய, அழகுச்சொற் பெருக்கம் உடைய.

luxur'iate, *v.* களியாட்டயர், இன்பத்தில் மூழ்கிக்களி; கவலையற்று வாழ், நீடின்பம் நுகர்.

luxur'ious, *a.* உயர் இன்பவாழ்வுடைய; இன்பவாழ்வுக் குகந்த; ஒய்யாரமான; செழிப்பான; கட்டற்ற புலனுகர் வின்பஞ் சார்ந்த.

lux'ury, *n.* உயர்இன்பவாழ்க்கை; இன்பவாழ்க்கைப் பொருள்; அரும்பெறல் இன்பப்பொருள்; உயர்விலைப்பொருள்; கவலையற்ற இன்பப்பெருவாழ்வு; இன்றியமையாக்கூடிய ஆனால் விரும்பத்தக்க பொருள்.

lycan'thropy, *n.* சூனியக்காரியின் ஓநாய் உருவேற்பு; தாம் விலங்காய்விட்டதாகக் கொண்ட மருட்சியால் நோயாளி விலங்கின் குரல்-உணவுப்பண்புகளை மேற்கொள்ளல்.

lycee, (பிர.) *n.* பிரஞ்சு நாட்டில் அரசினர் நடத்தும் இடை நிலைப்பள்ளி.

Lyce'um, *n.* அரிஸ்டாட்டில் தம் மாணவர்க்கு மெய்விளக் கியல் கொள்கைகளைக் கற்பித்த ஆதென்ஸ் நகரத்திலுள்ள தோட்டம்; இலக்கியக் கழகம்; சொற்பொழிவுக் கூடம்; கற்பிக்குமிடம்.

Lych'nis, *n.* இளஞ்சிவப்பு மலர்களையுடைய செடி இனம்.

lyc'opod, *n.* (தாவ.) நிமிர்ந்த சிதல் உறைகளையுடைய பாசி வகை.

lycopod'ium, *n.* (தாவ.) நிமிர்ந்த சிதல் உறைகளையுடைய பாசிவகை; பாசிவகையிலிருந்து எடுக்கப்பட்டு அறுவை மருத்துவத்தில் உறிஞ்சு பொருளாகவும் நடிப்பரங்க மின்செய் ஒளியாகவும் பயன்படும் நுண்பொடிவகை.

lydd'ite, *n.* ஆற்றல்மிக்க வெடிமருந்து வகை.

Lyd'ian, *n.* மேலை ஆசியாவின் பண்டை நாடாகிய லிடியா வில் வழங்கிய மொழி; லிடியாவில் வாழ்ந்தவர்; *a.* லிடியா நாட்டைச் சார்ந்த; (தொ.) Lydian mode, (இசை.) பண்டைய கிரேக்க சுரவரிசை வகை.

lye, *n.* கடுங்கார நீர், ஆற்றல் வாய்ந்த கழுவுநீர்ம வகை; மாசு போக்கி.

ly'ing[1], *n.* படுத்திருத்தல்; படுக்குமிடம்; *a.* படுத்திருக்கிற; (தொ.) lying in, மகப்பேறுற்ற நிலையில்.

ly'ing[2], *n.* பொய் பேசுதல்; *a.* பொய் பேசுகிற, ஏமாற்று கிற, பொய்யான.

ly'ing-in', *n.* மகப்பேறுற்ற நிலை; (தொ.) lying-in hospital, மகப்பேற்று மருத்துவமனை.

lyke'-wake, *n.* இறந்தோர் உடலுக்கு இராக்காவல் விழிப்பு.

lyme'-grass, *n.* மணலின் புடைபெயர்ச்சியைத் தடுப்பதற்கும் பயிரிடும் புல்வகை.

lymph, *n.* (செய்.) தூயநீர்; (உட.) நிணநீர்; புண் முதலியவற்றிலிருந்து கசியும் ஊனீர்; ஆவின அம்மைக் கொப்புளங்களிலிருந்து எடுக்கப்படும் சீநீர்; காப்புச் சீநீர் வகை; (தொ.) vaccine lymph, ஆவின அம்மைக் கொப்புளங்களிலிருந்து எடுக்கப்படும் சீநீர்.

lymphat'ic, *n.* ஊனீர் நாளம்; *a.* நிணநீர் சார்ந்த; சீநீர் சுரப்பிக்கிற; ஊனீர் கொண்டு செல்கிற; ஊளைச்சதையுள்ள; வெளிறிய தோலுடைய; மந்தமான; சோம்பலான; lymphatic gland, நிணநீர்ச் சுரப்பி; lymphatic vessel, ஊனீர் நாளம்.

lynce'an, *a.* காட்டுப்பூனையின் கண் பார்வையுடைய; கூரிய பார்வையுள்ள.

lynch, *n.* சட்டமுறைப்படா வழக்குமன்ற நடவடிக்கை; *v.* சட்ட முறையின்றித் தான்தோன்றித்தனமான தீர்ப்பளி; தான்தோன்றித்தனமாகக் கொலைத்தண்டனை விதி; (தொ.) Judge Lynch, சட்டவிரோதமான நீதிமன்றக் கற்பனை உருவகம்; lynch law, Lynch law, சட்டவிரோதமான நீதிமன்ற விதிமுறை.

lynx, *n.* சிவிங்கி, குறுவாலுடைய பூனையின விலங்குவகை.

lynx'-eyed, *a.* கூரிய பார்வையுள்ள.

Ly'on, Lyon King of Arms, *n.* ஸ்காத்லாந்தின் முதன்மையான படைக்கல அதிகாரி.

Lyr'a, *n.* வடக்கு விண்மண்டல மீன்குழு.

Lyr'aid, *n.* (வான்.) வடக்கு விண்மீன்குழுவினின்றும் ஏப்ரல் 20 வாக்கில் பரவும் ஒளி.

lyr'ate, *a.* (வில., தாவ.) யாழ் வடிவமுள்ள.

lyre, *n.* வழக்கற்றுப்போன யாழ்போன்ற நரப்பிசைக்கருவி வகை.

lyre'-bird, *n.* யாழ்வடிவிலமைந்த தோகையினையுடைய ஆஸ்திரேலியப் பறவை வகை.

'ly'ric, *n.* சிறிய அளவினதான உணர்ச்சிப்பாடல்; தன்னுணர்ச்சிப்பாட்டு; *a.* யாழ்சார்ந்த; யாழுக்குரிய, பாடுதற்கேற்ற; இசைப்பாட்டாகப் பாடத்தக்க; பாடலுருவான; பாடலினது இயல்புள்ள; பாடலினால் தெரிவிக்கப்பட்ட; பாட்டில் வெளியிடத்தக்க; கவிஞரின் தற்கருத்துணர்ச்சிகளைத் தெரிவிக்கிற; கவிஞர் வகையில் உணர்ச்சி நிரம்பிய சிறு பாடல்கள் எழுதுகிற; (தொ.) lyric drama, the lyric stage, உணர்ச்சிப்பாடல் நாடகம்.

ly'rical, *a.* உணர்ச்சிப்பாடல் உருவான; உணர்ச்சிப் பாடலுக்குரிய மொழிநடையில் அமைந்திருக்கிற; உணர்ச்சிப் பாடலுக்குகந்த மொழிநடையுடைய.

ly'ricism, *n.* உணர்ச்சிப்பாடலாயமைந்த; உணர்ச்சிப்பாடற் பண்பு; உயர்தர உணர்ச்சிப்பாங்கு.

ly'rics, *n. pl.* உணர்ச்சிப் பாடல்கள்.

Lyr'id, *n.* = Lyraid.

lyr'ist, *n.* யாழ்ப்பாணர்; உணர்ச்சிப் பாடற்கவிஞர்.

lys'ol, *n.* நோய்தொத்தல் தடுப்புநெய்; நச்சுத்தடை மருந்தாகப் பயன்படுத்தப்படும் நீரில் கரையத்தக்க சவர்க்கார நெய்க்கலவை வகை.

Ma, *n.* = mamma.
ma'am, *n.* = madam.
mac, *n.* (பே-வ.) = macintosh.
maca'bre, *a.* கொடூரமான, கோரமான; (தொ.) Danse macabre, கொடுகொட்டியாடல்.
macac'o[1], *n.* அமெரிக்க குரங்கு வகை.
macaco[2], *n.* மனிதக்குரங்கு வகைகள்.
macad'am, *n.* பாட்டைச்சரளை, பாட்டை போடுவதற்குரிய ஒரே சீராக உடைக்கப்பட்ட கல்துணுக்குத் தொகுதி; *a.* ஜான் மக்காடம் (John Macadam 1756-1836) கண்டமுறையிற் போடப்பட்ட; சரளையிடப்பட்ட.
macad'amize, *v.* பாட்டைக்குச் சரளைபோடு.
macaron'i, *n.* கோதுமைமாக் குழல்பண்ணியம்; பல்கூட்டு; வண்ணப் புனைபொருள்; பறவை வகை; (வர.) பதினெட்டாம் நூற்றாண்டு வழக்கில் ஒய்யாரன், பிலுக்கன்; (தொ.) macaroni cheese, பாலாடைக்கட்டியுடன் வேகவைக்கப்பட்ட கோதுமை மாப்பசைச் சுருள் பண்ணியம்.
macaron'ic, *a.* பாடல்கள் வகையில் நையாண்டி வடிவத்திலுள்ள; மணிப்பிரவாளமான, லத்தீன் ஆங்கிலச் சொற்கதம்பமான, குழப்பமான.
macaron'ics, *n. pl.* கேலிப்பாடல்கள்; லத்தீன் ஆங்கில மொழிச்சொல் வழக்குகளின் கதம்பம், குழப்பம்.
macaroon', *n.* முட்டை வெண்கரு வாதுமை சர்க்கரை முதலியன சேர்த்துச் செய்யப்படும் அப்பவகை.
macart'ney, *n.* வான்கோழியினப் பறவை.
macass'ar, macass'ar oil, *n.* கூந்தல் தைல வகை.
macaw'[1], *n.* கிளி வகை.
macaw'[2], *n.* பனை வகை.
macc'abaw, *n.* = maccaboy.
Maccabe'an, *a.* கி. பி. 166-இல் சிரியாமன்னரின் கொடுங்கோன்மையிலிருந்து யூதேயாவை விடுவித்த யூத இளங்கோக்கள் சார்ந்த.
macc'aboy, *n.* நறுமண மூக்குத்தூள்.
mace[1], *n.* (வர.) செண்டு, தண்டாயுதம்; பணித்துறை முத்திரைக்கோல்; மேசைப்பந்தாட்டக் கோல்.
mace[2], *n.* சாதிபத்திரி, சாதிக்காயின் மேல்தோடு.
mace'-bearer, *n.* பணித்துறை முத்திரைக்கோல் ஏந்திச் செல்லும் அலுவலர்.
ma'cedoine, *n.* காய்கறிக்குழம்பு; சமையலுக்குரிய குழம்புச் சாறு.
ma'cerate, *v.* ஊறவைத்து மென்பதமாக்கு; பட்டினியால் மெலிவி; மெலிந்து நலிவுறு.
machan', (இ.) *n.* பரண்.
machet'e, *n.* = matchet.
Machiavell'i, *n.* அரசியலில் இரண்டகஞ் செய்பவன், சாணக்கியன், பழிக்கஞ்சாச் சூழ்ச்சிக்காரன்.
Machiavell'ism, *n.* சூழ்ச்சிக்குத் தயங்காத அரசியல்முறை, சாணக்கியம்.
machic'olate, *v.* (க-க.) தாக்குபவர்கள்மேல் கற்கள் முதலியவற்றை எறிவதற்காக மதிற்சுவர்களில் தண்டயங்களுக்கிடையில் இடைவெளிகள் ஏற்படுத்து.
machicoul'is, *n.* (க-க.) துப்பாக்கி வைத்துச் சுடுவதற்காக மதிற்சுவர்த் தண்டயங்களுக்கிடையிலுள்ள வெளியிடம்.
mach'inate, *v.* சூழ்ச்சிசெய், சதிவேலைகள் புரி.
machina'tion, *n.* சூழ்ச்சி, சதி.
mach'inator, *n.* சூழ்ச்சியாளர்.
machine', *n.* இயந்திரம், விசைப்பொறி, இயற்பியல் விசையைச் செலுத்துவதற்கான அமைவு; விசையைக் கொண்டு செலுத்தும்கருவி; விசையைப்பயன்படுத்தும் கருவி; இருசக்கர மிதிவண்டி, முச்சக்கர மிதிவண்டி; இயந்திரம்போல வேலை செய்பவர்; அறிவைச் செலுத்தாமல் செயலாற்றுபவர்; சற்றும் பிசகாமல் ஒழுங்காகச் செயலாற்றுபவர்; மேலாண்மை இயக்கும் அரசியல் அமைப்பு; *v.* இயந்திரத்தினால் செய், இயந்திரத்தின் உதவியால் வினையாற்று; இயந்திரத்தைப் பயன்படுத்து; (தொ.) machine tool, இயந்திரத்தினால் இயக்கப்படுங் கருவி; simple machine, கிளையுறுப்புக்கள் இல்லாத தனிநிலை இயந்திரம்.
machine'-gun, *n.* இயந்திர பீரங்கி, சக்கரங்களின்மேல் ஏற்றப்பட்டுத் தானே விரைவில் சுடும் பீரங்கி; *v.* இயந்திர பீரங்கியால் சுடு.
machine'-made, *a.* இயந்திரத்தினாற் செய்யப்பட்ட.
machi'nery, *n.* இயந்திரத்தொகுதி; இயந்திரக் கருவிகலத் தொகுதி, இயந்திரப்பணி; இயந்திர விசை; இயந்திர அமைப்பு; இலக்கியத்துறையில் இயற்கை கடந்த ஆள் நிகழ்ச்சித் துணை அமைப்பு.
machi'nist, *n.* இயந்திரங்கள் செய்பவர்; இயந்திரங்களை நெறிப்படுத்துபவர்; இயந்திரங்களை இயக்குபவர்; இயந்திர இயக்கவல்லுநர்; தையல் இயந்திரத்தில் வேலைசெய்பவர்.
machom'eter, *n.* விமானக்காற்று ஒப்புவிசைமானி, திணைநிலக்காற்று வேகத்தின் கூறளவாக விமான வேகத்தை கணித்தளவிடும் கருவி.
mac'intosh, *n.* மழைச்சட்டை, மழை மேலங்கி.
mack, *n.* (பே-வ.) = macintosh.
mack'erel, *n.* காளுங்கெளுத்தி, உணவாகப் பயன்படும் கடல் மீன்வகை; (தொ.) mackerel breeze, mackerel gale, கடலின் மேற்புறத்தைச் சலசலக்க வைத்துக் காளுங்கெளுத்தி மீன் பிடிப்பதற்குதவும் வன்காற்று; mackerel sky, நீண்ட மெல்லிய ஒருபோகான பஞ்சுத்திரள்கள் போன்ற மேகங்களுடன் கூடிய வானம்.
mack'intosh, *n.* = macintosh.
ma'cle, *n.* இரட்டைப்பளிங்கு; கனிப்பொருளில் உள்ள கறுப்புப்புள்ளி.
Macon, (பிர.) *n.* பிரஞ்சு நாட்டிலுள்ள இன்தேறல் வகை.
macon'ochie, *n.* படைவீரர்களுக்குக் கொடுக்கப்படும் பேழை உணவுவகை.
macra'me, *n.* இழைமுடிச்சுக்களின் விளிம்பு, கயிற்று முடிச்சின் விளிம்பு.
macrocephal'ic, *a.* நீண்ட அல்லது பெரிய தலையுடைய.
mac'rocosm, *n.* அண்டம், அகிலம், பேரளவினதாகிய முழுமை.
macrom'eter, *n.* தொலைவிலுள்ள பொருள்களை அளப்பதற்கான கருவி.
mac'ron, *n.* நெடிற்குறி.
macroscop'ic, *a.* வெற்றுக் கண்களுக்கே புலனாகிற.
mac'ula, *n.* பரிதி வட்டத்திலுள்ள கரும்புள்ளி; கனிப்பொருளில் உள்ள களங்கம்; தோலில் நிலையாக உள்ள மறு; *pl.* mac'ulae.
mad, *a.* பித்துப்பிடித்த, மூளைக்கோளாறுடைய, தன்னிலை மறந்த, மதிகேடான, அறிவுகெட்ட; மனவெழுச்சிகொண்ட, மதிமயக்கமுற்ற; (பே-வ.) மன எரிச்சலுற்ற; விலங்குகள் வகையில் வெறிபிடித்த; மகிழ்ச்சி மீதூர்ந்த, உவகை வெறி பிடித்த; *v.* பித்துக்கொள்ளச் செய்; பைத்தியமாயிரு, வெறிச் செயல்கள் புரி; (தொ.) like mad, மூர்க்கமாக, வல்லந்தமாக; mad as a hatter, முழுப்பைத்தியம் பிடித்த.
mad'am, *n.* பெருமாட்டி, மாதரைக்குறிக்கும் நன்மதிப்பு விளி.
madame, (பிர.) *n.* திருவாட்டி, மாதர் குறித்த நன்மதிப்படை மொழி; பெருமாட்டி, மாதர் குறித்த நன்மதிப்பு விளி; *pl.* *mesdames*, (தொ.) Madame Tussaud's, லண்டன் மெழுகுச் சிலைக் காட்சிச்சாலை.
madapoll'am, *n.* முன்பு தமிழகத்தில் நெய்யப்பட்ட பருத்தித் துணி வகை.

mad'cap, *n.* எளிதில் உணர்ச்சி வசப்படுபவர், பித்துக் கொள்ளி.

madd'en, *v.* பித்துக்கொள்ளச்செய், பைத்தியமாக்கு ; சின மூட்டு, எரிச்சலுண்டாக்கு ; வெறிகொள்.

madd'er, *n.* மஞ்சிட்டி, மஞ்சள் மலர்களையுடைய பூண்டு வகைக்கொடி ; மஞ்சிட்டிச்சாயம்.

mad'-doc'tor, *n.* பைத்தியம் பிடித்தவர்களுக்குப் பண்டுவம் செய்யும் மருத்துவர்.

made[1], *a.* ஆக்கப்பட்ட ; இயற்றப்பட்ட ; செய்துமுடிக்கப் பட்ட ; செயற்கையான ; வலிந்து உண்டுபண்ணப்பட்ட ; கூட்டிணைவான; (தொ.) a made man, வாழ்கையில் உறுதி யாக வெற்றிபெறக்கூடியவர் ; made dish, பல பொருள்கள் கலந்து சமைக்கப்பட்ட துணையுணவு ; made gravy, செயற் கையாய்க் கலவை செய்யப்பட்ட இறைச்சிக்குழம்பு.

made[2], *v.* make என்பதன் இறந்தகாலம், முடிவெச்சம்.

Madeir'a, *n.* மடீராத் தீவில் செய்யப்படும் வெள்ளை இன் தேறல் வகை ; (தொ.) Madeira cake, மென்பதமான அப்ப வகை.

mademoiselle, (பிர.) *n.* பிரஞ்சுமொழி வழக்கில் மணமாகாத பெண் ; பிரஞ்சு விட்டாசிரியை ; *pl. mesdemoiselles.*

mad'-house, *n.* பித்தர் மருத்துவ மனை.

mad'ia, *n.* சூரியகாந்தியினச் செடி வகை; (தொ.) madia oil, சூரிய காந்தியினச் செடியிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்.

mad'man, *n.* பிச்சன், கோட்டிக்காரன்.

madonn'a, *n.* கன்னிமேரி ; கன்னிமேரியின் படம் ; கன்னி மேரியின் சிலை; (தொ.) madonna lily, வெள்ளாம்பல் வகை.

madras'ah, (அரா.) *n.* இஸ்லாமியக் கல்லூரி.

mad'repore, *n.* நுண்துளைகள் கொண்ட பவளப் பேரினம் ; நுண்துளைகள் கொண்ட பவள வகையை உண்டாக்கும் உயிரினம்.

mad'rigal, *n.* சாவளி, காதல் சார்ந்த சிறு பாடல் வகை.

madur'o, (ஸ்பா.) *a.* சுருட்டுகள் வகையில் நிறைமணம் ஊட்டப்பெற்றுள்ள.

mad'woman, *n.* பிச்சி, பித்துடையவள்.

Maecen'as, *n.* கலைவள்ளல், கலை-இலக்கியம் ஆகியவற்றின் புரவலர்.

mael'strom, *n.* நார்வே மேற்குக் கரையில் தோன்றும் நீர்ச் சுழி ; பெரிய கடல் நீர்ச் சுழல்.

maen'ad, *n.* கிரேக்க மதுத் தெய்வத்தின் பூசாரிப்பெண்.

maestos'o, (இத்.) *adv.* (இசை.) விருர்ந்து.

maes'tro, (இத்.) *n.* புகழ்வாய்ந்த இசைப்பாடல் இயற்றுபவர்; இசை கற்பிப்பவர் ; இசைநிகழ்ச்சி நடத்துபவர்.

maff'ick, *v.* ஆரவார வெறியாட்டயர்.

mafi'a, *n.* சிசிலி (Sicily) என்னும் தீவுப்பகுதியின் மக்க ளிடையே சட்டத்தின்மீதும் அமைச்சர்கள்மீதும் உள்ள பகைமை ; சட்ட எதிர்ப்புக் குற்றச்செயல்கள் ; சட்டத்தின் மீது பகைமை கொண்டு குற்றமிழைப்பவர்கள்.

mag, *n.*=magneto.

magazine', *n.* படைக்கலக் கொட்டில், போர்க்காலத்தில் படைக்கலங்களையும் போர்த்தளவாடங்களையும் சேர்த்து வைக்குமிடம், துப்பாக்கிமருந்து முதலிய வெடிமருந்து களைச் சேர்த்து வைக்குமிடம் ; பருவ இதழ்ச்சுவடி, பல எழுத்தாளர்களின் கட்டுரைகளடங்கிய பருவ வெளியீடு ; (தொ.) magazine gun, அவ்வப்போது மருந்து நிரப்பா மலேயே அடுத்தடுத்துச் சுடவல்ல துப்பாக்கி.

Mag'dalen, Mag'dalene, *n.* திருந்திய விலைமகள்.

Magdalen'ian, *a.* (தொல்.) பிரஞ்சு நாட்டில் உள்ள 'லா மாடிலீன்' (La Madeleine) என்னுமிடத்திற் காணப்படும் படிவங்கள் காட்டுங் கற்காலஞ் சார்ந்த.

mage, *n.* மாயாவி ; அறிவர், புலவர், மேதை.

magen'ta, *n.* ஒண் சிவப்புச்சாயம் ; *a.* ஒண் சிவப்புச்சாயந் தீட்டப்பட்ட ; ஒண் சிவப்புச்சாயம் போன்ற.

magg'ot, *n.* சில பூச்சிகளின் முட்டைப்புழு ; நிலையற்ற வேடிக்கைக் கற்பனை ; (தொ.) red maggot, கோதுமைப் பூச்சியின் முட்டைப்புழு.

Ma'gi, *n. pl.* பண்டைப் பாரசிகப் புரோகித வகுப்பினர் ; சூனியக்காரர், மாயாவி ; அறிவர் ; (தொ.) the Magi, the three Magi, குழந்தை இயேசுநாதருக்குக் கீழ்த்திசையிலிருந்து காணிக்கைகள் கொண்டு வந்த 'அறிஞர்கள்'.

Ma'gian, *n.* பண்டைய பெர்சிய குருமார்களில் ஒருவர் ; மந் திரக்காரர் ; *a.* பண்டைப் பெர்சிய குருமார் சார்ந்த.

ma'gic, *n.* மாயவித்தை ; மந்திரம்; வியத்தகு விளைவுகளைத் தோற்றுவிக்கும் ஆற்றல்; *a.* மாயவித்தைசார்ந்த; மந்திரம் போன்ற ; வியத்தக்க ; விளக்கமுடியாத ; புதிர்விளைவுகளை உடைய ; (தொ.) black magic, பில்லி, சூனியம் ; magic lantern, படவிளக்குக் கருவி, ஒளி விளக்கப்படம், படங்களைத் திரையில் ஒளியுருப் பெருக்கிக்காட்டுதற்கான அமைவு ; magic mirror, மாயக்கண்ணாடி, எதிர்காலக் காட்சிகளை அல்லது தொலைவுக் காட்சிகளைக் காட்டுங் கண்ணாடி ; magic square, மாயச்சதுரம், நேர் குறுக்குச் சாய்வாக எவ் வழிக் கூட்டினாலும் ஒரே தொகை வரும்படி அமைக்கப்பட் டுள்ள சதுரம்; natural magic, தெய்விக ஆற்றலற்ற மாயம், செப்பிடுவித்தை ; white magic, நல்தெய்வங்களின் துணை யுடன் செய்யப்படும் மாயம்.

magi'cian, *n.* மாயக்காரன், மந்திரவாதி.

magilp', *n.*=megilp.

Maginot line, *n.* செர்மனி எல்லையிலுள்ள பிரஞ்சு அரண் வரிசை.

magister'ial, *a.* குற்றவியல் நடுவர் சார்ந்த ; குற்ற வழக்கு நடுவரால் நடத்தப்பட்ட ; குற்றவியல் நீதிபற்றிய ; தண்ட நடுவர் அதிகாரம் உடைய ; மேலாண்மைத்தனமான ; கருத் துக்கள் வகையில் அதிகாரம் அமைந்த.

magis'tral, *a.* பள்ளி ஆசிரியர்களைச் சார்ந்த; தலைவர்களைச் சார்ந்த ; நோய் தீர்வுமுறை வகையில் மருந்து நூலிற் காணப்பெறுமல் குறிப்பிட்ட நோய்க்கு மருத்துவரால் வகுக்கப் பட்ட.

ma'gistrate, *n.* குற்றவியல் நடுவர் ; அமைதி காப்பு நடுவர் ; தண்டலாளர்.

Maglemos'ian, *a.* டென்மார்க்கில் காணப்படும் தடங்களுக் குரிய தொடக்கக்கால ஐரோப்பிய நாகரிகஞ் சார்ந்த.

mag'ma, *n.* (மண்.) கற்குழம்பு.

Mag'na Cart'a, Mag'na Chart'a, *n.* (வர.) பேருரிமைப் பத்திரம், பிரிட்டனில் ஜான் (John) என்ற மன்னரிடமிருந்து 1215-இல் மக்கள் சார்பில் பெறப்பட்ட அரசியல் உரிமைப் பத்திரம்.

magnal'ium, *n.* அலுமினியமும் வெளிமமும் (magnesium) கொண்ட இலேசான வன்கலவை.

magnanim'ity, *n.* பெருந்தகைமை, பெருந்தன்மை, பெருமித மனப்பாங்கு.

magnan'imous, *a.* பெருங்குணமுள்ள, குறுகிய சிற் றுணர்ச்சிகளைக் கடந்த.

mag'nate, *n.* பெரிய மனிதர், மேம்பாடுடையவர்; சிறப்புடை யவர் ; பெருஞ் செல்வர்.

magne'sia, *n.* வெளிம உயிரகை ; (பே-வ.) வயிற்றுப் புளிப் பகற்றும் மருந்தாகப் பயன்படுத்தப்படும் வெண்பொடி, நீருட்டப்பட்ட வெளிமக்கரியகி.

magnes'ium, *n.* வெளிமம், உலோகத்தனிம வகை ; (தொ.) magnesium light, கண் கூசவைக்கும் பேரொளி.

mag'net, *n.* காந்தம், அயம்பற்றி ; காந்தக்கல்; கவர்ச்சிக் குரிய பொருள் ; கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பொருள்; (தொ.) horse-shoe magnet, வளைவிற் காந்தம்.

magnet'ic, *a.* காந்தத்தின் இயல்புடைய ; காந்த ஆற்றல் உண்டாக்குகிற ; காந்த ஆற்றலால் உண்டாக்கப்படுகிற ; காந்த ஆற்றலால் செயற்படுகிற ; காந்தக்கல்லின் இயல்பு களை ஏற்கத்தக்க ; காந்தக்கல்லினால் ஈர்க்கப்படத்தக்க ; மிக்க கவர்ச்சி வாய்ந்த ; மயக்குகிற, வசியம் பண்ணுகிற ; (தொ.) magnetic equator, காந்த ஊசி சாய்விலாதிருக்கிற நடுநிலை வரை ; magnetic mine, காந்தக் கடற்கண்ணி, கடலுக்கடியில் அமிழ்த்தப்பட்டுக் கப்பல் நெருங்கும்போது வெடிக்கும்படி அமைக்கப்பட்டுள்ள கண்ணி ; magnetic needle, வடக்கு நோக்கி கருவியில் எப்போதும் வடக்கையே காட்டுங் காந்த ஊசி ; magnetic north, காந்த ஊசிமுனை காட்டும் வடதிசைப்பகுதி.

magnet'ics, *n. pl.* அயப்பற்று ஆய்வுத்துறை.

mag'netism, *n.* காந்தவிசை; அயப்பற்று; கவர்ச்சி; அழகுக் கவர்ச்சி; (தொ.) animal magnetism, வசியவித்தை, மனித வசியம் ; terrestrial magnetism, நிலவுலகக் கோளக் காந்த விசை.

mag'netite, *n.* அயக்காந்தம், காந்த விசைப்பட்ட இருப்பு உயிரகை.

mag'netize, *v.* காந்த விசையூட்டு; காந்தத்தின் இயல்புகளை ஏற்று ; கவர்ச்சிசெய், ஈர்த்துக்கொள் ; வசியம்பண்ணு.

magnet'o, *n.* தனிக் காந்த மின்னாக்கி, உள்வெப்பாலைப்பொறி முதலியவற்றில் தீக்கொளுவுதற்காகப் பயன்படுத்தப்படும் தனிநிலைக்காந்த மின்னாக்கிப்பொறி ; *pl.* magnet'os.

magne'to-elec'tric, *a.* காந்த இயக்க மின்வலி சார்ந்த.

magne'to-electric'ity, *n.* காந்த இயக்க மின்வலி.

magne'to-graph, *n.* காந்த வரைவி, காந்தத் தாக்குதல் களின் மாறுதல்களைப் பதிவு செய்வதற்கான கருவி.

mag'netron, *n.* (இய.) உயர்தர அதிர்வூசல் உண்டுபண்ணு வதற்கான வெவ்வயனி வேகக்குழாய்.

magnif'icat, *n.* விவிலியத்தின் 'லூக்' (Luke) பகுதியில் கன்னிமேரி பற்றிய புகழ்ப்பாடல்.

mag'nific'ation, *n.* பெரிதாக்குதல்.

magnif'icent, *a.* வீறுர்ந்த ; உயர்வான ; சிறப்புவாய்ந்த ; முழுநிறைவுடன் கட்டப்பட்ட அல்லது ஒப்பனைசெய்யப்பட்ட; வளமையான, தாராளமான; (பே-வ.) நேர்த்தியான, சிறந்த.

magnif'ico, *n.* வெனிஸ் நகரத்துப் பெரிய மனிதர் ; பெருந் தகை ; *pl.* magnif'icoes.

mag'nify, *v.* பெரிதாக்கு ; உருப்பெருக்கு ; பெரிதாகச்செய் ; பெரிதாக்கிக்காட்டு ; மிகைப்படுத்து ; (தொ.) magnifying glass, உருப்பெருக்காடி.

magnil'oquent, *a.* பெருமையொடு பேசுகிற ; உயர்சொல் வகையான ; தற்புகழ்ச்சியான.

mag'nitude, *n.* பருமன் ; பரும அளவு ; பரிமாணம் ; பெருமை ; முதன்மை, முக்கியத்துவம் ; விண்மீன்கள் வகையில் ஒளிப்பிறக்கம் ; ஒளிப்பிறக்க நிலை ; (தொ.) of the first magnitude, முதன்மைநிலை வாய்ந்த ; முதன்மை ஒளிப்பிறக் கம் உடைய.

magnol'ia, *n.* தழை-மலர் வனப்புக்காகப் பயிற்றி வளர்க்கப் படும் தாவர இனம்.

mag'num, *n.* அரை 'காலன்' (gallon) அளவு ; அரைக் காலனளவுப் புட்டி ; அரைகாலன் அளவு குடிதேறல் ; முகத் தலளவுக்கூறு.

mag'num bon'um, *n.* சமைத்தற்குரிய பெரிய மஞ்சள்நிறப் பழவகை ; உருளைக் கிழங்கு வகை.

mag'num op'us, (ல.) *n.* இலக்கியப் பெரும்படைப்பு ; கலைப் பெரும்பணி ; எழுத்தாளரது முக்கிய படைப்பு.

mag'pie, *n.* கறுப்பு வெள்ளை இறகுகளையும் நீண்டொடுங்கிய வாலையுமுடைய ஐரோப்பியப் பறவை வகை ; புறு வகை ; சலசலப்பாளர் ; வம்பளப்பவர் ; இலக்குவட்டத்தின் புறக் கோடியடுத்த வளையம்; இலக்குவட்டப் புறக்கோடி அடுத்துப் படும் வேட்டு.

Mag'yar, *n.* ஹங்கேரியில் வாழும் மங்கோலிய இனத்தவர் ; ஹங்கேரியில் வாழும் மங்கோலிய இனத்தவரின் மொழி ; *a.* ஹங்கேரியில் வாழும் மங்கோலிய இனஞ் சார்ந்த.

mag'yar, magyar blouse, *n.* ஒரு துணியிலேயே கைகளும் வெட்டப்பட்டுள்ள மார்புச்சட்டை.

Maharaj'a, Maharaj'ah, (ச.) *n.* பேரரசர்.

Maharan'ee, (ச.) *n.* பேரரசி, பேரரசன் மனைவி.

Mahat'ma, (ச.) *n.* அருட் பெரியார், அருளாளர்.

Mahd'i, (அரா.) *n.* இஸ்லாமியப் பெருந்தலைவர், இஸ்லாமி யர் எதிர்பார்க்கும் வருங்காலத்துக்குரிய இஸ்லாமிய உலகத் தலைவர்.

mah-jong', mah-jongg', *n.* 144 காய்களை வைத்து நால்வர் ஆடுஞ் சீன விளையாட்டு வகை.

mahl'stick, *n.* = maulstick.

mahog'any, *n.* சீமை நூக்கு, நல்ல மெருகேற்கும் கட்டுமான மரவகை ; உணவு மேசை ; சீமை நூக்கின் நிறம், செந் தவிட்டு நிறம் ; (தொ.) have one's knees under one's mahogany, உடனிருந்துண்.

Mahom'etan, *n.* இஸ்லாமியர் ; *a.* இஸ்லாமிய.

mahout', *n.* யானைப்பாகன்.

Mahratt'a, *n.* மராட்டியர்.

mah'seer, *n.* வேட்டையாடப்படும் நன்னீர் மீன் வகை.

maid, *n.* சிறுமி ; முதுகன்னி ; பணிப்பெண் ; (தொ.) maid of honour, அரசியின் அல்லது இளவரசியின் மணமாகாத சேடி ; பாலேடு அப்பவகை ; old maid, குமரிமூத்தவள் ; சீட்டாட்ட வகை.

maidan', (பெர்.) *n.* திடல், திறந்த வெளியிடம் ; படை அணி வகுப்பிடம்.

maid'en, *n.* பெண், சிறுமி, மங்கை ; கன்னிப்பெண் ; மண மாகாத பெண் ; மணமாகாத முதிய மாது ; (வர.) ஸ்காத்லாந்தில் பயன்படுத்தப்பட்ட தலைவாங்கிப்பொறி வகை ; *a.* மணமாகாத ; பெண்விலங்கு வகையில் பாலினச் சேர்க்கைபெறாத ; குதிரை வகையில் பந்தயப் பரிசுபெறாத ; குதிரைப்பந்தய ஓட்ட வகையில் பரிசுபெறாக் குதிரை களுக்குமட்டும் இடமளிக்கப்பட்ட ; செடிவகையில் வித்திலிருந்து விளைந்த ; போர்வீரன் வகையில் போரனு பவமற்ற; வாள் வகையில் கையாளப்பட்டிராத, பயன் படுத்தப்படாத ; (தொ.) maiden name, கன்னிப் பருவப் பெயர், மணமாவதற்குமுன் வழங்கிய பெயர் ; maiden over, மரப்பந்தாட்டத்தில் ஓட்டம் எடுக்காத ஆட்டப்பகுதி ; maiden speech, முதற்பேச்சு, கன்னிப்பேச்சு.

maid'enhair, *n.* மயிரிழை போன்ற காம்புகளும் நுண்ணிலை களும் கொண்ட சூரல் வகை.

maid'enhead, *n.* கன்னிமை, கன்னித்தன்மை; முதல் நுகர்வு; முதல் அனுபவம் ; முதல் முயற்சி.

maid'enhood, *n.* கன்னிமை ; கன்னிப்பருவம் ; கன்னிமை நிலை ; முதல் முயற்சி ; முதல் நுகர்வு, முதல் அனுபவம்.

maid'servant, *n.* பணிப்பெண்.

maieut'ic, *a.* சாக்ரட்டீஸ் என்ற கிரேக்க பேரறிஞரின் ஆய்வுமுறை வகையில் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தி விளக்கத் தூண்டுகிற.

mail[1], *n.* கவசம், போர்ப்பாதுகாப்பான இருப்புச்சட்டை; *v.* கவசம் பூட்டு, காப்பிட்டுப்பொதி ; (தொ.) the mailed fist, வன்செயல்.

mail[2], *n.* அஞ்சல் கட்டு ; அஞ்சல்முறை ; வெளிநாட்டு அஞ்சல் ; நாளஞ்சல் தொகுதி ; *v.* அஞ்சல்மூலம் அனுப்பு; அஞ்சலிற் சேர் ; (தொ.) mail order, அஞ்சல் அனுப்பாணை.

mail'cart, mail'coach, *n.* முற்கால அஞ்சல் வண்டி.

maim, *v.* குறைப்படுத்து, ஊனமாக்கு; முடமாக்கு, நொண்டி யாக்கு ; பழுதாக்கு, ஊறுபடுத்து.

main[1], *n.* பகடை ஆட்டக்கேள்வி எண் ; சேவற் போட்டிப் பந்தயம்.

main², *n.* வலு, வலிமை ; உடற்பெரும்பகுதி ; தலைநிலம், நிலப்பெரும்பகுதி ; கடல், கடலின் அகல் பெரும் பரப்பு, ஆழ் கடல்; தலைமை வாய்க்கால் ; சாக்கடைப் பெருங்கால் ; தலைப் பெருங்குழாய்; முதன்மை நிலை; *a.* தலைமையான; சிறப்பான; அளவில் முதன்மையான ; பரப்பில் தலைநிலைவாய்ந்த ; பெரும்பகுதி உட்கொண்ட ; முழு ஆற்றலும் பயன்படுத்தப் பட்ட ; (தொ.) have an eye to the main chance, காரியத்தில் கண்ணுயிரு ; தன்னலத்தில் கருத்தாயிரு ; in the main, பெரும்பாலும் ; main line, மூலபாட்டை, முக்கியபாதை ; Main Street, முக்கிய தெரு ; splice the main brace, தனி மிகையான வெல்லச்சாராயப் பங்கீட்டளவை வழங்கு ; the main point, வாதத்தின் முனைத்த கருத்து ; with might and main, முழு வலிமையோடு கூட, முழுமுச்சுடன்.

main'land, *n.* தீவு முதலிய புறப்பகுதிகள் நீங்கலான தலை நிலப் பரப்பு.

main'mast, *n.* முக்கிய பாய்மரம்.

main'sail, *n.* கப்பலின் முக்கிய பாய்.

main'spring, *n.* கடிகாரத்தின் முக்கிய சுருள்வில்; மூலவிசை, உயிர்ப்பொறி.

main'stay, *n.* கப்பலின் முன்புறப் பாய்மரத்தில் மேலிருந்து கீழ்வரையுள்ள கயிறு ; மூலக்கையிருப்பு ; முக்கியமான ஆதாரம் ; முக்கிய ஆதாரப்பொருள் ; தலைமையான ஆதர வாளர்.

maintain', *v.* தொடர்ந்து செயலாற்று ; விடாமல் நடத்து ; அழியாமற் காத்துவா ; செப்பனிட்டு வைத்துப்பேணு ; ஆதரவளித்துக் காப்பாற்று; உணவுடையுதவி ஆதரி; ஆதரி; உண்மையென வற்புறுத்து, மெய்ப்பித்து நிலைநிறுத்து.

main'tenance, *n.* பேணுகை; பராமரிப்பு; தொடர்ச்சிகாப்பு, காப்பாட்சி ; வாழ்க்கைப்பிழைப்பு ; வாழ்க்கைப்படியுதவி ; பிழைப்பூதியம் ; (சட்.) சட்டமுறையான காரணமில்லாமல் வழக்காடுபவருக்கு உதவிசெய்யுங் குற்றம்.

main'top, *n.* முக்கியமான பாய்மரத்தின் கீழ்ப்பகுதித் தலைப் பின்மீதுள்ள மேடை.

maiol'ica, *n.*=majolica.

maisonette', maisonnette', *n.* சிறு வீடு; தனியாக வாடகைக்கு விடப்பட்ட வீட்டின் பகுதி.

maitre d'hotel, (பிர.) *n.* மாளிகைவீட்டுப் பொறுப்பாட்சியாளர் ; அருந்தக மேலாட்சியாளர்.

maize, *n.* சோளம், மக்காச்சோளம் ; சோளக் கதிர்மணி.

maizen'a, *n.* உணவாகப் பயன்படும் சோளமாக் கூழ்.

majes'tic, *a.* கம்பீரமான, பெருமிதத்தோற்றம் வாய்ந்த ; மாண்பமைதிமிக்க, வீறு நலமார்ந்த, தனிப்பெருஞ் சிறப்புடைய ; அமைவாரவார மிக்க.

maj'esty, *n.* வீறு, தோற்ற உயர்வு ; நடைப்பெருமிதம் ; பேச்சு விழுப்பம் ; புகழ்வீறு ; ஆற்றல் நிறைவு ; மாண்பமைதி, தன்னிறைவமைதி ; புகழ் ஒளி, சூழொளி வட்டம் ; இறைவன் திருவீற்றிருக்கை ; இயேசுநாதரின் திருவெழுந் தருளிப்புக்கோலம்; பாடைமேற்கட்டி; மன்னர் புகழ்ப்பட்டக் குறிப்பு ; (தொ.) Her Majesty, அரசி படர்க்கைச்சுட்டுக் குறிப்பு ; His Majesty, அரசர் படர்க்கைச்சுட்டுக் குறிப்பு ; Their Majesties, அரச குடியினர் படர்க்கைச்சுட்டுக் குறிப்பு; Your Majesties, அரசர் குடும்ப முன்னிலைச்சுட்டு விளிக் குறிப்பு ; Your Majesty, மன்னர் முன்னிலைச்சுட்டு விளிக் குறிப்பு.

Majlis', *n.* பாரசீக நாட்டுச் சட்டமாமன்றம்.

majol'ica, *n.* பளபளப்பான அழகிய இத்தாலிய மட்கல வகை; இத்தாலிய மட்கல வகைப்போலி.

maj'or¹, *n.* படைத்துறைப் பணித்தலைவர் ; (தொ.) bugle major, drum major, pipe major, trumpet major, படைப்பிரிவின் தனித்துறைப் பணித்தலைவர்.

maj'or², *n.* இரண்டில் பெரியது ; வயதுவந்தவர் ; வீட்டுப் பணி மேற்பார்வையாளர்; (அள.) பெரும்பதம், இனச்சுட்டு; மாணவர் சிறப்புநிலைப்பாடம் ; *a.* இரண்டில் பெரிதான ; பெரும்படியான ; முக்கியத்துவமிக்க ; மூப்பான, விஞ்சிய வயதுடைய ; வயதுவந்த; (தொ.) major axis, நெட்டச்சு; major epilepsy, வலிப்புநோய் ; major part, முக்கியமான பகுதி ; பெரும்பகுதி ; major premiss, (அள.) வாத மூலப் பெரும்பொருள் வாசகம் ; major suit, சீட்டாட்டத்தில் உயர் தரச்சீட்டு ; major term, (அள.) பெரும்பதம், இனச்சுட்டு.

maj'or-general, *n.* படைத்துறைப் பணித்தலைவர்.

majo'rity, *n.* பெரும்பான்மை; பெரும்பான்மையர் ; மிகுதியான எண்ணிக்கையுடையவை; நிறை வயது, உரிய வயது; படைத்தளபதிப் பதவி ; (தொ.) absolute majority, தனி நிலைப் பெரும்பான்மை, சரிபாதிக்கு மேலான பெரும்பான்மை; join the majority, இறந்துபோ, மாள்வுறு ; the majority, இறந்தோர், சாவுற்றோர்.

majus'cule, *n.* தொன்மைக்கால எழுத்துமுறை வகையில் பெரிய எழுத்து; *a.* தொன்மைக்கால எழுத்துமுறை வகையில் பெரிய எழுத்தைச் சார்ந்த.

make, *n.* செயலாக்கம்; ஆக்கச்செய்பொருள்; செயல்விளைவு; ஆளின் செயலாக்க விளைவு ; நாட்டின் செய்தொழிலாக்கப் பொருள் ; ஆக்கப்பாணி ; கட்டுமானப்பண்பு ; வினைமைப் பாங்கு; ஆக்க ஒழுங்கு; ஒழுங்கமைதி; அமைப்பு; வடிவம்: மாதிரி, வகை அமைதி ; ஆக்க அளவு ; சீட்டாட்டத்தில் துருப்புக்கேள்வி; மின் தொடர்பாக்கம், மின்வட்டகை முற்றுவிப்பு ; *v.* ஆகும்படி செய் ; ஆக்கு ; படை; உருப்படுத்து; உண்டுபண்ணு ; நூல் இயற்று ; சேர்த்துருவாக்கு ; கலந்து ஆக்கு ; பொருத்தி அமைவி ; ஒழுங்குசெய், சரிசெய் ; செய்; செய்தமை; செய்வி, செயல்தூண்டு; நிகழ்வி; தோற்றுவி; செயல் எழச்செய் ; வற்புறுத்து, வலிந்து செயலாற்றுவி ; ஆகும் தகுதிபெற்றிரு ; காரணமாக அமைவுறு ; மாற்றியமை ; ஆக்கத்தகுதி பெற்றிரு ; ஆக்கப்பயன்படு ; பயனுடையதாயிரு ; மூலப்பொருளாயமைவுறு ; ஆக்கக் கூறுயமை; இணைந்தாகு; கூடியமைவுறு; தொகைபடு, தொகையாகு ; கணிப்புறு ; சீட்டாட்டத்தில் சீட்டுக் கலை; அமர்வி; விளைவி; விளைவாக அளி; விளைவாகு; நிறுவு; நிலைநாட்டு; விதிசெய் ; சட்டமாக அமைவி ; முன்செல் ; ஏற்படுத்து ; ஆயத்தப்படுத்து ; ஆதாயமாகப்பெறு ; பெறு ; சீட்டாட்டத்தில் பிடியில் வெற்றிபெறு ; ஈட்டு ; வழிசெய் ; கெலிப்பெண் பெறு; கண்டுணர் ; முடிவுபடுத்து; உணர்; புரிந்துகொள்; எண்ணங்கொள்; ஐயுறு; தயக்கங்கொள்; காட்சிக்குத் தென்படு; செய்துமுடி; சென்றெட்டு; சென்றெய்து; வெற்றியுடன் எய்து; முயற்சிசெய்; தொடங்கு; புறப்படு; வழங்கு; நடந்துகொள் ; ஒழுகு ; நயவஞ்சகமாக நடந்துகொள் ; துணைக்கருவியாய் உதவு ; நாடிச்செல் ; சாய்வுறு ; சார்பு அளாவி நில் ; (தொ.) make a bag, வேட்டையில் விலங்கு-பறவை பல எய்தப்பெறு; make a book, குறிப்பிட்ட நிகழ்ச்சியின்மீது தொடர்ச்சியாகப் பந்தயங் கட்டு; make after, பின் தொடர், பின்தொடர்ந்துசெல்; make against, எதிர்ப்பாயிரு, பாதகமாயிரு; make a hash of it, பயன்படமுடியாமற் கெடு, காரியங் கெடு ; make and mend, (கப்.) ஓய்வு நேரம், பணியாளர்களுக்குக் குறிப்பிட்ட கடமைகளில்லாத வேளை ; make as if one had, பாசாங்கு செய் ; make away, விரைவாகச்செல், விரை ; make away with, கைதுறந்துவிடு ; கொல் ; வீண்செலவு செய் ; பாழாக்கு ; make believe, பாசாங்கு செய், நடி ; make bold, செய்யத்துணி ; துணிந்து முன் வா ; make do, வைத்துச் சமாளித்துக்கொள், வைத்து ஒப்பேற்றிக்கொள்; make face, அழகுகாட்டு, முகம் வலித்துக் காட்டிக் கேலிசெய்; make for, உகந்ததாயிரு; உறுதி செய்வதாயிரு ; நோக்கிச்செல், குறிக்கொண்டு முன்னேறு ; எதிர் தாக்குதல் செய் ; make free with, தாராளமாகப் பழகு ; உரிமைச் சலுகைகள் கொள் ; make fun of, make game of, ஏளனஞ் செய், கேலி செய்; make good, உறுதி நிறைவேற்று; செய்து முடி ; எதிர்பாரா வெற்றியுறு ; இழப்பீடு செய் ; தவறு சரி செய் ; நேர்மையுடையதாக்கு ; make hay, வைக்கோல் உலர்த்து ; தறுவாயை விடாது கைக்கொள் ; make hay of, கூளமாக்கு, குழப்பு ; make head, முனைந்து முன்னேறு ; make head or tail of, இனம் புரிந்துகொள்ளு ; make it, கடப்பதில் வெற்றியடை ; வெற்றி நிறைவுற்றிரு ;

make it up, வேற்றுமையைப் போக்கிக்கொள்; சரிப்படுத்திக் கொள், சமரசமாகு; make light of, புல்லாகக்கருது, அசட்டை செய்துவிடு; make little of, புறக்கணி, குறைவுபடுத்து; make love, அணுகிக்காதலி; நட்பாடு, அன்பாடிப் பழகு; make much of, பொருட்படுத்து, மிகைப்படுத்து, மிகுதியான முக்கியத்துவம் அளி; make no bones about, make no bones of, தயக்க நீக்கு; ஐயமின்றித்துணி; make of, மதித்துணர், இன்னதெனப் புரிந்துகொள்; make off, ஓடிவிடு, திருட்டுத்தனமாகக் கொண்டோடு, எடுத்துக்கொண்டு ஓடிவிடு; make oneself scarce, (பே-வ.) ஒதுங்கியிரு, மறைந்திரு, அப்பாற் சென்று மறை, காட்சிக்கு அரிதாகிவிடு; make or mar, ஆக்கு அல்லது அழி; ஆக்கலழித்தல் செய்; make out, வரை; எழுதி உருவாக்கு; விளக்கக் குறிப்பெழுது; அருமுயற்சியுடன் திரட்டு; எண்பித்துக்காட்டு; கண்டறி, கண்டுணர், தெளிவாக அறி; காணப்பெறு; make over, உரிமை மாற்று; உடைமை மாற்றிக்கொடு; make peace, உடன்படிக்கை செய்; make place, make room, make way, வழிவிடு, இடமளி; நகர்ந்து கொடு; make sail, கடலிற் செல்; பாய் விரி; make sure, make sure of, உறுதி செய், ஐயத்துக்கு இடமில்லாமற் செய், மெய்ம்மை கண்டுகொள்; make the best of, முழுதும் பயன்படுத்திக்கொள்; கிடைத்ததை மேலாகக்கொண்டு பயன்படுத்து; make up, நிறைவு செய்; பற்றாக்குறை நிரப்பு, இழப்பு ஈடுசெய், சரிசெய்; திரட்டி ஒன்றுசேர், இணைத்து உருவாக்கு; பூசல் தீர்த்துவிடு; மணம் ஏற்பாடு செய்; ஒப்பனை செய்து தக்க தோற்றம் கொடு; make up one's mind to, முடிவு செய், ஒரு வழி உறுதிப்படு; make up to, அன்புகாட்டு, காதலாடு; வசப்படுத்த முயலு; make water, சிறுநீர் கழி; make way, முன்னேறு.

make'-believe, *n.* பாசாங்கு, போலி நடிப்பு; *v.* பாசாங்கு செய், நடி; நம்பும்படி நடி.

make'peace, *n.* அமைதி உண்டுபண்ணுபவர், சமாதானம் செய்பவர்.

Mak'er[1], *n.* படைப்பு முதல்வர், கடவுள்.

mak'er[2], *n.* செய்தவர்; படைத்தவர், உருவாக்கியவர், இயற்றியவர்.

make'shift, *n.* தற்காலிகச் சரக்கு; சமாளிப்புச் செயல், தற்காலிகச் சூழ்ச்சி; அகடவிகடத் திறம்.

make'-up, *n.* நடிகரின் வேடம்; நடிப்பு வேடத்திற்கான சிங்காரிப்புப் பொருள்; மாதர் முக ஒப்பனை; மாதர் ஒப்பனைப் பொருள் தொகுதி; அச்சு ஒழுங்கமைப்பு; ஒழுங்கமைந்த அச்சுப்பகுதி.

make'weight, *n.* பார நிறைக்கும் எடை, எடையை நிறைவு செய்வதற்கான சிறு பளு; வழக்கு வலிமையுள்ளதாகக் காண்பிப்பதற்குச் சேர்க்கப்படும் முக்கியமல்லாத சிறு செய்தி.

mak'ing, *n.* செய்தல், உருவாக்குதல்; தொழிற்படுத்தல்; (தொ.) be the making of, வெற்றியை உறுதியாக்கு; சாதகமான வளர்ச்சிக்கு வழிகோலு; ஆதரவான முதிர்ச்சிக்கு வழிவகு.

mak'ings, *n. pl.* ஆதாயம்; ஈட்டுபொருள்; ஆக்கப்பண்புக் கூறுகள், வருங்கால மேன்மைக்குரிய விதைக்கூறுகள்.

mal'achite, *n.* நீரியல் தாமிரக் கரியகி, உயர் மெருகு ஏற்கும் பச்சைநிறக் கனிப்பொருள் வகை.

mal'acoderm, *n.* மென்தோல் உயிரினப்பிரிவு.

malacol'ogist, *n.* நத்தையின ஆய்வுநூல் வல்லுநர்; நத்தையின ஆய்வுநூல் மாணவர்.

malacol'ogy, *n.* நத்தையின ஆய்வுநூல்.

mal'acoptery'gian, *n.* மென்துடுப்பு மீன் இனம்; *a.* மென் துடுப்புள்ள, மென்துடுப்பு மீன்வகை சார்ந்த.

malacos'tracan, *n.* நத்தையினஞ்சார்ந்த உயிரினம்.

maladjust'ment, *n.* பொருத்தக்கேடு, உறுப்பமைதிக்கேடு.

maladministra'tion, *n.* பழுதுடைய ஆட்சி, முறைகெட்ட செயலாட்சி.

mal'adroit, *a.* தவறான; செப்பமற்ற; குளறுபடியான, தாறுமாறான.

mal'ady, *n.* பிணி, நோக்காடு; நலிவு, கோளாறு.

mal'a fid'e, (ல.) *a.* நல்லெண்ணமற்ற, இரண்டகமான, சூதான; வஞ்சகத்துடன் செய்யப்பட்ட; *adv.* தீய எண்ணத்துடன், வஞ்சகக் கருத்தோடு.

Mal'aga, *n.* ஸ்பெயின் நாட்டின் தென்பகுதியிலுள்ள வெண்ணிற இன்தேறல் வகை.

Malagas'y, *n.* மடகாஸ்கர் (Madagascar) தீவிற் பேசப்படும் மொழி; மடகாஸ்கர் தீவின் குடிவாணர்; *a.* மடகாஸ்கர் தீவுக்குரிய மொழி சார்ந்த; மடகாஸ்கர் குடியிருப்பாளருக்கு உரிய.

mal'aise, *n.* உடல்நலக் குறைபாடு, எப்பிணியும் இல்லாமலே உடல்நலங் குன்றியநிலை.

mal'amute, *n.* எஸ்கிமோ இனத்தவரின் நாய்.

mal'anders, *n.* குதிரை முழங்காலின் பின்புறச் சொறிக் கட்டி.

mal'aprop, mal'apropism, *n.* ஒலிக்குழப்பச் சொற்குளறுபடி, ஒரு சொல்லுக்கு மாறாக அதைப்போல் ஒலிக்கும் வேறு சொல்லைத் தவறாகப் பயன்படுத்துதல்.

malapropos', *n.* சமயப் பொருத்தமற்ற பேச்சு; இசைவுக்கேடான நிகழ்ச்சி; *a.* சமயப் பொருத்தமற்ற; *adv.* சமயப் பொருத்தமற்றதாக.

mal'ar, *n.* கன்ன எலும்பு; *a.* கன்னத்துக்குரிய.

malar'ia, *n.* முறைக்காய்ச்சல், மலைக் குளிர்காய்ச்சல்; உடல் நலத்துக்குக் கேடான சதுப்புநில நச்சுக்காற்று.

Malay', *n.* மலாய்மொழி; மலாய் இனத்தவர், மலேயாவிலும் கிழக்கு தீவுக்குழுவிலும் தலைமையாயுள்ள இனத்தின் உறுப்பினர்; (தொ.) Malay fowl, பெரிய வீட்டுக்கோழி வகை.

Malaya'lam, *n.* மலையாள மொழி.

mal'content, *n.* மனக்குறையுடையவர்; கிளர்ச்சி ஆதரவாளர்; *a.* மனக்குறை உடைய; கிளர்ச்சி செய்கிற.

mal de mer, (பிர.) *n.* கடற்பயணிகளுக்கு ஏற்படும் குமட்டல் கோளாறு.

male, *n.* ஆண்; ஆண்பாலர்; *a.* ஆண்பாலுக்குரிய.

maledic'tion, *n.* பழிப்புரை, தெறுமொழி, சாபம்.

malefac'tion, *n.* தீங்கிழைப்பு, பொல்லாங்கு; குற்றம்.

mal'efactor, *n.* கேடு விளைவிப்பவர், தீங்கிழைப்பவர், குற்றவாளி.

malef'ic, *a.* கேடு சூழ்கிற, மந்திர-சூனிய வகைகளில் தீங்கு விளைவிக்கிற, தீக்குறியான.

malef'icent, *a.* புண்படுத்துகிற; பழி சூழ்கிற; குற்றவாளியான; குற்றத்துறை சார்ந்த.

mal'emute, *n.* = malamute.

malev'olent, *a.* தீங்கு விளைவிப்பதில் விருப்பமுடைய, பழியார்வமுள்ள.

malfeas'ance, *n.* (சட்.) பொல்லாங்கு, பணியாளர் நெறி தவறிய நடத்தை.

malforma'tion, *n.* பொருத்தமில்லாத உருவ அமைப்பு, செப்பக்கேடு.

mal'ic, *a.* (வேதி.) பழ வகைகள் சார்ந்த; (தொ.) malic acid, பழக்காடி.

mal'ice, *n.* வன்மம், மனக்காழ்ப்பு; பகைமை எண்ணம்; பழிசூழ் நோக்கு; தொல்லைதரும் விருப்பம்; (சட்.) தீய நோக்கம், கொலைக் குற்றத்தை மிகுதியாக்கும் மனமார்ந்த வன்ம எண்ணம்; (தொ.) bear malice, பழிவாங்கும் உணர்ச்சியை வளர், பொல்லாப்புப் பேணு.

mali'cious, *a.* கெடு நோக்கான.

malign', *a.* தீங்கு விளைவிக்கின்ற; நோய்கள் வகையில் துன்பம் விளைவிக்கிற; *v.* அவதூறு சொல்; புறங்கூறு; பழிகூறு, இழித்துச் சொல்.

malig'nancy, n. உக்கிர வேகம்; கடு வெறுப்புணர்ச்சி, கடும்பகைமை.

malig'nant, n. (வர.) பிரிட்டனின் உள்நாட்டுப்போரில் (1640-1644) மன்னராதரவாளர்; a. நோய் வகையில் உக்கிர மான, வேகமாகத் தொற்றிப் பரவுகிற; கேடு விளைவிக்கின்ற; கொடிய; கடு வெறுப்புணர்ச்சியுள்ள.

malig'nity, n. ஆழ்ந்த வெறுப்பு; நோய்வகையில் உக்கிரத் தன்மை.

maling'er, v. கடமை விலக்குவதற்காக நோயுற்றதாகப் பாசாங்கு செய்; நோயாளியாக நடித்துத் தட்டிக்கழி; நோய் நிலை நீடிப்பதாக நடித்துக் கடமையை ஒத்திப்போடு.

mal'ism, n. உலகம் கேடு நிறைந்தது என்ற கோட்பாடு.

mal'ison, n. சாபம், தெறுமொழி.

mall, n. சாலை வழி, மோடிடப்பட்ட நடைவழி; (வர.) ஆட்ட வகை; ஆட்ட வகைக்குரிய மூடுபாதை; ஆட்ட வகைக்குரிய கொட்டாப்புளி.

mall'ard, n. காட்டு வாத்து; காட்டு வாத்தின் இறைச்சி.

mall'eable, a. உலோகங்களின் வகையில் தகடாக்கக்கூடிய, அடித்து நீட்டக்கூடிய, வளைந்து கொடுக்கிற; சூழ்நிலைக் கேற்ப மாற்றியமைக்கத்தக்க; நெகிழ்விணக்கமுடைய; பணியத்தக்க; காலநிலைமைக்கு ஏற்பச் சரிப்படுத்திக் கொள் கிற.

mall'emuck, n. தோலடிப்பாதம் நீண்ட வெண்மை கருமை நிற இறக்கையுமுடைய கடற்பறவை வகை.

mall'enders, n.=malanders.

mall'et, n. கொட்டாப்புளி, மரச்சுத்தி, மரச்சம்மட்டி; பந்தாட்ட வகையில் பந்தடிகட்டை.

mall'eus, (ல.) n. காதின் சுத்தி எலும்பு, காதுச்சவ்வின் அதிர்ச்சியை உட்காதுக்குள் ஊடுபரவவிடும் எலும்புப் பகுதி.

mall'ow, n. மெல்லிழை இலைத் தண்டுகளும் ஊதா மலர் களும் உடைய செடிவகை.

malm, n. மென்மையான சுண்ணப்பாறை; சுண்ணக் களி நிலம்; சுண்ணக் களிமண்; நேர்த்தியான சுண்ணக்களிச் செங்கல்வகை.

malmais'on, n. செவ்வண்ண மலர்ச்செடி வகை.

malm'sey, n. கிரீஸ்-ஸ்பெயின் நாடுகளிலிருந்து கிடைக்கும் இனிப்பான கடுந்தேறல் வகை.

malnutri'tion, n. சத்துக் குறை உணவு, போதா ஊட்டம்.

malod'orous, a. கெட்ட வாடையுள்ள.

malprac'tice, n. கெடுசெயல்; (சட்.) ஒழுங்கற்ற மருத்து வம்; (சட்.) பொறுப்புக்கேடான பதவிச் சுரண்டல்.

malt, n. வடிப்பதற்கான மாவூறல்; v. மாவூறலாக்கு; மாவூறவை; வித்து வகையில் வெப்பால் கெடு; மாவூறலாகு; (தொ.) extract of malt, நோயாளிகளுக்கு உணவான மாவூறல் நீர்; malt liquor, மாத்தேறல்.

Mal'ta, n. மால்ட்டா, நடுநிலக்கடல் தீவு; (தொ.) Malta fever, மால்ட்டா தீவில் நிலவுங் கடுங்காய்ச்சல்.

Maltese', n. மால்ட்டா தீவின் மொழி; மால்ட்டாவின் குடிவாணர்; pl. Maltese'; a. மால்ட்டாவைச் சார்ந்த; மால்ட்டாவின் மொழி சார்ந்த.

mal'tha, n. கீலும் மெழுகுஞ் சேர்ந்த காரைவகை.

malt'-house, n. வடிதேறலுக்கான மாவூறற் கிடங்கு.

Malthus'ian, n. மால்தஸ் (Malthus) என்பாரைப் பின்பற்று பவர்; மக்கட் பெருக்கத்தைத் தடுப்பதற்கு ஒழுக்கஞ் சார்ந்த கட்டுப்பாடு வேண்டுமென்ற கோட்பாடுடையவர்; a. மால் தஸின் கோட்பாடு உடைய; மக்கட் பெருக்கத்தைத் தடுக்க ஒழுக்கக் கட்டுப்பாடு வேண்டுமென்ற கொள்கை சார்ந்த.

mal'ting, n. வாற்கோதுமையை மாவூறலாக்குதல்; வடி தேறலுக்கான மாவூறற்கிடங்கு.

mal'tose, n. (வேதி.) மா வெல்லம், மாவூறலிலிருந்து எடுக்குஞ் சர்க்கரை.

maltreat', v. தவறாக நடத்து; கொடுமைப்படுத்து, துன் புறுத்து.

malt'ster, n. மாவூறல் ஆக்குபவர்.

malt'-worm, n. மட்டுமீறிச் சாராயங் குடிப்பவர்.

malva'ceous, a. மெல்லிழை இலை தண்டுடைய வண்ண மலர்ச் செடியினஞ் சார்ந்த.

malversa'tion, n. கெடுநடத்தை; பணித்துறைப் பொறுப் புக்கேடான நடைமுறை; செயலாட்சிக்கேடு; நிதியாட்சிக் கேடு, நிதி மோசடி; இலஞ்சப் பழக்கம்; சட்டமீறிய பணப் பறிப்பு.

mama', n.=mamma.

mam'ba, n. ஆப்பிரிக்க மர நச்சுப்பாம்பு வகை.

mam'elon, n. குவடு, வட்ட முகடு.

Mam'eluke, n. அடிமை; (வர.) எகிப்திய அரசுரிமையைக் கி. பி. 1254-இல் கைப்பற்றிய படைவீரர் குழுவில் ஒருவர்.

mamill'a, n. முலைக்காம்பு; முலைக்காம்பு வடிவ உறுப்பு.

mamma'[1], n. அம்மா, தாய்.

mamm'a[2], n. பாலுணிகளின் பால்மடி; ஆண்களின் உட லமைப்பில் பால்மடிக்கு இணையான உறுப்பு; pl. mamm'ae.

mamm'al, n. பாலூட்டி, கருப்பை உயிர்.

mammal'ia, n. pl. பாலூட்டும் உயிரினத் தொகுதி.

mammalif'erous, a. (மண்.) பாலூட்டும் உயிரினங்களின் பழங்காலப் புதை தடங்கள் கொண்டுள்ள.

mammee', n. பெரிய மஞ்சள்நிறப் பழமுடைய அமெரிக்க வெப்பமண்டல மரவகை.

mamm'on, n. காசுத்தெய்வம், தெய்வம்போலப் பூசித்துப் பேணப்படுஞ் செல்வம்; பண்பற்ற செல்வர்குழு; (தொ.) the mammon of unrighteousness, தீவழிச் செல்வம், கெட்ட வழியில் ஈட்டிய செல்வம்; கெட்ட வழியில் செலவாகுஞ் செல்வம்.

mamm'oth, n. கம்பளி யானை, மரபற்றுப்போன பாரிய யானையினப் புதைபடிவ விலங்கு; a. மிகப்பெரிய.

mamm'y, n. குழந்தை வழக்கில் அம்மா, தாய்; செவிலி.

man, n. மனிதன்; ஆடவன்; ஆள்; மனித இனம்; மனித உடல், மனித இன உடற்கூறு; வயது வந்தவர்; முழு வளர்ச்சியடைந்த மனிதர்; தனி மனிதர்; ஒருவர்; கணவர்; துணைவர்; (வர.) பண்ணையாள்; அடிமை; ஏவலாள்; தொழிலாளர்; படைவீரர்; சதுரங்க ஆட்டக்காய்கள் வகை; v. கோட்டைப் பாதுகாப்புக்கு வேண்டிய ஆட்களைத் திட்டப் படுத்தி அமர்த்து; கப்பலின் முக்கிய பகுதிகளில் ஆள் அமர்த்து; பணித்துறைகளில் ஆட்களை நிரப்பு; உள்ளத் துக்கு உரமூட்டு; ஊக்கம் வலுப்படுத்து; (தொ.) all to a man, to a man, ஒருவர்விடாது எல்லாரும், ஒருவர்கூட விலக் கின்றி அனைவரும்; as a man, தனிப்பட்ட குணப்பண்பு களைக் கருதுமிடத்து; be a man, play the man, ஆண்மை ஆற்றலுடன் இயங்கு; be one's own man, சுதந்திரமாகச் செயலாற்று, புலன்கள் முதலிய ஆற்றல்களைத் தன்வசமாகக் கொண்டிரு; inner man, ஆன்மா; உள் மனிதத்தன்மை; man and wife, கணவனும் மனைவியும்; man Friday, அடிமைக்குணமுள்ள பணியாள்; பலதிற வேலையாள்; man in the moon, கற்பனை மனிதன்; man of Kent, மெட்வே (Medway) என்னும் இடத்திற்குக் கிழக்கில் பிறந்தவர்; man of letters, இலக்கிய எழுத்தாளர்; புலவர், இலக்கிய அறிஞர்; man of straw, வைக்கோலடைத்துருவாக்கிய கொல்லைப்பொம்மை; கற்பனை மனிதர்; கற்பனை எதிரி; சரக்கற்றவர்; வக்கற்றவர், வசதியற்றவர்; outer man, மனித உடல், உடல் சார்ந்த புறவாழ்வு; the man in the street, the man on the street, பொதுநிலை மனிதர்; பொதுமக்களில் ஒருவர்.

man'acle, v. விலங்கிடு.

man'acles, *n. pl.* தளைகள், கை விலங்குகள்.

man'age, *n.* குதிரைப்பயிற்சி; குதிரையின் பயிற்சிமுறை இயக்கம்; குதிரையின் குறும் பாய்ச்சல்; குதிரையேற்றப் பயிற்சிக்கூடம்; *v.* கையாளு, கருவிகலங்களைக் கையாளு; நடத்து, செயற்படுத்து; அடக்கியாளு, மேலாட்சிசெய்; பொறுப்பு ஏற்றுக்கொள்; கட்டுப்படுத்து; பசப்பிக் காரிய மாற்று, வசப்படுத்திச் செயல்செய்; கொண்ட நோக்கம் ஒருவாறாக நிறைவேறப்பெறு; ஒப்பேற்று; எதிர்த்துநின்று சமாளி; சூழ்ச்சிமூலம் செயல் வெற்றிகரமாக்கு; தக்கவாறு பயன்படுத்து.

man'agement, *n.* செயலாட்சி; மேலாண்மை; தந்திரம், சூழ்ச்சிப்பொறி, சூழ்ச்சிப்பொறி அமைப்பு, சூழ்ச்சி நுட்பமுடைய இயந்திரம்; (தொ.) the management, செயலாட்சிக் குழு, இயக்குநர் குழு.

man'ager, *n.* மேலாளர், செயலாட்சியாளர்; வணிகக்குழு இயக்குநர்; நிறுவனச் செயலாட்சியர்; பார்வையாளர், சட்டமாமன்றத்தின் இரு அவைகளின் கடமைகளைக் கவனிக்க நியமிக்கப்பட்ட மாமன்றக் குழுவின் உறுப்பினர்; (சட்.) கடன் கண்காணிப்பாளர், கடன் கொடுத்தவர்களின் நலத்துக்காக வணிகநிலையத்தை மேற்பார்வை செய்வதற்கு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவர்.

man'akin, *n.* அமெரிக்க வெப்பமண்டலங்களில் வாழும் ஒள்ளிய நிறமுடைய சிறுபறவை வகை.

man'-at-arms', *n.* படைவீரன்; பளுவான போர்த்தளவாடங்கள் தாங்கிய குதிரைப்படை வீரன்.

manatee', *n.* கடற்பசு.

Man'chester goods, *n.* பருத்தித் துணிமணி.

Man'chester School, *n.* காப்புவரியில்லாத வாணிகமுறைக் கோட்பாட்டாளர் குழு.

man'-child, *n.* ஆண் குழந்தை.

manchineel', *n.* மேலை இந்தியத்தீவின் நச்சுப் பால்மர வகை.

man'ciple, *n.* பள்ளி-கல்லூரி நிறுவனங்களில் உணவுப் பொருள்கள் வாங்கும் பொறுப்புடைய பணியாளர்.

Mancun'ian, *n.* மாஞ்செஸ்டர் குடிமகன்; மாஞ்செஸ்டர் இலக்கணப் பள்ளி மாணவர்; *a.* மாஞ்செஸ்டரைச் சார்ந்த; மாஞ்செஸ்டர் இலக்கணப் பள்ளிக்குரிய.

Mandae'an, *n.* தெய்வ ஐயுறவுக் கோட்பாட்டாளர்களான பண்டைக் கிறித்தவப் புறச்சமயிகளின் மரபில் மெசபொட்டேமியா (Mesopotamia) வில் மீந்துள்ள இக்குழுவைச் சேர்ந்தவர்; மெசபொட்டேமிய இனக்குழு மரபின் மொழி; *a.* ஐயுறவுக் கோட்பாட்டு மரபில் வந்த மெசபொட்டேமிய இனக்குழுவினுக்குரிய.

mandam'us, *n.* மேல்மன்ற ஆணை, கீழ்மன்றத்திற்கு உயர் நீதிமன்றம் விடுக்கும் ஆணை.

man'darin[1], *n.* சீன ஆட்சி வகுப்பினர், சீன உயர்தரப் பணித்தரங்கள் ஒன்பதினுள் இடம் பெற்றவர்; உயர்தரச் சீன வகுப்பினரின் மொழி; சீன உயர்தரப் பேச்சுக் கட்டளை மொழி; காலப் பிற்போக்குடைய தலைவர்; சீனத் தலையாட்டிப் பொம்மை உரு; (தொ.) mandarin duck, வண்ணச் சிறகுகளுள்ள சீனத் தாரா வகை.

man'darin[2], man'darine, *n.* ஆழ்ந்த செம்மஞ்சள் நிறமான கிச்சிலிப்பழ வகை; நிலக் கீலிலிருந்து எடுக்கப்படும் செம்மஞ்சள் வண்ணப்பொருள்; கடுந்தேறல் வகை.

man'datary, *n.* (சட்.) கட்டளையுரிமை அளிக்கப்பட்டவர்.

man'date[1], *n.* சட்ட உரிமைக்கட்டளை; நீதிமன்றக் கட்டளை உரிமை; பிற்பட்ட நாட்டுப் பகுதியின் வகையில் அனைத்து நாட்டுக் கழகத்தின் ஆட்சிக் கட்டளையுரிமை; ஆணை, மேலிடக்கட்டளை; கருத்துரைக் கோரிக்கைமீது போப்பாண்டவரின் மறுமொழித் திருக்குறிப்புச்சீட்டு; உரிமைக் கட்டளை ஏற்பாளர் வகையில் இலவசமான ஒப்பந்தக் கடமை ஏற்பு; பேராண்மை உரிமை, வாக்களிப்புமூலம் மக்கள் அளித்த உரிமை ஆற்றல்.

mandate'[2], *v.* உரிமைக் கட்டளை முறைக்குக் கட்டுப்படுத்து.

man'datory[1], *n.* = mandatary.

man'datory[2], *a.* உரிமைக்கட்டளை சார்ந்த, உரிமைக்கட்டளை தெரிவிக்கின்ற.

man'dible, *n.* தாடை; பாலூட்டி உயிரினங்களின் கீழ்த் தாடை; பறவைகளின் அலகு; பூச்சியினங்களின் மேல் தாடையின் இரு பாதிகளில் ஒன்று.

mandol'a, *n.* தந்தி இசைக்கருவி வகை.

man'dolin, man'doline, *n.* தந்தம்-இறகு ஆகியவற்றாலான வில் மாட்டி வாசிக்கப்படும் இணைத் தந்திகளையுடைய யாழ்வகை.

mandor'a, *n.* = mandola.

mandrag'ora, *n.* மயக்க மருந்துச் செடிவகை.

man'drake, *n.* வாந்தி மயக்கத் திறங்களையுடைய நச்சுச் செடிவகை.

man'drel, man'dril, *n.* கடைசல் பிடிக்கும் பொறியின் நடுவச்சு; குழல் வடிவம் உருவாக்கப் பயன்படும் நீள் உருளைக் கோல்; சுரங்கத் தொழிலாளரின் கடப்பாரை.

man'drill, *n.* மூர்க்கத்தனமுள்ள பெரிய ஆப்பிரிக்க மனிதக் குரங்கு வகை.

man'ducate, *v.* மெல்லு, பற்களால் அரை, உண், தின்.

mane, *n.* பிடரி மயிர்; நீண்டமயிர்.

man'-eater, *n.* மன்தின்னி, மனிதரைத் தின்னும் மனிதன்; கடிக்கும் குதிரை; மனிதரைத் தின்னும் புலி; மனிதரைத் தின்னும் சுறாமீன்.

manege', *n.* குதிரையேற்றப் பயிற்சிக்கூடம்; குதிரையின் பயிற்சிமுறை இயக்கங்கள்; குதிரையேற்றத் திறன்.

man'es, *n. pl.* தென்புலத்தார்; வழிபடுதற்குரிய மூதாதையரின் ஆவிகள்.

man'ful, *a.* வீரமிக்க; துணிவுள்ள; மனவுரம் வாய்ந்த; உறுதியுடைய; ஆண்மையுடைய; பெருமிதமான.

man'fully, *adv.* ஆண்மையுடன், வீரத்தோடு.

man'gabey, *n.* வெண்ணிறக் கண்ணிமையுடைய மேலை ஆப்பிரிக்க குரங்கினம்.

mang'anese, *n.* மங்கனம், கண்ணாடி செய்வதில் பயன்படும் கருநிறக் கனிப்பொருள் தனிமம்.

mange, *n.* மயிரடர்ந்த விலங்குகளின் தோல் நோய்; தோல் மாசு.

mang'el, mang'el-wurz'el, *n.* கால்நடைத் தீவனமாகப் பயன்படும் பெரிய சர்க்கரைக் கிழங்கு வகை.

man'ger, *n.* குதிரை இலாயத் தொட்டி; மாட்டுக் கொட்டில் தொட்டி; (தொ.) dog in the manger, தானும் வாழாது பிறரையும் வாழவிடாதவர்.

mang'le[1], *n.* சலவை மடிப்புப்பொறி; *v.* சலவைப் பொறியிலிட்டு அழுத்தி மடி.

mang'le[2], *v.* நை, அடித்துச் சிதை; கொத்து, உருக்கெட வெட்டு; சின்னபின்னப்படுத்து; மூலத்தைத் தப்புத்தவறாக்கி உருத்தெரியாது பண்ணு; சொற்களைத் தவறாக ஒலித்து இனம் தெரியாததாக்கு.

mang'o, *n.* மாங்காய், மாங்கனி.

mang'o-fish, *n.* பொன்வண்ண மீன்வகை.

mang'old, mang'old-wurz'el, *n.* = mangel.

mang'onel, *n.* (வர.) படைத்துறைக் கவண்பொறி, கல்லுமிழ் பொறி.

mang'osteen, (மலாய்.) *n.* மங்குஸ்தான் பழம்; மங்குஸ்தான் மரம்.

mang'rove, *n.* மருந்துக்கும் தோல் பதனிடுவதற்கும் பயன்படும் பட்டையினையுடைய வெப்பமண்டலச் சதுப்புநிலப் படர் தாவர வகை.

man'gy, *a.* மயிரடர்ந்து வங்கு பற்றிய; அழுக்கடைந்த; இழிதோற்றமான.

man'handle, *v.* மனித ஆற்றலால் மட்டுமே இயக்கு; முரட்டுத் தனமாகப் பிடித்து இழு.

manhatt'an, *n.* இன்தேறல் கலவைக் குடிவகை.

man'hole, *n.* புதைசாக்கடை வாயிற்புழை, புதைசாக்கடைக் குத் தெருவின்மீது அமைக்கப்பட்டிருக்கும் திறப்பு.

man'hood, *n.* மனிதத்தன்மை; ஆண்மை, வீரம், துணிவு, உரம்; முழு வளர்ச்சிப்பருவம்; நாட்டின் ஆடவர் தொகுதி; (தொ.) manhood suffrage, வயதுவந்த ஆண்களின் வாக் குரிமை.

man'-hour, *n.* மன்மணி அலகு, ஒரு மனிதன் ஒரு மணி நேரம் செய்யும் வேலையளவு.

man'ia, *n.* வெறி, கோட்டி; மூளைக்கோளாறு; மனமாருட்டக் கோளாறு; பேரார்வம், மட்டுமீறிய ஆவல், உணர்ச்சியார்வ மிகை.

man'iac, *n.* வெறியர், கோட்டிக்காரர், பித்தேறியவர், அறி விழந்தவர், பித்தர்; *a.* பைத்தியம் பிடித்த, வெறியான, அறிவிழந்த.

mani'acal, *a.* பைத்தியம் பிடித்த; பைத்தியம் பிடித்தவர் போன்ற.

man'ic, *a.* பித்து வெறி சார்ந்த; பித்து வெறிக்கு ஆட்பட்ட.

man'ic-depressive psychosis, *n.* இடையிடையே நன்னிலை யுடன் மாறிமாறிக் களிப்பு சோர்வு வெறிகளுண்டுபண்ணும் பித்தக்கோளாறு.

Manichee', *n.* இறைவனும் நரகிறையும் நிலைபேறுடைய சரி ஆற்றலுடையவர் என்ற கோட்பாடுடைய முற்காலச் சமயக்கிளையினர்.

man'icure, *n.* கைவிரல் நக ஒப்பனைக்கலை; கைவிரல் நக ஒப்பனைக் கலைஞர்; *v.* கை விரல் நகங்களை ஒப்பனைசெய்.

man'ifest, *n.* தீர்வைத் துறையினர்க்குக் காட்டுவதற்குரிய சரக்குப்பட்டியல்; *a.* வெளிப்படையான, தெளிவான; *v.* தெளிவாகக்காட்டு; மெய்ம்மை காட்டு; பண்பு முதலிய வற்றைப் புறந்தெரியச் சுட்டிக்காட்டு; வெளிப்படுத்து, வெளிப்படுத்திக்காட்டு; பண்பு உருப்படுத்திக்காட்டு; உரு வெளிப்படுத்திக்காட்டு; கருத்து எடுத்துக்காட்டு; சரக்குப் பட்டியலில் பதிவுசெய்; கருத்தை வெளிப்படையாகத் தெரி விப்பதற்குரிய நடவடிக்கை எடு.

manifes'to, *n.* கொள்கை விளக்க அறிவிப்பு; அரசியலார் பொது அறிக்கை விளம்பரம்; கட்சித் திட்ட அறிவிப்பு; தனியார் கருத்தறிவிப்பு.

man'ifold, *n.* பல்புழைவாய் இயந்திர அறை; பல்வாயிற் குழாய்; மைத்தாள் படிவுப்படி; (கண.) முழு மொத்தம்; அசைபோடும் விலங்குகளின் மூன்றுவது இரைப்பை; *a.* பன்மடியான; பல்லுருவான; பல்வேருன; பல்வேறு பய னுடைய; பல்தொழில் ஒருங்கு செய்கிற; பல்வகைப் பெருக்க முடைய; *v.* பல்படி ஒருங்கெடு; படி பெருக்கு; (தொ.) manifold writer, படிபெருக்கி, மைத்தாள் படியெடுக்கும் கருவி.

man'ikin, *n.* சிறு மனிதன்; குள்ளன்; மூட்டுத்தெரியும் ஒட்டுவடிவப் பொம்மை; உடலமைப்பின் மாதிரி; அமெரிக்க வெப்ப மண்டலச் சிறு பறவை.

manill'a[1], *n.* ஆப்பிரிக்க பழங்குடிகள் நாணயமாக வழங் கும் உலோக வளையல்கள்.

Manill'a[2], *n.* பிலிப்பைன் தீவுகளின் தலைநகரம்; கயிறு-பாய் செய்வதற்கு உதவும் சணல் நார் வகை; மணிலாவில் செய்யப்படும் சுருட்டு வகை; (தொ.) Manilla hemp, கயிறு-பாய் செய்வதற்குதவும் சணல் நார்வகை; Manilla paper, சிப்பம் கட்டுதற்குரிய சணல்தாள்.

manille', *n.* நால்வர் ஆடும் முற்காலச் சீட்டாட்ட வகைகளில் இரண்டாவது சிறந்த மதிப்புடைய சீட்டு.

man'ioc, *n.* மேற்கிந்திய தீவுகளின் கிழங்குடைய செடி வகை; கிழங்கு வகையின் மாவு.

man'iple, *n.* ரோமாபுரியில் 60 முதல் 120 வரை படைவீரர் கொண்ட படைப்பகுதி உட்பிரிவு; தேவநற்கருணைச் சடங்கில் குருமார் உடை; குருமார் உடையில் இடது கையி னின்று தொங்கும் மூன்றடி நீளமுள்ள துண்டு.

manip'ulate, *v.* கையாளு, கைவினையாற்று; சூழ்ச்சித்திறத் துடன் கையாளு; திறமையாக நடத்து; பெருமுயற்சியுடன் காரியமாற்று, செல்வாக்கைப் பயன்படுத்திக் காரியம் சாதித் துக்கொள்.

man'itou, *n.* பற்ருவி, அமெரிக்க இந்தியர் வழக்கில் தனி மனிதனுக்கு நலமோ தீங்கோ செய்யும் ஆவி வடிவம்; தெய் வதம், இயற்கை கடந்த ஆற்றலுடைய பொருள்.

mankind', *n.* மனித இனம், மன்பதை; ஆண்பாலார்.

man'like, *a.* மனித குணங்களையுடைய; ஆண்மையுடைய; மனிதனின் கெட்ட குணங்களையுடைய; பெண்வகையில் ஆண்போன்ற.

man'ly, *a.* ஆடவரின் நற்குணங்களுள்ள; வீறுமிக்க; கவ டில்லாத; பெண்வகையில் ஆணின் குணமுள்ள; மனிதனுக்குத் தகுதியான, மனிதத் தகுதி வாய்ந்த.

mann'a, *n.* தாவர வகைகளின் இன்னமுதக் கசிவூறல்; குட லிளக்க ஆற்றலுடைய செடிவகைகளின் இனிய வடிசாறு; இன்னமுது, இன்னுணவு; மனத்துக்கினிய அறிவூட்டம்; இயேசுநாதரின் இறுதி விருந்து விழாவின் திருவுணவமுது; (வர.) பண்டை இஸ்ரேல் மக்களுக்குப் பாலைவனத்தில் இறை யருளால் வழங்கப்பட்ட உணவு; (தொ.) manna in sorts, குடலிளக்க இன்சாற்றின் கீழ்த்தர வகை; manna in tears, குடலிளக்க இன்சாற்றின் உயர் வகை.

mann'a-ash, *n.* இன்னுணவூறல் தரும் மரவகை.

mann'a-croup, *n.* சொரசொரப்பான சிறுமணிக் கோதுமை மாவுணவு.

mann'equin, *n.* ஆடையணிக் காட்சிக்காகப் பயன்படுத்தப் படும் பெண்; ஆடையணிக் காட்சிக்காகப் பயன்படுத்தப் படுபவர்.

mann'er, *n.* பாங்கு, பாணி, முறை; செயல்வகை; வழிவகை; நடைப்பாங்கு; எழுத்து நடைப்பாணி; கலைப்பாணி; எண்ணப் படிவம்; வழக்கமரபு; வகை, மாதிரி; (தொ.) adverb of manner, (இலக்.) முறை விளக்க வினையடை; in a manner, ஒருவாறு, ஓரளவில்; in a manner of speaking, பேசுமிடத்து, ஒருவகையில் கூறுவதானுல்; the grand manner, பழங் காலப் பெருமித முறைமை; to the manner born, பிறவிக் குணமாக அமைந்த, இயல்பாகப் பொருந்திய.

mann'ered, *a.* நடத்தைவாய்ந்த; நல்லொழுக்கங்கொண்ட; பாணி-ஓவியர்-எழுத்தாளர் வகையில் செயற்கைப் பாணி வாய்ந்த.

mann'erism, *n.* செயற்கை மரபு, போலிநடை; கலை இலக் கியத்துறையில் செயற்கைத் தனிப்பாங்கு; மட்டுமீறிய ஒரு திறச் சார்பு; எழுத்தாண்மை-பேச்சு வகையில் போலி மரபுத் துணுக்கு நடை, செயற்கைநடை.

mann'erly, *a.* நன்னடத்தையுள்ள, வணக்க இணக்கமான.

mann'ers, *n. pl.* பழக்கவழக்க நடைமுறைகள்; நடத்தை முறைகள்; புற ஒழுகலாறுகள்; சமுதாய ஒழுக்கமுறைகள்; நன்னடக்கை, வணக்க இணக்க நடைமுறை.

mann'ish, *a.* பெண் வகையில் ஆண்மாரியான, ஆணியல்பு காட்டுகிற.

mann'ite, mann'ite-sugar, *n.* குடலிளக்க இன்சாற்றுப் பொருள், இன்னுணவுப் பொருள்.

manoeu'vre, *n.* படைகள் அல்லது போர்க்கப்பல்களின் திட்டமிட்ட நடைமுறை இயக்கம்; படைத்துறை நட வடிக்கை; கண்மாருட்ட நடவடிக்கை, ஏய்ப்பு நடவடிக்கை; திறமைவாய்ந்த திட்டம்; *v.* சூழ்ச்சிமுறைத் திட்டத்துடன் படைகளை அல்லது போர்க்கப்பல்களை நடத்து; சூழ்ச்சித் திட்டமுறைகளைக் கையாள்; ஆள் அல்லது பொருளை சூழ்ச் சித்திறமுலம் செயலாற்றுவி, தூண்டி இயக்கு; முனைந்து திட்டமிட்டு வேலைசெய், மறைதிட்ட முலம் ஏற்பாடு செய்.

man'-of-war', *n.* போர்க்கப்பல், நாட்டின் கடற்படையைச் சேர்ந்த போர்த்தளவாடக் கப்பல்.

manom'eter, *n.* ஆவி வளி அழுத்தமானி.

ma non tropp'o, (இத்.) *adv.* (இசை.) கட்டளைக்குறிப்பின் பின்னடைமொழி வழக்கில் மட்டாகவே, மட்டுமீறாமல்.

man'or, *n.* இங்கிலாந்து நாட்டு நில உடைமைப்பிரிவு; முற்காலப் பண்ணைத் தனியுரிமை நிலம்; பண்ணைமுறையாட்சி உரிமை வட்டாரம்; அமெரிக்காவில் குடிவாரத்துக்குரிய நிலப்பகுதி; (தொ.) lord of the manor, பண்ணை நில உரிமையாளர்.

man'power, *n.* ஆள்வலம், பணித்துறைக்குத் தேவைப்படும் ஆள் எண்ணிக்கை அளவு.

manque, (பிர.) *a.* இருந்திருக்கக்கூடிய ஆனால் இல்லாமற் போன.

man'sard, man'sard roof, *n.* மேற்பாதிச் சாய்வைவிடக் கீழ்ப்பாதிச்சாய்வு செங்குத்தாயுள்ள இருசரிவு மோடு.

manse, *n.* சமயத்துறையினர் உறைவிடம், ஸ்காத்லாந்து நாட்டுத் திருக்கோயில் குருவின் வீடு.

man'servant, *n.* வேலைக்காரன், ஆண்பாற் பணியாள்.

man'sion, *n.* மாளிகை, பெரிய வீடு; (தொ.) the Mansion house, லண்டன் மாநகர் முதல்வரின் மாளிகை.

man'sion-house, *n.* பண்ணைமனை, பண்ணை நில உரிமையாளரின் இல்லம், நிலக்கிழாரின் வீடு; பணிமுதல்வர் மனை.

man'sions, *n. pl.* குடும்பங்கள் தனித்தனியாகத் தங்குதற்கேற்பப் பிரிக்கப்பட்ட பெரிய கட்டிடம்.

man'slaughter, *n.* மனிதக்கொலை செய்தல்; (சட்.) பகைமை வன்ம எண்ணமற்ற ஆட்கொலை.

man'suetude, *n.* மெல்லிணக்கப் பண்பு, பணிவுடைமை.

man'tel, man'telpiece, *n.* அடுப்பங்கரைத் தண்டயப் பலகை.

man'tel-board, *n.* அடுப்பங்கரை நிலையடுக்கு.

mante'let, *n.* குறுங்கைச் சட்டை; பீரங்கிச் சுடுபவரின் கவசம்.

man'telshelf, *n.* அடுப்பங்கரைச் சுவர் நிலையடுக்கு.

man'tel-tree, *n.* அடுப்பங்கரை விட்டம்.

man'tic, *a.* உய்த்துணர்தல் சார்ந்த, வருவதுணர்த்துகிற.

mantill'a, *n.* பெண்களின் தலை-தோள் மறைக்கும் மெல்லிய ஆடை, சிறுதொப்பி.

man'tis, *n.* பூச்சிகளைத் தின்னும் பெரும் பூச்சி வகை; (தொ.) praying mantis, கும்பிடுவதுபோல் முன்கால்களை விரித்துயர்த்தி நிற்கும் பூச்சிவகை.

mantiss'a, *n.* மடக்கையின் பதின்மானக்கூறு.

man'tle, *n.* பெண்களின் தளர்த்தியான கையற்ற மேலாடை; மூடாக்கு, போர்வை; மெல் ஒளித்திரைவலை; நத்தைகளின் மெல்லிய புறத்தோல் மடிப்பு; *v.* மெல்வலைபோல் போர்த்து; தளர்த்தியான கையற்ற மேலாடை அணிவி; மூடு, மறை; நீர்ம வகையில் அழுக்கு அல்லது நுரையால் மேற்படியப் பெறு, மூடப்பெறு; இரத்தம் ஏறி கன்னங்கள் சிவப்பாக்கு.

mant'let, *n.*=mantelet.

man'trap, *n.* மனிதரை வீழ்த்து பொறி, உரிமையின்றி நுழைபவர்களைப் பிடிக்கும் விசைப்பொறி.

man'tua, *n.* 17-18-ஆம் நூற்றாண்டுகளில் வழங்கிய பெண்களின் தளர்த்தியான மேலங்கி.

man'tua-maker, *n.* மேலாடை ஆக்குபவர்.

man'ual, *n.* கையேடு, சிறு குறிப்பு ஏடு; கைகளால் வாசிக்கப்படும் இசைக்கருவியின் இசைப் பட்டடை; (வர.) சமயவினைச் சடங்கில் திருக்கோயில் குருவால் பயன்படுத்தப்படும் சமயவிதி ஏடு; *a.* கைகள் சார்ந்த; கைகளால் செய்யப்பட்ட; (தொ.) manual exercise, (படை.) துப்பாக்கியைக் கையாளும் பயிற்சி.

manufac'tory, *n.* தொழிற்சாலை, பட்டறை, பணிக்களரி.

manufac'ture, *n.* ஆக்கத்தொழில்; செய்தொழிலாக்கம்; செய்தொழில் துறை; ஆக்கிக்குவிப்பு; *v.* ஆக்கு; பயனுக்கு மிகுதியாகப் படை; விளைவி; உழைத்துருவாக்கு; கற்பனை இலக்கிய வகையில் இணைந்துருவாக்கு, செயற்கையாகப் படை.

manumit', *v.* (வர.) அடிமைகளை விடுதலை செய்.

manure', *n.* எரு, நில உரம், மக்கிப்போன எரு, நிலவளச் சத்து; *v.* எருவிடு, உரமிட்டுச் செழிப்பாக்கு.

man'uscript, *n.* கையெழுத்துப்படி, கையால் எழுதிய பிரதி, அச்சடிப்பதற்குக் கொடுக்கப்படும் மூல வரைப்படி.

man'ward, *a.* மனிதர்பக்கம் நோக்கிய, மன்னினம் நாடிய.

Manx[1], *n.* மேன் (Isle of Man) தீவினைச் சார்ந்தவர்; மேன் தீவு மொழி; வாலில்லாப் பூனைவகை; *a.* மேன் தீவினைச் சார்ந்த.

Manx[2], *n. pl.* மேன் தீவு மக்கள்.

Manx'man, *n.* மேன் தீவில் வாழ்பவர்.

ma'ny, *n.* பலர்; பல; *a.* பல; (தொ.) a good many, a great many, மிகப்பலர்; பெருந்திரள்; மிகப்பல; one too many, தேவைப்படாதவர்; தேவைப்படாதது; மிஞ்சியவர், திணறடித்தவர், திகைக்கச் செய்பவர்; the many, கும்பல், பெருந்திரள், கூட்டம்.

man'yplies, *n.* (பே-வ.) அசைபோடும் விலங்குகளின் மூன்றாவது இரைப்பை.

ma'ny-sided, *a.* பல பக்கங்களுள்ள; பல தோற்றக்கூறுகள் உடைய; பல்வகையான ஆற்றல்கள் அமைந்த; பல பண்புத் திறங்கள் கொண்ட.

ma'ny-sidedness, *n.* பலவகை ஆற்றல்கள் கொண்ட தன்மை, பல்திறப் பண்புகள் நிறைந்த நிலை.

Maor'i, *n.* நியூசிலாந்தில் வாழும் பழுப்பு நிற இனத்தவர்; நியூசிலாந்தின் பழுப்பு நிற இனத்தவர் மொழி.

map, *n.* நாட்டுப்படம், நிலப்படம்; உலகப்படம்; *v.* நிலப்படம் வரை; உலகப்படம் வகு; தாளில் நாட்டுப்படம் எழுது; திட்டமிடு.

ma'ple, *n.* சர்க்கரை தரும் அழகுடைய நிழல் தரு மரவகை; அழகுடைய நிழல் தரு மரவகையின் கட்டை.

Maquis', *n.* பிரஞ்சு நாட்டில் 1939-45ஆம் ஆண்டுப் போரில் ஈடுபட்ட நாட்டுப் பற்றாளர் படை.

mar, *v.* கெடு, அழி, முழுதும் பாழ்படுத்து; பதங்கெடு, அழிவுவேலை செய்.

ma'rabou, *n.* மேற்கு ஆப்பிரிக்க பெரு நாரை வகை; தொப்பிகளில் அழகுக்காகச் செருகப்படும் கொக்கு இறகின் கொத்து.

ma'rabout, *n.* வட ஆப்பிரிக்க வழக்கில் முஸ்லீம் துறவி; முஸ்லீம் துறவியின் கல்லறைமாடம்.

maraschi'no, *n.* சிறு கறுப்புப் பழவகையிலிருந்து எடுக்கப்படும் தேறல் வகை; *pl.* maraschi'nos.

maras'mus, *n.* உடல் கரைவு.

Ma'rathon, *n.* நெடுநீள ஓட்டப்போட்டி; எல்லைமீறிய பொறுமை தேவைப்படும் முயற்சி.

maraud', *v.* கொள்ளையடி; சூறையாடு; திருடு; திருடித் திரி.

maraud'er, *n.* கொள்ளைக்காரன்.

marave'di, *n.* (வர.) ஸ்பானிய நாட்டு நாணயம்.

mar'ble, *n.* சலவைக்கல், பளிங்குக்கல், மாக்கல்; *v.* பல் வண்ணச் சலவைக்கல் தோற்றம் அளி.

mar'bles, *n. pl.* கழங்கு, கோலிக்காய்.

marc, *n.* பழச்சக்கை, அழுத்திச் சாறு பிழியப்பட்ட பழங்களின் கோது.

Marc'an, *a.* தூயதிரு மார்க் (St. Mark) சார்ந்த.

mar'casite, *n.* கந்தகக்கல்; வெள்ளை இருப்புக்கந்தகக்கல்.

marcel', *n.* தலைமயிரில் செயற்கையாக ஒப்பனை செய்யப்பட்ட அலைபோன்ற தோற்றம்; *v.* தலைமயிருக்கு அலை போன்ற செயற்கைத் தோற்றமளி; (தொ.) marcel wave, மயிரின் செயற்கை அலை ஒப்பனை.

marces'cent, *a.* செடி உறுப்பு வகையில் விழாது உலர்ந்து தொங்குகிற.

March[1], *n.* ஆங்கில ஆண்டின் மூன்றும் மாதம்; (தொ.) March brown, தூண்டிலுக்கு இரையாகப் பயன்படும் ஈ வகை; March hare, வெறிபிடித்தாடும் முயல்.

march[2], *n.* (வர.) எல்லை, எல்லைப்புறம், இருநாடுகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி; *v.* பொது எல்லைப்புறம் கொண்டிரு.

march[3], *n.* அணிவகுப்பியக்கம், அணிவகுப்பு முன்னேற்றம்; அணிகடப்பு; அணி கடந்த தொலை; அணி இயக்க இசை; ஒழுங்குமுறைப்பட்ட நடை; நெடுந்தொலைக் கடுநடை; போக்கு, கடப்பு, செலவு; *v.* அணிவகுத்துச் செல், அணி வரிசையிற் செல்; ஒழுங்குபட்ட நடையுடன் செல்; கடந்து செல்; முன்னேறு; தளராது மேற்செல்; கடந்து செல்ல விடு; போக்கு, வெளியேற்று; (தொ.) marching orders, போருக்குப் புறப்படுவதற்கான கட்டளை; march past, வணக்கம் செலுத்திக்கொண்டே படைகள் அணியாகக் கடந்து செல்லுதல்; படை அணிவகுத்துச் செல்லும்போது இசைக்கப்படும் இசைவகை.

march'es, *n. pl.* இங்கிலாந்திற்கும் ஸ்காத்லாந்திற்கும் இடைப்பட்ட எல்லைப்புறப் பகுதி; இங்கிலாந்திற்கும் வேல்ஸுக்கும் (Wales) இடைப்பட்ட பகுதி.

mar'chioness, *n.* கோமகள், தன்னுரிமைக் கோமகவுரிமை உடையவள்; கோமாட்டி, கோமான் மனைவி; கோமான் உரிமைக் கைம்பெண்.

march'pane, *n.* வாதுமைப் பண்ணியம், வாதுமைக் கொட்டையும் வெல்லமும் அரைத்து ஆக்கிய பண்டம்; வாதுமைக் கொட்டை வெல்லமிட்டமைத்த மாவு.

marcon'i, marcon'igram, *n.* சேணொலிச் செய்தி, கம்பியில்லாத் தந்திமூலம் அனுப்பப்படும் செய்தி.

Mard'i gras, *n.* நீற்றுப் புதன்கிழமைக்கு முந்திய செவ்வாய்க் கிழமை; நோன்பு விழாவின் கடைசி நாள்.

mare[1], *n.* பெண் குதிரை, குதிரையின விலங்கின் பெண்.

mare[2], *mar'e claus'um*, (ல.) *n.* நாட்டின் ஆட்சி வரம்பிற்கு உட்பட்ட கடற்பகுதி.

Marechal Niel, *n.* ரோசா இனத் தழுவு கொடிவகை.

mar'e lib'erum, (ல.) *n.* பொதுக் கடற்பகுதி, அனைத்து நாடுகளுக்கும் பொதுவுரிமைப்பட்ட கடற் பெரும்பகுதி.

maremm'a, *n.* உடல்நலத்துக்கொவ்வாத கடலடுத்த சதுப்பு நிலப்பகுதி.

mare's'-nest, *n.* குதிரைக்கூடு, முயற்கொம்பு வேட்டை, பயனில் மாயக் கண்டுபிடிப்பு.

mare's'-tail, *n.* நீர்வாழ் செடிவகை.

marg'arine, *n.* செயற்கை வெண்ணெய்.

marg'ay, *n.* புலிபோன்ற தென் அமெரிக்க காட்டுப்பூனை வகை.

marge, *n.* (செய்.) = margin.

mar'gin, *n.* எல்லைக்கோடியடுத்த பகுதி; அச்சுத்துறையில் அடிக்காது விடுபடும் பக்க ஓர இடம்; ஒதுக்கி விடப்பட்ட ஓரப்பகுதி; விடுமிகை, ஈடு செய்வதற்காக முன்னரே சேர்க்கப்பட்ட மிகைபகுதி; சலுகை மிகை, காலம்-பொருள் முதலியவற்றின் தேவைக்கு மேற்பட்ட அளவு; வாணிகம் வகையில் தற்செயல் இழப்பீடு சரிசெய்வதற்காகப் பங்குத் தரகரிடம் சேமிப்பாக ஒப்படைக்கப்படும் பணம்; *v.* ஓர இடம்விடு; ஓர இடத்தில் குறிப்பு எழுது; பங்குத் தரகரிடம் கணக்கு மாற்றங்களில் ஏற்படும் இழப்பீட்டிற்காகப் பணம் ஒப்படை.

mar'ginal, *a.* ஓரத்துக்குரிய, ஓர இடஞ்சார்ந்த; ஓர இடத்திலுள்ள; ஓர இடத்தில் வரையப்பட்ட; ஓரக்குறிப்புக்களையுடைய; எல்லைக்கோடியடுத்த, விளிம்படுத்த; நில வகையில் பயன்படுத்துதற்கரிதான.

marginal'ia, *n. pl.* ஓரக்குறிப்புகள்.

margo'sa, *n.* வேப்பமரம்.

marg'rave, *n.* (வர.) புனித ரோமப் பேரரசின் இளவரசர்களுக்கு அளிக்கப்பட்ட செர்மானிய பட்டப்பெயர்; எல்லைப் புற மாகாணத் தலைவர்.

marg'ravine, *n.* புனித ரோமப் பேரரசின் செர்மானிய விருதுப்பெயர் கொண்ட சில இளவரசர் மனைவியர்க்குரிய பட்டப்பெயர்; எல்லைப்புற மாகாணத் தலைவரின் மனைவி.

marg'uerite, *n.* பெரிய மலர்களையுடைய சிறு தோட்ட மலர்ச்செடி வகை.

mariage de convenance, (பிர.) *n.* ஆதாயத் திருமணம், தன்னல ஆதாய நோக்குடன் செய்யப்படும் திருமணம்.

Mar'ian, *n.* (வர.) ஸ்காத்லாந்து அரசி மேரியின் ஆதரவாளர்; *a.* தூய கன்னி மரியாளை வழிபடுகிற; (வர.) இங்கிலாந்தில் ஸ்காத்லாந்து அரசி மேரிக்கு ஆதரவான.

ma'rid, (அரா.) *n.* ஆற்றல்மிக்க ஆவி, பேய்.

ma'rigold, *n.* பொன்வண்ண மலர்களுள்ள செடிவகை.

marihua'na, marijua'na, *n.* புகை குடிப்பதற்குரிய கஞ்சாச்சருகுப் பூஞ்சுருட்டு.

marim'ba, *n.* முற்பட்ட நாகரிகநிலையில் உள்ள ஆப்பிரிக்கர்கள் வழங்கிய மரக்கட்டைகளால் ஆன இசைக்கருவி வகை; தற்கால பல்லியக் கருவிவகை.

marinade', *n.* மணத்தேறலுப்பீடு, ஊறுகாய், தேறலும்-காடியும்-மணப்பொருளும் கலந்த கலவையில் ஊறிய பொருள்; மீனுப்பீடு; இறைச்சி உப்பீடு, உப்புக்கண்டம்; *v.* தேறல்-காடி-மணப்பொருட் கலவையில் ஊறச்செய்.

marine', *n.* கடற்படை; வாணிகக் கப்பற்படை; கடற்படை வீரன்; நீர்-நில நடவடிக்கைக் குழாத்தின் படைத்துறை வல்லுநர்; *a.* கடல் சார்ந்த; கடலில் விளைகிற; கடல்துறை பற்றிய; கப்பல் பற்றிய; கடற்படைச் சார்பான; கடலில் பயன்படுகிற; வீரர்கள் வகையில் கடற்படையில் வேலையாயிருக்கிற; (தொ.) marine stores, விற்பனைக்கான பழைய கப்பலுக்குரிய சிறுபொருள்கள்.

ma'riner, *n.* கடலோடி; கப்பலோட்டி; (தொ.) master mariner, மீகாமன், தலைமைக் கப்பலோட்டி.

Marin'ism, *n.* இத்தாலியப் புலவர் மாரினி (Marini) யின் போலி நடை; செய்யுளின் செயற்கைப்பாணி.

Mariol'atry, *n.* தூய கன்னி மரியாளின் வழிபாடு.

marionette', *n.* சூத்திரப்பாவை.

ma'rish, *n.* சதுப்புநிலம்; *a.* சதுப்பு நிலஞ்சார்ந்த.

Mar'ist, *n.* ரோமன் கத்தோலிக்கரிடையே கன்னிமரியாள் சங்கம் சார்ந்தவர்.

ma'rital, *a.* கணவனுக்குரிய; திருமணஞ்சார்ந்த, திருமணம் பற்றிய.

ma'ritime, *a.* கடலருகில் வாழ்கிற; கடற்கரையோரம் காணப்படுகிற; கடலோடு இணைந்த, கடல் சார்ந்த.

marj'oram, *n.* சமையலில் பயன்படுத்தப்படும் மணப்பூண்டுச் செடிவகை.

mark, *n.* குறி; சின்னம்; இலக்கு; தடம்; கறை; தழும்பு; அடையாளம்; அடையாளக் குறி; உடற்பயிற்சிப் போட்டிகளில் புறப்படும் எல்லைவரை; தர அடையாளக் குறியீடு, தரம்; பண்புக் குறியீடு; முத்திரை; கைநாட்டுக் குறி; நடத்தைச் சான்றுக்குறி; இடக்குறிப்படையாளம்; மதிப்பெண்; தனிச் சிறப்பு; விருப்ப எல்லை; விரும்பிய பொருள்; செர்மன் ஊர்ப்பொதுநிலத் தொகுதி; குத்துச்சண்டை வகையில் வயிற்றுத் தொப்பூழ்ப் பகுதி; உதைபந்தாட்டத்தில் சிறப்பாட்டக்காரன் நிலத்திலிடும் குதிக்காற் குறி; *v.* குறியிடு; முத்திரையிடு; எழுத்திற்குறி; வடுவிடு; அடையாளமிடு; தடம் பொறி; இயற்குறியாயமைவி; விலைகுறி; எல்லை குறி; திட்டவரையிடு; முன்குறித்து வை, ஒதுக்கி வை; குறித்துக்காட்டு; சுட்டியுணர்த்து; பதிவு செய்; தெரியக்காட்டு; சின்னமாகக் காட்டு; தனிப்படுத்திக் காட்டு;

பண்பாயுடனிலவு; பண்பாயமை; தாளமிடு; நினைவிற் குறித்துக்கொள்; கூர்ந்துகாண்; உதைபந்தாட்டத்தில் உன்னிப்போடு உடன்செல்; (தொ.) a marked man, ஐயத்தோடும் பகைமையோடும் கவனிக்கப்படும் ஒருவர்; beside the mark, wide of the mark, குறி விலகி; நேரடித் தொடர்பு இல்லாமல்; easy mark, எளிதில் ஏமாறுபவர்; get off the mark, ஆட்டப்பந்தய வகையில் புறப்படு, ஓடத் தொடங்கு; make one's mark, தனிச்சிறப்புப் பெறு; mark down, கவனித்துக்கொள்; குறித்துக்கொள்; விலையைக் குறைத்துக் குறி; mark off, எல்லை வரையறுத்துப் பிரி; திரித்து அறி; திரித்துணருவி; mark out, நிலத்திற்கு எல்லை ஏற்படுத்து; வழி அமை, திட்டம் தீர்மானி, விதி, நியமி; mark time, கால்களை இயக்கு, முன்னேறுவதாகப் பாவித்து நேரங்கடத்திக்கொண்டிரு; mark up, விலையை ஏற்றிக் குறி; of mark, கவனிக்கத்தக்க, குறிப்பிடத்தக்க; Plimsoll's mark, சரக்கேற்றியபின் கப்பல் எவ்வளவு தூரம் நீருள் அமிழலாம் என்பதைக் குறிக்குங் கோடு; the mark, படித்தரம்; பொது அளவு.

mark[4], *n.* வெள்ளி-தங்கத்திற்கான எடை; செர்மனி நாட்டு நாணய வகை; (வர.) 13 பென்னி 4 துட்டுக்குச் சமமான ஆங்கிலநாட்டுக் கணிப்புப் பணம்.

mark'er, *n.* குறியிடுபவர்; குறியிடு கருவி; வருகையாள் பதிவு செய்பவர்; சட்டாம்பிள்ளை; வேட்டை விலங்குகளைக் காட்டுபவர்; ஆட்டங்களில் கெலிப்புத் தோற்பு எண்களைக் கணிப்பவர்; கெலிப்பு எண் கணிப்புப் பொறி; குறிவிளக்க ஒளிக்கூம்பு, குண்டு வீச்சாளர்க்குதவியாகக் குறியிலக்குகள் மீது ஒளிவீசிக் காட்டும் ஒளிக்கூம்பு.

mark'et, *n.* அங்காடி, சந்தை; சந்தைக்கூட்டம்; சந்தைக் களம்; சந்தை கூடும் பருவம்; கால்நடைத்தாமணி; தாமணிக்களம்; வாணிகக்களம்; கொடுக்கல் வாங்கல்; கொடுக்கல் வாங்கல் வாய்ப்பு; தேவைப்பாடு; தேவைப்பாடுள்ள இடம்; விற்பனை; பேரம்; விலைப்படு நிலை, விற்குநிலை; விலை வீதம்; விலைமதிப்பு; *v.* விற்பனைக் களப்படுத்து; விலைப்படுத்து; சந்தைக்கனுப்பு; சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்; (தொ.) black market, கள்ளச்சந்தை; bring one's eggs to a bad market, bring one's hogs to a bad market, திட்டங்களில் தோல்வியுறு; come into the market, விற்பனைக்கு வந்துசேர்; make a market of, பண்டமாற்றுக்கு; market garden, விற்பனைக்காகக் கறிகாய்கள் வளர்க்கப்படும் தோட்டம்; market value, நிலவர விலை; money market, பங்கு வாணிகச் செயற்களம்; put on the market, விற்பனைக்குக் கொடு, விலை கூறு; the corn market, கூலவாணிகத் துறை.

mar'ket-day, *n.* சந்தை நாள்.

mar'ket-place, *n.* சந்தைக் கூடம்.

mar'ket-price, *n.* நிலவர விலை.

mar'ket-town, *n.* சந்தை கூடும் நகரம்.

mar'khor, *n.* முறுக்கிய பெரிய கொம்புகளுள்ள காட்டு ஆட்டு வகை.

mark'ing, *n.* குறியிடல்; இலக்குவைப்பு; தோல் வண்ணம்; சிறகு வண்ணம்.

mark'ing-ink, *n.* துணிக்குறியிடும் மை.

marks'man, *n.* குறி வல்லவன்; *pl.* marks'men.

Mark Tap'ley, *n.* என்றும் மகிழ்ச்சியோடும் உள்ளக் கிளர்ச்சியோடும் இருப்பவர்.

mark'-up, *n.* வாணிகத்துறையில் செலவா தாயங்களுக்கு ஈடு செய்ய அடக்க விலைக்குமேல் குறித்த விலையில் சேர்க்கப்படும் மிகைவிலை.

marl, *n.* களிமண்ணும் சுண்ணக் கரிகையும் கலந்த மண்வள உரச்சத்து; *v.* நிலத்திற்குக் களிமண்ணும் சுண்ணக் கரிகையும் கலந்த உரமிடு.

Marlbur'ian, *n.* மார்ல்பரோ கல்லூரி (Marlborough College) உறுப்பினர்; *a.* மார்ல்பரோ கல்லூரியைச் சார்ந்த.

marl'ine, *n.* (கப்.) இரு புரிகள் கொண்ட மெல்லிய கயிறு.

marl'ine-spike, mar'linspike, *n.* கயிறு பிரித்தணைக்கப் பயன்படும் கூரிய காழ்மரக்கோல்; புரி இழைக்கும் இருப்புக் கோல்.

marl'ite, *n.* காற்றின் செயற்பாடு தடுக்கும் ஆற்றலுடைய சுண்ணக்கரிகை கலந்த களிமண் வகை.

marm'alade, *n.* பழப்பாகு.

marm'ite, *n.* தேறல் காடிச் சத்து.

marm'olite, *n.* அடுக்கியல் பச்சை வண்ணப் பாறைவகை.

marmor'eal, *a.* (செய்.) பளிங்குக் கல்லாலான; சலவைக் கல் போன்ற.

marm'oset, *n.* அமெரிக்க வெப்ப மண்டலத்துக்குரிய மயிரடர்ந்த வாலுடைய சிறு குரங்குவகை.

marm'ot, *n.* அணில் இனத்தைச் சார்ந்த சிறு விலங்கு வகை; குளிக்கும்போது அணியும் தொப்பிவகை.

ma'rocain, *n.* பட்டுத்துகில் வகை.

Ma'ronite, *n.* லெபனன் (Lebanon) பகுதியில் வாழும் சிரியக் (Syrian) கிறித்தவக்கிளை சார்ந்தவர்.

maroon'[1], *n.* பலத்த ஓசையுடன் வெடிக்கும் வாண வெடி வகை; பழுப்புச் சிவப்புநிறம்; *a.* பழுப்புச்சிவப்பு நிறமான.

maroon'[2], *n.* மேற்கிந்திய தீவுகளைச் சார்ந்த நீகிரோ வகுப்பினர்; தனித்துக் கைவிடப்பட்டவர்; *v.* தண்டனையாகக் குற்றவாளியைத் தனியான தீவில் விட்டுவிடு; பொழுதுபோக்கு; சோம்பித்திரி, சுணங்கு.

marque, *n.* (வர.) எதிரிகளின் வாணிகக்கப்பலைக் கைப்பற்றுவதற்கான தனிக் கப்பலாளர் சிறப்புரிமை; எதிரி வாணிகக் கப்பலைக் கைப்பற்றும் உரிமைச்சீட்டு பெற்ற கப்பல்.

marquee', *n.* பெரிய கூடாரம்.

marq'ueterie, marq'uetry, *n.* உள் இழைப்பு வேலை.

marq'uis, marq'uess, *n.* கோமான்.

marquise', *n.* கோமான் மனைவி; கோமாட்டி; கூர் முட்டை வடிவ மணிக்கொத்துப்பதித்த கணையாழி.

marq'uois, marquois scale, *n.* சமதூர ஒருபோகு கோடுகள் வரைவதற்கான கருவிச்சட்டம்.

ma'rram, *n.* கடற்கரையில் மணலைப்பற்றி உறுதியாக்கும் புல்வகை.

ma'rriage, *n.* திருமணம்; திருமணத்தொடர்பு; மணவினை; திருமணமுறை; திருமண நிகழ்ச்சி; மிக நெருங்கிய இணைவு; சீட்டாட்ட வகையில் ஓரின அரசன் அரசிச் சீட்டுக்களின் இணைவு; (தொ.) civil marriage, சடங்குகள் இன்றிச் சமுதாய அதிகாரிகளால் நடத்தப்பெறும் திருமணம்; communal marriage, சமுதாயக்குழுவில் எல்லாப் பெண்களையும் எல்லா ஆண்களும் திருமணம் செய்துகொள்ளும் முறை; companionate marriage, இருவரும் விரும்பினால் மணவிலக்கு செய்துகொள்ளவும் சட்டப்படி கருத்தடை செய்துகொள்ளவும் உரிமையளிக்கும் திருமணம்; marriage articles, திருமணத்துக்குமுன் சொத்துக்கள் மரபுரிமை முதலிய உரிமைகள் பற்றிய ஒப்பந்தம்; marriage licence, திருமணம் செய்துகொள்வதற்கான அரசியலார் ஒப்புதல்; marriage lines, திருமணச் சான்றேடு.

ma'rriageable, *a.* திருமணத்திற்கான வயதுள்ள, திருமணஞ் செய்துகொள்ளத்தக்க.

ma'rriage-bed, *n.* மணவறைப்படுக்கை; உரிமைப்புணர்ச்சி.

ma'rried, *a.* திருமணத்தால் இணைந்த; திருமண உறவுடைய.

marron glace, (பிர.) *n.* வாதுமை வகையோடு பனிக்கட்டியும் சர்க்கரையும் கலந்த இனிப்புத் திண்பண்ட வகை.

ma'rrow[1], *n.* எலும்பு மச்சை, நல்லி, எலும்பிற்குள்ளிருக்கும் மெல்லிய கொழுப்புப் பொருள்; முக்கிய பகுதி; (தொ.) chilled to the marrow, முற்றிலும் குளிர் தாக்குற்று; spinal marrow, முதுகந்தண்டின் உள்ளீடு; vegetable marrow, சுரையினச் செடிவகை.

ma'rrow[2], *n.* (பே-வ.) துணைவர், தோழர் ; இணைதுணை ; முற்றிலும் ஒத்த படிவம்.

ma'rrowbone, *n.* மச்சை எலும்பு.

ma'rrow-spoon, *n.* எலும்புகளிலுள்ள மச்சையை எடுப்பதற்கான கரண்டி.

ma'rry, *v.* மணவினையில் இணைத்து வை ; மணஞ் செய்து கொடு ; மணங்கொள் ; மணத்திற்கொள் ; மணஞ்செய் ; பொருந்த இணை ; திட்பமிகாதபடி கயிறுகளின் புரி முறுக்கி இணை.

Mars, *n.* ரோமர்களின் போர்த்தெய்வம் ; அங்காரகன், செவ்வாய் ; போர், போர்த்தொழில்.

Marsa'la, *n.* வெண்ணிற முந்திரித்தேறல் வகை.

Marseillaise', *n.* பிரஞ்சு நாட்டுப்பாடல்; பிரஞ்சுப் புரட்சிக்காரர் பாடல்.

Marseilles', *n.* அழுத்தமான பருத்தித் துணிவகை.

marsh, *n.* சதுப்புத் தாழ்நிலம் ; (தொ.) marsh gas, ஒளி உமிழும் சதுப்புநில வளி, கரியகச் செறிவுடைய நீரக வளி ; marsh mallow, சதுப்பு உவர்நிலப் புதர்ச்செடி வகை ; சதுப்பு உவர்நிலச் செடிவகையின் வேரிலிருந்து செய்யப்படும் இன்பண்ட வகை ; marsh marigold, பொன்வண்ணப் பூக்களுள்ள செடிவகை.

marsh'al, *n.* படைத்துறை மீயுயர் அலுவலர், சுற்றுலா நடுவருடன் செல்லும் செயலாண்மைப் பணித்துணைவர் ; விழா ஒழுங்கு முறைப் பணியாளர் ; வீரப்போட்டி ஒழுங்கு முறைப் பணியாளர்; சிறைக்கூட முகவர் ; அரண்மனைத் தலையாரி ; *v.* ஒழுங்காக வரிசைப்படுத்தி வை ; (கட்.) குடும்ப மரபுச் சின்னங்களை ஒன்று சேர் ; சடங்குகளோடு அழைத்துச்செல் ; ஒழுங்குபட இணைவுறு ; (தொ.) judge's marshal, சுற்றுலா நடுவருடன் செல்லுஞ் செயலாண்மைப் பணித்துணைவர்; knight marshal, (வர.) நீதிமன்றக் கடமைகளுள்ள அரண்மனைத் தலையாரி ; marshalling yard, இணைகூட்டுக்களம், சரக்கு வண்டிகள் ஒருங்குகொண்டு நிறுத்தப்படும் இருப்புப்பாதைக் களம்.

marsh'alsea, *n.* (வர.) அரண்மனை அலுவலர் நடத்தும் நீதிமன்றம் ; அரண்மனை அதிகாரியின் கட்டுப்பாட்டிலுள்ள சிறைச்சாலை.

marsup'ial, *n.* பைம்மாவினம், வயிற்றில் பையுடைய பாலூட்டி உயிரினம் ; *a.* பைபோன்ற ; பைம்மாவினஞ் சார்ந்த.

mart, *n.* (செய்.) அங்காடி, கடைத்தெரு ; ஏல அறை ; சந்தை, வாணிக மைய இடம்.

martell'o, *n.* பகைவர் வந்திறங்குவதைத் தடுப்பதற்காகக் கடற்கரையில் கட்டப்பட்டுள்ள சிறு வட்டவடிவக் கோட்டை; *pl.* martell'os.

mart'en, *n.* மதிப்புயர்ந்த மென்மயிருடைய கீரியின விலங்கு வகை.

mar'tial[1], *a.* போருக்குரிய ; போருக்குத் தகுதிவாய்ந்த ; போருக்குகந்த ; வீரமிக்க ; போர் விருப்பமுள்ள ; (தொ.) martial law, போர்க்காலச் சட்டம், பொதுநிலைச்சட்டம் நிறுத்திவைக்கப்படும் படைத்துறை ஆட்சிமுறை.

Mar'tial[2], *a.* செவ்வாய்க்கோள் சார்ந்த.

Mar'tian, *n.* செவ்வாய்க்கோளில் வசிப்பவர்.

mart'in, *n.* வீட்டுச்சுவர் முதலியவற்றில் மண்கூடு கட்டுங் குருவி வகை.

martinet', *n.* கண்டிப்பாளர் ; கண்டிப்புமிக்க படைத்துறைவர்.

mart'ingale, *n.* குதிரை எறியாமலிருக்கும்படி கட்டும் தலைவார் ; (கப்.) பாரந்தூக்கியின் நீள் கையைக் கட்டிவைப்பதற்கான கயிறு ; சூதாட்ட வகையில் இறுதி வெற்றி எதிர் நோக்கிப் பணயத்தை இரட்டிப்பாக்கும் முறை.

marti'ni[1], *n.* சாராயம்-வெள்ளை இன்தேறல் முதலியவற்றைக் கொண்டு செய்யப்படும் தேறல் கலவை வகை.

marti'ni[2], **Marti'ni-Hen'ry rifle,** *n.* சுழல் துப்பாக்கி வகை.

Mar'tinmas, *n.* தூய திரு. மார்ட்டின் (St. Martin) திருநாளாகிய நவம்பர் 11.

mart'let, *n.* குருவி வகை ; (கட்.) காலற்ற பறவை.

mart'yr, *n.* புனிதத்தியாகி, மதத்துக்காக உயிர் துறந்தவர்; வீரத் தியாகி, கொள்கைத்தியாகி, கொள்கைக்காக உயிர் விட்டவர் ; *v.* உயிர்த்தியாகியாக்கிவிடு, கொள்கைக்காகக் கொன்றுவிடு ; வதைசெய் ; (தொ.) make a martyr of oneself, புகழ் கருதித் தனி விருப்பங்களை விட்டுவிடு ; புகழுக்காகத் தனி விருப்பங்களைத் துறப்பதாக நடி ; martyr to gout, முடக்குவாதம் முதலியவற்றால் எந்நேரமும் துன்பப்படுபவர்.

mart'yrdom, *n.* புனித உயிர்த்துறவு ; கொள்கைக்கான உயிர்த்தியாகம், பலிச்சாவு; தியாகத்துயரங்களின் தொகுதி; சித்திரவதை ஏற்பு.

mart'yrize, *v.* உயர்ந்த குறிக்கோளுக்காக உயிர்த்தியாகம் செய்வி ; கொண்ட கொள்கைக்காகத் துன்பம் மேற்கொள்ளுவி.

martyrol'atry, *n.* புனிதத்தியாகிகளின் வழிபாடு.

martyrol'ogy, *n.* புனிதத்தியாகிகளின் பட்டியல் ; புனிதத்தியாகிகளின் வரலாறு.

mart'yry, *n.* வீரத்தியாகியின் நினைவாக எழுப்பப்பட்ட கோயில்.

marv'el, *n.* வியத்தக்கபொருள் ; வியத்தகு நிகழ்ச்சி, அற்புதம் ; பண்பின் வியத்தக்க எடுத்துக்காட்டு, வியத்தகு பண்புடைய பொருள் ; வியப்பு ; *v.* வியப்புறு, மலைப்படை.

marv'ellous, *a.* அற்புதமான ; திகைக்கச் செய்கிற ; நம்ப முடியாத.

Marx'ian, *n.* செர்மன் சமவுடைமைவாதியான காரல் மார்க்ஸின் (Karl Marx 1818-1883) கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர் ; *a.* காரல் மார்க்ஸ் கொள்கைகள் சார்ந்த.

marz'ipan, *n.*=marchpane.

mascar'a, *n.* கண்ணிமை மயிர்களுக்குச் சாயம் ஊட்டுவதற்கான கலவை மருந்து.

mas'cot, *n.* தாயத்து, அதிர்ஷ்டம் உண்டுபண்ணும் பொருள்; நற்பேறு கொணர்விப்பதாகக் கருதப்படும் ஆள்.

ma'sculine, *n.* ஆண்பால் ; ஆண்பாற்சொல் ; *a.* ஆண்பாலுக்குரிய ; (இலக்.) ஆண்களின் பெயர்களுக்குரிய பால் சார்ந்த ; வீறுமிக்க ; ஆண்மைவாய்ந்த ; ஊக்கமுடைய ; பெண் வகையில் ஆணியல்புகள் வாய்ந்த, ஆண்மாரியான; (தொ.) masculine ending, அழுத்தம்பெற்ற அசையுடன் அடிமுடிதல்; masculine rhyme, பிரஞ்சு மொழிப் பா வகையில் அழுத்தம்பெற்ற அசைகளில் முடிகிற சொற்களுக்கிடையேயுள்ள அடியீற்றெதுகை.

mash, *n.* கூழாகும்பொருட்டு வெந்நீருடன் கலக்கப்பட்ட அரைத்த மாவு ; குதிரைகள் முதலியவற்றிற்குச் சூடாகக் கொடுக்கப்படும் வெந்த கூலம் தவிடு முதலியவற்றின் கலவை; மசியல்; குழப்பமான கதம்பம்; *v.* அரைத்தமாவை வெந்நீரில் கல ; மசியலாக்கு ; உருளைக்கிழங்கு முதலியவற்றைப் பிசைந்து மொத்தையாக்கு.

mash'er, *n.* சிறு பேதைப் பெண்களின் கருத்தைக் கவர்வதாக எண்ணிப் பகட்டான உடை உடுத்தும் பிலுக்கன்.

mash'ie, *n.* குழிப்பந்தாட்ட வகையில் பந்தினை மிக உயர அல்லது இடைப்பட்ட தொலைவுகளுக்குத் தூக்கியடிப்பதற்கான இருப்புக்கோல்.

mash'-tub, *n.* அரைத்தமா கூழாக்கப்படும் தொட்டி.

mash'y, *n.*=mashie.

ma'sjid, (அரபு.) *n.* பள்ளிவாசல்.

mask, *n.* முகமூடி; முகத்திரை; முகக்காப்பு வலை; பண்டைய கிரேக்க-ரோம நடிகர்களால் அணியப்பட்ட மனிதத் தலை பொம்மை ; பொய்முகம், முகத்தைப்போல் செய்யப்பட்ட

களிமண் அல்லது மெழுகுருவம்; மாறுவேடம்; உருமாற்றம்; முகமூடியணிந்தவர்; நரிமுகம், நரித்தலை; *v.* முகமூடி கவி; முகமூடியினால் உருமாற்று; பகைவர் பார்க்காமல் மறைத்து வை; பகைவர் படைகள் செயற்படாமல் தடுத்து நிறுத்திவை; நேசப்படையின் பீரங்கி வேட்டு வரிசையில் நின்றுகொண்டு அது செயற்படாமல் தடு; உருமாறு, உணர்ச்சி முதலியவற்றை மறைத்துக்கொள்; (தொ.) masked ball, முகமூடிகள் அணிந்துகொண்டு ஆடப்படும் குழு நடனவகை.

ma'sker, *n.* முகமூடி அணிந்திருப்பவர்; முகமூடி நடனக் குழுவினர்.

maskinon'ge, *n.* வட அமெரிக்க பெரிய ஏரிகளிற் காணப்படும் பெருமீன் வகை.

mas'ochism, *n.* அடக்கிக் கொடுமைசெய்வதை ஏற்றின்பமடையும் முரணியல் சிற்றின்பநிலை; அருரின்பம்.

mas'on, *n.* கொற்றன், கொல்லத்துக்காரன், கல்தச்சன், சிற்பி; நற்கொற்றர், உடன்பிறப்புணர்ச்சியுடன் ஒருவர்க்கொருவர் உதவிசெய்துகொள்ளும் கேண்மைக்கழக உறுப்பினர்; *v.* கட்டுமான வேலை செய், கொல்லத்து வேலை செய்; கல்தச்சு வேலைப்பாட்டினால் வலுப்படுத்து.

mason'ic, *a.* நற்கொற்றர் கேண்மைக்கழக முறை சார்ந்த.

mas'onry, *n.* கட்டுமான வேலை, கொல்லத்துவேலை, கல்தச்சு வேலைப்பாடு.

Masor'a, Masor'ah, *n.* விவிலிய நூல் மூலபாடம் பற்றி யூதரிடையே மரபாக வந்த செய்திகளின் தொகுப்பு.

Mas'orete, Mas'orite, *n.* விவிலிய நூல் மூலபாடம் பற்றி யூதரிடையே மரபாக வந்த செய்திகளைத் தொகுக்கும் யூதப்புலவர்.

masque, *n.* கலைபயில்வோரின் இசைநாடகக் கூத்து வகை; இசைநாடகக் கூத்துக்காக எழுதப்பட்ட நாடகம்.

ma'squer, *n.* = masker.

masquerade', *n.* அயிற்பெண்டு, முகமூடி நடனம்; பொய்த் தோற்றம், பகட்டு; *v.* அயிற்பெண்டாடு, முகமூடி நடனத்தில் கலந்துகொள்; மாறுவேடத்தில் தோன்று; உருமாறிச் செல், பொய்த்தோற்றம் கொள்.

mass[1], *n.* ரோமன் கத்தோலிக்கக் கோயில்களில் இயேசுநாதரின் இறுதி உணவுவிழா; இறுதி உணவு விழாவில் பயன்படுத்தப்படும் வழிபாட்டுச்சுவடி; இறுதி உணவு விழாப்பாடல்களின் இசைமெட்டமைப்பு; (தொ.) high mass, குரு-உதவிக் குருவின் துணைகொண்டு தூபம்-இசைப்பாடல் ஆகியவற்றுடன் நடத்தப்படும் இறுதி உணவுவிழா வழிபாடு; low mass, இசைப்பாடலின்றி மிகச்சுருங்கிய வினைமுறைகளோடு நடத்தப்படும் இறுதி உணவுவிழா வழிபாடு.

mass[2], *n.* பிண்டம், கட்டி; பலவற்றின் திரள், செறிதொகுதி; பெரிய எண்ணிக்கை; நிறைபிழம்பு; பெரும்பரப்பு; மொத்தம்; (இய.) பொருண்மை, அடங்கியுள்ள பொருளின் அளவு; *v.* பிண்டமாகத்திரட்டு, மொத்தையாகச் சேர்; ஓரிடத்தில் கொண்டுவந்து குவி; (தொ.) in the mass, மொத்தத்தில்; mass energy, பொருண்மை ஆற்றல், பொருண்மை காரணமாகப் பிண்டத்துக்குரிய ஆற்றல்; mass meeting, மாபெரும் பொதுக்கூட்டம்; mass observation, பொதுமக்கள்பற்றிய கூராய்வு; mass of manoeuvre, படையணிவகுப்புத்தேவைகளுக்கென எதிலும் ஈடுபடுத்தாமல் ஆயத்தமாக வைத்திருக்கப்படும் தானைப்பகுதி; mass production, திட்டமிடப்பட்டபெரிய அளவான பொருட்படைப்பு; the mass, the great mass, பெரும்பகுதி; the masses, பெரும்பான்மைப் பொதுமக்கள், அடிநிலை வகுப்புமக்கள்.

mass'acre, *n.* நூழிலாட்டு, படுகொலைக்களரி, கொன்றுகுவிப்பு; *v.* கொன்று குவி, படுகொலை செய்.

massage', *n.* உருவுதல், வருடுதல், தசைகளும் மூட்டுக்களும் செயலாற்றத் தூண்டுவதற்காக அவற்றைத் தேய்த்துப் பிசைந்து விடுதல்; *v.* உருவு, வருடு, தேய்த்துப் பிசைந்துவிடு.

masse, (பிர.) *n.* மேசைக்கோற்பந்தாட்டக் கோலினைச் செங்குத்தாகப் பிடித்துக்கொண்டு கொடுக்கப்படும் அடி.

masseur', *n.* உடம்பைத்தேய்த்துப் பிசைந்துவிடுதலைத் தொழிலாகக் கொண்டவன்; *fem.* masseuse'.

mass'if, *n.* மலைமுகட்டுத் திரள்.

mass'ive, *a.* பெருத்த; கனமான; கெட்டியான; திண்மையான; பெரும்படியான; கணிசமான; உறுப்புக்கள் வகையில் பெரிதாக உருவாகியுள்ள; மலைக்கவைக்கிற; உள்ளத்தில் பதியும் ஆற்றல்வாய்ந்த; பரும அளவு மிக்குடைய.

Massor'a, Massor'ah, *n.* = Masora.

Mass'orete, Mass'orite, *n.* = Masorete.

mass'-spec'trograph, *n.* திரிபடிவ வகைபிரி கருவி, மின் காந்தக்களங்களூடாக அணுவிசை இயக்குவதன்மூலம் தனிம மறுபடிவங்களைப் பிரிப்பதற்குரிய கருவியமைவு.

mass'y, *a.* திண்மையான, பளுவான.

mast[1], *n.* மரக்கலக்கூம்பு, கப்பற் பாய்மரம்; வானொலியமைப்பின் வான் கம்பிக் கம்பம்; பறவைக்கப்பலைக் கட்டி நிறுத்துவதற்குரிய உறுதியான எஃகுக்கோபுரம்; (தொ.) before the mast, பொதுநிலைக் கப்பலோட்டியின் நிலையில்.

mast[2], *n.* பன்றிகளுக்கு உணவாகப் பயன்படும் காட்டு மரங்களின் கனிகள்.

mas'taba, *n.* (தொல்.) சரிவான பக்கங்களும் தட்டையான மேற்பகுதியுமுடைய பண்டைய எகிப்தியக் கல்லறை.

ma'ster, *n.* தலைவன்; ஆண்டை, எசமான்; மேலாளர்; ஆயன், மேலாட்சியாளர்; நிலைய மேலாண்மையர்; கல்லூரித் தலைவர்; கப்பல் முதல்வர்; பணி முதல்வர், பணிமனை மேலுரிமையாளர்; உடையவர், மேலுரிமையர்; காப்பாளர்; ஆசிரியர்; ஆசான், குரு; மெய்விளக்கத்துறை ஆசிரியர்; வல்லார்; திறலாளர்; தேர்ச்சியாளர்; கைதேர்ந்தவர்; துறைபோனவர்; ஆட்சித்திறமையாளர்; நம்பி; இளஞ்சேய்; இளநிலை ஆண்டை; *a.* தனி முதன்மையான; தலைமை நிலைக்குரிய; தனிச்சிறப்பு வாய்ந்த; அடக்கியாளும் திறமுடைய; வென்று மேம்படும் திறலுடைய; ஆட்சியாற்றல் வாய்ந்த; *v.* கீழடக்கு; அடக்கியாளு; போராடி வெல்லு; நிறை ஆட்சிக்குட்படுத்து; முற்றிலும் தன்வயப்படுத்து; முழுத் தேர்ச்சியடை; துறைபோகக் கைவரப்பெறு; தலைமை வகித்தாட்சி செய்; (தொ.) be master of, ஆதிக்கத்தில் வைத்துக்கொள், மேலாட்சி கைவரப்பெறு; be one's own master, விரும்பியவாறு செய்யும் உரிமைபெறு; make oneself master of, கற்றுத்தீர், துறைபோ; கையாளுவதில் முழுத்திறமை பெறு; master mason, மூன்றும் படித்தரத்தை எய்தியுள்ள நற்கொற்றர் கழக உறுப்பினர்; Master of Arts, பல்கலைக்கழகக் கலைமுதல்வர் பட்டம் பெற்றவர்; கலைமுதல்வர்; Master of foxhounds, வேட்டைநாய்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்; Master of Misrule, (வர.) கிறிஸ்துமஸ் களியாட்டங்களில் தலைமை வகிப்பவர்; Master of the Ceremonies, வினைமுறை முதல்வர், சடங்குகளின் தன்மையையும் வரிசை முறையையும் வகுக்கிற அதிகாரி; Master of the Horse, அரச குடும்பத்தின் குதிரை அரங்க முதல்வர்; Master of the revels, அரசு சார்ந்த விழா வினைமுறைகளைக் கண்காணிப்பவர்; Master of the Rolls, ஆவணங்களைத் தம் பொறுப்பில் வைத்திருக்கும் மேல்முறை மன்ற நடுவர்; old masters, மறுமலர்ச்சிக்கால இத்தாலியக் கலை மன்னர்; The Master, இயேசுநாதர்.

ma'ster-at-arms', *n.* போர்க்கப்பலின் காவற்பணியாளர்.

ma'sterful, *a.* அடம்பிடித்த, பிடிமுரண்டான; ஆதிக்க மனப்பான்மையுள்ள, வீறுப்புடைய.

ma'ster-key, *n.* ஆணித்திறவு, பல பூட்டுகளைத் திறக்கவல்ல திறவுகோல்.

ma'sterly, *a.* தேர்ச்சி வாய்ந்த, வல்லாண் திறமமைந்த.

ma'sterpiece, *n.* சிறந்த வேலைப்பாடுடைய பொருள்; தலைசிறந்த படைப்பு.

ma'stership, *n.* நாயகத்துவம், ஆதிக்கம், ஆட்சி; பள்ளி ஆசிரியர் பதவி; பள்ளி ஆசிரியர் அலுவல்.

ma'ster-stroke, *n.* தேர்ச்சித்திறமிக்க செயல், வன்றிறச் செய்கை.

ma'stery, *n.* ஆட்சி, ஆதிக்கம்; முதன்மை, தலைமை; தேர்ச்சித்திறம்; வல்லமை; மேம்பாட்டுநிலை; தேர்ச்சி நய எளிமை.

mast'-head, *n.* பாய்மரத்தின் உச்சி; சுற்றுக்காட்சியிடம்; தண்டனைக்காக நிறுத்தப்படும் இடம்; *v.* பாய்மரத்தின் உச்சிக்கு உயர்த்து; பாய்மரத்தின் உச்சிக்கு ஏற்றுவது மூலமாக ஒறு.

mas'tic, *n.* பூனைக்கண் குங்கிலியம், மெருகெண்ணெய் செய்யப் பயன்படுகிற மரக் கசிவுப் பிசின்; பிசின் கசிவுள்ள மரவகை; காரைப் பசைமண் வகை; பூனைக்கண் குங்கிலியத்தினால் நறுமணம் ஊட்டப்பெற்ற சாராய வகை; வெளிறிய மஞ்சள் நிறம்.

mas'ticate, *v.* மெல்லு, அதுக்கு, பல்லினால் அரை.

mastica'tion, *n.* மெல்லுதல், பல்லரைப்பு.

ma'stiff, *n.* தொங்கிவீழ் காதுகளும் உதடுகளும் உடைய வலிமைசான்ற பெரிய நாய்வகை.

mastit'is, *n.* முலை அழற்சி.

Mas'todon, *n.* மரபற்றுப்போன யானையின மாபெரு விலங்கு.

mas'toid, *n.* (உள்.) பொட்டெலும்பின் கூம்பு முனைப்பு; (பே-வ.) பொட்டெலும்பின் கூம்பு முனைப்பின்மேல் வரும் கட்டி; *a.* குவடு போன்ற வடிவமைந்த, பெண் மார்பு போன்ற; (தொ.) mastoid operation, செவிப்பறைக் கோளாறு நீக்குவதற்கான அறுவை மருத்துவம்; mastoid process, (உள்.) பொட்டெலும்பின் கூம்பு முனைப்பு.

mas'turbate, *v.* செயற்கைத் தற்புணர்ச்சிப் பழக்கம் கையாளு.

masturba'tion, *n.* செயற்கைச் சிற்றின்பக் கையாடற் பழக்கம்.

mat[1], *n.* பாய்; கால் துடைக்கும் இரட்டு; *v.* பாயிடு, பாயிட்டு மூடு; மயிர் வகையில் சிக்குப்பிடிக்க வை; சடையாகு; (தொ.) matted hair, சடையாகிவிட்ட மயிர், சடை.

mat[2], *n.* சட்டமிடப்பட்ட படத்தின் ஒளியற்ற பொன்னிற விளிம்பு; வண்ண விளிம்புக்கரைக்கட்டு; வெள்ளை வரைக் கட்டு; துலக்கப்படாத பொன்னின் தோற்றம்; சரவையான தள வேலைப்பாடு; கரட்டுத்தளமிடும் அழுத்து கருவி; நிலையச்சு அழுத்துப்படிவம்; *a.* மங்கலான, ஒளியற்ற; *v.* மங்கலாக்கு; கண்ணாடி மேற்பரப்பினைச் சரவையாக்கு.

mat'ador, *n.* எருத்துப்போரில் எருதினைக் கொல்ல அமர்த்தப்படுபவர்; ஆட்டங்களில் முதன்மையான சீட்டு.

match[1], *n.* ஈடுசோடு; ஈடுசோடானவர்; ஈடுகொடுக்கத்தக்கவர்; பண்பில் இணையானவர்; நிகரானவர்; நிகரானது; திறமைப் போட்டிப்பந்தயம்; திருமண இணைவு; மண உறவின் இணை தகவுடையவர்; *v.* மண உறவால் சேர்த்து வை; ஈடு சோடாக்கு; ஈடிணையாயிரு; இணைத்து வை; போட்டியிட வை; நிகராயிரு; அளவொத்திரு; நிறம் ஒத்திசை; இயல்பு ஒத்தியலு; ஒத்திசைவுறு; ஈடிணை நாடிப்பெறு; (தொ.) make a match, திருமண உறவு ஏற்படுத்து.

match[2], *n.* தீக்குச்சி; பீரங்கி கொளுத்துவதற்கான எரிதிரி, எரிகுச்சு.

match'-board, *n.* ஒட்டிணை பலகை, ஒன்றுடன் ஒன்று பொருந்தும்படி குவடு குழிவுகளுடன்கூடிய பலகை வரிச்சல்.

match'-box, *n.* தீப்பெட்டி.

match'et, *n.* வெட்டுக்கத்தி, வெட்டு கருவியாகவும் வெட்டு படையாகவும் பயன்படுத்தப்படும் அகல் அலகுக்கத்தி.

match'less, *a.* ஈடில்லாத, இணையற்ற.

match'lock, *n.* பழங்காலத் துப்பாக்கி வகை.

match'maker, *n.* மண இணைப்பாளர், திருமணங்களை முடித்து வைப்பதில் ஈடுபட்டுழைப்பவர்.

match'-point, match'-points, *n.* கெலிப்பணிமை நிலை, ஆட்டத்தில் ஒருபக்கத்து வெற்றிக்கு ஒரு கெலிப்பெண்ணே வேண்டியிருக்கும் நிலை.

match'wood, *n.* தீக்குச்சிகள் செய்தற்குரிய கட்டை, எளிதில் தீப்பற்றும் செத்தை, சிராய், சிம்பு; (தொ.) make matchwood of, தீரநொறுக்கு.

mate[1], *n.* தொழிலாளர்களுக்கிடையில் தோழன், கூட்டாளி, உடன் வேலைசெய்பவர்; இணைதுணைகளில் ஒன்று; துணைவன் அல்லது துணைவி; (கப்.) வணிகக்கப்பலில் துணைத்தலைவர்; பணித்துணைவர்; *v.* மண உறவில் இணைத்து வை; மணஞ் செய்துகொள்; பறவை முதலியவற்றின் வகையில் இணைகூட்டு; கூடி இணைவுறு; தோழமை கொள், கூடிப்பழகு.

mate[2], *n.* சதுரங்கக்காய் அடைப்பு, திக்குமுக்காட்ட நிலை; *v.* திக்குமுக்காடவை; தடுத்து நிறுத்து; தோல்வியுறச் செய்; (தொ.) fool's mate, நகர்த்துவதனுலேயே சதுரங்கக்காய்களுக்கு ஏற்படும் தடைப்பட்ட நிலை.

ma'te[3], *n.* நறுங் குடிவகைக்குதவும் தேயிலைபோன்ற தென் அமெரிக்க புதர்ச்செடி வகை; புதர்ச்செடிவகை இலையின் வடிநீர் ஊறல்; வடிநீர் ஊறல் கலம்.

matelote, (பிர.) *n.* வெங்காயம் வதக்கியமீன் முதலியவற்றுடன் கலந்த தேறல் குழம்பு.

mater'ial, *n.* மூலப்பொருள்; மூலக்கூறு; வரலாற்றுப் பொருட்கூறு; சாதனம், மூலம்; கலைமூல முதல்; தனிப் பொருட்கூறு; ஆக்கப்பொருட் கூறு; பொருள் வகை, பொருள் திறம்; *a.* பருப்பொருள் சார்ந்த, உடல் சார்ந்த; வாதப்பொருளுக்குரிய; ஆன்மத்துறை சாராத; முக்கியமான, சாரமான; (தொ.) material theory of heat, வெப்பம் பருப்பொருண்மையுடையதென்னுங் கொள்கை; raw material, இயற்பொருள்மூலம், மூலப்பொருள்.

mater'ialism, *n.* இயற்பொருள் வாதம், உலோகாயதம்; கலைத்துறையில் பொருண்மைக் கூற்றையே வலியுறுத்தும் பாங்கு.

mate'rialist, *n.* உலோகாயதி.

mater'ialize, *v.* பருப்பொருளாகு; பிழம்புருவாக்கு; பிழம்புருவாகக்காட்டு; ஆவி வகையில் கண்ணுக்குப் புலப்படத் தோன்று; மெய்யாகு, உருப்படு, உருப்படியாகு; உலோகாயதப் பண்பூட்டு.

mate'rially, *adv.* அடிப்படையிலேயே, மூலப்பொருள் வகையிலேயே; முக்கியமான அளவிற்கு; உருப்படியாக, கணிசமான அளவில்; குறிப்பிடத்தக்க அளவில், பெருமளவில்.

mater'ia med'ica, (ல.) *n.* மருந்துச்சரக்குகள், மருந்துச் சரக்குகளின் தொகுப்பேடு, மருந்துச்சரக்காய்வுநூல்.

materiel, (பிர.) *n.* துறைக்கலங்கள், பணித்துறைத் துணைச் சாதனத் தொகுதி.

matern'al, *a.* தாய் சார்ந்த; தாய்க்குரிய; தாய்போன்ற; தாய்போன்ற பாசமுடைய; தாய்வழி உறவுடைய; (தொ.) maternal uncle, தாய்மாமன், அம்மான்.

matern'ity, *n.* தாய்மை; தாயின் இயல்பு; தாய்ச்சி நிலை, பிள்ளைப்பேற்று நிலை; (தொ.) maternity hospital, மகப்பேற்று மருத்துவமனை, பேறுகால மருத்துவச்சாலை; maternity nurse, பேறுகாலத்தாதி; maternity robe, கருக்கொண்ட மகளிர் அணிதற்குரிய நீள் அங்கி; maternity ward, மருத்துவமனையில் மகப்பேற்றுப்பிரிவு.

mat'ey, *a.* பழகுந்தன்மையுள்ள, பழக்கப்பட்ட.

mathemat'ical, *a.* கணக்கியல் சார்ந்த; கணக்குத் தவருத சரிநுட்பமான.

mathemat'ician, *n.* எண்ணர், கணக்கியலார்.

mathemat'ics, *n.* கணக்கியல்; (தொ.) applied mathematics, mixed mathematics, பயன்துறைக் கணக்கியல், வானியல் போன்ற பிறதுறை ஆராய்ச்சிகட்குப் பயன்படும் கணக்கியல்; pure mathematics, உயர் கணக்கியல், எண் இடம் பற்றிய பிறசார்பிலாத் தனிநிலைக் கணக்கியல்.

mati'co, (ஸ்பா.) பெருவிய (Peruvian) புதர்ச்செடி வகை; குருதிப் போக்கினை நிறுத்துகிற மருந்தாகப் பயன்படுத்தப்படும் பெருவிய புதர்ச்செடி வகையின் இலைகள்.

mat'in, *n.* (செய்.) பறவைகளின் வைகறைப்பாட்டு.

mat'inee, *n.* நாடகப் படத்துறைகளில் பிற்பகல் காட்சி; பிற்பகல் இசையரங்கு; (தொ.) the matinee hat, மேடைக் காட்சியை மறைக்கும் மாதர் தொப்பி; மேடைக் காட்சியை மறைக்காதபடி அமைக்கப்பட்டுள்ள மாதர் தொப்பி.

mat'ins, *n. pl.* காலை வழிபாடு, காலை வணக்கம்; (செய்.) பறவைகளின் புலரிப்பாட்டு.

mat'rass, *n.* வடிகலக் குவளை, முட்டை வடிவான நீள்கழுத்துடைய கண்ணாடி வாலைவடிகலம்.

mat'riarch, *n.* குலத்தலைவி.

mat'riarchy, *n.* தாய் குடும்பத்தலைவியாகவுள்ள சமுதாய அமைப்பு; தாய்வழியாட்சி முறை.

mat'ricide, *n.* தாய்க்கொலை; தாய்க்கொலை செய்பவர்.

matric'ulate, *n.* பல்கலைக்கழக நுழைவுரிமை பெற்றவர்; *v.* பல்கலைக்கழக நுழைவு பெறுவி; பல்கலைக்கழக நுழைவு பெறு.

matricula'tion, *n.* நுழைவுரிமை யளிப்பு; பல்கலைக்கழக உரிமைகள் பெறச்செய்தல்; பல்கலைக்கழக நுழைவுரிமைப் பேறு; பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வு.

matrimon'ial, *a.* திருமணஞ் சார்ந்த, திருமணத்துக்குரிய; திருமணமூலமாகக் கிடைத்த.

mat'rimony, *n.* திருமண வினை; திருமணமான நிலை; சீட்டாட்ட வகை; சீட்டாட்ட வகைகளில் துருப்பு அரசன்-அரசி இணைவு.

mat'rix, *n.* கருப்பை; உருவாகுமிடம், முதிர்விடம்; விலங்குருப்பில் உரு அமைவூட்டும் கூறு; மணிக்கற்களை உள்ளடக்கிய பாறைத்திரள்; உயிரணுக்களுக்கிடையே உள்ள பொருள்; அச்சுவார்ப்புரு; (உயி.) உயிர்ம இடையீட்டுப் பொருள்; *pl.* mat'rices.

mat'ron, *n.* வாழ்வரசி; மருந்தகச்செவிலி; விடுதிச் செவிலி.

matt, *n.* = mat².

matt'amore, *n.* அடிநிலக்கிடங்கு; கீழ்நில மனை.

matt'er, *n.* பருப்பொருள்; சடப்பொருள்; சீ; கசிபொருள்; செய்தி; காரியம், நிகழ்வு; பேச்சுக்குரிய செய்திமூலம்; எழுத்துமூலம்; கருத்துமூலம்; பொருண்மை, பொருட்கூறு; கருப்பொருள், சுருக்கம்; (அள.) வாசகக் கருத்துக்கூறு; *v.* குறிப்பிடத்தக்கதாயிரு; கவனத்துக்குரியதாயிரு; முக்கியத்துவமுடையதாயிரு; சீக்கசியவிடு. (தொ.) a matter of, ஏறத்தாழ; a matter of fact, (சட்.) மெய்ந்நிகழ்வு பற்றிய செய்தி; as a matter of fact, (சட்.) நிகழ்ச்சியை ஆராயுமிடத்து, நிகழ்ச்சிக்கூறு வகையில்; for that matter, அதைப்பற்றிய வரை; in the matter of, வகையில், தொடர்பாக; matter of course, இயல்பான நடைமுறை; no matter, என்பது முக்கியமன்று, கவலைப்படவேண்டுவதில்லை; what is the matter? என்ன நேர்ந்துவிட்டது?

matt'er-of-course', *a.* இயல்பான முறையில் எதிர்பார்க்கக்கூடியதான.

matt'er-of-fact', *a.* கற்பனையற்ற, நடைமுறை மெய்ம்மையான; கவர்ச்சிக்கூறற்ற.

matt'ery, *a.* சீழ்கொண்ட, சீழ்வடிகிற.

matt'ing, *n.* பாய்முடைவு; சிக்குறுகை, சடைப்பு; பாய் விரிப்பு, பாய் பரப்பீடு; பாய்முடைபொருள்; பொதிவு, கவிவு.

matt'ins, *n.* ஆங்கிலநாட்டுத் திருக்கோயிலின் காலை வழிபாடு.

matt'ock, *n.* மண்கொத்தி, மண்ணைக் கொந்துவதற்கான நீண்டகன்ற அலகுடைய கருவிவகை.

matt'oid, *n.* அறிவுக்கிறுக்கர், அறிவுமூடர்.

matt'ress, *n.* வன்றிண்டு, வைக்கோல்-மயிர்-நார் முதலியன உள்ளிட்டுத்திணித்த முரட்டுமெத்தை; (தொ.) spring mattress, சுருள்வில் அமைவுற்ற மெத்தை.

mat'urate, *v.* (மரு.) கொப்புளம் பழுப்புறு, சீக்கனிந்து முனைப்புறு; கொப்புளம் பழுக்கவை.

matura'tion, *n.* சீக்கட்டுப் பழுப்பு, கொப்புளம் பழுத்தல்; சீக்கட்டு பழுக்கவைத்தல்; பழம் பழுத்தல்; முதிர்கை, வளர்ச்சி.

mature', *a.* முதிர்ந்த; பழுத்த; கன்றிய; பருவமுற்ற, இயல்பாக முழு வளர்ச்சியுற்ற; முழு வளர்ச்சியடைந்த உடலுள் ஆற்றல்களையுடைய; பணமுறி வகையில் தவணை முற்றிய, கொடுக்கும் பருவமுற்ற; *v.* பழு; முதிர்; முழு வளர்ச்சியுறு; திட்டம் முதலியவை வகையில் நிறைவுபடுத்து; பணமுறி வகையில் தவணைமுற்று, பணமாக மாற்றும் பருவமெய்து; (தொ.) mature deliberation, ஆழ்ந்த ஆய்வு; mature plans, ஆழ்ந்த ஆய்வுக்குப் பிறகு வகுக்கப்பட்ட திட்டங்கள்; mature wisdom, முற்றறிவு.

matur'ity, *n.* நிறை முதிர்ச்சி; பருவ நிறைவு; குதிர்வு, பணமுறி தவணைமுதிர்வு.

matutin'al, *a.* காலைவேளைக்குரிய, காலைநேரத்தில் நிகழ்கிற; முந்திய, முற்பட்ட.

mat'y, *a.* = matey.

maud, *n.* ஸ்காத்லாந்து ஆட்டிடையரின் கோடிட்ட தவிட்டுநிறக் கம்பளச் சால்வை; பயணத்துக்கான தடித்த தவிட்டுநிறக் கம்பள விரிப்பு.

maud'lin, *n.* வெறிநேரப் பசப்புணர்ச்சி, அருவருப்பான வெற்றுச் சிணுங்கல்; *a.* களிமயக்குற்ற; பச்சைக்குழந்தைத்தனமான; வெறிநேரப் பசப்புச் சிணுங்கல் உடைய; அருவருப்பாக வெற்றுப் பசப்புணர்ச்சி காட்டுகிற.

maul, *n.* சம்மட்டிக்கட்டை; *v.* அடித்து நொறுக்கு; கவனமின்றி அல்லது நயமின்றிக் கையாளு; கண்டித்துப் பழுதுபடுத்து.

maul'stick, *n.* ஓவியம் வரைபவர்கள் இடதுகைத் தாங்கலாகப் பயன்படுத்தும் தோலுருளை அடியுடைய கோல்.

maund, *n.* மணங்கு, எட்டு வீசைகொண்ட நிறை.

maun'der, *v.* ஊன்றிய கருத்தின்றி இயங்கு; வேறு கவனத்துடன் செயலாற்று; பொருத்தமின்றி வேறு நினைப்பாகப் பேசு.

maun'dy, *n.* ரோமன் கத்தோலிக்க நாடுகளில் ஏழைகளின் கால்களைக் கழுவும் சடங்கு; இங்கிலாந்தில் ஏழைகட்கு அரசியல் அற முறையாளர் காசு வழங்குதல்; (தொ.) maundy money, ஈஸ்டர் விழாவுக்கு முந்திய வியாழனன்று அரசியலற முறையாளரால் ஏழைகளுக்கு வழங்கப்படும் பணம்; Maundy Thursday, ஈஸ்டர் விழாவிற்கு முந்திய வியாழக்கிழமை.

Mau'ser, *n.* படைத்துறைக் கைத்துப்பாக்கி வகை; சுழல் துப்பாக்கி வகை.

mausole'um, *n.* வீறுர்ந்த கல்லறை மாடம்.

mauvaise honte, (பிர.) *n.* போலி வெட்கம், துன்பந்தரும் துணிவின்மைநிலை.

mauvais quart d'heure, (பிர.) *n.* துன்பந்தரும் கொஞ்சநேர அனுபவம், துன்பந்தரும் சின்னேரச் சந்திப்பு.

mauvais sujet, (பிர.) *n.* கீழ்மகன், கயவன்; கருங்காலி.

mauve, *n.* ஒள்ளிய மெல் ஊதாநிறச் சாயவகை; *a.* ஒள்ளிய மெல் ஊதா நிறமான.

mav'erick, *n.* சூடடப்பெறாத ஓராட்டைக்கன்று; உரிய மேலாளற்றவர்; தான்தோன்றியாகத் திரிபவர்; ஒத்திசையாதவர்; களவில் பெறப்பட்ட பொருள்; *v.* வழி விலகிச் செல்; சட்ட உரிமையின்றிக் கைப்பற்று.

mav'is, *n.* (செய்.) பாடுங்குருவி வகை.

mavour'neen, *n.* அருமையானவர்; *int.* என் அருஞ் செல்வமே!

maw, *n.* கீழ்த்தர விலங்குகளின் இரைப்பை, அசைபோடும் விலங்குகளின் நான்காவது இரைப்பை.

mawk'ish, *a.* சற்றே அருவருப்புச் சுவைதட்டுகிற; சற்றே உணர்ச்சி பசப்புகிற.

maw'seed, *n.* கசகசாச் செடி விதை.

maw'worm, *n.* குடற்புழு.

maxill'a, *n.* தாடை, தாடை எலும்பு; உயிர் விலங்குகள் வகையில் மேல்தாடை; *pl.* maxill'ae.

max'im [1], *n.* விஞ்ஞானம் அல்லது அனுபவத்திலிருந்து பெறப்படும் பொது உண்மை; கோட்பாடு, ஒழுக்க விதி; முதுரை; சால்புரை, மேற்கொள்ளத்தக்க மெய்யுரை.

Max'im [2], *n.* நீர்ப்பொதிவால் வெப்புக்காப்பிட்ட ஒரே குழலுடைய இயந்திர விசைத் துப்பாக்கி வகை.

max'imalist, *n.* மிகுவரைக் கோரிக்கையாளர், தாம் கேட்பவைகளில் மிக்க அளவு கொடுக்கப்பட வேண்டுமென விட்டுக் கொடுக்காது உறுதியாக நிற்கும் கோரிக்கையாளர்.

max'imize, *v.* மிகுதியாக்கு; பெரிய அளவு பெருக்கு; கொள்கை முதலியவற்றை ஊக்கமாக விரிவுற விளக்கு.

max'imum, *n.* பெருமம், பெரிய அளவு; உச்சவரம்பு: *pl.* max'ima; *a.* எல்லாவற்றிலும் பெரிய, மிகப்பெரிய அளவான; இயன்ற வரையில் மிகப்பெரிய; உச்ச அளவான; (தொ.) maximum price, உச்ச அளவான உயர் விலை; maximum thermometer, குறிப்பிட்ட காலத்துக்குள் உச்ச வெப்பநிலை அடைவைப் பதிவுசெய்து காட்டும் வெப்பமானி.

max'imus, *a.* பாடசாலைகள் வகையில் பெயருடையவரில் தலை மூத்த.

May [1], *n.* ஆங்கில ஆண்டின் ஐந்தாவது மாதம்; இளமை; மலர்ச்சிப் பருவம்; (தொ.) May Day, மே மாதம் முதல் தேதி; Queen of May, Queen of the May, மே திருநாளன்று விளையாட்டரசியாகத் தெரிந்தெடுக்கப்படும் சிறுமி.

may [2], *n.* முட்செடி வகை; முட்செடி வகையின் மலர்.

may [3], *n.* (செய்.) கன்னிப்பெண்.

may [4], *v.* கூடும், கூடியது, ஒருவேளை நடைபெறலாம்; ஆகலாம், இசைவு உண்டு, இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

maya, (ச.) *n.* மாயை.

Ma'yan, *a.* நடு அமெரிக்காவில் வாழ்ந்த மாயர்களின் பண்டைய நாகரிகஞ் சார்ந்த.

may'be, *n.* ஆகக்கூடிய ஒன்று, நிகழக்கூடிய ஒன்று; *adv.* ஒருவேளை, ஒருக்கால்.

May'fair, *n.* லண்டன் நகரத்தின் செல்வவளமிக்க மேற்குப் பகுதி.

may'fly, *n.* விரைந்தழியும் பூச்சிவகை; ஈசல்.

may'hap, *adv.* ஒருவேளை.

may'hem, *n.* (வர.) தற்காப்பற்றவராக ஒருவரை முடமாக்குங் குற்றம்.

may'ing, *n.* மே திருநாள் கொண்டாடுதல்; முட்செடி வகையின் மலர் பறித்தல்.

mayonnaise', *n.* முட்டை-பாலேடு-புளிக்காடி முதலியன கலந்து பக்குவப்படுத்தப்பட்ட சுவைச்சத்து, சுவைச்சத்து சேர்த்த குளிர் கூட்டுணவு வகை.

ma'yor, *n.* மாநகர் முதல்வர், பெரு நகராண்மைக் கழகத் தலைவர்; (தொ.) Lord Mayor, லண்டன் யார்க் (York) டப்ளின் (Dublin) போன்ற மாநகர்களின் தலைவர்; mayor of the palace, (வர.) பெயரளவில் மன்னர் கீழிருந்து மன்னர் உரிமை முற்றிலும் பெற்றுருளுகிறவர்.

may'oral, *a.* மாநகர்த் தலைவருக்குரிய; மாநகர்த்தலைவர் பதவிசார்ந்த.

may'oralty, *n.* மாநகர்த் தலைவர் பதவி; மாநகர்த் தலைவரின் பதவிக்காலம்.

may'oress, *n.* மாநகர்த் தலைவரின் மனைவி; மாநகர்த் தலைவி; மாநகர்த் தலைவரின் வினைமுறைக் கடமைகளைச் செய்யும் மாது.

ma'y'pole, *n.* மே விழாக் கம்பம்; மே திருநாளன்று சுற்றி நடனமாடுவதற்காக வண்ணந்தீட்டி மலர்களால் ஒப்பனை செய்யப்படும் கம்பம்.

Mays, *n. pl.* கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் வகையில் மே மாதத்தில் நடக்கும் தேர்வு; மே வாரத்தில் நடக்கும் படகுப் பந்தயங்கள்

maz'ard, *n.* சிறிய கறுப்புப் பழவகை.

mazarine', *n.* திண் கருநீலம்; *a.* அடர்நீல நிறமான.

Maz'daism, *n.* தொல் பழங்காலப் பாரசீகரின் சமயநெறி, பார்சி சமயம்.

maze, *n.* புதிர்நெறி, ஏடாகோடமான வழி, சிக்கல் வலைப் பின்னற் போக்கு; குழப்பம்; *v.* குழப்பு, திகைப்பூட்டு.

maz'er, *n.* (வர.) வெள்ளிச்சட்டம் போடப்பட்டுள்ள கெட்டிக் கட்டையாலான பருகுகலம்.

mazurk'a, *n.* போலந்து நாட்டுச் சிறுதிற ஆடல் வகை; போலந்து நாட்டு ஆடலுக்கான இசையமைப்பு.

McCar'thyism, *n.* அமெரிக்காவில் பொது உடைமையரென ஐயுறப்பட்டவர்களைப் பணிகளிலிருந்து நீக்கிவிடும் செயல்முறைக் கோட்பாடு.

me, *pron.* என்னை; எனக்கு; நானே, என்னையே.

mead [1], *n.* கடுந்தேறல் வகை, தேன்-நீர்க் கலவை வெறியம்.

mead [2], *n.* (செய்.) பசும்புல்வெளி.

mead'ow, *n.* பசும்புல்நிலம்; நீர்வளமுள்ள தாழ்நிலம்; ஆற்று நீர்வளத் தாழ்நிலப்பகுதி; (தொ.) meadow pipit, சிட்டுக் குருவி வகை, சிறு பறவை வகை.

mead'ow-sweet, *n.* ரோசா இனமலர்ச் செடி வகை.

mea'gre, *n.* நடுநிலக் கடலக மீன் வகை; *a.* சதையற்ற; ஒல்லியான, மெல்லிய; ஏழ்மையான, எளிய; குறைவாயுள்ள, போதாத; சிலவான; அருகலான; வலுவற்ற; திட்பமற்ற; நிறைவற்ற, அரைகுறையான.

meal [1], *n.* மாவு, கூலமா; தூள்; தூளான பரப்பு; *v.* மாவாக்கு, மாவாக அரை, தூளாக்கு; மாவுமேலிட்டுத் தூவு; நிறைய மாச்சத்தளி.

meal [2], *n.* உணவு, சாப்பாடு; சிறப்பு ஊண; உண்ணும் பொருள்; ஒரே கறவையில் பசு கொடுக்கும் பாலின் அளவு; *v.* உணவு உண்ணு; (தொ.) make a meal of, உண்ணு, உணவாக உட்கொள்.

meal'ie, *n.* சோளக்கதிர்.

meal'ies, *n. pl.* தென்னுப்பிரிக்க மக்காச் சோள வகை.

meal'time, *n.* உணவு நேரம், வழக்கமாக உணவருந்தும் வேளை.

meal'y, *a.* மாவுக்குரிய; மாப்போன்ற; வேகவைத்த உருளைக் கிழங்கு வகையில் உலர் பொடியாக்கப்பட்ட; குதிரை வகையில் புள்ளிகளுள்ள; முகத்தோற்ற வகையில் வெளிறிய; (தொ.) mealy primrose, பொடி தூவப்பட்டது போன்ற தண்டும் ஊதா நிற மலர்களுமுள்ள செடிவகை.

meal'y-bug, *n.* கொடிமுந்திரியை அரிக்கும் வெண்பொடியுருவான பூச்சியினம்.

meal'y-mouthed, *a.* மழுப்பிப்பேசுகிற, மென்னயத்துடன் பசப்புகிற, தளுக்காக உரையாடுகிற.

mean [1], *n.* இடைநிலை; நிலைஅமைதி; (கண.) சராசரி, நிகர் அளவு; எண்களின் கூட்டுப்பெருக்க மூலம்; *a.* (கண.) இரண்டு எண்களுக்குச் சரிசமமான இடைநிலையிலுள்ள; இடையான; சராசரியான; (தொ.) in the mean time, in the mean while, இடைக்காலத்தில், இடைநேரத்தில், இடைவேளையில்; mean proportional, மூன்று எண்களுள் முன்னதுடனும் பின்னதுடனும் ஒரே கூறளவுடைய நடு எண்; mean sea level, சராசரிக் கடல்மட்டம்; mean sun, கதிரவன் இயக்க நிகர அளவில் வான் நடுக்கோட்டில் இயங்குவதாகப் புனையப்படும் கற்பனைக்கதிரவன்; the golden mean, the happy mean, நடுநிலை இன்னமைதி.

mean [2], *a.* கீழ்த்தரமான; இழிந்த; ஏழ்மைமிக்க; மதிப்பில் குறைந்த, மட்டமான; அற்பமான; குறைவான; இழிதோற்றமான; குறுகிய நோக்கமுள்ள; பெருந்தன்மையற்ற; கஞ்சத்தனமான; வாய்ப்பின்பமற்ற; பகையெண்ணங்கொண்ட; எளிதில் கோபங்கொள்கிற; (பே-வ.) வெட்கி ஒதுங்குகிற; (தொ.) he is no mean scholar, அவர் நல்லறிஞர்; mean white, (வர.) அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்பகுதியில் நிலமில்லாத வெள்ளையர்.

mean[2], *v.* கருது ; எண்ணங்கொள் ; உட்கோள் உடையராயிரு ; குறிக்கொண்டிரு ; மனத்துட்கொண்டிரு ; குறித்து வைத்திரு ; பொருள்கொள் ; பொருள்படு ; குறி, கருத்திற் சுட்டு ; குறித்துக் காட்டு ; (தொ.) mean well by, mean well to, அன்போடிரு ; நல்லெண்ணத்தோடிரு.

mean'der, *n.* வளைவு நெளிவான அணிவேலைப்பாடு; வளைவு, நெளிவு, சுற்றுவழி ; திகைப்பு ; *v.* வளைந்து நெளிந்து செல், சுற்றி அலைந்து திரி.

mean'ders, *n. pl.* ஆற்றின் வளைவு நெளிவுப்போக்கு; திருகு நெறி, வளை நெளிவுப்பாதை ; சுற்றுவழிப்பயணம் ; வளைவு நெளிவான அணி வேலைப்பாடு.

mean'drine, *a.* வளைந்து நெளிந்து செல்கிற ; மனித மூளை போன்ற தோற்றமுடைய ; பவள வகையில் வளைவு நெளிவுகள் நிரம்பிய.

mean'ing, *n.* பொருள், விளக்கம், கருத்து ; *a.* பொருள் தருகிற ; தனிக்கருத்துள்ள ; குறிப்பிடத்தக்க ; (தொ.) with meaning, தனிக்குறிப்புடன்.

mean'ness, *n.* கஞ்சத்தனம், கயமை.

means[1], *n.* வழிவகை, கருவி வகைதுறை ; துணைப்பொருள் ; (தொ.) by all means, by all manner of means, எல்லா வழியிலும் ; எப்படியாவது ; கட்டாயமாக, உறுதியாக, தவருமல் ; by means of, கருவியாகக்கொண்டு, துணைக்கொண்டு; by no means, by no manner of means, கிடையவே கிடையாது, இல்லவே இல்லை ; means test, உதவியளிக்குமுன் தேவை பற்றிய மெய்த்தேர்வு கோருதல்.

means[2], *n. pl.* செல்வ ஆதாரம், வருவாய் வகை ; செல்வம், பணவளம்.

mean'time, mean'while, *n.* இடைநேரம் ; *adv.* இடைநேரத்தில்.

mea'sles, *n. pl.* தட்டம்மை, புட்டாளம்மை ; அம்மைக் கொப்புளங்கள் ; பன்றியின் நோய்வகை.

meas'ly, *a.* தட்டம்மை நோய் சார்ந்த; தட்டம்மை நோயால் பிடிக்கப்பட்ட ; வெறுக்கத்தக்க, இழிவான.

mea'sure, *n.* அளவு ; அளவை, அளவு முறை; அளவெல்லை; அளவெண் ; பருமன் ; முகத்தலளவைக்கூறு, படியளவு ; நீர்ம அளவு கலம் ; அளவுக்கருவி ; அளவுப்பட்டை ; அளவு கோல் ; வரையளவு ; படிக்கூறு ; யாப்பமைதி, சந்தம் ; தாளம் ; நடவடிக்கை ; சட்டமன்றச் செயல்முறை ; (கண.) மடங்கெண் ; *v.* அள, அளவிடு ; அளந்தறுதி செய் ; பருமன் மதித்தறி ; நீள-அகல-உயரங்கள் கண்டுணர் ; மதித்துணர் ; மேலுங் கீழும் பார்த்துத் தர மதிப்பிட்டறி ; பாத்திடு, அளந்துவழங்கு ; குறித்து அளவு பிரித்தெடு ; அளவொப்பிடு ; போட்டியிடு ; கடந்துசெல் ; (தொ.) above measure, beyond measure, முடிவற்ற, எல்லையில்லாத ; மட்டுமீறிய அளவில் ; clothes made to measure, அளவின் படி தைக்கப்பட்ட ஆடை ; greatest common measure, (கண.) உச்சப் பொது மடங்கு ; in a measure, in some measure, ஓரளவு, அரைகுறையாக ; measure one's length, நெடுஞ்சாண்கிடையாக விழு, குப்புற விழு; measure swords, வாட்போரில் போட்டியிடு ; வல்லமைப் போட்டியில் முனை ; set measures to, கட்டுப்படுத்து, வரையறு, மட்டுப்படுத்து; short measure, குறை அளவு ; take person's measure, ஆடை தைப்பதற்கு அளவெடு ; குணம்-ஆற்றல் முதலியவற்றை மதிப்பிடு ; within measurable distance, அருகாமையில்.

mea'sured, *a.* அளவிடப்பட்ட ; கணக்கிடப்பட்ட ; சீர்தூக்கி மதிப்பிடப்பட்ட ; ஒழுங்குபட்ட ; சந்த வயப்பட்ட.

meas'urement, *n.* அளவு.

meat, *n.* இறைச்சி, புலாலுணவு, மீன் கோழி-நீங்கலான ஊனுணவு ; உணவு ; (தொ.) butchers' meat, இறைச்சி ; green meat, புல் ; காய்கறியுணவு.

meat'-offering, *n.* மாவும் எண்ணெயும் கூடிய தெய்விகப் படையல்.

meat'-safe, *n.* இறைச்சிப்பெட்டி.

meat'us, (ல.) *n.* நாடிக்குழாய், செல்குழாய் ; *pl.* meat'us, meat'uses ; (தொ.) auditory meatus, காதின் குழாய்.

meat'y, *a.* சதைப்பற்றுள்ள, கொழுத்த ; இறைச்சி சார்ந்த ; இறைச்சி போன்ற; பொருட்செறிவுள்ள, பொருள் நிறைவுள்ள.

Mecc'a, *n.* நபி நாயகத்தின் பிறப்பிடம் ; காணவிழையும் இடம் ; கொள்கைப் பிறப்பிடம்.

mecca'no, *n.* இயந்திர உறுப்புக்களின் நுட்பமாதிரித் தொகுதி.

mechan'ic, *n.* கம்மியர், கலைவினைஞர் ; பொறித்துறை வினைஞர்.

mechan'ical, *a.* இயந்திரத்துக்குரிய ; சிறு கைத்தொழில் சார்ந்த ; இயந்திர நுட்பம் சார்ந்த ; இயந்திரப்பொறியால் இயக்கப்படுகிற ; இயந்திரங்களால் ஆக்கப்படுகிற ; இயந்திரத்தின் தன்மையுடைய ; தானே இயங்குகிற ; இயல்நிலை இயக்கமுடைய ; உயிர்ப்புத்திறமற்ற ; அறிவுத்திறமற்ற ; தன் முதன்மையற்ற, தன் செயலற்ற ; மாருத ; கண்மூடி மரபான ; மரபுவழிப்பட்டியங்குகிற ; இயக்கஞ் சார்ந்த ; உள்நரப்பியக்கம் சார்ந்த ; இயக்கவியல் துறை சார்ந்த ; இயந்திர நுட்பத்திறமை வாய்ந்த; இயலியக்கவாதமுறையில் விளக்குகிற ; (தொ.) mechanical drawing, கவராயம் முதலியவற்றால் வரையப்பட்ட படம் ; mechanical transport, பொறிவண்டிப் போக்குவரத்து.

mechani'cian, *n.* இயந்திர அமைப்பு வல்லுநர்.

mechan'ics, *n.* இயக்கவியல், பிழம்பின்மீது இயக்கத் தாக்குதல் பற்றி ஆயும் ஆய்வியல்துறை.

mech'anism, *n.* இயந்திர நுட்பம் ; இயக்கும் ஒழுங்கமை வேற்பாடு; இயக்கும் செயலமைவுத்திட்டம்; நுண்ணொழுங்கமைவு ; இயந்திரமூலமான செயல்முறைமை ; பின்னணி இயக்க ஏற்பாடு ; இயந்திர நுணுக்கம் ; இயல் இயக்க வாதம்.

mech'anist, *n.* இயந்திர அமைப்பு வல்லுநர் ; இயந்திர ஆக்கத்தொழிலர் ; இயந்திர வல்லுநர் ; இயக்கவல்லுநர் ; (மெய்.) இயற்கை நிகழ்ச்சிகளெல்லாம் இயலியக்க ஆற்றல் சார்ந்தவை என்ற கோட்பாட்டாளர்.

mech'anize, *v.* இயந்திரமயமாக்கு ; இயந்திரக் கருவியாக மாற்று ; இயந்திர விசையூட்டு, இயந்திர ஆற்றலாலியக்கு ; இயந்திர ஆற்றல் மேற்கொள்ளுவி.

Mech'lin, Mechlin lace, *n.* பொன்னிழைக்கச்சை வகை.

mecon'ic acid, *n.* வெண்பளிங்கு போன்ற தோற்றமுடைய அபினிக்காடி.

med'al, *n.* சின்னப்பூ, பதக்கம், வீரர்-அறிஞர் பாராட்டுச் சிறப்புச்சின்னம் ; (தொ.) medal play, பந்தடிகளின் அடிப்படையில் கெலிப்பெண் கணிக்கப்படும் குழிப்பந்தாட்ட வகை; the reverse of the medal, ஆய்பொருளின் மறுபக்கவாதம்.

medall'ion, *n.* பெரிய பதக்கம் ; பட்டயத்தகடு ; பதக்க உருவப்படம்.

med'allist, *n.* பதக்கம் செதுக்குபவர் ; பதக்க உரு வரைபவர் ; பதக்கம் பெற்றவர்.

med'dle, *v.* தலையிடு, குறுக்கிடு, இடையிற் புகு.

med'ia, (ல.) *n.* நலிந்த தடையொலி, வல்லெழுத்தின் மெல்லொலி ; குருதிக்குழாயின் இடை மென்றோல் ; *pl.* med'iae.

mediaev'al, *a.* வரலாற்றின் இடைநிலைக்காலத்திய ; இடைநிலைக்காலப் பாணியைப் பார்த்துப் பின்பற்றிய.

med'ial, *a.* இடையிலுள்ள, மையத்திலுள்ள ; மட்டான பருமனுள்ள, நடுத்தரமான ; இடைநிலையான ; சொல்லிடை நிகழ்வான ; சராசரிக்குரிய.

med'ian, *n.* நடுக் குருதிக்குழாய், நடுநாடி, நடு நரம்பு ; பூச்சி இறகின் நடு நரம்புவரை ; நடுத்தர அளவு ; (வடி.) அடிமைவரை ; முக்கோணத்தில் கோணப்புள்ளியிலிருந்து எதிர் வரை மையமிணைக்கும் கோடு ; *a.* இடையிலுள்ள, மைய நிலையிலுள்ள ; நடுவூடான; மையநெடுவரையூடான; மைய நெடுவரையூடான தளத்திலுள்ள.

med'iant, *n.* (இசை.) சுரவரிசையின் மூன்றாவது ஒலி.

mediastin'um, *n.* உடற்கூற்றில் மென்தோலாலான இடைத் தடுக்கிதழ்; நுரையீரல் இடையிதழ்.

med'iate, *a.* இடைப்பட்ட, இடையீடான; பிறிதூழி இடையீடுடைய; இடையீடுமூலஞ் செயலாற்றுகிற; இடைப்பட்ட கருவியோடு தொடர்பு கொண்ட, இடையீடான சாதனத்தை உள்ளடக்கிய; *v.* இடைநின்றிணை; நடுவராயிருந்து இணக்குவி; தொடர்பு படுத்து; இடையீட்டாளராகச் செயலாற்று; நடுவராயிரு; இடைநின்று பரிந்துரை; இடைநிலையிடம் பெறு; வாயில் மூலஞ் செயலாற்று; வாயிலாயிருந்து காரிய மாற்றுவி, ஊடாயிருந்து விளைவி.

med'iatize, *v.* அரசு ஒட்டிணை, முன்னிருந்த அரசருக்குப் பட்டமும் சில ஆட்சி உரிமைகளும் அளித்து சிறு நாட்டை வேறு நாட்டோடு சேர்; இடைமுகவர்மூலம் செயலாற்றுவி; துணைநிலைப் பதவியிலிருந்து செயலாற்றுவி; தரங்குறையாமல் நேர் குடிவாரமாற்றிக் கீழ்வாரப்படுத்து.

med'iator, *n.* இடையீட்டாளர்; இயேசுநாதர்.

med'icable, *a.* குணப்படுத்தக்கூடிய, சரிப்படுத்தக்கூடிய, சிகிச்சைக்குரிய.

med'ical, *n.* (பே-வ.) மருத்துவ மாணவர்; *a.* மருத்துவக் கலை சார்ந்த; மருந்து சார்ந்த; மருந்தாட்சிக்குரிய; மருத்துவத் துறையில் அறுவைமுறை சாராத; (தொ.) medical jurisprudence, மருத்துவருக்குத் தேவையான சட்டப்படிப்பு; medical man, மருத்துவர்; அறுவை மருத்துவர்.

medic'ament, *n.* குணப்படுத்தும் மருந்து.

med'icaster, *n.* போலி மருத்துவர்.

med'icate, *v.* பண்டுவம் பார், மருந்து கொடு; மருந்துடன் கல; மருந்து சார்ந்த பொருளைக் கருவாகக் கல.

Medice'an, *a.* பிளாரான்ஸ் நகரை 15-ஆம் நூற்றாண்டில் ஆண்ட மெடிசி (Medici) குடும்பத்தைச் சேர்ந்த.

medi'cinal, *a.* மருந்து சார்ந்த; குணப்படுத்தும் பண்புகள் கொண்ட, குணப்படுத்துகிற.

med'icine, *n.* மருந்து; மருத்துவத்துறை, மருத்துவக்கலை; உட்கொள் மருந்து; நாகரிகமற்றவர்களிடையே வழங்கும் மந்திரம்-தாயத்து முதலிய போலி மருத்துவ நடைமுறை; *v.* மருந்துகொடு; மருந்தினால் குணப்படுத்து; (தொ.) medicine ball, உடற்பயிற்சிக்காக எறிந்து பிடிக்கும் செறிதோற்பந்து; take one's medicine, விரும்பாத செய்திக்கு உட்படு.

med'icine-man, *n.* நாகரிகமற்ற இனங்களின் மாய மந்திரவாதி.

med'ico, *n.* மருத்துவர்; *pl.* med'icos.

mediev'al, *a.* = mediaeval.

med'iocre, *a.* இடைப்பட்ட தரமான, நல்லதுங் கெட்டதும் அல்லாத, உயர்வற்ற, சாதாரண திறமையுடைய.

medioc'rity, *n.* சாதாரண திறமையர்; சாதாரண நிலை.

med'itate, *v.* ஆழ்ந்தாராய், உள்ளாராய், ஆழ்ந்துநினை; ஆழ்ந்த திட்டமிடு, சூழ்ச்சி செய்.

medita'tion, *n.* தியானம், எண்ண அலை.

Mediterran'ean[1], *n.* நடுநிலக்கடல்; *a.* நடுநிலக்கடல் சார்ந்த; (தொ.) Mediterranean Sea, நடுநிலக்கடல்.

mediterran'ean[2], *a.* நிலவகையில் கடற்கரையிலிருந்து தொலைவான; நீர்ப்பரப்பு வகையில் நிலத்தால் சூழப்பட்ட.

med'ium, *n.* நடுத்தரம், நடுநிலைப்பண்பு; இடைத்தர அளவு; இடையீட்டுப் பொருள்; ஊடு பொருள்; வழி; வாழ்க்கையின் சூழல்; செயற்கருவி, சாதனம்; வகைதுறை; பண்டமாற்று இடைப்பொருள்; நாணயம்; செலாவணி இடையீட்டுப் பொருள்; கலவை நீர்மக் கூறு; ஆவியுலக இடையீட்டாளர்; *pl.* med'ia, med'iums; *a.* நடுத்தரமான, இடைப்பட்ட; சராசரியான; (தொ.) medium wave, வானொலி வகையில் 100 மீட்டருக்கும் 800 மீட்டருக்கும் இடைப்பட்ட நீட்சியுடைய ஒலி அலை.

med'lar, *n.* சிறிய ஆப்பிள் இனப்பழவகை; ஆப்பிள் இன மர வகை.

med'ley, *n.* கதம்பம், கூட்டுக்கலவை; பலதிறப்பட்ட மக்கள் கும்பல்; இலக்கியத் துண்டுத் துணுக்குத் திரட்டு; *pl.* med'leys; *a.* கலவையான, கதம்பமான; பலவகைப்பட்ட; பலவகை நிறங்களுள்ள; *v.* கதம்பமாக்கு, குழப்பமாக்கு, ஒன்றாகக் கல.

Medoc', *n.* செந்நிற இன்தேறல் வகை.

medull'a, (ல.) *n.* மச்சை, எலும்பின் பித்து; தண்டெலும்பு உட்சோறு; உறுப்பு வகைகளின் உட்கூறு; குண்டிக்காய் உட்கரு; பாலூட்டிகளின் மயிர் உட்கூறு; மரவினப்பித்து; (தொ.) medulla oblongata, (ல.) மூளையின் பின்கூறு.

Medus'a[1], *n.* கிரேக்க புராணத்தில் பாம்புகளைத் தலைமயிராகக் கொண்ட பூத அணங்குகள் மூவருள் ஒருத்தி; *pl.* Medus'ae, Medus'as.

medus'a[2], *n.* (வில.) இழுதுமீன்.

meed, *n.* (செய்.) பரிசு; தகுதிக்கூறு; பாராட்டுதற்குரிய பண்புக்கூறு.

meek, *a.* அடக்கவொடுக்கமான, பணிவான, அமரிக்கையான, கீழ்ப்படிதலுள்ள, எதிர்ப்பற்ற தன்மையில் ஏற்றுக் கொள்கிற.

meer'kat, *n.* தென்னாப்பிரிக்க கீரியினச் சிறு விலங்குவகை.

meer'schaum, *n.* நீரியல் வெளிமக் கன்மகி, நீரியல் வெளிமக் கன்மகியாலான குமிழுடைய புகைகுடிக்கும் குழாய்.

meet[1], *n.* வேட்டைக்குழுச் சந்திப்பு; மிதிவண்டியாளர் இடந்தலைப்பாடு; பந்தயப் போட்டியாளர் கூட்டியல்வு; *v.* எதிர்ப்படு, சந்தி; போரில் எதிரெதிராகு; சென்றுகாண், சென்றெதிர்கொள்; வரவேற்பளி; அறிமுகமாகு; ஒன்றுபடு; ஒருங்குகூடு; இணைவுறு; ஒத்திசைவுறு, ஒத்தியலு; இசைந்து போ; நிறைவு செய்; தவணை நிறைவில் பண மாற்றிக்கொடு; வந்தெய்து; சென்றடை; கண்ணுறு, காண்; பொருந்து, சென்று மேவு; படு, தொடர்பு கொள்; புலனாகு; (தொ.) meet person half-way, நட்புக்கரத்தை ஆர்வமாக ஏற்றுக்கொள்; சற்று விட்டுக்கொடுத்து இணங்கு; meet person's eye, பார்வை சந்திக்கப்பெறு; meet the case, ஏற்புடைத்தாயிரு; அமைவுடையதாயிரு, பொருத்தமாயிரு; meet the ear, செவிப்படு; meet the eye, கட்புலப்படு; meet with, வரப்பெறு, எய்தப்பெறு; நேர்வுறு; அனுபவி; படு; எதிர்ப்படு; தற்செயலாகக் கண்ணுறு, எதிர்பாராமல் சந்தி.

meet[2], *a.* பொருத்தமான, உகந்த, தகுதி வாய்ந்த, சரியான.

meet'ing, *n.* கூடுதல்; கூட்டம்; சந்திப்பு; பொழுதுபோக்கு-களியாட்டம் முதலியவற்றின் குழுமம்; வழிபாட்டுக்கூட்டம்; திரண்டு கூடிய மக்கள்.

meet'ing-house, *n.* கிறித்தவ சமயப் பிரிவினரின் வழிபாட்டிடம்.

megacephal'ic, *a.* பெருந்தலையுடைய.

meg'alith, *n.* பாரக்கல்; பெரிய நினைவுச்சின்னக் கல்.

megalith'ic, *a.* பாரக்கல் சார்ந்த, பெருங்கல்லாலான; பெரிய நினைவுக்கல் வழக்காறுடைய.

megaloman'ia, *n.* தற்புகழ்ச்சிக் கிறுக்கு, தற்பெருமைக் கோளாறு; உயரவாப்பித்து.

megalosaur'us, *n.* மரபற்றுப்போன பாரிய ஊனுணிப் பல்லியுருவ விலங்கு.

meg'aphone, *n.* நெடுந்தொலை ஒலிபரப்பும் வாய் முரசம், ஒலிபெருக்கி; *v.* ஒலிபெருக்கி மூலம் அறிவி.

meg'apod, meg'apode, *n.* மணல்மேட்டிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவை வகை

meg'ascope, *n.* ஒளி விளக்கப்படக் கருவி வகை.

megascop'ic, *a.* இயல்பாகவே தெளிவாகத் தெரிகிற, எத்தகைய கண்ணாடியின் உதவியுமில்லாமல் பார்க்கக்கூடிய.

megass', megasse', *n.* கருப்பஞ் சக்கை.

megather'ium, *n.* மரபற்றுப்போன கரடி போன்ற தழை யுணிப் பெருவிலங்கு.

meg'aton, *n.* பத்திலக்கம் டன் எடை.

meg'awatt, *n.* 1000 'கிலோவாட்' மின்கூறு.

megg'er, *n.* மின் தடைகாப்பின் தடையாற்றல்மானி.

megilp', *n.* வண்ணந் தோய்க்கிற கலவை எண்ணெய்வகை, ஆளிவிதை எண்ணெய்-கற்பூரத் தைலக் கலவை.

meg'ohm, *n.* பத்து நூறாயிரம் மின் தடையாற்றல் அலகு.

meg'rim[1], *n.* ஒற்றைத் தலைவலி ; திடீரெண்ணம், விந்தைக் கருத்து, போலிப்புனைவு; ஆதாரமில்லாத நம்பிக்கை.

meg'rim[2], *n.* மழமழப்பான தட்டை மீன்வகை.

meg'rims, *n. pl.* எழுச்சியின்மை, மனச்சோர்வு நிலை, வெறி எண்ணம் அச்சந் தருகிற மனநோய் வகை; குதிரைக் கிறுகிறுப்பு நோய்.

meios'is, *n.* மென்னயச் சாட்டுக் குறிப்புரை, குறைத்துச் சொல்லி மிகை தெரிவிக்கும் நயவஞ்சக உரை; கருமுளை அணுக்களில் அணு இயக்க மாற்றக்கூறு.

meis'tersinger, (செர்.) *n.* செர்மன் உணர்ச்சிக் கவிஞர்-இசை வாணர் கூட்டுச் சங்க உறுப்பினர்; *n. pl.* 14-16-ஆம் நூற்றாண்டுகளில் கூட்டுச் சங்கங்களிற் சேர்ந்திருந்த செர்மன் உணர்ச்சிக் கவிஞர்கள்-இசைவாணர்கள்.

mekom'eter, *n.* தூக்கிச் செல்லவல்ல படைத்துறை வேட்டுத் தொலைமானி.

melanchol'ia, *n.* அழுங்கு நோய், வேண்டா அச்சங்களுக்கு ஆட்படுத்தும் மனச்சோர்வு நோய்.

melanchol'ic, *a.* மனச்சோர்வுடைய, மனச்சோர்வுக்கு ஆளாகக்கூடிய.

mel'ancholy, *n.* இயல்பான மனச்சோர்வு; துயரார்ந்த நிலை; *a.* சோர்வான, எழுச்சி குன்றிய, துயரார்ந்த.

melange, (பிர.) *n.* கலவை, கதம்பம்.

mel'anism, *n.* தோல்-மயிர் ஆகியவற்றில் மட்டுமீறிய கரு நிறமிகளால் ஏற்படும் மைக்கருமை.

melanoch'roi, *n. pl.* வெளிறிய மேனி நிறத்துடன் மெல்லமைவான கருமயிர் வாய்ந்த மனிதர்கள்.

melanos'is, *n.* கரும் புற்றுநோய் வகை, சதைப்பற்றுக்களில் கருநிறமிகளின் அளவுமீறிய படிவினுல் ஏற்படும் மிகுகருமைக் கோளாறு.

meld[1], *n.* சீட்டாட்டக் கெலிப்பெண் அறிவிப்பு; கெலிப் பெண் அறிவிக்கப்பட இருக்கும் சீட்டுத்தொகுதி; *v.* கெலிப் பெண் அறிவி.

meld[2], *v.* கலந்து ஒன்றுபடு.

melee, (பிர.) *n.* கைகலப்பு, அடிதடிச்சண்டை; எழுச்சிமிக்க சொற்போர்.

mel'ic, *a.* பாடும்படி அமைக்கப்பட்ட.

mel'inite, *n.* பிரஞ்சு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிப் பொருள் வகை.

mel'iorate, *v.* மேம்படச் செய், செம்மையாக்கு, திருத்து; முன்னேறு.

mel'iorism, *n.* மேலாக்கவியல் கோட்பாடு, மனித முயற்சியால் உலகினைச் சீர்திருத்தலாம் என்னும் கொள்கை.

mellif'erous, *a.* தேன் விளைவிக்கிற, தேன் துளிக்கிற; தேனுள்ள.

mellif'luous, *a.* தேன் போன்று இனிமையான, ஒழுகிசையான, இன்னிசையான.

mell'ow, *a.* கனிந்த, சாறு ததும்பிய, இனிய; தேறல் வகையில் முதிர்சுவையுடைய; மண்வகையில் உரமார்ந்த, வளமுள்ள; அனுபவத்திலும் வயதிலும் முதிர்வுற்ற; ஒளி-ஒலி-வண்ணம் ஆகியவற்றின் வகையில் தூய மென்னிறைவுடைய; மகிழ்ச்சி நலம் வாய்ந்த; சிறு வெறியுடைய; *v.* கனிவி; கனிவுறு, பக்குவமடைந்து மென்மையாகு.

melod'eon, *n.* துருத்தி மூலம் காற்றெழுப்பி இசைக்கும் இன்னிசைக் கருவி வகை.

melod'ic, *a.* பண்சார்ந்த, இசை சார்ந்த.

melod'ion, *n.* = melodeon.

melod'ious, *a.* பண்திறம் வாய்ந்த; இன்னிசை எழுப்புகிற; இன்னிசையோடு ஒலிக்கிற.

mel'odist, *n.* பாடுபவர், இன்னிசையாளர்; இன்னிசைப் பாடல்களை இயற்றுபவர், பண்ணிசை வல்லுநர்.

melod'ium, *n.* = melodeon.

mel'odize, *v.* பண்திறம் மிழற்று; இன்னிசை எழுப்பு.

melodra'ma, *n.* உணர்ச்சி முனைப்புடைய இன்ப முடிவு நாடகம்; பல்லியங்களின் பின்னணி இசையுடன் இணைந்த பாடல்கள் விரவப்பெற்ற நாடகம்.

mel'ody, *n.* பண்திறம், சுர ஒழுகிசை; இன்னிசை; இசையமைதியோடு அடுக்கப்பெற்ற சொற்கள்; பண்ணிசையின் தலைமைக்கூறு.

mel'on, *n.* முலாம்பழம்.

Melpom'ene, *n.* துன்பியல் நாடகத்துக்குரிய பெண் தெய்வம், கலைத்தெய்வங்கள் ஒன்பதினுள் ஒன்று.

melt, *n.* உருகிய உலோகம்; ஒரு சமயத்தில் உருக்கப்படும் உலோக அளவு; உருகுநிலை; *v.* உருக்கு; உருகு; மின்கம்பி வகையில் எரிந்துபோ; எரிந்துபோகச் செய்; கரை; கரைவுறு; கசிந்தோடு; உருத் தெளிவற்றதாகு; உருகிக் கல; படிப்படியாக மாறுதலுறு; கட்புலனிலிருந்து மறைவுறு; கலந்து மறைவுறு; மனமுருகு; கனிவுறு; இரங்கு; ஒலி வகையில் கனிந்தொழுகு; படிப்படியாகச் சென்று கலந்தொன்றுபடு; முகில் வகையில் மழையாகப் பொழி; (தொ.) melt away, உருகி மறைவுறு; melt down, உருக்கி உருவழித்துப் பிழம்பாக்கு; melt in the mouth, வாயிலிட்டவுடன் எளிதில் கரைவுறு; melt into tears, உருகிக் கண்ணீர் விடு, கனிந்து கண்ணீருகு.

melt'ing-pot, *n.* உருக்கு குகை; (தொ.) go into the melting-pot, புரட்சிகரமாக மாறுபடு.

mel'ton, *n.* ஆண்களின் ஆடைக்கான துணிவகை; (தொ.) Melton Mowbray pie, பணியார வகை.

mem'ber, *n.* உறுப்பு, உடற்பகுதி, கை கால்கள்; கூட்டமைப்பின் துணைப்பகுதி; சமுதாய உறுப்பினர்; அரசியல் அமைப்பின் கிளை; சொற்றொடரின் பகுதி அல்லது பிரிவு; எண்கள் தொகுதி; பிரிட்டிஷ் பேரரசு விருது வரிசையில் இடம் பெற்றவர்; மன்னுரிமை விக்டோரிய விருதளிப்பில் இடம் பெற்றவர்; (தொ.) unruly member, நாக்கு.

mem'bership, *n.* உறுப்பினர் நிலை; உறுப்பினர்களின் எண்ணிக்கை.

mem'brane, *n.* சவ்வு, மெல்லிய தோல்; நோய் வகைகளில் மேலடைக் கோளாறு; பழங்கால எழுதும் தாள் சுருள் பகுதி.

mem'brum viril'e, (ல.) *n.* ஆண்குறி.

memen'to, *n.* நினைவுக் குறிப்பு, மறவாதிருப்பதற்கான அடையாளம், நினைவு எச்சரிக்கை; ஆள் நினைப்பீட்டுக் குறிப்பு; நிகழ்ச்சி நினைவூட்டுக்குறி; *pl.* memen'toes, memen'tos.

memen'to mo'ri, (ல.) *n.* சாவு நினைவுக்குறிப்பு; மண்டையோடு போன்ற சாவு பற்றிய நினைவூட்டெச்சரிக்கைக் குறிப்பு.

mem'oirs, *n. pl.* வாழ்க்கை நிகழ்ச்சிக்கோவை; வரலாற்றுக் குறிப்புக்கள்; சிறப்பாய்வு வரலாறு; ஆராய்ச்சிப் பதிவுக் குறிப்புக்கள்; சங்க நடவடிக்கைக் குறிப்புக்கள்.

mem'orabil'ia, (ல.) *n. pl.* நினைவில் வைக்கத்தக்கவை, குறிப்பிடத்தக்க செய்திக்கோவை.

mem'orable, *a.* நினைவில் வைக்கத்தக்க, எளிதில் மறக்க முடியாத.

memoran'dum, *n.* நினைவுக்குறிப்பு; வருங்காலப் பயன் கருதிய நிகழ்ச்சிப் பதிவுக்குறிப்பு; (சட்.) ஒப்பந்த இனங்களின் குறிப்புத் தொகுதி; கையொப்பமிடாத பொதுநிலை அறிக்கை.

memor'ial, *n.* நினைவுச்சின்னம்; நினைவுக் கொண்டாட்ட வழக்கம்; செய்திக்கோவை, விண்ணப்பத்துக்குரிய செய்தித் தொகுதி; *a.* நினைவில் வைத்துக்கொள்ள உதவுகிற.

memor'ialize, *v.* நினைவுச்சின்னம் உண்டாக்கு; விண்ணப்பம் கொடு.

memor'ials, *n. pl.* பதிவேடுகள், முறைப்படிவமல்லாத அரசியற் பதிவுத் தாள்கள்; காலவரிசைப்பட்டி, வரலாற்று நிகழ்ச்சிக் கோவை.

memor'ia tech'nica, (ல.) *n.* நினைவிற்குத் துணை புரியும் அமைப்பு.

mem'orize, *v.* உருவிடு, நினைவில் வைத்துக்கொள்; எழுத்தில் பதிவு செய்.

mem'ory, *n.* நினைவுத் திறம்; நினைவாற்றல்; நினைவாற்றல் எல்லை; நினைவாற்றல் கால எல்லை; மீட்டு நினைவு, நினைவிற் கொணர்தல்; இசை எச்சம், புகழ்; (தொ.) accommodating memory, convenient memory, தனக்கு விருப்பமானதை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளும் இயல்பு; in memory of, நினைவுக் குறிப்பாக; நினைவில் வைத்திருக்கும்பொருட்டு.

mem'-sah'ib, *n.* திருமணமான ஐரோப்பிய மாது.

men, *n. pl.* மனிதர்; ஆடவர்; படைவீரர்.

men'ace, *n.* அச்சுறுத்தும் செய்தி; பேரச்சுறுத்து; *v.* அச்சுறுத்து.

menage, (பிர.) *n.* வீட்டாட்சி, இல்லச் செயலாண்மை.

mena'gerie, *n.* காட்டு விலங்கு காட்சிச்சாலை.

mend, *n.* சரிப்படுத்தப்பட்ட பொத்தல்; *v.* சீர்ப்படுத்து, சரிப்படுத்து; பழைய நிலைக்குக் கொண்டுவா; பழுதுபார், செப்பனிடு; செம்மைப்படுத்து; மேம்படுத்து, திருத்து, குற்றங்குறை நீக்கு; தேவையான அளவில் செதுக்கு; இழந்த நலத்தை மீட்டுப் பெறு; நிலைமை சீர்ப்படுத்து; நடைவேகத்தை அதிகப்படுத்து; (தொ.) mend fire, நெருப்பில் மேலும் எரிபொருள்களை இடு; mend or end, சீர்ப்படுத்து அல்லது சிதைவுபடுத்து, துணிந்து சீராக்குவதில் முனை.

menda'cious, *a.* பொய்யான, மெய்யல்லாத, ஏமாற்றுகிற.

Mendel'ian, *n.* ஜி.ஜே.மெண்டல் (G. J. Mendel) என்ற தாவர இயல் அறிஞரைப் பின்பற்றுபவர்; மெண்டலின் கோட்பாட்டாளர்; *a.* மெண்டல் என்ற தாவர இயல் அறிஞரைச் சார்ந்த.

Men'delism, *n.* ஜி.ஜே. மெண்டல் என்ற தாவரவியல் அறிஞரின் கோட்பாடு; மரபுப் பண்புகளை எண் கணிப்பு முறைக்குள்ளாக்கும் கோட்பாடு.

men'dicant, *n.* இரவலர், பிச்சைக்காரர்; *a.* இரக்கிற, பிச்சையெடுக்கிற.

menhad'en, *n.* உரத்துக்காகவும் சிறந்த எண்ணெய்க்காகவும் பயன்படும் மீன்வகை.

men'hir, *n.* (தொல்.) வரலாற்றுக்கு முற்பட்டகால நினைவுச் சின்னக் குத்துக்கல்.

men'ial, *n.* குற்றேவலன், வீட்டு வேலையாள்; *a.* ஊழிய வேலை சார்ந்த, குற்றேவல் செய்கிற; அடிமைப்பாங்கான.

menin'geal, *a.* தண்டு மூளைக் கவிகைச்சவ்வு சார்ந்த.

meningit'is, *n.* தண்டு மூளைக் கவிகைச் சவ்வழற்சி.

menin'gocele, *n.* தண்டுமூளைக் கவிகைச் சவ்வு வளர்ச்சி, மூளைப்புற்று.

men'inx, *n.* தண்டுமூளைக் கவிகைச்சவ்வு, மூளையையும் முதுகந்தண்டு நரம்பிணையும் சுற்றிச் சூழ்ந்திருக்கும் மூவகைச் சவ்வுகளில் ஒன்று; *pl.* menin'ges.

menis'cus, *n.* குழிகுவி வில்லைக்கண்ணடி; (கண.) பிறை போன்ற தோற்றமுடைய வரைவடிவம்; (இய.) கண்ணடிக் குழாய்களிலுள்ள நீர்மங்களின் குவிந்த மேற்பரப்புத் தோற்றம்; *pl.* menis'ci.

Menn'onite, *n.* சுவிட்சர்லாந்து நாட்டில் தோன்றிய மறுப்பியல் கிறித்தவப் பிரிவின் உறுப்பினர்.

menol'ogy, *n.* புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளைக் கொண்ட கிரேக்க திருக்கோயில் ஆண்டுக் குறிப்பேடு.

men'opause, *n.* இறுதி மாதவிடாய்.

men'orrha'gia, *n.* மட்டுமீறிய மாதவிடாய்ப்போக்கு.

men'orrhoe'a, *n.* மட்டான மாதவிடாய்ப்போக்கு.

mens con'scia rec'ti, (ல.) *n.* தெளிந்த உளச்சான்று.

men'ses, *n. pl.* மாதவிடாய், வீட்டுவிலக்கு, தீண்டல்.

Men'shevik, *n.* (வர.) மிதவாதக் கட்சி சார்ந்த ருசிய அரசியற் சமநெறியாளர்.

mens san'a in corp'ore sano, (ல.) *n.* நலமார் உடலில் நலமார் அறிவு.

men'strual, *a.* மாத விலக்குக்குரிய; (வான்.) மாதந்தோறும் நிகழ்கிற.

men'struate, *v.* மாதவிடாய் வெளியேறப்பெறு.

men'struous, *a.* மாதவிடாய் சார்ந்த.

men'struum, *n.* கரைப்பான், கரைக்கும் திறனுள்ள நீர்மம்.

men'surable, *a.* அளக்கத்தக்க, வரையறுக்கக் கூடிய, குறித்த எல்லையுடைய; (இசை.) வரையறைப்பட்ட சந்த முடைய.

men'sural, *a.* அளவு சார்ந்த.

mensura'tion, *n.* அளத்தல்; (கண.) உரு அளவைநூல், நீளம் பரப்பு கன அளவு முதலியவற்றை அளப்பதற்கான அளவை விதிகளின் தொகுதி.

men'tal[1], *n.* (பே-வ.) மன நோய்; மன நோயுடையவர்; *a.* மனஞ் சார்ந்த; மனத்தால் இயக்கப்படுகிற; (தொ.) mental arithmetic, மனக்கணக்கு; mental home, பைத்தியக்காரர் விடுதி, பித்தர் காப்பகம்; mental patient, மனநோயாளி, பைத்தியம் பிடித்து மருத்துவ மனையில் இருப்பவர்.

men'tal[2], *a.* மோவாய் சார்ந்த, தாடை சார்ந்த.

mental'ity, *n.* மனப்போக்கு, மனப்பாங்கு, மனப்பான்மை; அறிவாற்றல் படித்தரம்; உள்ளம், மனம்.

meta'tion, *n.* மனநிலை; உள இயக்கம்.

men'thol, *n.* பச்சைக் கற்பூரம்.

men'tion, *n.* குறிப்பீடு; குறிப்பு, பெயரீடு; *v.* குறிப்பிடு; பெயர் குறி, தெரிவி; (தொ.) honourable mention, பரிசின்றிச் சிறப்பு மதிப்புக்காக அளிக்கப்படும் நற்சான்று.

men'tor, *n.* அனுபவம் மிக்க நம்பிக்கையான அறிவுரையாளர்.

men'u, *n.* உணவு வகைப் பட்டியல்.

Mephistoph'eles, *n.* செர்மன் நாட்டுப் புராணக் கதைகளில் வரும் தீய ஆவி, சைத்தான்; கொடியவன்.

mephit'is, *n.* நச்சு வளி, மண்ணிலிருந்து வெளிப்படும் நச்சு ஆவி; கேடுதரும் நச்சு வாடை.

merc'antile, *a.* வாணிகஞ் சார்ந்த, வாணிகம் பற்றிய; பண அவாவுள்ள, பேரம் பேசுவதில் பெரு முனைப்புடைய; (தொ.) mercantile marine, வாணிகக் கப்பல் தொகுதி; mercantile theory, பணந்தான் செல்வம் எனும் கோட்பாடு.

mer'cenary, *n.* அயல் நாட்டிலிருந்து வந்து பணி செய்கிற கூலிப் படைவீரர்; *a.* கூலிக்காக வேலை செய்கிற; பணத்தை நாடிய.

mer'cer, *n.* அறுவை வணிகன், பட்டு முதலிய உயர்ந்த துணிவகை வணிகன்.

mer'cerize, *v.* நூல் துணி ஆகியவற்றுக்குப் பளபளப்பும் உறுதியும் கொடுப்பதற்காகக் கடுங்கார உப்பிட்டுப் பக்குவப்படுத்து.

merch'andise, *n.* வாணிகச்சரக்கு, விற்பனைப் பொருள்கள்.

merch'ant, *n.* பெருவணிகர், அயல்நாடுகளோடு மொத்த வாணிகம் செய்பவர்; (தொ.) merchant prince, வணிக இளங்கோ, பெருஞ்செல்வ வணிகர்; merchant ship, வாணிகச் சரக்குக்கப்பல்.

merch'antable, *a.* விற்கத்தக்க, விலைப்படத்தக்க, வாணிகத் திற்கேற்ற.

merch'antman, *n.* வாணிகக்கப்பல்.

mer'ciful, *a.* அருளிரக்கமுடைய, இரக்கங்காட்டுகிற; தயையுள்ள ; மன்னிக்குமியல்புடைய.

mer'ciless, *a.* இரக்கமற்ற; கொடிய, மன்னிக்குங் குணமற்ற.

mercur'ial[1], *n.* பாதரசம் கலந்த மருந்துச்சரக்கு ; *a.* பாதரசத்துக்குரிய; பாதரசம் போன்ற; பாதரசத்தினுல் விளைந்த; துடிப்புள்ள ; சுறுசுறுப்புள்ள ; சமயத்துக்கேற்ற உடனடிச் சொல்திறம்வாய்ந்த ; கூர்நுட்பமுடைய; நிலையற்ற, திடீர் மாறுபாடுடைய.

Mercur'ial[2], *a.* புதன் கோளினைச் சார்ந்த.

mercur'ic, *a.* (வேதி.) ஈரிணை திறப் பாதரசமடங்கிய.

merc'urous, *a.* (வேதி.) ஓரிணைதிறப் பாதரசமடங்கிய.

merc'ury[1], *n.* பாதரசம் ; (தொ.) mercury drug, பாதரச மருந்து.

Merc'ury[2], *n.* ரோமரின் புராண மரபில் சொல்திறம் கைத்திறமை திருடுமாற்றல் ஆகிய பண்புகளையுடையவரான வானவர் தூதுவத் தெய்வம் ; புதன்கோள்.

mer'cy, *n.* அருள், கருணை, தயவு; (தொ.) at the mercy of, முற்றிலும் தயவை எதிர்பார்த்த நிலையில், முழுதும் அடிமைப்பட்டு ; left to the tender mercies of, அருமை தெரியாத முரடர் கைப்பட்டு ; mercy ! mercy on us !, mercy upon us! தயவுகாட்டுங்கள் ! அந்தோ ! ஆகா !

mer'cy-seat, *n.* விவிலிய மரபில் திருவருள் உடன்படிக்கைப் பேழையின் தங்கக்கவசம் ; ஆண்டவன் அருட்பீடம்.

mere[1], *n.* ஏரி, குளம், குட்டை.

mere[2], *a.* வெறும், வேறு கலப்பற்ற; குறை எல்லையுட்பட்ட; (தொ.) mere right, (சட்.) உரிமையற்ற உரிமை.

meretri'cious, *a.* விலைமகளின் பாங்கான; அணிமணி வகையில் வெளிப்பகட்டான; இலக்கிய நடைவகையில் பகட்டான கவர்ச்சியுடைய.

mergan'ser, *n.* மீனுண்ணும் நீர்மூழ்கி வாத்து வகை.

merge, *v.* தற்பண்பிழந்து ஒன்றுபடு; தனிநிலைகெட்டுக் கலந்திணை, இரண்டறக் கல ; அடங்கி ஒன்றுரு ; பட்டம்-பதவி வகையில் இணைந்த கூறுயமைந்துவிடு; நிலப்பரப்பு வகையில் பெரும் பரப்பில் ஒன்றுபட்டிணை.

mer'ger, *n.* கலப்பிணைவு, ஒன்றுபடுநிலை.

merid'ian, *n.* வான்கோள மைவரை வட்டம், உச்சநீசங்களையும் வான்கோள துருவங்களையும் ஊடுருவிச் சென்றிணைக்கும் வான்கோள வட்டம் ; நிலவுலக மைவரை வட்டம் ; ஓரிடத்தினூடாகச் சென்று இருதுருவங்களையும் இணைக்கும் வட்டம் ; வான்கோளங்களின் உச்சநிலை ; உச்சநிலை, புகழுச்சி, சிறப்பு முகடு; நண்பகல்; நண்பகற் சிறுகுடி; நண்பகற் சிறுதுயில் ; *a.* நண்பகல் சார்ந்த ; மைவரை வட்டமீதான ; வான்முகடு சார்ந்த ; உச்சநிலைக்கோள் சார்ந்த ; உச்சநிலை சார்ந்த ; உச்ச நிறைவுக்குரிய; புகழுச்சிக்குரிய; உச்சவுயர்நிலைக்குரிய.

merid'ional, *n.* தென்பகுதியில் வாழ்பவர் ; பிரான்சு நாட்டின் தென்பகுதியில் வாழ்பவர் ; *a.* ஐரோப்பாவின் தென்பகுதியில் வாழ்கிற ; நடுநிரல் கோட்டைச் சார்ந்த ; வானுச்சம் சார்ந்த.

meringue', *n.* முட்டையின் வெண் கருவுடன் சர்க்கரை கலந்த தின்பண்ட வகை ; முட்டைவெண்கரு சர்க்கரை கலந்து சுட்ட மெல்லப்ப வகை.

meri'no, *n.* மிக நேர்த்தியான கம்பளி மயிரினையுடைய ஆடு வகை; மென்மையான கம்பள ஆடை, பருத்தியும் கம்பளியும் சேர்த்து நெய்த மென்றுகில்; மிகநேர்த்தியான கம்பளி நூல்; (தொ.) merino sheep, கம்பளி ஆடு வகை.

me'rit, *n.* தகுதி, மதிப்பு; நலன், சிறப்பு, நற்கூறு ; உள்ளார்ந்த நலம் ; *v.* தண்டனை அல்லது சிறப்புப் பெறுதற்குத் தகுதியாகு ; (தொ.) make a merit of, சிறப்பித்துக்காட்டு; சிறப்பாகக்கொள்.

meritor'ious, *a.* பரிசுத் தகையார்ந்த; புகழ்த்தகுதியுடைய, பாராட்டுத் திறனுடைய ; நன்றிக்குரிய.

me'rits, *n. pl.* நற்பண்புகள், குணநலன்கள் ; பரிசு-நன்றியறிவு முதலியவை பெறத்தகுதியாக்கிய பண்பு அல்லது பொருள் ; பரிசுக்குரிய திறன்கள் ; நன்றிபாராட்டுக்குரிய கூறுகள் ; (தொ.) judge on one's merits, இயல்பான சிறப்புக்களை மட்டும் நோக்கித் தீர்மானி ; the merits, (சட்.) உள்ளார்ந்த நலக்கேடுகள்.

merl'in, *n.* ஆடற்பருந்து வகை.

merl'on, *n.* இரண்டு அரண்புழைச் சாய்வுகளுக்கிடையேயுள்ள கைப்பிடிச் சுவரின் பகுதி.

merm'aid, *n.* கடற்கன்னி,பழம்புராண மரபுகளில் அரைக்கு மேல் பெண்ணுருவும் அரைக்குக் கீழ் மீன் வாலாகவும் அமைந்த அரைமனித உரு.

me'roblast, *n.* அரைகுறை உயிர்மப்பிளவுடைய கருவணு.

merohed'ral, *a.* படிக வகைகளில் அரைகுறை இயல்முகப்புக்களையுடைய.

Merovin'gian, *n.* பண்டைய பிரான்சு செர்மனிப் பரப்பாண்ட குடிவழியின் அரசர் ; *a.* பண்டைய பிரான்சு செர்மனியாண்ட குடி வழிக்குரிய.

me'rriment, *n.* மகிழ்வாரவாரம், களியாட்டம்.

me'rry[1], *n.* கருப்புப் பழவகை.

me'rry[2], *a.* களிமகிழ்வார்ந்த, களிகிளர்ச்சியுடைய ; சிறு வெறியுடைய; (தொ.) make merry, களிகொள், களியாட்டு மகிழ், களியாட்டயர் ; make merry over, கேலிசெய், கிண்டல்செய் ; merry andrew, விகடன், கோமாளி, வாய்வீச்சுக் காரனின் துணைவன் ; the merry monarch, (வர.) இரண்டாம் சார்லஸ் அரசன்.

me'rry-go-round, *n.* குடை இராட்டினம்.

me'rry-making, *n.* விழாவயர்வு, மகிழ்ச்சிக்கொண்டாட்டம், மகிழ்ச்சிப் பொழுதுபோக்கு.

me'rrythought, *n.* பறவையின் மார்புக்கும் கழுத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள கவை எலும்பு.

me'sa, *n.* செங்குத்தான பக்கங்களையுடைய மேட்டுப் பாங்கான நிலம்.

mesalliance, (பிர.) *n.* கீழ்த்தரமான தொடர்பு, சமுதாயத்தில் கீழ்நிலையிலுள்ளவரோடு செய்துகொள்ளும் திருமணம்.

meseems', *v.* (செய்.) எனக்குத் தோற்றுகிறது.

mesembrian'themum, mesembryan'themum, *n.* பொன்வண்ண மலர்ச்செடி வகை.

mes'entery, *n.* குடல்தாங்கி, குடற்குழாயில் ஒரு பகுதியை அகட்டின் புறத்துடனிணைக்கும் இருமடி ஊநீர்ச்சவ்வு.

mesh, *n.* வலையின் கண்ணி, வலைக்கண்; *v.* வலையிட்டுப்பிடி; பற்சக்கர வகையில் கொளுவியிணை.

mesh'es, *n. pl.* பின்னல்வலை, வலை; பொறி; (உட.) வலைப் பின்னல் அமைப்பு.

mes'ial, *a.* உடலின் மையப்பகுதியிலுள்ள, மையப்பகுதி சார்ந்த ; மையப்பகுதியை நோக்கியுள்ள.

mes'merism, *n.* உள ஆற்றல் வசியம்.

mesne, *a.* இடைப்பகுதியான, நடுவான, மையமாகவுள்ள ; (தொ.) mesne lord, மேலாளரையுடைய மேலாளர் ; mesne process, வழக்கின் தொடக்க இறுதிகளுக்கிடைப்பட்ட நடைமுறை ; mesne profits, பண்ணையிலிருந்து தவறுன குடியாளால் தேதிகளிடையிட்டுப் பெறப்பட்ட பணம்.

mesogas'ter, *n.* வயிற்றின் பின்புறப்பகுதியோடு இரைப்பையை இணைக்கும் மென்சவ்வு.

mes'olithic, *a.* இடைக்கற்காலஞ் சார்ந்த, பழங்கற்காலத்திற்கும் புதுக்கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலஞ் சார்ந்த.

mes'on, *n.* (இய.) நேர்மின்னணுவுக்கும் எதிர்மின்னணுவுக்கும் இடைப்பட்ட எடைமானமுடைய மூலமின்னணு.

mes'ophyll, *n.* இலையின் உள்ளிழைமம்.

mes'otron, *n.* அணுவினுள் மின்னணுவைவிட இருநூறு மடங்கு எடைமானமுடைய அணுத்துகட் கூறு.

mesozo'ic, *a.* (மண்.) இடையுயிருழிக்குரிய, மீன்-நில-நீருயிர்கள் பெருகிய ஊழிக்கும் பாலூட்டிகள் பெருகிய ஊழிக்கும் இடைப்பட்ட ஊர்வன பெருகிய மண்ணியலூழிக்குரிய.

mes'quit, mes'quite, *n.* வட அமெரிக்க பயற்றின மரவகை.

mes'quite-grass, mes'quit-grass, *n.* வட அமெரிக்க பயற்றின மரத்தின் அருகே வளரும் புல்வகை.

mess, *n.* உண்டி; நீராள உணவு, கூழுணவு; வேட்டை நாய்களுக்கான உணவுக்காடி; கலவைக்குடிநீர்; அழுக்கடைசல், அருவருப்பான கழிகடை; குப்பைகூளம், கதம்பம்; ஏறுமாறு, குழப்பம்; குளறுபடி, சீர்குலைவு; திகைப்பு; கடன்கழிப்புப் பணி; உணவுப்பந்தி, ஒருங்குடனிருந்துண்ணுவோர் தொகுதி; பந்தி உணவு; கப்பலோட்டிகளின் குழுப் பிரிவு; *v.* அழுக்கடைசலாக்கு; குளறுபடி செய்; கடன் கழிப்பு வேலை செய்; உணவு கொள்; (தொ.) make a mess of, குழப்பு, குளறுபடி செய்; mess of pottage, உயர்பண்பு துறந்து பெறப்படும் பொது இன்பநிலை வாய்ப்பு.

mess'age, *n.* தூது; தூதுக்குறிப்பு; தூதுரை; சிறுபணித் துறை அலுவல்; செய்தி, தகவல்; பணிமுறை அறிவிப்பு; அறிவுரைக்கூறு; *v.* தூது அனுப்பு; செய்தி அடையாளமனுப்பு.

mess'enger, *n.* தூதர், தூதறிவிப்பாளர்; தகவலாளர்; முன்னோடி அறிவிப்பவர்; முன்னோடி அறிவிப்பது; புயல்வரவினை அறிவிக்கும் விரைமுகிற் கீற்று; பறக்கும் காற்றாடியை நோக்கிக் காற்றாடிக்கயிறு மூலம் அனுப்பப்படும் தாள் துண்டு; தந்திவடத்தை மேலிழுப்பதற்கான முடிவில்லாச் சுழல் கயிறு; பறவை வகை.

Messi'ah, *n.* யூதர்களுக்கு இறைவனால் வாக்களிக்கப்பட்ட மீட்பாளர்; இயேசுநாதர்; அடிமைப்பட்ட நாட்டின் மீட்பாளர்; அல்லற்பட்ட மக்களை விடுவிப்பவர்.

Messian'ic, *a.* மீட்பாளர் சார்ந்த; மீட்பாளர் அவா ஆர்வத்தால் தூண்டப்பட்ட; மீட்பாளரிடம் நம்பிக்கையினால் இயக்கப்பட்ட.

mess'mate, *n.* உணவுபந்தித் தோழர், ஒன்றாக உடனமர்ந்து உண்ணுபவர்.

mess'uage, *n.* (சட்.) சூழ்நிலமனைகளின் வழங்குரிமையுடைய குடியிருப்பு வீடு.

mesti'zo, *n.* ஸ்பானிய அல்லது போர்ச்சுக்கீசிய வழக்கில் கலப்பினப் பிறவியான குழந்தை; *pl.* mesti'zos.

met, *v.* meet என்பதன் இறந்தகால முடிவெச்சம்.

metabol'ic, *a.* ஊன்ம ஆக்கச்சிதைவு மாறுபாடு சார்ந்த; உயிர்ப்பொருள் மாறுபாட்டுக்குரிய; உயிர்ப்பொருள் மாறுபாடு தோற்றுவிக்கிற.

metab'olism, *n.* ஊன்ம ஆக்கச்சிதைவு மாறுபாடு, உயிர்களின் உடலினுள்ளாக இயற்பொருளான உணவுச்சத்து உயிர்ச்சத்தாகவும் உயிர்ச் சத்துமீட்டும் இயற்பொருளாகவும் மாறுபடும் உயிர்ப்பொருள் மாறுபாடு; (தொ.) constructive metabolism, ஊன்ம ஆக்க மாறுபாடு; destructive metabolism, ஊன்மச்சிதைவு மாறுபாடு.

metab'olize, *v.* உயிரியல் மாறுபாடு உண்டுபண்ணு.

metacarp'us, *n.* மணிக்கட்டுக்கும் விரல்களுக்கும் இடைப்பட்ட உள்ளங்கைப் பகுதி; உள்ளங்கை எலும்பு; விலங்கின் கணுக்காலுக்கும் கால்விரலுக்கும் இடைப்பட்ட பகுதி; உள்ளங்கால் எலும்புப்பகுதி.

met'age, *n.* நிலக்கரி-கூல முதலியவற்றிற்குரிய பணித்துறை எடையளவு; எடையளவுக்குரிய தீர்வை அளவு.

metagen'esis, *n.* ஒற்றைமாற்றுத் தலைமுறை, பால் சார்ந்த இனப்பெருக்கத்துடன் பால்சாரா இனப்பெருக்கம் தலைமுறை தோறும் மாறி வருதல்.

metagenet'ic, *a.* ஒற்றைமாற்றுத் தலைமுறையான.

met'al, *n.* உலோகம்; உலோகம்போன்ற வேதியியல் பண்புடைய பொருள்; கீழ்த்தர உலோகக் கலவைக்கூறு; போர்க்கப்பல் பீரங்கி; படைத்துறைக் கவசக் கலன்; இயங்கு கோட்டை; உருகிய நிலையில் கண்ணாடி செய்வதற்குரிய பொருள்; இயற்பாறை; பாதைபோடுவதற்குரிய சரளைக் கல்; இருப்பூர்திப்பாதை போடுவதற்குரிய சரளை; உள்ளார்ந்த பண்பு; உள்ளுரம்; *a.* உலோகத்தாலான; *v.* உலோக மூட்டு; உலோகத்தினால் கவிந்து பொதி; பாதைக்குச் சரளையிடு.

metall'ic, *a.* உலோகம் சார்ந்த; உலோக வகைக்குரிய; உலோகப்பண்பு வாய்ந்த; (தொ.) metallic currency, பொன்-வெள்ளி-செம்பு முதலிய உலோக நாணயங்களாலான செலாவணி.

met'allize, *v.* உலோகம் போன்றதாக்கு; தொய்வகத்தைக் கந்தகம் கலந்து திண்ணிதாக்கு.

metallog'raphy, *n.* உலோக உள்ளமைப்பியல் ஆய்வுத் துறை.

met'alloid, *n.* உலோகப்போலி, ஒருசார் உலோகப்பண்புகளும் ஒருசார் உலோகச்சார்பற்ற பொருள்களின் பண்புகளும் உடைய பொருள்கள்; *a.* உலோகத்தின் தோற்ற வடிவமுடைய.

metallur'gic, metallur'gical, *a.* உலோகத் தொழிற்கலை இயலுக்குரிய.

met'allurgist, *n.* உலோகத்தொழிற் கலையியலாளர்.

met'allurgy, *n.* உலோகத்தொழில், உலோகம் எடுத்துருவாக்கும் தொழில்; உலோகத்தொழிற் கலையியல்.

met'als, *n. pl.* இருப்பூர்திக்குரிய தண்டவாளங்கள்.

met'amere, *n.* ஒருசீராயமைந்த உடலின் கூறு.

metame'ric, *a.* ஒருசீராயமைந்த உடற் கூறுகள் சார்ந்த; (வேதி.) ஆக்க எடை இயல்புகள் ஒத்து வேதியியற் பண்புகளில் மட்டும் மாறுபாடுடைய.

metam'erism, *n.* (வில.) ஒருசீராயமைந்த உடற் கூறுபாடு; (வேதி.) ஆக்க எடை மாறுபாடின்றி மைய அணுவைச்சுற்றி வேறுபட்ட ஒழுங்கமைவு.

metamorph'ic, *a.* உருமாருட்டஞ் சார்ந்த; உருத்திரிபுடன் கூடிய; (மண்.) இயன் மாறுபாடு அடைந்த.

metamorph'ose, *v.* உருமாற்று; உருமாருட்டம் உண்டு பண்ணு; உருத்திரிபுறு.

metamorph'osis, *n.* உருமாற்றம்; மாய உருத்திரிபு; மாறிய வடிவம்; இயன் மாறுபாடு; பண்பு மாறுபாடு; *pl.* metamorph'oses.

met'aphor, *n.* உருவக வழக்கு, நேர் சொற்பொருளாகாத பெயர் அல்லது பண்புசுட்டிய வழக்கு; உருவகம்; (தொ.) mixed metaphor, இயைபில் உருவகக் கோப்பு.

metaphor'ic, metaphor'ical, *a.* உருவகஞ் சார்ந்த; உருவகமான; உருவக வடிவான.

met'aphrase, *n.* சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு; *v.* வேறு சொற்களால் மாற்று.

metaphras'tic, *a.* சொல்லுக்குச் சொற் பெயர்ப்பான.

metaphys'ical, *a.* நுண்பொருள் ஆய்வுக் கோட்பாட்டியல் சார்ந்த, பொருண்மை சாராப் பொதுநிலைப் பண்பியல் வாதத்துக்குரிய; நொய்ம்மை நுணுக்கமான; பொருண்மை சாராத; இயல் கடந்த; கனு நிலையார்ந்த.

metaphys'ics, *n. pl.* இயல்கடந்த ஆராய்வு, நுண்பொருள் கோட்பாட்டியல்; உளவாகும்நிலை உணர்நிலை பற்றிய கோட்பாட்டியல் விளக்கமுறை; உளம் பற்றிய மெய்விளக்க இயல்; வறட்டுக் கோட்பாடு; நொய்ம்மை நுணுக்கவுரை; கடுஞ்சிக்கல் வாதம்.

met'aplasm, *n.* (உயி.) உயிர்ச் சத்தல்லாத உயிர்மக்கூறு, ஊன்மத்தில் மாறுபாடு ஊக்கும் உயிர்மக்கூறு.

metapol'itics, *n. pl.* உறுநுணுக்க அரசியல், செயல்முறையினின்று நெடுந்தொலை விலகிய கோட்பாட்டரசியல்.

metapsych'ics, *n. pl.* இயல்கடந்த உளநிலை ஆராய்ச்சி.

metas'tasis, *n.* உறுப்புக்களில் பண்புவகை இடமாற்றம்; நோய்வகையில் உறுப்புக்களிடையே இடமாறுபாடு; நிலை மாற்றம்; உருமாற்றம்; பாறைகளில் பண்புமாறு உரு மாற்றம்; *pl.* metas'tases.

metastat'ic, *a.* இடமாறிய; இடமாற்றஞ் சார்ந்த.

metatars'us, *n.* கணுக்காலுக்கும் கால்விரல்களுக்கும் இடைப்பட்ட ஐந்து நீண்ட விரல்களின் தொகுதி.

metath'esis, *n.* எழுத்திடப்பெயர்ப்பு; ஒலியிடப் பெயர்ப்பு; (வேதி.) இரண்டு அணுத்திரள்களிடையே அணுமாற்றம்; *pl.* metath'eses.

metayage, (பிர.) *n.* பாட்டம், நிலக்கிழார் உழவரிடை வாரம் பிரித்துக்கொள்ளும் முறை.

metayer, (பிர.) *n.* பாட்டக்காரர், வாரம் பிரித்துக்கொள்ளும் முறையில் விளைநிலம் பெறுவர்.

mete[1], *n.* எல்லை; எல்லைக்கல்; (தொ.) metes and bounds, (சட்.) எல்லை வரையறைக் கூறுகள்.

mete[2], *v.* (செய்.) அள; அளந்து பங்கிடு, பாத்திடு; வகுத்தளி; தண்டனை வகையில் தேர்ந்து வழங்கு; பரிசு வகையில் கொடு.

metempi'ric, *n.* அனுபவ எல்லை கடந்தவை பற்றிய கோட்பாட்டுத்துறை; அனுபவங்கடந்த கோட்பாட்டுத் துறையில் நம்பிக்கை உடையவர்.

metempi'rics, *n.* அனுபவ எல்லை கடந்தவை பற்றிய கோட்பாட்டுத்துறை.

metempsychos'is, *n.* பிறப்பிறப்புக் கோட்பாடு, உயிரின் கூடுவிட்டுக் கூடு பாய்தல்பற்றிய கொள்கை; *pl.* metempsychos'es.

met'eor, *n.* உற்கை, விண்வீழ் கொள்ளி; எரிமீன், அண்டப்புற வெளியிலிருந்து விண்வெளியில் மோதியதனுல் ஒளிகாலும் பிழம்பு; விண்வெளி நிகழ்ச்சி.

meteo'ric, *a.* விண்வெளிக்குரிய; காற்றுமண்டலச் சூழ்நிலைகள் சார்ந்த; விண்வீழ் கொள்ளிக்குரிய; பேரொளி காலுகின்ற; திடீர் வரவான; மின்னல் தோற்றமான; விரைவேகமான.

met'eorite, *n.* விண்வீழ் கல்.

met'eorograph, *n.* வானிலைப் பதிவுமானி, வானிலைக் கூறுகள் பலவற்றின் அளவைப் பதிவித்துக்காட்டும் அமைவு.

met'eoroid, *n.* அண்டவெளி கடவாத உற்கை, விண்வெளி அணுகாததனுல் கூராய்வொளி பெருத எரிமீன் ஒத்த பிழம்பு.

met'eorolite, *n.* = meteorite.

meteorolo'gic, meteorolo'gical, *a.* வானிலையாராய்ச்சிக்குரிய; வானிலை நிகழ்வியக்கங்களுக்குரிய.

meteorol'ogist, *n.* வானிலை ஆராய்ச்சியாளர்.

meteorol'ogy, *n.* வானிலையாய்வு நூல், வருங்குறி அறிவிக்கும் நோக்குடைய வானிலை நிகழ்வியக்க ஆராய்ச்சித்துறை.

met'er, *n.* அளப்பவர்; அளப்பது; அளவு கருவி.

meth'ane, *n.* (வேதி.) சதுப்புநில வளி, நிறமணங்களில்லாத வெடிநீரகக் கரிய வளி.

metheg'lin, *n.* மணமூட்டப்பட்ட தேனீர்த்தேறல்.

methinks', *v.* எனக்குத் தோற்றுகிறது, நான் எண்ணுகிறேன்.

meth'od, *n.* முறைமை; ஒழுங்கு; கருத்தமைவு; நிகழ்முறை; ஒழுங்குபட்ட வழக்கங்கள்.

method'ic, method'ical, *a.* முறையான; ஒழுங்கான; முறைப்பட்ட; ஒழுங்குபடுத்தப்பட்ட.

Meth'odism, *n.* கிறித்தவத் திருமறை பரப்பும் கிளைச்சமயத்தவரின் கொள்கை நடைமுறைக் கோட்பாட்டுத் தொகுதி.

meth'odist[1], *n.* ஒழுங்குமுறை பின்பற்றுபவர்; உயிர்நூல் துறையில் தொகை வகைமுறை கையாள்பவர்; கண்டிப்பான சமயக் கோட்பாடுடையவர்.

Meth'odist[2], *n.* சார்ல்ஸ் வெஸ்லி (Charles Wesley) ஜான் வெஸ்லி (John Wesley) ஜார்ஜ் ஒயிட்பீல்டு (George Whitefield) முதலியோரால் தொடங்கப்பட்டு இணைந்த கிறித்தவத் திருமறை பரப்புக்குழுவின் உறுப்பினர்.

Methodist'ic, Methodist'ical, *a.* கிறித்தவத் திருமறை பரப்பும் கிளைச்சமயக் குழுவினரைப் போன்ற.

meth'odize, *v.* ஒழுங்குமுறைக்கு உட்படுத்து, தொகை வகைப்படுத்தி ஒழுங்குசெய்.

methodol'ogy, *n.* ஆராய்ச்சிமுறை நூல்.

methought', *v.* methinks என்பதன் இறந்தகாலம்.

Methus'elah, *n.* விவிலிய வரலாற்று வரன்முறைப்படி நோவா (Noah) காலத்துக்கு முன்பு 969 ஆண்டு வாழ்ந்திருந்ததாகக் கருதப்படும் குல முதல்வர்; பல்லாண்டு வாழ்நர்.

meth'yl, *n.* மரத்தேறல் சத்து, மரத்தேறல் முதலிய பல வெறியவகைகளின் அடிப்படைக் கூறு.

meth'ylate, *v.* மரத்தேறல் கல, குடிபொருள் தகுதியும் வரி விதிப்பும் நீங்கும்படி தேறல்வகைகளில் மரத்தேறற் சத்தூட்டு; மரத்தேறற் சத்துச்செறிவி.

meth'ylated, *a.* மரத்தேறற் சத்தூட்டப்பட்ட; குடிநீர்மை நீக்கப்பட்ட.

metic'ulous, *a.* மிக உன்னிப்பான; விவரங்களை விடாமற் கவனிக்கிற.

metier, (பிர.) *n.* தொழில்.

met'is, *n.* வெள்ளையருக்கும் அமெரிக்க செவ்விந்தியருக்கும் பிறந்தவர்; கானடா (Canada) வில் வெள்ளையர் செவ்விந்தியர் கலப்புப் பிறவியாளர்.

Meton'ic cycle, *n.* முழுநிறைமதிவட்ட ஊழி, சந்திரனின் இயக்கமாறுபாடுகள் அனைத்தையும் உட்கொண்ட 19 ஆண்டு அல்லது 235 மதிமான மாதக் காலம்.

met'onym, *n.* ஆகுபெயராக வழங்கப்படுஞ் சொல்.

meton'ymy, *n.* ஆகு பெயர்; காரிய ஆகுபெயர்; பண்பாகு பெயர்.

met'ope, *n.* (க-க.) பழங் கிரேக்கரின் (Doric) சிற்ப முறையில் தூணடி நடுமுகப்புக் கூறு.

me'tre[1], *n.* சீர்; சீர்தளையாப்பமைதி; யாப்பு வகை; பா வகை; தாளம், இசைக்குரிய காலக்கணிப்பு.

me'tre[2], *n.* பதின்மான முறையில் அமைந்த பிரஞ்சு நீட்டலளவை அலகு, 39·37 அங்குலம் கொண்ட நீட்டலளவு.

met'ric, *a.* பதின்மான அடுக்காயமைந்த பிரஞ்சு அளவை முறை சார்ந்த; (தொ.) metric system, பதின்மான அடுக்காயமைந்த பிரஞ்சு அளவைமுறை.

met'rical, *a.* சீருக்குரிய; சீராலமைந்த; யாப்புமுறையான; அளவுமுறைக்குரிய; அளத்தலை உட்கொண்ட.

metri'cian, *n.* = metrist.

met'rics, *n.* யாப்பியல்.

met'rist, *n.* யாப்புமுறை வல்லுநர்; யாப்பியல் மாணவர்.

metrol'ogy, *n.* எடையளவுகள் ஆய்வுநூல்.

met'ronome, *n.* தாளப்பொறி, இசைத்துறையில் ஊசல் குண்டு மூலம் கால அளவினைக் குறித்துக்காட்டும் கருவி.

metrop'olis, *n.* தலைநகரம், நாட்டுத் தலைமைக் குருவின் பணியிருப்பிடம்; செயல்நிகழ் நள்ளிடம்.

metropol'itan, *n.* நாட்டுத் தலைமைக்குரு; தலைமை மேற்றிராணியார்; *a.* தலைநகருக்குரிய; நாட்டுத் தலைமைக் குருவுக்குரிய; நாடுகடந்த ஆட்சிநில வகையில் தாயகத்துக்குரிய, தாயகத்தின் பகுதியான.

met'tle, *n.* எழுச்சிநிலை; இயல்பான ஊக்கார்வம்; கிளர்ச்சி; உள்ளுரம், மனவுறுதி.

met'tled, met'tlesome, *a.* ஊக்கமிக்க, கிளர்ச்சியுடைய.

me'um & tu'um, (ல.) *n.* எனது உனது என்ற உரிமை வேறுபாடு.

mew[1], *n.* கடற் காகம், கடற் பறவை வகை

mew[2], *n.* பூனையின் கரைவு, மியாமியாக் குரல்; *v.* பூனை வகையில் மியாக் குரலிடு; கடற்பறவை வகையில் கரை.

mew[3], *n.* வல்லூற்றுக் கூண்டு; இறகுதிர் பருவத்து வல்லூற்றுக்கான கூண்டு; *v.* வல்லூற்றைக் கூண்டிலிடு.

mew⁴, *v.* உதிர், இறகுதிர்.

mewl, *v.* சிணுங்கு; பூனைபோல் கரை.

mews, *n.* குதிரைக்கொட்டில் சூழ்ந்த முற்றம்; *pl.* mewse.

me'zzanine, *n.* இடைமாடி, இரண்டு உயர்மாடிக்கிடைப் பட்ட மட்டமாடி; நிலத்தளத்துக்கும் முதல்மாடிக்கும் இடைப் பட்ட இடைத்தளமாடி; தாழ் பலகணி; நாடக அரங்கத் துக்கு அடியிலுள்ள அறை, அரங்க அடித்தளம்.

mezzo, (இத்.) *adv.* (இசை.) மட்டாக, அரையளவில்; (தொ.) mezzo forte, மட்டாக உரத்து; mezzo piano, மட்டாக, மெள்ள; mezzo relievo, பாதி உரு வெளித் தெரியும்படி புடைப்பாக; mezzo soprano, இடைத்தரப் பெண் குரலில், நடுத்தரச் சிறுவர் குரலில்.

me'zzotint, *v.* முருட்டுப் பின்னணிப்பட அச்சுப்பாளம், கரடு முரடாக்கப்பட்ட தகட்டின் பின்னணியே செறி நிழல் வண்ண மாகக்கொண்டு பிற பகுதிகளில் கரடுமுரடு நீக்கப்பட்ட ஒளி நிழற்பட அச்சுப்பாளம்; *v.* முருட்டுப் பின்னணிப்பட அச்சுப் பாளம் செதுக்கு.

mi, *n.* (இசை.) மூன்றாவது சுரம்.

miaow', *n.* பூனையொலி; *v.* பூனைபோல் ஒலி.

mias'ma, *n.* புழுக்க நச்சாவி, தொற்றூட்டும் முறைக்காய்ச்சல் ஆவி.

mias'mal, miasmat'ic, *a.* நச்சாவி உட்கொண்ட; நச்சாவி சார்ந்த; நச்சாவியின் விளைவான.

miaul', *v.* பூனைபோலக் கத்து.

mic'a, *n.* அப்பிரகம், காக்காய்ப் பொன்.

mic'a-schist, mic'a-slate, *n.* அப்பிரகமும் படிகமும் மாறிமாறிய தகடுகளாக அமைந்த பாறை வகை.

Micaw'ber, *n.* முயற்சியின்றித் தானாக நலம் வருமென்ற அவா நம்பிக்கையுடன் காலங்கழிப்பவர்.

Mich'ael, *n.* தேவ தூதர்களின் முதல்வர்களுள் ஒருவர்; (தொ.) Order of St. Michael and St. George, படைத்துறை பொதுத்துறை இரண்டிற்குமுரிய ஆங்கில வீரத்திருவாளர் பட்டக்குழு.

Mich'aelmas, *n.* தூயதிரு மைக்கேல் பெயரால் செப்டம்பர் 29-இல் நடைபெறும் விழா; ஆங்கில நாட்டிற் காலாண்டு வாடகைத் தவணை நாள்.

Mick'ey Mouse, *n.* திரைப்படச் சித்திரக் கேலிநடிப்புப் பகு தியின் பெயர்; (படை.) விமானத்திலிருந்து குண்டுகளை வீழ்த்தும் மின்பொறி.

mick'le, *n.* பெரிய அளவு; *a.* மிகுதியான, பெரிய.

mic'ro-ampere, *n.* மின்விசையலகில் பத்து இலட்சத்தில் ஒரு கூறு.

mic'robe, *n.* நுண்ணுயிர், செடி நுண்மம்; உயிர் நுண்மம்; நோய் நுண்மம்.

microcephal'ic, *n.* இயல்புமீறிய மிகச் சிறு தலையர்; *a.* இயல்புமீறிய மிகச் சிறு தலையினையுடைய.

microceph'alous, *a.* இயல்புமீறிய மிகச் சிறு தலையினை யுடைய.

mic'rocosm, *n.* அண்டத்தின் நுண்மாதிரிப் படிவமான பிண் டம், மனித உயிர்; பல பெருங்கூட்டுப் பெரும்பொருளின் மாதிரிப் பிண்ட நுட்பம்; நுணுக்க மாதிரிப் படிவம்.

microcos'mic, *a.* அண்ட நுணுக்கமாகிய பிண்டஞ் சார்ந்த.

mic'rocoulomb, *n.* மின்னோட்ட அளவலகின் பத்து இலட் சத்தில் ஒரு கூறு.

mic'rofar'ad, *n.* மின்காந்தப் பரும அளவலகின் பத்து இலட்சத்தில் ஒரு கூறு.

mic'rofilm, *n.* நுண் படத்தகடு, வேண்டும்பொழுது பெரி தாக்கக்கூடிய நுண்ணிய நிழற்படப் பதிவு.

mic'rogramme, *n.* பதின்மான எடையலகின் பத்து இலட் சத்தில் ஒரு கூறு.

mic'rohm, *n.* மின்தடையாற்றலலகின் பத்து இலட்சத்தில் ஒரு கூறு.

microlith'ic, *a.* சிறு கற்களால் கட்டப்பட்ட; சிறு கற்க ளால் கட்டப்பட்ட நினைவுச் சின்னங்களையுடைய.

mic'rolitre, *n.* பதின்மான முகத்தலளவை அலகின் பத்து இலட்சத்தில் ஒரு கூறு.

microl'ogy, *n.* நுண் பொருளாராய்ச்சி; சிறுதிறச் செய்தி களின் ஆராய்ச்சி; மயிர் பிளப்பு வாதம்.

microm'eter, *n.* நுண்ணளவை மானி, நுண்பொருள்கள் தொலைகள் கோணங்களை அளந்துகாட்டுங் கருவி.

mic'rometre, *n.* பதின்மான நீட்டலளவை அலகின் பத்து இலட்சத்தில் ஒரு கூறு.

mic'rometry, *n.* நுண்ணளவை, நுண்ணளவைமானியால் அளத்தல்.

mic'romillimetre, *n.* பதின்மான நீட்டலளவு நுட்பத்தில் பத்து இலட்சத்தில் ஒரு கூறு.

mic'ron, *n.* பதின்மான நீட்டலளவை அலகில் பத்து இலட் சத்தில் ஒரு கூறு.

mic'roorganism, *n.* நுண்மம உயிரினம்.

mic'rophone, *n.* ஒலிபெருக்கி; நுண்ணொலிகளைத் திட்பப் படுத்தியும் ஒலிகளை மின்னலைகளாக்கியும் தொலைபேசி ஒலி பெருக்கிகளைச் செயற்படுத்துங் கருவி.

microphot'ograph, *n.* பெரிதாக்கப்பட்ட நுண்மெல் நிழற் படம்.

mic'rophyte, *n.* நுண்மச் செடியினம், நுண்மம்.

mic'roscope, *n.* நுண்ணோக்காடி, பூதக்கண்ணாடி.

microscop'ic, microscop'ical, *a.* நுண்ணோக்காடிக்குரிய; நுண்ணோக்காடியின்றிப் புலப்படாத, மிக நுட்பமான.

micros'copy, *n.* நுண்ணோக்காடிப் பயனீடு, நுண்ணோக் காடியைப் பயன்படுத்துதல்.

mic'roseism, *n.* நில அதிர்ச்சியின் நுட்ப அலையதிர்வு.

microseis'mograph, *n.* நில அதிர்ச்சி நுண் அலைகளையும் தொலை அதிர்ச்சி அலைகளையும் பதிவு செய்யுங் கருவி.

mic'rospore, *n.* சிறு நுண் சிதல்களையுடைய ஒட்டுணிக் காளான் வகை.

mic'rotome, *n.* நுண்ணோக்காடிக்காகச் சிறு துண்டுகள் செதுக்குங் கருவி.

mic'rotone, *n.* (இசை.) நுண் இடைக்கால அளவு.

mic'rovolt, *n.* மின் இயக்க ஆற்றலலகின் பத்து இலட் சத்தில் ஒரு கூறு.

mic'rozyme, *n.* புளிப்பு நொதியிலுள்ள நுண்மம்.

micturi'tion, *n.* அடிக்கடி சிறுநீர் கழிக்க விரும்பும் கோளாறு.

mid, *n.* நடு; *a.* நடுவிலுள்ள; இடைப்பட்ட; இடைநிலை யான; இடைத்தரமான; (ஒலி.) ஒலிவகையில் உயர்வு தாழ்வு ஆகிய இரு நிலைகளுக்கும் இடைப்பட்ட நடுநிலையில் தோன்றுகிற.

mid-air', *n.* நிலத்திலிருந்து சிறிது தொலைவான உயரம்; வான்வழிப் பயண நடுவிடம்.

mid'day, *n.* நண்பகல்; *a.* நண்பகலுக்குரிய.

midd'en, *n.* எருமேடு; குப்பைமேடு; (தொ.) kitchen midden, ஒடுகளும் எலும்புகளும் பெரிதும் அடங்கிய வர லாற்றுக்கு முற்பட்டகாலக் குப்பைகூளம்.

mid'dle, *n.* நடு; நடுப்பகுதி; இடையிடம்; இடைப்பகுதி; அரை, இடுப்பு; செய்வினை-செயப்பாட்டுவினை ஆகிய இரண் டிற்கும் இடைப்பட்ட நடுவினை; நடுத்தரக்குரல்; *a.* நடுச் சார்ந்த; இடைப்பட்ட; இடைநிலையான; சரி இடையான; இடைக்காலத்துக்குரிய; இடைப்பகுதியான; இடையேயுள்ள; இடையீடான; செய்வினை-செயப்பாட்டுவினை ஆகிய இரண் டிற்கும் இடைப்பட்ட தரமான; *v.* உதைபந்து வகையில் குறிபொல்லை முன்பக்கத்திலிருந்து நடுவிடம் திருப்பு; பொறி

நுணுக்கத்துறையில் நடுவிடத்தில் வை; (கப்.) நடுவே மடி; (தொ.) in the middle of, இடையே, செயலிடையே; middle age, இளமை-முதுமை இடைப்பட்ட வயது; Middle Ages, கி. பி. 600-1500 வரையுள்ள வரலாற்றின் இடைநிலைக்காலம்; middle article, பத்திரிகைத்துறையில் அரசியல் கட்டுரைகளுக்கும் மதிப்புரைகளுக்கும் இடையே அமையும் சுருங்கிய இலக்கியக் கட்டுரை; middle class, நடுத்தர வகுப்பு; middle course, middle way, இருதிசைக் கோடிகளும் இல்லாத இடைநிலை வழி; Middle East, மேலைநாட்டினருக்கு அருகிலுள்ள வட ஆப்பிரிக்கா மேலைஆசியாப் பகுதிகளையடுத்த கீழை நாடுகள்; Middle English, 1150-1500 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால ஆங்கிலமொழி; Middle Kingdom, (வர.) சீனப் பேரரசு; middle term. (அள.) முத்திற மெய்வரவில் தரவு வாசகங்கள் இரண்டுக்கும் பொதுவான சொல்; middle passage, மேலைஆப்பிரிக்காவுக்கும் மேலை இந்தியத்தீவுகளுக்கும் இடைப்பட்ட கடல்வழிப் பயணம்; middle watch, நள்ளிரவு முதல் காலை 4 மணி வரையுள்ள காவல் தவணை; principle of excluded middle, இரண்டிலொன்று உட்படும் கட்டாயநிலை.

mid'dleman, *n.* தரகர், அம்பணவர், இடையீட்டாளர்; பொருள் தருபவர் பெறுபவர்களுக்கு இடைப்பட்ட வணிகர்

mid'dle-weight, *n.* இடைநிலை எடையாளர், குத்துச் சண்டைக்காரர்களிடையே 165 கல்லெடைக்கும் 154 கல்லெடைக்கும் இடைப்பட்ட எடையுடையவர்.

midd'ling, *a.* இடைநிலைப்பட்ட; மட்டமான நலமுடைய; இரண்டாந்தரமான; மட்டாக உடல்நலமுடைய; *adv.* மட்டாக; நடுஅளவாக.

midd'lings, *n.* நடுத்தரப்பட்ட சரக்குகள்; நடுத்தரமான கோதுமை மாவு; மட்டான செறிவுடைய சுரங்கக் கலவை மண்.

midd'y, *n.* = midshipman.

midge, *n.* கொசுவினப் பூச்சிவகை; குறுமனிதர், குற்றுருவமுடையவர்.

midg'et, *n.* குறளன், வேடிக்கையாகக் காட்டப்படத்தக்க குள்ளன்; நனி சிறுபொருள்.

midinette, (பிர.) *n.* பாரிஸ் நகரத்துக் கடைக்காரப் பெண்; துணிக்கடை அணங்கு.

mid'land, *n.* நாட்டகம்; நாட்டின் உட்பகுதி; *a.* நாட்டின் உட்பகுதி சார்ந்த; இங்கிலாந்தின் உள்நாட்டு மாவட்டங்களுக்குரிய.

Mid'lands, *n. pl.* இங்கிலாந்தின் நடு மாவட்டங்கள்.

mid'most, *n.* நேர்நடுவிடம்; *a.* மையத்தில் மையமான, உள்நடுவான.

mid'night, *n.* நள்ளிரவு, இரவு 12 மணி; கூரிருட்டு.

mid'rash, *n.* (எபிரேயம்) யூத மறைப்பகுதிக்குரிய பண்டை உரைவிளக்கம்; *pl.* mid'rashim.

mid'rib, *n.* இலையின் நடுநரம்பு.

mid'riff, *n.* உந்து சவ்வு, நெஞ்சுமேல் வயிறிடைப்பட்ட சவ்வு.

mid'ship, *n.* கப்பல் இடைப்பகுதி; படகின் இடைப்பகுதி.

mid'shipman, *n.* கப்பல் நடுத்தரப் பணியாளர்.

mid'ships, *adv.* = amidships.

midst, *n.* நடு, இடையில் அமைந்த நிலை; *adv.* இடையில்; *prep.* (செய்.) இடையே; (தொ.) in the midst of, இடையே, நடுவே, ஊடாக.

mid'summer, *n.* நடுவேனில், வேனிற்காலக் கதிரவன் கோடி நிலையடுத்த காலம், ஜூன் 21-ஆம் நாளையடுத்த பருவம்; (தொ.) Midsummer day, ஜூன் 24-ஆம் நாள்; காலாண்டுத் தவணை நாள்; midsummer madness, முழுப் பைத்தியம்.

mid'wife, *n.* பேறுகாலப் பணிமகள், மருத்துவச்சி; *pl.* mid'wives.

mid'wifery, *n.* பேறுகால மருத்துவ உதவி; பேறுகாலத் துணைமைக்கலை, பேறுகாலத்துணை; பேறுகால மருத்துவ ஆய்வுத்துறை.

mien, *n.* (செய்.) தோற்றம், நடையுடை பாவனை, முகபாவம்.

miff, *n.* (பே-வ.) சிறுபூசல்; வம்பு; *v.* மகிழ்ச்சிகெடு; சினங்கொள்.

might[1], *n.* வல்லமை, பேருடலாற்றல், மன ஆற்றல்; வலிமை; மனத்திண்மை, துணிவாற்றல்; (தொ.) with might and main, முழு உடலாற்றலுடன்.

might[2], *v.* may என்பதன் இறந்தகாலம்.

might'iness, *n.* வல்லமைமிக்கநிலை; பேராற்றல்; பெருமை, பெருந்தகைமை; பெரிய அளவு; சிறப்புப்பட்டம், பெருந்தகைப் பட்டம்.

might'y, *a.* வல்லமைமிக்க, உடலாற்றல் சான்ற, துணிவாற்றல் வாய்ந்த; திரண்ட, பருத்த; (பே-வ.) பெரிய, மிகுதியான; *adv.* (பே-வ.) மிக.

mignon, (பிர.) *a.* நொய்ம்மையான.

mignonette', *n.* நறுமண மலர்களையுடைய செடிவகை; இம் மலர்களின் நிறம், சாம்பற் பச்சைநிறம்; பூவேலை ஆடை; நயமிக்க வலையாடை.

migraine, (பிர.) *n.* கடுமையான ஒற்றைத்தலைவலி; கற்பனைப் புணைவு.

mig'rant, *n.* புலம்பெயர்கிற மனிதர் அல்லது விலங்கு; *a.* புலம்பெயர்கிற.

migrate', *v.* புலம்பெயர்; இடம்பெயர்; நாடுவிட்டு நாடு செல்; பறவை-மீன் வகையில் பருவகாலங்களையொட்டி இடமாறிச்செல்.

migra'tion, *n.* புலம்பெயர்வு, இருப்பிடமாற்றம்; நாடு பெயர்ச்சி; திணைப்பெயர்வு, மண்டலப்பெயர்வு; குழுப் பெயர்ச்சி; குடிபெயர்குழு.

migrat'or, *n.* புலம்பெயர்வோன்.

mi'gratory, *a.* புலம்பெயர்கிற; புலம்பெயரும் வழக்கமுடைய; நாடோடியாகத் திரிகிற.

mika'do, *n.* ஜப்பானியப் பேரரசர்; *pl.* mika'dos.

mike, *n.* (பே-வ.) = microphone.

mil, *n.* ஆயிரம்; (மரு.) ·061 கன அடி கொண்ட முகத்தலளவு; கம்பி முதலியவற்றின் விட்டத்தை அளப்பதற்கான அங்குலத்தில் ஆயிரத்திலொரு பங்குடைய அலகு; (தொ.) per mil, ஆயிரத்துக்கு, ஒவ்வோர் ஆயிரத்துக்கும்.

mil'age, *n.* கல்தொலை நீள அளவு; கல்தொலைவுக்குப் பிடிக்கும் தூரம்.

Milanese', *n.* மிலான் நகரத்தவர்; *a.* மிலான் நகரஞ் சார்ந்த; (தொ.) the Milanese, பழைய மிலான் கோமகனுருக்குரிய ஆட்சிப்பரப்பு.

milch, *a.* பால்தருகிற; கறவைக்குரிய; (தொ.) milch cow, கறவைப்பசு; ஆதாயமூலம் எளிதில் பணம் கறக்கக்கூடிய மனிதர்.

mild, *a.* மென்னயமுள்ள, கனிவுடைய; விதி-தண்டனை முதலியன வகையில் கடுமையாயிராத; வானிலை வகையில் அமைதியாகவும் வெதுவெதுப்பாகவுமிருக்கிற; மருந்து வகையில் மென்பதமாகச் செயற்படுகிற; உணவு-புகையிலை முதலியன வகையில் உறைப்பாயிராத, காரமிகுதியற்ற; மது வகையில் நறுமணம் நெடி ஊட்டப்பெறாத; பழகிய, பயின்ற; உறுதியற்ற; ஊக்கம் அல்லது உயிர்த்துடிப்புக்குறைந்த; (தொ.) mild steel, கரியம் குறைவாகவுள்ள எஃகு.

mil'dew, *n.* பூஞ்சணம், பூஞ்சக்காளான்; *v.* பூஞ்சணம் பற்று, பூஞ்சணம் பற்றப்பெறு.

mile, *n.* கல்தொலையளவு, கல்தொலை; ஒரு மைலுக்கு மேற்பட்ட தொலைவுக்கான பந்தயம்; (தொ.) geographical mile, nautical mile, நிலவுலகைச் சுற்றியுள்ள பெரிய வட்டத்தின் ஒரு கலை, 6080 அடி; not 100 miles from, (பே-வ.) மிக அண்மையில்.

mil'eage, *n.* = milage.

mil'er, *n.* (பே-வ.) ஒரு கல் தொலை ஓட்டத்திற்கெனத் தனித் தகுதியும் பயிற்சியும் பெற்றுள்ள மனிதர் அல்லது குதிரை.

Mile'sian, *n.* அயர்லாந்து நாட்டுக்காரர்; *a.* அயர்லாந்து நாட்டைச் சார்ந்த.

mile'stone, *n.* நாழிகைக்கல், மைல் கல்; வாழ்க்கையில் ஒரு கட்டம்; திரும்புகட்ட நிகழ்ச்சி.

mil'foil, *n.* நெடிநாற்றமும் துவர்ப்புச் சுவையுமுள்ள இலையுதிராப் பூடு வகைகள்.

mil'iary, *a.* அளவில் அல்லது வடிவில் கூலவிதை போன்ற; (தொ.) miliary fever, கூலவிதை வடிவக் கொப்புளங்களுடன் மணல்வாரிபோன்ற பருக்கள் தோற்றுவிக்கிற காய்ச்சல் வகை.

milieu, (பிர.) *n.* சூழ்நிலை, வாழ்க்கைச்சூழல், சமுதாயச்சூழல்.

mil'itant, *a.* பொருகிற, போரில் ஈடுபட்டுள்ள; ஆன்மிகப் போராடுகிற.

mil'itarism, *n.* படைத்துறைப்பண்பு முனைப்பு; போர்வீரர் உணர்ச்சி, போர் மனப்பான்மை.

mil'itarist, *n.* படைத்துறை இயல் பயில்பவர்; படைத்துறை எண்ணங்கள் மீதூரப்பெற்றவர்.

mil'itary, *n.* படை, படைப்பிரிவு; போர்வீரர் தொகுதி, போர்வீரர் அணி; *a.* படைத்துறைக்குரிய; போர் வீரர்களைச் சார்ந்த; போர்வீரர்களுக்குகந்த; போர்வீரர்களுக்குரிய; போர்வீரரால் நடத்தப்படுகிற; (தொ.) military band, படைத்துறைக் கூட்டிசை மேளம்; military chest, படைத்துறைக் கருவூலம்; military fever, குடற்காய்ச்சல்; military testament, போர்வீரரது வாய்மொழி விருப்ப ஆவணம்; the military, போர்வீரர் தொகுதி, படைத்தொகுதி.

mil'itate, *v.* போரில் பங்கெடுத்துக்கொள்; செய்திகள்-சான்று வகையில் எதிர்க்கும் ஆற்றல் பெற்றிரு; ஒவ்வாதிரு.

mili'tia, *n.* குடிப்படை; (வர.) மாவட்ட ஆட்சேர்ப்பினால் உருவாக்கப்பட்ட முற்காலப் பிரிட்டிஷ் படைத்துறையின் கிளை; (வர.) கட்டாயமாக ஆள் சேர்த்து 1939-இல் உருவாக்கப்பட்ட பிரிட்டிஷ் படை.

mili'tiaman, *n.* குடிப்படையைச் சேர்ந்த வீரர்.

milk, *n.* பால்; மரப்பால், பூண்டுகளிலிருந்து வடித்தபால்; செடிகளின் பால்போன்ற சாறு; *v.* பால் கற; ஒருவரிடமிருந்து பணம் கற, ஒருவரைத் தன்னலத்திற்குப் பயன்படுத்திக்கொள்; சாறு இறக்கு; பாம்பிலிருந்து நஞ்சு இறக்கு; (தொ.) condensed milk, கட்டிப்பால்; உறைபால்; milk and honey, இன்பநுகர்ச்சிக்கான பெருவளம், தேனும் பாலும் வழிந்தோடும் வளம்; milk and water, பயனற்றசொல், நொய்தான பேச்சு; வெறுப்பூட்டுகிற உணர்ச்சி; milk fever, மகப்பேறுக்குப் பிறகு பெண்களுக்கு வரும் காய்ச்சல்; milk for babes, எளிய வடிவத்திலுள்ள இலக்கியம்-அறிவுக் கோட்பாடு முதலியன; milk of human kindness, மனிதப் பண்பியலான இரக்கம்-கருணை; milk of lime, நீரில் கரையாது நிற்கும் சுண்ண நீரகை; milk of magnesia, நீரில் கரையாது நிற்கும் வெளிம நீரகை; milk of sulphur, கந்தகப் படிகம்; milk pudding, பால் பிட்டு, அரிசி-சவ்வரிசி-மரவள்ளிக்கிழங்கு மாவு முதலியவற்றைப் பாலில் வேகவைத்துச் செய்யப்படுங் களி; milk the ram or bull, ஆகாத காரியத்தில் இறங்கு; no use crying over spilt milk, தீராப்பிழைக்கு வருந்திப் பயனில்லை, மீளா இழப்புக்கு வருந்திப் பயனில்லை.

milk'-and-wa'ter, *a.* செறிவற்ற; உறுதியற்ற; சுவையில்லாத, உவர்ப்பான; உணர்ச்சி தூண்டாத.

milk'-bar, *n.* பால்வகைப்பண்ட அருந்தகம்.

milk'-crust, *n.* குழந்தைக் கரப்பான் வகை.

milk'-float, *n.* பால்வண்டி, பால் வழங்குதற்குப் பயன்படுத்தப்படும் தாழ்வான சிறுவண்டி.

milk'-leg, *n.* மகப்பேறுக்குப் பிறகு பெண்களுக்குக் காணும் கால் வீக்கம்.

milk'maid, *n.* பால்காரி; பாற்பண்ணையில் பால் கறக்கும் அல்லது பணிபுரியும் பெண்.

milk'man, *n.* பால்காரன், பால் விற்பவன்.

milk'-powd'er, *n.* பால்பொடி, வறட்டுப்பால், காய்ச்சி நீர் நீக்கப்பட்ட பால்.

milk'-run, *n.* வழக்கமான விமான நடவடிக்கைச்சுற்று.

milk'-shake', *n.* பால்காடி, பருகுவதற்கென நறுமணமூட்டிக் குலுக்கப்பட்ட பால்; பாலும் முட்டையும் சேர்ந்த கலவை.

milk'sop, *n.* எழுச்சியற்ற மனிதன், ஊக்கம் அற்ற இளைஞன்.

milk'-tooth, *n.* பாற்பல், அரும்புப்பல்.

milk'walk, *n.* பால்காரன் திரியும் வட்டம், பால்காரன் செல்லும் வழி.

milk'weed, *n.* பால்போன்ற சாறுள்ள காட்டுச் செடிவகை.

milk'-white, *a.* பால்போல் வெண்மையான.

milk'wort, *n.* பெண்களுக்குப் பால் சுரக்கும்படி செய்வதாகக் கருதப்படும் செடி வகை.

mil'ky, *a.* பாலுக்குரிய; பால்போன்ற; பால் கலந்த; நீர்ம வகையில் கலங்கலான; தெளிவாயிராத; பெண் தன்மையுள்ள; வலுவற்ற; கோழையான; வலுவின்மை காரணமாக எதற்கும் சரியென்கிற; (தொ.) Milky Way, வானகப் பால்வீதி மண்டலம்.

mill, *n.* ஆலை; மாவாலை; மாவரைக்கும் எந்திரம்; திரிகைப் பொறியமைவு; செய்பொருள் வேலைமுறைகளுக்கான இயந்திரம்; இயந்திரங்கள் பொருத்தப்பெற்றுள்ள கட்டிடம்; குத்துச்சண்டை; *v.* இழைகளை உள்மடித்துத் துணி முதலியவற்றைக் கனமுள்ளதாக்கு; கூலவகைகளை இயந்திரத்திலிட்டு அரை; இயந்திரத்திலிட்டு மாவு செய்; அழுத்து; பொறிப்பிடு; தகடாக அரை; அரும்பு கட்டு, நாணயத்தின் விளிம்பில் பல்வெட்டு; குடிதேறல் வகையினை நுரையுண்டாகும்படி அடி; அடி, புடை, சண்டையிடு; கால்நடை அல்லது ஆட்கள் வகையில் கும்பலாகச் சுற்றிச் சுற்றிவரச் செய்; (தொ.) go through the mill, பயிற்சிபெறு; அனுபவம் பெறு; put through the mill, பயிற்சி பெறுவி; அனுபவத்திற்கு உட்படுத்து; the mills of God grind slowly, தெய்வம் நின்றுகொல்லும், தீவினைப் பயன் நாட்பட்டுத்தான் வந்தெய்தும்.

mill'board, *n.* புத்தகக் கட்டிடத்துக்கான தாள் அட்டை.

mill'-dam, *n.* ஆலை அணை, ஓடையின் நீர் ஆலைக்குப் பயன்படும் பொருட்டு அதன் குறுக்கே கட்டப்படும் அணை.

millenar'ian, *n.* இயேசுநாதரின் நல்லாயிர ஆண்டு ஆட்சியில் நம்பிக்கையுடையவர்; *a.* நல்லாயிர ஆண்டுக்குரிய; இயேசுநாதரின் நல்லாயிர ஆண்டு ஆட்சியில் நம்பிக்கையுடைய.

mill'enary, *n.* ஆயிரம் ஆண்டுக்காலம்; இயேசுநாதரின் நல்லாயிர ஆண்டு ஆட்சியில் நம்பிக்கையுடையவர்; *a.* ஆயிரம் ஆண்டுக்குரிய; இயேசுநாதரின் நல்லாயிர ஆண்டு ஆட்சி சார்ந்த; இயேசுநாதரின் நல்லாயிர ஆண்டு ஆட்சியில் நம்பிக்கையுடைய.

millenn'ium, *n.* ஆயிரம் ஆண்டுக்காலம்; நிலவுலகில் இயேசுநாதரின் நல்லாயிர ஆண்டு நேர் ஆட்சிக்காலம்; பொன்னுள்; பொங்குமாவளம் நிலவுங் காலம்.

mill'epede, *n.* மரவட்டை; கடுந்தோடுடைய தென் அமெரிக்க விலங்கு வகை.

mill'er, *n.* ஆலையின் உரிமையாளர்; ஆலைக் குத்தகைக்காரர்; ஆலைநடத்துபவர்; வெள்ளைப்பூச்சி வகை; உரத்த ஒலியெழுப்பிப் பறக்கும் தவிட்டுச் சிவப்புநிற வண்டு வகை; (தொ.) miller's thumb, நன்னீர்வாழும் சிறு மீன் வகை.

milles'imal, *n.* ஆயிரத்தில் ஒரு கூறு; *a.* ஆயிரத்தில் ஒரு கூறான; ஆயிரக்கூற்றுமானமடங்கிய.

mill'et, *n.* தினை, சாமை; தினைச்செடியின் விதை.

mill'et-grass, *n.* அழகிய நீண்ட புல்வகை.

mill'-hand', *n.* ஆலைத்தொழிலாளர்.

mill'iard, *n.* நூறுகோடி.

mill'igramme, *n.* கிராமாயிரச் சீரெடை.

mill'ilitre, *n.* பருமனளவுக்கூறு, .061 கன அங்குல அளவு.

mill'imetre, *n.* கீழாயிரக்கோல், ·0394 அங்குலம்.

mill'iner, *n.* மகளிர் தொப்பி-தலைச்சீரா முதலியன செய்பவர்; பெண்டிர் தொப்பி முதலியன செய்யும் மாது; (தொ.) man milliner, சிறுதிற அலுவல்களில் சுறுசுறுப்பாக ஈடுபடுபவர்.

mill'inery, *n.* மகளிர் தொப்பி முதலிய சிறுதிற அணிமணிகள்; பெண்டிர் அணிமணிச் செய்தொழில்.

mill'ing, *n.* ஆலைத்தொழில், அரைப்பு இயந்திரத்தொழில்; அரைப்பு, கடும்பிழிவு; கடுந்துயருழக்கச் செய்தல்; இழை உள்மடித்துத் திண்ணிதாக்கல்; நாணயம்-திருகாணித் தலைப்பு முதலியவற்றுக்குக் குறுக்குச் சால்வரியிடல்; (தொ.) milling machine, உலோகத்தகடுகளில் பள்ளங்களை வெட்டுவதற்கான இயந்திரக்கருவி.

mill'ing-machine, *n.* உலோகத்தகட்டில் வடுவரிசை துளைகள் இடுவதற்கான இயந்திரம்.

mill'ion, *n.* பத்து இலட்சம்; பத்து இலட்சம் எண்ணிக்கையுள்ள பொருள்களின் தொகுதி; ஆங்கில நாட்டுப் பத்து இலட்சம் பொற்காசுகளின் தொகுதி; (தொ.) the million, மக்களிற் பெரும்பாலோர்.

millionaire', *n.* கோடீசுவரர், பெருஞ்செல்வர்.

mill'ipede, *n.*=millepede.

mill'-pond, *n.* ஆலையைச் செலுத்துவதற்கான நீர்கொண்டிருக்கும் குளம்; (பே-வ.) அட்லாண்டிக் மாகடல்; (தொ.) like a mill-pond, ஆலைச்சிறுகுளம் போன்று அமைதியான.

mill'-race, *n.* ஆலைச்சக்கரத்தைச் செலுத்துகிற நீரோட்டம்.

Mills bomb, *n.* முட்டை வடிவக் கை வெடிகுண்டு.

mill'stone, *n.* ஏந்திரக் கற்களில் ஒன்று; மிகப் பளுவான சுமை; (தொ.) between upper and nether millstone, தவிர்க்க முடியாத நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு; millstone grit, கெட்டியான மணற்கல் வகை; nether millstone, ஏந்திரத்தின் அடிக்கல்; கல்நெஞ்சம்; see far into a millstone, மிகக் கண்டிப்பாயிரு.

mill'-wheel, *n.* ஆலையைச் செலுத்துவதற்கான நீரியங்கு சக்கரம்.

mill'wright, *n.* ஆலைகளை அமைப்பவர்; ஆலை அமைப்புத் திட்டமிடுபவர்.

milor', milord', *n.* பிரஞ்சு வழக்கில் ஆங்கில நாட்டுப் பெருமகன், பெருஞ் செல்வரான ஆங்கிலேயர்.

mil'reis, *n.* 4 ஷிலிங் 5½ பென்னி மதிப்புள்ள முன்னுள் போர்ச்சுகீசியப் பொற்காசு.

milt, *n.* (உள்.) மண்ணீரல்; மீன் சினை; *v.* பெண் மீன் வகையில் சினைப்படுத்து, கருவுயிர்க்கச் செய்.

mil'ter, *n.* இனப்பெருக்கப் பருவத்தில் ஆண்மீன்.

Milton'ic, *a.* ஆங்கில கவிஞரான மில்டனுக்குரிய; மில்டன் நடையிலுள்ள.

mime, *n.* பண்டைய கிரேக்கர் அல்லது ரோமர் வழக்கில் அவிநயக்கூத்து; அவிநயக்கூத்தாடி; நகைவேழம்பர்; கோமாளி; *v.* வாய்பேசாது அவிநயங்காட்டிக் கூத்தாடு.

mim'eograph, *n.* கையெழுத்துப்படியின் பலபடி எடுப்பதற்கான தகடு ஆக்க அமைவு; *v.* படியாக்கத்தகடு செய்வதற்கான அமைவினுல் படிகள் எடு.

mimes'is, *n.* (உயி.) விலங்குடன் விலங்கு அல்லது பிற அஃறிணைப் பொருளுக்குள்ள புற ஒற்றுமை.

mimet'ic, *n.* ஒப்புப் போலி நடிப்பாளர், போலி நகை நடிப்பாளர்; *a.* பிறிதுபோல் நடித்துக் காட்டுவதில் திறமையுடைய; பிறர்போல் போலிப் பாசாங்கு செய்கிற.

mim'ic, *n.* பிறர்போல் நடித்துக் காட்டுவதில் திறமையுடையவர்; *a.* பிறர்போல் போலியாக நடிக்கக் கூடிய, போலியான, பாசாங்கான; *v.* போலியாக நடித்துக் கேலிசெய், பிறர்போல் நடித்து நையாண்டி செய்.

mim'icked, *v.* mimic என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

mim'icking, *n.* ஒப்புப்போலி நையாண்டி; *a.* ஒப்புப்போலி நையாண்டி செய்கிற.

mim'icry, *n.* நடையுடை தோற்ற ஒப்புப்போலி நடிப்பு; ஒப்புப்போலி நையாண்டி; ஒப்புப்போலிப் பொருள்; (உயி.) ஒப்புப்போலிப் பண்பு, புறத்தோற்றத்தில் ஒரு விலங்கு மற்றொன்றை ஒத்திருத்தல்.

mim'iny-pim'iny, *a.* நயநாகரிக மினுக்கம் வாய்ந்த, அளவு மீறி நாகரிகமுடைய; திருத்தமும் தெளிவுமுடைய.

mimos'a, *n.* 'தொட்டாற் சுருங்கி'யை உள்ளடங்கிய துவரை இனக் குத்துச் செடிவகை.

min'a[1], *n.* மலர்ச்செடி இனம்.

min'a[2], *n.* நாலு பொன் மதிப்புடைய பண்டைய கிரேக்க நாணய வகை; கிரேக்க எகிப்திய வழக்கில் எடை அளவுக் கூறு.

min'a[3], *n.* நாகணவாய்ப்புள், சிட்டுக்குருவி இனத்தைச் சார்ந்த பறவை வகை.

mina'cious, *a.* அச்சுறுத்துகிற, கிலியூட்டுகிற.

minar', (அரா.) *n.* கலங்கரை விளக்கம்; தூபி.

min'aret, *n.* பள்ளி வாயில் தூபி.

min'atory, *a.* அச்சுறுத்துகிற.

mince, *n.* கொத்திறைச்சி, குறுக அரிந்த கறித்துண்டு; *v.* கொத்து, குறுக அரி; மறைத்துப் பேசு, நயமாக மழுப்பு; மென்னயத்துடன் கண்டி; தளுக்காகப் பேசு; மினுக்கி நட; (தொ.) mince matters, நயமாக மழுப்பிப் பேசு.

mince'meat, *n.* உறையப்ப உள்ளீடான உலர்பழ வெல்லம் பாகடைக் கலவையுறை; (தொ.) make mince meat of, ஆளை அழி; வாதத்தைச் சிதை; தோற்கடி.

mince-pie', *n.* உறையப்பம், உலர்பழம் வெல்லம் பாகடை உறையிட்ட பண்ணிய வகை.

min'cing, *n.* மழுப்பல்; தளுக்குப்பேச்சு; மினுக்குநடை; *a.* முழுதும் பேசாதடக்குகிற; தளுக்காகப் பேசுகிற; மினுக்கி நடக்கிற.

Min'cing Lane, *n.* தேயிலை முதலிய இறக்குமதிச் சரக்குகளின் மொத்த வாணிகக்களம்.

mind, *n.* உள்ளம், மனம்; உள்ளக்கருத்து; கருத்து, எண்ணம்; ஓர்மை, நினைவாற்றல்; நினைவு; உளநிலை, உணர்ச்சி; உணர்வுநிலை, உணர்வு; உயிர்நிலை, ஆன்மா, உயிர்க்கூறு; விருப்பாற்றல்; விருப்பம்; சிந்தனையாற்றல்; சிந்தனை; திட்ட ஆற்றல்; திட்டமிடுபவர்; ஆளும் ஆற்றலர், ஆள்; ஆளும் ஆற்றல்; *v.* மனத்துட் கொள், ஓர்; நினைவிற் கொள்; கவனம் எடுத்துக்கொள்; அக்கறை எடுத்துக்கொள்; முனைந்து ஈடுபடு; சட்டைசெய், பொருட்படுத்து; விழிப்பாயிரு; பொறுப்பு மேற்கொள்; கருத்துக்கொள்ளுவி; (தொ.) be in two minds, மன உறுதிப்பாடின்றி இரு, கருத்தில் ஊசலாடு; be of a mind, be of one mind, இணங்கு, உடன்படு, ஒத்துக்கொள்; be of one's mind, கருத்துக்கு இணங்கு, கருத்து ஒருமைப்படு; bring to mind, call to mind, நினைத்துப் பார், நினைவுபடுத்திப்பார்; give one's mind to, சிந்தனையை ஒருமுகப்படுத்திச் செலுத்து; go out of mind, pass out of mind, மறதியுட்படு; have a good mind, have a great mind, மிகுதியும் விரும்பு; have half a mind, முனைத்த ஒரு சார் விருப்பம் கொள்ளு; if you don't mind, உனக்குத் தடையேதும் இல்லாவிடில்; keep in mind, நினைவில் வைத்துக்கொள்; know one's own mind, முடிவை உருவாக்கி அதன்படி நட; make up one's mind, ஒருநிலை துணி, முடிவு செய்; mind's eye, நோக்கம், மனப்பாங்கு; never mind, அது கிடக்கட்டும், அதுபற்றிக் கவலை வேண்டாம்; set one's mind on, அடைவதற்கு மிக ஆவல்கொள், பெறத்துடிப்புக்கொள்; time out of mind, நினைவுக்கெட்டாத காலத்திலிருந்து.

mind'ed, *a.* செய்ய விருப்புடைய, மனப்பற்றுடைய; குறிப்பிட்ட மனப்பாங்குடைய, இயல்புள்ள.

mind'ful, *a.* சிந்தனையுள்ள, கவனமுள்ள, விழிப்புடைய.

mind'-stuff, *n.* (மெய்.) பருப்பொருளின் மூலமாகக் கருதப் படும் கடுநிலை நினைவியல் நுண் படிவம்.

mine[1], *n.* சுரங்கம், உலோகம்-கனிப்பொருள் முதலியவற்றுக் காக அகழப்படும் குழி; வெடிச்சுரங்கம்; படைத்துறை அரண் சுரங்கம் வைப்பதற்குரிய மருந்து வைத்த கிடங்கு; கடற்கண்ணி; அகழ்பீரங்கி; இரும்புக்கனிவளம்; மூல வளம்; *v.* நிலத்தில் தோண்டு; நிலத்தின்கீழ் அகழ்; சுருங்கை வழிசெய்; சுரங்கவெடி வை; கடற்கண்ணியிடு; சுரங்கமகழ்ந்து வளமெடு; கருப்பொருளுக்காக நிலமகழ்; கீழறு, அடிப்படை சிதை; அழிவுக்கு வழிகோலு.

mine[2], *pron.* என்னுடையது, எனது; *a.* எனக்குரிய, என்னுடைய.

mine'field, *n.* சுரங்கப்பகுதி, சுரங்கங்களுள்ள இடம், கடலில் அல்லது நிலத்தில் சுரங்கங்களுள்ள பகுதி; உலோகம் விளைகளம், சுரங்கவயல்.

mine'layer, *n.* கடற்கண்ணி பரப்பும் கப்பல்; கடலில் சுரங்க வெடிபரப்பும் வானூர்தி.

min'er, *n.* சுரங்கத் தொழிலாளி; சுரங்கவெடி பரப்பும் படை வீரர்.

min'eral, *n.* கனிப்பொருள்; சுரங்கத்திலிருந்து கிடைக்கும் தாதுப்பொருள்; உயிர்மச் சார்பற்ற பொருள்களின் வகை; இயற்பொருள், கருப்பொருள்; உலோகத் தாது; *a.* கனிப் பொருள் சார்ந்த; சுரங்கத்திலிருந்து கிடைக்கிற; இயற் பொருளான, உயிர்மச் சார்பற்று இயற்கையிலிருந்து கிடைக் கிற; (தொ.) mineral jelly, செயற்கை நெய்க்களிம்பு, எண்ணெயிலிருந்து கிடைக்கும் களிம்புநெய்; mineral kingdom, இயற்கையின் கனிப்பொருள் பெரும்பிரிவு; mineral water, கனிச் சத்துக்கள் நிறைந்த இயற்கையான நீர்; செயற்கையாகக் கனிச்சத்துக்களைக் கலந்த நீர்; செயற்கைக் கனிச்சத்துடைய குடிநீர்ம வகை.

mineral'ogy, *n.* கருப்பொருளியல், கனிப்பொருள் இயல்.

min'erals, *n. pl.* செயற்கையாகச் செய்யப்பட்ட கனிச் சத் துடைய நீர், செயற்கையாகக் கனிச்சத்துக் கலந்த குடி நீர்மம்.

Minerv'a, *n.* அறிவாற்றலுக்குரிய பண்டை ரோமரின் பெண் தெய்வம்; (தொ.) Minerva press, (வர.) உணர்ச்சி யூட்டும் புதினங்களை 1800-இல் வெளியிட்டு வந்த லண்டன் அச்சகம், உணர்ச்சியூட்டும் புதின வெளியீட்டுத் தொகுதி.

mine'sweeper, *n.* கடற்கண்ணிவாரிக் கப்பல்.

mine'thrower, *n.* குறுகிய அகழ் பீரங்கி.

min'ever, *n.* வினைமுறை ஆடைக்கான சடைக் கம்பளி வகை.

ming'le, *v.* கல, ஒன்றுபடு; ஒன்று சேர், கதம்பமாக்கு.

min'gy, *a.* (பே-வ.) கீழ்த்தரமான, கஞ்சத்தனமான.

min'iate, *v.* சாதிலிங்கத்தால் செந்நிறமாக்கு; கையெழுத்துப் படிக்கு ஒண்ணிறமூட்டு.

min'iature, *n.* ஒண்ணிறமூட்டப்பட்ட கைவரைப்படம்; நுணுக்க ஓவியம்; தந்தம் அல்லது தோல்தாள் மீது சிற்றுரு வாகத் தீட்டப்பட்ட நுண்ணிய ஓவியப்பட்டம்; நுணுக்க ஓவியக் கலை; நுண்பதிப்பு, சிற்றுருவாக்கப்பட்ட மறுபடி வம்; சில்காய்ச் சிற்றிலக்கச் சதுரங்க ஆட்டவகை; *a.* நுண் பதிப்பான, நுண்ணளவில் காட்டப்பட்ட; *v.* நுண்பதிப் பாக அல்லது நுண்ணளவில் காட்டு.

min'ify, *v.* சிற்றளவாக்கு; குறுக்கிக் காட்டு; முக்கியத் தைக் குறைத்துக் காட்டு.

min'ikin, *n.* குற்றுருவுயிர், குற்றுருவினது; *a.* குற்றுரு வான; போலிப்பகட்டான, தளுக்கி நடக்கிற.

min'im, *n.* சுர அலகின் அரை; கையெழுத்தின் செங்குத்துக் கீழ்க்கோடு; நுண்ணுயிர்; சிறுதிற உயிர்; சிற்றினம்; மடத்துச் சிறுதிறத் துறவிளைஞர்; மடத்துச் சிறுதிறத் துறவுநங்கை; மருந்து நீரளவை அலகின் அறுபதின் கூறு; (மரு.) எடைச் சிற்றலகு.

min'imal, *a.* மிகச் சிறிய; மிகக் குறைந்த.

min'imalist, *n.* தற்காலிகமாகக் குறைந்த அளவை ஏற்றுக் கொள்ள இணங்குபவர்.

min'imize, *v.* கூடியவரை குறை, இயன்ற அளவு சிறிதாக்கு; நுண் படித்திறப்படுத்து; கீழ்ப்படிக்கு இறக்கு.

min'imum, *n.* குறுமம், மிகக் குறைந்த அளவு, குறைவெல்லை; *a.* மிகக் குறைந்த, குறைவெல்லையான; *pl.* min'ima; (தொ.) minimum thermometer, குறித்த காலத்தில் மிகக் குறைந்த தட்பவெப்பநிலையைத் தானே பதிவு செய்யும் தட்ப வெப்பமானி.

min'imus, *n.* பள்ளிகளில் ஒரே பெயருடைய இரு பிள்ளை களில் இளையவனைக் குறிக்குஞ் சொல்.

min'ing, *n.* சுரங்கவேலை, சுரங்கத்துறை; *a.* சுரங்கத்துறை சார்ந்த.

min'ion, *n.* அன்புக்குரிய குழந்தை; மனத்துக்குப் பிடித்த ஏவலர்; செல்வமான விலங்கு; (அச்சு.) எழுத்துச் சிற்றளவு வகை, மிகச் சிறு அச்செழுத்து; (தொ.) minions of the law, சிறைக்காவலர், ஊர்க்காவலர்.

min'ish, *v.* குறைபடு, ஆற்றல் முதலியவற்றில் குறைவாக்கு.

min'ister, *n.* செயலாற்றுப் பணியாளர், செயலாளர்; அமைச்சர், மந்திரி; அரசியல் தூதர்; மதகுரு; *v.* தொண்டாற்று; பணி செய்; உதவியாயிரு; துணையாய் உதவு; கொடு, கொடுத்துதவு; மருந்து வகையில் ஆதரவுடன் கொடு; (தொ.) ministering angel, பிணியாளருக்குப் பணிபுரிபவள், நோயாளியர் செவிலி.

minister'ial, *a.* சட்ட நிறைவேற்றம் சார்ந்த; சட்ட நிறை வேற்ற உதவியான; துணைமையான, கருவியான; சமய குரு அல்லது அவருடைய ஊழியஞ் சார்ந்த; அமைச்சர் சார்ந்த; அமைச்சரவையினை ஆதரிக்கிற, அரசியல் ஆட்சிக்குழுச் சார்பான.

minist'erialist, *n.* நாளரசினை ஆதரிப்பவர்.

ministra'tion, *n.* சமயத் தொண்டாற்றுதல்; பணி உதவி; அளிப்புதவி.

min'istry, *n.* அமைச்சர் தொழில்; சமயகுருமார் தொகுதி; அமைச்சர் குழாம், அமைச்சரவை; அரசியல் துறையரங்கம்.

min'ium, *n.* சாதிலிங்கம், இலிங்கக்கல், ஈயச் செந்தூரம்; ஈயச் செந்தூரச் செந்நிறம்.

min'iver, *n.* = minever.

mink, *n.* அரைகுறையாக நீரில் வாழும் கீரியின உயிர்வகை; கீரியின வகையின் மென்மயிர்த்தோல்.

minn'esinger, *n.* செர்மனியில் 12—14-ஆம் நூற்றுண்டு களில் நிலவிய உயர்குடிக் காதலுணர்ச்சிப் பாடகர் குழு.

Minn'ie, *n.* பதுங்குகுழிப் பீரங்கி.

minn'ow, *n.* நன்னீர் வாழ் சிறுமீன் வகை; (தொ.) Triton among the minnows, சிறுமையாளர்களிடையே சிறப்பாளர்.

Mino'an, *a.* மைனுஸ் (Minos) என்ற அரசனின் பெயரால் வழங்கப்படும் கிரீட் (Crete) மாநிலத் தொல்பழங்கால நாக ரிகம் (3000-1500 கி. மு.) சார்ந்த.

min'or, *n.* வயது வராதவர், 21 அகவைக்குட்பட்டவர்; இளம்படியர்; சிறுதிறத்தார்; சிறுதிறத்தது; சிறுபடித் துறவி; (அள.) சிறுபடிப்பதம்; (அள.) சிறுபடி வாசகம்; *a.* இளம்படியான; சிற்றளவான; (இசை.) அளவிற் குறைந்த; சிறுதிறத்துக்குரிய; சிற்றியலான; சிறுதிற மான, சில்லறையான; சிறுபடியான; (தொ.) conversation in a minor key, துயரார்ந்த உரையாடல்; minor canon, திருக்கோயிலின் நாள் வழிபாட்டில் உதவி செய்யும் கிறித்தவ சமய குரு; minor interval, (இசை.) குறைவான இடை நிறுத்தவேளை; minor key, (இசை.) சுரவரிசையில் மூன்றி லொன்றுன ஒலியெழுப்பும் திருகாணி; minor premiss, (அள.) முக்கூற்று முடிபின் சிறுபடி வாசகம்; minor suit, சீட்டாட்டத்தில் சிறுபடிச் சீட்டு வரிசை; minor term, (அள.) முக்கூற்று முடிபின் சிறுபடிப்பதம்.

Minorc'a fowl, *n.* ஸ்பெயின் நாட்டிலிருந்து கொண்டு வரப் பட்ட கருநிறக் கோழிவகை.

mino'rity, *n.* இளம்படிநிலை; வயதுவரா நிலை, இருபத்தொரு வயதுக்குக் குறைந்தநிலை; வயதுவராப் பருவம்; சிறுபான்மையான எண்ணிக்கை; சிறுபான்மைப் பகுதி; சிறுபான்மைக் கட்சி; பாதியிற் குறைந்த எண்; பெரும்பான்மைக் கட்சிக்கு எதிரான சிறுபான்மைக் கட்சியினர்கள்; சிறுபான்மைக் கட்சியினர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள்; சிறுபான்மைக் கட்சியினரின் வாக்குக் குறைபாடு.

Min'otaur, The Minotaur, *n.* கிரேக்க புராண மரபில் அரைக்குமேலே மனிதனுருவும் அரையின் கீழே காளையாகவும் உள்ள அஞ்சுவரு வடிவம்.

min'ster, *n.* கிறித்தவ துறவிமடத் திருக்கோயில்; பெரிய திருக்கோயில்; முக்கிய திருக்கோயில்; தலைத் திருக்கோயில்.

min'strel, *n.* பாணர், நாடு சுற்றிப் பாடல்களை இயற்றிப் பாடி மகிழ்விப்பவர்; (வர.) பாடகர், கூத்தர், பெருமக்களிடம் சென்று பாடிக் கூத்தாடி மகிழ்விப்பவர்.

min'strels, *n. pl.* பாடற் குழுவினர்; நீகிரோ இசைக்குழுவினர்.

min'strelsy, *n.* பாணரின் பாடற்கலை; இசைக்கலை; பாணர் தொகுதி; நாடோடிப் பாடகரின் பாடல் தொகுதி.

mint[1], *n.* அக்கசாலை, நாணயக் கம்பட்டக்கூடம்; புதுப் புனைவுக்குரிய மூல இடம்; பெருஞ்செல்வம்; *v.* நாணயமடி; முத்திரையிடு, புதுப்புனைவு செய், புத்தாக்கம் செய்; சொல்-தொடர் முதலியவற்றைப் புதிதாக உருவாக்கு; (தொ.) mint condition, mint state, புத்தம் புதியநிலை, புதுமைமாறு நிலை.

mint[2], *n.* புதினா வகைக்கீரை; (தொ.) mint sauce, வறுக்கப்பட்ட ஆட்டிறைச்சியோடு உண்ணப்படும் புளிக்காடியும் சர்க்கரையும் சேர்த்த நறுமணக் கொத்துக்கீரை உண்டிவகை.

mint'-mark, *n.* தம்பட்டச் சுவடு, நாணயத்தின் மீது பொறிக்கப்பட்ட அக்கசாலை அடையாளம்.

mint'-master, *n.* அக்கசாலை முதல்வர்.

minuet', *n.* இருவர் நடனவகை; இருவர் நடன இசை; இருவர் நடனச் சந்தமும் பாணியுங்கொண்ட பாட்டு வகை.

min'us, *n.* கழித்தல், குறைப்பு; மறிநிலை அளவை, மறிநிலை எண்; கழித்தற்குறி; *a.* மறிநிலையான, எடுபட்ட, குறைபட்ட; (பே-வ.) எடுபட்ட நிலையிலுள்ள, குறைபட்ட நிலையிலுள்ள; *prep.* குறைக்கப்பட்டு, நீக்கப்பட்டு.

minus'cule, *n.* சிற்றெழுத்து, கீழ்ப்படி வடிவ எழுத்து; *a.* சிறிய; 7-ஆம் நூற்றாண்டில் வளர்ச்சியுற்ற விரைவரி வடிவத்தில் சிறியதான.

min'ute[1], *n.* மணித்துளி, மணி நேரத்தின் அறுபதில் ஒரு கூறு; சிறிதளவு நேரம், குறுகிய வேளை, விரை சிறுபொழுது; கணக்கான நேரம், மயிரிழை பிழையாத கால எல்லை; கலை, கோண அளவில் பாகையின் அறுபதில் ஒரு கூறு; முதல் வரை எழுத்துப்படி, நிகழ்ச்சியேடு; *v.* சரி நுட்பமான நேரம் பார்; பத்திரம் திட்டப்பட்டி ஆகியவற்றை வரைந்துருவாக்கு; நிகழ்ச்சி ஏட்டிற் பதிவுசெய்; (தொ.) minute down, குறித்துக்கொள்.

minute'[2], *a.* மிகச்சிறிய, நுட்பமான; மிகச் சிறுதிறமான, அற்பமான; சரி நுட்பமான, அணுப்பிசகாத.

min'ute-book, *n.* கூட்ட நடவடிக்கைச் சுருக்கக் குறிப்பேடு.

min'ute-gun, *n.* கணத்துக்குக்கணம் சுடவல்ல பீரங்கி.

min'ute-hand, *n.* மணிப்பொறியின் நீண்ட முள், நிமிடங்காட்டும் முள்.

min'utely[1], *a.* நிமிடந்தோறும் நிகழ்கிற.

min'utely[2], *adv.* சரி நுட்பமாய், கூர்நோக்குடன்.

min'ute-man, *n.* (வர.) அமெரிக்கப் புரட்சிகால நாட்டுப் படைவீரன்.

min'utes, *n. pl.* நிகழ்ச்சியேடு, கூட்ட நடவடிக்கைச் சுருக்கக் குறிப்பு.

minu'tiae, *n. pl.* சில்லறை நுணுக்க விவரங்கள்; சரி நுட்ப விவரங்கள்; *sing.* minu'tia.

minx, *n.* சிறுக்கி, தளுக்கி.

mi'ocene, *n.* (மண்.) புத்துயிரூழியின் முற்பிரிவின் மூன்றாங்காற் கூறு; *a.* புத்துயிரூழியின் முற்பிரிவின் மூன்றாங் காலுக்குரிய.

mir, *n.* ருசிய நாட்டுப்புற ஊர்ச் சமுதாயம்.

mi'racle, *n.* தெய்விக அரு நிகழ்ச்சி, அற்புதம்; வியத்தகு நிகழ்ச்சி; குறிப்பிடத்தக்க செயல்; அருஞ் செய்தி; வியத்தக்க பண்புச் சின்னம்; (தொ.) miracle play, இயேசுநாதரின் வாழ்க்கை நாடகம்; திருத்தொண்டர்களின் வாழ்க்கை நிகழ்ச்சி நாடகம்; to a miracle, வியக்கத்தக்க முறையில் சிறப்பாக.

mirac'ulous, *a.* வியக்கத்தக்க, இயற்கை கடந்த, தெய்விக அரு நிகழ்வான.

mirage', *n.* காட்சி மாயம்; கானல் நீர், பேய்த்தேர்; பொய்த் தோற்றம்.

mire, *n.* சதுப்புநிலம், சேறு; தூசி, அழுக்கு; *v.* சேற்றில் அமிழ்த்து; இக்கட்டுக்களில் தொல்லைகளில் சிக்கவை; கறைப்படுத்து; மாசு சிதறித்தெளி; தூய்மை கெடு; பழித்துரை; (தொ.) find oneself in the mire, stick in the mire, இக்கட்டுக்களில் அகப்பட்டுக்கொள், துன்பங்களுள் ஆழ்.

mi'rror, *n.* உருப்பளிங்கு, முகம்பார்க்குங் கண்ணாடி; உண்மையை எடுத்துக்காட்டுவது; பொருளின் மெய்யான விவர விளக்கம்; *v.* கண்ணாடிபோல் நிழலிட்டுக்காட்டு; உரு எடுத்துக்காட்டு.

mirth, *n.* களிப்பு, மகிழ்ச்சி, நகைப்பு, சிரிப்பு, வேடிக்கை, ஆரவார இன்பப் பொழுதுபோக்கு; களியாட்டம், கொண்டாட்டம்.

mirth'ful, *a.* மகிழ்ச்சி நிரம்பிய; உவகையளிக்கிற; களிகிளர்ச்சி வாய்ந்த; களிப்புமிக்க.

mir'y, *a.* சேரான; இழிந்த.

mir'za, (பெர்.) *n.* இளங்கோ, அரசிளஞ்செல்வர் பட்டம்; கோமான், பணித்தலைவர் புலவோர்க்குரிய பட்டம்.

misadven'ture, *n.* அவகேடு; கெடுநிகழ்ச்சி, இடையூறு, பேரிடர்ப்பாடு; தற்செயற் கொலைநேர்ச்சி; (தொ.) homicide by misadventure, (சட்.) தற்செயல் நிகழ்ச்சியால் நேர்ந்த ஆட்கொலை.

misalli'ance, *n.* தகுதிப்பொருத்தமற்ற தொடர்புறவு; பொருந்தாத் திருமணம்.

mis'anthrope, *n.* மனித இனத்தை வெறுப்பவர், மனித சமுதாயத்தை வெறுத்தொதுக்கி வாழ்பவர்.

misanthrop'ic, misanthrop'ical, *a.* மனித இனத்தை வெறுக்கிற; மனித இனத்தில் நம்பிக்கையற்ற.

misan'thropist, *n.* = misanthrope.

misan'thropy, *n.* மனித இன வெறுப்பு, மனித இனம்பற்றிய நம்பிக்கைக் கேடு.

misapplica'tion, *n.* கெடுவழக்கு, தவறான காரியத்துக்கு வழங்குதல்; நிதியைத் தவறாகப் பயன்படுத்துதல்.

misapply', *v.* தவறாகச் செயற்படுத்து, தவறாக வழங்கு.

misapprehend', *v.* தவறாகப் புரிந்துகொள், தப்பெண்ணம் கொள்.

misapprop'riate, *v.* உரிமையின்றிப் பணம் கையாடு, பணமோசடி செய்.

misbecome', *v.* தகுதிக்கு ஏற்காததாயிரு, ஒவ்வாததாயிரு.

misbegott'en, *a.* நெறிதவறிப்பிறந்த, முறைகேடாகப் பிறந்த.

misbehave', *v.* நெறிதவறி நட, தகுதியற்ற தன்மையில் நட.

misbehav'iour, *n.* தவறான நடத்தை.

misbelief', *n.* தவறான சமய நம்பிக்கை; பொய்யான கொள்கை.

misbeseem', *v.* பொருத்தமற்றதாயிரு, தகவற்றதாயிரு.

miscal'culate, *v.* தவருகக் கணக்கிடு; விளைவுகளைத் தவருக மதிப்பிடு.

miscalcula'tion, *n.* தவருன மதிப்பீடு.

miscall', *v.* தவருன பெயரால் கூப்பிடு; தவருகப் பெயரிட்டழை; (பே-வ.) திட்டு.

misca'rriage, *n.* கெடுமுடிவு; தோல்வி; காலமல்லாப் பிள்ளைப்பேறு, கருச்சிதைவு; நீதிமுறைச் சீர்குலைவு, நீதி வழங்குதலில் தவறுதல்; கடித வழங்கீட்டில் ஒழுங்குக்கேடு, சேரிடம் சேராமல் தவறுகை.

misca'rry, *v.* தோல்வியடை; கருச்சிதைவுறு; உரியகாலத்துக்கு முன் கரு வெளியேறப்பெறு; கடிதவகையில் சேரிடம் செல்லாமல் தவறு.

miscas'ting, *n.* கணக்குவகையில் தவருன கூட்டல்; நடிகர்கள் வகையில் உறுப்பினர் பொருத்தக்கேடு.

miscegena'tion, *n.* இனக்கலப்பு, நீகிரோவர் வெள்ளையர் பாலினக்கலப்பு.

miscellan'ea, *n.* இலக்கியக் கதம்பம்.

miscellan'eous, *a.* சில்லறையான; பல்பொருள் கலவையான, பல்கூட்டான; பல ஆட்கள் வகையில் பல்வேறு வகைப்பட்ட இயல்புகளையுடைய.

mis'cellany, *n.* கலவை, கதம்பம்; ஆய்வுக்கட்டுரைகளின் தொகுதி ஏடு; ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு.

mischance', *n.* நேர்வுக்கேடு, கெடுநேர்வு, அவப்பேறு; தீய நிகழ்ச்சி; இடையூறு.

mis'chief, *n.* குறும்பு, குழந்தைகளின் விளையாட்டு நச்சரிப்பு; தொல்லை, தொந்தரவு; நையாண்டி, கேலி, வசை; வன்மம், பகைமை; பொல்லாங்கு, தீங்கு; கேடு, ஊறுபாடு; பிணக்கு, பொல்லாப்பு; (தொ.) do one a mischief, காயப்படுத்து; கேடுசூழ்; கொல்; make mischief, முரண்பாடு ஏற்படும்படி செய், ஒற்றுமை கெடும்படி செய்.

mis'chievous, *a.* தீங்கான விளைவுகளுள்ள, குறும்புவாய்ந்த; விளையாட்டுத்தனமான; நையாண்டி செய்கிற; தொந்தரவு கொடுக்கின்ற.

mis'cible, *a.* கலக்கக்கூடிய.

misconceive', *v.* தவருன கருத்துக்கொள்; தவருகப் புரிந்துகொள்.

misconcep'tion, *n.* தவருன கருத்து, தப்பெண்ணம்.

miscon'duct, *n.* தவருன நடத்தை; ஒழுக்கக்கேடு; கூடா ஒழுக்கம், பிறர்மனை நயப்பு; மேலாட்சிச் சீர்கேடு.

misconstruc'tion, *n.* தவருகப் பொருள்கோடல்.

miscon'strue, *v.* தவருகப் புரிந்துகொள், தவருகப் பொருள்கொள்; பிழைபட உணர்; திரித்துணர்.

miscount', *n.* எண்ணிக்கைத்தவறு; தவருன வாக்கெண்ணிக்கை; *v.* தவருக எண்ணு; வாக்குகளைத் தவருக எண்ணு; தவருகப் பொருள்களை மதிப்பிடு.

mis'creant, *n.* போக்கிரி, வீணன்; கயவன், ஒழுக்கங்கெட்டவன், இழிந்தவன்; பாசண்டன், முரண்சமயக்கோட்பாடுடையவன்; *a.* இழிந்த, சீர்கெட்ட; ஒழுக்கக்கேடான; முரண்சமயக்கோட்பாடுடைய.

miscreat'ed, *a.* கெடுபடைப்பான, சீர்கேடாக உருவாக்கப்பட்ட.

mis-cue', *n.* மேசைக்கோற் பந்தாட்டத்தில் பந்தின் குறிதவறுகை; *v.* மேசைக்கோற் பந்தாட்டத்தில் பந்தின் குறிதவறு.

misdate', *v.* தவருன தேதியிடு.

misdeal', *n.* சீட்டாட்டத்தில் தவருன சீட்டுப்பங்கீடு; *v.* சீட்டாட்டத்தில் சீட்டுக்களைப் பங்கீடு செய்வதில் தவறு செய்.

misdeed', *n.* குற்றச்செயல்; தவறு; தீச்செயல், பழிச்செயல், குற்றம்.

misdeem', *v.* (செய்.) தவருன கருத்துக்கொள்; ஒன்றை வேருென்ருகத் தவருகக்கொள்; தவருக முடிவுசெய்.

misdemean'ant, *n.* குற்றக்கைதி, தவருன நடத்தையுடையவராகத் தண்டிக்கப்பட்டவர்; குற்றவாளி, நெறிதவறிய குற்றஞ் செய்தவர்.

misdemean'our, *n.* (சட்.) தவருன நடத்தை; சிறுகுற்றம்; சட்டப்படி குற்றஞ் சாட்டக்கூடிய தீச்செயல்.

misdirect', *v.* தவருன வழியிற் செலுத்து; ஆளைக் கெடுநெறிப்படுத்து; அடியை இலக்குத்தவறி இயக்கு.

misdo'ing, *n.* குற்றம், தவறு.

misdoubt', *v.* ஐயுறு, ஐயப்பாடு கொள்; நம்பிக்கை கொள்ளாதிரு; அவநம்பிக்கையுறு.

mise, *n.* (வர.) உடன்பாட்டு ஒப்பந்தம்; (தொ.) Mise of Lewes, இங்கிலாந்தில் 1264-இல் மூன்ரும் ஹென்றி அரசனுக்கும் பெருமக்களுக்கும் இடையே நிகழ்ந்த உரிமை ஒப்பந்தம்.

mise en scene, (பிர.) *n.* நடிக்கப்பட்ட நாடகத்தின் காட்சித்திரை முதலிய உடைமைகள், நிகழ்ச்சியின் சூழ்நிலைகள்.

mis'er[1], *n.* கஞ்சன், இவறன்மாலையன், உலோபி; பேராசை உடையவன்.

mis'er[2], *n.* கிணறு தோண்டுவதற்கான துளையிடும் கருவி.

mis'erable, *a.* துயர்மிகுந்த; மகிழ்ச்சியற்ற; அவப்பேருன; இரங்கத்தக்க; வெறுக்கத்தக்க, தாழ்வான, இழிந்த; கஞ்சத்தனமான; ஏழ்மையான.

miserer'e, (ல.) *n.* விவிலிய நூலில் ஐம்பத்தொன்ருவது கீதம்; மன்னிப்புக் கோரும் இரங்கற்பாடல்.

mise'ricord, *n.* சலுகைக்கூடம், கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதற்குரிய துறவிமட அறை; மென்கூர் உடைவாள், வேதனை நீக்கி உயிர்போக்குவதெனக் கருதப்பட்ட குத்துவாள்; சாய்மடியிருக்கை, திருக்கோயிலில் நிற்கும்போதும் சார்பளிப்பதற்காக மறிநிலையில் மடக்குடைய இருக்கை.

mis'erly, *a.* கஞ்சனை ஒத்த; இவறலுடைய, பிசுணித்தனமான.

mis'ery, *n.* இடும்பை, ஆழ்துயர்நிலை, அவலநிலை, இரங்கத்தக்க சூழல்; கையாறு; சீட்டாட்டத்தில் எந்தப் பிடியும் பிடிப்பதில்லை என்ற அறிவிப்பு.

misfeas'ance, *n.* (சட்.) நெறிதிறம்பல், சட்டப்படியான அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்துதல்.

misfire', *n.* விசைத் தவறு, பீரங்கி உந்துவண்டி ஆகியவற்றில் பொறியின் செயலிழப்பு; *v.* பீரங்கி-உந்துவண்டி ஆகியவற்றின் வகையில் இயங்கத்தவறு, விசையிழந்துபோ.

misfit', *n.* பொருத்தமின்மை; இசைவுப்பொருத்தமற்றது, உடை முதலியவற்றின் வகையில் ஏறுமாருனது; இடத்துக்கு ஏலாதவர்.

misfort'une, *n.* அவப்பேறு; வாய்ப்புக்கேடு, இன்னல், இடையூறு, இடர்ப்பாடு.

misgive', *v.* ஐயங்கொள்ளுவி, நம்பிக்கையிழக்கச் செய்; அச்சங் கொள்ளுவி.

misgiv'ing, *n.* அவநம்பிக்கை உணர்ச்சி, ஐயுறவுணர்ச்சி, அச்ச உணர்வு.

misgo'vern, *v.* மோசமாக ஆட்சிசெய்.

misguide', *v.* தப்புவழிச் செலுத்து; தவருன கருத்துக் கொள்ளுவி; தவருக நடக்கும்படி செய்.

mishan'dle, *v.* தவருகக்கையாடு, முரட்டுத்தனமாகக் கையாளு, தீங்கான தன்மையில் நடத்து.

mishap', *n.* அவப்பேருன தற்செயல் இடர், வாய்ப்புக்கேடு, எதிர்பாரா இடையூறு.

mishear', *v.* தவருகக்கேள், அரைகுறையாகக்கேள்.

mis'hit, *n.* தவருன அடி, பிழைபட்ட அடி; *v.* பந்தைத் தவருக அடி.

mish'mash, *n.* தாறுமாருன கலவை.

mish'na, mish'nah, *n.* யூதவேதக் கட்டளைத்தொகுதி

mish'nic, *a.* யூதவேதக் கட்டளைத் தொகுதி சார்ந்த.

misinform′, *v.* தவருன செய்தி தெரிவி, மெய்ம்மை பிழைபட உரை ; தகவல் திரித்துக்கூறு ; தப்புவழி காட்டு.

misinterp′ret, *v.* தவருகப் பொருள் விளக்கு ; தவருகப் பொருள்கொள் ; தவருக உய்த்துணர்.

misjudge′, *v.* தவருகத்துணி ; தவருக மதிப்பிடு, தவருன கருத்துக்கொள்.

mislay′, *v.* தவருன இடத்தில் வை ; வைத்த இடத்தை மற.

mislead′, *v.* தப்புவழி காட்டு ; தவருன தூண்டுதலளி, நெறி தவறுவி ; தவருன எண்ணம் தோற்றுவி.

mislike′, *v.* வெறு.

misman′age, *v.* தவருக நடத்து, திறமையற்ற தன்மையில் செயலாற்று; காரியத்தைக் கெடு.

misname′, *v.* தவருன பெயரால் அழை ; பொருத்தமற்ற பெயரிடு, பொருந்தாப் பெயரிட்டழை.

misnom′er, *n.* தவருன சொல்வழக்கு, தவருக வழங்கும் பெயர்.

misog′amist, *n.* திருமண வெறுப்பாளர்.

misog′amy, *n.* திருமண வெறுப்பு.

misog′ynist, *n.* பெண்ணின வெறுப்பாளர்.

misol′ogist, *n.* பகுத்தறிவை வெறுப்பவர், கல்வியறிவை வெறுப்பவர்.

misol′ogy, *n.* ஆராய்ச்சியறிவின்மீது வெறுப்பு, கல்வியறிவு வெறுப்பு.

misone′ism, *n.* புதுமை வெறுப்பு.

misone′ist, *n.* புதுமை வெறுப்பாளர்.

mis′pickel, *n.* உள்ளியக் கந்தகைத் தாளகம்.

misplace′, *v.* தவருன இடத்தில் வை ; தவருனவரிடத்தில் கொடுத்து வை; அன்பு-நம்பிக்கை முதலியவற்றைத் தகுதியற்றவரிடம் வைத்திரு; சொல்-செயல் முதலியவற்றை இடம்-காலத் தகுதிகருதாது பயன்படுத்து.

misprint′, *n.* அச்சுப்பிழை ; *v.* பிழையாக அச்சிடு.

mispri′sion, *n.* (சட்.) சதித்திட்டத் தகவல் தெரிவியாக் குற்றம்.

misprize′, *v.* ஏளனஞ் செய்; மதிக்கத்தவறு, பாராட்டாதிரு.

mispronounce′, *v.* தவருக ஒலி, பிழைபட உச்சரி.

misquote′, *v.* தவருக மேற்கோள் காட்டு, மேற்கோளைப் பிழைபட எடுத்துக்கூறு.

misread, *v.* தவருகப்படி, தவருகப் புரிந்துகொள்.

misrepresent′, *v.* தவருக எடுத்துரை, திரித்துக்காட்டு, தவறுபடக்காட்டு, பொய் விவரம் அளி.

misrule′, *n.* ஆட்சிக்கேடு, மோசமான ஆட்சி, கொடுங்கோன்மை ; (தொ.) Abbot of Misrule, Lord of Misrule, Master of Misrule, (வர.) கிறிஸ்துமஸ் திருவிழாக் களியாட்டக் கூத்துக்களின் தலைவர்.

miss[1], *n.* குறி பிழைப்பு ; தப்பவிடுகை ; வழு, சறுக்கல் ; சிறு தோல்வி ; கையிழப்பு, செயல்தவறு ; *v.* இலக்குத் தவறு ; தப்பவிடு, தவறவிடு ; தவிர், செய்யாதுவிடு ; கையிழ ; வழுக்கு, சறுக்கு ; இல்லாக்குறை உணர் ; சிறுபிழையால் தோல்வியணுக்க நேர் ; (தொ.) give a miss, மேசைக்கோற் பந்தாட்டத்தில் பந்தை வேண்டுமென்றே அடிக்காமல் இருந்த இடத்தில் இருக்கவிடு ; give something a miss, தவிர், விலக்கு, புறக்கணி, விட்டுவிடு ; கைவிடு ; miss fire, பீரங்கி-துப்பாக்கி வகையில் இயங்கத்தவறு ; நோக்கம் நிறைவேறப் பெருமல் தோல்வியுறு ; miss out, எழுதுவதிலும்-படிப்பதிலும் இடையேயுள்ள பகுதியை விட்டுவிடு ; miss stays, (கப்.) பாலக்கயிறுகள் ஒன்றிலிருந்து மற்றென்றிற்குத் தாவுவதில் இடையே தவறு ; miss the bus, உந்துவண்டி தவறவிடு ; கிடைத்த வாய்ப்பினை இழ.

miss[2], *n.* கன்னியின் பெயர்ச்சுட்டு அடைமொழி ; சிறுமி, சிறுபெண், பள்ளிப்பெண்.

miss′al, *n.* கிறித்தவ ஆண்டு வழிபாட்டுத் திருமுறை ஏடு ; ஒண்ணிற ஒப்பனைவாய்ந்த ரோமன் கத்தோலிக்க வழிபாட்டுப் புத்தகம்.

miss′el, miss′el-thrush, *n.* புல்லுருவிக் கொட்டைகளை உணவாகக்கொள்ளும் இன்னிசைப் பறவை வகை.

mis-shap′en, *a.* வடிவமைதியற்ற, அருவருப்பான வடிவமுடைய, அழகற்ற.

miss′ile, *n.* எறிபடை, ஏவுகணை ; *a.* இயந்திரத்திலிருந்து எறிவதற்குரிய; துப்பாக்கியிலிருந்து வேட்டு விடுவதற்குரிய.

miss′ing, *a.* காணப்படாத ; தேவைப்படுகின்ற ; இடத்தில்லாத ; (தொ.) missing link, விட்ட கண்ணி, தொடரின் இடையிணைப்புக்குரிய கூறு ; (வில.) மனிதனுக்கும் மனிதக் குரங்குக்கும் இடையிணைப்பாயிருந்ததாகக் கருதப்படும் இடையினம் ; the missing, காணப்படாத படைவீரர்கள், கொல்லப்பட்டவர்கள்-காயமடைந்தவர்கள் என்று அறியாமல் காணுமற்போன படைவீரர்கள்.

mi′ssion, *n.* தூதுக்குழு ; சமயப்பரப்புக்குழு; சமயப்பரப்புத் துறை ; சமயப்பரப்புக் களம் ; சமயப்பரப்புப் பயிற்சிமுறை ; மேற்கொண்ட பணி ; குறிக்கொண்ட அரசியல் செயல் முறைத்திட்டம் ; குறிக்கோள் பணித்திட்டம் ; வாழ்க்கைப் பணித்திட்டம் ; இறையருட் கட்டளைப்பணி.

mi′ssionary, *n.* சமயப்பரப்பாளர் ; சமயப்பரப்பூழியர் ; சமயப் பணியிற் செல்பவர் ; நீதித்துணைவர், குற்றவாளிகளை அல்லது மனுவர்களை வழிப்படுத்தி உதவிசெய்வதற்கான காவல் நீதிமன்றத்தொடர்புடைய பணியாளர் ; *a.* சமயப் பரப்புப் பணி அமைப்பைச் சார்ந்த, சமயப்பரப்புப் பணி அமைப்போடு தொடர்புகொண்ட.

mi′ssionary-box, *n.* சமயப்பணி அமைப்புக்கான நன்கொடைப்பெட்டி.

mi′ssioner, *n.* சமயப்பரப்பாளர், சமயப்பணி அமைப்பு ஊழியர் ; திருக்கோயில் ஆட்சிவட்டாரச் சமயப்பணி அமைப்புப் பொறுப்பாளர்.

miss′is, *n.*=mistress.

miss′ive, *n.* மடல் ; பணிமுறை முடங்கல் ; சமயவட்டத் தேர்வுமுடிவு பற்றிய அரசர் நிருபம் ; *a.* சமயவட்டத் தெரிவுபற்றி வட்டக்கழகத் தலைவர்க்கு அரசனுல் அனுப்பப்பட்ட; (தொ.) letter missive, letters missive, சமயவட்டத் தேர்வுமுடிவு பற்றிய திருவோலை.

mis-spell′, *v.* தவருக எழுத்துக்கூட்டு.

mis-spend′, *v.* தவருகச் செலவுசெய், வீண் செலவுசெய்.

mis-state′, *v.* தவருகக்கூறு, பிழைபடக்கூறு.

miss′us, *n.*=mistress.

miss′y, *n.* கன்னியைப் பற்றிய செல்ல வழக்கான விளிக் குறிப்பு.

mist, *n.* மூடுபனி; பார்வையை மறைக்கும் படலம்; *v.* மூடுபனி போன்று மறை ; மூடுபனி போன்று மறைப்புறு ; (தொ.) Scotch mist, ஸ்காத்லாந்து மலைகளில் அடிக்கடி பெய்கிற நுண்துளித் தூறல்.

mistake′, *n.* தவறு, குற்றம் ; தப்பெண்ணம் ; தவருன பொருள்கோள்; *v.* தவருகப் பொருள்கொள், தவருகக் கருது; மாருகக் கருது ; ஒன்றை மற்றென்ருகத் திரித்துணர் ; ஒருவரை மற்றெருவராக மாறுபடக் கருதிக்கொள் ; தவறுசெய் ; தவருன மதிப்பீட்டுக்கு ஆட்படுத்து.

mistake′n, *a.* தவருகக் கொள்ளப்பட்ட.

mis′ter, *n.* (சு-வ. Mr.) திருவாளர், பட்டம்பதவியற்ற பொதுநிலை ஆள் சுட்டு விளிக்குறிப்பு ; பெயர்முன் சுட்டு விளிக்குறிப்பு; பதவிப் பெயர்முன் சுட்டுவிளிக்குறிப்பு; கணவன்நிலைச்சுட்டு ; *v.* திருவாளர் என்று குறிப்பிட்டு அழை.

mis′tigris, *n.* சீட்டாட்ட வகையில் வெறுஞ்சீட்டு.

mistime′, *v.* காலம் தவறிக்கூறு, பருவம் தவறிச் செய்.

mis′tletoe, *n.* புல்லுருவி.

mis'tral, *n.* நிலநடுக்கடற் பகுதியின் குளிர்பருவ வடமேற்குக் காற்று.

mistranslate', *v.* தவறாக மொழிபெயர்.

mistreat', *v.* தவறாக நடத்து; மோசமாக நடத்து.

mis'tress, *n.* முதல்வி; தலைவி; குடும்பத்தலைவி; அரண்மனைத் தனியரங்கத் தலைவி; முழுநிறைத் தன்னுண்மையுடையவர்; ஆட்சிவலவர்; அறிவனுபவ நிறைவுடையவர்; ஆடவர் காதற்பரிவுக்குரிய அணங்கு; காமக்கிழத்தி, மணைவியாக உடனுறை வாழ்க்கை நடத்துபவள்; பள்ளி ஆசிரியை; பாட ஆசிரியை; கலைத்துறை ஆசிரியை; திருவாட்டி, மணமான பெண்டிர் சுட்டுவிளிக்குறிப்பு அடைமொழி; (சு. வ. Mrs.) (தொ.) Mistress of the Robes, அரண்மனை ஆடையணியரங்கத் தலைமைப் பெருமாட்டி.

mistri'al, *n.* முறைதவறிய வழக்கு விசாரணை.

mistrust', *n.* நம்பிக்கையின்மை, அவநம்பிக்கை; *v.* அவநம்பிக்கை கொள், ஐயப்படு.

mis'ty, *a.* மூடுபனி சார்ந்த, மூடுபனி சூழ்ந்த; உருவகையில் தெளிவில்லாத; விளங்காத, புரியாத, ஐயத்துக்கிடமான, தெளிவற்ற.

misunderstand', *v.* தவறாகப் பொருள்கொள்; சொற்களை அல்லது செயல்களைப் பிழைபடப் புரிந்துகொள்.

misunderstand'ing, *n.* தவறான பொருள்கோள்; தப்பெண்ணம், நட்பிடைப் பிணக்கு.

misuse', *n.* கெடுவழக்கு, தவறான பயனீடு; தவறான நோக்கங்களுக்கும் பயன்படுத்துகை; *v.* தவறாக வழங்கு, தவறான முறையில் பயன்படுத்து, தவறான நோக்கத்திற்குப் பயன்படுத்து; மோசமாக நடத்து.

mite, *n.* சிறு செப்புக்காசு; பிளாண்டர்ஸ் (Flanders) மாநிலத்தின் பழைய சிறு செப்புத்துட்டு; (பே-வ.) ஆங்கில நாட்டு அரைக்காசு; நன்கொடையில் சிறு துணைக்கூறு; சிறுதுகள்; தூசு; சிறிதளவு; சிறுபொருள்; மதலை, குழந்தை; சிறுபூச்சி வகை.

Mith'ra, Mith'ras, *n.* பண்டைப் பாரசிகச் சமய மரபில் கடவுள்; பகலவன், செங்கதிர்த்தெய்வம்.

mithrid'atize, *v.* சிறிதுசிறிதாக நஞ்சுண்டு நச்சுக் காப்பீடு செய்துகொள்.

mit'igate, *v.* மட்டுப்படுத்து, தணி, அமைதிப்படுத்து; நோவாற்று; தண்டனையின் கடுமையைக் குறை.

mitos'is, *n.* (உயி.) உயிர்மப் பிளவியக்கம், உயிரணு நுண்ணிய இழைகளாகப் பிரியும் செய்கை.

mitrailleuse', *n.* பல்குழல் பீரங்கி வகை, ஒரேகாலத்தில் அல்லது ஒன்றன் பின்னொன்றாகத் தொடர்ந்து சுடும் பல குழல்களுள்ள பீரங்கி.

mit'ral, *n.* நெஞ்சுப்பையின் சவ்வடைப்புக்களில் ஒன்று; *a.* மாவட்டச் சமயமுதல்வரின் தொப்பி சார்ந்த; மாவட்டச் சமய முதல்வரின் தொப்பிபோன்ற; (தொ.) mitral valve, நெஞ்சுப்பையின் அடைப்புக்களில் ஒன்று.

mi'tre[1], *n.* மாவட்டச் சமயமுதல்வரின் நீண்ட நடுப்பிளவுடைய தொப்பி; *v.* மாவட்டச் சமயமுதல்வருக்குரிய தொப்பி அணிவி; மாவட்டச் சமயமுதல்வர் பதவி அளி.

mi'tre[2], *n.* மரத்துண்டுகளின் செங்கோண இணைப்பு; அரைச் செங்கோணம், 45 பாகையுள்ள கோணம்; *v.* துண்டுகளின் இணைவாயின் சாய்வு 45 பாகை கோணம் படும்படியாக இணை; முனைகளுக்கு 45 பாகைக் கோணச் சாய்வுதளங் கொடு.

mi'tre-block, mi'tre-board, mi'tre-box, *n.* மரத்தைக் குறிப்பிட்ட கோணத்தில் அறுப்பதற்கு இரம்பத்துக்குத் துணைசெய்யும் அமைவு.

mi'tre-wheels, *n. pl.* சாய் பற்சக்கரங்கள், ஊடச்சுக்கு 45 பாகைச் சாய்வாக உள்ள பற்களையுடைய சக்கரங்கள்.

mi'tring-machine, *n.* மர முனைக்கு 45 பாகைச் சாய்வு கொடுப்பதற்கான இயந்திரம்.

mitt, *n.* அடிக்கையுறை, விரல்களை விட்டுவிட்டு கையினையும் மணிக்கட்டினையும் மூடுவதற்காக மகளிர் அணியும் பின்னல் கையுறை.

mitt'en, *n.* ஓரக்கையுறை, அடிக்கைக்கும் பெருவிரலுக்கும் மட்டும் காப்பளிக்கும் வேலிசெப்பனிடுவோரின் கையுறை வகை; (தொ.) get the mitten, காதலர் வகையில் கை துறக்கப்பெறு; பதவி முதலியவற்றினின்றும் நீக்கப்பெறு; give the mitten, காதலரைக் கைதுறந்துவிடு.

mitt'imus, *n.* சிறை சேர்ப்பாணை, சிறைக்கு அனுப்புவதற்கான ஆணை; (பே-வ.) பதவியினின்று நீக்கம்.

mix, *v.* கலந்திணைவி, சேர்த்திணை, ஒன்றாகக் கூட்டு; கலவையாக்கு; மருந்து கல; கலப்புறு, கூடு, இணை, ஒன்றுசேர்; கூடியுறவாடு; கலக்கவிடு; கலந்து குழப்பமுண்டுபண்ணு; இனக்கலப்புச் செய்; இனக்கலப்புறு; திரைப்படத்துறையில் இருபட வரிசைகளை ஒன்றுபட இணை; (தொ.) be mixed up, தொடர்பில் மாட்டிக்கொண்டிரு, சிக்கிக் கொண்டிரு; mix up, நன்றாகக் கலக்கு; மனத்தில் ஒன்றுபடக் குழப்பு; mix well, ஒத்துப்போ.

mixed, *a.* கலப்பான; ஈரினமான; பல்வகையான, வெவ்வேறு இயல்புகள் இணைந்த; பல கூறுகள் கலந்துள்ள; கூட்டவகையில் பொறுக்கியெடுக்கப்படாத; சந்தேகப் பேர்வழிகள் கொண்ட; (பே-வ.) மனங்குழம்பிய, தடுமாற்ற முற்ற; ஆண்பெண் இருபாலாருக்குமான; (தொ.) mixed mathematics, கலவைக் கணக்கியல், பயன்படு கணக்கியல்.

mix'en, *n.* (பே-வ.) எருமேடு, உரக்குவியல்.

mix'er, *n.* கலப்பவர்; கலப்பதற்கான கருவி; கலக்க உதவும் பொருள்; கலக்கவிடும் பொருள்; பொருள்களைக் கலப்பதற்கான கலம்; எத்தகையவர்களோடும் எளிதாகப் பழகுபவர்; குரலிசைவமைவு, பேசும் படங்கள் எடுக்கையில் வெவ்வேறு ஒலிகள் இணைவதை நெறிப்படுத்துவதற்கான அமைவு; (தொ.) bad mixer, (பே-வ.) மற்றவர்களுடன் ஒத்துப் போகாதவர்; good mixer, (பே-வ.) மற்றவர்களோடு ஒத்துப்போகிறவர்.

mix'ture, *n.* கலப்பு, தனிப்பண்புமாறா இயற்கூட்டு; கலவை; கலக்கப்பட்ட பொருள்; மருந்துக்கூட்டு; உள்வெப்பாலையில் வெடிக்கும் ஆற்றலாக உள்ள காற்றுடன் கலந்த ஆவி எண்ணெய்.

miz'en, *n.* = mizzen.

Miz'pah, *n.* விடைபெறு வாசகம்; (தொ.) Mizpah ring, காதற் சின்னக் கணையாழி.

mizz'en, *n.* பின்புறக் கப்பற்பாய்; (தொ.) mizzen yard, பின்புறக் கப்பற் பாய்மர விட்டம்.

mizz'en-mast, *n.* பின்கோடிக் கப்பற்பாய்மரம்.

mizz'en-sail, *n.* = mizzen.

miz'zle, *n.* மழைத்தூறல்; *v.* மழை தூறு.

mnemon'ic, *n.* நினைவூட்டு வாசகம்; *a.* நினைவிருத்தற்குத் துணைசெய்கிற.

mnemon'ics, *n. pl.* நினைவாற்றல் பேணுங்கலை; நினைவிருத்தும் ஆற்றலைப் பெருக்குவதற்கான முறை.

mnemotech'nic, *a.* நினைவிருத்தற்குத் துணைசெய்கிற.

mnemotech'ny, *n.* = mnemonics.

mo'a, *n.* மரபற்றுப்போன நியூசிலந்து நாட்டுப் பெரும்பறவை வகை.

moan, *n.* முனக்கம், புலப்பம், வேதனைக்குரல்; *v.* ஏங்கு; இரங்கியழு; புலம்பிக்கொண்டே பேசு; கருதி வருந்து; நினைந்து புலம்பு.

moat, *n.* அகழ், அரண்சூழ் கிடங்கு; *v.* அகழெனச் சூழ்.

mob, *n.* மக்கட்கும்பல்; கொந்தளிக்குங் கூட்டம், கலகக் கும்பல்; கீழ்மக்கள் வகுப்பு; கீழினம்; பலவகை மக்கள் திரள்; *v.* திரண்டு நெருங்கித்தாக்கு, ஆரவாரித்துச் சூழ், திரண்டெழுந்து தொல்லைகொடு; கும்பலாகத்திரளு; (தொ.) mob law, பெருவாரியான மக்களின் வன்செயல்முறை; swell mob நாகரிகமாக உடுத்தியுள்ள முடிச்சுமாறித் திருடர் கும்பு.

mob'-cap, *n.* மகளிர் தலைமுழுவதையும் மூடும் மனையகக் குல்லாய்வகை.

mob'ile, *a.* இயங்குகிற; அசையக்கூடிய; நிலையாகப் பொருத்தப் பெற்றிராத; தங்குதடையற்று அசைவதற்குரிய; மிக எளிதில் மனம் மாறுதலடைகிற; படைப்பகுதி வகையில் எளிதில் இடம் விட்டு இடம் பெயரக்கூடிய.

mobil'ity, *n.* அசையும் தன்மை; எளிதில் இயங்கும் தன்மை; இடம் பெயர்வாற்றல்.

mob'ilize, *v.* அசையும்படி செய், புடைபெயர்வி; புழக்கத்துக்குக் கொண்டு வா; படைதிரட்டு; போருக்கெனப் படைகளை ஆயத்தமாக்கு.

moboc'racy, *n.* கும்பலாட்சி, கும்பலாதிக்கம்.

mocc'asin, *n.* பதனிட்ட மான்தோல் செருப்பு வகை.

mo'cha [1], *n.* மணிக்கல் வகை.

mo'cha [2], **Mocha coffee,** *n.* மிகநேர்த்தியான காப்பி.

mock, *n.* ஏளனம், நையாண்டி; ஏளனச்செயல்; ஏளனத்துக்குரியது; நகையாடத்தக்கது; போலி; கேலி; இகழ்ச்சி; *a.* நையாண்டிப் போலியான; பாசாங்கான; *v.* ஏளனத்துக்கு ஆளாக்கு; ஏளன நையாண்டி செய்; கிண்டல் செய்; போலி செய்து நகையாடு; நடிப்புப் போலிசெய்; போலி நடிப்பு நடித்துக்காட்டு; நங்கு காட்டு, நடித்துக்காட்டிக் கேலிக்கு ஆளாக்கு; எதிர்த்துக் கேலி நகையாடு; ஏய்த்துக் கொக்கரி; அலைக்கழிப்பூட்டு; (தொ.) mock duck, mock goose, வாத்திறைச்சிபோல் தோன்றும் வண்ணம் சமைக்கப்படும் பன்றி இறைச்சி; mock moon, திங்களின் அகல்வட்டத்தில் ஒளி காலும் பகுதி; mock sun, ஞாயிற்று அகல்வட்டத்தில் காணும் புள்ளிவட்டம்; mock turtle soup, ஆமை இறைச்சிக் குழம்புபோல் தோன்றும் வண்ணம் சமைக்கப்படும் கன்றின் தலையிறைச்சிக் குழம்பு.

mock'ery, *n.* இகழ்ச்சி, ஏளனம்; அவமதிப்பு, நிந்தை; ஏளனத்துக்குரிய பொருள்; இகழ்வதற்கான வாய்ப்பு; போலி மாதிரிப்படிவம்; கேலிக்கிடமான வெற்றுச்செயல், அவமதிப்பான வீண்செயல்.

mock'-hero'ic, *n.* வீரகாவிய நடையின் நையாண்டிப்போலி; *a.* வீரகாவிய நடையின் நையாண்டிப் போலியான.

mock'ing-bird, *n.* பிற பறவைகளைப்போல் ஒலியெழுப்பும் அமெரிக்க பாடும் பறவை வகை.

mock'-up, *n.* செய்யக்கருதியுள்ள இயந்திரத்தின் தோற்றத்தைக் காட்டும் மாதிரிப்படிவம்; இயந்திரப் பகுதியின் மாதிரிப்படிவம்.

mod'al, *a.* முறைக்குரிய, வகைதுறை சார்ந்த; (இலக்.) வினைச்சொல்லின் பாங்கியல் சார்ந்த; இடைச்சொல் வகையில் வரைமுறை குறிக்கிற; (தொ.) modal legacy, பயன்படுத்தப் படவேண்டிய முறைபற்றிய குறிப்புக்களுடன்கூடிய இறுதி விருப்ப ஆவணம்; modal proposition, (அள.) பயனிலைப் பொருளுக்குத் தனிமுறை எல்லைவரையறை செய்யும் கருத்து வாசகம்.

mode, *n.* முறை, செயல்வகை; வழக்கம், வழக்காற்றிலுள்ள பாணி; காலப்பாங்கு; (இசை.) சுரவரிசைத்திட்டம்; (அள.) கருத்து வாசகத்தின் பயனிலைப்பொருள் எல்லை வரையறையுடைய தன்மை.

mod'el, *n.* உருப்படிவம், மாதிரிச்சட்டம்; முன் மாதிரி எடுத்துக்காட்டு, நிறையுயர் மாதிரியானது, பின்பற்றத்தக்க நிறைசால்பாளர்; மூலமுதல், முன்னோடி உருமாதிரி; கட்டளை மாதிரி; கலைஞர்க்கு உருமாதிரியாயமைபவர்; சரி எதிர் படிவம்; சிற்றுருமாதிரிப்படிவம்; அளவொவ்வாது உரு ஒத்தபடிவம்; ஆக்கப்பொருள் மாறுபட்ட முற்படிவம்; மாதிரிப் பொம்மையுரு, அறுவைக்கடைகளில் ஆடையணி மணிகள் இட்டு விளம்பரப்படுத்தப்படுவதற்குரிய உடை தாங்கியுரு; *a.* முன் மாதிரியான; பின்பற்றத்தக்க; பார்த்துப் பின்பற்றி இயற்றுவதற்குரிய; பார்த்துத் தீட்டுவதற்குரிய; *v.* படிவம் உருவாக்கு; கட்டளைப்படுத்து, ஆவண முதலியவற்றிற்கு உரிய உருவங் கொடு; முன்மாதிரியாகக்கொள்; பார்த்து உருச்சமை; ஓவியரின் காட்சி மாதிரியாகச் செயலாற்று; காட்சி மாதிரியான உருநிலைப்படிவங் கொள்; (தொ.) The New Model, (வர.) இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர்க்காலத்தில் (1644-45-இல்) மாமன்றப் படையினைத் திருத்தியமைப்பதற்காக வகுக்கப்பட்ட திட்டம்; working model, இயங்கு மாதிரிப்படிவம், இயந்திரத்தைப் போலவே இயங்கிக்காட்டுகிற உருப்படிவம்.

mod'ena, *n.* திண்சிவப்பு நிறம்.

mod'erate, *n.* மிதவாதி, அரசியலில் மட்டியலான கொள்கை உடையவர்; *a.* மட்டான, மிதமான, முனைத்த நிலைகளைத் தவிர்க்கிற; நடையில் அளவோடிருக்கிற; பேச்சில் மட்டளவான; உருவில் நடுத்தரமான; பண்பில் இடைநிலைப்பட்ட; *v.* மட்டாக்கு; முனைப்புத்தணி, அடக்கு; சீற்றம்-புயல் முதலியவற்றில் கடுமையைக் குறைத்துக்கொள்; சரிமட்டாக்குநராகச் செயலாற்று; சமநிலைப்படுத்தும் பொறியாகச் செயற்படு; (தொ.) moderate price, மிதவிலை.

modera'tion, *n.* மட்டியல் நிலை; முனைப்பின்மை; நடுநிலைத் தன்மை; சீராக்குதல்; தணிப்பு, அடக்கம்; (தொ.) in moderation, மட்டாக, மிதமான அளவுக்கு, நிதானமாக.

modera'tions, *n. pl.* ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக இளங் கலைஞர் (B. A.) பட்டத்துக்கான முதல் பொதுத்தேர்வு.

mod'erator, *n.* இடையீட்டாளர்; நடுவர்; தலைமை அலுவலர்; பல்கலைக்கழகங்களில் இளம் புலமைப் பட்டத்துக்கான முதல் தேர்வினைக் கண்காணிக்கும் அலுவலர்; கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சிறப்புத்தேர்வு நடத்தும் தலைவர்; கிறித்தவக் கிளைச்சமயத் திருச்சபை மாற்றங்களில் தலைமை வகிப்பவர்; (தொ.) moderator lamp, எண்ணெய் ஒழுக்கினை ஒழுங்குபடுத்துவதற்கான அமைவுடன்கூடிய விளக்கு.

mod'ern, *n.* தற்காலத்தவர்; *a.* தற்காலத்திய; அண்மைக் காலத்துக்குரிய, புது நாகரிகப் பண்பாடு வாய்ந்த; புதுப் பாணியில் அமைந்த; பழங்காலத்ததாயிராத; (தொ.) modern school, தற்காலத்திய மொழிகள் கற்பிக்கப்படும் பள்ளி; modern side, தற்கால மொழிகள் போதனைப்பிரிவு.

mod'ernism, *n.* புதுமைப்பாங்கு; புதுக்கருத்துக் கோட்பாடு முறை; தற்காலப் பாணி, தற்கால வழிமுறை; சமய நம்பிக்கைத்துறையில் புது மனப்பான்மை; சொல்தொடர் வகையில் தற்காலத்திய வழக்காறு.

mod'ernize, *v.* தற்கால வழக்குக்கேற்றதாக்கு.

mod'est, *a.* தன்னடக்கமுடைய; பணிவுநயம் வாய்ந்த; கூச்சமுடைய, பெண்கள் வகையில் நாணமுடைய; பணிவடக்கமுள்ள; நடைத் தூய்மையுடைய; மட்டியலான; வரம்புமீறாத, கட்டுப்பட்ட; அளவான; ஆரவாரமற்ற, எளிய.

mod'esty, *n.* நாணம்; தன்னடக்கம்; பணிவு நயம்; பெண்டிர் ஆடையின் கிழ்க்கழுத்தைச் சிறிதே மூடியுள்ள பின்னல் வேலைப்பாட்டுத் துகில்.

mod'icum, *n.* சிறிதளவு, துணுக்கு.

modifica'tion, *n.* மாற்றியமைத்தல்; உருத்திரிபு, உரு மாற்றம்; சிறு வேறுபாடு, மாறுபாட்டின் சிறுவிளைவு; திருத்தமைவு; திருந்திய நிலை; திருந்திய உருவம்; (உயி.) சூழ்நிலை காரணமாக இலைவகைகளில் தோன்றும் சிறுதிற மாறுதல்.

mod'ify, *v.* முனைப்பழி; கடுமையைக்குறை; விசைதணி; மட்டுப்படுத்து; ஒருசார் மாறுபாடு செய்; சிறிது மாற்றியமை; (இலக்.) சொற்பொருள் வரையறு; அக ஒத்திசைவுத் திறன் விளைவாகச் சொல்லின் உயிரொலியில் திரிபு உண்டுபண்ணு.

modill'ion, *n.* (க-க.) கொரிந்திய (Corinthian) பாணி எழுதகத்தைத் தாங்கும் ஒப்பனைமுட்டு.

mod'ish, *a.* நாகரிகமான, புதுப்பாங்கான.

modiste', *n.* உடை தைப்பவர்.

mod'ulate, *v.* ஒழுங்குபடுத்து, சரிப்படுத்து; இசைவி; குரலை ஏற்றியிறக்கிப் பேசு; (இசை.) சுரபேதம் பண்ணு, இசைத் தாழ் மாற்று; வானொலியில் அலையகல அதிர்வுகளைப் பிற அதிர்வுகள் மூலம் மாற்றியமை.

modula'tion, *n.* (இசை.) தான நிலை, வலிவும் மெலிவும் சமனும் என்று சொல்லப்படும் இசைக்கூறுபாடு ; வானொலி அலையகல அதிர்வு மாற்றமைப்பு.

mod'ulator, *n.* ஒழுங்குபடுத்துபவர்; சரிப்படுத்தும் பொருள்; வானொலி வகையில் தானநிலையை உண்டுபண்ணுதற்கான பொறியமைவு ; இசைத்துறையில் பயன்படுத்தப்படும் விளக்கக் குறியீட்டுப்படம்.

mod'ule, *n.* அளப்பதற்கான அலகு ; (க-க.) சிற்ப அளவு, தகவுப் பொருத்தங்களைத் தெரிவிப்பதற்கான நீட்டலளவை அலகு.

mod'ulus, *n.* நிலைதகவு, மடக்கைகளின் வகைமாற்றத்துக்கான நிலையான வாய்ப்பாடு ; உறுதகவு, ஆற்றலுக்கும் அதன் உடல்சார்ந்த விளைவுக்கும் இடையேயுள்ள நிலையான தொடர்பளவு ; *pl.* mod'uli.

mod'us, *n.* முறை ; பதின்கூற்றுவரிக் கீடாகச் செலுத்தப்படும் தொகை ; *pl.* mo'di ; (தொ.) *modus operandi,* (ல.) செயல்வகை ; *modus vivendi,* (ல.) வாழும் வகை, வாதமுடிவு எதிர்நோக்கி ஏற்படும் தற்கால சமரச ஏற்பாடு.

mofette, (பிர.) *n.* நச்சுவளி வெளிப்படுத்தும் நிலவெடிப்பு ; நில நச்சுவளி வெளிப்பாடு.

mofuss'il, (இ.) *n.* நாட்டுப்புறம், தலைநகரத்தினின்றும் தொலைவான நாட்டுப்பகுதி.

Mogul', *n.* மங்கோலியர் ; *a.* மங்கோலிய ; (தொ.) the Grand Mogul, the Great Mogul, the Mogul, டெல்லிப் பேரரசர்.

mo'hair, *n.* அங்கோரா ஆட்டின் மயிர் ; அங்கோரா ஆட்டுக் கம்பளி நூல் ; அங்கோரா ஆட்டுமயிரைக்கொண்டு செய்யப்படும் நேர்த்தியான துணி வகை.

Mohamm'edan, *n.* இஸ்லாமியர் ; *a.* இஸ்லாமிய.

Mohamm'edanism, *n.* இஸ்லாம் சமயம்.

Moha'rram, Muha'rram, *n.* முகம்மதிய ஆண்டின் முதல் மாதம்; முகம்மதிய ஆண்டின் முதல் மாதத்தின் முதல் பத்து நாட்களில் கொண்டாடப்படும் பெரிய நோன்பு.

Mo'hawk, *n.* வட அமெரிக்க செவ்விந்திய இனத்தவர் ; வட அமெரிக்க செவ்விந்திய இனத்தவர் மொழி ; பனிக்கட்டிச் சறுக்கல் இயக்கவகை.

Mo'hock, *n.* (வர.) வீம்பர், பதினெட்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் லண்டன் நகரத்தெருக்களில் இரவு நேரங்களில் மக்களை அலைக்கழித்துவந்த உயர்குடி வீணர் குழுவினர்.

mo'hur, gold mohur, *n.* மோகரா, பதினைந்து ரூபாய் மதிப்புள்ள பழைய பொற்காசு.

moid'er, *v.* (பே-வ.) குழப்பு, திகைப்பூட்டு, அலைக்கழி.

moid'ore, *n.* இருபத்தேழு ஷில்லிங்கு மதிப்புள்ள முன்னாளைய போர்ச்சுகீசியப் பொற்காசு.

moi'ety, *n.* பாதி, அரை ; இருகூறுகளில் ஒன்று.

moil, *v.* கடு ஊழிய வேலைசெய்; (தொ.) toil & moil, ஓயாக் கடு ஊழிய வேலைசெய்.

moi're [1], *n.* மங்கலான தோற்றம்; *a.* பட்டுத்துணி வகையில் நனைத்து அழுத்தி அலைநெளிவான தோற்றம் கொடுக்கப்பட்ட ; உலோகங்கள் வகையில் மங்கலான தோற்றமுடைய.

moi're [2], moi're ant'ique, *n.* நனைத்து அழுத்தி அலைநெளிவான தோற்றம் கொடுக்கப்பட்ட பட்டுத்துணி.

moist, *a.* சற்று நனைந்த, ஈரமான; பருவகால வகையில் மழை பெய்கிற ; நோய்வகையில் சீழ் முதலியவை கசிகிற.

moi'sten, *v.* ஈரமாக்கு, நனை; ஈரமாகு.

mois'ture, *n.* ஈரம், கசிவு, நீர்நயப்பு.

mok'o, *n.* நியூசிலந்து கறுப்பரிடையே வழங்கும் பச்சைக் குத்து முறை.

mol'ar [1], *n.* அரைக்கும் பல் ; பின்கடைவாய்ப் பல் ; *a.* பின் கடைவாய்ப் பல் வகையில் அரைக்க உதவுகிற.

mol'ar [2], *a.* ..திரள் சார்ந்த; பிழம்புத்திரள்மீது செயற்படுகிற ; ..ளின் மூலமாகச் செயற்படுகிற.

molass'es, பஞ்சாறு, வெல்லப்பாகு ; பதியஞ்சர்க்கரை, வெடி.

mole [1], *n.* ..லில் காணப்படும் மச்சம்.

mole [2], *n.* ..லி ; (தொ.) blind as a mole, முழுக் குருடான.

mole [3], *n.* ..கி, அணைகரை, இடைகரை.

molec'ular ..ணுத்திரண்மஞ் சார்ந்த, அணுத்திரண்மம் பற்றிய ; திரண்மங் கொண்ட.

mol'ecule, ..ய., வேதி.) அணுத்திரண்மம், பொருளின் பண்பு மா.. மிகச்சிறிய நுண்கூறு ; இம்மி; சிறு துணுக்கு.

mole'hill, ..னெலிப் புற்று; (தொ.) make mountains out of mol.. தடைகள் முதலியவற்றை மிகைபடுத்து.

mole'skin, ..ட்டுத்துணி வகை, துன்னெலியின் மென்மயிருடன் .. தோல்.

mole'skins *pl.* இரட்டுத்துணி வகையினுலான காற்சட்டை.

molest', *v.* ..தரவுகொடு, தலையிட்டுத் தொல்லையளி.

molesta'tio.. நச்சரிப்பு, தொல்லை.

Mol'inism, ..அருளொப்படைப்புக் கோட்பாடு, முந்தூழ்க் கோட்பாடு..ற்ற விருப்பாற்றல் கோட்பாடு ஆகியவற்றின் இணைப்பா..றவன் முன்பே தீர்வுசெய்தபடியான கட்டற்ற விருப்பாற்.. ஒத்துழைப்பாலேயே இறை அருள் செயலாற்றும் என்..ரயி மோலினு (Luis Molina) என்ற 16-ஆம் நூற்றாண்..டிய ஸ்பானியப் பெரியாரின் சமயக்கொள்கை; 17-ஆம் நூற்றாண்டுக்குரிய மிகுவெல் டி மோலினுஸ் (Miguel de Molinos..ற அறிஞரின் சரணடைவுக் கோட்பாடு.

moll, *n.* பர.., விலைமகள் ; சதிக்குழுவின் காமக்கிழத்தி.

moll'ify, *v.* ..ணி ; இளக்கு, மென்மையாக்கு.

moll'usc, *n.* (ல.) இப்பி இன உயிர் ; குழைவான உடலும் வலியதோடு..டைய நத்தை-சிப்பி முதலிய உயிர்வகைகளில் ஒன்..

moll'y, *n.* ..ண்ணியல்பு மிக்கவன் ; கையாலாகாதவன், எழுச்சியற்..ன்.

moll'y-codd.. *n.* பெண்ணியல்பு மிக்கவன் ; *v.* சீராட்டு, நோயாளி..க் கருதி நடத்து.

Mol'och, *n.* ..ழந்தைகள் பலியிடப்பெற்ற செமிடிக் (Semitic) கடவுள் சி.. ; முட்களையுடைய ஆஸ்திரேலிய பல்லியின விலங்குவ..

moloss'us, ..மூன்று நெடிலசைகள் கொண்ட செய்யுளடி.

mol'ten, *a.* ..ருக்கி வார்க்கப்பட்ட.

mol'to, (இத்.) *adv.* மிக.

mol'y, *n.* ..த்தக்க ஆற்றல் வாய்ந்ததாகக் கருதப்படும் கற்பனைப் ..ண்டு ; வெள்ளைப் பூண்டினச் செடிவகை.

molyb'denum, *n.* முறிவெள்ளி, தகர்வியல்புடைய வெள்ளி நிறம் வாய்ந்த உலோக வகை.

mom'ent, *n.* கணம், விநாடி; சிறப்பு; (இயக்.) நெம்புதிறன்; (தொ.) m.. of the moment, குறிப்பிட்ட காலத்தில் சிறப்பு வாய்ந்தவர்கள் ; moment of a force about a point, (இயக்.) சுழலச் செயும் ஆற்றலின் அளவீடு, தாக்கின் நெம்புதிறன்; the mome.., வாய்ப்பளிக்கிற நேரம், சரியான காலம் ; this moment, ..டனே ; timed to the moment, மிகச் சரிநுட்பமாகக் காலம் வகுக்கப்பட்ட.

mom'entar.., *a.* கணநேரமே உள்ள ; சுருங்கிய வாழ்வுள்ள, நிலையில்லாத.

mom'ently *adv.* கணத்துக்குக் கணமாக ; கணந்தோறும் ; கணநேரத்துக்கு.

momen'tous, *a.* பெருஞ் சிறப்பு வாய்ந்த, பெருவிளைவுகளை உண்டாக்கவல்ல.

T 3318

momen'tum, *n.* (இயங்.) இயங்கு மோதாற்றல்; இயக்க உந்துவிசை; *pl.* momen

Mom'us, *n.* கிரேக்கபுராண மரபில் தெய்வம்; குற்றங் காண்பவர்.

mon'acal, mon'achal, *a.* துறவிசார்ந்த.

mon'ad, *n.* ஒருமை; ஒருமைநிலை; முடிநிலை ஒருமை; (உயி.) கற்பனை மூலஉயிரணு; ஓரிணை திறத் தனிமம், நீரகத்தின் ஓரணுவுடன் இயைபும் ஆற்றலுடைய தனிம வகை.

monadelph'ous, *a.* (தாவ.) மலரிழைகயில் ஒருமுடிப் பான; செடிகள் வகையில் ஒருமுனை மலரிழைகளை யுடைய.

monan'drous, *a.* (தாவ.) ஒரே மலடைய.

monan'dry, *n.* ஒருசமயத்தில் ஒரேவரை மேற்கொள் ளும் வழக்கம்.

mon'arch, *n.* ஆளுநர், முடிமன்னர்; மக்கும் மேம்பட்ட ஆட்சியாளர்; அரசன்; அரசி; பேரரசர், பேரரசி; சிவப்பும் கருமையுங்கலந்த நிறமுடைய பெரிய வண்ணத்துப்பூச்சிவகை.

monarch'al, monarch'ic, monarchical, *a.* முடியரசு சார்ந்த; முடிமன்னருக்குரிய.

mon'archism, *n.* முடியரசுக் கோட்பாடு, முடியரசுப்பற்று.

mon'archist, *n.* முடியரசுக் கோட்பாளர்; முடியாட்சி ஆதரவாளர்.

mon'archy, *n.* முடியரசு, முடியாட்சி, முடியாட்சி நாடு; (தொ.) constitutional monarchy, வரையறைக்குட்பட்ட முடியரசு; limited monarchy, கட்டுப்பட்ட முடியாட்சி, வரைநிலை முடி யாட்சி.

mon'astery, *n.* துறவிமடம், சமய நோன்பினர் வாழிடம்.

monas'tic, *a.* துறவிகளுக்குரிய; துறவிகள் சார்ந்த; புத்தக அட்டை வகையில் சூடேறிய கருவி அழுத்திப் பொறிக்கப்பட்ட.

mondaine, (பிர.) *n.* நவநாகரிகப் பெண், நவநாகரிகப் பண்பாட்டமுள்ள பெண்.

Mon'day, *n.* திங்கட்கிழமை; (தொ.) Monday, வேலை ஓய்வுடைய திங்கட்கிழமை.

Mon'dayish, *a.* சமயகுருமார் வகையில் ஞாயிற்றுக்கிழமை வேலையினால் களைப்புற்ற; மற்றவர் வகையில் ஞாயிறு விடுமுறையினால் வேலையார்வமற்ற.

monde, (பிர.) *n.* நவநாகரிக உலகு, நாகரிக சமுதாயம்; பழகுஞ் சமூகச்சூழல்.

mon'dial, *a.* உலகளாவிய.

mo'netary, *a.* நாணயமுறைக்குரிய; பணசார்ந்த.

mo'netize, *v.* நாணயமாக வழங்கவிடு, பணமாகச் செலா வணிப்படுத்து.

mo'ney, *n.* பணம்; நாணயம்; செலாவணி நாணயம், நாணயத்தினிடமாகச் செலாவணியிலுள்ள பொருள்; நாண யத்தாள்; பணமாக மாற்றக்கூடிய உடைமை; செல்வம்; (தொ.) coin money, தம்பட்டமடி; விரைவில் பணம் ஈட்டு; conscience money, உளச்சான்றுப் பணம், வருமானவரி வகையில் முன்பு செலுத்தாமல் தட்டிக்கழித்ததை மறுப்பதற் காக அனுப்பப்படும் பணம்; for love or money, எம்முறை யிலேனும்; make money, செல்வம் ஈட்டு; money of account, நாணயவழக்கற்ற மதிப்பளவைக் கணிப்பு.

money'-bag, *n.* பணப் பை.

money'-bags, *n. pl.* பெருஞ்செல்வர்; பேராசைபிடித்தவர்.

money'-box, *n.* பணச் சேமிப்புப் பெட்டி.

mon'ey-changer, *n.* செலாவணியர், நாணயமாற்றுக்காரர்.

mon'eyed, *a.* செல்வமிக்க; பணஞ்சார்ந்த, பணவடிவான; (தொ.) moneyed interest, பண உடைமை வகுப்பு, செல்வ ஆட்சி வகுப்பு.

mon'ey-grubber, *n.* கஞ்சத்தனமாகப் பணம் சேர்ப்பவர்.

mon'ey-grubbing, *n.* கஞ்சத்தனமான பணச்சேமிப்பு; *a.* கஞ்சத்தனமாகப் பணம் திரட்டிவைக்கும் பழக்கமுடைய.

mon'ey-lender, *n.* வட்டித்தொழிலர்.

mon'ey-mar'ket, *n.* பங்குவாணிகக் களம், பணமுதலீட்டுத் துறை.

mon'ey-or'der, *n.* பண அஞ்சல்.

mo'neys, *n. pl.* நாணயங்கள்; பணத்தொகைகள்; செல்வம்.

mon'ey-spinner, *n.* நற்பேறு கொணர்வதாகக் கருதப்படும் சிறு சிலந்தி வகை.

mon'ey's-worth, *n.* பணத்துக்கு ஈடான பொருள்.

mon'ey-wort, *n.* பளபளப்பான வட்ட இலைகளையுடைய செடிவகை.

mo'nger, *n.* சிறுதிற வணிகர், நாடோடி விற்பனையாளர்.

Mong'ol, *n.* மங்கோலிய இனத்தவர், மங்கோலியாவில் வாழும் இனத்தவர்; *a.* மங்கோலிய இனஞ் சார்ந்த.

Mongol'ian, *n.* மங்கோலியர், மங்கோலியாவில் வாழும் இனத்தவர்; *a.* மங்கோலிய இனஞ் சார்ந்த; மஞ்சள் நிறமும் நிமிர் மயிரும் உடைய மனித இனஞ் சார்ந்த; அறிவிலியான.

mong'oose, *n.* கீரிப்பிள்ளை; மனிதக்குரங்கு வகை.

mo'ngrel, *n.* இழிந்த கலப்பின நாய், இனமறியப்படாத நாய்; கலப்பின விலங்கு; கலப்பினச்செடி; இனக்கலப்புற்ற வர்; இன வகைதுறையற்றவர்; *a.* இனக்கலப்பான, இன வகை துறையற்ற.

mon'ial, *n.* பலகணி நெடுக்கைச் சலாகை.

monil'iform, *a.* கழுத்துமாலைபோன்ற, அக்கமாலைவடிவான.

mon'ism, *n.* (மெய்.) ஒருபொருண்மை வாதம்; உடல் வேறு மனம் வேறு என்பதை ஒத்துக்கொள்ளாத கோட்பாடு.

moni'tion, *n.* இடர் எச்சரிக்கை; குற்றத்தடுப்பாணை; சமய குருவின் முன்னறிவிப்புக் கட்டளை; நீதிமன்றத்தின் அழைப் பாணை.

mus′ical, *a.* இசை சார்ந்த; இனிமையான; இசைவிணக்க முடைய; இசைக்கலைத் திறமைவாய்ந்த; இசை நயப்புடைய; இசையமைக்கப்பட்ட, இசையோடு சேர்ந்து இசைக்கப்பட்ட; (தொ.) musical box, இசைப்பெட்டி, சீப்புப்போன்ற தகட் டின்மீது பற்கள் வாய்ந்த உருளை சுழல்வதால் இசை யெழுப்பும் இசைக்கருவி வகை; musical chairs, இசைவட்டக் கேளிக்கை, ஆட்டச்சுற்றுத்தோறும் ஓர் அமர்விருக்கை குறைத்து இசை நின்றவுடன் இருக்கை இழந்தவர் விலக்கப் படும் ஆட்டவகை; musical comedy, ஆடல்பாடல் உரை நிரம்பிய பொழுதுபோக்குக் களி நாடகம்; musical film, இசையைச் சிறப்பாகக் கொண்ட திரைப்படம்; musical glasses, நீர்க்கல இசைக்கருவி, சலதரங்கம்; musical ride, இசையோடு கூடிய படைத்திறப் பயிற்சிமுறை.

musicale′, *n.* இசைவிருந்துக் குழாம்.

mus′ic-hall, *n.* இசைக்கூடம், ஆடல்பாடல் நாடகங்களுக் கான மண்டபம்.

musi′cian, *n.* இசைக்கலை அறிஞர், இசைப்பாடகர்.

musicol′ogy, *n.* இசைத்துறை ஆர்வப் பயிற்சிமுறை.

mus′ic-stool, *n.* உயரம் சரிசெய்யும் வாய்ப்புடைய இசை மேளக் கோக்காலி.

musk, *n.* கத்தூரி; கத்தூரி மணமுள்ள செடிவகை; (தொ.) musk melon, முலாம்பழ வகை.

musk′-deer, *n.* கத்தூரி மான்.

musk′-duck, *n.* கத்தூரி மணமுள்ள அமெரிக்க வாத்து வகை.

mus′ket, *n.* காலாட்படைவீரனின் துப்பாக்கி; பருந்துவகைச் சேவல்.

musketeer′, *n.* துப்பாக்கி வீரர்.

mus′ketry, *n.* துப்பாக்கித் தொகுதி; துப்பாக்கிப் பயிற்சித் துறை; துப்பாக்கிப் பழக்கம்; துப்பாக்கிப் பயிற்சிப் போதனை; துப்பாக்கிப் படை.

mus′ket-shot, *n.* கைத்துப்பாக்கிக் குண்டு; குண்டுத் தொலைவு, துப்பாக்கிக் குண்டு பாயுந் தொலைவு.

musk′-ox, *n.* அமெரிக்க துருவப்பகுதியிலுள்ள முனைத்த கத்தூரி மணமுடைய எருது போன்ற விலங்கு வகை.

musk′-rat, *n.* வட அமெரிக்க நீர்வாழ் கொறிவிலங்கு வகை; நீர்வாழ் கொறிவிலங்கின் மென்மயிர்த்தோல்.

musk′-rose, *n.* மணமுள்ள பெரிய வெண்மலரையுடைய செடி வகை.

musk′-tree, musk′-wood, *n.* கத்தூரி மண மரவகை.

musk′y, *a.* கத்தூரி மணமுள்ள.

Mus′lim, *n.*, *a.*=Moslem.

mus′lin, *n.* மென்துகில் வகை; பெண்டிர் உடைகட்கும் திரை கட்கும் உதவும் நுண்ணயமுடைய பருத்தியாலான மென் துகில்; (தொ.) bit of muslin, (பே.வ.) பெண்.

muslinet′, *n.* திண்ணிய மென்துகில் வகை.

mus′mon, *n.*=moufflon.

mus′quash, *n.* வட அமெரிக்க நீர்வாழ் கொறிவிலங்கின் மென்மயிர்த் தோல்.

muss, *n.* (பே-வ.) குழப்பநிலை, தூய்மையற்ற நிலை, தாறு மாறான தன்மை; *v.* ஒழுங்கு குலை, சீர்குலை, தாறுமாறாக்கு.

mussal′, (அரா.) *n.* தீவட்டி, தீப்பந்தம்; தீவட்டி பிடிப்பவர்.

mussal′chee, (அரா.) *n.* தீவட்டி பிடிப்பவர்.

muss′el, *n.* சிப்பி வகை; (தொ.) mussel plum, கருஞ் சிவப்புநிறப் பழவகை.

muss′uck, (இ.) *n.* தோலாலான நீர்ப்பை.

Muss′ulman, *n.* இஸ்லாமிய சமயத்தவர்.

must[1], *n.* புதிய சாராயம்; முழுப்புளிப்பாகு முன்னுள்ள கொடிமுந்திரிப் பழச்சாறு.

must[2], *n.* பூஞ்சைக்காளான்பிடித்தநிலை; பழமைப்பட்ட தன்மை.

must[3], *n.* மதவெறி; *a.* ஆண்யானைகள்-ஒட்டகங்கள் வகை யில் வெறிகொண்ட நிலையிலுள்ள.

must[4], *n.* செய்து தீரவேண்டியநிலை; *v.* வேண்டும்.

mustache′, *n.*=moustache.

musta′chio, *n.*=moustache.

mus′tang, *n.* மெக்சிகோ (Mexico) கலிபோர்னியா (California) பகுதிகளிலுள்ள காட்டுக்குதிரை; (தொ.) mustang grape, செங்நிறமான சிறு கொடிமுந்திரிப் பழவகை.

mus′tard, *n.* கடுகு; சுவைமிக்க பொருள்; ஆர்வ ஊக்க முள்ளவர்; (தொ.) French mustard, புளிக்காடியோடு கலக்கப்பட்ட கடுகு; grain of mustard seed, மிகப்பெரிய வளர்ச்சிக்குரிய சிறுபொருள்; mustard and cress, கடுகு முளைக்கீரை; mustard gas, நச்சாவி நீர்ம வகை.

mus′tard-pot, *n.* மேசைக் கடுகுக்கலம்.

mus′ter, *n.* திரளணி, மேற்பார்வை இடுவதை எதிர்நோக்கிக் கூடும் பேரணி; எண்ணிக்கைத் தணிக்கைக்கான கூட்டணி; மொய்திரள்; பேரவை; தொகுதி; *v.* திரளணி கூட்டு; திரளணிகூடு; ஒருங்கு திரட்டு; குழுமு; மனவுரம் வகையில் வரவழை; உடல்வலிமை ஒருங்குதிரட்டு; (தொ.) pass muster, போதுமானதென்று ஏற்றுக்கொள்ளப்பெறு.

mus′ter-book, *n.* படைத்துறைப் பதிவேடு.

mus′ter-roll, *n.* அணியேடு, படைவீரர் பெயர்க் குறிப் பீட்டுப்பட்டியல்.

mus′ty, *a.* பூஞ்சைக்காளான் பிடித்த; ஊசிப்போன; ஊசல் வாடையுடைய; ஊசிச் சுவைகேடான; நாட்பட்ட, பழமைப் பட்ட, காலங்கடந்த.

mutabil′ity, *n.* நிலையாமை.

mut′able, *a.* மாறக்கூடிய; மாறும் இயல்புள்ள.

muta′tion, *n.* மாற்றம், மாறுபாடு; (உயி.) வகைமாற்றம், மாறுதலடைந்து புது உயிரினந் தோன்றுதல்; (தொ.) mutation stop, (இசை.) தொனிமாற்றக்கட்டை.

mutat′is mutan′dis, (ல.) *adv.* வேண்டிய மாறுதல்களுடன்.

mute[1], *n.* ஊமை, ஊமர்; ஊமைக்கூத்து நடிகர்; வாய்திறவா திருப்பவர்; ஊமைப்பணியாள்; கூலித் துயர்கொண்டாடி; இசைநரம்படக்கும் திண்டு; இசைக்கருவி அதிர்வடக்கிப் பொறி; இசைக்குழல் மந்தப்பட்டை; (சட்.) வழக்காடா திருப்பவர்; (ஒலி.) தடைமெய்யொலி; தடை ஒலி மெய் எழுத்து; ஊமை எழுத்து, ஒலிப்பற்ற எழுத்து; *a.* ஊமை யான; பேசாத; ஓசையற்ற, வேட்டைநாய் வகையில் குரைக் காத; பேச்சில் தெரிவிக்காத; சைகையால் தெரிவிக்கிற;

ஒலி வகையில் உறுப்புத்தடையுடைய; தடை ஒலியான; எழுத்து வகையில் ஒலிக்கப்படாத; *v.* ஒலி அடக்கு; ஒலித் தடங்கல் செய்; இசைக்கருவியின் ஒலியை மந்தமாக்கு; (தொ.) stand mute of malice, (சட்.) வழக்குரைப்பதற்கு வேண்டுமென்றே மறு.

mute[2], *v.* பறவைகள் வகையில் மலத்தை வெளியேற்று; எச்சமிடு.

mut'ilate, *v.* உறுப்புக் குறை; முடமாக்கு; உருக்கெடு, உருச் சிதை; வெட்டிக் குறை; உறுப்பைப் பயனற்றதாக்கு; நூற் பகுதிகளை நீக்கி குறைப்பட்டதாக்கு.

mutineer', *n.* அரசியற் புரளியாளர், ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்; கிளர்ச்சிப் படைவீரர்; மேலாட்சிமீறி எழு பவர்.

mut'inous, *a.* புரளி செய்கிற, எதிர்ப்புக்கிளர்ச்சி செய்கிற, மீறி எழுகிற, அடங்காதெதிர்க்கிற; கிளர்ச்சி செய்கிற, கலகம் செய்கிற, கலவரம் செய்கிற.

mut'iny, *n.* அரசியற்புரளி, ஆட்சி எதிர்ப்புக்கிளர்ச்சி; படை வீரர் கலகம்; கலகம், கிளர்ச்சி, கலவரம்; சட்டப்படியான அதிகாரத்தை வெளிப்படையாகப் புறக்கணிக்குங் கலகம்; படைத்தலைவர்களுக்கு எதிரிடையாகப் படைவீரர்கள் செய்யுங் கலகம்.

mut'ism, *n.* பேசாநிலை, மௌனம்; ஊமைத்தன்மை.

mut'ograph, *n.* இயங்குபொருளைத் தொடர்பட வரிசைப் படுத்தும் கருவி அமைவு; *v.* இயங்குபொருளைத் தொடர்பட வரிசைப்படுத்திக் காட்டு.

mut'oscope, *n.* இயங்கு பொருளின் தொடர்வரிசைப்படத் தைக் காட்சி காட்டுங் கருவி அமைவு.

mutt'er, *n.* முணுமுணுப்பு; முணுமுணுப்புச் சொற்கள்; *v.* தாழ்ந்த குரலிற் பேசு, முணுமுணு; தெளிவில்லாமற் பேசு, குறைசொல்.

mutt'on, *n.* ஆட்டிறைச்சி; (பே-வ.) ஆடு; (தொ.) dead as mutton, முற்றிலும் இறந்த; முழுதும் உயிரற்ற; eat one's mutton, ஆட்டிறைச்சியோடு உணவு உண்; mutton chop, ஆட்டிறைச்சித் துண்டு, ஆட்டின் விலா எலும்பிறைச்சி; ஆட்டெலும்பு போன்ற வடிவுடைய மீசை; mutton dressed like lamb, (பே-வ.) இளம் பெண்ணைப்போல உருவொப்பனை செய்துகொள்ளும் வயதானவள்; to our muttons, நமக்குரிய செய்திக்கே.

mutt'on-head, *n.* (பே-வ.) மந்த மதியாளர், முட்டாள்.

mut'ual, *a.* பரஸ்பரமான, ஒருவருக்கொருவர் பரிமாற்றமான; ஒன்றுக்கொன்று பரிமாற்றமான; (தொ.) mutual admiration society, புகழெதிர்ப் புகழ்க்கூட்டுறவு; ஒருவர்க்கொருவர் தமக்குள் மெச்சிக்கொள்ளுங் குழு; mutual insurance company, காப்பீடு செய்பவர் பிணைப்புறுதிக் கழகம், ஆதாய முழுதும் காப்பீடு செய்பவர்களுக்கே வரும் காப்புறுதிக் கழகம்; mutual terms, பணக்கட்டத்தினிடமாகச் சேவைகளை மாற்றிக்கொள்ளும் ஒப்பந்தமுறை.

mut'ualism, *n.* நலவாழ்வுக்குக் கூட்டுறவுச் சார்புத்தொடர் தேவை என்னுங் கோட்பாடு.

mut'ule, *n.* (க-க.) டோரிக் (Doric) என்னும் கிரேக்க கலைப் பாணியின்படி தூணின் மேல்வரம்பிலுள்ள பிதுக்கற் கவரணை.

mu'zhik, *n.* = moujik.

muz'zle, *n.* முஞ்சி, விலங்கின் மூக்கும் வாயுமுள்ள முற்பகுதி; துப்பாக்கி வாய்முகப்பு; விலங்கின் வாரினுலான முகவாய்க் கட்டு; கம்பியாலான விலங்கின் வாய்மூடி; *v.* வாய்மூடியிடு; பேசாதிருக்கும்படி செய்; பாய்மரத்தை உள்வாங்கு.

muz'zle-loader, *n.* வாய்ப்பக்கமாக மருந்தடைப்பதற்குரிய பீரங்கி.

muzz'y, *a.* மந்தமான, எழுச்சியற்ற; குடிமயக்கத்தால் அறிவு மந்தமான.

my, *pron.* என்னுடைய.

myal'gia, *n.* (மரு.) தசைக்குரிய கீல்வாத நோய்.

my'alism, *n.* மேற்கிந்திய தீவுகளில் கையாளப்படும் சூனிய வகை.

my'all, *n.* புகையிலைக் குழாய் செய்யும் நறுமணக்கட்டை யுடைய ஆஸ்திரேலிய வேல மரவகை.

mycel'ium, *n.* (தாவ.) பூசணவலை, பூஞ்சைக்காளானின் வெண்மையான நாரியற் பொருள்.

Mycenae'an, *a.* (தொல்.) கிரேக்க நாட்டில் கிரேக்க நாக ரிகத்துக்கு முற்பட்டு (கி. மு. 1400-கி. மு. 1100 வரை) நில விய நாகரிகஞ் சார்ந்த.

mycetom'a, *n.* காலில் அல்லது கையில் கடற்பஞ்சு போன்று தோன்றும் நோய்வகை.

mycol'ogy, *n.* காளானூல், பூஞ்சைக்காளானைப் பற்றிய ஆய்வுநூல்.

mycos'is, *n.* ஒட்டுயிர்க்காளானுள்ள நிலை; ஒட்டுயிர்க் காளா ணுல் தோன்றும் நோய்.

myelit'is, *n.* முதுகந்தண்டு நாள வீக்கம்.

myl'odon, *n.* மரபற்றழிந்துபோன மாபெருங் கரடியின உயிர்.

myna, *n.* = mina[8].

mynheer', *n.* ஆலந்து நாட்டவர்.

myocardit'is, *n.* நெஞ்சுப்பைத் தசை வீக்கம்.

myocard'ium, *n.* நெஞ்சுப்பையின் தசைப்பகுதி.

myol'ogy, *n.* தசைப்பற்றுய்வு நூல்.

my'ope, *n.* அணிமைப்பார்வை நோயாளர்.

myos'is, *n.* கண்பாவை இடுக்கம்.

my'osote, *n.* "தொட்டாற் சிணுங்கி" செடிவகை.

Myosot'is, *n.* "தொட்டாற் சிணுங்கி" செடியினம்.

my'riad, *n.* (செய்.) பத்தாயிரம்; மிகப்பல; *a.* பத்தாயிரக் கணக்கான; எண்ணற்ற.

my'riapod, *n.* அட்டை பூரான் இன உயிர்.

myriora'ma, *n.* பல்காட்சிப்பட வேடிக்கை.

Myrm'idon[1], *n.* அக்கிலஸ் (Achilles) என்ற கிரேக்க மாவீர னைப் பின்பற்றிய தெஸ்ஸேலியா (Thessalia) நாட்டு வீர இனத்தவர்.

myrm'idon[2], *n.* குண்டன், முரட்டுக் கூலிவேலையாள்; அடி யாள், கூலிக்கு வேலைசெய்யும் போக்கிரி; கொத்தடிமை, அடிமைத்தனமான பணியாள்; (தொ.) myrmidon of the law, ஊர்க்காவலர், தலையாரி.

myrob'alan, *n.* நெல்லிக்காய், தோல்பதனிடல்-சாயம் ஆகிய வகைகளில் பயன்படும் காரத்துவர்ப்பான கனிவகை.

myrrh[1], *n.* வெள்ளைப்போளம், நறுமணப்பொருள் செய்யப் பயன்படும் பிசின் வகை.

myrrh[2], *n.* நறுமணச் செடிவகை.

myr'tle, *n.* பசுமை மாரு நறுமண மலர்ச் செடிவகை.

myself', *pron.* நானே, என்னையே.

mys'tagogue, *n.* மறைஞான குரு; பண்டைக் கிரேக்க ரிடையே உயர் மெய்ஞ்ஞான ஆசிரியர்.

mys'teries, *n. pl.* இயேசுநாதரின் இறுதி உணவு விழா; பண்டைக்கிரேக்கர்-ரோமர் ஆகியோரின் மறைவினை முறைகள்.

myster'ious, *a.* மறைவடக்கமான; புதைவான; விளங் காத, விளக்கமற்ற; புதையார்வமுடைய, மறைத்து வைப்பதில் மகிழ்வுடைய.

mys'tery, *n.* புதைமறைவான செய்தி; விளங்காச் செய்தி, விளங்கா மெய்ம்மை; புதிர்நிலை, தெளிவின்மை; ஒளிவு மறைவுப் பழக்கம்; மறைபொருள்; மறைமெய்ம்மை, அறிவு கடந்த சமய உண்மை; உயர் தெய்விக உணர்வு; இயேசு நாதரின் வாழ்க்கை நாடகம்; (தொ.) make a mystery of, மறை பொருளாகப் பாவி.

mys'tery-ship, *n.* இரகசியப் போர்க்கப்பல், முதல் உலகப் போரில் பொதுநிலைக் கலம்போலத் தோற்றமளிக்கும்படி அமைந்த நேசநாட்டுப் போர்க்கப்பல்.

mys'tic, *n.* அறிவர், மறைஞானி; அறிவு கடந்த மெய்யுணர்வாளர்; இறை உணர்வாளர்; தனிநிலையிழந்தவர்; இறைநிலை கலந்தவர்; *a.* அகநிலை உணர்வுபெற்ற; மறைமெய்ம்மை சார்ந்த; அறிவுநிலை கடந்த; ஆழ்ந்த உட்பொருளுடைய; ஆன்மிகச் சார்பான; மறை ஆற்றலுடைய, தெய்வத் திறனுடைய.

mys'ticism, *n.* இறைநிலை இணைவுப் பான்மை, இறைமை இணைவுப் பண்பு.

mys'tify, *v.* நம்பவைத்து ஏய்; கோமாளியாக்கு; மருட்சிக்கு ஆளாக்கு; திகைக்க வை; புதிரிடு; புதைமறைவு செய்; புரியாததாக்கு.

mystique', *n.* தெய்விக மறை அச்சமதிப்புச் சூழமைவு; மறை அச்சமதிப்புச் சூழமைவு முறை.

myth, *n.* புராணக்கதை, மக்கள் பழங்கதை; இட்டுக்கட்டு; வெற்றுப்புனைந்துரை; கற்பனையாகப் படைக்கப்பட்ட பேர்வழி; இல்பொருட் கற்பனை.

myth'ic, myth'ical, *a.* புராணச் சார்பான, பழங்கதை மரபுச்சார்பான; இட்டுக்கட்டான, கற்பனையான; பொய்யான; ஆதாரமற்ற.

myth'icize, *v.* புராணப் பொருளாக்கு, பழமரபுக் கதையாக்கு; புராணக் கதையாகக்கொள்; புராணக்கதைபோலப் பொருள் படுத்து; புராணக்கதை என்று விளக்கங் கூறு.

mythog'rapher, *n.* புராண ஆசிரியர், பழங்கதை எழுதுபவர்.

mythog'raphy, *n.* குழைமக் கலையில் புராணக் கருத்துக்களைத் தீட்டுங் கலை.

mythol'ogy, *n.* புராண இலக்கியம்; புராணத்துறை; புராணக்கதைத் தொகுதி; கற்பனைப் பழங்கதைக்கோவை, மரபுரைக் கோவை; தனி ஆள்-இடம்-பொருள் பற்றிய புராண மரபுத்தொகுதி; புராண ஆய்வுத்துறை நூல்.

mythopo'eic, mythopoet'ic, *a.* புராணக்கதைகளைப் புனைகின்ற; புராணக் கதைகளைப் படைக்கிற.

mythopo'et, *n.* புராணப் படைப்புக் கவிஞர்.

mythopo'etry, *n.* புராண இலக்கியப்படைப்பு.

myth'us, *n.* = myth.

myxoedem'a, *n.* மந்திப்புக் கோளாறு, கேடயச்சுரப்பிக் குலைவு காரணமாக உடலுறுப்புக்களின் அடிச்சவ்வுகள் தடித்து உடலுள ஊக்க அழிவு உண்டுபண்ணும் நோய்.

myxom'a, *n.* ஊனீர்ப்புற்று.

Nab, *v.* பற்று, பிடி.

nab'ob, (இ.) *n.* மொகலாயப் பேரரசின் மாகாணத் தலைவர், மண்டலிகர்; (வர.) இந்தியாவிலிருந்து பெருஞ்செல்வத்துடன் தாயகம் மீண்ட ஆங்கிலேயர்; இன்பவாழ்க்கைப் பெருஞ் செல்வர்.

Nab'oth's vine'yard, *n.* காமுறப்படும் பொருள்.

nac'arat, *n.* கிச்சிலிப்பழ சிவப்புநிறம்.

nacelle', *n.* விமான இயந்திர வேயுறை; வான்கலத்தின் சகடப் பகுதி.

na'cre, *n.* இறகு வடிவான கடலுயிர் வகை; இப்பி, சோழி முத்துச்சிப்பிகளின் தோட்டின் உட்புறம்; சிப்பிமீன்.

nad'ir, *n.* (வான்.) உச்சிக்கு நேரெதிர்; தாழ்விற்கு எல்லை.

nag[1], *n.* ஏறிச் செல்வதற்குரிய மட்டக்குதிரை; (பே-வ.) குதிரை.

nag[2], *v.* குறை கண்டுபிடி; ஓயாது நச்சுப்படுத்து, தொல்லைப் படுத்து.

naga'na, *n.* தென் ஆப்பிரிக்காவின் கொடிய நச்சு ஈ வகை யால் வரும் காய்ச்சல்.

nag'or, *n.* மேலை ஆப்பிரிக்க கலைமான் வகை.

nai'ad, *n.* நீரரமகள்; *pl.* nai'ades, nai'ads.

nail, *n.* நகம், கால்நகம்; உகிர், விலங்கு-புட்களின் கொடு நகம்; மெல்லலகுடைய பறவைகள் வகையின் மேலலகு மீதுள்ள காழ்ப்புடைப்பு; ஆணி; காய்ப்புப் புற்று, உடலின் கடுங் காழ்ப்புடைப்பு; முற்கால நீட்டல் அளவைச் சிற்றலகு, இரண்டேகால் அங்குலம்; *v.* ஆணி அடி; வரிசையாக ஆணி அடித்திறுக்கு; ஊசியால் பிணை; உறுதியாகப் பற்று; வலிந்து பிடி, பற்றி நிறுத்து; கவனத்தை அசையாது நிறுத்து; (தொ.) drive nail in one's coffin, ஓயா நச்சரிப் பால் விரைவில் சாகடி; மட்டுமீறிய குடியினுல் விரைந்து உயிர்க்கு ஊறு தேடு; hard as nails, நன்கு பயிற்சி செய்யப் பட்ட, செப்பமுறப் பயிற்றுவிக்கப்பட்ட; hit the nail on the head, hit the right nail on the head, குறி தவருது செயல் வெற்றிகொள்; சரியான செயல்செய்; சரியான செய்தியில் கருத்துச் செலுத்து; சரியான விளக்கம் அளி; nail a lie to the counter, nail to barndoor, nail to counter, போலித் தன்மையை யாவரும் அறியச் செய்; nail up, ஆணிகளிட்டு இணை; ஆணியில் உயரத் தொங்கவிடு; on the nail, தாம தத்துக்கு இடமில்லாமல், பணம் கொடுப்பதில் தவணைக்கு வழிவைக்காமல்; right as nails, நிரம்பச் சரியான, குறை வற்ற; tooth and nail, முழுநிறை முயற்சியுடன்.

nail'-brush, *n.* நகந்துடைக்கும் தூரிகை.

nailed'-up, *a.* நன்கு கட்டமைக்கப்படாத; (தொ.) nailed-up drama, உறுப்புக்கள் நன்கு இணைக்கப்படாத செப்பமற்ற நாடகம்.

nail'er, *n.* ஆணி செய்பவர்.

nail'ery, *n.* ஆணி செய்யுமிடம்.

nail'-head, *n.* ஆணித்தலைப்பு, தலை; ஆணித்தலைப்புப் போன்ற சிற்ப ஒப்பனைக்கூறு.

nail'ing, *n.* ஆணி அடித்தல்; ஆணி செய்தல்; பற்றியிறுக் கல்; பற்றிப் பிடிப்பு.

nail'-scissors, *n.* நகம் வெட்டி.

nain'sook, (இ.) *n.* மிக நேர்த்தியான பருத்தியாடை வகை.

naive', *a.* சூதறியாத, பயிலா நடையுடைய, இன்னியல்பான, எளிமை நலமுடைய, பகட்டறியாத; நடிப்பறியாத, சூது வாதற்ற.

naiv'ete, naiv'ety, *n.* இயலெளிமை; பயிலா நடை; சூதறி யாப் பேச்சு; கரவின்மை.

nak'ed, *a.* உடுப்பற்ற, மேற்போர்வையற்ற; பாதுகாப்பற்ற; உறையற்ற; மேல் வளர்ச்சியற்ற, மரஞ்செடி கொடியற்ற, புல் புதரற்ற; மழுங்கலான; வெறுமையான; புறத்திரை யற்ற; அகநிலைப் பாறை வகையில் புறந்தோன்றுகிற; புனைவற்ற, ஒப்பனையற்ற; உருமாருத; இயல் எளிமை வாய்ந்த; மறைவற்ற, ஒளிவற்ற; அறை-கட்டிட வகையில் தட்டுமுட்டற்ற; மரஞ்செடி வகையில் இலைதழையற்ற; துணை யாதரவற்ற; துணை இணைவுகளற்ற; கருவித்துணை இல் லாத; வெறுமையான; வெட்டவெளியான; (தொ.) Naked Boys, Naked Lady, அல்லியினச் செடிவகை.

nak'er, *n.* முழா, போர்ப்பறை.

nam'able, *a.* பெயர் கூறத்தக்க; பெயர் குறிப்பிடப்படும் தகுதியுடைய.

nam'by-pam'by, *n.* பிதற்றுரை, சுவையற்ற பேதைமையுரை; *a.* கவையற்ற, சுவையற்ற, போலிப் பசப்பான.

name, *n.* பெயர்; அடைமொழி, பண்பு சுட்டியழைக்கும் சொல்; பட்டப்பெயர், மதிப்பார்ந்த பெயர் வழக்கு; புகழ், மதிப்பு, சால்பு; குடிப்பெயர்; குடும்பம், இனக்குழு; பெயர் மட்டிலுமான நிலை, பொருண்மையற்ற நிலை; சிறப்பின்மை; போலித்தன்மை; மேற்கோள்; முறைமை; வேறு ஆட் பெயர்ப்புணைவு; *v.* பெயரிடு; பெயரிட்டழை; பெயர் கூறு; குறி; தனிப்படக் குறிப்பிடு; அமர்வி, பதவிக்கு அமர்த்து; பணிக்கெனச் சுட்டிக் குறிப்பிடு; சட்டமன்ற அவையில் முறைகேடான நடத்தை குறித்துப் பெயர் குறிப்பிடு; சான்ருக எடுத்துரை; குறித்து முடிவுறுதி கூறு; (தொ.) in name, பெயரால் மட்டும், போலியாக, பொருண்மையின்றி வெறும் பெயராக; in name of, in one's name, in the name of, பெய ரால்; சார்பாக; அதிகாரத்தின்மீது; சான்ருக; ஆதரவை முன்வைத்து; நலத்தை முன்னிட்டு; மனத்திற்கொண்டு; name after a person, ஒருவர் பெயரை மதித்துப் பாராட்டி அதே பெயரை மற்றெருவருக்கு இடு; name the day, நாளை அறுதிசெய்து கூறு; திருமணநாளைக் குறிப்பிட்டுரை; மணமாகாப் பெண் வகையில் திருமணநாளைக் குறித்து விருப்பம் தெரிவி; name your price, விலைகுறி; not to be named in same day with, not to be named on same day with, எத்தனையோ மடங்கு தாழ்ந்த, மிகத் தாழ்ந்தபடியான.

name'-child, *n.* பெயராளன், தன் பெயரிட்ட குழந்தை.

named, *a.* பெயரிடப்பட்ட; பெயரையுடைய; என்ற பெய ருடைய.

name'-day, *n.* தன் பெயருக்குரிய திருத்தகைப் புனிதர் திரு நாள்.

name'less, *a.* பெயரற்ற; பெயரறியப்படாத; பெயர் குறிப் பிடப்படாத; பெயர்குறிக்க வேண்டாத; பெயர் குறிக்குந் தகுதியில்லாத, முக்கியத்துவமற்ற; மிகப் பொதுப்படை யான, அற்பமான; புகழற்ற; வரையறுத்துரைக்க முடியாத; வருணிக்க முடியாத; சொற்கடந்த; மிக மோசமான; வெறுக்கத்தக்க; அருவருப்பான.

name'ly, *adv.* அதாவது.

name'-part, *n.* நாடகத்துக்குரிய பெயர்க் காரணமான பகுதி; பெயர்க்கூறு.

name'-sake, *n.* தம் பெயரை உடைய மற்றெருவர்; தன் பெயரைக் கொண்ட மற்றெரு பொருள்.

nan'cy, *n.* செயற்கைப் புணர்ச்சியாளர், தன்னெத்த பால் அவாவுடையவர்; *a.* தன்னெத்த பால் அவாவுடைய.

nankeen', *n.* மஞ்சள் பருத்தியால் செய்யப்பட்ட நூல் துணி வகை; மஞ்சள் அல்லது வெளிறிய மஞ்சள் நிறம்.

nan'ny, *n.* வெள்ளாட்டின் பெட்டை; செவிலித்தாய்.

Nantz, *n.* பழச்சாராயம்.

nap[1], *n.* சிறு துயில்; அரைத்தூக்கம்; பகலுறக்கம்; *v.* சிறுதுயில் கொள், சற்றே தூங்கிவிழு.

nap[2], *n.* மென்துய்ப்பரப்பு, ஆடையில் மேன்முனைப்பான வெட்டுத் துய்ப்பரப்பு; மெத்தென்ற மென்பரப்பு; *v.* ஆடை யில் மேல் முனைப்பான வெட்டுத்துய்ப்பரப்பு அமை, தேங் காய்ப்பூப் பின்னல் அமை.

nap[3], *n.* தனித்தனிக் கட்சியான ஐவராடும் சீட்டாட்ட வகை; ஐவர் சீட்டாட்ட வகையில் ஐங்குறி மதிப்புக் கோரிக்கை; ஐவர் சீட்டாட்ட வகையில் ஐம்பொறிக் கெலிப்பு; வெற்றி யுறுதி தரும் குதிரைப் போட்டிப் பந்தயக்குறிப்பு; வெற்றி

யுறுதியுடைய துணிந்த தேர்வு; உடைமை முழுமையும் ஈடு படுத்திய துணிவுச் சூதாட்டச் செயல்; v. வெற்றியுறுதி யுடைய குதிரைப்பெயர் குறிப்பிடு; (தொ.) go nap, துணிந்த தேர்வுகள் ஐந்தும் கெலிக்கும் பொறுப்பேற்றுக்கொள்; முழுதும் இழக்கத் துணிந்திறங்கு.

nape, *n.* கழுத்தின் பின்புறம், பிடரி, பின் கழுத்து.

nap'ery, *n.* மேசைத்துணி; குடும்பப் பயனீட்டுக்குரிய துணி.

nap'-hand, *n.* வெற்றியுறுதிக்கான நம்பிக்கைதரும் துணிந்த தேர்வுக்குரிய நிலை.

naph'tha, *n.* இரசகற்பூரத் தைலம்.

naph'thalene, naph'thaline, *n.* இரசகற்பூரம்.

naph'thalize, *v.* இரசகற்பூரத் தைலமூட்டு, இரசகற்பூரத் தைலங்கலந்து பதனூட்டு.

nap'kin, *n.* குறுந்துணி, துடைப்புக்குட்டை; குழந்தையின் அணையாடை; (தொ.) lay up in a napkin, பயன்படுத்தா மலே வைத்திரு.

nap'kin-ring, *n.* துடைப்புக்குட்டை வளையம்.

napol'eon, *n.* (வர.) இருபது பிரஞ்சு வெள்ளி கொண்ட முதல் நெப்போலியன் காலத்திய பிரஞ்சு தங்க நாணயம்; உயரக் கால் புதையரணம்; தனித்தனி ஆட்டமாக ஐவராடும் பிரஞ்சு சீட்டாட்ட வகை; பனிக்கட்டியூட்டப்பட்ட உயர்தர அப்ப வகை; (தொ.) double napoleon, நெப்போலியன் காலத்திய 40 பிரஞ்சு வெள்ளிகொண்ட தங்க நாணயம்.

Napoleon'ic, *a.* (வர.) பிரஞ்சு பேரரசன் முதலாம் நெப் போலியனுக்கு உரிய; முதலாம் நெப்போலியனைப்போன்ற; மூன்றுவது நெப்போலியனுக்கு உரிய.

napp'y, *a.* சாராய வகையில் நுரைக்கிற, கடுமுனைப்பான.

na'pu, *n.* தென்கிழக்காசிய பகுதியிலுள்ள கத்தூரிமான் வகை.

nar'ceine, *n.* அபினியிலிருந்து எடுக்கப்படும் காரம், அபினி யைப்போல் பயன்படுத்தப்படும் அபினிக்காரம்.

narciss'ism, *n.* தற்பூசனை, தற்காதல்; தற்காதற் கோளாறு.

Narciss'us, *n.* முனைத்த மணமுடைய வெண்மலரும் அடித் தண்டுங்கொண்ட செடிவகை; *pl.* Narciss'i, Narciss'uses.

narc'olepsy, *n.* துயில் மயக்கநோய், திடீர்த்தூக்கக் கோளாறு வகை.

narcos'is, *n.* மரமரப்பு மருந்தூட்டிய நிலை; மரமரப்பு மருந் தூட்டல்; நோவுணர்ச்சியற்ற நிலை.

narcot'ic, *n.* மரமரப்பூட்டும் மருந்து; நோவுணர்ச்சி அகற்றும் பொருள்; மயக்கமருந்து; துயிலூட்டும் பொருள்; *a.* மரமரப்பூட்டுகிற, ஊறுணர்ச்சியகற்றுகிற; மயக்கமூட்டு கிற; துயிலூட்டுகிற; நோவுணர்ச்சியற்ற நிலைசார்ந்த.

narc'otism, *n.* மயக்க மருந்தின் செயலாற்றற் பண்பு.

narc'otize, *v.* மயக்கமூட்டும் மருந்தின் செயலுக்கு உட் படுத்து.

narg'hile, *n.* நீரோடி குடிப்புக்குழல், நீருடாகப் புகை வரும்படி அமைக்கப்பட்ட புகைபிடிக்குங் குழாய்.

narrate', *v.* எடுத்துரை, கதையாகக் கூறு; கதையாக எழுது.

narra'tion, *n.* எடுத்துரைத்தல், தொடர்பாகச் சொல்லுதல்; கதைப்படுத்துதல்.

na'rrative, *n.* கதை; கதைக்கூற்று; கூற்று; தொடர் உரை; கதைப்பகுதி; நிகழ்ச்சி விரிவுரை; *a.* கதை இயல் பான; கதை வடிவான; கதைக் கூற்றுக்குரிய; தொடர் உரை சார்ந்த, வரிசைப்பட எடுத்துரைக்கிற.

narra'tor, *n.* கதை கூறுபவர்.

na'rrow, *a.* ஒடுக்கமான, அகலக்கட்டையான; நெருக்கமான, இடையகலங் குறைந்த; கூம்பிய, குறுகிய; விரிவகற்சிக் கிடமில்லாத, இடவளமற்ற; முட்டுப்பாடான; சுருங்கிய, குடுவை போன்ற; எல்லைக்குறுக்கமான, அளவு வரையறைப் பட்ட; குறுகிய அளவான; சிறிதே விலகிய; குறுகிய நோக்கமுடைய; குறுகிய தன்னலமுடைய; தாராள மனப் பான்மையற்ற; குறுகிய வெறிபிடித்த; கஞ்சத்தனமான; கையிறுக்கமான; கடுஞ்சிக்கனமான; செல்வவளமற்ற; குருட்டுத் தப்பெண்ணமுடைய; மிகு கண்டிப்பான; நுணுகிக் காண்கிற; (ஒலி.) செறிவான; *v.* ஒடுக்கு; சுருக்கு; குறுக்கு; குறைபடு; கட்டுப்படுத்து; அடைத்திரு; ஒடுங்கு; சுருங்கு; துன்னலில் தைப்புக்களின் எண்ணிக்கையினைக் குறைவாக்கு; (தொ.) narrow bed, narrow cell, narrow house, கல்லறை; narrow circumstances, வறுமைச்சூழல் கள், வறுமை; narrow cloth, 52 அங்குலத்துக்குக் குறைவான துணிவகை; narrow escape, மயிரிழை தப்பிய நிலை; narrow examination, அஃகிய தேர்வாய்வு; narrow gauge, இருப்புப் பாதையில் 4 அடி $8\frac{1}{2}$ அங்குல அகலத்திற்குக் குறைந்த தண்ட வாள அமைவு; narrow goods, இழைக்கச்சை-சடை முதலிய வாணிகப் பொருள்கள்; narrow majority, சிறிதே மிகுந்த மேம்பாடுடைய பெரும்பான்மை; narrow seas, பிரிட்டானிய தீவுகளைச் சூழ்ந்த சிறுகடல்கள்.

na'rrow-mind'ed, *a.* குறுகிய நோக்கம் வாய்ந்த; தாராள மனப்பான்மையற்ற; பழைய குருட்டுத் தப்பெண்ணங்களை உடைய.

na'rrows, *n. pl.* இடுக்கு வழி; ஒடுங்கிய கால்வாய்; ஆற்றிடுக்கு; கடலிடுக்கின் மிக ஒடுங்கிய பகுதி; தெருவின் ஒடுங்கிய இடம்.

nar'thex, *n.* பெண்டிர்-நோன்பிகள்-சமயப் புத்தேற்பாளர்கள் வருவதற்குரிய முற்காலத் திருக்கோயிலின் அழியிடப்பட்ட மேற்கு முகப்புவாயில்.

nar'whal, *n.* கொம்பன் திமிங்கிலம், ஒற்றை அல்லது இரட் டைத் தந்தங்களையுடைய திமிங்கில வகை.

nas'al, *n.* மூக்கொலி; மூக்கொலியெழுத்து; மூக்கிடைத் தட்டு இணை எலும்பு; கவசத்தில் மூக்குறுப்பு; *a.* மூக்குக் குரிய; மூக்கு வழியாய் ஒலிக்கிற; மூக்கொலி சார்ந்த.

nasal'ity, *n.* மூக்கொலிப்பு.

nasaliza'tion, *n.* மூக்கொலிப்படுத்துதல்.

nas'alize, *v.* மூக்கொலிப்படுத்து.

nas'cency, *n.* தோற்றம் எடுக்கும் நிலை, முதிரா நிலை.

nas'cent, *a.* பிறக்கும் நிலையிலுள்ள, முழு வளர்ச்சி எய்தாத.

nase'berry, *n.* சடாமாஞ்சிப்பழம்; சடாமாஞ்சி மரம்.

nas'o-fron'tal, *a.* மூக்கையும் நெற்றியையுஞ் சார்ந்த.

nastur'tium, *n.* உணவாகப் பயன்படும் நீர்வாழ் செடிவகை; செம்பொன் நிற மலர்களையுடைய தூங்கு கொடிவகை.

nas'ty, *a.* அருவருக்கத்தக்க அளவு அழுக்கடைந்த, ஆபாச மான; ஊசிய, சுவைமணங் கெட்ட; ஓயாத் தொந்தரவான; தூறலும் சேறும் நிறைந்த, காற்றும் மழையும் மிக்க; இடர் வாய்ந்த, கேடார்ந்த; விடாச்சனியான; தீயொழுக்கத்தில் கிடந்துழல்கிற; நடைநலமற்ற; கோணல் நடை வாய்ந்த; விரும்பத்தகாத; தகாத்தனமான; சிடுசிடுப்பான; குணங் கெட்ட, கெடுமதியுடைய, பகைக்குங் குணமுடைய.

nat'al, *a.* பிறப்புச் சார்ந்த; பிறப்பு முதல் தொடர்கிற.

natal'ity, *n.* பிறப்பு வீதம்; பிறப்பு.

nata'tion, *n.* நீந்துதல்.

natator'ial, nat'atory, *a.* நீந்துகிற; நீந்துதல் சார்ந்த.

nat'es, *n. pl.* (உள்.) பிட்டம்; பார்வை சார்ந்த மூளையின் முன்புற அலகுகள்.

na'tion, *n.* இனம், தேசிய இனம்; நாட்டினம்; (தொ.) law of nations, நாடுகளிடையே ஒழுங்கு நிறுவும் சட்டக் கட்டுப்பாடு, League of Nations, சர்வதேச சங்கம், போரைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் 1919-இல் முதல் உலகப்போர் முடிவில் உடன்படிக்கையாலமைந்த பன்னாட்டு அமைப்பு; most favoured nation, குறைந்த அளவான காப்புவரிச் சலுகை பெறும் நாடு; United Nations, ஐக்கிய நாடுகள் அமைப்பு, முதலில் 1942-இல் அச்சு வல்லரசுகளுக்கெதிரான நேசதேச அமைப்பாகத் தொடங்கி 1945-இல் இரண்டாம் உலகப் போரின்பின் அமைதி விரும்பும் உலகநாடுகளின் கூட்டாகச் சீரமைக்கப்பட்ட அமைப்பு.

na'tional, *a.* நாட்டினத்துக்குரிய ; நாட்டுப் பொதுத்தளத்துக்குரிய, தேசம் முழுமைக்கும் உரிய ; தேசிய, நாட்டுக்குச் சிறப்புரிமையான ; நாட்டினத்தின் தனிப்பண்புக்குரிய ; தேசிய இனங்களுக்குரிய, நாட்டினங்களுக்குரிய, நாடுகளுக்குரிய ; (தொ.) Grand National, Grand National Steeple-chase, ஆண்டுதோறும் மார்ச்சு மாதத்தில் நடைபெறும் நீளிடை வழித்தடங்கல் குதிரைப் போட்டிப் பந்தயம் ; national air, national anthem, நாட்டுரிமைப்பண், தேசிய கீதம் ; national church, நாட்டு அரசியல் ஏற்புரிமை பெற்ற முறையார்ந்த திருச்சபை நிறுவனம் ; National Convention, பிரான்சில் பிரஞ்சுப் புரட்சிக் காலங்களில் 1792 முதல் 1795 வரை நடைமுறையிலிருந்த நிறை உரிமைப் பேரவை ; national debt, தேசியக் கடன், நாட்டின் பெயரால் அரசியலாரால் வாங்கப்பெற்றுத் திருப்பியளிக்கப் பெருதிருக்கும் தொகை ; National Guard, 1789-இல் முதலில் அமைக்கப்பட்ட பிரஞ்சுப் புரட்சிப் படை ; national school, இங்கிலாந்தில் 1811-ல் தொடக்கக்கல்வி பரப்புதற்காக அமைக்கப்பட்ட தேசியக்கழகத் தொடர்புகொண்ட பள்ளி ; National Socialist Party, செர்மனியில் ஹிட்லரால் அமைக்கப்பட்ட நாஜிக் கட்சி.

na'tionalism, *n.* நாட்டுப்பற்று ; தேசியக் கோட்பாடு ; தேசிய நடைமுறை ; தேசியத் தன்னுட்சிக்கொள்கை, நாட்டு விடுதலையுரிமைக் கோட்பாடு ; தொழில் துறையைத் தேசியமாக்குங் கொள்கை.

na'tionalist, *n.* தேசியவாதி, நாட்டு ஒருமைப்பாட்டுக் கொள்கையுடையவர் ; நாட்டுத் தனியாட்சியுரிமைக் கோட்பாட்டாளர் ; தேசிய நலங்களின் பற்றுர்வலர் ; நாட்டின் பேரரசாட்சியாற்றலில் அக்கறை கொண்டவர் ; நாட்டு நலங்கட்காக உழைப்பவர்.

nationalist'ic, *a.* தேசியஞ்சார்ந்த.

national'ity, *n.* நாட்டுரிமைப்பண்பு ; தேசியத்தன்மை ; நாட்டினச் சார்பு, தேசிய இன உறுப்பாண்மை சார்ந்த நாட்டினம் ; நாட்டின வாழ்வு ; தேசியப் பண்புடைய மக்கள் தொகுதி ; தேசிய இனம், அரசியல் நாட்டுப் பிரிவு ஒன்றன் கூருக உள்ள இனம் ; இனத்தேசியக் கூறு, நாட்டுப் பிரிவுகள் பலவற்றின் கூருகப் பரவியுள்ள இனக்கூறு.

nationaliza'tion, *n.* தேசிய மயமாக்குதல் ; நாட்டின் உரிமையாக்கம், நாட்டுடைமையாக்கம், நாட்டியலாக்கம்.

na'tionalize, *v.* தேசிய மயமாக்கு; நாட்டின் உரிமையாக்கு; அயல் நாட்டவர் வகையில் தேசியப் பண்பூட்டு ; தேசிய உடைமையாக்கு ; தேசியப் பொது ஆட்சிக்கு உட்படுத்து.

na'tionals, *n.* நாடொத்தவர் ; இனமொத்தவர்.

nat'ive, *n.* திணைப் பிறப்புரிமையாளர் ; பிறப்புரிமை ஆய்வு நிலையில் இருக்கப் பெற்றவர் ; ஆஸ்திரேலியாவிற் பிறந்த வெள்ளையர்; ஐரோப்பியரல்லாதவர் ; மேலை நாகரிகத்துக்குப் புறம்பான இனத்தவர் ; வெள்ளையருக்கு அயலான நிறத்தையுடையவர் ; வெள்ளையருக்கு அயலான நிறத்தவர் தொகுதி ; திணையுரிமைச் செடிகொடி ; திணைக்குரிய உயிரி ; பிரிட்டன் நீர் எல்லையில் வளர்ந்த கிளிஞ்சில் வகை ; பிரிட்டன் நீர் எல்லையில் செயற்கைத் தொட்டியில் வளர்க்கப்பட்ட கிளிஞ்சில் வகை ; *a.* இயல்பான உரிமையுடைய ; இயற்கையான ; உள்ளார்ந்த ; பிறப்புரிமையான ; அடிப்படைக்கூருன ; இயற்கை நிலையிணையுடைய ; செயற்கை ஒப்பனையற்ற ; செயற்கை மாறுதலற்ற ; எளிய ; இயல்பான இடத்திற் காணப்படுகிற, தன்னிடத்திலேயே உள்ள ; கனிப்பொருள் வகையில் இயலுருவான ; கனிப்பொருள் வகையில் இயற்கையிலேயே நேரடியாகப் பெற்ற ; பிறப்புரிமையான, பிறப்பிலே உரிமைப்பட்ட ; பிறப்பிலிருந்தே உரிமைப்பட்ட; திணைப் பிறந்த ; திணையிலிருந்து தோன்றிய ; திணையிலிருந்து உருவான ; அயல் வரவல்லாத ; இனமக்களுக்குரிய ; இன மக்களிடையே அயல்வரவின் முன்னரே காணப்பட்ட ; பிறப்புடன் இணைந்த ; ஆஸ்திரேலிய செடி கொடி உயிர் வகைகளில் ஆஸ்திரேலிய முன்மரபு மாதிரி சார்ந்த; கிளிஞ்சில் வகையில் பிரிட்டனில் செயற்கைத் தொட்டிகளில் பயிற்றி வளர்க்கப்பட்ட ; (தொ.) go native, திணைநிலக் குடிமக்களுடன் பழகி அவர்கள் நடையுடைபாணி மேற்கொள்ளு ; native rock, தன்னியல்பான இடத்திலேயே இருக்கும் பாறை; சுரங்கமிடப்படாத பாறை ; native princes, திணைக்குடி மன்னர்.

nat'ivism, *n.* அகநிலைக் கருத்துக்கோட்பாடு ; திணைக்குடி யாதரவுக் கோட்பாடு.

nativ'ity, *n.* பிறப்பு ; பிறப்புநிலை ; பிறப்பிடம் ; பிறந்த நேரம் ; பிறக்கும் முறை ; பிறப்புப்பற்றிய விவரம், ஜாதகம், பிறப்புப்பட்டி; பிறப்புக்குரிய சார்பு நாட்டினம்; திணைநிலைப் பிறப்பு ; திணைநிலைப் பிறப்புரிமை ; இயேசுநாதர் பிறப்பு ; இயேசுநாதர் பிறப்புப்படம்; இயேசுநாதர் பிறப்புநாள் விழா, கிறிஸ்துமஸ் பண்டிகை ; கன்னிமரி பிறப்பு, செப்டம்பர் 8; தூய திரு. ஜான் பிறப்பு, ஜூன் 24.

nat'ron, *n.* ஏரிக்கரைகளில் கிடைக்கும் நீருட்ட வெடியக்கரியகி.

natt'er, *v.* (பே-வ.) சோம்பேறித்தனமாக வெற்றுரையாடு; முணுமுணு ; கடுகடுப்பாகப் பேசு.

natt'erjack, *n.* முதுகில் மஞ்சள் வரைகளையுடைய பிரிட்டானிய தேரைவகை.

natt'ier blue, *n.* நீலத்தின் மென்சாயல் வண்ணம்.

natt'y, *a.* ஒழுங்குபட்ட, நேர்த்தியான, நுட்பநய நேர்த்தி வாய்ந்த ; கைத்திறமிக்க ; கைத்திறங் காட்டுகிற.

na'tural, *n.* பிறவி மந்தன் ; இசைத்துறையில் பொதுநிலைத் தொனி, முன்னதைப் பொதுநிலை ஆக்குந் தொனி; சீட்டாட்ட வகையில் முதலில் 21 குறி எண் கெலிப்பவர் ; *a.* இயற்கை சார்ந்த; இயல்பாக உண்டான; இயற்கையைப் பின்பற்றிய; இயற்கையால் வழங்கப்பட்ட ; ஆண்டு முதலியவற்றின் வகையில் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட ; இயல்பான ; தெய்விக அருநிகழ்வல்லாத ; இறையருள் வெளிப்பாடு சாராத ; ஆன்மிகச் சார்பற்ற; புனையப்படாத; அறிவு நிலைக் கட்டமைப்புச் சாராத ; இயற்கைநிலை மாருத; மனிதத் தலையீட்டால் மாற்றப்படாத ; சாவு வகையில் இயற்காரணங்களாலான, கொலை இடையூறுகளுக்கு உள்ளாகாத ; உள்ளார்ந்த, இயலுணர்ச்சி சார்ந்த ; இயலற உணர்வு சார்ந்த ; இயற்கைத் தூண்டுதலுக்குரிய நல்லுணர்ச்சிகளின் பாற்பட்ட ; அன்புப் பாசமுடைய ; பொதுநிலையான ; தானுகச் செயலாற்றுகிற ; இயல் நிகழ்வான ; வழக்கமான, பொது நடைமுறையிலுள்ள ; வியப்புக்கு இடனற்ற ; எதிர்பார்க்கத்தக்க ; உயிர்ப்பண்புடைய ; நடை எளிமையுடைய, பகட்டற்ற ; இயல் எளிமையுடைய, செயற்கை நடிப்பற்ற ; எளிவரலுடைய; இயற்கை மரபான; வலிந்து செய்யப்படாத; வலிந்துபெறப்படாத, பிறப்பினுல் தொடர்புடைய, தத்தெடுக்கப்படாத ; முறைகேடான ; திணைநிலைப் பிறப்புடைய; திணைநிலைப் பிறப்புரிமையுடைய ; இயல்நிலையிலுள்ள, திருந்தா நிலையுடைய; இசைத்துறையில் தொனி வகையில் பொதுநிலையுடைய ; இயல்துறை சார்ந்த ; (தொ.) natural gas, நிலத்திலிருந்து வெளிப்படும் வளி; natural history, நிலவுலகத்தையும் அதன் விளைவு வளங்களையும் ஆயும் பொது ஆய்வுத்துறை, தாவர இயல்-விலங்கு நூல்-கருப்பொருள் நூல் ஆகியவற்றின் தொகுதி ; களத்துறைக் கருப்பொருள்நூல் ; natural law, இயலமைதி, இயற்கையின் ஒழுங்கு ; சமயமும் சட்டமும் சாராத மனச்சான்றடிப்படையான நன்மை தீமையறிவமைதி; natural magic, இயலாற்றலின் சிறப்பறிவுத் துணையால் இயக்கப்படும் அருஞ்செயல் நிகழ்வு ; செப்படிவித்தை, கைத்திற வித்தை ; கலைத்துறைக் கற்பனையின் மாயக் கவர்ச்சியாற்றல் ; natural numbers, முழு எண்கள் ; natural order, தாவரக் குடும்பம் ; natural orders, இயல்நூற் பெரும்பிரிவுகள் ; natural philosophy, இயற்பியலாய்வு; பௌதிக ஆராய்ச்சி; natural science, உளநூல்-அறநூல்-கணக்கியல் அல்லாத புறநிலை இயற்கை ஆராய்ச்சித்துறை ; natural religion, பகுத்தறிவார்ந்த சமயம் ; natural selection, இயல் தேர்வு விளைவு ; மரபுப்பண்புகளும் போட்டியின் விளைவான தகுதி நேர்வுப்பண்புகளும் சேர்ந்த இயற்கை இயல் வளர்ச்சியின் தேர்வு ; natural son, சட்டப்படிச் செல்லாத மகன் ; natural system, இயல்மரபு வழாத வகைதொகைப் பாகுபாடு; natural theology, பகுத்தறிவார்ந்த இறைமை நூல்.

na'tural-born, *a.* திணைப்பிறப்புடைய.

na'turalism, *n.* இயற்கைப் பண்பாடு, இயற்கை வாய்மை நிலையினை அணுக்கமாகப் பின்பற்றும் முறை; வாய்மைப் பண்பு, கலை இலக்கியத் துறைகளில் வாய்மை வழுவாமையே குறிக்கோள் எனக் கருதும் பண்பாடு; நேர் வாய்மையியல்; மரபுப் பண்புகளை விலக்கி இயல்பு நிலையே பின்பற்றும் முறை; இயற்சமயக் கோட்பாடு, இயற்கை கடவாத சமய நம்பிக்கை; இயற்கை ஆத்திகம், இறையருள் வெளிப்பாடு இடம் பெருத இறை நம்பிக்கை; இயற்கை அடிப்படையான சமய அறநெறி முறைமை; இயலுணர்ச்சிகளின் அடிப்படையான செயல்நெறி முறை; (மெய்.) இயற்கோட்பாடு, இயற்கை கடந்த பண்புகளை விலக்கிய உலகியல் கொள்கை.

na'turalist, *n.* இயற்கைப் பண்பாடு பின்பற்றுபவர்; கலை-இலக்கியத் துறையில் வாய்மைப் பண்பாளர்; நேர் வாய்மையியல் பின்பற்றுபவர்; இயற்சமயக் கோட்பாட்டாளர்; இயற்கோட்பாட்டாளர்; செடிகொடி உயிரின ஆராய்ச்சியாளர்; நாய்களையும் கூண்டில் வளர்க்கப்படும் உயிரினங்களையும் வைத்து வாணிகஞ் செய்பவர்; பஞ்சு முதலியன உள் திணித்து மாண்ட உயிரின உடல் பதனஞ் செய்து வாணிகஞ் செய்பவர்; *a.* இயற்கைப் பண்பாடு சார்ந்த; வாய்மைப் பண்புடைய; இயற்கோட்பாடு சார்ந்த; இயற்பண்புக் குகந்த; இயற்கோட்பாட்டுக்கியைந்த; இயல் நூல்துறை சார்ந்த.

naturalis'tic, *a.*=naturalist.

na'turalize, *v.* அயல் நாட்டவருக்குக் குடியுரிமை வழங்கு; அயலினச் சொற்களையோ பழக்க வழக்கங்களையோ மேற்கொண்டு வழங்கு; செடி கொடி உயிரினங்களைப் புதுநிலத்தில் பயிற்றிப் புகுத்து; இயற்பண்பூட்டு; மரபு முறைகளைத் தவிர்க்கச் செய்; அருநிகழ்வுப் பண்புகளைத் தவிர்த்து விடு, இயல் அடிப்படையுடையதாக்கு; குடியுரிமையுடையவராகு; திணை இயைவு பெறு; இயற்பியல் ஆய்வு பயில்.

na'turally, *adv.* இயல்பாக; இயற்கை மரபு வழியாக; இயல்பான முறையில்; இயற்கையைப் பின்பற்றி; தன் இயல்புக்கிசைவாக; உயிரின் இயல்புப்படி; வழக்கப்படி, பொது வழக்காற்றினையொட்டி; எதிர்பார்க்கப்பட்டபடியே.

Na'ture[1], *n.* இயற்கை ஆற்றல், இயற்சத்தி.

na'ture[2], *n.* இயற்கை; இயலுலகு; இயற்கைநிலை; இயற்கை மரபு; இயல் நடைமுறை; இயலாற்றல்; இயலாட்சி; இயல் வளர்ச்சித்திறம்; இயல்நிலை ஒழுங்கு; இயல் வாய்மை; இயல்பு; இயல்பான தன்மை; உள்ளார்ந்த பண்பு; உள்ளுரம்; மனப்பண்பு; இயலுணர்ச்சிப் பண்பு; குணம்; இயல்புடையவர்; குணமுடையவர்; வகை, மாதிரி; தன்மை; தரம், தர அளவு, வகைத்திறம்; உள்ளாற்றல்; உயிராற்றல்; உயிரியக்கம்; கலைத் துறையில் இயற்கை வாய்மை; மூல இயற்கைநிலை, சமுதாய வளர்ச்சிக்கு முற்பட்டகால மனித வாழ்க்கைநிலை; செடி கொடி விலங்குகள் வகையில் பயிற்றுவித்துப் பழக்கப்படாத நிலை; ஆடையற்ற நிலை; மர உணவுச் சாறு, பாலரக்குச் சாறு; (தொ.) debt of nature, சாவு, மாள்வு; ease nature, relieve nature, குடல் இளக்கி மலம் வெளியேற்று; nature study, பொதுநிலைச் செடிகொடி உயிர் பற்றிய ஆய்வறிவுத்துறை; state of nature, இறையருளால் மீட்கப்படாத இயற்கை மனநிலை; touch of nature, இயற்பண்புக்கூறு; (பே-வ.) பிறர் ஒத்துணர்வை இயக்கவல்ல உணர்ச்சிக்கூறு.

na'ture-cure, *n.* இயற்கை மருத்துவமுறை, இயற்கையின் போக்கிலேயே குணங்காண விடும்படி நடத்தப்படும் மருத்துவ முறை.

na'ture-print'ing, *n.* இயலழுத்த அச்சு, இயற்கைப் பொருள்கள் அழுத்தி எடுக்கப்பட்ட பாளங்களினுல் எடுக்கப்படும் அச்சுமுறை.

naught, *n.* ஒன்றுமின்மை, இன்மை; (கண.) இன்மைக்குறி, சுழி; *a.* தகுதியற்ற, பயனற்ற; (தொ.) come to naught, ஒரு பயனுமில்லாமற் போ, முழுத் தோல்வியடை; set at naught, பொருட்படுத்தாதிரு, அலட்சியப்படுத்து.

naught'y, *a.* குறும்புத்தனமான, கீழ்ப்படிதலற்ற, நன்னடக்கையற்ற; கெட்ட, குறைகூறத்தக்க, கயமைத்தனமான.

naus'ea, *n.* நோய்மையுணர்ச்சி; கப்பற் பயணத்தில் குமட்டல் உணர்ச்சி; அருவருப்பு.

naus'eate, *v.* உணவு வெறுப்பூட்டு; அருவருப்பூட்டு; கடற் பயணக் குமட்டற் கோளாறு அடைவி; குமட்டலுணர்ச்சி கொள்; உணவு வெறு; அருவருப்புக் கொள், வெறுப்பு அடை.

naus'eous, *a.* குமட்டுகிற; அருவருப்பான மணஞ்சுவையுடைய, வெறுக்கத்தக்க.

nautch, (இ.) *n.* நாட்டியத் தொழிலர் காட்சி.

naut'ical, *a.* கப்பல்துறை சார்ந்த; கப்பலோட்டிகள் பற்றிய; கடலோடிகளுக்குரிய; கடற்படை-வணிகக்கப்பல் ஆகியவை பற்றிய; (தொ.) nautical almanac, கடல் நிலைப்பட்டி, வானிலை-கடலெழுச்சி-வேலை ஏற்ற இறக்கம் ஆகியவைபற்றிய செய்திகள் கொண்ட கடலோடிகளின் ஆண்டுக் குறிப்புநூல்.

naut'ilus, *n.* நத்தை வகை.

nav'al, *a.* கடற்படைக்குரிய; கடற்படையிலுள்ள; கடற்படைக்கான; கப்பலுக்கான; கப்பலுக்குரிய; கப்பற் படையினுல் வெல்லப்பட்ட; கப்பற் படையினுல் ஆற்றப்பட்ட; போர்க் கப்பலைத் தளமாகக் கொண்ட; போர்க்கப்பல்கள் அடங்கிய; (தொ.) Naval Aviation, கடற்படையின் விமானக் கிளைத்துறை; naval officer, கடற்படைத்துறை அதிகாரி; naval stores, கடற்படைக்கான பொருட்கிடங்கு.

nave[1], *n.* சக்கரத்தின் குடம், சக்கரத்தில் அச்சைப் பொருத்துமிடம்.

nave[2], *n.* கிறித்தவத் திருக்கோயிலின் நடுக்கூடம்.

nav'el, *n.* கொப்பூழ், உந்தி; மையப்புள்ளி; (தொ.) navel orange, கொப்பூழ் போன்ற உச்சி அமைவுடைய கிச்சிலிப் பழவகை.

nav'el-string, *n.* கொப்பூழ்க்கொடி.

nav'el-wort, *n.* செடிவகை.

nav'icert, *n.* கப்பலின் போர்க்காலச் சரக்குச் சான்றிதழ்; சரக்கு வகைக்குக் கடப்புரிமைச்சீட்டு.

navic'ular, *n.* கை-கால்களிலுள்ள படகுவடிவ எலும்பு; குதிரையின் படகு வடிவ எலும்பில் வரும் நோய் வகை; *a.* படகு வடிவுடைய, தோணி போன்ற; (தொ.) navicular bone, கை-காலிலுள்ள தோணி போன்ற எலும்பு.

nav'igable, *a.* நீர்வழிப் போக்குவரவுக்குரிய; கப்பல் செலுத்தக்க; கடல் திறமுடைய, கப்பல் வகையில் கடற் பயணத்துக்கேற்ற நன்னிலையில் உள்ள; பறவைக் கப்பல் வகையில் விரும்பிய வழிச் செலுத்தத்தக்க.

nav'igate, *v.* கடலிற் செலுத்து; கடற்பயணஞ் செய்; நீர்வழிச் செலுத்து; நீர்வழிப் போக்குவரவு செய்; விமானத்தை உகைத்துச் செல்; கப்பலைக் குறித்த திசையிற் செலுத்து; விமானத்தை விரும்பிய திசையில் இயக்கு.

naviga'tion, *n.* கடற் பயணம்; நீர்வழிச் செலவு; விமான வகையில் அகல்வெளிச் செலவு; கப்பல் வழிநிலை தெரிமுறை; வானூர்தி நெறிநிலை தெரிமுறை; நீர்வழிச் செலவுத் திறம்; (தொ.) aeriel navigation, வான்வழிச் செலவு; inland navigation, உள்நாட்டு நீர்வழிச் செலவு, ஆறு-கால்வாய்-ஏரிகள் வழிப் போக்குவரவு.

naviga'tion-coal, *n.* நீராவிக் கொதிகலங்களுக்குப் பயன்படுத்தப் பெறும் நிலக்கரி வகை.

nav'igator, *n.* கடல்வழி வல்லுநர், திறமை வாய்ந்த கப்பலோட்டி; கடல்சூழ் வரவாளர், கடற் பயணப் பொறுப்பு ஏற்பவர்; புதுக் கடல்வழி காண்பவர், புதுக் கடலிடம் புகுபவர்.

navv'y, *n.* கால்வாய்-இருப்புப்பாதை-சாலை முதலிய துறைகளில் அகழ்வுத் துறைப் பணியாள்.

nav'y, *n.* கப்பற்படை; கப்பற் கூட்டம், கப்பல் தொகுதி; நாட்டுக் கடற்படைத்துறை, கடற்படைக் கப்பல்களும் கப்பற் பணியாளர்களும் சேர்ந்த தொகுதி; (தொ.) navy bill,

கடற்படைத் தலைமை நிலையம் அளிக்கும் காசோலை; navy blue, கடற்படைத் துறையினர் அணியும் ஆழ்ந்த நீலநிற ஆடை; navy cut, மெல்லிதாக நறுக்கப்பட்ட புகையிலைச் சுருளை; navy league, கடற்படையில் நாட்டு மக்களின் ஆர்வத்தைத் தூண்ட அமைக்கப்பட்ட குழு; navy list, படைத்துறைப் பெயர்கள்-செய்திகள் கொண்ட கடற்படைப் பணி நிலைய ஏடு.

nawab', *n.* மாகாண ஆட்சியாளர்; பெருமகன், செல்வச் சீமான்.

nay, *n.* அன்றெனும் சொல்; மறுப்பு; எதிர்ப்புரை; *adv.* அப்படியன்று; இன்னும் சொல்லப்போனால்; உண்மையில், மெய்யாக.

Nazarene', *n.* நாசரேத் நகரத்தவர்; கிறித்தவர்; பழங்கால யூத கிறித்தவக் கிளைமரபினர்; *a.* நாசரேத் நகரைச் சார்ந்த; கிறித்தவரான; யூத கிறித்தவர்களைச் சார்ந்த.

Naz'arite[1], *n.* நாசரேத் நகரத்தவர்.

Naz'arite[2], *n.* யூத நோன்பி.

naze, *n.* நிலக்கூம்பு முனை, கடலுள் உந்தி நிற்கும் நிலக் கோடு.

Na'zi, *n.* செர்மானிய தேசிய சமநெறிக் கட்சியின் உறுப்பினர்.

Naz'irite, *n.* = Nazarite[2].

neap, *n.* வியன்கால் வேலை ஏற்ற இறக்கம், மதி வட்டத்தின் முதற்காலிலும் மூன்றும் காலிலும் நிகழும் மட்ட வேலை ஏற்ற இறக்கம்; *v.* அலை வகையில் மட்ட வேலை ஏற்ற இறக்கமடை; கப்பல் வகையில் மட்ட வேலை ஏற்ற இறக்கத்தால் பின் தங்கலுறு.

Neapol'itan, *n.* இத்தாலிநாட்டு நேப்பிள்ஸ் (Naples) நகரத்தவர்; *a.* நேப்பிள்ஸ் நகரம் சார்ந்த; (தொ.) Neapolitan ice, பல நறுஞ்சுவை வண்ண அடுக்குடைய உறைபாலேடு; Neapolitan violet, இருவகை நறுமணங் கொண்ட தனிமலர் வகை.

neap'-tide', *n.* = neap.

near, *a.* அணுக்கமான, நெருங்கிய உறவுடைய; நெருக்கமான, நெருங்கிய பழக்கமுடைய; இப்பாலான, நெருங்கிய தொலைவிலுள்ள; அருகிலுள்ள; கால அணிமையுடைய; குறுகிய தொலைவுடைய, நேர் குறுக்கான; இடது பக்கமான; நெருங்கிய ஒப்புமையுடைய; அணுக்க ஏற்றத் தாழ்வான; நுணுகி நோக்க வேண்டிய, நுட்பமான; இடுங்கிய; மயிரிழை தப்பிய; *adv.* அருகில்; கால அணிமையில்; ஏறத்தாழ; கிட்டத்தட்ட; நெருக்கமாக, அணித்தாக; கஞ்சத்தனமாக; கிட்டத்தட்ட முனைந்தொருங்கி; *prep.* அருகே; நெருங்கி; தொலை குறைவாக; அடுத்து, பக்கத்தில்; நுணுக்கமாக; கால அணித்தாக; *v.* அணுகு, நெருங்கு; (தொ.) far and near, எங்கும், எல்லா இடத்திலும்; near at hand, கைக்கெட்டிய தொலைவில்; மிக அண்மைக் காலத்தில்; near by, சிறிது தொலைவில்; near miss, மயிரிழை தப்பிய நிலை; near upon, விரைவில், மிக அணித்தான காலத்தில், நெருங்கி; near work, அருகில் வைத்து நுணுகிப் பார்த்துச் செய்யவேண்டிய வேலை; the near distance, முகப்புக்கும் பின்னணிக்கும் இடைப்படு தொலைவுத் தோற்றம்.

Nearc'tic, *a.* (வில.) வட அமெரிக்காவின் குளிர் மட்டு வெப்ப மண்டலங்களைச் சார்ந்த.

near'ly, *adv.* கிட்டத்தட்ட; ஏறத்தாழ, நுணுகி; மிக அணுக்கமாக, நெருக்கமாக.

near'-sighted, *a.* அணிமைப் பார்வையுள்ள, குறுக்கப் பார்வையுள்ள; வருவது உணராத.

neat'[1], *n.* எருது, மாட்டின விலங்கு, கால்நடைகள்.

neat[2], *a.* நேர்த்தியான, செப்பமிக்க தோற்றமுடைய; செம்மையான, ஒழுங்கமைப்புடைய; நேரிய; அமைப்பெளிமை வாய்ந்த; மொழிநடை-சொற்கள் வகையில் திட்பம் வாய்ந்த, திட்ப நுட்பம் இயைந்த; செயல் திறமிக்க; எளிமை வண்ணஞ் சான்ற; முறைமை வாய்ந்த; துப்புரவான, அப்பழுக்கற்ற; மது வகையில் நீர் கலவாத.

neath, *prep.* (செய்.) கீழே, அடியில்.

neat'-handed, *a.* கைத்திறம் வாய்ந்த.

neat'-herd, *n.* ஆயர், ஆனிரை மேய்ப்பவர், இடையர்.

neat'-house, *n.* மாட்டுத்தொழுவம், கால்நடைப்பட்டி.

neat'ly, *adv.* துப்புரவாக; ஒழுங்கெளிமையுடன்; கைத்திற எளிமையுடன்.

neat'ness, *n.* துப்புரவு; ஒழுங்கெளிமை; எளிமைத்திறம்.

neat's'-foot, *n.* மாட்டுக் காலடி இறைச்சிக்கறி.

neat's'-leather, *n.* மாட்டுத்தோல்.

neat's'-tongue, *n.* மாட்டுநா இறைச்சிக்கறி.

neb, *n.* அலகு; மூக்கு; மூஞ்சி; முகறை நுனி; மூக்குப் போன்ற கூம்பு முனை; நுனி.

neb'ula, *n.* விழி வெண்கோளத்திற் படர்ந்து பார்வைக் கோளாறு உண்டாக்கும் மேகம் போன்ற மறு அல்லது புள்ளி; (வான்.) ஒண்முகிற் படலம்; ஒண்மீன் படலம், ஒளி ஆவி போலத் தோன்றும் நீணெடுந் தொலை விண்மீன் குழாம்; *pl.* neb'ulae.

neb'ular, *a.* ஒண்மீன் படலஞ் சார்ந்த; (தொ.) nebular hypothesis, nebular theory, ஞாயிற்று மண்டலமும் பிற விண்மீன் மண்டலங்களும் ஒண்மீன் படத்திலிருந்தே தோன்றின என்னும் கொள்கைவாதம்.

nebul'ium, *n.* வண்ணப்பட்டையின் பச்சைநிறப் பகுதியில் உள்ள ஒளிமிக்க வரிகளின் காரணமாக முன்னுல் கருதப்பட்ட வளி மூலப் பொருள்.

neb'ulous, *a.* (வான்.) ஒண்மீன் படலத்துக்குரிய; ஒண்மீன் படலம் போன்ற; முகில் போன்ற; மஞ்சு படர்ந்தாற் போன்ற; மங்கலான, தெளிவற்ற, தெளிவான உருவற்ற; கலங்கலான, குழம்பிய; (தொ.) nebulous star, தெளிவற்ற உடுக்களின் சிறு திரள்; ஒண் படலத்தினுட்பட்ட விண்மீன்.

necessar'ian, *n.* = necessitarian.

necessar'ianism, *n.* மன்னியல் வாதம், விருப்பாற்றல் புற ஆற்றல்களால் இயக்கப்படுவதேயன்றித் தன்னியலாற்றலாலன்று என்று கொள்ளும் கோட்பாடு.

ne'cessaries, *n. pl.* இன்றியமையாத் தேவைப்பொருள்கள், உயிர்நிலைத் தேவைகள்.

ne'cessarily, *adv.* தவிர்க்க முடியாதபடி, கட்டாயமாக, இன்றியமையா நிலையில்.

ne'cessary, *n.* கட்டாயத்தேவை; ஒதுக்கிடம்; (பே-வ.) பணம்; *a.* இன்றியமையாத, அவசியமான; கட்டாயத் தேவையான; தீராது வேண்டப்படுகிற; நடந்துதீர வேண்டிய; ஆகவேண்டிய; தவிர்க்க முடியாத, விலக்க முடியாத; விருப்புரிமைக்கு இடமற்ற, கட்டாயமாகச் சுமத்தப்பட்ட.

necessitar'ian, *n.* மன்னியல்வாதி, புறநிலைக் காரணங்களன்றிச் செயற்காரணங்களாகத் தன்னியலான விருப்பாற்றல் எதுவும் கிடையாதென்ற கோட்பாட்டினை உடையவர்; *a.* மன்னியல் வாதமான.

necessitar'ianism, *n.* = necessarianism.

necess'itate, *v.* இன்றியமையாததாக்கு, தவிர்க்க முடியாதபடி செய், அவசியமாக்கு, கட்டாயப்படுத்து.

necess'ities, *n. pl.* வறுமை, நல்குரவு; கடுந்துயர், துன்பம்; நெருக்கடித் தேவைநிலை.

necess'itous, *a.* வறுமையான, நல்கூர்ந்த.

necess'ity, *n.* இன்றியமையாமை, தவிர்க்கமுடியாமை; கட்டாய நிலை; சூழ்நிலைக் கட்டுப்பாடு; விலக்க முடியா நிகழ்வு, கட்டாய விளைவு; தவிர்க்க முடியாத செய்தி; (தொ.) logical necessity, மறுக்க முடியாத இயல் முடிவு; வாத முறை நேர்முடிவு; make a virtue of necessity, செய்து தீர வேண்டியதை மனமாரச் செய்து தீர்; விலக்க முடியாததை ஏற்றமைதிகொள், தவிர்க்க முடியாததை நற்பண்புடன் ஏற்றமை; of necessity, தவிர்க்க முடியாத நிலையில்.

neck[1], *n.* கழுத்து; விலங்கின் கழுத்திறைச்சி; குப்பியின் குறுகிய கூறு; வழி-வாய்க்கால் முதலியவற்றின் ஒடுங்கிய பகுதி; நில இடுக்கு, நில இணைப்பு; கணவாய்; இடை

இணைப்புப் பகுதி; (க-க.) தூணின் தலைப்படுத்த கீழ்ப்பகுதி; ௳. கட்டித் தழுவு, கழுத்தைக்கட்டு; (தொ.) break neck of task, வேலையிலுள்ள மிகக் கடினமான பகுதியைக் கட; neck and crop, தலைகீழாக; முழுதும்; முன்பின் பாராமல் எல்லாவற்றையும்; neck and neck, ஓட்டப்பந்தயத்தில் நெருக்கமாக ஓடுகிற; neck or nothing, வெற்றிக்காக எதற்கும் துணிந்து அனைத்தையும் பணயம் வைத்தல்; save one's neck, தூக்கிலிடப்படாமல் தப்பித்துக்கொள், தன்னைக் காத்துக்கொள்.

neck[2], *n.* கடைசி அறுவடைக் கூலக்கதிர்க் கட்டு.

neck'band, *n.* கழுத்துப்பட்டி.

neck'cloth, *n.* கழுத்துக்குட்டை, ஆடவர் கழுத்தைச்சுற்றி அணியும் துகிற்பட்டி.

neck'erchief, *n.* கழுத்தைச்சுற்றி அணியுங் குட்டை.

neck'ing, *n.* (க-க.) எருத்தம், தூணின் தலைப்பகுதிக்கும் நடுத்தண்டிற்கும் இடையிலுள்ள பகுதி.

neck'lace, *n.* ஆரம், கழுத்து மாலை, பதக்கம், கண்டசரம்.

neck'let, *n.* கழுத்து அணி; கம்பளிப் பட்டிகை.

neck'tie, *n.* கழுத்துக்கச்சு, கழுத்துப்பட்டையைச் சுற்றி அணியப்படும் சுருக்கு.

neck'-verse, *n.* தலை காக்கும் பாடல், திருச்சபைக் காப்புரிமையுடையவர் கொலைத் தண்டனையிலிருந்து தவிர்ப்புப் பெற வாசிக்கப்படும் விவிலியப் பாடல் வாசகம்.

neck'wear, *n.* கழுத்தணி.

necrobios'is, *n.* உடலின் தசை அழுகல்.

necrogen'ic, *a.* இறந்த உடலினின்று தோன்றிய.

necrol'atry, *n.* இறந்தவர் வழிபாடு; இறந்தவர் பற்றிய மதிப்பு; பிண வழிபாடு; பிணத்துக்குக் காட்டப்படும் மதிப்பு.

nec'rology, *n.* இறந்தவர் பெயர்ப்பட்டி.

nec'romancer, *n.* ஆவியுலகப் பேச்சாளர்; மாய வித்தையாளர்.

nec'romancy, *n.* ஆவிகள் தொடர்பால் வருவதுரைத்தல்; மாயவித்தை, மாந்திரிகம்.

nec'rophagous, *a.* பிணந் தின்னுகிற.

nec'rophore, *n.* இறந்தவற்றைப் புதைத்து மூடிவைக்கும் வண்டுவகை.

nec'ropolis, *n.* இடுகாடு.

nec'ropsy, nec'roscopy, *n.* பிணத்தேர்வாய்வு, இறந்த பிறகு செய்யும் உடல் ஆய்வு.

necros'is, *n.* உடற்பகுதி இழைம அழுகல், எலும்புடன் உடற்பகுதி இழைமம் அழுகல்.

nec'tar, *n.* அமிழ்தம், சாவா மருந்து; இன்சுவைப்பானம்; தேன்; வளியூட்டப்பட்ட பான வகை.

nec'tarine, *n.* கண்ணிறுக்கமான சதைப் பற்றுடைய பேரியினக் கனிவகை.

nec'tary, *n.* மலரின் தேன்தடம்.

Nedd'y, *n.* கழுதை.

need, *n.* தேவை; தேவைக்கூறு; தேவைப்படுநிலை; வேண்டிய பொருள்; துணையற்ற நிலை; இடர்நிலை, நெருக்கடி நிலை; இல்லாக்குறை; இலம்பாடு, வறுமை; ௳. தேவையுறு, வேண்டிநாடு; தேவைப்படு; தேவையுணர்; குறைபாடுறு; குறைபாடு உணர்; கடப்பாடு கொண்டிரு; இன்றியமையா நிலையுறு; வேண்டியதாகு; (தொ.) have need, தேவையுடையவராயிரு; have need of, வேண்டுதலுறு, தேவை உணர்; if need be, தேவைநிலை ஏற்பட்டால், தேவைப் பட்டால்.

need'fire, *n.* உராய் நெருப்பு, உலர்ந்த கட்டை உராய்தலினால் ஏற்படுந் தீ.

need'ful, *a.* தேவைப்படுகிற, இன்றியமையாத, அவசியமான.

nee'dle, *n.* ஊசி; ஊசி வடிவ மணியுருப் படிவம்; குளிர் மண்டல மர வகைகளின் ஊசி வடிவ இலை; கூர் முட்கருவி; காந்த முள், காந்த ஊசி; பொன் உரையாணி; கூரறுவைக் கருவி; கூரலகுடைய செதுக்கு கத்தி; தோலடிப் பீற்றுக் குரிய குத்து மருந்தூசி; இசைத்தட்டு முள்; துப்பாக்கி-பீரங்கிகளின் குண்டுறை வெடிக்க வைக்கும் வெடியூசி; தூபி, கோரி, ஊசிக்கோபுரம்; கூர்முனைக் கொடும்பாறை; நீள் கொடுமுடி, கூர்ஞ்சிமையம்; (க-க.) தற்கால உதைகால்; குத்தல் உணர்ச்சி; தொல்லை; ௳. ஊசியால் தை; குத்து; துளை; ஊடுருவு; ஊடுருவிச் செல்; ஊடாகப் புகுந்துசெல்; புகுந்து வழிசெய்; உத்தர உதைகால் கொடு; ஊசியுரு மணிப்படிவமாகு; ஊசிப்படிவமாயமை; குத்திக்கிளறு; எரிச்சலூட்டு; தொல்லைகொடு; அலைக்கழி; செயலுக்குத் தூண்டு; (தொ.) needle game, needle match, பகைமை உணர்ச்சியைத் தூண்டும் முனைப்பான போட்டி விளையாட்டு.

nee'dle-bath, *n.* ஊசித்தாரைக் குளிப்பறை.

nee'dle-book, *n.* புத்தக வடிவ ஊசிப்பெட்டி.

nee'dle-fish, *n.* முரல் மீன், ஊசி போன்ற வடிவுடைய மீன்.

nee'dleful, *n.* ஊசியில் ஒரு தடவையில் கோக்கக்கூடிய நூலின் அளவு, ஊசிக் கோப்பளவு நூல்.

nee'dle-gun, *n.* ஊசியின் தாக்குதலால் தோட்டா வெடிக்கும் துப்பாக்கி வகை.

nee'dle-lace, *n.* ஊசிப் பின்னல்வேலை.

nee'dle-point, *n.* கூர்முனை; ஊசிப் பின்னல் வேலை.

need'less, *a.* தேவையற்ற, வேண்டாத.

nee'dlewoman, *n.* தையல் மாது, தையல் பயிற்சித் திறமுடைய பெண்.

nee'dlework, *n.* தையல் வேலை.

need'ments, *n. pl.* தேவைப்பொருள்கள்; பயணத் துணைப் பொருள்கள்.

needs[1], *n. pl.* இயற்கைத் தேவைகள்; இயற்கை வாய்ப் புதவிகள்.

needs[2], *adv.* இன்றியமையாத நிலையில், கட்டாயமாக.

ne'er, *adv.* (செய்.) = never.

ne'er'-do-well, ne'er'-do-well, *n.* உதவாக்கரை, ஒன்றுக்கும் பயனற்ற ஆள்.

nefar'ious, *a.* கொடிய, இழிந்த, பழியார்ந்த, வெறுக்கத் தக்க.

negate', *v.* மறு, இல்லையென்று கூறு, இல்லாததாக்கு.

nega'tion, *n.* மறுத்தல்; மறுப்பு; மறுப்புரை; மறுப்புச் செய்தி; மறுப்புக் கோட்பாடு; எதிர்மறை; அன்மை; இன்மை; இல்பொருள்; மறுதலை மெய்ம்மை; மெய்யல்லாதது.

nega'tionist, *n.* அழிவுவாதி; வெற்று மறுப்புவாதி, தனக்கென ஆக்கக் கருத்தாக எதுவுமின்றி ஒப்புக் கொள்ளப்பட்ட எல்லாப் பொதுக் கருத்துக்களையும் முற்றிலும் மறுப்பவர்.

neg'ative, *n.* எதிர்மறை; எதிர்மறைப் பண்பு; அன்மை; இன்மைக்கூறு; மறுப்புரை; எதிர்மறை வாசகம்; மறுப்பெதிர் மொழி; மறிநிலை எண், எதிர்மறையான அளவை; நிழற்படத்தில் மறிநிலைத் தகடு; மின்கலத்தில் எதிர்மின் தகடு; *a.* எதிர்மறையான; மறுப்பான; மறுமொழி வகையில் மறுப்புத் தெரிவிக்கிற; தடையான, தடையறிவிக்கிற; வாக்குச் சீட்டு வகையில் எதிரான; அல்லாத; எதிர்பண்பு வாய்ந்த; எதிர் இயல்புடைய; இன்மைக்கூறு தெரிவிக்கிற; எதிர்மறைக் கூருன; எதிர்மறைச் சார்பான; எதிர்மறையை அடிப்படையாகக் கொண்ட; நிழற்படத்துறையில் மறிநிலைப் படிவமான; எதிர்மின் சார்ந்த; ஆற்றல் வகையில் எதிர் விசையார்ந்த; (அள.) மாறுபாடு வலியுறுத்துகிற; மெய் விலக்குகிற; (கண.) மறுதலையான; கழித்துக் காண வேண்டிய; இழப்புக் குறித்த; ௳. மறுத்துரை; மறு; தவறென்று எண்பி; இசைவு மறு; எதிர்த்தழி, செல்லாதாக்கு; பயனற்றதாக்கு.

neg'ativism, *n.* வெற்று மறுப்புவாதம், அழிவுவாதம்.

neglect', *n.* புறக்கணிப்பு; புறக்கணிக்கப்பட்ட நிலை; புறக்கணிப்பு மனப்பான்மை; புறக்கணிப்புக்கு ஆளாகும் நிலை; கருத்தின்மை; உன்னிப்பின்மை, கவனக்குறைவு; *v.* புறக்கணி; கவனியாதிரு; விழிப்புத் தளரவிடு; கவனிக்காது விடு; முடிக்காமல் வழுவு; செய்யத்தவறு.

neg'lige, *n.* எளிமை உடை; எளிமைத் தோற்றம் மேற்கொண்ட உடை.

neg'ligeable, *a.* = negligible.

neg'ligence, *n.* கருத்தின்மை, கவனக்குறைவு; கவனிப்புக் குறைபாடு, பேணிப்பாராக் குறை; புறக்கணிப்பு; கட்டுப்பாட்டுத் தளர்வு, கலைத்துறையில் செயற்கைப்பண்புக்கு ஆட்படாத இயலெளிமைப்பண்பு.

neg'ligent, *a.* புறக்கணிக்கிற; கவனக்குறைவான; கருத்தூன்றிச் செய்யப்படாத; பேணிப்பாராத; கட்டுப்பாட்டைப் புறக்கணிக்கிற; எண்ணிப்பாராத.

neg'ligible, *a.* புறக்கணிக்கத்தக்க, தள்ளிவிடக்கூடிய, சிறப்பில்லாத.

neg'otiable, *a.* பணமாக மாற்றத்தக்க; (தொ.) negotiable instrument, செலாவணி முறி.

nego'tiate, *v.* கூடிக்கலந்து பேசு, ஒப்பந்த நோக்குடன் கலந்துரையாடு; இசைவிணக்க முறையிற் கலந்து ஏற்பாடு செய்; கலந்துபேசி முடிவுசெய்; கைப்பொருள் பெற்றுப் பண முறியை மாற்றிக்கொடு; காசாக மாற்று, கொடுத்து நாணய விலைமதிப்புப் பெறு; பெற்று நாணய விலைமதிப்புக்கொடு; வேலி தாண்டிச் செல்; இடர் கடந்து செல்; இக்கட்டு வகையில் ஒரு தீர்வு காண்; இடர்நீக்கு.

negotia'tion, *n.* ஒப்பந்தம் பேசுதல்; பேரப்பேச்சு.

Neg'ress, *n.* நீகிரோ இனப்பெண்.

negrill'o, *n.* நடு ஆப்பிரிக்காவிலும் தென் ஆப்பிரிக்காவிலும் உள்ள குள்ள நீகிரோ இனத்தவர்; *pl.* negrill'os.

negri'to, *n.* மலேயோ-பாலினீசிய (Malayo-Polynesian) நிலப் பகுதியிலுள்ள குற்றுருவ நீகிரோ இனத்தவர்.

Neg'ro, *n.* நீகிரோவர், நீகிரோ இன ஆண்; *a.* நீகிரோ இனத்தைச் சார்ந்த, நீகிரோக்களால் உறைவிடமாக்கப்பட்ட; நீகிரோக்களோடு தொடர்புகொண்ட; கருநிறமுடைய, கருமையான; இருண்ட; *pl.* Neg'roes; (தொ.) negro ant, கட்டெறும்பு; negro minstrels, நீகிரோ இனப் பாடல்களையும் நடனங்களையும் பாடியாடிக் காட்டும் நாடோடி நடனக்குழு.

neg'ro-head, *n.* காரமான கரும்புகையிலை; கீழ்த்தர ரப்பர்வகை.

Neg'roland, *n.* நீகிரோவர் நிலம்; ஆப்பிரிக்காவில் நீகிரோவர்கள் குடியிருக்கும் நிலப்பகுதி.

Neg'us[1], *n.* அபிசீனியாவின் அரசர்.

neg'us[2], *n.* இன்தேறலும் நீரும் கலந்த வெப்பான இனிப்புப் பானம்.

neigh, *n.* கனைப்பு; *v.* குதிரைபோலக் கனை.

neighb'our, *n.* அயலவர், அருகிலுள்ளவர், அக்கம் பக்கத்திலுள்ளவர்; அண்டைவீட்டார்; அடுத்திருப்பவர்; அடுத்த தெருவினர்; பக்க ஊரினர்; அண்டை நாட்டினர்; அருகிலுள்ளது; அணிமையிலுள்ள பொருள்; நட்புணர்ச்சியுடையவர்; பாசமுடையவர்; பாசத்துக்குரியவர்; *v.* அடுத்திரு; எல்லையடுத்திரு; ஒரே எல்லைகொண்டிரு; அணித்தாயிரு, கிட்டத்தட்ட சென்றெட்டியதாயிரு.

neighb'oured, *a.* அண்டையயலாராகக் கொண்ட; அருகாகக் கொண்ட; சுற்றுச் சூழ்நிலையாகக் கொண்ட.

neighb'ourhood, *n.* அருகிடம், சுற்றுப்புறம்; சூழ்வட்டாரம்; அணிமை; அருகிலுள்ள தன்மை; அணுக்க அளவு; அணிமை ஒப்புமை; அணிமை இணக்க உணர்ச்சி, அணிமைப்பாசம்.

neith'er, *pron.* இரண்டும் அற்றது, இதுவும் அதுவும் அல்லாதது, குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பொருள்களில் எதுவுமல்லாதது; *a.* இரண்டுமற்ற, இதுவும் அதுவும் அல்லாத, குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையுள்ள பொருள்களில் எதுவுமல்லாத; *adv.* இரண்டும் இல்லாததாக, ஒன்றிலும் சாராததாக; *conj.* அல்லது இதுவோவெனில் அதுதானும் இல்லை.

nek, *n.* தென் ஆப்பிரிக்க மலைத்தொடரில் இடைப்பள்ளம்.

nek'ton, *n.* (உயி.) பெருங்கடலிலும் ஏரியிலும் நீந்தி வாழும் உயிரினத்தொகுதி.

nell'y, *n.* வெண்மையும் கருமையுமான நீண்ட இறகுத் தொகுதியுடைய மிகப்பெரிய கடற்பறவை வகை.

nem'atocyst, *n.* இழுதுமீன் முதலியவற்றில் கொடுக்காக இயக்கத்தக்க சுருள் இழை அடங்கிய நுண்மக்கூறு.

nem'atode, nem'atoid, *n.* நீண்டுருண்ட வடிவுடைய புழு வகை; *a.* நீளுருள் வடிவுடைய.

Nem'esis, *n.* பழித்தெய்வம்; சூழ்வினை ஆற்றல்; கலை இலக்கியத்துறையில் இயல்பான அறமுறைப் பழிவிளைவு.

nem'ine contradicen'te, (ல.) (சு-வ. *nem. con.*) *adv.* யார் மறுப்புமின்றி, எதிர்வாக்கில்லாமல், ஒருமுகமாக.

nen'uphar, *n.* அல்லி மலர்வகை.

ne'o-Cam'brian, *a.* (மண்.) தண்டிலா உயிரூழியின் முதற் பகுதியின் பிற்கூறு சார்ந்த.

ne'odoxy, *n.* புதிய கோட்பாடு; புதிய கொள்கை.

ne'o-Hell'enism, *n.* கிரேக்க கொள்கை குறிக்கோள்களின் மறுமலர்ச்சிப் பண்பு.

neolith'ic, *a.* புதிய கற்காலத்தைச் சார்ந்த, பண்பட்ட கருவிகள் பயன்படுத்தப்பெற்ற கற்காலப் பிற்பகுதி சார்ந்த.

neolo'gian, *n.* சமய சித்தாந்தத் துறையிற் புதுச்சொற் பொறிப்பாளர்; இறைமையாய்வு நூல் துறையிற் புதுச் சொல் வழங்குபவர்; *a.* இறைமையாய்வு நூல் துறையிற் புதுச்சொல் வழங்குகிற; இறைமையாய்வு நூல் துறையிற் பகுத்தறிவுச் சார்புடைய.

neol'ogism, neol'ogy, *n.* புதுச் சொற்படைப்பு; புதுப் படைப்புச்சொல்; சமய சித்தாந்தத்துறையில் புதுமைக் கருத்துச்சார்பு; சமய சித்தாந்தத்துறையில் புதுப்பகுத்தறிவுக் கோட்பாட்டுச் சார்பு; இறைமையாய்வு நூலில் புதுக்கருத்தேற்பாளர்; இறைமையாய்வு நூலில் பகுத்தறிவுச் சார்பு ஏற்பவர்.

ne'o-Malthu'sianism, *n.* கருத்தடை முறை வழக்காறு.

ne'on, *n.* செவ்வொளி விளக்குக்களில் பயன்படுத்தப்படும் செயலற்ற தனிமவளி; (தொ.) neon light, செவ்வொளி விளக்கு.

neontol'ogy, *n.* வாழ் மரபாய்வுநூல், நின்று நிலவும் மரபுடைய விலங்குகள் பற்றிய ஆய்வுநூல்.

ne'ophron, *n.* எகிப்திய வெண்கழுகு வகை.

ne'ophyte, *n.* சமயப்புதுவர், புதிதாகச் சமயம் மாறியவர்; முற்காலக் கிறித்தவ சமயப் புத்தேற்பாளர்; ரோமன் கத்தோலிக்க சமயப் புத்தேற்பாளர்; புத்தமர்வுற்ற சமயகுரு; துறவுச்சங்கப் புதுவரவாளர்; புதுப்பயிற்சியாளர்; புது மாணவர்; அனுபவமற்றவர்.

ne'o-Plat'onism, *n.* பிளேட்டோ (Plato) கருத்துக்களும் கிழ்த்திசைக்குரிய மறைமெய்ம்மைக் கொள்கைகளும் சேர்ந்த மூன்றும் நூற்றாண்டுக் கலவைக் கோட்பாடு.

neote'ric, *a.* புதுமையான, புத்தம்புதிய; அண்மைக்காலத்திய; புது வழக்காறான, புதுவரவான, புதிதுபுகுந்த; புத்தம் புதுப்பாணியான; தற்காலத்துக்குரிய.

neotrop'ical, *a.* அமெரிக்க வெப்பமண்டலப் பகுதிக்குரிய; அமெரிக்க வெப்பமண்டலப் பகுதியில் காணப்படுகிற.

neozo'ic, *a.* (மண்.) தொல்லுயிரூழிக்குப் பிற்பட்ட ஊழிகளுக்குரிய, இடையுயிரூழி புத்துயிரூழிகட்குரிய.

nepen'the, *n.* துயர் மறக்கவைக்கும் மருந்து.

nepen'thes, *n.* சாடி வடிவ இலைகளுள்ள செடியினம்.

ne'phew, *n.* உடன்பிறந்தார் மகன், அண்ணன் மகன்; தம்பி மகன்; அக்காள் மகன்; தங்கை மகன்.

nephol'ogy, *n.* முகிலாய்வு நூல், மேகம்பற்றிய ஆராய்ச்சித் துறை.

nephrec'tomy, *n.* குண்டிக்காயறுவை.

nephrit'ic, *a.* குண்டிக்காய் சார்ந்த, குண்டிக்காயிலுள்ள.

nephrit'is, *n.* குண்டிக்காய் வீக்கம்.

ne plus ul'tra, (ல.) *n.* மேற்செலவுத் தடுப்பாணை ; கடக்க முடியாத்தடை ; செல்லத்தக்க உச்சநிலை ; உச்ச எல்லை ; மீமுகடு ; நிறைவுநிலை.

nep'otism, *n.* குருதிச்சலுகை, உயர்பணியர் உறவினர்க்குக் காட்டும் தனி ஆதரவு.

Nep'tune, *n.* கிரேக்கபுராண மரபில் கடல் தெய்வம் ; சேண் மம், கதிரவனைச் சுற்றி ஓடும் எட்டாவதுகோள் ; (தொ.) Neptune's cup, பவளவகை.

Neptun'ian, *n.* பாறைகள் சிலவற்றின் நீர்வழித் தோற்றக் கோட்பாடுடையவர் ; *a.* (மண்.) நீரின் செயலால் தோன்றுகிற.

neptun'ium, *n.* சேணியம், விண்ணிய அணுக்கள் நொதுமங்களை ஏற்றுச் சேணியம் ஆகும்போது ஏற்படும் நிலையற்ற இடைமாற்ற நிலைத்தனிமம்.

ner'eid, *n.* கடலணங்கு ; (வில.) நீண்ட கடற்புழு, கடற்பூரான்.

ner'o anti'co, (இத்.) *n.* பண்டை ரோமப் பேரரசின் பாழடைந்த கட்டிடங்களில் காணப்படும் கருஞ் சலவைக்கல்.

ner'oli, *n.* நறுமணப் பொருள்களுக்காகப் பயன்படுத்தப்படும் செம்மஞ்சள் மலர்த் தைலம்.

Neron'ian, *a.* ரோமப் பேரரசன் நீரோவைச் சார்ந்த ; பேரரசன் நீரோ காலத்துக்குரிய ; கொடுங்கோன்மை வாய்ந்த ; கொடிய, இரக்கமற்ற ; ஆணவமான, மனம்போன போக்குடைய ; வரம்பு கடந்த.

nerv'ate, *a.* (தாவ.) இலை வகையில் நரம்புகளுள்ள.

nerva'tion, nerv'ature, *n.* இலைநரம்பு அமைதி.

nerve, *n.* நரம்பு ; தசை, தசைக்கட்டு; (உள்.) உணர்ச்சி நாளம், மூளையிலிருந்து உடலுறுப்புப் பகுதிகளுக்குத் தூண்டுதல் அலையதிர்வுகளைக் கொண்டுசெல்லும் தசைநாண் ; வில்நாண் ; நரம்பின் நாரியல் இழைமம் ; (தாவ.) இலை நரம்பு, நடுநரம்பு ; முறுக்கேறிய நிலை ; ஊக்கம் ; ஆற்றல் ; மனவுறுதி ; இடரிடை உலையா மன அமைதி ; மனத்திட்பம் ; துணிவு ; தளராத்தன்னம்பிக்கை ; (பே-வ.) துணிச்சல், திண்ணக்கம், துடுக்குத்தனம் ; *v.* வலியூட்டு, ஊக்கமளி, உரமூட்டு ; இடர் எதிரே முழுவலிமையும் திரட்டி ஒருங்குவி ; (தொ.) strain every nerve, முழு முயற்சிசெய்.

nerve'-cen'tre, *n.* நரம்பு மையம்.

nerve'-knot, *n.* நரம்புத்திரள்.

nerve'less, *a.* வலிமையற்ற, உரமற்ற; கிளர்ச்சியற்ற; செயலற்ற ; நரம்பில்லாத.

nerves, *n. pl.* நரம்புணர்வுநிலை ; அளவுமீறிய கூருணர்ச்சி நிலை ; நரம்புக் கோளாறுநிலை, எளிதில் கிளர்ச்சியூட்டப்படும் நிலை ; உணர்ச்சித் துடிப்பு ; (தொ.) a fit of nerves, நடுக்க நிலை ; get on one's nerves, தொந்தரவு கொடுப்பதாயிரு, பொறுமையைச் சோதிப்பதாயிரு ; lose one's nerves, மனவுறுதி இழ ; war of nerves, வேதனைப்போர், மனவுரங் கெடுக்கும் போர் முயற்சி.

nerv'ine, *n.* (மரு.) நரம்பூக்க மருந்து, நரம்புக்கோளாறு தணிவிக்கும் மருந்துப்பொருள் ; *a.* நரம்புத்தளர்ச்சியைத் தணிவிக்கிற, நரம்புக்கோளாறுகளைப் போக்குகிற.

nerv'ous, *a.* தசைப்பற்றுள்ள, தசைக்கட்டு நிரம்பிய ; வலிமை பொருந்திய ; இலக்கியநடை வகையில் உரமிக்க, பொருட்செறிவான, சொற் சுருக்கமிக்க ; நரம்பு சார்ந்த ; நரம்புகள் நிறைந்த ; நரம்புணர்வைப் பாதிக்கிற; மென்மையான நரம்புகளையுடைய, நுட்பக்கூருணர்வுடைய; தொட்டால் சிணுங்குகிற ; நரம்புக்கோளாறுடைய ; எளிதில் சினங்கொள்கிற ; எளிதில் மனக்கிளர்ச்சிகொள்கிற; எளிதில் அமைதியிழக்கிற; அஞ்சி நடுங்குகிற; கோழைத்தனமுடைய ; துணிவில்லாத; மனவுரமற்ற ; கூச்சப்படுகிற ; (தொ.) nervous system, நரம்புமண்டலம் ; நரம்புமண்டல அமைப்பு.

nerv'ure, *n.* பூச்சி சிறகின் நரம்புச்சட்டம் ; இலைநரம்பு ; இலையின் தலைநரம்பு.

nerv'y, *a.* (செய்.) வலிமையுடைய, தசைப்பிடிப்புடைய.

nesc'ience, *n.* அறிவின்மை.

nesc'ient, *n.* அறிவின்மைக் கோட்பாட்டாளர், கடவுளையோ இயற்கை கடந்த எவ்வாற்றலையோ அறிய இயலாதென்னும் கோட்பாடு உடையவர் ; *a.* அறியாமையுள்ள, கடவுள்பற்றிய கருத்தற்ற, ஐயுறவுக்கோட்பாடுடைய.

ness, *n.* நிலக்கோடு, நிலமுனை, நிலக்கூம்பு.

nest, *n.* கூடு, பறவை தங்கி வாழுமிடம் ; புழுப்பூச்சிக்கூடு ; விலங்கின் உறைவிடம் ; உறையுள் ; வீடு ; ஒதுக்கிடம் ; தனிவாழ்விடம்; தனிக்காப்பிடம்; இன்ப வாய்ப்பிடம்; இனப்பெருக்கிடம் ; பேணிடம் ; திருடர் சேம இடம் ; தீமை தழைப்பிடம் ; மொய்திரள், இனக்குழு ; தொகுதி ; திரட்டு ; இழுப்பறைத் தொகுதி; *v.* கூடுகட்டி வாழ்; கூடுகட்டு; கூடமைப்பில் ஈடுபடு ; கூட்டைப்பறித்தெடு ; கூட்டில் அமைத்துவை, செறித்துவை ; ஒன்றுக்குள் ஒன்றாகப் புகுத்தி வை.

nest'-egg, *n.* தூண்டு முட்டை, பெட்டைக்கோழி முட்டையிடும்படி தூண்டுவதற்காக வைத்த முட்டை அல்லது முட்டைப்போலி ; சேம ஒதுக்கீட்டுத்தொகை ; சேமிப்புத் தொகைக் கருமூலம்.

ne'stle, *v.* மிடைந்திரு ; மொய்த்திரு ; ஒட்டி அணைந்திரு, தழுவியிரு ; வாய்ப்பாக அமர்ந்துகொள், பாதி உடல் புதைவாகக் குழைத்தமர்ந்துகொள் ; பேணி அணை ; அணைவாக நெருக்கு ; அமர்விடம் அளி.

ne'stling, *n.* புனிற்றிளங்குஞ்சு, கூட்டைவிட்டு நீங்க இயலாத இளங்குஞ்சு.

Nes'tor, *n.* அறிவுமிக்க முதியவர் ; குழுவில் மூத்தவர்.

Nestor'ian, *n.* இயேசுநாதர் தெய்விகத் தன்மையும் மனிதத் தன்மையும் வெவ்வேறாகக் கொண்டிருந்தவர் என்ற முற்காலக் கான்ஸ்டாண்டிநோப்பிள் சமய முதல்வர் நெஸ்டாரியஸ் (கி. பி. 428) என்பாரின் கோட்பாட்டாளர்; *a.* நெஸ்டாரியஸ் என்பாருக்குரிய ; நெஸ்டாரியஸ் என்பாரின் கொள்கை சார்ந்த ; இயேசுநாதர் தெய்விகத் தன்மையும் மனிதத்தன்மையும் உடைய இருவேறு இயல்புடையவர் என்ற கோட்பாட்டைச் சார்ந்த.

net[1], *n.* வலை ; மீன்வலை; பழமுதலியன வைக்கும் வலைப்பை; பந்தாட்ட வலை ; சூழ்ச்சி ; சிலந்திக்கூடு ; வலைபோன்ற அமைப்பு ; வலைப்பின்னல் வேலை ; *v.* வலையால் மூடு ; வலையிட்டுப்பிடி ; வலையிலடை ; மீன்பிடி ; ஆற்றில் வலை வீசு ; வலைப்பின்னல் வேலை செய் ; பை-படுக்கை முதலியவற்றை வலைப்பின்னலாக முடை ; வலைப்படிவத்தில் அமை, வலைப்படிவப்பாணியில் அமை ; வலையாரப்பின்னு ; வலைபோல பின்னு.

net[2], *a.* கழிவு நீங்கிய, கழிவுபோக எஞ்சியுள்ள, நிகர, தேவையான குறைப்புக்கள் போக மிகுதியாக நிற்கின்ற ; *v.* நிகர ஆதாயமாகப்பெறு; நிகர வருவாயாகப் பயனளி; (தொ.) net price, நிகரவிலை, கழிவுதள்ள முடியாத திட்டவட்ட விலை; net profit, நிகர ஆதாயம், செலவுகழித்த மெய்ந்நிலை ஆதாயம்.

net'ball, *n.* வலைக்கூட்டுப் பந்தாட்டம், மேல்கட்டிய வலைத் தொங்கலுடைய வளையத்தினூடாகப் பந்துவிழும்படி ஆடும் பெண்டிர் பந்தாட்ட வகை.

ne tem'ere, (ல.) *n.* புறச்சமயத் திருமணத்தடைக் கட்டளை, தனி இசைவாலன்றிப் பிறசமயத்தாருடன் ரோமன் கத்தோலிக்கர் செய்யும் திருமணம் செல்லாதென்ற போப்பாண்டவரின் 1907-ஆம் ஆண்டு ஆணை.

neth'er, *a.* கீழே உள்ள ; அடியிலுள்ள, உள்ளான ; நிலவுலகுக்குக் கீழே உள்ள; (தொ.) nether garments, காற்சட்டை ; nether man, nether person, கீழுறுப்புத்தொகுதி, கால்கள் ; nether millstone, கல்நெஞ்சம் ; nether regions, nether world, கீழுலகம், நரகு.

Neth'erlander, *n.* நெதர்லாந்து நாட்டவர்.

Neth'erlandish, *a.* நெதர்லாந்து நாட்டைச் சார்ந்த.

net'suke, *n.* குமிழணி, ஜப்பானியர் அணியும் மெருகிடப்பட்ட குமிழ்மாட்டி போன்ற அணிகலன்.

nett'ing, *n.* வலையிடல்; வலை; வலைக்குரிய இழை; வலைப் பின்னலுக்கான கச்சை; வலையமிக்கான கம்பி; கம்பியாலான வலை; கம்பி வலைப்பகுதி.

net'tle, *n.* பூனைக்காஞ்சொறிச் செடி வகை; *v.* முட்செடிகளால் அடி; காஞ்சொறிமுத்துப்போலக் குத்து; எரிச்சலுண்டாக்கு; சினமூட்டு; தொந்தரவுசெய்.

net'tle-rash, *n.* காஞ்சொறிமுத்துக்களால் ஏற்படும் தடிப்புச் சொறி வேதனை.

net'work, *n.* பின்னல் வேலை; பின்னல், வலையமைவு, குறுக்கு மறுக்குக்கட்ட அமைவு; ஆறு-இருப்புப்பாதை-கால்வாய் முதலியவற்றின் வலைபோன்ற கிளைப்பின்னலமைப்பு; இணைதிட்ட ஒலிபரப்பு நிலையக்கோவை.

neum, neume, *n.* (இசை.) அசை ஒலிப்பு இசைப்புக்குறி; இடைநிலைக்கால இசைமானத்தில் சுரத்தொனி ஏற்ற இறக்கக் குறி.

neur'al, *a.* நரம்புகள் சார்ந்த; நரம்புமைய அமைப்பைச் சார்ந்த.

neural'gia, *n.* நரம்பு வலி; தலைவலி, விட்டுவிட்டு வரும் கடுமையான முகக்கடுப்பு.

neural'gic, *a.* தலைவலி சார்ந்த.

neurasthen'ia, *n.* நரம்புத்தளர்ச்சி.

neurasthen'ic, *a.* நரம்புத்தளர்ச்சி சார்ந்த.

neura'tion, *n.* பூச்சி சிறகின் நரப்புச்சட்டப் பரப்பு; இலை நரப்புச் சட்டப்பரப்பு.

neurec'tomy, *n.* நரம்பறுவை, நரம்புத்துணிப்பு.

neur'ine, *n.* நரம்பிழைமம்.

neurol'ogy, *n.* நரம்பாய்வு நூல்.

neurom'a, *n.* நரம்புக்கட்டி; *pl.* neurom'ata.

neuro-mus'cular, *a.* நரம்புத்தசை சார்ந்த.

neur'opath, *n.* இயற்கை கடந்த உணர்ச்சியறிவுள்ளவர்; இயல்மீறிய நரம்புணர்ச்சிக் கோளாறுடையவர்.

neurop'athist, *n.* நரம்புநோய் மருத்துவ வல்லுநர்.

neurop'athy, *n.* இயற்கைமீறிய நரம்புக்கோளாறு.

neuro-physiol'ogy, *n.* நரம்புமண்டல அமைப்பாய்வுநூல், நரம்புமண்டலம் பற்றிய உடலமைப்புநூல்.

neuro-psych'ic, *a.* நரம்பியல்-உளவியல் ஆகிய இருசார்புப் பண்புகளுஞ் சார்ந்த.

neurop'terous, *a.* பளிங்குவலை போன்ற நாலு சிறகமைப்புடைய பூச்சியினம் சார்ந்த.

neuros'is, *n.* நரம்புச்சிக்கலால் ஏற்படும் உடல்நிலைக் கோளாறு; மூளை நுண்ம அமைதிக்கோளாறு; *pl.* neuros'es.

neurot'ic, *n.* நரம்புமண்டலத்தைப் பாதிக்கும் மருந்துச்சரக்கு; நரம்புக்கோளாறுடையவர்; இயற்கை மீறிய உணர்ச்சியுடையவர்; *a.* நரம்புமண்டலத்தைப் பாதிக்கிற; நரம்புக்கோளாறுக்கு ஆட்பட்ட; இயற்கை மீறிய உணர்ச்சியுடைய.

neurot'omy, *n.* ஒருசிறை உணர்விழப்புக்கான நரம்பறுவை.

neurypnol'ogy, *n.* செயற்கைத் துயிலூட்டுக்கலை, வசியம்.

neut'er, *n.* (இலக்.) ஆண்பெண்பால் வேறுபாடு காட்டாப் பெயர்ச்சொல்; பால்வேறுபாடு காட்டாப் பெயரடை; தன்வினை, செய்வினை செயப்பாட்டுவினை வேறுபாடற்ற வினைச் சொல்; நொதுமலர், போரில் இருசார்புமற்ற பொது நிலையாளர்; வாதத்தில் சார்புகொள்ளா நடுநிலையாளர்; கருத்து வேறுபாட்டில் சார்பற்றவர்; பூச்சியினப்பெண்பாலில் பாலின முதிர்வற்றவை; செடியினத்தில் பாலின உறுப்பற்றவை; விதையகற்றப்பட்ட பூனை; *a.* இரண்டுங்கெட்ட; பொது நிலையான; சார்பற்ற; ஆண்பெண் பான்மை குறிக்காத; செய்வினை செயப்பாட்டுவினை வேறுபாடு குறிக்காத; தாவரங்களில் பாலின உறுப்புக்களற்ற; பூச்சியினத்தில் பாலின முதிர்ச்சியற்ற பெண்பாலான, மலடான; போரில் சார்பற்ற; வாதத்தில் நடுநிலையான; கருத்து வகையில் தனிச்சார்பு கொள்ளாத.

neut'ral, *n.* நடுநிலை அரசு; போரில் நடுநிலை வகிக்கும் நாடு; நடுநிலையாளர், நடுநிலை வகிப்பவர்; நடுநிலை நாட்டுக் குடிமகன்; நடுநிலை நாட்டுக் கப்பல்; விசையூக்க இயந்திரத்தில் இயக்கம் ஊட்டாது இயங்கும் பகுதியின் நிலை; *a.* போரில் ஈடுபடாத, நடுநிலையான, விலகிநிற்கிற; விலகி நிற்கும் உரிமை அளிக்கப்பட்ட; வாதத்தில் சார்பற்ற; கருத்து வேறுபாடுகளில் கலக்காத, தனிநிலையான; சார்புறுதியற்ற; தெளிவான, நிலையற்ற; திட்டவட்டமான பண்பற்ற; வகைப்படுத்த முடியாத; தனிமுனைப்புப்பண்பில்லாத; முடிபுறுதியற்ற; சுவைமுனைப்பற்ற; வண்ண உறுதியற்ற; பூச்சியினத்தில் பெண்பாலில் பாலின வளர்ச்சியற்ற, பெண்மலடான; தாவரத்தில் பாலுறுப்புக்களற்ற; மின்னூற்றலில் நொதுமின்னூன; வேதியியலில் காடி-காரச் செயல்கள் இரண்டுமற்ற; (தொ.) neutral tint, சாம்பல் நிறம், கற்பலகை வண்ணம்; stand neutral, நடுநிலையிலிரு; போரில் ஈடுபடாதிரு; போரில் நடு நிலையாயிருப்பதாக அறிவி.

neut'ralize, *v.* மட்டுப்படுத்து, முனைப்பழி; மாறான விளைவால் பயனற்றதாக்கு; ஈடுகட்டு, சரிக்கட்டு; இட வகையில் போர் எல்லையிலிருந்து விலக்கிவை.

neut'ron, *n.* நொதுமம், மின் இயக்கமில்லாத சிற்றணுத்துகள்.

neve, *n.* குழை பனிப்பரப்பு; பனியோடையின் தலைப்பில் பனிக்கட்டியாகச் செறிவுறாத தளர் பனித்திரள் பரப்பு.

nev'er, *adv.* ஒருபோதுமில்லா நிலையில், என்றுமில்லா நிலையில்; (தொ.) it is never too late to mend, சீர்திருந்துவதற்கு எப்போதும் இடமுண்டு; never a one, யாருமில்லை, ஒருவருமில்லை; Never Never, Never Never Land, வட குயின்ஸ்லாந்து (Queensland) நாடு; never so, அளவு கடந்த தன்மையில்.

nev'ermore', *adv.* இனி எக்காலத்தும் இல்லா நிலையில்.

nevertheless', *adv.* எனினும், அப்படியிருந்தாலும், இருந்த போதிலும்.

new, *a.* புதிய; முன்னில்லாத; முதன்முதலாகத் தெரிவிக்கப்படுகிற; முன் உணரப்படாத; தெரியவராத; முன்கேட்டறியாத; முன்கண்டறியாத; அண்மையில் தோன்றிய; புதிதாக ஆக்கப்பட்ட; அணிமையில் செய்துமுடிந்த; புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட; புதிதான, பழக்கத்திலில்லாத; மாறிய; மாறுபாடான; புது மாறுதலுடைய; புதுப்பிக்கப்பட்ட; புதிதாகச் சேர்க்கப்பட்ட; கெடாத; புதுநிலையிலுள்ள; பழமைப்பட்டுவிடாத; தேய்வுறாத; தளராத; பளபளப்புக் குறையாத; புத்தாக்கம்பெற்ற; புத்துயர்வுபெற்ற; புது வகையான; புதுப்பயனுடைய; வேறு வகையான; அனுபவமற்ற; புதுமுறையான; *adv.* புதிதாக; அண்மையில்; (தொ.) new chum, தாய்நாட்டிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் புதிதாக வந்துள்ள; new comer, காலந்தாழ்ந்து வந்துசேர்ந்தவர்; New Deal, அமெரிக்க ஐக்கியநாட்டுத் தலைவர் ரூஸ்வெல்ட் (Roosevelt) ஆட்சியில் (1932-இல்) திட்டமிடப்பட்ட சமூக பொருளாதாரச் சீரமைப்புத்திட்டம்; New Englander, புதிய இங்கிலாந்து குடியேற்றவாசி, ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஆறு பிற்பட்ட ஆங்கிலக் குடியேற்ற அரசுகள் ஒன்றில் குடியாகவுள்ளவர்; new look, தற்கால உடைப்பாணி, புத்தம்புதிய தோற்றம்; new man, கிறித்தவ மதத்தில் புதிதாகச் சேர்ந்த புறச்சமயி, கிறித்தவ மதத்திற்கு மாறியவர்; new moon, முதற் பிறைநிலா; new year, வரும் ஆண்டு; தொடங்கிவிட்ட ஆண்டு; புத்தாண்டு, put on the new man, கொள்கை-மத மாற்றங்களை வெளிப்படையாகக் காட்டு; the New Comedy, பிற்காலக் கிரேக்க இன்பியல் சமுதாய நாடகம்; the New Learning, பதினாறும் நூற்றாண்டில் இங்கிலாந்தில் புகுத்தப்பட்ட கிரேக்க கல்விமுறை; the new model, (வர.) 1644-5-ஆம் ஆண்டில் பாராளுமன்றப் படையைத் திருத்தி அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டம்; the new woman, புதுமைப்பெண், ஆடவருடன் சரிசம உரிமை விரும்புபவள், பழம்போக்கை உதறித்தள்ளி விடுதலை வேண்டும் பெண்; the New World, அமெரிக்கா; turn over a new leaf, திருந்து, திருந்திப் புதுவழி தொடங்கு.

new'-blown, *a.* புதுமலர்ச்சியுடைய, அப்பொழுதுதான் மலர்ந்த.

new'-born, *a.* புதிதாகப் பிறந்த.

new'-built, *a.* புதுப்பித்துக் கட்டப்பட்ட, திரும்பக் கட்டப் பட்ட.

new'-coined, *a.* சொற்கள் வகையில் புதிதாகப் படைத்துரு வாக்கப்பட்ட.

new'-come, *a.* காலந்தாழ்த்து வந்துசேர்ந்த.

new'el, *n.* சுழற்படிக்கட்டின் நடுத்தூண் ; படிக்கட்டுக் கைப் பிடி வரிசையின் அடிக்கம்பம் ; படிக்கட்டுக் கைப்பிடி வரிசை யின் உச்சிக்கம்பம் ; (தொ.) hollow newel, open newel, சுழற் படிக்கட்டின் மைய இடைவெளி.

new-fang'led, *a.* புதுமை விரும்பியான ; புதுவரவுப் பாணி யான ; புதுமைப் போக்கான.

Newfound'land, Newfound'land dog, Newfound'-lander, *n.* நீந்தும் ஆற்றல்மிக்க பெரிய வேட்டைநாய் வகை.

new'-front, *v.* புதிய முகப்பு அமை.

new'-furnish, new'-model, *v.* சீர்திருத்தி அமை.

Newg'ate, *n.* லண்டன் நகரச் சிறைச்சாலை ; (தொ.) Newgate frill, Newgate fringe, முகம் மழிக்கப்பட்டு மோவாயின் கீழ் வளர்க்கப்படுந் தாடி ; Newgate knocker, கூவிவிற்பவர் கள் மேற்கொள்ளும் தலைமயிர்ச்சுருள்.

new'ly, *adv.* புதிய முறையில் ; புதிதாக ; அண்மையில் ; சிறிது காலத்துக்குமுன் ; சிறிது காலமாக.

Newm'arket, *n.* குதிரைப்பந்தயங்களுக்குப் பெயர்போன நகரம் ; இறுக்கமான மேற்சட்டை ; சீட்டாட்ட வகை ; (தொ.) Newmarket coat, இறுக்கமான மேற்சட்டை.

news, *n. pl.* செய்தி ; புதுத்தகவல், புதிய நிகழ்ச்சிகளின் விவரம்; (தொ.) that is no news, அது முன்னரே தெரிந்தது தான்.

news'-agent, *n.* செய்தித்தாள் விற்பவர்.

news'-boy, *n.* செய்தித்தாள் கூவி விற்கும் பையன்.

news'-letter, *n.* செய்திமடல், நாட்டுப்புற ஊர்களுக்குச் செய்திகளுடன் அனுப்பப்படும் கடிதம்.

news'-man, *n.* செய்தித்தாள் விற்பவர்.

news'monger, *n.* வம்பளப்பவர், ஊர்ச்செய்தி பேசுபவர்.

news'paper, *n.* செய்தித்தாள், பத்திரிகை.

news'print, *n.* செய்தித்தாள் அச்சிடுதற்கான தாள்.

news'-reel, *n.* செய்திச்சுருள், நாட்செய்திகளைத் தெரிவிக் கும் திரைப்படம்.

news'-room, *n.* செய்தித்தாள் படிப்பதற்கான அறை.

news'-sheet, *n.* எளிய வடிவச் செய்தித்தாள்.

news'-stand, *n.* செய்தித்தாள் விற்பனைச் சாவடி.

news'-vendor, *n.* செய்தித்தாள் விற்பவர்.

newt, *n.* பல்லியின உயிர்வகை.

Newton'ian, *n.* நியூட்டன் (Sir Isaac Newton 1642-1727) என்ற விஞ்ஞான அறிஞரைப் பின்பற்றுபவர்; தொலைநோக்கி வகை ; *a.* நியூட்டனுக்குரிய ; இயலுலகு பற்றிய நியூட்ட னின் கொள்கை சார்ந்த; நியூட்டனால் திட்டம் செய்யப்பட்ட.

new-year's day, *n.* புத்தாண்டுநாள், ஜனவரி முதல் நாள்.

new-year's eve, *n.* புத்தாண்டுக்கு முந்திய நாள், டிசம்பர் முப்பத்தோராம் தேதி.

next, *n.* அடுத்தவர் ; அடுத்தது ; மிக அணிமை உறவுடை யவர் ; மிக அணிமை உறவுடையது ; *a.* அடுத்த ; ஒட்டி அருகிலுள்ள; உடனடியாகப் பின்தொடர்கிற; மிக அணிமை யுடைய ; மிக அணிமை ஒப்புடைய ; அடுத்துவருகிற ; அடுத்தபடியான; மிக அணிமை உறவுடைய; *adv.* அடுத்து; மிக அணிமையில் ; அடுத்தபடியாக ; அடுத்தாற்போல ; இனி ; அடுத்த தடவை ; *prep.* அடுத்துப்பக்கத்தில் ; மிக அணிமையில் ; மிக ஒப்பாக ; (தொ.) next of kin, மிக அணிமையான உறவினர் ; next to nothing, கிட்டத்தட்ட ஒன்றுமில்லை என்று சொல்லும்படி.

next'-best, *a.* இரண்டாவதாகச் சிறந்ததாயுள்ள.

next'-door [1], *a.* அடுத்த வீட்டில் இருக்கிற; பக்கத்தில் கடை வைத்திருக்கிற ; அண்டையிலுள்ள ; (தொ.) next-door to felony, கொடுங்குற்றமென்றே சொல்லத்தக்க.

next-door' [2], *adv.* அடுத்த வீட்டில் ; பக்கத்தில்.

nex'us, *n.* இணைவு, தொடர்பு, பற்று, உறவு ; (தொ.) he cash nexus, பணத்தொடர்பு.

Niag'ara, *n.* நீர்வீழ்ச்சி, அருவி, மலைவீழாறு; பேரொலி, கம்பலை; (தொ.) shoot Niagara, பயங்கர இடரில் துணிந்து குதி.

nib, *n.* இறகு மைக்கோலின் கூர்முனை; பேனு அலகு; கருவி முதலியவற்றின் கூர்முனை; *v.* பேனு அலகு செய்; பேனு அல கினைச் சரிப்படுத்து ; அலகினைப் பேனுக் கட்டையிற் செருகு.

nib'ble, *n.* கொறித்தல், கொந்துதல் ; அரித்தல், சிறுகடி ; கொறிப்பதற்குப் போதிய புல்லளவு ; *v.* சிறுகச் சிறுகக் கடித்துத்தின், கொந்து ; விளையாட்டாகக் கறித்துக்கொண் டிரு ; கொறி ; மெல்லப் பற்களால் பிருண்டு; அரி; கடிந்து கொள், சிறு குற்றங்குறை கூறி நச்சரிப்புச் செய்.

nib'lick, *n.* பெரிய உருண்டையான தலைப்பகுதியுடைய குழிப்பந்தாட்ட மட்டை.

nibs, *n. pl.* கொக்கோ விதைகளின் நொறுங்கல் துணுக்குக்கள்.

nice, *a.* நுட்பமான ; நயமான; நுண்ணயமான; மென்னய மிக்க ; இன்னயம் வாய்ந்த ; கூருணர்வு நயமுடைய, சிறு நுட்பமும் உணர்கிற ; நுண்ணயத்திரிபுணர்வு வேண்டப் படுகிற ; நுட்பத்திறமை வாய்ந்த ; நுண்ணயத்திறமிக்க ; சிறுநுட்பம் காட்டுகிற ; பூத்தானமான, மட்டின்றி நுட்ப நுணுக்கம் பார்க்கிற ; எளிதில் நிறைவமைதி பெருத, திருப் திப்படுத்துதற்கரிய ; இசைவிணக்கமுடைய ; நட்புப் பாச முடைய; இனிய; இனிய தோற்றம்வாய்ந்த, நல்வனப்பார்ந்த; கண்ணோட்டமுடைய, பரிவிணக்கம்மார்ந்த ; பாராட்டத்தக்க; திருப்தியான ; *adv.* திருப்தியாக.

nice'-looking, *a.* இனிய காட்சியளிக்கிற, அன்பாதரவான தோற்றமுடைய.

Nicene', *a.* நைசீயா (Nicaea) நகரத்திய; நைசீயா நகரத்தில் கி. பி. 325, 787-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்துக் கிறித்தவத் திருச்சபைக்குரிய ; (தொ.) Nicene Creed, நைசீயா நகரத்தில் நடைபெற்ற முதல் கிறித்தவ திருச் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை அடிப்படை யாகக்கொண்டு வகுக்கப்பட்ட சமயக்கோட்பாடு.

ni'ceties, *n. pl.* நுட்பநுணுக்க விவரங்கள், சில்லறை நுட்ப வேறுபாடுகள்.

ni'cety, *n.* நுண்ணய ஒழுகலாறு; சரிநுட்பம், நுட்பதிட்பம்; அருநயப் பண்பு, நயநுணுக்கம்; நுட்பவேறுபாடு; வேண்டா நயநுணுக்க விவரம் ; (தொ.) to a nicety, சரிநுட்பமாக.

niche, *n.* மாடக்குழி ; சிலையுருக்கள் வைப்பதற்குரிய சுவர் மாடம்; தனியிடம், ஒருவர்க்குரிய தனி ஒதுக்கிடம்; *v.* சுவர் மாடத்தில் வை ; உள்ளிழைந்து அமர்ந்துகொள், பதுங்கி ஒட்டிக்கொள்.

nick, *n.* வடு, கணிப்புக்குறி; குறியாட்டத்தில் முதலடிக் கெலிப் பெறி ; தேறல் அளவு கலத்தில் கள்ள அடித்தட்டு ; குறிக் கொண்ட புள்ளி; குறித்த கணம், சரியான தறுவாய்; காலங் கடந்துவிடுவதற்கு முற்பட்ட கடைசிக்கணம் ; *v.* வடுப் படுத்து ; வடுக்குறியிடு ; குதிரை வாலை உயர்த்தி வைத்துக் கொள்ளும்படி வாலடியில் வடுவிடு ; குறியாட்டத்தில் கெலிப் பெண் அடை ; வேட்டையில் குறுக்குவெட்டிச்செல் ; பந்த யத்தில் மூலை வெட்டிச்செல் ; சரியாக ஊகித்துவிடு; வண்டி தவறுமுன் எட்டிப்பிடித்துவிடு; காலங் கடந்துவிடுமுன் கைப் பற்று ; (தொ.) in the nick, in the nick of time, சரியான தறுவாயில்.

nick'el, *n.* நிக்கல், கலவைகளில் பெரிதும் பயன்படுத்தப்படும் கெட்டியான ஒளிரும் வெள்ளை உலோகம் ; அமெரிக்க சிறு நாணயம் ; ஐரோப்பிய சிறு நாணய வகை ; *v.* நிக்கல் மூலாம்பூசு ; (தொ.) nickel silver, செர்மன் வெள்ளி போன்ற கலவை உலோகம்; nickel steel, இரும்பும் நிக்கலுங் கலந்த கலவை உலோகம்.

nick'-nack, *n.* சிறுதிறப் பொருள்கள், பளுவற்ற சிறுதிறக் கருவிகலங்கள்; சிறுதிறத் துணிமணித் துணுக்குக்கள்.

nick'name, *n.* விளையாட்டுப்பெயர், செல்லப்பெயர்; *v.* செல்லப் பெயரிட்டழை; விளையாட்டுப்பெயர் கொடு.

nico'tian, *n.* சுருட்டு முதலியவை பிடிப்பவர்; *a.* புகையிலை சார்ந்த.

nic'otine, *n.* புகையிலை நஞ்சு, புகையிலையிலிருந்து வடித்திறக்கப்படும் எண்ணெய் வடிவ நச்சுச்சத்து.

nic'tate, nic'titate, *v.* கண்கொட்டு, இமை; உள்ளிமைப் படலம் திறந்து மூடியாடப்பெறு; (தொ.) nictating mambrane, nictitating membrane, பல உயிர்கள் வகையில் மூன்றுவது உள்ளிமைப்படலம்.

ni'cy, *n.* குழந்தை வழக்கில் இனிப்புத் தின்பண்டம்.

nidamen'tal, *a.* (வில.) நத்தை வகைகளின் முட்டைத் திரளை வைப்பதற்குப் பயன்படுகிற.

nidd'ering, nid'ering, *n.* இழிமகன், கோழை; *a.* இழிவான, கோழையான.

nid'dle-nod'dle, *a.* தலையாடுகிற, நடுங்குகிற, ஆட்டங்கொடுக்கிற; *v.* தலையாடிக்கொண்டிரு; தடுமாறு, தள்ளாடு; ஊசலாடு.

nide, *n.* ஓரீடு, வான்கோழி வகையின் ஓரீற்றுக்குஞ்சுகள்.

nid'ificate, nid'ify, *v.* கூடு கட்டு.

nid'-nod, *v.* தலையசைத்துக்கொண்டேயிரு.

nid'us, *n.* பூச்சியினம் முட்டையிடுமிடம்; சிதல்கள் அல்லது விதைகள் வளர்ச்சியடையுமிடம்; நோய் விளையும் இடம்; கோட்பாடு தழைப்புறும் இடம்; இயற்கைக்கொள்கலம்; முட்டைத்திரள்; பருத்திரள்; *pl.* nid'i, nid'uses.

niece, *n.* உடன்பிறந்தாரின் மகள்; தமையன்-தம்பி-தமக்கை-தங்கை மகள்.

niell'o, *n.* வெள்ளிச் செதுக்குருவின் வரைகளை நிரப்புவதற்கான கருப்புக் கலவைப்பொருள்; வெள்ளிச் செதுக்கிற் கரும் வண்ணம் நிரப்பிய ஒப்பனை வேலைப்பாடு; வெள்ளிச் செதுக்கிற் கரும்வண்ணம் நிரப்பும் வேலைப்பாட்டுப்பாணி; *pl.* niell'i, niell'os.

Nier'steiner, *n.* வெள்ளைத்தேறல் வகை.

Nietzsch'ean, *n.* நீட்ஷி (F. Nietzsche, இறப்பு 1900) என்னும் செர்மன் மெய்விளக்கியலாரைப் பின்பற்றுபவர்; நீட்ஷியின் கோட்பாடுகளை ஆதரிப்பவர்; *a.* நீட்ஷி என்னும் செர்மன் மெய்விளக்கியலாருக்குரிய; நீட்ஷியின் கொள்கைகள் சார்ந்த.

nigg'ard, *n.* கருமி, பிசினாறி, கஞ்சன்; *a.* உலோபியான, கைக்கடிப்புடைய.

nigg'ardly, *a.* பிசினாறியான, கஞ்சத்தனமான; வழங்க மனமில்லாத; கைக்கடிப்புடன் கொடுக்கிற; குறைத்துக்கொடுக்கிற; சிறுகச்சிறுகத் தருகிற; அற்பமான; சிறிதும் போதாத; *adv.* பிசினாறியாக, கருமித்தனமாக, போதும் போதா நிலையில்.

nigg'er, *n.* (இழி.) நீகிரோவர்; கருநிற மனித இனத்தவர்; கரு மனிதர்; கிழங்கு அரிக்கும் கருங் கம்பளிப் பூச்சி வகை; (தொ.) nigger melody, nigger song, அமெரிக்க நீகிரோவர் இசை; அமெரிக்க நீகிரோவர் பாடல்.

nigg'er-brown, *a.* தவிட்டுநிறத்தில் கருஞ்சாயலான.

nigg'erhead, *n.* = negro-head.

nig'gle, *v.* சில்லறை விவரங்களில் காலத்தை வீணாக்கு; சில்லறை நுணுக்கங்களை அளவுக்குமீறி விரிவுபடுத்து.

nigg'ling, *a.* மிகச் சிறுதிறமான, சில்லறையான, அற்பமான; பரந்த தன்மையற்ற; பெருந்தன்மையற்ற; கையெழுத்து வகையில் புரியாத.

nigh, *a.* அருகிலுள்ள; *adv.* அருகே; *prep.* அருகில்.

night, *n.* இரவு; இராக்காலம்; இராப்போது; இருள், இருட்டு; மருட்சி; அறியாமை; துயர்; தீமை; இராக்காலச் சிறப்பு நிகழ்ச்சி; இராக்கால நிலை; இராக்காலத் தனி அனுபவங்கள்; (தொ.) a dirty night, புயலான இரவு, மழைமிகுந்த இரவு; all night, all night long, முழு இரவும், இரவு முழுவதும்; at night, இரவில்; by night, இரவில்; இருளில், மறைவில்; make a night of it, மகிழ்ச்சியாக இரவைக் கழி; night and day, அல்லும் பகலும்; எப்போதும்; இடைவிடாமல்; night art, மகிழ்ச்சியான இரவு; பணியாளருக்குரிய இராப்பணி ஓய்வு.

night'-bird, *n.* ஆந்தை; இராக்குயில்; ஒழுக்கக்கேடன், இராச்சுற்றி.

night'-blindness, *n.* இராக்குருடு; மாலைக்கண், மட்டொளியில் கண்தெரியாக் கோளாறு.

night'-boat, *n.* இரவுப் பயணப்படகு.

night'cap, *n.* இரவுக்குல்லாய்; உறக்கத்திற்குமுன் பருகும் வெறித்தேறல்.

night'-cellar, *n.* அடிநிலத்தமைந்த கீழ்த்தரச் சாராயக்கடை.

night'-chair, *n.* = night-stool.

night'-clothes, *n.* இராக்கால உடை, படுக்கை உடுப்பு.

night'-club, *n.* இரவுவிடுதி, உறுப்பினர்க்கு மட்டும் இரவுணவு-படுக்கை-ஆடல் முதலியவற்றின் உரிமை அளிக்கும் நிலையம், இரவுக்கேளிக்கை விடுதி.

night'-dress, night'-gown, *n.* பெண்டிர் இரவு உடை; குழந்தையின் இராக்கால உடுப்பு.

night'fall, *n.* கதிரவனடைவு, மாலை, இரவின் தொடக்கம்.

night'-flower, *n.* அல்லியின மலர், இரவில் மலர்ந்து பகலில் சுருங்கும் மலர்.

night'-glass, *n.* கடலின்கண் இரவிற் பயன்படுத்தும் குறுகிய தொலைநோக்கி.

night'-hag, *n.* சூனியக்காரி, இரவில் ஆகாயத்திற் பறந்து செல்லும் பெண் பிசாசு.

night'-hawk, *n.* இராக் கள்ளன், இராச்சுற்றி.

night'ingale, *n.* அல்லிசைப் புள், புலம் பெயர்வுறும் இன்னிசைப் பறவை வகை.

night'-jar, *n.* விரைவிற் பறந்துசெல்லும் இரவுப் பறவை வகை.

night'-light, *n.* மங்கலான இரவு விளக்கு.

night'-line, *n.* இரவில் மீன் பிடிப்பதற்காக இரையோடு வைத்துவிட்டுச் செல்லப்படும் தூண்டில்.

night'-long, *a.* இரவுநேர முழுதும் நீடிக்கிற.

night'ly, *a.* இரவில் நிகழ்கிற; இரவுதோறும் நிகழ்கிற; இரவில் செய்யப்பட்ட; இரவில் உள்ள, இரவில் இருக்கிற; (செய்.) இரவு சார்ந்த, இரவோடு பொருந்திய; *adv.* ஒவ்வொரு இரவிலும், இரவுதோறும்.

night'man, *n.* கழிமலமகற்றும் வேலையாள்.

night'mare, *n.* தூங்குபவர்மீது உட்கார்ந்து திக்குமுக்காடச் செய்து மூச்சுத் திணறவைப்பதாகக் கருதப்படும் பேயுரு; பெருங்கவலை; கொடுங்கனவு; கோரக்கனாக் காட்சி; மனக்கிலி; ஓயாது வந்துவந்து வருத்தும் பெருந்தொல்லை.

night'-piece, *n.* இரவுக்காட்சி ஓவியம், இராக்கால இயற்கைக் காட்சிப்படம்.

night'-school, *n.* தொழிலாளர்களுக்கான இராப்பள்ளிக் கூடம்.

night'-season, *n.* (செய்.) இராக்காலம்.

night'shade, *n.* இரவில் மலருஞ் செடியினம்.

night'-shirt, *n.* நீண்ட துயிற்சட்டை.

night'-soil, *n.* மலம்; கழிநீர்க்கூளம்.

night'-stool, *n.* மலக்கழிப்பு முக்காலி.

night'-suit, *n.* படுக்கை ஆடைத் தொகுதி.

night'-time, *n.* இராக்காலம்; இராக்கால நிலை; இராக்கால வாய்ப்புநிலை.

night'-watch, *n.* இரவுக்காவல்; இராக்காவல் குழு; யாமம், பண்டை எபிரேயர்-ரோமரிடையே இராக்காவற் காலக்கூறு.

night'-work, *n.* இராக்கால வேலை, இரவிற் செய்யவேண்டிய தொழில்; இரவிற் செய்த வேலை.

night'y, *n.*=night-dress.

nigres'cence, *n.* கருஞ்சாயல், கருவண்ணம்.

nigres'cent, *a.* கருஞ்சாயலான.

nig'ritude, *n.* கருமை; இருள்.

ni'hil ad rem, (ல.) *a.* தொடர்பற்ற, தலைப்புக்குப் பொருத்தமில்லாத.

ni'hilism, *n.* எதிர்மறுப்புவாதம், சமய ஒழுக்கத்துறைகளில் நடைமுறை நம்பிக்கைக் கோட்பாடுகள் யாவற்றையும் மறுக்குங் கொள்கை; ருசியாவில் 19-ஆம் நூற்றாண்டில் முளைத்த மறுப்பியல் கட்சிவாதம்; (மெய்.) சூனியவாதம், இயலுலகு உளதாந் தன்மையை மறுக்குங் கோட்பாடு.

nihil'ity, *n.* சூனியம், ஒன்றுமில்லாமை; சிறுதிறம்.

nil, *n.* இல்லை; சுன்னம்.

nil admirar'i, (ல.) *n.* எதைக்கண்டும் வியப்புறு மனப்பான்மை; கவலையில்லா அசட்டைநிலை.

nil'gai, *n.* சிறு கொம்புடைய மான்வகை.

Nilom'eter, *n.* நைல் ஆற்றின் நீர்மட்ட உயர்வினைக் காட்டும் அளவு குறிக்கப்பட்ட தூண்.

Nilot'ic, *a.* நைல் ஆற்றைச் சார்ந்த; நைல் நிலப்பகுதி சார்ந்த; நைல் நிலப்பகுதிக்குரிய குடிமக்களைச் சார்ந்த.

nim, *v.* திருடு.

nim'ble *a.* விரைவான; விரைவியக்கமுடைய; விரை பயில்வுடைய; விரை திறம் வாய்ந்த; உள வகையில் பல்திறப் பயிற்சியுள்ள; விரைவில் புரிந்துகொள்கிற; சுறுசுறுப்பான.

nim'bus, *n.* பரிவேடம்; தெய்விக வடிவங்களைச் சுற்றியுள்ள சூழ் ஒளிவட்டம், தெய்விக வடிவங்களின் ஓவியங்களில் காட்டப்படும் ஒளிவட்டவரை; (வான்.) மழை முகில்; *pl.* nim'bi, nim'buses.

nimi'ety, *n.* கழிமிகை.

nim'iny-pim'iny, *a.* செயற்கையான, பகட்டுமினுக்கான.

Nim'rod, *n.* வேட்டை வல்லான்; பயிற்சி விளையாட்டு வல்லுநர்.

ninc'ompoop, *n.* அப்பாவி; பேதை; அறிவற்றவன்; உரமிலி.

nine, *n.* ஒன்பது; ஒன்பது குறிகள் ஆட்டச்சீட்டு; (தொ.) dressed up to the nines, ஆடம்பரமாக உடையணிவிக்கப்பட்டு; nine days' wonder, நிலையற்ற சிலநாள் ஆரவாரம்; nine-o' clock wind, துப்பாக்கி வீரரின் இடதுகைப் புறத்திலிருந்து அடிக்குங் காற்று; nine times out of ten, மிக்க பெரும்பான்மையாக; the Nine, கிரேக்க புராணத்திலுள்ள ஒன்பது பெண் தெய்வங்கள்; to the nines, முழுநிறைவை நோக்கி.

nine'fold, *a.* ஒன்பது மடங்கான.

nine'pins, *n.* எறிகட்டை ஆட்டம், பந்தினால் அடித்துவிழச் செய்யும் ஒன்பது கட்டைகள்கொண்ட ஆட்டவகை.

nine'teen, *n.* பத்தொன்பது; *a.* பத்தொன்பது ஆன.

nine'teenth, *n.* பத்தொன்பதாமவர்; பத்தொன்பதாவது; பத்தொன்பதில் ஒரு கூறு; *a.* பத்தொன்பதாவதான; பத்தொன்பதில் ஒரு கூறான; (தொ.) nineteenth hole, குழிப்பந்தாட்டச் சங்கத்தின் இன்தேறல் விடுதி.

nine'tieth, *n.* தொண்ணூறாமவர்; தொண்ணூறாமது; தொண்ணூறில் ஒரு கூறு; *a.* தொண்ணூறாவது ஆள்; தொண்ணூறில் ஒரு கூறு ஆன.

nine'ty, *n.* தொண்ணூறு; *a.* தொண்ணூறான; (தொ.) the nineties, 90 எண் கொண்ட பாகை அளவுகள்; நூற்றாண்டில் 90 முதல் 99 வரையுள்ள ஆண்டுகள்; 90 முதல் 99 வரையுள்ள வயதளவு.

Nin'evite, *n.* நினிவே (Nineveh) என்ற பண்டைக்கால நகர வாழ்நர்.

ninn'y, *n.* முட்டாள், பேதை; மனவுரம் அற்றவர்.

ninon, (பிர.) *n.* இலேசான பட்டுத்துணி வகை.

ninth, *n.* ஒன்பதாமவர்; ஒன்பதாவது; ஒன்பதில் ஒரு கூறு; *a.* ஒன்பதாவதான; ஒன்பதில் ஒரு கூறான; (தொ.) ninth part of a man, தையற்காரன்.

ninth'ly, *adv.* ஒன்பதாவதாக.

Ni'obe, *n.* கையாறுற்று ஆருத்துயரிலாழ்ந்த அணங்கு; குழந்தைகளுக்காக அழுதுகொண்டேயிருந்தபோது கல்லாகும்படி செய்யப்பட்ட பெண்.

niob'ium, *n.* (வேதி.) அருந்தலான உலோகத்தனிமம்.

nip[1], *n.* கிள்ளல்; நெருடல்; கடிப்பு; கொய்வு; ஊறுபாடு; கடுநோவு; ஊறுபடுத்துந் தன்மை; குளிரின் கடுப்பு; வசையின் உறுத்தல்; கண்டனத்தின் உறைப்பு; கடித்தெடுத்த அல்லது கொய்த துணுக்கு; சுரங்கப்பாளத்தின் அரிப்பு, தேய்வு; (கப்.) வடக்கயிற்று நெரிவு; *v.* கிள்ளு; நெருடு; நெருக்கி நசுக்கு; கடி; கொய்; வளர்ச்சியைத் தடைப்படுத்து; நலத்துக்கு ஊறுசெய்; ஊறுபடுத்து, கடுப்பூட்டு; காரமாகக் கடிந்துரை; (தொ.) nip in the bud, முளையிலேயே கிள்ளியெறி.

nip[2], *n.* ஊக்கமூட்டுவதற்கான சிறிதளவு இன்தேறல்; *v.* ஊக்கமூட்டுஞ் சிறிதளவு இன்தேறலை அருந்து.

ni'pa, *n.* கிழக்கிந்திய பனையின மரவகை.

nipp'er, *n.* கிள்ளுபவர்; கிள்ளுவது; கடுப்பூட்டுபவர்; கடுப்பூட்டுவது; நலங்கெடுப்பவர்; நலங்கெடுப்பது; மீன் வகை; சிறுவன், பழ விற்பனையாளரின் உதவியாள்; தெருச் சுற்றிச் சிறுவன்; வீடில்லாக் குழந்தை.

nipp'ers, *n. pl.* இடுக்கி, பற்றுக்குறடு, சாமணம்; வில் அமைப்புடைய மூக்குக்கண்ணாடி; குதிரையின் முன்வாய்ப்பல்; நண்டு இனத்தைச் சேர்ந்த உயிரினத்தின் கொடுக்கு.

nip'ple, *n.* முலைக்காம்பு; முலைக்காம்பு பாதுகாப்புக் கவிகை; குழந்தைப் பால்புட்டிக் காம்பு; தோல்-கண்ணாடி-உலோகம் முதலியவற்றின்மீதுள்ள குமிழ் முளை; மலைமீதுள்ள சிறு முகடு; துப்பாக்கி விசைமீது மூடிப் பொருத்தப்படும் துளையிட்ட முனைப்பு.

nip'plewort, *n.* மஞ்சள்நிற மலருடைய களைச்செடி வகை.

Nipp'on, *n.* ஜப்பான்.

nirva'na, (ச.) *n.* வீடுபேற்றுநிலை.

nis'i, (ல.) *conj.* (சட்.) இல்லாவிடில், ஒழிய; (தொ.) decree nisi, order nisi, rule nisi, வேறு எதிர் நடவடிக்கைகளால் ஒதுக்கி வைக்கப்பட்டாலன்றிக் குறிப்பிட்ட காலம் முழுநிறை உரிமைபெற்ற கட்டளை.

nis'i pri'us, (ல.) *n.* பொதுத்துறை வழக்குகளைப் பருவகால நீதிமன்றங்களில் நடுவர்கள் விசாரணை செய்தல்; நடுவர்கள் பருவகால நீதிமன்ற விசாரணை நடவடிக்கை.

Niss'en hut, *n.* வளையிருப்புக் குடில், திண்காரை நிலத்தளமும் சுரங்கம் போன்ற அமைப்பும் உடையதாய் வளைவு நெளிவான இரும்புத் தகட்டாலான குடிசை.

nit, *n.* ஈர் ஒட்டுயிரின வகைகளின் முட்டை, பேன்முட்டை.

nit'on, *n.* கதிரியச் சிதைவினின்று கிட்டும் கதிரியக்கம் வாய்ந்த தனிம வளிப்பொருள்.

nit'rate[1], *n.* வெடியகி, வெடியக்காடியுடன் மூல அடிப்பொருளோ வெறியமோ சேர்வதால் உண்டாகும் உப்பியற் பொருள்.

nitrate'[2], *v.* வெடியக்காடியுடன் கல; வெடியக்காடியூட்டு; வெடியக்காடி கலந்து செயற்படுத்து.

ni'tre, *n.* வெடியுப்பு, சாம்பர வெடியகி; (தொ.) cubic nitre, உவர வெடியகி.

nit'ric, *a.* வெடியம் சார்ந்த; வெடியம் உட்கொண்ட; (தொ.) nitric acid, வெடியக் காடி.

nit'rify, *v.* வெடியத்தால் வளமாக்கு; வெடியக் காடியாக மாற்று.

nit'rite, *n.* வெடியகக் காடியின் உப்புச் சத்து.

nitro-a'cid, *n.* உயிர்ப்பொருட் காடியுடன் கலந்த வெடியக் காடிக் கலவை.

nitro-com'pound, *n.* வெடியக் காடியின் செயலால் ஆக்கப் பட்ட கலவை.

nitro-explos'ive, *n.* வெடியக் காடியைக் கொண்டு செய்யப் பட்ட வெடிமருந்து.

nit'rogen, *n.* வெடியம், வளிமண்டலத்தில் ஐந்தில் நான்கு கூறான வளித்தனிமம்.

nitro-gly'cerin, nitro-gly'cerine, *n.* வெடிப்பாற்றல் மிக்க மஞ்சட்கலவை நீர்மம்.

nitro-powd'er, *n.* வெடியக்காடி சேர்த்துச் செய்யப்பட்ட வெடிமருந்து.

nitro-sulphur'ic, *a.* வெடியக் கந்தகக்காடிக் கலப்பினுல் ஏற்பட்ட.

nit'rous, *a.* வெடியகம் சார்ந்த; வெடியகம் போன்ற; வெடியக முட்டப்பட்ட; (தொ.) nitrous acid, வெடியகக் காடி; nitrous oxide, வெடியக உயிரகை, மயக்க மருந்தாகப் பயன் படும் வளி.

nitrox'yl, *n.* வெடியமும் உயிரகமும் உட்கொண்ட வேதிப் பொருட் குழுமம்.

nit'wit, *n.* அறிவிலி, பேதை.

nix, *n.* நீரர மைந்தர், நீர்வாழ் சிறு தெய்வம்; *fem.* nix'ie.

Nizam', *n.* ஐதராபாத்தின் இடைக்கால அரசர்; துருக்கி நாட்டுப் படைவீரர்.

no, *n.* இல்லையென்ற சொல்; மறுப்புரை; மறுப்பு; ஒன்று மில்லாதது; *a.* எத்தகையதும் அல்லாத; எதுவும் இல்லாத; எவரும் இல்லாத; ஒன்றும் இல்லாத; அல்லாத; மாறான; என்றுகூற முடியாத; உளதாகாத; கருத இடமிராத; வேண்டாத; சரியல்லாத, நேரல்லாத, தவறான; மதிப்பற்ற; முக்கியத்துவமற்ற; *adv.* அப்படி அல்லாது; என்று கூற முடியாமல்; அல்லாது; (தொ.) no less, no less than, அள விற் குறையாது, என்ற அளவுக்கு ஒப்பாக; no man's land, புறம்போக்கு, பொதுநிலம்; no more, இனியில்லா நிலையில்; இதற்கு மேலில்லா நிலையில்; முடிந்துவிட்ட நிலையில்; இறந்து விட்ட நிலையில்; no side, காற்பந்தாட்டத்தில் ஆட்டமுடி வினைப் பற்றிய நடுவரின் அறிவிப்பு; no thoroughfare, பொது வழியன்று என்னும் அறிவிப்பு, மறுபக்கம் அடைத் திருக்கிறது என்பதற்கான அறிவிப்பு; no trump, no trumps, சீட்டாட்டத்தில் துருப்பு வகை குறிக்காமல் ஆட்டமாடும் அறிவிப்பு; no whit, இல்லவேயில்லை, முழுதும் இல்லை.

Noach'ian, Noach'ic, *a.* விவிலியக்கதை மரபின்படி வெள்ள ஊழிகடந்து வாழ்ந்த மனிதவின முன்னோனை நோவா (Noah) என்பவனைச் சார்ந்த; நோவா காலத்துக்குரிய.

Noah's ark, *n.* விவிலியக்கதை மரபுப்படி ஊழிவெள்ளத்தின் போது இறைவன் தன் அருட்சலுகையால் அதனின்று தப்ப நோவா பயன்படுத்திய தோணி; நோவா மேகமண்டலம்.

Noah's nightcap, *n.* மஞ்சள்வண்ண மலர்ச்செடி வகை.

nob, *n.* தலை; இருவர் சீட்டாட்டவகையில் இனமொத்த 'அடியாள்' சீட்டுக்காட்டல்; இனமொத்த 'அடியாள்' சீட்டுக் காட்டலால் வரும் கெலிப்புக்குறி; *v.* குத்துச்சண்டையில் தலையில் அடி.

nob'ble, *v.* முறைகேடான மறைவழிகளில் சலுகைபெறு; ஒழுங்குகேடான தன்மையில் பணம் கைப்பற்று; குற்ற வாளியைப் பிடி.

no'-being, *n.* இல்பொருள்; உளராகாதவர், இலா உருத் தோற்றம்.

nobil'iary, *a.* உயர்குடிச் சார்ந்த; பெருமக்கள் குழுவினுக் குரிய; உயர் குடியாளர் தொகுதியைச் சார்ந்த; பெருமக்கள் குடிப்பட்டத்துக்கு உரிய; (தொ.) nobiliary particle, பிரஞ்சு செர்மன் மொழிகளில் உயர்குடிச் சுட்டான முன்னிடைச் சொல்.

nobil'ity, *n.* உயர்குடிப்பிறப்பு; உயர்குடிப்பதவி; உயர் குடி மக்களின் தொகுதி; பெருந்தன்மை; உயர்பண்பு; மேதகைமை.

no'ble, *n.* உயர்குடிமகன், பெருமகன்; முற்கால நாணய வகை; *a.* உயர்குடியைச் சேர்ந்த; உயர் புகழ் பெற்றுள்ள; சிறப்பு வாய்ந்த; உயர் குணமுடைய; உயர்நோக்கமுள்ள; மேதக்க, பெருந்தன்மையுடைய; வண்ணப்பகட்டான; வீறுர்ந்த தோற்றமுள்ள; மிகச்சிறந்த; மெச்சத்தகுந்த; உலோகப் பொருள்களின் காடிபற்ருத, களிம்பேருத, துருப் படாத, வேதியியல் மாறுபாட்டில் கேடுருத; கறைபடாத.

noblesse, (பிர.) *n.* பெருங்குடிமக்களின் தொகுதி; (தொ.) *noblesse oblige*, சிறப்புரிமைக்கேற்ற பொறுப்புணர்வு.

no'body, *n.* ஒருவரும் இலார்; பொருளல்லர்.

no'cent, *a.* தீமை செய்கிற; குற்றமுள்ள.

nock[1], *n.* குதை, வில்லின் நாண் பள்ளம்; நாண் பற்றுவதற் கான அம்பின் காம்படி; *v.* அம்பை நாணில் தொடு.

nock[2], *n.* பாய்மர வகையின் முற்புற மேல் மூலை.

noctam'bulant, *a.* இரவில் உறக்கத்தில் நடந்து செல்கிற.

noctiflor'ous, *a.* இரவில் மலர்கிற.

noctiluc'a, *n.* இருளில் ஒளிவிடுகிற சிற்றுயிர்.

noctiv'agant, noctiv'agous, *a.* இரவில் சுற்றித்திரிகிற.

noc'tule, *n.* பிரிட்டனிலுள்ள மிகப்பெரிய வௌவால் வகை.

nocturn'al, *a.* இரவுக்குரிய; இரவிலுள்ள; இரவிற் செய்யப் பட்ட; இரவில் நடமாடுகிற.

noc'turne, *n.* கனவு போன்ற தூங்கிசைத் துணுக்கு; இரவுக் காட்சி ஓவியம்.

noc'uous, *a.* தீதுடைய.

nod, *n.* தலையாட்டம்; அதிகாரத்தின் அடையாளமான தலை யசைப்பு; *v.* தலையசை, தலையாட்டு; தலையாட்டி ஒப்புதல் அளி; தலையசைத்துக் கட்டளை தெரிவி; அரைகுறை உறக்க நிலையில் தலையை முன்னே சாயவிடு; அரைகுறை உறக்கம் கொள்; தள்ளாடு, சாய்; தன்னறியாமல் தவறு செய்; (தொ.) Homer sometimes nods, யானைக்கும் அடி சறுக்கும்; land of nod, தூக்கம்; nodding acquaintance, மேற்போக் கான நட்பு, சிறிதளவே பழக்கமான நட்பு.

nod'al, *a.* கணுச்சார்ந்த; கரணைக்குரிய.

nod'dle, *n.* (பே-வ.) தலை; மூளை; *v.* தலையசை, தலையாட்டு.

nodd'y, *n.* முட்டாள், பேதை; வெப்பமண்டலக் கடற்பறவை வகை.

node, *n.* முடிச்சு; குமிழ்; புடைப்பு; கரணை, வேர் தடி கிளை களிலுள்ள திரளை; இலைக்கணு; இலைகள் கிளைக்கும் இடம்; கட்டி; கீல்வாதக் கழலை; கோளின் சுழற்சி வட்டம் மற்றொரு கோளின் சுழற்சி வட்டத்தோடு சந்திக்கும் இடம்; அதிர் வுடைய பொருளின் அதிர்வு மையப்புள்ளி; மையமுனை; கண்ணிக்கணு, வளைவுக்கோடு தன்னையே சந்திக்கும் இடம்.

nodose', *a.* முடிச்சுள்ள; கணுவுள்ள; சிக்கலுள்ள; குமிழ் களுள்ள, புடைப்புள்ள.

nodos'ity, *n.* முடிச்சுகளுள்ள தன்மை; முடிச்சு, கணு; புடைப்பு, முனைப்பு.

nod'ule, *n.* திரளை, சிறு உருண்டை; செடியில் சிறு கணு; நரப்புக் கரணை, நரப்புக்கணு.

nod'us, *n.* கடா, சிக்கலான செய்தி; இக்கட்டு, கதை முதலிய வற்றின் சிக்கலான கட்டம்; *pl.* nod'i.

Noel', *n.* நாவலோ! கிறிஸ்துமஸ் பாடல்களில் மகிழ்ச்சி குறிக்கும் இடைச்சொல்.

noes, *n. pl.* எதிர்மறுப்பு வாக்குக்கள்; எதிர்மறுப்பு வாக்கா ளர்கள்.

noet'ic, *n.* அறிவுத்திற ஆய்வியல்; *a.* அறிவுத்திறம் சார்ந்த; கருந்தியலான, புலன்களுக்கு அப்பாற்பட்ட; கோட்பாட் டாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள.

nog[1], *n.* குற்றி, மரமுளை; ஆப்பு; சிறு மரக்கட்டை; மொட்டை மரக்கிளை; கிளைமுறிந்த அடித்தூறு; மரத்தின் பயனற்ற அடிக்கட்டை; *v.* ஆப்படித்திறுக்கு, மரமுளை அடித்துச் செப்பம் செய்; மரச்சட்டத்தில் செங்கல் வேலைப்பாடமைத்துக் கட்டு.

nog[2], *n.* இங்கிலாந்தின் கிழக்கு ஆங்கிளியாப் பகுதியில் வடிக்கப்பட்ட காரச் சாராய வகை.

nogg'in, *n.* சிறு குடுவை; கடுந்தேறல் வகையில் சிறுமுகத்தல் அளவு, கால் 'பைண்ட்'.

no'how, *adv.* வழியில்லாமல், ஒருவழியாலும் முடியாததாக, எவ்விதத்திலுமில்லாது.

noil, *n.* குறுகிய கம்பளிச் சீவல் அல்லது சீவல்கள்.

noise, *n.* கூச்சல், இரைச்சல்; வெறுப்பான ஒலி; கடுமையான ஒலி; *v.* பேரொலி செய்; பரவலாகத் தெரிவி; (தொ.) big noise, (பே-வ.) முக்கியத்துவம் வாய்ந்தவர்; make a noise, மிகுதியாகப் பேசு; அதிகமாகக் குற்றங்கூறு; நாடறிந்தவராயிரு; இகழார்ந்தவராயிரு, கெட்டபெயர் உடையவராயிரு.

noisette'[1], *n.* கலப்பின ரோசா மலர்வகை.

noisette[2], (பிர.) *n.* கொத்திய இறைச்சி உண்டி வகை.

nois'ome, *a.* கேடுதருகிற; வெறுப்பூட்டுகிற; கெட்டவாடையுள்ள.

nois'y, *a.* கூச்சலிடுகிற; இரைச்சல் மிக்க; கொந்தளிப்பான; உரத்த; மொழிநடைவகையில் ஆரவாரமான; பகட்டான; முனைப்பான.

nol'ens vol'ens, (ல.) *adv.* விரும்பினும் விரும்பாவிடினும்; கட்டாயப்படுத்தி; எப்படியாவது.

nol'i me tan'gere, (ல.) *n.* தோற்சிலந்திப்புண்; முகப்பரு; தொடா எச்சரிப்பு, அணுகாத்தடை, தலையீடு தடுப்பு; தொட்டால் வெடித்து விதை சிதறவிடுஞ் செடி; மகதலேன் மரியாள் மாதினுக்கு இயேசுநாதர் காட்சியளித்தது பற்றிய படம்.

noll, *n.* (பே-வ.) தலை, மண்டை, தலையுச்சி.

noll'e pros'equi, (ல.) *n.* (சட்.) வாதிபக்க வழக்குத்துறப்பு; அரசியல் வழக்குரைஞர் வழக்குப்பின்னிடைவு; குற்றச்சாட்டுக் கைதுறப்பு; நடவடிக்கை நிறுத்தம்; வழக்குத்துறப்புப் பதிவு.

nol'o episcopar'i, (ல.) *n.* பொறுப்புவாய்ந்த பதவித் தவிர்ப்பு; பொறுப்புத்தவிர்ப்பு மரபுவாசகம்.

nom'ad, *n.* நாடோடிமரபினர், மேய்ச்சல்நாடி இடத்துக்கு இடம் அலைந்து திரியும் வாழ்க்கைமரபுடைய இனத்தவர்; நிலையான வாழ்வற்றவர்; ஊர்சுற்றி; *a.* நாடோடியான, அலைந்து திரிகிற, ஊர்சுற்றுகிற.

nomad'ic, *a.* குடிநிலவரமற்ற, நாடோடியான.

nom de guerre, (பிர.) *n.* புனைபெயர், மாற்றுப்பெயர், பாவனையாக மேற்கொள்ளப்பட்ட பெயர்.

nom de plume, (பிர.) *n.* எழுத்தாளரின் புனைபெயர், புனை குறிப்பு.

nom'enclator, *n.* பெயரிடுபவர்; தாவரவியலில் பெயர் வகுத்துரைப்பாளர்; விருந்தில் உரிய இடத்துக்கு இட்டுச் செல்லும் அரங்கத் துணைவர்; பண்டை ரோமரிடையே ஆளறிமுகப் பணியர்; தேர்தல் காலத்தில் பெயர்கூறி ஆள் அறிமுகம் செய்யும் கடமையுடைய அடிமை.

nom'enclature, *n.* இடுபெயர்த் தொகுதி; துறைப்பெயர்த் தொகுதி; துறை வழக்காறு, துறைச்சொல் வழக்கு; முறைப்படுத்தப்பட்ட துறை வழக்குச்சொல்.

nom'inal, *a.* பெயர் சார்ந்த; பெயர்ச்சொல் போன்ற; பெயர்ச்சொல் இயல்புடைய; பெயர்களைத் தருகின்ற; பெயர்களடங்கிய; பெயரளவேயான, பெயர் மட்டிலான, உண்மையல்லாத, பெயருக்குரிய மெய்ப் பண்பற்ற; (தொ.) nominal definition, பெயர்ப்பண்பு விவர விளக்கம்; nominal sum, பெயரடையாளத் தொகை.

nom'inalism, *n.* (மெய்.) பெயர்ப் போலிமைக்கோட்பாடு, பொதுப்பெயர் பண்புப் பெயர்கள் பொருள்குறியாப் பெயர்க் குறிப்புக்கள் மட்டுமே என்னுங் கருத்து.

nom'inate, *v.* பெயர்குறிப்பிடு; பெயரால் கூப்பிடு; தேர்தலுக்குநிறுத்து; வேட்பாளராகக் குறிப்பிடு; பதவிக்குஅமர்த்து; தேர்தலுக்காக முன்மொழி; அமர்வி, நியமனஞ் செய்.

nomina'tion, *n.* பெயர்க்குறிப்பீடு; தேர்தல் முன்மொழிவு; பதவி அமர்த்தீடு; பணி அமர்விப்பு; நியமனம், பதவி அமர்த்தும் உரிமை.

nom'inative, *n.* (இலக்.) எழுவாய் வேற்றுமை; *a.* எழுவாய் வேற்றுமை சார்ந்த; அமர்த்தீடு சார்ந்த, நியமன உரிமையால் அமர்த்தப்படத்தக்க.

nominee', *n.* நியமிக்கப்பட்டவர்; பெயர் குறிப்பிடப்பட்டவர், முன்மொழியப்பட்டவர்.

non, (ல.) *adv.* இல்லாததாக.

non-abstain'er, *n.* குடிவிலக்காதவர்; விலக்காதவர், விலகியிராதவர்.

non-ac'cess, *n.* (சட்.) வழக்கில் தந்தைமை சாலாது என்ற வாதம்.

non'age, *n.* (சட்.) இருபத்தொரு வயதுக்கு உட்பட்ட பருவம்; வயதுவரா நிலை; பருவமடையா நிலை; தொடக்கப்பருவம்.

nonagenar'ian, *n.* 89-100 ஆண்டுகட்கு இடைப்பட்ட வயதுடையவர்; *a.* 89-100 ஆண்டுகட்கு இடைப்பட்ட வயதுடைய.

non-appear'ance, *n.* தோன்றாமை, நீதிமன்றத்தில் கட்சிக்காரர் அல்லது சான்றாளர் வராதிருத்தல்.

non'ary, *n.* (கண.) ஒன்பதின் தொகுதி; *a.* ஒன்பது எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட.

non assump'sit, (ல.) *n.* (சட்.) எதிர்வாதி வாக்குறுதி அளிக்கவில்லை என்ற வாதம்.

non-belli'gerant, *n.* போரில் ஈடுபடா நாடு; *a.* போரில் ஈடுபடாத.

nonce, *n.* தற்போதைய நிலை, தற்சமயம்.

nonce'-word, *n.* அப்போதைக்கு உருவாக்கப்பட்ட சொல், ஒரு தறுவாய்க்காகப் புதிதாக உண்டுபண்ணப்பட்ட சொல்.

non'chalant, *a.* உணர்ச்சியற்ற; அக்கறையற்ற, அசட்டையான.

non'-claim, *n.* சட்டப்படி தகுந்த காலத்தில் எழுப்பத்தவறிய உரிமை வாதம்.

non-colle'giate, *a.* மாணவர் வகையில் கல்லூரி சாராத; பல்கலைக்கழக வகையில் கல்லூரிகளில்லாத.

non-com'batant, *n.* போரிடாத துறையைச் சார்ந்தவர், படைத்துறை சாராப் பொதுமகன்.

non-commi'ssioned, *a.* படைத்துறைப்பதவி வகிக்காத.

non-committ'al, *n.* பொறுப்பேலாச் சமநிலை, ஒருபாலும் சாராமல் விலகிநிற்குந் தன்மை; *a.* பொறுப்பேலாத, கட்டுப்படுத்திக் கொள்ளாத.

non-commun'icant, *n.* நற்கருணை வழிபாட்டுக்குச் செல்லாதவர்.

non com'pos, non com'pos men'tis, (ல.) *a.* (சட்.) கிறுக்கான, மனக்கோளாறுள்ள.

non-conduc'ting, *a.* மின்வலி ஊடுசெல்லாத; இசைப்புத்திறனற்ற, வெப்பத்தையோ மின்வலியையோ கொண்டு செல்லாத.

nonconform'ist, *n.* ஆங்கிலேய திருச்சபைக் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்; (தொ.) the nonconformist conscience, ஆங்கிலேய திருச்சபைக் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களின் மனச்சான்றுக்குரிய கருத்துக்கள்; ஆங்கில திருச்சபை ஏலாதவர் மனச்சான்றுக்குரிய அரசியல் கருத்துப்பகுதி.

nonconform'ity, *n.* பொருந்தாமை, ஒத்துவராமை; இசைவின்மை; ஆங்கிலேய திருச்சபைக் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களின் கொள்கைகள்-பழக்கங்கள் ஆகியவற்றின் இயல்பு.

non'-content, *n.* பிரிட்டிஷ் மாமன்ற மேலவையில் தீர்மானத்துக்கு எதிரிடையாக வாக்களிப்பவர்.

non-co-opera'tion, *n.* ஒத்துழையாமை; பிரிட்டிஷ் ஆட்சிக்கால இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம்.

non'descript, *n.* எளிதில் வகைப்படுத்தப்பட இயலாதவர்; வகைப்படுத்தப்பட முடியாதது; இரண்டுங்கெட்டது, இதுவும் அதுவுமல்லாத பொருள்; கலப்பினத்தவர்; கலப்புப்பொருள்; *a.* வகைப்படுத்தப்பட இயலாத; விளக்கிக்கூற முடியாத; கலப்பினமான.

none, *pron.* யாருமிலார்; *a.* ஒன்றுமில்லாத; *adv.* ஒருசிறிது கூட இல்லாததாக.

non-effec'tive, *a.* படைவீரர்-மாலுமிகள் வகையில் படைத் துறைப்பணிக்குத் தகுதியற்ற.

non-eg'o, *n.* நானல்லாதது, புறப்பொருள், தான் அறியாது அறியப்படும் பொருள்.

nonen'tity, *n.* இல்பொருள்; பொருளன்மை; கட்டுக்கதை, கற்பனை; மதிப்பு ஏதுமற்றவர்; மதிப்பில்லாத பொருள்; இன்மையெண் குறி.

nones, *n. pl.* பண்டை ரோமர் வழக்கில் மார்ச்சு முதல் ஒன்று விட்ட மாதங்களில் 7-ம் மற்ற மாதங்களில் 5-ம் ஆகிய விழா நாள்; பிற்பகல் மூன்று மணிக்குரிய திருக்கோயில் வழிபாடு.

non ess'e, (ல.) *n.* இல்லாதது, இல்லாமை, இல்லாநிலை.

non est, (ல.) *n.*=*non inventus*.

non est inven'tus, (ல.) *n.* எதிர்வாதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற தலையாரியின் அறிவிப்பு.

none'such, *n.*=nonsuch.

nonet', *n.* (இசை.) ஒன்பது இசைக்கருவிகளுக்கான பாட்டு வகை; ஒன்பது குரல்களுக்கான பாட்டு வகை.

non-Euclide'an, *a.* வடிவியலில் பண்டைய கிரேக்க அறிஞரான யூக்ளிட் (கி. மு. 300) மேற்கொண்ட அடிப்படைக் கோட்பாடுகளுக்குப் புறம்பான.

non-feas'ance, *n.* (சட்.) செய்தக்க செய்யாப் பிழைபாடு.

non-flamm'able, *a.* எளிதில் தீப்பற்றாத.

non-hum'an, *a.* மனித இனத்தைச் சேராத.

nonill'ion, *n.* ஓரிலக்கம், கோடிகோடி கோடி கோடி கோடி கோடி கோடி, ஒன்று தொடர்ந்த 54 சுன்னங்களையுடைய பேரெண்.

non-interven'tion, non-interfer'ence, *n.* தலையிடாக் கொள்கை; பிறநாட்டுச் சச்சரவுகளில் தலையிடாமை.

non-intru'sion, *n.* ஸ்காத்லாந்தின் திருக்கோயில் வகையில் பொது அவை விரும்பாத சமயகுருவைப் புரவலர் அவர்கள் மீது சுமத்தக் கூடாதென்னுங் கொள்கை.

non inven'tus, (ல.) *n.* (சட்.) எதிர்வாதி தன் வட்டாரத்தினுள் காணப்படவில்லை என்ற தலையாரியின் அறிவிப்பு; ஆள் எல்லையுளின்மை அறிவிப்பு.

non'ius, *n.* நுண்கணிப்பு மானிகளில் அளவு கூறுபடுத்தும் வகைமுறை.

non-join'der, *n.* (சட்.) வழக்கில் பங்காளர் அனைவரையும் சேர்க்காமை.

Nonjur'or, *n.* பிரிட்டிஷ் அரசர் வில்லியம்-அரசி மேரி ஆகியோருக்கு அடக்க உறுதிமொழிச் சூளுரை கூறமறுத்த சமய குரு.

non-jur'y, *a.* முறைகாண் ஆயத்தினர் உதவியற்ற வழக்கு விசாரணை சார்ந்த.

non liq'uet, (ல.) *n.* (சட்.) விளக்கமில்லை என்ற அறிவிப்பு, முடிவு தெளிவற்ற வழக்கில் முறைகாண் ஆயத்தினர் ஒத்திவைப்பு முடிபு.

non-lo'gical, *a.* அளவைமுறையின்றிப் பெறப்பட்ட, அளவைசாரா முறையான.

non-mem'ber, *n.* உறுப்பினரல்லாதவர்.

non-met'al, *n.* (வேதி.) உலோகமல்லாத தனிமம்.

non-mo'ral, *a.* ஒழுக்கமுறை சாராத, ஒழுக்கநெறித் தொடர்பில்லாத.

non-na'tural, *a.* இயல்நெறி திறம்பிய.

non nob'is, (ல.) *n.* "வெற்றி தோல்விகள் கடவுளாலன்றி நம்மால் அல்ல" என்று தொடங்கும் லத்தீன் பாடல்; ஆட்டப் படுதல் உணர்வு.

nonpareil', *n.* தனி ஒருவர், ஈடிணையற்றவர்; தனிநிலைப் பொருள், ஈடெடுப்பற்றது; (அச்சு.) அச்செழுத்து அளவு வகை; இனிப்புத் தின்பண்ட வகை; சீமை இலந்தைப்பழ வகை; பறவை வகை; கோதுமை வகை; அந்துப்பூச்சி வகை.

non-part'y, *a.* கட்சிச் சார்பற்ற, அரசியல் கட்சிப்பற்று நீக்கிக் கவனிக்க வேண்டிய.

non pla'cet, (ல.) *n.* தீர்மானத்திற்கு எதிரிடையாகத் திருக்கோயில் அல்லது பல்கலைக்கழகப் பெருங்குழுக்களில் கூறும் எதிர்ப்பு வாக்கு; *v.* தீர்மானத்தைத் தோற்கடி.

nonplus', *n.* திகைப்புநிலை, தடுமாற்றம்; தத்தளிப்பு; குழப்ப நிலை, செயலற்றநிலை; *v.* திகைக்க வை, தடுமாற்றமூட்டு.

non plus ul'tra, (ல.) *n.* "மேற்செல்லற்க" என்ற தடையாணை; மேற்செல்ல முடியா எல்லைக்கோடி; உச்சநிலை; முழுநிறை முகடு.

non poss'umus, (ல.) *n.* நம்மால் முடியாது என்ற கூற்று, இயலாமை அறிவிப்பு; மறுப்பு.

non-provid'ed, *a.* தொடக்கப்பள்ளி வகையில் திணைநில அரசியல் ஆதரவுபெறாத.

non-res'ident, *n.* புறக்குடியிருப்பாளர், உடனுறைவற்ற சமயகுரு; உடனுறைவற்ற சமய அலுவலர்; வேறிட வாழ்வுடையவர்; தற்காலிகக் குடியிருப்பாளர்; *a.* சமய குருமார் வகையில் உடன் குடியிருப்பற்ற; உடனுறைவற்ற; வேறிட வாழ்வுடைய; நீடித்துக் குடியிராத.

non-resis'tance, *n.* (வர.) ஆட்சி நேர்மையற்றதாயினும் எதிர்க்கக்கூடாதென்ற 17-ஆம் நூற்றாண்டுக் கொள்கை.

non'sense, *n.* முட்டாள்தனம்; பொருத்தமற்றது; ஒப்புக் கொள்ளத் தகாதது; *int.* என்ன முட்டாள்தனம்! சீ! பொருத்தக்கேடானது! (தொ.) nonsense verses, பொருளற்ற பாட்டுகள், வீண்வேடிக்கைப் பாட்டுகள்.

non'sense-book, *n.* அறியாப்பருவ ஏடு, கருத்தற்ற வெறும் நகைத்துணுக்கேடு.

non seq'uitur, (ல.) *n.* தொடர்பாய் வருவதல்ல என்ற நிலை, பொருத்தமற்ற வாத முடிபு.

non-skid', *a.* வழவழப்பான தரையில் வழுக்காமலிருக்கின்ற.

non-soci'ety, *a.* தொழிற்சங்கத்தைச் சாராத.

non'-stop', *n.* இடைநில்லா ஓட்டம்; இடைநில்லா வண்டி; இடைநில்லா உந்து; *a.* இடைநிலைகளில் நிற்காத; இடையில் தங்காத, இடை நிறுத்தலற்ற; *adv.* இடையில் நிற்காமல்.

non'such, *n.* ஒப்புமையற்றவர்; ஈடிணையிலார்; நறுமணப் புல் வகை.

non'suit, *n.* சான்றுமெய்ப்பிப்பு அற்ற நிலையில் வழக்கு நிறுத்தம்; *v.* வாதியின் வழக்கை நிறுத்திவிடு.

non-un'ion, non-un'ionist, *a.*=non-society.

non'us, *n.* ஒன்பதாமவர்; ஒரே பெயருடையவருள் ஒன்பதாவதாக எண்ணிட்டுக் கூறப்படுபவர்.

non-us'er, *n.* (சட்.) வழங்காத்தவறு, கையாளாமையால் செல்லுபடிநிலையிழப்பு.

noo'dle [1], *n.* முட்டாள்.

noo'dle [2], *n.* மாவீடு, வடிசாற்றிலிடப்படும் மாவு-முட்டைக் கலவையின் வற்றல் துணுக்கு.

nook, *n.* மூலை; பின்னிடம்; ஒதுக்கிடம்; தனியிடம்.

noon, *n.* நண்பகல், உச்சிவேளை, பகல் பன்னிரண்டுமணி.

noon'day, noon'tide, *n.*=noon.

noose, *n.* சுருக்குக்கயிறு, கண்ணி, சுருக்குப்பொறி, சுருக்குக் கண்ணி; தூக்குக்கயிறு; திருமணத்தளை; தளை, வலை; *v.* சுருக்கில் பிடி; வலையில் சிக்கவை; கயிற்றில் சுருக்கிடு; கழுத்தில் சுருங்கிடு.

nop'al, *n.* அமெரிக்க சப்பாத்தி முட்செடிவகை.

nor [1], *adv.* அல்லதூஉம், இல்லாததாக; *conj.* அல்லதூஉம், இன்றி.

nor' [2]-, *n.*=north.

Nord'enfelt, *n.* இயந்திரத் துப்பாக்கி வகை.

Nord'ic, *a.* வடமேற்கு ஐரோப்பாவில் ஸ்காண்டினேவியாப் பகுதி சார்ந்து பரவியுள்ள நெட்டையான நெடிய மண்டையோட்டினையுடைய வெள்ளை நிறத்தவர் இனத்தைச் சார்ந்த.

Norf'olk, *n.* இங்கிலாந்திலுள்ள ஒரு மாவட்டம் அல்லது கோட்டத்தின் பெயர்; (தொ.) Norfolk capon, செவ்வண்ணக் கடல்மீன் வகை; Norfolk dumpling, Norfolk turkey, நார்ஃபக் மாவட்டத்தில் குடியிருப்பவர்; Norfolk jacket, தளர்த்தியான இடைக்கச்சுள்ள ஆடவர் சிறுசட்டை; Norfolk plover, தடித்த முழங்காலுடைய நீர்ப்பறவை வகை; நீர்ப்பறவை வகையின் தடித்த முழங்கால்.

norl'and, *n.* வடபுலம்.

norm, *n.* உருமாதிரி, படிவம்; மேல்வரி எடுத்துக்காட்டு; கட்டளைச்சட்டம்.

norm'al, *n.* இயல்பான நிலை; பொதுமாதிரி; பொதுநிலை அளவு; இயல்பான தளமட்டம்; பொதுத்தட்பவெப்பநிலை; உடலின் இயல்பான வெப்பநிலை; சராசரி, பொது நிகர நிலை; (வடி.) செங்குத்துக்கோடு; *a.* இயல்பான, பொது முறையான, வழக்கமான; கட்டளைப்படியான, உருமாதிரிக் கியைந்த; வடிவியலான; அமைவியலான; (வடி.) செங்குத்தான; (தொ.) normal school, ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, கல்விமுறைப்பள்ளி.

norm'alcy, normal'ity, *n.* இயல்நிலை.

Norm'an, *n.* நார்மனியர், பிரான்சில் நார்மண்டி (Normandy) மாவட்டத்தினர்; நார்மண்டி நாட்டு மக்களின் மரபு வழியினர்; *a.* நார்மண்டி நாட்டுமக்கள் இனமரபைச் சார்ந்த; (தொ.) Norman French, நார்மனியர் பேசும் பிரஞ்சு மொழி; முற்கால ஆங்கில சட்டமன்றங்களில் வழங்கப்பட்ட பிரஞ்சு மொழி; Norman style, கட்டிடக் கலையில் நார்மன் பாணி.

Norn, *n.* ஸ்காண்டிநேவியா நாட்டுப் பழம்புராணப் பெண் தெய்வங்களுள் ஒன்று.

No'rroy, *n.* இங்கிலாந்தில் டிரெண்ட் (Trent) ஆற்றுக்கு வடக்கில் ஆட்சி எல்லைகொண்ட கட்டியப் பெருந்தகை.

Norse, *n.* நார்வே நாட்டுமொழி; *a.* நார்வே நாட்டுமொழியைச் சார்ந்த; நார்வே நாட்டைச் சார்ந்த; (தொ.) Old Norse, நார்வே நாட்டிலும் நார்வே நாட்டுக்குடியேற்ற நாடுகளிலும் 14-ஆம் நூற்றாண்டு வரையில் வழங்கிய நார்வே நாட்டுமொழி.

Norsk, *n.,a.*=Norse.

north, *n.* வடக்கு, வடதிசை; வடபுலம்; வடபகுதி; இந்தியாவின் வடபகுதி; பிரிட்டனின் வடபகுதி; வட ஐரோப்பா; வட இங்கிலாந்து; வட ஸ்காத்லாந்து; வட அயர்லாந்து; அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அடிமைமுறை வழக்கிலில்லாத வடபால் அரசுகளின் தொகுதி; வாடை, வடகாற்று; காந்த ஊசியின் வடமுனை; *a.* வடபாலுள்ள; வடதிசைச் சார்ந்த; வடபகுதிக்குரிய; காந்த ஊசியின் வடமுனைப் பக்கமான; வடதிசைப் பக்கமுள்ள; வடபகுதியான; காற்று வகையில் வடக்கிருந்து வீசுகிற; காந்த ஊசி வகையில் வடக்கு நோக்கிய; *adv.* வடக்கே, வடபால், வடக்குத் திசையாக, வடக்கு நோக்கி, காந்த ஊசியின் வடமுனைத்திசையில்; (தொ.) magnetic north, காந்த ஊசியின் வடமுனை காட்டும் வடதிசைப் பகுதி; North Country, இங்கிலாந்தின் வடக்குப் பகுதி; north light, வடமுனை வளரொளி; North Sea, வடகடல், ஸ்காண்டினேவியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே உள்ள கடல்; North star, வடமீன், துருவ நட்சத்திரம்.

North-coun'try, *a.* இங்கிலாந்தின் வடபகுதிசார்ந்த, இங்கிலாந்தின் வடபகுதிக்குரிய; தனிப்பட்ட இயல்புகளையுடைய.

North-coun'tryman, *n.* வட இங்கிலாந்தின் குடிவாழ்பவர்.

north-east'er, *n.* வடகிழக்குக் காற்று.

north'er, *n.* இலையுதிர்காலத்திலும் குளிர்காலத்திலும் நடு அமெரிக்காவின் கிழக்குக் கரைமீது வீசும் கடுங்குளிர் காற்று.

north'erly, *a.* வடக்கு நோக்கிய; காற்று வகையில் வடக்குப் பக்கமிருந்து அடிக்கின்ற; *adv.* வடக்குநோக்கி, காற்று வகையில் வடக்குப்பக்கமிருந்து.

north'ern, *n.* வடபுலத்தவர்; வடகாற்று; *a.* வடக்கிலுள்ள; வடக்கே வாழ்கிற; வடக்கிலிருந்து வருகிற; வடக்கின் தனிச் சிறப்பியல்புள்ள; (தொ.) northern lights, வடமுனை வளரொளி.

north'erner, *n.* வடபகுதியர்.

north'ing, *n.* வடக்கு நோக்கிய முன்னேற்றம்; பயணவகையில் வடதிசை நோக்கிய பிறழ்வு.

North'land, *n.* (செய்.) வடமாநிலம்; நாட்டின் வடபகுதி.

North'man, *n.* நார்வே நாட்டுக் குடிமகன்; ஸ்காண்டினேவிய மாநிலக் குடிமகன்.

Northum'brian, *n.* பிரிட்டனின் வடபாலுள்ள பண்டை நார்த்தம்பிரியாப் (Northumbria) பகுதி சார்ந்தவர்; பண்டை நார்த்தம்பிரிய மொழிவழக்கு; நார்த்தம்பர்லாந்து (Northumberland) மாவட்டத்தின் குடிமகன்; நார்த்தம்பர்லாந்து மாவட்டத் திசைமொழி; *a.* நார்த்தம்பர்லாந்தைச் சார்ந்த; பண்டை நார்த்தம்பிரியாவுக்குரிய.

north'ward, *n.* வடமுகப்பக்கம்; *a.* வடக்கு நோக்கிய; *adv.* வடக்கு நோக்கி.

north'wardly, *a.* வடதிசை சார்ந்த, வடதிசை நோக்கிய; *adv.* வடதிசையாக.

north'wards, *n.* வடமுகப்பக்கம்; *adv.* வடக்கு நோக்கி

north-west'er, *n.* வடமேற்குக் காற்று.

nor'ward, *n., a., adv.*=northward.

nor'wards, *n., adv.*=northwards.

Norwe'gian, *n.* நார்வே நாட்டுக் குடிமகன்; நார்வே நாட்டு மொழி; *a.* நார்வே நாட்டைச் சார்ந்த.

nor'-west'er, *n.* வடமேற்குக் காற்று; கடுந்தேறல்; கண்ணுடிக்கலம்; எண்ணெய்த்தோல் குல்லாய்.

odd, *n.* குழிப்பந்தாட்டத்தில் எதிர்த்தரப்பைவிட மிகையாகப் பெற்ற பந்தடி; ஏற்றத்தாழ்வு சரிப்படுத்தும் சலுகைப் பந்தடி; சீட்டுப்பொறி ஆட்டத்தில் ஆறன் தொகுதி கடந்த பொறித் தட்டு; *a.* ஒற்றையான, இரட்டையல்லாத; எண்வகையில் வியஞன, இரண்டால் வகுக்கப்பெருத; ஒற்றைப்படை எண்ணுக்குரிய; சோடியுடன் இணையாத; இரட்டைப்படையில் மிச்சமான; வட்டத்தொகைபோக மீந்துள்ள; தொகுதியுட் சேராத; உதிரியான; சில்லறையான; பாதிக்கு ஒன்று மிகையான; குறிப்பிட்ட தொகைக்குச் சற்று மிகைப்பட்ட; சில்லறையுடன் கூடிய, சொச்சமான; கணக்கில் சேராத; தனிமிகையான; விட்டுப்போன; தொடர்புபடாத; ஈடுபடுத்தப்படாத; தொலை ஒதுக்கமான; எதிர்பார்க்கப்படாத; வழக்கமல்லாத; புதுமையான; பொதுநிலை திரிந்த; புதிரீடான; அரிய இயல்புடைய; விசித்திரமான; நகைப்புக்கிடமான; ஒத்துவராத; கோமாளித்தனமான; குழு வாக்கெடுப்பில் சரிசம வாக்குகளுக்கு மேம்பட்டுத் தனி மதிப்புப் பெறுகிற; சீட்டுப்பொறியாட்டத்தில் இருதரப்பும் ஆறன் தொகுதி தீர்ந்தபின் முதலாவதாக முனையப்பெறுகிற; (தொ.) forty odd, நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடையில்; odd and even, சூதாட்டம்; odd man out, நாணயத்தை எறிந்து பார்த்து மூவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் முறைப்படி; odd numbers, odd volumes, முழுநிறைவாகாத வரிசைகளைச் சேர்ந்த பருவ இதழ்கள்; sixty odd thousand, அறுபது ஆயிரத்துக்கும் எழுபது ஆயிரத்துக்கும் இடையில்; sixty thousand odd, அறுபது ஆயிரமும் சில நூறும் சில்லறையும்; the odd man, இரட்டைப்படை வரிசையில் அடங்காத தனி மனிதன்; the odd trick, சீட்டாட்டவகையில் இருதரப்பினருக்கும் ஆறுஆறு பிடித்தபிறகும் எஞ்சியுள்ள பதின்மூன்ருவது பிடி; twelve pounds odd, பன்னிரண்டு பவுன்களும் சில்லறையும்.

odd'-come-short, *n.* எஞ்சியது, மிச்சம்.

odd-come-short'ly, *n.* அண்மையில் ஒரு நாள்.

odd'fellow, *n.* நற்கொத்தர் சங்கத்தைப் போன்ற சடங்குகளையுடைய நட்புறவுக் குழுவின் உறுப்பினர்.

odd'ity, *n.* புதுமை, விசித்திரம்; தனிப்பட்ட போக்கு; விசித்திரமானவர்; விந்தைப்பொருள்; வியப்பான நிகழ்ச்சி.

odd'ments, *n. pl.* எச்சமிச்சங்கள், எஞ்சியவைகள்.

odds, *n. pl.* துண்டுத்துணுக்குகள்; உயர்வுதாழ்வு; வேற்றுமை; மனவேறுபாடு, சச்சரவு; சாதகநிலை; போட்டியில் பிற்பட்டவர்க்குரிய சலுகை; விட்டுக்கொடுக்கும் வீதாச்சாரச் சலுகை; நகைக்கூறு; வருநிலை வாய்ப்பு, நிகழ இருப்பது; (தொ.) odds and ends, எச்சமிச்சங்கள்.

ode, *n.* பண்டைய கிரேக்க துள்ளற் கலிப்பாடல் வகை; 50 முதல் 200 அடி வரையுள்ள நீடுயர் எழுச்சிப்பாடல் வகை; (தொ.) choral ode, கிரேக்க நாடக இசைக்குழுப் பாடல்.

ode'um, *n.* பண்டைக் கிரேக்க ரோமர்களிடையே இசை நிகழ்ச்சிகளுக்கான கட்டிடம்.

od'ic, *a.* காந்தக் கவர்ச்சி-படிகஆக்கம்-வேதிமாற்றம்-வசிய வித்தை ஆகியவைகள் நிகழ்வதற்குக் காரணமாக இயற்கை முழுதும் பரந்து பரவி நிற்பதாகக் கருதப்படும் ஆற்றல் சார்ந்த.

od'ious, *a.* வெறுக்கத்தக்க, அருவருப்பான.

od'ium, *n.* பரந்துபட்ட வெறுப்பு, பழி, இகழ்ச்சி.

odium theolo'gicum, (ல.) *n.* சமய தத்துவ அறிஞரிடையே யுள்ள வழக்கமான போட்டிப் பகைமையுணர்ச்சி, ஒரு தொழிலர் வெறுப்புணர்ச்சி.

odontal'gy, *n.* பல் வலி.

Odontogloss'um, *n.* பெரிய அழகிய பூக்களையுடைய வண்ண மலர்ச் செடிவகை.

odontol'ogy, *n.* பல் ஆய்வுநூல்.

odontorhync'ous, *a.* அலகில் பற்கள் போன்ற அமைப்புடைய.

odorif'erous, *a.* நறுமணம் பரப்புகிற.

od'orous, *a.* (செய்.) = odoriferous.

od'our, *n.* நறுமணம்; நாற்றம்; வாடை; அறிகுறி, சாயல், தடம்; (தொ.) bad odour, ill odour, அவப்பெயர், இழுக்கு; good odour, நற்பெயர், நன்மதிப்பு.

od'ours, *n. pl.* நறுமணப் பொருள்கள்.

od'yl, *n.* = od.

Od'yssey, *n.* கிரேக்க பெருங் காவியங்களிரண்டில் ஒன்று, ஒடிசஸ் (Odysseus) என்ற பெருவீரனின் சுற்றுலாப் பயண வரலாறடங்கிய வீரப்பெருங்காவியம்; சுற்றுலாத் தொகுதி; துணிகர நிகழ்ச்சிகள் நிறைந்த நீள் பயணம்.

oe'cist, *n.* குடியேற்ற முதல்வர்; பண்டைய கிரேக்கரிடையே குடியேற்ற நாடு தோற்றுவித்தவர்.

oecol'ogy, *n.* = ecology.

oecumen'ical, *a.* கிறித்தவ உலகப் பரப்பு முழுதுஞ் சார்ந்த; முழு மொத்தமான, எல்லாவற்றையும் உட்கொண்ட; உலகப் பொது திருச்சபையைச் சார்ந்த; உலகளாவிய.

oedem'a, *n.* இழைம அழற்சி; இழைமங்களில் நீர்க்கோவை.

Oe̋d'ipus, *n.* புதிர்களை விடுவிப்பவர், சிக்கல்களை அவிழ்ப்பவர்; (தொ.) Oedipus complex, உளஆய்வியலின்படி எதிர்பாலராகிய பெற்றோர் வகையில் பிள்ளைகளுக்கு உட்செறிவாக இருப்பதாகக் கருதப்படும் அடங்கிய உள்ளுணர்ச்சிக்கூறு.

o'er, *adv., prep.* (செய்.) = over.

oesoph'agus, *n.* உணவுக்குழாய், தொண்டை கடந்து இரைப்பைக்குச் செல்லுங் குழாய்.

oes'trum, oes'trus, *n.* மாட்டு உண்ணி; தூண்டுதல்; திடீர்உணர்ச்சி; உணர்ச்சிப்பொறி, வெறியார்வம்.

of, *prep.* உடைய, ஆறும் வேற்றுமை உடைமைப் பொருள் உருபு; உரியதாக; உள்ள, கொண்ட; இருந்து; கொண்டு ஆக்கப்பட்ட; பற்றி, குறித்து; இடையே; சார்ந்து; காரணமாக; கால்வழிமரபில்; போது; வகையில்.

off, *n.* மரப்பந்தாட்டத்தில் எதிர்ப்புறம்; *a.* அப்பாலுள்ள; தொலைவிலுள்ள; வண்டி-குதிரை வகையில் வலப்பக்கத்திலுள்ள; *v.* (பே-வ.) கைவிடுவதாகத் தெரிவி; நீக்கிவிடுவதாக அறிவி; ஒப்பந்தத்திலிருந்து விலகு; சமரசப்பேச்சிலிருந்து பின்வாங்கு; *adv.* தொலைவில், அப்பால்; *prep.* விலகி, ஒதுங்கி, தள்ளி; விட்டு, இருந்து; (தொ.) be off, விரைந்து போ, புறப்படு, போ; come off, திரும்பிவா, வந்துவிடு; தப்பிவிடு; fall off, go off, சீர்குலை, நிலைமை மோசமாகு; fall off, கப்பல் வகையில் காற்றின் ஒண்மை நெருக்கம் குறைவுபடு; ill off, வறிய நிலையில், நல்கூர்ந்த தன்மையில்; make off, விரை; புறப்படு; off and on, விட்டுவிட்டு, இடையிட்டு, அவ்வப்பொழுது; நிச்சயமின்றி; off colour, நன்னிலையிலில்லாமல், நோயுற்று; off one's feed, பசியின்றி, பசியார்வமின்றி; உணவு செல்லாமல்; off one's hands, கைப்பொறுப்பின்றி; off one's head, கிறுக்குப்பிடித்த, பைத்தியங் கொண்ட; off shore, கடற்கரையிலிருந்து சிறு தொலைவில்; off side, காற்பந்தாட்ட வகையில் எதிரிகளின் இலக்கிற்கும் பந்திற்கும் இடைப்பட்ட பக்கம்; off the point, தொடர்பின்றி, தலைப்புக்குப் பொருந்தாமல், வழிவிலகி; show off, பகட்டாகக் காட்டு, புறப்பகட்டாகத் தோற்றுவி; take off, நீக்கு, அகற்று; விழுங்கு; போல நடி; தரையைவிட்டு மேலெழு; well off, நன்னிலையில், பொருள் வளத்தோடு.

off'al, *n.* கழிவுப்பொருள்; குப்பைகூளம்; துண்டுதுணுக்கு; இறைச்சிக்குதவாத விலங்குடல் கழிவு; ஊழ்த்த இறைச்சி; மட்ட வகை மீன், விலைகுறைவான மீன்; உமி, தவிடு; சக்கை, வண்டல், மண்டி; (தொ.) offal milk, கீழ்த்தரமான பால்.

off'-drive[1], *n.* மரப்பந்தாட்டத்தில் மறுபுறஞ் செல்லும் பந்தடி.

off-drive'[2], *v.* மரப்பந்தாட்டத்தில் மறுபுறம் செல்லும்படி பந்தினை அடி.

offence', *n.* உணர்ச்சி புண்படுத்தல்; புண்படுநிலை, உணர்ச்சி ஊறுபாடு; மீச்செலவு, வலிந்துதாக்குதல்; குற்றம், குற்றச் செயல்; பொல்லாங்கு; சட்ட வகையில் மீறுகை.

offend', *v.* உணர்ச்சி புண்படுத்து, வருத்தமுண்டாக்கு; சினமூட்டு; வெறுப்பூட்டு; தீங்குசெய்; அவமதி; ஒழுங்கு மீறு, வரம்பு கட; சட்டம் மீறு; தவறுக நட.

offense', *n.* = offence.

offen'sive, *n.* மீச்செலவு, வலிய முதலிற் சென்று தாக்குதல்; வலிந்து கைப்பற்றுஞ் செயல், ஆக்கிரமிப்பு; *a.* வலிந்து மேற்சென்று தாக்குகிற; போருக்கு வலிந்து எழுகின்ற, தாக்குதலிற் பயன்படுத்துகிற; தாக்குதலிற் பயன்படுத்துதற்கான; துன்பம் அல்லது வருத்தம் தருவதற்கான; அவமதிப்பான, புறக்கணிப்பான; வெறுப்பூட்டுகின்ற; தீ நாற்றமுடைய, அருவருப்பான, குமட்டுகிற; எதிரிடையான.

off'er, *n.* கொடைமுனைவு, மனமாரக் கொடுக்க முன்வருகை; வரம், தன் விருப்பக்கொடை, உரிமைக்கொடை; தருமொழி, கொடுக்க ஒருங்கியுள்ளமை தெரிவிப்பு; உரிமை வழங்கீடு, சலுகை அளிப்பு; உரிமைச்சலுகை; உதவ முன்வருகை, உதவுகுறிப்பறிவிப்பு; செயல் ஏற்பறிவிப்பு, செயல் ஏற்க முன்வரல், இசைவுக்குறிப்பு, விருப்பறிவிப்பு; விலைக்குறிப்பீடு; விலை இசைவுக்குறிப்பு; ஏலக் கோரிக்கை; மணத்தில் கொடுக்க முன்வருகை; *v.* படையல் செய், பலியாக அளி; மதிப்புடன் வழங்கு; கொடுக்க முன் வா; வழங்கும் குறிப்புத் தெரிவி; கொடுக்கும் குறிப்பில் கை நீட்டு; மணக்கோரிக்கை செய்; திருமணத்தில் கொடுக்க இசைவு தெரிவி; செயல் ஒழுக்கக் குறிப்புத் தெரிவி; விற்பனைக்கு வை; ஏலத்தில் விலை கூறு; விலை குறிப்பிடு; விருப்பக்குறிப்பறிவி; உதவ முன் வா; செயலேற்று முன் வா; போர் தொடுத்தெதிர்க்க முனை; முன் வை; பொது வாய்ப்பளி.

off'ering, *n.* காணிக்கை, படையல்; நேர்த்திக்கடன்.

off'ertory, *n.* படையல் வழிபாடு, படையல் வழங்கப்படும் வழிபாட்டுக்கூறு; படையற் பொருள்; காணிக்கை; வழிபாட்டு நேரக் காணிக்கைப் பணத்திரட்டு.

off'hand[1], *a.* முயற்சி முனைப்பற்ற; முன்னேற்பாடின்றிச் செய்யப்படுகிற; முன்கருதலுடன் முனைந்து செய்யாத; இயலெளிமைவாய்ந்த; கோடு வகையில் வாரொழுங்கான; கற்றுருவாக்கப்படாத; உடனெழுச்சியான; பண்பு நய அமைதியற்ற, வெடுக்கென்ற; சடங்காசாரமற்ற, வரிசை வக்கணையின்றிச் சுருக்கான.

offhand'[2], *adv.* உடனடியாக; தயக்கமின்றி; முன் முயற்சியின்றி; கற்றுருவாக்காமல்.

off'ice[1], *n.* பணி; அலுவல்; பணித்துறை; தொழில்துறை; வேலை; கடமை; கடமைத்துறை; பொதுப்பணிமுறை; ஆட்சிப் பொறுப்பு; அமைச்சரவைப் பொறுப்பு; வினைமுறை; கடன்முறை; செயல்முறை, இணைசெயல்; வழிபாட்டு முறை, வழிபாட்டு வினைமுறை; இறுதி வினைமுறை; பணிமனை, அலுவலகம்; தொழில்மனை; பணித்துறைப்பிரிவு; கடமை ஈடுபாடு.

Off'ice[2], *n.* அலுவலகம், ஆட்சிப்பொறுப்பிடம்; ஆட்சிப் பொறுப்புக்குழு, ஆட்சிக்குழுமம்; (தொ.) Foreign Office, வெளிநாட்டமைச்சர் அலுவலகம்; Holy Office, இடைக்காலக் கிறித்தவ சமயத்துறை உயர்தண்ட நீதிமன்றம்; Post Office, அஞ்சலகம்; அஞ்சல் ஊழியத்துறை; War Office, போர் முறைச் செயலகம்.

off'icer, *n.* அலுவலர், பணியாளர், பணித்துறைவர்; உயர் பணியாளர்; பொதுப்பணியாளர்; படைத்துறை ஆணையர்; கடற்படைத்துறை ஆணையாளர்; விமானப்படைத்துறை ஆணையர்; பணித்துறைக் குழுவின் ஆணையர்; திட்டக்குழு ஆணையாளர்; சங்க ஆட்சிக்குழுவினர்; காவல்துறையினர்; மேலாளர், பணித்துறைப் பொறுப்பாளர்; பணித்துறை நான்காம் தள நன்மதிப்புப்படி; *v.* பணியாளர்களை அமைத்துக்கொடு; பணியாளர்கள்மீது மேலாட்சி நடத்து, மேலாளராகச் செயலாற்று.

off'ices, *n. pl.* மனைவினையிடங்கள்.

offi'cial, *n.* பணிமுதல்வர்; பணித்துறைவர்; பொதுப்பணித் துணைவர், துணைமைப் பொதுப்பணியாளர்; சமயத்துறை முறை மன்றங்களில் துறைமுதல்வரின் பேராளர்; *a.* பணிமனை சார்ந்த; பணித்துறைக்குரிய; பணித்துறைக் கடமைகள் சார்ந்த; பொதுப்பணியமர்வுபெற்ற; பொதுப்பணி ஈடுபாடுடைய; பணித்துறை ஏற்புடைய; பணித்துறை இசைவுபெற்ற; முறைமை ஏற்புடைய; முறைமைப்பட்ட; முறையார்ந்த; மருத்துவப் பட்டியலேட்டின்படியான.

offi'cialdom, *n.* பணித்துறைவர் குழு, பணியாளர் தொகுதி; பணித்துறை உலகு; பணித்துறைநிலை; மட்டுமீறிய பணித் துறைச் சார்பு; பணித்துறைப்பான்மை, பணிமனை மனப் பான்மை.

officialese', *n.* பணித்துறைக் குழுவழக்குமொழி.

offi'cialism, *n.* பணித்துறைநிலை; பணித்துறைப்பான்மை; பணித்துறைக்கண்டிப்பு; மட்டிலா அலுவலகப்பற்று; பணித் துறைத் தற்செருக்கு.

offi'ciant, *n.* வழிபாட்டு வினைமுறையாளர்.

offi'ciate, *v.* வினையாற்று, சமய வினைமுறைக்கடனாற்று; வழிபாட்டு முறையாற்று; பணித்துறைக் கடனாற்று; பொதுக்கடமையாற்று, கடன்முறைசெய்.

offi'cinal, *a.* மருத்துவத் துறைக்குரிய; மருத்துவர் வழக் காற்றின்பாற்பட்ட; மருத்துவப் பட்டியற்படியான.

offi'cious, *a.* முந்து உபசாரமுடைய, வலிந்து தலையிடுகிற; தேவைக்கு மேற்பட்ட; கடமையின் பொதுவரம்பு மீறிய; முறைமை வரம்புக்குப் புறமான, முறைப்படாத; பணித் துறைக் கட்டுப்பாடற்ற.

off'ing, *n.* கரையினின்று சிறிது தொலைவான இடம்; சிறிதே தொலைவான தூரம்; (தொ.) in the offing, கண்ணுக்குத் தோன்றும் நிலையில்; அருகில்.

off'ish, *a.* (பே-வ.) நெருங்கிப்பழக விரும்பாத, தனித்து ஒதுங்கி நடக்கிற.

off'-licence, *n.* வீடுகளிலிருந்து வெகு தொலைவில் பயன் படுத்துவதற்குச் சாராயம் விற்பதற்கான உரிமை.

off'load, *v.* பளு அகற்று; சரக்கினை இறக்கு.

off'-print, *n.* கட்டுரைத் துணுக்குப் படி.

off'-saddle, *v.* சேணங் கழற்று.

off'scourings, *n. pl.* கழிவுப்பொருள்கள்; அழுக்கு அடைவுகள்.

off'set, *n.* செடியினத்தின் அடிக்கன்று, முளைப்பாற்றலுடைய அடிக்கிளை; வேரடி; கிளைக்குருத்து; உயிர் மரபுக் கொழுந்து; பக்கக்கிளை; பக்கச்சிறுமலை; கிளைக் குன்று; குறை நிரப்பீடு; எதிரீடு, ஒப்புறழ்வால் பண் பெடுத்துக்காட்டும் நிலை; குழாயின் திடீர்த்திருப்பம்; (க-க.) திண்ணக்குறைவு; (க-க.) சுவரில் திட்பக்குறைவு உண்டுபண்ணும் பக்க உட்சாய்வு; அச்சுத்துறையில் எதிர்ப் பக்கக் கறைப்படிவு; அழுத்தப்பட்ட தொய்வக உருளைமீது மை தடவி எதிர்ப் படிவாக எடுக்கப்படும் கல்லச்சுமுறை; நில ஆய்வளவையில் ஊடு நேர்வரைக்குச் செவ்வான நேர் குறுக்குத்தொலைவு; *v.* சரியீடுசெய், குறைநிரப்பு; (தொ.) offset printing, offset process, அழுத்தப்பட்ட தொய்வக உருளைமீது மை தடவி எதிர்ப்படியாக எடுக்கப்படும் கல்லச்சு முறை.

off'shoot, *n.* பக்கக்கிளை, பக்கக்கன்று; கிளைவிளைவு, துணை விளைவு.

off'shore[1], *a.* கரையிலிருந்து சற்று விலகிய, கரையிலிருந்து செல்கிற; (தொ.) offshore wind, கடல் நோக்கி வீசுங் காற்று.

offshore'[2], *adv.* கரையிலிருந்து விலகி; கரையிலிருந்து.

off'spring, *n.* கால்வழி, வழிமரபு; மரபெச்சம், மரபுக் கொழுந்து; விளைபயன், விளைவு.

Of'lag, (செர்.) *n.* அலுவலர்க்கான செர்மன் சிறைக்கூடாரம்.

oft, *adv.* (செய்.) =often.

o'ften, *adv.* அடிக்கடி, பலதடவை, அடுத்தடுத்து, மீண்டும் மீண்டும்.

o'ftentimes, *adv.* அடிக்கடி.

og'am, *n.*=ogham.

og'doad, *n.* எட்டன் தொகுதி; எட்டெனும் எண்.

ogee', *n.* (க-க.) கீழிருந்து குழிவு குவிவான இரட்டைவளைவுப் பக்க ஒப்பணைப்பகுதி; காணிவடிவ வரை, பாம்பு வடிவ இரட்டை வளைவு; *a.* கீழிருந்து குழிவு குவிவாகச் செல்கிற; பாம்புவடிவ இரட்டை வளைவான.

ogee'd', *a.* குழிவு குவிவான இரட்டை வளைவமைந்த.

ogh'am, *n.* பண்டைப் பிரிட்டனிலும் அயர்லாந்திலும் வழங்கிய இருபது உருக்கள் கொண்ட எழுத்துமுறை; பண்டைப் பிரிட்டன்-அயர்லாந்து வழக்கிலுள்ள எழுத்துரு.

og'ive, ogive', *n.* (க-க.) வளைவுக்கூடத்தின் சாய்குறுக்குக் கை; காதிக் (Gothic) மரபுக்குரிய கூர்முனை வளைவு.

o'gle, *n.* ஒசிந்த நோக்கு, சிறக்கணிப்புப் பார்வை; காதற் பார்வை; *v.* சிறக்கணி; ஒசிந்து பார்.

Og'pu, *n.* சோவியத் ருசியாவில் புரட்சி எதிர்ப்பியக்கங்களைத் தடுத்தாள்வதற்குரிய முற்கால அமைப்பு.

o'gre, *n.* மனிதனைத் தின்னும் அரக்கன், மன்னுணி.

og'ress, *n.* மனிதனைத் தின்னும் அரக்கி.

Ogy'gian, *a.* வரலாற்றுக்கு முற்பட்ட.

oh, *int.* விளிக்குறிப்பு; வியப்புக்குறிப்பு; உணர்ச்சிக்குறிப்பு.

ohm, *n.* மின்தடை அலகு.

oho', *int.* வியப்புக்குறிப்பு; உவகைக்குறிப்பு.

oil, *n.* நெய்ப்புப்பொருள்; எண்ணெய், எண்ணெய்ச்சாயம்; *v.* எண்ணெய்பூசு; மசகிடு; எண்ணெயிட்டு இளக்கு; இயைபெளிமையுடன் இயங்குவி; எண்ணெய்போலாக்கு; எண்ணெய் போலாகு; எண்ணெயூட்டு; எண்ணெய் உள் ளூறித் தோயச்செய்; (தொ.) burn the midnight oil, இரவில் நெடுநேரம் விழித்திருந்து படி; இரவில் நெடுநேரம் விழித் திருந்து வேலை செய்; oil and vinegar, ஒருங்கிணையா முரண்பாடுடைய பொருள்கள்; oil one, oil one's hand, கைக்கூலி கொடு, கைக்கூலி கொடுத்து இணக்குவி; oil one's tongue, முகப்புகழ்ச்சி செய், புகழ்ந்து பசப்பு, நயவுரையாற்று; oil the wheels, சக்கரங்களுக்கு மசகிடு, மசகிட்டு மென்னயத்துடன் இயங்கச்செய்; இயைபெளிமை யுடன் இயங்குவி; நயமாகச் செயலாற்றுவி; பசப்பிக் காரிய

மாற்று; கைக்கூலிகொடுத்து எளிதாகக் காரியம் நடக்கும் படி செய்; pour oil on the flame, உணர்ச்சிகளைக் கிளறி எழுப்பு; pour oil on the waters, இசைவூட்டி அமைதிப் படுத்து; smell of oil, நெடிதிருந்து படித்த அடையாளம்; கடும் உழைப்புக்குறி; strike oil, அடிநிலத்தில் எண்ணெய் ஊற்றுக் கிடைக்கப்பெறு; வெற்றி எய்து.

oil'-bird, *n.* எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படும் பறவை வகை.

oil'-bush, *n.* நெய்ம உலோக உள்ளீடு.

oil'-cake, *n.* பிண்ணாக்கு.

oil'-can, *n.* எண்ணெய்க்கலம்.

oil'-cloth, *n.* மெழுகுத்துணி.

oil'-coat, *n.* மெழுகுத்துணிச் சட்டை.

oil'-colours, *n. pl.* வண்ண மை, வண்ணப்பொருள் கலந்த எண்ணெய்.

oil'-engine, *n.* எண்ணெயால் இயங்கும் பொறி.

oil'er, *n.* எண்ணெய் பூசுபவர், எண்ணெய் பூசுவது; மச கிடுபவர்; மசகிடுவது; எண்ணெய் ஊற்றும் கிண்ணி.

oil'-field, *n.* எண்ணெய்படும் இடம்.

oil'-gauge, *n.* எண்ணெய் அளவுமானி.

oil'-gilding, *n.* மஞ்சள் வண்ணங் கலந்த ஆளி எண்ணெய் மீது பூசப்பெறும் மெல்லிய பொன் தகட்டுத்தாள்.

oil'-gland, *n.* நெய்மப்பொருள் சுரப்பிக்கும் கழலை.

oil'-gold, *n.*=oil-gilding.

oil'-hole, *n.* மசகெண்ணெய் ஊற்றுவதற்குரிய இயந்திரத் துளை.

oil'man, *n.* எண்ணெய் வகைகள் செய்பவர்; எண்ணெய் வகைகள் விற்பவர்.

oil'-meal, *n.* ஆளிவிதைப் பிண்ணாக்கு.

oil'-painting, *n.* எண்ணெய்ச்சாய ஓவியக்கலை; எண் ணெய்ச்சாயப்படம்.

oil'-palm, *n.* எண்ணெய்தரும் விதைகளையுடைய பனையின மரம்.

oil'paper, *n.* எண்ணெய்த்தாள், எண்ணெயிட்டுக் கண்ணாடி போல் ஒளியூடுருவும்படி செய்யப்பட்ட தாள்.

oil'-plant, *n.* எண்ணெய்ச் செடி.

oil'-press, *n.* செக்கு, செக்காலை.

oils, *n. pl.* மெழுகுத்துணி; எண்ணெய் வகைகள்; (தொ.) drying oils, உறைவண்ணச் சாயங்கள்; essential oils, volatile oils, ஆவிவடிப்புக்கும் மணத்துக்கும் உரிய நெய்மப் பொருள்கள்; fatty oils, fixed oils, வண்ணச்சாயமாகவும் மசகாகவும் பயன்படுத்தப்படும் ஆவிவடிப்பேற்காத நெய்மப் பொருள்கள்; mineral oils, மசகாகவும் ஒளிதரும் எரிபொருளாகவும் பயன்படும் நெய்மங்கள்; non-drying oils, மசகாக வும் ஒளிதரும் எரிபொருளாகவும் பயன்படும் உறையா நெய்மப் பொருள்கள்.

oil'-seed, *n.* எண்ணெய்விதை.

oil'skin, *n.* நீர்த்தடைக்காப்புச் செய்யப்பட்ட மெழுகுத்துணி; மெழுகுத்துணி ஆடை.

oil'skins, *n. pl.* எண்ணெய்த் துணியாலான முழு உடைத் தொகுதி.

oil'-spring, *n.* எண்ணெய் ஊற்று.

oil'-stone, *n.* எண்ணெய் ஊட்டப்பட்ட தீட்டுக்கல், சாணைக் கல்.

oil'-tanker, *n.* எண்ணெய்க்கப்பல்.

oil'y, *a.* எண்ணெய் சார்ந்த; எண்ணெய் போன்ற; புகழ்ந்து பசப்புகிற; குழைந்து நடிக்கிற; நயமாக இணைத்துக்கொள்கிற.

oint'ment, *n.* மருந்துநெய்.

Oir'eachtas, *n.* அயர்லாந்து சட்ட மாமன்றம், இரு அயர் லாந்து பேரவைகளுடன் தலைவரும் கூடிய தொகுதி.

oka'pi, *n.* ஒட்டைச்சிவிங்கி போன்ற வண்ண அமைப்புக்களை யுடைய நடுஆப்பிரிக்க மாட்டினவிலங்குவகை, வரிமான்வகை.

ok'ra, *n.* வெண்டை வகை.

old, *a.* பழைய; பழங்காலத்திய; பழமைப்பட்டுவிட்ட; பழம் பாணியான; பழமைப்பட்ட; காலங்கடந்துவிட்ட; வழக் காறற்றுப்போன; வழங்கிக்கழித்த; பழகிய; பழகிப்போன; நீடித்த; நீடித்து வழங்கிய; முற்பட்ட; முந்திய; முன் னோர்களுக்குரிய; அனுபவமிக்க; தேர்ச்சிமிக்க; முதிய; வயதுசென்ற; வயதுடைய; மூப்பால் தளர்வுற்ற; கிழடு தட்டிய; அறிவு முதிர்ச்சியுடைய; (தொ.) old age, முதுமை; old bachelor, மணங்கொள்ளா வாழ்க்கையில் உறுதிபெற்ற வர்; old bird, ஏமாற்றங்களில் சிக்காது கடுவிழிப்பாயிருப் பவர்; 'old boy, வயதுசென்றவர்; வயதுசென்ற தோற்ற முடையவர்; இளந்தோற்றமுடைய முதியவர்; பேச்சு வழக்கில் தந்தை; கணவன்; பழைய மாணவர்; old gentleman, Old Harry, Old Nick, Old Scratch, நரகத் தலைவன், பேயரசு; Old Glory, உடுக்களும் கம்பிகளும் கலந்த அடையாள முடைய அமெரிக்க கொடி; old gold, மங்கிய பொன்னிறம்; old hand, தேர்ச்சிபெற்ற வேலையாள்; கைதேர்ந்தவர், பழகித் தேர்ச்சிபெற்றவர்; old man, திருந்தா மனித இயல்பு; குரங்கு வகை ஆண்; வாணிகக் கப்பல் மீகான்; மணமுள்ள செடி வகை; அன்பு விளிக்குறிப்பு; ஊக்கு விளிக்குறிப்பு; பேச்சு வழக்கில் தந்தை; கணவன்; பணிமுதல்வன்; Old Stager, அனுபவமிக்கவர்; Old Tom, old wine, மதுவகை; முதிர் சுவைத்தேறல்; Old World, நில உலகக்கோளத்தின் கீழ்ப் பாதி.

ol'den, *a.* (செய்.) முற்காலத்திய, பழங்காலத்திய, பண்டை நாளைய; *v.* மூப்பால் தளர்வுறு; முதுமையால் தளர்வுறுத்து.

old'ster, *n.* இளமைநிலை கடந்தவர்.

olea'ginous, *a.* எண்ணெய் உண்டுபண்ணுகிற; எண்ணெய் சார்ந்த; நெய்மப்பசையுடைய; கொழுப்பார்ந்த; கொழுப்புப் பண்புடைய; எண்ணெயின் இயல்புடைய.

olean'der, *n.* அலரி.

oleas'ter, *n.* காட்டு நெய்ம மரவகை.

ol'eograph, *n.* எண்ணெய் வண்ண அச்சுப்படம்.

ol'eography, *n.* எண்ணெய் வண்ணப்பட அச்சுமுறை.

oleo-marg'arine, *n.* செயற்கை வெண்ணெயின் கூறுயுதவும் மாட்டிறைச்சியின் கொழுப்புச்சத்து.

oleom'eter, *n.* எண்ணெய்மானி.

oleo-res'in, *n.* பிசினரக்கு நெய்மப்பொருள் கலவை.

olfac'tion, *n.* முகர்வுணர்வு, மோப்பம்.

olfac'tories, *n. pl.* முகர்வுணர்வுக்குரிய உறுப்புக்கூறுகள்.

olfac'tory, *a.* மோப்பம் பற்றிய.

olib'anum, *n.* நறுமணப் புகைதரும் பிசின் வகை.

ol'id, *a.* கெடுநாற்றமுள்ள, கடுவாடையுடைய.

ol'igarch, *n.* சிலவராட்சி உறுப்பினர்.

oligarch'ic, oligarch'ical, *a.* சிலவராட்சிக்குரிய.

ol'igarchy, *n.* சிலவராட்சி; சிலவராட்சியர்.

oligocarp'ous, *a.* சில்கனியுடைய.

ol'igocene, *a.* (மண்.) புத்துயிர்ப் பேரூழியின் முதல் இடைப் பருவங்களுக்கு நடுவான இடைப்பருவ ஊழிக்குரிய.

ol'io, *n.* கதம்பக்கூட்டுணவு, கூட்டுச்சோறு; *pl.* ol'ios.

oliva'ceous, *a.* 'ஆலிவ்' மரக்காயின் நிறமுடைய, புகை யார்ந்த பசு மஞ்சள் வண்ணமான.

ol'ive, *n.* ஆலிவ் மரம், தேவதாரு வகை எண்ணெய்தரும் கொட்டையுடைய பசுந்தழை மரவகை; ஆலிவ் மரக்கிளை; ஆலிவ் தழைக்கொத்து; அமைதிச் சின்னம்; சமாதானச் சின்னம்; கிளிஞ்சில் வகை; குமிழ் வடிவச் சட்டைமாட்டி; புகையார்ந்த பசுமஞ்சள் நிறம்; *a.* புகையார்ந்த பசுமஞ்சள் நிறமுடைய; மேனி வகையில் பொன் பழுப்பு நிறமுடைய; (தொ.) olive crown, வெற்றிச்சின்னமான தழைச்சூட்டு; olive oil, ஆலிவ் எண்ணெய், தேவதாரு வகை எண்ணெய்.

ol'ive-branch, *n.* சமாதானச் சின்னம்; குழந்தை; (தொ.) hold out the olive branch, அமைதி நாடு.

ol'iver[1], *n.* ஆணி வடிப்பதற்குரிய மிதி சம்மட்டி வகை.

Ol'iver[2], *n.* பிரஞ்சுப் பழங்கதையில் வீரன் ரோலந்தின் (Roland) இணையொத்த தோழன்; வீரத்துணைவன்; (தொ.) a Roland for an Oliver, சரிக்குச்சரி.

ol'ives, *n. pl.* காய்கறிகளுடன் கலந்தவித்த மாட்டிறைச்சி அல்லது கன்றிறைச்சிக் கண்டங்கள்.

ol'ivin, ol'ivine, *n.* பசுமஞ்சள் வண்ணமான மணிக்கல்.

oll'a podri'da, *n.* கதம்பக் கூட்டுணவு.

olym'piad, *n.* பண்டைக் கிரேக்க உலகின் கூட்டாட்டப் பந்தய விழாக்களுக்கிடைப்பட்ட நான்காண்டுக்காலம்; முதற் கூட்டாட்டப் போட்டி (கி. மு. 776) தொடங்கிக் கிரேக்கர் மேற்கொண்ட ஆண்டுக்கணிப்பு ஊழி.

Olym'pian, *n.* ஒலிம்பஸ் (Olympus) மலைமீது வாழ்வதாகக் கொள்ளப்பட்ட கிரேக்க பெருங் கடவுளரில் ஒருவர்; பெருந் தேவன், தேவர்; வீறுார்ந்தவர்; அருள்நலங் கொண்ட மேதகை; *a.* ஒலிம்பஸ் மலைக்குரிய; ஒலிம்பஸ் மலையில் வாழ்கிற; தெய்விகத்தன்மை வாய்ந்த; வீறுார்ந்த; மேதக்க; அருள் நலமார்ந்த.

Olym'pic, *a.* பண்டைக் கிரேக்க உலகில் ஒலிம்பியா (Olympia) என்னும் பகுதியில் நடைபெற்ற; அனைத்து நாடு களின் போட்டிக்குரிய; (தொ.) Olympic games, பண்டைக் கிரேக்க உலகில் கி. மு. 776 முதல் நான்காண்டுக்கொருமுறை நடைபெற்ற விளையாட்டு-இசை-இலக்கியப் போட்டி நிகழ்ச்சி; தற்கால உலகில் 1896 முதல் நான்காண்டுக்கொருமுறை நடை பெற்றுவரும் உலகப் போட்டி நிகழ்ச்சி.

Olym'pics, *n. pl.* கி. மு. 776 முதல் நான்காண்டுக்கொரு முறை நடைபெற்ற பண்டைக் கிரேக்க உலகப்போட்டி; 1896 முதல் நான்காண்டுக்கொருமுறை நிகழும் தற்கால உலகப்போட்டி நிகழ்ச்சி.

Olym'pus, *n.* கிரேக்க பெருந்தெய்வங்கள் வாழ்வதாகக் கரு தப்பட்ட மலை.

om'bre, *n.* பதினேழு-பதினெட்டாம் நூற்றுண்டுகளில் பெரு வழக்காயிருந்த சீட்டாட்ட வகை.

om'ega, *n.* கிரேக்க நெடுங்கணக்கின் கடைசி எழுத்து; தொடரின் முடிவு; வளர்ச்சி முடிவு; முன்னேற்ற முகடு.

om'elet, om'elette, *n.* முட்டை ஊற்றப்பம்; கொத்திய இறைச்சி-பாலேடு-பழப்பாகு-மணப்பூண்டு முதலியவற்றின் சுவை யூட்டப்பெற்ற முட்டைப் பொரியல் மடிப்புப் பண்ணிய வகை; (தொ.) cannot make an omelet without breaking eggs, உழைப்புக் கடுமையின்றிப் பலனுகர முடியாது.

om'en, *n.* முன்னம், நிமித்தம்; *v.* வருவதுரை, முன்னறிகுறி காட்டு.

omen'tum, *n.* குடல் போன்ற பிற வயிற்று உறுப்புக்களோடு இரைப்பையை இணைக்கும் வபை மடிப்பு.

om'inous, *a.* முன்னறிகுறியான; தீக்குறியான; வரும் பேரி டரை முன் காட்டுகிற; அச்சுறுத்துகிற.

omi'ssion, *n.* விடுபாடு, விட்டு விடுகை; விடுபடல்; சேர்க் காது விடுதல்; செயற்சோர்வு, செய்தக்க செய்யாமை; செய்யப்படாதது; கடமைப் புறக்கணிப்பு, கடமைச் சோர்வு.

omit', *v.* விடு, விடுபடச்செய்; செய்யத்தவறு; கடமை புறக் கணி.

om'nibus, *n.* பெருந்துகலம், பெரிய பொறியூர்தி; *a.* ஒரே சமயத்தில் பல செயல்கள் செய்கிற; பல வழிகளிற் பயன் படுகிற; பல உருப்படிகள் கொண்ட; பல இனங்கள் அடங் கிய; *pl.* om'nibuses; (தொ.) family omnibus, private omnibus, புகைவண்டி நிலையத்திற்கோ புகைவண்டி நிலையத் திலிருந்தோ பிரயாணிகளையும் சரக்குகளையும் கொண்டு செல் லும் பெருந்துகலம்; omnibus bar, omnibus wire, முழு மின் அலையும் ஊடுசெல்லுங் கம்பி; omnibus book, பெரும்பாலும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்ட பல கதைகள்-நாடகங்கள் உட்கொண்டு அனைவரும் வாங்கக்கூடிய குறைந்த விலைக்குக் கிடைக்கும் ஏடு; omnibus box, நாடக அரங்கில் பங்குவரி யாளர்களுக்கான முன் வரிசை இருக்கை; omnibus train, எல்லா நிலையங்களிலும் நின்று செல்லும் புகைவண்டி.

omnicom'petent, *a.* எல்லா வழக்குகளுக்கும் பொருந்திய சட்ட வரம்பாட்சியுடைய.

omnifar'ious, *a.* பல்வகையான, நாலா வகைப்பட்ட.

omnif'ic, *a.* எல்லாவற்றையும் படைக்கிற, அனைத்தையும் உண்டாக்குகிற.

omni'genous, *a.* எல்லா வகைகளும் சார்ந்த.

omnip'otence, *n.* எல்லாம் வல்ல தன்மை, வரம்பில் ஆற்றல்; கடவுள்; மிகப்பெருஞ் செல்வாக்கு, பேராற்றல்.

Omnip'otent[1], *n.* கடவுள், இறைவன்.

omnip'otent[2], *a.* எல்லாம் வல்ல.

omnipres'ence, *n.* எங்கும் இருக்கும் தன்மை; எங்கும் நிறைந்த தன்மை.

omni'science, *n.* நிறைபேரறிவு, எல்லாம் அறியும் பேரறிவு; கடவுள்.

Omni'scient[1], *n.* கடவுள், இறைவன்.

omni'scient[2], *a.* எல்லாம் அறிகிற.

om'nium gath'erum, *n.* பல்பொருட் கதம்பம்; பல்வகை மக்கள் கும்பல்; எல்லாருக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட விருந்து.

omniv'orous, *a.* கண்டதைப் புசிக்கிற.

om'oplate, *n.* தோட்பட்டை எலும்பு.

om'phalos, *n.* கேடயத்தின் மேலுள்ள குமிழ்; பூமியின் மைய மாகக் கருதப்பட்ட டெல்பி (Delphi) என்னுமிடத்திலுள்ள கூருருளைக்கல்; மையம், நடு; சக்கரத்தின் குடம்.

om'phalotomy, *n.* கொப்பூழ்க் கொடியைப் பிரித்தல்.

on, *n.* மரப்பந்தாட்டத்தில் முதலில் ஆடுங் கட்சி; *a.* மரப் பந்தாட்டத்தில் பந்து அடிக்கும் ஆட்டக்காரரின் இலக்கிற்கு இடப்பக்கத்திலுள்ள முன்பகுதி நோக்கிய; முன்பகுதி சார்ந்த; *adv.* மேலே; முன்னோக்கி; உயர, தூர; அப்புறம்; பிறகு; *prep.* மேல், மீது, மிசை; இல்; அருகில்; நோக்கி; (தொ.) be on, சார்வாயிருக்கிற; கட்சியாளராக இருக்க விரும்புகிற; be on to, கருத்துக்களையும் எண்ணங்களையும் அறிந்து விழிப் பாயிரு; on and off, அங்குமிங்கும், இடையிடையே; on licence, கட்டிடங்களிலேயே குடிவகைகள் குடிக்கும்படி விற்பதற்கான இசைவுரிமை; on to, மேனிலைநோக்கி.

on'ager, *n.* காட்டுக்கழுதை வகை; *pl.* on'agers, on'agri.

on'anism, *n.* நிறைவுறு இணைவிழைச்சு; தன்கைத்தீமை.

once, *n.* ஒருமுறை; ஒரேவேளை; உடனடி வேளை; *adv.* ஒரு காலத்தில்; முன் ஒரு காலத்தில்; ஒருதடவை; ஒரு படி; (தொ.) at once, உடனடியாக, தயக்கமின்றி; ஒருங்கே, ஒரே நேரத்தில்; once and again, பன்முறை, பல தடவை; once for all, முடிவாக, உறுதியாக; once in a way, once in a while, எப்பொழுதாவது ஒருதடவை, அருமையாக; once more, மறுபடியும், இன்னொரு தடவை.

once-o'ver, *n.* (பே-வ.) பீடிகையான நிறை ஆய்வு.

on'cer, *n.* (பே-வ.) வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் மட்டுந் திருக்கோயிலுக்குச் செல்பவர்.

on'-coming, *n.* அணுகுதல்; *a.* முன்னேறுகிற, நெருங்கு கிற, அணுகுகிற.

on dit, (பிர.) *n.* கேள்வித்துணுக்கு; அவதூறான சொல்.

one, *n.* ஒன்று; ஒருவன்; ஒருத்தி; *pron.* ஏதோ ஒருவர்; ஏதோ ஒரு பொருள்; *a.* ஒன்றான; இணைந்த; பிறரல்லாத; ஒற்றை யான; (தொ.) all in one, எல்லாம் இணைந்து; at one, ஒத்து உடன்பட்ட, ஒரு மனப்பட்ட; in the year one, வெகுகாலத் திற்குமுன்; it is all one to me, எனக்கு எல்லாம் ஒன்றுதான்; எதுபற்றியும் கவலையில்லை; எதுவும் பயனில்லை; never a one, ஒருவருமில்லை; எவருமில்லை; number one, தான்,

தற்பற்றுக்குரிய இலக்கு ; one and all, எல்லாம் சேர்ந்து ; one by one, one after another, ஒவ்வொன்ருக; ஒவ்வொருவராக; one with another, சராசரியாக; ten to one, பெரிதும் உறுதியாக ; the all and the one, முழு ஒருமை, கூட்டு மொத்த நிலையுடன் கூடிய முழுமைநிலை ; the Evil One, சைத்தான், நரகத்தலைவன்; the Holy One, One above, இறைவன்.

one'-eyed, *a.* ஒற்றைக்கண்ணுள்ள, ஒரு கண் குருடான.

one'-hand'ed, *a.* ஒரே கையுடைய ; ஒரே கையால் செய்யப்பட்ட.

one'-horse, *a.* ஒற்றைக்குதிரையால் இழுக்கப்படுகிற ; ஒரே குதிரைகொண்டு வேலை செய்யப்பட்ட ; மிகச் சிறுதிறமான ; வாய்ப்பு வளம் மிகக் குறைந்த.

one'-ide'a'd, one'-ide'aed, *a.* ஒரே கருத்துள்ள ; குறுகிய நோக்கங்கொண்ட.

oneirocrit'ic, *n.* கனவுக்குறி கூறுபவர்.

oneir'omancy, *n.* கனவுக்குறி கூறுங்கலை

one'-legged, *a.* ஒற்றைக்காலுள்ள ; சரிசம நிலையற்ற.

one'-man, *a.* ஒருவர் தேவைப்படுகிற ; ஒருவர் கொண்ட ; ஒருவரால் நடத்தப்படுகிற, ஒருவரால் கண்காணிக்கப்படுகிற.

one'ness, *n.* ஒருமை; தனிமை; தனித்தன்மை; அருந்திறம்; முழு ஒருமை ; ஒற்றுமை ; உடன்பாடு ; இணக்கம் ; ஒத்த தன்மை ; வேறுபடா நிலை, மாருநிலை, ஒன்ருந்தன்மை, வேறற்ற தன்மை.

one'-pair, *n.* முதல் தளத்திலுள்ள அறை; இரண்டு முதல்தள அறைத்தொகுதி.

on'er, *n.* புகழ்பெற்றவர், குறிப்பிடத்தக்க சிறப்புடையவர் ; குறிப்பிடத்தக்க பொருள்; (பே-வ.) பந்து அடித்தல் முதலியவற்றில் ஒன்று என்னும் எண்ணிக்கை.

on'erous, *a.* பளுவேறிய, கனமிக்க; மிகுபொறுப்பான; மிகு கவலை தருகிற.

oneself', *refl. pron.* ஒருவரே; ஒருவர் தாம்; ஒருவர் தம்மையே.

one'-sid'ed, *a.* ஒருசார்பான ; ஒருசாய்வான ; ஒருபுறத்தில் மட்டும் உள்ள ; ஒருபுறமட்டுமேயுடைய ; (தொ.) one-sided plant, தண்டின் ஒருபக்கம் மட்டும் இலைகளையுடைய ; one-sided street, ஒருபக்கத்தில் மட்டும் வீடுகளுள்ள தெரு.

one'step, *n.* அமெரிக்க துரிதநடன வகை.

one'-way, *a.* ஒருதிசைப்போக்கு மட்டுமேயுடைய; ஒருதிசைச் செலவுக்கு மட்டும் இசைவுடைய ; ஒருதிசைப்போக்குக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட; (தொ.) one-way street, ஒரு வழித் தெரு.

on'fall, *n.* தாக்குதல்.

on'flow, *n.* முன்னேக்கிய பாய்ச்சல், விரைவொழுக்கு.

on'goings, *n.* முறைதவறிய நடவடிக்கைகள்; விந்தையான செய்திகள்.

on'hanger, *n.* சார்பாளர், பின்பற்றுபவர்.

on'ion, *n.* வெங்காயம், உள்ளிப்பூண்டு; *v.* வெங்காயத்தைக் கண்ணில் தேய்த்து நீர் வரச்செய் ; (தொ.) flaming onions, நெருப்புக்கோளத் தொடரைப் போன்ற வானூர்தி எதிர்ப்புக் குரிய எறிகுண்டு.

oni'on-couch, oni'on-grass, *n.* காட்டுக் கூலவகை.

oni'on-shell, *n.* நத்தை வகை.

on'looker, *n.* பார்வையாளர்.

on'ly, *a.* ஒரே ; ஒன்றுமட்டுமான, ஒரே ஒரு, ஒரே ஒன்ருன ; தனிமையான ; *adv.* மட்டும்; தான்; ஒரு வழியாக; *conj.* எனினும், ஆயினும் ; விதிவிலக்காக.

onomatopoe'ia, *n.* சொற்பொருள் இசைவணி ; ஒலி அனுகரணம்.

on'rush, *n.* முன்னேக்கிய பாய்ச்சல்.

on'set, *n.* கடுமையான தாக்குதல்; வலுத்தாக்குதல் ; தொடக்கம்.

on'slaught, *n.* கடுந்தாக்குதல், எதிர்ப்பு, மோதல்.

ontogen'esis, *n.* தனி உயிரின் தோற்றவளர்ச்சிகளின் வரலாறு.

ontol'ogy, *n.* மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சி.

on'us, *n.* சுமை ; பொறுப்பு ; கடமை.

on'ward, *a.* முன்னேக்கிய ; முன்னேக்கிச் செலுத்தப்பட்ட ; *adv.* முன்னேக்கி ; மேன்மேலும் ; முன்னேற்ற விரைவுடன்.

on'wards, *adv.* முன்னேக்கி, மேன்மேலும் ; முன்னேற்ற விரைவுடன்.

on'ymous, *a.* பெயர் அறியப்படுகிற, அநாமதேயமல்லாத.

on'yx, *n.* பல்வகை நிற அடுக்குகள் கொண்ட மணிவகை ; (மரு.) பொருள் புலப்படா நிலையில் விழி முன்தோலின் கீழ்ப்பகுதியின் ஒளி ஊடுருவவிடாத் தன்மை ; (தொ.) onyx marble, பற்பல வண்ண அடுக்குகள் கொண்ட மணிக் கல் போன்ற சலவைக்கல் அமைப்பு.

oo'dles, *n. pl.* (பே-வ.) பெருந்திரள், தேவைக்கு மேற்பட்ட கழிமிகை.

ooe'cium, *n.* பொலிமுகை, முதுகெலும்பற்ற விலங்குகளில் கருவை உள்வாங்கிப் பொலிவிக்கும் மொட்டுப் போன்ற பை.

oog'amous, *a.* ஆண் பெண் கரு உயிர்மச் சேர்க்கையால் இனப்பெருக்கம் உண்டுபண்ணுகிற.

oogen'esis, *n.* கரு அணுவின் தோற்ற வளர்ச்சி வரலாறு.

o'olite, *n.* சுண்ணமணிக்கல், பரற்செறிவுடைய சுண்ணக்கல்; (மண்.) சுண்ணக்கல் கொண்ட நிலப்படிவ அடுக்கு.

ool'ogy, *n.* பறவை முட்டைச் சேகரம் ; பறவை முட்டை ஆய்வுநூல்.

ool'ong, *n.* பதப்படுத்தப்பட்ட கருநிறச் சீனத் தேயிலை வகை.

oom, *n.* தென் ஆப்பிரிக்க வழக்கில் மாமன்.

oont, (இ.) *n.* ஒட்டகம்.

ooze, *n.* ஆற்று வண்டல் ; நீராளமான அடிச்சேறு ; கசிவு ; மென்கசிவொழுக்கு ; பட்டை நீர், தோல் பதனிடப் பயன்படும் சீமை ஆல் மரப்பட்டை ஊறல் நீர் ; *v.* துளைகள் வழியாக ஈரங் கசிவுறு, கசிந்து வெளிப்படு ; ஈரக்கசிவை வெளிவிடு, புறங்கசி ; கசிந்து ஒழுகு ; வெளிப்படு ; வெளிவிடு ; கசியவிடு ; செய்தி புறம்போகவிடு ; ஊக்கம் கரையவிடு.

ooze'-calf, *n.* சாயம் தோய்ந்து ஊறிய கன்றின் தோல்.

opa'city, *n.* ஒளியை ஊடுருவிச் செல்லவிடாத தன்மை ; ஒளியை எதிரிட்டுக் காட்டாத இயல்பு ; மழுங்கல்தளம், பொருள்புரியா நிலை ; மழுப்பம்.

op'ah, *n.* இறைமீன், நிலாமீன், வட அட்லாண்டிக் கடலில் வாழும் அருமதிப்புடைய ஒளிவண்ண மீன்வகை.

op'al, *n.* பலநிறம் நிழலாடும் மணிக்கல் வகை, நிறம் மாறும் மணிவகை.

opales'cence, *n.* வானவில் வண்ண மாறுபாட்டுடன் கூடிய பால் நுரை நிறம்.

op'aline, *n.* அரைகுறையாகத் தெளிவில்லாமல் ஒளிக்கதிர்கள் ஊடுருவிச் செல்லும் வெண்ணிறக் கண்ணடி ; *a.* பல நிறம் நிழலாடும் மணி வகைபோன்ற ; மாறிக்கொண்டிருக்கும் நிறங்களைக் காட்டுகிற ; வானவில்போல் பல நிறங்களுடன் விளங்குகிற.

opaque', *a.* ஒளியை ஊடுருவிச் செல்லவிடாத ; ஒளியை எதிரிட்டுக் காட்டாத ; ஒளிவிடாத ; கண்ணுக்குப் புலப்படாத ; தெளிவற்ற ; மழுங்கலான, அறிவுக்கூர்மையற்ற ; (தொ.) the opaque, இருட்டு.

ope, *v.* (செய்.) = open.

op'en, *n.* திறந்த வெளியிடம்; தங்குதடையற்ற வான்வெளி; பொதுவிடம், பொதுமக்கள் பார்வைக்குரிய இடம் ; *a.* திறந்த, வாயில் மூடப்பெருத, மூடி பொருத்தப்படாத; புழை அடைக்கப்படாத ; பூவகையில் மலர்ந்த ; மடிப்பவிழ்ந்த ; இடைவெளியுடைய; துளைகளையுடைய; போக்குவழி உடைய;

வழிமறிக்கப்படாத; நுழைவு தடுக்கப்படாத; செல்ல வழி விடுகிற; வளைக்கப் பெறாத; அடைப்பற்ற; வேலியிட்டுத் தடுக்கப்படாத; தடையற்ற; பொதியப்பெறாத; மேலீடற்ற; மூடாக்கற்ற; மேற்கவிவற்ற; மறைப்பற்ற; திரை நீக்கப்பட்ட; வெளிப்படையான; கள்ளங்கபடமற்ற; மூடிமறைக்காத; தப்பெண்ணமற்ற; முன்முடிபு அற்ற; ஒரு சாய்வு அற்ற; எதையும் எளிதில் ஏற்கும் பண்புடைய; வேற்றுமைகளை வரவேற்கிற; பொதுக்காட்சிக்குரிய; எல்லாரும் அணுகத்தக்க; எல்லாருக்கும் உரிய; தாராள வாய்ப்பளிக்கிற; இடமளிக்கிற; முழு வாய்ப்பின்மீது அமைந்த; பொதுமக்கட்குரிய; பொது உரிமையான; பொது விளம்பரமான; தடைபடாக் காட்சியுடைய; பரந்த, அகன்ற; அகல்விரிவான; இடுக்கமற்ற; குடல் வகையில் மலச்சிக்கலற்ற; தாராளமாகக் கொடுக்கிற; வரையறையற்ற; தனிக்கட்டுப்பாடற்ற; முடிவுகட்டாத; முடிவுறாத; (இசை.) சுரவகையில் தடைபடாக் குழலிசைப்புச் சார்ந்த; சுரவகையில் நரப்பிசைப்புச் சார்ந்த; இடைநிறுத்தமற்ற; தொடர்பான இசைப்புடைய; (இலக்.) அசைவகையில் உயிரெழுத்துடன் முடிகிற; (ஒலி.) உயிர் ஒலிவகையில் அங்காந்தொலிக்கிற; *v.* திற; திறந்துகொள்; திறந்துவிடு; திறந்திரு; வாயில் உடையதாயிரு; திசைநோக்கியமை; பூவகையில் மலர்வுறு; வாயில் உண்டுபண்ணு; துளை உண்டுபண்ணு; வழிசெய்; போக்குவழியுடையதாயமை; துளையுடையதாய் அமை; செல்வழியாயுதவு; தடைநீக்கு; தடை விலகப்பெறு; தொடங்கு; அலுவல் தொடங்கு; திறந்துவை; தொடங்கிவை, வழக்கில் தொடக்க நடவடிக்கை எடு; நடவடிக்கை மேற்கொள்; இயக்கிவை; நிறுவு; பேசத்தொடங்கு; வேட்டைநாய் வகையில் குரைக்கத்தொடங்கு; தோன்று; தோற்றத்தொடங்கு; புதுத் திருப்பக்காட்சிபெறு; முழுக்காட்சிகாண்; காட்சிக்குப் புலப்படுத்து; காட்சிக்குப் புலப்படு; வெளிப்படுத்து; வெளியிடு; அறியும்படி விளக்கு; (தொ.) force an open door, கரப்பிலாரிடங் கேள்; keep open doors, keep open house, வருபவர்களை எல்லாம் ஏற்று விருந்தளி; lay open, திறந்து வெளிக்காட்டு; தோல் உரித்துக் காட்டு, பிளந்துகாட்டு; open boat, தளமற்ற படகு; open bowels, குடல் இளக்குவி; open champion, கட்டுப்பாடற்ற போட்டிகளுக்குப் பிறகு வாகை சூடியவர்; open country, பரந்த காட்சியுடைய நிலப்பரப்பு; open face, கபடற்ற தோற்றம்; open fire, குண்டு வீசத் தொடங்கு; open ground, ஏர்கொண்டு நிலத்தை உழு; open harmony, நீள இடைவெளிகள் கொண்ட சுரத்தொகுதி ஒத்திசைவு; open hearth process, ஆழமற்ற மூட்டு அனல் உலையில் எஃகு செய்யும்முறை; open ice, கப்பல் போக்குவரத்துக்கு இடமளிக்கக்கூடிய பனிப்பரப்பு; open letter, திறந்த முடங்கல், வெளிப்படைக் கடிதம்; open one's designs, திட்டங்களை வெளியிட்டுத் தெரிவி; open one's eyes, வியப்புக் காட்டு; நல்லறிவுபுகட்டு; open order, (படை., கப்.) அகன்ற இடைவெளிகள் கொண்ட அணி; open out, பிரி; திற; விரிவடை; வளர்ச்சியடை; விரைவுபடுத்து; பேச்சில் விருப்பங்கொள்; open question, கருத்து வேற்றுமைகள் கொண்ட செய்தி; open scholarship, போட்டியடிப்படையில் அளிக்கப்பட்ட கல்வியுதவித்தொகை; open the case, வழக்கைப் பற்றிய தொடக்க அறிக்கை படி; open time, விலங்கு-மீன் வகையில் வேட்டையாடக்கூடிய காலம்; இனம் பெருக்கும் பருவங்கடந்த காலம்; open up, எளிதில் காணத்தக்க வாய்ப்பளி; கவனத்திற்குக் கொண்டுவா; வெளிப்படுத்து; open weather, open winter, மூடுபனியற்ற பருவம்; open work, உலோகவேலையில் அல்லது கசவு வேலையில் இடைவெளிகள் கொண்ட வேலைப்பாடு; receive with open arms, மனமார வரவேற்புக் கொடு, நிறைந்த உள்ளத்தோடு எதிரழை; the open door, அயல்நாடுகள் வந்து வாணிகம் செய்வதற்காக ஒரு நாடு அளிக்குங் காசில்லா நுழைவுச் சலுகை; with open eyes, மனமாரத் தெரிந்து; நல்ல நினைவுடனேயே; விருப்புடனே.

op'en-cast, *n.* முகட்டுத் திறப்புடைய சுரங்க அகழ்வுப் பகுதி.

op'en-hearted, *a.* கபடற்ற.

op'ening, *n.* பிளவு; இடைமுறிவு; இடையீடு; புழை; வாயில்; செல்வழி; இடைவெளி; தொடக்கம்; தொடக்கப் பகுதி; வழக்கில் தொடக்க அறிக்கை; சதுரங்க ஆட்ட வகையில் தொடங்குவதற்கான ஆட்டம்; நல்வாய்ப்பு, ஏற்ற சூழ்நிலை, தக்க தறுவாய்; *a.* முதலாவதான; தொடக்கத்திலுள்ள.

op'enly, *adv.* ஒளிவுமறைவின்றி; எல்லோருக்கும் தெரியும்படியாக, பொதுவாக, வெளிப்படையாக.

op'era, *n.* இசைநாடகம், இசையைச் சிறப்புக்கூறாகக் கொண்ட நாடகம்; இசைநாடகக்கலை; (தொ.) comic opera, உரையாடல் உள்ளிட்ட இசைநாடகம்; grand opera, உரையாடலில்லா இசைநாடகம்.

op'era-cloak, *n.* மாலை விருந்துகளுக்கோ இசைநாடகங்களுக்கோ செல்லும் மகளிர் அணியும் மேலாடை.

op'era-glass, op'era-glasses, *n.* இசைநாடகங்களில் அல்லது நாடகக்கொட்டகைகளில் பயன்படுத்துவதற்கான சிறு தொலைக்காட்சிக் கண்ணாடி.

op'era-hat, *n.* ஆடவரது நீண்ட மடக்குத் தொப்பிவகை.

op'era-hood, *n.* மாலை விருந்துகளுக்கோ இசை நாடகங்களுக்கோ செல்லும் மகளிர் அணியும் முகத்திரை.

op'era-house, *n.* இசைநாடகக் கொட்டகை.

op'erate, *v.* இயங்கு, நடைபெறு; செயற்படு; பணியாற்று; கையாளு; இயக்கு, நடைமுறைப்படுத்து; செய்துமுடி, நிறைவேற்று; செயல் விளைவு உண்டுபண்ணு; நடத்து, மேலாட்சி செய்; பயன் அளி; உணர்ச்சிகளைப் பாதி; (படை.) போர்த்துறை நடவடிக்கைகளெடு; வாங்குதல் விற்றல்வழி பங்கு விலைமதிப்பில் உயர்வுதாழ்வு உண்டுபண்ணு; (மரு.) அறுவை செய்.

operat'ic, *a.* இசைநாடகம் போன்ற; இசைநாடகத்துக்குரிய.

op'erating-room, *n.* அறுவை மருத்துவ அறை.

op'erating-table, *n.* அறுவை மருத்துவ மேசை.

op'erating-theatre, *n.* மருத்துவ மாணவர்கள் முன்னிலையில் அறுவை மருத்துவம் செய்துகாட்டுதற்கான இடம்.

opera'tion, *v.* நடவடிக்கை, செயற்பாடு; செயல்முறை; வேலைநடைமுறை, வேலைப்பாடு; செயல்வகை; இயக்கம்; இயங்குமுறை; சட்டச் செயலாட்சி; சட்டச் செயலாட்சி எல்லை; நடப்புநிலை, செல்லுபடியாயிருக்கும் தன்மை; படைகள்-கப்பற்படைகள் வகையில் போர்த்திற நடவடிக்கை; அறுவை மருத்துவ நிகழ்ச்சி; (கண.) எண்களின் செய்மானம்.

op'erative, *n.* கலைத்தொழிலாளர்; பொறி வேலையர்; பணியாள்; வேலையாள்; ஆலைத்தொழிலாளி; *a.* செயல்முறை சார்ந்த; செயல்விளைவுள்ள; நிறைவியலுடைய, விரும்பிய பயனை அளிக்கிற; கருத்துமுறையுடனமையாத, செயற்படுகிற; நடைமுறையான, நடப்பிலுள்ள; (மரு.) அறுவைசார்ந்த.

op'eratize, *v.* இசைநாடகமாக்கு, இசைநாடகவடிவங் கொடுத்தமை.

operc'ulum, *n.* மீன்களின் செவுள் உறை அல்லது மூடி; கிளிஞ்சில் துளை மூடி; தாவரங்களிலுள்ள துளை மூடி.

operett'a, *n.* ஓரங்க இசைநாடகம், சிற்றியல் இசைக்கூத்து.

op'erose, *a.* பெரும் உழைப்புத் தேவைப்படுகிற, கடினமாக உழைக்கிற.

oph'icleide, *n.* திருகாணிகளையுடைய பித்தளை இசைக்குழல் வகை.

ophid'ian, *n.* (வில.) பாம்பினஞ் சார்ந்த உயிர்; *a.* பாம்பினஞ் சார்ந்த.

ophiol'ater, *n.* பாம்பு வழிபாட்டினர்.

ophiol'atry, *n.* பாம்பு வழிபாடு.

oph'ite, *n.* பச்சைக்கல் வகை, பாம்புநிறச் சலவைக்கல்.

ophthal'mia, *n.* கண்ணழற்சி.

ophthal'mic, *n.* கண்ணோய் மருந்து; *a.* கண் சார்ந்த; கண்ணழற்சி கண்டுள்ள; கண்வகையில் வீக்கங்கண்டுள்ள; கண்ணோய் போக்கவல்ல.

ophthalmit'is, *n.* (மரு.) கண்ணழற்சி.

ophthalmol'ogist, *n.* (மரு.) கண் மருத்துவர்; கண்ண மைப்பு ஆய்வாளர்.

ophthalmol'ogy, *n.* கண் மருத்துவம்; கண்ணாய்வு நூல்; கண்ணமைப்பாய்வுநூல்.

op'iate, *n.* அபின் கலந்த தூக்கமருந்து; அபின் கலந்த நோவாற்று மருந்து; *a.* அபின் கலந்த; தூங்க வைக்கிற; மயக்கமூட்டுகிற; *v.* அபினுடன் கல.

opine', *v.* கருது, எண்ணங்கொள்; கருத்துத்தெரிவி.

opin'ion, *n.* கருத்துரை; எண்ணம்; மதிப்பீடு; நம்பிக்கை; நடைமுறைக் கொள்கை; கருத்து வேறுபாடு; பொதுக் கருத்து; தற்காலிகத் துணிவு; தனிப்பட்ட கருத்து; கொள்கை; கோட்பாடு; நிபுணரின் கருத்து அறிவிப்பு; தொழில்முறை ஆலோசனை; நன்மதிப்பு; (தொ.) a matter of opinion, வாதத்திற்குரிய செய்தி; public opinion, பொதுமக்கள் கருத்து; the courage of one's opinions, எண்ணங்களுக்கேற்பச் செயலாற்றுந் துணிவு.

opin'ionated, opin'ionative, *a.* கொள்கைப் பிடிவாத முடைய; முரட்டுப்பிடியான, தன்முனைப்புள்ள, ஆணவமிக்க.

opisom'eter, *n.* வணர்கோல், வளைகோடுகளை அளக்குங் கருவி.

opis'thograph, *n.* இருபுறமும் எழுதப்பெற்றுள்ள திண்ணிய தாள்; இருபக்கங்களிலும் எழுத்துச் செதுக்கப்பெற்றுள்ள கற்பாளம்.

op'ium, *n.* அபினி, கம்புகம்; *v.* அபினி மருந்திடு, அபினூட்டிப் பண்டுவஞ்செய்; (தொ.) opium den, அபினி குடிப்பவர்கள் பயிலுமிடம்.

opodel'doc, *n.* சவர்க்காரப் பூச்சுத் தைல வகை.

opop'anax, *n.* முற்கால மருத்துப் பிசின்வகை; நறுமணப் பிசின்வகை.

oposs'um, *n.* பைக்கீரி, மரம் அல்லது நீரில் வாழ்ந்து இரவில் நடமாடும் மதலைப்பையுடைய அமெரிக்க அல்லது ஆஸ்திரேலிய சிறு விலங்கு வகை.

opp'idan, *n.* நகரத்தினர், ஈட்டன் (Eton) கல்லூரி இல்லத்தில் தங்காது நகர உணவுவிடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்; *a.* நகரஞ் சார்ந்த.

opp'ilate, *v.* (மரு.) வழியடை, துளை தூர்த்துவிடு.

oppon'ent, *n.* எதிரி, பகை; *a.* எதிர்க்கிற, மாறான, முரண்பட்ட, பகையான.

opp'ortune, *a.* தறுவாய்க்கு ஏற்ற; வேளை வாய்ப்பான, தக்கவேளையில் வந்தமைந்த; பொருத்தமாக வந்துசேர்ந்த; ஆங்காலமான; காலத்திறுற் செய்த; செவ்வி வாய்த்த.

opportun'ism, *n.* வேளை வாய்ப்பு வாதம், காலத்துக்கேற்ற நடைமுறைக்கொள்கை; வாய்ப்பு வேட்டை, சந்தர்ப்பவாதம்; கொள்கைப்பேரம்; சமயசஞ்சீவித்தன்மை, வேளைக்கு ஒத்த ஒழுகலாறு.

opportun'ist, *n.* வாய்ப்பு வேட்டையாளர், சந்தர்ப்பவாதி; வேளைக்கூத்தர், சமயசஞ்சீவி; அரசியல் பச்சோந்தி; வேளைக்குத் தக்கவாறு கொள்கைகளை மாற்றிக்கொள்பவர்; நிலையான கொள்கையற்றவர்.

opportun'ity, *n.* செவ்வி, தறுவாய், தக்க சமயம்; வேளை வாய்ப்பு; வாய்ப்பு வேளை; நல்வாய்ப்பு, வாய்ப்பு வழி, வழி திறப்பு.

oppose', *v.* எதிர், எதிர்த்து நில்; மாறுயிரு; எதிரீடாக்கு, எதிராக வை; எதிர்த்துரை; தடு; தடை செய்; தடங்கல் கூறு; தடுத்துரை.

opposed', *a.* எதிரான, மாறான, முரண்பட்ட, பகையான.

oppose'less, *a.* (செய்.) தடுக்கமுடியாத; எதிர்த்து வெல்ல முடியாத.

opp'osite, *n.* மறுதலை, எதிர்மாறான பொருள்; முரண், எதிர்ப்பண்பு; எதிர்ச்சொல்; எதிரி; *a.* எதிரான, மறுதலைப் பண்பு வாய்ந்த; எதிர்மாறான; முற்றிலும் வேறுபட்ட; நேர் எதிரான; எதிரிணையான; நேருக்கு நேரான, எதிர் முகமான; எதிர்ப்பக்கத்திலுள்ள; எதிர்நிலையான; முற்றும் மாறான; *adv.* எதிரே, எதிர்ப்பக்கத்தில், எதிர்த்திசையில்; எதிரிணையாக; *prep.* எதிரில், எதிர்ப்பக்கத்தில்; (தொ.) opposite number, சரி இணை அலுவலர்; ஒன்றுக்குச் சரி நிகராக மற்றொரு தொகுதியிலுள்ள பொருள்; opposite prompter, நாடக மேடையில் நடிகருக்கு வலப்பக்கத்திலிருந்து நினைவுறுத்துபவர்; play opposite, நாடகம்-திரைப்படம் ஆகியவற்றில் முதன்மையான நடிகருடன் சோடியாக நடி; சோடியுடன் இணைவாக நடி.

oppositifol'ious, *a.* (தாவ.) இலைகளைத் தண்டின் எதிர்ப் புறங்களில் இரண்டிரண்டாக உடைய.

opposi'tion, *n.* எதிரீடு; முற்றும் எதிரான நிலை; வேறுபாடு; முரண், எதிர்முரண்; பகைமை, எதிர்ப்பு, பகைநிலை; எதிர்க்கட்சி; (அள.) மறிநிலைத் தொடர்பு; ஒரே எழுவாயும் பயனிலையும் உடைய இரண்டு கூற்றுகளிடையே அளவிலோ இயல்பிலோ இரண்டிலுமோ உள்ள வேறுபாடு; (தொ.) His Majesty's Opposition, the Opposition, மாமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு எதிரான முக்கிய கட்சி.

opposi'tionist, *n.* எதிர்க்கட்சி உறுப்பினர்; *a.* எதிர்ப்பாக வுள்ள.

oppositisep'alous, *a.* (தாவ.) புல்லிக்கு நேரெதிராக மலரிழையுடைய.

oppress', *v.* அழுத்து; அமுக்கு; நெருக்கு; ஒடுக்கு; அடர்; கொடுங்கோலாட்சி புரி, வலுக்கட்டாயமாக அடக்கிவை; கொடுமைப்படுத்து.

oppre'ssion, *n.* அநீதி, அட்டூழியம், கொடுமை; அடக்கு முறை; கொடுங்கோன்மை; பெருந்துயர உணர்ச்சி; தாங்கொணுத் துன்பநிலை; ஊக்க இழப்பு.

oppress'ive, *a.* கொடிய; பீடையான, ஒறுக்கும் பாங்குடைய; பெருஞ்சுமையாயுள்ள; கொடுங்கோன்மையான; அடக்கியாள்கிற.

oppress'or, *n.* கொடியோன்; கொடுங்கோலன்; பாதகன், கண்டகன்.

opprob'rious, *a.* இகழ்ச்சியான, வைதுரைக்கிற, அவதூறான; பண்பிழந்த.

opprob'rium, *n.* கெட்டபெயர்; வசை; பழி; இகழுரை, இழிவு.

oppugn', *v.* மறுத்துரை, எதிர்த்துக்கூறு; தடங்கல் உரை.

oppug'nant, *n.* எதிரி, மாற்றான்; *a.* எதிர்க்கிற, பகையான.

op'simath, *n.* முதுமையிற் கற்றுக்கொள்பவர்.

opsim'athy, *n.* முதுமையிற் கற்ற கல்வி.

opson'ic, *a.* நோய் நுண்மங்களை நிணநீரணுக்கள் எளிதில் உறிஞ்சிக்கொள்ளச்செய்யும் விளைவினை உண்டுபண்ணுகிற.

op'sonin, *n.* நோயாளி உடலில் அழிந்த நோய் நுண்மங்களைச் செலுத்துவதால் விளைவிக்கப்படும் பொருள்.

opt, *v.* விருப்பத்தைத் தெரிவி; தெரிந்தெடுத்துக்கொள்.

op'tative, *n.* (இலக்.) வியங்கோள்; *a.* விருப்பத்தை உணர்த்துகிற; (இலக்.) வியங்கோளான; (தொ.) optative mood, (இலக்.) வியங்கோள் வினைப்பாங்கு.

op'tic, *a.* (உள்.) கண் சார்ந்த, கட்புலனுக்குரிய; (தொ.) optic angle, காட்சி வரைக்கோணம், பொருளின் இருகோடிகளிலிருந்து புறப்பட்டுக் கண்ணின் மையத்தில்சேரும் வரைகளுக்கிடையிலுள்ள கோணம்; விழியிடைக்கோணம், இரண்டு கண்களிலிருந்து புறப்பட்டு ஒரு புள்ளியில் வந்து சேரும் வரைகளுக்கிடையிலுள்ள கோணம்.

op'tical, *a.* கண்ணுக்குரிய; பார்வைக்குரிய; கண்பார்வைக்கும் ஒளிக்கும் உரிய இடைத்தொடர்பு சார்ந்த; ஒளியியல் சார்ந்த; பார்வைக்குத் துணைசெய்யும் வகையில் அமைக்கப்பட்ட; ஒளிநூல் கோட்பாடுகளின்படி அமைக்கப்பட்ட; (தொ.) optical illusion, விழிக்காட்சி மயக்கம், பொய்த் தோற்றம்.

opti'cian, *n.* மூக்குக்கண்ணாடி செய்பவர்; மூக்குக்கண்ணாடி விற்பவர்.

op'tics, *n. pl.* கண்ணொளியியல், காட்சியொளிசார்ந்த ஆய்வு நூல்.

op'time, *n.* கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மரபில் கணக்கியலில் சிறப்புப் பட்டம் பெற்றவர்களுள் இரண்டாவது அல்லது மூன்றாவது வகுப்பில் தேர்ச்சிபெற்ற ஒருவர்.

op'timism, *n.* இனிமை நம்பிக்கை; இன்மகிழ் நலம், இன்பமே எதிலும் எதிர்பார்க்கும் மனநலன், நல்லார்வ நலம், எதிலும் நற்கூறே காணும் இனிய மனவளம்; இந்நிலவுலகமே வாழ்வதற்கு மிகச் சிறந்ததென்ற லேப்னிட்ஸ் (Leibnitz) என்ற மெய்விளக்க அறிவரின் கொள்கை; படைப்பு முழுமையிலும் முடிவாக நன்மையே வெல்லும் என்னும் கருத்து.

op'timist, *n.* இன்முகச்செவ்வியர், அனைத்திலும் நன்மையே காண்பவர்.

optimis'tic, *a.* இன்மகிழ் நலமார்ந்த, எதிலும் நலமே காண்கிற, தளரா நம்பிக்கையார்வம் கொண்டுள்ள.

op'timum, *n.* உயிர்வாழ்வு வளத்துக்குப் பெரிதும் உகந்த சூழ்நிலை; *a.* பெரிதும் உகந்த; மிகவும் விரும்பத்தக்க; வளர்ச்சி வளங்களுக்குப் பெரிதும் துணைநலமான.

op'tion, *n.* விருப்பம்; விருப்பத்தேர்வு; தெரிந்தெடுப்புரிமை; தெரிந்தெடுக்கப்பட்டது; தெரிந்தெடுக்கப் படக்கூடியது; விருப்பம் தெரிவிக்கும் உரிமை; பங்குமாற்று முதலியவற்றின் வகையில் வரையறுத்த காலத்துக்குள் விருப்பம்போல் குறிப்பிட்ட விலைக்கு வாங்குவதற்கான உரிமை; (தொ.) local option, ஒரு மாவட்டத்தில் சாராயம் விற்கப்படுவதை அங்குள்ளவர்கள் தடுத்துவிடக்கூடிய ஏற்பாடு.

op'tional, *a.* விருப்பப்படியான, கட்டாயமற்ற.

optom'eter, *n.* விழிக் காட்சியாற்றல் எல்லைத்தேர்வாய்வுக் கருவி.

optom'etrist, *n.* விழிப்பார்வைத் தேர்வாய்வாளர்.

op'tophone, *n.* குருடர்கள் எழுத்தினை வாசிக்கச்செய்யும் வகையில் ஒளியை ஒலியாக மாற்றுங் கருவி.

op'ulence, *n.* பொருள்வளம், செல்வநிறைவு; வளமை, செழுமை.

op'ulent, *a.* செல்வமிக்க, பொருள்வளமுடைய; செழுமையான, தாராளமான, சேமவளமுடைய.

op'us, (ல.) *n.* இசை-இலக்கிய எழுத்தாண்மைத் துறைகளில் கலை ஆக்கப்படைப்பு; (தொ.) *magnum opus, opus magnum*, தனிப்பெரு நூல்.

opus'cule, ***opus'culum***, (ல.) *n.* சிற்றிலக்கியப் படைப்பு; சில்லறை இசைப்பாடல்; *pl.* opus'cula.

or[1], *n.* (கட்.) மரபுவழிச் சின்னங்களிற் செதுக்கிய புள்ளிகளால் காட்டப்பெறும் மங்கலான பொன் அல்லது மஞ்சள் நிறம்.

or[2], *conj.* அல்லது, இரண்டில் ஏதோ ஒன்றாக, என்பவற்றுள் ஏதோ ஒன்றாக; அதாவது; அல்லாவிட்டால்.

o'rach, *n.* தோட்டக் காய்கறிச் செடிவகை.

o'racle, *n.* தெய்வ வாய்மொழித்தலம்; யூதர்கோயில் கருவறை; தெய்வ வாய்மொழியாளர்; வருங்குறியுரைப்போர்; முன்னறிவுடையோர், அறிவர்; உறுதுணையாளர், சான்றோர்; விரிச்சி, முன்னறிவுரை, இருபொருளுரை; தெய்வமொழி; இறைவாக்கு; பொய்யாமொழி; தோலா நல்லுரை; பொன்றுத்துணை; தெய்விக வழிகாட்டுச்சின்னம்; தவறுக்குறி; *v.* வாய்மொழித் தெய்வமாகக் கூறு, விரிச்சியுரை; (தொ.) work the oracle, கணியனைக் கையிற் போட்டுக்கொண்டு விரும்பிய பதிலைப் பெறு; சூழ்ச்சிசெய்து விரும்பிய விளைவைப் பெறு.

orac'ular, *a.* தெய்வமொழி சார்ந்த; விரிச்சியின் இயல்பு வாய்ந்த; குறி சொல்வது போன்ற; வருங்குறி சொல்லுகிற; தவறு வாய்மையுடைய; தெய்வத்தன்மை வாய்ந்த; இருபொருளுடைய, ஐயப்பாடான, புரியாத.

or'al, *n.* (பே-வ.) வாய்மொழித்தேர்வு; *a.* பேசப்படுகிற, வாய்மொழியான; (உள்.) வாய்சார்ந்த.

o'rally, *adv.* வாய்மொழியாக.

O'range[1], *n.* ரோன் (Rhone) ஆற்றின் கரையிலுள்ள நகரம்; *a.* "ஆரஞ்சு இளவரசர்கள்" குடும்பம் சார்ந்த; ஆலந்திலும் பிரிட்டனிலும் அயர்லாந்திலும் "ஆரஞ்சு இளவரசர்" கட்சியை ஆதரிக்கிற; ஆரஞ்சுக் கழகஞ் சார்ந்த; ஆரஞ்சுக் கழகத்தை ஆதரிக்கிற; அயர்லாந்தில் முனைத்த புரோடஸ்டண்டு ஆதிக்கக் கொள்கையுடைய.

o'range[2], *n.* கிச்சிலிப்பழம்; கிச்சிலிமரம்; செம்மஞ்சள் நிறம்; *a.* செம்மஞ்சள் நிறமான; (தொ.) mock orange, நெடிவீசும் வெண்மலர்க் கொத்துக்களையுடைய புதர்ச்செடிவகை; oranges and lemons, குழந்தைகள் விளையாட்டு வகை; 'ஆரஞ்சு' நிறப் புள்ளிகளுள்ள மஞ்சள் மலர்களையுடைய இலை யுதிராச் செடிவகை: squeezed orange, இனிப் பயன்படாப் பொருள்; squeeze the orange, நற்கூறுகளையெல்லாம் எடுத்துவிடு.

orangeade', *n.* கிச்சிலிப்பழச் சாற்றுப் பான வகை.

or'ange-blossom, *n.* மணமகள் அணிந்துகொள்ளும் கிச்சிலி மரத்தின் வெண்மலர்கள்.

or'ange-colour, *n.* செம்மஞ்சள் நிறம்.

or'ange-fin, *n.* வரால் மீன்வகை.

Or'angeman, *n.* முனைத்த புரோட்டஸ்டண்டு ஆதிக்கம் நிலைநாட்டுதற்காக 1795-இல் அயர்லாந்தில் அமைக்கப்பட்ட கழகத்தின் உறுப்பினர்.

o'range-tip, *n.* முன்சிறகின் முனையில் 'ஆரஞ்சு' நிறத் திட்டுடைய வண்ணத்துப்பூச்சி வகை.

orang'-outang', **or'ang-ut'an**, *n.* மனிதக் குரங்கு, வாலில்லாக் குரங்குவகை.

orate', *v.* சொற்பொழிவுசெய்; உரத்துப்பேசு.

ora'tion, *n.* சொற்பொழிவு, பேருரை, மேடைப்பேச்சு; (இலக்.) மொழி; பேசும்முறை; (தொ.) direct oration, தன்மைப்பேச்சு ஒப்பிப்பு; நேர்முகப்பேச்சு ஒப்பிப்பு; indirect oration, oblique oration, படர்க்கைப்பேச்சு ஒப்பிப்பு.

o'rator, *n.* நாவலர், மேடைப்பேச்சுத் திறமையுடையவர்; சொல்வன்மை வாய்ந்த பொதுப்பேச்சாளர், சொற்பொழிவாளர்; *fem.* o'ratress, o'ratrix; (தொ.) Public Orator, விழாக்களில் பல்கலைக்கழகத்தின் சார்பாகப் பேசும் ஆக்ஸ்போர்டு-கேம்பிரிட்ஜ் அலுவலர்.

orato'rical, *a.* நாவன்மை வாய்ந்த; செயற்கை அணி நயத்துடன் பேசுகிற; சொற்றிறம் வாய்ந்த; சொற்பொழிவு சார்ந்த, சொற்கோப்புக்கலை சார்ந்த.

orator'io, *n.* நாடக இசைப்பண்புடன் கலந்த சமயச்சார்பான புண்ணியக் கதைக்கச்சேரி; *pl.* orator'ios.

o'ratorize, *v.*=orate.

O'ratory[1], *n.* 1564-இல் ரோமாபுரியில் நிறுவப்பட்ட நோன்புகள் மேற்கொள்ளாத எளிய ரோமன் கத்தோலிக்க குருமார்கள் கழகம்; ரோமாபுரியில் நிறுவப்பட்ட நோன்புகள் மேற்கொள்ளாத எளிய ரோமன் கத்தோலிக்க குருமார்கள் கழகத்தின் பிறநாட்டுக் கிளை.

o'ratory[2], *n.* தனிப்பட்டவர் தொழுகையிடம், சிறு வழிபாட்டிடம், மனையகக் கோயில்.

o'ratory[3], *n.* பேச்சுத்திறன், சொற்கோப்புக்கலை; சொற்பொழிவு; அலங்காரப்பேச்சு; பகட்டாரவாரப்பேச்சு, பெரும்பேச்சு.

orb, *n.* வட்டம்; வட்டு, வட்டத்தட்டு, வட்டத்தகடு; வளையம்; உருண்டை, கோளம்; வான் ஒளிக்கோளம்; விண்மண்டலம்; விழிக்கோளம்; (செய்.) கண்; சிலுவை ஏந்திய கோளச் சின்னம்; முழுமொத்தம், திரளுரு; *v.* சூழ்; கோளமாகத் திரட்டு; கோளமாகத் திரள்.

orbic'ular, *a.* வட்டமான; வட்டத்தகட்டு வடிவான; மோதிர வடிவுடைய; கோளவடிவுள்ள, உருண்டையான; திரண்டுருண்ட; ஒரே முழுமொத்தமான; ஒழுங்குபட்ட முழுமையினையுடைய; (தொ.) orbicular muscle, துளை சுருக்குந் தசை.

orb'it, *n.* கட்குழி ; பறவையின் கண்சூழ் வரை ; பூச்சியின் கண் சூழ்ந்த வளையம் ; கோள்வீதி ; கோளப்பாதை ; வால் வெள்ளியின் நெறி ; வரம்பு ; செயல் எல்லை.

orc, orc'a, *n.* திமிங்கில வகை ; கடல்வாழ் பெருவிலங்கு.

Orcad'ian, *n.* ஆர்க்னி (Orkney) தீவுகளில் வாழ்பவர் ; ஆர்க்னி தீவுகளைச் சேர்ந்தவர் ; *a.* ஆர்க்னி தீவுகள் சார்ந்த.

orch'ard, *n.* பழத்தோட்டம்.

orch'ardist, orch'ardman, *n.* பழத் தோட்டக்காரர்.

orches'tic, *a.* ஆடல் சார்ந்த.

orches'tics, *n.* ஆடற் கலை.

or'chestra, *n.* பண்டைய கிரேக்க நாடக அரங்கின் முகப்பில் இசைக் கருவியாளர் இருந்து வாசிப்பதற்குரிய அரைவட்டப் பகுதி ; நாடக-நடன அரங்குகளில் இசைக்கருவி இயக்குநர் மேடை ; இசைக்கருவியாளர்கள் குழு ; கூடுகொள் இன்னியம், பல்லியம்.

orches'tral, *a.* கூடுகொள் இன்னியஞ் சார்ந்த, பல்லியத்துக் குரிய.

or'chestrate, *v.* கூடுகொள் இன்னிய வாசிப்பிற்காகப் பாடல் இயற்று ; கூடுகொள் இன்னிய வாசிப்பிற்காக ஏற் பாடுசெய்.

orchestri'na, orches'trion, *n.* பல்லியம் போன்ற இசை யொலி எழுப்புதற்கென வகுக்கப்பட்ட பெருங்குழல் இசைக் கருவி.

or'chid, *n.* (தாவ.) பகட்டு வண்ணமலர்ச் செடிவகை, ஒக்கிட்டு.

or'chidist, *n.* பகட்டு வண்ண மலர்ச்செடி ஆர்வலர்.

or'chidology, *n.* பகட்டுவண்ண மலர்ச்செடி ஆய்வுநூல்.

orchidoman'ia, *n.* பகட்டு மலர்ச்செடிப் பித்து.

or'chil, *n.* பாசி வகையிலிருந்து கிடைக்குஞ் சிவப்பு அல்லது ஊதா நிறச் சாயப்பொருள்.

or'chis, *n.* இங்கிலாந்து நாட்டில் பகட்டான பல்வண்ண மலர்களையும் மெல்லிய நிமிர்ந்த தண்டுகளையுமுடைய ஒற்றை விதைச் செடியினக் குழுவின் வகை.

orchit'is, *n.* அண்டவாதம், விரைவீக்கம்.

or'cin, *n.* (வேதி.) பாசி வகையிலிருந்து எடுக்கப்பட்டுப் பல் வேறு சாயங்களைத் தரும் நிறமற்ற பளிங்கனைய பொருள்.

ordain', *v.* விதித்தமை; ஊழமைவாக்கு; ஆணையிட்டமர்த்து; சமயப்பணியில் அமர்த்து ; அமர்வு வினையாற்று ; புனிதப் பதவிப்படி சார்த்தியருள்; பணியுரிமையளி; வகுத்தொழுங்கு படுத்து ; ஒதுக்கிவை ; நிறுவு ; நிலைப்படுத்து.

ordain'ment, *n.* விதித்தல் ; கட்டளை.

ordeal', ord'eal, *n.* சோதனைமுறை, எண்ணெய்க் கொப் பரை முதலிய கடுந்தேர்வு.

ord'er, *n.* உத்தரவு ; விதிமுறை ; கட்டளைமுறை ; பணித் தீர்ப்புச் செயற்கட்டளை ; பண வகையில் அளிப்பாணை ; சரக்கு வகையில் அனுப்பாணை ; உத்தரவுச் சீட்டு ; ஒழுங்கு; வரிசைமுறை ; படையணி ; அமைதி ; நேர்மை ; தகவு ; செப்பம், துப்புரவு ; மரபொழுங்கு ; முறைமை, வகைமுறை; வகை, மாதிரி ; படி ; தரம் ; படிநிலை வகுப்பு ; அமைப்பு, நிறுவனம் ; அமைப்புக்குழு ; நன்மதிப்புக்குழு ; வீரத்திருத் தகைத் தொகுதி; அமைப்புச் சின்னம்; நன்மதிப்புச் சின்னம்; வீரத் திருத்தகைத் தொகுதிச் சின்னம் ; சமயப் பணித் துறை அமைப்பு ; பூர்வாங்கச் செயல்முறை ; துப்பாக்கியின் மொட்டைப்பக்கம் நிலத்தூன்றி நிமிர்ந்து நிற்கும்நிலை; (தாவ.) இனக்குழுமம் ; (கண.) அடுக்குத் தொடரின் படி முறை; எண்ணின் மதிப்பளவு; சேர்மங்களின் இணைவுப்படி; *v.* ஒழுங்குபடுத்து; முறைப்படுத்து; அமைவி; ஊழ்வகையில் வகுத்தமை; உத்தரவிடு; வகுத்தளி; போகும்படி கட்டளைப் படுத்து ; கொண்டு வரும்படி ஏவு ; வரவழை ; துப்பாக்கி யின் அடிப்புறம் நிலத்தூன்றி நிமிர்ந்து நிற்கும்படி ஏவு ; ஏவி நடத்து ; செயலாணை செய் ; (தொ.) by order, உரிய உத்தரவு பெற்று ; முறைப்படி ; close order, படைத்துறை யில் செறிவான அணி; in order, in good order, ஒழுங்குடன், நன்னிலையில் ; பயன்படுத்தத்தக்க நிலையில் ; in order, வரிசைப்படி ; in order that, என்ற நோக்கத்துடன் ; in order to, ஆக, வேண்டி, என்பதற்காக ; keep order, ஒழுங்கு பேணு, அமைதி குலையாமல் காத்தமை ; law and order, சட்ட ஒழுங்கமைதி ; money order, அஞ்சல் பண விடை ; new order, புது மரபு, புது நடைமுறை ; old order, பழைய பாணி, பழைய மரபு ; on order, உத்தரவிடப்பட்ட நிலையில் ; கோரப்பட்டுள்ள நிலையில் ; open order, படைத் துறையில் தளர் வரிசை அணி ; கப்பற்படை அகல் அணி வரிசை; order arms, துப்பாக்கி அடியை நிலத்தில் வலப்புறம் ஊன்றி நிமிர்ந்துநில் ; order of the day, நாள் நிகழ்ச்சி நிரல், நாண்முறை ஆணைத் திட்டம் ; அதிகாரி பிரகடனம் ; out of order, in bad order, ஒழுங்கின்றி; சீர்குலைவாக ; முறையற்ற தாய் ; point of order, விதிமுறைக்கடா ; rise to order, rise to a point of order, வாதத்தில் தலையிட்டு ஒழுங்குமுறை வினு எழுப்பு ; to order, கட்டளையின்படி ; வேண்டுதற் கோரிக்கையின்படி.

ord'erly, *n.* பணிமுறைத் துணைவர்; படைத்துறை மருந்தகத் துணை ஏவலர் ; *a.* ஒழுங்கு முறைப்பட்ட, கட்டுப்பாடுகளை மதித்து நடக்கிற, ஒழுங்கமைதியுடைய, நடையமைதி வாய்ந்த ; படைத்துறையில் ஆணை நிறைவேற்றும் பொறுப் புடைய ; (தொ.) orderly bin, தெருக்குப்பை ஒதுக்கல் தொட்டி ; orderly officer, நாள்முறை ஆணைப் பணியாளர்.

ord'erly-room, *n.* படைவீட்டில் படைப்பிரிவின் அலுவலக அறை.

ord'ers, *n. pl.* சமயப்பணித் தரங்கள், துறவுப் பணிநிலைகள்; மேலிட உத்தரவுகள் ; (தொ.) holy orders, சமயத்துறவுப் பணித்துறை ; in orders, சமயப் பணித்துறையிலீடுபட்டு ; சமயப் பணித்துறையில் அமர்வு பெற்று ; take orders, சமயப் பணித்துறை அமர்வு பெறு, சமயப்பணி ஏற்றமை.

ord'inal, *n.* எண் வரிசைமுறைப் பெயர் ; சமயத்துறைப் பணியேடு ; சமயப்பணி நேர்வமர்வுப் பதிவேடு ; *a.* எண் வகையில் வரிசைமுறை சுட்டுகிற ; படிமுறை குறித்த.

ord'inance, *n.* உரிமைக்கட்டளை, மேலாணை ; சமயவினை.

ord'inand, *n.* திருநேர்வாளர், சமயப்பணியமர்விற்கு உரி யவர்.

ord'inary, *n.* சமயத்துறை இயலுரிமை வழக்கு நடுவர், பொதுமுறை நீதிபதி ; *a.* பொதுமுறையான, சாதாரண மான ; வழக்கமான, வாடிக்கையான ; சிறப்பற்ற, பொது நிலையான ; பணிச் சார்புக்குரிய, பொதுமுறை உரிமை வாய்ந்த, ஆணைச்சார்பற்ற ; அழகு மூனைப்பற்ற ; நடுத்தர மான; (தொ.) in ordinary, மருத்துவர் வகையில் நிலையான, வாடிக்கையாகப் பார்க்கிற ; கப்பல் வகையில் ஆணைபெறாத; Lord Ordinary, அமர்நீதி மன்றத்தின் புறவிருக்கை சார்ந்த பொதுமுறை நீதிபதி.

ord'inate, *n.* (வடி.) குவிகை நடுவிட்டத்துக்கு இணையான நாண்வரை ; (கண.) வரைவிளக்கப் படத்தில் நடுச்சுட்டு வரையிலிருந்து மற்ற நடுச்சுட்டுக்கு இணையான வரை.

ordina'tion, *n.* பதவியளிப்பு, ஆச்சாரிய அபிடேகம்; வகைப் படுத்துதல் ; வரிசைப்படுத்துதல் ; ஆணையிடல்.

ordinee', *n.* புதிதாக நியமிக்கப்பட்ட சமயவட்டத் துணைவர்.

ord'nance, *n.* பீரங்கி, சகடத்தின்மேல் ஏற்றப்படும் பெரிய இயந்திரத் துப்பாக்கி ; படைக்கலச் சாலையரங்கம் ; (தொ.) Ordnance datum, நிகரக் கடற்பரப்பு மட்ட அளவு ; Ordnance survey, பிரிட்டன்-வட அயர்லாந்துப் பரப்புக் களின் நில ஆய்வளவை.

ord'ure, *n.* பிழுக்கை, எச்சம் ; கொச்சைப் பேச்சு.

ore, *n.* உலோகக்கரு, கனியிலிருந்து எடுக்கப்படும் இயற்கை உலோகக் கலவை ; (செய்.) உலோகம் ; தங்கம்.

or'ead, *n.* மலையணங்கு.

orec'tic, *a.* (மரு., மெய்.) வேட்கைக்குரிய, அவாவுணர்வுக் குரிய ; பசியுணர்வு தூண்டுகிற.

or'eide, *n.* போலித்தங்கம்.

orfe, *n.* பொன்னிற மீன்வகை.

org'an, *n.* உறுப்பு, அங்கம்; உள்ளுறுப்பு, கருவி, சாதனம்; கருத்துப்பரப்பும் வாயில், கொள்கை பரப்புக்கருவி; குரலமைவு, சாரீரம்; இசைக்கருவி; இசைப்பேழை, சுரமண்டலம்; இசைப்பேழையுறுப்பு; இசைப்பெட்டி; (தொ.) mouth organ, விளையாட்டு ஊதுகருவி.

org'an-blower, *n.* ஒத்தூதுபவர்; இசைத்துருத்தி இயக்குங் கருவி.

org'an-builder, *n.* இசைப்பேழை யாத்தமைப்பவர்.

org'andie, *n.* பாலாவித் துணி, மென்றுணி வகை.

org'an-grinder, *n.* கையால் சிறிய இசைப்பேழை இயக்குபவர்.

organ'ic, *a.* உறுப்புக்குரிய; உறுப்புப் போன்ற; உறுப்பு விளைவான; உறுப்புக்களாலமைந்த, உறுப்பாக்கமுடைய, உறுப்பமைதி வாய்ந்த; உடலமைப்புக்குரிய; உடற் கூற்றியலான; உடலுக்கு இயல்பான; அடிப்படையான, உள்ளார்ந்த; அமைப்பியல் சார்ந்த; கூட்டிணைப்பியல் சார்ந்த; உயிரியக்கவியலான; உயிர்ப்பொருட் கூருன; (மரு.) உறுப்பாக்கம் குலைக்கிற; (வேதி.) உயிர்ப்பொருட் கூருன; உயிராக்க விளைவான; கரியச் சேர்க்கைப் பொருள்களாலான, கரியச் சேர்மானமுடைய.

org'anism, *n.* உறுப்பாண்மை, உறுப்பமைதி; உறுப்பமைதியுடைய உயிர், விலங்கு-தாவர இன உயிர்களில் ஒன்று; உயிர்ப்பொருள்; கூட்டிணைவமைப்பு, முழுமொத்த உரு, ஒருயிர்போல் இயங்கும் அமைப்பு.

org'anist, *n.* இசைப்பேழை இயக்குநர்.

organiza'tion, *n.* அமைப்பாண்மை; இணைப்பாட்சி; அமைப்புமுறை; அமைப்பு; சங்கம், நிறுவனம்.

org'anize, *v.* உறுப்பிணை; உறுப்பமைதி உண்டுபண்ணு; உயிர்ப்பூட்டு; உயிர்ப்பொருளாக்கு; உயிர்ப் பொருளாகு; சேர்த்து ஒன்றுபடுத்து; இணைத்துருவாக்கு; ஒழுங்கமை; செயல் திறமூட்டு; திட்ட ஆக்கஞ் செய்; ஏற்பாடு செய்.

org'anized, *a.* உறுப்புக்களின் கூட்டு ஒத்துழைப்பினையுடைய, கூட்டிணைவான; ஒருமுகப்படுத்தப்பெற்ற; ஒழுங்கமைதியுடைய.

org'anizer, *n.* அமைப்பாளர்; கூட்டிணைப்பவர்; கருமுளையில் பிற பகுதிகளின் வளர்ச்சியைத் தூண்டியியக்கும் கருவுயிர்க்கூறு.

org'an-loft, *n.* திருக்கோயிலில் இசைப்பேழை வைத்திருக்கும் மேடை.

org'anon, *n.* சிந்தனைமுறைத் தத்துவ ஆய்வேடு; ஆராய்ச்சி முறைத் தத்துவம்; ஆராய்ச்சிக்குரிய கருவிமுறை.

org'an-screen, *n.* இசைப்பேழை மேடைக்கும் பாடற்குழுவிற்கும் இடையில் அமைந்துள்ள வண்ண ஓவியத்தட்டி.

org'an-stop, *n.* இசைப்பேழையில் இசைக்குழாய்த் தொகுதி; இசைக்குழாய்த் தொகுதியை இயக்கும் குமிழ்ப்பிடி.

org'anum, *n.* = organon.

org'anzine, *n.* நடு இழை மற்ற இழைகளுக்கு எதிராகத் திரிக்கப்பட்ட பட்டுமுறுக்கிழைக் கயிறு.

org'asm, *n.* உணர்ச்சித் துடிதுடிப்பு; புணர்ச்சியிடைத் துடிப்பு, புணர்ச்சிப் பரவசநிலை.

or'geat, *n.* தீஞ்சாறு வகை.

orgias'tic, *a.* தெய்விகக் களியாட்ட விழாவின் மறைவினைக்கு உரிய; சிற்றின்ப ஆடல் பாடற் களியாட்டஞ் சார்ந்த.

or'gies, *n. pl.* காமன் பண்டிகை போன்ற பண்டைக் கிரேக்க ரோமர் ஆடல் பாடல் களியாட்டவிழாவின் மறைவினைமுறைகள்; ஆடல் பாடல் கூத்துக் களியாட்டம்; சிற்றின்பக் கேளிக்கைக் கூத்தாட்டம்.

or'gy, *n.* orgies என்பதன் ஒருமை.

or'iel, *n.* மாடிக் கிளிக்கூண்டுப் பலகணி, சுவராதாரத் தண்டயக் கைகள் மீதமைந்த பல்கோணத் தொங்கற் பலகணி.

Or'ient[1], *n.* கீழ்த்திசை; கீழ்த்திசையுலகு; கீழை நாடுகள்.

or'ient[2], *n.* (செய்.) எழுஞாயிற்றுத் திசை; குண திசைவான்; கீழையுலகின் முத்து; தூய ஒளி வண்ணம்; முத்தின் தூய ஒளிவண்ணக்கூறு; *a.* (செய்.) கீழ்த் திசைக்குரிய; கதிரவன் வகையில் எழுகின்ற நிலையிலுள்ள; ஒளி வகையில் இளநலம் திகழ்கிற; சுடரிடுகின்ற, முத்து முதலிய அரும்பொருள் வகையில் ஒளி பிறங்குகின்ற, தூய ஒளி வண்ணக்கூறு வாய்ந்த; விலை மதித்தற்கரிய.

orient'[3], *v.* = orientate.

Orien'tal, orien'tal, *n.* கீழ்த்திசைவாணர், கீழை நாடுகளுக்குரியவர்; ஆசியாக் கண்டத்தவர்; *a.* கீழ்த்திசைக்குரிய; கிழக்கிலிருந்து வருகிற; கீழ்நாடுகளுக்குரிய; கீழையுலகில் காணப்படுகிற; குணதிசை நாகரிகஞ் சார்ந்த; கீழை நாகரிகத் தொடர்புடைய.

Orien'talism, *n.* கீழையுலக மரபு; கீழையுலக மரபுத் தொடர், கீழையுலக வழக்காறு; கீழ்த்திசை மொழிப்புலமை.

Orien'talist, *n.* கீழ்த்திசை மொழிப்புலமையாளர்; கீழ்த் திசைவாணர்.

o'rientate, *v.* கிழக்குமுகமாக அமைவி; திருக்கோயில் பாடகர் குழுவிடம் கீழ்த்திசையாக அமையும்படி செய்; காலடி கிழக்கு நோக்கியிருக்கும்படி புதைவடக்கஞ் செய்; திசைமுகப்படுத்து; சரியான திசைத் தொடர்பமைவி; சரியாக இணைத்துத் தொடர்புபடுத்து; சரியான தொடர்பு கொள்ளுவி; கிழக்குமுகமாகத் திரும்பு; குறிப்பிட்ட திசை முகமாகு.

orienta'tion, *n.* கிழக்கு நோக்கிய அமைப்பு; திசையமைவு; திசையமைப்பு; திசைமுகப்புநிலை; திசைத் தொடர்புணர்வு; திசைத் தொடர்பமைவு; தொடர்பிணைவு; ஊறுணர்வின் இட இயல்பு அறியுந் திறம்; ஆற்றுப்படுத்தும் பயிற்சி.

o'rifice, *n.* துளை, துவாரம்; புழைவாய்.

o'riflamme, *n.* முற்கால பிரான்சில் ஈட்டியில் இணைக்கப்பட்ட பன்முனைச் செம்பட்டுக்கொடி; போர் எழுச்சிக்கொடி; போராட்ட எழுச்சித் தூண்டுதல்; எழுச்சி தூண்டும் குறிக்கோள்; வண்ணப் பகட்டு; பகட்டு வண்ணப்பொருள்.

o'rigan, orig'anum, *n.* மருவகம், சமையலுக்குதவும் மணப்பூண்டு வகை.

o'rigin, *n.* முதல்நிலை, தோற்றம், பிறப்பு; தோற்றுவாய், தொடக்கம்; மரபுமூலம், மூலமுதல்; மூல முதலிடம், பிறப்பிடம்; ஆற்றின் தலைமுதல்; சொல்மூலம்; (கண.) அளவின் தொடக்க முதல்.

ori'ginal, *n.* மூலப்படிவம், பார்த்துப் படியெடுக்க உதவிய மூலம்; மெய்ம் மூல ஓவிய மாதிரி; முதனூல்; மூலநூல், மொழி பெயர்ப்பின் மூலம்; தனிமாதிரிப் பேர்வழி, தனிச் சிறப்புப் பண்புடையவர்; *a.* தொடக்க முதலேயுள்ள; தொடக்க நிலைப்பட்ட; முதலாவதான; மூல முதலான; படி மூலமான; மெய்ம் மூலமான; தனி முதலான, பிறிதொன்றை மூலமாகக் கொள்ளாத; தன்முதலான, பிறிதொன்றைப் பார்த்துப் பின்பற்றாத; தற்பண்பு வாய்ந்த; தனிப்புதுமையுடைய; தற்சார்புடைய; தற்சிந்தனை வாய்ந்த; தற்படைப்பான.

original'ity, *n.* தன்முதன்மை; தற்பண்பு; தற்படைப்புத் திறம்; தற்கற்பனை ஆற்றல்; தற்படைப்பாற்றல்.

ori'ginate, *v.* பிறப்பி, தொடங்கிவை; படைத்துருவாக்கு, உண்டுபண்ணு; முதன்முதலாகச் செய், முதன்முதலாக நடைமுறைக்குக் கொண்டுவா; மூலமாகக் கொள்; மூலமாகக் கொள்; பிறப்புறு, எழு, தோன்று; தொடங்கு.

ori'ginative, *a.* உண்டுபண்ணும் ஆற்றலுடைய, படைக்குந் திறம் வாய்ந்த

orinas'al, *n.* வாய் மூக்கு ஒலி; *a.* வாய் மூக்கொலி சார்ந்த.

or'iole, *n.* காஞ்சனப்புள், கருமை பொன்மைநிற இறக்கைகளையுடைய மண்டலப்பறவை வகை.

Ori'on, *n.* மான்தலை விண்மீன்குழு, மிருகசீரிடம்; (தொ.) Orion's belt, மான்தலை விண்மீன் குழுவின் நடு மூன்று உடுக்கள்; Orion's hound, அழல்மீன், அக்கினி நட்சத்திரம்.

o'risons, *n. pl.* வழிபாட்டுரை.

Orl'eans, *n.* பழவகை; பருத்தி கம்பளி கலந்து நெய்த ஆடைவகை.

orl'op, *n.* கப்பல் அடி அகட்டுத்தளம்.

orm'er, *n.* உணவுக்குரிய ஒற்றைத் தடுக்கிதழ் அமைப்புடைய நத்தை இனம்.

orm'olu, *n.* தட்டுமுட்டுச்சாமான்களை அணி செய்யப் பயன்படும் பளபளப்பான வெண்கலம்; செம்பும் துத்தநாகமும் வெள்ளீயமும் கலந்த பொன்வண்ண உலோகக்கலவை; பொன்வண்ண உலோகக் கலவையால் செய்யப்பட்ட அல்லது அணிசெய்யப்பட்ட பொருள்கள்.

orn'ament, *n.* அணிமணி, பூண், நகை; அழகுப்பொருள், அணிசெய்யப் பயன்படுவது, அழகினைத் தருவது; அணி வேலைப்பாடு; சிறப்பு அளிப்பவர்; அணிசெய்யப்பட்டநிலை; அணிஒப்பனைக் கூறுகள்; *v.* ஒப்பனை செய், அணிசெய்; சிறப்பி; அழகுபடுத்து.

orn'aments, *n. pl.* வழிபாட்டிற்குத் தேவையான பொருள்கள், பலிமேடை-திருக்கலங்கள்-தேறல்புட்டி-வழிபாட்டு ஏடு முதலியவற்றின் தொகுதி; (இசை.) அழகிசைப்பண்கள்.

ornate', *a.* அணிநலம் வாய்ந்த.

ornithol'ogy, *n.* பறவையியல் நூல்.

ornith'omancy, *n.* பறவைக் குறி முறை.

ornithorhync'us, *n.* முட்டையிட்டுப் பால்கொடுக்கும் வாத்தின நீர்வாழ் பறவை வகை.

ornithos'copy, *n.* புள்நிமித்தம்.

orog'raphy, *n.* மலையமைப்புச்சார்ந்த நிலவியல், மலைகளைப் பற்றி ஆயும் நிலவியற் பிரிவு.

orohipp'us, *n.* குதிரையின் முன்மரபெனக் கருதப்படும் மரபறுப்போன புதைபடிவ நாற்கால் விலங்குவகை.

or'oide, *n.* செம்பும் துத்தநாகமும் கலந்த பொன்வண்ண உலோகக்கலவை.

or'otund, *a.* உச்சரிப்பு வகையில் வாய்நிறைந்துள்ள; சொற்றொடர் வகையில் வாய்நிறைவான; நிறை ஆரவாரமான; பகட்டாரவாரமான, போலி ஆடம்பரமான.

orph'an, *n.* ஏதுமிலி, அநாதை; *v.* பெற்றோரிழ.

orph'anage, *n.* பெற்றோரற்ற பிள்ளைநிலை, தந்தை தாயின்மை; துணையிலாக் குழந்தைகள் நிலயம்; பெற்றோரற்ற பிள்ளைகளின் வளர்ப்பு நிறுவனம்.

Orphe'an, *a.* கிரேக்கரிடையே டயோனிசஸ் என்ற தெய்வத்தின் வழிபாட்டினிடையே ஆர்பியஸ் (Orpheus) என்பாரின் மறைக்கோட்பாட்டுக்குரிய; மறைபுதைவான, தெய்வத் தன்மையுடைய.

Orph'ic, *a.* கிரேக்கரிடையே டயோனிசஸ் என்ற தெய்வத்தின் வழிபாட்டினிடையே ஆர்பியஸ் என்பவரின் மறைக் கோட்பாட்டுக்குரிய; மறைபுதைவான; தெய்வத் தன்மையுடைய; ஆர்பியஸ் என்ற தெய்விக ஆற்றலுடைய இசைக் கவிஞனுக்குரிய; தெய்விக இசையாற்றலுடைய.

orph'rey, *n.* சமயச்சடங்கு ஆடைகளின் சரிகைச் சித்திர வேலைப்பாடுடைய ஓரப்பகுதி.

orp'iment, *n.* மஞ்சள்வண்ணப் பொருளாகப் பயன்படும் கனிபொருள், உள்ளிய முக்கந்தகை, அரிதாரம், தாளகம்.

orp'in, orp'ine, *n.* ஊதா நிறமலர்களையுடைய சதைப்பற்றுள்ள மூலிகை வகை.

Orp'ington, *n.* பண்ணைப் பறவை இனம்.

o'rrery, *n.* மணிப்பொறி போன்றியங்கும் கோள்மண்டல அமைப்புக் கருவி.

o'rris[1], *n.* பகட்டான மலர்களையும் கத்தி போன்ற இலைகளையுமுடைய தண்டங்கிழங்குச் செடிவகை.

o'rris[2], *n.* பொன் வெள்ளிச் சரிகை வேலை.

o'rris-powder, *n.* நறுமணப் பொருளாகவும் மருந்தாகவும் பயன்படும் பொடி.

o'rris-root, *n.* மணமூட்டும் பொருளாகவும் மருந்தாகவும் பயன்படும் வேர் வகை.

Ors'on, *n.* அஞ்சாத முரடன்.

orthocephal'ic, *a.* நீளத்தில் முக்காலுக்கும் ஐந்தில் நாலுக்கும் இடைப்பட்ட அகலமுடைய மண்டையோடு வாய்ந்த.

orthochromat'ic, *a.* நிழற்படத்தில் வண்ணங்களுக்கு சரியான செறிவுகொடுக்கிற.

orth'oclase, *n.* படிகங்களில் செங்கோணங்களில் இரட்டைப் பிளவுகளுடைய களிக்கற் கூறு.

orth'odox, *a.* ஏற்புடைச்சமயம் சார்ந்த, சமயமாறுபாடற்ற; சமயத் தனிநிலையுற்ற, புறச்சமயம் சாராத; ஏற்றுக்கொள்ளப்பட்ட; மரபு வழாத; நடப்பாட்சிக் கோட்பாட்டில் உறுதியான.

orth'odoxy, *n.* ஏற்புடைச் சமய உறுதி; மரபுக்கோட்பாடு; நடப்பாட்சி மரபு.

ortho'epy, *n.* சரியான உச்சரிப்பு இயல்.

orthogen'esis, *n.* வேறுபாடுகள் பெரிதும் திட்ட ஒழுங்கமைப்புடையவை என்று கருதும் படிவமுறை வளர்ச்சி வாதம்.

orthog'nathous, *a.* செங்குத்தான தாடைகளையுடைய.

orthog'onal, *a.* செங்கோணங்களாலான, செங்கோணங்கள் கொண்ட.

orthograph'ic, orthograph'ical, *a.* எழுத்துக்கூட்டு முறைசார்ந்த.

orthog'raphy, *n.* எழுத்திலக்கணம்; எழுத்துக்கூட்டுமுறை; நிலப்படங்களில் உயர்ச்சியூட்டும் தொலைத்தோற்ற முறை.

orth'opaedy, *n.* அங்கக்கோணல் சார்ந்த அறுவை மருத்துவம்.

orthop'terous, *a.* நேரான குறுகிய முன் சிறகுகள் கொண்ட வண்டுவகை சார்ந்த.

orthop'tic, *n.* சரியாக இலக்குநோக்க உதவும் ஒளியூடுருவாத துளையிட்ட மூக்குக்கண்ணாடி; *a.* துப்பாக்கி சுடுவதில் நேரான நோக்குடைய, சரியான பார்வை சார்ந்த.

orth'otone, *a.* சொல் வகையில் தனக்கெனத் தனிப்பட்ட ஒலி அழுத்தமுடைய.

ort'olan, *n.* நறுஞ்சுவை உணவுக்குரிய தோட்டப்பறவை வகை.

orts, *n. pl.* (பே-வ.) மிச்சில், உண்ட எச்சமிச்சங்கள்.

o'ryx, *n.* பெரிய நேரான கொம்புகளுடைய ஆப்பிரிக்க மான் வகை.

os'can, *n.* தென் இத்தாலியிலுள்ள பண்டைய இத்தாலியப் பழங்குடி மக்களுள் ஒருவர்; தென் இத்தாலியிலுள்ள பண்டைப் பழங்குடியினத்தவருக்குரிய இலத்தீன் மொழியின் வகையைச் சார்ந்த மொழி; *a.* தென் இத்தாலியிலுள்ள பண்டைய இத்தாலியப் பழங்குடி மக்களின் இலத்தீன் மொழி வகையைச் சார்ந்த.

os'cillate, *v.* ஊசலாடு; இருமுனைகளுக்கிடையே இங்குமங்கும் அசைவுறு; முன்னும் பின்னுமாக ஆடு; கருத்து செயல்நிலை முதலியவற்றுள் இருதிறக் கோடிகளுக்கிடையே தயங்கி ஊசலாடு; (மின்.) மின் அலைகள் வகையில் மாறி மாறிப் பாய்; கம்பியில்லாத் தந்தியின் அலைவாங்கி வகையில் தவறான கையாளுதலினால் மின்காந்த அலைகளை வெளிவிடு.

oscita'tion, *n.* கொட்டாவி விடுதல்; கவனமின்மை; புறக்கணிப்பு.

os'cular, *a.* வாய்க்குரிய; முத்தத்துக்குரிய; (கண.) பரப்பு அல்லது வளைவு வகையில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளில் பொருந்துகிற.

os'culate, *v.* முத்தமிடு; (தாவ., வில.) இடைப்பட்ட இனங்களின் வழியால் தொடர்புகொள்; மற்றவற்றோடு அல்லது மற்றொன்றோடு பொதுப் பண்புகள் அல்லது தன்மைகள் கொண்டிரு; (கண.) வளைவு அல்லது பரப்பு வகையில் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட நிலைகளிற் பொருந்து.

o'sier, *n.* முடைவதற்குரிய வரிச்சல் முளை, கூடை முடையப் பயன்படும் பிரம்பு வகை.

Osman'li, *n.*, *a.* = Ottoman [1].

os'mium, *n.* வெண்மக் குழுவினைச் சார்ந்த எடையில் எல்லாப் பொருள்களையும் விஞ்சிய உலோகவகை.

os'mose, osmos'is, *n.* (இய.) ஊடுகலப்பு, துளைகள் உள்ள இடைத்தடுப்புக்கள் வழியாகத் திரவங்கள் பரவித் தம்முட் கலக்குந் தன்மை.

os'mund, *n.* பூக்குஞ் சூரல் வகை.

os'prey, *n.* மீன் கொத்தித்தின்னுங் கழுகு போன்ற பெரிய கடற்பறவை வகை; தொப்பிமேல் பஞ்சு போன்ற மெல்லிறகு.

oss'eous, *a.* எலும்பாலான; எலும்பு உட்கொண்ட; எலும்புக் கூடுடைய; எலும்பாகிவிட்ட; புதைபடிவ எலும்புகள் நிறைந்த.

oss'icle, *n.* (உள்.) சிறு எலும்பு, விலங்கு உடலமைப்பில் எலும்பு போன்ற சிறுபகுதி.

oss'ifrage, *n.* = osprey.

oss'ify, *v.* எலும்பாக மாறு; எலும்பாக மாற்று; கடினமாகு; கடினமாக்கு; கெட்டிப்படு; வாட்டு; வளர்ச்சியறச் செய்.

oss'uary, *n.* என்புக்கலம், இறந்தவர்களின் எலும்புகள் வைக்கும் கலம்; பழைய எலும்புகள் காணப்படும் குகை; எலும்புகள் அடுக்கி வைக்கப்படும் வீடு அல்லது நிலவறை.

osteit'is, *n.* எலும்பழற்சி.

osten'sible, *a.* பகட்டுவெளிப்படையான, வெளிவேடமான, உண்மையை மறைத்துக்காட்டுவதற்கான, காட்சிக்குரிய.

osten'sory, *n.* திருமேனிக்கலம், நற்கருணை வினையால் தெய்வத்துக்கு நேர்ந்துவிட்ட அப்பத்தைப் பொதுமக்களுக்குக் காட்டுவதற்கான பொன் அல்லது வெள்ளியாலான திறந்த கொள்கலம்.

ostenta'tion, *n.* பகட்டாரவாரக்காட்சி; ஆரவாரப்பகட்டு; பணப்பகட்டு; இன்பப்பொருட்பகட்டு; பிறரின் கவனத்தைக் கவருவதற்கான முயற்சி.

osteogen'esis, *n.* எலும்பு உருவாதல்.

osteog'raphy, *n.* எலும்புகளைப் பற்றிய நூல்மரபு விளக்கம்.

osteol'ogy, *n.* எலும்புகளைப் பற்றி ஆயும் உள்ளுறுப்பியல்; விலங்கின் எலும்புக்கட்டுமான அமைப்பு.

osteomala'cia, *n.* என்புமென்பாடு, மண்ணியல் உப்பு நீக்கத்தினால் எலும்பு மென்மையாகுதல்.

osteomyelit'is, *n.* நிணவெலும்பு வீக்கம்.

os'teopath, *n.* வன்மப்பிடி மருத்துவர், தசையைப்பிடித்து விடுதலால் நோய் நீக்கும் மருத்துவர்.

osteop'athy, *n.* வன்மப்பிடிமுறை, தசைபிடித்து விடுவதால் குணப்படுத்தும் மருத்துவ முறை.

os'tiary, *n.* மாதா கோயில் வாயிலோன்.

os'tler, *n.* தங்குமனைகளிலுள்ள குதிரைக்காரன், குதிரை இலாயத்தான்.

os'tracism, *n.* நாடுகடத்தல்; தள்ளிவைப்பு; சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைத்தல்.

os'tracize, *v.* நாடுகடத்து; விலக்கிவை; சமுதாயத்திலிருந்து ஒதுக்கிவை.

os'trich, *n.* தீக்கோழி; (தொ.) ostrich belief, ostrich policy, தன் கண்ணை மூடினால் உலகம் இருண்டுவிட்டதென்று கருதும் மயக்கம்.

os'trich-farm, *n.* அழகிய இறகுகளுக்காகத் தீக்கோழி வளர்க்கும் பண்ணை.

os'trich-plume, *n.* தீக்கோழி இறகு.

os'trich-tip, *n.* தீக்கோழி இறகுமுனை.

o'ther, *n.*, *pron.* மற்றது; ஏனையது; மற்றவர்; *a.* ஒன்றுவிட்டொன்றான; இரண்டாவதான; இரண்டில் ஒன்றான; மற்ற, ஏனைய; இன்னும் உள்ள; வேறான; எஞ்சிய; *adv.* வேறு வகையாக; (தொ.) happens every other day, ஒன்றுவிட்டொன்றான நாள்களில் நிகழ்கிறது; எப்போதோ சில சமயங்களில்; in other words, அதாவது; none other than, தவிர வேறு யாருமில்லை; on the other hand, நேர் மாறாக, அவ்வாறின்றி; other things being equal, நிலைமைகள் மற்றெல்லா வகையிலும் மாறாமலிருந்தால்; someone or other, எவரோ ஒருவர்; some time or other, ஏதோ ஒரு சமயத்தில்; the other day, முன்னொருநாள், அன்றொருநாள்; the other world, வருங்கால வாழ்வு; மேலுலகம்.

o'thergates, *adv.* வேறு வகையில்.

o'therguess, *a.* முற்றிலும் வேறு வகையான.

o'therwhence, *adv.* வேறு எங்கிருந்தேனும்.

o'therwhere, oth'erwheres, *adv.* (செய்.) மற்றோரிடத்தில்.

o'therwhile, o'therwhiles, *adv.* மற்ற சமயங்களில், சில சமயங்களில்.

o'therwise, *adv.* வேறு வகையாக, இன்னொரு வழியில்; இல்லையெனின்; மற்றப்படி; நிலைமைகள் வேறானவையாயிருந்தால்; அல்லது; வேறு கூறுகளில்; வேறு நிலையில்; (தொ.) merits or otherwise, நற்கூறுகளோ குறைபாடுகளோ.

o'therwise-minded, *a.* உலகத்தார் உண்டென்பது இல்லையென்கிற, நடப்பிலுள்ள கருத்துக்களுக்கு மாறுபாடாயுள்ள.

o'ther-worldly, *a.* மறு உலகை நினைத்துக்கொண்டிருக்கிற, மறு உலக மனப்பான்மையுடைய.

ot'ic, *a.* செவிக்குரிய, காது சார்ந்த.

o'tiose, otiose', *a.* ஓய்வான; வேலையற்ற, சோம்பலான; வீணான, பயனற்ற; மிகையான.

o'tium cum dignitat'e, (ல.) *n.* வீறமைதி வாய்ந்த இன்ப வாழ்வுநிலை.

otol'ogy, *n.* செவியமைப்பு நூல்; செவிநோய் நூல்.

ot'oscope, *n.* உட்செவி ஆய்வுக்கருவி; செவிப்புல வழியான உடலாய்வுக்கருவி, நாடியறி கருவி.

otta'va ri'ma, (இத்.) *n.* எட்டு வரிகள்கொண்ட செய்யுள் வகை.

ott'er, *n.* நீர்நாய்; நீர்நாயின் மென்மயிர்; மீன் பிடிப்பதற்கான கருவி கலங்கள்; சுரங்க வெடிகளை அகற்றுவதற்கான நீர்மூழ்கிக்கப்பல் வடிவமைந்த அமைவு.

ott'er-dog, ott'er-hound, *n.* நீர்நாய் வேட்டைக்குப் பயன்படும் நாய்வகை.

ott'er-spear, *n.* நீர்நாய் வேட்டையில் பயன்படுத்தப்படும் ஈட்டி வகை.

ott'o, otto of roses, *n.* அத்தர், ரோசா இதழ்களிலிருந்து பெறப்படும் ஆவியாய்ப் போகும் நறுமணத் தைலம்.

Ott'oman [1], *n.* துருக்கியர்; *a.* துருக்கியில் முதலாவது ஆத்மன் (Othman I) அரச மரபு சார்ந்த; துருக்கியர்களில் முதலாவது ஆத்மன் கிளைவழி சார்ந்த; முதலாவது ஆத்மன் வழி வந்தவர்களால் ஆளப்பட்ட பேரரசு சார்ந்த; துருக்கிப் பேரரசுத் தொடர்பான; துருக்கிய.

ott'oman [2], *n.* சாய்மானம் அல்லது கைகள் இல்லாத மெத்தையிட்டுத் தைத்த இருக்கை; மெத்தையிட்டுத் தைத்த மேற்பாக முடைய பெட்டி.

ou'bit, *n.* மயிரடர்ந்த கம்பளிப்புழு வகை.

oubliette', *n.* பொறிவாயில் வழியாகமட்டும் உட்புகவல்ல மறைவான நிலவறைச்சிறை.

ouch, *n.* மணி பதித்த ஆடையூக்கு.

ought [1], *v.* வேண்டும், கட்டாயமாக வேண்டியதாகும்.

ought [2], *n.* = aught.

oui'ja, oui'ja-board, *n.* அட்சரப்பலகை, குறி சொல்லும் எழுத்துப் பலகை.

ounce [1], *n.* (சு-வ. oz.) வீசம் கல்லெடை; மிகச்சிறிய அளவு.

ounce[2], *n.* காட்டுப்பூனை வகை; மலைச்சிறுத்தை; நடு ஆசியாவில் காணப்படும் புலிவகை.

our, *a.* எங்களுடைய; நம்முடைய; நமக்குரிய; எங்களுக்குரிய.

ours, *pron.* நம்முடையது; எங்களுடையது; நம்முடையவை; எம்முடையவை.

ourself', *pron. sing.* ஒருவர் வகையில் நாமே; நம்மையே.

ourselves', *pron. pl.* நாமே; நாங்களே; நம்மையே; எங்களையே.

ou'sel, *n.*=ouzel.

oust, *v.* நீக்கு, வெளியேற்று, தள்ளு, அகற்று; துரத்து; வெளியேற்றி இடத்தைக் கைப்பற்றிக்கொள்.

ous'ter, *n.* (சட்.) வெளியேற்றம்; உடைமை கைப்பற்றல், பறித்தல்.

out, *n.* வெளியேயிருப்பவர்; வெளியேயிருப்பது; புற நீட்டம், புறத்தே நீட்டிக்கொண்டிருப்பது; புற வளைவு; அச்சுக்கோப்பதில் விடுபட்டுப்போனது; பொழுதுபோக்குப் பயணம்; வெளியே போகும் வழி; *a.* புறம்பான, புற எல்லையடுத்துள்ள, தொலைவிலிருக்கிற; ஆட்ட வகையில் விட்டுக்கு வெளியே ஆடப்படுகிற; அயல் நாடுகளில் ஆடப்படுகிற; வெளி நோக்கிய; மரப்பந்தாட்டக்காரர் வகையில் பந்தடிக்காத; வழக்கமானதைவிடப் பெரிதான; *v.* (பே-வ.) வலுக்கட்டாயமாக வெளியேற்று; குத்துச்சண்டை வகையில் தோல்வியுறச் செய்; வெளியேகு: வெளியே வா; கழலு; வெளிக்கொணர்; பேசு; *adv.* புறத்தே, வெளியே, உள்ளேயிராமல், வெளிப்புறமாக, பிற நாடுகளில்; புற நோக்கி; உலக நடையினின்றும் விலகி; மற்றவர்களிடமிருந்து அப்பாலாக; மொத்தத்திலிருந்து பிரிந்து; எல்லைகளுக்கப்பால், வழக்கமான இடம்விட்டு; முதல் நிலையிலிருந்து விலகி; தொலைவிடத்தே, தொலைவிடம் நோக்கி; கடல் நோக்கி; தாயகத்தை விட்டு நீங்கி, கட்டிடத்தைவிட்டு விலகி; திறந்த வெளியில், திறந்த வெளிக்குள்; ஒதுங்கிய அல்லது ஒதுக்கப்பட்ட நிலையில்; பதவியிலிராமல்; வழக்காற்றிலிராமல்; ஆட்டத்திலிராமல், பந்தடிப்பவராயிராமல், விலக்கப்பட்டு; போட்டியினின்றும் சில காலம் விலகி; வெற்றியடைந்த நிலையில்; குறியைவிட்டு விலகி; பிழைபட்டு; சரியான வடிவத்திலிராமல்; நல்ல நிலைமையிலிராமல்; மலைப்புற்று; ஒத்துப்போகாமல்; பங்கிடப்பட்டு; மற்றவர்கள் வசத்தில், பொதுமக்கள் வசத்தில்; கடனாக; முடிவு நோக்கி, முடிவில்; களைப்புற்ற நிலையில்; அவிந்துபோன நிலையில்; முழுவதும், தீர; இழப்புக்குட்பட்டு; களத்தில்; ஒன்றைத் தேடிக்கொண்டு, வெளிப்படையாக ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டு; கலகம் விளைத்து, வேலை நிறுத்தத்திலீடுபட்டு; பாதுகாப்பற்ற நிலையில்; மறைந்திராமல், இருட்டடிப்புக்குட்படாமல்; பொதுமக்களுக்குமுன்; வீட்டுப்பணியில்; விரிந்து; மலர்ச்சியுற்று; உரக்க; வலுக்கட்டாயமாக; ஒளிவு மறைவின்றி; *prep.* விட்டுவிலகி, இருந்து; வெளிப்புறநோக்கி, திறந்தவெளி நெடுகலாக; *int.* அந்தோ! போ! ஒழிந்து போ! ஆட்டமிழந்தாய்! ஆட்டமிழந்தார்! வெட்கம்! (தொ.) all out, மரப்பந்தாட்ட வகையில் குழு முழுவதன் ஆட்ட வட்டம் முடிந்துவிட்டது; எல்லா முயற்சியும் செய்து பார்த்தாகி விட்டது; call out, அறைகூவிச் சண்டைக்கு அழை; வேலைக்குக் கூப்பிடு; வெளிக்கொணர்; செயல் முறைக்குக் கொண்டுவா; catch out, மரப்பந்தாட்டத்தில் அடிக்கப்பட்ட பந்தைக் கீழேவிழுமுன் பிடித்து அதை அடித்தவரை ஆட்டமிழக்கச் செய்; தவறு செய்யப்படுகையில் கண்டுபிடி; knock out, அடித்துத்தள்ளு; குத்துச்சண்டையில் குறிப்பிட்ட காலத்துக்குள் மீண்டும் எழாதபடி குத்திவீழ்த்து; வெல்; மோப்பம் தொடர்பற்றுப்போ; miners are out, சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்; murder will out, கொலையை மூடி மறைத்துவைக்க முடியாது; உண்மை வெளியாகியே தீரும்; not out, மரப்பந்தாட்டத்தில் எதிர்க்கட்சியினரின் கேள்விக்கு ஆட்ட நடுவர் தீர்ப்புக்கூறும் வகையில் பந்தடிப்பவர் ஆட்டமிழக்கவில்லை; out and about, நோய் நலிவுற்றவர் வகையில் வெளியே செல்லக்கூடிய நிலையிலுள்ள; out and away, மேம்பட்ட நிலையில், போட்டியைக் கடந்தநிலையில்; out and out, முழுக்க முழுக்க, முற்றிலும்; out at elbows, மேற்சட்டை வகையில் நைந்துபோன; ஆள் வகையில் ஏழ்மையான; out for, தேடிப் புறப்பட்ட நிலையில், குறிக்கொண்டு; மரப்பந்தாட்டத்தில் பந்தடிப்பவர் வகையில் ஓட்ட எண்ணிக்கை பெற்று ஆட்டமிழந்து; out of character, தகாத, ஒழுக்கவரம்பற்ற; out of course, நெறிவிலகி, ஒழுங்குமீறி, முறைதவறி; out of date, வழக்காறற்ற, பழமைப்பட்ட; out of doors, திறந்தவெளியில், திறந்த வெளிக்குள்; out of drawing, பிழையாக வரையப்பட்டு; out of fashion, நடப்பு நயத்துக்கு மாறான; out of favour, வெறுக்கப்பட்டு; out of hand, அக்கணமே; கட்டுக்கடங்காமல்; out of it, பங்கு கொள்வதனின்றும் நீக்கப்பட்டு, வாய்ப்பின்றி; புகலற்று; தடுமாறி, பிழைபட்டு; தவறான செய்தி தெரிவிக்கப்பட்டு; வழுவான; out of joint, சரியாகப் பொருத்தப்பட்டிராமல், இசைவுகெட்டு, கழன்று; out of keeping, ஒத்திசைவாயிராமல்; out of one's mind, பைத்தியம் பிடித்து; out of one's own head, தன் கருத்தாகவே, புதுப்புனைவாக; out of place, உரிய இடத்திலிராத, பொருத்தமற்ற; பருவத்திற்கு ஏலாத; out of pocket, பணமில்லாமல், வரவைக் காட்டிலும் அதிகமாகச் செலவிட்டு; out of print, பதிப்புப்படிகள் இல்லை; out of question, ஐயத்துக்கிடமின்றி; out of sight, பார்க்க முடியாத நிலையில், மறைந்து; (பே-வ.) ஒப்பிட்டுப்பார்க்க முடியாது; out of sorts, உடல்நலமின்றி, மன எழுச்சியற்று, சிடுசிடுப்பாக; (அச்சு.) ஓரின அச்சுருப்படிவங்கள் போதாத நிலையில்; out of temper, சிடுசிடுப்பாக, எரிச்சலூட்டப்பெற்று; out of the common, இயல்முரணிய நிலையில், வழக்கத்திற்கு மாறாக; out of the way, தடையேயிராமல்; ஒதுக்கமாக; out of time, உரிய காலத்திற்கு முந்தி; காலங்கடந்து; இசைவகையில் தாளந் தப்பி; out of tune, இசை வகையில் குரல் எடுப்பு சரிவர அமையாமல்; out of use, நெடுநாள் பயன்படுத்தப்படாத; out of wedlock, திருமண மூலமாகவல்லாமல்; out size, இயல்பாயுள்ளதற்கு மேற்பட்ட அளவு; out to do, ஒன்றைச் செய்யும் முனைப்புடன்; out to out, வெளிப்புறமாக அளவெடுக்கும் வகையில் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரையில்; மொத்தத்தில்; out upon, ஒழிக! வெட்கம், வெட்கம்! out with, அவரோடு நட்புறவாக இல்லை; மறை செய்தியை வெளியிட்டுரை; out with him, அவரை வெளியேற்று; put oneself out of the way, உதவி செய்வதற்காகத் தன்னைத் தொந்தரவுக்குள்ளாக்கிக்கொள்; put out of sight, பார்வையிலிருந்து அகற்று; times out of number, எண்ணற்ற தடவை; work out, கணக்கிடு; முயன்று செய்துமுடி; தீர்வுகாண், முடிவுறு.

out-act', *v.* செயலில் மேம்படு.

out-and-out'er, *n.* மட்டுமீறியவர்; மட்டுமீறிய வகையைச் சேர்ந்த பொருள்; முற்றுர்வமுடைய கட்சிக்காரர்; பெரும் புளுகு.

out'back, *n.* ஆஸ்திரேலிய வழக்கில் மிகு தொலைவிலுள்ள குடியேற்ற நாடுகள்; *a.* மிகு தொலைவிலுள்ள குடியேற்ற நாடுகள் சார்ந்த.

outbal'ance, *v.* சோர்வுறச் செய், விஞ்சு, மேம்படு; கனத்திறல் அழுத்து.

outbid', *v.* ஏலத்தில் கூறிய விலைக்குமேல் விலைவைத்துக் கேள்; இன்னும் மிகுதி செய்வதாகச் சொல்; தாண்டிச் செயலாற்றிவிடு.

out'board, *a.* கப்பலுக்கு அல்லது படகுக்கு வெளிப்புறத்திலுள்ள; படகின் புறத்தே பொறிகள் அமைக்கப்பெற்றுள்ள; *adv.* கப்பலுக்கு வெளியே; வெளிப்புற நோக்கி.

out-brag', *v.* தற்புகழ்ச்சி செய்வதில் விஞ்சு, வீம்பில் மேம்படு.

outbrave', *v.* எதிர்த்து நில்.

out'break[1], *n.* திடீர் வெடிப்பு; எதிர்பாராக் கிளர்ச்சி; திடீர் எழுச்சி; உணர்ச்சிகளின் வெறி எழுச்சி; போரின் திடீர்த் தொடக்கம்; நோயின் திடீர் வெறியாட்டம்.

outbreak'[2], *v.* வெடித்து வெளிப்படு ; திடீரெனத் தோன்று; எதிர்பாராது எழுச்சிகொள்.

out'building, *n.* புற வீடு, புறக்கட்டுச் சிற்றில்.

out'burst[1], *n.* திடீர் வெளிப்பாடு ; திடீர் வெடிப்பு ; திடீர் எழுச்சி ; எரிமலை வெடிப்பு ; தெரிபாறை.

outburst'[2], *v.* வெடித்து வெளிப்படு.

out'cast, *n.* நாடு கடத்தப்பட்டவர்; குடியொதுக்கப்பட்டவர்; தள்ளி வைக்கப்பட்டவர்; போக்கிரி; இழிசினர் ; *a.* துரத்தப்பட்ட, தள்ளுண்ட; வீடற்ற; நாதியற்ற.

out'caste[1], *n.* சாதி நீக்கம் செய்யப்பட்டவர், இழிசினர், கீழோர் ; *a.* சாதி நீக்கம் செய்யப்பட்ட.

outcaste'[2], *v.* சாதி நீக்கம்செய்.

outclass', *v.* மற்றவரைவிட மேல்வகுப்புக்குரியவராயிரு.

out'-clearing, *n.* தீர்வாக்கம், பணக்கட்டளைத்தாள்களையும் பணமுறிகளையும் கணக்குத் தீர்விடத்துக்கு அனுப்புதல்.

out'college, *a.* கல்லூரியில் தங்கியிராத; கல்லூரியைச் சேர்ந்திராத.

out'come, *n.* விளைவு, பலன்.

out'crop[1], *n.* பாறை வெளித்தோன்றுதல், தெரிபாறை ; கிளர்ச்சி, எதிர்ப்பு.

outcrop'[2], *v.* வெளித்தோன்று.

out'cry[1], *n.* கூக்குரல், கூப்பாடு ; துயர்க்குரல் ; கண்டனக் குரல் ; குழம்பிய ஒலி ; பொதுமுறை ஏலம்.

outcry'[2], *v.* விஞ்சிக் குரலெழுப்பு, மேம்பட்டுக் கூக்குரலிடு.

outdance', *v.* நடனமாடுவதில் விஞ்சு.

outdare', *v.* துணிவில் விஞ்சு, எதிர்த்து நில்.

outdis'tance, *v.* மிக முந்திச்செல் ; மிகப் பின்னல் தங்கி விடச்செய்.

outdo', *v.* மேம்படு, விஞ்சு, வெல்.

out'door, *a.* திறந்தவெளியிற் செய்யப்படுகிற ; மனைப் புறத்தே இருக்கிற ; வெளியிடத்திற் பயன்படுத்துகிற ; (தொ.) outdoor agitation, சட்டமன்றத்திற்கு வெளியே செய்யப்படுங் கிளர்ச்சி; outdoor relief, மனைப்புற உதவி, வேலை விடுதியில் தங்கியிராதவருக்குச் செய்யப்படும் உதவி.

outdoors', *adv.* திறந்த வெளியில்.

out'er, *n.* துப்பாக்கி இலக்கிணைச்சுற்றி மிகத் தொலைவிலுள்ள வட்டம் ; இவ்வட்டத்தைத் தாக்கும் வேட்டு எறி ; *a.* மையத்திலிருந்து விலகியுள்ள ; வெளிப்புறத்ததான ; புறம்பான ; வெளிப்புறத்துக்குரிய ; புறநிலையான, புறப்பொருண்மை சார்ந்த, அகவியலல்லாத ; (தொ.) the outer man, ஒருவரது புறத்தோற்றம்; உடைத்தோற்றம்; the outer world, பழகும் சூழல் வட்டாரத்துக்குப் புறம்பானவர்கள்.

out'ermost, *a.* மிகத் தொலைவிலுள்ள, கடைப்புற எல்லையான.

outface', *v.* துணிவுடன் எதிர்த்துநில் ; முகத்திலடி ; கடுமுகங் காட்டு.

out'fall, *n.* ஆறு முதலியவற்றின் வடி கால்.

out'field, *n.* பண்ணைக்குப் புறம்பாகவுள்ள நிலம்; எண்ணம் முதலியவற்றிற்கு அப்பாற்பட்ட துறை ; மரப்பந்தாட்ட வகையில் இலக்குக் கட்டைகளுக்குத் தொலைவிலுள்ள பகுதி.

outfight', *v.* போரிட்டு வெல், போரில் மேம்படு.

out'fighting, *n.* கைநீளத்துக்கு அப்பால் விலகி இடும் குத்துச்சண்டை.

out'fit, *n.* கருவிகலத் தொகுதி ; குறிப்பிட்ட நோக்கத்துக்கான துணைக்கலக்கோப்பு ; (பே-வ.) ஒன்றுபட்ட குழு, செயற்கணம் ; *v.* கருவிகலக் கோப்பூட்டு, துணைக்கலத் தொகுதி இணைத்தொருங்குவி.

out'fitter, *v.* கருவிகலத் தொகுதி முன்னேற்பாட்டாளர், உடை அணிமணிக்கோப்புப் படைப்பாளர்.

outflank', *v.* (படை.) பக்கத்தில் தாண்டிச்செல் ; பக்கவாட்டில் தாக்கு ; ஏமாற்றிச் சிக்கவை.

out'flow[1], *n.* வழிந்தோடுதல் ; நீர்-காற்று-மின் வகையில் வெளிநோக்கிய ஓட்டம் ; வடிகால் ; வழிந்தோடும் அளவு.

outflow'[2], *v.* வழிந்தோடு.

outfly', *v.* தாண்டி வேகமாகப் பற, வேகமாகப் பறந்து தப்பித்துக்கொள்.

outgen'eral, *v.* விஞ்சிய போர்முறைத் தலைமைத்திறத்தினுல் வெல்.

out'go[1], *n.* வெளிச் செல்வது ; செலவு.

outgo'[2], *v.* தாண்டிச்செல் ; விஞ்சு ; மேம்படு ; கடந்து வாழ்ந்திரு ; ஊடு சென்று எஞ்சியிரு ; வெளிச்செல் ; முடிவுக்கு வா.

out'going, *n.* வெளியே போகுஞ் செயல் ; வெளிச்செல்லும் நிலை ; மிகக் கடைசியான எல்லை ; செலவு ; *a.* புறப்பட்டுச் செல்கிற.

out'goings, *n.* செலவு, முதலீடு.

outgone', *v.* outgo[2] என்பதன் முடிவெச்சம்.

outgrow', *v.* தாண்டி வேகமாக வளர் ; விஞ்சி உயரமாகு ; ஆடைகளின் அளவெல்லைமீறி வளர்ந்துவிடு ; வளர்ச்சியால் பண்புகளைக் கடந்துசெல் ; இளமைப் பழக்கங்களை நாளடைவில் விட்டொழி.

out'growth, *n.* கிளைப்பு ; புற வளர்ச்சி ; இயல்பான விளைவு.

out-hec'tor, *a.* எதிர்த்து மடக்குகிற ; *v.* மடக்கு, எதிர்த்து அடக்கு.

out-he'rod, *v.* வன்செயலில் விஞ்சு ; (தொ.) out-herod Herod, வன்செயலில் அதற்குப் பேர்போன ஹிராட் என்ற கொடியவனையும் விஞ்சிவிடு.

out'house, *n.* புறவீடு, புறக்கட்டுச் சிற்றில்.

out'ing, *n.* இன்பப் பயணம், வீட்டைவிட்டு வெளிச்சென்று கழிக்கப்படும் விடுமுறைப் பருவம்.

out-jock'ey, *v.* வளைத்து எட்டிப்பிடி; ஏய்த்துக் காரியமாற்றிவிடு, ஏமாற்றி வெற்றிகாண் ; மட்டுமீறிச் செயலாற்றித் தோல்வியுறச்செய்.

outland'ish, *a.* அயல்நாட்டுத் தோற்றமுடைய ; வெளிநாட்டு உச்சரிப்புள்ள ; புதுமை வாய்ந்த, இயல்முரணிய ; அருவருப்பான, வடிவமைதியற்ற.

outlast', *v.* குறிப்பிட்ட கால எல்லைக்கப்பாலும் நீடித்திரு ; தாண்டி நெடுங்காலம் நீடித்திரு.

out'law, *n.* சட்டத்தின் காப்பிழந்தவர் ; நாடு கடத்தப்பட்டவர் ; *v.* தடைசெய், விலக்காணையிடு ; சட்டக்காப்பின்மை அறிவி.

out'lawry, *n.* சட்டக்காப்பின்மைக்கு ஆளாக்குதல்; சட்டச் காப்பிழந்தவர் நிலை.

out'lay[1], *n.* செலவிட்டதொகை ; செலவுகள் ; முதலீடு.

outlay'[2], *v.* பார்க்கும்படி காட்டிவை ; செலவிடு ; முட்டையிடுவதில் மேம்படு.

out'let, *n.* வெளிச்செல்லும் வழி ; வழிந்தோடும் வழி, வடிகால் ; புறமதகு.

out'lier, *n.* திறந்தவெளியில் படுத்திருப்பவர் ; விலகித் தனியாகத் தங்கியிருப்பவர் ; வெளியார் ; பிரிந்து புறத்தே கிடக்கும் பொருள் ; (மண்.) பழைய பாறைகளால் சூழப்பட்ட தனியான பாறைத்துணுக்கு.

out'line, *n.* உருவரை, எல்லைக்கோடு ; திட்டவரை ; குத்தாயக் குறிப்பு; உருவரைக் குறிப்பு ; மட்டநிலைக்கோடு ; உரு மாதிரி ; திருந்தா உரு ; சுருக்க வாய்மொழி விவரம் ; சுருக்கம் ; *v.* அச்சுக்கட்டு ; எல்லைக்கோடு வரை ; உருவரையிடு ; முக்கியக் கோடுகளைமட்டும் காட்டி உருவெழுது ; திட்டக் குறிப்பிடு, முக்கியக்கூறுகளை மட்டும் விவரித்துக்கூறு ; ஓப்பனை முதலிய செய்கையில் எல்லைகுறி; (தொ.) in outline, பட வகையில் முக்கிய கோடுகளைக்கொண்டு மட்டும் வரையப்பட்ட ; சுருக்கமான ; பொதுவான.

out'lines, *n. pl.* முக்கியகூறுகள், பொதுக்கோட்பாடுகள்.

outlive', *v.* கடந்து வாழ்ந்திரு ; எஞ்சியிரு ; குறிப்பிட்ட காலப்பகுதி முடிய வாழ்ந்திரு ; தன் எல்லைதாண்டி வாழ்ந்திரு ; மறந்துவிடப்படும் அளவுக்கு வாழ்ந்திரு.

out'look, *n.* விழிப்புடைய காவல் ; இருந்து காவல்புரிவதற்கான இடம் ; பரந்த காட்சி ; எதிர்கால வாய்ப்பு வளம் ; உளங்கொள் பாங்கு, மனநிலைச் சார்பு.

out'lying, *a.* மைய இடத்திலிருந்து மிகுதொலை விலகியிருக்கிற, தொலை ஒதுக்கமான.

outmanoeu'vre, *v.* சூழ்ச்சித்திற மேம்பாட்டால் வெல்; திட்ட மேம்பாட்டினால் தோல்வியுறுவி.

outmarch', *v.* விஞ்சி முன்னேறு ; முன்னேறுவதனால் பின் தங்கச் செய்.

outmatch', *v.* மேம்படு, போட்டியில் விஞ்சு.

outmea'sure, *v.* அளவுமிக்கதாயிரு, அளவில் விஞ்சியிரு.

outmod'ed, *a.* நாண்மரபுக்கு மாறான, பழமைப்பட்ட.

out'most, *a.*=outermost.

out'ness, *n.* புறநிலை, பொருண்மை, பருப்பொருளியல்.

outnum'ber, *v.* எண்ணிக்கையில் விஞ்சிவிடு.

out-of-door', *a.* திறந்தவெளியிலுள்ள, திறந்தவெளிக்கான ; மாமன்றத்துக்கு வெளியேயுள்ள.

out of doors, *adv.* மாமன்றத்துக்கு வெளியே ; திறந்த வெளியில்.

outpace', *v.* விஞ்சி வேகமாகச் செல்.

out'-patient, *n.* மருத்துவமனைப் புற நோயாளி.

out'-pensioner, *n.* அறநிலையத்தில் தங்கவேண்டியிராத ஓய்வுச் சம்பளக்காரர்.

out'post, *n.* புறக்காவற்படையிருக்கை ; புறக்காவல் அரண்; காவற்படை ; தொலைவுக் குடியிருப்பு.

out'pour [1], *n.* கொட்டுகை, பொழிவு ; உணர்ச்சி வேகமிக்க பேச்சு ; சொரிவு, பொழிவு ; இலக்கிய வடிவான உணர்ச்சி வெளிப்பாடு.

outpour' [2], *v.* ஊற்று, கொட்டு, பொழி ; நீர்க்காலாக வழிந்தோடு.

out'put, *n.* செய்பொருள் ஆக்க அளவு; விளைவளவு, வேலையளவு.

out'rage, *n.* அட்டூழியம், அழிசெயல், மானக்கொலை, அவமதிக்கும் பழிச்செயல் ; கற்பழிப்பு ; *v.* மானம்பறி, கொடும்பழி ஆற்று ; கொடுஞ் செயலுக்குட்படுத்து; தீங்குசெய் ; அவமதி; கற்பழி ; பட்டாங்கமாகச் சட்டம்-ஒழுக்கம் முதலியன மீறு ; வேண்டுமென்றே மனம் புண்படுத்து ; திடுக்கிடச் செய்.

outra'geous, *a.* மட்டுமீறிய, வழக்கமீறிய ; வன்செயலான, மூர்க்கமான, கொடுமையான ; ஒழுக்கக்கேடான ; அருவருப்பான.

outrange', *v.* துப்பாக்கி முதலியன வகையில் மிகு தொலைவுக்குக் குண்டு பாய்ச்சும் ஆற்றல் பெற்றிரு.

outre, (பிர.) *a.* வழக்கமீறிய; தகாத; கோமாளித்தனமான; பண்புமீறிய.

out-reach', *v.* நீட்டு ; எட்டிப்பிடி ; எல்லைகடந்து நீண்டுகிட ; எல்லைகடந்து செல் ; ஏய்.

out'-relief, *n.* புறமனைத் துணையுதவி.

outride', *v.* முந்தி ஏறிச்செல், அப்பாலும் இவர்ந்து செல் ; கப்பல் வகையில் புயலினூடே இடரின்றிச் செல்.

out'rider, *n.* வண்டிக்கு முன்னே பின்னே உடனே குதிரையேறிச் செல்லும் பணியாள் ; வாணிகத்தின்பொருட்டு வெளிநாடுகளிற் பயணம் செய்பவர்.

out'rigged, *a.* படகு முதலியன வகையில் பாய்கள் விரிப்பதற்குரிய முனைப்பான தூலங்களையுடைய.

out'rigger, *n.* தூம்புகட்டை, பாய்களை விரிப்பதற்குரிய முனைப்பான தூலம்; விலாவரிக்கட்டை, வள்ளம் கவிழாதபடி அதன் பக்கவாட்டில் பொருத்தப்பட்டுள்ள முனைப்பான அமைவு; உகைப்பு விசைக்கட்டை, படகின் உகைப்பாற்றலைப் பெருக்கும்பொருட்டு அதன் பக்கவாட்டில் கிடையாகப் பொருத்தப்பட்டுள்ள இரும்புமிண்டு ; விசைப்படகு, துடுப்பியக்குவதற்குரிய முனைப்பான மிண்டுகள் கொண்ட எளிய பந்தயப்படகு ; சாரத்தூலம் ; தள நீட்டச்சட்டம், விமானத் தளங்களைத் தாங்குவதற்கான முனைப்பான சட்டம் ; சேமக் குதிரைப்பூட்டு, சேமத் தனி மிகையான குதிரையைப் பூட்டுவதற்கான வண்டியின் குறுக்குச் சட்டத்தின் நீட்டம்; சேமப் பூட்டுக் குதிரை, வண்டியின் குறுக்குச் சட்ட நீட்டத்தில் பூட்டப்படும் குதிரை.

outright', *a.* நேரடியான, உடனடியான ; தீர்க்கமான, தீர்மானமான ; முழு நிறைவான ; *adv.* அடியோடு, மொத்தமாக ; ஒரேயடியாக ; முற்றும், முழுவதும்.

outriv'al, *v.* போட்டியில் விஞ்சு, மேம்படு, வெல்லு.

outrun', *v.* வெளியே ஓடு, கடந்துபோ, கழிவாகு ; மிகுதியாகு; ஓடித் தப்பித்துக்கொள்; எல்லைகடந்து செல்; (தொ.) outrun the constable, கடன்படு, வருவாய்க்கு மேல் செலவு செய்.

out'runner, *n.* உடன் துணையாள், வண்டியுடன் ஓடிவரும் பணியாள் ; சேமக்குதிரை, வண்டியின் ஏர்க்கால்களுக்குப் புறம்பாகப் பூட்டப்படுங் குதிரை; பனிக்கட்டிமீது வண்டியில் சறுக்கிச் செல்பவர்களுக்கு வழிகாட்டும் நாய்.

out'rush [1], *n.* திடீர்ப் பாய்ச்சல், வேகமான வெளிப்பாய்வு.

outrush' [2], *v.* வேகமாகப் பாய்ந்து செல், விரைந்து வெளிப்பாய்.

outs, *n. pl.* ஆட்சிக்கு வெளியேயிருக்கும் கட்சியாளர் ; வரிவகைச் செலவினங்கள்; (தொ.) the ins and outs, இப்படியும் அப்படியுமான திருப்பங்கள், மூலைமுடுக்குகள்; ஒன்றன் நடைமுறை பற்றிய முழு விவரங்கள்; அலுவல் மனையில் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பவர்கள் ; the outs, பதவியிலிராத அரசியல் கட்சி.

outsail', *v.* கடலில் முந்திச்செல் ; கப்பலில் தொலைவிடப் பயணம்செய்.

out'sentry, *n.* படையிருக்கையின் புறக்காவலாள்.

out'set, *n.* தொடக்கம், எடுத்த எடுப்பு.

outshine', *v.* விஞ்சி ஒளிர் ; மேம்படு.

outshoot', *v.* எய்வதில் விஞ்சு ; வேட்டுக்குறி வைப்பதில் மேம்படு ; குறியிலக்குக்கு அப்பால் வேட்டுச்செலுத்து ; துருத்திக் கொண்டிரு.

outside', *n.* வெளிப்புறம் ; மேற்பக்கம் ; புறத்தோற்றம் ; புறநிலை ; புற உலகு ; பெரும்பகுதி ; புறத்தேயிருந்து பயணஞ் செய்பவர் ; *a.* புறஞ் சார்ந்த ; வெளிப் பக்கத்திலுள்ள ; வெளிப்புறத்துக்கு அருகிலுள்ள ; நிறுவனத்தைச் சேர்ந்தவராயிராத ; சூழலுக்குப் புறம்பான ; மிகைபடியான; *adv.* வெளிப்புறத்தில் ; வெளிப்புறம் நோக்கி ; உள்ளேயிராமல் ; அடைக்கப்பட்டிராமல் ; சேர்க்கப்பட்டிராமல்; *prep.* புறம்பாக, சேர்க்கப்பட்டிராமல், எல்லைகளுக்கப்பால், உள்ளேயிராமல், வெளிப்புறத்தில், வெளிப்புற நோக்கி ; (தொ.) outside broker, பங்குமாற்றுக் களரியின் உறுப்பினரல்லாத தரகர் ; outside in, உட்புறம் வெளிப்புறமாகும்படி.

outsid'er, *n.* புறம்பானவர், புறத்தார் ; தொடர்பற்றவர், அயலார் ; கட்சி சேர்ந்தவராயிராதவர் ; தொழில்துறை சார்ந்தவரல்லாதவர் ; தீக்கை பெறுதவர் ; பொதுநிலையாளர் ; குழாத்தில் கலந்துறவாடத் தகுதியற்றவர் ; போட்டியில் சேர்க்கப்பட வாய்ப்பில்லாத ஆள்; போட்டியில் சேர்க்கப்பட வாய்ப்பில்லாத விலங்கு.

outsides', *n. pl.* கட்டிலே மேற்புறமிருக்கும் தாள்கள்.

out'sight, *n.* புறநோக்கு.

outsit', *v.* உரிய காலத்துக்கு அப்பாலும் அமர்ந்திரு ; மற்ற விருந்தாளிகளைவிட மிகுதிநேரம் தங்கியிரு.

out'size, *n.* ஆடை முதலியன வகையில் தேவைக்கு மேற்பட்ட அளவு ; *a.* தேவைக்கு மேற்பட்ட அளவினதான.

out'skirts, *n. pl.* புறஞ்சேரி, நகர்ப்புற எல்லை ; செய்தியின் புற எல்லை.

out'span, *n.* கட்டவிழ்ப்பிடம் ; கட்டவிழ்ப்பு ; கட்டவிழ்த்து இளைப்பாற விடுங்காலம் ; *v.* நுகத்தினின்றும் கட்டவிழ்.

outspeak', *v.* உரக்கச் சொல்; எல்லைகடந்து பேசு; எல்லாரும் கேட்குமாறு பேசு ; துணிவாகப் பேசு ; நிமிர்ந்து பேசு.

out-spend', *v.* வரம்புமீறிச் செலவு செய்.

out'spok'en, *a.* மனந்திறந்து பேசுகிற ; கள்ளங்கபடமற்ற ; துணிவுடன் சொல்லப்பட்ட ; பேச்சில் துணிச்சலுள்ள.

out'spread[1], *n.* விரிவு, பரப்பு ; *a.* பரவிய.

outspread'[2], *v.* பரவு ; பரப்பு.

out'standing, *a.* முனைப்பான, முதன்மையான ; தீர்வு காணப்பெறாத ; செலுத்தப்படாத ; இன்னும் மீந்துள்ள ; கவனிக்க வேண்டிய, செய்ய வேண்டியிருக்கிற.

out-stare', *v.* கூசாது எதிர்த்து முறைத்துப்பார், நாணமற்ற வர்களின் உறுத்த நோக்கினை எதிர்த்து நோக்கு, கண்கூசப் பெறாமல் விழித்து நோக்கு.

out'station, *n.* தொலைவிட நிலையம், தலைமையிடத்தி னின்றும் விலகியுள்ள இடம்.

outstay', *v.* உரிய காலத்துக்கு அப்பாலும் தங்கியிரு ; நெடு நேரம் தங்கியிரு ; விஞ்சி நீடித்திரு.

outstep', *v.* எல்லை கட, வரம்பு மீறு.

outstretch', *v.* விரித்து நீட்டு, தாவிப்பிடிக்க எட்டு ; முழு நீளமும் பரப்பு.

outstrip', *v.* கடந்து செல், முந்திக்கொள், மேம்பட்டிரு.

out-talk', *v.* வாதத்தில் வெல், அடித்துப் பேசு ; தூக்கி எறிந்து பேசு.

out-think', *v.* எண்ணத்தில் மேம்படு ; அறிவால் வெல்.

out'-throw[1], *n.* எறியப்பட்டதன் அளவு.

out-throw'[2], *v.* வெளியே எறி, அப்பால் வீசு.

out'-thrust[1], *n.* சிற்பத்தின் ஏதேனும் ஒருபாகத்தின் வெளிப் புற அமுக்கம்.

out-thrust'[2], *v.* வெளிநோக்கி அமுக்கு.

out-trav'el, *v.* விஞ்சி வேகமாகச் செல் ; கடந்து அப்பால் செல் ; எல்லைகடந்து போ.

out'-turn, *n.* செயலாக்கம் பெற்ற பண்டத்தொகுதி ; செய் பொருள் விளைவு.

outval'ue, *v.* மதிப்பில் விஞ்சு.

outvie', *v.* போட்டியில் விஞ்சு.

outvoice', *v.* மேம்பட்டு உரக்கப்பேசு ; கடந்து திறம்பட வுரை, கவர்ச்சியாக விஞ்சிப்பேசு.

outvote', *v.* மேம்படு வாக்குகள் பெற்றுத் தோல்வியுறச் செய்.

out'voter, *n.* தேர்வுத் தொகுதியில் தங்கியிராத வாக்காளர்.

out-walk', *v.* மற்றவரைவிட மிகுதொலை நட; மற்றதைவிட மிகுதியான நேரம் நடந்துசெல்; மற்றவரைவிட வேகமாக நட; எல்லைகடந்து நட.

out'wall, *n.* புறச்சுவர்.

out'ward, *n.* புறத் தோற்றம், வெளிப்புறம் ; *a.* வெளி நோக்கிய ; உடம்பு சார்ந்த, புறம்பான, பருப்பொருளான, கண்ணுக்குப் புலனாகிற, தோற்றமட்டிலுமான, மேலெழுந்த போக்கான ; *adv.* வெளிநோக்கிய திசையில், புறத்திலுள் ளதை நோக்கி ; (தொ.) outward form, புறத்தோற்றம் ; outward man, சமயத்துறை வழக்கில் உடம்பு ; நகைச்சுவை வழக்கில் ஆடை அணிகலன்கள் ; outward things, நம்மைச் சுற்றிலுமுள்ள உலகம் ; to outward seeming, வெளித்தோற் றத்தில், புறத்தோற்றத்தைமட்டிலுங் கருதினால்.

out'ward-bound, *a.* கப்பல் பயணக்காரர் வகையில் அல்லது பயண வகையில் தாயகத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்கிற, வெளிநாடு செல்கிற.

out'wardness, *n.* புற வாழ்க்கை, புறவுலகம், பொருண்மை; வெளிப் பொருள்களிற் பற்று அல்லது நம்பிக்கை, உலோகா யதம்.

out'wards[1], *n. pl.* புறப்பொருள்கள், வெளிப்பகுதிகள் ; புற வினைமுறைகள், அவசியமற்ற சடங்குகள்.

out'wards[2], *adv.* வெளிநோக்கிய திசையில், புற நோக்கி.

outwatch', *v.* விஞ்சி மிகுநேரம் விழித்துக்கொண்டிரு; இரவு கடந்தும் விழித்திரு.

outwear', *v.* நேரத்தைப் போக்கிக் கழித்துவிடு, வாழ்ந்து கழித்துவிடு.

outweed', *v.* வேரோடு பிடுங்கு.

outweep', *v.* மிகுதியாக அழு; மட்டுமீறிக் கண்ணீர்விட்டழு.

outweigh', *v.* நிறைகூடு, எடையில் மிகுதியாயிரு; மதிப்பில் உயர் ; முக்கியத்துவத்தில் மேம்படு ; செல்வாக்கில் விஞ்சு.

outwent', *v.* outgo[2] என்பதன் இறந்தகாலம்.

outwit', *v.* சூழ்ச்சியினால் வெல் ; திறமையால் வெற்றியடை; பொறியில் வீழ்த்து, ஏமாற்று.

out'work[1], *n.* புற அரண், வீட்டுக்குப் புறம்பான வேலை ; தொழிற்கூடத்துக்குப் புறம்பான பணி.

outwork'[2], *v.* முடிவு செய், முடிவுக்குக் கொண்டுவா.

out'worker, *n.* மனைப்புறத்தே வேலை செய்பவர் ; வேலையை விட்டிற் செய்வதற்குக் கட்டுகள் கொண்டு செல்பவர்.

out'worn', *a.* (செய்.) நைந்துபோன ; பழமைப்பட்ட, வழக் காறற்ற ; தீர்ந்து போன.

out-zol'a, *v.* உண்மையை எடுத்து விளம்புவதில் அதன் முதல்வனையும் விஞ்சு ; (தொ.) out-zola Zola, உண்மை எடுத்துரைக்குங் கடைப்பிடியில் முதல்வனான பிரஞ்சு எழுத் தாளர் ஸோலாவையும் விஞ்சிவிடு.

ou'zel, *n.* சிறு பறவை வகை.

ov'a, *n. pl.* புது உயிராக உருவாகும் பெண்கரு உயிரணுக்கள்.

ov'al, *n.* முட்டை வடிவம், நீள் உருண்டை ; நீள் உருளைவடி வுடைய பொருள் ; *a.* முட்டை வடிவான, நீளுருண்டை வடி வுடைய ; முட்டைபோன்ற வெளிவரையுடைய.

ovariot'omy, *n.* கருவக அறுவை.

ova'rious, *a.* முட்டையுள்ள.

ovarit'is, *n.* அண்டகோச அழற்சி.

ov'ary, *n.* பெண் கருப்பை ; கருவகம், முட்டைப்பை; மலரின் சூலக அடிப்பகுதிக் கூறு ; கருமுளை.

ov'ate, *a.* (தாவ.) முட்டை வடிவான.

ova'tion, *n.* மகிழ்ச்சிதரும் சிறு வெற்றி; ஆரவார வரவேற்பு; விடாத கைத்தட்டு.

o'ven, *n.* சுட்டடுப்பு, செங்கல் கல் அல்லது இரும்பாலான மூடு வெப்ப உலையடுப்பு ; (வேதி.) மூடுலையடுப்பு ; (தொ.) Dutch oven, திறந்த பக்கம் திரும்பியுள்ள உலோக உலைப் பெட்டி.

o'ven-bird, *n.* அடுப்பு வடிவக் கூடுகள் பின்னும் பறவை வகை.

ov'er, *n.* மரப்பந்தாட்டத்தில் இடைத்தவணை ஆட்டம் ; மரப்பந்தாட்டத்தில் இடைத்தவணைப் பந்தெறிவு ; முடிந்த செய்தி ; முடிந்தது ; மிகைப்படியானது ; *a.* மேலுள்ள ; வெளிப்புறமான ; மிகுதியான ; *adv.* சாய்ந்து ; கவிழ்ந்து, தலைகுப்புற ; தலைகீழாக, மறித்து ; பரப்பு முழுவதிலும் ; மேலாக, மீதாக, மேற்கவிந்து ; முழுக்காரணமாக, குடை மறித்து ; திரும்பத்திரும்ப, முழுச்சுற்றாக ; தொடக்கத்தி லிருந்து மீண்டும் புதிதாக; குறுக்காக; பக்கம் மாறி; கட்சி மாறி, கொள்கை மாறி ; மட்டின்றி, வரம்பின்றி ; முடிந்த நிலையில், அமைந்த நிலையில் ; இறுதி ஒய்வுற்று ; *prep.* மேலாக ; மீதாக ; மேற்கவிந்து ; மேலே ; மேற்புறத்தில்

பல இடங்களில்; தொடக்க முதல் கடைசிவரை; அங்கு மிங்கும்; சுற்றிச்சுற்றி; பற்றி, குறித்து; மேலே தொங்க விட்டுக்கொண்டு; மேற்பட, அப்பாற்பட்டு; தொடர்பில்லா மல்; எங்கும், முற்றிலும், சுற்றிலும்; மலிந்து; தாவி; கடந்து மறுபக்கத்தில்; மறுகரையில்; எதிர்ப்புறத்தில்; ஊடாக; (தொ.) over again, புதிதாக; over against, எதிராக; over and above, கூடுதலாக; over head and ears, முழுதும் அமிழ்ந்து.

overact', *v.* மிகைப்படுத்தி நடி; மிகைப்படுத்திக் காட்டு; செயல்வரம்பு கட.

ov'erall [1], *n.* வேலை செய்யும்பொழுது மகளிர் அணியும் தளர்த்தியான மேலாடை.

o'verall [2], *a.* எல்லாவற்றையும் உள்ளிட்ட.

ov'eralls, *n. pl.* அழுக்கு வேலை செய்யும்பொழுது தொழிலாளர் அணிந்துகொள்ளும் மேல் காற்சட்டை; (படை.) அதிகாரிகளின் முழு உடை.

ov'erbalance [1], *n.* அளவு மிகை, எடை மிகை.

overbal'ance [2], *v.* சமநிலை இழந்து கீழேவிழு; நடுநிலை யிழந்து விழச்செய்.

overbal'ance [3], *v.* மதிப்பில் மிகைப்படு, கனத்தால் அழுத்து.

overbear', *v.* பளுவால் அழுத்து; ஆற்றலால் நிலைகுலையச் செய்; மேலாண்மையால் கீழ்ப்படுத்து; செல்வாக்கில் மிகைப்படு.

overbear'ing, *a.* வீறுப்பான, அடக்கியாரப்பரிக்கிற.

overbid', *n.* மேற்கேட்பு, விஞ்சிய கேள்வி; *v.* மேற்கேள்வி கேள்.

overblow', *v.* (இசை.) அடிப்படைப் பண் எழுப்புவதற்குப் பதிலாக இசைவிணக்கமுடைய இசையுண்டாகும்படி மிகுந்த ஆற்றலோடு குழலூது.

overblown', *a.* புயல் முதலியன வகையில் வீசி ஓய்ந்து விட்ட; மலர்கள் வகையில் முழுதும் மலர்ந்த, மலர்ச்சிப் பருவம் கடந்துவிட்ட.

ov'erboard, *adv.* கப்பலிலிருந்து வெளியே; (தொ.) throw overboard, கழித்துத் தள்ளு, எறிந்துவிடு; துறந்துவிடு.

overbrim', *v.* விளிம்புவரை பொங்கித் ததும்பு.

overbuild', *v.* கட்டிடங்களால் நிரப்பு; மிகநெருக்கமாகக் கட்டு; மேற்கட்டுமானம் அமை; மட்டுமீறி மேலே கட்டி எழுப்பு; மட்டுமீறி நம்பிக்கை வை.

overbuilt,' *a.* மிக அதிகமான கட்டிடங்களையுடைய.

overburd'en, *v.* நிறையச் சுமத்து.

overbus'y, *a.* மட்டுமீறி ஈடுபட்ட, மிகுதியாக வேலையுள்ள, வேலையில் மிக்க கவனம் செலுத்தியுள்ள.

overbuy', *v.* தேவைக்குமேல் மிகுதியாக வாங்கு.

overcall', *v.* சீட்டாட்ட வகையில் மேற்கேள்வி கேள்; மிகு கேள்வி கேள்.

overcan'opy, *v.* மேற்கட்டிபோல் மூடு, விதானம்போல் மேல் மறை.

over-cap'italize, *v.* மிகு முதலீட்டு அளவு உறுதிசெய்.

ov'ercare, *n.* அளவுமீறிய முன்னெச்சரிக்கை, மிகு விழிப்புடைமை.

overcast', *n.* மூடாக்கு; *a.* மூடாக்கிட்ட, மப்பு மந்தாரமான; இருள் பரந்த; துயர்பரவிய; *v.* மூடாக்கிடு, மப்புப்போடு; இருள் பரப்பு; துயர்நிழல் பரப்பு.

ov'ercharge [1], *n.* மின்மிகைச்செறிவு; வெடிமருந்து மிகு செறிவு; மிகுவிலை; மிகைக்கட்டணம்; மிகுசுமை.

overcharge' [2], *v.* மட்டுமீறி வெடிமருந்து செறிவி; வரம்பு கடந்து மின்செறிவூட்டு; நுணுக்க விவர முதலியவற்றை மட்டின்றி மிகுதியாகச் செறிவுறுத்து; மிகுசுமை ஏற்று; மிகைப்படுத்து; விலையேற்றிக் கூறு; மிகுவிலைகோரு; மிகு கட்டணம் விதி.

overcloy', *v.* தெவிட்டு.

ov'ercoat, *n.* மேலங்கி.

over-col'our, *v.* நுணுக்க விளக்கங்களையும் வருணனைகளையும் மிகைப்படுத்து.

ov'ercome [1], *a.* களைப்பு முதலியவற்றால் ஆட்கொள்ளப்பட்ட; உணர்ச்சி முதலியவற்றிற்கு முற்றிலும் ஆட்பட்ட; உதவியற்றுப்போன, செயலற்றுப்போன; தன்னுற்றலிழந்த; (தொ.) overcome with liquor, குடிபோதையில் மூழ்கிய.

overcome' [2], *v.* விஞ்சி மேம்படு; மேற்கவிவுறு; வெற்றி கொள்; கீழடக்கி வெல்லு; வென்று ஆட்சிசெய்.

over-con'fidence, *n.* மட்டுமீறிய தன்னம்பிக்கை.

over-con'fident, *a.* மட்டுமீறிய தன்னம்பிக்கை கொண்ட.

over-credu'lity, *n.* எளிதில் எதையும் நம்புந்தன்மை, மட்டுமீறிய நம்பிக்கை கொள்ளுதல்.

overcrop', *v.* விடாது தொடர்ந்து பயிரிடுவதனுல் நிலத்தை வறிதாக்கு.

overcrow', *v.* வெற்றிவீறுப்புப் பேசு, வெற்றி இறுமாப்புடன் நட.

overcrust', *v.* திண்ணிய புற ஏட்டினுல் மூடு; கடுமையான மேலுறையிற் பொதி; ஏடுமேற் படிந்திரு.

over-cunn'ing, *n.* அளவுமீறிய சூழ்ச்சித்திறம், தன் நோக்கத்தையே கெடுத்துவிடும் வரம்புகடந்த வஞ்சகம்.

over-cur'ious, *a.* பிறர் செய்திகளில் மட்டின்றித் தலையிட விரும்புகிற; மிகவும் எச்சரிக்கையுள்ள; எளிதில் மனநிறைவு அடையாத.

overdo', *v.* அளவுமீறிச் செய்; வரம்புமீறிச் செல்; ஆற்றல் எல்லைமீறி உழைக்கச்செய்; அளவுமீறிப் பக்குவங்கெடச் செய்.

ov'erdoor, *n.* கதவுமேல் ஒப்பனை.

ov'erdraft, *n.* பொருளகத்தில் இருப்புக்குமேல் பணம் எடுப்பு; பொருளகக் கணக்குவகையில் இருப்புக்குமேல் பற்று.

overdraw', *v.* பொருளகத்தில் இருப்புக்கு மேற்பட்டுப் பணம் எடு; வருணனையில் மிகைப்படுத்திக் கூறு.

ov'erdress [1], *n.* மேலுடை, இரண்டுடை நிறம் உடைய அங்கியின் புறப்பகுதி.

overdress' [2], *v.* வரம்புமீறிப் பகட்டாக உடையணி.

overdrive', *v.* களைப்படையும்படி குதிரையை ஓட்டு; களைப்புறும்படி ஆளை வேலைவாங்கு.

over-es'timate [1], *n.* மிகை மதிப்பீடு; *v.* தகுதிக்கு மேற்பட்டு மதிப்பிடு.

ov'er-excit'ed, *a.* மிகு உணர்ச்சி வசப்பட்ட; மிகு உள்ளதிர்வுடைய.

ov'erfall, *n.* நீரோட்டச்சந்திப்புக்களால் ஏற்படும் கொந்தளிப்பான கடற்பரப்பு; நீரடிப் பாறையருகே நீரோட்டத்தினுல் ஏற்படும் கொந்தளிப்பான நீர்பரப்புப் பகுதி; கொந்தளிப்பான நீர்ப்பரப்புப் பகுதி; கொந்தளிப்பான நீர்ப்பரப்பு; திடீர்ச் சூழ்நிலை; மிகைநீர்வடி அமைவு; நீர்ப்பூட்டுத் தளநிலை காக்கும் மதகு.

ov'erfault, *n.* (மண்.) எறிதிசை வழிச்சாய்வுடைய எதிர்நிலை மடக்கு.

overfish', *v.* நீர்நிலையில் வரம்பின்றி மீன்பிடித்து வறிதாக்கு.

ov'erflow [1], *n.* பொங்குவளம், பொங்கி வழிந்தோடுவது; தேவைக்கு மேற்பட்டது; (தொ.) overflow meeting, நடைபெறும் இடம் கொள்ளாததால் வேறு இடங்களில் சென்று கூடுபவர்கள் கூட்டம்.

overflow' [2], *v.* பொங்கி வழி; நிலமீது வெள்ளமாகப் பெருகு; மக்கள் கூட்டம் வகையில் அறைகள் முதலிய இடயெல்லை களைக் கடந்து பரவு; கொள்கலம்-கிண்ணம் முதலியவை வகையில் நிறைந்து வழி; உணர்ச்சி ததும்பி வழிந்தோடு; செல்வம் கொழி.

ov'erfold [1], *n.* (மண்.) நடுப்பகுதி தலைகீழாக மாறிய பாறைப்படுகை மடிப்பு.

overfold'[2], *v.* (மண்.) உண்மடி, பாறை மடிப்பினுள் மடிப்பாக மடிப்புறு.

ov'erfront, *n.* மேலங்கியில் இணைக்கப்பட்ட கைப்பகுதியின் தொங்கல் மடி.

overgo'vern, *v.* தேவையில்லாத கட்டுத்திட்டங்களுக்கு உட்படுத்து.

ov'erground, *a.* நிலத்திற்குமேல் எழுப்பப்பட்ட.

ov'ergrow', *v.* மேற்கவிந்து படர்; தொற்றிப்படர்; மட்டுமீறி வளர்ச்சியுறுவி; பண்புநிலை தாண்டி வளர்ந்துவிடு.

ov'ergrowth[1], *n.* மேற்கவிந்த வளர்ச்சி; புறத்திரட்சி வளர்ச்சி; மிகு வளர்ச்சி.

overgrowth'[2], *n.* உடல் நலத்திற்குக் கேடான பெருவளர்ச்சி.

ov'erhand, *a.* தோளுக்குமேல் கைகளை உயர்த்திய; பற்ற வேண்டும் பொருளுக்கு மேற்சென்ற கையையுடைய; மேல் கையுடைய; *adv.* தோளுக்கு மேலுயர்ந்த கைகளுடன்.

ov'erhang[1], *n.* தொங்கற்பகுதி, புறந்துருத்திக்கொண்டிருக்கும் பகுதி; புறந்துருத்தியுள்ள அளவு; முனைப்பாக நீட்டிக் கொண்டிருக்கும் நிலை.

overhang'[2], *v.* கவிந்திரு, தொங்கலாயிரு, புறந்துருத்திக் கொண்டிரு; மேலே நீட்டிக்கொண்டிரு; அண்மையில் நிகழவிரு.

ov'erhaul[1], *n.* முழுத் தேர்வாய்வு, செப்பனிடுவதற்காகச் செய்யப்படும் ஆய்வு.

overhaul'[2], *v.* பகுதிபகுதியாகப் பிரித்தாராய்; கப்பல் வகையில் நிலைமையை முழுதும் ஆய்; எட்டிப்பிடி, விரைந்து சென்றெட்டு.

ov'erhead[1], *a.* தலைக்குமேல் உள்ள; தலைக்குமேலே வைக்கப்பட்ட; (தொ.) overhead charges, அலுவலகச் செலவுகள், வட்டி-செயலாட்சிப் பொறுப்பு முதலியவற்றிற்கான செலவினங்களின் தொகை.

overhead'[2], *adv.* வானத்தில்; உயரமாக; மேலுள்ள மாடியில்.

overhear', *v.* ஒட்டுக்கேள், ஒளிந்து நின்றுகேள், தற்செயலாகக் கேள்.

ov'erhouse, *a.* மின்கம்பிகள் வகையில் கம்பங்களுக்குப் பதிலாக வீட்டு உச்சிகளில் தாங்கப்படுகிற அல்லது கட்டப்பட்டுள்ள.

overhoused', *a.* மிகப்பெரிய வீட்டில் வசிக்கிற.

over-iss'ue, *n.* இசைவளிக்கப்பட்ட அளவிற்குமேல் அல்லது திருப்பித்தரும் அளவிற்குமேல் பொருளகத்தினால் வெளியிடப்பட்ட பங்கு; *v.* இசைவளிக்கப்பட்ட அளவிற்குமேல் அல்லது திருப்பிக் கொடுக்கும் ஆற்றலுக்குமேல் அளி.

overjoyed', *a.* மிக்க மகிழ்ச்சிகொண்ட.

overjump', *v.* குதித்துச் சுளுக்கு வருவித்துக் கொள்வி; (தொ.) overjump oneself, சுளுக்கேற்படும் வகையில் தாண்டு.

ov'erknee, *a.* முழங்காலுக்குமேல் செல்லுகிற.

over-lab'our, *v.* மட்டுமீறி நுணுக்க விரிவுபடுத்து.

ov'erland[1], *a.* நிலங்கடந்து செல்கிற, நிலவழியான.

overland'[2], *adv.* நிலவழியாக.

ov'erlap[1], *n.* மேற்சென்று கவிந்திருக்கை; மேற்சென்று கவிந்திருக்கும் பகுதி.

overlap'[2], *v.* பாதி மேற்சென்று கவிந்திரு; பகுதியொத்திரு.

ov'erlay[1], *n.* மேல்விரிப்பு, மேலுறை; மூடி, போர்வை, சிறு மேசைவிரிப்பு.

overlay'[2], *v.* மேல்விரி; மேலே பூசு; மேலே கவி.

overleaf', *adv.* ஏட்டில் தாளின் மறுபக்கத்தில்.

overleap', *v.* தாவு, தாண்டிக் குதி; ஏறிக் கடந்துசெல்; விட்டுவிடு; புறக்கணி.

overlie', *v.* மீதுகிட; குழந்தை வகையில் மேற்கிடந்து அமுக்கு.

overlive', *v.* வயதுவகையில் கடந்து வாழ்; மற்றொருவர் வகையில் வாழ்வெல்லைகடந்து உயிரோடிரு.

overlook', *v.* மேலிருந்து நோக்கு; உயர்ந்திரு; கவனிக்கத் தவறு, காணத்தவறு; புறக்கணி; மேற்பார்வை செய், கண்காணி.

ov'erlord, *n.* குடிவார முதல்வர்; பண்ணை முதல்வர்; மேலாண்மையர்; மேல்நிலக்கிழார்; மேலுரிமையரசு; ஒரு நாட்டை ஆளும் பிற நாடு, நாடாளும் அயல் நாட்டரசர்.

ov'erman, *n.* மீமனிதர், சீவன்முத்தர், இருவினை கடந்தவர்; நீட்ஸ் (Nietzche) என்பாரின் கோட்பாட்டின்படி நன்மை தீமைக் கட்டுப்பாடு கடந்த உயர்குறிக்கோள் மனிதர்.

ov'ermantel, *n.* அடுக்களைத் தண்டயக்கட்டுமீதுள்ள ஒப்பனைத் தட்டு.

overmast'ed, *a.* மிக உயரமான பாய்மரங்களையுடைய; மிகப் பளுவான பாய் மரங்களுள்ள.

ov'ermatch[1], *n.* விஞ்சிய வலிமையுடையவர்.

overmatch'[2], *v.* மிகுந்த வலிமையோடிரு; வெல்லு, தோற்கடி.

over'-mea'sure, *n.* தேவைக்கு அதிகமான அளவு; மிகையளவு.

over-nice', *a.* நயத்திரிபு நுணுக்கங் காண்கிற; எளிதில் மனநிறைவுபடுத்த இயலாத.

ov'ernight[1], *a.* ஓரிரவிற் செய்து முடித்த, முந்திய நாளிரவில் முடித்துவிட்ட.

overnight'[2], *adv.* முன்னிரவில், முந்தியநாள் மாலையில், ஓரிரவுக்குள்ளாக.

overpass', *v.* கடந்துசெல், குறுக்கே செல், தாண்டு; அடுத்த முனையை அடை; கட.

overpassed', overpast', *a.* கடந்த, சென்ற, கழிந்த.

overpay', *v.* மிகையாக ஊதியங் கொடு, மிகுதியாகக் கட்டு.

over-peo'pled, *a.* மட்டுமிஞ்சிய மக்கள் நெருக்கம் உடைய.

overpersuade', *v.* விருப்பமில்லா நிலையிலும் மட்டுமீறி வலியுறுத்தி இணங்கச்செய்.

overpitch', *v.* மரப்பந்தாட்டத்தில் இலக்குக் கட்டைகளுக்கு மிக அண்மையில் விழும்படி பந்துவீசு.

ov'erplus, *n.* கழிமிகை.

overpoise', *v.* நிறையில் விஞ்சு; மதிப்பில் விஞ்சு.

over-pop'ulated, *a.* மட்டுமீறி மக்கள் நெருக்கமுடைய; அளவுமீறிய நெருக்கமுடைய.

over-popula'tion, *n.* மக்கள் தொகைப்பெருக்கம்; மக்கள் தொகை மிகுந்துள்ள நிலை.

overpot', *v.* மிகப்பெரிய தொட்டியில் செடி நடு.

overpow'er, *v.* கீழடக்கு, அடக்கி ஆட்கொள்ளு; மிகை ஆற்றலால் பயனற்றதாக்கு; விஞ்சிய ஆற்றலுடையதாயிரு; தடுக்கமுடியாததாக்கு.

over-pow'ering, *a.* தடுக்கவியலாத ஆற்றலுடைய; அடக்க முடியாத.

overpraise', *n.* மிகு புகழ்ச்சி; *v.* மிகுதியாகப் புகழ், வரம்பு கடந்து புகழ்ச்சிசெய்.

overpre'ssure, *n.* மிகை அழுத்தம்; மிகுவேலை நெருக்கடி; மிகைநெருக்கடி.

overprint', *v.* அச்சடித்த பக்கத்தில் மேலும் அச்சடி.

over-produce', *v.* மிகுதியாக உற்பத்தி செய், தேவைக்கு மேற்பட விளைவி.

over-produc'tion, *n.* மட்டுமீறிய விளைவு; தேவைக்குமேல் உற்பத்தி.

ov'erproof, *a.* வடித்த சாராய வகைகளில் உள்ளதைவிட அதிக அளவான வெறியச் சத்துடைய.

overrate', *v.* மட்டுமீறி உயர்வான மதிப்புக்கொள்; அளவுமீறி மதிப்பிடு, உயர்விலை மதிப்பிடு.

ov'erreach[1], *n.* அளவிறந்து ஊக்குதல்; அளவுமீறிய முயற்சியால் ஏற்படுந் தோல்வி.

overreach'[2], v. குதிரை வகையில் பின்காற்குளம்பு பட்டு முன் கால் காயமுறச்செய்; எட்டிப்பிடித்து மேற்செல்; மிகு திறமையால் காரியம் கெடச்செய்; மிகு சூழ்ச்சியால் தோல்வி யுறுவி; வலிந்து எட்டிப்பிடிக்க முயன்று தோல்வியுறுவி; (தொ.) overreach oneself, மட்டுமீறிய முயற்சியால் வெற்றி யடையுமுன் சோர்வுறு.

over-read', v. மட்டுமீறி வாசி, வரம்புமீறிப் படி; திரும்பிப் பார்த்துப் படி.

over-refine', v. கூர்நுண் வேறுபாடுகள் காண்; கழிநுண் வேறுபாடுகள் கற்பி.

over-rent', v. அதிக வாடகை வாங்கு; உழுவோர் முதலியோ ரிடம் அதிக வரி வாங்கு.

override', v. குதிரைவகையில் ஏறி ஊர்ந்து சோர்வுறச்செய்; குதிரைப் படையின் காலடிக்கீழ் அழியவிடு; மிதித்துச்செல்; புறக்கணி; ஒதுக்கித் தள்ளு; இணங்கமறு; மேலுரிமைப் பாட்டில் பணிய மறு; அறுவை மருத்துவத்தில் எலும்பு வகையில் ஒன்றன்மீது ஒன்றாகக் கிட.

overripe', a. அளவுமீறிக் கனிந்த; கனிந்தளிந்த.

overrule', v. ஒதுக்கித் தள்ளு, உதறித்தள்ளு.

overrun', v. விஞ்சி ஓடு; பரந்து ஒழுகு; ஓடித் தப்பு; எல்லை கட, வரம்புமீறு; மலிந்துவடி, பொங்கிவழி; ஓடிக் களைப்புறு; ஓடித் தீங்கிற்கு ஆளாகு; எல்லைகடந்து வளர்; எங்கும் பரவி நிரப்பு; கடந்து பரப்பு; படர்ந்து பரவு, படர்ந்து கவிந்து நிலைகொள்; கொள்ளைப்பூச்சி பொட்டுக் கள் வகையில் நெருங்கி மிடைவுறு; படைபரப்பு, படைகளைப் பரவலாகத் திரிய விடு; பரந்தழிவு செய்; படையெடுத்துப் பாழ்படுத்து.

oversail'ing, a. கற்கட்டிட அமைப்பு வகையில் கீழ் இருப் பதைவிட மேற்பகுதி முனைப்பாக நீண்டிருக்கிற.

ov'ersea[1], a. கடல் கடந்த.

oversea'[2], adv. கடல் கடந்து, கடலுக்கு அப்பால்.

overseas'[1], a.=oversea[1].

overseas'[2], adv.=oversea[2].

oversee', v. மேலிருந்து கீழ்நோக்கு; வேலையாள்களையும் வேலையையும் மேற்பார்வை செய், கண்காணி.

ov'erseer, n. கண்காணி, மேற்பார்வையாளர்; (தொ.) overseer of the poor, ஏழைகளைப் பேணுவதுபோன்ற பணிப் பொறுப்புக்களையுடைய கிறித்தவ திருக்கோயிலைச் சார்ந்த சிறு வட்டார அதிகாரி.

oversell', v. வழங்கக்கூடிய அளவிற்குமேல் விற்பனை செய்; மிக உயர் விலைக்கு விற்பனைசெய்.

ov'ersew, v. சாய்வரித் தையல் இடு, இரு முனைகளையும் அல்லது ஓரங்களையும் ஒரே தையல் ஒரே திசையில் ஊடுருவி மறு திசையில் திரும்பும்படி தை.

overshad'ow, v. வெயில்படாது காப்பளி; நிழலடிப்புச் செய்; ஒளிமறைப்புச் செய், விஞ்சிய ஒளியால் மறை.

ov'ershoe, n. புறக்காப்புப் புதைமிதியடி, புதைமிதி பொதி வுறை.

overshoot', v. குறிகடந்து எய்; இலக்குக்கடந்து வேட்டுச் செலுத்து; இலக்குக்கடந்து செல்; குறிகடந்து ஆற்றல் செலுத்து; (தொ.) overshoot the mark, overshoot oneself, உயர்வு நவிற்சியாகக் குறி; மிகைப்படுத்து; வரம்புமீறிச் செயலாற்றிக் காரியங் கெடு.

ov'ershot[1], a. மேலுதடு வகையில் கீழுதடு தாண்டி நீண்டி ருக்கிற; மேலிருந்து நீராற்றல் பெறுகிற; (தொ.) overshot wheel, மேலிருந்து விழும் நீரால் இயக்கப்படும் விசைச் சக்கரம்.

overshot'[2], a. மேலாக எய்யப்பட்ட; மேலாக ஏவி எறியப் பட்ட; இலக்குக் கடந்து எறியப்பட்ட; குறிகடந்து தவறிய; வேட்டுகளுக்கு மிகுதியும் உட்பட்ட; வரம்பு கடந்த; விஞ்சப் பெற்ற.

ov'erside[1], a. கப்பலின் பக்கவாட்டிற் சரக்குகளை ஏற்றி இறக்குகிற.

overside'[2], adv. படகில் ஏற்றி இறக்குஞ் சரக்குகள் வகை யில் கப்பலின் பக்கவாட்டில்.

ov'ersight, n. புறக்கணிப்பு; கவனக்குறைவு; கருதாப்பிழை; தன்மறதி; காட்சிப்பிழை, காணத்தவறுகை.

ov'erslaugh, n. (படை.) பணிமுறை விலக்கு.

oversleep', v. காலங் கடந்து தூங்கு.

ov'ersleeve, n. உடுப்பின் கைத்தொங்கல் உறைகாப்பு.

ov'ersoul, n. இயவுள், வான்பேருயிர், உயிர்களை உள்ளடக்கி உலகனைத்தும் இயங்குவிக்கும் இறைநிலை.

overspend', v. கையிருப்புக்குமேற் செலவுசெய், தகுதிக்கு மேற் செலவழி.

overspent', a. மிகவும் களைத்துள்ள.

ov'erspill, n. வடிந்து சிந்தியது; புலம்பெயர் மக்கள் தொகை மிகுதி.

overspread', v. எங்கும் கலந்து பரவு; பரப்பில் கவிந்து பரவு, கவிந்து மறை; கவிந்து மூடு; மூடி மறை.

overstate', v. மிகைப்படக் கூறு.

overstate'ment, n. உயர்வு நவிற்சி, மிகையுரை.

overstay', v. வரவேற்பாளர் விருப்ப அளவிற்குமேல் தங்கு; வரம்புகடந்து தங்கியிரு.

overstep', v. எல்லைகட, வரம்புமீறு.

ov'erstrain[1], n. மிகு கடுமை, கடுஞ்சோர்வு.

overstrain'[2], v. மிகு களைப்பூட்டும் அளவில் கடும் உழைப்பு ஏற்றுக்கொள்; கடுமுயற்சி மேற்கொள்.

overstrung'[1], a. மிகைபட முறுக்கேறிய; அதிர்ச்சிக்கு உட்பட்ட.

ov'erstrung[2], a. இசைக்கருவி வகையில் கம்பிகளின் தொகுதி கள் சாய்வாக ஒன்றையொன்று கடக்கிற.

oversubscribe', v. கடன் முதலியன வகையில் விரும்பப் பட்ட தொகைக்குமேல் கட்டு, கூடுதலாகச் செலுத்து.

ov'ert, a. வெளிப்படையாகச் செய்யப்பட்ட; மறைவில்லாத; எல்லாருக்கும் தெரியத்தக்க; (தொ.) market overt, வரு பவர்கள் எல்லோருக்கும் விற்பனைக்கான பொருள்களை வெளிப் படையாகக் காட்டும் விலைக்களம்; overt act, எண்ணம் நிறைவேற்றுஞ் செயல்.

overtake', v. மேற்சென்று எட்டு, தொடர்ந்துசென்று பிடி; புயல்-இடர்-துன்பம் வகையில் எதிர்பாராது திடீரென வா.

overtask', v. மிகுந்த வேலைகொடு, கடும்வேலை வாங்கு.

overtax', v. மிகுவரி சுமத்து; மிகை வரியால் அழுத்து; மட்டுமீறிய அளவு பயன்கோரிப் பெறு.

ov'erthrow[1], n. தோல்வி; தலைகீழ் எறிவு; நிலைகுலைவு; மரப்பந்தாட்டத்தில் மேலுங் கெலிப்புத்தரும் வாய்ப்புடைய தடைப்பட்ட மீட்டெறி.

overthrow'[2], v. தலைகீழாக்கு, மறித்துவிடு, கவிழ்த்துவிடு; வீழ்த்து; நிலைகுலைவி; வென்று வீழ்த்து, தோற்கடி.

ov'erthrust, n. நில மடக்கில் மற்ற அடுக்குகளின் மீதான மேலெறிவு.

ov'ertime[1], n. மிகைநேரம்.

overtime'[2], adv. மிகைநேரமாக, குறித்த வேலைநேரத்துக்குப் புறமாக.

ov'ertone[1], n. (இசை.) நிலைச்சுரத்தோடு கம்மிய தொனி யுடன் கேட்கப்பெறும் மேற்சுரம்.

overtone'[2], n. மேற்பூச்சின் எதிர்நிழல் வண்ணம்.

overtop', v. உயரிடம் பெறு, தர உயர்வுடையதாயிரு.

overtrain', v. கேடு உண்டாகுமளவில் மட்டுமீறிப் பயிற்சி யளி, மட்டுமீறிய பயிற்சியால் கெடு.

overtrump', v. விஞ்சிய உயர்துருப்புச் சீட்டால் ஆடு.

ov'erture, *n.* உடன்படிக்கைப் பேச்சுத் தொடக்கம்; நேசத் தொடர்பு முயற்சி; தனிமுறைக் கோரிக்கை; முறைநிலை வேண்டுகோள்; காதற்கோரிக்கை, மணவுறவுக் கோரிக்கை; (இசை.) அரங்குத் தொடக்க நிகழ்ச்சி.

ov'erturn[1], *n.* கரணம், தலைமறிவு; நிலைகுலைவு, முறை கவிழ்வு.

overturn'[2], *v.* கவிழ்; மறியவை, கவிழ்த்து; தலைகீழாய்ப் புரட்டு; விழு; வீழ்த்து; சீர்கெடச்செய்; அழி, பாழாக்கு.

overwatched', *a.* மிகவும் விழித்திருந்ததால் அயர்வுகொண்ட.

overween'ing, *a.* தருக்கான, தற்பெருமைமிக்க; மட்டு மீறிய தன்னம்பிக்கை வாய்ந்த.

ov'erweight[1], *n.* மிகை எடை; அளவுகடந்த பாரம்.

overweight'[2], *a.* தேவைக்கு மேற்பட்ட எடையுள்ள; *v.* மிகு சுமையேற்று.

overweight'ed, *a.* வரம்புமீறிச் சுமையேற்றப்பட்ட; எடை மீறிய.

overwhelm', *v.* மூழ்கடித்துவிடு; மேலமுழ்த்தி அமுக்கு; அடியிற் புதைந்து விடும்படிச்செய்; திடீரென அமுக்கி அழி; உணர்ச்சியில் ஆழ்த்து; கேள்விமாரியால் திணறச்செய்.

overwhel'ming, *a.* திணற அடிக்கிற; சமாளிக்க முடியா அளவு பெரிய.

overwind', *v.* கடிகாரம் முதலிய வகையில் எல்லைக்குமேல் சுற்று.

ov'erwork[1], *n.* அதிக வேலை, வரம்புகடந்த உழைப்பு.

overwork'[2], *v.* கடுமையாக வேலைசெய்யத் தூண்டு; கடுமை யாக வேலை செய்; வேலையால் களைத்துப்போகச் செய்; மிகு வேலையால் சோர்வுறுத்து.

overwrite', *v.* மிகையாக எழுதிப் பெயர்கெடுத்துக்கொள்.

ovibov'ine, *n.* செம்மறியாட்டிற்கும் எருதுக்கும் இடைப் பட்ட தன்மைகள் கொண்ட விலங்கு; *a.* செம்மறியாட் டிற்கும் எருதிற்கும் இடைப்பட்ட தன்மைகள் கொண்ட.

ov'icide, *n.* செம்மறியாட்டுக் கொலை.

Ovid'ian, *a.* ஓவிட் (Ovid) என்ற லத்தீன் கவிஞரைச் சார்ந்த; ஓவிட் என்ற லத்தீன் கவிஞரின் காவியத்திற்குரிய.

ov'iduct, *n.* முட்டைத் தூம்பு.

ov'iform, *a.* முட்டை வடிவான.

ov'ine, *a.* செம்மறியாடுபோன்ற; ஆடுகளுக்குரிய.

ovip'arous, *a.* முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிற; முட்டை யிற் பிறக்கிற.

ovipos'it, *v.* முட்டையிடு.

ovipos'itor, *n.* முட்டையிடும் உறுப்பு.

O'vis, *n.* செம்மறியாடு.

ov'oid, *n.* முட்டைவடிவப் பொருள்; நீள்வட்டம்; *a.* கெட்டி யான நீளுருளை வடிவுடைய; முட்டை வடிவமான.

ov'olo, *n.* (க-க.) கால்வட்ட வளை பகுதியுடைய சித்திர வேலைப்பாடு.

ovorhomboid'al, *a.* சாய்சதுரத்திற்கும் நீளுருளை வடிவிற் கும் இடைப்பட்ட.

ovovivip'arous, *a.* உடலுக்குள்ளேயே முட்டை பொரித்துக் குஞ்சுகள் உண்டாக்குகிற.

ov'ule, *n.* (தாவ.) பெண்பாலின் பொலிவுருக் கருவணு; கருநிலை விதை, கருவுரு முட்டை.

ov'um, *n.* விலங்குகளின் பெண் கருவகத்திலுண்டாகுஞ் சினை; பாலுண்ணி-மீன்-பூச்சியினங்களின் முட்டை.

owe, *v.* கடன்பட்டிரு; கடமையுணர்வு கொண்டிரு; வழங் கும் கடப்பாடு கொள்; உரிய மூலமுதலாகக் கொள்; மற வாது உளத்தில் வைத்துப் பேணு; (தொ.) owe one a grudge, மனக்காழ்ப்பை விடாமற் பேணு, கறுவு கொள்.

Ow'enism, *n.* ராபர்ட் ஓவென் (Robert Owen 1771-1858) என்பாரின் பொதுவுடைமைக் கூட்டுறவுக் கோட்பாடு.

ow'ing, *a.* கடனுகக் கொடுக்க வேண்டிய; விளைவான, பய னுன, காரணமான; (தொ.) owing to, விளைவாக, காரண மாக, பயனுக.

owl, *n.* ஆந்தை; கங்குலார்; பார்வை மட்டானவர்; ஒளிக்கு ஒதுங்கிச் செல்பவர்; வீறுர்ந்தவர், செம்மாந்தவர்; அறிவாளியின் தோற்றமுடைய அறிவிலி; (தொ.) fly with the owl, இரவுப் பழக்கங்கள் கொள்; owls to Athens, கொல் லர் தெருவில் ஊசி.

owl'ery, *n.* ஆந்தைப் பொந்து.

owl'et, *n.* ஆந்தைக் குஞ்சு.

owl'ish, *a.* ஆந்தைபோல விழிக்கிற; மந்தமான.

own, *a.* தனக்கே உரிய, சொந்தமான, தனிப்பட்ட உரிமை யான; தனக்கெனத் தகுதி வாய்ந்த, பிறர்க்குரியதல்லாத; தன் தனிச்சார்பான; இரவல் பெருத; முழு நேருரிமை வாய்ந்த; *v.* தனதெனப் பெற்றிரு; உடைமையாகக் கொண் டிரு; தனதென ஒத்துக்கொள்; ஏடு வகையில் ஆக்கியோ னென உரிமை பாராட்டு; பிள்ளை வகையில் உரிமையாக ஏற்றுக்கொள்; மெய்யென ஒப்புக்கொள்; சரியென இசைவு தெரிவி; தானே ஏற்றுக்கொள்; மறுப்புச் செய்யாதிரு; (தொ.) on one's own, சொந்தச் செலவில்; சொந்த முயற்சி யில்; own brother, own sister, இருசார்புப் பெற்றேரும் பொதுவான உடன்பிறப்பாளர்.

ow'ner, *n.* உடையவர், உடைமையுரிமையாளர், சொந்தக் காரர்.

ow'nerless, *a.* உடையவரற்ற, உரியவரற்ற.

ow'nership, *n.* உடைமை, உடைமையுரிமை, சொந்தம்.

ox, *n.* எருது; விதையடித்த காளை; *pl.* ox'en; (தொ.) have the black ox tread on one's foot, இடுக்கணுக்கு ஆளாகு; முதுமைக்கு ஆட்படு.

ox'alate, *n.* வெல்லகை.

oxal'ic, *a.* வெல்லகை சார்ந்த; (தொ.) oxalic acid, நச்சுத் தன்மை வாய்ந்த புளிங்காடி வகை, வெல்லகக்காடி.

ox'-bird, *n.* சிறு பறவை வகை.

ox'er, *n.*=ox-fence.

ox'-eye, *n.* பெருங்கண், அகல்விழி; பறவை வகை; செடி வகை; மோட்டுச்சாளரம்.

ox'-eyed, *a.* அகல்விழியார்ந்த.

ox'-fence, *n.* மாட்டுத்தொழுவத்து வேலி.

Ox'ford, *n.* இங்கிலாந்து நாட்டில் ஒரு மாவட்டம்; இங்கி லாந்து நாட்டில் ஒரு நகரம்; இங்கிலாந்து நாட்டில் ஒரு பல்கலைக் கழகம்; *a.* ஆக்ஸ்போர்டு நகரத்திற்குரிய; ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகத்திற்குரிய; (தொ.) Oxford bags, அகலக் காற்சட்டை; Oxford blue, திண்ணிய நீலம்; Oxford clay, நீலக் கடுங்களிப் பாறைவகை; Oxford frame, இரு பக்கங்களும் அடியில் குறுக்கிட்டு நீடிக்கும் பாணியி லுள்ள படச்சட்டம்; Oxford Group, Oxford Group Movement, டாக்டர் பிராங்க் புக்மன் (Dr. Frank Buchman) என் பாரைப் பின்பற்றுஞ் சமயக் கோட்பாட்டுக் குழு; Oxford mixture, திண் சாம்பர்நிற ஆடை; Oxford movement, ஆங்கிலத் திருச்சபையில் கத்தோலிக்க நடைமுறைகளைப் புதுப்பிக்கும் நோக்குடன் 1833-இல் தொடங்கப்பட்ட சமயத் துறை இயக்கம்.

ox'-gall, *n.* துப்புரவு செய்யவும் சாயமிடவும் மருந்து செய்யவும் பயன்படும் பிசின் வகை.

ox'head, *n.* மாட்டுத்தலை; மட்டி, அறிவிலி.

ox'herd, *n.* மாட்டிடையன்.

ox'hide, *n.* மாட்டுத்தோல்.

ox'idate, *v.* உயிரகத்துடன் இணைவுறுவி; உயிரகத்துடன் இணைவுறு.

oxida'tion, *n.* உயிரகத்தோடிணைப்பு; உயிரகத்தோடிணைவு; உயிரக இணைவு.

ox'ide, *n.* உயிரகை, தனிமம் அல்லது உயிர்ம அடிச்சேர்மத்துடன் உயிரகம் இணைந்த வேதிப்பொருள்.

ox'idize, *v.* உயிரகத்துடன் இணைவுறுவி; உயிரகத்துடன் இணைவுறு; உயிரகமேற்று மாறுதலுறு; துருப் பற்றவை, துருப் படர்வி; துருப் பிடி.

ox'idizer, *n.* உயிரகத்துடன் இணைவிக்கும் கருவிப்பொருள்.

ox'lip, *n.* மலர்ப்பூண்டு வகை.

Oxon'ian, *n.* ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பட்டதாரி; ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக உறுப்பினர்; ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக முன்னாள் உறுப்பினர்; *a.* ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகஞ் சார்ந்த.

ox'tail, *n.* உணவுச் சாற்றுக்குப் பயன்படுத்தப்பெறும் மாட்டுவால் இறைச்சி.

oxy-acet'ylene, *a.* உயிரகக் கைவளிக் கலவையடங்கிய; உயிரகக் கைவளிக் கலவையின் பயனீட்டுக்குரிய; (தொ.) oxy-acetylene blowpipe, வெவ்வூதுலைக் குருகு.

oxya'cid, *n.* உயிரகமடங்கியுள்ள காடி.

oxycarp'ous, *a.* கூர்முனைக் கனியுடைய.

ox'ygen, *n.* உயிரகம், உயிர்களுக்கு இன்றியமையா உள்ளுயிர்ப்புக் கூறாக இயலும் வளி.

ox'ygenate, ox'ygenize, *v.* உயிரகமூட்டு; உயிரகத்துடன் கல; உயிரகத்துடன் இணைவுறுவி; உயிர்ப்புமூலம் குருதி முதலியவற்றிற்கு உயிரகச்செறிவூட்டு.

ox'ymel, *n.* தேம்புளிக்காடி, புளிக்காடியுடன் தேன்கலந்த பானம்.

oxymor'on, *n.* சொல் முரணணி, முரணுவபோன்ற சொற்களின் இணையடுக்கு.

oxyop'ia, *n.* கூர்விழிப் பார்வைக் கோளாறு.

ox'ysalt, *n.* உயரகமடங்கிய உப்புவகை.

ox'ytone, *n.* கிரேக்க மொழியில் கடையசையில் விசையழுத்தங் கொண்ட சொல்; *a.* கிரேக்க மொழியில் கடையசையில் விசையழுத்தங் கொண்ட.

oy'er, *n.* உலா முறைமன்றத் தண்டவழக்குக் கேள்விமுறை; (தொ.) oyer and terminer, உலா முறைமன்றக் கேள்விமுறை ஆணை.

oyes', oyez', *int.* அமைதியாணைக் குறிப்பு.

oys'ter, *n.* ஈரிதழ்ச்சிப்பி.

oys'ter-bank, *n.* சிப்பி மலிந்து பெருகுங் கடலடிப்பகுதி; சிப்பி பேணி வளர்க்கப்படும் இடம்.

oys'ter-bar, *n.* அருந்தகத்தில் சிப்பிச் சிற்றுணா வழங்கப்படும் இடம்.

oys'ter-bed, *n.* = oyster-bank.

oys'ter-catcher, *n.* ஆழமற்ற கடல் நீரினுள் நடக்கவல்ல பறவை வகை.

oys'ter-farm, *n.* சிப்பிப் பண்ணையாகப் பேணப்படும் கடலடிப் பகுதி.

oys'ter-knife, *n.* சிப்பிச் சூரிகத்தி.

oys'ter-patty, *n.* சிப்பிப் பண்ணியம்.

ozo'cerite, ozok'erit, *n.* மெழுகுத்திரி-மின்காப்பு ஆகிய வகைகளிற் பயன்படும் புதைபடிவ அரக்குப்பொருள்.

oz'one, *n.* கமழி, செறி உயிரக ஓதை; மகிழ்வூக்குந் திறன்.

ozonif'erous, *a.* செறி உயிரகங் கொண்ட; கமழி ஆக்குகிற.

oz'onize, *v.* கமழியாக மாற்று; செறி உயிரகமூட்டு; செறி உயிரகம் வழங்கு.

ozoniz'er, *n.* உயிரகத்தைக் கமழியாக்கும் அமைவு.

Pa, *n.* (பே-வ.)=papa.

pab'ulum, *n.* உணவு.

pace[1], *n.* ஒரு காலடி; காலடித்தொலைவு; ஏறத்தாழ முப்பது அங்குலத்தொலைவு; பண்டை ரோமர் வழக்கில் ஒரே காலின் இரு தடங்களுக்கிடைப்பட்ட தொலைவு, ஏறத்தாழ அறுபது அங்குலத்தொலைவு; செல்லும் வேக அளவு, நடைவேகம்; ஓட்டவேகம்; முன்னேற்ற வேகம்; *v.* மென்னடையிடு; ஒழுங்குநடையிடு; ஒழுங்குநடை நடந்து கட; காலடியால் அள; குதிரை வகையில் ஒருபக்கத்து இருகால்களையும் ஒருங் கெடுத்துவைத்து நட; வேக அறுதியிட்டமை; (தொ.) go the pace, மிகு விரைவாகச் செல்; சிறிது காலத்திற் குள்ளே பெரிய அளவு ஆற்றலைப் போக்கடித்துக்கொள்; hold pace with, keep pace with, தொடர்ந்து உடன்செல்; make the pace, set the pace, பிறர் பின்பற்றுவதற்காக வேகத்தை முறைப்படுத்து; put one through one's paces, ஒருவர் திறமறிய ஏற்பாடுசெய்.

pa'ce[2], (ல.) *prep.* இசைவிணக்கம்பெற்று, கருத்துக்குப் போதிய மதிப்புப்பெற்று.

pa'cer, *n.* மென்னடையிடுபவர், ஒழுங்குநடையிடுபவர்; ஒரு பக்க இருகால் ஒருங்குநடைபோடுங் குதிரை.

pa'ce tu'a, (ல.) *adv.* தம் இசைவிணக்கத்துடன், தம் கருத்துக்குரிய மதிப்புடன்.

pa'cha, *n.*=pasha.

pachi'si, (இ.) *n.* நால்வர் ஆடும் தாய ஆட்டம்.

pach'yderm, *n.* திண்தோல் விலங்கு; திண்தோலர், சொரணை கெட்டவர்.

pachyderm'atous, *a.* திண்தோல் விலங்கினஞ் சார்ந்த; திண் தோலுடைய; ஊறுணர்ச்சியற்ற.

Pacif'ic[1], *n.* ஆசிய-அமெரிக்க மாநிலங்களுக்கு இடையிலுள்ள மாகடல், பசிபிக் மாகடல்; *a.* பசிபிக் மாகடலுக்குரிய.

pacif'ic[2], *a.* அமைதிவாய்ந்த; சமாதானம் நாடுகிற; அமைந்த பண்புநலமுடைய.

pacifica'tion, *n.* அமைதிப்படுத்துதல்; அமைதி உடம்பாடு.

pacif'icism, pa'cifism, *n.* போரொழிப்புக் கோட்பாடு, போரொழிப்பு விரும்பத்தக்கதன்றியும் நடைமுறைப்படுத்தத் தக்கதென்னுங் கோட்பாடு.

pacif'icist, pa'cifist, *n.* போரொழிப்புக் கோட்பாட்டாளர்.

pa'cify, *v.* அமைதிப்படுத்து, கோபந் தணிவி, கொந்தளிப்பை அடக்கு; அமைதியூட்டு; அமைதி நிலவச்செய்.

pack, *n.* கட்டு; சிப்பம்; மூட்டைமுடிச்சு; தொகுதி; கும்பு, குழு; வேட்டைநாய்த் தொகுதி; விலங்குத்திரள்; பறவைத் தொகுதி; நீர்மூழ்கு படை நிரை; சீட்டுக்கட்டுத் தொகுதி; ஒட்டுத்தாள் முதலியவற்றின் மூட்டிணை அடுக்கு; மீன்-கனி வகை முதலியவற்றின் பருவ விளைவுத்தொகுதி; நில முனைக் கோடிக் கடல்களின் மிதவைப் பனிக்கட்டிப்பாளத் தொகுதி; காற்பந்தாட்ட வகையில் முன்வரி ஆட்டக்காரர் தொகுதி; *v.* திணித்துவை; நெருக்கிவை; திரட்டிக்குவி; கட்டிடு; பொதி; வரிந்துகட்டு; இறுக்கிக்கட்டு; கட்டில் இணை; மூட்டையில் வைத்துக்கட்டு; மூட்டையாகக் கட்டு; பெட்டியில் இட்டுநிரப்பு; பேழையிலிட்டுப் பதனஞ்செய்; வேட்டைநாய்களைத் தொகுதிகளாக வகுத்தமை; சீட்டுக்களைக் கட்டில் வை; (மரு.) ஈரத் துணியால் சுற்றி வரிந்து போர்த்து; நிறைய சுமை ஏற்று; மூட்டை கட்டிக்கொண்டு புறப்படு; ஒருங்குதிரள்; தொகுதிகளாக இணை; எளிதாகக் கட்டில் அமை; அடுக்க எளிதாயமைந்திரு; முறைகாண் ஆயத்தினர் முதலியோரை ஒருசார்புபடத் தேர்ந்தெடு; (தொ.) pack of fools, மூடர் தொகுதி; pack of lies, பொய்மூட்டை, புளுகு மூட்டை; pack of nonsense, பொருந்தாப் புளுகுமூட்டை; send one packing, மூட்டை முடிச்சோடு அனுப்பு.

pack'age, *n.* கட்டு; சிப்பம்; துணிமணி செறித்து வைக்கப் பட்ட பெட்டி.

pack'-drill, *n.* தண்டமுறைப் படையணி நடை.

pack'er, *n.* வரிந்துகட்டுபவர்; வாணிக மூட்டை கட்டி; சிப்பங்கட்டி; மூட்டை கட்டுவதற்கான பொறி.

pack'et, *n.* சிறு சிப்பம்.

pack'-horse, *n.* பொதிக்குதிரை.

pack'ing, *n.* வரிந்துகட்டல்; மூட்டைகட்டல்; பொதிவு; கட்டுமானம்; கட்டுமானப்பொருள்; கட்டுமான இடநிரப்புப் பொருள்; பொறியின் சுழல்பகுதி அடைப்பு நிரப்புப்பொருள்; மசகடைப்பு.

pack'ing-box, *n.* துணிமணி நிரப்புப்பெட்டி.

pack'ing-needle, *n.* கட்டுமானத் தையல் ஊசி.

pack'ing-sheet, *n.* பொதியுறை, கட்டுமானப்பொதியிரட்டு; (மரு.) நீர்மருத்துவத்துறை ஈரக்கம்பளம்.

pack'-saddle, *n.* பொதிக்குதிரைச் சேணம்.

pack'thread, *n.* கட்டிழை; கட்டுமானத் தைப்பு நூல்.

pact, *n.* உடன்படிக்கை.

pad[1], *n.* சேணப் பையுறை; இரட்டைச்சேணத்தின் உடல் வார் மாட்டி; திண்டு, மெத்தை; பையுறை, பஞ்சுத் திணியுறை; இடநிரப்புக் காப்பு; நைவுகாப்பு; ஆட்டக்காரர் முழந்தாள் காப்புறை; குண்டூசி உறைகாப்பு; ஒட்டுத்தாள் இணைபொதி; விலங்கு அடிகாப்புத் தசைத் திண்டு; நரி-முயல் ஆகியவற்றின் உள்ளங்கால்; காலடித்தடம்; கொளுவியின் தாயமாட்டி; கைப்பிடிநிலைமாட்டி; *v.* திண்டு அமை; மென் பஞ்சுறை பொருத்து; இணைபொதி ஆக்கு; பஞ்சு உள்வைத்துத் திணி; உப்ப வை, பெரிதாக்கு; ஊறித் தோய்வி; வண்ணப் பற்றுசு செறிவி; காலடி மூலந் தடங் காண்; பயனில் சொற்கொண்டு நிரப்பு.

pad[2], *n.* பழம் முதலியவற்றின் ஒரு கூடை அளவு.

pad[3], *v.* கால்நடையாகச் செல்; கால்நடையாகப் பயணஞ் செய்.

pad'dle[1], *n.* நீள்தண்டு; படகின் அகல் துடுப்பு; வண்டிச் சக்கரத்தின் சுற்றுவரைச் சட்டப்பகுதி; மீனின் துடுப்பு; துடுப்பியக்கம்; துடுப்பியக்கத் தவணை; *v.* துடுப்பை இயக்கு; படகினைத் தண்டுகைத்துச் செலுத்து; நீரில் தவழ்ந்துசெல்; மெல்லச் செல்; (தொ.) paddle one's own canoe, தன்னையே சார்ந்திரு.

pad'dle[2], *v.* ஆழமற்ற நீரில் காலாலளை, அளைந்து விளையாடு; கையால் தடவியூடாடு; குழந்தை வகையில் தள்ளாடி நடமாடு.

padd'ock[1], *n.* சிறு புல்வெளி; பொலிவிடைப்பண்ணைப் பகுதியான புல்வெளி முற்றம்; குதிரையோட்டப் பந்தய வெளியருகில் பந்தயத்துக்கு முன்பு குதிரைகளைக் கட்டிவைப்பதற்கான புற்கரணடைப்பு; வயல், நிலக்கூறு.

padd'ock[2], *n.* (பே-வ.) தவளை, தேரை.

Padd'y[1], *n.* அயர்லாந்து நாட்டவர்.

padd'y[2], *n.* நெல்; நெற்பயிர்த்தாள்; நெற்பயிர்.

padd'y[3], **padd'ywhack**, *n.* (பே-வ.) கோப எழுச்சிவீச்சு, சீற்றம்.

Pa'dishah, (பெர்.) *n.* பாரசிக அரசர்; துருக்கி மன்னர்.

pad'lock, *n.* கொண்டிப்பூட்டு; *v.* கொண்டிப்பூட்டிட்டுப் பூட்டு; (தொ.) padlock law, மணிக்கட்டு எல்லையைப் பூட்டிக்கொள்வதற்குரிய உரிமைச் சட்டம்.

padouk', *n.* பர்மா நாட்டு வெட்டுமரவகை; வெட்டு மரவகையின் கட்டை.

pad're, *n.* பாதிரி, தனிமுறைக் குரு.

padron'e, (இத்.) *n.* நடுநிலக்கடல் வாணிகக்கப்பல் தலைவன்; இத்தாலி நாட்டில் தெருப்பாடகர் தலைவன்; குழந்தைப் பிச்சைக்காரர் தலைவன்; இத்தாலிய வழிமணையுரிமையாளன்.

Pa'dshah, (பெர்.) *n.*=Padishah.

pad'uasoy, *n.* முற்கால ஒப்பனைப் பட்டிழைப்புரி.

pae'an, *n.* நன்றிப்பாடல்; வாகைப்பாடல்.
paed'erast, *n.* பையன் வேட்கையர்.
paed'erasty, *n.* பையன்பால் வேட்கை.
paediat'ric, *a.* குழந்தை மருத்துவஞ் சார்ந்த.
paediatri'cian, *n.* குழந்தை மருத்துவர்.
paediat'rics, *n. pl.* (மரு.) குழந்தை வைத்தியம்.
paediat'rist, *n.*=paediatrician.
paedobap'tism, *n.* குழந்தைத் தீக்கைமுறை.
paedobap'tist, *n.* குழந்தைத் தீக்கைமுறை ஆதரவாளர்.
pae'on, *n.* ஓரசை நீண்ட நாலசைச்சீர்.
pag'an, *n.* புறச்சமயி; *a.* புறச்சமயியான.
pag'anish, *a.* புறச்சமயச் சார்புடைய.
pag'anism, *n.* புறச்சமயச்சார்பு; புறச்சமயம்; புறச்சமய நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் தொகுதி.
pag'anize, *v.* புறச்சமயச்சார்பாக்கு; புறச்சமயத்துக்கு மாற்று.
page[1], *n.* பக்கம், ஏட்டிதழின் ஒருபுறம்; வரலாற்றில் ஒரு பக்கம் நிறைக்கத்தக்க பகுதி; *v.* பக்கவரிசை எண்குறி, பக்க எண்குறி.
page[2], *n.* பணியாள், குற்றேவற் சிறுவன், துணைச்சிற்றாள்; துணையுழையர், உயர்தரப் பணிமுதல்வர் துணையாள்; பயிற்சி நிலையிலுள்ள வீரப்பெருந்தகையின் இளந்துணைவர்; இளந் தகை, இளவீரப்பெருந்தகை; *v.* துணையுழையர் மூலம் கூவியழை.
pa'geant, *n.* ஆரவாரக் கண்காட்சி; பேரணிக்காட்சி; அரு வண்ணக்காட்சி; நாடகக் கண்காட்சி; வரலாற்றுக்காட்சி யணி; ஓவியப் பல்வண்ணக்காட்சி; அணிவரிசைக்காட்சி; வெற்றாரவாரம், புறவண்ணத்தோற்றம்.
pa'geantry, *n.* பகட்டாரவாரக் காட்சி; வெற்றாரவாரத் தோற்றம்.
Pa'gett, M.P., *n.* சென்றிருக்கும் நாட்டைப்பற்றி அறிய வேண்டுவன யாவும் சில மாதங்களுக்குள் அறிந்துவிடுவதை எதிர்பார்க்கும் பிரயாணி.
pa'ginal, *a.* பக்கங்கள் சார்ந்த; பக்கவரிசையான; பக்கங் கள் அடங்கிய; பக்கத்துக்குப் பக்கம் இணையான.
pa'ginate, *v.* பக்கவரிசைப்படுத்து, பக்கவரிசை எண்குறி.
pagina'tion, *n.* பக்க வரிசைப்பாடு, பக்க வகுப்பு; பக்க எண்குறியீட்டு முறை.
pa'ging, *n.* பக்க எண்குறிப்பீடு; பக்கக் குறியீட்டுமுறை.
pagod'a, *n.* கோபுரம்; கோயில்; தூபி; கோட்டம், புத்த விகாரம்; தூபிப்பாணியில் அமைந்த கட்டிடம்; வராகன், தென்னிந்திய பழம்பொன் நாணயம்.
pagod'a-tree, *n.* வராகன்கள் காய்ப்பதாகக் கற்பனை செய்யப் பட்ட மரம்.
pagur'ian, *n.* யோகி நண்டு, யோகிபோன்ற தோற்றம் காட்டும் நண்டு வகை; *a.* யோகி நண்டுக்குரிய.
pah, *int.* வெறுப்புக்குறிப்பு.
paid, *v.* pay என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.
pail, *n.* வாளி, மரத் தூக்குதொட்டி; வாளி அளவு.
paillasse', *n.* வைக்கோல் பையுறை, வைக்கோல் மெத்தை.
paillette', *n.* மினுக்கத் துணுக்கு, மெருகுச் சாயத்தில் பயன் படும் பளபளப்பான உலோகத் துகள்.
pain, *n.* நோவு, வேதனை; மனத்துன்பம், மனத்துயர்; *v.* நோவு உண்டுபண்ணு; துன்புறுத்து; நோவுகொள், துன்புறு.
pained, *a.* துன்புற்ற; துயரார்ந்த; நோவுறுகிற; வருத்தங் கொள்கிற; கவலையார்ந்த.
pain'ful, *a.* நோவுதருகிற; துன்பந்தருகிற; துன்பம் நிறைந்த, வருந்தி உழைக்கவேண்டிய; கவலை எடுத்துக் கொள்ளவேண்டிய.
pain'less, *a.* நோவற்ற; நோவுதராத; வருத்தந் தேவையற்ற.
pains, *n. pl.* பிள்ளைப்பேற்று வேதனை; கடுமுயற்சி, மெய் வருத்தம்.
paint, *n.* சாயம்; முகப்பூச்சு வண்ணப்பொருள்; *v.* வண்ணந் தீட்டு; ஓவியந் தீட்டு; அணிசெய், ஒப்பனை செய்; உருவகப் படுத்திக் காட்டு, சொல்லோவியந் தீட்டு; சாயம்பூசு; வண்ணந் தோய்வி; முகத்துக்குச் சாயமிடு; (தொ.) paint out, சாயம் மேலிட்டு உருத்தெரியாமல் அழி; paint the lily, அழகினை அழகு செய்; paint the town red, கலவரமாக எழு.
paint'ed, *a.* சாயம்பூசிய; அணி செய்த; (தொ.) Painted Lady, வண்ணத்துப்பூச்சி வகை.
paint'er[1], *n.* ஓவியர்; சாயமிடுபவர்; (தொ.) painter's colic, ஈயச்சாயமிடுபவர்களுக்கு அடிக்கடி வரும் வயிற்றுவலி.
paint'er[2], *n.* படகைக் கப்பலுடன் பிணைக்குங் கயிறு; (தொ.) cut the painter, குடியேற்ற நாட்டு வகையில் பிரிவு ஏற்படுத்து.
paint'ing, *n.* ஓவியம்; ஓவியக்கலை.
paint'y, *a.* சாயஞ் சார்ந்த; வண்ணமிகையுடைய.
pair, *n.* இணை, இரண்டன்தொகுதி; சோடி, இணையாக வழங்கும் பொருள்களின் ஒரு தொகுதி; கத்தரி-குறடு-காற் சட்டை முதலியன போன்று இருபகுதிகள் இணைந்தே வழங் கும் இரு கவர்ப்பொருள்; மணத்துணைவர்; கணவன் மனை வியர்; மணமாகிய காதல்துணைவர்; இணைகாதலர்; ஒரு நுகத்துக் குதிரை இணை; சட்டமாமன்றத்தில் ஒருங்கு இசை வுடன் வராதிருக்கும் இணைதுணைவோர்; இணைதுணைவ ராகத்தக்க எதிரிணை துணைவோர்; இணைதுணைவோருள் ஒருவர்; எதிரிணை; விலங்கிணை; ஒத்த இணை; ஈடுசோடு, ஒப்புடைய எதிரிணை; படிக்கட்டு இரட்டை; *v.* இணைவுறு; காதலில் இணை; திருமணத்தில் இணை; இணைவிழைச்சில் ஈடுபடு; எதிர்பாலாருடன் கூடி இணை; எதிர்பாலுடன் இணை; சோடியாக்கு; இணையிணையாக வகுத்தமை; சோடியாகு; இணையிணையாக அமை; எதிரிணையாயிரு; இணைகூடு, ஒருங்கிணை; சட்டமாமன்றத்தின் எதிர் உறுப்பினர் இருவர் வகையில் ஒத்து முடிவுசெய்து வராமலிரு; (தொ.) pair off, இரண்டிரண்டாக வை, இரட்டையாக அடுக்கு; pair royal, ஒரே இனப்பிரிவு சார்ந்த மூன்று சீட்டுக்களின் தொகுதி; ஒத்த எண்ணைக் கொண்ட மூன்று கவற்றுக்காய்கள்.
pair'-horse, *a.* இரட்டைக் குதிரைகளுக்குரிய.
pair'-oar, *n.* இரட்டைத் துடுப்புப் படகு.
paja'mas, *n. pl.*=pyjamas.
pal, *n.* தோழர், நண்பர், துணைவர்; *v.* இணைந்திரு; தொடர்புகொள், கூட்டாளியாயிரு.
pal'ace, *n.* அரண்மனை, அரசமாளிகை; கிறித்தவசமயத் தலைவர் இருப்பிடம்; அகல்மாட மாளிகை; இன்பமாளிகை, கேளிக்கை விருந்தாட்டு மனை; (தொ.) palace car, இன்ப வாய்ப்புக்கள் அமைந்த புகைவண்டிப் பெட்டி.
pal'adin, *n.* பழங்கால பிரஞ்சு நாட்டு மன்னன் சார்லிமேன் (Charlemagne) அரசவைப் பெருமக்கள் பன்னிருவருள் ஒருவர்; அருஞ்செயல்வீரன், வீரத்திருவாளன்.
palaeoarc'tic, *a.* பழைய உலகின் வடபகுதி சார்ந்த, வட ஆசிய ஐரோப்பிய பரப்புக்குரிய.
palaeocrys'tic, *a.* தொல்பழங்காலத்திலிருந்தே உறைந்த பனிக்கட்டி சார்ந்த.
palaeog'raphy, *n.* தொல்லெழுத்துக் கலை.
palaeolith'ic, *a.* பழைய கற்கருவிகளாற் குறிக்கப்பட்ட; பழங்கற்காலஞ் சார்ந்த.
palaeontol'ogy, *n.* புதைபடிவ ஆய்வு நூல்.
pal'aeothere, *n.* சிறு தும்பிக்கைபோன்ற உறுப்பும் குளம்பு களும் கொண்ட பன்றியொத்த வழக்காற்றுப்போன பால்குடி விலங்குவகை.
palaeozo'ic, *a.* (மண்.) தொல்லுயிரூழி சார்ந்த.
palaes'tra, *n.* களரி, மற்போர்ப் பயிற்சி நிறுவனம்.

pal'afitte, *n.* சுவிட்சர்லாந்திலும் வட இத்தாலியிலும் கம்பங்கள் மீதமைந்த வரலாற்றிற்கு முற்பட்டகால ஏரிக்குடிசைகள்.

palankeen', palanquin', *n.* பல்லக்கு, சிவிகை; மூடு வண்டி.

pal'atable, *a.* நாவுக்கினிய; சுவையார்ந்த; மனத்திற்குப் பிடித்தமான.

pal'atal, *n.* அண்ண ஒலி; இடைநா இடையண்ண ஒலி; *a.* அண்ணத்திற்குரிய; இடைநா இடையண்ணத்திற் பிறக்கிற.

pal'ate, *a.* அண்ணம்; முதுகெலும்புடையவற்றின் மேல்வாய்; சுவையுணர்வு, சுவைப்புலன்; மனச்சுவை, மனவிருப்பம்.

pala'tial, *a.* மாளிகை போன்ற; பீடுறு தோற்றமுடைய.

palat'inate, *n.* ஆட்சியுரிமை உடைய பெருமகனின் கீழுள்ள நிலப்பகுதி; டர்ஹாம் (Durham) பல்கலைக்கழகத்தில் போட்டி விளையாட்டுக்களில் அணியப்படும் இள ஊதா நிறம்; (தொ.) the Palatinate, the Rhine Palatinate, அரசருக்கான உரிமைகளும் மதிப்புமுடைய பெருமகனின் ஆட்சிக் கீழிருந்த பழைய செர்மானிய பேரரசு.

pal'atine[1], *n.* மகளிரின் கம்பளித் தோள்குட்டை.

Pal'atine[2], *a.* கோமகன் வகையில் மன்னருக்குமட்டுமே உரிய ஆட்சியுரிமைகளையுடைய.

pal'atine[3], *a.* அண்ணத்துக்குரிய, அண்ணஞ் சார்ந்த; (தொ.) palatine bones, பல்லண்ணத்தை உருவாக்கும் இரண்டு எலும்புகள்.

pal'atogram, *n.* அண்ண ஒலிப்பிறப்பு விளக்கப்படம், ஒலிகளின் பிறப்பில் அண்ணத்துக்குரிய பங்கினை விளக்குதற்குரிய உருவப்படம்.

pala'ver, *n.* கலந்து பேசுங்கூட்டம்; ஆப்பிரிக்க பழங்குடியினருடன் கூடிப்பேசுங்கூட்டம்; ஆரவாரப்பேச்சு; வாத ஆரவாரம்; வீண்வீாதம்; ஏமாற்றுப்பேச்சு; *v.* மட்டுமீறிப் பேசு; வீண்பேச்சுப் பேசு; முகப்புகழ்ச்சி செய்; கெஞ்சிக் காரியமாற்று.

palay', (த.) *n.* பாலைமரம்.

pale[1], *n.* வேலிக்கான கூர்முனையுடைய மரத்துண்டு; மர முளை, கிராதிக்கம்பு; வேலி; எல்லை; (கட்.) கேடயத்தின் மையத்திலுள்ள செங்குத்தான கோடு; (தொ.) the English Pale, ஆங்கிலேயர்கள் ஆட்சியிலிருந்த அயர்லாந்து நாட்டுப் பகுதி.

pale[2], *a.* வெளிறிய, வெளுத்த; மங்கலான, மங்கல் நிற முடைய; ஒளிமழுங்கலான; *v.* வெளிறிப் போ; வெளிறச் செய்.

paled, *a.* வேலியிடப்பட்ட, முளைகளால் வேலி சூழப்பட்ட.

pales'tra, *n.* = palaestra.

pal'etot, *n.* தளர்ச்சியான மேலங்கி.

pal'ette, *n.* ஓவியர் வண்ணத்தட்டு; ஓவியர் பயன்படுத்தும் வண்ணம்; ஓவியர்வண்ண வகை; ஓவியர் வண்ணக்கலப்பு.

pal'ette-knife, *n.* வண்ண அலகுக்கத்தி, வண்ணங்கள் கலக்கப் பயன்படும் மெல்லிய எஃகு அலகுடைய கத்தி.

pal'frey, *n.* மகளிர் ஏறிச்செல்லும் மட்டக்குதிரை.

Pa'li, *n.* புத்தசமயத்தவரது புனிதமொழி, பாளி.

pal'ikar, (கிரே.) *n.* கிரேக்க அல்லது அல்பேனிய படைத் தளபதியின் விடுதலைப் போராட்டகாலக் குழுவின் உறுப்பினர்.

pal'impsest, *n.* அழித்தெழுதத் தக்க வரைவு மூலப்பொருள்; *a.* முதற்படியை அழித்து அதன்மேல் இரண்டாம் முறை எழுதப்பட்ட.

pal'indrome, *n.* இருவழி ஒக்குஞ்சொல்; (எ-டு. மோரு தருமோ) முன்பின் இருவழியும் ஒத்த எழுத்துக்கோப்புடைய செய்யுள், மாலைமாற்று; *a.* இருவழியும் ஒக்குஞ் சொல்லுடைய, மாலைமாற்றுான.

pal'ing, *n.* இடுமுள் வேலி.

palingen'esis, *n.* புத்துயிர்ப்பு, புத்துயிரளிப்பு; புதுமலர்ச்சியூட்டல்; (உயி.) முன்னோர் பண்புகள் உள்ளவாறே மாறுது உருவாதல்.

pal'inode, *n.* மாறுபடக் கூறுங் கவிதை; கொள்கை கைதுறப்பு.

palisade', *n.* கம்பிவேலி; குச்சிவேலி, கூரிய முளைகளால் ஆன அடைப்பு; (படை.) திண்ணிய கழியரண்; *v.* வேலியிட்டு அடை, வேலி சூழ், வேலியிடு.

pal'ish, *a.* சற்றே வெளுத்துப்போன, வெளிறிய.

pall[1], *n.* பிணச்சீலை, பிணப்பேழை அல்லது கல்லறைமேல் விரிக்கப்படுங் கருமை அல்லது ஊதா அல்லது வெள்ளை மென் பட்டினுலான துணி; போப்பாண்டவர் அல்லது மாவட்டக் கிறித்தவ சமயத்தலைவர் அணியுங் கம்பளியுடை; மேலங்கி, மேலாடை.

pall[2], *v.* சுவையற்றுப் போ; ஊக்கங்குன்றச்செய்; வெறுப்பூட்டு, சலிப்பூட்டு.

Pallad'ian, *a.* (க-க.) பதினாறும் நூற்றாண்டின் இத்தாலிய பாணிசார்ந்த.

pallad'ium[1], *n.* பாலாஸ் (Pallas) என்ற பெண் தெய்வத்திற்குரிய டிராய் (Troy) நகர்ப் பாதுகாப்புச் சிலை; பாதுகாப்பு; *pl.* pallad'ia.

pallad'ium,[2], *n.* விழுப்பொன் வகைத் தனிமம், பிளாட்டின (platinum) உலோகக் குழுவைச் சார்ந்த வெண்ணிற உலோகத் தனிமம்.

pall'bearer, *n.* பிணப்பேழை தூக்குபவர்.

pall'et, *n.* வேட்கோவர் மரத்துடுப்பு; ஓவியரின் வண்ணத் தட்டு; சக்கர இயக்கத்தை மாற்றப் பயன்படும் பொறியின் கைப்பிடி; இசைக்கருவியின் காற்றுப் பெட்டியில் ஒவ்வொரு குழலுக்கும் அடியிலுள்ள தடுக்கிதழ்.

pall'iasse, *n.* = paillasse.

pall'iate, *v.* மட்டுப்படுத்து; தளர்த்து; நோயைத் தணிவி; குறை பொருட்படுத்தாதிரு.

pallia'tion, *n.* கடுமைத்தணிவு.

pall'iative, *a.* அப்பொழுதைக்குக் குறைக்கிற, தணிக்கிற, ஆற்றுகிற, தளர்த்துகிற.

pall'id, *a.* வெளுத்த, வெளிறிய.

pall'ium, *n.* கிரேக்கரிடையே ஆண்பாலார் அணியும் நீள் சதுர அங்கி; மாவட்டக் கிறித்தவ சமயத்தலைவரின் கம்பளி உடுப்பு; நத்தையின் புறமடிப்புக்கள்.

pall'-mall', *n.* வளையப்பந்தாட்டம், நீண்டொடுங்கிய வழியில் தொங்கவிடப்பட்ட இரும்பு வளையங்களின் ஊடாகப் பந்து செலுத்தப்படும் பந்தாட்ட வகை; வளையப்பந்தாட்டத் திற்குரிய நீண்டொடுங்கிய சந்துவழி.

pall'or, *n.* வெளிறிய நிறம்; வெளிறிய தோற்றம்.

pall'y, *a.* (பே-வ.) இணக்கமான, நட்பான.

palm[1], *n.* புல்லின மரம், தென்னை-பனை போன்ற ஒற்றைத் தடி மரவகை; வெற்றிக்கு அடையாளமான பனைவகைக் குருத்து; நய நேர்த்தி; பரிசு, வெற்றியில் கிடைத்த பொருள்; கிறித்தவர்களுக்குச் சிறப்பான விழாக்களிற் பயன்படுத்தப் படும் குருத்தோலை; (தொ.) Palm Sunday, இயேசுநாதர் மீட்டுயிர்த்தெழுந்ததன் நினைவான குருத்தோலை விழாநாள்.

palm[2], *n.* உள்ளங்கை; அங்கைவரை மூடுங் கையுறை; அங்கை அகலம், ஏறத்தாழ நாலு அங்குலம்; உள்ளங்கை நீளம், ஏறத்தாழ எட்டு அங்குலம்; *v.* சூழ்ச்சியால் ஏய்த்துச் செயலாற்று; திறமையால் வெற்றியுறு; உள்ளங்கையால் சிட்டு-கவறு முதலியவற்றை மறை; உள்ளங்கையால் தடவு; கைக்கூலி கொடு, கையுறை அளி; (தொ.) grease person's palm, கைக்கூலி கொடுத்து வசப்படுத்து; sailmaker's palm, விரற்காப்பு ஈயக்குமிழ்களுடன் இணைக்கப்பட்ட உள்ளங் கைத் தோல்வார் உறைகாப்பு.

Pal'ma Chris'ti, *n.* ஆமணக்கு வகை சார்ந்த செடியினம்.

pal'mar, *a.* உள்ளங்கை சார்ந்த; உள்ளங்கையிலுள்ள.

pal'mary, *a.* வாகையேந்திய ; புகழ்பெற்ற, சிறப்புவாய்ந்த.

pal'mate, pal'mated, *a.* உள்ளங்கை வடிவான.

pal'mer, *n.* புண்ணிய யாத்திரையிலிருந்து குருத்தோலையோடு திரும்புங் கிறித்தவர் ; எருசலேம் சென்றுவந்தவர் ; வறுமை வாழ்வை நோன்பாக மேற்கொண்ட நாடுசுற்றுந் துறவி ; கேடு விளைவிக்கும் மயிரடர்ந்த கம்பளிப் புழு வகை; மயிரார்ந்த செயற்கை ஈ.

pal'mer-worm, *n.* கேடு விளைவிக்கும் மயிரடர்ந்த கம்பளிப் புழு வகை.

palmett'o, *n.* குட்டையாயுள்ள விசிறிப்பனை ; கூழைப்பனையினங்களின் வகை.

pal'miped, pal'mipede, *n.* தோலடியுள்ள பறவை ; *a.* தோலடியுள்ள.

pa'lmistry, *n.* கைவரை நூல், இரேகை சாத்திரம்.

palm'-oil, *n.* புல்லின மர எண்ணெய்.

pa'lmy, *a.* புல்லின மரவகை சார்ந்த; பனையின மரங்கள் நிரம்பிய; வெற்றிவிழாக் கொண்டாடுகிற; வளமிக்க, சிறப்பு மிக்க.

palmyr'a, *n.* பனைமரம்.

palp, *n.* பூச்சிகளின் உணர்கொம்பு.

pal'pable, *a.* தொடக்கூடிய ; உணரக்கூடிய ; புலன்களால் எளிதில் அறியக்கூடிய, மனத்தால் அறியக்கூடிய.

pal'pate, *v.* தொட்டுக் கையாளு ; மருத்துவ ஆய்வில் தொட்டுச் சோதனைசெய்.

pal'pebral, *a.* கண்ணிமை சார்ந்த; கண்ணிமைகளுக்குரிய.

pal'pitate, *v.* துடி ; நடுங்கிடு.

palpita'tion, *n.* துடிப்பு ; கடும் உழைப்பு-நோய்-கவலை ஆகியவற்றால் ஏற்படும் மிகுதியான நெஞ்சுத்துடிப்பு.

pal'pus, *n.*=palp.

pa'lsgrave, *n.* அரசருக்கு மட்டுமேயுள்ள ஆட்சியுரிமைகளைத் தன் ஆட்சிவரம்பிற்குள் கொண்ட கோப்பெருமகன்.

pa'lstave, *n.* வெண்கல ஊழிக் கோடரி.

pal'sy, *n.* முடக்குவாதம் ; முழுதும் உதவியற்றநிலை ; முழுதும் உதவியற்றதாக்கும் பண்பு ; *v.* முடக்குவாதப்படுத்து ; மரத்துப் போகச் செய் ; உணர்வுகெடு.

pa'lter, *v.* இரண்டுபொருள்படப் பேசு; இரண்டகமாக நட, மாறாட்டஞ் செய் ; போக்குக்காட்டி ஏய் ; சிறு செய்திக்குச் சச்சரவு செய், அற்பத்திற்கு மல்லாடு; முக்கியத்துவம் கவனியாமல் விளையாட்டுத்தனமாக நடந்துகொள்.

pa'ltry, *a.* அற்பமான, சிறுதிறமான ; வெறுக்கத்தக்க ; பயனற்ற.

palud'al, *a.* சதுப்புநிலஞ்சார்ந்த ; சதுப்பு நிலத்திற்குரிய ; முறைக் காய்ச்சலுக்குரிய.

pal'y, *a.* (செய்.) சற்றே வெளுத்த.

pam, *n.* சீட்டாட்ட வகையில் உச்சமதிப்புடைய காலாட் சீட்டு.

pam'pas, *n. pl.* தென் அமெரிக்காவில் அமேசான் ஆற்றின் தென் பகுதியிலுள்ள மரங்களற்ற பரந்த சமவெளிப்பகுதி.

pam'pas-grass, *n.* தென் அமெரிக்காவினின்று ஐரோப்பாவிற்குக் கொண்டுவரப்பட்ட வெண்பட்டுப்போன்ற நீள் சூட்டுப் பெரும் புல்வகை.

pam'per, *v.* அதிக சலுகை காட்டு ; இனிய உண்டி ஊட்டு ; முழுதுந் திருப்தி செய் ; (தொ.) pampered menial, கெஞ்சிப் பிழைப்பவன்.

pamper'o, (ஸ்பா.) *n.* தென் அமெரிக்காவில் மேற்புறக்கடல் நோக்கி வீசும் கடுங்குளிர்காற்று ; *pl. pamper'os.*

pamph'let, *n.* துண்டு வெளியீடு ; விளம்பரச் சிற்றேடு.

pamphleteer', *n.* துண்டு வெளியீட்டு எழுத்தாளர் ; சிறு விளம்பர ஏட்டு ஆசிரியர் ; *v.* துண்டு வெளியீடுகள் உருவாக்கு.

Pan[1], *n.* பண்டைக் கிரேக்கரின் நாட்டுப்புறத் தேவதை ; இயற்கைத் தெய்வம்; புறச்சமயப் பரப்பு; புறச்சமயப் பண்பு, பொய்த் தெய்வ வழிபாடு ; இயேசுநாதர் காலத்துக்கு முன் இருந்த உலகம் ; ஒழுக்கத்துக்குப் புறம்பான உலகம்.

pan[2], *n.* உலோகத்தட்டு ; மட்கலத்தாலம் ; கொதிகலத் தட்டம்; தட்டுப்போன்ற கொதிகலம்; துப்பாக்கியின் பற்றுவாய் ; நிலப்பள்ளம் ; மண்ணின் கீழாயுள்ள கெட்டியான படுகை ; *v.* தாலத்திலிட்டுப் பொற்சன்னங்களைக் கழுவு ; தங்கம் தோன்றப்பெறு ; வெற்றியடை ; நன்றாக நடைபெறு, நல்லபடி இயங்கு.

pan[3], (இ.) *n.* வெற்றிலை.

panace'a, *n.* அனைத்துநோய் மருந்து, சஞ்சீவி.

panache', *n.* சிகையணி இறகு, தலைச்சூட்டு; பகட்டு; வீம்பு நடை, வீறுப்புப் பேச்சு.

pana'da, *n.* கூழாக வேகவைத்து நறுமணம் ஊட்டப்பட்ட அப்பம்.

pan-Af'rican, *a.* ஆப்பிரிக்கர்கள் அனைவரையுஞ் சார்ந்த ; ஆப்பிரிக்கர்கள் முழுமைக்குமான.

Panama', Panama hat, *n.* வைக்கோல் போன்ற பொருளாற் செய்யப்படும் நேர்த்தியான நெகிழ்வுடைய தொப்பி வகை.

pan-Ang'lican, *a.* இங்கிலாந்தின் திருச்சபையோடு அதன் கிளைகளையும் உள்ளடக்கிய.

pan'atrope, *n.* ஒலிபெருக்கிமூலம் இசைத்தட்டுக்களின் படியெடுக்கும் மின் அமைவு.

pan'cake, *n.* பணியார வகை, தோசை, முட்டை-மாவு-சர்க்கரை-பால் முதலியன கலந்து தட்டில் வார்த்தெடுக்கப்படும் மெல்லிய அடைவகை ; விமானம் தட்டைச் சிறகுகளோடு கீழிறங்குதல்; (தொ.) flat as a pancake, முழுதும் தட்டையான.

pancha'yat, (ச., த.) *n.* பஞ்சாயத்து, ஐம்பெருங்குழு.

panchromat'ic, *a.* (நி-ப.) எல்லா நிறங்களையும் ஒருபடித்தாகக் கூருணர்கிற.

pan-cos'mism, *n.* பருப்பொருள் சார்ந்த இயலுலகு மட்டுமே மெய்யானதென்னுங் கோட்பாடு.

pancrat'ic, *a.* மல்லர் குத்துச்சண்டை சார்ந்த ; மூக்குக் கண்ணாடிவில்லை வகையில் பல பாகைகளிற் பருமைப்படுத்தத் தக்க.

pancra'tium, *n.* மல்லர் குத்துச்சண்டை.

panc'reas, *n.* கணையம், செரிமானத்துக்கேற்ற நீர்சுரக்கும் இரைப்பைக்கு அருகிலுள்ள சுரப்பி.

pancreat'ic, *a.* கணையஞ் சார்ந்த; (தொ.) pancreatic juice, கணைய நீர்.

pan'creatin, *n.* கணைய நீரின் செயற்படு கூறுகளில் ஒன்று; விலங்குகளின் கணையங்களிலிருந்து வடித்திறக்கப்படுஞ் செரிமான நீர்மம்.

pan'da, *n.* செங்கரடிப் பூனை, இமயமலைப் பகுதிசார்ந்த கரடியின விலங்கு வகை.

Pandae'an, Pande'an, *a.* கிரேக்க நாட்டுப்புறத் தெய்வத்தினைச் சார்ந்த ; (தொ.) Pandean pipe, வரிசையான குழல்களையுடைய இசைக்கருவி வகை.

pan'dects, *n. pl.* பண்டை ரோமப் பேரரசர் ஜஸ்டினியன் (Justinian) கட்டளைப்படி தொகுக்கப்பட்ட 50 சுவடிகளில் அடங்கிய ரோமப் பொதுநிலைச்சட்டம்; சட்டங்களின் முழுத் தொகுதி.

pandem'ian, *a.* இழிதகைமையான, உடலின்பஞ் சார்ந்த ; (தொ.) pandemian venus, பாலுணர்ச்சி சார்ந்த உடலின்பக் காமம்.

pandem'ic, *n.* பெரும்பரப்புத் தொத்துநோய் ; *a.* பெரும் பரவலான.

pandemon'ium, *n.* பேய்க்கூடம்; ஒழுங்கற்ற வன்செயலும் பேய்க்கூச்சலும் நிகழுமிடம் ; பெருங்குழப்பம்.

pan'der, *n.* பரத்தமைத் தரகர்; தீய சூழ்ச்சிகளுக்குத் துணை செய்பவர்; *v.* இழிந்த உணர்ச்சிகளுக்கு இடந்தேடிக்கொடு; தீய சூழ்ச்சிகளுக்குத் துணைசெய்.

pandicula'tion, *n.* காலை நீட்டிக்கொண்டு கொட்டாவி விடுதல்.

pan'dit, (ச.) *n.* அறிஞர், மொழிப்புலவர்; இந்துசமய சாத்திர வல்லுநர்; இந்திய சட்ட நிபுணர்; விஞ்ஞானப் புலவர்.

pan'door, *n.*=pandour.

pandor'a, *n.* நரப்பிசைக்கருவி வகை.

Pandor'a's box, *n.* நல்வாழ்வு சாபப்பெட்டி, கிரேக்கப் பழங் கதை மரபில் மனித இனத்தின் துன்பங்களையும் துயரங்களை யும் உள்ளடக்கித் திறந்தபோது சிதறவிட்டதாகக் கருதப் படும் பெட்டி.

pandore', *n.*=pandora.

pan'dour, *n.* முற்கால ஆஸ்திரிய (Austrian) படைத்துறைப் பணியிலிருந்த காலாட்படையினன்; கொள்ளைக்காரன்.

pane, *n.* பலகணிக் கண்ணுடிச்சில்லு; பலகணிச் சட்டத்தின் நாற்கட்டமான கண்ணுடிப்பாளம்; *v.* பலநிறப் பட்டைத் துண்டுகளை இணைத்து உடுப்பு முதலியன ஆக்கு.

panegy'ric, *n.* புகழுரை; *a.* புகழ்சாற்றுகிற, புகழ்பாடுகிற, போற்றுதல் மயமான.

panegy'rist, *n.* புகழ்பாடுபவர், வைதாளிகர், மங்கலம் பாடுவோர்.

pan'egyrize, *v.* புகழ்ந்து பேசு; பாராட்டியெழுது.

pan'el, *n.* சேணத்தின் உள்ளிட்டு நிரப்பிய அணைதுணி; சேணவகை; தாள் நறுக்கு; முறைகாண் ஆயத்தினர் பெயர்ப் பட்டியல்; முறைகாண் ஆயம்; சிறு பெயர்ப்பட்டியல்; வழக்கு விசாரணைக்குட்பட்டவர்களின் தொகுதி; குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் தொகுதி; காப்பீட்டு மனுவாளர் களுக்குப் பணி செய்ய ஒத்துக்கொள்ளும் மாவட்ட மருத்து வர்களின் பட்டியல்; பொட்டிப்பு, கதவு-சுவர்க்காப்பீடு ஆகியவற்றின் பரப்பில் தனி முகப்புக்கூறு; நீள்சதுரத் துண்டு, மகளிர் உடுப்பில் வைத்துத் தைக்கப்படும் வேறு வகை அல்லது நிறமுள்ள துணித்துண்டு; வேலிப்பிரிவு; அகலத்தைவிட நீளம் மிக அதிகமாகவுள்ள பெரிய அளவு நிழற்படம்; அரங்கம், பிரிவு; கூறு; *v.* விலங்குக்குச் சேணம் பூட்டு; சுவர்-கதவு முதலியவற்றில் பொட்டிப்புகள் அமை; வேறுவகை அல்லது வேறுநிறத் துண்டுகளைக் கொண்டு உடுப்பு முதலியவற்றை ஒப்பனைசெய்.

pang, *n.* கடும்வேதனை, இணைவு; சுரீரென்ற நோவு.

pan'gamy, *n.* திடீர்ப்புணர்ச்சி, திடீர்த் திருமணம்.

pan-gen'esis, *n.* உறுப்புமரபுக் கோட்பாடு, உயிர்ப்பொரு ளின் ஒவ்வொரு கூறும் தன்னினம் பெருக்கிக்கொள்கிறதென் னுங் கொள்கை.

pan-Germ'an, *a.* அரசியல் கூட்டமைப்பிலுள்ள செர்மானி யர் அனைவரையுஞ் சார்ந்த, செர்மானியர் அனைவரையுஞ் சார்ந்த.

pangol'in, *n.* எறும்புண்ணும் விலங்குவகை.

pan-Hell'enism, *n.* கிரேக்கர்கள் அனைவருடைய அரசியற் கூட்டமைப்பு.

pan'ic [1], *n.* இத்தாலிய தினைவகையின உள்ளிட்ட புல்வகை களின் பேரினம்.

pan'ic [2], *n.* கிலி, திகில், பீதி, கூட்டத்திற் பரவி ஆட் கொள்ளும் கலவர உணர்ச்சி; அவசரச் செயல்களைத் தூண்டும் திடீர் அச்சம்; அச்சத்தால் ஏற்படும் தன்வயமற்ற மருட்சிநிலை; *a.* அச்ச வகையில் ஆதாரமற்ற, மட்டுக்கு மிஞ்சிய; *v.* திகிலூட்டு, திகிலடை.

pan'icky, *a.* திகில் விளைக்கிற, கிலிகொண்ட.

pan'icle, *n.* (தாவ.) பல்கவர் மலர்க்கொத்து, கலப்பு மஞ்சரி.

pan'ic-mong'er, *n.* திகில் பரப்புபவர், பீதியுண்டாக்குபவர்.

panifica'tion, *n.* பொங்கப்பம் செய்தல், ரொட்டிப் புனைவு.

pan-Is'lam, *n.* இஸ்லாமிய உலகத்தின் கூட்டு; இஸ்லாமிய உலகின் கூட்டமைவுக்கள இயக்கம்; இஸ்லாமிய உலகின் கூட்டிணைவார்வம்.

panjan'drum, *n.* கற்பனை வீரத்திருமகன்.

pan'logism, *n.* இயலுலகு மூலதத்துவத்தின் வெளிப்பாடே என்ற கோட்பாடு.

panlogis'tic, *a.* ஹெகல் (Hegel) என்னும் செர்மன் அறிஞர் கோட்பாட்டின்படி பகுத்தறிவுக்கொத்தது மட்டுமே உண்மை யானதெனக் கருதுகிற.

pann'age, *n.* பன்றி பொறுக்கலுண்டி; காடுகளிற் பன்றி மேய்ப்புரிமை.

panne, *n.* உடுப்புக்குப் பயன்படுத்தப்படும் நீண்ட துய்களை யுடைய மென்துணி வகை.

pann'ier [1], *n.* பொதிவிலங்கின் சுமைகூடை இரட்டைகளில் ஒன்று; தூக்கு கூடை; அறுவை முதலுதவிக் கருவிகளுக் கான மூடிய கூடை; மகளிர் உடையை இடுப்பண்டை ஏந்தலாகக் காட்டுதற்கான புடைப்பமைவு.

pann'ier [2], *n.* (பே-வ.) சட்ட மாணவர் கழகத்தில் மேசை ஏவலாள்.

pann'ikin, *n.* சிறு உலோகக் குடிகலம்; குடிகலத்திலுள்ள பானம்.

pan'oplied, *a.* முழுப் படைக்கவசம் அணிந்துள்ள.

pan'oply, *n.* முழுப் படைக்கவசம்; பகட்டு அங்கி.

panop'ticon, *n.* வட்டக் கண்காணிப்புச்சிறை, காவலர் மைய மான ஓரிடத்திலிருந்துகொண்டு எல்லாக் கைதி அறை களையும் பார்க்கக்கூடிய வட்ட அமைப்புடைய சிறைச்சாலை; பொருட்காட்சி அறை.

panora'ma, *n.* அகல்பரப்புக்காட்சி; உட்சுவர்ச்சுற்று வண்ண ஓவியக் காட்சி; அவிழ்த்து உருளவிட்ட படம்.

panoram'ic, *a.* பரந்த காட்சியுடைய, சுற்றுவண்ணக்காட்சி வாய்ந்த.

pan'-pipe, pan'-pipes, *n.* குழல்வரி இசைக்கருவி, வரிசை யான குழல்களைக்கொண்டு இயன்ற இசைக்கருவி வகை.

pan-Sla'vism, *n.* ஸ்லாவிய இனத்தவர் அனைவரின் அரசியல் ஒற்றுமையியக்கம்.

pansperm'atism, pansperm'y, *n.* இசைவான சூழ்நிலை யில் பெருக்கம் அடையத்தக்க எண்ணற்ற நுண்மங்கள் வளி மண்டலத்தில் நிறைந்துள்ளன என்னுங் கோட்பாடு.

pan'sy, *n.* பல்வண்ண மலர்கள் காடாக வளரும் தோட்டச் செடிவகை; பெண்ணியல்புள்ள இளைஞன்; தன்னொத்த பாலி னருடன் கூடுபவன்.

pant, *n.* மூச்சுத்திணறல், குறுமூச்சு, துடிப்பு; *v.* மூச்சுத் திணறு; மிகவிரும்பு, வேணவாக்கொள்; தவி, பதை, துடி; திணறிக்கொண்டே பேசு.

pantag'amy, *n.* அனைத்துலக பிரமசரியம்.

pantagru'elism, *n.* அகடவிகடம்.

pantalets', pantalettes', *n. pl.* மகளிர் குறுங்காற்சட்டை; மிதிவண்டிக் காற்சட்டை.

Pantaloon' [1], *n.* இத்தாலிய இன்பியல் நாடகத்தில் இறுக்கமான காற்சட்டையணிந்துவரும் நாடகவுறுப்பினர்; கோணங்கி; புல்தடுக்கி.

pantaloon' [2], *n.* (வர.) இறுக்கமான காற்சட்டை, ஒருங் கிணைந்த காற்சட்டையும் காலுறையும்.

pantaloons', *n. pl.* இறுக்கமான காற்சட்டை.

pantech'nicon, *n.* தட்டுமுட்டுப் பொருள்களின் கிடங்கு; (தொ.) pantechnicon van, தட்டுமுட்டுப் பொருள்களை எடுத்துச் செல்லும் மூடுவண்டி.

pan'theism, *n.* அனைத்திறைக்கொள்கை, இயல்வன யாவும் இறையுருவே என்னுங் கோட்பாடு; பலதெய்வ வழிபாடு.

pan'theon, *n.* பல தெய்வக் கோயில்; ஓரின மக்களின் தெய்வங்கள்; புகழடைந்து இறந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ள கட்டிடம்; புகழடைந்து இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னங்களுள்ள கட்டிடம்; பொதுமக்களது பொழுதுபோக்கிற்காக 1772-இல் லண்டனில் திறக்கப்பட்ட கட்டிடம்.

pan'ther, *n.* பெருஞ்சிவிங்கி, சிறுத்தை; *fem.* pan'theress; (தொ.) American panther, புள்ளிப்புலி.

pan'ties, *n. pl.* (பே-வ.) சிறுவர்கள் அணியுங் காற்சட்டை; மகளிர் அணியும் இறுக்கமான குறுங்காற்சட்டை.

pan'tile, *n.* எழுதக வளைவான குறுக்குவெட்டுடன் கூடிய கூரை ஓடு; குழிவான அல்லது குவிவான குறுக்கு வெட்டுள்ள ஓடு.

pantisoc'racy, *n.* எல்லாருக்கும் சரிசம ஆற்றலும் சம நேராட்சி உரிமையும் உடைய சமுதாயம்.

pan'tograph, *n.* தரைப்படம் முதலியவற்றை எந்த அளவிலும் படிசெய்வதற்கான கம்பிச் சட்டம்.

pantolo'gic, *a.* முழுநிறை அறிவுத்தொகுதி சார்ந்த.

pantol'ogy, *n.* முழுநிறை அறிவுத்தொகுதி.

pan'tomime, *n.* (வர.) ரோமன் ஊமைக்கூத்து நடிகர்; போலி மாருட்ட நடிகர்; கோமாளிகளின் கூத்து-நடனம்-பாடல்கள் இவற்றுடன் முடியும் ஆங்கில நாடகக்காட்சி; ஊமைக்கூத்து, அவிநயக்கூத்து; *v.* ஊமைக்கூத்துமூலம் புலப்படுத்து; சைகைமூலந் தெரியப்படுத்து.

pantomorph'ic, *a.* எல்லா வடிவங்களையும் எடுக்கிற.

pantopragmat'ic, *n.* எல்லாவற்றிலும் தலையிடுபவர்; *a.* ஒவ்வொன்றிலும் தலையிடுகிற.

pantoscop'ic, *a.* நெடுந்தூரத்துக்கு எட்டும் பார்வையுடைய.

pan'try, *n.* சரக்கறை, உக்கிராணம்.

pan'tryman, *n.* வீட்டு வேலையாள்.

pants, *n. pl.* (பே-வ.) காற்சட்டை; கடை வழக்கில் நீண்ட இறுக்கமான குறுங்காற்சட்டை.

pan'zer, *n.* போர்க்கவசம்; *a.* போர்க்கவசம் பூண்ட.

pan'zers, *n. pl.* (பே-வ.) கவசம் பூண்ட படைகள்.

pap[1], *n.* குழந்தையுணவு, மெல்லுணவு.

pap[2], *n.* பெண்டிர் மார்புக்காம்பு; ஆடவர் மார்பு மையம்.

papa', *n.* குழந்தை வழக்கில் அப்பா, தந்தை.

pap'acy, *n.* போப்பாண்டவர் பதவி; போப்பாண்டவர் பதவிக்காலம்; போப்பாதிக்கம், போப்பாண்டவர் ஆட்சிமுறை.

pap'al, *a.* போப்பாண்டவரைச் சார்ந்த; போப்பாண்டவர் பதவிக்குரிய.

pap'alism, *n.* போப்பாண்டவர் ஆட்சிமுறை.

pap'alist, *n.* போப்பாண்டவரின் ஆதரவாளர்; போப்பாதிக்கத்தை ஆதரிப்பவர்.

pap'alize, *v.* போப்பாண்டவர் ஆட்சிமுறையாக்கு; போப்பாண்டவர் சார்புடையதாக்கு; போப்பாண்டவரின் ஆதரவாளர் ஆக்கு; போப்பாண்டவரின் ஆதரவாளர் ஆகு.

papav'erous, *a.* கசகசாச் செடிபோன்ற; கசகசாச் செடிக்கு இனமான.

papaw', *n.* பப்பாளிமரம்; பப்பாளிக்காய்.

pap'er, *n.* தாள்; தாள்துண்டு; கழகத்தில் வாசிப்பதற்கான கட்டுரை; பத்திரம்; முறி; செய்தியிதழ், பத்திரிகை; தேர்வு வினாத்தாள்; நுழைவுரிமைச் சலுகையாளர்; தாள் பணம், காசுமுறி; சுவர் பொதிதாள்; பொதிதாள்; தாள் பொதி அளவு; தாள் சார்ந்தது; *a.* தாளடங்கிய; தாளாலான; தாள்போன்ற; தாள்மீது எழுதப்பட்ட; *v.* தாளில் பொதி; தாளால் மூடு; தாளில் மடித்து வை; தாள்விளிம்பு ஒட்டு; தாள் கந்தல் ஒட்டு; தேய்ப்புத்தாளிடு; தாள் பயன்படுத்திச்செய்; (தொ.) commit to paper, எழுதிவை; எழுத்துருவில் பதித்துவை; on paper, எழுத்துருமட்டிலுமான; கொள்கையளவில் திட்டமிடப்பட்ட, செயல்முறைக்கு வராத; தற்காலிகக் கோட்பாடாக ஏற்பட்டிருக்கிற; paper-bag cookery, வெண்ணெய்க் காகிதப்பையில் பல்வகை உணவுப் பொருள்களை வைத்து இளஞ்சூடான அடுப்பின்மேல் ஏற்றிச் சமைக்கும் முறை; paper currency, தாள்நாணயம்; paper money, செலாவணி நாணயமாகப் பயன்படுத்தப்படும் பொருளகமுறி; தாள்பணம்; paper profits, உத்தேச இலாபம்; paper war, paper warfare, தாள்போர், துண்டு விளம்பரங்கள் செய்தித்தாள்கள் மூலமாக நடத்தப்படும் வாக்குவாதம்; put pen to paper, எழுதத்தொடங்கு.

pa'per-back, *n.* தாள் அட்டையிட்ட நூல்.

pap'er-chase, *n.* தாள்துண்டு ஓட்டப்போட்டி ஆட்டம், தாள்துண்டுகளைக் கிழித்துப் போட்டுக்கொண்டே ஓடுபவரைப் பின்பற்றி அத்துண்டுகளைக் கைக்கொண்டு அவரைப் பின்தொடர்ந்து பிடிக்கும் நாட்டுப்புற விளையாட்டு.

pap'er-hanger, *n.* சுவர்களிற் சித்திரப் பூவேலைத்தாள்களை ஒட்டுபவர்.

pap'er-hangings, *n. pl.* சுவர்களில் ஒட்டுதற்கான சித்திரப் பூவேலைத்தாள்.

pap'er-mill, *n.* தாள் ஆலை, தாள் செய்யப்படுந் தொழிற்சாலை.

pap'ers, *n. pl.* ஆளின் அல்லது கப்பலின் அடையாளம் அல்லது மதிப்பு நிலையை எண்பிப்பதற்கான ஆவணங்கள்; (தொ.) send in one's papers, பணி துற.

pap'er-stain'er, *n.* சுவரில் ஒட்டப்படும் ஒப்பனைத்தாள்கள் செய்பவர்.

pap'er-weight, *n.* தாட்கட்டை, தாள் பறக்காமல் மேல் வைக்கப்படும் பளுவுடைய பொருள்.

pap'ery, *a.* தாள்போன்ற.

pap'ier mach'e, *n.* பெட்டி-தட்டு முதலியன செய்வதற்கான தாள் ஊறல் கூழ்மொத்தை.

papiliona'ceous, *a.* (தாவ.) வண்ணத்துப் பூச்சியுருவுடைய.

papill'a, *n.* காம்புபோன்ற உறுப்புப்பகுதி; (தாவ.) சதைப் பற்றுள்ள சிறு முகிழ்; *pl.* papill'ae.

pap'illary, *a.* சதைக்காம்பு போன்ற, சினப்புச்செறிந்த.

pap'illate, *a.* சதைக் காம்புகளையுடைய.

pap'illose, *a.* சதைக்காம்புகளையுடைய, சினப்புச்செறிந்த, கரணைகள் நிறைந்த.

pap'ist, *n.* போப்பாண்டவர் ஆதிக்கத்தை ஆதரிப்பவர்; ரோமன் கத்தோலிக்க கிறித்தவர்.

papoosh', **papouche'**, *n.* செருப்பு வகை.

papp'us, *n.* (தாவ.) துய்ச்சிறை.

pap'rika, *n.* அங்கேரிய (Hungarian) நாட்டிலுள்ள சிவப்பு மிளகு வகை.

paps, *n. pl.* மலைக் குவடுகள்.

pap'ula, **pap'ule**, *n.* பரு, கொப்புளம்; செடிகளிற் காணப்படும் சதைப்பற்றுள்ள சிறுமுகிழ்; *pl.* pap'ulae, pap'ules.

papyra'ceous, *a.* தாளின் இயல்புவாய்ந்த; தாளைப்போல் மெல்லிய.

papy'rograph, *n.* பொறித்தகட்டுப் படியெடுப்புக்கருவி, செதுக்குத்தாள் தகட்டினைக்கொண்டு ஆவணங்களுக்குப் படியெடுப்பதற்கான அமைவு.

papyrog'raphy, *n.* பொறித்தகட்டுப் படியெடுப்பு முறை, படம் முதலியன தாளிலிருந்து துத்தநாகத்தகடு முதலியவற்றிற்கு மாற்றப்படுகிற படியெடுக்கும் முறைகள்.

papyrol'ogist, *n.* பண்டைய புல்தாள் வரைவு ஆய்வாளர்.

papyrol'ogy, *n.* பண்டைய புல்தாள் வரைவு ஆய்வுத்துறை.

papy'rotype, *n.* = papyrography.

papyr'us, *n.* கோரையின நாணற்புல் வகை, ஓலைநாணல்; கோரையின நீர்ப்பூண்டிலிருந்து எகிப்தியர் முதலியோர் செய்த வரைதாள்; நாணற்புல் தாளில் எழுதப்பட்ட கையெழுத்துப்படி; *pl.* papy'ri.

par [1], *n.* சமநிலை; படியளவை; சராசரி; பங்கு-பங்குமுதல் ஆகியவற்றின் முகப்புவிலை; குழிப்பந்தாட்ட வகையில் முழு ஆட்டத்தில் ஒரு குழிக்கு எடுக்க வேண்டிய வீச்சு அளவு; ஆட்டத்தில் ஒரு தடவைக்கு எடுக்க வேண்டிய அடிகளின் அளவு; (தொ.) above par, முகப்பு விலைக்கு மேற்பட; ஆதாயத்துடன்; சார்வு நலத்தோடு; at par, முகப்பு மதிப் பின்படி; below par, முகப்பு விலைக்குக் குறைவாக, தள்ளு படி செய்து கொடுத்து; on a par with, சரிசம நிலையில், சம மாக, ஒத்த நிலையில், ஒத்த படித்தரத்தில்; par of exchange, நாட்டின் நாணய மதிப்புக்கு மற்றொரு நாட்டின் நாணய மதிப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றுவீதம்.

par [2], *n.* (பேஃவ.) பத்தி, பிரிவு.

par [3], *n.* = parr.

parab'asis, *n.* கிரேக்க இன்பியல் நாடகங்களில் அவை யோரை முன்னிலைப் படுத்திக் கவிஞன் பெயரால் பின்னணி இசைக்குழுவினர் பாடும் பாடல்.

pa'rable, *n.* நீதிக்கதை; உருவகக் கதை; பழமொழி.

parab'ola, *n.* சாய்மாலை வட்டம், குவிகை வடிவின் சாய் பக்கங்கள் ஒன்றற்கிணைவான குறுக்குவெட்டிற்படும் நீள் வட்ட வடிவம்.

parabol'ic, parabol'ical, *a.* உருவகமாயமைந்த; நீதிக் கதை போன்ற; நீதிக்கதைக்குரிய; சாய்மாலை வட்டம் போன்ற; சாய்மாலை வட்டத்துக்குரிய; சாய்மாலை வட்ட வடிவான.

parab'oloid, *n.* சாய்மாலை வட்டத் திண்மம், ஒருதிசைக் குறுக்குவெட்டுத் தளங்கள் சாய்மாலை வட்டமாயிருக்கும் பிழம்புரு, சாய்மாலை வட்டச் சுழற்சியால் ஏற்படும் பிழம்பு வடிவம்.

parach'ronism, *n.* காலக்கணிப்பு வழு, கால ஆராய்ச்சித் தவறு.

pa'rachute, *n.* வான்குடை மிதவை, வானூர்தியிலிருந்து பத்திரமாகக் கீழே இறங்கவுதவுங் குடைபோன்ற கருவி; *v.* வான்குடை மிதவை உதவிகொண்டு வானூர்தியிலிருந்து கீழே குதித்து இறங்கு; வான்குடை மிதவைமூலமாக நிலத் தில் இறக்கு; (தொ.) parachute flare, இலக்குப் பரப்பினை ஒளி விளக்கப்படுத்துவதற்காக வான்குடை மிதவைமூலம் கீழே எறியப்படும் பந்தம்; parachute mine, வானூர்தியி லிருந்து வான்குடை மிதவைமூலம் கீழே வீசப்பட்ட வெடி மருந்துகள் கொண்ட பொதியுறை: parachute troops, வான் குடைப் படை, வான்குடை மிதவைமூலம் இறக்கப்படும் படைவீரர் தொகுதி.

pa'raclete, *n.* வழக்குப் பரிந்துரையாளர்; தூய ஆவிக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று.

parade', *n.* படையணித் திரட்டு; நாள்முறை அணிவகுப்பு; அணிவகுப்புக் காட்சி; அணிவகுப்புக்களம், படையணிச் சதுக்கம்; பொதுவெளி அரங்கம்; *v.* படையணி திரட்டு; காட்சிக்காக அணிவகுப்பு நடத்து; படையணியாக ஊர் வலஞ் செல்; பகட்டாரவாரமாகச் செல்; பகட்டாரவாரஞ் செய்; பகட்டாக விளம்பரப்படுத்து.

pa'radigm, *n.* இலக்கணத்தில் மேற்கோள் வாய்பாடு, கட்டளைப்படிவ வாய்பாடு.

pa'radise, *n.* விண்ணுலகு, சுவர்க்கம், துறக்கம், ஏதேன் தோட்டம்; பேரின்ப இடம்; பெருமகிழ்வுநிலை; (தொ.) bird of paradise, நியூகினியிலுள்ள காக இனஞ்சார்ந்த அழகு வண்ணச் சிறகுகளையுடைய பறவை வகை; earthly paradise, வையகத் துறக்கம், ஏதேன் தோட்டம்; fool's paradise, மெய்யல் உலகு, போலி இன்பநிலை.

pa'rados, *n.* மதகரண் அடைகரை.

pa'radox, *n.* முரணுரை, பொருந்தாவுரை; புதிர், முரண்படு செய்தி; புதிரீடு, முரண்படு மெய்ம்மை, முரணுரைபோலத் தோன்றும் மெய்யுரை; புரியாப் புதிர், ஏற்றுக்கொள்ளப் பட்ட இயல்புக்கு மாறான செய்தி; புதிரீட்டாளர், நம்ப முடியாதவர், புரிய முடியாதவர்.

paradox'ure, *n.* புனுகுப்பூனை வகை.

pa'raffin, *n.* கன்மெழுகு, களிமண்ணுடன் கல்லெண்ணெ யைக் கலந்து காய்ச்சும்போது கிடைக்கும் மெழுகுவகை; *v.* கன்மெழுகு பூசு; கன்மெழுகு கலந்து செயலாற்றுவி; (தொ.) liquid paraffin, மணஞ்சுவைகளற்ற மலமிளக்க மருந்து வகை; paraffin oil, விளக்கு எரிக்கவும் மசகுப்பொருளாக வும் பயன்படும் எண்ணெய்வகை; paraffin wax, திண்ணிய கன்மெழுகு, கெட்டியான மெழுகுப்பொருள் வகை.

parago'ge, *n.* (இலக்.) பகுதிப்பொருள் விகுதி.

pa'ragon, *n.* ஏண்; இணை முழு நிறை வைரமணி; *v.* ஒப்பிடு, இணை.

pa'ragraph, *n.* ஏட்டின் ஒருபத்தி, விடு கூறு, பிரிவு; புதிய பத்தி அடையாளக் குறியீடு, புதுக்கருத்துத் தொடக்கக் குறியீடு (¶); பத்திரிகையில் தலையங்கமற்ற தனியான பகுதி; *v.* பத்தி எழுது, ஆள் அல்லது பொருளைப்பற்றிப் பத்தி எழுது; பத்தி வரிசையாகப் பிரி.

paraheliotrop'ic, *a.* செடிகளில் ஒளிக்கதிர்களுக்கு இலை களின் விளிம்புகாட்டிச் சாய்கிற.

paraheliot'ropism, *n.* ஒளிக்கதிர்களுக்கு இணைவாக இலை களைத் திருப்பும செடிகளின் இயல்பு.

pa'rakeet, *n.* நீண்ட வாலுடைச் சிறு கிளிவகை.

pa'rakite, *n.* வான்குடை போன்று செயற்படும் காற்றாடி வகை; விஞ்ஞான ஆய்வு கருதிப் பறக்க விடப்படும் வாலில் லாக் காற்றாடி.

paraleip'sis, paralip'sis, *n.* கூறுது கூறலணி.

parallac'tic, *a.* விழிக்கோட்ட வழுச்சார்ந்த.

pa'rallax, *n.* விழிக்கோட்ட வழு; விழிக்கோட்டக் கோணஅளவு.

pa'rallel, *n.* இணைதொலைவுக் கோடு, ஒருபோகு; *a.* கோடு முதலியன வகையில் இணைவான, ஒருபோகுடைய; இணை தொலைவான; இணையொத்த, இசைவுப் பொருத்தமான; (தொ.) parallel bars, இணைவு கம்புகள், இணைக்கம்பி உடற் பயிற்சிக்கருவி; parallel ruler, ஒருபோகுக் கோடுகள் வரை வதற்குரிய சுழலச்சால் இணைக்கப்பட்ட இரட்டை வரை கோல்.

parallelep'iped, *n.* இணைவகத் திண்மம், இணைவகங்களைப் பக்கங்களாகவுடைய பிழம்புரு.

pa'rallelism, *n.* ஒருபோகு நிலை, ஒருவழி இணைவுநிலை; நுட்ப உள்ளுறுப்பொப்புமை; இருசொல் இயைபணி; தொடர் உவமை; இணைவளர்ச்சிப் போக்கு; உடலும் உள மும் தொடர்பின்றியே இணைவாக இயங்குகின்றன என்னுங் கோட்பாடு.

parallel'ogram, *n.* ஒருபோகு நாற்சிறைபி, இணைவகம், எதிர்ப் பக்கங்கள் சமமாகவும் இணைவாகவுமுள்ள வரை உருவம்; (தொ.) parallelogram of forces, இணைவிசை இணைவகப்போக்கு, இரண்டு விசைகள் இணைந்து ஒரே விசையாகச் செயலாற்றும்போது திசையிலும் அளவிலும் மூல விசைகள் இரண்டும் ஓரிணைவகத்தின் இருபுடைப் பக்கங்களுக் கும் இணைவிசை அவற்றிடைப்பட்ட மூலைவிட்டத்துக்கும் சமமாயிருக்கும் நிலை.

paral'ogism, *n.* தவறான வாதம், பொருந்தா வாதம்.

paral'ogy, *n.* போலி நியாயம்.

pa'ralyse, *v.* பக்கவாதத்தால் தாக்கு, முடக்குவாதத்துட் படுத்து; ஆற்றலறச் செய், செயலறச் செய், முடமாக்கு.

paral'ysis, *n.* முடக்குவாதம், பக்கவாதம்; ஆற்றலிழந்த நிலைமை.

paralyt'ic, *n.* முடக்குவாதம் உடையவர்; இயக்க ஆற்றற் கூறிழந்தவர்; *a.* பக்கவாதப் பிணியால் வருந்துகிற; இயக்க ஆற்றலிழந்த.

paramagnet'ic, *a.* காந்த முனைகளால் இழுக்கப்படத்தக்க.

paramatt'a, *n.* பட்டு அல்லது பருத்தி இணைத்த நய நேரியல் கம்பளித்துணி வகை.

param'eter, n. (கண.) திணையியல் நிலையளவுரு, பொது வாக மாறுபட்டுக் குறிப்பிட்ட தறுவாயில் மட்டும் நிலையான மதிப்புடைய அளபுரு.

paramil'itary, a. துணைப்படைத் திறமான, படைத்துறை போன்ற அமைப்புடன் நிலையான படைத்துறையை வலிமைப் படுத்துவதற்காக வகுக்கப்பட்ட.

paramne'sia, n. பொய்ந்நினைவு.

pa'ramo, n. தென் அமெரிக்க வெப்பமண்டலப் பகுதிகளில் உள்ள மரங்களற்ற உயர்ந்த பீடபூமி; pl. pa'ramos.

pa'ramount, n. உயர் தலைவர்; மேதகவாளர்; a. தலைமை சான்ற; மேதகவான.

pa'ramour, n. கள்ளக்காதலர்.

par'ang, n. மலாய்நாட்டு உறைவாள்.

paranoe'a, paranoi'a, n. அறிவுப் பிறழ்ச்சி; தருக்கியல் சித்தப்பிரமை.

par'anymph, n. மாப்பிள்ளைத் தோழன்; மணமகள் தோழி.

pa'rapet, n. கைப்பிடிச்சுவர்; (படை.) மறைகுழிகளுக்கு மறைப்பாக எதிரில் எழுப்பப்படும் மணல் மேடு, படைகளை மறைக்கவும் பாதுகாக்கவும் பதுங்கு குழிகளின்முன் கட்டப் படும் சிறு மதிலரண்.

pa'raph, n. பிறர் போலியாக இடாமல் தடை செய்வதற் கான கை ஒப்பத்தின் வீச்சு எறிவுக்கோடு.

paraphernal'ia, n. pl. எடுபிடி கொடி; மூட்டை முடிச்சு; உரிமை மகளிர்; பரிவாரம்; இயந்திரத்தின் துணைக்கலத் தொகுதி; இணை துணுக்குகள்.

pa'raphrase, n. பொழிப்புரை; ஸ்காத்லாந்து நாட்டுத் திருக் கோயில்களில் வழங்கப்படும் விவிலிய நூல் பொழிப்புரைகள் கொண்ட திரட்டு; v. பொழிப்புரை செய்.

paraple'gia, n. உடம்பின் கீழ்ப்பகுதிப் பக்கவாதம்.

pa'rasang, n. மூன்றேகால் மைல்கள் நீளமுடைய பண்டைப் பாரசீகத் தொலைவு அளவு.

paraselen'e, n. நிலா மண்டல ஒளிவட்டத்தில் ஒளிமிக்க இடம், போலிமதி.

pa'rasite, n. சுரண்டி வாழ்பவர், அண்டி வாழ்பவர்; அட்டை, புல்லுருவி; ஒட்டுயிர்; செடி அல்லது சுவரின்மேல் பற்றி வளருங் கொடி வகை.

parasit'icide, n. ஒட்டுயிர்க்கொல்லி.

pa'rasitize, v. ஒட்டுண்ணி போன்று பற்றிப்படர்; ஒட்டுயிர் போலச் சுரண்டி வாழ்.

parasol', n. கைக்குடை; (தொ.) parasol monoplane, விமானத்துள் விமானம்.

parasyn'thesis, n. (மொழி.) தொகைச்சொல் வழிச்சொற் பிறப்பு.

paratax'is, n. (இலக்.) இணைப்புச் சொற்கள் அல்லது துணைச் சொற்களின்றித் துணையுறுப்பு வாசகங்களை அடுக்குதல்.

pa'ratroops, n. pl. வான்குடை மிதவையில் ஏற்றிச்செல்லப் படும் படைவீரர்கள்.

paratyph'oid, n. குடற்காய்ச்சற் போன்ற காய்ச்சல் நோய்.

pa'ravane, n. ஆழ்தடக் கடற்கண்ணி வாரி, கடலடிக் கண்ணிகளின் தளையறுப்பதற்குரிய நீர்மூழ்கிபோன்ற ஆழ் தட இழுவைக்கருவி.

parb'oil, v. அரைகுறையாகக் கொதிக்க வை.

parb'uckle, n. பார ஏற்றக்கயிறு, மிடா முதலிய உருளை வடிவப் பொருள்களை ஏற்றி இறக்கப் பயன்படுங் கயிறு; v. பார ஏற்றக் கயிற்றினுல் ஏற்ற இறக்கஞ் செய்.

par'cel, n. சிறு கூறு, பகுதி; சிப்பம், பொட்டலம், உருப்படிக் கட்டு; உருப்படி; வாணிகத்துறையில் ஒரு நடவடிக்கையில் கையாளப்படும் அளவு; v. பகுதிகளாகப் பிரி; (கப்.) கப்பல் விளிம்படைப்புக்கள்மீது நிலக்கீலும் இரட்டுத் துண்டும் பொதி; இரட்டுத்துண்டுகளால் கயிறு பொதி; (தொ.) parcel post, சிப்ப அஞ்சல்; சிப்பங்கள் பற்றிய அஞ்சற் பிரிவு.

par'celling, n. உருண்டைக் கயிறுகள்மேல் சுற்றப் பயன் படும் நிலக்கீல் பூசப்பட்ட இரட்டுத் துண்டுகள்.

par'cenary, n. இணைமரபுரிமை.

par'cener, n. இணைமரபினர், பங்காளி.

parch, v. இலேசாக வறு; வாட்டு, உலர்த்து; வரட்சியூட்டு; வாடி உலர்.

parch'ment, n. வரைதோல், எழுதுவதற்காகப் பாடம் செய் யப்பட்ட ஆட்டுத்தோல்; படம் எழுதுவதற்குரிய தோல்; தோலில் எழுதப்பட்ட கையெழுத்தேடு; வரைதோல் போன்ற தொலி, உமி.

pard, n. சிறுத்தைப் புலி.

pard'on, n. மன்னிப்பு; மன்னிப்பு வழங்கும் பண்டிகை; (சட்.) தண்டனை குறைப்பு, பொறுத்தருள் பண்பு; v. மன் னித்துவிடு; குற்றத்தைப் பொருட்படுத்தாது விடு; தண்டிக் காது விட்டுவிடு.

pard'oner, n. (வர.) திருக்கோயில் பாவமன்னிப்புச் சீட்டு விற்பனை உரிமையாளர்.

pare, v. சீவிச்செப்பனிடு, தறித்து ஒழுங்குபடுத்து; பழம் முதலியவற்றின் தோலைச் சீவு; தோடு நீக்கு; நகம் வெட்டு; கொஞ்சங் கொஞ்சமாகக் குறை; ஓரம் நறுக்கு, விளிம்பு வெட்டி எறி.

parego'ric, n. சூட அபினித்தைலம், சூடன்-சோம்பு-சாம்பி ராணி மணங்களூட்டப்பட்டு அபினி கரைந்த சாராயத்தா லான நோவாற்று மருந்து; a. நோவாற்றுகிற, வேதனை தணிக்கிற; (தொ.) paregoric elixir, சூட அபினித்தைலம்.

pareir'a, n. சிறுநீர்க் கோளாறுகளுக்குப் பயன்படுத்தப்படும் பிரேசில் நாட்டு வேர்ச்சரக்கு மருந்து வகை.

paren'chyma, n. (உள்.) சுரப்பிக்கருப்பொருள், உறுப்புக் கருப்பொருள்; (தாவ.) இலை-பருப்பு-பழச்சதை போன்ற மென் பகுதிகளின் உயிர்மங்களில் அருகருகாகக் காணப்படும் சம சதுர மென்பதக் கூறு.

paren'chymal, parenchym'atous, a. மென்பதக் கூறான.

par'ent, n. பெற்றோர்; தந்தை அல்லது தாய்; முன்னோர்; விலங்கு தாவரங்களின் மூல முன்னினம்; மூலம், தோற்று வாய்; (தொ.) our first parents, ஆதாம் ஏவாள்.

par'entage, n. பெற்றோர் விவரம்; ஊங்கணோர் மரபு, தாய் தந்தையர் வழியான அல்லது முன்னோர் வழியான மரபு; பெற்றோர் மரபுப்பண்பு; முன்னோர் மரபுப்பண்பு; கால்வழி, பரம்பரை; மரபின் மதிப்பு; பெற்றோர்நிலை; பெற்றோராதல்; பெற்றோர் பிள்ளை தொடர்பு.

paren'theses, n. pl. தனிநிலை மொழிக்குரிய அடைப்புக் குறிகள்.

paren'thesis, n. தனிநிலை மொழி; இடைப்பிறிது வருவது, தொடர்பிலிக்குறி, வளை அடைப்புக்குறி; இடைமுறிப்புக் காட்சி; இடைவேளை.

paren'thesize, v. இடைமுறிப்பாக நுழை; தனிநிலை மொழி யாகப் புகுத்து; பிறைவடிவ அடைப்புக் குறிகளுக்கிடை அமை.

parenthet'ic, a. தனிநிலைமொழியான; இடைமுறிப்புறுப் பான, இடைப்பிறவரலுக்குரிய; இடையில் வைப்பதற்குரிய.

parerg'on, n. துணைப்பணி; pl. parer'ga.

pa'resis, n. (மரு.) அரைகுறை முடக்குவாதம்; தசை இயக் கத்தை மட்டுந் தடைப்படுத்தி உணர்ச்சியைத் தடைப்படுத் தாத பக்கவாதம்.

par excellence, (பிர.) adv. தனிச்சிறப்புக் காரணமாக; எல்லா வற்றிற்கும் மேம்பட்டு.

par'get, n. காரை, சாந்து, சுண்ணச்சாந்து; v. காரை பூசு, சுண்ணச்சாந்து பூசு.

parhel'ion, n. கதிரவனைச் சுற்றியுள்ள ஒளிவட்டத்திற் பேரொளியுள்ள இடம், போலிக்கதிரவன்.

par'iah, (த.) n. பறையர்.

Par'ian, *n.* மிக நேர்த்தியான வெண்ணிற மங்குப்பாண்டம்; உயர்ந்த வெள்ளைக்களிமண்; *a.* வெண்ணிறப் பளிங்குக் கல்லுக்குப் பேர்போன பரோஸ் (Paros) தீவைச் சார்ந்த.

pari'etal, *n.* மண்டையோட்டின் உச்சிப் பக்கங்களுக்குரிய எலும்பிணைகளுள் ஒன்று; *a.* புறத்தோடு சார்ந்த; புறத் தோடுகளுக்குரிய; புறத்தோட்டின் உட்பக்கஞ் சார்ந்த; (தாவ.) செடியின் கருவகப்புறத்தோட்டின் உட்பக்கத்துக் குரிய; மண்டையோட்டின் உச்சிப் பக்கங்களுக்குரிய எலும் பிணையில் ஒன்றுசார்ந்த; (தொ.) parietal bones, மண்டை யோட்டின் உச்சிக்கும் பக்கங்களுக்கும் உரிய எலும்பிணைகள்.

pari mutuel, (பிர.) *n.* இழந்தவர்களின் பணயப்பொருளை வென்றவர்கள் தங்களுக்குள் பிரித்துக்கொள்ளும் பந்தய வகை.

par'i pass'u, (ல.) *adv.* இணையாக, சோடியாக; ஒரே சம யத்தில், சமமாக.

Pa'ris, *n.* பிரஞ்சு நாட்டுத் தலைநகர்; (தொ.) Paris blue, வண்ண வகை; Paris doll, உடுப்பு அளவிற்காகத் தையற் காரன் வைத்திருக்கும் பொம்மை; Paris green, பூச்சிக் கொல்லியாகவும் வண்ணப்பொருளாகவும் பயன்படும் நச்சு வேதிப்பொருள்; Paris white, மெருகிடப் பயன்படும் மிக நேர்த்தியான சுண்ணப்பொருள்.

pa'rish, *n.* வட்டாரம்; சமயகுருவினுடைய மாவட்டக் கிளைப் பிரிவு; வட்டாரத்தில் வசிப்பவர்கள்; (தொ.) civil parish, வறியோர் பாதுகாப்புச் சட்டம் ஆட்சிப்படுவதற்காக அமைக் கப்பட்ட மாவட்டம்; go on the parish, வட்டார வறியோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உதவிபெறு; parish clerk, திருக்கோயிற் பொது அலுவலர்; parish council, வட்டார ஆட்சிக்குழு; parish lantern, நிலா; parish register, பிறப்பு-இறப்பு ஏடு.

parish'ioner, *n.* திருச்சபை வட்டாரக் குடிவாணர்.

Pari'sian, *n.* பாரிஸ் நகரத்தவர்; *a.* பாரிஸ் சார்ந்த.

parisyllab'ic, *a.* (இலக்.) கிரேக்க லத்தீன மொழிகளில் பெயர்ச் சொற்களில் எழுவாயும் பிற ஒருமை வேற்றுமை வடி வங்களும் ஒருங்கே ஒரே எண்ணிக்கை அளவான அசைகளைக் கொண்ட.

pa'rity, *n.* ஒப்புமை, சரிசமநிலை; திருக்கோயில் உறுப்பினர் கள் அல்லது குருமார்களிடையே சரிசமத்துவம்; இணை, சமம், ஒப்பு; வேற்று நாணயத்தில் சரிசம மதிப்பு.

park, *n.* பூங்கா, திறந்தவெளித்தோட்ட வளாகம்; பூங்கா மனை, வேலிசூழ்ந்த நாட்டுப்புறத் தோட்டமனை; உந்து வண்டிகள் தங்கிநிற்குமிடம்; பாசறையில் பீரங்கி அமைப் பிடம்; பாசறைப் படைக்கல வைப்பிடம்; பீரங்கித்தொகுப்பு; படைக்கலத்தொகுதி; சேமகாப்பான தனிச் சோலை வளம்; கிளிஞ்சில் வளர்ப்புப்பண்ணை; *v.* பூங்காவாக அடைப்புச் செய்; பூங்காவாக்கு; பீரங்கிகளைத் தொகுப்பாக்கி வை; உந்து வண்டியைத் தங்கல் இடத்திற்கொண்டு நிறுத்து; (தொ.) oyster park, கிளிஞ்சிற்பண்ணை; the Park, லண்ட னிலுள்ள நாகரிகம் மிக்க பொழுதுபோக்கிடமாகிய ஹைடு பார்க் (Hyde Park).

park'a, *n.* எஸ்கிமோக்கள் அணியும் தலைக்கவிகையோடு கூடிய தோல் மேலாடை.

park'in, *n.* (பே-வ.) வெல்லப்பாகும் கூலவகை மாவும் சேர்த்துச் செய்த அப்பவகை.

parl'ance, *n.* பேச்சுப்பாங்கு, பரிபாஷை.

parlement, (பிர.) *n* (வர.) 1792 வரை இருந்த பழைய பிரஞ்சு நீதிமன்றம்.

parlementaire, (பிர.) *n.* இடைப் போர்நிறுத்தக் கொடி தாங்குபவர்.

parl'ey, *n.* சிக்கல் தீர்வுப்பேச்சு; *v.* எதிரியுடன் கலந்துபேசு, போரிடையே ஒப்பந்தம் பற்றிக் கலந்துரையாடு; பிறிதொரு மொழி பேசு.

parleyvoo', *n.* பிரஞ்சு மொழி; பிரஞ்சு நாட்டினன்; *v.* பிரஞ்சு மொழி பேசு.

parl'iament, *n.* பிரிட்டனின் சட்டமாமன்றம்; இந்தியச் சட்ட மாமன்றம்; சட்டமன்றம்; பிரஞ்சு நீதிமன்றம்; இஞ்சி ரொட்டித்துண்டு.

parliamentar'ian, *n.* சட்டமன்ற இயலறிஞர்; பதினேழாம் நூற்றூண்டு உள்நாட்டுப் போரில் பிரிட்டனின் சட்ட மாமன்றச் சார்பாளர்; *a.* சட்ட மாமன்றச் சார்பான; சட்ட மாமன்ற ஆதரவாளரான.

parliamen'tary, *a.* சட்ட மாமன்றஞ் சார்ந்த; சட்ட மாமன் றத்தின் சட்டத்துக்கு உட்பட்ட; சட்ட மாமன்றத்தால் மர பாக நிலைநாட்டப்பட்ட; மொழிகள் வகையில் சட்டமாமன் றத்திற் கூறப்படும் தகுதியுடைய; அவைக்குப் பொருந்திய; நாகரிகமான; சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட; சட்டமன்ற விதி மரபுகளுக்குக் கட்டுப்பட்ட; சட்ட மாமன்ற ஆதரவான; (தொ.) parliamentary agent, தனிப்படக் கொண்டுவரப் படும் சட்டப்பகர்ப்புக்களை உருவாக்குவதற்காக அமர்த்தப் பட்ட ஆள்; parliamentary train, 1844 மாமன்றச் சட்டத் தின்படி ஒரு கல் தொலைவுக்கு ஒரு துட்டுக்கு மேற்படாத கட்டணம்பெற்று ஓடிய புகைவண்டி.

parl'iament-cake, *n.* ரொட்டியப்பம்.

parl'our, *n.* முகப்பறை, வீட்டின் வரவேற்பறை; மறைபேச் சறை; துறவிமடங்களில் உரையாடலுக்கு ஒதுக்கப்பட்ட பகுதி; பொதுப்பணிமனைகளில் உரையாடலுக்கு வாய்ப் புள்ள அறை; வழிமனையின் தனிநிலை உரையாடல் அறை; (தொ.) parlour boarder, முதல்வரின் வீட்டில் தங்கும் பள்ளிவிடுதி மாணவர்; parlour car, பெருவசதிப் புகை வண்டிப்பெட்டி; parlour maid, மேசைப் பணிப்பெண்.

parl'ous, *a.* இடுக்கண் நிறைந்த; *adv.* மிகு முனைப்பாக; மட்டுமீறிய அளவில்.

Parmesan', Parmesan cheese, *n.* பார்மா (Parma) என்னுமிடத்திற் செய்யப்படும் பாலடைக்கட்டி வகை.

Parnass'ian, *n.* பிரான்சு நாட்டில் 19-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியில் கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டைக் கொண்ட குழுவினைச் சார்ந்த கவிஞர்; கவிஞர்; *a.* பண்டைக் கிரேக்கரின் கலைத்தெய்வங்கட்குப் புனிதமான பர்னசஸ் (Parnassus) மலையைச் சார்ந்த; கலைத் தெய்வங்கட் குரிய; கலை கலைக்காகவே என்ற கொள்கையை மேற்கொண்ட கவிஞர் குழுவினைச் சார்ந்த.

Parnass'us, *n.* பண்டைக் கிரேக்க நாட்டில் கலைத்தெய்வங் களுக்குரிய புனித இடமாகக் கருதப்பட்ட மலை; கவிதை களின் தொகுதி.

Parn'ellism, *n.* பார்னல் (C. S. Parnell) என்பவரால் 19-ஆம் நூற்றூண்டின் கடைப்பகுதியில் நடத்தப்பட்ட அயர் லாந்து நாட்டுத் தன்னுட்சிக் கோட்பாடு.

Parn'ellite, *n.* பார்னல் என்பவரின் அயர்லாந்து நாட்டுத் தன்னுட்சிக் கொள்கையினைப் பின்பற்றுபவர்.

paroch'ial, *a.* திருச்சபை ஆட்சி வட்டாரஞ் சார்ந்த; குறுகிய பகுதி சார்ந்த; குறுகிய நோக்கங்கொண்ட; குறுகிய விருப்பு வெறுப்புக்களையுடைய; குறுகிய சுவை உணர்ச்சிப் பாங்கு களையுடைய.

paroch'ialism, *n.* திருச்சபை வட்டார அடிப்படையான திணையாட்சிமுறை; குறுகிய நோக்கம், குறுகிய கோட்பாடு.

paroch'ialize, *v.* குறுகிய நோக்கமுடையதாக்கு; வட்டா ரங்களாக வகுத்தமை; திருச்சபை வட்டாரப் பணிசெய்.

pa'rody, *n.* நையாண்டிப் போலி, எழுத்தாண்மை-நடிப்பு முதலியவற்றில் குறைபெருக்கிக் காட்டிக் கேலிக்கு ஆளாக்கு வது; வலுவில் போலி, பின்பற்றிச் செய்யப்பட்ட மூலத்தின் உயிர்ப்பண்பற்ற போலி; *v.* நையாண்டிப் போலி செய்து காட்டு, நகைப்புக்கிடமாகும்படி குறைகளைப் பெருக்கிக் காட்டு, கேலிக்குரியதாக்கிக் காட்டு.

par'ol, *a.* வாய்ச்சொல்லான, ஏடல்லாத.

parole', *n.* நன்னம்பிக்கை உறுதிமொழி; (படை.) வாய் மொழி உறுதி, போர்க்கைதிகளை விடுவிக்கும்போது தப்பித்து ஓடவில்லையென்றோ விடுவிக்கப்பட்டால் திரும்பவும் சிறைக் குத் திரும்புவதாகவோ அல்லது குறிப்பிட்ட காலம் வரை

சிறையிட்டவர்களுக்கு எதிராக எவ்வகை ஆயுதமும் ஏந்துவதில்லையென்றே அளிக்கும் வாக்குறுதி; (படை.) காவல் அதிகாரிகள் அல்லது சோதனை அலுவலாளர்கள் பயன்படுத்தும் நாள்முறை அடையாளச் சொல்; *v.* நாணய வாக்குறுதியின்மீது கைதியை விடுவி; (தொ.) on parole, கைதியின் நாணய வாக்குறுதியின்பேரில் விடுதலைபெற்று.

paronomas'ia, *n.* செம்மொழிச் சிலேடை.

paronych'ia, *n.* விரற்சுற்றி.

pa'roquet, *n.* = parakeet.

parot'id, *n.* காதின் முன்புறத்திலுள்ள சுரப்பி; *a.* காதருகில் அமைக்கப்பட்ட; (தொ.) parotid duct, காதின் முன்புறச் சுரப்பியையும் வாய் உட்புறத்தையும் இணைக்கும் சுரப்பி நாளம்.

parotit'is, *n.* பொன்னுக்கு வீங்கி, புட்டாளம்மை.

pa'roxysm, *n.* இசிப்பு, வலிப்பு.

parox'ytone, *n.* (இலக்.) கிரேக்க மொழியில் ஈற்றயல் அசை கூர் ஒலியழுத்தங்கொண்ட சொல்; *a.* (இலக்.) கிரேக்க மொழியின் சொல்வகையில் ஈற்றயல் அசை கூர் ஒலியழுத்தங் கொண்ட.

parp'en, *n.* சுவரில் இருதலை நெடுங்கல்.

parq'uet, *n.* மரக்கட்டை எழில்விரிப்பு; *v.* மரக்கட்டை எழிற்பரப்பு அமை.

parr, *n.* சிறு சால்மன் மீன், சால்மன் மீன் குஞ்சு.

parricid'al, *a.* தந்தைக்கொலை சார்ந்த; தந்தைக்கொலை போன்ற; உறவுக்கொலைக்குரிய; நாட்டுப் பகைமைப்பழி சார்ந்த.

pa'rricide, *n.* தந்தையைக் கொன்றவர்; நெருங்கிய உறவினரைக் கொன்றவர்; மதிப்பிற்குரியவரைக் கொன்றவர்; நாட்டுப் பகைஞர்; தந்தைக்கொலை; உறவுக்கொலை; சான்றோர்க் கொலை; நாட்டுப் பகையாண்மை.

pa'rrot, *n.* கிளி; *v.* கிளிபோல் சொன்னதைச்சொல்; கிளிபோல் சொன்னதைச் சொல்ல ஆளைப்பழக்கு; கிளிபோலப் பேசு.

pa'rrot-fish, *n.* கிளியினது போன்ற அலகும் பளபளப்பான வண்ணமுமுடைய மீன்வகை.

pa'rry, *n.* தவிர்த்தல், தடுத்தகற்றுதல்; *v.* தவிர், தடுத்தகற்று.

parse, *v.* சொல்லிலக்கணங் கூறு; வாக்கியத்தைக் கூறுகளாகப் பாகுபடுத்தி அவற்றிற்கு விவரங்கூறு.

pars'ec, *n.* வான் விகலை அலகு, நிலவுலகின் நிகர ஆரத்தொலைவின் காட்சியிட மாற்றத்தால் ஏற்படும் ஒரு விகலை நோக்குக்கோண வேறுபாட்டுக்குரிய விண்மீன்களின் தொலைவு.

Parsee', *n.* பார்சி, பாரசிகரின் பழைய சமய நெறிப்பட்டவர்; முற்காலப் பாரசிக மொழி, பாரசிக நாட்டில் சஸ்ஸானிய மரபினர் (Sassanians) காலத்து மொழி.

Par'seeism, *n.* இந்தியா வந்துசேர்ந்த பாரசீகர்களின் சமயம்.

parsimon'ious, *a.* மட்டுமீறிச் சிக்கனமான; உலோப குணமுள்ள, ஈயாத.

pars'imony, *n.* செட்டு, சிக்கனம்; உலோபம்; (தொ.) law of parsimony, மெய்ம்மைகளுக்கு ஏது கூறும் வகையில் அவசியமானவைகட்கு மேற்பட்ட காரணங்களைக் கொள்ளுதலாகாதென்னும் விதி.

pars'ley, *n.* சமையலில் நறுமணத்திற்காகச் சேர்க்கப்படும் இலைகளையும் வெள்ளை மலர்களையுமுடைய செடிவகை.

pars'nip, *n.* சமையலுக்குப் பயன்படுத்தப்படும் இள மஞ்சள் நிறக் கிழங்கு; சமையலுக்குரிய இளமஞ்சட் கிழங்கினையும் மஞ்சள்நிற மலர்களையுமுடைய செடிவகை; (தொ.) fine words butter no parsnips, வெறும் வாய்ச்சொற்கள் பயனற்றவை.

pars'on, *n.* ஊர்ச் சமயகுரு; திருச்சபைப் பணியாளர்; (தொ.) parson's nose, கோழி முதலியவற்றின் எச்சம் அல்லது வால் பகுதி.

pars'onage, *n.* சமயகுரு இல்லம்.

par'son-bird, *n.* கருஞ்சிறகும் வெள்ளைக் கழுத்துமுடைய நியூசிலந்து பறவை.

part, *n.* கூறு, பகுதி; புத்தகப் பிரிவு, காண்டம், பாகம்; சம்புடம்; முழுமையின் சமக்கூறுகள் பலவற்றில் ஒன்று; ஒதுக்கப்பட்ட பாகம், பங்கீடு; செயலில் ஒருவரது பங்கு; கடமை; அரங்கில் நடிகருக்குக் கொடுக்கப்பட்ட நடிப்புப் பகுதி; அரங்கில் நடிகர் பேசுஞ் சொற்கள்; அரங்கில் நடிகர் பேசவேண்டியவற்றின் படி; வாதத்தில் கட்சி; வழக்கில் பக்கம்; (இசை.) குறிப்பிட்ட குரல் அல்லது கருவிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பண்; *v.* கூறுகளாகப் பிரி; தொடர்பறு; நட்பு வேறுபடு; விட்டுச்செல்; வேறிடஞ் செல்; கிளைகளாகப் பிரி; வகிரெடு; சண்டை செய்பவர்களை விலக்கிவை; நண்பர்களைப் பிரித்து வை; வேறுபடுத்து; கூட்டுறவை விட்டொழி; (பே-வ.) பணங்கொடு; *adv.* பகுதியாக, சிறிதுமட்டில், பாகத்தைப் பற்றிய மட்டில்; (தொ.) art and part, எண்ணமுஞ் செயலும்; for my part, என்னைப் பற்றிய வரையில்; for the most part, பெரும்பாலும், அநேகமாக; in bad part, in ill part, எதிரிடாக, பிரதிகூலமாக; in good part, சாதகமாக; in great part, பெரிதும், பெரிய அளவில்; in part, சிறிதளவாக, குறையளவில்; on the part of, சார்பாக, சார்பில்; part and parcel, இன்றியமையாக் கூறு; part company with, விட்டுப்பிரி; part from, part with, விட்டுப்பிரி, விடைபெற்றுக்கொள்; part of speech, (இலக்.) சொல்லின் வகை; play a part, ஏமாற்று; take in good part, நல்லபடியாகக் கொள்; take part in, உதவிசெய்; பங்குகொள்; take part with, ஒரு கட்சியை ஆதரி; take the part of, ஆதரி, தாங்கு.

partake', *v.* பங்குகொள்; கூட்டிலிணைந்து பங்கெடுத்துக்கொள்; சிறிது அருந்து; இயல்பு முதலியவற்றிற் பங்குகொள்.

parterre', *n.* பூம்படுக்கை, தோட்டத்திற் பூம்பாத்திகள் அமைந்த சமதளப்பகுதி; இசையரங்கு மண்டபத்திற் கூடுகொள் இன்னியத்துக்குப் பின்னுள்ள பாகம்.

parthenogen'esis, *n.* (உயி.) பாலினக் கூட்டற்ற இனப்பெருக்கம்.

Parth'ian, *a.* பண்டைய மேற்கு ஆசிய அரசாகிய பார்த்தியா சார்ந்த; (தொ.) a Parthian shot, பிரிவுநேரக் கடைசிக் கணை வீச்சு; Parthian glance, பிரிவுநேரக் கடைசி நோக்கு; Parthian shaft, பிரிவுநேரக் கடைசி வசைச்சொல்.

parti, (பிர.) *n.* திருமணத்துக்குத் தகுந்தவரெனக் கருதப்படுபவர்.

par'tial, *n.* (இசை.) முழுமையாக ஒலிக்காத கிளைச்சுரம்; *a.* ஒருசார்புடைய, மனக்கோட்டமுடைய; நேர்மையற்ற; அரைகுறையான, நிறைவற்ற; முழுமையாயிராத; பகுதியளவான; (தொ.) partial eclipse, ஒருசிறைக் கோள் மறைப்பு; upper partials, (இசை.) முழுமையாக ஒலிக்காத கிளை உயர் சுரம்.

partial'ity, *n.* மனக்கோட்டம், ஒருபுடைச் சார்பு, தனிப்பற்று, ஓரவஞ்சனை.

part'ible, *a.* பிரிக்கத்தக்க; பங்கிட்டுத் தீரவேண்டிய.

partic'ipant, *n.* பங்குகொள்பவர்; *a.* பங்குகொள்ளுகிற; கலந்துகொள்ளுகிற.

parti'cipate, *v.* பங்குபெறு; தொடர்புகொள்; கலந்துகொள்; பண்பினைச் சிறிது பெற்றிரு.

participa'tion, *n.* பங்கேற்றல், கலந்துகொள்ளுதல், பங்குபற்றுதல்.

part'iciple, *n.* பெயரடை வினைச்சொற்களுக்கு ஒத்த சொல்; (தொ.) past participle, perfect participle, முடிவெச்சம்; relative participle, பெயரெச்சம்; verbal participle, வினையெச்சம்.

part'icle, *n.* துகள், பொடி; சிறு துண்டு, துணுக்கு; அணுக்கூறு; இடைச்சொல்; முன்னிணைவு; பின்னிணைவு.

part'icoloured, *a.* இருநிற இடைக்கலப்புடைய, சிறிது ஒருநிறமும் எஞ்சியது வேறுநிறமுமாகவுள்ள, பலவகைப் பட்ட.

partic'ular, *n.* நுணுக்க விவரம்; தனியுரு, தனியொருமை உறுப்பு; சிறப்பு; *a.* குறிப்பிட்ட, தனிப்பட்ட, சிறப்பான பிறவற்றை விடுத்து ஒன்றினுக்கு மட்டும் உரிய; (அள.) இனத்தில் முழுமையையும்பற்றிக் குறியாமல் சிலவற்றைப் பற்றி மட்டுங் குறிக்கிற; மற்றவைகளினின்றும் வேறு பிரித்துக் கருதப்படுகிற, தனியான; கவனத்துக்குரிய; நுணுக்கமான; சரிநுட்பமான; மிகு கண்டிப்பான; தனிப்படு சுவைத்திறமுடைய; தனிப்படு சுவை உணர்வுக் கண்டிப் புடைய; (தொ.) in particular, தனிப்பட, சிறப்பாக, முக்கியமாக; விவரமாக; Particular Baptists, மனித இனத்தில் தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டுமே மீட்பும் நற்கதியும் கிடைக்குமென்னுங் கோட்பாடுடைய விவிலியக் கிளைக் குழுவினர்.

partic'ularism, *n.* மனித இனத்தில் தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டுமே மீட்பும் நற்கதியுங் கிடைக்குமென்னுங் கோட்பாடு; கட்சி-பிரிவு முதலியவற்றினிடம் தனிப்பட்ட ஈடுபாடு; பேரரசில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் அரசியல் உரிமை வழங்குவதென்னுங் கோட்பாடு.

partic'ularity, *n.* தனிப்பட்டதாயிருக்குந் தன்மை, சிறப்பியல்பு; நுணுக்கவிவரம்; குறிப்பிட்ட செய்தி.

partic'ularize, *v.* தனிப்படக் குறிப்பிட்டுக் கூறு, தனியாகக் குறிப்பிடு; ஒவ்வொன்றாக எடுத்துச்சொல்; விவரங்களைக் குறிப்பிடு.

partic'ularly, *adv.* தனிமுறையில், தனிப்பட; வகைவகையாக, விவரமாக; பகுதி வாசக முறையில்; குறிப்பிடத்தக்க முறையில், முனைப்பாக, குறிப்பாக.

partic'ulars, *n. pl.* நுணுக்க விவரங்கள், விவர வரலாறு; விவரக்கணக்கு.

part'ing, *n.* பிரித்தல்; பிரிதல்; பிரியுமிடம்; வகுக்கப்படுமிடம், வகுப்பு, வகிடு; பிரிக்குங் கோடு; விடைபெற்றுப் போதல்; *a.* பிரிக்கிற, வகுக்கிற; புறப்பட்டுச்செல்கிற; விடைபெற்றுப்போகிற; விடைபெறுதற்குரிய; விடைபெறும் நேரத்திலான; (தொ.) parting of the ways, வழி இரண்டாகவோ பலவாகவோ பிரிந்துசெல்லும் இடம்; முக்கியமான முடிவெடுக்கவேண்டிய தறுவாய்.

parti pris, (பிர.) *n.* மனக்கோட்டம், முன்னரே கொண்ட கருத்து.

partisan'[1], *n.* கட்சிக்காரர், கட்சி-கொள்கை முதலியவை மாட்டுக் குருட்டுத்தனமான ஈடுபாடுடையவர்; (படை.) தனிப் படையெழுச்சிகளின்போது அமர்த்திக்கொள்ளப்படும் ஒழுங்கற்ற சிறிய படைப்பிரிவுகளைச் சேர்ந்த வீரர்; இரண்டாவது உலகப்போரில் பகைவர் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் அடங்காமல் எதிர்த்தவர்; *a.* கட்சிப்பற்றுடைய; பட்சபாதமான, கோட்டமுள்ள.

part'isan[2], *n.* (வர.) குத்துவாள் போன்ற நீண்ட கைப்பிடியுடைய ஈட்டிவகை.

part'ite, *a.* (தாவ., பூச்.) கிட்டத்தட்ட அடிவரையில் பிளவுபட்ட.

parti'tion, *n.* பிரிவினை, கூறுகளாகப் பிரித்தல்; பிரிக்கப்பட்ட கூறு; இடைத்தட்டி, இடைத்தடுக்கு, பிரிக்குங் கட்டமைப்பு, தடுப்புச்சுவர்; எல்லைச்சுவர்; (சட்.) பிரிவீடு, நிலவுடைமையைக் கூட்டுக் குத்தகைக்காரர்களுக்கிடையே பிரித்துக்கொடுத்தல்; *v.* கூறுகளாகப் பிரி, பாகங்களாக வகு, பங்கிடு; (தொ.) partition deed, பாகப் பத்திரம்; partition off, அறை முதலியவற்றைத் தடுப்புச் சுவரினூற் பிரி.

part'itive, *n.* திரண்ட மொத்தத்தின் பாகத்தைக் குறிப்பிடுகிற சொல்; *a.* திரண்ட மொத்தத்தின் பாகத்தைக் குறிப்பிடுகிற; (தொ.) partitive genitive, கூறுகளாகப் பிரிக்கப்பட்ட மொத்தத்தைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் உருபு.

partizan'[1], *n., a.*=partisan[1].

part'izan[2], *n.*=partisan[2].

part'ly, *adv.* ஒரு பகுதியைக் குறித்தமட்டில்; அரைகுறையாக, பகுதியளவாக; ஓரளவாக, சிறிதளவாக.

part'ner, *n.* கூட்டாளி, பங்காளி; துணைவர்; மனைவி; கணவன்; ஆடற்கூட்டாளி; வரிப்பந்தாட்டம் முதலியவற்றில் ஆட்டக்கூட்டாளி; கூட்டுவாழ்விணையுயிர்களுள் ஒன்று; *v.* இணை, கூட்டு; கூட்டாளியாயிரு; (தொ.) predominant partner, முதன்மைப் பங்காளி; ஐக்கிய அரசின் (United Kingdom) முதன்மைப் பங்காளியான இங்கிலாந்து; sleeping partner, வாணிகத்தில் முதல்மட்டும் இட்டு உடனிருந்து செயலாட்சி செய்யாத பங்காளி.

part'ners, *n. pl.* (கப்.) கப்பல் மேல்தளத்தில் பாய்மரம்-குழாய் முதலியன செல்லுந் துளையைச் சுற்றியுள்ள வெட்டுமரச் சட்டவேலைப்பாடு.

part'nership, *n.* கூட்டுப்பங்காண்மை, கூட்டில் பங்காளியாயிருக்கிற நிலை; பங்காண்மைக் கூட்டுவாணிகம்; ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கிடைப்பட்ட ஒப்பந்தம்.

part'-own'er, *n.* கூட்டுச் சொந்தக்காரர்.

part'ridge, *n.* கௌதாரி.

part'ridge-wood, *n.* தச்சுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் கடினமான சிவப்புக்கட்டை வகை; சில காளான் வகைகளால் சட்டைகளின்மேல் தோன்றும் புள்ளிகள்.

parts, *n. pl.* இடங்கள், நிலப்பகுதிகள்; திறமை, அறிவுத் திறம்; விலங்குடம்பின் பகுதிகள்; (தொ.) the privy parts, மறை உறுப்புக்கள்.

part'-song, *n.* ஒத்திசைப்பாட்டு.

part'-time, *a.* குறை நேரத்துக்குரிய, முழுநேரமல்லாத.

part'-tim'er, *n.* பகுதிநேரப் பணியாள்.

partur'ient, *a.* ஈனுகிற, ஈனுந்தறுவாயிலுள்ள; கருவுயிர்ப்புச் சார்ந்த; கருத்துப் படைப்புச்சார்ந்த, புத்துருவாக்கும் நிலையிலுள்ள.

parturi'tion, *n.* பிள்ளைப்பேறு; பிறப்பு, புதுத்தோற்றம்.

partur'iunt mon'tes, nascet'ur ridic'ulus mus, (ல.) மலைகள் கருவுயிர்த்து எலியைப் பெற்றன, மிகப் பெரு முயற்சி அற்ப பயன்.

part'y, *n.* கட்சி; கூட்டந்தார்; சேகரத்தார்; நோக்கம்-கொள்கை முதலியவற்றில் ஒன்றுபட்ட குழுவினர்; பயணக் குழு; ஒரு தொழிலர் குழு; விருந்தினர் கூட்டம்; வழக்கில் ஒருதிறத்தவர்; ஒப்பந்தஞ் செய்துகொள்பவர்களில் ஒரு சார்பினர்; மணவினையில் ஒருதரப்பினர், மணமகன்; மணமகள்; உடந்தையாளர், ஒத்து உதவுபவர்; ஆள்; *a.* (கட்.) வெவ்வேறு சாயல் வண்ணங்கள்கொண்ட பாகங்களாகப் பிரிக்கப்பட்ட; சுவர் வகையில் இரு கட்டிடங்களுக்குப் பொதுவாகப் பயன்படுகிற; (தொ.) party spirit, கட்சி மனப்பான்மை; party wall, கட்டிடங்களுக்குப் பொது வுரிமையாக வழங்கப்படும் இடைச்சுவர்.

part'y-coloured, *a.*=particoloured.

parv'enu, *n.* பெருவாழ்வு அற்பர்; யாணரார்.

parv'is, *n.* வளைமுற்றம், திருக்கோயில் முதலியவற்றின் எதிரிலுள்ள அடைப்பிட்ட நிலப்பரப்பு.

pas, (பிர.) *n.* முந்துரிமை, முந்துநிலை; ஆடல் அடிபெயர்ப்பு முறை; (தொ.) have the pas of one, முந்திக்கொள்.

pasch'al, *a.* இயேசுநாதர் உயிர்த்தெழுந்த திருநாள் பற்றிய; யூதர்களின் விடுதலைத் திருவிழா சார்ந்த.

pas de deux, (பிர.) *n.* ஒருவர் அல்லது இருவர்க்கான நடன வகை.

pa'sha, pasha', *n.* பாஷா, உயர்தரத் துருக்கிய அதிகாரி; துருக்கிய படைத்தலைவர்; துருக்கி மாகாண ஆளுநர்; (தொ.) pasha of one tail, மூன்றாந்தரத் துருக்கிய அதிகாரி; pasha of three tails, முதல்தரத் துருக்கிய அதிகாரி; pasha of two tails, இரண்டாந்தரத் துருக்கிய அதிகாரி.

pa'shalic, *n.* பாஷாவின் ஆட்சி வரம்பு.

pa'shm, *n.* காசுமீரச் சால்வைகள் செய்வதற்குப் பயன்படும் திபேத்திய வெள்ளாடுகளின் அடிமென்மயிர்.

pasque'-flower, *n.* மணிவடிவ ஊதா மலர்ச் செடிவகை.

pasquinade', *n.* வசைப்பாட்டு, பழிப்புரை, அங்கதம்.

pass, *n.* தேர்ச்சி, தேறுதல்; பொதுநிலைத் தேர்வு வெற்றி; நெருக்கடி நிலை; நுழைவு இசைவுச் சீட்டு; வெளியேறுவதற்கான இசைவுச்சீட்டு; விடுதியில் தங்காதிருப்பதற்கான இசைவுச்சீட்டு; வாட்போரில் குத்துதல்; கண்கட்டு மாயம், கை மாயம்; கை தடவுஞ் சமிக்கை; பந்து கைமாற்றம், பந்தாட்ட வகையில் தன்பக்க ஆட்டக்காரருக்குப் பந்தினைச் செலுத்துதல்; கணவாய், மலைகளினூடு செல்லும் இடுங்கிய பாதை; (படை.) ஒரு நாட்டுக்குள் செல்லும் வழியாக அமைந்துள்ள கணவாய்; ஆற்றுவாயிடை மரக்கலம் செல்லத்தக்க வாய்க்கால்; மீன் அணையைத் தாண்டித் துள்ளிவரும் வழி; *v.* முந்து, மேலே செல், முன்னேறு; புழங்கு, வழக்காற்றிலிரு; இடம்விட்டு இடம் மாற்றப்பெறு; மாறுதலுறு; சா, இற; கடந்து செல்; கழிவுறு; முடிவுறு; சேரிடத்துக்குக் கொண்டுபோ, கொண்டு வரவேண்டிய இடத்துக்கு வந்துசேர்; வழிவகுத்துக்கொண்டு செல்; கண்டிக்கப்படாமல் தப்பித்துக்கொள்; போதுமானதென்று ஏற்றுக்கொள்ளப்பெறு; மன்றச் சட்டப்பகர்ப்பு முதலியவற்றின் வகையில் நிறைவேற்றப்பெறு; வேட்பாளர் வகையில் தேறு, தேர்ச்சியடை; தேர்வாளருக்கு மனநிறைவளி; நிகழ், நேரிடு; செய்யப்பெறு, சொல்லப்பெறு; நடுத்தீர்ப்புக்கூறு; தீர்ப்புவகையில் வழங்கப்பெறு; சீட்டாட்டங்கள் வகையில் வாய்ப்பினை இழந்துவிடு, ஆட்டத்திலிருந்து விலகிக்கொள்; பின்தங்கும்படி விட்டுச்செல்; தாண்டிச்செல்; சட்டப்பகர்ப்பு வகையில் சட்ட மன்றத்தால் ஆய்ந்து ஏற்றுக்கொள்ளப்பெறு; தேர்வுக்கு வேண்டிய தரம் எய்து; விஞ்சு; மேம்படு; அறிவாற்றல்களைக் கடந்ததாயிரு; அனுப்பு; இயக்கு, நகர்த்து, செலுத்து; காற்பந்தாட்டம் முதலியவை வகையில் தன்பக்க ஆட்டக்காரருக்குப் பந்தினைச் செலுத்து; கடந்துபோகச் செய்; தேர்வில் மாணவனைத் தேர்ச்சிபெறச் செய்; சட்ட மன்றத்தில் சட்டம் முதலியவற்றை ஆய்ந்து நிறைவேற்று; காலவகையில் கழி; கொடுத்துவிடு; வழங்கு, செலாவணியிலிருக்கச் செய்; தூள் உரை; கண்டித்துப்பேசு; (தொ.) bring to pass, செய்துமுடி, நிறைவேற்று, நிகழ்வி; come to pass, நிகழ், நேரிடு; free pass, நுழைவிணக்கச் சீட்டு; பயண இணக்கச்சீட்டு; has passed the chair, தலைவராக அல்லது மாநகர் முதல்வராக ஆனார்; pass a dividend, பங்கு வீதம் அறிவிப்புத் தவிர்; pass away, இறந்துபடு; pass by, தவிர், புறக்கணி, தாண்டி நடந்து செல்; pass by the name of, என வழங்கப்பெறு; passed pawn, சதுரங்க வகையில் அடுத்தாற்போல் எதிர்ப்பில்லாத காய்; pass for, என ஏற்கப்பெறு; எனத் தவறாக வழங்கப்பெறு; pass in one's checks, இறந்துபடு; pass muster, அம்பலமேறு; போதுமானதென்று ஏற்றுக்கொள்ளப் பெறு; pass off, உணர்ச்சி முதலியவை வகையில் மங்கிப் போ; நடவடிக்கைகள் வகையில் முற்றும் நிறைவேற்றப்பெறு; ஒன்றை ஒன்றெனச் சொல்லி ஏமாற்றிக் கொடுத்துவிடு; ஒன்றிலிருந்து கவனத்தைத் திருப்பு; pass on, முன்செல், முன்னேறு; இறந்துபடு; அனுப்பு; கைக்குக் கை மாற்றியனுப்பு; தீர்ப்புக்கூறு, தண்டனை விதி; மோசஞ் செய்; pass out, (பே-வ.) இறந்துபடு; மதுக்குடியினால் நினைவிழ; pass over, தவிர், விட்டுவிடு; pass the time of day, (பே-வ.) முகமனுரைகள் பரிமாறிக்கொள்; pass through, நுகர், பட்டுணர், அனுபவி; pass upon, தீர்ப்புக்கூறு, தண்டனைவிதி; கைமாயஞ் செய், ஒன்றை ஒன்றெனச் சொல்லி ஏமாற்றிக் கொடுத்துவிடு; pass water, சிறுநீர் கழி; sell the pass, கொள்கைக்குத் தவறிழை.

pa'ssable, *a.* கடந்து செல்லக்கூடிய; பயணஞ் செய்யத்தக்க; நீர்வழிவகையில் படகு முதலியன செல்லத்தக்க; ஒப்புக்கொள்ளக்கூடிய, மட்டாக நல்லதான; பொறுத்துக் கொள்ளக்கூடிய, புறக்கணித்துவிடத் தக்க.

pass'age [1], *n.* சேறல், செலவு, பெயர்ச்சி; நிலைமாற்றம், ஒரு நிலையிலிருந்து மற்றொன்றுக்கு மாறுதல்; ஊடே செல்வதற்கான உரிமை; கப்பற்பயணம்; பிரயாணியைக் கடல்வழி கொண்டு செல்வதற்கான உரிமை; சட்டமாக நிறைவேற்றுதல்; செல்லும் வழி; நடை, இடைகழி; ஏட்டுரைப்பகுதி; (தொ.) bird of passage, நாடோடிப்பறவை; நாடோடி, ஓரிடத்தில் நிலையாய்த் தங்காதவர்; passage at arms, passage of arms, சண்டை, வாய்ச்சண்டை; passage beds, (மண்.) பொழுதைய அடுக்குகள்.

pass'age [2], *v.* குதிரையைப் பக்கவாட்டாகச் செலுத்து; பக்கவாட்டமாகச் செல்.

pass'ages, *n. pl.* இருவர்க்கிடையே நடக்கும் விவகாரங்கள்; ஒருவர்க்கொருவர் மனம்விட்டுப் பேசிக்கொள்ளுதல்.

pass'ant, *a.* (கட்.) மரபுச்சின்னத்திற் காணப்படும் விலங்கு வகையில் வலப்பக்க முன்னங்கால் தூக்கிய நிலையில் வலப்பக்கம் நோக்கி நடக்கிற.

pass'book, *n.* பற்றுவரவு ஏடு, வைப்பீட்டாளர் பணம் போடுவதையும் எடுப்பதையுங்காட்டும் பொருளகக் கணக்கேடு.

passe, (பிர.) *a.* இளமை கடந்துவிட்ட; காலநிலை கடந்துவிட்ட.

passee, (பிர.) *a.* பெண்வகையில் எழிற் பருவம் கடந்துவிட்ட.

passe menterie, (பிர.) *n.* பொன்-வெள்ளிச் சரிகை மணிகள் வாரிழை முதலியவற்றைக் கொண்டு செய்த ஒப்பனை.

pass'enger, *n.* பயணர்; (பே-வ.) செயல்துறை உழைப்பில் ஈடுபடாக் குழுவினர்.

pass'enger-pig'eon, *n.* நெடுந்தொலைவு பறந்து செல்லக்கூடிய வட அமெரிக்க காட்டுப்புறு வகை.

passe-partout, (பிர.) *n.* பொதுச்சாவி, பல பூட்டொரு கோல்; நிழற்படச் சட்டம்; விளிம்புகளில் ஒட்டுநாடாவைக் கொண்டு இணைக்கப்படும் இரண்டு கண்ணாடிப் பாளங்களைக் கொண்ட படச்சட்டம்.

pa'sser, *n.* கடந்து செல்பவர்; தேர்வில் தேறுபவர்; கடந்து செல்விப்பவர்; தேறுவிப்பவர்; பொருள்களை வேறு வேலையாள் கைக்கு மாற்றுபவர்.

pass'er-by, *n.* வழிச்செல்வோர்.

pass'erine, *n.* கிளையினைப் பற்றிக்கொண்டு குந்துதற்கேற்ற கால்களையுடைய பறவையினத்தின் வகை; *a.* கிளை அல்லது கொம்பினைப் பற்றிக்கொண்டு அமர்வதற்கேற்ற கால்களையுடைய பறவையினஞ் சார்ந்த; சிட்டுக்குருவியின் அளவுள்ள.

pass'ible, *a.* (இறை.) உணர்ச்சியுடைய; துன்பமுணரக் கூடிய.

pass'im, (ல.) *adv.* ஏட்டுரை மேற்கோள் சுட்டுவகையில் எல்லா இடங்களிலும், முழுவதிலும், பரவலாக.

passim'eter, *n.* பயணச்சீட்டுத் தானியங்கி.

pa'ssing, *n.* கடந்துசெல்லுதல்; தேர்வில் தேறுதல்; கடந்து செல்வித்தல்; தேறுவித்தல்; கடந்துசெல்லுமிடம்; முடிவுறுதல்; இறப்பு; பட்டுநூல் உள்ளீடாகவுள்ள பொன் அல்லது வெள்ளி இழை; *a.* அருகே செல்கிற; ஊடே செல்கிற; விட்டுச்செல்கிற; நிலையற்ற, விரைந்தோடுகிற; நன்கு ஆராயாத; தற்செயலான; *adv.* கடந்துசென்றுகொண்டு; நிலையற்று; விரைந்தோடி; நன்கு ஆராயாமல்; தற்செயலாக.

pass'ing-bell, *n.* சாவுமணி.

pass'ing-note, *n.* (இசை.) பண்ணமைதிக்கு இன்றியமையாததாய் இராது தடங்கலற்ற சுரபேதத்திற்குத் துணை செய்யும் இசைக்கூறு.

pa'ssion, *n.* உணர்ச்சி; அடங்காக் கோபம்; அடங்காப் பாலிணை விழைவு, மிகு காமம்; வெறி உணர்ச்சி; பேரார்வம்; *v.* (செய்.) உணர்ச்சி கொள்; பேரார்வங்காட்டு; (தொ.) Passion Sunday, கிறித்தவரின் நாற்பது நாள் உண்ணா நோன்புக்காலத்தின் ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமை; Passion Week, இயேசுநாதர் உயிர்த்தெழுந்த நாள் விழாவில் வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய வாரம்; மீட்டுயிர்ப்பு

விழா ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய வாரத்துக்கு முந்திய வாரம்; the Passion, இயேசுநாதர் சிலுவையிற்பட்ட துன்பங்கள்; இயேசுநாதர் வாழ்க்கை வரலாற்றில் அவர் சிலுவையிற்பட்ட வேதனைகள் குறித்துவரும் நிகழ்ச்சி; இயேசுநாதர் வாழ்க்கை வரலாற்றில் அவர் சிலுவையிற்பட்ட வேதனைகள் குறித்துவரும் கதையின் இசையமைப்பு.

pa'ssional[1], *n.* திருத்தொண்டர்கள் தியாகிகள் இவர்களுடைய துன்பங்களைக் கூறுஞ் சுவடி.

pa'ssional[2], *a.* உணர்ச்சி சார்ந்த; பேரார்வங் காட்டுகிற.

pa'ssionate, *a.* எளிதிற் சினங்கொள்ளத்தக்க; உணர்ச்சிக்கு ஆட்பட்ட; எளிதில் உணர்ச்சிகொள்ளுகிற; முற்றுர்வத்தின் விளைவான; மொழி-சொல் முதலியவை வகையில் பேருணர்ச்சி காட்டுகிற.

pass'ion-flower, *n.* இயேசுநாதர் சிலுவையிற்பட்ட வேதனைகளுக்குக் காரணமாயிருந்த ஆணி-முள் முதலியவைபோன்ற தோற்றமுடைய மலர்க்கொடி வகை.

pa'ssionist,* *n.* இயேசுநாதர் சிலுவையிற்பட்ட வேதனைகளின் நினைவை நிலைநிறுத்துவதற்குத் தங்களாலானதையெல்லாம் செய்யப் பிணைபட்டுள்ள குழுவினருள் ஒருவர்.

pass'ionless, *a.* சமநிலையான; எளிதிற் சினமூட்டப்பெறாத; காமம் நீத்த.

pass'ion-play, *n.* இயேசுநாதரது துன்பங்களையும் இறப்பினையுங் காட்டும் சமயநாடகம்.

pass'ive, *n.* (இலக்.) வினையின் செயப்பாட்டு வடிவம்; செயப்பாட்டு வினை; சாத்துவிக குணத்தினர்; *a.* துன்பமேற்கிற; தன் செயலின்றிப் பிறர் செயலுக்காட்பட்ட; (இலக்.) செயப்பாட்டுவினை சார்ந்த; எதிர்க்காத, அடங்கிப்போகிற; சுறுசுறுப்பில்லாத, மந்தமான, உயிர்ப்பற்ற; (தொ.) passive debt, வட்டி செலுத்தப்பெறாத கடன்; passive resistance, அறப்போர், சாத்துவிக எதிர்ப்பு; passive voice, (இலக்.) செயப்பாட்டு வினை.

pass'key, *n.* வாயிற்கதவு முதலியவைகளுக்கான தனிமுறைத் திறவுகோல்; பல பூட்டுச் சாவி.

pass'man, *n.* பல்கலைக்கழகத் தேர்வில் சிறப்புநிலைப் பட்டம் பெறுமல் பொதுநிலைப்பட்டம் பெற்றவர்.

pa'ssover, *n.* இஸ்ரவேலர்கள் எகிப்தியரிடமிருந்து பெற்ற விடுதலையைக் கொண்டாடும் யூதர் திருவிழா; யூதர் திருவிழாவின்போது கொன்று தின்னப்படும் ஆட்டுக்குட்டி; இயேசுநாதர்.

pa'ssport, *n.* கடவுச்சீட்டு, பயண இசைவுச்சீட்டு, நுழைவுரிமை தருஞ் செய்தி.

pass'word, *n.* அடையாளச்சொல், பகைவனினின்றும் நண்பனைப் பிரித்துக் காட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் அல்லது சொற்றொடர்.

past, *n.* இறந்த காலம்; சென்ற காலத்தில் நேர்ந்த நிகழ்ச்சி; ஒருவரது கடந்தகால வாழ்க்கை; *a.* கழிந்த காலத்தைச் சேர்ந்த; நடந்துபோன, கடந்துபோன; இப்போதுதான் கழிவாகிவிட்ட; முடிவுற்ற; (இலக்.) கால வகையில் சென்றுவிட்ட; *adv.* அருகாகக்கடந்து; *prep.* குறித்த காலவகையில் கடந்து; குறித்த இடவகையில் அப்பால்; எல்லை வகையில் அப்பால்; (தொ.) past master, வாணிகக்குழு-நற்கொத்தர் கழகம் முதலியவற்றில் தலைவராய் இருந்தவர்; துறை போகியவர்; past participle, (இலக்.) முடிவெச்சம்; past tense, (இலக்.) இறந்த காலம்; the past, கடந்த காலம்.

paste, *n.* பிசைந்த ஈர மாவு, கூழ், களி, பசைக்குழம்பு, இனிப்புத் தின்பண்ட வகை; மீன் பிட்டு; பற்று, மாப்பசை, பிசின்; இளக்கமான மென்கலவை வகை; போலி மணிக்கல் செய்வதற்கான நேர்த்தியான கண்ணுடி வகை; *v.* பசையினுல் ஒட்டு; நாடக முதலியவற்றின் விளம்பரத்தைப் பசை தடவிச் சுவரில் ஒட்டு; தாள் முதலியவை ஒட்டி மூடு.

paste'board, *n.* தாள் அட்டை; *a.* தாள் அட்டையாலான; நொய்தான; போலியான; சிறப்பற்ற.

pas'tel, *n.* நீலச்சாயம் தருஞ் செடிவகை; செடிவகையிலிருந்து கிடைக்கும் நீலச்சாயம்; வண்ணக்கோல்கள் செய்வதற்காகப் பசைநீரில் நிறமிகளைக் கலந்து உண்டாக்கப்படும் உலர்பசை; வண்ணக்கோலினுல் தீட்டப்பட்ட படம்.

pas'tern, *n.* குதிரையின் காற்குழைச்சு.

pas'teurism, *n.* அடுத்தடுத்து ஊசிகுத்தி மருந்தேற்றுவதன் மூலம் நீர்வெறுப்புநோய் போன்றவை வராமல் தடுக்கும் அல்லது குணப்படுத்தும் முறை.

pas'teurize, *v.* பிரஞ்சு விஞ்ஞானியான லூயி பாஸ்டர் (Louis Pasteur 1822-95) முறைப்படி பாலைச் சூடாக்கித் துப்புரவு செய்; ஊசிகுத்தி மருந்தேற்றி நோய்க்கு மருத்துவஞ் செய்.

pasti'ccio, *n.* கதம்பம், கூட்டுக்கலவை; இசைக்கலம்பகம், வெவ்வேறு மூலங்களிலிருந்து எடுத்து ஆக்கப்பட்ட இசைப் பாடல்; பல்வேறு படங்களைப் பார்த்து எழுதப்பட்ட படம்.

pastiche', *n.* கதம்பம்; வெவ்வேறு மூலங்களிலிருந்து எடுத்து ஆக்கப்பட்ட இசைப்பாடல்; வேறு பல படங்களைப் பார்த்து எழுதப்பட்ட படம்; தெரிந்த ஒரு நூலாசிரியரின் நடையில் அமைந்துள்ள இலக்கிய நூற்கோப்பு; தெரிந்த ஒரு கலைஞரின் பாணியிலமைந்துள்ள கலைவேலைப்பாடு.

pas'til, pastille', *n.* நறுமணத் தூபச் சுருள்; சிறு நறுமணத் தின்பண்டம்; இனிப்புக்கலந்த மருந்து வில்லை.

pa'stime, *n.* பொழுதுபோக்கு, விளையாட்டு, களியாட்டம்; நேரப்போக்குமுறை.

pa'stor, *n.* நல்லாயர், மேய்ப்பர், குரு, போதகர், திருக்கோயிலின் அல்லது திருச்சபையின் பொறுப்புடைய சமயகுரு; ஆன்மிக வழிகாட்டி; கருந்தவிட்டு நிறச் சிறகுகளையுடைய பறவை வகை.

pa'storal, *n.* நாட்டுப்புற வாழ்க்கை குறிக்கும் நாடகம்; முல்லைத்திணைப் பாட்டு; முல்லைநிலவாழ்க்கைக் காட்சிப்படம்; சமயகுரு மக்களுக்கு எழுதிவிடுக்கும் கடிதம்; *a.* ஆயர்களைச் சார்ந்த; நிலவகையில் மேய்ச்சலுக்குப் பயன்படுகிற; பாடல்கள் முதலியவை வகையில் நாட்டுப்புற வாழ்க்கையை விரிக்கிற; சமயகுரு சார்ந்த; (தொ.) pastoral epistles, புதிய ஏற்பாட்டில் டிமோத்தி-டைட்டஸ் (Timothy and Titus) என்பவர்களுக்குப் பால் (Paul) என்பவர் எழுதிய திருமுகங்கள்.

pastora'le, *n.* நாட்டுப்புற வாழ்க்கை பற்றிய இசைப்பாடல்; முல்லைத்திணை சார்ந்த எளிய இசைநாடகம்.

pa'storalism, *n.* முல்லைத்திணைப் பண்பு; நாட்டுப்புற வாழ்க்கையை விரித்து எழுதும் பாணி.

pa'storate, *n.* சமயகுருவின் பதவி; சமயகுருவின் பதவிக் காலம்; சமய குருமார் குழு.

pas'try, *n.* பிசைந்து வேகவைத்த மாவு; அடை, அப்பவகை, மாப்பண்டப் பண்ணியம்.

pas'try-cook, *n.* மாப்பண்டஞ் செய்பவர்.

pa'sturable, *a.* மேய்ச்சலுக்கு உகந்த.

pa'sturage, *n.* மேய்ப்பு, ஆநிரை மேய்த்தல்; மேய்ச்சல் நிலம்.

pa'sture, *n.* கால்நடைத் தீவனம்; மேய்ச்சல் பசும்புல் தரை; பசும்புல் நிலம்; *v.* கால்நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு போ; கால்நடைகளை மேயவிடு; ஆடுகள் முதலியவை வகையில் புல்மேய்; ஆள்வகையில் ஆடுகள் முதலியவற்றைப் புல் தரையில் மேயவிடு.

pa'sty[1], *n.* இறைச்சி-பழம் முதலியன உள்ளீடாகவுள்ள மாப் பண்ட வேவல்.

pas'ty[2], *a.* பசைக்குரிய; பசைபோன்ற; வெளிறிய நிறம் அல்லது தோற்றமுடைய.

pas'ty-faced', *a.* வெளிறிய நிறம் அல்லது தோற்றமுடைய.

pat[1], *n.* தட்டிக் கொடுத்தல்; சொட்டு; ஆதரவுக்குறிப்பு, மெச்சுதற் குறிப்பு; திரளை, வெண்ணெய் முதலியவற்றின் வகையில் மெல்லத்தட்டி உருவாக்கிய உருளை; *v.* தட்டு,

கொட்டு; தட்டித் தட்டையாக்கு; தட்டிக்கொடு; விரலால் தட்டி ஒத்துணர்வுகாட்டு, முதுகில் தட்டித்தடவி ஆதரவு தெரிவி; ஆதரவு காட்டு; மெச்சு; ஊக்குதல் தெரிவி; (தொ.) pat on the back, ஆர்வ ஆதரவு தெரிவி, ஆதரவு தெரிவித்து ஊக்கு.

pat², *a.* வாய்ப்பான, வாக்கான; தறுவாய்க்கு ஏற்ற, காலத்துக்குப் பொருத்தமான; நோக்கத்துக்கு இசைவான; எண்ணத்துக்குப் பொருத்தமாக அமைந்த; *adv.* வாய்ப்பாக, வாக்காக; தறுவாய்க்கு ஏற்றதாக, காலத்துக்கு இசைவாக; சரியாக, நுட்பமாக, நுட்பந் தவறாமல்; நோக்கத்துக்கு முற்றிலும் பொருத்தமாக; எந்த நேரத்திலும் பயன்படுத்திக் கொள்ளும் ஆயத்தநிலையில்; (தொ.) stand pat, சீட்டாட்ட வகையில் வெளிச்சீட்டெடுக்க நாடாமல் தன் கைச்சீட்டைக் கொண்டே ஆடு; மாறுதல் ஏற்க மறு; தன் துணிவே மேற்கொள்.

pat³, *n.* அயர்லாந்து நாட்டானைப் பற்றிய வேடிக்கைப் பெயர்.

pat'-a-cake, *n.* குழந்தைப்பாடல் தொடக்க வாசகம்; குழந்தை விளையாட்டு வகை.

patagi'um, (இ.) *n.* வெளவாலினத்தின் இறக்கைச் சவ்வு.

patavin'ity, *n.* லத்தீன் மொழியில் காணப்படும் பாடுவா (Padua) வட்டாரத் திசைமொழிப் பண்பு.

pat'-ball, *n.* புல்வெளிப் பந்தாட்ட வகை.

patch, *n.* ஒட்டு; வட்டப்பட்டை, அகலப்பொட்டு; ஒட்டுத் தையல் துண்டு; காயத்தின்மீதுள்ள மாவடைக்கட்டு; கண் தடைக்கட்டு; சுட்டி, பரப்பின்மீதுள்ள இடை வேறுபாட்டுப் பட்டை; பாத்தி, நிலத்துண்டம்; பத்தை, துண்டு நிலத்தின் இலை தழை மர வளர்ச்சித் தொகுதி; எச்சமிச்சம்; இடையிடைப்பகுதி, இடைவெட்டு; 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் மேனி வண்ணமெடுத்துக்காட்ட அணியப்பட்ட கரும் பட்டுத் துண்டு அல்லது மாவடைப்பொட்டு; *v.* ஒட்டுத் தையலிடு; ஒட்டுப்போடு; ஒட்டுத்துண்டால் சரிசெய்; ஒட்டுத்துண்டு வகையில் ஒட்டுப்போட உதவு; ஒட்டிட்டுச் சரிசெய், துண்டுத் துணுக்குகள் கொண்டு ஒப்பேற்று; சந்து செய், அமைத் திணக்குவி, சீர்செய்; அவசர அவசரமாக ஒட்டிட்டுச் சரிசெய்; ஒட்டுக்களிணைத்து உருவாக்கு; துண்டுகளை ஒட்டி இணை; பொட்டுப்பொட்டாகத் தோற்று, பட்டைபட்டையாகத் தென்படு; (தொ.) not a patch on, சிறிதும் ஒப்பிடத் தக்கதன்று, ஒப்பிட ஏதும் இல்லை; மலை மடுவாக வேறுபட்டது; patch up, ஒட்டிட்டுச் சீராக்கு, அரைகுறையாகப் பழுது பார்; பூசல் இணக்குவி; strike a bad patch, கேடான பருவம் வரப்பெறு.

patch'ouli, patch'ouly, (த.) *n.* பச்சிலை, மணப்பொருள் தருஞ் செடிவகை; மணப்பொருள் வகை.

patch'-pocket, *n.* சட்டைவெட்டுப் பை, துண்டொட்டுப் பை.

patch'-work, *n.* ஒட்டுவேலை; பன்னிற ஒட்டிணைவு; பல்வகை ஒட்டிணைவு.

pate¹, *n.* (பே-வ.) தலை; மூளை.

pate², (பிர.) *n.* உணவுக்களி வகை; (தொ.) *pate de foie gras*, கொழுவிய வாத்தீரற் களி.

patell'a, (ல.) *n.* முழந்தாள் முட்டுச்சில்லு, கால்முட்டெலும்பு; சிறு தட்டம்; *pl. patell'ae*.

patell'ar, *a.* கால்முட்டுச் சில்லுக்குரிய.

patell'ate, *a.* குவிதட்டம் போன்ற; சிப்பியுருவான.

pat'ent, *n.* காப்புரிமைப் பட்டயம்; புதுமுறை ஆக்க விற்பனைகளுக்குரிய தனிக்காப்புரிமை; தனிச்சிறப்புரிமை; தனியுரிமைச் சான்றிதழ்; உரிமைக் காப்புடைய புத்தாய்வு முறை; தனிக் காப்புரிமை வாய்ந்த புதுச் செய்முறை; சிறப்புச் சின்னம், பண்புச் சின்னம்; *a.* தனிக்காப்புரிமையுடைய; உரிமைக் காப்புடைய; தனியுரிமைச் சான்றுடைய; தனி உரிமைத் தொடர்பிணையுடைய; (பே-வ.) தனிக்காப்புரிமைத் தகுதி வாய்ந்த, காப்புரிமை பெறத்தக்க; திறந்த; வெளிப்படையான; தெளிவான, மேலீடாகவே தெரிகிற; *v.* தனிக் காப்புரிமை பெறு, அரசியற் பட்டய உரிமை பெறு; (தொ.) letters patent, காப்புரிமைப் பட்டயம்; patent leather, மெருகிட்ட கருவண்ண மேற்பரப்புடைய தோல்; patent log, கப்பல் வேக அளவைக் காட்டும் வட்டில்; patent office, காப்புரிமைச் சீட்டு வழங்கும் பணிமனை; patent of gentility, தவறா உயர்குடிச் சின்னம்.

patentee', *n.* காப்புரிமைச்சீட்டு எடுப்பவர்; தனியுரிமைப் பட்டயம் பெற்றிருப்பவர்; பட்டய உரிமைப் பயன்பெறுபவர்.

pat'ent-roll, *n.* பட்டய உரிமை பெற்றோர் பெயர்த்தொகுதிப் பட்டியல்.

paterfamil'ias, *n.* குடும்பத் தலைவர்; தந்தை.

patern'al, *a.* தந்தையினுடைய; தந்தைக்குரிய; தந்தை வழியான; தந்தைவழி உறவுடைய; தந்தை போன்ற; தந்தையின் அன்புடைய; (தொ.) paternal government, நல்லெண்ணத்துடன் குடிகளின் உரிமைகள்மீது தேவையற்ற கட்டுப்பாடுகளைச் சுமத்தும் அரசியல்; paternal grandmother, தந்தையின் தாய்; paternal legislation, நல்லெண்ணத்துடன் குடிகளின் உரிமைகள்மீது தேவையற்ற கட்டுப்பாடுகளைச் சுமத்துஞ் சட்டங்கள்.

patern'ity, *n.* தந்தைமை, தந்தையாயிருக்குந் தன்மை; தந்தைத் தொடர்பு; தந்தை வழியில் பிறப்புமூலம்; ஆக்கியோன் நிலை, ஆசிரிய உரிமை; ஆக்கமூலம், தோற்றமூலம்.

pat'ernos'ter, *n.* இறைவழிபாட்டு வாசகம்; இறைவழிபாடு; சமய மேடையுரை; அக்கமணிமாலையில் இறைவழிபாட்டு நினைவூட்டும் பெரிய மணியுரு; செபமாலை; அக்கமாலை போன்ற பொருள்; இடையிடையே கொக்கியுடைய தூண்டில்; (க-க.) அக்கமாலை போன்ற அணி ஒப்பனை; (தொ.) black paternoster, white paternoster, மந்திரிப்பு வாசகமாகப் பயன்படுத்தும் வழிபாட்டு வாசகம்; devil's paternoster, முணுமுணுப்பு; paternoster line, இடையிடையே கொக்கியுடைய தூண்டில்.

path, *n.* வழி; கால்டிப்பாதை; நடைப்பாதை; பந்தய ஓட்ட மிதிவண்டிகளுக்கு வழிகாட்டும் நெறிவரை; செல்நெறி; செயல் நெறிமுறை; வழிவகை, நெறிமுறை.

Pathan', *n.* பட்டாணியர், ஆப்கன் நாட்டவர், ஆப்கன் நாட்டினத்தவர்.

pathet'ic, *a.* இரக்கந்தூண்டுகிற; இரங்குகிற, இரக்கமான; துயரார்ந்த, சோகமான; (தொ.) pathetic fallacy, தற்குறிப்பேற்றம்.

pathet'ics. *n. pl.* சோக உணர்ச்சி தூண்டுதல்; கழிபேரவலம்.

path'finder, *n.* புதுநிலங் காண்பவர்; புதுவழி நாடுபவர்; குண்டு விமானத்துக்குமுன் சென்று இலக்கு விளக்கங் காணும் வழிகாட்டி விமானம்.

path'ic, *n.* இயல்பல் புணர்ச்சிச் சிறுக்கன்; *a.* செயலுக்கு ஆட்படுகிற, தன்செயலற்றுச் செயல் ஏற்கிற.

path'less, *a.* வழியற்ற; முன்சுவடற்ற.

pathogen'esis, *n.* நோய்த்தோற்ற வகை.

pathogenet'ic, pathogen'ic, pathog'enous, *a.* நோய் உண்டுபண்ணுகிற, பிணி தோற்றுவிக்கிற.

pathog'eny, *n.*=pathogenesis.

pathognomon'ic, *a.* நோய் இன்னதென்று குறிப்பிட்டுக் காட்டுகிற.

pathog'nomy, *n.* உணர்ச்சி ஆய்வியல்.

pathol'ogist, *n.* நோய்க்குறியாய்வு வல்லுநர்; நோய்க்குண நூல் வல்லுநர்.

pathol'ogy, *n.* நோய்க்குண நூல், நோய்க்குறி நூல்; உணர்ச்சியாய்வு நூல்.

pathopho'bia, *n.* நோயச்சம்.

path'os, *n.* அவலச்சுவை; உணர்ச்சிக்கனிவு; இரக்கப் பண்பு.

path'way, *n.* வழிநடைப்பாதை.

pa'tience, *n.* பொறுமை; இடையறு ஊக்கம்; நோய் நோன்றல்; பொறுக்கும் எல்லை; ஒருவரே ஆடுஞ் சீட்டாட்ட வகை; (தொ.) would try the patience of Job, எவர் பொறுமை எல்லையையுங் கடந்தது.

pa'tience-dock, *n.* செடிவகை.

pa'tient, *n.* நோயர், நோய்நோற்பவர்; மருத்துவரின் வாடிக்கையர்; *a.* பொறுமையுள்ள; பொறுத்துக்கொள்கிற; நீடித்துத் தாங்கும் ஆற்றலுடைய; விடா ஊக்கமுடைய; ஏற்கிற, பொருள்கோளுக்கு இடந்தருகிற.

pat'ina, *n.* பழைய வெண்கலப் பொருள்களுக்குரிய அழகுப் பசுங்களிம்பேற்றம், பசுங்களிம்பு; உலோகக் களிம்பின் மென்படலம்; பண்டை ரோமாபுரிப் பாணியில் பரந்தகன்ற தட்டம்; திருவுணா வழிபாட்டுத் தட்டம்.

pa'tio, (ஸ்பா.) *n.* உள்முற்றம்; *pl. pa'tios.*

pat'ois, *n.* சேரிமொழி; திசைமொழி.

pat'riarch, *n.* குடி முதல்வன்; குடும்பத்தலைவர், குடும்ப ஆட்சி முதல்வர்; குலபதி, குல ஆட்சி முதல்வர்; இன ஆட்சி முதல்வர்; யூதரின் சிறப்புக்குரிய மூதாதையருள் ஒருவர்; முதுவர், முற்காலக் கீழைத் திருச்சபைகளில் வட்டார முதல்வர்; ரோமன் கத்தோலிக்க உயர்படி முதல்வர்; மூதாளர்; இனத்தில் வாழும் மூப்பு மிக்கவர்; இனத்தின் சிறப்புப் பொருள்.

patriarch'al, *a.* குடும்ப ஆட்சித் தலைவருக்குரிய; இன ஆட்சித் தலைவருக்குட்பட்ட; குடும்ப ஆட்சி முதல்வர் போன்ற; இன ஆட்சி முதல்வரியல்புடைய.

pat'riarchate, *n.* திருச்சபை முதுவர் பணிநிலை; திருச்சபை முதுவர் ஆட்சி வட்டாரம்; திருச்சபை முதுவர் பணிமனை; திருச்சபை முதுவர் உறைவிடம்; குடும்ப ஆட்சி முதல்வர் படிநிலை.

pat'riarchy, *n.* குடி முதல்வராட்சி; குடிமுதல்வராட்சி முறைச் சமுதாயம்; குடிமுதல்வர் ஆட்சிமுறை அரசு.

patri'cian, *n.* பண்டை ரோமாபுரி உயர்குடியுரிமையாளர்; ரோமாபுரிப் பேரரசின் உயர் உரிமைக் குடியாளர்; ரோமாபுரிப் பேரரசின் தொலை மாகாணங்களில் பேரரசர் பேராளர்; இத்தாலியக் குடியரசுகளில் உயர்குடித் தலைவர்; உயர் குடியாளர்; ஆட்சிக்குடி உரிமையாளர்; *a.* பண்டை ரோமாபுரியில் உயர் ஆட்சி வகுப்புக்குரிய; உயர்குடிப் பிறந்த; உயர்குடி சார்ந்த.

patri'ciate, *n.* உயர்குடி வகுப்பு; உயர்குடி மக்கள் தொகுதி; உயர்குடியாட்சி; உயர்குடிப் படிநிலை.

patricid'al, *a.* தந்தைக்கொலை சார்ந்த; தந்தையைக் கொலை செய்கிற.

pat'ricide, *n.* தந்தைக்கொலை; தந்தையைக் கொன்றவர்.

patrimon'ial, *a.* தந்தைவழிச் சொத்துச் சார்ந்த; தந்தை வழி வந்த.

pat'rimony, *n.* தந்தைவழிச் சொத்து; மூதாதையர் வழி மரபுச் செல்வம்; திருக்கோயிலுக்கு விடப்பட்ட நிவந்தம்.

pat'riot, *n.* பிறந்தநாட்டார்வலர்.

patriot'ic, *a.* பிறந்தநாட்டுப் பற்றூர்ந்த.

pat'riotism, *n.* நாட்டுப்பற்று, தேசாபிமானம்.

patris'tic, *a.* தொடக்க காலக் கிறித்தவ திருச்சபை முதுவர் ஏடுகள் சார்ந்த.

patrol', *n.* படைத்துறைச் சுற்றுக்காவல் உலா; ஊர்க்காவலர் சுற்றுக்காவல், ரோந்து; காவல்தண்டு, சுற்றுக்காவற் குழு; தண்டுகாவலர்; நாள்முறை விமானச் சுற்றுலா; வேவுக்குழு, புலங்காண் குழு; *v.* சுற்றுக்காவல் புரி; தண்டு காவலராகச் செயலாற்று.

pat'ron, *n.* புரவலர்; காப்பாளர்; சிறப்பு வாடிக்கையாளர்; காப்புத் திருத்தகை, மரபாதரவுப் புனிதர்; பண்டை ரோமாபுரியில் விடுவிக்கப்பட்ட அடிமையின் முன்னுள் தலைவர்; பண்டை ரோமாபுரியில் பொதுக் குடியினர் துணையாதரவாளர்; மானியம் வழங்கும் உரிமையுடையவர்.

pat'ronage, *n.* புரவு, ஆதரவு; மானியம் வழங்கும் உரிமை; வாடிக்கையாதரவு.

pat'ronal, *a.* காப்புத் திருத்தகை சார்ந்த, மரபாதரவுப் புனிதர் பெயராலான.

pat'roness, *n.* பெண் புரவலர்.

pat'ronize, *v.* புரந்தருள், துணையாதரவு செய், ஊக்குதவி செய்; வள்ளலாக நடி, ஆதரவுப் பாவனை காட்டு, பெருமித ஆதரவுப்பாங்குடன் நட.

pat'ronizing, *a.* ஆதரவுப் பசப்புக் காட்டுகிற, ஆதரவு பாலிக்கிற.

pat'ronizingly, *adv.* ஆதரவுப் பசப்புடன், ஆதரவுப்பாவனைப் பாங்கில்.

patronym'ic, *n.* தந்தைவழிப் பெயர்; மூதாதைவழிப் பெயர்; *a.* தந்தை வழியான; மூதாதை வழிப்பட்ட.

patroon', *n.* (வர.) சிறப்புரிமை நிலக்கிழார், நியூயார்க்கு-நியூ ஜெர்ஸி ஆகிய அமெரிக்க பகுதிகளில் 1850-க்கு முன்னிருந்த டச்சு அரசியலின் பட்டய உரிமைபெற்றுச் சிறப்புரிமை பெற்றிருந்த நிலக்கிழார்; கப்பல் மீகான்; படகு வலவர்.

patt'en, *n.* மேல் சோடு, சேற்றுக்காப்பு மீபுதையரணம், புதையரணம் சேற்றில் அமிழாதபடி இருப்பு வளையங்கள்மீது மரத்தாலான அடிக்கட்டையுடைய காப்புக்கவிகைப் புதையடி.

patt'er[1], *n.* குழூஉமொழி; தொழிற்குழுவின் தனிக்குறிமொழி; ஆரவாரப் பேருரை; பாடலிடை விரை உரையாடல்; பாடல்வாசகம்; களிநாடக வாசகம்; *v.* கடகடவென ஒப்பி; மளமளவென்று பேசு; உளமேவாமல் பேசு.

patt'er[2], *n.* தடதடவொலி, அடுக்கடுக்காகத் தட்டும் ஒலி; *v.* சடசடவென்றொலி எழுப்பு; மோட்டில் மழைத்துளிகள் விழும் ஒலி எழுப்பு; குற்றடியிட்டு விரைந்தோடு, குடுகுடு வென்றோடு; சடசடவொலி எழும்படி நீர்கொட்டு.

patt'ern, *n.* பாங்கம், எடுத்துக்காட்டமைப்பு; தோரணி; எடுத்துவரிச் சட்டம்; எடுத்துக்கோள் வார்ப்பு; முன்வரைவு; *v.* முன்மாதிரியாகக் கொண்டு செய், படிவம் பின்பற்றிச் செய்; மேல்வரிச்சட்டமாகப் பின்பற்று; மாதிரிச்சட்டங் கொண்டு ஒப்பனைசெய்; பாங்காக்கு.

patt'ern-room, *n.* ஆடை-கம்பளம்-சுவர்த்தாள்களின் ஒப்பனை மாதிரிச் சட்டம் உருவாக்குந் தொழிற்சாலைப் பகுதி.

patt'ern-shop, *n.* ஆடை கம்பளம்-சுவர்த்தாள்களுக்கான ஒப்பனை மாதிரிப் படிவங்களின் சட்டங்களை உருவாக்குந் தொழிலகம்.

patt'y, *n.* மாப்பண்டம், பிட்டு.

patt'ypan, *n.* மாப்பண்டம் சுடுவதற்கான சில்லுத்தட்டு.

pat'ulous, *a.* திறந்த, விரிந்த; கிளைகள் வகையில் பரந்தகன்ற.

pau'city, *n.* சின்மை.

Paul'ine, *n.* லண்டன் மாநகர் தூய திரு. பால் கல்வி நிலைய உறுப்பினர்; *a.* தூய திரு. பாலுக்குரிய.

paulo-post-fu'ture, *n.* கிரேக்க மொழியில் வினைச்சொல் எதிர்நிகழ்வின் விளைவு குறிக்குங் காலம், முடிவுநிலை எதிர் காலம்.

Paul Pry, *n.* "முந்திரிக்கொட்டை".

paunch, *n.* தொப்பை, வயிறு; விலங்கின் முதல் இரைப்பை; திண்ணிய பாய்விரிப்பு; *v.* குடலெடு, குடலை வெளிப்படுத்து.

paup'er, *n.* ஏழையர், நொடித்தவர்; இரவலர், இரப்பாளி; ஏழையர் விடுதியின் உதவி பெறுபவர்; இயலா நிலை மனுச் செய்பவர்.

pau'perdom, *n.* = pauperism.

pau'peress, *n.* இயலா எளிமையுடைய பெண்; ஏழை விடுதி உதவி பெறும் பெண்; இரந்துண்பவள்.

pau'perism, *n.* இயலாநிலை, நொடிப்பு நிலை.

pau'perize, *v.* இயலாநிலைப்படுத்து; புற உதவி நாடும் பழக்கத்துக்கு ஆளாக்கு.

pause, *n.* இடை ஓய்வு; இடைத் தயக்கம்; இடை நிறுத்தம்; பேச்சிடை ஓய்வு; படிப்பிடைத் தயக்கம்; (இசை.) சுரம் அல்லது நிறுத்தக்குறியின்கீழ் இடும் நீட்டிப்புக் குறி; *v.* இடைத்தயங்கு; இடையே சிறிது நிறுத்து; காத்திரு; மெல்ல நிறுத்திச் செல், நின்று தயங்கி மேற்செல்.

pav'age, *n.* தளவரிசைக்கூலி; தளவரிசை வரியுரிமை.

pav'an, (ஸ்பா.) *n.* விளேதக் கூத்துவகை.

pave[1], *v.* தளவரிசையமை; மீதாகப் பரப்பு; முன்னேற்பாடு செய்.

pave[2], (பிர.) *n.* தளம்; மணிக்கற் பதிப்பு.

pave'ment, *n.* தளவரிசையிட்ட பகுதி; நடைபாதைத் தளம்; (வில.) பாவுதளம் போன்ற பல்லமைவு; (தொ.) crazy pavement, பல வடிவக் கற்கள் கொண்டு அமைத்த தோட்டப் பாதை; on the pavement, குடியிருக்க இடமில்லாமல்.

pave'ment-artist, *n.* நடைபாதை ஓவியக்கலைஞர், வழி செல்பவரிடமிருந்து பணம்பெறுவதற்காக நடைபாதையில் வண்ண ஓவியம் தீட்டுங் கலைஞர்.

pavil'ion, *n.* கூடார மண்டபம்; விதான மண்டபம்; காட்சி மாடம்; கட்டிடத்தின் ஒப்பனைப் புறத் தாழ்வாரம்; பட்டையிட்ட மணிக்கல்லின் அடிப்பகுதி; மருத்துவக்கூடத் தனிப் பகுதி; கொம்பில் கட்டிய மணி; புறச்செவி; *v.* அணிமாடங்களுடன் அமை; வண்ணப் பந்தரிட்டுக் கவி; இட்டுப் பொதி.

pavona'zzo, (இத்.) *n.* மயில்வண்ணக் குறியுடைய சலவைக் கல்; *a.* சலவைக்கல் வகையில் மயில்வண்ணக் குறியுடைய.

pav'onine, *a.* மயிலுக்குரிய; மயில் போன்ற.

paw, *n.* கூருகிர்க்காலடி; (பே-வ.) உள்ளங்கை, கை; கையெழுத்து; *v.* தாளால் அறை; குதிரை வகையில் நிலத்தி லுதை; காலால் நிலத்தில் எற்று; (பே-வ.) திருந்தா நிலையிற் கையாளு; மோசமாகக் கையாடு.

pawl, *n.* இயந்திரப் பற்களைத் தடுக்கும் அடைதாழ்; நங்கூரந் தூக்கியைச் சறுக்காமல் தடுக்கும் அடைகோல்; *v.* நங்கூரந் தூக்கியைச் சறுக்காமல் அடைகோலிட்டுத் தடு.

pawn[1], *n.* சதுரங்க ஆட்டத்திற் காலாட் காய்.

pawn[2], *n.* ஈடு, பிணையம், கொதுவை; அடகு, அடைமானம்; *v.* பிணையாக அளி; ஈடு வை, அடகு வை; உயிர்-உறுதிச் சொல்-மானம் ஆகியவற்றைப் பிணையமாக வைத்துச் செயலாற்று; இழக்க முனை.

pawn'broker, *n.* அடைமான வட்டிக்கடைக்காரர்.

pawn'broking, *n.* அடைமான வட்டித்தொழில்.

pawnee', *n.* அடைமானமாகப் பொருள் வைக்கப் பெற்றவர், பிணையம் ஏற்பவர்.

pawn'shop, *n.* அடைமானக் கடை.

pax, (ல.) *n.* குருமாரும் வழிபாட்டாளரும் வழிபாட்டின்போது திருமுத்தமிடும் சிலுவைக் குறியிட்ட சுற்பாளம்; *int.* போர் நிறுத்தம்! நட்பமைதி! (தொ.) pax Britannica, பிரிட்டன் பேரரசாட்சிக்குட்பட்ட நாடுகளில் நிலைநிறுத்தப்படும் அமைதி; pax Romana, பண்டை ரோமாபுரிப் பேரரசாட்சிக்குட்பட்ட நாடுகளில் நிலைநிறுத்தப்பட்ட அமைதி; pax vobiscum, உங்களிடையே அமைதி நிறைவதாக.

pay[1], *n.* உழைப்பூதியம், கூலி; சம்பளம், ஊதியம்; *v.* கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடு; வரிப்பணம் கொடு; பணத்தை ஒப்படை; உழைப்புக்கு ஊதியம் அளி; உழைப்புக்கீடாக வழங்கு; பரிசு வழங்கு; கொடு, வழங்கு, அளி; விளைவித்துக் கொடு, விளைவி; ஆதாயம் அளி; ஏற்ற பலன் அளி; (தொ.) pay back, கடனைத் திருப்பிக்கொடு; செய்வதற்குப் பதில் செய்; pay court to, காதலுக்கு ஊடாடு; பாராட்டுரை; மதிப்புக்காட்டு; தன் காரியத்தை முன்னிட்டுப் பின்சென்று நயந்து நட; pay down, காசாக உடனடிப்பணம் கொடு; pay for, விலைகொடு; ஏற்ற தண்டனைபெறு; உரிய துன்பத்தை ஏற்றுக்கொள்; சரியீடு செய்; செலவை ஏற்றுக்கொள்; pay for one's whistle, கொண்ட சிறிதளவு இன்பத்துக்குப் பேரளவான விலைகொடு; pay in, கணக்கில் வரவினமாக்கு; நிதிக்குப் பங்குவரி அளி; pay its way, கடனில்லாமல் செலவுக்குப் போதியதாகு; pay load, விமானப் பாரத்தில் வருவாய்தரும் பகுதி; pay off, முழுதும் கொடுத்துத்தீர்; சரியான ஊதியமளி; பழிக்குப்பழி வாங்கு; (கப்.) காற்றெதிர்ப் பக்கமாக ஒதுங்கு; pay one's way, செலவுக்குப் பணமுடையராயிரு; pay out, பணத்தைச் செலவுவகையில் வழங்கு; தக்க தண்டனை கொடு; (கப்.) கயிறு முதலியவற்றைத் தளர்த்தி நீட்டி விட்டுக் கொடு; pay round, (கப்.) முகப்புத் திருப்பு; pay the piper, செலவுப் பொறுப்பேற்றுக்கொள்; பெருஞ்செலவுக்கு ஆட்படு; pay the piper and call the tune, செலவுப் பொறுப்பை ஏற்றுச் செயலாட்சி மேற்கொள்; pay through the nose, கஷ்டப்பட்டுக்கொடு; pay up, முழுதுங்கொடு, கொடுத்துத்தீர்.

pay[2], *v.* தார் பூசு; ஈரத்தடைக் காப்பாகக் கீலடி.

pay'able, *a.* கொடுக்க வேண்டிய; கொடுக்கத்தக்க; சுரங்க வகையில் ஆதாயந் தரத்தக்க.

pay'-as-you-earn, *a.* வருமானவரித் துறையில் வருவாய் இடத்திலேயே பிடித்துக் கொள்ளப்படுகிற.

pay'-bill, *n.* சம்பளப் பட்டியல்.

pay'-day, *n.* சம்பள நாள்; பங்குக்களச் செலாவணி நிலையத்திற் பங்கு முதல் மாற்றுக்குப் பணங் கொடுக்கப்படும் நாள்.

payee', *n.* பணம் பெறுவோர்.

pay'er, *n.* பணந் தருபவர்.

pay'ing, *a.* வருவாய் அளிக்கிற, ஆதாயந் தருகிற; செலவுக்குப் பணங் கொடுக்கிற; கட்டணம் அளிக்கிற, வாடகை தருகிற; (தொ.) paying guest, ஒரு குடும்பத்தில் பணங் கொடுத்து உணவு வசதிமட்டும் பெறுபவர்.

pay'-list, *n.* சம்பளம் பெறுபவர் பட்டியல்.

pay'master, *n.* படைவீரர்க்குச் சம்பளம் வழங்குபவர்; தொழிலாளர்க்குச் சம்பளப்பணம் வழங்குபவர்; (தொ.) paymaster general, கருவூலத் துறையரங்கத் தலைவர்.

pay'ment, *n.* பண வழங்கீடு, பணங்கொடுப்பு; கொடுக்கப்படும் பணம்; ஊதியம்.

payn'ize, *v.* மர வகையில் பதனக் காப்பூட்டும் பொருள் தோய்வி.

pay'-roll, *n.*=pay-list.

paysage, (பிர.) *n.* நாட்டுப்புறக் காட்சி; துண்டு நிலக்காட்சி; துண்டுநிலக் காட்சிப்படம்.

pay'-sheet, *n.*=pay-bill.

pea, *n.* பயறு; பட்டாணி; பயற்றினம்; பயற்றுச்செடி; பயற்றினச்செடி; (தொ.) green peas, உணவுக்குரிய இளம் பயறு; pea soup, பயற்று வடிசாறு; sweet pea, தோட்டப் பகட்டு மலர்ச்செடி வகை.

peace, *n.* அமைதி, போரற்ற நிலை, சமாதான நிலை; உள்நாட்டமைதி, குழப்பமற்ற நிலை; சட்ட ஒழுங்கமைதி; மன அமைதி, உலைவிலா நிலை, கலக்கமின்மை; நட்பமைதி; மோனம், சந்தடியின்மை; (தொ.) at peace, அமைந்து, நட்பமைதியுடன், கலவரமின்றி, சண்டையில்லாமல்; be sworn of the peace, தண்டலாளராக அமர்வுபெறு; commission of the peace, justice of the peace, அமைதி காவலர், சுற்றுலா நடுவர்; hold one's peace, வாளா இரு, அரவமறிரு; keep the peace, அமைதிபெறு, சச்சரவற்றிரு, பூசல் தடுத்தாள்; king's peace, நாட்டுச்சட்ட ஒழுங்காட்சியமைதி; make one's peace with, மீண்டும் நண்பராக்கிக்கொள்.

peace'able, *a.* அமைதி நாடுகிற; அமைதியுடனிருக்கிற; கலவரமற்ற; சச்சரவு நாடாத.

peace'ful, *a.* அமைதி வாய்ந்த; அமைதிநிலைக்குரிய.

peace'maker, *n.* சந்து செய்விப்போர்.

peach[1], *n.* பழவகை; கனிமரவகை.

peach[2], *v.* உடன்கூட்டாளியைக் காட்டிக்கொடு, கூட்டாளிக்கெதிராகச் சான்றுபகர்.

peach'-blow, *n.* மென்னீலச் செந்நிறம்; நீலச்செந்நிற மெருகு வண்ணம்.

peach'-coloured, *a.* வெளிறிய சிவப்புநிறமுடைய.

pea'-chick, *n.* மயிற்பிள்ளை, இள மயில்.

pea'cock, *n.* மயில்; மயிற் சேவல்; *v.* தன்னழகு பகட்டிக் காட்டு; பகட்டு வீறுப்புடன் நடைபழகித் திரி; வீறுப்புக் காட்டு.

pea'cock-blue, *n.* மயில்நீலம், மயிற்கழுத்துப் போன்ற திண்ணீலம்.

pea'cock-butt'erfly, *n.* வண்ணத்துப்பூச்சி வகை.

pea'cock-fish, *n.* பச்சை-நீலம்-சிவப்பு-வெண்மை நிறங்களைக் கொண்ட மீன் வகை.

pea'hen, *n.* பெடை மயில்.

pea'-jack'et, *n.* கப்பலோட்டியின் குறுமேற்சட்டை.

peak[1], *n.* முகடு, சிமையம்; மலைமுகடு, கொடுமுடி; தாடி முனை; தொப்பி முனை; கப்பலின் ஒடுங்கிய முனைக்கோடி; பாய் உச்சி விளிம்பு; *a.* உச்சநிலையான, உச்ச அளவான; *v.* (கப்.) பாய்க்கட்டைகளை நிமிர்த்துயர்த்து; துடுப்பினை உயர்த்திப்பிடி; திமிங்கில வகையில் மூழ்கும் வேளையில் வாலைச்செங்குத்தாகத் தூக்கு; குத்துமுனைத் தோற்றம் அளி; குத்து முகடாக எழு.

peak[2], *v.* நலிந்து மெலிவுறு.

peak'y[1], *a.* முகடு போன்ற; முகடுள்ள; முகடு முகடான.

peak'y[2], *a.* ஒட்டி மெலிந்த.

peal, *n.* முழக்கம்; கிளர் ஒலியலை; பன்மணி ஒலி; கணகண ஒலி; *v.* முழங்கு; கணகணவென்றொலி; கிளர் ஒலியெழுப்பு.

pea'nut, *n.* நிலக்கடலைச் செடிவகை; நிலக்கடலைவகை.

pear, *n.* பேரியினக்காய் வகை,

pearl[1], *n.* முத்து; அரும்பொருள்; இனத்தின் சிறந்த எடுத்துக்காட்டு; முத்துப்போன்ற பொருள்; பனித்துளி; கண்ணீர்த்துளி; பல்; அச்சுருப்படிவ வகை, படிகவகைப் பொருள்களின் சிறு துணுக்கு; *v.* முத்துப்போன்ற துளிகள் சிதறவிடு; முத்துத் துளிகளாகச் சிதறு; முத்து வெண்மை யாக்கு; கூலவகைகளைச் சிறு துணுக்குகளாக்கு; முத்துத் துளிகளாக உருவாக்கு; முத்துப்போன்ற துளிகளாகு; முத்துக்குளி.

pearl[2], *n.* பூவேலைத் தலையணை ஓரத்தின் ஒப்பனை இழை முடி, இழைமுடிக்கண்ணி; *v.* இழைமுடிக் கண்ணியிட்டுப் பூவேலை செய்.

pearl'-ash, *n.* சாம்பர நீறு.

pearl'-bar'ley, *n.* வாற்கோதுமைக் குறுநொய்.

pearl'-div'er, *n.* முத்துக்குளிப்பவர்.

pearl'-fisher, *n.* முத்துச் சிப்பிகளை எடுப்பவர்.

pearl'-fishery, *n.* முத்துச்சலாபம், முத்தெடுக்குந் தொழில்; முத்துக்குளிக்குமிடம்.

pear'lies, *n. pl.* சட்டையின் முத்துக்குமிழ்மாட்டிகள்; பழம்-மீன் ஆகியவற்றின் தெரு விற்பனையாளர் அணியும் முத்துக் குமிழ்மாட்டி நிரம்பிய ஆடை.

pearl'-pow'der, *n.* வெண்ணிற ஒப்பனை முகத்தூள்.

pearl'-sa'go, *n.* = pearl-barley.

pearl'-shell, *n.* முத்துச்சிப்பி.

pearl'-white, *n.* வெண்ணிற ஒப்பனை முகத்தூள்; செயற்கை முத்துச் செய்யப் பயன்படும் சிப்பித்தூள் சரக்கு.

pearl'y, *a.* முத்துப்போன்ற; முத்துச்சிப்பிக்கு உரிய; முத்து நிரம்பிய; முத்து வளமிக்க.

pear'main, *n.* இன்கனி வகை.

pear'-shaped, *a.* பம்பர வடிவுடைய, அடி குறுகி மேல் திரண்ட உருவுடைய.

pear'-tree, *n.* பேரியினக் கனிமரம்.

pea'sant, *n.* உழவர்; நாட்டுப்புறத்தார்.

pea'santry, *n.* உழுகுலம்.

pease'-cod, *n.* பயற்று நெற்று.

pease'-pudding, *n.* பயற்று மாப்பண்ணிய வகை.

pea'-shooter, *n.* பயறுகளை வைத்து ஊதி எறியவல்ல குழல்.

pea-soup'er, *n.* திண்ணிய மஞ்சள்நிற மூடுபனி.

pea-soup'y, *a.* மூடுபனி வகையில் திண்ணிய மஞ்சள்நிறம் வாய்ந்த.

peat[1], *n.* புல்கரி, தூள் நிலக்கரி.

peat[2], *n.* தருக்குச் சிறுமி.

peb'ble, *n.* கூழாங்கல்; மூக்குக் கண்ணாடிச் சில்லுகளுக்குப் பயன்படும் படிகப் பாறைப்பாளம்; மூக்குக்கண்ணாடிச் சில்லு; மணிக்கல் வகை.

pebb'ly, *a.* கூழாங்கல் நிறைந்த.

pebrine, (பிர.) *n.* கரும்பொட்டு, பட்டுப்புழுக்களுக்கு வரும் கொள்ளைநோய் வகை.

pecan', *n.* திண்கட்டையுடைய அமெரிக்க வாதுமையின மரம்.

pecc'able, *a.* பாவஞ் செய்யக்கூடிய; பிழை செய்யும் இயல் புடைய.

peccadill'o, *n.* சிறு மாசு.

pecc'ant, *a.* பாவஞ் செய்கிற; (மரு.) கோளாறுடைய; நோய் தூண்டுகிற.

pecc'ary, *n.* பன்றியின அமெரிக்க விலங்கு.

peccav'i, (ல.) *n.* பழியேற்றிரங்கல்; (தொ.) *cry peccavi*, பாவஞ் செய்தேன் எனக்கூறு.

peche Mel'ba, *n.* பழவகை உறைபாலடைக் கலவை.

peck[1], *n.* முகத்தலளவைக் கூறு, 2 காலன்; 2 காலன் அள வுள்ள கொள்கலம்; பேரளவு.

peck[2], *n.* கொட்டு, அலகின் குத்து; கொத்து வடு; அவசர முத்தம்; *v.* அலகினுற் கொத்து; கொத்தியெடு; கொத்தித் துளையிடு.

peck'er, *n.* கொத்துபவர்; கொத்துவது; கொத்தும் பறவை, மரங்கொத்தி, மண்கொத்தி.

peck'ish, *a.* பசிமிக்க.

peck'sniff, *n.* போலி அருளாளர்.

pec'ten, *n.* (வில.) சீப்புப்போன்ற அமைப்புடைய உறுப்பு; *pl.* pec'tines.

pec'tin, *n.* பழப்பசைச் சத்து.

pec'toral, *n.* மார்பணிக் கவசம்; யூத உயர்குருவின் மார் பணிப் பட்டிகை; *a.* நெஞ்சுக்குரிய, மார்பு சார்ந்த; மார்பு நோய்க்குக் குணம் அளிக்கிற; மார்பில் அணியப்படுகிற; (தொ.) pectoral cross, மேற்றிராணியர் மார்பணிச் சிலுவை.

pec'tose, *n.* காய்ச்சத்து.

pec'ulate, *v.* பணங் கையாடு, கையாடல் செய்.

pecul'iar, *n.* தனியியல்புக்கூறு, சிறப்பியல்பு; சிறப்புத் தனியுரிமை; வட்டார மேலாட்சியிலிருந்து விலக்குரிமை பெற்ற திருச்சபை; தனிச்சிறப்புரிமையுடைய திருக்கோயில்; *a.* சிறப்புரிமையான; தனியியல்பான; தனிப்பட்ட தன்மை யுடைய; பொது நீங்கிய, தனி ஒருவர்க்கு மட்டுமேயுரிய; தனி ஒன்றனுக்கேயுரிய; தனிப்படக் குறிப்பிடத்தக்க, தனித் தன்மைப்பட்ட; வழக்கமற்ற, கண்டு கேட்டறியாத, புதிர் வாய்ந்த; (தொ.) peculiar people, யூதர்; தம்பிரான் தோழர் கள்; Peculiar People, நோய் குணமடைவதற்குத் திருவருள் துணையையே எதிர்நோக்கும் கோட்பாட்டுடன் 1838-இல் நிறுவப்பட்ட கிறித்தவ கிளைச்சமய வகையினர்.

peculia'rity, *n.* தனித்தன்மை; சிறப்பியல்பு; தனிப்பட்ட பண்புக்கூறு; சிறப்புப்பண்புக்கூறு; வழக்கம் மீறிய பண்பு.

pecul'iarly, *adv.* தனி நிலையில், தனி முறையில்; எதிர்பாரா வகையில், வழக்கம் மீறிய நிலையில்; தனிப்பட்ட தன்மையில்.

pecun'iary, *a.* பண வகையான, பொருள் வகை சார்ந்த; அபராதத் தண்டனையான.

pedagog'ics, *n.* ஆசிரியரியல்.
ped'agogism, *n.* = pedagoguism.
ped'agogue, *n.* பள்ளியாசிரியர் ; ஆசிரியர் ; கண்டிப்புக் கணக்காயர்.
ped'agoguism, *n.* போதனைமுறை ; போதனை ; கற்பிக்கும் பாங்கு.
ped'agogy, *n.* ஆசிரியரியல், போதனைமுறை.
ped'al, *n.* மெம்படி; இயந்திர மிதிகட்டை; இசைக்கருவியின் மிதிபலகை; (இசை.) நீள் கவிவிசைப்பு; வைக்கோலின் திண்ணிய அடித்தாள் ; வைக்கோல் புரி ; *a.* காலடிக்குரிய ; சிப்பியினத்தின் காலடி உறுப்புச் சார்ந்த ; *v.* மெம்படியை மிதித்தோட்டு ; இயந்திரத்தை மிதித்தியக்கு ; இசைக்கருவி மிதிகட்டையை மிதித்தியக்கு ; இசைக்கருவி இயக்கு.
ped'ant, *n.* கல்விச் செருக்குடையவர் ; புத்தகப் படிப்பாளர்; கோட்பாட்டு வெறியர் ; நூல் விதிமுறை வெறியர்.
pedan'tic, *a.* கல்விச் செருக்குடைய ; விதிகண்டிப்பான ; எங்கும் பள்ளியாசிரியராகவே நடந்து கொள்கிற ; புலமைப் பாணி விடாத.
ped'antize, *v.* கல்விச்செருக்குடன் நட ; புலமைப்பாணியிற் செயலாற்று ; புலமைப் பகட்டாளராக்கு.
pedantoc'racy, *n.* ஆசிரியராட்சி.
ped'antry, *n.* பகட்டு நூலறிவு ; புலமைக்கண்டிப்பு ; பகட்டாரவாரச் சொற்றொடர் ; குருட்டுக் கோட்பாட்டு வெறி.
ped'ate, *a.* (வில.) காலடி உடைய; பாதம் போன்ற; (தாவ.) இலை வகையில் கால்விரல் அல்லது பறவை உகிர் போன்ற கூறுடைய.
ped'dle, *v.* சுற்றித் திரிந்து விற்பனை செய்; சுற்றித்திரி; அற்ப காரியங்களில் முனைந்தீடுபடு ; சில்லறையாகக் கொடு ; சிறிது சிறிதாகக் கொடு.
ped'erasty, *n.* = paederasty.
ped'estal, *n.* நிலைமேடை; சிலை அடிப்பீடம் ; தூண் அடிக் கட்டை ; கால்புழை மேசையின் ஆதாரக்கால்; இயந்திர உருளையின் பக்கப் பிடிப்பாதாரம் ; இயங்கியல் நிலையடுக்கு; அடிப்படை, ஆதாரம் ; *v.* பீடத்தின்மீதமை, பீடத்தின்மீது ஆதாரமாக்கு.
pedes'trian, *n.* கால்நடையர், நடப்பவர் ; நடைப்பயிற்சியாளர் ; *a.* கால்நடையாகச் செல்கிற, நடந்து செல்கிற ; நடத்தலுக்குரிய ; மந்தமான ; உயிருக்கமற்ற.
pedes'trianism, *n.* நடைப்பயிற்சி, நடந்து செல்லும் பழக்கம்.
pedes'trianize, *v.* நட, கால்நடை பயில்.
ped'icel, *n.* (தாவ., வில.) காம்பு போன்ற சிற்றமைவு, காம்புச் சிறு கிளை.
ped'icellate, *a.* காம்புச் சிற்றமைவுடைய.
ped'icle, *n.* சிறுகாம்பு.
pedic'ular, *a.* பேன் போன்ற; பேன் சார்ந்த.
pedic'ulate, *a.* காம்புடைய; துடுப்பு வகையில் மணிக்கட்டுப் போன்ற திருப்பும் அமைவுடைய மீன்வகை சார்ந்த.
pedic'ulous, *a.* = pedicular.
ped'icure, *n.* கால்விரல் உகிர்க்காழ்ப்பு மருத்துவம் ; கால்விரல் உகிர்க் காழ்ப்பு மருத்துவர் ; *v.* காழ்ப்பகற்றிக் கால்விரல் உகிர் மருத்துவஞ் செய்.
ped'igree, *n.* குடிவழி, மரபுக் கால்வழி அட்டவணை, வம்சாவளி; விலங்கின் மரபுக் கால்வழி; மரபுக் கால்வழியுடையது.
ped'igreed, *a.* குடிவழியுடைய.
ped'iment, *n.* (க-க.) பண்டைக் கிரேக்க கட்டிடக்கலைப் பாணியில் வரி முக்கோண முகப்பு முகடு ; வில்முகப்பு முகடு.
pedimen'tal, *a.* வரி முக்கோண முகப்பு முகட்டையுடைய ; வரி முக்கோண முகட்டு முகப்பைப் போன்ற.
ped'imented, *a.* வரி முக்கோண முகப்பு முகட்டினையுடைய.
ped'lar, *n.* அம்பணர், தலைச்சுமை அங்காடியர்; வம்பு உய்க்குநர் ; (தொ.) pedlar's French, திருடர் குழூஉக்குறி.
ped'lary, *n.* சுமந்து விற்பவர் தொழில்; அம்பணர் சரக்கு.
pedo-bap'tism, *n.* = paedo-baptism.
pedo-bap'tist, *n.* = paedo-baptist.
pedol'ogy, *n.* மண்வகை ஆய்வுநூல்.
pedom'eter, *n.* அடியீடுமானி, காலடி எண்ணிக்கையால் தொலையைக் கணித்துக் காட்டுங் கருவி.
ped'oscope, *n.* கால் புதையரண இசைவை நுண் கதிரொளியால் தேர்ந்தாயுங் கருவி.
ped'rail, *n.* பளுவான வண்டிகள் கரடுமுரடான பாதையில் எளிதாகச் செல்லும்படி காலடிகள் போன்ற சுற்றுறுப்புக்களுடன் கூடிய சக்கர அமைவு; சக்கரக் காலடியுறுப்பமைவு; காலடி உறுப்பமைவுச் சக்கரமுடைய வண்டி.
pedunc'le, *n.* (தாவ.) பூங்கொத்தில் தலைப் பூக்காம்பு; தனி நுனிப் பூக்காம்பு; (வில.) காம்பு போன்ற உடற் பகுதி அமைவு.
pedunc'ular, pedunc'ulate, pedunc'ulated, *a.* தனிக் காம்பு சார்ந்த ; தலைக்காம்புக்குரிய.
peek, *v.* கூர்ந்து நோக்கு.
peel[1], *n.* (வர.) இங்கிலாந்து ஸ்காத்லாந்து எல்லைப்புறங்களில் முற்காலச் சிறு சதுரக் கோபுரம்.
peel[2], *n.* அடுப்பில் சூட்டப்பத்தைப் புரட்டிப் போடுவதற்குரிய சட்டுவக் கோல்.
peel[3], *n.* பழத்தோல்; *v.* பழத்தில் தோலுரி; உருளைக்கிழங்கு முதலியவற்றின் தோலை அகற்று ; மரத்தின் பட்டையுரி; தோலை உரித்தெடு ; தோல் உரிக்கப் பெறு ; பட்டை உரியப் பெறு ; (தொ.) pack and peel, ஏதாவது தொடர்புகொள்.
peeled, *a.* சூறையிடப்பட்ட ; தோலுரிக்கப்பட்ட ; மழுக்கையான.
peel'er[1], *n.* உரிப்பவர்; கொள்ளையடிப்பவர்; நிலவளங் கெடுக்குந்தாவரம்; தோலுரிக்குங்கருவி, புறத்தோடகற்றும் அமைவு.
peel'er[2], *n.* (வர.) முற்கால அயர்லாந்து காவல் துறையினர்.
peel'ing, *n.* உரித்தல்; உரிதோல்; உரியல்.
Peel'ite, *n.* (வர.) கூலக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை அகற்றியபோது பிரிட்டனின் அமைச்சரான பீல் (Sir R. Peel) என்பாருக்கு ஆதரவளித்த கான்சர்வேட்டிவ் (Conservative) கட்சியுறுப்பினர்.
peen, *n.* சுத்தியல் தலைப்பின் மென்னுனி.
peep[1], *n.* ஊடுநோக்கு, துளைவழிப் பார்வை ; ஒளிவுக்காட்சி, மறை நோட்டம் ; முதல் தோற்றம் ; *v.* ஊடாக நோக்கு, துளைவழிகாண் ; உற்றுக்காண் ; மறைவாக நோட்டமிடு, மெல்லவந்து தோற்றமளி ; அரைகுறையாக வெளிப்படு ; பண்புகள் வகையில் இயல்பாக வெளிப்படு ; (தொ.) peep of dawn, peep of day, காலை முதற் கதிரொளி, புலரி ; peep show, பூதக்கண்ணாடிவழிக் காட்சி ; peep sight, சுழல் துப்பாக்கியில் புழைவழிக் காணுந் தோற்றம்.
peep[2], *n.* மெல்லிய கீச்சொலி; பறவை ஒலி; எலியின் அரவம் ; *v.* கீச்சொலிசெய்.
peep'er, *n.* மறைந்து பார்ப்பவர்; உற்று நோக்குபவர்.
peep'-hole, *n.* பார்க்குந் துளை; ஒளி ஊடு செல்லவிடும் சிற்றிடைவெளி.
peep'ing, *a.* துளை வழி உற்று நோக்குகிற, மறைந்து காண்கிற; (தொ.) peeping Tom, சன்னல் வழிப் பார்வையர்.
peep'show, *n.* சிறு புழைவழிக் கண்காட்சி அமைவு.
peep'-through, *a.* ஊடாகக் காணும் வாய்ப்பு அளிக்கிற.
peep'-toe, *n.* கால்விரல் காட்டும்படி நுனி வெட்டப்பட்ட புதைமிதி.
peep'ul, (இ.) *n.* அரசமரம்.
peer[1], *n.* படி ஒப்பானவர்; சரியிணை, சரி ஒப்பானது; பிரிட்டனின் உயர்படிப் பெருமகனுர், கோமக்கள் படியினர்; மேன்மக்கள் அவை உறுப்பினர் ; உயர் பெருங்குடி மகன் ; *v.* ஒப்பாயிரு, சரியிணையாயிரு ; உயர்படிப் பெருமகனுராக்கு.

peer[2], *v.* கூர்ந்து நோக்கு, உற்று நோக்கு; வெளிப்படத் தோன்று; காட்சிக்கு உரியதாகு.

peer'age, *n.* பிரிட்டன் உயர்படிப் பெருமகனுர் நிலை.

peer'less, *a.* இணையற்ற.

peev'ish, *a.* வெடுவெடுப்பான, சிறி விழுகிற, சிடுசிடுப்பு மிக்க.

pee'wit, *n.* கூட்டமாக வாழும் நீள்காலுடை நீர்ப்பறவை வகை.

peg, *n.* முளை, மாட்டற் கொம்பு; பற்றிறுக்கி, ஆப்புக்கட்டை; இணைகுழைச்சு; மாடகம், யாழ் முதலிய கருவித் தந்திகளை வரிந்திறுக்கும் முறுக்காணி; தடைக்கட்டை; கட்டுத்தறி; எல்லைக்குற்றி; குறிச்சந்து, ஆட்ட வகையில் அளவை குறிக்கும் ஆப்புமுளை; சாக்குப்போக்குக் கருவி; குடிவகை; *v.* முளையறைந்து இறுக்கு; ஆப்பு அறை; ஆணியிறுக்கு; விதிமுறைகளுக்குள் கட்டுப்படுத்து; பங்குமாற்றுக் களத்தில் பங்குமதிப்பு விலை திடீர் ஏற்ற இறக்கம் அடையாமல் அறுதி விலையால் தடுத்து நிறுத்து; குறிமீது முளை இலக்குவை; முளைகொண்டு தாக்கு; முளையறை; ஆட்டவகையில் அளவைக் குறித்து ஆப்புமுளை செருகு; சுரங்க உரிமை எல்லையை முளையால் குறி; ஆட்ட வகையில் ஆட்ட இறுதி குறிக்கும் முறையில் முளைமீது பந்தடித்து வீழ்த்து; விடாமுயற்சியுடன் உழை; (தொ.) a peg to hang on, வேறொன்றினை இணைப்பதற்கான கருவி; வெறுஞ் சாக்குப்போக்கு; வேறொரு செயலுக்கு ஏற்பமைவான தறுவாய்; off the peg, செயலுக்கு உரிய நிலையில்; round peg in a square hole, square peg in a round hole, இடத்துக்கு ஒவ்வாத ஆள்; take down a peg or two, படியிறக்கு, மதிப்பிற் சில படிகள் தாழ்த்திவிடு.

peg'amoid, *n.* வண்டிக் கட்டுமானத்திற் பயன்படும் செயற்கைத் தோல்.

peg'asus, *n.* கிரேக்க பழங்கதை மரபில் பறக்கும் திப்பிய குதிரை; கவிதையாற்றல்.

peg'orative, *n.* இழிவுபடுத்துஞ் சொல்; *a.* இழிவுபடுத்துகிற.

peg'-top, *n.* உலோக முனையுடைய பம்பரம்; (தொ.) peg-top trousers, இடுப்பகன்று கணுக்கால் சுருங்கிய காற்சட்டை வகை.

peignoir, (பிர.) *n.* மாதர் அணியுந் தளர்த்தி அங்கி.

peine forte et dure, (பிர.) *n.* கடும்வதைத் தண்டனை, கேள்விக்கு விடையளிக்க மறுக்கும் கொடுங்குற்றவாளி வகையில் அழுத்திக் கொல்லுந் தண்டம்.

pek'an, *n.* வட அமெரிக்க கீரியின ஊனுண்ணி விலங்குவகை.

peke, *n.* சீனக் குள்ளநாய் வகை.

pek'in, *n.* பட்டுத்துணி வகை.

Pekinese', *n.* சீன தேசத்தில் பீகிங்கு நகரவாணர்; குறுநாய் வகை; *a.* சீன தேசத்துப் பீகிங்கு நகரத்துக்குரிய.

Pekingese', *n.*=Pekinese.

Pek'ing man, *n.* பீகிங்கு அருகே 1929-இல் கண்டெடுக்கப்பட்ட முன்னூழிக்காலப் புதைபடிவ மனித இனம்.

pek'oe, *n.* கருநிற நறுமணத் தேயிலை வகை.

pel'age, *n.* விலங்கின் கம்பளிமயிர்; குறுமென் மயிர்.

Pela'gian[1], *n.* தொல்லைத் தீவினை இல்லை என்னும் பிலாஜியஸ் (Pelagius) என்ற கி. பி ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த துறவியின் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்; *a.* பிலாஜியஸைச் சார்ந்த; பிலாஜியஸ் கோட்பாட்டைச் சார்ந்த

pela'gian[2], *n.* கடல் வாழ்வன; *a.* கடல்வாழ் உயிரினம் பற்றிய.

pela'gic, *a.* மாகடலுக்குரிய; கடற்பரப்பிற்குரிய; கடற்பரப்பில் வாழ்கிற; கடற்பரப்பில் நிகழுகிற; கடலின் நடு ஆழத்துக்குரிய; கடல் நடு ஆழத்தில் வாழ்கிற; கடலின் ஆழத்தில் நிகழ்கிற; ஆழ்கடல் சூழலிற் படியவிடப்பட்ட.

pelargon'ium, *n.* பகட்டு மலர்களையும் நறுமண இலைகளையுமுடைய செடியினம்.

Pelas'gic, *a.* கிரீஸ் நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பண்டைய மக்களினஞ் சார்ந்த; (தொ.) Pelasgic architecture, கிரீஸ் நாட்டுப் பழங்காலக் கட்டிடக் கலை.

pel'erine, *n.* மகளிரின் தோள் தொங்கலுடுப்பு.

pelf, *n.* கொண்டி.

pel'ican, *n.* குஞ்சுகளுக்குத் தன் குருதியையே ஊட்டி வளர்ப்பதாக முற்காலங்களில் கருதப்பட்ட உணவுச் சேமிப்புப் பையுடைய நீர்க்கோழி வகை.

pelisse', *n.* கணுக்கால்வரை நீண்டு தொங்கும் மகளிர் மேலங்கி; குதிரை வீரரரின் குறுமென்மயிர்ச் சட்டை; குழவி மனைப்புறச் சட்டை.

pellag'ra, *n.* ஊட்டக் குறைவால் ஏற்பட்டு முடிவில் மூளைக் கோளாறில் கொண்டுவிடும் தோல்வெடிப்புடைய நோய்வகை.

pell'et, *n.* குறும் பந்து; குளிகை; இரவைக்குண்டு; நாணயங்கள் முதலியவற்றின் மீதுள்ள சிறு குமிழ் வடிவம்; *v.* தாள் உருண்டையால் அடி, தாள் சுருட்டி எறி.

pell'icle, *n.* தோல்; சவ்வு; மென்படலம்.

pell'itory, *n.* தொட்ட இடத்தில் எரிச்சலூட்டுங் காரச்சுவை கொண்ட வேர்ச் செடிவகை; சிறிதே பச்சையான மலருடைப் புதர்ச்செடிவகை.

pell'-mell', *n.* குழப்பம்; கதம்பம்; கைச்சண்டை; *a.* தாறுமாறான, குழப்பமான; *adv.* குழப்பமாக, ஒழுங்கின்றி, தாறுமாறாக; தலைகுப்புற.

pellu'cid, *a.* தெள்ளத் தெளிந்த; ஒளி எளிதில் ஊடுருவிச் செல்கிற; மாசுமறுவற்ற; உச்சரிப்பில் தெளிவான; அறிவுத் தெளிவுடைய, மனக்கோட்டம் அற்ற.

Pel'manism, *n.* இருபதாம் நூற்றாண்டின் நினைவுப் பயிற்சி முறை.

pel'met, *n.* திரைச்சீலைக் கழிகளை மறைப்பதற்காகக் கதவுகள் அல்லது பலகணிகள்மேல் விடப்படுங் குறுகிய கரைத் தொங்கல்.

pelot'a, *n.* பந்தும் மட்டையுங் கொண்டு விளையாடப்படும் பாஸ்க் (Basque) இனத்தவர் ஆட்டவகை.

pelt[1], *n.* செம்மறியாட்டின் அல்லது வெள்ளாட்டின் குட்டைக் கம்பளி மயிர் கொண்ட தோல்; பதப்படுத்தப்படாத கம்பளித் தோல்; செம்மறியாட்டின் பதப்படுத்தாத பச்சைத்தோல்.

pelt[2], *n.* எறிபடைத் தாக்கு; எறிபடைத்தாக்கு விசை; *v.* எறிபடைகளைக் கொண்டு தாக்கு; மழை முதலியவற்றின் வகையில் கடுமையாகப் பெய்; விடாது எறிபடைகளைத் தொடர்ந்து வீசு; விடாது வேட்டுவிட்டுக் கொண்டிரு.

pel'ta, *n.* பண்டையக் கிரேக்கர்கள்-ரோமர்கள் ஆகியோரின் பளுவற்ற சிறு கேடயம்; (தாவ.) கேடயம் போன்ற அமைப்பு.

pel'vis, *n.* இடுப்பெலும்பு, இடுப்புக்கூடு, இடுப்புவளையம்; குண்டிக்காயின் உட்குழிவு.

Pem'broke, Pem'broke table, *n.* சிறு மடக்கு மேசை.

pemm'ican, *n.* கொழுச்செறிவப்பம், இளகிய கொழுப்புடன் உலர் இறைச்சித்தூள் சேர்த்த அப்பம்; மாட்டுக்கறிக் கொழுச்செறிவப்பம்; இலக்கியச்செறிவு.

pem'phigus, *n.* (மரு.) நீர்க்கொப்புளத் தோல்நோய்வகை.

pen[1], *n.* தொழுவம், பட்டி, வேலியடைப்பு, சூழ்பட்டி; *v.* பட்டியில் அடை, தொழுவத்திற் கட்டு, கிடை மறி.

pen[2], *n.* இறகுப்பேனு; எஃகு அல்லது தங்கத்தாலான எழுதுகோல்; எழுதுதல்; எழுதும் பாணி; *v.* எழுது; வரை; இயற்று.

pen[3], *n.* அன்னப்பெடை.

pen'al, *a.* தண்டனை பற்றிய; தண்டனைக்குரிய; சட்டப்படி தண்டிக்கக்கூடிய; தண்டனையாக விதிக்கப்பட்ட; தண்டனைக்குரிய இடமான; (தொ.) penal colony, குற்றவாளிகளை ஒதுக்கி வைத்திருக்கும் இடம்; penal servitude, கடுமையான உழைப்புடன் கூடிய சிறைக்காவல்; கடுங்காவல் தண்டனை.

pena'lize, *v.* தண்டி; தண்டனைக்குரியதாக்கு; தண்டனைக் குரியதென்று அறிவி; ஆட்டக்காரரைத் தண்டவரிக்குள்ளாக்கு, தண்டம் அடையச்செய்.

pen'alty, *n.* தண்டனை; தண்டத்தொகை; சீட்டாட்ட வகையில் ஆட்ட விதிப்படி விளையாடுபவரின் கெலிப்பு எண்ணோடு சேர்க்கப்படும் எண்ணிக்கைகள்; (தொ.) penalty kick, காற்பந்தாட்டத்தில் இலக்கிற்கு முன்னுள்ள நிலப்பகுதியில் பந்தினைத் தடுக்கும் எதிர் ஆட்டக்காரர்கள் ஆட்ட விதியை மீறியதன் விளைவாக மறுபுறத்தார் பெறும் பந்தடி முறை உரிமை.

pen'ance, *n.* நோன்பு, தவம்; கழுவாய்; கழுவாய்க்காகத் தன்னை ஒறுத்தல்; *v.* கழுவாய் விதி, பிராயச்சித்தங் கூறு; (தொ.) do penance, கழுவாய் தேடு, பிராயச்சித்தஞ் செய், நோன்பிரு.

pen'-and-ink', *n.* எழுது பொருள்கள்; பேனாப்படம்; *a.* மையும் பேனாவுங்கொண்டு எழுதப்பட்ட.

Penat'es, *n. pl.* ரோமர் குலதெய்வங்கள்.

pence, *n. pl.* ஆங்கிலநாட்டுச் செப்புக்காசுகள்.

penchant, (பிர.) *n.* விருப்பம், மனச்சார்பு.

pen'cil, *n.* வரைகோல், கரிக்கோல்; வண்ண ஓவியத்தூரிகை; தீட்டுபாணி, வண்ண ஓவியப்பாணி; (இய.) குவிகதிர்க் கூம்பு; (வடி.) வரைக்கூம்பு, ஒருமுனையில் கூடும் பல நேர்க் கோடுகள்; *v.* வரைகோலாற் குறி; கரிக்கோலால் தீட்டு; பந்தயப் புத்தகத்தில் குதிரையின் பெயரைப் பதிவுசெய்; வண்ணத்தைக்கொண்டு ஒரே மையமுள்ள மெல்லிய பல கோடுகள் வரை.

pen'cil-case, *n.* வரைகோல் உறை.

pen'dant, pen'dent, *n.* பதக்கம், கழுத்தணியிற் கோக்கப்பட்டுள்ள தொங்கணி; (கப்.) பாய்மரத்தின் உச்சியில் தொங்கும் சிறு கயிறு, கீழ்ப்புறத்தில் பாய்மரக் கருவிகளின் கொக்கிகளை இணைப்பதற்குதவும் கண்ணியுடன் கூடிய சிறு கயிறு; கைக்கடிகார வளையம்; இணைதுணை, சோடி, எதிரிணை; *a.* தொங்குகிற, மேற்கவிந்து தொங்குகிற; உறுதியற்ற; முடிவுபெறாத; நிறைவேறாத, முடிவுக்காகக் காத்திருக்கிற.

penden'te lit'e, (ல.) *adv.* வழக்கு முடிவதற்கிடையே.

penden'tive, *n.* (க-க.) கவிகை மாடத்தின் சதுரவளைவு தாங்கி அடித்தளத்துக்குரிய உருளை முக்கோண வடிவுடைய குவிகால்.

pend'ing, *a.* முடிவு செய்யப்படாத; முடிவிற்காகக் காத்துள்ள; விரைவில் முடிவுசெய்யப்பட இருக்கிற; *prep.* முடிவு செய்யப்படும் வரையில்; முடிவு செய்யப்படுவதற்கிடையில், முடிவு செய்யப்படும் வகையில்.

pendrag'on, *n.* பண்டைய பிரிட்டிஷ் குறுநில மன்னர்.

pen'dulate, *v.* ஊசலாடு; ஊசற்குண்டு போலாடு; தீர்வு பெறாதிரு, முடிவுறாதிரு.

pen'duline, *a.* கூண்டு வகையில் தொங்குகிற, ஆடிக்கொண்டிருக்கிற; பறவை வகையில் தொங்குகூண்டு கட்டுகிற.

pend'ulous, *a.* தொங்கலான; பறவைக்கூண்டு-மலர் முதலியவற்றின் வகையில் ஊசலாடுகிற.

pen'dulum, *n.* ஊசற் குண்டு; மணிப்பொறியின் ஊசலி; ஊசலாடும் ஆள்; ஊசலாடும் பொருள்; (தொ.) compensation pendulum, சரியீட்டு ஊசலி; swing of the pendulum, ஊசற்குண்டின் ஊசலாட்டம்; கட்சிகளுக்கிடையேயுள்ள அதிகார ஊசலாட்டம், ஆட்சிநிலை மாறிமாறி வரும் நிலை.

Penel'ope, *n.* பத்தினி; யூலிசிஸ் (Ulysses) மனைவி.

penel'opise, *v.* செய்ததை அழித்துச் செய்.

pen'eplain, *n.* (மண்.) குறிஞ்சி மருதத்திரிபு.

penetral'ia, *n. pl.* கட்டிட உள்ளகங்கள்; கோயிற் கருவறைகள்; உள்ளிட இரகசியங்கள்.

pen'etrate, *v.* ஊடுருவு, உட்புகு; ஊடுபரவு; துருவி நோக்கு; துருவிக் கண்டுணர்; பண்புதோய்வி; மனம்-பொருள்-திட்டம்-உண்மை முதலியவற்றின் வகையில் நுணுகி உள்நோக்கு, நுட்பமாக ஆராய்; வழி செய்து கொண்டு போ; நுழை.

pen'etrating, *a.* நுழைநோக்குடைய; துளைத்துச் செல்கிற; உண்ணோக்குடைய; மற்ற ஓசைகளையும் விஞ்சி எளிதாகக் கேட்கிற.

penetra'tion, *n.* உட்புகுவு, ஊடுருவல்

pen'-feather, *n.* இறகு, எழுதுகோலாக முன்பு பயன்படுத்தப்பட்ட குருத்து இறகு.

peng'uin, *n.* துடுப்பு போன்ற சிறகுகளால் நீரடியில் நீந்த வல்ல தென்பகுதிக் கடற்கோழி வகை; பறவா விமானம்.

pen'ial, *a.* ஆண்குறி சார்ந்த.

pen'icillate, *a.* (இய., தாவ.) சிறு கொத்துக்களையுடைய; சிறு திரள்களை உருவாக்குகிற; தூரிகையாற் சிறு கீறுகள் இடப்பட்ட.

penicill'in, *n.* பெனிசிலின், பூஞ்சக்காளானில் முதலிற் கண்டுபிடிக்கப்பட்டுச் சில நோய்நுண்மங்களின் வளர்ச்சியைத் தடைசெய்யப் பயன்படும் மருந்து.

penin'sula, *n.* தீவக்குறை, தீவகற்பம், ஒட்டரங்கம்; (தொ.) the Peninsula, ஸ்பெயினும் போர்ச்சுகலும் சேர்ந்த தீவக்குறை மாநிலம்.

penin'sular[1], *n.* தீவக்குறைவாணர்; *a.* தீவக்குறை உருவான; ஒட்டரங்கஞ் சார்ந்த; பிரஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் (1808 முதல் 1814 வரை) நடந்த போர்குறித்த.

Penin'sular[2], *n.* (1808 முதல் 1814 வரை) ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் இடையே நிகழ்ந்த போரின் படைவீரர்.

penin'sulate, *v.* நிலத்தைத் தீவக்குறை ஆக்கு.

pen'is, *n.* ஆண்குறி.

pen'itent, *n.* செய்ததற்கு இரங்குபவர்; கழுவாய் மேற்கொள்ளுபவர்; *a.* தவறுக்காக வருந்துகிற; உய்தி தேடுகிற, கழுவாய் வேண்டுகிற; நோன்பாற்றுகிற.

peniten'tial, *a.* கழுவாய் சார்ந்த; நோன்பு முறைக்குரிய.

peniten'tiary, *n.* திருத்தியல் சிறை; கழுவாய்-தண்டனைத் தளர்த்தீடு ஆகியவற்றின் மேலாட்சிக்குரிய போப்பாண்டவரின் நீதிமன்றப் பணிமனை; சீர்திருத்தமுறும் மாதர் புகன்மனை; *a.* கழுவாய் சார்ந்த; சீர்திருத்தப் பணிசார்ந்த.

pen'itents, *n. pl.* கூட்டு உட்கட்டுப்பாட்டுக்காக இணையும் ரோமன் கத்தோலிக்க துறவுமடக் குழுவினர் தொகுதி.

pen'knife, *n.* சிறு கத்தி, பேனாக்கத்தி.

pen'man, *n.* நன்றாக எழுதுபவர், நல்ல கையெழுத்தாளர்; எழுத்தாளர், ஆசிரியர்.

pen'manship, *n.* எழுதுந் திறமை, கையெழுத்துப்பாணி; இலக்கியக் கட்டுரை அல்லது செய்யுளின் பாணி.

pen'-name, *n.* எழுத்தாளரின் புனைபெயர்.

penn'ant, *n.* (கப்.) பாய்மரத்தின் உச்சியில் தொங்கும் சிறு கயிறு, கீழ்ப்புறத்தில் பாய்மரக் கருவிகளின் கொக்கிகளை இணைப்பதற்குதவும் கண்ணியுடன்கூடிய சிறு கயிறு; நீண்டு குறுகிய முக்கோண வடிவுடைய படைத்துறையின் அடையாளக் கொடி, ஈட்டியையுடைய குதிரைப்படையின் கொடி; கப்பலின் நீண்டு குறுகிய புகைப்போக்கி; கொடி.

penn'ies, *n. pl.* ஆங்கிலநாட்டுச் செப்புக்காசின் தனி நாணயங்கள்.

penni'form, *a.* (வில., தாவ.) இறகுபோன்ற வடிவமுடைய; தூவியின் தோற்றமுடைய.

penn'iless, *a.* காசில்லாத, கைப்பொருளற்ற; ஏழ்மையான; துணையற்ற.

penn'ill, *n.* யாழ்போன்ற இசைக்கருவியோடு பாடுவதற்காகச் சமயத்திற்கேற்றபடி அமைக்கப்பட்ட பாட்டு; பண்டை வேல்ஸ் மக்களின் கவியரங்கத்திற் பாடப்படும் ஆசுகவி; *pl.* pennill'ion.

penn'on, *n.* நீண்டு குறுகிய முக்கோண வடிவுடைய படைத்துறைப் பிரிவின் அடையாளக் கொடி, ஈட்டியையுடைய குதிரைப்படையின் கொடி; கப்பலின் நீண்டு குறுகிய புகைப்போக்கி; கொடி.

penn'orth, *n.* = pennyworth.

penn'y, *n.* ஆங்கில நாட்டுச் செப்புக்காசு; (பே-வ.) சிறு நாணயம், சிறுகாசு; (தொ.) a pretty penny, பெருந் தொகை; in for a penny, in for a pound, தொடங்கிய செயலை எப்படியாயினும் எல்லாவற்றுானும் முடித்துவிட வேண்டும்; penny farthing, (பே-வ.) பழைய பாணியான உயர மிதிவண்டி; penny post, முற்காலப் பொதுநிலை அஞ்சற் கட்டணமுறை; penny wise, சிறு செலவினங்களிலும் மட்டுமீறிக் கையிறுக்கமாயிருக்கிற; penny wise and pound foolish, உலக்கை போவதை விட்டு விட்டு ஊசி போவதைக் கணக்குப் பார்க்கிற; Peter's penny, Peter's pence, (வர.) போப்பாண்டவரின் கருவூலத்திற்கு 1860 முதல் விருப்பாணைப்படி அளிக்கப்படும் ஆண்டு வரி; take care of the pence, சிறுதொகையினுஞ் சிக்கனமாக இரு; turn an honest penny, நல்ல வழியிற் சிறிது பணம் ஈட்டு.

penn'y-a-line, *a.* எழுத்து வகையில் மேற்போக்கான, மலிந்த தரமான.

penn'y-a-liner, *n.* குறைந்த கூலிக்கு அளவுமீறி உழைத்து எழுதுபவர்.

pennyroya'l, *n.* மூலிகையாகப் பயன்படும் புதினா இனச் செடிவகை.

penn'y-wedding, *n.* மணமக்களை மணப்படுத்த விருந்தினர் காசுதரும் திருமணவினை.

penn'y-weight, *n.* இருபத்துநான்கு குன்றிமணி எடையளவு.

penn'ywort, wall pennywort, *n.* சதுப்புநிலங்களில் வளரும் வட்ட இலைச் செடிவகை.

penn'yworth, *n.* ஒரு செப்பு நாணயத்தில் வாங்கக்கூடியது, ஒரு செப்புக்காசு மதிப்புள்ளது.

penol'ogy, *n.* தண்டனை ஆய்வுநூல், சிறைநிர்வாகம்.

pen'sile, *a.* தொங்கிக்கொண்டிருக்கிற; பறவைகள் வகையில் தொங்குகூண்டு கட்டுகிற.

pen'sion, *n.* ஓய்வுகால ஊதியம், உரிமை துறப்புக்கீடான உதவிச் சம்பளம்; பரிவூதியம்; துணைமை ஊதியம்; அன்புதவி; 'கிரே விடுதி' (Gray's Inn) என்ற சட்ட மாணவர் இல்ல ஆய்வுப்பேரவை; ஐரோப்பாவில் உணவு விடுதி; *v.* ஓய்வுச் சம்பளம் கொடு; உதவிச்சம்பளம் கொடுத்து வசமாக்கிக் கொள்; உதவிச்சம்பளம் கொடுத்து விலக்கு; (தொ.) Ministry of Pensions, *1914-18*-ஆம் ஆண்டுப்போரில் நிறுவப்பட்ட ஓய்வுச்சம்பளத் துறை; old-age pension, குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கோ ஏழைகளுக்கோ அனைவருக்குமோ அரசாங்கம் அளிக்கும் வார அல்லது மாத ஓய்வுச்சம்பளம்; pension off, ஓய்வுச்சம்பளம் கொடுத்து விலக்கீடு செய்.

pen'sionable, *a.* பணி முதலியவற்றில் ஓய்வுச்சம்பள உரிமையுடன் கூடிய; ஆட்கள் வகையில் உதவிச் சம்பளம் பெறத்தக்க உரிமையுடைய; பரிவூதியம் பெறும் உரிமையளிக்கிற.

pen'sionary, *n.* ஓய்வூதியம் பெறுபவர்; உடைமையுரிமை ஓய்வூதியத்தால் இழந்தவர்; *a.* ஓய்வுச் சம்பள இயல்புடைய.

pen'sioner, *n.* ஓய்வுச்சம்பளம் வாங்குபவர்; உதவிச்சம்பளம் பெறுபவர்; ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உணவுக்கும் விடுதிக்கும் உதவிச்சம்பளம் பெருமல் சொந்தப் பணத்திலிருந்தே செலுத்தும் மாணவர்.

pen'sive, *a.* எண்ணத்தில் ஆழ்ந்துள்ள, சிந்தனையில் மூழ்கிய; வருத்தந் தோய்ந்த, வாடிய தோற்றமுடைய.

pen'stock, *n.* மதகு, மடை.

pent, *a.* அடைத்து வைக்கப்பட்ட; அடக்கி வைக்கப்பட்ட.

pen'tachord, *n.* முல்லையாழ், ஐந்து நரம்புகளுள்ள இசைக் கருவி; முல்லைப்பண், ஐந்து சுரங்கள் கொண்ட இசைத்தொடர்.

pen'tacle, *n.* செப்படி வித்தையில் அடையாளக் குறியாகப் பயன்படுத்தப்படும் உருவம்.

pen'tad, *n.* ஐந்து, ஐந்தன் இலக்கம்; ஐந்தன் தொகுதி; ஐந்து நாட்கள் கொண்ட காலப்பகுதி; (வேதி.) ஐயிணை திறத் தனிமம், ஐந்து நீரக அணுக்களுடன் இணையும் ஆற்றல் கொண்ட தனிமம்.

pentadac'tyl, *n.* கைகால்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விரல்களுள்ளவர்; கால் ஒவ்வொன்றிலும் ஐந்து விரல்களுள்ள விலங்கு; *a.* ஒவ்வொரு காலில் அல்லது கையில் ஐந்து விரல்கள் கொண்ட; கால் ஒவ்வொன்றிலும் ஐந்து விரல்களையுடைய விலங்குகளைப்பற்றிய.

pen'tagon, *n.* ஐங்கோணம், ஐந்து பக்கங்களுள்ள உருவம்.

pen'tagram, *n.* ஐந்து முனைகளுள்ள விண்மீன் வடிவம்; ஐந்து மூலைகள் கொண்ட விண்மீன் வடிவில் அமைந்த மறைவியல் உரு.

penta'gynous, *a.* மலர்வகையில் ஐந்து சூலகங்கள் கொண்ட.

pentahed'ron, *n.* ஐந்து முகப்புக்கள் கொண்ட பிழம்புரு.

pentam'erous, *a.* (தாவ.) இதழ் வட்டங்களை ஐந்தாக உடைய; (வில.) ஐந்து இணைப்புகள் கொண்ட.

pentam'eter, *n.* (யாப்.) ஐஞ்சீரடி.

pentan'drous, *a.* ஐந்து தனிப்பூவிழைகள் கொண்ட.

pen'tane, *n.* நில எண்ணெயிலிருந்து எடுக்கப்படும் நீர்மக் கரியவகை.

pentapet'alous, *a.* ஐந்து இதழ்களையுடைய.

pentap'ody, *n.* ஐந்து சீர்கள் கொண்ட செய்யுள் அடி; ஐஞ்சீரடிச் செய்யுள்.

pen'tastich, *n.* செய்யுளின் ஐந்தடித்தொகுதி.

Pen'tateuch, *n.* விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டில் மோசே (Moses) என்பாருக்கு உரியதாகக் கருதப்பட்ட முதல் ஐந்து ஏடுகள்.

pentath'lon, *n.* பண்டைக் கிரேக்கர் பயிற்சி விளையாட்டுப் போட்டியில் பங்கெடுத்துக்கொள்ளும் அனைவரது ஐந்து நிகழ்ச்சித் தொகுதி; தற்கால ஒலிம்பிக் பந்தயங்களில் (Olympic races) ஐந்து ஆட்டத்தொகுதி.

pentatom'ic, *a.* (வேதி.) அணுத்துகளில் ஐந்து அணுக்கள் கொண்ட.

pentaton'ic, *a.* ஐந்து இசைக்குரல்கள் கொண்ட.

pentav'alent, *a.* ஐந்திற இணைவாற்றலுடைய, தனிமங்களில் ஐந்து அணுக்கள் நீரகத்தோடு இணையும் ஆற்றலுடைய.

Pen'tecost, *n.* யூதர்களின் அறுவடை விழா; யூத திருக்கோயிலின் திருக்கட்டளை நாள் விழா; ஈஸ்டர் விழா நாளுக்குப்பின் அடுத்த ஏழாவது ஞாயிற்றுக்கிழமை.

pent'house, pen'tice, *n.* சாய்விறக்கி மோடு, முக்கியமான கட்டிடச் சுவரோடு இணைந்துள்ள சரிவுக்கூரை; மேற்கட்டி, அணியொப்பனைப் பந்தல்.

pe'ntode, *a.* கம்பியில்லாத் தந்தி தடுக்கிதழ்கள் வகையில் ஐந்து மின்வாய்கள் கொண்ட.

Pen'tonville, *n.* தனித்தனி அறைகளில் கைதிகளை அடைப்பதற்கேற்ப அமைக்கப்பட்ட லண்டன் நகரச் சிறை.

pentstem'on, *n.* பகட்டு வண்ணமலர்களுடைய தோட்டச் செடிவகை.

penult', penul'timate, *n.* ஈற்றயல் அசை; ஈற்றயல்; *a.* கடைசிக்கு முந்திய, ஈற்றயலான.

penum'bra, *n.* அரைநிழற் கூறு; நிலவுலகு திங்கள் இணை நிழலான திண்ணிழற்பகுதி சூழ்ந்த அரைநிழல் வட்டம்; கதிரவன் கறைப் பொட்டுச் சூழ்ந்த இளங்கரும் பகுதி.

penur'ious, *a.* கடுமிடிமையான; பற்றாக்குறையான; கஞ்சத்தனமான.

pen'ury, *n.* இலம்பாடு, ஏழ்மைநிலை, நல்குரவு.

pen'wiper, *n.* பேனா துடைக்குஞ் சிறுதுண்டு.

pe'on, *n.* பணியாள், ஏவலாள், பணிமனை குற்றேவலன்; ஸ்பானிய அமெரிக்க வழக்கில் நாட்கூலியாள்; மெக்ஸிகோவில் அடிமையாய்விட்ட கடனாளி.

pe'onage, *n.* குற்றேவலர் பணி; பணியாட்களை வேலைக்கு அமர்த்துதல்.

pe'ony, *n.* வெண்சிவப்பு மலர்ச்செடி வகை.

pe'ople, *n.* மக்கள்; சமுதாயம்; இனம்-நாட்டு மக்கள்; வாழ்குழு; மக்கள் வகுப்பு; மக்கள் குழாம்; குடிமக்கள்; மாவட்டக் கிறித்தவ குருமார் கூட்டம்; *v.* குடியமர்வு செய்; குடிமக்களாக்கு; வாழ்குடிகளாக்கு; தங்கிவாழச் செய்; விலங்கினங்கள் வாழச்செய்; தங்கிவாழ்; குடியமர்; (தொ.) People's Palace, லண்டனில் ஏடகம்-கல்விப் பயிற்சி வகுப்புக்கள்-பொழுதுபோக்குக் கேளிக்கைகள் ஆகியவற்றினையுடைய தொழிலாளர் நிறுவனம்.

pe'oples, *n. pl.* உறவினர்; படைதாங்கிய உழைப்பவர் குழு; புடையர் குழு, பரிவாரம்; தொழிலாளர் குழு; பொதுமக்கள்; குடியுரிமையாளர்.

pep, *n.* (பே-வ.) ஊக்கம், தெம்பு, கிளர்ச்சி.

peperi'no, *n.* கரிமணற்கல், மணலும் கரித்தூளுங் கலந்து உருவான துளைகளுள்ள பளுவற்ற எரிமலைப் பாறைவகை.

pepp'er, *n.* மிளகு; *v.* மிளகுப்பொடி தூவு; மிளகுகலந்து செய்; எறிபடைகளால் தாக்கு; கடுமையாகத் தண்டி; (தொ.) Black Pepper, மிளகுக்கொடி; cayenne pepper, மிளகாய்; காரமுடையது; white pepper, வெள்ளை மிளகு, தோல் நீக்கப்பெற்ற கருமிளகு.

pepper-and-salt', *n.* கருமையும் மங்கல் வெண்ணிறமும் உள்ள இருவகைக் கம்பளி நூலால் நெய்யப்பட்ட துணி; சிறு கரும்புள்ளியும் மங்கல் நிறப்புள்ளியும் இடைவிரவிய துணி.

pepp'erbox, pepp'er-caster, pepp'er-castor, *n.* மிளகுப் பொடி தூவுதறகேற்ற மூடி அமைப்புடன் கூடிய சிறு வட்டப்பெட்டி.

pepp'er-corn, *n.* காய்ந்த மிளகு; பெருமதிப்பில்லாப் பொருள்.

pepp'erer, *n.* = pepperbox.

pepp'ermint, *n.* வாசனைத் தைலம் தருஞ் செடிவகை; வில்லை, சிறந்த தைல மணமூட்டப்பட்ட இனிப்புத் தின்பண்டம்.

pepp'er-pot, *n.* மிளகுப்பொடி தூவுகலம்; இறைச்சி-காய்கறி-உலர்த்திய மீன் ஆகியவற்றோடு மிளகாய் கலந்து செய்யப்படும் மேலை இந்தியக் கார உணவுவகை; ஜமெய்க்கா (Jamaica) தீவில் வாழ்பவர்.

pepp'ery, *a.* மிளகாலான, மிளகுபோன்ற; மிள்கு நிறைந்த; காரமான; எரிப்பான; கடுகடுப்பான, சிடுசிடுப்பான.

pep'sin, *n.* இரைப்பையில் ஊறுஞ் சாற்றிற் கலந்துள்ள ஊன் கரைக்கும் ஆற்றலுடைய காடிச்சத்து.

pep'tic, *a.* செமிக்கச் செய்கிற; செமிப்பதற்கு உதவியான; (தொ.) peptic gland, இரைப்பை நீர்ச்சுரப்பி.

pep'tone, *n.* கரிநீரகைகளின் புத்துருவாகச் செரிமான நீரிலுள்ள எளிதிற் கரையும் உறையாப்பொருள்.

per, *prep.* வழியாக, மூலமாக; ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொருவருக்கும்; அளவுக்கு; (தொ.) per cent, நூற்றுக்கு; per man, தலைக்கு; per post, அஞ்சல்வழி; per rail, இருப்புப்பாதை வழியாக; per steamer, நீராவிக்கப்பல் வழி.

peradven'ture, *n.* உறுதியின்மை; ஊகநிலை; தற்செயல் நிகழ்வு; *adv.* தற்செயலாக; ஒருவேளை.

perai', *n.* பெருந்தீனி உண்கிற அமெரிக்க நாட்டு நன்னீர் மீன்வகை.

peram'bulate, *v.* நடந்து திரி, சுற்றித்திரி, அலைந்து திரி; நாடுகளிற் சுற்றித்திரிந்து தணிக்கை செய்; கிறித்தவ திருச்சபை வட்டாரங்களைச் சூழநடந்து அவற்றின் எல்லையை வரையறு.

peram'bulator, *n.* தள்ளுவண்டி, குழந்தைத் தொட்டில் வண்டி; தொலைவுமானி சக்கரம்; திரிபவர்.

per ann'um, (லை.) *adv.* ஆண்டுதோறும், ஆண்டிற்கு.

percale', *n.* நெருக்கமாக நெய்யப்பட்ட பருத்தித்துகில் வகை.

per cap'ut, per cap'ita, (லை.) *adv.* தலைக்கு, ஒவ்வொருவருக்கு.

perceive', *v.* மனத்தால் உணர்; கூர்ந்து கவனி; உணர்; புலனால் உணர்; காண்.

percen'tage, *n.* நூற்றுவிழுக்காடு, சதவீதம்.

per'cept, *n.* புலனுணர்வுப் பொருள்; புலனியல்காட்சி, உளவியல் காட்சி, செயல்துறை அல்லாத அனுபவம்.

percep'tible, *a.* புலன்களால் உணரத்தக்க; அறியக்கூடிய; காணத்தக்க.

percep'tion, *n.* புலனுணர்வு; பொறிக்காட்சி; உணர்வுக் காட்சி; கலையுணர்வுக்கூறு; புலனுணர்வுமூலம் ஏற்படும் உள்ளத்தின் புறக்காட்சி; வரிமுதலியவற்றின் பிரிவு.

perch[1], *n.* துடுப்புக்கொண்ட ஐரோப்பிய நன்னீர் உணவு மீன்வகை.

perch[2], *n.* பறவை தங்குவதற்கான குறுக்குக்கம்பி; பறவை குந்துவதற்கான இடம்; உயர்காப்பிடம்; பாதுகாப்பிடம்; நாலு சக்கரவண்டியின் இருசு; நில அளவுகோல், *11* முழ நீள அளவு; *v.* பறவை வகையில் குந்து; தங்கு, ஓய்வு கொள்; ஆள் வகையில் அமர், தங்கியிரு; (தொ.) hop the perch, இற, மாள்வுறு; knock off one's perch, முறியடி, அழி; square perch, *121* சதுர முழ அளவு.

perchance', *adv.* தற்செயலாய், ஒருவேளை.

perch'er, *n.* குந்துவதற்கேற்ற கால்களோடு கூடிய பறவை.

percheron, *n.* (பிர.) வலிவும் விரைவும் மிக்க பிரஞ்சுநாட்டு வளர்ப்பினக் குதிரைவகை

percip'ient, *n.* நுண்காட்சியாளர்; தொலைவிலுணர்தல் மூலம் புலன்கடந்த காட்சிகளைக் காண்பவர்; *a.* உணர்கிற; அறிகிற; காண்கிற.

perc'olate, *v.* நீர்ம வகையில் வடிக்கட்டுக்கடந்து ஊறிச் செல், கடந்து ஊடுபரவு; கசிந்து அப்பாற்செல்; கசியவை; வடிகட்டு; தூளைத் துளைவழி தேய்த்து வடிகட்டு.

per con'tra, (லை.) *n.* கணக்கேட்டில் எதிர்ப்புறம்; *adv.* கணக்கேட்டில் எதிர்ப்புறத்தில், மறுபக்கமாக.

percuss', *v.* (மரு.) நோயின் தன்மையை நுணுகி ஆராய்வதற்காக விரலால் அல்லது கருவியால் மெள்ளத்தட்டு.

percu'ssion, *n.* மோதுதல், மோதல் அதிர்ச்சி; தண்ணுமை; (மரு.) நோய்த்தன்மை ஆராய்வதற்காக விரல் அல்லது கருவியின் மூலந் தட்டுதல்; (இசை.) இசைக்கருவி வகையில் தட்டுதலால் இசை எழுப்புதல்; (தொ.) percusson cap, வெடிபொருள்கள் திணிக்கப்பெற்றுச் சுத்தியலால் தாக்கும்பொழுது வெடித்துச் சிதறும் வெடிகருவிகளின் செம்பாலான மூடி.

percutan'eous, *a.* தோலினூடே நிகழ்கிற, தோல் வாயிலாகச் செயலாற்றப்படுகிற.

per di'em, (லை.) *adv.* நாள் ஒன்றிற்கு.

perditi'on, *n.* அழிவு; நரகம்.

perdu', *a.* (படை.) மறைந்துகொள்ளுதற்குரிய புறக்காவலரணான.

perdue', *a.* மறைவான; (தொ.) lie perdue, மறைந்திரு.

perdur'able, *a.* நிலையான; அழியாத, என்றுமுள்ள; நீடித்து உழைக்கக்கூடிய.

pere, (பிர.) *n.* தந்தை; தந்தை-மகன் பொதுப்பெயரில் தந்தை சுட்டுவதற்குரிய பின்னடைக் குறிப்பு.

pe'regrin, *n.*, *a.* = peregrine.

pe'regrinate, *v.* பயணஞ் செய், சுற்றியலை.

peregrina'tion, *n.* சுற்றலைவு; நாடுசூழ் வருகை; முழுநிறைவான பயணச்சுற்றுலா; வெளிநாட்டுத் தங்கற் பயணம்.

pe'regrinator, *n.* சுற்றி அலைபவர், நாடுசூழ் வரவாளர்.

pe'regrine, *n.* வேட்டைப் பருந்து; *a.* வெளிநாட்டுக்குரிய, வெளிநாட்டுத் தோற்றமுடைய.

pe'remptory, *a.* முடிவான, மீறமுடியாத; முழுதும் நிலை நாட்டப்பட்ட; மிக இன்றியமையாத; ஆள் வகையில் பிடிவாதமான; தனித்தன்னாட்சியாளரான, வல்லாட்சியாளரான; (சட்.) கட்டளை வகையில் தீர்மானமான; கட்டளைப்பத்திர வகையில் மறுப்புக்கு இடங்கொடாத; (தொ.) peremptory mandamus, மறுத்தற்கிடமில்லாக் கட்டளை; peremptory writ, எதிர்வாதி வழக்குமன்றத்திற்குக் கட்டாயம் வரவேண்டுமென்னும் அழைப்புக் கட்டளை.

perenn'ial, *n.* பல்லாண்டு மரவடை, ஆண்டுக்கணக்கில் வாழவல்ல தாவரம்; *a.* என்றுமுள்ள, எப்பொழுதும் இருக்கிற; நிலைத்திருக்கிற; நெடுநாளிருக்கிற; நீர்வழி வகையில் ஆண்டின் எல்லாப் பருவங்களிலும் ஓடிக்கொண்டிருக்கிற; தாவர வகையில் பல்லாண்டு உயிர்வாழ்கிற.

perf'ect[1], *n.* செயல்முடிவு தெரிவிக்கும் வினைவடிவம்; *a.* முழுநிறைவான; குறைபாடற்ற; வடுவற்ற; குற்றமற்ற; பயிற்சி முதலியவற்றின் வகையில் முற்றுவிக்கப்பட்ட, முழு நிறைவாக்கப்பட்ட; சரிநிறைவான, பிசகாத; சரிநுட்பமான, துல்லியமான; கலப்பற்ற; முழுநிலையான; பண்பு முனைப்பான; (தாவ.) பூவின் நாள் இதழ்ச் சுருள்வு முழுதும் உடைய; (இசை.) தூங்கலோசை இசைவான; (இலக்.) வினைவடிவ வகையில் செயல்முடிவு குறிக்கிற.

perfect'[2], *v.* நிறைவுபடுத்து; முற்றுவி, முடி; முழுநிறைவாக்கு; முன்னேற்றுவி.

perfec'tion, *n.* முழுநிறைவு; முழுநிறைவாக்கல்; முழு வளர்ச்சி; தவறற்ற நிலை; படிநிலையில் மிகுசிறப்பு; முழு நிறைவுடைய பொருள்; முழுநிறைவுடைய ஆள்; உச்சக் குரல்; மிகச்சிறந்த பண்பு.

perfec'tionist, *n.* சமயத்திலும் ஒழுக்கத்திலும் நிறைவடைய முடியும் என்ற கொள்கையுடையவர்.

perfec'tions, *n. pl.* தேர்ச்சிக் கூறுகள், தனிச்சிறப்புக் கூறுகள், தகுதிக் கூறுகள்.

perferv'id, *a.* ஆர்வமுள்ள; வெப்பமான.

perfid'ious, *a.* நம்பிக்கைத் துரோகமான; மெய்ம்மை காட்டாத.

perf'idy, *n.* துரோகம், நயவஞ்சகம், நம்பிக்கை மோசம்.

perfol'iate, *a.* (தாவ.) காம்பு இலையினூடே செல்வது போன்ற தோற்றமுடைய.

perf'orate, *v.* துளைத்துச்செல்; துளை; தாளில் முத்திரைகளுக்கான சூழ்வரிசைத் துளைகளிடு; பொத்தல் இடு; வெட்டி வழிசெய்; ஊடுசெல்.

perfora'tion, *n.* துளையிடுதல்; துளை ஆக்கம்; புடைவிடுதல்; துளைகளிட்ட நிலை; ஊடுபுழை; கிழிப்பதற்கு வாய்ப்பான துளைவரிசை.

perf'orator, *n.* துளைப்பவர்; துளைப்புக்கருவி; துளைப்புறுப்பு.

perforce', *n.* இன்றியமையாச் சிறப்பு; *adv.* இன்றியமையாமையை முன்னிட்டு; கட்டாயத்தால்.

perform', *v.* இயற்று; செயற்படுத்து, செய்துமுடி; வினையாற்று; ஆற்று, புரி, நடத்து; கையாளு; பொதுநிகழ்ச்சி விளையாட்டு ஆகியவற்றை நடத்து; கட்டளை-சூளுரை-செயல் முதலியவற்றை நிறைவேற்று; நாடகம் நடி; பாடல் பாடு; சூழ்ச்சி இழை; செயற்பொறிகள் காட்டு; பயிற்றுவிக்கப்பட்ட விலங்குகள் வகையில் செய்துகாட்டு.

perform'able, *a.* செய்யப்படத்தக்க; நடைமுறையில் கூடியதான, சாத்தியமான.

perform'ance, *n.* செயல் நிறைவேற்றம்; செயல்காட்சி; செய்தல், செய்துமுடித்தல்; செயற்கரிய செயல்; நாடகம் அல்லது பொதுக்காட்சி நிகழ்ச்சி.

perform'er, *n.* செய்பவர், வினையாற்றுபவர்; செயல்நிறைவேற்றுபவர்; கடமை நிறைவேற்றுபவர்; சட்ட நடவடிக்கை நிறைவேற்றுபவர்; வினைமுறையில் பங்கெடுப்பவர்; விழா முறையில் பங்கெடுப்பவர்; வித்தைக்காரர்; செயற் காட்சியாளர்.

perf'ume[1], *n.* நறுமணம், எரியும் பொருளினின்று எழும் நன்மணம்; இன்மணம்; மணம்; நறுமணத்தைலம்.

perfume'[2], *v.* நறுமணமூட்டு; நறுமணம் தோய்வி; நன்மணம் நிரப்பு; இன்மணங் கல.

perfum'er, *n.* நறுமணப்பொருள்கள் செய்பவர்; நறுமணப் பொருள் வணிகர்.

perf'umery, *n.* விரை; விரைபொருட்கலை.

perfunc'tory, *a.* கடமைக்காகச் செய்யப்படுகிற, மேலோட்டமான அக்கறைமட்டுமேயுடைய; ஆழ்கவனமற்ற; மனந் தோயாத; மெய்ப்புக்கான.

perfuse', *v.* நீர்முதலியன தெளி, தூவு; ஒளி முதலியவற்றின் வகையில் மூடு, நன்கு பரவு; சூழ்ந்துபரவு, கவி; உட்கவிவுற்றுப் பரவு; நீரை உள்ததும்பவிடு, நீர்மேலீடாக அலம்பவிடு.

pergamen'eous, *a.* பண்படுத்தப்பட்ட வரையுந்தோலாலான; எழுதுதற்காகப் பதப்படுத்தப்பட்ட ஆட்டுத்தோல் போன்ற.

perga'na, (பெ.) *n.* = pergunnah.

perg'ola, *n.* கொடிவீடு, தோட்டப் பூம்பந்தர்; செடிகொடிகள் கவிந்துள்ள நடைபாதை, கொடிகள் படரவிட்ட கழித்தட்டிகளால் வளைக்கப்பட்ட இடைவழி.

pergunn'ah, (பெ.) *n.* ஊர்களை உள்ளடக்கிய ஊர் வட்டகை, பிடாகை.

perhaps', *adv.* ஒருவேளை.

per'i, *n.* பாரசீகப் பழங்கதை மரபில் தேவதை, அணங்கு; அழகி.

peria'gua, *n.* = piragua.

pe'rianth, *n.* பூவின் புறவட்டம், அல்லிவட்டமும் புல்லிவட்டமும் வேறு பிரிக்கப்பட முடியாத நிலையிலுள்ள முழுவட்டம்.

pe'riapt, *n.* தாயத்து, மந்திரக்கவசம்.

pericardit'is, *n.* குலையுறை அழற்சி, நெஞ்சுப்பையை மூடிக்கொண்டிருக்கும் சவ்வின் வீக்கம்.

pericard'ium, *n.* குலையுறை, நெஞ்சுப்பையை மூடிக்கொண்டிருக்கும் சவ்வு.

pe'ricarp, *n.* விதையுறை, நெற்று.

perichon'drium, *n.* கணுநீங்கலாகக் குருத்தெலும்பு முழுவதும் மூடியிருக்கும் சவ்வு.

pe'riclase, *n.* வெசுவியஸ் (Vesuvius) எரிமலையிற் காணப்படும் வெள்ளிமமும் இரும்புத்துருவுங் கலந்த கனிப்பொருள் வகை.

periclin'al, *a.* (மண்.) மையத்திலிருந்து எல்லாத் திசைகளிலும் சரிந்திருக்கிற.

peric'ope, *n.* சிறுபகுதி; பத்தி; பொதுவழிபாடுகளில் படிக்கப்படும் விவிலிய ஏட்டுச் சிறுபகுதி.

pericran'ium, *n.* மண்டையோட்டை மூடிக்கொண்டுள்ள சவ்வு; (பே-வ.) மண்டையோடு; மூளை; அறிவாற்றல்.

pe'ridot, *n.* பச்சை மணிக்கல் வகை.

pe'rigee, *n.* நிலவுலகத்துக்கு மிக அடுத்த கோளின் இடம்; நில உலகத்துக்கு மிக அணித்தான திங்களுலகின் இடம்.

pe'rigynous, *a.* கருவகம் அல்லது சூலகம் சுற்றிலும் பூவிழைகளையுடைய.

perihel'ion, *n.* ஞாயிற்றணிமை நிலை, கோள் சுற்றிவரும் பாதையில் கதிரவனுக்கு அண்மையிலுள்ள இடம், கோள் நெறியில் கதிரவனை அணுகுமிடம்.

pe'ril, *n.* இடர், துன்பநெருக்கடி; *v.* இடருக்குள்ளாக்கு, இன்னலுக்குட்படுத்து; (தொ.) in peril of one's life, உயிரை இழக்கும் இடர்நிலையில்; you do it at your peril, உன் பொறுப்பிற் செய்.

perim'eter, *n.* சுற்றுவட்ட அளவு; புற எல்லை; வட்டமான உருவின் சுற்றுவரை; வட்டச்சுற்றுவரை நீளம்; சுற்றுக்கட்ட நீளம்; காட்சிப்பரப்பை அளப்பதற்கான கருவி.

perine'um, *n.* (உள்.) உடலில் விதைப்பைக்கும் எருவாய்க்கும் இடைப்பட்ட பகுதி; எருவாய்க்கும் பெண் உறுப்புக்கும் இடைப்பட்ட உடற்பகுதி.

per'iod, *n.* ஊழி, வானியற்பொருத்தங்கள் திரும்பத்திரும்ப நிகழ்வதால் குறிக்கப்படும் காலக்கூறு; கோள்வட்டம், வானக்கோள் சுழற்சியின் காலம்; பருவம், நோய் நீட்டிக்கும் காலம்; காலவட்டம், வரலாறு-வாழ்க்கை முதலியவற்றின்

பகுதி; காலக்கூறு, காலப்பகுதி; முழு வாக்கியம்; வாக்கியத்தின் கடைசியிலுள்ள நிறுத்தம், வாசக முழு நிறுத்தம்; (கண.) முற்றுப்புள்ளிக்குறி; பதின்பகுப்புத் தனிக்குறிப்புப் பகுதி; குறிப்பிட்ட காலப்பகுதி; *a.* குறிப்பிட்ட காலப்பகுதி சார்ந்த; இறந்தகாலத்திற்குரிய பண்புடைய; (தொ.) put a period to, முடி, முடிவிற்குக் கொண்டுவா.

period'ic, *a.* வான்கோள்களின் சுழற்சியோட்டஞ் சார்ந்த; குறிப்பிட்ட இடைவெளிகளுடன் திரும்பத்திரும்ப நிகழ்கிற; இடையிடை நிகழ்கிற; ஒழுங்கான; கணிப்பு ஒழுங்குவகைகளாகச் செயற்படுகிற; ஒழுங்காய் எழுந்தெழுந்தமிழ்கிற; (தொ.) periodic table, ஒத்த வேதிப்பண்புகள் ஒரே ஒழுங்காகத் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட தொகுதிகளிற் சேருகின்ற தனிமங்களின் அணு எண்படியான பட்டியல்.

period'ical, *n.* பத்திரிகை, பருவ இதழ்; *a.* வான்கோள்களின் சுழற்சி வட்டஞ் சார்ந்த; குறிப்பிட்ட இடைவெளிகளுடன் திரும்பத் திரும்ப நிகழ்கிற; ஒழுங்கான, கணிப்பு-ஒழுங்குவகைகளிற் செயற்படுகிற.

periodi'city, *n.* பருவ நிகழ்வு; இடையீட்டொழுங்கு; விரைவதிர்வு.

per'iods, *n. pl.* மாதவிடாய்.

perios'teum, *n.* எலும்புகளை மூடியுள்ள சவ்வு.

peripatet'ic[1], *n.* (பே-வ.) சாத்து வணிகர்; *a.* செயற் காரணமாக அல்லது தொழிற் காரணமாக இங்குமங்கும் அலைந்து திரிகிற; அலைந்துதிரிகிற; திரிந்து வாணிகஞ் செய்கிற.

Peripatet'ic[2], *n.* பண்டைக்கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டிலைப் பின்பற்றுபவர்; *a.* அரிஸ்டாட்டிலைச் சார்ந்த; அரிஸ்டாட்டிலைப் பின்பற்றுகிற.

peripetei'a, peripeti'a, *n.* வாழ்க்கையில் திடீர்ச்செல்வநிலை மாறுதல்; நாடகத்தில் திடீர் செல்வநிலை மாற்றம்.

periph'ery, *n.* வட்டப்பரப்பின் சுற்றுக்கோடு; புற எல்லை; புறப்பரப்பு.

periph'rasis, *n.* சுற்றிவளைத்துப் பேசுதல், மிகைபடக் கூறல்; சுற்றி வளைத்த சொற்றொடர்.

perip'teral, *a.* கோயில் வகையில் ஒற்றை வரிசைத் தூண்களாற் சூழப்பட்ட.

perique', *n.* மிகச்சிறந்த கருநிறப் புகையிலை வகை.

pe'riscope, *n.* நீர்மூழ்கிக் கப்பலின் முகட்டுமேற்பரப்புக் காட்சிக்கருவி; பாதுகாப்புக் குழியின் புறக்காட்சிக் கருவி; நிழற்படக் கருவியின் மையச்சில்லு.

periscop'ic, *a.* காட்சிநேர்வரை திறம்பியைக் காண உதவுகிற.

pe'rish, *v.* அழி; இறந்துபோ; மறைவுறு; உயிரிழ; மாள்வுறு; அழிவுக்கு ஆளாகு; வீழ்ச்சியுறு; ஆற்றலிழக்கச் செய்.

pe'rishable, *a.* அழிந்துபோகிற; விரைவில் அழுகிக் கெட்டு விடுகிற.

pe'rishables, *n. pl.* அழிபொருள்கள், காய்கறி-பழங்கள் போன்று விரைந்தழியக்கூடியவை.

pe'risperm, *n.* விதைகள் சிலவற்றில் முளைப்பையின் புறத்தேயுள்ள வெண் கருத்திரள்.

pe'rispome, perispom'enon, *n.* (இலக்.) கிரேக்க மொழியில் கடைசி அசையில் ஏற்ற இறக்க அழுத்தங்கொண்ட சொல்; *pl.* pe'rispomena.

perissodac'tylate, *a.* (வில.) ஒவ்வொரு காலிலும் ஒற்றைப் படை எண்ணுடைய விரல்கள் கொண்ட.

peris'talith, *n.* (தொல்.) புதைமேட்டைச் சுற்றிச் செங்குத்தாக நிற்கும் குத்துக்கல் வட்டம்.

peristal'sis, *n.* (உட.) உணவுசாரம் எளிதிற் செல்லுவதற்கிசைவான உணர்வற்ற வட்டாகாரமான தன்னியக்கத் தசைச்சுருக்க அலைகள்.

peristeron'ic, *a.* மாடப்புறுக்களுக்கு உரிய.

pe'ristome, *n.* (தாவ.) பாசிகளில் விதையுறைகளின் வாயிலுள்ள பல்லமைவு; (வில.) முதுகெலும்பு விலங்குகளின் வாயைச் சுற்றியுள்ள பகுதி.

pe'ristyle, *n.* சுற்றுத்தூண் வரிசை, கோயில்-மடம்-மண்டபம் முதலியவற்றைச் சுற்றிலும் உள்ள தூண் வரிசை; சுற்றுமண்டபம், கோவில்-மடம்-மண்டபம் முதலியவற்றைச் சுற்றிலுமுள்ள தூண்வரிசை நிறைந்த இடம்.

peritone'um, peritonae'um, *n.* (உள்.) வபை, அடிவயிற்று உட்பகுதியைச் சூழ்ந்துள்ள நீரடங்கிய இரட்டைச் சவ்வுப் பை.

perityphli'tis, *n.* குடல்வால் அழற்சி.

pe'riwig, *n.* பொய்மயிர்க் குல்லாய்.

pe'riwinkle[1], *n.* நீலமலர்ப் பசுங்கொடி வகை.

pe'riwinkle[2], *n.* உணவுக்குப் பெரிதும் பயன்படும் நத்தை வகை.

perj'ure, *v.* பொய்யாகச் சத்தியஞ் செய்.

per'jured, *a.* பொய்ச்சத்தியஞ் செய்கிற.

perjur'ious, *a.* வாயல் வாய்மைபற்றிய; பொய்க்கரிக் குற்றம் உள்ளிட்ட.

perj'ury, *n.* பொய்ச்சத்தியம்; பொய்க்கரி கூறுதல்; சூளுரை மீறுதல்.

perk, *a.* துடுக்கான, தன்முனைப்பான; செம்மாப்புடைய; *v.* சட்டென்று தலைநிமிர்; திடுமென நீட்டு; ஆணவமாக முந்திமேற்செல்; விறைப்புடன் நடந்துகொள், இழந்த ஊக்கம் பெறு, ஊக்கத்துடன் எழு.

perk'y, *a.* துடுக்கான, தன்முனைப்பான.

perl'ite, *n.* மெருகேறிய உருள்மணிகள் வடிவிலுள்ள பளிங்குப் பாறைவகை.

perm, *n.* (பே-வ.) தலைமயிரில் உண்டாக்கப்படும் செயற்கை அலை நெளிவு.

perm'alloy, *n.* நிக்கலும் இரும்புஞ் சேர்ந்த காந்தக் கூருணர்வுடைய கலவை.

perm'anence, *n.* மன்னுகை, நிலைத்த தன்மை, நிலைபேறு; நீடித்திருக்கும் நிலை.

perm'anency, *n.* நிலைபேறு; பொன்றாப் பொருள்.

perm'anent, *a.* நிலையான, நிலைபேறுள, மன்னிய; (தொ.) permanent magnet, நிலைக்காந்தம்; permanent set, பயன்படுத்தப்படுவதனால் உண்டாகுஞ் சேதத்துக்கு உட்பட்ட பிறகு உலோகம் அடையும்நிலை.

permang'anate, *n.* (வேதி.) பரமங்கனிகக்காடியின் (permanganic acid) உப்பு; (தொ.) permanganate of potash, potassium permanganate, கரைசலில் தொற்று நீக்கியாகப் பயன்படுத்தப்படும் பரமங்கனிகக் காடியின் சாம்பர உப்பு.

permanga'nic acid, *n.* (வேதி.) பரமங்கனிகக் காடி.

permeabil'ity, *n.* ஊடுருவ இடந்தரும் இயல்பு; ஊறி உட்புக இடந்தரும் நிலை; (தொ.) magnetic permeability, காந்தத்தாக்குக்கும் இளக்கி அடர்த்திக்கும் உள்ள தகவு.

per'meate, *v.* உட்புகு, ஊடுருவு; ஊடுருவிப்படர்; புகுந்து பரவு; தெவிட்டுநிலை எய்தும்வரையிற் கரைவுறு; எங்கும் பரவிக் கலப்புறு.

per men'sem, (ல.) *adv.* திங்களொன்றிற்கு, மாதத்திற்கு.

Perm'ian, *a.* (மண்.) தொல்லுயிர் ஊழியின் கடைசி மேலடுக்குப் பிரிவு சார்ந்த.

per mill'e, (ல.) *adv.* ஆயிரத்திற்கு, ஒவ்வோர் ஆயிரத்திற்கும்.

permiss'ible, *a.* ஏற்கத்தக்க, இசைவு வழங்கத்தக்க, அனுமதிக்கக்கூடிய.

permi'ssion, *n.* இசைவு, அனுமதி.

permiss'ive, *a.* இசைவு தருகிற; கட்டாய வற்புறுத்தலின்றி உரிமை வழங்கப்படுகிற, தடையில்லாத; (தொ.) permissive legislation, கட்டாய வற்புறுத்தலில்லாமலேயே அதிகாரங்களை வழங்குஞ் சட்டம்.

perm'it[1], *n.* இசைவாணைச்சீட்டு, சுங்கம் விதிக்கத்தக்க சரக்குகள் முதலியவற்றை இறக்கவோ எடுத்துச்செல்லவோ இசைவளிக்கும் எழுத்தாணை, அனுமதிச்சீட்டு; இசைவு, அனுமதி.

permit'[2], *v.* அனுமதி கொடு, இசைவளி; ஏற்றுக்கொள்; இடங்கொடு.

permuta'tion, *n.* (கண.) தொகுதியின் உறுப்பு வரிசை மாற்றம்; வரிசை மாற்ற ஒழுங்கமைவு, வரிசைமாற்ற வகைகளில் ஒன்று.

permute', *v.* முறைமாற்று, வரிசைமாற்று.

pern, *n.* தேனீக்கள்-குளவிகள் ஆகியவற்றின் முட்டைப்புழுக்களைத் தின்னும் பறவை வகை.

perni'cious, *a.* பொல்லாத, பெருங்கேடு பயக்கவல்ல, அழிவுண்டாக்கக்கூடிய, சாவுக்கேதுவான; (தொ.) pernicious anaemia, சாவினை விளைக்குங் குருதிச் சோகை வகை.

pernick'ety, *a.* (பே-வ.) சிறுகுற்றமும் பொருத; இடர்ப்பாடான; விழிப்பாகக் கையாளவேண்டியிருக்கிற, நுட்பக்கவனந் தேவைப்படுகிற.

pernocta'tion, *n.* இரவினைக் கழித்தல்; சமயத்துறையில் இரவு முழுதுங் கண்விழித்தல்.

pe'rorate, *v.* சொற்பொழிவில் தொகுத்து முடிவுரை கூறு; விரிவாகப் பேசு.

perora'tion, *n.* சொற்பொழிவின் முடிவுரைப்பகுதி; நாத்திறம் படைத்த சொற்பொழிவு.

perox'ide, *n.* (வேதி.) பர உயிரகை; (பே-வ.) நீரகப் பர உயிரகை, நச்சரியாகவும் மயிரை வெளுப்பதற்கும் பயன்படுத்தப்படும் பிசுபிசுப்பான நிறமற்ற நீர்மம்; *v.* நீரகப் பர உயிரகையைக்கொண்டு மயிரை வெளுப்பாக்கு; (தொ.) peroxide of hydrogen, நீரகப் பர உயிரகை.

perp'end[1], *n.* சுவரின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு அதனூடே செல்லுங் கல்.

perpend'[2], *v.* ஆழ்ந்தாராய்.

perpendic'ular, *n.* குத்துக்கோட்டினை அறுதிசெய்வதற்கான கருவி; செங்குத்துக்கோடு; *a.* தொடுவானத் தளத்திற்குச் செங்கோணத்திலுள்ள; செங்குத்தான; நிலைக்குத்தான, சாய்வற்ற; நிற்கிற நிலையிலுள்ள; (வடி.) குறிப்பிட்ட கோடு-தளம்-அல்லது பரப்பிற்குச் செங்கோணத்திலுள்ள; (தொ.) perpendicular style, இங்கிலாந்தில் 1350 முதல் 1600 வரை வழங்கிவந்த திருக்கோயில் கட்டிடக் கலைப் பாணி.

perpendic'ularity, *n.* செங்குத்து நிலை.

perpendic'ulars, *n. pl.* கப்பல் நீளத்தை அறுதிசெய்வதற்குதவும் வகையில் அதன் நீர்க்கோட்டின் இருமுனைகளிலிருந்தும் மேல்நோக்கி எழும் செங்குத்துக்கோடுகள்.

perp'etrate, *v.* குற்றஞ் செய்; செய்யுள் வகையில் இயற்று; சிலேடை வகையில் அமை.

perpet'ual, *a.* நிலையான, என்றுமுள்ள; மன்னும் நிலையதான, தொடர்ச்சியான; (பே-வ.) அடிக்கடி நிகழ்வதான; (தொ.) perpetual motion, புறத்திலிருந்து நிறுத்தும் ஆற்றல் பெறுவிடில் முடிவில்லாமற் செயற்படத்தக்க இயக்கம்.

perpet'uance, *n.* = perpetuation.

perpet'uate, *v.* நிலைபேறுடையதாக்கு; என்றும் இயங்கச்செய்; நீடித்திருக்கச்செய்; மறக்கப்படாமற் பேணு.

perpetua'tion, *n.* நிலைபேருக்கம்; முடிவில் தொடர்ச்சி; என்றென்றும் காத்துப்பேணுகை; நெடுநீள்தொடர்ச்சி; நெடுநீள் காலம் பேணுகை.

perpetu'ity, *n.* நிலைப்பாடு, நிலைபேறு, நிலைத்திருக்குந் தன்மை; எல்லையில் காலம்; வரையறுக்கப்படாக் கால எல்லை; என்றுமுள்ளது; நிலையான உடைமை; நிலையான பதவி; நிலையான ஆண்டுப்படி; நிலையான ஆண்டுப்படிக்குரிய மூலதனத் தொகை; (தொ.) for perpetuity, in perpetuity, to perpetuity, என்றென்றைக்கும்.

perplex', *v.* குழப்பமடைவி, திகைப்பூட்டு; சிக்கலாக்கு; சிக்கவை, பின்னிக்கொள்.

perplex'ity, *n.* தடுமாற்றம், மனக்குழப்பம்; இரண்டக நிலை, தடுமாற்றம் உண்டுபண்ணுவது; சிக்கலான நிலை.

per procuration'em, (ல.) *adv.* பகரநிலையாக; கையொப்பமிடுபவர் செயல்விளைவாக.

perq'uisite, *n.* இடை ஆதாயம், தற்செயலாகக் கிடைத்த மிகைப்பேறு; சுதந்திரம்; பணியாளர் சேதாரப்பொருளுரிமை; வாடிக்கைக் கையுறை; (சட்.) முறையான வருமானத்துக்கு மேற்பட வரும் பண்ணை முதல்வர் ஆதாயம்.

pe'rron, *n.* வாயிற்படி மேடை.

pe'rry, *n.* பேரிப்பழத் தேறல் வகை.

per sal'tum, (ல.) *adv.* இடையீடின்றி நேரடியாக, உடனடியாக.

pers'ecute, *v.* வாட்டு, கொள்கைவேறுபாடு காரணமாகத் துன்புறுத்து; அடக்குமுறை அட்டூழியங்களுக்கு ஆளாக்கு, இடர்ப்படுத்து, முறைகடந்து வருத்து; தொந்தரவு கொடு.

persecu'tion, *n.* அடக்குமுறை அட்டூழியம், விடாத்துயரளிப்பு; (தொ.) persecution mania, அடக்குமுறைப் பித்தம்; தாம் இடைவிடாது துன்புறுத்தப்படுவதாக வெறிமயக்குறுதல்.

pers'ecutor, *n.* வருத்துவோர், ஆரஞர் தருவோர்.

persever'ance, *n.* விடாமுயற்சி, ஆள்வினையுடைமை; சமயத்துறையில் திருவருளுக்கு ஆட்பட்ட நிலையில் இருந்துவருதல்.

persevere', *v.* விடாமுயற்சியுடன் செயலாற்று, உருற்று.

Per'sian, *n.* பெர்சிய நாட்டவர்; பெர்சியமொழி; *a.* பெர்சிய நாடு சார்ந்த; (தொ.) Persian carpet, மென்மையான சமுக்காள வகை; Persian cat, பட்டுப்போன்ற நீண்ட மயிரும் குச்சுவாலும் உடைய பூனைவகை; Persian powder, பூச்சிகளைக் கொல்லுந் தூள் வகை; Persian wheel, கீழேசெல்லும் நீரினால் இயக்கப்படும் தண்ணீர் இறைப்பதற்கான பெரிய சக்கரம்.

persiennes', *n. pl.* எளிய கிடைச்சட்டங்களுடன் கூடிய வெளிப்புறப் பலகணித் திரைகள்.

pers'iflage, *n.* ஏளனப்பேச்சு, இலேசான வசவு.

persimm'on, *n.* அமெரிக்க வகை ஈச்சம்பழம்.

persist', *v.* விடாது வற்புறுத்து, விடாப்பிடியாயிரு; விடாது தொடர், தொடர்ந்து வாழ்ந்திரு, கடந்துவாழ், எஞ்சியிரு.

persis'tence, persis'tency, *n.* விடாப்பிடியாக இருக்கும் இயல்பு; தொடர்ந்து நீடிப்பு; பிடிவாதம்.

persis'tent, *a.* உறுதியாக நிற்கிற, பிடிவாதமான, விடாப்பிடியான; எதிர்ப்பைக் கடந்து முன்னேறுகிற; (வில., தாவ.) கொம்புகள்-மயிர்-இலைகள் முதலியவற்றின் வகையில் நிலையான.

pers'on, *n.* தனியொரு மனிதர், ஆள்; உயிருள்ள மனித உடம்பு; (சட்.) ஒப்புக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளும் கடமைகளும் உடையவர்; ஒப்புக்கொள்ளப்பட்ட உரிமைகளும் கடமைகளும் உடைய கூட்டவை; நாடகம் அல்லது கதையில் வரும் உறுப்பு; (இலக்.) தன்மை-முன்னிலை-படர்க்கை என்ற மூவிடங்களில் ஒன்று; (வில.) கூட்டிணை உயிர்களில் ஒன்று; (தொ.) in person, நேரில், தாமே; the three persons of the Godhead, திருத்தந்தை-திருச்சேய்-தூய ஆவி என்ற இறைமையின் மூன்று மூர்த்தங்கள்.

person'a, (ல.) *n.* ஆள், தனியொரு மனிதர்; (தொ.) *in prop'ria person'a*, நேரில், தாமே; *person'a grat'a*, வேண்டியவர், பிடித்தமானவர்; *person'a non grat'a*, வேண்டாதவர், விரும்பப்படாதவர்.

pers'onable, *a.* நல்தோற்றமுடைய, வனப்புவாய்ந்த, அழகுவாய்ந்த.

pers'onage, *n.* பொருளவர், உயர்நிலையினர்; நாடக உறுப்பினர்; கதை உறுப்பினர்.

pers'onal, *a.* தனிப்பட்ட, தனி மனிதருக்குரிய, பொதுவல்லாத; ஒருவர் தாமே செய்த, ஒருவர் நேரில் ஆற்றிய; தனியொருவரை நோக்கிய, தனியொருவரைக் குறித்த; சொந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கிற, சொந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கும் பாங்குள்ள; (இலக்.) தன்மை-முன்னிலை-படர்க்கை என்ற மூவிடங்களில் ஒன்றிற்குரிய; மூவிடங்களில் ஒன்றினைக் குறிப்பிடுகிற; (தொ.) personal column, செய்தித்தாளில் தனியொருவர்க்குரிய சிறு விளம்பர ஒதுக்கீட்டுப் பத்தி; personal equation, கருவிகாட்டும் கணக்கெடுப்பவர் அக்கணக்கினைச் சரியாக எடுக்கும் பாங்கற்றவராயிருப்பது காரணமாக அக்கணக்கில் செய்யவேண்டியுள்ள திருத்தம்; personal estate, personal property, (சட்.) தட்டுமுட்டுப்பொருள்கள், இயங்குடைமை; ஒருவரது கால்வழியினரை அடையும் நிலமல்லாத மற்றெல்லா உடைமைகளும் நிலத்திலுள்ள உரிமைகளும்; personal identity, நிலைமாறாத் தனிமையுணர்ச்சி; personal rights, வாழுயிர் உரிமைகள்; personal security, சொந்தப் பிணையம்; personal service, முகவரியர் கையிலேயே சேர்ப்பிப்பது; personal transaction, சொந்தக்கணக்கு; சொந்த முயற்சிச் செயல்.

personal'ities, *n. pl.* குறிப்பிட்ட ஒருவரைப்பற்றிய கருத்துரைகள்.

personal'ity, *n.* தனிமனிதர் நிலை; தனியாள்; தனியாள் மெய்ம்மைநிலை; தனிமனித வாழ்வு; தனித்தன்மை; தனிமனிதர் சிறப்பியல்பு; ஆள்; முக்கியமான ஆள்; தனிமனிதர் செய்திச்சுட்டு; தனிமனிதப் பண்பியல்புகளின் மொத்தத்தொகுதி; தனி மனிதரிடம் உள்ள வேறுபட்ட செயற்பண்பு நிலைகளில் ஒன்று; (தொ) multiple personality, (உள.) ஒரே மனிதரிடம் இரண்டு அல்லது பல வெவ்வேறான முரண்பட்ட இயல்புகள் இருப்பதாகத் தோன்றும் நிலை.

pers'onalize, *v.* = personify.

pers'onally, *adv.* நேராக; தாமே; தம்மைப்பற்றியவரை.

pers'onalty, *n.* (சட்.) செயற்பொறுப்பினரைச் சாரும் சொத்துக்கள்.

pers'onate[1], *a.* (தாவ.) இதழுடைய அல்லி வட்டம் வகையில் கிழிதழ் மேல்நோக்கிப் பருத்திருப்பதனால் மூடப்பட்ட.

pers'onate[2], *v.* நாடக உறுப்பின் பாகமேற்று நடி; போலச் செய்; ஆள்மாறாட்டஞ் செய்.

personifica'tion, *n.* தற்குறிப்பேற்றம், ஆளுருவாக்குதல், பண்பைப் பண்பியாக உருவகஞ் செய்தல்; கருத்தளவான ஒன்றன் எடுத்துக்காட்டாகக் கருதப்படுபவர்; ஓர் இயல்பின் உருவகம் எனக் கருதப்படும் பொருள்.

person'ify, *v.* ஆளுருவாக்கு; பண்பைப் பண்பியாக உருவகஞ்செய்; எடுத்துக்காட்டாயிரு; இயல்பினைக்கொண்டிரு.

personnel', *n.* அலுவலகப் பணியாளர், ஊழிய ஆளினர்.

perspec'tive, *n.* வரைபடத்தில் தொலையணிமைக் காட்சி அமைவு; தொலையணிமைக் காட்சிப்படம்; பொருள்களுக்கிடையே படத்திற் காணப்படுந் தொலைவுத்தோற்றம்; உள்ளத்தில் வாதப்பொருளில் முதல்-சினைபற்றிய தகவு நோக்கு; தொலைக்காட்சி; பரப்புத்தோற்றம்; முழு உளக்காட்சி; பரப்பு மனக்காட்சி; *a.* இயலுருத்தோற்றம் பற்றிய; தொலை அணிமைத் தோற்றத்துக்கிணங்கிய; (தொ.) in perspective, இயலுருத்தோற்றக் காட்சிப்படம் வரையும் விதிகளுக்கிணங்கச் சரியான தொலை அணிமைத் தகவுப்படி வரையப்பட்ட; linear perspective, பொருள்களின் உருவம்-அளவு-நிலை ஆகியவை சார்ந்த படத்தின் புற இயலுருத் தோற்ற அமைவு; perspective plane, இயலுருத்தோற்றத் தளம், இயலுருத்தோற்றமாகக் காட்டவேண்டிய பொருள்களின் படம் வரைதற்குரிய பரப்பு.

pers'pex, *n.* விமானப் பலகணித் திரைக்குப் பயன்படுத்தப்படும் கண்ணாடியினும் மிக இலேசான விறைப்பான ஒளி ஊடுருவும் உடையாத குழைமப்பொருள்.

perspica'cious, *a.* கூர்த்த மதியுள்ள, நுண்ணறிவுடைய.

perspica'city, *n.* கூர்ந்தமதி, நுண்ணறிவு.

perspicu'ity, *n.* தெளிவு.

perspic'uous, *a.* எளிதில் விளங்குகிற, தெளிவாகச் சொல்லப்பட்ட; ஆள்வகையில் தெளிவாக எடுத்துரைக்கிற.

perspir'able, *a.* வியர்வை ஊடுசெல்ல விடுகிற; வியர்வையுடன் வெளியேற்றப்படக்கூடிய.

perspira'tion, *n.* வியர்த்தல்; வியர்வை.

perspire', *v.* வியர்த்தலுறு, வியர்வையரும்பு.

persuade', *v.* அறிவுறுத்தி இணங்க வை; மெய்யெனக்காட்டி நம்பவை, மெய்ப்பித்துக்காட்டு.

persuad'er, *n.* கருத்தை ஒப்புக்கொள்ளச் செய்பவர்; இணங்க வைப்பது.

persuas'ible, *a.* நயந்து சொல்லி நம்பவைக்கத் தக்க, இணங்குவிக்கத் தக்க, சொல்லித் திருத்தக்கூடிய.

persua'sion, *n.* இணங்குவித்தல்; மெய்யெனக்காட்டி நம்பவைத்தல்; உறுதியான கொள்கைப் பற்றூர்ந்த நம்பிக்கை; சமயக்கோட்பாடு; சமயக்கோட்பாட்டுப் பிரிவினர்; இனம், வகை, வகுப்பு.

persuas'ive, *n.* தூண்டுதல்; செயல்நோக்கம்; *a.* மெய்ப்பிக்கவல்ல; தூண்டி இயக்கக்கூடிய; கவர்ச்சியுடைய.

pert, *a.* அடக்கமற்ற, துடுக்கான.

pertain', *v.* உரியதாயிரு; சார்ந்ததாயிரு; பொருத்தமாயிரு; தொடர்புடையதாயிரு, சார்புபெற்றிரு.

pertina'cious, *a.* பிடிவாதமான, விடாப்பிடியுடைய, இணங்காத.

pertina'city, *n.* இணங்காமை, பிடிவாதம், முரட்டுத்தனம், விடாப்பற்று.

per'tinence, per'tinency, *n.* பொருத்தம், தொடர்புள்ளதாயிருக்கும் நிலை.

pert'inent, *a.* சார்புடைய, ஏற்புடைய, தகுந்த, பொருத்தமான.

pert'inents, *n. pl.* சார்ந்தவை, சார்புரிமைகள், உடைமைப் பொருள்கள்.

perturb', *v.* கலக்கு, மனத்தைக் குழப்பு.

perturba'tion, *n.* கலக்குதல்; கலங்கிய நிலை; மனக்கலக்கம்; ஒழுங்கின்மை; கலக்குவது; (வான்.) வானக்கோளின் முறையான இயக்கத்தில் மூன்றாவது பொருளாற்றலால் உண்டாகும் சிறு தடுமாற்றம்; வானக்கோளின் சுற்றியக்கத்தில் மையக்கோளத்தின் கோளம் மீறிய உருவமைதியினால் ஏற்படுஞ் சிறிய உலைவு.

peruke', *n.* பொய்ம்மயிர்த் தொப்பி.

peru'sal, *n.* தேர்ந்தாய்வு, நுண்ணாய்வு; படித்தல், பார்வையிடல்.

peruse', *v.* கவனமாகப் படி, நுண்ணாய்வுசெய்.

Peru'vian, *n.* தென் அமெரிக்காவிலுள்ள பெரு (Peru) நாட்டினர்; *a.* பெரு நாடு சார்ந்த; (தொ.) Peruvian bark, கொய்னா மருந்துதரும் சிங்கோனா மரப்பட்டை.

pervade', *v.* ஊடுருவிப்பரவு, பரந்து தோய்வுறு; ஊடுருவி நிரப்பு; கரைந்து தெவிட்டுநிலை எய்துவி.

pervas'ive, *a.* படர்ந்து பரவுகிற, ஊடுபரவும் பாங்குள்ள, ஊடுருவி நிரம்பும் ஆற்றலுடைய.

perverse', *a.* விடாது பிழைசெய்கிற; வேண்டுமென்றே தவறுசெய்கிற, விபரீதமான; தேவைக்கு முரணான; கட்டு மீறிய; முறைதிறம்பிய; சொற்கேளாத; சிடுசிடுப்பான; குணக்கேடுடைய; நெறிகோணிய, தவறான போக்குடைய; கொடிய; ஏறுமாறான; தீர்ப்பு வகையில் சான்றுகளுக்கு முரண்பட்ட, நடுவர் காட்டிய நெறிக்கு மாறான.

perver'sion, *n.* நெறிபிறழ்வு; பிறழ்வுநிலை; நடைமுரண்பாட்டு விளைவு; உருத்திரிபு; ஏறுமாறான போக்கு; இயல்முரணிய பாலுணர்ச்சி; (கண.) கண்ணாடியில் நிழற்படிவம் உண்டாதல்; கண்ணாடி நிழற்படிவம்.

pervers'ity, *n.* முறைகேடு; முரணியல், வக்கரிப்பு, விபரீதப் பண்பு.

perversʹive, *a.* தகாவழிச் செல்கிற ; முரண்பாடான ; தலை கீழாய்ப் புரட்டுகிற.

pervʹert[1], *n.* இயல்முரணிய பாலுணர்ச்சியுள்ளவர்; கோணல் போக்குடையவர் ; கொள்கை மாறுட்டக்காரர் ; அறிவைத் தவருகப் பயன்படுத்துபவர்.

pervertʹ[2], *v.* தகாவழிப் பயன்படுத்து; இயல்மீறிய பொருள் கொள் ; சொற்களைத் தவருக வழங்கு ; சமயக்கோட்பாட்டு வகையில் உண்மை நெறியினின்றும் விலக்கி அழைத்துச் செல்.

pervʹious, *a.* ஊடுருவிப்பரவுதற்கு இடங்கொடுக்கிற ; வழி விடுகிற ; இணங்குகிற, ஒத்துப்போகிற.

Peshiʹto, Peshiʹtta, *n.* மேலை அரமிய மொழியில் விவிலிய நூலின் பெயர்ப்பு.

peshʹwa, *n.* (வர.) முற்கால மராட்டிய அரசின் முதலமைச்சர்; மராட்டிய பரம்பரைக் குறுமன்னர்.

peʹso, *n.* தென் அமெரிக்க குடியரசு நாடுகளில் வழங்கும் நான்கு ஷில்லிங்கு குத்தாய மதிப்புள்ள வெள்ளி நாணயம்.

pessʹary, *n.* (மரு.) கருப்பையினை நிலைபிறழாமல் தாங்குதற்காக அல்குல் வாயிலிற் பெண்கள் பொருத்திக்கொள்ளும் கருவி ; கருநிலைப்படுத்தும் குறிவாயுட் கரையும் மருந்து.

pessʹimism, *n.* சோர்வுவாதம், உலகில் எதுவுமே கெட்டது என்று கொள்ளும் கோட்பாடு ; சிணுங்கு மனப்பான்மை, எதிலுமே தீயசார்பு காணும் பாங்கு ; தோல்வி மனப் பான்மை ; கிளர்ச்சியின்மை, சோர்வு: அவா முறிவு.

pessʹimist, *n.* நம்பிக்கையற்றவர், தோல்வி மனப்பான் மையர், எதிலுந் தீயதையே காண்பவர் ; துன்ப இயற்கைக் கோட்பாட்டாளர்.

pest, *n.* தொல்லை கொடுப்பவர் ; அழிவுவேலை செய்பவர் ; அழிவுசெய்யும் உயிரினம் ; பீடை, தொற்றுநோய்.

pesʹter, *v.* தொந்தரவு செய், ஓயாது தொல்லை கொடு.

pestʹ-house, *n.* தொற்றுநோய் மருத்துவமனை.

pestifʹerous, *a.* கேடுதருகிற, அழிவுசெய்கிற ; அருவருப் பான ; கொள்ளைநோய் விளைக்கிற.

pesʹtilence, *n.* சாவு விளைக்கிற கொள்ளைநோய்; மாமாரி, ஈதி.

pesʹtilent, *a.* உயிருக்கு அழிவு செய்கிற, சாவு விளைவிக்கிற ; ஒழுக்கக்கேடான ; (பே-வ.) தொந்தரை செய்கிற.

pestilenʹtial, *a.* பெருவாரி நோயியல்பு வாய்ந்த ; கொள்ளைநோய் விளைக்கிற ; கொள்ளைநோயினுற் பீடிக்கப் பட்ட ; பேரழிவு செய்கிற, பெருவாரியாகத் தீங்கிழைக்கிற ; வெறுப்பூட்டுகிற; தொந்தரை செய்கிற.

peʹstle, *n.* கலுவக் குழவி ; உலக்கை ; *v.* கலுவத்தில் அரை.

pestolʹogy, *n.* பூச்சித்தொல்லை ஆய்வுநூல்.

pet[1], *n.* ஆசை விலங்கு ; ஆசைப்புள் ; அன்பு மகவு; தனிப் பற்றிற்குரியது, செல்லமாக வளர்க்கப்படுவது ; *v.* செல்ல மாக நடத்து, கொஞ்சிச் சீராட்டு ; (தொ.) pet aversion, மிகுவெறுப்புப் பொருள் ; pet name, செல்லப்பெயர்.

pet[2], *n.* கடுஞ்சினம், கடுகடுப்பு.

petʹal, *n.* பூவிதழ், அல்லி, மடல், தளம்.

petʹaline, *a.* பூவிதழுக்குரிய; பூவிதழ்போன்ற.

petʹalled, *a.* பூவிதழ்களையுடைய.

petʹaloid, *a.* பூவிதழின் தோற்றமுடைய.

petʹalon, *n.* யூதர் தலைமைக்குருவின் தலைப்பாகையிலுள்ள பொன்மடல்.

petardʹ, *n.* கதவுகள் முதலியவற்றைத் தகர்க்கப் பயன்பட்ட சிறு போர்ப் பொறிவகை ; சிறு வெடிகுண்டு ; வானவெடி, அதிர்வேட்டு.

petʹasus, *n.* பண்டைக் கிரேக்கர் தொப்பிவகை.

petaurʹist, *n.* பறப்பதுபோன்ற பாய்ச்சலுக்குதவும் சிறகுத் தோலுடைய பைம்மா வகை.

petʹ-cock, *n.* நீராவி முதலியவற்றை வெளிவிடுவதற்கான சிறு அடைப்புக் குமிழ்.

Petʹer[1], *n.* கிறித்தவ ஆண்பாற் பெயர்; இயேசுநாதரின் திரு மாணவருள் ஒருவர் ; (தொ.) blue Peter, கப்பல் புறப்படு முன் பறக்கவிடப்படும் வெண்சதுரம் தாங்கிய நீலக்கொடி ; Peter's fish, முதுகில் இருவிரல் அடையாளங்கள் போன்ற கோடுகளையுடைய மீன்வகை; rob Peter to pay Paul, கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடை ; Saint Peter, St. Peter, இயேசுநாதர் திருமாணவருள் ஒருவர்.

petʹer[2], *v.* தேய்ந்திறு, படிப்படியாக அழிந்து ஒன்றுமில்லாது போ.

Petʹer-penny, Petʹer's-penny, Petʹer's-pence, *n.* (வர.) போப்பாண்டவருக்கு விரும்பித் தரப்படும் பென்னி அளவு ஆண்டு வரித்தொகை.

petʹersham, *n.* முறுக்குப்பட்டு, நாடா; முற்காலத்தில் அணி யப்பட்ட கனமான மேலங்கி அல்லது காற்சட்டை ; கனத்த மேலங்கி அல்லது காற்சட்டை தைப்பதற்கான துணி.

petʹiolar, *a.* இலைக்காம்பு சார்ந்த ; இலைக்காம்பின் இயல் புடைய.

petʹiolate, petʹiolated, *a.* இலைக்காம்புடைய.

petʹiole, *n.* (தாவ.) இலைக்காம்பு.

petiʹtion, *n.* வேண்டுகோள், மனு, விண்ணப்பம் ; குறை யிரப்பு ; முறைமன்றத்திடம் எழுத்து மூலமான மன்றாட்டு ; *v.* வேண்டுகோள் விடு, விண்ணப்பஞ் செய்துகொள் ; மனுச் செய்.

petiʹtioner, *n.* மனுச்செய்பவர் ; திருமண விடுதலை கோரும் வழக்குகளில் வாதி ; (வர.) பிரிட்டனின் அரசர் இரண்டாம் சார்லஸ்ஸிடம் 1680-ஆம் ஆண்டில் பாராளுமன்றம் கூட்ட வேண்டுமென்று மனுச்செய்துகொண்ட கட்சிகளில் குறிப் பிட்ட ஒன்றினைச் சார்ந்தவர்.

petiʹtio princípʹii, (ல.) *n.* நச்சுச்சுழல்வாதம், வாதக் குழப்பம், மெய்ப்பிக்க வேண்டியதையே ஆதாரமாகக் கொண்டுவிடுதல்.

petit-maitre (பிர.) *n.* பகட்டன், பிலுக்கன், தற்பெருமைக் காரன்.

petit mal, (பிர.) *n.* கடுமையற்ற காக்காய்வலிப்பு நோய் வகை.

petits-chevaux, (பிர.) *n.* சூதாட்ட விளையாட்டு வகை.

petit souper, (பிர.) *n.* நெருங்கிய நண்பர் சிலருக்கு அளிக்கும் இரவு விருந்து.

petits soins, (பிர.) *n. pl.* சின்னஞ்சிறு துணையூழியங்கள்.

petit verre, (பிர.) *n.* குவளைநிறை மது.

petʹrel, *n.* கருமை வெண்மை நிறங்களும் நீண்ட இறகுகளும் உடைய சிறு கடற்பறவை வகை.

petrifacʹtion, *n.* கல்லாகுதல் ; கல்லாக மாறிய பொருள் ; கல்லாக மாறிய பொருளின் திரள் ; கல்வடிவாகக் கிடைத்த புதைபடிவம்.

petʹrify, *v.* கல்லாக்கு ; உணர்ச்சியறச்செய் ; வியப் பால் செயலறச்செய் ; அச்சத்தால் உணர்விழக்கச்செய் ; விறைத்துப்போகச் செய் ; கடினமாக்கு ; மனம்-கொள்கை வகையில் உயிர்ப்பு ஆற்றல் இழக்கச்செய்.

petʹroglyph, *n.* கற்பாறைச் செதுக்குவேலை.

petʹrograph, *n.* கற்பாறைச் செதுக்கெழுத்து, கல்வெட்டு.

petrogʹraphy, *n.* கற்பாறைகளின் அமைப்பு-உருவாக்கம் முதலியவற்றைப்பற்றிய இயலாய்வு விளக்கம்.

petʹrol, *n.* கல்லெண்ணெய், பொறிவண்டிகளுக்கும்-விமானம் முதலியவற்றிற்கும் பயன்படும் தூய்மையாக்கப்பட்ட நில எண்ணெய் ; தூய்மைப்படுத்திய பெட்ரோலியம்.

petrolʹeum, *n.* பாறை எண்ணெய், உள்வெப்பாலையிலும் பிற பொறிகளிலும் எரிபொருளாகப் பயன்படும் நிலமேற் படுகைக்குரிய தாது எண்ணெய்.

petroleur, (பிர·) *n.* பாறை எண்ணெயைப் பயன்படுத்தி எரித்தழிப்பவன்·

petroleuse, (பிர·) *n.* பாறை எண்ணெயைப் பயன்படுத்தி எரித்தழிப்பவள்.

petrol'ic, *a.* கல்லெண்ணெய் சார்ந்த; பாறை எண்ணெய்க்கு உரிய·

petrol'ogy, *n.* கல்லாய்வு நூல், கற்பாறைகளின் தோற்றம்-அமைப்பு முதலியவை பற்றிய நூல்·

pet'ronel, *n.* (வர·) பதினாறு-பதினேழாம் நூற்றாண்டுகளின் குதிரைவீரர்கள் பயன்படுத்திய பெரிய கைத்துப்பாக்கி வகை·

pet'rous, *a.* பாறையாலான; பாறை சார்ந்த; பாறைபோன்ற; (உள்·) பொட்டெலும்பில் மிகவுங் கடினமான பகுதி சார்ந்த.

pett'icoat, *n.* மகளிர் உட்பாவாடை, உள்ளங்கி; பெண்; மங்கை; (தொ.) petticoat government, பெண் ஆளுமை.

pett'icoats, *n. pl.* மகளிர் இல்லாண்மை; மகளிர்·

pett'ifog, *v.* சட்டத்துக்குட்பட்ட உருட்டுப்புரட்டுக்களைக் கையாளு; சட்ட நுணுக்கம் பார்த்துச் சொற்புரட்டுச் செய்; சிறு சொல் நுட்பங்களுக்காகச் சச்சரவிடு.

pett'ifogger, *n.* கீழ்த்தரமான வழக்குரைஞர்; கீழ்த்தர வழிகளைக் கையாளும் வழக்குரைஞர்; எந்தத் துறையிலும் மிகச் சிறுசெய்திகளுக்கும் கீழ்த்தரமான முறைகளைக் கையாளுபவர்·

pett'ish, *a.* சிடுசிடுப்பான, வெடுவெடுப்பான; எளிதிற் சினங்கொள்ளுகிற.

pett'itoes, *n. pl.* உணவுக்குப் பயன்படும் பன்றியின் கால்கள்.

pett'o, (இத்·) *n.* மறைவடக்கம், தனி இரகசியம்; (தொ.) *in petto*, தன் மனத்துக்குள், இரகசியமாக, பிறருக்குத் தெரியாமல்·

pett'y, *a.* மிகச்சிறிய; முக்கியமல்லாத; குறுகிய மனப்பான்மையுடைய; கீழ்த்தரமான; (தொ.) petty cash, சில்லறை வரவு செலவு இனம்; petty jury, சிறு திருட்டு முதலியவற்றின் முறைகாண் ஆயத்தினர்.

pet'ulant, *a.* எரிச்சல்கொள்ளுகிற, வெடுவெடுப்பான.

petun'ia, *n.* பெய்குழல் வடிவான ஊதா அல்லது வெண்ணிற மலர்களையுடைய செடிவகை; ஆழ்ந்த ஊதா நிறம்.

petun'tse, *n.* மங்குப்பாண்டங்கள் செய்யச் சீனாவிற் பயன்படுத்தப்படும் வெண்ணிற மண் வகை.

pew, *n.* கோயில் திண்ணை; திருக்கோயிலிற் குடும்பத்தினருக்கான சூழிருக்கை; திருக்கோயில் சூழிருக்கைத்தொகுதி; திருக்கோயிலிற் சாய்மானமுடைய நிலையான இருக்கை; (பே-வ.) இருக்கை; *v.* திருக்கோயிலிற் சூழிருக்கைகள் அமை; சூழிருக்கையாய் அடைப்பிடு.

pe'wit, *n.*=peewit.

pew'-rent *n.* திருக்கோயிற் சூழிருக்கை வாடகை·

pewt'er, *n.* வெள்ளீயமும் காரீயமுங் கலந்த சாம்பல்நிற உலோகக் கலவை; வெள்ளீயக் காரீயக் கலவைக் கலத்தொகுதி.

pfenn'ig, pfenn'ing, *n.* சிறு செர்மானிய செப்பு நாணயம், செர்மானிய வெள்ளி நாணயத்தில் நூறில் ஒரு பங்கு மதிப்புடைய காசு.

pha'eton, *n.* இரட்டைக் குதிரைத் திறப்பு வண்டி.

phagedaen'a, phageden'a, *n.* பரவும் குருதிக்கட்டிப் புண்.

phag'ocyte, *n.* நோயணுக்களை ஈர்த்துக்கொண்டு உடலை நோய்களினின்றுங் தடுக்கும் ஆற்றலுள்ள நிணநீரணு.

phal'ange, *n.*=phal'anx.

phalan'geal, *a.* (உள்.) கைவிரல்களின் அல்லது கால்விரல்களின் தனித்தனி எலும்பு சார்ந்த.

phalan'ger, *n.* பறக்கும் அணில் போன்ற மரங்களில் வாழும் ஆஸ்திரேலிய பைம்மா இனக் குடும்பம்.

phal'anstery, *n.* பூரியர் (Fourier) என்பவரால் நிறுவப்பட்ட 1800 பேர்களடங்கிய சமுதாயப் பொதுவாழ்வு முறைக்குழு; சமுதாயப் பொதுவாழ்வுமுறைக் குழுவிற்குரிய கட்டிடம்.

phal'anx, *n.* (வர.) கிரேக்கரிடையே மாசிடோனியரின் செறிவுமிக்க காலாட்படையணி; பொதுவாழ்வு முறைக்குழு; பூரியர் (Fourier) என்பவரால் நிறுவப்பட்ட 1800 பேரடங்கிய பொதுவாழ்வு முறைக் குழாம்; (உள்.) கைகால் விரல்களின் தனி எலும்பு; பூவிழைக்கொத்து; *pl.* phal'anges, phal'anxes.

phal'arope, *n.* நீரினுள் நடக்கவும் நீந்தவும் வல்ல சிறு பறவை வகை.

phall'us, *n.* இலிங்கவுரு, படைப்பாற்றல் சின்னமாக வழிபடப்படும் குறிவடிவம்.

phana'riot, *n.* கான்ஸ்டாண்டிநோபிள் நகரில் பனார் (Phanar) பகுதியில் வாழ்ந்த கிரேக்கருள் ஒருவர்; துருக்கியரின் கீழ்ப் பணிபுரிந்த கிரேக்க பணியாளர் வகுப்பினரில் ஒருவர்.

phan'erogam, *n.* (தாவ.) ஆண்பெண் கூறுகளையுடைய மலர்ச்செடிவகை.

phan'sigar, (இ·) *n.* கொள்ளைக் கூட்டத்தினர்.

phan'tasm, *n.* கற்பனைக்காட்சி, உருவெளித்தோற்றம்; (உள.) புனைவுருத்தோற்றம்; ஆவியுருக்காட்சி.

phantasmagor'ia, *n.* லண்டனில் 1802-ஆம் ஆண்டில் காட்டப்பட்ட மாயத்தோற்றங்களின் பொருட்காட்சி; பல்வண்ணப் புனைவுருக்காட்சி; பல்வண்ண மெய்ந்நிலைச் சூழற்காட்சி.

phan'tasy, *n.* கற்பனையுருவினைப் படைக்கும் ஆற்றல்; மனக்கண் தோற்றம்.

phan'tom, *n.* மாயம், பொய்த்தோற்றம்; ஆவியுரு, பேயுருத்தோற்றம்; புனைவுருத்தோற்றம்; உள்ளீடற்ற உருத்தோற்றம்; இல்பொருள் தோற்றம், பொருண்மையற்ற போலியுரு; போலித்தோற்றம்.

Phar'aoh, *n.* பண்டைய எகிப்திய அரசர்களின் பொதுப் பட்டப்பெயர்; (தொ.) Pharaoh's serpent, உருகுநிலையில் பாம்பு வடிவில் வளைந்துவளைந்து செல்லும் விளையாட்டு வேதிப்பொருள்.

Pha'risee, *n.* கடுமையான ஆசாரங்களையும் மரபுச்சடங்குகளையும் எழுத்தியலான சட்டங்களையும் கடைப்பிடிக்கும் யூத வகுப்பினர்; ஆசாரக்கள்ளர், போலிப் புற ஆசாரக்காரர்; மரபொழுங்கு சார்ந்த ஆசாரக்கண்டிப்பாளர், போலிப் பகட்டர், பாசாங்குக்காரர்.

pharmaceut'ical, *a.* மருந்து ஆக்கத்தொழிலுக்குரிய; மருந்து வழங்கீடு விற்பனை சார்ந்த.

pharmaceu'tics, *n.* மருந்தாக்க இயல்.

pharm'acist, *n.* மருந்துக்கடைக்காரர்; மருந்தாக்கக் கலைஞர்.

pharmacol'ogy, *n.* மருத்துப் பொருளியல்.

pharmacopoe'ia, *n.* வாகட நூல், மருத்துப்பொருள் தொகுதி.

pharm'acy, *n.* மருந்தகம்; மருந்துக்கடை; மருந்தாக்கக்கலை.

phar'os, *n.* கலங்கரை விளக்கம்; கரைவிளக்கப் பந்தம்.

pharyng'ocele, *n.* அடித்தொண்டை அழற்சி, முன் தொண்டை அடிப்புற அழற்சி.

pharyng'otomy, *n.* தொண்டையழற்சி அறுவை.

phase, *n.* திங்களின் கலை, மதிவட்டத்தின் ஒளிவிளக்கக்கூறு; கோள் ஒளிக்கலை; மாறுபாட்டுப் படி; வளர்ச்சிப் படி; (இய.) மாறுபாட்டலை இயக்கத்தின் அலையிடைப் படி; (இய.) மாற்று மின்னோட்ட இயக்கப் படிநிலை; பொருளின் நிலை மாறுதல்; இடைப் படி; தோற்ற வேறுபாடு; பண்பு வேறுபாடு.

phea'sant, *n.* நெடுவால் பகட்டு வண்ணக் கோழிவகை.

phena'cetin, *n.* காய்ச்சல் தடுக்கும் மருந்து.

phen'ix, *n.* இறந்தெழும் பறவை; பெறலரும் பொருள்.

phen'ol, *n.* கரியகக் காடி.

phenol'ogy, *n.* உயிரிகள் ஆய்வியல்.

phenom'enal, *a.* குறிப்பிடத்தக்க; வியப்புக்குரிய; தனிச் சிறப்புக்குரிய; புலன்களால் உணரத்தக்க; தெரிந்துகொள்ளக் கூடிய.

phenom'enalism, phenom'enism, *n.* அறிவின் அடிப் படை நிகழ்ச்சியுணர்வுகள் மட்டுமே என்ற கோட்பாடு.

phenom'enon, *n.* இயற்காட்சி, இயல்நிகழ்ச்சி, காரண காரியத்தொடர்பு ஆய்ந்து காணப்படாச் செய்தி; புலன் குறித்த செய்தி; மனங் குறித்துக் கண்ட செய்தி; ஆராய்ச்சிக் குரிய செய்தி; குறிப்பிடத்தக்க ஒன்று; குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி; குறிப்பிடத்தக்க ஆள்; *pl.* phenom'ena.

phen'yl, *n.* கரியகக்காடியிலுள்ள அடிக்கூற்றுக் கரியக நெய்மம்.

phew, *int.* வியப்புக்குறி; வெறுப்புக்குறி; பொறுதியின்மைக் குறிப்பொலி.

phial, *n.* சிறுபுட்டி, சிறு கண்ணாடிக்குப்பி.

philan'der, *n.* காதலன்; பெண்பித்தன்; காதற்பரத்தன்; *v.* காதல்கொண்டு திரி; மகளிர் பின்னர் அலை.

phil'anthrope, *n.* = philanthropist.

philanthrop'ic, *a.* மனிதவினத்தை நேசிக்கும் பண்புள்ள; இரக்கமுள்ள; கொடைக்குணமுள்ள.

philan'thropist, *n.* மனிதவினப் பற்றுளர்; பிறர் நலனுக்கு உழைப்பவர்; கொடையாளி, இரக்கமுள்ள நன்கொடையாளர்.

philan'thropize, *v.* இரக்கங் காட்டு; கொடையாளியாயிரு, பிறருக்கு உதவி செய்.

philan'thropy, *n.* மனிதவின நேயம்; அருட்பண்பு; கொடையாண்மை; சமுதாயத்தொண்டு.

philat'elist, *n.* அஞ்சல்தலைச் சேர்ப்பர்.

philat'ely, *n.* அஞ்சல் தலைத் திரட்டு; அஞ்சல் தலை ஆய்வு.

philharmon'ic, *n.* இசையார்வமிக்கவர்; *a.* இசைவிருப்பு மிக்க.

phil'hellene, *n.* கிரேக்கர்களிடம் நட்போடும் அன்போடும் பழகுபவர்; கிரேக்க நாட்டு விடுதலை ஆதரவாளர்; *a.* கிரேக்கரிடம் நட்பார்வம் மிக்க; கிரேக்க நாட்டு விடுதலைக்கு ஆதரவான.

Philipp'i, *n.* கி. மு. 43-இல் நடைபெற்ற பெரும்போர்; (தொ.) thou shall see me at Philippi, meet at Philippi, பழிவாங்குவதாக அச்சுறுத்தும் சொற்றொடர்கள்.

philipp'ics, *n. pl.* மாசிடோனைச் (Macedon) சேர்ந்த பிலிப்பிற்கு (Philip) எதிராக டெமாஸ்தனிஸ் (Demosthenes) என்ற பண்டைக் கிரேக்க சொற்பொழிவாளர் செய்த சொற்பொழிவுகள்; அந்தோணிக்கு மாறாகச் சிசரோ செய்த ஆவேசச் சொற்பொழிவுகள்; கடுமையான வசைமாரி, திட்டு.

philippi'na, philippine, *n.* ஒருவகைத் தின்றிகொட்டை; கொட்டைப்பருப்பு பகிர்ந்தூண் விளையாட்டுமரபு.

Phil'istine, *n.* பிலிஸ்தியர்கள், இஸ்ரவேலர்களைத் துன்புறுத்திய போர் விருப்பமுள்ள மக்களினம்; கைப்பற்றித் துன்புறுத்தும் எதிரி; அமீனா; இலக்கியக் கருத்துரையாளர்; வெளியார், செர்மானிய பல்கலைக்கழக வழக்கில் மாணவரல்லாதவர்; பண்பற்றவர்; உயர்நாட்டமற்றவர்; உலகியல் நாட்டமுடையவர்; *a.* பண்பற்ற, நாகரிகமற்ற; உயர்நாட்டமற்ற, உலகியற் பற்றுடைய.

philobib'lic, *a.* புத்தக விருப்புடைய, நூலார்வமுடைய.

philogy'nist, *n.* பெண் விருப்பர்.

philol'oger, *n.* = philologist.

philolo'gian, *n.* = philologist.

philolo'gical, *a.* மொழிநூல் சார்ந்த; கலையிலக்கிய ஆர்வஞ் சார்ந்த.

philol'ogist, *n.* மொழிநூல் வல்லார்; கலையிலக்கிய ஆர்வலர்.

philol'ogy, *n.* மொழிநூல்; கலை இலக்கியப் பற்றார்வம்.

phil'omath, *n.* கல்வியார்வலர்.

Phil'omel, Philomel'a, *n.* (செய்.) இராக்குயில், இரவிற் பாடும் பறவை வகை.

Philopen'a, philopoen'a, *n.* = philippina.

philoprogen'itive, *a.* பிள்ளைக்கனி ஆர்வமுடைய.

philos'opher, *n.* மெய்ந்நூல் அறிஞர், தத்துவஞானி; மெய்யுணர்வுப் பற்றார்வலர்; மெய்விளக்க இயல் ஆய்வாளர்; அறிவாராய்ச்சிச் சிந்தனையாளர்; மெய்யுணர்வுக் கோட்பாட்டுக்கேற்ப வாழ்க்கை நடத்துபவர்; உள்ள நடுநிலையாளர், எவ்வகை இடர்களிலும் சிக்கல்களிலும் உலைவிலா அமைதியுடையவர்; (தொ.) moral philosopher, ஒழுக்கச் சிந்தனையாளர்; natural philosopher, இயற்கைத் தத்துவ அறிஞர்; philosopher's stone, சித்துமணிக்கல், பிற உலோகங்களைப் பொன்னாகவோ வெள்ளியாகவோ மாற்றும் இயல்புடையதாகக் கருதப்படும் மணி.

philosoph'ic, philosoph'ical, *a.* மெய்யுணர்வு இயல் சார்ந்த, தத்துவ ஞானத்துக்குரிய, மெய்யுணர்வியலிற் பற்றுடைய; தத்துவ அறிவுத்திறம் சான்ற; மெய்யுணர்வார்ந்த; இடரிடை உலையா அறிவமைதியுடைய; தன்னடக்க அமைதி வாய்ந்த.

philos'ophism, *n.* மெய்யுணர்வுப் பாவனை; மெய்யுணர்வு வித்து; பிரஞ்சு அறிவுக்களஞ்சியத்தார் மெய்விளக்கமுறை.

philos'ophize, *v.* மெய்யுணர்வு இயலாளராகச் செயலாற்று; தத்துவ ஆராய்ச்சி செய், கொள்கை ஆய்வு செய்; தத்துவம் பேசு; கொள்கை ஆய்விலாழ்ந்துவிடு, நன்மைதீமை ஆழ்ந்தாராய்; தத்துவப் போக்காக்கு, மெய்யுணர்வு இயலாளராக்கு; சமநிலைப்படுத்து, அறிவமைதிப்பண்பூட்டு.

philos'ophy, *n.* அறிவார்வம்; மூல முதற்காரணம் பற்றிய சிந்தனை; பொருள்களின் பொதுமூலக் கோட்பாட்டாராய்வு; தத்துவம்; தனித்துறை அடிப்படைக் கோட்பாட்டாராய்ச்சி; மனவமைதி; பகுத்தறிவுச்சிந்தனை; வாழ்க்கைக்கோட்பாடு; வாழ்க்கை நடைமுறைத்திட்டம்; மெய்விளக்கியல்; மெய்யுணர்வுக் கோட்பாட்டுத்துறை; மெய்யுணர்வுநூல்; ஆழ்ந்த அறிவமைதி, நடுநிலையமைதி; (தொ.) moral philosophy, ஒழுக்கச்சிந்தனை; ஒழுக்கக் கோட்பாடு பற்றிய ஆராய்ச்சி; ஒழுக்க ஆய்வியல்துறை; natural philosophy, இயற்கைப் பொருளாராய்ச்சி.

philotech'nic, *a.* தொழிற்கலையார்வமுடைய, கலைநுணுக்க ஆர்வஞ் சார்ந்த.

phil'ter, phil'tre, *n.* வசியமருந்து, காதலைத் தூண்டும் மருந்து.

phiz, *n.* (பே-வ.) முகம்; முகத்தோற்றம்.

phlebit'is, *n.* குருதி நாளத்தின் புறத்தோல் வீக்கம்.

phleb'olite, phleb'olith, *n.* குருதிநாளங்களில் ஏற்படும் சுண்ணப்படிவுக் கோளாறு.

phlebot'omize, *v.* குருதிவடிக்கும் மருத்துவமுறையைக் கையாளு; குருதி வடிப்புச்செய்.

phlebot'omy, *n.* முற்காலக் குருதிவடிப்பு மருத்துவமுறை, மருத்துவமுறைக் குருதிவடிப்பு.

phlegm, *n.* சளி, கோழை, கபம்; குளிர்ச்சி, சோம்பேறித் தனம்; உணர்ச்சியற்ற தன்மை.

phleg'magogue, *n.* கபம் வெளிப்படுத்தும் மருந்து.

phlegmat'ic, *a.* கபம் உண்டுபண்ணுகிற; கோழை நிரம்பிய; தணுப்பு மிக்க; மடிமையார்ந்த; எளிதிற் செயற்படாத.

phleg'mon, *n.* அழற்சிக் கட்டி, பரு.

phlo'em, *n.* (தாவ.) மென்மரம் சூழ்பகுதி, வளரும் மரப்பகுதியும் அதனுடன் இணைந்த இழைமங்களும் சேர்ந்த தொகுதி.

phlogis'tic, *a.* தனிமமாக முன்பு கருதப்பட்ட எரிபொருட்களின் எரிப்பாற்றல் சார்ந்த; (மரு.) அழற்சியுடைய.

phlogis'ton, *n.* தனிமமாக முன் கருதப்பட்ட எரிபொருள்களின் எரிப்பாற்றல்.

phloriz'in, *n.* மரவகைகளின் கசப்பு வேர்ப்பட்டை; மர வேர்ப்பட்டைகளிலிருந்து எடுக்கப்படுங் கசப்புச்சத்து.

phlox, *n.* தென் அமெரிக்க மலர்க்கொத்துச் செடியினம்.

phob'ia, *n.* அச்சக்கோளாறு; வெறுப்புக்கோளாறு.

Phoeb'e, *n.* திங்களங்கடவுள்.

Phoeb'us, *n.* கிரேக்க புராண மரபில் செங்கதிர்க்கடவுள்; அப்பலோ (Apollo); (செய்.) கதிரவன்.

Phoenici'an, *n.* பினீசியாவில் வாழ்பவர்; பினீசியாவின் மொழி; *a.* பினீசியாவைச் சார்ந்த; பினீசியரின் மொழி சார்ந்த.

phoen'ix, *n.* இறந்தெழும் பறவை, கிரேக்க புராணமரபுப்படி பல நூற்றாண்டுகள் வாழ்ந்து தன்னை எரித்த சாம்பரிலிருந்து மீண்டும் புத்துயிர் பெறுவதாகக் கருதப்பட்ட பாலைவனப் பறவை வகை; பெறலரும் பொருள்.

phon, *n.* (இய.) ஒலியுர அளவை.

phon'ate, *v.* மிடற்றொலி செய், குரலொலி எழுப்பு.

phonaut'ograph, *n.* ஒலியலைப்பதிவுக் கருவி.

phone[1], *n.* (பே-வ.) தொலைபேசி; *v.* தொலைபேசி மூலம் பேசு.

phone[2], *n.* அடிப்படைப் பேச்சொலி.

phon'eme, *n.* ஒலியம்.

phonem'ics, *n.* ஒலியவியல்.

phonen'doscope, *n.* உள்ளொலி பெருக்கி, மனித உடலிலுள்ள சிறு ஒலிகளையும் தெளிவாகக் கேட்பதற்கு வகை செய்யுங் கருவி.

phonet'ic, *a.* குரலொலிக்குரிய; குரலொலிபற்றிய; ஒலிப்புமுறை சார்ந்த; நிலையான மதிப்புடைய குரலொலிச் சின்னமான.

phonetici'an, *n.* ஒலியியல் வல்லுநர்.

phonet'icist, *n.* ஒலிமுறை எழுத்தார்வலர்.

phonet'ics, *n. pl.* ஒலியியல்.

phon'etist, *n.* ஒலியியல் வல்லுநர்; ஒலிமுறை எழுத்து வடிவ ஆதரவாளர்; ஒலிமுறை எழுத்துருவைப் பயன்படுத்துபவர்.

phon'ogram, *n.* ஒலியமை வடிவம்; ஒலிக்கருவியிற் செய்யப்பட்ட பதிவு.

phon'ograph, *n.* ஒலிகொள்வடிவம், நீளுருளைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பழைய ஒலிப்பதிவுமுறை இசைப்பெட்டி; இசைப்பெட்டி; *v.* ஒலிப்பதிவுசெய்; பதிவுசெய்ததைத் திரும்ப ஒலிக்கச்செய்.

phonog'raphy, *n.* பிட்மன் (Pitman) என்பாரின் ஒலிமுறைச் சுருக்கெழுத்து; ஒலிகளைப் பதிவுசெய்யும் கருவி கொண்டு தானே ஒலிப்பதிவு செய்யுங்கருவி; இசைப்பதிவுப் பெட்டியைப் பயன்படுத்தி ஒலிப்பதிவுசெய்யுங் கருவி.

phon'olite, *n.* தட்டினுல் ஒலிசெய்யும் எரிமலைப் பாறை வகை.

phonol'ogy, *n.* ஒலியியல்; ஒலிவரலாற்று ஆய்வு.

phonom'eter, *n.* ஒலியலைமானி.

phon'ophore, phon'opore, *n.* தொலைபேசிச் செய்திகளை தந்திச்செய்திகளுக்குக் குந்தகமில்லாமலே தந்திக்கம்பிவழிச் செலுத்துங் கருவி.

phon'oscope, *n.* இசை நரம்புகளைத் தேர்ந்தாய்வு செய்வதற்கான கருவி; ஒலியதிர்வு காட்டி, ஒலியலைகளைக் கண்ணுக்குப் புலப்படும் வடிவிற் காட்டுங் கருவி.

phon'otype, *n.* ஒலிமுறை அச்செழுத்து.

phorm'ium, *n.* நார்ப்பொருளாகப் பயன்படும் வெங்காயக் குடும்பச் செடியினம்; நியூசிலாந்து நாட்டுச் சணற் செடி வகை.

phos'gene, *n.* 1914-18 போரில் பயனபடுத்தப்பட்ட நச்சுவளி வகை.

phos'phate, *n.* எரியகி, எரியகிக்காடியின் உப்புக்களில் ஒன்று; சுண்ண எரியகி-இரும்பு எரியகி-அலுமினிய எரியகி ஆகியவற்றுள் ஒன்று.

phos'phates, *n. pl.* எரியகிக்காடியின் மூன்று உப்புக்களில் ஒன்று.

phosphat'ic, *a.* எரியகியின் இயல்பு வாய்ந்த; எரியகி அடங்கியுள்ள.

phos'phene, *n.* (உட.) விழித்திரையில் எரிச்சல் உண்டாகிக் கண்விழி அழுத்தப்படுவது காரணமாகத் தோன்றும் ஒளி வளையங்கள்.

phos'phide, *n.* (வேதி.) எரியகை, எரியமும் வேறு தனிமமுஞ் சேர்ந்த கூட்டு.

phos'phite, *n.* (வேதி.) எரியகி, எரியகக்காடியின் உப்பு.

phos'phorate, *v.* எரியத்தோடு சேர்; எரியஞ் செறிவி.

phos'phor-bronze, *n.* தேயாப் பரல்மணி, சிறிது எரியங் கலந்து உறுதியாக்கப்பட்ட வெண்கலக் கலவை.

phosphoresce', *v.* எரிவழிவில்லாமலேயே சுடர்விடு; எரியத்தைப்போல் மிகு குறை எரிவழிவுடன் இருளில் ஒளிவீசு.

phosphores'cence, *n.* இருளில் ஒளி, ஒளி மினுக்கம்.

phosphores'cent, *a.* சுடர்விடுகிற, ஒளிமினுங்குகிற.

phospho'ric, *a.* எரியஞ் சார்ந்த; எரியம் போன்ற; சுடர்விடுகிற; (வேதி.) எரியம் உயரிணைதிறனுக் அடங்கியுள்ள; (தொ.) phosphoric acid, எரியக்காடி; phosphoric anhydride, எரிய இன்னீரகை.

phos'phorism, *n.* (மரு.) எரிய நச்சூட்டு.

phos'phorite, *n.* மணியுரு அல்லாத சுண்ண எரியகியின் வகை.

phosphorogen'ic, *a.* (இய.) இருளில் ஒளிவீசச் செய்கிற.

phos'phorograph, *n.* (இய.) சுடர்பரப்பின்மேல் தோன்றும் நிலையற்ற உருவம்.

phosphorog'raphy, *n.* சுடர்பரப்பின்மேல் நிலையற்ற உருவங்கள் தோன்றச் செய்யுங் கலை.

phos'phoroscope, *n.* இருளில் ஒளி நீடித்திருப்பதை அளப்பதற்கான அமைவு; பன்னிற ஒளிகளுடன் ஒளிரும் வெவ்வேறு சுடர்ப்பொருள்களைக் கொண்ட விளையாட்டுப் பொம்மை.

phos'phorous, *a.* சுடர்விடுகிற; (வேதி.) எரியம் சிறு திறனுக அடங்கியுள்ள; (தொ.) phosphorous acid, எரியகக்காடி; phosphorous anhydride, எரியக இன்னீரகை.

phos'phorus, *n.* எரியம்; (தொ.) phosphorus necrosis, தீக்குச்சி செய்யும் தொழிலில் எரிய ஆவி வெளிப்படுவதனுல் தொழிலாளர்களின் தாடையெலும்பின் சீரழிவுக்கோளாறு.

phos'phureted, phos'phuretted, *a.* வேதியியல் முறையில் எரியத்தோடு சேர்க்கப்பட்ட.

phoss'y-jaw, *n.* தீக்குச்சித் தொழிலாளர்களிடையே எரிய ஆவி காரணமான தாடையெலும்பின் சீரழிவுக்கோளாறு.

phot'ism, *n.* உணர்ச்சி காரணமான ஒலித்தோற்றம்.

phot'o, *n.*, *v.* = photograph.

phot'ochromy, *n.* வண்ண நிழற்படக் கலை.

photo-fin'ish, *n.* பந்தயத்தில் இன்ன குதிரை வெற்றியடைந்ததென்பதை நடுவர் தீர்மானிக்கும் பொருட்டுப் பந்தயத்தின் கடைசித் தசையில் மிகநெருக்கமாக எடுக்கப்பட்ட நிழற்படம்; பந்தயத்தின் இறுதிக்கட்ட நெருக்கடி.

pho'togen, *n.* மெழுகெண்ணெய் வகை; ஒளியுற்பத்தி உறுப்பு.

photogen'ic, *a.* ஒளியுண்டாக்குகிற; சுடர்விடுகிற; நிழற்படம் எடுக்கத்தக்க.

phot'oglyph, phot'oglyphy, *n.* நிழற்படச் செதுக்குக் கலை.

phot'ograph, *n.* நிழற்படம்; *v.* நிழற்படம் எடு; நிழற்பட உருவொப்புமை எடு; நிழற்படவெடுப்பிற் செயற்படு.

photog'rapher, photog'raphist, *n.* நிழற்படக்கலைஞர்; நிழற்படத்தொழிலர்; நிழற்பட வல்லுநர்.

photog'raphy, *n.* நிழற்படக் கலை.

photogravure', *n.* நிழற்பட மறிபடிவத் தகட்டுச்செதுக்குரு; *v.* நிழற்பட மறிபடிவத்தை உலோகத்தகட்டில் பதியவைத்துச் செதுக்குவது மூலமாக ஒப்புருவம் எடு.

photom'eter, *n.* ஒளிச்செறிவு மானி.
photom'etry, *n.* ஒளிச்செறிவளவை.
photomic'rograph, *n.* உருப்பெருக்காடியினுல் விரிவாக்கப்பட்ட பொருளின் நிழற்படம்.
photophob'ia, *n.* ஒளிவெறுப்பு, கண்கூச்சம்.
phot'ophone, *n.* ஒலிகளை ஒளிமூலமாகக் கடத்தும் அமைவு.
phot'osphere, *n.* ஞாயிறு-விண்மீன் முதலிய வான்கோளங்களைச் சூழ்ந்துள்ள ஒளிக்கோசம்.
Phot'ostat, *n.* படவுருப் படிவமைவு, ஆவணங்கள்-வரிவடிவங்கள் முதலியவற்றின் படியுருவங்களை எடுப்பதற்கான நிழற்பட அமைவு; படவுருப்படிவம், நிழற்பட அமைவினுல் எடுக்கப்பட்ட ஆவணங்கள் முதலியவற்றின் நேர்படியுருவம்.
photosyn'thesis, *n.* (தாவ.) ஒளி இயைபாக்கம்.
phototeleg'raphy, *n.* தந்திப்பட அனுப்பீட்டமைவு.
pho'totype, *n.* ஒளிப்படத் தகட்டச்சு; நிழற்படத் தகட்டச்சு முறைப்படம்.
photozincog'raphy, *n.* நிழற்பட முறையில் துத்தநாகத் தகட்டில் உருவச்சுக்குங் கலை.
phrase, *n.* சொற்றொடர், தொடர் மொழி; சொல் தொடுப்பு; மரபுவழிச் சொற்றொடர்; ஒருசொல் நீர்மைத்தொடர்; திட்ப நுட்பமான சிறு தொடர்; (இசை.) பெரிய பாடலின் கூருகிய சிறு துணுக்கு; *v.* சொற்கள் வாயிலாக வெளிப்படுத்து.
phrase'-monger, *n.* இன்சொற்றொடர் ஆர்வலர்.
phras'eogram, *n.* சுருக்கெழுத்தில் சொற்றொடரைக் குறிக்குங் குறியீடு.
phras'eograph, *n.* சுருக்கெழுத்தில் தனிக்குறியீடுடைய சொற்றொடர்.
phraseol'ogy, *n.* சொல்நடை.
phra'ses, *n. pl.* உள்ளீடில்லாத வெறுஞ்சொற்றொடர்கள்.
phrat'ry, *n.* (வர.) கிரேக்கரிடையே குலத்தின் கிளையான குருதியினப் பிரிவு; பண்டைய இனங்களின் குலமுறைப் பிரிவு.
phrenet'ic, *a.* வெறிபிடித்த, மூர்க்கமான; விடாப்பிடி வெறிகொண்ட.
phren'ic, *a.* (உள்.) உந்து தசையினுடைய; வயிற்று விதானஞ் சார்ந்த.
phrenol'ogy, *n.* மண்டையோட்டு அமைப்பு ஆய்வியல், பல்வேறு உளத்திறங்களுக்குரிய உறுப்புக்களின் வளர்ச்சியையும் நிலையையும் மண்டையோட்டின் வெளியமைப்பு மூலமே துணிய முயலும் ஆய்வுத்துறை நூல்.
phren'sy, *n.* ஞானவெறி, தெய்வமேறிய ஆவேசம், திப்பியம்; பேய்கொண்ட நிலை.
phron'tistery, *n.* எண்ணிப் பார்ப்பதற்கான இடம்.
Phry'gian, *a.* பண்டைய சிறிய ஆசியாவில் (Asia Minor) உள்ள பிரிஜியா சார்ந்த; (தொ.) Phrygian cap, உச்சிப் பகுதி முன்னுல் வளைந்துள்ள கூம்புவடிவக் குல்லாய்; Phrygian mode, (இசை.) போர்த்திறத்திலமைந்த பண்டைய கிரேக்க இசைப்பாணி.
phthis'ical, *a.* ஈளை சார்ந்த; காச நோயுடைய.
phthis'is, *n.* ஈளை, காச நோய்.
phut, *n.* கொப்புளம் அல்லது மெல்லிய தோற்பையின் வெடிப்பொலி; துப்பாக்கிக்குண்டு பாயும் ஒலி; *adv.* 'பட்' டென்று; (தொ.) go phut, தகர், இடிந்து விழு; திட்டம் முதலியவற்றின் வகையிற் பாழ்படு.
phylac'tery, *n.* யூதர்கள் அணியும் மறைவாசகங்கள் அடங்கிய சிறு தோற்பேழை; பகட்டாரவாரச் சமய வினைமுறை; தாயத்து; (தொ.) make broad one's phylacteries, நேர்மை கடைப்பிடிப்பதாகப் பகட்டிக்கொள்.
phylet'ic, *a.* (உயி.) இனக்குழு சார்ந்த.
phylloph'agan, *n.* தழையுண்ணி, இலைகளைத் தின்றுவாழும் விலங்கு.
phylloph'agous, *a.* தழையுண்ணியான, இலைகளைத் தின்று வாழ்கிற.
phyll'opod, *n.* தழைக்காலி, இலைபோன்ற கால்களையுடைய நத்தையின உயிர்; *a.* இலைபோன்ற கால்களையுடைய.
phyll'ostome, *n.* தழைமூஞ்சி வாவல், இலைபோன்ற மூக்கினையுடைய வௌவால்.
phyllotax'is, *n.* இலையடுக்கு முறை.
phylloxer'a, *n.* செடிப்பேன் இனம், கொடிமுந்திரிச்செடியை அழிக்கும் பூச்சிவகை.
phylogen'esis, phylog'eny, *n.* விலங்கு அல்லது செடி வகையின் இனவளர்ச்சி; விலங்கு அல்லது செடிவகையின் இனவரலாறு.
phyl'um, *n.* (உயி.) விலங்கு அல்லது செடிவகையின் இனப் பெரும்பிரிவு; *pl.* phyl'a.
phys'ic, *n.* நோய்தீர்க்குங் கலை, பண்டுவம்; மருத்துவத் தொழில்; (பே-வ.) மருந்து; *v.* மருந்துகொடு; (தொ.) physic garden, நூலுக்கு விளக்கந்தரும் வகையில் வைத்துப் பேணப்படும் தோட்டம்.
phys'ical, *a.* இயற்பொருள் சார்ந்த, சடப்பொருள் தொடர்பான; இயற்பியல் சார்ந்த, இயற்பியல் விதிகளுக்கிணங்கிய; உடல் சார்ந்த; (தொ.) physical astronomy, வான் கோளங்களின் இயற்பியல் நிலையையும் வேதியியல் நிலையையும் பற்றிய ஆய்வுநூல்; physical chemistry, இயற்பியல் வேதிநூல், வேதியியல் பண்புசார்ந்த இயற்பியல் கூறுகளையும் வேதியியல் இயைபுகளோடு உடனுக ஏற்படும் இயற்பியல் மாற்றங்களையும் ஆயும் நூல்துறை; physical force, உடம்பின்மீதான வலுவந்தத் தாக்கு; physical geography, இயற்கையமைப்புக்களைப்பற்றிக் கூறும் நிலவியல்.
physi'cian, *n.* மருத்துவர்; மருத்துவத்திலும் அறுவையிலும் சட்டப்படித் தகுதி பெற்றவர்; நோய்தீர்ப்பவர்; கோளாறு அகற்றுபவர், தீங்கு நீக்குபவர்.
phys'icism, *n.* இயற்பொருட் கோட்பாடு, வெறும் இயற்பொருள்களே அல்லது சடப்பொருள்களே உண்மையானவை என்னுங் கோட்பாடு.
phys'icist, *n.* இயற்பியல் ஆய்வுத்துறை மாணவர்; இயல்நூல் மாணவர்; உயிரின் இயற்பொருள் தோற்றக் கோட்பாட்டாளர்.
phys'icky, *a.* மருந்துபோன்ற; மருந்தினை நினைவூட்டுகிற.
phys'ics, *n. pl.* இயற்பியல், இயற்பொருள் ஆற்றல் ஆகியவற்றின் இயல்புகளைப்பற்றி ஆயும் நூல்துறை.
physioc'racy, *n.* இயலாட்சி, இயற்கை முறைக்கு ஒத்த அரசு.
phys'iocrat, *n.* இயலாட்சி ஆதரவாளர், இயற்கை முறைக்கு ஏற்றதான அரசாட்சி வேண்டுமென்பவர்.
physio'geny, *n.* உயிரியக்கச் செயற்பாடுகளின் தோற்ற வளர்ச்சி வரலாறு.
physiogn'omy, *n.* உறுப்பமைதி இயல், சாமுத்திரிகம், முகத்தோற்றங்களிலிருந்து அல்லது உடலமைப்பிலிருந்து ஒருவர் குணத்தையறியுங் கலை; உறுப்புக்களின் அமைதி; முக அமைப்பு; (பே-வ.) முகம்; நாடு முதலியவற்றின் புறவியல்புகள்; சிறப்புக் கூறு; முனைந்த சிறப்புப்பண்பு.
physiog'raphy, *n.* இயற்கையமைப்பின் விளக்கம்; இயற்கைத் தோற்றங்களின் வருணனை; பொருட்டொகுதிகளின் விவரக் குறிப்பு; இயற்கையமைப்புக்களைப்பற்றிக் கூறும் நிலவியல்.
physiol'atry, *n.* இயற்கை வழிபாடு.
physiol'ogy, *n.* உடல்நூல், விலங்குகளும் தாவரங்களும் உள்ளிட்ட உயிரினங்களின் இயற்கைச் செயற்பாடுகளையும் தோற்றங்களையும்பற்றிக் கூறும் நூல்.

physiothe'rapist, n. இயன் மருத்துவர்; மின் மருத்துவர்; பிடித்துவிடுதல் முதலிய இயற்கைமுறைகளால் நோய் தீர்க்கும் மருத்துவர்.

physiothe'rapy, n. இயன் மருத்துவம், உடம்பு பிடித்து விடுதல்-தூயகாற்று-மின்சாரம் போன்ற இயற்கை முறைகளால் பண்டுவம் செய்யும் முறை.

physique', n. உடலமைப்பு, உடம்பின் கட்டுக்கோப்பு வளம்.

phytogen'esis, phyto'geny, n. செடிகளின் தோற்ற வளர்ச்சி முறை.

phytog'raphy, n. விவரணத் தாவர நூல்.

phytol'ogy, n. தாவரவியல்.

phyt'omer, n. தாவர அடியுறுப்புக்கூறு; தாவர உயிர்க்கூறு; தாவர உயிர்க்கொழுந்து, தனிச்செடியாக வளரும் திறமுடைய முளை.

phytoph'agous, a. செடிகளைத் தின்று வாழ்கிற.

phytot'omy, n. தாவரக்கூறாய்வு, செடிகளை வெட்டிக் கூறிட்டு ஆய்வு செய்தல்.

phytozo'on, n. கடற்பஞ்சினம், செடிபோன்ற தோற்றமுள்ள விலங்கு; pl. phytozo'a.

pi, n. 'பை' என்ற ஒலிப்புடைய கிரேக்க எழுத்து; (கண.) வட்டலகு, வட்டத்தின் விட்டத்துக்கும் சுற்றுவரைக்கும் உள்ள தகவினைக் குறிக்கும் அடையாளமான 'பை' என்ற கிரேக்க எழுத்து.

piac'ular, a. கழுவாய் இயல்புடைய, பரிகாரமான.

piaffe', v. குதிரைவகையில் பெருநடையிட்டுச் செல்.

piaff'er, n. குதிரை வகையில் பெருநடைச் செலவு.

pi'a mat'er, n. (உள்.) மூளையைச் சூழ்ந்துள்ள மூன்று சவ்வுப் படலங்களில் கடைசி அடிச்சவ்வுப் படலம்.

pianette', n. நிமிர்ந்த அமைப்புடைய தாழ்வான சிறு இசைப்பெட்டி வகை.

piani'no, n. நிமிர்ந்த அமைப்புடைய இசைப்பெட்டி வகை.

pianissi'mo, (இத்.) n. (இசை.) மிக மென்மையாக வாசிக்கப்பட வேண்டிய பாடற்பகுதி; *adv.* மிக மென்மையாக.

pi'anist, n. இசைப்பெட்டிவகை வாசிப்பவர்.

pia'no[1], (இத்.) n. (இசை.) மென்மையாக வாசிக்கப்பட வேண்டிய பாடற் பகுதி; *adv.* மென்மையாக.

pian'o[2], n. இசைப்பெட்டி வகை, கின்னரப்பெட்டி; pl. pian'os; (தொ.) cottage piano, நிமிர்ந்த அமைப்புடைய சிறு இசைப்பெட்டிவகை; grand piano, நிறைவொலியுடைய பெரிய கிடை இசைப்பெட்டிவகை; piano organ, இயந்திர இயக்கத்திஞல் வாசிக்கப்படும் குழல்கள் அமைந்துள்ள இசைப்பெட்டி வகை.

pianofort'e, n. = piano[2].

pianol'a, n. இயந்திர இயக்கத்திஞல் இசைப்பெட்டி வாசிப்பதற்கான அமைவு வகை.

pian'o-play'er, n. இசைப்பெட்டிவகை வாசிப்பதற்கான இயந்திர அமைவு; இசைப்பெட்டிவகை வாசிப்பவர்.

pias'ter, pias'tre, n. ஸ்பானிய வெள்ளி நாணய வகை; சிறு துருக்கிய-எகிப்திய நாணய வகை.

piazz'a, n. இத்தாலிய நகரத்தின் பொதுச்சதுக்கம் அல்லது அங்காடியிடம்.

pib'roch, n. ஒத்துவாத்தியத் திரிபுவகை.

pic'a, n. ஓர் அங்குலத்தில் ஆறு வரிகள் அடுக்கக்கூடிய அளவுள்ள அச்சுருப்படிவ வகை.

pic'ador, n. ஏறெதிரோ ஈட்டியேந்திய இவுளி வீரன்.

pic'amar, n. மரக்கீலிலிருந்து எடுக்கப்படும் கசப்பு எண்ணெய் வகை

picaresque', a. புனைகதை வகையில் துணிகரப் போக்கிரிகளின் செயல்களைப் பற்றிக் கூறுகிற.

picaroon', n. போக்கிரி; திருடன்; கடற்கொள்ளையாள்; கொள்ளைக்கப்பல்; v. கொள்ளையாளாகச் செயலாற்று.

picc'alilli, n. காய்கறி ஊறுகாய்.

picc'aninny, n. சிறுகுழந்தை; நீகிரோவர் குழந்தை; a. சின்னஞ்சிறிய, குழந்தை இயலுடைய.

picc'olo, n. சிறு புல்லாங்குழல் வகை; pl. picc'olos.

pice, (இ.) n. பைசா, செப்புக்காசு.

pichiciag'o, n. தென் அமெரிக்காவில் சிலி (Chili) நாட்டைச் சேர்ந்த வளைதோண்டும் இயல்புடைய சிறுவிலங்கு வகை.

pick, n. குந்தாலி, குத்துகோடரி; பற்குச்சி; கூர்நுனிக் கருவி; பொறுக்குதல், தெரிந்தெடுத்தல், தெரிவு, ஆய்வு; ஒன்றன் மிகச்சிறந்த கூறு; v. குந்தாலியாற் கொத்து, கல்லு; குந்தாலியால் வெட்டித் துளைசெய்; பல்குத்து; எலும்பு முதலியவற்றில் ஒட்டிக்கொண்டிருக்கும் தசையை அகற்று; பழம்பறி; மலர்கொய்; பறவைகள் வகையில் கூலம் முதலியவற்றை அலகிஞல் கொத்தியெடு; மனிதர்கள் வகையில் சிறிது சிறிதாகத் தின்; (பே.வி.) சாப்பிடு; பொறுக்கு, தேர்ந்தெடு, ஆய்ந்தெடு; பிய்த்தெறி, பிரித்தெடு; (தொ.) pick a lock, திருடும் நோக்கத்துடன் கூர்ங்கம்பியிஞல் பூட்டைத் திற; pick and choose, முயன்று தேர்ந்தெடு; pick and steal, சிறு களவு செய்; pick a quarrel with, வலிந்து சண்டைக்குப் போ, சண்டையிடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்; pick at, குற்றங்காண்; pick holes in, குற்றந் தேடிக்காண்; pick oakum, பழங்கயிறுகளைப் பிரித்து நார் எடு; pick off, பிடுங்கியகற்று; ஆட்கள் முதலியவர்களை ஒவ்வொருவராக வேண்டுமென்றே சுடு; pick one's pocket, சட்டைப் பையிலுள்ளவற்றைத் திருடு, மடிதடவு; pick one's way, உன்னிப்பாகக் கால் பார்த்து வைத்து நடந்துசெல்; pick out, பிரித்துணர்; வண்ணப் புள்ளிகளிட்டுப் பிரித்துக்காட்டு; பொருள் தெரிந்துகொள்; கேள்வி மூலமாகமட்டும் அறிந்திருக்கிற இசைப்பண்ணினை இசைப்பெட்டி முதலியவற்றில் வாசி; pick over, ஆய்ந்து தேர்ந்தெடு; pick to pieces, பிய்த்தெறி; குற்றங்களை ஒவ்வொன்ருக எடுத்துக்காட்டிக் கண்டி; pick up, நிலம் முதலியவற்றைக் குந்தாலியால் கொத்து; கைப்பற்றி எடுத்துக்கொள்; விழுந்தபின் முயன்றெழுவி; பிழைப்புக்குரியதை ஈட்டிக்கொள்; ஊதியம் அடை; செய்தி தெரிந்துகொள்; நீடொளி விளக்கைக்கொண்டு தேடிக்காண்; வானொலியில் விரும்பியதைக் கேட்பதில் வெற்றிபெறு; வழியில் ஏற்றி இட்டுச்செல்; கண்டு அறிமுகப்படுத்திக்கொள்; தவறிய வழியை மீண்டும் கண்டுபிடி; சதைப்பற்றுக்கொள்; புத்துணர்ச்சிபெறு; இழந்த உடல்நலம் எய்தப்பெறு; விளையாட்டுகள் வகையில் கட்சி ஆட்டக்காரர்களை மாறி மாறித் தேர்ந்தெடு; the pick of the bunch, கிடைப்பவற்றுள் மிகச் சிறந்தது.

pick'-a-back, adv. சுமைபோலத் தோளிலும் முதுகிலும் ஏற்றிக்கொண்டு.

pick'aninny, n., a. = piccaninny.

pick'ax, pick'axe, n. குந்தாலி; v. குந்தாலியால் நிலம் முதலியவற்றைக் கொத்து; குந்தாலியைக்கொண்டு வேலை செய்.

pick'elhaube, (செர்.) n. கூர்முனையுடைய தலைக்கவசம்.

pick'er, n. குந்தாலியால் நிலங்கொத்துபவர்; பழம் பறிப்பவர்; மலர் கொய்பவர்; நிலங் கொத்துவதற்கான அல்லது கல்லுவதற்கான கருவி வகைகள்.

pick'erel, n. மீன் வகையின் குஞ்சு.

pick'et, n. குற்றி; கட்டுத்தறி; வேலிகளுக்கான முளை; (படை.) கழுமரம், தண்டனைக்குரியவர் நிறுத்தி வைக்கப்படுவதற்குரிய கூர்ங்கழி; கழுமர ஏற்றத்தண்டனை; (படை.) பகைப்புலக் காவற்படை; எல்லைக்காவற் பிரிவு; பாசறைக்காவற் பிரிவு; நகர்க்காவல் பாசறைப்பிரிவு; v. கூர்முளையடித்துக் காப்பமை; குதிரை முதலியவற்றை முளையடித்துக் கட்டிவை; காவற்பணியில் வீரர்களை நிறுத்து; மறியல் செய்பவர்களைக் கொண்டு தொழிலாளர்களைச் சூழ்ந்து

நெருக்கு; மறியல் செய்; (தொ.) inlying picket, தங்குமிடத்தில் முன்னேற்பாடாக வைத்திருக்கப்படும் காவற்படைப்பிரிவு; outlying picket, பகைவர்களைக் கவனிப்பதற்காகப் புறத்தே அனுப்பப்படும் காவற்படைப் பிரிவு.

pick'ets, *n. pl.* வேலைநிறுத்தம் முதலியவற்றின்போது தனியாகவோ கூட்டாகவோ மறியல்செய்பவர்கள்.

pick'ing, *n.* கொத்துதல்; கல்லுதல்; கொய்தல்; பறித்தல்; தெரிந்தெடுத்தல்; கள்ளத்தனமாகப் பூட்டைத் திறத்தல்.

pick'ings, *n. pl.* மேல்வரும்படிகள், பிசிர்வருமானங்கள்.

pic'kle, *n.* ஊறவைப்பதற்குரிய நீர்மம், ஊறல் உப்புநீர்; ஊறற் புளிங்காடி; ஊறற் சிறுதேறல்; துப்புரவாக்குவதற்கான காடிக் கரைசல்; குறும்புக்குழந்தை; *v.* உவர்நீர் முதலியவற்றில் ஊறவைத்துப் பதனமிடு, புளிக்காடியில் ஊறுகாய் போடு; உப்புநீர் முதலியவை ஊட்டிப் பக்குவஞ் செய்; (கப்.) ஆளைக் கசையாலடித்த பிறகு அவன் முதுகில் உப்பு அல்லது புளிக்காடி தடவித் தேய்; (தொ.) have a rod in pickle for, தண்டனை கொடுக்க ஒருங்கியிரு.

pic'kles, *n. pl.* ஊறுகாய், உப்பு முதலியவற்றில் ஊறின காய்; வெங்காய ஊறல்; வெள்ளரிக்காய் ஊறல்.

pick'lock, *n.* பூட்டுக்களைக் கள்ளத்தனமாகத் திறப்பவர்; பூட்டுக்களைக் கள்ளத்தனமாகத் திறப்பதற்கான கருவி.

pick'-me-up, *n.* கிளர்ச்சி பான வகை.

pick'pocket, *n.* முடிச்சுமாறி, கத்திரிக்கள்ளன்.

pick'some, *a.* மிகுகண்டிப்பான சுவைத்திறமுடைய.

pick'-up, *n.* தற்செயலாக அறிமுகமானவர்; எதிரெதிர்க்கட்சி ஆட்டத்தலைவர்கள் தங்கள் கட்சி ஆட்டக்காரர்களை மாறி மாறித் தேர்ந்தெடுத்து ஆடும் விளையாட்டு; மரப்பந்தாட்ட வகையில் பந்தினைக் கையாற் பற்றியெடுத்தல்; பதிவிசைப் பெட்டியின் இசைத்தட்டுப் பாடல்களை மின் ஆற்றலால் வானொலி ஒலிபெருக்கியின்மூலங் கேட்கும்படி செய்வதற்கான அமைவு.

pick'wick, *n.* விலைமலிவான சுருட்டுவகை.

Pickwick'ian, *a.* சொற்கள் வகையில் தனிப்பொருளில் வழங்குகிற; மறைபொருளில் வழங்கப்பெறுகிற; தனித்துறை ஊக முறையில் வழங்கப்படுகிற.

pic'nic, *n.* கூட்டாஞ்சோறு; மனைப்புற விருந்துக்குழு; (பே-வ.) இனிய ஏற்பாடு; எளிய செய்தி; *v.* மனைப்புற விருந்திற் கலந்துகொள்; (தொ.) no picnic, எளிதல்லாத செயல்.

picot', *n.* ஆடையின் ஒப்பனைக்கரை முதலியவற்றிலுள்ள முறுக்கிய நூலிழைக்கண்ணி.

picotee', *n.* பூப்பயிர்ப்பாளர்கள் வளர்க்கும் இரட்டடுக்கு இதழ் மலர்ச்செடிவகை.

picq'uet, *n.* காவற்படை, சேனைக்காவல்.

pic'ric acid, *n.* (வேதி.) சாயம் போடுவதிலும் அறுவை மருத்துவத்திலும் வெடிமருந்துகளிலும் பயன்படுத்தப்படும் மிகுகசப்பு மஞ்சள்நிறப் பொருள்.

Pict, *n.* வடக்குப் பிரிட்டனிலிருந்த தொல்குடி மக்களினத்தவர்.

pic'tograph, *n.* ஓவிய எழுத்து; சித்திரக் குறுக்கெழுத்து.

pictog'raphy, *n.* ஓவியவெழுத்துக் கலை.

pictor'ial, *n.* படமிகு பத்திரிகை; *a.* படங்கள் சார்ந்த; படங்கள் வாயிலாகத் தெரிவிக்கப்படுகிற; பட விளக்கங்கள் கொண்ட; படமாக அமையத் தகுந்த.

pic'ture, *n.* படம்; ஓவியம்; கலைப்படம்; உருவப்படம்; அழகுப்பொருள்; காட்சி; மொத்தக்காட்சித்தொகுதி; செய்திக்கோவை, பொருள் தொகுதி, விவகாரம்; உருமாதிரி, ஒப்புமை, மாதிரி; *v.* படங்கள் வாயிலாகத் தெரிவி; விளக்கமாக வருணித்துக்கூறு; கற்பனை செய்துபார்; (தொ.) come into the picture, கவனத்துக்குரியதாகு; in the picture, சிறிது கவனத்தைப் பெற்றிருக்கிற; போதிய அளவு ஆதரித்துப் பேசப்பெற்றிருக்கிற; moving pictures, the pictures, திரைப்படக்காட்சி; out of the picture, தொடர்பற்றது; picture hat, வெள்ளை விளிம்புடைய மகளிர் தொப்பிவகை; picture postcard, படமுடை அஞ்சலட்டை.

pic'ture-card, *n.* அரசன்-அரசி-ஏவலன் படந் தாங்கிய ஆட்டச்சீட்டுவகை.

pic'ture-drome, pic'ture-palace, pic'ture-theatre, *n.* திரைப்பட அரங்கு.

pic'ture-gallery, *n.* ஓவியக் காட்சிச்சாலை; ஓவியக் காட்சித் தொகுப்பு.

picturesque', *a.* படம் போன்ற; படமாக எழுதத்தக்க; விளக்கமான; மொழி முதலியவற்றின் வகையில் கண்ணைக் கவருகிற; கவரும்படி வருணிக்கிற.

pic'ture-writ'ing, *n.* கருத்தோவிய முறை.

pic'ul, *n.* சீன எடுத்தலளவை (133-1/3 பவுண்டு).

pic'ul-stick, *n.* தோளில் மாட்டிச் சுமைகளைத் தூக்கிச் செல்வதற்கான கோல்.

pid'dle, *v.* சிறுபிள்ளைத்தனமாக நட; சுவைக்காது உண்; (பே-வ.) சிறுநீர் கழி.

pidd'ock, *n.* தூண்டிலிரையாகப் பயன்படுத்தப்படும் இரட்டைத் தடுக்கிதழ் நத்தை வகை.

pidg'in, *n.* (பே-வ.) ஒருவரது வேலை, விவகாரம்; (தொ.) pidgin English, சீனரது சிதைவுற்ற ஆங்கில மொழிவழக்கு.

pie[1], *n.* பறவை வகை; வீண்வம்பு பேசுபவர்.

pie[2], *n.* மோதகவகை, சினையப்பம்; காய்கறி-இறைச்சி முதலியவற்றைக் கரைத்த மாவினுள் வைத்து வேகவைத்துச் செய்யப்படும் பண்ணிய வகை; (தொ.) bran pie, யோக விழாத்தொட்டி, கிறிஸ்துமஸ் திருவிழாவின்போது கைக்கு வந்ததை எடுக்கும்படி பொம்மைகளைத் தவிட்டில் மறைத்து வைத்துள்ள தொட்டி; have a finger in the pie, உரிமையின்றித் தலையிடுபவராயிரு; mud pie, குழந்தைகளின் விளையாட்டுப் பண்ணியம்.

pie[3], *n.* (அச்சு.) அச்சுருப்படிவங்களின் குழப்பமான குவியல்; குழப்பம்; *v.* அச்சுருப்படிவங்களைக் கலந்துவிடு; (தொ.) printers' pie, அச்சுருப்படிவங்களின் குழப்பமான குவியல்.

pie[4], (இ.) *n.* பைசா, செப்புக்காசு.

pieb'ald, *a.* குதிரை முதலியவற்றின் வகையில் முறையின்றி வெண்மை கருமை நிறங்களையுடைய; பலவகையான, கதம்பமான; கலப்பினமான.

piece, *n.* துண்டு; கூறு, பகுதி; துண்டு நிலம், அடைப்பிட்ட நிலப்பகுதி; பிரிவுற்ற பகுதி; கண்டம், தனிக்கூறு; முனைமுகம்; மாதிரிப்பகுதி; பாளம், ஒன்றுபட்ட கூறு, சினைப்பகுதி; அளவுப்பகுதி; அளவு மிடா; மாதிரி, எடுத்துக்காட்டு; சுடுபடைக்கலம், பீரங்கி; பீரங்கிக்குழல்; சதுரங்கம் முதலிய ஆட்டங்களில் ஆட்டக்காய்; நாணயம்; படம்; இலக்கியப்படைப்பு; இசைப்பாடல்; நாடகம்; *v.* இணைத்திடு; ஒட்டுப்போடு; முழுமையாக்கு; இழைகளைப் பொருத்து; இணைத்துப் பொருத்தவை; சேர்த்து உருவாக்கு, கூட்டி உருப்படுத்து; சிறுகச்சிறுக ஈட்டு; கதை முதலியவற்றின் வகையில் பகுதிகளைச் சேர்த்து உருவாக்கு; ஒருங்கிணை; (தொ.) all to pieces, துண்டுதுண்டாக, சிதறுண்ட நிலையில்; a piece of one's mind, வெளிப்படை வசவு; break to piece, துண்டுகளாக உடை; தகர்வுறு; சிதறு; in pieces, உடைந்துபோன நிலையில்; of a piece, ஒத்திருக்கிற, முரண்பாடற்ற; piece out, ஈட்டு; piece together, துண்டுதுண்டாகச் சேர்த்து ஒன்றுக்கு; piece up, ஒட்டுப்போடு; அண்டை கோடு; piece work, துண்டுவேலை, நேரக்கணக்கில் அல்லாமல் அளவுக்கேற்பக் கூலி பெறும் வேலை; to pieces, சிதைந்த நிலையில்.

piece de resistance, (பிர.) *n.* சாப்பாட்டில் வலுப்பண்டம்.

piece'-goods, *n. pl.* திட்டமான நீளத்துடன் நெய்யப்படுந் துணி, ஜவுளி.

piece'meal, *n.* சின்னஞ் சிறுதுண்டு; கொஞ்சங்கொஞ்சமான அளவு; *a.* சிறிது சிறிதாகச் செய்யப்படுகிற; துண்டுதுண்டான; *adv.* துண்டு துண்டாக, சிறிது சிறிதாக; (தொ.) by piecemeal, கொஞ்சங் கொஞ்சமாக.

piec'er, *n.* இழைநெருடி, நூற்புத் தொழிற்சாலையில் அறுந்துபோன இழைகளைப் பொருத்துவதற்காக அமர்த்தப்பட்டுள்ள சிறுவன் அல்லது சிறுமி.

pie'crust, *n.* சினையப்பத் தோடு, மோதக வகையின் வெந்த மாத்தோடு.

pied, *a.* பல வண்ணங்களாலான.

pied a terre, (பிர.) *n.* உள்ளங்கால் வைப்பிடம்; தற்காலிகத் தங்கலிடம்.

pier, *n.* அலைதாங்கி, இரேவு, அலை இடைகரை, அலைவாய்க் குறடு; பாலந்தாங்கி; தூண்; பலகணிகளுக்கு இடையிலுள்ள திண்கட்டு வேலை.

pier'age, *n.* அலைமேடையைப் பயன்படுத்துவதற்கான கட்டணம்.

pierce, *v.* குத்தி ஊடுருவு; துளைத்து உட்செல்; குளிர்-நோவு-துன்பம் வகையில் உட்புகுந்து வருத்து; கூர்ந்துருவ நோக்கு; ஊசி முதலியவற்றினுற் குத்து; மிடா முதலியவற்றில் துளை உண்டுபண்ணு; வல்லந்தமாக நுழை.

pier'-glass, *n.* முற்காலக் கட்டுமானங்களிற் பலகணிகளுக்கிடையில் அமைக்கப்பட்ட நிலைக்கண்ணுடி; நீண்டுயர்ந்த பெரிய நிலைக்கண்ணுடி.

Pier'ian, *a.* வடக்கு தெசலி (N. Thessaly) நாட்டிலுள்ள கலைத் தெய்வங்களின் இருப்பிடமெனப் புகழ்பெற்ற பியரியா (Pieria) என்னுமிடஞ் சார்ந்த.

pi'errot, *n.* பிரஞ்சுநாட்டு விகடன்; *fem.* pierrette'.

piet'a, (இத்.) *n.* இயேசுநாதரின் உயிரற்ற உடலத்தைக் கன்னிமரியாள் தாங்கிக்கொண்டிருப்பதாகக் காட்டும் படம் அல்லது சிற்பம்.

pi'etism, *n.* பதினேழாம் நூற்றுண்டில் லூதரன் திருச்சபையில் (Lutheran Church) கடவுட்பற்றுர்வம் புதுப்பிப்பதற்காக ஸ்பீனர் (Spener) என்பவர் தொடங்கிய இயக்கம்; கடவுட்பற்றுணர்ச்சி; கடவுட்பற்றுள்ளவராகப் பகட்டிக் கொள்ளுதல்.

pi'etist, *n.* கடவுட்பற்றுணர்ச்சியுள்ளவர், பக்தர்; கடவுட்பற்றுர்வம் புதுப்பிக்க முயன்ற பதினேழாம் நூற்றுண்டுக்குரிய செர்மன் சமயச் சீர்திருத்த இயக்கத்தவர்.

pi'ety, *n.* கடவுட்பற்று; கடமையுணர்ச்சி.

piezom'eter, *n.* அழுக்கமானி.

pig, *n.* பன்றி; பன்றியிறைச்சி; இளம் பன்றி; இளம் பன்றியிறைச்சி; (பே-வ.) பேராசையர்; அழுக்குப்பிடித்தவர்; குதிர்வயிறர்; ஏறுமாறுனவர்; நச்சரிப்பவர்; உலையிலிருந்து எடுக்கப்பட்ட நீள் இரும்புப்பாளம்; கிச்சிலிப் பழச்சுளை; *v.* பன்றிக்குட்டிகளை ஈனு; பன்றிகளைப்போல் மந்தையாகத் திரள்; (தொ.) bring one's pigs to a fine market, bring one's pigs to a pretty market, bring one's pigs to the wrong market, நலமல்லா வாணிகஞ் செய்; buy a pig in a poke, கண்மூடித்தனமாக வாங்கு; pig it, பன்றிகளைப்போல் ஒருங்குதிரள்; pig's wash, பன்றித்தொட்டி நீர்; when pigs fly, என்றுமில்லாமல்.

pi'geon[1], *n.* புரு, மாடப்புரு; முட்டாள், பேதை, அப்பாவி, ஏமாளி; *v.* ஏமாற்று; (தொ.) clay pigeon, புரு வடிவுடைய களிமண் எய்குறி; homing pigeon, தூது கொண்டுசெல்லப் பயிற்சியளிக்கப்பெற்ற புரு; pigeon pair, ஆணும் பெண்ணுமான இரட்டைக் குழந்தைகள்; குடிக்கு ஒரே ஆணும் பெண்ணுமாகப் பிறந்த குழந்தைகள்; pigeon's milk, புருக்கள் குஞ்சுகளுக்கு ஊட்டும் அரைச்செரிமான உணவு; பிள்ளைகளை எடுத்துவரும்படி கூறி ஏமாற்று விளையாட்டாகக் கூறும் இல்பொருள் குறிப்பு.

pi'geon[2], *n.* (பே-வ.) விவகாரம்; (தொ.) pigeon English, சீனர்களும் ஐரோப்பியர்களும் பரிமாறிக்கொள்ளும் ஆங்கிலச் சொற்கள் பெரும்பாலுங்கொண்ட மொழிவழக்கு.

pig'eon-breast, *n.* உருவக்கேடாகக் குறுகலாய் அமைந்த மார்பு.

pig'eon-breast'ed, *a.* உருவக்கேடாகக் குறுகலாய் அமைந்த மார்புடைய.

pi'geongram, *n.* புரு உய்க்குஞ் செய்தி.

pig'eon-hearted, *a.* அஞ்சிச் சாகிற.

pig'eon-hole, *n.* புருமாடம், புருக் கூட்டறை; *v.* புருக் கூட்டறையிற் பிரித்தடுக்கு; பின்னுய்வுகருதிச் செய்தியை ஒதுக்கிவை; செய்தியைத் திட்டமாக நினைவில் வை.

pig'eonry, *n.* புருமாடம், புருக்கூடு.

pig'eon-toed, *a.* உள்வாங்கி வளைந்திருக்கும் கால் விரல்களையுடைய.

pigg'ery, *n.* பன்றித்தொழுவம்.

pigg'ish, *a.* பன்றிபோன்ற; பேராசை கொண்ட; அழுக்குப் பிடித்த; ஏறுமாறுன போக்குடைய.

pigg'y, *n.* பன்றிக்குட்டி.

pig'gy-wiggy, *n.* குழந்தை வழக்கில் பன்றிக்குட்டி; அழுக்குப் பிடித்த குழந்தை; கிட்டிப்புள் விளையாட்டு.

pig'headed, *a.* பிடிவாதமான, அறிவற்ற.

pig'-iron, *n.* தேனிரும்பு.

pig'-jump, *v.* குதிரை வகையில் கால்களை இணைக்காமல் நான்கு கால்களாலுங் குதி.

pig'let, pig'ling, *n.* பன்றிக்குட்டி.

pig'ment, *n.* வண்ணப்பொருள், சாயப்பொருள்; நிறமி, இயற்கை நிறப்பொருட்கூறு.

pig'my, *n.*, *a.*=pygmy.

pig'nut, *n.* நிலக்கடலை வகை.

pig'skin, *n.* பன்றித்தோல்; பதனிட்ட பன்றித்தோல்.

pig'sticker, *n.* ஈட்டிகளைக்கொண்டு பன்றி வேட்டையாடுபவர்; பன்றி வேட்டைக்காகப் பயிற்சியளிக்கப்பட்ட குதிரை; இறைச்சிக்காகப் பன்றி வெட்டுபவர்; நீண்ட அலகுடைய சட்டைப்பைக் கத்தி.

pig'sticking, *n.* ஈட்டிகள் கொண்டு காட்டுப்பன்றி வேட்டையாடல்; இறைச்சிக்காகப் பன்றியைக் கொல்லுதல்.

pig'sty, *n.* பன்றிப்பட்டி; அழுக்கடைந்த குடிசை.

pig'tail, *n.* மெல்லிய புகையிலைச்சுருள்; தொங்குமயிர்ப் பின்னல், சடைப்பின்னல், பனிச்சை.

pig'wash, *n.* பன்றித்தொட்டி நீர்.

pig'weed, *n.* பன்றிகள் தின்னும் பூண்டுவகைகள்.

pike[1], *n.* வேல்கம்பு, ஈட்டி, கூர்முனைக் கழி, கூர்ங்கோல்; குன்றின் கொடுமுடி; நன்னீர்ப் பெருந்தீனி மீன்வகை; நன்னீர் மீன்வகையின் குட்டி; (பே-வ.) மீனகொத்துங் கருவி; *v.* ஈட்டியினுற் குத்தித் துளை, வேல்கம்பால் குத்திக் கொல்லு.

pike[2], *n.* சுங்கச்சாவடி, சுங்கம், ஆயம்; சுங்கச்சாவடி அமைந்துள்ள பெரும்பாதை.

pike'let, *n.* மாலைச்சிற்றுண்டி அப்பவகை.

pike'man[1], *n.* ஈட்டிவீரன்.

pike'man[2], *n.* சுங்கச்சாவடிக் காவலர்.

pik'er, *n.* (பே-வ.) சூதாட்டத்தில் ஆர்வமற்ற ஆட்டக்காரர்; வீர விளையாட்டு மனப்பான்மையற்றவர்.

pike'staff, *n.* சுளிக்கு, ஈட்டியின் மரக் கைப்பிடி; (தொ.) plain as a pikestaff, மிகத்தெளிவான.

pilas'ter, *n.* சதுரத் தூண்.

pilau', pilaw', (பெர்.) *n.* புலவு, ஊனுேடு கலந்து நறுமணப் பொருள்களிட்டுப் பக்குவப்படுத்திய உணவு.

pilch, *n.* மென்கம்பளத் துணி.

pil'chard, *n.* சிறு கடல்மீன் வகை.

pil'corn, *n.* உமி தானியமணியோடு ஒட்டிக்கொண்டிராத கூலவகை.

pile¹, *n.* முளை, கூர்ங்கழி; குத்துக்கழி; ஆற்றின் சேற்று நிலத்தில் செங்குத்தாக நிறுத்திவைக்கப்படும் பாலக்கால்; கட்டிட அடிப்படைதாங்கும் பதிகால்; பண்டை ரோமரின் வேல்; அம்பு முனை; (கட்.) தலைகீழ்க்கூம்பு; *v.* கூர்முளைகளை அமைத்துக்கொடு; முளையிறக்கு; கட்டிட அடிப்படை தாங்கும் நீண்ட பதிகால் தறிகளை அடித்திறக்கு.

pile², *n.* குவியல், ஒழுங்கான அடுக்கு; ஈமவிறகு அடுக்கு; படியடுக்கு; படைக்கல அடுக்கு; குண்டுக்குவியல்; நாணய அடுக்கு; (பே-வ.) பணக்குவியல், செல்வம்; உயர்ந்த பெருந்திரளான கட்டிடங்கள், நீள்நெடுமாடம்; மின்னிரை, மின்னோட்டம் விளைவிப்பதற்கான வகைமாறி அடுக்கி வைக்கப்படும் வேறுவேறு உலோகங்களாலான தகடுகளின் நிரை; அணு ஆற்றலைக் கட்டுப்படுத்தி இயக்கும் அமைவு; *v.* குவி, ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கு; சுமையேற்று; (தொ.) atomic pile, அணு ஆற்றலைக் கட்டுப்படுத்தி இயக்கும் அமைவு; funeral pile, ஈமவிறகு அடுக்கு; make a pile, make one's pile, வேண்டிய அளவு பணங் குவி; pile arms, சுழல் துப்பாக்கிகள் வகையில் தடித்த முனைகள் கீழே இருக்க வாய்ப்புறமீ ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கும்படி அமைத்து வை; pile it, மிகைபடக்கூறு; pile up, கப்பலைப் பாறைகளின்மேல் மோதுவி; கப்பல் கரைதட்டச் செய்; pile on the agony, pile up the agony, (பே-வ.) துன்பச் செய்திகளை மேன்மேல் அடுக்கிக்கொண்டுபோ.

pile³, *n.* மென்மயிர், துய், தூவி, மெல்லிறகு, ஒற்றை முடி மயிர்; மெய்ம்மயிர்; ஆட்டு மயிர்; துணிச்சடை.

pile⁴, *n.* நோய்வகையில் மூலமுளை, மூலக்கட்டி.

pile⁵, *n.* நாணயப் பின்புறம்.

pile'-driver, *n.* கட்டிட அடிப்படை தாங்கும் நீண்ட பதிகால் தறிகளை அடித்திறக்குவதற்கான இயந்திரம்.

piles, *n. pl.* மூலநோய்.

pile'wort, *n.* மஞ்சள்நிற மலர்ச்செடி வகை.

pil'fer, *v.* சிறு களவு செய், அற்பப்பொருள்களைத் திருடு.

pil'ferage, *n.* சிறு திருட்டு.

pil'ferer, *n.* திருடன்.

pilgarl'ic, *n.* வழுக்கைத்தலை; வழுக்கைத்தலையர்; பேதை.

pil'grim, *n.* தலந் திரிதருபவர், யாத்திரிகர்; வாழ்க்கைப் பயணஞ் செய்பவர்; *v.* யாத்திரிகர்போல் அலை; (தொ.) Pilgrim Fathers, வெளியேறிய மூத்தோர், 1620-இல் அமெரிக்காவுக்கு வெளியேறிச்சென்று குடியேறிய ஆங்கிலக் கடுந் தூய்மைச் சமயத்தார் (English Puritans); The Pilgrims of Great Britain, The Pilgrims of the United States, ஆங்கில-அமெரிக்க நட்புறவை வளர்க்குங் கழகங்கள்.

pil'grimage, *n.* யாத்திரை; வாழ்க்கைப்பயணம்; *v.* யாத்திரை செல்.

pil'grimize, *v.* யாத்திரை செய்; தல யாத்திரிகராகச் செயலாற்று.

pilif'erous, *a.* (தாவ.) மென்மயிருள்ள, துய்யுடைய.

pil'iform, *a.* மயிர்போன்ற.

pill, *n.* மாத்திரை, குளிகை; ஒப்புக்கொள்ள வேண்டிய தொன்று; மென்று விழுங்கவேண்டிய செய்தி; தொல்லைப் படுத்தும் ஆள்; பந்து; வரிப்பந்தாட்டப் பந்து; பீரங்கிக் குண்டு; *v.* மாத்திரைகளை மிகுதியாக உட்கொள்ளச்செய்; (தொ.) a pill to cure an earthquake, அரைகுறைச் செயல்; gild the pill, கடுவிற்குக் கட்டிபூசு, கசப்புச்செய்தியை மழுப்பு.

pill'age, *n.* கொள்ளை, போர்க்காலத்திற் கொள்ளையிடல், சூறை; *v.* பாழாக்கு, தாக்கிக் கொள்ளையடி.

pill'ar, *n.* தூண்; அழகுத்தம்பம், தூபி; ஆதாரக்கால்; திருநிலைக்கால்; வணங்கப்படுஞ் சிலைக்கம்பம்; நெடும்பாறை; சுரங்கத்தின்மேல் தன் ஆதாரமாக அகழாது விடப்பட்ட ஒடுங்கிய பாறை அல்லது நிலக்கரிப்பகுதி; மிதிவண்டி இருக்கையின் ஆதாரம்; கைக்கடிகாரத்தை அல்லது கடிகார முகப்பை நிலைநிறுத்தும் ஆதாரமுனை; காற்று-நீர் முதலியவற்றின் நீள் செங்குத்துப்பிழம்பு; முக்கிய ஆதரவாளர்; *v.* தூண்களைக்கொண்டு தாங்கச்செய்; தூணைப்போல் தாங்கு; (தொ.) from pillar to post, இங்குமங்கும், ஓர் இடர்ப்பாட்டினின்றும் விடுபட்டு மற்றொன்றில் மோதுண்டு; தலைவலி போய்த் திருகுவலி.

pill'ar-box, *n.* அஞ்சல் தூண்.

pil'laret, *n.* சிறு தூண்.

pill'arist, *n.* கந்து முனிவர்.

pill'box, *n.* மாத்திரைப்பேழை; ஒற்றைக்குதிரை வண்டி; (படை.) சிறு தற்காலிக நிலவறை அரண்.

pill'ion, *n.* (வர.) பிற்கலணை, குதிரைமீது இரண்டாவது சேணம்; பின்னிருக்கை, மிதிப்பொறிவண்டியில் ஊர்பவருக்குப்பின் மற்றொருவருக்கான துணையிருக்கை.

pill'iwinks, *n.* (வர.) விரல்நெருக்கி, விரல்களை நசுக்கிச் சித்திரவதை செய்வதற்கான கருவி.

pill'ory, *n.* தண்டனைக்கட்டை, குற்றவாளியை ஒறுப்பதற்கான அரிகண்டம் போன்ற மரப்பணிச்சட்டம்; *v.* ஒறுப்பதற்கான மரப்பணிச்சட்டத்தில் மாட்டு; பழிப்புக்கு ஆளாக்கு.

pill'ow, *n.* தலையணை; தலையணைக்கட்டை; துன்னல் திண்டு; முட்டுக்கொடுப்பதற்கான திண்டுக்கட்டை; *v.* தலையணைமேற் சாய்ந்துகொள்; தலைசாய்த்து இளைப்பாறு; (தொ.) take counsel of one's pillow, ஓர் இரவு முழுதும் சிந்தித்துப்பார்.

pill'ow-case, *n.* தலையணை உறை.

pill'ow-fight, *n.* திண்டெறி விளையாட்டு, ஒருவர்மீதொருவர் தலையணைகளை வீசியடித்துக்கொள்ளும் விளையாட்டு.

pill'ow-slip, *n.* தலையணை உறை.

pill'owy, *a.* தலையணைபோன்ற; உருண்டு பெருத்த; மெதுவான.

pills, *n.* மேடைக் கோற்பந்தாட்டம்.

pil'lule, *n.* மாத்திரை, சிறு குளிகை.

pil'ose, *a.* மயிர் அடர்ந்த, மயிர்போர்த்த.

pil'ot, *n.* வலவர், இயக்குவோர்; கப்பல் வலவர், துறைமுகக் கப்பற் பொறுப்பாளர்; விமானம் இயக்குபவர்; வானூர்திச் செலவைக் கட்டுப்படுத்தும் பகுதிகளை இயக்குபவர்; வழிகாட்டி; வேட்டைக்களத்தில் நெறிகாட்டி; *v.* வழிகாட்டி இட்டுச்செல், ஆற்றுப்படுத்து; நெறிகாட்டியாகச் செயலாற்று; விமான வலவனாகச் செயலாற்று; (தொ.) drop the pilot, நம்பகமாக அறிவுரை கூறுபவரைக் கைவிடு; pilot balloon, காற்றுவீசும் திசையைக் கண்டறிவதற்காக மேலே பறக்கவிடப்படும் சிறு புகைக்கூண்டு; Pilot Officer, இரண்டாவது படைத்துணைத் தலைவருக்கு நிகரான விமானப் படை அதிகாரி; pilot plant, முன்மாதிரி இயந்திரம்; pilot scheme, முன்னோடிதிட்டம், சோதனைத்திட்டம்.

pi'lotage, *n.* முற்செலுத்துதல்; வழிகாட்டுதல்; நெறிகாட்டியின் கூலி.

pi'lot-cloth, *n.* மேலங்கிகளுக்கான கனத்த முரட்டுத்துணி வகை.

pi'lot-engine, *n.* முன்செல்லும் பொறியம்.

pi'lot-fish, *n.* சுறுவுக்கு வழிகாட்டுவதாகச் சொல்லப்படும் சிறுமீன் வகை.

pi'lot-flag, *n.* மாலுமி வேண்டுமென்னும் அறிகுறிக்கொடி.

pi'lot-jacket, *n.* முரட்டுக் கம்பளித்துணியினாலான மாலுமியின குறுகிய மேற்சட்டை.

pi'lotless, *a.* செலுத்துபவர் இல்லாத; விமானவகையில் வலவன ஏவாத.

pil'ous, *a.* மயிரடர்ந்த.

pil'ule, *n.* சிறு குளிகை.

pim'elode, *n.* பூனைபோன்ற அமைப்புடைய மீன்வகை.

pimen'to, *n.* மிளகு; நறுமணக்கொட்டை வகை; நறுமணக் கொட்டை தரும் மரவகை.

pimp, *n.* காமத் தரகர்.

pim'pernel, *n.* வண்ணமலர்க் களைச்செடி வகை.

pim'ping, *a.* சிறிய, அற்ப, இழிந்த; நோய்வாய்ப்பட்ட, உடல்நலங் குன்றிய; மேலீடான உணர்ச்சிவசப்பட்ட.

pim'ple, *n.* குரு, முகப்பரு.

pim'pled, pim'ply, *a.* பருக்களையுடைய.

pin, *n.* குண்டூசி; பிணைப்பூசி; மரம் அல்லது உலோகத்தினாலான மூளை; பிரடை, நரப்பிசைக் கருவிகளின் முறுக்காணி; 4½ காலன் (gallon) அளவுள்ள சிறு மிடா; *v.* குண்டூசியைக்கொண்டு பொருள்களை ஒன்றோடொன்று இணை; முளை-ஈட்டி முதலியவற்றைக்கொண்டு குத்தி அசையாமல் நிறுத்து; சுவர் முதலியவற்றின்மேல் வைத்து அழுத்திப்பற்றி அசையாமற் பிடித்திரு; வாக்குறுதியில் பிணி; ஏற்பாடுகளிற் பிணை; கம்பி முதலியவற்றால் வேலியிடு; (தொ.) don't care a pin, அறவே கவலைப்படவில்லை; pin one's faith on, முழு நம்பிக்கை வைத்திரு; pins and needles, திமிர்விட்டு வரும்போது உறுப்புக்களில் ஏற்படும் சிலிர்ப்புணர்ச்சி; pin up, சுவர்-கரை முதலியவற்றிறுக்குக் கற்கட்டிடத்திறுல் முட்டுக்கொடு; split pin, இயந்திரப் பகுதிகளின் துளைகளிற் செலுத்தி இறுக்குவதற்கான முனைபிளந்த உலோகமுளை.

pin'afore, *n.* குழந்தை வேனுடுப்பு.

pinas'ter, *n.* தேவதாரு இன மரவகை.

pince-nez, (பிர.) *n.* வில்பிடிப்பு மூக்குக்கண்ணுடி.

pincers, *n. pl.* குறடு, இடுக்கிப்பொறி; (படை.) இருகவர்ப் படை நடவடிக்கை; (தொ.) pincers movement, (படை.) இடுக்கிப்பொறி நடவடிக்கை.

pincette, (பிர.) *n.* சிறுகுறடு, சாமணம்.

pinch, *n.* கிள்ளுதல், நெருடுதல், நுள்ளல்; கடிப்பு, நெரிப்பு; வேதனை; சிட்டிகையளவு; நெருக்கடி வேளை, அவசர நொடிக்கட்டம்; *v.* கிள்ளு, நுள்ளு, நெருடு; நசுக்கு, வருத்து, கடிப்புறுத்து, நோவுறுதது; நோவால் நெளியப்பண்ணு; கொல்; முனைமுறி; தொல்லையளி; பணம் பிடுங்கு, சுரண்டு; கைக்கடிப்பாயிரு, பிசுணித்தனஞ் செய்; கருமித்தனம் பண்ணு, கஞ்சத்தனங் காட்டு: தாற்றுக்கோலால் ஊக்கு; காற்றோட்டத்துக்கு மிக அணிமையாகக் கலத்தை இயக்கு; (தொ.) a pinch of, ஒரு சிட்டிகையளவு; at a pinch, நெருக்கடிக்கட்டத்தில்; where the shoe pinches, நேரனுபவத்தில் இக்கட்டு உள்ள இடம்.

pinch'beck, *n.* போலித்தங்கம், செம்பு-துத்தநாகக் கலவை வகை; *a.* போலியான.

pin'cushion, *n.* குண்டூசிச் செருகணை.

Pinda'ri, (இ.) *n.* கொள்ளைக்கூட்டத்தினர்.

Pinda'ric, *a.* பிண்டார் (Pindar) என்ற பண்டைக் கிரேக்க கவிஞனுக்குரிய.

Pinda'rics, *n. pl.* பிண்டார் என்ற கிரேக்க கவிஞன் வழங்கிய பாவகை; பிண்டார் பண்பைப் பின்பற்றுவதாகக் கருதப்பட்ட 17-ஆம் நூற்றுண்டு யாப்புவகை.

pine[1], *n.* தேவதாரு, பசுமைமாரு ஊசியிலை மரவகை; (தொ.) pine carpet, முட்டைப்புழுப் பருவத்தில் தேவதாரு மரம் தின்று வாழும் அந்துப்பூச்சிவகை; pine marten, கருந் தவிட்டுநிறக் கிரியினச் சிறுவிலங்கு வகை.

pine[2], *v.* மெலிவுறு, நலிவுறு; வாட்டமுறு, வதங்கு; ஏங்கு, வேணவாக்கொளளு; இனவுறு, நினைந்து நினைந்து இரங்கு.

pin'eal, *a.* (உள்.) தேவதாருவின் காயுருவுடைய; (தொ.) pineal gland, மூளையில் மூன்றுவது குழிவின் பின்னுள்ள செயல் விளக்கம் உணரப்படாத சுரப்பி.

pine'apple, *n.* அன்னுசிப்பழம்.

pine'-beauty, *n.* முட்டைப்புழுப் பருவத்தில் தேவதாரு மரத்தைத தின்றுவாழும் அந்துப்பூச்சிவகை.

pine'-cone, *n.* தேவதாருவின் திரளை.

pin'ery, *n.* அன்னுசிப்பழத் தோட்டம்; தேவதாரு மரச்சோலை.

pin'-feather, *n.* வளராத இறகு.

pin'-fire, *a.* துப்பாக்கி வகையில் முளை செருகுவதன்மூலம் வெடிதீர்க்கும்படி செய்யப்படுகிற; (தொ.) pin-fire cartridge, முளை செருகி வெடிக்கப்படும் வெடிக்கலம்.

pin'fold, *n.* அடைகொட்டில்; *v.* பட்டியில் அடை.

ping, *n.* விண்ணென்ற ஒலி, துப்பாக்கிக்குண்டு பாயும் ஓசை; *v.* விண்ணென்ற ஓசையுடன் பாய்; விண்ணென்ற ஓசையுடன் செல்லுவி.

ping'-pong', *n.* மேசை வரிப் பந்தாட்டம்.

ping'uid, *a.* எண்ணெய்ப்பசையுடைய, வழவழப்பான.

ping'uin, *n.* மேலை இந்திய தீவுகளிலுள்ள அன்னுசிபோன்ற பழவகை.

pin'-head, *n.* குண்டூசித்தலை; மிகச்சிறிய பொருள்.

pin'-hole, *n.* குண்டூசித்துளை; முளைபொருந்துகிற துளை.

pin'ion, *n.* சிறகு நுனி; (செய்.) சிறகு; பறக்கும் ஆற்றல் உள்ள சிறகின் பகுதி; விசைகொள் இறகு; செதுக்கு வேலையில் முன் கையுறுப்பொத்த இறக்கைப்பகுதி; *v.* சிறகொடி, பறவையின் இறக்கையை வெட்டிப் பறக்கமுடியாமற் செய்; இயங்க முடியாமற் கட்டு; கைகளைக்கட்டு; அசையாமல் இறுகப் பிணைத்துக்கட்டு.

pink[1], *n.* பல நிறவகைகளையுடைய மலர்ச்செடிவகை; இளஞ்சிவப்பு நிறம்; உச்ச உயர் நிறைவு; உச்சநிறை நலம்; நரிவேட்டையாளர் அணியும் செஞ்சட்டை; நரிவேட்டையாளர்; நரிவேட்டையாளரின் செஞ்சட்டைக்குரிய துகில்; *a.* இளஞ்சிவப்பான; அரசியல் துறையில் சிவப்புப் பக்கச்சாய்வான.

pink[2], *n.* மஞ்சள் சாயப்பொருள்.

pink[3], *n.* சிறுமீன் வகை.

pink[4], *n.* (வர.) ஒடுங்கிய பின்பகுதியை உடைய பாய்க் கப்பல் வகை.

pink[5], *v.* வாளால் ஊடுருவு; தோலில் துளைவரிசையிட்டொப்பனை செய்; அணிசெய், அழகுபடுத்து.

pink[6], *v.* குமுறல் வெடியோசை செய், கலவையின் அரைகுறை எரிவியக்கத்தால் பலபட இரைந்தெழும் வெடிமுழக்கஞ் செய்.

pink'-eye, *n.* குதிரைகளுக்கு வரும் ஒட்டுவாரொட்டிக் காய்ச்சல்; ஒட்டுவாரொட்டியான கண்ணோய் வகை; கடல்மீன்களின் செந்நிறக் கோளாறு.

pink'-eyed, *a.* இளஞ்சிவப்புநிறக் கண்களையுடைய.

pink'ish, *a.* சிறிதே இளஞ்சிவப்பான.

Pink'ster, *n.* இயேசுநாதரின் மீட்டெழுச்சி விழாக்கழிந்த ஏழாம் ஞாயிற்றுக்கிழமை; (தொ.) pinkster flower, இளஞ்சிவப்பு மலர்ச்செடிவகை.

pink'y, *a.* இளஞ்சிவப்பவாவிய, இளஞ்சிவப்புச் சாய்வான.

pin'-money, *n.* கையடைப்பணம், உடுப்புச்செலவு முதலியவற்றிற்காகப் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் ஆண்டுப் படிப்பணம்; மனைவியின் சொந்தச் செலவுக்கென்று ஒதுக்கப்பட்ட படிப்பணம்.

pinn'a, (ல.) *n.* புறச்செவியின் அகல் மேற்புறம்; இறகு வடிவ இலையின் உள்ளுறுப்புக் கிளையிலை; துடுப்பு; துடுப்பமைவு.

pinn'ace, *n.* வள்ளம்.

pinn'acle, *n.* கோபுரமுகடு; மோட்டு முகடு; இயற்கைக் குவடு; உச்சநிலை, முழுநிறைநிலை; *v.* முகடாய் அமை; முகட்டில் வை; முகட்டுடன் அமை.

pinn'ate, pinn'ated, *a.* (தாவ.) இலைகள் வகையில் இறகு வடிவான; (வில.) இறகுபோன்ற வடிவமைதியுடைய.

pinn'er, *n.* குத்திவைத்துப் பிணைப்பவர்; குத்திவைத்துப் பிணைப்பது; குண்டூசி செய்பவர்.

pinn'i-grade, pinn'i-ped, *n.* துடுப்புவடிவக் கால்களையுடைய விலங்கு; *a.* துடுப்புவடிவக் கால்களையுடைய.

pinn'othere, pinn'otere, *n.* சிப்பி கிளிஞ்சில் வகையின் தோட்டிலமர்ந்து அதன் உணவையே பகிர்ந்துண்ணும் சிறு நண்டினம்.

pinn'ule, *n.* (தாவ.) இறகுவடிவ இலையின் கிளையிலையின் கிளையிலை; (வில.) சிறிய இறகு அல்லது துடுப்புப் போன்ற உறுப்பு; விண்மீன்வடிவ உயிரினத்தின் கிளைக் கையுறுப்பு; உயர்வுமானியின் பார்வை உறுப்பு.

pinn'y, *n.*=pinafore.

pin'ochle, pin'ocle, *n.* கீழ்ச்சீட்டுக்கள் கழிக்கப்பட்ட நான்குகட்டுச் சீட்டுக்களுடன் விளையாடப்படும் சீட்டாட்ட வகை; சில தனித் துருப்புச் சீட்டுவகைகளின் அறிவிப்பு.

pinol'e, *n.* சோளமாக் கலவை; சோளமாத் தின்பண்ட வகை.

pin'-point, *n.* ஊசிமுனை; மிகச்சிறு பொருள்; *a.* இலக்கு வகையில் மிக நுட்பமாகக் குறிபார்க்கவேண்டிய; *v.* மிக நுட்பமாகக் குறிபார்த்து எறி; மிகநுட்பமாகக் குறிப்பிடு.

pin'prick, *n.* நச்சரிப்பு; சிறுதொல்லை.

pins, *n. pl.* (பே-வ.) கால்கள்.

pint, *n.* நீர் முகத்தலளவைச் சிற்றலகு, அரைக்கால் காலன்; (மரு.) 20 நீர்ம அவுன்சு.

pin'-table, *n.* இயந்திரச் சூதாட்ட அமைவு.

pinta'do, pinta'do bird, pinta'do petrel, *n.* கடற் பறவை வகை; கினிக்கோழி.

pin'tail, *n.* கூர்முனை வாலுடைய வாத்துவகை; கூர்முனை வாலுடைய காட்டுக்கோழிவகை.

pin'tle, *n.* சுழலுறுப்புக்கு ஊடச்சாய் உதவுந் தாழ்க்கட்டை.

pin'-tuck, *n.* ஊசிக்கொசுவம், உடையில் மிகக்குறுகிய ஒப்பனைமடிப்பு.

pin'-up, *n.* பற்றுர்வப்படம், சுவரில் மாட்டி அழகுபார்க்கப் படும் பற்றுர்வததுக்குரியவரின் படம்; *a.* சுவரிற் படமாக மாட்டி அழகுபார்க்கப் படுவதற்குரிய; (தொ.) pin-up girl, ஓவத்தன்ன நங்கை.

pin'-wheel, *n.* கடிகாரமணியடிக்கும் நெம்புகோலை உயர்த் தும் பற்களை விளிம்பிற் கொண்ட சிறுசக்கரம்; தாள் காற்றுடி; சுழலும் சக்கரவாணம்.

pinxer'unt, (ல.) *v.* ஓவியக்குறிப்புவகையில் 'இது தீட்டினுர்' என்னுங குறிப்பு.

pinx'it, (ல.) *v.* ஓவியக்குறிப்புவகையில் 'இது தீட்டினர்'.

pin'y, *a.* தேவதாரு மரத்தினுடைய; தேவதாரு மரம்போன்ற; தேவதாரு மர இயல்புடைய; தேவதாரு மரங்கள் நிறைந்த.

piolet, (பிர.) *n.* பனிபிளக்குங் கோடரி.

pioneer', *n.* வழிகாண்மார்; படைத்துறையில் படைகட்கு முன்சென்று வழி செப்பனிடுபவர்; வழிமுனைவர்; முன்னேடி, முதன் முயற்சியாளர்; புதுவழிகாண்போர், புதுப்புலங் காண்போர்; *v.* முன்னேடியாயமை; முன்சென்று பாதை செப்பனிடு; முன்முயற்சிசெய்; புதுவழி கண்டுதவு; புதுவழி திறப்பதில் ஈடுபடு, புதுப் புலங்காண்பதில் முனை.

piou-piou, (பிர.) *n.* மெய்ம்மாதிரியான பிரஞ்சுக் காலாட் படைவீரர்.

pi'ous, *a.* கடமை பேணுகிற; சமயப்பணியார்வமுடைய; (தொ.) pious fraud, நன்மைக்க ஏமாற்று; கேடற்ற இரண் டகம்; pious opinion, வற்புறுத்தப்படாத கருத்து.

pip[1], *n.* தொண்டைகட்டி நாவில் வெண்மைபடரும் இயல் புள்ள கோழி-பருந்துகளின் நோய்வகை.

pip[2], *n.* சீட்டுப்புள்ளிகுறி; பகடைக்குறிப்புள்ளி; தாயக் கட்டைப் புள்ளி; படைப்பணியாளர் தோட்சின்ன விண்மீன் குறிப்புள்ளி; கொத்துப்பூவின் சிறு தனிப்பூ; அன்னுசிப் பழத்தின் மீதுள்ள சுளைததடம்.

pip[3], *n.* பல்விதைக்கனியின் தனிச் சிறு விதை.

pip[4], *n.* அடையாளக்குறியீட்டு ஒலியில் பி (P) என்ற எழுத் துக் குறிப்பு.

pip[5], *n.* ஊதல் சமிக்கையில் ஒற்றை உயர்விசை ஒலி.

pi'pal, *n.* அரசமரம்.

pipe, *n.* குழாய், குழல், வேய்ங்குழல்; இசை மேளத்தின் தனிக்குழல்; மிடற்றிசைக்குரல்; புள் இசைப்பொலி; பற வைப் பாட்டு; படகோட்டியின் சீழ்க்கை: சீழ்க்கையடிப்பு; உடலில் குழல் வடிவ உறுப்பு; புகைபிடிக்குங் குழாய்; சுரங்கக் கனிவள வேர்; காட்டுக்கோழியைப் பொறியில் பிடிப்பதற்கான வாய்வழி; *v.* குழலூது; வேய்ங்குழல் வாசி; குழலிற் பாடு; குழலிசைத்து வருவி; சீழ்க்கையடித்துக் கப்பலோட்டிகளை உணவுக்கு வரவழை; சீழ்க்கையடி; கீச்சுக் குரலிடு; குழாய்கள் இணைத்தமை; ஆடை கத்தரித்துத் திருத்தி ஒப்பனைசெய்; அப்பங்களை அழகுபடுத்தி ஒப்பனை செய்; மலர்ச்செடிவகைக் கணு வெட்டி வைத்துப் பயிர் பெருக்கு; (தொ.) King's pipe, Queen's pipe, கள்ள வாணி கப் புகையிலையை எரிக்கப் பயன்படுத்தப்பட்ட லண்டன் நகர்த் துறைமுக உலைக்களம்; pipe away, படகு புறப்பட அடையாளக் குறிப்பு ஓசைசெய்; pipe down, (கப்.) வேலையி லிருந்து நீக்கு; pipe dream, பயனில கற்பனை, மயக்கவெறி மருந்துண்டவரின் கனவுபோன்ற காட்சி; pipe major, படைத்துறை இசைக்கருவியாளர் தலைவர்; pipe of peace, அமைதி ஒப்பந்தக்குறியாக அமெரிக்க செவ்விந்தியர் புகைக் கும் புகைக்குழாய்; pipe one's eyes, அழு, கண்ணீர் விடு; pipe up, பாடத்தொடங்கு; இசைக்கருவி வாசிக்கத்தொடங்கு; put that in your pipe and smoke, முடியுமானுல் செய்தியை மனத்தில் வாங்கிச் செரிக்க வைத்துக்கொள்.

pipe'-clay, *n.* புகைகுடிகுழாய் செய்யப் பயன்படும் வெண் களிமண்; ஆடைநேர்த்தியில் மிகுகவனம்.

pipe'-fish, *n.* முகம்நீண்ட நீளுருவ மீன்வகை.

pipe'-line, *n.* குழாய் இணைப்பு வரிசை; எண்ணெய்க்குழாய் வழி; உற்பத்தியாளரிடமிருந்து சிறு வாணிகர்க்கு அல்லது வாங்குவோர்க்குப் பொருள் இடையீடின்றிச் செல்லுதல்.

pip'er, *n.* குழலூதுபவர்; நாடோடிப்பாடகர்; மீன்வகை; வலுவிழந்த ஏலாக்குதிரை; பறவைக்குஞ்சு; மாடப்புறுக் குஞ்சு; ஈ வகையின முட்டைப்புழு; பிற விலங்குகளைப் பொறியுட்படுத்த பயிற்றுவிக்கப்பட்ட நாய்; (தொ.) pay the piper, செலவை ஏற்றுக்கொள்; pay the piper and call the tune, செலவை ஏற்றுக்கொள்வதால் கட்டுப்படுத்தி நடத்த முற்படு.

pipe'-rolls, *n. pl.* பழைய நாட்டுக் கருவூலமன்றப் பதிவேட்டுச் சுருளகள்.

pipe'-stone, *n.* அமெரிக்க செவ்விந்தியர் புகைகுடிகுழாய் செய்ய வழங்கிய திண்ணிய செங்களிக்கல்.

pipette', *n.* வடிகுழல், சிறு அளவான நீர்மங்களை அளவாக ஊற்றப் பயன்படும் ஆய்க்களக் கூர்முகக் குழாய்க்கலம்.

pip'ing, *n.* குழல் வாசிப்பு; வேய்ங்குழல் ஊதல்; குழல் போன்ற ஒலியீடு; குழல்வரிசை; குழல்வரிசையமைவு; குழாய் அமைப்புக்குரிய துணைக்கூறு; ஆடையிழைகளுக்குக் குழாய் போன்ற நுனி ஒப்பனை; அப்பங்கள்மீது சர்க்கரையாலான கயிறுபோன்ற வரி ஒப்பனை; தண்டுமூலையின் வெட்டுத் துண்டு; துப்புரவு அகழ்வுகளுக்கான சுரங்கக்குழாய் நீர்ப் பீற்று; *a.* குழல் வாசிக்கிற; வேய்ங்குழல் ஊதுகிற; குழல் ஊதலபோன்று ஒலிக்கிற; சீழ்க்கையடிக்கிற; கீச்சிடட; மெல் உயர்விசைக்குரலுடைய; குழலிசையுடன்கூடிய; வெப்ப விசையுடன் சுறீரென்று பீற்றுகிற, வெப்புமிகக; (தொ.) piping times of peace, வேய்ஙகுழலிசைக்கும் இன்னமைதி நாட்கள்.

pipistrel', pipistrelle', *n.* வௌவால் வகை.

pip'it, *n.* வானம்பாடியினப் புள்வகை.

pip'kin, *n.* மண்கலத் தட்டு, மட்பாண்டம்.

pipp'in, *n.* ஆப்பிள் பழவகை.

piq'uancy, *n.* ஊக்காரவம்.

piq'uant, *a.* காரசாரமான; கூர்ஞ்சுவை தூண்டுகிற; சுவை யாரவம் கிளறிவிடுகிற.

pique[1], *n.* வன்மம், அகக்காழ்ப்பு; வெம்பகை, கடுஞ்சீற்றம்; *v.* உள்ளரிப்பூட்டு, நெஞ்சராவு; தற்பெருமைக்கு ஊறுசெய்; தற்பெருமைகொள்ளுவி; விருப்பு மேற்கொள்ளுவி; (தொ.) in a fit of pique, வன்ம வேகத்தில், take a pique against, எதிராகப் பகைமைக் காழ்ப்புக்கொள்.

pique², *n.* இருவர் சீட்டாட்ட வகையில் எதிரி ஆடத் தொடங்குமுன் 30 கெலிப்புப்புள்ளி எடுத்தல்; *v.* எதிரி ஆடத் தொடங்குமுன் 30 கெலிப்புப்புள்ளி எடு.

pi'que³, *n.* விறைப்பான ஊடுநூலுடைய பருத்தித்துகில்.

pi'quet'¹, *n.* 32 சீட்டுடன் இருவராடும் சீட்டாட்ட வகை.

pi'quet², *n.* (படை.) காவற் படைப்பிரிவு.

pir'acy, *n.* கடற்கொள்ளை; கொள்ளைக்குற்றம்; உரிமை மீறிய வெளியீட்டுச் செயல்.

pira'gua, *n.* கட்டுமர வகை, ஒரே கட்டையில் செய்யப்பட்ட ஒடுங்கிய நீள்படகு; இருபாய்மரமுடைய தோணி.

pir'ate, *n.* கடற்கொள்ளைக்காரர்; கொள்ளைக்கப்பல், கடற்கொள்ளைக்காரர் கப்பல்; ஆசிரியர் எட்டுரிமை கவர்பவர்; பிற உரிமை நெறிகளில் செல்லும் உந்துார்தி; மட்டுமீறிக் கட்டணம் பெறும் உந்தூர்தி; பயணிகளைச் சுரண்டும் உந்தூர்தி; *v.* சூறையாடு; இசைவுரிமையின்றி ஏட்டினைப் பதிப்பித்து நேர்மையற்ற ஆதாயமடை; கடற்கொள்ளைக்காரராகச் செயலாற்று.

pirat'ic, pirat'ical, *a.* கடற் கொள்ளைக்காரருக்குரிய; கடற்கொள்ளை சார்ந்த; கொள்ளையடிக்குந் தன்மையான; உரிமைப்பறிப்புச் சார்ந்த.

pirouette', *n.* குழு நடனத்திடையே காற்பெருவிரலூன்றிய சுற்றோட்டம்; *v.* நடனத்திடையே காற்பெருவிரலூன்றிச் சுற்றோட்டமாடு.

pis aller, (பிர.) *n.* சிறந்த வழி வேறு இல்லையென்று மேற்கொள்ளப்பட்ட நெறி.

pis'cary, *n.* மீன்பிடிக்கும் உரிமை; அயலார் நீர்ப்பரப்பில் உடையவருடனுகப் பிறருடனே சென்று மீன்பிடிக்கும் உரிமை.

piscator'ial, *a.* மீன்பிடித்தலில் தோய்ந்து பழகிய.

pis'catory, *a.* மீனவரைச் சார்ந்த; மீன்பிடிப்பிற்கு உரிய.

Pis'ces, *n. pl.* மீன்கள்; மீனராசி; மீன வான்மீன் வட்டக் குழு.

pis'ciculture, *n.* செயற்கை மீன்வளர்ப்பு.

piscifau'na, *n.* மீன் தொகுப்பு.

pisci'na, *n.* மீன்தொட்டி; பண்டை ரோமாபுரியினரின் குளிப்புத்தொட்டி; திருக்கோயிலில் நீர் வெளியேற்றத்தக்க துளையமைந்த திருக்கலங் கழுவுதொட்டி.

pis'cine¹, *n.* நீராடுதற்குரிய குளம்.

pis'cine², *a.* மீனிற்குரிய.

pisciv'orous, *a.* மீன் தின்னுகிற

pise, (பிர.) *n.* கட்டிடங் கட்டுவதற்குரிய பொருளாகப் பயன்படுத்தப்படும் இறுகிய மண்களிச் சரளைப்பாளம்.

pish, *int.* இழிவுக்குறிப்பு; வெறுப்புக்குறிப்பு; பொறுமையின்மைக் குறிப்பு.

pishogue', *n.* சூனியம்; வசியம்.

pis'iform, *a.* பயறுவடிவமான; (தொ.) pisiform bone, மணிக்கட்டு மேல்வரிசைச் சிற்றெலும்புகளுள் ஒன்று.

pis'mire, *n.* எறும்பு.

piss, *n.* சிறுநீர்; *v.* சிறுநீர் கழி.

pista'chio, *n.* இன்பசுங் கொட்டை; இன்பசுங் கொட்டை மரம், பசுங்கொட்டை நிறம்.

pis'til, *n.* மலர்ச்சூலகம், மலரின் பெண்மை உறுப்பு.

pis'tol, *n.* கைத்துப்பாக்கி; *v.* கைத்துப்பாக்கியாற் சுடு.

pistole', *n.* ஐரோப்பிய தங்க நாணயம்; 18 ஆங்கில வெள்ளி மதிப்புடைய ஸ்பானிய தங்க நாணயம்.

pis'tolgraph, *n.* உடனடி நிழற்படமெடுப்புக்கான முற்காலக் கருவியமைவு.

pis'tol-grip, *n.* கைத்துப்பாக்கிப்பிடி.

pis'tol-shot, *n.* கைத்துப்பாக்கி வேட்டு; கைத்துப்பாக்கி சுடும் தொலைவெல்லை.

pis'ton, *n.* உந்துதண்டு, குழலச்சுத் தண்டு.

pit, *n.* குழி; குண்டு, தோண்டிய பள்ளம்; சுரங்கக்குழி; பொறிக்குழி, விலங்குகளைப் பிடிப்பதற்கான கிடங்கு; படுகுழி, ஆளை வீழ்த்துவதற்கான பள்ளம்; சேவற் சண்டை அரங்கம்; நரகக்குழி, உடல் குழிவு; உடலின் உட்பொள்ளல்; தழும்புக்குழி; அம்மைத் தழும்பு; காட்சிக்கொட்டகையின் நிலத்தளம்; காட்சிக்கொட்டகையில் நிலத்தளக் குழு; உந்து வண்டிப் பந்தயத்தின் தளவாட உதவிக் கொட்டில்; விமானி இருப்பிடம்: செலாவணிக் களத்தில் தனிப்பொருள் வாணிகக் கிடங்கு: *v.* குழிவு உண்டுபண்ணு; பதனஞ் செய்யக் கிடங்கில் இடு; சேவல் முதலியவற்றைச் சண்டை அரங்கத்தில் விடு; காட்சியரங்கத்தில் விடு; எதிராக நிறுத்திப் போராட விடு; (மரு.) தொட்ட இடங் குழிவுறு; (தொ.) dig a pit for, குழியில் வீழ்த்தச் சதிசெய், அழிவுக்கு வழி வகுத்தமை; pit pony, அடிநிலத்தில் வைக்கப்பட்டுள்ள சுரங்கக் குதிரை; the pit, the pit of hell, நரகக்குழி.

pit'-a-pat, *n.* தட்டுத்தடவெனும் ஒலி, தடதடவெனும் ஓசை; *adv.* தட்டுத்தடவெனும் ஒலியுடன், தடதடவென.

pitch¹, *n.* நிலக்கீல், சூட்டில் களியாயிளகும் கரும்பசைக் கட்டிப்பொருள்; *v.* நிலக்கீல்கொண்டு பொதி, நிலக்கீல் பூசிடு, நிலக்கீல் தடவு; (தொ.) pitch black, pitch darkness, கருமிருட்டு, கும்மிருட்டு.

pitch², *n.* தூக்கி எறிவு, கப்பல் முதலியவற்றின் உந்தல்; மரப்பந்தின் முதல் வீசசெறி; சேணெறிவு, குழிப்பந்தாட்டத்தில் இலக்கிற்கு மிக அருகே விழுமாறு பந்து எறியும் உச்ச வீச்சு; சந்தையின் சரக்குச்செறிவு; நிலையாய்க் காத்திருக்குமிடம்; வேட்டைப்பருந்து இரைமீது பாயுமுன் பறக்கும் உயரம்; பருந்தின் வீழ்வு; உயரம்; விசை; படிநிலை; செறிவு; சாய்வளவு; மோட்டுச் சாய்வின் செவ்வுநிலையளவு; (இயற்.) தொடர் வரிகளின் இடைவெளியளவு; தொடர்நிலைப்புள்ளிகளின் இடைநிலையளவு; சக்கரப் பற்களின் இடைத்தொலையளவு; (இசை) தொனியளவின் செறிவு உயர்வளவு; *v.* எறி; குறிநோக்கி வீசு; சுண்டி எழுப்பு; குழிப்பந்தாட்டத்தில் பந்தை இலக்கருகில் விழுமாறு ஓங்கி எறி; குத்தி வை; நடு; உறுதியாக நிறுவு; நிலைப்படுத்து; கூடார முதலியவற்றை நிறுவு; சந்தையில் சரக்குகளைக் கடைவிரித்து வை; பாதைகளிற் கற்பாவு; முகப்பிற் பதித்து வை; மேற்பொதிந்து வை; கல் அடிவாரமிடு; (இசை.) குறிப்பிட்ட தொனி அளவில் அமை; குறித்தபாணியில் உருவாக்கு; தொனிச்செறிவெல்லையளி; உயர்வெல்லையளி; தலை குப்புற வீழ்த்து; முன்புறமாகக் கவிழ்த்துவிடு; எதிர்த்து நிற்கவை; குழிப்பந்தாட்டத்தில் பந்தை இலக்கருகே வந்து விழும்படி ஓங்கி உயரத்தில் எறி; கட்டப்பந்தாட்டத்தில் பந்தை இன்னொருவரெடுக்கும்படி மற்றவர்க்கு எட்டாது மேலாகவோ கீழாகவோ எறிந்து கொடு; தேர்வு முடிவுசெய்; உறுதிசெய்; கூடாரமிட்டுத் தங்கு; முன்னேறுக்கிப் பாய், கிடைநிலையில் ஒரு குறுக்கச்சின் எல்லைக்குள்ளாக ஊசலாடு; சாய்; செங்குத்தாகச் சரி; பிணைப்புறு, கையொடு கை கலப்புறு; (தொ.) pitch into, விசையுடன் சென்று விழு, பளுவுடன் விழு; pitch on, விசையுடன் விழு; pitch shot, குழிப்பந்தாட்டத்தில் இலக்கருகில் விழும்படியான ஓங்கிய பந்துவீச்சு; pitch upon, தற்செயலாகத் தேர்ந்தெடு.

pitch'-and-toss, *n.* நற்பேறு எறிகணைவீச்சு.

pitch'blende, *n.* கதிர்மத்துக்குரிய முக்கியக் கனிப்பொருள் வகை.

pitch'-cap, *n.* தண்டனைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்ட நிலக்கீல் உள்வரிபிட்ட தொப்பி.

pitched, *a.* நெருங்கிக்கலந்த; அடர்ந்து கைகலப்புற்ற; (தொ.) pitched battle, இருதரப்பும் நெருங்கி மோதிக் கைகலப்புற்ற சண்டை.

pitch'er¹, *n.* பரணி, பெரிய சாடி; (தாவ.) சாடிவடிவான இலைதிரியுறுப்பு.

pitch'er², *n.* எறிபவர்; பந்தாட்டவகைகளில் முதற்பந்தெறியாளர்; நிலையான இடத்தில் கடையமைக்கும் தெருவணிகர்; தெருப்பாவுகல்; நடுவதற்கான சிறுகிளை.

pitch'-far'thing, *n.* நற்பேறுநாணய எறியாட்டம்.

pitch'fork, *n.* கவர்க்கோல், வைக்கோல்வாரி; (இசை.) கவர்முள் இசைக்கருவி; *v.* கவர்க்கோலால் எடுத்துத்தள்ளு, கவர்க்கோலால் எடுத்தெறி; பணி-பதவி முதலியவற்றில் தள்ளித்திணி.

pitch'-pine, *n.* அரக்குப்போன்ற பிசின்தரும் தேவதாரு வகை.

pitch'-pipe, *n.* ஒத்தூது குழல், சுருதிக்குழல்.

pitch'stone, *n.* நிலக்கீல்போலத் தோற்றமளிக்கும் எரிமலைப் பாறை

pitch'-wheel, *n.* மற்றொரு சக்கரமியக்கும் பற்சக்கரம்.

pitch'y, *a.* நிலக்கீலால் ஆகிய; நிலக்கீலுக்கு உரிய; நிலக்கீலின் தன்மையுடைய; நிலக்கீல்போன்ற; நிலக்கீல்போன்ற கருமை நிறமுடைய.

pit'eous, *a.* இரக்கமுண்டுபண்ணுகிற; இரங்கத்தக்க; வருந்தத்தக்க.

pit'fall, *n.* இடறுகுழி, விலங்குகளைப் பொறியாக வீழ்த்துவதற்கு அகழப்பட்ட குழி; சதிப்பொறி, வீழ்த்துபொறி.

pith, *n.* தாவரங்களின் உள்ளீடான மென்சோறு; பழவகைகளின் தோட்டு உள்வரி மாப்பொருள்; மைய இழைமம்; நடுநாடி; நடுத்தண்டின் மச்சை; உட்கரு, உள்ளீட்டுப்பகுதி; உயிர்க்கூறு, கருச்சத்து; ஆற்றல், வல்லமை; தனிச்சிறப்பு; சுருக்கம், சாரம்; கருப்பொருள், உயிர்க்கூறான பொருள்; நெட்டி; *v.* தண்டெலும்பகற்றி விலங்கினைக் கொல்.

pithecan'thrope, *n.* குரங்குமனிதன், மனித இனத்துக்கும் குரங்கினத்துக்கும் இடையே உயிரின வளர்ச்சி இணைப்பாயிருந்ததாகக் கருதப்படும் உயிரினம்.

pithec'oid, *a.* வாலில்லாக் குரங்குபோன்ற; குரங்கியல்பு வாய்ந்த.

pith'y, *a.* மெல்லிய உள்ளீடுடைய; மெல்லிய உள்ளீட்டிற்குரிய; மெல்லிய உள்ளீடுபோன்ற; மெல்லிய உள்ளீடு நிரம்பிய; மணிச்சுருக்கமான; சுருக்கமும் ஆற்றலும் மிக்க; பொருட் செறிவுள்ள.

pit'iable, *a.* இரங்கத்தக்க; வருந்தத்தக்க; ஏளனத்துக் குரிய.

pit'iful, *a.* இரக்கமுடைய; ஏளனத்துக்குரிய.

piti'less, *a.* இரக்கங்காட்டாத, இரக்கமற்ற.

pit'man, *n.* சுரங்கத்தில் இயந்திரப்பகுதிகளை இணைக்கும் வேலையாள்.

pit'pan, *n.* நடு அமெரிக்க உட்குடைவுப் படகு.

pit'-pat, *n., adv.*=pit-a-pat.

pitt'ance, *n.* சிறுகட்டளை; இரக்கப்படி; சிறு தொகை, சிறிய அளவு.

pitt'ite, *n.* கொட்டகை நிலத்தளத்தில் அமர்ந்திருப்பவர்.

pitu'itary, *a.* சீழுக்குரிய; சீழ் சுரக்கிற; கபத்துக்குரிய; பசைநீர் கசியவிடுகிற; (தொ.) pituitary body, pituitary gland, கபச்சுரப்பி, குருக்கழலை, உடல்வளர்ச்சிக்கு முக்கியமாக உதவுவதாகக் கருதப்படும் தூம்பற்ற மூளையடிச் சுரப்பி.

pitu'itrin, *n.* குருக்கழலை நீர்; மூளையடிச் சுரப்பியினின்று சுரக்கும் இயக்குநீர்.

pit'y, *n.* இரக்கம்; இரக்கத்துக்கு ஏதுவான செய்தி; வாய்ப்புக்கேடான செய்தி; கழிவிரக்கத்துக்குரிய செய்தி; வருந்தத்தக்க செய்தி; வருந்தத்தக்கநிலை; *v.* இரங்கு, கண்டிரக்கப்படு, நினைந்து வருத்தமுறு.

pityri'asis, *n.* (மரு.) சிதல்சிதலாயுரியும் தோல்நோய்.

piv'ot, *n.* சுழல்முளைப்பகுதி, திருகு குடுமி; இயக்க மையம்; படை அணித்துறையில் சுழலியக்க மையமாக நிற்பவர்; *v.* சுழல்முளைமூலம் இணை; திருகு குடுமி இணைப்பளி; சுழல் முளைமீது திருகி இயங்கு.

piv'otal, *a.* திருகு முளையியல்புடைய.

pix'ie, *n.* கூளி, நற்குறளி.

pix'ilated, *n.* (பே-வ.) சிறிது அறிவுதிறம்பிய.

pix'y, *n.*=pixie.

pizzica'to (இத்.) *n.* (இசை.) கைவிரலால் நரம்புளர்ந்து பாடப்படும் பண்; *a.* கைவிரலால் நரம்புளரப்படுகிற; *adv.* கைவிரலால் நரம்புளர்ந்து.

plac'able, *a.* தணிக்கக்கூடிய; தணிந்த; பொறுக்கும் பண்புடைய.

plac'ard[1], *n.* சுவரொட்டி; விளம்பர அட்டை.

placard'[2], *v.* சுவர்மீது விளம்பரம் ஒட்டு; சுவரொட்டி மூலம் விளம்பரஞ் செய்.

placate', *v.* இணக்குவி; சாந்தப்படுத்து.

place, *n.* இடம்; வெளியிடம், முற்றம்; நிலம்; நிலப்பகுதி; நகர்; ஊர்; கிராமம்; மனை; கட்டிடம்; தங்கிடம்; உறையுள்; இருக்கை; பரப்புக்கூறு; பிழம்புக்கூறு; உடலின் பகுதி; ஏட்டின்கூறு; பணியிடம்; பதவி; சமுதாயப்படி; படிமுறை, தரம்; உரிமையிடம்; உரியபடி; தகவிடம்; கடமை; உரிய நிலை; நேர்நிலை; தகுதிப் படிவரிசை; வாதப் படிவரிசை; (கண.) எண் தானம், பதின்முறைப்படித்தானம்; *v.* வை; இடத்தில் அமர்வி; ஒழுங்குபடுத்திவை; சரியான இடத்தில் வை; குணங்குறை மேவுவி; பணியில் அமர்த்து; பணி அமர்த்திக்கொடு; பணத்தை முதலீடுசெய்; சரக்குகளை வாடிக்கைக்காரர்களிடம் ஒப்படை; சரக்குகளின் அனுப்பாணை சேர்ப்பித்துவிடு; நம்பிக்கை வை; இடம் குறித்தமை; வரிசையிடம் வகுத்தமை; இடம்குறித்துணர்; நினைவில் குறித்துணர்; இனம் கண்டறி; பந்தயத்தில் முதல் மூன்றினுள் ஒன்றாகக் குறி; இலக்குநோக்கி வைப்புப்பந்தினை அடி; (தொ.) give place to, இடம் விட்டுக்கொடு; பின்னுரிமையாளராகப்பெறு; in place, ஒழுங்காக, பொருத்தமாக; தகுதியுடையதாக; in place of, பகரமாக, பதிலாக; out of place, பொருத்தமின்றி; முரண்பாடாக; தகுதியற்றதாக; take place, நடைபெறு; முந்திடங்கொள்

placeb'o, *n.* மாண்டவர்மீதான வழிபாட்டுப்பாடலின் முதல் எதிரிசைப்பு; அந்திக்கால மருந்து; *pl.* placeb'oes, placeb'os.

place'-brick, *n.* காய்ச்செங்கல், சூளையில் காற்றுப்பக்கமாய் இருந்ததனால் அரைகுறை வேக்காடுடைய செங்கல்.

place'-kick, *n.* வைப்புப்பந்தடி.

place'man, *n.* காதன்மை அலுவலர், மேலவர் தன்னல ஆதாயங்கருதி அமர்த்திய பணித்துறைவர்.

placen'ta, *n.* நச்சுக்கொடி; (தாவ.) சூலகத்தின் கருவக ஒட்டுப்பகுதி.

placen'tal, *a.* நச்சுக்கொடி சார்ந்த.

pla'cer, *n.* கனிவளங் காணத்தக்க ஆற்றின் வண்டற்படிவு.

pla'cet, (ல.) *n.* பிடித்தம், விருப்பம்; *v.* எனக்குப் பிடித்தமாயிருக்கிறது; (தொ.) *non placet,* பிடித்தமின்மை, எனக்குப் பிடித்தமில்லை.

pla'cid, *a.* அமைந்த; மெல்லமைதிவாய்ந்த; விழுமிய வீறமைதிமிக்க.

placid'ity, *n.* மெல்லமைதி, ஆர்ந்தமைந்த தன்மை.

plack'et, *n.* பெண்டிர் பாவாடை உட்பை.

plack'et-hole, *n.* பெண்டிர் பாவாடையின் உட்பைவாய்.

plac'oid, *a.* செதிள் வகையில் தகடுபோன்ற; மீன்வகையில் தகடுபோன்ற செதிள்களையுடைய.

plafond, (பிர) *n.* மச்சடி; சித்திரம் வரைந்த அறைமுகடு; அறைமுகட்டோவியம்.

plag'al, *a.* (இசை.) ஐந்தாம் நரம்புக்கும் அதன்மேற்கேள் விக்கும் இடைப்பட்ட குரல்களையுடைய; (தொ.) plagal cadence, (இசை) நாலாம் நரம்பிணைவு உயிர்நரம்படுத்து முன்வரும் இழைவுநிலை.

plage, *n.* நடப்புநயக் கடற்கரை.

pla'giarism, *n.* எழுத்துத்திருட்டு; கருத்துத்திருட்டு.

pla'giarist, *n.* எழுத்தினைக் களவாடுபவர்; கருத்தினைக் களவு செய்பவர்.

pla'giarize, *v.* எழுத்துத்திருட்டுச் செய்; கருத்தினைத் திருடு.

pla'giary, *n.* எழுத்துத்திருட்டு ; கருத்துத்திருட்டு ; எழுத்தினைக் களவாடுபவர் ; கருத்தினைத் திருடுபவர்.

plagiocephal'ic, *a.* மூளையின் முன்னும்பின்னும் வேறு வேறு பக்கமான பாதிகளில் வளர்ச்சியடைந்துள்ள.

plagioclas'tic, *a.* கனிப்பொருளில் சாய்வெட்டு வரையுடைய.

pla'giostome, *n.* சாய்வரை வாயுடைய மீன்வகை.

plague, *n.* கொள்ளைநோய்; ஒழுக்கமுறை அழிகேட்டுக்குரிய செய்தி; தொல்லை, தொந்தரவு; *v.* கொள்ளை நோய்க்கு ஆட்படுத்து ; தொல்லையூட்டு, தொந்தரவு கொடு.

plague'some, *a.* தொந்தரவு தருகிற; தொல்லையளிக்கிற.

plague'-spot, *n.* கொள்ளைநோயின் வீக்கங்காணுமிடம் ; ஒழுக்க அழிகேட்டிற்கு மூலகாரணம் ; பழிகேட்டிற்குத் தொடக்கமான பகுதி.

plag'uy, *a.* (பே-வ.) தொல்லையூட்டுகிற ; பெரிய அளவினதான ; *adv.* (பே-வ.) தொல்லையூட்டும் முறையில் ; பெரிய அளவில்.

plaice, *n.* தட்டை உணவுமீன் வகை.

plaid, *n.* கம்பளச் சால்வை வகை; வண்ணப்பட்டையிட்ட கம்பளித் துணிவகை; புறஆடை; வட ஸ்காத்லாந்து நாட்டுப் புற ஆடைக்குரிய துணி.

plaid'ed, *a.* கம்பளித்துணி வகையாலான; கம்பளச் சால்வை யணிந்த ; வட ஸ்காத்லாந்து நாட்டுப்புற ஆடையணிந்த.

plain[1], *n.* சமநிலம் ; சமவெளி ; புறவெளி, திறந்த இடம் ; தாழ் நிலம்; ஆற்றுப்படுகை; *a.* தெளிவான; எளிய, எளிதில் உணரக்கூடிய ; சிக்கலற்ற; வண்ணந்தோய்விக்கப்பெருத; எளிமை வாய்ந்த ; பகட்டற்ற ; உயரின்ப வாய்ப்பு வளங்களற்ற ; கரவடமற்ற ; ஒளிவுமறைவற்ற ; நேரடியாகப் பேசுகிற ; நாட்டுப்புற நடையுடை தோற்றமுடைய ; அழகற்ற, கவர்ச்சியற்ற, மிகப்பொதுப்படையான தோற்றம் வாய்ந்த ; *adv.* தெளிவாக ; (தொ.) be plain with, மறையாது பேசு ; plain cards, படமில்லாச் சீட்டுக்கள் ; plain clothes, பணிமுறைச் சார்பற்ற ஆடை ; plain dealing, நடைநேர்மை, கரவின்மை ; plain living, எளிய வாழ்க்கை ; plain sailing, இடர்ப்பாடற்ற கடற்பயணம் ; இடர்ப்பாடில்லாத எளிய முயற்சி ; plain suit, துருப்பல்லாச் சீட்டுத் தொகுதி ; plain tile, தட்டையோடு.

plain[2], *v.* (செய்.) புலம்பு ; முறையீடுசெய் ; கரைந்தழு.

plain'-chant, *n.* மாறுபாடில்லா ஒற்றைப்பண்ணிசைப்பு.

plain'-song, *n.* இடைக்காலத் திருக்கோயிலில் தனிக்குரல் நேர் பண்ணிசைப்பு ; பலர் இணைந்து பாடுதற்குரிய இசை.

plain'-spoken, *a.* மறையாது பேசுகிற; வெளிப்படையாகக் கூறப்பட்ட.

plaint, *n.* (சட்.) குற்றச்சாட்டு ; முறையீடு; (செய்.) குறையீடு ; புலம்பல்.

plain'tiff, *n.* முறையீட்டாளர், வாதி, வழக்காடி.

plain'tive, *a.* துயரார்ந்த, அவலமிக்க, சோகமான.

plait, *n.* பின்னல் மயிர்க்கற்றை; இரண்டுக்கு மேற்பட்ட வைக்கோற் புரிமுறுக்கு ; இழைக்கச்சைப் பின்னல் ; துணிமடிப்பு வரை ; *v.* சடைபின்னு ; புரிமுறுக்கு ; இழைதிருகி இணை.

plan, *n.* திட்டம்; வரைவு ; ஒழுங்கமைப்பு; கால-இட அட்டவணை ; நகரம்-நகரப்பகுதி-நிலம் முதலியவற்றின் நிலவரைப் படிவம் ; கட்டிட உருவரைப்படிவம் ; *v.* திட்டமிட்டு உருவாக்கு ; திட்டமிடு ; முன்னேற்பாடுசெய் ; கருத்துரு அமை ; உருவரைப்படிவம் வரை ; நிலவரைப்படிவம் உருவாக்கு.

planch, *n.* சில்லு ; குறுங்கல்.

plan'chet, *n.* உருப்பெரு நாணயத் தட்டம்.

planchette', *n.* எழுத்தியக்கப் பலகை; ஆவியுலகத் தொடர்புப் பலகை.

plane[1], *n.* தளம், சரிமட்டமான பரப்பு: சமதளப்பரப்பு: சமதளப்பரப்புநிலை ; விமானம், வானவூர்தி ; வானவூர்திப்பகுதிக்கு ஆதாரமான மென்தளப்பலகை: மணிக்கல்லின் பட்டை முகம் ; *a.* சமதளமான, சரிமட்டமான ; சரிசமதளத்தில் கிடக்கிற, தளமட்டமான ; *v.* வானூர்தியில் இயங்கு ; வானூர்திப்பயணஞ் செய்; தளமட்டக்கருவியால் நிலப் பரப் பாராய் ; (தொ.) inclined plane, சாரம், சாய்தள ஏற்ற இறக்கத் துணைக்கருவி ; plane chart, நிலவுலக நேர்வரை நிரைவரைகள் சமதூர வரைகளாகக் காட்டப்படும் வரைப் படிவுப்படம் ; plane sailing, கப்பலின் சமதள இயைபுப் போக்கு ; இடக்கற்ற இழைவுநெறி.

plane[2], *n.* இழைப்புளி ; உலோக இழைப்புக்கருவி ; *v.* இழைத்து வழவழப்பாக்கு ; உலோகத்தை இழைத்துத் தளமட்டப்படுத்து ; மேடுபள்ளம் அகற்றி மட்டத்தளப் படுத்து.

plane[3], *n.* கைவடிவ அகல் இலைகளையுடைய மரவகை.

plan'et[1], *n.* (வான்.) கோள் ; (சோதி.) கிரகம் ; (தொ.) major planets, புதன்-சுக்கிரன்-பூமி-செவ்வாய்-வியாழன்-சனி-விண்மம்-சேண்மம்-சேணுகம் ஆகிய ஒன்பது பெருங்கோள்கள் ; minor planets, செவ்வாய் வியாழனுக்கு இடையேயுள்ள குறுங்கோள்கள் ; primary planets, கதிரவனை நேரே சுற்றிச்செல்லும் பெருங்கோள்-குறுங்கோள்கள் ; secondary planets, கதிரவனை நேரடியாகச் சுற்றுது கோள்களில் ஒன்றைச் சுற்றும் துணைக்கோள்கள்.

plan'et[2], *n.* நாள்விருந்திற்கேற்ப நிறம் மாறும் திருவுணு வழிபாட்டுக் குருமார் கையுறுப்பற்ற உடை.

plane'-table, *n.* மட்டப் பலகை மேசை.

planetar'ium, *n.* கோள் நிலை இயக்கங்களைக் காட்டும் பொறி.

plan'etary, *a.* வான்கோள்களுக்குரிய ; நிலவுலகுக்குரிய ; இம்மைக்குரிய, இவ்வுலக வாழ்வுசார்ந்த; உலகியலான; நிலை திரிகிற ; நிலை திரும்புகிற ; (தொ.) planetary hour, இயற் பகலின் அல்லது இயலிரவின் பன்னிரண்டில் ஒருகூறு வேளை ; planetary influence, கோள்விளைவு, கிரக பலன் ; planetary system, கதிரவன் மண்டலம்.

planetes'imal, *n.* கோளணு, குளிர்நிலையில் கோள்கள் திரண்டுருவாவதற்குக் காரணமாயிருந்ததாகக் கருதப்படும் கோள்நிலை அணுத்துகள்.

plan'etoid, *n.* குறுங்கோள், செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே கதிரவனைச் சுற்றிவரும் ஆயிரக்கணக்கான சிறு கோளங்களில் ஒன்று.

plan'et-stricken, plan'et-struck, *a.* குழப்பமுற்ற, திகைப்புண்ட.

plan'gency, *n.* முழக்கம், சிலிர்ப்பூட்டும் ஓசை.

plan'gent, *a.* இரட்டும் ஓசையுடைய ; விதிர்விதிர்க்கிற.

planim'eter, *n.* தளமட்டமானி.

planimet'ric, planimet'rical, *a.* தளப்பரப்பளவை சார்ந்த.

planim'etry, *n.* தளப்பரப்பு அளவை.

planipet'alous, *a.* மலர்கள்வகையில் தட்டையிதழ்களுடைய.

plan'ish, *v.* மெருகூட்டு ; தடிப்புடையதாக்கு.

plan'isher, *n.* தட்டையாக்குங் கருவி.

plan'isphere, *n.* கோளத்தட்டமைவு, கோளப்பகுதியைத் தட்டையான தளத்தில் படிவித்துக்காட்டும் அமைவு; (தொ.) revolving planisphere, இடவேளை வான்காட்டி, குறித்த இடவேளையிற் கட்புலனாகும் வான்கோளப்பகுதி காட்டும் அமைவு.

plank, *n.* பலகை ; அரசியல் கோட்பாட்டுத்திட்டம் ; கொள்கைத்திட்டம் ; *v.* பலகைகொண்டு தளம் பாவு; பலகையால் மூடு; பலகை இணைத்தமை; (தொ.) plank bed, கடுங்காவல் கைதிகளுக்குரிய மெத்தையற்ற படுக்கை ; walk the plank, கண்மூடிச்சென்று கடலில் விழு.

plank'ing, *n.* பலகைபாவுதல்; பலகையிணைப்பு; பலகை பொதிவு; பலகைத்தொகுதி; பலகைகளாலான வேலைப் பாடு.

plank'ton, *n.* (உயி.) மிதவியம், கடல் முதலிய நீர்ப்பரப்பின் மேல்-அடித்தள ஆழங்களில் உள்ள மிதவை நுண்ம உயிரினத் தொகுதி.

planoconc'ave, *a.* கண்ணுடிவில்லைகள் வகையில் ஒருபுறம் தட்டையும் ஒருபுறம் உட்குழிவும் ஆன.

planocon'vex, *a.* கண்ணுடிவில்லை வகையில் ஒருபுறம் தட்டையும் ஒருபுறம் மேற்குவிவும் ஆன.

planom'eter, *n.* தளப்பரப்பு அளக்கப் பயன்படும் வார்ப் பிரும்புத் தகடு.

plant, *n.* மரவினம், தாவரம்; செடி; கன்று; முளை, கிளைக் கன்று; பயிர்; வளர்ச்சி; முளைப்பு; உயிர்த்திறம்; உயிர்ப்பு; நிற்கும் நிலை, நிலையமைதி; முன்னேற்பாடான ஒப்படைப்புப் பொருள்; துணைக்கருவித்தொகுதி; இயந்திர சாதனம்; தொழிற்சாலை; அறிவுத்துணையமைவு; கலைத்துணையமைவு; *v.* நடு; பயிரிடு; நாற்றுக நடவுசெய்; நத்தை-மீன் முதலியன வளர்வதற்காக நீர்நிலையில் இடு; மரம்வளர்; பயிரேற்று; குடியிருப்பமை; படியவை; ஊன்று; மனத்தில் ஊன்றுவி; குறிவைத்துக் குத்து, எற்று; வித்திடு; நிலத்தில் ஊன்று; புதைத்துவை; போலி வளங்காட்டச் சுரங்கத்தேட்ட இடத்தில் மண்ணில் பொன்பொடி கலந்துவை; ஓச்சு, குத்துவிடு, அடிகொடு; இடத்தில் ஒற்றுடவிடு.

Planta'genet, *n.* (வர.) இரண்டாம் ஹென்றி முதல் மூன்றும் ரிச்சர்டு வரையுள்ள பிரிட்டிஷ் மன்னர் குடிமரபு.

plan'tain[1], *n.* பறவைத்தீனியாகப் பயன்படும் விதைகளை யுடைய பேரிலைக் குறுஞ்செடிவகை.

plan'tain[2], *n.* வாழை; வாழையின மரவகை; வாழைப்பழம்; வாழைக்காய்.

plan'tar, *a.* (உள்.) உள்ளங்காலிற்குரிய.

planta'tion, *n.* தோப்பு; பண்ணை; பருத்திவிளை; புகையிலைத் தோட்டப்பண்ணை; (வர.) குடியேற்றம்; குடியேறுகை; (தொ.) plantation song, (வர.) உழவுப் பாட்டு.

pla'nter, *n.* பண்ணையாள்; பண்ணையார்; (வர.) அயர் லாந்தில் ஆங்கிலக் குடியேற்றத்தார், குடியகற்றப்பட்டவர் நிலத்தில் குடியிருப்புப்பெற்றவர்; நடவு இயந்திரம்.

plant'igrade, *n.* உள்ளங்கால் பதித்துநடக்கும் விலங்கினம்; உள்ளங்கால் பரப்பு முழுவதும் நிலத்தில் ஒருங்கே படிய வைத்து நடக்கும் மனிதர்; *a.* உள்ளங்கால் பதித்துநடக்கிற; உள்ளங்கால் பரப்பு முழுதும் பதித்து நடக்கிற.

plant'-louse, *n.* செடிப்பேன்.

plantoc'racy, *n.* பண்ணையார் ஆட்சி.

planx'ty, *n.* மூவகைச் சந்தப்போக்குடைய அயர்லாந்து இசைப்பாங்கு.

plaque, *n.* அணிகிளர் பலகை; பெயர்ப்பொறி கல்; பதக்க வில்லை; (மரு.) வீக்கத்தழும்பு.

plash[1], *n.* சதுப்புநிலக் குளம், குட்டை.

plash[2], *n.* முக்குளிப்பு, தடாற்குதிப்பு; *v.* நீரில் துடுமெனப் பாய்.

plash[3], *v.* வேலியாகத் தழைகிளைகளை வளைத்து வரிந்து கட்டு; தழைகிளை வரிந்து வேலி அமை; தழைகிளை வரிந்து வேலி செப்பஞ்செய்.

plash'y, *a.* நீர்நிலை சார்ந்த, சதுப்பு நிறைந்த.

plasm, *n.* உயிர்மத்தின் ஊன்மம், உயிரியற்பொருள்.

plas'ma, *n.* பசும்படிகக் கல் வகை; நிணநீர், குருதியில் நுண்ணிழைமங்கள் மிதப்பதற்குரிய அடிப்படை ஊனீர்க் கூறு; உயிர்மத்தின் ஊன்மக்கூறு.

plasmat'ic, plas'mic, *a.* ஊனீர் சார்ந்த; ஊன்மஞ் சார்ந்த.

plasmod'ium, *n.* கருவுள் இணையாத அணு உயிர்களின் திரள்பிழம்பு; முறைக்காய்ச்சலுக்குக் காரணமான ஒட்டுயிர் நுண்மம்; *pl.* plasmod'ia.

plas'molyse, *v.* ஊன்ம உலர்வுக்கு ஆட்படுத்து; தாவர உயிர்மச்சுரிப்பு ஊட்டு.

plasmol'ysis, *n.* ஊன்ம உலர்வு, நீரிழப்பால் ஏற்படும் ஊன்மச்சுருக்கம்; தாவர உயிர்மச்சுரிப்பு, விஞ்சிய செறி வார்ந்த நீர்மத்தோய்வு காரணமான தாவர உயிர்மச் சுருக்கம்.

pla'ster, *n.* கட்டு; அரைசாந்து, சுவர் மச்சடிகளின் பரப்பிற் பூசப்படும் மணல்-மயிர் கலந்தமென்சாந்துக்கலவை; சுண்ணக் கந்தகி, *a.* அரைசாந்தாலான; *v.* மருத்துவக்கட்டிடு; கட்டிட்டு மருத்துவஞ் செய்; பிசைந்து பூசு; அப்பு, பூசு; கொட்டிப் பரப்பு, வாரி அப்பு, மட்டின்றிப்பூசு; மேல் ஒட்டு; அரை, பொடியாக்கு; வேட்டுக்களால் தகர்; மென்பரப்பாக்கு; மெழுகிப்பசப்பு; களிக்கல் பொடியூட்டு; நீறுகொண்டு ஒட்டி யிணை; (தொ.) court plaster, வெட்டுக்காயங்களுக்கான ஒட்டுப்பசைத்துணி; mustard plaster, காரசாரமான செய்தி; காரசாரமான ஆள்; plaster of Paris, வார்ப்புக்குடுவையாக வும் காரை மண்ணுகவும் பயன்படும் களிக்கல் தூள்.

plas'tic, *n.* குழைம ஒட்டுறுப்பறுவை; வார்ப்புப்பொருள்; *a.* குழைத்து உருவாக்கத்தக்க; குழைத்துருவாக்கப்பட்ட; குழைமக்கலை சார்ந்த; குழைவான, எளிதில் உருவேற்கிற; எளிதில் மாறுகிற, நிலையுருவற்ற; உருமாற்றத்தக்க, உருத் திரிபூட்டத்தக்க; இருது தளர்ந்து வளைகிற; இயல்வளர்ச்சி யூட்டுகிற; உயிரியல் இழைமமாக்கத்தக்க; பருப்பொருள் கடந்த நுண்ணியல் திறம் ஆக்கத்தக்க; உயிரியல் இழைம ஆக்கத்துடன் கூடிய; (தொ.) plastic arts, குழைமக்கலைகள், உருவாக்கஞ் சார்ந்த சிற்பம்-மட்பாண்டத்தொழில் முதலிய கலைகள்; plastic clay, (மண்.) புத்துயிரூழியின் தொடக்க நடுவூழிப்படுகை; plastic surgery, ஒட்டுறுப்பு அறுவை.

plas'ticine, *n.* செயற்கைக் களிமண், குழைவுருவாக்கத்துக் குரிய களிமண்ணினிடமாகப் பள்ளிகளில் பயன்படுத்தப் படும் செயற்கைக் குழைமப்பொருள்.

plasti'city, *n.* குழைவியல்பு; எளிதில் உருமாறுந் தன்மை.

plas'ticizer, *n.* குழைபொருட் குழுமத்தை உருவாக்கும் அல்லது வளமாக்கும் பொருள்.

plas'tics, *n. pl.* குழைபொருட் குழுமம்; குழைவுப்பொருள் தொகுதி; வார்ப்படப் பொருள்கள்.

plas'tron, *n.* வாட்போர் வீரனின் தோல்பொதிந்த மார்புக் கவசம்; குதிரைவீரரின் கழுத்தணிகாப்பு மார்புக்கவசம்; பெண்டிர் மார்புக்கச்சின் அணிமுகப்பு; ஆடவர் திண்மெரு கிட்ட உட்சட்டை முகப்பு; ஆமையோட்டின் வயிற்றுப்பகுதி; விலங்குகளின் வயிற்றுப்பகுதித் தோடு.

plat[1], *n.* திடல், நிலப்பகுதி.

plat[2], *n.* பின்னல், சடை, புரிமுறுக்கு; *v.* பின்னிவிடு, முறுக்கி இணை.

plat[3], (பிர.) *n.* உணவுத்தட்டம்.

plat'an, *n.* கைவடிவ அகல் இலைகளையுடைய மரவகை.

plate, *n.* உணவுத்தட்டம்; தட்ட உணவுத்தொகுதி; தாம் பாளம்; திருக்கோயில் காணிக்கைத்தட்டம்; தட்டு; திண்ணிய தகடு; தகட்டுப்பாளம்; கவசத்தகடு; இயந்திரத்தின் தட்டு றுப்பு; செதுக்குத்தகடு, செதுக்குதற்குரிய மென்பரப்புத் தட்டு; செதுக்குத்தகட்டுப் படிவுரு; ஏட்டில் படம் உடைய தனிச்செருகிதழ்; முற்காலத்தகட்டுத் தண்டவாளம்; ஆசிரியர் பெயர்-சின்னம் முதலியன பொறித்த ஏட்டுப் பெயர் முத்திரைத்தகடு; பெயர்ப்பொறிப்புத் தகடு; வாயில் முகப்புத் தகடு; புதைபேழை முகப்புத்தகடு; ஒளிப்பதிவுக்கான நிழற் படத்தகடு; நிலையச்சுப் பதிவுத் தகடு; நிலையச்சு மின்பதி தகடு; சுவர்முகட்டு உத்திரம், கதவு பலகணிகளின் உருச் சட்டக் கையிணைப்பான விட்டம்; உலோகக் கலங்களின் தொகுதி; பந்தயப் பரிசுக்கலம்; திருக்கோயில் காணிக்கைத் தட்டம்; தட்டக் காணிக்கை; பொய்ப்பல் இணைப்பு அடித் தகடு; பந்தாட்டத்தில் பந்தடிகாரர் நிலையிடம்; *v.* தகடுபொதி; கப்பல் வகையில் தகட்டுக்காப்பிடு; பூணணி வகையில் தகட்டுப்பொதிவு செய்; உலோகமீது வெள்ளி பொன் மென்றகடு பொதி; அச்சுநிலைப்படிவத் தகடெடு;

(தொ.) half plate, நிழற்படத் துறையில் $4\frac{3}{4}'' \times 6\frac{1}{2}''$ அளவு; home plate, கட்டப்பந்தாட்டத்தில் பந்தடிக்காரர் இட எல்லை; pitcher's plate, கட்டப்பந்தாட்டத்தில் பந்தெறிகாரர் இடம்; plate glass, முகக்கண்ணாடிக்கான வார்ப்புப்பளிங்குத் தகடு; கடைப்பலகணிக் கண்ணாடித்தகடு.

plateau', *n.* மேட்டுநிலம், நிலமேடு; பூவேலைப்பாடுடைய தட்டம்; அணியொப்பனைப் பட்டயச் சின்னம்; தட்டை முகட்டினையுடைய பெண்டிர் தொப்பி; *pl.* plateaus', plateaux'.

plate'-basket, *n.* கரண்டி முதலியன வைக்குங் கூடை.

plate'ful, *n.* தட்ட அளவு.

plate'layer, *n.* தண்டவாளம் பழுதுபார்க்குநர்.

plate'-mark, *n.* முத்திரை.

plat'en, *n.* அச்சகத்தில் அச்சுத்தாள் அழுத்துந் தகட்டுப் பாளம்; தட்டச்சில் தாள் அழுத்துந் தகடு.

plat'er, *n.* ஈயம் பூசுபவர்; வெள்ளித்தகடு பொதிபவர்; கப்பல் கட்டும் தொழிலில் மேல் தகட்டுப்பாளம் பொருத்துபவர்; பட்டிப்புரவி, பட்டயச்சின்னங்களையே முன்னிட்டுப் பந்தயத்தில் கலந்துகொள்ளும் கீழ்த்தரப் பந்தயக்குதிரை.

plate'-rack, *n.* தண்டயப்பலகை, உலோகக்கலன் ஏந்து சட்டம்.

plat'form, *n.* பேச்சுமேடை; தளமேடை; கலையரங்க மேடை; தனித்துறை மேடையரங்கம்; மேடையில் அமர்ந்திருப்பவர்; மேடைத்தளம்; மேட்டுநிலம்; தொடர்வண்டி நிலையத்தின் பரப்புமேடை; பீரங்கிமேடு; பாதையோர நடைமேடை; மேடைப்பேச்சுத்துறை; கட்சிக்கோட்பாட்ட டிப்படை; கட்சித் தேர்தலறிவிப்பு; விவாத அடிப்படை; *v.* மேடைமீது வை; மேடைமீது தோன்று; மேடைமீது பேசு; மேடையமைத்துக் கொடு; திட்டமமை.

plat'ing, *n.* முலாம்பூசுதல்; தங்கப்பூச்சு; வெள்ளிப்பூச்சு; தகடுட்டுதல்; பரிசிற்கலன் பந்தயம்.

platin'ic, *a.* நாலிணைதிற விழுப்பொன் சார்ந்த.

platinif'erous, *a.* விழுப்பொன்னடங்கிய.

plat'inize, *v.* விழுப்பொன் பூச்சிடு.

plat'inoid, *n.* செம்பு-துத்தம் முதலிய உலோகங்கள் அடங்கிய கலவை; விழுப்பொன்னுடன் இணைந்து கிடைக்கும் உலோகம்.

plat'inotype, *n.* விழுப்பொன் மைத்தூளினுற் செய்யப்படும் நிழற்பட அச்சுமுறை.

plat'inous, *a.* ஈரிணைதிற விழுப்பொன் சார்ந்த.

plat'inum, *n.* விழுப்பொன், அணு எடை 78 கொண்ட விலைமிக்க ஒண் சாம்பர்நிற உலோகத்தனிமம்; *a.* விழுப்பொன்னாலான; விழுப்பொன்னுக்குரிய; (தொ.) platinum black, கரித்தூள் வடிவான விழுப்பொன்; platinum blonde, பொன் சாம்பர்நிற மயிருடைய பெண்; platinum metals, விழுப்பொன்னுடன் இணைந்து கிடைக்கும் உலோகங்கள்.

plat'itude, *n.* பயனில் பெருங்கூற்று; வெற்றுரை.

platitudinar'ian, *n.* வறுமொழியாளர்; *a.* வெற்றுரையுடைய.

platitud'inize, *v.* வெற்றாரவாரவுரை கூறு; மேலீடான பொதுநிலை மெய்ம்மைகளையே கூறு.

Platon'ic, *a.* பிளேட்டோ (கி. மு. 427-347) என்ற பண்டைக் கிரேக்க அறிவருக்குரிய; பிளேட்டோவின் கோட்பாடு சார்ந்த; கருத்தியலான; கோட்பாட்டு நிலைப்பட்ட; ஆன்ம ஈர்ப்புடைய; சொல்லளவான, செயல்சாராத; (தொ.) Platonic love, பொறியுணர்ச்சியில்லாக் காதல், ஆன்ம நேயம்; Platonic year, வான்கோளங்கள் வேறு வேறு தனி நிலைப்போக்கு முற்றித்தொடக்க நிலையடைவதற்குப் பிடிக்கும் பேரூழிவட்டம்.

Platon'icism, *n.* மெய்யுறு புணர்ச்சியில்லாக் காதல்.

Platon'ics, *n. pl.* பொறியுணர்ச்சியில்லாக் காதல்; ஆன்மநேயக் காதலர் பேச்சு; ஆன்மநேயக் காதலர் தொடர்பு.

Plat'onism, *n.* பிளேட்டோ என்ற பண்டைக்கிரேக்க அறிவரின் கோட்பாடு; ஆன்ம நேயம்.

Plat'onist, *n.* பிளேட்டோ என்ற பண்டைக் கிரேக்க அறிவரைப் பின்பற்றுபவர்

platoon', *n.* படைப்பிரிவு; காலாட்படைப் பிரிவின் குண்டு வீச்சு; குண்டுவீச்சு நடத்துவதற்கான சிறு காலாட்படைப்பிரிவு.

platt'en, *n.* = platen.

platt'er, *n.* மரவை; தாம்பாளம், தட்டு.

plat'ypus, *n.* வாத்தலகுடைய ஆஸ்திரேலிய நீர்வாழ் விலங்கு.

plat'yrhine, plat'yrrhine, *n.* தென் அமெரிக்க குரங்கு வகை; *a.* அகன்ற மூக்குடைய.

plaud'its, *n. pl.* கைகொட்டாரவாரம், கைதட்டு முழக்கம்; முனைப்பார்வப் பாராட்டு.

plaus'ible, *a.* சரியாகத் தோற்றமளிக்கிற, எளிதில் நம்பத்தக்க; வாத வகையில் நேர்மையாகத் தோன்றுகிற; ஆள் வகையில் புறத்தோற்றத்தில் நேர்மையானவராகத் தெரிகிற.

play, *n.* விளையாட்டு; களரியாட்டம்; பயிற்சி விளையாட்டு; மனைப்புற ஆட்டம்; குழந்தைகளின் கட்டற்ற செயல், ஆட்டபாட்டம்; துள்ளல், குதியாட்டம்; ஓட்டசாட்டம்; கேளிக்கை; பொழுதுபோக்கு விளையாட்டு; பொழுதுபோக்கு; பொழுதுபோக்குக் காட்சி; நாடகக்காட்சி; நாடகம்; வேடிக்கை; கேலி, களியாட்டம்; விளையாட்டுப்பாங்கு; விளையாட்டுப் பாங்கான செயல்; நகையாட்டம்; கட்டற்ற போக்கு; எளிய செயல்; ஆர்வச்செயல், மகிழ்ச்சிக்குரிய செயல்; மகிழ்வூட்டுஞ் செயல்; விரைவியக்கம்; மெல்லியக்கம்; கட்டற்ற இயக்கம்; ஓய்வின்பம்; வேலை ஓய்வு; வேலை நிறுத்தம்; சூதாட்டம்; பந்தய ஆட்டம்; சொல்திரிபாட்சி; சிலேடையாட்சி, இரட்டுற மொழிதல்; *v.* விளையாடு; கேளிக்கை வகையிற் பங்குகொள்; ஆட்டத்திற் கலந்துகொள்; ஆட்டத்திற் பங்கு கொள்ளுவி; பந்தடி; எதிர்த்து ஆட்டம் ஆடு; சூதாடு; சூதாட்டத்தில் காய் நகர்த்தி வை; பந்தய ஆட்டமாடு; சீட்டிறக்கு; நாடகத்தில் நடி; நாடகத்திற் பங்குகொள்; நடி, பாவி; வாழ்க்கைத் துறையிற் பங்குகொண்டு செயலாற்று; இசைக்கருவி இயக்கு; துள்ளிக்குதி, குதியாட்டமிடு; குழந்தை வகையில் கைகால் அசைத்தாட்டு; இங்குமங்கும் ஓடியாடு; உலவு; மெல்ல இயங்கு; தொட்டுச்செல்; ஊடாடு; மகிழ்ந்து செயல் செய்; களிப்பூட்டிச்செயலாற்று; கட்டுப்பாடின்றி இயங்கு; தட்டுத் தடங்கலின்றி இயக்கு; கேலி செய்; சூழ்ச்சிப் பொறியிற் சிக்கவைத்து நையாண்டிபண்ணு; மெல்ல ஏமாற்று; தூண்டிச் செயலாற்றுவி; துப்பாக்கிக்குண்டு பாயவிடு; துப்பாக்கி வகையில் குண்டு பாயப்பெறு; தொழிலாளர் வகையில் வேலையிலிருந்து விலகியிரு; தூண்டிலை இழுத்து இழுத்துக் களைப்படையும் வரை மீனை வாளா விட்டுவைத்திரு; (தொ.) child's play, சிறுபிள்ளை விளையாட்டு, மிக எளிய செயல்; fair play, நேர்மை தவறா விளையாட்டு; எல்லோருக்கும் சமநிலை வாய்ப்பளிப்பு; foul play, மோசடி விளையாட்டு; நேர்மைக் கேடு; வஞ்சகச் செயல்; make play, ஓட்டப் பந்தயங்களிலும் வேட்டை ஆட்டத்திலும் நிறைபயனுடன் செயலாற்று, பின்தொடர்ந்து வருபவர்களுக்கு நல்ல பயிற்சியளி; சோர்வுறச் செய்; play a good knife and fork, வயிறு நிரம்ப உண்ணு; play a good stick, நன்றாகச் சிலம்பமாடு; நன்றாக வாட்போர் செய்; play at, அரை மனத்துடன் விளையாட்டில் ஈடுபட்டிரு; குறை மனதோடு செயலில் ஈடுபட்டிரு; play booty, உளவாயிருந்து காட்டிக்கொடு; play by ear, முறையான இசைப்பயிற்சியின்றிக் கேள்வியறிவுமூலமே இசைக்கருவியை வாசி; play ducks and drakes, நீரிற் கற்களை எறிந்து விளையாடு; கவலையின்றிப் பணத்தைச் செலவழி, வீண்செலவு செய்; played out, ஆற்றல் இழந்து, சோர்வுற்று, பயனற்ற நிலையடைந்து; play fair, ஆட்டத்தில் எதிரிக்கும் சம வாய்ப்புக் கொடு; ஆட்ட விதிகளை மனத்திற்கொண்டு நேர்மையாக ஆடு; நியாயமாக நடந்துகொள்; play fast and loose, கடமைகளைப் புறக்கணி; நம்பிக்கைமோசஞ் செய், நம்பிக்கை வைக்கத்

தகுதியற்றிரு; play first fiddle, முக்கிய பதவியிலிரு, தலைமைப் பதவியை மேற்கொள்; play foul, கள்ள ஆட்டம் ஆடு; ஆட்டத்தில் எதிரிக்கு ஒத்த வாய்ப்புக் கொடுக்காமல் ஆடு; ஆட்ட விதிகளைப் புறக்கணித்து ஆடு; நேர்மைக் கேடாக நட; play in, திருக்கோயில் வழிபாட்டாளர் குழு உள்வருஞ் சமயம் இசைக்கருவியில் வாசி; play into the hands of, நோக்கங்களுக்குச் சார்பாகச் செயலாற்றி அவற்றில் தானே சென்று சிக்கு; play off, பிரித்துவைத்து நலமடை; கேடு பயக்கும் வகையில் தூண்டிச் செயலாற்றுவி; பொருளை இன்னொன்றுகக் காட்டி வெற்றிபெறு; play of words, சொல்லணி; play on, மரப்பந்தாட்ட வகையில் தன்னுடைய இலக்குக் கட்டைகள் நோக்கிப் பந்தினை அடித்து ஆட்டமிழ; play on, play upon, ஒருவரின் அச்சம்-கவலை முதலியவற்றைப் பயன்படுத்திக்கொள்; play one's cards well, வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக்கொள்; play on words, play upon words, சொற்சிலேடை; play out, திருக்கோயில் வழிபாடு முடிந்தவுடன் வழிபாட்டாளர் வெளியே போகும்போது இசைக்கருவியில் வாசி; play second fiddle, இரண்டாந்தரப் பணியை மேற்கொள்; பெரியவரைப் பணிந்து செயலாற்று; play Shylock, இரக்கமற்ற தன்னலத்தனுகச் செயலாற்று; play up, விளையாட்டில் முழு ஆற்றலையும் ஈடுபடுத்து; play upon the square, நியாயமாக நடந்துகொள், நேர்மையோடு செயலாற்று; play upto, துணையாதரவாக நாடகத்தில் நடி; முகப்புகழ்ச்சி செய்; play well, மரப்பந்தாட்டத்தில் ஆட்டக்கள வகையில் விளையாடுவதற்கேற்ற நன்னிலையுடையதாயிரு; play with, எடுத்து விளையாடி மகிழ்; விளையாட்டுக் காட்டு; விளையாட்டாகக் கருதிச் செயலாற்று, எளிதாகக் கருதி நட.

play'-actor, *n.* நடிப்புப் பேர்வழி.

play'bill, *n.* நாடக விளம்பரம், நாடக அறிவிப்புச் சுவரொட்டி.

play'-day, *n.* விடுமுறை நாள்.

play'-debt, *n.* சூதாட்டத்தில் ஏற்பட்ட கடன்.

play'er, *n.* ஆட்டத்தவர்; விளையாட்டில் தேர்ந்தவர்; மரப்பந்தாட்டத்தில் தொழில்முறை ஆட்டத்தவர்; இசைக்கருவி மிழற்றுநர்; இசைக்கருவி தானுக இயங்குவதற்குரிய கருவியமைவு; அரைகுறை மனத்துடன் செயலாற்றுபவர்; ஆட்ட வகைகளில் ஆட்டமுறையாளர்; (தொ.) professional player, மரப்பந்தாட்டம் முதலியவற்றில் தொழில்முறை ஆட்டக்காரர்; நடிப்பை வாழ்க்கைத் தொழிலாக மேற்கொண்ட நடிகர்.

play'er-piano, *n.* தானுக வாசிக்கும்படி துணைக்கருவிகளோடு பொருத்தப்பட்ட இசைக்கருவி வகை.

play'fellow, *n.* விளையாட்டுத் தோழர்.

play'ful, *a.* விளையாட்டுத்தனமான; கருத்தற்ற; விளையாட்டு விருப்புடைய; நகைச்சுவையுடைய; கேலியான.

play'game, *n.* விளையாட்டுச் செய்தி, நடைமுறைப் பண்பு குன்றிய செயல்.

play'goer, *n.* நாடகக் கொட்டகைகளுக்கு அடிக்கடி செல்பவர்.

play'ground, *n.* ஆட்டக்களம்; பள்ளிக்கூட விளையாட்டு வெளி; (தொ.) the playground of Europe, சுவிட்சர்லாந்து.

play'house, *n.* நாடகசாலை, நாடகக் கொட்டகை.

play'ing, *n.* விளையாடுதல்; இசைக்கருவி வாசித்தல்; கேலி செய்தல்.

play'ing-cards, *n. pl.* சீட்டுக்கட்டு.

play'let, *n.* சிறு நாடகம்.

play'mate, *n.* விளையாட்டுத் தோழர்.

play'-off, *n.* வெற்றி தோல்வியின்றி நேர்ந்த சமநிலைப் போட்டியில் முடிவு துணிவதற்கான மிகையாட்டம்.

play'some, *a.* விளையாட்டுத்தனமான.

play'thing, *n.* விளையாட்டுப்பொருள்; கைப்பாவை, பிறர் விளையாட்டுப்பொருள், பிறரால் எளிதிற் பயன்படுத்தப் படுபவர்.

play'time, *n.* விளையாட்டு நேரம்.

play'-way, *n.* கல்வி வகையில் விளையாட்டு முறை.

play'wright, *n.* நாடக ஆசிரியர்.

pla'za, *n.* அங்காடி, சந்தை கூடுமிடம்; ஸ்பானிய நகரங்களில் திறந்த வெளியிடம்.

plea, *n.* முறையீடு, வேண்டுதல், பரிந்து பேசுதல்; வாதம்; வழக்கு; (சட்.) வாதி-எதிர்வாதி சார்பான வாத அறிவிப்பு; வழக்குத் தொடுப்பு; (தொ.) Court of Common Pleas, 1875-இல் அகற்றப்பட்டுவிட்ட பழைய முறைமீட்டு மன்றம்; special plea, புதிய செய்திகளின் அடிப்படையிற் செய்யப்படும் தனிவழக்கு வாத அறிவிப்பு.

pleach, *v.* சுற்றிப்பிணை; இசைத்துப் பின்னு.

plead, *v.* வழக்காடு, வழக்காளிகள் சார்பில் முறைமன்றத்தில் வாதாடு; கொள்கைகள்-நலங்கள்-பண்புகள் ஆகியவற்றின் சார்பில் நின்று வாதாடு; ஆதரித்துப் பேசு; மன்றாடு, எடுத்துக்கூறி முறையிடு; சாக்குப்போக்காக விளக்கங் கூறு; வாதாடி வேண்டு; (தொ.) plead guilty, குற்றவாளியென்று ஒப்புகொள்; plead not guilty, குற்றஞ் செய்யவில்லையென்று மறு; plead with, ஆதரவுகோரி வற்புறுத்திவேண்டு.

plead'er, *n.* வழக்குரைஞர்; வாதாடுபவர்.

plead'ing, *n.* வாதாடுதல்; வாதாடி வேண்டுதல்; வாதி-எதிர்வாதிகளின் வழக்குவாத அறிவிப்பு.

plea'sance, *n.* (செய்.) இன்பம்; இன்ப நுகர்வு; மகிழ்வு; மகிழ்வளிப்பது; மாளிகையோடு இணைந்துள்ள இன்பக்களம்.

plea'sant, *a.* மகிழ்வளிக்கிற, மனத்திற்கு உகந்த; உணர்ச்சிகளுககு இயைந்த; புலன்களுக்கு இணக்கமான, பூரிக்கிற.

pleas'antness, *n.* இனிமை, திருப்தி.

plea'santry, *n.* கேலிப்பேச்சு; விளையாட்டுப் பேச்சு; நகைச்சுவை நையாண்டி.

please, *v.* மகிழ்வி; மனத்திற்கு உகந்ததாயிரு; விரும்பு, ஏற்றதாகக் கருது; திருவுளங் கொள்ளுவி; திருவுளங் கொள்ளு; (தொ.) if you please, தம் இசைவின் பேரில்; please yourself, உன் விருப்பம்போற் செய்.

pleas'ing, *a.* மகிழ்வூட்டுகிற, திருப்தியளிக்கிற.

plea'surable, *a.* இன்பந் தருகிற, மகிழ்ச்சியளிக்கிற.

pleasu're, *n.* இன்பம்; இன்ப நுகர்வு; மனமகிழ்ச்சி; புலனுகர்வு சார்ந்த மகிழ்ச்சி; விருப்பம்; *v.* இன்பமளி; மனமகிழ்வுகொள்; (தொ.) man of pleasure, நடைக்கேடன், ஒழுக்கங் கெட்டவன்.

pleasu're-boat, *n.* இன்பப் படகு.

pleasu're-ground, *n.* களியாட்டக் களம்.

pleat, *n.* மடிப்புவரை; *v.* மடிப்பு உண்டாக்கு.

plebe, *n.* (பே-வ.) அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கடற்படையில் அல்லது படைத்துறைக் கல்லூரியில் கீழ்க்கோடிப் படிநிலை உறுப்பினர்.

plebei'an, *n.* பண்டைய ரோமாபுரியில் பொதுமக்களில் ஒருவர்; *a.* இழி பிறப்புடைய; பொதுமக்களைச் சார்ந்த; இழிந்த, நயநாகரிகமற்ற, தாழ்ந்த தரமான.

pleb'iscite, *n.* (வர.) ரோமப் பொதுமக்கள் தனிமன்றத்தில் நிறைவேற்றிய சட்டம்; நெருக்கடிக் கட்டங்களில் வாதத்துக்குரிய செய்திமீது குடிமக்கள் அனைவரின் நேர்முக வாக்கு; சமுதாயச் செய்திகளிற் பொதுக்கருத்து அறிவிப்பு.

plec'trum, *n.* நரப்பிசைக்கருவி வகையில் பயன்படுத்தப் பெறும் இறகடிக்கோல்.

pledge, *n.* பிணையம்; பிணையப்பொருள்; பிணையாயிருக்கும் நிலை; ஈடு; அடகுப்பொருள்; மரபுச்சின்னம்; குழந்தை; அன்பின் அறிகுறி, ஆதரவின் சின்னம்; வருங்குறிச் சின்னம்; நலம் விழைவிசைவு, பிறர்நலங் கருதிக் குடிநீர் வகை அருந்துதல்; உறுதிச்சொல், வாக்குறுதி; மது நிறுத்த ஒப்பந்த உறுதி; அரசியல் தலைவரின் செயலுறுதிச் சூளுரை; *v.* பிணையமாக வை, அடகு வை; நாணயத்தை முன்வைத்து உறுதியளி; நலம் விழைவறிகுறியாக அருந்து.

pledgee', *n.* அடகு வாங்குகிறவர்; அடைமானப் பொருள்களை அல்லது பிணையப் பொருள்களை வைத்திருப்பவர்.

pledg'et, *n.* மருத்துப் பட்டைத்துணி.

Plei'ad, *n.* அறிஞர் எழுவர் குழு.

Plei'ads, Plei'ades, *n. pl.* ஏழு விண்மீன்கள் அடங்கிய கார்த்திகை விண்மீன் குழு; ஏழு விண்மீன்கள் குழு.

pleis'tocene, *n.* (மண்.) நாலூழியின் முன்னூழி, உலகூழிகளில் கடையூழிக்குரிய ஈற்றயல் அடுக்கு; *a.* (மண்.) புத்துயிரூழியின் ஈற்றயற்பகுதி சார்ந்த.

plen'ary, *a.* முழு நிறைவான; முழு முடிவான; மட்டுமடங்கற்ற.

plenipoten'tiary, *n.* முழு அதிகாரம் பெற்ற தூதர்; முழு அதிகாரம் பெற்றவர்; *a.* முழு நிறை அதிகாரம் வாய்ந்த.

plen'itude, *n.* முழுமை, நிறைவு; முழுநிறைவளம்.

plen'teous, *a.* (செய்.) மிகுதியான, ஏராளமான.

plen'tiful, *a.* மிகுதியான, நிறைந்த; திரளான.

plen'ty, *n.* நிறைவு; (தொ.) horn of plenty, பொங்குமா வளம், வளமார் கொம்புச்சின்னம்.

plen'um, *n.* பொருள் நிறை இடைவெளி; நிறை பேரவை; (தொ.) plenum system, காற்றை உள்ளே வல்லந்தமாக அனுப்புங் காற்றூட்டமைவு.

ple'onasm, *n.* (இலக்.) மிகைப்பாட்டு மொழி; கூறியது கூறல்.

plesiosaur'us, *n.* மரபற்றுப்போன கடல்வாழுங் குறுவால் நீள்கழுத்துடைய ஊரும் விலங்குவகை; *pl.* plesiosar'i, plesiosar'uses.

pleth'ora, *n.* குருதிமிகை; மிகுநிறைவு.

pleur'a, *n.* மார்புவரி, உள்ளுறுப்புக்களைக் கவிந்து போர்த்த பால்குடி உயிரின் மார்பு உள்வரிச் சவ்வுகள் இரண்டில் ஒன்று; தண்டெலும்பிலா விலங்குகளின் உடற்புறத் தோற் பகுதி.

pleur'isy, *n.* நுரையீரற் சவ்வின் அழற்சி.

pleurodyn'ia, *n.* மார்புத்தசை வாதத்தால் ஏற்படும் விலா வலி நோய்.

pleuropneumon'ia, *n.* மார்பு உள்வரிச் சவ்வழற்சியுடன் கூடிய குலைக்காய்ச்சல்; கொம்புடைய கால்நடைகளிடையே பரவுந் தொற்று நோய்வகை.

plexim'eter, *n.* தட்டுக்கொட்டுமானி.

plex'or, *n.* (மரு.) வர்மத்தட்டுச் சிகிச்சை முறையிற் பயன்படுத்தப்படுஞ் சிறு சுத்தி.

plex'ure, *n.* குறுக்குநெசவு.

plex'us, *n.* பின்னல்வேலை; பின்னலமைவு; சிக்கல், குழப்பம்.

pli'able, *a.* நெகிழ்வுடைய, ஒசிவுடைய; எளிதில் வளையத்தக்க; எளிதில் மடக்கத்தக்க; எளிதில் வசப்படுத்தத்தக்க; செல்வாக்கிற்கு இசையத்தக்க; எதற்கும் ஒத்திசைவான.

pli'ant, *a.* தொய்வான, எளிதில் வளைகிற; ஒசிவான; செல்வாக்கிற்கு எளிதில் விட்டுக்கொடுக்கிற; எளிதாக வசப்படுகிற; ஒத்திசைந்து போகிற.

plic'a, (ல.) *n.* தோல் மடிப்பு; சவ்வின் மடிவு; நோய் காரணமான தலைமயிரின் சடைப்பிடிப்பு; (தொ.) *plica polonica*, தலைமயிரின் சடைப்பிடிப்பு.

plic'ate, *a.* (தாவ., வில., மண்.) மடிப்புடைய; விசிறிபோல மடிந்துள்ள.

plica'tion, *n.* மடிப்பு; மடித்தல்; மடிவு, மடிந்துள்ள நிலை.

pli'ers, *n. pl.* இடுக்கு குறடு, இடுக்கி, சாமணம்.

plight[1], *n.* வாக்குறுதி; மண உறுதிப்பாடு; *v.* வாக்குக் கொடு, உறுதியளி, சூளுரைத்துக்கொள்; பிணை நில்; மண உறுதிப்பாடு செய்.

plight[2], *n.* நிலைமை, நெருக்கடிநிலை.

plim, *v.* (பே-வ.) வீங்கு, புடைப்புறு.

Plim'soll line, Plim'soll's mark, *n.* கப்பற் சரக்குப் பளுவளவுக் கோடு.

plim'solls, *n. pl.* மலிவான ரப்பர் அடித்தோலுடைய புதைமிதியடி வகை.

plinth, *n.* தூணின் பீட அடி; மர அடிக்கட்டை; நிலத்தையடுத்து உந்தி நிற்கும் சுவர்ப் பகுதி.

plin'thite, *n.* சிவப்புநிறக் களிமண் வகை.

Pli'ocene, *n.* (மண்.) நில அடுக்கின் மூன்றுவது பிரிவின் புத்தம்புதிய பிரிவு; *a.* (மண்.) நில அடுக்கின் மூன்றுவது படிவின் புத்தம்புதிய பிரிவு சார்ந்த.

plod, *n.* கடும் உழைப்பு; கடு நடை; *v.* கடு முயற்சியுடன் உழை; அடிமையாக உழை; இடைவிடாது நட.

plombe, (பிர.) *a.* அலுவலக முத்திரையிடப்பட்ட.

plop, *n.* தொப்பென்ற ஒலி; தொப்பென்ற ஒலியோடு நீரில் விழுதல்; *v.* தொப்பென்ற ஒலியோடு விழச்செய்; தொப்பென்று விழு; *adv.* தொப்பென்ற ஒலியோடு.

plot, *n.* மனையிடம், நிலக்கூறு; கதையமைப்பு; கதையின் நிகழ்ச்சிக்கூறு; சூழ்ச்சி, மறை சதி, மறைபொறித் திட்டம்; *v.* மனைப்படம் எழுது; சதித்திட்டமிடு, மறை சூழ்ச்சி செய்.

plough, *n.* ஏர், கலப்பை; உழுத நிலம்; கலப்பை போன்றுள்ள கருவி வகைகளில் ஒன்று; தேர்வில் மாணவனைத் தள்ளிவிடுதல்; *v.* உழு; சாலிடு; புரட்டு; நிலம்பறி, கிளறு, கலப்பையைக் கொண்டு மேற்புறத்தைக் கீறு; கல்லியெறி; சால்வரியிடு; நெற்றியில் திரைவிழச் செய்; மிகு உழைப்போடு முன்னேறிச்செல்; கப்பல் வகையில் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு செல், வழி உண்டுபண்ணிக் கொண்டு செல்; தேர்வில் மாணவனைத் தோல்வியுறச் செய்; (தொ.) plough a lonely furrow, முன்னுளைய கூட்டாளிகளிடமிருந்து பிரிந்து தனிவழியே செல்; plough back, நிலத்தை வளப்படுத்துவதற்காகப் புல் முதலியவற்றை நிலத்தில் மடக்கி உழு; வாணிகத்தில் இலாபத்தை மீண்டும் முதலீடு செய்; plough in, உழுது மண்ணுல் நிரப்பு; Plough Monday, இயேசுநாதரின் தெய்விகத் தோற்ற விழாவினை அடுத்துவரும் திங்கட்கிழமை; plough the sand, plough the sands, வீணுக்கு உழை, வீண்பாடு படு; put one's hand to the plough, காரியம் செய்யத் தொடங்கு, வேலையை மேற்கொள்; the Plough, கலப்பை விண்மீன் குழு, சப்தரிஷி மண்டலம்.

plough'-beam, *n.* ஏர்க்கால்.

plough'-boy, *n.* உழவுக் கால்நடைகளை ஓட்டுபவன், உழவுக் கால்நடைகளை நடத்துபவன்.

plough'-land, *n.* உழுது பண்படுத்துதற்குரிய நிலம்; (வர.) நிலப்பரப்பளவு அலகு, ஓர் ஆண்டு காலத்தில் எட்டு எருதுகளைக் கொண்டு உழக்கூடிய பரப்புள்ள நிலம்; இங்கிலாந்தின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வரிவிதிப்பு நில அளவின் அலகு.

plough'man, *n.* உழவன்.

plough'share, *n.* உழுமுனை, கொழு.

plough'-shoe, *n.* உழுமுனையின் உறை, கொழுவினைத் தாங்கிப் பிடிக்கும் அமைவு.

plough'-staff, *n.* கலப்பையிலிருந்து மண் முதலியவற்றை அகற்றுவதற்கான கருவி.

plough'-tail, *n.* கைப்பிடியுடைய கலப்பைமுனை, மேழிப்பிடி; பண்ணை வேலை.

plo'ver, *n.* ஆட்காட்டி குருவியினத்தைச் சேர்ந்த பறவை வகை.

ploy, *n.* வேலை, அலுவல், தொழில்முறை ஏற்பாடு, தொழில் முறைப் பயணம்.

pluck, *n.* பறித்தல், சட்டென்று இழுத்தல், இசிப்பு; தேர்வில் தோல்வி; உணவு வகையில் ஆட்டின் குலை, விலங்கின் நெஞ்சுப்பை-நுரையீரல்-கல்லீரல்-உயிர்ப்புக்குழல் கொண்ட ஊன்தொகுதி; துணிவு, உரம், ஊக்கம்; *v.* பறி, பிடுங்கு, இழு, இழுத்துச்செல், தென்னியிழு, வெட்டியிழு; பறவையின்

இறகுகளை அகற்று ; கொள்ளையிடு, மோசடி செய் ; மாண வரைத் தேர்வில் தோல்வியுறச்செய் ; (தொ.) have a crow to pluck with, குற்றங்காண் ; pluck up, ஊக்கங்கொள், துணிவு மேற்கொள், ஆற்றல் பெறு.

plucked, a. பறிக்கப்பட்ட ; தேர்வில் தள்ளிவிடப்பட்ட.

pluck'y, a. துணிவூக்கமுள்ள, விடாமுயற்சியுடைய.

plug, n. அடைப்புக்கட்டை, ஆப்பு, தக்கை, அடைப்பாகப் பயன்படும் இயற்கைக்கரணை ; அடைப்பு ; கழிப்பிடத் தொட்டி நீரைத் திறந்துவிடும் பொறி ; அழுத்தப்பட்ட புகையிலைக் கட்டை ; வெட்டப்பட்ட புகையிலைக்கட்டைத் துண்டு ; தீ யணைப்புக்குழாயின் வாயடைப்புக் குமிழ் ; v. அடைப்பான் கொண்டு துளை அடை ; சுடு ; முட்டியினுற் குத்து ; (பே-வ.) வலிந்து செவியுட்புகுத்தி விளம்பரஞ்செய்.

plum, n. இனிய சதைப்பற்றுள்ள பழவகை ; பழமர வகை ; உலர்ந்த கொடிமுந்திரிப்பழம் ; நல்ல பொருள், தொகுதியில் மிகச் சிறந்த ஒன்று ; வாழ்க்கையில் நற்பேறு ; (தொ.) French plum, உயர்வகைப் பழ வற்றல் ; plum cake, கொட்டையில்லா உலர்ந்த கொடிமுந்திரிப்பழம் முதலியன சேர்த்துச் செய்யப்பட்ட பண்ணிய வகை ; plum duff, கொட்டையில்லாக் கொடிமுந்திரிப்பழ வற்றல் சேர்த்துச் செய்யப்படும் மாவுக்களி ; plum pudding, உலர் பழஞ் சேர்ந்த மாவுக்களி.

plu'mage, n. பறவையிறகுகளின் தொகுதி.

plumassier', n. ஒப்பனை இறகுகள் செய்பவர் ; ஒப்பனை இறகு களில் வாணிகஞ் செய்பவர்.

plumb, n. ஈயக்குண்டு ; தூக்குநூற் குண்டு ; ஆழம்பார்க்கும் நூற்குண்டு ; a. செங்குத்தான ; முழுநிலையான ; மரப்பந் தாட்டத்தின் பந்திலக்குக் கட்டை வகையில் நேர் மட்டமான, சரி நேரான ; v. தூக்குநூற்குண்டு கொண்டு ஆழம்பார் ; செங்குத்தாக்கு ; காரீயக் கம்மியராகப் பணிபுரி ; adv. செங்குத்தாக ; சரிநுட்பமாக, துல்லியமாக ; (தொ.) out of plumb, செங்குத்தாயிராத.

plumbag'o, n. காரீயம், வரையி, எழுதுகோலுக்காகப் பயன் படுத்தப்படும் ஈயத்தைப் போன்ற கரிவகை ; நடுநிலக்கடல் சார்ந்த ஒப்பனைச்செடி வகை.

plum'beous, a. ஈயஞ் சார்ந்த ; ஈயம் போன்ற ; ஈயம் பூசிப் பளபளப்பாக்கப்பட்ட.

plumb'er, n. ஈயக்கம்மியர், ஈயம்-துத்தநாகம்-வெள்ளீயம் முதலியன கொண்டு குழாய்-தொட்டி முதலியவற்றைப் பொருத்திச் செப்பனிடுபவர்.

plumb'ery, n. ஈயக்கம்மிய வேலை ; ஈயக்கம்மியர் தொழிற் சாலை.

plum'bic, a. (வேதி.) ஈயங்கலந்த ; நோய்க்குண ஆய்வு வகையில் ஈயம் இருப்பது காரணமான.

plumbif'erous, a. ஈயங் கிடைக்கிற ; ஈயங் கொண்டுள்ள.

plumb'ing, n. செங்குத்தாக்குதல் ; ஈயத்தொழில் ; ஈயக் குழாய் முதலியன பழுது பார்ப்பவர் வேலை.

plum'bism, n. ஈய நச்சூட்டு.

plumb'less, a. ஆழம் பார்க்க முடியாத.

plumb'-line, n. விடுது ; தூக்குநூல், சுவரின் குழுங்கறி கருவியின் நூற்கயிறு.

plumb'-rule, n. கொத்தனது தூக்குநூல்.

plume, n. இறகு, ஒப்பனை இறகுச்சூட்டு ; தலைக்கவசம்-தொப்பி ஆகியவற்றின் இறகுக்குஞ்சம் ; குதிரைமயிர்ச் சூட்டு ; இறகு போன்ற உறுப்பு ; இறகு போன்ற உறுப்பு வளர்ச்சி ; v. இறகுகளைக் கோதிவிட்டுக் கொள் ; இறகு செருகு ; இரவல் இறகுகளைக்கொண்டு ஒப்பனை செய்துகொள் ; அற்பச் செய்தி பற்றிப் பெருமைப்பட்டுக்கொள் ; போலிப் பண்பு வகையில் பெருமைகொள்.

plume'let, n. முளைக்குருத்து ; சிறுகொண்டை, சிகை முடி.

plumm'er-block, n. (இய.) சுழலும் நடு அச்சினைத் தாங்குதற்கான உறையுடன் கூடிய உலோகச் சட்டம்.

plumm'et, n. தூக்குநூல் ; தூக்குநூற் குண்டு ; ஆழம் பார்ப்பதற்கான கருவியின் ஈயக்குண்டு ; அழுத்துசுமை ; தடங்கலாயிருக்கும் பாரம் ; தக்கையை நேர்நிறுத்தும் பொருட்டுத் தூண்டிற் கயிறுடன் இணைக்கப்படும் பளு.

plumm'y, a. உலர்ந்த கொடிமுந்திரிப் பழங்கள் சார்ந்த ; கொடிமுந்திரிப் பழங்கள் மலிந்த ; வளமான ; நல்ல ; உகந்த.

plumose', a. இறகு போன்ற ; இறகுகளையுடைய.

plump [1], a. கொழுகொழுத்த ; சதைப்பற்றுள்ள ; உருண்டு திரண்ட ; முழு நிறைவான ; v. கொழுக்கப்பண்ணு ; கொழுப் பேறு ; உருட்சி திரட்சியுறு ; புடைத்து வீங்கு, பருமனுகு.

plump [2], n. திடீரென மூழ்குதல் ; பளுமிக்கதன் வீழ்ச்சி ; a. நேர்முகமான ; மட்டுவரைப்பபடாத ; மொட்டையான ; v. திடீ ரென மூழ்கு ; செங்குத்தாக விழு ; வாக்குகளைப் பலருக்குப் பங்கிடாமல் ஒருவருக்கே அளி ; adv. தடாலென, சடுதியில், செங்குத்தாக ; ஒளிவு மறைவின்றி.

plum'per [1], n. வாய்த்திரள் தக்கை, குழிவிழுந்த கன்னங்களை உருட்சியாக்கும் பொருட்டு வாயில் அடைத்து வைத்துக் கொள்ளப்படும் பந்து அல்லது வட்டுப் போன்ற தக்கைப் பொருள்.

plum'per [2], n. தடாலென்ற வீழ்ச்சி, செங்குத்தான முக் குளிப்பு ; தடாலென்ற அடி ; வாக்குகளைப் பலருக்குப் பகிர்ந் தளிக்காமல் ஒருவருக்கே அளிப்பவர் ; ஒருவருக்கே அளிக்கும் வாக்கு ; புளுகு, பச்சைப்பொய்.

plump'ness, n. மொழுமொழுத்த தன்மை, உருண்டு திரண் டிருக்கை.

plum'-pudd'ing dog, n. வண்டியுடன் ஓடுவதற்காக வைத் திருக்கும் புள்ளி நாய் வகை.

plum'-pudd'ing stone, n. (மண்.) தீக்கல் போன்ற கூழாங் கற்கள் கொண்ட கூட்டுப்பாறை.

plu'mule, n. முளைக்குருத்து ; பறவைகளின் சிறு மென் தூவி.

plu'my, a. இறகு போன்ற ; இறகு மூடிய ; மென்தூவிகள் போர்த்த ; பெரிய இறகுகளால் ஒப்பனை செய்யப்பட்ட.

plun'der, n. கொள்ளை, சூறை ; சூறைப்பொருள் ; கொள்ளை ஆதாயம் ; v. கொள்ளையிடு ; சூறையாடு ; போரில் பறி ; திட்டமிட்டுப் பறி ; பிறர் பொருளைக் கையாடு.

plun'derage, n. கொண்டி, கொள்ளையடித்தல் ; கப்பலில் சரக்குகளைத் திருடுதல் ; கையாடிய பொருள், கொள்ளை யடித்த பொருள்.

plun'derer, n. கொள்ளைக்காரன்.

plunge, n. மூழ்குதல், முழுக்கு ; திடீர்த் தோய்வு ; துணிகர முனைப்பு ; இடர் நுழைவு ; v. தடாலென்று நீரில் பிடித்துத் தள்ளு ; நெருக்கடிக்குள் வீழ்த்து ; செடித் தொட்டியை நிலத்தில் ஆழப் பதியவை ; மூழ்கு ; துணிந்திறங்கு ; அறை யில் அவசரமாக நுழை ; படிக்கட்டில் வேகமாக இறங்கு ; படிக்கட்டில் வேகமாக ஏறிச்செல் ; குதிரைவகையில் முன்னுல் வேகமாகப் பாய் ; கப்பல் வகையில் நீளவாட்டாகச் சாய்ந்து மூழ்கு ; வரம்பின்றிச் சூதாடு ; கடனாளியாகு ; (தொ.) take the plunge, திட்டமிட்ட செயலைத் துணிந்து மேற்கொள்.

plunge'-bath, n. முழுக்கு நீர்த் தொட்டி.

plun'ger, n. மூழ்கடிப்பவர் ; மூழ்குபவர் ; மூழ்குவது போன்ற இயக்கத்துடன் செயற்படும் இயந்திர உறுப்புக்கள்.

plung'ing, n. முக்குளிப்பு ; முழுக்குதல் ; மூழ்குதல் ; a. முக்குளிக்கிற ; பாய்கிற ; (தொ.) plunging fire, உயர இருக்கிற பீரங்கிகளிலிருந்து தீர்க்கப்படுகிற வெடிகள்.

plunk, n. இசைக்கருவியின் தந்திகளைத் தெறித்தலால் எழும் ஒலி ; (பே-வ.) பலத்த அடி ; (பே-வ.) அமெரிக்க வெள்ளி நாணயம் ; v. இசைக்கருவித் தந்தி வகையில் மீட்டொலி செய் ; திடீரெனத் தள்ளு, தொப்பென விழு ; எதிர்பாரா வகையில் தாக்கு.

plu'perf'ect, *n.* (இலக்.) முடிவு சுட்டிய சென்றகாலம், இறந்த காலத்துக்கு இறந்த காலம், குறிப்பிட்ட இறந்த காலத்துக்கு முன்பே முடிந்துவிட்ட செயலைத் தெரிவிக்கிற காலம்; *a.* இறந்த காலத்துக்கு இறந்த காலமான.

plur'al, *n.* (இலக்.) பன்மை; பன்மையெண்; பன்மைப் பெயர் வடிவம்; பன்மை வினைவடிவம்; *a.* பன்மைகுறித்த, ஒன்றுக்கு மேற்பட்டதைக் குறிப்பிடுகிற; இருமை எண் முறை உள்ள மொழிகளில் இரண்டுக்கு மேற்பட்டதைக் குறிப்பிடுகிற; எண்ணிக்கையில் ஒன்றிற்கு மேற்பட்ட; (தொ.) plural vote, பல்தொகுதி வாக்கு, ஒன்றிற்கு மேற்பட்ட தொகுதிகளில் வாக்களிப்பதற்கான அதிகாரம்; பன்மை வாக்கு, ஒரே தொகுதியில் ஒரு முறைக்கு மேல் வாக்களிப்பதற்கான அதிகாரம்.

plur'alism, *n.* பல்பதவியாண்மை, ஒரேவேளையில் பல பதவிகளை வகித்தல்; (மெய்.) பன்மை வாதம், மூலப்பொருள்கள் ஒன்றிற்கு மேற்பட்டவை என்று கொள்ளும் அனேகான்ம வாதம்.

plur'alist, *n.* பல்பதவியாளர், ஒரேசமயத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட நிலைகளைத் தாங்குபவர்; (மெய்.) பன்மைவாதி, அனேகான்ம வாதி.

plural'ity, *n.* பன்மை, பலவாயிருக்கும் நிலை; பேரெண்ணிக்கை, கூட்டம், திரள்; ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளை வகித்தல்; ஒன்றிற்கு மேற்பட்ட மானியங்களைக் கைக்கொண்டிருத்தல்; மற்றொன்றனோடு சேர்த்து வகிக்கப்படும் பதவி; வாக்குகள் முதலியவற்றின் வகையில் பெரும் பான்மை.

plur'alize, *v.* பன்மையாக்கு; பன்மை வடிவத்திற் கூறு; ஒன்றிற்கு மேற்பட்ட திருக்கோயில் மானியங்களை வைத்துக் கொண்டிரு.

plurilit'eral, *a.* (இலக்.) மூன்றிற்கு மேற்பட்ட எழுத்துக் களையுடைய.

pluripres'ence, *n.* எங்கெங்கும் இருத்தல்.

pluriser'ial, pluriser'iate, *a.* பல வரிசைகள் கொண்ட.

plus, *n.* கூட்டல் குறி; கூடுதலான அளவு; நேர் அளவு, எதிர்மறையல்லாத அளவை; *a.* கூடுதலான, மிகையான, மிகுதிப்படியான; (கண.) நேரான, எதிர்மறையல்லாத, கூட்டப்பட்ட; (இய.) மின்னாற்றல் வகையில் நேராற்றலுடைய, நேர்மின் ஆற்றல் செலுத்தப்பட்ட; குழிப்பந்தாட்ட வகையில் மிகுதிப்படியான முட்டுக்கட்டையுடைய; *prep.* உடன் சேர்க்கப்பட்டு.

plus'-fours', *n. pl.* நீண்டகன்ற காற்சட்டை.

plush, *n.* மெத்தென்ற பூம்பட்டுவகை.

plush'es, *n. pl.* பணியாள் காற்சட்டை வகை.

plu'tarchy, *n.* செல்வராட்சி.

Plu'to, *n.* கிரேக்க புராணமரபில் செல்வத்துக்குரிய கீழுலகத் தெய்வம்; சேணுகம், நெப்டியூனை (Neptune) விடத் தொலைவிலுள்ள (1930-இல் கண்டுபிடிக்கப்பட்ட) கோளினம்.

plutoc'racy, *n.* செல்வராட்சி.

plu'tocrat, *n.* பொருட்செல்வ வலிவர்.

plutol'atry, *n.* செல்வப்பூசனை, பண வழிபாடு.

Pluton'ian, *a.* கிரேக்க புராண மரபில் செல்வத்துக்குரிய கீழுலகத் தெய்வஞ் சார்ந்த; கீழுலகுக்குரிய; மிகுதொலைக் கோளான சேணுகஞ் சார்ந்த.

Pluton'ic, *n.* அழற்பாறை, அடிநில வெப்பழலால் உண்டான பாறை; *a.* தொலைக்கோளான சேணுகம் சார்ந்த; கிரேக்க புராண மரபில் செல்வத்துக்குரிய கீழுலகத்தெய்வஞ் சார்ந்த; கீழுலகுக்குரிய; (மண்.) தீ சார்ந்த, அடிநில வெப்பால் உருவான, எரிமலையால் ஆக்கப்பட்ட; (தொ.) Plutonic rocks, அழற்பாறைகள், அடிநில வெப்பால் உருகி உறைந்த பாறைகள்; Plutonic theory, உள்வெப்பம் செயற்படுவதனாலேயே பெரும்பாலான மண்ணியல் இயக்கங்கள் உண்டாகின்றன என்னுங் கோட்பாடு.

Plu'tonist, *n.* மண்ணியல் துறையில் அடிநில வெப்பத்தின் சிறப்பை வலியுறுத்திய ஜேம்ஸ் ஹட்டன் (James Hutton 1726-97) என்பவரைப் பின்பற்றுபவர்.

pluton'ium, *n.* பொன்னுகம், அணு எண் 94 கொண்ட தனிமம்.

pluton'omy, *n.* பொருளியல்.

plu'vial, *n.* மழையங்கி; *a.* மழை சார்ந்த; மழையுள்ள; (மண்.) மழையினால் ஆக்கப்படுகிற.

pluviom'eter, *n.* மழைமானி.

plu'vious, *a.* மழையுள்ள.

ply[1], *n.* துணி முதலியவற்றின் வகையில் மடிப்பு; திண்மை, கனம்; அடுக்கின் ஓர் அடை, பாளம், படலம்; கயிறு முதலியவைகளின் இழை அல்லது புரி; போக்கு, பாங்கு.

ply[2], *v.* ஊக்கத்துடன் பயன்படுத்து, கையாளு; மும்முரமாக ஈடுபடு; வினுக்களை அடுக்கு; வாதங்களினால் விரைந்து தாக்கு; உணவு முதலியவற்றை இடைவிடாமல் தருவித்துக் கொடு; (கப்.) காற்றுவருந்திசை நோக்கிச் செலுத்து; போய் வந்து கொண்டிரு; வாடகைக்காக விடு.

Plym'outh, *n.* இங்கிலாந்தில் தென்மேற்கிலுள்ள துறைமுகம்; அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மசாச்சுஸெட்ஸ் (Massachusetts) அரசிலுள்ள துறைமுக நகரம்; (தொ.) Plymouth Rock, பெரிதான அமெரிக்க வளர்ப்பின வீட்டுக் கோழி வகை.

ply'wood, *n.* ஒட்டுப்பலகை, படலங்களின் இழைவரை ஒன்றற்கொன்று குறுக்காக வைத்து ஒட்டிச் செய்யப்படும் மெல்லிய வன் பலகை.

pneumat'ic, *n.* காற்றுப்பட்டை, காற்றடைத்த குழாய்ப் பட்டை: காற்றடைத்த குழாய்ப்பட்டை வாய்ந்த மிதிவண்டி; *a.* வளி சார்ந்த; காற்றுக்குரிய; வளி இயக்கத்தால் செயற்படுகிற; பறவைகளின் எலும்புகள் வகையில் காற்றுக் குழிவுகள் கொண்ட; காற்றுக் குழிவுகள் சார்ந்த; ஆன்மிக, உயிர் நலஞ் சார்ந்த; (தொ.) pneumatic dispatch, காற்றழுத்தத்தினுல் அல்லது காற்று வெளியேற்றத்தினுல் இயக்கப்பட்டுக் குழாய்கள் வழியாகச் சிப்பங்கள் முதலியவற்றை இடம் பெயர்த்துக்கொண்டு செல்லும்முறை; pneumatic trough, வளிக்கொள்கலம், நீர் அல்லது பாதரசப் பரப்பின்மேல் சாடிகளில் வளிதிரட்டுவதற்கான கலம்; pneumatic tyre, காற்றடைத்த குழாய்ப்பட்டை.

pneumati'city, *n.* வளிகொள் இடங்கள் வாய்க்கப்பெற்றுள்ள நிலை.

pneumat'ics, *n.* வளி ஆய்வியல்.

pneum'atocyst, *n.* பறவை முதலியவற்றின் உடம்பிலுள்ள காற்றுப்பை.

pneumatol'ogy, *n.* ஆவிகளைப் பற்றிய கோட்பாடு; தூய ஆவிபற்றிய கோட்பாடு; உளநூல்.

pneumatom'eter, *n.* மூச்சுமானி.

pneu'matophore, *n.* (தாவ.) மூச்சு வேர், சதுப்புநிலச் செடிகளில் காற்று உறிஞ்சுவதற்காக மேல்நோக்கி வளரும் வேர்.

pneumogas'tric, *a.* நுரையீரல்களையும் இரைப்பையையுஞ் சார்ந்த; (தொ.) pneumogastric nerves, மூளை நரம்புகளின் பத்தாவது இணை.

pneumon'ia, *n.* சளிக்காய்ச்சல், சீதசன்னி, நுரையீரல் இழைமங்கள் ஒரு பகுதியோ முழுதுமோ வீங்கிய நிலை; (தொ.) double pneumonia, இரட்டை நுரையீரற் காய்ச்சல்; single pneumonia, ஒற்றை நுரையீரற் காய்ச்சல்.

pneumon'ic, *n.* நுரையீரல் நோய்களுக்கான மருந்து; *a.* நுரையீரல்கள் சார்ந்த.

pneumonit'is, *n.* சளிக்காய்ச்சல், சீதசன்னி.

po, *n.* குழந்தை வழக்கில் சிறுநீர் கழிக்குங் கலம்.

poach[1], *v.* முட்டை அவி, முட்டையை ஓடு நீக்கிக் கொதிக்கும் நீரிற் போட்டு வேகவை.

poach², *v.* விரல்-கழி முதலியவற்றை ஒன்றனுள் நுழைவி, உட்பாய்ச்சு ; நிலம் வகையில் மிதித்துச் சேருக்கப் பெறு ; வரம்பு கடந்து பிறர் தனியுரிமையில் தலையிடு ; பிறர் நிலத்தில் நுழை ; பிறர் உரிமையைத் தவருகக் கையாளு ; மீறிப் பிறர் உடைமையில் தலையிடு; முறைகடந்து மீன்பிடி; விலங்குகளை ஒழுங்கின்றி வேட்டையாடிப் பிடி ; பந்தயத்தில் தகா வழியில் நல்வாய்ப்புப் பெறு ; வரிப்பந்தாட்ட வகையில் கூட்டாளியின் களத்திற்குரிய பந்தினை அடி.

poch'ard, *n.* ஆண் வாத்து வகை.

poach'er, *n.* முட்டை வேகவைப்பவர் ; முட்டை வேக வைப்பதற்குரிய குழிவுக்கலம் ; பிறர் நிலத்தில் நுழைபவர்; பிறர் உரிமையில் தலையிடுபவர்.

pock, *n.* பெரியம்மைக் கொப்புளம், வைசூரி முத்து.

pock'et, *n.* சட்டைப் பை ; கம்பளி-முசுக்கட்டையினக் காய் வகை முதலியவற்றை அளப்பதற்கான பை ; ஆடைப் பை ; பண வருவாய்வள ஆதாரங்கள் ; மேடைக் கோற்பந்தாட்ட வகையில் பந்துகளை அடித்து வீழ்த்துவதற்கான மேசையோர மூலைப் பைகளுள் ஒன்று ; (மண்.) பாறையின் அயற்பொருள் செறிந்த இடைப்பள்ளம் ; பாறையில் பொன் முதலியவற்றின் கனியம் நிரம்பிய இடைக்குழிவு ; (படை.) பகைவர் ஆட்சிக்குட்பட்ட தனியிடம் ; பகைவர் ஆட்சிக்குட்பட்ட தனியிடத்திலுள்ள படைகள் ; வான் இடையிறக்க மண்டலம், காற்றழுத்தக் குறைவினுலோ காற்றின் கீழோட்டத்தினுலோ விமானங்கள் கீழிறங்க நேருவதற்குக் காரணமான காற்று இடைவெளி ; *a.* சட்டைப்பைக்குரிய; சிறு அளவினதான, சட்டைப் பையில் கொண்டுசெல்லத்தக்க அளவு அல்லது வடிவுடைய; *v.* சட்டைப்பையில் வைத்துக்கொள் ; சட்டைப் பையில் வைத்து மறைத்துக்கொள் ; கைந்தயத்தில் போட்டியிடுபவரைச் சுற்றி வளைத்துக்கொள் ; கைப்பற்றிக்கொள், பறித்தெடுத்துக்கொள் ; அவமதிப்பைத் தலைக்குனிவுடன் ஏற்றுக்கொள் ; உணர்ச்சிகளை மறைத்துக்கொள் ; உணர்ச்சிகளை அடக்கிக்கொள் ; மேடைக் கோற்பந்தாட்ட வகையில் பந்தினை அடித்துப் பைக்குள் வீழ்த்து ; (தொ.) be prepared to put your hand in your pocket, கொஞ்சம் பணம் செலவழிக்க ஒருங்கியிரு ; empty pocket, பணமில்லாதவர் ; have one in pocket, முழு ஆதிக்கத்தின்கீழ் அடக்கி வைத்துக்கொண்டிரு ; in pocket, பண நிலையில், பணமுள்ள நிலையில் ; out of pocket, பணமில்லாத நிலையில், பணம் போகு நெறியில் ; pick a person's pocket, ஒருவர் சட்டைப் பையிலுள்ளதைத் திருடு ; pocket an insult, அவமானத்தை ஏற்றிரு ; pocket battleship, செறிவடக்கமான சிறு போர்க் கப்பல் ; pocket borough, தேர்தலுக்குரிய கைவசத்தொகுதி, சிறு தொகுதி ; pocket expenses, சில்லறைச் செலவுகள்.

pock'et-book, *n.* குறிப்பேடு, குறிப்புப் புத்தகம்.

pock'etful, *n.* சட்டைப்பை கொள்ளுமளவு.

pock'et-money, *n.* கைப்பணம், சில்லறைச் செலவுக்கான பணம்.

pock'et-piece, *n.* பைத்தாயத்து, நற்பேறு உண்டு பண்ணுவதற்காகச் சட்டைப்பையில் கொண்டுசெல்லும் நாணயம்.

pock'et-pis'tol, *n.* பைத்துப்பாக்கி, சட்டைப்பையிற் கொண்டுசெல்லும் கைத்துப்பாக்கி ; பைத் தேறற் புட்டி, சட்டைப்பையிற் கொண்டுசெல்லும் சாராயப் புட்டி.

pock'mark, *n.* அம்மைத்தழும்பு.

pock'marked, *a.* அம்மைத்தழும்புள்ள, வைசூரித்தழும்பு நிறைந்த.

pock'-pudd'ing, *n.* கொழுத்தவர் ; பெருந்தீனியர் ; ஆங்கிலேயருக்குரிய ஸ்காத்லாந்தரது சாட்டுப்பெயர்.

pococuran'te, *n.* கருத்தில்லாதவர் ; *a.* கருத்தில்லாத.

pod¹, *n.* துளையிடுஞ் சுழல்கருவிக்கான குழிப்பொருத்து.

pod², *n.* நெற்று, அவரை முதலிய செடிவகைகளின் விதைகளடங்கிய தோடு; வெடிக்கும் விதைப்பை; பட்டுப்புழுக் கூடு; வெட்டுக்கிளி முட்டைகளின் உறை ; விலாங்குமீன் பிடிப்பதற்கான குறுங் கழுத்து வலை ; *v.* செடிவகையில் நெற்று விடு ; நெற்றின் தோடு நீக்கு.

pod³, *n.* கடற் சிங்கங்களின் கூட்டம் ; திமிங்கிலங்களின் சிறு குழாம் ; *v.* கூட்டமாகத் திரளும்படி கடற்சிங்கங்களைத் துரத்து.

pod'agra, *n.* (மரு.) சூலை, சந்துவாதம் ; கால் சந்துவாதம்.

pod'agral, podag'ric, pod'agrous, *a.* சந்துவாதஞ் சார்ந்த ; கால் சந்துவாதம் பீடித்துள்ள.

podd'ed, *a.* நெற்றுடைய ; நெற்ருகக் காய்க்கிற, நெற்று விடுகிற ; நெற்ருக வளர்கிற ; செல்வ நிலையில் உள்ள; இன்ப வாய்ப்பு நலமார்ந்த.

podesta', (இத்.) *n.* இத்தாலிய நகராட்சிகளில் உள்ள குற்றவியல் நடுவர் ; (வர.) இடைநிலைக்கால இத்தாலிய நகரங்களின் முதன்மையான குற்றவியல் நடுவர்.

podge, *n.* (பே-வ.) கொழுத்துக் குறுகிய ஆள்.

pod'ium, *n.* நெடுமேடைப்பீடம் ; அரங்கைச் சுற்றியுள்ள உயர்மேடை ; அறையைச் சுற்றியுள்ள தொடர் விசிப்பலகை; *pl.* pod'ia.

podophyll'in, *n.* (வேதி.) குடலிளக்கும் இயல்புள்ள கசப்பான மஞ்சள் குங்கிலிய வகை.

po'e-bird, *n.* கருஞ்சிறகும் வெள்ளைக் கழுத்தும் உடைய நியூசிலாந்து பறவை வகை.

po'em, *n.* செய்யுள், பா ; இன்னறுஞ் செய்யுள்வகை ; இயைபமைதிச் செய்யுள்.

po'esy, *n.* கவிதை.

po'et, *n.* கவிஞர், பாவலர், செய்யுள் யாப்பவர் ; *fem.* po'etess; (தொ.) Poets' Corner, வெஸ்ட்மினிஸ்டர் திருமனை (Westminster Abbey) யில் பல கவிஞர்களின் கல்லறைகளும் நினைவுச்சின்னங்களுங் கொண்ட பகுதி ; கவிதைகள் வெளியிடப்படும் செய்தித்தாள் பகுதி.

poetas'ter, *n.* புன்கவிஞர், இழிபொருட் பாவலர்.

poet'ic, *a.* கவிதை சார்ந்த ; பாட்டிற்குரிய ; பாட்டின் நல்லியல்புகள் வாய்ந்த ; (தொ.) poetic justice, கவிதை நீதி ; poetic license, கவிஞர் சிறப்புரிமை; கவிதைச் சிறப்பு வழக்கு ; poetic works, தனிக் கவிஞரின் கவிதைத்தொகுதி, பாடல் ஏடுகள்.

poet'ical, *a.* கவிதை சார்ந்த ; பாட்டிற்குரிய ; செய்யுள் வடிவில் எழுதப்பட்ட ; (தொ.) poetical works, அடங்கல் முறை, கவிதைத் தொகுதி.

poet'icize, *v.* கவிதைக்குரியதாக்கு ; பாடல் வடிவினதாக்கு.

poet'icule, *n.* புன்கவிஞர்.

po'etize, *v.* கவிஞருக எழுது, பாவலன்போலப் பாடு ; கவிதையாக்கு ; பாடல்வழியாகப் புகழ் நிறுவு.

po'etry, *n.* கவிதை, செய்யுட்கலை ; உயர்கருத்தின் உயர் சொற் சந்த யாப்பு ; உயர்நிலை உணர்ச்சியின் வீறுர்ந்த சொற்கோப்பு ; கவிதைத்தொகுதி ; ஆழ்ந்த உணர்ச்சி ; பாடலுக்குரிய தகுதியமைந்த கருத்து; ஆழ்கருத்து; (தொ.) prose poetry, உரைக்கவிதை, யாப்பமைதி ஒன்றினைத்தவிர மற்ற செய்யுள் இயல்புகளெல்லாமுடைய உரைநடை.

pog'o, *n.* போகல் விசைக்கட்டை, வில்லமைவுடன் கூடிய குதித்தல் விளையாட்டுக் கருவி வகை ; *pl.* pog'os.

pogrom', (ருசிய.) *n.* (வர.) நூழிலாட்டு, திட்டமிட்ட ருசிய நாட்டு யூதர் படுகொலை.

poign'ancy, *n.* காரம், கடுப்பு.

poign'ant, *a.* கடுப்பான ; உறைப்பான ; எரிச்சலூட்டுகிற; நெடியுடைய ; துன்பந்தருகிற ; காரசாரமான; கிளர்ச்சி தூண்டுகிற.

poinsett'ia, *n.* பெரிய செந்நிற இலைகளையுடைய மஞ்சள் நிறப் பூச்செடி வகை.

point, *n.* முனை ; கருவியின் கூர்நுதி ; விளிம்பு ; துளைக் கருவி ; செதுக்கூசி ; மான் கொம்பின் முனைக்கவர் ; தார் முள் ; மின்தாங்கி முளை ; குத்துச்சண்டையில் முகவாய்க்

கட்டை ; தண்டவாள இணைப்பின் புடைசாய்வுடைய முனைப்புப்பகுதி ; முனைக்கோடி ; முடிவு ; நிலமுனை ; நிலக் கூம்பு ; புள்ளி; (வடி.) நீள அகல அமைவற்ற இடக்குறிப்பு ; நிறுத்தப்புள்ளி ; செமித்திய வரிவடிவின் ஒலி வேறுபாட்டுக் குறி; குறியிட்ட இடம்; துல்லிய இடம்; சரிநுட்ப நிலை; பதின் மானப் புள்ளி ; பதின்மானக் கூறு ; அச்செழுத்துரு அலகு (·0138 அங்குலம்) ; அளவைக் கூறு ; அளவைப் படிநிலை ; பங்கீட்டுமுறை அலகு ; பங்குகளின் விலைமதிப்பளவு ; தர மதிப்பளவை ; முன்னேற்றத் தரம் ; தட்பவெப்ப நிலை அள வுக்கூறு ; மிகுதிப்பாட்டின் கூறு ; துன்னூசிப் பின்னல்; மகளிர் உட்கச்சு-உள்ளாடைக்குரிய உலோகக் கலப்புடைய பூவேலைப் பின்னல் நாடா ; ஆட்ட மிகைக் கெலிப்பெண் ; கட்ட ஆட்டக் குறுங்கட்டம் ; சீட்டாட்ட வகையில் உச்சக் கேள்வி ; உச்சக்கேள்விக்குரிய சீட்டுத்தொகுதி ; உச்சக் கேள்விக்குரிய கெலிப்பெண் ; கள ஆட்டக்காரர், மரப் பந்தாட்ட வகையில் ஆட்டக்காரர்களின் வலப்பக்கத்தில் நிறுத்தப்படுபவர் ; கள ஆட்டக்காரர்நிலை ; வாட்போர் ; வேட்டை வகையில் நேர்குறி இலக்கு ; நேர்குறி இலக்குப் போக்கு ; வேட்டைநாய் வகையில் குறிவிலங்குச் சுட்டுதல் ; (கட்.) கேடயத்தில் இட அறுதிக்குரிய ஒன்பது குறியிடங் களில் ஒன்று ; (படை.) படைத்துறை இசையில் கடையான ஒலி ; (படை.) முன்னணிக்காவற்குழு ; (கப்.) கப்பற்பாயின் கீழ் விளிம்புத் தும்புக்கயிறு ; திசைக்கூறு, திசைகாட்டு கருவியின் முப்பத்திரண்டு திசைச் சாய்வுக் கூறுகளில் ஒன்று ; பகுதி ; நுணுக்கம் ; நுட்பம் ; தகுதி ; பொருத்தம்; விறுவிறுப்பு ; பயன் செறிவு ; தனிப் பண்புத்திறம் ; சிறப் புக்கூறு ; தனி அடையாளக்கூறு ; தனியன், தனியுரு, சிறப்பியல்பு ; கதையின் முக்கியகூறு ; கட்டம் ; தறுவாய்; கணநேரம் ; குறித்த கணம் ; நடப்புச்செய்தி ; வாத மையக் கூறு ; விவரக்கூறு ; செய்திக்கூறு ; வாதச் செய்திக்கூறு; பொருத்தமான கூறு ; சரியான செய்தி ; உட்கோள் ; உறுதிப்பாடு ; *v.* சுட்டிக்காட்டு ; குறித்துக்காட்டு; பார்வை செலுத்து ; கவனிப்புக்கு உரியதாகக் குறி ; திசைமுகமாக்கு, முகப்பைத் திசைநோக்கித் திருப்பி நீட்டு ; விரலாற் காட்டு ; எடுத்துக்காட்டு ; வேட்டைநாய் வகையில் குறிவிலங்கின் திசைநோக்கிக் காட்டு ; இலக்குக் குறிக்கொள் ; திசை நோக்கிச் சாய்வுறு ; எழுதுகோல் முதலியவற்றின் முனை தீட்டு ; கூர்மையாக்கு ; வழிபாட்டுப் பாடல்களுக்கு இசைக் குறிமானம் இடு ; பாடலுக்கேற்ப அசை வகுத்து எழுது ; சொற்களுக்கு அழுத்த முனைப்புக் கொடு ; படமூலம் குறித்துக்காட்டு, பண்பு முனைப்புக் கொடு; புள்ளிகளிடு; புள்ளி அடையாளமிடு ; மண் கொத்தியால் கொத்து; கொத்தி மண் புரட்டு ; மென்மயிர்த் தோலில் இடையே வெண்மயிர் குத்தி வை ; சந்துபூசு, கட்டுமானத்தில் பழைய இணைப்புக் காரை அகற்றிப் புதுக்காரை இடை திணித்துப் பூசு ; பாத்தீட்டலகுப்படி பங்கீடு செய் ; நோக்கித் திருப்பியிரு ; நோக்கித் திரும்பிய நிலைகொள் ; (தொ.) at all points, எல்லாப் பகுதியிலும் : at the point of, தறுவாயில்; விளிம் பில், ஓரத்தில் ; carry one's point, வாதாடுவதை நிறுவிப் பெறு ; full point, நிறுத்தக்குறி, முற்றுப்புள்ளி ; give points to, எதிரிக்கு ஆட வாய்ப்புக்கொடு ; எதிரியைவிட மேம்பட்டிரு ; in point, பொருத்தமாக, தகுதியாக ; make a point, யோசனை கூறு, திட்டம் வரை ; கூற்றை மெய்ப்பி, வாதத்தை நிலைநிறுத்து ; on the point of, upon the point of, செயலாற்றுந் தறுவாயில் ; point lace, முழுதும் ஊசியா லேயே செய்யப்பட்ட இழைப்பின்னல் வேலை; point of honour, மானத்தைப் பாதிக்கும் செய்தி ; point of order, ஒழுங்குச் சிக்கல் ; point of view, நோக்குநிலை, நோக்குகோணம் ; to the point, செய்திக் தத் தேவையானது மட்டும், பொருளுக் குப் பொருத்தமானது மட்டிலும்.

point'-blank', *a.* குண்டு வகையில் படுக்கை மட்டமாகக் குறிவைக்கப்பட்ட ; *adv.* நேர் இலக்காக, படுக்கை மட்ட மான நேர்கோட்டில் ; நேராக, ஒளிவு மறைவின்றி, வெளிப் படையாக ; முன்னேற்பாடின்றி, முன்கருத்தின்றி ; (தொ.) point-blank distance, தளமட்டமாகக் குண்டு சுடப்படக் கூடிய எல்லை.

point d'appui, (பிர.) *n.* (படை.) தாங்கு இடமையம்; ஆதாரத் தளம் ; புதிய தாக்குதல் தொடங்குதற்குரிய இடம்.

point'-device, *a.* முற்றிலுஞ் சரியான ; திட்டவட்டமான ; *adv.* முற்றிலும் சரியான முறையில், சிறிதுந் தவறுது, துல்லியமாக.

point'-duty, *n.* போக்குவரவு வழிக் கண்காணிப்பாளர் வேலை.

point'ed, *a.* முனையுடைய ; கூர்மையான ; கருத்துரை வகை யில் முனைப்புடைய ; உள்ளத்தை வடுப்படுத்துகிற ; வற் புறுத்துகிற ; தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்ட.

point'er, *n.* சுட்டிக்காட்டுபவர் ; சுட்டிக்காட்டுவது ; மணிப் பொறி-துலாக்கோல் முதலியவற்றில் சுட்டுமுள் ; சுட்டிக் காட்டப் பயன்படும் நீண்ட கோல் ; மோப்பமுற்ற நிலையில் விறைப்பாக நின்று ஒரு காலைத் தூக்கிக்கொள்ளும் நாய், வேட்டை நாய் ; (பே-வ.) சைகை, குறிப்பு.

point'ers, *n. pl.* சப்தரிஷி மண்டலத்திலுள்ள முதல் இரண்டு விண்மீன்கள்.

point'ing, *n.* சுட்டிக்காட்டுதல் ; நிறுத்தக் குறியிடல் ; கட்டுமான இணைப்புக் காரைப் பூச்சு ; ஆங்கிலத் திருச்சபை யில் வழிபாட்டுப் பாடல்களுக்கான இசைமான அமைப்பு.

point'less, *a.* குறிப்பில்லாத ; முனையற்ற, மழுங்கலான ; பொருளற்ற ; பொருத்தமற்ற ; கெலிப்பெண்கள் பெறுத.

points, *n. pl.* குதிரையின் இருபுறக் கோடிமுனைப் பகுதிகள்.

points'man, *n.* இருப்புப்பாதை பிரியுமிடத்தில் இணைப்பு வேலை செய்பவர் ; போக்குவரவினைக் கண்காணித்து ஒழுங்கு படுத்தும் காவலர்.

point'-to-point' race, *n.* குறியிட்ட சிற்சில இடங்களின் வழியே ஓடும் குதிரைப் பந்தயம்.

poise, *n.* சமநிலை ; மனத்தயக்க நிலை ; கோட்ட அமைதி, தலை முதலிய உறுப்புக்களை வைத்துக்கொண்டிருக்கும் தனி முறை நிலையமைதி ; *v.* சமநிலையில் நிறுத்து ; தொங்கவிடு ; தாங்கவிடு ; தலை முதலிய உறுப்புக்கள் வகையில் தனிக் கோட்ட அமைதியுடையராயிரு ; சமநிலையில் வைக்கப்பெறு; காற்றுவெளியில் அந்தரத்தில் மிதந்துநில்.

pois'on, *n.* நஞ்சு, உயிர் போக்கும் பொருள் ; உயிரைக் கொல்வது ; உடல்நலத்திற்கு ஊறுவிளைக்கும் பொருள் ; (பே-வ.) சிறு அளவில் உட்கொண்டவுடன் விரைந்து கொல் லும் பொருள் ; *v.* நஞ்சூட்டு ; நஞ்சூட்டிக் கொல் ; குருதி யில் நச்சுத்தன்மையை உண்டாக்கு ; காற்று-நீர் முதலிய வற்றை நச்சுப்படுத்து ; படைக்கருவிமேல் நஞ்சு பூசு ; மனத் தைக் கலை, மனத்தைத் தவறுன வழியிற் செலுத்து; மகிழ்ச்சி கெடு, இன்பத்தை அழி; பயனறக் கெடு, நிலம்-உலை முதலிய வற்றைக் கெடுத்துப் பயனறச் செய் ; (தொ.) poison pen, பொல்லாங்கு மொட்டைக் கடிதம் எழுதுபவர்.

pois'onous, *a.* நச்சுத்தன்மையான.

pois'on-tree, pois'on-wood, *n.* நச்சுத்தன்மையுடைய மரம்.

poissarde, (பிர.) *n.* சந்தைக் கலகக்காரி ; பரதவமகள்.

poke[1], *n.* கோணிப்பை, பை, சாக்குப்பை.

poke[2], *n.* நுழைப்பு, திணிப்பு , இடிப்பு ; வேலிக்குள் நுழை யாதபடி கால்நடைகளுக்கிடப்படும் தடைப்பூட்டு ; மகளிர் தொப்பியின் உந்தல் விளிம்பு ; *v.* நுழையவிடு, திணி ; குத்தித் தள்ளு, இடித்துத் தள்ளு ; அகப்பைக்கோல் கொண்டு நெருப்பைக் கிளறு ; குதத்தித் துளையுண்டாக்கு ; கழிகொண்டு குத்து ; வல்லந்தமாக உரிமையின்றி இடித்துக் கொண்டு நுழை, வலுக்கட்டாயமாகத் தலையிடு ; (பே-வ) சிறிய நெருக்கமான இடத்திலிரு ; (தொ.) poke about, poke and pry, பிறர் செய்திகளில் ஆர்வங்காட்டு ; poke fun at, கேலி செய், ஏளனம் பண்ணு ; poke one's head, தலையை முன்கவித்துச் செல், தலைகவிழ்த்துக் குனி , poke one's nose, தொடர்பில்லாததில் தலையிடு.

poke'-bonnet, *n.* அருள்மீட்புப்படை மகளிர் தொப்பி போன்ற அமைப்புள்ள தொப்பி ; உந்து விளிம்புள்ள மகளிர் தொப்பி; திருவருட்படை என்னும் கிறித்தவ சமயக்குழுவின மாதர் அணியும் தொப்பி.

pok'er[1], *n.* தீக்கோல், நெருப்பைக் கிளறி விடுதற்கான கம்பி; ஆக்ஸ்போர்டு-கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரின் முன்செல்லுங் கட்டியர்; வெண்ணிற மரத்திற் சூடிட்டுச் சித்திரப் பூவேலைகள் செய்தற்கான கருவி; *v.* வெண்ணிற மரத்திற் சூடிடுகருவிகொண்டு சித்திரப் பூவேலை செய்; வெண்மரத்தில் கருவியாற் சூடிடுவதன் மூலம் அணிசெய்.

pok'er[2], *n.* பந்தயச் சீட்டாட்ட வகை.

pok'er-face, *n.* சீட்டாட்டக்காரரது குறிப்பறியமாட்டாத முகம்.

pok'er-work, *n.* வெண்ணிற மரத்திற் சூடுபடுத்தப்பட்ட கருவிகளாற் செய்யப்படுஞ் சித்திரப் பூவேலை.

pok'y, *a.* அறை வகையில் இறுக்க இடுக்கமான, மிக நெருக்கமான; கீழ்த்தரமான; தொழில் வகையில் சிறுதிற, தாழ்ந்த.

polacc'a, pola'cre, *n.* மூன்று பாய்களுள்ள நடுநிலக்கடல் வாணிகக்கப்பல்.

pol'ar, *a.* நிலமுனைக்கோடிக்குரிய, துருவஞ் சார்ந்த; நிலவுலக முனைக்கோடிக்கருகேயுள்ள; காந்தமுனைக் கோடிகளுள்ள; காந்தமுனைப்புள்ள, காந்தத்தன்மையுள்ள; நேர் எதிர்மின் ஆற்றல்களையுடைய; அணுத்திரள் வகையில் குறிப்பிட்ட திசையில் செவ்வொழுங்காக அமைவுற்ற; (வடி.) தளமூலப் புள்ளி சார்ந்த; நிலமுனைக்கோடிகளைப்போன்ற இயல்புடைய; நேர் எதிரெதிர் பண்புகளையுடைய; (தொ.) polar bear, துருவப் பகுதிக்குரிய மிகப்பெரிய வெண்ணிறக் கரடி; polar circles, நிலமுனைக்கோடி வட்டம், துருவச் சக்கரம்; polar distance, அண்மையிலுள்ள நிலமுனைக்கோடியிலிருந்து கோளப் புள்ளிக்குள்ள கோணத்தொலைவு.

polarim'eter, *n.* வக்கரிப்புமானி, ஒளிக்கதிர் வக்கரிப்புக் கோட்டமானி.

pola'riscope, *n.* வக்கரிப்புக்காட்டி, ஒளிக்கதிர் வக்கரிப்பியல்பு காட்டுங் கருவி.

pola'rity, *n.* துருவமுனைப்பு, இருகோடிகளும் நிலவுலக முனைக்கோடிகளை நோக்கி முனைத்து நிற்கும் காந்தக்கல்-காந்த ஊசி முதலியவற்றின் இயல்பு; மின்னூட்டு முனைக்கோடி இயல்பு; இருகோடி எதிரெதிர் நிலை; காந்த ஈர்ப்பு.

pol'arize, *v.* ஒளிக்கதிர் வக்கரிக்கச்செய், ஒளிக்கதிர் அலைகள் எதிர் பக்கங்களில் ஒத்தும் செங்கோணவாட்டில் வேறுபட்டும் திரியும்படி செய்; காந்த முனைவாக்கமூட்டு; மின் முனைப்பாக்கமூட்டு; போக்கின் திசை ஒருமுகப்படுத்து; சொல் முதலியவற்றின் வகையில் தன்முனைப்புடன் வழங்கு; சிறப்புப் பொருள்பட வழங்கு.

polatouche', *n.* பறக்கும் அணில்வகை.

pol'der, *n.* நெதர்லாந்தில் கடலிலிருந்தோ ஆற்றிலிருந்தோ மீட்கப்பட்ட தாழ்நிலப்பகுதி.

pole[1], *n.* கழி, கம்பு; உலோகக்கம்பி; கூடாரக்கால்; நிலைக் கம்பம்; தந்தி முதலியவற்றிற்கான கம்பம்; நுகத்தடி; கோல், 11 முழ நீள அளவு; *v.* கழிகள் இடு; கம்புகள் பொருத்து; கழிகொண்டு செயலாற்று; கழியால் தள்ளு; (தொ.) under bare poles, (கப்.) பாய்களின்றி.

pole[2], *n.* நிலவுலக முனைக்கோடி, துருவம்; காந்தமுனைப்புக் கோடி; மின் முனைப்புக்கோடி; உறுப்பின் உருட்சி முனைப்பு; நேர் எதிரெதிரான பண்பிணைகளில் ஒன்று; (தொ.) magnetic pole, காந்தவிசைத் துருவம், காந்த ஊசியின் முனை செங்குத்தாக நிற்கும் நிலவுலகின் வடக்குத் தெற்கு முனைக்கோடியடுத்த பகுதிகள்; north pole, நிலவுலக வட முனைக்கோடி, வட துருவம்; south pole, நிலவுலக தென் முனைக்கோடி, தென் துருவம்.

Pole[3], *n.* போலந்து நாட்டினன்.

pole'-ax, pole'-axe, *n.* கண்டகோடரி, மழுப்படை; முற்காலப் படைக்கப்பற் கோடரி; தூர்க்கோடரி, ஈட்டியும் கோடரியும் இணைந்த படைக்கலம்; இறைச்சிக்கடைக்காரனின் வெட்டுக்கத்தி.

pole'cat, *n.* மரநாய், கீரியினத்தைச் சேர்ந்த விலங்குவகை.

pole'-jumping, *n.* கழிதாண்டல், நீண்ட கழியைப் பிடித்துக் கொண்டு உயரமாகத் தாண்டுதல்.

pol'emarch, *n.* (வர.) பண்டைக் கிரேக்கரிடையே பொதுப் பணிகளையும் ஏற்றுநடத்திய படைத்துறைத் தலைவர்; ஆதென்ஸ் (Athens) என்ற கிரேக்க நகரில் படைத்துறைப் பணிகள் பூண்ட ஒன்பது குற்றத்தண்டனை நடுவர்களுள் ஒருவர்.

polem'ic, *n.* வாதம்; வாத உரைஞர்; வாதத்திற்குரிய நூல்; *a.* வாதத்திற்குரிய.

polem'ics, *n. pl.* விவாதக்கலை; விவாதப்பயிற்சி; சமய வாதத்துறை.

polen'ta, (இத்.) *n.* மாக்கலவைக் கஞ்சி, சவ்வரிசிமாவும் வாதுமை போன்ற கொட்டை மாவும் கலந்து காய்ச்சப்பெற்ற இத்தாலிய நாட்டுக் கஞ்சி வகை.

pole'-star, *n.* வடமீன், துருவ நட்சத்திரம்; வழிகாட்டியாக விளங்குவது; கவர்ச்சி மையம்.

police', *n.* காவல்துறை; நகர அமைதிகாக்கும் முறை; பொது அமைதிகாப்புத் துறை; காவல்துறைப் படை; காவல்துறையினர் தொகுதி; *v.* காவல்துறையினர் வழி ஒழுங்கமைதி காப்புச் செய்; ஒழுங்கமைவாட்சி நடத்து; ஒழுங்குநிலை நாட்டு; (தொ.) police State, சர்வாதிகார ஆட்சி, காவல் துறையினரால் நடத்தப்படும் ஒருமுக அரசியல் ஆதிக்க ஆட்சி.

police'-court, *n.* காவல்துறை நீதிமன்றம்.

police'-magistrate, *n.* காவல்துறை நீதிமன்றக் குற்றவியல் நடுவர்.

police'man, *n.* காவல்துறையாள்.

police'-office, *n.* காவல்துறை அலுவலகம்.

police'-officer, *n.* காவல்துறை அதிகாரி.

police'-station, *n.* காவல் நிலையம்.

police'-trap, *n.* காவல்துறைஞர் வலை; தானியங்கு வாகன வேக மறைவுமானி.

policlin'ic, *n.* தனிநிலை மருத்துவப் பயிற்சிமனை, மருத்துவ மனையிலன்றித் தனிமனையிலுள்ள மருத்துப் பயிற்சிக்கூடம்; மருந்தக வெளியாள் பண்டுவப் பகுதி.

pol'icy[1], *n.* அரசாட்சிக்கலை; அரசியல்திறம்; நடத்தைப் போக்கு; செயல்திற நுட்பம்; மதிநுட்பம்; தந்திரம்.

pol'icy[2], *n.* காப்பீட்டுத்துறையில் காப்புறுதிப் பத்திரம், காப்பீட்டு ஒப்பந்த இதழ்.

pol'igur, (த.) *n.* பாளையக்காரர்.

pol'iomyelit'is, *n.* (மரு.) முதுகுத்தண்டின் சாம்பல்நிற உட்பகுதி அழற்சி, இளம்பிள்ளை வாதம்.

pol'ish[1], *n.* மெருகு, மினுமினுப்பு, தேய்ப்பினால் ஏற்படும் பளபளப்பு; தேய்ப்பு; தேய்ப்புப்பொருள்; பண்பட்ட தன்மை; *v.* தேய்த்துப் பளபளப்பாக்கு, மெருகேற்று; வழவழப்பாக்கு, துலக்கு, மினுக்கு; நேர்த்தியாக்கு; பண்பாடுடையதாக்கு; (தொ.) polish off, விரைவிற் செய்துதீர்.

Pol'ish[2], *n.* போலந்துநாட்டு மொழி; போலந்து நாட்டினர்; *a.* போலந்து நாட்டிற்குரிய; போலந்து நாட்டைச் சார்ந்த.

pol'itarch, *n.* (வர.) பண்டை ரோமரிடையே கீழ்த்திசை நகர ஆளுநர்.

polite', *a.* பண்பட்ட.

pol'itic, *n.* அறிவுக் கூர்மையுள்ளவர், நுட்ப மதியினர்; ஊகி; சூழ்ச்சித்திறமுடையவர்; *a.* அறிவுக்கூர்மையுடைய; நுட்ப மதியுடைய; ஊகமுள்ள, முன்மதி வாய்ந்த; சூழ்ச்சித் திறமுடைய; செயல்வகைத் திறமுடைய; செயல் நய முடைய; சூழலுக்கு இயைந்த செயல்திறம் வாய்ந்த; (தொ.) body politic, அரசுக்குரிய மக்கள் தொகுதி, ஆட்சி மக்கள் தொகுதி.

polit'ical, *n.* அரசியல் மேலாண்மைப் பேராள்; *a.* அரசுக் குரிய, நாட்டாட்சிக்குரிய; பொது ஆட்சித்துறைக்குரிய; அரசியல் சார்ந்த; அமைப்பொழுங்குடைய அரசியல் நெறி முறை சார்பான; ஆட்சிமுறையில் ஈடுபட்ட; அரசியல்கட்சி சார்ந்த; அரசியல் கட்சியில் ஈடுபட்ட; (தொ.) political agent, political resident, (வர.) சார்பாட்சி அரசுகளின் அரசர்களுக்கு ஆலோசனை கூறும் மேலரசின் அதிகாரி; political economy, பொருளியல் நூல்; political geography, அரசியல் பிரிவடிப்படையான நிலநூல்; political science, ஆட்சியியல்; political verse, அளவாலன்றி ஈற்றயலசைச் சார்பான ஒலியழுத்தத்தால் இயக்கப்படும் தற்கால கிரேக்க கவிதை.

politi'cian, *n.* அரசியல் வாதி; அரசியல் அறிஞர், அரசியல் வல்லுநர்; அரசியலைத் தொழிலாகக் கொண்டவர்; அரசியல் கட்சியிலீடுபட்டவர்; அரசியலைப் பொழுதுபோக்காகக் கொண்டவர்; அரசியல் சூழ்ச்சிமுறை தெரிந்தவர்; சூழ்ச்சிக் காரர்.

polit'icize, *v.* அரசியல்வாதியாக நடி; அரசியலில் ஈடுபடு; அரசியலைப் பற்றிப் பேசு; அரசியற் பண்பேற்று, அரசியல் சார்ந்ததாக்கு.

polit'ico-religious, *a.* சமயச் சார்புடைய அரசியல் சார்ந்த.

pol'itics, *n. pl.* ஆட்சியியல்; அரசியல்துறை ஆய்வியல், அரசியற்கலை; ஆட்சிமுறை; அரசியற் கோட்பாடுகள்.

pol'ity, *n.* ஆட்சி அமைதிநிலை; ஆட்சி அமைப்பொழுங்கு; ஆட்சி அமைப்புமுறை; அமைப்பொழுங்குடைய அரசியற் சமுதாயம்; அரசு, ஆட்சிக்குரிய இனக்குழு.

polk, *n.* பொகிமியா (Bohemia) நாட்டின் கிளர்ச்சிமிக்க நடன வகை.

poll[1], *n.* தலை; மனிதத்தலை; முடிவளருந் தலைப்பகுதி; மீன் வகையின் தலை-தோள் பகுதி; சுத்தியல்தலைப்பின் பருத்த பகுதி; ஆள், தனியாள்; தேர்தல் வாக்காளர் பட்டியல்; தேர்தல் வாக்களிப்பு; தேர்தல் வாக்கெண்ணிக்கை; *v.* முடி கத்தரி; திரள் வளர்ச்சிக்காகத் தாவரங்களின் உச்சிப் பகுதியை வெட்டு; கால்நடைகளின் கொம்புகளை அகற்று; வாக்கெடுப்பு நடத்து; வாக்கெடுப்புப் பெறு; வேட்பாளர் வகையில் வாக்குக்களைப்பெறு; வாக்குச்சீட்டை இடு; வாக் கினைக் கொடு.

poll[2], *n.* மோழை எருது; கொம்பற்ற எருது வகை; *a.* சரி சமமாக வெட்டப்பட்ட, உச்சி தறிக்கப்பட்ட; கொம்பு தறிக்கப்பட்ட; கொம்பற்ற.

Poll[3], *n.* தத்தை, கிளியின் மரபு வழக்குப்பெயர்; (தொ.) poll parrot, கிளி; மரபு வழக்கான சொற்றொடர்களையும் வாதங்களையும் பயன்படுத்துபவர்.

poll[4], *n.* கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வழக்கில் பொதுவகைத் தேர்வு; (தொ.) go out in the Poll, வெறுந் தேர்வுப் பட்டம் பெறு; the Poll, பொதுத் தேர்வுப்பட்டம் பெறுபவர்.

poll'am, (த.) *n.* பாளையம், பாளையக்காரரின் பண்ணை.

poll'an, *n.* அயர்லாந்து நாட்டு நன்னீர் மீன்வகை.

poll'ard, *n.* மோழை விலங்கு; கொம்பிழந்த விலங்கு; கொம் பற்ற ஆடுமாடு வகை; நுனி தறித்துத் திரள் தலையுடையதாக ஆக்கப்பட்ட தாவரம்; தவிடு; குறுநொய்த் தவிடு, மாவ டங்கிய குறுந்தவிடு; *v.* மரவகையில் இளங்கிளைகள் நெருக்க மாகவும் வட்டமாகவும் கிளைப்பதற்காக உச்சியைத் தறி.

poll'en, *n.* பூந்தாது, மகரந்தம்; கருவுயிர்க்கச் செய்யும் தாவர ஆண்பாற்கூறு; *v.* பூந்தாது இட்டுச்செல்; பூந்தாதி றைற் கவியவை.

pollicita'tion, *n.* (சட்.) முறைப்படி ஏற்றுக்கொள்ளப் படாத வாக்குறுதி, ஒதுக்கிவிடத்தக்க வாக்குறுதி.

poll'inate, *v.* பூந்தாது தூவு, பூந்துகள் மேலிடு.

poll'oi, (கிரே.) *n. pl.* பலர், பெரும்பாலோர்.

poll'-tax, *n.* தலைவரி, ஆள்வரி.

pollute', *v.* மாசுபடுத்து, அழுக்காக்கு.

pollu'tion, *n.* தீட்டு; தூய்மைக் கேடு, விழுப்பு.

pol'o, *n.* செண்டாட்டம், குதிரைமீதிவர்ந்து செண்டுகொண்டு ஆடும் பந்தாட்டம்.

polonaise', *n.* திறந்த மேற்பாவாடையுடன் கூடிய மகளிர் கச்சு; ஸ்காத்லாந்தில் முன்பு வழங்கப்பட்ட திறந்த பாவா டையுடன் கூடிய குழந்தைச்சட்டை வகை; போலந்துநாட்டு மென்னய ஊர்வல நடன வகை.

poloni'um, *n.* கதிரியக்க விளைவுள்ள அணு எண் 84 கொண்ட உலோகத் தனிம வகை.

polon'y, Polon'y sausage, *n.* அரை வேக்காடான பன்றி யிறைச்சி கலந்த காரப் பண்ணிய வகை.

pol'o-stick, *n.* செண்டு, செண்டாட்டத்திற் பயன்படுத்தப் படும் நீண்ட கைப்பிடியுள்ள தண்டு.

pol'tergeist, *n.* ஏவல், ஆர்ப்பரி தேவதை.

polt'-foot, *n.* முட்டிக்காலர்; முட்டிக்கால்; *a.* முட்டிக்காலினை யுடைய.

poltroon', *n.* மானவுணர்ச்சியற்ற கோழை.

poltroon'ery, *n.* கிளர்ச்சியின்மை.

polyadel'phous, *a.* கொத்தாய் இணைந்த.

polyan'drist, *n.* பல்கணவர் பெண்.

polyan'drous, *a.* பல கணவர்களுடன் வாழ்க்கை நடத்துகிற; (தாவ.) பல மலர்த்துய்களையுடைய.

pol'yandry, *n.* பல கணவருடைமை.

polyan'thus, *n.* பலநிற மலர்களையுடைய பசுமைமாறு வளர்ப்பினச் செடி வகை.

pol'yarchy, *n.* பலராட்சி.

polyatom'ic, *a.* பிற அணுக்களுடன் எளிதில் இடமாறவல்ல பல நீரக அணுக்களைக்கொண்ட.

polyautog'raphy, *n.* கல்லச்சுமுறை.

polybas'ic, *a.* (வேதி.) இரண்டுக்கு மேற்பட்ட அடிமங்களை அல்லது ஓர் அடிமத்தில் இரண்டிற்கு மேற்பட்ட அணுக் களைக் கொண்ட.

polycarp'ellary, polycarp'ous, *a.* பல கருவக உயிர்மங் களைக்கொண்ட.

polychaet'an, polychaet'ous, *a.* பூச்சி வகையில் காற் குறடுகளில் மிகப்பல முட்கூறுகளைக்கொண்ட.

poly-chro'ite, *n.* மஞ்சள்நிறமி, பல்வேறு ஆய்வுப்பொருள் களோடு பல்வேறு வண்ணங்கள் காட்டும் மஞ்சளிலுள்ள வண்ணப் பொருள்.

polychromat'ic, *a.* பல்வண்ணமுடைய.

pol'ychrome, *n.* பல்வண்ணக் கலைவேலை, பன்னிற உருவச் சிலை வேலைப்பாடு; பல்வகை வண்ணம் பூசுதல்; *a.* பல் வண்ணங்களைக்கொண்டு பூச்சுவேலை செய்யப்பட்ட; பல் வண்ண ஒப்பனை செய்யப்பட்ட; பல்வண்ணங்களில் அச் சடிக்கப்பட்ட.

pol'ychromy, *n.* பன்னிறப்பூச்சுக்கலை; பன்னிறச் செதுக்குக் கலை.

polyclin'ic, *n.* தனியார் பலவகை மருத்துவ மனை; பல வகைப் பயிற்சி மருத்துவமனை.

polydac'tyl, *n.* மிகைவிரல் உயிர், கால்-கைகளில் இயல்பான எண்ணிக்கைக்கு மேற்பட்ட விரல்களைக்கொண்ட விலங்கு; *a.* இயல்பான எண்ணிக்கைக்கு மேற்பட்ட கால்-கை விரல் களையுடைய.

polydaem'onism, *n.* இயற்கைக்கு மேற்பட்ட பல ஆற்றல் களில் நம்பிக்கை.

polygam'ic, *a.* பன்மனைவிகளையுடைய.

polygam'ist, *n.* பன்மனைவியருடையவர், பன்மனைவியரை மணக்கும் பழக்கம் உடையவர்.

polyg'amous, *a.* பன்மனைவியரையுடைய, ஒரே சமயத்தில் பல மனைவியரைக் கொள்ளும் பழக்கமுடைய; பல கணவர் களையுடைய; (வில.) ஒரு பருவத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட

இணைவுத் தோழமையுடைய ; (தாவ.) சில மலர்களில் ஆண் உறுப்புக்களும் சிலவற்றில் பெண் உறுப்புக்களும் சிலவற்றில் இருபால் உறுப்புக்களும் கொண்ட.

polygam'y, *n.* பன்மனைமணம் ; பன்மனை மணமுறை.

polygas'tric, *a.* பல இரைப்பைகள் கொண்ட.

polygenes'ic, *a.*=polygenetic.

polygen'esis, *n.* பல்வேறு மூலவினத் தோற்றம் ; பல்வேறு கருமுளையிலிருந்து உண்டான உயிர்த் தோற்றம்.

polygenet'ic, polygen'ic, *a.* நீரகம் முதலியவற்றோடு இணைந்து ஒன்றிற்கு மேற்பட்ட சேர்மங்கள் ஆக்கவல்ல.

poly'genism, *n.* பன்மூல மன்மரபியல் கோட்பாடு, பல தனிவேறு இணைதுணைகளான மூதாதையரிடமிருந்தே மனித வினம் தோன்றிற்று என்னுங் கொள்கை.

poly'genist, *n.* பன்மூல மன்மரபியல் கோட்பாட்டாளர்.

poly'geny, *n.* பன்மூல மன்மரபு, மனிதவின வகையில் பல தனிவேறான இணைதுணையான மூதாதையர்களிடமிருந்து தோன்றுதல்.

pol'yglot, *n.* பன்மொழிகளில் எழுதப்பட்ட நூல்; பன்மொழி யாளர் ; *a.* பன்மொழிகளாலான.

pol'ygon, *n.* பல்கோணக்கட்டம், நான்கிற்கு மேற்பட்ட பல பக்கங்களையுடைய வரைப்படிவம்.

polyg'onal, *a.* பல்கோணக்கட்ட வடிவான ; பல்கோணக் கட்டஞ் சார்ந்த ; பல பக்கங்களையுடைய.

polyg'onum, *n.* பல்வகைக் களைகளையும் புற்களையும் உள்ளடக்கிய தாவர இனப்பிரிவு.

pol'ygram, *n.* பல கோட்டு வடிவம்.

pol'ygraph, *n.* பலபடியமைவு ; பன்னூலாசிரியர்.

polyg'ynous, *a.* பன்மனைவியர் மணமுறை சார்ந்த ; பன் மனைவியருடன் வாழ்க்கை நடத்துகிற ; (தாவ.) மலர்கள் வகையில் பல சூலகங்கள் உடைய, பல சூலகத் தலைகள் கொண்ட.

polyg'yny, *n.* பன்மனை மணமுறை.

polyhed'ron, *n.* பல்தளப் பிழம்புரு, ஆறுக்கு மேற்பட்ட பல பக்கங்களுடைய கன வடிவம்.

polyhis'tor, *n.* பல்கலை வல்லுநர், பலதிறப் புலவர்.

pol'ymath, *n.*=polyhistor.

polym'athy, *n.* பல்துறை அறிவு.

pol'ymer, *n.* (வேதி.) மீச்சேர்மம், ஒரே வகைப்பட்ட சேர்மங்களின் அணுத்திரள்கள் இணைந்து வேதியியல் முறையில் மாறுமலே அணுத்திரள் எடை மானமும் இயற்பியல் பண்பும் மட்டும் மாறுபட்ட பிறிதுருச் சேர்மம்.

polyme'ric, *a.* (வேதி.) மீச்சேர்ம இயலுடைய, சேர்மங்கள் வகையில் வேதியியல் இணைவுவீதத்தில் மாறுபாடில்லாமலே அணுத்திரள் எடைமானத்தில் மட்டும் வேறுபாடுடைய.

polym'erism, *n.* (வேதி.) மீச்சேர்மத்திறம், சேர்மங்கள் வேதியியல் இணைவுக் கூறுகளின் வீதத்தில் மாறுபாடின்றி அணுத்திரள் எடைமானத்தில் மட்டும் மாறுபட்டிருக்கும் தன்மை ; (தாவ.) பல பகுதிகளையுடையதாயிருத்தல்.

polymeriza'tion, *n.* (வேதி.) மீச்சேர்ம இணைவு.

pol'ymerize, *v.* (வேதி.) மீச்சேர்மமாக இணை ; (தாவ.) பல பகுதிகளுடையதாக்கு.

polym'erous, *a.* (தாவ.) பல பகுதிகளாலான.

polymorph'ic, polymorph'ous, *a.* (தாவ.) தனி உருக்கள்தோறும் மாறுபடுகிற ; தொடர்ந்து பல மாற்றங்களை அடைகிற.

Polyne'sia, *n.* ஆஸ்திரேலியாவுக்குக் கிழக்கில் பசிபிக் மாகடலிலுள்ள சிறு தீவுக்குழுமம்.

polyn'ia, *n.* பனிக்கேணி, பனிக்கட்டிப் பரப்பிலுள்ள இடை நீர்ப்பரப்பு.

polynom'ial, *a.* பெயர்வகையில் பல சொற்களுடைய ; (கண.) தொடர் வகையில் பல உருக்களைக் கொண்ட.

polyon'ymous, *a.* பல் பெயருடைய.

polyon'ymy, *n.* ஒரு பொருட் பல்பெயர்.

polyop'ia, *n.* பல்வடிவக் காட்சிக் கண் கோளாறு.

pol'yp, pol'ype, *n.* பல கால் உயிரினம்.

pol'ypary, *n.* பல கால் உயிரிகளைத் தாங்கும் பொதுத் தண்டு.

polypet'alous, *a.* தனித்தனிப் பூவிதழ்களைக் கொண்ட.

polyph'agous, *a.* பெருந்தீனி தின்கிற ; (வில.) பல்வகை உணவுகளைத் தின்கிற.

pol'yphone, *n.* பலவொலி ஒரு குறி.

polyphon'ic, polyph'onous, *a.* பல குரல்களுள்ள ; (மொழி.) பல்வகை ஒலிகளைக் குறிக்கிற ; (இசை.) கொடுக்கப்பட்ட மெல்லிசைப் பாடலுக்குத் துணையாகச் சேர்க்கப்பட்ட.

polyph'ony, *n.* பல குரல்களுள்ள தன்மை ; பல ஒலி ஒரு குறி ; (இசை.) கொடுக்கப்பட்ட மெல்லிசைப் பாடலுக்குத் துணையாகச் சேர்க்கப்பட்ட இன்னிசை.

polyphylet'ic, *a.*=polygenetic.

polyphyll'ous, *a.* தனிப் பூவுறையுடைய, தனிப் புல்லிதழ் உடைய.

pol'ypite, *n.* கூட்டு வாழ்வுயிரினத்தில் தனி உயிரி.

pol'ypod, *n.* பல கால் விலங்கு; *a.* பல கால்களையுடைய.

pol'ypody, *n.* சூரல் வகை, பெரணியினப் பிரிவு.

pol'ypoid, *a.* பல கால் விலங்கு சார்ந்த ; பல கால் விலங்கினைப் போன்ற.

pol'ypus, *n.* கீழ் உயிரினங்களின் உணர்ச்சிக் கொடுக்கினைப் போன்ற கிளையுறுப்புக்கள் கொண்ட கழலைக் கட்டி.

polysep'alous, *a.* தனித்தனிப் புல்லிதழ்கள் வாய்ந்த ; தனித்தனிப் பூவுறைகள் வாய்ந்த.

pol'ystome, *n.* பல வாய்களையும் உறிஞ்சு புழைக்கைகளையும் உடைய விலங்கு ; *a.* பல வாய்களையும் உறிஞ்சு புழைக்கைகளையுங் கொண்ட.

polysyllab'ic, *a.* பல அசையுடைய.

polysyll'able, *n.* பல அசை ஒருசொல்.

polysynthet'ic, *a.* பலகூட்டிணைவான; மொழிகள் வகையில் ஒரு வாக்கியத்திலுள்ள பல சொற்களையும் ஒன்றாக இணைக்கிற.

polytech'nic, *a.* பலதொழில் நுணுக்கப் பயிற்சி சார்ந்த, பலதுறைப் பயிற்சியிலீடுபட்ட, பலதுறைப்பட்ட, பலதுறைகளையும் வளர்த்தற்குரிய ; (தொ.) Polytechnic Institution, பலதொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், லண்டனில் 1838-இல் நிறுவப்பட்ட பல்துறைக்கூடம் ; polytechnic school, பலதொழில் நுணுக்கப் பள்ளி.

polythal'amous, *a.* (உயி., தாவ.) பல கண்ணறைகளுள்ள, பல அறைகளையுடைய.

pol'ytheism, *n.* பல தெய்வ வழிபாடு ; பல தெய்வ நம்பிக்கை ; பல தெய்வ வணக்கமுறை.

pol'ytype, *n.* அச்சுப் பதிவுத்தகடு வகை ; செதுக்கு வேலையிலிருந்து எடுக்கப்பட்ட அச்சுத்தகட்டுப் பதிவுப்படி.

polyzo'a, *n.* முதுகெலும்பற்ற தட்டுயிரி இனப்பிரிவு.

polyzon'al, *a.* கலங்கரைவிளக்கக் கண்ணாடி வகையில் பல் வில்லை வளையங்களால் ஆக்கப்பட்ட.

pom, *n.* சடைக் குச்சுநாய் வகை.

pom'ace, *n.* பழப்பிழிவெச்சம், பிழிவுச்சக்கை.

pomade', *n.* காசறை, நறுமண மயிர்ச்சாந்து ; *v.* மயிர்ச் சாந்து தடவு.

pom'ander, *n.* மணப்பொருட் சம்புடம்.

Pomard', *n.* சிவப்புநிற இன்தேறல்வகை.

poma'to, *n.* உருளைத் தக்காளி.

pomat'um, *n.*, *v.*=pomade.

pom'be, *n.* ஆப்பிரிக்காவில் கூலவகைகளிலிருந்தும் பழத்திலிருந்தும் செய்யப்படும் மதுபான வகை.

pome, *n.* (தாவ.) ஆப்பிள் போலி; (செய்.) ஆப்பிள்; உலோகக்குண்டு.

pome'granate, *n.* மாதுளம்பழம்; மாதுளை மரம்.

pom'elo, *n.* சிறு கிச்சிலிப்பழவகை; கொடிமுந்திரிப்பழம்.

Pomeran'ian, *n.* குச்சுச் சடைநாய்வகை, பட்டுப்போன்ற நீண்ட மயிரும் கூம்பிய முகமும் நிமிர்ந்த கூரிய காதுகளும் உடைய சிறுநாய் வகை; *a.* பால்டிக் கடலின் தென்கரையில் உள்ள பொமிரேனியா (Pomerania) மாகாணஞ் சார்ந்த.

pom'fret, *n.* உணவு மீன்வகை; இனிய அப்ப வகை.

pom'iculture, *n.* பழவளர்ப்புத்துறை, பழப்பண்ணைத் தொழில்.

pomif'erous, *a.* கனி தருகிற.

Pommard', *n.*=Pomard.

pomm'el, *n.* கலணைக்கரடு, சேணத்தின் மேல்நோக்கிய முனைப்பான முன்பக்கம்; கத்தியின் கைப்பிடிக் குமிழ்; *v.* மொத்து, குமிழ்ப்புறத்தால் அடி; முட்டிகளால் குத்து.

pomol'ogy, *n.* பழவளர்ப்பு நூல்.

Pomon'a, *n.* பண்டை ரோமரின் பழங்கதை மரபில் பழங்களின் தேவதை; (தொ.) Pomona green, மஞ்சள் முனைப்பாகவுள்ள பச்சை நிறம்.

pomp, *n.* பகட்டாரவாரம், ஆடம்பரம், ஆகுலம்.

Pom'padour, *n.* பதினைந்தாவது லூயி (Louis XV) மன்னரின் அரசி; *a.* கூந்தல் ஒப்பனைப்பாணி வகையில் பாம்படோர் அரசிக்குரிய; கச்சு வெட்டுப்பாணியில் பாம்படோர் அரசிக்குரிய.

pom'pano, *n.* வட அமெரிக்க மேற்கிந்திய தீவுகள் சார்ந்த உணவு மீன்வகை; *pl.* pom'panos.

pom'pier, pom'pier ladd'er, *n.* தீயணைப்போர் ஏணி.

pom'-pom, *n.* (பே-வ.) இயந்திரப் பீரங்கி.

pom'pon, *n.* கூந்தல் திருகணி; பெண்கள்-சிறுவர்கள் ஆகியோரின் தொப்பிகளிலும் மிதியடிகளிலும் உள்ள இழைப் பட்டை-மலர்கள் முதலியன கொண்ட ஒப்பனைக்குஞ்சம்; போர்வீரர் தொப்பியின் முன்பக்கத்திலுள்ள உருளைக்குஞ்சம்.

pompos'ity, *n.* பகட்டிறுமாப்பு, செயற்கைப் பகட்டாரவாரம்; ஆரவாரச் செயல்; ஆகுல நீர்மை.

pom'pous, *a.* பகட்டாரவாரமான; பகட்டழகுடைய; தோற்றச் சிறப்பு வாய்ந்த; தற்பெருமையுள்ள; மொழிவகையில் சொற்பகட்டான, ஆரவார ஒலியுடைய, வெற்றுரையான.

pon'ceau, *n.* ஒளிர் சிவப்பு நிறம்.

pon'cho, *n.* தென் அமெரிக்க மேலாடை, தலைநுழைவதற்கான நடுவிடம் விட்ட நீண்ட ஆடைச்சதுக்கம்; தலைநுழைவிடம் விட்ட மிதிவண்டிக்காரரின் நீர் ஊறுத நீண்ட மேலாடைச்சதுக்கம்.

pond, *n.* குட்டை, குளம்; சிறு செய்குளம்; *v.* அணைகட்டி நீரோட்டத்தைத் தடுத்து நிறுத்து; நீரோட்டத்திற்கு அணைபோடு; நீர்நிலை வகையில் குளமாக அமைவுறு, குட்டையாகத் தேங்கு.

pon'dage, *n.* குளத்து நீரின் கொள்ளளவு; நீர்த்தேக்கம்.

pon'der, *v.* நினைநினை; தீர எண்ணிப்பார்.

pon'derable, *a.* கணிசமான எடையுடைய.

pondera'tion, *n.* எடையீடு, நிறுத்துப்பார்த்தல், சமநிலைப்படுதல்.

pon'derous, *a.* பளுவான; எளிதிற் கையாளமுடியாத; மிகுதியான உழைப்பு வேண்டியிருக்கிற; நடைவகையில் எழுச்சியற்ற, கவர்ச்சியற்ற; மிகுசோர்வு விளைவிக்கிற.

pond'-life, *n.* குட்டை வாழுயிரி, குளங்குட்டைகளில் வாழும் தண்டிலி உயிரினத் தொகுதி.

pond'weed, *n.* நிலைநீர்ப் பூண்டு.

pon'e[1], *n.* சீட்டாட்ட வகைகளில் முதல் ஆட்டக்காரர்; சீட்டாட்ட வகைகளில் முதல் ஆட்டக்காரரின் கூட்டாளி.

pone[2], *n.* மக்காச்சோள அப்பம்; அமெரிக்க இந்தியர்கள் செய்யுஞ் சோள அப்பம்; பால்-முட்டை முதலியன சேர்த்துச் செய்யப்படும் நேர்த்தியான அப்ப வகை; நேர்த்தியான அப்பவகையின் முழுப்பாளம்; நேர்த்தியான அப்பவகையின் அரைப்பாளம்.

pongee', *n.* மென்பட்டு; நேரியற் பருத்தி.

pon'go, *n.* மனிதக்குரங்கு வகை; வாலில்லாக் குரங்கு.

pon'iard, *n.* குத்துவாள், உடைவாள்; *v.* உடைவாளினுற் குத்து.

pons, (ல.) *n.* (உள்.) பாலம், மூளையின் இருபாதிகளையும் இணைக்கும் நரம்பிழைப்பட்டை; (தொ.) *pons asinorum*, கழுதைப்பாலம், தொடக்கப் பயிற்சியாளர்களுக்கு இடர்ப்பாடானதாகக் கருதப்படும் பண்டைக் கிரேக்க அறிஞர் யூக்ளிட் (Euclid) என்பாரின் வடிவியல் ஏட்டின் முதற்சுவடியின் ஐந்தாவது தெரிவு; *pons Varolii*, மூளையின் இருபாதிகளையும் இணைக்கும் நரம்பிழைப்பட்டை.

pon'tifex, *n.* பண்டைய ரோம் நகரில் சமய குருமார்களின் முதன்மைக் குழுவின் உறுப்பினர்; போப்பாண்டவர்; *pl.* pontif'ices; (தொ.) Pontifex maximus, பழைய ரோம் நகரில் சமயகுருமார்களின் முதன்மைக்குழுத் தலைவர்.

pon'tiff, *n.* மேற்றிராணியார், மாவட்டச்சமய முதல்வர்; முதன்மைப் புரோகிதர்; தலைமைக்குரு, தேசிகர்; (தொ.) sovereign pontiff, போப்பாண்டவர்.

pontif'ical, *n.* மாவட்டச் சமய முதல்வர்களுக்கான வினைமுறைச்சுவடி; *a.* மாவட்டச் சமய முதல்வரைச்சார்ந்த; தவறிழைக்காதவரென்று சொல்லிக்கொள்கிற ஆரவார மதக்கொள்கைப் பற்றுர்ந்த.

pontifical'ia, (ல.) *n. pl.*=pontificals.

pontif'icals, *n. pl.* விருதணி, மாவட்டச் சமய முதல்வரின் உடுப்புக்கள்-விருதுகள்-சின்னங்கள் ஆகியவை.

pontif'icate[1], *n.* சமயகுருமார்களின் முதன்மைக்குழுவின் உறுப்பினருடைய பதவி; மாவட்டச் சமய முதல்வருடைய பதவி; போப்பாண்டவருடைய பதவி; போப்பாண்டவர் பதவிக்காலம்.

pontif'icate[2], *v.*=pontify.

pon'tify, *v.* தலைமைக்குருமார் குழு உறுப்பினராகச் செயலாற்று; மாவட்டச் சமயத் தலைவராகச் செயலாற்று; போப்பாண்டவராகச் செயலாற்று; தவறிழைக்காதவரெனக் கூறிக்கொள்.

pont-levis, (பிர.) *n.* தூக்குப்பாலம், கோட்டையின் உள்ளே இழுத்துக்கொள்ளத்தக்க பாலம்.

pontoneer', pontonier', *n.* தட்டைப் படகுப் பொறுப்பாளர்; படகுப்பாலங் கட்டுபவர்.

pontoon'[1], *n.* சலங்கு, தட்டைப்படகு; தோணிப்பாலம்; நீரின்கீழ் அடித்தளம் அமைக்க உதவும் நீரேறாப் பெரும் பேழை; படகுருவான துறைமுகவாயிற் கதவம்; விமானத் தெப்பம்; தெப்பம்; *v.* மிதவைப்படகுகளில் ஆற்றைக் கடந்துசெல்.

pontoon'[2], *n.* யோகச் சீட்டாட்ட வகை.

pon'y, *n.* மட்டக்குதிரை.

pood, *n.* 36 பவுண்டுள்ள ருசிய எடையளவு.

poo'dle, *n.* சடைநாய், பலவகையில் வேடிக்கையாகக் கத்தரிக்கப்பட்டு ஆர்வத்துடன் வளர்க்கப்படும் நீண்ட சுருள் மயிரினை உடைய சடைநாய் வகை; *v.* சடைநாயின் மயிரை அழகுக்காகக் கத்தரித்து ஒழுங்குபடுத்து.

pooh, *int.* சீ! பொறுமையின்மைக் குறிப்பு; வெறுப்பொலிக் குறிப்பு.

Pooh-Bah′, *n.* பல பதவியாளர்.

pooh-pooh′, *v.* ஏளனஞ் செய்.

poo′ja, (த.) *n.* பூசை.

poo′ka, *n.* கூளி, சிறுதெய்வம்.

poo′koo, *n.* தென் ஆப்பிரிக்காவைச் சார்ந்த சிவப்பு மான் வகை.

pool [1], *n.* இயற்கையாயமைந்த சிறுகுளம்; அமைந்த நீர்நிலை; கட்டி நிற்கும் நீர்மத்தேக்கம்; மடு, ஆற்றின் அமைந்த நீர்ப் பகுதி; *v.* கல்வெட்டியெடுக்கையில் ஆப்புச்செருகுவதற்காகத் துளைசெய்; நிலக்கரி வகையில் கீழறு, சுரங்கமறு.

pool [2], *n.* பொதுநிதி; பொதுச்சேர்மம்; பொது மேசைப் பணம், சீட்டாட்ட வகையில் பந்தயப் பணம்-தண்டப்பணம் ஆகியவற்றின் மொத்தம்; பொது மேசைப்பணச் சேமக்கலம்; மேடைக் கோற்பந்தாட்டவகை; கூட்டுச் சூதாட்ட முயற்சி; கூட்டுச்சூதாட்டப் பந்தயங்களின் மொத்தம்; வாணிகக் கூட்டிணைப்பு, போட்டியிடுபவர்கள் போட்டியைத் தவிர்ப்ப தற்காக விலைகளை நிச்சயித்துத் தொழிலைப் பங்குபோட்டுக் கொள்ளத் தங்களுக்குட் செய்துகொள்ளும் ஏற்பாடு; *v.* பொதுநிதியிற் போடு; பொதுவாகக்கொள்; போக்குவரத்து நிறுவனங்கள் முதலியவை வகையில் பொதுக்கூட்டாக்கி ஆதாயப் பங்குகொள்.

poon, (த.) *n.* புன்னைமரம்.

poon′ah brush, *n.* பூனு ஓவியத்தூரிகை, கீழ்த்திசை வேலைப் பாட்டினையொப்ப மெல்லிய தாளில் வண்ண ஓவியம் வரை வதற்குப் பயன்படும் தூரிகை.

poon′ah paint′ing, *n.* பூனு ஓவியப்பாணி.

poon′ah paper, *n.* பூனு ஓவியத்தாள், கீழ்த்திசை வேலைப் பாட்டினையொப்ப வண்ண ஓவியம் வரைவதற்குப் பயன் படும் மெல்லிய தாள்.

poon′-oil, *n.* புன்னை எண்ணெய்.

poop [1], *n.* கப்பலின் பிற்பகுதி; கப்பலின் பின்கோடி மேடைத் தளம்; *v.* அலை வகையில் கப்பலின் பின்பகுதியின்மேல் மோது; கப்பல் வகையில் பிற்பகுதியின்மேல் அலைமோதப் பெறு.

poop [2], *n.*, *v.* = pope [3].

pooped, *a.* கப்பல் வகையில் பின்கோடி மேடைத்தளமுடைய.

poor, *a.* வறிய, ஏழ்மையான; வளமற்ற, குறைபாடுடைய; மண் வகையில் விளையாத; குறைவாயுள்ள, போதாத, எதிர் பார்த்ததைவிடக் குறைவாயிருக்கிற; இழிவான, அற்பமான; எழுச்சியற்ற, ஊக்கங்குறைந்த; வெறுக்கத்தக்க; தாழ்மை யுள்ள; பொருட்படுத்த வேண்டியிராத; இரங்கத்தக்க; நற் பேறற்ற; நலக்கேடான; (தொ.) poor man's weather glass, மழைக்காலத்தில் அல்லது மப்புமந்தார நேரத்தில் மூடிக் கொள்ளும் ஒளிர்சிவப்பு மலர்ச் செடிவகை.

poor′-box, *n.* தரும உண்டி, ஏழையர் உதவிநிதிப்பெட்டி.

poor′-house, *n.* ஆதுலர் சாலை, ஏழையர் விடுதி.

poor′-law, *n.* ஏழையர் உதவிமுறைச்சட்டம், இரவலர் சட்டம்.

poor′ly, *a.* உடல்நலமற்ற, நலக்கேடான; *adv.* பற்றுக் குறையாக, போதாமல், குறைபாட்டுடன்; முழுவெற்றியின்றி; இழிவாக, வெறுக்கத்தக்க வகையில்.

poor′ness, *n.* குறையுடைமை, குறைபாடு.

poor′-rate, *n.* அறவரி, ஏழைகளின் உதவிக்காக விதிக்கப் படும் வரி.

poor′-spir′ited, *a.* ஊக்கமற்ற; கோழையான, உரமற்ற; எதற்கும் அஞ்சுகிற.

poort, (டச்சு.) *n.* குறுகிய கணவாய்.

pop [1], *n.* திடீரென்ற வெடிப்பொலி; ஆடுகள் முதலியவற் றிற்கு அடையாளமிடுகையில் வைக்கப்படும் புள்ளி அல்லது பொட்டு; (பே-வ.) நுரைத்துப் பொங்குகிற பான வகை; *v.* விரைந்த சிறு வெடிப்பொலி எழுப்பு, புட்டியிலிருந்து அடைப் புத் தக்கையை இழுக்கும்போது உண்டாவதைப்போன்ற ஒலிசெய்; வெடிதீர்; பறவை முதலியவற்றைத் துப்பாக்கி யால் சுடு; திடுமென வை; திடுதிப்பெனப்போடு; விரைவாக இயங்கு அல்லது செல்; திடீரெனக் கேள்வி கேள்; *adv.* விரைந்த வெடிப்பொலியுடன், திடீரென; *int.* 'டப்' போன்ற ஒலிக்குறிப்புச்சொல்; (தொ.) pop the question, (பே-வ.) திருமண விருப்பம் பற்றி வினவு.

pop [2], *n.* (பே-வ.) பொதுவிருப்பமான இசையரங்கு.

pop [3], *n.* ஈட்டன் (Eton) கல்விநிலையத்தில் உள்ள பொழுது போக்கு-சொற்போர்க் கழகம்.

pop [4], *n.* = papa.

pop′corn, *n.* மக்காச்சோளப் பொரி; மக்காச்சோள வகை.

pope [1], *n.* போப்பாண்டவர், ரோமன் கத்தோலிக்க திருச் சபையின் தலைவர்; குறைவற்ற முழுநிறைவானவராகக் கூறிக் கொள்பவர்; முழுநிறைவானவரெனக் கருதப்பெறுபவர்; (தொ.) Pope Joan, கற்பனையான பெண் போப்பாண்டவர்; சீட்டாட்ட வகை; pope's eye, எருது அல்லது ஆட்டின் துடையிலுள்ள கொழுப்பு சூழ்ந்த நிணநீர்ச்சுரப்பி; pope's head, நீண்ட கைப்பிடியுடைய உருள் துடைப்பம்; pope's nose, கோழி முதலியவற்றின் வால்நுனி இறைச்சிக் கறி.

pope [2], *n.* ருசியா முதலிய நாடுகளின் கிரேக்கர் திருச்சபையின் வட்டகைக் கோயிற்குரு.

pope [3], *n.* துடையின் பொறித்தடம், அடித்தால் பொறுக்க முடியாத நோவு அல்லது மயக்கந்தரும் துடைப்பகுதி; *v.* துடையின் பொறித்தடத்தில் அடி; (தொ.) take one's pope, துடையின் பொறித்தடத்தில் அடி.

pope′dom, *n.* போப்பாண்டவர் பதவி; போப்பாண்டவர் பணிமதிப்பு; போப்பாண்டவர் ஆட்சியெல்லை; போப் பாண்டவர் பதவிக்காலம்.

pop′ery, *n.* ரோமன் கத்தோலிக்க சமயம், ரோமன் கத்தோ லிக்க கூறுகள் அமைந்த சமயமுறை.

pop′gun, *n.* பொம்மைத் துப்பாக்கி; பயனற்ற சுடுபடைக் கலம்.

pop′ish, *a.* போப்பாண்டவர் சமயமுறைமை சார்ந்த; போப் பாண்டவருக்குரிய.

pop′lar, *n.* நெட்டிலிங்க மரவகை.

Pop′larism, *n.* இரவலர் இல்லங்களில் தங்கியிராது உதவி கோருபவர்களுக்குத் தாராளமாக உதவி வழங்குங் கொள்கை; வரிவீதங்களை உயர்த்துவதற்கேதுவாயுள்ள உதவிமுறைக் கொள்கை.

pop′lin, *n.* பட்டியல் பருத்தித்துணி வகை.

poplit′eal, *a.* துடையின் பிற்பகுதிசார்ந்த; முழங்காலின் பின்னுலுள்ள குழிவுக்குரிய.

popp′a, *n.* = papa.

popp′et, *n.* குஞ்சு-குழந்தைபற்றிய ஆர்வச்சொல்; கடைசற் பொறியின் தலைப்பாகம்; கப்பலைப் புறப்படுத்தப் பயன்படும் சிறுமரத் துண்டு; உயரத்தூக்குவதில் பயன்படும் கயிற்றுக் கப்பிகளைத் தாங்குஞ் சட்டம்.

popp′et-head, *n.* கடைசற் பொறியின் தலைப்பகுதி.

popp′ing, *n.* வெடிப்பொலி எழுப்புதல்; துப்பாக்கி வெடி தீர்த்தல்; பொருளைத் திடுமென வைத்தல்; விரைந்தியங்குதல்.

popp′ing-crease, *n.* மரப்பந்தாட்ட வகையில் மட்டைக் காரர் நிற்கவேண்டிய எல்லைக்கோடு.

pop′ple, *n.* நீர் அலை திரைவு, நீரலை உருட்சி, மெல்லிய நீர்த் திரை; *v.* அலைவகையில் உருண்டோடு, முன்னும்பின்னும் அலைபாய்.

popp′y, *n.* கசகசாச்செடி, மயக்கமூட்டும் பாற்சாற்றினை யுடைய செடிவகை; (தொ.) Flanders poppy, முதலாவது உலகப் பெரும்போரில் (1914-18) இறந்துபட்ட பிரிட்டிஷ் வீரர்களின் நினைவுச்சின்னம்; முதல் உலகப்போரில் மாண்ட வீரர் நினைவுநாளில் விற்கப்படும் செயற்கை வணணப்பூ; opium poppy, அபின் தரும் கசகசாச் செடிவகை; Poppy

Day, முதலுலகப்போரில் மாண்ட வீரர் நினைவாகச் செயற்கை வண்ணமலர்கள் செய்து விற்கப்படும் நாள்.

popp'y-head, n. கசகசாச் செடியின் விதையுறை; திருக்கோயில் இருக்கை முனையின் ஒப்பனை முகடு.

pop'shop, n. அடைமான வட்டிக்கடை.

pop'sy, pop'sy-wop'sy, n. 'கிளி' போன்ற ஆர்வமொழி; சிறுபெண்.

pop'ulace, n. பஞ்சுநிலம், பொதுமக்கள் திரள்.

pop'ular, a. மக்கள் பாராட்டிற்குரிய; பொதுமக்கள் சார்ந்த; பொதுமக்களால் நடத்தப்படுகிற; பொதுமக்களும் அறிந்து கொள்ளுமாறு ஆக்கப்பட்ட; மக்கள் சுவைக்கேற்பச் செய்யப்பட்ட; மக்கள் பொருள் நிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட; பொதுமக்களிடையே வழங்குகிற; (தொ.) at popular prices, குறைந்த விலைகளில்; popular front, அரசியலில் முன்னேற்றக் கருததுள்ளவர் கட்சி.

popula'rity, n. பொதுமக்களிடை மதிப்பு; பொதுமக்கள் விரும்பும் நிலை.

pop'ularize, v. பாமரர்க்குரியதாக்கு; மக்கள் விரும்பும்படி செய்; வாக்குரிமை முதலியவற்றைப் பொதுமக்களிடையே வழங்கு; தொழில்நுணுக்கப் பொருள் முதலியவற்றை எல்லாரும் விரும்பும் வடிவத்தில் எடுத்துச்சொல்; யாவரும் விரும்பும் முறையில் எழுது.

pop'ulate, v. குடியேற்று.

popula'tion, n. மக்கட்டொகை; குடியேற்றச் செயல்.

pop'ulist, n. குடிப்பொதுமைக் கட்சியினர், இருப்பூர்திகள்படித்தர வருமான வரி முதலியவற்றை அரசினர் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்க அரசியல்கட்சி உறுப்பினர்; கூட்டாண்மையை ஆதரிக்கும் ருசிய அரசியல்கட்சி உறுப்பினர்.

pop'ulous, a. குடிநெருக்கான, மக்கள் நிறைந்த.

porb'eagle, n. சுறுமீன் வகை.

porce'lain, n. மங்கு, பீங்கான்; பீங்கான் கலம்; a. மங்கினால் செய்யப்பட்ட; மென்மையான, நொய்ம்மையான; (தொ.) porcelain clay, வெண்களிமண்.

porce'lainize, v. பீங்கானாகச் சுடு.

porc'elainous, porcella'neous, a. பீங்கான் போன்ற.

porce'lain-shell, n. சோழி.

porcel'lanous, a.=porcelainous.

porch, n. புகுமுக மண்டபம்; மூடு முன்றில்; (தொ.) the Porch, ஆதென்சில் (Athens) ஸீனோ (Zeno) வும் அவர் மாணவர்களும் தங்கியிருந்த மண்டபம்; மெய்விளக்கியலில் இன்பதுன்ப நடுநிலைக்கோட்பாடு.

por'cine, a. பன்றிக்குரிய, பன்றிபோன்ற.

porc'upine, n. எய்ப்பன்றி, முள்ளம்பன்றி; சிக்குவாரி, சணல் கோதுங் கருவி; a. முள்ளம்பன்றி போன்ற.

pore[1], n. நுண்துளை; மயிர்க்கண்.

pore[2], v. கருத்தூன்றிப்பார், படிப்பதில் ஆழ்ந்திரு; நீளநினை, ஒன்றியிருந்து நினை; (தொ.) pore one's eyes out, சுவடியை நெருக்கமாக வைத்து ஊன்றிப்படிப்பதனால் கண்கள் சோர்வடையச் செய்; pore over, கருத்தூன்றிப் படி.

porge, v. யூதர் சமயவினைமுறை வகையில் கொல்லப்பட்ட விலங்கின் தசைநார் முதலியவற்றை அகற்றித் தூய்மையுடையதாக்கு.

por'ism, n. (கண.) கிளைத்தேற்றம்; (அள.) பன்முகப் பலகோள், விடை தீர்வுகளுக்கு வழிவகுக்கக்கூடிய நிலைதரும் முறைகோள்.

pork, n. பன்றியிறைச்சி.

pork'-butch'er, n. விலைப்பொருட்டுப் பன்றி கொல்வார்.

pork'er, n. இறைச்சிப் பன்றி; கொழுத்த ஆண்பன்றிக்குட்டி.

pork'ling, n. சிறுபன்றி; பன்றிக்குட்டி.

pork'-pie, n. கொத்திய பன்றியிறைச்சி வேவல்.

pork'y, a. பன்றியிறைச்சி சார்ந்த; பன்றியிறைச்சி போன்ற; (பே-வ.) சதைப்பற்றுள்ள, கொழுத்த.

pornoc'racy, n. விலைமகளிர் செல்வாக்காட்சி.

pornog'raphy, n. பரத்தையர் வருணனை; இழிபொருள் ஓவியம்; இழிபொருள் இலக்கியம்.

poroplas'tic, a. அறுவை மருத்துவ வகையில் செறி கம்பளம் போன்ற நுண்துளைகளும் குழைவுங்கொண்ட.

por'ous, a. நுண்துளைகளையுடைய.

porph'yry, n. வெண்ணீலப் பாறைவகை

porp'oise, n. கடற்பன்றி வகை.

porra'ceous, a. வெங்காயப் பச்சையான.

porrect', v. (வில.) உறுப்பை முன்னுற நீட்டு; திருச்சபைச் சட்டத்துறையில் ஆவணத்தைத் திருமுன்னிலையில் வழங்கு.

po'rridge, n. கூழ், துழவை; (தொ.) keep your breath to cool your porridge, உன் புத்திமதியை நீயே வைத்துக் கொள்.

porrig'o, n. (மரு.) தலைப்பொடுகு.

po'rringer, n. வட்டில், குழந்தைகளின் சிறு உணவுத்தட்டு.

port[1], n. துறைமுகம்; துறைமுகப்பட்டினம்; துறைமுகமுள்ள இடம்; சுங்க அதிகாரிகளிருக்கும் துறைமுகப் பட்டினம்; (தொ.) Cinque Ports, (வர.) இங்கிலாந்தின் தென்கிழக்குக் கரையிலுள்ள ஐந்து துறைமுகங்கள் (Sandwich, Dover, Hythe, Romney, and Hastings); close port, ஆற்றின் மேடான பகுதியிலுள்ள துறைமுகம்; free port, தீர்வையில்லாத் துறைமுகம், அனைத்துநாட்டு வணிகர்களும் சரக்குகளைத் தடையின்றி ஏற்றவும் இறக்கவும் உரிமையுடைய துறைமுகம்; இறக்குமதிகளுக்கான அல்லது ஏற்றுமதிகளுக்கான விலக்குரிமை; port admiral, கடற்படைத் துறைமுக மேலாண்மைப் பொறுப்புடைய கடற்படைத் தலைவர்; port of call, தேவைப்பொருள்களுக்காக அல்லது செப்பனிடுவதற்காகக் கப்பல்கள் செல்லக்கூடிய துறைமுகம்; port of entry, வாணிகச் சரக்குகள் சட்டப்படி வரக்கூடிய துறைமுகம்.

port[2], n. நகரக் கோட்டைவாயில்; (கப்.) கப்பல் பக்கப்புழைவாய்; துப்பாக்கிவாய் வழிப்புழை; காலதர், காற்றுப் புழை; (இயந்.) ஆவி-நீர் முதலியன செல்வதற்கான துளைவாய்; கடிவாள இரும்பிலே குதிரையின் நாக்கிற்காக வளைத்த பகுதி.

port[3], n. நடைத்திறன், நடைப்பாங்கு; (படை.) படைக்கலம் சாய்த்தேந்தித் தாங்கிச் செல்லும் நிலை; v. துப்பாக்கி முதலிய படைக்கலங்களைக் குழல் மேலிருக்கும்படியாக இடது தோளிற் சாய்த்து ஏந்து.

port[4], n. (கப்.) கப்பலின் இடதுபக்கம்; a. இடதுபக்கமான; v. கப்பலை இடதுபக்கமாகத் திருப்பு; கப்பல் வகையில் இடதுபக்கமாகத் திரும்பு.

port[5], n. போர்ச்சுகல் திராட்சைத்தேறல்.

por'ta, n. (வில) வாயில் போன்ற பகுதி; (வில.) கல்லீரலின் குறுக்காகவுள்ள பிளவு.

port'able, n. எடுத்துச்செல்லத்தக்க பொருள்; a. எடுத்துச் செலலத்தக்க, கையேந்தலான, கையடக்கமான.

port'age, n. எடுத்துச்செல்லுதல்; கொண்டுபோவதற்குப் பிடிக்குஞ் செலவு; நீர்வழிகளிடையே படகின் சரக்குக் கொண்டு ஏக வேண்டியுள்ள நிலவழி; v. இரண்டு நீர்நிலைகளுக்கு இடையே படகின் சரக்குக்களை நிலத்தின் மேற் கொண்டுசெல்; (தொ.) mariner's portage, மாலுமியின் சொந்தத் தொழிலுக்கென விடப்படும் இடப்பரப்பு.

port'al[1], n. நுழைவாயில்; அணிவாயிற் கதவம்; அணி கெழுவாயில்.

port'al[2], a. (உள்.) கல்லீரலின் குறுக்குப்பிளவு சார்ந்த; (தொ.) portal system, கிளை நாளங்களுடன்கூடிய வடிபாய் குழல்; portal vein, வடிபாய்குழல், கல்லீரலுக்குக் குருதி கொண்டு செலுத்துங் குருதிநாளம்.

Portamen'to, (இத்.) *n.* (இசை.) ஒரு சுருதியிலிருந்து மற்றொன்றிற்கு நழுவிக்கொண்டே செல்லுகை.

port'ative, *a.* எடுத்துச்செல்லுதற்குரிய, தூக்கெளிய.

port-crayon, (பிர.) *n.*=*porte-crayon.*

portcull'is, *n.* கோட்டைவாயிலடைக்கும் சருகுபொறிச் சட்டம்.

Porte, *n.* (வர.) துருக்கிப்பேரரசு; (தொ.) the Ottaman Porte, the Porte, the Sublime Porte, (வர.) கான்ஸ்டாண்டி நோபிளில் உள்ள ஆட்டோமன் அரசிருக்கை; 1923 வரையி லிருந்த துருக்கிய அரசு.

porte-cochere, (பிர.) *n.* ஊடகவாயில், வண்டி கடந்து செல்வதற்குரிய வீட்டினூடான வாயில்.

porte-crayon, (பிர.) *n.* வண்ணக்கோல் கைப்பிடி.

portefeuille, (பிர.) *n.*=portfolio.

porte-monnaie, (பிர.) *n.* பணப்பை; குட்டையேடு.

portend', *v.* முன்குறிகாட்டு.

port'ent, *n.* முற்குறி; உற்பாதம், கெடுகுறி; அருந்திறலாளர்; வியத்தகு நிகழ்ச்சி.

porten'tous, *a.* தீக்குறியான; வியப்பிற்குரிய; பொதுநிலை கடந்த; உள்ளத்திற் பதியும் ஆற்றல்வாய்ந்த.

port'er[1], *n.* வாயிலோன்; *fem.* port'ress.

port'er[2], *n.* சுமைகாரன்; முட்டாள்; கசப்புச் சாராயவகை; (தொ.) porter's knot, சும்மாடு அட்டை.

port'erage, *n.* கொண்டுசெல்லுதல்; எடுகூலி, சுமைகூலி.

port'fire, *n.* வெடிகுண்டுகளைப் பற்றவைப்பதற்கான பொறி யமைவு; சுரங்கமறுக்கையில் வெடிமருந்துகளுக்குத் தீக் கொளுவுவதற்கான பொறியமைவு.

portfol'io, *n.* கைப்பை, உதிரித்தாள்கள் படங்கள் வைப்ப தற்குரிய கெட்டித்தாள் பையுறை; அமைச்சர் பதவி; வணிக இணைப்புக்கழக முதலீடுகளின் பட்டியல்; *pl.* portfol'ios.

port'hole, *n.* கப்பற் சாளரம்.

port'ico, *n.* மூடு முன்றில், புகுமுக மண்டபம்; *pl.* port'icos.

portiere, (பிர.) *n.* கதவத் திரை.

por'tion, *n.* பங்கு, பாகம், கூறு; உண்டிச்சாலைகளின் வாடிக்கைக்காரர்களுக்குப் படைக்கப்படும் உணவின் அளவு; பெண் வழிச்சீர், சீதனம்; விதி, ஊழ்; *v.* பங்குகளாகப் பிரி, பங்கிட்டுக்கொடு, பங்கு ஒப்படை; பெண்ணுக்குச் சீர் வரிசைசெய், சீதனங்கொடு.

por'tionless, *a.* உடைமையற்ற; சீதனம் இல்லாத.

Port'land, *n.* போர்ட்லாந்து தீவிலுள்ள சிறை; *a.* போர்ட் லாந்து தீவுடன் தொடர்புடைய; (தொ.) Portland cement, சிமைக்காரை, சீமைச் சுண்ணும்பு-களிமண் ஆகியவற்றுற் செய்யப்படும் செயற்கைப் பசைமண்.

port'ly, *a.* பருத்த, கொழுத்த; வீறூர்ந்த தோற்றமுடைய.

portman'teau, *n.* பயணத் தோற்பெட்டி, நடுவிலிருந்து தட்டையாக மடிக்கவல்ல பெருந்தோற்பெட்டி; இருபாதி ஒட்டுச்சொல், இரண்டு சொற்களின் ஒலிகளும் பொருள்களும் கலந்துருவான கற்பனைச்சொல்; *pl.* portman'teaus, portman'teaux.

portola'no, (இத்.) *n.* (வர.) துறைமுகத் திசைகாட்டிச் சுவடி.

port'rait, *n.* உருவப்படம்; சொல்லோவியம், விளக்க வருணனை.

port'raitist, *n.* உருவப்படம் வரைபவர்.

port'raiture, *n.* உருவப்பட வரைவு; உருவப்படம்; உருவப் படக்கலை; உருவப்படத் தொகுதி; விளக்க வருணனை.

portray', *v.* உருவப்படமெழுது; விளக்கமாக வருணி.

portray'al, *n.* உருவப்படமெழுதுதல்; விளக்கமாக வருணித்தல்; ஒப்புருவம்.

Port'reeve, *n.* (வர.) நகரத்தின் முதன்மையான அலுவலர்; நகர முதல்வருக்கு ஒரு படி கீழான அலுவலர்.

Portuguese', *n.* போர்ச்சுகல் நாட்டுக்குடிமகன்; போர்ச்சுகல் நாட்டு மொழி; *a.* போர்ச்சுகல் நாட்டைச் சார்ந்த; போர்ச்சுகல் நாட்டுமொழியைச் சார்ந்த.

port'-wine', *n.* போர்ச்சுகல் மதுவகை.

pose[1], *n.* நிற்கும் விதம், நிலை; மனப்பாங்கு, மனநிலை; பாவிப்பு, மேற்கொள்ளும் நிலை; தாய விளையாட்டு வகையில் முதலாட்ட உரிமை; *v.* ஓவியரின் மாதிரி வகையில் குறிப் பிட்ட தோற்றநிலையில் அமைவி; குறிப்பிட்ட தோற்ற நிலையை மேற்கொள்; கலைநோக்குடன் தனிப்பட்ட தோற்றச் சாய்வை மேற்கொள்; தனித்திறம் பாவி, தனித்திறனுடை யவர் போலப் பாவனை மேற்கொள்ளு; வலியுறுத்து, வலி யுறுத்திக்கொடு; கடாவிடு; தாய ஆட்டவகையில் முதற் காயைக் களத்தில் வை.

pose[2], *v.* கேள்விகளால் அல்லது புதிர்களால் திணற அடி.

pos'er, *n.* திணறவைக்கும் கேள்வி, திகைப்பூட்டும் புதிர்; தடுமாறச் செய்பவர்.

poseur, (பிர.) *n.* வேடதாரி.

posit, *v.* உண்மையென ஏற்றுக்கொள்; மெய்யாகக்கொள்; உள்ளதென வாதத்துக்காக வைத்துக்கொள்; நிலையில் அமை; ஒழுங்குபடுத்திவை.

posi'tion, *n.* நிலை; இருப்பு, இருக்கை; உடல் அமர்வுநிலை; மனநிலை, மனப்பாங்கு; இருப்பிடம், கிடப்பு; நிலைமை; சூழ்நிலை; நற்சூழல்நிலை; நல்வாய்ப்புநிலை; படிநிலை, பதவி; பணி நிலை; (படை.) உரிய வாய்ப்பிடம்; (இலக்.) கிரேக்க-லத்தீன் யாப்பில் அசையுயிரின் பின்தொடர்பு நிலை; (அள.) மெய்யுரை வாசகம் அறுதியிடல்; மெய்யுரைவாசக அறுதி; *v.* நிலையில் வை; நிலையினை உறுதிசெய்; படைகளைப் போர் நடவடிக்கைகளுக்காக உரிய இடத்தில் அமர்த்து; (தொ.) in position, சரியான இடத்தில், தக்க இடத்தில்; out of position, பொருந்தாத இடத்தில், சரியான இடத்திலில்லா மல்; people of position, மேனிலையிலுள்ளோர்.

pos'itive, *n.* நேர் எண், நேர் அளவை; நிழற்பட நேர்படிவம்; நிழற்பட நேர்படிவத்தை ஒத்த உருப்படிவம்; நேர்மின் ஆற்றல்; மின் பிரிகல நேர்த்தகடு; இசைக்கருவி வகையான துணைமேளம்; (அள.) உறுமெய்ம்மை, உறுதிசெய்வதற் குரிய செய்தி; (இலக்.) பெயரடை வினையடைகளின் ஒப் பீட்டுப் படிகளில் இயற்படி; (இலக்.) இயற்படியான பெய ரடை; இயற்படியான வினையடை; *a.* (சட்.) ஆக்கமுறை யான; இயல்பாயமைந்ததல்லாத; குறிப்பிட்டு உறுதி செய்யப்பட்ட; தனிப்பட வரையறுக்கப்பட்ட; ஐயத்துக் கிடமற்ற; கட்டாயமான; தன்னுறுதியுடைய; மட்டற்ற தன்னம்பிக்கையுடைய; மாறுத; நெகிழ்வு விரிவற்ற; தனி நிலையான, தொடர்பியல்புச் சார்பற்ற; (பே-வ.) தீர்ந்த, முற்றியலான; புறமெய்ம்மை சார்ந்த, புறநிகழ்வுச்செய்தி சார்ந்த; உளதாம்தன்மை குறித்த, இன்மைமறுத்த, எதிர் மறையல்லாத; காந்தத்தில் வடகோடி காட்டுகிற; சுழற்சி வகையில் வலஞ்சுழித்த; (இலக்.) பெயரடை வினையடை ஒப்பீட்டுப்படிகளில் இயற்படியான; (கி. ப.) நேர்படியான, இயல்பான ஒளி நிழல்வண்ணம் காட்டுகிற; நில உலகக் கோள் வகையில் தென்கோடி சார்ந்த; (மின்.) நேர்நிலைப் பட்ட, மின்னணு மிகையால் தோற்றுகிற; (தொ.) positive electricity, நேர்மின் ஆற்றல், கண்ணுடியைப் பட்டுத்துணியில் தேய்ப்பதனுல் ஏற்படும் மின் ஆற்றல்; positive organ, திருக்கோயில்களில் பெரிய இசைக்கருவிப் பெட்டிக்குத் துணையாக அமைந்துள்ள தூக்கிச்செல்லக்கூடிய சிறு இசைப்பெட்டி வகை; positive pole, காந்த வகையில் வடக்கு நோக்கிய முனை; நில உலகக்கோள வகையில் தென் முனைக்கோடி, தென் துருவம்.

pos'itivism, *n.* நேர்க்காட்சி வாதம், 'அகஸ்ட் காம்டே' (Auguste Comte) என்பவரின் மெய்விளக்கக் கோட்பாடு; நேர்க்காட்சி வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சமய முறை.

pos'itron, *n.* நேர் ஆக்கமின்மம், மின்மங்களுக்கு ஆற்றலில் இணையாகத் தற்காலிகமாகக் கருவுளில் உருவாகும் நேர்மின் திரள்.

posol'ogy, *n.* மருந்து அளவியல்.

poss'e, *n.* குழுமம்; ஊர்க் காவலர் தொகுதி; வலிமை வாய்ந்த படைவீரர்தொகுதி; அதிகாரம்.

poss'e comita'tus, (ல.) *n.* கலகம் முதலியவற்றை அடக்க மாநகரத் தலைவரால் அழைக்கப்படும் உள்ளூர்ப்படை.

possess', *v.* உடையராயிரு; உடையதாயிரு; உடைமையாகப் பெற்றிரு; உடைமையாகக் கைக்கொள்; திறமை தகுதி முதலியவற்றைப் பெற்றிரு; உள அமைதி ஆன்மிக அமைதியைக் கைக்கொண்டிரு; பேய் பிசாசு வகையில் ஒருவரைப் பிடித்தாட்டு; (தொ.) be possessed of, உடையராயிரு, உடைமையாகக்கொள்; like all possessed, பேராற்றலோடும் உணர்ச்சியோடும், ஆவேசத்தோடும்; possess oneself of, உடைமையாகக் கைக்கொள், உடைமையாகப் பெற்றிரு.

posse'ssion, *n.* உடைமையாகப் பெற்றிருத்தல்; உடைமை; உடைமைப்பொருள், கையாட்சி; (சட்.) அனுபவஉரிமை, சட்டப்படியான உரிமையாளருக்குள்ளதைப் போன்ற உரிமை; (தொ.) in possession, பொருள் வகையில் உடைமையாகக் கைக்கொள்ளப்பட்ட; ஆள்வகையில் உடைமையாகக் கைக்கொண்டுள்ள.

posse'ssions, *n. pl.* சொத்து, உடைமை; வென்றாளும் ஆட்சி நிலப்பரப்பு, ஆட்சியின்கீழ் வந்துள்ள அயல்நிலப் பரப்பு.

possess'ive, *n.* உடைமைவேற்றுமை, ஆறும் வேற்றுமை; உடைமை வேற்றுமைச்சொல்; *a.* உடைய, உடைமைக்குரிய; உரிய, சொந்தமான; (இலக்.) உடைமையைக் குறிக்கிற, ஆறும்வேற்றுமை சார்ந்த; (தொ.) possessive case, ஆறும் வேற்றுமை; possessive pronoun, கிழமை மறுபெயர்; உடைய பொருளைச் சுட்டும் மறுபெயர்.

poss'et, *n.* பத்தியக் குடிவகை.

possib'ilist, *n.* உடனடியாகச் செயல்முறைப்படுத்தக்கூடிய சீர்திருத்தங்களையே குறியாகக் கொண்டு செயலாற்றிய ஸ்பானிய குடியரசுக் கட்சியினர் அல்லது பிரஞ்சு சமவுடைமைவாதி.

possibil'ity, *n.* ஒல்லுவது, முடியக்கூடிய செயல்; செயல் கூடுநிலை, சாத்தியம்.

poss'ible, *n.* துப்பாக்கிசுடும் பயிற்சியில் எடுக்கக்கூடிய உயர்தரக் கெலிப்பெண்; வேட்பாளர் தகுதியுடையவர்; ஆட்டக்குழுவிற் சேரும் தகுதியுடையவர்; செய்யக்கூடிய முழு அளவு; *a.* இருக்கக்கூடிய; நிகழக்கூடிய; செய்யக்கூடிய; மட்டளவாகச் செய்யக்கூடிய; நேர்மையான, அறிவுக்குப் பொருத்தமான; புரியக்கூடிய, விளங்கக்கூடிய; (தொ.) do one's possible, ஒருவர் செய்யக்கூடிய அனைத்துஞ் செய்.

poss'ibly, *adv.* ஒருவேளை, கூடுமாயின், இயலுமாயின்; இயலுமளவில், கூடியவரையில்.

poss'um, *n.* செத்ததுபோலப் பாவித்து எதிரிகளிடமிருந்து தப்பும் பழக்கமுடைய பைம்மாவின அமெரிக்க விலங்கு வகை; (தொ.) play possum, நோயுற்றிருப்பதாக நடி, நோயாளியாகப் பாசாங்குசெய்.

post[1], *n.* கம்பம்; மரக்கம்பம்; மரமுளை; குற்றி; கட்டுத்தறி; நிலைக்கால்; ஆதாரக்கால்; உதைகால்; கழுமரம்; இலக்குக் குறிக்கம்பம்; அடர்த்தியும் நெருக்கமுமான சுண்ணக்கல் படுகை; சுரங்கங்களில் ஆதாரமாக விடப்பட்ட நிலக்கரித் திரள்; *v.* விளம்பரத்தாளை ஒட்டு; சுவரொட்டிகளை ஒட்டு; சுவரொட்டியால் விளம்பரப்படுத்து; கல்லூரியில் தேர்வு பெறாத மாணவர்களின் பெயர்ப்பட்டியல் ஒட்டு; தவணை கடந்த அல்லது காணாமற்போன கப்பலின் பெயரை விளம்பரப்படுத்து.

post[2], *n.* அஞ்சல்; பழங்கால அஞ்சல்வழி இடைமாற்றுக் குதிரைகளுடன் கூடிய ஆள்; பழங்கால விரைதூதர்; அஞ்சல் வண்டி; அஞ்சல் ஆள், அஞ்சற்கடிதம் கொண்டுசெல்பவர், ஒருதடவைவரும் அஞ்சற்கடிதத்தொகுதி; ஒருவேளை அஞ்சல் தொகுதி; ஒருவேளை அஞ்சற்பெட்டியிலிருந்து எடுக்கும் கடித முதலியவற்றின் தொகுதி; ஒருவீட்டில் ஒருதடவை கொடுக்கப்படும் அஞ்சல் உருப்படிகளின் தொகுதி; அஞ்சல்மனை; அஞ்சல்பெட்டி; அஞ்சலுக்கான கடிதத்தொகுதி; அஞ்சலுக்குக் கொண்டுசெல்லப்படும் பணிமனைக் கடிதத்தொகுதி; எழுதுதாள் அளவு (21" × 16"); எழுதுதாள் வகை; *v.* குதிரை இடைமாற்று ஏற்பாட்டுடன் பயணஞ் செய்; விரைந்து பயணஞ் செய்; விரைவுகொள்; கடிதத்தை அஞ்சற்பெட்டியில் இடு; அஞ்சல் பணிமனையில் கொண்டுசேர்; அஞ்சலில் ஒப்படை; கடைக்கணக்குத் துறையில் பேரேட்டில் கொண்டு பதிவுசெய், பேரேட்டில் குறி; பேரேட்டுக் கணக்கை நிறைவு செய்; முழுத்தகவலும் தெரிவி; *adv.* மிகு விரைவாக; அஞ்சல்முறையில், வழி இடைமாற்றுக் குதிரைகளின் ஏற்பாட்டுமூலமாக; (தொ.) by return of post, அடுத்த மறு அஞ்சலில், கடிதம் கொண்டுவந்த அதே அஞ்சல் தூதன் வழியாகவே; general post, காலையில் முதலில் வரும் கடிதங்கள்; வீட்டிற்குள் ஆடும விளையாட்டுவகை; parcel post, சிப்ப அஞ்சல் துறை; penny post, ஒருபென்னிகட்டணத்தில் சென்ற தொடக்கக்கால அஞ்சல்முறை.

post[3], *n.* படைத்துறைக் களம், படைவீரர் நிறுத்தப்பட்டுள்ள இடம்; பாளையம், வென்ற நாட்டில் படைப்பிரிவு தங்க வைக்கப்பட்டுள்ள இடம்; படைவீரர் காவலிடம், பணித்துறைக் கடமைக்குரிய இடம்; அரங்காப்பிடம், கோட்டைத்துறை; ஒதுக்குப்புறமான நாட்டின் வாணிகத்துறைக் களம்; பணியிடம், பணிநிலை; இருபதுக்கு மேற்பட்ட துப்பாக்கிகளையுடைய படைக்கப்பல் முதல்வர் ஆணைப்பணி; (படை.) வேலை எக்காளமுழக்கம்; *v.* படைவீரரைக் காவலாக நிறுத்து; படைப்பிரிவினை நிறுவு; படைக்கப்பல் முதல்வராக அமர்த்து; பணியில் அமர்வுசெய்; (தொ.) first post, (படை.) இரவிற் படுக்கைக்குச் செல்லும் நேரத்தை அறிவிக்கும் முதல் எக்காள ஒலி; last post, படைத்துறை இழவு வினைகளில் ஊதப்படும் இறுதி எக்காள ஒலி; post captain, இருபது அல்லது அதற்கு மேற்பட்ட துப்பாக்கிகள் கொண்ட கப்பலுக்குத் தளபதியாகச் செயலுரிமை அளிக்கப்பட்டவர்; post up, முழுச்செய்திகளையுங் கூறு, முழு விவரங்களையும் அளி.

pos'tage, *n.* அஞ்சற் கட்டணம்; (தொ.) postage stamp, அஞ்சல் தலை.

pos'tal, *a.* அஞ்சல் பற்றிய, அஞ்சல் சார்ந்த; (தொ.) postal order, அஞ்சல் பண ஆணைத்தாள்; postal union, பல நாட்டு அஞ்சற்கட்டண ஒழுங்குமுறை ஏற்பாட்டிற்கான பல்வேறு நாடுகளின் அரசாங்கக் கூட்டுறவுக் குழு.

post'-bag, *n.* அஞ்சற் பை.

post'-boat, *n.* அஞ்சற்படகு; குறிப்பிட்ட இடங்களுக்கான தனிப்பயணப் படகு.

post'-boy, *n.* கடிதங்கொண்டுசெல்பவன்; முற்காலத்தில் அஞ்சற்குதிரைமீது செல்பவன்; முற்காலத்தில் குதிரைமீது அமர்ந்து வண்டி ஓட்டுபவன்.

post'card, *n.* அஞ்சல் அட்டை.

post'-chaise, *n.* (வர.) முற்கால வழி இடைமாற்று ஏற்பாடுடைய அஞ்சல் வண்டி.

post-class'ical, *a.* கிரேக்க-ரோமமொழிகளின் இலக்கிய காலத்திற்குப் பிற்பட்ட.

post-commun'ion, *n.* திருக்கோயிலில் தூய நற்கருணை தொடர்ந்து நடைபெறும் இயேசுநாதரின் திருவிருந்து நிகழ்ச்சிப்பகுதி.

post-cos'tal, *a.* விலா எலும்பிற்குப் பின்னுலுள்ள.

post'-date[1], *n.* பின்தள்ளிக் குறித்த நாள்.

post-date'[2], *v.* உண்மை நாளைக் குறிக்காது பின்தள்ளிக் குறி.

post-diluv'ian, *n.* விவிலிய ஏட்டின் உலக வரலாற்று மரபுக்குரிய பேரூழி வெள்ளத்துக்குப்பின் வாழ்ந்தவர்; *a.* பிரளயத்திற்குப்பின் வாழ்ந்த; பேரூழி வெள்ளத்துக்குப்பின் நிகழ்ந்த.

posteen', *n.* செம்மறியாட்டின் கம்பளி நீக்கப்பெறாத ஆப்கானிஸ்தான் நாட்டிற்குரிய பெரிய முழு மேலங்கி.

post-en'try, *n.* குதிரைப்பந்தயத்திற் பிற்சேர்வு; கடைக் கணக்குத் துறையிற் பிற்சேர்ப்பு; பிந்துகுறிப்பு.

pos'ter, *n.* விளம்பரத்தட்டி; விளம்பரங்களை ஒட்டுபவர்; காறபந்தாட்ட வகையில் இலக்குக்கம்பத்துக்கு மேலே சென்று இலக்கினை எய்தும்படியான பந்துதைப்பு.

poste restante, (பிர) *n.* அஞ்சற் காப்பகம், கேட்கும் வரையில் கடிதங்களை வைத்திருக்கும் அஞ்சல் நிலைய அரங்கம்.

poster'ior, *n.* உடலின் பிற்பகுதி, பிட்டங்கள்; *a.* பின்னுள்ள; தொடர்ச்சியில் பின்வருகிற; பின்பக்கத்திய.

poste'rity, *n.* கால்வழி, சந்ததி; பின்னோர், வழித்தோன்றல்கள்; வருமரபு, பின்வருந் தலைமுறைகள்.

pos'tern, *n.* பின்புறக் கதவு; புறக்கடை, பக்கக்கதவு, பக்க வாயில.

post-exil'ian, post-exil'ic, *a.* யூதரின் பாபிலோனிய சிறைவாழ்வுக்குப் பிறபட்ட.

post'-fix[1], *n.* பின்வைப்பு, விகுதி, சொல்லின் பின்னொட்டுக் கூறு.

post-fix'[2], *v.* கடைப்பகுதியிற் சேர்.

post'-free, *a.* அஞ்சற் கட்டணமின்றிக் கொண்டு செல்லப் பட்ட; அஞ்சற் கட்டணம் முன்னரே கட்டப்பட்ட.

post-gla'cial, *a.* (மண்.) பனிப்பேரூழிக்குப் பிற்பட்ட.

post-grad'uate, *n.* பட்டப் பின்பயிற்சி, பட்டம் பெற்றபின் படிபபு; *a.* பட்டம் பெற்ற பின்னுள்ள, பட்டத்திற்குப்பின்.

post-haste', *adv.* மிகு விரைவுடன்.

post hoc erg'o prop'ter hoc, (ல) *n.* பிந்திவந்தது எனவே பின்விளைவாகத்தக்கது என்ற வாதம்; காலவரிசையைக் காரண காரியமாகத் தொடர்புபடுத்தும் போக்கைக் கண்டிக்கும் எளனக்குறிப்பு.

post'-horse, *n.* முற்கால அஞ்சல்முறையில் வழியிடை மாற்றுகுதிரை.

post'humous, *a.* இறந்த பின்னுள்ள; தந்தை இறந்தபின் பிறந்த; இயற்றியவர் மறைவுக்குப்பின் அச்சிடப்பட்ட.

postiche', *n.* வேலைப்பாடு முற்றுப்பெற்றபின் சேர்க்கப்படுவது; சிற்ப வேலையில் பின்னுறச் சேர்க்கப்படும் பொருத்த மற்ற வேலை, தேவைக்கு அதிகமான பின்னிணைப்பு வேலை; கடைச்சரக்கு வகையில் பொய்ம்மயிர், கள்ளமுடி; போலி முகப்பு; *a.* போலியான; செயற்கையான, இயற்கையல்லாத.

postic'ous, *a.* (தாவ.) பின்பகுதியிலுள்ள; பின்னுள்ள; பின் பக்கத்திய.

pos'til, *n.* (வர.) ஓரக்குறிப்பு, விவிலிய நூலில் ஓரத்தில் எழுதப்படும் விளக்கக்குறிப்பு; விளக்கவுரை, விரிவுரை.

postil'ion, postill'ion, *n.* மாவூர் வலவன், இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியில் அண்மையிலுள்ள குதிரை மீதிவர்ந்து ஓட்டுபவன்.

post-impre'ssionism, *n.* அகவாய்மைப் பண்போவிய முறை, பிரானசில் 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய புறவாய்மைப் பண்போவிய இயக்கத்திற்குப் பின் அதன் எதிரியக்கமாகத் தோன்றிய ஓவிய இயக்கம்.

postlim'iny, *n.* (ரோம. சட்.) மறுசீர்ப்பெறலுரிமை, நாடு கடத்தப்பட்டவர் அல்லது சிறைப்பிடிக்கப்பட்டவர் திரும்பிய பின் நாட்டின் குடியுரிமைகளைத் திரும்பப்பெறும் நிலை; மறு சீரமைப்புப் பேறு; அனைத்து நாட்டுச் சட்ட வகையில் போருக்குப்பின் ஒருவருடைய நாடு மீண்டும் அந்நாட்டார் ஆட்சிக்கு வந்தால் போர்க்கைதிகள்-கைப்பற்றப்பட்ட பொருள்கள்-பெற்றுப் பழையநிலைக்கு மீளூந் தன்மை.

post'lude, *n.* இசை முடிப்பியக்கம்; இசைத்துறையில் இறுதித் தற்புனைவியக்கம்.

post'man, *n.* அஞ்சலாள்.

post'mark, *n.* அஞ்சல் முத்திரை; *v.* அஞ்சல் முத்திரையிடு.

post'master[1], *n.* அஞ்சல்நிலையத் தலைவர்; (தொ.) Postmaster General, அஞ்சல்துறைத் தலைவர்.

post'master[2], *n.* ஆக்ஸ்போர்டு சார்ந்த மெர்டன் (Merton) கல்லூரியின் உதவிச்சம்பள மாணவர்.

post'mastership, *n.* அஞ்சல்நிலையத் தலைவர் நிலை; அஞ்சல் நிலையத் தலைவர் பதவி.

post merid'iem, (ல) *adv.* நடுப்பகலுக்குப்பின்னுல், பிற்பகலில்.

post-millenn'ial, *a.* இயேசுநாதரின் மறுவருகை திருவாயிரம் கடந்து நிகழும் என்ற கோட்பாட்டுக்குரிய.

post-millenn'ialism, *n.* இயேசுநாதரின் மறுவருகை திருவாயிரத்துக்குப்பின் நிகழும் என்ற கோட்பாடு.

post'mistress, *n.* அஞ்சல்நிலையத் தலைவி.

post-mort'em[1], *n.* சாவிற்குப் பின்னுய்வு; (பே-வ.) சீட்டாட்ட வகையில் ஆட்டம்பற்றிய பின்பேச்சு; *a.* சாக்காட்டின் பின் செய்யப்படுவதான.

Post-mort'em[2], (ல.) *adv.* சாக்காட்டிற்குப் பின்.

post-nat'al, *a.* பிறப்பிற்குப்பின் நிகழ்கிற.

post-nup'tial, *a.* திருமணத்திற்குப் பிற்பட்ட.

post-ob'it, *n.* மரபுச்சொத்துக்குரிய முன்னவர் இறந்ததும் கொடுத்த வாக்குத்தொகை உரிமை தருகிற கடன் பத்திரம்; *a.* இறந்த பிறகு நடப்புக்கு வருகிற.

post'-office, *n.* அஞ்சல்நிலையம்.

post'-office order, *n.* பணஞ் செலுத்துதற்கான அஞ்சல் நிலையக் காசோலை.

post-or'al, *a.* வாய்க்குப்பின் அமைந்துள்ள.

post'-paid, *a.* அஞ்சல்தொகை செலுத்தப்பட்ட.

post-pli'ocene, *a.* மண்ணியல் கடையூழியாகிய புத்துயிரூழியில் மூன்றாந்தரக் கிளை ஊழிகளும் நான்காந்தரப் பனி ஊழிப்பருவங்களும் கடந்த காலத்திற்குரிய.

postpone', *v.* காலங்கடத்து, தள்ளிவை; காலந்தாழ்த்து; முக்கியத்துவங் குறைத்து மதி.

postpone'ment, *n.* காலங்கடத்துதல்; தள்ளிவைக்குஞ் செயல்.

postposi'tion, *n.* பின்வைப்பு, விகுதி.

postpran'dial, *n.* உணவிற்குப் பிற்பட்ட.

post'script, *n.* (சு-வ. P.S., P.P.S.) பிற்சேர்க்கை; கடிதத்தில் கையெழுத்திட்டபின் எழுதிச் சேர்க்கும் பத்தி; வானொலி பரப்புச் செய்தி அறிக்கையின் முடிவில் வரும் பேச்சு.

post-ter'tiary, *a.* மண்ணூல் புத்துயிரூழியின் முதல் மிகப் பெருங்கூறு கழிந்த.

post'-town, *n.* தனி அஞ்சல்நிலையமுடைய நகரம்.

pos'tulant, *n.* சமய அமைப்பிற் சேர்வதற்கான வேட்பாளர்.

pos'tulate[1], *n.* அடிக்கோள், ஆராய்ச்சியின் அடிப்படையாக ஏற்றமைவு கொள்ளப்பட்ட மெய்ம்மை; அடிப்படைநிலை; இன்றியமையா முதற்படு முதற்கூறு; (வடி.) இயல்வுக் கோள், எளிய கையாட்சி இயலுவதாகக் கொண்டு மேற் செல்லும் முறை.

pos'tulate[2], *v.* ஏற்றமைவாகக் கொள்; அடிப்படையாக வேண்டு; மெய்யாக அப்பொழுதைக்கென ஏற்றுக்கொள்; முற்படு, முதற்கூறுகக் கோரு; இன்றியமையா முற்படு கூறுக வற்புறுத்திக் கூறு; திருச்சபைச் சட்டத்துறையில் மேல் ஏற்பிசைவு எதிர்நோக்கித் தேர்வுசெய்.

pos'ture, *n.* நிலைகோடல்; தோற்ற அமைவு, மனநிலை; பாங்கு, நிலை, போக்கு; *v.* நிலைகொள்ளு, தனி அமைவு நிலையில் நில், தனிப்படு தோற்றநிலைகொள்; தனிநிலை உடலமைவுடன் இயலு.

pos'ture-maker, *n.* நிலைகொளையர்.

pos'ture-master, *n.* உடற்பயிற்சிக்கலை ஆசிரியர், கட்டழகுக்கலை ஆசிரியர்.

pos'y *n.* பொலஞ்சொல்; பூங்கொத்து.

pot, *n.* பானை; மட்கலம்; கண்ணுடிக் கொள்கலம்; நீர் மொள்ளும் கலம்; உலோகக் குடிகலம்; அடிசிற் கலம்; மைகொள் புட்டில்; பழச்சாற்றுப் புட்டில்; கொள்கல

அளவு; தாள் அளவு ($15\frac{1}{2}'' \times 12\frac{1}{2}''$); பணத்தின் பெருந் தொகை; மேசைக் கோற்பந்தாட்டத்தில் பந்துவீழ்பை; பைவீழ் பந்தடி; மேசைக் கோற்பந்தாட்டத்தில் பையில்வீழ அடிக்கும் பந்தடி; வெள்ளியாலான பரிசுப் பூங்குவளை; பலர் பெருந்தொகைப் பந்தயம் வைத்த குதிரை; பலர் விருப்பத்துக்குரியது; தலைக்கவசம்; *v.* கலத்திலிடு; கலத்திலிட்டு வை; சாடியில் உப்பீடு வை; கலத்திலிட்டுச் சமை; தொட்டியில் நடு; மேசைக் கோற்பந்தாட்டத்தில் பையில் விழும்படி பந்தினை அடி; அணுக்கக் குறிவேட்டு எறி; வேட்டையில் கொன்ற சிறு விலங்கினைப் பையிலிடு; கைக்கொள், பெறு; சுருக்கிக் கூறி நையாண்டிசெய்; (தொ.) big pot, பொருளர்; come and take pot luck with us, எங்களோடு வந்து எங்களுக்குக் கிடைப்பதை நுகர்; go to pot, அழிந்துபோ, ஒழிந்துபோ; keep the pot boiling, வாழ்க்கைத் தொழிலை ஒழுங்காகச் செயற்படச் செய்; make the pot boil, வாழ்க்கைத்தொழில் செய், சீவனம் பண்ணு; pot hat, வட்டமான உச்சியுடைய அழுத்தமான கம்பளித் தொப்பி; pot lead, பந்தயப் படகுகளின் உடற் பகுதி வகையில் பயன்படும் ஈயம்; the pot calls the kettle black, தன்குற்றங்காணுது பிறர்குற்றங் காண்பவர்; watched pot never boils, கவலைப்பட்ட பொருள் கைகூடுவதில்லை.

pot'able, *a.* குடிக்கத்தக்க.

pot'ables, *n. pl.* பான வகைகள்.

pot'-ale, *n.* வடிகூடத்தின் கடைக்கழிவான மிகுபுளிப்பு மண்டி.

potam'ic, *a.* ஆற்றிற்குரிய.

pot'ash, potass', *n.* மர உப்பு, சாம்பலுப்பு; (தொ.) caustic potash, சாம்பர நீரக உயிரகை.

pot'ash-water, *n.* வளி கலந்த பானவகை.

potass'ium, *n.* சாம்பரம், மென்மையான வெண்ணிற உலோகத்தனிமம்; கூட்டுப்பொருட்களில் பயன்படும் கார உலோகங்களில் ஒன்று; (தொ.) potassium cyanide, சாம்பரக் கரிநீரகை, மிகக்கொடிய நஞ்சுவகை.

pota'tion, *n.* குடித்தல்; குடிதேறல்.

pota'tions, *n. pl.* கடுங்குடி, வெறிமயக்கக் குடி.

potat'o, *n.* உருளைக்கிழங்குச் செடி; உருளைக்கிழங்கு; (தொ.) small potatoes, நிரம்பிய மதிப்பில்லாதது; the clean potato, the potato, சரியானது, தக்கது.

potat'o-box, *n.* வாய்.

potat'o-ring, *n.* கலந்தாங்கி, கலச்சும்மாடு.

potat'o-trap, *n.* வாய்.

pot'-belly, *n.* தொப்பை வயிறுடையவர், வயிறுதாரி.

pot'-boiler, *n.* வாழ்க்கைப் பிழைப்புக்காக மேற்கொள்ளப் பட்ட கலை-இலக்கிய வேலை; வாழ்க்கைப் பிழைப்பிற்காகக் கலை-இலக்கிய வேலைசெய்பவர்.

pot'-bound, *a.* தொட்டியின் அளவுகடந்து வளர்ந்துவிட்ட; வளர்ச்சிக்கு இடமற்ற.

pot'-boy, *n.* மதுக்கடைப் பையன்.

pot'-companion, *n.* கள்வகை நண்பர், மதுக் கூட்டாளி.

poteen', *n.* அயர்லாந்துநாட்டு வழக்கில் கள்ள வடிப்புச் சாராயம்.

po'tency, *n.* ஆற்றல்; பயனுடைமை; செல்வாக்கு நிறைந்தவர்.

pot'ent, *a.* (செய்.) ஆற்றல்வாய்ந்த; மிகப்பெரிய; சிந்தனை வகையில் அறிவுக்குப் பொருத்தமான; கருத்துவகையில் மறுக்கமுடியாத; மருந்து முதலியன வகையில் ஆற்றல்மிக்க.

pot'entate, *n.* ஆளுநர், வல்லுநர்.

poten'tial, *n.* (மின்.) மின்னூட்ட அளவு; மின் அழுத்த அளவு; நிகழக்கூடியது; மூல வாய்ப்புவளம்; உள்ளார்ந்த ஆற்றல், வேண்டும்போது செயல்திறப்படுத்தப்பெறும் அடங்கிய ஆற்றல்வளம்; (இலக்.) ஆற்றல் உணர்த்தும் வினைச் சொல்; *a.* உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த, வேண்டும்போது செயல் திறப்படும் திறமுள்ள; பின்வள வாய்ப்புடைய, அகங்லைத் தகுதிவாய்ந்த; (இலக்.) இயலக்கூடும் செயல் உணர்த்துகிற; இருக்கத்தக்க; செயலுக்கு வரக்கூடிய; (தொ.) potential cautery, potential corrosive, (மரு.) வாட்டுஞ் செயல் விளைவினை உண்டுபண்ணும் பொருள்; (மரு.) அரிக்குஞ் செயல் விளைவினை உண்டுபண்ணும் பொருள்; potential difference, நிகழக்கூடும் மின்னோட்டத்தின் ஏற்றத் தாழ்வு உச்ச எல்லைகளின் வேறுபாடு; potential energy, உள்நிலை ஆற்றல்; potential mood, ஆற்றலுணர்த்தும் வினை வாய்பாடு.

poten'tiality, *n.* இயல்திறம்; உள்ளடங்கிய ஆற்றல்; செயற்படுந்திறம்; செயற்படத்தக்க மறை ஆற்றல்.

poten'tially, *adv.* இயல்திறமுறையில், கூடியதாக.

poten'tialize, *v.* இயல்திறமுடையதாக்கு; உள் ஆற்றலுடையதாக்கு; நிலைபேறுடையதாக்கு.

poten'tiate, *v.* ஆற்றலளி, சக்தியூட்டு; இயலச்செய்.

potentiom'eter, *n.* மின்னழுத்த ஆற்றல்மானி.

pot'-hanger, *n.* பானைக்கொக்கி.

potheen', *n.* அயர்லாந்துநாட்டு வழக்கில் கள்ளவடிப்புச் சாராயம்.

poth'er, *n.* திணறல் தூசி; புகைப்படலம்; பேரிரைச்சல்; குழப்பம்; *v.* மனக்குழப்பம் அடை, அலைக்கழிக்கப்படு, தொந்தரைப்படுத்திக்கொள்.

pot'-herb, *n.* தோட்டக் காய்கறிவகை.

pot'-hole, *n.* (மண்.) பாறைகளில் இயல்பாக உண்டாகும் ஆழமான நீள்துளை; போக்குவரவுச் சாலைகளில் ஏற்படும் பள்ளம்.

pot'-hook, *n.* உறி, பானைக்கொக்கி.

pot'-house, *n.* மதுக்கடை.

pot'-hunter, *n.* தினல் வேட்டுவர்; பரிசில் வேட்டுவர்.

potiche', *n.* மேசைப் பூச்சட்டி.

potichoman'ia, *n.* மேசைப் பூச்சட்டிச் சித்திரப்பித்து.

po'tion, *n.* ஒருவேளை மருந்துநீர்; ஒருவேளை நஞ்சு.

pot'lach, pot'lache, pot'latch, *n.* வட அமெரிக்க இந்தியரின் மரபுக்குழு விருந்து.

pot'man, *n.* மதுக்கடைப் பணியாள்.

pot'-metal, *n.* செம்பீயக்கலப்பு; இரும்பு உடைசல்கள்; உருகிய நிலையில் நிறங்கள் ஊட்டப்பெறும் வண்ணக் கண்ணாடிக்கலம்.

pot-pourri, (பிர.) *n.* உலர்மணக்குவைப் புட்டி, நறுமணத்திற்காகச் சாடிகளில் சேர்த்துவைக்கப்படும் உலர்ந்த மலரிதழ்களும் நறுமணப் பொருள்களும் அடங்கிய கலவை; இலக்கியக் கதம்பம்; கதம்ப இசை உருப்படி.

pot-roast, *n.* இறைச்சிப் புழுக்கல், *v.* புழுக்கு.

pot'sherd, *n.* மட்கல உடைசல்.

pot'-shot, *n.* எளிய இலக்குச் சூடு; திடீரெனச் சுடுதல்.

pot'-still, *n.* ஆவி வெப்பூட்டாது நேரே வெப்பூட்டிச் சாராயம் வடிக்கும் வாலை.

pot'stone, *n.* சிறுமணி உருவுடைய சவுக்காரம் போன்ற கல்.

pott, *n.* எழுதுதாள் அளவு ($15\frac{1}{2}'' \times 12\frac{1}{2}''$).

pot'tage, *n.* ஆணம், சாறு; வயிறு கழுவுங்கஞ்சி; (தொ.) mess of pottage, விழுப்பொருளுக்குப் பதிலாகப் பெறுஞ் சிறுநன்மை.

pott'er [1], *n.* குயவர், வேட்கோவர்; (தொ.) potter's asthma, potter's bronchitis, மட்கலத் தொழிலர்க்குத் தூசியால் ஏற்படும் மார்ச்சளி நோய்; potter's lathe, கலம் வனையும் களிமண்ணுக்கு உருக்கொடுக்குங் கருவி; potter's wheel, வேட்கோத் திகிரி.

pott'er [2], *v.* வலுக்குறைவாக வினையாற்று, அறிவுச்சோர்வுடன் வேலை செய்; தொடர்பின்றி இடையிடைவிட்டு வேலை செய்; வீண்காலம் போக்கு, மெல்ல நகர்ந்து செல்; சுற்றித் திரி, அலை; சிறுபிள்ளைத்தனமாக நட.

pott'ery, *n.* மட்பாண்டத்தொழில்; வேட்கோவர் கலை; மட்பாண்டஞ் செய்யும் இடம்; சட்டிபானை, மட்கலத் தொகுதி.

pot'tle, *n.* அரைக்காலன் நீர்ம அளவை; அரைக்காலன் நீர்மங் கொள்ளும் கலம்; பழக்கூடை.

pott'o, *n.* மேற்கு ஆப்பிரிக்க மனிதக்குரங்கு.

potty, *a.* வெறிகொண்ட, பற்றுவெறியுடைய; சாதாரணமான; (தொ.) potty questions, எளிதில் விடையளிக்கவல்ல தேர்வு வினுக்கள்.

pot'valiant, *a.* குடியினுல் வீரவெறிகொண்ட.

pot'waller, *n.* தனிக்குடித்தன வாக்காளர்.

pot'-walloper, *n.* தனிக்குடித்தன வாக்காளர்; (கப்.) சமையல்வேலைத் துணைவன்.

pouch, *n.* சிறுபை; சட்டை வெளிப்பை; போர்வீரர் துப்பாக்கி மருந்துப்பை; கங்காரு போன்ற விலங்குகளின் மதலைப்பை; குரங்கின் கன்னப்பை; (தாவ.) பை போன்ற குழிவு; விரையுறை; *v.* பையிற் போடு; உடைமையாக்கிக் கொள்; திருட்டுத்தனமாக எடுத்துக்கொள்; உடையின் பாகத்தைப் பைபோலத் தொங்கவிடு; பைபோல் தொங்கு.

pouched, *a.* பையினையுடைய; பைபோன்ற உறுப்புடைய; (தொ.) pouched mouse, மதலைப்பையினையுடைய சிறு விலங்குவகை; வெளிப்புறமாகத் திறக்கும் கன்னப்பைகளையுடைய அமெரிக்க கொறிவிலங்குவகை; pouched rat, வெளிப்புறமாகத் திறக்கும் கன்னப்பைகளையுடைய வளைதோண்டும் அமெரிக்க கொறிவிலங்கு வகை.

pouch'y, *a.* உப்பிப் புடைத்துள்ள; தளர்ந்துத் தொங்குகிற.

poudrette', *n.* மலக்கழிவு-கட்டைக்கரி முதலியவற்றுலான எருவகை.

pouf, pouffe, (பிர.) *n.* மகளிர் புடைப்புக் கூந்தல் ஒப்பனை வகை; தாழ்விருக்கைப் பெருந் திண்டு; மெத்தை.

poulp, poulpe, *n.* பற்றி உறிஞ்சும் எட்டுக் கைகளையுடைய கடல்வாழ் உயிரின வகை.

poult, *n.* வீட்டுக்கோழி-வான்கோழி முதலியவற்றின் குஞ்சு.

poult-de-soie, (பிர.) *n.* முறுக்கு வண்ணப்பட்டு வகை.

poul'terer, *n.* பறவை வாணிகர்.

poul'tice, *n.* பதவாடை, பற்று, கட்டி-புண் முதலியவற்றிற்கு மெல்லிய துணியின்மேல் வைத்துக்கட்டும் சூடான மாக்களி; *v.* கட்டி முதலியவைகளுக்குப் பதவாடை வைத்துக் கட்டு.

poul'try, *n.* வளர்ப்புப் பறவைகள்.

pounce [1], *n.* பறவை உள்நகம், உகிர்; இருஞ்சுதல், பறவையறைதல், திடுமெனப் பாய்ந்து இறங்குதல்; *v.* இருஞ்சு, திடுமெனப் பாய்ந்து பற்று; திடீரெனத்தாக்கு; ஆர்வத்துடன் கைப்பற்று.

pounce [2], *n.* மை உறிஞ்சுதூள்; புரைவழிச் சுண்ணம்; வண்ணப்பொடி; *v.* சுண்ணத்தால் செவ்விதாக்கு.

pound [1], *n.* வீசங்கல்லெடைகள் (ounce) பதினுறு கொண்ட நிறையளவு; இருபது ஷில்லிங்குகள் கொண்ட பிரிட்டிஷ் பணம்; இருபது ஷில்லிங்குகள் மதிப்புடைய தங்க நாணயம்; *v.* நாணயமடித்தல் வகையில் ஒரு பவுண்டு நிறை இருக்க வேண்டிய எண்ணிக்கையுள்ள நாணயங்களை எடைபோட்டு அவற்றின் நிறையைச் சரிபார்; (தொ.) penny wise and pound foolish, பூசணிக்காய் போவதறியாமல் கடுகு போவதற்குக் காதறுத்துக் கொள்ளுதல்; pound note, ஒரு பவுண்டு மதிப்புள்ள பொருளக நாணயத்தாள்; pound Scots, (வர.) 1 ஷில்லிங்கு 8 பென்ஸ்; pound sterling, இருபது ஷில்லிங்கு கொண்ட பணம்.

pound [2], *n.* பட்டி, ஆளற்ற கால்நடைகளையும் பொருள்களையும் மீட்கிறவரையில் அடைத்து வைப்பதற்கான இடம்; விலங்குகளுக்கான தொழுவம்; சிறை; வேட்டைவகையில் இடர்ப்பாடான நிலை; *v.* கால்நடை முதலியவற்றைப் பட்டியிலடை; (தொ.) pound the field, வேட்டையில் வேலி வகையில் கடக்கக்கூடாததாயிரு; குதிரைமீது செல்பவர் வகையில் பிறரால் தாண்டமுடியாத வேலியைத் தாண்டு.

pound [3], *v.* அரை, பொடியாக்கு, தூளாக்கு; இடி, துவை, குறு; மோது; தூள்தூளாக அடித்து நொறுக்கு; செம்மையாக அடி; துப்பாக்கி முதலியவற்றுல் பலமாகச் சுடு; நட; ஓடு; சவாரிசெய்; பளு உணர்ச்சியுடன் நடந்துசெல்.

poun'dage, *n.* ஒரு பவுன் பணத்துக்கு இவ்வளவென்னுந் தரகு அல்லது கட்டணம்; ஒரு தொழிலிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானத்தில் கூலியாகக் கொடுக்கப்படும் நூற்றுவிழுக்காடு, ஒரு பவுண்டு எடைக்கு இவ்வளவென்று செலுத்தப்படுந் தொகை; அஞ்சற்காசோலை முதலியவை மீதான கட்டணம்; தொகை; அஞ்சற்காசோலை முதலியவை மீதான கட்டணம்; (தொ.) tonnage and poundage, (வர.) இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட மிடாத்தேறல்மீதும் பவுன் மதிப்புள்ள சரக்குமீதும் முதலாவது சார்லஸினுல் (Charles I) மாமன்றத்தின் உடன்பாடின்றி முறைமீறி விதிக்கப்பட்ட வரி.

pound'-day, *n.* வருபவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு பவுன் நாணயம் அல்லது ஒரு பவுண்டு எடையுள்ள பண்டங்களை அறவுதவியாகக் கோரப்படும் நாள்.

poun'der [1], *n.* அரைத்துப் பொடியாக்குங் கருவி; உலக்கை, குழவி; உரல், அம்மி.

poun'der [2], *n.* பவுண்டு எடையுள்ள பொருள்; பவுண்டு எடைக் குண்டுகளையுடைய துப்பாக்கி; பவுன் பணம் மதிப்புள்ள பொருள்; பவுன் பணம் வைத்திருப்பவர்.

pound'-lock, *n.* இரண்டு கதவுகளுள்ள நீர்த்தேக்க அடைப்புப் பூட்டு.

pour, *n.* பெரும்பெயல், சோனைமாரி; வார்ப்படத் தொழில் வகையில் ஒருதடவை வார்க்கப்பட்ட உருக்கிய உலோகம் முதலியவற்றின் அளவு; *v.* ஊற்று, கொட்டு; பொழி, சொரி; சிந்து; ஏராளமாக வெளிப்படுத்து; அடுத்தடுத்து வெளிப்படுத்து; பாய், பெருகு; மழைவகையில் சோனுமாரியாகப் பெய்; ஏராளமாக வந்தடை; ஏராளமாக வெளியேறி வா; (தொ.) it never rains but it pours, கேடுகள் பலவாகவே வருகின்றன; pour cold water on, ஊக்கங்கெடு, ஆர்வத்துக்குத் தடைபோடு; pour oil upon troubled waters, நயம்பட உரைத்துக் கலகந் தணிவி.

pourboire, (பிர.) *n.* காபிச்செலவு, அன்பளிப்பு.

pourparlers, (பிர.) *n. pl.* பேச்சு வார்த்தைக்கு முன்னீடான கலந்தாய்வு, பூர்வாங்கப் பேச்சுக்கள்.

pour'point, *n.* (வர.) அடுக்கு மெத்தை, சேர்க்கைப்பள்ளி.

poussette', *n.* ஈரிருவர் கைகோத்தாடல்; *v.* இணையாகக் கைகோத்து ஆடு.

pou sto, (கிரே.) *n.* நிற்குமிடம், செயலின் அடிப்படை.

pout [1], *n.* மீன் வகை.

pout [2], *n.* உதட்டுப் பிதுக்கம்; *v.* உதடுகளைப் பிதுக்கு, உதடுகள் வகையில் வெறுப்புக்குறியாகப் பிதுக்கமுறு.

pout'er, *n.* வெறுப்பினுல் உதட்டைப் பிதுக்குபவர்; புடைத்த மார்புடைப் புறுவகை.

pov'erty, *n.* வறுமை, ஏழ்மை, நல்குரவு, இன்மை, பஞ்சம், பற்றுக்குறை, குறைபாடு; இனப்பொதுப்பண்பு குறைபாட்டுநிலை; இழிதகைமை, சிறுமை, அற்பத்தனம்.

pov'erty-strick'en, *a.* நிரப்பிடும்பையுடைய; மொழிவகையில் சொல்வளங் குறைந்த.

powd'er, *n.* பொடி, தூள்; மருந்துப்பொடி; சூரணம்; நீற்று மருந்து, பற்பம்; நறுமணச் சுண்ணம்; வெடிமருந்து; விளையாட்டுகள் வகையில் அடியின் வீச்சாற்றல்; *v.* பொடி தூவு, தூள் முதலியவற்றுற் போர்த்து; நறுமணச் சுண்ணந் தூவு; புள்ளிகளால் மேற்புறத்தை ஒப்பனைசெய்; பொடியாக்கு; (தொ.) food for powder, படைவீரர்கள்; not worth powder and shot, முயற்சிக்கு ஒவ்வாத, சிரமத்திற்கு ஏற்ற பயன்தராத; powder blue, சலவைத் தொழிலிற் பயன்படுத்தப்படும் நீலக் கண்ணுடித்தூள்; நீலக்கண்ணுடித் தூளின் அடர்நீலநிறம்; அடர்நீலநிறமான; smell of powder, போர் அனுபவம்.

pow'der-down, *n.* பறவையிறகின் தூவி.

powd'er-flask, powd'er-horn, *n.* வெடிமருந்துப் புட்டில்.

powd'er-magazine, *n.* வெடிமருந்துக் கிடங்கு.

powd'er-mill, *n.* வெடிமருந்தாலை.

powd'er-monkey, *n.* (வர.) போர்க்கப்பலில் பீரங்கிகளுக்கு வெடிமருந்து எடுத்துச் செல்லுஞ் சிறுவன்.

powd'er-puff, *n.* சுண்ணப் பூம்பந்து.

powd'er-room, *n.* வெடிமருந்துக்கிடங்கு; மகளிர் ஒதுக்கிடம்.

powd'ery, *a.* சுண்ணஞ் சார்ந்த; தூள் போன்ற, பொடி போர்த்த, தூசி படிந்த; தூளாகிற.

power, *n.* ஆற்றல்; விசையாற்றல்; வேலைத்திறம்; வேலைத்திற ஆற்றற்கூறு; இயக்குந்திறம்; இயக்குவிசை; இயந்திர ஆற்றல்; இயந்திர ஆற்றல் கருவி; உருப்பெருக்காடி-தொலை நோக்காடி ஆகியவற்றின் இயலுருப்பெருக்க விசையளவு; கண்ணுடிச்சில்லின் குவிமைய அமைவு; ஆணையுரிமை; மேலாண்மையுரிமை; ஆட்சியுரிமை; வலிமை, மிடல்; ஆட்சித்திறல்; ஆட்சி; வல்லரசு; அடக்குந்திறம்; கட்டுப்படுத்தி ஆளுந்திறம்; அதிகாரத் தலைமையிடம்; ஊக்கம்; உடல்வலிமை, சக்தி; செய்திறம்; செயலுரிமை; செயலிசைவுரிமை; இயல்திறம்; இயல்திற எல்லை; சட்டவுரிமை; உரிமைத் தகுதி; உரிமைத்தாள், உரிமைப்பத்திரம்; ஆன்மிக வலிமை; உளத்திறக்கூறு; ஆன்மிக ஆற்றற்கூறு; செல்வாக்கு; பெருந்தொகை வலிமை; பேரெண் வலிமை; எழுத்தின் ஓசைத்திறம்; பயன்விளைவுத்திறம்; வலிமையாளர்; இயக்குந்திறன் உடையவர்; விவிலிய வழக்கில் அதிகாரத்துக்குட்பட்ட தன் அடையாளம்; தேவ தூதர்களில் ஆளும் படித்தரத்துக்குரிய தெய்வதங்கள்; (கண.) எண்ணின் விசைப்பெருக்கம்; (வடி.) மையவிசைமானம், இரு வட்டமைய இடைத்தொலைப் பெருக்கத்திற்கும் அவற்றின் ஆரப் பெருக்கங்களுக்கும் இடைப்பட்ட வேற்றுமை அளவு; *a.* ஆற்றல் சார்ந்த; இயந்திர ஆற்றலால் இயக்கப்படுகிற; உடலாற்றலால் இயக்கப்படாத; *v.* இயந்திர ஆற்றலிணைவி; (தொ.) in one's power, ஒருவர் தயவில்; ஏலுமளவு; power of attorney, பகர ஆள் செயலுரிமைப் பத்திரம்; power politics, தெம்பு அரசியல்; the mechanical powers, கெம்பு கோல்-சக்கரம்-அச்சு-கப்பி-திருகு முதலிய கருவியாற்றல்கள்; the powers that be, ஆட்சியிலிருப்போர்.

pow'er-dive, *n.* நேர்குத்துப் பாய்வு, விமான வகையில் இயந்திரங்களை நிறுத்தா நிலையிலேயே செங்குத்தாக இறங்குவது; *v.* நேர்குத்தாகப்பாய்; இயந்திரங்கள் அடக்கப்பெறுமலேயே செங்குத்தாக இறங்கு.

pow'erful, *a.* ஆற்றல்மிக்க; பெருஞ் செல்வாக்குடைய; திட்பம் வாய்ந்த, செறிவு மிக்க; பயன் விளைவுத்திறம் மிக்க.

pow'er-lathe, *n.* இயந்திரக்கடைசலி.

pow'erless, *a.* வலுவற்ற; ஆற்றாத, சிறிதும் உதவிசெய்ய முடியாத.

pow'er-loom, *n.* இயந்திரத் தறி.

pow'er-mill, *n.* இயந்திர ஆலை.

pow'er-station, *n.* மின் உற்பத்தி நிலையம்.

pow'wow [1], *n.* வட அமெரிக்க-இந்தியரிடையே மருத்துவர்; செவ்விந்தியரிடையே சூனியக்காரர்; செவ்விந்தியரின் மந்திர வினைமுறைக் குழு.

powwow' [2], *v.* மருத்துவத் தொழில்புரி; மந்திரத் தொழில்புரி; மந்திர வினைமுறைக்குழு நடத்து; மந்திர வினைமுறைக் குழுவில் வாதிடு; மருத்துவஞ் செய், மந்திரம் போட்டுக் குணப்படுத்து.

pox [1], *n.* அம்மை, பெரியம்மை; பயற்றம்மை; கோ வைசூரி; (பே-வ.) கிரந்தி நோய்.

pox [2], *n.* pock என்பதன் பன்மை.

pozzola'na, pozzuola'na, (இத்.) *n.* சீமைக்காரை வகையில் பெரிதும் பயன்படும் எரிமலைச் சாம்பல்.

praam, n. = *pram* [1]

prac'ticable, *a.* செயல்முறைக்குகந்த, செய்யக்கூடிய, செய்துமுடிக்கத்தக்க; பாதை கடவு வகைகளில் பயன்படுத்தக்கூடிய, நடைமுறைப்படுத்தக்கூடிய; நாடக அரங்கின் பலகணிகள் வகையில் மெய்யாகப் பயன்படுபவையான.

prac'tical, *a.* செயல்முறை சார்ந்த; நடைமுறைக்குரிய; அனுபவத்தில் தெரிகிற; காரிய சாத்தியமான; காரியத்துக்குப் பயன்படுகிற; தொழிலில் ஈடுபட்டிருக்கிற, தொழில் புரிகிற; மனக்கோட்டையான தன்மையின்றி செயலாற்றும் பாங்குள்ள; செயல்துறையில் உண்மையான; (தொ.) practical joke, செயற்குறும்பு, நையாண்டிக் குறும்பு; practical politics, செயல்முறைக்கு ஒத்த திட்டங்கள்.

prac'tically, *adv.* நடைமுறையில்; உண்மையாக; கிட்டத்தட்ட; பெரும்பாலும்.

prac'tice, *n.* பழக்கம், வழக்கமான செயல்; சட்ட நடைமுறை ஒழுங்கு; வாடிக்கை; நீடித்த பயிற்சி; பயிற்சித் தொடர்பு; வழக்கறிஞர் மருத்துவர் ஆகியோரின் தொழில் முறைப்பணி; கடைக்கணக்குமுறை, விலை விகிதம் சரக்களவு ஆகியவற்றில் ஒன்றிலிருந்து ஒன்று வகை மாற்றிக் கண்டு பிடிக்கும் முறை, (தொ.) in practice, நடைமுறையிலிருக்கிற; out of practice, நடைமுறையிலிராத, பழக்கம் விட்டுப்போன; put in practice, put into practice, திட்டம்-ஏற்பாடு முதலியவற்றை நிறைவேற்று.

practi'cian, *n.* தொழில்நடத்துபவர்; செயல்முறைக்கு ஒத்தவர்.

prac'tise, *v.* செயற்படுத்து; வழக்கமாகச் செய்துகொண்டிரு; தொழில் நடத்து, தொழில்புரி; கலை-கருவி முதலியவற்றில் பயிற்சி மேற்கொள்; பழக்கு; பழகு; (தொ.) practise on, practise upon, ஏமாற்று, ஒருவர் ஏமாளியாயிருப்பதைப் பயன்படுத்திக்கொள்.

prac'tised, *a.* பயிற்சி மூலமாகத் திறமைபெற்றுள்ள.

practi'tioner, *n.* வழக்குரைஞர்; மருத்துவர்; (தொ.) general practitioner, மருந்து அறுவை ஆகிய இரண்டு துறைகளிலும் தொழில் நடத்துபவர்.

praeco'cial, *a.* புனிற்றேட்டமுடைய, பறவை வகையில் முட்டையிலிருந்து வெளிவந்ததும் இரைதேடிக் கொள்ளவல்ல குஞ்சுகளையுடைய.

praemunir'e, (ல.) *n.* (சட்.) கட்டளையழைப்பு, இங்கிலாந்தில் போப்பாண்டவரின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதாகக் குற்றம் சாட்டப்பட்டவரை அழைக்குமாறு மாவட்ட நீதிபதிக்கு இடப்படும் கட்டளை.

praepos'tor, *n.* மாணவர் தலைவர், சட்டாம்பிள்ளை.

praet'or, *n.* (வர.) தண்டலர், ரோமரிடையே ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சித்தலைமைப் பொறுப்பிற் பங்கு கொண்டிருந்த குற்றவியல் நடுவர்.

praetor'ian, *n.* ரோமர் குற்றவியல் நடுவர்; படித்தாமுடையவர்; ரோமப் பேரரசரின் மெய்க்காவல் படைவீரர்; *a.* ரோமர் குற்றவியல் நடுவர் சார்ந்த; ரோமப் பேரரசரின் மெய்க்காவற்படை சார்ந்த.

pragmat'ic, *a.* பிறர் செய்தியில் தலையிடுகிற; பிடிவாதமான, கொண்டதுவிடாத; செயல்துறைப் பயன் நாட்டமுடைய; வரலாற்று நிகழ்ச்சிகள் காட்டுந் தத்துவங்களையொட்டி வரலாற்றைக் கொண்டு செல்லுகிற; நாட்டரசின் வினைகள் பற்றிய, (தொ.) pragmatic sanction, ஆணைச்சட்டம், அடிப்படைச் சட்டமாகப் பிறப்பிக்கப்படும் பேரரசர் தனிக் கட்டளை.

pragmat'ical, *a.* பிறர் செய்தியில் தலையிடுகிற; பிடிவாதமான, கொண்டது விடாத; செயல்துறைப் பயன்நாட்டமுடைய.

prag'matism, *n.* பிறர் செயலில் உரிமையின்றித் தலையிடுதல்; கல்விச் செருக்கு; செயல்துறைப் பயன்நாட்டமுடைமை; காரியவாதியாயிருக்குந்தன்மை; (மெய்.) பயனீட்டுவாதம், மனித நலனுக்குப் பயன்படுகிற அளவிற்கு ஒன்றினை மதிப்பிட வேண்டுமென்னுங் கோட்பாடு.

prag'matist, n. பிறர் செயலில் தலையிடுபவர்; கொண்டது விடாதவர்; கல்விச் செருக்குடையவர்; தன்முனைப்புள்ளவர்; பயனீட்டுக் கோட்பாட்டாளர், பயனீட்டுவாதத்தில் நம்பிக்கையுடையவர்.

prag'matize, v. மெய்யாகக் குறித்துக்காட்டு; பகுத்தறிவுக்கு ஒத்ததாக்கு; நேர்மைக்கிணங்க வை.

prair'ie, n. மரமற்ற பரந்த வெளி; அலை போன்ற பரப்புடைய புல்வெளி; (தொ.) prairie oyster, முழுமையாக விழுங்கப்படும் பச்சைமுட்டை.

prai'rie-chick'en, n. வட அமெரிக்க காட்டுக்கோழி வகை.

prai'rie-dog, n. நாய்போல் குரைக்கும் வட அமெரிக்க கொறி விலங்கு வகை.

prai'rie-hen, n.=prairie-chicken.

praise, n. புகழ்ச்சி; பாராட்டு; புகழ்தல்; v. புகழ்; மெச்சு, போற்று; பராவு. துதி.

praise'worthy, a. புகழ்தற்குரிய, பாராட்டத்தக்க.

Pra'krit, (ச.) n. பிராகிருதம், பாகதம், சம்ஸ்கிருதத் திரிபாயுள்ள அல்லது தொடர்பாயுள்ள பேச்சுவழக்கு மொழிகளுள் ஒன்று.

pra'line, n. வாதுமை இனிப்புப்பிட்டு.

pram[1], (டச்.) n. சரக்கேற்றும் தட்டை அடிப்பாகமுடைய படகு வகை; பீரங்கிகள் ஏற்றப்பட்ட தட்டைப்படகு வகை; ஸ்காண்டிநேவிய (Scandinavian) கப்பலின் படகு.

pram[2], n. (பே-வ.) தள்ளுவண்டி, கைவண்டி.

prance, n. பின்கால்மீது துள்ளிக்குதிப்பு; தாவு நடை, எழுச்சிமிக்க நடை; துள்ளலியக்கம்; v. குதிரையைப் பின்னங் கால்களை ஊன்றித் துள்ளச்செய்; துள்ளி நட; துள்ளி நடக்குங் குதிரைமீதிவர்ந்து செல்; இறுமாப்பு நடைபோடு; பகட்டுநடை நட; வீறுப்புக்காட்டு.

pran'dial, a. சாப்பாட்டிற்குரிய.

prank[1], n. குறும்பு விளையாட்டு; சிறு குறும்பு; நையாண்டிக் குறும்பு; இயந்திரங்கள் வகையில் ஒழுங்கற்ற இயக்கம்.

prank[2], v. ஒப்பனைசெய், அலங்கரித்துக்கொள்; மலர்கள் முதலியவற்றால் அணிசெய்.

prase, n. பச்சைப் படிகக்கல் வகை.

parte, n. பிதற்றுரை, வீண்பேச்சு, பயனில்சொல்; v. பிதற்று; உளறு.

prat'ie, prat'y, n. ஆங்கிலோ-ஐரிஷ் வழக்கில் உருளைக் கிழங்கு.

prat'incole, n. தூக்கணாங் குருவியின் தோற்றமும் பழக்க வழக்கங்களும் உடைய பறவை வகை.

pratique, (பிர.) n. தொற்று நீக்கச்சீட்டு, தொற்றுநோய் ஒதுக்கீட்டுக்குப்பின் கப்பலுக்கு வழங்கப்படும் துறைமுகத் தொடர்புரிமைச்சீட்டு.

prat'tle, n. குதலை; v. குதலை பேசு.

pratt'ler, n. குதலைப்பேச்சினர்; குழந்தை.

prav'ity, n. உணவுவகையில் கெட்டுப்போன நிலை; கொடுமை.

prawn, n. இறால் மீன்; v. இறால்மீன் பிடி.

prax'is, n. எடுத்துக்காட்டு; வழக்கம்; (இலக்.) பயிற்சிக்கான எடுத்துக்காட்டு வாய்பாடுகள்.

pray, v. வழிபடு; வேண்டுதல் செய்; விண்ணப்பித்துக்கொள்; வேண்டு; இசைவு கோரு; மன்றாடு; குறையிர, கெஞ்சிக் கேள்.

pray'er[1], n. இறைவணக்கம்; வழிபாட்டுமுறை; இறையருள் வேண்டுதல்; வழிபாட்டு வாசகம்; இறைவணக்க வாய்ப்பாடு; வேண்டுகோள்; முறையீடு, விண்ணப்பம்; வேண்டப்படும் பொருள்; (தொ.) Lord's prayer, இயேசுநாதர் தமது சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்த வழிபாட்டு முறை.

pray'er[2], n. இறைவணக்கஞ் செய்பவர்; வேண்டிக்கொள்பவர்.

pray'er-book, n. வழிபாட்டு ஏடு.

prayer'ful, a. இறைவணக்கஞ் செய்யும் பாங்குள்ள; கடவுள் வழிபாட்டொழுக்கமுடைய.

prayer'-meet'ing, n தொழுகைக் கூட்டம்.

prayer'-wheel, n. தருமசக்கரம், திபேத்திய பௌத்தர் வழிபாட்டு வாசகம் பொறித்த சுழல்நீள் உருளை.

preach, n. அறவுரை, திருக்கோயில் மேடைப்பேச்சு; (பே-வ) வலிந்த நீதிபோதனை; v. சமயச் சொற்பொழிவாற்று; அறவுரை கூறு; வலியப் போய் நீதிபோதனை செய்; சொற்பொழிவுகள் வாயிலாகச் சமயநூல்களைப் பலரறியக்கூறு; சொற்பொழிவுகள் வாயிலாகக் கோட்பாடுகள் முதலியவற்றைக் கேட்போர் மனத்திற் பதியவை; (தொ.) preach down, குறைவுபடுத்து; preach up, பாராட்டிப் பேசு.

preach'er, n. சமய போதகர், சமயச் சொற்பொழிவாளர்; சமய குரு; ஆதரவாளர்; மன்றாடி.

preach'ify, v. சலிக்கும்படி போதி.

preach'ment, n. வாய்வீச்சுச் சமயச் சொற்பொழிவு; சலிப்புப்பேச்சு.

preach'y, a. (பே-வ.) சலிப்பு அறவுரையான.

pre-acquaint', v. முன்னதாகத் தெரிவி.

pre-adam'ic, a. ஆதாம் காலத்திற்குமுன் இருந்ததாகக் கருதப்படுகிற.

pre-ad'amite, n. ஆதாம் காலத்திற்குமுன் இருந்ததாகக் கருதப்படும் இனத்தவர்; ஆதாமுக்குமுன் இருந்ததாகக் கருதப்படும் இன மரபினர்; ஆதாமுக்குமுன் மனித இனம் இருந்ததாக நம்புபவர்; a. ஆதாம் காலத்திற்குமுன் இருந்ததாகக் கருதப்படுகிற.

pre-admon'ish, v. முன்னெச்சரிக்கை செய்.

pre-admoni'tion, n. முன்னெச்சரிக்கை செய்தல், முற்பட்ட எச்சரிக்கை.

pream'ble, n. முகப்புரை, பீடிகை; முற்கூற்று, பூர்வாங்க வாசகம்; தொடக்கப்பகுதி; v. முகப்புரை அமை, தோற்றுவாய் செய்.

pre-appoint', v. முன்னதாகத் திட்டப்படுத்து.

pre-arrange', v. முன்னேற்பாடு செய், முன்னதாக ஒழுங்கமைவு செய்.

pre-aud'ience, n. முற்கூற்றுரிமை; வழக்குரைஞர் தம்முள் முற்படப் பேசும் உரிமை.

preb'end, n. மானியப்படி, திருச்சபை உறுப்பினருக்கு உதவித்தொகையாக அளிக்கப்படும் மானியவருவாய்ப்பகுதி; திருச்சபை உறுப்பினர் உதவித்தொகைக்கு மூலமுதலான மானியப்பகுதி; திருச்சபை உறுப்பினர் உதவித்தொகைக்கு மூலமுதலான வரிப்பகுதி; மானிய வருவாய்ப் பகுதியிலிருந்து உதவித்தொகை பெறும் திருச்சபைக்குழு உறுப்பினர்.

preb'endary, n. மானிய வருவாய்ப் பகுதியிலிருந்து உதவித்தொகை பெறும் திருச்சபைக்குழு உறுப்பினர்.

preb'endary-stall, n. கிறித்தவ திருக்கோயில் வருவாயில் ஊழிய மானியம் பெறுங் குருவின் தங்கிடம்.

precar'ious, a. பிறர் சார்பொட்டிய; நிலையுறுதியற்ற; நிலையற்ற; முடிவுக்குரியதையே ஆதார மெய்ம்மையாகக் கொள்கிற; தற்செயல் நிகழ்வான; ஐயத்துக்கிடமான; இடர் செறிந்த.

prec'atory, a. (இலக்.) வேண்டுகோட் பொருளுடைய; (தொ.) precatory trust, கட்டுப்படுத்தும் இயல்புடையதாக மதிக்கப்படும் வேண்டுதல் வாசகங்கள்; precatory words, விருப்ப ஆவண வகையில் செயல் நிறைவேற்றங் கோரி வேண்டிக்கொள்ளும் வாசகப்பகுதி.

precau'tion, n. முன்யோசனை, முன் எச்சரிக்கை நடவடிக்கை.

precau'tionary, a. முன்னெச்சரிக்கையான.

precede′, *v.* முந்தியதாயிரு, முன்னிகழ்வுறு ; முற்படு, முன் வரிசைப்படு ; முக்கியத்துவத்தில் மேம்படு ; தரத்தில் விஞ்சியதாயிரு ; முற்படுவி, முன்னிகழ்வி.

pre′cedence, pre′cedency, *n.* முந்துநிலை, காலத்தால் முற்பட்ட தன்மை ; வரிசையில் முன்னிடம் ; மேம்பாடு ; மேம்பட்ட இடம் ; முற்படுதகுதி ; முதன்மை ; முந்துரிமை ; முன்னிகழ்வு ; முன்னுரிமை.

pre′cedent[1], *n.* முன்னோடி மாதிரி ; முன்னோடி நிகழ்ச்சி ; முன்னிகழ்வுச் சாக்குபோக்கு; (சட்.) முற்சான்று, முன்மாதிரிக் கட்டளை.

preced′ent[2], *a.* முற்போந்த முன்னிகழ்வான, முந்திய உயர்படியான.

pre′cedented, *a.* முன்னோடி நிகழ்வுடைய; முன்னிகழ்வாதார முடைய, முற்சான்றுடைய.

precent′, *v.* இசைக்குழுத் தலைவனாகச் செயலாற்று.

precen′tor, *n.* இசைக்குழுத் தலைவன் ; (வர.) திருச்சபைக் குழுவில் தன் கடமையைப் பகர ஆளுக்கு விட்டுச்செல்லும் உரிமை படைத்திருந்த முற்கால உறுப்பினர்.

pre′cept, *n.* கட்டளை, நீதி வாசகம் ; முதுமொழி ; நல்லொழுக்கப் போதனை ; தெய்விக ஆணை ; எழுத்துமூலமான உத்தரவு, பற்றாணை ; தேர்தலுக்கு ஏற்பாடு செய்து நடத்துவதற்கான எழுத்துமூலக் கட்டளை ; குறிப்பிட்ட தவணை வீதப்படி பணம் திரட்டுவதற்கு அல்லது செலுத்துவதற்குரிய ஆணைக்கோரிக்கை.

precep′tor, *n.* ஆசான், குரு.

precep′tory, *n.* (வர.) புனித யாத்திரைக் காவற்பணி மேற்கொண்ட சமயத் தொண்டர் படைக்குழுவின் துணை நிலைப் பிரிவினர் ; சமயத் தொண்டர்படைத் துணை நிலைப் பிரிவினர்க்குரிய மனையிடம் ; சமயத்தொண்டர் படைத் துணைநிலைப் பிரிவுநிலை.

prece′ssion, *n.* முந்துகை ; (வான்.) பூர்வாயணம், புவி மையததில் வெங்கதிர் தண்கதிர் ஈர்ப்புக்களால் ஏற்படும் அயன மைய முந்துநிகழ்வு.

pre-Chris′tian, *a.* இயேசுநாதருக்கு முற்பட்ட ; கிறித்தவ சமயம் மேம்படுதற்கு முந்திய.

pre′cinct, *n.* எல்லைக்கோடு; எல்லை வரையறைப்பட்ட இடம்; மதிலக வட்டாரம் ; தேர்வுத்தொகுதியெல்லை ; வட்டம், மாவட்டப்பகுதி.

pre′cincts, *n. pl.* சூழிடங்கள், சுற்றுப்புற இடங்கள், கோட்ட எல்லை.

pre′cious, *a.* மதிப்புமிக்க ; அருமந்த, மொழி-வேலைப்பாடு முதலியவற்றில் செயற்கைச் செப்பம் வாய்ந்த ; (பே-வ.) மிகைப்பட்ட ; *adv.* அரிதாக, வழக்கமீறி ; (தொ.) precious metal, பொன்-வெள்ளி முதலிய விலையுயர் உலோகம் ; precious stone, மணிக்கல்.

pre′cipice, *n.* கொடும் பாறை, செங்குத்துப் பாறை.

precip′itance, precip′itancy, *n.* குப்புற வீழ்வு; பதற்றப் பண்பு ; முன்பின ஆராயாமை ; தேராச்செயல்.

precip′itant[1], *n.* கரைசலிற் படிகம் உண்டுபண்ணும் நீர்மம்.

precip′itant[2], *a.* தலைகீழாக விழுகிற ; தொப்பென்று விழுகிற ; கடுவேகமாகப் பாய்கிற ; திடீர் வேகமான.

precip′itate, *n.* (வேதி.) கரைசலின் மண்டிப்படிவு ; (இய.) மழையும் பனியும் போன்ற ஆவியின் குளிர் உறைவுப்படிவு ; *a.* தலைகீழான ; கடுவேகமாக விரைகிற ; ஆள் வகையில் பதற்றமான ; செயல்வகையில் முன்பின் ஆராயாத ; மடத் துணிச்சலான ; *v.* தலைகீழாக வீசு ; கடு வேகமாக எறி ; மிகு விரைவுபடுத்து, அவசரப்படுத்து ; விரைவில் நிகழ்வி ; (வேதி.) கரைசலில் கரையா வண்டலாகப் படியச்செய் ; ஆவியைக் குளிரால் உறைவி.

precipita′tion, *n.* தலைகீழ் எறிவு ; குப்புறு வீழ்ச்சி ; தெறிப் பாயச்சல் ; திடீர் உணர்ச்சிநிலை ; திடீர் உணர்ச்சிச்செயல் ; படு விரைவு ; மட விரைவுத் துணிச்சல் ; படி வண்டல் ; வண்டற் படிவு ; வண்டல் வடிப்பு ; படிவாக்கம் ; படிவுப் பொருள் ; திடீர் உறைவு ; மழை ; கல்மழை ; பனி வீழ்ச்சி ; பனிப்பெயல் ; மழைவீழ் அளவு.

precip′itous, *a.* செங்குத்தான; சாய்வற்ற, திடீர் வீழ்வான; திடீர் ஏற்றமான.

precis, (பிர.) *n.* சுருக்கம், பொழிப்பு, குறிப்புரை ; *v.* சுருக்கு, பொழிப்பாக்கு.

precise′, *a.* துல்லியமான ; நன்கு வரையறுக்கப்பட்ட ; சரி நுட்பம் வாய்ந்த ; செவ்விய, இழையும் பிசகாத, விதிமுறை வழாத.

precise′ly, *adv.* சரி நுட்பமாக ; இழையும் வழுவாமல் ; முற்றிலும் அதே முறையிலேயே.

preci′sian, *n.* சமயத்துறையில் மயிரிழை வழுவாது வினை முறை கடைப்பிடிப்பவர் ; விதிமுறை வழாதவர் ; கண்டிப் பாளர்.

preci′sion, *n.* துல்லியம்.

preclude′, *v.* விலக்கு, தள்ளு ; தடைசெய் ; நடைமுறைக்கு ஒவ்வாததாக்கு.

preclu′sion, *n.* தவிர்ப்பு, முன்தடுத்தல்.

preco′cious, *a.* பிஞ்சில் முதிர்ந்த ; சிறுமுதுக்குறைவான ; பருவத்திற்கு முன்பாகவே பூக்கிற ; பருவம் வருமுன் காய்க்கிற ; இலை தளிர்ப்பதற்கு முன்பே பூக்கிற ; செயல்வகையில் வயதுக்கு மீறிய அறிவாற்றலைக் காட்டுகிற.

precoc′ity, *n.* பருவமுன் பழுத்தல் ; பிஞ்சில் முதிர்வு.

precogni′tion, *n.* முன்னறிவு, முன்னுணர்வு.

pre-compose′, *v.* முன்னதாக உருவாக்கு.

preconceive′, *v.* முற்புனைவாகக் கொள் ; அறியுமுன்னரே கருத்துக்கொள், முன்கூட்டியுணர்.

preconcep′tion, *n.* அறியுமுன் கருத்து, முன்னுறு தப் பெண்ணம்.

pre-con′cert[1], *n.* முன்னேற்பாடு.

pre-concert′[2], *v.* முன்னதாகவே வகுத்துத் திட்டமிடு.

pre-condemn′, *v.* முன்னதாகக் கண்டி.

pre-condi′tion, *n.* முன்நிபந்தனை.

prec′onize, *v.* சாற்று, அம்பலப்படுத்து ; பலரறியப் பாராட்டுரை, பெயர் கூவி அழை ; நியமனத்தைப் பலரறிய ஏற்றிசைவளி.

pre-con′scious, *a.* உணர்வுநிலைக்கு முற்பட்ட, உணர்ச்சி விழிப்புநிலைக்கு முற்படுநிலை சார்ந்த.

pre-con′tract[1], *n.* முந்திய ஒப்பந்தம் ; முந்திய மணவுறுதி.

pre-contract′[2], *v.* முன்னதாக ஒப்பந்தம் செய்துகொள் ; முன்கூட்டி மணவுறுதி செய்துகொள்.

pre-cord′ial, *a.* (உள்.) நெஞ்சுப் பைக்கு முன்னுள்ள.

pre-cos′tal, *a.* (உள்.) விலாவெலும்புகளுக்கு முன்னுள்ள.

precurs′or, *n.* முன்னோடி, முன்வரு தூதன் ; முன்னறிவிப்பாளர் ; முற்போந்த அறிகுறி ; முந்தையர், பணித்துறையில் ஒருவருக்கு முன்னிருந்தவர் ; இயேசுநாதர்க்கு முன் வாழ்ந்து அவர் வருகைக்கு முன்னறிவிப்பாளராக அமைந்த தீக்கையாளர் யோவான் (John the Baptist).

precurs′ory, *a.* முன்குறிப்புரையான, பீடிகையான, வாயில் செய்கிற, புகுமுகமான ; முன்னோடித் தூதனாக அமைந்த.

preda′cious, *a.* விலங்கு வகையில் பிற விலங்குகளை உண்ணுகிற ; பிற விலங்குகளை உண்ணும் விலங்குகள் பற்றிய ; சூறையாடுகிற, கொள்ளையடிக்கும் பழக்கமுடைய.

predate′, *v.* முன் தேதியிடு, மெய்யான தேதிக்கு முன் தேதி குறி.

pred′atory, *a.* கொள்ளைசார்ந்த, கொள்ளையடிக்கிற, சூறையாடும் பழக்கமுள்ள ; விலங்குவகையில் பிற விலங்குகளைக் கொன்றுதின்னுகிற.

predecease′, *n.* முற்சாவு ; *v.* முன்மாள்வுறு.

pred′ecessor, *n.* முற்பதவியாளர், பதவியில் முன்னிருந்தவர் ; முந்தியது, முன்னது ; முற்போந்த ஒன்று ; மூதாதை.

predefine′, *v.* முன்னதாகவே வரையறு ; முன்பே அறுதி செய் ; முந்திக் குறிப்பிடு.

predell′a, *n.* திருக்கோயில் வழிபாட்டு மேடையின் முகட்டுத் தளம் ; வழிபாட்டு மேடைப் பின்புற மாடக்குழி ; வழிபாட்டு மேடைப்படி முகப்போவியம் ; வழிபாட்டு மேடைப்படி முகப்புச் செதுக்குரு ; வழிபாட்டுமேடைப் பின்புற மாட ஓவியம் ; வழிபாட்டு மேடைப் பின்புற மாடச் செதுக்குரு ; வழிபாட்டுமேடை அடிப்புறத் தனிக்கட்ட ஓவியம்.

predestinar′ian, *n.* ஊழ் முன்னறுதிப்பாட்டில் நம்பிக்கை யுடையவர் ; *a.* ஊழ் முன்னறுதிப்பாட்டுக் கோட்பாடு சார்ந்த ; விதியின் முன்னறுதிப்பாடு சார்ந்த.

predes′tinate, *v.* முன்வகுத்தமை, கடவுள்வகையில் தனி மனிதரின் வீடுபேறு உடைமை-அன்மை ஆகியவற்றையும் பிற செயல்களையும் முன்னரே முடிவாக அறுதியிட்டு வகுத் தமைத்துவிடு, முன்னறுதியூழால் தனிமனிதரை முற்றிலுங் கட்டுப்படுத்திவிடு.

predestina′tion, *n.* முன்வகுத்தமைவு, ஊழ், மாறா நியதி, வீடுபேற்றிற்கும் இறவா வாழ்விற்கும் எனக் கடவுளால் சிலர் முன்னறுதி செய்யப்பட்டுள்ளனர் என்ற கருத்து ; நடப்பது யாவுமே கடவுளால் முன்னறுதி செய்யப்பட்டவை என்ற கருத்து.

predes′tine, *v.* முன்முடிவு செய்துவை, முன்னரே அறுதி செய் ; ஊழ் வகையில் முன்கூட்டி வகுத்தமை ; கடவுள் வகையில் ஊழ் முன்னறுதிப்பாடு செய்தமை ; வீடுபேற்றிற்கு உரியராகச் சிலரை முன்னறுதி செய்துவிடு ; நடப்பு நிகழ்ச்சிகளையும் தனிமனிதர் செயல்களையும் முற்றிலும் முன்னரே வகுத்தமைத்துவிடு.

predetermina′tion, *n.* முன்முடிவு.

predeterm′ine, *v.* முன்னரே தீர்மானி ; முன்னறுதிசெய் ; முன்னரே தீர்ப்புமுடிவு செய்துவை; முன்னரே விதி, ஊழ்வலி போன்று நியமித்துவை.

pred′ial, *n.* நில அடிமையாள், நிலத்துடன் பிணைக்கப்பட்ட அடிமை ; *a.* நிலஞ் சார்ந்த ; பண்ணை சார்ந்த ; நாட்டுப்புற மான ; நாட்டுப்புறஞ் சார்ந்த ; வேளாண்மைக்குரிய ; அடிமைகள் வகையில் நிலத்தோடு இணைக்கப்பட்ட.

pred′icable, *n.* பயனிலைமானம், ஒன்றைக்குறித்துக் கூறப் படத்தக்கது ; *a.* பயனிலைமானமாக ஒன்றைப்பற்றிக் கூறத் தக்க.

pred′icables, *n. pl.* அரிஸ்டாட்டில் (Aristotle) என்ற பண்டைக் கிரேக்க அறிஞரால் எழுவாய்மானத்தோடு தொடர்பு நோக்கி வகுக்கப்பட்ட இனம்-வகை-வகைதிரிபு-இனப்பண்பு-தனிப்பண்பு ஆகிய ஐந்து பயனிலைமானப் பிரிவுகள்.

predic′ament, *n.* இக்கட்டுநிலை ; இடர்ப்பாட்டுநிலை ; இடுக் கட்பட்ட நிலைமை ; குறித்தேற்றிக் கூறக்கூடியது ; அரிஸ் டாட்டில் என்ற பண்டைக் கிரேக்க அறிஞர் வகுத்துரைத்த பொருள்-அளவை-பண்பு-தொடர்பு-இடம்-காலம்-கிடப்புநிலை-உடைமை-செயல்-செயலின்மை என்ற பத்துப் பயனிலை மானக் கூறுகளில் ஒன்று.

pred′icant, *n.* தென் ஆப்பிரிக்காவில் டச்சுப் புரோடஸ் டாண்டு திருக்கோயிலின் சமயகுரு ; *a.* சமயத்துறைக் குழுவினரிடையே சமயச் சொற்பொழிவாற்றுகின்ற.

pred′icate[1], *n.* (அள.) பயனிலைமானம், வாசகத்தின் பயனிலைப்பகுதி ; குறித்து ஏற்றிக் கூறப்படுவது ; (இலக்.) பயனிலை, வாசகத்தின் பயனிலைக்கூறு ; குணம்.

pred′icate[2], *v.* ஒன்றைப்பற்றி உள்ள செய்தியை உறுதிப் படுத்து ; பண்பேற்றிக் கூறு, வற்புறுத்திக்கூறு ; (அள.) பயனிலைமானப்படுத்து, எழுவாய்மானத்தைப்பற்றி ஒன்றினை வலியுறவாகக் கூறு.

predic′ative, *a.* உறுதிப்படுத்துகிற, குறித்து வற்புறுத்து கிற ; பயனிலைக் கூருன.

pred′icatory, *a.* சமய உரைக்குரிய ; சமய உரையாற் குறித்துக்காட்டப்பட்ட ; சமயச் சொற்பொழிவாற்றுகிற.

predict′, *v.* வருவதுரை, குறிகூறு ; முன்மதிப்பிட்டுரை.

predi′ction, *n.* வருவதுரைத்தல்.

predic′tor, *n.* வருவதுரைப்போர் ; முன்கூறுவோர் ; பகை வானூர்தி வரும் உயரம்-திசை-வேகம் முதலியவற்றைத் தீர்மானிக்குங் கருவி.

pre-digest′, *v.* முற் செரிமானமாக்கு, உணவை உண்பதற்கு முன் எளிதாகச் செரிமானமாகக் கூடியதாகச் செய்.

pre-dige′stion, *n.* முற்செரிமானம், உணவை உண்பதற்கு முன் செயற்கையாக எளிதாய்ச் செரிமானமாகக் கூடியதாகச் செய்தல்.

predikant′, (டச்.) *n.* தென் ஆப்பிரிக்காவிலுள்ள டச்சு புரோடஸ்டாண்டு திருக்கோயிலின் சமயகுரு.

predilec′tion, *n.* ஒருதலைச் சார்வு, மனச்சாய்வு ; மனக் கோட்டம் ; ஒருதலை விருப்பம் ; இயற்சார்பு.

predispose′, *v.* முற்சார்பூட்டு; கருத்துவகையில் முற்சாய்வுப் படுத்து ; நோய்வகையில் முன்பே எளிதில் ஆளாகுநிலை யூட்டு ; செயல் வகையில் முன்னமைவூட்டு.

predisposi′tion, *n.* முற்சார்பு ; முற்பரிவு ; இறையருள் வகையில் முற்செவ்வி ; நோய்வகையில் இயற்சார்புநிலை.

predom′inate, *v.* விஞ்சி மேம்பட்டிரு ; பெருந்தொகையா யிரு ; வலிமிக்கிரு ; முக்கிய கூறுயிரு ; சிறப்புப் பெற்றிரு ; உயர்விடங்கொள்.

predoom′, *v.* முன்னதாகவே கெடுபேரிடு ; முன்தீர்ப்பளி.

pre-elect′, *v.* முன்னதாகத் தெரிவுசெய்.

pre-elec′tion, *n.* முன்தெரிவு, முன்னதாக எதிர்நோக்கித் தேர்ந்தெடுத்தல் ; *a.* தேர்தலுக்கு முந்திய, தேர்தலுக்கு முன் செய்யப்பட்ட, வாக்குறுதிகள் வகையில் தேர்தலுக்கு முன் அளிக்கப்பட்ட.

pre-em′inence, *n.* முந்து தலைமை, படினம்.

pre-em′inent, *a.* ஒப்புயர்வற்ற; தனி மேம்பாடுடைய, முந்து தலைமையுடைய.

pre-empt′, *v.* பிறருக்கு வாய்ப்பளிக்கும் முன்னரே விலைக்கு வாங்கு ; பிறருக்குமுன் விலைக்குவாங்கும் உரிமைபெறும்படி பொதுநிலத்தைக் கையாட்சிக்குக் கொண்டுவா ; முன்னதாகக் கைப்பற்றித் தனதாக்கு ; சீட்டாட்டத்தில் மற்றவர்கள் கேட்க முடியாத அளவுக்குக் கேள்வி கேள்.

pre-emp′tion, *n.* முற்படு விலைக்கோட் பேறு, மற்றவர்கள் வாங்குவதற்கான வாய்ப்பளிக்கப்படுவதற்கு முன் விலைக்கு வாங்குதல் ; முற்படு விலைக்கோள் உரிமை, மற்றவர்கள் வாய்ப்பளிக்கப்படுவதன்முன் விலைக்கு வாங்குதற்கான உரிமை ; முற்பட விலையிற் கொள்ளப்பட்ட நிலம் ; சட்ட மீறிய நொதுமலர் சொத்தை நிலையாக வரையறுக்கப்பட்ட விலைக்குக் கைப்பற்றும் போர்த்திறத்தார் உரிமை.

pre-emp′tive, *a.* முற்படு விலைக்கோள் பெறுகிற ; சீட்டாட் டத்தில் பிறர் கேள்வி கேட்கமுடியாத அளவிற் கேட்கிற.

preen, *v.* இறகுகளை அலகாற் கோதி அழகுசெய் ; ஆள் வகையில் கோலஞ் செய், அழகுபடுத்து.

pre-engage′, *v.* முன்னதாக ஒப்பந்தஞ் செய்துகொள் ; முற்பட ஈடுபாடு கொள்வி.

pre-estab′lish, *v.* முன்னதாக நிறுவு, முற்பட நிலைப்படுத்து.

pre-exil′ian, pre-exil′ic, *a.* யூதர்கள் நாடு கடத்தக் கொண்டுசெல்லப்பட்டதற்கு (கி. மு. 586-538) முந்திய.

pre-exist′, *v.* முன்னொரு பிறவியில் உளதாயிரு ; ஒருவருக்கு முன்வாழ்ந்திரு.

pre-exis′tence, *n.* பிறப்பிற்கு முற்பட உளதாம்நிலை, உடலுருவாகுவதன் முற்பட்ட வாழ்வு.

pref′ab, *n.* (பே. வ.) முன்னிணைவு வீடு.

prefab′ricate, *v.* முன்னிணைத்து அமை, கட்டிடத்திற்கு வேண்டிய கூறுகளைத் தனித்தனியாய் உருவாக்கு ; (தொ.) prefabricated house, கட்டளை வீடு, முன்னிணைவு வீடு.

pref′ace, *n.* முன்னுரை, பாயிரம் ; பேச்சின் முற்கூறு ; திருவுணா வழிபாட்டு வினையின் முற்பகுதி ; *v.* முன்னுரை யளி ; பீடிகையிடு ; செயலுக்கான முற்குறிப்புரை கூறு, செயலுக்கான முன்னீடு செய் ; வழிசெய், முன்னீடாய் அமை.

prefator'ial, *a.* பாயிரமாய் அமைந்த.
pref'atory, *a.* முன்னுரையான.
pref'ect, *n.* பண்டை ரோமாபுரி அதிகாரி; பண்டை ரோமாபுரிப் படையாட்சியாளர்; பிரான்சில் ஆட்சி அரங்கத்தலைவர்; சட்டாம்பிள்ளை; (தொ.) prefect of police, பாரிஸ் நகரக் காவல்துறை முதல்வர்.
prefec'torial, *a.* ஆட்சியரங்கத் தலைவருக்குரிய.
prefec'tural, *a.* ஆட்சியரங்கத் தலைமைசார்ந்த.
pref'ecture, *n.* ஆட்சியரங்கத் தலைமைப்பதவி; ஆட்சியரங்கத்தலைவர் பணிமனை; ஆட்சியரங்கத்தலைவர் ஆற்றல் எல்லை.
prefer', *v.* முன்மதி; விரும்பித்தேர்; ஆக்கமளி, பணியில் மேம்படுத்து; முன்கொணர்; கொண்டுவந்து காட்டு.
pref'erable, *a.* முன்தேர்விற்கு உகந்த, முன்மதிப்புக்குரிய.
pref'erably, *adv.* முன்மதிப்பாக; பெரிதும் விரும்பத்தக்க நிலையில்.
pref'erence, *n.* முன்மதிப்பீடு; விருப்பத்தேர்வு; முன்னுரிமை; விருப்பச் சார்பு; இறக்குமதி வகையில் ஒரு நாட்டிற்குக் காட்டப்படுஞ் சார்தகவு நிலை; (தொ.) preference bond, முன்னுரிமைப்பத்திரம், கொடுக்கப்படுவதில் முன் மதிப்புப்பத்திரம்; preference share, preference stock, பங்கூதிய வகையில் முன்னுரிமையுடைய பங்கு.
preferen'tial, *a.* முன் மதிப்புவாய்ந்த; முன்னுரிமைக்குரிய; பங்கூதியப் பேறுவகையில் முந்துரிமையுடைய; சாதகமான, சலுகையாதரவுடைய; பிரிட்டனுக்கும் சார்புநிலை நாடுகளுக்குந் துணைநலமான.
prefer'ment, *n.* மேற்பதவி.
preferred', *a.* முன்மதிக்கப்பட்ட.
prefig'ure, *v.* முன்கற்பனை செய்துகொள்; முற்பட உருப்படுத்திக்காட்டு; முன் குறித்துணர்.
pref'ix[1], *n.* முன்னீடு, முன்னிடைச்சொல்; முன்னடை, பெயருக்குமுன் இடப்படும் அடைமொழி.
prefix'[2], *v.* முன்னிடு, முன்னிணைப்பாக்கு; முன்னடையாகச் சேர்.
preform', *v.* முன்னரே உருவாக்கு, முன்னரே தோற்றுவி; முன்னரே கருத்துருவாக்கு.
preforma'tion, *n.* முன்னுருவாக்கம்; (தொ.) theory of preformation, பின்வளர்வதன்றி உறுப்பமைதி முற்றிலுங் கருவிலேயே உருவாயிற்றென்னும் கோட்பாடு.
preform'ative, *n.* முன்னொட்டிடைச்சொல்; *a.* முன்னொட்டிடையான; முன்கூட்டி உருவாகிற.
pre-fron'tal, *a.* (உள்.) நெற்றி எலும்புக்கு முன்னுள்ள; மூளையின் முற்பிரிவுக்கு முற்பகுதியிலுள்ள.
pregla'cial, *a.* பனி ஊழிக்கு முந்திய.
preg'nable, *a.* அழிக்கக்கூடிய, வடுப்படக்கூடிய; அரண் வகையில் தாக்கிக் கைக்கொள்ளத்தக்க.
preg'nancy, *n.* சூல், கருப்பம்.
preg'nant, *a.* சூலுண்ட, கருவுற்ற; தாவரவகையில் பொலிவூட்டப்பெற்ற; கருநிலை வளங்கொண்ட; வருங்காலச் சிறப்பு வாய்ந்த; கருத்து வளமிக்க; கற்பனை வளமுடைய; புதுப் புனைவு வளம் நிரம்பிய; உட்பொருள் கனிவுள்ள; தொனிப் பொருட் செறிவுடைய; குறிப்புப் பொருளுடைய; குறிப்பிடத் தக்க சிறப்புவாய்ந்த.
prehen'sile, *a.* பற்றிப்பிடிக்கத்தக்க, பற்றிக்கொள்ளும் ஆற்றல்வாய்ந்த.
prehen'sion, *n.* பற்றுகை, பிடிப்பு; மனம்பற்றுகை; அறிதல், உணர்வு.
prehisto'ric, *a.* தொல் பழங்காலத்திய, வரலாற்றிற்கு முந்திய.
prehis'tory, *n.* வரலாற்றிற்கு முற்பட்ட காலம்; வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட செய்திகள்.
pre-hum'an, *a.* மனிதன் உண்டான காலத்திற்கு முற்பட்ட.
pre-igni'tion, *n.* முன்னிடுவெடிப்பு, உள்வெப்பாலை எரிபொருளின் உரிய நேரத்துக்கு முற்பட்ட வெடிப்பு.
prejudge', *v.* முன்முடிவுசெய்; தேராது தீர்ப்புக்கூறு.
prej'udice, *n.* முற்சாய்வு; முற்கோள்; தப்பெண்ணம்; கேடு, தீங்கு, பொல்லாங்கு; ஊறு, இழப்பு; எதிர்ச்சார்பு; *v.* தப்பெண்ணம் உண்டுபண்ணு, முன்கூட்டி மனங்கெடு; கேடு உண்டுபண்ணு, தீங்கிழை, பொல்லாங்குப்படுத்து; எதிர்ச்சார்பாக்கு; (தொ.) to the prejudice of, எதிர்ச்சார்பாக, கேடுவிளைக்கும் முறையில்; without prejudice to, பாதிக்காமல், ஏற்கெனவே உள்ள உரிமை நிலைகளுக்கு எவ்வகைக் கேடும் இல்லாமல்.
prejudi'cial, *a.* எதிர்ச்சார்பான, கேடு உண்டுபண்ணத்தக்க; தப்பெண்ணம் ஊட்டுகிற, முற்சாய்வு உண்டுபண்ணுகிற.
prel'acy, *n.* உயர் திருச்சபைப் பதவி; உயர் திருச்சபைப் பதவியாளர் பணி; உயர் திருச்சபைப் பதவியாளர் ஆட்சி வட்டம்; திருச்சபைக் குருமார் ஆட்சிமுறை.
prel'ate, *n.* மேம்படு சமயகுரு, உயர் திருச்சபைப் பதவியாளர்; (வர.) திருமடத்தலைவர்.
prel'atess, *n.* திருமடத்தலைவி, திருமட முதல்வி.
prelat'ic, prelat'ical, *a.* மேம்படு சமயகுருவுக்கு உரிய; உயர் திருச்சபைப் பதவிக்குரிய.
prel'atize, *v.* திருச்சபையினைச் சமயகுருமார் ஆட்சிக்குட்படுத்து; மேம்படு சமயகுருவுக்குரியதாக்கு.
prel'ature, *n.* மேம்படு சமயகுருமார் பதவி; உயர்திருச்சபைப் பதவியாளர் தொகுதி.
prelect', *v.* விரிவுரையாற்று; பல்கலைக்கழகத்திற் சொற்பொழிவுசெய்.
prelec'tor, *n.* மேடைப் பேருரையாளர்.
preliba'tion, *n.* முற்சுவை.
prelim', *n.* (பே-வ.) புகுமுகத்தேர்வு.
prelim'inaries, *n. pl.* முன்னேற்பாடுகள், முன்னொழுங்குகள்.
prelim'inary, *n.* புகுமுகத் தேர்வு; *a.* முன்னணியான, பூர்வாங்கமான.
prel'ude[1], *n.* முற்செயல்; முன்விளைவு, பீடிகை; (இசை.) முன்தரவு.
prel'ude, prelude'[2], *v.* புகு முகப்படுத்து, வாயில் செய், முன்குறித்துக்காட்டு; பாயிரத்துடன் தொடங்கு; (இசை.) முன்தரவு இசைப்பி.
prelus'ive, *a.* முன்தரவான, பீடிகையான.
premature', prem'ature, *n.* முற்பட்டு வெடிமருந்து வெடித்தல்; *a.* முதிராத, பருவமுறாத; உரியகாலத்திற்கு முற்பட்ட, அவசரப்பட்ட.
prematur'ity, *n.* முதிரா நிலை.
pre-maxill'ary, *a.* (உள்.) மேல்தாடைக்கு முன்னுள்ள.
premed'itate, *v.* முன்பே ஆழ்ந்தாராய்; முன் எண்ணு.
premed'itated, *a.* முன்கருதலுடன் திட்டமிடப்பட்ட, திட்டமிட்டுச்செய்யப்பட்ட.
premedita'tion, *n.* முன்னுராய்ச்சி, முன்சிந்தனை.
prem'ier, *n.* முதலமைச்சர்; *a.* முதன்மையான.
premiere, (பிர.) *n.* நாடக முதலாட்டம்; திரைப்பட முதல் வெளியீடு; *v.* நாடக முதலாட்டங்காட்டு; திரைப்பட முதல் வெளியீடு செய்.
pre-millenar'ian, *n.* திருமுன்னுயிரத்தார், திருவாயிரத்திற்கு முன்னதாகவே இயேசுநாதரின் இரண்டாவது திருவருகை நேருமென்னும் நம்பிக்கையுள்ளவர்; *a.* திருவாயிரத்திற்கு முன்னதாகவே இயேசுநாதரின் இரண்டாவது திருவருகை நேருமென்னும் நம்பிக்கைக்குரிய.
pre-millenn'ial, *a.* திருவாயிரத்திற்கு முற்பட்ட.
pre-millenn'ialism, *n.* திருமுன்னுயிரக்கொள்கை, திருவாயிரத்திற்கு முன்னதாகவே இயேசுநாதரின் இரண்டாவது திருவருகை நேருமென்னும் நம்பிக்கை.

prem'ise[1], *n.* (அள.) தரவு வாசகம்; மெய்க்கோள், மெய்யாகக்கொள்ளப்பட்ட வாதமூலக் கூற்று; முகப்புரை, முற்கூற்று, பத்திரத்தின் முதனிலைவாசகம்.

premise'[2], *v.* முகப்புரையாக எழுது; முன்னுரையாகக் கூறு.

prem'ises, *n. pl.* (சட்.) முன்கூறப்பட்டவை; முன்கூறப்பட்ட நிலமனையிடங்கள்; (சட்.) வரைப்பிடம், சட்டச் செயற்பாட்டுக்கு உட்படும் இடப்பரப்பெல்லை; வளவு.

prem'iss, *n.*=premise[1].

prem'ium, *n.* பரிசில், ஊக்கப்பரிசு; காப்பீட்டுக் கட்டணம்; பரிதூதியம், நல்லெண்ண மிகை ஊதியம்; வட்டிமீது மிகைக் கட்டணம்; தொழிற்பயிற்சிக்கான மதிப்பளிப்பு; வாசி வட்டம், உயர் செலாவணியாக மாற்றுவதற்குரிய மிகை வட்டம்; மிகைமதிப்பு, உயர்மதிப்பு; (தொ.) at a premium, முகப்புவிலைக்கு மேலாக, மிகைமதிப்பாக; put a premium on, ஊக்கமளித்து வளரச்செய்.

premol'ar, *n.* முன் கடைவாய்ப்பல், கடைவாய்ப்பல்லுக்கு முன்னுள்ள பல்; மனிதர்வகையில் இருகதுப்புப்பல்.

premon'ish, *v.* முன்னெச்சரிக்கை செய்.

premoni'tion, *n.* முன்னுணர்வு, முன்னெச்சரிக்கை.

premon'itor, *n.* முன்னெச்சரிப்பவர்; முன்னெச்சரிப்பது; முன்னறிந்துரைப்பவர்; முன்னறிந்துணர்த்துவது.

premon'itory, *a.* முன்னெச்சரிக்கை தருகிற; முன்னறிவிக்குந் தன்மையுடைய.

Premonstraten'sian, *n.* பிரமாண்ட்ரே (Premontre) என்னுமிடத்தில் 1119-இல் நிறுவப்பட்ட திருநெறித்துறவுக் குழாத்தினைச் சார்ந்தவர்; திருநெறிக் குழுவமைப்பு வகையினைச்சார்ந்த பெண்துறவி; *a.* திருநெறித்துறவுக்குழு அமைப்புவகையினைச்சார்ந்த.

premorse', *a.* (தாவ., பூச்.) கட்டைவெட்டித் தறித்தது போன்ற முனையுடைய.

premo'tion, *n.* இறைவயவிருப்பறுதி, படைக்கப்படும் உயிரின் மனச்சார்பினை முன்னதாக நிச்சயிக்கும் தெய்வச் செயல்.

pre-nat'al, *a.* பேறுகாலத்திற்கு முந்திய.

pren'tice, *n.* புதுப்பயிற்சியர்.

preoccupa'tion, *n.* பிறிதீடுபாடு; முன்னீடுபாடு, முன்பே வேறு வேலையில் ஈடுபட்டதனால் ஏற்படும் கைக்கட்டுநிலை; இடவகையில் முந்தமர்வு; முற்கோட்கருத்து, முற்சார்பு, முன்முடிபு.

preocc'upied, *a.* பிறிது கவனமான, ஆழ்நிலையில் தன்னை மறந்த.

preocc'upy, *v.* இடவகையில் முன் அமர்த்திக்கொள்; உள வகையில் முன் ஈடுபடுத்திக்கொள்; பிறவழிச்செல்ல இடமின்றி உளத்தை முழுதும் ஈடுபடுத்திக்கொள்; முன்பே தனதாக்கிக் கொள்.

pre-oc'ular, *a.* (உள்.) கண்ணிற்கு முன்னுள்ள.

pre-o'ral, *a.* வாய்முன்னுன.

pre-ordain', *v.* முன்னதாக வகுத்தமை; கடவுள்வகையில் ஊழ்வழி முன்னறுதிசெய்.

preor'dinance, *n.* முன்விதித்தமை, அன்றெழுதியது.

prepara'tion, *n.* முன்னேற்பாடு செய்தல்; முன்னெருக்கம்; பள்ளிப்பாட முன்பயிற்சி; மருத்துக்கலவை; மருத்துணவுத் திட்டம்; (இசை.) பின்வரு முரணிசைப்புக்கேற்ற முன் முரணதிர்வு.

prepara'tions, *n. pl.* முன்னேற்பாடுகள், முன்னெருக்கங்கள்.

prepa'rative, *n.* முன்னெருக்கச்செயல்; (படை., கப்.) முன்னேற்பாட்டுக் கட்டளை அடையாள அறிவிப்பு; முன்னெருக்க முரசறைவிப்பாணை; ஆயத்தநிலைக் குழலூதற் கட்டளை; *a.* முன்னெருக்கமான, முன்னேற்பட்டான.

prepa'ratory, *n.* முன்னணிப்பள்ளி; *a.* முற்பயிற்சியளிக்கிற, முன்னீடான, பீடிகையான; முன்னெருக்கம் உண்டு பண்ணுகிற, ஆயத்தமாக்குகிற.

prepare', *v.* முன்னேற்பாடுசெய்; ஆயத்தமாக்கு; தகுதியூட்டு; முன்னீடுசெய், முதனிலைத்தகுதி உண்டுபண்ணு; பேச்சு-எழுத்து முதலியவற்றை முன்முயன்று உருவாக்கு; பாடத்தை முற்பயிற்சியால் ஆயத்தஞ் செய்; முற்பயிற்சியளித்துத் தகுதி பெறுவி; முன்னெருக்கஞ் செய்; மருந்து முதலியன கலந்து உருவாக்கு; (இசை.) பின்வரு முரணிசைப் புக்கேற்ற முன்முரணதிர்வூட்டு.

prepared', *a.* ஒருங்கிய, ஆயத்தமான; முன்முயற்சியால் தகுதியுற்ற; தகுதி நிலையிலுள்ள; கலந்துருவாக்கப்பட்ட; செயற்கையாக உருவான.

prepar'edness, *n.* தகுநிலை; (படை.) ஆயத்தநிலை, எக்கணமும் போருக்கெழ ஒருங்கியிருக்கும் நிலை.

prepay', *v.* முன்பணஞ் செலுத்து; முன்பே செலவுகொடு.

prepense', *a.* எண்ணித் திட்டமிடப்பட்ட, கருதிச்செய்யப் பட்ட, நோக்காகக் கொள்ளப்பட்ட.

prepon'derance, *n.* விஞ்சுநிலை; எடைமேம்பாடு; அளவேற்றம்; தொகையில் கழிமிகை, மிகுபெரும்பான்மை; சிறப்பு மேம்பாடு; விஞ்சிய செல்வாக்கு; ஆற்றல் மேம்பாடு.

prepon'derant, *a.* எடைவிஞ்சிய; தொகையில் மிஞ்சிய; கழிமிகையான, பெரும்பான்மையான; அளவேற்றமுடைய; சிறப்பு மேம்பட்ட; விஞ்சிய செல்வாக்குடைய; மேம்பட்ட ஆற்றலுடைய.

prepon'derate, *v.* மேம்படு, மேம்பட்டநிலை எய்தப்பெறு; விஞ்சு, விஞ்சியிரு; எடையில் மிகு; தொகையிற் பெரிதாயிரு; பெரும்பான்மையாகு; பெரிதளவாயிரு; முதன்மைநிலை பெறு; முதன்மைக் கூறாய் அமை; நிறைகோல் தட்டுவகையில் பளுவால் அமிழ்.

preposi'tion, *n.* (இலக்.) முன்வைப்பு, முன்னிடைச்சொல், முன்வரும் உருபு.

preposi'tional, (இலக்.) *a.* முன்வைப்பின் இயல்புடைய, முன்னிடைச்சொல் சார்ந்த.

prepos'itive, *a.* (இலக்.) சொல்-உருபு ஆகியவற்றின் வகையில் முன்வைப்பதற்குரிய.

prepos'itor, *n.* பள்ளிச் சட்டாம்பிள்ளை.

prepossess', *v.* முன்கருத்துக்கொள்; சார்பு கருத்துக்கொள்.

prepossessed', *a.* முற்சாய்வுடைய; ஒருசார்புடைய; சார்பாகச் சாய்ந்த.

prepossess'ing, *a.* கவர்ச்சியூட்டவல்ல; தன்சார்பில் சாய்வூட்டத்தக்க.

preposse'ssion, *n.* முன்சார்புடைமை.

prepos'terous, *a.* இயற்கைக்கு மாறான, பகுத்தறிவுக்கு ஒவ்வாத, நம்பமுடியாத; சிறிதும் பொருந்தாத, முற்றிலும் ஒவ்வாத.

prepot'ence, prepot'ency, *n.* ஆற்றல் மேம்பாடு; வீரிய மிகுதி.

prepot'ent, *a.* ஆற்றல்மிக்க; ஆற்றலில் விஞ்சிய; (உயி.) பொலிவூட்டுத் திறத்தில் மேம்பட்ட, மரபிற் பண்பூட்டும் திறத்தில் விஞ்சிய.

pre-pran'dial, *a.* உண்டிக்கு முந்திய.

pre-pref'erence, *n.* முந்து முற்சார்பு.

prep'uce, *n.* மாணிநுதி.

Pre-Raph'aelism, *n.* முற்படு கலையார்வக்கோட்பாடு, இத்தாலிய கலைஞர் ரபேல் (Raphael 1483-1520) காலத்திற்கு முற்பட்ட பழங்கலையார்வ ஈடுபாட்டுக் குழுவினரின் கலைக்கோட்பாடு.

Pre-Raph'aelite, *n.* பழங்கலையார்வக் கோட்பாட்டுக் குழுவினர், இத்தாலிய கலைஞர் ரபேல் காலத்திற்கு முற்பட்ட கலைப்பண்பைப் பின்பற்றிய 19-ஆம் நூற்றுண்டின் பழங்கலையார்வக் குழுவினர்.

Pre-Raph'aelitism, *n.* = Pre-Raphaelism.
prereq'uisite, *n.* முற்படு தேவை; நிபந்தனை; *a.* முன் நிபந்தனையான.
prerog'ative, *n.* மேதகவுரிமை, தனிச்சிறப்புரிமை; முதற் பாக்கு; முதல் வாக்குரிமை; *a.* தனி முதலுரிமையுடைய; (வர.) பண்டைய ரோமரிடையே முதல் வாக்குரிமையுடைய.
pres'age[1], *n.* தீ நிமித்தம்; வருவதன் குறி.
presage'[2], *v.* முன்னறிவி; முன்னறிந்துரை.
presbyop'ia, *n.* கிட்ட பார்வைக் குறைவு.
pres'byter, *n.* பொதுவாட்சிச் சமயக்கிளையின் திருச்சபை மூப்பர்; குருமார் ஆட்சிச் சமயக்கிளையில் இரண்டாந்தரச் சமயகுரு; முற்காலத் திருச்சபைகளில் திருக்கோயில் அலுவலர்.
presbyt'eral, *a.* திருச்சபை மூப்பர் சார்ந்த.
presbyt'erate, *n.* சமயமூப்பர் பதவி; சமயமூப்பர் தொகுதி; மூப்பராட்சி முறை.
presbyter'ial, *a.* மூப்பர் ஆட்சிமுறை சார்ந்த; மாவட்டச் சமயகுருமன்றஞ் சார்ந்த.
Presbyter'ian, *n.* பொது ஆட்சிமுறைத் திருச்சபையின் உறுப்பினர்; சமயமூப்பர் ஆட்சிமுறை ஆதரவாளர்; *a.* பொது ஆட்சிமுறைச் சமயக்கிளைசார்ந்த.
Presbyter'ianism, *n.* திருச்சபைப் பொது ஆட்சிமுறை.
Presbyter'ianize, *v.* மூப்பராட்சிமுறை ஆதரவாளராக்கு; திருச்சபைப் பொது ஆட்சிமுறை ஆதரவாளராகு; மூப்பராட்சிமுறை நோக்கிச் சாய்வுறு.
pres'bytery, *n.* குருமனை, திருக்கோயில் உள்மண்டபம்; மாவட்டச் சமயகுரு மன்றம்; சமயகுரு மன்றத்திற்குரிய மாவட்ட எல்லை; மூப்பர் ஆட்சிமுறை.
pre'science, *n.* முன்னுணர்வு; முன்னறிவு.
pre'scient, *a.* முன்னுணர்வுடைய, முன்னறி தன்மையுடைய.
pre-scientif'ic, *a.* இக்கால அறிவியல்முறை தோன்றுதற்கு முற்பட்ட.
prescind', *v.* துணித்தெறி; பிரித்தெறி; கவனங்குறைத்துக் கொள்.
prescribe', *v.* அறுதியிடு; விதிமுறைசெய்; ஆணையாக இடு; மருந்து முதலியன வகுத்துக்குறி; குறித்துக்கொடு; வகுத்துரை, வழிவகை கூறு; எல்லை கட்டுறுத்து; நடப் புரிமை வற்புறுத்து; நீள் வழக்காற்றுரிமை கோரு; தவணை கடந்து செல்லாததாகு.
pres'cript, *n.* விதி, கட்டளை, ஆணை.
prescrip'tion, *n.* விதியமைப்பு; ஆணையிடுதல்; மருந்து சீட்டு, மருந்துபட்டி; நீள்வரன்முறை வழக்காறு; நீள் வழக்காற்றுரிமை; நீடுவழக்காற்றுரிமைக் கோரிக்கை; கால எல்லைக் கட்டுப்பாடு; உரிமைத்தவணை.
prescrip'tive, *a.* விதிமுறைக் கட்டுப்பாட்டிற்குரிய; விதி முறையாற் கட்டுப்படுத்துகிற; கட்டுறுத்துகிற; நீள்வழக் காற்றிற்குரிய, வரன்முறைக் கட்டுச் சார்ந்த.
preselec'tive, *a.* உந்துவிசைச் சக்கரப் பற்கள் வகையில் முன்னரே தேர்ந்தெடுத்து அமைக்கத்தக்க.
pres'ence, *n.* உளதாந்தன்மை; இருத்தல்; அணுக்கம்; முன்னிலை, திருமுன்; தோற்ற அமைதி, நிலையமைதி; தன்னிலையமைதி, உணர்வமைதி; செயல்திற அமைதி; (தொ.) in the presence of, முன்னிலையில்; உடனுக; presence of mind, மனஞ்சோராமை, இடுக்கணழியாமை; real presence, ரோமன் கத்தோலிக்க கோட்பாட்டின்படி திருவுணு வழி பாட்டில் இயேசுநாதரின் குருதி-தசை வந்துடனிருக்கை.
pres'ence-chamber, *n.* ஓலக்கம்.
pres'ent[1], *n.* நிகழ் வேளை; (இலக்.) நிகழ்காலம்; *a.* நிகழ் காலத்திய; தற்போதைய; தற்போதுள்ள; இவ்விடத்துள்ள; இதை எழுதுகிற; முன்னிலையிலுள்ள, இப்போது முன் இருக் கிற; இங்குக் குறிக்கப்படுகிற; தற்போது குறிப்பிடப் படுகிற; உளதான; உளரான; உடனிலையான; உடனிருக் கிற; வாழ்பவரான; தற்போதைய மதிப்பிற்குரிய; (தொ.) at present, இப்பொழுது, நிகழ்வேளையில்; for the present, தற்காலிகமாக, இக்கண அளவில்.
pres'ent[2], *n.* நன்கொடை.
present'[3], *n.* துப்பாக்கி வணக்கமுறை; வணக்கமுறைத் துப்பாக்கிநிலை; *v.* அறிமுகப்படுத்து; முன்னிலையில் அறி முகஞ் செய்து வை; முன்னிலைப்படுத்து; தேர்வுக்கு முனைவி; தோற்றுவி, காட்சியளி; காட்டு; உளத்தில் தோன்றுவி; நன்னடையாகக்காட்டு; வழங்கு, அளி; கையில் ஒப்படை; படைக்கலம் நீட்டிப் பிடி; துப்பாக்கியை வணக்கமுறையில் ஏந்து; (சட்.) முன் வை, கவனத்திற்குக் கொண்டுவா.
presen'table, *a.* அறிமுகப்படுத்தத்தக்க; செப்பம்வாய்ந்த; பரிசாகக் கொடுக்கத்தக்க.
presenta'tion, *n.* பரிசளிப்பு; பொதுக்காட்சி; நாடக மேடைக்காட்சி; அறிமுகப்படுத்துகை; முன்னிலைப்படுத் துகை; திருமுன்னிலைப்படுத்துகை; திருமுன்னிலைக் காட்சி; புறத்தோற்றப்பாங்கு; (மெய்.) கணநேர உணர்வு ஆற்றல்; (தொ.) presentation copy, பரிசுப் படி.
presenta'tionism, *n.* புலனுணர்வே நேராக மனவுணர் வாகும் என்னுங் கோட்பாடு.
presen'tative, *a.* மானியமாக அளிக்கத்தக்க; கருத்தை மனத்தில் நன்கு எடுத்துக்காட்டத்தக்க; (மெய்.) கணநேர உணர்வுக்குகந்த; (மெய்.) புலனுணர்வு நேரே மனவுணர் வாகிறது என்னுங் கோட்பாடு சார்ந்த.
presentee', *n.* பரிசுபெறுபவர்; மானியம் வழங்கப்பட்ட திருச்சபை அதிகாரி; பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்; நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர்.
presen'tient, *a.* பின்னிகழ்வுபற்றிய முன்னுணர்வுடைய.
presenti'ment, *n.* வருந்தீங்குணர்தல்.
presen'tive, *a.* சொல்வகையில் பொருளை நன்கு எடுத்துக் காட்டுகிற, கருத்தை நன்கு உளத்துக்குத் தெரிவிக்கிற.
pres'ently, *adv.* உடனே.
present'ment, *n.* நாடகக்காட்சித்தோற்றம்; ஓவியத் தோற்றம்; தோற்றக் கவர்ச்சி; மனக்காட்சிப்பாங்கு; உளத்துக்கு எடுத்துக்காட்டுஞ் செயல்; திருச்சபை மேலதிகாரியிடம் ஊர்த் தலைமைக்குருவின் குற்றமுறையீடு; (சட்.) முறைகாண் ஆயத்தினரின் சான்றறிவிப்பு.
pres'ents, *n. pl.* எழுத்துக்கள், வாசகங்கள்; ஆவணம்.
preserva'tion, *n.* காப்பீடு; பதனம், பேணுகை; பதன நிலை.
preserv'ative, *n.* பதனச்சரக்கு; காப்புமுறை, காப்பு நட வடிக்கை; நோய்த்தடைக் காப்புமருந்து; *a.* பதனஞ் செய்ய உதவுகிற; சேமக்காப்புச் செய்கிற, அழியாது காக்கிற.
preserve', *n.* பதனப்பழச்சாறு, பழச்சத்து; தனிக்காடு, தனிக் காப்பு வேட்டைக்காடு; தனி ஆட்சிவட்டம்; போட்டியற்ற தனி உரிமையெல்லை; மீன்வளர்ப்பு நீர்நிலை; *v.* வைத்துக் காப்பாற்று; கெடாது பேணு; அழியாது பாதுகாப்புச்செய்; உயிருடன் வைத்துப்பேணு; தளராது நடைமுறைப்படுத்து; தொடர்ந்து நடைபெறுவி; பண்புகாத்துப் பேணு; பதனஞ் செய்; அழுகாமல் தடு; புரையாமல் பார்த்துக்கொள்; தனி உரிமைக்காக வைத்துக்காப்பாற்று; உடல் தளர்ச்சியுறுமற் பேணு.
preside', *v.* தலைமைதாங்கு; மேலாண்மை ஏற்று நடத்து; அடக்கி ஆட்சிசெய்; முதன்மைநிலைகொள்; (தொ.) presiding officer, வாக்குச்சாவடி அதிகாரி.
pres'idency, *n.* தலைவர்பதவி; தலைவர் பதவிக்காலம்; தலைவர் ஆட்சி வட்டகை, மாகாணம்.
pres'ident, *n.* கூட்டத்தலைவர்; மன்றத்தலைவர்; குடியரசுத் தலைவர்; அவைத்தலைவர்; கல்லூரி முதல்வர்; பொருளக முதல்வர்.
pres'identess, *n.* பெண் தலைவர்; தலைவர் மனைவி.
presiden'tial, *a.* தலைவர்க்குரிய.

presid'iary, *a.* காப்புப்படைசார்ந்த; காவற்படையாய் இயல்கிற; காவற்படையினையுடைய.

presid'io, (ஸ்பா.) *n.* கோட்டை; அரண்காப்புடைய நகரம்.

presid'ium, *n.* பொதுவுடைமை நிறுவனங்களில் நிலைவாரியம்.

press[1], *n.* அச்சகம்; அச்சியந்திரம்; அச்சுத்தொழில், அச்சுக்கலை; அச்சுத்துறை; பத்திரிகைத்துறை, பத்திரிகை உலகம்; அழுத்தப்பொறி; மட்ட அழுத்தப்பொறி; உரு அழுத்துப்பொறி; பிழிவுக்கருவி; அழுத்துகை; அழுத்தம்; நெருக்கம்; நெருக்கடி; வேலை நெருக்கடி; அவசர நெருக்கடி; திரள்; கூட்டம்; மாடநிலைப்பேழை; புத்தகநிலையடுக்கு; (கப்.) காற்றழுத்தந் தாங்கும் பாய் அளவெல்லை; *v.* நெருக்கு; அழுத்து; அமுக்கு; அழுத்தி இணை; அழுத்தி அமுக்கு; நெருக்கி அணை; பிழி; விசையுடன் உந்தித்தடு; அழுத்திச் சப்பையாக்கு; அழுத்தி மட்டமாக்கு; அழுத்தங்கொடுத்து வழவழப்பாக்கு; அமுக்கிச் செறியவை; அழுத்தி அடக்கமாக்கு; நெருக்கித்தாக்கு; பளுவேற்று; அமுங்கச்செய்; அழுந்தச்செய்; கிளர்ச்சியடக்கு; வருத்து; மனத்துயருட்டு; துன்பத்துள் ஆழ்த்து; துயர்ப்படுத்து; மனத்தில் ஆழ்ந்து பதியவை; நெருக்கடிக்கு உள்ளாக்கு; தொல்லைப்படுத்து; அவசரப்படுத்து; மன்றாடிக் கேள்; விடாது வேண்டு; கருத்தினை ஏற்று; மேற்சுமத்து; வற்புறுத்து; வலிந்து ஏற்கும்படி நெருக்கு; நெருங்கு; திரள்; அணுகு; முனை, விரை; முன்னேறு; (தொ.) go to press, அச்சிற்கு எடுத்துக்கொள்; in the press, அச்சாகிக்கொண்டு; press campaign, press stunt, பத்திரிகை முழக்கம், பத்திரிகை விளம்பரம்; the press, அச்சுச் செய்தி, செய்தித்தாள்கள்.

press[2], *n.* படைத்துறைக் கட்டாய ஆட்சேர்ப்பு; கடற்படை வல்லந்த ஆட்சேர்ப்பு; *v.* படைத்துறையிற் சேரும்படி கட்டாயப்படுத்து; கடற்படையில் வற்புறுத்திச்சேர்; வல்லந்தப்படுத்து; வலிந்து பயன்படுத்து.

press'-agent, *n.* விளம்பரச் செயலர்.

press'-box, *n.* செய்தியாளர் தனியிருக்கை

press-button war, *n.* ஏவுகலப்போர்.

press'-cutting, *n.* பத்திரிகைத்துணுக்கு.

press'-gall'ery, *n.* செய்தியாளர் அமரிருக்கை.

press'-gang, *n.* படைச்சேர்ப்புக்குழு.

press'ing, *a.* அழுத்துகிற; தாக்குகிற; அவசரமான; நெருக்கடியான; வற்புறுத்தலான; கட்டாயமான; இன்றியமையாத; விடாப்பிடியான.

press'man, *n.* பத்திரிகையாளர்; அச்சக இயக்குநர்.

press'mark, *n.* ஏட்டின் ஏடக வகுப்புக் குறியீடு.

press'-money, *n.* முன்பணம், அச்சாரம்.

pre'ssure, *n.* அழுத்தம்; செறிவு; அமுக்கம்; அமுக்கவிதம்; அவசர நெருக்கடி; துன்பம்; தொல்லை; வற்புறுத்தல்; மிக்க செல்வாக்கின் வலிமை; தேவை நெருக்கடி; எதிர்ப்பழுத்தம்; எதிர்ப்பழுத்த வீதம்; மின்வலி இயலாற்றல் வேறுபாடு.

pre'ssure-cooker, *n.* உயர் அழுத்தச் சமையற்கருவி.

pre'ssure-group, *n.* ஆற்றல் உட்குழு, அரசியல்மீது ஆற்றல் செலுத்தும் தன்னலக்குழு.

pre'ssurize, *v.* அழுத்தக் கட்டுப்பாடுசெய், விமானவகையில் உயர் வளிமண்டல அழுத்தங்களுக்கேற்றவகையில் அழுத்த இசைவுத்திறமூட்டு.

prestidigita'tion, *n.* செப்பிடு வித்தை, மாயவித்தை.

prestidi'gitator, *n.* செப்பிடு வித்தைக்காரர், கழைக்கூத்தாடி, குறளி வித்தையாளர், மாயமந்திரக்காரர்.

prestige', *n.* தன்மானம்; செல்வாக்கு; கீர்த்தி.

prestiss'imo, (இத்.) *n.* (இசை.) முடுகியல்பு, மிகுவிரைவியக்கம்; முடுகியற் பாட்டு; *a.* முடுகியலான; *adv.* மிகு விரைவாக.

pres'to, (இத்.) *n.* (இசை.) விரைவியக்கம்; விரைபாட்டு; *a.* விரைவான; *adv.* விரைவாக.

presum'able, *a.* மெய்யாகக் கருதத்தக்க, உண்மையெனக் கொள்ளத்தக்க.

presume', *v.* ஊகி, மெய்யெனக் கொண்டு நிகழ்த்து, ஆராயாமலே ஏற்றுக்கொள்; மெய்யெனக்கொள்; துணிந்து எண்ணு; எண்ணும் உரிமை எடுத்துக்கொள்; தகவுகடந்து செல், உரிமை எல்லைதாண்டு; உரிமையின்றிச் செயலாற்று; தகாச் சலுகைகொள்.

presum'ing, *a.* தகாத்துணிவுடைய.

presump'tion, *n.* உத்தேசம், ஆராயா ஏற்பு; தற்கால ஏற்பு; ஆராயாது ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்தி; தகாச்சலுகை; தகாத்துணிபு; வரம்புமீறிய நடத்தை; (சட்.) இயல்புநிலை, உண்மையெனக் கொள்ளுதற்குரிய நிலை; இயல்பான முடிபு; மறுதலை எண்பிக்கப்படாத் துணிபு; பொதுத்துணிபு, தற்காலத் துணிபு.

presump'tive, *a.* உத்தேசமான, தற்கால ஏற்பிற்குரிய; (தொ.) heir presumptive, பிறவழி உரிமை இன்னும் ஏற்படாநிலை உரிமையாளர், இனி வேறு உரிமையாளர் பிறந்தாலன்றி இயல்பான உரிமையுடையவர்; presumptive evidence, மறுதலை எண்பிக்கப்படாத செய்தித்துணிபு.

presump'tuous, *a.* மிதப்புவாய்ந்த, தன்முப்புடைய; தகாத் துணிவு வாய்ந்த; உரிமை விஞ்சிய.

presuppose', *v.* முன்னூகி, முன்னதாகக் கொள்.

presupposi'tion, *n.* முற்கோள்.

pretence', *n.* பாவனை, பாசாங்கு; போலிநடிப்பு; போலித்தன்மை, மோசடி; போலிப்பகட்டு; போலி உரிமை; பாவிப்பு, நடிப்பாக மேற்கொண்ட நடையுடைதோற்றம்; நடிப்பு; உரிமைத்தடம், உரிமைக்கான சிறு சாக்குப்போக்கு; உரிமைக்கோரிக்கை.

pretend', *v.* பாசாங்குசெய்; போலியாகச் செயலாற்று, போலி நடிப்புநடி; போலியாகப்பகட்டு, பொய்த்தோற்றம் அளி; போலி உரிமைகொள்; பகட்டால் நம்பவை; விளையாட்டாகப் பாவனைசெய்; மெய்போலக்கூறு; உரிமைகோரு; பெற நாட்டங்கொள்; பெறத்துணி; மண இணைவு அவாவுறு; பண்புவகையில் பெற்றிருப்பதாகப் பாவனைசெய்.

preten'der, *n.* பகடி, போலி உரிமையாளர்.

preten'sion, *n.* உரிமைத்தகுதி; கேட்புரிமை; போலிப் பகட்டு.

preten'tious, *a.* போலிப் பெருமைகொள்ளுகிற, பகட்டான, தான்தோன்றியான.

pretercan'ine, *a.* நாய் இயல்புகடந்த.

preterhum'an, *a.* மனித இயல்புகடந்த.

pret'erite, *n.* (இலக்.) இறந்தகாலம்; இறந்தகாலச்சொல்; *a.* இறந்தகாலங் குறித்த.

pret'erite-pres'ent, *n.* இறந்தகால வடிவ நிகழ்காலச் சொல்.

preteri'tion, *n.* குறிப்பிடாது மேற்செல்லல்; குறியாதொழிவு, விட்டுவிடல்.

pretermi'ssion, *n.* ஒழிவு, இடையறவு.

pretermit', *v.* கடந்துசெல், கூறாது ஒழி; செய்யாது விடு; புறக்கணி; வழக்கு இடையொழியவிடு; தொடர்பு இடையற விடு.

preterna'tural, *a.* இயற்கைநிலை கடந்த, இயல்புமீறிய.

preterna'turalism, *n.* இயற்கை கடந்தநிலை; இயல்புமீறிய முறைமை; இயற்கை நிலைகடந்த அமைப்பு; இயற்கைமீறிய வற்றினைப் பற்றிய கோட்பாடு, இயல்புகடந்தவை பற்றிய நம்பிக்கை.

preterna'turally, *adv.* இயற்கைகடந்த முறையில்.

pretersen'sual, *a.* புலனுட்சிக்குப்புறம்பான, ஐம்புல ஆற்றல் எல்லைக்கு அப்பாற்பட்ட.

pret'ext[1], *n.* சாக்குப்போக்கு, வியாஜம், தலைக்கீடு.

pretext'[2], *v.* சாக்குச்சொல்லு, தலைக்கீடு உரை.

pret'one, *n.* அழுத்த விசையுடைய அசைக்கு முன்னசை; அழுந்த விசையசைக்கு முன் உயிரொலி.

preton'ic, *a.* அழுத்தவிசைக்கு முன்னசை சார்ந்த.

pre'tties, *n. pl.* சித்திர அணிமணிகள்; சிறுதிறப் பகட்டணிகள்.

pre'ttify, *v.* மேனி மினுக்கு, பகட்டிக்கொள்.

pre'ttily, *adv.* கவர்ச்சிமிக்க முறையில், ஒயிலாக; குழந்தை வழக்கில் நன்கு, நற்பண்புடன்.

pre'ttiness, *n.* மேனிமினுக்கு; சிங்காரப்பொருள்; ஒய்யார அணிமணி; நவின்றோர்க்கினிமை.

pre'tty, *n.* ஒயில், சிங்காரப்பண்பு; தேறற் குவளையில் சித்திரச் செய்கை; (பே-வ.) குழிப்பந்தாட்டத்தில் நேரோட்டம்; *a.* ஒயிலான; சிங்காரமான; சித்திர அழகு வாய்ந்த; கவர்ச்சி வாய்ந்த; கண்ணுக்கினிய; செவிக்கின்பமான; நேர்த்திமிக்க; நுண்ணயம் வாய்ந்த; மிகநல்ல; பாராட்டத்தக்க; போற்றத்தக்க அளவான; மெச்சத்தக்க; *adv.* நன்முறையில்; போற்றத்தக்க அளவில்; மட்டான அளவில்; ஏறத்தாழ.

pret'zel, (செர்.) *n.* முடிச்சு வடிவ உப்புப் பிஸ்கட்டு.

pre'-univers'ity course, *n.* பல்கலைக்கழகப் புகுமுகத் திட்டம்.

preux chevalier, (பிர.) *n.* இன்பநடை வீரர்.

prevail', *v.* மேலோங்கு, மேம்படு; வெல்; செல்வாக்குப் பெறு; வழக்கில் நீடித்திரு; நீங்காதிரு; நடப்பிலிரு; பெரு வழக்காயிரு; நன்கு உகந்ததாய் அமை.

preval'ence, *n.* பரவியுள்ளமை; மிகுசெல்வாக்குடைமை.

preva'ricate, *v.* மழுப்பிப் பேசு; தட்டிக்கழிக்கும் வகையில் நடி; சொற்புரட்டுச்செய்; தாக்காட்டு; இருபொருள்படப் பேசு; ஏய்த்துப் பசப்பு; (சட்.) எதிரியுடன் தொடர்பு கொண்டு தன்கட்சிக்காரரைக் காட்டிக்கொடு.

preven'ient, *a.* முந்திய; முன்னதாகத் தடுக்கிற; (தொ.) prevenient grace, (இறை.) செய்ததற்கிரங்குமுன் அவன் தாள் நினைப்பிக்கும் அருள்.

prevent', *v.* தடைசெய்; இடையிட்டு நிறுத்து; முன்னறிந்து தடு; வராமல் தடு; தவிர்; விலக்கு; முன்னறி; முன்னறிந்து ஆவனசெய்; முன்னறிந்து அமைவி.

preven'ter, *n.* தடுப்பவர், தடைசெய்பவர்; இடையூறு விளைவிப்பவர்; (கப்.) பிற்சேர்ப்புக்கயிறு; மறு சங்கிலி; இணைப்புத் திருகு.

preven'tive, *n.* தடுப்புச்செயல்; தடுப்புமருந்து; *a.* தடுக்கக்கூடிய; (தொ.) preventive custody, தடுப்புக் காவல்.

prev'iew, *n.* வெள்ளோட்டம், முற்காட்சி; *v.* முற்காண்.

prev'ious, *a.* முந்திய; முன்நிகழ்ந்த; *adv.* முன்னுக, முற்பட; (தொ.) Previous Examination, பல்கலைக்கழகப் பட்டத்தேர்வு வகுப்பின் நுழைவுத்தேர்வு; previous question, வாதச்செய்தி பற்றி வாக்கெடுக்க வேண்டுமா என்னும் வினு.

previse', *v.* முன்னறி, வருவதறி; வருவதுரை.

previsi'on, *n.* முன்னுணர்வு.

pre-war', *a.* போருக்கு முந்திய; *adv.* போருக்கு முற்பட்ட காலத்தில்.

prey, *n.* கொண்டி; இரைவிலங்கு; இரை; பலி; (விவி.) போரில் தப்பி மீண்டது, தன்னுயிர்; *v.* இரை தேடு; இரையாகக்கொள்ளு; சூறையாடு; அரித்துத்தின்; உணர்ச்சி வகையில் உள்நின்று அரி; தீங்கிழை; (தொ.) beast of prey, பிற உயிரினங்களைக் கொன்று இரையாகக்கொள்ளும் விலங்கு; bird of prey, பிற உயிரினங்களைக் கொன்று தின்னும் பறவை.

pri'apism, *n.* கட்டின்மை, பரத்தமை; (மரு.) ஆண்குறி விறைப்பு.

price, *n.* விலை; மதிப்பளவு; பெறுவதற்காக இழக்கநேரும் பொருள்; பெறுவதில் அடையும் துன்ப அளவு; கைக்கூலியாய் வசப்படுத்தத்தக்க அளவு; கொலைவினைக்குத் தருங் கையுறை; ஆள் பற்றீட்டுக்கு அளிக்குங் கையுறை; குதிரைப் பந்தயத்தில் குதிரைமீதிடும் பணய மதிப்பு; *v.* விலைகுறி; விலையை வரையறு; விலை கேள்; விலை மதிப்பிடு; மதிப்பிடு; (தொ.) above price, beyond price, without price, விலை மதிக்கவொண்ணுத; at any price, என்ன விலை கொடுத்தேனும், எப்பாடு பட்டாவது; cost price, கொள்விலை; long price, கழிமிகுவிலை; price oneself out of the market, மீமிகு விலை கோரு; set price on person's head, பிடிப்பதற்காக அல்லது கொல்வதற்காகப் பரிசறிவி.

priced, *a.* விலைகுறித்துள்ள; விலைகூறப்பட்டுள்ள, விலை அறுதியிடப்பட்ட.

price'less, *a.* விலைமதிப்பற்ற, பெருமதிப்புடைய, மிகுவிலையுயர்ந்த.

price'-list, *n.* நடப்புவிலைப் பட்டியல்.

prick', *n.* துளைக்கும் கூர்முனைப்பு; குத்து; குத்துதல்; முள்தைப்பு; ஊசித்தைப்பு; குத்தியதுளை; தையல்துளை; குத்துஞ்செயல்; குத்தப்படும் அனுபவம்; குத்தல் உணர்ச்சி; குத்தியகாயம்; புள்ளியிடம்; கணம்; கடிகார மணிக்குறி; அடையாளக்குறி; இயக்குங்குறி; முயல் அடித்தடம்; *v.* மெல்லக்குத்து; கூர்முனையால் குத்து; குத்திச் சிறுதுளை செய்; குத்தி உள்நுழையச்செய்; குத்தி இணை; குத்தி எடு; துளையில் புகுத்து; கூர்நோவுண்டாக்கு; குத்துதல் உணர்ச்சி உண்டாக்கு; துன்பம் விளைவி; குதிரையைக் குதிமுள்ளால் குத்தி விரைவாகச் செலுத்து; பட்டியலில் பெயரைப் புள்ளியிட்டுக்குறி; குதிரை மீதிவர்ந்துசெல்; மாவட்டமணியம் போன்றவர்களைப் பட்டியலில் பெயர்மீது புள்ளியிடுவதன் மூலம் தெரிந்தெடு; புள்ளிகளிட்டுப் பூவேலை மாதிரிப்படிவங் குறி; குத்திநடு; நாய்வகையில் காதை நிமிர்த்து, காதை நிமிர்த்திக் கூர்ந்து கவனி; திடுமென விழிப்புற்றுக் கவனி; நிமிர்ந்து முனைத்து நிற்கவை; விறைத்துநில்; தூண்டு; ஒட்டி ஒப்பனைசெய்; சூனியக்காரி என்று ஐயுறப்பட்டவள் உடலில் குத்தி உணர்ச்சியற்ற பகுதி தேடு; (தொ.) kick against the pricks, பயனற்ற தடுப்பு முயற்சிகளில் தன்னையே ஊறுபடுத்திக்கொள்; prick in, prick off, prick out, நிலத்தில் துளைகளிட்டுச் செடி நடு; prick the bladder, prick the bubble, குட்டை வெளிப்படுத்து; ஆளின் வெறுமையை அம்பலமாக்கு; நடிப்பை வெளிப்படுத்து; prick up one's ears, நாய்வகையில் காதுகளை விறைப்பாக்கி விழிப்பாய் இரு; ஆள்வகையில் கூர்ந்து கவனிக்கத் தொடங்கு.

prick'-eared, *a.* நாய்வகையில் நிமிர்விறைப்புக் காதுகளையுடைய; முனைத்த செவிகளையுடைய.

prick'-ears, *n.* நாயின் நிமிர்ந்த கூரான காதுகள்; மனிதரின் முனைப்பான செவிகள்.

prick'er, *n.* குத்துவது; குத்து கருவி; கூர்முள்; தோல் தைக்கும் ஊசி; சூனியக்காரியை ஆய்ந்து கண்டுபிடிப்பவர்; விரைகுதிரை ஊர்பவர்.

prick'et, *n.* ஈராட்டைக் கலைமான்; மெழுகுத்திரி செருகி வைக்குந் தண்டு; (தொ.) pricket's sister, பொன்தவிட்டு நிறமும் சிற்றுருவும் உடைய ஈராட்டைப் பெண்மான்.

pric'kle [1], *n.* துய்முள், பொடிமுள்கற்றை, செடிகளின் மேற்புறத்தில் தோன்றும் முள்போன்ற சுணை; சிறுமுள்; முள் எலியின் கடுங்கூர்மையுடைய முள்; *v.* முள்ளாற் குத்து; பொடிமுள்ளாற் குத்துவது போன்ற உணர்ச்சி உண்டாக்கு; முள்ளாற் குத்தப்படுவது போன்ற உணர்ச்சிபெறு.

pric'kle [2], *n.* பிரம்புக்கூடை; பிரம்புக்கூடை அளவை.

prick'ly, *a.* செடிகள்-விலங்குகள் வகையில் முட்கள் போர்த்த; முள் நிறைந்த, சுணையுள்ள; முள் குத்தும் உணர்ச்சியுடைய; (தொ.) prickly heat, வியர்க்குரு; prickly pear, சப்பாத்துக் கள்ளி, பாம்புக்கள்ளி.

pride, *n.* செருக்கு, இறுமாப்பு; தற்பெருமை; தன்முனைப்பு; அகம்பாவம்; பெருமை கொள்ளுவதற்குரியவர்; பெருமைக்குரியது; மயில் முதலியவற்றின் வகையில் பெருமிதத் தோற்றம், வீறமைதி; பெருமை உணர்ச்சி; கட்டழகு அமைவு; களிகிளர்ச்சி; (தொ.) false pride, மாணுமானம்; pride of grease, வேட்டை விலங்கு வகையில் கொழுப்பார்ந்த நிலை; pride of place, உயர்பதவி; சிறப்பிடம்; இறுமாப்பு; pride of the morning, விடியல்நேர மூடுபனி அல்லது மழைத்தூறல்; pride oneself on, pride oneself upon, பெற்றிருப்பதில் பெருமைகொள்.

prie-dieu, *n.* (பிர.) வழிபாட்டில் முழங்காற் படியிடும் சாய்வு மேசை.

priest, *n.* பூசாரி, அர்ச்சகர்; திருச்சபைச் சமயகுரு, சடங்குகள் செய்யும் உரிமைபெற்ற மதகுரு; அயர்லாந்தில் மீனைக் கொல்லப் பயன்படுத்தப்படும் மரக்கொட்டாப்புளி; *v.* சமய குருவாக்கு; புரோகிதராக்கு; சமயச்சடங்குகள் ஆற்றும் பூசாரியாக அமர்த்து; (தொ.) high priest, யூதர்களின் தலைமைக்குரு; தலைமைப்புரோகிதர்.

priest'craft, *n.* குருமாரின் பேராசை; சமயகுருமாரின் உலகியற் பற்றார்வப் பண்பு; புரோகிதச் சூழ்ச்சிமுறை.

priest'hood, *n.* சமயகுரு நிலை; புரோகிதப்பண்பு; சமய குருமார் அமைப்பு முறை.

priest'ly, *a.* சமயகுருவிற்குரிய; மதகுருவிற்கேற்ற; சமய குருவினைப் போன்ற; புரோகிதத் தன்மையுடைய; (தொ.) priestly code, விவிலிய நூலின் முற்பகுதியில் சமயகுருமாருக்கான ஒழுங்கியற் கூறு.

priest'-ridden, *a.* சமயகுரு ஆட்சிக்குக் கட்டுப்பட்ட, குருமாராற் கொடுமை செய்து அடக்கப்பட்ட.

priest's hood, priest'-in-the-pulpit, *n.* உயரமான வெண்ணிற மடல்களையுடைய ஒற்றைவிதைச் செடிவகை.

prig, *n.* நடையழுத்தக்காரர், மயிரிழைநுட்பம் பின்பற்றுபவர்; நீக்குப்போக்கறியாத் திருத்தமுறையினர்; மட்டுமீறிய பேச்சு நடைத்திருத்தம் பேணுபவர்; விடாப்பிடி ஒழுக்கக் கொள்கையர்; போலித் தற்பெருமையாளர்.

prigg'ish, *a.* மயிரிழைநுட்பம் பின்பற்றுகிற; போலித் தற்பெருமையுடைய.

prim, *a.* முறைபிசகாத; துல்லிய; செயற்கை ஆசாரமிக்க; பழகாது பின்னடைந்து நிற்கிற; *v.* செயற்கை ஆசாரம் மேற்கொள்; பழகவிரும்பாத முகத்தோற்றங்கொள்; இதழ்க் கோட்டம் மூலம் வெறுப்பின்மை தெரிவி.

pri'ma, (இத்.) *a.* முதன்மையான, முதலாவதான, தலைமையான.

pri'ma buff'a, (இத்.) *n.* நாடக அரங்கில் தலைமை நகைச் சுவைப் பாடகி; தலைமை நகைச்சுவை நடிகை.

pirm'acy, *n.* திருக்கோயில் தலைமைக்குருவின் அலுவலகம்; முதன்மை, தலைமைச்சிறப்பு.

pri'ma donn'a, (இத்.) *n.* இசைநாடகத்தில் தலைமைப்பாடகி; எளிதில் உணர்ச்சி கொள்பவர்; *pl.* pri'ma donn'as, prim'e donn'e.

primaev'al, *a.*=primeval.

pri'ma fa'cie, (ல.) *a.* முதற்காட்சியில் தோன்றுகிற; முதல் எண்ணத்தை அடிப்படையாகக்கொண்ட; *adv.* முதல் தோற்றத்திலேயே.

prim'age[1], *n.* கப்பற்சரக்குக் கூலிக்கு மேற்பட்ட நூற்றுமானத் தொகை.

prim'age[2], *n.* கொதிகலத்து நீராவியுடன் மேலே கொண்டு செல்லப்படும் நீரின் அளவு.

prim'al, *a.* முதல்நிலையான, முக்கியமான; மூலாதாரமான; முற்படு நிலையான, நாகரிகத் தொடக்ககால நிலையான.

prim'ary, *n.* மூலம், முதல்நிலை; மூலக்கூறு; நேர்கோள், நேரடியாகக் கதிரவனைச் சுற்றுங்கிரகம்; பூர்வாங்கத்தேர்தல் கூட்டம், தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யுங் கூட்டம்; *a.* முதல்நிலையான; மூலமான; முதன் முதல் உருவான; தொடக்கத்திலிருந்தே உள்ள; அடிப்படையான; முதற்படியான; பலபடிக்கிளைகளில் முதற்படிக்கிளையான; தொடக்கநிலையான; இறகுகளில் மூலக் கையுறுப்புக்களிலிருந்து கிளைத்த; தொடக்கக் கல்விக்குரிய; தொடக்கநிலை வகுப்புக்குரிய; (தொ.) primary amputation, அழற்சி அல்லது வீக்கம் இடையூறாக நிகழ்வதற்குமுன் செய்யப்படும் உறுப்புத் துண்டிப்பு; primary assembly, primary meeting, தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் கூட்டம்; primary battery, மின் ஆற்றல் உண்டாக்கும் மின்கல அடுக்கு; primary colour, கலவை மூலக்கூறாய் உதவும் சிவப்பு-பச்சை-ஊதா ஆகிய தலையாய வண்ணங்களில் ஒன்று; வண்ணம் பூசுபவர்கள் தேரும் சிவப்பு-நீலம்-மஞ்சள் ஆன மூல வண்ணங்களில் ஒன்று; primary education, தொடக்கக் கல்வி; primary planets, கதிரவனை மையமாகக் கொண்டு சுழலும் நேர் கோள்கள்; primary school, தொடக்க நிலைப் பள்ளி; primary tenses, (இலக்.) இறப்பு நிகழ்வெதிர்வுகளாகிய முக்கிய காலக்கூறுகள்.

prim'ate, *n.* கிறித்தவ தலைமைக்குரு, நாட்டுச்சமய முதல்வர்.

primat'es, *n. pl.* மனிதன்-குரங்கு உள்ளிட்ட உச்சவுயர்வுட் பால்குடி உயிரினத்தொகுதி.

prime[1], *n.* முழுநிறைவு நிலை; சிறந்த பகுதி; தொடக்கம்; முதற்படிநிலை; முதற்காலக் கூறு; கிறித்தவ வழிபாட்டின் நாள் தொடக்கவேளை; உதயவேளை, காலை ஆறுமணி; (கண.) பகா எண்; (வேதி.) இயைநிலையில் அலகான தனி அணு; வாட்போரில் எதிர்த்தாக்குநிலை; *a.* தலைமையான, முக்கியமான, இன்றியமையாததான; முதல் தரமான, மிகச் சிறந்த; மிகுநேர்த்தியான; முதலாவதான; அடிப்படையான; (கண.) முழுமையான எண் கூறற்ற, எண் வகையில் பகா நிலையான; (தொ.) prime cost, கொள்விலை; prime minister, முதலமைச்சர்; prime mover, முதன்மையான இயக்குங்கருவி, இயக்கமூல ஆற்றல்; பொறிகளை இயக்கும் ஆற்றல் மூலம்; ஆற்றலை இயக்காற்றலாக்கும் இயந்திரம்; பயன்மிக்க கருத்தின் கருத்தா; prime vertical, prime vertical circle, தொடுவானத்தின் கிழக்கு-மேற்கு மையங்களைக் கடந்து உச்சத்தில் நடுநிரல் வான்கோட்டினைச் செங்குத்தாக வெட்டிச்செல்லும் வான்வட்டம்.

prime[2], *v.* (வர.) துப்பாக்கியில் மருந்து திணி; குழாய் செயற்படுவதற்காக நீரூற்று; ஆள்வகையில் வேண்டிய தகவல்கள் அறிவித்துச் சித்தப்படுத்து; நிரம்பக் குடிக்கச் செய், உறிஞ்சு தடைப்படுத்துவதற்காக மரத்தின்மீது எண்ணெய் அல்லது வண்ணம்பூசு; கொதிகலத்தினுள் ஆவியோடு நீர்த்திவலை வடிவாகப் புகவிடு.

prim'er[1], *n.* தொடக்கப் பாடபுத்தகம், அரிச்சுவடி; தொடக்க அறிவேடு; (வர.) முற்கால வழிபாட்டு நூல்; (அச்.) அச்செழுத்து அளவு; (தொ.) great primer, long primer, அச்சுரு அளவு வகையிற் பெரிது.

prim'er[2], *n.* துப்பாக்கி மருந்திற்குத் தீவைக்குங் குழாயமைவு.

primer'o, (ஸ்பா.) *n.* (வர.) சீட்டாட்டத்தில் 16-ஆம் 17-ஆம் நூற்றாண்டுகளில் நாகரிக வழக்காயிருந்த சூதாட்ட வகை.

primeur, (பிர.) *n.* முதற்கனிகள்; பருவ முன்விளைவு; முன்வரு செய்தி.

primev'al, *a.* முதல் ஊழிசார்ந்த, தொடக்கக்காலத்திற்கு உரிய; பண்டைக்காலத்திய.

prim'ing[1], *n.* வெடிமருந்து திணிப்பு; துப்பாக்கி மருந்துக்குத் தீவைத்தல்; துப்பாக்கியில் உள்ள வெடிமருந்து; சுரங்க வெடிப்புக்கான மருந்துப்பொடி வரிசை; முற்சாயமாகச் சாயக்காரர் பயன்படுத்துங் கலவை; மாத்தேறலிற் சேர்ப்பதற்குரிய வெல்லச் சேர்வை; அவசரக்கல்வி, விரை அறிவு திணிப்பு; உருப்பாடமாக்குதல்.

prim'ing[2], *n.* வேலை நீர் ஏற்ற இறக்க மாறுவிசை, வியன் கால் வேலை ஏற்ற இறக்கத்திலிருந்து சமன்கால் வேலை ஏற்ற இறக்கத்துக்கு இடையே நிகழும் வேலை நீர் ஏற்ற இறக்கவிசை விரைவியக்கம்.

primip'ara, *n.* தலைச்சன் பிள்ளைத்தாய்ச்சி.

primip'arous, *a.* தலைச் சூலினளான.

prim'itive, *n.* மறுமலர்ச்சி ஊழிக்கு (15-ஆம் 16-ஆம் நூற்றுண்டுகளுக்கு) முற்பட்டகால வண்ண ஓவியர்; மறுமலர்ச்சி ஊழிக்கு முற்பட்டவர் வரைந்த வண்ண ஓவியம்; முதல்நிலை மெதடிஸ்டு (Methodist) இயக்கத்தவர்; மூலமுதல்; மூல வேர்ச்சொல்; *a.* மூல ஊழிக்குரிய; முற்பட்ட காலத்திய; நாகரிக முதிர்ச்சியற்ற; நாகரிக முதிர்ச்சியற்ற காலத்திற்குரிய; பழம்பாணியான; முதிராப் பண்புடைய; திருந்தாத; கரடுமுரடான; நிறங்கள் வகையில் இணைமூலமுதலான, கரு

மூல இயல்புடைய; மூலமுதலான; தன்மூலமான, கிளை வரவியல்பற்ற; (இலக்.) மூல வேர்ச்சொல்லியல்பான, பகுதியான; (கண.) வரையுரு வகையில் பிறவற்றிற்கு மூலமான; வரையுரு வகையில் துணைக்கட்டுமானங்கட்கு மூலமான; (மண்.) மிக முற்பட்ட ஊழியில் உருவான; (வில.) வளர்ச்சியின் மிக முற்பட்ட படிநிலையில் தோன்றுகிற; (தொ.) Primitive Church, பண்டைக்காலத்திய கிறித்தவ திருச்சபை.

pri'mo[1], (இத்.) *n.* (இசை.) இருவர் குரற்பாட்டில் முற்பகுதி.

prim'o[2], (ல.) *adv.* முதலாவதாக, முதலிடத்தில்.

primogen'itor, *n.* முதல் மூதாதை, முந்தைமூலவர்.

primogen'iture, *n.* முந்துபிறப்புநிலை; மயின்முறைக் குலத்துரிமை.

primord'ial, *a.* தொடக்கத்திலுள்ள; உலகின் தொடக்க நிலைக் காலத்திற்குரிய; ஆதியிலிருந்தே உள்ள; மூலமுதலான, அடிமூலமான.

prim'rose, *n.* இளவேனில் இளமஞ்சள் மலர்ச்செடிவகை; இளமஞ்சள்நிற மலர்வகை: வெளிறிய மஞ்சள் வண்ணம்; (தொ.) Primrose dame, Primrose knight, இங்கிலாந்தின் அரசியல்தலைவர் பீக்கன்ஸ்பீல்டு கோமான் பென்ஜமின் டிஸ்ரேலி (மறைவு 1881) நினைவுக் கழக உறுப்பினர்; Primrose Day, பென்ஜமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli) ஆண்டு நினைவுவிழாநாள் (ஏப்ரல் 19); Primrose habitation, பெஞ்சமின் டிஸ்ரேலி நினைவுக் கழகப்பணிமனைக் கட்டிடம்; Primrose League, பென்ஜமின் டிஸ்ரேலி நினைவுக்கழகம்; primrose peerless, இரட்டை மலர்களுள்ள நறுமணந்தருஞ் செடிவகை; the primrose path, இன்பவாழ்க்கை நாட்டம்.

prim'ula, *n.* பலவண்ண மலருடைய பசுமைமாறாச் செடிவகை.

prim'um mob'ile, (ல.) *n.* அண்டகோளகை, வான்கோளங்களை உடன்கொண்டு பூவுலகை நாள்தோறும் சுற்றுவதாக இடைநிலைக்காலங்களில் கருதப்பட்ட வானகோளம்; மூல இயக்க ஆற்றல்; செயல்மூல ஆற்றல்.

prim'us[1], *n.* ஸ்காத்லாந்து திருச்சபைத் தலைமைக்குரு; *a.* பள்ளியில் ஒரே பெயருள்ள ஆண்களில் மூத்தவனான; பள்ளியில் ஒரே பெயருள்ளவரில் முற்பட்டவரான.

prim'us[2], *n.* ஆவிச் சூட்டடுப்பு வகை.

prim'us in'ter par'es, (ல.) *n.* சமநிலைக்குழுவில் முதல்வர்; சமநிலைக் கூட்டுக்குழுமத்தின் பேராளர்.

prince, *n.* இளங்கோ, இளவரசன்; அரசகுடி இளவல்; பிரிட்டனில் மன்னன் மகன்; பேரரசன் மகன்; அரசி புதல்வன்; பேரரசி புதல்வன்; மன்னன் பெயரன்; சில நாடுகளில் சிற்றரசர்; உச்சவுயர் பட்டமுடையவர்; ஆட்சியாளர், தலைவர்; இளங்கோமகன்; கோமகன்; கோமான்: தலைசிறந்தவர்; ஒப்பற்றவர்; புகழ்சான்றவர்; (தொ.) Hamlet without the Prince of Denmark, உள்ளுறை உயிர்த்தன்மை நீங்கப்பெற்ற பொருள், மாப்பிள்ளையில்லாத் திருமணம்; Prince Albert, (பே-வ.) இரட்டை மார்புப்பகுதி கொண்ட ஆண்களின் மேலங்கிவகை; prince bishop, தம் ஆட்சிப் பகுதியில் முழு அதிகாரமுங் கொண்ட சமய வட்டத் தலைவர்; Prince Consort, ஆளும் அரசியின் கணவர்; prince of darkness, prince of the air, prince of the world, நரகிறைவன், சைத்தான், பேய்மகன்; Prince of Denmark, ஷேக்ஸ்பியர் நாடகக் கதைத் தலைவன் ஹாம்லட் (Hamlet); Prince of Peace, 'அமைதியின் அரசு', இயேசுநாதர்; prince of the blood, அரசகுடும்பத்தின் இளவல்; prince of the Church, prince of the Holy Roman Church, போப்பாண்டவரின் ஆலோசனைக்குழு உறுப்பினர்களுள் ஒருவர்; ரோம் நகரத் தலைமைத் திருச்சபைகளுள் ஒன்றன் தலைமைக்குரு; எழுபது தலைமைக் குருமார்களுள் ஒருவர்; Prince of Wales, பிரிட்டனின் ஆட்சியுரிமை இளவரசர்; Prince of Wales's feathers, நெருப்புக்கோழியின் முக்கூட்டு இறகு; Prince Regent, இளவரசாட்பேர், ஆட்சியின் ஆட்பேராகச் செயலாற்றும் இளவரசர்; Prince Royal, ஆளும் அரசரின் தலைமகன், ஆட்சியுரிமையுடைய மூத்தமகன்; Prince Rupert's Drops, உடைந்தால் சிதறிவிடும் கண்ணுடிக்குமிழ் வகைகள்; prince's feather; செம்மலர்ச் சூட்டுடைய நீண்ட செடிவகை; prince's metal, செம்பும் துத்தநாகமும் கலந்த உலோகக்கலவை.

prince'ly, *a.* இளவரசுக்குரிய; இளவரசுப் படிநிலையுடைய; அரசுரிமைக்கேற்ற; இளவரசினை ஒத்த; இளவரசுக்குகந்த; உச்ச உயர்வுடைய; விழுமிய, மதிப்பார்ந்த.

prin'cess, *n.* இளவரசி; அரசனின் மனைவி; அரசனின் மகள்; அரசனின் பெயர்த்தி; (தொ.) princess dress, princess petticoat, கச்சு-பாவாடை நீள அளவுகள் ஒரே துண்டிலிருந்து வெட்டப்படும் மகளிரின் உள்ளாடைகள்; princess of the blood, அரசரின் மகள்; அரசரின் பெயர்த்தி; Princess Regent, ஆட்பேரிளவரசி, பகர ஆட்சியாளராகச் செயலாற்றும் இளவரசி; பகர ஆட்சியாளரான இளவரசரின் மனைவி; Princess Royal, அரசின் மூத்த மகள்.

prin'cipal, *n.* முதல்வர்; ஆளுநர், முதன்மையானவர்; கல்லூரித்தலைவர்; மேலாளர்; துணைவரின் மேலாட்சியாளர்; பொறுப்பு முதல்வர், நேரடிப் பொறுப்பர்; உடந்தையாளர், பிணைய உரிமையாளர்; மற்போரில் பொருநர்களில் ஒருவர்; விட்டங்களைத் தாங்கும் தாய்நிலை உத்தரம்; மூலதனம், விடுமுதல்; இசைக்கருவி மெட்டுவகை; *a.* முதன்மையான; முக்கியமான; தனிமையான; மூலதனம் பற்றிய; (இலக்.) துணை முதலான, வாசகங்களில் சார்பு வாசகங்களுக்கு மூலமான; (தொ.) lady principal, கல்லூரித் தலைவி; principal boy, principal girl, அவிநயக்கூத்தில் தலைமைப் பாத்திரம் தாங்கும் பையன் அல்லது பெண்; principal clause, சார்புறுப்பு வாசகங்களைக் கொண்ட தலைமைவாசகக் கூறு; principal in the first degree, நேரடியாகக் குற்றத்திற்குப் பொறுப்பாளி; principal in the second degree, குற்றத்திற்கு உடந்தையாக இருந்தவர்.

principal'ities, *n. pl.* தேவதூதர்களின் ஒன்பது படிநிலைகள்.

principal'ity, *n.* இளவரசரின் ஆட்சி; இளவரசரின் ஆட்சிக்குரிய பகுதி; இளவரசு பதவி; இளவரசுநிலை மதிப்பு; இளவரசின் ஆற்றல்; இளவரசுநிலை; இளவரசு பட்டத்துக்குரிய ஆட்சிப்பகுதி; வேள்புல அரசு.

prin'cipally, *adv.* முக்கியமாக, சிறப்பாக.

prin'cipate, *n.* (ரோம வர.) நீடித்து நிலவிய குடியரசு முறைகளை அழிக்காமலே முற்பட்ட பண்டைப் பேரரசர்கள் நடத்திய ஆட்சி; இளவரசன் ஆட்சி.

prin'ciple, *n.* தத்துவம்; அடிப்படை மெய்ம்மை; மூலக் கோட்பாடு; இயற்கை அமைதி; பொது அமைதி, விதி; ஒழுக்கமுறை விதி; செயல்முறைக்கொள்கை; தனி நடைமுறைக் கட்டுப்பாடு; இயந்திர ஆற்றல் நுணுக்கம்; உள்ளத்தின் ஆற்றல் கூறு; தனித்திறம்; பண்புக்கூறு, பண்புக்கு அடிப்படையான கூறு; பிறப்பு முதல், தோற்றுவாய்; (தொ.) on principle, வரையறுத்துக்கொண்ட ஒழுக்க நியதிகளின்படி; திட்டமிட்ட நேர்மையான எண்ணங்களின்படி.

prink, *v.* கட்டுச்செட்டாக நன்கு ஒப்பனை செய்துகொள்; மதிப்பாக உடுப்பணி; பறவைகள் வகையில் இறகுகளைக் கோதி அழகு செய்துகொள்.

print, *n.* அச்சு; முத்திரை பதித்த வெண்ணெய்க்கட்டி; அச்சடித்த பருத்தித்துணி; அச்சடித்த பகுதி; அச்செழுத்து; அச்சிட்டது; அச்சிட்ட வெளியீடு, செய்தித்தாள்; தகட்டச்சுப் பதிவு; தகட்டச்சுமாதிரி; பதித்த சுவடு; பொறிப்புத்தடம்; (நிழ.) நிழற்படத் தகட்டச்சுப்படம்; *v.* அச்சிடு; பதிப்பி; முத்திரை பொறிப்பிடு; கருத்து-காட்சி முதலியவற்றை மனத்திற் பதியவை; தாள்-தோல் முதலியவற்றின் மீது எழுத்துப் பொறிப்பி; படம் பதியவை; நிழற்படத் தகட்டச்சுப் பதிப்பிடு; ஆசிரியர் அல்லது பதிப்பாசிரியர் வகையில் புத்தகங்களை அச்சிடு; அச்சிட்டு வெளியிடு; அச்சிட்டுத்தெரிவி; அச்செழுத்துப்போன்று எழுது; ஒப்பனை செய்யும் வண்ண மாதிரிகள் கொண்டு துணிகளில் அச்சிடு; வண்ண மாதிரிகளை அல்லது சித்திரவேலைகளைத் தாள் முதலியவற்றினின்று மெருகிடப்படாத மட்கலங்கள்மேல் இடமாற்றுச்செய்; (தொ.) print hand, print letters, அச்செழுத்தைப்போன்ற கையெழுத்து; print off, print out, நிழற்படத்தைத் தகடாக

உருவாக்கு ; out of print, விற்பனையாகிவிட்ட, கைவசமில்லாத ; rush into print, புத்தக வகையில் அச்சிட்டு வெளியிடு; செய்திகளைத் தக்க சான்றுகளின்றிச் செய்தித்தாளுக்கு எழுது.

prin'ter, *n.* அச்சடிப்பவர்; அச்சுத்தொழில் முதல்வர்; அச்சக உரிமையாளர்; அச்சடிக்கும் இயந்திரம் ; (தொ.) printer's devil, அச்சகச் சிற்ருள் ; printer's mark, அச்சக வாணிக அடையாளமுத்திரை ; printer's pie, குழம்பிய நிலையில் விழுந்த அச்செழுத்துக்களின் தொகுதி.

prin'ting, *n.* அச்சு ; அச்சடிப்பு ; அச்சுக்கலை ; அச்சுத் தொழில்; பதிப்பு, ஒருங்கு அச்சிடப்பட்ட படிகளின் தொகுதி.

prin'ting-ink, *n.* அச்சக மை, அச்சு மை.

prin'ting-press, *n.* அச்சகம், அச்சிடுந் தொழிற்சாலை.

print'-seller, *n.* செதுக்குவேலைகள்-மாதிரிகள் முதலிய வற்றை விற்பவர்.

print'-shop, *n.* செதுக்குவேலைகள்-மாதிரிகள் முதலியவை விற்குங் கடை.

print'-works, *n.* அச்சடி துணியாலை, பருத்தித்துணிகளில் அச்சிடுந் தொழிற்சாலை.

pri'or[1], *n.* திருமட முதல்வர், மடத்துத்தலைவருக்கு அடுத்த நிலையிலுள்ள திருமடத்துப் பணியாளர் ; துறவியர் குழுத் தலைவர் ; (வர.) சில இத்தாலிய குடியரசுகளில் தலைமைத் தண்டலாளர்.

pri'or[2], *a.* முந்திய ; காலத்தால் முற்பட்ட ; முன்னதாக உள்ள; முந்திய முதன்மையுடைய; *adv.* முன்பாக, முன்னே.

pri'oress, *n.* திருமடத்து முதல்வி.

prio'rity, *n.* முந்துரிமை, முற்படும் உரிமை ; விஞ்சிய மேம்பாடு ; விஞ்சியதன்மை ; (தொ.) first priority, top priority, முதல் முந்துரிமை ; சிறப்பு முந்துரிமை.

pri'ory, *n.* துறவிமடம்; கன்னித்துறவியர் மடம்; (தொ.) alien priory, priory alien, அயல் நாட்டிலுள்ள மடத்தைச் சார்ந்துள்ள துறவிமடம் ; அயல்நாட்டு மடத்தைச் சார்ந்துள்ள கன்னித்துறவியர் மடம்.

prise, *v.* நெம்பித்திற, மூடியைத் தெள்ளி எழுப்பு.

pri'sm, *n.* பட்டகை, மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட தட்டையான பக்கங்களையுடைய நீளுருளை உரு.

protochlor'ide, *n.* (வேதி.) பாசகம் குறைந்த அளவில் கலந்த சேர்மவகை.

prot'ocol, *n.* உடன்படிக்கை முதற்குறிப்பு; கூட்டு ஒப்பந்த மூலப்படி; முறையான ஒப்பந்தக்கூட்டு நடவடிக்கைக் குறிப்பு; பிரஞ்சு வெளிநாட்டு அரங்க ஒழுங்குமரபுப்பிரிவு; மரபு ஒழுங்குமுறை வக்கணைத்தொகுதி; பத்திர முதல் இறுதி வக்கணை; தூதரக வக்கணையாளர்; *v.* உடன்படிக்கை முதற்குறிப்பு எழுது; ஒப்பந்த மூலப்பத்திரமாக்கு; உடன்படிக்கை முதற்குறிப்பிற் பதிவுசெய்.

protogenet'ic, protogen'ic, *a.* வளர்ச்சிக்கால முதற்படியைச் சார்ந்த; முதற்பருவத்திற்குரிய.

prot'ogine, *n.* மிகப்பழைமையானது என்று கருதப்படும் ஆல்ப்ஸ் (Alps) மலைப் பாறைவகை.

protohipp'us, *n.* முற்பரிமா, மரபற்றுப்போன குதிரையின விலங்கு வகை.

pro'tomartyr, *n.* கிறித்தவசமயத்தின் முதல் உயிர்த்தியாகி, தூயதிரு ஸ்டீபன் (St. Stephen).

prot'on, *n.* அணுவின் கருவுளில் உள்ள நேர்மின்மம்.

protonot'ary, *n.* வழக்குமன்றங்களிலுள்ள தலைமை எழுத்தர்.

prot'ophyte, *n.* ஓரணுவுயிர்த்தாவரம்; *pl.* protoph'yta.

prot'oplasm, *n.* ஊன்மம், ஒளியூடுருவவல்ல அரை நீர்ம இயலான உயிரக கரிய நீரகங்களடங்கிய உயிர்ச்சத்துப் பொருள்.

protoplas'mic, *a.* ஊன்மஞ் சார்ந்த.

prot'oplast, *n.* முதன்முதலாகப் படைக்கப்பட்ட மனிதன்; மூலமுதல், மாதிரி, மூலப்பிரதி; ஊன்மக்கூறு; உயிர்மம்.

protosulph'ide, *n.* மிகக்குறைந்த அளவான கந்தகங்கலந்த சேர்மவகை.

proto-ther'ia. *n. pl.* பால்குடி இனத்தின் மிகத்தாழ்ந்த உட்பிரிவு சார்ந்த விலங்குகள், பால்குடி இனத்தின் முன்னோடியாகக் கருதப்படும் உயிரினம்.

prot'otype, *n.* மூலமுன்மாதிரி; முந்தை வடிவம்; முன்னோடி மாதிரி.

prot'oxide, *n.* மிகக் குறைந்த அளவான உயிரகங் கொண்ட சேர்மவகை.

protozo'a, *n. pl.* நுண்ணிய ஓரணுவுயிர்ப் பிரிவுசார்ந்த உயிர்கள்.

protozo'al, *a.* ஓரணு உயிர்சார்ந்த; நோய்வகையில் ஓரணு உயிர் நுண்மங்களால் ஏற்படுகிற.

protozo'an, *n.* நுண்ணிய ஓரணு உயிர்; *a.* நுண்ணிய ஓரணு உயிர்ப்பிரிவு சார்ந்த; நோய்வகையில் ஓரணு உயிர் நுண்மங்களால் ஏற்படுகிற.

protozo'ic, *a.* (மண்.) மண்ணியலூழிப் படுகை வகையில் மிக முற்பட்ட உயிர்வகைகளின் தடங்களையுடைய.

protozool'ogy, *n.* நுண்ணிய ஓரணு உயிராய்வுநூல்.

protozo'on, *n.* நுண்ணிய ஓரணு உயிர்.

protract', *v.* நீட்டு, நீளமாக்கு; காலங்கடத்து; நிலத்தின் திட்டப்படத்தை வீதக்குறிப்பு அளவுப்படி வரை.

protrac'tile, *a.* (வில.) உறுப்பு முதலியவை வகையில் நீட்டக்கூடிய, விரிக்கக்கூடிய.

protrac'tion, *n.* காலநீட்டிப்பு; நீளச்செய்தல்; நீட்டுத்தசைச் செயல்; வீதக்குறிப்பு அளவுப்படி வரைதல்.

protrac'tor, *n.* கோணமானி; நீட்டுத்தசை, உறுப்புக்களை நீட்டுவதற்குரிய தசைநார்.

protrude', *v.* முன்பிதுங்கியிரு, துருத்திக்கொண்டிரு; நீட்டு; உந்திநில்; உரிமையின்றித் தலையிடு.

protru'sile, *a.* கை-கால் முதலிய உறுப்புக்கள் வகையில் வெளியே நீட்டக்கூடிய.

protru'sion, *n.* துருத்திக்கொண்டிருக்கும் நிலை, முன்புறம் நீட்டியிருத்தல்.

protub'erance, *n.* புடைப்பு, கொம்மை, வீக்கம்.

protub'erant, *a.* புடைத்திருக்கிற, முனைப்பாகத் தெரிகிற.

protu'berate, *v.* புடைத்துக்கொண்டிரு, வீங்கு.

prot'yle, *n.* (வேதி.) தனிமங்களுக்கும் மூலமாகக் கருதப்படும் கற்பித முதற்பொருள்.

proud, *a.* செருக்கிய, இறுமாந்த; மட்டுமீறிய தன்மதிப்புடைய; தன்நிறைவுமிக்க; விருப்புமிக்க; மான உணர்ச்சியுடைய, தன்மதிப்புக்குன்றாத; விழுமிய தோற்றமுடைய; செயல் வகையில் பெருமைக்குரிய; பெருமைகொள்கிற, பெருமதிப்பிற்குரியதாகக் கொள்கிற; பெருமை அளிக்கிற; பெருமைக்குக் காரணமாகக் கூறப்படுகிற; துணிவான; எடுப்பான, துடிப்பான; புடைப்பான; வெள்ளத்தின் வகையில் பொங்கிவருகிற; விலங்கின் பெடை வகைகளில் இணைவவாமிக்க; (தொ.) do one proud, (பே-வ.) நிறை பெருமையுடன் நடத்து; proud flesh, ஆறிவரும் புண்ணைச் சுற்றிவளருஞ் சதை.

proud'-heart'ed, *a.* தருக்குணர்ச்சியுடைய.

prov'able, *a.* மெய்ப்பிக்கக் கூடிய.

prove, *v.* மெய்ப்பி, சான்றுறுதிசெய்; சரியென்று காட்டு; தேர்வுமூலம் உறுதிப்படுத்து; வாதமூலம் நிலைநாட்டு; செயல்மூலம் விளக்கு; விசாரணையால் தேர்ந்துகாண்; தெளிவுபடுத்து; சோதனை செய்துபார்; கணிப்பினை வேறு முறையால் சோதித்துச் சரிபார்; பண்பு தேர்; துப்பாக்கி வகையில் நோட்டம் பார்; தெளிவுபடு; பின்னால் விளக்க முறு நிலையடை; காணப்படு; என்று காணப்பெறு; வந்தமைவுறு; ஆகு; (தொ.) the exception proves the rule, விலக்குண்மையால் விதியுண்மை உறுதியாகிறது.

proved'itor, provedore', *n.* (வர.) வெனிஸ் குடியரசின் உயர் அதிகாரி; உணவு ஏற்பாட்டாளர்.

prov'enance, *n.* தோற்றுவாய், பிறப்பிடம்.

Provencal, *n.* பிரஞ்சு நாட்டில் பிராவென்சு (Provence) மாவட்டத்தவர்; பிராவென்சு மாவட்ட மொழி; பிராவென்சு மாவட்ட மொழி பேசுபவர்; *a.* பிராவென்சு மாவட்டத்தைச் சார்ந்த.

prov'ender, *n.* தீவனம், கால்நடை உணவு; கேலிவழக்கில் மக்கள் உணவு.

proven'ience, *n.* = provenance.

prov'erb, *n.* பழமொழி; மேற்கோள் உரை; மூதுரை; பொது நடைமுறை வழக்காறு; புதிர்உரை, விளக்கம் அவாவி நிற்கும் வாசகம்; பழமொழி பெயராகவும் கதை அடிப்படையாகவும் அமையும் பிரஞ்சு நாடகம்; (தொ.) Book of Proverbs, பழமொழிகள் கொண்ட விவிலிய ஏட்டின் பிரிவு.

proverb'ial, *a.* பழமொழிபோன்ற ; முதுரையான ; நாடறிந்த ; கெட்டபெயர்பெற்ற.

prov'erbs, *n. pl.* வட்டமேசை விளையாட்டுவகை.

prov'iant, *n.* உணவுதருவிப்பு ; படைத்துறை உணவு ஏற்பாடு.

provide', *v.* தருவி, தருவித்து வழங்கு ; ஏற்பாடு செய்துகொடு ; தேவை சேகரித்துக்கொடு ; வேண்டியன கொடுத்து உதவு ; ஆள் வகையில் வேண்டிய துணைவாய்ப்பு வகைகள் இணைவி ; படைவகையில் கருவிகலத் துணைவாய்ப்புக்கள் அளித்தமைவு செய் ; உணவுப்பொருள் தேடித்தருவி ; முன்னெருக்கங்கள் செய் ; முன்கூட்டி எதிர்நடவடிக்கைகள் எடுத்து அமை ; முன்னதாகச் சரியீடுசெய்து அமை ; முன்னதாகத் தடைகாப்புச்செய்துவிடு ; (வர.) மானிய வகையில் ஆள் அமர்த்து ; போப்பாண்டவர் வகையில் ஆள் இருக்கும்போதே அடுத்த உரிமையாளரை அமர்வு செய்துவிடு.

provid'ed[1], *a.* வசதிசெய்துகொடுக்கப்பட்ட ; (தொ.) provided school, உள்ளூர் மேலாட்களால் உதவி அளித்து நடத்தப்படும் பொதுத் தொடக்கப்பள்ளி.

prov'ided[2], *conj.* இந்நிபந்தனைகட்கு உட்பட்டு.

prov'idence[1], *n.* முன்னுணர்வு, முன்கருதல் ; சிக்கனத் திட்டம் ; கடவுள் அருள், இயற்கையின் அருள்நலம் ; (தொ.) special providence, தனி அருள்நிகழ்ச்சி, கடவுளின் அல்லது இயற்கையின் அருட்செயல் கைகூடிவரப்பெற்ற தனி நிகழ்ச்சி.

Prov'idence[2], *n.* கடவுள், ஆண்டவன்.

prov'ident, *a.* முன் அறிவுடைய, முன்யோசனை காட்டுகிற ; சிக்கனமான.

providen'tial, *a.* தெய்வச்செயலான ; தற்செயல் நல்வாய்ப்பான, நற்பேறான.

provid'er, *n.* அளிப்பவர், கொடுப்பவர் ; ஏற்பாடு செய்பவர் ; (தொ.) lion's provider, நரி ; universal provider, பலவகைச் சரக்குகளிலும் வாணிகம் செய்பவர்.

prov'ince, *n.* மாகாணம், நாட்டின் பெரும்பிரிவு ; மாநிலச் சமய ஆட்சி முதல்வர் ஆட்சியெல்லை ; கடமையெல்லை, செயல்துறை எல்லை ; கலை-இலக்கியத்துறை எல்லை ; (வர.) பண்டை ரோமப்பேரரசின் ஆட்சிப்பகுதி, வெளி மாகாணம்.

provin'ces, *n. pl.* தலைநகர் நீங்கிய மாகாணப் பகுதிகள்.

provin'cial, *n.* மாகாணவாசி ; நாட்டுப்புறவாசி, சமய மாநில முதல்வர் ; *a.* மாகாணத்திற்குரிய ; மென்னயஞ் சாராத, குறுகலான.

provin'cialism, *n.* மாகாணப்பாங்கு ; உள்ளூர்ப்பழக்கம் ; மொழியின் மாகாண வழக்காறு ; குறுகிய மாகாணப்பற்று.

provin'cialist, *n.* மாகாணவாசி.

provi'sion, *n.* முன்னேற்பாடு செய்தல் ; முன்னேற்பாடு ; முற்காப்பு ; வழிவகை ஏற்பாடு ; முன்னேற்பாடாக ஒதுக்கப்பட்ட தொகை ; முற்சேகரப்பொருள் ; முன்னேற்பாட்டு வாசகம் ; கட்டுப்பாட்டு விதி ; சட்டத்தில் நிபந்தனை வாசகம் ; தனிச்சிறப்பான வழிவகை செய்யும் சட்டப்பிரிவு ; உணவுப்பொருள் ; (வர.) ஆள் இருக்கும் மானியத்துக்கான அடுத்த உரிமையாளர் அமர்த்திடு ; *v.* உணவுப்பொருள் சேகரி, உணவுப்பொருள் ஏற்பாடு செய்து அமை.

provi'sional, *a.* தற்பொழுதைக்கான.

provis'ions, *n. pl.* பலசரக்குக் கடை.

provis'o, *n.* காப்புவாசகம், சட்டத்தில் விலக்குக்கூறு, விருப்பாவணத்தில் கட்டுவரையறை ; *pl.* provis'os.

provis'or, *n.* (வர.) பத்திரத்தின் தனி ஏற்பாட்டு வாசக உரிமையாளர் ; போப்பாண்டவர் இளவரசு ; சமய மனையின் உண்டிப்பொருள் முதல்வர்.

provis'ory, *a.* காப்பு வாசகம் அடங்கிய ; நிபந்தனை மீதான, வருநிலை சார்ந்தே நிகழத்தக்க ; தற்பொழுதைக்குரிய ; தற்காலத்திய ஏற்பாடான.

provoca'tion, *n.* தூண்டுதல், சினமூட்டுஞ் செயல் ; தீமை செய்வதற்கான தூண்டுதல் ; எரிச்சலூட்டுதல் ; தூண்டு காரணம்.

provoc'ative, *n.* தூண்டும் பொருள் ; அறியும் ஆர்வம் ; *a.* அறியும் ஆர்வத்தைத் தூண்டுகிற ; வேண்டுமென்றே எரிச்சலூட்டுகிற.

provoke', *v.* சினமூட்டு, எரிச்சல் உண்டுபண்ணு ; அவா எழுப்பு ; கவர்ச்சியூட்டு ; தூண்டு, கிளறு.

prov'ost, *n.* ஆக்ஸ்போர்டு-கேம்பிரிட்ஜ் கல்லூரிகள் சிலவற்றின் தலைவர் ; (வர.) சமயத்துறைச் சங்கத்தலைவர் ; ஸ்காத்லாந்து நகராண்மைக்கழகத் தலைவர் ; செர்மனியில் நகரத் தலைமைத் திருக்கோயில் பொறுப்புள்ள சமயகுரு ; (தொ.) provost marshal, படைத்துறைக்காவலர் தலைவர் ; படைத்துறை முறைமன்றம் நடக்கும் படைக்கப்பல் தலைவர் ; குடியேற்ற நாடுகள் சிலவற்றில் தலைமைக் காவல் அதிகாரி ; (வர.) பிரான்சில் படைத்துறைப் புறச்சார்பான பணியர் ; provost sergeant, படைத்துறைக்காவலர் குழுத்தலைவர்.

prow[1], *n.* கப்பல் அல்லது படகின் முன்பகுதி ; (வில.) உடலின் முன்முனைப்புப்பகுதி.

prow[2], *a.* தகுதிமிக்க ; வீரப்பண்புநயமார்ந்த.

prow'ess, *n.* வீரம் ; ஆண்மை ; துணிவு ; பண்பு நிறைவு.

prowl, *n.* கொள்ளைச்சுற்றுத் திரிவு ; தெருச்சுற்றல், அலைவு, திரிவு ; *v.* கொள்ளைப்பொருள் தேடித்திரி ; இரைதேடி அலை ; வீதிகளில் திருட்டுக்கருத்தோடு சுற்று.

prox'imal, *a.* (உள்.) உடலின் மையத்தை நோக்கி அமைந்துள்ள ; இணைப்பு மையத்தை நோக்கி அமைந்துள்ள.

prox'imate, *a.* அண்மையான, அருகிலுள்ள ; முந்திய அல்லது அடுத்த, உடனடியான ; ஏறத்தாழ, கிட்டத்தட்ட.

prox'ime accesser'unt, *n. pl.*, ***prox'ime access'it***, *n. sing.* (ல.) பட்டியலில் பரிசு பெறுபவருக்கு அடுத்த நிலையில் வைக்கப்பட்டவர், பரிசு பெறுபவருக்கு அருகில் வந்தவர்.

proxim'ity, *n.* இடவகையில் அண்மை ; காலவகையில் அணிமை ; நெருங்கிய தன்மை, அடுத்துள்ள நிலை ; (தொ.) proximity of blood, அடுத்த உறவு.

prox'imo, *adv.* அடுத்த மாதத்தில்.

prox'y, *n.* பதிலாள் ; செயலுரிமைபெற்ற பதிலாள் ; பதிலாள் வாக்குரிமை.

prude, *n.* நுணுக்கநாணி.

pru'dence, *n.* செயலறிவு ; உலகியல்மதி ; தன்னல நோக்குடைய அறிவு ; முன்மதி.

pru'dent, *a.* செயலறிவுத்திறம்வாய்ந்த ; செயல்நுட்பமறிந்த ; வகைதிரிபுணர்வுடைய ; யூகமுடைய ; விவேகமுடைய, உலகியல் அறிவுவாய்ந்த, அறிவுநுட்பம் வாய்ந்த ; அமைந்திருந்து செயல் செய்யக்கூடிய.

pruden'tial, *a.* தன்னல நோக்குச்சார்ந்த, காரிய அறிவு சார்ந்த, முன்மதிகாரணமான ; நிர்வாகம் பற்றிய.

pruden'tials, *n. pl.* செயலறிவு முதுமொழி.

pru'dery, *n.* போலிநாணம், போலிப்பயிர்ப்பு.

prud'homme, (பிர.) *n.* தொழிலாளர் பிணக்குத் தீர்வு நடுவர்.

pru'inose, *a.* வெண்துகளால் மூடப்பெற்ற ; பனிபோர்த்த.

prune[1], *n.* உலர் கொடிமுந்திரிப்பழம் ; கொடிமுந்திரிப் பழச் சாற்றின் நிறம் ; கருஞ் சிவப்பு ஊதாநிறம் ; (தொ.) prunes and prism, நயநுணுக்கப் பசப்புப்பேச்சு.

prune[2], *v.* நறுக்கு ; தறி, வெட்டு ; தேவைக்கு மேற்பட்ட வற்றை அகற்று.

prunell'a[1], *n.* உறுதியான மென்பட்டு ; முறுக்கிய கம்பளி நூல்.

prunell'a[2], *n.* தொண்டைக் கம்மல் ; தொண்டையடைப்புக் காய்ச்சல்.

prunell'o, *n.* மிகச்சிறந்த உலர்முந்திரிப்பழ வகை ; *pl.* prunell'os.

pru'ning-hook, *n.* மிகைக்கொம்புகளைக் கழிக்குங்கருவி.

prunt, *n.* கண்ணுடி வார்ப்பணி ; வார்ப்புக் கண்ணுடி ; கண்ணுடி வார்ப்புக் கருவி.

prur'ience, prur'iency, *n.* அரிப்பு, தினவு ; எண்ண இழிதகவு.

prur'ient, *a.* அரிப்புடைய ; காம எண்ண விருப்புடைய ; கெட்ட அவாவுடைய.

pruri'ginous, *a.* தோல் அரிப்புடைய.

prurig'o, prurit'us, *n.* அரிப்புக்கொப்புளம்.

Pru'ssian, *n.* பிரஷிய நாட்டினர், பிரஷிய குடியுரிமையாளர் ; *a.* பிரஷியாவிற் பிறந்த ; பிரஷியாவில் வாழ்கிற ; பிரஷிய நாட்டிற்குரிய ; (தொ.) Prussian blue, ஆழ்ந்த நீல வண்ணப்பொடி, அடர்த்தியான நீலவண்ணச் சரக்கு ; Prussian brown, Prussian green, ஆழ்ந்த நீலவண்ணச் சரக்கிலிருந்து எடுக்கப்படும் பழுப்பு வண்ணம் அல்லது பச்சை வண்ணம் ; Prussian carp, சிறு நன்னீர்மீன் வகை.

Pru'ssianize, *v.* தனியாளை நாட்டுநலத்திற்குப் பலியிடும் பிரஷிய முறையினைத் தழுவு.

pruss'ic, *a.* ஆழ்ந்த நீலவண்ணச் சரக்கு சார்ந்த ; அடர்ந்த நீலவண்ணத்திலிருந்து பெறப்பட்ட ; (தொ.) prussic acid, நீரசயனிகக் காடி.

pry[1], *v.* ஒற்றுப்பார், துருவி ஊடாக நோக்கு ; பிறர் மறையில் இடையிட்டுக் கருத்துச்செலுத்து ; தலையிட்டுத் தொல்லை கொடு ; பிறர் நடத்தைபற்றி உரிமையின்றி உசாவு ; நுழைந்து ஆராய் ; (தொ.) pry out, நுட்பமாக நோக்கி ஆய்வு செய் ; வேண்டாத வகையில் தலையிட்டு ஆர்வத்துடன் கண்டுபிடி.

pry[2], *v.*=**prize[3]**.

prytane'um, *n.* பண்டைய கிரேக்க நகரப் பொது வரவேற்பு மண்டபம்.

psalm, *n.* வழிபாட்டுப் பாடல், தோத்திரம், தெய்வகீதம் ; (தொ.) the Book of Psalms, the Psalms, பழைய ஏற்பாட்டிலுள்ள தோத்திரப்பாடல்கள்.

psalm'-book, *n.* பொதுவழிபாட்டுத் தோத்திரச்சுவடி.

psalm'ist, *n.* வந்தனைப்பாடல் இயற்றுபவர் ; the Psalmist, தோத்திரப்பாடல்களின் ஆசிரியர், தாவீது (David).

psalmod'ic, *a.* தோத்திரப்பாடல் இசைத்தலைச் சார்ந்த.

psalmod'ist, *n.* வந்தனைப்பாடல் பாடுபவர்.

psalmod'ize, *v.* தெய்வகீதம் பாடிப் பயிலு.

psal'mody, *n.* தோத்திரப்பாடல் இசைத்தல் ; தோத்திரப் பாடற்கலை ; தோத்திரப்பாடல்களின் தொகுதி ; ஞானப் பாடல்கள்.

psal'ter, *n.* தாவீதின் தோத்திரப்பாடல் திரட்டுச் சுவடி ; லத்தீன்-ஆங்கிலம் முதலிய மொழிகளில் தாவீதின் தோத்திரப் பாடல்களின் பதிப்பு ; வழிபாட்டுக்கான தாவீதின் தோத்திரப்பாடல் திரட்டின் படி.

psal'tery, *n.* பண்டைக்கால-இடைநிலைக்கால தெறி நரப்பிசைக் கருவிவகை.

pseph'ism, *n.* பண்டைய கிரீஸில் அத்தீனிய பொதுச்சபையினர் வாக்களிப்பின் மூலம் பிறப்பித்த கட்டளை.

pseud'echis, *n.* (வில.) நச்சுப்பாம்பினம்.

pseudepig'rapha, *n. pl.* பழைய ஏற்பாட்டாசிரியர்கள் எழுதியதாகக் கூறப்படும் சுவடிகள்.

pseu'do, *a.* பொய்யான, போலியான.

pseudo-archa'ic, *a.* நடை முதலியவற்றில் செயற்கைப் பழமைத்தோற்றங் கொண்ட.

pseud'o-carp, *n.* (தாவ.) போலிக்கனி, கருவகத்துக்குப் புறமான பகுதியிலிருந்து உருவாகும் கனியுரு.

pseudo-class'ic, *a.* பண்டைய கிரேக்க-ரோமக்கலைப்போலியான.

pseudo-Goth'ic, *a.* கூர்வளை சிற்பவகைப்போலி சார்ந்த.

pseud'ograph, *n.* உண்மை ஆசிரியரறியா இலக்கியம்.

pseudol'oger, *n.* கன்றிய பொய்யர்.

pseudol'ogy, *n.* பொய்ம்மைக்கலை.

pseudo-mart'yr, *n.* போலி உயிர்த்தியாகி.

pseud'omorph, *n.* பொய்த்தோற்றம் ; மாறுபடுமணியுரு, வேறொரு கனிப்பொருளுக்குரிய மணியுருத்தோற்றத்தைக் கொண்டுள்ள கனிப்பொருள் மணியுருவம்.

pseud'onym, *n.* புனைபெயர்.

pseudon'ymous, *a.* புனைபெயரில் எழுதப்பட்ட ; கற்பனைப் பெயரில் எழுதுகிற.

pseud'oscope, *n.* குவிவான பொருளைக் குழிவாகவும் குழிவான பொருளைக் குவிவாகவும் காட்டும் ஒளிக்கருவி வகை.

pshaw, *int.* சீ-சீ!

psilan'thropism, *n.* இயேசுநாதர் மனிதரே என்னுங் கோட்பாடு.

psilos'is, *n.* மேற்பகுதி நீக்கி வெறுமையாக்கிக் காட்டும் நிலை ; மயிர்விழுந்துபோதல் ; வாய்-தொண்டை-செரிமானம் ஆகியவற்றைப் பீடிக்கும் வெப்பமண்டல நோய்வகை ; புறச்சதைக்கரைவு.

psitt'acine, *a.* கிளிகளுக்குரிய ; கிளிபோன்ற.

psittacos'is, *n.* கிளிகளின் தொற்றுக் காய்ச்சல்.

pso'as, *n.* இடுப்புத்தசை.

psor'a, *n.* சிரங்கு.

psori'asis, *n.* யானைச்சொறி, நமட்டுச்சொறி.

psyche, *n.* உயிர், ஆன்மா ; உளம், மனம் ; வண்ணத்துப் பூச்சி வகை ; கிரேக்க பெண்தெய்வம்.

psychi'atrist, *n.* உளநோய் மருத்துவர்.

psychi'atry, *n.* மனநோய் மருத்துவம், உளமருத்துவம்.

psych'ic, *n.* ஆவி ஆற்றலுடன் தொடர்புகொள்ளக்கூடியவர், ஆவியூடாடி ; இயல் இயக்கமீறிய ஆற்றல் ; உடலியல்பு கடந்த செய்தி ; *a.* உளஞ் சார்ந்த ; ஆன்மிக ; உடலியல்பு கடந்த ; இயற்பியல் நியதிக்கு அப்பாற்பட்ட ; ஆவியுலகு சார்ந்த ; (தொ.) psychic force, ஆன்மிக ஆற்றல், இயலியக்கம் சாராதவற்றை விளக்குவதாகக் கொள்ளப்படும் இயற்பியல் கடந்த ஆற்றல்.

psych'ical, *a.* உளம் அல்லது உயிர் சார்ந்த ; மனிதனின் உயிர்நிலை வாழ்க்கைக்குரிய ; இயற்பியல் நியதிக்கு அப்பாற்பட்ட தோற்றங்கள் சார்ந்த ; இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலைகள் சார்ந்த ; (தொ.) psychical research, ஆவி உலகத் தொடர்பு பற்றிய ஆய்வு.

psych'ics, *n. pl.* உளநூல் ; ஆவிஉலகத் தொடர்புபற்றிய புத்தாய்வுத்துறை.

psycho-an'alyse, *v.* உளநிலைப்பகுப்பாய்வுசெய், உளநிலை உணர்வாய்வுமூலம் மருத்துவஞ்செய்.

psycho-anal'ysis, *n.* உளநிலைப்பகுப்பாய்வு, உணர்வுநிலை உணர்வுகடந்த நிலைகளின் தொடர்பு விளைவுகளை ஆயும் உள ஆய்வியல்துறை ; உளவியல் மருத்துவமுறை, உணர்வு கடந்தநிலை எண்ண உறைவுகளின் விளைவாய்ந்து நோய் தீர்க்கும் முறை.

psycho-an'alyst, *n.* உளநிலை ஆய்வுவல்லுநர், உளநிலை மருத்துவ ஆய்வாளர்.

psycho-dynam'ic, *a.* உள ஆற்றல் சார்ந்த.

psycho-dynam'ics, *n.* உள ஆற்றல் ஆய்வியல்துறை.

psychogen'esis, psychog'ony, *n.* மனத்தின் தோற்ற வளர்ச்சி, மனத்தில் கருத்து உருத்தோற்றம்.

psycho'gram, *n.* ஆவியினிடமிருந்து வருவதாகக் கருதப்படும் எழுத்துச்செய்தி.

psycho'graph, *n.* ஆவி எழுத்திற்குரிய கருவி.

psychog'raphy, *n.* விரிவியல் விளக்கமுறை உள ஆய்வுத் துறை ; ஆவி இயக்க வரிவடிவச் செய்திப்பேறு.

psycholo'gical, *a.* உளநூல் சார்ந்த; உள இயல்புத் தொடர்பான; மனத்தால் நேரடியாக உணரப்படுகிற; அக உணர்வுச் சார்பான; அகநிலை உணர்வுக்குரிய; (தொ.) psychological moment, உற்றவேளை, மனத்தைத் திறம்படக் கவர்ந்து ஆட்படுத்துவதற்குரிய சரிநுட்பமான காலக்கூறு.

psychol'ogist, *n.* உளநூல் வல்லுநர்; உளநூல் ஆய்வாளர்; உள உணர்வு செயற்பாடுகளை ஆய்பவர்; உள உணர்வு செயற்பாடுகளைப்பற்றிப் போதிப்பவர்.

psychol'ogize, *v.* உளநூல் ஆய்வில் ஈடுபடு; உள இயல்பிற்கேற்பப் பொருள் விளக்கு; மனிதவசிய முறையில் மயக்கி உறக்கமூட்டு.

psychol'ogy, *n.* உளநூல், உள இயல்பு நிலை இயக்கங்களையும் விளைவுகளையும் ஆயும் அறிவுத்துறை; உளநூல் பற்றிய ஆய்வேடு; உளநூல் நியதி; உள இயல்பு; உள உணர்வியக்கங்களின் தொகுதி; மனப்போக்கு, மனநிலை.

psycho'mancy, *n.* ஆவியுலகத்தொடர்பு.

pyschomet'ric, psychomet'rical, *a.* உற்றறி பண்பாற்றல் சார்ந்த.

psychom'etry, *n.* உற்றறி பண்பாற்றல், தொடுவதன் மூலமே பொருள்களின் அல்லது ஆள்களின் உள்ளியல்புகளை அறியும் மறையாற்றல்.

psychomot'or, *n.* உள ஆற்றச் செயற்பாடு, உள ஆற்றலால் தசைப்பகுதி இயங்குவித்தல்.

psychoneuros'is, *n.* சித்தப்பிரமைத் தொடக்கநிலை.

psych'opath, *n.* மனநிலை திரிந்தவர், உளநோயாளி.

psychopath'ic, *a.* உளநோய் சார்ந்த.

psychop'athist, *n.* உளநோய் மருத்துவர்.

psychopathol'ogy, psychop'athy, *n.* உளநோய் ஆய்வு நூல்.

psychophys'ics, *n.* உடலுளத்தொடர்பாய்வியல்.

psychophysiol'ogy, *n.* உளவியல் உடல்நூல்.

psychos'is, *n.* பைத்தியம், கோட்டி; *pl.* psychos'es.

psychosomat'ic, *a.* சிந்தையும் உடலுஞ் சார்ந்த; உடல் சார்ந்த நோய்வகையில் கவலைகளினால் உண்டான; கவலைகளினால் மேலும் மோசமாகிவிட்ட.

psychotherapeut'ic, *a.* வசியத்துயில் முதலிய வழிகளால் மனநோய்க்குப் பண்டுவஞ் செய்வது சார்ந்த.

psychothe'rapy, *n.* வசியத்துயில்முறை மருத்துவம், மயக்கி உறக்க மூட்டுவது மூலமாக நோய்க்குப் பண்டுவஞ் செய்தல்.

psychrom'eter, *n.* ஈர உணக்கவெப்பமானி, ஈரக்குமிழுடன் ஈரநீக்கிய குமிழும் உடைய வெப்பமானி வகை.

ptarm'igan, *n.* காட்டுக்கோழி வகை, கோடைக்காலத்தில் கறுப்புச் சிறகுகளையும் மழைக்காலத்தில் வெண் சிறகுகளையும் உடைய கோழியினப் பறவை வகை.

pteridol'ogist, *n.* தூரல் ஆய்வுத்துறை வல்லுநர்.

pteridol'ogy, *n.* தூரல் ஆய்வுநூல், பெரணி ஆராய்ச்சித் துறை.

pterodac'tyl, *n.* மரபற்றுப்போன சிறகுடைய ஊரும் உயிர் வகை.

pterog'raphy, *n.* சிறகுகள் பற்றிய விளக்கவுரை.

pter'opod, *n.* காலின் நடுப்பகுதி சிறகுபோல் விரிந்திருக்கும் நத்தையின உயிர்வகை.

pte'ropus, *n.* (வில.) நரிச்சல், பழந்தின்னும் வௌவால்; *pl.* pte'ropi.

pter'osaur, *n.* மரபற்றுப்போன பறக்கும் பல்லியின உயிர்.

pteryg'ium, *n.* (மரு.) சதைப்படர்த்தி, கண்ணோய் வகை.

pte'rygoid, *n.* தாடை முளை எலும்புகளுள் ஒன்று; *a.* சிறகு போன்ற; தண்டெலும்புடைய உயிரினங்களில் வல்லண்ண எலும்புகளுக்குப் பின்னால் மேல்தாடையிலுள்ள இரட்டையான முளையெலும்புகள் சார்ந்த; (தொ.) pterygoid process, தண்டெலும்புடைய உயிரினங்களில் வல்லண்ண எலும்புகளுக்குப் பின்னால் மேல்தாடையிலுள்ள இரட்டையான முளையெலும்புகளின் அமைவு.

pti'san, ptisan', *n.* வாற்கோதுமைக் கஞ்சி.

Ptolema'ic, *a.* இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான நூலாராகிய தாலமி (Ptolemy) சார்ந்த; கி. மு. 323 முதல் கி. மு. 30 வரையில் எகிப்தை ஆண்ட தாலமி மரபு மன்னர்களைச் சார்ந்த; (தொ.) Ptolemaic system, வானநூல் வகையில் நிலவுலகை மையமாகக் கொண்டு ஞாயிறும் பிறகோள்களும் சுற்றி வருவதாகக் கொள்ளப்பட்ட கோட்பாடு.

ptom'aine, ptomaine', *n.* அழிதசைநஞ்சு, அழுகும் பிணங்களிலும் காய்கறிகளிலும் உள்ள நச்சுப்பொருள் வகை.

ptos'is, *n.* இமைவாதம், தசையின் பக்கவாதத்தினால் கண்ணின் மேலிமை கீழ்நோக்கித் தொங்குதல்.

pub, *n.* (பே-வ.) பொது விடுதி.

pub'erty, *n.* பூப்புப்பருவம், பாலின முதிர்ச்சியின் தொடக்கக் காலம்.

pubes'cence, *n.* பூப்புப்பருவம் எய்துதல்; செடிகளின் இலைகளிலும் தண்டுகளிலும் காணப்படும் மென்மயிர்த்துய்; விலங்கு பூச்சிகளின் உடற்கூறுகளில் மென்மயிர்த்துய்; மென்மை, மொசுமொசுப்பு.

pubes'cent, *a.* மென்மயிருடைய; மென்மைவாய்ந்த.

pub'lic, *n.* பொதுமக்கள், சமுதாயமக்கள்; மனிதசமுதாயம்; மக்கள்; சமுதாயத்தில் ஒரு பிரிவினர்; பொதுமக்கள் கூடும் இடம்; பொதுமக்களைக் காணும் வெளியிடம்; (பே-வ.) பொது விடுதி; *a.* பொதுமக்களுக்குரிய; பொதுமக்கள் பற்றிய; பொதுமக்களின் சார்பான; பொதுமக்களுக்கான; பொதுமக்களுக்குப் பிரதிநிதியான; பொதுமக்களுக்குப் பயன்படத்தக்க; பொதுமக்கள் கலந்துகொள்கிற; பொதுவான, பொதுவில் ஏற்பட்டிருக்கிற; வெளிப்படையாகச் செய்யப்படுகிற; மக்கட்பணியில் ஈடுபட்டிருக்கிற; பொதுப் பணி சார்ந்த; பொதுமக்கள் கருத்து வழங்குதற்குரிய; பல்கலைக்கழக முழுமைக்குமுரிய; எல்லா நாடுகளுக்கும் பொதுவான, அனைத்து நாடுகளுக்கும் உரிய; (தொ.) in public, வெளிப்படையாக; பொதுமக்கள் அறியும்படி; notary public, சான்று அலுவலர்; public education, பள்ளிக்கல்வி, நாட்டுப் பொதுக்கல்வி; public funds, அரசினரால் எழுப்பப்பெற்றுள்ள நிலையான வட்டிக்கடன்; public holiday, பொது விடுமுறை நாள்; public house, பொதுவிடுதி; public lands, அரசினரின் உடைமையான பொது நிலங்கள்; public law, அனைத்து நாடுகள் சட்டம்; public orator, பொதுநிகழ்ச்சிகளிற் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவின் (Senate) சார்பில் உரையாற்றும் அலுவலர்; public prosecutor, அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞர்; public relations, பொதுமக்கள் தொடர்புப் பிரிவு; public relations officer, பொதுமக்கள் தொடர்புத்துறை முதல்வர்; public school, பெருமக்கள் பள்ளி; public spirit, நாட்டுப்பற்று; பொதுநல ஆர்வம்; public utility, பொதுநலத்துறை; public woman, விலைமகள்.

pub'lican, *n.* இறைதண்டுவோர்; சொண்டிகர், பெண்டிர் விடுதி நடத்துவோர்; ஆயக்காரர்.

publica'tion, *n.* வெளியிடுதல்; பொது அறிவிப்பு, விளம்பர அறிவிப்பு; வெளியீடு, வெளியிடப்பட்ட சுவடி; இசையிலக்கிய வெளியீடு; கலைவெளியீடு.

pub'licist, *n.* அனைத்து நாடுகள் சட்டம்பற்றி எழுதுபவர்; சர்வதேசச் சட்ட வல்லுநர்; நடப்புச்செய்திகளைப்பற்றி எழுதுபவர், பத்திரிகையாளர்.

publi'city, *n.* பலரறிநிலை, பிரசித்தி; ஆரவாரப்புகழ்; செய்திப்பரப்பு, பொது விளம்பரம்.

pub'licize, *v.* பரப்பிடு, சாற்று.

pub'licly, *adv.* வெளிப்படையாக.

pub'lic-spir'ited, *a.* ஒப்புரவுடைய, பொதுநல உணர்ச்சியுள்ள; பொதுநலத் தொடர்புடைய.

pub'lish, *v.* வெளியிடு, புத்தகம் விற்பனைக்கு உரியதாக்கு ; இசைப்பகுதி-கலைப்பகுதி முதலியவற்றைப் பொதுமக்கள் அறியச்செய் ; பலவிடங்களிலும் பரவச்செய் ; அறிக்கையிட்டுப் பரப்பு ; முறைப்படி அறிவி ; விளம்பரஞ்செய் ; திருமண முன்னறிவிப்பாய் வினவு ; திருமண முன்னறிவிப்பு அறிக்கை படி.

pub'lisher, *n.* வெளியீட்டாளர் ; அறிவிப்பவர், தெரிவிப்பவர்.

puccoon', *n.* வண்ண மையுடைச் செடிவகை.

puce, *a.* தெள்ளுப்பூச்சி நிறமான, செங்கல் மங்கலான.

Puck [1], *n.* ஷேக்ஸ்பியரின் 'நடுவேனிற்கனவு' நாடகத்தில் வரும் சிறப்புவாய்ந்த வனதெய்வம்.

puck [2], *n.* குறும்பு செய்யுங் குறளி ; குழந்தை.

puck [3], *n.* வளைகோற் பனிச்சறுக்கற் பந்தாட்டத்திற்குரிய தொய்வக ஆட்டச்சில்லு.

puck [4], *n.* கால்நடை நோய்வகை.

puck'a, (இ.) *a.* முழுநிறைவான ; முழுக்க முழுக்க நல்ல.

puck'er, *n.* மடிப்பு ; திரைப்பு ; குவிப்பு ; வளைவு ; கொய்சகம் ; *v.* திரைகளாகச் சுருக்கு ; மடிப்புக்களாகத் திரள்வி ; சுரி, சுருங்கு, குவி ; மடிப்புறு ; குவிவுறு.

puck'ery, *a.* சுருங்கக்கூடிய, திரையும் பாங்குள்ள.

pud, *n.* (பே-வ.) குழந்தையின் கை ; விலங்குகள் சிலவற்றின் முன்னங்கால்.

pu'ddening, *n.* (கப்.) உராய்வுத்தடைக் கயிற்றுமெத்தை.

pu'dding, *n.* களி, கூழ், புற்கை ; கூலவகையின் மாவு-குருதி முதலியவை திணிக்கப்பட்ட பன்றி முதலியவற்றின் குடற்கறி ; களிபோன்ற பொருள் ; (கப்.) உராய்வுத்தடைக் கயிற்றுமெத்தை ; (தொ.) black pudding, குருதிக்களி ; more praise than pudding, சத்தில்லா வெறும் பாராட்டு ; pudding pie, மாப்பணியார வகை; the proof of the pudding is in the eating, தின்பதால் தெரியும் பணியாரத் திறம்.

pu'dding-cloth, *n.* களி வேகவைக்குந் துணி.

pu'dding-head, *n.* மட்டி, மடையன்.

pu'dding-heart, *n.* கோழை.

pu'dding-stone, *n.* கூட்டுக்கலவைப்பாறை.

pud'dle, *n.* குட்டை, சேற்றுமடு ; (பே-வ.) குழப்பம், தாறுமாறான நிலை ; மண்ணடை, அணை-கரை முதலியவற்றில் நீர் புகாதவாறு பூசப்படும் மணல் கலந்த குழைசேறு ; *v.* குட்டையில் அளை, சேற்றுமடுவில் புரள் ; தூய்மையற்ற துறைகளில் ஈடுபடு ; நீரைக் கலக்கிச் சேருக்கு; செய்தியைக் குழப்பு ; களிமண்ணையும் மணலையுங் கலந்து பிசைந்து குழைசேருக்கு ; கால்வாய் முதலியவற்றின் கரைகளுக்குக் குழைசேறு பூசு; தேனிரும்பாக்குதற்காக உருகிய இரும்பைக் கலக்கு.

pudd'ly, *a.* குட்டைகள் நிறைந்த.

pud'ency, *n.* அடக்கம், நாணம்.

puden'dal, *a.* மறையுறுப்புக்கள் சார்ந்த.

puden'dum, (ல.) *n.* மறை உறுப்பு, பாலினப் புற உறுப்பு ; *pl. puden'da*.

pudge, *n.* (பே-வ.) கட்டை குட்டையானவர் ; கொழுத்துக் குறுகிய விலங்கு.

pudg'y, *a.* கட்டை குட்டையான, கொழுத்துக் குறுகிய.

pud'sy, *a.* கொழுத்த, உருண்டு திரண்ட.

pue'blo, (ஸ்பா.) *n.* ஸ்பானிய அமெரிக்க பகுதிகளில் சிற்றூர்; ஸ்பானிய அமெரிக்க பகுதிச் செவ்விந்தியர்களின் குடியிருப்பு; *pl. pue'blos*.

pu'erile, *a.* சிறுபிள்ளைத்தனமான ; விளையாட்டுப் புத்தியுள்ள ; சிறுதிற, பயனற்ற ; (தொ.) puerile breathing, முணுமுணு என்ற ஒலியுடன் குழந்தைபோல் மூச்சுவிடுங் கோளாறு.

pueril'ity, *n.* சிறுபிள்ளைத்தனம் ; சிறுபிள்ளைத்தனம் வாய்ந்த செயல் ; அற்பச்செயல் ; மதலைச்சொல் ; அறிவற்ற சிறுதிறச்செயல், மடமை.

puerp'eral, *a.* பிள்ளைப்பேறு சார்ந்த, பிள்ளைப்பேற்றின் விளைவான ; (தொ.) puerperal fever, பேறுகாலக் காய்ச்சல்; puerperal insanity, பிரசவப் பைத்தியம்.

puff, *n.* மோதுஞ் சிறு காற்றலை, திடீர்க்காற்று வீச்சு ; குற்றுயிர்ப்பு வீச்சு ; காற்றின் சிற்றலை வீச்சொலி ; சிறு மூச்சொலி ; வெளியேற்றப்படும் புகைக்கற்றை ; ஆடை ஒப்பனை மடிப்பலை; மயிர் ஒப்பனை அலைச்சுருள் ; ஒப்பனைத் துகள் ஒத்தும் இழைச்செண்டு ; பொடிச்செண்டு ; மாவினுற் செய்த பொங்கப்பம் ; செய்தித்தாள்களில் நூலை மிகைபடப் புகழும் விமரிசனம் ; செய்தித்தாள்களில் வாணிகப் பண்டங்களை மிகைபடப் புகழும் விளம்பரம், பக்கச்சொல், வீண் பாராட்டுரை ; *v.* ஊது, மூச்சு அலை வெளிவிடு ; காற்றுவகையில் அலைவீசு ; அசைப்பிடு, விட்டுவிட்டு எழு ; முசுமுசுப்புக்கொள், இடர்ப்பட்டு மூச்சுவிடு ; மூச்சுத் திணறவை ; நீராவிப்பொறிவண்டி வகையில் 'குப்' 'குப்' என்று புகைவிடு; 'குப்' 'குப்' என்று புகைவிட்டுக்கொண்டே செல் ; சுருட்டு முதலியவற்றின் வகையில் புகை ஊதித்தள்ளு ; புடை, வீங்கு, வீக்கங்கொள் ; தற்பெருமையால் பூரிப்புக் கொள்வி ; மிகைபடப் பேசு ; பொய்யாகப் புகழ்ந்து விளம்பரஞ் செய் ; ஏலத்தில் விலை உயர்த்துவதற்காகக் கேள்வி கேள்; (தொ.) puff out, திக்கித் திணறிப்பேசு ; puff paste, மெல்லடை மாக்களி ; மெல்லடைப் பண்ணியம் ; puff up, செருக்கடைவி.

puff'-adder, *n.* பெரிய ஆப்பிரிக்க நச்சுப்பாம்பு வகை.

puff'-ball, *n.* ஊதுகாளான், மணிவடிவச் சிதல் உறையுடைய காளான் வகை.

puff'-box, *n.* சுண்ணச் சம்புடம்.

puff'er, *n.* முசுமுசுப்பவர் ; புகைவிடுபவர் ; நீராவி இயந்திரம் ; நீராவிப்படகு ; ஏலத்தில் விலை ஏற்றிவிடுபவர்.

puff'ery, *n.* விளம்பரம், மிகைபடப்புகழ்தல் ; சுண்ண வண்ணச் சிமிழ்கள்.

puff'-puff, *n.* மழலைப்பேச்சில் இரயில்.

puff'y, *a.* வன்காற்றாக வீசுகிற ; குறுங்காற்று வீச்சான ; புடைத்த, பாரித்த, வீங்கிய; அதைப்புக்கொண்ட, கொழுத்த.

pug [1], *n.* தடித்துக் குள்ளமான சப்பை முகமுடைய நாய் வகை; பெரிய நிறுவனத்தில் மேல்நிலையிலுள்ள வேலைக்காரர்; குள்ளநரி ; திசைதிருப்புப் பொறிவண்டி.

pug [2], *n.* செங்கல் செய்வதற்கான கலவைக் களிமண், *v.* செங்கல் செய்வதற்காகக் களிமண்ணைக் கலந்து பக்குவப் படுத்து ; தளமடித்துக் கெட்டியாக்கு ; சந்தடித் தடை செய்வதற்காக நிலத்தள அடியில் களிமண்-வாள்தூள்-சாந்து முதலியவை இட்டு அழுத்து.

pug [3], *n.* விலங்கின் காலடிச்சுவடு ; *v.* விலங்கினைத் தடங் கண்டு தொடர்.

pug'-dog, *n.* சப்பைமுகக் குள்ளநாய் வகை.

pugg'aree, (இ.) *n.* தலைப்பாகை; பின்தொங்கலுடன் தொப்பியைச் சுற்றி அணியப்படும் மென்துகில் குட்டை.

pugg'ing, *n.* அடித்தல், துவைத்தல் ; செங்கல் செய்வதற்காகக் களிமண்ணை இயந்திரத்திலிட்டுக் கலந்து பக்குவப் படுத்துதல் ; ஒலி ஊடுருவாதவாறு தரைத்தளங்களிடையே வைக்கப்படும் களிமண்-வாள்தூள்-சாந்து முதலியவற்றின் கலவை.

pugg'ish, *a.* குரங்கு போன்ற ; சப்பை முகக் குட்டைநாய் வகை போன்ற ; மேல்வளைந்த சப்பை மூக்குடைய.

pugg'ree, *n.* = puggaree.

pugg'y, *a.* = puggish.

pu'gilism, *n.* குத்துச்சண்டைக்கலை ; குத்துச்சண்டையிடுதல்.

pu'gilist, *n.* குத்துச்சண்டையர்; சண்டையிடுபவர் ; ஊக்கத்துடன் வாதிடுபவர்.

pug'-mill, *n.* செங்கல் செய்வதற்கான களிமண் கலவையைப் பக்குவப்படுத்தும் இயந்திரம்.

pugna'cious, *a.* சண்டையிடும் பாங்குள்ள, வம்பிற்கிழுக்கிற.

pugna'city, *n.* போர்த்தினவு.

pug'-nose, *n.* குறுஞ் சப்பைமூக்கு.

puisn'e, *n.* உயர்நீதிமன்றத் துணைநடுவர்; *a.* (சட்.) துணைமையான; பிற்பட்ட, பிந்திய, காலத்தாற் பின்னிட்ட; (தொ.) puisne judge, உயர்நீதிமன்றத் துணைநடுவர்; puisne mortgagee, பின்னிட்டுக் கொதுவை வைத்துக்கொண்டவர்.

pu'issance, *n.* பலம்.

pu'issant, *a.* சக்தி வாய்ந்த.

pu'ja, (த.) *n.* பூசை, வழிபாடு; திருவிழா.

puke, *n.* வாந்தி; *v.* வாந்தியெடு.

pu'ker, *n.* வாந்தி மருந்து.

pukk'a, pukk'ah, *a.* = pucka.

pul'chritude, *n.* அழகு, வனப்பு.

pule, *v.* கிறிச்சிட்டு அழு, இணை, சிணுங்கு.

pull, *n.* இழுப்பு, வலிப்பு; வெட்டியிழுப்பு; தென்னுகை; இசிப்பு; இழுப்புவிசை; ஈர்ப்பாற்றல்; செல்வாக்காற்றல்; மேலிட ஆதரவு வலிமை; கடிவாள இழுவை; பந்தயக்குதிரை வகையில் கடிவாளத் தடுப்பீர்ப்பு; வலிந்த படகுகைப்பு; மதுவகையில் நீள்குடியளவு; கேட்டதற்கு மேற்பட்ட தாராள மதுவழங்கீடு; பற்றுகைப்பிடி; அச்சுவகையில் சரவைப் பார்வைப்படி; பந்தாட்ட வகையில் பின்விசையடி; ஆக்க நலம், சாதகமான நலம்; *v.* இழு; பற்றி ஈர்; பிடுங்கு; கிள்ளியெடு; கவர்ந்து ஈர்; ஈர்த்துக்கொள்; முனைந்து உழல்; இழுத்துச்செல்; உறிஞ்சு; மொண்டுகொள்; சோர்த்து எடு; வார்த்துக்கொள்; பறித்தெடு; மணியை இழுத்தடி; படகு உகை; தண்டுவலி, வலிந்து துடுப்புத்தள்ளு; படகு வகையில் உகைக்கப்பெறு; பற்றிக்கிழி; உடல்நலங் கெடு; கோட்டு, முகம் வகையில் கோணலாக்கிக்கொள்; கைமுறை அச்சுப் பொறி இயக்கிப் படி எடு; திருத்தத்தகட்டின் அச்சுப்படி எடு; கைதுசெய்; சூதாட்ட மனைமீது தாக்குதல் நடத்து; குதிரை வகையில் கடிவாளம் பற்றி இழுத்து இடக்குப்பண்ணு; தன் பால் கவர்ந்தீர்த்துக்கொள்; முனைந்து முயன்று தன்பால் வருவித்துக்கொள்; ஒருதிசைப்பட்ட சார்பூட்டு; ஆதரவை வலிந்து பெறு; செல்வாக்கைப்பயன்படுத்தி உதவு; வாரிவிடு; வீழ்த்து; அழி; குற்றங் காண், குறைப்படுத்து; பந்தயத்தில் தோற்க வைப்பதற்காகக் குதிரை வேகம் தடுத்துப்பிடி; குத்துச் சண்டையில் குத்து வலுக் குறை; செயல் வலுக் குறை; மரப் பந்தாட்டத்தில் பந்தை இடையிட்டு விலக்கு; (தொ.) pull about, இப்படியும் அப்படியுமாக இழு; pull a face, முகஞ் சுளி; pull apart, இழுத்துப் பிய்த்து வேறுவேறுக்கு; pull a sanctimonious face, மதிப்பான தோற்றம் மேற்கொள்; pull caps, pull wigs, சண்டைபோடு, பூசலிடு; pull devil, pull baker, தத்தம் வேலையை அவரவர் கவனிக்கட்டும்; pull down, இடித்துத்தள்ளு; தெம்பு குறைந்திரு; pull for, படகைத் திசையிற் செலுத்து; pull in, ஊர்தி வகையில் நிலையத்துக்குள் நுழை; pull off, பரிசுபெறு; போட்டியில் வெற்றியடை; pull off one's hat, தொப்பியைச் சிறிது எடுத்து வணக்கந் தெரிவி; pull one's ears, pull one by the ear, ஒறு, தண்டி; pull oneself together, புதிய ஊக்கம் பெறு; நலம் பெறு; pull one's leg, ஏமாற்று, முட்டாளாக்கு; pull one's nose, pull one by the nose, அவமானப்படுத்து; pull one's punches, குத்துச்சண்டையில் குத்தில் முழு ஆற்றல் ஈடுபடுத்தாதிரு; pull one's sleeve, pull one by the sleeve, கவனிக்கும்படி செய்; pull one's weight, படகு செலுத்துவதில் தன் முழுப்பளுவையும் ஈடுபடுத்து; வேலையில் தன் பங்கு முழுதுஞ் செய்; முழு மனத்துடன் ஒத்துழை; pull out, படகு வகையில் துடுப்புக்களினுற் செலுத்தப்பெறு; ஊர்தி வகையில் நிலையத்தைவிட்டு வெளியே செல்; pull out of the fire, ஆட்டம் இழந்துபோகுந் தறுவாயில் தடுத்து வெற்றி காப்பாற்று; pull round, உடல் நலம் பெறுவி; நன்னிலை எய்துவி; உணர்வுநிலை கொள்ளுவி; உடல்நலம் பெறு; நன்னிலை எய்து; உணர்வுநிலை கொள்; pull the bell, மணியை இழுத்தடி; pull the long-bow, மட்டுமிஞ்சிப் பொய் பேசு; தற்பெருமையடித்துக்கொள்; pull the strings, ஆட்டிப் படை, பின்னிருந்து இயக்கிவை; pull the wires, மறை செல்வாக்கினுல் அரசியல் கட்சியையோ இயக்கத்தையோ நடத்து; pull through, இடர்-நோய் முதலியவற்றினின்றுந் தப்புவி; இடர்-நோய் முதலியவற்றினின்றுந் தேறு; pull together, ஒத்துழை; pull to pieces, பிய்த்துப் பிரித்தெறி; கண்ணறக்கண்டி; pull up, கடிவாளமிழுத்து நிறுத்து; கண்டி, குற்றங் கூறு, அதட்டு; தன்னையே அடக்கிக்கொள்; பந்தயம் முதலியவற்றில் தன் நிலையை முன்னேற்றிக்கொள்; pull up stakes, புறப்படச் சித்தமாயிரு.

pull'-back, *n.* தடங்கல், தடைப்படுத்துங் கூறு; தொங்கல் தாங்கி, மகளிர் ஆடைத்தொங்கலை எடுத்துச் செருகுவதற்கான அமைவு.

pulled, *a.* உடல்நலமிழந்த; ஊக்கங் குறைந்த; (தொ.) pulled bread, ரொட்டித்தூள் வறுவல்.

pu'ller, *n.* இழுப்பவர்; துடுப்பிழுத்துப் படகு செலுத்துபவர்; பந்தடிப்பவர்; இழுப்பது; இழுப்பதற்கான கருவி; இழுக்கும் இயந்திரம்; கடிவாளம் மீறி இடக்குச்செய்யுங் குதிரை.

pu'llet, *n.* இளம் பெட்டைக்கோழி.

pu'lley, *n.* உருளை, கப்பி, பாரஞ்சாம்பி; *pl.* pu'lleys; *v.* கப்பிமூலந் தூக்கு; கப்பி அமைத்து இணை; கப்பியால் வேலைசெய்.

pull'icate, (த.) *n.* வண்ணக் கைக்குட்டை; வண்ணக் கைக்குட்டை நெய்வதற்கான மூல இழைமப்பொருள்.

Pu'llman, Pu'llman car, *n.* இரயில் தனிவசதிப் பெட்டி.

pull'-out, *n.* விளிம்பொட்டு இதழ், ஒத்துப்பார்வையிடுவதை எளிதாக்கும் பொருட்டுச் சுவடித்தாள்களின் முகப்பு விளிம்பிலிருந்து விரியும் பக்கம்.

pull'-over, *n.* கம்பளிச்சட்டை; கம்பளித் தலைச்சீரா.

pull'-through, *n.* சுழல்துப்பாக்கிக்குழல் துப்புரவுத் தூரிகை.

pull'ulate, *v.* தண்டு வகையில் தளிர், அரும்புவகையில் முகிழ்வுறு, அரும்பிடு; விதை வகையில் முளை; கோட்பாடு வகையில் தோன்று, தழைத்தோங்கு.

pull'-up', *n.* பயணிகள் இடைத்தங்கல் மனை; திடீர் நிறுத்தம்; இழுத்து நிறுத்தல்.

pu'lly-haul, *v.* முழு வலிமையையும் ஈடுபடுத்தி இழு.

pulmobranch'iate, *a.* மூச்சுவிடுதற்கான திரிபமைப்புடைய செவுள்கள் வாய்ந்த.

pulmom'eter, *n.* நுரையீரல் ஆற்றல்மானி.

pul'monary, *a.* நுரையீரல் சார்ந்த; நுரையீரல்களிலுள்ள, நுரையீரல்களின் தொடர்பான; நுரையீரல்களையுடைய; நுரையீரல் போன்ற உறுப்புக்களையுடைய; நுரையீரல் நோயினுல் பீடிக்கப்பட்ட; நுரையீரல்களில் வலிமையிழந்த; (தொ.) pulmonary artery, நுரையீரற் பாய்குழல், நெஞ்சுப்பையிலிருந்து நுரையீரல்களுக்குக் குருதி கொண்டுசெல்லும் முதன்மைக் குருதிநாளம்.

pul'monate, *n.* நேரடியாக வளிமண்டலக் காற்றுயிர்க்குஞ் சிப்பி வகை; *a.* நுரையீரல்களை அல்லது நுரையீரல் போன்ற உறுப்புக்களையுடைய.

pulmon'ic, *n.* ஈளை மருந்து; *a.* நுரையீரல்களுக்குரிய.

pulp, *n.* விதைபருப்பு; பழச்சதை; களி, கூழ்; தாள்செய்வதற்குரிய கூழ்; நீரியலான தசைக்குழம்பு; பல்அடிக் கூழ்ப்பொருள்; தூளாக்கி நீருடன் கலக்கப்பட்ட கனி உலோகக் கலவை; *v.* களியாக்கு, கூழாகச்செய்; காப்பிக்கொட்டையிலிருந்து சோறு நீக்கு; களியாகு.

pulp'er, *n.* பொருள்களைக் களியாக்குவதற்கான இயந்திரம்.

pu'lpit, *n.* திருக்கோயிற் சமய உரைமேடை; சமயப்பிரசாரத் தொழில்; சமய உரையாற்றுங் குருமார்; ஏட்டுப்பெயர் வகையில் சமய உரைத்திரட்டு; *a.* சமய உரைமேடை சார்ந்த.

pulpiteer', *n.* சமயப் பிரசாரகர்; *v.* சமய உரையாற்று.

pulsate', *v.* துடி ; அடித்துக்கொள் ; தாளகதியில் விரிந்து சுருங்கு, அதிர்வுறு, அலைபாய் ; உயிர்ப்புறு; வைரக் கற்களி லிருந்து மண்ணைப் பிரிப்பதற்காக இயந்திரத்தின் மூலமாக அதிர்ச்சியூட்டு.

pul'satile, *a.* துடிப்புச் சார்ந்த ; நாடித்துடிப்பின் இயல்பு வாய்ந்த ; இசைக்கருவி வகையில் தட்டுவது மூலமாக வாசிக்கப்படுகிற.

pulsatill'a, *n.* செடிவகையின் ஊதாநிற மணிவடிவ மலர் ; மருந்தாகப் பயன்படும் ஊதாநிற மணிவடிவ மலரின் சாறு.

pulsa'tion, *n.* நாடித்துடிப்பு; உயிர்த்துடிப்பு; இதயத்துடிப்பு; அடிப்பு, துடிப்பு ; ஒழுங்காக இயங்கும் துடிப்பு ; அதிர்வு.

pulsat'or, *n.* குலுக்கியந்திரம், மண்ணிலிருந்து வைரத்தைப் பிரித்தெடுக்கக் குலுக்குகிற இயந்திரம்.

pul'satory, *a.* துடிக்கிற, அடித்துக்கொள்கிற, அதிர்கிற.

pulse[1], *n.* நாடி, நாடித்துடிப்பு ; குருதிக்குழாய் அதிர்வு ; இதயத்துடிப்பு; வாழ்க்கை விறுவிறுப்பு; உணர்ச்சியார்வம்; துடிப்பு முதலியவற்றின் சந்தமார்ந்த இயக்கம் ; (இசை.) தாளம்; ஒளியின் தனியலை; ஓசையின் தனி அலை; *v.* துடி, அடித்துக்கொள் ; அதிர், அலைபாய் ; தாளகதியில் விரிந்து சுருங்கு; தாள கதியில் இயக்குவி; (தொ.) feel one's pulse, நாடி பிடித்துப்பார், உள்ளக் கருத்தின் நோட்டம் பார்.

pulse[2], *n.* துவரையினம், பயற்றினம்.

pul'ses, *n. pl.* பயறு வகைகள்.

pulsim'eter, *n.* நாடிமானி, நாடி ஆற்றல் அல்லது துடிப்பு வீதம் அலகிட்டுக்காட்டுங் கருவி.

pulsom'eter, *n.* நீராவியைச் செறியவைப்பதற்கான வளிதீர் குழல்.

pulta'ceous, *a.* வீக்கமருந்துக் களிபோன்ற, கூழான.

pul'tan, (இ.) *n.* காலாட்படை வகுப்பு.

pul'verize, *v.* தூளாக்கு, பொடியாக்கு; இடி, அரை; நீரைத் திவலைகளாகச் சிதறு ; இடித்து அழி, நொறுக்கு, தகர்வுறு, நொறுங்கு ; தூளாகு.

pul'verizer, *n.* தூளாக்குபவர் ; பொடிக்கும் இயந்திரம் ; சிதறு கருவி.

pulve'rulent, *a.* பொடியான, தூள் சார்ந்த; பொடிபோர்த்த; பாறை வகையில் நொறுங்கிவிடக்கூடிய, தன்னிணைவாற்றல் குன்றிய.

pul'vil, *n.* வாசனைத்தூள், பொடி.

pul'vinate, *a.* (தாவ., பூச்.) புடைப்பான, அதைப்புள்ள ; மேற்கவிவான ; திண்டுபோன்ற, திண்டுபோல் மெத்தென்ற.

pul'vinated, *a.* (க-க.) போதிகை வகையில் குவிமுகத்துடன் புடைத்திருக்கிற.

pum'elo, pumm'elo, *n.* = pomelo.

pumi'ce, *n.* மெருகு மாக்கல்வகை ; படிகக் கல், சிட்டக் கல் ; *v.* மாக்கல்கொண்டு தேய் ; சிட்டக்கல்லால் துப்புரவு செய் ; (தொ.) pumice hoof of horse, குதிரைக்குளம்பு கடற்பஞ்சு போலாகும் நோய்க்கோளாறு.

pum'ice-stone, *n.* = pumice.

pumm'el, *v.* குத்து, அடி.

pump[1], *n.* நீர்வாங்கு குழாய், காற்றழுத்த ஆற்றல்மூலம் நீரை மேலெழச் செய்யும் விசைக்குழாய் ; நீர்ம மட்டம் உயர்த்துவதற்கான விசைக்குழாய்ப் பொறி ; நீர்மம் இயக்கு வதற்கான குழாய்ப்பொறி ; வளியழுத்தம் கூட்டவோ குறைக்கவோ பயன்படுத்தப்படும் குழாய்ப்பொறி ; இதயம், குருதி விசையியக்கக் கருவி ; பூச்சியினங்களிற் குருதியுறிஞ் சும் உறுப்பு ; பிறரிடமிருந்து தந்திரமாகச் செய்திகளைக் கவரும் முயற்சி ; பிறரிடமிருந்து திறமையாகச் செய்திகளைக் கவர்பவர் ; *v.* நீர்வாங்கு குழாயை இயக்கு ; நீர் முதலிய வற்றை விசைக்குழாய்மூலம் அகற்று ; விசைக்குழாய்மூலம் நீர்மட்டம் உயர்த்து ; கப்பல்-கிணறு முதலியவற்றிலுள்ள நீரை விசைக்குழாய்மூலம் வற்றச்செய் ; வெளிப்படுத்து ; வெளிக்கொணர் ; செய்தியைத் தந்திரமாக வெளிப்படுத்து ; முழுதுங் களைப்படையச் செய் ; காற்று அழுத்தமானியில் உடனடியாகப் பாதரசத்தை ஏற்றியிறக்கு.

pump[2], *n.* குழாய்ச்செருப்பு, கட்டுப்போடாத புதைமிதி வகை.

pu'mpernickel, *n.* செர்மன்நாட்டுக் கூலவகை ரொட்டி.

pump'kin, *n.* பூசணிக்காய்.

pump'-room, *n.* கனிப்பொருள் நீரூற்றுக்களிலிருந்து மக்கள் குழாய்வழி நீரைக் குடிப்பதற்குரிய அறை.

pun[1], *n.* சிலேடை, சித்திரப்பேச்சு ; *v.* சிலேடையாகப் பேசு.

pun[2], *v.* அறை ; குத்தியிடித்து நிலத்தை உறுதிப்படுத்து ; திமிசுக்கட்டையால் இடி.

pu'na, (பெரு.) *n.* தென் அமெரிக்காவின் வட பகுதியிலுள்ள உயரமான பாழ்மேட்டுப்பகுதி ; காற்றழுத்தக் குறைவு காரணமாக ஏற்படும் கடுமூச்சுக் கோளாறு.

punch[1], *n.* தமருசி, தோல்-உலோகம்-தாள் முதலியவற்றில் துளையிடுங் கருவி ; தாழ்செறிபொறி, தாழ்ப்பாளைச் செறிப் பதற்கும் எடுத்தற்கும் பயன்படுங் கருவி ; செறிவழுத்தப் பொறி, ஆணியைப் பரப்பின்கீழ்ச் செலுத்தும் அமைவு ; வெட்டழுத்தப்பொறி ; பொறிப்பாணி, வார்ப்புருவத் தாய்ப் படிவம் அழுத்தும்பொறி ; முத்திரைப்பொறி ; இலச்சினைப் பொறி ; *v.* தாள்-தோல்-உலோக முதலியவற்றில் தமருசி யால் துளையிடு ; துளையிடு ; ஆணியை அடித்திறக்கு ; இருப்பூர்திச்சீட்டில் அடையாள நறுக்கிடு ; அழுத்துபொறி இயக்கிச் செறிவி ; அழுத்துபொறி இயக்கி நெகிழ்வி ; அழுத்துபொறி இயக்கி உருவாக்கு ; மரையழுத்து, குமிழ் அழுத்து ; பொறிப்பிடு ; அழுத்திப்பதிவு செய் ; (தொ.) bell punch, துளையிடலை மணியடித்துக்காட்டும் இருப்பூர்திச் சீட்டுத் துளைக்கருவி ; punch in, தமருசிகொண்டு ஆணியை உட்செலுத்து ; punch out, துறப்பணத்தைக்கொண்டு ஆணியைப்பிடுங்கு, வெளியேற்று.

punch[2], *n.* கைமுட்டிக் குத்து ; வன்திற இடி ; குத்தாற்றல்; விசையூக்கம் ; சுரங்க முகட்டின் ஆதார உதைகால் ; *v.* கைக்குத்துவிடு, முட்டியால் இடி ; கோலாற் குத்து; தாற்றுக் கோலாற் குத்தி ஓட்டு ; (தொ.) pull one's punches, குத்துச் சண்டையில் முழு ஆற்றலையுஞ் செலுத்தத் தவறு.

punch[3], *n.* ஐங்கலவைப் பானகம், இன்தேறல்-சுடுநீர் அல்லது பால்-சர்க்கரை-எலுமிச்சைச்சாறு-நறுமணப் பொருட்கள் முதலியவை கலந்த சூடான பானம் ; ஐங்கலவைப் பானகக் குவளையளவு ; குவளைநிறை மது ; ஐங்கலவைப் பானக விருந்துக்குழு.

punch[4], *n.* குட்டைக்காற்குதிரை ; குறும் பரும் பொருள்.

Punch[5], *n.* பாவைக்கூத்தின் கோணங்கிக் குறளன்; லண்டன் நகர நகைச்சுவை வார இதழ் ; (தொ.) as pleased as Punch, மிகு மகிழ்ச்சி வாய்ந்த; as proud as Punch, மிக்க தற்பெருமை யுடைய.

punch'-ball, *n.* = punch'ing-ball.

punch'-bowl, *n.* ஐங்கலவைப் பானகக் குவளை; குன்றுகளிற் காணப்படும் வட்ட வடிவ ஆழ்பள்ளம்.

punch'-drunk, *a.* கடுமையான அடியால் திகைப்படைந்த.

pun'cheon[1], *n.* துளைக்கருவி ; அண்டைகட்டுக்கம்பு.

pun'cheon[2], *n.* (வர.) பெரிய மிடா, 72 காலன் முதல் 120 காலன் வரை அளவுள்ள பறை.

punch'er, *n.* குத்துச்சண்டை செய்பவர், முட்டியால் தாக்கு பவர் ; துளையிடு கருவி, தமருசி.

Punchinell'o, *n.* இத்தாலிய பொம்மலாட்டத் தலைமை நடிகர்; பொம்மலாட்டத் தலைமைப்பாத்திரம் ; குட்டையான பருத்த ஆள் ; *pl.* Punchinell'os.

punch'ing-ball, *n.* குத்துப்பயிற்சிப்பந்து, குத்துச்சண்டை பழகுவதற்காகத் தொய்வாற்றலுடைய தளையால் கட்டித் தொங்கவிடப்படும் காற்றடைத்த பந்து.

punc'tate, *a.* (தாவ., மரு.) புள்ளிகள் கொண்ட.

punctil'io, *n.* ஆசார நுணுக்கம், சடங்கு நுட்பம்; நுண்ணய வினைமுறைக்கூறு ; *pl.* punctil'ios.

punctil'ious, *a.* ஆசார நுணுக்கம் வாய்ந்த ; விடாப்பிடி நுட்ப ஒழுங்குமுறை வாய்ந்த ; ஆசார ஒழுங்குடைய ; வழுவற்ற, செம்மையான.

punc'tual, *a.* காலந்தவறாத ; காலங்கடவாத ; குறித்த காலத்திற்கு முந்திய ; (வடி.) புள்ளி அல்லது முனை சார்ந்த.

punc'tuality, *n.* காலந்தவறாமை, காலத்திட்பம்.

punc'tuate, *v.* புள்ளிகளிடு, நிறுத்தக்குறிகளிடு ; பேச்சிடையே கிளர்ந்துரைத்துத் தடு ; வற்புறுத்தல் கொடு.

punctua'tion, *n.* நிறுத்தக்குறியீடு ; நிறுத்தக் குறியிடுதல் ; எபிரேய முதலிய மொழிகளில் உயிர்க்குறி ஒலிக்குறிப் புள்ளிகளிடுதல்.

punc'tum, *n.* கறை, மேற்பரப்பின் மாசு ; வண்ணத்தடம் ; புள்ளி ; கரடு, மேடிட்ட தடம் ; தழும்பு, பள்ளமான புள்ளி ; *pl.* punc'tua.

punc'ture, *n.* கீறல் ; கிழிசல் ; துளை, ஓட்டை ; குத்து ; சக்கரப் புறவட்டில் ஏற்படும் பிளவு ; *v.* சக்கரப் புறவட்டில் துளை ஏற்படுத்து ; கிழிசல் உண்டாக்கு ; கீறுதலுறு.

pun'dit, *n.* = pandit.

pun'gency, *n.* உறைப்பு ; காரம் ; எரிச்சல், நெடி ; குத்தலான கேலி ; வன்சொல்.

pun'gent, *a.* காரமான ; உறைப்பான ; மணவகையில் மூக்கைத் துளைக்கிற ; கேலி வகையில் குத்தலான ; கண்டன வகையில் கடுமையான ; உணர்ச்சியைத் தூண்டுகிற; எரிச்சலூட்டுகிற ; (இய., தாவ.) கூரிய முனையுடைய.

Pun'ic, *n.* பண்டைய கார்த்தேஜ் (Carthage) மக்களின் செமித்திய இன மொழி ; *a.* கார்த்தேஜைச் சார்ந்த ; (தொ.) Punic faith, நம்பிக்கைக்கேடு, நம்பிக்கை மோசம்.

pu'nice, *n.* மூட்டைப்பூச்சி.

pun'ish, *v.* தண்டி ; தண்டனை அளி ; தண்டத்தொகை விதி ; அடி, ஒறு ; ஓட்டப்பந்தயத்தில் எதிர்ப்பக்கத்தாரைக் கடுஞ்சோதனைக்கு உள்ளாக்கு ; (பே-வ.) குத்துச்சண்டையில் எதிரிக்குக் கடுமையான அடிகொடு ; உணவுவகையில் பெரிய அளவு உட்கொண்டுவிடு ; பந்தாட்டத்தில் எதிர்ப்பக்கப் பந்தாட்ட வலுக்கேட்டை முழுதும் பயன்படுத்திக்கொள்.

pun'ishment, *n.* தண்டனை, ஒறுப்பு ; தண்டத்தொகை, தண்டவரி.

puni'tion, *n.* ஒறுப்பு

pun'itive, *a.* தண்டிக்கிற; தண்டனையாக விதிக்கப்படுகிற; தண்டனை இயல்புடைய ; (தொ.) punitive police, தண்டக் காவல்துறை, சட்டமீறிய பொதுநிலையுடைய மாவட்டத்தில் அம் மாவட்டச்செலவில் அமர்த்தப்படும் காவல்துறை அமைப்பு.

punk[1], *n.* விலைமகள், பரத்தை.

punk[2], *n.* மக்கிய மரம், மரக்கட்டைமீது வளருங் காளான் ; தீக்கொளுத்து குச்சி ; பயனற்ற பொருள் ; குப்பைகூளம் ; *a.* பயனற்ற ; அழுகிய.

punk'a, punk'ah, (இ.) *n.* விசிறி ; பங்கா, இழுப்புவிசிறி.

punn'er, *n.* அறைகருவி, கம்பத்தைச்சுற்றி மண்ணை இடித்து நிலத்தை உறுதியாக்கப் பயன்படுங் கருவி.

punn'et, *n.* குடுவை, பெட்டி, பழக்கூடை.

pun'ster, *n.* சிலேடையர்.

punt[1], *n.* பரிசல் ; *v.* பரிசல் தள்ளு ; பரிசல்வழி அனுப்பு.

punt[2], *n.* நிலம்பாவாப் பந்தடி, காற்பந்தாட்டப் பந்து கையிலிருந்து கீழே விழுந்து நிலத்தைத் தொடுமுன் காலால் உதைத்தல் ; *v.* நிலம்பாவாப் பந்தடி அடி.

punt[3], *n.* சீட்டாட்ட வகையில் பொருள் வைப்புக்கெதிராகப் பணயம் வைத்து ஆடுபவர்; சீட்டாட்டவகைக் கெலிப்பெண்; *v.* சீட்டாட்ட வகையில் பொருள்வைப்புக்கு எதிராகப் பணயம் வை ; (பே-வ.) குதிரைமீது பந்தயங் கட்டு.

punt'-about, *n.* பந்துதைப்பயிற்சி ; உதை பயிற்சிப் பந்து.

pun'ter, *n.* சூதாட்டக்காரர்.

pun'ty, *n.* ஊதுகம்பி, ஊதிக் கண்ணாடிப்பொருட்களை உருவாக்குவதிற் பயன்படுத்தப்படும் இரும்புக்கம்பி.

pun'y, *a.* குறிய, மிகச்சிறிய ; உருவில் குள்ளமான ; வலிமையற்ற; நுண்ணிய; நொய்ம்மையான; அற்பமான, சிறுதிற.

pup, *n.* நாய்க்குட்டி; *v.* ஈனு; குட்டிபோடு; (தொ.) in pup, கருக்கொண்டுள்ள, சூல் உற்ற; sell person a pup, ஏமாற்றுப் பேரஞ் செய்.

pup'a, *n.* முட்டைப்புழுக்கூடு, பூச்சியினத்தின் பருவச் செறிதுயிற்கூடு ; *pl.* pup'ae.

pup'ate, *v.* பூச்சியினப் பருவ வகையில் முட்டைப்புழுவாகு.

pup'il, *n.* பள்ளிமாணவர் ; பாடங்கற்பவர் ; கண்ணின்மணி, பாவை; (சட்.) இளங்கணாளர், பாதுகாப்பாளரின் பொறுப்பிலிருப்பவர், உரிய வயதை அடையாதவர்.

pup'ilage, *n.* உரிய வயது அடையாதிருக்கும் நிலை; பள்ளிச் சிறுவனாயிருக்கும் நிலை ; ஆதரவுநிலை, இளங்கண்மை ; மொழி-நாடு வகையில் சிறுபான்மை நிலை.

pupi'lary, *a.* கண்மணி சார்ந்த, கண்பார்வைக்குரிய; பள்ளிச் சிறுவருக்குரிய ; இளங்கணாளருக்குரிய ; பள்ளிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட.

pup'ilize, *v.* மாணவர்களுக்குக் கற்பி, பாடம் பயிற்று.

pup'illage, *n.* = pupilage.

pup'illary, *a.* = pupilary.

pup'illize, *v.* = pupilize.

pup'il-teacher, *n.* சட்டாம்பிள்ளை ; மாணவ ஆசிரியர், தான் பயிற்சி பெற்றுக்கொண்டே பிற மாணவருக்குக் கற்பித்துப் பழகும் ஆசிரியர்.

pupip'arous, *a.* (பூச்.) கூட்டுப்புழு நிலையிலே கருவுயிரை ஈனுகிற.

pupp'et, *n.* கூத்தாட்டுப்பொம்மை ; பிறர் கைப்பாவை.

pupp'et-clack, *n.* = puppet-valve.

pupp'et-play, pupp'et-show, *n.* பொம்மலாட்டம், பாவைக்கூத்து.

pupp'et-valve, *n.* புடை இணைப்பில்லாத தூக்கு தடுக்கிதழ்.

pupp'y, pupp'y-dog, *n.* நாய்க்குட்டி; அறிவற்ற இளைஞன், தற்பெருமைக்காரன், பகட்டன், முட்டாள்.

pur, *v.* பூனைபோலக் கனை.

pura'na, (ச.) *n.* புராணம்.

purb'eck, *n.* கடினமான சுண்ணாம்புக்கல் வகை; (தொ.) purbeck marble, உயர்நயம் வாய்ந்த சுண்ணாம்புக்கல் வகை.

purb'lind, *a.* அரைக்குருடான, கண் மங்கலான ; மழுங்கலான, அறிவுக் கூர்மையற்ற; ஆன்மிகத் தொலைநோக்கற்ற; *v.* அரைக் குருடாக்கு; மழுங்கலாக்கு, அறிவு மழுங்கச்செய்.

purch'ase, *n.* கொள்வினை, விலையிற் கொள்ளல் ; கொள்முதல் சரக்கு, விலைக்கு வாங்கிய பொருள்; பொறி ஆதாயம்; பொறி ஆதாயந் தருங்கருவி ; நிலத்திலிருந்து கிடைக்கும் ஆண்டு வருமானம்; (வர.) படைத்துறையிற் பணம் கொடுத்து ஆணைப்பதவி பெறும் பழக்கம் ; (சட்.) நில ஈட்டுமானம், மரபுவழி பெருமல் தன்முயற்சியாற் பெற்ற நில உடைமை ; *v.* வாங்கு, விலையிற்கொள் ; முயன்று பெறு ; (கப்.) கப்பி-நெம்பு முதலியவற்றின் உதவியால் நங்கூரம் எழுப்பு.

purch'ase-money, *n.* கொள்முதல் விலை ; பொருள்பெறக் கொடுக்கப்பட வேண்டும் விலை.

purd'ah, (பெர்.) *n.* திரை, படுதா.

pure, *a.* தூய, பரிசுத்தமான ; கலப்பற்ற ; நேர்வழிமரபான, கால்வழிக்கலப்பற்ற ; துறைதீர்ந்த, பிறிதொன்றன் தொடர்பற்ற ; கெடாத, வழுவாத ; தீமை கலவாத ; குற்றமற்ற, கறையற்ற ; களங்கமில்லாத, மாசுமறுவற்ற ; வாய்மை குன்றாத ; பெண்மைநலங் கெடாத ; ஒலிவகையில் மா

ணெலிக்கலப்பற்ற; இசைவகையில் முரணோசைக்கலப்பற்ற, நேரிசையான; உயிர்வகையில் மற்றோர் உயிரொலியினைத் தொடர்ந்த; சொல்லடி வகையில் உயிரீறான; மெய் ஒலி வகையில் மற்றொரு மெய்யொலியுடன் இணையாத; இயல் நூல் வகையில் பயன்முறைத்துறை சாராத; (தொ.) pure mathematics, தூய தனிநிலைக் கணக்கியல், பயன் முறைக் கணக்கியல் தொடர்பற்ற தனிக் கணக்கியல் துறை; pure science, செயன்முறை கருதா நுணங்கியல்.

pure'-blood, pure'-blooded, pure'-bred, *a.* இனக்கலப் பற்ற, தூய்மையான மரபுடைய.

puree, (பிர.) *n.* காய்கறி வடிசாறு, இறைச்சிச்சூப்பி.

pur'fle, *n.* கரைக்கட்டு, ஆடைப்பூவேலை ஓரம்; *v.* பூவேலை ஓரத்தால் அழகுபடுத்து; கட்டிய விளிம்புகளைச் சுருண்ட மலர்கள் அல்லது இலைகள் போன்ற வேலைப்பாட்டால் ஒப்பனைசெய்.

purf'ling, *n.* வில்யாழ் வகையின் விளிம்புகளைச் சுற்றியுள்ள ஒப்பனை வேலைப்பாடு.

purga'tion, *n.* துப்புரவாக்கல்; மலக்கழிப்பு, குடல் தூய்மைப் பாடு; மலநீக்கம், ஆன்மாவின் வினையுலகத் தூய்மைப்பாடு; (வர.) கடுஞ்சோதனைகள் மூலமான குற்றச்சாட்டுத் தீர்வு; (வர.) சூளுறவு மூலமான குற்ற ஐயுறவுத்தீர்வு.

purg'ative, *n.* பேதிமருந்து; குடல் இளக்கமருந்து; *a.* குடல் இளக்குகிற; தூய்மைப்படுத்துகிற.

purgato'rial, purgato'rian, *a.* கழுவாய்நிலை சார்ந்த; ஆன்மா திருத்தமடையும் இடஞ் சார்ந்த.

purg'atory, *n.* கழுவாய்நிலை; வழுநீங்கிடம்; ஆன்மா திருத்த மடையும் இடம்; ரோமன் கத்தோலிக்க வழக்கில் மாள்வுக்குப் பின் திருவருட்பேற்றிற்குரியவர் பாவம் போக்கப்படும் இடம்; *a.* பாவங்களைப் போக்குகிற, தூய்மைப்படுத்துகிற.

purge, *n.* துப்புரவாக்கல்; மலக்கழிப்பு; கழிப்புக்குறைப்பு, படை கட்சி மன்றங்களில் வேண்டாதவரை நீக்கிக் கழித்தல்; *v.* பேதியாக்கு; குடலைச் சுத்தப்படுத்து; தூய்மைப்படுத்து; மாசகற்று, ஆன்மமலம் நீக்கு; உள்ளம் துப்புரவாக்கு; குற்றச்சாட்டிலிருந்து விடுதலை அளி; குற்றச்சாட்டுப் பற்றிய சந்தேகந் தெளிவி; குற்றமற்றவன் என்று எண்பி; (சட்.) பணிவேற்பினாலோ கழிவிரக்கத்தாலோ குற்றத்திலிருந்து கழு வாய் பெறு; அரசியல் கட்சியிலிருந்து விரும்பத்தகாதவரைக் கழித்தொதுக்கு; (தொ.) Pride's Purge, (வர.) பிரிட்டனில் நீடுமாமன்றத்தில் *(1640-1660)* பிரைட் என்பவரால் நடை முறைப்படுத்தப்பட்ட மன்னராதரவாளர்களின் நீக்கம்.

purifica'tion, *n.* தூய்மைப்பாடு; வாலாமை நீக்கம்; (தொ.) the Purification, the purification of the Virgin Mary, கன்னிமேரியின் குழந்தைப்பேற்றுத் தூய்மைச் சடங்கு, பிப்ரவரி 2-ஆம் நாள் விழா.

pur'ificator, *n.* திருவுணா வழிபாட்டுத் துப்புரவுத்துணி.

pur'ify, *v.* தூய்மையாக்கு, சுத்தஞ்செய்; சடங்கு முறைப் படி புனிதப்படுத்து; அயற்பொருள்களை அகற்றித் துப்புர வாக்கு; புடமிடு; அழுக்ககற்று; பாவம் நீக்கு.

Pur'im, *n.* ஹமானின் (Haman's) சூழ்ச்சி தோல்வி அடைந் ததைக் கொண்டாடும் யூதர்கள் திருவிழா.

pur'ism, *n.* தனித்தூய்மை.

pur'ist, *n.* தனித்தூய்மைக் கோட்பாட்டினர்.

Pur'itan[1], *n.* (வர.) கடுஞ்சீர்திருத்தச் சமயவாதி, பிரிட்டனில் எலிசபெத் அரசிகாலச் சீர்திருத்தம் அரைகுறையானது என்று கருதிய புரோட்டஸ்டாண்டு சமயத்தவர்.

pur'itan[2], *n.* கடுந்தூய்மைக் கட்சியினர்; சமயத்துறைக் கடுங்கண்டிப்பாளர்; ஒழுக்கத்துறைக் கடுங்கண்டிப்பாளர்; *a.* கடுஞ்சீர்திருத்தச் சமயவாதியைச் சார்ந்த; ஒழுக்கத்திலுஞ் சமயத்திலும் கடுங்கண்டிப்பான.

pur'ity, *n.* தூய்மை; உடல்துப்புரவு; ஒழுக்கத்தூய்மை.

purl[1], *n.* கோப்புத்தையல்; குஞ்சம்; ஒப்பனைப் பூவேலை அருகு; திருப்புத்தையல்; *v.* முறுக்கிழைச் சரிகைக்கரை பின்னு, குஞ்சம் வைத்துத் தை; திருப்புத்தையல் போடு.

purl[2], *n.* ஓடைவகையில் சலசலப்புடன் கூடிய சுழிப்போட்டம்; சிற்றலையாட்டம்; சிறுசுழிப்பு; *v.* சலசலப்புடன் சுழன்றோடு; சுழலு.

purl[3], *n.* (வர.) சூடாக்கி மணமூட்டப்பட்ட கடுந்தேறல் வகை.

purl[4], *n.* கரணம், தலைகீழ்வீழ்ச்சி; வீழ்ச்சி, தோல்வி; பேரிடி, பேரழிவு; *v.* கவிழ்; தலைகீழாக்கு; சுழற்று; தலைகுப்புற வீசி எறி; திட்டத்தைக் குலை.

purl'er, *n.* (பே-வ.) எறிவு; பேரடி, மிகுதுயர், தலைகுப்புற எறிவு.

purl'ieu, *n.* எல்லை, புறச்சிறை; காவற்காடு.

purl'in, *n.* உத்தர நெடுவிட்டம்.

purl'ing, *n.* நீர்ச்சலசலப்பு.

purloin', *v.* திருடிப்பெறு, சிறு அளவில் திருடு.

purloin'er, *n.* ஏய்த்துத் திருடுபவர், சிறு அளவில் திருடு பவர்.

pur'ple, *n.* கருஞ்சிவப்பு; ஊதா, ஊதா வண்ண உடை; பேரரசர்க்குரிய கருஞ்சிவப்புநிற உடை; கோதுமைப்பயிர் நோய் வகை; *v.* கருஞ்சிவப்புநிறமாக்கு; ஊதாநிறம் ஆகு; (தொ.) born in the purple, உயர்குடிப் பிறந்த; purple emperor, வண்ணத்துப் பூச்சிவகை; purple patch, சொல் லணிச் சித்திரம்.

pur'ple-red, *n.* ஊதாநிறச் சாயற் சிவப்பு.

pur'ple-robe, *n.* பேரரசர் அணியும் கருஞ்சிவப்பு ஆடை.

pur'ples, *n. pl.* பன்றிநோய் வகை.

pur'point, *n.* = pourpoint.

purp'ort[1], *n.* கருப்பொருள், மூலக்கருத்து, ஆவண மையக் கருத்து; சொற்பொழிவின் கருத்துரை; பொருள்சுருக்கக் குறிப்பு; செயல்நோக்கம், உட்கருத்து.

purport'[2], *v.* பொருள்படு; பொருள் இருப்பதாகத் தோன்று; செயல் எண்ணங்கொள்; கருத்துத்தெரிவி, வெளியிடு.

purp'ose *n.* செயல்நோக்கம், குறிக்கொண்ட கருத்து; *v.* எண்ணமிடு, கருத்துக்கொள், கருத்தில் குறிக்கொள்; (தொ.) of set purpose, முன்கருதலாக, வேண்டுமென்றே; on purpose, வேண்டுமென்றே; to little purpose, சிறிதளவு பயனுடன்; to some purpose, மிகச்சிறிதளவே பயனுடன்; to the purpose, பயன்படுமுறையில்; with no purpose, பயனின்றி.

purp'osely, *adv.* வேண்டுமென்றே, மனமார, முன்கருத லோடு.

purp'osive, *a.* நோக்கமுள்ள; நோக்கத்தோடு செய்யப்பட்ட; குறித்த நோக்கத்திற்குப் பயன்படுகிற; நோக்க உறுதி யுடைய, கருத்துத்திட்பமுடைய.

Purp'ura[1], *n.* ஊதாநிறச்சாயம் ஈனும் கடல்வாழ் நத்தை வகை.

purp'ura[2], *n.* தோலின்மேல் ஊதாநிறப் புள்ளிகள் காணப் படும் நோய்வகை.

purpur'ic, *a.* தோலின்மேற் காணப்படும் கருஞ்சிவப்புப் புள்ளிகள் கொண்ட நோய்சார்ந்த; (தொ.) purpuric acid, ஊதாநிற உப்புக்கள் கொண்ட காடிவகை.

purp'urin, *n.* எருக்குச்செடியிலிருந்து பண்டு எடுக்கப்பட்ட செஞ்சாயம்.

purr, *n.* பூனை முதலியவற்றின் உறுமலொலி; மகிழ்ச்சிக் குறிப்பு; மனநிறைவு காட்டும் அடங்கிய குரல்; *v.* உறுமு, மகிழ்ச்சிக் குறிப்புக்காட்டு.

pu'rree, (இ.) *n.* மஞ்சள்வண்ணச் சாயச்சரக்கு.

pursang, (பிர.) *adv.* கலப்பின்றி, முழுக்கமுழுக்க.

purse, *n.* பணப்பை, பணம் வைப்பதற்கான தோற்பை; பணம்; நிதி; பைபோன்ற கொள்கலம், கூடு, பொறியுறை; *v.* உதடு-புருவம் முதலியவற்றைச் சுருக்கு; சுருக்கம் விழப் பெறு; பணப்பைக்குள் போடு; (தொ.) a common purse,

பொதுநிதி; heavy purse, long purse, செல்வ வளம்; light purse, நல்குரவு, வறுமை; privy purse, அரசருடைய சொந்த செலவுப்படி; the public purse, தேசப்பொதுப் பணம்.

purse'-bearer, *n.* பணப்பொறுப்பாளர்; பொதுநிதிப் பொறுப்பாளர்; முத்திரை நாயகத்தின் துணையாள்.

purse'-net, *n.* முயல்பிடிப்போரின் சுருக்கு வலைப்பை.

purse'-proud, *a.* பணச்செருக்குடைய.

purs'er, *n.* கப்பல் கணக்கர்; பிரயாணிக் கப்பலில் வரவு செலவுக் கணக்கு அதிகாரி.

purse'-seine, *n.* பைபோன்ற மீன்வலை.

purse'-strings, *n.* பணப்பையின் சுருக்குக்கயிறு; (தொ.) hold the purse-strings, பணச்செலவின் பொறுப்பு வகி; loosen the purse-strings, பணத்தைத் தாராளமாகச் செலவு செய்; tighten the purse-strings, பண வகையில் சிக்கனமாயிரு.

purse'-tak'ing, *n.* திருடுதல், கொள்ளையடித்தல்.

purs'lane, *n.* கோழிக்கிரை வகை.

pursu'ance, *n.* பின்பற்றுகை; தொடர்கை; செயற்படுத்துதல், நிறைவேற்றம்.

pursu'ant, *a.* பின்தொடர்கிற, பின்பற்றுகிற; செயற்படுத்துகிற; *adv.* இணங்க, அனுசரித்து.

pursue', *v.* பின்தொடர்ந்து செல்; பின்தொடர்ந்து செய்; பின்பற்று; பின்சென்று வேட்டையாடு; ஓட்டிக்கொள்; தேடு, நாடு, நோக்கமாகக் கொள்; தேடிச்செல்; இணங்க நட, அனுசரித்துச்செல்; நெடுகச்செல்; மேற்கொண்டு நட.

